ஸ்ரீமத் திராவிட மகாபாரத வசனம்

உத்தியோக பர்வம்

ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாயநம:

ஸ்ரீமத்திரவிடமஹாபாரதவசனம்.

உத்தியோகபர்வம்.

கடவுள்வணக்கம்.

மீனமாகியுங் கமடமாகியும் மேருவை யெடுக்குந்தாள்.........................*
ஏனமாகியும் ஆளரியாகியும் எண்ணருங் குறளாயும்..........................*
கூனல்வால்மழு தரித்தகோவாகியும் அரக்கரைக் கொலைசெய்த...... .....*
வானநாயக னாகியுநின்றமால் மலரடி மறவேனே..............................*

(என்பது.) வேதங்களைக் கவர்ந்து சென்ற சோமுகா சூரனைக்கொன்ற மச்சாவதாரமாகியும், அமுதங்கடையுஞ்வேளையில்-மத்தாகியமந்தரகிரி நிலைபெறுது அலையுங்காலையில் அமரர்களுக்கு அமுது அளிக்க அடிப்பீட ஆதாரமாகயிருந்த கூர்மாவதாரமாகியும், இப்பூமியைப் பாயகச்சுருட்டிக்கொண்ட இரணியாக்கனை உயிருண்டமகமருவையும் எடுக்கும் பிரசண்டதாள்களையுடைய ஆதிவராக மூர்த்தியாகியும், மூவுலகிற்கும் முத்தொழில் நடாத்தும் இறையென இருந்த இரணியனைப்பிளந்த நரசிங்கமூர்த்தியாகியும், ஓங்கிவளர்ந்து உலகம் அளந்து மகாபலியைப் பாதலத்தில் இருத்த உபேந்திரனாக அவதரித்த வாமனமூர்த்தியாகியும், இராஜவமிசத்தைக் கருவறுக்கவளைந்த வடிவாளைத்தாங்கிய பரசிராம மூர்த்தியாகியும், இராவணகும்பகர்ணாதியரை அழித்துச் சீதாதேவிமுதலிய தேவர்கள் தண்டகாரணிய வாசிகளின் பயம் அகற்றிய கோதண்டராமமூர்த்தியாகியும், நிலைபெற்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் தாமரைக் கமலம்போன்ற திருவடிகளாயும்! ஸ்ரீ வேதவியாசருடைய பாதபத்மங்களையும் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி.

விருத்தம்.

ந்தவெம்படைக் காவலர்திருவுருக் கரத்தமெட்டி
றும், நடந்தபான்மைநான்காகியபர்வமென் றருண்
முனிவில்போதில், குடங்கையுட்படர்நெடுங்கணாள்வ
ட்டைதன் கொழுநன்மெய்ப்புளகோங்கி, தொடர்ந்தி
சைத்திமேற் செயலெனவினவலுந் தூய்முனி புகல்கின்
றான்.

(என்பது) தடையிலாமல் விடுத்து அடையலரைக் கெடுத்து முடிக்கும் படையினைக் கைபழகிப்பிடித்த, முடிபொறுத்த பாண்டவர்களும் திரௌபதாதேவியும் தங்களுடைய சுந்தரஉருவமறைந்து, ஒருவருடம் விராடபுரத்திலுறைந்து! மல்லர்முதலிய கீசகனாதியரை மாய்த்து மாடுமடக்கவந்த தென்றிசையிற் சேனைகளைச் சாய்த்து; திரிகர்த்தனைச்செல்லவொட்டாமற் றடுத்து தேரிற்கட்டுப்பட்ட விராடனைவிடுத்து திரிகர்த்தனையும் சேனைகளையும் விரட்டி ஓட்டி தென்றிசையில் ஜயஸ்தம்பமும் நிலைநாட்டி? உத்தரகுமாரனும் பேடியும் உத்தர திசைக்குச்சென்று உவரிபோல்நிறைந்து, ஒலிக்குஞ்சேனைகளைக் கண்டு கலங்கி உத்தரன் காலோட்டங்கொள்ள காண்டீபனுந்தடுத்து இராஜநீதிகள் விள்ள இருவரும்இசைந்து ஆயுதங்களைக்கொண்டு எதிர்த்து, இயாவரும்பயந்து முறிந்தோட அடித்து வஸ்திரங்களும் மாடுகளும் கைக்கொண்டுவந்து மன்னர் ஜவொனக்கொலுவிலிருந்து மச்சதேசாதிபனும் சுதர்க்கணையும் மனமகிழ்ந்து வையகத்தார்முதல் மன்னர் மன்னவர்களும் புகழ்ந்து வாளபி மன்னுவுக்கு வைபவத்துடன் உத்த[illegible]யமணந்து வரிசையாகக்கொடுத்த உபலாவியத்திலிரு[illegible] மங்கையர் தங்குலச்சுற்றங்க ளியாவரும் கலந்து வாழ்விற்சிறந்தனர் தாழ்விலாப் பாண்டவரொன்று இதுவரையிலும் இயம்பியது நான்காவது விராடபர்வமென்று வைசம்பாயனர் சொல்ல முகமலர்ந்து குடங்கையில் அடங்கும் விடங்கலந்த தடங்கண்ணாளாகிய வபுஷ்டாதேவியின் மகிழ்நனும் ஜெனமேஜெயமகாராஜன் உடல்புளகமுற்று எழுந்து வலம்வந்து விழுந்து பணிந்து இருகரங் குவித்து மேல்நடந்த ஐந்தாவது உத்தியோகபர்வத்தையும் திருவாய்மலர்ந் தருளவேண்டும்-எம்-தெய்வமே யென்று போற்ற பரிசுத்தமுள்ள வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

...ரப் பொ
...இருந்த சிங்க
... வருடமும்நீங்
...வைத்த ஆயுதங்களுந்தாங்
கி அவரவர்கள் புயாசலங்களும் வீங்கி செல்லமும் மே
லோங்கி பலராமர் ஸ்ரீ கிருஷ்ணர் சாத்தகி முதலாகிய
பாஞ்சாலன் இளம்பஞ்சபாண்டவர் பற்பலதேச பந்து
ஜனங்கள் தௌமியாச்சாரியர் முதலிய வேதவிப்ராள் ச
மஸ்தமானபேர்களும் பொருந்த அஞ்ஞானம்விட்டுநீங்கி
ய சுத்தானசூரியர்களைப்போல் உபலாவியத்தி லிருந்த ஐ
வர்களைநோக்கி வனவாசத்தில் நடந்த மகத்துவங் களையு
ங்கேட்டு மகிழ்ந்து இனிமேல் நடக்கவேண்டிய காரியங்
களுக்கு என்னயோசனைசெய்து இருக்கின்றீர்கள் எங்க
ளுக்கு உத்தரவுகொடுத்தால் இப்போதே அஸ்தினபுரத்
திலிருக்கும் துரியோதனன்முதலாகிய புத்திர மித்திர வ
ருக்கத்தாரை முடித்துப்போட்டு தங்களுக்கே சகலசுப
சந்தோஷங்களும் உண்டாகும்படியாய்ச் செய்து போடு
கிறோமென்று சகல அரசர்களுஞ் சொல்லக்கேட்டு தரு
மராஜன் புன்னகை நகைத்து, ஞாயமே, தாங்களெல்
லோரும் என்பேரில் இருக்கும்பக்ஷத்தினால் சொல்லுகி
ன்றீர்கள்.ஆகிலும் பொறுத்தார் அரசாள்வர் பொங்கினார்
காடுகொண்டுபோவர்-என்னும் பழமொழியிருப்பதினால்
நாம் சற்றுயோசித்து ஒருதூதுபோக்கி அறியவேண்டியி
ருக்குது மேலும் இஷ்டதெய்வம்போ லிருக்கும் ஸ்ரீ கிரு
ஷ்ணபகவானுடைய இஷ்டப்படி நடப்பதே நமக்கு நஷ்
டமில்லாத ஜெயமென்றுசொல்லி தருமபுத்திர மஹாரா
ஜன் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி இனி நடக்கவேண்டி
யதற்குக், தாமே யோசிக்கத் தக்கதென்று சொல்லவும்
கோவர்த்தனமென்னுங் குடையினால் கல்வருஷத்தைத்
தடைசெய்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகின்
றார் கேளுங்கள் நமது முக்கியபாக்கியங்களுக்கு உரிய ம
ன்னர் மண்டலீகர்களே வணங்காமுடி பொறுத்த துரி
யோதனமகாராஜனானவன் ஆகியிற் சூதாடி பாண்டவர்க
ளுக்கு உரித்தாகிய மண், மனை, முதலியபாக்கியங்களைப்
பறித்துக்கொண்டதும் அல்லாமல் தருமபத்தினி யாகிய
பாஞ்சாலியையும் சபையில் மானபங்கஞ்செய்து பாண்
டவர்கள் பனிரண்டுவருடம் காடேகதியாகத் திரியச்செ
ய்தும் நாடேபதியாக ...திருந்த ...வங்க அரவகேதன னு
டன் மறுபடியுஞ் சூதாடி அ... ...கக்கொண்ட இராச்சி
யத்தை ஐவர்கைக் கொள்வ...வ ஞாயம் அல்லாமல்
சேனைபரிவங்களுடன்எதிர்த்து வில்முதலிய அஸ்திர
ஆயுதங்களினால் யுத்தம்புரிந்து வெற்றி அடைந்து பட்
டாபிஷேகபாக்கிய இராச்சியத்தைக் கைக்கொள்ளுவோ
ம் என்று நினைப்பது இராஜநீதியிற் கிடையாது ஆனால்
பூர்வம்சூதாடிய சபாமண்டபத்தில் வீஷ்டுமர் துரோண
ர் பெரியோர்களுக்கு நேராகப் பனிரண்டுவருடம் வன
வாசமும் ஒருவருடம் அக்கியாதவாசமுஞ்செய்து பாண்
டவர்கள் வெளிப்படுவார்களே யாகில் அவர்களுடைய
இராச்சியங்களை அவர்களுக்கே கொடுத்து விடுகிறேன்
என்று துரியோதனன்சொல்லிய வாக்கியம் ஒன்றுண்டு
அதனால் ஒருதூது அனுப்பி ஆகியிற்சொல்லிய உட
ன்படிக்கு அவன்கருத்தை அறியத்தக்கதே கடமையெ
ன்று கண்ணன்சொல்லிய கட்டுரையைக்கேட்டு அண்ண
னாகிய வெள்ளைவண்ணப் பலராமர் சொல்லுகின்றார்.

மண்ணினை ஆளும் அண்ணலே கேளும் அமுதியசமு
த்திரத்தை உரித்தாகிய ஆடையாகத் தரித்தருளிய பூ
லோகத்தில் துரியோதன மகாராஜனுடைய சாமார்த்தி
யங்களையும் தருமபுத்திர மகாராஜனே முதலிய தம்பிமா
ர்களின் வல்லமைகளையும் பற்பலதேசத் தரசர்களும் மற்
புயவீரத் தலைவர்களும் அறியும்படியாக விருப்பமுள்ள
பெருஞ்சூதாடிச்செயித்து சகலபாக்கியங்களையும் கைக்
கொண்டு பதின்மூன்று வருடம்கடந்து போகும்படி வா
ழ்விற்சிறந்த துரியோதன னிடத்திற்குத் தூது அனுப்
பியும் யுத்தஞ்செய்தும் சூதினால்தோற்ற பூமியை, லச்
சையில்லாமல் மறுபடியும்வாங்க யோசிக்கும் யுத்திகொ
டிய தீப்புத்தியென்று காமபாலன் சொல்லவும் சமீபத்
தில் இருந்த தம்பியாகிய சாத்தகிதமயனை புருக்கிக் கண்
கறுக்க நோக்கி பளா? பளா! வெகுநேர்த்தி இப்படியா
நீர் எண்ணங்கொண்டது உமது திருநாவினிடத்தி லிரு
ந்து பிறந்தவார்த்தையானது தேவரீருடைய திருமேனி
யின் வெளுப்பைப்பார்க்கிலும் மிகவும் வெளுத்தது எ
ன்று பலபத்திருடைய மனம்வருந்தும்படியாகச் சொ
ல்லவுங்கேட்டு அடுத்த அன்பர்களுடைய இடுக்கங்களை
யும் புயல்வண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் காம் அண்மை
து இயான் கூறிய வசனயுத்தியிலும் அண்ணா அவர்கள்
பலராமர்சொல்லிய மொழியிலும் பிரயோசனமில்லை
னி எவர்களாகிலும் கட்டுரையாகிய யுத்திகளைச் சொ
லுங்க ளென்னவும் ஆதிசேடனுடைய சிரோரத்தின
பிரகாசங்களினால் உலகத்திலுள்ள இருள்கெடும்படி ...
கிய வளப்பங்கொண்ட பாஞ்சாலதேசத்திற் கிறைவனா
கும் துருபதேயமகாராஜன் சொல்லுகின்றான்.

ஓ? மன்னவர்களே தருமநீதிப் பெருமைதவறுமல்
செங்கோல்செலுத்தியும் நான்குவேதம் ஆறுசாஸ்திரம்
கலைக்கியானமுதலிய நன்னூல்களெல்லாந் தெரிந்துணர்
ந்தும் உச்சமாகிய பேதாபேதங்கள் ஒன்றும் உணராதப
ரிசுத்த உள்ளமுடைய பலபத்திரராதையால் முன் பின்
யோசிக்காமல் இந்த வார்த்தையைச் சொன்னார். அதற்
காக குரூரத்துடன் கொடிய வசனங்களினால் சோபிக்க
வேண்டாம் சபைகளில் ஒருவர்சொல்லிய வசனம் சப்
மதியில்லாவிட்டால் உடனே அதைமறுத்து மறந்துவிட
வேண்டியதே முறைமையென்றான் பாஞ்சால ராஜன்
அப்போது மச்சதேசாதிபதி யெழுந்து மாயோ...
லாகிய மன்னவர்களைநோக்கி ஐயா பாபத்தையும் ...
த்தையும் லோபத்தையும் ஆபத்தையும் பொருளாக...
ண்ட அரவக்கொடியோன் மோசமாய்ச் சூதினால் கவர்
துகொண்ட பூமியை அபேட்சிக்க இல்லை பாஞ்சாலியை
வஸ்திரபங்கஞ் செய்தகாலையில் அந்தச் சபையிலிருந்த
பெரியோர்களுக்கு முன்பாக நாங்கள் கூறியசபதம் மு
டிக்கவேண்டிய விதத்தை யோசிக்கின்றோமென்று ஐவர்
மொழிந்தால் அதை தீபுத்தியென்று இந்தப் பலபத்தி...

ர்சொல்லலாமோ இயாவரும் பிழைக்கும்படியாகிய நன்
னிநிலையச்சொல்லும் துளபமாலையணிந்த ஸ்ரீ கிருஷ்ண
தேவர் ஒருதூதுபோக்கி அறியலாம் என்று சொல்லிய
தே இராஜமுறைமை அதுவே வேதவாக்கியத் திறமை
அந்தப்பிரகாரம் தூதுபோய் அவன் இசையாத கருத்தை
அறிந்துகொண்டு இப்போதேசென்று யுத்தஞ்செய் தா
லும் பெரிதன்று என்று மச்சதேசாதிபதி சொல்லவும்,
துருபதேயமகாராஜன் காசாம்பூவண்ணனைநோக்கி சுவா
மி இதோ இருக்கின்ற வேதவிப்பிர சிலாக்கிய விண்ம
ணிபோன்ற உலூகமாமுனியாகிய பௌரோகிதர் சதுர்
விதஉபாயங்களுந் தெரிந்தபரிசுத்தர் இவரை இன்று தூ
து அனுப்ப நினைப்பிராகில் அதற்கு இவரே யோக்கியம்
இதுவேயெங்கள் பாக்கியம் என்று உரைக்க; அந்தச் ச
பையிலுள்ள பற்பலமன்னவர்களின் மனப்பொருத் தத்
தையும் உதிஷ்டிரன்முதல் உயர்ந்ததோளினையுடைய த
ம்பிமார்களின் சிந்தையுறுதியையும் நடக்கவேண்டிய கா
ரியங்களையும் தன்மனதில் நிதானித்து, சபையைநோக்கி
க்களிக்குந் தருமநந்தனனைப் பார்த்து தோஷ, மோச; கு
ற்றங்களைப், பூஷணமாகக்கொண்ட சுயோதனன் தனக்
குப் படைத்துணைவரும்படியாக, திட, விர; காத்திர, ப
ராக்கிரம, ஆண்மிக்கையை உடைய அரசர்களுக்குத் தூ
து அனுப்புமுன்னமே உமக்குப் படைத்துணைவரும்படி
யாக, முன்சாக்ரதையுடன் தூது அனுப்பிவிட்டு அப்
பால் உமதுகருத்தைச்சொல்லி மறுமொழி கேட்டு வரு
ம்படியாக திருதராட்டிரனிடத்திலுக்கு உலூக மாமுனி
யை தூது அனுப்பும் என்றுசொல்லி முடிமன்னர் அடிப
ணியச் செலவுபெற்றுக்கொண்டு, அசோதைப் பிராட்டி
யார் கட்டிய உரலுடன் ஊர்ந்த உத்தமன் பலபத்திரர் சா
த்தகி முதலியபேர்களுடன் துவாரகைபோய்ச் சேர்ந்தா
ர். இப்பால், தருமராஜனுடைய சபையிலிருந்த அரசர்க
ளெல்லாரும் எழுந்து பாண்டவர்களைவணங்கி ஐயா; இ
ந்த உலூகமாமுனியை அஸ்தினபுரத்திற்குத் தூது அனு
ப்பி, தங்களுக்கு ராச்சியம்வரும்படியாகிய விதங்களெல
லாம் பேசச்சொல்லி, அதற்குத் திரிதராட்டிரனும்; துரி
யோதனனுஞ் சொல்லியனுப்பும் வார்த்தைகளைக் கேட்
கும்போது உங்களுக்குப் பிரதிகூலமா யிருக்குமாகில்
உடனே ஓலையும் தூதும் அனுப்பினால் இயாங்க ளியாவ
ரும் சதுரங்கசேனைகளுடன் ஆயுதபாணியாகப் 'படைத்
துணைவருகிறோம்-தேவரீருக்குமாமனாராகியபாஞ்சாலரா
ஜனும். விராடபூபதியும், உங்களைவிட்டு நீங்காது இங்கி
ருக்கின்றார்கள். நாங்கள் அவ்வளவுபாக்கியஞ் செய்யா
மற்போனாலும் உங்களுடைய சுகதுக்கமே எங்களுடை
யதாக யெண்ணியிருக்கிறோம். எங்களுக்கு விடைதாரு
ம் என்றுகேட்கவும் தருமராஜன் எழுந்து, அவர்களைத்
தழுவிக்கொண்டு சந்தோஷத்துடன் உத்தரவுகொடுக்கப்
பெற்றுதங்கள்தங்கள் பட்டினம்போய்ச்சேர்ந்தார்கள் பி
ன்பு முரசக்துவஜன்தம்பிமார்கள். 'பாஞ்சாலன், விராட
ன்முதலியபேர்களும் சபையில்நிறைந்திருந்து,ஸ்ரீகோபா
லகிருஷ்ணனுடையஉத்தரவின்படிக்குஇவடத்தில்வந்திரு
ந்து போனமன்னவர்கள்தவிர இங்குவராதிருந்தஇறைவர்

களுக்கெல்லாம் தங்களுடைய மெ...
டைத்துணைவந்துகாக்கவேண்டுமென்று ...
கங்களையும்தூதர்களையும் அனுப்பிவிட்டு உலூகமாமு
வரென்னும்பெரியோனை அழைத்து, ஆசனத்திலிருக்க
ச்செய்து ஐயனே? நீர், அஸ்தினபுரம்போய் வீஷ்டுமர்
துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார் அசுவத்தாமர் எந்
தையாகிய திருதராட்டிரமஹாராஜன் விதுரமகாராஜன்
இவர்களுக்கெல்லாம் எங்களுடையவந்தனத்தை முதன்
மையாகச்சொல்லி மற்றப்பேர்களிடத்தில் நீர்போகும்
தூதுக்குரியவார்த்தைகளைப் பேசிவரக்கடவிர் மெய்ம்
மையையுடைய வேதவேதியனே என்று மொழிந்தார் த
ருமராஜன், அதுகாலத்தில் போதுமாகிய தவங்களைச்செ
ய்து பவங்களகற்றி சுபங்களுடன் மனவுறுதிபெற்றிருக்
கும் தரணீசனாகிய துருபதேயமஹாராஜன் எதிரில் இள
ஞ்சூரியனைப்போல் பிரகாசித்திருக்கும் வேதபண்டிதனு
டைய மலர்ந்த ஒளிமுகத்தைப்பார்த்து, நீலகண்டனுக்
கொப்பாகிய உலூகமாமுனியே! நீர் தூதுசென்று பா
ண்டவர்கள் சிறப்புப்பெறும்படியாக அஸ்தினபுரிக்கு
அரசாகிய திருதராட்டிர மஹாராஜன்வீஷ்டுமர்துரோண
ர், கிருபர், அசுவத்தாமர், விதுரர் முதலியவர்களின் அர
ண்மனைக்குச்சென்று தனித்தனியாகக்கண்டு சாஷ்டாங்க
நமஸ்காரம் புகன்றார்களென்று நவின்று நாள்தோறும்ப
ழகி அவர்களிடத்தில் அதிகவிசுவாசநேசமாகி வீஷ்டுமர்
முதலிய மற்றவர்களுக்கெல்லாம் ஐவர்மீது அன்புவரும்
படியாகநடந்து வணங்காமுடியோனைக்கண்டு உங்களிஷ்
டப்படிக்குப் பதின்மூன்றுவருடம் காட்டிலும் நாட்டிலு
ம் காலங்கழித்துவந்த காவலர்களுக்கு நீர்முன் ராசசபை
யில்சொன்னவண்ணம் நாடுகொடுப்பீர்களா இல்லையா
வென்று அவர்கள்நினைப்புங்கருத்தும் நிதானித்துணர்ந்
து தாமும் தகுந்ததருமம்புகன்று பக்கச்சொல் பதினாயி
ரமென்பதுபோல் பெரியோர்களாலும் பேசச்செய்து க
லங்காமனத்தினராகிய தேவரீர் காரிய பாகங்களைக் கண்
டறிந்துகொண்டு சீக்கிர மிவிடம்வந்துசேர வேண்டிய
தென்று கரங்குவிக்கவும், இயாவரும் காலிற்பணியவும்,
அவர்களுக்கெல்லாம் ஆசீர்வதித்து, வாயுவேக மனோ
வேகமுடைய வண்பரிபூட்டிய விண்தொடு மிரதத்தில்
அரோகணித்துக்கொண்[illegible] பலாலயத்தை விட்டுப்புற
ப்பட்டார். பெண்களு[illegible]ளென்னும் வண்டுகள்
மொய்க்காத மலர்மாலை அ[illegible]ந்த உலூகமாமுனிவர் அ
ஸ்தினபுரிக்குச் செல்லுமுன்னமே அஸ்தினபுரியின் துரி
யோதனன் முதலாகிய தம்பிமார்களும் வீஷ்டுமர் துரோ
ணர்முதலிய பெரியோர்களும் அசுவத்தாமர் கருணர் இ
வர்கள் முதல்படை மன்னர்களும், வீராதி வீரர்களும்
சூராதி சூரர்களும், மற்றியாவர்களும் விராடபுரத்தில்
அருச்சுனன் கையில் அடிபட்டு மடக்கியமாடுகளையும்,
உடுத்திய விருதுவஸ்திரங்களையும், அவர்களுக்கு ஒப்
பிவைத்துவிட்டு பகலில்வர வெழ்கப்பட்டு எல்லோ
ரும் நித்திரைசெய்யும் அபராத்திரிவேளையில் பச்சையு
திரம் பாயும்படியாகிய புண்கள் நோகவும் பவிசும்போ
ய்பலமும் குன்றிப்போகவும் தேகஞ்சாகவும் தங்கள்தலை

...கமகொண்டு கனிந்கனியே அஸ்தி
...ாந்து, நித்திரையிற்சோர்ந்து, அன்று இ
...டிநதபின்புசென்று சபையில்நிறைந்துமுன்பு. வந்த
வர்கள் முகங்களைப்பார்த்துவந்தனைபுரிந்து. முகம்வியர்
த்து கள்ளமிருந்த உள்ளத்தினனாகிய துரியன் பெரியோ
ருள்ளம் வருந்தவிளம்பினான் பெரியவெள்ளம் நிறைந்த
கடலென இரைந்த எள்ளுவிழுந்தால் எடுக்கொணாதிசை
ந்த வெள்ளஞ்சேனையும் வீரரும் சூழ விராட புரம்போ
ய் வேந்தரைவரும் பாஞ்சாலியுடனே பதுங்கியிருந்தது
ம் பேடியாய் அருச்சுனன் பேணியேவந்ததும் உருவந்
தெரிந்ததும் யுத்தஞ்செய்ததும், பசுக்களைத் திருப்பிக்
கொண்டு போனதும் இவைகளையெல்லாம் திரிதராட்டி
ரனுக்குங் காந்தாரிக்கும் நமஸ்கரித்துச்சொல்லவும் அவ்
விருவருங்கேட்டு பெருமூச்சுவிட்டு, வெழ்க்கப்பட்டு, ச
பைக்குவராமலிருந்து அப்பாலொருநாள் இராஜமண்ட
பத்திற்குவந்து உபலாவியத்திலிருக்கும் பாண்டவர்களி
னுடைய தினச்செய்கைகளை அக்கம்பக்கத்தில் விசாரித்
துவரும்படியாகத் தூதரை அனுப்பி சங்கதி தெரிந்து
கொள்ளும்போது பாண்டவர்கள் வெளிப்பட்டதும் அ
பிமன்னுவுக்கு உத்தரையை சகலவித சம்பிரம மங்களஜ
யத்துடன் விவாகம் நடத்தியதும் அவடத்தில் வந்திருந்
த அரசர்கள் இன்னாரின்னாரென்றும் அவரவர்கள் அஸ்
தினாபுரத்தின்மீது படையெடுக்கக்கருதிய விதமும் தரு
மராஜன்முதலியபேர்கள் செய்யும் யோசனையும்துரியோ
தனமகாராசன் முந்தி படைத்துணை அழைக்கத் தூது
அனுப்புமுன்னமே நம்முடையதூது அனுப்பவேணு
மென்றும், உலூகமகாமுனியை அத்தினாபுரத்தினுக்குத்
தூது அனுப்பிவிடச்சொல்லி கிருஷ்ணமூர்த்தி துவார
கைக்குப்போனதும் படைத்துணைவருவதற்கு தேசங்க
ளில் தூதர்களும் ஓலைகளும்போக்கி உலூகமகாமுனியை
ப்பயணப்படுத்தினார் பாண்டவர்களென்று தூதர்வந்து
திருதராட்டிரனுக்கும் துரியோதனனுக்குஞ்சொல்ல அ
தைககேட்டு இராஜன் கொலுவுக்குவந்து-துச்சாதனன்-
கர்னன் - சகுனி - வீஷ்டுமர் - துரோணர் - கிருபர் மு
தலான பெரியவர்களுக்குந் தெரியப்படுத்தச் சொல்ல
யாவருங் கேட்டு ஆலோசனைசெய்து பாண்டவர்கள்
படைத்துணைசேர்க்கும்பே... நாம் ஆலசியமாயிருக்கலா
காது என்று திரிதராட்'... ச்சொல்லி, வணங்காமு
டிபொறுத்த மன்னவன... க்குப்போய் ஸ்ரீகிருஷ்
ணபகவானுடைய உதவியைப்படைத்துணையாகக் கொ
ண்டுவந்துவிட்டால் ஆயிரங்கோடி நக்ஷத்திரஞ்சேர்ந்தா
லும் ஓர்சந்திரனாகமாட்டாது- பன்றிபலகுட்டி ஈனுவதி
லும் யானைக்கன்று ஒன்று கிடைத்தால் பெருமையாம்
என்று நிச்சயித்துக்கொண்டு தேசதேச மெங்கும் செங்
கோலும் ஆக்கினாச்சக்கரமுஞ் செலுத்தும் அரசர்களுக்
குத் தூது அனுப்பிவிட்டு உடலுமுயிரும் போலும் பா
லும் நீரும்போலும் ஆத்மகோடிகள் தோறும் அமைந்
த பகவானிடத்திற்கு இரத கஜ துரக பதாதிகளுடன் அ
ரவகேதனனை அனுப்பிவைத்தார்கள் அப்படியே துரி
யோதனமகாராஜனும் துவாரகாபுரி வீதியில் வரும்போ
து அநேகங்கோடி அகண்டவீதிகளும் அவ்வீதிகள் நி
றைந்த மாடமாளிகை வீடுகளும் வீடுகளைச்சூழ்ந்த பவ
ளக்காலுகளும் பூங்காவனங்களும், முல்லைக்காடுகளும்,
அக்காடுகளில் நிறைந்த மயில்பேடுகளும் குயிற்பேடுக
ளும் குளங்கள் நிறைந்த அன்னப்பேடுகளும் மலையில
மைந்த யானைக்கோடுகளும் சவுக்கடிமேடைகளும் சகல
வளமும் உற்பவிக்கும் கடைகளும் சங்கினங்கள் தவழும
டைகளும் சரஞ்சரமாகத்தொங்கும் பூந்தொடைகளும்
ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீகிருஷ்ணனாக இவடத்தில் அவதரி
த்திருக்குந்தன்மையைக்கேட்டு ஆதிசேடன்தனது ஆயி
ரம்பணமகுடமும் விரித்து சிரோரத்தினங்கள் பிரகாசிக்
கும்படியாக மண்டலாகிர்தியாய் வளைந்துகொண்டதைப்
போலும் வானமளாவியிருக்காநின்றமதிலும், அதின்மே
ற்பொருந்திய சிகரகோபுரங்களும் மதிலுறுப்புகளும் க்ஷீ
ராப்திநாதன் நம்மைவிட்டுநீங்கி இங்ஙனம் அவதரித்திரு
க்கின்றாரென்று உட்கொண்டு பாற்கடலானதுவந்து பா
தலம்வரையில் ஆழ்ந்து வட்டமாகிய மதிலைச்சூழ்ந்துகரு
நிறங்கொண்டு இருப்பதையொத்தபலவித புட்பங்களும்
நிறைந்த அகழும் அவைகளில்ஏறுந்துறைக்கும் இறங்கு
ந்துறைக்கும் அமைந்திருக்கும்பளிங்குப்படிகளும் ஆகா
யத்தையளாவிய அநேகக்கொடிகளும் அதின்மேல் அ
மைத்தசிகரமுடிகளும் அரவணைதுயின்றஎங்கள்பெருமா
ன்ஐவர்க்குச் சகாயன் அவர்களுக்கே படைத்துணை யா
குவான் அல்லாமல் உனக்குத்துணையாகமாட்டான்நீயே
ன்வீர்தாவில்வருகின்றாய்திரும்பிப்போய்விடுவென்றுநக
ரமாகியபெண்கைகளைநீட்டிஆட்டிக்காட்டுந்தன்மைபோ
ல் அசைந்தாடுங் கொடிகளின் படபடப்பும் கிருபை
உற்பத்திக்கு ஸ்தானமாகிய தாமரைக்கண்கள் நிறைந்த
எங்கள் மஹாவிஷ்ணுவந்து அவதரித்திருக்கின்றவடமது
ராபுரியானது ஸ்ரீவைகுந்தமாநகரம்,போலும்மெய்ஞ்ஞா
னச்சுடர்விரிந்து அஞ்ஞானயிருள் அவிந்து அழகிய மா
ணிக்கத்தீபங்கள்மிகுந்துசோதிப்பிரகாசங்கலந்து விளங்
கியவளங்களையுடையதுவாரகாபுரிவீதியில்சித்துஅசித்து
தெரியாத துரியோதனன் வருங்காரியங்களைத் தெரிந்து
கொண்ட அரிபரந்தாமன் அருச்சுனன் வரும்படியாகத்
தூது அனுப்பிவிட்டு வாசற்காவலோரைநோக்கி புவன
பூபதியாகிய துரியோதனராஜன்வந்தால் எனக்கு அறிவி
க்க வேண்டுமென்று எண்ணாமலும் தடைபண்ணாமலும்
விட்டுவிடக்கடவீர்களென்று உத்தரவுசெய்து அரண்ம
னைக்குச்சென்று பவளத்தினாலும் பளிங்கினாலும் ஏர்ப்
படுத்திய மண்டபத்தில் மரகதஊசலில் வயிரக்கொலுசு
கள் அசைந்தாட சலப்பிரளைய காலத்தில் மிதந்தசைந்
தாடும் வடபத்திரசாயிபோலும் பாற்கடலில் பருமணிச்
சிகர ஆதிசேடன்மேற்கியான நித்திரைகொள்ளும் பது
மநாபன்போலும் அன்பருள்ளத் தமர்ந்த அருளாழி வே
ந்தன்போலும் சயனித்துக்கொண்டு சந்திர னொடுக்கிச்
சூரியகலை யோடும்படியாகக்காட்டி அதிகநித்திரை என்
பது தோன்ற அன்பெல்லாம் அருச்சுனனிடத்திலூன்ற
அழகியபிரதமைகள் கொலுசுகைக்கொண்டசைக்க ஐய
னிருந்த அக்காலத்தில் அரவக்கொடியோன் தன்னுடன்

கூடவந்த தளங்களை வெளியில் நிறுத்தித் தான் ஒண்டி
யாகவந்து ஒருவரையுங்கேளாமல் பவளக்கால் மண்டப
ம் எதிரில்தோன்றும் பளபளப்பின் பிரகாச விந்தையினு
ல் எதிர்நோக்கினான் மிகுந்த நித்திரைகொள்வதுபோலி
ருந்த மாயனை நாமாயெழுப்புகிறது, அவனுக எழுந்தபி
ற்பாடு பேசிப்போகலாமென்று திருவடிப் பக்கத்தில் ஒ
ருஉயர்ந்தஆசனம்இருக்கக்கண்டுஇவன் எம்மாத்திரம் ப
ஞ்சை இவன் காலடிப்புறத்திலேயா நாமிருப்ப தென்று
கோபங்கொண்டு இவடத்தில் இவனுக்காக நாம் காத்திரு
க்கதகாது என்று வருந்தி அந்தப்பீடத்தை இழுத்துக்
கொண்டுவந்து சுவாமியின் திருமுடிப்பக்கம் போட்டுக்
கொண்டு உளுக்கார் திருக்கும்போது இவனுடைய உள்
ளத்திலிருக்கும் கள்ளம் அறிந்த கடவுள் இன்னம் வரயி
ல்லையே பற்குனன் என்று எண்ணங்கொண்டு இருக்
கையில் நிண்ணியனுகிய கிரீடி துவாரகைக்கு நண்ணி இ
ரதம்விட்டுஇறங்கிப்பள்ளியறைக்குட்சென்றுபகவானைக்
கண்டு திருவடிப்புறத்தில் மண்டியிட்டு இருந்து இருகர
ங்களினுலும் இதழ்விரிந்தசெந்தாமரைக் கமலம்போன்ற
ஸ்ரீபாதங்களைத் தடவிப் பிடிக்கும்போது நித்திரை கலைந்
து மேற்போர்வையாகிய நவரத்தின பீதாம்பரத்தை நீக்
கித் திருக்கண் மலர்ந்து காற்புறத்தில் பார்வை நோக்கு
ம்போது அருச்சுன னிருக்கக்கண்டு எப்போது வந்தாய்
அருச்சுனு என்றுகேழ்க்கவும் இதுதான்வந்த பயனமெ
ன்றுசொல்லி சாஷ்டாங்கமாகச் சேவிக்கவும் திக்குவிஜய
ங்களும் சத்துருகண்டனமும் மனோபீஷ்டமும் உண்டா
கக்கடவதென்று மங்கள ஆசிர்வசனஞ்சொல்லி மறுபடி
யும் மாயன் நித்திராமயக்கம் நீங்காதவர்போல் கண்க
ளை மூடிக்கொண்டு உடனே அருட்பார்வைநிறைந்த அ
ரவிந்தக்கண்கள் மலர்ந்து பற்குனனைப்பார்த்து பக்கத்தி
ல் உளுக்காருமென்று பகரவும் காண்டீப னெழுந்து இ
ருகரங்குவித்து தேவ தேவா தேவதா சார்வபௌமா ச
ர்வலோகநாயகா சுவாமிபராக் எங்கள் அண்ணுவாகிய அ
ரவத்துவஜ மகாராஜன் வந்திருக்கின்றானென்று சொல்ல
வும் திடுக்கிட்டுத் திக்கென்றெழுந்து எதோ நான் பார்க்
க இல்லையே அடடா இது ஆச்சரியம் என்னை இந்த
தூக்கம் மோசஞ்செய்தது நானெம்மாத்திரம் பஞ்சை,
பஞ்சாசத்கோடி பூமண்டலாதிபதி இவடத்தில் வந்து
காத்துக்கொண் டிருக்கும்படியாக நேரிட்டதே இது எ
ன்ன பாவம் இந்த வாசற்காவலாள்களும் தெரிவிக்காம
ல் போனர்கள் என்று மிகச்சீறி கோபங்கொண்டு எழு
ந்து நின்று நங்கியாவர்த்த மாலையனைப்பார்த்து ஓ? சந்தி
ரகுலத்திந்திரனே நமக்கும் உங்களுக்கும் பேதமில்லா
திருக்க வந்தீர் என்னை எழுப்பிவிட லாகாதா உம்மை
விடவா யெனக்கு நித்திரை நீர்வந்ததே என் பாக்கியம்
இந்தமாநகரஞ்செய்ததே யோக்கியம் ஆகிலும்நான் அ
றியாமல் நடந்தது அபசாரம் இதைப்பொறுத்தருளவே
ண்டுமென்று இறுகக்கட்டி ஆலிங்கனஞ்செய்துகொண்
டு எது? அபுருபமா யிருக்கின்றது நீங்கள் இருவருஞ்
சேர்ந்துவந்தது ஆச்சரியம் ஆச்சரியம் சேனையின்னமே
ளவாத்தியம் சத்திரசாமர முதலிய சின்னங்க ளெங்கே

என்று அவன் மனதில் தன்னைலேசாக நினைத்ததை தா
னே எடுத்து துரியோதனன்மனதில் படும்படி அநியின
யங்களாகச் சொல்லி என்னையொரு பொருளாக நினைத்
து இவ்வளவுதூரம் பிரயாசை கொண்டுவந்தது இயாது
காரணம் எவ்விமித்தத்தில் காத்திருந்தோமென்று கோ
பங்கொள்ளாமல் தெளிவில்லாதயான் தெரிந்து கொள்
ளும்படியாகச் சொல்லுங்க ளென்று கேட்கவும் அப்
போது துரியோதனன் அகமகிழ்ந்து முகமலர்ந்து நம்
மிடத்தில் வெகுவித உபசாரத்தையும் பயத்தையுங்கொ
ண்டிருக்கின்றானென்று மிகுந்த இறுமாப்புடனே சொல்
லுகின்றான் நாளை நடக்கப்போகின்ற பாரத யுத்தத்
திற்கு உம்மைப்படைத்துணையாகக் கொண்டு போகவந்
தேன் என்னவும் உடனே அர்ச்சுனன் வணங்கி நினது
யானுவாகிய தெய்வமே எம்மையாகிய யெங்களுக்குப்ப
டைத்துணை வேண்டிவந்தேனென்னவும் இருவர் மொ
ழிகளையும் ஒருமொழியாகக்கேட்ட என்னையன் ஆபத்பா
ந்துவாகிய சங்கு சக்கரக்கையன் சுயோதனனை நோக்கி
மெய்யன்பாக விளம்பினர், வையகங்காக்கும் ஐயனே,
கேளும் துய்யனுகிய தருமராஜனுந் தம்பிமார்களும் வெ
ளிப்பட்டு விராடபுரத்தி லிருக்கக்கேட்டு யான் சென்ற
போது என்னை எதிர்கொண்டு கண்டு வார்த்தைக ளாடி
யிருக்குங்காலையில் இனிமேல் எங்கள் சபதநடக்கப்போ
கின்ற பாரதயுத்தத்திற்கு தேவரீர் படைத்துணையாகவே
ண்டுமென்று வினவுஞ் சமயத்தில் இயாம்தடுத்து துரி
யோதன மகாராஜனும் படைத்துணை கேழ்ப்பாரல்லவா
எனக்கு நீங்களிருவரும் இரண்டுபுஜம் இரண்டு கண்கள்
இரண்டும் சமம் ஆகையால் ஒருவரை நீக்கி ஒருவருக்கு
ப் படைத்துணை வரமாட்டேன் என்னை நீக்கிவிடவேண்
டுமென்று மறுத்துச் சொல்லியும் பிடிவாதமாக வாதித்
தபோது யுத்திவார்த்தை சொல்லிவந்தேன் அதென்ன
வென்றால் இயான் நித்திரைசெய்து எழுந்திருக்குங் கா
லத்தில் எவர்கள் என்முகத்தில் முன்விழிக்கிறார்களோ
அவர்களுக்குநான் படைத்துணையாவே னென்று உண்
மையாகச்சொல்லி யிருந்தேன். அந்தப்படியே இன்று
அருச்சுனன்வந்து முந்திமுகத்தில் விழித்தான் ஆகையா
ல் அவர்களுக்கே படைத்துணையன்றி உமக்குப்படைத்
துணையாகக்கூடாது இது என் தப்பிதமல்ல உம்முடை
ய அஜாக்கிரதை முன்வந்த நீ என்னை எழுப்பி விடாம
லும் சேவகரைக்கொண்டு தெரிவிக்கச் செய்யாமலும்
கைதட்டிக் கனைத்து ஜாக்கிரதை செய்யாமலும் லேசா
கிய எனக்குப் பிரபுத்தன்மைகொடுத்து வீண் பொழுது
போக்கிவிட்டீர் ஐயோ இனியான் என்னசெய்வேன் ஆ
னல் என்னைப்படைத்துணை விரும்புவதும் யௌனம்
நானேயுத்தகளத்தில் ஆயுதம் ஒன்றும் தொடேன் நிரா
யுதனுக நிற்பேன் நானொருபுறம் என் தமையன் முதந்
சகலரும் இன்னொரு பக்ஷமாக இருப்பார்கள் இது சத்
திய வசனம் உங்களிருவருக்கும் இந்த இரண்டுபக்ஷத்தி
ல் இயாவர்வேண்டியது அர்ச்சுன உங்களெண்ணத்தை
ச் சொல்லுங்க ளென்று கேட்க விஜயன் பணிந்து தே
வரீரை மாத்திரம் வேண்டினேனென்று விளம்பவும் கல்

கலவென்று நகைத்து விளையும்பயிர் முளையிற்றெரியுமென்று கேட்டிருந்ததில்லையா கிரீடி, ஆயுதமெடாதே யென்னைப் படைத்துணையாக அபேட்சித்தையே என்னாலுனக்கு என்னகாரியம் நடக்கும் இந்திரன் முதலாய் என்று கேட்கவும் இணையடிவணங்கி சுவாமி அடியேனுடைய இரதத்திலிருந்து சாரத்தியஞ் செய்வீராயில் மண்ணுலகிலுள்ள மகாஜனங்களும் விண்ணுலகிலுள்ளவித்தியாதாரும்கருடகின்னர காம்திருவர்யாவரும் அசுரஇராக்கதர்-அடங்கலும்வென்று ஒருமுகூர்த்தத்தில்சத்துருமுதல்வேர்களைந்து வஞ்சினமுடித்துவாழ்விற்சிறப்போம் அஞ்சனமேனியாம் அண்ணலே என்னவும் அப்பால் அமலன் வஞ்சனையுள்ளவணங்காமுடியோனை நோக்கி தனஞ்சயன் என்னைச்சாரதியாகக் கொண்டபடியால் குதிரைகளைநடாத்தி இருப்பதேயன்றி எவர்கள்பேரிலும் ஆயுதமெடுத்து அடிப்பதில்லை நான்சொல்லுமொழியைநம்புகம்பு இதல்லாமல் எங்கள் அண்ணன் தாலகேதனமுடையபலராமர் உமக்குச்சாக்ஷாத்மாமனாராகையால் அவரையும் எங்கள்யதுவம்சத்தார்பலரையும் உமக்குத்துணைவாயிருக்கும் எமதுபங்காளிகளாகிய கிருதவீரியனையும் கிருதவன்மனையும் ஒரு அக்ரோணிசேனைகளையும் இன்னமிருக்கும்பலரையும் படைத்துணையாகக்கொண்டுபோமென்றுகாலத்திரயம் உணர்ந்தகண்ணன் இஞ்சொற்கூறி விடைகொடுக்கசெலவுபெற்றுக்கொண்டு பலபத்திராகிய மாமனைக்கண்டுவணங்கி படைத்துணைவிரும்பி வந்ததும் பார்த்தன்நேரிட்டதும் ஆயுதம் எடுப்பதில்லை என்று அவனுக்குக்கிருஷ்ணன் இசைந்ததும்தாமேமுதலிய தம்பியும்சேனையுமெனக்குத்துணையாகஇசைந்து அளித்தனர் என்று விளம்பிதாங்களும்கிருதவன்மன் கிருதவீரியனும் அலகிறந்தசேனைகளும்யாதவகுமாரரும்படைத்துணைவாருங்களென்றுபகர்ந்து செலவுபெற்றுக்கொண்டு அஸ்தினபுரம்வந்துசேர்ந்து அரசர்சபையிற்புகுந்து வீஷ்டுமர்முதலானோர்படைத்துணைபெற்றவிதத்தைவிளம்ப அவர்கள்கேட்டுமனம்வருந்திகடல்பெரிது தண்ணீருமாகாது ஊற்றுஜலம்கொஞ்சம் உண்ணும்நீராகும்,அதுபோல்சேனைப்பெருக்கத்தில்பிரயோசனமில்லை, கண்ணனொருவன் கைவசப்படுவானாகில் அண்ணலேஉன்னையாவர்வெல்லுவார், என்றுபேசியிருக்கும்பொழுதினில்நகுலசகாதேவர்களுக்கு நல்லம்மானாகிய மத்திர தேசாதிபதி பாண்டவர்களுக்குப் படைத்துணை வருகின்றார் என்றுதேசதேசங்களுக்குச்சென்றதுரியோதனனுடையதூதுவர்கள் ஓடிவந்து உரைக்க அதைக்கேட்டு வீஷ்டுமர்முதலிய மேலோர்களும்மன்னனைநோக்கி இந்தச்சல்லியராஜனையாவதுவழிமடக்கிப்படைத்துணை கொண்டால் பெரியசகாயமாகும் என்றுயுத்திவிளம்ப இறைவனும் இசைந்து, நன்றுநன்றென்றுநலம்பெறநடந்து, அஸ்தினபுரிக்கு அடுத்தமேற்புறத்தில்,கல்வியறியாக்கசடர்மனம்போல்கற்றும் அறிவில்லாக்கயவர் இனம்போல், செல்வம் இல்லார்சிந்தைக்கொப்பாய், சத்தியநன்னெறிதவறினோர்வாழ்வென பெண்ணலங்கிட்டாப்பேதையர்சுகமென, தானம்,தவம், விரதம்,தரியார்மனமென, ஞானமில்லார் நவிலுமொழியென, தெய்வநிந்தனைசெய்வோர்கதியென, முள்ளுமுரடுங்கல்லுங்கரடும், புல்லும்பூடும்பொருந்தாவழியும்,நிழலிலாவெளியும்நெருப்புறும்பாலையும்,மழைத்துளியறியாமாமலைப்புழுதியும், இருக்குமவ்வழியில் இறைவனும் சேனையும்,வெந்துவெதும்பிவிடாய்ப்படவருவார்என்று அறிந்து இந்திரனுலகெனபந்தர் அமைத்து, பன்னீர்தெளித்துத், தென்றலுக்கெதிராய் சிங்காசனம்வகுத்து,மேற்கட்டிவிட்டுவிசித்திரமாக சாலர்கள் தூக்கிசாளரம் அமைத்து, வாழைகமுகுகள்வான் கரும்புடனே. தாழையிளநீர்சரஞ்சரமாக, பற்பலபழங்களும்பாயச விதங்களும், வகைக்கொருகிறங்கும்வாசனைமலர்களும், பலவிதத்தண்ணீர் பன்னீர்வகையும், வாசனைப்பண்டமும்வரிசையாயூசலும், தாதியர்சேடியர்சங்கீதம்பாடநிண்டுதிமாசுசித்திரமேடை பூசாவிதிகள்புரியுஞ்சாலை, போசனச்சாலைபுகழ்பெற அமைத்து, கணக்கர்காரியஸ்தர்காவலர் இறைஞ்ச, சுக்குநீர்வென்னீர்சுத்தநீர்பன்னீர், கச்சாயவர்க்கமும் காசாலட்டும், விதவிதமாகிய விசிறிகளனேகமும், ஆலவட்டமும் அரிவையர்பிடித்தநிலைக்கண்ணாடியும்நிமிர்சாய்மாமும் படுக்கைமெத்தையும்பலவிதமலரும்,அறுசுவை அன்னமும்அமுதெனச்சமைத்து,சந்தனபுட்பம்தாம்பூலவிடையமும், வந்தவரெவர்க்கும்வழங்க அமைத்து; மாமனார்வருகிறவழியிற்பாண்டவர், உபசாரஞ்செய்யும் உயர்தண்ணீர்ப்பந்தல், என்றுவிளம்பி எழுதிவைத்து; அண்டையில்மறைந்து அரவக்கொடியோன், இருக்கும்வேளையில் இயானையுஞ்சேனையும் தன்னினம்நெருங்கிய சல்லியராஜனும், வெய்யலில்மிகுந்தவிடாய்ப்பட்டுவருந்தி,தண்ணீரென்றேதாகமிருந்து, காலுமேலும்கனலாலெறிந்து, நாபிவரண்டுநாவுமுலர்ந்து,விடாய்ப்பட்டுவந்தவேளையிலிருந்த காரியத்தூதரும்கணிகைமாதரும்,எதிர்கொண்டோடி இறைஞ்சியழைத்து, ஆலவட்டத்தால் ஆயாசமாற்றி, தண்சுகபரிமளஸ்நானமுஞ்செய்து சந்திசெபபூசைசந்தனம் அக்ஷதை.மந்திரசெபங்களும்வரிசையாய்நடத்தி;பொன்வாழைய[illegible] போசனஞ்செய்து, சந்தனபுட்பந்தையலா[illegible]ற்றி, தாம்பூலம்விடையந் தகுதியாய்க்கொடுத்து, ஊசலிலிருத்தி ஊசலும்பாடி, சேனையர்க்கெல்லாம் தேவாமிர்தம்போல்போசனமிடவும் புசித்தவர்மகிழ்ந்து,மார்க்காயாசம் மகிழுடன்திர, சங்கீதம்வீணை தாளசுரங்கள், இங்கிதமாக இறைவனுங்கேட்டு ? அகமும்முகமும் அன்புமலர்ந்து, இவ்வளவுசம்பிரமம் இன்றுயான்கண்டேன்;தியமாபாவிகள் சிந்தைபோல்வறண்டு, பேய்குடியிருக்கும் பேயாக்கானகம், இப்பெரும்வெளியில் இவ்விதமாக,சம்பிரமம் அமைத்ததருமனெவர்கொலோ, பொருளெலாம்நிறைத்தபுண்ணியரெவர்கொலோ, அவர் என்முன்வந்து அரசுகேட்டாலும்,உயிரினைவிரும்பினும்உவந்துயான் கொடுப்பேன், என்றுசந்தோஷித்து இறுமாந்துரைக்க. இதுவேசமயம் என்றுமகிழ்ந்து, வணங்காமுடியோன் வரவெதிர்கண்டு சல்லியனோடிதழுவிக்கொள்ளும், இருவருந்தழுவி இன்பமாயிருந்து, இப்பெருவெளியில் இதம்பெறவமைத்த, ஒப்பிலாத்தண்ணீர்ப்பந்தலால் உயிரும், இயானையும்சேனையும் இயாவரும்பிழைத்தோம், தேவரீர்

செய்தசித்திரமியாது, சொல்லும்யான்தருவேன்சொன்னசொல்மறுக்கேன். மன்னனேயென்றுமகிழ்ந்த சல்லியனை, கரத்தோடுகரமும்கண்ணோடுகண்ணும், சிரத்தொடுசிரமும்சேரவணைத்துப், பாண்டவர்தமக்குப்படைத்துணையாக, ஆண்டைகைசேறல் அறிந்துயான் இங்கு, பந்தல் அமைத்துவழிபார்த்திருந்தேன், எந்தையேபடைத்துணை எனக்காகவேண்டும் என்றுதுரியோதனன் இயம்பமகிழ்ந்து, நன்றுநன்றுநானும் அப்படியே, உப்புநீரும் உமதுநானுண்டேன், இப்பலேபடைத்துணைக்கி இசைந்தேனுமிலும், பாண்டவரிருக்கும்பதிக்குயானேகி மீண்டுவருவேன்மெய்யெனச்சொல்லி, விடைபெற்றுக்கொண்டுவேந்தனைவிடுத்து, சேனையுந்தானுஞ்சென்றனன் இப்பால், தருமராஜனுந்தம்பியரியாரும், எதிர்கொண்டுவந்து இறைஞ்சிப்பணிந்து, சகலவுபசாரசம்பிரமஞ்செய்து, சிங்காதனத்தில் இருந்து க்ஷேமங்கள், எங்கோன் வினவ, இயாவு முரைத்து, இருக்குங் காலையில் இறையாஞ் சல்லியன், அறன்மகன் முதலிய அரசரை நோக்கி, படைத்துணை வந்த பாட்டையில் துரியன், தருமன்போல் தண்ணீர்ப்பந்தல், சமைத்து உபசாரஞ் சகலர்க்கும் உதவி, என்னைப்படைத்துணை இரந்துகொண்டான், மன்னனே வாக்குதத்தஞ்செய்து, வந்தனன் என்மேல் மனமகிழ்ந் துடனே; விடைதாரும் என்று விளம்பச் சல்லியன் சந்திரவமிசக் குலோத்துங்கனாகிய தருமராஜன் சல்லியனைப்பார்த்து; ஓ! ஓ! மாமா, அஷ்டலட் சுமிகள் அடுப்பதானாலும், அடுத்தபாக்கியங்கள் விடுப்பதானாலும்; ஆவியையொருகாற் கொடுப்பதானாலும்; அயலார்நம்மைக் கெடுப்பதானாலும் சத்தியவசனந் தப்பலாகாது, சொன்ன சொற்சோர்வு சொல்லலாகாது, அன்னமும் பாலும் அவன்தரப்புசித்து, இன்னமும் ஒருவர்க்கிசையலாகாது, உண்டவீட்டுக் கிரண்டகஞ்செய்தல், உத்தமர்க்கு ஒருக்காலுந்தகாது, நீர்சொல்லிவந்த நீதிதப்பாது, போவதேவுமக்குப் பெரும்புகழாகும், எங்கட்குஞ்சத்தியம் என்றைக்குந் துணையாம், அவர்க்கு [illegible] படைத்துணை ஆனீரொன்று, எமக்கொருநாளும் இல்லைவிசாரம்வார்த்தைகொடுத்த வலிமைதப்பாது பார்த்திபனுக்குப் படைத்துணை போம்போம், எங்கட் கோர்வரம் ஈய்ந்திடவேண்டும், அஃதியாதெனில் அருச்சுனன் தன்மேல், கொடுங்கோபங்கொண்டு கொலைசெய்வேனென்று, சபதம்புரிந்து தரித்தனன் கன்னன் சாரதித் தொழிலில் சல்லியனும் கிருஷ்ணனும், வல்லவரொன்று மானிலந் துதிக்கும், அலகிலாநூல்கள் அறிந்தவல்லவர்கள், இருவரோ உவமை இருவரோ சம்மாம், பார்த்தசாரதியாய் பகவான் அமைந்தார், வள்ளலாங்கன்னனுக்கு வலவனாக, உம்மை அமைப்பான் ஒருவேளை துரியன், அப்படி நேர்ந்தால் அருச்சுனன்மீது, கண்ணருள் வைத்துக் காப்பதுன்கடனும், என்றுதருமன் இயம்பக்கேட்டு; சல்லியன் நகைத்துச் சந்தோஷங்கொண்டு, அஷ்டபாலரும் அவையமென்றேட, அசுரர் உதாகண்டத்தவர்களும் வாட, அமரர்க்கிருவர் ஜயங்கொண்டாட, அட்டதிக்கிலும் அட்டகிரியிலும், அட்டகஜங்கள் அணிநெற்றிதன்னிலும் துட்டகண்டகன் சுவேதவாகனனென்று, பட்டமும் கொடியும் பதித்த பற்குனனுக்குத், துணையாம் முரசத் துவஜனே கேளும்; சாரதிவளப்புக் கனையன்தனக்குத் கோர்விடமாட்டேன் தெய்வச்செயலால், நேரிடுமாகில் நீர்சொல்லும்வண்ணம். நடப்பதுசத்தியம் நம்புமென்சொல்லை, சத்தியசவுசத்தவசுந்தியில்; உத்தமராகும் உங்களைச்சூதில் ஜெயித்துவஞ்சித்த சுயோதனன்வாழ்வு, இரவிமுன்பனிபோல் எரிந்துபோகும், கேடுசெய் தோர்கள் கெட்டுப்போவார், பாடுபட்டோர்கள் பதத்திலிருப்பார் ஆடவர்திலகனே அரசுஞ்செல்வமும், பீடும்புகழும் பெறுவாய்சொன்னேன்; ஆதியிலிந்திரன் அயிராணியுடனே, நோதல்வருந்திச் செல்வமும்பெற்றான், அத்தன்மையைப்போல் அடவியில்நொந்தீர்: வித்தகர் யுத்தத்தில் வெற்றிபெறுவீர், என்று சல்லியன் இதம்பெறவுரைக்கத், தருமனும் சல்லியன் தன்முகம்நோக்கி, தேவேந்திரனும் தேவியும் பிரிந்து, வருந்தியகதையை வழங்கெனக்கேட்க, மத்திரதேசாதிபதி சொல்லுகின்றான்.

கேளும் பாண்டுபுத்திர சிகாமணியே முப்பத்து முக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும்அஷ்டவசுக்களும் கின்னரகிம்புருடர்கருடர்காந்திருவரும் சப்தரிஷிகளும் கூடிநிறைந்த சபையில் தேவேந்திரன் அணிமுடிப்பணியுடன் கற்பகமாலையிலங்க கடவுள் மணிபிரகாசிக்க காந்திருவர்தாங்கும் குடைகவிக்க, அரம்பையூர்வசி திலோர்த்தமை மேனகை-முதலிய அறுபத்துநாலுகோடி மாதருங் கட்டியங்கூற கைலாகேந்த அடைக்காய்கொடுக்க படிக்கம்பிடிக்க ஆலவட்டம்வீச சாமரைபோட பீலிக்குஞ்சந்தாங்க சுருட்டியெடுக்க ஆலாத்தி சுழற்ற மங்களம் லாலி சங்கீதம்பாட இங்கித பாதநாட்டியம் ஆடக் கொலுக்கொண்டிருக்குங்காலையில் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் கொலுவுக்குவரவும் (தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு செயலுமுண்டோ) என்பதுபோல் ஸ்திரீகளுடைய மையலால்மயங்கி நாட்டியம்பார்த்திருந்த வச்சிராயுதன் வந்த குருவைப்பார்த்து மரியாதைசெய்யாமல் மறந்திருக்கவும் சற்றுநேரம்நின்று கோபங்கொண்டு திரும்பிப்போகிய தேவகுருவானவர் தெய்வலோகத்தைவிட்டு மறைந்துபோகவும் (பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தாலெப்பொருளும் பேதியாதோ)என்பதுதோன்ற தேவேந்திரனுக்குச் செல்வமும் கல்வியும் சீரும் சிறப்பும் முககாந்தியும் நாளுக்குநாள் குறைந்துபோகவும் விசனமடைந்து எதால்விளைந்தது இதுவென்றுநொந்து, குருவை மரியாதைசெய்யாத குறையென்றுணர்ந்து, இந்திரனுலகும் சந்திரனுலகும் இயக்கருலகும் யக்ஷருலகும், அளகாபுரியும், அமராபதியும், பூமண்டலமும், நாகமண்டலமும், தேடிக்காணமல் தியங்கி மயங்கி, சத்தியலோகத்தைச் சார்ந்துபார்த்து; பிரமனைநோக்கி பெருமூச்சுவிட்டு, என்குருசுவாமியார் கோபித்துச் சென்றார் என்று, தன்னால்நடந்த தாட்சியும் சொல்லி, நித்தியசெபம் ஓமம் இயாகமவிர்ப்பாகம் இவைகளெல்லாம் நின்றுபோய்விட்டது எங்குந் தேடிப்பார்த்தேன் என் குருவைக்காணேன் இதற்கொருவழிசொல்லும், எந்தை

யேயென்று வணங்கிப்பணிந்த வச்சிராயுதனை, நோக்கி
ஆசானை இப்படி அவமதிக்கலாகாது உனது செல்வகர்
வத்தினால் உன்னை மறந்திருந்தா யென்று தன்மனத்தில்
ஒரு சூட்சியை நினைத்து இந்திரனைப்பார்த்து உனக்குப் பி
ரகஸ்பதிபகவான் கிடைக்கிறவரைக்கும் துவஷ்டா வெ
ன்னும் ஒருபெரியவர் வெகுளிமானசத்தால் பெற்றபிள்
ளையாகிய விசுவரூப னென்பவர் இருக்கின்றார் சேற்றில்
செந்தாமரைபிறந்ததுபோல்அரக்கர்குலத்திற்பிறந்ததோ
ஷமேயல்லதுவேதம்நான்கும்சாஸ்திரம் ஆறும்கலைஞா
னம் உபநிடதம் சித்தாந்தம்செபம்-தவம் - ஓமம் - யோக
ம்-இவையெல்லாந்தெரிந்த உத்தமர் அவரை ஆசாரியரா
கக்கொண்டு சகலகாரியங்களையும் நடத்திக்கொள்ளென்
று நான்முகன்சொல்ல, அந்தவார்த்தையை நம்பிப்பணி
ந்து விடைபெற்றுவந்து மூன்று தலையினையுடைய விசு
வரூபனைக்கண்டு உபசாரமாகத்தொழுது எனக்குக் குரு
வாக இருக்கவேண்டும் என்றுவருந்த இராக்ஷசன் தேவ
குருவாகிறதற்கு எத்தனைகாலம் தவம்பண்ணினாலுங்கிட்
டாது அப்பேர்ப்பட்டவனிடத்தில்இந்திரன்வந்துஅழை
க்கவே தேடியபொருள் நாடிவந்ததைப்போல் சந்தோஷி
த்து இதோவந்தேன் என்று தெய்வலோகத்திற்குப்போ
ய் சிலநாள் இருந்து தேவேந்திரன் ஒரு யாகஞ்செய்ய எ
த்தனித்தபோது குருவாகிய விசுவரூபன் தேவர்கள்பே
ரினால் கூச்சலிட்டு மந்திரஞ்சொல்லி அக்கினியில் அவிர்
ப்பாகம் விடுக்கும்போது தங்கள் இனமாகிய இராக்ஷத
ருக்கு இந்த அவிர்ப்பாகப்பாலன்சேர்ந்து திடவீரகாத்தி
ர தைரியபலங்க ளுண்டாகும்படியாகவும் தேவதைகள் ந
யிச்சுப்போகும்படியாக மனதில்நினைத்து வாய் முணமு
ணப்புடன் மந்திரஞ்சொல்லிய கள்ளக்குறிப்பை சதமக
ன் அறிந்து கோபங்கொண்டு தன்னினந்தன்னைக்காக்கும்
வேலி பயிரைக்காக்கும் என்னுமொழி தப்பாது செய்தா
னல்லவா இந்தச்சண்டாளக் குருக்களென்று தன்கையி
லிருக்கும் வச்சிராயுதத்தினால் அவன்தலையை வெட்டவு
ம் அவன்பெற்றிருந்த வரத்தின்பலத்தினால் ஒருதலை ஊர்
க்குருவியாகியும், மற்றொருதலை சிச்சிலிப்பட்சியாகியும்
இன்னொருதலை காடையாகியும், பறந்தோடிப்போக விசு
வரூபனாகிய குருவைக்கொன்ற பிர்மஹத்திவந்து கோப
தியைப் பிடித்துவருத்தவும் அதனால் துன்பம் அடைந்த
தேவராஜனைக்கண்டு தேவர்களெல்லாங்கலங்கி வாடி பூ
மியிலிராநின்ற மண்சலம் மரங்கள் ஸ்திரீகள் இவைகளை
ப்பார்த்து இந்திரன்சுமந்த தோஷத்தை நீங்கள் ஏர்த்துக்
கொள்ளவேண்டுமென்று இரங்கிச்சொல்லக்கேட்டு இந்
தநான்கும் தேவராஜனால்சுமக்கக்கூடாத அத்தியை நாங்
கள் எவ்விதந்தாங்குவோமென்று கேட்க பூமியில் சவர்
மண்ணாகவும் சலங்களில் நுரையாகவும் மரங்களில் பிசி
னாகவும் ஸ்திரீகளில் மாதவிடாயாகவும், சுமந்துகொள்ள
வேண்டியதென்று தேவர்கள் வேண்ட, நல்லது அப்படி
யே அழியாப்பெரும்பழியாகிய பிர்மஹத்திதோஷத்தை நா
ங்கள் வாங்கிக்கொண்டால் அதனால் எங்களுக்கு என்ன
லாபம் எப்படி அந்தப்பழியைத் தீர்த்துக்கொள்ளுவோ
ம் என்று கேட்கும்போது அமரர்கள் சொல்லுகின்றார்

கள். பூமியில்வெட்டியபள்ளம் தானாகத்தூர்ந்துபோகவும்
சலங்கள் இறைக்க இறைக்க சுரக்கவும் மரங்கள்வெட்டி
னால் துளிர்க்கவும் ஸ்திரீகள் கருப்பமாகிய பத்துமாதம்
வரைக்கும் கணவனைக்கலந்துவாழ்சுகமாக, அநுக்கிரகஞ்
செய்யவும் அப்படியே அந்தப் பிர்மஹத்தி தோஷத்தை நா
லுபங்காகப்போக்கி தேவேந்திரன் இந்திரலோகத்தில் அ
மரர்களுடன் அரசுபுரிந்து வாழ்ந்திருக்கு நாளையில் விசு
வரூபன் இறந்தசெய்தியை துவஷ்டாவாகிய தூயோன்
கேள்வியுற்று (கடந்துளோர்களும் கடப்பரோமக் கண்
மேற்காதல்) என்னும் வாய்மைக்கு நேராக மனம்வருந்
தி புத்திரசோக துக்கத்திலாழ்ந்து துன்பம் அடைந்து ந
மது குமாரனைக்கொன்ற ஆகண்டலனைவென்று பழிதீர்த்
துக்கொள்ள வேண்டுமென்று ஒருபுத்திர காமேஷ்டியா
கஞ்செய்து மந்திராலோபம் கிரியாலோபம் இல்லாமல்
பூரணாகுதிகொடுக்குங்காலையில் சிவந்தநெருப்புக்கம்பிக
ள் போன்ற தலைமயிரும் வடவாமுகாக்கினிவந்து குடியி
ருக்கும்கண்களும், எழுகடலின் ஆழமும் இதுதானென்
று அளவுகாட்டவந்தவாயும், எட்டுக்கிரியின் உயரத்தை
யும் பருமத்தையும் தெரிவிக்கவந்த தோள்களும், இருண்
டகறுப்பு இதுதான் என்னும்மேனியும், திண்ணிய யா
னைத்துதிக்கைகள் திரண்டுவந்தகால்களும், சூலம் வாள்
முதலிய ஆயுதங்களும்சுமந்து, ஒரு மஹாபுருஷன் அந்த
யாகாக்கினியிலிருந்து அண்டகடாகம் வரைக்கும் உயர்ந்
துவளர்ந்து எழுந்து தன்தந்தைக்குச் சாஷ்டாங்கதண்ட
ஞ்செய்து என்னை ஏர்ப்படுத்தியகாரியம் யாதென்று கே
ட்க அந்தமைந்தனைநோக்கி விருத்திராசுரனென்று பே
ரிட்டழைத்து உன்தமையனைக்கொன்ற இந்திரன் முதலி
யதேவர்களையும் விழுங்கி அந்தந் தேவேந்திரப் பட்டத்
தையும் மூவுலகத்தையும் நீயே ஆளுவை என்று ஆசீர்வ
சனஞ்செய்து அனுப்பிவைக்க விருத்திராசூரன் தேவரா
ஜனுக்குச் சத்துருவாகிக் கோபங்கொண்டு இரதமேறி
வந்ததை இந்திரன்கேட்டு தேவப்படைகளுடன் வெள்
ளையானையின்மேல் வந்த ஆகண்டலனும் விருத்திரனும்
எதிர்த்து சிற்சில அஸ்திர சஸ்திரங்களைத் தொடுத்துப்
போர்புரியும்போது தேவப்படைகளைத் திரணமாக எண்
ணி இரதம்விட் டிறங்கி இந்திரனையும் அவன் ஏறிவந்த
வெள்ளையானையையும் மற்றச்சேனையையும் வாரிவிழுங்
கித் திரும்பிவரும்போது சோம்பலுங் ஏப்பமும் தும்ம
லும் இருமலும் கோட்டாவியும்வந்து வாயைத் திறக்கவு
ம் வெள்ளையானை தேவேந்திரன் தேவர்கள் முதலிய இ
யாவரும் பூமியிலே குப்புற்றுவிழுந்தார்கள். கக்கின வஸ்
துவைக்காறியுமிழ்ந்து விருத்திராசூரன் போய்விட்டான்
இவர்களெல்லோருஞ்சாகாமல் சற்றுநேரம் ஆயாசந்தீர்
ந்து எழுந்து பார்த்தார்கள் இது எப்படி இருந்தது என்
றால் குமாரசுவாமியும் தாருகாசூரனும் யுத்தஞ்செய்கை
யில் கைலாயத்திலிருந்துவந்த இரண்டாயிரம் தேவகண
ம் பூதகணங்களையும் தாருகாசூரன் வாரிவிழுங்க அதைச்
சண்முகர்கண்டுநகைத்துவயிரக்கனையைவிடுத்து அவன்
வயிற்றைக்கிழிக்க அந்தவயிற்றிலிருந்து சாகாமல்தேவக
ணங்கள்குதித்துவந்ததுபோல் இருந்தது அப்பால்இந்திர

ன்முதல் இயாவருங்களைதெளிந்து எழுந்து அசுரனை வெல்ல நம்மால் ஆகாது என்று மேருமலைச்சாரலில் போய்ச்சேர்ந்து ஏகமுற்று இனிமேல் நமது தேவதத்துவமும் இந்திரதத்துவமும் நடவாது என்று ஒடுங்கியிருக்குங்காலத்தில விருத்திராசூரன் தனது புஜபலபராக்கிரமத்தினால் மூன்றுலோகமுந்தானே அரசுபுரிந்துவந்தான் அதைக்கண்டு மஹாரிஷீஸ்வரர்களெல்லாம் விருத்திராசூரனிடத்திற்குப்போய் அவனை ஆசீர்வதிக்கவும் அவன் எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஆசனங்கொடுக்கவும் அதன்மேலிருந்து ஓ: துவஷ்டாவுடையபுத்திர காமேஷ்டியாகத்தில் உதித்தபுத்திரரே, விருத்திரா சூரனே இன்றுமுதல் இந்திரன்முதலிய தேவர்கள்பேரில் யுத்தஞ்செய்யாது இருப்பையாகில் உனக்கு மிகுந்தபலமும் சகலநலமும் கைகூடும் யுத்தஞ்செய்ய நினைந்தால் அபலமும் சபலமும் உண்டாய் மற்ற இயாவும் குறைந்து போவதும் அன்றி நீயும் அழிந்துபோகும் காலமும் நேரிடும் அந்த உளவறிந்து சொல்லவந்தோமென்று உணர்த்தவும் கேட்டுபயந்து உடனே ரிஷிகளை வணங்கி இனி இந்திரன் பேரில் சண்டைக்குவருவதில்லை அவர்களுடைய இராச்சியத்தை அவர்கள் ஆளும்படியாகச் செலவு கொடுத்தேன் நான்கொடுத்தவரம் தப்புவதில்லைதேவதைகளின் திவ்வியாஸ்திரமுதலிய ஆயுதங்களினால் நான்சாகாமலிருக்கும்படியாயிவரம் தாங்கள் தயவுசெய்யவேண்டும் என்று கேட்க; அப்படியேவரங் கொடுத்து மகாரிஷிகள் விடைபெற்றுக்கொண்டுபோய் இந்திரனை அழைத்துவந்து எப்போதும்போல இந்திரபோகத்தில் இருத்தி சுகம்பெறவாழ்த்தினார்கள் இப்படி சிலநாள்சென்றபிற்பாடு நாளுக்குநாள் விருத்திரன் பலப்பட்டு சகலபுவனமுந் தானே கைக்கொண்டுஆண்டு இயாவர்களையும் மதிக்காமல் எல்லோரையும்வருத்தி இந்திரன்மேலும்பகைத்துவருவதைக்கண்டு இந்திரன் மனம்பொறுமல்பிர்மாவினிடத்திற்சென்றுவிசுவரூபனைகுருவாக்கிக்கொண்டதுமுதல்இதுவரையிலும்நடந்தசங்கதிகளையும்இப்போதுதான்படும்சங்கடங்களையும்விளம்பி வணங்கச்சதுமுகனானவர் இந்திரனை அழைத்துக்கொண்டு பாற்கடற்சயனராகியபரந்தாமன் உலகிற்போய் இருவரும்பணிந்து சொல்லக்கேட்டு மகாவிஷ்ணு திருவாய்மலர்ந்தருளினார்சகலபலங்களையும்சகலவரங்களையும்உடையவிருத்திரனைக்கொல்லுவதற்கு உன்கையிலிருக்கும்வச்சிராயுதம்மெத்தபழசானபடியால்சத்துருக்களின்பிராணனைவாங்கமாட்டாதுமற்றஎந்த ஆயுதத்தினும்அவன்மாளான்(ஆற்றவும்பழயதுன்அங்கைவச்சிர,மாற்றலர் உயிர்கொளும்வகையின்றுதலால்) வேற்றொரு வச்சிரம்வேண்டும் என்றுவிளம்பி உன்கையிலிருக்கும் வச்சிராயுதம்பழசு சத்துருவைவெல்லாதுபுதிதாகிய வச்சிராயுதம்வேண்டியது அதற்கு ஒருயுத்திசொல்லுகின்றோம் கேளும் இந்திரனே அதாவது,பாற்கடல்கடையும்போது அமரர் அசுரர் இயாவரும்கொண்டுவந்த ஆயுதக்கூட்டங்களைக்கண்டு கலகம்விளையும் என்றுததீசிமகாமுனிவசத்தில் ஒப்பிவைத்துவரும்படியாய்ச்சொன்னோம் அப்படியேவைத்துவந்து அமுதங்கடைந்தார்கள்-அசுரர்களுக்கு அமுதம் அகப்படாமையால் வருந்திகோபங்கொண்டு ஆயுதங்களைமறந்துபோய்விட்டார்கள் தேவர்கள் அமுதம்புசித்தசந்தோஷத்தால் அவர்களும்மறந்துபோய்விட்டார்கள் அந்த ஆயுதங்களை வெகுகாலம்வைத்துங் காப்பாற்றிய ததீசிமகாமுனிவரானவர் எடுத்துவிழுங்கி விட்டார் அவைகளெல்லாம் அவருடையமுதுகெலும்பைப்பற்றிற்றிரண்டுயிருக்கின்றன அந்தமுனிவரானவர் (அன்பிலாரெல்லாந் தமக்குரிய அன்புடையர் என்பும் உரியபிறர்க்கு, என்பதுதோன்றலோகோபகாரி ஆகையால் அவரிடத்தில்நீர்போய்க்கேட்டால்கொடுப்பார் அந்த எலும்பைவாங்கிவச்சிராயுதம் பண்ணிக்கொண்டு விருத்திராசூரன் சமுத்திரக்கரையோரத்தில்வரும் இரணியவேளையில் எதிர்த்து என்னைநினைத்து ஒரு திரணமேனும்விடுப்பாயாகில் அவன் இறப்பான் என்று மால்சொல்லக்கேட்டு அடிவணங்கிப்பணிந்து விடைபெற்றுக்கொண்டுததீசிமகாமுனிவரைக்கண்டு தாளிணைப்பூண்டுஎங்களையாண்டு இரட்சிக்கவேண்டும் ஈஸ்பரமகாமுனியே என்று இருகரத்தையும்நீட்டிக்கொண்டு இரக்க அந்தமகாமுனிவர் நாய்கமதென்ப, நரிகமதெனப்பிதா, என்றும் எரியெனக்கென்னும், புழுவோ எனக்கென்னும், இந்தமண்ணுஞ் சரியெனக்கென்னும், என்றிருப்பதிலும் நிலையில்லாத இந்த இயாக்கைபலருக்கும் உபயோகப்படும் பொருட்டு அழிவதே உத்தமம் என்று யோகத்திலிருந்து ஆன்மாவைப் பிரிக்கவும் உடனே தேவதுந்துமிமுழக்கத்துடன் சுயம்பிரகாசச்சோதிவானுலகத்திற் கலக்கவும் அந்தமகாமுனியினுடைய முதுகெலும்பையெடுத்து விசுவப்பிரமனிடத்திற்கொடுக்க அதைவச்சிராயுதமாகச்செய்து ஆசீர்வதித்து தேவேந்திரன்கரத்தில் அளிக்கவும்வாங்கிவைகுந்தநாதன்சொல்லியகாலம் வருகிறவரையில் காத்திருக்கவும் ஒருநாள் விருத்திராசூரன் சமுத்திரக்கரையோரத்தில் வரக்கண்டு அமரர்களுடன் வெள்ளைவாரணன் எதிர்த்து யுத்தஞ்செய்து புதிதாகியவச்சிராயுதத்தைப் பிரயோகஞ்செய்ய அதற்கு யிடுபடாமல் இளைத்து ஓடிமிசவும்வாடி ஆழியில்மூழ்கிமறைந்தான் வச்சிராயுதமுங் கூடவே தொடர்ந்துதேடிக்காணுமல் நாணித்தியங்கவும்கண்டுதேவர்கோன்வாடி மண்பொதுத்தந்தையிடத்திற்சென்றுவாரிதியில் அரக்கன்மறைந்துபோனதைச்சொல்ல மலரோன்கேட்டு வாசவனைநோக்கிஸ்ரீமன்னாராயணமந்திரத்தை ஏன் பிரயோகிக்க இல்லை என்று கோபித்து நல்லது முக்குணமும்முத்தொழிலும் முப்பொருளு மாகிய மூலகாரணனென்னும் முதற்பொருளில் அடிமையாகிய அகஸ்தியனைக்கண்டு வணங்கினால்உமதுகாரியங்களெல்லாம் அநுகூலமாகுமென்று வெண்டாமறையோன் விளம்பக்கேட்டு அக்கணமே அகஸ்திய ரிடத்திற்கு வந்து வணங்கி அடிபணிந்துசிறக ஆசீர்வதித்துத் தேவேந்திரமகாராஜனே இவ்வளவுதூரம் வந்தகாரணம் இயாது என்று குறுமுனிகேட்க வேலாவலயத்தில் விருத்திராசூரன்மறைந்துபோனான் தேவர்கள்முதலிய இயாவரும் இயானும் மெத்தவருத்தமுறுகின்றோம் அந்தஅசுரனைக்காண்பிக்கவேண்டும் கருணைக்கண்ணனேஎன்றுதொழவும்

நன்றென்று இசைந்து கயிலையங்கிரியில் எழுந்தருளிய கடவுளையும் அவரால்விளைந்த திரிபுரதகனுக்கினி மன்மததகனாக்கினி வடவாமுகாக்கினி இவைகளைமனதில்நிறுத்தி கண்ணுறுதல் அருளினால்கடலைக்கடுகளவாகக் கரத்தினில் ஏந்தி உட்கொண்டருளினர் குருமாதவர் அதுகாலத்தில் சமுத்திரம் நீர்வறழ்ந்து மகரமச்சமுதலிய பொடிமீன்களெல்லாம் குன்றுகள்மலைகளுடன் குவிந்துமயங்க ஓர்மலைச்சிகரத்தில்விருத்திராசுரனிருந்துகண்களைமூடிக்கொண்டு யோகத்திலிருக்கக்கண்டு வச்சிராயுதம் அவனைமாய்த்துவிட தேவர்கள் பாரிஜாதமலர்மாரிதூற்ற மாயவனை வாழ்த்திவந்த தேவேந்திரனை மண்ணுலகுள்ளோர் வாழ்த்தித்துதிக்க பிர்மஹத்திதோஷம்பிடித்து அழகுமுதலிய செல்வமும் இழந்துசித்தியையும் பதியையும்நீங்கி தபோபலங்களும்வரப்பிரசாதங்களும்குறைந்துமனத்தில்பயங்கரமும் அச்சமும் உண்டாய் ரூபிகரித்து வரும் பிர்மத்தியைநோக்கமாட்டாமல் ஓட்டமெடுத்து ஈசானியதிசையிலிருக்கும் நிர்மானிடதமென்னும் மலையிற்சேர்ந்து மிகுந்த துக்கத்துடன் இந்திரன் இருக்க தெய்வலோகத்திற்கு அரசன் இல்லாமல் ரிஷிகள் முதலியதேவர்கள் இயாவரும் வருந்தி இந்திரனைக்கண்டு எங்களைவிட்டுப்பிரிந்திருக்க எப்படிமனங்கொண்டீர் அரசில்லா நாடுகாடென்பது அறிந்ததில்லையா ஐயனேவாரும் அரசுபுரியும் அடியேங்களுக்காருமென்று இயாவர்களும் அழைக்க அந்தவார்த்தைக்கு உத்தாரஞ்சொல்லாமல் ஊமைபோலிருந்து பிர்மத்தியைக்கண்டு மிகவும் நடுக்கமுற்றிருக்க இந்திரனை அழைக்கவந்த ரிஷிகள்முதல்தேவர்களெல்லாரும் ஏதேது இனி நமக்கு இவர் உதவமாட்டார் என்று ஆலோசித்து ஆவைப்பிரிந்த கன்றுபோலும் தாயைப்பிரிந்த சேயைப்போலும் மழையைப்பிரிந்த பயிரைப்போலும், உயிரைப்பிரிந்த உடலைப்போலும், துக்கமடைந்து பட்டமில்லாத அரசு பாழென்றுணர்ந்து கேளுந்தருமபூபதியே உங்கள் பாட்டனாராகிய ஆயுமகாராஜாவின் புத்திரன் நகுஷமகாராஜன் நூறு அசுவமேதயாகஞ்செய்து இந்திர பட்டத்துக்கு எதிர்பார்த்திருப்பவர்இடத்திற்கு தேவர்கள் முதலியபேர்களெல்லாரும்வந்து உபசரித்துதேவராஜனாக இருக்கவேண்டுமென்றும் எங்களுடைய தபோபலன்களை எல்லாம் உமக்குக்கொடுத்தோமென்றும் வாக்குதத்தஞ்செய்து பிரார்த்தித்து அழைத்துவந்து சகலநலமும்செல்வமும், அழகும் உண்டாக சிங்காதனத்தில் ஏற்றி தேவகிரீடபட்டாபிஷேகமும் செய்துவைத்து முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் அமரர், சித்தர்; அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிம்புருடர், காந்திருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், உரகர், முனிவர், ஆகாயவாசிகள்; போகபூமியோர், இவர்களெல்லோரும் வணங்க அரம்பாஸ்திரீகள் இயாவரும் பாதநாட்டியஞ்செய்ய கற்பகப்பூங்காவனத்திலுறைந்து அரசுசெலுத்தி வருநாளையில் பழையதேவேந்திரனைப்பிரிந்திருக்கும்இந்திராணி தன்னாயகன் செல்வமிழந்ததன்மையைநோக்கி மனஸ்தாபம் அடைந்து அநேகம்ஸ்திரீக் கூட்டங்களுடன் வனங்களில் உலவிமயில் போலவருஞ் சாயலைக்கண்டு (மோகத்திற்கோர்முடிவுமுண்டாங்கொலோ) மோகத்திற்குமுடிவில்லையென்பது தோன்ற இராவணன் அழியுங்காலம் சீதையை நாடினனென்பதுபோல, நகுஷன் ஆசைகொண்டு சந்திரனைக்கண்டபேர்கள் தாரகைகளைநோக்காத தன்மைபோல மற்றஸ்திரீகளின் பேரிலிருக்கும் ஆசையைவிடுத்து தேவதூதனைநோக்கி இந்திராணியை அழைத்து வாருங்களென்று அனுப்பினன் இவர்கள்போய்புலோம்சையைப்பார்த்து வணங்கி இந்திரன் அழைத்துவரச்சொன்னானென்று சொல்லக்கேட்டுதேவகுருவினிடத்திற் சென்று திருவடிமலரைப்பணிந்து ஐயா! என்னாயகன் உயிருடனிருக்க இப்போதுவந்த இந்திரன் என்னைவிரும்பி அழைக்கின்றதாக இவர்கள் சொல்லுகின்றார்களே இதற்கெப்படியென்று கண்ணீருதிர்க்கவும்கண்டு குருவானவர் உன்பதிவிரதாதனத்திற்கு பழுதுவராமல் காக்கிறேன், நீர்கண்கலக்கப்படவேண்டாம் அம்மா என்று தைரியஞ்சொல்லி தூதனைநோக்கி அப்பா நகுஷமகாராஜன் மிகவும்புத்திசாலிஆகையால்இந்திராணியை அழைப்பதுராஜநீதிஅல்லவென்றுநான்சொன்னதாகச்சொல்லுங்களென்று அனுப்பவும்அதைக்கேட்டு நகுஷன் மெத்தக் கோபங்கொண்டு கூடாதுகைப்பிடியாகக்கொண்டு வரவேண்டியது என்று தூதனையனுப்பவும் இந்திராணிபார்த்துமுறடனோடெதிர்க்கலாகாது இதவசனத்தினால்ஜயிப்பதேயுத்தி ஐயாஎனக்குவிடைகொடும் நான்போய்வார்த்தைபேசிநகுஷனைமகிழச்செய்து வருகின்றேன் என்றுசெலவுபெற்றுக்கொண்டு அரம்பாஸ்திரீகளுடன்கூடிஅரண்மனையை நாடி வேங்கைப்புலிக்கு எதிர்ச்செல்லும் பெண்மானைப்போலவெருண்டு மருண்டு நகுஷன்சபைக்குப் போகும்போதுஆயுவின்குமாரன் இந்திராணியைஎன்றைக்குக்காண்பேனென்றுஇரவும்பகலும்ஏக்கங்கொண் டிருந்தவனுக்குகண்ணெதிரில்கண்டதுகல்லாதான்கற்றநல்விபோலும்,காணாதான்கண்டசெல்விபோலும்கண்டுசகலசாம்பிராச்சியம்பெற்றவனைப்போலாகி குறுநகைகொண்டு தேவர்கள்முகத்தைப்பார்க்க அமரர்களெல்லாம் சுவாமி பராக்கு தங்களிஷ்டப்படிக்கு சசிதேவிவந்துவிட்டாளென்று சாற்றவும் சமீபத்தில்வந்துநின்று புதிய இந்திரனைக்கண்டு என்னாயகன் உயிருடனிருக்க என்னை அழைப்பதுதருமமா; நீர்பெருமையடைந்த தேவப்பட்டம்பெற்றும் சிறுமையிற்சிந்தைசெலுத்தப்போகுமா இன்னமும் நன்னீதியுடன் நடப்பீராகில் அளவிறந்த கீர்த்தியைப்பெருவீர் தகாதபோகத்தை விரும்பி சுகாதியோகத்தை அநேகம்பேர் இழந்துதாழ்ந்து அழிந்துபோன் தன்மையைநீர்கேட்டறியீரா நற்குலத்திற் பிறந்தும் நற்றவங்களிழைத்தும்அற்பத்திற்குஆசைப்பட்டுஆயுள்மாய்ப்பரோஆயுவின்தவத்திலுதித்த அரசேகேளும்மலைகளின்சிறகையரிந்தவச்சிரபாணிவிருத்திராசுரனென்னும்விறலோனைக்கொன்று பிர்மத்திதோஷம்பிடித்துஅதைத் தவிர்த்துகொள்ளாத்தவம்பண்ணப்போயிருக்கின்றார்அந்த இந்திரன்பழிதீர்த்துக்கொண்டு இவடத்திற்கு வராதிருப்பாராகில் எங்களை எல்லாங்காத்து இரட்சிக்குங்கடமை உமக்கேயல்லது மற்

றியாருக்கு உண்டாயிருக்கும் அப்படியிருக்க உமக்கு நான்புறம்பல்லவே என்னை இந்தச்சபையில் அழைத்தது விபகாரமா! தருமமா என்றுசொல்லிய இனிய நயவசனங்களைக்கேட்டு நகுஷன் உடம்பு அடங்காமகிட்சிகொண்டு ஓ, ஓ, பொன்னுலகிற்சிறந்த இந்திராணி தேவியே பழையஇந்திரன்பிழைத்து வருவதும்வாராமற்போவதுந்தெரிந்துகொள்ளவேண்டுமென்றுஉம்முடையஉள்ளம்விரும்பியிருப்பதினால் அதுகளைவிசாரித்துக்கொண்டுஎன்பேரில் கருணைகூர்ந்து என்றைக்கிவரும்படியாக உத்தரவுசெய்கின்றீரோ அன்றைக்கு உம்முடன்கூட வருகிறேன் என்று சகல உபசாரமுஞ்சொல்லி மரியாதைசெய்து செலவுகொடுக்கப்பெற்றுக்கொண்டு இராகுவினால் விடுபட்ட சந்திரனைப்போல் சபையைவிட்டுத்திரும்பி அரம்பாஸ்திரீகளின் கூட்டத்துடன் பிரகஸ்பதிபகவானிடத்தில் வந்து வணங்கி தான்போனதும் வசனித்ததும் அவன் சந்தோஷப்பட்டதுஞ்சொல்லி குருவினுடைய ஆசீர்வசனமும்பெற்று தன்புருஷனை நீங்கியிருக்கும் ஆறுத்துயரத்தினால் நிடதகிரிக்குப்போய் தேவேந்திரனைக்கண்டு தீர்க்கதண்டஞ்செய்து தேவர்கைக்கொண்ட பாக்கியமெல்லாம் நகுஷன் கைக்கொண்டு ஆளுகின்றான் என்றும் அவனால்தனக்குவந்த விபத்துக்களெல்லாந் தெரியப்படுத்தி விசனப்படும்போது இந்திரன் இந்திராணியைநோக்கி செல்வம் சீர் சிறப்பையும் உன்னையும் என்னையும் பிரித்துவிட்டது பிர்மஹத்திதோஷமே அன்றி வேறல்ல அந்தத்தோஷமாத்திரம் என்னைப்பிரியாதிருக்கின்றது இன்னங்கொஞ்சநாள் மனம்பொறுப்பையாகில் நான் தெய்வலோகம்வந்து சேருகின்றேன் நீபோவென்று சசிதேவியை அனுப்பிவிட்டு திருத்துழாய் தரித்திருக்குந் தீனதயாளுவே என்குறையகற்றுங் கோவே என்றிவினையகற்றுந்தெய்வமே, கோவிந்தா கோவிந்தா, என்றுகூவிக்கொண்டு வைகுந்தமாநகரஞ்சேர்ந்து அநந்த சயனனாகிய ஆதிபகவானுடைய அடியிணை மலரைத் தொழுது உலக அபகாரியாகிய விருத்திரனைக்கொன்று ஸ்ரீலோகத்திற்கும் பொன்னுலகிற்கும் உபகாரஞ்செய்த உமது அடிமையாகிய எனக்கு இந்தப் பிர்மஹத்தி நீங்காதிருக்கவும் என் செல்வம் என் பத்தினிமுதலிய அரசாட்சியாவும் இன்னொருவன்கைக்கொள்ளவும் நான் ஒண்டியாய் தரித்திரம் அடைந்துதிரியவும் தேவரீர்கடாக்ஷம் இப்படியிருந்தால் நான் செய்வதென்னவென்று நின்று சிந்தித்து வந்திக்குங்காலையில தேவதேவன் திருவாய்மலர்ந்து மேகவாகனா கேளும் உன்னை வருத்தும் பிர்மத்திதோஷம் நீங்குவதற்கு இந்திராணி சமேதமாகயிருந்து அயமேதமென்னும் ஒருயாகஞ்செய்வையாகில் தோஷமும் நீங்கி வாழ்வும்பெறலாம் என்று மகாவிஷ்ணு அருள்செய்ய அப்படியே சில தேவர்களுக்கும் ரிஷிகளுக்குந் தெரிவித்து இமோற்பர்வதச்சாரலில் இந்திராணியுடனிருந்து அந்த யாகத்தைமுடிக்க அதனாலே பாபரகிதனாகி பயந்தீர்ந்து சகலதேவர்களுடனேயும் தெய்வலோகம்போய்சசேரவும் சம்பத்தும் அழகும் பலமும் இந்திரபதமும் இதுகள் கூடிவாராமல் பிர்மத்திபிடித்த மூகமென்று சொல்லும்படியாயிருப்பதினால் நகுஷனுடைய சுந்தரத் தன்மைக்கு இவன் ஈடுபடாமல் மனவிசாரம்பிடித்து வெகுதுக்கத்துடன் ஒருவருக்குந்தெரியாமல் ஈசானதிசையிலிருக்குஜலநதடாகத்தில் நிறைந்ததாமரை நாளத்திலுட்புகுந்து தபசுசெய்துக்கொண்டிருந்தான் அப்படி இருக்குநாளில் தேவேந்திரன் இறந்துபோனானென்றும் இந்திராணிமுதலிய போகங்களையும் துறந்து போனானென்றும் வெகுநாளாய்ச்சுமந்த ஸ்தூலதேகத்தை மறந்துபோனானென்றும் கண்களிற்காணாமல் பறந்துபோனானென்றும் இப்படி பற்பலவிதங்களாகப் பேசிக்கொள்ளும் வகையை வாசவன்தேவிகேட்டு மனந்திடுக்கிட்டு வாய்புலர்ந்து விசனமென்னும் வாரிதிமடுவிலாழ்ந்து இந்திராணி கலைவாணியின் இணையடிபோற்றி விரதம் இழைக்க அந்தத்தேவியொரு ஸ்திரீரூபமாய் எதிரில்நின்று சுரேந்திரன் மனைவியேகேளும் உன்னாயகன் பிர்மஹத்தியின்பீடிதத்தினால் பெருமையும்புகழும் பிரகாசமுங்குறைந்து எவர்களுக்குந்தெரியாத ஈசானமூலையில் இருக்கும் ஒருபொய்கையுள் நிறைந்ததாமரை நாளத்தியில் அணுரூபமாகத்தவசுசெய்கின்றான் நீபடும்விசனத்தினால் இரக்கமுற்றுவந்துசொன்னேன் என்பின்வருவையாகில் இப்போதே காண்பிப்பேன் என்றுரைத்த வாக்கியங் கேட்டு மனங்குளிர்ந்து வருகிறேனென்று தொடரவும் அழைத்துக் கொண்டுபோய் அந்தப்பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரைத்தண்டின்மத்தியில் உண்டாகியசிறிய துவாரத்தில் புகைரூபமாகப் புகுந்துபோய்த்தேவேந்திரனைக்காட்டி அந்தத்தேவி மறைந்துபோகவும் இந்திராணி இந்திரனுடைய கால்மேல்விழுந்து கதறியழுது விசாரப்படவும் ஆச்சரியமுற்று நானிருந்த இந்த ஸ்தானத்தை நீயெப்படியறிந்து வந்தாய் உனக்கு எவர்கள் தெரிவித்தவர்கள் என்றுவினவும்போது தேவரீர் இறந்துபோன தாகவும் துறந்துபோனதாகவும் வெகுசனங்கள் பற்பலவாறுகப் பேசிக்கொண்டார்கள். அதைக்கேட்டு மனந்தாளாமல் கலைவாணியைக்கருதி விரதம் இழைக்க, அந்த அம்மன் அழைத்துவந்து காட்டி எனதுதுன்பத்தை நீக்கிச்சென்றாள். நான் இன்புற்று இவடம்வந்தேனென்னவும் கேட்டு மகிழ்ந்த நாயகனைப்பார்த்து இந்திரபட்டாபிஷேகத்தைவிட்டு ஏன் வந்துவிட்டீர் என்று சசிதேவிகேட்க, சசிநாதன் சொல்லுகின்றான், வாராய்பெண்ணே! நாமிருவருங்கூடிச்செய்த அயமேதயாகத்தினால் விருத்திராசூரனைக் கொன்ற பிர்மத்திதோஷம் நீங்கியதென்று பேர்மாத்திரமேயொழிய மயக்கமும் தியக்கமும் மனதுறு நடுக்கமும் என்னைவிட்டு நீங்கவில்லை அரசும்வாழ்வும் அழகும் பலமும் ரிஷிகளும்தேவர்களும் கொடுத்ததபோபலம் நகுஷனைச்சேர்ந்து அரசுபுரிகின்றான் அவைகள் இயாவும் என்னிடத்திற்குவருமாகில் அப்போது நான் யோக்தேவேந்திரனாகுவேன் இல்லாவிட்டால் என்கதி இவ்வளவுதான் என்றுசொல்ல அவைகள் தேவரீருக்குக் கிடைக்கும்படியாகிய உபாயஞ்சொல்லும் நான் அப்படியே முடிக்கிறேனென்று இந்திராணிவிளம்பக்கேட்டு நல்லது பெண்ணாயகமே உன்பேரில் இச்சைகொண்டு தூது அனுப்பினா

யென்று முன்சொல்லி யிருக்கின்றையே அதை அனுசரித்து சப்தரிஷிகள் தாங்கும் இந்திரவிமானப் பல்லக்கில நகுஷன் ஏறிவரப்பண்ணினல் அவனுடைய தபோபலமெல்லாங்குறையும் என்னிடத்தில்வந்து நிறையும் இது உன்னால்வரவேண்டிய செல்வமென்று உரைத்து விடைகொடுத்து எப்போதும்போற் றவஞ்செய்திருந்தான் இப்பால் இந்திராணி செலவுபெற்றுக் கொண்டு தெய்வலோகம்போய்ச் சேர்ந்துதானே வலுவிற் றூதுகளையனுப்பி இந்திராணி உமக் கியாபகஞ்செய்யச் சொன்னளென்று சொல்லவே நான்பிழைத்தேன் நான்பிழைத்தேன் மறவாமல் இவ்வளவு தயவை வைத்திருந்தது எனது பாக்கியமே, எனது நற்காலமே என்றுமகிழ்ந்த செய்தியைத்தெரிந்துக்கொண்டு நாலிடைபுகாத ஸ்தனத்தையுடைய இந்திராணி நகுஷன்னெதிரிற்போய்நின்று இன்பமொழியும் நல்லொழுக்கமும் நன்னிதியும் நற்கீர்த்தியும் பரிசுத்தவாய்மையும் அழகும் தங்களைப்போல் எங்குமில்லையென்றும் நீரன்றழைத்தபோதே எனக்கு இச்சையுண்டு ஆனால் ஸ்திரீசனங்களாகப் பிறந்த பேர்களுக்கு லச்சையுண்டு கொள்ளாமோக மிருந்தாலும் புருஷரிடத்தில் வாய்விட்டு விள்ளார்கள், இவ்வுலகத்தில எனக்குப் பணிப்பெண்ணுகிய பேர்களெல்லாரும் இன்பசுகத்தை அனுபவிக்கும்போது நானொருத்திதானே துன்பத்தை அனுபவிப்பது உம்மைவெறுக்க வேண்டியதில்லை ஆரால் கெட்டாயென்றால் நோரால்கெட்டேன் என்பது தோன்ற தானேவருஞ் சீதேவியை நானே காலாலுதைத்துத் தள்ளிவிட்டு வந்தேன் இந்திரன்வந்து விடுவானென்று எண்ணிப்பார்த்தேன் இதுவரையிலும் வரக்காணேன் ஆயினும் இன்னங்கொஞ்சநாள் பார்க்கவேண்டும் அதுவரையிலும் என்நாயகன் சப்தரிஷிகள்சுமக்கும் பல்லக்கிலேறிப் பவனிவரப் பார்ப்பேன் அப்படியே நீரும் அந்தத் தேவயானத்திலேறிப் பவனிவரும்படியாகவும் என் கண்களால் நோக்கவும் விருப்பமுற் றிருக்கின்றேன் - என்று கபடமாகச்சொல்லு மொழியானது நகுஷனுடைய காதுகளில் தேவாமிர்தம் வாரிப்பொழிந்த தன்மையைப்போல் இருக்கக்கண்டு இன்னஞ்சிலநாளில் அப்படியே வருவேன உமது அரண்மனைக்கு இப்போது நீர்போமென்று அனுப்பிவிட்டு மிகுந்தசந்தோஷத்துடன் புன்னகை கொண்டு சப்தரிஷிகளையும்வரவழைத்து இயான் இந்திரலோகசிறப்பையும் அரண்மனை வீதிகளையும் பார்க்கவேண்டியிருப்பதால் நீங்கள் தாங்கப்பட்ட பல்லக்குகொண்டு வாருங்கள் என்று உத்தரவுசொல்ல, அப்படியே கொண்டுவந்துவைத்தார்கள்- அந்தத் தேவயானத்தில் ஏறிக்கொண்டு சிங்காரவீதி தேவர்கள்வீதி, மண்டபவீதி, மலர்வாவி, தேவஸ்தலவீதி, சித்திரவீதி, கோபுரவீதி, அரம்பையர்வீதி, ஆவணவீதி, தேரோடும்வீதி, கிரயவீதி போகமாநகரம், புண்ணியநகரம், மடாலயநகரம், மாதவநகரம், வீரமாநகரம், வெற்றிநகரம், காமதேனு சாலை, கற்பகச்சோலை, வெள்ளையானைச்சாலை, வெண்பரிச்சாலை அமுதச்சாலை, அறஞ்செயுஞ்சாலை, இந்திராணி அரண்மனை இவைகள் முதலிய எட்டுத்திக்கும் சப்தரிஷிகளும் தாங்க உலவிவருகையில் நகுஷனுக்கு தபோபலம் ஊக்கம் தைரியம் அழகு இதுகளெல்லாம் நாளுக்குநாள் நசிந்து போகவும் பழய இந்திரன்செய்யும் தவத்தினால் சகலபலமும் நலமும் விர்த்தியாகிவரவும் இப்படி நடந்துவருநாளையில் ஒருநாள் அகஸ்தியமுனியானவர் பெரியோர்களை வருத்தும் பிரபல அதிசயங்களை எல்லாங் கேள்வியுற்று பொன்னுலகத்திற் பொருந்திய நகுஷனை நோக்கவரவும் உடனேயெழுந்து சாஷ்டாங்கதண்டஞ்செய்து அர்க்கியபாத்தியஆசமனீய சந்தனபுஷ்பதாம்பூல தீபதூபஉபசாரங்களும் புரிந்து உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளச்செய்து அவருடைய ஆசீர்வசனமும்பெற்று அரியாசனத்திலிருந்து க்ஷத்திரியர் அறியக்கூடாத வேதரகசிய மந்திரங்கள் சிலவற்றைப் பொருளுதவியினால் பிராமணரிடத்தில் கற்றுக்கொண்டு கர்வம் அடைந்திருந்த நகுஷனானவன் அகஸ்தியரை இன்னரென்று அறிந்தும் மறந்து எவர்களும் கேட்கும்படியாக அந்த மந்திரத்தைச் சொல்லி இதற்குப்பொருளுரையும் குருமுனியே என்று வினவ, அவருக்குக்கோபம்வந்து குலுங்கநகைத்து உணரக்கூடாத பரமரகசியமந்திரத்தைத் தெரிந்துக்கொண்டதல்லாமலும் என்னைப் பயன்சொல்லச் சொல்லிப்பயமில்லாமலும் கேட்கத்தகுமா பஞ்சைபாகிய நீயென்று உறுக்கிப்பார்க்கும்போது நகுஷன்சீறி ஆத்மார்த்தமாக யாவர்களும் மோக்ஷம் அடைவதற்கே விதித்திருக்கும் மந்திரத்தைநான்கேட்கவும் கற்கவுங்கூடாதென்று கற்றுணர்ந்த நீர் ஞானமில்லாமற் கழறிய மொழிக்குக் கலகலவென்று நகைப்பதேயன்றி வேறொன்றையுங் காணேனென்று நிந்தித்து சற்ப சற்பசீக்கிரம்இடம்விட்டுப்போம்போமென்று நாகப்பாம்பைப்போற் சீறிக்கூறக் கேட்டுதடாகல் அடங்கலுகுடங்கையி லொடுக்க அருந்திய அகஸ்தியர்வடவைக் கனல்போன்ற விஷங்களைக் கக்கும் அஷ்டமாநாகத்தினும் மேற்படச்சீறி அடாபிரஷ்டா மூடனே ஒன்றுமறியாமல் முழுமையும் அவமானம்பேசினய்சப்தரிஷிகளையுந்தாங்கும்தேவயானத்தைச்சப்தமுனிவர்களுந்தாங்க ஏறிநடத்தினுய் அன்னத்தின்நடைபோல் நடந்தகாக்கை தன்னடையுங் கெட்டுவருந்திய தன்மையை அறியாயா சின்னத்தனமுடைய உனக்குப் பெரியதனம்பொறுக்குமா ? குரங்கின்கைப் பூமாலையைப்போல் பெரியோர்களின் மனங்குறையச் செய்தனையே நிறையாத்தவஞ்செய்தநிஷ்டூரா என்று எழுந்து இடதுகாலினல் நெற்றியிலுதைத்து ஆறுங்கோபத்துடன் மறுபடியுஞ் சொல்லுகின்றார் அறிவில்லாத அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோ என்பதைப்போல் அடர்ந்த ஆரணியமலைச்சாரலில் உன்வாக்கில்வந்த சற்பவென்னுமொழிதப்பாமல் ஒப்பில்லாத மலைப்பாம்பாய் விழக்கடவையென்று சபிக்கவும் உடனே தேவர்கள்முதலிய யாவரும்பயந்து நடுங்குங்காலையில் புதிய தேவேந்திரன் நிலத்தில்புரண்டெழுந்து உரமுங்கரமும் சிரமும் காலும்மேலும் பதறிநடுங்க உதறியொடுங்க விரைந்து ஓடிவந்து பொன்னிறச்செய்த விரகண்டைபொருத்த புதியமலர்போன்ற பொதிகைமுனியின் திருவடிபைத்தனது

பூமுடியிற் சூட்டிக்கொண்டு அடியேன்தெரியாமல் அக்கி
யானத்தினாலும் வினைச்செயலாலும்வருந்தி, வந்தசெல்
வங்களைவிடுத்து மலைப்பாம்பாகச்சாபம்பெற்றேன் என
க்குநேரிட்ட அரிதாகிய தவக்குறைச்சாபம் விமோசன
மாகுங்காலம் அருள்செய்யவேண்டும் விந்தகிரியின்கர்வ
ம் அடக்கியவிமலனே என்று இருகரங்களையும் நீட்டி இ
ரங்கவும். எள்ளகர் அறிவுடையார் என்பதுபோலும் சி
றுமைகண்டவர் பெருமைகண்டல்லது தேறார் என்பதற்
கிணங்க கும்ப சம்பவன் நினைந்து இரங்கி ஜீவகாருணிய
முடைய மேதவன்கொதித்துக் காய்ந்த நீர்போல்மனங்கு
ளிர்ந்து தனது தாளிற்றலை முடிசூட்டிய நகுஷனை நோக்
கி காலகத்திலிருக்கும் காடி-புலி-யாளி-சிங்கம் யானைமு
தலாகிய மிருகபலத்தினையுடைய செந்துக்களும் உனக்
குண்டாகும் அரிதாகியபசிக்கு ஒளிதாகிய உணவாகக்க
டவது, என்று இயம்பி இப்படி, நீ மலைப்பாம்பாக வாழ்
ந்திருக்குங் காலத்தில் திங்கள்குலமாகிய உங்கள் குலத்
தில் உதிக்கும் தங்கம்போன்ற தருமராஜன் ஒருகாரணத்
தினால்வனத்தில்வந்து உன்னைப்பார்த்துவசனிக்கும்போ
து நெருங்கியசாபம்நீங்கி சுவர்க்கம்அடையக்கடவைஎன்
று அனுக்கிரகமாக அருள்செய்யவும் உடனே முனிகூறி
யசாபத்தின்வண்ணம் மலைப்பாம்பாகி உடனே விழுந்தா
ன் நகுஷன்மலையடிவாரத்தில் அகஸ்தியர் பொதிகையிற்
சேர்ந்தார். இப்பால் ரிஷிகளுந் தேவதைகளும் இந்திரனீ
ங்கிய எண்டிசைப்பலரும் பழய இந்திரனிருக்கும் இடந்
தெரியாமல் தேவகுருவினிடத்தில் வந்துபணிந்து மயங்
குங்காலையில் தகுந்த கற்பினையுடைய இந்திராணிதேவே
ந்திரன் தவஞ்செய்யும் இடத்தைக்காண்பிக்க யாவரும்
வேதவசனங்களினாற் போற்றிப்புகழ்ந்து தேவேந்திரனு
டைய பொன்னடியில்வணங்குவோர்கள்வணங்கி நகுஷ
ன்சாபம் அடைந்ததும்நவின்று இனிமேலாகிலும் தேவ
ரீர்தேவபட்டத்திற்கு வரலாமென்று திசைப்பாலரும் இ
ந்திராணியும், தேவகுருவும், ஊற்றமுடன் அழைக்கதே
வகுருவின் திருவடியைப்பணிந்து கண்ணீர்சொரிந்துதே
வரீரைத்தெரியாமல் அவமதித்தஎன்தீவினையானதுசெய்
யவேண்டியவேலைகளைஎல்லாஞ்சீராகமுடித்தது இனிமே
ற்றுளமாட்டேன் பொறுப்பதுசான்றோர்கடன் ஆதலா
ல் என்னை ஆண்டு இரட்சியும் ஐயனே என்று போற்றவு
ம் இந்திராணிமுதலியாவரும்வாழ்த்தவும் இரக்கங்கொ
ண்டு இந்திரனுடைய இருகரத்தையும்பற்றி எடுத்துவா
ழ்த்தி அமராபுரிக்குச்சென்று மங்களஸ்நானம் ஆட்டி
தேவசிங்காதனத்தில்வைத்து திவ்யகிரீடந்தரித்து அரசு
புரிந்துவரும்போது ஒவ்வொருவேளை மதிமயக்கமும் தி
யக்கமுந்தோன்ற பிரகஸ்பதிபகவானுடைய பூவடிபணிந்
து சுவாமி தேவரீர்கிருபைசெய்யாமல் என் தியக்கந் தீர
மாட்டாது (ஈசனுக்கிழைத்தகுற்றந் தேசிக னெண்ணித்
தீர்க்கும், தேசிகற்கிழைத்தகுற்றம் குரவனே தீர்ப்பதன்றி
ப், பேசுவதேவனே தன்னைப் பிழைத்த காரணத்தாலைய
ன்வாசவன்பழியைத்தீர்ப்பான் குரவனேவழிபுங்கூற)சர்
வலோகநாயகராகியசாம்பசிவனுக்கு ஒருகுற்றஞ்செய்தா
ல்ஆசாரியரிடத்தில் விண்ணப்பம்பண்ணிக்கொண்டுதீர்த்
துக்கொள்ளலாம்ஆசாரியாருக்குஒருகுற்றஞ்செய்தால்ஈ
சன்முதல்மற்றியாவர்களாலுந்தீர்க்கக்கூடாது (அவனரு
ளாலே அவன்றாள்வணங்கி;என்பதுபோல்ஆசாரியராலே
யேதீர்த்துக்கொள்ளவேண்டும் ஆகையால் என்னைக்காப்
பாற்றுமென்றுவணங்கிய இந்திரனை(தன்னை இகழ்ந்தமை
யால்வந்தபழியைத்தீர்க்கும்பொருட்டுகுரவனே ஒருவழி
தேடி சிலதேவதூதருடன் பூலோகத்திற்கு) அழைத்துக்
கொண்டுபோய் சகலபுண்ணியதீர்த்தம், திவ்யஸ்தலங்கள்
யாவுங்கண்டு வணங்கிப்பணிந்து தென்றிசைக்கு வரும்
போது கடம்பவனத்தில்வந்துநிற்கவும், கலக்கந்தியக்கம்
மயக்கம்யாவும்தெளிந்து நல்லகியானந்தோன்றிய இந்தி
ரன் குருவினிடத்திற்சொல்லவும் அவர் தூதரை விடுத்து
த் தேடிப்பார்க்கவும் ஒரு சிவலிங்கப் பெருமானும்?
பொய்கையும் இருக்கக்கண்டு அவ்விடத்தில்நெருங்கி புற்
பூடு கற்காடுகளைந்து திருக்குடைசாத்தி தெய்வலோகத்
திற்குத் தூதரை அனுப்பி அபிஷேகத்திரவியம் பால் த
யிர்கோசலகோமயம் 'தூபதீபநைவேத்தியம் பொன்னு
டை இரத்தினாபரணம் இவைகளெல்லாங்கொண்டு வரச்
சொல்லி விசுவப்பிரமனைப்பார்த்து 'அஷ்டகெஜம்தாங்கு
ம் இந்திரமணிவிமானம் அமைக்கவிடுத்து அர்ச்சனைசெய்
யப்புஷ்பம்வேண்டுமே என்று இருக்கும்போது அந்தப்
பொய்கைநிரம்ப பொற்றாமரைமலராக நிறைந்திருக்கப்ப
நித்து அந்தப்பொய்கைக்குப் பொற்றாமரைப்பொய்கை
யென்றுபேரிட்டுபுகழ்ந்துக்கொண்டிருக்கும்போதுதெய்
வத்தச்சன் ஆகாயத்திலிருந்து இறங்கிய விமானஞ்சாத்தி
ப்பொய்கையில் மூழ்கி தூதர்கொண்டுவந்த திருமஞ்சன
த்திரவியங்களால் அபிஷேகஞ்செய்து ஆடையாபரணந்
தரித்து நிவேதகஞ்செய்து பொற்றாமரைமலரால் அர்ச்ச
னைபுரிந்து தூபதீபமங்கள ஆலத்திகுடைகவரி சுருட்டி
ஆலவட்டம் பூர்ணகும்பஉபசாரமுஞ்செய்துகண்ணுங்க
ருத்தும்மனமுங்களிக்க(அடியேன்வினையையவிப்பதற்கு
வருவாயுருவாயமைந்தெழுந்தவிடையாய்போற்றிவேதந்
தின்வித்தேபோற்றி; கடம்பநீழலுடையாய்போற்றி,உயி
ருக்குயிராயுறைந்தாய்போற்றியுடுபதியார்சடையாய்போ
ற்றி,யைந்தெழுத்தாய்ச்சமைந்தாய்போற்றி,தனிமுதலே
(என்றுதுதித்து ஏற்றிப்பணிந்து ஆகமவிதிமுறைதப்பா
து பூசித்துமதிமயக்க நீங்கிவானவர் குருவும் வானவர்க
ணமும் வானவர்கோவும் விருத்திராசூரனைக்கொன்ற ச
முத்திரமருங்கில்வந்து மகாவிஷ்ணுவைப்பூசித்து தீனத
யாளுவாகியதெய்வமே ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா அ
ஷ்டாக்ஷரப்பொருளே அடியேன் உன்னடைக்கலம் என்
றுதொழுது இந்திரலோகம்புகுந்து சிங்காசனத்தில் இரு
ந்து இமையவர்களும் எண்டிசைப்பாலரும்வசுக்களெண்
மரும் ஏகாதசருத்திரரும் பதினெண்கணங்களும்நெருங்
க தேவதுந்துபிமுழங்க பாரிசாதமலர்தூவ கிரீடபட்டந்
தரித்துக்கொண்டு. ஆயிரங்கண்ணன் அபிராணிசமேதனு
க, இமையவர்வேந்தனாகியிருந்து அயன் அரி அரன் முத
ல் யாவரும் ஆசீர்வதிக்க, கட்டியங்கூற கணிகையர் ஆட்
பதியும்நிதியும்பலமும்பெற்று மதிதவறாமல் வாழ்விற் சி
றந்தனன் வானவர் கோமான் கேளும் மருகனே, அக

ஸ்தியர் சாபத்தால் மலைப்பாம்பாகி வனத்திலுழன்ற நகுஷமகாராஜனும் உம்மைக் கண்ட கலத்திலல் சாபந்தொலைந்து திவ்யரூபம்பெற்று சுவர்க்கலோகஞ்சார்ந்தசங்கதி உமக்குத்தெரியுமே; சந்திரகுலோத் துங்காகிய தருமநந்தன மலைப்பாம்பாகிய நகுஷனைப்போன்றவன் துரியோதனன் தேவேந்திரன் நீர்தான் இந்திராணியேஇந்தத்தௌபதி சாக்ஷாத்காரமாகியகடம்பவனக்கடவுளும் வைகுந்தநாதரும், மண்பொதுத்தந்தையும், பிரகஸ்பதியும்; இவர்கள்தான் உமக்குத்துணையாக இருக்கும் துவாரகாபுரிவாசன் இந்திரன் இந்திராணி அநுபவித்தவருத்தங்களெல்லாம் நீங்கள் அனுபவித்தீர்கள் அவர்கள் எப்படிபரிபாவங்களையும் சத்துருவையும்வென்று அமராபதியை ஆண்டார்களோ அப்படிபோல இன்னங்கொஞ்சம் நாளையில் நீங்களுஞ் சத்துருவைச்செயித்து உலகமெல்லாம் ஒருகுடைநீழலில் அரசுசெலுத்தப் போகின்றீர்கள் எனதுவார்த்தைக்குக் தவறுவாராது என்று மங்களாசனஞ்சொல்லி சகல அரசர்களும்பாண்டவர்களும்பாஞ்சாலிமுதலியயாவர்களும் அடங்காமகிட்சி அடையும்படியாக விடைபெற்றுக்கொண்டு சதுரங்கசேனைகளும் சூழ சல்லியமகாராஜன் இரதம் ஏறும்போது ஐவர்களும்பின்தொடர்ந்து வழிவிடுத்துத் திரும்புங்காலத்தில் முரசக்கொடியோன் மாமாநான்கேட்டுக்கொண்ட வாக்கியம்மறந்துவிடப்போகிறீரென்று உறுத்தியபோது ஒருக்காலும்மறவேன் உள்ளத்திற்பதித்தேன் உமது இஷ்டப்படிமுடிப்பேன் என்று மரியாதைசெய்து நிறுத்திவிட்டு அஸ்தினபுரம்போய்ச்சேர்ந்து அரவக்கொடியோன்முதலாகியஇயாவர்களையுங்கண்டுவந்தனை வழிபாடுகள்பெற்றுவதிலுபசாரமுஞ்சொற்றுவணங்காமுடியோனிடத்தில்படைத்துணையாக உற்றுவாழ்ந்திருந்தான் மத்திரதேசாதிபதிஐவர்முதல்வனும் அரசர்களும் உபலாவியத்தில் இருந்தார்கள்அந்தவேளையில் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் அருச்சுனனும் துவாரகையிலிருந்து இரதம் ஊர்ந்து இன்பமுற்று பாரதயுத்தத்திற்குத் தகுந்தயோசனைசெய்ய வந்தார்கள்எல்லோரும்எழுந்துஉபசரிக்கவும்தருமநந்தனனைத்தாங்களும்பணிந்து ஆசனத்தில்அமர்ந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்படைத்துணைகேட்கப்போனதும் துரியோதனன் படைத்துணைவிரும்பி அவடம்வந்ததும் நடந்தச்செய்திகளும் சுவாமிமொழிந்ததும் துணையாயமைந்ததும்இயாவையுமறக்காமல் பற்குணன் தருமராஜனுக்குச்சொல்லக்கேட்டு உடல்பூரித்துமகிழ்ந்து இவடத்தில்சல்லியராஜன்படைத்துணைவந்தவழியில் தருமராஜன்பேரால் தண்ணீர்ப்பந்தல் அமைத்துவஞ்சனையாகவழிமடக்கிச்சுயோதனன்படைத்துணைக் கொண்டதும் மத்திராஜன் வந்து சொல்லிப்போன வசனங்களியாவையும்ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு தருமர்சொல்லக்கேட்டு ஒருவருக்கொருவர் மகிழ்ந்து பேசிக்கொண்டு மேல்நடக்கவேண்டிய காரியங்களையும் முறைமைகளையும்யுத்திசெய்து இருந்தார்கள். இப்பால் உபலாவியம்விட்டுப் புறப்பட்ட உலூகமகாமுனியானவர்மலைகள், கெவிகள், வனங்கள், வனந்திரங்கள், மேடுகள், காடுகள், பாலைகள், சோலைகள், சாலைகள், நாடுகள், நகரங்கள், இயாவுங்கடந்து அஸ்தினபுரத்திற்குவந்துவீஷ்டுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், விதுரர்முதலாகிய பெரியோர்களின் அரண்மனைக்குச் சென்று சத்தியவாய்மைதப்பாத பாண்டவர்கள் சாஷ்டாங்கநமஸ்காரஞ்சொன்னார்கள் என்றுசொல்லித்தானும் வந்தித்து அவர்கள்தந்தவந்தனமுங்கொண்டு மரியாதையும்பெற்று தான்கற்றவேதசாஸ்திரம், நீதிசாஸ்திரம், தருமசாஸ்திரம், ஞியானசாஸ்திரம், இதுமுதலாகியநூல்களெல்லாம், எடுத்துக்காட்ட அந்தப்புத்திமான்கள்கேட்டு செவிநிரம்பிய தேவாமிர்தத்திலும்இனியசொற்களைக்கேட்க இதுவே புண்ணியதினமென்றும் தேவரீருடைய திருவடியைத்தாங்க இந்நகரம் இன்றுசெய்த பாக்கியமென்றும் தம்மைத்தரிசிக்கப்பெற்றதே நாங்கள்கண்கள்படைத்த இதற்குலாபமென்றும்சொல்லி உடல்புளகமுற்று உபசாரஞ்செய்து உதிட்டிரன்முதல் மற்றெல்லோர்களின் க்ஷேமங்களை விசாரித்துசிந்தைமகிழ்ந்துவந்த பௌரோகிதருக்குத் திடஞ்சொல்லியிருந்தகாலையில் ஒருநாள்மதுநிறைந்தமலர்மாலையும்முப்புரிநூலும் தழைந்திலங்கியமார்பினனாகிய உலூகமாமுனிதிருதராட்டிரமகாராஜாவின்பெரியசபைக்குச்சென்றார் அவரைக்கண்டஇயாவரும்தண்டஞ்சமர்ப்பித்துதேவகுருவாகிய பிரகஸ்பதிபகவானைக்கண்ட தேவேந்திரன்முதலாகிய சபையார்செய்யும் உபசாரம்போல்எல்லோரும்வணங்கிப்பணிந்து மங்களாசனம்பெறவும்வணங்காமுடிபொறுத்த துரியோதனமகாராஜனும் எதிர்கொண்டுகண்டு இருபதங்களிலும் தீர்க்கதண்டனிட்டு நயமிருதுவசனத்துடன் நவரத்னகஜிதவீராசனத்தில் எழுந்தருளச்செய்து கண்ணில்லாதகாவலனுக்குச் சொல்ல அவரும் இவருக்கு இருகரத்தையுங்குவித்துவணங்க உலூகமாமுனிவர் அரசன்முதல் இயாவர்களுக்கும் ஆசீர்பதஞ்செய்து அக்ஷதைகொடுக்கப்பெற்று; விந்தகிரிக்கு ஒப்பாகிமேல் நிமிர்ந்ததோள்களையுடைய விரதவீரிய வீஷ்டுமர்முதலியமேலோர்களும் உள்ளக்களிப்புடன் உவந்து நோக்கிதேவரீர்வந்தகாரியம் தெரிவிக்கவேண்டுமென்று செப்பவும் ஏட்டுக்கிரியுந் தியங்கவிழித்துவட்டக்கிரியுமயங்கமிதித்துமுட்டுக்கொடுக்க முயங்கிமதர்த்துசுட்டுத்தறியைமுறிக்கும்மதங்கொண்டபட்டத்துயானையை உடையதிட்டியற்றதிருதராட்டிரனும் அவன்குமாரர்களும்கன்னனும் சகுனியும்கொதிப்புமனத்தார் குன்றதுதுவந்த உலூகமாமுனிவரானவர்தான் வந்தவரலாற்றை ஒழுங்காகவிரித்துச்சொல்லுகின்றார் பனிரண்டுவருடம்வனவாசமும் ஒருவருடம் ஆரும் அறியாமல் அக்கியாத வாசமும் போக்கியபாண்டுவின்மைந்தர் ஐவரும்வெளிப்பட்டு உபலாவியத்தில்வந்திருக்கின்றார்கள் ஆதியில் அநேகம்அரசர்களுங்காணமாயச்சூதாடிமயக்கிவென்ற இராச்சியத்தை மரியாதை அல்லவென்று அவர்களுக்கேகொடுத்துவிடாமல் நீங்கள்கைக்கொண்டு ஆண்டு அநுபவித்துவந்தவாம்நிறைந்தபூமியை பதின்மூன்றுவருடங் கழித்துவந்தால் கொடுத்துவிடுகிறோமென்று முன்னமொழிந்திருக்கின்றீர்களாம் அந்தச்சத்தியவாக்கின்படி இப்போதுபாண்டவர்களுக்குநாடுகொடுக்கின்றீர்களா கொடுக்கமாட்டீர்களா நாங்கள் இராச்சியங்கொடுக்கமாட்டோம்யுத்தமேசம்மதி

தானென்றுசொல்லுவீராகில்இந்திரப்பிரஸ்தத்திலிருந்து வாழ்ந்த ஐவரைவிசுவாசவார்த்தைகள்சொல்லி அழைத்துவந்துவாய்ப்பேச்சுபேசவொட்டாமல் மோசச்சூதாடி தேசத்தைக்கைக்கொண்ட நாசத்தைப்போல் மோசயுத்தஞ்செய்ய எண்ணுமல் எதிரில் இளைக்காமல்நின்று மோதியுத்தஞ்செய்யநினைப்பீராகில்வெளிப்படுங்கள் அப்படியேஞாயமாயுத்தஞ்செய்தபோதிலும் நீங்கள் ஒருக்காலும்ஜயம்பெறப்போகிறதில்லைவீணுகியஎண்ணம்வேண்டாம் ஏரிகளிலும்குளங்களிலும் அழகினையுடையசெங்காலன்னமும்கருங்கால்மயில்களும் கலந்துவிளையாட கிளைநாடுங்குயில்பாடும் வளநாட்டையுடையமன்னவர்களே தமையன்தம்பிகள்வேற்றுமையில்லாமல் ஆதியிலிருந்த அன்புரிமையைப்போல்கலந்து வாழ்வீர்களாகில் பெருவாழ்வும்பெருந்தனமும் பெருநிதியும்பெரும்புகழும் பெருமையும்வரும்இவ்விதமாகப்பொருந்திவாழ்வுபெறுமலும் விர்தாவாய்ப்பாண்டவர்களுடன் எதிர்த்துயுத்தம்பண்ணிஞல்நாம் அழிந்துபோவோமென்றுநினையாமலும் எவ்விதத்திலும்வெற்றியடைவோமென்றுகருதிஎதிர்ப்பீர்களாகில்உங்களால்அவர்களைவெல்லுவதென்பது அரிது அரிது ஏனெனில் கண்கறுத்துமனங்கறுத்து கதையெடுத்தாங்கியபலமுடைய வீமசேனனுமகாண்டீபதாரியாகியஅருச்சுனனும் நகுலனும் சகாதேவனும் யுத்தகளத்திற்புகுந்துவிட்டால் சத்துருவாகிய நீங்கள் புத்திரமித்திர களத்திராதிகளுடன் அழிந்து அவிழ்ந்து போவீர்கள் முனீஸ்பரர்கள் சொல்லும் வாக்கியம் மெய்யாகாமற் போமோ ஐயா ? ஒருக்காலும் பொய்யாக மாட்டாது என்று உலூக மாமுனி சொல்லவும் சந்தன குங்கும பங்கம் தங்கும் செம்பொன் மேருவைக்கிட்டி இணையற்றுயர்ந்த துணையெனவகுத்த பிரகாசம்பொருந்திய புயத்தையுடைய குருகுலத்தில் வருதவத்தில் அவதரித்து அரசுபெற்று வரிசையுற்ற பெருமைபெற்ற ஜயமிகுத்த சுயோதனராஜன் உலூகினைப்பார்த்து இவடத்தில் இதுவரையிலும் பூனைபோலிருந்து பெரும்புலிபோற் சொல்லிய உன்வாக்கியம் நாங்கள் செய்யப்போகின்ற யுத்தத்தைப்பார்க்கிலும் மிகக் கொடியதாகயிருக்கின்றது நல்லது ஐயரே உமது வாக்கியத்தையும் எங்களிருதிறத்தாருடைய ஆண்மிக்கையின் சிலாக்கியத்தையும் தருமவான்களின் யோக்கியத்தையும் தோள்வலியின் பராக்கிர மத்தையும் காளை நடக்கப்போகிற யுத்தகளத்தில் பார்த்து அறியலாமென்றும் கல்விமுதலாகிய சகல வித்தையுங்கற்று அதினுடைய உண்மைக்கியானத்தை யறிந்து நடக்குங்கருத்தில்லாத துரியோதனன்சொல்லிய மொழிகளையெல்லாங்கேட்டு தத்வக்கியானியாகிய விசயவில் விதுர மஹாராஜன் சொல்லுகின்றார். அப்பா ? சூதினாற்கைக்கொண்ட நாட்டை மறுபடியுங்கொடுத்து விடுகிறேனென்று சொல்லியபடிக்குப் பாண்டவர்களுக்குக் கொடுக்காமல் புன்மைமேலிட்டு அறிவிலாமலிருக்கும் பவமுடைர்களுடைய துற்போதனையைக் கேட்பாயாகில் ஸ்ரீ மஹாலட்சுமி உன்னைவிட்டு நீங்கிப்போய்விடுவாள் நால்வகைச்சேனைகளும் பந்துக்களும் நாசமடைந்து போகும் நல்லதல்ல அல்லல்வரும் என்றுன் சிறியதந்தை அந்தச்சமயத்தில் நக்கியாவர்த்தத் தாமனை நோக்கி அரசே ! பனிரண்டுவருடங் காட்டிலும் ஒருவருட நாட்டிலுமிருந்து மீண்டு வருவீராகில் உங்கள் செல்வத்தை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேனென்று இராஜசபையில் ஸ்திரமாகச்சொல்லிய உமது சத்தியவசனம் தவறிப்போய் சேனைசயினியங்களைக்கொண்டு வீரப்ப தாபத்துடன் பொறுத்தவாளாயுத யுத்தஞ்செய்ய நினைப்பது ஞாயமல்ல உலகம்பழிக்கும் பெரும்பிழையாகும் பாண்டவர்கள் பேரில் அந்தப்பழிகளையும் ஒருவழியாகத் தள்ளிப் போர்புரிவீர்களாகில் விஜயன் காண்டீபத்தில் இருந்து விடும்சரங்களிலுடைய முனைவாய்கள்தோறும் இரத்த மாமிசச்சேறும் உயிரும் கக்கும்படியாகப் போக்கிவிடுவான் பெரிய அவமானமுஞ்செய்வான் பின்பலம் வேண்டாமல் தன்பலம் வேண்டிய காண்டீபனுகிய தனஞ்சயன் என்று துரோணுச்சாரியார் சொல்லவும் துரியோதனன்கேட்டு உத்தமராகிய இத்தனைபேரும் எத்தனைவிதமாகச் சொன்னுலும் என்சித்தமிரங்கி எள்ளத்தனை நாடும் கொடுப்பதென்பதே இல்லை மண்டைகள் கிழியச்சண்டைகள்செய்து வென்றவர்களுக்குச்சொந்தமே இந்தராச்சியம் என்று இயம்பிய பேரனை ஏறநோக்கி கொன்று கசகச வென்று மென்று தின்று விடலாமென்று பல்லைக்கடித்து சிறந்த புத்திரனுகிய திருதராட்டிரனைப் பார்த்து உன் குமாரனுகிய துரியோதனன் ஒருவர் சொல்லும் புத்திவழியிலும் வாரான் தன்சுயபுத்தியையும் உன்னிப்பாரான் சின்னமனிதர் வார்த்தையைக்கேட்டு நமது திங்கள்மாபின் நீதிமுறைமையைக் கைவிட்டுப்போட்டு பதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து வாருங்களென்றுசொல்லிய உறுதிவாக்கியத்தின் வண்ணம் உன்புதல்வராகிய பாண்டவர்கள் காட்டைக்கழித்து நாட்டில்வந்து ஒரு உத்தமனைத் தூதாக அனுப்பி நாட்டைக்கேட்ட விடத்திலும் ஐவருக்கு நாடுங் கொடாமல் வெவ்விய வினைக்கு மேலாகும் போர்புரிய விரும்புவார்க ளாகில் மகமேருவுக் கொப்பாகிய காண்டீபங் கரத்தி லேந்தி வந்து எதிர்க்கும் விஜயனுக்கு எதிரில் வளைத்துச் சமர்செய்யும்வீரன் எவன் இருக்கின்றான் அவன் திருஷ்டிக்கு எதிர் நிற்பவர்கள் இயாவருமில்லை எவர்கள் பலத்தைக்கண்டு இவன் இப்படித் துள்ளுகின்றான் ஊமை கண்டகனவுபோல் பேசுவதில் உபயோகமில்லை வாக்கினுல் அளப்பதில் வருவதொன்றில்லை வருத்தமுமில்லை வெளிப்பட்டபாண்டவர் விடப்போகின்றதில்லை ஆகையால் காதுகேளாதவனைப்போல் கேட்டுக்கொண்டு இருப்பதில் காரியமில்லை முன்னுக்கு இன்பம் பின்னுக்குத்துன்பம் வாய்க்கு இனிப்பு வயிற்றுக்குக்கேடு வருத்தமாக உனக்குவரும்புன்மை கலகஞ்செய்வோர்க்கெல்லாம் நன்மை உன் புத்திரனுக்குத் தெரியப்படுத்தி ஆதியிற்சொல்லியநீதிதப்பாமல் ஐவருக்கும்நாடுகொடுப்பதேநலமென்றுவீஷ்டுமர் மிகுந்தகோபங் கொண்டுதிருதராட்டிரனுக்குச்சொல்லிவரும்போது பக்கத்திலிருந்த அங்கதேசாதிபதி பதை பதைத்துவெகுளி மேற்கொண்டு ஈரேழுலகினும் எனக்கு எதிர் இல்லையென்று

இடமாந்திருக்கும் வீரன் இயாளொருவ னிருக்க முன்பி
ன் எண்ணிப்பாராமல் அர்ச்சுனனுக்கு எதிர் இயாருமில்
லையென்று அவனையே அதிக சிலாக்கியமாகப் பேசிவரு
கின்றீர் பொக்கைவாயன் பொரிமாவைமெச்சிய பூச்சிய
ம்போல் மகிழ்ந்து புகழுகின்றீர் உமது வல்லமைக்கும்
நீர் கற்ற தனுர்வேதத்திற்கும் விசயன் மேற்பட்டவனெ
ன்று விளம்பவேண்டியதே யன்றி உலகத்தில் ஒருவரு
ம் அவனுக்கு யீடுபட மாட்டார்கள் என்று நீர் எப்படி
சொல்லுவீர், ஓ ? வீஷ்டுமரே, ஒரு ஏழைக் குடித்தனக்
காரன் காடு அடர்ந்த ஏரிக்கரையோரத்தில் ஏரைப் பூட்
டி உழுதான் அந்தக்காட்டில் இருந்து வேங்கை யொன்
று எழுந்து உழுகின்றமாட்டைப் பாய்ந்துபிடித்துக்கொ
ண்டது அந்தக்குடியானவன் விசனம் அடைந்து கண்ணி
ர்சொரிய அந்த வேங்கைநோக்கி ! ஏன் அழுகின்றாய் உ
ழுகின்றவனே என்னலும் ஐயா, எனக்கொரு பெண்ணு
ண்டு அந்தப்பெண் தனக்கு திடவீரதைரிய சாலியாக
ஒருநாயகன் வேண்டும் என்றுசொல்லி யிருந்தது நானு
ம் எங்கள் பந்துக்களிலும் மற்ற உலகங்களிலுந் தேடிக்
காணாமல் வருந்தியிருந்தேன் உம்மைக்கண்டு மகிழ்ந்தே
ன் ஆனல் நீர் யிருகமா யிருப்பதினல் என்குலத்துக்கும்
இவ்வுலகத்துக்கும் விரோதமாக இருக்குமே என்று வி
சனப்படுகின்றேன் என்றான் குடியானவன், அந்த வார்
த்தையைக்கேட்டு வேங்கையானது உள்ளமகிழ்ந்து பெ
ண்ணென்றால் பேயும் இரங்குமே என்னும் வசனப்பிர
காரம்மயங்கி இயான் எப்படி யிருந்தாலும் குறைவில்லை
மேலும் வீரனென்னுந் தைரியசாலிகள் எந்தக் குலத்திற்
பிறந்தாலும் தோஷமில்லை, என்னிடத்திற் கொலைத்தொ
ழில் இல்லை உம்முடைய குமாரத்தியைக் கொடுத்தால்
வேண்டிய செல்வங்கொடுப்பேன் என்று வேங்கைசொ
ல்லக்கேட்டு நான் விட்டுக்குப்போய் மாட்டை விட்டுவி
ட்டு வாருகின்றேன் இவடத்தில் தானே இரு மென்று
சொல்லி சற்றுதூரம் குடியானவன்சென்று ஒருநாழிகை
மறைந்து இருந்து மறுபடியும்வந்து வீரதீர மருமகனே
விட்டுக்குப்போய் என் குமாரத்தி இடத்திலும் உங்கள்
மாமியாரிடத்திலும் இந்த வார்த்தையைச் சொன்னேன்
அவர்களும் எங்கள் பந்துக்களில் சிலரும் சந்தோஷம்
அடைந்து இப்போதே விவாகமுடிக்க வேண்டும் என்று
ர்கள். என்பெண்ணானவள் தேம்பித்தேம்பி அழுதாள் ஏ
ன் அம்மா அழுகிறாய் என்றுகேட்டேன் உலகத்தில்வா
ழும் உத்தமிகளைப்போல், நாட்டில்வாழும் நங்கையர் த
ங்கைபோல், காட்டில்வாழும் மிருகராஜ புருஷனைத்தழு
வி முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவி விளையாடி வாழ்வத
ற்குப் பாக்கியம்செய்யாத பாவியானேன் என்றாள் என்
னகாரணத்தால் என்றேன் இருகரங்களில் நகங்களும்,வா
யிற்கோரதந்தங்களும் இருப்பதினல் எப்படித்தழுவுவே
ன் இதுகள்மாத்திரம் இல்லாவிட்டால் எனக்குக்கிடைத்
த புருஷருடைய சுந்தரவிரத்திற்கு என்போலொத்தபெ
ண்கள் ஏக்கங்கொள்ள வேண்டும் அல்லது கைகால்கள்
விக்கங்கொள்ளவேண்டும் என்னசிலாக்கியம் என்னுடை
ய பாக்கியம் என்றாள் என்று குடியானவன்சொல்லவும்
வேங்கைவருந்தி நகங்களையும் பற்களையும் அடக்கிக்கொ
ண்டு தேகத்திற்படவொட்டாமல் உமது குமாரத்தி யுட
ன் கொஞ்சிவிளையாடுகிறேன்-மாமா - என்று சொல்லக்
கேட்டு இதோபாரும் எங்கள் நகங்களை க்ஷவரகன்வாங்
கிப்போடுவதுபோல நீரும் வாங்கிப்போடும் அப்போது
குடித்தனமுறைமைக்குந் தரித்திரமில்லாத சவுக்கியமா
ம் என்று சொல்லக்கேட்டு அப்படியே செய்யுமென்று
வேங்கைசொல்லவும் க்ஷவரகனை அழைத்துவருவேனெ
ன்றுபோய் ஒருதச்சனை அழைத்துவந்து இருகரங்களி
லும் இருக்கும் கூர்மையாகிய நகங்களை அடியோடு நறு
க்கிவிட்டு வாயைக்காட்டச்சொல்லி கோரதந்தங்களையும்
குறடுகொண்டு பிடுங்கிவிட்டுப் போ போ வென்று முக
த்தில் ஒரு அறைவிட்டான் அந்த அறையைத் தாங்கிய
வேங்கையானது கோபித்து பெருவியாதிகொண்ட ஈயா
த லோபியின் விரல்குறைந்திருக்கும் அங்கைபோலொத்
த கூழைக்கரத்தால் ஓங்கி ஓங்கிமோதும்போது தாற்றுக்
கோல்வாங்கி வீசினன் ஏங்கித் தனிவேங்கை உயிர் இழந்
து நலிவருந்தி ஓட்டம்பிடித்து ஓடிப்பதுங்கி வலிப்பெடு
த்துமாய்ந்துதுவேங்கை, ஐயா? வீஷ்டுமரோ இப்படிக்கு
வீரமும் வில்லும் தவமும் ஸ்ரீராமனிடத்தில் பறிகொடு
த்து நகமிழந்த வேங்கைப்புலிபோல் நலிவுற்ற பாசிராம
னை கிட்டியமரத்திற் கூர்பார்ப்பதுபோல் அவனிடத்தில்
கற்ற அல்ப வித்தையைக் கொண்டு அம்பை யென்னும்
பெண்ணுக்காகப் பிறமுதுகிட் டோடச்செய்த சேவகத்
தை மேற்கொண்டாய் அல்லாமல் எந்தயிடத்தில் எந்த
வீரர்களைவென்று ஜயம்பெற்றிருக்கின்றாய் உன் பண்ட
வாளம் இப்படி இருக்க, இயாரையும் அலட்சியமாகத் தூ
றச்சொல்வது அனியாயம் அனியாயம் காங்கேயனே உ
மக்கு இது ஞாயமல்லவென்று கண்கள்சிவந்து கடுகடு
த்து கன்னன்சொன்னமொழியைக் காங்கேயன் கேட்டு
கடுங்கோபங்கொண்டு அடாகச்சைக் கொடியோனே நா
னென்ன யுத்தஞ்செய்தேன் எங்கே வீரப்ரதாபம் பெற்
றேன் ஆளில்லாக்கூடலத்தில் வீண் வார்த்தைகளைப்பேசி
அகப்பட்டுக்கொண்டு ஆரிடத்தில் விழித்தேன் நான் எ
வ்வளவு அப்பாகன்ற நீயோ சுத்தசாமர்த்தியன் ஒருவர்
துணைவேண்டா வீரன்சொல்லிய வீரந்தப்பாதவன் வல்
லமைசாலி மெத்தவும் நல்லவன் வெவ்விய புகையெழும்
பும் புத்திரகாமேஷ்டியாக அக்கினியில் துருபதேய மஹா
ராஜனுக்குப் புத்திரியாகப்பிறந்த தோகை மயிலைப்போ
ன்ற திரௌபதாதேவியின் சுயம்வரகாலத்தில் வில்வளை
த்து மச்சேந்திரத்தை அடித்து மாலை சூட்டுவதற்கு வந்
திருந்த மன்னவர்களெல்லாரும் மதிமயங்கப் பயத்தைத்
தரும்படியாகிய வில்லை எடுத்து நிறுத்தி இழுத்துவளைத்
து நாணிபூட்டி நாணுமவிருந்தவன் நீதானே அடா கவச
குண்டலா சகல அரசர்களும் தலைகுனியும் படியாப் பி
ராம்மண ரூபத்துடன்வந்து வில்வளைத்து வன்மை, சிறு
நுன்மை, சலம், நிச்சலம் என்னும் நான்கு குறியாக
வைத்த மச்சேந்திரம் அறுந்து விழும்படியாக அம்பினா
ல் எய்து பாஞ்சாலி மாலைசூட்டக் கைப்பற்றிக் கொண்
டுபோகும் கைவலிமையை யுடைய விஜயனைப் பார்த்து

ஐயோ பெண்ணைக்கொண்டு போகின்றானே பிராம்மண
ன் நமது குலத்தாராகிய இராஜர்களுக் கெல்லாம் மான
மும் ஈனமும்வீரமும் வெட்கமும் இல்லையா என்று இர
ந்த்துரியோதனன் மனவருத்தப் படுங்காலையில் கனூர்ப்
பாணங்களுடன்சென்று கிரீடியைத்தளைந்து யுத்தஞ்செ
ய்து திரௌபதியை மீட்டுக்கொண்டுவந்த வீராதிவீரன்
நீதானே வனவாசஞ்செய்யும் பாண்டவர்களை அவமான
ஞ்செய்யநினைத்து மன்னர் மண்டலிகரும் நால்வகைச்சே
னையும் இராஜஸ்திரீகளும் சுவேத சஷத்திரமுடைய வண
ங்காமுடியோனும்நீயும் வனஞ்சுற்றிப் பார்த்து சலக்கிரீ
டைபண்ணிவருவோம் என்றுபோன நாளையில காந்திரு
வனுக்கும் உங்களுக்குங் கலகம் நடந்து எல்லோரையும்
பிடித்துப் பின்கட்டாகக்கட்டிப் பிணையலாடிக் கொண்டு
போம்பொழுது தருமராஜனுடைய சரணங்களில் விழுந்
து அழுது சிறை நீக்கிவிடவேண்டும் தேவரீரென்று தா
துவர் சொல்லக்கேட்டு விமராஜனையும் அருச்சுன ராஜ
னையும் விடுத்து மீட்டுவிட்டபோது அந்த இடத்தில் நீய
ல்லவோ முன்னின்று வெற்றிபொருந்திய யுத்தஞ் செய்
து மீட்டினாய் அடாதாஷ்டகா போனதெல்லாம் போக
நேத்து விராடபுரத்தில் ஒரு அக்ரோணி சேனைகளும்
கோடிதேர்களும் நாமுஞ்சென்று பசுக்களை ஓட்டிக்கொ
ண்டுவரும்போது உண்டைவிற்பிடித்துக்கொண்டுதிரியும்
உத்தரகுமாரன்தேர்செலுத்த உத்தரதிசையில்வந்து அ
க்ரோணிசேனைகளையும் கோடி இரதங்களையும் பாணங்க
ளினால்மூடி இராஜனையுந்தேடிபற்றிப்பாகப்பாடிஎன்னையுந்
துரோணர்முதலாகியபேர்களையும் நாடியடித்துநீயும் ஓடி
ஒளிக்கத்தடுத்து நானுவிதபங்கஞ்செய்துதலைத்துணியும்
பிடுங்கிக்கொள்ளக்கொடுத்து மடக்கியபசுக்களையும் விடு
த்துவரும்படியாகமாட்டியவிஜயன் ஒன்றியே அன்றி இர
ண்டுபேரில்லை அப்போது அருச்சுனனைச்செயித்துபசுக்க
ளையும்கொண்டு துரியோதனனையும்செயம்பெறச்செய்து
சகலசெல்வமுங்கொடுத்து அஸ்தினாபுரத்திற்சேர்த்த உ
த்தமவீரன்பதினான்குலோகமும் ஒருவனென்றிருக்கும்தீ
ரன்நீதானே இப்பவும்பசுமைநிறமும் வாசனையும் தேனு
மருவியதுளபமாலை அணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவன் சாரத்
தியஞ்செய்யக்காண்டீபமும் கணையுங்காத்திலேந்தி யுத்த
ஞ்செய்யவரும்சைவசாசியை ஜயிப்பதற்குவேறொருவீர
ர்கள் எக்காலும் இல்லை முக்காலுஞ்சொன்னேன் நீயொ
ருபிராணிதான்மருந்தைப்போல் வெற்றிபெறுவதற்குப்
பொருந்தி இருக்கின்றாய் நல்லமரத்திற்பாயும் புல்லுளி
போலநல்லகுலத்தை நாசஞ்செய்யுங்கல்லுளியாகச்சேர்
ந்தகன்று இவ்விடத்திலிருக்கும்இயாவரும் உயிருடனிரு
ந்து உள்ளங்கைப்புண்போல்பார்க்க இருக்கின்றோம் உ
னதுவல்லமையை என்று கங்காபுத்திரன்சொல்ல, கன்
னன்மறுமொழிகூறாமலும் மனத்தில் ஒன்றுந் தோணம
லும் இருக்குஞ்சமயத்தில் துரியோதனன்கையோடு கை
தட்டிக்கொட்டிக் கலகலவென்றுகுலுங்கநகைத்துக் கெ
ட்டிகெட்டி அண்ணாகன்னா விஷ்டுமர் பாண்டவர்கள்பே
ரிலிருக்கும் இஷ்டத்தினால்சொல்லும்வார்த்தை என்றுப
ட்டப்பகற்போல்தெரியவருகின்றது துஷ்டப்பகையைப்

போக்கவும் இஷ்டனாகிய என்னைக்காக்கவும்அஷ்டதிசை
யும் அதரித்திரளெனன்று பேர்பெற்றவள்ளலே அதைரிய
ம்வேண்டாம் என்று தட்டிக்கொடுத்து தூதாகவந்து எதி
ரிலிருந்தபிராமணனைநோக்கி வேலையில்லாமல் இந்த வீ
ண்வார்த்தையைப்பேசவந்தீர் என்று அவமதித்து இங்கி
ருக்கும்நாடுகளெல்லாம்எங்களுடையது அங்கிருக்குங்கா
டுகளெல்லாம் அவர்களுடையது அரசர்முதலியகுடிப்ப
டைகளெல்லாம் எங்களுடையது ஆரணியவாசமாகியமி
ருகங்களெல்லாம் அவர்களுடையது தனதானிய போச
ன அனுபவம் எங்களுடையது சருகுகந்தமூல அனுபவ
ம் அவர்களுடையது முன்னமேதெய்வம்முடித்து இருக்
கின்றது அதுதோன்றாமல் உம்மைத்தூது அனுப்பியது
கொடியவழுமையென்றுதோனுது ஆகையால் நீர்சீக்கி
ரம்போய் ஐவருக்குந்தெரிவித்து ஆசையைவிட்டுவிடும்ப
டியாகப்போகியும்என்றுசர்ப்பக்கொடியோன்சொல்லவும்
சந்திரகுலத்திற்கு உரித்தாகியதிரிதராட்டிரமகாராஜன்து
ரியோதனனைக்கடிந்து சிறந்தபெரியோர்களும்நிறைந்த அ
ரசர்களும்பொருந்தியபெரியசபையில் அழகுந்தகுதியும்
அல்லாதசொற்களை நீசொல்லியது நன்மையோ என்று
அதட்டி அடக்கிபாண்டவர்கள்பேரில் பக்ஷம்வைத்துப்
பேசுகிறவனைப்போல் அன்புநிறைந்த உருவமாக எதிரில்
இருக்கும் உலூகமாமுனியைப்பார்த்து ஐயா நீர் வந்து
சொல்லியவார்த்தைகளெல்லாம் மெய்யாகிய சத்தியமே
இருதிறவர்களும் மனம் ஒத்துவாழ்வைப்பெறாமல் அம
ர்செய்வார்களாகில் அழிவதுநித்தியமேபிழைப்பார் ஒரு
வரும் இல்லை அப்படியுத்தம்விளையாமற் செய்யவேண்டு
ம் எங்கள்பிள்ளைகள் இருதிறத்தாரும்நிறைந்த செல்வத்
துடன்சுகப்படும்படியாகியகாரியங்களை இயாங்கள் இயா
வரும் ஆலோசித்துக்கொண்டு விவேகமேகேகமாகப் ப
டைத்த உண்மையானவர்களை ஐவர்களை என்பிள்ளைகளி
டத்திற்கு அனுப்பிவைக்கின்றேன்தேவரீர்உபலாவியத்தி
ற்கு எழுந்தருளி குலமும்பலமும்நலமும்தவமும்வரமும்
பெற்றிருக்கும்பாண்டவர்கள் துரியோதனாதிகள் பேரி
ல்கொண்டிருக்குங் கோபங்களும் மனஸ்தாபங்களும் ச
பையிற்கூறியசபதங்களும் நீங்கும்படியாக அநேகம்தரு
மஞாயம் குலமுறைமைமுதலிய நீதிகளினாற்றெரிவித்து
ப்புகழாகிய சகாயஞ்செய்யவேண்டும்பெரியோராகியதே
வரீரென்றுநமஸ்கரித்து வெகுவித உபசாரமுஞ் செய்து
தேவர்களும்தாவிவந்து ஆசைகொண்டு மகிழும்படியாக
ச்சந்தனபுட்பம் கந்தகதம்பமும் பீதாம்பரங்களும் நவர
த்தினகசித ஆபரணங்களுங்கொடுத்துத் தீர்க்கதண்டஞ்
செய்துவிடைகொடுக்க வீஷ்டுமர், துரோணர், விதுரர்மு
தலியபேர்களும்வணங்கி பெரிய அரசன்சொல்லியவண்
ணமேநடத்தவேண்டும் உலூகமாமுனியே போய்வாரும்
என்றுசெலவுகொடுக்க ஆசீர்வதித்து அஸ்தினாபுரத்தை
விடுத்துகாடுமலையெல்லாங்கடந்து உபலாவியம்வந்து த
ன்னைத்தூது அனுப்பிய அரசர்களும் ஸ்ரீகிருஷ்ண தேவ
ரும்பொருந்தி இருக்கும் இராசசபைக்கு நேராக வரும்
போது இயாவரும்வணங்கி உபசரிக்க அவர்களுக்கெல்
லாமங்களாசனஞ்சொல்லி உயர்ந்தஆசனத்தில்அமர்ந்து

இப்போதுசொல்லிக்கொண்டுவந்த தூதுவசனங்கள் இயாவற்றையுஞ்சொன்னர் உலூகமாமுனியானவர் அதைக்கேட்டுபாண்டவர்சகாயன் முதலியபேர்களும் இனிமேல்நடக்கவேண்டியகாரியங்களுக்கு இப்போது யோசிக்கவேண்டியதென்ன ஒன்றுமில்லை இனி அவர்கள் அனுப்பும்தூதிஞல்நேரிடுஞ்சங்கதிகளையும் உள்ளக்குறிப்பையும்வரவாத்தெரிந்துக்கொள்ளுவோமென்று அஸ்தினபுரத்தின்திசையைநோக்கிஇருந்தார்கள்கேளும்ஜெனமேஜெயமகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லிவந்தப்பிரகாரம் நான்சொல்லுகின்றேனென்று நைமிசாரணியவாசிகளுக்குச் சூதபௌராணிகர்சொன்னர்.

இனி. சஞ்சயன் - தூதுச்சருக்கம் - தனியன்.

ஒருகுலத்திடை அவதரித்தனி பொதுவர்சிற்குடி லுறைவதோர், மரகதப்புய லினையெடுத்தொரு மகவெனத்தன திருநியால், அரிதுபற்றிய அலகைசெற்றிட அவனியைப்பய வுகர்வுறு, மருதிடைத்தவழ் பொருவில்வித்தகன் மலரடித்துணை கருதுவாம்......................

(எ-று.) சங்குசக்கர கதாகட்க கோதண்டமுந்துலங்க ஆயிரம்பணாமணிமுடிகளையுடைய ஆதிசேஷன் கவிக்கும் சோபிப்பும் இலங்ககோடி சூரியப்பிரகாச திவ்யதேஜசும்விளங்க தந்தவக்கிரனல் பந்திக்கப்பட்டசிறைச்சாலையில் திரு - அவதாரஞ்செய்து அழகியபொதுவரின் சிறியகுடிசையி லிடத்தில் உறைந்தருளிய ஒப்பற்றமரகதமணிபோன்று கருணைவருஷிக்கும் மேகத்தை தனதுமுடிவுகாலத்திஞல் முன்பின்யோசிக்காமல் உலகத்தில் இருக்கும் பிள்ளைகளில் இதுவும் ஒன்று என்று எண்ணி எடுத்து மார்போடணைத்து இறுகப்பிடித்த பூதகி அழியும்படியாகக்கெடுத்து அவளுடைய ஸ்தனத்தின்பிரயோசனத்தைப் புசிக்காதவராகவும் அசோதைப்பிராட்டியார்அணைக்கயிற்றால்கட்டிய உரலுடன் ஊர்ந்துமருதமரத்தின் இடையிற்சென்று பின்வந்த உரல்வாராமையினல் உதைத்து அந்தமரத்தின்சாபத்தை அகற்றி நளகூபரன்மணிக்கிரீவனுக்கு அனுக்கிரகஞ்செய்தருளிய பத்தபராதீன வித்தகராகவும்விளங்கிய ஸ்ரீகிருஷ்ணபகவா னுடைய தாமரைக்கமலம்போன்ற திருவடிகளை இக்கதைநிறைவேறும்பொருட்டு சிந்தித்துவந்திப்பாம் என்று வாழ்த்திவணங்கி ஸ்ரீவேதவியாசரையுந்துதித்து வைசம்பாயனர் சொல்லுகின்ருர்.ஆடவர்திலகனுகிய ஜெனமேஜெயனேகேளும் உலூகமாமுனி அஸ்தினபுரத்தைவிட்டு நீங்கியவுடனே நஞ்சமுடைய நாகத்தைக்கொடியாயுயர்த்த நராதிபனும் பயத்தைத்தரும் வேலாயுதந்தாங்கிய பற்பலமன்னர்களும் விஷ்டுமர் வில்த்திறமைசொண்ட துரோணச்சாரியார் தவத்திற்சிறந்த விதுரமகாராஜன் இரவிபுத்திரனுகிய கருணன், கிருபாச்சாரியார், அசுவத்தாமர், முதலாகியபேர்களும் திரிதராட்டிரனும் எதிரில் இருகரங்களையும் குவித்து வணங்கிவாழ்த்தி நிற்கும் சேனசயினியமத்தியில் இந்திரசபைக்குமேலாகிய இராஜமண்டபத்தில் பொருந்தியிருந்து புத்தியிலும்புத்தியிலும் கல்வியிலும் கியானத்திலும் இணையில்லாமல் உயர்ந்தசத்தியவசன உத்தமனுகிய சஞ்சயனை வரவழைத்துச் சபையினிடத்தில் இருத்தி என்றென்றைக்கும் சண்டையில்லாமல் இருக்கவேண்டும் என்று எண்ணங்கொண்ட திரிதராட்டிரன் இயம்பலுற்ருன் ஓ சஞ்சயனே குருகுலத்தரசர்களுக்கு நேரிடும் காரியாகாரியங்களை அறிந்து சொல்லும்படியாகிய சுதந்தரமும் மாட்சிமையும் உடையவன் நீயாகையால் இருகுலத்தவராகிய கவுரவர்களும் பாண்டவர்களும் உனதுசொல்லாகிய நீதிவசனத்தை ஒருக்காலுந்தள்ளமாட்டார்கள் ஆதலால் மிருந்தகருமான் உலைக்கனலுக்கு ஒப்பாகிய கோபங்கொண்ட என்தம்பி பிள்ளைகள் மாறுபட்டுப்பேசுகின்றவஞ்சினத்தைநீக்கி இருவர்களில் ஒருவர்சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தை ஆளும்படியாக உனதுஉள்ளத்தில்நினைக்கவேண்டும் யுத்திக்குவித்தானவனே அளவுசொல்லக்கூடாத கோபக்கருத்தினராகிய என்பிள்ளைகளுக்கு எத்தனைவிதத்திற்சொன்னலும் பாண்டவர்களுக்கு நாடுகொடுக்கச் சம்மதியாமல் மூண்டு யுத்தஞ்செய்வதற்கு இசைந்து இருக்கின்ருர்கள் விவேகம் இல்லாத கவுரவர்கள்; என்தம்பி புத்திரர்களோ அப்படி அல்ல நற்குணங்களிலும் வில்திறங்களிலும் சத்தியங்களிலும் ஆண்மிக்கையிலும் குளிர்ச்சியாகிய மிர்துவசனங்களிலும்நீதியிலும் தருமதானங்களிலும் தவங்களிலும் பொய்யில்லாமெய்விரதங்களிலும்புகழிலும் அருளிலும்பொறுமையிலும்நிறைந்தபூரணபுத்திமான்கள் இப்பேர்ப்பட்டவர்களும் நமதுபசகளைப்போல இடம் அகன்ற போர்க்களத்தில் யுத்தஞ்செய்யும்படியாகக் கருத்துகொண்டு இருப்பதுநன்மையோ சஞ்சயனேகேளும் பிறவிப்பிணியும்பெருந்துக்கமும் அனித்தியவாழ்வையும் பாபமாகியபொருளையும் விளையச்செய்யும் இந்தக்கர்மபூமியின் ஆசையைவிடுத்து மறப்பும்பிணப்பிறப்பும் மோக்ஷவழிச்சிறப்பும் உண்டாகும்படியாக விசாலம்பொருந்தியகானகத்தில்பாண்டவர்கள் இன்புற்றிருந்து நித்தியமாகுந்தவத்தைச்செய்யும்படியாக அன்புகொண்டிருக்கும் என் கருத்தையுஞ்சொல்லி நீயுந்தெரியப்படுத்தக்கடவை என்று இருள் அடர்ந்ததனதுபுத்திக்கு ஒப்பாகச்சொன்னன் வெறுப்பாகிய திருதராட்டிரன் இப்படிசொல்லியவசனம் பாரபக்ஷம்என்று தெரிந்தும்தடைசொல்லாமல் அரசனுடைய கட்டளையைச்சிரசாகக்கொண்டு இயாவரும்புகழப் புகழ்ந்து விடைகொடுக்கப்பெற்று அஸ்தினபுரத்தை விடுத்துக் காடுமேடுமலைகளெல்லாங்கடந்து ஐவர்வாழும் உபலாவியத்திற்குவந்து அன்றையத்தினமே ஸ்ரீகிருஷ்ண பகவான் எழுந்தருளி இருக்கும் திருமாளிகையிற்சென்று திரௌபதியும் பார்த்தனும் வார்த்தையாட மலரணையில்வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாகிய அமலனைக்கண்டுதீர்க்கதண்டமாகப்பணிந்து வணங்கித்துதித்துதான்வந்த சங்கதிகளில் சிற்சிலகாரியங்களைப்பேசி தருமபுத்திர மகாராஜன்முதலிய நராதிபர்கள் கூடியிருக்குஞ்சபைக்கு நாளையத்தினம்வந்து சகலகாரியங்களையும் சொல்லுகிறேனென்றுதொழுது விடைபெற்றுக்கொண்டு தனதுவிடுதியிற்போயிருந்து சூரியன் உதையமாகுமுன்னம் எழுந்து நித்தியகருமம் ஸ்நானம்செபம் தவம்முடித்துக் கொண்டு தருமராஜனுடைய பெரியசபைக்குச் செல்லும்போ

ஸ்ரீகிருஷ்ணபகவானும்சாத்தகியும் துருபதேயமகாரா
ஜனும் விராடபூபதியும் இன்னம் பற்பலபாஷைமன்னரு
ம் சூழ்ந்துகொண்டிருக்கும் நடுநாயகமாகவிருந்த தஞ்ச
மென்போரை அஞ்சலென்றளிக்கும் வஞ்சகம் இல்லா
நெஞ்சினனாகும் மெய்விரதராகிய உதிட்டிரனைச் சஞ்சய
ன்விரைந்துசென்று கண்களும்மனமும் களிக்கக்கண்டு
அறிவும் அறமும்திறமும் புகழும்மிகுந்து தருந்த தம்பி
மார்களாகவிளங்கிய வீம அருச்சுன நகுலசகாதேவர்நா
ல்வரும், அக்கினியில் உற்பவித்து கற்புக்கு அணியென
இருந்தபாஞ்சாலியும், பின்பக்கத்தில் சிறப்புடன்பொரு
ந்த. முன்பக்கத்தில்நெரிப்புடன் இருந்த அறத்தின்மைந்
தருடைய மலரடியைச்சிரத்திற்சூடிவணங்கிய சஞ்சயனை
நோக்கிக்கருணைகூர்ந்து எழுந்திரும் என்றுசொல்லி இர
த்தினகசிதமாகிய ஆசனங்கொடுப்பித்து அந்த ஆசனத்
தின்பேரில் உட்காருமென்று அறன்மகன் உத்தாரஞ்
சொல்ல மகிழ்ந்து இயாவர்களையும் வந்தித்துப் புகழ்ந்து
வணக்கவொடுக்கமாக.ஆசனத்தில்அமர்ந்து சஞ்சயன்சொல
லுகின்றான். பொய்யைச்சிலைத்துமெய்யைப்புனைந்துவை
யகங்காக்கும் ஐயனேகேளும்,பாதலத்திற்பொருந்தும்ஆ
திசேடன்முதலிய பாம்புகளின் விஷச்சுவாலைகளை அடக்
கிஇவ்வுலகத்தில்இயாவர்களும்இன்பம்விளையும்படியாகஅ
முதகிரணங்களைப்பொழியும்சந்திரன்பிரகாசித்தபோதிலு
ம்சூரியகிரணங்களைவிரும்பிமுகமலரும்தாமரைப்புட்பங்க
ளானது இது உண்மையே அதுபோல உலகமெல்லாம்
ஒருகுடையில் ஆளும் திரிதராட்டிர பூபதியினுடைய அ
ருளுக்கும் அன்பிற்கும் உரியவனாகிநான் இருந்தபோதி
லும் ஒளியும் சிறப்பும் உடைய உமது முகத்தைப்பார்த்
து உயிர்வாழும்படியாக என் சிந்தையானது வந்த; நான்
வந்தேன் என்று சொல்லக்கேட்டு சேறுநாறும் வயல்க
ளெல்லாம் செங்கழுநீர் மணம்நாறும் குருநாட்டுக்கு அதி
பதியாகிய குந்திபுதல்வன் சஞ்சயன் கூறிய உபசார வார்
த்தைக்குப்புன்னகைகொண்டுஅவனுடையமனம்மகிழும்
படியாக உள்ளன்புடன் இனியவார்த்தைகள் சொல்லி ச
ஞ்சயனே பெருமைபெற்றிருக்கும் என் பெரிய தந்தை
யாகிய திரிதராட்டிர மஹாராஜனும், ஐயா அவர்கள் வீஷ்
டுமரும், குருசுவாமியாராகிய துரோணாச்சாரியாரும், கி
ருபாச்சாரியாரும், கயிலாசபதியின் அருள்நிறைந்து பல
ஞ்சிறந்த அசுவத்தாமாவும், பெரியஞானம் வரம்பெறு
ம், சதுரனாகிய சிறியதந்தை விதுரமஹாராஜனும், இன்
னும் உண்டாகிய பெரியோர்கள் இயாவரும், சுகமாக யி
ருக்கின்றார்களா குணபூஷணனே என்று கேட்கவும், தூ
துவந்த சஞ்சயன்கரத்தைச் சிரத்திற்குவித்து ஐயா அவ
ர்களெல்லோரும் க்ஷேமமாக யிருக்கின்றார்கள், உங்களு
க்கு க்ஷேமம் உண்டாகவாழ்த்தி ஆசீர்வதித்தார்கள் என்
று சஞ்சயன்சொல்ல, தருமராஜன் மனமும்தேகமும்மற
ந்து புளகமூற்றுச்சொல்லுகின்றார். அப்பா, பூர்வம், இ
ராஜசபையிற் பொருந்திய மஹாஜனங்க ளெல்லாரும் உ
டல்பதறி ஆச்சரியப்படும்படியாகத் தம்பியை நோக்கி தி
ரௌபதையைக் கைப்பிடியாக இழுத்துவந்து என்மடி
மேல்வையென்று தனது சிவந்த தொடையை ஆசனமா
கக்காட்டிய துரியோதனமஹாராஜனும் சுகமாக நேசமா
க இருந்து மோசச்சூதாடக் கற்றுணர்ந்த சகுனிமாமாவு
ம் சுகமா, பரிசுத்தமுள்ள பாஞ்சாலியினிடையிறுடுத்திய வ
ஸ்திரத்தைத் தடையில்லாமற் பிடித்து உரிந்து சபையில்
மானபங்கஞ்செய்த தம்பி துச்சாதனனும் சுகமா, சத்து
விரர்களையும் யுத்தஞ்செய்து வெல்வதற்குச் சக்தியில்
லாமல் சிங்காரப்பேச்சினால் ஜெயிப்பேன் என்று காலங்
ங்கழிக்கும் கன்னனும் சுகமா, மற்றப்புத்திர மித்திரர்க
ளுஞ்சுகமா. பற்பலதேசத்து மன்னர்களுஞ்சுகமா, இபா
னைத்தலைவர், சேனைத்தலைவர், படைத்தலைவர், குடைத்
தலைவர், கொடித்தலைவர், சேவகர்முதலிய யாவர்களுந்
சுகமாகயிருக்கின்றார்களா;என்று கேட்கும் தருமராஜனை
நோக்கிச் சஞ்சயன்சொல்லுகின்றான். பொல்லாங்கென்
பவையெல்லாம் நீங்கிய உள்ளமுடையவள்ளலே அவர்க
ள் இதுவரையிலும் சுகம் இல்லாதிருந்தாலும் தேவரீரு
டைய திருநாவினால் க்ஷேமம் விசாரித்தபடியால் இன்று
முதல் நாளுக்குநாள் அபிவிர்த்தி ஆவார்கள் என்றுகூற
முரசகேதனன்மகிழ்ந்து சொல்லுகின்றார், சஞ்சயனே
நாட்டைவிடுத்துக் காட்டையடுத்து நெடுநாளாகப்பிரிந்
த எங்களைப்பார்க்க எண்ணங்கொண்டு வந்ததோ அல்ல
து திங்கள்மரபில் உதித்த எங்கள்குலத்தில் கதித்த இ
றைவனாகும் திரிதராட்டிர மகாராஜன் சொற்படி வந்த
தோ, இவடம் நீர் வந்ததற்கு இயாதுகாரணம் விளம்பு
மென்று கேட்க சஞ்சயன் சொல்லுகின்றான். சங்கினங்
கள் வயிறுளைந்து பெறும் ஆணிமுத்துக்கள் நீரின்மடை
களை அடைக்கும் வயல்களால் வளப்பங்கொண்ட திரு
நாடென்னுங் குருநாட்டுக்கு அதிபதியாகிய கோவே உ
ங்கள் பெரியதந்தையாகிய திரிதராட்டிரமகாராஜன் சொ
ல்லி அனுப்பிய செய்தியைத் தெரிவிப்பதற்கு இவடம்வ
ந்தேன் ஆகையால் திருநாபிக்கமலமுடைய ஸ்ரீகிருஷ்ண
தேவரும் நீங்கள் ஐந்துபேரும் இந்த இராஜசபையை நீ
ங்கித் தனிமையிலிருந்து; சங்கதி முழுமையுங் கேட்டு
யோசிப்பீர்களாகில் மிகவும் நன்றென்று சஞ்சயன் விள
ம்பக்கேட்டு தருமராஜன் நகைத்து வாளாயுதம் வேலா
தம்பிடித்து இவடத்தில்வந்து நிறைந்திருக்கும் இராஜம
ன்னவர்கள் இயாவரும் எங்கள் பிராணனும் ஊக்கமும்
உச்சாகமும் ஊற்றமும் புகழுமாக இருக்கின்றவர்கள் இ
வர்கள் அறியக்கூடாத இரகசியமில்லை இவர்களை அன்றி
ஏதொரு எண்ணமுமில்லை தாய்க்கு ஒளிக்கும் சூலுமில்
லை சத்தியத்தை நித்தியமாக நம்பும் சாமர்த்திய முடை
ய சஞ்சயனே இந்தச்சபையினிடத்தில் தடையில்லாமற்
சொல்லுமென்று தருமராஜன்கூற, பாண்டவர்களின் பு
க்ஷத்தைத் தெரிந்துக்கொண்ட சஞ்சயனானவன் துளப
மாலை அணிந்த மேகம்போன்ற திருமேனியையுடைய ப
கவானைப்புகழ்ந்து சபைநிறைந்த மன்னவர்களை நோக்கி
த் தங்களுக்குத் தெரியாதகாரியம் ஒன்றுமில்லை இராஜத
ந்திரத்தை அநுசரித்து தனிமையிற்சொல்லவேண்டுமெ
ன்று புகன்றதே அன்றிவேறல்ல அடியேன்பேரில் கோ
பஞ்செய்யாதிருக்க வேண்டுமென்று இருகரத்தையுஞ்சி
ரத்திற்குவித்து விநய வந்தனத்துடன் வணங்கி கடைக்

த இடையினை யுடைய புனக்கிளிபோன்ற திரௌபதா
தேவியையும் பெருமையுடன் நோக்கித் தொழுது ஐவ
ர்களுடைய கருத்தைச் சிரமேற் கொண்டு சஞ்சயன்
சொல்ல லுற்றான். மநுநீதி தவறாத மன்னரே கேளும்
நீங்கள் இந்தப் பூமியை ஆளவேண்டு மென்னும் ஆசை
யைவிடுத்து சுஷ்ணத்தியாயங்களைக்கடந்த மஹாரிஷிகளை
ப்போல் நல்லகதி கிடைக்கும்படியாகத் தவஞ்செய்யவே
ண்டும், பதினமூன்றுவருடம் வனத்திற் கைபழகி வந்த
நீங்கள் பழம்புண்ணாளிபரியாரி என்பதைப்போல் மறுப
டியும் காட்டுக்குப்போகப்பயப்படமாட்டீர்கள் சகல மந்
திர தந்திர எந்திரங்களுந்தெரிந்தசுந்திரராகிய புண்ணிய
சிலர் இப்போதுபவத்தை யொழிக்கும் தவத்தைக் கருதி
ச்சென்றால் அதிசீக்கிரத்தில் கைகூடும் கதியும் பெறலா
ம் ஜன்மாந்திரத்திற் றவஞ்செய்யாப்பாவிகள் இம்மையி
ற் றவஞ்செய்யவிரும்பினால் தவங்கெட்டு அவமேவிட்டு
நரகத்தில்விழுவார்கள், இதன்றியும் எல்லாப் பிறவியினு
ம் உத்தமமாகிய மானிடப்பிறப்பு அரிது அரிது ஊமை
செவிடு குருடு மூடம் நோய் இவை நீக்கிப்பிறப்பது மிக
வும் அரிது கல்வியும் ஞானமும் செல்வமும் நற்குணமு
ம் உண்டாவது அதனிலும் அரிது. தானம் தருமம் தவம்
இவைகள்கிட்டுவது எதிலும் அரிது இவைக ளெல்லாம்
உண்டாகியகாலத்திலும் மோக்ஷம் அடைவது ஐயா அரி
யதென்று லோகதர்மஞ்சொல்லுகின்றது இந்தக்காரியங்
களெல்லாம் ஒருருவாகத்திரண்டு மாயாமயக்கம் அகன்
று தூஷணபூஷண திரஸ்காரங்க ளெல்லாம் சுத்த பரம
த்திற்கென்று பேரறிவு விளங்கிய பெருமான் தேவரீரல்
லது வேறில்லை அகந்தையும் ஆசையும் அகப்பற்றும் புற
ப்பற்றும் மமகாங்காரமும் உள்ள சுயோதனன் உங்களு
டன் உடன்பட்டு வாழ்வதுமில்லைநாடுகொடுப்பதுமில்லை
பெறுவோ மென்னும் இச்சையும் உங்களுக்கு யில்லை
அநித்தியமாகிய ஆசாபாசத்தை விடுத்து நித்தியமாகிய
பிரம நேசவிசுவாசத்தைத்தொடுத்து உண்மையாகிய ஊ
ர்த்த கதியை அடைவது உத்தமம் மேலும் பராசமகா ரி
ஷியினுடைய சந்ததியிற்றோன்றி தனக்குப் பிறந்தபிள்ளை
கள் துரியோதனாதியர் நூறுபேர் என் தம்பிபுத்திரர் ஐவ
ர் இந்த நூற்றைந்து பிள்ளைகளில் பொய்யும் சூதும் பொ
றாமையும்மிகுந்து மண்ணாசை பெண்ணாசை பொன்னா
சைகொண்டு ஞான சூனியராய்ப்பிறந்த குலத்தின் பே
ரையும் புகழையும் கெடுத்து இனிப்பிறக்கும் பற்பலபிற
விக்கு இடங்கொடுத்து தந்தை தாய் குருமொழி மந்திர
ம் இவையெல்லாந்தள்ளி பாவமென்னும் மூட்டையைத்
தேடி பாதகித்து என்வார்த்தையைக் கேளாமல் அலையு
ம். துரியோதனாதிகள்பேரில் வைத்திருந்த பக்ஷத்தை வி
டுத்தேன் என் மூத்தபிள்ளையாகிய தருமநந்தனனை நம்பி
அடுத்தேன் சராசரங்கள் தோறும் வியாபித்திருக்கும் சு
கப்பிரமத்திற்கு ஒப்பாகிய பிள்ளை இவன் ஒருவன்தான்
இந்தமண்ணும் பெண்ணும் பொன்னும் வாழ்வும் நிலை
யில்லாத தென்று நிச்சயித்திருப்பவன் நீதிமான் சோமா
ன் பூமான் சீமான் புத்திமான் சத்தியமே நித்தியமென்றி
ருக்கும் தருமனாகிய புத்திர சிகாமணி என் உத்தரந்தள்
ளமாட்டான் சிறியோர்செய்யுந் தீங்கைப்பொறுத்தலே
பெரியோரென்னும் பழமொழியையும் தம்மை யிகழ்வா
ரைத் தாம்பொறுப்பதன்றி (தம்மையிகழ்வாரைத் தாம்
பொறுப்பதன்றிமற்; றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தால்-
மும்மை, எரிவாய்நரகத்துள் வீழ்வர்கொல்லென்று; ப
ரிவதுஞ் சான்றோர்கடன்.) என்னும் நீதிநெறியையும் பு
கன்று கோபம் பாபம் சண்டாளன் என்ற கொள்கையுஞ்
சொல்லி நடந்த நன்மை தீமைகளையெல்லாம் ஈஸ்வரார்
பிதஞ்செய்து முன்கூறிய சபதங்களையும் இப்போது செ
ய்ய எத்தனிக்கும் சண்டையையும் பழியும் பாவமும் த
ழைக்கப் யாராரும் ஆசைவிளைக்கும் மண்ணைத்தையும்
அறுசுவை அன்னமும் விரும்பி அனுபவிக்கும் போகத்
தையும் ஆறாகப்பெருகும் மோகத்தையும்விடுத்து இந்த
த் தருமராஜனாகிய புத்திரனால் இருபத்தொரு தலைமுறை
யும் கதிசேரப்பெற்றான் திருதராட்டிரன் என்னும் பெரு
ம்புகழ் எனக்கும் என்கால்வழியைவிட்டு நீங்கா திருப்ப
தற்கும் நன்னெறி ஓங்கியதவத்தை உறுதியாய்ச் செய்வ
து உத்தமம் என்று குடும்பக்கொத்து குன்றாமல் இருக்க
வேண்டுமென்னும் ஆசைகொண்ட உமதுதந்தை உரை
த்தது என்று சஞ்சயன்சொல்ல பெருமை என்பது சிறு
மைப்படாமல் சத்தியத்தை அனுசரிக்கும் மெய்ஞ்ஞான
சிந்தையனாகும் தருமநந்தனன் பூத பௌதிக வர்த்தமா
னமும் தெரிந்துணர்ந்த சஞ்சயன் பன்னிச் சொல்லிய
வார்த்தையையுன்னி அழகுறநகைத்து தெரிந்த சஞ்சய
னே இவ்வுலகத்து இராஜ ராஜர்களும் நகைக்கும்படி யா
ய் துரியோதனாதிகளால் நாங்கள்பட்ட அவமான நிந்தை
கள் சக்ரவாளக் கிரிபோல்வளர்ந்து வளர்ந்து நிலைத்திரு
க்க அதனால் விளைந்த சபதங்கள் பெரும்புறக் கடல்போ
ல் சூழ்ந்திருக்க இவைகளைச் சாதியாமல் முத்தி அடைய
முயற்சிசெய்ய வேண்டுமென்று என்பெரியதந்தைசொ
ல்லியதைப்பார்க்கிலும் தமப்பிரபை, இமப்பிரபை, தூ
மப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்
பிரபை. அழற்பிரபை, என்னும் வெப்பமாகிய எழுநரக
த்திலும் தனித்தனி வீழ்ந்து அனுபவிப்பது மிகவும் நன்
மையாம் சத்தியவசனந்தப்பினால் நித்தியநோன்பு பலிக்
குமா-தாயைக்கொன்றபழி யிருக்க கோடி கோதானம்ப
ண்ணினால் மோக்ஷம் உண்டாகுமா ஆசார ஈனமாகிய ச
ண்டாளத்துவம் வகித்து விரதம் அனுஷ்டித்தால் தவங்
கைக்கூடுமா அதுபோல் பழியையும் நிந்தையையும் சும
ந்த நாங்கள் எத்தனை விதமாய்த் தவஞ்செய்தாலும் நா
கமே அன்றிச் சுவர்க்கங்கிட்டாது சஞ்சயனே ஒரு சிறி
ய கதையைக்கேளும் (ஆற்றின்கரைமேல ஐந்துபேர் நி
ன்றார்கள் நிரம்பியவெள்ளத்தில் கரடியானது தலையைக்
கால்சந்தில்வைத்துக்கொண்டு மிதந்துவருவதைக்கண்டு
கம்பிளிமூட்டையென்று கருதினோர்கள் ஒருவன் நீந்திப்
போய் அதைப்பற்றவும் நிராதரவாகவந்த கரடி அந்தம
னிதனுடைய கழுத்தைக்கட்டிக்கொள்ள இவனும் அது
வும் முழுகியெழுந்து வருந்தப்படும்போது கரையிலின்
றநால்வரும் கம்பிளிமூட்டையைக்கைவிடுத்துவந்துவிடு
என்றுசொல்ல கம்பிளிமூட்டையை நான்கைவிட்டுவிட்

டேன் கம்பிளிமுட்டை என்னைக் கைவிடவில்லையென்று
ஓங்கிக்கூவி உயிரினை இழந்தான் அதுபோல்) சபதத்தை
யும் யுத்தத்தையும் கைவிட்டு நாங்கள் தவஞ் செய்தாலு
ம் அவைகள் எங்களைக் கைவிடாதுமேலும், எக்குலத்தா
ருக்கும் இணையற்றமேலாகிய நற்குணம் நற்றவம் எங்க
ளுக்கு விளங்கச்சொல்ல வேண்டியது தந்தையின் கட
மையே அந்தத் தந்தையின் தருமகுண வாக்கியத்தைத் த
ள்ளாமற்செய்வது எங்கள் முறைமையே ஆயினும் தரு
மசாம்பிரதாயமாகிய நற்குலத்திற்பிறந்த மன்னரானவர்
கள் இராஜமுறைமைதவறிவேறொருகாரியங்களைக்குறிப்
பார்களா சஞ்சயனே வீரப்ரதாபத்தில் சிறந்த தீரர்கள்
கூறிய சபதம் நிறைவேறும்படியாய்ச் சத்துருக்களுடன்
எதிர்த்து புறமுதுகுகாட்டி ஓடாமல் நின்று ஜயங்கொ
ண்டு வெற்றிமாலை சூடினால் இப்பூமியில் கல்லெழுதி நா
ட்டுவதும் அன்றி வீரசொர்க்கமும் பெறுவார்கள் இப்
பூமியாகிய தலமும்சலமும் உள்ளவரைக்கும்அவர்களின்
குலமும்குணமும்கீர்த்தியும்நிலைக்கும் இதைவிட அறமா
கியதவம்எவ்வுலகத்திலும்இல்லைகூறியசபதமும்சத்துருக்
களும்முடியாதுஇருக்கதவஞ்செய்யமனம்வாராது இப்ப
டிக்குச்சுளுவாகிய தவமிருக்ககாட்டிலிருந்து கந்தமூலப
லாதிகளைப்புசித்துண்டு காற்றிலும்வெய்யலிலும் பனியி
லும்குளிரிலும்வருந்தி மோக்ஷம்பெறும்படியாகப் பெரி
யதந்தைமுதிர்ந்த வயதினால்தெரியாமற்சொன்னதுபோ
லும் இருக்கின்றது என்றுகண்கள் சிவந்து கடுங்கோபத்
துடன்தருமநந்தனன் சொல்லியவார்த்தையைச் சஞ்சய
ன்கேட்டு ஐயா பழையபகையைமனத்தில்குடிவைத்துக்
கொண்டுயுத்தம்புரிந்து சபதம்நிறைவேற்றநினைப்பதுகற்
றுணர்ந்தகாவலராகும் புண்ணியம்நண்ணியவிவேகவான்
களுக்குமுறைமையோ அப்படியேயுத்தம்செய்தாலும்எ
ன்னபலன் அண்ணன்தம்பிகள்மாமன்மைத்துனர்புத்திரமி
த்திரர் சுற்றத்தார்மற்றதேசத்தார் இயாவர்களையுங் கொ
ன்று இயமன்கையில் ஒப்பிவைப்பதிலும்வனங்களிலிருந்
துதவங்களிழைத்துப் பவங்களொழிப்பது வசையோ எ
ன்றும், அழியாத இசையோ, முள்ளாடியும்வாழைக்கே
நஷ்டம், வாழையாடியும் வாழைக்கேநஷ்டம் தெரியாத
பேர்களைத் தெளியச்செய்யலாம் தெளிந்தோர்களைத் தெ
ருட்டுவது அருமைமேலும் திங்கள்மரபுக்குவித்தாகியும்
உங்களுக்கெல்லாம் பாட்டனாகியகர்த்தா வீஷ்மர் உயர்
ந்தசிலைக்குருவாகிய துரோணாச்சாரியர், கிருபாச்சாரியர்
ஒருசாலைமாணாக்கரில் பால்யசிநேகராகிய துருபுத்திரர்அ
சுபத்தாமர், தந்தைக்குப்பின்திவந்த தத்வக்கியானியாகிய
விதுரமகாராஜன் முதலியபேர்கள் இந்தக்குலந்தழைக்க
வேண்டுமென்னும் உத்தமநினைப்பினையுடையபெரியோர்
கள்இவர்களெல்லாரும்புவனபூபதியாகிய திரிதராட்டிரம
காராஜனுடையசெல்வநலத்தைக்குறித்து காவலாகக்கை
வசப்பட்டிருக்கின்றவர்கள் திரிலோக கண்டகனென்றும்
உமக்குத்தெரிந்திருக்குமே இப்பேர்ப்பட்ட முதியோரெ
ல்லாரும்அழியும்படியாகப்பழிபூண்டுஉலகம்அதிரவெற்
றிகொண்ட அன்றைக்கு அல்லவோ நீங்கள் ஒருகுடை
நிழலில்அடக்கிஉலகம் ஆளப்போறதும் அவர்கள் அழிய
ப்போறதும் இல்லை உலகம்நீங்கள் ஆளப்போகிறதும் இ
ல்லை ஜயிப்பதற்கு அருமையாகியகாரியங்களில் நீங்கள்து
ணிவதுநன்மையன்று இத்தன்மையாகிய உத்தமர்களுட
ன் எதிர்த்துயுத்தஞ்செய்துகொல்லுவதற்கு உங்களுக்கு
ஒருக்காலுமனந்துணியாது இரக்கமும் ஜீவகாருண்யமு
ம் உள்ள எந்தலைதன்பலமும் எதிரியின்பலமும்யோசிக்
கவேண்டியதருமத்தை இங்குநினைக்கவேண்டும்நெருங்கி
யகோபாக்கினிமிகுந்த கண்களையுடைய வலிமையோரொ
ன்றும் சாமர்த்தியம் இல்லாததுர்ப்பல ரொன்றும்இப்
போது நினைப்பதிலும் சொல்லுவதிலும் என்னலா
பம் அவரவர்சேவகர்களை எதிர்த்துயுத்தஞ் செய்யு
ம் அமர்க்களத்தில்தெரியவேண்டுவது அன்றியும்சந்திர
குலத்தில்பிறந்த இருதிறவரும்சிறியோர்கள்யுத்திகேட்டு
நிதானிக்காமல் போர்செய்யநினைப்பீர்களாகில் மெலிவா
கியதுன்பக்கடலில் மூழ்கிப்போய்விடுவீர்கள் நடுவுநிலை
மையும்நன்மனமும் உடையபெரியோர்களின் புத்தியைக்
கேட்கில் இன்பக்கடலுள்மூழ்கச்செய்வார்கள் எனக்குத்
தோன்றியதைச்சொன்னேன் அப்பால் உங்கள்சித்தமெ
ன்றுகோபமில்லாத சஞ்சயன்கூறக்கேட்டு நமதுதமைய
னுக்கும் முரசத்துவஜமகாராஜனுக்கு வதிலாகநேரில்பே
சவேண்டியகடமை இனிச்சும்மாயிருக்கலாகாதென்று இ
ருவிழிகளும்செவ்வரக்கினும் நிறக்கச்சிவந்து ஒப்பற்ற உ
காந்தகாலத்தினில்மேகம் இடிக்குந்தன்மைபோல் முழங்
கிகொடியகோபம்மேற்கொண்டுசொன்னான் அவனுலெனி
ல் சூரியனைக்கனிந்தகனியெனத்தாவி நவவியாகரண பா
ண்டித்யமுடையஆஞ்சநேயருக்குத்தம்பியாகியவீமசேன
மகாராஜன் ஓ சஞ்சயனே எங்களுக்கும்எங்களைப்பகைவ
ராகிய எதிராளிகளுக்கும் பொதுவாகயிருக்கும் நீ ஒரு
தலைப்பக்ஷமாக அன்புகொண்டுபேசுவது உனக்குத்தகு
தியோ இதுநாயமன்று ஆனால் அரசனெவ்வழியோ அ
வ்வழிகுடிகளென்னுந் தன்மையாய்ச் சொல்லுகின்றனை
அதுநிற்க, பெரியோர்களுடன்யோசித்து என்பிள்ளைகள்
கூடிவாழும் வித்தைச்சொல்லி அனுப்புகிறேனென்று
அஸ்தினபுரத்திற்குத் தூதுவந்த உலூகமாமுனிவரிடத்தி
ல் எங்கள்பெரியதந்தைசொல்லி அனுப்பியிருக்க அதை
மறந்துநாட்டைத்துறந்துகாட்டிலிருந்து தவத்தைச்செய்
து முக்திபெறும்படியாக எங்களுக்குப்புத்திசொல்லி அ
னுப்பிவைத்தான் ஆதிசேஷனுற்சுமக்கும் அவனியை ஆ
ளும் அரசர்கள் ஒன்றைச்சொல்லிமற்றொன்றைவிரும்பி
வேறுபடப்பின்னை ஒன்றைச்சொல்லுவார்களோ ஆகிலு
ம்பாண்டவர்களும் கௌரவர்களும் இடதுகண், வலதுக
ண், என்று எண்ணாமல் பிடரியிற்புத்தியுடையகண்ணில்
லாத அண்ணல்தகுதியும்பெருமையும் அல்லாதகாரியங்
களைச்சொல்லி அனுப்பினான் காவலரும்சேனைகளும்கட
ல்போற்கலந்து வெப்பமாகியயுத்தம்செய்யும்போர்க்கள
த்தில் என்கரந்தாங்கிய கதையினால்செய்யப்பட்ட அதி
சயமாகியதவங்களைச்சொல்லுகின்றேன் கேளும் ஐயனே
எங்கள்தந்தைசொல்லியவண்ணம் நீவந்துசந்தோஷித்து
ச்சொல்லியது அரியதவம் அல்ல நான்செய்யப்போகின்
றது பெரியதவம், அதென்னவென்றால் சத்துருக்களில்
தேகத்திலிருந்துமாரிபோலபொழியும் உதிரச்சோரியில்

மூழ்கிதலே அறுந்து ஆடும்கவந்தமாகியகாட்டில்ஸ்தம்பித்
திருந்து உள்ளத்தில்கொதித்துக்கொண்டிருக்கும்கொடிய
நினைவுகளைக்களைந்துவிட்டால் அதுதான்றவங்களுக்கெல்
லாம்தலையாகிய மோக்ஷத்தைத்தரும்படியாகிய தவம் இ
து எனக்குப்போதும் இந்தத்தவமும்அல்லாமல் பிரபல
யாகமும்நடத்துகிறேன்கேளும், கடல்சூழ்ந்த உலகத்தில்
போர்க்களம்என்னும்இயாகசாலையில்துரியோதனனாகிய
சொன்னும் நாறுபசுக்களை என்கதையாகிய யூகஸ்தம்பத்
தில் அணைந்து; அவர்களின்வினைக்காத்துவீச, எனது
கோபாக்கினிமூட்டி திரௌபதையின்,சபதமென்னும்நெ
ய்யைச்சொரிந்து பகையென்னும்,சமித்தைச்சேர்த்துவி
ரம் என்னும் முனியினால்வேதமந்திரமொழிந்து பாஞ்சா
லிவிரித்த கூந்தல்முடிக்கும் அவிர்ப்பாகங்கொடுத்து எங்
கள் பெரிதந்தைசுரும் சந்திரகுலத்திற்கும் குறைவில்லா
ப்புகழ்நிறையும்படியாக இராஜசூயயாகமும்செய்து கதை
யிரூலசலத்தில் அடித்துமேல்யெழும்பும் துளியைவாயி
னுல் அருந்திதாகவிடாய் தீருவதன்றிக்காத்தினுற் சலம்
வாரிப்பருகேன் என்றுகூறிய கங்கணத்தையும் அவிழ்த்
துவிடுவேன் அக்ராண்யமரியாதையும்முடியும் அறக்கட
வுளாகிய எங்கள் அண்ணுவுக்குத்தரிப்பேன் என்று ஆங்
காரங்கொண்டு ஓங்காரமிட்டு பற்பலமொழிகள்சொல்லி
யமர்புயவிமனைத்தருமராஜன் கையமர்த்திவாசனை தாங்கி
யமாலையும் மணிமகுடமுந்தரித்த மன்னர்மன்னன் தூது
அனுப்பவந்தசஞ்சயனே எனக்குத்தோன்றியது ஒன்று
சொல்லுகின்றேன் உனதுமனங்கொள்ளக்கடவை அதா
வது துரியோதனன்மோசமாகப்பறித்துக்கொண்டஇரா
ச்சியத்தைவாங்கவேண்டும் என்றும்யுத்தஞ்செய்துவெற்
றிகொள்ளுவோம் என்றும் எவ்விதத்திலும் ஜயங்கொள்
ளும் வீரமுடையவர்களென்றும்வரங்கள்முதலியவைபெ
ற்றோமென்றும் மிகுந்தசிறப்புத்தாங்கினேமென்றும்ம
கிழ்ச்சியடைந்துசொல்லவில்லை வினைவசத்தால் ஈஸ்வரச்
செயல் எப்படிநடக்குமோ இயாம் அறியோம்மாமவா
கிய சகுனியைக்கொண்டு எங்களுக்கு இணையாகிய எதிரி
யாக்கிமாயச்சூதினால் வையகமுழுமையும்கைக்கொண்ட
தல்லாமல் சபையோர்நகைக்கதம்பிமார் உடல்பதைக்க
எங்களைமதிக்காமல் தையல்திரௌபதையை அவமானப்
படுத்திய தாட்சியையோசிக்குமிடத்தில் இந்தத்தேகமும்
வைத்திருக்கவேண்டுமோ சஞ்சயனே என்று தன்மார்பி
ற்பனிரோன அறைந்துக்கொண்டு எங்களுக்குக்குலமும்ந
லமும் மானுபிமானமும் தீரமும்வீரமும் செல்வமும் கல்
வியும் இல்லாமல் சித்திரம்போலிருக்கஇல்லைஉத்தமனே
சத்தியமும் தருமமும்குன்றலாகாது என்று அன்றுமன
ம்பொறுத்துயிருந்தோம் மன்னர்முன்கூறியவாக்கியப்ப
டிக்குபதின்மூன்றுவருடமுங்கழித்தோம் நீதியின்படிது
தும்விடுக்கோம் பெரியதந்தை சொல்லியனுப்பிய வார்த்
தையுங்கேட்டோம்இனிமேல்இராஜவீரமுறைமைதப்பா
மல எங்கள்சபதங்களையும்மனத்திலுற்ற குற்றங்களையும்
நீக்கிக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றோம் மானங்கெட்ட
பின்பு உடுபிராணனிருந்துப் பிரயோசனம் என்ன அப்பா!
குணமேன்னுங்குன்றேறிநின்றார் வெகுளி கணமேனுங்
காத்தலரிது.) என்று இருக்கும் நீதிச்சரியாக நாங்கள் ந
டந்துவந்ததும் இனிநடக்கப்போறதும் நன்மையோ தீ
மையோ? அழகியமேனியிற் குணபூஷணமணிந்த சஞ்ச
யனே, எக்தையாகியபாண்டு இறந்தசிங்கைத்துயர்நிரவிங்
தையாகியவித்தைகளைக்கற்பித்துச் சொந்தமாகயிரட்சித்
தபெரியதந்தைக்குச்சொல்லும் வாளாயுதத்திற்கைபழகி
யமகாராஜாவின்மைந்தர்களுடனும் அவர்களுடன் சிநேக
மாயிருந்து தருமங்களையும் சத்தியங்களையுங்கெடுத்துபா
பத்தைச்சேர்க்கும் ஆபத்தைப்போன்ற சிலபாவிகளுட
னேயும்யுத்தஞ்செய்துவெற்றியடைந்து எங்கள்பத்துசெ
லுத்துவதே அன்றி வேதவேதியர் இருவர்மூதாதை சிறி
யதந்தை அசுவத்தாமாமுதலியவர்களிடத்தில் போர்புரி
யநினைக்கமாட்டோம் கல்வியின் அழகார்ந்த சஞ்சயனே
அரசர்களுக்கு இயற்கையாவதுசொன்னசொற்றப்பாமல்
நீதிசெலுத்தியும் தருமபரிபாலனஞ்செய்வதே தவமாகு
ம் ஆனையால் எங்கள்சபதங்களை நிறைவேற்றிக்கொள்ளு
ம் வேலைகளில்மிகவும்ஜாக்கிரதையாக இருக்கின்றோம் க
ச்சத்தையும் சன்னமதத்தையுங்கொண்ட இயானையையு
டைய எங்கள்பெரியதந்தை உம்மிடத்திற்சொல்லியனுப்
பியவார்த்தையைத்தள்ளிவிட்டோம் என்றுகோபங்கொ
ண்டு எங்கள்பேரில் இதுவரையிலும்வைத்திருந்த கிரு
பையும்கடாக்ஷமும் பொய்த்துப்போனாலும் நாங்கள் நம்
பியிருக்கும்வழிபடுகடவுள் எங்களிடத்தில்வைத்த தயை
யும் அன்பும் ஒருக்காலும்தப்பாது நிச்சயமாக நீயுணர்ந்
துகொள்ளென்று தருமசொரூபிசொல்லவும் ஒப்பில்லா
தபைந்துளபமாலையணிந்த திருமார்பனாகிய ஸ்ரீகிருஷ்ண
மூர்த்தியானவர் அந்தச்சபையிலிருந்த அரசர்களெல்லா
ரும் வெவ்வேறாகக்கொண்டிருந்த எண்ணங்களைவிடுத்து
சந்தோஷத்தில்மூழ்கும்படியாக ஒருவாக்கியஞ்சொல்லு
கின்றார்,ஓசஞ்சயனே வஞ்சகச்சூதாடிஆசைகொண்டுபா
ண்டவர்களிடத்திற் பறித்தபூமியைதுரியோதனன் கைப்
பற்றிக்கொள்ள வேண்டியதேயொழிய இந்தப்பேதையா
கியபாஞ்சாலியைமயிரைப்பற்றி இழுத்துவரச்சொல்லியு
ம்மாமிமாமி என்று நூறுபிள்ளைகளைப்பெற்றும் மலடியா
கியபெரும்பாவிகொடும்பாவிபோன்ற காந்தாரியிடத்திற்
சென்று கண்கலங்கினால் பயப்படாதே என்றுஆதரிக்கா
மல்மச்சினமார்சபைக்குப்போக இலச்சை என்னடிஅடி
போடி கள்ளிக்காக்கை கற் என்றால் மூக்கை மூடிக்கொ
ள்ளும்காயக்கி என்றதாக்ஷணியமில்லாமல்கையைப்பிடி
த்து இழுத்துக்கொண்டுபோவென்றுசொன்னதும்பெரு
மைதானு அந்தப்படுபாவி சபையில் இழுத்துவந்ததும்
துன்மந்திரிகளெல்லாரும் சரிப்போனபடிபேசியதும்ஞா
யமா; என்புருஷராகிய ஐவரெங்கே என்றுகேட்டால் சி
ன்னமனிதரெல்லாரும் கலகலவென்றுநகைக்கவும் மன்
னனுக்குத்துணைவனுகிய கன்னன் இந்தச்சபையில்கண்
ணுக்குரம்மியமாகியபுருடனைக்கூடிக்கலந்துவாழடியென்
றுசொன்னதும்குலமைந்தன் காதுக்குக்குளித்திதானு வ
ஸ்திரத்தைவுரிந்து மானபங்கஞ்செய்யச்சொன்னதும் உ
த்தமிபுத்திரனுக உலகாளும் இராஜராஜன் தன் தொடை
மேற்கொண்டுவந்துவையடாதம்பியென்றதும் வம்சபா

ளுடையமதி இதுதானுகடவுள் சகாயத்தினுலும் பதிவிர
தாதர்மத்தினுலும்வளர்ந்த மாளாதவஸ்திரத்தைக்கண்டு
திரிதராட்டிரன்வணங்கி என்மருமகளே இவர்களெல்லா
ரும் உன்பிள்ளைகள் நீயென்குலதெய்வம்கோபிக்கவேண்
டாமென்று வேண்டிக்கொண்டு சூதினுல்தோற்றநாடுநகர
ங்களெல்லாங்கொடுக்கவும் அதை இந்தத்துரியன் கூடா
தென்று தடுத்ததும் முறைமைதானுமறுபடியும் பாஞ்சா
லிநாணத்தோடிருந்து சூதாடிதெய்வ அனுக்கிரகத்தினு
ல்பாண்டவர்களையும்பார் முதல்பாக்கியங்களையும் ஆடித்
திருப்பியபோது இன்னம் ஆடினுல் மாமாநம்மையும் உம்
மையும்கெலிப்பாள் என்று சகுனிமாமனிடத்திலும் மற்
றப்பேர்களிடத்திலும் ஆலோசித்துபன்னிரண்டுவருடம்
வனவாசம் ஒருவருடம் அக்கியாதவாசமென்று அனுப்பி
விட்டதும்நீதிதானு'இந்தப்பதின்மூன்றுவருடமுங் கழித்
துவந்தால்நாடுகொடுத்துவிடுகிறேனென்றுசத்தியவசன
ஞ்சொல்லி இப்போதுதூதுவிடுத்துக்கேட்டால் யுத்தத்
திற்குச் சித்தமாயிருக்கின்றேன் என்றுசொல்வதும் நன்
மைதானு? அதற்குத்தந்தையாகியபெரியவர்காட்டுக்குப்
போய்த்தவஞ்செய்வதேஎனக்குக்கண்காட்சிஎன்றுசொ
ல்லியனுப்புவதும் இதுகளெல்லாம் உத்தமகுலத்திற்பிற
ந்தயோக்கியர்களாகிய அரசர்செய்யும்முறைமைகளும்த
ருமமும்மாட்சிமையும் இதுதானு சஞ்சயனே முளையிற்
றுனே கிள்ளி யெறிந்தால் பிற்பாடு விளையாது கிளைகளை
கிளையாது அந்தக் காலத்தில் வயிர மாகும்படி விட்டு
விட்டு இந்தக் காலத்தில் வாய்ப் புளிப்போ மாங்காய்
ப்புளிப்போ என்பது போலும் கொக்கின் தலையி
ல் வெண்ணெயைவைத்தால் அது உருக்கிக் கண்ணி
ல்விழும் அப்போது பிடித்துக் கொள்ளலாம் என்னும்
தன்மையாகவும் இருக்கின்றது பெரிய அரசன்சொல்லி
வரவிட்டவார்த்தை மேலும் இந்திரப் பிரஸ்தத்திலிருந்த
பரிசுத்தவான்களாகிய பாண்டவர்களை மரியாதை யுடன்
வரவழைத்து பசுவைப் புலிவாயில் தள்ளிக்கொடுக்குந்த
ன்மைபோல துரியோதனன் சகுனியினிடத்தில் காட்டி
க்கொடுத்ததுய்மையும் விதானையும் உடைய பெரியோ
ர்களும் உரிய பெரியதந்தையாகிய அரசனும் இப்பேர்ப்
பட்ட இகட்சியெல்லாம் சபையில் நடக்கப்பார்த்து ஜீவ
னில்லாத தேகம்போலும் சிங்குவை யில்லாத ஊமை
போலும் இருந்தார்களே யொழிய துரியோதனு! உனக்
கு இதுபுத்தியல்ல, மரியாதையல்ல தருமம் அல்ல; என்
று ஒருவார்த்தைசொன்னதும் உண்டோ சஞ்சயனே! சு
த்தமுள்ள உத்தமர்களுக்கு ஒருபக்ஷமாகக் கொள்ளும்;
பக்ஷமில்லாமலும் கெடுநினைப்பு இல்லாமலும் இருதிற
வர்களும் பொதுமை என்று யெண்ணும் நீதியுள்ளவல்ல
வர்களானல் இந்த அனியாயம் அக்கிரமம் சந்திர குலத்
தில் நடக்கக்கூடாது என்று ஒருவார்த்தையினுல் நிறுத்
திவிடக்கூடுமே அப்படி விலக்காமலிருக்க இந்தத் தீங்கு
விளைந்ததற்குக் காரணம் திரிதராட்டிர-மஹாராஜனே அ
ன்றி வேறொருவரை நோக்கத்தக்கது இல்லை இதற்குமூ
லஞ் சொல்லுகின்றேன் கேளும் சஞ்சயனே, காமம்,கு
ரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், ஆகிய
உட்பகை ஆறுங்கூடியதுரியோதனனே கொடிய பெரிய
விருக்ஷம், அதற்குப்பிராணனும் வாசனையும்சூரியகுமார
னுகியகன்னன், சப்திக்கும்படியாகிய கிளைகள் சகுனி; க
ல்லின்மேல் வழுதலைக்காய்க்குமா என்றால் ரொத்தா லா
யிரம் கொடியாலாயிரம் என்னும் மைத்துனர்கள், அக்
கிளைகளுக்கு இலைகள் தம்பிமார்கள் பூ - பிஞ்சு-காய்கள்-
எவர்களுக்கும் உபையோகமில்லாத கனி துச்சாதனன்,
திரிதராட்டிரமகாராஜனே இந்த விருக்ஷத்திற்கு மூலமா
கிய ஆணிவேர் இதல்லாமல் சத்தியம், பொறுமை ஜீவ
காருண்யம்; தருமமாகிய திவ்யவிருக்ஷம் தருமராஜன் அ
தற்குப் பிராணனும் குணமுள்ளமணமும் வீம சேனன்
விஜயன்,நகுலன்,சகாதேவர் இருவரும்கிளைகள்ஒப்பில்லா
த பூவும்பிஞ்சும்காயும்உலோகோபகாரமாகிய கனியும்,இ
யான்நெருங்கிய பிராமணர்களும் வேதங்களும் இந்தவிரு
க்ஷத்திற்கு மூலமாகிய ஆணிவேர் ஐயா, சஞ்சயனே.இத்
தன்மையவாகிய இரண்டுவிருக்ஷத்தில் அழிவுஇல்லாதது
எது, அழிவது எது; உன்சிந்தையிற்றேர்ந்து செப்பக்க
டவையென்று சொல்லி மேலும் விளம்புகிறார். சஞ்சய
னே சத்துருக்களைத்தொலைத்து சபதமுடிக்கக் கோபங்
கொண்டிருக்கும் வீமசேனனும் அருச்சுனனும் யுத்தத்தி
ற்கு எதிர்த்த காலையில் மண்ணாசைபிடித்து வாழ்வைப்
பெற மனங்கொண்டிருக்கும் வஞ்சகராகிய துரியோதனு
தியரின் வல்லபங்களையும் நாம் காண்போம் என்பதுவும்
உண்டோ ஏதேது, புத்திமானே (அரசமரத்தைப் பிடித்
தசனி ஆனைமுகனைப் பிடித்தது என்பதுபோல) துரியோ
தனுதிகள் நூறுபேரும் இவர்களுக்குச் சகாயமாகிய ம
ன்னர்களும் மாண்டுபோவது நிச்சயம் வையக முழுமை
யும் பாண்டவர்கள் ஆண்டு அனுபவிப்பது சத்தியமாகக்
கொள்ளும் சஞ்சயனே விவேகம் நீங்கிய திரிதராட்டிரன்
சொல்லிவிடுத்த கொடியமொழியை நீர்கேட்டுச் சம்மதி
த்து இவடம்வந்து கூறியது எங்கள் உயிருள்ள வரையி
லும் மறக்கமாட்டோம் சஞ்சயனே என்று சர்வ ஜீவத
யாபரனுகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லவும் இந்தவா
சகியங்களை எல்லாங்கேட்டு மனங்கலங்கியசஞ்சயன்வே
றுதருமங்களையும் யுத்திகளையும் சொல்லுதற்குப் புத்தி
தோன்றுமல் உடல்அயர்ந்து ஊர்த்தசுவாசங்கொண்டுசு
ற்றுநேரம் நின்று இத்தன்மையவாகிய எண்ணங்கொண்
டிருக்கும் இறைபவர்களே நான் இவ்வளவுதூரம் வந்து
ம் பெரிய அரசன்மொழிந்த வார்த்தைகளைப் புதிய அல
ங்காரமாகச்சொல்லியும் ஏதொருபிரயோசனமும் பெ
றுதவனுக இருக்கின்றேன் தாங்கள் ஆதியோடந்தமாகச்
சொல்லியவசனங்கள் இயாவற்றையும் பூமண்டலாதிபதி
யாகியபெரியஅரசனுக்குப்போதிக்கவேண்டியிருப்பதால்
நீங்கள்கொண்டிருக்குங்கோபங்களும்மனஸ்தாபங்களும்
நீக்கவேண்டியது அங்குசந்தங்கிய கும்பமஸ்தகக்குஞ்சர
முடையஐவர்கள்முதலிய அரசர்களேதங்கள்சமுகத்தில்
இன்றுஇயான்இயம்பியமொழிகள்இகழ்ச்சி உடையதாயி
னும் இணங்காவசனமாயினும் சொற்சோர்வு பொருட்
சோர்வு இருந்தாலும் கோபமில்லாமல் க்ஷமிக்க வேண்
டியது என்று உபசாரஞ்சொல்லி விடை கொடுங்கள் எ

ன்று வணங்கிய சஞ்சயனைநோக்கி மன்னர்கள் சிற்சில வார்த்தைகள் சொல்லத்துணியுங்காலையில் மேருச்சாரல்வரைக்கும் போர்புரிந்த தீரனாகிய தானுகானுக்கும்பாண்டுபுத்திரன்பார்த்து மட்டைகளென்னும் வாயினால் கடகட என்றுவரும் சலங்கைகளைக்கொண்டு மடமடயென்று வளரும் பயிர்களார்ந்த செய்கால் வளங்களையுடைய அரசர்களைச் சற்று இருங்களென்று கையமர்த்தி சஞ்சயனைப்பார்த்து ஐயா ? எங்கள் தந்தையாகிய பாண்டுபூபதி மாண்டுபோகிய ஏழாண்டினில் ஆதரித்து தனுர்வேத முதலிய கல்விகளும் வருவித்து இள அரசு முடிதரித்து சகலசுப சந்தோஷவாழ்வைத்தந்து செவிப்புலனும் மதிக்கண்ணும் மகிழ்ந்துகண்ட என் பெரியதந்தை அவைகளையெல்லாம்விடுத்து எங்களுக்குத்தாழ்வைக்கொடுத்து கொடுமையாகிய பயிர்தழையச்செய்தார். ஆகிலும், (தந்தைசொல்மிக்க மந்திரமில்லை;) பிதாவினுடைய வார்த்தைக்கு மேலாகியமந்திரங்கள் ஒன்றும் யில்லாமையால் அந்த மொழியைத்தப்பி நடக்கலாகாது என்று முதன்மையாகிய பெரியோர்கள் மொழிந்திருக்கின்றார்கள். நல்லகாரியமே சிலபிள்ளைகள் நாடாண்டு வாழ்விற் சிறக்கவும் சிலபிள்ளைகள் காடாண்டு தாழ்விற் சிறக்கவும் தந்தை செய்யலாமென்று நுண்மை நூலுணர்ந்த உத்தமர்கள் சொல்லியிருக்கின்றார்களோ, சஞ்சயனே, இந்திரப்பிரஸ்தமென்னும் நகரையும் குருநாட்டையும் தகுதியாகிய செல்வங்களையும் நால்வகைத்தானைகளையும் நாங்கள் விரும்பவில்லை பதின்மூன்றுவருடம் துக்கத்தையே சுகமாகக் கொண்டு காடுதிரிந்து கலங்கிகசங்கிவந்த எங்களை ஆசையையுடைய பெரியதந்தையாகும் அத்தன்கண்டு நமது புத்திரர் மிகவும் வருந்திவந்தார்களோ யென்று உட்கொண்டு எங்களுடைய அருமை பெருமை இயாவும் தெரிந்த ஐயன் தன்மனத்தில் தோன்றியதைக்கொடுத்து அப்பா நீங்கள் இதைவைத்துக்கொண்டு வாழ்வைப் பெறுங்களென்று குலமும் நலமும் தழைக்கும் பெருமையும் உண்டாம் எங்கள்மனத்தில் விளைந்தகுறையும் நீங்கும் இப்போது ஏங்கி உம்மைவரவிடுக்க ஏதுவாகிய பிழையும் எப்போதும் இல்லாமல் நீங்கிவிடுமே இப்போதும் சிறப்பினையுடைய பெரிய தந்தையின் வார்த்தையைத் தள்ளாமல் சிரசாக வகித்துக்கொண்டு அவருக்கே கீர்த்தி யுண்டாகும்படியாக இராஜதருமமும் தப்பாமல் முயற்சிசெய்துகொண்டு நடந்துபோன காரியங்களை எல்லாம் நாடாமல் சிலவருடங்கழித்துக்கொண்டு வருகின்றோம் நிறைந்த அன்பினையுடைய என்தந்தையினிடத்தில் சொல்லக் கடவை நீதியைப் பிரக்யாதியாயுடைய சஞ்சயனே (அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்.) என்பது தோன்ற இருக்கும் தகுதியை உடைய பெரியதந்தைக்கும் தாயாகிய காந்தாரியம்மனுக்கும் தவவிரதத்தில் உயர்ந்த பாட்டனாகும் விஷ்டுமருக்கும் காமம் வெகுளி மயக்கம் அகற்றிய துரோணாச்சாரியார் கிருபாச்சாரியார் விதுரமகாராஜன்முதலிய பெரியோர் களுக்கும் திக்குநோக்கிப் பணிந்தோம் என்றுசொல்லும் மற்றவர்களுக்கு க்ஷேமம் விசாரித்தோமென்று சொல்லும் ஐயா சஞ்சயனே என்றுரைத்து நரை திரையை தேவாமிர்தத்தையும் தெவிட்டச்செய்யும திவ்வியபோசனம் அளித்து சுகந்தபரிமள சந்தனங்களுங் கொடுத்து மலர்மாலைகளும் அளித்து அருமையாகப் பெருமையிற்சிறந்த பொற்கலை பூஷணங்களும் புனைந்துகொள்ளும்படி ஈய்ந்து, போய்வாருஞ்சஞ்சயனே என்று செலவுகொடுக்கவும் மற்றையர்களிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு வேகப்பரி பூட்டிய இரதம் ஏறி விரைவாகச்சென்று திரைவாயிற் சூரியன் சென்றகாலத்தில் நோக்குவதற்குக்கண்கள் பாக்கியஞ் செய்ய வேண்டிய சிலாக்கியமும் யோக்கியமும் உடைய அஸ்தினபுரத்திற்குவந்து திரிதராட்டிரமகாராஜன் அரண்மனையுட்சென்று கண்டு வணங்கித் தூதுபோய்வந்த சங்கதிகளை இந்திரப்பதத்திலுயர்ந்த இறைவனேகேளும் மூவர்களுந் தேவர்களும் இயாவர்களும் தேவேந்திரனுங்கொண்டாடிப் புகழும்படியாகத் தரும பூபதிவாழும் துன்பம் நீங்கி இன்பம் ஓங்கிய உபலாவியம்சேர்ந்து தம்பிமார்கள் முதலிய தரணிபாலர்கள் சூழ்ந்திருக்கும் சபையிற் போய் அவர்களுடைய கருத்தெல்லாந் தெரிந்துக்கொண்டேன் ஆசைகொண்டு தேவரீர்சொல்லி யனுப்பிய தன்மையின் இயாவற்றையும் இபரத்துக் கேதுவாகிய இயற்கைகளையும் பலபலவித உறுதியாகப் புகன்றேன் அருள் நிறைந்து சுரக்கும் முகத்தையுடைய ஐயா திரும்பிவந்தேன் இயான் தமது சமூகத்தில் என்னவென்று சொல்லப் போகின்றேன் ஏந்தலே சிறப்பினையுடைய மாமன் துரியோதனன் துசுவாசன் அங்கர்கோமான் இவர்கள் எல்லாரும் உரியநெஞ்சைவிட்டு நீங்காத பெரிய பகைஞராயிருந்தும் உன்பேரிலிருக்கும் நிஷ்டூர உறுதிவசனங்களை ஒருபுகாந்திரம் சொன்னாலும் குறைவு படாது பலபல வார்த்தையேன் உன்னுடைய மனவிருப்பப் பிரகாரமும் இராஜமுறைமை நடுநிலையின்படி இராச்சியங் கொடுக்காமற் போவீர்களாகில் அகண்ட சாம்பிராச்சியமும் உன்மக்களும் ஒக்கலும் செல்வமும் சீரும் இன்னஞ் சிலபகலில் வாயுகுமாரனாகிய வீமசேனனுடைய கதையால் மாண்டுபோம் ஐயா அவடத்தில் நடந்தகாரியங்கள் அநேகமுண்டு அவைகளையெல்லாம் தேவரீருக்கு மாத்திரம் உரைத்தால் பூரித்ததோள்களையுடைய புண்ணியர்களும் திண்ணிய கண்ணியர்களும் உன்புத்திரர்களும் மற்றமித்திரர்களும் கேட்பதற்கு இப்போது இவடத்தில் இல்லாமையால் போதுவிடிந்தவுடனே நித்தியவிதி முடித்துக் கொண்டு தீங்கில்லாத திருச்சபைக்குவந்து இயாவருங் கேட்கச் சொல்லுகின்றேன் என்று திரிதராட்டிரனிடத்தில் சஞ்சயன் சிலவுபெற்றுக் கொண்டு விடுதிபோய்ச் சேர்ந்தான், இப்பால் உலகத்தை இருள் மூடுந் தன்மைபோல் தரணீசனாகிய திரிதராட்டிரனுக்கு மனச்சஞ்சலம் வந்துதோன்ற பெருமூச்சும் நெடுமூச்சும் வுண்டாய் ஆலஹாலவிஷத்தைப், புசித்தவர்கள்போல் நடுங்கி ஆறுத்துயரத்தில் வீழ்ந்து இரங்கி மயங்கித் தியங்கித்தாழ்ந்து ஒன்றுந்தோன்றாமல் நித்திரை இன்றி அரட்டலும் புரட்டலும் அதிகரிக்க கண்ணீர்சோர அழுவான் கையையூன்றி எழுவான் கால்நடுங்கி விழுவான் கடவுளே என்று

தொழுவான் இப்படிக்குப் பலபலதுன்பம் அடைந்து சகிக்கமாட்டாமல் மந்திரயுத்தியிலும் தந்திர புத்தியிலும் உயர்ந்தம்பியாகிய விதுரமகாராஜனை அழைத்தோடிவாருங்களென்றுஉயிர்ச்சேவகரை அனுப்பஅவர்கள்வினைந்துவணங்கிச்சொல்லும் அம்மொழிகேட்டுசெம்மலாகியவிதுரன் அர்த்தராத்திரியில்அண்ணனிடத்திற்குவந்து அணிமலர்அடியில்வீழ்ந்து ஆசீர்வசனங்கொண்டுஅருகிலிருக்கும் ஆசனத்தில் இருந்து மார்பையும் தோளையும் தடவிக்கொடுத்து வாண்டநாவுக்குப்பச்சைவுண்டாகக்கசாயவற்கங்கொடுத்துத் திடப்படுத்தியாலவட்டங்களால் உபசரித்து ஆறுதல்சொல்லி என்னை அழைத்தகாரணம்இயாது அண்ணா என்று வினவிய தம்பியைநோக்கி, மாட்சிமையுடைய கல்வியிலும் கேள்வியிலும் சாஸ்திரக் கருத்துந் தப்பாமல் தெரிந்துநடக்கும் அப்பனே. ஐவரிருக்கும் உபலாவியம்புகுந்து இயான்சொல்லியவசனங்களெல்லாம் உரைத்துமறுமொழிகொண்டு இவடம்வந்து அவர்கள்கூறியசங்கதி அநேகங்களில் சிற்சிலகாரியங்களைத்தெரிவித்து நாளை உதயத்தில்வந்து மற்றவைகளையுஞ் சொல்லுகின்றேன் என்றுமேலாகிய அறிவிற்சிறந்த சஞ்சயன்விடைபெற்றுக்கொண்டு விடுதிக்குச்சென்றான் அதுமுதல்கண்ணுறக்கங்கொள்ளாமல்கலங்கிய எனக்கு எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல்இந்த இராக்காலம்நான்குயுகமாக நிலைபெற்றிருக்குந்தன்மைபோல் நலியச்செய்கின்றது ஆகையால் ஏதாகிலுந்தருமங்களைச்சொல்லி இந்த இராப்பொழுதைப்போக்கடிப்பாயென்று இவடத்திற்கு உன்னை இயான் அழைப்பித்தேனென்று இறைவனுன்இயம்பக்கேட்டுஇளையதம்பியாகியவிதுரன்சொல்லுகின்றான் என் அண்ணாவே ! சதுரங்கத்துடன் சாமர்த்தியமுள்ள அரசன்சளையாமல்யுத்தஞ்செய்யத் துணிந்துவளைந்துகொண்டால் அவனைவெல்லுவதற்கு வல்லமை இல்லாதசவுங்கலாகிய இராஜவீரர்கள் எவர்களோ அவர்களும்தான் சம்பாதிக்காமலும் தந்தைமுதலியபேர்கள் எச்சிற்கையாலுங்காக்கையை ஓட்டாமல்சேகரித்து க்ஷேமத்தில் வைத்த திரண்ட திரவியங்களை; ஜனபோஷகம், தானகருமம், பரவுபகாரம்செய்யாமலும்,தாங்களேபிரபுக்களென்று இறுமாந்து பொன்காத்த பூதம்போற்பார்த்திருந்தும் அந்தப்பொருள் இழந்தபிற்பாடு தலைகவிழ்ந்துவாகனமிழந்துபூரியராகித்திரியும்பேதைபோன்றலோபியலெவர்களோ அவர்களும்திருடவேண்டுமென்னுங்கியாபகமுடைய திருடர்களும் கலகமும்வஞ்சனையுஞ்செய்து ஜீவனஞ்செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டு திரிகின்றகர்மிகளும் பற்பலபாஷைகளையும் சாஸ்திரங்களையும் படித்துணர வேண்டிய ஆசை கொண்டவர்களும் நித்தியதரித்திரத்தில் ஆழ்ந்துவருந்திநிலையாகியவாழ்வைப்பெறவேண்டுமென்னும் இச்சையையுடையவர்களும் எந்தவேளையும் போகத்தை விரும்பிக் காமாந்தகராய்த்திரிபவர்களும் வியாதிக்காரர்களும், தாங்களெண்ணியகவலையினால் நித்திரை அற்றிருப்பார்கள் இவர்களுக்குக்கண்ணுறக்கம் வாராதிருப்பதுஞாயமே, பஞ்சாசத் கோடி பூமண்டலாதிபதியாகிய தேவரீர் கண்ணுறக்கங் கொள்ளாதிருப்பதற்குக் காரணமென்னவென்று வினவியவிதுரனை இராஜன்நோக்கி ! நிறைந்த உயிருக்குயிராகிய தம்பியும், மதிமந்திரியும், தோழனுமாகிய, தோன்றலேகேளும், பலமும்நலமுமுடைய பாண்டவர்களால் நடக்கப்போகின்றயுத்தத்தில் அபலமும் சபலமுமுடைய அரவகேதனன்முதலாகிய புத்திரமித்திரவருக்கங்கள் என்னபாடுபடுவார்களோ எந்தக்கேடு கெடுவார்களோவென்று என்சிந்தைநினைந்து பெருமூச்செறிந்து தியங்கி மயங்கித் திடுக்கிட்டெழுந்து நித்திரைவாராமல்நெடுந்துயருழன்றேன் ஆகையால் என்னையுந்தேற்றி யுத்தம்நேரிடாமலிருப்பதற்குத்தகுதியாகிய யுத்தியுபாயங்களையும்புகன்று அபாயம் நீக்கி ஆளவேணும்; ஐயனேயென்று அரசன்கூற அவ்வார்த்தையைக்கேட்ட விதுரனனவன் என்னண்ணாவேகேளும் ! காசினி ஆளும் காவலர்களுக்கு, இரண்டுகாரியமுண்டு அதாவது, தாயாதிமுதலியபந்துக்களுடன் வித்தியாசமின்றிருமை மனத்தினராய் உடன்பொருந்திவாழ்வதே உலகமெய்க்கும்வாழ்வு அப்படியில்லாமல் விரோதங்கொண்டு பகைத்துவாழ நினைப்பாராகில் மாறுத்துயரம் ஆறுகப்பெருகும் இதுசத்தியவசனமாதலால் உன்புத்திரர் ஐவரைப்பகைத்துக்கொண்டபடியால் விளையப்போகின்ற சண்டையை விலக்கவல்லவர்களொருவருமில்லை இருந்தால் முதலில் விளையும்போதே முளையிற்கிள்ளிவிடுவார்கள், ஐயா ! சிருஷ்டி கர்த்தாவாகிய திசைமுகன் வரன்முறைப்படி விதித்த விதியை அனுசரிக்கும்மதியென்றியம்பி, குற்றமில்லாத்தவத்தினையுடைய விதுரமகாராஜன்மேலும்சொல்லுகின்றார். கேளும் பூபதியே. பாண்டுமகாராஜாவின் புத்திரர் தங்களுக்கு நிரியாணநேரிடும்ஆபத்காலங்களிலும்தேவரீர்பேரில்வைத்திருந்த அன்பும், பத்தியும், விசுவாசமும், ஆசையும்,தினையத்தனையேனு மறந்துமாறுபட்டு வேறாக நினைக்கமாட்டார்கள் ஆனால் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்தவர்களை சபாமண்டபம் பார்த்துப்போகலாமென்றுபெரியதந்தையாகிய நீர் திருமுகமெழுதி கையொப்பமிட்டு வரவழைத்த காலத்தில் உமதுபுத்திரன்மாயச்சூதாடி அவர்களுடைய உரிமையைக் கைக்கொண்டபோதும் உமதுபிள்ளைகளும் அவர்களைச்சார்ந்தவர்களும் இழிவாகியசொற்களைச் சொல்லியபோதும் தாமரைமலர்போன்ற முகத்தையும்சாமாகிய கமுகின்பாளைபோன்ற குழலையுமுடையதிருவுக்கொப்பாகும் திரௌபதியை, மயிரைப்பற்றி இழுத்துவந்த காலத்திலும் வஸ்திரத்தையுரிந்து மானபங்கஞ்செய்தகாலத்திலும் கரத்தைநீட்டி தொடையைக்காட்டி இந்தத்துடையின்மீது கொண்டுவந்துவையடாதம்பியென்று கூறியகாலத்திலும்நொந்து மனம்வருந்தி, உன்பேரில்வைத்திருந்த அன்பும் ஆசாபாசமுங்,கொஞ்சங்கொஞ்சமாக நீங்கிப்போய்விட்டது அதைக்குறித்து நீர் ஆயாசப்படவேண்டாம், இவ்வுலகத்தில் உத்தமர்மத்திமர் அதமரென்று மூவருண்டு அதாவது.

கவி.

கற்பிளவோடொப்பர்கயவர்கடுஞ்சினத்திற்
பொற்பிளவோ டொப்பாரும்போல்வரோ-விற்பிடித்து

நீர்கிழியவெய்தவடுப்போலுமாறுமே
சீரொழுகுசான்றோர்சினம்.

(எ-து.) அண்ணா! அதமராகும் கயவர்களுடையகோபம்பிளந்த கல்லைப்போலாகும்மறுபடியும்பொருந்தாது, மத்திமராகும் புத்தியினர்களுடைய கோபம்வெட்டுப்பட்டபொன் துண்டுபோலாகி மூசையில்வைத்து படிகாரமிட்டுருக்கப்பொருந்தும் அதுபோல் இன்னொருபுத்திமான் இடையிலிருந்து சமாதானஞ்செய்தால் கலந்திருப்பார்கள், மேன்பாட்டினையுஞ் சிறப்பினையும்கல்வித் திறத்தினையும் குலசாம்பிரதாயத்தையுமுடைய உத்தமர்களுக்குக்கோபம்வாராதுவந்தாலும் தண்ணீரின்பேரில் பாணத்தைத்தொடுத்தால் வடுவாகியகாயமும் வேறுபாடாவதாகியபிரிவுமில்லாமல்ஒன்றாகயிருக்குந் தன்மையைப்போலாகும் உத்தமர்களுடைய கோபம்அதுபோல, ஐவர்கள் மேன்பாடுடைய சீரியர் ஆதலால் எப்பேர்ப்பட்ட குற்றங்களையும் உடனே மறக்கத்தக்கவர்கள் வீரவழகு நிறைந்தோள்களையுடைய வேந்தே, ஆண்மிக்கையிலும்விவேகத்திலும்கீர்த்தியிலும் நீதிஞாயங்களிலும்சத்தியத்திலும் இளையாமலுயர்ந்த பாண்டவராகியநல்லபுத்திரர்களை இப்போதுவரவழைத்து அவர்களுக்குரிய பூமியைக்கொடுக்கமனதுள்ளதோசொல்லும் அப்படிசெய்வீராகில் வீரகண்டாமணியைத்தரித்த அரசர்களாகிய ஐவர்பெரிய தந்தையான உமதுவார்த்தையைத்தள்ளமாட்டார்கள், சபையிற்சொல்லிய சபதங்களெல்லாவற்றையும் குடும்பதோஷத்தையும் பாராஜர்கள்பழித்த நிந்தையாகிய வடு உச்சொல்லையும் மறந்து உமதுபுத்திரர்களுடன்வித்தியாசமில்லாமல்பொருத்திவாழ்வார்கள் அதனாலிந்தச் சந்திரமாபுமேன்மேலாகத்தழைக்கும் இப்படிசெய்யாமற் கொடிதாகிய யுத்தம்விளையும்படியாக எண்ணுவையாகில் கடல்வளைந்தகாசினியெல்லாம்காவலராகஐவரே ஒருகுடையில்ஆள்பவர்கள்இரணகளத்தில்பலியாகப்படுவோரெல்லாம் நினதுபுத்திரரும் பௌத்திரரும்மித்திரர்களுந்தான் உறுதியாகச்சொல்லுவதற்கு ஒருக்காலுஞ் சந்தேகமில்லை திரோஷ்டனே உயர்ந்தபதமும்பெருமையும் அரசர்முதற்சேனைகளின்கூட்டமும்உரியபெரியவர்களின்நண்பும்செல்வப்பெருக்கமுங்கூடினல்தாயத்தாரைவென்றமமதையும் ஏகபோகமாக இராச்சியத்தைஆளுவதும் நூறுபிள்ளைகளென்னுந்தொகை மகிட்சியும் இவைகளெல்லாம் நிச்சயமாகியபொருளென்று நினைவுகொள்ளாதே, ஐயோ! அனித்தியமே, ஏனெனில் தூண்டி முள்ளில்மாட்டியசோற்றுஇரையைக்கருதிவிழுங்கியஜலசரமான மீன்களுக்குநேரிடுந்துன்பந்தான், உனதுபுத்திரர்களுக்குவரப்போறதிரையைக்கருதி உண்டுஇன்னம்வாழலாமென்றுவந்துவிழுந்துமாட்டிக்கொண்ட மீன்களைக்கரையிலிருந்தவன் இழுத்துக்கொல்லுவான் அதுபோல்பாண்டவர்களை வஞ்சித்துவாயிற்போட்டுக்கொண்டபூமியை நமதுசொந்தமாகக்கொண்டுவெகுநாளிருந்து ஆண்டு அனுபவிக்கலாமென்னும் ஆசைமேலிட்டிருப்பதனால்நாளைநடக்கும் யுத்தகளமென்னுங்குளத்தில் பாசொத்தபேசைஷயாகியஇரைகளைக்கொண்ட உன்புத்திரரை வீமார்ச்சுனர்கதையினாலும், விற்கணையினாலும், தூக்கிப்பாக்கியில்லாமல்மாட்டியிழுத்துவாட்டிவிடப்போறார்கள்மேட்டிமையையுடைய அண்ணலே,நீர்யோசிக்கக்கடவது மெய்யாகவும் ஸ்திரமாகவும் நடக்கப்போறஇரகசியத்தை இன்றுசொல்லி விட்டேன்; மேலும் வீஷ்டுமர்முதலியஎன்போலொத்தவர்களெல்லாம் உன்புத்திரனுக்கெத்தனைவிதத்தில் வருந்திச்சொன்னாலும் கிழவன்பாடல்கின்னரிக்குச்சரிப்படாதென்றதோன்ற காதுக்குநாராசமாகவும்நாவுக்குக்காஞ்சிரங்காயாகவும் இருக்கின்றதுலாபலோபத்திற் குடன்பட்ட நண்பர்களைப்போலும்விரும்பியிருக்கும் கன்னன், சகுனி, துச்சாதனன்இவர்கள்சொல்லும்வார்த்தைகள்தேன்பாகுமணப்பாகுகற்கண்டுப்பாகு சீனிச்சருக்கரைப்பாகு இதுகளுக்குமேலாகியமாதுரியமாயிருக்கின்றது அரவக்கொடியோனுக்குஐயா இதுநன்மை, இதுதீமை என்றுணராதசிறுபிள்ளையினிடத்தில் ஏகச்சக்ராதிபத்தியத்தைவிடுத்து ஏதொருபற்றில்லாதயோ கீஸ்வரனைப்போலிருக்கின்றாய் அவர்களோ அழகிய ஆயுதங்களையும்அரம்பாஸ்திரீகளையும்வைத்துப்படைக்கும்வகையுணராதநபுஞ்சர்களைப்போல்வழிதுறை இல்லாமல்தங்கள்மனது வந்தபடிக்குநடந்து செய்தற்கரியனவற்றைச்செய்யும் பெரியோர்களையும் எடுத்தெறிந்துபேசி இளங்கன்றுபயமறியாதென்பது தோன்ற உமது உரியவார்த்தைக்கும் உடன்படாமலிருக்கும்புத்திரர்களைக்குறித்து நான் என்னசொல்லுவேன் அவர்களுக்காக நீர்விசனப்படுவானேன் பெருமூச்சுவிடுவானேன் நித்திரையற்றிருப்பானேன் கமுகம்பாளைவிரிந்து அதிற்பெருகிய தேன்கள்சொரிந்துபாயுங் குருநாட்டுக்குநாயகமாகிய எங்கோவே இன்னமுங்கேளும் நீர்கொடுத்த காண்டவப்பிரஸ்தமென்னுங் காட்டை தெய்வானுக்கூலத்தால் நாடுநகரங்களேர்ப்படுத்தி அரசுபுரிந்து பெருமை பாராட்டிக்கொண்டிருந்த பாண்டவர்களை முன்பின்னெண்ணாமலழைப்பித்துசகுனியை எதிராக்கி சொக்கட்டானாடச்செய்ததேதகாது அதிலும்பந்தியம்வைக்கச்சொன்னதுபழுது மேலும் ஐவரையும் திரௌபதையையும்வைத்துக்[illegible]த்து ஐயையோ அனியாயமனியாயம் இப்படிபாச்சிகூடினற்ஜயங்கொண்டபூமியைக்கைப்பற்றினாலும் ஒருவிதநன்மையே இதன்றிதேவர்கள்முதலிய இயாவர்களும்துதிக்கும்படியாகிய பெருமையிற்சிறந்த பாண்டவர்களாகிய பிரபலரை அற்பமாகிய துரும்பிலுந்துரும்பாக அவமதித்து அந்தச்சபையிற்பேசிய புன்மொழிகளைப் புருஷமேருவாகிய தீரர்கள்பிராணபரியந்தரம்மறந்து மறப்பார்களோசொல்லும் அண்ணா, (தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறுமாறாதே நாவினாற்சுட்டவடு.) என்று இயம்பியநீதிக்கிணங்க நெருப்பினாற்சுட்டபுண்ணும் பாணமுதலிய ஆயுதங்களினால் துளையாகியபுண்ணும்சல்லிய கரணிமுதலாகியமருந்துகளினால் உடனே ஆறிப்போம்சொல்லினாற்பட்டபுண் என்றென்றைக்கும் ஆறாது எவர்கள்நீக்கத்தக்கவர்கள்சர்வசங்கப் பரித்தியாகஞ்செய்த மகானுக்களையும்துளைக்கும்அவர்களும்சகிக்கமாட்டார்கள் பாண்டவர்கள்மேன்மையாகிய அறிஞராகையினால் அன்றுஅந்தச்சபையில்மனம்பொறுத்திருந்தார்கள் அவர்களல்லாம

ல்தேவர்கள்முதலியமற்றெவர்களானாலும் இந்தப்பாவிகள்செய்தபொல்லாங்கினால்தனயதருமம், சாந்தமென்னும்பாசங்களைவிடுத்து அன்னேரமேநாசப்படுத்திக்கோபந்திருவார்களல்லவா தேவரீரும் உரிமை அறிவு ஒழுக்கம்பெருமைக்குணம் தெளிவு இவைகளில்லாத மூடர்களைப்போல் கண்ணைமூடிக்கொண்டிருந்தபடியால் இவ்வளவு அலங்கோலத்திற்கிடமாயிற்று போனதுபோகட்டும் இப்பவும்பக்ஷபாதமில்லாமல் சமமாகநடத்தவேண்டுமென்னும்நடுவுநிலைமையாகியபுத்தி உம்மிடத்திலிருக்குமாகில் நம்முதுகுலத்திற்பிறந்த பிள்ளைகள் பிரவேசிக்கத்தகாத பகைவழியிற்புகவொட்டாமல் பாண்டவர்களை அழைத்து உனதுபுத்திரர்க்கிசைந்த இராச்சியத்தையும்சேனைகளையுஞ்செல்வங்களையுங்கொடுத்துசமாதானஞ்செய்தாலொழிய கௌரவர்கள்பிழைக்கமாட்டார்களென்று பரிசுத்தவான்களிலுயர்ந்த விதுரமகாராஜன்விளம்பியமொழிகளையெல்லாங்காதின்வழியாக அருந்தினனது அருமைத்தம்பியே நீ சொன்னதெல்லாம் உண்மைதானென்று விசனந்தீர்ந்துசந்தோஷித்துமனங்குளிர்ந்துமறைந்தசூரியன்உதயமானவுடனேஎன்தம்பிபிள்ளைகளுக்கு நாடுநகரமுதலியபாக்கியமியாவுங்கொடுத்துவிடுகிறேன்இதற்குயாதொரு தடையுமில்லை இவ்வுலகி லிருக்கு மனிதர்களும் பற்பல தேசத்தரசர்களும் அவ்வுலகத்திலிருக்குந்தேவர்களும்முத்தொழில்நடாத்தும் மூவர்களும் துரியோதனாதிமுதலிய யாவர்களுங்கூடிவந்து அவர்களுக்கு நாடுகொடுக்கக் கூடாதென்று தடைசெய்தலும் அவர்கள் வார்த்தையைத் தடைசெய்து கொடுக்கிறேன் ஒருக்காலும் நான்சொன்ன சொற்றவறேன் சத்துருக்கள் பத்தினிகளின் தாலியையும் அகங்காரக்காவலாகிய வேலியையும் களைய வளையுஞ் சிலையையுடைய தம்பி நீ போய்வாவென்று விடைதரவுங் குணநிதியாகிய சுகவிதுரன் அணிபதிமேவுமகம் புகுந்தான் இப்பால் தருமஞ்சொல்லிய தம்பி அரண்மனைக்குப்போனபிற்பாடு, (கல்லாப்புல்லர்க்கு நல்லோர்சொன்னபொருளெனப் போயதன்றே,)கற்காத அற்பபுத்தியை யுடையபேர்களுக்குக் கற்றுணர்ந்தமேலோர்கள் சொல்லிய ஞயானப்பொருள் ஒரு காதினுழைந்து மற்றொரு காதிவழியாய்ப் போய்விடுந் தன்மையைப்போல் கண்ணொளியற்ற குருடனுடைய கவலை மனமும் இருண்டு களைத்து மகனைப்போலிருந்தது அவன் மனத்தைப்போல் இராத்திரியு மிருண்டுவளைத்து எமனைப்போல் நிறைந்தது அதெப்படி என்றால் மேகங்களெல்லாந் தலையும், பிரகாசிக்குமின்னலெல்லாம் சுருண்ட செம்பட்டமயிரும், மூன்றாம்பிறையே கோரதந்தமும், சிற்சில, மலைகளே பற்பல புயங்களும் நக்ஷத்திரங்களே வக்ஷஸ்தல ஆபரணங்களும் கறுத்த இருளே தேககாந்திரமுமாக உடைய இராக்காலமென்னும் இயமன்வாடைக் காற்றாகிய பாசந்தாங்கி துரியோதனாதிபர்கள் இறப்பதற்கு முகூர்த்தநாள் ஏற்படுத்திக்கொள்ள திரிதராட்டிரனைச் செலவுகேட்க வந்தது போலுமிருந்தது, திரிதராட்டிரனுக்கு அளவற்ற ஊழிகாலமென இடைவிடாமல் குழம்பாக நெருங்கிய இருட்கூட்டமானது கனவிற்றோன்றி கனவிற்கண்டபொருள் வாழ்க்கையைப்போல் உடனேயகன்றது ஞானிதன்னை விற்பட்டால் நசியிருட்பிறவி நீங்கும்.) என்பதற்கீடாய் பரப்பிரமக்கடவுளின் வலக்கண்ணாகியும், நவவியாகரண பாண்டித்வமுடைய சூரியபகவான் உதயமாக நினைத்தவுடனே இருள்நீங்கியது அவரெப்படி நினைத்தாரென்றால் விவேகசூரியரின் மனம்போலிருண்ட முன்னைநாள் நடுராத்திரியில் இளவலாகிய விதுரமகாராஜன் திரிதராட்டிரனுக்கு உபதேசித்த மந்திரவார்த்தைகளெல்லாம் ஏதாகமுடியுதோ அதை அறியவேண்டுமென்று நினைத்துசப்தமாவென்னும்பரிபூட்டிய இரதமேறி உதயகிரியின் உச்சியில்வந்து விளங்கி, வண்மையும் தன்மையும் உண்மையும், நிறைந்த மஹானுக்களின்மனதிற்கொப்பாக அரண்மனை சாளரங்கள் மேல்வீடுமுதலிய சாலை சோலை இடங்களிலும் பிரகாசமுள்ள கிரணங்கள் நுழைந்து காயும்படியாக உதயமானார், அந்தக்கிரணங்கள் விரிந்து நுழைந்து காய்ந்தது எப்படி இருந்ததென்றால் விதுரமகா ராஜனுடைய விவேகத்தைக்கேட்டு திரிதராட்டிரன் ஐவருக்கு நாடுகொடுக்கிற தாகச்சொல்லி யிருக்கின்றான் அந்த அதிசயத்தை இயாவரும் எழுந்துபாருங்க ளென்று கிரணமாகிய கரங்களினால் கிட்டித்தட்டி யெழுப்பி யதைப்போலுமிருந்தது சூரியகாந்தி, உடனே நகரில்வாழும் ஜனங்களெல்லோரும் முகமும் அகமும் மலர்ந்து மகிழ்ந்து எழுந்து விழுந்து சூரியனைத்தொழுதார்கள் வீஷ்டுமர் துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர்-அசுபத்தாமர்- அங்கதேசாதிபதி; துரியோதனன், துச்சாதனன் முதலிய சகோதரரும் சௌபலசிரேஷ்ட சகுனி முதலாகிய புத்திர மித்திர தம்பிமார்களும் இரத்தந்தோய்ந்த வேலாயுதந்தாங்கிய இளைய இராஜ தேஜ போஜரும் வேதபண்டிதவிப்பிரர்களும் சோதிட நூல்வல்லவர்களும் சகுன சாஸ்திரிகளும் மாசறக்கற்ற கவிவாணரும் மற்ற தேசதேசத் தலைவரும் தங்கள் தங்களுக்குரிய இராஜசிங்காசனங் களிலும் வீற்றிருந்தார்கள் அந்தச்சமையத்தில் இராத்திரிமுழுமையும் நித்திரையற்றிருந்த திரிதராட்டிர மகிபதி சுத்தியாய்ப் பத்தியாய் நித்தியகடனை வெற்றிபெற முடித்துக்கொண்டு குருகுலம் விளங்கக் கூடியிருக்கும் மதிமந்திரிமார்களும் துதி தந்திரியோர்களும் பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் மண்டலீகரும் உரிய பலநாட்டரசரும் பெரிய குழுஉக்கொண்டுவர பரதகீதநாதநட நாட்டியங்களும் பட்டுவான்களும் சட்டியர்களும் சதிர்சேர்ந்திருக்குஞ் சபையில்வந்து அவ்விடத்தி லிருப்பவர்களியாவரையும் விசாரித்து விதிமுறைப்படி வந்தனம் மரியாதை உபசாரம் இயாவுஞ்செய்து அக்ஷதை ஆசீர் வசனங்களும்பெற்று அரியாசனத்தி லமர்ந்தான் பெரிய அரசன், அந்தவேளையில் சஞ்சயனென்பவன், உதயத்திலெழுந்து திருமஞ்சனமூழ்கி திவ்யமலரா லருச்சித்து சூரிய நமஸ்காரஞ்செய்து அணிமணிக்கலை அணிந்து அழகிய சபைக்கு நேராகவந்து நின்று காவலோனைக்கண்டு கடைத்தலையில் தான்வந்து காத்திருப்பதைக் காவலனுக்கு அறிவிப்புமென்றான் அதைககேட்டுத்தூதர் போய்வணங்கிச் சொல்ல, வரும்படியாக அரசன் உத்தரவுசெய்ததை அறிந்து

க்கொண்டு சபைக்குட்சென்று துரோணாச்சாரியர்முதலி ய பிராமணர்களுக்கும் வீஷ்டுமர்முதலிய பெரியவேந்த ருக்கும் கைதொழுது, தருமநீதி சாஸ்திரமுணர்ந்து வெறுப்பும் விருப்பும் வெப்பமும் தட்பமுமில்லாத சஞ்சய னென்கிற முத்தமருணத்தோனவர் இராஜனுக்குச் சமீபத்திலிருந்த ஆசனத்திலிருக்கவும் கட்புலனற்ற காவலன்சி ந்நிந்து ஆசையுடன் சஞ்சயனை அழைத்துப்பாண்டவர் களிடத்தில் தூதுபோய்வந்த சருத்து முழுவதும் சபை யில் நிறைந்த இயாவருங் கேட்கப் பெரியோர் களுக்கு முன்பாகச்சொல்லும்; என்றவுடனே சஞ்சய னானவன் எல்லோர்க்கும் சந்தேகப் படும்படியாகச் சொல் முடிபு பொருண்முடிபு காரியகாரணம் தோன்றாமல் மனவெறுப்பின்றல் பொழிப்பாகச்சொல்லவும் அதைக்கேட்டு வெற்றியையுடைய திரிதராட்டிரன் சஞ்சயனைப் பார்த்து ஐயா? நீர்போனதுமுதல் வந்ததுவரையில் அவர்கள் கூறிய வசனத்தில் ஒருசொல்லாகிலும் சோர்வுபடாமல் பதம்பதமாக விரித்துச்சொல்ல வேண்டுமென்னவும், சஞ்சயன் சொல்லலுற்றான். அம்புலிமரபிற் சுதித்து அம்பிகைசுதனென உதித்து அம்புவி அரசுசெலுத்தும் அரசன்முதலிய இயாவருங்கேண்மின் அஸ்தினபுரத்தை விடுத்து, அழகிய உபலாவியத்தை யடுத்து, ஸ்ரீகிருஷ்ணனிருந்த திருமாளிகைக்குச் சென்று சஞ்சயன்வந்திருக்கின்றேனென்று தெரிவிக்கும்படி வாசலிலிருந்த தூதனைச் செலுத்தினேன் வரச்சொல்லென்று கூறிய மறுமொழி கொண்டு அந்தப்புரத்திற்சென்று அழகுகுலவிய அரதன மணிகளாற்செய்த அம்ச தூளிகாமஞ்சத்தில் ஆதிசேஷனுக்கு ஒப்பாகப் பட்டுமெத்தை மலர்மெத்தை பரப்பிய பஞ்சணையின்மீது அருச்சுனனிருந்து அடியிணை சுமந்துவருட உருக்குமணிதேவியார் இருகரத்தினாலு மயில்விசிறி கொண்டு உபசரிக்க அக்கினியிலுதித்த பாஞ்சாலி கவரி வீச, இவர்கள் மூவருமன்றி மற்றொருவருமின்றி சயனித்துக்கொண்டிருந்த அஞ்சன மேனியானாகிய இணையில்லாத ஏந்தலை உட்புலன்களைந்து தேறிய உத்தமர்களின் உள்ளத்திலூறும் உணர்வானவனை, உந்திபூத்தோனை உலவைசேதனனை உததி விட்டிவண் வந்துதித்த மாயவனை வருந்தித்தவப்பேறுபெறுவார்களைப்போல்காட்சியாகக்கண்டு இதுவேநாம் பெறவேண்டிய முத்திவீடென்று தேவதேவனுடைய திருவடியில் சாஷ்டாங்கமாகப் பணிந்த வென்னை, மனமகிழ்வுடன் பக்கத்திலழைத்து அணைத்தனர் நானுங் கைகட்டிக்கொண்டு நின்றேன் அப்போது இளமையும் அழகையும் இயல்பாகக் கொண்ட என் ஐயன்மார்களின் முகத்தை தமது தாமரைக் கண்ணினால் நோக்கினார் உடனே அவர்களிருவரும் அரக்காம்பலுக்கு ஒப்பாகிய கரங்களினால் நவரத்தினங்களிழைத்துமாற்றுயர்ந்த தங்கத்தினாற்செய்து எங்கும்பொங்கும்ஒளியினையுயர்ந்தசிங்காசனங்கொண்டுவந்துபோட்டார்கள் அதன்மேலில்உருக்காராமல்கையைமாத்திரம்அந்தஆசனத்தின்மேலில் வைத்துக்கொண்டுசுவாமியின்பக்கத்தில்பூமியிலிருந்துவனைய்கிருற்சொண்டமேகம்போலும்,காசாம்பூவைப்போலும்மரகதமணியைப்போலும் வண்ணந்தழைத்தகண்ணன்திருமேனியினழகையும்அருச்சுனனுருவத்தையும்கண்களிகூரநோக்கி ஆக்கலும்அழித்தலும், தோற்றமும் மறைப்புமுடைய சுதந்தரர், இவர்கள் திருஷ்டிக்கு லோகா லோகங்களும் நிலையில்லாம லழியும் இந்தப் புண்ணிய வான்களைச் சிநேகித்தால் மூவுலகமும் ஆளலாம் மாறுபட்டுப் பகைத்தால் எதிர்த்தவர்களும் ஈரேழுலகமும் இறந்துபோம் இப்பேர்ப்பட்ட மைத்துனனும், தம்பியும்கைகாட்டியவேலைகளைச்செய்யும்ஏவலாளாகயிருக்க தருமராஜனுக்கு வேறேபடைத்துணையும்வேண்டுமோ.ஆண்மிக்கையற்றவனென்றுஞ்சொல்லப்போமோ புவனபுவனமுழுமையும் தனக்குவேண்டுமென்றுநினைப்பாராகில் இப்போதேகிடைக்கும்படிசெய்வார்கள்இந்தஇருவரும்இப்பேர்ப்பட்ட பலசாலிகளிருந்தும் நாட்டைவிடுத்துக்காட்டிலுறைவானேனென்றால், பரிசுத்தமுள்ள நினைப்பும் ஒப்புவமை யில்லாதவருமாகையால் எதையும் விரும்பாமல் வெறுத்திருந்தாரென்று என்னெண்ணத்தில் பலபல வண்ணம் எண்ணிக்கொண்டிருக்கையில், கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துக் கல்வருஷத்தைத் தடுத்து, கோபாலரைக் காத்தருளிய, தேவாதி தேவனாகிய கண்ணன் என்னைப்பார்த்து இப்போது இவடத்திற்கு நீர் வந்தகாரிய மென்ன வென்றுகேட்க, அடியேன் சிற்சிலவார்த்தைகளைச் சொன்னேன், அப்போது கேசவனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஒருவாக்கியம்! திருவாய்மலர்ந்தருளினார். அப்பா சஞ்சயனே! துரியோதனாதியர்க்கும் பாண்டவர்களுக்கும் நடக்கப் போகின்ற யுத்தத்தைக்குறித்து திரிதராட்டிரமகாராஜன் விசனத்துடன் பயப்படுவாராகில் ஐவர்களுக்கும் இனிமையாகிய வசனங்களைச் சொல்லி விரித்த தலைமயிரை முடிக்காமல் விசனமும் உலகப்பழிப்புங் கொண்டிருக்கும் பாஞ்சாலியின் மனத்துயரத்தையும் போக்கி சூதாடிப் பறித்துக் கொண்ட நாடுநகரம் திரவியமுதலிய இயாவையும் பாண்டவர் பெறும்படியாகக்கொடுத்து அவர்களுக்கு இப்போது படைத்துணைவந்திருக்கும் பார்த்திபர்களையும் நன்மையுடன்சிநேகித்தால்கிரீடபதியாகிய;பாண்டவர்கள்தங்கள் தமையனாராகிய துரியோதனாதியரும் சுகப்பட வேண்டுமென்றெண்ணி தங்கள் சிந்தையிற் றோன்றிய மாத்திரம் நாடுநகரங்கொடுப்பார்கள், அதுவும் கௌரவர்கள்.வஞ்சகமில்லாமல் உரிமைப்பாடாக, மரியாதையுடன் சீழ்ப்படிந்து நடப்பார்களாகில கிடைக்கும் இல்லாவிட்டால் எப்போதுங் கலந்துவாழப்போறதில்லை. இது ஒருபக்ஷம் இப்படி நடத்துவதற்கு மனதொப்பாவிட்டால், யுத்தகளத்தி லெதிர்த்து அவரவர்கள் புஜவலிமைக்குத் தகுந்தபடி சண்டைபண்ணி சத்துருநாசஞ்செய்து துன்ப நீக்கி,இன்பத்துடன் உலகாள்வது ஞாயம், *இது ஒருபக்ஷம் இவ்விரண்டி லொன்றைத்தெரிந்து துணிந்து நடத்த அறியுங் குணமில்லாதவர்களைப் பெரியோரென்று சொல்லுவதிற் பிரயோசனமில்லை தெரிந்தோர்களும் தெரியவுனையாதிருப்பது என்னகாரணமோ, சஞ்சயனே! நீ வந்தகாரியத்தை நானறிந்துக் கொண்டேன் நாடுநகரம் விரும்பிப் பெருமைபெறும் அரசராகிய பாண்டவர்கள், தே

டியசெல்வத்தையும் கூறியசபதத்தையும் நாடிய யுத்தத்
தையும்விடுத்து,விடுபெறுந்தவத்தைச்செய்யக் காடடை
யும்படியாகப் பெரியதந்தை விளம்பினனென்று சொல்வ
தற்கு நீ ஓடிவந்தது எத்தன்மை யொத்த தென்றால் அ
டர்ந்தகாடுமுழுமையும் தொடர்ந்து புகையும்பொறியும்
படர்ந்து முன்னமெரியும் காடாக்கினியை வாடைக்காற்
றும் துணைப்பட்டு வந்து கலந்து, அதை அவிக்கத்துணி
ந்தது போலாகும். பாண்டவர்கள், மனம்வருந்தி எரிந்து
க்கொண் டிருக்கும் வேளையில் உங்களைத் தவஞ்செய்யப்
போகச்சொன்னானென்று நீ சொல்லப்போறசொல்லா
கிய வாடைக்காற்றுங்கலந்து கொண்டால் உலகமுழுகி
ப்போமே, பெரியதந்தை வார்த்தையென்னும் பெருமை
த்தருமமும், எரிந்துபோமே இந்த மொழிகளையும் மநு
நெறிமுறைமைகளையும் யோசிக்குமிடத்தில் தங்கள் தம்
க ளிச்சையின்படிக்கும் வணங்காமுடியோனுக்கு மறுத்
துச்சொல்லக்கூடாத முகஸ்துதியாகவும் பாரபக்ஷமாகவு
ம் நினைத்துச்சொல்லியதாக இருக்கின்றதே தவிர காரியா
காரியந்தெரிந்து இப்படிபோனா லிப்படி நடக்கும் இப்ப
டிவிதைத்தா லிப்படிவிளையும், இது தகுந் ததாதென்பது
ணர்ந்துசொல்லி யனுப்பியதாகத் தோன்றவில்லையே இ
ஃது, பெரிய அரசன்புத்தியல்ல அல்பமதியை யுடைய
அறிவினர், உரைத்தபுத்தியைக்கேட்டுச்சொல்லியனுப்பி
வைத்ததாகஇருக்கின்றதுமதிமிகுந்தபரிசுத்தமாகியசாஸ்
திரங்கள்முழுமையுங் கற்றுணர்ந்தபுண்ணியராகும் பெரி
யோர்களின்புத்தியைக்கேட்டு மொழிந்தவார்த்தையா யி
ருக்கையில்லைதம்பிபிள்ளைகள்காட்டில்தவஞ்செய்யவும்த
ன்பிள்ளைகள்நாட்டில்அரசுபுரியவும்எந்தமதியைக்கொண்
டுதிரிதராட்டிரன்சொல்லியனுப்பிவைத்ததோ,இது அவ
ர்மனதுக்கேதெரியவேண்டியது எனக்குந்தகுந்தயோச
னையாயிருக்கயில்லைசஞ்சயனே நாளையத்தினம் உத்தமனா
கிய தருமநந்தனனுடையசபையிற்சொல்லி அறிந்துக்கொ
ள்ளென்றுமுக்திக்குவித்தாகுமுதல்வனாகிய ஸ்ரீகிருஷ்ண
பகவான்திருவாய்மலர்ந்தருளினானென் றுசஞ்சயன்சொல்
லுவதற் குமுன்னமேபூபதியாகியதிரிதராட்டிரன் சஞ்சய
னை நோக்கி புஜபலவலியாற் கஜமெனவுயர்ந்த விருஷபவி
ராட்டாகியவிஜயன், ஒன்றுஞ்சொல்ல இல்லையோவென்
றுகேட்டான். அப்போதுசஞ்சயன் அரசனைப் பார்த்து,
ஐயா தூயவனாகியமாயவன் சொல்லியதைக்கேட்டிருந்த
இந்திரகுமாரனாகிய நாயகன் அவியாதஅக்கினியைப்போ
ல்வர்ள்விழி சிவந்துமார்புந்தோளும் வலக்கண்ணுந் துடி
த்து என்முகத்தை ஏறநோக்கி ஆ ஆ சஞ்சயனே பெரி
யோராகிய உத்தமர்களும் சிறியோராகியமற்றையர்களும்
நெருங்கிய இராஜசபையில் இந்தவார்த்தையை விஜயன்
விளம்பினனென்றுகலங்காமல்பயப்படாமல்ஒளிக்காமல்
சொல்லக்கடவையென்று சொன்னான் அதென்னவென்
றால்பாபங்களென்னும்பயிர்விளையச்செய்யும் தன்புத்திர
ராகிய துரியோதனனதியர்பேரில்வைத்தபக்ஷமும் கிருபை
யும்பிரயோசனப்படவொட்டாமல் குடும்பம் குலைக்கும்
அல்ப்பர்களுடையபுத்தியை விரும்பிக்கேட்டு தருமத்தி
னுக்கு அடாதகருமத்தைமேற்கொண்டு ஐவர்களையும்அ
னாதையாக்கி அழகியவளஞ்செறிந்தநாட்டில் ஒன்றுமினு
ங்கொடுக்கமாட்டேன் பாண்டவர்கள் இராச்சிய அபே
க்ஷையைவிடுத்து தவம்புரிந்துமோக்ஷவீட்டையடுத்து க
ரையேறவேண்டுமென்றே, எங்கள்பெரியதந்தை பக்ஷ
மாகப்புத்திகள்சொல்லி அனுப்பிவைத்தது ஓ ஓ சஞ்சய
னே ! குலகோத்திரத்துக்கும் தனக்கும்நன்மையுண்டா
கத்தவஞ்செய்யச்சொல்லி அனுப்பியவார்த்தையைச்சிர
சாகக்கொண்டுநாங்கள்முன்பு சபையிற்கூறிய சபதத்தை
விடுத்து தவஞ்செய்வோமாகில் திரிதராட்டிரன் தம்பிபி
ள்ளைகள்சொன்ன சபதஞ்சோர்ந்துபோனார்களென்னும்
பழியும்பாபமும்இவரையும்நமதுமரபையுஞ் சேருமேபெ
ரியவயதினால் அதைமறந்தாரோ சஞ்சயனே நாங்கள்வீ
ரப்பிரதாபத்துடன் ஆபத்துவேளையில் கோபத்தினால் ச
பையில்விளம்பிய சத்தியவாக்கியத்தைலோகப்பிர சித்த
மாகமுடித்து உதிரவெள்ளத்தில்முழ்கி அரசர்கள் பழிக்
கும்பழநாகள்போக்கி அழகினையுடையவர்களாய் எங்க
ள்குலமாகிய திங்கள்குலமோங்க அங்கையிற்சங்குசக்கி
ராதரத்தேவன் ஹரிபரந்தாமன் ஐவர்சகாயன் அழகியம
ணவாளனுடைய அடிமலரைப்பணிந்து குற்ற மகற்றிக்
கொள்ளுவோம் அன்றியும் எங்களுக்குப் பொல்லாங்கு
செய்து எக்காலத்தினும் அசையாதவசையை, இசையாக
க்கொண்ட துரோகிகள் அழகார்ந்தமேனியை தெய்வீக
மாகியவிஜயகாண்டீபத்தில் தொடுத்துவிடுங் கணையினால்
சின்னபின்னமாகப்பிளந்து இரத்தவெள்ள மொழுகவும்
வெப்பமாகிய மூளைகள் அற்பவாயிற்பெருகவும்செய்த அ
ப்பொழுது எங்கள்பெரியதகப்பனார் சொன்னசொற்படி
தவஞ்செய்யக்கானகம்புகுவதன்றி இதற்குமுன் ஒருக்கா
லும்வனம்போக மாட்டோமென்று சொல்லும் சஞ்சய
னே, நினைக்குந்தோறும் சத்துருக்களுடையமார்பும் பெ
ரியதோளும் காத்திரவுடலும் அவர்கள்செய்தகபட வஞ்
சமும் என்கண்ணெதிர்தோன்றிக்கொண் டிருப்பதினால்
அவர்களுடையதேகத்தை ஒருநொடிப்போதில் அளவிற
ந்தகணைகளினால்சல்லடைக்கண்களாக்கிசூரியகிரணங்கள்
சாளரங்கள்தோறும் பிரகாசிக்குந்தன்மைபோல் உதிரக்
கம்பிகள் பீரிட்டடிக்கவும்வாய்செவி, மூக்கு, கண்கள்,
இதுகளின்வழியில் இந்திரியங்கள்துந்து உந்திமுந்தவும்,
உயிர்கள்சிந்தவும் காக்கைகழுகுகள்கொந்தவும்செய்வே
னல்லாமல் உயிருடன்விடமாட்டேன் ஆ ஆ சஞ்சயனே,
பஞ்சபூதசிரேஷ்டனாகிய வாயுகுமாரன் கரங்கொண்ட க
தாயுதத்தினால் துரியோதனாதியர் நூறுபேர்களுடைய ம
ண்டைகள்சிதைந்து சிந்திமண்மேல்விழுந்து அழிந்து பூ
தப்பிரேதபைசாசகணங்கள், நாய், நரி, காக்கை, கழுகு,
பருந்துக்கும்விருந்திட்டாலொழியஎங்களுள்ளத்திற்கோ
பமென்று குடிகொண்டெழுந்த சிவந்தயுகாந்த காலாக்கி
னிதணியமாட்டாது தெளிந்தசிறந்தசஞ்சயனே ஆ, ஆ,
தேவாமிர்தத்திலும்சிறந்தபோசனமுண்டு அம்சதூளிகா
தலப்பத்திற்சயனங்கண்டு வாயுவேகமனோவேகமுடைய
குதிரையின்மேற்கொண்டு கன்னமதகபோலமதாரடமத
ஸ்தம்பகும்பமும் வீரகண்டையுமுடைய இராஜகுஞ்சர

த்தின்மேற்சென்று நவரத்தினப்பணியார்ந்தமணியிரதத்
திலேரோகணித்து உலாவிவரும்தருமசொருபியாகிய தரு
மராஜன் பாதசாரியாய் நடக்கவும் சூதாடி பாக்கியங்களை
யெல்லாங்கைக்கொண்டு வனவாசம்பன்னிரெண்டு வரு
டமென்று அனுப்பியும், பனியிலும் வெய்யலிலும் காற்
றிலும் மழையிலும்வருந்தி மேடுபள்ளம் கற்பாறையிற்ப
டுத்துநித்திரைசெய்யப்பொருத்தியுங் கந்தமூலசருகாதிக
ளருந்திவாழ்நாளை வீணாளாகக்கழிக்கவுந் தாங்கள் சுகத்
தை அநுபவித்திருக்கவுஞ்செய்த இம்மக்களுடைய உட
ல்கள் என்வில்லிலிருந்து வல்லியம்போல்வரும் காலாக்
கினிருத்திராஸ்திரத்தின் நெருப்பினால்வெந்துபுரைந்துவ
ருந்திகரிந்துபொரிந்து சரிந்துமண்மேற்பொடியாகப்போ
ம்படிசெய்து தமயனென்னும்வாஞ்சைதரித்தேனென்று
சகலருமுணரக்காட்டுவதுமன்றி நாளைநடத்துகின்றயுத்த
த்தில்நினைகூடிய சிரம்,கரம்,'கால்,களம், உரம்;இடை,கு
டல், செவி, நாக்கு, மூக்கு, நலமிலாக்கண்கள்மாமிசம்உ
திரம், மயிர், தோல், என்பு, நரம்பு, நிணம், சீழ், நாற்ற
மாம்வெப்புநீர் இப்படியாகக்கூடிய பகைவருடலத்தை க
ண்டங்கண்டமாகக் கோடிதுண்டங்கண்டு சிரமெல்லாமு
ருட்டி நிலமெல்லாம்பரப்பி பொடிப்பொடியாக்கிநாசஞ்
செய்து எங்களைப்போல் அவர்கள்மோசம்போய் அலை
யாமல் எல்லாமிழந்துவனத்தி லுழலாமல் எங்களுக்கும்
இகட்சியில்லாமல் புகட்சிவரும்படியாய் அரம்பாஸ்திரீக
ளெதிர்ந்து ஆசைவிசுவாசத்துடன் வாசந்தங்கு முலைமே
லணைந்து இராஜபோக வீரசொர்க்கத்தில் வாசமாகவை
த்து உபசரிக்கும், அந்தசுகத்தை யிவர்களனுபவிக்கும்ப
டியாகக்கூசாமல்அனுப்பிவிட்டு ஓசைக்கடல்சூழ்ந்தஉலக
முழுமையும் வாசத்தார்புனைந்தசத்தியவாக்கியன்தருமபூ
பதிக்கு சம்பிரமமாக இஷ்டமுடனே இயாவரும்தேவரு
ம்போற்ற பட்டமுங்கட்டிப் யார்ப்பேனையா, எங்கள் தக
ந்தைவார்த்தைக்கு இயாங்கள் அடங்கிசபதமறந்து உலக
ஆசையுந்துறந்து இருந்தாலும், இராசசபையிற்பயந்துவ
ருந்திவயிறு எரிந்துமனங்குழைந்து திக்கற்றவளைப்போ
ல் தியங்கிய மீன்போன்றகண்களையுடைய பாஞ்சாலி அ
ன்றுவிளம்பியசாபம் இவர்கள்கோத்திரத்தையும் குலத்
தையும் புத்திரவருக்கத்தையும்விட்டு நீங்காதென்று அ
ழகியதோளினையுடைய ஐயனேஎங்கள்ஐயாவுக்குச்சொ
ல்லும் இப்பேர்ப்பட்ட மனவைரமுடைய நீங்கள்போர்
புரிந்துவெற்றிகொண்டு இராச்சியங்கைக்கொள்ளாமல்ப
ழமையாகியநாடுநகரங்களை எங்களுக்குக் கொடுவென்று
யாசிப்பவர்களைப்போலே உலூகமாமுனியைத் தூதனுப்
பிகேட்கச்சொல்லுவானேன் என்றால் இயாங்கள் புத்தி
யில்லாமையாலும் யுத்தஞ்செய்யச் சக்தியில்லாமை யா
லும்பயத்தினாலும் கேட்டனுப்பவில்லை அவர்கள் நாடு
கொடுக்க மாட்டார்கள் வீரசொர்க்கவீடு பெறுவார்களெ
ன்று எங்களுக்கு நன்றாய்த்தெரியும் நாங்கள் எத்தனைநா
ளைக்குச்சும்மாயிருந்தாலும் அவர்களும் அத்தனைநாளைக்
குவிசனமற்றிருப்பார்களென்று கருதி எங்களுடைய நா
ட்டைக்கொடுவென்று நாமேதாண்டினால் அவர்கள் தா
மாட்டோமென்று தாண்டிவிழுந்தெழுந்து சண்டைக்கு
வருவார்கள் நாம்பூண்டுகொண்ட சபதங்களெல்லாம்தீர்
த்துக்கொண்டு புகழ்பெறலாமென்று மேலாகிய யுக்தி
செய்து தூதுவிடுத்தோம் அதற்கு எங்கள்பெரியதந்தை
உம்மிடத்திற்சொல்லி அனுப்பியவாக்கியங்களைக்கேட்ட
வுடனே நூதனமாகிய பூமியும்பொன்னாபரணமும் பொ
ருள்முதலிய பொன்னுடையுஞ் சகலவிதநன்மையுங்கோ
டாகோடிபங்குகுறைவில்லாமல் மேலாகப்பெற்றவர்களை
ப்போலானோம் அந்தோ எங்கள் கோழிக்கை நிறையே
றுங்காலம் கைகூடியபடியால் பெரியதந்தைக்கு இந்தப்
புத்தி பிறந்து வனத்திற்றவஞ்செய்யச் சொன்னார் இந்த
விபகாரமுதலிய வார்த்தைகளைக்கேட்டு மனஞ்சகித்துவ
ழிதெரிந்து எங்களிடத்தில் நேரசகசனிக்கும்படி நானு
மல் விநோதத்தூதுவந்த சஞ்சயனேகேளும், நாங்கள் ச
பையில்மொழிந்த சபதங்கள்முடியுங்காலம் எதுவென்றி
ருந்த சந்தோஷத்திற்கு இடையூறுவிளையும்போ லிருக்கி
ன்றதென்று எனதுமனதுவருந்தும்படியாக நினைத்திருந்
தேன் அதை நீ தெரிந்துகொள்ளும்படியாக இப்போது
சொல்லுகின்றேன் கேளுஞ் சஞ்சயனே எங்கள் பாட்ட
னாராகிய வீஷ்டுமர் குருவாகிய துரோணாச்சாரியர் கிரு
பாச்சாரியர் சிறியதந்தை விதுரமகாராசன் இவர்களியா
வரும் அந்தப்பக்ஷத்திலிருக்கின்றார்களே அவர்கள் ஒரு
காலத்தில் இருதிறவர்களையும் சமாதானப்படுத்தி நாடு
நகரங்களைக்கொடுத்து நீங்கள் இவ்விதமாக இருங்களெ
ன்று இயம்பினால் (மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்)
என்னும்பழமொழிக்கு இணங்கும்படியாக பெரியோர்க
ள் சொல்லும் வார்த்தையைத்தள்ளாமல் கேட்கவேண
டுமே அவர்களுடையவாக்கியத்தைக்கேட்டுயுத்தத்தை நி
றுத்திவிட்டால் நாங்கள் சபையிற்கூறிய சபதங்களெல்
லாம் பிசகிப்போய்விடுமே சபதவசனம்பிசகினால் பழியு
ம்பாவமும்வந்து விளையுமே என்று சஞ்சலங்கொண்டிரு
ந்தேன் அந்த சஞ்சலவிபரீதம் இன்றளவில் நீங்கிவிட்
டது அதென்னவென்றால் வீஷ்டுமர்முதலிய பெரியோர்
கள் சமாதானஞ்செய்யவிரும்பிருந்தால் எங்கள்பெரியத
ந்தை இந்தவார்த்தையைச்சொல்லி உம்மைஅனுப்பிவை
க்கமாட்டார் அவர்கருத்துக்குபெரியோர்கள் உடன்பட்டா
மையால் காட்டுக்குப்போகச்சொல்லிகைகாட்டினாரொன்
றும் நாடுகொடுப்பதில்லை சண்டைசெய்ய சித்தமாயிருக்
கின்றார்களென்றும் ஸ்திரமாகத்தெரிய வருகின்றது எங்
களுக்குச் சந்தேகநிவிர்த்தி ஆச்சுது சஞ்சயனே! துரி
யோதனன்முதலிய நூறுபிள்ளைகளின் உயிர்களும் தேறி
த்தெளிந்த பெரியோர்களுடைய உள்ளங்கையில் அடங்
கியிருந்தன, அந்தப்பெரியோர்களின் வார்த்தையைக்கே
ட்டு வணங்கிநடந்தால் இன்னஞ்சிலநாளைக்குக் கூட்ட
ங்குலையாமலிருப்பார்கள் உரியோராகிய பெரியோர்களி
ன் வாக்கியத்தை எப்போதிழந்தார்களோ அப்போதிவர்
கள் இவ்வுலகத்தாரல்ல, இயமலோகத்தில் ஒருவர்முகத்
தை ஒருவர்பார்க்காமல்வருந்தி வாழ்கின்றவர்கள் இதற்
குயாதொருதடையுமில்லை, எங்கள் பெரியதந்தையின் எ
ண்ணம் கவைக்குவாராது (நாமொன்றுநினைத்தால்தெய்
வந்தானொன்று நினைக்குமென்பதைமறந்த் திரிதராட்டிர

னும் மற்றயாவருங்கேட்கச்சொல்லக்கடவையென்று பராக்கிரமசாலியாகிய விஜயன் ஆக்ரமத்துடன்சொன்னான் ஐயாவென்றுநெருங்கியிருக்கும்இராஜசபையினிடத்தில் சஞ்சயன் அஞ்சாமல்விளம்பினான் இந்தவசனங்களைக்கேட்டு இயாவரும் திகிலடைந்திருக்குஞ்சமையத்தில்விவேகத்திலுயர்ந்த விஷ்டுமர் இராஜாதிராஜனாகிய திரிதராட்டிரமகாராஜாவின் அழகியமுகத்தைப்பார்த்து பக்கங்களிற்பொருந்திய துரோணாதிமுதலிய பெரியோர்க ளியாவரும் சந்தோஷங்கொண்டு சஞ்சலம்விண்டு ஏக்கம்நீங்கவும் ஊக்கமோங்கும்படியாகவும் தேவரகசிய வாக்கியம் ஒன்றுசொல்லத்துணிந்தார். இந்த உலகத்தைநிந்தையில்லாமல்விந்தையாய் அரசுபுரிந்துவந்துமைந்தர் நூற்றுவரால்சிந்தைநொந்த அந்தகனாகிய என்மைந்தனே கேளும், சத்தியலோகத்தில் நித்தியாகும்மாதுரியவசன முனிவர்கள்முதலிய மகாரிஷிகள் சுற்றியிருக்கப் பொற்றாமரைத்தவிசில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவர் தருமபத்தினியுடன் பொருந்தி யிருக்குஞ் சமயத்தில் வேதபுங்கவ ராகிய தேவ குருவும் தேவேந்திரனும் தேவர்களும் வந்து நான்முகனைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அருகாசனத்தில் அமர்ந்திருக்கையில் இரண்டுபேர்திவ்யதேசோமயப்புருஷர்கள்அந்தச்சபைக்கு நேராகவந்து சிருஷ்டிகர்த்தாவுக்கு வணங்காமல் இறுமாந்து அப்பால் நடந்துபோகும் பெருமையைக் கண்டு பிரகஸ்பதியினுடைய மனதில் ஆச்சரியந்தோன்ற பிரமனை நோக்கி பரிசுத்தனே நல்லவரென்பவரெல்லாம் உருவாகத்தோன்றியதை யொத்த இந்தவல்லவர்கள் இவடம்வந்து தேவரீரை மதியாமற்போகின்ற காரணம்யாதோ இவர்களியாரோ அடியேனுக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்னவும் பிரமதேவர் நகைத்து தேவகுருவைநோக்கி! இந்த மகானுபாவர்களை இதுவரையிலும் நீரறிந்த தில்லையோ பிரகஸ்பதியேகேளும்! புராதன சராசரங்க ளாலேயும் ஸ்துதிக்கும் பெரும்புகழினையுடைய நர நாராயணரென்பவ ரிவர்கள்தான் தேவர்களுக்கும் சத்தியவசன ஆசார பரர்களாகிய தேவபத்தியையுடைய புண்ணியவான்களுக்கும் இடையூறாகிய துன்பம் வருமாகில் தக்ஷணத்தில் வந்து அவர்கள் பக்ஷத்திலிருந்து துன்ப நீக்கி இன்பம்விளையச்செய்து புண்ணியவெண்ணமுள்ள புண்ணியவான்களுக்குப் போதுமான துணையாயிருந்து பாபசிந்தையையுடைய பாபிகள், எண்ணிய எண்ணங்கள்கைகூடவொட்டாமல் அவர்களுடைய புத்திர மித்திரர் களைப் பாழாக்கி லோகோபகாரஞ்செய்து இரட்சிக்கும்பழமையாகிய மூலகாரணர்கள், மேலும், நாமிருக்குஞ் சத்தியலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம், இந்த மூன்று லோகங்களுக்குந் தடையறப்போய்த் திரும்புவார்கள் தகுதியாகிய காரியங்கள் ஏதாகிலுமொன்று விளையுமாகில் அதை நீக்கும்பொருட்டு பொன்னுலகத்திலும் புகுந்து வருவார்கள் பூமியிலும் சத்தியவசன நித்தியவிரத பத்திமான்களாகிய புத்திமான்க ளிடத்திலும் அவர்களுடைய விசுவாசநேச உத்தமபத்தினிமார்கள் வயிற்றிலும் இராஜ புத்திரராகப் பிறந்து வேதமுதலிய மநுநீதிதருமங்களை நிலைநிறுத்தி சிஷ்டாசாரத் தன்மையும் பழக்கித் திரும்பி வருவார்கள் ஆதிமூலமாகிய ஸ்ரீமன்னாராயண மூர்த்தியின் நினைப்பினால் உற்பத்தி யானவர்கள் இவர்க ளுடைய பெருமையும் பிரதாபமும் இவ்வளவென்று எடுத்துச் சொல்லுவதற்கு என்தரமல்லவென்று பிரமதேவர் சொல்லக்கேட்டு மகிழ்ந்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தேவகுருவும் இந்திரனுந்தேவர்களுந் தெய்வலோகம்போய்ச் சேர்ந்திருக்கும்நாளையில் பூமியில் சிறிது இராக்ஷதர்பிறந்து தவங்களிற்சிறந்து முனிகள் ரிஷிகள் தேவர்கள் இயாவர்களும் வருந்தும்படியாக உபத்திரவஞ்செய்து வருங்காலத்தில் தேவர்களுந் தேவேந்திரனுஞ்சேர்ந்து ஆதியில் பிரமன்சொல்லிய வாக்கியத்தை நினைந்து ஆபத்பாந்தவாய் அனாதரக்ஷகராய் விளங்கிய நர நாராயண மூர்த்திகளை அரக்கரால்விளைந்த துன்பஞ் சகிக்கப்படவில்லை என்று திக்குநோக்கித்தொழுது அடைக்கலமென்று கூவியழுதபோது அந்தநரநாராயணமூர்த்திகளிருவரும் ஸ்ரீகிருஷ்ணதேவராகவும் அழகியவிஜயபராக்ரம அருச்சுனனாகவும் இந்தப்பூமியி லவதரித் தார்கள் அப்பனே! அந்தக் காரணத்தினாலல்லவா வேதமுந்தேடிக் காணக்கூடாத செஞ்சடைக் கடவுளென்னுஞ் சிவபெருமானைச் சீக்கிரமத்திற் றரிசிக்கத் தவஞ் செய்ததும் அவர், பிரசன்னமானதுங் கட்டிப்புரண்டு விளையாடிக் கங்கையுந் திங்களும் மங்கையும் பொங்கரவும் அங்கமுங் கலங்கக் காண்டீபத்தி னடியுண்டதுங் கருணைசுரந்ததும் பாசுபதாஸ்திரம் பெற்றதுங் காலகேய நிவாதகவச இராக்கதரைவென்றதும் இரணியபுர வாசிகளைக்கொன்றதும் இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் நின்றதும் சகலசுப சந்தோஷவைபவங்களுந் தேவர்களுக்கு வரும்படியாகக் கூண்டதும் அமுதபோசனமுண்டதுந் தெய்வலோக வரசு புரிந்ததும் இவனே யவன் அவனே யிவனாகையா லல்லவோ இவ்வளவு மகத்துவங்களும் நடந்தது, குழந்தாய், தொழுந்தகவினையுடைய பலமும் குணநலமும் அழகும் பழகிய வில்திறமையின் விற்பனமும் ஆண்மிக்கையும்பெருமையும் பிரகாசமுங் கீர்த்தியும் நீதியும் இராஜ முறைமையும் உண்மையுமுடைய காண்டீபனுக்கு ஒப்பாகப் பெரும்புகழையும் வெற்றியையும் பெற்றவர்க ளெவர்களிருக்கின்றார்கள் திரிபுரதகனனாகிய திரிநேத்திரதாரியை இணையாகச்சொன்னாற் சொல்லலாம் மற்றொருவரையுஞ் சமமாகச் சொல்லக்கூடாத விற்குண மேற்றும் வீராதி வீரனாகிய பற்குணனைச் சாதாரணமாகிய சத்துருவாக நினைத்து ஜயங்கொள்ளுவோமென் றெண்ணி யிருப்பது அவிவேகமேயன்றி விவேகத்துடன்சேர்க்கத்தக்கதன்று, இத்தன்மையவாகிய வீரதீரசூரபாரகாண்டீபமுடைய விஜயனுக்குநானே யெதிரியென்று சூரியன்பெற்ற சவுரியன் நாள்தோறும் அஞ்சாமற்சொல்லிவரும் வஞ்சகவார்த்தையைக் கொஞ்சமேனும் நிசமென்றுநம்பாதேசுயோதனா! அருச்சுனனோ அஸ்திர சஸ்திர வலிமையில் மேலாகச்சிறந்தவன், கன்னனே! குத்திர க்ஷுத்திரவார்த்தையில் காலாகப் பாந்தவன் இதைநானுணர்ந்து சொன்னதாகக் கொள்ளாதே திரிலோகத்தாரும் அறிந்ததே ய

ன்றி வேறல்ல அப்பா எனது பேரனே இந்தமொழியை
நீ உட்கொண்டு யோசிப்பையாகில் இவ்வுலகத்திற்கு மூ
தன்மையாகும் பெருமையை, நீயே பெறுவாய், இராஜ
செல்வமே? விவேக சூனியனுகிய மாமன் சகுனியுங் க
ட்டிக்கொண்டு வாவென்றால் வேரற வெட்டிக்கொண்டு
வருந்தம்பிதுச்சாதனனும்என்னடா ஆண்டிதாதனுறுயெ
ன்றால் இதுவுமொருகந்தாயமென்பதையொத்த அங்கதே
சராஜனுகிய கன்னனும் இந்தமூவருஞ் சொல்லிய உறுதி
மொழியைத்தேனும்பாலும்போலக்கேட்டு அதற்கிணங்க
நடக்கின்றாயல்லதுஎன்போலொத்தவர்கள்பொன்போல்
நயமாகச்சொல்லியனுயவசனங்களைத்தள்ளிபுகைந்துஎரி
ந்து அழியச்செய்யுங்கோபாக்கினியைத்தாபாக்கினியாக
க்கொண்டுசகலராச்சியசம்பத்துமுதலியபந்துமித்திரரை
ப் போக்கடித்துக்கொள்ள ஏதுவாயிருக்கின்றாய், ஒருவ
ர்சட்டிக்கொடுத்தசோறுங்கற்றுக்கொடுத்த சொல்லும்நி
லைநிற்காதென்னு முலக மொழியை மறந்து சிறந்த உன்
னால் இந்தக்குருகுலத்துக்கு நேரிடுங் கொடியபொல்லா
ங்கைக்குறித்துகடைசிமுடிவில் உரியோராகிய பெரியோ
ர்களிருந்தும் தருமஞ் சகாதெனச்சொல்லி அரசை நிறுத்
தாமற் போனார்களென்று இயாவரும் எங்களை நொந்து
ஒறுத்துக்கொள்ளுவார்களேயல்லது, இந்த அல்ப்பரை
இயாரும் நினைத்து நோவமாட்டார்கள், பெருங்காற்றடி
க்கும்போது உயர்ந்தமரத்தை அலைத்துவருத்தி முறிப்ப
தன்றி; தாழ்ந்தமரத்தைச் சாராது அதுபோல்! உலகத்
திற்பிறக்கும் பழிச்சொல்லானது உயர்ந்தபெரியோர்களை
அடுப்பதன்றி, சிறியோர்களைத் தொடர மாட்டாது, ஆ
கையால் இன்றுமுதற்கொண்டு எங்களுடைய விவேகத்
தினுல் விளையும் நீதி தருமவசனங்களைக்கேட்டு உயிர்வா
ழும்படியாக உறுதிகொண்டு நம்புவையாகில் இந்தப்பஞ்
சாசத்கோடி பூமண்டல முழுதும் சுவேதசுத்திர நீழலி
ல் ஏகச்சக்ராதிபதியாகத் தம்பிமார்களுடன் நீயே அரசா
ட்சி செய்யும்படியாய்க் கொடுக்கமாட்டுவோம் பரிசுத்த
வான்களாகிய பாண்டவர்கள், பூர்வத்தில், இராஜசபையி
ற்கூறிய சபதங்களையும் திருப்பிவிடுவோம் இதற்கு யா
தொரு தடையுமில்லை, பால்யராஜனே, திங்கள் குலத்தி
லும் உங்களிடத்திலும் எனக்குமிகுந்த ஆசையிருப்பதி
னல் சொன்னேன், இந்தவாக்கியங்களை, உன்னுள்ளத்தி
ற் சிந்திக்கக்கடவையென்று வீஷ்டுமர்சொல்லவும்; அந்
தவார்த்தைகளைக் கருணன்கேட்டுத் தலைசாய்த்து பக்கத்
திலிருக்கும் பெரியோர்களுடைய சந்திரபிம்ப மூகத்தை
நோக்கி, ஐயா? அறிஞரே கேளுங்கள் இந்த உத்தமரா
கிய காங்கேயரென்னும் புத்திமான் எந்தவேளையிலும் எ
ன்னைச் சுட்டிச்சுட்டித் திட்டித்திட்டிக் கோபிக்கின்றார்
ஐயோ, நானென்னசெய்வேன்; இராஜனுள்ளம் இராஜக
ந்திரம், காலம், சமயம், நோக்கம், வீரம், பெரும்புகழ்,
இத்தி திடதிரம்; இவைகளெல்லாந்தெரிந்த உத்தமராகு
ம் இவருக்குத்தெரியாத தொன்றுமில்லை இதழ்விரிந்த ம
லர்மாலையணிந்த மார்பினராகிய மன்னவர்களின் மனோ
பிஷ்டமெப்படியோ அப்படியே அநுசரித்துக்குழைந்து
நடக்கும் என்னைப்போலொத்தவர்களுக்கு இராஜகாரிய
த்தைத்தடுக்கவும் நடப்பிக்கவும் என்ன சுதந்தரமுண்டா
யிருக்கும் இராஜசபையில் சமானமாக எங்களையிருத்தி
வீரபட்டமுள்ள தீரரென்று தன்னைப்போல் பாவித்து ச
லாக்ஷணைசெய்து ஆண்டுவரும் பக்ஷமுடைய பட்டாபி
ஷேகப் பிரபுக்களின் தாமரைமலர்போன்ற பாதங்களிற்
பஞ்சுபட்டாலும், சேவகத் தொழில் செய்யுந் தீரர்களு
டைய இருகண்களிலும் முள்ப்பட்டதாகக் காலிற்பட்ட
து கண்ணிற்பட்டதென்னும் பழமொழியை அநுசரித்து
நடவாமற்போவோமாகில் அவர்களையடுத்து நெடுநாளா
கச்சாப்பிட்ட அரிய செஞ்சோற்றுக்கடன் எவ்விதத்திற்
றீரும் நாங்கள் எந்தக்காலத்தில் நற்கதியை யடைவோம்
வணங்காமுடியோனுடைய மனதையறிந்து நாங்கள்கோ
பமாகப்பேசினால் இராச்சியமும் செல்வமும் எங்களால
ழிந்துபோறதாகச் சொல்லுகின்றீர், ஐயா? வீஷ்டுமரே,
(சிந்தினாலறந்துபோகிறதுக்குசேனைநாளைக்கிருக்குமோ
சீமானே,) ஆகிறதும் அழிகிறதும் எங்களாலிருக்கின்ற
தோ அத்தனே இராஜமுறைமைகளில்-இது தகுங்காரிய
ம்; இது தகாதகாரியமென்று சொல்லி நடத்தவேண்டிய
கடமை உம்மைப்போலொத்த நாதர்களுடையதாயிருக்க
இராஜர்களுடைய அன்பையுந் தயவையுஞ்சம்பாதிக்கும்
எங்களைப்போன்ற சேவகவீரர்கள் எப்படிப்பட்ட தீரர்
களையுந் திரணமாகமதித்து எங்கள் திருஷ்டிக்கு திரிமூர்
த்தியும் ஈடல்ல; அட்டகிரிகளையுந்-துட்ட கஜங்களையும்-
விட்டெறிந்து விளையாடி வானத்தை வில்லாக வளைத்து
மணலைக் கயிறாகத்திரித்து சமுத்திரத்தைச் சாப்பிட்டு ஏ
ப்பமிடவும் வல்லாளரென்று சொல்லா ஞரைக்குங் கட
மை எங்களுடையதா யிருக்க, பரியாரி தலைமாட்டி லழு
வதுபோல-தனிவழிக்குப்பிடித்த கொள்ளி தலைமாட்டுக்
கொள்ளியாய்ச் சமைந்ததற் கீடாய் தங்களைப்போல் நா
ங்களும் இளைத்துச்சொல்லுவது தருமமா, ஐயா? இராஜ
விபகாரங்களுஞ் சேவகர் செய்கைகளுந் தெரிந்த பெரி
யோராகிய தேவரீர்? எங்களை வெறுத்துச் சொல்லவும்
ஞாயமுண்டோ, சாகத்துணிந்தபேர்க்கு சமுத்திரத்தில்
மூழ்கிப்போய் விடுவோமென்னுந் துன்பமுந் தோன்று
மோ, தாஷ்டீகராகிய வீஷ்டுமரே, புண்ணிற்கோலிடுந் த
ன்மைபோல் எங்களை விடவிடப் பேசவேண்டாமென்று
உண்மையாகிய சட்டுரைகளை வெளி விட்டுக் கன்னன்
சொன்னவுடனே பரிசுத்த மன்த்திரியுற்ற வீஷ்டுமர் பி
ரகாசமற்ற, சண்களைப்பெற்ற திரிதாராட்டிர னுடைய மு
கத்தைநோக்கி, அப்பா திரிதாராட்டிரனேகேட்டையா, எ
ப்படிப்பட்ட சத்துருக்களென்றாலும் ஒரே கணையினால்,
உடல்வேறு தலைவேறாகத்துண்டித்து விடுவேனென்று
இந்தக்கன்னன் தன்னைத்தானேமெச்சிக்கொண்டு தானே
புகழ்ந்து வாய்வளஞ்சொல்லுகின்றதைக் கேட்டிருக்கின்
றோமல்லாமல் கைவளத்திலை யுத்தஞ்செய்து வெற்
றியைப்பெறக் கண்டறிந்த திலலையே அதற்குச் சாக்ஷி
யாக இப்போது சொல்லிய வார்த்தையை இயாவருங்
கேட்டீர்களா சபைநிறைந்த தன்னியர்களே துருபதேய
மகாராஜன் சுயவரம் நாட்டிவைத்த பாஞ்சால தேசத்தி
ல் திரௌபதா தேவியின் விவாகத்திற்கு பற்பல தேசத்

ரசர்களுஞ் சென்று நெருங்கி யிருந்த காலையில் திருஷ்டத் துய்மனால் நேமித்த வில்லை வளைத்து மச்சேந்திரத்தை யறுத்து பிரகாசம் பெற்ற துரியோதன மகாராஜனுக்கு வெற்றியும் பெருமையுங் கொடுத்தான் அன்றியும் சித்திரசேனனென்னும் கந்திருவன் துரியோதனன்முதலிய யாவரையுங் கட்டிக்கொண்டு போம்போது தான்போ யெதிர்த்து அனேகயுத்தங்களைச் செய்து அரவக்கொடியோனாகிய அரசனை மீட்டுவந்தான், பின்னையும், புயவலிமையுடைய அருச்சுனன் பேடிரூபத்துடன் இணையில்லாமல் வளைந்த விஜய காண்டீபத்தைத் தாங்கி வேகங்கொண்ட குதிரை பூட்டிய இரதத்தைக், கைபழகாத சிறுபிள்ளை உத்தரகுமாரன்செலுத்த, அரோகணித்து ஒருதேர், ஒரு வில், தானொருவ னெனவந்த விஜயன் அநேகங்கோடி இரதமுதலிய அதிரதர் மகாரதர் சமரதர்களை விழ்த்தி இரதகஜ துரகபதாதியர் பின்னிட்டோட முன்னிட்டோடியொளித்த இந்தக்கன்னனையும் பின்னமுறத்துளைத்து பசுக்கூட்டங்களைத் திருப்பிக்கொண்டு ஸ்திரமாகவிடுத்த மோகனாஸ்திரத்தால் மயங்கச்செய்து சிரவஸ்திரங்களையுங்கைக்கொண்டு அஸ்தினாபுரம்வரைக்கும்புறமுதுகிட்டோட அடித்துசயங்கொண்டகாலத்தில் அந்த அருச்சுனனைவெற்றிகொண்டு அவன் கைக்கொண்ட ஆவினங்களையுமீட்டுக்கொடுத்துவணங்காமுடியையுடையமன்னவனுக்கு வலிமையும்புகழும்வரச்செய்தான் இந்த்வள்ளலாகியகன்னன் ஓ ஓ மன்னவனே, அடக்கமுடையவராகயிருந்து யுத்தகாலம் நேரிடுகிறவரையிலும் காத்திருக்கின்ற தீரசூரசேவகத்திறமுடைய வீராதிவீராகியபேர்கள் சத்துருக்கள்பேரில்படையெடுத்து செல்வதும் அவர்களை வெல்வதும் உலகமெல்லாங் கொண்டாடப் புகழ்பெற்றுவருவதும் இயற்கையே இத்தன்மையவாகிய திடவீரத்தில் வல்லவரானபேர்கள் தங்கள்திறத்தை வாக்கினாற்சொல்லமாட்டார்கள் அப்படிசொல்லுவார்களாகில் உடனேயவர்கள் வில்திறமைமுதலிய சாமார்த்தியங்களும் அழிந்துபோம் (அடக்க மமரருளு ய்க்குமடங்காமை யாரிருளுய்த்துவிடும்.) என்னும் நீதிக்கிணங்க இதன்றியும் தான்பிறந்தவருஷமும் தனக்குக்கிடைத்திருக்குஞ்சம்பத்தும் குற்றமிலலாத யோககாலமும் புசிக்கும் ஔஷதமும் குருவினுபதேசமும் நேரிட்ட அவமானமும், தான்செய்ததருமமும் ஸ்ரீபோகமும் கற்றகல்வியும் திடவீர சாமார்த்தியமும் மானமும் வயதின்முறைகையுமிவைகளையெல்லாம் ஒருவரறியும்படியாகச் சொல்லக்கூடாது அப்படிக்குசொன்னார்களாகில்அப்போதே அவைகளெல்லாம் அழிந்துபோம் மேலும் ஜயிக்கத்திறமில்லாதமூடர்கள்படைமுகத்தில் ஜயிப்பேனென்றுவாக்கில் வந்தவண்ணம்பிதற்றுவார்கள் (குரைக்குநாய்கடிக்கவறியாதென்னும்) பழமொழிபோலும் வற்றியவோலை கலகலக்குமென்ஞான்றும் பச்சோலைக்கில்லையொலி, வெண்கத்திலோசை மிகுமேவிரிபசும் பொன்னெண்கலத்தினுண்டோவொலி.) என்பது காய்ந்த ஓலை கலகலவென்றுசப்திக்கும்; பச்சையோலை சப்திக்காது வெண்கலத்திலடித்தால் ஓசையுண்டாம் பொன்கலத்திலடித்தால் ஓசைப்படாது நிறைகுடம் தளம்பாது குறைகுடந்ததும்பும் என்பதுபோலும் ஜயம்பெறுவதற்குமுன்னமேஜயிப்பேனென்றுசொல்லும் பிரதாபங்கள் மாசடையுமென்று மானமேற்கொண்ட மேலோர் சொல்ல மாட்டார்கள் இப்படியாகவாசாகயிங்கிரியஞ் சொல்லிக்கொண்டுகாலங்கழிக்குங்கன்னனுடைய ஆகரவினால், சுவேதவாம்புரவி பூட்டிய தேரேறிவரும் ஆலகாலவிஷத்தையொத்த அழகிய அருச்சுனனைமதியாமல் அதிகசொல்பத்தில் வென்றுவிடலாமென்றுசொப்பனம்போலெண்ணி இந்தக்குற்றமாகியதுன்பங்களியாவற்றையும் விளைவித்துக்கொண்டான் துரியோதனன் அவனப்படிக்கு எண்ணங் கொண்டாலும் பொய்யில்லாத உள்ளமும்பொறுமையும் நற்குணமும்பரிசுத்தமும் நயவசனமுமுடைய ஐவர்களைகோபமும் துற்குணமும் அசுத்தமும் அசத்தியமும் கடூரவசனமும் குற்றமும்பொருந்திய அயோக்கியனாகுந் துரியோதனனியர்களோ ஜயிப்பவர்கள் இயாவருங்கற்றுணர்ந்த சாஸ்திரமுதலிய நீதிநெறியையுத்தியினாற் தெரிந்துக்கொண்டபுத்திமானாகிய திரிதராட்டிரனென்னும்என்புத்திரனே உனக்கு சம்மதமாகத்தோன்றிய நாட்டைப் பாண்டவர்களுக்குக்கொடுத்து அவர்கள்மனமகிழ்ந்துஅரசுபுரியும்படியாகச்செய்து மற்ற இராச்சியமுழுமையும்அழகியவெள்ளைக்குடைநிழற்படுத்தி உனது புத்திரர்களுடன்வாழ்வைப்பெறுதல் எனது மனத்தினுக்குமிகுந்த துணிவாயிருக்கின்றது இதற்குயாதொருகுறைவுமில்லைநிறைந்தமனதாகச்சொன்னேனென்று சத்தியவிரதசிந்தையை நித்தியமாக உடைய வீஷ்டுமர்சொல்லவும் பக்கத்திலிருந்த இயாவரும்சுகுந்த தருமமும் இராஜமுறைமையும் சாற்றினார் வீஷ்டுமசொன்றுமகிழவுந் தனுர்வேதபண்டிதராகிய துரோணாச்சாரியர் திரிதராட்டிரனைநோக்கி அரசனே பரதமகாராஜனுடைய மாபென்னும் பிரயோசனத்தை இன்றுநிலைநிறுத்தினார் விரதபூஷணனாகிய காங்கேயன் ஆகையால் இந்தவசனம்மேன்மைக்கு மேன்மையானது இதைவிடவேறுநன்மையென்பதில்லை குலாவியிருக்குங்கூட்டமாகியபந்துக்களுடன் வேற்றுமையில்லாமற் பொருந்திபிறர்பழிக்க இடங்கொடாமல்வாழ்கின்றவாழ்வைப்போல் இதுவரையிலும் நான்கண்ணாற்கண்டதுமில்லை கேட்டதுமில்லை இனிகாணப்போறதுமில்லை வீஷ்டுமர் தகுதியாகிய காரியங்களை யோசித்துச்சொன்னார் இன்றுமுதலாக வுன்னுடைய குலமுந்தழைக்கும் புத்திரமித்ராதிமுதலிய உலகத்துப்பிரும்பிழைக்கும் உனது செல்வமுஞ்செழிக்கும் ஐயா ? உன்னுடைய வழிபடுகடவுள்சொன்னவாக்கியத்தைப்போல் இந்த மகானுபாவர் சொல்லிய தருமவசனத்தை வழித்துணையாகக் கைபற்றுவையாகில் நன்மையென்பவைகள் இயாவையும் பெறுவாய் இதன்றியும் அரசராகப்பிறந்தபேர்கள் சத்துருக்களிடத்தில் தங்களுக்குள்ள வீரியங்களையுஞ்சொல்லி இல்லாதசௌரியங்களையும் இரவலாகக்கொண்டு எடுத்துப்பேசவேண்டியது சகோதரர்முதலிய உள்ளிட்டாரிடத்தில் காரியங்களாகிய தொழில்களைக்குறித்துக் கலந்து பேசவேண்டியது குடும்பத்திற்பிறந்த பெரியோர்களாவது ஆசானாவது

மந்திரியாவது அன்புநிறைந்தோழனாவது நடுவுநிலைமையாகப் பகுத்துச்சொல்லும் நீதிவாக்கியங்களைத்தருமதேவதைசொல்லிய சத்தியவாக்கியமென்று தனதுவிவேகத்தினால் ஆராய்ச்சிசெய்து அவ்வழிநடக்கவேண்டியது இதுகளைச்செவ்வையாகவுள்ளி உன்புத்திரனை நல்லவழியில் நடத்துவையாகில் நுண்மையறிவிலும் நுட்பமுணர்ந்த அறிஞர்கள்கொண்டாடும்படியாக வாழ்விற்சிறந்துதாழ்விலாதோங்கும், உன்னுடைய குலநலமானது அரசனே என்றுதுரோணாச்சாரியர் இனியவசனங்களினால்பற்பலவாகச்சொல்லவும் இவ்விதமாகச்சொல்லியபெரியோர்களை வணங்கிப்பணிந்து அவர்களுடன்கலந்து ஆலோசிக்காமல் மேலோருரைத்த வாக்கியங்களெல்லாம் ஆலகாலவிஷம்போல்கர்ணகடூரமாய்மனம்வருந்தி அவர்கள்பக்ஷத்தில்வைத்திருந்தகுவிந்ததாமரைமலர்போன்றபிரகாசம்பொருந்திய முகத்தைச் சஞ்சயனுக்குநேராகத்திருப்பிக்கொண்டு ஓ ஓ சஞ்சயனே! சொல்லுதற்கரிதாகிய குருகுலத்திற்பிறந்த துரியோதனன் முதலாகிய மன்னவரியாவரும்பகைமேற்கொண்டு எதிர்த்து போர்செய்யப்புகும்யுத்தகளத்தில் கானகந்திரிந்து கால்கைகளோய்ந்து அன்னபானாதிகளுக்கு அவதிப்பட்டு வருந்திய பாண்டவர்கள் உச்சாகத்துடன் எதிர்த்து யுத்தஞ்செய்வதற்கு வல்லமையுண்டோ இனைத்த இவர்களுக்குச்சகாயம் எவர்வருவார்கள், ஆருடைய துணையைநம்பி அமர்செய்யவருவார்கள் ஐவர்களுக்குநேரிட்டிருக்கும் பலாபலங்களைச்சொல்லும் சஞ்சயனே என்று திரிதராட்டிரன்கேட்கவும் அந்தவார்த்தைகளைக்கேட்டு சபையில்நிறைந்திருந்த சத்தியமுனிவர்களும், தேசதேசாந்தரசர்களும்விசனமடைந்து இராஜனுடைய வாழ்வினைப்பயனுக்குத்தகுந்த புத்தியிதுவென்று தங்கள்பிராணன்பேரில்வைத்திருந்த ஆசையை அன்றுவிடுத்து, இனிமடியுங்காலம்நேரிட்டதென்றுமனம்வருந்தியிருந்தார்கள், அந்தசமையத்தில்திரிகாலமுந்தெரிந்தசஞ்சயன் ? மெலிந்துவருந்தி ஐயையோ சந்திரகுலத்திற்பிறந்த நமது அரசனுடையதெளிவாகிய விவேகத்திற்கு என்னதாட்சி வீஷ்டுமர் துரோணர்முதலிய பெரியோர்களும்சொல்லிய. தருமநீதிகளை உன்னி உணராமற்போயினன்.இதென்னகாலம் ஏதேதுஇயாவரும்பிழைப்பதற்கு ஏதுவையில்லையென்று பெருமூச்சுவிட்டு (விதையொன்றுபோடசெடியொன்றுமுளைக்குமாவிடுபோபோவெனக் காடுவாவாவென.) இருக்கும் முதிர்ந்தவயதினையுடைய தகப்பன் இவ்வளவு அறிவினையுடையவனானால் இவன்பெற்றபிள்ளைகளைப்பழித்து மனம்வருந்திநோவது நமக்குப்பெருமையன்று (தந்தையெவ்வழியோ அவ்வழிபுதல்வர் தவத்தினளவாகும் தான்பெற்றசெல்வம்) என்னும்பழமொழிபோல் இவனுடையகெடுநினைப்பும் பாபங்களுஞ்சேர்ந்துமைந்தரொன்றுமுருவாகிவந்திருக்கின்றார்கள் இவைகளுக்கெல்லாம் மூலமானவன் இந்தக்குருடனே என்று ஸ்திரமாகச்சிந்தையிற்கொண்டுசபையிலுள்ள யாவர்களும் ஆச்சரியப்படும்படியாக திரிதராட்டிரனைநோக்கிச் சஞ்சயன்சொல்லுகின்றான் குடும்பந்துலங்கச்செய்யுங்கோவேந்தரும்தெய்வசகாயம்பெற்றஐவர்களுக்குமின்பலமும்வேண்டுமோ அவர்களும் ஒருவரைப்படைத்துணைவிரும்புவார்களோ அதேதென்றால் புயவலிமைக்கு இணையில்லாமல் தென்றிசையமனையும் குலகிரியையும் பந்துபோலெடுத்தெறிந்துவிளையாடிமடிக்கும் இடிம்பாசுரனை, பகாசுரனை, கிம்மிராசுரனை, சடாசுரனை, சராசந்தனை இபக்கர்நடுங்கும் மணிமாலனை, கீசகனை, இறைப்போதினுக்குள் இடித்துமடித்துத் தேய்ந்துதொழித்துமாய்ந்து அழித்து ஜயங்கொண்டவீரகண்டையொலிக்குங் காலினையுடையகதாயுதனாகும்வீமசேனனிருக்கவெற்றியையுடைய பாண்டவர்களுக்குச்சத்துருபயதுணையும் வேண்டுமோசொல்லும் ஐயனே இஃதன்றியும் உலகமெல்லாம்வருந்தாண்டவனை மெரித்தும்மாட்சிமையுடைய இராஜவருக்கங்களை வேரறுத்தும் உத்தரகுருகண்டத்தோரியாவரையும்வென்று உம்பர்மகிழச்செம்பொன்முதலிய இறைகொண்டும் பின்புலம்வேண்டாதவீரப்ரதாபத்தையும் அனுமக்கொடியையும் அம்பொன்மக மேருவில்நாட்டி, நின்மலநிஷ்கள நிராமயமாகிய சங்கரசுயம்புவின் தரிசனங்கண்டு பாசுபதாஸ்திரமும் பெற்று காலகேயநிவாதகவசர்கள் மாய்ந்திடக்காய்ந்து விரவானைவேய்ந்து இந்திரன்முதலியதேவர்களுக்குச் சுகமீய்ந்துதேவாமிர்தம்புசித்துக்களித்து இணையில்லாக்கணைகள்பெற்ற விரதபவிராட்டாகிய விஜயனிருக்கப்பாண்டவர்களுக்குப் பலமுண்டோவென்று நீர்நினைத்துக்கேட்டது எனக்கும்பழிப்பாகவிருக்கின்றதுபார்த்திபனே இன்னமுங்கேளும், பிள்ளையென்றுவந்த பூதகியுயிரை முலைப்பாலுடன்பருகியும்தேவேந்திரன் வஞ்சகத்தினால் வருஷிக்கச்செய்த கல்மாரியைக் கோவர்த்தனகிரியென்னுங் குடையினாற்றடுத்தும் ஆயர்முதலிய ஆவினங்களை இரட்சித்தும்மாமனாகிய கம்சனைக்கொன்றும் இந்திரப்பிரஸ்தத்தில்நடந்த இராஜசூயயாகத்தில் சிசுபாலனைச்சிரச்சேதஞ்செய்தும் ஐவர்சகாயனென்று அஞ்சனமேனியையுடைய கண்ணனிருப்பதுதிண்ணமாய்த்தெரிந்திருந்தும் ஐவருடைய வல்லபங்களையும்படைத்துணைகளையும் விசாரிக்கும்புத்திமான்களுமுண்டோமேலும்(குணமென்னுங்குன்றேறிநின்றார்வெகுளி கணமேனுங்காத்தலரிது.) குணக்குன்றேறியிருக்குங்கோபமில்லாத சாந்தனானவனுக்கு ஒருவேளைகோபம் வருமாயில் ஒருமாத்திரைப்போதுஞ்சகிப்பதரிது என்பதுபோல் சத்தியமும்சாந்தமும் பொறுமையும்தருமமும் வழுவாதவிரதசீலமெய்ஞ்ஞானநீதிபானுவியதருமநந்தனன்கோபித்து வில்வளைத்துப்பகைவர்மேலெதிர்க்குங்காலத்தில் திரிபுராந்தகனையும் வடவாமுகாக்கினியையும் ஒப்பாகிநிற்பான் நவரத்தினமழுத்திய அணிமுடிதரித்த அரசே மற்றத்தம்பிமார்களுக்குஈடாகவெதிர்த்துநேர்நின்று போர்செய்பவர்கள் இபாரிருக்கின்றார்கள் இவர்களெல்லாமிருக்க இந்தச்சந்திரவம்சத்திற் பரம்பரையாகப்பிறந்து அந்நாண்முதலிந்நாள்வரையில் நீதிசெலுத்திவந்தவேந்தர்களின் திரவீரங்களிலும் தன்தந்தையாகிய விசயபராக்ரமனுடைய சேவகத்திறங்களிலும்நூறுபங்குஉயர்ந்ததிடகாத்ர ஜய சிம்மக்குருளைபோன்ற அபிமன்னுவென்னும் அருச்சுனகுமாரன். உன்னுடைய புத்ரமித்ரகளத்திராதிமுதலியபதினொரு அக்ரோணிசேனைகளாகிய துரும்பு

க்குரூரவஷிக்காற்றைப்போற்றேன்றிச்சுழற்றிமடக்கிய
டித்துமுடிக்கத்தக்கவனென்றுசத்தியமாக உன்சித்தத்தி
லுணர்வாய், இதன்றியும் நாகாதிபன்மைந்தனுகிய அரு
ச்சுனனுக்கும், நாககன்னிகையாகிய உலூபிக்கும்பிறந்து
சிறந்ததிறவானுகிய அரவானென்பவன் போர்முகத்தில்
நேர்புகுவானுகில் அவனுடனெதிர்த்து அமர்செயமதிக்
கும் அடல்வீரர்கள் சுவர்க்கமத்திய பாதலத்திலுமில்லை
மேலும் எல்லாத்திறங்களிலும் எதிரில்லாதவீமசேனன்
இடும்பியைமணந்துபுணர்ந்து பெற்றதிணிந்ததோள்களை
யுடையகாலை பாற்கடல் கலங்கக்கடைந்த மத்தாகிய மந்
தரகிரியையொத்த கடோற்கஜன் கிழக்குத்திசையிலுதித்தசி
வந்த சூரியனைக் கனியெனத்தாவிக்கவ்விய அனுமந்தனை
ஒப்பாகச்சொன்னால் ஒருவேளையொக்கும் மாயாவிசித்தி
ரமுடையவல்லபன் வாய்த்திருக்கின்றான் அல்லாமலும்
அக்கினியிற்பிறந்த பாஞ்சாலிபெற்ற இளம்பஞ்சபாண்ட
வரைவர் பிரிதிவிந்தன், சுருதிசன்மன், சுதசேனன், சதா
னிகன், சுதகீர்த்தி, என்னும்பிள்ளைகள் தங்கள் தகப்ப
மார்களுடைய பலா பலங்களிலும் பதின் மடங்கு மே
லாகிய கோலாகல பரிசுத்தரா யிருக்கின்றார்கள் இன்
னமுஞ்சொல்லுகின்றேன் இமையேகேளும் ஸ்ரீ கிருஷ்
ணமூர்த்தியினுடைய தம்பி சாத்தகி யென்னும் சாமர்த்
தியன் விஜயனிடத்தில் வில்வித்தைகற்றுக்கொண்ட வீ
ராகி வீரனும் போஜகுலத்தலைவரும் மத்திரதேச மித்தி
ரருந் துணையானார்கள் அவரோடெதிர்த்து அமர்செய்ய
நினைப்பவர்க ளியாவரோ அறியேன் அரசே! இயாகத்தி
ற்பிறந்த திருஷ்டத் துய்மன், துரோணச் சாரியாருக்கு
வைரி எதிர்த்துப் போர்செய்யும் சத்துருக்களுக்கு ய
மன், பாண்டவர்களுக்குத் தோள்வலித் துணையாகிய
மைத்துனனும், விற்றிறமையைக் கற்றுணர்ந்த வேந்தர்
களிலும் தேர்ந்த விவேகமுள்ள சத்தியகுணனுகிய துரு
பதேயனும், மித்திரர்களுடன் புத்திரராகிய சிகண்டியும்,
உத்தமோஜாவும், உதார்மனும், மற்றுமுள் ளோர்களும்
தருமபுத்திரருக்குப் படைத்துணை யானார்கள், விராடரா
ஜனும் அவன்புத்திரராகிய சதானிகன், சங்கன், சுவேத
ன், வராககேது, உத்தரன், முதலிய மித்திரவருக்கத்துட
ன் புஜபல பராக்கிரமத்திற்குத் தானொருவனன்றி வேறி
ல்லையென் றெதிர்த்து யுத்தஞ்செய்து பாண்டவர் களுக்
கு வெற்றியைக்கொடுக்கச்சம்பந்தஞ்செய்த உற்றதுணை
யானார்கள்பின்னும், பற்பலமகுடாதிவேந்தரும்சிற்சிலகு
றுநிலமாந்தரும், சேதிபதேசாதிபதி சிசுபாலனுடையகு
மாரன் துஷ்டகேதுவும், சராசந்தனுடையகுலபுத்திரனுகி
யசாதேவனும், சோழராஜனும்,பாண்டியனும், சேரராஜ
னும் இன்னுமநேக மன்னர்மன்னரும் படைத்துணைநெ
ருங்கி யிருக்கின்றார்கள்,சுவேதக்குடையினையுடையதோ
ன்றலே, இத்தன்மையவாகப் படைத்துணை நெருங்கி யி
ருக்கும் அரசர்களும்; இயானைகளும், குதிரைகளும்,தே
ர்களும், பதாதிகளும், ஏழக்கு ரோணியென்றுங், சனக்
கர், காரியஸ்தர், படைவீரர், சேனைத்தலைவர் முதலிய இ
வர்கள் கோடாகோடிபேர்க ளென்றுந் தொகை சொல்
லக்கேட்டு மகிழ்ந்து சத்தியத்தை நித்திய மென்று நம்பி
ய பாண்டுபுத்திரர்கள் உபலாவி யத்தில் வீற்றிருக்கின்று
ர்கள் மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கட்டளையிடுங்
காவலனே யென்று அஞ்சலியஸ்தனுகச் சஞ்சிதவினைய
ற்ற சஞ்சயன்சொல்லக்கேட்டு கட்புலனில்லாத காந்தா
ரிகொழுநன் நெடுமூச்சும் பெருமூச்சும் விட்டு வியர்த்து
வெளிப்பட்டு போகிற பிராணனை விடாமலிருத்தி இராஜ
சபையிலிருக்கும் எல்லோரையும் பார்த்து கூவிச்சொல்
லுகின்றான். ஓ ஓ அரசர்களே! கல்விதேர்ந்த வல்லவனு
கிய சஞ்சயன் இப்போது சொல்லிக்கொண்டுவந்த பற்
பல படைத்துணைவர்களின் பலாபலங்க ளெல்லாம் ஒரு
காலத்தில் இளைத்துப்போமென்று நினைத்தாலும் நினைக்
கலாம், அப்பப்பா ? கோபாக்கினிவிளைந்து தகிக்குங்க
ண்களையுடைய வீமசேனனென்பவன் இருப்புக் கட்டுக
ளார்ந்த நீண்டகதையைக் கைக்கொண்டு ரணகளம்புகு
வானுகில் மண்ணைக்கவ்வி மடிவார்களன்றி மாயாமற்றிரு
ம்பி வருவாருமுண்டோ ! வாகுமாலையணிந்த மன்னவர்
களே அந்த வீமனைப்பார்க்கக் கண்ணில்லாத வெனக்கு
அவனைப்பார்த்தவர்கள் பயந்து பயந்து சொன்னார்கள் அ
ம்மம்மா ஆகாயபரியந்த முயர்ந்து திணிந்த வச்சிரப்பொ
ருப்புக்கிணையாகிய உச்சிதப் புயமென்றும், திகுதிகுவெ
ன்றெரிந்து புகையும் நெருப்புக் கண்களென்றும் போர்
மன்னரெல்லாம் பொடிப்பொடியாகப் போக்கி நமனுக்
குச் சமானமாக நாசஞ்செய்யத் தக்கவனென்றும் அவ
னுடனெதிர்த்துப் போர்புரிபவர்கள் எவருள ரென்றுஞ்
சொல்லக்கேட்டிருக்கும் என்மனந்துடிக்குதே நுட்பமா
கவளர்ந்த புட்பம்போன்ற தோள்களையுடைய என்மக்க
ள் வீமனுடனெதிர்த்துப் போர்விளைக்க மாட்டார்களே?
மேலும்; நாகப்பாம்பின் விடம்போல வேகந்தாங்கி வெ
குநாளாக வைரங்கொண்டிருக்கும் வீமசேனன் வெகுண்
டு போர்செய்யச் சீறியெழுந்து வருவானுகில் கொழுந்து
போன்ற, என்குழந்தைக ளூற்றையும், நீறுக்கி விடுவா
னே, அவனை நினைத்துப் பேசினுல் எனக்கு வயிறு கலக்
குதே அப்பாமைந்தர்களே ! அவனுடன் பகைத்து யுத்
தஞ்செய்ய ஆர்நினைப்பார்கள்; விளக்கைப்பிடித்துக் கிண
ற்றில்விழும் விவேகிகளா யிருக்கின்றீர்களே, அவனையெ
ன்னுள்ளத்தி லுன்னும்போது என்னுடல் நடுங்குதே-எ
ன்னீரல்-கருகுதே-என்னிதயம்வேகுதே-என்னுவும் புல
ருதே-ஐயையோ பிள்ளைகளே ! பகையென்பது மறந்து
பிழைக்கும்விதத்தைத் தேறித்தெளிந்து சொல்லுங்க ள
ப்பா! தழைக்கும்புத்திமான்கள் சொல்லிய நீதியை உட்
கொள்ளுங்க ளப்பா ! தருமத்தைக்கெடுக்கும் பாபத்தை
த்தொடுக்கா தீர்கள்,அருமையாகிய ஆசாரியர்,பெரியோ
ர்; அன்னை, தந்தையர் புத்தியை விடுக்காதீர்கள், மைந்த
ர்களேயென்றுபுத்திரவாஞ்சையினுல் எத்தனையோவிதத்
திற்சொன்னான்· வெற்றியையுடைய திரிதராட்டிரன்,இத்
தன்மையவாக பெற்றவனுகிய அத்தனுரைத்த புத்திமதி
களைச் சித்தத்திற் சற்றுநேரமாகிலும் வைத்திராமல் சு
புத்திரனுகிய துரியோதனன் தந்தையை நோக்கி சிந்தை
வருந்தி மெத்தவுங்கனன்று சிறிமனமடியாம றுமாந்து
ராஜசபையில் நிறைந்திருக்கும் எல்லோருந் திடுக்கிடும்

படியாகச் சொல்லுகின்றான். ஓ, ஓ, மன்னவர்களே மா
ண்டவளையொத்த பாண்டவர்களின் வல்லபங் களையும்
அவர்களுக்குப் படைத்துணைவந்த கீர்த்தியை யுடையம
ன்னவர்களையும் இந்தச்சஞ்சயன் சொல்லக்கேட்டு தரு
மன்முதலிய பேர்களைச் சத்தியமுள்ள பிரபலரென்று த
ங்களுக்குத் தாங்களே கொண்டாடிச் சந்தோஷங் கொ
ண்டீர்களல்லாமல், எங்களுடைய சாமர்த்தியமும் எந்தி
ரமந்திரதந்திர தபோபலசித்தியையும் எள்ளத்தனையுமெ
ண்ணுமற்போனீர்கள். கள்ளத்தன மனமுடையவ ரானீ
ர்கள் திடவீர சிம்மம்போன்று படைவீரராக எனக்குத்
துணைவந்திருக்குந் தீரர்களுடைய திடத்தையுஞ் சிந்திக்
காதவரானீர்கள். ஆகிலும் நான்சொல்லுகிறேன் கேளு
ங்கள் சுவர்க்க மத்தியபாதலங் கொண்டாடா நின்ற பிர
தாபசாலியாகிய பரசிராமனைப்போலொத்தவர் புறமுது
கிட் டோடும்படியாகப் போர்புரிந்து திண்ணிய கீர்த்தி
யாகிய வெற்றியைக்கொண்ட புண்ணியனுகும் எங்கள்
பாட்டனார் வீஷ்டுமர் புராந்தகனையும் நராந்தகனையு மொ
த்துப், போர்முகத்தில் வில்வளைத்து நேர்புகுந்தாராகில்
அவருக்கெதிரில் ஈடாக எதிர்த்து நிற்பவர்கள் ஈரேழுல
கத்திலுமில்லை அப்பேர்ப்பட்ட வீரகேசரிக் கெதிராகக்
காடுமலையுங் கசங்கித்திரிந்து இளைத்துவருந்திய பாண்ட
வர்களோ எதிர்த்து நிற்கத்தக்கவர்கள், (சோற்றிலிருக்கு
ங் கல்லெடுக்கமாட்டாதவன், முகவண்ணக்கல்லெடுப்பா
னென்பதெவ்வண்ணம்,) அன்றியும் அழகிய தனுர்வேத
த்திலுங்கும் புயவலிமைக்கும் ஒருவரு நிகரில்லாத சது
ர்வேத சம்பன்னனுகிய துரோணச்சாரியர் யுத்தஞ்செய்
யத்தொடங்கும் போர்முனையினிடத்தில் சர்வசங்கார கர்
த்தனுகிய வுருத்திரனும் யமனும் எட்டிப்பார்ப்ப தருமை
யென்றால், ஒரு, திரௌபதையின் காமத்திலகப்பட் டுழ
லுகின்ற ஐவர்களோ என்னைவென்று வெற்றியடைகின்
றவர்கள். வேந்தர்களே இயக்கர்முதலிய விண்டலத் தே
வரும், இராஜர்கள் முதலிய மண்டலத் தியாவரும் எல்
லாவிதங்களிலும் வல்லாரிவரென்று புகழும்படியாகத்தி
கழும் கிருபாச்சாரியர் பகலிற்பிரகாசிக்குஞ் சூரியனைப்
போலும் இரவிற் பிரகாசிக்குஞ் சந்திரனைப் போலும் வி
ளங்கி உயர்ந்த தோள்கள் பாரிக்கவும் ஒப்பில்லாச் சங்க
ம் பூரிக்கவும் விற்றொடுத்து யுத்தகளத்திலடுத்து, சத்து
ருக்களைப்படுத்து என்பகையைக்கெடுத்து வெற்றிக்கொ
டிபிடித்துவரும், வல்லமைத்திறத்தையும் நீங்கள் மதிக்க
வில்லையேமேலும், பிறையணியுஞ் சடைமுடியுங்கொண்
ட பிறப்பிலியாகும் பெம்மானுடைய தாதுவித் தாகியும்
சிலைத்திறமும் கலைத்திறமும் சிரஞ்சீயும் பெற் றசுபத்தா
மாவானவர் கைக்கொண்டிருக்கும் வில்லுக்கொப்பாகிய
வில்லையுடைய காவலர்கள் மூவுலகத்திலுமில்லையேசொ
ல்லுங்களேன் அரசர்களே அறிவுவளர்ந்தோங்கிவிக்ஞா
னம் வினையுமுள்ளமும் வேறொருவரிணையில்லாத வீரமு
ம், விரதவைராக்கியமுங் கொண்ட பரசிராமரிடத்தில் வி
ல்வித்தைகளைப் பூரணமாகக்கற்று தேகத்துடன் பிறந்த
கவச குண்டலத்தை, தேவேந்திரனுக்குத் தியாக மாகக்
கொடுத்து திரிலோகமும் புகழ்ந்து மகிழ்ந்து கொண்ட

வள்ளலாகியும் அருச்சுனனை விற்பரிக்ஷைகாலத்தில் அ
வமானப்படுத்தி அப்போது நேரிட்ட பகையினால் தாம
ரைமலர்போன்ற முகநிறைந்த தலையை அறுத்து அரங்
கு பூசைசெய்வேனென்று சகல வரசர்களும்நடுங்கச் ச
பதங்கூறியும் காண்டவவனத்தி லிருந்து அருச்சுன னு
டைய கணையினாற் கலங்கிக்கரிந்து எரிந்துவருந்தி அபய
மெனவந்த நாகாஸ்திரத்தை ஆதரித்துத் தாங்கியும் தோ
ளாண்மையிலோங்கியும் பதினான்கு லோகத்திலும்பானை
வருஷங்களைப்பொழியும் என்னண்ணனாகிய கன்னமகா
ராஜன் என்னிடத்திலிருக்கப் பகைவரால் நேரிடும் பய
மென்பதும் எட்டிப்பார்க்குமோ கிட்டிவிழிதிறந்து நோ
க்குமோ சொல்லுங்கள், ஆ-ஆ ! அரசர்களே சத்துருக்
களின் தேகமாகியவயலை தன்கரத்திற்பிடித்தசிலையிற்றொ
டுக்குங் கணைகளாகிய கொழுவினாலுழுது மாமிசச்சேறு
படுத்த இரத்தநீர் பாய்ச்சியுத்த விதைவிதைத்து பூர்வம்
தன்மனதில் விளைந்திருக்கும் களைகளையகற்றி கீர்த்திப் ப
யிர் தழையச்செய் அவர்களுடையபிராணனை மேல்வார
மாகநமனுக்குக் கொடுத்து வெற்றியைக்குடிவார மாகக்
கைக் கொண்டு; என்கைக்குக் கொடுக்கும் என்மைத்து
னன், சிந்துதேசாதிபதியும் சப்ததீவிலும்ஒப்பற்றவெப்ப
மாகியசுப்ரதீபத்திற்கொப்பாகியபகதத்தனும், ஐவருக்கு
மிகுதத்தெனும்படிசுகமுற்று என்னிடத்திலிருக்கின்றார்
கள் இவர்களிருவரும் போர்புரிய முனைந்தால் இந்தஅண்
டமும் அயன் சொந்த அண்டமும் பகிரண்ட பேரண்ட
மும், நமக்குயிது ஒருகண்டமென்று பாழாகிப் புழுதியா
ய்ப் போய்விடுமே, மேலும், புஜவுறுதிக்கும் கஜமிகுதிக்
கும் போர்புரிவதற்கும் தேர்விடுவதற்கும் கலைவலிமைக்
கும் சிலைவலிமைக்கும் கண்மணியனையான் விண்மணிக்
கிணையாம் மத்திரதேசாதிபதியாகிய என்மித்திரன், கூளி
போற்கூடிய பகைவரையாளிபோற் சீறியடித்துகண்ணை
நிமைகாக்குந் தன்மைபோல் என்னைக்காக்க வந்திருக்கி
ன்றான், இந்திரனுக்கொப்பாகிய சோமதத்தனும், பூரிசிர
வனும், காந்தாரராஜனும் கிருதபன்மன், கிருதவீரியன்மு
தலிய இயாதவகுலத் தலைவரும் எனக்குப் படைத்துணை
யாகிச் சூழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அதன்றியும் வீ
மார்ச்சுனன் முதலியபேர்களை வில்யுத்தத்தி னாலும் மல்
யுத்தத்தினாலும் வெல்லுகிறோமென்றுங் கொல்லுகிறோ
மென்றும் விற்பிடித்து வெற்றிமாலைதரித்து சங்காரருத்
திரனைப்போல் ஓங்காரமிட்டு சம்சத்தராகிய அறுபதினா
யிரம் வெண்கலரதக்காரர்கள் பாதலத்தி லிருந்து படை
த்துணைவர விருக்கின்றார்கள். ஓ! ஓ! அளவுசொல்லுவத
ற் கருமையாகிய தவத்தையும் பலத்தையுமுடைய அநே
கங்கோடி இராக்ஷசாள் என்னிடத்தி லுண்டாகிய இஷ்
டத்தினால் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்யப் ப
டைத்துணைவரப்போகின்றார்கள்.இப்போதுஎன்னுயிருக்
குத் தங்களுயிரைக் கொடுக்கும்படியாகச் சிநேகித்திருக்
கும் தீவுகளிலுள்ள பேர்களும் பூமியிலுள்ள பேர்களும்
பாரதயுத்தந் தொடங்குங்காலங்கேட்டு ஒருநாளைக்கு மு
ன்னதாக இவடம்வந்து சேருவார்கள் இத்தன்மையவா
க அவரவர்கள் சேனா சயினியங்களுடன் எனக்குத்து

ணையாகிவருபவர்க ளெல்லாரும் என்னுயிருக்குயிராகிய
பேர்கள் அவர்களிறந்தால் நானிறப்பேன் நானிறந்தால்
அவர்களிறப்பார்கள். இந்தவுலகமழிந்தால் நாங்க ளெல்
லோரும் அழிவோம், உலகம்-அழியப்போகிறதுமில்லை
நாங்களிபாவ நும்மழிப்பபோகிறதுமில்லை, இதுஉண்மை
யே, இனிநான்பம்பலவாறாகச் சொல்லவேண்டியதில்லை
என்தந்தையாகிய பராஜ பயங்கரனே கேளும், இதுவ
ரையிலும் படைத்துணை கூடியதேர் இயானை குதிரை கா
லாள் விரர்கள் முதலாகிய வெல்லாஞ்சேர்த்து பதினொ
ரு அக்ரோணியென்று கணிதநூல்தெரிந்த பெரியோர்க
ள் தொகைசெய்தார்கள். இவ்வளவுசேனைகளும் வீராதி
வீரர்களும் எனக்காகச் சேர்ந்திருப்பவர்கள் இவர்களுட
னெதிர்த்துப் போர்புரியுந் தன்மையையுடையவர்கள் ஒ
ருவருமில்லை. அப்படிக்கு நேர்நின்று சண்டை செய்பவ
ர்கள் யாவரேனும் இருப்பார்களாகில் சொல்லுங்கள் நீங்
காத விவேகநிறைந்த நிதிமான்களே, சூழ்கொண்ட மேக
ம்போன்ற திருமேனியையுடைய கிருஷ்ணபகவான் பா
ண்டவர்களுக்குப் படைத்துணை யானேனை அவனுக்கு
ஈடாரொன்றுசொல்வீர்கள் அப்படியே படைத்துணையா
னாலும் நிராயுதனுகி தேர்செலுத்தவமைந்தானன்றி வே
றல்ல அவனண்ணன்பலபத்திரர் கலப்பையாயுதத்துட
ன் எனக்குப்படைத்துணையானார் இவைகளெல்லாம் அ
ந்தக்கிருஷ்ணனுக்கு முன்னிலையில்லாமலழிந்து போகு
மே என்று பயந்திருக்கின்றீர்களல்லவா. அப்படியேமடி
ந்துபோகுமாகில் நாமெல்லோரும் வீரமொன்றும்வேங்க
மொன்றும் எனிநக்கின்றேம்கால்கரந்துறைந்தசப்பாணி
முடம்போலெண்ணிக்கொண்டோ சஞ்சலித்துவாடுகின்
றீர்கள் தைரியமுடையமன்னவர்களே, இன்னமுஞ்சேனு
ங்கள் கதாயுதக்கைக்கைக்கொண்டு யுத்தமுனையிற் கலந்
து நின்றேனாகில் இவ்வுலகத்திலுள்ள மனிதர்களும்புனி
தர்களும்அவ்வுலகத்திலுள்ளதேவர்களும்மூவர்களும்சே
ர்ந்துவந்தெதிர்த்தாலும் ஒருக்ஷணப்போதில் அவர்களி
யாவரையும்வதைத்து வீரசொர்க்கம் அனுப்பிவிடுவேன்
இவ்வளவுவலிமையையுடைய என்னை வீமசேனனேவெ
ற்றிகொண்டுவெல்பவன் இதைநீங்கள் யோசிக்கவில்லை
யே அந்தோ ! அந்தோ ! நானென்சொல்லப் போகின்
றேன் மேலும், திடவிரகாத்திரதிண்ணியராகிய துச்சாத
னன்-துன்முகன்-விகர்ணன்-சுமதி-சித்திரசேனன்-சித்தி
ரபானு-இவர்கள்முதலிய என்தம்பிமார்கள் மல்லைப்புரியு
ந்தோள்வல்லமையும் சொல்லற்கரிய தோள்வல்லமையு
முடையவர்கள் வடபத்திரசாயியாகியமாயோன் பார்த்த
சாரதியாகவந்தாலும் அதைக்குறித்துமெச்சி சந்தோஷ
ப்படாமல் அருச்சுனனையும்மற்றப்பேர்களையும் பிச்சிப்பி
டுங்கிவலம் பஞ்சுபோலகாற்றிற்றூற்றிவிடுவார்கள்வீ
மசேனனுடையவிதியை மாற்றுதற்குநானொருவனிருக்கி
ன்றேன் இதல்லாமலும், என்பேரில் எதிர்த்து வரப்பட்
டவரெவரையும் இனிப்பிறவாமற்செய்வதுமன்றி, ஈட்டி
எறி வல்லயம் குண்டு குழல் முதலியவற்றைத் தடுக்கவு
ம் இடித்துமின்னிவரும் எழுமேகங்களின் முழக்கத்தை
விலக்கவும் மெதினிகிழியப்பொழியுங் கல்வருஷங்களைக்
கலக்கவும், ஓங்கிவீசியயுகாந்தகாலச் சண்டமாருதத்தை
யொடுக்கவும், வேண்டியபோது விடுக்கவும் பேரிருளை
ப்பிரகாசிக்கச்செய்யவும், பிரகாசத்தைப் பேரிருளாக்கவு
ம், ஆகாயகங்கையைப்பூமியில் அழைப்பிக்கவும், அதன்
பேரில் இயானைசேனைபரிவாரங்களெல்லாம்நடக்கவும்எ
திராளிகளின் சேனைப்படைகள் முழுகிப்போகும்படியா
கமுடுக்கவும், வெப்பமாகியபாலைநிலத்தில்மேகம்பொழி
ந்தசலமானது சுவறிப்போகாமல்வரும்படியாய்மடக்கவு
ம் என்னுடையசேனைகள் தாகவிடாய்த்தீர்ந்து குளித்து
முழுகியிளைப்பாறிநடக்கவுஞ்செய்வதுமன்றிமண்டலமே
லாகவும் விண்டலங்கீழாகவும்மாற்றுவேன்; சரபம்சார்த்
தூலம்-கண்டபேறண்டம்-சிங்கம்-இயானை- மலைப்பாம்பு
கள் முதலாகியமிருகங்களெல்லாம்நான் கைகாட்டியதொ
ழில்களைச்செய்துகொண்டு இன்னமும்வேலைசெய்யக்கட்
டளையிடவேண்டும் இறைவனே என்று இறைஞ்சிநிற்கவு
ம் குறுங்காற்பூதம்-குடங்கைப்பூதம்-குடவயிற்றுப்பூதம்
குழிக்கண்பூதம் முதலாகிய-பைசாசகண பிர்மராக்ஷசர்க
ளெல்லாம் சிரத்திற்கரத்தைக்குவித்து, என்ன உத்தரம்
எந்தவேளையில் வருமோவென்று எதிர்காத் திருக்கும்ப
டியாகிய ஸ்தம்பனம்-மோகனம்-உச்சாடனம்-ஆகருஷண
ம்-தொட்டியம்-சல்லியம்-இந்திரஜாலம்-மயேந்திரஜாலம்
கண்கட்டு-திசைக்கட்டு-தேகக்கட்டு-விண்கட்டு-மண்கட்
டு-மறைவுமை-மாயாவித்தை-முதலிய மந்திர-எந்திர-தந்
திர-சாதகங்களும், முனிவர்-சித்தர்-முதலியபேர்கள் அ
நுக்கிரகஞ்செய்யக்கற்றிருக்கிறேன் - சலஸ்தம்பனமும்,
வாயுஸ்தம்பனமும்-அக்கினிஸ்தம்பனமும் மாய்ந்துபோ
ன உயிரைமறுபடியும்வரவழைக்கும் மிருதசஞ்சீவிமந்தி
ரங்களும் பெற்றிருக்கிறேன் இத்தன்மையவாகிய உபா
யங்களெல்லாவற்றிலும்வல்லவனாகியநான்படைத்துணை
வந்தபேர்களை நம்பிக்கொண்டிருக்கத் தக்கதுமுண்டோ,
தேவர்கள் அடைக்கலமென்பார்களாகில் அசுரர்களைவெ
ன்று ஒருவாக்கியத்தினால் அமரர்களைக்காக்குந் திறத்தை
யுடைய என்னைத்துதித்துக்கொண்டாடிப்புகழாமல் அல்
பபலத்தையுடைய ஐவரைக்கொண்டாடி விம்மிவிம்மிவா
டுவது வேந்தர்களுக்குப் புகழல்லவே இப்போது நான்
சொல்லிவந்தகாரியங்களித்தனையும் உறுதியுடையதல்ல
வென்று உங்கள்மனத்தில் நினைப்பீர்களாகில் உண்மை
யாகியவார்த்தைகளைச்சொல்லுகின்றேன். கேளுங்களுத்
தமர்களே (பேறிளமையின்பம் பிணிமூப்புச்சாக்காடா;
மாறுங்கருவிலமைப்பு) தாய்தந்தையர்கூடி சுக்கில சு
ரோணிதஞ் சம்பந்தப்படுங்காலத்தில் ஐந்துகோசமாகவா
யுவுவந்தியபோது தரித்தகருவுருவாகிய உடற்பெறும்ப
டியாகிய) பேறு-இளமை இன்பம்-வியாதி - கிழத்தனம்-
சாவு இவை முதலிய ஆறுவகைகளுங்கருவிற்றானே அ
மைத்திருக்கின்றான் சிருஷ்டிகர்த்தனாகிய பிரமனென்று
பெரியோர்களாற்றெரிந்துக்கொண்டிருக்கின்றேன் அன்
றெழுதியதையழித்தெழுதப்போறதில்லை யென்றுசொல்
லும் பழமொழியுங்கேட்டிருக்கின்றேன் இதைவென்று
வாழ்ந்தவர்களுமில்லை யென்றுணர்ந்திருக்கின்றேன் அப
படி எவர்களாகிலும்இவ்வினையைத்தவிர்ந்திருப்பவர்களு

ல்டாலுல் எனக்கு நீதிதருமங்களைச் சொல்லுங்கள் ஆ
கையால் க்ஷத்திரியர்களுக்கு விதித்திருக்குமுறைநெறிப்
படியுத்தஞ்செய்வதேஞாயம் வெற்றிகொண்டுபஞ்சாசத்
கோடி பூமண்டலமுழுதும் தருமராஜன் ஆண்டாலும்அ
லலதுமாண்டாலும் நாங்கள் மிகுஜெயம்பெற்றாலும் அ
ல்லது அபஜெயமுற்றாலும் ஆருக்கென்ன பள்ளமிறைத்
தவன் பற்குகொண்டுபோவா னென்பதுபோல் சாகிறவ
ரையிலும்யுத்தஞ்செய்துஜயித்தவர்களுடையதுஇராச்சிய
மென்று இராஜமுறைமையிருப்பதனுல் ஒருகைபார்த்து
விடுவேனல்லாமல் பாண்டுமைந்தரைப்பணிந்துஇனியவ
சனங்கூறித்தாழ்ந்து அவர்கள்பாதத்தைப்பிடித்துக்கொ
ண்டு நித்தியதரிசனஞ்செய்து அற்பத்திற்கு அருமை கு
லைந்த அரியபண்டத்திற்காசைகொண்டு வாழ்ந்திருக்க
மாட்டேன் இதனுல் என்னுயிர்மாத்திரம் அழியுமேயன்
றி என்புகழொழியமாட்டாது ஆகையால் என்னதுன்ப
ங்கள்வந்தாலும் எதுகளழிந்தாலும் எவர்கள்மொழிந்தா
லும் எவர்களொழிந்தாலும் யுத்தமென்னும்விரத்தை எ
ள்ளிதயம் ஒருங்காலும்விட்டு நீங்காது என்று இராஜாதி
ராஜனுகிய திரிதராட்டிரனைநோக்கித் துரியோதனன்பல
பலவார்த்தைகளை சலசலவென்றுமொழியவே மனத்திற்
றுய நம்முகத்தில்வியர்வும்பெருமூச்சுங்கொண்டுதந்தை
யாகிய அரசன்மைந்தனைநோக்கி ஐயாகுழந்தாய் அப்பா
கண்மணியே, நான்சொல்லுகின்ற கட்சிவார்த்தையாகிய
கட்டுரையை உன்காதுகொடுத்துக்கேட்கக்கடவைகாதல
னே இப்போது நீ சொல்லிவந்த சகலவிதபலாபலங்களை
யுங்கேட்டேன் ஆகிலும் இவைகளெல்லாவற்றிலுஞ் சி
றந்தவர்களாயுஞ் சொல்லுதற்கரிய பெரியவல்லமையை
யுந்தவங்களையும், உடையவர்களாகிய பாண்டவர்களுட
ன்யுத்தஞ்செய்யக்கருதி யுடன்படுவது நம்மாற்சாதனை
செய்யக்கூடாதகாரியமென்று நீதியாய் நினைக்கக்கடவாய்
எனெனில் தெய்வபலமும் இயாகபலன்களும் திணிந்த
தோள்வலிமையும் திவ்வியாஸ்திரத்திறமையும் சேனைப்
பெருக்கமும் உறுதிமுதலியயாவும் ஐவர்களுக்கு அமைந்
திருக்கின்றன உனக்கென்னிலோ இவடத் திலிருக்
கும் அரசர்களுடையவலிமைத்துணையல்லாமல் மற்றெ
ருதுணையுமில்லையே மகனே அருச்சுனன் தவஞ்செய்து
ஆதிபாண்ட ரங்கனுடைய அருள்பெற்று தேவலோகம்
போய் தேவர்கட்குப்பகைவராகிய காலகேயநிவாதகவச
ரைச்செயித்து தேவாமிர்தபோசனங்கொண்டு தேவசிங்
காசனத்திலிருந்து தேவர்சகாயனென்று பேரும்புகழும்
கிரீடமும்பெற்று பூலோகத்திற்குவந்த தேவேந்திரன் பி
ள்ளையாகிய விஜயவீரனை இந்த அரசர்களைக்கொண்டுஜயி
க்க உன்னுற்கூடுமோ பதினுயிரங்கோடி. நக்ஷத்திரங்கள்
கூடிப்பிரகாசித்தாலும் ஒருசூரியகிரணத்தினுல் ஒளிமழு
ங்கி உலகந்தாருக்குத்தோற்றுமற் பிரகாசமறைந்துபோ
வதுபோல் விஜயனுகிற சூரியனுக்கெதிரில் இராஜர்களெ
ன்னும் நக்ஷத்திரங்கள் ஒளிமாறி நிலைமாறி தலைமாறிபல
பலவென்றுடைந்துபோமேயல்லதுநிலைத்துநின்று நில
வெறிக்க மாட்டாதே அப்படியிருக்க மருதமரத்தைக்கா
லினுலுந்தி குபேரன்பிள்ளைகளின்குறைபகற்றிய ஸ்ரீகிரு
ஷ்ணபகவான் சாரதியாகிய ரதஞ் செலுத்தும்படியாக
இசைந்தமையால் மகிழ்ந்துபொருந்திய அருச்சுனன்யுத்
தகளம்புகுவானுகில் இரத்தமாமிசந்தோய்ந்த வேலாயுத
த்தைத்தாங்கிய பற்பலமன்னர்கூட்டங்களும்வெலவெத
வென்றுதைத்துக்கொண்டுகுலைகுலைந்துஅழிந்துபோவா
ர்களேயன்றி வேறல்ல அவரவருடைய வல்லபங்கள் அ
வரவர்களுக்குத்துணையல்லது ஒருவருடையவல்லபம் ஒ
ருவருக்குத்துணையென்றுநம்பும்வம்பர்களுக்குஇகழ்வும்
வசையும் வருவதல்லாமல் புகழும் இசையும்வரமாட்டா
து ஆகையால்உன்னுடையபெரியவல்லபங்களெல்லாம்
பாண்டவர்களுக்கு ஒருலக்ஷயமாயிராது இப்போதுகூடி
யிருக்கும் வீஷ்டுமர் துரோணர்முதலிய பெரியோர்களு
டைய உயிரிருக்கிறவரைக்கும் நீபலசாலிதான் உனக்குப்
பயமில்லை அவர்களுக்குப்பிற்பாடு நீ துன்பப்படுவாயெ
ன்பதற்குச்சந்தேகமில்லை ஆகையால் நீங்களிருதிறவரும்
பகைநீங்கி யிருப்பதற்காக ஒருயுத்திசொல்லுகிறேன் அ
தென்னவென்றால் அவிர்ப்பாகங்களைப்புசிக்கும் அமரர்
களும், அன்புடமையுடன்வாழும் அரசர்களும் நமதுபுர
சனங்களும் சந்தோஷமடையும்படியாக இந்தராச்சியத்
தையிருகூருகப் பங்கிட்டுத்தருகிறேன் உன்னுடைய பா
கத்தை இயாவரும்புகழ்ந்து துதித்துமகிழும்படியாகவும்
உன்னையடுத்தவர்கள் இருகரத்தையுங்குவித்து வாழ்த்தி
வணங்கிவாழ்ந்து கொண்டிருக்கும்படியாகவும் சுவேத
க்ஷத்திர நிழலில்துரைத்தனஞ்செய்து சிறந்த சுகத்தைப்
பெறக்கடவையென்று திரிதராட்டிரன்சொல்லவே அவ்
வார்த்தைசெவிக்குட்புகுமுன்னமே சிந்தைவருந்திமிகவு
ங்கோபங்கொண்டு துரியோதனன்சொல்லுகின்றான். ஐ
யா? பூர்வத்தில் சூதாடித்தோற்று இனிமேல் இராச்சிய
ம் நமக்குவரப்போறதில்லையென்று கைவிட்டு காடேகதி
யாய்க்கலந்திருந்த பாண்டவர்களைமறுபடியும்வரவழைத்
து நாட்டை நான் வாங்கித்தருகிறேனென்று உறுதிவார்
த்தைகள்சொல்லி பந்துக்களாகிய சிலபடைத்துணைகளை
ச்சேர்த்துவிடுத்து நான்கொண்டபூமியை மீட்டுக்கொடு
க்கக்கருதி கலகம்செய்து இதுவேவேலையாகவேலையற்று
திரிகின்றான் கருமேகத்தையொத்த திருமேனிவாய்த்த க
ண்ணன் அவன்செய்கின்ற தந்திரமருட்சியினுல் நீர்மயங்
கிப்பயப்படுகின்றீர் நான்பயப்படேன் அவனெண்ணிய
யெண்ணத்தின்படி நான் பூமியைக்கொடுத்து விடுவேனு
கில் எனக்கிடாகியமன்னர்களும்என்சத்துருக்களும்குலு
ங்கநகைப்பார்கள் தந்தைவாக்கியத்தைக்கேட்டுதருமமா
ய்க்கொடுத்ததல்ல ஐவருடைய பலத்தினுக்குப் பயந்து
கொடுத்துவிட்டான் துரியோதனனென்று அவமதிப்பாய்
நிந்திப்பார்கள் ஆதலால் என்னுயிருள்ளவரைக்கும் அல்
பத்துரும்பளவு பூமியும் அவர்களுக்குக்கொடுக்க மாட்
டேன் பாண்டவர்களுக்குப்பயந்து இளைத்தான் துரியோ
தனனென்று ஏழ்மையாகிய சொற்கேட்டு உயிர்விரும்பி
வாழமாட்டேன் திரிநேத்திரன்வந்து எதிர்த்துச் செயித்
தாலும் செயிக்கலாமேயன்றி மற்றபேர்கள் போர்முகத்
திலென்னைச்செயிக்கமாட்டார்கள் இத்தன்மையவாகிய
ஜவலிமையையுடைய வென்னை உச்சாகப் படுத்தாமலுப்

உமதுபுத்தியில்நிதானிக்காமலும் புத்தியில்லாதபேதைய
ர்மருட்டியவார்த்தை மயக்கத்தால்கலங்கிச் சொல்லவந்தி
னையாஅப்படிநீயொன்றுக்குங்கலங்கவேண்டாம் எந்தை
யே திடகாத்திரவீர அமோகவரங்கொண்டு உரஞ்சொண்
டிருக்குஞ் சத்துருக்களானாலும் அவர்களை ஒருநொடிப்
பொழுதில்வெல்லவல்ல வல்லமையிற் சைபழகியிருக்கி
ன்றேன் ஆனால் நீர்கொண்டிருக்கும் நடுக்கத்தை மாற்று
கிறதற்குக்கல்லாமற்போனேன் ஆகிலும் அதுவுந்தெரியு
ம அதெப்படியென்னில் உன்பிள்ளைகளின் புயவலிமை
யினால் எதிர்ந்தசத்துருக்களெல்லாருமிறந்து இயமலோ
சமடைந்தார்களென்று எப்போது நீர்கேட்கின்றீரோஅ
ப்போது இந்தச்சந்தேகமும் பயமும் உம்மைவிட்டு நீங்
கிப்போம் அது வரையிலும் உமது மனந் தாள மாட்
டாது ஆகிலும் கொஞ்சம் யோசித்து இந்தக் காலத்
தைத் தள்ளும் இப்போது நேரிட்ட போரைப் புரிவது
தருமமேயன்றி இராச்சியம் பகுந்து கொடுப்பதில் எ
னக்குங் கீர்த்தியில்லை என்னிடத்தில் வாங்கிக் கொள்
ளும் பாண்டவர்களுக்கும் பெருமையில்லை ஆகலால் பூ
மியைப்பிரித்துக் கொடுக்கிறேனென்னும் வார்த்தையை
இனனொருதரம் என்செவியிற் போடாதிருக்கக்கோருகி
றே னிதைமறந்துவிடும், என்னையனே என்று துரியோத
னன் படபடப்புடன் சொல்ல அவைக்கிலிருந்த பேர்க
ளியாவரும் நடுநடுங்க அந்தவேளையில் அரசன் வார்த்
தைக்குக் குறுக்காகப்பாய்ந்து பக்கத்தில் இருந்த கன்ன
ன் சொல்லுகின்றான். பெரிய அரசனேகேளும் மன்னா
சைகொண்டலையும் பாண்டவர்களுடைய படைவலிமை
யைப்புகழ்ந்து எங்களுடைய புஜபல பராக்கிரம விற்வி
த்தைமையை யோசிக்காமலிகழ்ந்து இழிவாகப்பேசுகின்றீர்
அப்படி பேசவேண்டாம் போர்புரியும்படியாக நினைப்பே
னாகில் ஒரே கணையால் உவரிவளைந்த உலக முழுமையும்
வேர்களைந்து வெந்நீர்வார்த்து விடுவேன் என்னிலு முய
ர்ந்த வில்லாளிக ளுண்டென்னும் எண்ண முமக்குண்
டோ மன்னவனே ! வெப்பமாகிய வடவாமுகக்கனலும்
மேதினியெல்லாம் நிறைந்த வெங்கனலும் வேதநான்ம
தனை யெரித்த விழக்கனலும் வேறுபடாத திரிபுரமெரி
த்த நகைக்கனலும் உருகிக்கலந்து மொய்த்த கூரம்பாகி
ய கணைகளைச்செலுத்தி ஒருகணத்திற்குள் சத்துருக்களை
ச் சாம்பராக்கும் வல்லபமுடைய என்முன்னே தேறிய
படைவல்லவர்க ளென்று போர்புரிய வந்தால் மறுமன்
னவர்களையும் அவர்கள் துணையையும் இரதகஜ முதலிய
படைகளையும் பின்பலம் வேண்டாமல் தன்னந்தனியனாக
விற்கொண்டு காடியுதிரவெள்ளங்களோடி காளிகள்கூடி
கொண்டாடிப் புசித்துக் களிக்கக் கண்டங் கண்டமாய்க்
கூறுபடுத்தி மாமிச ரெத்தங்களினாற் சேறுபடுத்தி கரமு
ஞ் சிரமுங்கலந்து விதைத்து கடல்சூழ்ந்த காசினி முழு
வதும் உன்புத்திரருடைய வெள்ளைக்குடை நீழலில் வி
ளங்கவைத்து உன்னுடைய மன நடுக்கத்தையும் மற்ற
வர்களுடைய மதியொடுக்கத்தையும் பகைவரால்விளையு
மிடுக்கத்தையும் நொடிப்போதிலடக்கி அகற்றிவைக்கின்
றேன் ஐயா இப்போ தெனக்குச் செலவுகொடுமென்று

பற்பலவிதமாகிய சாமர்த்தியங்களைப் பகர்ந்த அங்க தே
சாதிபதியினுடைய வல்லபவார்த்தை முழுமையுங்கேட்
டுத் திரிதராட்டிரன் சந்தோஷமுஞ் சந்தேகமுங் கொண்
டு சொல்லுகின்றான். அப்பா, கர்ணா, முறியாதகாண்டீப
மும் அருத நாணியும் அக்ஷயதூணியும் இளையாத சுவே
த வாம்புரவியும் அழியாத இரதமும் அநுமத்துவஜமும்
அக்கினிதேவனாற் கொடுக்கப்பெற்றவனென்றும் கங்கை
யுந்திங்களும் பொங்கரவும் மங்கையும் அங்கத்திற் றரித்
தருளிய சங்கரசுயம்பு வானவரளித்த பாசுபதாஸ்திர மு
டையவனென்றும், தேவேந்திரனுடன்சமமாயிருந்து புத்
தமுத போசனமுண்டவனென்றும், காலகேய நிவாத க
வசர்முதலிய பேர்களைக் குலத்தோ டழிக்குங் கொடுங்க
ணைகொண்டவனென்றும், சகல தந்திர சுதந்தரமாய ஞ
கிய கிருஷ்ணன் சாரதியாகித் தேர்செலுத்தக் காண்டவ
வனத்திற் போர்செலுத்தினவனென்றும், மூன்றுலோக
மும் புகழ்ப்பேர்கொண்ட அருச்சுன னுடைய போர்மு
னையில் நானெதிர்த்து யுத்தஞ்செய்கிறே னென்று சொ
ல்லத்தக்கவர்களுமுண்டோ, எப்பிறப்பிலுஞ் சொப்பன
த்திலுங்காணேன் இப்பிறப்பில் நீயொருவன் சொல்லு
கின்றதை சாக்கிரத்தி லிருந்து பார்க்குமெனக்குப் பெரி
ய ஆச்சரியமா யிருக்கின்றது நல்லதப்பா, விராடபுரத்தி
ல் நேற்று நடந்த மாடுபிடிசண்டையில் நீயில்லையோ இ
துசேதி அறியமாட்டையோ அற்புதமற்புதம் தம்பி அ
ருச்சுனனை வெல்லுவேனென்று ஆர்சொல்ல வேண்டு
மென்றால்அநேககற்பகோடிகாலம்தவஞ்செய்துசர்வசங்
கார காலருத்திரனுக் கொப்பாக யேர்ப்படப் போறவ
னொருவனிருப்பானாகில் அவனு மொருவேளை ஆலோசி
த்துச் சொல்லவேண்டியது தான் அதைவிட வேறொரு
வரையுங்காணோம் நாமிருக்கின்றோ மென்றாலோ, மரமி
ருக்குநாட்டில் வந்திறங்குங்காக்கை ஊசென்றாலும் பற
க்கும், ஆசென்றாலும்பறக்கும்என்றுசொல்லும்பழமொ
ழியைப்போல்அருச்சுனன் போர்செய்ய வந்தானென்று
கேட்டவுடனேயுத்தத்தையும்உடலையுமறந்துஓடிப்போங்
காக்கையைப்போன்றநாம்வாக்கினால்வெல்லுவோமென்
பதுஎப்படியிருக்குதென்றால்(உள்ளான்பதுங்கலும்ஒணா
ன்றன்கர்வமும்ஓங்குபுகழ்,வெள்ளான்கிரந்தமும்பார்ப்பா
ன்தமிழும்விழல்விழலே,)உள்ளான்குருவியானது பூமிய
சையுதோவென்றுஆட்டிப்பார்ப்பதும்ஆகாயமிடியப்போ
குதென்று இருகாலையுமேலேநாட்டி மல்காந்துபடுப்பது
ம் ஓணான் தலையாட்டலும் வெள்ளான், கிரந்தங் கற்றுப்
பேசுவதும், பார்ப்பான் தமிழ்கற்றுப் பிரசங்கஞ்செய்வ
தும் விழல்விழலே, என்பதுபோல் தம்பிமார்களே, விஜ
யன் வெம்பிப்பதைத்து ஒருகணை விடுவானாகில் அம்புவி
யெல்லாமழியும் என்சொல்லைப் பழுதாக்காமல் புத்தியு
ட்கொண்டு பெருமையுடன் வாழக்கடவீர்கள் புத்திரர்க
ளே, மைந்தர்களும் பந்துஜன நண்பர்களும்பரிவாரச் சே
னைகளும் நூறுநூறாய்க் கூறு கூறாய்ச் சிதைந்து அழிந்து
விழும்படியாகப் பாண்டவருட னெதிர்த்து அமர்செய்ய
வேண்டியதென்ன அவர்கள் கையைக்கொண்டு அவர்க
ள் கண்ணைக் குத்துவதுபோல் முன்னே உங்களிடத்தில்

சொக்கட்டாஞடித் தோற்றபூமி முழுமையும் முறையாக
க்கொடுத்து எல்லாவுயிருந்தொழும்படியாக மித்திரருட
னிருந்து அரசாட்சிசெய்யுங்களப்பா வென்று கட்புலனி
ழந்த காவலன்மொழிந்த சொல்லை மகமேரு வைப்போ
ல வேட்டிருக்க விஷ்மர் சொல்லுகின்றார், ஆகிமுதற்
கொண்டு இதுவரையிலும் பாண்டவர்களை யிகழ்ந்துவெ
ற்றியடைந்துவந்த இந்த வீரனுடைய திறந்தை எல்லோ
ரும் அறிந்திருக்கின்றீர்களல்லவா வென்று கர்ணனைநோ
க்கிக் கைசேர்ந்தவனே, போனதெல்லாம் போகட்டும்
இப்பொழுது அருச்சுனனுக்கு எதிரில் முனைந்து யுத்த
ஞ்செய்யத்துணிந்து நிலைத்து நின்று உன்னுயிரைத் தப்
பித்துக் கொண்டுவரமாட்டுவையோ என்றுறுக்கிக்கேட்
டு கலகலவென்றுநகைத்துப் போபோ பைத்தியக் கார
னே (குறைவானவர்கள் கூவிக்கதறுவர்-நிறைவானவர்க
ளிதானித்திருப்பர்) என்னு மொழிக்கொப்பாக யுத்தஞ்
செய்யக் கையிலாதவர்கள் வாக்கினுற் பிதற்றிக்கொண்டி
ருப்பார்கள், பூரணமாக சயிக்கத்தெரிந்த புண்ணியவான்
கள் சமயம்வந்தபோது தங்கள் சாமர்த்தியத்தைக் காட்
டுவார்களன்றி நாவினுல் ஒருக்காலும் கவிலமாட்டார்கள்
அதுதான் வீரதருமமென்பது, சொல்லுவது அதர்மம்,
ஆகையால் பிறந்தவீட்டின் பெருமையை உடன் பிறந்த
முத்தோனிடத்தில் புகழ்ந்து சொல்வதைப்போல் உன்
பண்டவாளந்தெரிந்த எங்கள் சபையிற் சொல்லாதே, ச
ந்தை கூடிய விடத்தில் உன் சாமர்த்தியத்தைப்பேசினுல்
சகலருங்கேட்டு சந்தோஷப்படுவார்கள் இந்தவார்த்தை
யைப்பேசலாம் இந்தவார்த்தையைப் பேசக் கூடாதென்
னுணராத நீ, காலமிடமறிந்து சற்றுயோசித்துச் சொல்
லக்கடவையென்று உலகமதிக்கும் புகழினை யுடைய வீ
ஷ்டுமர்சொல்ல, குற்றங் குறைகுச்சிதமில்லா மனத்தோ
னுகிய அங்கதேசாதிபதி வடவா முகாக்கினிபோற் பொ
ங்கிக்கொதித்து மநோவியாதி கொண்டிருக் கின்ற திரித
ராட்டிரனுக்குச் சொல்லலுற்றுன். அரசனே கேளும்,
பாண்டவர்களுக்குந் துரியோதனுதியர்களுக்கும் யுத்தம்
விளையப்போகுதென்று முன்னமே தேவதைகளெல்லா
ருங் கூடி வஞ்சனையாகயோசித்து நான்கற்றமந்திரங்களை
யும் தேவாஸ்திரங்களையும் தருணத்திற்குதவாமற் போகு
ம்படியாக என்னைச்சபித்திருக்கின்றுர்கள் ஆகையினுலே
இதுவரையிலும் அருச்சுனன் பிராணனுடன் பிழைத்தி
ருக்கின்றுன் இல்லாவிட்டால் அன்றே யிறந்து நாமெல்
லாருமறந்து அவன்செத்தவிடம் புல்முளைத்துப்போய்வி
டும் ஆகிலும், என்னசாபம் நேரிட்டாலும், (இபானைபடு
த்தால் குதிரையத்தனை உயரமிருக்கமாட்டாதா) ஆகட்டு
ம், ஒரேபாணத்தினுல் காண்டீபனுடைய பிராணனை வா
ங்குகின்றது. நிச்சயம் அபத்தமல்ல ஒருவேளை இவனெ
ன்ன வாங்கப்போகிறதென்று உமது மனத்தில் சந்தேக
மிருந்தால் பாண்டவர்களுக்கு இந்த ராச்சிய முழுமையு
ங்கொடுத்து விட்டு நூறுபிள்ளைகளையும் அவர்களை யடுத்
தபேர்களையும் எப்படி விடவேண்டுமோ அப்படியே உ
மது மனதுக்கு ராசியானபடி செய்யுமென்று கன்சிவந்
து மிகுந்த கோபத்துடன் சபாமண்டபத்தை விட்டெழு
ந்து துரியோதனனைநோக்கி ! கல்லுங் கரையும்படியாக
க் கரைத்திருக்கின்றுர்கள். அதனுல், உன்தந்தை அஞ்சி
ப்பேசுகின்றுர். நீர் அவருடைய இஷ்டப்படி தடுக்காம
ல் நடப்பதுவேஞயம் அப்பால் தெய்வசகாய மெப்படி
யிருக்கின்றதோ பார்த்துக் கொள்ளுவோமென்று இரப்
போர்களுக்கு இல்லையென்னுமற் கொடுக்கும் ஈகையாள
ன் தன்னுடைய அரண்மனைக்குப் போகவும், துரியோத
னன், சகுனி, துச்சாதனன் தவிர மற்றபேர்களும் திரித
ராட்டிரனும் கர்ண னீங்கிப் போனதற்கு விசனப்படாம
ல் நீங்காகிய தடைநீங்கியதைப்போல் சந்தோஷங் கொ
ண்டு சஞ்சயனைநோக்கி என் தம்பிபுத்திரராகிய பாண்ட
வர்கள் எவர்களை எவர்கள் கொல்லுகிறதென்று சபதங்
கொண் டிருக்கின்றுர்கள். நீரறிந்த மாத்திரஞ் சொல்லு
மென்று திரிதராட்டிரன்கேட்க! சஞ்சயன்சொல்லுகின்
றுன். ஐயனே வீஷ்டுமரைச்-சிகண்டியும், துரோணுச்சா
ரியரைத்-திர்ஷ்டத்துய்மனும், சல்லியராசனைத் தருமரா
ஜனும், துரியோதனன்முதலாகிய நூறுபிள்ளைகளை- வீம
சேனனும், கர்ணன் சிந்துபதிமுதலிய இவர்களை- அருச்
சுனனும், மாமாவாகிய சகுனியை-நகுலனும், சகுனிதந்
தையாகிய சௌபலன்முதலிய குலத்து ளோரைச்-சகா
தேவனும், ஆயிரம்பேர்களாகிய உமது பேரப் பிள்ளைக
ளுக்கும் பதினுயிரம்பேர்களாகிய இராஜகுமாரர்களுக்கு
ம் அருச்சுனகுமாரனுகிய வாளபிமன்னுவும், கிருதவன்
மனைச்-சாத்தகியும், ஆத்திமாலையைத்தரித்த அரன்வந்து
தடுத்தாலும் கொல்லுவோமென்று சபதங்கூறிக்கொண்
டிருக்கின்றுர்கள். விராடனும் அவனுடைய புத்திர வரு
க்கமுதலிய சேனைகளும் திருஷ்டத்துய்மனுக்குத் துணை
யானுர்கள் திரௌபதியினுடைய பிள்ளைகள் இளம்பஞ்ச
பாண்டவரைவரும் சிகண்டிக்குத் துணையானுர்கள் தேச
தேசத்து இராஜர்களெல்லாரும் தங்கள் தங்களுக்குப் ப
கையாகிய பேர்களுடன் போர்புரியத்- துணிந்திருக் கின்
றுர்கள். பாண்டவர்களுக்கும் திரௌ பதைக்கும் பிறந்த
இளம்பஞ்சபாண்டவர் தவிர மற்ற உபபத்தினி மார்களு
டைய புத்திரர்கள் ஏழுபேரிருக்கின்றுர்கள், ஏழுபுத்தச
முத்திரத்தையும் எளிதில் நீந்துகின்றவர்கள் அல்லாமலு
ம் (செல்லுஞ் செல்லாததற்குச் செட்டியா ரிருக்கின்று
ரென்னுங்கதையைப்போல்) அரவானெருவ னிருக்கின்
றுன். மகா மாயைவல்லபத்திற் சிறந்த கடோற்கச னெ
ன்பவன், கடலைப்போல்வருகின்ற இராக்ஷசப்படைகளு
க்குத் [illegible]டையாகத் தானொருவனே யென் றிருக்கின்றுன்
உத்தமோசன், உதர்மனு வென்பவர்கள் அருச்சுனனுக்
கு சக்கர ரக்ஷகரானுர்கள். இந்தப்பிரகாரம் ஏற்படுத்திப்
பிரித்துக்கொண் டிருக்கி றுர்கள். பாண்டவர்க ளென்
றுசொல்லி ஓ மன்னர்மன்னனே ! இனிமே லுமதுபுத்
திரற் றேன்றிய தன்மையைச்சொல்லுமென்று சஞ்சய
ன்கேட்க; அச்சபையில் நிறைந்திருக்கும் பேர்களிற்சில
ர், சஞ்சயனைப்பார்த்து ! நீர் சொல்லிவந்த பலவான்கள்
நிச்சயித்துக்கொண்ட எதிரிகளெல்லாருஞ் சரிதான் - ஆ
னுல் தருமராஜன் சல்லியனைக்கொல்ல யிருக்கின்று ரெ
ன்றது சல்லியபூபதிக்குத் தருமராஜனெம்மாத்திரமென்

று சொல்லவே இதைக்கேட்டிருந்த விவேக முடையசல்லியராஜன் ஐயா! சகல வெப்பங்களைத் தணிப்பதும் ஜீவாதாரமாயிருப்பதும் பாபவிநாச பரிசுத்தமுடையதும் கங்காசலம் அந்தக் கங்காசலத்தினிடத்தில்! நெருப்புப் பிறக்குமாகில் மற்றெதைக்கொண்டவிக்கலாம்; அந்தச் சலத்தைப்போன்ற தருமராஜனாகிய கருணைவள்ளல் விளைய நினைத்து என்னைக்கொல்ல வெகுண்டு வருவாராகில் அவருடனெதிர்த்துப் போர்செய்யத்தக்கவர்கள் இந்தத் திரிபுவனங்களிலு முண்டோ அவருடைய தந்தையாகிய யமதருமராஜனைப்போற் சாமர்த்தியங் கொண்டிருக்குந் தவத்தினராகையால், தருமராஜன் என்னைக்கடிந்து ஜெயிப்பேனென்று தாராளமாகச் சொல்லத்தகுமென்றான் சல்லியராஜன் அதைக்கேட்டு, தேசதேசத் தரசர்களெல்லாரும் வாயை மூடிக் கொண்டார்கள், பின்பு திரிதராட்டிரன், சஞ்சயனை நோக்கி, அப்பா, சஞ்சயனே உனக்குப்பிரயாசைகொடுத்து இவ்வளவுதூரம் பண்ணிப் பண்ணிக்கேட்டதெல்லாம் என்பிள்ளைகள்தெரிந்துக் கொண்டு ஏதாகிலும் ஒருவழியாக வருவார்களென்று மிச்சையை உடையனாய்க்கேட்டதேயல்லாமல் வேறல்ல, நான் எவ்விதயோசனைகள் செய்தபோதிலும் என்புத்திரர் வழிக்குவருகிறதாகயில்லை யோசிக்குமிடத்தில் பாண்டவர்களுக்கு ஜயமும் துர்யோதனாதியருக்கு அபஜயமும் உண்டாமென்று தோற்றுகின்றது மேலும்என்குமாரர்களுக்கு இறக்குங்காலம் நேரிட்டபடியால் இப்பேர்ப் பட்ட துற்புத்தியுந் துர்யோசனையும் சேர்ந்திருக்கின்றன பிழைக்கும்பிள்ளைகளானால் பெரியோர்களுடைய நீதிவாக்கியங்களையும் தந்தையாகிய என்வசனத்தைத்தள்ளுவார்களோ, இறந்துபோவதற்கு இதுவேதிருஷ்டாந்தமாகயிருக்குமென்று மனவெறுப்புடன் சொல்லி நொந்தபெரியமன்னனுடைய மனக்கருத்தையறிந்துக்கொண்டு இரக்கமனத்தினையுடையவிதுரராஜனெழுந்து அண்ணாவே சேனும் உமக்குப்பக்ஷபாதமில்லாமல் இருதிறபுத்திரர்களையுஞ்சமமாய் நடத்தவேண்டுமென்னும் இச்சையிருக்குமாகில் அடிக்கடிசபலிக்குஞ் சிந்தையைநீக்கி உறுதிப்படுத்திக்கொண்டு மறுபடியும்மாசற்ற இதயமுள்ள சஞ்சயனை உபலாவியத்திற்கனுப்பிப் பாண்டவர்களைக்கண்டு பெரியதகப்பனார் உங்களைப்பார்க்க அழைத்துவரச்சொல்லுமென்று இனியமொழிகள் சொல்லச் செய்வீராகில் இந்தவார்த்தையைக் கேட்டவுடனே அஞ்சலி அஸ்தராகவந்து உன்பாதங்களில்வணங்குவார்கள் அப்படிக்குவந்தபிள்ளைகளை ஆதரித்து பிரியவசனங்களைப்பேசினால்மனமகிழ்ந்து உடல்புளகமுற்று வருத்தம்நீங்கி இராஜசபையில் பூர்வத்தில்கூறிக்கொண்ட சபதமென்னும் அக்கினிகோபங்களெல்லாம் ஆறிப்போய் உமக்குரியஅன்பாவார்கள் இவ்வளவுபக்குவம் பண்ணிக்கொள்ளும்படியாக உமதுமனந்துணியுமாகில் இப்போதேசெய்யலாம் இதைவிடவேறுவிதமாகிய நலங்களொன்றுங்காணேமென்று விதுரராஜனாகியதம்பி சொல்லக்கேட்டவேந்தன் விவேகமுள்ளசஞ்சயனுடைய முகத்தைநோக்கிவாசனையார்ந்த மாலைகள்புனைந்தமார்பனே நான்சொல்லியனுப்பிவைத்தால் என்தம்பிபிள்ளைகள் என்வார்த்தையைத் தள்ளாமல் இவடத்திற்கு வருவார்களாவென்று ஆச்சரியத்துடன் கேட்ட அரசனைப்பார்த்துசஞ்சயன் சொல்லுகின்றான் ஐயா! குபேரசம்பத்துகூடிவருவதானாலும்குவலயமெல்லாம் ஒருகுடையிலாளவமைந்தாலும்குன்றச் செய்யும் வறுமைநோய்கள்கூடினாலும், வாராத ஆபத்துக்கள்வந்தாலும் மடியுங்காலம்நேரிட்டாலும் இவடத்திற்கவர்கள் ஒருக்காலும்வாமாட்டார்கள் ஆனால் சத்தியவிரதந்தப்பாத உத்தமர்களாகையால் தந்தைவார்த்தையைத்தப்பலாகாதென்னுந்தருமத்தை அனுசரித்து யிப்போதுவந்தாலும்வருவார்கள் இத்தன்மைவாய்ந்த புத்திசாலிகளாகிய புத்திரரையும் அழைத்துவரும்படி உத்தரவானால் சித்தங்களிக்க இதோ அழைத்துக்கொண்டுவருகிறேன் விடைகொடுமென்றுசஞ்சயன்கேட்க, இந்தவசனமானது துரியோதனனுடைய காதுகளில் நாராசம் போலேறவும் வடவாமுகாக்கினிபொங்கிஎழுந்ததன்மைபோற்கோபங்கொண்டு கண்களினுற்றீப்பொறியிறைத்து சஞ்சயனானவன் முகமாயிப்போகும்படியாய்ப் பற்பல வார்த்தைகளைச்சொல்லி அடாசஞ்சயனே? என்னிடத்திற் சூதாடித்தோற்றுங் காடேகதியாகப்போய்க் காலங்கழித்திருந்த பாண்டவரொன்னும் பஞ்சைகளை பால்,வெண்ணெய், தயிர், முதலியவைகளைத்திருடி அன்றுநின்ற கண்ணனானவன் ஏதேதோ ஆசைகளைச்சொல்லிஇன்று அழைத்துவந்து சிலதந்திரஞ் செய்துக்கொண்டிருக்கின்றான் நன்றுநன்று அவனுடையதிறத்தையும் பாண்டவர்களின் திறத்தையும்பாழாக்கவேண்டுமென்று யெண்ணியிருக்குமெனக்கு விரோதமாக நீ போய் ஐவரை அழைத்துக்கொண்டுவந்துவிடுகிறதும் இந்தத் திரிதராட்டிரன் அவர்களுக்கு ராச்சியங்கொடுத்து விடுகிறதும்திரிலோகமும் புகழும் நினராகியபாண்டவர்கள் பெற்றுக்கொள்ளுகிறதுஞ் சிறியதந்தையாகியவிதுரன் சந்தோஷப்படுகிறதும் நான்பயித்தியக்காரனைப்போற்பார்த்திருப்பதுமாக எண்ணிக்கொண்டோ இந்தயோசனைசெய்தீர்கள். அடடா? இதுவென்னவனியாயம் உனக்கும் விதுரமகாராஜனுக்கும் எவ்வளவு ஏழ்மையாய்ப்போய்விட்டேன் பார்த்தையா நல்லது தூரதாலோசனைசெய்யாமல் அவசரப்பட்டீர்கள் இப்போதும் என்சோறும் என்வஸ்திரமும் பொன்னாபரணமாகிய என்னாபரணமுந்தரித்தும் அனுபவித்தும்அந்தப்பக்ஷத்திலிருக்கின்றீர்களல்லவா ஐயோ உங்களை ஒருக்காலும்நம்பலாகாதேஇப்பேர்ப்பட்ட பக்ஷபாதிகளாகிய நீங்கள் என்சபையைவிட்டெழுந்துஇந்நேரமே பாண்டவர்களைச்சேரவேண்டியது. இனியென்முகத்தெதிர்வரவேண்டியதில்லை போம்போமென்றுபுகன்று இன்னமும் இந்தச்சபையில்பக்ஷபாதிகளாயிராநின்றபேர்கள் எப்பேர்ப்பட்டதகுதியையுடைய சுதந்தரராகியிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இதுவே உத்தரமென்று சொல்லி, வெண்கலமென்றுசொல்லுமிடத்தில் ஓட்டைபோட்டையென்று சொல்லத்தக்க பேர்களைப்போலுந் தலையாட்டிக்கொள்ளியைப்போலும் இவ்விடத்திலிருந்துக்கொண்டு எந்நேரமும்தைரியமில்லாத வார்த்தைகளைப்

பேசிச் சஞ்சலத்தையுண்டாக்கிக் கொண்டிருக்கும் பேதையர்முகத்தில்பெரியவள்வாசமாகயிருப்பாள், அப்பேர்ப்பட்டவர்களுடைய முகத்தில் நாம்விழிக்கலாகாது அவர்கள்நிழலும் நமதுபேரிற்படலாகாது, அவர்கள்வார்த்தைகளையும் நமதுகாதுகேட்கலாகாது, அப்படி, மருவிக்கேட்டுக்கொண்டிருப்போமாகில் நமக்குண்டாகியசெலவமும், வீரமுங்குறைந்துபோகும் ஆகையால் இப்பேர்ப்பட்டவர்களெல்லாரும் பலசாலிகளாகியபாண்டவர்களிடத்திற்போய்ச் சேருவதேமிகுந்த நன்மையாகயிருக்கும் நீங்கள் என்னைவிட்டுப்போவதினு லெனக்கொருகுறைவுமில்லை, என்னுயிர்த்துணைவனுகிய கன்னமகாராஜனொருவ னிருந்தாற்போதும் அவருடன்கூடமாமன் தம்பியர்கள் தேசத்தலைவர்கள் முதலாகிய பற்பலபேர்கள் என்னிடத்தில் நண்புகொண்டிருக்கின்றார்கள் (கூனனைக்கொண்டு குளப்படிமாமி, காணிக்குப் பிள்ளையுறும்) என்னும் பழமொழிபோல், இவர்களைக்கொண்டு எதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றிபெறுவேனேயன்றி நான்சாகிறவரையிலுஞ் சமர்செய்யாமல் நிறுத்திப்பொறுத்துத் தரித்திருக்கமாட்டேன் ஒருவருக்கும் வணங்கிப்பயந்து இணங்கிஅடங்கி உத்தரஞ்சொல்லேன். (தலைக்குமேலோடியவெள்ளஞ் சாணேடியுமென்னும் முழமோடியு மென்னும்) என்னும் பழமொழிபோல் நான், பயப்படேன் அவரவர்களுக்கு எத்தெந்தப்படி இஷ்டமிருக்கின்றதோ அந்தந்தப்படிக்கு நடந்துக்கொள்ளலாம்அதற்குயாதொருதடையுமில்லை, (கெட்டமாடு தேடுவாருமில்லை மேய்த்தகூலி கொடுப்பாருமில்லைசம்பளமில்லாச் சேவகமும் கோபமில்லாததுரையும் ஏற்பட்டிருந்தால் வேலைகள்சாயுமாமன்குகிளையைநம்பியாற்றிலிறங்குவார்போல்நான் உங்களை நம்பியிருக்கயில்லை, மண்பூனையானாலும் எலிபிடிப்பது லாபமென்பதுபோல்) உருக்கியசெம்பிலும் ஒளிமிகுந்தகோபக்கண்களையுடையஉத்தமன் அங்கதேசாதிபதியாகிய எங்களண்ணன் கன்னமகாராஜனுடையகரதநிற்பிடித்திருக்கும் வில்லானது சத்துருக்கள்வந்து வளைத்துக்கொண்டகாலத்தில் அவர்களைவெதுப்பி நாசப்படுத்தி யெனக்குவெற்றியைக் கொடுக்குந் துணையாயுற்றிருக்கின்றது அதைநான் விபரித்துச்சொல்லவேண்டியதில்லை; என்பேரில்அன்புடையவர்களே போதும்போதும் அகலுமினென்றுன் வினையேதுணையாகக்கருதிய வித்துவலவேந்தன் இப்படியாகச்சொல்லிய மைந்தனுடையவார்த்தையைக்கேட்டு, திரிதராட்டிரன்மனம் புகைத் தெரிய வெம்பி விசனமடைந்து வெவ்வியகோபங்களையும் அடக்கிக்கொண்டு விதுரனையும் சஞ்சயனையும்நோக்கி ? மறுமொழிசொல்லாதிருக்கும்படியாகத் தனதுகரத்தினுற்றடவியணைத்து கரமமைத்துகண்ணீர்சொரிந்து என்னபாவம் இந்தப்பாவிமுன்பின் என்னுமல்வார்த்தை சொல்லுகின்றனென்றேங்கி ஏதுந்தோற்றமற் சற்றுநேரமிருந்து பெருமூச்சுவிட்டு ஆ ஆ சிருஷ்டிகர்த்தாவாகிய தெய்வமே ! இவன் மாண்டுவிழுவோ பூமியை ஆண்டுவாழவோ இவன்தலையிலெவ்விதமா யெழுதியிருக்கின்றீரோ விதியையாநசரிக்குமதியென்பதற்குச்சரியாக அறிவும்பிறந்திருக்கின்றதே அதைவிலக்கி நடத்திவைப்பதற்கு என்றாத்திலில்லையே. கண்ணைக்கெடுத்த தெய்வங்கோலைக் கொடுத்ததுபோல்.) புத்திரபாக்கியங்கிடைத்ததைப் பலிகொடுத்து உள்ளசரக்கைக் கப்பலிலேற்றிநடுக்கடலிற்கவிழ்த்துவருந்திய ஒருவன்போல் துன்புறலாச்சேனென்று வாடிபிள்ளையைநாடி துரியோதனு ! பாண்டவர்கள்பேரிற்பக்ஷமாய்ப்பேசுகிறதாய்ச் சொன்னையே ! அவர்களா விவர்களுக்காகவேண்டியதென்ன யிருக்கின்றது அப்பாஇப்படிக்கெல்லாம் நல்லோராகியநமக்கினியவர்களின்மனம்நோவப்பேசாதே ஊருடன்பகைக்கில் வேருடன்கெடுமென்னும்) வேதவாக்கியத்தைமறந்தையோ; (சிறியோருடன்சேராதே செம்புக்குப்புளிவாராதே) என்னுமொழியையோசிக்கயில்லையோ,(பெரியாரைத்துணைக்கொள்.) என்பதைப்போக்கிவிட்டையோ, அப்பா பெரியோர்கள் வருந்தப்பேசுவது புகழன்றென்றுசொல்லி மறுபடியும் இதுயார்செய்தபாவமோ யாரிட்டசாபமோவென்று தன்னைத்தானொந்துகொண்டசமையத்தில் வீஷ்டுமரெழுந்து தன்வீட்டுக்குப்போனார். அவருடனே துரோணாச்சாரியர் கிருபாச்சாரியர் அசுபத்தாமர்விதுரர் முதலாகியபெரியோர்களும் சிந்துதேசாதிபதிமத்திரதேசாதிபதி சகுனியாகிய மாமன் தொண்ணூற்றொன்பது,தம்பிமார்கள்தேசராஜர்முதலானபேர்களும், 'சபையைவிட்டு நீங்கி எமதூதர்கைக்குள்ளடங்குங் காலஞ்சமீபித்ததென்றேங்கித் தங்கள் தங்களுடைய விடுதிகளிற்சார்ந்தார்கள் ஆலகாலத்தையொத்த துரியோதனன் அருமருந்தனைய சஞ்சயன்முதல்மூலவேராகியதிரிதராட்டிரன்,இவர்கள்மூவருஞ் சபையிலிருந்தவர்கள் மேலைநடாத்தும்வினைப்பயனின் சூட்சியினுல்விளைந்தகாரியங்களைச் சொல்லுகின்றோம் இப்பால் குளிர்ச்சிதங்கிய ஓர்வெள்ளக்குடைநீழலில் அநேகமுலகங்களையாளும்திரிதராட்டிரமகாராஜன் ஒப்பில்லாதபிள்ளையையும் சிறந்தசஞ்சயனையும் அழைத்துக்கொண்டு பரிசுத்தமும் பதிவிரதாதனமுங்கொண்டு பிரகாசமுற்ற பொற்பிரதமையொத்த காந்தாரியம்மனிருக்கும் உயர்ந்தவரண்மனைக்குட்சென்றுன் அந்தக்காலத்தில் காந்தாரிதேவியானவள் எதிர்கண்டோடிபாத பூசைசெய்துபத்திரமக்ஷதைசாத்திவணங்கிச் சிங்காசனத்திற்சீர்பெறவமைத்துத் தீர்க்கதண்டஞ்செய்து இருக்கும்போது துரியோதனன் தன்தாயைப்பணிந்துகொள்ளவும் வாழ்த்தியெடுத்து மார்புரவணைத்துவிடவும் சஞ்சயனுந் துரியோதனும் அரசனுக்குச் சமீபத்திலிருந்தார்கள் அப்போது திரிதராட்டிரன்காந்தாரியைநோக்கி பெண்ணே இன்றையத்தினம் இராஜசபையிலிருந்த எல்லோர்களுங்கூடிப்பற்பலநீதிநெறி தருமங்களையற்புதமாக எத்தனை விதத்திலெடுத்துச்சொல்லியும் உன்புத்திரனுகிய சற்பக்கொடியோன் விற்பிடித்துப்போர்செய்வதே பொருளெனக்கொண்டு பூரிப்படைந்திருக்கின்றான் விசாரிக்குங்காலத்தில் மேலாகியதவத்தினுற்கொண்டஅஸ்திரசஸ்திரங்களின் திறத்தையும்மறத்தையும் அறத்தையும் பூரணமாகப் பெற்றிருக்கும் புகழினையுடையபாண்டுவின்புத்திரர்களுடன்யுத்தஞ் செய்யத்துணிவது தகுதியல்ல வென்றும்

பொருந்திவாழ்வதுவே உத்தமமென்றும்பத்தியையுடை
யமன்னர்பலருஞ்சொன்னார்கள் நான்சிரேஷ்டபுத்திரனை
நோக்கி அப்பாபகைதேடிக்கொள்ளவேண்டாம் வகையி
ல்லாமல்வயிரமெனவிளையும் யுத்தத்தை நிறுத்திவிடு ம
கனே ! என்று சொல்லியும் நமது தந்தை நமக்குவிரோ
தஞ் சொல்லுவாரா என்றெண்ணாமல் கன்ன னுடைய
வார்த்தையைக் கனகமலையாக நம்பி என் வாக்கியத்தை
யிகழ்ந்துவிட்டான் தம்பி, ஆகையால், நங்கையே உன்
னைக்கொண்டாகிலும் உன் புத்திரனுக்குத் தெரியச்சொ
ல்லச்செய்து சீர்படுத்தலாமென்றெண்ணங்கொண்டு உ
ன்னிடத்திற்கு அழைத்துவந்தேன் இப்போதும்பாண்ட
வர்களுக்கு விசேஷித்ததொன்றுங்கொடுக்க வேண்டிய
தில்லை, முன்னேயவர்கள் சூதாடித்தோற்றுப்போன பூ
மியை இப்போது கொடுத்துவிட்டால் அவர்கள்கூறிய
சபதமும் மனஸ்தாபமும்மேற்கொண்ட கோபமும்மாறி
ப்போய்விடுவார்கள் நமதுபெரியோர்களின் எண்ணமும்
இப்படியேயிருக்கின்றது இதைவிட்டுநிமைப்புத்தியையு
டைய நிங்கினர்வாய்மையை ஸ்திரமென்றுநினைத்து செ
ருச்செய்யப்போகிறானும் அப்படிசமர்செய்யத் தொடங்
குவானாகில் ஜயாபஜயம் எப்படிமுடிமோ தெரியவில்லை,
ஜெயமும்விபரீதமும் சேற்றில்நட்டகம்பம் ஆகலால் உ
ன்னுடையபுத்தியிற்றெளிவாகச்சிந்தித்து அஸ்தினாபுரிதே
சராஜனாகிய துரியோதனனுக்குத்தெரியப்படுத்தக்கடவை
யென்று திரிதராட்டிரனாகிய நாயகன்கூற தேவியானவள்
அந்தவார்த்தையை மந்திரம்போற்கேட்டுவணங்கி எதிரி
லிருந்தமைந்தனைநோக்கி குழந்தாய்பெரியாரைப்பேணெ
ன்னும்வாக்கியத்தைக்கொண்டு சிறியோர்சிநேகத்தை வி
டுத்துப்புகழைப்பெறாமல் பெரியோர்சொல்லும் வார்த்
தையைப்பிரயோசனமல்லவென்று இகழ்ந்துவிடுவது
சிறுமையோ அல்லதுபெருமையோ இவ்வுலகத்து மன்
றி மற்றெவ்வுலகத்தினும்இணையில்லாமற்சிறந்த என்மை
ந்தனே உன்றந்தையானவர்கனிந்து மிகுந்த ஆசையுடன்
சொல்லுந்தன்மைப்பிரகாரம்நடந்து பெரும்வாழ்வைப்
பெறக்கடவையென்றுரைத்துவாழ்த்திய அன்பினையுடை
யதாயைப்பணிந்து அரவக்கொடியோன் அம்மா ஐவர்ச
ம்மதித்துச்சூதாடியிழந்தஅவனியைஇப்போதுநான்கொ
டுத்துவிடுவேனாகில் அவர்களுடைய ஆண்மைத்திறத்தி
னுக்கஞ்சிக்கொடுத்துவிட்டதாய்வீராகியவேந்தர்கள்அ
வமதிப்பாய்நினைத்து நிந்திப்பார்கள் அதனாலெனக்குக்கு
றைவுண்டாகும் இதுவரையிலும்பத்துத்திசையிலும்வெ
ற்றிசெலுத்திச்சுற்றத்தாருடன் வாழ்வைப்பெற்றவணங்
காமுடியோனாகிய யான் பசப்சவென்றுவிழித்து வசை
யைக்கொண்டு இசைபெற்ற பாண்டவர்களுடைய பாத
ங்களில்வணங்கிஇச்சகஞ்சொல்லி என்சாணுடம்புமொ
ருசாணாகக்குன்றி வயிறுவளர்த்துக்கொண்டிருடனிரு
ந்துவாழேன் ஆறிலுஞ்சாவு, நூறிலுஞ்சாவு, அம்மணி
அழியும் பிராணனை அவத்தில் மாய்க்காமல் அமர்புரிந்
திறப்பேன் அல்லவென்றால், என்னுடையவெற்றியையு
ம் பாண்டவர்களுடைய சத்தியசகாய சாமர்த்திய சத்தி
யையும் ஈரேழுலகமுங் கொண்டாடும்படியாகச் செயம்
பெற்று புவனசக்கிரேஸ்வரனென்னும்புகழ்கொண்டு இ
ப்பூமியையாள்வேன் அற்பபலங்கொண்ட ஐவர்கள் என்
னுடனெதிர்த்துநின்று போர்புரியமாட்டார்கள் எதிர்நி
ன்றுவென்று ஜயங்கொள்ளும்படியாகிய முறைமை இது
வரையிலும் என்னிடத்திலிருப்பதுமன்றி இன்னமுமுய
ற்சிசெய்துக்கொண்டிருக்கின்றேன். இதன்றியும், சொக்
கட்டானையுருட்டி தங்கள் செல்வமுழுமையுந்திரட்டிக்
கொடுக்கப்பெற்றுக்கொண்ட நான் காட்டில்விரட்டிவிட்
டிருக்கமாண்டார்போல் வனமடைந்தபாண்டவர்கள் மீ
ண்டுவந்து என்னைமருட்டிப் பூமியைப்பெறக்கருதினால்
(பேரிகைசப்தங்கேட்டிறந்த நரியைப்போற்பயந்து) பூமி
யைக்கொடுக்கமாட்டுவேனோஒருக்காலும்ஏமாறமாட்டே
ன். ஐவர்கள்பூச்சிகாட்டவந்ததும் அவர்கள்பொருட்டில்
நம்மிடத்திலிருக்கும் பலபேர்கள் ஏச்சுக்காட்ட விருந்த
தும் இவைகளையெல்லாம் யோசிக்காமல் என்தந்தை ச
பையினிடத்தில் என்னுடைய வல்லபத்தையிகழ்ந்துபே
சியதுங்கேட்டு சகிக்காதகோபத்தினாற் றந்தைவார்த்தை
யைத்தடுத்தேன், தாயே, வச்சிராயுதன் முதலாகியபேர்
கள் வந்தாலும் லக்ஷயமில்லாமல் வெல்லுந்திறத்தினையு
டைய என் சேனைகளை யுத்தகளத்திற்கண்டவுடனே பா
ண்டவர்மெத்தவருந்தியிறப்பார்கள் அன்னையேஎன்றுபற்
பலவிதபராக்கிரமங்களை பவளம்போன்றயிதழினையுடை
யகாந்தாரியினிடத்திற்சொல்லிக்கொண்டுவாராநின்ற மக
னுடையமனமடிவில்லாவிரகைப்பெரியமன்னவன் கேட்
டுமயக்கமுற்று வாடிவருந்திபெருமூச்சுவிடுத்து ஏதேது
இனிகாரியமில்லையென்று இளைத்து தெளிவினையுடையச
ஞ்சயனைநோக்கி,புத்தியிற்சிறந்த உத்தமனேபாண்டவர்க
ளுடைய பலங்களையும் நமதுபிள்ளைகளினுடையதோளா
ண்மைகளையும் ஆதியோடந்தமாகத் தெரிந்தநீயாகையால்
இந்த இருதிறவர்களுமெதிர்த்துயுத்தஞ்செய்தால் எவர்க
ள்வெல்லுவார்கள் எவர்கள் தோற்றுயிறப்பார்க
ள். இதையான் தெரிந்துக்கொள்ளும் படியாக உள்ளபடி
சொல்லென்று திரிதராட்டிரன் கேட்கச் சஞ்சயன்சொ
ல்லுகின்றான். அரசனே கேளும் காலக்கியானந் தெரி
யாத மானிடனாகையால் இதையறிந்து சொல்லுந் திற
ம் எனக்கில்லை. தேவரீர் தெரிந்துக்கொள்ள வேண்டுமா
கில் அளவற்ற புகழ்பெற்ற மூலகாரணனாகியும் மூக்கால
மு முணர்ந்த தவச்சிரேஷ்டனாகியும். இறப்பும் பிறப்பும
ற்ற இறையாகியும், வேதங்களைப் பெற்ற விமலனாகியும்;
விளங்காநின்ற ஸ்ரீ வேதவியாசரை தாமச மில்லாமல் வந்
தித்துச் சிந்திப்பாயாகில் அவர். சிறந்துவந்து உனக்குத்
தெரிவிப்பாரென்று சஞ்சயன்சொல்ல, சரிதானென்றுட்
கொண்டு சஞ்சலமகற்றி அசைவற்ற தன்மையிலிருந்து
வருந்தி நினைத்தபோது மின்னார்ந்தபொன்போலும் புரி
யோடிய சடையும், பூமுடியும், புலித்தோலுடையும், அ
சைந்த நடையும், மிதியடியும், அழகிய குடையும், கரத்
திற்றடியும், முப்புரிநூலிலங்குமார்பும், விபூதி தாளிதமே
னியும் பிரகாசிக்க விண்ணைவிட்டிறங்கிய சூரியனைப்போ
ல்வந்து வேந்தனுக்கெதிரில் நின்ற; ஸ்ரீவேதவியாசரை,தி
ரிதராட்டிரன், காந்தாரி, துரியோதனன், சஞ்சயன்; இவ

ர்கள் நால்வரும்கண்டு எதிர்கொண்டோடி சாஷ்டாங்க தண்டனிட்டு அருக்கியபாத்திய ஆசமனீய அக்ஷதை சந்தனாதி தூபதீபங்களுங்கொடுத்து ஆசனத்திலெழுந்தருளச்செய்து கலக்கமுற்ற மனத்தினை யுடைய காந்தாரி நாயகன் கண்ணீர்சோரவிட்டு தானெண்ணிய காரியங்களைக்குறித்துக்கேட்கவும், பெருமையி லுயர்ந்த ஸ்ரீவேதவியாசர் கேட்டுச், கலீரென நகைத்து திரிதராட்டிரனைப் பார்த்து நாளை நடக்கப்போகிற சமரிலெதிர்க்கும் பிள்ளைகள் நூற்றைவரில்,இறப்பவர்களியார், இருப்பவர்களியார் என்றுகேட்டனை, இந்தக்கேள்விக்கு: விவேகத்திற் சிறந்த மேலானவர்கள், விளம்பிய, மொழியொன் றுண்டு அதென்னவென்றால், சத்திய தருமமுள்ளவிடத்தில் ஜயமுண்டாம், அசத்தியம் அதர்மமுள்ள விடத்தில் அபஜயமுண்டாமென்று பழமொழி யிருப்பதினால் நல்வினையைத் துணையாகக்கொண்டும், நல்வினைக்குத்தக்க நல்லொழுக்கங்களுக்குத் துணையாக யிருந்தும். நடத்திய நல்லோரெவர்களோ அவர்களுக்கு நலமும் பலமும் ஜயமும் புகழ்ச்சியுமுண்டாம். இதை விடுத்துத் தீவினையைத் துணையாகப்பெற்றும் தீவினைக்குத்தக்க தீயகுணங்களுக்குத்தானே துணைப்பட்டிருக்குந் தீயராகிய பேயர்களுக்குத் தீமையும் துயரும் இகழ்ச்சியும் அபஜயமும் எமபாசப்பந்தியாகிய நரகவேதனை முதலிய துன்பங்களுமுண்டாகும். மேலும்; உன்பிள்ளைகள் ஏழுசமுத்திரத்திற்கொப்பாகிய சேனாசயினியங்களைக் கொண்டு யுத்தஞ்செய்து வெற்றிபெறக்கருதி யுத்தபூமியில்வந்தாலும் இவர்கள்படையினிடத்தில் காலவவைரியென்னுந் திருமாலுக்கொப்பாகிய வீரர்களிருந்தாலும் தேவர்கள்மதித்து மகிழும்படியாகப்புகழ்ந்து யமதூதர் உயிருடன் விட்டுவிடு வார்களோ ஒருக்காலும்விடார்கள்-அரசனே, ஆனால், எமதுகர்த்தனாகிய கடவுளின் கருணைக்கண் ணெவர்களிடத்திற் றங்கியிருக்கின்றதோ அவர்களுடைய புயத்தில், சேற்கண்டையையொத்த கண்களையுடைய ஜயலட்சுமி சேர்ந்துவாழ்வாள் கிளைகள் தழைந்த சோலைக்கொப்பாகிய பந்து மித்ர புத்ர சம்பத்துக்களுடன் செல்வமோங்கிய திரிதராட்டிர மகாராஜனே இவைகளைச் செவ்வையா யோசிக்கக்கடவை யென்று ஸ்ரீவேதவியாசர் மேலுஞ் சொல்லுகின்றார் என்னரசேகேளும், அஷ்டாக்ஷரப்பொருளாகிய மாதவன் ஸ்ரீநாதன், ஹரி, வாசுதேவன், முகில்வண்ணன்,முரஹரி, ஜநார்த்தனன், பக்தபராதீனன், பக்தவற்சலன், பரமதயாளு பரமபுருஷோத்தமன் என்னுந் திருநாமங்களிற் பலநாமங்களைக்கொண்ட பகவானுடைய பாதபங்கயங்களை யுள்ளத்திற் கொள்ளும் பரமபாகவதர்கள் பெறுதற் கருமையாகியபேறு பிரமாண்ட பேரண்டங் களினு மேலாகியது-ஆதலால் இத்தன்மை வாய்ந்த பரம ரகசியத்தை நீங்கள் கைப்பற்றுமற் போனீர்கள் இதற்குத் திருஷ்டாந்திரம் பாண்டவர்கள் தங்களுடைய நாதனென்றும் தங்கள் மைத்துனனென்றும் பாண்டவர் சகாயனென்றும் ஆபத்தி லருள்புரியு மையனென்றும் திரிகரணசுத்தியாய்ச் சிந்தித்து அவர் நடந்து காட்டி நடத்தும் நன்னெறிப்பிரகாரம் நடந்து வருகின்றார்கள். சத்தியசவுச ஆசார சற்குணங்களிற் றழைந்த பாண்டுபுத்திரர் அதனால் உனது புத்திரர் வெற்றி பெறுவார்களென்று எவர்கள் சொல்லுவார்கள் வேந்தனே ! புல்லாங்குழலைப் பூரிக்குஞ் செம்பவளவாயன் கோபாலனாஞ் செய்தமாயன் சிந்திப்பவர்களுக்குச் சேயினிடத்திற்பொருந்திய தாயைப்பாற்கிலும் பரிவுள்ள நேயனானவனென்று துணிவுகொண்டு நீங்களும் நேசவிசுவாசத்துடன் அந்தக்கடவுளை நெஞ்சில் நினைப்பீர்களாகில் நினைத்தகாரியங்களெல்லாம் இனிமேற்கைகூடுமென்று வெகுவாகிய வசனங்களைப் பரிசுத்தமுள்ள ஸ்ரீ வேதவியாசர் சொல்லக் கேட்டிருந்த திரிதராட்டிரன், முனிசிரேஷ்டனுடைய கருத்தைத்தெரிந்துகொண்டு வணங்கி என்னிஷ்டதெய்வமே! இவ்வுலக வாழ்வென்னும் மாயைவலைக்குட் சிக்கியுழன்று வருந்தி மாய்ந்தவியும் பெருமோசத்தைக் கண்டிருந்தும் படுகுழியில்வந்து விழுமென்னைப் பாதுகாத்து யானுய்யும் பொருட்டு வேதவிதியாகிய தத்துவத்தை யெனக்கு விளம்பியருளிச்செய்யுமெய்யனே? இப்போதறிந்துக்கொண்டேன், போனதுபோக யின்னுண்முதற் கொண்டு மன்னுயிர்யாவையும் பெற்றளிக்கு மாதவனுடைய மலரடியை மனத்தினிறுத்தி அவனுக் கடிமையாகிய அரசுபுரிந்துவாழ்வேன், இதுவரையிலும், அறிவழிந்தே னென்று திரிதராட்டிரன் சொல்லித்துதிக்க இதைக்கேட் டிருந்த மாசுணக்கொடியோனாகிய மைந்தனென்னுந் துரியோதனன் சொல்லுகின்றான்.

விருத்தம்.

உலகையோரடி யளந்தமாலெனினு முண்டுமிழ்ந்தவரியெனினும், அலகையாருயிர்பறித்துளானெனினு மய்யனைநல்கினவனெனினும்; திலகம்யானவனை யெட்டுணைப்பொழுது சிந்தைசெய்துமதிகொள்கிலேன், பலகலன்புனைதனஞ்செயற்குறவு பற்றியுள்ளமுறு பான்மையால்.*

(எ-து.) இவ்வுலகங்களை யெல்லாம் ஓரடியிலளந்த திருமாலானாலும், மற்றெவ்வுலகங்களையும் விழுங்கிக்கக்கின அரியானாலும், பூதகியின் பெரும்பாலுடன் பிராணனையு முறிஞ்சிவிட்டவனானாலும், ஆத்மகோடிகளைச் சிருட்டித்த அயனைப்பெற்றவனானாலும், பலவித ஆபரணங்களினாற் பிரகாசிக்கும் அருச்சுனனுக்கு உறவாகி ஐவருள்ளத்திற் பொருந்தியிருக்குந் தன்மையினால் அவனுக்குத் திலகம்போன்ற யான், அந்தக்கிருஷ்ணனை எள்ளத்தனைப்போதும் என்சிந்தையால் வந்திக்க மாட்டேனென்று வரையறுத்துக் கூறியமைந்தன் வார்த்தையைக் கேட்ட மன்னவன் எதிரிலிருந்த மாமுனியை நோக்கி சுவாமி இவனென்னகாரணத்திற்கு உற்பத்தியானானோ எல்லாருயிரையும் போக்கவந்த ஏமனோ அல்லது; இவன் பிள்ளையோ, பெரும்பூதமோ என்குலகோத்திரத்தைக் கெடுக்க வந்த குறளியோ துதிக்கும்புகழை அழிக்கவந்த துடைகாலனோ யானறியேன்; இன்று, நான் சொல்லிய வார்த்தைக்கெல்லாம் எதிர்த்து மாறுபாடாக மறுத்துச் சொல்லுவதே யன்றி, இணங்கிவர இல்லையே ! இவனுக்குச் சாங்காலஞ் சமீபித்ததோ, கடவுளே ஆங்காலம் பொய்யுமெய்யாம்; போங்காலமெய்யும் பொய்யாமென்று, புவி

வில் வழங்கும் பழமொழியும் என்னளவி லுண்மையாச்சே, ஆயினும், அனித்தியமாகிய வுடலென்னும் பொய்யை மெய்யெனப் பேர் கூறியிருக்கும் விதம்மிகவும் நன்காயிருக்கின்றது. ஐயோ, மாயாமயக்கப் பிரபஞ்சவலையிலகப்பட்டு மனம்வருந்தி மடியவேண்டியதென்னையென்று திடங்கொண்டு மைந்தனை நோக்கி! குற்றமில்லாத எங்குலந் தழைக்கப்பிறந்த உத்தமனே. உன்சிந்தையி னினைத்த வண்ணம் நடக்கக் கடவையென்று பற்பலவிதமாகிய வெறுப்பு வார்த்தைகளை விளம்பி புத்திரபாசப் பெருப்பிணிப் பதனால் மறுபடியுஞ் சிரேஷ்ட புத்திரனுடைய மனத்தை எவ்விதத்திலாகிலும் ஸ்திரம்பெறத் திருத்திப் பெரும்புகழ்மாண்பில் நிலை நிறுத்த வேண்டும் என்னையனே என்று இறைவன் சொல்லக்கேட்ட ! வியாசபகவான் சொல்லுகின்றார் அரசனே; யேதுக்கு வருந்துகிறாய்காம்புபற்றிப்போனமனம் இனித்திரும்பாது இவன்சத்துருக்களுக்கெதிரில்யுத்தஞ்செய்து இவனுக்கேர்ப்படுத்தியிருக்குந்தலைவிதிப்பிரகாரம் இறங்குங்கொள்கையையுடையவனாகவேயிருக்கின்றான், இது உண்மைதானென்றுசொல்லி இன்றுமுதல் உலகரக்ஷகனாகிய உவணமூர்த்தியின் உபயதிருவடிகளை உள்ளத்திற்சிந்தித்துக்கொண்டு நீர்க்குமிழிபோன்ற உடலிருந்தாலும் இறக்குங்காலமெதிர்த்தாலும் விருதாவாகியபலசிந்தையையும் பற்பல எண்ணங்களையும்விடுத்து நன்னெறிநிலையில்நிற்கக்கடவையென்று வேதமுனிவன் விளம்பிய தண்ணறுந்தேன்கோப்பாகியமொழிகளைத் தன்செவியாரக்கேட்டுஇதுவே கடைப்பிடியென்றுமனங்கொண்டு விக்கியான வந்தனுதிக்கியானசூரியனையொத்தவியாசருடையபாதங்களில் வீழ்ந்து சுவாமி எந்தபாசபந்தநெறியைத்தொடர்ந்து எவர்கள்கெட்டழிந்தாலும் தேவரீருபதேசித்த திருமந்திரத்தைச்சிந்தனைசெய்துஎன்காலகதிக்குத்தகுந்தபிச்சையைப்பெறுகின்றேன் இறைவனே என்றுகரங்குவித்திறைஞ்சியதிரிதராட்டிரனுக்கு ஆசீர்வதித்துத்தக்ஷணம் வானத்திற்றோன்றியமின்னலைப்போல் மறைமுனிவன்மறைந்துபோயினார், வேதங்களைவிரித்துவிளம்பியருளிய ஸ்ரீவேதவியாசர் போனபின்பு, திக்குநோக்கித் தெண்டனிட்டுக்கொண்டுதனக்குச்சமீபத்தில் நிற்காநின்றபரிசுத்தமாகிய புத்திரனைநோக்கி உள்ளத்திலிருத்திநினைத்து உன்மனதுக்கு இஷ்டமானபடிசெய்யென்று விடைகொடுத்துவிட்டு சிவந்தசூரியனைப்போலொத்ததேகத்தையும்விவேகத்தையுமுடைய சஞ்சயனைவிடுத்துப்போகும்படி அனுப்பிவிட்டுபலமணிகளினாலும் நலம்பெறச்செய்தமாளிகையினிடத்திற்காந்தாரியுடன்ஆகுங்காரியங்களையோசித்துக்கொண்டிருந்தான் திரிதராட்டிரமகாராஜன் இப்பால் இருளில்லாமனத்தினையுடைய சஞ்சயன்பாண்டவர்களிடத்தில் துதுபோய்வந்து உரைத்தபலவாக்கியங்களையும் தெளிவில்லாததிரிதராட்டிரன் துரியோதனன்முதலாகியபேர்கள் சேர்ந்துக் கொண்டதைக்குறித்து திருத்தமாகப் பேசிக்கொண்டவிதங்களியாவையும் விளம்பினேம்பக்கமற்ற பாண்டவர்களிடத்தில் வார்த்தையாடி விடைபெற்றுக்கொண்டு சஞ்சயன்வந்தபின்பு அந்திவண்ணனுடைய அருளைக்கவசமாகக்கொண்டு அடல்புரியத்துணிந்து ஹரிபரந்தாமனுடைய அடியிணையைப்பணிந்துவாழும் ஐவர்கள் உபலாவியத்திலிருந்து உத்தமர்களுடன்கலந்து இனிநடத்தாநின்ற செய்கைகளுஞ் சொல்லுகின்றோம் கேளும், ஜெனமேஜெய மகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லினார்.

ஸ்ரீகிருஷ்ணபகவான்றூதுச்சருக்கம்.

தனியன் - விருத்தம்.

பேர்படைத்தவிஜயனுடன்மும்மைநெடும்பிறவியினும் பிரியானாகிச், சீர்படைத்த கேண்மையினாற் றேரூர்தற்கிசைத்தருளுஞ்செங்கண்மாலைப்,பார்படைத்தசுயோதனற்குப்படையெடேனமரிலெனப்பணித்தகோவைக், கார்படைத்தநிறத்தோனைக்கைதொழுவார் பிறவாழிக்கரைகண்டாரே........ .... ௧

(எ-து. சுவர்க்கமத்தியபாதலமாகிய மூவுலகத்திலும், விஜயபராக்கிரம சௌரியத்தினாற்புகழப் பேர்படைத்த பற்குணனுடனே, இரணியசங்காரஞ்செய்ய உக்கிரநரசிங்கமாயெழுந்தருளியபோது பிரகலாதனாகியும், இராவணவதைசெய்ய ஸ்ரீராமமூர்த்தியாயவதரித்தபோது விபீஷணனாகியும், பூபாரந்தீர்க்க ஸ்ரீகிருஷ்ணாவதாரஞ்செய்தபோது அருச்சுனனாகியும், இப்படிமூன்றவதாரத்தினும் பிரியாமற்பிறந்து சீர்படைத்தசிநேகிதத்தினால் அந்தப்பார்த்தனுக்குச்சாரதியாக இசைந்தருளிய, செந்தாமரைக்கண்களையுடையதிருமாலை கெடிஸ்தலாதிபதியாகிய துரியோதனன்வந்து படைத்துணைவேண்டியபோது இனிநடக்கப்போகிறபாரதயுத்தத்திலே ஆயுதங்கையிலெடுப்பதில்லையென்று உறுதியாகச்சொல்லி பலபத்திரர் முதலிய பேர்களைப்படைத்துணை கூட்டிவிடுத்ததேவராஜனை நீலமேகநிறத்தினையுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியை கனவிலும் மறவாது நனவினாற்றொழுதபேர்கள் பிறப்பெருங்கடலை நீந்திமுத்தியின் கரையைச்சார்ந்துசித்தியாகிய வரம்பெயினின்று நித்தியதத்துவமடைந்தவர்களென் றுரைக்கும் உத்தமர்களையும் ஸ்ரீவேதவியாசபகவானையுந்துதித்து, துரியோதனனிடத்திற்கு ஸ்ரீகிருஷ்ணதேவர்திருவடிபெயர்த்துத் தூதுசென்றவரலாற்றை ஒருவாற்றாற்சொல்லுகின்றேனென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

திருநாட்டிற்சிறந்த குருநாட்டிற்பிறந்த ஜெனமேஜெய மகாராஜனே கேளும், தம்பிமார்நால்வருடன் தருமபுத்திர மகாராஜன் பன்னிரண்டாண்டுவனவாசமும் ஓராண்டு அக்யாதவாசமுந்தொலைத்து உபலாவியமென்னும்பட்டணத்தில் வந்திருந்ததன்னுடைய ஸ்ரீதனபுரோகிதனாகிய உலூகமுனியை துரியோதனனிடத்திற்குத்தூதனுப்ப அந்தத்துரியோதனன்முதலாகிய திரிதராட்டிரனுங் கலந்து பேசிக்கொண்டு, தங்களுடையபுரோகிதனாகிய சஞ்சயமுனிவனையழைத்து ஓ ! சஞ்சயனே ! நீர் உபலாவியத்துக்குச்சென்றுபாண்டவர்களைக்கண்டு ஞானப்பிரசங்கம்பேசி தருமபுத்திராதியரை இன்னமும்வனவாசம்போகத்தக்கதாக இசைத்துவாருமென்றனுப்ப அந்தப்படியே சஞ்சயன் பாண்டவர்களிடத்தில்வந்து ஞானப்பிரசங்கஞ்செய்து ஆக்கை-இளமை-செல்வம்-இவைமுதலியதும் அனி

த்தியமாகையால்நித்தியமாகியதவமிழைத்துமுத்திபெறுவதே உறுதியாகிய உத்தமமென்றுரைக்க அதைக்கேட்ட வீமசேனன்மெத்தவுங்கோபித்து சத்துருசங்காரஞ்செய்து நாங்கள்கூறிய பிரதிக்கினையைமுடிப்பதேதவமென்று பேசியனுப்ப இவ்வார்த்தையைக்கேட்டுசஞ்சயமுனிதிரும்பி அஸ்தினபுரம்போனபிற்பாடு சாமதானபேத தண்டமென்னுஞ்சதுர்விதவுபாயம் (இவைகளின்விபரமாவது, சமாதானத்தாற்காரியங்களைக்கொள்வது சாமம், பொருள்முதலியவற்றைக் கொடுத்து காரியவனுகூலம் பண்ணிக்கொள்வது தானம், வேறொருவராற் பகையைவிளைத்துத்தாம்ஸ்நேகமாயிருந்து காரியசித்திசெய்துகொள்வது பேதம், நால்வகைச்சேனைக்கொண்டெதிர்த்துயுத்தஞ்செய்துவெற்றியுடன்வேண்டியவைகளைப்பெறுவதுதண்டம் இந்நான்கும் இராஜர்களுக்குரிய உபாயமாகையால் இவ்விதமாகியதந்திரயுக்திபுத்திமுதலாகிய நீதிமுறைமைகளில் வழுவாமற்பேசி சத்துருக்களைவசப்படுத்தி ஆகவேண்டியகாரியங்களைகாலத்துக்கேதுவாயமைத்துக்கொண்டு வரத்தக்கவல்லவர்கோபாலகிருஷ்ணரேயன்றி வேறொருவரில்லையென்றுணர்ந்து பரிமளம்பொருந்தி பரிசுத்தமாகிய குளிர்ச்சிகொண்ட துளவமாலையனை துரியோதனனிடத்திற்குத் தூதுவிடுவதற்கெண்ணிச்சொல்லத்தொடங்கினர்.

அவ்வாறெண்ணில், அருவிகளிறைந்தசுனைகள்தோறும் செறிந்தோங்கிய செந்தினைவளர்க்க திண்ணியமலைகளிலிருந்துவழிந்த தேன்களினால்நிரம்பிய கயங்கள் குளங்கள் கழனிகள் கலந்து சுகந்தமிகுந்த மலர்கணிறைந்து விளைந்த பலகலவளமுமிருந்த குருநாட்டுக்கதிபதியாகிய தருமபுத்திரமகாராஜன் கிருஷ்ணமூர்த்தியைநோக்கி தீனதயாளுவாய் ஜெகரக்ஷகராய்த்தோன்றிய தேவேகேளும், செவ்வையாகியகாரியங்களைச்சொல்லவந்தவரைப்போல் வந்து நீங்காகியவார்த்தையைச்சொல்லிய சஞ்சயமுனிக்கு நாம்செப்பியவசனமும் உலூகமுனியை முன்னுதாகத்தூதுவிடுத்த நமக்குதுரியோதனன் அப்போது பேசிய வெப்பியவசனமும் தேவரீருடையதிருவுளம் அறியுமே சுவாமி அப்படியிருக்க கொடியவிஷத்தைவெகுவாகக்குடித்து அந்தவிஷந்தலைக்கேறி உடம்புமறந்து உறங்கிக்கிடக்கும் ஒருவனுக்குசவுக்கியஞ்செய்யநினைத்துநல்லமருந்தும்மந்திரமும் கடுகவிசாரித்துக்கொடுத்து நன்மைசெய்யநினைக்காமல் சுற்றிலுமிருந்துவருந்தி வாட்டமுற்றுமயங்கித்துன்பப்பட்டுக்கொண்டிராநின்ற அவனுடைய அண்ணன்தம்பிமுதலிய பந்துக்களைப்போல் தேவரீரும் விஷமுண்டவர்களைப்போலிருக்கும் எங்களுக்குவேண்டியபக்குவங்களைச்செய்துஇரக்ஷிக்காமல் ஏனோதானோவென்று சும்மாயிருப்பதுஞாயமோ ! ஐயனே ! ஏதாகிலும் ஒருயுக்திபுத்தியை எங்களுக்குப்போதித்தருளவேண்டும் ஸர்வஜீவராசிகளின்மனத்திலுமிருந்து விளையாடுஞ்சோதியே,

குருக்ஷேத்திரபூமியில் அரிதாகியயுத்தஞ்செய்ய துரியோதனாதியர் சம்மதிப்படுவார்களாகில் அது நமக்குமிகவுநல்லது அதைவிட்டு நாம்யுத்தஞ்செய்வதற்குத் தயாராயிருக்கின்றோமென்று முந்திச்சொல்லியனுப்பிவைப்பது முறைமையல்லவே ஆகையால்தேவரீர், பிரயாசையெடுத்துக்கொண்டு திருவடிவருந்த அஸ்தினபுரத்திற்குப்போய்த் திரிதராட்டிரன் துரியோதனன் முதலியபேர்களைக்கண்டுவார்த்தையாடி அவர்களுடையகடைப்பிடிக்கருத்தையறிந்து சமப்படுத்திவரவேண்டியகடமை உம்முடையதென்று கிருபாவெள்ளம்பெருகும்படியாகத் தருமராஜன்சொல்லிய வார்த்தையைக்கேட்டு வாணசூரனுடையவாகுளையும் புஜகிரி இரண்டாயிரத்தையும் அழித்த அரிபரந்தாமனானவர் வீமசேனன், அருச்சுனன், நகுல சகாதேவனென்னும் நால்வரையுங்கூடவைத்துக்கொண்டு சாத்தகிமுதலியபேர்களுஞ் சுற்றிலுமிருக்க யுத்தகளத்தில்வெற்றிபெறநாட்டும் முரசக்கொடியினை யுடைய தருமராஜனே நாளையொருகாலத்தில் நீங்களென்னை விஞாகநிந்திக்கவேண்டாம் அவரவர்களுடையமநோநிச்சயத்தை வெளியிட்டுச்சொல்லுங்கள் நான்சொல்லுவதையுங்கேளுங்கள் அதென்னவெனில்வயல்களிளிடத்தில்தாமரைமலர்களுடன்வராலினங்கள் மருவிவிளையாடும் வளப்பங்கொண்ட குருநாட்டில் பாகப்பிரகாரம் பாதிவாங்கிக்கொண்டு அரசாட்சிசெய்துவாழ்ந்திருக்கநினைவோ அல்லதுபழையபடியே துன்பமுடையவர்களாய்த் தனமுங்கனமும்விடுத்து அனமுமனமும்வெறுத்து வனமேகியாக அடுத்து இன்னமும்வாடித்திரியநினைவோ அஃதன்றிப்பகைமேற்கொண்டு யுத்தஞ்செய்து பிழைப்பாரியாரோ சாவாரியாரோ வென்று சந்தேகப்படும் போர்முகத்தில் கோபித்தெழுந்து சபையிற்சொல்லிய பிரதிக்கினையின்படியே துரியோதனாதியரைக்கொன்று ஜெயம்பெற நினைவோ ஐவராகிய உங்களொவ்வொருவருக்கு மிருக்கின்ற எண்ணமென்னவென்று திருமால்கேட்க, அப்போது தருமசொரூபியாகிய தருமராஜன் சொல்லுகின்றார் நந்தகோபாலன்களிக்கும் நந்தனனாகியநாதனேகேளும், வைராக்கியமென்னுங் கொடூரமாகிய நெருப்பை வாசாமஹோசாமாகவளர்த்து விடுவோமாகில் தனக்குத்தானே இழைந்துபற்றிக்கொண்டெரிந்து சுற்றிக்கொண்டிருக்கும் மூங்கிற்காடெல்லாம் அழிந்துபோகுந் தன்மையைப்போன்ற நாங்களிருதிறவரும் குற்றம்பொருந்திய யுத்தகளத்தில் ஒரோதாமாய்மாண்டுபோவோம் ஆண்டவனே ? (வாழையாடியும் இலைக்குச்சேதம் முள்ளாடியும் இலைக்குச்சேதம்.) என்னும் பழமொழிபோல் எங்களிருதிறத்தவருக்குக் கெடுதிவாராமல் செவ்வல்லியுந்தாமரையும் பரிமளிக்கின்ற வயல்கள்சூழ்ந்த குருநாட்டிலே நாங்கள் நூற்றைந்துபேரும் அந்தமலர்களைப்போல் ஒருமித்துக் கலந்துவாழும்படியாக எங்களுயிர்க்குயிராகிய தேவரீர் தூதுபோய் க்ஷாத்திரமின்றித் தாட்சியில்லாதக்ஷேத்திரஞ்சேர்ந்து வாழும்படியாய் பொருந்தச் செய்யவேண்டிய கடமை உம்முதென்று தருமராஜன் சொல்ல ? தாயென்றுவந்த பூதகியுயிரைக்கொன்ற ஜனார்த்தனன் சொல்லுகின்றார் உத்தலகாளும் மைத்துனரேகேளும் பூர்வம் சபாமண்டபத்தில் சூதாடித்தோற்ற பிற்பாடு புண்ணியத்தைப்பொருளாகவைத்து மறுபடியுஞ்சொக்கட்டாடி திரௌபதையும் நீங்களைவருஞ் சுவாமிதயையினால் மீண்டபோதுஅச்சபையிலிருந்தஅரசர்களுக்கும்பெரியோர

ர்களுக்கும்எதிராக உங்களைப்பார்த்துகலிசொனகைத்து
பன்னிரண்டுவருடம்வனவாசமும் ஒருவருடம் அக்கியா
தவாசமும்செய்து வருவீர்களாகில உங்களுடையபாகத்
தைக்கொடுத்து விடுகிறேனென்று விதுரனையும் துரோ
ணாச்சாரியரையுங்கொண்டு அப்போது சொல்லிவைத்த
துரியோதனன் இப்போது சொன்னசொற் றவறிப்போ
வானாகில் அவனைப்போர்முகத்தில்மாய்த்து உங்கள்சொ
ந்தமாகியபூமியை நீங்கள் பட்டங்கட்டிக்கொண்டாள்வத
ற்கு யாதொருதடையுமில்லையே என்று ஸ்ரீகிருஷ்ணமூர்
த்தியானவர்சொல்ல அதைக்கேட்டு தருமராஜன் சொ
ல்லுகின்றார். காசாம்பு வண்ணமுள்ள கண்ணனே ?
ஆசாரியனையும், சுற்றத்தாரையும், குருகுலத்திற் குரி
ய அண்ணன் தம்பிகளையும், பாட்டன், மாமன் மித்திரர்
முதலாகிய புத்திரர் களையும் நேரில் நின்று போர்பு
ரிந்து கொன்று - வென்று, கடலாடையை யணிந்த பூ
மியைப்பிணந்தின்ற பூச்சிபோல் தனியாக யிருந்து அர
சாட்சி செய்வதைப் பார்க்கிலும், சபடவஞ்சகம் கலந்த
மனமுடைய என் பெரிய தந்தையார் சஞ்சய னிடத்திற்
சொல்லிய சஞ்சலமான சொற்படியே, வனவாசஞ்செய்
து காய்-கனி-கிழங்கு-சருகுகளைப் புசித்து இரவும்பகலு
ம் காலங்கழிப்பது மிகவும் நன்றென்று தருமபூபதிசொ
ல்ல ! இந்தவார்த்தையைக்கேட்ட; வேதவித்தாகிய விம
லன் சொல்லுகின்றார். மெய்யே மெய்யாகக் கொண்டு
வையகங்காக்கு மையனே கேளும், பாபமாகிய யுத்தமெ
ன்றுவிடுத்து, பலம்பொருந்திய தம்பிமார்க ளுடன் வன
த்தையடுத்து வாசஞ்செய்யப் போவீராகில் தந்தையுரை
த்த வார்த்தையைத்தப்பாமல் போனார்களென்று சொல்
வார்கள். தாயாதிகளுடன் யுத்தஞ்செய்து சபதமுடித்து
க்கொள்ளத் தையிலாகாமல் பயந்தோடிப் போனார்களெ
ன்று பூமியிலுள்ளோ ரெல்லாரும் பழிப்பார்களே, ஏசு
வார்களே, அதுபோக நீங்கள்சொல்லிய சபதமும் பொ
ய்த்துப்போமே, பாபமும்வருமே, இதுவோ நீதி நிறை
மதிகொண்ட இறையே ? உன்யோசனை மிகவும் நன்றா
யிருக்கின்றதென்று நெடியோனுரைக்க, அதற்கு தரும
ராஜன் மறுமொழிசொல்லுகின்றார். சேனுலகோர் துதி
க்கும் வேணுகோபாலத் தெய்வமே, தேவரீர் ? எங்கள்
நிமித்தமாக துரியோதனனிடத்திற் றூதுசென்று அவ
னிடத்திற் எங்கள் கருத்தையுங் காட்டிப்பேசினால் மகா
நகங்களை யூதி வண்டுகள்பாடும் சோலைகள்சூழ்ந்த நாடும்
எங்கள் பாகமுங் கொடுப்பான், அப்படிக்குத் தேவரீர்
போய்ப்பேசியுங் கொடாமற் போவானாகில் அதற்குமே
ல் வெற்றிச்சங்கும், வலம்புரிச்சங்கும், தவளைச்சங்கும்,
ஜயம்பெறுசங்கும், எங்குமுழங்க விரகாளமும் வெற்றி
முரசும் மொய்க்கும்படியாக, நெடியகொடிய தடியினையு
டைய யமதூதர் மனங்களிக்க யுத்தஞ்செய்தானாலும் தா
யாதிபக்ஷத்தி லுள்ள பூமியைப் பெற்றுக் கொள்ளலாம்
அப்போது நமக்கு அபகீர்த்தியும் பழிப்பு மில்லையென்
றுரைத்து, மேலுஞ் சொல்லுகின்றார். தருமராஜன் து
ஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானே
கேட்டருளும்வெற்றிமுதலாகிய சம்பிரமத்திற்குமுந்திநா
ட்டிய சற்பக்கொடியினையுடைய துரியோதனமாராஜனு
ளும்அஸ்தினாபுரத்துக்குத் தேவரீ ரெழுந்தருளிச்சென்று
அவனைக்கண்டுபெள்ளர்களுடையமுத்தங்களிற்சங்கினங்க
ளுருகின்ற சலவளம் பொருந்திய எங்களுக்குரிய நாட்
டைக்கேளும், அதைக் கொடுப்பதில்லை யென்று மறுப்
பானாகில் எங்களைந்துபேருக்கும், இந்திரப்பிரஸ்தம், எம
ப்பிரஸ்தம், அவந்தி, வாரணாபுரி, அஸ்தினாபுரி! என்று
ம் ஐந்தூருங்கேளும் அதுவுங் கொடானாகில் ஐந்துமனை
யாகிலுங் கொடுவென்று கேளும் அவையும் இல்லையெ
ன்றால், யுத்தத்துக்காவது வருகிறையா வென்று சம்மதி
த்துவாரும் சிந்தூரத்திலதமெழுகிய குவலயாபீடமென்
னும் யானையின் கொம்பைப் பிடுங்கி கம்சனைக்கொன் றவீ
ரம்பொருந்திய செந்தாமரைக் கண்ணனே யென்று மூ
த்தவராகிய தருமராஜன் இப்படியாகச் சொல்ல, வீமசே
னன் கேட்டு, முன்னங் குமுக்கொண்டிருக்கும் கோபம
னத்தினில் இன்னங் கோபாக்கினி குடிக்கொண்டு சொ
ரிய நாவினிடத்திலே குற்றமில்லாத சொற்கள் பகர,
சீக்கிரத்திலெழுந்துவந்து, ஸ்ரீகிருஷ்ணதேவனைப்பணிந்
து பூலோகமுழுதுந் திருநாபிக்கமலத்தாற் பிறக்கச் செ
ய்தவனே ? பொற்றாமரையிலுதித்த மகா லட்சுமியையு
ங் கௌஸ்துவாபரணத்தையும் பொருந்தவணிந்த தினி
ந்த வக்ஷஸ்தலனே, நம்பினபேர்களுக்கு நேரிடுந்துன்பத்
தை நீக்கிய இன்பவாரிதியே ! பழிபாவமில்லாத பரிசுத்
தகுணமுள்ள எங்களண்ணாவாகிய தருமபூபதி யானவர்
தன்மானம் பிறர்மானமென் றுணராமற் சொல்லு வதற்
கு நானென்னசெய்வேனென்று நடுநடுங்கி மறுபடியுஞ்
சொல்லுகின்றான், வீமசேனன் ! மதிமரபுதித்த அதிப
தியாகிய அண்ணா, மூன்றுலக்ஷத் தறுபத்தாறாயிரம்-பட்
டவர்த்தனரும், ஆறுலக்ஷத் தறுபத்தாறாயிரம்-மகுடவர்
த்தனரும், பதினெண்பூமி-மன்ன மண்டலீகரும், ஐம்ப
த்தாறு தேசத்து அரசவர்க்கமும் வீஷ்டுமர், துரோண
ச்சாரியர், கிருபாச்சாரியர், அசுபத்தாமர். கர்னன், சகு
னி, சல்லியன், அதிரதர், சமரதர், அர்த்தரதர்; முதலிய
சமஸ்தமானபேரும் நிறைந்திருந்த இராஜசபையில் விரி
த்த கூந்தலையும் பசியவளையலையு முடைய திரௌபதியை
அபிமானபங்கம் பண்ணுவித்தநாளில்; அந்தப்பெண்ணா
னவள் மெத்தவும் நாணமடைந்து திக்கில்லாப் பாவியா
னேனே தெய்வமேயென்று தஞ்சமில்லாதவர்களைப்போ
ல முறையிட்டபோது சரீரந்துடித் தெழுந்த யெங்களைப
தருதீர்கள் கோபியாதீர்கள். (ஆக்கப் பொறுத்தபசி ஆற
மட்டும்பொறுநீரோ) என்று சொல்லியடக்கி குருகுலத்
துக்கும் நமக்கும் பூலோகமட்டுந் தீராப் பெரும்பழியையு
உண்டாக்கி வைத்தீர்; அதுவுமல்லாமல், கள்ளக் கவறு
கொண்டு சூதாடிக்கெலித்து, தீப்படுகின்ற காட்டில் நம்
மை யோட்டிவிட அதற்குஞ் சம்மதித்துப் போவோமெ
ன்றீர். அப்படியே போய்த்திரிந்து பதின்மூன்றுவருடங்
கழித்துப் பிழைத்துவந்து இன்னமும் பகையைமுடிக்க
மனமில்லாதவராய்த் தூதனுப்பிப்பார்க்கவேணுமென்று
இளைக்கின்றீர் ஆதலாலே-துரியோதனன் செய்த-கொடு
மையைப்பார்க்கிலும் - உம்முடைய - கிருபைக்குமிகவு

ம் - பயந்தேன் - தருமபுத்திரரே - யென்று - பின்னுஞ் சொல்லுவான் - வீமசேனன் - வைதிக - சாந்தஸ்தமே - உருவாகவளர்ந்த - அண்ணா, உம்மைப்போலொத்தவுண்மைப்பொருளைவனவாசம்போகச்சொன்ன கண்ணற்ற திரிதராட்டிரனுடையகாதலனாகும் துரியோதனன் ஆண்டுவருகின்ற பூலோகமுழுமையும் இன்றைக்கே ஒருகுடைக்கீழ் நீராளும் படியாகத் தருவேன், அதுவுமல்லாமல், முன்னேநமமுடைய ஆக்ஷியானநாட்டைக்கைக்கொண்டு நாம் வெறுத்துக்கொள்ளும்படியாக வனத்தில்விரட்டிவிட்ட அந்தத்துரியோதனனானவன்! ஐயோ அனியாயமே! என்னரசாக்ஷியைத் தருமராஜன் அடித்துப்பிடுங்கிக்கொண்டாரென்று தேவரீரைவெறுத்துக்கொள்ளாதபடிக்கு வீரசொர்க்கத்தை அவனாளும்படியாக இந்திரப்பதத்தைக் கொடுக்கின்றேன். அண்ணாவென்றுசொல்லி, ஸ்ரீகிருஷ்ணதேவரைநோக்கிச்சொல்லுகின்றான். ஓ - ஓ' சுவாமி ? எங்களண்ணாவியார் - துரியோதனனுடனே - யுத்தஞ்செய்து - பகையைமுடித்தார் - மேகம்போன்ற - கூந்தலையும் புலம்பு கின்ற சொல்லையு முடைய திரௌபதி முடித்துக் கொள்ளும் படியாகச் சாதித்து விட்டார், தம்பிமாராகிய நாங்கள் சபையிற்பேசிய சபதங்களைத் தடையில்லாமல் முடிப்பித்தார், தெய்வத்தன்மை பொருந்திய கங்கையடங்குஞ் சடாமகுடத்தை யுடைய உருத்திரதேவர்! கையிலே பிரமகபாலங்கொண்டு இரப்பதைத் தவிர்த்தருளிய ஈசனே ! உம்முடைய மனமறிய பூலோகத்திலே ! நிலை நின்றுயர்ந்த கீர்த்திமானென்னும் பேர்பிரசித்தமாக நிலைநாட்டி முடித்தார். இப்படிக்கு ! யாவர்முடிக்கப் போறார்கள். இவருடனே பிறந்தநான் கீர்த்திபெற்றது போதும் போதும்! இன்னம் எங்களையு முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் தருமநந்தனரென்று பின்னுஞ்சொல்லுகின்றான். சுவாமி? போர்க்கோலங் கொண்டு வருகிற பெரியயுத்தகளத்திலே புகுந்து துரியோதனனுடனே கூடியெதிர்க்கும் அரசர்களுடைய சரீரங்களெல்லாம் இரண்டு துண்டாகும்படிபோர்செய்து, பழையவுலகமுழுவதும் அரசாக்ஷிசெய்யத் துணியாமல், பொறுமைமேற்கொண்டு ! தருமத்தையுங் கிளைபுறவையும் பாராட்டி இன்னமுந்தூதுவிடுத்து துரியோதனனை வணங்கிப் பூமியையாசித்து, அவன்கொடுக்கப் பெற்றுக்கொண்டு சவுக்கியமாக காலபோசனந்தப்பாமல்சாப்பிட்டுக் கொண்டிருக்கவே யெண்ணுகின்றார், தருமபுத்திரமஹாராஜர் ஐயையோ! குருகுலம்பட்டபாட்டையுங் கெட்ட கேட்டையும் நானென்னசொல்லுவேனென்று விசனப்படும் வீமசேனனுடைய வார்த்தைகளைக்கேட்டு! பொறுமைநிறைந்த புண்ணியவானாகுந் தருமராஜன் பரிவாகச் சொல்லிய தம்பியைச் சற்றிருவென்றுமலர்போன்ற கையினாலமர்த்தி? குருகுலசிகாமணியாகிய தம்பி! குற்றம்பார்க்குமிடத்திலே - சுற்றமுண்டோ ? ஒருகுலத்திலே பிறந்த அண்ணன்தம்பிமாருடனே கூடிவாழும் வாழ்வினைப் போல்வேறொரு உறுதியுண்டோ ! பெரிதாகிய இப்பூமியைப்பெறுவது காரணமாகக்கருதி பகைத்தெதிர்ப்பது நம்மிருதிறவருக்கும் நஷ்டமல்லவோ ? (செத்தவன் வீட்டில் சுருஷ்டியார்க்கெனில்_உற்றார் பெற்றார்முதலாகிய புத்திரர்க்கன்றி மற்றெவர்க்கென்ன) என்பதுபோல் நமதுகோபம் நமக்கேதுன்பத்தை விளைக்கும் ஆகையால்? குருகுலத்திற்பிறந்த உரிமையுள்ள நமது பெரிய தந்தையின் பிள்ளைகளாகிய தம்பிமார்கள் அறியாமையினாலே சபையிற்சொன்ன வார்த்தைகள், நமக்கு இழிவையுண்டாக்குமோ நமக்குச்சம்பந்தமல்லாத அன்னியரால் சொல்லப்பட்டாலல்லவோபேரிழிவாகுந்தம்பி? அதை யோசிக்குமிடத்தில் கண்களிற்கைவிரல்பட்டால் அந்தக்கையைத்துணித்து விடலாமோ, எப்போதும்பொறுமை கடலினும்பெரிதென்னும் வாக்கியத்தை அனுசரித்து சண்டையைநிறுத்தி, சமாதானமாய்ப்போவதே தன்மை, ஆகையால் நம்மாற்கூடிய முயற்சி சந்தி சமாதான முதலாகிய வழிகளெல்லாம்பார்த்து எதிலும் ஒவ்விவராயற்போவாராகில் பின்னடி யுத்தத்தைக்குறித்து யோசிக்க வேண்டியது, அதைவிடுத்து, ஆரம்ப சூரத்துவமாய் முதலிற் றப்பட்டைக்காரன் பட்டானென் பதுபோல்? யுத்தமென்றுபேசுவது யுக்தமல்ல அப்பாவென்று கீர்த்தியைப் பூஷணமாகத் தரித்தருளிய தருமபுத்திர மகாராஜன் சொல்ல, அந்தமொழியினாலும் வீமசேனனுக்குக் கோபந்தணியாமல் மனஸ்தாபமேற்கொண்டு தருமராஜனைப்பார்த்து எங்கோவே, துரியோதன னிடத்திற்குத் தூதுவிடுத்து, அறியவேண்டுமென்று சத்தியமுள்ள தேவரீர் சித்தத்திற்கு இஷ்டமுண்டாகில் துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர்? தேவர்களும் முனிவர்களும் நான்கு வேதங்களும் இன்னமுந் தேடுகின்ற, திருவடிசிவப்ப நடந்து நமது திருநாடு பெறுவதற்காகத் தூதுசெல்லவேண்டாம் வாடுகின்ற திரௌபதியினுடைய பிரதிக்ஞையும் என்னுடைய பிரதிக்ஞையும் வழுவிப்போகாமல் நிறைவேறும்படியாக துரியோதனனிடத்தில் நான்போய் வருகிறேன் என்னைத்தூதாக அனுப்பிவையும் அண்ணாவென்று கோபச்சிரிப்பாக நகைத்து ஐயோ ? மலையைக்கண்ட தன்மையைப்போல் என்கரத்தில் வலுவேறியிருக்குந் தண்டாயுதத்தி னுடைய பிரபலங் கண்டும் அர்ச்சுனனுடைய காண்டீபத்தின் வலுமைகண்டும், நகுலசகா தேவருடைய வல்லமைகண்டும், நமக்குச் சகாயமாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி துணைப்பட்டிருக்கும் நிலைகண்டும், இந்தப்பாஞ்சாலி விரித்த அளகபாரங்கண்டும், ஒருமாத்திரைப் பொழுதில் துரியோதனாதியரைச் சர்வ சங்காரம்பண்ணி மகிட்சியடையாமல் பகையாளியின் குடையின் கீழொதுங்கி வாழும்படியாகவோ எண்ணியிருக்கின்றீர். ஆ! ஆ! அண்ணாவே என்று வெப்பமாகிய தோள்களும் மீசையுந்துடிக்க நுட்பமாகிய மனமுங் கண்ணுங்கறுக்க மேலோங்கி யெழுந்து பூமியிற்றாழ்ந்து விழுவிறெனச் சுழன்று நறநறெனப்பற்கடித்து மேகநடுங்கிப் பதுங்க முழங்கி கோபமெழுந் தற்றழுங்கக்கலக்கிக் கூகூவெனக் கூறிய வார்த்தையைக் கோபாலகிருஷ்ணதேவர் கிருபையுடன் பரிவுகூர்ந்துபார்த்து அப்பா வீமா! பூமியிலே முன்பிறந்ததமையன்மார் இராஜநீதிமுறைமைசொன்னால் அதைக்கேளாமல்பின்பிறந்த தம்பியானபேர் பிழைசொல்லிமறுப்பார்களோ

அந்தோ, பெரும்பிழை வந்ததே ! அடடா ! கடிய கோபத்தை க்ஷமிக்கக்கடவாயென்றுதிருவுளம்பற்றகொதிப்பாறி கொடூரகடுவிடம்பெற்ற நல்லபாம்பைப்போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். வீமராஜன் அந்த வேளையில் இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனெழுந்து வணங்கிநின்று ! இறந்தகாலம் - நிகழ்காலம் எதிர்காலமென்னும் முக்காலங்களையு முணர்ந்த ஸ்ரீகிருஷ்ணதேவருக்கும் தருமபுத்திரருக்குஞ் சொல்லினன் ஐயா ? அந்தக்காலத்திலே துரியோதனன் பண்ணிய அக்கிரமங் களையும் அவமதிப்பையும் பொறுத்த பொறுமைக ளெல்லாம் போதாமல் இன்னமும் பொறுக்கச் சொல்லி பொழுது விடியமட்டுந் தருமத்தையே சொல்லிக்கொண்டிருந்தால் இனி எந்தகாலத்தில்பகையைமுடித்து நாம்தலையெடுக்கப்போகிறது அப்போது தலையைவிரித்துக்கொண்ட திரௌபதையும் எப்போது கூந்தலை முடித்துக்கொள்ளவிருக்கின்றாள் தேவர்களானாலும்பழைய இராக்கதரானாலும் இன்னமும்வலிமைபெற்ற எவர்களானாலும் எதிர்ந்தவர்களுடைய காலிற்பற்றியபிராணனைதனக்கு இரையென்றுநினைத்திருப்பது என்கையிலிருக்கும் பாணமானது மும்மூர்த்திக்குமுதல்வனாகிய முகுந்தனே இத்தன்மையவாகிய என்னுடையதிறத்தையுந்திடத்தையுந் தெரிந்திருக்கும்தருமராஜனானவர் மேகந்தவழும் கமுக மரத்தில் வராலினம்பாயுங்கழனிகள்சூழ்ந்த குருநாட்டை என்ன நிமித்தியமாய்த் துரியோதனனிடத்தில் வேண்டிப்பெறுவது ஐயோ பாண்டவர்சகாயனும்விஜயனும் இறந்தார்களென்று எப்போதுகேட்கின்றீரோ அப்போதல்லவோ நாடிரந்துபெறவேண்டும் அண்ணாதருமநந்தனமேகவண்ணா கோபாலகிருஷ்ணா அக்கினியைப்போல் தீண்டப்படாதபதிவிரதமகத்துவமுடைய திரௌபதியை இராஜசபையிலேதுகிலுரியடாதம்பிதுச்சாதனாவென்று துரியோதனன்சொன்னபோது அவள்திக்கில்லாதவளைப்போல தியங்கிகண்கலங்கி ஜெகரக்ஷகா தீனபந்தோ, ஜெனார்த்தனா, தினதயாளுவே; நெடியவனே; நீலமேனியனே நிரந்தரனே, நின்மலனே, நித்தியானந்தனே; நேசமுற்றதாசருக்கு விசுவாசமந்தஹாசனே, நிர்மலசொரூபனே, நிராதாரமாகியவென்னை இரட்சிக்கக்கடவையென்றுநின்று தளர்ச்சியுற்றபோது நாம் ஐவருஞ்சீவனில்லாத உடலைப்போலே இராஜசபையிற்பார்த்துக்கொண்டிருந்த குற்றந்தீரவேண்டாமோ இன்னமும் இரந்து நாடுவேண்டுவது மன்னறமாமோ மண்ணுலகெல்லாம் வாழ்வுறவாழும் தண்ணளிசுரந்து தருமநிறைந்தபுண்ணியதேகப் புகழினையுடைய அண்ணா ! பொற்பிரகாசம்பொருந்திய சக்கிராயுதத்தையுடைய நமது ஸ்ரீகிருஷ்ணதேவர்தூதுபோய்சொல்லியவாக்கியங்களையெல்லாம் தேவாமிர்தத்தைப்போல் கலக்கித்துரியோதனனுடைய காதில்வார்த்தாலும் அவன்கேளான் அதேனெனில் அளர்நிலத்தில் முளைவீசிய விதைகளைவிதைத்தாலும் முளையாது ஒருவேளைதப்பு விதைமுளைத்தாலும் விளையாதுபடத்தையுடைய பாம்புக்குப்பால்வார்த்து வளர்த்தாலும் கொடுவிஷத்தைத் தருமேயல்லாமல்குணமாகிய அமிழ்தத்தைக்கொடாது அன்றியும் சக்கரையைமணல்போற்பரப்பிபாலேரியாய்ச்சி தேன்மாரிபொழிந்து வேப்பம்வித்திடினும் கசப்பல்லது இனிப்புறாது அதுபோல் துரியோதனனுடைய ஊழ்வினைவலியினால் கெடுமதிகண்ணுக்குத்தோற்றாது, கிருபாநிதியாகிய ஸ்ரீகிருஷ்ணசுவாமியையும், அவமதிப்பாய்ப்பேசுவானேயல்லது ஞாயமாகிய வுத்தரவுசொல்ல மாட்டான் ஆதலால்தூதனுப்பநினைப்பது அனியாயமென்றுசொல்லிய அர்ச்சுனனைசற்றுபொறுவென்று கையமைத்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்திநகுலனைப்பார்த்துநீயென்னசொல்லுகின்றாயென்று கேட்க, அன்புடன் நகுலனெழுந்து அரிவாசுதேவமூர்த்தியின் பாதங்களில்வணங்கி தருமபுத்திரருக்குச்சாஷ்டாங்கதண்டஞ்செய்து சூழினுமிழ்ந்த சமுத்திரம்வளைந்தபூமியை பெருமைபொருந்திய பாண்டவர்கள்பெறுவார்களென்றுசொல்லுவது பொய்யோ ஐயா ? இதுமெய்யே தருமபுத்திரருடைய ஒப்பற்ற சௌரியபராக்கிரமசாமர்த்தியமேசொல்லி வெல்லாதோ ஓ கிருஷ்ணசுவாமி தேவரீர்க்கொன்றுந்தெரியாதோதிருவாய்மலர்ந்தருளுந்தேவனேயென்றுஆவலாய்ப்பின்னுஞ்சொல்லுகின்றான் அண்ணா தீர்ப்பதற்கரியபகையானதுமேலிட்டிருக்ககோவினங்களைக்காத்தருளியகோபாலன் தூதுபோயுரைத்தாலும் குருநாட்டையும் அரசாட்சியையும் அந்த துரியோதனன்கொடுக்கமாட்டான் சிறியோன்சொல்லும் வாக்கியத்தைச்செவ்வையாயோசிக்கவேண்டியது தருமபூபதியே காற்றிலும் பனியிலும் வெய்யலிலும் மழையிலும் மலையிலும் அலைந்துதிரிந்துவருந்திவந்த பாண்டவர்கள் துரியோதனனிடத்தில் நாட்டையிரந்தார்களென்று சம்புத்தீபாகிய இந்தப்பூமியை ஆளும் அரசர்களெல்லாரும் ஒன்றுகூடிநம்மைநகைத்துக் கேலிசெய்யாதபடிக்கு துரியோதனனுடைய சேனைவலிமையையும் என்னுடையபுயவலிமையையும்தேவரீர்பார்க்கலாம்அண்ணாமுன்னம் அன்னம்போல் நடையையுடைய அரம்பாஸ்திரீயை அசுரர்கள் அபகரித்துக்கொண்டுபோக அப்போது அவள்பயந்து அலறி அபயமிட்டு அடைக்கலம்வேண்ட அதையறிந்து அந்தரவாசியாகிய இந்திரனுக்காகஅந்த அசுரருடன் அமர்புரிந்துஅரம்பையைமீட்டுஅபையமளித்தான் நமதுகுலத்திலுதித்த முப்பத்தெட்டாவது பாட்டனாகியபுரூரவசக்கரவர்த்தி ஆ ஆ“அண்ணா! அன்னியஸ்திரீகளுக்குவந்த அபிமானங்காத்தளித்த அரசர்குலத்திற்பிறந்த நாம்குட்டிச்சுவர்போலிருந்து காணும்படிக்கு துஷ்டனாகியதுச்சாதனன் திரௌபதியை எட்டிமயிர் பிடித்திழுத்துவந்து சபையில்விட்டு அபிமானபங்கஞ்செய்ய ஆக்யாபித்த அருளற்றபாவியாகிய அரவக்கொடியோனிடத்தில்யாசித்து அவன்கொடுக்குங்குடை நிழலி லிருந்து அங்கம்வளர்த்தால் நம்மையுலகம்நங்கஞ் சொல்லாதோ! திங்கள்குலத்திற்பிறந்ததேவே தேவரீர்தருமமும்பொறுமையும் தழைக்கும்படிக்குயோசிக்கின்றீர் அவர்களிடத்திலும் இந்ததருமநினைப்பிருக்குமாகில் இதுதருமந்தான். அப்படியில்லாதிருக்க நீ நினைப்பது அதர்மந்தான் அண்ணாவேகேட்டருளும் வனவாசம்பன்னிரண்டு வருடமும் அக்யாதவாசம் ஒருவருடமுஞ் சத்தியமொழிதப்பாமல்

கழித்துவந்தார்களே நமது சிற்றப்பார்பிள்ளைகளாகிய அண்ணன்தம்பிகளென்று கொஞ்சமேனுமிரக்கம்வையாமலும் நம்மைக்கூட்டிப்போய்தன்சொல்லின்படியே காயாதிபாரந்தையைசெய்யாமலும் உலூகமாமுனிபோன றாதுலல்மனம்வையாமலும்போவானாகில் தானேயறிந்துகொள்ளாத ஒருவனுக்குமற்றொருவர்போய்ச்சொன்னாலறிவனோ தனக்குத்தானே கனியாதபழந்தடிகொண்டடித்தாற் கனியுமோ கண்ணைக்காட்டவாராதவள் கையைப்பற்றியிழுக்கவருவாளோவென்றுபற்பலவித பழமொழிச்சொற்புகலுகின்ற நகுலராஜனை அற்புதகுணமுடைய அரிவாசுதேவன் கையமைத்தருளி சகாதேவனைப்பார்த்து சௌரியத்தையுடையவீமசேனன் சொன்னதும்வலிமையுடைய அர்ச்சுனன்சொன்னதும் மனோதிடங்கொண்ட நகுலன்சொன்னதுங் கேள்விப்பட்டோம்சொல்லுதற்கரிய அறிவையுங்கீர்த்தியையும் பராக்கிரமத்தையுமுடைய தோன்றலே உன்கருத்தையுஞ்சொல்லென்றுகேட்க, கரியதிருமேனியையுடையகண்ணனைப்பார்த்து மனமுருகும்படிசகாதேவன்சொல்லுகின்றான்.

அதிநாராயணனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவரே நீர்நினைத்தபடியேதாதுபோனாலென்னபோகாமல்நின்றுவிட்டாலென்ன துரியோதனன் பாண்டவர்களுக்குப்பூமிகொடுத்தாலென்ன கொடாவிட்டாலென்ன பூங்கொத்தையுடைய அளகபாரத்தை இந்தத்திரௌபதிமுடித்தாலென்ன, முடியாமல் விரித்தாலென்ன. நீரெண்ணியிருக்குங் காரியங்கடைசியில்முடியப்போகிறவிதம் அடியேனுக்குத்தெரியுமோ வாசனையைவீசுகின்றபசிய துளபமாலையையணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணா! அன்று பூதகியினுடைய விஷப்பாலாகிய முலைப்பாலையுண்டு சாபம்பெற்ற மருதமரத்தையுதைத்து உயர்ந்த ஜடாசூரன் விழும்படியாகவுந்தின்தையாகிய கன்றால் விளாங்கனியெறிந்துவிளையாடிய நந்தகோபாலன் அசோதைப்பிராட்டியார்மகிழ இயாதவர் மனைகடோறும் புகுந்துவளர்ந்தருளிய புருஷோத்தமனாகிய ஸ்ரீகபடநாடகா இங்கேநீர்செய்கின்றமாயம் உன்னாயம் ஒருவருக்குந்தெரியாது எனக்குத்தெரியும் ஆகையால் சத்தியமாக உம்முடையதிருவுளத்துக்குநினைப்பு எதுவோ அதுவே எனக்குக்கருத்தென்றான் தெய்வத்தையொத்தசகாதேவன் அந்தமொழியைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவர் புன்சிரிப்புகொண்டு வலிமையையும் வைரத்தையுங்கொண்டிருக்கும் தருமராஜன் முதலிய பேர்கள் சொன்ன அவ்விதஞ்சொல்லாமல் கொஞ்சம் உபாயமாகவும் பக்குவமாகவும் சொல்லழுத்தமாகவும்பேசினான். இந்தச்சகாதேவன் இன்னமும் இவடத்தில் இவனுடன் பேசினால் என்னென்ன ரகசியங்களை வெளிப்படையாக இழுத்துச்சொல்லுவானோ தெரியாது சாஸ்திரவிசாரணையுள்ளபுத்திமானானகையால் கலந்துபேசுவதற்குத்தனிமையிற்கொண்டுபோய் இவனது உள்ளக்கருத்தை அறியவேண்டுமென்றெண்ணி தருமன்முதல் நால்வரையும்நோக்கி தம்பியாகிய சகாதேவன் உண்டு உடுத்து விளையாடும் வயதுள்ள பாலனானகையால் மனவெறுப்பாகச் சொல்லுகின்றான் அவனைத்தனிமையிற்கொண்டுபோய்தெரியப்படுத்தி அழைத்துக்கொண்டுவருகிறேன்தருமநந்தன சும்மாயிருந்தவெனக்குச் சுமைகொண்டுவந்துவைத்தீர்கள் அப்பா கொஞ்சத்திலிருக்குதா குரங்குமிளகுநீர்குடிப்பது என்றுசொல்லியெழுந்து சகாதேவன்கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோய் நாகரத்தினத்தாலிழைக்கப்பட்டிருக்கிற ஒரு ஏகாந்தஸ்தானத்திலேபோய் இருவருமிருந்துசகாதேவனைப்பார்த்து ஒப்மைத்துனரே நாலுபேரைக்கேட்டதன்மைபோல் உம்மையுங்கேட்டால் அவர்களுடன்கலந்துகொண்டுசொல்லாமல் என்னையிழுத்து வெளியிற்போட எத்தனைநாளாக எண்ணிக்கொண்டிருந்தீர். விவேகநிறைந்தபுத்திமானே இப்பவும் உம்முடைய இஷ்டப்படிக்குப்பாரதயுத்தம் நடக்காமலிருப்பதற்கும் இயாவரும்பிழைப்பதற்கும் ஏதாகிலும் உபாய முண்டானாற் சொல்லும் நாமிருவருங்கலந்து யோசித்துக்கொண்டு அந்தப்படிநிறைவேற்றிவிடலாமென்று சூத்திரதாரிகேட்க சகாதேவனெழுந்து அவருடையபாதகமலங்களிற்பணிந்து ஸ்ரீகிருஷ்ணதேவரே! குள்ளநரியின் வாலைக்கொண்டோ சமுத்திரத்திலுள்ள ஆழம்பார்க்கப்போகிறீர் சுவாமி நீர்வேறு நான்வேறென்றெண்ணி என்னைப்புறம்பாக விட்டுப்பேசாதீர் தேவரீர் சர்வதேசத்து இராஜவர்க்கத்தையும் இராக்ஷதரையும் குருக்ஷேத்திரத்திலே கூட்டிச் சாம்பலாக்கிக்காற்றிற்றூற்றிவிட்டு பூமிபாரம் தீர்க்கும்படியாய்க்கருதி க்ஷீராப்தியைவிட்டுநீங்கிதேவகிதேவியார்கர்ப்பத்திலவதரித்திருக்கின்றீர் மேகமேனியையுடையவேதவித்தகரோபசுக்களைப்பரிபாலனஞ்செய்தருளியபாக்கியரோ ஸ்ரீ அரிகோவிந்தா இதுவேலையாகவந்திருக்கும், உம்மையல்லாமல் இந்த மகாபாரதத்தை நீக்கவல்லவர் வேறேயாரிருக்கின்றார்களென்று சகாதேவன் சொல்ல; பாண்டவர்சகாயன்கேட்டு நகைத்துநாமிருவருங்கலந்து பேசுவதென்றுநேமித்துக்கொண்டபிற்பாடுநீர் இன்னமுங்கபடமாய்பேசுவது ஞாயமன்று உமதுகருத்தைவெளிப்படுத்தும் அப்பால்நான்சொல்லுகிறேனென்று காரியவாதியாகிய கண்ணனருள்கொண்டுரைக்க கருணையையுடைய சகாதேவன் கண்ணீர்த்ததும்பநின்று. கருத்தையுன்னி ஓ காசாம்புவண்ணா! என்வாக்கினாலேயே வெளிப்படுத்தவேண்டுமென்னும் எண்ணமிருக்குமாகில் சொல்லுகிறேன்கேளுஞ் சுவாமி இப்போது இந்தப்பூமியைப் பட்டங்கட்டிக்கொண்டாளவேணுமென்று எண்ணங்கொண்ட துரியோதனராஜன் தருமராஜனாகிய இவர்களிருவரையும் நாட்டைவிடுத்து காட்டிற்போகவிரட்டி பஞ்சாசத்கோடி பூமண்டலத்தையும் கர்னனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து கர்னனைக்கொல்லுகிறேனென்று சபதங்கூறிப்பகைத்திருக்கின்ற அர்ச்சுனனைமுன்னேகொன்றுவிட்டுபிற்பாடுபந்துமித்திரர்பெரியோர்முதலியவெகுபேர்களுடையதலையைவாங்கத் தலையைவிரித்துக்கொண்டிருக்குந்திரௌபதியினுடையகறுத்தகூந்தலைக்களைந்ததுமொட்டையாக்கிகாலிலேவிலங்குபூட்டிவைத்து எனக்குநேரிலிருக்கும்உம்மையும் என்கையாற்பிடித்துபுயத்தோடுபுயநெருங்சக்கட்டுவனேயானால் இந்தமகாபாரதயுத்தம்விளையாமலிருக்கும்படி செய்யலாமென்றான். சகாதேவன்.

அந்தவார்த்தையை அறிவாகுதேவன்கேட்டுபுன்னகை
யுடையவராய் பாம்புக்குத்தெரியும் பாம்பின்கா லென்ப
துபோல் அறிந்துகொண்டு ஓ சகாதேவராஜனே நல்லயு
க்திசொன்னீர் சந்தோஷமானேன் ஆயினும்தருமராஜனை
யும் துரியோதனனையும் காட்டிலோட்டி கர்னனுக்கு நா
ட்டைப்பட்டங்கட்டி அர்ச்சுனனைவெட்டி திரௌபதை
யைமொட்டையடித்து விலங்குபூட்டிவைத்தால் பாரத
யுத்தம்வாராதென்று நீர்முக்கியமாகச்சொல்லிய இவைக
ளெல்லாம் ஒருவேளைமுடிந்தாலுமுடியும் அதுநிற்க எ
ன்னைக்கைப்பிடியாகப்பிடித்துக் கட்டிவிடவேண்டுமென்
றுசொன்னீரே அதுஎவ்விதம்என்னைஎப்படிகட்டுவீரென்
றுகமலக்கண்ணன்கேட்க சகாதேவன்சொல்லுகின்றான்.
சுவாமி, மலையினுபாரத்தை மலையறியாது மற்றவரறிந்
து சொல்வதுபோல் உம்முடைய பெருமை உமக்குத்
தெரியாது உத்தமராகிய புத்திமான்களறிவார்கள். உந்தி
பூத்தோனே உம்முடைய உருவத்தை உண்மையாகக்கா
ட்டினல் உன்னடியார்க்கு ளொருவரி லொருவனாகியநா
ன் கட்டுவேனென்று உறுதிச் சொன்னான் சகாதேவன்
அந்தமொழியை ஸ்ரீகிருஷ்ணதேவர் அன்பனுடைய பக்
திமனத்தை அறியும்படி நம்மைக்கட்டும் பிள்ளாயென்
று தம திச்சையினாலாகிய பதினாறுயிரம் வடிவுகொண்டு
அந்தரங்க மண்டபமுழுமையுஞ் சுதந்தரராக இருந்தார்,
அந்தக்காலத்தில் பரிசுத்த சித்தமுடைய சகாதேவனும்
அந்தரூபங்களுக்குள் ஆதியாகிய உருவத்தை உண்மை
ஞானத்தா லுணர்ந்து உலகமுழுமையுந் தாவியளந்த உ
பயதிருவடிகளையும் தன்கருத்தென்னுங் கயிற்றினாலே இ
றுக்கக்கட்டினன் ! அப்போது பதினாறுயிரம் வடிவிலே
ஆதிமூலமாகிய வடிவை ஆற்றலாலுணர்ந்து நீதான்தேவ
னென்று நிச்சயித்தபடி எல்லாவுருவும் ஒருருவாகப் பிர
த்தியக்ஷமாய் நின்றார், அவராரெனில் பூலோகத்தி லியா
வரும் போந்தித் தவம்புரிந்து தேடியுங்காணுத தாமரை
மலர்போன்ற பாதங்களையுடைய சங்கு சக்கிரக் கையனா
கிய வெண்ணெயன் சகாதேவனைப்பார்த்து பத்தியினாலும்
புத்தியினாலும், என்னை இன்னானென்றறிந்து கட்டியமை
ந்தனே - என்னுடைய பாதத்தை இனி - நீ - கட்டவிழ்த்
து விட்டுவிடக்கடவை மெத்த உறுதியாகிய பாசக்கட்
டென்று ஸ்ரீ கிருஷ்ணதேவர்சொல்ல சகாதேவன் சகஸ்
திர நாமங்களினாலும் ஸ்தவுத்தியஞ்செய்து சுவாமீ-வன்
மைபொருந்திய பாரதயுத்தத்திலே தேவரீர் திருவடிக்கு
அடைக்கலமாகவந்து சேர்ந்த எங்களைவரையும் உம்மு
டைய கடாக்ஷத்தினாலே ரக்ஷிணைசெய்யவேண்டும் நெடி
யமாவிஷ்ணுவே யென்று சொல்லி வணங்கி இரண்டு
செந்தாமரைமலர்போன்ற திருவடிகளில நமஸ்கரித்த ச
காதேவனுக்கு ஐவரையும் காக்கிறேனென்று நித்தியஞ்
சொல்லி கட்டு விடுவித்துக்கொண்டு இன்று நாமிரண்டு
பேரும் இவடத்திற்பேசி நடத்திய சங்கதிக ளொன்றும்
அசலாரியச் சொல்லாதேயென்று மேல்நடக்க வேண்
டிய காரியங்களையெல்லாங் கலந்து பேசிக்கொண்டு அந்
தச்சபையைவிட்டு நீங்கி-அறிவுடையோ ராகிய அவ்விர
ண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோ ரிருக்கிற சபைக்
குவரும்போது குற்றமற்ற குணத்தினையுடைய திரௌப
தையானவள் மற்ற நாலுபேரைப்போலே சகாதேவராஜ
ன் ஒப்புக்கொள்ள மாட்டார் நமக்காகவே பாடு பட்டுப்
பேசி அளகமுடிக்கும் விதத்தையோசித்து வருவாரென்
று மிகவு மனமகிழ்ந்து நெடிய அளகபாரஞ் சோர எதி
ரில் நின்ற பாஞ்சாலியின் கருத்தை யுணர்ந்த கண்ணன்-
அவள்முகத்தைப்பார்த்து ஓ! திரௌபதையே ? பாண்ட
வர்களில் இளையோனாகிய இந்த சகாதேவன் வேறுவித
மாகச்சொல்லுவா னென்கருமென் றெண்ணித் தனித்துப்
போயோசித்த காலத்தில் துரியோத னன்பால் தூது
போகச்செய்வதே உத்தம மென்று இவர்கள் கருத்தை
யொத்துச் சொன்னானென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் சொ
ல்லவே இந்தமொழியைக்கேட்ட பாஞ்சாலி யிடிகேட்ட
நாகம்போலேங்கி இளைச்சலிட் டோங்கிப் பெருமூச்சு
விட்டு தெய்வமே, காயாநிகளுடன் சண்டையிட்டு சபத
த்தைமுடிக்க மனமில்லாமல தூதுபோய்கி பெருமை
பொருந்திய பூமியைப்பெற்றுக்கொண்டு அவர்களுடன்
குலாவி வாழ்வதற்குத் தருமபுத்திரர் முதல் சகாதேவரு
க்கும் இஷ்டமிருக்குதென்று தேவரீர் சொல்லுவீராகில்
பூவைமறந்து புழுதியிற்புரளும் அளகபாரத்தை வாரிமு
டித்து என்வஞ்சினந் தீர்க்குங்கால மெதுவோ வென்று
மின்னலையொத்த திரௌபதையானவள் மாயவனுடைய
மலரடிமேல் வீழ்ந்து மண்ணிற்புரண்டு கண்ணீர் சோர
விட்டழுது இரண்ய கசிபனானவன் மிகவும் கோபங்கொ
ண்டு இராக்ஷதவயிரியை நாவினாற்கூவி என்குலத்தைநா
சம்பண்ணவந்த மோசக்காரனாகிய அடா பாலா-பிரகலா
தா ? இப்போது-நீ சொல்லுகின்ற பேரை யுடையவன்
எங்கேயிருப்பா னடாவென்று கேட்ட தந்தையை நோக்
கி ஐயா ? சங்காழியிற்றுயின்ற சங்கு சக்கிராதர னாகிய
எங்கோன் எங்குமிருப்பானென்று சொன்னவுடனே அ
னலிலுங் கொடிய கனல்போற்சீறி அடாபாவி ! இந்தத்
தூணிலிருப்பானாவென்று கேட்க. கலீரெனநகைத்து து
ரும்பிலுமிருப்பா னென்றுசொல்லதுரிதத்துடன்ஆங்கா
ரங்கொண்டு ஓங்காரமிட்டு அறையும்படியாகிய அந்தத்
தூணிலிருந்து உக்கிரநரசிங்க மூர்த்தியாயுதித்து இரணி
யகசிபனைச் சங்காரம்பண்ணி பிரகலாதனைச் சன்மான
ஞ்செய்தருளிய இறைவனே ! இதன்றியும் பதினாயிரம்வ
ருடம் முதலையினிடத்தி லகப்பட்டு வருந்தி ஆதிமூலமே
யென்று பெயரிட்டழைத்த மும்மதம் பொழியுங் கஜேந்
திரனுக்குச் சம்மதமாக நீலமலைபோலே நேரினின்று மு
தலையை அழித்து யானையைக்காத்தருளிய கஜேந்திரவர
தா ! கற்றையாகிய என் அளக பாரத்தைப்பிடித் திழுத்
துவந்து சபையில் நிறுத்தி கண்ணில்லான் பெற்ற துச்
சாதனன், நஞ்சைப்போன்ற பலவார்த்தைகளைக் கொஞ்
சமேனு மஞ்சாமற்பேசி அபிமான பங்கமாக வஸ்திரத்
தை யுரியும்போது; பஞ்சபாண்டவரும் நெஞ்சு பொருந்
திப் பார்த்திருந்தார்கள், நான் தாதுகலங்கி தஞ்சமென்ற
மும்போது வெற்றிபொருந்திய சக்கிராயுதத்தையுடைய
கோவிந்தா அன்றைக்கும் என்மானத்தை நீர் காப்பாற்றி
னீரல்லாமல் வேறே யாராவது காத்தவர்கள-ஐயனே இ

ன்றைக்கும் நீயே துணை மற்றென்றைக்கும் நீயே துணை என்று புலம்பிப் பின்னுஞ்சொல்லுகின்றாள்.

தேவேரிராஜசபையில் என்னையழைத்துநிறுத்தி என் குலகோத்திரத்துக்கும் பழுதுண்டாகும்படியாகிய குற்றத்தைச்செய்த சற்பக்கொடியோனிடத்தில் தூதுவிடுத்து ஐந்தூர்பெற்று சுத்தவீரர்களென்று பேர்வைத்துக்கொண்டு உயிர்வாழ்ந்திருக்க நினைப்பார்களேயானால் தீவினைப்பாவியாகிய நான் அன்றுவிரித்தகூந்தலை இனியென்று மூடிக்கப் போகிறேன், தீனர்களுடைய என்னத்தைமுடிக்கும் எமதுதெய்வமே? யென்றழுதாள்-திரௌபதையானவள் அவள்முகத்தைக்கண்டு அந்தச் சபையிலிருந்த யாவருங் கண்கலக்கப்பட்ட காலையில் சாத்தகியெழுந்து மூர்த்தன்யகோப முடையவராய் தருமராஜன் முதலியபேர்களை நோக்கி ஐயையோ யிதென்ன அனியாயம் மூவுலகமுமதிக்கும் வீமசேனன் கையில் தண்டாயுதமிருந்தும் திசைபத்தும் இசைபெற்ற விஜயன் கையில்காண்டீபமென்னும்வில்லிருந்தும் பூவும்வண்டும் பொருந்திய அளகம் புழுதியிற் புரளும்படியாய் திரௌபதை புலம்பிப் பரதவித்துக்கொண்டிருந்தும் இன்னமும் நீங்களெல்லோரும்பார்த்துக்கொண் டிருக்கின்றீர்களல்லவா சத்துருக்களிடத்திலே தாழ்ந்து வருந்தி அவன் கொடுக்கும் நாட்டைப்பெற்றுக்கொண்டு குறைவில்லாமற்புசித்து-உயிர்வளப்பதற்கு யோசிக்கின்ற உத்தமர்களே ? க்ஷத்திரிய தருமநெறியிதுதானோ சொல்லுங்களையா (இதன்றியும்,) பிரசண்டவேகமுடைய மேகத்தின் பிரளயகாலத்து இடியைப்போன்ற சர்வலோக ஜயசிம்மமாகிய ஜராசந்தனுடைய தண்டனைக்குப்பயந்து தன்னைக்காப்பதற்குக் காவலாகிய துவாரகையைக் கைக்கொண்டு சகலவளப்பமு முடைய வடமதுராபுரியை விட்டுவிட்டோடிய திணிந்த சாமர்த்தியமுடைய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின்சொற்புத்தியைக்கொண்டோ அல்லது பிரகாசம்பொருந்திய தருமபுத்திரருடைய சுயபுத்தியைக் கொண்டோ ? துரியோதனனாகியருடைய துற்குணமுள்ளதெல்லாம் பூர்வத்திற் றெரிந்திருந்தும் இன்னமும் அவனிடத்திற் றூது போக்கி நாடுகேட்கச்செய்வது, தெய்வமே இதென்னமதியோ-இரணியகருப்பனெழுதிய விதியோ அறியேன் சிறியேனென்று, சாத்தகியானவர் தன்னைமறந்து சொல்லவே-சின்னபின்னலாகச் சடைபட்டிருக்குந்தலை மயிரினையுடைய பாஞ்சாலி சபையில்விழுந்து சஞ்சலத்திலாழ்ந்து பிரலாபித்துப் புலம்பும்போது தருமபுத்திரர்முதலாகிய ஐவரையும் அருள்நிறைந்த தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திபார்த்து, கற்புக்குவித்தாகிய திரௌபதையை நோக்கி ! என் றங்கையாகிய மங்கையே? நீ கண்கலக்கப்படாதே காரியமொன்றும் முழுகிப்போகவில்லை குடலறுபட்ட நரி கூப்பிடுமோ மோமோ - குணவதியே ? இப்போதும் தருமராஜன் முதலிய பேர்களின் எண்ணத்தின்படி, நான் தூதுபோய்வருகிறேன், நீ-இதைக்குறித்து விசனப்படாதே, தடுக்காதே, ஓ ! திரௌபதையே, பாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தவுடனே-உன்னுடைய பின்னியகூந்தல் மயிரையும் உன்னைப் பேரவையில் அவமானஞ்செய்தபேர்களுயிரையும் நானேமுடிக்கிறேன்-இதல்லாமல் உன்கூந்தல் விரியும் போது அஸ்தினபுரியும், அரசருடைய சபையும், அறிந்ததேயன்றி மற்றியாவரும் அறியார்கள், இனிமேல் சத்துருக்களின் அந்தப்புரத்திலிருக்கும் ஸ்திரீகளுடைய கூந்தல் விரியப்போகிறத்தையும் அவர்கள்படும் அலங் கோலத்தையும் உலகமுள்ள வரையிலும் அறிந்துசொல்லி - நகைக்கப்போகிறத்தையும், நாளையே காணப்போறாய், சரிய கூந்தலையுடைய காரிகையே இன்னமுங்கேளும் சத்துருக்களுடைய தேகங்களென்னும் வயலிலே உழுதற்குரிய கருவியாகிய கொழுவாயுதம்போன்ற வாளாயுதத்தினால் உழுது வீரவாம்பு புதுக்கி - நிணச்சேறு திருத்தி இரத்த நீர் பாய்ச்சி பிராணவிதை விதைத்துவளர்ந்த அரசர்களுடைய குலமுதல் அறுத்து-கழுகு-பருந்து - காக்கைகளுக்கு களப்பிச்சை யீய்ந்து நமனுக்கு கீர்த்தியென்னும் மேல்வாரங்கொடுத்து, குடிவாரங்குவித்து ஐவருடைய துயரசாகரத்தையும், உன்னளகபாரத்தையும், துரியோதனனாகியாகிய பூமிபாரத்தையும்முடித்து விடுவதற்கு,உன்குமாரனாகிய அபிமன்னனொருவ னிருக்கின்றான் ! அம்மா சும்மாயிருவென்றுரைத்தபெண்தன்மையிற்சிறந்த திரௌபதியினுடைய கண்களிலிருந்து, மாரிபோற்பொழியுங் கண்வாரியைத் தம்முடைய கரங்களினால்துடைத்து தமது கண்களிலுங் கிருபைவெள்ளம் பெருகக்காட்டி திரௌபதையினுடையமனம் நம்பும்படியாகத் தேற்றி அந்தப்புரத்தினுக் கனுப்பிவிட்டு பிருதிவி அப்பு - தேயு-வாயு-ஆகாயமென்னும்பஞ்சபூதவடிவமாகியஸ்ரீகிருஷ்ணதேவர் தருமபூபதியைப்பார்த்து-ஓ-அரசரேறே கேளும்? வியாதிக்காரர் துறவிகள் ஒருவருக்கும் அடங்காததுஷ்டர்கள் கோபமுடையவர்கள் கற்றுணராமூடர்கள்-சிறுபிள்ளைகள்-நீதியுணராதவர்கள் பேதமையாகிய ஸ்திரீகள் இவர்களைச் சபையிற்கூட்டி வைத்துக்கொண்டு ஒரு ஆலோசனையுஞ் செய்யக்கூடாது; அப்படிக்குத் தருமவிதி யிருக்க இந்தத் திரௌபதையை சபையில்வைத்துக் கொண்டு ரகசியம்பேசினதினால் நாமேதோ சவுக்கியத்தைக் குறித்துப் பேசுகின்றோமென்று பெண்புத்தியினால் இவ்வளவுதூரம் விபரீதயுரத்தை விளைத்துவிட்டாளிந்தவுத்தமி தருமநந்தனா ? நான் அந்தவேளையில் அவ்வளவு உபசாரவார்த்தையாகச் சொல்லாவிட்டால் அந்த மனதுக்கு மெத்த வருத்தமுண்டாகும் ஆகையால், இத்தன்மையவாகிய உபசாரஞ் சொன்னேனென்று தரும ராஜனுக்கு மனவருத்தம் வாராமற் சாந்தி சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணசுவாமியி னுடைய வசன தந்திரங்களை நிறுத்தி தமக்குத்தாமே ஒப்பாகயிருக்குஞ் சுவாமீ ? காலதாமதம் பண்ணாமல் தேவரீர் தூதுபோகவேண்டுமென்று பாண்டவர்கள் வேண்ட, வணங்காமுடிபொறுத்த மன்னவனிடத்தில் தூதுபோகும்படியாய் சர்வாபரண வலங்கார சந்தனக்ஷதை தரித்துக்கொண்டு தன்னுடைய ஜனனமாகிய ரோகணி நக்ஷத்திரத்திற்கு தாராபலஞ் சந்திரபலமுள்ள ரேவதிநக்ஷத்திரத்தில் பிரயாண முகூர்த்தங் கொண்டு தானதருமங்கள்செய்து சமஸ்தமான பேர்களிடத்

திரும் விடைபெற்றுக் கொண்டு தெய்வவணக்கம்- ஆசாரிய வணக்கஞ்செய்து - நற்சகுன முதலியதும்பார்த்து தன்மனதின் வண்ணம் நடக்கும்படி யாகிய நல்லவேளையில். விராடர் பாஞ்சாலர் முதலிய பாண்டவர்கள் பின்றொடர்ந்து வழிகூட்டி விடும்படியாக மனோவேகத்திலும் வாயுவேகத்திலு மிஞ்சிய வேகப்புரவி பூட்டி மகாமேருக் கொப்பாகிய தேரின், மேலேறிக்கொண்டு சங்கினங் கொம்பு கெடிமுரசுமத்தள பேரிசல்லரி மல்லரி பூரி தாரைகளும் வெள்ளைக்குடைமுதலிய பற்பல வன்னக்குடைகளுங்கவிந்து நிழல் செய்துநெருங்க இருபக்கங்களிலுஞ் சாமரைவீச கணக்கிறந்த ரதகஜதுரகபதாதிகளும் பூமியையாளும் அரசர்களும்பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்மன்னர்மண்டலிகர் மந்திரிசாமந்தர்தந்திரதந்த்ரசேவகர் எண்டிசைப்பாலர்சூழ்கட்டியர்பட்டிவாண்கள்புகழ்வோர்வந்திப்போர்முதலியபேர்கள்முந்திக்கூடிக்கொண்டோட பரத நாட்டிய ஸ்திரீகள்பின்றிப்பாடிக் கொண்டாட ஆலவட்டம் தாலவட்டம்வீசிக்குஞ்சம் - மயிற்பீலிமேற்கட்டி-மகரதோரணங்கள்-குடை; கொடி,சவளக்காழி, பாலா; பல்லயம்; பிட்டி, யெறிபிட்டி,-வாள் வேல், முதலியவைகளெல்லாம்- வீதிசளில்- நெருங்கிவரும்படியாகஸ்ரீகிருஷ்ணதேவர், புறப்பட்டார்! அதுகாலையில்தம்பியாகியசாத்தகியும், இரதமேறி - சேனைநாயகராகப்புறப்பட்டுசேனைகளையெல்லாம் அணியணியாகநிறுத்தி-யானைத்தலைவர் சேனைத்தலைவர்-கொடித்தலைவர் - குடைத்தலைவர் - குதிரைத்தலைவர்-இரதத்தலைவர்-அணித்தலைவர் - பணித்தலைவர் - படைத்தலைவர் முடித்தலைவர் வாத்தியத்தலைவர்-குசோத்தியத்தலைவர்- சேவகததலைவர் புக்கிலத்தலைவர்-நவரத்தினப்பூஷணத்தலைவர்- பட்டுபட்டாவளி-பிதாம்பரமுதலிய வஸ்திரத்தலைவர்-அஸ்திரத்தலைவர்-சஸ்திரத்தலைவர்-சாஸ்திரத்தலைவர் - மல்யுத்தமுதலிய வாள்விரத்தலைவர் வில்யுத்தமுதலியவேல்விரத்தலைவர் இயாவருஞ்சூழ்ந்து வரிசையாகவரும்படி நடத்திக் கொண்டுவர கார்காலமேகம்போன்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னைவழிவிடும்படியாக வருகிறயாவரையும் பார்த்துநில்லுங்கள் நில்லுங்களென்றுசொல்லும்போது தருமராஜன் சுவாமியைநோக்கி "கருணைவாரிதியே எல்லாந் தெரிந்த உமக்கு நான் விஸ்தரித்துச்சொல்லவேண்டியதில்லை இலைக்கு மண்ணுங்கட்டி ஆதரவு மண்ணுங்கட்டிக்கு இலையாதரவு என்றுரைக்குந்தன்மையைப்போல் ஒன்றுக்கொன்று ஆதரவாகமுடித்துக்கொண்டு வரவேண்டியது ஆனால் காற்றுமழையுங் கலந்தடித்தால் காற்றினால் இலைபறந்துபோமே மழையினால்மண்ணுங்கட்டி கரைந்துபோமேயென்று தேவரீர் திருவாய்மலர்ந்தால் அப்பால் நாம்செய்யத்தக்கதென்ன ஒன்றுமில்லை எல்லாஞ்சிவன்செயலென்றுநடத்தவேண்டியதே நன்மை ஆகையால் தேவரீர் அஸ்தினபுரம்போய்ப்பேசுமிடத்தில் தருமதேவதையும் வேதப்பிராமணர்களும் நீதியையுடையவேந்தரும் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளும் படியாகப் பேசவேண்டியது எங்கள்பெரியதந்தை பாட்டனாகிய வீஷ்மர்-துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர் - அசுபத்தாமர் முதலிய இயாவருக்கும் எங்களுடையசாஷ்டாங்க நமஸ்காரஞ்சொல்லவேண்டியது. இரக்கமு நீதியுமுடைய சிறிய தந்தை விதுரமகாராஜனுக்கும் பணிந்ததாகச்சொல்லி தேவரீர் எங்கள்பேரில்வைத்திருக்குங்கடாக்ஷ விசேஷண்யத்தையுந்தெரிவித்து எங்கள்தாயாகியகுந்தியம்மனுக்கும் எங்களுடையசரணஞ்சொல்லி இதுவரையிலும் உன்பிள்ளைகள் உன்னுடையபுண்ணியவசத்தினால் பிழைத்திருக்கின்றார்களென்று தெரிவித்து பேதைமனது பேதிக்காம லிருக்கும்படிக்குதேவரீர் திருவாக்கினால் உறுதிவாக்கியமுஞ்சொல்லி பிற்பாடு சபையினிடத்தில் பேசவேண்டிய பிரகரணங்களெல்லாம்பேசி நன்மையான காரியங்களாக நடத்திக்கொண்டு சீக்கிரம் வரவேண்டியதென்று முரசக்கொடியினையுடையமுதல்வன்சொல்ல வீமசேனன்வணங்கி சுவாமீ ? எங்களையாமுதலிய வெல்லோர்க்கும் என்வந்தனங்கூறி எல்லோரையும் ஏககாலத்தில் ஒரேகூட்டமாய்ப்பார்க்க என்றைக்குக் கிடைக்குமென்று ஏக்கங்கொண்டு தூக்கமில்லாதிருக்கின்றான் ! வீமனென்றுவிளம்பும் மேகமேனியனே என்றான் ? உடனே அருச்சுனன்வணங்கி சுவாமீ தேவரீரைக்கண்டவுடனே பற்பலவுபசாரங்கள்செய்து எல்லாந் தேவரீராலேயே முடியவேண்டியதென்றும் உமது இஷ்டப்படி நாடு நகரங்களெல்லாங்கொடுத்து விடுகிறோமென்றுந் திரிதராஷ்டிர ராஜன்முதலிய சகலருஞ்சொல்லுவார்கள் அதுவாசாகயிங்கிரியமேயன்றி வேறல்ல தேவரீர் அதைநம்பவேண்டாம், டம்டிங்கென்றுதாக்ஷண்யமில்லாமல் ஆம் அல்லவென்று இரண்டொருவார்த்தைகேட்டுக்கொண்டு சீக்கிரமாய்வந்துவிடும் தீனதயாளுவே என்னவும் ! நகுலசகாதேவர்கள் நாட்பட்டிருக்கவேண்டாம்போனதும் வந்ததுமாயிருக்கவேண்டுமென்று புகலவும்; திரௌபதைவணங்கி மேகவண்ணமுடைய அண்ணா? நான் இதுவரையிலுங் காலங்கழித்தது பெரிதல்ல இப்போது நீர் போய்வருகிறவரையிலும் ஒரு பிர்ம சல்பமாய் நாளைக் கழித்துக் கொண்டிருப்பேனென்று நவிலவும், விராடன் பாஞ்சாலன்முதலியபேர்கள் ஓ ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எதுவந்தாலும் எதுபோனாலும் இவர்களுடைய சபதமாத்திரங் குறைவுபடாமல் நிறைவேறும்விதத்தை யோசிக்கவேண்டியதென்றுஉரைக்கவும்எல்லோருடையவார்த்தையுங்கேட்ட இறைவன் சந்தோஷமடைந்துநல்லதாகட்டும் உங்களிஷ்டப்படியேபேசிவருகிறேனென்றுயாவரையுநிறுத்திஸ்ரீகிருஷ்ணபகவான் தேரைநடத்தும்படி உத்தரவு செய்யவும், அவருக்குச்சமமாகியதம்பி சாத்தகியானவர் தேர்முதலிய சேனைகளைச்செல்லவிடுத்து தானும் அடுத்து முன்னும்பின்னும் பாராபரிபண்ணிக்கொண்டு சேனாநாயகராக நடக்கவும் தேவேந்திரன்முதலாகிய தேவர்கள்மாதவர்கள்பார்த்து மனங்களிக்கவும் ஆதிசேடன் படஞ்சுளிக்கவும் பூமிதேவிமகிழ்விற்குளித்து உடல்பூரித்து நமதுபொருட்டால் அஸ்தினபுரிக்குத் தூதுபோகின்றார் சுவாமியானவர் இனிமேல் நமதுபார நீங்குமென்றுபரிந்து உபசரிக்கவும் சகலவளமுங்கொண்ட உபலாவியத்தை விட்டு அஸ்தினபுரத்தைநோக்கி நாட்டைக்கடந்துக் காட்டில்

வரும்போது நாரதர் கண்ணுவர் சமதக்கினேயர் இந்தமூவரும் இவர்களுடன் அநேக உபரிஷிக்கூட்டங்கள் நெருங்கும்படியாகவந்து ஜகநாதன் தூதுபோவதைப்பார்த்தார்கள் அவர்களைக்கண்டவுடனே ஸ்ரீகிருஷ்ணதேவர் தேரைவிட் டிறங்கி அவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, வந்தகாரியமென்னவென்று கேட்க.

அந்தரிஷிகள்மூவரும்மனத்தினால்வணங்கிதேவரீருடைய விஸ்வசொரூப தரிசனஞ்செய்யவேண்டிய இச்சையுடையவர்களாயுந் தேவரகசியப்பிரகாரம் அஸ்தினபுரத்துக்குத்தூதுபோய் அரவக்கொடியோனைக்கண்டு அவனிடத்தில்பேசப்போகிற அதிசயங்களையும் கூடயிருந்துபார்க்கவேண்டுமென்றும் அவாக்கொண்டுவந்தோமென்று இணங்கிச்சொல்லிய பெரியோர்களைப்பார்த்து அஸ்தினபுரத்துக்கு வருவீர்களாகில் உங்களிச்சைகளியாவும் நிறைவேறுமென்று பரிபூரணமாக அருள்வாக்கியம்பகர்ந்த பரமபகநாதனைப் பணிந்துவாழ்த்தி தேவரீர் முன்னுதாகச்சொல்லும் நாங்கள்பின்றலே வருகின்றேமென்று விடைபெற்றுக்கொண்டு மூவரானயமுனிவர்களும்மறைந்துபோனார்கள் அவர்கள்சென்றபிற்பாடு ஸ்ரீகிருஷ்ணபகவான் தேரேறிக்கொண்டு கல்லுமலையுங்காடுமேடும் புல்லும்பூடும் புதருந்திடரும் பாலைநிலமும் பனிவரைச்சாரலும் காட்டெருமைப்பால் கட்டியாய்ப்பெருகி ஓட்டங்கொண்டே உறையுமிடங்களும் சிங்கமுதலிய புலிகளும், தங்கள் தங்கள் குட்டிகளுக்கு அந்தப்பாலை அருந்திவைக்குங் குணமும் மிருகங்கள் விளையாடும் வனமும் ஆகாயமளாவிய வாகாயமரங்களும் மலையருவிகளும வடியாத காலியாலும் நீர்வளம் நெல்வளம் நிறைந்தநிலங்களும்வாளைகள்பாய்ந்திடித்த வருத்தத்தினால் வாய்விட்டிடித்துமுழங்கிமழை நீர்பொழியுமேகமும் வாழைகமுகுகள்வான் கரும்புடனே தாழையிளநீர் சரஞ்சரமாகவும் வேர்ப்பலாக்கனியை வியன்மந்திபிற ஆருகத்தேன் பெருகிய மருதநிலமும்கடந்து இரண்டுநாள்வழியில் இருந்திளைப்பாறி மூன்றுநாள் குருநாட்டெல்லையில்வந்து அண்டகடாகத்தை அளாக்கப்புகுந்தகன்மைபோன்ற உயரத்தையுடைய கோபுரங்களும், நாகலோகம்வரையிலும் ஆழ்ந்து மேகலோகம்வரையிலு முயர்ந்து வளைந்திருக்கும்மதில்களும் அகழ்களுமுடைய பெரியசெல்வமோங்கிய அத்தினபுரியை ஸ்ரீகிருஷ்ணதேவர்கண்டு நடக்கும்போது அந்தமார்க்கத்திலே வரிசையாயிராநின்ற பசுமைபொருந்திய பாக்குமரங்களும் அதிற்பழுத்திருக்குங் குலைகளும் பச்சைக்குலைகளும் விரிந்தபாளைகளும் தழைத்துவிளங்கியது எப்படியிருந்ததென்றால் தாவியவேகத்தையுடைய குதிரைகட்டியதேரின்பேரில் ஸ்ரீகிருஷ்ணதேவர் அஸ்தினபுரத்துக்குத்தூதுவருகின்றாரென்று பவளச்சரங்களும் மரகத மணிகளின்பந்தியும் வெண்மையாகியமுத்துக்கோவைகளும் வரிசைவரிசையாகத்தூக்கிய அலங்காரமண்டபம், அமைத்ததைப்போலுமிருந்தன மேலும் பரிமளம்வீசும் அகில்விருக்ஷமும் சந்தனமரமும் பலாமரமும் மாமரமுஞ்சண்பகமரமும் பச்சிலைமரமும் நெருங்கிவிளங்கிக்கொண்டிருக்குஞ்சோலையில் தேவநாயகன்வந்திறங்கித் திருவடி பெயர்த்தருளியபோது எதிர்கொண்டுஉபசரிக்கவந்திருந்த பரதநாட்டிமாதர்களைப்போன்ற மயில்கள் கண்ணனுடைய திருமேனியைக் கார்காலமேகமென்றுகண்டு தோகையை விரித்துக் களிப்புடன் தொந்தோமென்று ஆடிக்கொண் டிருந்தன, வண்டுகள் பாடிக்கொண் டிருந்தன. இஃதன்றியும், சுவாமி வரும்வழியில் இருபக்கங்களிலும் நிறைந்த நீர்களை யுடைய அலர்ந்த செந்தாமரைப்பொய்கைகள் பொருந்தியதன்மை எப்படியிருந்தனவென்றால் அழகுக்கிடமாகிய அஸ்தினபுரியென்னும் கன்னிகையானவள் மகாலட்சுமிக்கு நாயகராகிய மகாவிஷ்ணுவருகின்றாரென்று பற்பலநிறமுள்ள சாதமும் மலர்ந்ததீபமும் சுன்னங்கலந்தமஞ்சள் நீருடன்ஆலத்தியெடுத்து அசைந்து நின்றதைப்போலு மிருந்தது அப்பால் தூதுவரும்படியாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் ஆதிவராகரூபியாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப்பெயர்த்தநாளில் அந்தவழியாகவந்தெழுந்த பாதாளகங்கை அஸ்தினபுரத்தின்பெரியமதிலை வளைந்துகொண்டதென்று சொல்லச்சிறந்து ஆழ்ந்துவாழ்ந்திருக்கும் அகழியும், அடியானது பாதலத்தினும் முடியானது மீதலத்தினும்பொருந்தி அளவிடக்கூடாததாகியும் ஒப்பு, உவமையில்லாமலுயர்ந்து வளர்ந்துவளைந்து நெடியகடல்சூழ்ந்த சக்ரவாளகிரியை இந்தமதிலுக்குப்படியாயமைத்திருக்கின்றதென்று சொல்லும்படியாய் பற்பலபொறிகளையுங்கொண்டு விளங்கிய அஸ்தினபுரத்தைச்சூழ்ந்த மதிலும் பகற்காலத்தில் சூரியவெப்பம் பூமியிற்படவொட்டாமல் நிழலைச்செய்தும் ஒற்றைச்சக்கரமுடைய சூரியன்தேரைநடாத்தும் அருணனுக்குச்சகாயமாக படபடாகாரசப்தத்தினால் சப்தமாவென்னுங் குதிரைகளைத்துருசாயோட்டி வெற்றிவீரப்பிரதாபத்தைத்திசைகளி னிடத்திற்காட்டி வேகங்கொண்ட காற்றின்விசையினால் ஆகாயகெங்கையில் நனைந்து அதினுடைய அலையைப்போலசைந்து மேகமண்டலத்திற்புகுந்து மின்னலைப்போல் ப்ரகாசித்து அழகிய மதில் முதலிய நகரங்களெல்லாம்நெருங்கி ஆடிக்கொண்டிருக்குங் கொடியாடைகளும் ஆதிசேடன்முதலாகியபேர்களுக்குமோகமாகிய நாகலோகமோ ஐந்தருவளர்ந்து இந்திரற்கமைந்த தெய்வலோகமோ? வளமெலாஞ்சுரந்தஅளகாபுரியோ? நித்தியமகிழ்ச்சியையுடையசத்தியலோகமோ? இந்த அஸ்தினபுரியென்றெண்ணும்படியாகிய பட்டணத்தில் மலைகளின் சிகரத்திலிருந்தெழுகின்ற கரிமேகங்களைப்போல் மாடமாளிகையிலிருந்தெழுகின்ற அகிற்புகை; சந்தனப்புகையின் வாசனைகளும், அரசர்களுடைய யானைகளும் சேனைகளும் எதிரெதிர்மயங்கி பின்னுமுன்னும்பக்கங்களிலுங் காலெடுத்துவைப்பதற் கிடமில்லாமல் நெருங்கியிடியுண்டுபோங்கோள் போங்கோளென்றுஞ் சொல்லினுடைய சத்தங்களைமிகுந்து புறம்போகமாட்டாமல் மயங்கிக்கொண்டிருக்கு மணிவீதிகளும் மலைபடுதிரவியம் மாணிக்கம் இயானைத்தந்தம் மிளகுகோஷ்டம், அகில் தக்கோலம் குங்குமமுதலாகியதும் காடுபடுதிரவியம் சௌரிமான்மயிர் மெழுக்காகிய மலைத்தேன் கூண்டுதேன் அரக்குமயிற்பீலி-கஸ்தூரி முதலியதும்நாடுபடுதிரவியம்நாணயவாரிகள்செந்நெல்-சிறுபயறுகரும்புவாழை

செவ்விளநீர்-முதலிய நம்கடல்படுதிரவியம்-பவளம்-முத்
து-சங்கு உப்பு-ஓக்கோலைமுதலாகிய தும்விதம்விதமாகக்
குவித்துவரிசையாக வமைத்திருக்கின்ற கடைவீதிகளும்
படைவீடுகளும் காட்டிலிருக்கும் பற்பலவிதமலைப்பா
ர்க்கினும் சிறந்துமிகுந்து கூட்டங்கொண்ட சுத்தவீரர்க
ளும் கடற்கரையின் வெள்ளைமணற்பரப்பைப் பார்க்கினு
ங்குவிந்து நிறைந்த வெள்ளையாகிய குதிரைப்பந்திகளும்இ
ராக்காலத்தில்தோன்றும் நக்ஷத்திரங்களிலும் அதிசமா
கியயானையினங்களும் மேகத்தின்றுளியினு மேற்பட்ட
தேர்களும் குற்றமில்லாத நான்குவேதமுமுணர்ந்த பிர
மஞ்ஞானமுடைய வேதவேதியர்களிருக்கும் அக்ராரவீதி
களும் மாசற்ற மணிகளாற்செய்த கிரீடம்பொருத்த மன்
னவரிருக்கும் அரண்மனைவீதிகளும் பழுதில்லாதபுத்திபு
த்திகளையுடைய மந்திரிமார்களிருக்குஞ் சுந்தரவீதிகளும்
நித்தியதவமாகிய சத்தியங்களும் தருமமுஞ்சிறந்த வைசி
யர்வாழ்வுபெறும் மாணிக்கவீதிகளும் மங்களசங்கமுழ
ங்கக் கலியாணஞ்செய்கின்ற கடிமணவாசலும்சிலம்போ
சை சப்திக்கநடனஞ்செய்கின்ற தேவமாதர்களின்தெரு
க்களும், வெற்றிமுரசு வீரமுரசு தியாகமுரசு கல்யாண
முரசு முழங்கிக்கொண்டிருக்கும் கொடிஸ்தலாதிபதியின்
ஆஸ்தானவாசலும், மத்தளம், டோல், முதலாகிய வாத்திய
முழங்கிக்கொண்டிருக்கும் பிர்மாலயதேவாலய வீதியும்
தெருவாசலில்நிற்க இடம்பெறாமல் அரசர்களுடைய கி
ரீடங்கள் ஒன்றோடொன்றுவண்டுதாக்கிஉராய்ந்துஉதிர்ந்த
அபரஞ்சிப்பொடிகளும் இரத்தினராசிகளிநிறைந்த ஆசார
வாசலின்படிகளும்மகம்மேருவைப்போலிருக்கும்கொலு
க்கூடமும்,சித்திரமேடைமாளிகைமாடமும் சூரியன்-வந்
துநிலைப்பாறுதலுக்குயேர்ப்பட்டதென்று சொல்லும்ப
டியாகவுயர்ந்தநான்குகோபுரவாயில்களும் சிங்காரத்தோ
ப்புகளும், பளிங்குமேடைகளும், நீராழி மண்டபங்களு
ம் வேதிகைகளும் பூரணகும்பங்களும்-மேற்கட்டிகளும்
பூப்பந்தல்களும்-மணிப்பந்தல்களும் - எப்போதுமாறாத
வைபவத்தைப் பெற்ற அஸ்தின புரத்தின் அலங்காரத்
தைக்கண்டு கண்களிக்க; ஸ்ரீ கிருஷ்ணசுவாமிமுதலிய-யா
வர்களுந் தெற்குக்கோபுரவாசலில் திவ்யமணங்குடிகொ
ண்டு குளிர்ச்சிபொருந்தி இருக்கும் செண்பகச்சோலையி
னிடத்திலெழுந்தருளி யிருந்தார்கள், அந்தச்சோலையிலு
ம், அஸ்தினபுரத்தின் சாலையிலுங், காலையிலும், மாலையி
லும், காவலாக இருந்த தூதுவர்கண்டு, வணங்கி நந்தி
யாவட்டமாலையணிந்த துரியோதனன் சபையிற்சென்று
பணிந்து, சுந்தரா சுதந்தரா-புரந்தரா-நிரந்தரா, பராக்கு,
மகிதலம்புரக்குந் திரிதராட்டிரன் மனைவிபாலுதித்த கண்
மணியே-பராக்கு, அகிலலோகத்தும்- ஆணைசெலுத்தி
அணிமுடிவணங்கா விண்மணியே-பராக்கு, பாதலஞ்சும
க்குஞ்-சேடனைத்துஜத்திற் சேர்த்திய திரமா மணியே ப
ராக்கு, திங்கள்குலத்தி லோங்கியவணியே துரியோதன
னென்றுஞ் சிந்தாமணியே பராக்கு; பராக்கு, ஐயா? அ
ன்று அநுமானைத் தூதாகவிடுத்து இலங்காபுரியை யெ
ரியூட்டிவித்தவர் - இன்று, பஞ்ச பாண்டவர்க்குத்தூ
தாக விசைந்து நமது செண்பகச்சோலையில் வந்திறங்கி
யிருக்கின்றாரென்று சொன்னவுடனே; பகை கொண்ட
பாவிகளாகிய பேர்களுக்கு யிடதுகண்-இடது தோள் து
டிக்கவும், புண்ணியராகிய பேர்களுக்கு வலதுகண்- வல
துதோள் துடிக்கவுமாகயிருந்தது! அந்தவேளையில் துரி
யோதனனெழுந்து திரிதராட்டிர மகாராஜனுடைய அர
ண்மனைக்குட்சென்று, அவனைக்கண்டுவணங்கி இராஜரா
ஜேஸ்வரனே ? கேளும் பாண்டவர்கள் பக்ஷமாய் ஸ்ரீ கி
ருஷ்ணமூர்த்தி தெற்குக்கோபுர வாசற் செண்பகவனத்
தில்வந்து இறங்கியிருப்பதாகத் தூதுவர்சொன்னார்களெ
ன்று விண்ணப்பம் பண்ணிக் கொள்ள அந்த வார்த்தை
யைக்கேட்ட திரிதராட்டிரன் மனமகிழ்ந்து வீஷ்டுமர்-து
ரோணர்-விதுரன்முதலிய பேர்களுடன்-ஆலோசித்துது
திப்பதற்குந் தொழுவதற்குந் தரிசிப்பதற்கும் அரிதாகி
ய வேதநாராயணனென்னுந் தேவதேவன் நாமிருக்கும்
பூமியை மிதிக்கப்பெற்றது. அற்புதம், அற்புதம், இஃது,
நாம் செய்த தவமென்று, நமது நலஞ்செய்த தவமென்
று நமதுகுலஞ்செய்த தவமென்று கொண்டாடி அண்ட
ரண்ட பகிரண்டங்களையுங் கர்ப்பத்தி லடக்கியருளிய அ
ரிமுகுந்தன் நம்மிடத்திற்குவருவாராகில் நமதுபெரியோ
ர்கள் சம்பாதித்துவைத்த கேயூரமதாணி குண்டலகிரீட
புஜக்கிரீட வாகுமாலை தும்பிப்பதக்கந் தோட்டிதழ் பதக்
கம் சகோரப் பதக்கம் - தனிமுத்துமாலை மோகனாரம்-
உத்தரசஞ்சமுதலிய ஆபரணங்களும், குடை-கொடி-சா
மரம் இரதகஜ துரகபதாதிகளும்-வெகுமதியாகக் கொடு
ப்பேன்-இதன்றியும் தாமரைக், கண்ணனுடைய மனதில்
நினைத்திருக்கின்ற யாவையுங் குறிப்பினாலுணர்ந்து கொ
டுத்து மனங்களிக்க வைப்பே னென்று திரிதராட்டிரன்-
தன்னைமறந்து சந்தோஷங் கொண்டு சொல்லும் வார்த்
தையை விதுரமகாராஜன்கேட்டு, அண்ணா கல்மழையை
த்தடுத்து கோவினங்களையுங், கோபாலரையுங் காத்தரு
ளிய கர்த்தனுக்கு இப்போது சொல்லிய வெகுமதியெல்
லாங்கொடுத்து பாண்டவர்களுக்கு ஐந்தூராகிலுங் கொ
டுவென்றுகேட்க வந்திருக்குங்காரியத்தைத் தடுத்துவிட
நீ-நினைத்திருக்கின்றீரல்லவா ! ஐயா ? பதின்மூன்றுவரு
டம் காட்டிலும், நாட்டிலும், உழன்றுவருந்தி வந்தமைந்
தர்களை ஆதரித்து இருக்க இடங்கொடுக்க இளகாத மன
த்தினையுடைய நீர், உலகமெல்லா முண்ட ஒருவனுக்குச்
சகலவெகுமதியுங் கொடுக்கத்துணிந்து சொல்வது ஆச்
சரியந்தான்-அண்ணா ? வடித்தகஞ்சி வார்க்காத பெரியப்
பன் வஸ்திரத்தைமன்னிக்கொண்டு-மணமிட வந்தானெ
ன்னும் பழமொழிக்குப் பிரயோசனந் தங்களிடத்திற் க
ண்டேனென்று சஞ்சலத்துடன் தம்பியாகிய விதுரன்
சொல்ல வீஷ்டுமர்நகைத்து விந்தையாகியமைந்தனே!அ
ஷ்டலட்சுமி வாசனாகிய ஆதிதேவன் உபலாவியத்தி லிரு
ந்து அஸ்தினபுரிக்கு அவசரமாகவந்தது நீர் சிறிது வெ
குமதிகொடுப்பீர் அதை என்றைக்குப் பெறுவோமென்
று ஓடிவந்ததாய்த் தோணுது அப்பா பொன்னையும் பூமி
யையும், நவரத்தினக்குவியல்களையும். புகழையும் புத்திர
மித்திராதிகளையுமுடைய உன்னையும், ஒருதவிபு மில்லா
த என்னையும் படைத்தருளிய பிர்ம்மாவை உந்திக் கமல

த்தில் புத்திரனைப்பெற்ற ஒப்பில்லாத ஒருவருக்கு நீயெனைக்கொடுக்கப்போகிறாய் அவர் உன்னிடத்தில் கைநீட்டியென்னவாங்கப்போகிறார். ஏந்தலே இவைகளெல்லாம் உபயோகமில்லாத வார்த்தை இந்தமட்டும் இதைநிறுத்திவிட்டு வந்திருக்குங் கண்ணனுடைய மனதை யறிந்து அவருக்கு மரியாதைசெய்து அனுப்பிவைக்கும் விதத்தை யோசிக்கக்கடவையென்று விதுரர் சொல்ல துரோணாசாரியர் - திரிதராட்டிரனைப்பார்த்து, அரசனே! ஸ்ரீ கிருஷ்ணதேவரோ தூதாகவந்திருக்கின்றாரென்றபோது-பாண்டவர்களுடையநன்னடத்தையையும்அவர்களினது மனோநிடத்தையும் யோசிக்கவேண்டியதல்லாமலும் கிருஷ்ணஸ்வாமி சொல்லப்போகிற இராஜநீதி முறைமை முதலிய நிறைமைகளையும் உன்னுடைய தீர்க்கபுத்தியினால் நிதானித்து உன்புத்திரராகிய நூறுபேர்களுக்கும் புத்தி விளைவித்து உன்மனதுக் கிசைந்த நாட்டைப் பாண்டவராகிய மைந்தர்களுக்குக் கொடுத்தால் வாசுதேவனுடைய மனமகிழ்ந்து கிருபைவந்து சகலசம்பத்துடன் நீடூழி வாழும் படியாகிய காலமுங் கொடுப்பார் அவருடைய கடாக்ஷ விசேஷணியத்தால் தாட்சியில்லாமல் ஆட்சியாக அரசாட்சிசெய்து காட்சியாக நீங்களுஞ் சுகப்படுவீர்கள் தேவர்கள்முதலிய யாவரும் சந்தோஷமடைவார்கள் இதற்கு மிஞ்சிய யுத்தியும், புத்தியும், உறுதியும், வேறொன்று மில்லையென்று துரோணாச்சாரியர் சொல்ல பக்கத்திலிருந்து கேட்டிருந்த துரியோதனனுக்கு மிகுந்த கோபம்பிறந்து கண்கள் சிவந்து கலிசொனநகைத்து சபையினிறைந்த காவலரெல்லாங் கலங்கும்படியாகச் சொல்லுகின்றான்.

கள்ளவணி மாயனாகிய தூதன் பாண்டவர்பக்ஷத்திலிருந்து இந்நகரத்துக்குள்ளேவருவானாகில் ஆ.ஆ.அவனுக்குநான் செய்யப்போகிறமரியாதைகள் வெணதுண்டு அதாவது, கோட்டைவாசலிற்புகுந்தவுடனே கிங்கிரர்முதலியமல்லர்களைவிடுத்துபுஜத்தோடுபுஜ நெரியப் பின்கட்டாய்க் கட்டிகாராக்கிரகத்திற்சேர்த்துபிராணன்போகவொட்டாமல் கஞ்சியும் உப்புமாகக் கலக்கிவார்த்து அவன்காலமுடிந்த பிற்பாடும் அவன் தேகத்தைச் சிறைச் சாலையில் வைப்பேன் அதேனெனில், சூத்தையுங்கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிவிட்டிருக்குந் துஷ்டர்களைப் போன்ற கலகக்காரரைத் தண்டிக்கச் சொல்லி தரும நீதியிற் சாற்றியிருப்பதினால் அவனை நான் விட மாட்டேன் விட்டால் குடிகெட்டுப்போம் ஐயையோ காட்டிலே காய்கனி கிழங்குகளை தின்றுக்கொண் டிருந்த பாண்டவர்களை நாட்டிலழைத்து அவர்களுக்கு இதவுபதேசம் பண்ணி நானே தூதுபோய் நாடுவாங்கித்தருகிறே னென்று சொல்லி வந்திருக்கின்றான், அந்தப்பேச்சைப் பாண்டவர்களாகிய பைத்தியக்காரர்கள் நம்பி, இவன் ஓடிவாங்கி வருவதையுணராமல், நாடுவாங்கி வருவானென்றும் ஐந்துவீடு வாங்கி வருவானென்றும் வழிபார்த்துக்கொண்டிருப்பார்கள் ஆகையால் இவனை இங்கேதானே மாட்டி விட்டால் இந்தச்சேதியைப் பாண்டவர்கள்கேட்டு பயந்து, பறந்தோடிப்போய்க் காடுசேர்வார்கள்-அவர்களுக்குப் படைத்துணையாக அடைந்தோரெல்லாரும் நடுநடுங்கி எனக்குப் பிரியவசனஞ்சொல்லி என்காலில்வந்து விழுந்து தங்கள் நாடுசேர்வார்கள் என்றென்றைக்குங் கலகமென்பதில்லை என்னுடைய நல்லகாலமானது இவனை எங்கேயோயிருந்து இழுத்துக்கொண்டு வந்துவிட்டது இதுவே தகுதியாகிய யோசனை ஓகோ மாமா அண்ணா என்று துரியோதனன் சொல்லிய சொல்லானது பெரியோர்கள் செவியிற்புகுகவே நாராசம் எறிகிறதுபோல் நடுங்கி இருசெவியையுங் கரத்தால் மூடிக்கொண்டு ஹரி ஹரி, இதென்ன விபரீத காலங் கட்டுப்படாத ஒருவனைக் கட்டவும் சிறைப்படாத ஒருவனை சிறைப்படுத்தவும், நீ நினைத்திருப்பதினால், நாங்கள் இனி பேசத்தக்க தொன்று மில்லை புத்திமானே உன்விதியெப்படியோ அப்படியே அநுசரித்து நடக்கும் மதியானது அப்பா, துரியோதனா. எங்களுக்குக் கொஞ்சநெஞ்ச மிருந்த சந்தேகந்தீரப் பேசிவிட்டாயென்று சொல்லி யாவருந் தலைகுனிந்துக் கொண்டார்கள்-அந்தவேளையில் திரிதராட்டிரன் தன்பிள்ளையை நோக்கிப் பதைபதைத்துச் சொல்லுகின்றான்.

அடாபுத்திரனே! வேதவிதிகளையும்; தரும சாஸ்திரங்களையும், இராஜமுறைமையையும் அழிக்கவோ எனக்குப் பிள்ளையாய்ப்பிறந்தாய் - அடடா! ஒருவன் சொல்லியவார்த்தை சொல்லுவதற்காகத் தூதுவந்த பேர்களை துன்பப்படுத்தலாகாது, கொல்லப்போகா தென்று எல்லா நூல்களிலுங் கூறியிருக்க அவைகளைவாசித்துங் கேள்வியுற்றுந் தேறியிருக்கு நீ தூதுவந்தவர்களைக் கொல்லவும் கொடுமைசெய்யவும் நினைப்பையாகில் எதிராளியின்கருத்தை நீ யெப்படி யறிந்து கொள்வாய் உன்னிடத்தில் எவர்கள் தூதுசொல்லவருவார்கள் குழந்தாய் காரியவாதியாகிய நீ தூதுவரத்தக்கவர்களை யெதிர்கொண் டழைத்துவந்து உபசாரஞ்செய்து நன்னயமாகப் பேசுவையாகில் இருவருக்குங் குறைவில்லாமல் வந்தகாரியங் களைப் பேசி இன்பமுறச் செய்வார்கள். ஆகையால் இப்போது தூதுவருகின்றவன் கபடநாடக சூத்திராவதாரி அவனைநீ எதிர்கொண்டு சென்று வணங்கி உன்தீவினையைப் போக்கடித்துக்கொள்ளச் சிந்திக்காமல் வாயில்வந்தவண்ணம் பிதற்றுகின்றாய் என்னடாபாவி - நான்கு வேதங்களினாலேயும் காணக்கூடாத நாராயணனை மடலுடன் மடல்விரியக்கட்டி சிறையிற் போடவும் உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் படியளக்கும் ஒருவனுக்கும் உப்புந்தண்ணீரும்வார்த்து உலரவைக்க உன்னால் கூடுமோ - மதிகேடா- உன் துற்புத்தியினாலே இப்படிக் கெல்லாம் பேசினையல்லாமல்நற்புத்தியினால் உணர்ந்துபேசினவனல்ல இப்போதும், அந்த துராங்கார யோசனையை விட்டு பெரியோர் சொல்லும் புத்தியைக்கேட்டு, நடந்து நன்மைபெற விரும்பத்தக்கதே யல்லாமல் உனக் கிஷ்டமாகிய தஷ்டை நினைவின்படிநடப்பையாகில் குஷ்டமும் கஷ்டமும் அஷ்டதரித்திரமும் நேரிட்டு வருத்தஞ்செய்ய பட்டமும்போய் நஷ்டப்பட்டு கெட்டலைந்து போவாய் துஷ்ட மகனே என்று வெறுத்துக்கொண்டு மந்திரி பிரதானிகளைப் பார்த்து பட்டணமெங்குந் திட்ட வட்டமாய் சிங்காரிக்கச்

சொல்லிகண்ணாடிப்பட்டமுதலியமேற்கட்டிகளுடன் சட்டமாயமைத்து மாணிக்கத்திபம்பிரகாசிக்கச்செய்து-மகாதோரணம்-வாழை-கமுகு-மாவிலை-தாழைமலர்-தாமரைமலர்-பவளவடம், முத்துவடம்- ரசக் குண்டுகள் தொங்கொளிவட்டம்-நிலையொளிபட்டம் நிலைக்கண்ணாடிகள் இவைகளெல்லாங்கட்டி அலங்காரஞ்செய்து மாவிலை கருப்பை தேங்காய்-வாழைப்பழம்-சந்தனம் - புஷ்பம்-தாம்பூலம்-அக்ஷதையுடன், பூரணகும்ப வேதிகை யமைத்து நமது புரத்திலிருக்குஞ் சனங்களெல் லாரும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரண அலங்காரங்களணிந்து சுசியாக வந்து தொழும்படியாகச் செய்து மத்தளதாள வித்துடனொத்துக் தத்திமிதாவென நர்த்தனமிட்டு வரும்பரதநாட்டிய மங்கையர்களாட மிகுஞ்சுரத விதியெங்கெங்கு நிறுத்திப்பாட வாத்தியமுதலிய ஜெயமங்கள பேரி முழக்கிவைத்து வஸ்துவாகிய - ஸ்ரீ கிருஷ்ணபகவான், வந்திறங்குதற்கு ! தகுதியாகிய விடுதியேர்ப்படுத்தி அவருடன் கூடவந்த யாவர்களுக்குங் குறைவில்லாமல் குபேர சம்பத்தைப்போல சகல சாமான்முதலிய வஸ்துக்களும், அமைத்து சுயம்பாகிகளைவைத்துச் சமைத்து சந்தர்பாளிதம் ஏர்ப்படுத்தி வைத்து மந்திரி பிரதானிகள் முதலாகிய மன்னர்களும், பயணப்பட்டு பிரயாண பேரி முழக்கி எனக்கு அறிக்கை பண்ணுவீர்களாகில் இரண்டுகண்ணுந்தெரியாத நான் எதிர்சென்று மேகவண்ணனாகிய கண்ணனை உபசரித் தழைத்துக் கொண்டு - வருகிறேனென்று பெரியஅரசன்சொல்லக்கேட்டு சமஸ்தமானபேருஞ் சம்மதிப்படாமல் தடுத்து ஓ ! ராஜராஜேஸ்வரா ? பெருமானைவைத்துக்கொண்டு திருநாள்செய்வதுபோல் தேவரீரை தகத்திலிடத்தில் பெருமையாகவைத்து நாங்களெதிர்கொண்டுபோய்க்கண்டுவணங்கி அழைத்துவருகிறோமென்றுசொல்ல இந்தவார்த்தைகளையெல்லாங் கேட்டிருந்த துரியோதனன் தந்தையின்பாதத்திற் சாஷ்டாங்கமாகப்பணிந்து சொல்லுகின்றான்.

கேளும் என்னையாவே ! தேவரீருடையசிந்தையின்படிக்குநானே எதிர்கொண்டுபோய்சகலவைபவங்களுடன் ஸ்ரீகிருஷ்ணசுவாமியை அழைத்துவருகிறேன் என்பேரில் கோபம்பண்ணவேண்டாம் எங்கோவே என்றுதந்தையைவணங்கிபட்டணவலங்காரஞ்செய்யும்படிதிட்டஞ்செய்தான் துரியோதனமகாராஜன் அப்போதே ஒட்டகத்தின்பேரில் பிரசித்தபேரிகைகட்டி விதிவிதியாய்க் கொட்டினார்கள் இப்படி திட்டஞ் செய்வதற்கு முன்னேதானே பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் ஸ்ரீகிருஷ்ணனாகிய கர்த்தன்வந்தாரென்று தானந்தவமுதலிய சம்பிரமங்களுடன் ஆநந்தங்கொண்டு அலங்காரஞ்செய்து பன்னீர்தெளித்து சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு கதம்ப கஸ்தூரி கருப்பூர சுன்னங்கலந்திறைத்து மகாலட்சுமியை அலங்கரித்துவைத்ததுபோல் அஸ்தினபுரிவீதியை அலங்கரித்துவைத்தார்கள். அதை துரியோதனமகாராஜன்கேட்டு மனமகிழ்ந்து இரதகஜதுரகபதாதிகளுடன் பற்பலமன்னவர்களும் அரசனது அற்புதபட்டத்துக்குரிய யானைகளுங், குதிரைகளும், ரதங்களும், அலங்காரத்துடன் அழகியதெருக்களில் இருபக்கங்களும்நெருங்கியிருக்க பேரியாழ் சகோரியாழ் செங்கோட்டியாழ் முகவீணை சுரமண்டலி முதலிய வாத்தியங்களெல்லாமுழங்க பட்டுவான்கள் கட்டியம்புகழ்ந்து துதிவழங்க அரவக்கொடியோனாகிய துரியோதனன் அரவணைதுயின்ற அமலனை எதிர்கொண்டழைக்க எழுந்துவருங்காலையில் பொய்யுந்-சூதும்-பொறாமையுங்-கொடுமையும்-நெய்யும்பாலும்போல் நிறைந்த நெஞ்சினனாகியவஞ்சகச்சகுனி மாமன் வயிற்றைப் பிசைந்துகொண்டோடிவந்து வழியில்நேரிடுந் துற்சகுனம்போல மருமகனைமறுத்துத்தடுத்து என்னருமைமருமகனாகிய அரசர்க்கரசனே! இதென்ன அனியாயம்இதென்னஞாயம் - இதென்னமுறைமை - இதென்னமரியாதை-இறைவனே!இன்னமுஞ்சின்னஞ்சிறுபிள்ளைத்தனமாகச்செய்கின்றீர் யோகபோக தேவேந்திராமுவுலகமும் மதித்துத்துதிக்க வணங்கா முடிபொறுத்தமன்னர்மண்டலேஸ்வரா ராஜாதிராஜராஜப்பிரபுடகாராஜ உத்தண்டராஜமார்த்தாண்ட - ராஜகோபால ராஜபூபால - ராஜதார்த்தண்ய ராஜமூர்த்தண்ய ஜயவிஜய சங்கிராம சார்வபூமா சந்திரன் முதற்கொண்டு இன்னான் மகனின்னானென்று சிங்காசனத்திலிருந்து செங்கோற்பிடித்து நீதிசெலுத்திய மகுடாபிஷேக துரந்தரா, புரந்தரா சாம்பிரதாய பூமண்டலாதிபதியாகிய கோமானே ? ஒருகுறுநில மன்னனாகக்குக்கிராமத்திலிருந்து பட்டாபிஷேகமில்லாமல் ஒட்டுக் குடித்தனக்காரனாகியும் பஞ்சையாகிய பாண்டவர்கள் கெஞ்சிக்கொண்டு தூதனுப்பவந்த கொஞ்சமனிதனாகிய கிருஷ்ணனை தேவரீர் எதிர்கொண்டுபோய் அழைத்துவரக்கூடுமா, உமதுசிந்தையு மிப்படித்தளருமா, சிங்கமானது நரிக்கு எதிர்கொண்டு செல்லுமா, தீங்காகிய சிறியகாரியத்தைச் சிந்தித்தீர்பெரிய அரசர்களுக்கு மரியாதையல்லவென்று; அன்பினாற்சொல்லினில்லுமென்று நிறுத்தவே, துரியோதனனுடைய எண்ணத்துக்குச் சரிப்பட்டிருந்த மாமனுடையவார்த்தை மணிமந்திர அவ்ஷதத்தை உட்கொண்டு சபாமண்டபத்துக்குத்திரும்பிவந்து தம்பிமார்முதலிய பெரியோர்களைநோக்கி நீங்கள்போய் அழைத்துவாருங்களென்று அனுப்பவிட்டு சக்கிராதரனாகிய; ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு விடுதி அரண்மனையும், வேண்டியவஸ்துக்களுந் திட்டஞ்செய்துகொண்டு யுத்தவலிமைபெற்ற ராஜவர்க்கங்களும் பந்துஜனங்களும் வணங்கிச் சூழ்ந்திருக்க நந்தியாவட்டமாலையணிந்த புயாசலத்தையுடைய துரியோதனன் சிங்காசனத்திலிருந்தான் புரஜனங்கள்யாவரும் இதென்னவிபரீதகாலமென்று மெய்மறந்து வருந்தினார்கள் அந்தவேளையில் வீஷ்டுமரும், துரோணாச் சாரியரும், அசுபத்தாமாவும், விதுர மகாராஜனும் கிருபாச் சாரியரும், வேதபண்டிதராகிய பெரியோர்களும்; அரசர்களாகிய உரியோர்களும், அறுபதுநாலாயிரம் மன்னர்மண்டலிகரும் நால்வகைச்சேனையும் பேரி பாங்காமுதலிய பஞ்சவாத்தியத்தொனிகளும் சணிகைமாதர்களாட்டமும் - குடை

கொடி - ஆலவட்டங்-காலவட்ட முதலிய கூட்டமும், அ
வரவர்களின் கண்கள்முதற் கரசாரூதியின் நெருக்கமு
ம் நிங்காமலோங்கிய அஸ்தினாபுரத்தின் வீதியைவிட்டு,
ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை இரண்டுயோசனைதூரம் எதிர்
கொண்டு கண்டு இருகண்களித்து இறைஞ்சிப் பணிந்து
இரண்டுபக்கத்திலு மொதுங்கி நிறைந்துநெருங்கி நின்ற
யாவரையும் துளபமாலையணிந்த சுவாமியார் கிருபைப்
பார்வையாகப்பார்த்து அவரவர்களைத் தழுவிக்கொண்டு
சந்தோஷமுடையவராய் தன்னுடன்கூடவந்தசேனைகளு
ம் அஸ்தினாபுரத்திலிருந்து வந்தசேனைகளும் அரசர்முத
லியயாவரும்புடைசூழ்ந்துவரசண்பகச்சோலையைவிட்டு
பாதசாரியாய்ப்புறப்பட்டு வீஷ்டுமர் துரோணர், விதுரர்
முதலியபேருங் கைலாகுகொடுக்க அஸ்தினாபுரத்தின்அ
ரண்மனைவீதியில்வரும்போது அவ்வீதியிருபக்கங்களிலு
மிருக்கிறவீடுகளைப்பார்த்து இதுயாருடையவீடு இதுயா
ருடையமாளிகை இதுயாருடையமாடம் இதுயாருடைய
அரண்மனை இதுயாருடையமந்திரம் இதுயாருடைய சுப
க்கிரகமென்று கோபாலகிருஷ்ணர் கேட்கும்போதுபக்க
ங்களிலிருப்பவர்கள் பதறியோடிவந்து பகவானைப்பணிந்
து இது என்னுடையவீடு இது என்னுடைய மாளிகை
இது என்னுடைய அரண்மனை இது என்னுடையமந்திர
ம் இது என்னுடையசுபக்கிரகம் என்று இவ்விதமாகச்
சொல்லியயாவரையும்பார்த்துபுன்னகைகொண்டு அப்ப
டியாவெகுநேத்தி வெகுசந்தோஷமென்று வார்த்தையா
டிக் கொண்டு விதுரராஜனுடைய மனைக்கு நேராக
வரும்போது இதுயாருடைய இருக்கையென்றுபகவான்
கேட்க பக்கத்திலிருந்தவிதுரன் பாதங்களிற்பணிந்து ஓ
தேவதேவா ? தேவதாசார்வபூமா சுவாமீ தேவரீருடை
ய இருக்கையென்றுசொல்லவும் அதைக்கேட்ட கண்ண
னானவர் உள்ளமகிழ்ந்து இவ்வளவுபெரிய நகரத்தில் எ
னக்குமொருவீடிருக்கின்றதல்லவா ? என்று ராஜாதிரா
ஜனாகிய துரியோதனன் ஏர்ப்படுத்திய விடுதிக்குப் போ
காமல் வீஷ்டுமர் துரோணர் முதலியபேருக்கு விடை
கொடுத்தனுப்பிவிட்டு விதுரனுடைய வளவிற்புகுந்தார்.

விதுரர்-துதிக்கும் - விருத்தம்

முன்னமேதுயின்றருளியமுதுபயோததியோ, பன்ன
காசயனப்பாயலோபச்சையாலிலையோ, சொன்னநான்ம
றைச்சுருதியோகருதிநீயெய்தற்,கென்னமாதவஞ்செய்த
திச்சிறுகுடிலென்றுன்.... ....•

அக்காலத்தில் விதுரமகாராஜன் பகவானுடைய இர
ண்டுதிருவடிகளையும் தன்முடிமேற்பொருத்திக்கொண்டு
சுவாமீ தேவரீர் திருவடிபெயர்த்தருளும்படியாய் இந்தக்
குடிசையானது, என்னதவஞ்செய்ததோ எந்தவிரத மி
ழைத்ததோ தேவரீர் பூர்வத்தில்திருக்கண்வளர்ந்தருளிய
பழயபாற்கடலோ சிரோரத்நம் பிரகாசிக்கும் ஆயிரம்ப
ணாமகுடப்பாயலாகிய ஆதிசேஷசயனமோ ஆலிலையோ
வேதமோ நான்குவேதத்தின்ஆதியோஅந்தமோ ஐயனே
என்னநினைந்து எழுந்தருளியதோ :இந்தச்சிறியகுடிசை
என்ன தவத்தைச் செய்ததோ என்று கண்களிலும் நீர்
சொரிய வணங்கித் துதிக்கும் விதுரனை மார்போடெடு
த்தணைத்து ஓ விதுராஜனே உமதுவீட்டுக்குவிருந்து வ
ந்தோமென்று ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவாயிருந்துவி
ருந்து செய்தருளுந் திருமால் திருவாய்மலர்ந்தருளக்கே
ட்டு மூன்றுவிதமாகிய புவனங்களையெல்லாம் உண்டரு
ளியமுதல்வர் மும்மையிலும் எம்மை அடிமையாகவுடை
ய ஸ்ரீகிருஷ்ணபகவான் விருந்துக்குச்சம்மதித்தாரென்று
ஆச்சரியப்பட்டு ஆறுநூறுயிரஞ் சமையற்காரரைநோக்கி
சுவாமியார்முதலிய எல்லாச்சேனைகளுக்கும் அறுசுவை
பதார்த்தத்துடன் ஒருநொடிப்போதில் அன்னமாகவே
ண்டுமென்று ஆக்யாபித்தான் அப்போது மாயவனாகியம
காவிஷ்ணுவானவர் வீரஞான விதுரனுடைய உள்ளன்பு
வெளிப்படச்செய்து சதுர்ப்புஜதரிசனங்கொடுக்கவேண்
டுமென்று சந்தோஷங்கொண்டு சமீபத்திலிருந்த விதுர
மகாராஜனைப்பார்த்து சமையலாகிறவரைக்கும் நான்பசி
தாளமாட்டேன் உனக்குச்செய்திருக்கும் போசனத்தை
எனக்குப்போடுமென்றுகேட்க, உடனே தனக்குச்செய்
திருந்த நூக்கு நொய்க்கஞ்சியைக் கொண்டுவந்து வைத்
துபாதோதகமுடைய பகவானுக்கு கரகத்தில் ஜலத்தை
க்கொடுத்தார்கள் அந்த ஜலத்தினால் கரம்சிரம் கால் மே
ல்சுத்திசெய்து நித்தியவிதிமுடித்துக்கொண்டு போசன
த்துக்குவந்தகாலையில் பொன்போன்ற வாழையிலையில் க
ஞ்சியைவிடுத்தார்கள் அதைக்கண்ணன்கரத்தால் வாரிப்
புசிக்கப்போங்காலையில் விதுராஜன் நிலத்தில்வீழ்ந்து
சுவாமீ திவ்ய அன்னமுதலாகியசட்ருசியபதார்த்தங்களு
ம் ஜாக்கிரதையாயிக்கொண்டிருக்க தேவரீர் இந்தநொய்
க்கஞ்சிக்கு எத்தனைநாள் ஏக்கமுற்றிருந்ததோ ஐயனே!
என்னையாவரும்பழிப்பார்களே இதுநன்மையல்லவே நா
தனேயென்று அஞ்சலியஸ்தனாகவிதுரன் உபசாரஞ்சொ
ல்லிக்கொண்டிருக்கும்போது, இலையில்விடுத்த கஞ்சியா
னது ஒருபக்கம்வழிய அதுவழியவொட்டாமல் ஒருகரத்
தினால் யிலையைத்தூக்கிப்பிடித்தார் இன்னொரு பக்கத்தி
லோடும்போது பின்னொருகரத்தால் அந்தப்பக்கத்தையு
ந்தூக்கிப் பிடித்துக்கொண்டார் பின்னொருபக்கம் ஓடும்
போது இன்னொருகரம்மேர்ப்படுத்திக்கொண்டு பிடித்தா
ர் இன்னொருபக்கம்நழுவும்போது அந்தபக்கத்துக்கும் ஒ
ருகரமுண்டாக்கிக்கொண்டு தலைகுனிந்து வாயினாலுறுஞ்
சிநாவினாற்சுவைபறிந்துபுசிக்குங்கடவுளானவர்விதுரனை
ப்பார்த்து ஓகோ அரசனே இதைத்தானோ அல்பமானக
ஞ்சி என்று இழிவாகச்சொல்லவந்தாய் அப்பனே! இன்
றைக்குப்பருகும்படியாகநேரிட்ட இந்தக்கஞ்சி என்பிரா
ணனுக்குவந்ததே ஓ விதுராஜனே கேளும பூர்வத்தில்
இரணியகசிபன் இராவண கும்பகர்ணன் தந்தவக்கிரசி
சுபாலன் இவர்கள்முதலிய பலவான்களையெல்லாம் முடி
த்துக்கொன்றபோது என்தலைவணங்காமல் என்னிருகர
த்தினாலுங்கொன்றுபோட்டேன் உன்னுடைய அன்பினா
ல்வார்த்த நூக்குநொய்க்கஞ்சியை அடக்கி உட்கொள்ளு
வதற்கு நான்குகரத்தைக்கொண்டு என்சிரம்வணங்கியும்
பிடிக்கப்படயில்லையே இதைக்குடிக்கப்படயில்லையே வி
துமகாராஜனேயென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் பூரித்துப்புக
ழ்ந்து மகிழ்ந்தகாலத்தில் புத்திபுத்தியென்று புளகாங்கி

தமுற்று பூதசம்பந்தமாகிய ஜனனமாரணவஸ்தையைவிட்டு நீங்கினவனைப்போல விதுரமகாராஜன் மெய்மறந்து பரவசத்தனுனன் உடனே போசனமாச்சுதென்று சுவானக்காரா சொல்லவே பரிமளசுகந்தமிருந்த தகுந்த குளிர்ந்தஜலங்கொண்டு ஸ்நம்பஞ்செய்விக்க கஸ்தூரி - அக்ஷதை யணிந்துக்கொண்டு வழிபடுகடவுளைவணங்கி தம்பியாகிய சாத்தகியுடனிருந்து அநேகவிதமாகிய கறியமுதுகளையும் அன்னங்களையும் விருப்பத்துடன் புசித்து சம்பிரமமாக இளைப்பாறி பச்சைக்கர்ப்பூரமும் மணமுள்ள சந்தனுதிகள்பூசி வாசனையுடையமாலையணிந்து மாணிக்க ஆபரணங்தரித்து தாம்பூலமணிந்து இரத்தினசிங்காசனத்திலவீற்றிருந்தார் அவராரெனில் பார்வதிபங்கனுகிய பரமேஸ்பரமூர்த்திக்குப் பிச்சையிட்டுப்பிரமகபாலத்தை நிறைந்து பழியைநீக்கிய பெரியபெருமாள் இத்தன்மையாகமார்க்காயாசந் தீர்ந்துமகிழ்ச்சிக்கொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணதேவரை சாஷ்டாங்கமாகவணங்கி திருப்பாற்கடலைக்கடைந்துதேவர்களுக்கு அமுதமளித்த நாராயணமூர்த்தியே நமதுவீட்டுக்குவிருந்தாக வந்தாரென்று மனமுருகி சுவாமியின் திருவடிகள் திருமுகமண்டலம் திருக்கரமென்னுஞ்செந்தாமரைமலர்களில் தனதுகண்களென்னுங்கரும்வண்டைநாட்டி களிப்படைந்து இப்பிறப்பையு நீக்கி இனிப்பிறப்பையுநீக்கி எப்பிறப்பிலும் புகழ்பெறவழிதேடிக்கொண்ட புண்ணியவிதுரன் மேகவண்ணனை மனத்தில்நினைந்து கண்ணீர்பெருக மண்ணினில்விழுந்து கண்ணனைப்பணிந்து திண்ணெனவெழுந்து துள்ளிக்குதித்து துணைப்பதத்தை சிரத்திற்றரித்துக்கொண்டு துன்பநீங்கி இன்பமோங்கி தத்துவாமிர்தத்தை அள்ளிச்சாப்பிட்டவர்போல் சுவாமியினுடைய திருவழகைகண்களினுற்கவர்ந்தபருகி இருகண்களும் இமையோடிமைமூடாமலசைவற்றிருந்த விதுரமகாராஜனுனவர் சுவாமியுடன்கூடவந்த வேல் வில் வாள் முதலிய ஆயுதங்களையுடைய வீரர்களும் மன்னமண்டலீகர் மந்திரிமார்முதலிய பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் ஐம்பதுலக்ஷம் அரசர்களும் மற்றுமுள்ளபேர்களும் போசனமுதலிய பழவர்க்கங்களும்புசிக்கச்செய்தபோது தேவர்களுக்குங் கிடைக்காத தேவாமிர்தம் புசித்தவர்களாகதெவிட்டவுண்டுஆபரண அலங்காரஞ்சுவாமியைச்சூழ்ந்ததன்மையைப்போலசுற்றிலும்நெருங்கியிருந்தார்கள் அந்தச்சமயத்தில் உபய சாமரங்கள் வீச சந்திரவட்டக்குடை நிழற்றவாத்தியமுழங்க, மாணிக்கச்சிங்காசனத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவர்எழுந்தருளியிருக்கமெய்ஞ்ஞானச் சட்டையணிந்தவிதுரமகாராஜனுடைய வீட்டில் பரவாசுதேவன் அறுசுவையுண்டியை அன்புடன்புசித்தாரென்று அகமலர்ந்துசிவந்து மேருமலைக்கப்புறத்திலிருக்கும் அமுதத்தைப்புசிக்கப்போனவனைப்போல் சூரியன் மேற்றிசைக்கடலில் மூழ்கினன், அப்போது மகாரிஷிகள்முதலிய வேதப்பிராமணர்களெல்லாரும்வேதமந்திரமென்னும் வில்லினிடத்தில் அனுஷ்டிப்பதற்குக் காத்தில் வாரிய அருக்கியசல மென்னும் பாணத்தைத் தொடுத்துவிட்ட படியால் சூரியனைச் செல்ல வொட்டாமற்றடிக்கும் அரக்கரழிந்து அவர்களுடைய உதிரம்பெருகிவழிந்ததைப்போற் பிரகாசிக்குஞ்செவ்வானமும் அந்த அரக்கருடைய கால் கரங்கள் துண்டமாய் விழுந்து கிடப்பதையொத்த பவளக்காடுகளும் நிராமகளிருக்குப் பகற்காலத்தில் நிழலைச்செய்யவிரிந்தும் இராக்காலத்தில் சிவப்புப்பட்டுக்குடையைச் சுருக்கிவிட்டதைப் போற்குவிந்திருக்கின்ற வெண்டாமரைசெந்தாமரைமலர்களும் மங்கலபேரிமுதலாகிய வாத்தியச்சங்கமும் தங்கம்போன்ற அழகினையுடைய மங்கையர்களின் மெய்பாகியமெய்விளக்கும்மாணிக்கத்தீபமும் தடாகங்களிலிருக்கும்தாமரைமலர்கள் குவிந்ததைக்கண்டு அஸ்தினபுரியென்னும் அணங்கு அநேகந்தாமரைக் கண்களைத்திறந்து பார்ப்பதையொத்த தீபப்பிரகாசமுடைய அஸ்தினபுரியில் விதுரமகாராஜனது அரண்மனையில் ஆதிசேடனுடைய சிரோரத்தினப்பிரகாசம்போலும் ஆயிரம்பிரதமைகள் ஆயிரந்தீபங்களைத்தாங்கிக்கொண்டிருக்க இரண்டாயிரஞ் சிங்கஞ்சுமந்த ஆசனத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீகிருஷ்ணபகவானைப் புண்ணியதேகத்தையுடைய விதுரமகாராஜன்வணங்கிப்போற்றி பூர்ணநந்தப்பெருவாழ்வுடைய புண்டரீகாக்ஷனே திருப்பாற்கடலையுஞ் சேஷசயனத்தையும்விட்டு நீங்கி வசுதேவர்மனைவியராகிய தேவகிதேவியார் கர்ப்பத்திலுதித்து ஆயர்பாடியில்வளர்ந்து உரலுடன் றவழ்ந்துமருதமரத்தையிடர்ந்து காளிங்கநர்த்தனம்புரிந்துகாலிக்கன்றுகளுடன்திரிந்து கங்காநதியானதுபொருந்தப்பெற்ற திருவடிகள்வருந்தும்படியாய் இவ்விடத்துக்குத் தேவரீர் தனித்தெழுந் தருளிய காரணத்தை திருவாய் மலர்ந்தருள வேண்டுங் கருணையங் கடலாகிய தேவதேவனே, யென்று கேட்காநின்ற விதுரனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்திநோக்கிபூவிதழிற்பொருந்திய சிவந்ததேனை அருந்தும் வண்டுகள் இசைகொண்டு பாடும்படியாகிய பூமாலையணிந்த புயாஜலமதுரவசன விதுரனே? பூர்வத்தில் இராஜசபையி லேர்ப்படுத்திக்கொண்ட தவணைநாளைக் கழிக்க, சந்தோஷத்துடன் பனிரண்டுவருடங் காட்டிலேதிரிந்து! ஒருவருடம் அக்ஞானவாசஞ் செய்துஇப்போது நாட்டிலே வந்திருக்கின்றபாண்டவர்களுக்குக் குருநாட்டைக்கேட்கத் தூதுவந்தோமென்று சுவாமிசொல்ல அந்தமொழியை விதுரராஜன்கேட்டு, வெறுப்பும் விருப்பும் இல்லாதவனுகச் சொல்லுகின்றுன், மையினு நிறத்த மெய்பனேகேளும், முன்னோர் வழக்கத்தையும், முறைமைகளையும், அனுசரித்து, ஆதியிற்சொல்லியிருந்த வாக்குந்தப்பாமல்-வலிய மனத்தினையுடைய துரியோதனன்-தன்பிராண னளவில் தருமராஜனுக்கு, நாடுமுதலிய பாகத்தைக் கொடுக்கப்போகிறதேயில்லை ஆனல், ஐவருக்குரியபாகத்தை அரவகேதனனிடத்திற் பெறுவதற்கு, ஒரு உபாயமுண்டு அதென்னவென்றல் எட்டுதிக்கும் இடிந்து சரிந்துபோகும்படியாய் - பேரிகை, பாங்கா-முரசுமுதலிய வாத்தியங்கள் சத்திக்க எதிர்ந்து யுத்தகளத்திற் புகுந்து அஸ்திரங்களைச்சொரிந்து வெந்துவெதும்பி விழுந்தழியும் காலத்தில் திரோகந்தளைப்பட்டு மனம்நொந்து, புத்திவந்து ஒருவேளை நாடுகொடுப்பானே அப்போதும் கொடானே ! நானறியேன் நாதனே ? தேவரீருக்குத்தெ

றியாத மர்மம் என்னயிருக்கின்றது அடியேன்சொல்லுந்
தரமோவென்று விதுரராஜன் சொல்லக்கேட்டு, மகிழ்ந்
து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி விதுரனைப்பார்த்துச் சொல்லு
கின்றார்,

ஓ! விதுரராஜனே? துரியோதனன்செய்த அன்னீதி
அக்கிரமங்களினால் வருந்தி யிளைத்துவந்தபாண்டவர்கள்
மனத்தில் குற்றங் குறைவைக்காமல்; இங்கிதவார்த்தை
கள்சொல்லித் - தூதனுப்பி நாடு கேட்டால் நல்லகால
மென்றுசந்தோஷங் கொண்டுநாடுகொடுப்பதே ராஜகரு
மம், அதைமறுத்து நடந்தால், நாசகருமம், ஆதலால் நா
னேயத்தினம் துரியோதன னுடைய, சபையிற்போ யிருந்
து, வாளைகள்பாய- இளங்கமுகின் பாளைவிரிந்து - தேன்
பொழிந்து பெருகும் வயல்சூழ்ந்த குரு நாட்டை பாண்
டவர்களுக்குக் கொடுவென்று கேட்கிறேன்- அப்போது,
கொடாமற்போவனேயாகில்-சமர்பூமியி லெதிர்த்து-மு
னையானது, வாய்வழியில் வழியும்படியுத்தஞ் செய்து மு
டிப்போம்-மயிலே-மயிலே "ஒரு இறகுகொடுவென்றால்
கொடுக்குமா, இருத்தி மிதித்துப் பிடுங்கினாலுண்டு என்
பதுபோல்-எத்தனைவிதத்தில் இதமாகப் பேசிப் பதமாக
வேண்டிக்கொண்டாலும் லோபிகளாகிய மூர்க்கர்-ஒரு
காசும்-அதிலொட்டியதுகூடங் கொடுக்கமாட்டார்கள்மாறு
மாறென்றுதாறுமாறாக அடித்து- சிதைத்து-வதைத்து-பு
தைக்குங்காலம்நேரிட்டால்-அப்போது-சேட்டவைகளை
யெல்லாந்தடையில்லாமல்கொடுப்பார்கள்இவ்விதமாகயி
ருக்கின்றது, உலகத்தினுடைய இயற்கை யென்று விதுர
ராஜனுக்குச்சொல்லி நல்லது எல்லாம் போது விடிந்தா
ல் பார்த்துக்கொள்ளுவோம்-வெகுநேரமாச்சுது, விதுர
ராஜனே ! நீர் சயனித்துக்கொள்ளப்போமென்று செல
வுகொடுத்தனுப்பிவிட்டு மாணிக்க - மரகதத்தாற்செய்த,
சயனவீட்டில், இரத்தினக் கொலுசுகளினாலமைத்த வூச
லில்; வாசனையுடைய அன்றலர்ந்த புட்பங்களினால் - நி
றைந்த-அமிச தூளிகாம்ஸத்தின்பேரில் பொன்போலும்
பிரகாசிக்குந் தோள்களுந் தாள்களும்-பொருந்த திருக்க
ண்வளர்ந்தருளினார்-சக்கிராதரனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
அதுகாலையில், விதுரராஜனவர்-இராத்திரி யெல்லாம்
நித்திரையில்லாமல், கஸ்துசுற்றிக்கொண்டு காவற்காரர்
கள் பறைமுழக்கிவரவும்; உருவிய கத்திகளுடன் உயிர்ச்
சேவகர் காத்திருக்கவும்-அடிக்கடி ஜாக்கிரதை செய்துக்
கொண்டிருந்தார் அந்தக்காலத்தில் அந்தகார மாகிய இ
ராத்திரியானது - வேசியாஸ்திரீயை யொத்திருந்தது அ
தெப்படியென்றால் - சந்திரனே ! முகமாகவும் மலர்ந்த
செவ்வல்லிமலரோ வாயாகவும் - முல்லையரும்பே பற்க
ளாகவும் - சூரியன் மறைந்தபிற்பாடு முகிழ்த்ததாமரை
மொக்குகளே குவிந்த கைகளாகவும் அளியென்னும் வ
ண்டினங்களே கிருபையாகவும் - உருவகமாய் துரியோத
னன் - மனதென்னும் - யிருளாகிய கன்னிகையானவள்
சர்வவல்லமையுமுடைய - லட்சுமிநாயகன் பாண்டவர்
தூதாகவெழுந்தருளி யிருக்கிறபடியால் போதுவிடிவதற்
கு முன்னமே இந்த சுவாமியாரைத் துரியோதனனுக்கு
வசப்படுத்தி விடவேண்டுமென்று - வந்து வளைந்ததைப்
போலும் நெருங்கிய இராத்திரியை சூரியன்பார்த்து - ஓ
கோ மோசம்வந்தது - துரியோதனனுடைய மனமென்
னும் இருட்டாகிய பெண்ணானவள்-சுவாமியாரைவசப்
படுத்திக் கொள்ளுவாளாகில் - தருமமாதகிய தலமுற
க்கெட்டு பூமிபாரமு மதிகப்பட்டுப் போமென்று-காருதி
கடுங்கோபத்துடன் கறுத்த இருளாகிய நிசையைக் கிழி
த்துக்கொண்டு - அண்டம் ஒருபக்கத்தில் விண்டதென
றுசொல்லவும் ஏழு சமுத்திரமும் வறண்டு - அதிலிருக்கு
ம் வடவாமுகாக்கினியானது பிரகாசித்ததென்று சொல்
லும்படியாக முகஞ்சிவந்து அநேக கிரணங்களென்னுங்
கரங்களை நீட்டி இருளென்னும் பொதுமகளை வெருளச்
செய்து உதயகிரியி னுச்சியினின்று விளங்கியதைப் போ
லும், மேலும்-பாண்டவரிடத்தில் பகைகொண் டிருக்கு
ஞ் சர்ப்பக்கொடியோனாகிய துரியோதனனிருந்த புராத
னமாகிய அஸ்தினாபுரத்திலே - அகிலபுவன சராசரனாகி
ய-ஸ்ரீ கிருஷ்ணபகவான் தனித்தூது வந்திருப்பது தெரி
ந்து மகரமச்சங்கள் முதலிய ஜெந்துக்களையுடைய சமுத்
திரத்தைவிட்டுப் புறப்பட்டு-சுவாமியினுடைய சக்கரம்பி
ரகாசிக்குந் தன்மையைப் போலும் கீழ்த்திசையிற் சூரிய
னுதயமானான் அதுகாலத்தில் - கங்காபுத்திரராகிய வீஷ்
மரும் துரோணாச்சாரியார் முதலாகிய மகத்வமுடைய
கனவான்களும் - திடவான்களென்னும் அரசர்முதலாகிய
தனவான்களும்-தருமநீதியுணர்ந்த மூன்றுலக்ஷத் தறுப
த்தோராயிரம் நிருபர்களும்; குற்றமற்ற பதினேரக்கு
ரோணியாகிய சேனைத் தலைவர்களும் கூட்டமாகிய வெ
ள்ளியசாமான்களும் மயிற்பீலிக்குஞ்சமும் ஆலவட்டங்
களுந் தாலவட்டங்களும்-வாளும்-உடைவாளும்- வேலு
ம்-வளைதடியும்-அஸ்திர-சஸ்திரங்களும்- வஸ்திரங்களும்
கைகளிற் காளாஞ்சிகளும், இளமைப் பருவமுங்கொண்
டு நெருங்கி நிற்கும் பணிப்பெண்க ளநேகரும்-சகலவே
த சாஸ்திரபண்டித சாமர்த்தியமுடைய பிராமணக்கூட்ட
மும்-கலைஞானங்களிற் கைபழகிய கருணையோர்களும்
தகுதியாகிய தம்பிமார் தொண்ணூற் றென்பது பேரும்
வந்து நிறைந்து வளைந்து சூழ்ந்திருக்க கிரணக்கூட்டங்க
ளையுடைய பொன்னினாற் சுவர்செய்து நூறுலக்ஷம் மர
கதத்தூணிறுத்தி-கோமேதகத்தினாற் போதிகை யமைத்
து பவளத்தினால் உத்தரம்போட்டு மாணிக்க வச்சிரங்க
ளினாற் கிராவியமைத்து-வைடூரியத்தால் பலகைதைத்து
முத்துவர்க்கங்களைப்பரப்பி சுதைதீத்தி, சிகரங்கள் வை
த்து-வெற்றிக்கொடிநாட்டி, மேகமண்டல பரியந்தம் அ
ளாவிய கொலுமண்டபத்தில் - பவளக்கால் நிறுத்தி ஆ
ணிமுத்துக்களினால் பந்தலிட்டு எங்குஞ் சிங்கமுமாய்த்
தங்கத்தினாற்செய்த சிங்காசனத்தில் போக தேவேந்திர
னைப்போல் துரியோதனமகாராஜன்-வீற்றிருந்தான்.

அப்போது, பட்டவர்த்தனர்களும்-மகுடவர்த் தனர்க
ளும்-மன்னர்மண்டலீகரும்-எண்டிசைவேந்தரும்-பாதங்
களில் வணங்கியசாலையில் வணங்காமுடி பொறுத்த மக
ரமண்ட லேஸ்பர மன்னர்மன்னனாகிய துரியோதனன்
பொன்னினாற்செய்த ஆசனங்களி லிருக்கும்படி பூரணப்
பார்வை யாகிய அருட்கண் ணூட்டினான் அக்காலத்தில்

அரசர்முதலியயாவரும் அவரவர்களுக்குரிய ஆசனத்தில் பொருந்தி இருந்தார்கள் - அந்தச் சமயத்தில், அந்தச்சபைநிறைந்த எல்லாருடைய முகங்களையும் பார்த்து தன்னுடைய அகங்களிக்க வேர்த்து ஓ கோ? மீன்போலும் வேலேந்திய வேந்தர்களே நம்முடன் பகைத்து யுத்தஞ்செய்ய நினைந்து கருவிக்களைத்து படைகள் சேர்த்துக்கொண்டிருக்கிற பஞ்சபாண்டவர்களுடைய ஏவலாளாய்த் தூதுவருகின்ற கன்றுமேய்க்கும் இடையனானவன் இன்று நம்முடைய கொலுக் கூடத்துக்கு வருகின்றானாம்- அப்படியே ஒருவேளை வருவானாகில் அவனுக்குநீங்களெதிர்சென்றுவணங்கிவந்தனைவழிபாடுகள்செய்துபந்துமித்திரனென்னும்பண்பிற்கலந்துஉறவுகொண்டாடுவீராகில் உடனேஉங்களுடையநாடுநகர முதலியவூர்களைநெருப்பிட்டுக்கொளுத்துவதல்லாமலும், உங்களையும்பிடித்து விலங்கிட்டு சிறையில்வைத்து வருத்துவேனென்று முறைமைமாறிய வஞ்சகனாகிய துரியோதனன் - மிகவுஞ்சீறிக்கூறினான். அவனுடைய கோபமொழியைக்கேட்டு - கோவேந்தரியாவரும் இதென்ன கொடுமையாகிய காலமென்று தலைகுனிந்திருந்தார்கள் - இத்தன்மையாகிய வார்த்தைகளைச்சொல்லி அரசர்க்கரசனாகிய துரியோதனன்- அவைநிறைந்த அரசர்களுடனிருக்குங் காலையில் வெள்ளைமேனியாகிய பலபத்திரனுக்குப் பின் பிறந்த கறுப்பு மேனியையுடைய கண்ணன் - இரவிற்குவிந்த செந்தாமரைமலர் இரவியைக்கண்டு மலர்ந்ததைப்போல் நித்திரைநீங்கிப் பிரகாசம்பொருந்திய கண்கள்மலர்ந்து உதயாதியிலெழுந்து பன்னீர்கலந்த தண்ணீரில், ஸ்நானஞ்செய்து. நித்தியகரும விதிகளைமுடித்து மணங்கொண்ட மலர்களைக்கொண்டுதேவாராதனைமுடித்து சூரியநமஸ்காரஞ் செய்து அலங்காரச்சாலையில்வந்து ஆடைஆபரணம்அணிமணிப்பூண் முதலிய ஆகேயூர மகரகுண்டல கிரீடமுந்தரித்து நெற்றியிற் கஸ்தூரித்திலகந்திட்டிசாத்தகிமுதலியபேர்களுந் தன்னைச்சூழ்ந்துவர தாவிநடக்கும் பரிபூட்டிய தேரேறிக்கொண்டு கட்டுப்பாடுசெய்துக்கொண்டிருக்குந் துரியோதனனுடையசபைக்கு இசையையுடைய புள்ளாங்குழலைக்கொண்ட எல்லாவல்லமையுங்கண்ட ஸ்ரீகிருஷ்ணதேவர் அடிமேலடிவைத்து எழுந்தருளியகாலத்தில் வீஷ்டுமரும்துரோணாச்சாரியரும், அசுவத்தாமாவும் நீதியைப்பிரக்யாதியாய்த்தரித்த விதுரராஜனும் மற்றஅரசர்களும் எதிர்கொண்டெழுந்துவந்து சிவந்ததிருவடியில் தொழுந்தன்மையுடன்விழுந்து வணங்கினார்கள் அப்போது கர்ணமகாராஜனுந் தலையைக்கவிழ்ந்துகொண்டிருந்தான் சகுனி துரியோதனனுடைய கட்டளையினால் உள்ளமமுன்று சுவாமியின்பாதங்களைக்கருத்திற் கருதிக்கொண்டிருந்தான் இவைகளையெல்லாந் தமதுள்ளத்திற் றெரிந்துக்கொண்டுவருகின்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு எதிரிலிருந்தவர்கள் பாதபூசை முதலியதும்பண்ணி உபசரித்திட்ட ஆசனத்தின்பேரில் துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவருஞ் சாத்தகியும் எழுந்தருளியிருந்தார்கள் அந்தவேளையில் முன்னேவழியிற்கண்டுபேசி பின்னால்சபைக்கு வருகிறோமென்றுசென்ற நாரதர் கண்ணுவர் ஜமதக்கினி இந்த மூன்று ரிஷிகளும் சுவாமியினுடைய திருஷ்டிக்கு நேராகவந்து அவருடைய அநுக்கிரகத்தினால் இராஜசபைக்குவந்தார்கள் அவர்களைக்கண்டு வேதப்பிராமணர்களெழுந்திருந்து அர்க்யபாத்திய ஆசமனீய வஸ்திராபரண சந்தனாக்ஷதை புஷ்ப தாம்பூல தூப தீப நைவேத்திய மந்திரங்களினால்பூசித்து பூச்சியமுள்ள ஆசனங்களிற் பொருந்தச்செய்தார்கள் அவர்கள்மூவரும் இருந்தபிற்பாடு கோவர்த்தனகிரியைக் குடையாகவெடுத்து கன்மாரியைத்தடுத்தருளிய காசாம்பூவண்ணன் எழுந்தருளியிருக்கும் இடத்தைநோக்காமல் வேறொருதிசையில் முகந்திருப்பிக்கொண்டு நேற்றைப்பொழுது இந்தமாநகரத்தில் வந்திருந்தும் எனக்கெதிரில்வாராமல்நானமைத்துவைத்த விடுதியில்வந்திறங்காமல் என்னையிகழ்ந்து இந்தவிதுரன்வீட்டிலே போயிறங்கியகாரணமென்ன முன்னேயிதனைச்சொல்லிபின்னேபேசவேண்டியதைப்பேசலாமென்றுசர்ப்பக்கொடிதரித்த துரியோதனராஜன்கேட்க அந்தவார்த்தைகளைக்கேட்டுபுன்னகையுடையவராய் ஸ்ரீகிருஷ்ணதேவர் அதற்கெதிருத்தரஞ்சொல்லுகின்றார் ஓ நந்தியாவட்டமாலையணிந்த நராதிபனேகேளும் நீவேறென்றும் நாம்வேறென்றும் நம்மிருவரிலொரு பேதமுமில்லை இது உன்வீடு, அது அவன்வீடு, என்கிறபேதம் எள்ளத்தனையாகிலும் நானினைத்தாலல்லவோ சொல்லலாம் அப்படிநானென்றும் பேதநினைத்ததேயில்லை எமதுமனமகிட்சியாய் உமது அரண்மனைக்குவரும்போது மின்னலைப்போலும் பிரகாசிக்கும் வில்லையுடைய விதுரராஜன் எதிரில்வந்துவணங்கி எமக்குவிருந்துசொன்னான் அதைத்தள்ளக்கூடாமையாலும் யோசிக்குமிடத்தில் இன்னமொரு காரியமுண்டு அதாவது பஞ்சவர்சொல்லியனுப்பியசொல்லைச் சொல்லவந்த ஒரு தூதனாகியயான் உன்னுடையவீட்டில் வந்திறங்கி நீ யுபசரித்திடும்படியாகிய இனிமையுள்ள ஷட்ருசிகூடிய அன்னத்தைப்புசித்து உன்னோடேதானே எதிருத்தமாய்விபகாரங்களைப்பேசிவெறுக்கநினைப்பது தருமநீதியல்லவே சர்ப்பக்கொடியைத்தரித்த துரியோதனனே விவேகத்தையுடைய மந்திரிகளாயிருந்து அரசாட்சியை அழித்தாலும் பெரியோர்கள் சொல்லும் புத்தி விசேஷங்களைமறுத்தாலும் ஒருவர்செய்த உபகாரத்தைமறந்தாலும் ஒருவருடையவாழ்மனையிலுண்டு பின்பு அவருடன்பகைத்து யுத்தஞ்செய்ய நினைத்தாலும் சூரியசந்திரருள்ளவரைக்கும் இவர்கள்தாம் கொடிய நரகவட்டத்தில் குமுங்கிக்கொண் டிருப்பவர்களென்று குளிர்ச்சிபொருந்திய பொற்றாமரை மலரிற்பிறந்தருளிய மகாலட்சுமிக்கு மணவாளனாகிய மாயோன் இப்படியாகிய தருமங்களையெடுத்துச் சொல்லவே நாதனாகிய நாயகன்முகத்துக்கு நேராகத்திரும்பி இரு நயனங்களிக்க திருமுகமண்டலத்தைநோக்கிமிகவுங்குலுங்கநகைத்து ஐயோ ? பாவம், ஐவருக்குத்தூதாகிவந்த அவசரத்தைச்சொல்லுமென்று ராஜாதிராஜனாகிய அரவக்கொடியோன்கேட்க, வேதங்கள் மணக்குந் தாமரைமலராகிய திருநாபியையும் கீதங்களுடன் வண்டுகள்பாடுந் துளபமாலையையுமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியார் வேணுநாத

ஞ்செய்யுந் திருவாய்மலர்ந்தருளி ஓ திரிதராட்டிரமகாராஜனுடைய செல்வக்குமாரனேகேளும் உன் சகோதரராகிய பாண்டவர்கள் சூதாடியத்தினாலே ஐஸ்வரியமுதலாகிய அரசாட்சியை யிழந்தும்சொல்லிய வார்த்தைகள் வழுவாமற் காட்டிற்சென்று ஏதொரு ஆதரவோ மற்ற அன்னியர்களென்று சொல்லும்படியாய் வருந்தி நொந்து வெய்யிலும் வெப்பமும்மிகுந்து வாசஞ்செய்யுங் கானகத்திற்றிரிந்து குறித்தனுப்பிய தவணைநாளைத்தீங்கில்லாமல்கழித்து தெய்வச்செயலால் திரும்பிவந்த பாண்டவர்களுக்கு சொற்றவறாத குற்றமற்ற குருகுலத்திற் பிறந்த கோவே ஆதியிற்சொன்னபடி அவர்களுக்குரிய பூமியை நன்மையாகிய சிநேகத்துடன் கொடுக்கவேண்டியதென்றும் இருவரும் ஒருகுலத்திற் பிறந்த உரிமையை யுடையவர்களாதலினால் உனக்குள்ளசொந்தம் அவர்களுக்குமுண்டு அவர்களுக்குள்ளசொந்தம்உனக்குமுண்டுஆகையால் ஒருவருக்கொருவர் மனநோக்கா டில்லாமல் சிநேகித்து அவர்களுக்குரிமையுடைய நாட்டில் உனக்கிஷ்டமுள்ள சிலநாடுகொடுத்துஅவர்களுடன்கூடி வாழ்வையேயானால் நல்லசத்தியகுணநெறியுள்ள சத்பாத்திரனென்று சகல மன்னவருஞ்சிநேகித்து நாள்தோறும்புகழ்ந்து மகிழ்ந்துகொண்டிருப்பார்கள் அப்படிசெய்யாமல் மறுத்தியேயானால் பழியும்பாவமும் ஒழியாமல் வளரும்படியாகப் பலரும்பழிப்பதற் கிடங்கொள்ளுமல்லாமல் தருமமும் கீர்த்தியுஞ்சௌரியமும்சந்திரகுலத்தின்றன்மையும்தழைத்து விளங்கமாட்டாது அதுவுமக்கு நன்மையுமல்லவென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லவே எதிரிலிருந்த துரியோதனமகாராஜன் படபடத்துக் கடுகடுத்து மிகவுஞ் சீறிச் சொல்லுகின்றான் ஏ ! ஏ ! கலகத்திற்கு முதலாகிய கண்ணனேகேளும், ஆதிநாளையிற்சொக்கட்டானாடித் தங்களுரிமைகளையெல்லா மிழந்து எங்களைப் புகழ்ந்து மகிழ்ந்து காட்டிற்போய்விட்ட புனிதராகிய ஐவர்களுக்கு நாட்டையும் நகரத்தையும் வாங்கிக்கொடுத்து ஒருபாட்டைசெய்துவைக்கவேண்டுமென்று சாட்டியில்லாப்பம்பரமாட்டத்தகுந்த நீர்சொல்லியதந்திரவார்த்தைகளைநம்பி வந்திருக்கும் அந்த வம்பர்களைப்போலே என்னையும் லேசாகநினைத்துக்கொண்டு உபாயப் பேச்சினால் ஏமாற்றலாமென்று எண்ணிவந்திருக்கின்றீர் உன்பேச்சைநம்பும் ஐவர்களைப்போலே நம்புவதற்கு நானும்பயித்தியக்காரனல்ல உமது தந்திரம் என்னிடத்திற்சாயாது ஓ மாயனே அவர்கள் இன்னமுங்காடேகதியாய்த் திரிந்து காலங்கழிப்பதுவே நல்லகாரியம் அதைவிட்டுப் பேராசைகொள்ளுவது அகாரியம் இதன்றியும் சகலமன்னர்களும் பழிப்பார்களென்று எனக்கொரு பூச்சிகாட்டவந்தீர் அடடா! இந்தப்பூச்சிக்கு நான்பயப்படுவனாகில் இன்னமெத்தனை பூச்சிகள் புறப்படும் பேய்ச்சிமூலை யுண்ட பெரும்பூச்சியேகுள்ளநரிமிரட்டாகமிரட்டவந்த கோபாலா என்னை நீ வெறுத்துக்கொண்டால்த்தா னென்ன இவ்வுலகிலுள்ள அரசர்களெல்லாரும் திகைத்தால்த்தானென்ன பற்பலவாராக நினைத்தால்த்தானென்ன எனக்குப்பின்னாற்போய்ச் சிரித்தால்த்தானென்ன சத்தியவசனந்தப்பினானென்று சாத்தினால்த்தானென்ன தேவர்கள் நிந்தித்தால்த்தானென்ன மாலையணிந்த மார்பினராகியவஞ்சகநெஞ்சுடையபஞ்சபாண்டவர்கள் ஆயுதபாணியாய் என்னுடனெதிர்த்துவெவ்வியயுத்தஞ்செய்தால்த்தானென்ன இன்றும்எப்பேர்ப்பட்டகாரியங்களை எவர்கள்செய்தாலும் எவர்கள்வைதாலும் என்னென்னவுபாயம் பண்ணினாலும் உன்னுடைய எண்ணமும் பாண்டவர்களி னிச்சையும் இன்றுமுதலென்றென்றைக்கும்இல்லாதழியும்படியாய் இந்தக்குருபூமியிலே ஒரு ஊசியிருக்கும் அவ்வளவு இடமானாலும் இனிகொடுக்கமாட்டேன் இவைகளுக்கெல்லாம் நானொருக்காலுங் கலங்கமாட்டே னென்று சப்தமேகத்தின் முழக்கத்தைப்போலிரைந்து கடுங்கோபத்துடன் கண்ணில்லான் பிள்ளையாகிய துரியோதனன் சொல்ல அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் நகைத்து கிழ்க்கண்ணினால்சபையிலிருக்கப்பட்டசகலரையும் பார்த்து ஒருமொழியுஞ் சொல்லாமல் ஊமைபோலிருக்கும் வீஷ்மர் முதலிய மேலோர்களையு நோக்கி உங்களெல்லோருக்கும் இந்தத் துரியோதனராஜன்சொல்லிய வார்த்தைசம்மதந்தானாசொல்லுங்கள் குலமுறைதலைமுறையறிந்த புத்திமான்களேயென்று வினவி பெரிய அரசனாகிய திரிதராட்டிரனைப்பார்த்து ஓ மகாராஜாவே கேளும் இந்தப்பூமிக்குச் சுதந்தரமாகிய பெரிய அரசன் நீராகையால் உமது பிள்ளையின் வார்த்தையையும் என்வார்த்தையையும் கேட்டீரோ இதற்கு மறுமொழி நீர்தான் சொல்லவேண்டும் இன்னொருவர் சொல்லக்கூடாது நல்லதென்று சொன்னாலும் அதுநடவாது இதனால் கீர்த்திவந்தாலும் அபகீர்த்திவந்தாலும் உம்மைச்சாருமேயல்லாமல் மற்றொருவரையுஞ்சாராது மேலும்உமதுதம்பியாகியபாண்டுமகாராஜன் இந்த ஐந்துபிள்ளைகளையுங் குந்திதேவியையுங்காட்டிலேவிட்டு இறந்துபோனதக்ஷணம் அவர்களையழைப்பித்து தனுர்வேதமுதலிய யாவுங்கற்பித்து இளவரசுபட்டமும் ஆண்மிக்கையுங்கொடுத்து சம்ரக்ஷணைசெய்து ரட்சித்தபெரியதந்தையாகிய நீரே மறுபடியுங்காட்டுக்குப் போகும்படி சஞ்சயனிடத்தில் மனதொப்பி சொல்லியனுப்பியதே ஆச்சரியம் ஐயோ உமது மனது இப்படிகறுக்குமென் றெவர்களுக்குந்தெரியாது இதன்றியும் உமது சிரேஷ்டகுமாரனாகிய துரியோதனன் பாண்டவர்களைப்படுத்திய பாடுகளையெல்லாம் மறந்துவிட்டீராக்களும் ஐயோபாவம் பெரியவயதாகையால் உமக்குக்கியாபகம் வரும்படியாய்ச் சிலசங்கதியைச் சொல்லுகிறேன் கேளும் நூற்றைந்துபிள்ளைகளுஞ் சிறுபிள்ளைகளாய் மருவிவிளையாடிக்கொண்டு வளர்ந்து வருங்காலத்தில் மித்திரபேதநினைப்பினால் துரியோதனன் வீமசேனனுக்கு அன்னத்தில்விஷமிட்டான் பாம்புகளைக்கொண்டு கடிப்பிக்கச்செய்தான் கங்கையில் வசிநாட்டிவைத்தான் இன்னும்பற்பல தீங்குகளைச்செய்தும் அவன் மடியாததினால் ஐவரொன்னுஞ்செடியை அடியோடழித்துவிட வேண்டுமென்று கருதி கண்ணில்லாத உன்னைக்கொண்டு பாண்டவர்காசியட்டணம்போகும்படிச்செய்து அரக்கு மெழுக்கு அழிஞ்சிலினால் அரண்மனைகட்டிவைத்து அதில் தா

யையும் பிள்ளைகளையுங் குடியேற்றி நெருப்பிடநினைத்தான் நாமொன்று நினைக்கத் தெய்வந்தானொன்று நினைத்ததென்பதைப்போல் அந்தவீடுமெரிந்து இடிந்து அதிலிருந்த புரோசனனுங்கரிந்துமடிந்துபோக இவர்கள் தப்பிப்பிழைத்து இடும்பாசுரனைப் பகாசுரனைக்கொன்று வேத்திரியத்தில் பிராமணரூபத்துடனின்று பாஞ்சாலதேசஞ்சென்று மச்சேந்திரத்தையறுத்து வேந்தரைவென்று பாஞ்சாலியை மணம்புரிந்துக்கொண்டு உன்னுதவியினால் இந்திரப்பிரஸ்தத்திலிருந்து அரசுபுரிந்து இராஜசூயயாகமுடித்து உலகிலுற்றோரன்றி மற்றோரும் கீர்த்திபடித்து வெற்றிக்கொடிபிடித்துஜயபேரியடித்துப் புகழ வாழ்ந்துக்கொண்டிருந்தவர்களை அஸ்தினபுரத்துக்குவரவழைத்து மாயச்சூதினால்மாநிலத்தைப்பிடுங்கிக் கொண்டுதுரோபதாதேவியை துகிலையுரிந்து பனிரண்டுவருடம்பாண்டவர்களைக்காட்டுக்கனுப்பிவிட்டுபந்துமித்திரர்களுடன்சீரானகுடைசவிக்கப் பாராண்டுவந்தான் துரியோதனன் அந்தமட்டிலும் விட்டுவிடாமல் அவர்களைக் கொல்லவேண்டுமென்று நினைத்து தூறுவாசருக்கு விருந்திட்டு மகிழச்செய்து வனத்திலிருக்கும் பாண்டவர்களிடத்தில் இந்தப்படிக்கு விருந்துபுசிக்கவேண்டுமென்று வரம்பெற்றுக்கொண்டு அனுப்பிவைத்தான் காளமாமுனியைக்கொண்டு மாரணயாகஞ் செய்வித்து அதிலெழுந்த மகாப்பிரசண்ட பூதத்தையனுப்பி ஐவர்களைப் பட்சித்துவாவென்றனுப்ப அந்தப்பூதம்பிரேதமாகியபாண்டவர்களைப்பார்த்துவிட்டுத் திரும்பிவந்து தன்னை யனுப்பிய தவமுனிவனை வாயிற்போட்டுக்கொள்ள அந்தப் பிரமத்திதோஷந் தன்னைச் சாரும்படி பண்ணிக் கொண்டான் ஆயிரம் வார்த்தை யென்னத்துக்கு உலகிலுள்ள வஞ்சனை துரோகத்தைக்கொண்டு தன்னா லானமட்டும் பாண்டவர்க ளிறப்பார்களென்று பார்த்துவிட்டான் பாண்டவர்கள் எதினாலேயும் இறக்காமல் உம்முடைய கருணையினாலும் தெய்வ வல்லமையினாலும் அவர்க ளுடைய சத்திய சவுச ஆசாரங்களினாலும் இயாவர் களுக்கும் நன்னெறி நன்மையையுடைய விதிதராகையி னாலும் இத்தனைப் பொல்லாங்குக்கும் வித்தியாச மில்லாமற் றப்பிப் பிழைத்தார்கள் இவர்கள் கூறிவிட்ட தவணைப்பிரகாரம் பன்னிரண்டுவருடமுங் காட்டிற்கழித்து ஒருவருடம் அக்கியாதவாசமுந் தொலைத்து நாட்டிலும்வந்து நம்மையடுத்து தூதுவிடுத்து நாடுகேட் டனுப்பினவர்களுக்குப்பாதிநாடாவது பாதிக்குப் பாதியாவது உங்கள் மனதுக்குச் சம்மதியான ஏதாவது ஒரு ஊராவது கொடுத்து அவர்களை யாதரித்து சந்துருஷ்டிப்படுத்தினால் உங்களுடைய வமிசமும் புத்திர மித்திர களத்திராதியரும் சுகப்பட்டு வாழ்வீர்கள் அல்லவென்று வலிமைபேசினால் சத்துருக்களின் ஆயுதக்காயத்தை ஆபரணமாகவணிந்த மார்பினையுடைய வீமசேனன் விஜயராஜன்முதலிய பேர்களால்கண்ணீர்ததும்பி கால்சாய்ந்தோடி வெந்துவெதும்பி விரிந்துபோவீர்கள் அவர்களுக் கீடாகியபேர் யாருமில்லை துரியோதனாதியர் சொன்ன சொற் சோர்ந் தார்கள். அதனால் ஐவர் வந்துவிழுந்து அடித்து நாசப்படுத்தி அகண்டசாம்பிராச்சியமுங் கைக்கொண்டார்களென்று அவர்களுக்குப் பிரதிஷ்டையும் உங்களுக்கு அப்பிரதிஷ்டையுமுண்டாகும் மேலும் நான், அவர்களுக்கும் உங்களுக்கும் சமமாகிய பாத்தியஸ்தனாகையாலும் பாண்டவர் களின் வீரப்பிரதாப மெய்மை முதலிய தருமங்களை அறிந்திருக்கின்றவனாகையாலும் உங்களைச்செவ்வைப்படுத்தும் பொருட்டு இவ்வளவு தூரம்வந்து உங்களுக்குச்சொல்லவேண்டிய உறுதிமொழிகளையுஞ் சொன்னேம் அதேனெனில் இருதிறவர்களுடைய காரியங்கள்யாவுந் தெரிந்திருந்தும் நடக்கப்போகிற செய்கைகளும் எண்ணங்களும் உணர்ந்திருந்தும் ஒருவார்த்தை முன்னாடிச் சொல்லலாகாதா இருவரையும் ராசிபண்ணிவைக்கலாகாதா? ஓ கிருஷ்ணாவென்று வெறுத்துக் கொள்ளுவீர்கள் அன்றியும் தெரிந்துந் தெரியாமலிருப்பவர்களுக்கு அந்தச்சங்கதி தெரிந்த உரியவர்கள் முன்னாடி தெரிவிக்க வேண்டியது. அப்படிக்குத் தானறிந்தமாத்திரந் தெரிவிக்காவிட்டால் அவர்கள் கோத்திர சத்துருவென்றும் கொடிய பாவிகளென்றும் தருமசாஸ்திரங்களிற் குறித்திருக்கின்றமையால் பாபத்திற்கும் நரகத்திற்கும் பயந்து நயந்து அக்கரையாகச் சொன்னேம் இன்னமுங்கேளும் உமது தம்பி பிள்ளைகள் உன்சொல்லைக் கடக்கவறியார்கள் இத்தியாதி துன்பத்திலேயும் பெரியதந்தை மொழியென்று பேசினால் சத்தியமொழியாகத் தலைமேற்கொள்ளுகிறார்கள் தார்வேந்தே லோகாலோகமெல்லாம் வெற்றி கொண்டு இராஜசூயாகமுஞ்செய்து சந்திரகுலத்துக்குப் பெருமையும் புகழும் இந்திரன்போலொத்த வுனக்கு அழகும் அருமையும் சம்பாதித்த சுதந்தராளாகிய பிள்ளைகளின் பே[illegible] சந்தோஷப்படாமல் பெருமையும் புகழையும் போக்கடிக்கும் பிள்ளைகளின்பேரில் இச்சைவைத்து அவர்களுக்குக் கொச்சைகளைச்செய்ய உமது மனம் ஒப்பியிருந்ததல்லவா இப்போது இந்த இருதிறப் பிள்ளைகளையும் இரண்டு கண்களாகப்பார்த்து இஷ்டமுடன் நடப்பிப்பது திட்டமாகிய உமதுகடன் பட்டத் திறையே உன்னுடைய குலநட்ட மில்லாமல் தாயாதியின் பாகத்தை தம் பிள்ளைகளுக்குக்கொடுத்து தமதுடைய பாகத்தை நூறுபிள்ளைகளுக்குங் கொடுத்து சந் துருஷ்டியாய் பொருந்தி வாழ்கச்செய்வதைவிட வேறொரு பொருளுமில்லை பூமியிற் புகழுமில்லை இதைவிடுத்து இந்த மண்ணாசை கொண்டு யுத்தம்பண்ணினால் யார் சாவார்களோ யார்பிழைப் பார்களோ தெரியாது யார்செற்றாலும் யார்பிழைத்தாலும் துக்கமுஞ் சுகமும் பெற்றதந்தையாகிய உம்மைச்சாருமல்லாமல் மற்றொருவரைச் சாராது உம்மிடத்தில் உற்றிருக்கும் வீராதிவீர வீரப்பிரபல அரசர்கள் யாவரும் நாளை விளயப்போகிற் வினயமறியாமல் ஓச்சன் கைவாளுக்குள் அகப்பட்ட ஆட்டுக்குட்டி தன்றலைபோவதை யுணராமல் தழையைக்கண்டு சந்தோஷப் படுந் தன்மையைப்போல் மகிழ்ந்து எமன்வந்தாலும் மற்றெவன்வந்தாலும் போய்விழுந்து பொருதுகிறோம்; வென்று ஜயங்கொண்டு வருகிறோமென்று இருந்த இடத்திலிருந்துக்கொண்டு வாய்ச்சுளுவாய் வீரமாகப்பேசுவார்கள். அதெப்போது

தெரியுமென்றால் மூன்றுங்கட்டு அவிழ்க்கும்போது தெ
ரியுமென்பதுபோல் சத்துருவைச் சமீபத்தில் காணும்
போது பறந்தும் தங்களைத் தாங்கள் மறந்தும் தொண்
டைமண்டை நிறந்தும் இறந்தும்போங் காலத்தில் உங்க
ளுக்குந் தெரியும் இப்போது எவர்களுக்குந் தெரியாது
அப்பேர்ப்பட்ட விரபராக்கிர மங்களை யுடைய வீரர்கள்
பேச்சை நம்பி பாண்டவர்களைப் பகைகொண்டு மேதினி
யையும் செல்வத்தையும் விருதாவி விழக்கப்போகிறீர்க
ள் வாய்ப்புஷ்டியின்வார்த்தை கைப்புஷ்டிக்கு நிற்குமோ
ஐயா நான் சொல்லுமொழி காரசம்போ லிருந்தாலும்
இனிக் கொஞ்சநாளையில் பஞ்ச பாண்டவர்களின் மிஞ்சி
ய சக்தியை தஞ்சங் தஞ்சமென்று நீங்களே அஞ்சி யறி
யப்போகிறீர்கள் வஞ்சனையில்லாத வார்த்தை யாடும் மன்
னவேங்களும் உபலாவியத்தை விட்டுப் புறப்பட்டு அஸ்
தினாபுரத்தை நோக்கி உம்மிடத்துக்கு நான் தூதுவரும்
போது பாண்டவர்கள் பணிந்து சொல்லிய பக்ஷத்தைக்
கேளும் ஐயா? எங்கள்பாட்டனார் வீஷ்டுமருக்கும் தனு
ர்வேத ஆசாரியர்களுக்கும் நேசமுள்ள பெரியதந்தைக்கு
ம் விதுரர்முதலிய பெரியோர்களுக்கும் சாஷ்டாங்க நம
ஸ்காரஞ்சொல்லி சகோதரர்முதலிய உரியோர்களுக்கும்
தகுந்த வந்தன வழிபாடுகளையுஞ் சாற்றி மிகுந்த வருத்த
மடைந்த எங்களுக்கு ஆதியிற் பிரித்துக் கொண்ட அர
சாட்சியைக் கொடுத்தாலுஞ் சரி அல்லது அவர்களுக்கு
ச் சம்மதமாகிய நாடு கொடுத்தாலுஞ் சரி அவர்கள்கொ
டுக்கப் பெற்றுக்கொண்டு வாரும் எப்போதும் நாங்கள்
எங்கள் தந்தையினுடைய பக்ஷவார்த்தையைக் கடந்து
நடவோம் ஒருவேளை இதுதான் சமயமென்றும் காட்டு
க்குப் போகச்சொன்னால் அதுமாத்திரம் ஒப்பமாட்டோ
ம் ஆனால் எதுவுங் கொடுப்பதில்லை யுத்தத்திற்கு வருகி
றோமென்று இசைவார்களாகில் ஆயிரத்தெட் டண்டமு
ம் ஆளும்படியாகிய சந்தோஷம் எங்களுக்கும் சுவாமி உ
டனே அந்த யுத்தவார்த்தைகளை ஸ்திரபடுத்திக்கொண்
டு வீரகண்டாமணி தரித்திருக்கும் வேந்தர்கள் முன்னி
லும் சான்றோர்களாகிய மேலோர்கள் முன்னிலும் திரிதரா
ட்டிர மகாராஜனுக்குத் தெரிவித்து அவர்சொல்லும் வா
க்கியங்களைக் கேட்டுக்கொண்டு சகலருமறியச் சாட்சிமு
ன்னிலையில் துரியோதனனிட த்தில் உறுதி பெற்றுக்
கொண்டு காலதாமசமில்லாமல் கதுமென வாருங் கண்
ணனே என்று விடைகொடுத் தனுப்பவந்த நான் என்னு
ள்ளேயிருந்த யாவத்தையும் எடுத்துச் சொன்னேன் இ
னிமேல் இதுகளையெல்லாம் யோசித்து மேல் நடக்கவே
ண்டியகாரியங்களையும் நிதானித்து தாயாதிபாகங் கொடு
ப்பதும் கொடுக்கக்கூடாதென்று மறுப்பதும் சண்டைக்
கு வருகிறதும் அந்தச்சண்டை இன்னதினத்திற் றொட
ங்குவதென்றுந் தெரியப்படுத்துவீராகில் பார்ப்பாத்திய
ம்மா மாடுவந்தது பார்த்துக்கொள் ளென்னும் பழமொ
ழிபோலே சிக்கிரஞ்சென்று செய்தி யிதுவென்று பாண்
டவர்களுக்குத் தெரியச்செய்து விடுவேன் வீணாக வாழ்
நாளைப் போக்கடித்துக்கொண் டிருப்பதில் லாபமென்ன
சொல்லுங்களென்று சுவாமியார்கேட்க இந்த வார்த்தை

களையெல்லாங் கேட்டிருந்த திரித ராட்டிர மகாராஜன்
பெருமூச்சுவிட்டுப் பிரலாபித்து தாமரை யுந்தியை யு
டைய சர்வலோக சரண்யனைநோக்கி என்னருமை மரு
மகனே நீருரைத்த மொழிகளெல்லாம் நிசமே, நிசமே,
நானென்னசெய்வேன், எலிவார்கையிற்கொடுத்த கல்லை
ப்போல் என்னரசாட்சியை பசகளிடத்திற் கொடுத்துவி
ட்டு நான் பரதவித்து பல்லைக்காட்டிக்கொண் டிருக்கின்
றேன் என்னிடத்தில் நாடுநகர மிருக்குமாகில் என்றம்பி
பிள்ளைகளுக்குக் கொஞ்சமேனும் வஞ்சனை செய்வனோ
அஞ்சனவண்ணா நீ - நன்னு யோசிக்கக் கடவை காசில்
லாத வெறுங்கையையுடையவன் முழம்போடு மாப்போ
ல் எனக்கு ஆசையிருக்குது ஐவருடன் விசுவாச நேச
மாயிருக்க வேண்டுமென்று அப்படி யிருந்தாலும் என்
வார்த்தையை என்பிள்ளைகள் எடுத்தெறிந்து விடுகிறார்க
ளேகண்ணனே இந்திரனுலகுக்கொப்பாகிய இந்தச்சந்திர
வமிசந் தழைக்கும்படியாக யோசித்து நீயே-சந்தி செய்
து வைக்கவேண்டியது தாமரைக்கண்ணா நீர் தயைசெய்
து எனக்குச்சொன்ன சங்கதி யாவற்றையுந் துரியோத
னனியருக்குத் தெரிவித்தால் உமது வார்த்தையை ஒருக்
காலுந் தள்ளான் உம்மிடத்தில் மிகுந்த அன்புள்ளான்;
தேவர்சொல்லவுந் தண்டிக்கவும் கண்டிக்கவும் திட்டவும்
வெட்டவும் பொருத்திவைக்கவுந் திருத்திவைக்கவும் ச
கல சுதந்தரமும் உமக்குண்டு நீரோ இவடத் துக்கு வந்த
மட்டுக்கும் என் துன்பத்தைநீக்கி என்னைக்கடைத்தேறச்
செய்யுஞ் சுவாமி கண்ணனே! என்று திரித ராட்டிரன்
சொல்லக்கேட்டு தேவாதி தேவனாகிய சக்கிராதரன் து
ரியோதனனைப்பார்த்து நீதிவசனங்கள் சொல்லத் தொ
டங்கினார், ஓ! பேரும் பிரக்கியாதியுமுடைய பூமண்டலா
திபதியே உத்தமராகிய பெரியோர்முதலிய உன்றந்தையு
ம் பேசிய வாக்கியங்களையெல்லாங் கேட்டீரல்லவா இப்
போது நான் சொல்லுவதையுங் கேளும் பிரதாபசாலி
யாகிய விஜயன் கயிலாசபதியைக் குறித்துத் தவஞ்செய்
து பாசுபதாஸ்திரமுதலிய வரங்களையும் பெற்று தேவே
ந்திரன் எதிர்கொண்டழைக்கத் தெய்வ லோகத்திற்போ
ய் இந்திராணியுபசரிக்கத் தெவிட்டாவமிர்தம்புசித்து கா
லகேயர்முதலிய வரக்கரைப் பாசுபதாஸ்திரத்தாற் காய
ந்து இந்திரலோகத்தில் கிரீடம்பெற்று கீர்த்தி கொண்ட
கிரீடியினுடைய கெடிவீர கர்மங்களையும் வீமசேன னு
டைய திடகாத்திர பராக்கிர மத்தையும் மற்றவர் களின்
மனோதிடத்தையும் அறிந்திருக்கின்றீரல்லவா? அப்பேர்
ப்பட்ட சாமர்த்தியவான்கள் இப்பேர்ப்பட்ட குலத்திற்
பிறந்து உமக்குச் சகோதரர்களாகிக் காட்டி லிருந்து க
ண்கலக்கப்படவும், நீர் நாட்டிலிருந்து சவுக்கியநலத்தை
ப்பெறுவதும் ஞாயமன்று, பார்ப்பவர் கேட்பவர் களுக்
கும் அழகன்று, மேலும் உங்க ளிருதிறவர்களில் நிறைவு
க்குறைவு நேரிட்டால் ஒருவருக்கொருவர்சகித்துக் கொ
ண்டு - தருமவிரோதமில்லாமல் - பெரியோர்கள் சொல்
லும் வாக்கியங்களைச் சிரமேற்கொண்டு பழுதுவாராமல்
இருவரும் ஒருமைப்பட்டு வாழ்வீர்க ளாகில் உமது ச
கோதரர்முதலியசுற்றத்தார் புத்திரமித்திரர்முதலாகிய

வெகு சனங்களும் சுகமாகவிருந்து பிழைக்கலாம் பராஜரும் பயந்து மதிப்பினை யுடையவர்களாய்ப் புகழ்ந்து வாழ்வார்கள், இம்மைப்பயன் - மறுமைப்பயன்-இரண்டுக்கும் லாபமாயிருக்கும் இந்திர சந்திரருள்ளவளாக்கும் இகட்சியில்லாப் புகட்சியுண்டாமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்ல அதைக்கேட்டிருந்த திரிதாாட்டிரன் சிந்தை களித்து மைந்தனைப்பார்த்து அப்பா! நந்தநந்தனனுரைத்த இந்தவார்த்தை உன்னை விந்தையாகச் சுகப்படுத்தும் அதற்காகவே இந்த அஸ்தினபுரத்தில் அரசர் சபைக்குவந்தது அப்படி வந்தபோதிலும் தான்வந்த காரியத்தை ஆம் அல்லவென்று பார்த்துக்கொண்டுபோகாமல் உன்னுடைய கோபதாபத்திற்கு முடன்பட்டு - இவ்வளவுபுத்திமதிகளை இவரைப்போல் யார்சொல்லப்போகிறார்கள்.தம்பி ஆகையால் இவருடைய மொழியே வேதம் இவரே தரும ஸ்வரூபி, இவரால் உன்குலமும் வாழ்வுந்தழைக்கும் குறைவில்லாப் பாக்கியமுஞ் செழிக்கும இந்த கோபாலகிருஷ்ணருடைய இஷ்டப்படிக்கு உனக்குத் தோன்றிய நாட்டை ஐவர்களுக்குக் கொடுத்து அவர்களும் நீங்களும் தாழ்வில்லாமல் வாழ்வதே வாழ்வு அப்படிச் செய்யாவிட்டால் இனி வருவதெல்லாந் தாழ்வு மேலும் தருமராஜன் உன்னிடத்தில் வைத்திருக்கும் பிரீதிவாச்சல்யங்களைப்போல் என்னிடத்திலில்லையே அடாசுதனே அப்பேர்ப்பட்ட அண்ணனையிழந்து அன்னியர்களைப்புகழ்ந்து ஆபத்தாளாயெண்ணிக் கலந்துகொண்டிருப்பது காரியமல்லவே தன்னைப்பெற்றதாய் தவிட்டுக்கலைய பொன்னைச்செலவழித்துப் பூரிகொடுத்தான் பிள்ளையென்பதுபோல் பெருமைபெறும்படி பிறரைத்தழுவி? அவர்களுக்குப்சரிப்பதினால் ஆவதென்ன அப்பனே இப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணதேவரும் பெரியவர்களும் தந்தையாகிய நானும்சொல்லும் வார்த்தைகளைச் சோர்வுபடவொட்டாமல் பாண்டவர்களுடன் பக்ஷமாய்க்கலந்து வாழ்வையாகில் எங்களுக்கெல்லாம் பெருமையுஞ் சிறப்புமுண்டாம் நமதுசொல்லைக்கடவாமல் நடந்தான் துரியோதனனென்று நாங்களெல்லாரும் புகழ்ந்துமகிழ்ந்து பூரிப்பையடைவோம் இதன்றியும், இரண்டுகண்ணுந் தெரியாதவென்னை இவ்வுலகுக்கு இறையாக்கிவைத்து என்சொல்வழிநின்று என்னேவலைச்செய்து எதிர்த்தசத்துருக்களைக்கொய்து சகலபெருமையும் நானடையச்செய்து ஊழியனைப்போலடங்கி நடந்துவந்த என்தம்பியாகிய பாண்டுராஜன் அவனால் நிலைத்த ராச்சியமிது அவனுடையசெல்வம் அவனுடைய அரசாட்சி அவனுடையபிள்ளைகள் ஆதலினால் எனக்கென்னசொந்தமுண்டு மகனே அந்தபாக்கியவானுடைய பிள்ளைகளை பரதேசிகளைப்போல் வேறுபடுத்தி பதிதிமுதலிய பாக்கியங்கொடுக்காமல் பகைமேற்கொண்டுபேசினால் ஐயையோ ! பாவம்விளைந்துய்யுமே மன்னவர் நிதியுமாயுமே நமது குலமுறைகுன்றுமே நானிலமெல்லாம் நகைக்குமே கலகமு மிருக்குமே அரசரிற் பகைவிக்குமே அதனால் நமது உரிமையும், பெருமையும். நீங்குமே வறுமையுஞ் சிறுமையுமோங்குமே வையகமுழுமையு மேன்றுமே மதலாய்பின்னும் இந்தக்கிருஷ்ணதேவர் நமது அருச்சுனனுக்கு இஷ்டரென்றும் உனக்கு அபிஷ்டரென்றும் நீயெண்ணியிருக்கின்றாயல்லவா அப்பா இவர் உங்களிருதிறவருக்கும் இரண்டுநேத்திரங்களேயன்றி வேறல்ல நமது உரியசம்பந்தத்திற்கும் புறம்பல்ல இவருடைய உறுதியும் உதவியும் உங்களுக்குத் துணையேயல்லது வேறுதுணையில்லையே இந்தப்பகவானுடைய வசனத்தின் வண்ணம் ஐவருக்குரிய அரசைக்கொடுத்து சண்டைமுதலிய சபதங்களையும்விடுத்து சமத்துவமாகத்துணைத்தனஞ்செய்து ஜகமெல்லாம்வாழ்த்த சுகம்பெறக்கடவீர்களென்று திரிதாாட்டிரபூபதி துரியோதனனுக்குச்சொல்ல இவைகளைக்கேட்டிருந்த விஷ்டுமர் பக்ஷபாதமில்லாமல் நடுவுநிலைமையாகச்சொல்லிவந்த திரிதராட்டிரனைப்புகழ்ந்து உள்ளமகிழ்ந்து பேரனாகிய துரியோதனனென்னுங்குபேரனை தமது திருவருட்கண்ணாரநோக்கி உன்னுடையமனக்களங்க நீங்கும்படியாக நானுரைக்கும் வசனத்தையுங்கேட்கக்கடவை அடா ! குழந்தாய் பரதகுலத்திற்பிறந்த ராஜாதிராஜனாகிய நீ பெரியோர்முதலிய பந்துமித்திரர்கள்சொல்லும்வார்த்தைகளைத்தள்ளலாகாது பாபத்தை மூட்டை கட்டலாகாது பிராணனை அலக்ஷயமாகவெண்ணி யுத்தஞ்செய்ய நினைப்பது க்ஷத்திரியதருமமானபோதிலும் சத்துருக்கள்பேரி லல்லாமல் சுற்றத்தார்பேரில்விரோதநினைக்கக்கூடாது தன்னுயிரைப்போலே மன்னுயிரைக்காத்து தருமத்தை நிலைநிறுத்தவேண்டியது பெருமையும் புகழும் பெறவேண்டிய பதார்த்தமல்லாமல் சிறுமையும்இழிவுஞ்சேர்க்கலாகாது தாழ்ந்தபேர்களுடன் சிநேகமாகாது தையலார்மோகந்தாங்கலாகாது நல்லவர்கள் நடுங்கச்செய்யலாகாது நாவினாற் பதறிப்பேசலாகாது இரக்கந்-தயை-சாந்தம்-பொருமை- இவைகளிருக்கவேண்டியது இம்மைப்பயனையும்மறுமைப்பயனையும் எண்ணிநடக்கவேண்டியது இத்தன்மையவாகிய பற்பல நீதிகளும் தருமங்களும் உன்னிடத்திற் குடிகொண்டிருக்கவேண்டும் ஐயனே நமது குலபுத்திராகிய பாண்டவர்கள் அன்னியரல்லவே அவர்களுக்கு உன்னிஷ்டத்திற்றோன்றிய ராச்சியங்கொடுத்து கீர்த்தியையுங் கௌரவத்தையும் பெறவேண்டியது, இந்தப்படிக்கு நாட்டைக்கொடுத்தால் பாண்டவருக்குப்பயந்துகொடுத்தான் துரியோதனனென்பதாய் உலகத்தார் பழிப்பார்களென்று நீ நினைக்கப்போறாய் அந்த அபிமானம் உனக்குவேண்டாம் அதேனென்றால் அன்னியரிடத்தில் அபகரித்துக்கொண்ட அரசாட்சியை மறுபடியுங்கொடுக்கநினைப்பையாகில் மன்னவரெல்லாரும் உன்னைச் சின்னத்தனமாகச்சொல்லுவார்கள் அதுமூலத்தினுனக்குக் குறைவுண்டாம் இப்போதுநாங்கள் சொல்லுவதினால் உனக்கு யாதொரு தாட்சியுமில்லை மாட்சிமையுடைய மைந்தனே அண்ணன்தம்பி தாயாதிகள் ஒருவருக்கொருவர் ஏதோகொஞ்சம்முகத்திருப்பாயிருந்து நிரடித்தால் நீர்விலகுமாவென்பதுபோல் மறுபடியுங்கூடிக்கொண்டார் புத்திமான்களென்று சகலருஞ்சந்தோஷப்படுவார்கள்மைந்தனே ஐவராகியசகோதரர்களுடைய அரசைச்சூதாடி அநியாயமாய்ப்பறித்துக்கொண்டான் துஷ்டனாகிய துரியோதன

னென்று நிஷ்டூரவசனங்களினால் பலருந் தூற்றுவதைப் பார்க்கிலும்நாங்கள் சொல்லும் நன்னெறியின்படி நீ நடப்பது குறைவோ நிறைவாகிய குறைவற்றதோவே இந்தப்படி நீ நடவாவிட்டால் இந்தப்பாருள்ளவரையிலும்கடல்நீருள்ளவரையிலுங் கருங்காருள்ளவரையிலும் மகமேருள்ளவரையிலும் பழிச்சொல்லும் பாவமும் கிளைகிளையாய்ப்பிணியுமேயல்லது மற்றொருலாபமுமில்லையே அரவக்கொடியோனே இந்தக்கிருஷ்ணதேவர் நமதுபட்டணத்துக்குவரவும், இராஜசபையேறி யுன்னிடத்தி லிருந்து பேசவும் நாமெல்லோரும் எத்தனைக்காலந்தபசுசெய்தாலுங்கிட்டாதே அப்பேர்ப்பட்டவர் நம்மிடத்திற் கலந்து இபாவருடைய புண்ணியவசத்தினாலேயோ வந்து உனக்குமிருந்த கருமநீதிகளைச்சொன்னார் அவருடையவாக்கியத்தை வேதமந்திரமாகக்கொண்டு மேன்மையுறக்கடவை இதுகிடைத்ததற்கருமையாகிய பொருள் இந்தமகானுபாவரை லேசாகநினைக்கவேண்டாம் இவரோ புராணபுருஷர் நம்மிடவர்களில் மகாபுத்தியும் யுத்தியும் ராஜதந்திர வெற்றியுமுடைய வுத்தமராகையால் இவருடையவாக்கியத்தைச்சிரமேற்கொண்டு நடப்பையாகில் ஊழிமலையுங்காலம்வரைக்கும் உன்கீர்த்திதொலையாது தீர்க்காயுசுடன் படிமீது கொடியுடைய அரவக்கொடிமுடி மன்னனாகயிருப்பாயப்பா பார்த்திபனே இந்தபகவானுடைய பக்குவமொழிகளைக்கேளென்று காங்கேயன்சொல்ல பக்கத்திலிருந்ததுரோணாச்சாரியர்வணங்காமகுடமன்னனைநோக்கி ஓ மன்னரேறே பாண்டவர் தூதனாகவந்து யிவடத்திலிருந்து பேசுகின்ற இவரையாரென்றெண்ணியிருக்கின்றாய் இவர்தான் பரமபதநாதன் சங்குசக்கிர கதாகட்ககோதண்டதாரி கோவர்த்தனகிரியைக் குடையாகத்தூக்கி ஆயர்களுடைய ஆபத்தைக்காத்த அரிபரந்தாமன் உங்கள் குலமாகிய திங்கள்குலஞ்செய்த தவத்தால் இங்குவந்து எங்களுக்குத் தரிசனமாக வுமது சபைக்கெழுந்தருளினார் இந்தக்குலத்தின் முதியோரெல்லாம் ஜன்மாந்திரத்திற்செய்த தபோபலத்தினால் உன்னுடைய கோபமொழிகளையெல்லாங்கேட்டு சகித்துக்கொண்டு குணமாகிய தருமமுறைமைகளையுங்கூறினார் உன்னொருவனால் உலகஞ்சுகப்படவும் நாங்கள் காண்பதற்கும் யிவடத்திற்றிருவடி பெயர்த்தருளினாரல்லது பாண்டவர்களுக்கு நாடுபெறவேண்டி முக்கியமாய்வந்தவரல்ல நீ நன்றாகயோசிக்கத்தக்கது ஆதியில்காண்டவபிரஸ்தமென்னுங் காட்டை ஒருகோடிப்போதில் இந்திரப்பிரஸ்தமாகயேற்படுத்தியெல்லாப்பாக்கியங்களும்பாண்டவர்களுக்கீய்ந்த இறைவன் அகண்ட சாம்பிராசசியமும் இப்போது அளிக்கவேண்டுமென்றுநினைத்தால் அதற்குயாதொரு அட்டியுமுண்டோ அப்பனே அப்படிநினைத்துவந்தவரல்லநீங்களொருகுலத்திற்பிறந்தவர்கள் உரிமையாகவிருப்பதழகென்றுஉரைக்கவும் நமது புத்ரமித்ர களத்திராதிகள்முதலிய நாமுஞ்சுகப்படவும் எண்ணியெழுந்தருளியதேயன்றி வேறல்லஇவைகளையெல்லாம் உள்ளிக்கைதைபுட்கொண்டு சொந்தமாகவந்தபகவான் சொல்லியவார்த்தையின்படிக்கும் உன்தந்தையுரைத்த தருமத்தின்படிக்கும் காடுதிரிந்துவந்த பாண்டவராகிய கனவான்களுக்கு நாடுகொடுத்து நாரணன்முதலாகிய நால்வரும்புகழ ஐவர்களுடனிருந்த தருமராஜனும் வீமனுங்கழுவ வணங்கியும் மற்றவருன்னைப்பணிந்துவாழ்த்த இணங்கியும் நாங்களியாவருங்கண்டு கண்களிக்கவும் சவுபாக்கிய சம்பன்னனாகவாழ்வைப் பொருந்தித் தாழ்வில்லாமல்வாழக்கடவை துரியோதனாவென்று துரோணாச்சாரியருஞ்சொல்லவே இம்மொழிகளைக்கேட்டிருந்த துரியோதனன்இடியைப்போலிரைந்து நீங்களளிக்கவேண்டியபகல்விகளெல்லாம் இவ்வளவுதானோ இன்னமேதாகிலுங் கொஞ்சங்குறை யிருக்கின்றதோ வென்றுகுலுங்கநகைத்து குத்தமுங்கோபமுங்குடிகொண்டெழும்பக் கொதித்துப்பகைத்து மணிவண்ணனாகியமாயனைப்பார்த்துச்சொல்லுகின்றான்.

ஓகோ ! கபடநாடகா ? உன்னுடைய கற்பனையினாலும் உன்திரோககாந்தியினாலும் நஞ்சனையவஞ்சகநிறைந்தவுன்னெஞ்சத்தினாலும் நீ கொஞ்சமேனும் யோசிக்காமற்சொல்லிய நீதிசாஸ்திரங்களினாலும் இவடத்திலிருப்போருடைய பக்கச்சொல்லின் பலத்தினாலும் என்னைமயக்கிமருட்டி நாடுபெற்றுக்கொண்டுபோகவல்லவோ நாடிவந்தாய் அடடாநாரணனே நீ ஓடிவந்ததற்கு நான்நாடுகொடுத்தவன்றான் நீவாங்கினவன்றான் ஐயோ பாவம் பாண்டவர் நீ வரும்வழியைப்பார்த்துங்கொண் டிருப்பார்களல்லவா சமுத்திரத்தின் அலை ஓயப்போகிறதுமில்லை தற்பணஞ்செய்து தம்பி தலைமுழுகப்போகிறதுமில்லை தமயனுக்குப்பெண்வாய்க்கப்போகிறதுமில்லை தங்கச்சிகலியாணம் முடியப்போகிறதுமில்லை என்னும்வாக்கியத்தை நீர்கேட்டதில்லையோ இந்தமட்டும் போதும்போதும் எங்களவர்களெல்லாரும் மெத்தத்தெரிந்த பெரியோனென்னும் பேர்மாத்திரமேயொழிய பின்னையொன்றுமில்லை உன்னுடையவஞ்சனையும் சூதும்மாயவித்தையும் எனக்குத்தெரியும் இவர்களறியமாட்டார்கள் நீரெல்லோரையுமயக்குவாய் நான் உன்னைமயக்கும்படியாகிய உலகுக்கொருவன்வணங்காமுடியோன் நந்தியாவட்டமாலையான் அரவகேதனன் ராஜாதிராஜப்பிரதாபவீரன் கெடிஸ்தலாதிபதியாகிய என்னை நீ நன்குமதித்துப்பாரு புன்குமரத்தின்கீழ் கன்றுகள் மேய்க்கும் புண்ணியனே நான் ஆளப்போகிறது அந்நாடானாலும் ஐவர்வாழப்போகிறது இந்நாடாகியமண்ணாடானாலும் அவர்களைவணங்கிப்பணிந்துகைகுவித்துவாழேன் அவர்களுக்குநான்தாழேன் அணுவத்தனைநாடும் அவர்களுக்குக்கொடுக்கேன் என்பிராணனிருக்கிறவரையிலும் அவர்களை உயிருடன்விடுக்கேன் உங்களுடையயுத்திபுத்திகளைக்கேட்டுநடக்கேன் ஒன்றுங்கொடுக்கேன் இதுதான்கடைசிவார்த்தை நாளைநடக்கப்போற அமர்க்களத்தில் அவரவர்களுடைய பெருமையும் பிரதாபங்களும் வீரமும்தீரமும் வெளிப்படவேபோகுது ஆகாயத்திலிருக்குந்தேவர்கள்வேடிக்கைபார்க்கவேபோகிறார்கள் இதற்குள்ளாக நீங்களெல்லாரும் ஏன்மனமடிந்துபோகிறீர்கள் திங்களைத்தரித்த சங்கரன்வந்துரைத்தபோதிலும் பஞ்சவருடைய பங்கைக்கொடுக்க மாட்டேன் இந்தப்பெரியோர்களைப்போல் உம்மைமதித்து உமது

வார்த்தையையும் நம்பிக் கேட்கமாட்டேன் என்றந்தையே முதலாகிய உரியபெரியோரெல்லாரும் என்னை வெறுத்தாலும் இந்தப்பிரபஞ்சமெல்லாம் என்னைப்பழித்தாலும் என்னைச்சார்ந்தவர்களெல்லாரும் மாண்டழிந்துபோனாலும் பாண்டவர்கள்மறுபடியும் நாடுபெற்றதாய்ப்பட்டிணமெழுதவொட்டேன் இல்லையென்று என்னுக்கினும் சொல்லியவாக்கியத்தை மறுத்து நாடுகொடுக்கிறதாய்ச் சொல்லிமாட்டேன் திடங்கொண்ட என்மனத்துறுதியிதுவாக்கரும் ஓ கிருஷ்ணனே உன்னெண்ணத்தை இப்போதேமறந்துவிடென்று சிறந்ததுரியோதனன்சொல்ல ஸ்ரீகிருஷ்ணமூர்த்திகேட்டு திருமுகமண்டலத்தில் திவ்ய காந்தியுடையவராய் புன்னகைகொண்டு மன்னனைநோக்க அந்நேரத்தில் சபையில்வந்திருந்த முனிவர்முவர்களில் ஜமதக்கினியென்பவர் நந்தியாவட்டத் தாரினையுடைய நாயகனைப்பார்த்து ஓ ராஜாதிராஜனே இவ்வுலகத்தில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னும் ஈஷணத்திரையங்களில் வீழ்ந்து மயங்கி நிலையில்லாத தோற்பையாகிய பொய்யைமெய்யென விரும்பிவிறுதாவிலழிகின்ற விவேக சூனியனைப்போலலையாமல் உண்மைப்பொருளை நாடிய உத்தமரென்றுரைக்கும்படியாய் வேடம்பூண்டு உலகுக்குச்சிஷ்டாசாரத் தன்மையைப் பழக்கி பாபத்தை யொறுத்து புண்ணியத்தை நிலை நிறுத்த வேண்டி நர நாராயண ரிஷியாகவந்து கந்தசுவாமி விளையாடிக் கொண்டிருந்த கந்தமாதனச் சாரலில் யாகங்கள் செய்து சகல சித்தியும் பெறும்படியாக மௌன விரதம் அனுஷ்டித்துக்கொண்டு வருநாளையிலொருநாள் இடிகளை யிடிக்கு முடிகளும் மொழிகளும் சக்கிர வாளத்தைச் சாய்க்கும்பலமும் தேவதைகள் நிராயுதபாணியாக ஓடச்செய்யும் பிரதாபமும் வடவா முகாக்கினியைப் புண்கள்செய்யும் பெரிய கண்களும் இந்தப் பூமியைச் சுற்றிலும் செல்லும்படியாகியவில்லும் அஸ்திரங்களும்தலையில்முடியும்ஜயவிரக்கொடியும்தானேறியதேரும் பாபியென்னும் பேருந் தாங்கிய ஆண்மிக்கையை யுடைய அரக்கனொருவன் வந்து தவஞ்செய்வோர்களைக் கண்டு ஆடா யிங்கு தவம்புரியாநின்றவர் உங்களுக்கு வில்லேன் பாணமேன் வீராதி வீரரைப்போலிருக்கின்றீர்கள் வெளியே வாருங்களடா வென்று மேகம்போல் மொழிந்து சரங்களைப்பொழிந்தான் அவனைக்கண்ட புண்ணிய சீலர்களிருவரும் இவனுடன்பொருதினால் நமதுதவங் கெடுமென்றெண்ணி அந்த ராக்ஷதனுக்கு அநேக வுபசாரச் சொல்லுகளைச்சொல்லி அப்பா !! நாங்கள் தபசிகள் மிருகபயங்கரத்திற்காக வில்- பாணம் வைத்திருக்கின்றோம் - மற்ற வேறொன்றுக்குமல்ல மேலும் எங்களை நீஜெயித்ததாக விஜயஸ்தம்பம் நாட்டிக் கொள்ளு அரக்கனே அப்பாலே நீங்கிப்போவென்று அவர்கள் அடங்கிச்சொல்ல அந்தவார்த்தைக்கு அவனொப்பாமல் குப்பல் குப்பலாக கணைகளைச்சொரிந்தபோது நாரனுக்குக் கோபம் வந்து வில்லை வளைத்து ஆகர்ணபரியந்த மிழுத்து அமோகமாகிய அஸ்திரங்களைப் பிரயோகித்து அவனுடையவீரப்பட்டத்தையும் - கவசத்தையும் அறுத்து வில்லை-இரண்டு துண்டாய்முறித்து மார்புந்தோளும் வயிறுந்தோளும் முழ்கித்துளைக்க முனையம்புகளையேவி - சின்னபின்னப் படுத்தி தேரையும் அவன் பேரையுமழித்துச் சிதைத்து உதிரவெள்ளம் பெருகச்செய்து உலகுக்குபகாரஞ்செய்தருளிய நர நாராயணரென்னும் இருவரும் இந்த யுகத்தில ஸ்ரீகிருஷ்ணதேவராகவும் - அருச்சுனராகவும், ராஜகுலத்தி லவதரித்து உங்களிலொருவராயிருக்கின்றார்கள் அவர்களோ ஒன்றைக்காட்டி ஒன்றைமுடிப் பார்கள்- அசாத்தியர்கள்- அவர்களால்முடியாததொன்றுமில்லை அவர்களை யாரொருத்தர் - சிந்தித்து வந்தித்து தாசத் துவம் புகுகின்றார்களோ அவர்களிடத்தில் மிகுந்த நேசமாயிருப்பார்கள் - நிந்திப்பவர்களைத் தகுந்த நாசஞ் செய்வார்கள் யுகந்தோறும் யுகந்தோறும் இவர்கள் பிறக்காவிட்டால் பாபம் இறக்கமாட்டாது - ஆகையா லிவர்கள்- பிறந்து இரவேண்டும் இந்தத் துவாபர யுகத்தில் தருமத்தை நிலைநிறுத்தும்படியாய் இவர்கள் - பிறந்திருக்கின்றார்கள் இனி பிறக்கப்போகிற கலியுகத்தில் - தெய்வ மில்லையென் றிகழ்ந்துந் தெய்வநிந்தனை செய்தும் தங்கள்- தங்கள் சுப சமயத்தையும்சுயபூசையையும் விட்டு பரமபதத்தையும் அன்னிய தேவதையையும் பூசித்து அநுஷ்டிப்பார்கள் - ஆசார பூஜாவிதியாவுந் தவிர்த்து சுசிசுத்த மில்லாமல் வருணசங்கிரம மாகும் கடைப்பட்டோரெல்லாரும் கல்விச் சாஸ்திரங்களையும்; ஜோசிய நூல்களையும், சாமத்திரிக சாஸ்திரங்களையும் - வைத்திய நூல்களையும் வேதங்களையும் - வேதாந்தங்களையுங்-கற்றுக்கொண்டு உயர்ந்தகுலத்தோர்போல ஸ்நானம்-பூசை ஆசாரம்-சுசி சுத்தம் வைதிகம் மாண்பு கௌரவ முடையவர்களாய் - மற்றவர்களுடைய வீடுகள் தோறுஞ் சென்று மரியாதையும் உயர்ந்த ஆசனமும் பெறுவார்கள் - முதன்மைக் குலத்தோராகிய பிராமணர் - முதலாகியபேர்களும்-கடைப்பட்டோரிடத்தில் கைகட்டிக்கொண்டு காத்திருந்து-'வேத நூல்முதலிய கல்விக்கியானமுங் குறைந்து இழிவானவன் உபதேசஞ்சொல்லக் கேட்டு யின்பமடைந்து- இச்சகம்பேசி இன்னான் இன்னானென்றில்லாமல் - முறைமை மாறி யிரந்துண்பார்கள்-நற்குலமெல்லாம் நடுங்கி யொடுங்கும் துற்குலமெல்லாந் துளுத்துத் துலங்கும் குப்பை யுயருங், கோபுரந் தாழுமென்பதைப்போலாகும் - அப்படி யொருவரை யொருவர் மதியாமல் கெட்டழிந்து போங்காலையில் - இந்தப்பகவானே திரு அவதாரஞ் செய்து துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து உலகத்தை வரிசைப்படுத்தி வர்ணாச்சிரமதருமம் வகுப்பார் ஆகையால் அரசனே! உங்கள் பாட்டனாரும் ஆசாரியரிருவரும் - பெரியதந்தை சிறியதந்தையிருவரும் யெம்போலியருஞ் சொல்லும்படியாகிய வசனங்களைக் கேட்டு ஆயர்பாடியில் நேயராகிய கோபாலர்கள் வீடுதோறுந் தயிர் வெண்ணெய்களைத் தாவியுண்டு தையலார்-சம்பிரமங்களையனுபவித்த கிருஷ்ணமூர்த்தியைப்பணிந்து அவருக்குச் சந்தோஷம்வரும்படியாய் தருமத்தை அனுசரித்து-நாடடைக்கொடுத்து பாண்டவர்களுடன் பொருந்தி யிருந்து திருந்திவாழ்வையாகில் பெரும் பிரதிஷ்டையு முண்டாய்

ச் சுகம்பெறலாம் சுவாமியின் அருளும்பெறலாம் - துரியோதனராஜனே என்று ஜமதக்கினி ரிஷீஸ்வராசொல்ல அந்தவார்த்தையைக்கேட்டு நகைத்து யிவர்களெல்லாரும் நீதுவாயிலும் சமஸ்கிரதமாய்ச் சொன்னார்கள் - தேவரீர்-தாராளமாய் விளங்கச்சொன்னீர்-சுவாமி யென்று உபசரித்தான் - அந்தவேளையில்-பக்கத்திலிருந்த கண்ணுவமகா ரிஷியானவர் - மன்னவனைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

ஓ! துரியோதனராஜனே? பெரியோர்கள் சொல்லைக் கேளாமல் அவமானமடைந்தவர்களின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளென்று சொல்லுகின்றார்-தேவேந்திரனுடைய சாரதியாகிய மாதலியென்பவன் திவ்ய சுந்தரமான வடிவினையுடைய ஒருபெண்ணைப் பெற்றுவளர்த்து இந்தப் பெண்ணுக்குத் தகுந்த புருஷன் வேண்டுமென்று சூரியகிரணந்தாக்கும் இடங்களெல்லாம் தேடிப்பார்த்துவருகையில் ஒருநாள்-பாதலத்திலிருந்த, நாக குமாரனைக்கண்டு அவன் சுந்தரவடிவைத் தன்சிந்தையிற்கொண்டு அப்பா, மிகுந்த அழகினையுடைய யென்பெண்ணையுனக்குக் கலியாணம்பண்ணிக் கொடுக்கிறேன்-நீபெற்றுக்கொள்ளென்று சொல்ல, அந்த வார்த்தையை நாக குமாரன்கேட்டு - ஐயா ,, யெங்களுக்கு குலப்பகையாகியிருப்பவன் கருடன் - என்-தகப்பனையுந்-தாயையுங் கொன்று இன்றுவிட்டு என்னையுங்கொல்லுவேனென்று கறுவிக்கொண்டிருக்கின்றான், அவன் கண்ணிற்படாத காலமெல்லாம் பிழைத்திருக்கின்றேன் எப்போது அவன் கண்ணிற் படுகின்றேனோ அப்போதே - நானிறந்தவனானேன், ஐயா? இப்படிப் பலமாகிய பகைநேரிட்டிருக்க நித்தியகண்டம் பூரணாயுசென்னும் பழமொழி போல் வருந்தினவனாகக்கொண்டிருக்கின்ற நான் என்றைக்கிருந்தாலுங் கருடனால் இறந்துபோவோமென்று தெரிந்திருந்தும் உமது பெண்ணை விவாகஞ்செய்துக்கொண்டு நெடுநாள்கூடி வாழ்வதற்கில்லாமல் விட்டுவிடுவது பிரயோஜனமில்லை மேலும் நல்லபெண் அகப்பட்டாற் போதுமென்னும் ஆசையுடன் எனக்கிருக்கும் விபத்தைச்சொல்லாமல் கலியாணமுடித்துக்கொண்டால் எனக்குப் பழியும் பாவமும்வந்துநேரிடும்ஆசையாலுற்றது சொன்னேனென்றுரைக்க, அந்தவார்த்தையைக்கேட்ட மாதலிக்கு மிகுந்த சந்தோஷம்வந்து, தன்னைமறந்தவனாக, உடல்பூரித்து மன்மதாகிர்த்தியாகிய வடிவிலும், கல்விக்கியானத்திலுஞ் சிறந்ததல்லாமலும் உண்மை மொழியிலும் உயர்ந்திருக்கின்றான் - இவனைச் சுகப்படுத்தி நமது பெண்ணையிவனுக்கே கொடுக்கவேணுமென்று மனமகிழ்ந்து சொல்லுகின்றான்.

ஓ-நாகபாலனே?எங்கள் தேவராஜனுக்குச்சொல்லி உனக்கிருக்கும் கருடனுடைய பகைப்பயத்தை நீக்கி, தீர்க்காயுவாயிருக்கும்படிச் செய்விக்கிறேன், வாவென்று கூட அழைத்துக்கொண்டு தேவேந்திரனுடைய சபைக்கு வருகையில் இவர்களுடைய பாக்கியவசத்தினால் ஸ்ரீவைகுண்ட வாசனாகிய செகரக்ஷகன் தேவேந்திரனுடைய சபையிலெழுந்தருளியிருந்த திவ்யகோலத்தை இந்தமாதலியும், நாககுமாரனுங் கண்டுவணங்கி கரத்தைக் குவித்து நாவினாற்றுதித்து இந்திரன் முதலாகிய பேர்களையும் பணிந்துகொண்டு தான்வந்த வரலாற்றுகளை யிந்திரனிடத்திற்சொல்ல அதைக்கேட்ட யிந்திரனெழுந்து மாயோன் மலரடியில்விழுந்து சுவாமி பக்தவற்சலனாகிய பரமதயாளுவே என் சாரதியாகிய மாதலியின்கருத்தைக்கேளுமென்று மனுப்பண்ணிக்கொள்ள அதைக் கேட்டு விஷ்ணுவானவர் - சந்தோஷித்துக் குமாரனைப் பார்த்து யினிமேலும் உனக்கு ஜீவபயமில்லை தீர்க்காயுசாக விருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளி திருவைகுந்தத்திற்கெழுந்தருளினார் உடனே மாதலியானவன்- தேவராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டுபோய் தன் குமாரத்தியை நாககுமாரனுக்கு தத்தஞ்செய்து சகலவித அலங்கார சம்பிரமங்களுடன் விவாகமுடித்து ஸ்ரீதனமுதலாகியதுங் கொடுக்கப் பெற்றுக்கொண்டு ஸ்திரீயும் புருஷனும் நாகலோகம் போய்ச்சேர்ந்து குங்குமந்தங்கிய கொங்கை குலுங்கி நெருங்க மங்களமிங்கித கிரீடையில் சிறந்து வாழ்ந்திருந்தார்கள் இவைகளை யெல்லாங் கருடன் கேள்விப்பட்டு கடுங்கோபங் கொண்டு கண்கள் சிவந்து நெருப்புப்பொறிகள் சிதறும்படியாக வந்து தேவேந்திரனைக்கண்டு சினத்து சொல்லுகிறான்

ஓ! இந்திரனே? அதிதியினுடைய புத்திரன் நீ வினதையினுடைய புத்திரன்-நான்-நம்மிருவருக்குந் தந்தையானவர்- கசியப்பிர்மா நாமிருவரும் அண்ணனுந் தம்பியுமாயிருக்கின்றோம் உனக்குவந்த நன்மைதீமை யென்னுடையது எனக்குவந்த நன்மை தீமை உன்னுடையது என்று பாராட்டி. அநேகங்கோடி ராக்ஷதரைக் கொன்று உன்பகை யெல்லாம் போக்கினேன்-உனக்குச் சவுக்கியமுண்டாக்கினேன்-அண்டரண்ட பகிரண்டங்களைக் கர்ப்பத்தில் வைத்திருக்கும் லோகநாயகராகிய தேவநாயகனை என்தோளிற் சுமக்கும் பராக்கிரமத்தை உடையவனாகவிருக்கின்றேன் இப்பேர்ப்பட்ட யென்னுறவை விரும்பாமல் என்னையும் என்தாயையும் அடிமையாக்கிக்கொண்டு வருத்திய என்பகைவராகிய பாம்புக்கு மிகுந்த உதவியைச்செய்து தீர்க்காயுசுவாங்கிக் கொடுத்தாயென்று கேள்விப்பட்டு வந்தேன் ஆனதினால் உன்னை என்சிறகினாலடித்துப்பிடித்துப் பிலத்துவாரத்திற் கொண்டு போய்ப்போட்டு விடுகிறேனென்று சீறியெழும்பும்படியாகிய கருடனைப்பார்த்து ஐயா-நானொன்றுஞ் சகாயம் பண்ணவில்லை. தேவாதிதேவராகிய ஸ்ரீமன்னாராயண மூர்த்தியிடம் வந்திருந்தார், அவரைக்கண்டு வணங்கிக்கேட்டுக்கொண்ட நாகத்திற்கு ஆதிமத்தியாந்த ரகிதனே அருள்புரிந்தாரென்று யிந்திரன் சொல்லக் கேட்டு,, அப்படியா நல்லதாகட்டுமென்று வைகுண்டத்திற்குப்போய் லட்சுமி நாராயணனைக் கண்டு வணங்காமனின்று இன்று தேவரீர் நாககுமாரனுக்கு தீர்க்காயுசுகொடுத்ததாய்க்கேள்விப்பட்டேன் அவன் எனக்கு நெடுநாட் பகையாயிருக்க உமக்கு நான் அடிமையாயிருக்க என் சத்துருவுக்கு அருள்செய்தகாரணமென்னவென்று மூடிக்காகக்கேட்க, விஷ்ணுநகைத்து. சொல்லுகின்றார். ஓ! கருடனே?

நம்மை யிரந்துவேண்டினுன் அவன்மீதுகடாட்சம்வைத்
து அநுக்கிரகஞ் செய்தோமென்று சாந்தமாகச் சொ
ல்லவும் கருடன்கேளாமல் கோபித்துக் கொள்ளுவதை
நோக்கி, இந்தக்கருடன் கர்வங்கொண்டிருக்கின்றுன்- அ
தை யடக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டு ஓ! கரு
டனே நீ சொல்லுகின்றது ஞாயமே ஆனுல் அந்த நாக
குமாரன் என்னைவணங்கிப் பணிந்து வருந்தியதால் நா
ன் மனமிரக்கம் வைத்தேன் இப்போதும் எனக்குரிய ப
க்தனுகிய உனக்கு உதவிசெய்யாமல் உன்பகையாளிக்கு
வரமளித்தது தப்பிதமே ஆனுல் அவனிருக்கும் நாகலோ
கத்திற்குப்போய் அவனுக்குக்கொடுத்தவரங்களைத் திரு
ப்பி விடுவோம் வருகின்றையாவென்று திருமால் அழைக்
க வருகிறேனென்று வந்துபணிந்த கருடன்மீது கருணை
யுடையவர் போற்காட்டி என்னுடைய இரதத்தைக் கொ
ண்டு வரச்சொல்லும் என்று சொல்லக்கேட்டு பதைப
தைத்து சுவாமீ அடிமையிருக்க வேறுவாகனமும்வேண்
டுமோ என்தோளின்பேரி லெழுந்தருளுமென்று மண்டி
யிட்டுப் புயங்கொடுக்க மஹாவிஷ்ணுவானவர் தமதுதிரு
வடியை ஒருதோளினிடத்தில் நாட்டவே என்புக ளெல்
லாம் நெக்குவிட்டொடிந்து களைத்து பூமியில் மூர்ச்சை
யாய்விழுந்துசோர்ந்தபுள்ளரசைநோக்கி ஏனப்பாவென்
று யிருகரத்தாலுந்தழுவியெடுத்து நிறுத்தியபோது கண்
ணிர்சோரவிட்டுப்புண்ணியனே ? தேவரீருடைய எண்
ணந்தெரியாமலிளைத்தேன் தேவரைத்துதிக்கத்தக்க எறு
ம்புகடையானைமுதலிய எல்லோரும்பரமபாகவதரென்று
யின்றுகண்டுகொண்டேன் விவேகசூனியத்தால்வெகுளி
யுற்ற வென்னையும் நாகராஜனைப்போல் இரட்சித்தருள
வேண்டியதென்று திருவடியைச்சிரத்திலுறுத்தவும் பக்
தவற்சலனுகிய பரந்தாமன் கருடன்மீது கடாக்ஷம்வைத்
து எப்போதும்போல சகலபலங்களுமுண்டாகச்செய்து
சிறியதிருவடி யென்று திவ்யநாமஞ் சூட்டி வாகனமுங்
கொடியுமாகவைத்து இரக்ஷித்தார் அந்தவிஷ்ணுவே இந்
தக்கிருஷ்ணமூர்த்தியாகவந்தவதரித்தவர் கேளுந்துரியோ
தனு ? ஆனவத்தால் பெரியோர்வார்த்தையைத்தள்ளி ந
டந்துஅவமானம்அடையத்தக்கவர்கள் அநேகம்பேருண்
டு அதுபோல நண்பராகியதேவரும் அன்பராகியயாவரு
ம் நாங்களாகியமூவருஞ் சொல்லும்வார்த்தையைக்கேட்
டு நடத்துவையாகில் புகழ்ச்சியும் மகிழ்ச்சியுமுண்டு. இல்
லாவிட்டால் நிகழ்ச்சியும் இகழ்ச்சியுமுண்டு, கடைசியில் உ
யிருமிழந்துபோம்படியாகும் உத்தமனே, சிரிக்கச்சொல்
பவர் தீயர், அழச்சொல்பவர்கள் அன்பரென்னும் பழ
மொழி அறியாயோ அரசேயென்று கண்ணுவர்சொல்ல,
நாரதமகாமுனிவரானவர் நந்தியாவட்ட மாலையானைப்பா
ர்த்து ஏதுமில்லாதவர்கள் இறைவராவார்கள் எல்லாமு
டையவர்கள் புல்லராவார்கள் சகலபலமுடையவீரர்கள்
அபலரிடத்தில் அகப்பட்டழிவார்கள் கீழுமேலாம் நாடு
காடாம் ஓடம்வண்டியாம் வண்டி ஓடமாம் ஒருவருக்கும்
ஒன்றுஞ்சொந்தமில்லை ஆகையால் நமக்கேபலமிருக்கின்
றது நாமேசெயிப்போமென்றுநினைந்து அகந்தைகொண்
டு பெரியோருரைத்தமொழியை அலக்ஷியஞ்செய்வையா

கில் ஒருநாளைக்கும் உருப்படப்போறதில்லை உத்தமனே,
பதினுலுலகுந்துதிக்கும் பாட்டனுகிய வீஷ்மர்-துரோண
ர்-விதுரர்-முதலியபேர்களும் உன்னிடத்தில்வைத்த விசு
வாசத்தால் இவ்வளவுதூரம் தழுவிச் சொல்லுகின்றுர்க
ள் அவர்களைப்பற்றி நாங்களும் ஆசையாகச் சொல்லுகி
ன்றேம் இவைகளையெல்லாம்தள்ளி உன்னிஷ்டப்படி ந
டப்பையாகில் உனக்குச்சுகம்வரப் போகிறதேயில்லை அ
ல்லலில்மூழ்கி அவஸ்தைப்படுவாய் அதற்கொரு கதை
சொல்லுகிறேன்கேளும் அரவக்கொடியோனேயென்று
மகதியாழ்முனிவன்சொல்லுகின்றுர், வணங்காமுடியோ
னேகேளும் சூரியகுலதிலகமாகிய காதிமகாராஜாவின்கு
மாரன் விசுவாமித்திரரிடத்தில் காலவனென்னும் பிரமச்
சாரியானவர் வேதப்பாடமுதலிய வித்தையெல்லாங் கற்
று அவித்தையவித்து மகாரிஷியென்று யாவரும்வணங்
க வாழுநாளிலொருநாள் ஆசாரியரைவணங்கி விடைபெ
ற்றுக்கொள்ள விசுவாமித்திரர் மனமகிழ்ந்து குழந்தாய்
ஐயந்திரிபில்லாமல் அறிந்துகொண்டையாவென்றுகேட்
கத் தேவரீருடைய அடியிணையருளால் இயாவுமுணர்ந்
தேனென்று காலவர்சொல்ல, கௌசிகன்கேட்டு கண்க
ளிகூர்ந்து போய்வாருமென்று விடைகொடுக்க குருவை
ப்பணிந்து சுவாமீ குருதக்ஷிணை கொடுத்துப் போவது
உத்தமம் இல்லாவிட்டால் என்னுடையமனம் மெத்தவ
ருந்தும் ஆகையால் சுவாமிகள் தடைசொல்லாமல் தங்
களுக்குச் சம்மதமானதை அடியேனுக்குக் கட்டளையிட
வேண்டுமென்றுகேட்க அதைக்கேட்டு விஸ்வாமித்திரர்
சொல்லுகின்றுர்.

ஓ! காலவரே ? உமதுவணக்கமும் ஒழுக்கமும் அடக்
கமும்ஒடுக்கமும்சாந்தமும்அன்பும்எனக்குப்போதுமான
தக்ஷிணையாயிருக்க வேறேதக்ஷிணையென்பதுமுண்டோ?
நீரும் நாமும் யிரண்டோ ஒன்றேயன்றிவேறல்ல நீர் த
பசுசெய்யப்போமென்று கௌசிகர்சொல்ல அதைக்கே
ட்டு காலவர் கோபங்கொண்டு நானென்ன எளியவனு?
கையிலாகாதவனு? குருதக்ஷிணைக் கொடுக்காதபாவி யவ
ருடைய நரகத்திற் கேதுவையாகும்படியாய்ச் செய்கின்
றீர்கள் அப்படிக்குவேண்டாம் நீர்குருதக்ஷிணை வாங்கிக்
கொள்ளும்படியாய்க்கேளும்நான்கொடுத்துவிட்டுப்போ
றேனென்றுசொல்ல இந்தவார்த்தையால் விசுவாமித்திர
ருக்குக்கோபம்வந்து நான்சொல்லுகின்றவர்ணமும் நல்
லசாதியுமுள்ளதாய் எண்ணூறுகுதிரை குருதக்ஷிணையா
கக்கொடுவென்றுசொல்ல நல்லதாகட்டும் அதினுடைய
நிறம் எப்பேர்ப்பட்டது அதையுஞ்சொல்லுமென்று கா
லவர்கேட்க, விசுவாமித்திரர்சொல்லுகின்றுர் பாலினுஞ்
சிறந்தவெள்ளையும் நீலநிறமுடைய காதும் அசுவசாஸ்தி
ரத்தின்படி சுழிசுத்த சுபலக்ஷணமும் வாயுவேக மனோ
வேகத்திலும்மேலாகியகதியை யுடைத்தாயிருக்கவேண்
டியதென்றுவிளம்ப அப்படியேகொண்டுவருகிறேனென்
று மண்டலமெல்லாம் விண்டலமெல்லாம் எண்டிசையா
வுந்தேடிவருகையில் எவ்விடத்திலுங்காணப்படாமையா
ல்வாடி விசாரமடைந்து போசனமில்லாமல் பிணாயாச
முற்றுவருந்தி ஐங்காதம்போனலும் அழிமுகம்வேண்டி

மென்பார்களே அதுபோல இவ்விடத்தில் ஆரையுங்காணேனே தெய்வமேயென்று கூவியபோது ஒருமலையினிடத்திலிருந்த பூர்வசிநேகிதனாகிய கருடபகவான்வந்துநீர் ஆரையா இவ்விடத்தில்வருந்தியிருக்கின்றீரென்றுகேட்க நான்காலவனென்று சொல்லக்கேட்டு ஓடிவந்து இளைப்பாற்றி தழுவிக்கொண்டு என்னகாரியம் என்னுடைய அன்பரேயென்றுகேட்கஒருவருக்கொருவர்தழுவிக்கொண்டு பழமைபாராட்டித் தான்வந்த குருதட்சணையின் சங்கதியையும்விளம்ப அதை அந்தக்கருடன்கேட்டு தலைநடுக்குற்று நானும் ஒருநாள் பகவானுடைய வார்த்தையைவெட்டித்தபோது அவரதுபெருமையைக்காட்டப் பயந்து வணங்கிப் புத்திபெற்றுக்கொண்டேன்.

அப்படியேநீயும் வருத்தம்வைத்துக்கொண்டாய் எப்போதும் உரியோராகிய பெரியோர்களின் வார்த்தையைக்கேளாமல்தடுத்துவந்தபாவம்நீ அனுபவிக்கின்றாயென்று இடருழ்ந்து சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் அவ்விதக்குதிரைகளில்லையென்று தெய்வலோகம்போய்ப்பார்த்து வருவோமென்று சிறகின்மேலேற்றிக்கொண்டுகேசரிமார்க்கமாகப்போகையில் காற்றின்வலுவினாலும சூரியகிரணவெப்பத்தினாலும் மூர்ச்சையடைந்து சோர்ந்து சமுத்திரத்தில்விழவும் அதைக்கண்டகருடன் தனதுகாவிரல் உருஞ்சியெடுத்துக்கொண்டுபோய் கந்தமாதனபர்வதத்தில்விட்டு திகிலையும் பயத்தையுந்தெளிவிக்க மூர்ச்சைதெளிந்தெழுந்த காலவனைநோக்கி போவோம்வாருமென்று புள்ளிறை அழைக்க நான் குருவுக்குப்போய்த்தாலும் குறைந்துயிளைத்தாலும் ஆகாயத்துவழி எங்களப்பாலே வரமாட்டேனென்றுசொல்ல அப்பால் இருவரும் பூமியிலிறங்கிவந்து குதிரையைக்குறித்து சகலதிவுகளிலுந்தேடித் திரிகையில்துரியோதனராஜனே கேளும் உங்கள் பிதாமகனாகிய யயாதிமகாராஜன் இந்த அஸ்திநாபுரத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருநாளையில் காலவரிஷியும் கருடபகவானும் அவரிடத்திற்குவந்து கண்டார்கள் உடனே அவர்களுக்கு வந்தனைவழிபாடுகள்செய்து இவ்விடத்திற்கு நீங்கள்வந்தகாரியமென்னவென்றுகேட்க குருதட்சணைக்காக சுபலக்ஷணமுள்ள எண்ணூறுகுதிரைகள் சம்பாதிக்கும்படி வந்தோம் எங்குந்தேடியிளைத்தோம் எங்கள்களையைத்தீர்க்கும் உத்தமகுணமுள்ள உம்மிடத்தில்வந்தோமென்றுசொல்லியவாக்கியத்தைக்கேட்டு யயாதிராஜன் துடிதுடித்துப்பதைபதைத்து என்னிடத்தில் லக்ஷங்குதிரைகளிருக்கின்றன; ஆனால் நீங்கள்தேடிவந்த லக்ஷணமுடையதல்ல நானென்னசெய்வேன் ஒருவருடையகாரியங்களை நிறைவேற்றுஞ் சக்தியையுடையவனெவனோ அவன்வந்தவர்களின் சங்கதியைவிசாரிக்கவேண்டும் அதை நிறைவேற்ற மாட்டாதவன் சங்கதிகேட்காமல் உபசரித்தனுப்பிவிடவேண்டுமென்று பெரியோர்நூல்வழிகளால் கூறியிருந்தும் பாபத்திற்குள்ளானேன் போகட்டும் ஐயா மகமேருவைக்கேட்டவர்களுக்கு அந்தமினமாக அணுவாகிலும் கொடுத்தனுப்பவேண்டுமென்றிருப்பதால் குதிரையுங்குணமுள்ளஸ்திரீயுஞ் சரியென்று தருமசாஸ்திரத்திற்சொல்லியிருக்கின்றது ஆகையால் என்னிடத்தில்வந்து உங்கள்குறையைச்சொல்லி மனக்குறையுடன்போகாமல்நிறைவாகிய சந்தோஷமனத்துடன் என்பெண்ணாகிய மாதவியென்னுங்கன்னிகையைத் தத்தம்பண்ணித்தருகிறேன் வாங்கிக்கொள்ளவேண்டுங் காலவனென்னும் மகானுபாவனேயென்று வணங்க; அப்போது காலவர்சொல்லுகிறார் குதிரைகளுக்காக நாடுகாடுமேடெல்லாம் தேடிவாடிவரும்படியாகிய நான் இந்தப்பெண்ணை யெங்கேயிழுத்துக்கொண்டுதிரிவேன் எனக்குவேண்டாமென்று பிணங்கக் கருடபகவான் இணங்கும்படியாகப்பேசி யயாதியின் மனதிற்குச் சந்தோஷம்வரும்படியாகச்செய்து அந்தமாதவியென்னும்பெண்ணைக் காலவருக்குக்கன்னிகாதானமாகச்செய்து போசனங்கொடுத்து நமஸ்கரித்து அனுப்பிவிட உடனே காலவரும்கருடனும் அந்தப்பெண்ணை அழைத்துக்கொண்டு இவர்கள் மூன்றுபேரும் வையகமெல்லாம் ஐயமறத்திரிந்துதேடிவரும்போது அயோத்திமாநகரத்தையாளும் இட்சுவாகுமகாராஜாவினிடத்தில் இருநூறுகுதிரைகளிருக்கக்கண்டு நாமெப்படிபோய்க்கேட்கிறது அந்தராஜன் பிராணபதமாய் வைத்திருக்கிறானே அது நமக்கு எப்படிகிடைக்குமென்று ஆலோசித்து ஏங்கும்போது காலவருடைய ஸ்திரீயாகியமாதவி சொல்லுகின்றாள் மகாரிஷியாகிய என்கணவனே ! என்னுடைய பால்யதிசையில் ஒருபெரியவருக்குப் பணிவிடைசெய்து ஒரு மந்திரம்பெற்றிருக்கின்றேன் அதனுடைய பலனென்னவென்றால் நாயகனனுமதியில் பிறரைப் புணர்ந்து பிள்ளைகளைப்பெற்று மறுபடியுங்கன்னிகையாய் நிர்தோஷமுள்ள கற்புடைமனைவியாய் கணவனைச்சேரும்படி ஆசீர்வதித்திருக்கின்றார்.

ஆகையால் இந்த அயோத்தியையாளும் இட்சுவாகு மகாராஜனுக்குப் பிள்ளையில்லாமல்வருந்துகின்றானும்அவனைக்கண்டுபேசி ஒருபிள்ளைபிறந்தால் லட்சனமுள்ள இருநூறு குதிரை கொடுக்கவேண்டுமென்று சொல்லுறுதிபெற்றுக்கொண்டு என்னை அனுப்பிவைத்து குதிரைகளைவாங்கிக்கொள்ளுமென்று தேவிசொல்லக்கேட்டு சிந்தைமகிழ்ந்து இருவருஞ்சம்மதித்து இட்சுவாகுவினிடத்திற்போய்ப் பேசிக்கொண்டு யயாதிமகளாகிய மாதவியை அனுப்பிவைத்தார்கள் அவளிடத்தில் பட்டத்துக்கு ஒருபிள்ளை வசுமகாராஜனென்பவனைப் பெற்றுக்கொண்டு இருநூறுகுதிரைகளையும் மாதவியையும் கொடுத்து வணங்கிக்கொண்டான். அப்பால் இந்த மாதவியானவள் முன்போல் கன்னிகையாய் காலவரைச்சேர்ந்து கலந்திருந்தாள் இதைக்கண்ட கருடனவர் குதிரைத்தேடிக்கொடுக்குங் குளிகையுனக்குக்கிடைத்தபடியால் இந்த உபாயப்படிக்கு மற்றை அறுநூறுகுதிரைகளுந் தேடிக்கொள்ளென்று செலவுபெற்றுக்கொண்டு எதாஸ்தானத்திற்குப்போய்விட்டார் இவடத்தில் காலவரும் மாதவியும் குதிரைகளைச்சம்பாதிக்கும்படி இராச்சியங்களிற்றிரியும்போதுகங்கைமகத்துவமுள்ள காசிமாநகரத்தில் அரசாட்சிசெய்யும் தியோதரனென்னும் ராஜனிடத்தில் இதேமாதிரியாக இருநூறுகுதிரையிருக்குதென்று கேள்வி

ப்பட்டு அவரிடத்திற்பேசியபோது எனக்கொருபிள்ளை
வேண்டும் தேவரீர் அருள்செய்தால் இருநூறுகுதிரைக
ளையுங்கொடுத்துவிடுகிறேன் என்னுடையபாக்கியமெல்
லாங்கருகிறேனென்று சொல்லக்கேட்டு மகிழ்ந்துமனை
வியாகிய மாதவியைவிட்டு ஒருபுத்திரன் பிறந்தபிற்பாடு
மேற்கூறிய இருநூறு குதிரைகளையும் பெற்றுக் கொண்
டார் மறுபடியுமாதவி மகாபதிவிரதையாகிய கன்னிகை
ப்பருவம்பெற்று நாயகனுக்கானும் இன்னும் நானூறு
குதிரைகள்வேண்டுமே இனியெங்கே அகப்படுமென்று
அப்பால்நாடிப்போகையில் போஜராஜனுடைய சமூகத்தி
ற்குப்போனார்கள் அவரிடத்திலும் இருநூறுகுதிரைகளி
ருக்கக்கண்டு பிள்ளையில்லாமல் மனவருத்தப்படுந் தன்
மையையுணர்ந்துமாதவியை அவரிடத்தில்விடுத்து சிபிக்
கிர்த்திவந்தனென்னும் ஒருபிள்ளையைப்பெற்றளித்து ப
ழையபடி கன்னிகையாய் இருநூறுகுதிரைகளையும் பெற்
றுக்கொண்டு ஆக அறுநூறு அசுவங்களுடன்வரும்போ
து இன்னும் இருநூறு அசுவம்வேண்டுமேமாதவி இனி
நானென்னசெய்வேன் என்காலமெல்லாம்குதிரைதேடுவ
திலேயேபோய்விட்டுது நான்பார்க்காதலோகமில்லை எவ்
விடத்திலும்இனிமேல்இத்தன்மை வாய்ந்தகுதிரைகளில்
லைமேல்நடக்கவேண்டிய தென்னவென்றுநாயகன் நாயகி
யுடன் யோசிக்கும்போது பழையசிநேகனாகிய கருடபக
வான்வந்து கலந்துகொண்டார் அவரைக்கண்டு சங்கதி
யெல்லாம்சொல்லி இன்னும் இருநூறு குதிரைகள் வே
ண்டுமென்றார். அதைக்கருடன்கேட்டு ஓய்-காலவரே-நீ
ர்-பூலோகமெல்லாந் தேடித்திரிந்தீர் நான் மேலோகமெ
ல்லாம் ஆராய்ந்துவிட்டேன் நாம் தேடவந்த குதிரைகள்
நாகலோகத்திலுமில்லை ஆகையால் இப்போது அகப்பட்
ட அறுநூறு குதிரைகளையும் ஓட்டிக்கொண்டுபோய் வி
சுவாமித்திரரிடத்தில் விட்டு நமஸ்கரித்துக் கொண்டால்
இன்னும் இருநூறு குதிரையெங்கே யென்று கேட்பார்
அப்போது வணங்கி சுவாமி ஒவ்வொரு பிள்ளைக்கு இரு
நூறுகுதிரை வாங்கினேனென்று உண்மையைப்பேசி அ
ந்தத் தன்மையின்படிக்கு தேவரீருக்கும் பிள்ளையில்லா
மையினால் இந்த மாதவியுடன்கூடி ஒருபுத்திரனைப் பெற்
றுக்கொள்ளும் உமக்கும் புத்திரனுண்டாகிறான். எனக்
கும் எண்ணூறுகுதிரை கணக்குச்சரிப்படுதுஎன்றுசொ
ல்லி குருதக்ஷிணையைச் சரிப்படுத்திவிட்டு உமது மனை
யாளுடன் தவத்தைச்செய்து வாழுமென்று கட்டியணை
த்துக்கொண்டு சிநேகனைவிட்டுநீங்கிகருடபகவான் போ
ய்விட்டார். அப்படியே காலவரும் மாதவியும் அறுநூறு
குதிரைகளையும் ஓட்டிக்கொண்டு விசுவாமித்திரரிடத்திற்
சென்று சாஷ்டாங்க தெண்டனிட்டு நடந்த வர்த்தமான
ங்களையெல்லாஞ்சொல்லி அறுநூறுகுதிரைகளையும் ஒப்
பிவைத்து மற்ற இருநூறு குதிரைகளுக்கும் வகைமான
ஞ்சொல்ல அந்தப்படிக்கு விசுவாமித்திரர் ஒப்புக்கொ
ண்டு மாதவியுடன்கலந்து ஒருபிள்ளையைப்பெற்றுக்கொ
ண்டு அந்தப்பிள்ளைக்கு அஷ்டகனென்று பேருமிட்
டு மாதவியையும் காலவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்து
அப்பா காலவனே குருதக்ஷிணை வேண்டாமென்றுசொ

ன்ன எனக்குக் கோபம் வரும்படியாய்ப்பேசி இவ்வளவு
வருத்தம் அடைந்தாய் ஆகலால் இனிமேல் பெரியோர்
களின் வார்த்தைக்கு மீறிப்பேசவேண்டாம் இன்று முத
ல் சிவத்தைப்பேணி தவத்திலிருந்த பலத்தையொழித்து
நலத்தைப் பெறுவாயென்று விடைகொடுக்க ஆசாரியரி
டத்தில் ஆசீர்வசனம் பெற்றுத் தானும் தனது பத்தினி
யாகிய மாதவியும் அருமையாகிய தவத்தில் அமர்ந்தார்
கள். ஆகையால் துரியோதனா பெரியோர்கள் பேச்சைக்
கேளாதபேதையர்கள் பேய்போல் விழித்து நாய்போல்
பாடுபட்ட அனுபோகத்தைச் சொன்னோம் இதுகளையா
கிலுந் தெளிந்து யோசித்து சுகப்படலாம் மேலும் சந்
திரவம்ச திலகனாகிய உங்கள் பிதாமகன் யயாதி இவர்க
ளை நோக்கி எங்குவந்தீர்களென்று கேட்ட தோஷம் இல்
லையென்று சொல்லமாட்டாமல் தன்பெண்ணைக்கொடுத்
தான். அந்தப்பெண்ணினால் குதிரைகளும் கிடைத்து கு
மாரர்களும் உண்டாய் குருதக்ஷிணையுங்கூடியது, காலவ
ரென்னும் மகாமுனியையும் உங்கள் பாட்டனையும் ஜெக
மெல்லாங்கொண்டாடினார்கள். இன்னமும் புகழ்கின்றார்
கள் பெரியோரைப் பூசிக்கும் யயாதிராஜனுக்குப் பேரனா
கிய நீர் இத்தனை உரிய பெரியோர் சொல்லியும் நாடுகொ
டுப்பதில்லையென்றால் உமக்குப் பேரும் புகழும் பெரு
மையும் எப்படிவரும் பலவந்தருடன் பகைத்தால் பவு
ஷ்யம்போம் ஜயம்வாராது. பெரியோர்வார்த்தையைப் பூ
சித்துக்கேட்பையாகில் சுகப்படுவாய் சுகப்படுவாய் துரி
யோதனாவென்று நாரதமுனிவர் சொன்னார் இப்படியாக
ச்சொல்லி வந்தரிஷிகள் மூவரையும் துரியோதனன் நோ
க்கி கண்பொறிபறக்கக் கடுகடுத்து வெகுளிமேற்கொண்
டு ஓ பெரியவாளே கேளுங்கள் கிருஷ்ணன் கட்டிக் கொ
ண்டுவந்த கட்டுகளெல்லாம் என்சமுகத்தில் சப்பைக்க
ட்டாக முடிந்ததேயல்லது வேறல்ல அப்படியிருக்க நே
ரிட்ட சூழ்வினையைத் தன்னறிவுகொண்டு தள்ளிக் கொ
ண்டவர்களு முண்டோ நீங்கள் கண்டிருக்கின்றீர்களோ
அப்படியுண்டானால் ஒருவரைக்காட்டுங்கள்இப்போதுஇ
ருக்கிறபுத்தியைவிடவேறுபுத்தி யேறப்போகிறதுமில்லை
இதுமாறப்போகிறதுமில்லைவீணாககிருஷ்ணன்பேச்சைக்
கேட்டுவந்து சோதைபோனீர்கள்பாவம் எங்களுக்குப்
புத்தியில்லைபுத்திமான்களே புத்திசொல்ல நீங்கள்மூவரு
ம்வாங்களென்றுஉங்களைநாங்கள்வரிசைசெய்துவரவழை
க்கவில்லையேபோங்களென்று புகலவுமில்லையே அன்றெ
ழுதிய அயன் அழித்தெழுதப் போகிறதில்லையென்று பெ
ண்டுகள்சொல்லும்பழமொழியைநீங்கள் அறியாமல்வழு
விஅறியாதவர்களானீர்களேஐயையோஏன்இவ்வளவுபிர
யாசை யெடுத்துக் கொண்டீர்கள் வீணாகிய கொள்ளையே
தொல்லையே வெள்ளைவாய்க்கு வெற்றிலையுமில்லையே சு
வாமிகளே எங்களை யேமாற்றி நாட்டைப்பறித்துக் காட்
டிலுழன்ற பாண்டவருக்குக்கொடுக்க ஸ்ரீ கிருஷ்ணதேவ
ர் இருக்கின்றார் உலகத்தை ஆளுகிறதுக்குப் பாண்ட
வர்கள் இருக்கின்றார்கள் உயிருடன் கொடுப்பதற்கு நா
னிருக்கிறேன் உங்களுக்கென்னவந்தது என்னுதான் எ
ண்ணெய்க்குலருதா எலிப்புழுக்கை ஏன் உலருதென்று

ஸ்ரீ ராமரைப்போல் தாங்கள் நித்தியவிதி சத்திய சவுசம் ஆசாரம் பூசை செபம் தபம் இவைகளை விட்டு இவருடன் ஏன் இப்படித்திரிந்து வருந்திக் காலத்தை வீணிற்கழிக்கின்றீர்கள் வேண்டாம் பெரியோர்களே நீங்கள் தவமுசெய்யும் இடத்திற்கு இப்பொழுதே தயவு செய்து எழுந்தருளுங்கள் நீங்கள் இருக்கும் இடத்திற்கு வேறு ஆள் சம்பாதிக்கிறேனென்று துரியோதனன் தூஷித்துச்சொல்ல இதைக்கேட்ட மூன்றுரிஷிகளும் திக்கென்று சிங்காசனத்தைவிட் டெழுந்து மிகுந்தகோபங்கொண்டு முகஞ்சுளித்துக் கண்கள் சிவக்கப் பார்க்குஞ் சமையத்தில் வீஷ்டுமர் நிற்கவென்றெழுந்து நீர்க்க தண்டஞ்சமர்ப்பித்துசுவாமிஇவனேறுசிறுபிள்ளைதங்களுடைய சுருபசுபானுபவங்கள் இப்பேர்ப்பட்ட தென்று இதுவரையிலும் அறியாதவன் ஏதோ எங்கள் தலையிலெழுத்து நாங்களனுபவிக்கிறோம் தங்களுக்கென்ன வந்தது இவ்வளவு தூரம் புத்திமதிசொல்லியும் செவித்திற்குவராத இவனால் இந்தக் குடும்பமெல்லாம் குன்றிப்போகக் காலம்வந் திருக்கின்றது அப்படியிருக்கத் தாங்கள் கோபங்கொண்டதை விடுத்து சாந்தமூர்த்திகளாய் இதை யொருவிஷயமாய் சித்தத்திலவையாமல் எங்கள் நிமித்தத்தில் க்ஷமிக்க வேண்டுமென்று நயமதுரவசன உபசாரங்களால் சொல்லிப் பணிய சான்றோர் சினமாகையால் உடனே கோபமாறி ஆசனத்தில் அமர்ந்தார்கள் அப்போது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் மறுபடியும் வணங்காமுடிபெற்ற மன்னனை நோக்கி வாரும் துரியோதனமகாராஜனே பூமியிலே நற்குணங்களும் நற்செய்கைகளும் நன்னடக்கைகளும் சத்தியவசனமும் தர்மசிந்தையும் தன்னுயிரைப்போல் மன்னுயிர்காக்கும் ராஜனும் துர்க்குணமும் துர்ச்செய்கையும் துராசாரமும் துர்த்தகுணமும் அதர்மமும் அசத்தியமுமுடைய அரசனும் ஒருவருக் கொருவர் சண்டைகள் நேரிட்டுப் போர்க் களத்தில் வந்து யுத்தஞ் செய்வார்களாகில் தர்மகுணமும் நித்திய சத்திய வசனமுமுடைய அரசனுக்கு மஹாவிஷ்ணுவின் சகாயமும் வீரலட்சுமி கடாட்சமும் உண்டாய் ஜயத்தைப்பெற்று தாரணியை ஆளுவான் மரணகாலத்தில் வீர சொர்க்கமும்பெறுவான் அதர்மகுணமும் அசத்திய வசனமுமுடைய அரசன் அரிவாசு தேவனுடைய அருளில்லாமல் வீர லட்சுமியின் விஜயமுங் கெட்டு அவமானப்பட்டு அபஜயமுற்று அரசாட்சியை யிழந்துமாள்வான். மீளாநரகத்திலுறுவானென்று முன்னோர்மொழிந்த நீதி சாஸ்திரம் தர்மசாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்றது. நீரும் தெரிந்திருக்கின்றீர் ஆசையினால் எத்தனைவிதபலமும் நலமும் உமக்கிருந்தாலும்? பாண்டவர்களுக்கு நீர் சமமாகப்போகிறதில்லை.உடமைச்சார்ந்த நால்வகைச் சேனைகளும் இராக்கதரும் படைத்துணையாக வந்திருக்கும் பார்த்திபர்களும் போர்க்களத்தில் மாளச்செய்து பூமியைப்பெறுவோமென்னும் பூரிப்பு பாண்டவர்களிடத்திலில்லை ஒருவேளை சபையிற் சபதங்கூறி யிருக்கின்றார்களென்று நினைப்பீராகில் உடனே சமாதானப் படுத்துவதற்கு நாங்களெல்லாரு மிருக்கின்றோம் சூதாடிப் பறித்துக்கொண்ட நாட்டை கூட்சத்திற்கொடுத்து விடுவதேயன்றி அதிகங்கொடுக்க வேண்டுவ தில்லை அப்படி யல்லவென்றால் பெரியோர்கள் சொல்லும் தருமநீதியின்படி கொடுப்பது உத்தமம் அதுவுங்கூடாதென்றால் உம்முடைய இஷ்டத்திற்குத்தோன்றிய தெவ்வளவோ அவ்வளவு கொடுத்தாலும் அதுவும் நமக்குச் சம்மதமே அரசனே நான் தூதுவந்து வீணாகவிளைந்த தென்றும் பிரயோசன மில்லையென்றும் எனக்கொரு பேச்சுவராமலும் பெரியோர்கள் சொல்லிய பேச்சைத் தள்ளினான் துரியோதன னென்று உனக்கொரு ஏச்சுவராமலும் உன்மனதுக் கிசைந்ததை தயவு செய்யுமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இரசத்தையும் நீட்டி இரப்போரைப்போல் கேட்க அதற் கிசையாத துரியோதனன் சொல்லுகின்றான் கேட்டீர்களோ சபையிலிருப்பவர்களே இவ்வுலகவழக்கம், எவர்களுக்கு எவர்களிடத்தில் இஷ்டமிறக்குதோ அவர்களைச் சாமர்த்தியரென்று தனக்குத்தானே புகழ்ந்து மகிழ்ந்து கொள்வதுண்டு அது இப்போது தெரியவந்தது தர்ம முள்ளவன் ஜயம்பெறுவானென்றும் அதர்ம முள்ளவன் அபஜயப்படுவானென்றும் அன்பினாற் சொல்பவர்களுடைய வாக்கியம் போர்முகத்தில் பார்க்கவேண்டும் ஓய் புண்ணியர்களே போகட்டும் தர்மமுள்ள பாண்டவர் ஜயித்தால் அவர்களே அரசாளட்டும் அதர்மமுள்ள நான் ஜயித்தால் நானே ஆளுகிறேன் இதைவிட மறுமொழி வேறொன்றுமில்லையென்று இறைவன்சொல்ல, அதைக்கேட்டு தம்பி வீணாகச் சண்டைசெய்து விருதாவிற் சாவானேனென்று மஹாபலியினிடத்தில் மூன்று லோகத்தையும் தானாவாங்கும்போது ஒருகரத்தை நீட்டிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாண்டவர்களுக்காக பஞ்சைப்பூமியைப் பெறுவதற்கு இரண்டுகரத்தையும் நீட்டி இரந்து பெரிய மனது செய்து நாஸ்தியென்றுரையாமல் சாஸ்தியாய்க்கொடாமல் முன்பாத்தியமாகிய நாட்டை மாத்திரம் பாலித்தருளுமென்ன அதைத் துரியோதனன்கேட்டு கொடுக்கமாட்டேனென்ன ஐந்தூராகிலும் தயவுசெய்யு மென்று எழுந்து இருகரத்தினாலும் இரக்க அதைத் துரியோதனன் கண்டு அம்மணமானவனுக்கு அரைச்சீலை அகப்பட்டாற்போதாதா ஐயா நிலைகெட்டு காடேகதிபாய்த்திரிந்த ஐவர்களுக்கு இவ்விடத்திலொரு வீடுகொடுத்தாலும் போதுமே கண்டோங்கண்டோமென்று கண்களி லொத்திக் கொள்ளுவார்களே அவர்களும் வேண்டாமென்று சொல்லப்போகிறதில்லையே வேணுமென்ற உன் எண்ணத்தின்படி நான் கொடுக்கப்போகிறதுமில்லையே, நீரோ கையைநீட்டிக்கொண்டு காத்திருக்கிறீர் அதற் கென்ன காரியமாதிகையையு நீட்டுவான் காலினும் விழ்வான் போம் போமென்று கடிந்துரையாடினான் துரியோதனன்.

அதை ஸ்ரீ கிருஷ்ணன்கேட்டு நகைத்து குழந்தாய் உன்வமிசத்தில் தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்குப் பரிமளகெந்தியைப் பாரியாளாக்கி அவளுடைய பிள்ளைகளிருவருக்கும் இராச்சியத்தைக்கொடுத்து தான் வீஷ்டுமம் பெற்றுக்கொண்ட மேலோனாகிய உனதுபாட்டன் வீஷ்டுமர் இதோ உயிருடனிருக்கிறார் இப்பேர்ப் பட்ட தர்ம

மூள்ள குலத்திலுதித்த சிரேஷ்டனே சகல சொர்தமுள்ள சிறியதகப்பனாகிய பாண்டுவின் பிள்ளைகளுக்குப் பாதிராச்சியமும் கொடுப்பதில்லை யென்றும் ஐந்து ஊருங்கொடுப்பதில்லையென்றும் ஒரே உறுதியாகப் பேசினால் உனக்கிந்த நாடு அரசு நடக்க மாட்டாதே ஒரு குலத்திற்பிறந்த பிள்ளைகளிரண்டுபேர் ஒத்துவாழ்வதே உத்தமம் ஒவ்வாமல் பேதப்படுத்திக்கொண்டு அநுபவிப்பது மத்திமம் ஒருவர்பங்கை தான் பறித்துக்கொண்டு துன்மார்க்கவழியில் வார்த்தை நழுவிப் பேசுவது அதர்மம்-ஒரு பங்காளி சவுக்கியமடைய ஒருபங்காளி துன்பப்படுவது அதர்மாதர்மம் இப்பேர்ப்பட்ட அதிசயங்களை யெல்லாங் கண்ணினாற் காணும்படி யீசன் யேற்படுத்தி யிருக்கின்றானம்மை யென்று விசனப்பட்டு இது தருமத்திற்கொவ்வாத காரியமென்று ஸ்ரீநாதன்சொல்லிச் சலித்துக்கொள்ள அதற்குத் துரியோதனன் சொல்லுகின்றான்.

ஓ, கிருஷ்ணரே? எத்தனைச்சொன்னாலும் அரசனுடைய மெலுக்குவை அறிந்து கொள்ளுவதற்கு உமக்கு அறிவுபோதாது நீரென்ன செய்வீர் பாவம் மாட்டுடன்பழகிய புத்திமான் மனிதருடன்பழகுவதுவருத்தம், இன்னும் பழகிக்கொண்டுவாரும்போமென்று துரியோதனன்சொல்ல; இந்தவார்த்தையைக்கேட்ட வீஷ்மர்-துரோணர்-கிருபர்-திரிதராட்டிரர்-முதலாகியபெரியோர்க ளெல்லாரும் கடகடவென்று நடுங்கச்சொல்லுகின்றார்கள்.

ஓ, துரியோதனா ? திருவுந்தியையுடைய ஸ்ரீமன்னாராயணமூர்த்தியே ஸ்ரீகிருஷ்ணதேவராய்வந்து நமக்குத்தரிசனந்தந்து இருகரத்தாலிரந்து நாடுகேட்க; நீ கூடாதென்று கூறுவதுஞாயமன்று முன்பின்யோசித்து விளைப்போகிறவினையையும் ஓராமல் எம்போலியர் சொல்லிய வார்த்தையுங்கேளாமல்ஒரேபிடிவாதமாய் என்னண்டையிருக்கும் வீரர்களைக்கொண்டு சண்டைபண்ணிப் பாண்டவரை அண்டவொட்டாமல்ஜயித்து நாடாள்வேனென்று சொன்னத்தையே சொல்லுகின்றாய் அப்பா உன்னிஷ்டப்படிநடவென்று எல்லோரும் மிகுந்த விசாரங்களுடன் ஓவென்றுகூவி யிறைந்தார்கள். இவையெல்லாம் அண்டையிலிருந்துப் பார்த்துக்கொண்டிருந்த துச்சாதனனானவன் துரியோதனனைவணங்கி அண்ணா ? இந்தக்கிருஷ்ணன் இவடம்வந்திருக்குந் தந்திரமும் வீணாய் நகைத்துத் திகைத்திருக்கும் நமதுபெரியோர்கள் அவனைக்கண்டுமயங்கி யெண்ணிக்கொண்டிருக்கிற மந்திரமும்பார்த்தால் துராக்கிர்தமாய் உமதுகையைப்பிடித்து கிருஷ்ணன்கைமேல்வைத்து நாடுகொடுத்தான் நாடுகொடுத்தானென்று கூவி கையறைந்து பாண்டவர்களையும் அழைத்து உமது காலில்விழச்செய்து எல்லோரும் ஒரேமுகமாயிருந்து ஐவராகிய இவர்களைக்காப்பாத்துமென்று சொல்லுவதற்காக எண்ணங்கொண்டிருக்கிறார்களென்று நான்நினைக்கின்றேன் அப்பால் இந்தப்பெரியவன் கைப்பிடித்திழுத்தால் எப்படி மாட்டேனென்னுவேன் என்பதுபோல்முடியும் ஆகையால் இந்தவம்பாகிய சபையைவிட்டெழுந்து அரண்மனைக்குப்போவது மார்க்கமென்றெண்ணுகிறேன் அண்ணா ! தேவரீர்சித்தம் என்பாக்கியமென்று துச்சாதனன்சொல்லவே க்ஷணத்தில் துரியோதனன் கர்னன் சகுனி துசுவாசனன் மற்றுமுள்ள அரசர்களெல்லாரும் சிங்காசனத்தைவிட்டிறங்கி சபையைவிட்டு நீங்கி அவரவர்கள் விடுதிக்குப்போயினார்கள் இப்பால் கன்றாற்கனியுதிர்த்த காசாம்பூவண்ணன் திரிதராட்டிரனை நோக்கிச்சொல்லுகின்றார் ஜெகபதியாகிய பீமனேகேளும் இந்தத்துரியோதனனால் உலகமழிந்து தானுமழிந்துப்போவதல்லாமலும் பந்துபுத்திரமித்திரர்களையும் குடும்பத்தையுந்தொடைக்குந் தொடைக்காலனைச் சிரேஷ்டபுத்திரனென்று பக்ஷம்விடாமல் எண்ணியிருப்பது பாவம் பூர்வத்தில் கம்சனென்னப்பட்ட எங்கள் நல்லம்மான் எவர்கள்சொன்னாலுங் கேளாமல் தன்னறிவுகொண்டும் நடவாமல் தங்கள் தாய்தகப்பனை ஒடுக்கி எங்கள் தாய்தகப்பனை விலங்கிட்டுச் சிறையில்வைத்து வெகுவாகிய அக்கிரமங்களைச் செய்துகொண்டுவந்தான் அதை அவனுடையதகப்பன் சம்மதிக்கமாட்டாமல் என்னையழைத்து மனோபிஷ்டத்தை உண்மையாகச் சொன்னான் அதற்கு வேண்டிய யுத்திகளைச்செய்து முடித்துவிட்டு குலத்தைப்பெருமைப்படுத்தி நலத்தைவிளைவித்தோம், இந்தக்காரியம் உலகமெல்லாந்தெரியும் அப்படிபோல சொல்லுக்கடங்காதபிள்ளையைத் தக்கபடிசெய்துப்போட்டு பாசகர்மங்களைப் பரிகரிக்கவேண்டியதே மேலும் தனதுசரீரத்தில் ஒருகட்டியாகிய ரணமெழுந்தபோது அத்தைத்திராணமாயெண்ணி அறுத்தெறிந்தால் அது ஒருநாளுபத்திரங்கொடுக்கும் பலநாளுஞ் சந்தோஷத்தைக் கொடுக்கும் அப்படிச்செய்யாவிட்டால் பலநாளுந்துன்பப்படுத்தும் அதுபோல் நூறுபிள்ளைகளில் இவனொருவன் குறைந்தால் உமக்குப்பெரிதல்ல, நீர்மோட்சவீடு பெறுவதற்குங்குறைவில்லை, பலநீட்டுக்கொருமுழுக்கென்பதுபோலும் பலநாளையதுக்கம் ஒருநாளையில் விலக்கமென்பதுபோலும் செய்துவிடுவதே உறுதியென்று ஸ்ரீகிருஷ்ணபகவான்சொல்லி ஐயோ? குலத்தினலமுங்குணமுங்கெட்டுதேயென்று விசனப்படுவதைப் பிறவியந்தகன் கேட்டு மிகுந்ததுக்கமும் பொம்மலும் விம்மலும் பொருமலும் செருமலும் பெருமூச்சு முடையவனாய் துரியோதனனை அழைத்துவாவென்று ஒரு தூதனையனுப்ப அப்படியே தூதுவன்போய்ச்சொல்லக்கேட்டு அதிசீக்கிரமத்தில் அரசர் கூடியிருக்குஞ்சபைக்கு அரவக்கொடியோன் வந்து சிங்காசனத்தி லமர்ந்தான், உடனே ? திரிதராட்டிரன் தெரிந்து கொண்டு துரியோதனனை நோக்கிச் சொல்லுகின்றான்.

அப்பா துரியோதனா ? பெரியோரெல்லாரும் பேசிக்கொண்டிருக்கையில் நீபேசாமலெழுந்துபோய் விட்டாயே இதுவோபெரியதனம் காரியமில்லாத கடையனுஞ் செய்யமாட்டானே என் கண்ணே ? வந்தவருக்குப் பூரணமாகிய உத்தாரஞ்சொல்லி எல்லோருக்குஞ் சம்மதியாகும்படிநடத்திப்போவது நாயகன்செய்யும் நலமும் அதனால் நமது குலமும் வாழ்நாளுந்தழைக்கும் ஆகையால், இன்னம் உனக்கு நன்மையாகியபுத்தி யென்றைக்குவருமோவென்று கண்ணீர்விடுத்த தந்தையைநோக்கி துரியோதனன் சொல்லுகின்றான்.

தூதுவந்தவர்களின் சங்கதிதெரிந்துக் கொண்டு தகுமாகிய உத்தரஞ்சொன்னால் அதைக்கேளாமல் தடுத்துத்தடுத்துப்பேசினால் அதனாலெனக்குக் கோபம்வந்து எழுந்துபோய்விட்டேன் இனிமேலும் நான்சொல்லவேண்டியவார்த்தை ஒன்று மில்லையென்று சொன்ன துரியோதன மன்னனைநோக்கிப் பின்னைப்பிராட்டியின் நாயகனாகிய மணிவண்ணன் வணங்காமுடியனைவணங்கி அண்ணலே பெரியமனசுபண்ணாவும் சகலஜெனங்களும் ஒருவனுற்சுச்சப்படுவது அருமை ஒருவனால் வெகுஜெனங்கள்கெட்டுப்போவது அருமையல்ல ஆகையால் நிதானித்து யோசித்து கவனித்து வருங்காரியம போங்காரியம் தெரிந்துசொல்லுமென்று மாயவன்சொல்ல மகுடாதிபதியாகிய துரியோதனன்கேட்டு மிகுந்தகோபங்கொண்டு கண்கள்சிவந்து கனன்று இந்தக்கர்மபூமியை நான்கொடுக்கவும் பாண்டவர்பெறவும் நீர் நடுவே தூதுபேசவும் பெரியவாளெல்லாரும் எனக்குப்புத்திசொல்லவும் இத்தனை விபரீதமென்னத்திற்கு ஒரேவார்த்தை உரைக்கின்றேன் க்ஷத்தவிரனானவன் யுத்தம்பண்ணி வெற்றிபெற்று இராச்சியமுற்றிலும் கட்டிக்கொள்ளுவதே காரியம் ஒருவனை ஒருவன் இரந்து ஒருவன்கொடுக்க ஒருவன்பெறுவது அகாரியம் ஆகையால் நீர்பாண்டவரிடத்திற் போய் இந்தச்செய்தியை நான்சொன்னதாகச்சொல்லும் அவர்கள்வெகு சந்தோஷப்படுவார்கள் வீரமென்பதும் ஜெயமென்பதும் புகழென்பதும் உமக்குத்தெரியாது அவர்கள் சந்தோஷப்படும்போது நீருங்கூடச்சந்தோஷப்படும் ஓ கிருஷ்ணா ! இப்போது எழுந்துபோமென்று துரியோதனன்சொல்ல அந்தமொழியைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுகின்றார்.

ஓய், துரியோதனா ! நீர்சொன்னகாரியமெல்லாம் சரிதான் ஆதியில் இந்தச்சபையில் நீர்சொல்லியிருந்தவார்த்தையைமறந்து பதின்மூன்றுவருட காலங்கழித்துவந்த பாண்டவர்களுக்கு மனப்பூர்வமாக இராச்சியங்கொடுக்க மனதில்லாமல் எப்படிசொற்சோர்வுபட்டையோ அப்போதே உன்பேச்சு அசைவுகொண்டிருக்கின்றது ஆதலால், அரசேயுத்தமேசரியென்று சொல்லுகின்றவார்த்தையின் வண்ணம் நிலையாக நிற்பையென்று நானெப்படிநம்புவது அதற்காகிலும் சகலமானபேரும் அறியும்படியாய் குருக்ஷேத்திரத்தில் படைகூட்டிக்கொண்டுவந்து பாண்டவர்களுடன் யுத்தஞ் செய்வது நிச்சய மென்று கைபோட்டுக்கொடுமென்று தமதுகரத்தைநீட்டினார் கருணையங்கடலாகியகண்ணன் அந்தவார்த்தையை துரியோதனன்கேட்டு செவ்வரக்கிலும் செம்புருகியதிலும் செம்முருக்கை மலரிலும் செம்பவளத்திலும் மேலாகச்சிவந்து பொறிபறக்குங் கண்களை யுடையவனாய் சிங்காசனத்திலோங்கி அறைந்து இயாவருந்திடுக்கிட கூவியிரைந்து படபடப்புடன்விரைந்துமனங்குலைந்து தூஷணவார்த்தைகள் சொல்லத்தொடங்கினான்.

ஓய் தூதுவந்தமனிதனே சுயகுலத்தைவிட்டுயிடையருக்குப்பிள்ளைபுகுந்து தாழ்ந்ததொழிலாகிய மாடுகள் கன்றுகளைமேய்த்து கோபாலஸ்திரீகளையேய்த்து அவர்கள் வீடுகளில்கட்டிய உறிகள்தோறும் வெண்ணெயுந்தயிரும் வேண்டியமட்டுந்திருடியுண்டு அந்தவிடைச்சியர்கண்டுபிடித்துகயிற்றினூர்கட்டி உரலுடன்சேர்த்தால் ஊர்ந்து உனக்கார்ந்தழுது மானவீனமில்லாமல் மதிகெட்ட நீ எல்லாக்குலங்களிலுமுயர்ந்த மதிமானாகிய என்னை உன்னைப்போலநினைத்துக்கை போடச்சொல்லிக் கேட்டஉன் தயிரியமேதயிரியம் ஆ ஆ மாதிமேய்க்குங்கோல்கொண்ட கையின்மீதுசெங்கோலத்தாங்கியமலர்போன்ற என்கையோ அடிப்பது திருட்டிற்பழகிய உன்கையில் திருட்டுநீக்கித்தெண்டிக்குஞ்செங்கோலையுடைய என்கையோ அறைவது முல்லைக்காட்டில் பல்லைக்காட்டி புல்லைப்பிடிக்கும் உன்கையின்மீது ஐவரைக்காட்டிற்செல்லவோட்டி சொல்லைநாட்டுமென்கையோபோடுவது ஓகோஉமதுகுலமும்உமதுநலமும்யோக்கியமுதலிய சிலாக்கியமெல்லாந்தெரிந்துகொண்டேன் அந்தமட்டும்நீர்மெத்தபுத்திசாலி நல்லகாரியஞ்செய்தீர் சிக்கிரம்நடவும்பாண்டவர்களை குருக்ஷேத்திரம்வந்துசேரச்சொல்லும் நீருங்கூடயிருந்துசகலபலமுஞ்செய்யும் நான் பேச்சுதப்பிப்போவேனென்றல்லவோகையடிக்கச்சொன்னீர் நீர்மாத்திரம்சொல்தப்பாமல்வந்துசேரும் சுயோதனனுமொன்றுஞ் சிங்கங்கள் கற்சித்துக்கொண்டிருக்குதென்று ஐவரொன்றும் யானைகளை அழைத்தோடிவாரும் அபலமதியினையுடையவரே நீர் சாம்பிரதாய இராஜனுமல்ல; உமக்குப் பட்டாபிஷேகப்பவிஷுமில்லை ஆகையால்இராஜமுறைமைமுதலிய மெலுக்குவை உமக்குத்தெரியாமற்பேசினீர் நல்லஞாயம் ஓ கிருஷ்ணா ! வெகுபேர் கூடியசபையில் யாவரும் நகைக்கத் துரோபதையைத் துகிலுரிந்தபோது பார்த்திருந்த மானமில்லாத வீரர்களுக்கு என்னசூரத்தனமேயேற்படுத்தினீர் எவ்விதச்சேவகராக்கிவிட்டீர் திருடர்சேவகராகும்போது சேவகர் திருடராவது ஞாயமல்லவோ சொற்சோர்வுபடாதவரோ என்னமதியைக்கொண்டு விபகாரம்பேசவந்தீர் ஓ மாயவரோ ? குந்திதேவியானவள் ஐந்து புருஷரைச்சேர்ந்து இந்த ஐந்து பிள்ளைகளையும்பெற்றாள் இவ்வைந்துபிள்ளைகளும் தாய்நடந்தமுறைமை தப்பாமல் திரௌபதியாகிய ஒருத்தியைப்பெண்டாக வைத்துக்கொண்டுபிழைக்கமாட்டாமல் உழலுகின்றபேயராகியபாபிகளை எனக்கு அண்ணன் தம்பிகளென்றும் சிறிய தகப்பன் புத்திரரென்றும் பங்குக்குரிய பங்காளிகளென்றும் அவர்களுக்குப் பாதிராச்சியங் கொடுத்து அவர்களுடன் கலந்து வாழச் சொல்லியும் புத்திசாலிகளும் புத்திகெட்டுப் போய்ச் சொல்லுவார்களாகில் இது எவர்க்கு மேலாகிய ஆச்சரியமா யிருக்கிறது விந்தையா யிருக்குது ஓ ? தூது வந்தவரோ ? என்று சொல்ல, அந்த மொழியைக் கேட்டுப் புன்சிரிப்புகொண்டு புயங்கேதனா உமக்கெப்படிசம்மதமோ அப்படியேசெய்யுமென்றுஇராஜசபையைவிட்டுப் பொட்டென்றெழுந்து தத்துவக்கியானியாகிய விதுரன்வீட்டிற்கெழுந்தருளினார் ஸ்ரீகிருஷ்ணதேவன் உடனே சபையிலிருந்த பெரியோர்களெல்லாரும் முகம்வெதும்பி மனங்கனன்று ஐயோ இதென்ன விபரீதகாலம் போகட்டும் இவ

ளவியாதவனுகையால் தெரியாமற்கோவித்துக்கொண்டா
ன் தெரிந்த பெரியோர்களுங் கோபிப் பார்களா! எ
துவந்தாலுஞ் சந்தோஷமா யெண்ணவேண்டியதேயன்
றி வெகுளிமேற்கொள்ளக்கூடாதேயென்று யாவரும்வி
சனப்பட அந்தக்காலத்தில் துரியோதனமகாராஜனுக்கு
க்கோபம்வந்து அணிந்திருந்தரத்நியாவட்டமாலைகளெல்
லாங்கறுகறுத்துலர்ந்து கருகவும் தேகமுழுமையும் விய
ர்வைபெருகவும் செம்மையுருக்கியதன்மைபோலும் செ
வ்வரக்குருகிய குணம்போலும் கண்கள்சிவந்து நெருப்
பும்பொறி சிதறவும் பக்கத்திலிருப்பவர்கள் பதறவும்வா
ய்மடித்துப் பற்கடித்து மீசைதுடிக்கப் பெருமூச்சுவிட்
டு சபையிலிருக்கும்வெகுபேர்களையும்நோக்கி கேட்டீர்க
ளா, இவனுடைய அயோக்கிதை அறிந்துதான் நான் எ
ழுந்துபோய்விட்டேன் நீங்களெல்லாரும் என்னைமறுப
டியும்வரவழைத்தது இந்த அவமரியாதைப்பெறுவதற்கெ
ன்று தோன்றுகிறது ஆகிலும்பெரிதல்ல கோடாலிக்கா
ம்புகுலத்துக்கீனமென்னுமாப்போல் ஒருவனுக்குத் தூ
தாகவந்தவனைவழிமடக்கியிருந்து செய்விக்கவும் உறவா
டவும் இவனுக்கென்னகாரியம் இவனாரவன் இவனெப்ப
டிச்செய்வானென்று சிறியதந்தையாகிய விதுரனைப்பார்
த்துச் சொல்லுகின்றான்.

ஓய் நன்றியற்றவிதுரனே ? தன் ஞண்மையினாலேயும்
சவுந்தரியத்தினாலேயும்-வசன சாதுரியத்தினாலேயும், ம
யக்கி என் செல்வத்தைப் பிடுங்கி பாண்டவர் களுக்கு
கொடுக்கவேண்டுமென்று வந்த வேஷதாரி என்வீட்டில்
சாப்பிடாமல் உன்வீட்டிற்குவந்தால் அவடத்தில் சாப்பி
டாமல் இவடத்திற் கேன்வந்தீர் அது முறைமை யல்ல
வே என்று திருப்பிவிடாமல் அவனுக்கும் - அவன்சே
னைகளுக்கும், திவ்விய போஜனஞ்செய்துவைத்த காரிய
மென்ன, என்றந்தையுடன் கூடப்பிறந்தோனென்றிருக்
கும் இவனுக்கும் இவனைச் சார்ந்தபேர் களுக்கும் அன்
னவஸ்திர பூஷணாலங்கிர்த வாகனமெல்லாம் இவடத்தி
ல் நடந்துகொண்டுவர என்னிடத்திற் பக்ஷம்வைத்து எ
ன்பகையாளி தன் பகையாளியென் றெண்ணாமல் மாமி
மேற்கையும் வேசியோரத்தில் கண்ணும் என்னும் பழ
மொழிபோல் என்னிடத்தில் சுகமனுபவித்துப் பாண்ட
வர்களிடத்தில் பலனைக்கொடுக்கும் பக்ஷமுடையவராய்
முடத்தெங்கைப்போலிருக்கின்ற நன்றி குன்றிய யிந்தப்
பாவியை யோசிக்குமிடத்தில் ஒரு தாசியானவள் பத்து
பணங் கொடுத்துவருந் தலைவனிடத்தி லிருக்கும்போது
இன்னொருநாயகன்வந்து பதினைந்துபணம் தருகிறேனெ
ன்றால் பழயவனை விடுத்து புதியவனைக்கூடிவாழ்வதும்,
தன்னை யனுபவித்தவன் ஊர்ப்பிரயாணம் போனால் பிரி
யாவிடை காயசிபோல் பின்றொடர்ந்து கண்ணீர்சோர
விட்டு தேம்பி-வெம்பி-வருந்தி-வழிவிட்டு வாடி நிற்கும்
போது இவளுக்குரியவன் தயிரியஞ்சொல்லி யத்துத்தின
த்தில்வந்து விடுகிறேன் என் பிராணனே நீபோவென்று
சொல்லிவிட்டு அவன்போக இவள் அவன்போன வழி
யைப் பார்த்துக்கொண்டு மயங்கி யிருப்பவர்போல் அவ
ன்தலை மறைகிற வரைக்கும் நிற்கும்போது போன வரு
ஷத்தில் இவளைவிட்டுப்பிரிந்த ஒருநாயகன் அப்போது
ஊரிலிருந்துவரக்கண்டு அவனைக் கட்டிக்கொண் டமுதா
ள்-ஏண்டி கண்ணே என்று கேட்கும் போது நீங்கள் ஊ
ருக்குப்போங்காலத்தில் வழிவிட்டுப் போனேனே அன்
றுமுதல் இன்றுவரையில் நித்தியம் இந்தயிடத்திற்குவந்து,
நீங்கள் அடிவைத்து நின்றயிடத்தை முடியினால் வணங்
கி தெய்வமே எங்களிருவரையும் பிரிந்த நீ, என்றைக்குக்
கூட்டிவைப்பாயென்று இறைஞ்சிக்கொண் டிருக்கின்றே
னென்றாள் அந்தச்சொல்லை வந்தபேதைமகன் கேட்டும
யங்கி கையிலுள்ள சம்பாத்தியமெல்லாங் கொட்டிக்கொ
டுத்தான்-இப்படிக்குத் தந்திர வுபாயத்துடன் சமயோச்
சிதமாய்ச் சதிசெய்யத்தக்கது தாசிகளின் குலாச்சாரத
ருமம் ஆதலால் அத்தன்மையவாகிய நமது அரண்மனை
த் தாசியின்வயிற்றிற்பிறந்த இந்தவிதுரனுக்கு(குலத்தள
வேயாகுங் குணமென்பதுபோல், சொந்தக்குணம் வரு
மல்லாமல் வேறுகுணம்வருமா நாம் வெறுத்துப் பேசு
வதில் தன்னவன் பிறனவனென்னுந் தாக்ஷண்ய முறுமா
மானமீனமில்லாத பேற்த வம்சமென்ன சதமா - இனிக்
காரியமில்லை யென்று துரியோதனன்சொல்ல சபையிலி
ருந்த யாவர்களும் வாயைவாயை மெல்ல கொல்லத்தக்க
கோபங்கொண்டு வில்லையுடைய விதுர னெழுந்து குபீ
ரெனவியர்த்து வழிய விழுந்து கண்களெரிந்து ஜொலிக்
க அக்கினிக்கொழுந்து கபகபவென்றெரிந்து பறக்கத் த
ன்னைமறந்து விதுரமஹாராஜன் வாய்திறந்து அடா துரி
யா-இந்த ராஜசபையிலே விசுவாச நேசர்களுங் கெதிரி
லே இடக்கர்மொழியாக யிகழ்ந்து பேசிய இடும்பா - இ
தோ உன் நாக்கையும் அந்நாக்கை வெளிப்படுத்திய வஞ்
வாக்கையு மிழுத்து என்கைவாளால் போக்குறேன் உதி
ரம்புரளும்படி யாக்குறேன் உன்தலையை முருட்டுறேன்
துன்மார்க்கப்பயலே இன்ன முயிருடனிருக்கின்றையோ
ஓ! சோ வென்று எதிர்நோக்கி எழுந்து உறுக்கிவருகை
யில் உடனே சாந்தத்தினாற் றயைபிறந்து அந்தோ அடா
பாவி இந்த வசனத்தைச் சிந்தைவருந்த எப்படி சொன்
னாயடா துரோகி இன்னேரங் காக்கை கழுகுகளுக் கிரை
யாக்கிவிடுவேன் அடாகர்மி சிறிய தந்தையா யிருந்தும்
தெரியாதபிள்ளைசொன்ன வார்த்தையை க்ஷமிக்காமல் து
ரியோதனனுடைய தலையை யறுத்தான் விதுர னென்று
தேவர்கள் பழிப்பார்கள் மற்ற யாவரும் நகைப்பார்கள்
அதனாலென்னுடைய நன்னெறி நன்னடை நன்னலமெ
ல்லாம் நலியுமென்றெண்ணி மனம்பொறுத்தேனே யல்
லது என்னையிகழ்ந்துபேசிய உன்னை ஒரு பொருட்டாக
நினைத்து நின்றவனல்ல இதுவரையிலும் உயிருடன் வை
யேன் உன்காலம் நல்லது உத்தமனே மன்னர்க்குரிய சு
த்தங்களைத் தழுவி வாழ்பவன் வேந்தன் ஆகையால் தூ
தாக யெவர்கள்வந்தாலும். அவர்களை வரவழைத்து அந்
தராஜ ரகசியமெல்லாந் தெரிந்து கொள்ளவேண்டிய அ
க்கரைக்காரன் நானாகையால் முறைமையின் படிக்கு நா
னெதிர்கொண்டுபோய் பிரார்த்தித்தழைத்து வந்து
விருந்துஞ்செய்தேன் உறவாடினேன் அவருடன்கலந்து
கொண்டு பாண்டவர்களுடைய எண்ணங்க ளெல்லாம்.

அறிந்துகொண்டேன்-தாதுவத்தவருடைய மனோபீஷ்டமுந் தெரிந்துகொண்டேன் இப்போதுதானென்ன எப்படியு மென் தமையன்பிள்ளைகளாகிய பாண்டவர்களிடம் போய்ச் சேர்ந்தால் என்னை சம்ரக்ஷணை செய்யமாட்டார்களா, அல்லது அவர்களுக்குப் படைத்துணையாய்ப்போவேனாகில் உலகத்து ராஜர்களும், நீயும் வேண்டாமென்று என்னைத் தடுக்கக் கூடுமா இல்லை உன் தடைக்குப் பயப்படத் தக்கவனா இவ்வுலக முழுமையும், பாண்டவர்கள்வசம் ஒப்பிவைக்கச் சத்தியில்லாதவனா - அடா புத்தியில்லாதவனே நாம் அப்படிச் செய்யலாகாது நாமிருந்தும் தாயாதிகள் கலகப்படக்கூடாது. ஒருவித சமாசமாய்ப் போகட்டு மென்று உன்னினதே யன்றி வேறல்ல, அப்படியிருக்க இப்படிப் பேசினாயல்லவோ நல்லதாகட்டும் உங்களிருவருக்கும் நாளை நடக்கப்போகிற யுத்தகளத்தில் தாசிப்பிள்ளையாகிய நான் உனக்குதவியாக யிருந்து வெற்றிபெற யுத்தம்பண்ணப்போகிறதில்லையே இந்தச் சபையறியச்சொல்லுகிறேன் இதுசத்தியம்சத்தியமென்றுசொல்லி சண்டைசெய்யாத என்னண்டையில் இந்த வில்லிருக்கலாகாது. இருந்தாலோ பெற்ற மனம்பித்து பிள்ளைமனம் கல்லென்னும் பழமொழிபோல் சமுசாரிபிள்ளையாகிய உனக்குபகாரஞ்செய்யச்செய்யும் ஆகையால் இதோ மகாபாவிக்குத் துணையாகாமல் நான்-வைத்திருந்த வில்லை வெட்டுகிறேன் பாருங்கள் சபையாரேயென்றுகூவி தன்னுடைய வில்லை உடைவாளினால் இரண்டுதுண்டாகவெட்டி யெறிந்து போட்டு விதுரன் தனது, அரண்மனைக்குச்சென்றார்-இப்பால் சபைநிறைந் திருந்த அரசர்களெல்லாரும் சஞ்சலப் பட்டு தளர்ந்து ஐயோ? தேவதைகளினும் சிறந்தவில்லானது, பரமசிவனுடைய பினாகம் விஷ்ணுவினுடைய சாரங்கம் இவ்விரண்டும் நமது, ராஜவம்சத்திற் பிரபலித்திராநின்ற அருச்சுனனிடத்தி லொன்றும் விதுரனிடத்திலொன்றும் வந்திருக்கின்றதென்று எண்ணி மகிழ்ந்திருந்தோம் அவ்விரண்டில் இன்றையத்தினத்தில் ஒன்றறுந்தது மற்றொருவில்லைக் கைக்கொண்டிருக்கும் அருச்சுனன் தேர்மீதேறிப் போர்புரிய வருவானாகில் அவன்வில்லுக் கெதிர்வில் யாரிடத்திலுமில்லையே நமக்கு யாதொரு திக்கு மில்லையே இனியெப்படி யென்று அங்ஙனே சிலர் யேங்கித் தூங்கினார்கள் அந்தவேளையில் வீஷ்மரானவர் துரியோதனனை நோக்கிச சொல்லுகின்றார்.

அப்பா இதென்ன விபரீதகாலம் விளைத்துக் கொண்டாய் தருமசாஸ்திரம் நீதிசாஸ்திரம் இராஜதருமம் இவையெல்லாம் பழுதுபடும்படி சிறியதந்தையின் சிந்தைவருந்தத் தீங்காகிய மொழிகளைச்சொல்லி திரிலோகமும் புகழும்படியாயிருந்த வில்லையும், வெட்டியெறிந்து தன்பிராணனிருக்கிற வரையில் உனக்குச் சகாயஞ் செய்கிறதில்லையென்று பவிருஷஞ்செய்து பகைமேற்கொண்டுபோம்படி செய்துகொண்டாய் நமக்கிருக்குஞ் சத்துருக்களை நீ சாதிக்கப்போறது தெரிந்தேயிருக்குது நாங்களோவென்றால் என்னபாடுபட்டு யுத்தஞ்செய்தாலும் பள்ளமுள்ள இடத்தில் தண்ணீர்சேருமாப்போல் பாபரகிதா ளாகிய பாண்டவர்களிடத்தில் ஐயஞ்சேருமேயன்றி வேறல்ல ஆகையால் எங்களைத்தள்ளு மற்றை யாவரைக் கொண்டு ஜெயம்பெற விருக்கின்றாய் என்ன திடதயிரியத்தைக்கண்டு யிப்படி தலைகுலுங்கப்பேசினாய் பெரியோர் சிறியாரென் றெண்ணாமற்பேசினையே அந்தப்பாவம் சத்துருக்களுக்கு முன்னே தலைகவிழ்ந்து சகலவளமுடைய பூமியையு மிழந்து போர்முகத்தில் விழுந்துபோங்கால நேரிட்டதாய்த் தோன்றுது (ஆராலே கெட்டா யென்றால் நோராலேகெட்டேனென்னும் பழமொழியிங்கு உன்னிடத்திற்கண்டேன்) (காலஸ்யகுடிலாகதி) யென்பதுபோல் வினைவசத்தால் விபரீதம் பிறந்தது, என்று பலவாறுகச் சொல்லி வெறுத்துக்கொண்ட பிதாமகனைப் பார்த்துப் பேரனாகிய துரியோதனன் சொல்லுகின்றான்.

ஐயா! இந்தவிதுரனை யல்லது வேறு வில்லாளிகள் யிவடத்திலில்லையோ பஞ்சாங்கம் போனால் அமாவாசியுங் கூடப்போய்விடுமோ வாழ்க்கைப் படும் பெண்ணுக்குச் சீப்பொடிந்து விட்டால் தாலிகட்டார்களோ பாட்டனாரே ஒரு ஊரில் சாவக்கோழியும் கும்டிச்சட்டியும் வைத்துக்கொண்டு ஒருகைம் பெண்டாட்டி கிழவி யிருந்தாள் அவளுக்கு அந்த ஊரார்பேரில் கோபம் வந்தது ஆ! ஆ! அப்படியா என்கோழியால பொழுதுவிடிகிறதும் கும்டிச்சட்டியால் கஞ்சிகாய்ச்சிக் குடிக்கிறதுமா யிருக்க என்னைப் பகைத்துக் கொள்ளுகிறீர்களா நல்ல தாகட்டும் இனிமேற் பொழுதுவிடிகிறதும் நீங்கள் போசனங் கண்டு புசிப்பது மெங்கே உங்கள்வாயில் மண்ணைப்போட்டு விடுகிறேனென்று அவ்விரண்டையும் எடுத்துக் கொண்டு போய் தன்துணியால் மூடிவைத்துப் படுத்துக் கொண்டாள் நெருப்புக் கனிந்து பற்றிக்கொண்டு சாவலுந் தானும் மண்ணைப்போட்டுக்கொண் டிரந்துபோய் விட்டாளென்று பெரியோர் சொல்லு வார்கள்-அவளைப்போல் இந்தவிதுரன் வில்லைமுறித்து விட்டால் இந்தவில்லுக்கு அப்பனாகியவில்லை யுடையவீராள் என்னிடத்தில் சேனைபேரிருக்கின்றார்கள் அவர்களைச்சொல்லுகிறேன் கேளும் மிருதாதாவாகிய என்சகோதரன் கர்னமகாராஜன் விருதுபெற்ற விற்பிடித்து வெளிவருவா ராகில் பாண்டவரொன்னுஞ் சாருகள் பறந்தோடவடித்து என்பக்கத்திலிருந்து விஜயங்கள், பாடும்படிச்செய்வார் தேவரீ ரிருக்கின்றீர் துரோணர்-கிருபர் - அசுபத்தாமா முதலாகிய அநேகங்கோடி யரசர்களிருக்கவே யிருக்கின்றார்கள் உங்கள் தயவினால் இத்தனை சுத்த வீரரொல்லாமிருக்க வழியேபோறயிடையனையழைத்துவந்து உறவாடி விருந்துசெய்து மேன்மை சம்பாதித்துக் கொண்ட வேசைமகன் வில்லையருத்தாலென்ன என்னை வெறுத்தாலென்ன, அவன் போனாலென்ன, யிருந்தாலென்ன, பாண்டவர்கள் பக்ஷத்திற் சேர்ந்து நமது பேரில் சண்டைக்கு வந்தால்த்தானென்ன, இதுகளுக்கெல்லாம் நான் பயப்படேன் யென்று விளம்பிய துரியோதனனுக்கு அண்டையில் நின்றிருந்த அங்கதேசாதிபதியாகிய கர்னன்சொல்லுகின்றான்.

கேளும் சபையிலுள்ளவர்களே. அர்ச்சுனன் தலைக்கு லக்ஷயம்வைத்திருக்கும்நானிருக்க விதுரன். விற்பெற்று

லென்ன, அற்றாலென்ன - அவனால் அர்ச்சுனனை ஜெயிக்கக்கூடுமோ, ஒருக்காலுமில்லை இதோ எல்லோருமறியச் சொல்லுகிறேன் இளங்கன்றால் விளாங்கனியெறிந்த ஸ்ரீ கிருஷ்ணன்வந்து தேர்விட்டாலும் இந்திரன் முதலாகிய எண்டிசைப் பாலர்-சந்திரசூரியர்-சகலரும், படைத்துணைவந்து பாணம்தொட்டாலும் விஜயனை நானே வெல்லுவேன் என்னிடத்தில் வளர்ந்து வரும் நாகாஸ்திரத்தால் கொல்லுவேன் இவ்விருதிறப் படைகளிலே யெனக்கு மிஞ்சிய வீரர்களியாவரு மில்லையென்று துரியோதனனுடைய பாட்டனுக்கெதிரில் கற்பகமூ நாணக்கொடுக்கும் கர்னன்சொல்ல வீஷ்டுமர்கேட்டு மிகுந்தகோபங்கொண்டு அடா! கர்ன! தேவர்களாலுஞ் சயிக்கப் படாத காலகேய நிவாதகவசத்தரை ஒருநொடியில் பனிபோலாக்கி இந்திரலோகப்பட்டாபி ஷேகத்தாற் சூரியனைப்போற் பிரகாசித்து மேன்மையுற்ற கிரீடிக்கு நீயோ யெதிராகிறவன் சந்திரனுக்கு முன் சுக்கிரனீடுபடுமோ அப்படிப்போல் ஒளிமழுங்கிப் போவா யல்லது அவன் திருஷ்டிக்கெதிர்ப்பட மாட்டாய் ஆனால் நீ வாய் வன்மைப்பேச்சில்வல்லவனேயன்றி வில்வன்மைப்போரில் வல்லவனல்ல, உன்காலமெல்லா மிப்படியே கழித்துவிட்டாய் போதும் போதும், வாயைமூடென்று வீஷ்டுமர் சொல்ல, கர்னன் சொல்லுகின்றான்.

ஓ, வீஷ்டுமரே! இதுவரையிலும், இந்த மகாராஜனுடைய அன்னத்தையும்; சொர்ணத்தையும், ஆபரணத்தையும், வஸ்திரத்தையும், அனுபவித்துசமயம்வந்தபோது சத்துருக்களின் தோளாண்மையைப்புகழ்ந்து பேசுகிறவீரர் தங்களைப்போல் நான் கற்கவேயில்லை நீராகையாலெப்படிவியந்து பேசுகிறீர் நானப்படி வேளைக்கொருபேச்சு விதம்விதமாய்ப்பேசமாட்டேன் தண்டிற்போனு விரண்டிலொன்றென்று சாதிப்பேன் என்னைநம்பியபேரை என்பிராணனிருக்குமளவும் எருமையின்வாலைப்பற்றி ஆற்றிலிறங்கிபிராணனிழப்பவரைப்போலகைவிடமாட்டேன் ஈரேழுபதினான்குலோகவீரரும் என்பேரி லெதிர்த்தாலும்வெல்லுவேன் மூவரும்வந்தாலும் என்பாணத்திற்குஇடைந்துபோகும்படியாய்க்கொல்லுவேன் உமதுசின்னக்கண்ணாலே பார்க்கவேபோகிறீர்பாரும் வீஷ்டுமரே என்று கர்னன்பகரவும் அதற்கு காங்கேயர்நகைத்து கெட்டிக்காறன்புளுவு எட்டுநாளைக்குள்தெரியுமென்பதுபொய்யோ ஐயோ! நாங்களே பார்க்கப்போறோம் அப்பா அங்கதேசாதிபதி அவசரப்படாதே யென்று அதட்டிக்கூறி இப்போதாகவேண்டியதென்னவென்று நாரதர்முதல் ரிஷிகள் மூவருக்கும் நமஸ்கரித்து எதாஸ்தானத்திற் கெழுந்தருளுங்களென்று விடைகொடுத்தனுப்பிவிட்டு தாமுந்தம்முடைய அரண்மனைக்குச்சென்றார் துரியோதனுந்தன்னைச்சார்ந்தசகலருக்குஞ் செலவுகொடுத்துத்தானுஞ் சபையைவிட்டெழுந்து அந்தப்புறத்திற்குப்போக திருத்துழாய்மாலைதரித்த தேவாதிதேவனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும், சாத்தகியும், சேனைசயினியங்களுடன் விதுரன் வீட்டுக்குச்சென்றார்களென்று முன்னமேசொல்லியிருக்கின்றோமே அவ்விடத்தில் நடந்த அதிசயங்களைக் கேளும் ஜெனமேஜெயமகாராஜனே? விதுரன் வீட்டுக்குச்சென்ற வேதநாராயணன் மாணிக்கச் சிங்காசனத்தில் கொலுக்கொண்டிருக்க, நாரதர்-கண்ணுவர் - சமதக்கினி முதலாகிய பெரியோர்கள்வந்து கிருஷ்ணசுவாமியைக் கண்டு தேவரீர்சபையைவிட்டெழுந்து வந்தபிற்பாடு மிகுகோபியும், வெகுபாபியும், பிடிவாதக்கார லோபியுமாகிய துரியோதனன் விதுரனை இழிகுறைவாகப்பேசினான். அந்தவிதுரன்கோபித்து தன்கையிலிருந்தவில்லை வெட்டிப்போட்டுவந்துவிட்டான் அப்பால் வீஷ்டுமருக்குங் கர்னனுக்கும் இப்படியாகவார்த்தைவளர்ந்தது அவருமெழுந்து அரண்மனைக்குப்போனார் மற்றியாவருஞ் சபைகலைந்துபோனார்களென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு முனிவர் மூவரும்போயினார்கள். இப்பால் வில்லைவெட்டிமுறிந்தெறிந்த விதுரராஜன் தமது வீட்டுக்குவந்து திரிலோகநாயகனுடைய சீர்பாதங்களின்வீழ்ந்து தெண்டனிட்டுக்கொண்டு கைகட்டி வாய்புதைத்து நிற்க உளுக்காருமென்று உபசரித்துமாத்து ஓ விதுரராஜனேநானொரு ஆச்சரியங் கேள்விப்பட்டேன் அதாவது பூமண்டலாதிபர் புகழும்படியாகிய வில் உமதுகையி லொன்றும் அர்சுனன் கையிலொன்றும் இருந்தது அதில் இன்று உமதுவில் குன்றிப்போனதாய் தெரியவந்தது அதென்னகாரணம் சொல்லுமென்று சுவாமியாகிய சதுரன்கேட்க, பூமிபாலனும் விதுரன்சொல்லுகின்றான்.

நேமியையுடைய சுவாமியே? கேளும் பூமியை ஆளுகிறவன் காமியாயும்; வாமியாயும், கோபியாயும், லோபியாயுமிருப்பானாகில் சுவாமியவனைக்கெடுத்துவிடுவார் காரியாகாரியந் தெரியாதகயவனுக்கு ஆகிறகாரியமிது அழிகிறகாரியமிதுவென்று அருகிலிருக்கும் பெரியோர் உரியோர் மந்திரிமார்முதலாகியபேர்களும் புத்திமதிசொன்னால் கேளாதவனாயிருப்பானாகில் மூளாநரகத்திற்கிரையாவான் ஆகையால் இந்த துரியோதனனோ சாத்திய அசாத்தியந்தெரியாவயித்தியனைப்போல் சாகிறதும் பிழைக்கிறதும் அறியான் சாஸ்திரப்படிக்குநடக்கான் சத்தியசுவசமுந்தேறான் பெரியோர் சிறியோரென்றறிந்து பேசான் இத்தன்மைவாய்ந்த பேதையாகிய துராத்மாவுக்குப் பிணைப்பட்டுத் துணைப்பட்டு போர்க்களத்திற்போய் விழுந்து போர்புரிந்து புரவலர்முதலிய சேனைகளைக்கொல்வதைப்பார்க்கிலும் யுத்தகளத்திற்குப்போகாமல் யாத்திரைபோவது உத்தமமென்றெண்ணி வில்லைவெட்டியெறிந்தேன் தீங்கினருக்குபகாரஞ்செய்யுஞ் செல்வருக்குத்தீங்குவரும் அதைவிடசெற்றுப்போவது மேலென்றுபெரியோர்சொல்லும் உரியமொழியொன்றிருப்பதினால்மனம்வெறுத்துவந்தேன் மேலும்.

விருத்தம்.

செல்வம்வந் துற்றகாலை தெய்வமுஞ் சிறிதுபேணார்,
சொல்வன அறிந்துசொல்லார் சுத்தமுந் துணையுநோக்கார், வெல்வதேகருமமல்லால் வெம்பகைவலிதென்றோரார், வல்வினை விளைவும்பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்.......... ✻

ஓ கிருஷ்ண மூர்த்தியே கேளும் ஐஸ்வரியம் வந்தால்

தெய்வத்தைக் கொஞ்சமேனுந் தொழார்கள் பேசத்தக்க முறைமையறிந்தும்பேசார்கள்பந்துஜனங்களையும் தோழமையாகியபேர்களையும் கண்ணெடுத்துப்பாரார்கள்தாங்கள்வெல்லவேணுமென்றுகருதுவதேயல்லாமல் எதிரியின் பலத்தையெண்ணார்கள் இதனால்விளையப்போகிறவினைமுட்டையையும்யோசிக்கார்கள் இவ்வுலகத்திலுள்ள சாம்பிரதாயமற்றமனிதர்கள் இப்பேர்ப்பட்டமதாந்தகாரத்தைமகமேருவாயெண்ணியிருக்குமனிதர்களில் தலையானவன் இந்தத்துரியோதனன் அதேனெனில் நமதுகுலபந்துவிற்பிறந்த நாயகனாகிய நீர் இவடத்திற்செழுந்தருளப் பாக்கியம்பெற்றும் மனங்கலந்து பேசிவணங்கி வாடியபயிருக்கு மழைபொழிவதுபோற் பாண்டவர்களுக்கு நாட்டைக்கொடுத்து ஒத்துவாழ்வோமென்றெண்ணாமல் என்னையுஞ் சின்னச்சொல்லாலேசி கோபமுங்கடினமுங் காட்டி முகங்கூசிப்பேசுந் துரியோதனனென்னுங் கர்மியின்முகத்தில் விழிக்கலாகாதென்று மனங்கசந்து அவனுடைய தலையைவெட்டுவதற்குப் பதிலாக என்கையில்லை வெட்டியெறிந்து போட்டேனென்று விதுரன்சொல்ல, அதைக்கேட்ட அரிவாசுதேவன் துடிதுடித்துப் பதைபதைத்துத் துரியோதனனுஞ் சேனைகளும் நாளை குருக்ஷேத்திரத்தில் யுத்தத்திற்குவரும்போது நீர் வரமாட்டீர்போலு மிருக்கின்றதே அப்படிசெய்யலாகாது அவன்றான் அறியாதவன்தெரியாமற்சொன்னாலும் அருமையாகியவில்லை முறிக்கலாமா ! யுத்தத்திற்குவாராமலிருக்கலாமா ! இது தருமமல்லவே, யென்று சுவாமி சொல்ல நான்செத்தாலும் வரப்போகிறதில்லையென்று விதுரராஜன் ஸ்திரமாகச்சொல்ல அதைக்கண்ணன்கேட்டு அப்படியா நீருஞ் சபதசத்தியந் தப்பாதவர் நாமென்னசெய்யலாம் துரியோதனனுடைய காலகதி இப்படியாச்சுதென்றுவிசனப்பட்டு விதுரனுடைய உள்ளத்துணிபையறிந்துகொண்டு ஐயோ எவ்வளவு விறகுகள்போட்டுக் கொளுத்தினாலும் நெய்யைச்சொரிந்தாலும் குங்கிலியங்கற்பூரங்களைக் கட்டிகட்டியாய்க்கொட்டினாலும் காற்றுசகாயமில்லாதபோது நெருப்பெரியாது அதுபோல் எத்தனைப்பலாபலங்கள் துரியோதனனுக்கிருந்தாலும் உமதுசகாயமற்றபடியால் அவைகளொன்றும் உபயோகப்படாது உமது புத்திரராகிய பாண்டவர்களுக்கு நல்லகாலமும்நாடுங்கிடைத்ததென்று யின்றுநம்பினேன் உமது விற்செய்த சகாயமென்று விளம்பி மேலும் பெரியோர் சொல்லிய தருமங்களில் அன்னைபிதாதெய்வமென்றிருக்க உம்மை அவமதித்துப்பேசினனல்லவோ அவனுக்கேகேடு வரும் நீர்விசனப்படாதீர் விதுரரே ஆனால் நான்தூதுவரவும் நீர் நம்மையழைத்து உபசரிக்கவும் அவனந்தராஜசபையிலே உம்மையிழிவாகப்பேசவும் நீர் வெகுளிமேற்கொண்டு வில்லைவெட்டவும், இதுகளெல்லாம் என்னால் வந்ததல்லவோநான்வாராதிருந்தால் இவ்வளவுதுன்பம்உமக்குவாராதே நான்பாவியானேன் விதுரரே என்னைப்பற்றி மனம்பொறுமென்று உபசரிக்கவே அந்தவார்த்தையைக்கேட்டவுடனே விதுரனெழுந்து விழுந்து தொழுதுசுவாமி! தேவரீரப்படிச்சிந்தையில்நினைக்கவேண்டியதில்லை அவன்கெட்டான் துஷ்டன் தமது எண்ணம் நிறைவேறவேண்டியதே என்னிஷ்டமென்று விதுரனும் சுவாமியும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து அப்பால் குந்திதேவியாகிய தங்களத்தையிருக்கும் இடத்திற்சென்றுகண்டு பாண்டவர்கள் பக்ஷமாகச் சொல்லவேண்டிய வார்த்தைகளுஞ்சொல்லிநமஸ்காரமும் பகர்ந்துவருகிறேன் விடைதாரும் விதுரராஜனேயென்று புறப்பட்டுச்செந்தாமரைப்பாதங்கள்நோக நடந்து கபடநாடக சூஸ்த்ராவதாரியாகிய கண்ணன் அந்தவேளையில் பெரிய வாண்மனையிலிருக்கும் பாண்டுபூபதியினுடைய தருமபத்தினியாகிய குந்திதேவியென்னும் அத்தையாரிருக்கும் அந்தப்புரவாயிலுக்குநேராக வருவதைக் குளிர்ச்சிபெற்ற பூரண சந்திர விம்பமுகத்தையுடைய குந்திதேவியானவள் கண்டு எதிரோடிவந்து வாரும் வாரும் மருமகனே யென்று வார்த்தையாடி முகம்வாடி மருகன் முகத்தைநாடி நிற்கநின்ற அத்தையினது அடியிணையில் வீழ்ந்து தெண்டஞ்சமர்ப்பிக்க உடனே வாரியெடுத்துமார்போடணைத்து உச்சிமோர்ந்து உபசரித்துவாழ்த்தி நீருண்டு சூற்கொண்ட மேகத்தைக் கண்டு நீலக் கலாபம் விரித்தாடும் மயிலைப்போல் மயிர்க்கூச்செறிய மகிழ்ந்து தம்பி நானொருத்தி யிவடமிருக்கின்றேனென்றும் என்னையொருபொருட்செய்தும் இவ்வளவுதூரம் வருவதற்கு வழிதெரிந்ததோ மனது வந்ததோ மகிழ்ந்ததோ மறவாதிருந்ததே யென்பாக்கியமென்று அழைத்துப்போய் மணியாசனத்திலிருத்தி இயாவரும் க்ஷேமமாயிருக்கின்றார்களா ! நீரிப்போது இந்த அஸ்தினாபுரத்திற்கு வந்தகாரிய மென்னவென்றுகேட்க, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நகைமுக முடையவராய்ச் சொல்லுகின்றார்.

கேளாய் மாமி ? நாட்டைவிட்டுநீங்கி காட்டிற் பனிரண்டுவருடமுங் கழித்து உருத்தெரியாமல் நாட்டிலொருவருடமும் போக்கி மேட்டிமையாக வெளிப்பட்ட தாஷ்டீகராகிய பாண்டவர்கள் உமக்குச் சாஷ்டாங்க நமஸ்காரந் திக்குநோக்கிச் செய்தார்கள் இன்னங் கொஞ்சநாளையில் உன் கஞ்சமலரடியிணையைக்கண்டு தரிசிக்க வருகின்றோமென்றுஞ் சொன்னார்கள். திரிதாட்டிரன் காந்தாரிமுதலாகிய பெரியோர்களுக்கெல்லாஞ் சரணஞ்சொல்லி இராஜசபைக்குப்போய் விபகாரப்படிக்கு நாடுகொடுப்பீர்களா என்றொரு வார்த்தைகேட்டு அவரவர்கள் கருத்தையறிந்து கொண்டு வாருமென்று ஐவருனுப்பத் தூதாகவந்து துரியோதனன் முதலாகிய அரசர்களுக்குச் சொல்லத்தக்கதுஞ் சொல்லிப் பேசத்தக்கதும் பேசினோம் உபவார்த்தைகளாகப் பெரியோர்களும் உரைத்தார்கள் அவைகள் எல்லாவற்றையுங்கேட்டு காலனுக்குக் கூட்டாளியாகிய கண்ணில்லாதவனுடைய பாலன் வேலமுட்குத்துமிட மேனுங் கொடுக்கேன் நால்வகைச்சேனையுடன் சண்டைக்கு வருவேனென்று உறுதிமொழிகூறி யிருக்கின்றான் இருதிறவரும் இப்படி வருத்தப் படுவதை திருத்தமாக்கி பொருத்தவேண்டுமென்று யோசித்தால் சரிப்படவில்லை ஆகிலும் இன்னமொருதரஞ் சொல்லிப்பார்ப்போம் அதற்கு மிணங்காமற் போவானாகில்

நாமென்னசெய்யலாம் மாமி ! அப்பா விருப்பதிவன் ம
ண்டையே ஆகையால் தெய்வச் செயலெப்படி முடியு
மோதெரியாது இதன்றியும் இன்னொருகாரியம் பேசவே
ண்டியிருக்குதுமாமி வாவென்றுஉள்ளறையிலழைத்துப்
போய்கள்ளத்தனமாயவ்வள்ளத்தையுமிதக்கமில்லாமல்
மெள்ளத்தன்னெண்ணம்வெளிப்படுத்தலானான் நானொரு
சமாசாரங்கேள்விப்பட்டுவந்தேன் அதைச்சொல்லச்சொ
ன்னாற்சொல்லுகிறேனென்று ஸ்ரீகிருஷ்ணன்கேட்க சுக
மாய்ச்சொல்லப்பாவென்று குந்திதேவிசொல்லக்கோபா
லகிருஷ்ணன் சொல்லுகின்றான்.

அத்தா நான் கேள்விப்பட்டுச் சொல்லுகிறதை பியாப
கமாகவும் உறுதியாகவுங் கேளும் நீர் உங்கள்தாய்விட்டி
ல் கன்னிகாமாடத்திலிருந்த சிறுவயதில் ஆரோ ஒருரி
ஷீஸ்வரன் வந்து விரத மிழைக்க, அவருக்கு நீர் பணி
விடை செய்ய அந்தப் பெரியவர் சந்தோஷித்து ஐந்து
தேவதா மந்திரம் உபதேசம் பண்ணிப் போக, அந்த
ஐந்துமந்திரத்தில் ஒருமந்திரத்தை நீர்-பரிக்ஷித்ததாகவும்
அப்போது சூரியபகவான்-பிரசன்ன மாகவும் நீர்கலங்கி
க் கண்ணீர் விடவும், உமக்குத் தழைக்கச்சொல்லி உம்
மிடத்தி லொருசற்புத்திரன் பிறக்கும்படி சர்ப்பா தான
ஞ்செய்யவும் தக்ஷணமே குழந்தை பிறக்கவும், பயந்து
உலகப்பழிப்புக்கஞ்சி பெட்டியில் வைத்துச் சிந்துநதியி
ல் விடவும், அந்த நதி யடித்துக்கொண்டுபோய் கங்காந
தியில் விடவும், திரிதராட்டிரனுடைய சாரதியாகிய சூத
னும் அவன் பத்தினிராதையுங் கண்டெடுத்துவந்து வள
ர்க்கவும், அசரீரிவாக்கியமாக இந்தப் பிள்ளைக்குக் கன்ன
னென்று பேரிடச் சொன்னதைக் கேட்டு அப்படியே
பேரிட்டழைக்கச் சகலசாஸ்திரமு முணர்ந்து பரசுராம
ரிடத்தில் வில் வித்தையுங்கற்று மேன்மையுற் றிருந்தா
ன், அதைத் துரியோதனன்கண்டு சிநேகங்கொண்டு அங்
கதேசாதிபதியாக்கி சுயம் வரத்திற் கலியாணமுஞ் செய்
து சகலவகண்ட சாம்பிராச்சியமுங் கர்னன் - வசத்தி
லொப்பிவித்து ஏகசக்கிராதிபதி பத்திய சேனுபதியென்
று ஏர்ப்படுத்தி இருக்கின்றான் அந்தக்கர்னனைச் செயி
க்கப்பட்ட பேர் மண்ணினுமில்லை. விண்ணினுமில்லை. அ
வனுக்கும் நமது அருச்சுனனுக்கும், பூர்வத்திலேயே ஜ
ன்மப்பகையாகிய வகைமேற்பட்டிருக்குது யுத்தஞ்செய்
யவெத்தனித்திருக்கின்றார்கள் ஆகையால்சீக்கிரம்கர்னனி
டத்திற்சென்று அவனுடைய ஐபந்திர தாயென்று தெரி
வித்து பாண்டவர்கள் சகோதராளென் றுணர்த்தி நீங்க
ளாறு பிள்ளைகளிருக்க நாவிப்படி அவதிப்படுவானேன்
அப்பா நீ இப்போதே பாண்டவர்க ளிடத்தில் வந்துவிடு
அவர்களுனக்குப் பணிவிடைசெய்ய, நீ அரசாட்சிசெய்
யலாம்-நாங்கள் கண்களிக்கப் பார்ப்போமென்று இதவா
கிய வார்த்தைகளைப் பேசி அழைத்துவா மாமி உமது
சொல்லைத் தடுப்பானாகில் அர்ச்சுனன் பேரில் விடுவதற்
கு அச்சுவசேன னென்னும் நாகாஸ் திரத்தை அருமை
யாய்ப் பூசித்து வருகின்றான், அதுவோ காண்டவவன
தகனத்தில். தன்தாயைக்கொன்ற பழியையும் தன் வால
றுப்புண்ட பகையையும் தப்பாமல் முடிப்பேனென் றி
ருப்பதால் அந்த நாகாஸ்திரத்தை விஜயன்பேரில் ஒருதர
ம் விடுவதன்றி மறுகணை தொடுக்காதிருக்க வரம்வாங்கி
க்கொண்டு வாருமென்று பக்ஷபாதினன் சொல்ல, இக்
தவசனங்களையெல்லாங் குந்திதேவிகேட்டு உயிருடன்கு
ன்றி ஐயோ, உலகமறியும்படி வந்ததே நமக்கும் பியாப
கமில்லாமல் மறந்ததே-நமது மருமகனுக் கெப்படியோ
தெரிந்ததே? யென்று மனதிலெண்ணி யிளைத்து-ஓ!கோ
பாலா, இந்தவார்த்தை முன்னடியறிந்தால் உமது யிஷ்ட
ப்படி பாண்டவரிடத்திற் சேரப்பண்ணுவேன் இப்போ
து உனக்கோ எனக்கோ-என்றிருக்கும் வேளையில் நான்
போய்ச்சொல்லுவது ஞாயமோ இது உன்னுடைய மா
யமோ அல்லது என்ன அபாயமோ விடியற் காலையிற்
கலியாணம் முடியப்போகுது பிரமாணமாகப் பிடியடா
தாம்பூலம் பெண்விட்டுக்காறு, என்னுந் தன்மைபோலி
ருக்கின்றதே நீ நினைத்துக்கொண் டோடிவந்து சொல்லு
ங்காரியம் நல்லது அப்படியே கர்னனிடத்திற் சென்று
தாயென்று அவனுஞ் சந்தோஷிக்கச்செய்து நாகாஸ்திர
த்தை ஒருதரம் விடுவையேயொழிய இரண்டாவது தரம்
விடாதேயென்று வரங்கேட்டால் என்வார்த்தையைத் த
ள்ளாமற் கொடுப்பான் அப்போது கர்னனுடைய பிரா
ணனுக் கானிவரு மல்லவா, அதல்லாமல் அந்தவரத்தை
நான் கேளாமற் போவேனாகில் அர்ச்சுனனிறப்பானல்ல
வா இந்த இரண்டுவிதத்திலேயும், எனக்கு நஷ்டமேயல்
லது, வேறில்லையே பிச்சைக்குப் பிச்சையும்போய் ஒரு
துட்டு நாமமும் போச்சென்னும், பழமொழி யாச்சுதே
உழக்கு நெல்லுக்கு உழைக்கப்போய் பதக்கு நெல்லைப்
பன்றிதின்றுதென்னும் பழமொழிவாச்சுதே, கழுதை ம
ப்பைக்கண்டு கனைத்தமாலை வட்டிக்குவிட்டாளென்னு
ங்கதைபோலாச்சுதே ஆ ஓ காரணமேயென்று சந்தன
மரங்களை யுந்தி வாராநின்ற சிந்து நதி சூழ்ந்த நாட்டில்வா
ழ்ந்த குந்திபோஜத்தலைவன் பெண்ணாகிய குந்திதேவி த
ன்மனம் வருந்தியிருந்தக் கருத்தை மருமகனாகிய மாயவ
னுணர்ந்து மாமி? நீர் யோசித்தது சரியே, ஆனால் உன்ம
க்களாகிய பாண்டவர்கள் பஞ்சபூதம் போலும் அஞ்சுத
லைப் பாம்புபோலும் பொருந்தியிருக்கின்றவர்கள், ஐந்து
பூதத்தில் ஒருபூதங்குறைந்தால் உலகங் குறைந்துபோம்
ஐந்துதலைப்பாம்பில் ஒருதலையிழந்தால் உடலுமிழக்கும்,
அதுபோல், ஐவர்களி லொருவரிறந்தால் மற்றநால்வரும்
உடனேமடிவார்கள் நீர் அருமையாய்ப் பெற்று எடுத்து
வளர்த்து ஈ யெறும்பு கடிக்க வொட்டாமற் பாதுகாத்து
பக்ஷமுடன் இரட்சித்த பாண்டவரைந்துபேரும் இறந்து
விடுகிறது பெரிதா இன்னானென் றறியாமலும் எடுத்து
வளர்க்காமலு மிருந்து இப்போது பிள்ளையென் றுணர்ந்
த இந்தக்கர்ன னொருவனிறப்பது பெரிதா செவ்வையா
யோசியும், நானேதோ அவசரப்படுத்தினேனென்று நா
ளையொருகாலத்திற் பழிசொல்லப்போகீர் மாமிபத்தும்
பதினைந்துக்குஞ் சம்மதியா யிருக்குமாகில் மனேதிடங்
கொண்டு போய்வாரும்,அப்பா லுமதிஷ்டமென்று சொ
ல்லி விடைபெற்றுக்கொண்டு விதுரனரண்மனைக் கெழு
ந்தருளி நித்தியவிதி போஜனாதி முடித்துக்கொண்டு திரு

க்கண்வளர்ந்தருளினர். இப்பால், ஜகமோகன ஞகிய ஜக
நாதனது மாயவசன வலைக்குளகப்பட்ட குந்திதேவி யா
னவள் குலைகுலைந்து கொடிய துயரி லுழன்று கலங்கிக்
கண்ணுறக்கங்கொள்ளாதிருந்தாள் பகற்போதையாக்கு
ஞ் சூரியபகவான் மேற்றிசைப்பெண்ணின் நெற்றியி லி
டப்பட்ட செந்நாதத்திலகம்போலப் பிரகாசித்து அஸ்த
மானமாகவும், வேதபண்டிதர் முதலிய பேர்களும் கால
விதிமுடித்துத்தொழவும், வருணனெனவன் சூரியனுக்கிட்
ட மாற்றுயர்ந்த பொற் சிங்காசனம்போல் செவ்வானம்
வரவும்; தாமரைப்புட்பமென்னுங் கன்னியர்கள் வண்டு
களாகிய புருஷருடன் ஊடி முகங்குவியுந் தன்மைபோற்
குவியவும் அவ்வண்டென்னும்நாயகர்களைக்கண்டு கடை
க்கண்காட்டி யழைத்து யிதழ்த்தேனருந்த வின்பங்கொ
டுக்குந் தாசிகளைப்போல நீலோற்பல முதலிய ஆம்பல்க
ள் மலரவும், தாமரைப்புட்பங்களிற் சஞ்சரித்த வண்டுக
ளானது குமுதமல ரிடத்தும் ஆம்பலி னிடத்துந் தங்கி
தேனைப்பருகுந் தன்மை யெப்படி யிருந்த தென்னில் கு
லமாதரை விடுத்து விலைமாதரை யடுத்த வேசிக்கள்ளர்
போலும் உள்ளுடைந்து கூவித்திரியவும் முல்லையரும்பும்
விரிந்ததைப்போல் எல்லையில்லாத நக்ஷத்திரங்கள் பிர
காசிக்கவும், இரவென்னும் இயானையேறிப்புறப்படும் ம
ன்மதனுக்கு வெள்ளைக்குடை விரித்ததைப்போல் சந்தி
ரனுதயமாகவும் அந்த வேளையில் தலைவனுந் தலைவியும்
அமளிகளிற்கலந்து சரசசல்லாபத்தில் நித்திரைபோகவு
ம், சந்தடியடங்கிய நடுராத்திரியில் இந்திரனுக் கொப்பா
குஞ் சந்திரகுலத்தோன்றலாகிய துரியோதனன், அந்த
ரங்கமண்டபத்திற்கு வந்து தம்பிமார் தொண்ணூற்றொ
ன்பது பேரும் மாமன் சகுனியும் கர்னமஹா ராஜனும்
சூழ்ந்திருக்கத் தானுமிருந்து அவர்களைநோக்கி! காடேக
தியென்று போய்விட்டபாண்டவர்களை நாடுவாங்கித்தரு
கிறேனென்று அழைத்துவந்து உபலாவியத்திலிருத்தித்
தானே தூதாகவந்து துந்த கினைற்றைத் தூறுவாருவார்
போல் கலகம்விளைத்து நமக்கெதிரிடையாகவும் விரூப்பாக
வும் விதுரன்விட்டில் வந்திறங்கிய இந்தக்கிருஷ்ணனைமு
டித்துவிட்டால் பலநாளையச்சம் ஒருநாளையிற் போச்சு
தென்று பாலைவார்த்துத் தலைமுழுகிவிடலாம் இவனிருக்
குமளவும் ஆகவுமொட்டான் அழியவுங் கிட்டான், ஆத
லால், நீங்களென்னசொல்லுகிறீர்கள் சொல்லுங்களெ
ன்று துரியோதனன்கேட்க தம்பியாகிய துச்சாதனனெ
ழுந்துகாலில்விழுந்து தேவரீருக்கு இந்தக்கியாபகந்தெய்
வங்கொடுக்குமாவென்றுபிரார்த்தித்திருந்தேன்என்னெ
ன்னைப்படிக்குக் கேட்டீர் அண்ணாவே! தாம் யோசித்த
து நன்றாயிருக்குது நானுஞ்சொல்லுகிறேன் பலநாளுஞ்
சிக்காமற் கலகஞ்செய்து கொல்லும் பெரும்புலியானது
வலைக்குளகப்பட்டால் கொலைக்கஞ்சிப் பார்க்க லாமோ
என்கோவே? இந்த இராத்திரி விடியுமுன்னமே நால்வ
கைச்சேனைகளுடன் வளைந்துக்கொண்டு நல்லபாம்பின்
தலையை நசுக்குவதுபோல் நசுக்கிப்போடுவதே காரியம்
அதுவே நமதுவிரியமென்று தம்பியாகிய துசுவாசனன்
சொல்ல அதுவேசரியென்று மற்றுந் தம்பியரும் ஒத்து
க்கொள்ள இந் நூறுபேர்களில் தர்மதேவதைப்போன்ற
விகர்னனென்பவன் பெரியதமையனைநோக்கி அண்ணா இது
வரையிலும் வாழ்ந்த நம்குலமன்னவர்களிலேயும் பற்ப
லபேர்களிலேயும் தூதுவந்தபேரைக் கொன்றவர்களுமி
ல்லை, கொல்லென்று விண்டவர்களுமில்லை, நாம்கொல்
லுவோமாகில் எவ்வுலகுக்கு மொவ்வாது பழி பாவங்க
ளுக் காளாவோம் அன்றியும், கிழவர்கள் குழந்தைகள்
வேதியர்கள் வியாதிக்காரர்கள், வித்துவான்கள், ஸ்திரீ
கள், தூதர்கள் இப்பேர்ப்பட்டவர்கள் எவ்வளவுகுற்றஞ்
செய்தாலும் கொல்லக்கூடாதென்று இராஜதருமமிருக்
கின்றது மீறிச்செய்தாலோ குடும்பசமேதராய் நரகமெ
ன்னுங் காவிரியை நா மனுபவிக்கவரும்; மேலும், பகை
வரானாலும்நமது வீட்டுக்குவந்தால் அவருக்கும் நமக்கு
மிருக்கும் விரோதங்களை மறந்து புதிய வுறவினர்போல
மரியாதைச்செய்து வந்திப்பது குலமுறைதவறுக் கு
லோத்துங்கர் குணமாம், அப்படி செய்யாமல் நெஞ்சில்
வஞ்சகம்நினைப்பீராகில் அதற்குமிஞ்சியபாவம் வேறில்
லை, அப்படியல்லவென்று பழிபாவங்களுக்கும்பயப்படா
மல்தூதரைக்கொல்ல நினைப்பீர்களாகில் காசாம்பு வண்
ணனாகிய கண்ணன் ஒருவனிடத்திலேயுங் கட்டுப்படவு
மாட்டார்வெட்டுப்படவுமாட்டார் உங்கள் குட்டுகெட்டு
ப்போகும்படியாகதுஷ்டகாரியங்களை ஆலோசிக்கின்றீர்க
ள்வேண்டாம் நீங்கள் நினைக்கும்படியானகாரியம்முடியா
து, யோசனைசெய்யுங்களென்றுவிகர்னன்சொல்ல, அது
காலையில்துச்சாதனனெழுந்து நல்லபாம்பைபோற்சீறி
அடா! விகர்னா உனக்கென்னடாதெரியும், பெரியோர்பே
சுஞ்சங்கதிகளில்நாமேன்பிரவேசிக்கவேண்டுமென்றிரா
மல்குறுக்கேதடுத்துப்பேசத்தக்ககுணக்கியனும் விட்டை
யோ அந்தமட்டும் வாயை மூடடா வென்று துரியோ
தன மஹாராஜனைப் பார்த்து வெறுத்துக் கொண்டு அ
ண்ணா! ஏதொருகாரியம் ஆலோசிக்கவேண்டியிருந்தால்
அறியாதபசகளைநீக்கிப் பெரியோர்களா யிருந்துபேசவே
ண்டுமென்று சொல்லி நான்சொல்லும்யுத்தியை நன்று
ய்க்கேளுங்களென்றான் - அதாவது, அதிரதர்முதலாகிய
சேனைகளைவிதுரன் வீட்டைச்சுற்றிக்காவலாகவைத்து
வைக்கோல் முதலிய செத்தைகளைச் சேர்த்துக் கொளு
த்திவிட்டால் நமது விரோதிகளுக்குத் தூதாகவந்த கோ
பாலனும் அவனுக்கு விருந்துசெய்த விதுரனும்வெந்து
கரிந்து - எரிந்துபோவார்கள் பார்ப்பவர் கேட்டவர்கள்
ஐயோ தீப்பற்றிக்கொண்டு தென்று சிந்திப்பார்கள்நமக்
கொரு நிந்தனையுமில்லைபாண்டவர்களிந்தவழியும்வாசக
ள், இது அழியாயோசனை அண்ணா பொழுதுவிடிவதற்கு
முன்னே முடித்துவிடவேண்டுமென்ற துச்சாதனன்சொ
ல்ல, இந்தயுத்தியைக்கேட்ட கர்னன்சொல்லுகிறான்இரு
ளைவிளக்குஞ்சூரியனைப்போல் அக்கினிச்சுவாலையுடைய
ஒருபாணத்தினால் அவ்விருவரையும் எரிப்பதற்குநானொ
ருவனிருக்கும்போது நெருப்பினாலேயா அவர்களைக்கொ
ல்லுவது ஜெயிக்கமாட்டாத திறத்தையுடையவன் செய்
யவேண்டிய யோசனையேயன்றி நாம்நினைக்கத்தக்கதல்ல
வென்றுகர்னன்சொல்லஅதைக்கேட்டு - விகர்னன்தவிர

மற்றத் தம்பிமார்களெல்லாரும் துரியோதனனை நோக்கி
அண்ணா இப்போது நமது பட்டணத்துக்குள் வந்தகப்ப
ட்டுக்கொண்ட இந்தக்கிருஷ்ணன்தர்திரவாதியாகையால்
பொழுதுவிடிந்தால் பாண்டவர்களிடத்திற்போய்க்கூடிக்
கொண்டுஏதொருகாரியங்களும் ஆகவொட்டாமல்நமது
எண்ணத்தைக்கெடுத்துவிடுவான், ஆகையால் எவ்விதங்
களிலாவது பொழுதுவிடிவதற்குமுன் கொன்றுவிடுகிற
தே காரியமென்று கூவிச்சொல்ல, அவைகளையெல்லா
ங்கேட்டிருந்தமாமன்சகுனியானவன்நகைத்து இதுகளெ
ல்லாஞ் சிறுபிள்ளைகளின் ஆலோசனையாக இருக்குதே
யொழியகாரியத்தைமுடிக்கும் பாரியாலோசனைகளில்லை
அப்படி ஏதாகிலுஞ்செய்ய வேணுமாகில் நான்சொல்ல
ப்போகிறயுக்தியைக்கேட்டு வெல்லுங்களென்றான் அந்த
யுக்தியென்னவென்று துரியோதனன்கேட்க சகுனிசொ
ல்லத்தொடங்கினான்.

மேலும் என்னருமைமருமகனேவிகர்னன்சொன்னவா
க்கியப்படிதூதனைக்கொல்லலாகாது துசுவாசனன்சொ
ன்னயுக்திநல்லயுக்தியானாலும்பூர்வாபூர்வமாய் பெரியோ
ர்கள்வாழ்ந்தவீட்டில் நெருப்பைப்போடலாகாதுபோட்
டாலும்அந்தநெருப்பினால் கிருஷ்ணனுக்கு ஒருகேடும்வ
ராதுதர்மராஜன் சொன்னபடிகணைவிடுத்துக் கொல்லநி
னைப்போமாகில்நாளைவரப்போகிறகலகம் இப்போதேவி
ளைந்துநமதுநாடுசுடுகாடாய்ப்போம் - ஆகையால் இதுக
ளெல்லாங்காரியமல்ல, ஒருகாரியஞ்செய்யும்நமதுகொ
லுக்கூடத்தில் ஒருபடுகுழிவெட்டி அதிலேராக்ஷதர்களை
யும் மல்லர்களையும் கிங்கிரர்களையும்வைத்து மூங்கிற்பற்
றைகளினால்மூடி மேலே ஒருசிங்காசனம் அமைத்து அ
திலே கிருஷ்ணனை அழைத்து உளுக்காரச்செய்தால் பற்
றைமுறிந்து படுகுழியில்விழுவான் உடனேபிடித்து விலங்
குபோட்டு சிறைச்சாலையில்வைத்து பிராணன்போக
வொட்டாமல்தண்ணீர்வார்த்துக்கொண்டுவந்தால் பாண்
டவர்களுக்கும் நமக்கும்பகைநேரிடமாட்டாது கலகமற்
றுப்போம் உலகமும்பழிக்காது இதுதானேச்செய்யவே
ண்டியமுறைமையென்று மாமன்சொல்லமருகன்கேட்டு
மனமகிழ்ந்து மாமா! உங்கள் புத்தி யெவருக்காகிலும்
வருமா நீங்கள் யோசித்தால் அதுவீண்போமா என்றும
கிழ்ந்து புகழ்ந்து அன்னேரமே அநேகமல்லரை அழை
ப்பித்து மிகுந்த ஆழமும் அகலமுமுள்ளதாய் நிலவறை
வெட்டச்செய்து அதிலே கிங்கிரர்-ராக்ஷதர்-மல்லர்கள்
முதலியபேர்களை வாளாயுதம் வேலாயுதம் சூலாயுதம்
குந்தாயுதங்களுடன்வைத்து அநேகங்கயிறுகளுடன் ப
ப்பார்களையும்பதுக்கிமூங்கிலைப்பிளந்து மேலாகமூடி நவ
ரத்தினகசிதசிங்காசனமமைத்து முத்துமாலை மாணிக்க
மாலை பூமாலை பொன்மாலை தூக்கி தம்பிமார்முதலிய க
ர்னன் யாவருஞ் சந்தோஷிக்கும்படியாய் பிறவிப்பெருங்
குழியில்விழ்ந்து பந்தபாசப்பிணிப்புறும் பக்தஜனங்களை
களையேற்றிரட்சிக்குங் கருணைக்கண்ணனாகிய அண்ணலு
க்குப் படுகுழி அமைத்தான் துரியோதனன் அதைக்க
ண்டு கொஞ்சமேனுமென்றுமல் நஞ்சமுதருந்திக் கஞ்
சனைக்கொன்ற அஞ்சனவண்ணனுச்குவஞ்சனையைச்செ
ய்தானே பஞ்சமாபாதகனென்று பரனைக்கவிந்துபொரு
ந்தியிருந்த யிருளோடிப்போகவும் இரவில்நடந்த அநியா
யங்களை எல்லோரும்பாருங்களென்று கிரணகரத்தால்
காய்ந்தெழுப்பிக்கொண்டு கிழக்குத்திசையிற் சூரியனுத
யமாகவும் மகானுக்கள் முதலாகிய ராஜராஜர்களும் பிரா
தக்காலத்தில்ஸ்நானம் பூசைநித்தியவிதிகருமங்களைமுடி
த்துக்கொண்டு வழக்கப்படி இராஜசபைக்குவரவும்இராத்
திரியெல்லாந் தூக்கமற்றிருந்த துரியோதனராஜனும்தம்
பிமார்களும் சகுனி கர்னன் மந்திரிசாமந்தர் முதலியபே
ர்களும் சபையில்வந்து நிறைந்தார்கள் விதுரன்வீட்டில்
இருக்கண் வளர்ந்தெழுந்த சுவாமியானவர் சாத்தகியுட
னெழுந்து நித்தியக்கடனைமுடித்துக்கொண்டு சிங்காசன
த்தில் வீற்றிருக்கும்போது துரியோதனனுடைய உத்தர
வின்பேரில் தூதுவரோடிவந்து தீர்க்கதெண்டனிட்டு சு
வாமீ? தூதுவந்த உங்களை எங்கள் ராஜாதிராஜனாகிய து
ரியோதனமகாராஜன் இராஜ சபைக்கு அழைத்துவரச்
சொன்னார் அதிசீக்கிரமத்தில்வரவேண்டுமென்று சொல்
ல இதோவருகிறேனென்றெழுந்து சேனைகளை யெல்லா
ம் நிறுத்திவிட்டுசாத்தகிமாத்திரம்ரதமேறிவரவும்தானும்
ரதமேறிக்கொண்டுதிரிதராட்டிரன்வீஷ்டுமர்துரோணர்கி
ருபர்அசுபத்தாமர்முதலாகியபெரியோர்களும்உரியோர்க
ளும்நிறைந்திருக்கும்சபைக்கெதிரில்வரும்போதுஇதோ
கிருஷ்ணபகவானுஞ்சாத்தகியும்வந்தார்களென்று போக
தேவேந்திரனைப்போற் கொலுக்கொண்டிருக்கும் யோக
பூவேந்தனாகிய துரியோதவனிடத்தில் தூதர்சொல்ல து
ரியோதனன்கேட்டு கிருஷ்ணனைமாத்திரம்விடுங்களென்
று ஆக்யாபிக்க அந்தப்படியே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தூதர்
வார்த்தையைக்கேட்டு சாத்தகியைவெளியேநிறுத்திதன்
னை அழைப்பித்த வஞ்சகசங்கதி யறிந்துக்கொண்டு சந்
தோஷசித்தராய் தம்பி நான்வந்தகாரியம் யின்றைக்கு நி
றைவேறுதென்றுகூறி தேவாதிதேவனாகியும் சீவாத்மாவு
க்குப்பரமாத்மாவாகிய ஸ்ரீநாதன் கொலுக்கூடத்தில் வர
வே விஷமாகிய அரவக்கொடியோன் மிகுந்த உபசாரத்
துடன் லோகநாதனைப்பார்த்து வாரும் ஆசனத்தி லிரு
மென்றுகைகாட்டினான் வீஷ்டுமர்முதலிய பெரியோரெ
ல்லாரும் ஏதடா அப்பாசுவாமிக்கு யிவ்வளவுமரியாதை
நடந்தது நமக்கு நல்லகாலம்பிறந்தது இனியொன்றுங்
குறைவில்லை பாண்டவர்களுஞ் செவ்வைப்படுவார்கள்
துரியோதனன்புத்தியை ஆண்டவன்மயக்கிவழிக்குக்கொ
ண்டுவந்தானென்று சந்தோஷித்து ஸ்ரீகிருஷ்ணனுடைய
முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஸ்ரீகிருஷ்ணர்
துரியோதனனென்னும் நாசகாலன் அமைத்த ஆசனத்
திலேறி உளுக்காரும்படியாய் ஒருகாலையூன்றினார் உட
னே மளமளவென்றுமுறிந்து சிங்காசனத்துடன் தேவா
திதேவனும் நிலவறைக்குட்போகும்போது ஸ்ரீபாதபங்
கஜமிரண்டும் ஆதிசேடனுடைய முடியிலும் திருமுடி
அண்டகோளகையினடியிலும் பொருந்தும்படிநின்றுவி
ஸ்வரூபங்கொள்ள சந்திரசூரியர் இந்திரன்முதலியதேவ
ர்கள் சப்தரிஷிகள் யாவருஞ் சிரத்திற்கரங்குவித்து தெ
ண்டனிட்டுச் சிந்தித்துத்துள்ள நாகலோகத்தார் நடுங்கி

நாங்களெப்படிப்பிழைப்போமென்றொடுங்கி சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து வந்திக்க அப்போது ஆகாயத்துக்கும் பூமிக்கும் ஒன்றாய்வளர்ந்தபகவான் அனேகந்தலைகளும் வெகுவாகிய கரங்களும் மிகுதியாகிய கால்களுமுடையவராய் படுகுழியிலிருக்கு மல்லரையிராசரை ராக்ஷதரைப்பப்பரவரை தப்பில்லாமற்கொல்ல நெட்டைக் கால்களினால் நீட்டியுதைத்தும் குட்டைத்தாள்களினால் குழுங்கமிதித்தும் மட்டப்பதத்தினால் மாளவரைத்தும் கட்டைக்காலினால் கரைத்துக்குழப்பியும் சிலரைத்துவைத்தும் சிலரைமிதித்தும் சிலரையெடுத்துச் சிதறவிசியும்நாகலோகத்தில் நசுங்கியிழ வுதைத்தும் உதிரவெள்ளம் சபையிலேயோடிவரும்படியாகப் படுகுழிநிறம்பக் கால்களைவளைத்தப்பருக்கச்செய்து ருடையும்போது சிரமிழந்து நெரிந்தபேர்சிலர் செவியழிந்து விரிந்தபேர்சிலர் கரமறுந்து உரிந்தபேர்சிலர் கால்கள்முறிந்து சரிந்தபேர்சிலர் உடல்நொறுங்கி உடைந்தபேர்சிலர் ஊனழிந்து சிதைந்தபேர்சிலர் படைநெரிந்துவிரிந்தபேர்சிலர் பசியெழுந்து பரந்தபேர்சிலர் சுவாமியைக் கட்டவைத்திருந்த பாசக்கயிறுகளறுபட்டு தங்களைக்கட்டிக்கொண்டபெண்சாதிபிள்ளைகளென்னும் பாசம் தங்களைக்கட்ட கலங்கிக்கட்டுண்டபேரும் வாளாயுதமுடைய வீரர் வாளாயிறக்கவும் வாயுவினால் மகமேருவின் சிகரம்போனதுபோல் வானத்தில்சிற்சிலவீரர் பறக்கவும் ராக்ஷதரெல்லாரும் நைந்துபோகவும் வச்சிராயுதத்தினால்சிக்கையறுப்பட்டமலைகள்போல் இவ்விதமாகப்படுகுழியில் நர்த்தனஞ்செய்து பலகாலால் பப்பரருடல்களை வாரியெறிந்தும் சிலகாலால் கிங்காரருடல்களைக்கிழியவரிந்தும் சிற்சிலகாலால் இராக்கதரின் சிரத்தைவாரியெறிந்தும் பற்பலதாளால் மல்லர்களின் கரத்தைவாரி வீசியும் எலும்புகளைவாரி இந்திரலோகமுதல் எங்குமிரைத்தது எப்படியிருந்ததென்றால் (சுக்ரீவனுக்காகதுந்துமி என்பவனுடைய எலும்பை ஸ்ரீராமமூர்த்தியின் காலாலுந்திய தன்மைபோலிருந்தது) அரசர்களிருந்த சபையெல்லாம் உதிரப்பெருக்குமும் மூளைநெருக்குமும் நிணவருக்கமும் மாமிசச்சுருக்கமும் பிணவருக்கமுமாய்க் குவியச்செய்ததுமல்லாமல் அகஸ்தியரால் பாதலத்தழுந்தும் விந்தைகிரியைப்போல மேலோங்கவொட்டாமல் அழுந்திப்பாற்கடலிற்சுழன்ற மந்தாகிய மந்தரகிரியைப்போல் படுகுழியினின்று சுழன்று கூற்றுடவும் ஆகாயத்தில்விரிந்த அனேககரங்களும்வேலாயுதம் சூலாயுதம் குந்தாயுதம் சக்கிராயுதம் தோமராயுதம் எழியாயுதங்கட்டி வல்லயம் சாங்குவாங்கு கத்திகட்டாரி பிருப்புலக்கை கதைமழுகொழு கவண்கண்டக்கோடாலி வளைதடி கொடுதடி குண்டாந்தடி சுக்குமாந்தடி பாணுத்தடி இவைமுதலிய ஆயுதங்களைப்பிடித்துச் சுழற்றவும் உடுக்கைதரித்த கரங்களனந்தம், உறும்பிபிடித்தக்கரங்களனந்தம், பேரிபடிக்குங்கரங்களனந்தம், தாரைபூரிபிடிக்குங்கரங்களனந்தம், தாளமத்தளந்தரித்தபுஜங்களனந்தம், துடமுழவறையுங்கரங்களனந்தம், சின்னம்பிடிக்குங்கரங்களனந்தம், காகளந்தாங்குங்கரங்களனந்தம், கொத்துமலரிசைகாட்டுங்கரங்களனந்தம்; சிட்டிகைபோடுங்கரங்களனந்தம், கொம்புகள்முழக்குங்கரங்களனந்தம், பம்பைசங்குமுழக்குங்கரங்களனந்தம், தாம்பாளந்தபாளிதருங்குமகளபகஸ்தூரி கதம்பப்பொடியணியுங்கரங்களனந்தம், முத்துமாலைமோகனமாலை இரத்தினமாலைவெற்றிமாலைபதக்கமுதலியபற்பல ஆபரணங்களைத் திருத்திக்கொள்ளும்கரங்களனந்தம், சித்திரவஸ்திரம் பீதாம்பரமுதலிய பற்பல பட்டுபட்டாவளிகளைத் தரித்துக்கொள்ளுங்கரங்களனந்தம், கைகளைச்சேர்த்துக்கொட்டுங்கரங்களனந்தம், கருவிக்காட்டுங்கரங்களனந்தம் எட்டுத்திக்குநிறைந்துஇராஜசபையிலிருக்கும் துரியோதனன் முதலியபேர்களைச்சுட்டிக்காட்டுங்கரங்களனந்தம் திலகந்திட்டுங்கரங்களனந்தம், சமுத்திரத்தை அள்ளியிறைக்குங்கரங்களனந்தம், மண்ணைத்தூற்றுஞ்சிற்சிலகரங்கள், மரங்களைப்பிடுங்கித்திசைகளிலெறியும்பற்பலகரங்கள், மலைகளைவாரி ஒன்றோடொன்றுமோதிவீசும்சிற்சிலகரங்கள், கற்பகத்தருக்களின்புட்பங்களையுருவியிறைக்கும்பற்பலகரங்கள், சூரியசந்திரநட்சத்திரங்களை உள்ளங்கையிற்காட்டுஞ்சிற்சிலகரங்கள், மேகங்களைப்பிடித்துப்பிழியுஞ்சிறசிலகரங்கள், திக்குபாலகர்களைச்சேர்த்துவாரியெடுக்கும்பற்பலகரங்கள், அமரர்களுக்கு அமுதம்பகருஞ்சிலகரங்கள், சிலகரங்கள், அஷ்டகுலாசலங்களைப்பறித்து நுனிவிரலில்வைத்துசுழற்றுபலகரங்கள்,மகமேருவைவளைத்துப்பிடிக்க பாஞ்சசன்னிய முதலிய கோடி சங்குகளைப்பவளம்போன்றதிருவாயில்வைத்து நாதம்பிடிக்கவில்லைவளைத்து நாணிதொடுத்துகுணத்தொனிவிளைக்குஞ்சிலகரங்கள், வீரகண்டாமணியைவிருதாக்ககாலிற்றொடுக்குஞ்சிலகரங்கள், கடகங்கணந்தோளணிமாலை கழற்றியெறியும்பலகரங்கள் வீணைபுள்ளாங்குழல் பேரியாழ்சகோரயாழ் செங்கோட்டியாழ் முதலியநாதங்களை நாதிக்கச்செய்யுஞ்சிலகரங்கள் உலகமெல்லாம்நிறைந்தகரங்கள் இத்தன்மையாக விபரீதம்விளைத்துக்கொண்டிருக்க யேலண்டத்திற்கு மேலாகப்போன சிரங்களானது பேரண்டத்திற்கு முட்டுக்கொடுத்ததைப்போல முட்டிக்கொண்டு நாலண்டையுங்குனிந்து பார்க்குஞ்சிலசிரங்கள் சிரக்கம்பஞ்செய்யும்பலசிரங்கள் கலகலவென்றுநகைக்குஞ்சிலசிரங்கள் ஆகட்டுமென்றுசொல்லி அமட்டுஞ்சிலசிரங்கள்கோடையிடிபோற்குமுறுஞ் சிலவாய்கள் தேவலோகங்குபேரலோகம் பிரமலோகம் இதுமுதலிய லோகங்களையெல்லாம் எட்டிப்பார்க்கும் பலசிரங்கள் சவுரியங்களைக்கூறுஞ்சிலவாய்கள் சத்துருக்களைத்தூறுஞ்சிலவாய்கள் அக்கினிப்பொறிகளைக்கக்குஞ் சிலகண்கள் சிவக்கவிழித்துஉறுக்குஞ்சிலகண்கள் மின்னலுடன்புகையும் பலகண்கள் துரியோதனன் சகுனி துச்சாதனன் கர்ணன் இவர்களைத்தேடிப்பார்க்குஞ் சிலகண்கள் உபலாவியத்தை நாடிப்பார்க்கும் பலகண்கள் பக்தாள்பேரில் அருள்பக்ஷம்வைக்கநோக்குஞ் சிலகண்கள் இப்படி பற்பலவிதமாகிய கண்களினாலும் கரங்களினாலும் சிரங்களினாலும் உரங்களினாலும் கால்களினாலும் வாய்களினாலும் தோள்களினாலும் பிரளயகாலநடிக்கம்போற் செய்யும் பிரமாதத்தை இந்திரன்முதலிய அண்டர்களெல்லாருங்கண்டுபயங்கொண்டு

கண்ணீர்சோரவிட்டு மூர்ச்சைபோய் தெளிந்தெழுந்து
நான்குவேதங்களினாலும் ஸ்தவுத்தியஞ்செய்து ஏகாங்க
திரியாங்க பஞ்சாங்க சஷ்டாங்க அஷ்டாங்க நமஸ்கார
முஞ்செய்து தோத்திரித்தார்கள். ஆதனனே! ஆரனே?
புவனங்க ளனைத்தையும்பெற்ற காரணனே! கருணாகர
னே? கமலாசனிநாயகனே? பூரணனே? புண்ணியனே
கஜேந்திரவரதனே? கருணாக்கண்ணனே? நாராயணனே
லோகநாயகனே! கோபம்வேண்டாம் கோபம்வேண்டா
மென்று நாகலோகத்தார் நடுங்கினார்கள் மாதவனே மது
சூதனனே மன்னுயிரைப்பெற்று வளர்க்கு மங்களகுண
னே ஆத்மனே யாதவனே ஆபத்பாந்தவனே அனாதரக்ஷ
கனே ஜம்புநமானவனே ஆதிமூலமே அனாதியே ஆதா
ரனே அரவணைச்செல்வனே உந்திபூத்தோனே உவண
கேதனனே உலகளந்தோனே கமலக்கண்ணனே காசா
ம்புவண்ணனே காளமேகத்தையுங் கடலையுங்கறுக்கச்செ
ய்யும்வண்ணனே சங்குசக்கராயுதனே . சம்போ சாரங்க
னே திருநாதனே ஸ்ரீதரனே பீதாம்பரனே பெருமானே
முகுந்தனே முரகரி வாசுதேவனே வைகுந்தநாதனேயெ
ன்று வானவர் வாழ்த்திப்பணிந்தார்கள் இந்தஇராஜசபை
யிலிருந்த வீஷ்மர் துரோணர் கிருபர் அசுபத்தாமர் கர்
ணன் திரிதராட்டிரன் துரியோதனன்தவிர மற்றப்பிள்ளை
கள் சகுனி சிந்துபதிமுதலாகியதேசத்தலைவர்கள்பதினெ
ண்பாஷைத்தலைவர்களியாவருமெழுந்துதீர்க்கதண்டமாக
விழுந்துநடுநடுங்கிஉடல்வியர்த்துகுடல்கலங்கிகோவென்
றலறிக்கூவிஅடாபாவியென்றுதுரியோதனனைத்தூற்றிஸ்ரீ
கிருஷ்ணபகவானைப்புகழ்ந்துபோற்றிதத்வசகியானச்சித்
தமுடனேகர்த்தருடையவிஸ்வரூபத்தைநோக்கப்பயந்து
இருகரத்தையுஞ்சிரத்திற்குவித்துசுவாமீ அடியேம் அக்
ஞானங்களினாற்றெரியாமற்செய்தஅபராதங்களைப்பொறு
த்திரட்சிக்கவேண்டும் புண்ணியாவென்றுதண்டஞ்செய்
து, அருட்கண்ணா,மணிவண்ணாமன்னியும்வெண்ணெய்தி
ருடித் திருக்கூற்றாடிய கள்வனே மன்னியும்; மேகநிற
முற்ற காமனைப்பெற்ற வாமனாமன்னியும், வஸ்துரூபமா
கிய வரதனே மன்னியும் பதிதபாமராகிய நாங்கள் செ
ய்த பாவத்தைமன்னியும் கெடுவதுதெரியாமல் விளைத்த
கெடுதியை மன்னியும் கேடிலாப் பிரமமே எங்களை கே
டிலாதிரட்சியு மென்று பலவாறாகப் புகழ்ந்து பேசியும்
பாடியும் ஆடியும் பாதங்களையுஞ் சிரங்களையும்பார்க்க ஏ
க்கமுற்றவர்களாய் புலம்பிக்கொண்டிருக்க இந்திரன் பிர
மன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் நா
ற்பத் தெண்ணாயிரம் பிரமரிஷிகளும் பாரிசாத புஷ்பங்க
ளைக்கொண்டு சத சகஸ்திர நாமார்ச்சனை சாற்றித் தோ
த்திரஞ்செய்தார்கள், இதன்றியும் எழுவகைத் தோற்றம்
நால்வகைப்பிறப்பென்று துன்னிய மன்னுயிர்த்தொகை
யாவும் கண்ணீர் ததும்பக் கசங்கிக் கலங்கி மதிமயங்கி
யோர்க்கும்போது மும்மூர்த்தியும் ஒருமூர்த்தியாய் விளங்
கிய தேவதேவன் கொதியாறிய சலம்போல் கோபமாறி
க்குளிர்ந்து கருணைசாந்த மூர்த்தியாய் விஸ்வரூபச் சொ
ரூபத்தை யடக்கிப் பழயவடிவினை யுடையவராய் பள்ள
த்திலின்றுங் கரையேறி மாபலியினிடத்தில் தானம் வா
ங்கி மண்டலத்தையும் விண்டலத்தையும் அளந்து அட
ங்கிய வாமனனைப்போல் நிற்கக்கண்டு எல்லோரும் வ
ணங்கி வாழ்த்தவும் போற்றவும் அப்பேர்ப்பட்ட காலங்
களிலேயும் துரியோதனன் கலங்காமல் அலமலங்காமல்
இறுமாந்து எனக்குப் பட்டமானநாள்முதலின்நாள்வரை
யிலும் அனேக இந்திரசாலம் மகேந்திர சாலங்க ளெல்
லாம்பார்த்தேன் எனக்கிது எம்மாத்திரம் போபோ இன்
னஞ் செவ்வையாக் கற்றுக் கொண்டு வாபோ வென்று
சொல்லி சிங்காசனம் விட்டிறங்காமல் திடதயிரியத்துட
னிறுமாந்திருந்தான். அப்பேர்ப்பட்டவனை, ஸ்ரீகிருஷ்ண
பகவான் உறுத்துப்பார்த்துச்சொல்லு கிறார்.

ஓய்! துரியோதனமகாராஜனே? நல்லகாரியஞ்செய்தீ
ர் நம்மைப் படுகுழியிற்றள்ளிக் கொல்லவல்லவோ நினை
த்தீர்-உமது நினைப்புக்குத் தெய்வஞ் சகாயம்பண்ணாமற்
போய்விட்டது எனது பத்தினிமார்களின் மங்கல்லியபல
மானது என்னை ரட்சித்தது இப்போதும் நமக்கு வெகுச
ந்தோஷமாச்சுது சக்கிரபதியாகிய நீர் அக்கிரமத்துக் கு
டன்பட்டபடியால் விக்கிரமத் துடன் உன்புத்ர மித்ர க
ளத்ராதிகளையும், இன்றேகொன்று தென்திசைப்பாலனி
டத்தில் அனுப்பிவைப்பேன், அப்படி செய்யாமல் மன
ம்பொறுத்தேன் அதேதென்று கேட்பையாகில், பூர்வ
ம் நீரும் அருச்சுனனும் துவாரகைக்குவந்து நம்மைப்ப
டைத்துணை கேட்டபோது ஆயுதமெடுக்குற தில்லையெ
ன்று வாக்குதத்தஞ் செய்திருந்த படியினாலேயும், சூதா
டிச்செயித்து துரோபதையைத் துகிலுரிந்த சபையில்,
உங்கள் நூறுபேரையும் நானேகொல்லுகிறே னென்று
வீமசேனன் சபதம்பண்ணிய வீரவசனம் தப்பிப் போ
காமலும் தூதுவந்த நான் சகலபகையு முடித்து விட்டா
ல் உன்பகைவராகிய பாண்டவர்களுக்குப் பெருமையில்
லையென்றும் இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து யி
ன்று உன்னைமன்னித்துப் பிராணனுடன் விட்டுவைத்த
தே யல்லாமல் வேறில்லை நல்லது ஓய்! துரியோதனம
காராஜனே? நீர் எனக்குப் பூமியிற்பள்ளம் வெட்டியப
டியால் நான் உமக்கும் உமது புத்திரமித்திர ரியாவருக்
கும் ஆகாயத்திற் பள்ளம்வெட்டி யிருக்கின்றேன், உம
க்கு அனுகூல மானவர்களுடனே அந்தப்பள்ளத்தில் வி
ழப்போகிறீர் இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை முன்
னளந்த நாழி பின்னளக்குமென்னும் பழமொழியாகிலு
ம் கேட்டதில்லையோ-இந்த மொழியின் தாத்பரிய மென்
னவென்றால் அரிசிமுதலிய வஸ்துக்களை முன்னொருவ
ருக்கொருவர் அளந்துகொடுத் திருந்தால் வாங்கினவர்
கள் பின்னாலே அளந்து கொடுப்பார்களென்றும் ஒருவ
ருக்கொருவர் உதவுதலை வேண்டு மென்றுஞ் சொல்லு
வார்கள். அப்படியல்ல! இந்த மொழிக்குப் பொருள்
சொல்லுகிறேன் கேளும்! பூர்வத்தில் நல்வினை தீவினை
களை எவ்வளவு அளந்து தொகைசெய்து வைத்தார்க
ளோ அந்த அளவின்படி பின்னுக்கு அனுபவிக்கும்படி
யாய் அந்தவினைகள் அளந்திருப்பதை நடத்து மென்று
பொருள்கொள்ளவும்! பூர்வமென்று சொல்லுவது,முன்
ஜன்மமென்று சிலர்பேசுவார்கள், அப்படி நீங்கள் என்

ணவேண்டாம்நடந்ததெல்லாம்ஜன்மாந்திரமென்றும், பூர்வமென்றும், கதாப்தமென்றும்சொல்லப்படும். ஆகையால் இப்போது என்னைக் குழியிற்றள்ள பள்ளம்வெட்டியபடியால் தெய்வும் உனக்கிதோ பின்னலே பள்ளம்வெட்டியிருக்குதென்று தடையறயோசிக்கலாமென்று எல்லோருங் கேட்கும்படியாகச் சொல்லி, ஸ்ரீகிருஷ்ண பகவான் சபையைவிட் டெழுந்தருளிய போது விஷ்டுமர் துரோணுதி வெகு ஜனங்களும் வந்தனஞ்செய்து மகாநாடியின் றொடர்ந்துவர அவர்களெல்லாரையும்பார்த்து நகைத்து கேட்டீர்களா எந்தத் தலத்தில் எந்தக்குலத்தில் இந்த மோசம் நடக்கும் இவன் ஆரத்தநம்வனானல் இப்போப்பட்ட அனியாயத்திற்குடன்பட மாட்டான் இவன் அழிந்துபோகிறவ னுகையால், இந்தத்துன்மார்க்கப்புத்தியை நினைத்தான் நீங்களெல்லோரும் அறிந்திருங்கள், என்பேரிற் குற்றமில்லை நான்போய் வருகின்றேன் நீங்களிவடத்திற்றுமேன யில்லுங்களென்று சொல்லி கர்னனுடைய கையைப்பிடித்துக்கொண்டு சிலதூரம்போய் கேட்டீரா அங்கதேசாதிபதியே நாமென்ன விரோதியா இல்லை உனக்கும் அவர்களுக்குங் கலகமூட்டிவிட்டவனு நீ வேறு அவர்கள் வேறென்று பார்க்கும்படியானவனு: ஒன்றுமில்லையே? பாண்டவர்கள் சொல்லிய சங்கதியைக் கேட்டு உற்றதுசொல்லவந்த தூதன்யான்! என்னைப் படுகுழியிற்றள்ள நினைக்கலாமா? இந்தப்பாவம் வீண்போமா, தூதனைக்கொல்ல நினைத்ததோஷம் இந்தப் பூதலமுள்ளமட்டுக்கு நீங்காதிருப்பதுமல்லாமல் அவன்செல்வமுமோங்கமாட்டாதே அவனுடைய புத்தியை நீர்தானே யோசியும்; அவனுக்கு யின்னந் தருந்தயுத்திகளைச் சொல்லுங் கர்னராஜனே! கர்னராஜனே! நீர் நில்லுமென்றுசொல்லி நாலடி பெயர்த்து வைத்துப் போய் மறுபடியும், நினைப்பு வந்தவரைப்போல் கர்னனை யழைத்து ஓய் கர்னராஜனே நீர் சாஸ்திர விசாரணையை யுடையவன் நல்ல யுத்திசாலி, சாமர்த்தியன், விபகார முடையவன், மிகு கொடையாளி, அங்கதேசாதிபதி எல்லாப் பாக்கியமும் உனக்கிருக்கின்றது ஆனல்-ஒருகுறைவு மாத்திர முண்டு அதாவது, நீ நின்றுனென்றும், தாய் தந்தை யின்னு ரென்றும் தெரிந்துக்கொள்ளாம லிருக்கின்றீர், உலகத்தாரெல்லாரும் சூதபுத்திரனென்று பச்சையாய்ச் சொல்லுகிறர்கள், நீரும் சபையினிடத்தில் யாராகிலும் இந்த இழிவுசொல்லைப் பேசினல் அப்போது குன்றிப்போகிறீர். அது நாயந்தான், எவ்வளவு அழகும் செல்வமுந் தவமுமிருந்தாலும் குலமோசம்வரலாகாது, வந்தாலோ குணமோசம்போகும், நானுமப்படியே யெண்ணியிருந்தேன், அப்பால் விசாரிக்குமிடத்தில் உமது உத்தமப்பிறப்பு முதலிய நன்மைக ளெல்லாங் கேட்டு, மேலாகிய பரமசந்தோஷமடைந்து, இந்த சந்தோஷ சமா சாரத்தை உமக்குச் சொல்லவேண்டுமென்றே இவ்வளவு தூரம் வந்தேன் மேலும்! நானறிந்தும் உமக்குச்சொல்லாவிட்டால் என்னைத்தவிர சிநேகத் துரோகி யிவ்வுலகத்தி லிரான் ஆதலால், சொல்லுகிறேன் கியாபகமாய்க் கேளும், குந்திபோஜமகாராஜாவின் குமாரத்தியாகியும், பாண்டுபூபதியின் பத்தினியாகியு மிராநின்ற குந்திதேவி யம்மனுனவள் தன்றந்தையிடத்தில் கன்னிகையா யிருக்கும்போது, துருவாசர் அருள்செய்தமந்திரம் ஐந்தில் ஒருமந்திரத்தை பரிட்சிக்க நினைத்துஜெபிக்க, அந்த மந்திரத்துக்கு அதிதேவதையாகிய சூரியபகவானடைந்து குந்தா தேவிக்கு அநுக்கிரகஞ்செய்ய உடனே உம்மைப் பெற்றள்-அந்தச் சூரியனுடைய வரத்தினல், கன்னியாகவேயிருந்து பின்பு பாண்டுராஜனைக் கலியாணம் பண்ணிக்கொண்டு மூன்றுமந்திரங்களால் தருமராஜன்-விமசேனன்-அருச்சுனன் இந்த மூன்று பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டாள், மற்ற ஒரு மந்திரத்தையும் தன் சக்களத்தி யாயும் பாண்டுராஜனுக்குத் துவிதிகை பாரியாளுமாகிய மாத்திரா தேவிக்கு அநுக்கிரகஞ்செய்து திவ்யமான பிள்ளைகள் ஒருகர்ப்பம் ஒருபிறப்பாய் நகுல சகாதேவனைப் பெற்றுக் கொள்ளச் செய்தாள், கேளுங் கர்னராஜனே! கன்னிகைப்பருவத்தில் முதற்பெற்ற பிள்ளையாகிய உம்மை வளர்க்கப் பாக்கியம்பண்ணுமல் உலகப்பழிப்புக்கும் அரசன் பெண்ணுகிய பிரதை கலியாணமில்லாமல் கணவனைச் சேர்ந்து பிள்ளையைப் பெற்றுளென்று தேசைமோர்ந்த யிளநிரொன்றும் பழிபோல்வருமே தன் தகப்பனுடைய நீதிக்குக் குறைவுண் டாகுமே என்றேங்கி உடனே ஒருபெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டாள் மற்றக்காரியமெல்லாம் உமக்குத் தெரிந்தே யிருக்கின்றது நானினி விசேஷித்தொன்றுஞ்சொல்லவேண்டியதில்லை. ஆனல்? பாண்டவர்களுக்கு மூத்த தமையன் நீராகையால் இந்தராச்சியத்தைஜெயித்துக்கொண்டாலுஞ்சரியே! அல்லதுவிட்டாலுஞ்சரியே; இன்றுமுதல் உமதுதம்பிமார்கள் ஐவரும்வணங்க நீருமிணங்கி சகோதர வாற்சல்லியமேலிடும்படியாகப் பொருந்திவாழ்வைப்பெற நான்கண்ணுற்கண்டு களிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு இந்த மொழிகளை விண்டேன் இரண்டாம் பேருக்குத் தெரிய வேண்டாம் மனதுண்டானல் ரெண்டாநாளேவந்துசேருகிறது உத்தமம், அப்பா லுமதிஷ்டம் என்பேரிற் கோபம் வேண்டாம் என்றுசொல்லிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து கர்னன் சொல்லுகிறுன்.

ஓய் கிருஷ்ணதேவா இன்றெனக்கு நல்லகாலம், என் குலகோத்திர முதலியயாவுந் தேவரீர் வாக்கியத்தால் தெரிந்துகொண்டு தன்னியனுனேன் சுகமடைந்தேன் கிருதார்த்தனுனேன் கீர்த்திமானுனேன், ஆனல், ஒருவார்த்தை கேளும் பாண்டவர்கள் என்தம்பிமார்களென்று இப்போதறிந்து கொண்ட யான் அவர்களிடத்தில் வந்து சேர்ந்து விட்டால் அடா பாவி, நன்றி குன்றினவனேயென்று நாலுபேரும் பகைத்து நகைப் பார்களே யல்லது தெரிந்த யோக்கியனென்று என்னைச் சிந்திக்கப்போகிறதில்லை, உலகம் நிந்திக்கும், என் தம்பிமார்களுந் தேவரீரும் என்னை எவ்வளவாக மதிப்பீர்கள் அது மரியாதையல்ல! மேலும், ஆற்றில் மிதந்து வந்த என்னை யெடுத்து சூதநாயகன் வளர்த்து வந்த காலத்தில் இன்ன ஊர் இன்ன சாதி இன்ன குலம் இன்ன கோத்திரம் இன்னுனென்று எதுவுமறியாமல்மனது கூசாமல் என்னை

யாதரித்து அங்கதேசாதிபதி யாக்கி அஸ்தினாபுரத்தின் செல்வங்களை எல்லாம் என்வசத்திலொப்பி வைத்து தன்னுடனே கூட சரியாசனத்திலுமேற்றி சகலராஜர்களும் பணியும்படியாகச்செய்து சிரேஷ்ட பிரதாவைப் பார்க்கிலும் விசேஷ மரியாதை யுடையவனும் பேதமில்லாமல் உடலிரண்டு உயிரொன்றென் றுரைக்கும் படியாக மலரும் மணமும்போல்வைத்திருந்த மகாராஜனாகிய துரியோதன பூபனுக்கும் பாண்டவர்களுக்கும் பகை மேலிட்டு உனக்கெனக் கென்றிருக்கும் போது செய் நன்றிகுன்றிய நீயர்களைப்போல் நான் என் தம்பிமார்க ளிடத்திற் கூடிக்கொள்வது ஞாயமா நீரே சொல்லுமென்று கச்சைக்கொடியினனாகிய கர்னன்சொல்ல ! பச்சைத் திருமேனியையுடைய கண்ணன்சொல்லுகிறார்.

ஐயா! கர்னனே நானறிந்துகேட்டதத்தையுநான்சொல்லவேண்டியகடமையையுஞ்சொன்னேன் அப்பால்உன் னிஷ்டத்திற்குச் சரிப்போனபடி நடக்கலா மென்று விடைபெற்றுக் கொண்டு அசுபத்தாமா அவடத்தில் நிற்கக்கண்டு வாருமையா, அசுபத்தாமனே யென்று கையைப்பிடித் தழைத்துக்கொண்டு நடந்துபோகையில் குருபுத்திரனே நான்கேட்ட காரியமும் துரியோதனன்சொல்லிய உத்தரமும் எனக்குப் பள்ளம்பறித்ததும் இதுகளெல்லாம்உமக்குச் சம்மதமா யிருக்குதா, ஐயோஅனியாயமாய் பதின்மூன்றுவருடம் நாட்டைவிட்டு காட்டில்வருந்திவந்தபாண்டவர்களுக்குஅவருடையநாட்டையுங்கொடாமல் ஐந்துவீடுங்கொடுப்பதில்லையென்று சொன்னால் அவர்களென்ன விடப்போகிறவர்களோ உமக்கென்ன தெரியாதோநாளை நடக்கப்போகிறகெதியைநாமெல்லோரும் அறியவேபோறோம் (பதராதகாரியஞ்சிதருதென்னும் பழமொழிபொய்யோ) அதுபோகட்டும் இந்தத் துரியோதனனுக்கு யிவ்வளவு கர்வமென்ன உங்களையாவாகிய துரோணரைக்கூட ஆசாரியனென்றும் பாராமல் ஒவ்வொரு சமயத்தில் எடுத்தெறிந்து பேசுகிறதாய் நான்கேள்விப்பட்டிருக்கிறேன் உம்மிடத்தில் மெத்த பயங்கரமாயிருந்திருந்தும் நீ ரொப்பேர்ப்பட்டவர் இந்தத்திரிலோகத்திலும் உமக்குமிஞ்சியபேர்களொருவருமில்லை ஐயாவுமக்கு அருச்சுனன்பேரில் பக்ஷமுண்டு நீங்கள் தான் பள்ளிக்கூடத்துக்கூட்டாளியாச்சே நீங்க ளொருவருக்கொருவர் வைத்திருக்கும் பட்சத்தை நான்சொல்லவேண்டியதில்லை அதற்கு உங்கள் மனதேசாட்சி இன்னொருகாரியம் துரியோதனன் உம்மை வணங்கிவழிபட்டு நாளைநடக்கப்போறயுத்தத்திற்கு சேனாதிபதியாயிருக்கச்செய்வானென்று நானினைக்கிறேன் ஒருவேளையப்படி நேரிடுமாகில் உங்கள்தகப்பனாருக்குச் சிஷராகிய பாண்டவர்கள் உமக்குஞ்சிஷர்களே அவசியம்பிதுராசாரமென்னுந் தன்மைபோல் உங்கள் தகப்பனாருக்கிருக்கும் பக்ஷம்போல் பாண்டவர்களிடத்தில் உமக்குமிருக்கவேண்டும் நீர்பின்னையொரு உதவியுஞ்செய்யவேண்டாம் சேனாதிபதிப்பட்டத்திற்கு மாத்திரம் ஒப்புக்கொள்ளாதீர் எவ்விதத்திலாகிலும் விலக்கிவிட்டுவிடும் பாண்டவர்களுக்கு உம்மாலாகிற உபகாரமிதுவென்று வாயினால்பேசிக்கொண்டுவ

ந்து தமதுவலது கரத்தின் விரலிலிருக்கு மோதிரமோதிரத்தை பெருவிரலாற்றளத்தி நிலத்தில் விழச்செய்தார் அப்போதே பூமியில்விழுந்த அந்தமோதிரத்தை அசுபத்தாமன்கண்டு யிறங்கியெடுத்து ஐயனே ! இதோமோதிரங் கீழேவிழுந்ததென்றுகொடுக்க அதைவாங்கக் கை நீட்டினவர்போல் கையைக்காட்டி ஆகாயத்தைப் பார்த்து அசுபத்தாமரே சூரியனைப்பரிவேடஞ் சூழ்ந்திருப்பதைப்பார்த்தீரா மழைக்கொப்பாயிருக்கிறது நானுஞ்சேனைகளும் பாண்டவர்களிருக்கும் உபலாவியம்போய் சேருகிறவரைக்கும் மழையில்லாமலிருக்குமாவென்றுகேட்க, அசுபத்தாமனும் அந்தமோதிரமெடுத்தகையைநீட்டி ஆகாயத்தைக்காட்டி ஆம் சூரியப்பரிவேடமேயென்றுசொல்ல அப்பால் பூமியைப்பார்த்துக் கையைக்காட்ட அசுபத்தாமன் அவர்கையில் மோதிரத்தைவைக்க வாங்கிக்கொண்டு நல்லதுபோய்வாருமென்று விடைபெற்றுக்கொண்டு தமது எண்ணங்கள்நிறைவேறியதுபோக யின்னமென்னயிருக்குதென்று எண்ணிச்சந்தோஷமடைந்து தேவதைகளெல்லாம் பூமாரிபொழிந்து போற்றும்படியாக சாத்தகிமுதலிய சகல ஜனங்களுடனேயும் விதுரன்வீட்டுக்குவந்து மத்தியான போஜனஞ் செய்து யிளைப்பாறி யிருந்தார்.

இப்பால், அசுபத்தாமா ! கிருஷ்ண மூர்த்தியி னிடத்தில் விடை பெற்றுக் கொண்டு இராஜ சபைக்குப் போம் போது அவடத்திலிருந்த சகுனி முதலாகியபேர்களும் அசுபத்தாமன் செய்த குறிப்பைக் குற்றமாகப்போதனைசெய்து துரியோதனனுடைய மனத்தைக்கலைத்துவிட்டார்கள். அப்போது வணங்காமுடியோன் மனம்பதைத்துச் சபையிலுள்ளயாவரையும்பார்த்து கேட்டீர்களா பார்த்தீர்களா பகையாளியின் தூதனென்றுவந்த அந்தப்பஞ்சையைப்பொருட்படுத்திஅவன்பின்னேபோனதும் யாவருக்கும்போதிக்கும் ஆசாரியபுத்திரனாகியஇந்த அசுபத்தாமனுக்கு அவன்போதித்ததும் அப்படியே இவன் உடன்பட்டுதுரியோதனன் எனக்குச்சேனாதிபதிப்பட்டங்கட்டினால் பாண்டவர்கள் பக்ஷத்திலிருந்து துரியோதனனைக் கெடுத்துவிடுகிறேனென்று சொல்ல, அந்தக்கிருஷ்ணன் இவன்சொல்லைநம்பமாட்டாமல் சத்தியம் பண்ணிக்கொடுவென்று கேட்க, அப்படியே ஆகாயம் பூமியறியபாண்டவர்களை ரட்சிக்கிறேனென்று பரவசஞ் செய்துகொடுத்துவந்தான் இந்த மித்துருத்துரோகிகளையெப்படிநம்புவதென்று உரக்கக்கூவி ஐயோ என்னுடைய சொத்தைத் தின்னத்தக்கபே ரெல்லாருமிப்படியாயிருக்கவேணும் தெய்வமே என்று சிந்திக்க அப்போது அந்தவசனத்தைக்கேட்டுக்கொண்டு சபைக்குவந்த அசுபத்தாமனை துரோணர்முதலிய யாவரும் நிந்திக்க அசுபத்தாமன் சிந்தித்து நாமொன்றும்பிரமாணம்பண்ணிக்கொடுக்கவுமில்லை அவரும்பிரமாணங் கேட்கவுமில்லையே இப்படியிருக்க இப்பேர்ப்பட்ட அபரோதனை எப்படிவிளைந்ததென்றுயோசித்து சூரியப்பரிவேடங்காட்டியது ஆகாயத்தைக்காட்டியும் பூமியில்விழுந்த மோதிரத்தையெடுத்தது பூமியைத்தொட்டு சத்தியஞ்செய்தானென்றும் ஸ்

தாபித்துவிட்டார்கள் இது சரிப்பட்டுப்போச்சுது இனி நாமெத்தனைவிதமாய்க்கற்ற உண்மைகளைச் சொன்னாலும் சற்றுமிலும் நம்பமாட்டார்கள்இந்தநாட்டார்கள் ஆஆ பிருஷ்ஹோ? உன்னெண்ணத்தில் வைத்துக்கொண்டு பண்ணியசூதாயிது புண்ணியனே? உன்னெண்ண நிறைவேறிற்றுறுந்தவையகமெல்லாம்என்னைவஞ்சகனென்றுரைக்கும்படியாக ஒருபேர் மாட்டிவிட்டையே சபையிலிருந்த எல்லார்மனத்தையும் பம்பரம்போலாட்டிவிட்டையே செந்தாமரை நாட்டமுடையவனே நீரோயிப்படி மித்ரபேதஞ்செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டால் பாண்டவர்களுக்குப்பகைவருமுண்டோ ஆண்டவனே தாண்டவமூர்த்தியென்று வேண்டிக்கொண்டிருந்தான் அசுபத்தாமன்.

அப்பால் விதுரன்விட்டிற்சென்ற சதாரணுகிய கிருஷ்ணமூர்த்தியானவர் பகற்காலமெல்லாம்இளைப்பாறிக்கொண்டிருந்து சாயுங்காலம் தங்களத்தையாகிய குந்திதேவியின் அரண்மனைக்குச்சென்றார் இந்திரன்முதலிய பிரமாதியரும் யேத்திப்போற்றி நமதுகர்த்தன் நமக்காகப்பொன்னடிபெயர்த்தருளி என்னபாடுபடுகின்றாரென்று தோத்திரஞ்செய்து வாழ்த்தினர்கள் அதுகாலத்தில் வசுதேவருடனேகூடப் பிறந்த நல்லத்தையாகிய குந்திதேவியும் மருனைவள்எதிர்கொண்டுவந்துகண்டு மருமகனைத்தழுவி வாழ்த்தவும் கோபாலகிருஷ்ணன் குந்திதேவியைப்போற்றி மாமி கொடையாளியாகிய கர்னனிடத்திற்குப் போய் வந்தையாமாமியென்றுகேட்க; இன்னம் போகயில்லையென்றுசொல்லக்கேட்டு இதுநல்லதருணம் போய்வாருமென்று நடந்தகாரியங்களைச்சொல்லி இனி நடத்தவேண்டியகாரியங்களையும் பேசிக்கொண்டுவாருமென்று பிரயாணங்கூட்டியனுப்பிவிட்டு உடனே பிரதையானவள் மூத்தமகனைப்பார்த்து பேசவேணுமென்னும் ஆசைமேலிட்டு நேசவிசுவாசமுள்ள கர்னமகாராஜனுடைய கொலுவாசலுக்குப் போகும்போது வாசற்காவலாளர்கள் விரைந்தோடிச்சென்று ராஜபூஜித மகாராஜ ராஜஸ்ரீயாகிய போஜனேகேளும் வாசநீங்காத மாலையணிந்த தேசத்தரசர்கள் திறைகொண்டுளக்க சேனைத்தலைவராய்ச் சிங்காசனத்திருந்து செங்கோல்செலுத்து மெங்கோனுகியபாண்டுபூபதியின்பட்டத்தரசி குந்தமாதேவி நமது கொலுக்கூடவாயலில் எழுந்தருளினுரென்று இறைஞ்சிக்கூறஅந்தவார்த்தையை அங்கதேசாதிபன்கேட்டுஎதிராகச்சென்று பிரதட்சணஞ்செய்து சாஷ்டாங்கதெண்டனிட்டு பாதபூசைசெய்து மிகுந்தவாச்சல்யத்துடனே அழைத்துக்கொண்டுபோய்ஆசனமமைத்து அதன்மேலிருத்தி பிரமானந்தம் அடையவும் தாயாகிய குந்திதேவியும் குமாரனைப்பார்த்து (சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல) சரீரம்பொங்கிச் சந்தோஷமடையவும் இவ்விதமாக இருவருமகிழ்ந்து ஒருவரையொருவர் உற்றுநோக்கவும் கர்னமகாராஜன்கண்ணீர்சொரிந்து அம்மாஜன்மாந்திரங்களிலே நான் நல்லதவங்களைச் செய்திருந்தபடியால் எனக்குத்தரிசனங்கொடுக்க யிவடத்திற்கெழுந்தருளினீர் என்பாக்கியமே பாக்கியம் தாயே தேவரீர் இவ்வளவுதூரந் திருவடிவருந்த வரவிருந்த காரியமென்ன திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கர்னன்கேட்க குந்திதேவி சொல்லுகின்றாள் குழந்தாய் நீ என்னுடைய பிள்ளை நானுன்னைப்பெற்றதாய் அதெப்படியென்றால் தன்னந்தனிமையாகிய கன்னிகைப் பருவமாய் என்வீட்டி லிருக்கும்போது ஒருமுனிவரானவர் என்னுடைய தந்தையாகிய குந்திபோஜமகாராஜ னிடத்திற்குவந்து வந்தனம் மரியாதைகளைப்பெற்று ஆசீர்வதித்து சாதுர்மாதவிரதஞ்செய்யவேண்டுமென்று சொல்ல அதற்குடன்பட்டு எனதுதந்தையானவர் அந்தப்பெரியவருக்கு சகலவித ஊழியப்பணிவிடைகளுஞ்செய்யும்படி எனக்குக்கட்டளையிட்டார் அந்தப்படிக்கு முதல்நாளைப்போல பலநாளுஞ்சகலவிதவுபசாரங்களுஞ் செய்துக்கொண்டு வந்தேன் அப்போது அந்தமகாமுனிவருக்கு யென்பேரிற்கிருபைவந்து மகிழ்ந்து ஐந்துதேவதைகள்பேரால் ஐந்துமந்திரம்உபதேசஞ்செய்து ஆசீர்வதித்துச்சென்றார்.

அப்பால் பாலையாகிய எவ்வர்ணமுடையபான் எதுவுந்தோன்றாமல் அந்தமந்திரத்திலொன்றைப் பரிட்சிக்கும்படி யெண்ணி யுச்சரித்தேன் அந்தட்சணத்திற்றானே அந்தமந்திரத்துக் கதிதேவதையாகிய சூரியபகவான் தன்கிரணங்களைச் சுருக்கிப் பிரத்தியட்சமாய் தருணியாகிய எனக்கு கன்னிகைப்பருவங் குறைவில்லாம லிருக்கும்படி வரங்களைப்பெருக்கி அநுக்ரகஞ்செய்ய உடனே எனது கர்ப்பத்தில் நீவந் துதயமாயினை மகனே அந்தவேளையில் உன்னுடைய திருவுருவத்தையும் கவசகுண்டலத்தையுங் கண்டு களிகூர்ந்தயாள் கன்னிகையாதலால் கண்கலக்கமுற்று ஆளனில்லாமல் ஆண்பிள்ளைபெற்றாள் அரசனுடைய மகளென்றுயாவருஞ் சொல்லிப் பழிப்பார்களே தந்தைமுதலிய பந்துக்களும் நிந்திப்பார்களே குடிகேடியென்றென்னைக் குறித்துக்கோவிப்பார்களே குணவதியிப்படியானாளென்று கூறுவார்களே என்று குலைகுலைந்து பற்பலவாராக நினைந்துபழிக்கஞ்சின பாவியாகிய யான் ஒருபெட்டகத்திலுன்னைவைத்து ஆற்றில்விட்டுவிட்டேன் அன்றுமுத லெனக்கொன் றுந்தெரியாது அப்பனே இன்றறிந் துன்னைப்பார்க்கவந்தேன் என்கண்மணியே உன்னையெடுக்கவும் மார்போடணைத்துப்பால்கொடுக்கவும் நீராட்டவும் தாலாட்டவும் சந்திரனைக் காட்டவும் சப்பாணிகொட்டவும் ஆபரணம்பூட்டவும் தத்தடியிட்டுநடந்து சிறுதேரோட்டவும் சக்கரைக்குங் குதலைமொழிபகர்ந்து தாயே அம்மாவென்று நீ அழைக்கவும் சீராந் தழைக்கவும் பாக்கியஞ்செய்யாத பாவினானுகினேன் அடாபாலனே ? நானுனக்குத் தாயென்றும் நீயெனக்கு ஜேஷ்டகுமாரனென்றும் பாண்டவர்களுனக்குத் தம்பிகளென்றும் சந்தேக மில்லாமலுனக்குத் தெரிவிக்க வந்தேனென்று குந்திதேவியார் சிந்தைவருந்திச் சொல்ல இந்தவார்த்தைகளெல்லாம் குந்திமுதற்புத்திரனுகிய கர்னன்கேட்டு அம்மா கோபஞ்செய்யாதீர் அடியேன் ஒருமொழி சொல்லுகிறேன் இதுவரையிலும் இல்லாததாய் இப்போது எங்கேயிருந்துவந்தார்கள் இதுகளெல்லாம் பம்பகம்பண்ணி தேவரீரை ஆளாக்கி அனுப்பிவைத்த ஆளைநானறிவேன் மேலும் உமதுவாக்கியம் உண்மைதா

ன் சந்தேகமில்லே அப்படியிருந்தாலும் நானிப்போது ந
ம்பமாட்டேன் அதேனெனில் எவர்களானபோதிலுந் தி
ரவியசம்பன்னுளா யிருப்பார்களாகில் அவர்களே என்பி
ள்ளே-என்தமையன் என்தம்பி என்மாமன் என்தந்தை
ஸ்பந்து என்சொந்தம் என்றுசொல்லுவது இவ்வுலகமா
ர்க்கம் ஆகையால் துரியோதன மகாராஜனுடைய சம்ப
த்தெல்லாம் என்பற்றுயிருக்கின்றமையால் எனக்குத்தா
யென்று வெகுபேர்வந்து நான்பெற்றேன் நான்வளர்த்
தேனென்றூர்கள் அப்போதுநான் விசனப்பட்டு ;(கவி)
(அன்னையெத்தனையெத்தனையன்னையோ, அப்பனெத்த
னையெத்தனையப்பனோ) என்றுமொழிந்த பெரியோர்களி
ன் சொல்லுக்கிணங்க யிருக்கின்றதேகமதுபிறப்பென்று
நானுமுற்று ரூதநாயகனையும் அவாதுமனைவியாகிய இ
ராதையம்மனையும் வணங்கிநோக்கி என்வரலாறென்ன
வென்றுகேட்டேன் அவர்கள் சொல்லியதாவது குழந்
தாய் பிள்ளையில்லாமல் வருந்தியிருந்த யெங்களுக்கு பி
ள்ளைக்கலி திர்க்கும்படியாய் பெருகிய ஆற்றில் பெட்டியி
ல்மிதந்துவந்த பெருமானே உன்னைக் கண்டெடுத்துவந்
து வளர்த்துப் பேரிடவேண்டுமென்று யோசிக்கும்போ
து கன்னனென்று பெயரிடும்படி அசரீரிவாக்கியம்பிறந்
தது, அப்படியே பெயரிட்டு எங்களாற்கூடிய சீரிட்டுவ
ந்தோம் அப்பனே ! இது நீவந்த வரலாறென்று சொன்
ஞர்கள். அதைக்கேட்டு மறுபடியும் அவர்களைப்பார்த்து
நல்லது நான்வந்தபெட்டியில் ஏதாகிலும் எழுதியிருந்து
தா அல்லது வேறுபொரு ளேதாகிலு மிருந்துதா அந்த
ப்பெட்டி யெங்கேயென்று கேட்டேன், வேறொருபொ
ருளுமில்லே, அந்தப்பெட்டி யிதோ யிருக்குதென்றுகொ
ண்டுவந்து வைத்து அப்பாமகனே; இந்தப் பெட்டியை
க் காப்பாற்றிய தன்மையைப்போல் உன்னைக் காப்பாற்
ற யில்லையென்று சொன்னூர்கள், அப்போதெனக்குப் ப
தினொன்றும்வய தாகையினுல் தனுர்வேதங் கற்று துரி
யோதன மகாராஜனுடைய சம்பத்தை யனுபவிக்குங் கா
ல மாகையால் அந்தப் பெட்டியை எடுத்து வந்து என
து அரண்மனையில் பூசைவீட்டில் வைத்துக் கொண்டு
நித்திய பூசை தூப தீபமுங் கொடுத்து வந்த காலத்தில்
ஒருநாள் என்னையாதரித்த அன்னையின் கர்ப்பம் போன்
ற அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தேன், அதனிடத்
தி லொருநாக வுரிப்பட்டை நாலாக மடித்து விரித்திருந்
தது. அது என்கண்ணுக்குத் தோற்றிய படியால் நானெ
டுத்துப் பூசித்து வைத்திருக்கின்றேன், அம்மா ? அந்தக்
காலத்தில் எனக்குத்தாயென்றுவந்த ஸ்திரிக ளிடத்தில்
இந்தப் பட்டுவஸ்திரத்தைக் கொடுத்து உடுத்திக் கொள்
ளச்சொன்னேன், அவர்களும் உடுத்திக் கொள்ளும்படி
யாகக் கரத்தில்வாங்கி விரித்தவுடனே சிரத்தைத்திருப்பி
உள்ளுடைந்து உதிரம்வறண்டு அக்கினிக் கொழுந்தின்
அனல்வந்துவிச ஆரண்டு வெருண்டு அடித்துமோதி வி
ழுந்து-உருண்டு புரண்டு ஓடிப்போய் விட்டார்கள். அம்
மணி யென்னிடத்தில் தாயென்று வந்து பேய்போற்கத
றிப் போவாளைக்கண்டு அன்றுமுதல் இன்று வரையிலு
ம் தாயென்று வருவாரொருவருமில்லே தாயே என்று க
ர்னன்சொல்லக், குந்திதேவியார்கேட்டு குலுங்கநகைத்
து அடாயெனது புத்திரசிகாமணியே? உன்னைப்பெற்ற
நாளையில் உடுத்திக்கொண்டிருந்த பட்டு வஸ்திரத்தை உ
ன்னுடம்பு வருந்தாமல் பெட்டியில் வைத்து விட்டேன
டா மகனே அந்தப்பட்டோ சுசி ஆசாரம் பக்தி இவை
யெல்லா முள்ளவர்க்குத் தோன்று மல்லாமல் மற்றபே
ருக்குத்தோன்றாது. ஆகையால் எதோ அந்த வஸ்திரத்
தை யெடுத்துவா வென்றியம்ப, அப்படியே பரிக்ஷிக்க
வேண்டுமென்று கர்னனும் பக்ஷமுடன் தாக்ஷணங் கொ
ண்டுவந்து கொடுக்க அதைவாங்கிச் சற்றுநேரம் யேங்கி
சூரியபகவானைச் சிந்தித்து நாகவுரிப்பட்டை விரித்து அ
ரையி லுடுத்திக் கொள்ளவே வாடாமல் வதங்காமல் ஒ
டாமல் ஒதுங்காமல் வெண்டாமரைபோல் விளங்கியமு
கமும் பால்சுரந்து பசந்ததனமும் பக்ஷமும் இச்சையும்
உடையவளாயிருந்த குந்திதேவியைக்கண்டு பிரமானந்த
ங்கொண்டு அமுதமுண்டவனைப்போல் அன்பு நிறைந்து
அன்னையின்பாதத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து என்னை
யின்னானென்று தெரியச் செய்த இறைவியே சரணமெ
ன்று இறைஞ்சிக் கர்னன்செய்த உபசாரமும் தோத்திர
மும் இன்னவிதமென்று எம்போலியரா லியம்பப்படா
வாம். அங்காலையில் கன்னி பிள்ளையைக் கட்டித் தழுவி
க்கொண்டு உச்சிமோர்ந்து உடலுடனணைந்து தேகமெல்
லாந் தடவிக்கொடுத்து வளர்த்தெடுக்கப் பாக்கியம்பண்
ணுமற் போனேனென்று மனம் வருந்தும்போது மகனு
கிய கர்னன்சொல்லுகின்றான், கேளுமாதாசி நல்லபூசை
விரதம் நோன்பு தவம் பெரியோர்நேசம் இவைமுதலிய
பாக்கியமெல்லாம் பெற்றவ ராகையினுல் ஆறுபிள்ளைக
ளைப்பெற்று ஐந்துபிள்ளைகளை யெடுத்து வளர்த்துப் புத்
திரவாஞ்சையை நீக்கிவிட்டீர், அடியேன் தேவரீருடை
ய கரத்திலிருந்து வளரவும், பாண்டவரைவரும் எனக்கு
த் தம்பிகளென்று பாரோர்மதிக்கவும் பாக்கியஞ்செய்யா
த பாவியானேன்-தாய்தந்தை தம்பி ஜாதி குலமுதலிய த
ன்மையின்னதென்று சாம்பிர தாயத்தைத் தாரணியோர்
சொல்லிக்கொள்ளும் படியாகிய தவஞ்செய்யாத தரித்தி
ரனுனேன் இன்றெனக்கு நல்லகாலமானதால் உம்மைக்
கண்டு தரிசிக்கப்பெற்றேன் என்மனக் குறைக ளெல்ல
மற்றேன் மேன்மையுற்றே னென்று தாயும் பிள்ளையு
சந்தோஷத்துடன் வார்த்தையாடி மகிழ்வுற்ற போது கு
ந்திதேவியானவள் கர்னனைப் பார்த்து அப்பனே இதுவ
ரையிலும் உன்பிறப்பை நீயறியாதபடியால் துரியோதன
னிடத்தி லிருந்தாய் இன்றுனென் றறிந்து கொண்டமை
யால் பாண்டவராகிய தம்பிமார் பணிவிடை செய்யச் சி
ங்காசனத்தில் வீற்றிருந்து தேசதேசராஜரும், வந்து வி
சுவாசமாகப் பணியவும் புவனசக்ரேஸ்வரன், புண்ணிய
சாலி தருமபூபதிக்கு அண்ணன், அஜேயனென்று தேவ
ர்கள்முதலிய யாவர்களும் ஜெயங்கூறிக் கொண்டாட அ
ஸ்தினபுரத்திலிருந்து அரசாளுகிறதைப்பார்க்கிலும் வே
றுகிய வைபவம் ஒன்றுமில்லையே அப்படி செய்வதே க
டனென்று குந்திதேவியாகிய தாய்சொல்ல, அதைக்கே
ட்டு கர்னனென்னும் சேப்சொல்லுகின்றான்.

கேளுமம்மா ராஜபத்தினியே ? சூரியபகவா னுடைய அநுக்கிரகத்தினால் என்னைப் பிள்ளையாகப் பெற்று பிறபழிப்பார்களென் றஞ்சி பெட்டியிலிட்டு பெருக்காற்றில்விட்டு புத்திரப் பேராசையை நிராசை செய்துக் கொண்டு பெற்றதுமல்ல பெறுததுமல்லவென்று எல்லா மறந்து விட்டீர் அம்மணி உமது கர்ப்பத்தி னலத்தினு லேயோ அல்லது என்னை உற்பவித்த சூரியபகவா னுடைய பலத்தினு லேயோ ஜன்மாந்திரத்தில் நான் தேடிக்கொண்டதபோபலத்தினுலேயோ உயிர்பிழைத்து ஆற்றில்மிதந்து வரும்போது சூதநாயகனும் ராதையும் என்னையெடுத்து வளர்க்க அந்தச் செய்தியை திரிதராட்டிர மஹாராஜன் கேட்டு தன்குலத்திற்குரிய பிள்ளையாக சகலசெல்வத்துடன் போஷித்து வந்தான். (இத்தனை பெரியவன்கைதொட்டிமுத்தால் எப்படிமாட்டோமென்ப தென்னும் பழமொழிபோல்) சூதநாயகனும் ராதையுந்தடை சொல்லாதிருந்தார்கள் நானுங்குழந்தையாதலினல் செல்வத்தில் வளர்ந்துவந்தேன் அப்பால்துரியோதனுதியரும் பிறந்தார்கள், நான்பரசிராமரிடத்தில் தனுர்வேதமுங்கற்றேன், துரியோதனன்முதலிய பாண்டவர்களும் உரியவராக யிருந்து துரோணுச்சாரிய ரிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்டு பரிசைஷ பார்க்கும்போது அருச்சுன னுக்கும் எனக்கும் பகைநேரிட்டு சபதங்கள் கூறியகாலத்தில்,துரியோதனராஜன் என்னை உயிர்த்தோழனுகக் கொண்டு அங்கதேச பட்டாபிஷேகந்தரித்து பொன்மாலையென்னும் பெண்ணை சுயம்வரத்தில் கலியாண முடித்துவைத்து தன்னுடன்கூடச் சரியாசனத்திலேற்றித் தம்பி மார்களும் சகலராஜர்களும் போற்றிசெய்ய சுற்றத்தார் முதலிய யாவருந் தொழும்படியாகச்செய்து காணியாட்சி அரசாட்சி படையாட்சி முதலாகிய நிதி நிக்ஷேபங்களும் என்னிடத்திலொப்பிவைத்து பொற்பள்ளயத்தில் கூடவிருந்து புசிக்கும்படியாகச்செய்து பெரும் பிரபலமும் புகழும் பெருமையும் உண்டாக்கி பேதமில்லாமல் பாதுகாத்தவந்தான் புவன சக்ரேஸ்வரனுகிய புண்ணியன், இதல்லாமலும், இன்னமொரு விந்தையைக் கேளும்! அன்னையாகிய குந்திதேவியே ஒருநாள் ! கெடிஸ்தலாதிபதி யாகிய சுயோதனமகாராஜாவின் தர்மபத்தினியாகிய பானுமதியும் நானும் தனிமையாய் ஏகாந்தச் சாலையில் சொக்கட்டா னுடிக்கொண்டிருந்தோம், அந்த வேளையில், துரியோதனராஜன்வந்தார்! அவர்வருவதை நேராகப் பார்த்த பானுமதியானவர் ஆட்டத்தைவிட் டெழுந்தார் அரசன்வந்ததை நானறிந்துகொள்ளாமல் தோர்ப்புக் கெலிப்பு இரண்டும் பார்த்துவிட் டெழுந்திரு மென்று அனாயிற் கட்டியிருந்த மேகலாபரணத்தைப் பற்றினேன் அந்தப் பட்டத்தரசி அவசரப்பட்டுப் போம்போது மேகலையறுந்து பலபலவென் றுதிர்ந்தது அந்த அம்ம வுடைய அரைவஸ்திரமுந் தளர்ந்தது இந்த அலங் கோலத்தைப் பார்த்துக்கொண்டுவந்த அரச னவன் அன்று, மேகலாபரணத்தைப் பொறுக்கி யெடுக்கவா அல்லது கோர்க்கவா என்றுகேட்ட துரியோதன னென்னும் இறைவனுகிய சாந்தமூர்த்திக்கு வஞ்சகஞ் செய்து உம்முடைய அஞ்சுபிள்ளைக ளிடத்தில்வந்து சேரச்சொல்லி நீரழைப்பதும் உமதுவார்த்தையைக்கேட்டு நான்வந்துவிடுவதும் ஞாயமா தருமமா அம்மணி நீரே சொல்லும்-இதன்றியும்! க்ஷாத்திரமேலிட்டு பாண்டவர்சண்டைசெய்யக் காத்திருக்கும்போ தாகிய இன்று உமக்கு ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லக்கேட்டு வந்து அழைக்கின்றீர் அன்றுமுதல் இன்றுவரையிலும் தாய்தந்தை தமர்குரு தெய்வம்போ லிருந்து சாதி குலம் கோத்திரம் க்ஷேத்திரம் இவைகளெல்லாம் உண்டாக்கி எனக்கும் ஒருபெண்ணைப் பெண்டாக்கி அன்னபானுதி ஆபரணங்களுங்கொடுத்து ஆதரித்த மன்னனை இந்தவேளையிற் கைவிட்டு எப்படிவரலாம் தாயே (தந்தைசொன்மிக்க மந்திரமில்லை - தாயைச்சிறந்த கோயிலுமில்லை யென்னும்) நீரிக்கினங்க உமது சொல்லைத் தள்ளாமல் வருவேனுகில் சந்திரசூரிய ருள்ளவரைக்கும் உலகம்பழிக்கும் நரகங்கிடைக்கும் நன்றிகுன்றிய பஞ்சமாபாதகரில் நான் மூந்தியிருப்பேன் என்னைச் சுமந்துபெற்ற உமது கர்ப்பத்திற்கு நிந்திப்பாகிய யிழிவு வந்து நேரிடும் தெய்வமும் சகியாது இதற்கு மேலாகிய பாவமும் பழியுமில்லை அன்னையே என்னை முன்னமேநம்பி யிருக்கும் மன்னனுக்கு அவனிடத்திலுண்ட அன்னகடன் கழியும்படியாய் மன்னவருடனெதிர்த்து சின்னபின்னப்படுத்தி இக்கிலந்துதிக்க பொன்னுலகத்திற் புகுவேனுகில் கன்னிகையாகிய உமது கர்ப்பத்திற்பிறந்த கன்னன் என்கிறவனுவேன், மின்னலுக்கிணையாகிய யிடையும் கன்னலுக்கிணையாகிய மொழியும் சொன்னத்திற் கொப்பாகிய வடிவும், அன்னத்திற்கொப்பாகிய நடையுமுடைய அன்னையே இப்போது சொல்லவந்த சங்கதியை சில நாட்களுக்குமுன்னே சொல்லுவையாகில் உமது மனதுக்கு ஒப்பாக வந்துவிடுவேன் அப்போ தில்லாமல் இப்போது வந்தபடியால் என்மனது ஒப்பாது ஒருவேளை தப்பாகவந்தாலும் பாண்டவர்களுக்குத் தமையன் உண்டவீட்டுக் கிரண்டகஞ் செய்பவனுவென்று தேவர்கள்முதல் யாவர்களுந் தூறுவார்கள் மன்னர் முதலியாவரும் வசைகூறுவார்கள் மாதாவே என்று வாய்குளிர்ந்து உபசார வார்த்தைகளினுல் தேற்றினுன் குந்திதேவியி னெண்ணத்தை மாற்றினுன்-அந்தவார்த்தையைக் கேட்டுப்பகீரெனப்பதறி வாடிவருந்தி மயங்கிக் குலைகுலைந்து கண்கலங்கி கோவென்றழுங் குந்திதேவியைப்பார்த்து தானுமனந்தளர்ந்து தாயைத்தழுவிப் பணிந்து தயிரியஞ்சொல்லி கண்ணீர்துடைத்து கவலையகற்றி கருணைசூாந்த தல்லி இதுவெல்லாம் நமதுசெயலன்று பிரமத்தின் கட்டளையல்லது வேறில்லை போனதுபோக துந்தநினைற்றைத் தூறு வார்பவரைப்போற் றுரிதப்படுத்தி தேருக் குள்ள சிங்காரமுஞ்செய்து தேவரீரை யென்னிடத்திற்கு அனுப்பிவைத்த தேவன் கருத்தென்னமோ அதைத் தெரியச்செய்யுஞ் சகியென்று கேட்ட தநயனைப் பார்த்து தாயாகிய குந்திதேவி சொல்லுகின்றாள்.

என்கான்முளையே! என்னிஷ்டப்படிக்கு உன்தம்மிமார்களுடன் கூடிவாழ்ந, யென் கண்களிக்கக் காணவேனுமென்று கருதிவந்தேன் அதற்குத் தரும விபகாரமும்

நீயுஞ்சொல்லி விலக்கிவிட்டபடியால் காண்டவவனத்
தில்பகைத்துவந்த அச்சுவசேன னென்னும் நாகாஸ்திர
த்தை வளர்க்கின்று யென்று கேள்விப் பட்டேன் அந்
தக்கணையை அருச்சுனன் பேரில் எப்படியுந் தொடுக்க
வே போகிறாய் அப்படியே அருச்சுனன் பேரில் பிரை
யோகஞ்செய்தபோது தெய்வபலத்தினால் தப்பிப் பிழை
ப்பானாகில் இரண்டாந்தரம் நாகாஸ்திரம் விடுவ தில்லை
யென்று ஒருவரமும் இதன்றியும், அருச்சுனன்தவிர ம
ற்ற நால்வரும் போர்முகத்தில் நேரிடுவாராகில் அவர்க
ளிடத்தில் நீ பக்ஷமுய்த்து இச்சைவைத்துவீரப்பிரதாப
ங்காட்டாமல் லகுவாகிய யுத்தஞ்செய்து அவர்களுயிரை
க் காக்கவேண்டியது உன்கடமையாக ஒருவரமும், இந்த
இரண்டு வரமுமெனக்குக்கொடுவென்று ஈன்றாள் கேட்
க, கர்னமகாராஜன் முகமலர்ந்து சொல்லுகின்றான்.

கேளாய் அம்மா! நாளை நடக்கப்போகிறரணக்களத்தி
ல்அருச்சுனனும் நானுமெதிர்த்து பற்பலயுத்தங்களும்
பண்ணிப்பார்த்து கடைசியில் நாகாஸ்திரத்தை விடப்
போறேன் அதுயெப்படியும்அவன்தலையைவாங்கிப்போ
டும் அப்போது மனங்கூசவேண்டாம் ஒருவேளை தலை
போகாமல் உயிர்பெறுவானாகில் திரும்பவும் நாகாஸ்திர
ந்தொடுக்கேன் அதேதெனனில் நல்ல சுத்தவீரன் கரத்தி
லிருந்து புறப்படுங் கணைகள் சத்துருவைக்கொல்லாமல்
விடாது ஒருவேளை லக்ஷயந்தப்பிப்போமாகில் மறுபடி
யுந் தொடுவது ராஜகர்மமும்; தனுர்வேததர்மமும், வீர
தர்மமும், மேலாகிய ஆண்மையுமல்ல, மேலும், மற்றநா
லுதம்பிமார்களையும் என்கையினால் கொல்லுகிறதில்லை,
ஐயமில்லாமற்கேளும் அம்மாவென்று அங்கதேசாதிபதி
யிந்த யிரண்டுவரமுங்கொடுத்து பூமிதேவியைப்போன்ற
குந்திதேவியைப்பார்த்து பாண்டுபூபதியின்மாதேவி நீர
வேண்டியவரமிதுதானா ஆனால் எனக்கிரண்டுவரந் தாரு
மென்று தொழுது அடிவணங்கிய குழந்தையை ஆதரித்
தெடுத்து அப்பாமகனே ஐயா அணியே கனியே கரும்
பே கண்மணியே உனக்குவேண்டியவரம் இன்னதென்
றுரையடா குமாரனேயென்று குந்திதேவியார்கேட்க பு
ந்திமகிழ்ந்து கர்னன்கேட்கின்றான் என்னுயிரையும் மன்
னுயிரையும் யீன்றுவளர்க்கும் இறைவியேகேளும் போ
ர்க்களத்தில் அருச்சுனனும் நானும் எதிர்த்துச்சமர்புரி
யும்போது அருச்சுனன்கணையினால் நானிறந்து விழுவே
னாகில் உடனே தேவரீரோடிவந்து என்மேல்விழுந்து எ
ன்மகனே! என்மகனே! என்றலறி அழுது உன்மகனெ
ன்று உலகமறியச்செய்வது ஒருவரம் அப்பேர்ப்பட்டமு
டிவுகாலம் எனக்கு நேரிடுகிறவரையிலும் நானுனக்குமூ
த்தபிள்ளையென்றும் தேவரீர் தாயென்றும் பாண்டவரெ
னக்குத் தம்பிகளென்றும் நானிறக்குமளவும் மன்னுல
கிலொருவருக்குத்தெரிவிக்காமல் மனத்தில் வைக்கவேண்டி
யது ஒருவரம் ஒருவேளை வெளிப்படுமாகில் பாண்டவ
ர்கள் சண்டையைநிறுத்திவிட்டு சபதங்களையும்விட்டு நா
ட்டையெனக்குக்கொடுத்து தாங்கள் காட்டையநுபவிக்
கும்படியாய் போய்விடுவார்கள் அப்படியெனக்கு நாட்
டைக்கொடுத்தாலும் அந்தநாட்டை என்தோழனாகிய து
ரியோதனனுக்குக் கொடுத்துவிடுவேன் ஆகையால் விர
தமுங்கெட்டுச் சுகமும்விட்டுப்போவானேன் அம்மா இப்
போது நாமிருவரும்பேசியமர்மம் வெளிப்படாமலிருக்க
வேண்டியது இந்த இரண்டுவரமு மெனக்குத்தாருந்தா
யேயென்று யிருகரத்தையும் நீட்டியிரந்து கேட்குங் கர்
னனைநோக்கி கண்ணுமனமுங்கரைந்துவிரைந்து உன்னெ
ண்ணப்படிக்கு வரந்தந்தேனென்றுரைத்த தாயைப்பணி
ய தாயுஞ்சேயைத்தழுவிச் சிந்தைகளித்துத் தேகந்தழுவி
ய என்காதலனே! இதுவரையிலும்பிரிந்திருந்த நம்மை
யின்றுஒன்று தெரிவித்துக் கூட்டியதெய்வம் மறுபடியு
ம் பிரிக்கநினைத்தால் என்மனமெப்படிதாளுவேன் வழி
நடந்தெப்படிமீளுவேன் ஆ குமாரனேயென்று அலறிய
அன்னையை அதரித்துபசரித்து அடிமலரிணையில் முடியு
றவணங்கி விடைகொடுத்தனுப்பித் துடிதுடிப்புடன் அர
ண்மனைக்குட்போயினான் கர்னமகாராஜன்.

இப்பால் குந்திதேவியானவள் படபடவென்று வழிந
டந்துவந்து மன்னர்பெருமான் மனையிற்புகுந்து மருமக
னாகிய கிருஷ்ணன் எதிரோடிவந்துவணங்கச் சிந்தைமகி
ழ்ந்துவாரியெடுத்து உபசரித்து உள்ளறையிற்போயிருந்
து கர்னனிடத்திற்சென்றதும் அவனைக்கண்டதும் சங்க
திவிண்டதும் அவன்நவின்றதும்நடந்ததும் இயாவற்றை
யும் தன்னல்லத்தையாகிய குந்திதேவிசொல்லக்கேட்டு
தமதெண்ணமெல்லா மீடேறியதென்று இறுமாந்தெழு
ந்து மாமி நான்வந்து சிலநாளாய்விட்டுது என்னமோ ஏ
தோவென்று என்னையெதிர்பார்த்துக்கொண்டிருப்பார்க
ள் உன்பிள்ளைகளாகியபாண்டவர்கள் அவர்களிடத்திற்
குப்போகும்படியாய் உத்தரவுகொடும் உத்தமியாகிய அ
த்தையேயென்று கிருஷ்ணன்கேட்க குந்திதேவி சொல்
லுகின்றாள்.

மருமகனே! நீயிருந்தும் என்பிள்ளைகள்நிறுவாகசாலி
களாகயிருந்தும் நாட்டையும், நகரத்தையும், நலத்தையு
ம், மானத்தையும், பங்காளிகள்கையி லொப்பிவைத்துப்
போட்டு காட்டையும் கலகத்தையும் அவமானத்தையும்
கைக்கொண்டு காலம்போக்குவது காரியமல்லவென்று
நான்சொன்னதாய்ச்சொல்லும் மேலும் (நீர்மேலெழுத்
துநிலையில்லாக்காயமென்னும் நிச்சயத்தைப்பெற்ற இந்
தப்புல்லுடலைக்கல்லுடலாகநினைத்து) சபையிற்கூறிய ச
பதத்தைநிறைவேற்றாமலிருப்பது இராஜவீரதருமமல்ல
வென்றுசொல்லும் இதன்றியும் இந்தப்பாண்டவர்களைப்
பெற்றுவளர்க்கத் தவம்பெற்றேனேயல்லது பாரதயுத்
தத்தில் பிராணனுக்கானியில்லாமற்காக்குங்கடமை யெ
ன்னுடையதல்ல எல்லாந்தேவரீருடையகடமையே திரு
வுந்திறனும் உம்முடைய உடமையே என்புத்திரரை உம
து அடைக்கலமாக ஒப்பிவைத்திருக்கின்றேன் எனக்கு
வேறொருதுணையுமில்லை நீயேதுணை உன்னைநம்பினேன்
என்மருமகனாகிய கண்ணனேயென்று குந்திதேவியானவ
ள் கோவென்றலறிக்கூறக்கேட்டு தினதயாளுவாகியதிரு
மால்மாமியைப்பார்த்து நீர்ஒன்றுக்குஞ்சிந்தனைப்படவே
ண்டாம் மாமி எல்லாமென்பொறுப்பேயல்லது வேறில்
லை நீர்நல்லசேதிகேட்கப்போறீர் இவடத்திற்றானே நில்

னுமென்று சொல்லிப்பணிந்து விடை பெற்றுக்கொண்டு விதுரன் வீட்டுக்குவந்து ஓ! விதுரராஜனே? நான் உபலாவியத்திற்குப் போய் வருகிறேன். விடை தாருமென்று சொல்ல, விதுரராஜ முனிவன் சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து இருகரத்தையுங்குவித்து அஞ்சலியஸ்தராய்நின்று சுவாமீ பாண்டவர்களையும் என்னையுங்காப்பாற்றவேண்டியகடன் தேவரீருடைய திருவடித்துணையல்லதுவேறில்லை.ஆகிலும் ராஜசபையில்மோசஞ்செய்து சூதாடி நாட்டைப்பறித்துக்கொண்டுவனவாசக்காட்டைக்கொடுத்த துஷ்டனாகிய துரியோதனன் இஷ்டஜனபுத்திராளுடன் ரணகளத்திற்பட்டழியும்படியாய்ச்செய்துகெட்டியாகிய வெற்றியைப்பெறவேண்டுமென்று என்புத்திராகிய ஐவருக்குந்தெரியப்படச்சொல்லித்தேவரீருங்கூடயிருந்து ஜெயஸ்தம்பம்நாட்டி திருமுடிசூட்டிவைக்கவேண்டியபாரந்தங்களுடையதென்று விதுரராஜன்விண்ணப்பஞ்செய்துகொள்ள அதைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்லுகின்றார்.

கேளும்விதுரராஜனே! செப்பிடுவித்தைபோல் உமதுசொற்படியேநடக்கும்அப்படியேபார்ப்பீர் இப்படியே நில்லும் துயரப்படாதீர் துரிதமாகச் செலவுகொடும், விதுரராஜனேயென்று பயணம்பெற்றுக்கொள்ள பயணபேரி முழக்கினார்கள் சாத்தகிமுதலியசேனைகளும் சமுத்திரகோஷ்டம்போலச் சப்திக்கச் சகலவிருதுக்களும் குடைகொடிமுதலியவாத்தியங்களுடன் இராஜவீதிநெருங்கும்படியாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இரதமேறிவரும்போது துஷ்டசதுஷ்டாள் நான்குபேர்தவிர மற்றயாவரும்வாகனமேறிப்புறப்பட்டு சுவாமியாருடன் தெற்குவாசற்படிவரையிலும்வந்து வழிவிடுத்துவணங்க அவடத்தில் தனதுரதத்தைநிறுத்தி இயாவரையும்நோக்கி வெகுதூரம்வந்துவிட்டீர்கள் நில்லுங்கள்நில்லுங்களென்று எவரெவர்களுக்கு எந்தெந்தமரியாதைசெய்யவேண்டியதோ அந்தந்தமரியாதையுபசாரவந்தனங்களைச்செய்து விடைபெற்றுக்கொண்டு சிலதூரம்போகும்போது சிற்சிலபேர்கள் தனித்துவந்துபேசினார்கள் அவர்களுக்குத் தகுந்தவார்த்தைகளைச்சொல்லி அஸ்தினாபுரத்திற்குப்போகும்படியாய் உபசாரத்துடனிருத்திவிட்டு அப்பாற்போகையில், விதுரராஜன் ஓடிவந்துபணிந்துஒருமொழிசொல்லுகின்றான்.

சுவாமீ ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியேகேளும் இந்தச்சபையில்துஷ்டனாகியதுரியன் அவமரியாதையாய் என்னையிகழ்ந்துபேசியவசனத்தை என்பிள்ளைகளாகிய ஐவரிடத்திற்சொல்லவேண்டாம் அதேனென்றால் இந்தச்சொல்லைக்கேட்டவுடனே என்பிள்ளைகளிப்போதேவந்து இவனைச்சேதித்துகத்திக்கித்தனை சதையாகக்கழித்துவிடுவார்கள் அப்போது உலகமென்னசொல்லுமென்றால் ஏதோதெரிந்துதெரியாமல் பிள்ளையானவன் ஒருவசனத்தைச்சொன்னபோதிலும் ஒருபொல்லாங்கைச்செய்தபோதிலும், தந்தையேமுதலியபெரியவர்கள் அப்போதுதண்டித்துக்கண்டித்துவிட்டு அப்பால்மறந்துபோவார்கள் அப்படியிருக்க இந்தவிதுரன் ஒருகுடல்வேற்றுமையானதினால் அந்தப்பிள்ளைசொல்லியபேச்சை விஷம்போல்வைத்திருந்துபாண்டவர்களுக்குத்தெரிவித்து துரியோதனனுடையபிராணனை வாயுவிடச்செய்தான்பார்த்தையா கண்ணில்விரற்பட்டால் நாலுபேருக்குச்சொல்லி கலகஞ்செய்துகையைத்தறித்துவிடுவார்களுமுண்டோவென்று பலவிதபழிப்புவசனங்களைப்பேசுவார்கள் என்னையேசுவார்கள் அந்தப்பழிநமக்குவருவானேன் எப்படியும்நடக்கவேண்டியகருமம்நடக்கப்போகுது ஆதலால் நீரொன்றுஞ்சொல்லவேண்டாம் சுவாமியென்று விதுரராஜன் விளம்பியபோது அரிவாசுதேவன்மெத்தவும் விசனமுடையவராய் விதுரராஜனைப்பார்த்துச்சொல்லுகின்றார்.

ஓய்விதுரராஜனே (நினைந்தழுவன்வந்தால் உலர்ந்தவிறகுசேதமாம் என்பதுபோல) நானிவடத்திற்குவரவும், உள்ளன்பினையுடைய உன்வீட்டிலிறங்கவும் இப்பேர்ப்பட்டசொல்லிழிவு வில்லழிவுவரவும் நேர்ந்ததல்லவா நல்லது, சுவாமியிருக்கின்றார். விதுரனே நீயொன்றுக்கும் விசனப்படாதீர் இந்தச்சங்கதியைப் பாண்டவர்களுக்கு நானேன்சொல்லுகின்றேன் சொல்லமாட்டேன் நீர் நில்லும்விதுரராஜனேயென்றுசொல்லிநிறுத்திவிட்டுமுல்லைமாலையையுடையமுகுந்தன் இரதகஜதுரகபதாதிகளுடன் மேளவாத்தியமும்முழக்கிக்கொண்டுவர சாத்தகியும் சகலவல்லமையையுடைய சுவாமியின்பக்கத்தில்வரும்படியாய்ச்சென்று மார்க்கத்தில் போஜனாதிமுதலியசவுக்கியங்களையுங்கொண்டு பண்டுபலாதிநாளுமுண்டு உபலாவியம்வந்துநின்று பாண்டவர்களைக்கண்டுபேச எத்தனித்துவரும் பகவானை பாண்டவர்களும் எதிர்கொண்டுபார்க்கும்படியாய் பற்பல அற்புதசோற்பெறு அற்புதமற்புயவிற்பெறுநற்குணவிற்பன இராஜர்களும் விசுவாசர்களும்மிகுநேசர்களும் கவிராஜர்களும் குலபோஜர்களும் பணிதாசர்களும் மந்தஹாசர்களும் நகரவாசர்களும் ஜேஜே யென்று சம்பிரமங்கள இங்கிதமங்கையர் தங்கள்தனங்கள் குடங்கள்குலுங்கநடங்கள்புரிந்து தத்திமி தாவென திமிதிமி திமி திமியென மத்தளபேரிகை யோசை குமுகுமுகுமுவென தாரை பூரி வீர சின்னபேரி காகளங்களோசை சமுத்திரத்தோசையென்ன அதிர்ந்திடமகத்துவத்துடன் முன்னமெதிர்ந்திட கண்டிருவருங்களிக்க கந்தி நவருங்களிக்க கற்பகப்பூமாரிபொழிய அற்புதர்பாமாலைபொழிய கலந்திருவர்சேனைகளுடன்கொண்டாட கண்ணனைக்கண்ணினாற்கண்டு வாகனம்விட்டிறங்கி மகிழ்ந்துவரும்போது சுவாமியும் இரதம்விட்டிழிந்து எதிர்நோக்கிவர எல்லோரும்வணங்கி பல்லோருமிணங்கி நல்லோரையினிற் சகலவைபவங்களுடன்நீராஞ்சனமுதலிய கற்பூர தீபங்களினாலுபசரித்து உபலாவியத்தின்வீதிப் பிரதக்ஷிணஞ்செய்துவைத்துஇராஜமண்டபத்திற்கழைத்துக்கொண்டுபோய் நவமாகிய நவரத்னகசிதசிங்காசனத்திலெழுந்தருளச்செய்து அர்க்யபாத்ய ஆசமன்யசந்தனாக்ஷதை புஷ்ப தூபதீபநைவேத்திய உபசாரங்கள்செய்துவணங்கி நிற்கையில் சர்வலோகசரண்யன்சந்தோஷித்து சகலருமிருக்கும்படியாய் உபசாரஞ்சொல்ல அப்படியேயாவருமிருந்தபின்பு உபலாவியம்விட்டு அஸ்தினாபுரத்திற்குத்தூது போனதும் அவடத்தில்துஷ்டசதுஷ்டாள்தவிரமற்றப்பே

மெல்லாரும் எழுந்து எதிர்வந்துகண்டு களித்து மகிழ்ந்
ததும் தாம் விதுரன்மனையி லிறங்கியதும் மறுநாள் இரா
ஜசபைக்குச் சென்றதும் - நாரதர் - கண்ணுவர் - சமத
க்கினி இவர்கள் மூவருங்கூட வந்ததும் எல்லோருக்
கும்வந்தனை வழிபாடுகளை நீங்கள் சொன்னதாய்ச்சொல்லி
துரியோதனனுடைய கொலுக்கூடத்திற் சென்றிருந்து
போனசெய்தியைப்பேசியதும் அந்தவார்த்தைக்குடன்
படாமற்போனதும் முனிவர்மூவர்களும் உறுதிநிதிதரும
ம் இவைகளெல்லாம் உரைத்ததும் அவனந்தவார்த்தைக
ளைக்கேளாமல்சண்டைசெய்துஜெயித்தவர்கள்நாடாளுகி
றதென்றுசொன்னதும் தனக்குவிருந்துசெய்தவிதுரனை
யிகழ்ந்துவாய்க்கடங்காவார்த்தைகபேசியேசியதும் அவன்
உடம்புகூசிவில்லைவெட்டியெறிந்து சீ சீ யென்றிகழ்ந்து
எழுந்துபோனதும் அன்றிராத்திரி நிலத்தைப்பறித்து ப
டுகுழியாகச்சமைத்து உதயத்திற்றன்னையழைப்பித்து அ
ந்தப்படுகுழியில் விழச்செய்ததும் அசுபத்தாமனுக்குச்
சேனாதிப்பட்டம் ஆகவொட்டாமல் தடுத்துவிட்டதும்
மற்றசங்கதிகளியாவும் மைத்துனராகியபாண்டவர்களு
க்கும் மற்றப்பேர்களுக்கும் மனத்திருப்தியாகும்படியாய்
திருவாய்மலர்ந்தருள இயாவரும்ஆதியோடந்தமாகக்கே
ட்டுஆனந்தங்கொண்டிருந்தார்களென்றுசொல்லவேஆனா
ல்கர்னன் இன்னானென்றுபாண்டவர்களுக்குத்தெரியும்ப
டியாகச்சொல்லிவிட்டாரோ சுவாமியாரென்று ஜெனமே
ஜெயமகாராஜன்கேட்கவைசம்பாயனர்சொல்லுகின்றார்.

அரசனே கேளும்! கர்னனின்னா னென்பதும் குந்தி
தேவியைவிட்டு வரம்வாங்கி வரச்செய்ததும் ? குந்திதே
வி வரங்கொடுத்ததும், இந்தச் சங்கதிகளை மாத்திரம் பா
ண்டவர்களுக்குத் தெரிவிக்காமல் மற்றச்செய்திகளையெ
ல்லாந் தெரிவித்தார், ஸ்ரீநிவாசனாகிய திருமா லென்று
வைசம்பாயனர்சொல்லவே வபுஷ்டாதேவி நாயகனாகிய
ஜெனமேஜெய மகாராஜன்கேட்டு மனமகிழ்ந்து புராண
சாரஞ்சொல்லும் பெரியோர்களைப் பிரமமாக நினைத்து
ப் பூசித்து வந்தனைவழிபாடுகள் செய்யும் வண்மைப்படி
செய்து வணங்கி என்னைப் புநிதனாக்கிய புண்ணியனே
மேல்நடந்த விர்த்தாந்தத்தையுஞ் சொல்ல வேண்டுமெ
ன்று இருகரத்தையுங் குவித்துக்கேட்க வைசம்பாயனர்
சொல்லத் தொடங்கினார்.

படையெழுச்சிச்சருக்கம்.

தனியன் - விருத்தம்.

படர்ந்துகானகந் திரிந்துமீண்டன்புடன் பணிந்தபஞ்ச
வர்க்காகக், கடந்தஞானியர் கடவுளர்காண்கிலர்க் கழலி
னைசிவப்பேறத், தொடர்ந்துநான்மறை பின்செலப்பன்
னகத் துவஜன்மாநகர்த்தூது, நடந்தநாயகன் கருமுகில்
வண்ணமென் மனமவிட்டகலாதே......................௧

(என்றது,)குற்றுச்செடிகள் மரங்கள் முதலியமற்றக்
கொடிகள் சுற்றிப்படரும் புற்றினையுடைய ஆரண்யத்தி
ற் பனிரண்டு வருடந்திரிந்து அஞ்ஞாதவாசமுஞ் செய்து
வெளிப்பட்டு அன்புடன்வணங்கித், தாங்கள்பட்டதுன்
பங்களைச் சொல்லிக்கொண்டபாண்டவர்களுக்காக ? ஈ
ஷணத்திரயாதி முதலிய பற்றுக்களையுமுற்றறவிடுத்து

பரத்தின் பதத்தைத்தொடர்ந்து இகத்தின்பரத்தைக்கட
ந்த உண்மை ஞானியர்களாலும் ? தேவர்களாலும், உண
ர்ந்தறியப்படாதவிரகண்டையார்ந்த இரண்டுதிருவடிகளு
ஞ் செந்தாமரைக்கமலம்போற்சிவப்பேறும் படியாகவும்
நான்குவேதமும் பின்றொடர்ந்துசெல்லவும்,நாகத்துவஜ
முடைய துரியோதனன்வாழும் அஸ்தினாபுரத் தூதுநட
ந்த, நாயகனாகு கறுத்தமேகம்போன்ற திருமேனியினழ
கானது என்னுடைய இருகண்களையும் விட்டு எப்போது
ம் நீங்காமலிருக்கும்படியாக அருள்செய்யும் ஸ்ரீகிருஷ்
ணபகவானுடைய பதாம்புயத்தைப் பணிந்து சொல்லு
கிறேன் கேளும் ஜெனமேஜெய மகாராஜனே யென்று
வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

அப்பால் ! ஸ்ரீகிருஷ்ணபகவானானவர், பாண்டவர்க
ளுடன் சபாமண்டபத்திலிருந்து சொல்லுகின்றார்.

தருமராஜனே கேளும் ! நாமிவடம் விட்டுப் புறப்பட்
டு அஸ்தினாபுரத்திற்குச் சென்று விதுரன்வீட்டி லிறங்கி
ப் போஜனங்கொண்டு துரியோதனன் சபைக்குப் போ
னேன், அவடத்திலிருந்த இயாவரும் வந்தனை மரியாதை
செய்ய ஆசனத்திலிருந்தேன். அதுகாலையில், நான் விது
ரன்வீட்டி லிறங்கினே னென்று துரியோதனன் சற்று
நேரங் கோபமாகயிருந்துமறுபடியும் என்னைப்பார்த்து நீ
ர்வந்தகாரிய மென்ன சொல்லுமென்று கேட்டான்-அத
ற்கு நான்சொன்னதாவது, பாண்டவர்கள் சூதாடித்தோ
ற்றநாளையில் பனிரண்டு வருடம் வனவாசமும்-ஒருவரு
டம் அக்ஞாதவாசமுந், சழித்து வந்தால் அவர்கள்பூமி
முதலியவற்றையுங் கொடுத்துவிடுகிறோ மென்று நீங்கள்
வாக்குத் தத்தஞ்செய்து அனுப்பியவண்ணம் பதின்மூன்
றுவருடமுங்கழித்து உபலாவியத்திற் செழித்திருக்கின்ற
பாண்டவர்கள் தங்களுடைய யோகக்ஷேமாதி சயங்களை
உங்களுக்குத்தெரிவித்து தங்களுக்கு நீங்கள் சொல்லியி
ருந்த சத்தியவசனப்படி ராச்சியங் கொடுங்க ளென்று
கேட்கும்படியாக என்னைத் தூதனுப்பி வைத்தார்கள் நா
னும் உங்களைப் பார்க்கவேணு மென்னும் ஆசையையு
டையவனாக இவடத்திற்குவந்தேன் உங்க ளியாவரையுங்
கண்டேன் சந்தோஷங்கொண்டேன் ஆதியிற்சொல்லிய
வார்த்தையின்படிக்கு ஐவர்களுக்கு அரசுகொடுத்து வா
ழ்வதே உத்தமமென்று கூறி நீங்களென்ன சொல்லுகிறீ
ர்களென்று கேட்டேன் என்னுடன்கூடவந்த மூன்றுரி
ஷிகளும் வீஷ்மரும், துரோணரும், கிருபரும், விதுர
ன்முதலாகியபேரும், ஸ்ரீகிருஷ்ணன் சொல்லு கிறதைக்
கெட்டியாய்நம்பி பாண்டவர்களை நேசித்துப் பக்ஷமுட
ன் வாழ்வதே நன்மையென்று சொல்லவும், பாபியாகிய
துரியோதனன் கூடாதென்று தடுத்துப் பேசவும் மறுப
டியும் அவனுக்குத் தனிபச்சொல்லி அப்பா துரியோத
னா ? வீணாகிய வம்புகள் விளைவித்துக்கொள்ளவேண்டா
ம் இனி விளையப்போகிற விபரீத மெத்தவுண்டு பாண்ட
வர்களோ மிகுந்த பலவான்கள் எல்லாந் தெரிந்த இறை
வனாகிய நீர்-ஒரோபிடிவாதமாய்ப் பேசவேண்டாம் அப்ப
டிக்கு நாடுநகரங்கொடுக்க மனதில்லா விட்டால் ஐந்தூ
ராகிலும் ஐந்துவீடாகிலுங்கொடும், விபகாரவிதிப்படிக்.

ருக் கொடுக்க மனதுவராவிட்டாலும் அவர்களுக்குப் பி
சசையாகக் கொடுமென்று என்னுடைய இரண்டுகரங்க
ளையும்! ஏந்தி யிரந்துங்கேட்டேன் அதற்கு மனதிரங்கிக்
கொடுக்காமற் றடுக்கின்றீர். நாளை நடக்கப்போகிறகதியி
ன்னதென்றுஞ்சொன்னேன் ! அதையும் யோசிக்காமல்
எத்தனைபேர் எத்தனைசொன்னாலும், கேளாமல் அடிக்க
டிக்கப் பந்து விசைகொள்ளு மென்னுந் தன்மை போல்
கோபமும் லோபமும் பிடிவாதமும் அதிகரித்து போம்
போம்-உமக்கும் அவர்களுக்கும் வேலையில்லை ஒருமொ
ந்தை வெண்ணெய்க்கு கோபாலஸ்திரிகளின் காலில்வி
ழுந்து கூத்தாடுகிற நீர் இந்தப் பாண்டவர் களுக்கு நாடு
வேண்டி யிரப்பது பெரிதோ இதென்ன அரிதோ இந்த
த் தந்திரமெல்லாம் நானறியேன், இத்தனை பஞ்சைப்பா
ட்டென்னத்திற்கு - பாண்டவர்கள் பலவான்கள் தெய்வ
பலமுடையவர்கள் சனக்கட்டினை யுடைய சரசிகளென்
றுஞ் சொல்லிய நீர் பிச்சைகொடுமென்று கேட்கிறீர். இ
ப்படிகேட்க இதென்னவீரியம் ? இதென்ன வெட்கமில்
லாதகாரியம் ? வல்லமையுடையபேர்கள் - மானமழியப்
பிராணனுடனே ஒருவரை யாசிப்பார்களோ யாசிக்க மா
ட்டார்களோ, இதெல்லாம் உன்னுடைய தீனத்துவமே ய
ல்லது வேறில்லை இப்பவும் நான் சொல்லுவதை நன்று
ய்க்கேளும் சண்டைமுகத்தில் யுத்தஞ் செய்து வெற்றி
பெறுகின்ற வீர ரெவர்களோ அவர்கள் இந்த அஸ்தினா
புரத்தை யாளுகிறதேயல்லாமல் என்னுயிருள்ளவரைக்
கும்? ஒருகடுகத்தனைமண்ணும்பாண்டவர்கண்ணுக்குக்கா
ட்டேனென்று ஒரே தீர்ப்பாகச் சொல்லிவிட்டான், வா
ழ்வார்க்குச்சீதேவி வாக்கிலென்பதுபோல் இந்தமண்ணு
க்குந் தன்னுயிருக்கும் சரிப்படுத்திக்கொண் டிருக்கின்று
ன் ஆகலால் இவனுயிர் மாளவேணும் அப்பால் பாண்ட
வர் பாராளவேணும். இல்லாவிட்டால் அரசாட்சிபெறு
வது அருமையென்று முன்னமே விதுரன்சொல்லி யிரு
க்கின்றான்-மேலும், அநேகம் பெரியோர் முதலிய சிறி
யோர்களு மிறப்பார்களே உலகம் பழிக்குமே யென்று
யோசித்து யுத்தஞ்செய்யாம லிருந்துவீராகில் உங்கள்
சபதத்தை எப்படி நிறைவேற்றிக் கொள்ளுவீர்க ளென்
றும் இதுவரையிலும் பட்டிருக்கும் அவமானப்பழிப்பை
விட இனிமேல் வரப்போகிறபழிப்பு மவமானமும் பெரி
தாகியதல்ல இந்தத் தருணத்தில் யுத்தம்பண்ணிச் செயி
க்காமல், விட்டு விடுவீர்களாகில் இதுதான் பெரிய அவ
மானம் லோகநிந்தை இராஜநீதிக்குப் பழுதாகிய காரிய
மென்று உங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார் உங்
கள் சிறியதந்தையாகிய விதுரமகாராஜன் உங்கள்தாயா
கிய குந்திதேவியார் சொல்லச்சொன்ன தாவது சத்துரு
க்களால் விளைந்திருக்கும் பொல்லாங்கெல்லாமிருக்க இ
ராஜசபையில் விளம்பிய உங்கள் சபதத்தை முடிக்காமல்
ஈரேழு பதினான்குலோகத்தையும், நீங்கள் ஏகசக்கிராதி
பதியாய் ஆண்டாலும் அதினாலொரு பெருமையுமில்லை
புகழுமில்லை இகழே எதிர்த்துக்கொண் டிருக்கும் ஆகை
யால் சீக்கிரம் சபதமுடித்து திரிலோகமுங் கொண்டாடு
ம்படியாய் முடிதரித்துக்கொண்டு வாழ்க்கடவீர்க ளென்
று ஆசீர்வதித்து வெகுவாகிய உறுதிவசனங்களைச்சொ
ல்லச்சொன்னார்கள் எங்கள் மாமியாகிய குந்திதேவி யெ
ன்று சொல்லி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சொல்லுகின்றார்.

ஓ ! பாண்டவர்களே என் எண்ணத்தையுங் கேளுங்க
ள் ? அவர்கள் உங்களைச்செய்திருக்கிற அநியாயங்களை
யோசிக்கும்போதெல்லாம் மண்ணுங்கல்லும் மரமும் அ
ழுமல்லாமல் வேறல்ல, அந்தமட்டும் நீங்கள் பொறுமை
யுடையவர்களே ஆகிலும், எத்தனை யென்று பொறுப்ப
து பொறுக்கு மிடத்தில் கல்லுக்கூட மூச்சுவிடுமே ஐய்
கன்யர்களே ! ஒருகாசுக்குப் போனமானம், பலகோடி
பொற்காசுகொடுத்தாலும் வாராதென்று பழமொழி கூ
றுவார்கள்-அதுபோல் எப்படியும் அவமானம்வந்துவிட்
டது உரலிற்றலை துறுத்துக்கொண்டவன் உலக்கைக்குப்
பயந்தால் விடுமா, ஆசையால் துணிந்த பேர்களுக்குத்
துக்கமில்லை யென்பதுபோல் போர்புரிந்து அவர்களைப்
போக்கடித்து சீர்பெறும்படியாய்த் தேசத்தைக் கைக்
கொள்ளுவது ராஜநீதம் பலதேசத்து ராஜாக்களும் சந்
தோஷப் படுவார்கள். அல்லது தம்பி தமயன் பாட்டன்
பூட்டனென்று பாராமல் படைமுகத்தி லொப்பாரியா
வென்று சாதித்து பாக்கியம்பெற மனமில்லா விட்டால்
வனத்திற்சென்று தவத்தைக்கொண்டு சுகத்தைப் பெறு
வது எல்லாத்திலும் மகத்துவமுடையது இவ்விரண்டில்
எதைச்செய்ய யோசித்திருக்கின்றீர்கள். உங்க ளெண்ண
த்தைச் சொல்லுங்களென்று முகுந்தன்கேட்க, அதற்கு
த்தகுந்தபடி தருமராஜன் நகைத்துச் சொல்லுகின்றார்.

ஆபத்பாந்தவனாகிய அரியேகேளும், நாங்கள் யுத்தஞ்
செய்வதற்குச் சர்வசித்தமாயிருக்கிறோம், இதோ நீர்பா
ருமென்று சொல்லி விராடராஜனுடைய இராயசம் சித்
திரகதனென்பவனை யழைத்துத் திருமுக மெழுதச்சொ
ன்னார்கள்.

(திருமுகமெழுதிய-விருத்தம்.)

எங்குமிருளறவொளி பரப்பிமுக்கண்ணனு ரெழில்வே
ணிமிசைவதிமா-னேந்தியிருபத்தேழு மாதர்தோடோ
ய்ந்தமிர்த மீய்ந்துரகர்விடமகற்றுந், திங்களினன்மரபினு
னுயர்முரசகேதனன் புகழ்தருமனெழுதுமிருபன் - தேச
தேசத்தர் மகராஜபோஜத்தவர் சேர்ந்துவந்தெதிர்கொ
ள்கமேற், குருபாம்நாடுவிட்டுக்காடடைந்துபதின் மூன்
றுண்டுகுன்றல்செய்து - கோமச்சனுட்டனண் பிற்சுதன்
மணங்கண்டு கூடியுபலாவியத்திற், சங்குசக்ராயுதனை தூ
துவிட்டுத்துரியோ தரன்மனதறிந் துங்கள்பாற் - சாற்றி
னேம்போர்க்குப் படைத்துணை யெமக்காகச் சயந்தாத்
தாம்வருகவே..*

(என்பது) எங்குந்தங்கிய கங்குலறும்படி பொங்குந்
தங்கிரணங்கள் விரித்தும் திரிநேத்திரதாரியாகிய சிவபெ
ருமானுடைய சிவந்த ஜடாபாரத்திற் பொருந்தி யிருந்து
ம், முயற்கறையென்னு மானைத் தன்னிடத்திற்கொண்டு
ம் அசுவனிமுதலிய இருபத்தேழு ஸ்திரிகளின் தோளைத்
தழுவியும், சமுத்திரங்கடைந்த காலத்தில் தானே துணை
கன்று அமிர்தத்தைத் தேவதைகளுக்கு ஆகாரமாக வ
ளித்தும்-ஆதிசேடன்முதலிய பெரும்பாம்புகளின் விஷச்

சுவாமியால் உலகம்வருந்தாமல் தமது; அமிர்தகிரணங்களினால் ஆற்றல்செய்து மிராநின்ற சந்திரனுடைய குலத்திற் றோன்றிய தாருகரன் உயர்ந்த முரசக் கொடியினையுடைய மாறுபாரணன் சத்தியவசனன்-நித்தியவிரதன் உத்தமனெனத்திகழும்தருமபுத்திரமகாராஜன் எழுதிவிடுத்த திருமுகபத்திரம், என்னவென்றால் பதினெண்பாஷைத் தேசத்துமன்னவர்களும், மகாராஜராகிய போஜகுலத்தலைவரும், ஒருங்குசேர்ந்து சந்தோஷித்து யெதிர் கொண்டு வந்துகாண்க.

அப்பால் நாங்கள் சூதாடி நொந்து நாடுநகரத்தை விடுத்து காடுகரம்பை அடுத்துப் பனிரெண்டு வருஷம் வனவாசம் ஒருவருஷம் அக்யாதவாசம் ஆகப் பதின்மூன்று வருஷமும்போக்கி மேன்மைபெற்ற ராஜனாகிய மச்சதேசாதிபதியின் சிநேகத்தினால் எங்கள் பிள்ளையாகிய அபிமன்னனுக்கு, உத்தரையைக் கலியாணஞ்செய்வித்து மிகு சம்பிரமத்துடன் உபலாவியஞ் சேர்ந்து சங்கு சக்கிராயுதமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவனைத் தூதுவிடுத்து யுத்தத்திற் குடன்பட்ட துரியோதனனுடைய மனதறிந்து கொண்டு உங்களுக்குத் தெரிவிக்கும்படியாக ஓலையுந் தூது மனுப்பினோம். ஆகையால்? மேல்நடக்கப்போகிற யுத்தத்திற்காக எங்களுக்குப் படைத்துணைவந்து ஜயம்பெறச்செய்து உங்கள் நகரங்களுக்காக கட்ட வேண்டிய பகுதிப் பணங்களும் யினமாக்கிக்கொண்டு நீடூழிவாழ்க வேண்டியதென்று திருமுகமனுப்பிவைத்தார்கள்.

இந்தப்படிக்குக் கஷ்டதிசையினால் விடுத்த திருமுகங்களைப்பார்த்துமுகம்வியர்த்து எட்டுத்திசையிலுமிருந்த துஷ்டகண்டர்களாகிய இராஜராஜர்முதலியபேர்களும் அவரவர்களுடைய நால்வகைச்சேனைகளும் யுத்தகோலங்கொண்டுவந்தார்கள் அவர்களாரென்றால் பாஞ்சாலராஜனும் அவன்பிள்ளைகள் துஷ்டத்தூய்மன் சிகண்டி சுமுத்திரன் பிரியதரிசனன் சித்திரகேது-சுகேது துவசேனன் உத்தமோசா உதார்மரா முதலிய நால்வகைச்சேனைகள்கூடிய ஏழக்ஷரோணிசேனையும்விராடராஜனும் அவன்பிள்ளைகள் சுவேதன் சதாநீகன் சங்கன் வராககேது உத்தரன்முதலிய நால்வகைச்சேனையுடன் மச்சதேசத்தார் ஏழக்ஷரோணிசேனையும் சேரன், சோழன், பாண்டியன், மூன்றுபேரும் தங்கள்தங்களுடைய நால்வகைப்படையும், கேகயதேசாதிபரும், குந்திபோஜரும் தருமராஜனுடையபிள்ளைதேவகனும், விமனுடையபிள்ளைகடோத்கஜனும், அவன்பிள்ளை அஞ்சனவர்மனும், அர்ச்சுனனுடையபிள்ளை அரவானும், அபிமன்னுவும், நகுலனுடையபிள்ளைவிஜயனும்; நிர்மித்திரனும், சகாதேவனுடையபிள்ளை விரசுகோத்திரனும், இவர்களெல்லாம் பாண்டவர்கள் தனித்தனி கலியாணம்பண்ணிக்கொண்ட ஸ்திரீகளிடத்திற் பிறந்தபிள்ளைகள் இதன்றியும் திரௌபதையினிடத்தில் ஒவ்வொருவருஷம் ஒவ்வொருவர்முறையிற்பெற்றுக்கொண்ட ஐந்துபிள்ளைகள் அவர்களுடையபெயர்யாதெனில் பிரிதிவிந்தன், சுர்தசோமன், சதாநீகன் சுர்தகீர்த்தி, சுருதிசன்மன், என்னும் இளம்பஞ்ச பாண்டவர்களும் போஜாள், பாஞ்சாலாள், சோமுகாள், சிருஞ்சேயாள் மார்க்சாள், மாகதாள், திரிகாலவாசுதேவாள், பவுண்டரவாசுதேவாள், அரிவாசுதேவாள், இவர்கள் போஜசம்பந்தத்தலைவர்கள் இவர்களும் இவர்களின்படைகளும், குந்திபோஜனுடைய பிள்ளைகள் மந்தனும், சுமந்தனும்; அவர்களின்சேனையும் சிசுகன்பிள்ளை பிரிதிபனும், காசிராஜனும், அவன்பிள்ளை தாமகீர்த்தியும், மலயத்துவஜபாண்டியனும், இவன்பிள்ளை பிரிதிவு, பாண்டியனும்; சராசந்தன்பிள்ளை சகதேவனும், சிசுபாலன்பிள்ளை, துஷ்டகேதுவும், ஜெயசேனன் ஈராகாள் அவுறன் ஆந்தாள் புண்டரீகாள் சோழபுருமித்திராள் இவர்களுடையசேனைகளும் வெள்ளைக்குடைவாத்தியமுதலிய விருதுக்கொடிகளுடனும் சீனர்-சாவார்-மத்திரர்-மாளவர்-தெலுங்கர்-கலிங்கர் குலிங்கர்-புலிங்கர்-சோனகர்-கன்னடர்-மாகதர்-துருக்கர்-குச்சரர் - ஒட்டர்-முதலாகிய பதினெட்டுப்பாஷைமன்னவரும், மகுடவர்த்தனர்-பட்டவர்த்தனர்-இளவரசர்-மன்னர்-மண்டலிகர் மந்திரிமார்களும் தந்திரிமார்களும்-சாமந்தர்களும்-பூமந்தர்களும் இவர்களுடைய சேனுசயிலியமுதலிய நானாவிதகோலாகலங்களுஞ்சேர்ந்து சதுரங்கபலத்துடன் ஏழக்குரோணி சேனைகளென்று கணக்கிட்டு பாண்டவர்களாவரும் சாத்தகியும், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சந்தோஷமடையும்படியாய் சமுத்திரப்பெருக்கம்போலவும் தாராகணநெருக்கம் போலவும் மிகுதியாய்சப்தமேகமுழக்கம்போலவும் சங்கத்தொனிமுழக்கம்போலவும் பெருங்கூச்சலும் தாரணியிடம் பெறுதுகதளித்ததென்றுசொல்லும்படியாய் உபலாவியம்வந்துசேர்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அதுகாலையில் பாண்டவர்களாவரும் ஸ்ரீகிருஷ்ணதேவரும் எதிர்கொண்டுபோய்கண்டு எந்தெந்தஅரசர்களுக்கு எத்தன்மையவாகிய மரியாதை வந்தனங்களைச் செய்யவேண்டியதோ அந்தப்படிக்குத்தலைவான்களுக்கெல்லாம்மரியாதைசெய்து அவர்களிடத்திற்றாம்பெற்றுக்கொள்ளும் உபசாரமரியாதைகளைப்பெற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் தழுவிக்கொண்டு பற்பலவாராக உபசரித்து இராஜசபைக்குளழைத்துவந்து சிங்காசனத்தி லிருக்கச்செய்து இராசோபசாரமுதலிய யாவும்நடத்தி அவ்வரசர்களைநோக்கித் தருமராஜன்சொல்லுகின்றார்.

ஜெகத்திலுற்ற சுகத்தைப்பெற்று மகத்துவமுற்றமன்னரோகேளுங்கள் பனிரண்டுவருடம் நாட்டைவிட்டுக் காட்டிற்றிரிந்துகாட்டைவிட்டுநாட்டிற்பொருந்திவிராடராஜனுடைய வீட்டிலொருவருடமிருந்து வெளிப்பட்டு துரியோதனனிடத்திற்குஉலூக்மாமுனியைத் தூதுவிட்டதற்காக எங்களைக்காட்டுக்குப்போகும்படி சொல்லச்சொல்லி எங்கள்பெரியதந்தை சஞ்சயனை அனுப்பிவைத்தார். அந்தச்சஞ்சயன்சொல்லிய வஞ்சனைமொழிகளை அஞ்சனவண்ணனும் யாங்களுங்கேட்டு அதன்பின்பு எங்கள் பிராணநாகயிருக்கும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை வேண்டிக்கொண்டு தூதனுப்பிவைத்தோம் இந்தமகானுபாவர்போய் எத்தனைவிதத்திற்சொல்லியுங்கேளாமல் சுத்தவீரனைப்போல்யுத்தமேசெய்ய எத்தனித்திருக்கின்றேன் பாண்டவருக்கு இத்தனையாகிலும்நாடுகொடுக்கேனென்று அந்த

கன்புத்திரனுகிய வித்தகன்சொன்னுனும் நீங்களித்தனைபேரும் எனக்குற்றவர்களாயிருக்க நானினிமேலெண்ணிப்பார்க்கவேண்டியதென்ன மேலும் தம்பிமார்களுந் திரௌபதையுங்கூறிய சபதங்கள்தலைவிரித்துக்கொண்டிருக்க அதைப்பாராட்டாமல் தருமத்தையெண்ணி ஒருகுலததிற்பிறந்த இருதிறவரும் பெருநலத்தைப்பெற்று கலந்துவாழ்வோமென்று நான்பேசச்சொல்லியும் அதற்குஅவர்களுடன்படாமல் யுத்தஞ்செய்வது உத்தமமென்று சொல்லியனுப்பியபடியால் உங்களுடைய உதவியெல்லாம்பெற்று நான்செற்றவனைப்போலிருப்பானேனென்று யுத்தத்திற்குபடைத்துணைவரும்படியாய் உங்களுக்கித்தனை வருத்தங்கொடுத்தேன் இந்தயுத்தம்பதினெட்டுநாளையில் செய்துமுடிப்பதென்று ஒரு நிர்ணயம்செய்துக்கொண்டோம் இவ்வளவுதயிரியம் எங்களுக்குண்டாகும்படியாயேர்ப்பட்டீர்களெல்லாரும் இந்தச்சங்கதியைச் சித்தத்தில்வைத்து சத்துருவைஜெயித்து சபதமென்னுங் குற்றத்தையகற்றி வெற்றிமுடிதரித்துவைக்கவேண்டிய உரிமைஉங்களுடையதென்று தருமராஜன்சொல்ல சந்திரனைச்சூழ்ந்ததாராகணங்கள்போலும், சபையில்நிறைந்திருந்த தாத்மீகரெல்லோரும் தருமநந்தனனைநோக்கி எங்கள்பிராணனும் எங்கள்சேனாசயினியங்களியாவும்உங்களுடையதாகையால் எங்களைக்கொண்டுஎன்னென்ன பெற்றுக்கொள்ளவேண்டுமோ அவைகளெல்லாந் தாராளமாய்ப்பெற்றுக்கொள்ளலாம் அதற்குயாதொருதடையுமில்லைவிரப்தாபஜெயம் உமக்குவரப்போகிறதென்று மன்னவரெல்லாம்உபசாரவார்த்தைகள்சொல்ல அவ்வார்த்தைகளினுல் சத்துருக்களைஜெயித்து சபதம் நிறைவேற்றிக்கொண்டவர்களைப்போல சந்தோஷமடைந்து நமது ஏழக்ஷோணிசேனைகளுக்குச்சேனாபதியாய் எவனைநியமிக்கலாமென்று தருமராஜன்கேட்க சகல இராஜர்களும் நேசர்களும் விசுவாசமுடன் அரிவாசுதேவனைக்கேட்டார்கள் அந்தவார்த்தையைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்திநகைத்து தனுர்வேதமுதலியயுத்தத்திறந்தெரிந்த நீங்களேயேர்ப்படுத்துங்களென்றுசொல்லிமேலுஞ்சொல்லுகின்றார்

நானியமிப்பேனுகில் அவரவர்கள் என்னைநியமிக்கயில்லை என்னையேர்ப்படுத்தயில்லையென்று கோபஞ்செய்துக்கொள்ளுவார்களே ஆகையால் நீ எனக்கு யிந்தவேலைவைக்கவேண்டாமென்று சொல்லிய சுவாமியை நோக்கிதேவரீர் எவர்களை நிச்சயித்தபோதிலும் அவர்களை எஜமானுகக்கொண்டு வழிபடுகிறேமென்றுமன்னவரெல்லாருஞ்சொல்ல மனமகிழ்ந்துவிராடகுமாரனுகிய சுவேதனையழைத்து இவருடையஜெனனவிர்த்தாந்தத்தைக்கேளுங்கள் மச்சதேசாதிபதியாகியவிராடராஜன் ஓர்நாள்வனவேட்டைக்குப்போனகாலத்தில் மிகுந்தகுணவதியாகியும் பதிவிரதையாகியும் நற்றவத்தையுற்றவளாகியும்பிராரத்துவவினையினுல் விராடராஜனைச் சேரவேண்டுமென்று விரதமிழைத்துக்கொண்டிருந்த ஓர்வேடகன்னிகையினிடத்தில் இந்தப்புத்திரனைப்பெற்றுக்கொண்டுமச்சதேசம்வந்து இந்தப்பச்சைக்குழந்தையை இச்சையுடன்வளர்த்து வச்சிருந்து அக்ஷராப்யாசமுதலிய தனுர்வேதமுங்கற்பித்துமகிழ்ந்துவாழ்ந்துவருநாளையில் ஓர்நாள் இந்தச்சுவேதனனுனவன் தனிவேட்டைக்குச்சென்று தவஞ்செய்யும்முனீஸ்வரரைக்கண்டு தானுந்தபம்புரிய மனங்கொண்டுபெரியோர்களைவணங்கி அரியதவத்திலிருந்து கைலாசபதியைநினைந்து கண்ணிர்சொரிந்தகாலத்தில் ரிஷபவாகனருடராய் எழுந்தருளியவிமலனைப்பணிந்து கரத்திற்பிடித்தவில்லினுலேயும் திரிலோகத்தையும் சாதிக்கும்படியான அருளைப் பூரணமாகப்பெற்ற புருஷோத்தமன் இவருக்கேசேனாபதிப்பட்டங் கட்டவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணன்சொல்ல எல்லோருஞ்சம்மதித்து சகலவித உபசார அபிஷேக ஓமாக்கினியுடனேசேனாபதிப்பட்டங் கட்டி செந்திருவினுயகனுகிய திருமால் சுவேதனைப் பெரியயானையின்பிடரியிலேற்றிமுரசவாத்தியமுழங்க சகல வைபவங்களுடனே பட்டணப்பிரதக்ஷணஞ்செய்வித்துவிரர்முதலிய எல்லாச்சேனைகளுக்கும் இவரேசேனாபதித்தலைவரென்று தெரிவித்து இங்கிருந்த அரசர்களுடன் விருந்துபோஜனமுதலியதும்அருந்திச் சந்தன தாம்பூலம் வாங்கிக்கொண்டு விந்தையாகிய வீரலட்சுமியைச்சிந்தித்துவணங்கிக் குருக்ஷேத்திரத்திற்குப் பிரயாணமானுர்கள் அந்தச்சமயத்தில் அருச்சுனன்குமாரர்களில் நாககன்னிகையின்பிள்ளையாகிய அரவானுனவன் அவடத்திற் பேசிக்கொண்டிருந்த சங்கதிகளையெல்லாந் தெரிந்துகொண்டு சேனாதிபதியும்சேனைகளும் தேசந்தரசர்களும் குருக்ஷேத்திரபூமிக்குப் புறப்படப்போகிறகாலத்தில் இராஜசபையிற்போய்நின்றுதந்தைமார்முதலிய சகலரையும்நோக்கி! விந்தகிரியைப்போன்ற தோளைக்குலுக்கி மந்திரவடிவாளைக்கரத்திற்பிடித்து ஐயோ இந்தத்துரியோதனுதியர்முதலிய சேனைகளைக்கொல்ல பதினெட்டுநாளென்னத்திற்கு அவரவர்கள் பட்டணத்தைவிடுத்துபெண்சாதிபிள்ளைகளைவிடுத்துவந்திருக்கின்றவர்கள் பதினெட்டுநாள்வரையிலும் வருத்தப்படுவானேன் நீங்களெல்லாரும் இவடத்திலிருக்க மனதிருந்தாலிருங்கள் இல்லாவிட்டால் அவரவர்களுடைய நகரத்திற்குப்போகச் சிலவுபெற்றுக்கொள்ளுங்கள் எனக்கு உத்திரவுகொடுங்கள் இன்றைக்குள்ளாகத் துரியோதனுதியரெல்லாரையுமுடித்து இந்தப்பூமியைத் தருமராஜனுகிய என்பெரியதந்தைக்குச் சொந்தமாக்கிறேனென்று சிந்தைகொண்டுரைத்த அரவான்வசனத்தைக்கேட்டு பந்தமுற்றும் பந்தமுறுதவனைப்போலிராநின்ற பரவாசுதேவன் நகைத்துநல்லது அப்படியேயாகட்டும் நாமெல்லோருங் குருக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்தபிற்பாடு உன்னிஷ்டப்படியாகிலும் அல்லது என்னிஷ்டப்படியாகிலும் யோசிப்போமென்று அரவானைத்தட்டிக்கொடுத்து முத்தமிட்டு சந்தோஷித்துப் புகழ்ந்துமகிழ்ந்தார் மற்றையரும் எழுந்து நமஸ்கரித்துக் கொண்டு சேனாசயினியங்களுடன் குருக்ஷேத்திரம்போகத்தொடங்கினர்கள் இந்தக்கதை யிப்படியிருக்க தூதுபோகிய சுவாமியானவர் அஸ்தினுபுரத்தைவிட்டு உபலாவியத்திற்குவந்தபிற்பாடு துரியோதனனிடத்தில்நடந்தசங்கதியைச்சொல்லுகிறோம் கேளும்ராஜனேயென்று வைசம்பாயனர்சொல்லத்தொடங்கினூர்.

இப்பால் துரியோதனராஜன் தனக்குப் படைத்துணை வரும்படியாய் சகலதேசத்தரசர்களுக்கும் திருமுகமெழுதி இப்போதெனக்குப் படைத்துணைவராவிடின்யாவரும் சந்திரசூரியருள்ளவரையிலும் தங்கள்தங்களுடைய இராச்சியத்தில் வரிசையில்லாமல் துமாலாய் அநுபவிக்கும்படி. உத்தரவுசொல்லியிருக்கின்றேம் ஆகையால் எழுத்திரையிட்டிருக்கும் இந்தத்திருமுகத்தையே தஸ்தாவேஜாகக்கட்டிக்கொண்டு மனப்பூர்விகமாய் சதுர்வித சேனைகள்சமுத்திரம்போல நடனே சீக்கிரம்வந்துசேரவேண்டியதென்று தூதுபோக்கினன்.

அந்த ஓலைகண்டமாத்திரம் சமஸ்த இராசர்களும்வந்தார்கள் அவர்களின்விபரமென்னவென்றால்மத்திரதேசாதிபதியாகிய சல்லியனும் அவனுடையஉடன்பங்காளிதாயாதிமுதலியபேர்களும் இரதகஜதுரகபதாதியுடனும்வந்தார்கள் காந்தாரதேசாதிபதியாகிய சௌபலன் அவர்களுடையதாயாதிவருக்கத்தாரெல்லாரும் சகலபடைகளுடனும்வந்தார்கள் மகததேசாதிபதியாகியசர்தேவனும்விந்தனும்விந்தனும்அவர்கள்சொந்தச்சேனையுடனும்வந்தார்கள் அலம்புசனும் அவன்தம்பிமாரகிமிதிருகன் என்னுமிருவரும் அனேககோடி இராக்ஷதப்படைகளும் வந்தார்கள் நரகாசூரன் பிள்ளையாகியபகதத்தனும் நால்வகைப்படையும் கோடியானைக்கூட்டமுநெருங்க வந்தார்கள்.

சௌசிதனும், காம்பிலிசனும், தெலுங்கதேசாதிபதியும், போஜனும், கேகயராஜனும், திரிகர்த்தனும், கவுடிசித்தனும்! மாளவதேசாதிபதியும், மாராடராஜாதி பதியும், வலவனும், சோமனுமாகிய, சோழபாண்டியரும், சூதநாயகன் பிள்ளைகளாகிய, கர்னன் பங்காளிகள், சுசேஷணன் முதல் (நூறு) பிள்ளைகளும், சோமதத்தனும் அவன்பிள்ளை பூரிசிரசு, சரன், பூரிஎன்பவர்களும், அவிக்குதேசாதிபதி விந்தன்? அநுவிந்தன், என்பவரும்; கலிங்கதேசாதிபதி கேதுமாலன்-அவன்தம்பி அசுபத்தாமா சக்கிரதேவன், என்பவனும். மாளுவராஜன், புளிந்தன், என்பவனும், சவுராஷ்டக தேசாதிபதி சவுபதி, சாலுவன், என்பவனும், கேகயதேசாதிபதி சுதர்மா; சுவர்மா, உக்ரசேனன், யாதவாள், விருஷணன், அந்தராள், போஜாள், பலராமர், கிருதவன்மா, கிருதவிரியன், சாம்பன், சாரணன்; பிரத்துமன், சாருதக்ஷணன், விரேதன், பாலுவு! சிதன்-விபுருது-பிருது-அக்குரூரன்-உக்ரசேனன் உத்தவன்-நவகோடி நாராயணாள்-நிவாத கவச-காலகேய பவுலவமான்-யாதவ-போஜ-விருஷ்ணி-அந்தக-சாத்துவ-மாதவ-குகுர-பப்பர தேசாதிபதி யுதாசித்தும்-நீலனும்-அங்க-வங்க-ஆரிய-சிங்கள-கொங்கண குடார -கொங்க-மாரட-ஒட்டதேசமுதலிய-ஐம்பத்தாறு தேசத்தலைவர்களும்; நால்வகைப் படைகளும் மந்திரி தந்திரிமார்களும்; சூழும்படியாகவந்து நிறைந்தார்கள் பாதலத்திலிருந்த மாதலிவருக்கத்தார் சம் சத்தகாளென்னும், அறுபதினாயிரம் வெண்கல ரதக்காரர்களும் வந்தார்கள், யாதவ குமாரரள் இருநூறாயிரம் வெண்கல ரதக்காரர்களும், வந்தார்கள் அநேகம் ராஜகுமாராள் வெகுவாகிய பாலிய சேனைகளுடனே வந்து குவிந்தார்கள், இப்படியாக இந்தச் சேனைகளைக் கணக்கிடும்படி நேமித்த போது துரியோதனன் அவன்பிள்ளை விகதத்தன் முதலியபேர்கள் அவன்தம்பிமார் துச்சாதனன்முதலிய தொண்ணூற்றென்பது பேரும், துச்சாதனன் பிள்ளை துச்சனி இலக்கணகுமாரன் முதலியபேரும் பெரும்புறைக்கடல்போன்ற சேனையும் வீஷ்டுமரும் துரோணாச்சாரியரும் கிருபாச்சாரியரும் அசுபத்தாமனும் கர்னனும் அவன் பிள்ளைகள் சித்திரசேனன் சித்திரகீர்த்தி சூரியவர்மன் முதலியபேரும் சிந்துதேசாதிபதி சயிந்தவனும் சகுனி சகுனியின் பிள்ளை உலூகன் சயிங்கன்முதலியபேரும் அஷ்டகுலாசலம்போலொத்த தேரேறி ஆயுதபாணிகளாய் அமைந்திருந்தார்கள். இத்தன்மையாகத் திரண்டசேனைகளின் மிகுதியானது லோகா லோகங்களெல்லாம் புரண்டுவந்த கடலைப்போலப் பெருகிவந்த சேனைகளைச் சம்பத்திற்சிறந்த துரியோதனன் கணக்கிடும்போது பதினொரு அக்குரோணியென்று தொகைப்படவும்; இவ்வளவு அதிகமாகிய சேனைகளைக்கண்டு துரியோதன மகாராஜன் பேரானந்தங்கொண்டு பந்துக்களின் மிகுந்தவர்படை சத்துருக்களையிளைத்தவர்படை சவுக்கியமாய்வாழ்ந்து உபகாரஞ்செய்பவர்களுடைய படைநீவுக்களில் பெருக்கமா விசனமற்றிருக்கும் படைதற்காலத்திற். பொருள்கொடுத்து வைக்கும்படை தன்னுடைய சொந்தப்படை-இவ்வாறு விதப்படைகளுநெருங்கி மண்ணும் விண்ணும் ஒன்றாகக்கலக்கும்படியாய் ஆரவாரிக்குந் தன்மையை யாவருங்கண்டு கண்களிகொண்டு இந்தச்சேனைகளுக்குச் சேனாபதி ஆரைநேமிக்கலாமென்று யோசனைசெய்து தங்கள் வம்சநாயகனுகவும், பரசிராமரிடத்திற் றனுர்வேதங் கற்று அவரையே ஜெயித்து வெற்றிபெற்றிருக்கும் பெரியோராகிய விஷ்டுமரையல்லது வேறில்லையென்று நிதானித்து தங்களுக்குரிய பாட்டனருடைய பாதங்களில் வணங்கி, சேனைகளோ திரண்டுபுரண்டு வந்திருக்கின்றது அந்தச் சேனைகளுக்குத் தேவரீரே சேனாதிபதி யாகவேண்டுமென்று வருந்திக் கேட்டுக்கொண்டு நல்ல முகூர்த் தத்திற் சேனாதிபதிப் பட்டமுங்கட்டிவைத்து பதினொரு அக்குரோணிச் சேனைகளையும் அவர்வசத்தி லொப்பிவைத்து அந்தச்சேனைகளைத் தரம்பிரிக்கும் படியாய்ச்செய்து அதற்குவேண்டிய திட்ட வட்ட சட்டமுஞ் செய்தபோது அதிரதர்-மகாரதர்-சமரதர்-அர்த்தரதர் முதலியபேர்களெல்லாரும் தங்கள் சேனாபதியாகிய வீஷ்டுமரைக்கண்டு வணங்கிக்கொண்டு மகரகுண்டல கேயூர மணி கிரீட வாகுவலய வச்சிராங்கி முதலியதுங் கொண்டு வந்து.உபசரித்து காணிக்கையாகக்கொடுக்க அவைகளை வாங்கிதரித்துக்கொண்டு ப்ரளயகால ருத்திரனைப் போல சேனாசமினியங்களின் மத்தியில் மகாமேருவைப்போ லொத்த தேரின்மீதேறி நின்றார்-கங்காபுத்திராகிய வீஷ்டுமர்.

மற்றச் சேனைகளெல்லாம் எழு சமுத்திரமும் வளைந்து நிறைந்ததைப்போலும், சுத்தவீரர்களுடைய ரதங்களெல்லாம் அஷ்டகுலாசலம்போலும் சூழ்ந்திருக்கும் யானைகளெல்லாம் அஷ்டகஜங்களைப்போலும் வளைந்துலாவுங் குதிரைகளெல்லாஞ் சுழன்றடிக்குங் காற்றைப்போலும்

பிரகாசிக்கும்படியாய் தாரத்துவஜநாட்டிய தேரேறி விரத்துவஜநட்டிய விஷ்டுமர் பாரியவில்லையும் பக்குவ மாகிய விரகோலத்தையும் உடையவராய் நிற்கக்கண்டு இயம தருமராஜனும் நடுநடுங்கி நாணமுற்றிருந்தான் சூரியபகவானும் ஆகாயத்திற்செல்ல நமக்கு வேலுகதியில்லையேயென்று அஞ்சியிருந்தான், ஹரி பிரமாதிமுதலியபேரும் நடுக்கங்கொள்ளும்படியாய் துரோணாச் சாரியரும், கிருபாச்சாரியரும், அசுவத்தாமாவும், கர்னராஜனும் மற்றுமுள்ள அரசர்களியாவரும் திடதயிரியங்களுடன் சேர்ந்து மனமொத்து வார்த்தையாடிக்கொண் டிருந்தார்கள்.

அதுகாலையில்? தேவர்கள் முதலியபேரும் சேனைகளின்பெருக்கத்தை நோக்கிச்சொல்லுகின்றார்கள்.

இவ்வுலகி லுள்ள மலைகளெல்லாம் யானைகளாகவும், செடி கொடி மரங்கள்முதலிய தோப்புகளெல்லாந் தேர்களாகவும்! பூமியினிறைந்த மணல்க ளெல்லாங் குதிரைகளாகவும் பிரமசிருஷ்டியில் வந்த உயிர்களெல்லாம் பதாதிகளாகவும் சப்தமேகம் சப்தசமுத்திரம் சப்த திவுகளின் முழக்கங்களெல்லாம் வாத்தியமுழக்கமாகவும் யானை சேனைகளின் முழக்கமாகவும், அமைந்து வந்ததோ அல்லது ஆதிதேவனுஞ் சமைந்து வந்ததோ என்று ஆச்சரியங்கொள்ளும்படியாய் தாராகணக் கூட்டம்போலும் சலசாராசிபோலும். பதினொரு அக்ரோணி சேனைகளுந் தங்கியிருக்கும்போது; விஷ்டுமர் துரியோதனனைப் பார்த்து சேனைகளோ பதினொரு அக்ரோணிசேனைகள் சேர்ந்திருக்குது; அஸ்தினபுரமோ யிடம்பெறுகிறதா யிருக்கவில்லை ஆகையால்! இந்தச்சேனைகளை குருக்ஷேத்திரத்திற்கு அனுப்பிவிடும்படியாகிய முயற்சி யோசிக்கவேண்டும், அதாவது நாட்செய்வது நல்லுற்றார் செய்யாதென்று பழமொழி சொல்லுமாப் போல) சேனைகள் குருக்ஷேத்திரம்போய்ச் சேருகிறத்துக்கு நல்ல நாளும் ஆயுதங்களைக்கொண்டுயுத்தம் ஆரம்பஞ்செய்வதற்குத்தகுந்த முகூர்த்த நாளும் பார்த்துக்கொண்டால் உத்தமமென்று சொல்ல! அந்தமொழிகேட்டு துரியோதனன் உடனே தனது புரோகிதனை அழைக்கும்படி உத்தரவுசெய்தான்! அந்தவார்த்தையை விஷ்டுமர் தடுத்து இந்தப் புரோகிதருக்கெல்லாம் நாம்கேட்கிற நாள்வைக்கத் தெரியாது இவர்கள் வைத்தாலுஞ் சரிப்படாது என்று சொல்ல, அதைத் துரியோதனன்கேட்டு பின்னையார் நாள்வைக்குந் திறத்தினையுடையவர்களென்று கேட்க? விஷ்டுமர்சொல்லுகின்றார், தம்பி? பாண்டவர்களில் கடைக்குட்டித்தம்பியாகிய சாஸ்திரதாரி சகாதேவன் நாள்வைத்துக்கொடுப்பானாகில் சொன்னகுறிதப்பாமல் முடிக்கலாமென்று காங்கேயன்சொல்ல? துரியோதனன்கேட்டு ஆச்சரியமடைந்து இப்போது அவனை யெப்படி கேட்கிறது, அவனெப்படி நமக்கு அகப்படுவான் அப்படி யல்லவென்று கண்டுகேட்டாலும் தப்பில்லாமல் உண்மையாகச்சொல்லுவானோ! அதற்கெப்படியென்று வணங்கா முடியோன் சொல்ல விஷ்டுமர் சொல்லுகிறார்.

அப்பா துரியோதனா! நீங்கள் பேதாபேத நினைப்பீர்கள் அவர்கள் அப்படி ஒருக்காலு நினைக்க மாட்டார்கள். நிமாத்திரம் ருசுவிற்போய் கேட்பையாகில் சந்திர சூரியர் மாறிநடந்தாலும் தங்களுடைய சத்தியவாய்ச்சொல தப்பாத உத்தமர்களில் சிறியனாகிய ஒருவன் உனக்கு உண்மையைச்சொல்லுவான். அப்படியே அரவானைக் களப்பலிக்கு, ராஜிப்படுத்திக்கொண்டு வந்து விட்டால் நமக்கு யெல்லாக்காரியங்களும் ஜெயமா மென்று விஷ்டுமர்சொல்ல? அதற்குடன்பட்டு ஒருநாளிராத்திரியில் பிராம்மிணுற்செய்திருக்கும் ருத்திர அன்னப்பக்ஷியிலேறிக்கொண்டு உபலாவியத்திற்குச் சென்று சகாதேவனுடைய அரண்மனையிற்போயிறங்கி அவனைக் கண்டபோது அந்தச்சகாதேவன் துரியோதனனென்னுந் தமயனைப்பார்த்து சந்தோஷங்கொண்டு என் அண்ணாவாரும் இருமென்று வணங்கி உபசரித்து ஏது இவ்வளவுதூரம் வந்ததென்றுகேட்க, அப்போது அவனைப் பார்த்து தம்பி சகாதேவனே எங்களுக்கும் பாண்டவர் களுக்கும் பகைநேரிட்டிருக்கின்றபடியால் யுத்தஞ்செய்வதற்குப் படை கூட்டிவிட்டோமே அந்தப்படைகள் குருக்ஷேத்திரம் போய்ச்சேரவும், தருமராஜன் தலையற்று விழும்படியாய் ஆயுதமெடுக்கவும் நாள்வைத்துக்கொடுக்கும்படிக்கு உன்னை நாடிவந்தேனென்று சொல்லவே, அதைக்கேட்டு நகைத்து அப்படியே நாள்வைத்துத் தருகிறேன் அண்ணாவென்றுசொல்லி துரியோதனனுடைய காலபலமுதலியதும்? கிசாநாதன் புத்திநாதன் அந்தரநாதன் இவர்களுடைய பலாபலத்தையும் ஜெயாபஜெயத்தையும் யோசித்து சாஸ்திரங்களை விசாரித்து நிதானித்து துரியோதனனைப் பார்த்து அண்ணா தேவருடைய இஷ்டப் படிக்கு வெற்றிபெற வேண்டுமாகில் நாளை நன்றைக்குப் பூரண அமாவாசையாகையால் அன்றிராத்திரி ஒன்பதுநாழிகைக்குமேல் குருக்ஷேத்திரத்தில் சேனைகள் போகும்படிக்குமுகூர்த்தங்கொண்டு அப்போதே களப்பலிகொடுத்து பராசக்தியைப்பூசித்து ஆயுதமெடுப்பீர்களாகில் தருமராஜன் தலை தப்பாது அற்றுவிழும் இதற்குயாதொரு சந்தேகமுமில்லை அப்பால் தெய்வசித்தம் எப்படியோ நானறியேனென்று உபசரித்துவணங்கி போஜனஞ்செய்துப் போமென்று பிரியவசனஞ்சொல்ல, அதைத் துரியோதனன் கேட்டு மதிமயங்காமல் மனமகிழ்ந்து தம்பி நல்லது நான்போய் வருகிறேன் சாயுங்காலந்தான் சாப்பிட்டு வந்தேனென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு அரவானுடைய விடுதிக்குப்போனான் அங்கிருந்த அரவான்கண்டு எதிர்கொண்டுவந்து பெரியதந்தையைப் பணிந்து ஐயா ஏது இவ்வளவுதூரம் தயைசெய்ததென்று கேட்க, அப்பனே ஐவர்களுக்கும் எங்களுக்கும் பகைநேரிட்டு படைகள் சேர்ந்து யுத்தத்திற்கு ஆரம்பஞ் செய்யப் போகிறபடியால் எதிரோமக்காரராகவும் பலசாலிகளாகவும் இருக்கிறபேரைப் பலிகொடுத்து ஆயுதமெடுத்தால் ஜெயமென்று பெரியோர் சொல்லுகின்றார்கள். அதற்காக உன்னைக் குறித்து பலிபிரத்தலுக்கு வந்தேனென்று சொல்லவே அந்தவசனத்தைக்கேட்ட அரவான் கலகலவென்ற நகைத்துஐயா நீங்கள்பிறந்தநாள்முதல்இதுவரையிலும்சகலசம்பத்தையும் அநுபவித்ததுபோதுமென்று

விடாமலும்இனியிருப்பவர்கள்குழந்தைகளாச்சே அவர்க
ளனுபவிக்கட்டுமென்று உன்னுமலும் மண்ணாசை பெ
ண்ணாசை பொன்னாசைமாருமலும்- பிள்ளைகளைக்கொன்
ருனுலும் இன்னம் அனுபவிக்க வேணுமென்று என்
ணி மனம் ரோசாமல் தேகங்கூசாமல் ஆசைமேலிட்டு
வாய்பேசாமல் வரும்படியாய் என்னைப்பலிக்கு யிரந்தீர
ல்லவா ஐயோ! என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிற
தேகம் இதற்கு இவ்வளவு அவாமேலிட்டிருக்கலாமாநல்
லகாரியம் அப்படியே என்னைக் கொன்று நீரே இந்தம
ண்ணைக் கட்டிக்கொண்டாலும்- அதற்குயாதொருதடை
யில்லை ஆனால் இந்தத்தேகம் அனித்தியதேகமாகையால்
நீரெப்போது நாள்வைத்துக்கொண்டீர் சொல்லுமென்று
அரவான்கேட்க, நாளைநன்றைக்குநாள் வைத்துக்கொண்
டேனென்று துரியோதனன்சொல்ல: அதைக்கேட்டு அ
ரவான் சொல்லுகின்றான்

ஐயா: அதுவரையிலும் இந்தத்தேகமிருக்குமாகில் உ
ண்மையாகஉமக்குக் கடைப்பலிக்குவருகிறேன், இதற்கு
யாதொரு சந்தேகமுமில்லை,இப்பேர்ப்பட்டதனகனசாம்
பிராச்சியத்தை யநுபவித்த நீரே வந்து இரண்டுகையை
யும் நீட்டி யிரந்தால் நாலில்லையென்று சொல்லக் கூடு
மா ஐயனே! உமது ஆசையடங்கச் சுகமாகப் பெற்று
க்கொள்ளுமென்று அரவான்சொல்ல அந்தச்சொல்லுறு
தியை ஸ்திரமாகப்பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்துநான்
போய்வருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு அஸ்
தினபுரத்திற்குப்போய் வீஷ்மர்முதலிய பெரியோருக்
குச்சொல்ல அவர்கள்கேட்டு மனங்களித்து ஆ ஆ அவ
ர்களுடைய மனமும்குணமும் சத்தியமும் பரிசுத்தமும்
பயியாதாபமும் உண்மையும் என்ன நன்மையாகயிருக்கி
ன்றது பார்த்தீர்களா சத்தியநெறிதப்பா திருப்பவர்களா
கையால் நித்தியவெற்றியை அவர்களேபெறுவார்களென்
பதற்குச்சந்தேகமில்லையென்று அகமகிழ்ந்திருந்தார்கள்.

இப்பால் துரியோதனன்வந்து சகாதேவனிடத்தில்நா
ள்வைத்துக்கொண்டதும், அரவானிடத்தில் களப்பலியி
ரந்து பெற்றுக்கொண்டுபோனதும், ஒருவருக்குந் தெரி
யாம லிருந்தது.

இப்படியிருக்க உபலாவியத்திலிருக்கும் பாண்டவர்க
ளும் ஸ்ரீகிருஷ்ணபகவானும் அனேககோடி அரசர்க
ளும் ஊழித்தீயும்வடவாலையும் காலகோடிவிஷமும்நே
ரிடுமாகில் கலங்கிக்கரிந்துபோகும்படியுத்தஞ்செய்துவெ
ற்றிகொள்ளாநின்ற உத்தமவீரர்களெல்லாரும் அன்று
போய் மற்றநாள் குருக்ஷேத்திரத்திற்குப் போகும்படி
யாய் நிச்சயித்த அக்காலையில் வீரர்களைத்தரமேற்படுத்
தினர்கள் அதெப்படி என்னில் சேனைபதியாகியசுவே
தனன் வீமசேனன் விஜயன் அபிமன்னு சாத்தகி துஷ்ட
த்யும்மன் இவ்வாறுபெரும் அதிரதத்தலைவராகவும் சிக
ண்டி விராடன் தருமராஜன் பாஞ்சாலன் இவர்கள் நாலு
பேரும் மகாரதத்தலைவராகவும் உத்தமோசா உதார்மனு
நகுலன் கடோற்கஜன் இவர்கள்நாலுபேருஞ்சமரதத்தலை
வராகவும்சகாதேவன் அஞ்சனவர்மன் இளம்பஞ்சபாண்
டவர்கள் இன்னமுள்ளராஜகுமாரரியாவரும்அர்த்தரத
த்தலைவராகவும் இந்தப்படிக்கு தேவர்சேனைபதியாகியகு
மாரசுவாமியார் அணிவகுத்ததுபோற்சேனைகளை அணி
யாகவமைத்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினிடத்திற்சுவேதன்
வந்துசொல்லஅதைக்கேட்டுபாண்டவர்களிடத்திற்சொ
ல்லப்பா என்னிடத்திலேன் சொல்லுகிறாயென்று சொ
ல்லி ஸ்ரீகிருஷ்ணர்சும்மாயிருந்தார் அந்தவேளையில் பாண்ட
வர்கள்சேனைகளின்பிரிவைப்பார்த்துமெத்தவுஞ்சந்தோ
ஷமுடையவர்களாய்ச்சுவேதனனைப்புகழ்ந்து மங்களாசன
ஞ்சொல்லி உபலாவியத்திலிருந்து நல்லசுபகாலத்திற்கு
ருக்ஷேத்திரத்திற்குச்சேனைகள்புறப்படும்படியாயோசிக்கு
ம்போது சகலஜனங்களும்தாங்கள்தாங்களிருக்குமிடத்தி
ற்றானே சம்பிரமங்களைக் கொண்டாடிவாழ்த்தி நீராஞ்ச
னம் ஆலாத்தி யெடுத்து அன்னதான முதலிய சோ
டச மகாதானங்களும்செய்து சுபகாரங்களும் மிகுஜயங்
களும் ஐம்பூதம்போன்ற பாண்டவர்களுக்கு வரக்கடவ
தென்று இஷ்டதெய்வங்களைப்பூசித்து வாழ்த்தவும் நவ
ரத்னுதிகளைவாரித்தூற்றவும் மங்களம்லாலி சோபனங்க
ளைப்பாடவும் பரதநாட்டியமாடவும் கட்டியர்கெட்டியா
ய்ப்புகழ்ந்துவாழ்த்தவும் பட்டுவான்கள் துதிகூறியேற்றி
ப்போற்றவும் அனேகம்பேரி உறுமிகுடமுழாமுரசுகாக
ளஞ்சின்னங் கொம்பு தவிலடிதப்பட்டை தவுண்டை ம
ல்லரி தாரைபூரிமுதலாகிய வாத்தியங்கள்முழங்கவும்செ
ம்பொன்பூ வெண்பொன்பூமுதலாகிய சகலபுஷ்பங்களை
யும்வாரி மாரிபோல்தேவர்களிறைக்கவும் நன்னிமித்தங்
களுண்டாக்கும்படியாகிய நல்லவேளையும் நல்லலக்னமு
ங்கைகூடியவேளையில் தேவர்கள்முதலாகிய யாவருஞ்
ஜெயஞ்ஜெயமென்று தீர்க்கமாய்வாழ்த்தவும் இந்நன்
மைவாய்ந்த சகலசுபசந்தோஷத்துடன் குருக்ஷேத்திர
பூமிக்குப்போகும்படியாக யெத்தனித்து துவாரகாபுரி
வாசனாகியஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து சுவாமி என்
ன சும்மாயிருக்கின்றீர் எழுந்தருளுமென்றுதருமராஜன்
சொன்னகாலத்தில்முகமலர்ச்சியில்லாதவராய் நான்பின்
னேவருகிறேன் நீங்களெல்லோரு முன்னடிபோங்களெ
ன்றுசொல்ல அதைக்கேட்டுமுரசக்கொடியையுடைய த
ருமராஜன்பெருமூச்சுவிடுத்துச்சொல்லுகின்றார்.

கேளாய்முகுந்தனே, இதென்னமோசமோ என்மன
தைச்சோதிக்கும்விசுவாசமோஅந்தமட்டும்வெகுநேத்தி
எழுந்திருமெழுந்திருமென்று இரண்டுகரத்தையும்பற்றி
த்தூக்கும்போது கண்ணில்முகத்தில் நயத்தைக்காட்டா
மல் கண்ணன்முகத்தைச்சுளித்துக்காட்டி ஏன்காணுமெ
ன்னைத்தொந்தரவுசெய்கின்றீர் வீணனசாரியத்திற்சுவா
னலழிவேனேவென்னுந்தன்மைபோல்விருதாவாகியகா
ரியங்களைத்தலைமேற் போட்டுக்கொண்டு படாதபாடும்ப
ட்டுநோய்க்குத்தகுந்தசிட்டிகைபோட்டுஉலகத்தில் (பெ
ரியபெருமை பேர்பெற்ற கதைபோல்) பாண்டவர்சகாய
னென்றும் பார்த்தசாரதியென்றும் நரநாராயணனென்
றும் ஐவருக்கு ஒன்றுந்தெரியாது எல்லாக்கலகமும்இவ
னேசெய்கிறானென்றும் குவலயமெல்லாம் என்னைக்கு
லைய தகுந்தகாதவர்களையெல்லாஞ்சிநேகித்து எதுகாரிய
மெப்படிமுடக்குதோ; இதுவேலையெப்படியடக்குதோ,

நமது எண்ணம் என்னமாமுடியுதோ ஏதாகிலும்யுதோ
வென்று இரவும்பகலும் வயற்றில்வாள்கட்டிக்கொண்டு
ஆகாரம்நித்திரையில்லாமல் அவஸ்தைப்பட்டு ஐவர்பிழைத்
தாற்போதும் அவர்கள்சபதம் நிறைவேறினாற்போதும்,
அவர்களுக்குப்பிள்ளைகூட்டல் முடித்தாற்போதுமென்றுகாரிய
த்தாட்சிவாராமல் என்முழுமனதுடனே சீர்ப்படுத்திக்
கொண்டுவந்தால் என்னை உங்கள்குலதெய்வமாகவினைத்
து என்சொற்படிநின்று செவ்வைப்படாமல் என்னைச்ச
த்துருவாக்கி அரசர்கள் மித்துருவாகயிருந்து லாபம்
பெறப்போகிறீர்களல்லவா போகட்டும் என்றுமேலே நீங்க
ள்விரோதிக்கவேண்டாம் நீங்களும் அவர்களுஞ்சுகமாயி
ருங்கள் ஆரம்பட்டும் அபலம்கோயிற்கட்டியுங் குறை
யென்பதுபோலாச்சுது நான் உங்களுக்குப்பயந்தவனல்
ல உங்கள் வேலைக்காறனல்ல உங்கள்சேவகனல்ல உங்
களால்கிராமம் பூமிநாடுநகரம் ஆடுமாடுவீடு யானை தேர்
பரி ஆபரணம் அலங்காரவஸ்திரம் இவைகள்பெறாக்காத்
திருப்பவனல்ல என்னை நீங்கள் தடைப்படுத்தவும் போ
வென்னவும் வாவென்னவுங்கூடாது புண்ணியத்திற் கு
றுவந்தமாட்டை பல்லைப்பிடித்துப் பருவம்பார்த்தானெ
ன்பதுபோல என்னைப்பரிட்சிக்கின்றீர்கள் அடபோங்கா
ளும் கன்மியற்றவர்களே இப்பவும் குருக்ஷேத்திரத்துக்
குவாவென்றுகூப்பிடுகிறீர்கள் அவடத்திற்கொண்டுபோ
ய் கழுவுக்கேற்ற கோமுட்டியாகப்பட்டானென்று விட்டு
விட்டு (கொண்டானுங்கொடுத்தானும் ஒன்று இந்தக்
கலியாணத்தைக் கூட்டிவைத்தவன்வாயிற்பிடி மண்ணு)
வென்னும்பழமொழிபோல் நீங்களுந் துரியோதனுநியரு
ம் ஒன்றாய்க்கூடிக்கொண்டு இந்தக்கிருஷ்ணன் தாண்டா
வென்று நம்பினவனையுங்கூடவொட்டாமல் கலகஞ்செ
ய்துகொண்டே வந்தான் இவனைப்பிடியடா இவனையடி
யடா சிறைபிற்செல்லடா இவனைக்கொல்லடாவென்று
ல் எனக்கார்துணை அப்போதுங்களுக்கு எதிருமில்லை எ
னக்குத்திக்குமில்லை தெய்வமே என்று உங்களாக்கினையி
னால் நானிறந்துவிட்டாலும் ஒருவேளையுத்தமுகத்தி லிற
ந்துவிட்டாலும் என்னைநம்பி என்காலைச் சுத்திக்கொண்
டிருக்கிறபெண்சாதிபிள்ளை குடும்பமெல்லாவற்றையும்,
ஆர்காப்பாற்றுவார்கள் ஒருவேளை அன்னம்போட்டுரட்
சிக்கிறவர்களியாரிருக்கின்றார்கள் இதெல்லாம்வீண்காரி
யம் பள்ளிக்கூடத்திற்குப்போனால் வாத்தியாரடிப்பார்
போகாவிட்டாலேனடிப்பார் அதுபோல் உங்களுடன்கூ
டவருவானேன் வருத்தப்படுவானேன் கரிப்புக்கிருந்து
பிழைகலகத்திற்கோடிப்பிழையென்பதுபோல்நான் எங்
களுக்குப்போய்விடுகிறதுநன்மையாயிருக்குது என்று
ஊரிற்போயிருந்துண்பதிலும் வாழுமூரிற்றாழ்ந்து கூழு
குடிப்பதுநன்று அதுபோகட்டும் ஒருதரம்பழகிவிட்டோ
ம் லாடுலகாடுயெதுவந்தாலும் அனுபவிப்போமென்றெ
ண்ணினாலோ எலிமுட்டிய அடிப்பும் இல்லிப்பானை வெ
ந்நிருமாய்முடியுது நீங்களெப்படியும்பலவான்கள் உங்க
ளுக்கொருகுறைவுமில்லை எனக்கென்ன அண்ணனு தம்
பியா பந்தும்பங்காளிகளா ஆரிருக்கின்றார்கள்போனாலு
ம் இருந்தாலும்நானொருவன்முன் ஆகையால்காலம்போ
ம் வார்த்தைமிற்கும் என்றதுபோல் நீங்களிருந்திறவர்களு
ங்கலந்துவாழ்ந்தால் நானுங்கண்குளிரப்பார்ப்பேனென்
று பற்பல நிஷ்டூரங்களாகப்பேசிவரும் புண்யனுடைய
மொழியைக் கண்யமுடையபாண்டவர்கள் புத்ரமித்ராள்
யாவருங்கேட்டு மனங்கலங்கிமதிமயங்கியிருக்க தருமரா
ஜன்நெடுநேரம்யோசித்து சுவாமி தேவரீர்போகிறேனெ
ன்றுசொல்லவும் மனந்துணிந்ததல்லவா என்னுடைய
வினைப்பயனென்று கண்ணீர்சோரவிட்டு நாம் உம்மைப்
பிரிந்தும் மண்ணில்வாழ்வைப்பெறுவதா உம்மைவிலக்
கி ஒருகாரியஞ்செய்வதா நமது மனையில் நாமிருந் தூப
தீபம் உம்மைவிட்டு அப்பாலொருவருக்கிடுவதா ஐ கோ
பாலா என்னசொன்னீர் என்னசொன்னீர் என்மனதை
ப்பேதித்துவிட்டீர் (பெருமாளில்லாமற் திருநாள் நடங்
குமா) சுவரைவைத்துக்கொண்டல்லவோசித்திரமெழுத
வேண்டுமென்பதுபோல் சுவாமீ என்ன எங்களுடைய
நன்றியற்றதனமும் நாங்கள் உங்களுக்குள்ளோ உறவாடு
கிறமுறையும் எங்களால் நேரிட்டகுறையும் பொல்லாங்
கும் தேவரீருக்கு இவ்வளவுமனஸ்தாபம் வந்ததிதமும்இ
ப்போர்ப்பட்டதென்று அடியேனுக்கு ஒன்றுந்தெரியவில்
லையே அவைகளையெல்லாந் தெரிவிக்கவேண்டும் தேவ
னேயென்று தீர்க்கதெண்டமாய்விழுந்த தருமராஜனைதி
டுக்கென்றெழுந்து ஆ ஆ என்னகாரியஞ்செய்தீர் எழுந்
திருமெழுந்திருமென்று வாரியெடுத்து மார்போடணைத்
து உளுக்காரவைத்து உபசாரஞ்செய்து இப்படியுஞ்செ
ய்யலாமா தருமராஜனே இதென்ன அநியாயமென்று
ர் மாயவனுனவர் அப்போது தருமராஜன் இதெல்லாமி
ருக்கட்டும் என்தம்பிமார்களேதாகிலுந் தவறிநடந்தார்க
ளா நானேதாகிலுந்தப்பிப்போனேனு அப்படி நாங்கள்
தெரிந்துந்தெரியாமற் செய்திருந்தாலும் சீர்திருத்தவே
ண்டியகடமை உம்முடையதன்றி பின்னையாரிருக்கின்று
ர்கள் அப்படிவேறென்றுங்காணேமே யேதாகிலும் உ
ண்டானலந்தச்சங்கதியை வெளிவிடுமென்று தருமராஜ
ன்சொல்ல நானென்னசொல்லுவது கோளாகுண்டுணி
யா (அம்மையார்மெழுகிமொக்கிட்டயிடத்தில் அறியாத
வள் முன்முணையால் அழித்தாளென்பதுபோல்) பெரி
யோர்கள்செய்யும் பெரிதாயகாரியங்களைச் சிறியோர்க
ளெல்லாஞ்சிதைத்துவருகின்றார்கள் அதைநான்சொல்
லுவேனுகில் என்பேரில் எல்லாருக்குங் கொல்லத்தக்க
பகைவருமென்று கோபாலன்சொல்ல தருமராஜன் கே
ட்டு அவ்வளவு இரகசியமான காரியத்தை நானறியப்
போகாதா அதுதானின்னதென்று தெரியட்டுமே இயா
வரும் அறியட்டுமே (இயானையைமுறத்தால் மூடுவது
போல) மறைக்கவேண்டியதில்லை நீர் திருவாய்மலர்ந்த
ருளும் ஐயனேயென்று வையகம்புரக்கும் தருமராஜன்
கேட்க செய்யாளுறையுந்திருமார்பர் பொய்யாமொழியா
ப் புகல்கின்றார்.

கேளும் தருமநந்தனு துரியோதனன்முதலியசத்துருக்
களெல்லாம் அடியோடழியும்படியாய் முகூர்த்தம்வைத்
து ஆயுதபூசைசெய்யவேண்டுமென்று நாமெண்ணியிரு
க்க நமதுபகையாளியாகிய துரியோதனன் இவ்விடம் வ

ந்து தருமராஜன் தலை அற்றுவிழும்படியாகிய நாள் எனக்குவைத்துக்கொடு நான் அந்நாளையில் ஆயுதபூசை செய்கிறனென்றுகேட்க அப்படியே உன்தலைபோகும்படியாகிய ஸ்திரநாள் வைத்துக்கொடுத்தான் இந்தச்சகாதேவன் ஒருவனாயொருவரறியாமல்உள்ளுக்குள்ளேஇப்படி நடக்குமாகில் நாம் ஊனாவளைத்துமென்ன உறவுபிடித்துமென்ன இன்னம் எதுவேகையோ எப்படிமுடித்துமென்னபிரயோசனம்(நிழலிலிருக்கும்பொருந்தம் வெய்யலிற்போனுந்தெரியும்வருத்தம்) நான்பட்டபாடு எனக்குத்தெரியும் இதனாலெனக்குமெத்த மனவேஷ்டையாச்சுதென்று மாயன்சொல்ல தருமராஜன்கேட்டுதம்பியாகிய சகாதேவனையழைத்து என்னதம்பி ஸ்வாமியார்சொல்லுகிறதுசத்தியமா அசத்தியமாவென்றுகேட்க சத்தியந்தான் தருமபூபதியாகிய அண்ணாவேகேளும் சந்திரகுலத்தோன்றலாகிய துரியோதனராஜன்வேத்திரவெகினமூர்ந்து நேற்றிராத்திரி என்னிடத்திற்குவந்தார் அவருக்குமரியாதைசெய்து ஆசனமளித்து ஏதண்ணா இவ்வளவுதூரம் வந்ததென்று கேட்டேன் - பாண்டவர்களுக்கும் எனக்கும், யுத்தம் நேரிட்டு படைகூடி யிருப்பதால், தருமராஜன் தலைபோகும்படி யாகிய நல்லநாள் வைத்துக் கொடு நான் ஆயுத பூசைசெய்து ஆயுத மெடுக்க வேண்டுமென்று கேட்டார் - அப்படியே நல்லதென்று வாரம்-திதி-நாள் ஓரை சுத்திமுதலியதும் நன்மையாகக் கூடிய அமாவாசியினன்று ஆயுதமெடுத்துக் கொள்ளென்று நாள்வைத்துக்கொடுத்தேன் நாமே பகையாளிகளாயிருக்க அதனை நினைக்காமல் என்னையே நாள்வைத்துக் கொடுவென்று கேட்டபடியால் சத்தியந்தப்ப லாகாதென்று நாள்வைத்துக்கொடுத்தேனென்றான்? அதைத் தருமராஜன்கேட்டு ஆ ஆ வென்றுநகைத்து ஆனந்தங் கொண்டு இதுவனாயினும் நீ எனக்குத்தம்பியல்ல, இன்றுமுதலாக எனக்கு நீ நல்லதம்பியாகினையே அப்பனே? சத்தியநெறிதப்பாத நித்தியனே, உன்சத்தியமே உன்னைக் காக்கக்கடவது, இனிஎனக்குஇவ்வுலகம்வரா விட்டாலும் வந்தாலும்யார்போனாலும் யார்வந்தாலும் நாம்கூறிய சபதம் சரிப்பட்டாலும் தப்பிப்போனாலும் எனக்குப்பெரிதல்ல என்தம்பியினுடைய உண்மையொன்றுமேபோதுமென்று பூரித்துப் புளகாங்கித முற்று சிறியவனாகயிருந்து பெரியபொருளைக்கைக்கொண்ட சகாதேவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டு கண்ணனைக் கண்ணினாலுற்றுப்பார்த்து காசாம்பூவண்ணனே உலகமுள்ளவரைக்கும் அழியாப் புகழ்கொண்டான் என்தம்பி யென்று சொல்லி, என்தம்பி சகாதேவன் எனக்குச்செய்த சகாயம் என்தந்தை முதலிய யாருஞ் செய்யமாட்டார்களென்று சொல்லி ஐயா! என்தம்பியினுடைய சத்தியத்தைக் குறித்து நீர்மெத்தவுஞ் சந்தோஷப் படவேண்டுமேயென்று.தருமராஜன்சொல்ல அதைக்கேட்ட ஹரிமுகுந்தனவர் இரண்டு கையையுங் கொட்டிக் கலகலவென்றுநகைத்துக் கேட்டீர்களா சபையிலுள்ளவர்களே (உளவில்லாமல் ஊரழியா தென்பதுபோல) இவாறுமதியில்லாம லிந்தசகாதேவன் இப்படிசெய்வானு சரிதான் சரிதான் இனிப் பேசவேண்டியதில்லை (குழந்தையினுடைய தொடையையுங்கிள்ளி தொட்டிலையும் ஆட்டினல் தூங்குவதெப்படி சொல்லுங்கள்) இவர் பெரியவரென்று நான்சொன்னால் ஏனடா இப்படிசெய்தாய் புத்தியில்லாதவனே யென்று தண்டிக்காமல் அவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக் கொண்டு மிகவும் புகழலாமா, இனி இந்த அனியாயத்தை நானாருடன் சொல்லி யாறுவேன் அரசர்களே இப்போது வினாய் நானொருவன் பழிக்காளானேன் இதுவனாயினும் பகைகளையவேணும் விதைவிளையவேணுமென்று நான்பட்டபாடு விழலுக்கிறைத்த நீராச்சே; வெய்யலின் மஞ்சட்பூச்சாச்சே, விருதாவாயெனக்குப் பேச்சாச்சே ! விபகாரங்கெட்டுப் போய்ப்போச்சே என்று விசனப்பட்டு, ஓய் தருமநந்தனரே (அதிகாரிவீட்டில் திருடி தலையாரிவீட்டில் அடுக்கிவைத்ததைப்போல்) உன்னிடத்தில் சொல்லிக் கொண்டேன், இனியெதுநடந்தாலும் வாய்பேசாம லிருக்கும்படியாகச் செய்துவிட்டீர், எனக்கென்ன கெட்டுப் போனது, ஆண்சிறையும் பெண்சிறையுந் தலைவிரி கோலமாக அவதிப்படுவது ஒன்றுமில்லை-அக்கரைக்காரருக் கில்லாதகாரியம்அயலாருக்கென்னவந்தது வீரியம், தருமநந்தனு, உமது கருத்தை நானறிந்து கொண்டேன் இதுபோகட்டும் மேல்நடக்கவேண்டிய காரியங்களுக்கென்ன சொல்லுகிறீரென்றுகேட்க, அந்தவார்த்தையை முரசக்கொடியினையுடைய முதல்வன் கேட்டு இனிமேல் நடக்கவேண்டிய காரியங்கள் இன்னதென்று கட்டளையிட்டால் அடியேன் அந்தப்படி நடக்கக் காத்திருக்கின்றேனென்றுசொல்ல, பின்னை வேறொன்றுமில்லைநாமுஞ்சேனைகள்முதலிய யாவர்களுங் குருக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்து வீரமாகாளியைக் கொலுநிறுத்தி அபிஷேக அலங்கார தீப தூபத்துடன் பலிகொடுத்து ஆயுதபூசைசெய்து ஆயுத மெடுப்போமாகில் சத்துருக்களைஜெயித்து மித்துருக்களும் நாமும் வெற்றிபெறலாம், இதற்கு நாளையத்தினம் நாள்நேமித் திருக்கின்றேன் அந்தப்படி நடத்திப் பூசியுங்களென்று நாரணன்சொல்ல, யாவருஞ் சந்தோஷித்து முக்கியமாகச்செய்யவேண்டிய ராஜதர்மம் வீரதர்மமிதுவேயென்று சொல்ல உடனே முரசகேதனன்கேட்டு கண்ணனைநோக்கி உமதிஷ்டப்படியே காட்டெருமைமுதலிய யானை-குதிரை-ஒட்டை-பன்றி-கோழி ஆடு-மான் - இவைகளெல்லாம்பலியிடுங்களென்று சொல்ல, அதைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லுகின்றார்.

ஓ-தருமநந்தனு ? இதெல்லாம் உலகத்திற் சுளுவாகிய பிரார்த்தனைமுதலிய காரியங்களுக்குச் சாதாரணமாய்ப்பலியிடுகிறதுண்டு நாம் தொடங்கியிருக்கும் வேலையோ மலை பாண்டமாகிறவேலை,. இதன்றியும், துரியோதனனே வெகுபேர் பெரியோர்களைச்சிநேகித்து திவ்வியமாகியபலிகொடுத்து பராசத்தி பூசைசெய்து ஆயுதமெடுக்கும்படியாய் ஸ்திரநாள்நேமித்துக்கொண் டிருக்கின்றான் நாம் பூசைசெய்து ஆயுதமெடுக்கப்போகிற ஸ்திரவேளையினால் அவனுக்கு ஜெயங்குறைந்து நமக்கு ஜெயம் வரவேண்டும்ஆகையினால் எனக்குத்தோன்றியதைச் சொன்னே

ன் உமக்குத் தோன்றியதையோசித்துச் சொல்லும் ஐவர்முதல்வனே யென்று சுவாமியார்சொல்ல அதைக் கேட்டு தருமராஜன்நகைத்து நரிவாலைக் கொண்டு கடலாழம்பார்ப்பதுபோ லிருக்கின்றதே தேவரீரென்னைக் கேட்கிற யுக்தி வெகுநன்றாயிருக்குது சுவாமி இப்படி அடிக்கடி யென்னைச் சோதிக்கவேண்டாம் தேவரீருடைய சிந்தையின் வினை யெப்படியோ அப்படியே முடித்துவிடுமென்று தருமராஜன் சொல்ல ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லுகின்றார்.

ஓ! தருமநந்தனா? நானென்ன நினைக்கின்றேனென்றால் சத்தியசவுச ஆசாரவிசார முள்ளவனும் வீரப்பிரதாப அபிமானத்தவனும் எதிரோமக்காறனும் இருக்கும்படியாகிய ஒருவனைப்பிடித்து வீரமாகாளிக்கு நரபலியூட்டிவைத்துவிட்டால் எத்தனைபேர் எத்தனைசாஸ்திரம் பார்த்து நாள்வைத்துக் கொடுத்தாலும் எவ்வளவு பலியிட்டுப் பூசைசெய்து ஆயுதமெடுத்தாலும் அந்தத் துரியோதனன் அவனுடைய புத்ரமித்ராதியரை மிறவிடாமல் நாமேமுடித்து வெற்றிபெறலாம் இதற்கு நானே முன்னிற்பேன் நீர் வேறாக யோசிக்க வேண்டிய தில்லையென்று கோபாலன்சொல்ல தருமராஜன் - அந்த வார்த்தையைக் கேட்டு சற்றுநேரம் யோசித்துச் சொல்லுகின்றார்.

ஓ! சுவாமி? தேவரீரிஷ்டப்படி நடத்திவையுமென்று சொல்ல, ஆளைக்கொண்டு நடத்துகிறது கடையில் விற்கிற பண்டமாகாசுகொடுத்துக்கொண்டுவா வேலைமுடித்து வென்றுமா வீரமாகாளியைப் பூசித்தோமாவென்றுபோகிறத்துக்குஇதுவோமானிட உயிரைச்சார்ந்தவேலை அதிலேயுஞ்சாஸ்திரப்படிக்கு லக்ஷணம் அமைந்திருக்கின்றவர்க ளருமை அப்படியுந் தேடிப்பார்த்தால் நாலத்திரண்டுபேரிருக்கிறார்கள் அவர்களுக்குமொவ்வொருகாரிய நேரிட்டிருக்குது,அதென்னவென்றால் சல்லியனொருவனிருக்கின்றான். அவனேதுரியோதனராஜனுக்குப் படைத்துணையாய்ப் போய்விட்டான்! அருச்சுனனொருவனிருக்கின்றான்? அவனைப்பலியூட்டினாலோ பஞ்சபூதம் போன்ற ஐவரொன்றும் பூண்டு அப்பொழுதேயற்றுப் போம் அரவா னொருவனிருக்கின்றான்.அவனேதுரியோதனமஹாராஜனுக்குக் களப்பலிவரும்படி யுடன்பட்டு விட்டான்? இனிவேறொருவருமில்லை, செல்லுஞ்செல்லாத்திற்கு செட்டியாரிருக்கிறா ரென்பதுபோல், நானொருவனிருக்கின்றேன்-தருமநந்தனா? என்னைக்களப்பலியூட்டிஉங்கள்சபதத்தையும்; சத்துருக்களையுமுடித்து வெற்றி பெற்று அரசாக்ஷி செய்யுங்களென்று அமலனாகிய அரிவாசுதேவன்சொல்லவே ஹரிஹரியென்று இரண்டுசெவியும்பொத்திக்கொண்டு ஏக்க முற்றவர்போல் நின்று பெருமூச்சுவிட்டுஇப்பேர்ப்பட்டபெரும்பழியாகிய சொற்கேட்பதற்கோ என்காதுக ளிருந்ததென்று மனம்வருந்திச் சபையைநோக்கிச் சொல்லுகின்றார்.

ஓ! அரசர்களே! இந்த விந்தையாகிய வார்த்தையைக்கேட்டீர்களா நந்த நந்தனனைக் களப்பலிகொடுத்து நான் பழிமுடித்துக்கொண்டு ராஜாங்கஞ் செய்யவேண்டியதென்று நமது நாரணன் சொல்லுகின்றார். அப்படிசெய்து சத்துருக்களை ஜெயித்து வெற்றிபெற்று நானெத்தனை நாளிருந்து வாழப்போறேன் இதைப் பார்க்கிலும் துரியோதனனே உலகத்தையாளும்படியாய் விட்டுவிட்டு நாங்களைந்துபேருங் காட்டுக்குப்போய்விடுவது மெத்த உத்தமமா யிருக்கின்றது, நீங்க ளெல்லோருந் தங்கள் தங்கள் நாட்டுக்குப் போங்களென்று இருகரத்தையுங் குவித்து வந்தனைசெய்து மரியாதையுடன்சொல்லி ஓ-தம்பிமார்களே, எழுந்திருங்களென்றுசொல்லித் தானுமெழுந்தார் தருமராஜனானவர், அந்தவேளையில் அரவா னெழுந்து அறத்தின்மகன் காலில்விழுந்து ஐயா? உனக்காருமென்றுசொல்லி சபையிலிருந்த யாவரையும் பணிந்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து ஜெகரக்ஷகனாகிய தேவா (காஞ்சிபுரத்திற் றிருடுவதற்குக் காவேரிப்பூம் பட்டணத்திற் கவிழ்ந்துபடுத்து மாரால்நகர்ந்துவந்த கதையைப்போல) வலைவிசிவந்தையே மாயவா! உன்சிந்தையிலெண்ணிய வண்ணம் நடக்கும்படியாகிய காலம் சேர்ந்திருக்கின்றபடியால் நீர் இந்தத் தந்திரமாத்திரமோ செய்வீர், இன்ன மென்னென்னமோ செய்யக் காத்திருக்கின்றீர், இறைவனே என்னைமுடிக்க இவ்வளவு யுத்திசெய்யவேண்டுமோ, உன்னிஷ்டத்தி னினைந்தா லிருந்தயிடத்தி லிறக்கமாட்டேனோ ஈசனே! சும்மாயிருந்த ஐவர்மனதுக்குத் துயரங்கொண்டுவந்து வைத்த தோன்றலே! உன்னையாரறிவார்கள், என்னை நீ யறிவாய் பன்னக சயனாவென்றுபணிந்து பாண்டவர்களைப்பார்த்து ஐயா? நேற்றிராத்திரி துரியோதனமகாராஜன் என்னிடத்திற்கு வந்தார், அவரைஎதிர்கொண்டு கண்டுவணங்கி ஆசனத்திலிருத்தி ஏது இவ்வளவுதூரம் வந்ததென்று கேட்டேன்,அதற்கு அவர்சொன்னது பாண்டவர் களுக்கும் எங்களுக்கும் பகைமேலிட்டிருப்பதினால் களப்பலிக்கு நீர்வரவேண்டுமென்று இருகரத்தையும் நீட்டி யிரந்தார்; போக தேவேந்திரனையொத்த கவுரவகுலமுதல்வன் இச்சைமேற்கொண்டு பிச்சைதாவென்று லச்சையின்றி என்னையிரக்கும்போது நான் நாஸ்தியென்று சொல்லக்கூடுமோ ஓ அரசர்களே, ஆகையினால் இப்படியாகயிரந்த எம்பெரிய தந்தையைநோக்கி எப்போது களப்பலியூட்ட நினைத்திருக்கின்றீரோ அப்போதுவரையிலும் இந்த அனித்திய தேகம் நிலைத்திருக்குமாகில் நீரே ஒப்புக்கொள்ளுமென்று நான் ஒப்புக்கொண்டதுண்டு, இப்போதும் நான் தப்பிதமாய்ச்சொல்லமாட்டேன், குவலயா பீடமென்னுந் தந்தியைக் கொன்றவனே, நீர் முந்திக்கொள்ளு வதானால் இதோ உமக்குச்சொந்தமாக யிருக்கின்றேன், இப்போதுமக்குச் சிந்தைக்கலிதிடுக்கென்று விழுந்ததா இனியுமக்கு நித்திரைபிடிக்குமா ஓ! நந்தகோபாலனே என்று சொல்லிய நாககன்னியின் புத்திரன் வார்த்தையைக் கேட்டு, இதென்ன அநியாயம் நானென்று சொல்லப் போய்த் தானென்றாய்விளைந்தது,அப்படியா அரவானே துரியோதனன்வந்து உன்னைக் களப்பலிக்குக்கேட்டானா அடடா தருமநந்தனரே கேட்டீரா சங்கதி (கிணறுவெட்டப்போய் பூதம்கிளம்பினகதையாச்சுது) இப்படியிருக்குது உலகம்பிழைக்க வகை அவனவன்தேடிக்கொள்ளுகிறார்

கள். நாமாத்திரம் வீண்காலம் போக்கிக்கொண் டிருக்கிறேமென்றுசொல்ல, இந்த வசனத்தைத் தருமர்கேட்டு அரவானையழைத்து அணைத் திருகப்புல்லி அப்பனே,என்னையனே, சாந்தமூர்த்தி துரியோதனன் களப்பலிக்குக்கேட்க அதற்கு ஒத்துக்கொண்ட என்னிருகண்ணே,சந்திரகுலத்தை விளக்கவந்த மணித்தீபமே, பிராணனைக் கேட்டவர்க்கு கொடுக்கவிசைந்த தாருவே, யென்றுபற்பலவிதமாய்ப்புகழ்ந்து மகிழ்ந்தார், அருச்சுனன்முதலிய பெயரும் அகங்களித்தார்கள்

அதுகாலையில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்லுகின்றார் ஏனையா இவர்களெல்லாருமிப்படி ஒன்றுபட்டிருப்பார்களாகில் நான்மாத்திரம்வேலையற்றவனு (ஆற்றிற்போகிற ஜலத்தை அப்பாகுடி ஐயாகுடி என்பதுபோலிருக்கின்றதே) இதென்ன அநியாயமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர்தருமராஜனைத்தனியே அழைத்துப்போய் நடக்கவேண்டியகாரியமர்மங்களைக்கலந்துபேசி அரவானைக்களப்பலிவைத்துவிடும்படியாகச்சொல்லஐயையோஎன்பிள்ளையைக்கொன்றுமுதற்பலியூட்டிவைப்பதுபெருமையோயுத்தவாரம்பஞ்செய்யும்போதே புத்ரசோகத்துடனேயுத்தஞ்செய்யலாமோ சொல்லுங்கண்ணனே என்தம்பிமுதலியபேர்களின்மனமெப்படிதுணியும் நானுடன்படமாட்டேனென்று தருமராஜன்சொல்ல அதற்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்லுகின்றார்.

தருமராஜனேகேளும் களப்பலியூட்டுவதென்றால்தலையறுத்துவைப்பதாயோசித்து வருந்துகின்றீர் அப்படியல்ல இந்தப்பிள்ளையை ஸ்நானஞ்செய்வித்து அலங்காரப்படுத்தி அவன்கையிற்றானேவாள்கொடுத்துமுப்பத்திரண்டு உறுப்புகளிலேயும் கொஞ்சங்கொஞ்சம் அறுத்துவீரமாகாளிக்கு நைவேத்தியம் வைக்கச்செய்து களப்பலிபேயல்லதுவேறில்லை இந்த அரவானுஞ் சுத்தவீரனாகின்று யுத்தஞ்செய்வானென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர்சொல்ல தருமராஜன்சித்தமகிழ்ந்து சுவாமீ எதிரோமக்காரன்வேண்டுமென்றுஞ் சித்தாந்தமென்னவென்று கேட்க ஸ்ரீகிருஷ்ணர்சொல்லுகின்றார்.

தருமநந்தனனேகேளும் மாமிசம் அறுக்கும்போது அந்தவிடத்திலுதிரம்வராமலும் கண்ணீரில்லாமலுமிருக்கவேண்டிய மனோதிடத்தைப்பற்றி எதிரோமக்காரனைத்தேடுவதென்றுசொல்ல அப்படியாவென்று அகமகிழ்ந்து அருச்சுனன்முதலாகிய தம்பிமார்களுக்குந்தெரிவிக்க அவர்கள்கேட்டுதிருமாலுடையமனத்திற்கும் தேவரீருடைய சித்தத்திற்குமெப்படிசம்மதமோ அப்படியே எங்களுக்குஞ்சம்மதமென்று அருச்சுனன்முதலியபெயரும் புத்திரவாஞ்சையை அகத்திலடக்கிச்சொல்ல அந்தக்குறிப்பை அரவானறிந்துகொண்டு ஐயா நீங்களொன்றுக்கும் யோசிக்கவேண்டாம் (காற்றிருந்தவர்கால்வாங்க நேற்றிருந்தவரின்றில்லை பார்த்திருந்தவர் பாழானரென்னும் பழமொழிபோலும்) ஆகாயத்திலெறிந்தகல்லைப்போலும், காற்றை அடைத்து வைத்த தோல் துருத்திபோலும், நெருப்பிற்காட்டியமெழுகைப்போலும் வெய்யலில்வைத்தவெண்ணெய்போலும் பெருக்காற்றிற்றோன்றியகுமிழிபோலும் மாலிமையில்லாக்கப்பல்போலும் சூத்திரக்கயிறுடைய பொம்மை போலும் வேகாப்பாண்டத்திலிறைந்த ஜலம்போலும் நிமிஷமாத்திரமும் ஸ்திரமென்று சொல்லக்கூடாத பொய்யாகியதேகத்தை மெய்யென்று நிச்சயித்து வெகுபேர்மறந்துமடிந்தார்கள் ஆகையால்அநித்தியத்தைநித்தியமென்றுநினைத்து பாம்பின்வாயிலகப்பட்டதேரை பாம்பினுடையபல்நுனியிற்றொங்கும் விஷத்துளியைப்பார்த்து ஈயென்றுகருதிஇதைப்பிடித்துநாம்புசித்துப்பசியாறியிருப்போமென்று எண்ணிதேரை அந்த விஷத்துளியைத்தாவ பாம்புவாழைப்பழம்போல்தேரையைப்பின்புறமாகவேபிடித்து விழுங்கித்தன்பசிதணிவதுபோல் சாகிறவரையிலும் அவர்நீங்காமையும் பிராணபயமும்யாவருக்குமிருக்கும் அப்படியிருந்தாலும்சமுத்திரத்தினலைபோலும் வண்டிச்சக்கரம்போலும் ஊசலின்கயிறுபோலும் கீழதுமேலதாய்ப்போய் வந்துகொண்டிருக்கும்தொழிலையுடைய பிற்றைச்சடத்தைப் பெருமையாகநினைத்து மூடர்மயங்குவார்கள் ஞானமுடையோர்நொடிப்போது மகிழார்கள் உலூபியின்வயிற்றில் உங்களுக்குநான்பிள்ளையாகப்பிறந்தும் என்னபலன் தந்தையின்துயர்போக்கி தர்ப்பணக்கிரியைமுதலிய கடனைத்தீர்ப்பவன் எவனானாலும் அவனுக்கே பிள்ளை யென்னும் பெருஞ்செல்வப்பேர்தகும் இல்லாவிட்டால் இறந்துமில்லாமையாகிய இழிவைப்பெறத்தக்கதாகயிருக்கும், இதோமது குலத்தில் வீஷ்டுமர்தந்தையாகிய சந்தனுமகாராஜன்நிமித்தத்தில் விரதசீலனாகி மேன்மைபெற்றார் ஆதலால் நானும் என்சரீரம்வருந்தி என்னாலியன்ற உபகாரங்களை தந்தைமார்களின்பொருட்டு பராசத்திக்குத்திருப்திசெய்யநினைக்கின்றேன் நீங்கள்தயவுசெய்து இந்தச்சிறியேனாலாகிய உதவியை அங்கீகரிக்கவேண்டும் மேலும் எல்லாரும் உயிருடனிருந்துவாழ்கவும் நான்மாத்திரம்இறந்துபோகவும் நேரிட்டதேயென்னும்பயம் எனக்கில்லை அதேனெனில் இவ்வுலகத்தி லுள்ள ஆத்மகோடிகளில் வெகுபேரைக் குருக்ஷேத்திரபூமியிற்கூட்டி வேலைமுடிப்பதற்குவேலைவிட்டெழுந்து இதுவேலையாகவந்திருக்கின்றவிமலன் என்கண்ணான எல்லாரையுமுடிப்பானென்பது என்னுள்ளேதோன்றுகின்றமையால் முன்னேயிறப்பது பின்னேயிறப்பதென்னும் பேதமும் அதனால்நேரிடும்பிராணபீதியும் என்மனதைவருத்தப்படுத்தயில்லை பழுத்தவோலைமுன்விழுந்தால் குருத்து ஓலை பின்விழுமென்னும்பான்மைபோல் (கடைசியிற் கணக்குப்பார்க்கும்போது சகடுமுழங்காலென்னுந்தன்மையாய்ச்சரிப்பட்டுப்போகும் ஐயா (குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குலமன்னரோ என்னுந்தன்மையாகுமென்று அரவான்வணங்கிச்சொல்ல அருச்சுனன்முதலியாவருங்கேட்டு மனமகிழ்ந்திருந்தார்கள் அந்தச்சமயத்தில் அரவானானவன்பெரியதந்தைமுதல் யாவரையும்பணிந்து தாய்மார்களுக்குந் தீர்க்கதண்டமுஞ்செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைவணங்கி ஸ்வாமீதேவரீருடைய என்னைப்படியுடன்பட்ட எனக்கு ஒருவரங்கொடுக்கவேண்டும் அதாவது ஜயவீரப்பிரதாப விஜயனுடையபிள்ளையாகிய அரவான்களப்பலியாலிறந்தானென்னும் பெயரில்லாமல் யுத்தகள

த்திற் சுத்தவீரனுமிறந்தானென்னுங் கீர்த்தியும் அப்பேர்ப்பட்டவீரனிடத்திற்போர்புரிந்து இறக்கும்படியாகியசத்துவமும்எனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அப்படியே ஈசன் அநுக்கிரகஞ்செய்வாரென்று அருள்புரிந்து யாவருமகிழும்படியாய்ப்பேசியிருந்ததாங்கள்தாங்கள் இறங்கியிருக்கும் இடம்போய்ச்சேர்ந்து போஜனுதிரும்புசித்திருந்து அன்றுபோய் மற்றநாட் காலமே எழுந்து சபைக்கு வந்து எல்லோருஞ் சேர்ந்த பிற்பாடு நெடுநேரம்வரைக்கும் வார்த்தையாடிக்கொண்டிருந்து அப்பால்இன்றையத்தினம் அமாவாசியாதலினால்யாவருந்திலோதற்பணுதிகளுமுடித்துப் போஜனஞ்செய்து இருபதுநாழிகைக்குங் குருக்ஷேத்திரம்போய்ச் சேரவேண்டுமென்று சேனாபதியாகிய சுவேதனையழைத்துஉத்தரவுசொல்ல அதைக்கேட்ட அரசர்களெல்லாரும் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து இன்றைக்குச்சதுர்த்தசி நாளைக்கு அமாவாசியாகையால் நாளைக்கல்லவோசேனைகள் குருக்ஷேத்திரம்போகவேண்டிய நாளென்றுசொல்லவே அதைக்கேட்டகண்ணனவர் நகைத்து ஐயோ இன்றைக்குத்தான் அமாவாசியென்று ஸ்தாபித்தார் அப்போதுஅரசர்கள்முதலிய பாண்டவர்களும் பஞ்சாங்கமெடுத்துவரச்சொல்லிபார்த்தபோது அதிலுமின்றைக்கென்றே யிருக்கப்பார்த்து பௌரோகிதரையுங்கேட்கும்போது ஐயா இன்றைக்கே அமாவாசியென்று அவர்களுஞ்சொல்ல மற்றயாவரும் அந்நகரத்திலுள்ளவர்களெல்லோரும் ஸ்நானசங்கல்பங்களைச் செய்துக்கொண்டு திலோதற்பணுதிகளையிடுத்துப் பிதிர்த்தேவதைகளைப்பூசித்து நைமித்தியம்வைத்தபோது அந்தப்பிதுர்த்தேவதைகளெல்லாரும்வந்து சாப்பிட்டார்கள் அந்தவேளையில் தேவதைகளுக்கும் சூரியசந்திராதிகளுக்கும் பிதுர்ப்பாகம் அகப்படாமையினால் இதென்னகாரணம் பிதுர்க்களெல்லாரும் உண்டுகளித்திருக்க நமக்குப்பாகமகப்படாமற்போன வயணமென்னவென்று தேவதைகளெல்லோருங் கூட்டங்கூடிச் சூரியசந்திரரை அழைத்து இன்றைக்குப் பிதுர்த்தினமென்று பூலோகமெல்லாங்கொண்டாடிப் பூசிக்கின்றார்களே உங்களுக்குக்கிடைக்கவேண்டிய பிதுர்ப்பாகங்கிடைத்ததாவென்று தேவர்கள்கேட்க அச்சொற்கேட்டு சந்திரசூரியரிரண்டுபேருந் திடுக்கிட்டு நாளைக்கல்லவோ நாம் கூடவேண்டியகாலம் சந்திரசூரியர் சம்பந்தப்பட்டகாலமல்லவோ அமாவாசிபிதுர்த்தினமென்றுபெயர் நம்முடையராசியின்றுமுழுமையுஞ்சென்றபிற்பாடல்லவோநாளையகதியிற்கூடப்போகிறோம்அப்போதல்லவோ பிதுர்ப்பாகம்நமக்குக்கிடைக்கும் அப்படியிருக்க இன்று கூடியதாய்க்கொண்டாடியவிதம் எங்களுக்குத்தெரியவில்லையென்று கிரகங்களைக்கேட்க அதென்னமோ! எங்களைத்தானம்விட்டுதானம்புரட்டியிருக்குது எங்களுக்குந்தெரியவில்லையென்றுசொல்ல இப்போது எல்லோருஞ் சந்தேகப்பட்டு நல்லது நமக்காகப் பூலோகத்திலவதரித்திருக்கும் புண்யனாகியகண்ணன் உபலாவியர்த்தி யிருக்கின்றார் அவர்தான் இதற்குக்காரணம்போலுமிருக்கிறது அவரைப்போய்க்கேட்போமென்று அந்நாய்விடுத்து இந்திரன்முதலிய சந்திரசூரியர் இயாவருஞ்சேர்ந்துவந்து சுவாமியைத்தனித்துக்கண்டுவணங்கி நாளையத்தினம் நாங்கள்கூடுஞ் சங்கமமாகயிருக்க யின்றையத்தினமென்று நாங்களுத்திரவுசெய்ததாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள், ஆகையால் சந்தேகப்பட்டு உங்களைக்கேட்கும்படியாகவந்தோம் என்று ஒருவர்பின்னொருவர்நின்று சந்திர சூரியர்சொல்ல ஸ்ரீகிருஷ்ணதேவர் அவர்களுடைய வசனத்தைக்கேட்டு நல்லது அமாவாசியென்பதென்னவென்று கேட்க நாங்களிரண்டுபேருங்கூடியகாலம் அமாவாசி பிதுர்த்தினமென்றுசொல்ல அதைக்கேட்ட பகவானவர்நகைத்து அவர்களைநோக்கி இப்போது நீங்கள்கூடியிருக்கின்றீர்களா அல்லது பிரிந்திருக்கின்றீர்களாவென்று கேட்க தேவரீரைக்கண்டு சந்தேகநிவிர்த்திசெய்துக்கொள்ளும்படியாய் இருவருங்கூடி வந்தோமென்றுசொல்ல, நீங்கள்கூடியதினமே அமாவாசியாகையால் யிப்போது கூடியிருக்கின்றீர்களே இதுவே அந்தப்பிதுர்க்காலந்தானென்றுசொல்ல நாளையத்தினத்தை இன்றாக ஒப்புக்கொண்டால் எங்கள்கதியெப்படி சரிப்படுமென்றுகேட்க இன்றுமுதல் பலநாட்களிலுஞ்சேர்ந்து ஒவ்வொரு தினத்திற்குமாத்திரைப்போது கதியாகச்சென்று சரிப்படுத்திக்கொள்ளுங்களென்று சக்ராயுதன்சொல்ல அப்படியேமகாபாக்கியமென்று ஒப்புக்கொண்டுபோய்விட்டார்கள் அந்தக்குறைவுதான் நாளதுவரையிலும் அமாவாசி சரியாகவராமல் இன்னம் இரவும்பகலுமாகப் புறண்டுகொண்டுவருகின்றது. கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர்சொல்ல, அதைக்கேட்டு மகாசந்தோஷமடைந்து நாளையுங்கோளையும்புரட்டும் நாயகனாகியநாரணனே பாண்டவர்களுக்குநன்மைத்துனனாக அமைந்திருக்கும்போது வேறுநடக்குங்காரியங்களுமுண்டோ வேதவேதாந்தமுதல்வனாகிய ஸ்வாமியென்று சிந்தனைசெய்து வந்தனைசெய்து கண்ணீருகுத்து மேற்செய்கைதிருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று ஜெனமேஜெயமகாராஜன்கேட்க வைசம்பாயனர்சொல்லுகின்றார்.

இப்பால்ஸ்ரீகிருஷ்ணனுனவர்சேனாபதியாகிய சுவேதனையழைத்துநமதுசேனைகளெல்லாம் இன்றையத்தினங் குருக்ஷேத்திரம்போய்ச்சேர்ந்து இராத்திரிக்குவீரமாகாளி பூசைசெய்து ஆயுதமெடுத்து நாளைக்குமுதனாள் யுத்தம் ஆரம்பிக்கும்படி நாள் நியமித்திருப்பதினால் அதிசீக்கிரமத்திற் பிரயாணப்படுமென்றுசொல்லவே அப்போதேபிரயாணபேரிமுழங்கச்செய்து அளவிருந்த முரசுபேரி குடமுழா துந்துமி டங்கா பாங்கா உறுமி தவிலடிதப்பட்டை தாரை பூரி கர்ணு கொம்பு முதலியவாத்தியமுழக்கமும் சேனைப்பெருக்கமும் இரதகஜதுரகபதாதிகளின் நெருக்கமும் அண்டமுகடுமுதல் எண்டிசையும் அதிரும்படியாய் மண்டலமும் புண்டரீகனுலகமும் பெதரும்படியாய்ப் புறப்பட்டார்கள் ஒருமையென்பது சிறுமையாற் குழையவும் இருமையென்னும் அஸ்திரசஸ்திர ஆயுதங்களிரண்டு மிறையவும் மூன்றுலோகமுழுங்கி விழிக்கவும் நான்குநிலமும் நடுங்கவும் ஐந்துபூதங்க ளலறவும் ஆறுசமயமடங்கவும் ஏழுகடலுமிரையவும் எட்டுசஜ

ங்களும் நடுங்கித்துடிக்கவும் ஒன்பதுகிரகங்களுலையவும், பத்துத்திசைகளும்பதறவும்பதினொரு உருத்திரர்பறக்கவும் பனிரண்டு சூரியர்மாறவும் பதின்மூன்று தமிழ்நாட்டரசருடன் சோழராஜன் பாண்டவர்களின் ஏழக்ரோணி சேனைகளுக்கும் படைபோட்டுக்கொண்டுவரவும் பதினாலு உலகம்நடுங்கவும் பதினைந்து திதியுமொடுங்கவும் பதினாறுபேரும் பாண்டவர்பெறவேண்டுமென்றும் பக்தினால் பாதத்திலிருக்கும் நாகங்களினுடைய தலைநசுங்கி அதின்சிரசிலிருக்கின்ற நாகரத்நம் பிரகாசிக்கும்படியாய்தொகையிறந்த யானைகளும் மகமேருவே முதலிய பர்வதங்களுக்கு அச்சுமச்சு சக்கரமும் அமைத்துக் குதிரைகள் கட்டி வருவனபோலொத்த கோடாகோடிதேர்களும், குரத்தாற் றூளிப்படலங்களையெழுப்பி மேககூட்டங்களுங் குமிழ்ந்துபோகும்படியா யநுமானித்துத்தாவி வருங்குதிரைகளும், அத்தன்மையவாக எழும்பிய தும்புகளை யானைமதங்கள் உளைச்சேருக்க, அந்த உளைச்சேற்றை இரதங்களி னுருளைகளூர்ந்து வாள்க்கருக்கைப் போலும் மண்வெட்டி யிலையைப்போலும் காய்ந்துலரச் செய்ய, அப்படியுலர்ந்துகாய்ந்த களிமண்கட்டியைப் பரம அணுவாக்கி ஆகாயத்தில் மறுபடியும் பறக்கச்செய்து தேவர்கள் கண்ணிமைத்துத் தியங்கும்படியாக்கி இமையா நாட்டத்தவரை இமைக்கு நாட்டத்தவரென்று பேரிட்டழைத்துப் பெருங்கூச்சலிட்டுச்செல்லும் பதாதிகளும், அப்படிதேவர்களுடைய கண்களில் விழுந்த தூம்பைத்துடைத்து விசனப்படாதிர்கள், நீங்கள் இமையாநாட்டத் தவர்தாமென்று பெயர்விளக்கி, தேவோபகாரஞ் செய்யும் படியாகிய பற்பலவித வன்னக்கொடியாடைகளும், தேவர்களுக்குபசாரஞ்செய்யுஞ் சொடிகளாகிய வஸ்திரங்களைத் தாங்கியிருக்குஞ் சவளக்கொடியும்-கொம்புகளையும், பலவிதக்குடைகளையும், பிடித்துவராநின்ற படியாள்களும் அந்தநிழலில் வரும்படியாகிய முடிமன்னவரும் வீரப்ரதாபசெடிமன்னவரும், முடியுடன்முடிநெருங்க புஜத்தோடு புஜங்களொருங்க அடியுடனடிசண் மிதிக்க ஆயுதங்களுடனாயுதமிழைப் ஆக்ரமித்து பராக்ரமத்துடன் வியாக்கிரம்போல சீக்கிரம்வந்து பற்கடித்துச் சொற்படித்து வாய்மடித்து வாள்பிடித்து படபடவென்ன மீசைதுடித்து விற்பிடித்து மற்கொடுத்து வீரங்களைப்பேசுமோசையும் யானையின் முழக்கமும் தேர்களின் கர்க்கரத்தொனியும் குதிரைகளின் அநுமானிப்பும் சேனைகளின் பெருங்கூச்சலும் இவைகளெல்லாம் உலகம் செவிடுபடும்படியாய் முழங்கவந்து குருக்ஷேத்திரஞ் சேர்ந்து செங்கண்மாலே சிரசுஞ் சிவனுமாகவும் சேனாதிபதிசுவேதனனே அணிமுடியும் ஆபரண அலங்காரமாகவும் மற்றயவரசர்களே பலவித உறுப்புகளாகவும் பாண்டவர்களே படைத்தேகமாகவுமிருந்து அந்தக்குருபூமியில் இந்த ஏழக்ரோணி சேனைகளுந் தாங்களுமிருப்பதற்குப்பாசறை அமைக்கும்படியாக யோசித்து காண்டவவனத்தில் அருச்சுனனால் உயிருதவிபெற்ற மயனென்பவனை அடியார்க்கெளியவனாகிய நெடியோன் அருளினால் நினைக்க அவன்வந்து ஆதிநாரணனைவணங்கி அடியேனைநினைத்தகாரியமென்னவென்றுகேட்க; இவ்விடத்தில் யாவரும் அவரவர்களந்தஸ்தின்படி யிருப்பதற்காகிய பாடிவீடு வெகுவிட்டமாய் அழகிய சட்டமாய் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்ல, அப்படியே மகாபாக்கியமென்று தனது மனத்திலுன்னி கரத்திலிருக்கும் மாத்திரக்கோலினாலும் தனது கண்களினாலும் கோடுகளேற்படுத்தி நான்குபுறமதிலும் கோட்டைவாயிலும் ஆயுதச்சாலையும் போஜனச்சாலையும் பூந்தருச்சோலையும் புஷ்கரஸ்நானஞ்செய்யும் இடமும் பூசாவிதிமுடித்துக்கொள்ளு மடமும் தேவதார்ச்சனைக்கூடமும் அலங்காரம் செய்துக் கொள்ளும் அறையும் அரசர்களிருக்குந்துறையும் ஆலோசனைமண்டபமுறையும் ஆனைகட்டுங் கொட்டாரமும் குதிரைகள் பந்திக்குஞ்சோலையும், தேர்நிறையுஞ்சாலையும், பதாதிகடங்கும் இடமும் ராஜஸ்திரீகளிருக்கும் அந்தப்புரமடமும், சவுக்கடிமேடையும், சந்தனவாடையும், சித்திர கூடமும் அஸ்திரமாடமும், சாதுசங்காசாலையும், வேதகேள்விச்சாலையும், ஓமச்சாலையும், கலியாணச்சாலையும், கனதனச்சாலைமுதலிய இவைக ளெல்லாம் ஏற்படுத்தினான். மயனானவன், அந்த அலங்காரத்தைக் கோபாலனும், பூபாலரும்பார்த்து நாவினாற் சொல்லத்தக்கதன்றென்று நலமுடன்மகிழ்ந்து மயனைப்புகழ்ந்து நல்லவேளையில் கிரகப்பிரவேசஞ்செய்து தியாக-யோக-யேக-போக - இந்திரனைப்போற் கொலுக்கொண்டிருந்தார்கள்- அன்றிராத்திரி ஒன்பதுநாழிகைக்குமேல் ஸ்ரீ கிருஷ்ணபகவான்-தன்னெண்ணம் நிறைவேறும்படியாய் ஆயுதச்சாலையில் ஆவாகனஞ்செய்திருக்கும் வீரமாகாளிக்குப் பூசைபோடவேண்டுமென்று சகலவித அலங்காரத்துடன் அபிஷேக திரவியம் சந்தனாதி கரும்பு இளநீர் பச்சைக் கற்பூரம் குங்குமங் கதம்பம் புநுகு ஜவ்வாது பன்னீர் பால்-தேன்-தயிர்முதலிய யாவுங்கொண்டு திருமஞ்சனமாட்டி திவ்ய வஸ்திராபரணமுதலிய திலகமுஞ்சூட்டி மலர்ந்தமணமுறைந்த பராகமுந் தேனுநிறைந்த புட்பமாலையுஞ்சாத்தி கன்னல் யறு-காய்கனி கிழங்கு-வாழை-வருக்கை- மாம்பழந் தேங்காய்-தாம்பூலம்-கர்ப்பூரம்-சாம்பிராணி தசாங்கம் அரிசிதுவரை அவரை எள்மொச்சை கடலை முழுவுளுந்து அபினி-சாராயங்-கள்-சடைக்கஞ்சா-புகையிலை- பாயசஞ்சுகியன்-பருப்பு-எள்ளுண்டை-மோதகம்-வடை-பணியாரம்-வட்டமாம் ரொட்டி-அன்னம்- கச்சாயம் - அறுசுவை கொழுக்கட்டை-மாம்சத்தினுசும் மரக்கறிவகைகளும் இடைக்கிடையிளநீர்-எலுமிச்சம்பழமும் பேரிச்சம்பழமும் பேர்வேர்ப்பலாவும் விளாம்பழங் கிச்சிலி-விதம்விதமாக சர்க்கரைவெல்லத்தால் தறைமுன்மெழுகி பக்குவ நெய்யாற் பள்ளயமமைத்து ஓமம்வளர்த்தி உயிர்ப்பலியெல்லாம் யாமளசாஸ்திர விதிப்படிகொடுத்து சுடர்மணிவிளக்குத் தூண்டாவிளக்குச் சோதியிற்கற்பூர ஜோதிகாட்டி அரவாணையழைத்து அபிஷேகஞ் செய்து சிவப்பு நிறங்கொண்ட செம்பட்டணிந்து செஞ்சந்தனமும் சிவப்பு மாலையுந் தேசோன்மயமான திவ்யாபரணங்களினால் தேகமெல்லாமறைத்து வீரகண்டாமணிகட்டி-விருது துவஜம்நாட்டி, வாளாயுதத்தை மகாதேவி சந்நிதியில்வைத்து,

ப் பூசிக்கும்படியாய்விட்டார்கள், அங்கப்படியே அரவானும சிர்க்குதண்டமாகப் பணிந்து இபகுாபக் கொடுத்து நிமிர்ந்து வாளாயுதந்தை வலதுகரந்தாலெடுத்து மண்டியிட்டு ஓங்காரங்கொண்டு தனது முப்பத் திரண்டு உறுப்புகளிலும் அறுத்துப் பராசத்தியின் முன்வைத்து மனங்கோணுமல் உடல் வாடாமல் பிராணபயநாடாமல் வாய்பேசாமல் தேகந்துடியாமல் உதிரம்வடியாமல் கண்ணீர்சொராமல் தண்ணீர்பாராமல் வாழ்நாள் நேடாமல் மன்றுறை நீடாமல் சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டான். உடனே பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியும் ஜலங்கொண்டு தெளித்து உபசாரஞ்செய்து தாகவிடாய்தீர்த்து திரும்பத்திரும்ப மஞ்சளைப்பூசி அந்தப்பராசத்தியின் சாலெயிற்றுனே வளர்த்து வைத்தார்கள், அப்பால் மூர்ச்சை தெளிந்தெழுந்த அரவானானவன் முன்பலத்திற்கு முன்மடங்கு பலங்குன்றிபோய்ச் சுவாமியின் அருளினுற் கொஞ்சம்பலமுடையவனுயிருந்தான் பாண்டவர்களும் நல்லவேளையில் ஆயுத மெடுத்துக் கொண்டு மிகுந்த சந்தோஷமுடையவர்களாய்ப் பொழுதெப்போது விடியும் பொழுதெப்போது விடியுமென்று சகல சேனைகளுடன் ராத்திரிமுழுமையும் நித்திரையில்லாமல் மிகுந்த ஆத்திரத்துடன் சூரியோதயம் பார்த்திருந்தார்கள்

இப்பால், துரியோதனமகாராஜன்-உபலாவியத்தில் நடந்தசங்கதியும், அமாவாசியைப் புரட்டியதும் அரவானைக் களப்பலியூட்டியதுந் தெரிந்துக் கொண்டு மெத்தவும் விசனமுடையவனுய் தான்போய் நாள்வைத்துக் கொண்டு களப்பலிக்கு அரவானை உடன்படுத்தி வந்தத்தையும், அதைக்கிருஷ்ணன் புரட்டி விட்டத்தையும் வீஷ்டுமர்முதலிய உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி தங்களுடைய பட்டத்துயானையைப் பலிகொடுக்கும்படியாய் அன்றையத்தினமே சித்தஞ் செய்துக்கொண்டு பாட்டனுகிய வீஷ்டுமருக்குச் சாஷ்டாங்கதண்டஞ்செய்து நமது சேனைகளுடன் குருபூமிக்குப் போகும்படியாய் பிரயாணப்படவேண்டுமென்று மிகுந்த தயிரியத்துடன் சொல்லிப்போன துரியோதனனுடைய பேச்சைக் கேட்டு வீஷ்டுமரானவர் அணிவகுத்துத் தரமேற்படுத்தினர், அந்தத்தரத்தின் விபரம், யாதெனில், துரோணுச்சாரியர் அசுவத்தாமா வீஷ்டுமர்-தாங்கள்-மூவரும், அதிரதத்தலைவரென்றும், பூரிசிரவன்-சோமதத்தன், துன் மருடன்-பகதத்தன்-இந்தநாலுபேரும் மகாரதத் தலைவர்களென்றும் கிருதவன்மன் துரியோதனன்-சகுனி-சல்லியன்-சயித்திரதன்-திரிகர்த்தன்-இவர்கள் சமரதத்தலைவர்களென்றும் அங்கதேசாதிபதி யாகிய கர்னன்-விஷசேனன்-துசுவாசனன் முதலாகிய தொண்ணூற்றொன்பது தம்பிமார்கள் அர்த்தரதரென்றும் யேற்படுத்திவணங்காமுடியையுடைய மன்னவனிடத்திற் சொல்ல அதைக்கேட்ட அரசனுனவன் அதிரதரிற்சிறந்த அங்கதேசாதிபதியை அர்த்தரதரிலெவ்போட்டார் நமது ஐயாவென்று யோசிப்பதற்குமுன்னமே கர்னனுனவன் இந்தச்சங்கதியைக்கேள்விப்பட்டு காய்ச்சிய செம்மைப்போல் கண்சிவந்து கோபங்கொண்டு முகங்கறுத்து மீசைதுடிக்க வியர்வைபொடிக்கத் தோள்துடிக்க வாளையுருவிக்கொண்டு மண்ணும் விண்ணும் நடுங்கும்படியாய் துரியோதனன்முதலிய சகலராஜர்களுக்கெதிரில்வந்து வீஷ்டுமரைப்பார்த்து விற்பிடிக்கத் தெரியாத நீ அதிரதத்தலைவனுகிய என்னை அர்த்தரதரிலேற்படுத்தினுயல்லவா-பளா-பளா வெகுநேர்த்தி ஐயா, பெரியவனென்றும், உரியவனென்றுந், துரியோதனமகாராஜன் உனக்குச் சேனுபதிப் பட்டங்கட்ட அந்தப் பெரியதனத்தைச் சீர்படுத்திச் சிறப்பாக்கிக் கொள்ள வகைதெரியாமற் சிறியதனமாக்கிக் கொண்டாயே சீமானே நீ தனுர்வேதத்தில் என்னென்ன சாஸ்திரங் கற்றிருக்கிறுய் எந்தெந்த வீரத்திறந்தெரிந்திருக்கிறுய் என்னசாகச மறிவாய் என்ன தன்மை என்னிடத்திற் குறைவுகண்டு அர்த்தரதரிற்போட்டாய் நீயென்ன அறிவாய் கெடு நினைப்பினையுடைய வீஷ்டுமனே இதோ-உன்தலையை வாளினுல் மாட்டி களப்பலி யூட்டி துரியோதனனுக்கு முடிசூட்டி வைக்கிறேனென்று வாளையோங்கி வீசிவரவும் அந்தவேளையில் வீஷ்டுமரும் வாளையுருவிக்கொண்டு தேவர்கள் நடுங்கும்படி கடுங்கோபத்துடன் சிறிதுப்பற்ற தங்களுக்கு வெட்டைப்பங்கென்னுந் தன்மையைப் போல் உன்சுத்தவீரத்திற்கு அதிரதந் தலைவனென்னும் ஆண்மிக்கையும் வேண்டுமோ - அடா-கர்னு ! இப்போதே உன்தலையை வெட்டித் தொலைப்பேனுகில் புகழினையுடைய இந்தக் குருகுலம்விளங்கி யிருகரப்பிள்ளைகளுஞ் சுகப்பட்டுப் போவார்கள். அடாபாவி இதோவெட்டினேனென்று பலவாறுக்குத் திட்டிக்கிட்டவரவும் இதைக்கண்ட அரசர்களெல்லாரும் அஞ்சி நடுங்கி யெட்டிப்போகவும், வீரர்களெல்லாரும் வெருண்டொடுங்கவும் இவ்விரண்டுபேருமெதிர்த்துக்கொண்டார்கள் இவ்விருவருங்கொண்ட பெருங்குரோதத்தைத் துரியோதனன்கண்டு திகில்கொண்டு இரண்டுபேருக்கும் நடுவில்வந்துநின்று பகைவர்நகைக்கும் படியாய் நீங்களிருவருமெதிர்க்கலாமோ ஐயா ! அண்ணு ! எங்களை இவ்வித அவமானம் பண்ணுவதைப் பார்க்கிலும் எங்களைக்கொன்றுபோட்டு உங்களெண்ணத்தைச் சரிப்படுத்திக்கொள்ளுவது உத்தமமென்று இருவருக்கு மத்தியினின்று விலக்கினுன்-அப்பொழுது காற்றிற் கலங்க அடிபட்டு விலங்கிய காளமேகத்தைப்போல கண்கறுத்து விலங்கி நின்ருர்கள்-அப்போ தந்தச் சேனைகளிலிருந்த மன்னவரியாவரும் மனஸ்தாப மடைந்து வீஷ்டுமரானவர் கர்னனை அர்த்தரதத்தலைவரிற் போட்டதற்குக் காரணங்கேட்காமலும், அதைத் தெரிந்துகொள்ளாமலும் அவமரியாதையாகப் பேசி வாளையுருவி வெட்டுகிறேனென்றுவந்த கர்னனையும் விசாரியாமல் சமாதானம்பண்ணிய துரியோதனனைக்குறித்துப் பேசவேண்டிய காரியமில்லை ஓம்பிரதானமென்று ஆயுதமெடுத்தபோதே என்னைவெட்டு உன்னை வெட்டென்று விளங்க படியால் இதுவே போதவிடியும் வரையிலுங் கலகமேவிளைக்குமென்று பேசிக்கொண்டிருந்தார்கள். இப்பால் கர்னனுனவன் நெடுநேரம்வரையிலும் விசனத்துடனின்றுபார்த்தையா ? இந்தத் துரியோதனன் நமதுபேரில் வைத்திருந்த பக்ஷமெல்லாம் பாழாகப் போய்விட்டது, ஐயை

யோ இந்த விஷ்டுமனை நோக்கி ஏனையா இப்படி செய்தீ
ரென்று ஒருவார்த்தையுங் கேளாமல் பாட்டனென்னும்
பக்ஷமறவாம லிருந்தானே யன்றி தனதிஷ்டமாகிய என்
னைமறந்தானல்லவா அடடா துஷ்டசாவகாசமாய் விட்ட
தென்று துடிதுடிப்புடனிருந்தான். அது காலையில் து
ரோணாச்சாரியார் முதலிய ராசர்களும் விஷ்டுமனை அடு
த்து ஐயா ? சேனாதிபதியே; அதிரதத்தலைவனாகிய இந்த
க்கர்னமகாராஜனை அர்த்தரதத் தலைவரில் போட்டதற்
குக்காரணமென்ன சொல்லுமையாவென்றுகேட்க, வீ
ஷ்டுமர் சொல்லுகின்றார். அரசர்களே கேளுங்கள் இவ
டத்திலிருக்கிற மகாவீரர்களில் நானும்- கர்னனும்-அட
ங்கலுக்குப் புறம்பாயிருக்கின்றோம் அப்படியிருக்கான்
முதற்படையி லிருக்கின்றபடியால் கடைப்படையிற் கர்
னனைப்போட்டேன், இதுவேயன்றிமற்றுவேறொன்றுமி
ல்லையென்றுசொல்ல, அதைக்கேட்டுதுரியோதனன்முத
லியயாவருங்கர்னனைக்கட்டித்தழுவிக்கொண்டு அங்கதே
சாதிபதியேகேளும் விஷ்டுமர்செய்தகாரியம் வஞ்சகமல்
லசேனைகளைாட்சித்துத் துரியோதனனைக்காக்கும்படிக்கு
இப்படிசெய்ததாய்ச்சொல்லுகிறார் ஆகையால் நீங்களிரு
வருங்கலந்து வார்த்தையாடியோசித்து ஒருகாரியத்தை
ச்செய்தால்மாத்திரம் மெத்தப்பெருமையாயிருக்கும்செ
யமுங்கிடைக்கும் இல்லாவிட்டால் காரியமல்லவென்று
துரியோதனன்முதலியபேர்களுஞ்சொல்ல அந்தவசனத்
தைக்கர்னன்கேட்டு கலிரெனநகைத்து இவருடையசூது
உங்களுக்குத்தெரியாது பாம்பின்கால் பாம்புக்குத்தெரி
யுமென்பதுபோல் இவருடைய வஞ்சகத்தையும் சத்து
ருவைப்புகழ்ந்துபேசும் தன்மையையும் என்னிடத்தி லி
வர்வைத்திருக்கும் இஷ்டத்தையும் நானறிவேன் இவ
ரோநல்லபாம்பின்விஷப் பகையிலுங்கொடியது வேஷக்
கொடுமையையுடையவர் எப்போதும் மனதிற் சந்தேக
ந்தோன்றாமல் சகலகாரியங்களும்நடக்கவேண்டும் சந்
தேகந்தோன்றினாலோ ஒருகாரியமும்நடவாது மிரண்ட
வன்கண்ணுக்குயிருண்டதெல்லாம் பேயென்பதுபோல்
அவருக்குமெனக்கும் அனுமானம் பிறந்துகொண்டிருக்
கும் ஆகையால் இந்தவிஷ்டுமன் என்றைக்குச் சாகிறா
ரோ அன்றைக்குநான்மனப்பூர்வமாய் ஆயுதமெடுத்து யு
த்தம்பண்ணுகிறதேயன்றி யிதற்குமத்தியில் யுத்தகளத்தி
திற்குவரமாட்டேன்வந்தாலுமோ மனக்களிப்பாய் வே
ணுமென்று போர்புரிய ஆயுதமெடுக்கமாட்டேன் இந்த
ப்பக்ஷபாதிசாகவேணும் நான்பாண்டவர்களைக் கொல்ல
வேணும் துரியோதனனிந்தப் பாராளவேணுமேயல்லது
மற்றவேறொன்றில்லை யென்றுசொல்லி அப்பாற்போய்
விட்டான் இப்பால் விஷ்டுமானவர்சேனைகளைக்கூட்டிப்
பிரையாணபேரி வீரபேரி ஜெயபேரி முதலியவாத்தியமு
முக்கும்படியாய்ச்செய்து பயணப்படுத்தினார் அந்தவே
ளையில் துரியோதனன் சகுனி துசுவாசனன் இவர்கள்மூ
வரும் கர்னனுக்குவேண்டிய தேறுதலைச்சொல்லி மன
வுறுதியைவிட்டுவிடாதீர் இந்தவிஷ்டுமருடைய மனது எ
ங்களுக்குத்தெரிந்திருக்கின்றது நாங்களறிந்துகொள்ளா
மலிருக்கவில்லை பாண்டவர்களிடத்தில் பக்ஷம்வைத்து
அவர்கள்செயிக்கவேணுமென்று பாடுபடுகிறார் நீ யொ
ருபிராணி எங்களுக்காக உண்மையாய்ப் பாடுபடுகிறபடி
யால் உன்னை அர்த்தரதரிற்போட்டு அவமானஞ்செய்ய
வேண்டுமென்றேசெய்தார் ஆகையால் கைப்புண்ணுக்கு
க்கண்ணாடிவேண்டியதில்லை பட்டப்பகற்போலெங்களுக்
குத்தெரியுது ஆகிலும் பந்திக்குமுந்தவேணும் படைக்கு
ப்பிந்தவேணுமென்னும் பழமொழிப்பிரகாரம் எங்களு
டைய அதிர்ஷ்டமும் உம்முடையநல்லகாலமும் விஷ்டு
மருடைய பொல்லாதகாலமும் அர்த்தரதரிற்போகும்ப
டியாய்ச்செய்ததுமெத்த நல்லகாரியம் முந்திமடியத்தக்க
வபேரெல்லாரும் மடிந்துபோகட்டும் வீரசூரர்முதலிய
பேர்களெல்லாருங் கைகாலசராட்டும் பிற்பாடுநாமிருக்கி
றோம் பாண்டவர்களிருக்கிறார்கள் பார்த்துக்கொள்ளு
வோம் பயப்படவேண்டியதில்லையென்று கர்னனைத்தே
ற்றி அழைத்துக்கொண்டுபோய் திரிதராஷ்டிரமகாராஜ
னுடைய காலில்விழுந்து குருக்ஷேத்திரத்திற்குப் படை
களைக்கூட்டிக்கொண்டுபோகும்படி விடைகேட்டார்கள்
அதற்கு திரிதராட்டிரன் சந்தோஷமடைந்து நமஸ்கார
ஞ்செய்த பிள்ளைகளையெல்லாம்வாரி மார்போடணைத்து
ஆசீர்வதித்து அப்பாமைந்தர்களே இதுவரையிலும் இந்
தச்சந்திரவமிசத்திலில்லாதபகையை நீங்கள்தேடிக்கொ
ண்டீர்கள் பாண்டவர்களோ மெத்தநயிச்சிகாள் அதற்கு
த்தக்கபடிவரங்கள் முதலியபலமுந்தவமுந் தெய்வகடா
க்ஷமும்பெற்றிருக்கின்றார்கள் ஆகையினால் காலம் இடம்
சமயம் பலம் படைத்துணைகளின்வீரம் இவைமுதலியயா
வையும் அறிந்துக்கொண்டுசந்தற்பமெப்படியிருக்குதோ
அந்தப்படிவழிவிட்டுபெரியோர்கள்சொல்லும்வார்த்தை
யைக்கேட்டு உரியோர்களைக்கைவிடாமல் தயிரியம்விடா
மல் காரியத்தாட்சிவராமல் ஜெயம்பெறக்கடவீர்களென்
றுசொல்லி கர்னன்சகுனி முதலியபேர்களைப்பார்த்து,
குழந்தைகளோ அறியாதவர்கள் இதுவரையிலும் யுத்த
ஞ்செய்ததுமில்லைபெரும்போர்நடந்ததைப்பார்த்ததுமி
ல்லை ஏதோ ஆத்திரத்தால் க்ஷாத்திரங்கொண்டு போர்த்
துணையாகிய உங்களைநம்பி யுத்தத்திற்குவருகின்றார்கள்
இவர்களைக்காப்பாற்றிக்கொண்டுவந்து என்னிடத்திலொ
ப்பிவைக்கவேண்டியகடமை யுங்களுடையதென்று கை
யைப்பிடித்துக்கொண்டு வெகுவாகச்சொல்லி இளைய பி
ள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்பார்த்து இளங்கன்று
பயமறியாதென்னுந்தன்மையாய் போர்முகத்திற்போய்
விழாதீர்கள் அணிவரிசையினின்று சத்துருக்களைவென்
று அண்ணன் தம்பிகள் பெரியோர்கள் பந்துக்கள்இவர்க
ள்சொல்லும்வார்த்தையைக்கேட்டு அடங்கியிருந்துகாரி
யசாதனம் பண்ணிக்கொண்டுவரக்கடவீர்களென்று ஆசி
ர்வதித்து அப்பா துரியோதனா தம்பிமார்முதலாகிய புத்தி
ரர்களையும் பத்திரமாய்ப்பார்த்துக்கொண்டு படைமுகத்
தில்வென்று செயங்கொண்டு வரும்படியாகச் சுகமாகப்
போய்வாவென்று விடைகொடுத்தான் அப்பால் காந்தா
ரியாகிய தாயிடத்திற்சென்று காலில்விழுந்து போய்வரு
கிறோமென்று செலவுகேட்க, உடனே அந்த அம்மணு
னவள் பிள்ளைகளையும்மற்றப்பேர்களையும் உபசரித்துமை

ங்கடே உங்களுக்குநான் விசேஷித்துச் சொல்லவேண்டி
யதில்லை எல்லாக்காரியங்களு முங்களுக்குத்தெரியும் ஆ
னையால்சத்துருநாசப்படுத்தி வாருங்களென்று விடை
கொடுத்தனுப்ப அவரவர்கள் யுத்தகோலங்கொண்டதி
றத்துடன் ஆயுதபாணிகளாய் ராஜஸ்திரீகள்முதலிய பேர்
களுடன்புறப்பட்டு அஸ்தினபுரத்தின் சாலைவீதியில் வ
ரும்போது சொன்னசொற்றப்பிய தண்டைகளும் அறுத
விழுண்டைகளும் தலையிலாதமார்பியும் மானமில்லாதவ
ரும் மயிர்விரித்தவரும் புகையுநெருப்பினைக் கைக்கொ
ண்டுவரும்பெண்ணும் விறகுதலையும் மின்னலும் இடியு
ம் பிண்டித்நாறலும் பெருங்காக்கைக்கூட்டமும் நாய்க
ள் குரைப்பும், பேய்கள் சிரிப்பும் பருந்துங் கழுகும்
பறந்து விழவும், யானையழவும், ஆயுதம் புகையவும்,
மாலைகருகவும், மனங்கடுமாறவும், சூறைக்கொள்ளி வி
ழவும் பெண்கள்கூடியழவும் சந்நியாசி, தட்டான், தயில
மெதிராகவும், இத்தன்மையவாகியபற்பலதுர்க்குணங்களை
மன்னேறுடிச் சகுனம்பார்ப்போர்கண்டு மன்னவருடன்
சொல்லநல்லதென்று இருப்பிகோலுவிற்போயிருந்துதெ
ருச்சாலைவீதியில் ஒருவரும்வாராமல் கதவுமூடும்படிதிட்
டப்படுத்தி சதுர்வேதசம்பன்னுள் தனிநாளாக யிருந்து
சாத்திரப்படிக்கு கோடிபசுக்கள் கோடாகோடிபெண்க
ள் அளவற்றவஸ்திரங்கள் அன்னதானங்கள் இவைகள்
முதலிய சோடசதானங்களுங்கொடுத்து சந்தோஷத்து
டன் தாசம்புசித்து தாம்பூலமணிந்து சம்பிரமத்துடன்
யுத்தபூமிக்கு நடக்கையில் மறுபடியுந் துற்சகுனங்கண்
டு நால்வகைச்சேனையும் வாள்படை, விற்படை, கதைப்
படை, வேற்படை, சக்கரப்படை, சூலப்படை, இந்த ஆ
றுவித ஆயுதங்களையுடைய படைகளும் பேரிபாங்காமு
தலிய தோற் கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்க
ருவி மிடற்றுக்கருவிகளாகிய வாத்தியங்களும் தேரோ
சையும் பதாதிகளுடைய பேரோசையும் மனுஷர்மக்களை
ப்பிரியும் ஊரோசையும் யானைமுழக்கமுங் குதிரைமுழ
க்கமும் சமுத்திரக்கோஷமும் அடங்கிப்போகும்படியா
ய்முழங்கிக்கொண்டுவரவும் துரியோதனன் அவனுடை
ய தம்பிமார்கள்சகுனி சல்லியன்முதலாகிய ராஜர்களும்
சேனைகளும் புத்திரரும் மித்திரரும் சுற்றிக்கொண்டு வ
ரவும் அரமனைப்பெண்களோடும் பரதநாட்டியத்துடன் ப
ட்டணம்விட்டுப்புறப்பட்டு குருக்ஷேத்திரம்போய்ச்சேர்
ந்து பாசறைமுதலியயாவும்ஏற்படுத்திய இடத்தில் பா
ளசவுக்கியுடன்சேனுசயினியங்களை நிறுத்தி பலபலவாகி
ய கொடிகள், வகைவகையாகிய குடைகள், ஆலவட்டங்
கள், தாலவட்டங்கள், பீலிக் குஞ்சங்கள், மயிற்பீ
லிகள்; வெண்சாமரைகள், மேற்கட்டிகள் முதலிய
சித்திரா யலங்காரத்துடன் அமைந் திருக்கும் சாலை
யில துரியோதனுடைய சிறங்கவும் சேனாநாயகர் சேனை
களை அணியணியாய்நிறுத்திப்பிரித்து அமைக்கவும் உல
சப்பெறுமல் தத்தளிக்கவும் உரகருடையபலமும் உட
லுமட தலையும் ஒடுக்கிவளைந்து உதறவும் அதனுல் அவர்க
ள்பதறவும் ஓசையிட்டுச்சதறவும் இப்படி வருந்தும்படி
யாகத்தரைபூமியில் இரண்டுதிறச்சேனைகளும் வரம்பாக

க்கலந்திருந்ததும் அப்போது துரியோதனன் வீஷ்டும
ரைநோக்கி இனிமேல் தேவரீருடையவேலையில் சாக்கிர
தையாகப்பார்த்துக்கொள்ளுமென்றுசொல்லவேஎங்கெ
ந்தச்சேனைகளை எங்கெங்கே அமைக்கவேண்டியதோ அ
ங்கங்கே அமைத்து கோட்டைமதில்போற்சூழ நிறுத்தி
பாசறைக்குக் காவல்வைத்து பெரியஜண்டா சிறியஜ
ண்டாமுதலிய பாவட்டாக்களும்நாட்டி எதிரிகளுக்குப்ப
யங்காட்டி பக்குவப்படுத்தியபோதுநாககசுரம், புள்ளாங்
குழல்; முகவீணை, சங்குநாதம், சிங்கநாதமுதலிய நாதஸ
ைசகளும்,நால்வகைச்சேனைகள்முழக்கும் பேரோசைக
ளும், விற்குணத்தொனியும்; வேலாயுதம், சூலாயுதம், ச
க்கிராயுதம், குந்தாயுதம், வாளாயுதம், யீட்டிமுதலிய ஆ
யுதங்களிழையுமோசையும் அதிலிருந்து புறப்படும் நெ
ருப்புப்பொறிகளும் புகையும் அண்டமுகடும் வெடிப்ப
டும்படியாயிருந்தன இதன்றியும் கருந்நாள் செந்நாளெ
ழும்பியதன்மை யெப்படியிருந்ததென்றால் இதுவரையி
லும்பாவியாகிய துரியோதனன்பாலில் இருந்தோமே அ
ந்தப்பாபந்தீர ஆகாயகங்கையில் ஸ்நானஞ்செய்து தரும
ராஜனுடைய கீர்த்திப்பிரதாப குடைநிழலிற்போய்ச்சே
ருவோமென்று பூமிதேவியார்பூமியிலிருந்து எழுந்துபற
ந்துபோனதுபோலிருந்தது இதல்லாமலும்துரியோதன
னுடைய அரவக்கொடியும்வீஷ்டுமருடையபனைமரக்கொ
டியும் இன்னும்பலவாகியபேர்களின் கொடியும் தரும
ராஜனுடையமுரசக்கொடியும்தம்பிமார்களின்சிங்கக்கொ
டிமுதலியமற்றப்பேர்களின்கொடியும் ஆகாயத்தில்நிறை
ந்திருப்பது எப்படியிருந்ததென்றால்காலபுருஷனானவன்
ஜெயம் ஆருடையதென்று நாளிக்காலையுன்றி எக்கிப்பார்
க்குந்தன்மைபோலிருந்தது மேலும் துரியோதனனுடை
ய அரவக்கொடிபறக்காநின்றது எப்படியிருந்ததென்றால்
ஸ்ரீகிருஷ்ணருடைய கருடக்கொடியையும் அருச்சுனனு
டைய அநுமக்கொடியையும் இந்திரனுடையயிடிக்கொடி
யையும்பார்த்துயோசித்து அவடத்தில் அசைந்தாடுகிற
எல்லாக்கொடிகளும் நமக்குப்பகையாயிருக்கின்றபடியா
ல் நாமெப்படிதலைக் காட்டுவதென்று வாடிப்போனது
போலும் அப்புறம்முதுகிட்டோடிப்போனதுபோலு மி
ருந்தது இப்படியாகப் பதினெட்டக்குரோணியென்னும்
இருதிறப்படைகளுநெருங்கிநிற்க இருதிற அரசர்களும்,
பாசறையிற்கொலுக்கொண்டிருந்தார்கள்பட்டவர்த்தனர்
மகுடவர்த்தனர்,மன்னர்,மண்டலீகர்முதலியமந்திரிசாமந்
தர்களுடையமத்தியில்கனகசிதஉசிதநவரத்தினச்சிங்கா
தனத்தின்மீது திடவீரகாத்திரத்தம்பிமார்களும் ஸ்ரீகிருஷ்
ணமூர்த்தியுஞ் சூழ்ந்திருக்கமுரசகேதனனுகியதருமராஜ
ன்கொலுக்கொண்டிருந்தார் அதிரதர்முதலியசகலஅரசர்
களும் அடிவணங்க கட்டியர்பட்டுவான்கள் புகழவந்திப்
போர்துதித்துமகிழத்தம்பிமார்கள்சூழ இந்திரவோலக்க
ம்போலெழுந்தருளியிருந்தான் துரியோதனமகாராஜன்
அந்தச்சமயத்தில் ரேவதிதேவிக்குநாயகராகிய பலராம
ர்தனித்துவரக்கண்டு தருமபூபதியுந்தம்பிமார்களும் கோ
பாலகிருஷ்ணரும்கொலுக்கொண்டுகூடியிருந்த அரசர்க
ளும் எழுந்து எதிர்கொண்டுசென்று வந்தனைமரியாதை

கள்செய்ய அவரவர்களுக்குத்தக்கபடிபதில் மரியாதை செய்து தருமராஜனைத்தழுவி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு ஓ தருமநந்தனா நீங்களுந் துரியோதனுதியரும் பகைத்துப்போர்புரியப்போறீர்களே அந்தயுத்தத்தில்சகலஜெயமும்பெற்று அவனியை ஆளப்போறது நீங்களே சகல சேனைகளுஞ்செத்து புத்ரமித்ராதியரையுந்துறந்து பூமியையுமிழந்து நாளைமாளப்போறது துரியோதனனே இதற்குயாதொருசந்தேகமுமில்லை ஆனலும்வெற்றிபெறப்போற ஜெயம் உங்களுடையதாயிருந்தாலும் அநேகம்விந்தைகள்நடக்கும் அந்தவிந்தைகளையும் துரியோதனன் மாளு நிந்தைகளையும் என்கண்ணினுற் பார்த்து நான்சகிக்கமாட்டேன் ஆகையால் துரியோதன னிறக்கிற வரைக்கும் நான் தீர்த்தயாத்திரைபண்ணிக்கொண்டு இதற்குப் பதினெட்டாநா ளிவடம்வந்து சேருகிறேன் நீரெனக்குச்செலவுகொடுமென்று பலராமர்கேட்க. அதற்குத் தருமராஜன் சற்றுநேரம் யோசித்து உங்களைப்போ லொத்தவர்க ளிருந்தால் இவடத்தில் நடக்கும் ஞாயம் அநியாயம் அறிந்துசொல்லுவீர்களென்று நான்மெத்த ஆசையா யிருந்தேன், தேவரீர் இப்படிசொல்லுகிறபடியால் நான்செய்யலாவதென்ன வென்றுசொல்ல அதைக்கேட்டு பலராமர் சொல்லுகிறார். ஓய் - தருமநந்தனரே கேளும் ! எல்லாந் திறக்கும் ஸ்ரீ கிருஷ்ண னிருக்கின்றான், ஞாயம், அநியாயம் அறிந்துசொல்லுவான் அவனறியாதகாரியம் அவனியிலில்லை இவனைக்கொண்டு எல்லாவேலைகளும் நடத்திக்கொள்ளுமென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தம்பியைநோக்கி நான்போய் வருகிறேனென்று புறப்பட்டபோது விதுரராஜனும் வந்து பலபத்திரனைக்கண்டு ஒருவருக்கொருவர் முறைமைபாராட்டிக் கொண்டார்கள். அந்தவேளையில் விதுரராஜனைப் பலராமர் நோக்கி ஏது நீர் யுத்தகோலங்கொள்ளாமல் என்னைப்போல் யாத்திரைவேடங் கொண்டிருக்கிறீரென்றுகேட்க, அந்த வார்த்தையைக்கேட்டுவிதுரராஜன்சொல்லுகிறார், ஆர்கெட்டாலென்ன ஆர்செத்தாலென்ன நீர்வாரும் யாத்திரை போவோமென்றுவிதுரன்சொல்ல அரிகரி, இதென்ன ஆச்சரியம் உமக்கேனிவ்வளவு மனவெறுப்பென்று பலராமர்கேட்க, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசொல்லுகின்றார், அண்ணு ! முன்னம்யான் பாண்டவர்களுக்காக அஸ்தினபுரத்திற்குத் தூதுபோய் விதுரன்வீட்டி லிறங்கினேன், அதற்குத் துரியோதனன் கோபித்துக்கொண்டு தூதுவந்தபகையாளிமனிதனுக்கு நீயெப்படி விருந்து செய்வாய் வீட்டிலழைப்பாய் வேசைமகனே யென்று பேசினன் அதற்கு இந்த விதுரராஜன்கையிலிருந்த வில்லையும் வெட்டியெறிந்துபோட்டு என்னுயிருள்ள வரைக்கும் உனக்குத் துணைப்படுவ தில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டார்; அந்தக்கோபம்போ லிருக்கிறது இன்று இவர்சொல்லுங் கருத்தென்று ஸ்ரீகிருஷ்ணர் சொல்ல, அதைக்கேட்டு பலராமர் நகைத்து அடாதம்பி நல்லதுச்சா விதுரன்வீட்டிற்போயிறங்கின அப்பாவென்று சொல்லி மனதில் மகிழ்ச்சியில்லாமல் விசனம்வைத்துக்கொண்டு வாரும் விதுரராஜனே யென்று அழைத்துக் கொண்டு பலராமரும் விதுரராஜனும் இரண்டு பேரும் குருபூமியைச் சூழ்ந்த தீர்த்தங்களாடும்படியாய்ப் போய்விட்டார்கள். இந்தச்சேதி துரியோதன னறிந்து நமக்குப் படைத்துணை வந்த பலராமரையுங்கலைத்து அழைத்துக்கொண்டுபோய்விட்டான், இந்த விதுரன் பார்த்தீர்களாவென்று வீஷ்மர்முதலிய பேர்களிடத்திற்சொல்லி நல்லதாகட்டுமென்று கருவிக்கொண்டு கவலையில்லாதிருந்தான் துரியோதனன், அப்பால் அளவிறந்த தூரம், சேனைகளை நிலைபெறச்செய்த வீஷ்மரும் துரியோதனனும் பாசறைவிட்டு வெளியேபுறப்பட்டு ஏழுகடலும், ஏழுமேகமும், ஏழுதீவும், ஈரேழுலகும், ஏககாலத்திற் கூடியதைப்போல் இரைத்துக்கொண்டு கண்ணுக்கெட்டியதூரந்தெரியாமலெருங்கி நின்ற இருதிறப் படைகளையும் பார்த்துப் பிர்மைகொண்டு துரியோதனன்மயங்கி சேனதிபதியாகிய வீஷ்மரைநோக்கி ஐயா ? இத்தனைசேனைகளை ஒருகுத்தவீரன் எத்தனை நாளையிற் கொல்லுவான் சற்றுயோசித்துச் சொல்லுமென்று வணங்காமுடிமன்னன் கேட்க, வீஷ்டுமர் சொல்லுகின்றார்.

விருத்தம்.

ஒருபகலில்யான்மலைவன் முப்பகலிலேமலையும் உபநிடதவிற்கைமுனிவன், வருபகலோரைந்தின்மலை யும்பருதிமைந்தன்முனி மைந்தனொருநாழிகையினிற், பொருபடையடங்கலுமிவ் வம்புவியும்வரனெடு புயங்கர்தலமுந்திசைகளும், வெருவமுன்னைந்தொரு கண்திஇனிடையே மலைவன் வில்விஜயனென்றனனரோ... .... ※

(என்றது.) கேளுந் துரியோதனராஜனே ! இந்தச்சேனைகளையெல்லாம் ஒரேபகலில் நான்வெல்லுவேன் ! வேதபுராண உபநிடதந்தெரிந்த தனுர்வேத பண்டிதராகிய துரோணச்சாரியர் மூன்றுபகலில் ஜெயிப்பார்-சூரிய குமாரனகிய கர்னன், ஐந்துபகலில் முடிப்பான் அசுவத்தாமா ஒருநாழிகையிற் போக்குவானென்று வீஷ்டுமர்சொல்லவே இந்தவார்த்தையைக் கேட்ட துரியோதனன் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் பொங்கிப் பூரித்து இனி எனக்கென்ன தாட்சி இதைவிட வேறென்ன சாட்சி எவர்க்குண்டிந்தக் கண்காட்சி இப்பேர்ப்பட்ட பலவான்களை எனக்குக் கூட்டிவைத்த என் பாக்கியமே பாக்கியமென்று புகழ்ந்து பாண்டவர்கள் தலையெடுக்க மாட்டார்களென்று மகிழ்ந்து எதிரிகளை யிகழ்ந்தகனமையை வீஷ்டுமரானவர் அறிந்து துரியோதனனைப் பார்த்து அப்பா; துரியோதனா நமதுபலத்தை நாமேசந்தோஷிப்பது காரியமல்ல, அது வீரியம்பெருது எதிரிகளின்பலத்தை நிதானித்துக்கொண்டு அப்பால், நமது பலங்களைப்பார்த்து சந்தோஷப் படவேண்டும் ஆகையால் நமது சேனைகளிலிருக்குந் தலைவான்களாகிய பலவான்களுடைய பலபராக்கிரமத்தை கேட்டையே அவர்களுடைய பலபராக்கிரமத்தையுங் கொஞ்சங்கேட்டறிந்துகொள்ளக்கடவை அப்பனே அதென்னெனில் இச்சப்படைகள் முழுமையும் இவ்வுலகமுழுமையும் ஈரேழுலக முழுமையும் தேவலோகமுழுமையும் திக்குகளெட்டுந் திடுக்கிட்டுப்பயந்து போகும்படியாய் விஜயன் காண்டீபங்கொண்டு மூண்டு ஒருக்ஷணத்திற்றுள்ளே பஸ்மீகரப்படலமாகும்படி போ

ர்புரிந்து போக்கி விடுவான் திசைகள் மகிழும் இசையும் புகழுங்கொண்ட விஜயபராக்கிரமனென்றார். அசைவிலாத விஷ்டுமானவர், அந்த வார்த்தையைக்கேட்டு துரியோதனன் - கர்னன் - சகுனி - துச்சாதனன் முதலாகியபேரும் ஆலோசித்துக்கொண்டு சகுனிகுமாரனாகிய உலூகராஜனைத் தூதுபோகும்படியாக அவனையழைத்து அவனுடன்சொல்லத்தக்க பேச்சுகளெல்லாஞ்சொல்லி பாண்டவர்களிடத்திற் சென்று இந்த வசனங்களைத் தெரியப் படுத்தி இதற்கு பதிலுத்தரம் அவர்களென்ன சொல்லுகின்றார்களோ அதையறிந்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் வாவென்று அனுப்பி வைத்தான் துரியோதனன், அந்தப்படிக்கே உலூகனவன்தருமராஜனுடைய சபைக்குப்போய் ஐயா ? துரியோதன ராஜன் அனுப்பி வைத்தானென்று சொல்ல, அதென்ன செய்தியென்று தருமராஜன்கேட்கஉலூகன்சொல்லுகின்றான் தருமபூபதியேகேளும்இராஜசபையில்சொக்கட்டானாடி தோற்றபோதும் திரௌபதையைத் துகிலுரிந்தகாலத்திலும் பன்னிரண்டுவருடம் வனவாசஞ்செய்தபோதும் அக்ஞாதவாசஞ்செய்த நாளையிலும் இல்லாத வீரமும் திறமும் இப்போது யெங்கிருந்துவந்தது நல்லது அந்தராஜசபையில் துரியோதனாதியர் நூறுபேரையும் நானே கொல்லுகிறேனென்று விமசேனன் சொல்லியிருந்த சபதமும், கர்னமகாராஜனைக் காண்டீபன் கொல்லுகிறேனென்று சொன்னதும் நகுலன் சவுபலனைக் கொல்லுகிறேனென்றதும் சகாதேவன் சகுனியைக்கொல்லுகிறேனென்றதும் இதுகளெல்லாம் நாட்கொண்டது ஆட்கொண்டுதென்றுவாராமல் நலிந்துபோனதைப்போ லிருப்பானேன் பதின்மூன்றுவருடங் காடுதிரிந்துவந்த நீங்கள் முன்பேசிய சபதப்படிக்குக் காரிய நிறைவேற்றிக் கொள்ளாமல் கண்கலங்கி அப்பா நீ போய்ச்சொல்லு ஐயா ! நீர்போய்ச் சொல்லுமென்று அவரவரைக்கும்பிட்டு உலூகமாமுனியையும் கிருஷ்ண மூர்த்தியையுந் தூதனுப்பி நாடிக்கவேண்டிய காரியமென்ன அதற்குநாங்கள் உடனே சஞ்சயனை யனுப்பி நாடுங்கொடுப்பதில்லை ஒரு வீடுங்கொடுப்பதில்லை போர்முகத்தில் யுத்தஞ்செய்து புகழுடன் வெற்றி பெற்றவர்களுக்குப் பூமியுண்டென்று சொல்லியிருக்க அந்தவசனத்தைக்கேட்டும் இன்றுஞ் சண்டைக்கு வரப்பயந்திருப்பானேன் இப்போதுஞ்சரிதான் தயிரியமிருக்குமாகில் தாமிசமில்லாமல்சண்டைக்குவரச்சொல்லும் இதுநல்லகாலம் வம்சநாயகனாகிய வீஷ்டுமரும் துரோணாச்சாரியரும் அசுபத்தாமாவும் கர்னராஜனும் ஒருகைபார்த்து விடுகிறோமென்று முகம்வியர்த்துக் கரத்தில் வில்லேந்திக்கொண்டு உங்களைவரையும் உங்களுக்குத்துணைவந்திருக்கும்அரசர்களையும்மண்ணுலகத்தைவிட்டுநீக்கிவிண்ணுலகத்திற் கனுப்பிவிடுகிறோமென்று வந்திருக்கின்றார்கள் உங்களுடைய வாயுருட்டும் கைப்புரட்டும் அவர்களறிந்தே யிருக்கின்றார்கள் இனியுங்களுடைய பேச்சு யிவடத்திற்செல்லாது உங்களைக் கொல்லாது விடப்போகிறதில்லை ஏதாகிலுங் கொஞ்சம் விரங்களுண்டானால் இப்போதேவரலாமென்றும் அப்படி யுத்தத்திற்குவரச்சம்மதமில்லாவிட்டால்பூர்வத்தில் மச்சராஜனாகிய விராடன் வீட்டில் புரோகிதனாகியும் சோறு சமைக்குஞ் சுயம்பாக மடையனாகியும் பரதநாட்டியங் கற்பிக்கும் பேடியாகியும் குதிரைச்சேவகஞ்செய்யும் தாமக்கிரந்தியாகியும் மாடுமேய்க்கும் தந்திரபாலனாகியும் சொற்ப சீவனஞ்செய்து காலங்கழிக்கும்படியா யோசிப்பீர்களாகில் இப்போதே திரும்பிப்போய் விடலாமென்றும் இராஜ தருமங்களிருந்தால் தடைசொல்லாமற் சந்தி பேசாமற் சண்டைக்குவரலாமென்றும் அருச்சுனனைக் கொல்லுகிறேனென்று வெகுநாளாயுருச் செபிப்பதைப்போற் சபதங் கூறிக்கொண்டிருந்த ஜயவீர கர்னமகாராஜனானவர் வில்லைக் கையிலேந்தி சபதச்சொல்லை நிறைவேற்றும்படியாய்க் குருக்ஷேத்ர யெல்லையில் எப்போது விஜயன் வருவானென்று வழிபார்த்துக்கொண்டிருக்கின்றார் இன்னும் சொல்லிச் செய்வது பெரியோர் கடமையாதலாற்சொன்னேம் இப்போதும் கிரீடிக்கு தயிரியமிருக்குமாகில் சல்தியிற் புறப்படச்சொல்லும் மேலும் என்னைப் பகைத்த சத்துருக்களையெல்லாம் எரியுந் தணல்முன் சருகாய்க் கருக்கி யமலோகஞ்சேர்ப்பிப்பேனென்று இருமாந்து சிங்கம்போலொத்திருக்கும் எங்கள்தம்பியாகிய துஸ்பாதனராஜன் உங்கள்குலத்திற்குக் கோடாலியும் உங்கள்கூட்டத்திற்குச் சூறாவளியும் போலிருந்து உங்களுக்குச்சொல்லச்சொன்னார் அதென்னவென்றால் முன்னாலேமன்னவர்கூடியிருந்தசபையில் உங்களுக்குரியகன்னிகையாகிய திரௌபதியை மயிரைப் பிடித்திழுத்துவந்து மானபங்கமாகப்பேசி வஸ்திரபங்கஞ்செய்தநாளையில்என்னைக்கொன்று உதிரபானம் பண்ணுகிறவனாயிலுங் கையினால் தீர்த்தபானம் பண்ணுகிறதில்லையென்று சபதம்பண்ணிக்காட்டுக்குப்போய் நாட்டுக்குவந்த கேட்டையுடைய வீமசேனன் ஓட்டமெடுப்பானா அல்லது யுத்தத்திற்கு வருவானாவென்றும் நாட்டிலோரிடத்தில் ஒருதாய் தந்தைக்குப்பிறந்து முல்லைக்காட்டில் மற்றோரிடத்தில் இடையர்வீட்டில்வளர்ந்து திருட்டுப்பிழைப்பினால் அடியும் மத்தடியும்பட்டு சாராத்துவ சோரத்துவத்திற் றன்னாலானமட்டும் வயிறுவளக்கப்பார்த்துப் பிழைக்கமாட்டாமல் சும்மாயிருப்பவர்களைத் தூண்டிவிட்டு தூதவேஷம் போட்டுக்கொண்டு உங்களை யானையாக்குறேன் எதிரிகளைப் பூனையாக்குறேனென்று பொய்யும்புளுகும்பேசி கபடும்வஞ்சனையுங்கலந்துகலகப்படுத்தி அர்ச்சுனனுக்குக்குதிரைப்பிடித்துச்சாரதியாகியும் சிசுஅத்தி ஸ்திரிஅத்தி கோஅத்திசெய்தும் காலிக்கன்றுகள்மேய்த்தும் சபடில்லாத ஆயர்களையேய்த்தும் சாண்வயிற்றை வளர்த்துக்கொண்டுதகல்பாசியாய் திரிகிற கிருஷ்ணனைப் பாண்டவர்கள் சேரப்பிடித்து வைத்துக்கொண்டு பயங்காட்டுகிறார்கள் நானவனுக்குப் பயந்து உங்களுக்கு நாடு கொடுப்பனோ அவனுக்கும் அவனுடைய வஞ்சனை மாயமருட்டுக்கும் உங்களுக்கும்கேடுஓடுங் கொடுப்பனேயல்லது ஒருவீடுங்கொடுக்கமாட்டேன் மேலும் சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டன் ஊமைக்குத்தெத்துவாயன் உற்பாதபிண்டமென்னும் பழமொழிபோல் இந்தக் கிருஷ்ணனுக்குச்

சரியாய் கண்டனுச்சுமின்டனுன எங்களம்மான் சகுனி ராஜனையேற்படுத்திவைத்திருக்கிறேன் இதன்றியும்நகுல சகாதேவனென்னும்பசகள் எங்களம்மானுகியசகுனியை யுஞ்சௌபலனையுங்கொல்லுகிறதாய்ச் சபதஞ்செய்தவர் களைக்கொல்லக்காத்திருக்கிருர் மாமாவானவர் ஆகையா ல் அவர்களையுஞ் சீக்கிரம் ஓடிவரச்சொல்லும் மேலும்ந கரத்திலும் நாட்டிலும் கொலுக்கூடத்திலும் நல்லரத்த ங்களுநிஸ்சிரம்பெற்றிருக்க அரசர்களாகியபாண்டவர்க ள் தங்களையுந்தோர்க்கச்செய்து தங்கள்பெண்சாதியையு ம் அவமானப்படுத்தி காட்டிற்பனிரண்டுவருடம் வனவா சஞ்செய்யுங்களென்று ஓட்டிவிட்டகாலத்திலில்லாதவீர ம்காட்டிற்சென்றுகாய்கனிகிழங்குகளைத்தின்றுகற்பாறை யிற்படுத்து கண்ணுறக்கமின்றித்தூக்கல்லாதங்களினுடை யசந்துப்போயிருக்கும் இந்தக்காலத்தில்பவுரிஷங்களும் கோபமுங்கொண்டுபசித்தவன் பழங்கணக்கைப்பார்ப்ப துபோல் பழையபகையைநினைத்து அதற்காகக்கூறிய ச பதங்களையுமுடிக்கவேண்டுமென்று ஓடிவந்தீர்களோ இ ல்லே நான்ராஜ்யங்கொடுப்பேன் அதைப் பெற்றுக்கொண்டு வாழலாமென்றுநாடிவந்தீர்களோநாணமற்றவர்களையெ ன்றுஇப்படிக்கெல்லாஞ்சொல்லிஅவர்கள்யெப்போதுச ண்டைசெய்யயெண்ணங்கொண்டிருக்கின்றுர்கள் அந்தக் காலத்தையும் அவர்கள்சொல்லுகின்ற இந்திரஜாலத்தை யும் அறிந்துக்கொண்டுசீக்கிரம்வரக்கடவையென்று துரி யோதனமகாராஜன் அனுப்பிவைத்தாராயாவென்று உ லூகனென்பவன்சொல்ல,இவைகளையெல்லாங்கேட்டிரு ந்தபாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய திருமு கமண்டலத்தைப்பார்த்து இந்தக்கேள்விக்கெல்லாம் உத் தரங்தேவரீரே திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று தர் மராஜன்சொல்ல,மகாசந்தோஷத்துடன்நானென்னசொ ல்லப்போகிறேன் என்னசொல்லியும் என்வயிறுவளர்க் கிறதாயில்லையேயென்றுநகைத்து உலூகனைப்பார்த்துநா ன்சொல்லுகிறவண்ணம் உங்கள்ராசனுக்கு நீபயப்படாம ற்சொல்லக்கடவையென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசொல்லு கின்றுர்பாண்டவர்கள்வனத்திலிருக்கும்போதுஅவர்களை அவமானப்படுத்தவேண்டுமென்று நினைத்து உன்னுடை யதம்பிமார்முதலாகியகர்னனுஞ்சகுனியும்உங்களுடைய பத்தினிமார்களும் கூடவரும்படியாய்அழைத்துக்கொண் டுவந்து சலக்கிரிடைபண்ணயெத்தனித்தபோதுசாங்கிரு வராஜனுகியசித்திரசேனன் கையிலகப்பட்டுத்தாமணிப்பி ணையலாய்ச்சேர்த்துதம்பிமாரெல்லாரும் ஒருவரிசைபெ ண்டுகளெல்லாருந்தலைமயிருடன்கலைகுலையும்படியாயொ ருவரிசை மாமாமுதலியபேரும் துரியோதனமகாராஜனு ம மடவிறுகும்படியாயொருவரிசை இப்படியாகக்கட்டுப் பட்டுக்கொண்டுபோம்போது. உன்னுடையசேனைகள்மு தலியவீரர்களெல்லாருந்தருமராஜனிடத்தில்வந்துமுறை யிட்டமுதகாலத்தில் ஜீவகாருண்யமுடையதருமராஜன்யி ரக்கங்கொண்டுதோடைப்புண்ணை வெளிக்காட்டலாகா தென்னும்பழமொழிப்படிக்கு தங்களுக்குள் ளென்னவி ரோதமிருந்தாலும்புறத்தியாருக்கிடங்கொடுக்கலாகாதெ ன்றுதன்தம்பிமாராகிய விமார்ச்சுனனையழைத்துநமதும

ரபிற்குக் குறைவுவாராம லிருக்கும்படியாய் துரியோதன னையும் அவனுடையபுத்திரர்மித்திரர்பெண்டுகள்முதலிய பேர்களையும்மீட்டுக்கொண்டுவரக்கடவீர்களென்று தம்பி மார்களுக்குக்கோபந்தணியவும் உன்பேரிலன்புகழைக்கு ம்படியாகவுஞ்சொல்லி அனுப்பிவைத்ததின்மேல் சித்தி ரசேனன்கட்டியசிறைநீக்கி கருமராஜனுக்கெதிரில் கொ ண்டுவந்துவிடவேண்டியபுத்திமதிகளைச்சொல்லிஉங்களை உயிருடன்மீட்டு அனுப்பியதெல்லாம் என்னத்திற்கென் றுல் சித்திரசேனனிடத்திற்சிறைபுகுந்துயிர்விடுவீர்களா கில் இராஜசபையில் தாங்கள்கூறிய சபதந்தப்பிப்போகு மென்றுயோசித்து அந்தச்சபதந்தப்பாமல்தாங்களேகொ ல்லும்படியாக உங்களைச்சிறைநீக்கிவிட்டிருக்கின்றுர்கள் இதனுல்பாண்டவர்களைவரும்சபதம்முடிப்பார்களென்று உங்களுக்குத் தெரியவில்லையா? அந்தச்சித்திரசேனனைச் செயித்தபாணமும் உங்கள்சிறையைமீட்டவீமார்ச்சுனவி ருவருமிருக்கிருர்களென்றும்நேற்றுவிராடபுரத்தில்தெட் சணதிசையில் திரிகர்த்தன்பட்டபாடும்துரியோதனன்முத லாகியபேரும்வந்துகெட்டகேடுங்கேளும் உலூகனேஉரு மாறியிருந்தபாண்டவர்களை அறியும்படியாகவந்து உத்தர திசைகொண்டகாலத்தில் பேடியாகியவிஜயன் அறியாதபி ள்ளையாகிய உத்தரனைச்சாரதியாகவைத்துக்கொண்டு தா னொருவனாக ஒரேவில் ஒரேதேர் ஒரு அம்பறாத்தூணியி வைகளைக்கொண்டு வீஷ்டுமர்முதலிய ஆசாரியரைப்பாண ங்களினுல்வணங்கிக்கொண்டு ஒரு அக்குரோணிசேனைக ளையும்கொன்றுயிளைத்தோடவென்று கர்னனைப்புறமுது கிட்டோடக்கண்டு கொடிதேரொளிகளுமழிந்துபோகப் போர்புரிந்து வீஷ்டுமர் துரோணுதிமுதலியபேரும் புற முதுகிட்டோடச்செய்து ஊரைநோக்கி ஓடிக்கொண்டி ருந்தவணங்காமுடியோனுகியஉன்னைத்துதித்துவணங்கச் செய்து உன்னுடையகுகிளாமுதலியசாதியைமாட்டிஅ ங்கமழியும்படியாகவும் எல்லாரு நகைக்கும்படியாகவும் பேசி சீசீயென்றுயேசி பாணங்களைவீசி என்தமயன்வீ மசேனராஜன்கூறியசபதத்திற்காகஉன்தலையைவிட்டுவை த்தேனென்றுசொல்லி உன்தலையிலிருந்த கிரீடத்தையும் அத்தினகிரியென்னும் பட்டத்துயானையையும் வீழ்த்தி, மோகனஸ்திரத்தைவிடுத்து இயாவருநிலத்தில்மயங்கிவீ ழச்செய்து தன்சாரதியைவிட்டு எல்லோருடையதலைத் துணிகளைப்பிடுங்கிக்கொண்டுவரச்செய்து பசுக்கூட்டங் களையும்வென்றுகொண்டுபோன விசயனிருக்கும்போ து சபதநிறைவேருமற்போகுமா இதுதெரியாதாஅறியா தசிறுபிள்ளைகளுக்கும்நேற்று அடித்தவனே இன்றைக்கு த்தெரியுமே நமது அரசாகியகண்ணில்லான் குழந்தைக் குயேன்தெரியவில்லை தங்கள்பாட்டனுராகிய விஷ்டுமரா னவர் அருச்சுனன் கொடுத்த பிராணப் பிரதிஷ்டையெ ன்றுயெல்லோரும் வாழ்த்துங்களென்றுசொல்லயாவரு ம் அப்படியேசொல்லிவாழ்த்திக்கொண்டு அஸ்தினபுர த்திற்கு பகலில்போகவெட்கப்பட்டுராத்திரியிற்போய்நு ழைந்தஅரசன்முதலாகியபேர்களுக்குயின்றும்அடிபட்ட அந்தப்புண்களிருக்குமேகாயமறச்செய்யுசிரம்வடியுமே உடம்பில்லச்சையுமில்லையே ஐயோ! செப்பனத்திலவி

மார்ச்சுனனைக்கண்டாலும் துரியோதன னிறந்துபோவானேசுத்தப்பேதையே இவனெங்கேயுத்தம்பண்ணியிருக்கிறான் எந்தயுத்தங்களைப்பார்த்திருக்கிறான்அப்படியே இவன்சுத்தவீரனாகில் பூசாரித்தனஞ் செய்யப்போனவிடத்தில் வியசாரித்தனம்வந்ததைப்போல்தனுர்வேதங்கற்பிக்கவந்ததுரோணாச்சாரியாகிய பிராமணனையும் வைதிகசாந்தருடையகிருபாச்சாரிமுதலியபேர்களையும் சுகபோகங்களிச்சியபிர்மச்சாரியாகிய வீஷ்மனையுந்திரிதண்ட சந்நியாசியாகிய அசுவத்தாமனையும்வணங்கி தழுவிக்கொண்டு பாண்டவர்களைச்செயித்து எனக்குப்பட்டங்கட்டிவையுங்களென்றுகாலில்விழுந்துகிடக்குந் துரியோதனனுக்கு யுத்தத்திற்குவரச்சொல்லென்னுந் துணிவுயெங்கிருந்துவந்ததுகாலையுதயத்திற்கே யுத்தஞ்செய்யசித்தங்கொண்டிருக்கிறார்கள் சொல்லியசபதங்களி லொன்றாகிலுங் குறையாது கர்னன்சகுனிமுதலிய துரியோதனனுயிர்கால் சாய்ந்துபோகும்படியாய்கைக்கணையிற் செயிக்கும்விக்கிரமபராக்கிரமவிஜயன் வீமனையிந்திரசேனனிடத்திற் கட்டுப்பட்ட துரியோதனன் செயிப்பானென்று நீர்யோசித்துப்பாரும் உலூகனே உங்கள்ராஜனுக்கு நீபோய்ச் சொல்லும்மேலும்திரிலோகமும்திருமூர்த்தியும்சேர்ந்து வந்து துரியோதனனுக்குத்துணையானாலும் விமார்ச்சுனன்கையினால்முடிந்துபோறது நிசம்நிசம்நிசமென்று நாம்சொல்லியதாய்ச் சொல்லுமென்று ஸ்ரீகிருஷ்ணதேவர் செலவுகொடுக்கதருமராஜன் அந்தத்தூதுவந்த உலூகனுக்குவேண்டிய ஆடையாபரணங்களெல்லாங்கொடுத்து துரியோதனனிடத்தில் பயப்படாமற் சொல்லுமென்று விடைகொடுத்தனுப்பியபின்புஸ்ரீகிருஷ்ணதேவரும்பாண்டவர்களும்சபையிற்பேசிக்கொண்டிருக்கும்போது உருக்குமவிந்தேவிக்குத்தமையனாகிய ருக்குமியென்னும்ராஜன் இரதத்திலேறி அதிவேகத்துடனோடிவந்து அருச்சுனனை நோக்கிதுரியோதனுயிர்முதலாகியபேர்களை செயிக்கத் திராணிந்தைரியமும் உனக்கில்லாவிட்டால் என்னைவேண்டிக்கொண்டுபடைத்துணைவிரும்புவையாகில் ஒருநொடிப்போதில்துரியோதனனுயிர்யாவரையுஞ்செயித்து உங்களுடையசபதங்களுநிறைவேறச்செய்து தர்மராஜனுக்குப்பட்டமுங்கட்டிவைத்து என்கண்ணாற்பார்த்துமகிழ்ந்து போகிறேன் சீக்கிரஞ்சொல்லும் அருச்சுனனென்று சபையிலிருக்கும்யாவருந் திடுக்கிடும்படியாய்ப்பேசினான். அந்தருக்குமியை அர்ச்சுனன்பார்த்து கலகலவென்று நகைத்து எங்கள்காலில்விழுந்துவேண்டிக்கேட்டாலும் எங்களுக்குவீரர்களுதவிவேண்டியதில்லை ஆனால் இப்போப்பட்டசூரனை துரியோதனராஜன் வேண்டியழைக்கிறார் அவரிடத்தில்போய்ச் சேருவீராகில் மெத்தவுமுக்கியமாய் வைத்துக்கொள்ளுவார் இதுநல்லசமயம்கோடைக்காலத்தில்விடாய்ப்பட்டுவருபவனுக்குகுளிர்ந்ததீர்த்தமகப்பட்டதைப்போல நீர்கிடைத்ததென்றுகுலுங்குவார்உமதுபலுக்குக்கும்அவருடையபிலுக்குக்குஞ்சரிப்பட்டிருக்குமிப்போதேபோமென்று அருச்சுனன்சொல்லமறுபேச்சுபேசாமல் ருக்குமிதனது பட்டணம்போய்ச்சேர்ந்தான் இப்பால்சேனாபதியாகியதேவனையழைத்து திட்டப்படுத்திகாலையுதயத்தில் முதலாள்யுத்தமென்று சர்வசாக்கிரதையுடனேசந்தோஷங்கொண்டிருந்தார்கள்பாண்டவர்கள் அப்பால்இந்தஉலூகனானவன்துரியோதனனிடத்திற்சென்று இவடத்தில்நடந்தசங்கதியாவற்றையுஞ் சகலமானபேருங்கேட்கச்சொன்னான் அதைக்கேட்டுத்துரியோதனன் உடம்புசவுங்காமல்உற்றாருடன்மகிழ்ந்துகாலையுதயத்திற்குயுத்தமென்றுசேனாதிபதிக்குச்சொல்லி தாங்களும் யுத்தகோலங்கொண்டிருந்தார்கள் இருதிறப்படைகளிலும்பேரிமுதலியவாத்தியங்களெல்லாஞ் சப்திக்கும்பெருங்கூச்சல்கடலினைச்சலொடுக்கும்படியாய்முழங்கச் சூரியன் எப்போதுவருவான்எப்போதுவுதிப்பான் எப்போது யுதயமாவானென்று இருதிறப்படைகளும் நித்திரையற்றுவெற்றிபெறநினைத்து சுத்தவீரத்தளத்தைநிறுத்தி சப்தசமுத்திரம்போலநிறைந்திருந்தார்கள் சூரியபகவானும் இந்தயிருதிறப்படை வீரர்கள்பேசிக்கொள்ளும்பிரபலங்களைக்கேட்டுநாமுதயமாகவில்லையென்று எல்லாரும்நமதுபேரில்தோஷஞ்சொல்லுகிறார்களே நாம்சீக்கிரமாயுதயமாவோமென்று சூரியபகவானும்கிழக்குத்திசையிலுதித்தார்கேளும் ஜெனமேஜெயமகாராஜனே யிதுவரையிலும்உத்தியோகபர்வம்இனிமேல்வராநின்றதுவீஷ்டுமபர்வமென்றுவைசம்பாயனர்சொல்லிக்கொண்டுவந்தார்.

விருத்தம்.

பல்வளனுயர்ந்தநகர்வில்லியருள்செய்யுள்பதினொன்றினொடுமூன்றுசதமுஞ், செல்வமலிநன்முதலைநல்லகவிநாவின்வளர் தேவியருடாவுதமிழின், மல்குகவிஐந்துசதமீதெழுபதுங்குழுமி மாண்புறவியங்கியதரோ, சொல்வளனுயர்ந்தமுனிதண்ணளிசுரந்தவட சொல்லெனுமுத்தியோகபர்வம்.. *

என்பது - பலவளங்களிலேயுமுயர்ந்த வில்லிபுத்தூரென்னு நகரில் வாசமாகிய நம்பியாழ்வாரையொன்றுவாதுபாடி வெல்லும் வல்லமையிற் சிறந்த மகாவித்துவானுடையவாக்கினாற்சொல்லிய (கவி) மூன்றூற்றுப்பதினொன்றும் நற்செல்வநிறைந்த முதலைம்பேட்டில்வாழும் நல்லாப்பிள்ளையென்னுஞ் சருணிகரினது நாவிலிருந்துவளர்ந்த சரஸ்வதிதேவியின் அருள்தாவியதமிழினால்பாடலாகப்பொருந்திய (கவி) ஐஞ்ஞூற்றெழுபதுஞ்சேர்ந்து பெருமையுறப்பிரகாசிக்கின்றது சொல்வளம், பொருள்வளம், அருள்வளம், தவவளஞ்சிறந்துயர்ந்தவேதவியாசமுனியானவர் குளிர்ச்சிபொருந்திய கிருபைசுரந்து லோகோபகாரமாய்வடமொழியிலேர்ப்படுத்திய உத்தியோகபர்வம் ஆகூடிய (கவி) எண்ணூற்றெண்பற்றுநான்கு.

உத்தியோகபர்வம் - முற்றுப்பெற்றது.

ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாயநம:

ஸ்ரீமத்திராவிடமஹாபாரதவசனம்.

வீஷ்டுமபர்வம்.

அண்டகோசவடுக்குறைத்தசருக்கம்.

விருத்தம்.

மேவருஞானநந்தவெள்ளமாய் விதித்தோனாதி.................. ....*
மூவருமாகிமீன முதலியபவங்களாகி...*
யாவருமியாவுமாகியிறைஞ்சுவாரிறைஞ்சற்பற்ப ....*
ரேவருமாகிநின்ற செங்கண்மாலெங்கள்கோவே..................... ....*

எ-று, விரும்புதற்கரிய ஞானமாய் அந்த ஞானங்களினாலுண்டாகிய பேரானந்த மிகுதியாய்சிருஷ்டிகர்த்தாவென்னும் பிரமமுதலிய மும்மூர்த்தியாய் மச்சாவதாரமுதலாகிய உற்பவங்களாய் சகலவுயிரும் சகலவஸ்துவுந் தாமாய் வணங்கத்தக்க அன்பினையுடையவர்கள் மனோபீஷ்டப்படி வணங்குவதற்கு பற்பலகோடி தெய்வங்களுமாய் எங்குநிறைந்து நின்ற எமதுகர்த்தா வாகிய செந்தாமரைக்கண்ணனுடைய வுபயதிருவடிகளையுந் திருமுடியிற் சூட்டி யென்சிந்தையுணாட்டி ஸ்ரீவேதவியாசருடைய ப்ாதபத்மங்களையும் வந்தித்து வாழ்த்திப்போற்றி வீஷ்டுமபர்வத்தில் திரிதராட்டிரனுக்குச்சஞ்சயன் அண்டகோசவடுக்குறைத்த விபரத்தைச் சொல்லுகின்றேன்.

இளமையாகிய அன்னப்பட்சிகள் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்குங் கஞ்சமலர்வாவிசூழ்ந்த குருநாட்டுக்கதிபதியாகிய ஜெனமேஜெயமகாராஜன் நான்குவேதமுதலிய சாஸ்திரங்களையும் நன்றாகத்தேர்ந்த வைசம்பாயனர்சொல்லிக்கொண்டுவந்த எல்லாவார்த்தைகளையும் உள்ளத்திற் பொருந்தக்கேட்டு இருகண்களிலுஞ் சலத்தைப்பெருக்கிக்கொண்டு மறுபடியும் வைசம்பாயனரைநோக்கி மெய்மையாகிய தவங்களெல்லாம் திருவுருக்கொண்டெழுந்தருளியதைப்போல் பரிசுத்தமாகிய கிருபாநோக்கத்தினால் எனது துன்பமுதலாகிய தேக பீடைகளுந் தொலையும்படியா யெழுந்தருளி தரிசனங்கொடுத்த என்னாண்டவனே துற்புத்தி துற்போதனையினாற் சொற்சோர்வுபட்ட துரியோதனனும் சற்சங்கசாவகாச சத்தியமே நித்தியமென்னுந் தயாளகுண மேருவாகிய தருமராஜனும் எவ்விதமாக யுத்தஞ்செய்தார்கள், அந்த விபரங்களை அடியேனுக்குச் சாங்கோபாங்கமாய்த் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று ஜெனமேஜெய மகாராஜன் வணங்கிக்கேட்க வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

கலைத்திறமையுங் கலைத்திறமையு முடைய அரசனே கேளும் இக்கப்பஞ்சம வேதமென்னும் பாரதத்திற்குப் பதினெட்டுப்பர்வமென்றுசொல்லியிருப்ப தல்லாமலும் மூன்றுபஞ்சகமும் ஒருசொற்கத் திரியமென்றும் ஸ்ரீவேதவியாசர் அருளிச்செய்திருக்கின்றார் அதனுடைய விபரமென்னவென்றால் ஆதிபர்வம்-சபாபர்வம்-ஆரண்ய பர்வம்-விராடபர்வம்-உத்தியோகபர்வம் - இந்த அஞ்சுபர்வமுங்கூடியது ஆதிபஞ்சகம், இதுவரையினுஞ் சொல்லிவிக்தோம் இனிமேற்சொல்லப்போகிற வீஷ்டும பர்வம்-துரோணபர்வம்-கர்னபர்வம்-சல்லியபர்வம்-சுயோதன பர்வமென்னும்-இந்த ஐந்துங்கூடிய யுத்தபஞ்சகத்தில் வீஷ்டுமர் சேனாதிபதியாகயிருந்து செய்த்வீரப்பிரதாபங்களையெல்லாஞ்சொல்லுகிறேன் மதிகுல நிதியாகிய அதிபதியேகேளும் கலைக்ஞானமுதலிய சாஸ்திரங்களைக் கற்றும் அதினது நுண்ணமப்பொருளைப்பெற்றும் எல்லோரு மதிக்கும் நல்லோராகிய வல்லவர்களும் கல்வியைக்கற்காத கசடரும் கற்றுமுணர்வில்லா அசடரும் அசுப்பற்றும் அற்றவர்களாகிய சித்தசுத்தியை யுடைய நற்றவர்களும் நித்தியவிதி முறைதப்பாது செபஞ்செய்து தொழும்படியாகிய சூரியபகவான் கிழக்குத்திசையி லுதிப்பதற்கு முன்னமே குருக்ஷேத்திரத்தில் நிறைந்து நின்ற இருதிறவர்களுடைய சேனாசமூகங்களும் அரசர்கள் முதலாகிய பேரும் காலைக்கடனை முடித்துக்கொண்டு ஆயுதங்களைக் கைக்கொண்டு ஆசபாரித்துநின்றார்கள். அவர்களப்படியி

ருக்க அஸ்தினபுரத்துக் கதிபதியாகிய திருதராஷ்டிர மகாராஜன் தனது புத்ரமித்ர பௌத்ராதியரெல்லாரும் போர்புரியச் செலவுபெற்றுக் கொண்டு போனவுடனே அடங்காத துன்பத்துடன் மடங்கி சுருண்டுமுடங்கி பூரித்ததோள்கள் வாடகண்ணீ ராறுகவோட ஐயையோதெய்வமே என்பிள்ளைகள் போர்செய்யப்போனார்களே யென்னவிளையுமோ ஏதாய்முடியுமோ இன்பச்சொல் கேட்பனோ துன்பச்சொல் கேட்பனோ என்று எண்ணங்கொண்டுவருந்தி தன்பிதாவாகிய ஸ்ரீவேதவியாசரைச் சிந்தையுளினைந்து வந்தனைசெய்தான் அந்தவேளையில் திரிதராஷ்டிர மகாராஜனுக்கெதிரில் ஸ்ரீ வேதவியாசர் வந்துநின்றார் அவரைக்கண்ட சஞ்சயனும் உயிச்சனும் திரிதராஷ்டிரமகாராஜனுக்கு சாடையினாற் றெரிவித்தார்கள் உடனே ஆவித்துக்கொண்டு பூமியில் விழுந்து புரண்டெழுந்து அவரடியிற் றாழ்ந்து அர்ச்ய பாத்திய ஆசமனீய சந்தனாக்ஷதை தாம்பூல புஷ்ப தூபதீப நைவேத்திய முதலாகிய வுபசாரங்களெல்லா நடத்தி முத்துக்களினாலமைத்திருக்கும் ஆசனத்தி லெழுந்தருளச்செய்து தாரைதாரையாக் கண்ணீர்சோரவிட்டு தேம்பி துக்கத்தினால் விக்கிக்கொண்டு வாய்குழறுமொழி குழறும்படியாய் ஸ்ரீவேதவியாசரைநோக்கி அருந்தவர்களுக் கரசாகிய ஐயனே என்பிள்ளைகளாகிய துரியோதனாதியர் யுத்தஞ்செய்யும் படியாய் என்னிடத்தில் விடைபெற்றுக் கொண்டு குருக்ஷேத்திரத்திற்குப் போய்விட்டார்கள், அவர்களைவிட்டு யிவடத்தில் நான் தனியாயிருக்கலா மென்றாலோ பெற்றமனம்பித்தென்னு முறைமையாலும் புத்திரவாஞ்சையினாலும் பிரிந்திருக்கப்படவில்லை நல்லதுஎன்பிள்ளைகள்போயிருக்குங் குருக்ஷேத்திரத்திற்கேபோகலாமென்றாலோஇரண்டுகட்புலனும்அற்றவனாகையால்அவ்விடத்திற்போய் நாம் செய்யலாவதென்னவென்று எனது மனமிளைக்குதே யொழிய துணிவுபெறவில்லை ஐயனே என்கதி யிப்படியிருக்கின்றதென்று திரிதராஷ்டிரன் சொல்லவும் அந்தவார்த்தையைக்கேட்டு வேதவியாசர் சொல்லுகின்றார் அப்பா திரிதராஷ்டிர பூபதியேகேளும் சர்வலோகசரண்யனாகிய சர்வேஸ்வரனுடைய செயல்களை ஒருவராலும் விலக்கக்கூடாது ஆகையால் ஊழ்வினையிற்சிறந்த மனத்தினையுடைய உன்பிள்ளைகள் செய்யப்போகிற யுத்தத்தைக்கண்டு களிக்கும்படியா யுனக்கு யிரண்டு கண்ணுந்தெரியச்செய்தேன் புஜக்கிருதிமுதலிய பொன்னாரங்களாற் சிறந்த புஜத்தையுடைய அரசனே இருதிறப் பிள்ளைகளும் போராடும் விதத்தைப்போய்ப் பாருமென்று வேதவியாசர் அநுக்கிரகஞ் செய்தார் உடனே யிரண்டு கண்களும் பிரகாசிக்கவே திசாதிசைகளுங் கடந்த கீர்த்தியையுடைய திரிதராஷ்டிர மகாராஜனானவன் மாட மாளிகை கூடகோபுரமுதலிய அரண்மனைகளையும் அஸ்தின புரத்தின் அலங்காரங்களையுஞ் சாலைகளையுஞ் சோலைகளையும் மலைகளையும் பலபல உயிர்களின் பேதங்களாகிய தலைகளையும் மண்டலத்தையும் விண்டலத்தையும் தாராகணங்கள்முதலியஎல்லாவற்றையுங்கண்டுயிரண்டுகண்களையுமூடிக்கொண்டு தந்தையாகிய வியாசருடைய திருவடியிற் றிருமுடிநாட்டி நின்று நாதனே நான்பிறந்த நாள்முதலிதுவரையிலும் களங்கமில்லாமல் பரிசுத்த யிருதயத்துடன் பெருமைபெற்று என்காலமெல்லாங் கழித்துவிட்டேன் இப்போது இறந்துபோகும்படியா யிருக்கிற கொஞ்சகாலத்தில் கண்களைப்பெற்று நானென்ன பயனைப்பெறுவேன் என்பிள்ளைகள் செய்யும் யுத்தத்தையுங்கண்டு சகியேனித்த உலகத்தையும் பார்க்கேன் உலகிலுள்ள உயிர்வருக்கத்தையு நோக்கேன் மாமலைமுதலிய மற்றெவையும்பாரேன் எதைப்பார்த்தபோதிலும் எனக்குப் பயங்கரமாயிருக்குது யின்னஞ் சற்றுநேரம் என் கண்களிருக்குமாகில் நானிறந்துபோவேன் உடலுங் குடலும் படபடவென்று நடுங்குதாகையால் தருமந்தப்பாத தவத்தினையுடையசந்தையேபழயபடி குருடாகச்செய்வதேயென்பாக்கியமென்றுதிரிதராஷ்டிரன்வணங்கிவருந்தமுற்றுவாழ்த்திக்கேட்கப் பெருமைதங்கிய முனிவனானவர் பழயபடி குருடாகச்செய்து புத்திரனைப்பார்த்து அப்பாகுழந்தாய் அரசனே யிப்போது நடக்கப்போகிற யுத்தத்தின் முயாற்சிகளையெல்லாம் பூரணமாகத் தெரிந்துக்கொண்டு உனக்குச் சொல்லும்படியாய் குற்றமற்ற சஞ்சயனுக்கு ஞானக்கண் கொடுக்கிறேன் நாள்தோறும் நடக்கும் யுத்தமுதலிய காரியங்களை யறிந்து அந்தச் சஞ்சயன் சொல்லத் தெரிந்துகொள்ளக் கடவை, மேலும் அந்தச் சஞ்சயன் சொல்லிக்கொண்டு வரும்போது தோற்றவர்களைப்போலிருப்பவர்கள் வென்றவராகவும் வெற்றிபெற்றவர்களைப் போலிருப்பவர்கள் தோற்றவராகவும் நடத்திவைக்கும் வினையின்பயனைச் சொல்லிக்கொண்டுவருவான் அந்தவார்த்தையைக்கேட்டு நீ மெத்தவிசனப்படாதே அப்பா கடைசிநாளையில் பார்க்கும்போது எது நின்றதோ அதையின்னதென்றுசொல்லத் தெரிந்துகொள்ளலாம் அதுவரையிலுந் துன்புறாதே யின்புறாதே தைரியமாயிருவென்று ஆதரணைச்சொல்லி உன்பிள்ளைகளை நம்பாதே வெற்றியையும் ஆண்மிக்கையையும் பெறுவோர்கள் நீதிமுறைமை தப்பாமல் சத்தியமாக நடப்பவர்களெவர்களோ அவர்களே ஜெயம்பெறுவோர்களென்று அறிந்துகொள்ளக்கடவையென்று சில உறுதிவார்த்தைகளைச்சொல்லி சஞ்சயனையழைத்து பலமுகத்திலும் யுத்தஞ்செய்யும்படியாகிய போர்முகத்திற்சென்று அவரவர்களுடைய மனக்கருத்தறிந்து சொல்லும்படியாகவும் சண்டைசெய்யுமிடத்திற் செல்லும்போது யிருதிறவர்களுடைய ஆயுதங்களொன்றுந் தேகத்திற் படாதிருக்கும் படியாகவும் ஆசீர்வதித்து சஞ்சயனுக்கு வரங்கொடுத்தோமென்றுவேதவியாசரானவர் செலவுபெற்றுக்கொண்டு தவச்சூழலுக்கெழுந்தருளினார் இந்தப்பிரகார மநுக்கிரகஞ்செய்து வேதவியாசர் போனபிற்பாடு திரிதராஷ்டிர பூபதியானவர் சராசரங்களுந் துதிக்கும்படியாகிய தர்மகுணசீலனென்னுஞ் சஞ்சயனைப்பார்த்து மதயானையின் வலிமையு மதியூகியின் திறமையும் பெற்ற சஞ்சயனே ராக்ஷதர்களும் தேவர்களும் யுத்தஞ்செய்ததைப்போல் என்பிள்ளைகளும் பாண்டவர்களும், போர்புரியச்சென்ற குருக்ஷேத்திரமென்னும் யிடம்யெவ்விடத்தி லிருக்கின்றதென்று கண்

னில்லாதவன் கேட்கச் சஞ்சயன் சொல்லுகின்றான் அஸ்தினாபுரத்துக்கரசனாகிய திரிதராஷ்டிரனே கேளும் இந்நாவலந்தீவில் சகல பாவங்களையும் போக்கி நன்மைகளையும் புண்ணியங்களையுங் கொடுக்கும்படியாகிய புனித தீர்த்தம் பூபிரதக்ஷணஞ் செய்கின்றவர்கள் போற்றி வணங்கித் தானங் கொடுத்து, ஸ்நானஞ்செய்யா நின்ற சிமந்த பஞ்சக மென்னு மகாமகத்துவ முடைய பொய்கை நிறைந்த குருக்ஷேத்திரத்தில் இருந்திறப்புகல்வர்களும் ஆசைகொண்டு போர்புரியச் சென்றார்களையாவென்று சஞ்சயன் சொல்ல திரிதராஷ்டிரன் கேட்கின்றான் ஐயா? சஞ்சயனே நாவலந் தீவாகியது எது அதற்கு நாவலந்தீவென்னும் பேரெப்படி வந்தது இந்திரன்முதலிய தேவர்கள் வாழாநின்ற தெய்வலோகம் அளகாபுரியென்பது யெங்கிருக்கின்றது இந்தச் சமுத்திரஞ்சூழ்ந்த விசாலமாகிய உலகங்களும் ஏழுபொழில்களென்னும் ஏழுலகமும் பிரமனால் விதிக்கப்பட்ட அண்டமுதலிய வெல்லாவற்றையும் நான் தெரிந்துகொள்ளும்படியாய்ச் சொல்லக்கடவை யென்று சந்தேகங்கொண்ட மனத்தையுடைய தாரியன் கேட்கப் புன்னகைகொண்டு பொய்யில்லா மனத்தோனாகிய புண்ணியன் யோசித்து அந்தகல்யாண குணனுடைய திருநாபிக்கமலத்தி லிருந்து வந்த பிர்ம்மா வானவர் ஆதியிற் படைத்த ஆயிரத்தெட் டண்டத்தில் இந்த ஒரு பிர்ம்மாண்டத்திற்குட்பட்ட யாவையும் பெரியோர்கள் பேசியிருக்குஞ் சாஸ்திரப் பிரகாரஞ் சொல்லுகிறேன் கேளும் இராஜாதி இராஜனாகிய அரசனேயென்று சஞ்சயன் சொல்லத்தொடங்கினான், ஐயா, அண்டமென்பது முட்டையைப்போல்விளங்கி சுவர்க்கமத்தியபாதலமென்னுமூன்றுபிரிவாகியிருக்கின்றது இந்தமூன்றுபிரிவில் அளவிடப்படாத ஏழுலகம் ஒருகூறாய்நிற்கும் அவ்வுலகம்யாதெனின் பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகந், தபோலோகம், மகாலோகஞ், சத்தியலோகமென்னும் ஏழுலோகமும்பொருந்தியிருக்கின்றது யிவைகளில் இப்போது நாமிருக்குமிந்த அண்டத்தின்மதிற்சுவர்வரைக்கும் யிப்பூலோகத்தின்விருத்தி அளவு இதற்குள் எல்லாம்வல்லகடவுளினுடைய வலதுகண்ணாகிய சூரியபகவானுதயமாதமுதயகிரியும், சமுத்திரங்களும், சக்கிரவாளகிரியும், பொருந்தியிருக்கின்றது அப்பால் நிறைந்த பெரும்பொறைக்கடலளவும் இருட்பூமியென்று அறிந்துகொள்ளும் அரசனே இப்போதுசொல்லிவந்த சக்கிரவாளகிரிக்குட்பட்ட இந்தப்பூமியைத்தேவபூமியென்றுஞ்சுவர்ணபூமியென்றுஞ்சொல்லுவார்கள் இந்தப்பூமியைசப்ததீவமென்று பிரித்திருக்கின்ற தன்மையின்படிக்குப் புட்கர தீவத்தைச் சொல்லுகிறேன்கேளுமேங்கலே புட்கரதீவமென்னும்அந்தப்பூமிபத்துகோடியோசனை விஸ்தீரணமாயிருக்கின்றது அந்தத்தீவில் தாமரைப் புட்பங்களேமிகுந்து மலர்ந்துசிறந்து வளர்ந்திருக்கின்றன பலம்பொருந்திய குமுதவரையென்னும் ஒருமலைசூழ்ந்திருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில் அறுபத்துநான்குலக்ஷம்யோசனை யகலமும் ஆழமுமுடையநன்னீர்க்கடல்வளைந்திருக்கின்றதுசர்வதோபத்திரமிகுந்திருப்பதால்அதுவேபுட்காதீவமென்று சொல்லப்பட்டது அதற்கப்பால் அறுபத்துநான்குலக்ஷம்யோசனையகல நீளமுடைய சாகத்தீவென்பதொன்றுண்டு அந்தத்தீவத்தைமந்திரகிரியென்னும் ஒருமலைசூழ்ந்துகொண்டிருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில் முப்பத்திரண்டுலக்ஷம் ஆழமும் அகலமுமுடைய பாற்சமுத்திரம்வளைந்துகொண்டிருக்கின்றது கீரைத்தண்டுகள்மிகுந்துவளர்ந்திருப்பதினால் அதற்குசாகத்தீவென்று பேராயிருக்கின்றது அதற்கப்பால் முப்பத்திரண்டுலக்ஷம்யோசனைவிசாலம்பொருந்திய கிரவுஞ்சத்தீவமென்பதொன்றுண்டு அந்தத்தீவத்தைக்கிரவுஞ்சகிரியென்னும் ஒருமலைசூழ்ந்துக்கொண்டிருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில்பதினாறுலக்ஷம்யோசனையகலமும் ஆழமுமுடையதயிர்க்கடல்வளைந்துகொண்டிருக்கின்றது அவ்விடத்தில்அன்றில்முதலியபட்சிகள் மிகுந்திருப்பதினால் அதற்குக்கிரவுஞ்சத்தீவென்றுசொல்லப்பட்டது அதற்கப்பால் பதினாறுலட்சயோசனையகலமும் நீளமுமுடையகோமேதகத்தீவமென்பதொன்றுண்டு அந்தத்தீவத்தைநிஷதமென்னும் ஒருமலை சூழ்ந்திருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில் எட்டுலட்சயோசனை அகலமும் ஆழமுமுடைய நெய்க்கடல்வளைந்துக்கொண்டிருக்கின்றது அவ்விடத்திற்கோமேதகமலைகளேமிகுந்திருப்பதினால் கோமேதகத்தீவென்றுகூறப்பட்டது அதற்கப்பால் எட்டுலக்ஷயோசனையகலமும் நீளமுமுடைய சான்மலித்தீவமென்பதொன்றுண்டு அந்தத்தீவத்தைமேருமந்தரவரையென்னும் ஒருமலைசூழ்ந்திருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில நாலுலக்ஷயோசனையகலமும் ஆழமுமுடையமதுக்கடல் வளைந்திருக்கின்றது அவ்விடத்தில் இலவமரமிகுந்திருப்பதினால் சான்மலித்தீவென்றுகூறப்பட்டது அதற்கப்பால்இரண்டுலக்ஷயோசனைவிசாலமுடைய குசைத்தீவமென்பதொன்றுண்டு அந்தத்தீவத்தைப்பாரிசகிரியெனு மோர்மலைவளைந்துக்கொண்டிருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில் இரண்டுலக்ஷயோசனைவிசாலமும் ஆழமுமுடைய யிக்குசமுத்திரஞ்சூழ்ந்திருக்கின்றது அவ்விடத்தில் தருப்பைப்புற்கள் மிகுந்திருப்பதினால் குசைத்தீவென்றுகூறப்பட்டது இப்பால்; நாமிருக்கும் யிந்தத்தீவம்லட்சயோசனைவிசாலமுடையது இந்தத்தீவத்தில் அயவரையென்னுமொருமலைசூழ்ந்திருக்கின்றது அந்தமலைக்குட்புறத்தில் ஜம்புவிருக்ஷமொன்றிருக்கின்றதுலக்ஷயோசனையகலமும்ஆழமுமுடையஉவர்க்கடல்வளைந்துகொண்டிருக்கின்றதுஜம்புவிருட்சமென்னும்நாவல்விருக்ஷமொன்றிருப்பதினால் இந்தத்தீவத்திற்குஜம்புத்தீவென்றும்நாவலந்தீவென்றுஞ்சொல்லுவார்கள்தேக்குக்கமுகுநிறைந்தஇந்நாவலந்தீவினுடையமத்தியில்மகமேருவென்னும்பொன்மலையிருக்கின்றதுபுதனுக்கொப்பாகியபுத்தியையுடைய புண்ணியனேகேளும் மகமேருவென்றுசொல்லும்படியான இந்தஜம்புத்தீவதந்துமத்தியில்பிர்ம்மபீடமாயிருப்பதினால் அந்தமகமேருவினுடையநான்குதிக்கும் இப்போதுநான்சொல்லிவந்தஏழுதீவமும்ஏழுமலையும்ஏழுபொருளும்ஏழுகடலும்ஏழுவிதவிருட்சமும் ஏழுவிதப்பொழிலும்ஏழுவிதப்பட்சிகளும்பலவித அதிசயங்களும்பொருந்தியிருக்கும் அப்படியிருந்த

போதிலும் சம்புநாவற்கனியின்றேறலினால் அயப்பொடி
கள்பொற்சன்னங்களாய் நதியின்கரைதோறும் வரம்பா
கிறம்பியிருக்கும் வலங்களினால் மற்றத்தீவுகளைப்பார்க்
கிலும் யிந்தஜம்புத்தீவத்தை மெத்தவுமேன்மையென்று
நூல்கள்தோறும் பெரியோர்கள்பேசுகின்றார்கள் மேலு
ம்மகமேருவுக்கும்சுவிக்கிருக்கும்அண்டச்சுவருக்கும்மத்
தியிலாநின்றபூமியின்விசாலம் கிழக்கே ஐம்பதுகோடி
யோசனையும் மேற்கே ஐம்பதுகோடியோசனையும் வடக்
கே ஐம்பதுகோடியோசனையும் தெற்கே ஐம்பதுகோடி
யோசனையும் பூமியின்கிழாகநாற்பதுகோடியோசனைதூர
முருவியும் ஆகாயத்தின்மீதாக ஐம்பதுகோடி யோசனை
தூரமுயர்ந்தும் உடையதென்று பெரியோர்சொல்லுவா
ர்கள் இதையுமநுவிவேகத்தாலறிந்துகொள்ளக்கடவி
ர் அரசர்காராவேயென்றான் சஞ்சயனானவன்.

இவையன்றியும் மேற்சொல்லிய மகமேருவுக்கு வடமே
ற்கில வடக்கில் வடகிழக்கில் நீலகிரி சுவேதகிரி ஸ்ருங்க
கிரியென்று மூன்றுமலைகள்நிற்கின்றன கிழக்கிசையில
மாலியவான்கிரியென்றொரு மலைநிற்கின்றது மேற்றிசை
யில் கந்தமாதனமென்று ஒருமலையிருக்கின்றது தென்றி
சையில் தென்மேற்கில் தென்கிழக்கில நிடதகிரி ஏமகூட
ம் இமயவரையென்று மூன்றுமலையுள்ளது இந்தவெட்டு
மலைகளைத்தான் அஷ்டகுலகிரியென்று யாவருஞ்சாஸ்தி
ரோத்தவமாய்ச்சொல்லுவது இதல்லாமல்முன்சொல்லி
ய பொன்மலையாகிய மகமேருவுக்குக் கிழ்த்திசையில் நி
லைபெற்ற மந்திரகிரியும் பருத்துக்கனமுந்த கிளைகளையு
டைய மாமரங்களிறைந்த ஆம்பிரவனமும் நெருங்கிய ந
ந்தனவனமும்பாற்சுனையும்தேவர்கண் முதலிய முனிவரு
ங்களிக்கப்பொருந்தியிருக்கின்றது மேருவுக்குத்தென்றி
சையில் மேருமந்தரமென்னும்மலையும்இந்தஜம்புத்தீவமெ
ன்னும்பெயரைத்தந்த ஜம்புவிருட்சமும் சயித்திரதவன
மும்பெருமைதங்கிய மதுச்சுனையும் அழகுபெறவிளங்கி
க்கொண்டிருக்கின்றது மகமேருவுக்குமேற்றிசையில்பா
ரிசகிரியென்னும் மலையும்மலர்ந்து சிறந்தகடம்புவிருட்
சமும் தலத்திற்கலங்காரமாகிய பிரசப்பெயர் வனமும்
கருப்பஞ்சாற்றுச்சுனையும் பரிசுத்தம்பொருந்தி மாதுரி
யந்துடனிருக்கின்றது மேருவுக்குவடதிசையில் குமுத
கிரியென்னும் மலையும் வானமளவுமுயர்ந்த வடவிருட்ச
மென்னும் ஆலமரமும் சர்வதோபதத்திரமென்னும் பூந்
தோட்டமும்நன்னீர்ச்சுனையும் எல்லாத்திசைகளினுமே
ன்பாடாய்விளங்கிக்கொண்டிருக்கின்றதுமேலும் அந்தம
கமேருவானதுபதினாயிரம்யோசனைதூரம்நடுமத்தியிலோ
ங்கி முப்பத்திரண்டுயோசனைதூரம் வானத்திலுயர்ந்துள
ன்பதினாயிரம்யோசனை விசாலம் சுற்றிலும்பருத்து சந்
திரசூரியர்முதலிய கோள்களுக்கு நடுநிலையாய் யிவ்வுல
குக்கு அச்சாணிபோற் பிரகாசித்துக்கொண்டு அநே
கங்கோடிசிகரங்கள் பொருந்தி மூன்றுருவடாகப்பிரிந்து
அயனார்பிடம் - அரியின்பிடம் - ஐமுகனாகிய அரனார்
பிடமாக அமைந்திருப்பதென்று அத்தியாமிகத்திற்சொ
ல்லியவல்லாம் அறிந்துகொள்ளுமரசனே மேலும் அந்
தமகமேருவி னெட்டுத்திக்கிலும் இந்திரன் - அக்கினி
இயமன் - நிருதி - வருணன் - வாயு - குபேரன் - ஈசா
னன் - முதலாகிய அமரர் - சித்தர் - அசுரர் - தைத்தி
யர் - கருடர் - கின்னரர் - கிருதர் - கிம்புருடர் - காந்த
ருவர் - முதலியபேர்களும் தங்களுக்கு நிவாசஸ்தலமாய்
க்ஷேமகூட்டம்போல் விற்றிருப்பார்கள்மேலும் முன்சொ
ல்லிய மகமேருவுக்குக் கிழ்த்திசையில் நிலைபெற்றிருக்கு
ம் மந்தரகிரியென்னும் மலையின்மீது பனைத்துக்கறைத்
துத் தளிர்த்துவிளங்கிய மாமரமானது ஆயிரம்யோசனை
ப்பரப்பும் உயரமுமுடைத்தாயிருக்கின்றது அந்தமாம்ப
ழத்தினின்றும் யிழிந்துவரும் ரசங்களைப்புசித்தபேர்களு
க்கு யிடகலை பின்கலையென்னும் சுவாசமானது பத்து
யோசனைதூரம் பரிமளித்துக் கொண்டிருக்கும் மேற்
சொல்லிய மாம்பழச்சாறனது வழிந்துபோய்ச்சேர்ந்து
நிறைந்து நின்றதைச் சோதகநதியென்று சொல்லுவா
ர்கள் இதல்லாமலும் (இடகலைபின்கலையென்னுஞ் சுவா
சம் பரிமளித்திருப்பதிலென்னபிரயோசனமென்றால்)
சுவாசம் பாழாகிப்போகாமல் நீடித்துப்பாய்வதினால் அ
வர்களுக்குத் தீர்க்காயுளென்றும் அவர்களே நித்தியதத்
துவம் பெற்றவரென்று பெரியோர்சொல்லுவார்கள் இ
தன்றியும் கிழக்குச்சமுத்திரமுதல் மேற்குச்சமுத்திரம்
வரைக்கும் இதன் மத்தியிலிருக்கும் பூமியானது குருக
ண்டம் (ஒன்று) குற்றமற்ற இந்த ஸ்ருங்கமலைக்குத்தெ
ற்குசுவேதமலைக்குவடக்குகிழ்கடல்மேல்கடலுக்குநடுவி
லிராநின்றபூமி இரண்யவருடம்(இரண்டாவது) இந்தச்சு
வேதகிரிக்கும்நீலகிரிக்கும்கிழ்கடலுக்கும்மேல்கடலுக்கு
ம் இடையிலிருக்கும் பூமி கிறமியவருடம் (மூன்றாவது)
இந்தநீலகிரிக்குத் தெற்குமேருவரைக்கு வடக்குமேல் க
டல் கிழ்கடலின்மத்தியிலிருக்கும் பூமி அளாவிரதவருட
ம் (நான்காவது) மேருவரைக்குத் தெற்கு மாலியவான்ப
ர்வதத்திற்குவடக்கு கிழ்கடல்வரைக்கும் பத்திரவருடம்
(ஐந்தாவது) கந்தமாதனத்திற்கு மேற்குமேற்குச்சமுத்தி
ரத்திற்குக் கிழக்குகேதுமால்வருடம் (ஆறாவது நிடதகி
ரிக்குத்தெற்கு ஏமமலைக்குவடக்கு மேல்கடல் கிழ்கடல்
வரைக்குமிருக்கும் பூமி அரிவருடம் (எ-வது) ஏமமலைக்
குத்தெற்கு யிமயமலைக்குவடக்கு கிழ்கடல் மேலகடல
ளவுந் தேவபூமியாகிய கிம்புருடவருடம் (அ-வது) இம
யமலைக்குத்தெற்கு தென்கடலுக்குவடக்கு மேல்கடல் கி
ழ்கடலுக்குநடுவாக நாமிருக்குமிந்தப் பூமியைத்தான் பா
ரதவருடமென்றுசொல்லுவது ஐயா அரசனே இந்தப்ப
டிக்கு நெருப்புப்பொறிபறக்கும் வேலாயுதத்தைத்தாங்
கிய தீரனாகிய அங்கிரிரவரசன்பெற்ற ஒன்பதுபிள்ளை
கள்போல் அரசுசெலுத்திவந்த யிந்தவொன்பதுவருட
த்தையும் நவகண்டமென்றுஞ்சொல்லுவார்கள் இந்தநவ
கண்டத்தின் அகலவிசால அளவையுஞ்சொல்லுகிறேன்
கேளும் அரசர்க்கணியாகிய அரசே நெருங்கியிராநின்ற
மாலியவான் மலைக்கும் கந்தமாதனகிரிக்குமத்தியிலுந் த
னுக்கோடிமுதல் வடகோடிவரையிலும் மூன்றுவருடஞ்
சேர்ந்த இந்தப்பாரதவருடம் முப்பத்துநாலாயிரம்யோச
னைதூரம் அகலநிகளமுடைத்தாயிருக்கின்றது அப்பால்
நிடதகிரிக்கு வடக்குமுதல் நீலகிரிவரையிலும் மூன்றுவ

ருடமிருக்கின்றது ஒவ்வொருவருடம் ஒன்பதினாயிரம் யோசனையகலங்களுமுடையது மேலும் கிடக்கிரிக்குத் தெற்கு முன் வருடமிருக்கின்றது ஒவ்வொருவருடம் ஒன்பதினாயிரம் யோசனை யகலங்களுமுடையது இதல்லாமலும் இந்தப்பாரதவருடத்திற்குச் சிறப்பாகிய ஆறு குலகிரிகளிருக்கின்றன ஒவ்வொருமலைகளின் அகலம் இரண்டாயிரம்யோசனை தூரம் அடிமுதற்சிகரம்வரைக்கும் பதினாயிரம்யோசனை தூரமுயர்ந்திருக்கின்றது ஐயா இப்போது சொல்லிவந்த ஒன்பதுவருடங்களில் எட்டுவருடத்தில் சாரணர்-சித்தர்-கந்திருவர் - வித்தியாதரர்-கிம்புருடர் கின்னரையர் முதலாகியபேர்கள் ஒவ்வொரு வருடத்தில் ஒவ்வொருகுலத்தார் வாசமாயிருப்பார்கள் அப்படியிருந்தபோதிலு மேலாகிய தருமம் அர்ச்சனைபூசை அருந்தவம் இவைமுதலியயாவும் இந்தப்பாரதவருடத்திலிருந்து செய்து தவநிறைவேற்றிக்கொண்டுபோய் தங்கள்தங்கள்பதியிலிருந்து அநுபவித்துக்கொள்ளுவார்கள் அந்த எட்டுவருடத்திலும் சஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கும்படியாகிய பேர்களுக்கு ஆயுசு எவ்வளவென்றால் ஒன்றேகால் ஆயுதமென் றுரைப்பார்கள் ஒன்றேகால் ஆயுதமாவது பன்னீராயிரந் தந்நூறு வயசென்று தெரிந்து கொள்ளும் ஐயனே அப்படியிருக்க இந்தப் பாரதவருடத்தி லிருப்பவர்களுக்குச் சொல்ப ஆயுசு யேற்படுத்தியிருப்பானேனென்றால் மகாவருத்தத் துடன் வாயுவைக்கும்பித்து வாலுனை வளர்த்துக் கொள்ளுவதைப் பார்க்கிலும் இந்த மாம்பழரசத்தைப் புசித்து வாழ்நாளை நீடிக்கச்செய்வதே மேன்மையாதலால் அவடத்தி லிருப்பவர்களுக்கு ஆயுளை விசேஷமாகச் சொல்லியது அப்பால் மேற்கூறிய மகமேருவுக்குத்தென்றிசையில் மேருமந்தரமென்னு மலையிலிடத்துப்-பொருந்திய நாவல்மரமானது இரண்டாயிரம்யோசனைப் பரப்பும் உயரமுடையது அம்மரத்தின் நாவற்கனியானது அயிராவதத்தின் தலையத்தனை பருமனுடைத்தாயிருக்கும் அந்தப்பழம்மைந்துவிழுந்த தேன்கள்போய் நிறைந்துநின்ற நதியைத்தான் ஜம்புநதியென்று சொல்லுவார்கள் அந்த ஜம்புநதியானது மேற்சொல்லிய மகமேருவின் மேலபுறமாகச் சுற்றிக்கொண்டு கிழக்குத்திசையிற் புகுந்து சமுத்திரத்தின் நடுமத்தியிற்போய்ச் சாரும்படியாய்ப் பேரோசை கொண்டோடிவரும் அந்த ஜம்புநதிதோய்ந்த இடங்கள்தோறும் ஒருவரா லெடுக்கப்படாத பொற்பாறைகள் நிறைந்திருக்கும் அந்தப்பாறையாகிய பொன்களினால் ஆபரணங்கள் செய்து தரித்துக்கொண்டாலும் அல்லது அந்தத்தீர்த்தத்தைச் சாப்பிட்டாலும் அவர்களுக்கு நரை-திரை-மூப்புபிணிமுதலிய நாசங்களில்லை மேலும் மகமேருவுக்கு மேற்றிசையிலிருக்குங் கந்தமாதனச் சாரலிற்பொருந்திய கடம்புமரமானது ஆயிரம்யோசனை யகலந்தழைத்துச் செழித்து மலர்கனிநிறைந்து சொரியும்படி யாகிய தேனானது இயாவர்களும் வணங்கும்படிக்கு கடம்பநதியென்னும் பேர்கொண்டிருக்கின்றது அப்படிப்பட்ட நதியில் ஸ்நானஞ்செய்தாலும் தாகத்திற்கருந்தினாலும் நூறுயோசனை தூரம் கலாசமணமுந் தேகமணமுஞ் சூழ்ந்துக்கொண்டிருக்கும் இதன்றியும் மகமேருவுக்கு வடதிசையிலிருக்குஞ்சுவேதகிரிச்சாரலில் நாற்பத்துயோசனை யுயரமும் பருமனும் பரப்புமுடைய ஆலமரமொன்றிருக்கின்றது அதினுடைய கிளைகடோறும் நெருக்கிய கனிகளைப்புசித்தால்-பால்-தயிர் தேன்-நெய்- இவைகளைக்கொடுப்பதல்லாமலும் அழகிய பொன்னுடை இரத்தினாபரணங்கள் முதலிய யாவுங்கொடுத்து ஆற்றைப்போலும் சுரக்கும் ஊற்றைப்போலும் பெருக்கெடுத் தோடிக்கொண்டிருக்கும் இதல்லாமல் பின்னமுஞ் சொல்லுகிறேன் கேளுந் திரிதராஷ்டிர பூபதியே சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்மமாவானவர் பூர்வத்திற்பெற்ற சுவாயம்பு மனுவென்பவர் மேற்சொல்லிய புட்கரத்தீவம் சாகத்தீவம் சான்மலித்தீவம்-கிரவுஞ்சத்தீவம்-கோமேதகத் தீவம்-குசைத்தீவம் ஜம்புத்தீவமென்னும்-சப்த தீவத்தையும் தமது புஜபல பராக்கிரமத்தினாலும் மிகுந்த தவத்தினாலும் ஆண்டுவந்தார் அப்படி அரசுபுரிந்துவருநாளையில் அந்தச் சுவாயம்பு மனுவுக்குநந்தன் - சமித்திரன்-பிரசன் - சர்வதோபத்திரன்-காதிரன்-மனுதாரன்-அங்கிதிரனென்று ஏழுபிள்ளைகள்பிறந்து கல்வியிற்சிறந்து வளர்ந்து கருதலாக்காய்ந்து கடைக்கண்சிவந்து காரியஸ்தரானார்கள் அந்தக்காலத்தில் ஏழுபிள்ளைகளின்திறத்தையுங்கண்டு ஏழுதீவத்தையும் ஒவ்வொருபிள்ளைகளுக் கொன்றாகப் பகுந்து பட்டங்கட்டிவைத்தார் அந்தத் தீவத்தை அந்தப்பிள்ளைகள் அரசாக்ஷி செய்துவந்தார்கள் அந்த ஏழுபிள்ளைகளில் அங்கிதிரனென்பவன் இந்த ஜம்புதீவத்தைச் செங்கோன்முறை குன்றாமல் தருமங்குறையாமல் மலைகளைப் பிளக்கும் வச்சிராயுதமுதலிய ஆயுதங்களை யுடைத்தாய் இராச்சியபரிபாலனஞ் செய்துவருநாளையில் குரு-இரணியன் கிரமியன்-அளாவிரதன்-பத்திரன்-கேதுமாலன் அரிகிம்புருடன்-பாரதனென்று சொல்லும் ஒன்பது பிள்ளைகளைப்பெற்று வளர்த்து இந்த ஜம்புத்தீவத்தை ஒன்பது பங்காக்கி ஒவ்வொரு பிள்ளைகளுக்கு ஒவ்வொருபங்காகப் பட்டங்கட்டி அந்தப் பிள்ளைகள்பேரால் நவகண்டத்திற்குப் பேரு மேர்ப்படுத்திவைத்து பத்தினி புத்திராள் முதலிய பிஷணத்திரையங்களையும் வெறுத்து ஆத்மார்த்தமாகக் கனங்குலவிய வனம்புகுந்து மனங்குவிந்து தவமிருந்து மோட்சவிடடைந்தான் அங்கிதிரனென்னும் அரசன், இப்பால் இந்த ஒன்பதுபிள்ளைகளும் ஒன்பது கூறாகிய கண்டத்தை ஆண்டுவந்தார்கள் அந்த ஒன்பதுகண்டத்தின் அளவையுஞ் சொல்லுகிறேன் கேளும் அரசனேயென்று சஞ்சயன்சொல்லுகின்றான். மலைகள் போலும் அலைகளடிக்கும் வடக்குசமுத்திரத்திற்குத் தெற்காகவும் அணியணியாய் மணிகள் கொழிக்குஞ் சுனைப்பெருக்குடைய ஸ்ருங்கமலைக்கு வடக்காகவு மிருக்கும் இரணியவருடமுதலிய பாரதவருடத்தி லிருப்பவர்க ளெல்லோருஞ் சீக்கிரமத்தில் மோக்ஷமடையும் படிக்கு ஆயுள் நீடித்திருக்கச்செய்யாமல் நூற்றிருபதென்று விதித்திருக்கின்றது அரசனேயென்று சஞ்சயன் சொல்ல திரிதராட்டிரமகாராஜன்கேட்டு சிந்தைகளித்துச் சஞ்சயனைப் பார்த்து மற்ற எட்டுவருடத்திலு மிருப்பவர்கள் யிவடத்-

இல்வந்து தவஞ்செய்து மேன்மைபெறவும் யிவடத்திலிருப்பவர்கள் சீக்கிரமத்திற் கதிசேர்வதற்காக ஆயுட் குறுக்கமென்றுஞ் சொன்னீர் அப்பேர்ப்பட்ட நலத்தைக் கொடுக்கு மகத்துவங்கள் யிந்தப் பாரதவருடத்தில் என்னென்ன விசேஷமிருக்கின்றது அதுகளையுந் தெரிவிக்க வேண்டுமென்று கண்ணில்லா காவலன்கேட்கச் சஞ்சயன் சொல்லுகின்றான் இந்து குலத்திந்திரனே கேளும் அழகிய பொற்றாமரை மலர்களுடனே ஆகாயத்திலின்றிழிந்து மகாமேருவின் சிகரத்திற்பாய்ந்து மூன்று பிரிவாயி அந்தமகாமேருவுக்குச் சமீபமாயிருக்கின்ற சிகரங்களையுடைய கும்பகிரியில் ஒருபிரிவு விழுந்து சிகரத்தைப் பிளந்துவரும் நதியானது நான்கு பிரிவாய்ச் சமுத்திரத்திற் போய்க் கலக்குமென்று சான்றோர் கூறுவார்கள் இப்பால் மகாமேருவுக்குத் தென்புறத்திலிருக்கும் குலகிரியினுடைய சிகரத்தில்விழுந்த ஒருபிரிவானது அம்மலையின்நடுவாகிய வயிற்றைக்கிழித்துப் பெருமைதங்கிய நிலத்தைப் பிளந்து தென்முகமாகத் திரும்பிவராநின்ற கங்கையாறானது இந்தப் பாரதவருடஞ் சிறந்ததென்று சொல்லுவதற்கு சாட்சியாயிருக்கின்றது இதன்றியும் சரஸ்வதி-யமுனை-கோதாவிரி நர்மதை-கௌசிகை துங்கபத்திரை-சரையுநதி-பாலி-பெண்ணை-காவிரி-கிருஷ்ணை-தாம்பிரபரணி கங்கையே முதலாகிய பலதீர்த்தங்களும்பொருந்திய இந்தப் பரதகண்டத்திற்கு ஒப்பாகிய கண்டமும் உண்டோ உத்தமனே, இன்னும் திருக்கோயில் திருவேடகளம்-திருநெல்வாயில் திருக்கழிப்பாலை-திருப்பெருமணம் திருமயேந்திரப்பள்ளி திருமுல்லைவாயில் வடமதுரை தென்மதுரை-காசி-காஞ்சி-மாயாபுரி - துவாரகை - யவந்தி-அயோத்தி திருக்கலிக்காமூர்-திருச்சாய்க் காடு திருப்பல்லவனீச்சுரம்-திருவெண்காடு-கோகர்ணம்-இராமேச்சுரம்-தென்கயிலை-வடவேங்கடம்-திருக்காட்டுப்பள்ளி - திருக்குருகாவூர்-திருக்காழி-திருக்கோலக்கா-அழகிய திருவாரூர்-புள்ளிருக்கும் வேளூர்-திரு ஆவினன்குடி-திருக்கேதாரம்-ஸ்ரீரங்கம்-திருவானைக்கா-திருக்கண்ணார் கோயில்-திருஞாயிறு-திருநின்றயூர்-திருப்புன்கூர் - அன்னியூர்-திருவேள்விக்குடி-சீர்காழி-சிதம்பரம்-சிற்சபை திருக்குடந்தை-ஜகநாதம்-திரிசிரபுரம்-கற்ப சயனம்-குருக்ஷேத்திரம், இவைகள்முதலாகிய திவ்வியஸ்தலங்களுமிருக்கின்றன இந்தப்பதிக்கு ஒப்பாகிய திருப்பதிகள் எப்பாரினுமில்லை அப்பா அதிபதியேகேளும் இப்போது சொல்லிவந்த ஸ்தலவிசேஷங்களினாலும் நதிவிசேஷங் களினாலும் கண்காட்சியாகிய சிறப்பினாலும் தவங்களினாலும் சோடச மகாதானங்களினாலும்சிவார்ச்சனை-விஷ்ணுவார்ச்சனை பூசைகளினாலும் சுசி சுத்தங்களினாலும் சகலவித வளங்கள்முதலிய நலங்களினாலும் இந்தப்பரதகண்டம் புனிதமாகிய விசேஷம்பெற்றது பரத கண்டத்தில் குருக்ஷேத்திரம் மேலாகிய பவித்ரமுடையது அநேகங் கோடி நற்குலத்தவர் நற்குணத்தவரெல்லாரும் நன்மைபெறச் செய்த யாகசாலைகள் கோடாகோடிகளிருக்கின்றன இதல்லாமலும் உத்தமக்ஷத்திய குலபோஜராகிய ராஜர்களெல்லாரும் விரோதத்தாற் பகைமேற் கொண்டு வெற்றிபெறும்படியாய் கருதி யுத்தஞ்செய்த மேலாகியஸ்தலம் இந்தக் குருபூமி இதன்றியும் பரசிராமரானவர் இராஜவம்சத்தைக் கருவறுத்து அவர்கள்தேகத்திலின்று பெருகிய உதிரங்களினால் சிமந்தபஞ்சகமென்னும் தீர்த்தமகத்துவமுண்டாக்கி அந்த ரத்த தீர்த்தத்தில் தன்றந்தைக்குத் திலதற்பணக்கடனைக் கழித்தார் இன்னமும் அநேகந்தகுதியையுடைய பெரியோர்களெல்லாரும் தங்களுக்குரிய கருமமுதலிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். இப்பேர்ப்பட்ட மகத்துவமுடைய அந்தக் குருக்ஷேத்திரம் எவடத்திலிருப்பதென்றால் கல்விவளமுஞ் செல்வவளமுந் தருஞ்சரஸ்வதி நதிக்குத் தெற்கிலிருக்கின்றது அவடத்தில் உன்பிள்ளைகள் நூறுபேரும் பாண்டவர்களும் யுத்தஞ்செய்யப் போகின்றார்கள்; புகழ்பெற்ற புண்ணியனேயென்று சஞ்சயன்சொல்ல திரிதராஷ்டிரமகாராஜன் மகாசந்தோஷத்துடன்கேட்டு சஞ்சயனைநோக்கி சகலமுந்தெரிந்த சாதுசங்காத்தியமுடைய சஞ்சயனே நவகண்டமென்று பிரித்துச்சொல்லி அதினுடைய விசேஷங்களும் இந்தப் பரதகண்டத்தினுடைய மகத்துவங்களும் விசாலமுதலிய தன்மைகளையும் எனக்குச் சொல்லிவந்தனை நானதைப்பூரணமாகத் தெரிந்துக் கொண்டேன் மேற்சொல்லிய ஏழுதீவுகளிலே யிந்த நாவலந்தீவை நீக்கி மற்ற ஆறு தீவுகளின் விபரங்களையுஞ் சொல்லக் கடவையென்று திரிதராஷ்டிரன்கேட்கச் சஞ்சயன்சொல்லத்தொடங்கினான் சேனைமையா ராஜனே முன்சொல்லிவந்த சப்ததீவுகளில் இந்த ஜம்புத்தீவ நீங்க மற்ற ஆறுதீவுகளையும் ஆறுபிள்ளைகள் அரசுசெலுத்தி வந்தார்கள் இந்தத்தீவங்களில் புட்கரமென்னுந் தீவத்தை சர்வதோபத்திரனென்னும் ராஜன் ஆண்டுவந்தான் அவனுக்கு பிராசீனன் சிவேதன் பிரத்தியக்கு உத்தரனென்று நாலுபிள்ளைகள் பிறந்தார்கள் அப்போது தானாண்டுவந்த புட்கரத்தீவத்தைக் கீழ்விதேகம் மேலவிதேசம் வடவிதேகம் தென்விதேகமென்று நாலுகண்டமாக்கி அந்தப்பிள்ளைகள் நால்வருக்குங் கொடுத்தான் அந்த நாலு பிள்ளைகளுந் துரைத்தனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள் குருகுல சிகாமணியாகிய கோவே பிள்ளைகளின் குணங்களையுந் திறங்களையுமறிந்து பூமியைப்பங்கிட்டுக் கொடுத்துவிடுகின்ற தந்தையானவன் எல்லாத்தேவனினு மூதற்றேவன் அப்படிக்குச் செய்யாமலிருந்து அவத்திலிறந்துபோகும்படியாகிய தகப்பன் புத்திர மித்திரர்முதலிய பூமியைக்கெடுக்கும் பகையாகிய கொடும்பாவியென்று இராஜ நீதியிலும் நீதிசாரங்களிலும் சொல்லியிருக்கின்றபடியால் அந்தந்த அரசர்கள் பாபத்திற்குப்பயந்து உடனே பகுந்து கொடுத்துவிட்டார்கள் அந்த நீதிமுதலிய கருமங்களப்படியிருக்க மேற்சொல்லிய ஆறுதீவுகளில் வசித்துவாழ்கின்ற மனிதர்களுக்கு ஆயிரம்வருஷம் ஆயுசென்றும் புட்கரதீவத்தோர் பிர்மாவைப் பூசிப்பார்களென்றும் கிரவுஞ்சத்தீவத்தோர் வருணனைத் தொழுவோரென்றும் பிலக்கத்தீவத்தோர் சூரியனை வணங்குகிறவர்களென்றும் சாகத்தீவத்தோர் வாயுவையாராதிப்பார்களென்றும் சான்மலித்தீவத்தோர் சந்திரனைப் போற்றுவாரென்றும்

குசைத்திவத்தோர் அக்கினியைக்கொண்டாடுவார்களென்றும்நீர்வளம்நெல்வளம்பொருந்தியயிந்த ஜம்புத்திவத்தோர் மேலாகிய விதிமுறைகளுடன் கடவுளைத்தொழுதல் பூசை சத்தியம் சவுசம் ஆசாரம் விபகாரம் ஞானம் இரக்கம் யாகம் ஓமம் ஔபாசனமுதலிய வண்மை வளங்களுடையவர்களென்றும் இவ்வுலகத்தையே தேவபூமியாகச் சொல்லுவார்களென்றுஞ் சஞ்சயன் சொல்ல இதினுடைய தன்மைகளைக்கேட்டு சந்தோஷமடைந்து ஏழுலகம் ஏழென்றுகூறிய கிரமத்தையுஞ் சொல்லென்று திரிதராட்டிரன்கேட்கச் சஞ்சயன் சொல்லத் தொடங்கினான் ஐயா இயாவரும்வணங்கும் இந்தப் பூமியின் சம்பந்தமில்லாமல் அதோமுகத்திற்றாழ்ந்துசென்றால் ஆயிரம் பணாமகுடமுடைய ஆதிசேடனுடன் அட்டகஜங்களுஞ் சூழ்ந்திருக்கும் அப்புவனத்தை நீங்கி அப்பாற்சென்றால் ஒப்பில்லாதபிலங்களாகிய அதலம்-விதலம்-சுதலம்-தராதலம்-ரசாதலம்-மகாதலம்-பாதாளமென்னும் ஏழுலகங்களுமன்றி ஒவ்வொன்று ஒன்பதுலட்சயோசனை விசாலத்தையுடையது இந்தஏழுலகத்தின் கடைசியாகிய பாதாளத்தில் விவேகத்தில்மிகுந்த காண்டவனென்னும் மகானுபாவர் பொருந்தி இருப்பார் அவடநீங்கிச்சென்றால் அள்ளலம் இரௌரவம்கும்பிபாகம்கூடசாலம்செந்துக்கானம் பூதிமாபூதி என்னும் ஏழுநிறையமாகிய நரகபூமி அந்தப்பூமியைநீங்கினால் தேவர்கள்தொழும் உருத்திரசங்கமாகிய சிவபெருமான்களைசர்முதலாகியகூட்டமும் ஆதாரமாகிய ஆமையுமடத்திலிருக்கின்றது அவடம்நீங்கினால் இந்த அண்டத்தில்கீழ்ச்சுவர்தோன்றும் அரசனே இந்தப்பூலோகமுதல் அண்டச்சுவர்வரையிலும் ஐம்பதுகோடியோசனைதூரமென்று பெரியோர்பேசுவார்கள் குருகுலமணிபாகியசாலே இந்தப்பூலோகமுதல்மேலாகிய ஏழுலகத்தின் சிருஞ்சொல்லுகிறேன்கேளும் இறையேயென்று சஞ்சயன்சொல்லுகின்றான் ஐயா இந்த மண்ணுலகத்தில் அளவிறந்தயோனிபேதமாக வாழுமாக்களென்று உணர்ந்திருக்கின்றீரல்லவோ அரசே இவ்வுலகின்மேற் பத்துயோசனைதூரம் வாயுமண்டலம் பதினாயிரயோசனைதூரம்மேகமண்டலம் இதுவரையிலும்பூலோகம் அதன்மேலாகியபுவலோகத்தின் அளவைக்கேளும் புண்ணியனே நலமுடைய கிம்புருடர்பலமுடைய கருடர் விஞ்சையர் இயக்கர் சித்தர் இவர்கண்முதலியபேர்கள்பொருந்திவாழுமுலகம் அதன்மேல் ஆகாயகங்கை செல்லுகின்றது அப்பால் லட்சயோசனைதூரம் சூரியமண்டலம் அதுவேமுப்பத்துமுக்கோடி தேவர்களும் வழிகூட்டி நடக்க மண்டலவீதியாயிருக்கும் அதற்குமேல் லட்சயோசனைதூரத்திற்சந்திரமண்டலம் அதன்மேல் ஒருயோசனைதூரத்திற்கப்பால் லட்சயோசனைதூரம் நட்சத்திரமண்டலம் அதன்மேல் இரண்டுலட்சயோசனைதூரம் புதனுடையமண்டலம் அப்பால் இரண்டுலட்சயோசனைதூரம் சுக்கிரமண்டலம் அதன்மேல் இரண்டுலட்சயோசனைதூரம் அங்காரகனாகிய செவ்வாய்மண்டலம் அப்பால் இரண்டுலட்சயோசனைதூரம் குருமண்டலம் அப்பால் இரண்டுலட்சயோசனைதூரம் சனிமண்டலம் அதன்மேல் லட்சயோசனைதூரந் தவத்தையுடைய சப்தரிஷிகள்மண்டலம் அப்பால் லட்சயோசனைதூரம் துருவமண்டலம் இதுவரையிலும் பதினைந்துலட்சயோசனைதூரம்தொகையினையுடையது புவலோகம் கேளுந் திருதராஷ்டிரபூபதியே இதன்மேலாகிய சுவலோகமென்பது எண்பத்தைந்து லட்சயோசனைதூரமுமுடையது அதற்கப்பால் மகாலோகம் இருநூறுலட்சயோசனைதூரமுடையது அதைத்தான் தேவேந்திரன்வாழுந் தேவலோகமென்று சொல்லுவார்களிவ்விடத்தில்மார்க்கண்டேயர் முதலாகிய மகாமுனிவர்களெல்லாரும் வீற்றிருப்பார்கள் அதற்குமேல் எட்டுக்கோடியோசனைதூரமுடையது சனலோகம் அவடத்திற்பிதிர்த்தேவதைக்கண்முதலிய புண்ணியரும்பொருந்தி வாழ்வார்கள் அந்தசனலோகத்தின்மீது பன்னிரண்டுகோடியோசனைதூரமுடையது தவலோகம் அவ்வுலகத்தில் சனக-சநந்த-சனர்க்குமார-சநார்த்தனர் முதலியபேரும் வாழ்வார்கள் இந்தத்தவலோகத்தின்மேல் சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மதேவர்வாழும்சத்தியலோகம் அஃதுபதினான்குகோடியோசனைதூரமுடையது இந்தச்சத்தியலோகம்வரைக்கும் புத்திமான்கள்சொல்லிய ஏழுலகமென்றுணரக்கடவை, இந்தச்சத்தியலோகத்தின்மேல் பிர்மபதமென்பது மூன்றுகோடியோசனைதூரமுடையது பரிமளங்கொண்ட துளவணிமாயன் பொருந்தியபதம் மூன்றுகோடியோசனைதூரமுடையது சிவபெருமான்பொருந்தியசிவலோகம் நான்குகோடியோசனைதூரமுடையது அதன்மேல் ஒருகோடியோசனைதூரத்தில்குற்றமற்ற அண்டச்சுவர்வட்டங் கவிந்திருக்கின்றது இந்தப்பிரகாரம் வேதவியாசருடைய அனுக்கிரகத்தால் வேதபுங்கவர்களாகியமுனிபீஸ்வரர்கள்சொல்லியிருக்கின்றநூன்முறையின்படி இராஜேஸ்வரனாகியவுமக்குச்சொன்னேன் இதல்லாமல் நூற்றெட்டு உருத்திரர்கள்வாழும் புவனங்களும் சமுத்திரமத்தியிலிராநின்ற இலங்கையேமுதலிய திவங்களும் பற்பலவாக இம்மேதினியி லிருக்கின்றன மேலும்நெருங்கியமலையருவி பெருகிவராநின்ற ஏமகூடத்திற்குத்தெற்காகவும் இமயமலைக்குவடக்காகவும்மிருக்கின்ற கிம்புருடவருடத்தில் பரமசிவனெழுந்தருளிய கயிலையங்கிரியிருக்கின்றது அந்தக்கயிலையங்கிரியினிடத்தில் அர்ச்சுனன்சென்று அரியதவத்தினின்று உமாமகேஸ்வரரருளினால் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம்பெற்றான் இப்போது நான்சொல்லிவந்த இந்த அண்டத்தை வளைந்துக்கொண்டிருக்கும் சக்கிரவாளகிரியின் எட்டுத்திக்கிலும் இந்திரன்-அக்கினி-இயமன்-நிருதி-வருணன்-வாயு-குபேரன் ஈசானன் - என்றுசொல்லுகின்ற திக்குப்பாலர்களும் இவர்கள்பொருந்தியிருக்கும் பட்டணங்களுமுண்டு ஆகையால் இப்போது நாமிருக்கும் யிந்தப்பூலோகமுதற்கொண்டு நான்சொல்லிக்கொண்டுவந்த அண்டகோளகையளவும் பஞ்சாசதகோடியோசனையளவென்றுபண்ணவர்பகர்ந்திருக்கின்றார்கள் பார்த்திவனேயென்று சஞ்சயன்சொல்லிக்கொண்டுவந்தபோதுஇருகண்ணுமற்றஇறைவன் அகமகிழ்ந்து அதிசயமுற்று ஆலிங்கனமாக அணைத்துக்கொண்டு அருணிறைந்த வேதவியாசர் அநுக்கிரக

ந்துசெய்தவரத்தினுல் இந்த அண்டத்தினியற்கை முழுமையுமுணர்ந்து இரண்டுகண்ணும் ஞானக்கண்ணு முடையவர்கள் அறிந்துகொள்வதைப்போல் இயான்தெரிந்துகொள்ளும்படியாய் எனக்குத்தெரிவித்தனே ஐயனே இனிமேல் குருக்ஷேத்திரத்திற்குச்சென்று அவ்விடத்தில இருதிறவர்களும் யுத்தஞ்செய்யுமுறைமைகளும் அவர்களின்நினைப்பும் அவர்களின்கலப்பும் யாவுமுணர்ந்து எனக்குச்சொல்லவேண்டியதென்று விடைகொடுக்க அப்படியேமகாபாக்கியமென்று செலவுபெற்றுக்கொண்டு யுத்தபூமிக்குப்போய் இரண்டுபிரிவாகயேர்ப்படுத்தி அணிவகுத்திருந்த சேனுசமினியங்களை ஆகாயவீதியிற்சுழன்று சுற்றிப்பார்த்துதிடுக்கிட்டு பித்தப்பிர்மைகொண்டு இந்தச்சேனைகளை யெவ்வளவென்று வகுத்துச்சொல்லுவோமென்றேங்கி சொல்லுதற்கரிய யேழுமேகங்களும் யானைகளாக உருவெடுத்துவந்ததோ உலகிலுள்ளமலைகளெல்லாம் தேர்க்கூட்டங்களாக உதித்து உருண்டுவந்ததோசமுத்திரத்தின் அலைகளெல்லாங் குதிரையினங்களாகச்சமைந்ததோ பிர்மசிருஷ்டியிலடங்கிய வுயிர்வகைகளெல்லாம் கால்பலங்களாயுற்றதோ இவைகளையெவ்வகையாக அறியத்தக்கதென்று பெருமூச்சுவிட்டு இந்த நால்வகைச்சேனைகளில்யானைக்கூட்டங்களதிகமோதேரினங்கள்மிகுதியோ குதிரைக்கும்புகளதிகமோபதாதிகள்மிகுதியோ அந்தப்பதாதிகளில் வில்லாளிகள் மிச்சமோ வேலாளிகள்மிச்சமோ வாளாளிகளதிகமோகதையாளிகளதிகமோ இதினுடையமிகுதியையெப்படிவகுத்துச்சொல்லுவோமென்று மனங்கூசி ஐயோ இத்தனைகோடி சேனைகளும் இந்தப்பூமியில் இறந்துபோவதற்கு ஈஸ்வரனுடைய அமைப்பிருந்ததல்லவாவென்று இரங்கி அப்படியெல்லாரும் ஏககாலத்தில்மடியும்படியாயிருக்குமா அந்தப்படி அடங்கலுமடிந்துபோவதற்குக்காரணம்காரியமெதுவென்றுநமக்குள்ளே நாம் சற்றுயோசித்துப் பார்க்கவேணுமென்று நிதானித்து யிதற்குக்காரணமாகயிருக்கின்றவர் ஸ்ரீகண்ணனே காரியமாகயிருக்கிறவர் துரியோதனராஜனே ஆகையால் இந்தயிரண்டுபேர்களாலே யிந்தத்தளங்களெல்லாம்மடிந்துபோம்இத்தனைகோடிசேனைகளுக்கும் இவர்களே எமனுக யேர்ப்பட்டிருக்கின்ருர்களென்று சிந்தித்து சுவாமி ஸ்ரீமந்நாராயண அரிவாசுதேவ பக்தவற்சலபரந்தாம பரமபதநாதனேவேதபோதனே கமலபாதனே நவநீதசூதனே ஆதிமூலவஸ்தனே தேவரீர் திருப்பாற்கடலைவிட் டெழுந்தருளிய வேலை நிறைவேறும்படியாகிய காலமிதுவோவென்றேற்றி வந்தித்துவாழ்த்தி கருணையங்கடலேயென்றுபோற்றிப்புகழ்ந்து இவ்விருதிறப்படைகளிலேயும் நாட்டியிருக்கும்பெரியகொடிகளும் கையிற்பிடித்து நீட்டியிருக்குஞ் சிறியகொடிகளும் இடிக்குமேகங்களைப் படபடவென்றடித்துத்துரத்திஉடைச்சல்கொண்டு ஆகாயகங்கையில்வீழ்ந்து சலத்தையுறிஞ்சிக்குடித்து காற்றினல்மழைகளைத் தூற்றுவதைப்போலும் அந்தத்தூறல்களைப் பூமியில்விடவொட்டாமற்றடுக்க விரித்திருப்பதுபோலிருக்கும் சிறியகுடைகளும் பெரியகுடைகளும் நிறைந்திருக்கவும் நால்வகைச்சேனைகள் முழங்கும்படியாகியவோசையும் ஓசைப்படும்சர்வாத்தியங்களின்முழக்கமும் ஆயுதங்களுடனுயுதங்களுரைபடும்பேரொலியும் அனற்பொறியும் வீஷ்டுமர்முதலிய வீராதிவீரர்கள் வில்வளைக்குநாணெலியும் ஆகர்ணபரியந்தமிழுத்துவிடும் ஷ்டங்காரமும் அவர்களின் சிங்காரவீரஒங்காரமும் பாணசிங்காரமும் அதிரதர் ஊதும் ஆண்சங்கினேசையும் மகாரதர் ஊதும் பெண்சங்குமுழக்கமும் சமரதர்முழக்கும் ஸ்ருங்கநாதவோசையும்அர்த்தரதர்முழக்குஞ் சுரிமுகமுழக்கமும் ஒரேமுகூர்த்தத்தில் முழங்கியபோது திக்குகளெட்டுந்திடுக்கிடப்பட்டும் திசையானைகளெட்டும் திக்குமுக்கிட்டும்செவிடுகள்பட்டும் திரையோசைகெட்டுத் தியங்கும்படியாய்ச் சேனைகணெருங்கியிருக்கிற குருக்ஷேத்திரத்தைக்கண்டு திரிதராஷ்டிரனுக்குத்தெரிவித்து இனிமேல்நடக்கும் யுத்தமுதலிய வதிசயங்களையுமறிந்துகொண்டுவருகிறேனென்று செலவுபெற்றுக்கொண்டு யுத்தபூமியில்வந்திருந்தான்சித்தசுத்தியையுடைய சஞ்சயன்.

பகவற்கீதை.

இப்பால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் கால்களுக்குச்சல்லடந்தொடுத்து கச்சைகட்டி கபாயணிந்து சிரமுடிதரித்து சிந்தைகளித்து பார்த்தசாரதியாய் மூர்த்தண்யத்துடன் இரதத்தைக்கொண்டுவந்துநிறுத்திஅர்ச்சுனனையேற்றிக்கொண்டு இருதிறச்சேனைகளையும்பார்த்துக்கொண்டுவரும்போது வீஷ்டுமர் துரோணச்சாரியர் கிருபாச்சாரியர் அசுவத்தாமர் துரியோதனுதியராகிய சகோதராள்புத்ரமித்ராள் படைத்துணைகூடிவந்த பார்த்திவர்கள் நம்மைநம்பிப் பிழைக்கும்படியாயிருக்கிறவீரர்கள் ஏழைகளாகிய சேவகாள் இவர்களெல்லாரையுங்கண்டு ஐயோ இவர்களைக்கொன்று எமலோகமனுப்பிவிட்டுஅப்பால்பிணந்தின்றபெரும்பூச்சிபோல்யிந்தப்பூமியையாண்டுகடைசியில்பாண்டவர் மாண்டுபோனர்களென்று வசைமொழிபெறுவதிலும் இச்சைநீக்கிலச்சைவிடுத்துக் கொச்சையர்போலப் பிச்சையெடுத்துண்பதே பெருவாழ்வு என் மச்சினனாகிய அச்சுதனே நாங்களேவரும்பிழைக்கவேண்டி அளவிறந்தபேர்களையுங்கொன்று அரசாட்சிபுரிந்து அன்னமும்பாலுமுண்டுஜாண்வயிறுவளர்க்குந்தன்மை எத்தன்மையென்னில் பெரியோர்முதலிய உரியோருடையரத்தத்திற்குழைத்த அன்னங்களுண்டு வாணுள்வளர்க்குமகாபாவிகளுள் யெங்களைவிடவேறொருவருண்டோ ஈசனே இப்படியேவாணுள்வளர்த்தபோதிலும் எத்தனைநாளைக்கிருந்து வாழப்போறோம் பனிப்பெருகில் கப்பலைநடத்தும்பான்மைபோலொத்த தேகத்தைநம்பி நீண்டபுகழினையுடைய துரோணச்சாரியர் வீஷ்டுமரென்னும் ஆண்டவர்களெல்லாரு மாண்டுபோகச்செய்தார்கள் பாண்டவர்களென்னும் பழிச்சொல்லைப்பெற்று பாவிகளாவதிலும் பழயபடிக்குக்காடேநாடாகவும் அவடத்திலிருந்து வாடாமல் வதங்காமற் திரும்பாமற் காலங்கழிக்குமிடமே கடவுள்பொருந்திய மோக்ஷவீடாகக்கருதிப்போய்விடுவதே வுத்தமம்காரியாகாரியந்தெரியாமற் காலநுட்பமுணராமல் முன்பின்னெண்ணிப்பாராமல் புத்

தியில்லாமல் யுத்தஞ்செய்ய வந்தோமென்று மனநொந்
து மெத்தவுநைந்து மனநடுங்க மதிமயங்க மயிர்க்கூ
ச்செறிய வியர்வைவழிய கரங்களுங் கால்களுந் தோள்
களும் வாடக்கையில்லுந் சோரக்கண்ணீர்ததும்ப தே
ரின்மிது மூர்ச்சையாகச் சோர்ந்துவிழ்ந்து - தியங்கி ம
யங்கிய திடகாத்திரதேகதீர வீரப்பிரதாபசூர சிலைமா
னுகிய விஜயனைத் தேவகிநந்தனன் திருக்கண்களாற் பார்
த்துநகைத்து - எப்பேர்ப்பட்டவர்களாலும் அறியக்கூ
டாது நமது மாயையை இன்னதென்று இந்த அர்ச்சு
னன் அறியத்தக்கதோ சிறிதேனும் அறியமாட்டான்
ஆகையால் பேச்சில்லாமல்மூச்சொடுங்கி மூர்ச்சைபோ
யினன் இவனையிப்போதே தேற்றவேணுமென்று திருவு
ளத்திலெண்ணித்தமதுகரங்களினுல்அர்ச்சுனனைவாரியெ
டுத்துமார்போடணைத்துஆலவட்டமுதலியவுபசாரங்களி
னுல்மூர்ச்சைதெளிவித்து அர்ச்சுனுவென்றழைத்தார் அ
ந்தக்கிருஷ்ணபகவானுடைய வாக்கியமாகிய அமுதம்விச
யன் காதிற்புகுந்தவுடனே விடாய் நீங்கி விழிப்பவனைப்
போற் கண்விழித்துப் பார்த்து நாவிற்சலமூறி நல்லுணர்
வுடனே தெளி நாரணனைத்தொழுது தானே காரணனெ
ன்றழுது சொல்லத்தொடங்கினுன். நரனுனவன், ஓ? ஆ
பத்பாந்தவாகிய ஐயனே என் கண்களிருண்டுது கருத்த
ழிவுற்றது கால்கைநடுக்குது - கண்ணீர் பெருகுது-இரக்
கமுந்-தயையும் இப்போது தோணுது எண்ணுதமென்
னுது-என்மனங்குன்றுது-என்னை யிவ்விடத்தில் நிறுத்தி
வைக்காமற் பாசறைக்குக் கொண்டுபோம் பரமனே யெ
ன்று பரிதாபமாய்ப் பற்குணன்சொல்ல அந்தவார்த்தை
யை வாசுதேவன்கேட்டு புன்னகையுடையவராய் என்ன
அர்ச்சுனு உனக்கிப்போது கண்டிருக்குந்துகிலானது-தே
கத்தோடொத்தவியாதியோ அல்லது தேசத்தோடொத்
த பாசபந்தஉபாதியோ இதென்ன ஆச்சரியம் காண்டீப
னே அல்லது இன்னமும் வேறென்று நினைக்கின்றேன்
அதென்ன வென்றுல் அங்கதேசாதிபதியாகிய கர்னன்
உன்தலையை வாங்குகிறேனென்று அடிநாளையிற் சபதம்
பண்ணி இருப்பதல்லாமலும் உனக்குப்பகையாகிய அச்
சுவசேனனென்னும் பெரும்பாம்பை ஆதரித்து வளர்த்
துக்கொண்டு வந்திருக்கின்றுனே அந்தக்கர்னனையும் அ
வனிடத்திலிருக்கின்ற ஆலகால விஷத்தையுடைய நாகா
ஸ்திரத்தையுங்கண்டு ஐயோ ? நம்மைக் கொல்லுமேயெ
ன்று பிராணபீதிகொண்டு பயப்பட்டாயோ பார்த்தனே
மேலும் அறுபதினுயிரம் வெண்கலரதக்காரரென்று வந்
திருக்கின்ற சம்சப்தகாளென்னும் அரக்கர்கள் மிகுந்தப
லசாலிகளும் தவமுதலியதிற் சிறந்த யோகசாலிகளுமா
கிய பேர்களைக்கண்டு மூர்ச்சைபோனையோ அதன்றியும்
சகஸ்திரவாகுவென்று சொல்லும்படியாகிய தானவர்-சி
ரேஷ்டன்-சகலநலமும் சர்வபலமும் தனக்கெதிரற்றவர
மும் பெற்ற அடலாயிரபாகுவைக்கண்டு அடங்கியொடு
ங்கினையோ அர்ச்சுனு அதன்றியும் சந்திரஜடாமண்டல
தாரியாகிய சதாசிவத்தியான மோனமந்திரத்தை அநுச
ரித்துத் தவமிழைத்துச் சிவபெருமானிடத்தில் வாளாயு
தமும் ஜெயம்பெறவரமும் பெற்று வந்திருக்கின்ற சிந்து
தேசாதிபதியாகியசெயித்திரதனைக்கண்டுசண்டை செய்ய
ப்பயங்கொண்டு அண்டையிலிருக்கிறநான் உறுதி சொல்
லி யுத்தம்பண்ணச் சொல்லுவேனென்று நடுங்கி நாவற
ண்டு நாபிவறண்டு மூர்ச்சைபோய் விழுந்தாயோ நரனே
அல்லது தாஷ்டிகராகிய வீஷ்டுமர் சேனுதிபதித்தனத்
திற்குவந்து நிற்கின்றுரோ இவரை நாம் எந்தக்காலத்தில்
வெல்லுவதென்றிளைத்து யேங்கினையோவென்று ஸ்ரீகிரு
ஷ்ணமூர்த்தி யிஷ்டமுடையவராய்க் கேட்க பாராளவே
ணுமென்னு மிஷ்டமில்லாமற் பரிதாபத்துடன் மனவெ
றுப்புக்கொண்டிருக்குஞ் சவ்யசாசிக்குக் கோபம்பிறந்து
கண்கள்சிவந்து மாலைகள்கருகி சருகாகவும் வியர்வோட
வும் பெருமூச்செறிந்து சற்றுநிதானித்துக் கிர்ஷ்ணமூர்
த்தியைப்பார்த்து என்குலதெய்வமே தேவரின்னசொ
ன்னீர் என்னசொன்னீர் பளா பளா வெகுநேர்த்தியென்
று யாவருந்திடுக்கிடநகைத்து ஐயனே என்னுடைய அ
ருமை பெருமையாவுந் தெரிந்த அத்தனே, பரிசுத்தனே
தேவரீருடைய சித்தம் இப்படிப் போவதற்கு யிஷ்டங்
கொண்டிருக்குமாகில் நான் செய்யலாவதென்ன ஆகினு
ம் இறந்துபோவோ மென்னுங் கவலையெனக் கெள்ளள
வேணுமில்லை யானைக்குச் சிங்கமிளைக்குமாகில் ஆடரவுக்
குக் கருடனஞ்சுமாகில் ஆட்டைக்கண்டு பெரும்புலி அ
லறுமாகில் ஆய்ந்து நன்றூலுணர்ந்த மேலோர் அசத்தி
யவாக்கியக் குடியருக்கு அஞ்சுவாராகில் அழியாப்பொ
ருள்பெற்ற ஸ்ரீ மந்தர் அழிந்து போகும் அல்பமாகிய
ப் பொருளைக்கண்டு தண்தெரியாமல் அலையுங் கடையரு
க்கு அஞ்சுவார்களாகில் நானுமிந்தச் சத்துருக்களைக் க
ண்டு பயப்படவேண்டியதாயிருக்கும் தேவாதி தேவனுகி
ய தேவனே உத்தமகுலத் திரியர்களுக்கு ஞானம்-தவம்
விரதம்- கருமமுதலியவைகளைச்செய்து காலம் போக்கு
வது உத்தமம் அப்படிக்கில்லாமல் வெகுளிமேற்கொ
ண்டு யுத்தந்தொடுத்து பகைவனைவென்று பாராளுகை
ப்பது அஞ்ஞானமென்றறிந்தேன் ஐயனே அநுநிற்க இ
ந்தக் கர்மபூமியிற் றேன்றிய தெல்லாம் மாண்டு போம்
பொருளேயல்லது வேறில்லை மேலும் தோல்த் துருத்தி
போலும் சூத்திரப்பொம்மைபோலும் விளங்குகின்றதே
கம் இது எத்தனைநாளைக் கிருந்தாலும் இறப்பதே யல்ல
து இறவாமலிருக்குஞ் சிறப்பொன்றில்லையே ஈசனே இ
ன்றையத்தினம் நான் இந்த ரணக்களத்திற்குவரவும் வெ
கு ஜனங்களைப் பார்க்கவும் இவ்வளவுபேரு மடிந்த அன்
றைக்கல்லவோ நமக்குச் செயம்வருமென்று மிவர்களைக்
கொல்லாவிட்டால் நமக்கு அபஜெயம்வருமென்றும் நா
மே கொல்லுவோமென்பதற்கு சாட்சியென்ன வென்று
ம் இவர்களெல்லாரையு மடித்து கரத்திற் செங்கோற் பி
டித்து மண்ணை யாளலாமென்று நம்பிவந்த நாமிறந்து
போனல் என்னலாபமென்றும் கானலைநீரென்று கருதி
அலையுங் கலையினத்தைப் போலாகுமே யென்றும் நாம்
வெற்றிபெற் றிருந்தாலும் விரம் விட்டிறந்தாலும் பாரு
ள்ளவரைக்கும் பழியும் பாவமும்வளருமேயென்றும் இ
ப்பேர்ப்பட்ட கருமவினைக் கிடாகாமல் தருமவினையை
அநுசரித்துப் பெருமைதங்கிய வனத்திற் சென்று அரு

மையாகிய தவத்தினின்று காலங்கழிப்பதே நற்காரியமெ ன்றுங் கருதினேன் உடனே இரக்கமும் அதைரியமும் உறக்கமும் மனமடிவுமேலிட்டு வருந்தச்சோர்ந்து விழுந் துவிட்டேன் மாதவனே தேவரீருடைய சித்தமெப்படி யோ நானறியேனென்று அர்ச்சுனன் தேம்பிச்சொல்ல அந்தவார்த்தைகளை யெல்லாம் அரிவாசுதேவன்கேட்டு அகமகிழ்ந்து தமது திருக்கரத்தால் அர்ச்சுனனைச் சேர் த்துத் தழுவியெடுத்து அணைத்து ஆதரித்துத்தேற்றி சிந் தை தெளியச்செய்து நீர்கொண்ட சந்தேக நீங்கும் படி யாய்ச் சொல்லுகிறேன் பயமகற்றி பராமுக மில்லாமற் பக்ஷமாய்க்கேளும பார்த்தனேயென்று பரந்தாமன்சொ ல்லத் தொடங்கினார் பாரமார்த்திய ஞானிய பற்குணனே கேளும் மித்துருவென்றும் சத்துருவென்றும் சுசனங்க ளென்றும் வெகுசனங்க ளென்றும் பாட்டனென்றும் ஆசாரியனென்றும்பீஷனென்றும்தமையன் தம்பிமார்களெ ன்றும் புத்திரவர்க்க மென்றும் மச்சானென்றும் மாம னென்றும் சாகத்தக்கபேரென்றும் கொல்லத்தக்க பே ரென்றும் ஊழ்வினைப் பயனைத்தள்ளிப் போகத்தக்க பே ரென்றும் உன்மனத்துட் கொள்ளத் தக்கதொன் றில்லை விருேறிய ஆசாபாசங்களினால் இவர்களெல்லாரையும் எ ப்படிகொல்லத் துணிவோமென்று கொன்றால் பாவமு ம் பழியும் நமக்குச் சுமையாகுமேயென்று நீயேன்மயங் குகிறாய் மன்னவனே சுமைதாங்கி ஆயந்தீர்க்கப் போகிற துமில்லை சுவரிலெழுதிய, சுந்தரச் சித்திரங் காக்கப்போ கிறது மில்லை அப்படியே, உன்னாற் சிலதாகிறதும் உன் னாற் சிலர்சாகிறதும் நீ சிலரைக்கொல்லுகிறதும், நீ சில ரை வெல்லுகிறதுமாயிருக்குமென்று யோசிப்பை யாகி ல் மற்றக்காரியங்களெல்லாம் உன்னால் நடத்திக் கொள் ளலாமல்லவா அர்ச்சுனா அப்படி யெல்லாம் நடத்த வல் லவனாகயிருப்பையாகில்முன்னால்நடந்தகாரியங்களையோ சித்துப் பார்க்கவேண்டிய தல்லவா இப்போதாகிலு மு னக்குத்தெரியவில்லையா அப்பனே ஒரு காரியத்தை மு டிப்பவனார் முடியத்தக்கதுயாது கொல்லுகிறவனார் கொ ல்லப்படுவதுயாது எது சாகத்தக்கது எதுசாகாமற்போ கத்தக்கது எவர்களுறவினர் எவர்கள்பகைவர் இஷ்டரா வர்கள் துஷ்டரெவர்கள் சவுக்கியமேது அசவுக்கியமே து நன்மையேது தீமையேது அர்ச்சுனா இயான்சொல்லு வதைச் சுருக்கமாகக் கேட்கக்கடவை அஃதாவது இவ்வு லகத்தில் நாமரூபங்களாகப் பேசப்படும் பொருள்களெ துவோ அவைகளுக்கெல்லாம் பழமையா யிருக்கும்படி யாகிய ஆதியை எங்கும் பரிபூரணமா யிருப்பதை ஒப்பி ல்லாத் தன்மையுடையதை நித்திய தத்துவத்தை நின்ம லத்தை நிர்விஷயத்தை நிலைபெற் றிருக்கும் பேற்றை ஐம்புலன்களாலும் அறியப்படாத நுட்பமாகிய அறிவை தனைத் தானாயிருக்குந் தத்துவ சொருபத்தை இன்ன தென்றுணராமற் சண்டைசெய்கின்றதனால் இறந்துபோ மென்று நினைத்து வருந்துகின்றனை அர்ச்சுனா எது இற க்கத்தக்கதென்று இஷ்டராகிய ஸ்ரீகிருஷ்ணர்கேட்க அ ர்ச்சுனன் சொல்லுகின்றான் சுவாமி தேவரீர் சொல்லிவ ந்த வஸ்துவானது எப்பேர்ப்பட்டதொரு பெயரைப் பெற்று

தோ அப்போதே பலவித துன்பங்களினாலும் அதற்குக் கேடுண்டல்லவா என்று கிரீடிகேட்க கண்ணன்சொல்லு கின்றார் கீர்த்தி கொண்ட பார்த்தனே நீர்கேட்ட கேள் விஞாயமே ஆகிலும் நான் சொல்லப்போகிற பொருள் எப்பேர்ப்பட்டதென்றால் யுகாந்த காலாக்கினியினாலும் வேகாது பிரசண்ட மாருதத்தாலும் கலங்காது ஏழுகட லும் பொங்கிவழியுஞ் சலப்பிரளயத்தாலு மிரக்காது ஆ திசேடனுடைய பணாமுடியிடிய யிடிக்கும் பேரிடியினா லும் உடைபடாது ஒரு பொருளையும்விட்டு நீங்காது உ ருவென்பதுவும், அருவென்பதுவும், ஒளியென்பதுவும் வெளியென்பதுவும், உளதென்பதுவும், இலதென்பது வும் அற்று, பேரறிவின்பெயரைத்தாங்கி எங்குந்தன்மய மாய் எவற்றிலுந் தானாயிருக்கும் வடிவாகிய ஆன்மாவெ ன்னும் அழியாத வஸ்துவை நீ கைக்கொண்ட அல்ப்ப ஆயுதங்களால் மடியச்செய்யுந் தன்மை உன்னிடத்தி லு ண்டோ வாசவன் மகனேயென்று கேசவன்சொல்ல அ ந்தவார்த்தையைக்கேட்டு விஜயன் சொல்லுகின்றான் ஓ சு வாமி தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய ஜீவான்மா வெ ன்னும் வஸ்துவானது அழிவில்லாதது என்றால் உயிர்போ ய் விட்டதென்று உலகத்தார் சொல்லுகின் றார்களே அ ந்த உயிர் நீங்கிப் போவானேன் அழிவில்லாத ஆன்மா வைத்தாங்கிய உடலுக்கு அழிவு வருவானேன் இந்த ஸ் தூலதேகத்தை விட்டுநீங்கிய வுயிர் எவ்விடஞ்சேரும் அ தை அடியேனுக்குக் கட்டளையிடு மென்று காண்டீபன் கேட்க கண்ணன்சொல்லுகின்றார் கேளும் அர்ச்சுனா இ வ்வுலகிலுற்ற மானிடர்கள் தேகாபிமான அலங்காரங்க ளுக்காக உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்கள் அழுக்கடை ந்துக் கந்தையாய்ப்போகுமாகில் பற்பலதினுசாகிய புது வஸ்திரத்தைத் தரித்துப் போர்த்துக் கொள்ளு வதைப் போல் இந்த ஸ்தூல தேகமானது வியாதிமுதலிய போ காதிகளால் நொந்து நீங்கிவிட்டால் புதிதாகிய இன்னொ ரு தேகத்திற்புகுந்து விளையாடிக்கொண்டிருந்து அந்தத் தேகம் அகந்தையினாற் கந்தையானால் இன்னொருதேகத் தினுழைந்து கூத்தாடிக்கொண்டிருக்கும் அப்பனே இயா வருஞ் சிந்திக்கும்படியாகிய உலகநிறைந்த உண்மைப் பொருளுக்கு ஒருக்காலும் அழிவில்லை, உடலுக்குமாத் திரம் அழிவுண்டென்று மாதவனுரைக்க, அருச்சுனன் கேட்டுமனமகிழ்ந்து நாதனே அகப்பற்றுபுறப்பற்றும் ந ல்வினைதீவினையும், ஷட்கர்மமும் உயிர்க்குரியதா அல்ல து உடற்குரியதா வென்றுதனஞ்சயன்கேட்கப் பரந்தாம ன்சொல்லுகின்றார் அப்பனே நீயென்பதும் நானென்ப தும் உன்னுடையதென்பதும் என்னுடையதென்பதும் உன்னாலென்பதும் என்னாலென்பதும் இரண்டுவினையும் ஆறுவிதக்கருமமும் உடலுக்கேயன்றி உயிருக்கொன்று மில்லை யென்றுரைத்துமேலுஞ்சொல்லுகின்றார் காண் டீபனே கேளும் இவ்வுலகத்திற் பிள்ளையை ஆர்பெற்றா ர்கள் அந்தப்பிள்ளைக்குத்தனுகரணபுவனபோகாதிமுதலி யசெயல்கள் எவரால்நேரிட்டதுஎவர்பெற்றுக்கொண்டா ர்கள் எவரென்னும் அவர்பிரிந்தால் அவர்எந்தயிடத்திற் போய்பொருந்திருப்பார் இதுகளினுடைய காரியங்கள்

முன்னுந்தெரியார் இனிபின்நடக்கப்போகிறசெயலுந்தெ
ரியார் ஆதியும்அந்தமுந்தெரியாமல்மத்தியில் தாமுயன்ற
முயற்சியின்படிதானேதகப்பன்தாயென்றும் தனக்கவன்
பிள்ளை யென்றும் நினைத்துக்கொண்டேயிருந்தவர்கள்தா
மிறந்துபோனால் இந்தப்பூமியில்விழுந்துதுக்கத்தைஅநு
பவித்துவருந்துவோர்களியார் எங்களுக்குச்சொந்தமெ
ன்று ஏன்மயங்கவேண்டும் ஒருவருக்குமொன்றுமில்லை
அருச்சுனுப்ராரத்வ வினைப்போகத்துக் கிடாய்ப்பிறக்கு
ம்படி யானது உடல் அந்த உடலிற் கடா காசம்போற்
றோன்றிக்கொண் டிருக்கின்றது உயிர், அதாவது, ஆ
காயத்திலுதித்த ஒருசூரியன் தண்ணீர்க்குடங்கள் தோ
றும் பல சூரியனாகக் காணப்படு மாப்போல் சொரூப
மாகிய ஜீவான்மா வென்று பலதேகங்க டோறும் ப்ர
தி பலித்துக்கொண் டிலவுகின்றது என்று உத்தமன்
சொல்லவெற்றிபெற்றவிஜயன்கேட்டு சுவாமீ இயாவத்வி
ஷயமும் உடலுக்கேயென்றால் ஆத்மாவுக்குச் சம்பந்த
மொன்றுமில்லையாவென்று அருச்சுனன்கேட்கஆத்மாவு
க்குச்சம்பந்தமுண்டு அதெப்படியென்றால் தேகவாசனை
விஷயத்தால் கருமங்களெல்லாந் தன்னுடையதென்று
பார்ப்பதனால் விதித்திருக்கின்ற இருவினையின்பிரயோ
சனத்தைத்தானும் அநுபவிக்கும், அதற்காகவே பெரி
யோர்கள் பேசியிருக்கும் வாசகமென்னவென்றால் எது
வுந்தனக்குச்சம்பந்தமில்லாமல் எல்லாம்அவன்செயலெ
ன்றுரைத்து இன்னொருவனிருக்கிறானென்று தள்ளிவிட்
டால் யாவத்துமென்னைச்சேரும் விவேகத்திற்சிறந்த வி
ஜயனே மகாமாயைகளைத்தொலைத்த மகானுக்கள் அறிந்
துநடக்குந் தூய்மையென்பது இதுதான் நீயும் அப்படி
நீக்கிவிடாமல் எல்லாம் உன்னாலாகுமென்றுன்னி நலிந்
துவருந்தின இந்திரன்முதலாய் இன்னமுங்கேளும் யார்
பெற்றவர்கள் யார்வந்துபிறந்தார்கள் நேசமானவர்கள்
யார் நேசமில்லாதவர்கள்யார் நாசமானவர்கள்யார் நாச
மில்லாதவர்கள்யார் உறவார் பகையார் உற்றுப்பார்க்கு
மிடத்தில் ஒன்றுமில்லை கற்றுணர்ந்தகாவலனே யாவத்
தும் அவன்கட்டளைச்செயலென் றுட்கொண்டால்குற்
றமென்பதொன்றும்விளையாது கொடியவினைக்கிடாகவு
மாட்டார்கள் மேலும்மாயையென்னும் பெண்ணானவள்
மனமென்னும் பிள்ளையைப்பெற்றாள் அந்தமனமென்ப
வன் அறிவென்னும்சுதனைநல்கினான் இந்தமூவருக்குள்
தாய்தந்தையென்றும் பத்தினிபுத்திரனென்றும் இவர்க
ளிடத்தில் நாட்டும்படியாகிய ஆசாபாசநேசமும் மாயை
யென்பவளாலும் மனமென்பவனாலும் விளையாநின்றது
அந்தச்சமயத்தில் அறிவென்னும்பிள்ளை பிரவேசிப்பானா
கில் இவைகளையெல்லாம்நீக்கிவிடுவான்ஒருவனாயுஞ்சே
ரவொட்டான் அதனால் அந்தமாயையும், மனமென்னும்
பிள்ளையும், அறிவனைத்தள்ளி ஒருகட்சியாயிருக்கின்றார்
கள் இதல்லாமலும் மெய், வாய், கண், செவி, மூக்கென்
னும் ஐம்பொறிகளும் சப்த, பரிச, ரூப, ரச, கந்தமென்
னும் தன்மாத்திரைகளும், ஞானம், அருள், தவம், பொ
றுமை, சத்தியவார்மை, மேன்மை, மோனம், ஐம்பொ
றியடக்கல், இவ்வெட்டுமுடையது சாத்வீககுணம், மன
ஊக்கம், ஞானம், வீரம்; தவம், தருமம், தானம், கல்வி,
கேள்வி, இவ்வெட்டுமுடையது இராசதகுணம், பெரு
ந்தீனி, நெடுந்தூக்கம், கடுஞ்சோம்பல், கெடுநீதி, துட்ட
நடத்தை, வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம், கொ
லை, இப்பதினொன்றுமுடையதுதாமதகுணம் இவைகளா
கியமுக்குணங்களுடனேயும்அறுவகைப்பயன்களுடனே
யும்பழகி அரசாட்சிசெய்யும் இந்தச்சாயலுலகினைவணங்
கித்துதித்து நித்திரைகொள்ளும்போது ஒளித்துநின்றஅ
றிவனென்னும் அரசனுந்தோன்றுவான் இத்தன்மையா
வாகிய நன்மைநிறைந்த அறிவனென்னும் அரசனை அறி
ந்தவரெவரோ அவரைத்தான் அறிஞரென்றுபோற்றிப்
புகழ்வது அன்பனே பிர்ம்மாவினால்வகுக்கப்பட்ட சராச
ரப்பொருள்கள்சோறும்பாலும்நெய்யும்போல் உயிர்க்கு
யிராகிப்பொருந்தி வாழ்வைப்பெற்றுக்கொண் டிருக்கும்
இந்தப்பந்தங்களையுணர்ந்து நாசிமுனையி னடுநிலைநாட்டி
நேரிற்பார்க்குமிடத்து நமக்கு ஆர் உறவு ஆர்பகைவர் அ
ப்பனே ஆகையால் நீயும்நானும் நிருபர்களுஞ் சகலவுயி
ரும்பிறந்து இறப்பதும் இறந்துபிறப்பதும் இல்லையென்
றுயோசித்து சற்றுணர்ந்தோர்கள் கலங்கமாட்டார்களெ
ன்றுமாயவன்கூற அருச்சுனனானவன் இந்தவசனத்தைக்
கேட்டுசுவாமீ ஒருவரும் இறக்கமாட்டார்களென்றால்பா
ர்த்தபேர்களைமறுபடியும் பாராதிருக்குங்காரணமென்ன
ஆர்நீங்கினவர்கள் ஆர்நீங்காமலிருந்தவர்கள் அதினுடை
யநிச்சயத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டுமென்று
நிருபன்கேட்க, ஸ்ரீகிருஷ்ணன்சொல்லுகின்றார்விஜயனே
கேளும் இவ்வுலகத்திற்பிறந்து இறக்கும்படியானது உட
லுக்குற்ற விதியேயல்லது நித்தியமாய் நின்சொரூபமாகி
யஆன்மா இறந்துபிறக்கத்தக்கதில்லை என்றுசுவாமிசொ
ல்ல, அர்ச்சுனன்கேட்டு கர்த்தனே என்சொரூபம் ஆத்
மாவென்றுரைத்தீர் என்சொரூபமென்பது அங்கம் இந்
திரியமுதலாகிய இவைகளாயிருக்குதேயல்லதுநானென்
பதுவேறுபிரிந்து காணவில்லையே! இந்தயிடத்தில் நான்
வேறாகயிருப்பதைச்சொல்லுமென்று அர்ச்சுனன்கேட்
க, மெய்மையாகிய ஆன்மா அவையவ அங்கமும் இந்தி
ரியமுமேயல்லதுவேறாகயில்லையேயென்று கேட்டவனெ
வனோஅவனும்அவனாலறியப்படாதவனும்நீயாயிருக்கின்
றாயென்று கோபாலன்சொல்ல அதைஅர்ச்சுனன்கேட்டு
நல்லது ஐயனே ? தேகம்பிறந்திருக்குமாகில் அதைச்சே
ர்ந்த அறிவனென்பது எங்கேயென்றுவிஜயன்கேட்க, து
க்கமாகியகருமவினைதொடர்ச்சிப் பொருளாவனென்று
சுவாமிசொல்ல தேகவுற்பத்தியாகுமுன்னமே கருமச்
செயல் எப்படிவரும்விதமென்று காவலன்வினவ வித்து
ள்ளொடுக்கமரமென்றும் மரத்துள்ளொடுக்கம்வித்தென்
றும் சொல்லும்வகையாமென்று கண்ணன்பேச நல்லது
சுவாமீதேகமும் ஆத்மாவும்வேறென்றுரைத்தால் கரும
வினையைச்செய்தவர்கள் யாரென்றுகாண்டீபன்கேட்கதே
கமேவிளைத்தது அந்தத்தேகமேவினைக்கருமத்துக்குரியத
ன்றி ஆன்மாவுக்குநிமித்தமில்லையென்றுஆண்டவன்சொ
ல்ல தேவரீருடையவாக்கியப்படி உடலானதுகருமத்தை
ச்செய்தாலதனால்வரும்பலனை ஆரனுபவிப்பதென்று அ

ர்ச்சுனன்கேட்க இபாவத்துமாகியபலனும் உடலுக்கல்லது உயிருக்கில்லையென்று உத்தமனுரைக்க அதைக்கேட்டு சுவாமி வெவ்விய உடலே வினைப்போகத்திற்குரியதென்றீர் அந்த உடலானது எல்லாவற்றையுஞ்செய்து இந்தக்கர்மபூமியில்மாய்ந்துவீழ்ந்துபோக ஜீவாத்மாநடுநடுவில் சுவர்க்கநரகத்தை அநுபவிக்கவேண்டிய காரணமென்னசொல்லுங்கர்த்தனேயென்று காவலன்கேட்கசுவாமிசொல்லுகின்றார் அருச்சுனு உலகத்தில தனுகரண புவனபோகச்செயல்களைத்தனதென்று சார்ந்திருந்ததன்மையைப்போல் நரகசுவர்க்க அநுபவமென்று சொல்லுவது மாத்திரமேயல்லது ஆத்மாவுக்கு நரகசுவர்க்க அநுபவமில்லை உண்டென்றுபேசுவது விறுரோபிதமென்று விளம்ப இத்தன்மையாகிய உடலின்செய்கைகளெல்லாம் ஆத்மாவின்பேரிலேறும்படியாகிய மயக்கமென்னவென்று மாதவிகொழுநனன்கேட்க மூற்றுணரும்படியாகிய நல்லறிவில்லாத மோகத்தினலேறியதென்று கிருஷ்ணமூர்த்திசொல்ல அவ்வறிவானதுதேகத்திற்கோ அல்லது ஆன்மாவுக்கோவென்று அர்ச்சுனன்கேட்க நீர்கேட்டகருத்தைப்பிரித்துச்சொல்லுவோமாகில் உடலானது அசத்து உயிரானது சத்து இந்த உயிரறிவானதுபிரமமென்று உலகளந்தோனுரைக்க அதை அர்ச்சுனன்கேட்டு ஐயா தேகம் அசத்தாகில் இந்தச்செயலெப்படி வருமென்ன ஏகமாகியசோதி உள்ளிருத்தலால் காந்தம் ஊசியையிழுப்பதுபோல்விழுந்ததென்ன தேவர்சொன்னசெயல் உடலுக்கானல் சுகதுக்கமாருக்கென்ன உடம்பினுக்கென்று கோவிந்தன்சொல்ல, சேதன ஆன்மாவைச் சேராதசுகதுக்கம் அசேதனமாகியதேகத்தைச் சேருமாவென்ன புலன்-பொறி-பூதம்-உயிர்-அந்தக்கரணமென்னும் ஸ்தூலசூக்கும சருடலாகிய மனதுக்கேயின்பதுன்பமென்ன ஸ்தூலசூக்குமயிருவகையுடலுக்கு ஏதுவென்னவென்றுகேட்க ஜன்மாந்திரக்காரணத்தால் ஸ்தூலசூக்குமகாரணமென்று மூன்றுடலாமென நல்லதுமனமறியுந்துக்கசுகத்தைஅவாவென்றுரைத்தீர் இந்தமனம்சேதனமா அசேதனமா என்ன இந்தமனத்தில் ஆன்மாவானது பேதமறவிருக்குந்தன்மைபோற்றேன்றலால் சுகதுக்கத்தைச்சேதனமாகியமனமேபெறுமென்ன இந்தமனம்பெற்ற சுகதுக்கம் இதினிடத்திலில்லாமல் ஆன்மாவைமருவவேண்டியதென்னவென வெப்பமுந்தட்பமும் மேல்வைத்த பாண்டத்திலுள்ளிருக்குஞ் சலத்திற்றங்குவதைப்போலென்றுரைக்கசித்தாகியபிராணனும் ஜடமாகியசித்தமும் எப்படி ஒத்திருக்கின்றதென இரும்பும்நெருப்பும் பொருந்தியதைப்போல் விவேகத்தைக்கண்டு பண்புகொண்டு ஆன்மாவும் மனமும் அநுகூலித்ததென இப்படிக்குக்கூடிய ஆன்மாவும்மனமும் எப்போதாகிலும்பிரியுமோவென்னசெம்பானது நிறங்காட்டிக்களும்பேறுவதுபோலும்அநித்தசைக்காட்டும்பளிங்குபோலும்க்ஷணத்திற்குக்ஷணம்பிரிந்துமறைந்துகலந்துகொண்டிருக்கத்தக்கதும்மனும்படிகம்போலேத்தசொரூபம் ஆசாமலினமனோபந்தத்தால்வர்த்திருக்கின்றமையால் முத்தியில்லையென்றுமுகுந்தனுரைக்கப்ந்தமாவதெதுமுத்தியாவதெதுமென்றுபார்த்தன்கேட்கதேகாபிமானமென்பதுபந்தம் அந்தபந்தமறுப்பதேமுத்தியென்றுபரமனுரைக்க அபிமானம்வருவதும் அதையொழிப்பதும்எவ்விதமென அஞ்ஞானத்தாலபிமானம்வரும்மெய்ஞ்ஞானத்தால் அபிமானம்விட்டுமுத்திபெறும் அந்தமெய்ஞ்ஞானந்துலங்குமாயின்எப்போதுமானந்தமுண்டாமென்று அரிசொல்ல அந்தப்படிக்குவிளங்குவதற்கு வேதாந்தசாஸ்திரங்களினாலும் ஆசாரியராலுங்கியானம்பெற்றபோதிலும் பொல்லாங்காகிய துக்கசுகந்நீராமலிருப்பது யாதுகாரணமென்றுவிஜயன்கேட்க சாஸ்திரங்களினாலும் குருவுபதேசத்தினாலும்வந்தபரோக்ஷஞானத்தாற்பற்றறமாட்டாது அநுபோகமாகிய அபரோக்ஷஞானத்தாற்பற்றறவேண்டுமதெப்படியென்னில் தீபமென்றுவாக்கினற்சொன்னால் இருள்ணீங்குமோ தீபமேற்றிவந்தால்இருள்ணீங்குமோ சொல்லும் அர்ச்சுனு கேள்வியினாலும்மனனத்தாலும்யோகாப்பியாசத்தினாலும் பிரமவநுபவத்தினாலும் நீரவேண்டுமேயொழிய மற்றவிதங்களாற்நீராதென்று திருமாலுரைக்க அஞ்ஞானத்தைநீக்கத்தெரியாதகற்கருமம் மெய்ஞ்ஞானத்தைத்தாங்கும்விதமெப்படியென்ன; இந்திரசாலம்போற்தந்திரமாகயிவ்வுலகத்தைக் கிளிஞ்சியிற்றேன்றும்வெள்ளியின்கிரணம்போலும் கனவுபோலும் என்னிடத்திற்காட்டியிருக்கின்றேம் அதுசத்தியமல்லவென்று தாமரைக்கண்ணன் சாற்ற; ஐயா உலகத்தைக்கனவுபோலென்றீர் பிரத்தியட்சமாய் விளங்குதேயென்றுஅர்ச்சுனன்சொல்ல அஞ்ஞானமிருக்கும்வரையிலும்இப்படியேதோன்றும்மெய்ஞ்ஞானம்வந்தால் உலகமென்னுமாயைவிட்டோடிப்போம்அல்லாமலும்பிரமனென்றும் ஈசனென்றும் பெருமாளென்றும் பலகோடி ஜீவனென்றும்சொல்மயக்கமாகச் சொல்லுவதல்லதுஆன்மாவொருவனே இதையுன்னிப்பார்க்குமிடத்து உலகம்பொய்யாகும் அவாவினால்உன்னிப்பார்க்காதிருக்குமளவும் உலகம்மெய்யாகும்ஆசைபற்றுப்பார்க்கும்போதுஉலகம்பொய்யாகும் அர்ச்சுனுஆகாயத்திற்றேன்றியசூரியன்சலத்திலாடுந்தன்மைபோலும்ஓர்கடலில்பலகுமிழியுதித்ததைப்போலும்ஒன்றாய்நிறைந்துஜீவபேதம்பலவாய்விரிந்துவிளங்குவது ஆன்மா ஆகையால்சுழுத்தியவத்தையைநோக்குவையாகிற் றேன்றுமென்றுசொல்ல இவ்வுலகம் பிரமமயமென்றறிந்தாலும் பூதமயமாய்த்தோற்றிப்போராடுதே அறிவும் அறிபவனும் அறியும்படியாகியபொருளும்மூன்றுகிப்பேதமாகுதே இந்தப்பேதங்களை நான்காணுதிருக்கத் திருவருளுண்டோ கண்ணனே என்று காண்டீபன்கேட்கத் துரியயோகத்தால்மனமலயப்படுமாகில் மூன்றுவகைவிகற்பமு மழிந்துபோம் மேலும் சத்துச்சித்தானந்தமென்னுமூன்றும்தனுவாதிகளுடனுற்று ஜகமாகிமிம்மூன்றும் பிரமமாயிருக்கையிற்றேற்றுது ஸ்மரிக்கில் ஞானத்தால் ஆன்மாவையறிந்து கொள்ளலாமென்றுகோபாலன்கூற சிறந்தஆன்மா எனக்குத்தரிசினமாமோவென்று தனஞ்செயன்கேட்கமுதன்மையாகியவிக்ஞானத்தால் அக்ஞானநீங்கினல் சிந்தையுள் சுயம்பிரகாசமாய் ஆன்மாதுலங்குமென்றுசொல்லஇன்பமாகிய மோக்ஷகமென்பதெப்படியென்ன அநுபவ

த்தால் விஷயானந்தமறிந்துகொள்ளக்கடவை மேலும் மனலயமுடைய ஜனகாதிமுதலிய ஜீவன்முத்தர்களிருக்கின்றார்கள்மைத்துனனேயென்றுசொல்லஜீவன்முத்தியடைந்தோர்களின்செயலும்குணமும்சொல்லுறையாலாகிய நல்லுரையும்சொல்லுமென்றாகவேதவாகனன்வினவஉற்பத்தி-வளர்தல்-பருத்தல்-குறைதல்-முதலியயாவும் உடலுக்கல்லது உயிருக்கில்லையென்றும் தாராதிமுதலிய யாவுந்தாமரையிலைநீர்போல் ஒறுத்திருப்பவர்கள் ஜீவன்முத்தர்கள்தயிர்கடைந்தெடுத்தவெண்ணெய் மோரிற்கிடந்தாலுங்கலங்காதிருக்குந்தன்மைபோல்மயங்காதிருப்பார்களென்றுசொல்லிமேலுஞ்சொல்லுகின்றார் விஜயனே கேளும் தேவர்களாலும் முனிவர்களாலும்மற்றியாவர்களாலும் அறியப்படாத ஆன்மாவென்னும்பொருளை இப்போதுமறிந்துகொள்ளும்படியாகநான்சொல்லிக்கொண்டுவந்தேன் மேலும் யாவர்களுக்கும்பஞ்சபூதங்களினாலுண்டாகியதேகம்அந்தேகத்தினுள்ளே சிவனானவனொருவனாலியாகநின்றுசகலநன்மைதீமைகளையும்நடத்திவருகின்றான் சூத்திரதாரி யாகிய அந்தச் சிவனென்றும் ஒருவனாலேயே நடாத்துமுண்மைகளை - நீ-உற்றுப்பார்த்தறியக்கடவை அன்றியும் - வருவதை விலக்கவும் - வராததைவருவிக்கவும் - எப்பேர்ப்பட்டவர்களாலுங் கூடாது ஆகையால் போர்புரியுஞ்செய்கையை நீமேற்கொண்டுவருந்தி உன்னுடையதென்னும் பற்றுகளினால் வெவ்வியவினைக்குள் அகப்பட்டுவெந்துபோகாதே-நல்வினைதீவினையிரண்டுமற்றசிவபெருமானுடைய திருவிளையாடலென்று அவனுக்கர்ப்பிதம்பண்ணிப்போட்டு - நீபரிசுத்தனாகமகிழ்ந்திருக்கக்கடவைமைத்துனா-மேலும்ஆங்காலம் சாய்காலமென்றுசொல்லுங் - காலங்களும் - இடமும் கொல்லத்தக்ககருவியும் - சமயமும்உடல்விழும்படியாகிய நிலமும் --எவரெவர்களுக்கு எப்படி அமைந்திருக்கின்றதோ இவ்விதமே நேரிடுவ தல்லாமல் வேறாகநடவாது எவ்வளவுபலசாலிகளாயிருந்தபோதிலும் தாங்களெண்ணியபடிக்கு ஒருவரை முடிக்கும்படியாகிய செயலுமுண்டோ, அரன் வரம்பெற்றநரனே நீ வீணாகியமயக்கத்தில்வீழாதே கடைப்பிடிக் கருமமொன்றுசொல்லுகின்றேன் அதாவது ஆயுள்முடியாமல் அற்பவுடற்றாங்கிய கொசுவுமுதலாகிய உயிர்களும் மடியமாட்டாது இதினுடைய உண்மை இப்படியிருக்க பூர்வத்தில் சகல இராஜர்களும் நெருங்கியசபையில் நீங்களைவரும் கையெடுத்து நீட்டி அவரவர்களைக்காட்டி ஆண்மிக்கவையுடன்சொல்லிய கட்டுரைச்சபதம் தப்பிப்போகும்படியாக விட்டுகொட்டுக்குப்போவோமென்று திரும்பி விடுவீர்களாகில் இம்மைப்பயன் மறுமைப்பயன் உம்மைப் பயனென்னும் மூன்றுபிரயோசனங்களையு மிழந்து எல்லோரும் பழிக்கும்படியாகிய யேளிதம்பூண்டு கீழ்ப்பட்டு கொடியநரகிற் குளித்துமூழ்கிக் கண்ணீர்சோரவருந்தி வெப்பமாகிய பிணியாலுழன்று-சுவை-ஒளி-ஊறு-ஓசை - நாற்றமென்றுரைக்கும் ஐம்புலனுகர்ச்சியுங் கெட்டுப் போவீர்களேயல்லது பிரயோசனம் பெறும்படி யாகியகாரியமொன்றுமில்லையே ஆகையால் போர்முகத்தில்வந்து யுத்தஞ்செய்யாமற் போவேனென்பது புருஷதிரமன்று கூறியசபதங்களை நிறைவேற்றும் படியாகச் சத்துருக்களைக் கொல்லுவது தர்மங்களெல்லாவற்றிலும் மிகுந்ததர்மம் அப்படியேமுடித்தால் உங்களுக்குப் பழிபாவமுதலிய குற்றங்களில்லை என்னுடைய வசனத்தை ருக்குவேதமாக நம்பு-ஐயா-அர்ச்சுனா-பகையாளிகளை வென்று-நீ-செயம் பெறுவையாகில் இவ்வுலகமெல்லாவற்றிற்கும் ஏகசக்ராதிபதியா யிருப்பாய் ஒருவேளை யிறந்துபோவையாகில் தேவர்கள் முதலிய அரம்பாஸ்திரீகள் எதிர்கொண் டழைக்கும்படியாகப்போய் சுவர்க்கலோகத்தைத் துரைத்தனஞ்செய்வாய் நித்தியபதவியாகிய மோக்ஷமுமுண்டாம் விபற்சென்னும்பெயரையுடைய வேந்தனே என்று கேசவனானவர் இத்தன்மையவாகிய உறுதிவசனங்களைச் சொல்லவும் இவைகளெல்லா வற்றையுங்கேட்ட வாசவன்மகனாகிய விஜயன்-கேசவன்மொழியை விசுவாச நேசத்துடன் மகிழ்ந்து மனத்துட்கொண்டு மயக்கமகன்று சிந்தைதெளிந்து திருமாலைநோக்கி வண்டுகள்மொய்க்கு மதுநிறைந்தவாசத் துளவமாலையணிந்த வானவர்கோமானே-மலர்மகள்பிமானே பூதங்கள்தோறும் பொருந்தி யிருக்கின்றவன் சிவனென்றுபுகன்றீர் அச்சிவனாகிய தேவன் எவ்விடத்திலிருக்கின்றார் அந்த உண்மையை ஏழையாகிய அடியேனுக்குத் தெளிவிக்கவேண்டுமென்று ஜெயவிசயன்கேட்கப் பரந்தாமன்சொல்லுகின்றார்.

பார்த்தனாகிய-பார்த்திவனே கேளும் சத்திய லோகத்திற் றாமரைமலர்மேலிருந்து மன்னுயிர்களைச் சிருஷ்டிக்கும் பிரமனென்பவனும்-வைகுந்தத்திலிருந்து ரட்சிக்கும் விஷ்ணுவானவனும் தேவர்முதலிய யாவரும் வணங்கும்படியாய்க் கயிலாயத்தில் உமா மஹேஸ்வரியுடனிருந்து சம்மாரத்தொழில்செய்யும் வெள்ளைவிடையேறிய விமலனும்-வாசநிறைந்த கடப்பமலர் மாலையணிந்த சண்முகத்தேவும்-பலம்பொருந்திய அயிராவதத்தலைவனாகிய தேவேந்திரனும் இவ்வுலகினிறைந்த சராசரப் பொருள்களைத்தேர்ந்துணர்ந்து அவைகளிற் சஞ்சரித்துக்கொண் டிருப்பவனும்-வேதபுராணங்கள் முதலியயாவத்தையும் இவ்வுலகில்விரித்துரைத்தருளிய வேதவியாசனும் இரவிற்சந்திர னானவனும் பகலிற் - சூரிய னானவனும் - உலகிற் சிறந்த பூமியானவனும் மாதவர்களிற் சிறந்த நாரதரோ முதலிய முனிவரானவரும் :- திக்குப்பால ரானவனும் நவக்கிரகமானவனும்-கர்ப்பகத் தருவானவனும்-மரங்களில் அரசானவனும், மனிதர்களில அரசானவனும்-பசுக்களிற் காமதேனானவனும் நானே என்றறிந்து கொள்ளும் அர்ச்சுனா இதன்றியும் எந்தத் தேசங்களில் எந்தத்திறங்களையுடையபேர்கள் எந்தச்சாதியார் எந்தக் காலத்தில் எந்த உருவமாகப்பாவனைசெய்து என்னைத்துதித்து வணங்குவார்களோ, அந்தத்தேசங்களில் அந்தந் திறங்களையுடைய அந்தச்சாதியாருக்கு அந்தக்காலத்தில் அந்த உருவத்துடன் அவரவர்களுக்குப் பிரசன்னமாகி அவர்களுக்குவேண்டிய மனோபீஷ்டங்களை யெல்லாங்கொடுத்து ரட்சிப்பன் அன்றியும்-பிர்ம்மா-விஷ்ணு-ருத்திரனாகிய மூவரும்-சிருஷ்டிதிதி - சங்காரமென்னும் தொழிலை

மூன்றும்சாத்விகம், இராசதம் தாமதமென்னுங் குணமுன்றுமுடைத்தாய் - அதுகளுக்குள்ளாய் அதுகளுக்குப்புறம்பாய் வேதமுடிவென்னும் வேதாந்தத்தில் முத்திக்குவித்தாகி முதன்மைபெற நின்றதனிப் பரப்பிரமப் பழம்பொருளா யிருக்கின்றவன் யான், நீ உண்மையாக உட்கொள்ளக்கடவை உத்தமனாகிய பார்த்தனே என்றுகரிய திருமேனியை யுடைய கண்ணன்சொல்லக் காண்டீபன் அற்புதமடைந்து ஐயனே, வசுதேவருந்தேவகி தேவியும் புத்திரராகப்பிறந்து ஆயர்வீட்டில்வளர்ந்து வெண்ணெய் பால்முதலிய யாவுமுண்டு எங்களுக்கு மைத்துனராகி, எங்களோப்பந்தமா யின்ப துன்பங்களை யனுபவித்து அழுவாருடனழுது தொழுவாருடன் றொழுது நகைப்பாருடனகைத்து பகைப்பாருடன் பகைத்து இப்படிக்கெல்லாம் விளையாடிக்கொண்டிருந்துவிட்ட நீர், எல்லாம் நான்தான் என்னைவிடப் பிரபஞ்ச மில்லையென்று சொல்லுவது பெரிய ஆச்சரியத்தை விளைக்குது எனக்காகச்சொல்லிய வார்த்தையோ அல்லது உண்மை யாகிய காரியந்தானோ அப்படி உண்மையாயிருக்குமாகில், யாவரும்-யாவும் தாமாகியிருக்குந் தேவரீருடையதிருக்கோலவுருவத்தை அடியேன்கண்டு தெரிசித் துய்யும்படியாகத் தெரிவிக்கவேண்டும் தெய்வ நாயகனே யென்று கேசவன்றோழன்கேட்க அப்படியே தெரிசித்துக்கொள்ளென்று ஞானக்கண்கொடுத்து அர்ச்சுனனுடைய முகத்தைத்தடவி அப்போதே உலகத்தை ஓரடியாக அளந்த உருவம்போதுயர்ந்து பாதாளம்வரையிலும் தாழ்ந்து, மேலிருக்கும் அகண்டாகண்டப் பேரண்டச்சுவர்வரையிலும் மேலுங் கிழுமாகத்திணிந்து நெருங்கும்படியாய் சுயம்பிரகாச ஒளியாய் விராட்சொரூபமாகினின்றார் அந்தத் திருக்கோலத்தை தனது திவ்யஞானவிழியினால் விசயன்கண்டு வாய்பேசாமல் மௌனியாய் விற்பனமுடைய அற்புதருணைசிலனாக மயிர்க்கூச்செறிய ஆநந்த சமுத்திரத்தில் மூழ்கி தன்னைத்தானே மறந்து அசைவற்று நின்றுவிட்டான், அப்பால் தேவர்களும் நான்குவேத பாராயணராகிய தவமுனிவர்களும் அந்த விராட்டினுடைய திருவுருவத்தில் ஒருபங்கமாயிருந்து மறை மாரியும் மலர்மாரியும் வாரிவாரிப்பொழிந்தார்கள், இகரமாகிய இருதிறப் படைகளின் பகுதிபோர் முன்னிருந்தபடியே கிர்ஷ்ணர்ச்சுனரைப் பார்த்துக்கொண் டிருந்தார்க ளன்றி மற்றவேறொன்றுங் கண்டதில்லை. இப்பால் தன்னிலே யெல்லாம் அர்ச்சுனன் செவ்வையாய் அறிந்துக் கொண்ட தன்மையைக்கண்டு தான்கொண்ட விராட்டுருவத்தை மாற்றி முன்னின்ற நிலைப்படிக்குச் சாரதியாயிருந்து வாசவியினுடைய தெளிவாகிய பிரகாசம்பெற்ற முகத்தைப்பார்த்து அர்ச்சுனா முற்றத்துறந்த சித்தத்தவர்களும் அறியப்படாத என்னிலையை நீ யறிந்துகொண்டாய், உன்னைப்போல் எவருணர்ந்தார்கள். உத்தமனே மலையினுயரம்-மலைக்குத்தெரியாதென்பதுபோல் என்னிலை யெனக்குத் தெரியவில்லை ஆகையால் நீ, கண்டு களித்த தோற்றமாகிய வெல்லாவற்றையும் நானறியும்படியாகச் சொல்லக் கடவை தவநெறித்த பேரறிவினையுடைய தனஞ்செயனே யென்று கமலநாபனாகிய நாராயணன்கேட்க, நரன்சொல்லலுற்றான், சுவாமீ, பிர்ம்மாண்ட கோளகையைக் கிழித்து மேற்பட்டுப் பேரொளியாகத்தோன்றி சிரம்-கரம்-உரம் கால்-மேல்-இடை-தொடையென்பது-ஒன்றுந்தெரியாமல் உலகமெல்லாஞ் சலமயமா யுள்ளதுபோலிருந்த உருவத்தை நானெப்படி பகுத்துச்சொல்லுவேன் மாதவனேயென்று இரண்டுபாதங்களையும் தன்னிருகரத்தாற்றழுவி முடித்தலையைத் திருவடிக் கடியிற்சாய்த்து இருகண்களும் ஆற்றுநீரூற்றுப்போற்சுரந்து பெருக்கெடுத்தோட இடகாத்திரமாகிய தேகநடுங்க மொழிகுழறும்படி நாநடுங்கத் தான்கண்டகாட்சியைத் தாட்சியில்லாமற் சொல்லத்துவங்கி, என்னுண்டவனே தாண்டவனாகிய தற்பரனே காண்டவமெரித்தகண்ணனே - பாண்டவர்க்கிசைத்த பாகனேகேட்டருளும், மாதவம்பெற்ற வேத வேதியராகிய முனிசிரேஷ்டர்கள் சூழ்ந்துவணங்கும்படியாயிருந்த பிர்ம்மதேவனைச் சரஸ்வதி முதலிய பேர்களுடன் உனதுதேகத்திலிருக்கக்கண்டேன்சங்கு-சக்கரம்-கதை கட்கம் சோதண்டமென்னும் பஞ்சாயுதங்களுடன் மகாலட்சுமியும்பொருந்த கவுஸ்துவாபரணமும் துளவமாலையுடன் பரவாசுதேவனே உன்னுடலில் ஒருபுறத்தில் மருவக்கண்டேன், குளிர்ந்தபிறையணிந்த உருத்திரமூர்த்தியை, நாராயணியாகிய நாயகியுடன், தேவகணம் பூதகணங்கள் சூழத் தேவர்திருமேனியிற் பொருந்தியிருக்கக்கண்டேன், பிரகாசமுடைத்தாய்மேலோங்கிய வேல்தாங்கிய பெருமாளாகிய சண்முகக் கடவுளை வள்ளிதெய்வ யானையுடன் தமதாகத்தில் இன்புற்றமர்ந்திருந்த இஷ்டமாகிய இடமுங்கண்டேன்; முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் தேவேந்திரனும் இந்திராணியுடன் தேவரீருடைய திருவுருவிற் றிகழக்கண்டேன் நான்குவேதம்-உபநிடதம் வியாகரணம்-ஆறுசாஸ்திரம்-பதினெண்புராணம்-ஆகமமுதலாகிய எல்லாவற்றையுங்கண்ணிற்கண்டேன், பகைவராயிருந்தழிந்து மடியும் அரக்கர்முதலிய அசுரர்களையுங்கண்டேன்-சரம்-அசர மென்னும் எல்லாப்பொருள்களையுங்கண்டேன், முத்தொழிலும் முக்குணமும்-மூவுருவும்-முக்காலமும்; வாரம்-திதி-மதி வருடமுதலியதும் அவைகளின் தொழிற்குணங்களுங்கண்ணுற்றேனிதல்லாமலும் இன்னொரு ஆச்சரியங்கண்டேனிறைவனே, நான்கண்டதென்னவெனில் நாகக்கொடியோனாகிய துரியோதனன்முதலிய யாவரையும்அநேகம் அக்ரோணிசேனைகளையும் பாண்டவர்களுக்குச்சகாயமாகிப் படைத்துணைவந்த மன்னவர்முதலிய பெருஞ்சேனைகளையும்தேவரீருடையதிருவாயால் விழுங்கக் கண்டேன் இவ்வளவுகோடி சேனைகளையும் இந்த எழுகடல்முதலாகிய பெரும்பொறைக்கடலையும் வளைத்துக்கொண் டிருக்கும் அநேகங்கோடி கரங்களும், அநேகங்கோடி சிரங்களும், அநேகங்கோடி கண்களும், அநேகங்கோடி கால்களும், அநேகங்கோடி செய்கைகளும், அநேகங்கோடி திருமுகமண்டலமும், பிரகாசிக்கும்படியாய்க்கண்டேன், தேவரீருடைய பூரணவுருவத்தைப்பார்ப்பதற்கு அநேகங்கோடி கண்களைப்பெறுமற்போனேன், கைகூப்பி

வணக்குவதற்கு காங்களைவெந்தம் பெருமற் போனேன் தேவரீருடைய திருநாமங்களை ஸ்துதிப்பதற்கு அநேகமாயிரம் நாவினைப்படைக்காமற்போனேன், இனிநான் சொல்லத்தக்க தொன்றில்லையென்றுன் அப்படியாகச் சொல்லிய அர்ச்சுனனை அணைத்துக் கிருபையளித்து நிறைக்கும்படியாய் இவடத்திற் சண்டுறக்கண்ட அதிசயம் யாவற்றையும் எவர்களிடத்திலுஞ் சொல்லாதே சுடைசியில் தருமராஜனை முதலிய நீங்களைவரும் பிழைத்திருக்கப் போறவர்கள் இதரமானவர்க ளெல்லாரும அழிந்துபோகிறவர்கள் இதை உன்மனத்திலுறுதியாகவைத்துக்கொள்ளு அறியாமையாகிய இருளை நீக்கிவிட்டுவிடு மேலாகியவல்லபமுடைய விஜயனே நாமிருவரும் இவ்வுலகிலுள்ள எல்லவரையுங் கும்புகட்டிமடிப்பதற்கே பிறந்திருக்கின்றோம் நீவேறாக எண்ணிக் கலங்குவையாகில நாம் வந்தகாரியந் தானுமாறுதும் ஆகையால் எந்தவேலை யெப்படியிருந்தாலும் நாமவந்தவேலையை முடித்துச் சுகம்பாலனையைத்தரித்து வெற்றிபெறும் படியாகிய விதத்தை விதியாய்த் தேடிக்கொள்ள வேண்டும் பின்னும் உனக்கு மயக்கமிருக்குமாகில் யின்னமும் சொல்லுகிறேன் கேளும் எல்லாவிடங்களும் அவ்விடங்களி லிருக்கிற எல்லாப்பொருள்களும் இராவுங்நாமாகிவேதமும்வேதவேதாங்கமும் நாமாகியிருக்கின்றோம் உன்னைவிட்டு நான்பிரியமாட்டேன் என்னைவிட்டு நீ பிரியமாட்டாய் அப்படியல்லவென்றபிரிந்தாலும் வேறபடோம் அதெப்படியென்னில் முன்னொரு முறையில் நானும் நாராயணனுமாகப்பிரிந்து பூபாரம்போக்கினேம் இன்னொருபிறப்பில் இராமலட்சுமணனென்னும்பேர்பெற்று சத்தியமுதலிய நித்தியவிரதங்களை நிலைநிறுத்தினேம் இந்தப்பிறப்பில் கிருஷ்ணார்ச்சுனராக யிவடத்திநிற்கின்றோம் ஆகையால் உன்னுடையமயக்கத்தையும் இவர்கள்பேரிற்கொண்டகோபத்தையும் ஆசாரியர்முதலிய விசுவாசத்தையும் உன்னைமயக்கியமோசமோசத்தையும் விட்டொழித்துவிடென்று தன்னிலைகளெல்லாவற்றையுஞ்சொல்லித் தத்துவந்தெளிவித்தசாமனவர்ணனாகியசாமியாருடைய திருவாய்மொழிகேட்டுத் தெளிவுற்றுத் தேறிதர்மம்அர்த்தம் காமமென்னும்அறம்பொருளின்பத்தை அனுபவித்து அப்பால் தேவரீருடைய திருவடியைச்சேரும் பதத்தின்பயனை அடியேனுக்குபதேசித்த ஆரியனேயென்று செந்தாமரைக்கமலமலர்க்குத் திருவடியிற்றொழுது அடியேன்விவேகருவியத்தாற் றெரியமற்சொல்லிய சொற்குற்றம் பொருட்குற்றம் மரியாதைமுதலிய மானக்குற்றம் குலக்குற்றம் குணக்குற்றமிவைமுதலிய இங்குசமோதாகிலுமுண்டாயிருக்குமாகில் அவைகளையெல்லாம் க்ஷமிக்கவேண்டும் அச்சுதனே அரிந்தமனே ஆரணனேயென்று அடிமலர்வணங்கி யுத்தஞ்செய்வதற்கு வேண்டியகருவிகளெல்லா மேற்படுத்திக்கொண்டு இதோயாவரையுமுடிப்பேனென்று விரப்பிரதாபதிரத்துடனின்றான் விஜயபராக்கிரமனென்று வைசம்பாயனர்சொல்லிக்கொண்டுவந்தார் இச்சச்சங்கதியைக்கேட்ட ஜெனமேஜெயமகாராஜன்மிகுந்த விக்கிரமமுடைத்தாய்க் குருமுகாத்தஞ்சொன்டெழுந்தருளிய வைசம்பாயனரொன்றுமாதவரோ இந்தபகவற்கீதை யுபதேசித்துக்கடவுளிச்சயங்காட்டிய சங்கதி விஜயராஜனுக்கும் விஷ்ணுவுக்குமநடந்த தேவரகசியமென்று திருவாய்மலர்ந்தீர் இப்போது தேவரீர்தெரிந்து அடியேனுக்குச்சொல்லும் விதமெப்படியென்றுகேட்க; மிகுந்தபுன்னகையுடையவராய்ப் புத்திசாலியாகிய புரவலனைநோக்கும் ஸ்ரீவேதவியாசர் சகலதேசாதிபர்களுந் தெரியும்படியாகச் சஞ்சயனுக்கு அநுக்கிரகஞ்செய்தருளியவண்ணம் அந்தசஞ்சயனறிந்து திருதராஷ்டிரமகாராஜனுக்குச்சொல்லியபடியால் செஞ்சடர்வேல்தாங்கிய இரனே உமக்குயானுஞ்சொன்னேனென்று வைசம்பாயனர் சொல்ல மனங்களிகொண்ட ஜெனமேஜெயமகாராஜன்வபுஷ்டாதேவியுடன்மகிழ்ந்து வைசம்பாயனரைப் புகழ்ந்து பற்பலபுட்பங்களால் அர்ச்சனைபுரிந்துவாழ்த்திப்போற்றி சுவாமீ மேல்நடந்தவிர்த்தாந்தங்களையும் விளம்பவேண்டும் வேதவேதியர்முதல்வனேயென்றுவேண்ட வைசம்பாயனர்மனமகிழ்ந்து விஷ்டுமபர்வத்தில்விளங்கிடுமுதற்போர் தாக்ஷடீகமாகச்சாற்றலுற்றனன்.

முதல்நாள்யுத்தம்.

விராடகுமாரனாகிய சுவேதனசேனாபதி.

கண்ணான் விருத்தம்.

எந்தவெந்தயோனிபேதமெங்குமெங்குமுள்ளன. . ....*
வந்தவந்தயோனிதோறுமாயியானதன்மையைச்.........*
சிந்தையின்கலைருகணத்திலிகழுமாறுசேவர்கோன் ..*
மைந்தனுய்ந்திடப்புகன்றவள்ளலுள்வணங்குவாம்.. ..*

எ-து, எவ்விடங்களிலும் நிறைந்திருக்கும் நாநாவிதபேதமாகிய ஜனனகாரணங்கள்தோறும் நித்தியதத்துவமாகிய ஜீவான்மாவாய் நிறைந்துலாவிய தன்மையைத்தியங்கிமயங்கிய விஜயனுக்குத்தெரிவித்துச் சீர்பெறச்செய்த செந்தாமரைக்கண்ணனுடைய திருவடிகளைச்சென்னியிற்சூட்டிச் சிந்தையுளிருத்தி முதனாள்யுத்தத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஜெனமேஜெயமகாராஜனேயென்று வைசம்பாயனர்சொல்லத்தொடங்கினர். நதிபதிவளைந்தபூமிக்கதிபதியாகிய நரபதியேகேளும் தர்மபுத்திரமகாராஜன்முதலிய தம்பிமார்களும் துரியோதனமகாராஜன்முதலிய தம்பிமார்களும் சேனைகணிறைந்துநிற்கயுத்தபூமிமத்தியில்வந்துநின்று இருகளங்களையும்பார்த்து எக்சமுற்றிருக்கையில் விஷ்டுமர் - துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர் அசுபத்தாமர்-முதலிய கைக்காரர்களெல்லாங் கடுங்கோபங்கொண்டு கையில ஆயுதம்பிடித்துக்கண்சிவந்து தளகர்த்தராகத்துசிப்படையில்நிற்கின்றவர்களைப் பார்த்து அந்தோ எந்தவிதத்தில் இவர்கள்பேரிற்கைவியடுப்பது இவர்களை எந்தக்காலத்திற் செயிக்கப்போகிறோம் எப்படிவெல்லுவோமென்று துக்கமுடையவர்களாய்க் கிருஷ்ணமூர்த்தியினிடத்திற் சொல்லிப்பார்ப்போம் அவரிதற்குத் தகுந்தயுத்திசொல்லுவாரென்று சேனாச்செலுத்திக்கொண்டுபோய் ஸ்ரீகிருஷ்ணபகவானும் அருச்சுனனுங்கலந்து பேசிக்கொண்டிருக்குஞ்சமயத்திற்கண்டு களிகொண்டு தண்டஞ்சமர்ப்பித்தபோது மிகுந்தவுபசாரத்துடனே தானும்வந்தனைசெய்து என்னகாரியமாய்வந்

நீர்கள் சொல்லுங்களென்று கேட்க நாங்களெண்ணிவந்த காரியம் இன்னதென்று தருமராஜன் சொல்லத் தயாநிதி கேட்டு சந்தோஷித்து நீங்கள்யோசித்துவந்தது நல்லகாரியம் இப்போது நமக்கென்னபயமா னேரே வீஷ்டுமர் துரோணாதிபேர்களிடத்திற்சென்றுருஜுவிலின்றுகண்டுபேசி அவரவர்களுடைய மனக்கருத்தை அறிந்துகொள்ளுவோம்வாருங்களென்று அனந்தசயனன்சொல்ல நல்லதென்று பாண்டவரியாவரும்பகவானும் துரியோதனனுடைய படையிற்புகுந்து சேனைகளுக்குச்சிரமாகிய சேனாபதியாக நிறம்பெற்றுநிற்கின்ற வீஷ்டுமனைக்கண்டு தெண்டனிட்டு ஆசிர்பதங்கொண்டு சிந்தைவாடி முகம்வாடி நிற்கும் பாண்டவர்களைப்பார்த்து நீங்களிப்போதுயிவ்விடத்திற்குவந்தகாரியமென்னசொல்லுங்களென்று காங்கேயன்கேட்கக் கண்ணன்சொல்லுகின்றார் முடித்தலைவர்வணங்கும் கொடிஸ்தலாதிபதியேகேளும் திரிதராஷ்டிரமகாராஜனுக்கும் பாண்டுமகாராஜனுக்கும் சொந்தமாகிய பெரியதந்தையாகியும் பாண்டவர்களுக்கும் துரியோதனாதியர்களுக்கும் கேட்டைநீக்கும்பாட்டனாராகும் வீஷ்டுமாகிய நீர் இருதிறப்புத்திரர்களும் ஒருதிறப்புத்திரராகப்பார்த்துப் பக்ஷம்வைத்து நடத்துகின்ற நியதிநிலைமையைவிடுத்து துரியோதனன்பக்கத்திற்சேர்ந்து அவர்களுக்குச்சேனாதிபதியாய் முன்னைமுகத்தினின்று பாண்டவர்களைக்கொன்று துரியோதனனுக்குப்பட்டங்கட்டிவைக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு நிற்கின்றீர் பாண்டவர்களிடத்திலிருக்கும்ஞாயம் - அன்ஞாயம் - பாவம் - புண்ணியம் சத்தியம் - அசத்தியம் - இயாவும் உமக்குநன்றாய்த் தெரிந்திருக்கப் பதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து கஷ்டப்பட்டுவந்திருக்கும்பாண்டவர்களிடத்தில் உண்மைச்சுத்தாரமாகப் பட்சம்வைக்காமற்போவிராகில் ஐயா உங்களை யெந்தக்காலத்தில் வெல்லுவது இருக்கிறசேனைகண்முதலிய துரியோதனாதியர்களை யெந்தக்காலத்திற்கொல்லுவது, யெந்தக்காலத்திற்சபதநிறைவேற்றிக்கொள்ளுவது எந்தக்காலத்தில் உங்கள்வீட்டு நாட்டும்பெண்விரித்த தலைமுடிக்கிறது இதுகாரியங்களை யெவ்வளவும் எண்ணிப்பார்க்காமல் எதிர்த்து யுத்தம்பண்ணும்படியாய்நீர்வந்தபோதிலும்உம்முடனேயெப்படியெதிர்த்து யுத்தஞ்செய்வதென்றும் உம்மையெப்படிக் கொல்லுவதென்றும் பாண்டவர்கள்மெத்தவும் பயபத்தியாய் பட்சத்துடன் தாக்ஷண்யம் எண்ணிப்பார்க்கின்றார்கள் நானெத்தனை சொன்னாலும் உமதுபேரில் வைத்திருக்கும் அன்பினால் என்சொல்லையுந்தள்ளி தங்கள் வில்லையுந்தள்ளி விசனப்படுகின்றார்கள் அறியாதவர்களானாலும் சொந்தபந்த நீங்காமலுருகுகின்றார்கள் எல்லாம் அறிந்தபெரியோர்கள் முந்திவந்து போர்புரியத் துணிவுகொண்டீர்களே ஆகையால் இதற்கென்ன யுத்திசொல்லுகிறீர் வீஷ்டுமரே பாண்டவர்கள் மறுபடியும் வனத்திற்கேபோய் விடுகிறோமென்று மனஸ்தாபமடைந்து வருந்தினார்கள் உம்மைக்கண்டுவார்த்தைபாடியபிற்பாடு உத்தரவுசொல்லுகிறேனென்று அழைத்துவந்தேனிதோஉமதுபேரப்பிள்ளைகள் அவர்களுக்கென்ன சொல்லவேண்டுமோ அதைச்சொல்லியனுப்புமென்று ஆதிபகவன்சொல்லவிந்த வசனங்களையெல்லாங்கேட்டுப் புன்னகையுடையவராய் ஜெகநாதனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவனே வசிஷ்டர்வாக்கினால் பிர்மரிஷியாகவேணுமென்னும் வாக்கியம்போல் என்வாக்கினால்நான்கேமித்துக்கொள்ளுவதற்காகவா இவ்வளவுதூரம் நடந்துவந்தீர் நாதனே நல்லபாக்கியம் இப்பவும் பாண்டவர்கள்சத்தியவான்களென்பதற்குச்சந்தேகமில்லை தர்மம் அவர்களிடத்திலிருப்பதினால் எப்படியுஞ்ஜெயம்பெறுகின்றார்கள் அதர்மம் அழியுமென்று யாவருஞ்சொல்லுவார்கள்

அந்தவிபகாரம் அப்படியிருக்க எனக்கு இந்தயிருதிறவரும் பட்சமுடைய பேரப்பிள்ளைகளென்று ஒருதரமல்ல பத்துதரமாகச்சொல்லமாட்டுவேன் ஆனால் துற்சனன் சற்சனனென்று யோசிக்கவேண்டாமாவென்றுகேட்பீராகில் ஞாயமே கைவிரல்கண்ணிற்பட்டால் விரலைக்கொய்தெரிவார்களா கெட்டவர்களானாலும் நல்லவர்களானாலும் நமதுபிள்ளைகளென்கிற வார்ச்சல்லியம் விட்டுப்போகுமா மேலும் நான் இந்த இருதிறப்பிள்ளைகளுக்குந் துணையாகாமலிருக்கவேண்டியதே அப்படியிருக்காமல் துரியோதனனுக்குச் சேனாபதியா யிருப்பானேனென்று கேட்டால் அதற்குக்காரணஞ் சொல்லுகிறேன் கேளுங்கண்ணனே எங்கள் சிறியதாயாகிய பரிமளகந்தியின்பிள்ளை விசித்திரவீரியனுக்குக் கல்யாணஞ் செய்யவேண்டிக் காசிராஜனுடைய மூன்றுபெண்களைச் சுயம்வரத்திற்கவர்ந்துகொண்டுவந்து விவாகநடத்தியபோது மூத்தபெண்ணாகிய அம்பையென்பவள் சாலுவராஜனிடத்தில் இஷ்டம்வைத்ததாய்ச்சொல்லிஎன்னைவிட்டு நீங்கிப்போய் அவன் விலக்கிவிட்டானென்று மறுபடியுமென்னிடத்தில்வந்து தம்பிக்குவிவாகம்பண்ணிக்கொள்ளுமென்று வேண்டிக்கொண்டாள் நானவளைமறுத்துவிட்டேன் அப்போது தன்னுலாசாததாரியத்தைப் பேதயந்திரத்தாற் சாதிக்கவேண்டுமென்னும் யுத்தியைக்கொண்டு என்னுசிரியனாகியபரசிராமரிடத்திற்போய்ச் சரண்புகுந்து அவனையழைத்துக்கொண்டுவந்து பகையாகவிடுத்தாள் அவரிளைத்துப்போய்விடவே இவளும் இளைத்துப்போய் அம்பிகையைக்குறித்துத் தவமிழைத்துப் பாஞ்சாலராஜனுடைய பத்தினிகர்ப்பத்தில்என்னைக்கொல்லும்பகையாளியாகிய சிகண்டியென்பதாய்ப்பிறந்து பாண்டவர்களுக்குப்படைத்துணை வந்திருக்கின்றமையால் நான் அவள் நிற்கும்படைக்கு எதிர்ப்படையில்நிற்கும்படியாய் நேரிட்டது ஐயனே ஆகையால் இனிநான்மெத்தநாளிருக்கமாட்டேன் முதனாள்யுத்தமுதல் பத்துநாள்யுத்தம்வரைக்கும் நடத்துவேன் அந்தப்பத்துநாள் எனக்குப்பகையாய்வந்து பிறந்திருக்கும் சிகண்டியென்னும் தீரபராக்ரமனாகிய அம்பையென்பவளை எனக்கெதிரிற்கொண்டுவந்தால் இந்தச்சென்மத்தில் ஆணாயிருந்தபோதிலும் முன்சென்மத்தில் பெண்ணானபடியால்நான் அவள்பேரிற்கையெடுக்கமாட்டேன் அந்தக்காலத்தில் எனக்கு அன்பாகியபேரன் அர்ச்சுனன்பாணத்தால் மூர்ச்சையடைந்துவிழுவேன் அப்பால் சரசயனத்திலிருந்து தேவரீருடைய திருவிளையாட்

டையெல்லாம்பார்த்து இராஜதர்மங்களை நிலைநிறுத்திச்
செந்தாமரைக்கண்ணனுடையதிருவடியடைவேனென்று
சொல்லிய விஷ்டுமர்வாக்கியத்தை ஸ்ரீகிருஷ்ணர்முதலிய
பாண்டவர்களுங்கேட்டு சபதநிறைவேறிபட்டாபிஷேக
ம்பெற்றவர்களைப்போல் மகிழ்ந்து நமஸ்கரித்துச்செலவு
பெற்றுக்கொண்டு துரோணாச்சாரியரிடத்திற்சென்று அ
வரைக்கண்டு தெண்டனிட்டுத்தொண்டனைப்போனிற்கவு
ம் அவர்களுக்கு ஆசிர்வதித்து ஏன்பாண்டவர்களே க்ஷே
மமாயிருக்கின்றீர்களாஇப்போது இவடத்தில் என்னைநா
டிவந்ததற்குக் காரணமென்ன சொல்லுங்க ளென்று து
ரோணாச்சாரியர்கேட்க ஸ்ரீகிருஷ்ணபகவான்சொல்லுகின்
றார் ஐயா துரோணாச்சாரியரே நாடுநகரமுதலியவற்றையு
மிழந்துநாணமேலிட்டுக்கானகந்திரிந்துநலிந்தவந்தபாண்
டவர்களிடத்தில்நல்லருணட்டாமற்துரியோதனராஜனிட
த்தில்அன்புகொண்டுபாண்டவர்கள்பேரில்யுத்தஞ்செய்யு
ம்படியாய்ப்பகைமேற்கொண்டுவந்திருக்கின்றீரேபாரமா
ர்த்திகராகிய நீர் உபயவாதிகளுக்கும் ஆசாரியராகியிருந்
தும்இவடத்தில்நடந்திருக்கும் ஞாயம் அன்ஞாயங்களெ
ல்லாந்தெரிந்திருந்தும் பாவபுண்ணியமெண்ணிப்பாராம
ல் அந்தபக்ஷத்திலின்றபடியால்தனுர்வேதபாண்டித்வமு
டையவும்மைச்செயிக்க யாவராலுமுடியாதே அப்படியி
ருந்தால் இந்தப்பாண்டவர்கள் பிழைப்பதெப்படி இவர்
கள் கூறியசபதமெவ்விதத்தில் நிறைவேறும் குணமேரு
வரிய குருவே இதற்குநடக்கவேண்டியகாரியங்களைத்தே
வரீரேசட்டளையிடவேணுமென்றுகேட்க வந்திருக்கின்று
ர்கள் அவர்களுக்குநீர்சொல்லவேண்டியஉத்தரஞ்சொல்
லியனுப்புமென்றுஉலகமுண்டோனுரைக்க, அந்த மொ
ழியைக்கேட்டுத் துரோணாச்சாரியர் அகமகிழ்ந்து சொல்
லுகின்றார் ஐயா? அரிவாசுதேவனே கேளும் எண்பே
லோத்தவீரர்கள் எத்தனைகோடிபேர் சேர்ந்து வந்தாலு
ம் இசையைக்கொண்ட விஜயனிடத்தில் பசபசவென்று
விழித்துவசையைப்பெறுவார்களல்லது திசைகள்மகிழச்
செயம்பெறமாட்டார்கள் ஒருவர்செயலாலொன்று நட
க்கமாட்டாது உலகளந்தோனாகிய உன்செயலன்றி வே
றில்லை உத்தமனே, சத்தியமே நித்தியமாகயிருந்து வெ
ற்றியைத்தரும்-மேலும் இந்தக்குலக்குமாரர்கள் இருதிற
வரும் என்கண்மணிபோன்றவர்கள் எனக்கு இவர்களெ
ன்றும் அவர்களென்றும் பேதமில்லை இப்படியிருக்க நா
ன் துரியோதனராஜனிடத்திற் சேர்ந்திருப்பானேனென்
று தேவரீர்கேட்பீராகில் அதற்குக் காரணஞ்சொல்லுகி
றேன் கேளுங் கசாம்புவண்ணனே என்னைச் செயிக்கு
ம்படியாகத் துஷ்டத்துய்மனென்னும் புத்திரனைப்பெற்
று வைத்துக்கொண்டிருக்கின்றான் பாஞ்சாலன், அந்தத்
துஷ்டத்துய்மனே பாண்டவர்களுக்கு மைத்துனனாகியு
ம் உபயசேனைநியாகியும் எதிர்க்கட்சியிலிருக்கின்றமை
யால் நான் யிவடத்தினிற்கும்படியாய் நேரிட்டது அப்ப
டியின்றபோதிலும் பதினைந்தாநாள் யுத்தநடந்துவருமத்
தியானகாலத்தில் இம்மை மறுமைப்பயனிரண்டும் பெ
றவிருக்கின்ற தருமபுத்திர மகாராஜனுடைய வாக்கினால்
அசுவத்தாமன் அதமென்றுசொல்லக் கேட்பேனாகில் உ
டனே புத்திரசோகத்தினால் மெத்தவருந்திச் சமாசயோ
கத்திலிருந்து தாரணைசெய்து தனியனுவேன் அந்தக் கா
லத்தில் உங்களுக்குப் பந்துவாய் வந்திருக்கின்ற, துஷ்ட
த்துய்மன் தான்பிறந்திருக்குஞ்சத்துருத்தனத்தை நிறை
வேற்றிக்கொள்ளுவான், சகலசந்தோஷ சாம்பிராச்சியங்
களையுங் காட்சியில்லாமற் பெற்று வாழக்கடவீர்க ளென்
று தலைதுகால நிர்ணயமுஞ்சொல்லி ஆசிர்வதித்தனுப்பி
னர் துரோணாச்சாரியரானவர், அவரிடத்தில் விடைபெற்
றுக்கொண்டு பாண்டவர்கள் தங்களுடைய சேனைக்காட்
டில்வந்து கலந்தார்கள் இப்பால் பாண்டவர்களும் ஸ்ரீகி
ருஷ்ணமூர்த்தியும் வந்து பேசிப்போனார்களென்று துரி
யோதனமகாராஜன் கேள்விப்பட்டு விஷ்டுமனையுந் து
ரோணாச்சாரியனையும் வணங்கி என்ன சமாசாரமென்று
கேட்டான், அப்பா துரியோதனா பின்னேவேறொன்றுமி
ல்லை பாண்டவர்கள்வந்து பரிதாபப்பட்டு சகலவியாபாரமு
ந்தெரிந்த பெரியோராகிய நீங்களே முனைமுகத்தில்வந்
துநின்றால் நாங்களெப்படிபிழைப்போமென்று கேட்டா
ர்கள் லோகத்தில் வாழ்வாரைப்போல்சாவார் சாவாரைப்
போல்வாழ்வார்-ஆகையால்-எங்கள் பிராணனென்னகல்
லா இரும்பா ஒன்றுமில்லை பத்துப் பதினைந்துநாளையில்
சத்துப்போகத்தக்கன நாங்கள் வெற்றிபெறுவோ மென்
பதெப்படி தெய்வசித்த மெப்படியோ அப்படிமுடியுமெ
ன்று சொல்லியனுப்பினோமென்று சொல்லக்கேட்டு து
ஷ்ட சதுஷ்டாள் நால்வரும் மற்றயாவரும் பாண்டவர்க
ளுடைய பெருமையையுஞ் சிறுமையையுங் குறித்துப்ப
ற்பலவிதமாய் பேசிக்கொண்டிருந்தார்கள் இவர்களிற் சி
ல புத்திமான்கள் யென்ன யோசித்தார்க ளென்றால் பா
ண்டவர்களுக்குமிஞ்சிய பலசாலிகளில்லை-அதுவுமல்லா
மல் ஆண்டவன் அணையுமிருக்கின்றது இருந்த போதிலு
ம் பாட்டனார் ஆசாரியர் இவர்களெல்லாம் வேண்டிய மு
தியோராகையால் வந்துவணங்கி தாங்கடங்கி அவர்க
ளுடைய ஆசீர்வசனமும் யுத்தஞ்செய்வதற்கு உத்தரவும்
பெற்றுக் கொண்டு போக வந்தார்களென்று பேசிக்கொ
ண்டார்கள்.

இப்படியிருக்க உபயவாதிகளின் தளங்களிலிருந்து ச
கலவிதபேரோசையும் - வீரப்பிரதாபக் கூச்சலும் வெகு
ளியுமேற்கொண்டு அட்டஹாசஞ்செய்து வில்லைவளைத்து
நாணேற்றிக் குணத்தொனிசெய்தார்கள் அந்த விற்குண
த்தொனி குமு குமுவென்று அஷ்ட திக்குகளுஞ் செவி
டுபடும்படியாய் முழங்கியவோசை யெப்படி யிருந்ததெ
ன்றால் ஓ! பிரபஞ்சத்தவர்களே, பாண்டவர்களும், துரி
யோதனாதியர்களும், பதினெட்டக்குரோணி சேனைகளு
ம், பதினெட்டாநாள் சண்டைபண்ணப்போறார்களென்
று சமாச்சாரந் தெரிவிப்பதுபோ லிருந்தது, மேலும் இ
ந்தக் குருக்ஷேத்திர நிறைந்தடங்கிய சேனைகளெல்லா
ந்திருமால் வயிற்றில் பொருந்தி யிருந்ததைப் போலு
மிருந்தது அன்றியும் இவ்வுலகத்தைச் சுமக்கும் பூ
மிதேவி யானவள் ஐயோ! பூபாரம் பொறுக்க மாட்
டே னென்று தான் முறையிட்டுக் கொண்டதற்கா இந்த
உபகாரஞ்செய்தார், முதல்வராகிய இறைவர் இந்தச் சே

ளைகளையெல்லாம் ஒருதலைப்பாரமா யொரிடத்திற்சேர்த்து, என்கழுத்தை யொடிக்கலாமா வென்று வருந்தவும், பாதாளத்திலிருக்கும் ஆதிசேடன் ஆயிரம் பணாமகுடமும் விரித்துப்பரிக்கவும்; சூரியசந்திரர் முதலிய கோள்களெல்லாம் போவதற்கு வழியில்லாமல் நாம் நடக்குங்கதியாகிய நாள்குறையும்படி. யாக்குமே யென்று நடுங்கவும், திக்குப்பாலர்முதலாகிய திசையானைக ளொடுங்கவும் தேவர்முதலியயாவரும் ஏங்கவும், அஷ்டகுலகிரிகள்-எட்டுத்திக்கிலும் தங்கள்தலையை மூட்டுக்கொடுத்துத் தாங்கவும், கடற்பொங்கவும், பகைவர்கள்குடற் குங்கவும், புயங்கள்பூரிக்கச்-சேனைகளார்ப்பரிக்க, இருதிறப் படைகளுங்கிளம்பி, சமுத்திரம் புரண்டு வந்ததைப்போனின்ற சேனைகளைக்கண்டு, பாண்டவச் சேனாபதியாகிய சுவேதன் தன்னுடையவக்குரோணி சேனைகளையும்பிரித்து வகைத்தர மேற்படுத்தி, ஐந்துதலை நாகம்போல் யூகம்வகுத்துச் சகலஜெயமுந் தங்களுக்கு வரும்படியாகவுமிரமகாளிமுதலிய வீரலட்சுமியையும் பூசித்து, விரதுடனெதிர்க்கவும், துரியோதன ராஜனுடைய பாட்டனாகிய சேனாபதி விஷ்டுமர் தங்களுடைய சேனைகளைக் கருடயூகமாகக்கட்டி தானுந் தூசிப்படையில்வந்துநின்றார் அந்தச்சமயத்தில் துரியோதனமகாராஜனும்; தர்மபுத்திரமகாராஜனும், இவ்விரண்டுபேரும் முன்னமுகத்தில்வந்து நின்று ஒருவரையொருவர் பார்த்து ஊழ்வினையை நினைத்து தங்களுடைய கரங்களிற் பிடித்திருக்கும் கொடியைத் தூக்கித் தாழ்த்தினார்கள், அப்படிக்குத் தாழ்த்திய உடனே, பிராணாபிமானந் தேகாபிமானம்-லோகாபிமானம்-மானாபிமானமென்பனவற்றைவிடுத்து, இரண்டு கடல் கிளம்பி புரண்டுவந்து கலந்ததைப்போற்கலந்து கோர்த்துயுத்தஞ்செய்தார்கள்

இந்தக்களத்தில் முரசக்கொடியும் - அந்தக்களத்தில்-நாகக்கொடியும் படபடாகாரங்களுடன் ஆகாயவீதி அதிரும்படியாய்ப் பறக்கவும்; இருபடைகளிலும் பேரிபாங்கார முரசமுதலிய வாத்தியங்கள் முழங்கவும், பிரமுகாளுடைய கரங்களிற்பிடித்திருக்கும் விற்கொளியும் வீரகண்டைத்தொனியும் மேலாகி அதிர்க்கவும் சகலவீரவீரர்களின் சங்கத்தொனிகளொலிக்கவும், ஆயுதங்களிழையவும் இவர்களுடைய உள்ளங்கள் குழையவும், தேராளிகளுடன் தேராளிகள், வில்லாளிகளுடன் வில்லாளிகள், வேலாளிகளுடன் வேலாளிகள், யானையொடுயானை, குதிரையுடன் குதிரை, வீரருடன் வீரர், வாளுடனே வாள், கதையுடனே கதை, அரசருடனே அரசரும், பட்டவர்த்தனர்களுடன் பட்டவர்த்தனர்களும், மகுடவர்த்தனர்களுடன்-மகுடவர்த்தனர்களும், மந்திரிகளுடன் மந்திரிகளும், தந்திரிகளுடன் தந்திரிகளும், தளகர்த்தருடன் - தளகர்த்தரும், மண்டலாதிபர்களுடன் மண்டலாதிபர்களும், சாமந்தருடன் சாமந்தரும், யானைத்தலைவருடன் யானைத்தலைவரும், குதிரைமுதல்வருடன் குதிரைமுதல்வரும்; பதாதிநாயகருடன்-பதாதிநாயகரும், கொடித்தலைவர்-குடைத்தலைவர்-அணித்தலைவர்-ஆயுதத்தலைவரும் யெதிர்த்துப் பற்கடித்து-சிரித்து-இரண்டுபுயமென்னும்-வெற்பெடுத்து-மற்றெடுத்து-மண்டல முதலிய விண்டல மதிரச் சண்டைபுரிந்தார்கள் பின்னும், அர்ச்சுனனும் விஷ்டுமரும் வீமசேனனும்-துரியோதனனும், தர்மராஜனும்-சல்லியனும், நகுலனும்-சித்திராதியும், சகாதேவனும் - சகுனியும், துஷ்டத்துய்மனுந் துரோணாசாரியரும், சுவேதனும்-துச்சாதனன்முதலிய தம்பிமார்களும் விராடனும்-பூரியென்பவனும்; கலிங்கராஜனும்-யாகசேனனென்னும் பாஞ்சாலனும், அசுபத்தாமனும்-குந்திபோஜனும், உத்தரகுமாரனும்-கிருபாச்சாரியரும, கேகயனும் கிருதபன்மனும், அபிமன்னனும்-இலக்கணகுமாரனும், கடோற்கஜனும்-பகதத்தனும், சாத்தகியும்-பூரிசிரவனும், சிகண்டியும்-சீதனும், சோமதத்தனுங் - காம்போஜராஜனும், சேரனும்-சோழனும் மகததேசாதி பதியையெதிர்த்து வளைத்துக்கொண்டார்கள், பாண்டியனுஞ்-சகந்திரதேவனும், அரவானும்- அலம்புதனும், அநுபசேயனும் துன்மார்க்கனும்; உத்தமோசாவும் - விகர்னனும், விடசேனனும்-[illegible]மனும், சங்கனும்-உக்கிரவேகனும், ஒருவரையொருவர் எதிர்த்துக்கொண்டு பற்பல விதமாகிய யுத்தங்களைச் செய்தார்கள்.

மேலும் கொங்கர்-கோசலர்-சிங்களர்- ஆரியர்-குருரர்-கங்கர்-கௌசலர்-திராவிடர்-குண்டலர் போசர் கலிங்கத்தர்-வங்கர்-மாளுவர்-மகதர் மச்சர் சோனகர்-வத்தர் - மராடர்முதலிய பதினெண்பாஷை மன்னர்களும் கைகலந்து கண்சிவந்து கடுமைகொண்டு சப்தமேகங்களும் அஷ்டகெசங்களும் - செவிடுபடும்படியாய்ப் போர்புரிந்தார்கள் இந்த யுத்தங்களைப் பார்த்திருந்த தேவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டுக் கைகளை நெரித்துக்கொண்டு இனிமேல் அண்டங்கள் பிளந்துபோமென்று நடுங்கவும்-சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்ம்மா தியங்கவும்-இவ்விதமாக-இருதிறப்படைகளும் ஒன்றுபட்டு யுத்தஞ்செய்யுங் காலையில்-குதிரையினங்களும்-யானைக்கூட்டங்களும் தறிபட்டு சிற்சிலமுறிபட்டு-பற்பலநெரிபட்டு-கால்களால் மிதிபட்டு மண்ணிற்புதைபட்டுப்போகவும் தேரினங்களெல்லாம்-சக்கரமுதல் சிகரம்வரைக்கும் அம்பு தூள்களாய்ப் போய்க்குவியவும்-ஒருவர்பேரிலொருவர்தத்தியும் பாணங்களினாலெய்தியும் வேல்களினாற் குத்தியும் வாள்களினால் எற்றியும். கரங்களினாற்பற்றியும் சரசரவென்றுசுற்றியும் போர்புரிந்திடுங் காலத்தில் இறந்துபோன பதாதிகள்முதலிய வீரர்களை இத்தனைகோடியென்று எவர்களுஞ் சொல்ல மாட்டார்கள் இந்திரன்கண்களாற் பார்த்து முடியாது இத்தன்மையாகத் தங்களைத் தாங்கமறந்து இமத்தவர்களில் தலைகள்வெட்டுண்டு ஆகாயத்திலெழுந்து பூமியில்விழுந்து கொழுந்துவிட்டெரியுந்தன்மைபோல் ரத்தங்கள் பீரிட்டடிக்க அந்தத் தலையிழந்த உடலானது தரையில்விழாமல் - இடசாரி வலசாரி-சுற்றிக்கொண்டிருப்பது எப்படியிருக்கதென்றால் - ஸ்ரீமன் நாராயணர் மோகினியவதாரமாய்த் தேவர்களுக்கு-அமுதம் பகுக்குங்காலத்தில் இராகுகேதென்னுங - கிரகங்கள் மாயமாகிய ரூபத்துடன் அமுதத்தைக் கரத்தி லேந்தியபோது சந்திரசூரியர் சொல்லத்தெரிந்து கையிலிருந்த சட்டு

வந்தால் அவர்களுடைய தலையை வாங்கிவிட்ட போது
தலையற்று-உடல்நின்று-சுழன்றுநின் தன்மைபோ லிருந்த
து இரண்டு முழங்காலளவு முறிபட்டுச் சுழன்றோடும்
ஒற்றைச்சக்கரங்களையுடைய தேரைநடத்தும் பாகரைப்
பார்க்கில் எப்படியிருந்தார்களென்னில் சப்தமா வென்
னும் பரிபூட்டிய சூரியனுடைய ரதத்தை யோட்டிய அ
ருணனென்னும் சாரதியைப்போ லிருந்தார்கள்-மேலும்
திடகாத்திர உன்னத தேகத்தினையுடைய-படைத்தலைவர்
பட்டவர்த்தனர் முதலிய பேர்களின்பேரில் பாணக்கும்
புகள் நாணற்கும்புகள்போற் பாய்ந்து கேசாதிபாதம் வ
ரையிலும் ரத்தங்கள் பெருகிக்கசிந்து பீரிட்டு வருந்தன்
மை யெப்படி யிருந்ததென்றால் உயர்ந்த உக்குஸ்தம்பக்
கப்பபாணத்தின் ஜம்பங்களைப்போன்றிருந்தது இன்னம்
தங்கள் தங்களுடைய அம்பறாத் தூணியிலிருந்த பாணங்
களைநாணியில்வைத்து சேனுறுவோர்நியங்கப்பிரயோ
கஞ் செய்துபோட்டு அப்பாற்பாணங்களில்லாமல் தங்க
ளுடையதேகத்தில்தைத்துக் கொண்டிருக்கும் எதிரிவிட்
டபாணங்களைப் பிடுங்கி எதிரிகளைநோக்கிச்சிரித்து கரத்
திற்பிடித்துத் திரிந்துவிடுகின்ற தீரர்கள் அனேகர்போர்
புரிந்தார்கள் மேலும் இடதுகையற்றபோது வலது கை
யைக்கொண்டும்; வலதுகையற்றபோது இடதுகையைக்
கொண்டும் யுத்தஞ்செய்தார்கள். இதன்றியும் ஒருவன்ற
லையை ஒருவன்வெட்ட வெட்டுப்பட்டவன் தன்தலையை
த் தன்கையிற்பிடித்துக்கொண்டு தன்னைவெட்டினவன்த
லைமுறிபட்டு விழும்படியாயெறிந்தான் உடனே யவனுந்
தலையறுந்தாடினான் இவனுந் தலையறுந்தாடினான் மேலும்
இரண்டுபுஜங்க ளறுபட்டு இரத்தவெள்ளம் பெருகும்ப
டியாயிருந்த வீராதிவீரர்கள் இந்திரனால் இறகுக ளறுப
ட்டமலைகள்போலிருந்தார்கள் சிலவீரர்கள்ஓடிவந்து தங்
கள்தலைகளால் முட்டியும் புஜங்களாலிடித்தும் அநேகந்
தேர்களைஅழித்து குதிரைப்படையிலும் யானைப்படையி
லும் புகுந்து அதுகளின் கால்களும் வால்களும் வேல்க
ளும் சிதைந்திறக்கும்படியாய்ச் செய்து ஜெயம்நம்முதெ
ன்று குதித்தாடவும்ஒருவீரனை யொருவீரன்வெட்ட- த
லைபோனவன் ஓயாமல் யாவரையும் வெட்ட இன்னொரு
வனோடிவந்து வெட்டினவனைத்திட்ட அவனுமிவனுநெ
ருங்கித் தலையுடன் தலையைமுட்ட மேலெழுந்த தலைவந்
துவிழுந்து இவர்கள்மூவரும் பட்டார்கள் உயிர்விட்டார்
கள் இன்னொருவீரன் பின்னொருவீரன்பேரிற் சன்னமின்
னலாய் பாதாதிகேசம் வரையிலும் பாணங்களைப் பொழி
ந்து வரும்போது அடிபட்டவீரனானவன் பேய்களுடன்
கூட்டுறவாகக்கூடிக் கொண்டாடித் தன்பகையை முடித்
துக்கொண்டான் மேலும் ஆயிரம் பாணங்கள் நுழைந்த
துவாரங்களிலின்று உதிரவெள்ளம் புறப்பட்டு வீசுந் த
ன்மையானது அருணனடத்துந் தேரில்வராநின்ற ஆயிர
ங்கிரணங்களை யுடைய சூரியனைப்போன் றிருந்தது இன்
னஞ் சிலரைப் பின்னும் பலர்கள் மின்னும் வாளாயுதங்
கொண்டு வெட்டினார்கள்-அந்த வெட்டைத் தன்கையிலி
ருக்குங் கேடையத்தாற்றட்டிவிட்டு முனைகாட்டி ஓட்டிப்
பதுங்கியிருந்து சிங்கக்குட்டிபோ லெழுந்து மேற்பாய்ந்
து கட்டிப்பிடிக்க இருவருங் காலுடன்கால்-கரத்தொடுக
ரம் சிரத்தொடுசிரம்-உரத்தொடு உரமணைந்து உடலொ
ன்று உயிரொன்று என்று சொல்லும்படியாக இடித்துக்
கொண்டு கீழேவிழுந்து மல்யுத்தஞ் செய்தார்கள் இப்ப
டியாகப்பற்பலகாலையர்-விற்போர்-மற்போர்-வேற்போர்
வாட்போர் - ஆட்போர்முதலிய இயாவும்புரிந்து அழிந்த
பேர்களை யெத்தனைகோடாகோடி யென்று சொல்லுவே
ன் அரசனே இந்தப்பிரகாரம் யுத்தஞ்செய்து வரும்போ
து அர்ச்சுனனும் வீஷ்டுமருமெதிர்த்துத் தேவதா அஸ்தி
ரப்பிரயோகஞ்செய்து போராடுங்காலையில் இயாவருந
டுங்கும்படியாய் இருதிறப்படைகளும் எட்டுத் திக்கிலும்
வளைந்துக்கொண்டார்கள் பூமியிலிருந்து மேலெழுந்தநா
சிகளினால் வேடிக்கைபார்த்த தேவர்களாகிய மேலுலக
த்திலிருக்கு நாகரும்கண்களைப் பொற்றிக்கொண்டார்கள்
பளுவைச் சுமக்கமாட்டாமல் ஆதிசேடன் முதலாகிய கீ
மூலகத்திலிருக்கும் நாகரும் கழுத்தொடியச் சுமந்து இ
ளைத்துங்களைத்தார்கள் - இந்தச்சமயத்தில் துரியோதனம
காராஜனானவன் தங்கள்பாட்டனாகிய வீஷ்டுமருக்குதவி
யாகச் சகுனி-சல்லியன் - தம்பிமார் முதலியபேர்களை ய
னுப்பினான் இதைக்கண்டதருமராஜன் அர்ச்சுனனுக்குப்
பின்பலமாக வீமசேனனையும் அபிமன்னனையும் அனுப்
பினார் அவர்களை அருச்சுனன்கண்டு எனக்கும் படைத்
துணையனுப்பவேண்டுமோ இந்தவீஷ்டுமரைச் செயிப்ப
து அருமையோவென்று கடுகடுத்து பாட்டனா ரேறியிரு
க்குந்தேரிற்கட்டிய பனைக்கொடியின் பேரில் பன்னிரண்
டுபாணமும் கவசத்தின்பேரில் ஒன்பதுபாணமும்- அவர்
தேகத்தின்மீது ஐம்பதுபாணமும்-அகம்புறநடுங்கி யொ
டுங்கும்படியாகஅடித்தான் அதனால் அந்தப் பெரியவரா
னவர் நிலைதளர்ந்துற்றார் அந்தச்சமயத்தில் சல்லியன்-ச
குனி-துரியோதனனுடைய தம்பிமார்கள் தலைநீட்டிக்கா
ட்டினார்கள் அவர்களை வீமசேனன் கும்பாகக்கூட்டிப்பே
ய்போலாட்டி கோடிகணைகளைப் பூட்டி மாட்டி யோட்டி
விட்டனன்.

இப்பால், கர்ணனுடையபிள்ளைகளில் மூத்தவனாகியகு
ரியகேதென்பவன் அரவானுடனெதிர்த்து அநேகவிதமா
கிய தந்திரயுத்தங்க ளெல்லாவற்றையுஞ் செய்து அலுந்
து அவரிருவரும் ஒருவரையொருவர்விட்டு நீங்காமலெரு
ந்தபடி யுத்தஞ் செய்தார்கள் பலம்பெறும் அரக்கனாகிய
அலம்புதனும் கடோற்கசக்காளையும் எதிர்த்து இருளாக
வும்-மழையாகவும்- மின்னலாகவும் வெளியாகுதல் முத
லாகியமகாமாயைக்கோலங்களும் இந்திரஜாலங்களுங் கா
ட்டி அமர்புரிந்தார்கள் அந்தஅலம்புதனுடைய தம்பியா
கிய அசேபசூரனும் கடோற்கசனுடைய குமாரனாகிய அ
ஞ்சனவற்மனும் மரமலைமுதலிய ஆயுதங்களைக் கொண்டு
போர்புரிந்தார்கள்-அப்போது குற்றமற்ற பலபராக்கிரம
சாலியாகிய வாளபிமன்னுவானவன் வெகுசேனைகள் மா
ளும்படியாய்த் துணிந்துக்கொண்டுவரும்போது தன்னு
டையதந்தையும் மூதாதையாகிய வீஷ்டுமரும் கைகலந்
து போராடுஞ்சமயத்தில் நாலுபாணங்களைத் தொடுத்து
வீஷ்டுமருடையரதத்திற்பூட்டிய நாலுகுதிரைகளையும்நா

சப்படுத்தினான் அபிமன்னுவானவன் அதைக்கண்டு காங்கேயன் சந்தோஷங்கொண்டு வேறுதேரேறி விரைந்துவந்து போர்புரிந்தார் அந்தச்சமயத்தில்உத்தரகுமாரன்தேரைச் செலுத்திக் கொண்டுவந்து மத்திரதேசாதிபருடன் எதிர்த்துப்போராடி குதையினையுடைய வில்லிற் சிலபாணங்தொடுத்துத் தேகங்களிற் புதையும்படி மழைபோற் பொழிந்துவிடுத்து மேகசெற்சிதம்போ லிரைந்து விரைந்து சல்லியனுடைய வில்லற்றுவிழவும் கவசங்கிழிபடவும் துவசம்முறிபடவும் அழகியரதத்திற்கட்டித் தாவிவருங்குதிரைகள் அற்றுவிழவும் சாரதிசெத்துவிழவும் மற்றவர்கள் தலைசுற்றிவிழவும் கொற்றவர்கள் சிலைபற்றிவிழவும் யுத்தஞ்செய்தகாலையில் சல்லியராஜனுடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்ணாகவும் உதிரப்ரவாகத்துடன்உடல்புண்ணாகவும் கண்டு மனந்தளர்வுற்று இந்தப்பாவியாகிய உத்தரனுடன் வில்லெடுத்துப் போர்புரியக்கூடாதென்று மனங்கூசி வீரவார்த்தையைப் பேசி இலையாகிர்தியாகியவேலாயுதத்தை யெடுத்து இதயத்திற் பலவாறுநகச் செபங்கொடுத்து வணங்கிவிடுத்தான் அப்படிவிடுத்த குழந்தைவேலானது குவலயத்தைக்குமுறச்செய்து வந்துகுபென்று மச்சகுமாரனுடைய மார்பிற்பாயவே தக்ஷணம் உத்தரகுமாரனானவன் மருட்சிகொண்ட மான்குட்டிபோற்றுள்ளி மார்புடைந்து வானுலகடைந்தான் தன்மகனாகிய உத்தரன் சல்லியனாற் கொல்லப்பட்டானென்று விராடன்முதற் பாண்டவச்சேனை வீரர்கள்யாவரும் ஒன்றாய்க்கூடி உகாந்தகாலத்திற்பொங்கியெழுங் கருங்கடலைப்போற் புரண்டுவந்து போர்புரிந்தார்கள் அத்தனைபேர்களும் சித்தங் கலங்கி வெற்றிபெற மாட்டாமல் சுற்றியிளைக்குந்தருணத்தில் வீரபட்டமணிந்த யானையைப் போன்றகதாபாணியாகிய வீமசேனன்வந்துவிழுந்து வீரசுவர்க்கத்திற்கு வரவுசெலவுகணக்குச் சொல்பவனைப்போல் வெற்றிமாலைதரித்து வேல்தாங்கிய அதிரதர் முதலாகிய அரசர்களும் நிலைபெற மாட்டாது குலை கிழியும்படியாய் அடிபட்டுத் தாங்களுமுடிபட்டு உகிரங்கள் வடிபட்டு உளைகொந்து இப்படிகெட்டு இறந்தவர்வாட, இருந்தவரோட, எதிர்ந்தவராட, இவர்களைத் தேவர்கொண்டாடச்செயம்பெறுந்தன்மையை துரியோதனமஹாராஜன்கண்டு பூமியிற்றரிக்கப் பொருந்தாமற்பொங்கி நெஞ்சழலக் கண்சுழல நெருப்புப்பொறியெழக்கோபங்கொண்டு அஞ்சுசிரத்தினையுடைய அரன்மேல் பஞ்சபாணனாகிய மன்மதன் மலர்ப்பகழியெடுத்து வருவதைப்போல் பாணந்தொடுத்து பலவீரர்களையும் ஓட்டிகறுகறுத்துப் பற்கடித்துவிற்பிடித்துச் சொற்படித்து இமயமலையின்சிகரம்போன்ற தண்டங்கொண்டு மண்டலமிட்டுத் தேர்நிரைகள் சேனைமணிகள் - யானைக்கூட்டம் அரசர்களுடைய மணிமகுட முதலியபடைகள் யாவற்றையுஞ் சாடிக்கொண்டு வரும் வீமசேனன்பேரில் அனேகம் பாணங்களைத் தாக்கினான் அந்தக்கணைகளையெல்லாம் முனைமழுங்கவடித்துக் கதையுடன்தாவி அநேகமாயிரவிதங்களாக விளையாடி மோதிமுனைந்து தாங்களிருவருஞ் சாதிக்கத்தக்க தன்மைகளையெல்லாங்காட்டிச் சிங்கமும் சிங்கமும் எதிர்த்துப்போர்புரிந்த தன்மையைப்போல் நெடுநேரஞ்சண்டைசெய்து திடவீரனாகிய வீமசேனன் துரியோதனராஜனுடைய வில்முறியும்படியாய் ஓங்கியடித்துப் பாங்கிற்குதித்து ஒருகரத்தைநீட்டித் துரியோதனராஜன் ஏறிவந்ததேரைத்தூக்கிச்சிதறவெறிந்தான் அந்தத்தேரானது பூமியிலோடுவதைப்போல் ஆகாயத்திலுங் கரகரவென்றோடி நிலத்தில் விழுந்து சக்கரங்களுடைந்து அச்சு முறிந்து சிகரமுதலிய குடைகளும் கொடிகளும் சாரதி குதிரைகளும் அழிந்து வன்னமாகிய தேர் சின்னபின்னமாகவே துரியோதனராஜனும் தேரைப்போற்சிதைந்து போனானென்று அவனுடைய சேனைகளெல்லாம் புறமுதுகிட் டோடினார்கள் அந்தச் சமயத்தில் படைத்தலைவர் முதலிய அரசர்களெல்லாரும் ஓடியசேனைகளைத் தடைப்படுத்தி இராஜனுக்கென்னமோ அபாயமென்று கூட்டங்கூடிவந்து பார்த்தார்கள் அந்தவேளையில் வீமசேனன் பாரியரதத்திலேறிக்கொண்டு ஒருசூரியனைப் பலசூரியர்கள் சூழ்மாப்போல் அநேகம்வேலாளிகள் வாளாளிகள் வில்லாளிகள் நிறைந்து நிற்கவும் - சுவேதகூத்திரநிழல் விட்டு நீங்காத கிரீடாதிபதிகள் சிறந்துநிற்கவும் நடுநாயகம்போல் வீமசேனன் நிற்கும்படியாகிய மேன்மையைக் கண்டு மனந்தாளாமல் புகையுமனத்தினராய்ப் பகை மேற்கொண்டு சிந்துதேசத்தலைவராகியவிந்தரன்முதலியபேரும் சகுனிமைந்தராகிய மைத்துன ரென்னு மாப்பிளைத் துரைகளும் இவர்களுக் கருகாகிய முடிமன்னவரும் வந்து நெருங்கி வீமசேனனை வளைத்துக்கொண்டு கூர்ங்கணைபொழிந்தார்கள் துரியோதனராஜனுக்காகப் பக்ஷமாயெதிர்த்து வந்த மைத்துனர் முதலாகிய மன்னவர்களைக் கண்டு மரியாதைசெய்வதற்குத் தேரைவிட் டிழிபவனைப்போல் இறங்கி இருகரத்தையுங்குவித்துப் பிடித்திருக்கும் கதையுடன் பூமியிற்குழ்ந்து நுழைந்து விஷ்ணுசக்கரம்போல் விரைந்து சுழன்று மகமேருவின்கொடிமுடி வாயுவாற்பறிபட்டுப் போனதைப் போல் வந்தவர்களின் மணிமுடி வாயுவின்சேயினாற் றறிபட்டு மண்ணில் விழுந்துருள விண்ணிலெழுந்துதிர, மாறிமாறிக் கதைகொண்டடிக்கதேவர்கள் முதலியபேரும் திடுக்கிட்டுத் துடிக்கச் சேதித்துவந்தான்-வீமசேனன்-துரியோதனனுடைய படைவீரர்கள் பாண்டவச்சேனைகளிற்புகுந்து பற்றறக்களைந்து பரியோடும்படி-சாரிசாரியாய்ச் சாய்த்தார்கள் இருதிறப் படைகளும் போர்புரியும்போது தனது தம்பியாகிய உத்தரனிறந்தானென்று மெத்தவிசனங்கொண்டு கர்த்தனாகிய சிவபெருமானளித்த வில்லை எடுத்துப்பிடித்துவெற்றிமாலையைத்தரித்து வீராவேசத்துடன் சங்குநாதம் சிங்காதம்தாரை-பூரி-முரசு-சின்னம்- காகளமுதலிய வாத்தியங்கள்முழங்கவும் ஆலவட்டம் குடை-கொடிமேற்கட்டி-விதானமுதலியசுருட்டி மயிற்பீலிகள் பிடிக்கவும் யானைவீரத்தலைவருக் கிறைவர் குதிரைவீரத் தலைவருக் கிறைவர் தேர்வீரத்தலைவருக்கிறைவர் சேனைவீரத்தலைவருக்கிறைவர் இடமாக நாலுபக்கங்களிற் சூழ்ந்துவரவும் பாண்டவச் சேனாபதியாகிய சுவேதனன் பற்கடித்துவிற்பிடித்து சொற்படித்து புறப்பட்டு யுத்தகளத்திற் புகுந்து மத்திர

ஞாயி சல்லிய னெங்கே அவனெங்கே சல்லிவேருடன்
கெல்லிவிடுகிறேனென்று தொடர்ந்து அவடத்திற் படர்
ந்து நின்ற படைவிரர்களெல்லாரும் பாயிப்போகும்படி
யாய்ப் பாடுபடுத்தி அவர்க்குக்கேடுவிளைத்து கலங்கி அ
லமலங்கிப்போகச்செய்து சல்லியனுக்கெதிரிற்போய் நி
ன்றுதகைந்து-சிங்கம்போன்றசுவேதனனானவன்பேரொ
லியாகவிரைந்து தனது விரப்பிரதாபங்களைப்பேசி ஆ! ஆ
மந்திரனே-பத்திரமாயிரு சற்றுநேரத்தில் உன்தலை அ
றுவிழச்செய்கிறேன் பாரென்று கேசரி கெற்சிதம்போற்
பலவித சபதங்களைப்பேச-சல்லியனு நகைத்து ஈட்டுக்கி
டாகயேச மிகுந்த ரோஷத்துடன் இருவரும்பதைத்துஇ
மைக்குமுன்பதைத்து பாரியவில்லை வளைத்து ஒருவருக்
கொருவர் நிகரில்லையென்று ஊடுருவும் வாளிகளைவி ம
லைந்தார்கள்-இந்தப்பிரகாரம் இவர்க ளிருவருந் தங்களுக்
கொருவர் நிகரில்லையென்று புருவம்நெறிந்து புகையும்
பிறந்து பொறியும் பறந்து ஐம்புலனுங்குறைந்து போகு
ம்படியாய்ப் போர்புரியும்போது சல்லியராஜன்; இதென்
னசல்லியமென்று தளர்ந்து வருந்துந் தன்மையைக்கண்
டு இராஜகுல ராஜனாகிய துரியோதன மகாராஜன் மலை
போன்ற புயத்தினையுடைய தன்தம்பிமார்களில் ஆறுபே
ரையும் அவர்களுடனே அநேகவீரர்களையுஞ் சேர்த்து
மத்திர தேசாதிபதிக்கு உத்த துணையாகும் படியாய் அ
னுப்பிவைத்தான் அந்த அரசனுடைய உத்தரவின்படிவ
ந்த தம்பிமார்கள் மயிலேறும்பெருமாளாகிய சுப்ரமண்ய
க் கடவுளைப்போல் மகுடமுடிமன்னவர்களுடன் வந்தெ
திர்த்து மாறாமல் வாளிதொடுக்குங்காலையில் மதுமாலைய
ணிந்த சுவேதனனாகிய சேனாபதிமனக்கொதிப்புடன்மலை
ந்து அவர்களுடைய அங்கக்கரணங்களெல்லாங் கெட்ட
ழியும்படிக்குப் பலகணைபொழிந்து பலங்கொண் டெதிர்
த்த மன்னவர்களின் வில்லுகளை இரண்டிரண்டாகத் தறி
த்து முறித்து திரண்டுவந்த படைவீரர்களெல்லாரும் அ
ருண்டு புரண்டு முடித்தலையுருண்டு மண்மேல்விழுந்தழி
ய வாளிமழைகளை மாறாமற் றொடுத்தான் இதன்றியும்
அவரவர்கள் ஏறிவந்ததேர்களும் அந்தத்தேரிற் பூட்டிய
குதிரைகளும் சாரதிகளும் மேகம்போன்ற யானைகளும்
வேலாயுதம்-சூலாயுதம்-வாளாயுதம்-சக்கராயுதம்-குத்தி
ட்டி-எறிபிட்டி-பாலா பல்லயங்கள்முதலிய கவண்டுக் க
ற்களுங் கொண்டுவந்த காலாள் யாவரும் இலவம் பஞ்சு
போற் பறக்கும்படியாகச் செய்து தன்னுடைய ரதமுந்
தானும் பெருங்காற்றைப்போ லுலவிக்கொண்டு நின்றா
ன் சுவேதனனானவன் அந்தச்சுவேதனன்றொடுக்கும் அ
ம்புகளினால் இறந்தவர்கள்போக இருந்தவ ரியாவரும்-த
ன் தம்பிமார்களும் நெரிபட்டு நின்ற நிலைக்கெட்டு நெறி
விட்டுப் புறமுதுகிட்டுப் பறிபட்டு ஓடிவருந்தன்மையை
ப்பார்த்து வணங்காமுடிபெற்ற மன்னன் விஷ்டுமனைக்க
ண்டு இன்று ஜெயங்கொண்டு பிழைத்தால் நமக்குண்டு
இல்லாவிட்டால் நாம்தோண்டு பாண்டவர்களுக்கென்று
பற்பலவார்த்தைகள்சொல்ல அந்தவசனத்தைக்கேட்டுப்
பாரியவில்லைக் கைக்கொண்டு சுழற்காற்றைப்போற் பற
க்கவடிக்கிறேனென்று முழங்கி யடித்துக்கொண்டு விஷ்
டுமர் எதிர்த்தார் இவரைக்கண்ட சுவேதனனானவன்சல்லி
யனை யொருபுறத்திற் றள்ளிவிட்டு-ஏழுசமுத்திரம்போலி
ரைந்து ஏழுமேகம்போல் விரைந்துவந்து-நீ யொரு பெ
ரியதலை யிருக்கிறாயென்று துரியோதனன் துள்ளிக்கொ
ண்டிருக்கின்றான் பாண்டவர்களும் பாட்டனாகிய விஷ்
டுமனையெப்படி ஜெயிப்போமென்று முன்பின் பார்த்து
க்கொண் டிருக்கின்றார்கள்; நீரும் மத்திராஜனுக்கு உப
றாலாய்வந்தீர், வாரும்-வாரும், பெரியவரே, உமாமஹே
சனைப்போற்றி, உம்முடைய ஒரு தலையைமாற்றி ஐவர்க
ளுக்கும்-ஆறுதலையேற்றிப்-பதினொ ரக்குரோணி சேனை
களையுந் தூற்றிவிடுகிறேன் பாரும்-பாருமென்று ஒரு அ
ஸ்திரத்தைவிடுத்து விஷ்டுமர் கைக்கொண்ட பலமாகிய
வில்லைக்கெடுத்து தேகத்திலும் ஆயிரங்கணைகளை நுழை
த்தான் அப்போது சுவேதனன்றொடுக்குங்கணைகளுக்கிளை
த்து சித்திரம்போற்றிகைத்து நிகிற்கொண்ட புலிபோலி
ளைத்து சற்றுநேரந்தரித்து, 'வேறுவிற்கொண்டு விராட
குமாரனுடைய சித்திரகிரீடம் அற்றுவிழும்படி தாக்கினா
ர் விஷ்டுமரானவர், உடனே அந்தச்சுவேதனன் அழற்க
ணைதொடுத்துப், பனைக்கொடியறுத்து, அச்சு மச்சுகளுட
ன்-தேரையுமழித்து நச்சு நச்சென வரும்பேரையுமொ
ழித்தான். மறுபடியும் விஷ்டுமரானவர் வேறு தேரேறி
விரைந்துவந்து சுவேதனனுடைய விரபட்டமும் அறுங்
து விழுந்துநெற்றிதிறந்துபோகும்படியாக நூறுகணைகளை
த்தொடுத்தார்-அந்த நூறுகணைகளையும்நூறுமாறுங்கி வே
றுவேறாய்ப்போக்கி அவர் கைபற்றிய வில்லையும் தேர்
குதிரை-சாரதியையும் இடிக்கணையால் முடித்து வடிக்க
ணைதொடுத்து, மார்பிலடித்தான், மறுபடியும்-விஷ்டுமரா
னவர் வேறுதேரேறிவந்து வில்வளைத்து-சரமாரி பொழி
யும்போது சுவேதனனானவன் கடுகடுத்துக்காலாக்கினிக்
கணைகளைவிடுத்துக்காங்கேயன் கையும்மெய்யுங்கருகும்ப
டியாய் உதிரம்பெருகும்படியாய்உடம்பெல்லாம்பொற்றி
உரனிற்குத்தியோடிவில்முதலியதங்களைஒடிக்கும்படியா
கிய உக்ரசாயியென்னும்ஒருகணையைவிடுக்க-அதைக்கண்
டுவிஷ்டுமர்வெகுண்டுஇவனுடனின்றுஇனியென்னயுத்த
ஞ்செய்வதென்றுமனந்தளர்ந்திருக்கச்சுவேதனனானவன்
மற்றப் படைகளை மடக்கியடித்து அக்ரோணிசேனைகளை
யொருதரஞ்சுற்றிப்பார்த்து உலையச்செய்துவருகின்றான்.
இதற்குள்ளே துரியோதனராஜனானவன் விஷ்டுமர் இளைத்
த விக்தையைக்கண்டு விசனமடைந்து சுவேதனனுடன்
யுத்தஞ்செய்து விஷ்டும ரிளைக்கிறாப்போலிருக்குது. நீங்
கள் விரைவிற்சென்று துணைசெய்யக் கடவீர்களென்று
முடிமன்னவரையும், கொடிமன்னவரையும், இளைக்காம
ல் வெற்றிக்கொள்ளுங்களென்று கூட்டிவிடுத்தான், அங்
தப்படிக்கு அவரவர்களுந் துடிதுடித்து விரைந்து வந்து
எங்கே சுவேதனனென்று வாய்திறந்தார்கள் இதோவந்
தேனென்று படையைச் சுற்றிப் பார்த்துவந்த சுவேதன
னானவன் வந்தவர்கள் அந்தவழியே நொந்துபோகும்படி
யாகவும் அவர்கள் பிடித்தவில்லும் ஆயுதங்களுடன் க
வசமும் தேரும் அழியும்படியாய்க் கணைகள்பூட்டி அவர்
களைமாட்டி ஓட்டினான் அவர்கள்வருந்திப் பின்னிட்டு வ

ருவதைக்கண்டு துரியோதனராஜன் மனத்துணிவு கொ
ண்டு ஜெயவிஜயாளென்னும் பஞ்சசேனுதிபர் ஐந்துபே
ரையனுப்பிவைத்தான் அந்த ஐந்துபேரும் வந்து, ஆரவ
ன் சுவேதன னாரவனென்று அதட்டி கேட்கும் போது
அக்ரோணியை ஒரு சுற்றுசுற்றிவரும் சுவேதனன் இவ
ர்களுக்குநேரில்வந்து நின்று நான்தான் சுவேதனனென்
றுசொல்லி சிவந்தமலைபோன்ற தேர்களும் அவர்கள்கை
க்கொண்டு தெறித்த விற்களும்-பொற்பிரகாச முற்ற மு
டிதாங்கிய தலைகளும் படிமேல்விழுந் துருளும்படியாய்ப்
பிறைமுகக் கணைகள்விடுத்து அழித்தான், அவர் மீண்டு
போய்த் துரியோதனனுக்கு வெற்றிபெற்றோ மென்று
சேதிசொல்லாமல், இங்ஙனே மாண்டு போனார்கள் இது
கண்டுபார்த்திருந்த கங்காபுத்திரன் கண்சிவந்து கடுமை
கொண்டு கார்முகம்வளைத்து நாணேற்றித் தெறித்து இர
தமேறி-சிங்கம்போற்றெழித்து உறுக்கி கறுவியெதிர்செ
ன்று நின்று இலைமுகப்பகழி யெடுத்துத் தொடுத்தான்
அதைக்கண்ட சுவேதனன், கலிரென நகைத்து எத்தனை
தரம் எத்தனைவில், எத்தனைவீரர்களுகவியுடன் இன்ன
மெத்தனைதரம் உருவாய் வருவாய் பெரியோனே யெ
ன்றுபேசி கமலாஸ்திரக் கணையெடுத்துத் தொடுத்து
விடுத்து வீஷ்டுமர் கைப்பிடித்த தாஷ்டீக விலலைப் ப
ங்கப்பட வொடித்து ஒருசுற்றுச் சுற்றியெதிர்த்து வந்
துநின்று விஷ்டுமரேறியிருக்கும் இரதத்தையும் அழித்
தான் அந்தவேளையிற் சிந்தைநொந்துத் தியங்கி மனோத்
தியானங்கொண்டிருந்தார், வீஷ்டுமரானவர் அப்போது
ஆகாயத்தில் வேடிக்கைபார்த்திருந்த தேவர்களெல்லா
ரும் விராடகுமாரனை மிகப்புகழ்ந்து வெகுவாய் மகிழ்ந்
து அவனுடைய விஜயங்களைப் பேசிக்கொண்டு லலாட
நேத்திரனுகிய நாதபிந்துகலா தீதனென்னுஞ் சிவபெரு
மான் அளித்தவில்லைத் தாங்கிய வல்லபனைக்கொல்லத்த
க்கபேரொவர்களுமில்லை ஆகையினால் விஷ்டுமர் அநேக
ந்தரமினைத்தார் அந்தவில்லை அவன் கைப்பிடித் திருக்கு
ம்வரையிலும் யாவருஞ்செயிப்ப தரிது ஆனால் வஞ்சனை
செய்து வேறு ஆயுதமெடுக்கப்பண்ணினால் அப்போ த
ழிந்துபோவானென்று தங்கள்குலத்தானுகிய விஷ்டுமரு
க்கு நலத்தைச்செய்யும்படியாக வசுக்கள்முதலிய வான
வர் பேசிக்கொண்டார்கள் அந்தவார்த்தை இந்த வீஷ்டு
மருக்குத் தெரிந்தது அதெப்படி யென்றால் எட்டுவசுக்
களில் ப்ரபாசனவசுவே வீஷ்டுமரவதார மாகையாலும்
அவர்களை இவர் நெடுநாள்விட்டுப் பிரிந்திருப்பதினாலும்
இவர் சிக்கிரம் அந்தவசுபதத்திற்கு வரவேணுமென்னும்
பாக்ஷத்தினாலும் இந்த விஷ்டுமரும் சற்றுநேரந் தியான
த்திலிருந்தபடியாலும் அவர்கள் பேசிக்கொண்ட தேவர
கசியம் இவருக்குத்தெரிந்தது உடனே வேறுதேரேறிக்
கொண்டு வெறுங்கையுட னெதிர்வந்து நின்று அடாபா
விப்பயலே உனக்கு இந்த வில்யுத்தம் ஒன்றுதான்
தெரியும்போலிருக்குது அதைவிட்டாற் கதியுமில்லை அ
ப்பாற்போனல் வழியுமில்லை யென்பது போல் வேல்-
வாள்-கதை-முதலியயுத்தங்கள் வேறென்றுந் தெரியாத
ல்லவா அடா வெப்பமுடையவனே யென்று விஷ்டுமர்

கேட்கவே மிகுந்தவெட்கமுற்று மேருவில்லியாகிய ஈச
ன்கொடுத்த விலலைப் போட்டுவிட்டு உடைவா ளொருவிக்
கொண்டு ஓய்-விஷ்டுமரோ எனக்கா வேறுவித ஆயுதப்ப
ழக்கமில்லை யென்றுசொன்னீர் நல்லது உமது நிர்வாக
த்தை விற்றிறமையிற்கண்டேன் இதோ வாள்த்திறமை
யிலும் பார்க்கும்படியாய் வந்தே னென்று அக்ரோணி
யைச்சுற்றி அநேகம் பேரையெற்றி ஓடிவந்து வீஷ்டுமர்
பேரிற்றாவி-சாரதி-குதிரையை வீசிக் கீழே குதித்துச் சக்
கரம்போலுஞ் சுழன்று உக்ரங்கொண் டெழுந்தகாலத்தி
ல் வீஷ்டுமர்வேறுதேரேறிவில்லெடுத்துவளைத்து அர்த்த
சந்திரபாணந்தொடுத்துசுவேதனனுடைய ஒற்றைக்கைய
ற்றுவிழும்படியாய்க் கொய்தார் அதைக்கண்டுமனமகிழ்வு
கொண்டு மற்றொருகையில் வடிவாளைத்தாங்கி விஷ்டு
மரைப் பார்த்து ஐயா பெரியோனே இப்படி வஞ்சக
ஞ்செய்து மடிப்பதற்கா இந்தயோசனை யெடுத்தீர் - ஆகி
லும் நீர் நினைக்குங்காரியமல்ல போகட்டும்இப்போதுப
தினொருஅக்ரோணிசேனைகளில் நாலக்ரோணிசேனைகள்
மடிந்திருக்கின்றன உமக்குக்கணக்குத்தெரியாதுநீர்போ
ய்ப்பாரும் பாண்டவர்களுக்கும் ஏழக்ரோணி துரியோ
தனனுக்கும்ஏழக்ரோணியென்றுசரிப்படுத்திவைத்தேன்
இன்னம்வேண்டியவேலைகளையெல்லா முடிக்கவிருந்தே
ன் இதற்குள்ளாக நீரென்னை மோசஞ்செய்து முடித்து
விட்டீர் ஆண்டவனுடையசித்தமிப்படியிருந்தது அப்படி
யிருந்தபோதிலும் உம்மைப்போலொத்த அதிரதனினைக்
குங்காரியம்இதன்று என்று வெகுவாய்ப்பேசிஇடதுகர
த்திற்கொண்டவாளையோங்கி விஷ்டுமருடைய தேர் -
குதிரை - சாரதியெல்லாவற்றையுமழித்து அவர்விடுகிற
கோடாகோடிபாணங்களையுங் குறைத்துயானைக ளநேக
ம் - பதாதிக ளநேகம் - அரச ரநேகம் - புரசரநேக
ம் - மாளும்படிக்குவீசி மண்டலமிட்டுவீஷ்டுமருடையம
ண்டையைப்பிளக்கும்படியாயெண்ணி அண்டையிற்பாய்
ந்துவந்தான் -அதைக்கண்டவீஷ்டுமரானவர்சுடர் வாளி
யொன்று சுறுக்கிற்றொடுத்துபகையாளியுயிரைப்பற்றற
ப்போக்கினர் உடனேசுத்தவீரனுகிய சுவேதனன் பூமிய
சையும்படியாய்ப் பொன்மயமாகியமேனியிற் புழுதிதோ
யும் படியாய்ப்பூமியில்விழுந்தான் ஆகாயத்திலுள்ள தே
வர்களெல்லாரும் வாழிகூறிமங்களம்பாடிமகிழ்ந்து புகழ்
ந்து அந்தாதுந்துமிமுழக்கினர்கள். இப்பால் துரியோத
னன்முதலியசேனைவீரர்கள்யாவரும் உகாந்த ஊழியக்கா
லமடங்கி உலகமுதலிய திசைகளும் உண்டாகியகாலத்தி
ல் ஏழுசமுத்திரமும் பரந்து இரைந்தாலெப்படியோ அ
ப்படிப்போலிரைந்தார்கள் அப்பாலழிந்துபோகிய ரதகஜ
துரகங்களின் துவாரங்கள் தோறும் உதிரவெள்ள மான
து பிரிட்டோடிவருந்தன்மை யெப்படி யிருந்ததென்றால்
ரணகளத்திலிறந்த சுத்தவீரர்முதலிய சேனைகளுக்குச்சூ
ரியமண்டலத்தின் மத்தியில் நுழைந்து போகும்வழியின்
சாயலைப்போலிருந்தது மேலும் ரத்தவெள்ளத்தில் வெ
ள்ளைக்குடைகள் காம்பற்றுவிழுந்துகிடப்பது எப்படியி
ருக்குதென்றால் வேல்போன்றகண்களையுடையஸ்திரீகள்
குளித்த பரிமளச் செங்குங்குமநீரில் எழுந்த குமிழியை

யும்வெண்டாமரைமலரையும் ஒத்திருந்தது இயானைகளி
ன் உடலாகிய கலங்கல்வழியில் வழிந்துபோகும் குருதி
வெள்ளத்திற் கொடியாடைகள்தோய்ந்தசைந்து மிதக்கு
ந்தோற்றம் எப்படியிருக்குதென்றால்செம்பண்சலங்கலா
கிபுதுவெள்ளப்பெருக்கிலெதிரேறிதுள்ளிப்பாய்ந்து வி
ளையாடித்திரிகின்ற வாளைமீன்மடலைமுதலிய சேற்கண்
டைகளையொத்திருந்தது இதன்றியும்மாலைகளணிந்த மன்
னவர்களின்மகுடத்துடனே மதிமுகம்விழுந்துகிடப்பது
எப்படியிருந்ததென்னில் சிவந்தசலத்தில் செந்தாமரை
ப்புஷ்பம் விரிந்தும்பொற்றாமரைப்புஷ்பங்குவிந்துமிருப்
பதைப்போலிருந்தது அளவிறந்த உதிரமானதுஏரியாகவு
ம் அதற்கு இருபுறத்திலுங்கட்டியகரைகள்யானைப்பிண
ங்குதிரைப்பிணம்சேனைப்பிணங்காளகவும்தோல்முதலிய
வார்கிழிந்தறுந்தபறைகளும் கப்பட்டைகளும்பாதிபுதை
ந்து பாதிதெரிந்த அதின்வழியே செந்நீரோடுவது எப்ப
டியிருந்ததென்னில்அந்தஏரிக்கு கீழ்க்கலங்கல்விட்டிருக்
கும்வாய்க்காலுக்குக் கட்டியமதகினுடைய துவாரம்போ
லுமிருந்தது, மேலும்பூமியிலிறந்தொழிந்த அரசர்களு
டையஆபரணங்கள்விழுந்துகிடக்குந் தோற்றமெப்படியி
ருந்ததென்னில்ஆகாயபரியந்தம்அளாவித்தெரியஅக்கினி
சுவாலையில்தாராகணங்கள்விழுந்துகிடக்குந் தன்மையை
யொத்திருந்தது இத்தன்மையவாகியயுத்தகளத்தில் நிறை
ந்து நின்ற பூபாலரும் - சேனைகளும்-மன்னவர்கள் முத
லியபேரும் மிகுந்த துன்பமுடையவர்களாய்ப் பாண்ட
வர்களுடையசேனாபதியாகியசுவேதனராஜன்பட்டான் இ
னிமேல் இன்றைக்கு யுத்தநடப்பது கஷ்டமென்று துன்
புற்றவர்களாய் வீரகண்டைகளும் இரதண்டைகளுந் தரி
த்தவீரர்களும் - பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர்களு
ம் - சுடர்வடிவா ளேந்திய மன்னவர்களும் மகிபாலரும்
பாசறைப்போய்ச்சேர்ந்தார்கள், சூரியனுங்குடபாற் குன்
றிற்சென்றுமறைந்தான்இந்தரெத்தங்களினால் மேற்றிசை
சிவந்ததைப்போற் செவ்வானந்தோன்றப்பாண்டவர்கள்
முதலாகியபேரும்பாசறையிற்சென்று பரிதாபங்கொண்
டுவிராடனிருக்கும் பாடிவீட்டுக்குப்போய் அவரைக்கண்
டுஉபசரித்தபோதுவிராடனும்அவன்தம்பி சதாநீகனும்பி
ள்ளைகள்முதலிய மச்சகுலத்தவரும் மிச்சமாகிய து
ன்பத்திலாழ்ந்துவருந்த அவர்களை யெல்லாம்பச்சைமா
லும் பாண்டவர்களுந்தேற்றி உன்பிள்ளையாகிய சுவேத
னும் - உத்தரகுமாரனும்-முதநாள்யுத்தத்தில் இறந்து
போனார்களென்று துன்புறவேண்டாம் ஐயா,உன்குமார
ன் இன்று வீஷ்டுமனைக்கண்டஆட்டமும் அவருக்கின்ப
வாட்டமும். புறமுதுகிட்ட ஓட்டமும் ரணகளமுழுதுங்
கோஷ்டமும் உண்டாகும்படியாய் வெற்றி கொண்டு வீ
ரத்திற காட்டிநின்றகாலத்தில் சூதாகவாளெடுக்கச்செய்
துதான்மாத்திரம் வில்லெடுத்துவஞ்சனையாகிய நெஞ்சி
னையுடையவீஷ்டுமர்கொன்றார் இல்லாவிட்டால் இறக்கு
ம்படியானவனு யேந்தலே,.உன்னிளையகுமாரன் அந்தச்
சல்லியனைப்படுத்தியபாடு லேசாகியதல்லஆகையால்இவ
ர்களிருவரும் நல்லவீரராள் வீரசுவர்க்கம் பெற்றார்கள்,நீ
ர்அந்தப்பிள்ளைகளைக்குறித்துவிசனப்படவேண்டாம்நீரொ
ப்பேர்ப்பட்டவரென்றால் பேய்கள்வாசஞ்செய்யும்வனத்
தில்வாசஞ்செய்துவந்தபாண்டவர்களுக்கு ஸௌவிகவாசத்
துடன் போஜனாதிமுதலியஉபசாரங்களு நடத்திப்பெற்ற
தாயிலும்பெரியதாயைப்போற்காத்திரக்ஷித்தபூமானேநீர்
செய்த உதவியைப்பார்க்கிலும் உமதுபிள்ளைகள்யுத்தகள
த்தில்உற்றாருக்கு உயிருதவிசெய்தார்கள் உத்தமனே,சத்
தியவானே-உன்னுடையதவமேதவமென்றுபுகழ்ந்து இப்
படிக்கு உயிருதவிசெய்யும்படியாகியபேர்கள் உலகிலுண்
டோஐயா,தேவர்கள்முதலியஇயாவரும்புகழும்படியாய்நீ
ங்கள்செய்த உதவியைப்போல் ஆர்செய்தார்கள்விராடபூ
பதியேயென்றுசொன்னார் அவராரென்னில் செங்கோற்
றாங்கிய மங்களாகா முடைய திங்களங்குடை நிழற்றப்-
பொங்குசத்யவாழ்வின்மிகுத்த எங்கும்ப்ரசித்த சங்கும்
முரசுற்றதருமராஜன் இந்த வார்த்தையைக் கேட்டு விரா
டராஜன் சொல்லுகின்றான் மெய்யேமெய்யாகக் கொண்
ட ஐயா-தேவரீருடைய பிராணனைப் போல் பாதுகாத்து
வந்த உத்தரகுமாரனும் தீரவீரத்திற் சிறந்து நிறைந்த சு
வேதனனும் உலகமெல்லாங்கொண்டாடும்படியாய் யுத்
தஞ்செய்து வெற்றியடைந்தார்கள் இனியிருக்கும் பிள்
ளைகளினுயிரும் என்னுயிரும் இன்னமும் என்குலத்தோ
ருயிரும் தேவரீருக்குச் சொந்தமேயன்றிவேறில்லை பிர
மனாற்சிருஷ்டிக்கும் இவ்வுலகில் தன்னுயிர்போல் மன்
னுயிர்காக்குந் தயாநிதியாகிய தருமவுருவேயென்று தா
ழ்ந்து வீழ்ந்து வணங்கினான் மச்சகுலாதிபர்க் குச்சித
மாகிய வளமிகுந்த சுகநிறைந்த மணமிகுந்த மாலையணிந்
த விராடராஜன் இப்படிக்குச்சொல்லி வணங்கிய விராட
ராஜனைத் தருமராஜன் வாரியெடுத் தணைத்து உபசரித்து
அவடத்திலிருக்கச்செய்து, பாண்டவர்களும்- கண்ணனு
ம் பாடிவந்துசேர்ந்து போசனாதி முதலியதுங் கொண்டு
சயனித்திருந்து பொழுதெப்போது விடியுமென்று வீரா
வேச மிகக்கொண்டிருந்தார்கள், அந்தச் சமயத்தில் இவ்
விருதிறப்படைகளில் முதல்னாள்யுத்தத்தைப் பார்த்தோ
மே, இனி இரண்டாநாள் யுத்தத்தையும் பார்ப்போ மெ
ன்று வந்தவனைப்போல் கீழ்த்திசையிலுதயமாயினான் சூ
ரியபகவான் அப்போதுதித்த அருக்கனைக் கண்டமாத்திர
த்தில் யாவருமெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்
டு போசனாதிமுதலியதுங்கொண்டு ஆயுதபாணிகளாய்யு
த்தசன்னத்தராய் எதிர்கொண்டிருந்தார்களென்று திரித
ராஷ்டிரமகாராஜனுக்குச் சஞ்சயன் சொல்லி விடைபெ
ற்றுக்கொண்டு குருக்ஷேத்திரத்திற்குவந்தான் கேளும்அ
ரசனேயென்று வைசம்பாயனர் சொல்ல மகாசந்தோஷ
த்துடன் வணங்கி இரண்டாம்போரின்றன்மை யெப்படி
யோ அஃதையுமெனக் கியம்பவேணுமென்று ஜெனமே
ஜெயமகாராஜன்கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொ
டங்கினார்.

இரண்டாம்போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி - விருத்தம்.

வானையாதிபூதராசிதோறுலாயமாயனை ....*
ஞானமாகிமறையினுச்சிநண்ணிநின்றகண்ணனை *
மோனமார்முனிக்குழாமுணர்ந்தமுத்திவித்தனை *

யானுழன்றபிறவிநிரவிருபதங்கடுதிசெய்வாம். ...॥
எ-று, ஆகாயம்வாயு அக்கினி ஜலம்-மண்ணென்று சொ
ல்லும்-ஐம்பூதங்கடோறும் பொருந்திபுலாவும் பெருமா
னை ஞானசொருபமாய் நான்குவேதத்தினுச்சியில்நடமா
டிக்கொண்டிருக்கும் நாதனை மௌனிகளாகிய முனிசிரே
ஷ்டர்கள் மனத்தாலுணருமாதவனை முத்தியங் கரைக்கு
விந்தாகிய முகுந்தனைநீங்காமல் வருத்தும் என்பிறவிநோ
ய் தீர்ப்பதற்குத் துதித்து அந்த அரிவாசுதேவ னுடைய
அடியிணையைவணங்கிப் பூசித்து இரண்டாநாள்நடந்தயு
த்தத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஜெனமேஜெய ம
காராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத் தொட
ங்கினர்.

அருளினிமேவிய அதிபதியேகேளும் பாண்டவர்கண்
முதலியபெரும் மறுநாள் காலைக்கடனை முடித்துக் கொ
ண்டு யுத்தபூமிக்கு வரும்படியாய் எத்தனிர்துக் கால மு
ரசமுதலிய பிரையாணபேரி முழக்கியகாலையில்சேனாபதி
யில்லாமையாற் சேனைகள் தியங்கிக்கொண்டிருக்குஞ்சே
திகேட்டுத் தருமராஜரானவர் திருமாலையடுத்து சுவாமீ
முதற்சேனாபதியாகிய சுவேதனவிறந்துபோன பிற்பாடு
விராடராஜன் முதலிய நாமெல்லோரும் அந்தவிசனத்தி
ல் இருந்துவிட்டோமே இன்றைக்குச் சேனாபதிபட்டம்
அருக்குக்கட்டலாமென்று தர்மபுத்திரமஹாராஜன்கேட்
க ஸ்ரீயப்பதியாகிய திருநாராயணர் சொல்லுகின்றார், மு
ரசகேதனனே கேளும் இளவரசாகிய சேனாபதி பட்டங்
குஷ்டத்தூய்மனுக்குக் கட்டியிராந்தபடியாலும் சொனை
ப் பெய்ச்சலைப்போலும் ஊழியக்காய்ச்சலைப்போலும் பா
ணம்பொழிந்து சத்துருக்களழிந்துபோகும்படியாய் வெ
ற்றிபெறத்தக்க வீரனுகையாலும் துரோணகண்டகனெ
ன்றுதித்திருப்பதினாலும் சகலநன்மைநிமைக்குரியவனாக
யிருந்து பாடுபடுந்தன்மையினாலும் உமதுமைத்துனனெ
ன்று முறைமையினாலும் இந்தத் துஷ்டத்தூய்மனுக்கே
சேனாபதிபட்டங் கட்டவேணுமென்று பிதாம்பரன்சொ
ல்ல, அந்தப்படியே துஷ்டத்தூய்மனுக்கு மங்கள ஸ்நா
னஞ்செய்வித்து மலர்தமாலைமுதலிய ரத்னாபரணங்கள்
பூட்டி சேனைக்கெல்லாந் தெரியப்படுத்தி ஜெயவிருதுக
ளுடன் புறப்பட்டார்கள் இவிடத்தினின்று பாண்டவச்
சேனை யெழுந்து பேரோசையுடன் யுத்தகளம்வந்து சே
ரவும் அவடத்திலிருந்து துரியோதனனுடைய சேனைக
ள் புறப்பட்டு மிகுந்தகோபத்துடன் இரண்டுகடலொன்
றுபடுமாப்போற்பிரண்டு வெவ்விதாகிய ரணகளத்தில்வ
ந்து நெருங்கிநிற்கவும் அந்தக்காலத்தில் ஐவர்சேனைத்த
லைவனாகிய துஷ்டத்தூய்மன் தங்களுடையசதுரங்கச்சே
னைகளையும் கோமுகவியூகமாகச்செய்து கெடிவீரஸ்தலா
திபர் முதலாகியபேர்களையும் கோட்டிலாகவளைத்து அந்
தவியூகத்தின்முனையில் உலைவிலா ஸ்தம்பம்போல் நிலை
பெற்றுநிற்கவும் கௌரவகுலமுதல்வனுடைய சேனாநா
யகன் விஷ்டுமர் தங்களுடைய படைகளையெல்லாஞ்சே
ர்த்து வியாக்கிரயூகமாகச் செய்து மற்றச் சுத்தவீரர்களை
யெல்லாம் குசிகக்குகைபோலுமமைத்து போர்முனையிற்
றானும் பெரும்புலிபோனிற்கவும் இப்பிரகாரம் தும்பெ
ரும்படியாகிய குருக்ஷேத்திரத்தில் இருவர் படைகளையு
ம் யூகமாகச்செய்து இரண்டுசேனாதிபரும் எதிரொதிர்நிற்
கவே கரும்புவிற்குழகிய மன்மதனைக் கங்காதரனெரித்
துக் காய்ந்தகாலத்திலெழுந்த கனலைப்போற் கண்களிலு
ம் ஆயுதங்களிலுமிருந்து அனற்பொறி யெழும்பவும் வி
மானத்திற்சென்று வானத்தினின்று வேடிக்கைப் பார்க்
கும் இந்திரன்முதலாகிய தேவர்கள் நடுங்கவும் கோடை
காலத்திடியினால் முடிபொடியாகுந் தன்மைபோற் பா
தாளத்திலிருக்கும் நாகரொடுங்கவும், இவ்வுலகத்தாரொடு
ங்கவும், முரசு-காகளம்-பேரி-பூரி-தாரை-கொம்பு முதலாகி
ய வாத்தியங்களுமுழங்கி மூவுலகு நடுங்கும்படியாய் மு
ரண்டு முனைமுகத்திற் றிரண்டு சேனாபதிகளின் உத்தரவு
பெற்றுக்கொண்டு இரண்டுபடைகளுங் கைகலந்து தொ
ந்தயுத்தஞ்செய்யுங்காலத்தில், சகாதேவராஜனானவன் ம
காவீரர்களேறிய பன்னீராயிரம் தேர்களுடனேயும், பன்
னீராயிரம் யானைகளுடனேயும், அளவிறந்த குதிரைவீரர்
களுடனேயும், தொகையிறந்த காலபலங்களுடனேயும்
இடதுபக்கத்தில்வந்தெதிர்க்கவும், எழுபத்தீராயிரம் யா
னைகளும்-எழுபத்தீராயிரந்தேர்களும், நாற்பத்துநாலாயி
ரங்குதிரைகளும், லக்ஷத்தெழுபத் தாறாயிரம் காலபலங்
களும், சேர்த்துக்கொண்டு நகுலராஜன் வலதுபக்கத்தி
ல்வந்து வளைத்துக்கொள்ளவும் இவ்வளவென்று வகுத்
துச்சொல்லுதற்கரிதாகிய மிலேச்சர்முதலாகிய வீரபடர
ள் பின்பக்கத்திற்பொருந்திப் போராடவும் வீமன்-அர்ச்
சுனன்-அபிமன்னன்-தருமராஜன் முதலாகியபேர்கள் க
ண்ணுக்கெட்டியதூரங் கடல்போனிறைந்த காரியஸ்தரு
டன் ஸ்ரீகிருஷ்ணராஜனும் முன்பக்கத்திற் சூழ்ந்துவரவு
ம் இப்படியாக நாலுபக்கத்திலும் நாலுசமுத்திரம்போல்
வளைத்துக்கொண்டு முன்கட்டிய கோமுகயூகத்தைக்கலை
த்து கடகநாதனென்று சொல்லப்பட்ட யூகங்கட்டி நின்
றார்கள், (கடகநாதனென்றால்யானைகளுக்கெல்லாமுதன்
மையாகிய தலையானையென்றறியவும்) விஷ்டுமரானவர் வி
யாக்ரயூகமாக்கிய அளவிறந்த சேனைகளைப் பேரணிவியூ
கமாக்கி அந்தவியூகத்தின் றாசிமுனையினின்றார், அப்பா
ல்மறுபடியு மாறுப்பகைவர்கள் போர்புரிந்தார்கள், விற்
காரருடன் விற்காரரெதிர்த்துப் பாணங்களைச் சொரியவு
ம் வாட்காறர்வாட்காரருடனேவிசிமடியவும்-வேற்காரர
ர் வேற்காரருடனே வெட்டிமடியவும் இந்தச் சேனாதி
பதியாகிய துஷ்டத்தூய்மனும் தனுர்வேதியாகிய துரோ
ணாச்சாரியரும் எதிர்மலைந்து ஒருவர்பேரி லொருவர் உ
ருவும்படியாக உந்தும்பாணங்களினால் மனநொந்து அ
ஷ்டதிக்குகளும் அதிர்ந்துபோகும்படியாய் அஸ்திரங்க
ளை யிறைத்து கேருக்குநேராகத் தேராச்சுழற்றிய இந்
தவிராதிவீரர்களிருவரும் போர்புரிந்தார்கள் அந்தச் சம
யத்தில் துரோணாச்சாரியாரானவர் சுடுமுகப்பகழியென்
னுங் கணைகளைவிடுத்துத் துஷ்டத்துய்மனுடையவில்லு
ம்-அவனேறியதேரும்-வீரபட்டமும்-கெட்டுவிழும்படிக்
கு ஒட்டியடித்தார் அந்தஅடியினால் மெத்தவருந்திச் சித்
தமுறிந்து துஷ்டத்துய்மன் பின்னிட்டோட அவனைச்
சூழ்ந்துவந்தசேனைகளெல்லாம் வெந்நிட்டோடிவாட அ

தை வீமராஜன்கண்டு பற்பலச் சேனைகளுடனே பாரிய
தேரைச்செலுத்திக்கொண்டுவந்து பார்ப்பாருக்குப்பக்ஷ
மெப்பதிருக்காதல்லவாவென்று துரோணாச்சாரியனைவ
ளைத்துக்கொண்டு பாணங்களையேற்றினன் அப்போதுது
ரோணாச்சாரியர் தன்னுற்கூடியவனையிலும் யுத்தஞ்செய்
து வீமசேனனைவெல்லமாட்டாமல் வெற்கத்தை வெ
ளிவிட்டுச்சொல்லமாட்டாமல் புறமுதுகிட்டுச் செல்ல
மாட்டாமல் ஆற்றிலொருகாலும் சேற்றிலொருகாலுமெ
ன்னும் பழமொழியைப்போல் ஒப்பார்க்கலாமா இன்
னமும் யுத்தத்தை நாடிப்பார்க்கலாமாவென்று யோசித்
துக்கொண்டிருக்குங்காலத்தில் வடகலிங்க தேசாதிபதி
யாகிய சக்ரதேவன் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வ
ந்து இந்திரதனுவைப்போன்ற சுந்தரவில்லைவளைத்து இ
ளைத்து களைத்துநின்ற துரோணாச்சாரியனைப் பின்னிருத்
தி தன்னுடையதேரை முன்னிருத்தி வீமசேனன்பேரிற்
சன்னுயுத்திவேண்டிய அஸ்திரமாரிகளை விதைத்தான்
அந்தக்கல்லைகளெல்லாங் கருங்கொண்டல்போற்கவிந்து
வரக்கண்ட கதாயுதனானவன் கடுகெனத் தேரைவிட்டிற
ங்கி இரண்டிகைகளையுமிட்டி சக்ரதேவனிறைத்த கணைக
ளையெல்லாம்பிடித்துக் கசகசவென்று கசக்கி அவ்வரச
ன் கொண்டுவந்த யானைக்கூட்டத்தில் ஆண்சிங்கத்தைப்
போலனுழைந்து கரங்களாலறைந்து கைகளாற்பற்றி கா
ல்களைவெற்றி கரத்தில்பிடித்துக்குற்றி துதிக்கையைப்பி
டித்துச்சுற்றி ஆகாயவீதியிலெறிந்து ஆகாயத்திலெறிந்த
யானை திரும்பிவருவதற்கு முன்னமே ஐந்து-ஐம்பது-ஐ
ந்நூறென்றுசொல்லும்படியாய் மறுபடியும் யானைகளை
வாரியெறியவும்பின்னேபோகிறயானைகள் கரகரவென்று
சுழன்றுகதறிச்சென்று முன்னேபோனயானைகள் விழுவ
தைமோத்திறுதுவுமதுவும்மறுபடியெழும்பி இரண்டுகொ
ம்புமிரண்டுதும்பிக்கையும் இரண்டுகாலும்வாலும் ஒன்
றோடொன்றுபிணைத்து இந்தயானைகளைத்திரும்பிக் கீழே
விழவந்தயானைகள்விடாமற்பிடித்து கிழித்துமேலதுகீழது
மேலதுகீழதுவென்றுசொல்லும்படியாய்வந்து பூமியில்
விழுந்துநொந்துநைந்து நொறுங்கிச்சிந்திப்போகவும்மே
லுலகத்திலடித்து வீசிக்கொண்டிருக்குஞ் சுழற்காற்றுக
ள் இந்தயானைகளை ஆகாயவீதியி லுந்திக்கொண்டுபோய்
அங்கிருந்து விழுந்தயானைகளால் இவடத்தி லிருந்த யா
னைகள் சேனைகள்-முதலியயாவும் அழிந்து மூளைவழிந்து
உதிரம்பொழிந்து உடலங்கிழிந்து உயிர் ஒழிந்துபோகவு
ம் இந்தப்படியாக நிலத்திலடித்தும் எதிராளிகளின் புய
த்திலிடித்தும் பாரிலறைந்துஞ் சத்ருருக்களின் தேரிலெ
றிந்தும் சிலயானைகளைக் காலால்முடித்தும் - சிலயானைக
ளை மேலாலிடித்தும் சிலயானைகளைக் கண்டமாய்த்தறித்
தும் சிலயானைகளைத் துண்டமாய் முறித்தும் மண்டலம
திர எண்டிசைகலங்க அண்டர்களொடுங்க துண்டர்கள
டங்கக் கொல்லுங்காலையில் இவைகளைப்பார்த்த யாவரு
ம்பயந்து இதென்ன ஆச்சரியமென்றுவியந்துபூர்வத்தில்
சக்ரவர்த்தித்திருமகன் சமுத்திரத்தைத்திருவணைகட்டிய
காலத்தில் அநேக மலைகளைப்போட்டு அநுமா ரடைத்த
தைப்போல் இந்த வீமசேனன் இவடத்திலோடும் ரத்த
க்கடலுக்கு யானைப் பிணங்களால் வாராவதி கட்டினான்
ஆகையால் ஆஞ்சநேயரிலும் சிறந்தவன் இந்த வாயுபு
த்திரனாகிய வீமனென்று அகமகிழ்ந்தார்கள் சிலபேர் தி
தன்மியும் வாயுவினாற்கலங்கி மின்னும்பின்னுமாய்க் கல
ந்தகன்ற மேகங்களைப்போல் இந்தயானைகள் கலந்து தலை
விரிகோலமாய்த் தாறுமாறு தலைமாடு கான்மாடாய்ச்சித
றிப்பறக்கச்செய்த இந்த வீமசேனன் வாயுவின்குமாரனு
கவினுந் தந்தையின் குணம் பிள்ளைக் கென்று சொல்லுந்
தருமசாஸ்திரத்திற் கிணங்க விருக்கின்றா னென்று சந்
தோஷமாகிறார்கள். சிலபேர்கள் இந்த வீமசேனனால் எ
றியப்பட்ட யானைகள் விண்ணுலகெல்லாஞ் சுழன்று ம
ண்ணில்விழும்போது முகமானது பூமியிற்புதைந்து உட
லும் பின்காலும் வாலும் மேலாக வுயர்ந்திருப்பது எத்
தன்மையை யொத்திருக்க தென்னில் இந்தப் பூமியைப்
பாயாய்ச்சுருட்டிப் பாதாளத்திற் சென்ற இரணியாக்ஷ
னென்பவனைச் சம்ஹரிப்பதற்காகத் திருவுருக் கொண்ட
ஆதிவராகமானது பூமிக்குட்செல்லத் தனது முகத்தாற்
பூமியைத் துளைத்ததுபோலிருந்தது அன்றியும் சிலயா
னைகளைப்பற்றி வீமனெறியும்போது மேகமண்டலம் வ
ரைக்கும் விரிட்டுக்கொண்டுபோன யானைகளைப்படி செ
ன்றதென்றால் பூலோகத்திலிருக்குஞ் சிலமேகங்கள் மே
லோகத்தி லிருக்குஞ் சில மேகங்களைப் பிடித்துப் புணை
போட்டுக்கொண்டுவரப் போகிறதைப்போலு மிருந்தது
இந்தப்பிரகாரம் வீமராஜனானவன் கலிங்கராஜ னுடைய
யானைக்கும்புகளையெல்லாங் கால்மாடு தலைமாடாகவிழுந்
து அழிந்து கலங்கிப்போகும்படியாய்க் கொன்று குவித்
துச் சேனைகளையெல்லாம் வென்று முடித்துக் கலக்கும்
போது ஒன்றொழியாம லொழிந்ததுமன்றி நின்ற சே
னைகளெல்லாம் புறமிட் டோடுவதை வீஷ்மர்கண்டு மி
குகோபங்கொண்டு கண்பொறி கதுவத் திண்சிலை தாங்கி
மகரதவீரர்கள் புடைசூழ்ந்து வரும்படியாகச்சென்றார் அ
ந்தவேளையில் தளகர்த்தரும் சேனைக்காவலருங்கலிங்கரா
ஜனும்-கலிங்கராஜனுடையபிள்ளைகள்-கேதுமாலனை மு
தலியபேரும் வெகு சேனைகளும்சென்று வீமசேனனைவ
ளைத்துக்கொண்டு போர்புரிந்தார்கள்- அந்த வீமசேனன்
இவர்களையெல்லாங்கண்டு பூமியில் நின்றபடி அவரவர்க
ள்விட்ட-கணைகள்முதலிய பாணங்கள் அஸ்திரங்கள் ஆ
யுதவகைகள் யாவற்றையும் அறைந்துபிடித்து ஒடித்தெ
றிந்த தல்லாமலும் அவர்களேறிவந்த தேர் நிரைகளையெ
ல்லாம் கோரகவாரி நிலத்தின்மோதி பலத்தினாற் கொன்
று நிகரொருவருமற்று நிற்கின்றதை கலிங்கராஜன் முத
லாகிய பிள்ளைகளெல்லாங்கண்டு கலங்கிக் கைபிசைந்தி
ருக்க அதை வீஷ்மர்கண்டு விஷம்போல் மனஸ்தாபங்
கொண்டு தேரைச்செலுத்தி வில்லைவளைத்து நாணியிழு
க்கக்கண்டகலிங்கராஜனும் அவன்புத்ரமித்ரர் முதலிய
யானைக்கூட்டங்களுங் கடல்போற்பொங்கிவந்து வீஷ்டும
னைக்கலந்தார்கள். அந்தச்சமயத்தில் வீமசேனராஜன் சி
ரேறும்படியாய்த் தேரேறிக்கொண்டு சிலையைக் கரத்திற்
பிடித்து குணத்தொனிசெய்து வீஷ்மருக்கெதிரில் தா
ஷ்டிகமாகவரும்போது-அந்த வீமனைப்பார்த்துப் பற்கடி
த்துப் புருவநெறித்து-கலிங்கராஜன் முதலிய புத்திரவர்

க்கம் யானைக்கூட்டஞ் சேனைப்பெருக்கம் குதிரைப் பந்திகள் தேர்க்குமபுகமெல்லாம் வீஷ்டுமர் துணைவந்த ரொன்றும் ஸ்தரியத்தினால் வீமன்மேல்வந்துவிழுந்து கோபக்கொழுந்து விட்டெரியும்படியாகக் கொதித்து அடாபாவி வெகுகாலமாய் நான்வைத்திருந்த யானைக்கும்பு யாவற்றையும் வாயிற்போட்டுக் கொண்டையே இதோ உன்னை நாங்கள் வாயிற்போட்டுக்கொள்ளுகிறோம் பாரென்று பற்கடித்து பாணந்தொடுத்து பலவாறுகிய ஆயுதங்களையும் விடுத்தார்கள். அவர்கள்விட்ட பாணங்கள்முதலிய ஆயுதங்களெல்லாம் பட்டழியும்படிக்குப் படுத்துக் கலிங்கன்முதலாகிய புத்ரவர்க்கத்தார் யாவருங் கெட்டொழியும்படிக்குக் கெடுத்துப் பட்டைய பாணங்களை விடுத்து மற்றொருவரும் அடுத்து யுத்தம்பண்ண மாட்டாமலோடும்படிக்கு முடுக்கிய தன்மையை வீஷ்டுமர்கண்டு இந்திரனுக்கிருந்த மலைபோலேங்கி-ஐயோ, கலிங்க தேசாதிபன் முதலிய காவலரெல்லாம் இறந்து போனார்களேயென்று வடவைத்தீப்போற்பொங்கி வீமசேனன்பேரில் வீரவாளிகள் தொடுத்துவந்தார் வீஷ்டுமரானவர் அதைக்கண்ட வீமசேனன்-ஒரு வெற்றிவேலைப் பற்றியெடுத்து பகருவமாகச்சுழற்றிப் பாட்டனுடைய தோளுருவிப்போகும்படியா யெறிந்தான், அந்தவேலாயுதம் வருகிற உறாட்டியை வீஷ்டுமர்கண்டு ஒரு தோமராயுதமெடுத்துச் சுழற்றியெறிந்தார் உடனே அந்தவேலாயுதமானது துண்டமாய்ப் போகக்கண்ட வீமசேனன் கொதித்து ஒரு சூலாயுதந்தொடுத்தான் அதை ஒரு ருத்ராஸ்திரத்தாற் றடுத்து ஓடியாஸ்திரம் நான்குவிடுத்து வீமசேனனுடைய ரதத்திற்கட்டியிருக்குங் குதிரைகள் நான்கையுமறுத்து-சிங்கக்கொடியையும் பங்கப்படுத்தி தேரையுஞ் சேனைகளையும் போக்கடித்தார் வீஷ்டுமர் அந்தக் காலத்தில் வீமசேனனுக்குக் கோபம்பிறந்து ஆயிரத்தெட் டண்டமும் அனல்விசிறுமெலப்படியோ அப்பேர்ப்பட்ட கோபாக்கினியுடைத்தாய் கதையைக் கையிலெடுத்துக் கொண்டு கிட்டியசேனைகள்முட்டிய யானைகள் யாவற்றுங் கெட்டழியும்படி கதைகொண்டு ஜாடி வீஷ்டுமருடையதேருக்குச் சமீபத்தில்வந்து அவருக்குமனதொத்த சாரதிதலையைத் தவிடாய் நொறுக்கினான் வெற்றிபெறும்படியாகிய வீமசேனன் இந்தப்படிக்கு ஜயபோகமும் புயவேகமுமுடையவனாக வீஷ்டுமரை மடக்கிக்கொண்டு அவர்விற்பிடித்து யுத்தஞ்செய்ய இவர் கதையைக் கொண்டு போர்புரிய அவர் ரதத்தினின்றும் இவர் நிலத்தினின்று பாட்டனுருக்கு ஈட்டுக்கிடா யுத்தம்பண்ணி இந்தப் பாட்டனுடன்வந்திருக்கும் பார்த்திவர்களுடைய தலைகளும் மூளைகளும் மகுடரத்னங்களுஞ் சிந்தித் தெறிக்கும்படியாயடித்து மலைகளைப்போலொத்த தேர்நிரைகளைவாரிச் சாரதி-குதிரைகள் சாகும்படியாய்மோதி ஆகாயத்திலெறிந்து ஒருநாழிகைக்குள்ளே ரணகளத்தை யொழித்து ஆகாயத்திலிடிக்கும் மேகத்தி னிரைச்சலைப்போல் யுத்தகளமெங்கும் பெருங்கூச்ச லுண்டாகும் படியாய் வீமசேனனும் பெருங்குரலிட்டுப் போர்புரிந்து திரியும்போது வீஷ்டுமரானவர்கண்டு வில்லைவெறுத்துக்கொண்டு மறுபடியும் ரதத்தைச்செலுத்தி வீமனைத் தன்னந்து உருத்து எரியுங் கண்ணினின்று நெருப்புப்பொறியுதிர காளமேகமும் காளமேகமும்-கலந்து யுத்தஞ்செய்வதைப்போற் போராடி யானைகளுஞ் சேனைகளும் நிலத்தில்மடிந்து விழும்படியாய் வீமசேனன் கதாயுத்தமும் வீஷ்டுமர் வில்யுத்தமுஞ் செய்துக்கொண்டிருந்தார்கள்-அப்போது பாண்டவசேனைகள் பட்டு பாழாய்விழுந்திறப்பதை அபிமன்னன்பார்த்து! ஆ! ஆ! நமதுசேனைகள் இப்படி நாசமாகுதல்லவாவென்று வெற்றிவில்லைவளைத்து ஆசர்ணபரியந்தமிழுத்து வடிக்கணைதொடுத்து வில்வட்டமாகும்படி நாணியிழுத்து வெகுவிதமாகிய பாணம் விடுத்து யுத்தஞ் செய்துவரா நின்ற-அவரவர்கள் நெற்றியிற் குறிவைப்பதுபோல் ஒவ்வொருகூரங்கணை உருவ விடுத்து மகமேருவை வளைத்து வாசுகியை நாணியாகமாட்டிச்சூற்கொண்டமேகம்போற் கணைகளைச்சொரிந்து நிறைந்த நெருப்பினால் திரிபுரம் நீறெழ நகைத்தருளிய ஆதிசிவனுக்கொப்பாக நகைத்து சத்துருக்களின் படையும் சேனாபதியாகிய வீஷ்டுமருடைய குடையும் அவருடைய வில்முதலாகிய கணைகளும் தேர்களும் - வீரபட்டங்களும் சாரதி குதிரைகளும் தனித்தனி யழியும்படியாய் வீமசேனனும் சாமர்த்தியமுடைய அபிமன்னனும் உலகமுடிவி லெழும் உவர்க்கடல்போற்பொங்கி தீயுங்காற்றுஞ் சேர்ந்து எரிப்பதுபோலும் ஆழமாகிய கிணற்றினீரும் அனலாற்பொங்கி மேலெழும்பும்படி யாகவும் போர்புரியுங் காலையில் அக்கிணற்றின்றவளை நாட்டுவளப்பங் கண்டு கோபிக்குந் தன்மையைப் போல் அஸ்தினாபுரிக் கதிபதியாகிய அரவகேதனன் கடுங்கோபங்கொண்டு கையொடு கையறைந்து கண்பொறி கதுவக்கூவி காவலர்களைநோக்கி அந்தோ வீஷ்டுமர்முதலிய படைகளும் வெந்துபோகின்றார்கள் மிகவு நொந்துபோகின்றார்கள் உடலசந்துபோகின்றார்கள் ஆகையால் நீங்க ளிந்தவேளை பிந்திப்போகாமல் முந்திப்போய் வீமன் அபிமன்னென்று சொல்லு மவ்விருவரையு மடக்கிக்கொண்டு கொல்லுங்கள் அவர்களை வெல்லுங்களென்று துரியோதனமகாராஜன்சொல்ல அந்தவார்த்தையைக்கேட்டு அநேகங்காலர்களும் பூவலர் முதலிய தேசத்தலைவரும் பதினெண்பாஷைத்தலை வருங்கூடி அவ்விரண்டுபேரையும் வளைத்துக்கொண்டு சளையாமல் யுத்தந்தந்தார்கள் அந்தச்சமயத்தில் காலகேய நிவாதகவசாள் இரண்யபுரவாசிகளாகியஇராக்கதரெல்லாரையும் ஒன்றொழியாமற்கொன்று ஜெயங்கொண்டு இந்திரனுக்குப்பட்டங்கொடுத்துத் தேவதைகளுக்காதாரமாகித்திசைகள் முழுதும்இசைகளெழுதும்அர்ச்சுனனனவன்மன்மதனுக்குச் சமானமாகிய அபிமன்னனையும் அண்ணனாகிய வீமசேனனையும் சத்துருக்கள் வளைத்துக் கொண்டார்களென்றுவரிபொரிந்திய கணைகளைக் காண்டீபத்தில்வைத்திறைத்துக்கொண்டு வியாக்ரமத்தைப்போல் ஆர்ரமித்து விடாதீர்கள்விடாதீர்கள் இதோவந்தே னிதோவந்தேனென்று தேரைநடத்திக்கூவிக்கொண்டு அவர்களுக்குப்பகையாக இவர்களுக்குத் துணையாகவந்துகூடினன் அந்தக்காலத்தில் இவர்கள் மூவருஞ் சேர்ந்து பாணங்களைத்

தொடுக்க அந்தப்பாணங்களானது சிவபெருமானகைக்க
த் திரிபுரானையெரித்ததீயைப்போலும் இலங்கையழிய அ
னுமந்தர்கொளுத்திய நெருப்பைப்போலும், யுகமுடிவில்
உலகை யழிக்கவெழுந்த ஊழித் தீயைப்போலும் திகுதி
கென்றெரிந்து நால்வகைச்சேனைகூடிய ராஜராஜர்களாகி
ய பெருங்கடற்கலறச்செய்து அப்பாற் காளமேகம்போ
ன்ற வில்லிலிருந்தெழுங்கணையாகிய துளிகளைப்பொழிந்
து திரண்டசேனைகள் வெருண்டோடவும் தலையறுந்தா
டவும் கரசரணாதிகள் அற்றுவிழவும் கருந்தூள் செந்தூ
ளெழும்பும்படியாய்க் கலக்கிப் படைக்குட் புகுந்து வரு
ங்காலையில் அருணனைச்சூரியனை மறைத்தெழுந்த பனியை
ப்போல் அரசர்கள்முதலாகிய படைமன்னவர்களுங் கல
ந்து அர்ச்சுனன்முதலிய மூவர்களையுமூட இம்மூவர்விடு
க்கும் பாணக்கிரணங்களினால் மூடியபனிவிட்டோர் சே
னைகள்வாட உதிரவெள்ளங்க ளோட பூதப்பிரேத பிசா
சகணங்களாடப் படைகளைப்பொடியாக்கித் தேர்களை
சிதறப்போக்கி-குதிரைப்பந்திகளைக் குறைத்துநீக்கி பதா
திப்படைகளைப் பாழாக்கி விஷ்ணுசக்கரம்போற் றிரிந்து
வரும் விஜயனையும்- ராஜஅசைவில்லாத பீமசேனனையும்
செவ்வேளுக்கிணையாகிய வாளபிமன்னனையும் சேனாபதி
யாகிய விஷ்டுமர்கண்டு மனஸ்தாபங்கொண்டு வில்லுமெ
டுக்காமல் கணையுந்தொடுக்காமல் விசனமேற்கொண்டிரு
ப்பதை ரதகஜதுரகபதாதிமுதலிய படைமன்னர்-பட்டவ
ர்த்தனர்-மகுடவர்த்தனர்கண்டு இனியிவடத்திலிருந்தால்
எல்லோரும் முடிந்துபோவோமென் றேங்கிப் பின்வாங்
கிப்பாசறையைநோக்கிப்போய்ப் பதுங்கினார்க ளின்றுயு
த்தத்திற்குவந்த விஷ்டுமரும் துரியோதனன் முதலாகிய
அக்ரோணிசேனைகளும் தேவாமிர்தம்புசிக்கவந்த தேவர்
களானார்கள்-சேனைகளைச் செயித்து ஆண்மிக்கையை நி
லைநிறுத்திவரும் அர்ச்சுனன்முதலிய மூவரும் அந்தப்பா
ற்கடலிற்பிறந்த ஆலகாலவிஷம்போ லானார்கள்; (இதனு
டையதாத்பரியமென்னவென்றால் அமுதம்புசிக்கலாமெ
ன்று ஆசைகொண்டுவந்த தேவர்கள்; ஆலகாலவிஷத்தை
க்கண்டு அவஸ்தையடைந்து அலறிச் சென்றார்களே-அ
ப்படிப்போல் வாடிக்கலங்கியோடினார்க ளென்பதுகருத்
து) ஆகையினால் இனிமேல் நாம்வெளியிலிருப்பமேயாகி
ல் நம்மையுங் கொல்லுவார்கள்போலு மிருக்கின்றது இ
வர்கள்கொண்டிருக்குங் கோபம், ஆதலால் துரியோதன
ராஜனுடைய படைகளைப்போல்நாமும்ஓடிப்பிழைப்போ
மென்று போனவனைப்போற் சப்தமா வென்னும் புரவி
பூட்டிய ரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் மேற்குத்
திசையில் மறைந்தான் விண்மணியாகியசூரியன் அந்தச்
சூரியன்மறைந்த திசையிலெழுந்த செவ்வானமோவென்
று சொல்லும்படியாக ரத்தவெள்ளம் ரணகள முழுமை
யுஞ்சிவந்து, திசாதிசைகளிலும்பரந்து கருங்கடலைச்செ
ங்கடலாக்கிக் கலந்தது.இப்பால் திரண்டிருண்ட இருளா
னது தங்களினத்தைக் கும்புகூட்டிக்கொண்டு ரணகளத்
திற்கு வந்தவர்களைப்போல் வந்துநிறைய அந்த யிருள்கூ
ட்டங்கள்வரவே அதைக்கண்டு யுத்தபூமியில் நிறைந்திரு
ந்த தீரவீரர்கள் முதலியபெரும் நாம்வந்தயிடத்தில் இரு
ள்வந்தபடியால் இனிநாம் இவடத்திற் றங்குவதற்கு இட
மில்லையென்றுதங்கள் தங்கள் பாடிபோய்ச் சேர்ந்தார்க
ள் அவர்கள் யாரென்னில் போர்முகத்தில்மலைந்து கொ
லைசெய்யும் வாளாயுதத்தைக் கைகொண்டமன்னவர்கள்
அப்பால் கூளிகளுங் காளிகளும் பேய்களும் பூதங்களும்
நாய்களும் நரிகளுங்கூடி விளையாடிக்கொண்டிருக்கும் கு
ருக்ஷேத்திர பூமியைவிட்டு பாசறைசென்ற பார்த்திவனா
கிய துரியோதனமகாராஜனும்-துசுவாசனன்-கர்னன்-சகு
னிதுரோணாச்சாரியர்விஷ்டுமர்முதலாகியபெரும்ஒருபே
ரவையிற்கூடிக் கலந்தகாலத்தில் வணங்காமுடியையுடை
ய மன்னவன் சேனாபதிமுதலிய இயாவரையும் பார்த்து
ஐயா-நீங்களெல்லாருமிருந்தும் அபியாச் சிறுவனாகிய அ
பிமன்னு வென்பவனுக்கும், அர்ச்சுனனுக்கும், வீமசே
னனுக்கும்இளைத்து, என்சேனைகள் புறமுதுகிட் டொழி
யவும், பிராணன்போ யழியவும் நேரிட்டதல்லவா, அந்
தோ தெய்வமே, இதுவுமென்காலகெதியல்லவோவென்
று நெடுமூச்செறிந்த குருகுலநிருபனை நோக்கி யாவருந்
தலையிறங்கிக்கொண்டார்கள் அந்தச் சமயத்தில் சேனாப
தியாகிய வீஷ்டுமர் விசனமுடையவராய் துரியோதனம
காராஜனைப்பார்த்து அப்பா குழந்தையே இன்றைய யுத்
தம் எனக்குஞ் சம்மதமாயிருக்கவில்லை ஏதோவிப்படிக்கு
நடந்துபோய்விட்டது இதைக்குறித்து நீவிசனப்படாதே
நாளை நடக்கப்போகிறயுத்தத்தில் பாண்டவச்சேனைகளை
ப்பாழாக்கி அர்ச்சுனன்முதலிய அபிமன்னனையும் அழச்
செய்து ஆயுத மெடுப்பதில்லையென்று சொல்லி அர்ச்சு
னனுக்குச் சாரதியாக வந்திருக்கும் அவனையும் ஆயுத
மெடுக்கச்செய்கிறேன் பாரும்என்னுடையவல்லபத்தை
யென்று, பேரப்பிள்ளையைநோக்கிப் பெருங்குரலாகக்கூ
வி பவுர்ஷம்பேசிக்கொண்டு பாசறைக்குப்போயினார் பா
ட்டனாகிய வீஷ்டுமரானவர் இப்பால் துரியோதனாதிய
ர் முதலியபெரும் போஜனாதிகளுண்டு நித்திரைசெய்தார்
கள்,இந்தச்சமாச்சாரங்களையெல்லாம்திரிதராஷ்டிரபூபதி
க்குச் சஞ்சயன் றெரிவித்து வந்தான், இப்பாற் சூரியபக
வானனவன் இரண்டு படைகளையும், சேனாநாயகரையும்,
மன்னவர்களையும் எழுப்பிவிட வந்தவனைப்போல் கிழக்
திசையில்வந்துதயமாயினனென்று வைசம்பாயனர்சொ
ல்ல, ஜெனமேஜெயமகாராஜன்கேட்டு உபசாரத்துடன்வ
ணங்கி சுவாமீ, இரண்டாநாள் யுத்தத்தின் றன்மைகளைச்
சொல்லக்கேட்டு இருவகைப்பயனுமடைந்தேன், மேல்
நடக்கும் மூன்றாநாள்யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை
ஆயுதமெடுக்கும்படியாய்ச் செய்கிறேனென்ற - வீஷ்டும
ருடைய வாக்கியப்படிக்குநடத்தும்படியாகிய முறைமை
யும் போரினுடையதிறமையுந் திருவாய் மலர்ந்தருளவே
ண்டுமென்று ஜெனமேஜெயமகாராஜன் கேட்க, வைசம்
பாயனர் சொல்லத்தொடங்கினார்.

மூன்றாம் போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி-விருத்தம்.

தந்தமுறியின்வாய்வைத்த தயிர்பால்வெண்ணெய்யெ
ட்டாமற், குந்திபுரவின்மீதேறி யிளங்கோவியர்முன்கூத்
தாடி,நந்தன்மனையிலசோதைவிழி நயனங்களிக்கவிளையா
டும், மைந்தனிருதாளொருநாளு மறவாதாரேபிறவாதார்.

எ-து. திருவாயர்பாடியிற்பொருந்திய கோபாலர்வீடுக
ள்தோறும் உறியினிடத்திற்சேர்த்திருக்குந் தயிரும் - பா
லும் வெண்ணெய்யும் எட்டாமல் தாவித்தாவிப்பார்த்து
பக்கத்திலிருக்கும் உரலையுருட்டிக்கொண்டுவந்து போட்
டு அதன்மேலேறிக் குந்திக்கொண்டு உறிக் குடுவைகளை
யுடைத்துவிட்டு- அதனிடத்தினின் றேடிவரும்படியாகி
ய அமுதங்களையுண்டு கைகளிலும் வாரிக்கொண்டு வரு
ங்காலத்தில் இளமைதங்கியகோபிகாஸ்திரீகள்கண்டு ஆ
ஆ நவநீதசோரன் அகப்பட்டானென்று கூவுகின்ற சம
யத்தில் அவர்களுக்கெதிரில்நின்று கோணைக்கூத்தாடி அ
வர்களை நகைக்கச்செய்து அவர்களாலுங் கொஞ்சம் வெ
ண்ணெய் வெகுமானம் வாங்கிக் கொண்டோடிய இந்தச்
சோரனுடைய விளையாட்டைக்கண்டுஏமாந்தஸ்திரீகளெ
ல்லாரும் மாமியாரிடத்தில் ஏச்சும்-இழிவாகிய பேச்சுங்
கேட்டு நந்தகோபாலனுடைய வீட்டில்வந்து அம்மா உ
ன்பிள்ளையினால் நாங்கள்பெரும்பழி சுமக்கலாச்சுது எங்
கள் வெண்ணெய்முதலிய பொருள்களும்போச்சுதுஎன்
று முறையிடும்போது தாயானவள் ஏனடா அடா என்க
ண்மணியே யிப்பேர்ப்பட்ட துஷ்டனென்று பேரெடுக்
கிறாய் இச்சையாகிய பாக்கியமிருக்கப் பிச்சைக்குப்போ
வானென்னும் பழமொழிபோல் உனக்கெல்லாச் செல்
வமுமிருந்தும் ஏழைகளை யேன்தொந்தரைசெய்கிறாய் இ
ளங்கன்றே என்னப்பனே நீ இவர்களுக்கெதிரில் வெண்
ணெய்க்காகக் கூத்தாடினையாம் அது மெத்த வேடிக்கை
யாயிருந்ததாம் அப்பேர்ப்பட்ட விந்தையாகிய கூத்தை
நான்பார்க்கும்படியாய் ஆடென்றுகேட்க, அந்த அசோ
தைப்பிராட்டியின் இருகண்களுங் களிக்கத் திருக்கூத்தா
டும் மைந்தனாகிய கோபாலகிருஷ்ணன்-அந்த ஐயனுடை
ய உபய திவ்யசரணாரவிந்தங்களை ஒருநாளுமறவாமல் வ
ணங்கியபேர்கள், மாதர் கருக்குழியிலுற்றுப் பிறவாதவர்
கள் ஆகையால் இத்தன்மையாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானு
டைய திருவடிகளைச்சிந்தித்து வந்தித்து வாழ்த்தி, மூன்
றும்போரைச்சொல்லுகிறேன், கேளும், முதல்வனேயெ
ன்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

கனமேவயமாகியநேச, ஜெனமேஜெயனாகிய ராஜகாவ
லனேகேளும், மூன்றுநாள் சூரியனுதித்தவுடனே இர
ண்டுசேனைகளும் காலைக்கடனைத் தீர்த்துக்கொண்டு ஆயு
தபாணிகளாய் யுத்தகோலங்கொண்டு யுத்தபூமிக்கு வந்
தார்கள் உடனே வீஷ்டுமரானவர் தங்கள்சேனைகளையெ
ல்லாஞ் சேர்த்துக் காருடயூகங்கட்டினார் (காருடயூகமெ
ன்பது கருடப்பக்ஷியைப்போல் மூக்கு - றெக்கை-வால்-
கால்-யிப்படியாக யானைசேனை பரிவாரங்களை யெல்லாங்
கூட்டி அதிலே காரியஸ்தரை நிலைநாட்டிச் சேர்த்துவை
ப்பது காருடயூகம்) இவரிந்தயூகங்கட்டவும் பாண்டவச்
சேனாதிபதியாகிய துஷ்டத்தூய்மன் பயப்படாமல் திட்டங்
கொண்டிருக்குஞ் சேனைகளைச்சேர்த்து சூத்திரயூகங் க
டினான் (சூத்திரயூகமென்பது குடைபோற்கவிந்து கா
ம்புமுதலிய கம்பிகளைப்போற்- சேனைகளை அமைத்து-வி.
ரிக்கசுருக்க விசாலங்கொண்டிருப்பது.) இந்தப்பிரகாரம்
இரண்டு சேனாதிபதிகளும் யூகம்வகுத்துத்தாங்களும்து
சிப்படைமுகத்தினின்றார்கள், அந்தவேளையில் ஏழுசமு
த்திரமுழக்கமபோலும் பதினாலுலகும் பதறும் படியாய்
அஷ்டகுலாசலங்களும் சப்தமேகங்களும் தலைசாய்க்கும்
படியாய் முரசு-காகளம்-பேரிகை-முதலியவாத்தியங்கள்
முழங்குங்காலத்தில் கங்காபுத்திரராகிய வீஷ்டுமரும்-து
ரோணாச்சாரியரும்-அசுபத்தாமர்முதலிய வநேகம் அதி
ரதத்தலைவரும் நால்வகைச் சேனையும் மேகங்கவிந்து வ
ருவதைப்போல் வந்து ரெண்டாநாட் சண்டையில் சே
னைகளையும் எங்களையுஞ்செயித்தவீரர்கள் இன்றைக்குவெ
ளிப்படுங்க ளென்று வீரவசனங்கள் புகன்று அர்ச்சுன
னையும், சிறுபோதில் புஜபலமல்லர்களைச் ,செயித்த திரு
வடிபதித்த பாகனாகிய ஸ்ரீகிருஷ்ணனையும் அபிமன்னனை
யும் தேடி வளைத்துக்கொண்டு தென்னலடிக்கத் திருகித்
தியங்கிய தேக்குமரம்போற் சிந்தை குழையும்படியாக
அம்புகளைப்பொழிந்தார்கள் அந்தச்சமயத்திற்சூரருக்கெ
ல்லாஞ் சிறந்த சூரதீரனாகிய சுயோதனராஜனும்-அவரு
டையதம்பிமார்களும் மாமாசகுனியும் சேனைவாகினியும்
படைத்துணைக்கு வந்தபார்த்திபரும் ஒருகும்பாகச் சேர்
ந்து சிங்கக்கொடியினைத் தாங்கியதேர்மேற்கொண்ட தீர
சிங்கமாகிய வீமசேனராஜனை வந்துவளைத்துக்கொண்டா
ர்கள் இந்தப்பிரகாரம் இருதிறத்துவீரர்களும் யெதிர்த்துக்
கொண்டு வரத்தினாலும் மந்திரங்களினாலும் தாங்கள்தா
ங்கள்பெற்றிருக்கும் வரிபொருந்தி மணிகள்கட்டிய வில்
லுகளினால் பிடிக்குங்கரங்கணிறைந்தும் இறையத்தொடு
த்துவிடும் பாணங்களினாலும், சடைக்கண்கதுவும் பொ
றிகளினாலும் ஆகாயமறைந்து போகவும் அந்தச் சரங்க
ளால் அறுப்புண்டுவிழுஞ் சிரங்களென்னுந் தலைகளினா
ல் யுத்தபூமி மறையவும்அந்தத்தலைகளிலிருந்து பெருகு
ம்உதிரவெள்ளங்களினால் பள்ளம்படுகுழிநிறைந்துசேறா
கி நான்குதிசைகளுமறைந்துபோகவும்பெருக்கமாகிய நா
ல்வகைச்சேனைகளுங்குறைந்துபோகவும், சிறப்பாகியதி
டதீரங்கொண்டதுரியோதனனும்,வீமசேனனும், பழம்ப
கையாகியவைரம்பற்றிப் போர்புரியுங் காலையில்; வீமசே
னனுடைய குமாரனாகிய கடோற்கஜனென்னுங்காளை-இ
வர்களிருவருஞ் செய்யும் யுத்தத்தைக்கண்டு பேய்பூட்டி
யரதத்தை வாயுபோற் செலுத்திக் கொண்டு வந்து துரி
யோதனனுக் கெதிரிலேநின்று நவசந்திரபாணத்தையெ
டுத்துப்பூசித்து அபிமந்திரித்துத் தொடுத்தான் அந்தப்
பாணமானது பார்த்தவர்களுடைய கண்களை யெல்லாம்
வேற்றுருவமாகமயக்கி படபடாகாரத்துடன் வந்து துரி
யோதனமகாராஜனுடைய பாம்புக்கொடியை முறித்துத்
தேரிற்பூட்டிய குதிரைகளையுமறுத்து கௌரவகுல முத
ல்வனணிந்த கவசத்தையுங்கிழித்து அவனுடையமார்பை
யுந்துளைத்து முதுகின் புறமாய்ப் புறப்பட்டு யுத்தமுகத்
தில் மிகுந்த வெற்றியை யுடைய கொற்றவர்களையுங் கு
றைத்துவரும்போது நந்தியாவட்டமாலையணிந்த ராஜாதி
ராஜன் தம்பிமார் முதலாகிய பேர்களுக் கெதிரிலே முடி
சாய்ந்து பரவசமாக வோய்ந்து விழுந்தான் ஒருவருக்கு
மிளைக்காத பார்த்திவனானவன் இந்தக்கடோற்கஜன் விட்
ட கணைபட்டுக் களைத்துக் காவலனாகிய துரியோதனன்

தெரிந்தாய்வதற்கு முன்னமே கடவுளர்க்குத் துணையாகச் சென்று காலகேய நிவாதகவசாளைக்கொன்று கிரீடியென்றுபேர்புனைந்துக் கொண்டுவந்த பலவானாகிய அர்ச்சுனனுடைய புத்திரனென்னும் அபிமன்னுவானவன் மன்னர் மண்டலேஸ்வரர்முதலிய யாவர்களும் மறுகிக்குழம்பி வாடி யோடும்படியாகமாட்டி வாட்டி வரும்போது தங்கள்பெரிய தந்தையாகிய வீமசேனனும் துரியோதனராஜனும் அமர்புரியும்படியானதைக்கண்டு ஒரு சமரவேலென்பதைக் கைக்கொண்டு சங்கார ருத்ரமூர்த்தியின்சூலாயுதம்போல் தேர்ச்சாரதியின் மார்புக்கு லக்ஷயம்வைத்து விடுத்தான் அந்த வேலாயுதம்போய்ப் பாய்ந்தவுடனே துரியோதனனுடைய ரதசாரதியானவன் கைசோர்ந்து பாய்ந்து நிலத்திற்சாய்ந்து மாய்ந்தான் இவ்விதமாக-கடோற்கஜன் விட்ட நவரத்ந பாணத்தாற் றுரியோதனன் சாய்ந்து அபிமன்னன்விட்ட வேலினாற் சாரதிமாய்ந்து விழுந்த மாத்திரத்திற் றுரியோதனனுடைய தம்பிமார்முதலாகிய பெருங் கும்புகூடிக்கொண்டு கோவென்றழுது வீமன்-கடோற்கஜன்-அபிமன்னன் இவர்கள்மூவரும் பிரயோகம்பண்ணுகின்ற வீரபாணத்திற் கிடைந்து கிட்டநெருங்கித் தமயனைப் பார்க்கப்பயந்து, வீஷ்டுமர்நின்று யுத்தம்பண்ணுமிடத்திற்கு வெகுபேராயனுப்பி ஐயா? அபிமன்னன்விட்ட வேலாயுதத்தாற் சாரதியிறந்தான் கடோற்கஜன்விட்ட வெஞ்சாயகத்தால் இராஜாதிராஜனாகிய துரியோதனமகாராஜன் உயிர் மறந்தான் சமீபத்திலெநருங்கிப் பார்க்கமாட்டாமல் யாவருந் தத்தளிக்கின்றார்கள் தேவரீருக்கு சேதிதெரிவிக்கச் சொன்னார்கள் நீர் சீக்கிரத்தில் வரவேண்டுமென்று சொல்லவே இந்தச்சேதியைக்கேட்டு மந்தாகினியாள் மைந்தனாகிய காங்கேயன்வருந்தி அப்போது, தான் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும் விஜயனையும் செந்தாமரைக் கண்ணனையும் ஒருபுறமாகவிடுத்துத் துரியோதனன் விழுந்துவிட்ட திசையைநோக்கிப் புறப்பட்டார்-இளைத்த பேர்களுக்கு ஏழுசுற்று மதிற்சுவர்போலிருந்து காத்திரக்ஷிக்கும் இறைவராகிய வீஷ்டுமர், வண்டுகள்மொய்க்கும் மலர்மாலையணிந்த பார்பினையுடைய துரியோதனராஜன் விழுந்துகிடக்கும் இடத்தில்வந்து அவனுடையமார்பிற்கணைபட்டுருவியிருக்குந் துவாரத்தைப் பார்த்து இருகரத்தாலுமணைத்தெடுத்து தனதுரதத்தின்பேரி லேற்றிக்கொண்டு காயம்பட்ட பேர்களைவைத்துக் காப்பாத்துங் காவணத்துட் சென்று அங்கிருக்குங் காரியஸ்தராகிய ரணவயித்தியர்களை யழைத்துக்காட்டி பிரேதம்போலும் அசைவற்றுபோட்டகாலும் போட்டகையுமாயிருக்கவே யாவரும்புலம்பி வினையின்பயனென்றுகலங்கித் தேறி ராஜனுக்குப் பிராணன்வரும்படியாகிய சஞ்சீவ கரணியென்னும் ஔஷதங்கொடுத்து ஒத்தமிட்டு மருந்துவைத்துக் கட்டினார்கள் பின்னுஞ் சற்றுநேரத்திற் கண்விழித்துப் பார்த்து வீமனிங்கின்றானோ ஓடிப்போனானோவென் றெழுந்து தாகத்திற்குப்புசித்து இளைப்பாறி யுத்தமுனைக்கு வரயெத்தனித்தான் அந்தச்சமயத்தில் சந்தனுகுமாரனாகிய பாட்டன் முகத்தைசசடித்து, ஓ-அரவகேதனனே கேளும் போர்புரியுந்தன்மை யெப்படி யென்றால் நாயகனானவன் போரணியினிற்கவேண்டும் மற்றப்படைகளிற் சிலவீரர்கள் எஜமானனைக் காத்துக்கொண்டிருக்கவேண்டும் மற்றச்சேனாபதி முதலிய படைமன்னவர்களெல்லாம் யுத்தஞ் செய்யவேண்டும் அப்படி யுத்தஞ் செய்து எல்லோரும் அழிந்துபோய்விட்டால் முதலாளியாகிய ராஜன் அதைரியமுடையவனாகில் ராஜியாய்ப்போகவேண்டும் தயிரியசாலியாகில் தானேபுறப்பட்டு எதிர்சென்று சளையாமலின்று யுத்தம்பண்ணவேண்டும் இப்படிக்கெல்லாம் ராஜதருமமுதலிய நீதிகளிருக்க நாங்களெல்லோரும், உயிருடனிருக்க நீ யுத்தஞ்செய்யப் போவது உத்தமமல்ல உத்தமனே மெத்தவருந்தி நொந்திருக்கின்றாய் நீயிப்போதிந்தப் போரணியிலிருப்பையாகில் உனக்குவதிலாதநான்போய் உன்னை யடித்தவர்களைப்பிடித்து யுத்தமுடித்து வெற்றிக்கொடிபிடித்து வருகின்றேனென்று சொல்லி துரியோதனராஜனைப்போரணியினிறுத்திபின்னாவலுமமைத்துமகமேருவென்றுசொல்லும்படியாகியவில்லெடுத்துநாணேற்றி திரிபுர தகனனே யிவனென்று சொல்லும்படிக்குத் தேரோட்டிவீரகண்டாமணி விளங்கியொலிக்குங் காலினையுடைய வீமசேனனையெதிர்த்து மிகுபோர்விளைத்து முன்னிட்டவர்களெல்லாரும் பின்னிட்டோடும்படியாகக் கூர்மைபொருந்திய வாளிகளினாற் குறைத்துச் சிதைத்துமார்பிலுந் தோளிலும் முகத்திலும் நகத்திலும் கண் காதுகளிலும் சொருகிப் புதையும்படியாய்க் கணைமாரி சொரிந்து-சிரமுங்-கரமும்-உரமும்-அறுபட்டுச் சிதறிவிழும்படியடித்து தருமராஜனுடைய சேனாசமுத்திரத்தில் தான் ஒருவனாகநின்று பாற்கடலைக்குழப்பிய மந்தரகிரிபோற்கலக்கித் திரிந்து போர்புரிந்து வீமன்-அபிமன்னு-கடோற்கஜன்-தர்மராஜன்முதலிய வேந்தர் பலர்களுங் காந்திப் போய்ப் பாங்கிப்போகக் கண்ணுக்கெட்டியதூரம் ரணகளம்புழுதி பறக்கும்படியாய்க் கறங்காகிய காற்றாடியைப் போலும் குயவனுடைய திருகையைப் போலும் கரகரவென்று ரதம் சுழன்றுவரவும், கால்மாடு தலைமாடாய்ப் பிணங்கள்குவியவும் பேய்களாடவும் உதிரவெள்ளம்பெருக்கெடுத்தோடவும் மதநிறைந்த மலைபோன்ற யானைக்கூட்டமும் பந்துபோல் விசைகொண்டுபாயுங் குதிரைக்கூட்டமும் காரைக்கிழித்தோடும் ரதபந்திகளும் பாரைக்குழித்தாடும் சேனைவெள்ளமும் தேசதேசத்தரசர்கள்ராஜாராஜத்தலைவர்கள் இயாவருங் குலைகுலைந்து நடு நடுங்கி விடவிடத்துப் படபடத்து எண்ணங்கள்மறந்து இச்சைகள்துறந்து திசாதிசைகளில் விழுந்தோடி யிறந்துபோகும்படிக்கு சுடுசரந்தொடுத்து அலைகணிறைந்த சடவிலுறைந்த வடவா முகாக்கினிபோல் அழித்து எரித்து யாவரும் எதிரில்லாமல் அவடம்விட்டுவந்து கிருஷ்ணார்ச்சுனனை மடக்கிக்கொண்டு சுவேதவாம்புரவி அழியாதரதம்-முடியாதசாரதி நாயகனாகிய அர்ச்சுனன்-இவர்கள் பேரில் சோனைப்பேய்ச் சலைப்போற் கணைபொழிந்து கருக்கிக்காயும் போதிற் ஸ்ரீ கிருஷ்ணருடைய கரங்களுங் கால்களும் ஓயும்படியாய்க் கலகலத்து வருந்த அப்போது அசைவற்றிருக்கும் அர்ச்சுனனைப்பார்த்து அடாபாவி

அர்ச்சுனா காடாக்கினிபோற் சேனைகண் முதலிய யாவரையுமெரித்து என்னையுங் குதிரைகளையும் இப்படிக்குக் கொளுத்திக்கொல்லும் வீஷ்டுமன்பேரில் வில்லெடுக்காமலும் ஒரு சொல்லுரைக்காமலும் பாணம்விட்டுத்தடுக்காமலும் சும்மா யிருக்கின்றாயே அப்பா அர்ச்சுனா உன்னை நம்பிவந்தேனே நல்லயுத்தத்தில் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டு அறியாதவன்போ லிருக்கின்றாயே இதென்னமோசம் உன்னுடையநேசம் ஐயோ? இதுமெத்த ஆச்சரியம் என்பேரி லுனக்கென்ன மாச்சரியம் அர்ச்சுனா, என்னைக் காக்காமற்போனாலும் தருமராஜன் முதலிய மன்னரைக்காக்கவேண்டுமே, தன்மானம் பிறர்மானம் என்பது இல்லாமலிருக்கின்றாயே உனக்கென்னமானமில்லையா ஈனமில்லையா, ஊனமில்லையா, வெட்கமில்லையா, சிக்கில்லையா, அக்கரைக்காரனாகிய அர்ச்சுனா, உன்பாட்டனாகிய இந்தவீஷ்டுமனால்இப்போர்ப் பட்ட அடிபடும்படியாய் எனக்கிசைவித்தத் தலைவிதி அப்பா என் பெண்டுபிள்ளைகளைவிட்டு உன்னைநம்பி நான் தேர்விடவந்தது என்னுடையபொல்லாதமதி விஜயனே நீ! நடுச்சமயத்திற் சமூகத்தர்க்கமாட்டாமற் செய்தது இதுநல்ல சதி அர்ச்சுனா, இனி என் ஜன்மஜன்மத்திற்கும் உனக்குநான் தேர்விடுவேனென்று நீ! செவ்வையாய் மதியென்று விழிசுழன்று கடுங்கோபங்கொண்டு செவ்வாம்பலையும் செம்முருக்கையும் செவ்வரக்கையுஞ்செம்பையுஞ்சேர்த் துருக்கியதைப்போற் கண்ணு முகமுஞ் சிவந்து கரத்திற் பிடித்த கடிவாளக் கயிற்றையும் குதிரைதூரத்துங் கோலையும் சுழற்றியெறிந்துவிட்டு ரதத்தைவிட்டுத் திடீரென்று பூமியிற் குதித்தொருவன் மெச்சியெனக்குலெக்ஷங்கொடுக்கவேண்டியதில்லைஒருவனுறவுஎனக்கென்ன உதவியைச்செய்யும்ஒருவன்பகைஎன்னையென்னபண்ணும் எவனெக்கேடுகெட்டாலும்எனக்கென்ன ராமனுண்டாலென்ன ராவணனுண்டாலென்ன எவனானாலும் எனக்கென்னஆகவேண்டியதென்று மனநொந்துதன்னுயுதமுந் தன்கைப்பொருளுந் தவ்விட்டிருந்தால் தருணத்திற்குதவும் அன்னியரிடத்திற்கொடுத்து அவன்கையைப்பார்த்திருந்தால் அந்தப்பாவி அவசரத்திற்குக்கொடுக்கான் கொடுத்தவனுக்கு உடனேகுறைவந்து நேரிடுமென்று பெரியோர் பேசியவாசகம் நிஜமாச்சே நான்பேசியிருந்த நேசஉருமைகளெல்லாம்வீண்போச்சே இவனுடைய ஆயுதத்தையும் இவனையும் நம்பிவந்து என்க்கிந்தக்கெதியாச்சே இந்த வேளையில் நாமும்சும்மாயிருந்தாற் பழியாச்சேயென்று சக்ராயுதத்தை நினைத்தவுடனே தகத்தகாயமாய் வந்து சுழன்ற சுதரிசனத்தை வலதுகரத்திலேற்றிக்கொண்டு உகாந்தகாலாக்னிபோற்சீறி வீஷ்டுமனைக்கொல்லும் படியாய்மிதிதிருவடிபெயர்த்தமாத்திரத்தில்ஆதிசேடனுடையபணமுகுடகடகடவென்ன அமரர்முதலிய பேர்கள், அரிசரி ஜய ஜய நமநமவென்ன சக்கரக்கையன், காஸாம்பூமெய்யனாகியஜயன். பையநடந்த பான்மையைக்கண்டு தேரிற்றிகைத்திருந்தவிஜயன் திடுக்கென்றெழுந்து பூமியிற்குதித்துதனக்குப் பகவற்கீதை சொல்லித்தரிசனங் கொடுத்த பங்கயம்போன்றதிருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டான், அந்தவேளையில், விடுவிடுகாலையென்று வீசிநடக்க, நானென்றுமவனென்றும் உவனென்றும் சொல்லத்தக்கவையற்றநன்னெறியைநாட்டி அவனருளார்காட்டியநற்குறியிட்டுப்பூட்டி, இருகரத்தாலும் பற்றிக் கொண்டு ஸ்தவுத்தியஞ் செய்கின்றான். தனஞ்செயனானவன், ஓ ஆபத்பாந்தவா, ஓ அநாதரக்ஷகா, ஓ சர்வலோகசரண்யா, ஓ சர்வபௌமா ஓ கஜேந்திரவரதா, அரிவிஷ்ணு அரிவாமனா - ஆதிமத்யாந்தரகிதா - யதுகுலசிரேஷ்டா- சுவாமீ என்னைமன்னிக்கக்கடவது தேவரீருடையதிருவடித்துணைகள்வாழக்கடவது தேவரீருடைய திருவருட்கண்கள்வாழக்கடவதுதேவரீர் அடியேனுடைய மனுவியொன்றுகேட்டருளும்ஆதிமூலமேஇந்தவீஷ்டுமரானவர்உமக்கொருலக்ஷயமென்றுநினைத்தோ- இல்லைஅவரைக் கொல்லுவது அருமையென்பதுகுறித்தோ அல்லது இரண்ய - இரணியாக்ஷ - இராவண - கும்பகர்னன்முதலியஎல்லாருடையஉயிரிலும் இவருடையஉயிர் வல்லுயிரென்றுகருதியோதேவரீர்சக்ராயுதங்கொண்டது திருமாலே பீதாம்பரப்பெருமானாகிய உமக்குஇவரீடோதேவர்சிருஷ்டியிலுண்டாகிய அநேகம்பேதங்களில் இவரொந்தஅனுவோ அரிகரிஇதென்னதந்திரகோலம் இதென்ன இந்திரஜாலம் கோபிகாலோலனே யென்று அர்ச்சுனன் துதித்து சுவாமீ? உம்மைவிட்டாற் றானே வீஷ்டுமனைக் கொல்லுவீர் உம்மை விடாமற்போனால் நீரொங்கே கொல்லுகிறது பார்ப்போம் என்னுயி ருள்ளவரையிலும் உன்னை நான்விடேன் ஆண்டவனேகேளும் நீர் ஆயுதமெடுப்பதில்லையென்று சொல்லிவிட்டு இப்போது ஆயுதமெத்துக் கொல்லுவீராகில் அது எனக்கு மிகுந்த குறைவைக்கொடுக்கும் கோவிந்தனே கையிலாகாமற் கலங்கிவிழித்த விஜயனுக்கு தான்சொன்ன சொற்றப்பி திருமாலுதவிசெய்தானென்று பழியாகிய இழிவு சொல்லுவார்கள் ஆகையால் தேவர்கண்காண இந்த வீஷ்டுமர் முதலியபடைகளை யெல்லாம் முருக்கி மாட்டுகிறேன் பாரும் சுவாமீ? ரட்சியுமென்று பாதாக்கிராந்தனாக விழுந்து விட்டான் பார்த்தனானவன் இத்தப்படிக்கு அர்ச்சுனன் வணங்கி வணங்கி உபசரிக்கக் கிருஷ்ணமூர்த்திக்குக் கோபமதிகமாய் ஆ? அர்ச்சுனா என்காலை விடுவிடென்று கூறி மாறித்திருகி தன்மேல்வாராநின்ற ஆதிகேசவன்கொண்ட கோபத்தை வீஷ்டுமருணர்ந்து நமக்கு இன்று நாசகாலஞ்சமீபித்ததென்று நடுநடுங்கி மாற்றுயர்ந்த அபரஞ்சியினாலியற்றிய மகமேருவைப்போன்ற தேரைவிட் டிறங்கி தனுப்பாணங்களையும் வைத்துவிட்டு இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்துஏகாங்கதண்டமாகப்பூமியில் விழுந்தெழுந்துவேதஉற்பத்திக்குமுதற்காரணனாகியவித்தகனே - மாதவனே - அச்சுதனே - பாற்கடலிற் பாப்பணையிற் றுயிலும் பரந்தாமனே - நற்குண - நற்சிந்தை - நல்லுருவமைந்த மகாலட்சுமிக்கு நாதனே-நாராயணனே-அற்புதனே-தெய்வநாயகனே-தேவர்கள் தொழுதேற்றுஞ் சீதரனே-கஜேந்திரனென்னுங் காட்டானையை முதநிவீடாகிய கொட்டாரத்தில திருவடிச்கம்பத்திற்சேர்த்து அருட்கவளமூட்டி யாதரித்து வாழ்வுபெறவைத்த கஜேந்திரவ

ரதனே என்னைரட்சியும் மேலும் சகலவரமுங்கொண்டு சாகாவரமுங்கண்டு மூவுலகாண்ட இரணியாசுரனைநரசிங்கரூபமாய்த் தூணிலுதித்துக் கைநகத்தாற்கொன்றனை இதன்றியும் அண்டங்களையாண்டமகாபலிச்சக்ரவர்த்தியினிடத்திற்போய்வாமனரூபங்கொண்டுமூன்றடிமண்கேட்டுபாதத்தாற்பாதலத்திற்சிறைவைத்தனை பின்னையும் இராமாவதாரமாய் ஆறைக்கோடி ஆயுள்கொண்ட இராவணன் முதலிய அரக்கரை அம்பினாற்செற்றனை ஆண்டவனே இப்படிக்கு வரங்களிலும் - உரங்களிலும் - சிரங்களிலும் - சரங்களிலும் - இனங்களிலும் - ஜனங்களிலும் - கனங்களிலுஞ் சிறந்து அழியாவரம்பெற்றிருந்தவர்களாகிய தாஷ்டிகர்களையெல்லாம் தந்திரங்களாய் முடித்த சர்வநாதனாகிய சர்வேஸ்வரனென்னும் உமக்கு என்னைக்கொல்லுவதருமையோ சுவாமி நாயினுங்கடையேனாகிய வென்னை ஒருலக்ஷியமுள்ளபொருளாகப்பாவித்து மேலாகிய கோபங்கொண்டு சக்ராயுதமெடுத்து செந்தாமரைச் சமலத்திருவடி பெயர்த்துவரும்படியானதோ தெய்வமே இந்தப்பிரபஞ்சத்தில் யாவரும் முடியும்படியாகிய கிரியாண காலத்தில கடவுளினுடைய திருநாமங்களைச் சிந்தைசெய்து வந்திப்பதில்லை ஆனலப்படிக்குப் பெறத்தக்கவர்களிபதவத்தையுடையவராதலால் கரியவண்ணனாகியகண்ணனே அடியேன் ஜனனமரணவேளையிற்சூழாமலும் மனத்துயிர்வருத்தும் மனைவாழ்க்கையில்வாழாமலும் மகத்தாகிய நாகத்திலாழாமலும் தேவரீருடைய திருவடி மணக்குலவும் பரமபதக்கதியை யெனக்குதவிசெய்யும்படியாகவினைத்து சக்ராதரனாகத்தரிசனந்தந்தது நான் இந்தப்பிறப்பிற் செய்த தவப்பயனென்றும் இல்லை - ஜன்மாந்திரத்திற்செய்த தவப்பயனே எனக்குத்தரிசனந் தரும்படியாகச்செய்தது தாமோதரனே - இனிமேலும் நான் இந்தக்கர்மபூமியிற் சல்க்காமலிருக்கும்படியாய்க் கருணைசெய்தாளுங் கருணைக்கடலேயென்று கரநடுங்கத் தோணடுங்க நாநடுங்கக்கண்ணீரோட தேகஞ்சிலிர்த்து உண்மைச்சியானமுணர்ந்து அநேகவிதமாக ஸ்தவுத்தியஞ் செய்து அரிஹரி யென்று திக்குநோக்கித்தெண்டனிட்டார் விஷ்டுமர், அந்தவேளையில் பக்தவற்சலனாகிய பரமதயாளனானவர், பக்ஷமுடையவராய்க் கோபந்தணிந்து உள்ளங்குளிர்ந்துநிற்க, இடகாத்திரனாகிய ஜெயவிஜயன் திருமாலைப்பணிந்து திருக்கரம்பற்றித் திரும்பி யழைத்துக்கொண்டுவந்து தேவர்கள் யார்தடுத்தாலும் மூவர்கள் போர்தொடுத்தாலும் - இப்போதே சேதிக்கிறேன் பாரும், நீர் வாரும் தேரின்மேலேறும் உட்காருமென்று தானுமேறிக்கொண்டு விஜயகாண்டீபத்தையெடுத்துப் பிடித்து - நிறுத்தி - வளைத்து - யிழுத்து - நாரிமாட்டி - சுடர்த்தலைகொண்ட தாரைக்கூர்கணை ஆயிரம் ஐயாயிரம் பதினாயிரம் நூறாயிரம் கோடிகோடியாகவாரி மாரிபோலிறைத்து வானத்தைமறைக்கவும், கிருஷ்ணனானவர் மறுபடியுந் தேரேறிக்கொண்டு - வாயுவேகமனோவேகமாய்ச் செலுத்த வாசவகுமாரனாகியசவ்யசாசி சர்வசம்மார காலருத்ரமூர்த்தியைப்போல் வீஷ்டுமர்முதலிய சேனைப்படைகளையெல்லாம் - ஊழியுகமுடிவிலெழியு மூயிர்போலழித்து காடாக்கினியாலெரியுங்காட்டைப்போலெரித்துக்கொண்டு வருவதைக் காணுவதற்கெவர்களாலுங் கூடாமையாய்க்கலங்க, தேவர்கள் கண்களைமூடிக்கொள்ள, சந்திரசூரியாக்கினி மூன்றுகோள்களும் நிலைதடுமாறி யசைந்தோடத் தாராகணங்கள் பலபலவென்று திரப்படைகளைத் தாக்கிப் போர்புரிந்துவந்தான் தனஞ்செயனானவன்.

இந்தப்படிக்கு ஆலைக்கரும்புபோலும் வேலைத்துரும்புபோலும், நைந்து நொந்தாடும்படியாய் வென்று வரும்போது வீஷ்டுமரானவர் வீரபட்டத்திரர்களை முடுக்கிவிடுக்க அவர்கள் திடுக்கெனவந் தெதிர்த்துப் படுக்கெனப் பாணங்களைத் தொடுக்க - அவைகளை அர்ச்சுனன் தடுத்து ஐமுகப்பகழிகள் விடுத்து மகுடவர்த்தனராகிய படைகளை மண்ணொடுமண்ணாகக் கெடுத்து நீறெழச்செய்து நெருப்பெழப்பெய்து திவ்யாஸ்திரங்களால் நவமணி மகுடமன்னர் மண்டலிகர் - பட்டவர்த்தனராகிய படைக்கும்புகளைச் சேறுபடுத்தி அவர்கள் தலையுடைபட்டுப் பெருகு மூளைகளாற் திக்குகளிற்கரையேற்படுத்தி திசைகள்வரைக்கும்புரண்டு வழிந்திருக்கும் உதிரங்களை ஆறுபடுத்தி நிலைபெற்றிருக்கும் யானைசேனை பரிவாரமாகிய படைக்குமொத்தத்தில் ஆயிரம் அம்புகளேவி அந்தக்கும்புகளையெல்லாம் ஈறுபடுத்தினான் வீறுபடைத்திருக்கும் விஜயனானவன் ஐயா அந்தவீஷ்டுமர் அனுப்பினைத்தபேர்களில் எவர்கள்பிழைத்தார்களென்று என்வாய்குளிரச் சொல்லுவேன் இறைவனே மறுபடியும் சமுத்திரநீராளாகியதிடவான்களையும் இராக்கதர்களையும் விரைவிற்செல்லவிடுத்தார் வீஷ்டுமரானவர் அந்தத்துரைகள்வந்தடுத்து தாங்கள்கற்றிருக்கும் பற்பலவற்புதவிற்றிறமை வேற்றிறமைகளையுங்காட்டினார்கள் அந்தக்கைக்காறரைத்தெரிந்துகொண்டு காண்டீவனகைந்து கூர்மையாகிய வாயுக்கணைபொறிகள்கக்கிய தேயுக்கணை நீரைச்சொரியும் வருணக்கணை காலமுடிவைச்செய்யும் ருத்ரக்கணை - கும்பாசக்கூடிக்கொல்லும் தேவர்க்கணை இந்திரக்கணை முதலாகிய சந்திரக்கணைகளையும் இணை யிணையாக இசைத்து எடுத்துத்தொடுத்து இழுத்துவிடுக்கின்றமையால்முனைகொண்டுவந்ததேர்வரிசைகளியாவும் வெந்தழிந்துபோயின வாளணிவரிசைகளெல்லாம் நொந்தொழிந்துபோயின கம்பமத யானைகளெல்லாம் கால்சாய்ந்தழுந்தன, அம்புபோலெழும் புரவிகள், அடிதுணிந்திறந்தன காவலரியாவரும்பட்டு உயிர்விட்டார்கள், அந்தச்சமயத்தில் முன்வந்த பேர்களுக்குப்பின் துணையாகச்சல்லியராஜன்முதலாகிய மந்திரதேசாதிபதிகளையும்சகலவயப்படைகளையும் - சமரதத்தலைவர்களையும் - வரவிடுத்தார் காங்கேயனானவர், அவர்களைக்கண்டு அர்ச்சுனன். ஆசைகொண்டு பேசவேண்டுமென்று வந்தயிடத்தில், அந்தப்படைமன்னர் ராஜகாரியங் குறைவுவருமென்று நாராசபாணமுதலாகிய அஸ்திரங்களையெடுத்துவிடுத்து - வீராவேசங்கொண்டு நடநடவென்று பற்கடித்து - நானைக்காய்ந்துவந்தவர்கள், தங்களுக்கு முன்னோடிவந்தவர்கள் படுகிறபாடுங், - கெடுகிறகேடும், பார்த்து முகம்வேர்த்து இவர்களுக்குப் பின்றுணையாகத்தானேவந்தோம் இவர்களுக்குப் பின்புறத்திற் றுணையாகப்பேசா

ரற் போய்விடுவது புண்ணியவசமென்று போர் புரியும்
போதே பொறிகலங்கி நெறிவிலங்கி அறிவழிந்து நிர்வள
முடைய மந்திரபூபரும் சல்லியனும் அஸ்திரமுறிந்து த
றிந்து குவிந்து மலைபோனிறைந்து கிடக்கும் யிடத்தைக்
கண்டு மறைந்துபோவதற்குச் சுற்றிலுமிருக்கிறபேரைச்
சேர்த்துக்கொண்டு ஓடிப்போயொளித்து உயிர் பிழைத்
திருந்தார்கள் இதல்லாமலும் பாண்டவர்கள் காட்டிலிரு
ந்தகாலத்தில் தாங்கள் நாட்டிலிருந்துகொண்டு நாளுவி
தமாகத் தங்களுடைய வல்லபங்களைத் தாங்களேபுகழ்ந்
து சொல்லிக்கொள்ளு நாவினையுடைய வயப்படைக்கெ
டிமன்னவரெல்லாம்வாடி, பாடியைநோக்கிப் போகாமல்
வெறிடம் நாடிப்போய்ப்பதுங்கினார்கள் போர்முகத்திற்
போர்செய்யவந்த துரியோதனன் தம்பிமார்களெல்லாரு
ங்கூடி விஜயன்கணைவிசையாய்ப்புதையவேவெருண்டோ
டிமறைந்தார்கள் அப்பால் மாகதர், சாகதர், மாளுவர்,
சாளுவர், குர்ச்சரர், பப்பரர், வடுகர், படகர், குடகர், க
ன்னடர், மராடர், மறவர், தொட்டியர், ஒட்டியர் முத
லாகியபேர்களெல்லாம் பற்குனன்பாணத்தால் அங்கம்
பழுதாய் வருந்திப்புகுந்தார்கள் இந்தப்படிக்கு முடிமன்
னர்முதலிய கெடிமன்னரையும் தாறுமாருக நிறுநிருகச்
செய்யுந் தனஞ்செயனென்னுந் தனிச்சிங்கத்தின் கைத்தி
றலைக்கண்டு ஆடும்படியாகிய அரவக்கொடிதரித்த அரச
ன் வியாகூலங்கொண்டு அர்ச்சுனன்பேரில் யுத்தஞ்செ
ய்யப்போவோமென்று நினைத்து அப்படிநினைத்த மனத்
தைமறுத்து அதினுலென்னலாபம்நாம்போர்புரியப்போ
ய்அச்சுமச்சுருத்துக்கால்குடைகொடிகுதிரை சாரதியாவு
நொறுங்கி புண்ணுறயிருக்கின்ற நமதுமார்பிலும் பாணந்
தினைத்துருவ அதனுற்றுன்பப்படுவதைப்பார்க்கிலும் ம
ரியாதையாய்ப் பாசறையைநோக்கிப்போய் விடுகிறத்தை
விட வேறுநன்மைகள்நானறிந்தது ஒன்றுமில்லையென்று
ன்னி வேறுவார்த்தைகளொன்றுஞ் சொல்லாமல்வாய்
மூடிக்கொண்டு தியங்கித்திரும்பினான் துரியோதனமகா
ராஜன் இப்பால் இந்தரணகளத்திற்பார்த்தனுடையபடை
ப்பசழியினுல் சத்துருக்களின்படையாகிய சமுத்திரம் உ
டைபட்டுலர்ந்துபோகவே கோபிகாஸ்திரிகளுடன் குலா
விமகிழுங்கோபாலன் இனிமேற்சண்டைக்கு எதிர்த்துவ
ருவா ரொருவருமில்லையென்றுணர்ந்து அன்புகூர்ந்துஅ
ர்ச்சுனனை அருட்பார்வையாகநோக்கி சாயங்காலமாய்ச்
சுது இவடத்திலும் படைகளிளைத்துப்போச்சுது உமக்
கும் புகழ்வாச்சுது இனிநமது வாகினியினிடத்திற் றே
ரைக்கொண்டு போகலாமாவென்று ஸ்ரீகிருஷ்ணர்கேட்க
திருப்பிவிடுந்தேனாதினதயாளாவென்று சிலைவல்லோனு
ரைக்க உடனேரதத்தைத்திருப்பி பொங்கியிருக்குந் தங்
கள்படையில்வந்துசேர்ந்தார்கள் இவடத்தில்பனைக்கொ
டியோனும் மறைக்கொடியோனும் கச்சைக்கொடியோ
னும் முரசக்கொடியோனும் பக்கங்களிற் படைநெருங்
க தாங்களும் பாதுகாத்துக்கொண்டு சர்ப்பக்கொடியோ
னுகிய தராதிபனைப் பாசறையிற்சேர்த்தார்க ளித்தன்மை
யவாக யுத்தநடாத்திய போர்க்களத்தில் கிரீடிவிட்ட வெ
வ்வியபாணங்களாலறுபட்டயானைத்துதிக்கைகளெல்லா
முகிறவெள்ளத்தி லசைந்தாடுவது எப்படியிருக்குதென்
றல் கருநிறங்கொண்ட மலைப்பாம்புகள் கவிழ்ந்தும் நிமி
ர்ந்தும் வளைந்தாடுவதைப்போலிருந்தது கொள்ளைகொள்
ளையாகிய ரத்தவெள்ளங்கள் பள்ளங்களில்நின்று பளப
ளப்பெறிவது கிரணங்களைப்பரப்பிய சூரியவட்டம்போ
ன்றிருந்தது இன்னும் காக்கை பருந்து கழுக்கூட்டங்கள்
மொய்த்துச் சுற்றிக்கொண்டு பறக்கும்படியாய் இரண்டு
காதுகளுமறுபட்டுச் செந்நீர்வடியும் யானைகள் தேவேந்
திரனுடைய வச்சிராயுதத்தாற் சிறகிழந்தசையும் மலைக
ள்போலிருந்தன மேலும் இறந்துவிழ்ந்த வெற்றிவீரர்க
ளின் தலையிற்றரித்திருந்த பொற்குவளைகள் தாளமாகவு
ம் வில்லொடு நாணிகள் வீணையாகவும் யானைத்தலைகள்
குடாமுழவாத்தியமாகவும் எயிசக்கரவளையம் பிரம்மதா
ளமாகவுங்கொண்டு கவசகேயூர கிரீட குண்டலங்களைய
ணிந்துக்கொண்டு அர்ச்சுனனுடைய பெரும்புகழைப்
பாடி ஆடும்படியாயிருக்கிற பேய்களனந்தம் போர்க்கள
த்திற்கிடைத்த பிணங்களைத்தானுமுண்ணுமல் தங்களின
த்தாரையும் உண்ண ஒட்டாமற்பொருமைகொண்டு தனி
த்தனிகுரைத்துக்கொண்டோடும் நாய்களனந்தம் கிடை
த்தபிணத்தைத் தானுண்டு மற்றையருக்குக் கிட்டவொட்
டாமற் கீழேமுடிப்புதைத்து அந்த யிடத்தைச் சுற்றிக்
கொண்டு தங்களினத்தார் முதலாகிய யாவர்வந்தாலும்
கூவிக்கத்திக் குழிபறித்து மண்ணைத்தூற்றித்திரியும் நரிக
ளனந்தம்: ஜாதிபேதம்-தெய்வபேதம் - தனபேதம்-ஜன
பேதம்-இனபேதம்-மனபேதம் - கனபேதமுதலிய இரு
மாப்படைந்து ஓர்தலத்தில் ஒரிடத்திற்கூடிய நாமென்று
உன்னுமல் பத்துப்பேர்களையாதரித்துந் தானுந்தின்னும
ல் பறந்துபறந்து பாடுபட்டாலும் பகலைக்குச்சோறில்லை
யென்னும்பழமொழியைப்போல் பாரப்பிணங்களைக்குவி
க்கும் பூதமனேகம் தன்னடத்தையையும் -தன்செல்வத்
தையும் தன்பிறப்பையும் தானிருந்தகதியையும் தான்செ
ய்தமோசங்களையும் தன்பசிக்கு ஒருதவளைகிடைத்தாற்
போதுமென்றிருந்தக் காலவெண்ணத்தையுந் தாமெண்
ணிப்பார்க்காமல் இந்தரணகளத்திற் பத்துபிணம் அகப்
படவே தன்னைத்தான்மறந்து தனக்குமிஞ்சிப்பிரபஞ்சமி
ல்லையென்று தலைகுலுக்கி யானைப்பிணம் குதிரைப்பிண
ங்களிலேறி இரதத்திற்பாய்ந்து உதிரவெள்ளத்திலீந்தி
ஆடல்பாடலுடன் அரமகளிர்மேலாசைகொண்டு நால்வ
ர்நகைக்க நாளைவரப்போகிற அவமானந்தெரியாமல் அ
லைந்துதிரிகின்ற குருட்டுக்கண்பேய்களனந்தம் தாய்தந்
தை பெண்சாதி தன்பிள்ளை தமயன்தம்பி தன்னுறவினர்
இவர்கள்முதலியயாவரையுஞ் சேர்த்துப்பிடியாமல் தா
ன்வாழ்வதற்குத் தலைமகளாத்தாற்போதுமென்று நினை
க்கும் தரித்திரரைப்போல் பேராசைகொண்டு பாவபுண்
ணியமெண்ணிப்பாராமற்றிரியும்போக்கிரி முரட்டுப்பேய்
களனந்தம் சோற்சோர்வினுற் சோம்பித்திரிந்து துன்ப
ப்படுந் துஷ்டகணங்களனந்தம் ஒன்றையொன்று வஞ்சி
த்து மாமிசங்களைவாயிற்போட்டுக்கொள்ளும் திருட்டுக்
கூளிகளனந்தம் கோலுக்கொண்டிருந்து சகலபூதப்பிரே
தபைசாசகணங்களால் ஏவல்கொள்ளுங்காளிகளனந்தம்

காளிக்குப்பூசையிடவைத்தகலியைத்தொட்டுமுகந்து மூக்கறுப்புண்ட மூளிகளனந்தம் இதல்லாமலும் வெப்பமாகிய பிணக்குவையாலும் யானைப்பிணம் குதிரைப்பிணம் தேர்கள் இவைகளையெல்லாம் ராசிராசியாய்க் களஞ்சுத்திசெய்வோர்குவிக்க அந்தக்குவியலிலிருந்து வழியும்படியாகிய ஊனீர் செந்நீர் மூளைமுதலிய ஊருநீர் நிணநீர் இதுகளெல்லாங்கூடி மலையருவிபோற் பெருகி வழிந்துவராநின்ற வாய்க்காலனேகம். மேலும் - அர்ச்சுனன் விட்ட பாணங்களினால் யானைவாயி லிருந்து செந்நீரும் நிணமும் திரண்டோடி வருவது பாலசுப்ரமண்யசுவாமியார் எறிந்தவேலாயுதம் புகுந்தவழியே சிகரங்களையுடைய மலைகிழிந்து ஓடிவரும், கெங்கைப்பெருக்கம்போலுமிருந்தது. தேவேந்திர குமாரனாகிய கேசவற்றோழன் றொடுத்த பாணங்களினாற் றுண்டித்து விழுந்த அரசர்களுடைய மண்டைகளை நாய்கள் கவ்விக்கொண்டோடுவது எப்படியிருந்ததென்னில் மனிதத்தலையும் நாயினுடலுங்கொண்ட மிருகங்களையொத் திருந்தது அன்றியும் பேய்கணங்கள் முதலியயாவும் கூடிக்கொண்டுபெண்ணுக்குப் பிள்ளையும் பிள்ளைக்குப்பெண்ணும்பேசி கல்யாண கச்சேரிமுதலிய சம்பிரமங்களையெல்லாம் அநுபவித்து விருந்துண்டு வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தனகள். இப்பால் இந்தமூன்றாநாள் யுத்தத்தில் சாங்களினால் அறுப்புண்டிறந்த சேனாதள்முதலிய வீரர்களின் மூளைகள்-நிணங்கள் செங்குருதிகளெல்லாந் தேகத்திற்றெரித்ததென்று சீக்கிரத்தில் மேற்குக்கடலில் மூழ்கப்போனவனைப்போல் சூரியன் அஸ்தமானமடைந்தான் - உடனே முடிமன்னர்முதலிய சகலசேனைகளும் பாசறைபுகுந்தார்கள். அவடத்தில் துரியோதனமகாராஜன் துரோணாச்சாரியர்-கன்னன்-துசுவாசனன்-இன்ன முள்ள மன்னர்களெல்லாருங் கூடியிருக்குங்காலையில் அர்ச்சுனன்செய்த யுத்தத்திறங்களும் தானடத்திய போரின் றிறமையும் செங்கண்மாலாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆயுதமெடுப்பதில்லையென்று சொலலியிருந்தவர் சக்ராயுதமெடுத்து தன்னைக் கொல்லவந்ததும் இதுகளை யெல்லாம் விஸ்தாரமாய்ப்பேசிப் புகழ்ந்து மகிழ்ந்துக்கொண் டிருந்தார் சேனாபதியாகிய வீஷ்டுமர், துரியோதனனுடைய படைவீரர்கள் முதலியபேர்களெல்லாம் இன்றையப்போரிலிறந்துபோன உரியவர்களையும் பெரியவர்களையுங் குறித்து அழுதிறங்கிக்கொண் டிருந்தார்கள். தருமராஜன்முதலிய தளகர்த்தர்களும் சேனைவீரர்களும் தனஞ்செயன் செய்த சண்டைகளையும் - வியசேனனும் - அபிமன்னனும் புரிந்த போர்த்திறத்தையும் புகழ்ந்து கொண்டாடிப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

இந்தப்படிக்கு இவ்விருதிறப் படைகளும் அன்றிராத்திரி முழுமையும் நித்திரை யில்லாமல் அவர்கள் பட்டுக்கொண் டிருந்த பாட்டை இவ்விதமென்று நானெப்படி சொல்லுவேன் திரிதராஷ்டிராபூபதி யாகிய இறைவனே கேளுமென்று சஞ்சயன்சொல்லி மறுபடியும் ரணகளத்திற்குவந்தான் அற்றைநாட்செல்ல மற்றாநாள் மாற்றுயர்ந்த பொன்மயமாகிய மகமேருவைப்போல் உதயகிரியும் பொன்னிறமாகவேண்டுமென்று ஒளிபொருந்திய கிரணங்களைவிரித்துக்கொண்டு ஆதிசிங்காதநி லோடிவந்து உதயமாயினான் சூரியதேவன் அந்தசூரியன் கனகளவென்று பரிகளைச் சிவந்து பிரகாசமா யோடிவந் துதயமானது எப்படியிருந்ததென்றால் சக்ராதரனாகி யாதவகுலத்தில் அவதரித்த நீலமேனியையுடைய நிமலன்நேற்றையத்தினத்தில் நம்மை ஆஸ்மீகமாய் நினைத்து அகங்கையிற்கொண்டருளினார் இன்றையத்தினமும் ஒருவேளை நம்மை நினைக்கும்படியா யிருக்கும் ஆகையால் நாம் அவருடைய திருக்கண்களுக்கெதிராகப் போயிருப்போமென்று பரிசுத்தமுடைய சுதரிசனமானது கீட்டிசையிலுதித்தெழுந்ததை யொத்திருந்தது இந்தச் சூரிய னுதயமாகிய தோற்றம்-கேளும் ஜெனமேஜெயமகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டு வந்தார், இந்தச் சரித்திரத்தைக்கேட்ட ஜெனமேஜெயமகாராஜன் மிகவுஞ் சந்தோஷமடைந்து வபுஷ்டாதேவியுடனெழுந்து பூமியில் விழுந்து போற்றிப்பணிந்து புகழ்ந்துமகிழ்ந்துபுண்ணிய சொரூபனே நான்காம்போர் நடக்குந்திறத்தை நவிலவேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்

இந்த மூன்றாம்போரில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சக்ராயுதமெடுத் தெதிர்த்து வரும்போது வீஷ்டுமர் சுவாமியைப் பணிந்து துதித்த,

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

ஆரணகற்பிதமாதவ்வச்சுத வாழியிடைத்துயிலுங்.... *
காரணசற்குணரூபமலர்க்கொடி காதன்மனத்துறையும் *
நாரணவற்புதவானவருக்கொரு நாயகனிற்பணியும்... *
வாரணமுந்திவிசாலதலத்திடை வாழ்வுறவைத்தவனே *
ஆவியழித்தனை தூணிலுதித்திட லாடகனைத்தலைநாள்... *
மாவலியைச்சிறு மானுருவத்துடன் வார்சிறைவைத்தனை
யால்-ஏவிலரக்கனைவீழவடர்த்தனை யானெறிலக்கெனவே
நீவலியிற்சினமூளுமனத்தொடு நேமியெடுத்தனையே .. *
இயானரகிற்புகுதாமலெனக்குயர் வானுலகைத்தருவான்
நீ நினைவுற்றது போனபிறப்பிலென் னீடுதவப்பயனே *
யானுமினிப்பிறவாமலளித்தரு ளாதியெனப்பரவா... *
ஞானமனத்தொடுநாகுழறப்பல நாடியுனாத்தனனே . *
ஆரியனப்பொழுதாறினனிற்கவு மாடலருச்சுனனுங்... *
தாரைவடிக்கணையாயிரமுப்பதோர் சாபம்வளைத்ததிரா *
ஆரொதிர்கிற்பினும்பாவர்தடுப்பினும்யானினியிப்பகலே *
சேரமுருக்குவனேறுகெனத்தன் றேர்மிசைபுக்கினனே *

நான்காம்போர்ச்சருக்கம்.

கண்ணன்-விருத்தம்.

தேடியவ்வகலிகை சாபந்தீர்த்ததாள்... .....*
நீடியவுலகெலா மளந்துநின்றதாள்............*
ஓடியசகடிற வுதைத்துப்பாம்பின்மேல்......*
ஆடியுஞ்சிவந்ததா ளென்னையாண்டதாள்....*

எ து. கௌதமருடைய தருமபத்தினியாகிய அகலிகாதேவியானவள் சபாகாரணத்தாற் கல்லாய்க்கிடந்த இடத்தைத் தேடிக்கொண்டுபோய் அந்த அம்மன்பெற்றுக்கொண்ட சாபத்தைத் தீர்த்ததிருவடிகள், விசால மாயி

ய ஆகாயத்தையும்-பூலோகத்தையும் ஈரடியாக அளந்து
மற்றோரடிக்கு மகாபலியின் சிரத்திலூன்றிநின்ற திருவடி
கள், உருண்டோடுஞ் சகடம்போல் வந்த சகடாசூரன்
உருண்டு போகும்படியாய் உதைத்த திருவடிகள், மிர்து
வாகிய காளிங்கனென்னும் பாம்பின்படத்தின்மீதாடி ந
ந்தகோபன் முதலிய அசோதைப் பிராட்டியாருங் கோ
பிப்பார்களோ அடிப்பார்களோ வென்றுபயந்து மெல்ல
மெல்ல அடிபெயர்த்த திருவடிகள் அடிமைக்கடிமையா
கிய அடியேனை அடியினேர்க்கடிமையாக்கி ஆண்டிரட்சிக்
குந் திருவடிகளை இரவும்பகலு மறவாமற்றுதித்து நான்
காநாட்சண்டையைச் சொல்லுகின்றேன் கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்ல
த்தொடங்கினர்.

அழியாத்தவங்களிற்சிறந்த பழியாம்பவக் கடற்றுறந்த
அரசேகேளும், நளினநாயகனுகிய சூரியன் வுதையமான
வுடனே இயாவருமெழுந்து காலைக்கடனைமுடித்துக்கொ
ண்டு சூரியனைத்தொழுது யுத்தகோலங்கொண்டு வெற்
றி முரசு-வீரமுரசு-ஜெயமுரசு திரமுரசு-கல்யாணமுரசு-
தியாகமுரசு-தாளை-பூரி-கொம்பு-தப்பட்டை-தவுண்டை
மல்லரி-சச்சரி-பேரி-சங்கு-பம்பை முதலிய வாத்தியங்க
ளு முழங்க ரணகளம்வந்து சேர்ந்து ஸ்ரீ நாதனுடைய உ
த்தரவின் வண்ணம் சகலபடைகளையும சக்கிரவியூகமாகவ
குத்து யுத்தத்திற்கு யெத்தனமாக நின்றூர்கள்; அவடத்
தில் துரியோதனன்முதலியபேர்களும் யுத்தபூமிக்கு வந்
து துஷ்டத்துய்மன் வகுத்த வியூகத்தைப் பார்த்து தாங்க
ளும் கருடவியூகம்வகுத்துக் கண்சிவந்துநின்றூர்கள் (நான்
காம்போரில இருபடைத்தலைவரும் - வகுத்தவியூகம் முன்
னுநாள்வகுத்த வியூகமென்றறியவும்.)

அந்தவேளையில் இருதிறச் சேனைபதிகளும் போர்புரியு
ப்படியாய்கொடியுமுடியுஞ் சாய்த்தார்கள், அப்படிசாய்க்
கவே இரண்டுசேனைகளும் விரைந்து இருளைக்கூச்சலிட்
டோடும்படியாகிய போர் முரசத்தை முழக்கிக் கோபங்
கொண்டுபொங்கிப் பேரிரைச்சலிட்டுக் கைகலந்துபோர்
செய்தார்கள் சக்ராதரனுகிய சுவாமியையும் அவர்மைத்
துனனுகிய அர்ச்சுனராஜனையும் சாஸ்திர விவேகத்திற்சி
றந்த வீஷ்டுமர் யெதிர்த்துக்கொண்டார்-பாண்டவச் சே
னைபதியாகிய துஷ்ட்த்துய்மன் தனக்குக் காரணப்பகை
யாகிய துரோணுச்சாரியரை வளைந்துக் கொண்டான் ஈ
ரேழுலகிற்கும் ஆதாரமாயிருக்கிற மகமேருவை அநேக
ங்கோடி மலைகள் சூழ்ந்துக்கொண்டா லெப்படியோ அ
த்தன்மைபோல்பலம்பொருந்திய புயமலைதாங்கியவாயுபு
த்திரனுகிய விமசேனனை-நிர்வாகசாலிகளாகிய தேசமன்
னவர்களும் யானைக்கும்புகளும் தேர்க்கூட்டங்களும் சே
ர்ந்து கெழித்து வளைத்தார்கள் சிற்சில விதமாகிய வீரர்க
ளும் பற்பலவிதமாகிய மன்னவரும் பலபல யிடங்களிலு
ம அமர்செய் தார்கள் அந்தவேளையில் வீமசேனராஜனு
னவன் விற்பாணமுடையவராய் வெகுநேரம்வரையிலும்
போர்புரிந்து அப்பால் ரதத்தைவிட்டிறங்கி ஆலகால வி
ஷம் வெளிப்பட்டுமுழங்கி அவனிமுதலிய அண்டங்களை
அழிக்கப் புகுந்ததுபோல் இந்த விமசேனன் வெறுங்
கையுடன் யானைப்படைக்குட்புகுந்து யானைகளைவாரி ஒ
ன்றோடொன்றை அறைந்து எலும்பு சலோக் கழற்றிவிட்
டபடியால்-தோலினமென்னும் யானைகள்- தோலாகவே
விழுந்திறந்ததுகள் இன்னுஞ் சில தோலினங்களை வீமன்
பிடித்துக் கிழிக்குமிடத்து தும்பிக்கையும் மேல்வாயும்
வீமசேனன்கரத்திலிருக்க கீழ்வாய் கீழே தொங்குவதினு
ல் நால்வாயென்னும் பெயர் மறையாமல் அசைந்தாடும்
வாயுடன் அழிந்திறந்ததுகள்சந்திரவட்டக்குடைதரித்தவீ
மசேனன்குதித்துக்குதித்துக்கொல்லுகின்ற நால்வாயெ
ன்னும்யானைகள்சிந்துரமென்னும்பெயர்மாறுமற் சிந்தூர
ப்பொடியாய்ச்சிதைந்துவிழ்ந்திறந்ததுகள்மேலும்வீமசே
னன்வெறுங்கையாற்சிந்துரங்களைப்பிடித்துஒருகைமேல்
வைத்து மற்றொருகையாற் குடலற்றுவிழக்குற்றுகின்ற
குத்தினல் - தோல் - மாமிசம் - நிணம் - தசைமுதலிய
யாவும் அழிந்துவழிந்துபோய் அத்தியென்னும் பெயர்
மறையாமல்அத்தியென்னும் வெற்றெலும்புகளாய் விழு
ந்திறந்ததுகள்மேலும்கந்தவகன்மைந்தனுகியவீமசேனன்
சந்தடர்க்கும்தோளினுர் கலக்குகின்ற அத்திகள்தந்தாவ
ளமென்னும் பெயர்மறையாமல் தாங்கள் பிறந்துலவும்
தந்தாவளமாகிய மலைப்பக்கங்களில் மறைந்ததுகள்சோ
கந்தீர்க்கும் வாயுபுத்திரனுகிய வேகமுள்ளவீமசேனன்
பலங்கொண்டபுஜத்தினுல் இடித்துக்கொல்லும் தந்தாவ
ளங்கள் - வாரணமென்னும் பேர்மறையாமல் வாரணமா
கிய கோழிகளைப்போற் குன்றியிறந்ததுகள் மேகம் போ
ன்றநிறத்தினையுடைய் பேராகிர்தியாகிய வாரணங்கள்உ
டல்குமுங்கிப்போய் உதிரவெள்ளங்களும் ஊன்றண்ணி
யும் கடகடவென்று கடைவாய்வழியே வழிந்தோடிவரு
ம்படிக்கு - வீமசேனன்தாமரைக்கமலம்போன்ற உள்ள
ங்கையால் அமுக்கிப்பிடித் தெடுத்து ஆகாயத்தி லெறி
ந்த படியால் தும்பிகளென்னும் பெயர் குன்றுமற் றும்
பிகளாகிய வண்டுகளைப் போற் பறந் திறந்து விழுந்த
துகள் மின்னலைக் கொண்டபொன் மலைபோன்றகதா
யுதத்தைப் பொன்னாமணிந்த புயத்திற் கொண்டு மூன்
னூவந்த யானைகளை யெல்லாம் மோதியடித்துக்கொல்
லுவதினுல்மலைக்கொப்பாகிய நாகமென்னும்பெயர்கொ
ண்ட தும்பிகள்நாகமென்னு மலைகளைப்போல் போர்க்க
ள மெங்குமடிந்து புதைந்து சிதைந்து மிதந்துகுவிந்த
துகள் மேலும்தந்தக்கொம்புகளும் துதிக்கையும்வீமசே
னன் கைகளாற் பிடித்துச்சுழற்ற பிடுங்குண்ட நாகங்க
ளெல்லாம் உதிர வெள்ளங்களால் நனைந்துசகல வீரர்
களும் உதிரவெள்ளத்தில் முழுகி யெழும்பும்படியாக உ
திரஞ்சுரப்பதினுல் கயங்களென்னும்யானைகள் எல்லாரு
ம்ஸ்நானஞ்செய்து முழுகும் ஊறு கயங்களையொத்தழிந்
ததுகள் மேலும்கயங்களை வாரிவீசுகின்ற வீமசேனனு
டையமுகம்-கரம்-கால்-உடல்மார்புஇவைகளெல்லாம்கு
ழம்புகளாய்மூடிக் கொண்டிருப்பதினுல்களபமென்னும்
யானைகள் உடலிற்பூசிக்கொள்ளுங்கலவைச் சாந்தாகியக
ளபமாகியதுகள் அன்றியும் மலைகளைப்போலெதிர்த்து
நெருங்கிப் போர்புரியவந்த களபங்களெல்லாம் எட்பொ
றிநெற்பொரிபோல் ஆகாயவிதியிற்பறக்குகின்றமையால்

பங்கமில்லாமற் சண்டைசெய்யும் சிங்கம்போன்ற விம
சேனனுடைய ஆண்மிக்கையானதுகர்மத்தை துணையா
கக்கொண்டு - எவர்களாலு முடிப்பதற் கருமையாகிய
சகலகாரியங்களையும் வெற்றிபெறச்செய்துக் கொள்ளும்
பெரியோர்களென்பதற்குச்சாட்சிஇதுதானென்பதுபோ
ல சரியென்றும் யானைகளேகரியாய்க் குவிந்தனுகள் இர்
நப்பிரகாரமாய்க் கோபங்கொண்டு விமசேனன் கடல்போ
ற்புரண்டு வந்தயானைக் கூட்டங்களையெல்லாங் கலக்கித்
தலையுங், குலையும் உடலுங், குடலும், காலும், வாலுந்
தோலும், தும்பிக்கையும், கும்பிப்பையும், நிணமும், ம
தமும்மூளையும்; உதிரமும், மூளையும் சிதைந்துவழிந்துகூ
முபோற் குழம்பிச் சேருருக்கும்படியாய்க் கொன்றுகுவித்
து அண்டையில்யாவருமில்லாமற்சண்டைசெய்துக்கொ
ண்டுவந்த காலத்தில் எதிராளிகள் மேலிட்டு எதிர்த்து
ப் போராடினார்கள், அந்தவேளையில் வாயுகுமாரனாகிய
விமசேனன் - கையாறுமற்புகுந்து சுடச்சுடக்கையால
றைந்து தேரணிகள் - குதிரைப்பந்திகள்-படை வீரர்கள்
பட்டவர்த்தனர்கள்-மகுட வர்த்தனர்கள் - மன்னவர்கள்
யாவரும் பின்னிட்டோடமடித்து வெகுஜனங்களை முடி
த்துவானத்திலும் வாரியெறிந்து மசகமாகிய கொசுப்
போல் கையாற்பிசைந்து கொல்லும்போதுவந்தவழி யெ
ந்தவழி யிந்தவழியென்றுணராமற்சிந்தைநொந்து வாடி
முகம்வைத்த வாறே ஓடினார்கள் அப்படியோடுவதைஅ
ரவக்கொடியோன்கண்டுமனந்தாளாமல் விசனங்கொண்
டு தளர்ந்தோடிவந்த அந்தச்சேனைகளைக் கையமர்த்தித்
தன்னுடைய தம்பிமார்களும், தானுஞ் சேர்ந்து-கொடி
குடை - முதலியவிருதுகளுடன் முரசு - பேரி - பூரிமு
தலாகிய வாத்தியங்களுமுழங்க - படைமன்னரநேகர் பு
டைசூழவந்துவிமசேனனை வளைத்துப் போராடினான் து
ரியோதனமகாராஜனெனவன், அவனைக்கண்ட விமசேனன்
தென்புகொண்டவனாய்த் தேரின்பேரி லேறிக் கொண்டு
பாரியவில்லைவளைத்து அச்சத்தை விளைக்கும் நச்சுக்கணை
தொடுத்துதுரியோதனராஜன்கைக்கொண்ட வில்லையும்
முறித்து அவன்தரித்திருந்தசேமக்கவசத்தையுஞ்சிதைத்
தான்திங்களக்குடையுஞ்சிங்கக்கொடியையு முடையவிம
சேனன்,மறுபடியும்வேறு வில்லெடுத்துநாணிமடுத்துபா
ணந் தொடுத்துவருவதற்குமுன்னே ஆறம்பைத் தெறித்
து அரவக்கொடியை முறித்து கூரம்புக்கும்புகளாய்-நூற
ம்புசெலுத்தி-துரியோதனனுடைய மார்புமுதலிய தேக
த்திலுழைத்து - வேறேஅம்புகள்விடுக்காமலிருந்தான் வி
மசேனன்,அந்தச்சமயத்தில் துரியோதனராஜன், சுதாரித்
துக்கொண்டுவிமன்விட்ட பாணங்களையெல்லாம்விலகச்
செய்து வதிலுக்குவதிலாக ஆறம்பும், உடனே ஒருநூ
றம்பும் விமசேனனுடைய சிங்கக்கொடியிலும்தேரிலும்
தேகத்திலுந் தெறித்தான்,அப்போது துரியோதனன்வி
ட்ட கணைகளினால்விமசேனனுடைய சிங்கக்கொடிமுறிந்
துதேருஞ் சிதைந்துதேகத்திலும் புகுந்துதுளைக்கும்போ
து வெற்றிமிகுந்த கடகசங்கண வலயமணிந்த தோளைத்
தட்டிக்கொண்டு அண்டமுகடு வெடிப்படும்படியாய் மு
றுக்கி ஆக்ரமித்தான் வாயுமைந்தனாகிய பராக்ரமவிமன்,
அந்தவேளையில் மகிபதிபுத்திரனால் விமனிளைத்தானென்
று கூர்மைதங்கிய வேலாயுதத்தைத்தாங்கி அநேகங்கோ
டிமன்னர்களும், மாலையுமுடியுந் தரித்த மகுடவர்த்தன
ரநேகரும் நகுலசகாதேவரும்விரகுமாரராளாகிய புத்திர
ர்களும்மித்திரர்களும், மைத்துனர்முதலாகிய பேர்களும்
விமசேனனுக்குத் துணைகூடினார்கள், இப்படிக்குவிரித்த
வெண்குடை தரித்தமன்னவர்முதலிய பேர்களெல்லோ
ரும் விமசேனனுக்குப்படைத்துணைவந்தார்களென்று நந்
தியாவட்டமாலையணிந்த நராதிபனுக்குத்துணையாக ரதக
ஜதுரகபதாதியருடன்பூபாலரநேகர் நவகோடிகோபாலர
நேகர்தம்பிமார்முதலிய பெருமம்புவியாளும் அரசற்ர
சனையடுத்தார்கள் இவ்விருவருக்குந்துணையாகவந்த மன்
னர்முதலியபேர்களும்எதிர்த்துஒருவருக்கொருவர் இளை
யாமல்நிலைபெற்றுநின்று அதிர்ச்சிவிளைந்துசிறுநாணவலி
யால்பேரோசைவிளைத்தார்கள் அந்த ஓசையினால்அகிலா
ண்டமுற்றுமதிர்ந்து மண்டலத்துடன் எட்டுத்திக்குங்க
லகலக்கும்படியாய் முதிர்ந்தயுத்தஞ்செய்தார்கள்இப்படி
க்குஇருதிறப்படைகளும்போர்புரியும்போது ஒருவர்பே
ரிலொருவர்தொடுக்கும்விஷக்கணைகளினால் பலம்பொரு
ந்திய ரதங்களழிந்து, சித்திரரித்த மகுடந்துணிந்து,பூ
மியிற்தேகம் அயரவும்பிராணன்வானிலுயரவும் - உடல
பிமான மறந்துமடிந்தார்கள்,இந்தப்படிக்குச் சேனைகளும்
விரர்களும்யுத்தஞ்செய்யும்போதுஇரதத்தையிடசாரிவல
சாரியாகச்சுழற்றிஎதிரெதிராகப்பற்கடித்து துரியோதன
னும் விமசேனனும் திவ்யாஸ்திரப் பிரயோகஞ்செய்
து நெடுநேரம்வரையிலும்-கடும்போர்விளைத்தார்கள், அ
ந்தவேளையில்விமசேனன் - அரசனுடையகணையை - அ
ரையாகக்குறைத்துஅவனியைமறைத்துபிறைமுகச்கணை
களை நிறைத்து - நந்தியா வட்ட மாலையணிந்த நராதி
பன் கைக்கொண்டிருந்த வில்முறிபடவும் வேகங்கொ
ண்டோடுங் குதிரைகள்தறிபடவும் தேர்த்தட்டொடியவு
ம் மேற்றட்டழியவும் சிகாமுங்குடையுந் தேருமழிந்து து
ரியோதனனுடைய மார்புங்கிழிந்து திரண்டுபுரண்டு உதி
ரம்வழிந்து தளர்ந்துவிழும்படிக்குத்தாக்கி எதிரேநின்று
நகைத்தான் விமசேனன் அந்தப்பிறைமுகக்கணை மார்பி
ற்பட்டமாத்திரத்தில் மரவட்டைபோற் சுருட்டிக்கொண்
டு பூமியில்விழ்ந்தான் வணங்காமுடிபெற்றமன்னன் அப்
படிவிழ்ந்தவுடனே சகுனி சல்லியராஜன்முதலிய மன்ன
வர்கள் துரியோதனனுடைய தம்பிமார்கள் இவர்களெல்
லோரும் பார்த்து முகம்வியர்த்து இரக்கமுற்று தேகநடு
ங்கித்திடுக்கிட்டு துரியோதனனை யெடுத்தணைத்துச் சிந்
தைகலங்கி நேற்றையயுத்தத்திற் கடோற்கஜனென்பவன்
முனைக்கணையுய்த்து மார்பைக்கிழித்து முடங்கும்படிசெ
ய்தான் இன்றையயுத்தத்தில் அந்தக்கடோற்கஜனைத்தந்த
தந்தையாகிய விமசேனன் பிறைமுகக்கணையாற் பூமியிற்
றள்ளினான் ஐயோநமது அரசனுடைய பிராணனை அப்ப
னும் பிள்ளையும் நாள்மாற்றிநாள் பங்குபோட்டுக்கொள்
ளுகிறுப்போலு மிருக்குதேயென்று கண்ணீர்பெருக்கிச்
சோர்ந்து தமயனுக்குபசாரஞ்செய்யும்படியாய்த் தகுந்த
பேரை அனுப்பிவிட்டு தம்பிமார்களெல்லோருங்கூடி எ

ங்கள்தமயனுகிய துரியோதனராஜனுக்குத் தேகம்வருந்தியிருப்பதால் இப்போது யுத்தஞ்செய்வதற்கு வரமாட்டார் ஆகையால் நீங்களெல்லோரும் ஒரே உறுதிபாய்ப் புறப்பட்டுநிலைத்து நிற்பீர்களாகில் அந்தவீமனைவளைத்து என்றமயன்பட்டபாடு அவன்படும்படியாய்ப்பாடுபடுத்தி சந்தோஷங்கொண்டு வரலாமென்று அநேகம்வீரர்கள் முதலிய யுத்தவித்தகரையும் அழைத்துக்கொண்டு கடகடவென்றுதேரைச்செலுத்திச் சிறுநாணோசைசெய்து கணைமாரி பொழிந்தார்கள் அவர்களப்பேர்ப்பட்டவர்களென்றால் கோபாலனுகியகோவிந்தன் கோபாலனஞ்செய்வதற்காகச் சுண்டுவிரலிற் கோவர்த்தனகிரியைக்குடையாகவெடுத்துத்தடுக்கப்பொழிந்த காளமேகத்திற் கொப்பாகியபேர்கள் அவர்களெல்லோரும் ஒரேமுகமாகக்கூடி யுத்தஞ்செய்யும்போது வீமசேனன்வெகுண்டு வில்லினிடத்திற் கடும்பாணங்களை விசையாகத்தொடுத்து வந்தெதிர்ப்போர்கொடுத்த வீரர்களைப்பார்த்து இனிமேலென்னயோசனை செய்யப்போகிறீர்களென்று அவரவர்களேறிவந்த ரதங்களை முடிய இடியச்செய்து அவரவர்கள்பிடித்திருந்த வில்லுகளையு முறித்து உடல்களிலும் கணைகளைநிறைத்துத் துளைக்கவே ஒருவரும் எதிர்நிற்கமாட்டாமல் இளைக்கவே அந்தவேளையில் துரியோதனனுடைய தம்பிமார்கள் ஸ்தம்பம்போல் ஐந்து பேர்களெதிர்த்து, வீமசேனனை வளைத்து அலைகாற்றிலடிக்குஞ் சருகைப்போற் குலைந்தலையச் செய்தார்கள், அப்போது வீமசேனன் ஆக்ரமித்துத் துரியோதனன்பேரிற் றொடுத்து விடுத்ததன்மையைப்போல் வெற்றியையுடைய ஐந்துபிறைமுகக்கணைகளை எடுத்து விடுத்தான் அந்தக்கணைகள்போய் மருமத்திற்றைக்கவே சேனுவிந்து சுதங்கனன் பிங்கலசன்-சலாசந்தன்-பீமவாகு வென்னும் பலம்பொருந்திய தம்பிமார்களைந்துபேரும் முடிதுணிந்தார்கள் வீமனவர்களைக் கூவி ஓ! தம்பிமார்களே, உங்கள்தமயனுகிய துரியோதனன் எங்களெவரையும்கானுளவிடுத்துக்கசக்கினுன் அவன்றெரியாமற்செய்தாலும் நாங்கள் அதைக்குற்றமா யெண்ணிப்பாராமல் அந்தக் குறைகளை மனத்தில்வைக்காமல்-உங்களருமை பெருமைக்குங் குறைவில்லாமல் மேலாகிய இடத்திற் கனுப்பிவைத்தேன் நீங்கள் புத்திசாலியாய் வானுலகத்திற் போயிருந்து-மாற்காயாசந்திர்த்துக்கொண்டு இனிவரப்போகிற உங்கள்தமயன் தம்பிகள்முதலியபேர்களுக்கு நல்லவாசஸ்தலமாக இடமேற்படுத்திக்கொண்டிருங்கள் அப்பா என்சகோதரர்களே நீங்கள் அறியாதவ ராகையால் வீமசேனன் நம்மைப்பிரித்துவிட்டானேயென்று என்பேரிற் கோபம்பண்ணுதீர்கள் அன்று அவர்கள் முதலாகியபேர்களை இன்னம் பத்துப் பதினுன்கு நாளைக்குள்ளாக அனுப்பிவைக்கிறேன் நானப்படி அருமைதெரியாதவனல்ல நீங்கள் ஆயாசப்படாமற் போங்கள், ஐயா! அவர்களுக்கும் அம்மா அவர்களுக்குஞ் சஞ்சயனுற்றெரிவிக்கிறேனென்றுசொல்லி அம்பாரமாகிய நூறுபேர்களில் ஐந்துபேரைக் கதாயுதமென்னும் அளவுகோற்கொண்டு லாபம் என்று அளந்து நாய்-நரி-கழுகு களுக்கு குடிவாரம்-உடலாகவும் நமனுக்கு மேல்வாரம் உயிராகவும் அனுப்பி வைத்து வளர்பிறை சதுரத்தில் விக்னேஸ்வரப்ராத்தனை செய்து முகுர்த்தங்கொண்டான் வீரகண்டாமணி பூண்ட தீரதண்டதரன் இந்தப்பிரகாரம்துரியோதனனுடைய தம்மார்களைப்போக்கிவிட்டு மற்றப் படைகளின்பேரின் திரும்பி யுத்தஞ்செய்யும்போது, தம்பிக ளிறந்தார்களென்றுஞ் சங்கதிதெரிந்துக்கொண்ட சர்ப்பகேது தளதளவென்று கொதிக்குந் தாறுபோற்கொதித்து நாலுவிதச் சேனைகளும் ஆறுவிதப்படைகளும் தம்பிமார்களுந் தானுஞ் சகுனியும்-தாலக்கொடியினனுகிய வீஷ்டுமரும் மன்னர்முதலாகியநாதிபரும் வந்துசாகரம்போல்வளைந்தார்கள் அந்தக்காலத்தில்தருமராஜனுடையபடையிலிருந்து சகலவீரர்களுங்கூடிக்கலந்துஒருபக்கத்தில்வீமன்ஒருபக்கத்தில் விஜயன் ஒருபக்கத்தில்அபிமன்னுஒருபக்கத்தில் நகுலன் ஒருபுறத்திற்சகாதேவன்ஒருபுறத்தில்அரவான்ஒரு புறத்தில்கடோற்சஜன்ஒருபுறத்தில்அஞ்சன வர்மன்-ஒருபுறத்தில்இளம்பஞ்சபாண்டவர்கள்முதலியபுத்ரவர்க்கம் ஒருபுறத்திற் பாஞ்சாலன் ஒருபுறத்தில் துஷ்டத்துய்மன் ஒரு பாரிசத்தில் உத்தமபானு-ஒருபாரிசத்தில் விராடன் ஒரு பாரிசத்தில் கீசகன்பிள்ளையாகிய மந்தன் - சுமந்தன்-ஒரு பாரிசத்தில் சராசந்தன்பிள்ளையாகிய மலயத்துவஜபாண்டியன் அவன்பிள்ளையாகிய பிரிதீப் பாண்டியன் ஒருபாரிசத்தில் சிசுபாலன்பிள்ளையாகிய துஷ்டகேது-ஒரு தானத்தில் கிராதாள் அவுணுள்-ஆந்திராள்; புண்டரீகாள்-ஒருதானத்தில் போஜாள்-பாஞ்சாலாள்-சேர்முகாள் - சிரஞ்சேயாள்-மார்ச்சாள்-மாகதாள்-திரிகால வாசுதேவாள்-திரிபுண்டரவாசுதேவாள் ஒருதானத்தில்-சேரன்-சோழன் பாண்டியன்-முதலாகியபேர்களும் மொய்த்துக் கொண்டு போர்புரிந்தார்கள்-இந்தப் பெருங் கும்புகளினுலும் இவர்கள்விடும் அம்புகளினுலும் துரியோதன மகாராஜன் முதலிய பெருஞ்சேனைகளெல்லாமுடைந்து புறமுதுகிட்டு ஓடியொளித்தார்கள் இப்படி வாடியோடியசேனைகளைக்கண்டு அஞ்சாதீர்க ளஞ்சாதீர்களென்று அதட்டிக்கொண்டு வந்தெதிர்த்தான் அவனுரென்னில் தேவர்கள் பொருட்டில் அசுராதிபர்களைவென்று மண்டலத்தரசர்களுக்கு மகுடசிகாமணிபோன்று சூரியனைப்போற் றுலங்கி பஞ்சகதிகொண்ட பஞ்சகல்யாணப் பசும்புரவி பூட்டிய தேரினையுடைய பகதத்தனுனவன், (ஐயா, இந்தப் பகதத்தனென்பவன் ஆதிவராகமூர்த்திக்கும் பூமிதேவிக்கும் பிறந்த நரகாசூரனுடையபிள்ளை யென்றறியவும்.) இந்தப்பகதத்தனுனவன் காற்றினுல் அலைகளெறிந்தாடும் கருங்கடலைப்போற் கலங்காநின்ற யுத்தகளத்தில் உலகத்திலுள்ள மலைகளெல்லாம் காலும் வாலும் பெற்று வருவதையொத்த பதினுயிரம்யானைகளுடன் துதிக்கையுங் கொம்புங்கொண்ட மதத்தயானையின் மீதேறிக்கொண்டு வந்து வில்வளைத்து தீமுகப்பகழி திரிமுகப்பகழி திசைமுகப்பகழி யென்பனவற்றைத் திருத்திவிடுத்துச் சத்துருக்களின்றலைகளைக் கொத்துக்கொத்தாய்த் தறித்தான் அவனெப்பேர்ப்பட்டவனென்னில் கொலைபுரியும் - கோபக்கண்ணினையுடைய யானைக்கும் அப்பேர்ப்பட்ட யானையைக்

கொல்லாநின்ற சிங்கத்திற்கும் மானிட தேகமாகிய மன்
னுயிர்களை வருத்தும் யமனுக்கும் யமனாக விருக்கின்றவ
ன் இந்தப்பகதத்தனுடைய தோள் வலிமையையும் வில்
வலிமையையும் கணைவலிமையையும் வீரபட்டமும் வெ
ற்றிமாலையும்பெற்ற பதினாயிரம் யானைப் பெருக்கத்தையு
ம் யுத்தநடக்கும் திடத்தையும் அவர்களின் மன வுறுதி
யையும் பாண்டவர்களுடைய படைகள், பறக்கும்பஞ்சு
போற்படும் பாட்டையும் கடோற்கஜன் - பார்த்து பரிதா
பங்கொண்டு அப்போதே மதங்கொண்ட நூறாயிரம் யா
னைகளும் மகாகாதகரைப்போற் கடுங்கோப முடைய கா
லாள்களும் பாகராகிய மேலாள்களும் திவ்யாஸ் திரங்க
ளும் சிதையாத விற்களும் சேனை முதலிய ஆயுதங்களும்
தானுகி மாயவேடங்கொண்டு மலைகாட்டியிருந்து வருவ
தைப்போல் வந்து உலக மிருளும்படியாய் இருதிறப் ப
டைகளும் மருளும்படியாய் முன்வந்தயானைப்படைகளெ
ல்லாம் வெருளும்படியாய்ப் போர்மூட்டி வலம்புரி முத
லிய சங்குமுண்முழங்க வெற்றிமுரசமார்ப்ப சச்சரி யடிக்
கந்-தாரை-பூரிபூதும் படியாய்ப் போர்முகத்திற் புகுந்த
போது யானைக்கும்புகள் வருங்காலையி லெழுந்ததும்புக
ள், தேவர்கள் பார்வைகுறையும்படி கண்களைப் புதைத்
து திரையாழிகள் நீர்வறளும்படி பள்ளத்தைச் சிதைத்து
தாவியெழும்பும் ஒரு சிங்கமானது மலைபோன்ற யானை
மத்தகத்தி லேறிவரும் தன்மையைப் போல் எவ்விடத்தி
லும் தானாயிருந்து பகதத்தனுடன் தகதத்தவென் றெதி
ர்த்துமலைந்தான்; இவ்வண்ணம் கடோற்கஜக் காளையான
வன் காளமேகம்போலெதிர்த்து ஒவ்வொருசரங்களைமு
ம்மூன்றுதா மழைபோற்பொழிந்து முஷ்டிநிலைகாட்டி ஈ
ட்டுக்கீடாய் எதிரெதிர்நின்று பெருமூச்சுவிடுத்து மெய்
மையைப்போற் கொடும்போர்செய்தான் அந்தப் பகதத்
தன் விடுத்த பதினாயிரம்யானைகளும் பொய்யானை களைப்
போல் நின்று போர்புரிந்து பொரிந்துபொடிந்து ஒடிந்து
மடிந்து குறைந்ததுகள் ஆனால் மெய்யானைகள் குறைவா
னேன் பொய்யானைகள்-நிறைவானேனென்றால் பொய்
பூரணச்சந்திரன்-மெய் விளக்கொளி மழுக்கமென்னும்ப
ழமொழியைப்போற் குறைந்ததுகள் இதன்றியும் நின்று
ர் நின்றபடி நேருக்குநேராகவோடிக் கொன்றார்கள்-பதி
னாயிரம் யானைக்கும்புகளையும் வென்றார்கள்-இந்தப் படிக்
குநடத்திய யுத்தத்தினால் வெற்றிபெற்ற மன்னவரியாவ
ரும் அக்கினிக்கணையால் மடிந்தார்கள் - யானைக் கும்புக
ளெல்லாமழிந்து குவிந்ததுகள்-இப்பிரகாரம் பகதத்தனு
டைய படைவீரர்களையும் யானைக்கும்புகள் யாவற்றையுங்
கொன்று வென்ற வீமசேன னுடைய குமார னாகிய க
டோற்கஜன்செய்த மாயையினாலாகிய வீரர்களையும் அவ
ர்களால்மாய்ந்த யானைகளையும் பகதத்தன்கண்டு கண்கல
ங்கி நல்லது இன்றையயுத்தத்தில் நமது யானைக ளெல்
லாம் நாசமாயிற் றல்லவாவென்று கடகடவென்று பற்க
டித்து போனதுபோகப் பிழைத்திருக்கும் பிள்ளைகளும்
போர்மன்னர்களும் பின்னிட்டுப் போங்களென்று இரை
ந்துசொல்லி தானும்விரைந்துசென்றான்-மானம்-ஊனம்
ஈனமென்பது எண்ணிப்பாராத பகதத்தன், அப்போது
அந்தச்சேனைமுதலிய வீரர்க ளெல்லாரும் திரும்பி விட்
டார்கள் அப்படி திரும்பிப்போரும்படியாகிய படைமன்
னவர்களைச் சூரியன்பார்த்து சரிதானே மெய்யைக் கொ
ண்டால் வெல்லலாம் பொய்யைக்கண்டாற்செல்லலாம்
என்னும் பொருட்போல் கடோற்கஜ னுடைய மாயைக்
கு உத்தரிக்கமாட்டாமல் எல்லாரும் ஓடிப்போய்விட்டா
ர்களோ-நாமாத்திர மிவடத்தி லிருக்கப்போமாவென்று ஓ
டினவனைப்போல் சூரியனும் புறமுதுகிட்டு காந்தியாகிய
சிவப்புவஸ்திரத்தாற் றேகத்தை மூடிக்கொண்டோடி ம
லைச்சாரின்மறைந்தான்.

இப்பால் அழகியமலர்மாலையணிந்த பாண்டவர்கள் நம
க்குதவியாகவந்த யிந்தயானைக்கும்புகளேதென்று சந்தே
கங்கொண்டு நாடியிருக்குஞ்சமயத்தில் கடோற்கஜ னான
வன் இந்த மாயைகளையெல்லா மறைத்துவந்து தந்தை
மார்களின் காலில்விழுந்து பகதத்தன் பதினாயிரம் யானை
களைக்கொண்டுவந்ததும் சொந்தப்படைகளழிந்து வருந்
தியதும்பார்த்து மாயவேடங்கொண்டு தான்ஜயித்தவகை
யுஞ்சொல்லித் தாழ்ந்துநின்றமைந்தனை யாவருமணைத்து
ப் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்தி ஜெயம்பெற்றோமென்று
செங்கண்மான்முதலிய பாண்டவர்களும், சேனாபதிமுத
லிய சேனைகளும் பாசறைப்போய்ச் சேர்ந்தார்கள், இப்
பால் இயானைக்கும்புகள் வம்பாய்மடிந்த தன்மையைக் க
ண்டும் தம்பிமாரிறந்த துன்பத்தைக்கொண்டும் வருந்திய
துரியோதனனையும் மற்றச்சேனைகளையும் சேனாபதி யாகி
ய வீஷ்டுமர் அழைத்துக்கொண்டு வாத்தியமுதலிய விரு
து வட்டக்குடைகளு மில்லாமல் பாசறைக்குப் போனார்
கள் அந்தப் பாசறைக்குட் போனவுடனே (தம்பியர்பட்
டதளர்ச்சியை நினைத்து-அம்புவியாளும் அரசனுமழுதா
ன்-பம்பிமேகம்பரவிய வாறுபோல்-தம்பியர்-மாமன்-சக
லருஞ் சூழ்ந்தார் - கதிரவன் புதல்வன் - கண்ணீ ருகு
த்து - எதிரிகளில் வரக்கண் டெழுந்தண்ணா வென்றே
கட்டியணைத்து - கண்ணீர் சொரிந்து - கட்டுக் குலைந்
து காவ லழிந்தேன் - இட்டமா முங்களை யென்மனங்
கொண்டேன் நட்டமாய்த் தம்பியர் நலிந்தைவர்மாண
டார் கலையாக்கட்டைக் கலகலப்பாக்கினான் மலையாம்பு
யநேர் மாருதிமைந்தன் இனியெவண்போவேன் எவரை
நான்நோவேன் கனிவுறமன்பாங்கன்னனேயென்று பூமி
யிற்சாய்ந்து புரண்டிடும்வேந்தை பூமனேர்கங்கா புத்திர
ன்தேற்றி செம்பின்குழம்பெனச் சேர்ந்தகண்தியுக அம்
புதநாதன் அருள்மகன்கன்னன் அரசனைநோக்கி அண்
ணலேகேளும் எதிர்த்தயாவரும் இறக்கச்செயிப்பேன்
என்னைவிலக்கிதம்மிஷ்டப்படியே மன்னனேயுன்னை வஞ்
சனைசெய்யும் அன்னபாண்டவர்பால் அன்புள்ளவிடுமன்
தன்னையேசேனைத் தலைவனுக்கினீர் அவரவர்திறத்தை அ
றியுமென்னரசே தம்பியரைவரும் தானையுமழிந்தார் எம்
பெருமானே இஃதிருவினைப்பகுதி யாவரையும் விடாது
அரசே அனுபவம் தாரசைமார்பா சஞ்சலமென்னே எ
னக்கொடையாளி இயம்பக்கேட்டு சித்திரபாவைபோற்
சித்தங்கலங்கி சற்றுநேரத்தில் தைரியகுணனும் வேந்த
வைநிறைந்த வேந்தரைக்குருவைப் பார்த்துநகைத்துப்

பார்த்திவன்பகர்வான் இஃதென்னவீரம் இனியென்னதீ
ரம் இப்பமென்படையேன் எழிலேன்முடியேன் பாண்
டவர்முன்போம் படையினரிலேயே மதியுளிர்வெகுவாய்
மன்னர்மடிந்தார் கதியுளிச்சிதாவிற் கனிஷ்டர்முடிந்தார்
அந்தோ நீங்க ளரசரிற்பிறந்தும் சந்திரகுலத்தோன் றனக்
கு யதுவேனயாய் வந்தவர்சொந்த மனிதர்மற்றுளரும் பின்
றிவருந்திப் போயினர்குறையே இறந்ததுவழுவல் எதிர
து தழுவல் என்றும்விதியாலினிமேலாகிலும் மாயன்தே
ர்விட வருமர்ச்சுனனை மாயும்படிக்கு மலங்கொண்டுறு
தியாய் காளைகளை நலிந்தவர்தமக்கு ஆளப்போமென் ன
வனியையளிப்பேன் என்பொருளவர்பொருள் என்சுகம
வர்சுகம் என்றுசுயோதனன் இயம்பக்கேட்டு விஷ்டும
சொருசொல் விளம்பினர்தெளிய ஞானேஅரசே அர்ச்சு
னற்கெதிரில் கைவில்லுடன்போரக் கருதுனருளரோ க
ன்னியுங்காணேன் கதைகயினுமில்லை அண்ணலேநாங்க
ள் ஆகிரிற்சொன்னோம் இன்னமுஞ்சொல்வோம் இனி
மேலாகிலும் மன்னரைவரும்நீர் மனதொத்துவாழ்வீர்
என்று காங்கேயன் இயம்பக்கேட்டு கர்னன்வெகுண்டு க
ழலினரேறார்சொல் விருத்தனேநின்பால் வீரமிலாவிடில்
ஒருத்தரைநிந்தித் துரையாதிருப்பாய் விறுப்பேசில்
விளையுமேபாவம் ஆறாய்ப்பிறந்தும் அவமாயினையே நீ
கொண்டசேனைத் தலைமையான்கொண்டால் காணுருபா
ண்டவர் கால்சாய்ந்திருப்பார் அதிபதிதம்பியர் ஐவரும
டியார் சதிபதியாகிச் சர்ப்பனைசெய்யும் விதிமுறைதப்பி
ய வேசியர்போலும் பானைக்குள்காவல் பூனைக்குந்தோழ
னென்றும் பழமொழிபோலிருக்கின்றீர் பாரமார்த்திய
ராகிய நீங்கள்நடத்துங்காரியம் உங்களுக்கேசரியாயிருக்
குதல்லவா ஏதோ அரசனுடையதுற்காலம் என்னைநீக்கி
விட்டார் ஆகட்டும் இப்பவுமென்ன நாளைக்கேவருதுநன்
மையென்பதுபோல் அர்ச்சுனனைக்கொன்று அரசனுக்
குப்பட்டம் அடியேனளிக்கிறேன் ஆகாயவீதியிலிருக்குந்
தேவர்கள்கண்டு களிக்கும்படியாய் வெற்றிபெறுகிறேன்
நீங்களே பார்க்கப்போகிறீர்கள் பாரும்விஷ்டுமரேயென்
று அங்கதேசாதிபன்சொல்ல அங்ஙனமிருந்த அரசர்கள்
முதலியயாவரும் தகுந்தகுந் தகுமென்று சாற்றினார்கள்
அப்போது காங்கேயன் கலீரெனநகைத்து கர்னனே அ
ர்ச்சுனன்விற்பிடித்து வெளிப்பட்ட இதுவரையிலும் எத்
தனைதாம் போர்கொடுத்திருக்கின்றான் நீயெத்தனைதரம்
அவனிடத்தில் அகப்பட்டிருக்கின்றாய் என்றைக்காகிலு
ம் அவனைச்செயித்தாயென்று ஒருவார்த்தையுண்டானங்
கே விரலைமுடக்குப்பார்ப்போம் என்வீறாய்ப்பேசி சோ
ரைபோகிறாய் அப்பா நாளை நடக்கப்போகிறயுத்தத்திற்
கு நான்போகாமல்நின்றுவிடுகிறேன் எனக்குப்பதிலாக
நீபோயிருந்து ஐந்தாம்போரில் ஏதாகிலுங் கொஞ்சநன்
னமகாட்டுவாயாகில் நானே உனக்குவீரத்திறமும் சேனா
பதிபட்டமுங்கட்டிவைக்கிறேன் விற்றிறமுஞ் சொற்றிற
முடையவீரனே நான்சொல்லிய இந்தவார்த்தைஉனக்கு
சம்மதமாயிருக்குமாகில் இப்போதே புறப்படென்று
விஷ்டுமருஞ்சொல்ல அந்தப்பேச்சைக்கேட்டு பெருமூ
சுவிட்டு மிகுகோபாளன் வேறுவசனஞ் சொல்லா

திருந்தான் அப்போதுபக்கத்திலிருந்த அசுபத்தாமன் க
ர்னனைப்பார்த்து இருந்தவிடத்திலிருந்துகொண்டு வெ
ற்றியைப்பெற்ற உத்தமர்களைப்போல் வெகுவாய் அளப்
பாய் வாக்கினுற்சொல்லியவண்ணம் வெற்றிபெறுவதற்கு
த்தெரியாமல் மயங்குவாய் இவ்வளவுலக்ஷணமுன்னிடத்
திலிருந்தும் நேற்றுவிராடபுரத்தில் விஜயனாலடிபட்டுப்
பிணமலைக்குள் ஒளிந்ததைமறந்தும் பூரணமாகக்கற்று
ணர்ந்த புண்ணியருகிய விஷ்டுமனைப் பற்பலவிதமாய்ப்
பேசுகின்றாய் இதெல்லாம் பொல்லாங்காகியபாபமல்ல
வோ நிழற்சாய்ந்து மரம்பட்டுப்போமா நீயெத்தனைபோ
தித்தாலும் துரியோதனமகாராஜன் உன்புறமாய்ச்சாய்ந்
து காய்ந்தாலும் விஷ்டுமர்முதலிய பெரியோர்களுங்கொ
ருதாகூடிவருமாகர்னனே என்றைக்கிருந்தாலும் நீவேறு
நான்வேறு அவர்கள் ஒருகுளக்கமலம்போல் உற்றிருக்
கு முரியோர்கள் அந்தக்குடும்பத்தைக் கலைத்துக்கெடுக்
கும்படிக்குநினைத்து சமயத்திலிப்படிக்கெல்லாம்பேசிகு
லமானம் குணமானம்பாராமற் சொல்லுகின்றனை யின்
னென்றுதெரிந்திருக்கும் இந்தச்சபையில் நீபேசும்போ
து உன்னுடம்பானது கூசாமல் வெட்கப்படாமலிருக்கி
ன்றது இது உனக்கு முறைமையல்லவென்று அசுபத்
தாமன்சொல்ல உடனே துரோணச்சாரியர்சொல்லுகின்
றார் இந்திரனும் குபேந்திரனும் வந்திக்குஞ் சந்திரகுலத்
துதித்து நற்குணம் நன்னடக்கைபடைத்த பாண்டுபுத்தி
ரர்களைத் துரியோதனனுக்குப் பகைவரென்று அநேகம்
விதத்திற்சொல்லியிருக்கின்றாய் கன்னனே அவர்களொ
ருக்காலும் விரோதிகளல்ல நல்லகுலத்திற்பிறந்த செடி
ஸ்தலாதிபதியாகிய வணங்காமுடியோனுடைய தன்மன
த்தை நற்செய்கையை நற்பிறப்பை மாறுபடுத்தி வேறு
கெடுத்துத் தாறுபடுத்தி அண்ணன்தம்பிகள் ஒருவரோ
டொருவர் கலந்துபொருந்தி வாழவொட்டாமல் சிறுபி
ள்ளைகளாயிருந்த அந்நாள்முதல் இன்னாள்வரையிலும் க
லகஞ்செய்துவைத்திருக்கும் சகுனிமாமனும் நீயும் இந்
த அரசைக்கெடுக்க ஏற்பட்ட கொடும்பையாளிகள்மு
ழுவிரோதிகள் உங்களைவிட இவர்களுக்கு விரோதிகளெ
ன்பவர்களில்லை நீங்கள் இப்போதிறந்தாலும் இன்றுமு
தல் என்றென்றைக்கும் கலகமென்பது இந்த உலகத்தா
ருக்கும் விளையமாட்டாது மூக்குள்ளவரையிலும் சளிப்
பருது முகமுள்ளவரையிலுங் களிப்பருது என்பதுபோ
ல் நீங்களிருக்கிறவரையிலுங் கலகமருது இவர்கள் சுகப்
படப்போறதுமில்லை என்று துரோணச்சாரியர்சொல்ல
வே அங்கிருந்தகர்னனனவன் ஆவேசம்வந்தவனைப்போ
ல் அங்கமெல்லாநடுங்கச் சுறுக்கென்றெழுந்து கடுக்கெ
ன்றுவாளைக் கையிலுருவிக்கொண்டு கண்பொறிபறக்கக்
கடைவாய்நுரைக்கப் பல்லைக்கடித்துப் பாக்விழித்து அ
வனிவனென்று அவமரியாதையாய்ப் பேசியபேர்களின்
வாக்கைக்கிழித்து நாக்கையழிக்கிறேனென்று ஓரடிபெய
ர்த்துவைத்தான் அந்தவேளையில்சமீபத்திலிருந்த அசுபத்
தாமன் காளைவாகனளித்த வாளாயுதங்கொண்டு மாரு
த்திரமூர்த்தியைப்போல் இரண்டடிபெயர்த்து கன்னனு
க்கெதிர்சென்று நின்று குடும்பங்குலைத்துக் கலகஞ்செய்

யும் கொடியபாவிகளின்முடியைத்தறித்துஇப்போது கூ
றியொழுந்துநாக்கையும்அறுக்கிறேன், என்றுபுகன்றுஎதி
ர்த்துக்கொண்ட அவ்விருவரையுந்துரியோதனராஜன் க
ண்டுபெருவரைபோலெழுந்துஇருவருக்குநடுவிற்போய்நி
ன்று தான்கொண்டிருந்த சஞ்சலமுதலிய தம்பிமார்களி
ன் துக்கமும்விடுத்து இருவரொடுத்துப்பிடித்தவாளையுந்த
டுத்து இருவரையும்பிரக்கமாய்ப்பார்த்து பெரியோரை
யுநோக்கிஇதுநல்லகாரியம்-இதுநல்லகாரியம் - இறைவர்
களுக்குஇதுவேதைரிய மிதுவல்லோ வீரியம் நால்வர்ந
கைக்கும்படியாய்நன்றாய்ச் செய்தீர்கள்எனக்கு நன்மை
யுண்டாக்கவந்தவர்களோநான் என் தம்பிமார்களையும் ப
டைத்துணைவந்ததாஷ்டிகர்களையும் இழந்து மனந்தடுமா
றி கவலைகொண்டு எனதுதுக்கம் உங்களாற்றீருமென்
றெண்ணி என்மனக்குறைகளை யெல்லாஞ்சொல்லி இற
ந்தவர்கள் போக இருப்பவர்க ளெல்லோருஞ்சேர்ந்து
எப்படியாகிலும்நாளை யுத்தத்தில் அர்ச்சுனனைக்கொன்
றுமுடித்துநமக்குவென்றிவரும்படிக்கு உபாயந்தேடுங்க
ளென்றுநான்கேட்டுக் கொண்டதற்குக் கொல்லும்படி
யாகிய உபாயவிதத்தை எனக் கெதிரிலேதானேவிளைத்
தீர்கள் - இதுநல்லஉபாயந்தான் இனிமேல் நான்வேறு
விதகுஷி யோசிக்கவேண்டியதில்லை உங்களைத்துணையா
கப் படைத்தனக்கெஜெயம்வருமல்லாமல் - எதிரிகள்
ஜெயமடைவார்களென் றியம்பலாமோ - ஐயாவென்றுந
கைத்து மனங்கூசி தன்னைத்தானேவெறுத்துக் கொண்
டான் - தரணிபதியாகியதுரியோதனன் - அந்தவேளையி
ல்வீஷ்டும ரொழுந்து அப்பாதுரியோதனா, நான்சொல்லு
வதை இப்போதாகிலும் யோசிக்கக்கடவை அஃதென்
னையெனில் மும்மூர்த்திகள் வந்தெதிர்த்தாலும் விஜயகா
ண்டீபனை வெல்லமாட்டார்கள், இந்தமொழியையென்னு
யிருள்ளவரையிலுமுன்னுயிருள்ளவரையிலும்வமாறுமற்
கெட்டியாய்மனத்துட்பதித்துவிடு அப்பால்என்னாலான
வரையிலும் மனவஞ்சகமில்லாமற் போர்விளைக்கிறேன்
ஒருவேளை அர்ச்சுனன் மாளும்படியாகிய ஊழ்வினையு
மொத்திருந்து முடிவானாலாகட்டும் அரசனே,மனத்தை
ப் பற்பலவிதத்திற்சிதற விட்டு வருந்தாதேமற்றவர் கலே
கசும்வார்த்தைக்குட்பொருந்தாதேகலைப்பார்வசனத்திற்
றிரும்பாதே என்களிற்றின்கன்றேயென்றுசொல்லி தன்
னுடைய பாடிவீட்டுக்குப்போயினார்,வீஷ்டுமரானவர் அ
வர்போனபிற்பாடு அவடத்திநெருங்கியிருந்த படைம
ன்னர் முதலியயாவர்களுக்கும் விடைகொடுத் தனுப்பிவி
ட்டுபோஜனாதிமுதலிய மங்களவுபசார வாத்தியங்களுமி
ல்லாமல் மிகுந்தவிசனமென்னுந் துணைவனுடன்தனித்
துக் கண்விழித்திருந்தான் துரியோதன மஹாராஜனாவ
ன்-இப்பால், இந்த நான்காம்போரினடந்த தன்மைகளை
யும் ஐந்துபிள்ளைகளிறந்த துன்மைகளையுந் திரிதராஷ்டிர
பூபதிக்கும், காந்தாரியம்மனுக்கும்சஞ்சயன்போய்ச்சொ
ன்னான் அவன் சொன்னவார்த்தையைக் கேட்டவுடனே
இடிவிழுந்த புற்றரவேங்குந் தன்மைபோலேங்கி இருகர
ங்களாலுமுகத்தி லறைந்துகொண்டு இரைந்தேங்கிப்புல
ம்பி யழுதார்கள், ஐயோ-மக்காள் சர்வாபரணமு நிறைந்

தகிடகாத்ர திரசூரவீரமார்பில் ஜெயமாலையணிந்து சிந்
தைமகிழ்ந்து வந்து பணிந்து சிங்காதனத்திருந்து செங்
கோல்புரிந்து சிதைவில்லாமல் நூறுபேருஞ் சீர்பெறுவி
ளொன்று சிந்தைமகிழ்ந்திருந்தோம் அப்பா செல்வர்களோ
இந்தப் பூமியாசையையடுத்து எங்களைத்தெருவில்விடுத்
து தேவபூமியை ஆளவேண்டுமென்னும் ஆசைதொடுத்
துச்சென்றீர்களோ என்செல்வர்களேயென்று இருகண்
களிலும் ஜலம்பெருகும்படியா யழுது அருகிருந்த தூ
ணின்மேற்சாய்ந்து ஓய்ந்து சோர்ந்தார்கள், அவடத்திலி
ருக்கும் உயிச்சன்முதலியபேர்கள் உபசரித்துத்தேற்ற ம
றுபடியு மெழுந்து காந்தாரியானவள் வயிற்றிலறைந்து
கொண்டு ஓ மைந்தர்களே, குந்திபெற்ற பிள்ளைகள் கூட்
டங்குலையாதிருக்க நான் பாவிபெற்றபிள்ளைகள் பாழில்ம
டியும்படியாய் நேரிட்டதே தெய்வமே அப்பா குழந்தை
களே-பந்திக்குமுந்தவும் படைக்குப்பிந்தவுமென்னும் ப
ழமொழிமறந்து துள்ளுமான்குட்டிபோல் முன்னேபோ
ய்விழுந்து ஏன்மடிந்தீர்களடா என்மைந்தர்களே இந்தக்
காக்ஷிகாணவோநான்பாவி இறக்காதிருந்தேன் இந்தக்கே
ழ்விகேட்கவோ இருந்தது என்தலைவிதியென்று (மின்ன
லாகியஇடையும் பின்னலாகியசடையும்- அன்னமாகியந
டையும் - சொன்னமாகியதொடையும் - வன்னமாகியஉ
டையும் கன்னலாகியமொழியும் - இன்னலாகியவிழியும்-
செங்கிடையாகிய யிதழும்-குங்குமமெழுதிய நுதலும்-ப
ங்கபமாகியகரமும் மங்குலுலாவியசிரமும்திங்களுலாவிய
முகமும்-கொங்கைகுலாவியஉரமும் - தீ அங்கிகுலாவிய
அகமும்-உடைய காந்தாரியானவள் மெய்குலைந்து மண்
மேல் வீழ்ந்தலைந்து என்செய்வேன்என்செய்வேனென்
று இறைவனைக் கட்டிக்கொண்டழுது இருகாலையுநீட்டிக்
கொண்டு இருபுறத்திலும் ஏரிக்கரைபுரள்வதுபோற்கண்
ணீர்பெருகும்படியாயிரைந்து இறந்தவர்கள் தேவியராகி
ய மருமக்களையும் சேர்த்துக்கொண்டு ஒப்பனையிட் டழு
வதற்கு முகூர்த்தநாள்வைத்துக்கொண்டாள் அவளாசொ
ன்னில் (மதிகுலத்தில்வந்துபுகுந்த துதிமதிமிகுந்த முத
ன்மருமகளை, அதிபதியாகிய ஐவர்தேவியை பாஞ்சாலன்
யாகத்தில் உற்பவமாகிய பத்தினியை மேலாகியகற்புக்கு
வித்தாகிய பெண்கள்பெருமாளை மின்னற்கொடிபோன்ற
திரௌபதியை-தமயன்மனைவியாகிய தன்தாயை அன்யா
யமாய் அக்ரமமாய் அவமரியாதையாய் கெடுமதி கண்ணு
க்குத்தோன்றாக கேடுகாலத்தினால் இழுத்துவந்து ஏற்ற
க்கூடாத ராஜசபையில் ஏற்றிவையடாதம்பியென்று உத்
தரவுசெய்தனுப்பிய- ராஜராஜேஸ்வரனாகிய துரியோதன
மகாராஜனைப்பணிந்து துச்சாதனனானவன் கொண்டான
டித்துக்கொண்டு காந்தாரியிருக்கும் அரண்மனையிற் புகு
ந்துவந்து செண்டாயுதத்தாற் சிகையைப்பற்றி- திரௌப
திையை இழுத்தகாலத்தில் மாமியென்று, வந்தடைந்த மரு
மகளைத் தகுந்ததாதென்றெண்ணாமற் கையைப்பதித்துவி
ட்டு பாபபுண்ணியமெண்ணிப் பாராமலும் பச்சாதாபமி
ல்லாமலும் நாளைவிளையப் போகிற காலகதியை நாடித்த
டுக்காமல் அடைக்கலமாகவந்த மருமகளை திடுக்கிடப்பா
ர்த்து என்னடி, படாங்கடிக்கிறுபென்று யேசி மைத்து

ளர்வாழுஞ்சபைக்குப் போய்வரத்தடையென்னடியென்றுபேசி இழுத்துக்கொண்டு போடாவென்று துச்சாதனனென்னும், திருட்டுப்பேய் பிள்ளைக்குவேலையிட்ட, குருட்டுமாப்பிள்ளைக்கு மாலையிட்டகாந்தாரியானவள், கேளும் அரசனே, அந்தக்காலத்தில் பத்தினியாகியபாஞ்சாலியை ஒருநாளழச்செய்த துக்கமானது - இந்தக் காந்தாரியையுயிருள்ளளவுமழும்படியாய்வைத்தது பாரும்அரசனே யென்றுசொல்லி, இந்தப்பிரகாரம் விசனமடைந்தராஜனையும்ராஜபத்தினியையுந்தேற்றிச்செலவுபெற்றுக்கொண்டு மறுபடியும் போர்க்களத்திற்கு வந்துவிட்டான் சஞ்சயனென்பவன், இப்பால் கெடிஸ்தலாதிபதியென்னும் துரியோதனனுடைய தம்பிமார்களின் பத்தினிகளும்-மற்றவர்களும் அன்றிராத்திரியெல்லாம் அழுதுக்கொண்டிருந்த பெருங்கூச்சலைக்கேட்டு இந்த ரோதனத்திலிருந்து நாமெப்படி பிழைப்பேனென்று ஓடிப்போய்விட்டதைப்போல் இருளானது விடியுமுன் ஓடியொளிக்க அந்தக்காலத்தில்தேவர்கள் சிரத்திலணிந்திருக்குஞ் சூடாமணியைப்போற் சூரியபகவானுதயமாயினார்.

கேளும் ஜெனமேஜெய மஹாராஜனே என்றுவைசம்பாயனர்சொல்ல, மகிழ்ந்துகேட்ட மஹாராஜனானவன் எழுந்து விழுந்து வணங்கி ஐந்தாநாளையுத்தத்தையும் அருள்செய்யவேண்டுமென்று அடிவணங்கிக்கேட்க, வைசம்பாயனர் சொல்லலுற்றார்.

இற்றைப்போரி லிறந்த துரியோதனன் தம்பிமார்களின்பெயர் சேனபிந்து, சுதைக்கணன், பிங்கலசன், சலாசந்தன், விமவாகு. ஆறு.

ஐந்தாம் போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி-விருத்தம்.

கருமாமுகிற்கோலநெஞ்சத் திருத்துங்கருத்தெய்துமேல், அருமாதவன்றானுமவன்முத்தி தருகைக்குமவனேகுரு, கருமாலைமனநாறுதாளானை வண்டேறுதண்ணந்துழாய், மருமாலைபுனைமேனி திருமாலையல்லாதுவல்லோர்கள்யார் ....*

எ-து. கறுத்தமேகம்போன்ற கண்ணனுடையதிருமேனியினழகை இரவுபகலெப்போதும் மனத்தின் மதித்து நிதானித்துத் துதிப்பதற்கு விவேகம் விளக்குமாயின் அந்தக் கியானமுள்ள மேலோரென்னும் அவர்களே கடவுளாகியமாதவன்-முத்திவீடுபெறுவதற்குக் காரணகுருவாக திருவுருக்கொண்டெழுந்தருளி உபதேசிக்கும் ஆசாரியரும் அவர்களே அஃதெதனென்றால் பிர்ம்மாமுதலிய தேவர்களால் அர்ச்சித்துப் பூசிக்குங் கற்பகத் தருவினுடைய மலர்க்கூட்டத்தின் மணங்கமழ்ந்துகொண்டிருக்குந் திருவடியுடைய தெய்வநாயகனை வண்டுகள் மொய்க்கும்படியாகிய குளிர்ச்சியும் அழகும் குணமும் மணமுங்குடிகொண்டிருக்குந் திருத்துழாய் மாலையணிந்த திருமேனிநிறைந்த நெடுமாலாகிய திருமாலையல்லது சர்வவல்லமையுள்ள மேலாகிய கடவுளரியார், இயாருமில்லை, ஆகையால் இப்பேர்ப்பட்ட கருணைகடலாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக்கருத்திற் பதித்தோர்களே கடவுளொக்கூடியது, ஆகலால் அந்தக்கடவுளையும் அந்தக்கடவுளுடைய திருவடியைக் கருத்தினிற் பியானிக்குந் தாசர்களையும்பணிந்து மேல்நடக்கும் ஐந்தாநாளின் யுத்தத்தை விளம்புகிறேன் கேளும் அரசனேயென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

மாலைவாழுஞ் சீர்பெற்றோங்கிய வேலைசூழும் பாரைத்தாங்கிய மகுடாபிஷேக மன்னனே கேளும் ஐந்தாநாளுத்தத்தில் யாவருமெழுந்து நித்தியவிதிகள் முடித்து யுத்தகோலங்கொண்டு மேன்மையாகிய சங்கமெய்குங் கறங்கவும் தாரைபூரிதொனிக்கவும் - சின்னங்காகளம் ஊதவும்-முரசமுதலிய துந்துமிவாத்தியம் அந்தரமதிரும்படியாய், ஆர்ப்பொலிசெய்யவும் - முழவுவாத்தியம் விம்மிமுழங்கவும்-கரைகளையுடைக்கும் அலைகளை அடைக்கும் துறைகளில் வெடிக்குந்துளியினிற் றெறிக்குஞ் சிறியவலைக்கூட்டம்போல் நால்வகைச்சேனைகளும்-ராஜராஜர்களும் வீரபோஜர்களுஞ்சேர்ந்துவரத்-தருமபூபதியும் சேனபதியும் புறப்பட்டு ரணக்களத்திற்கு வந்தார்கள், இப்பால் அநேகங்கோடிவிருதுகளுங்-கருடடால்-அனுமடால்-சிங்கடால் தோரணம் கொடி குடைமுதலிய மேற்கட்டிகளும் ஆயிரங்கோடி முரசவாத்தியங்களும்-அநேகங்கோடி பேரிபூரிதடாரி தாரியங்களும்-ஐயாயிரங்கோடி சில்லறைவாத்தியங்கள் அதிர்ந்துமுழங்கவும் பாராடப்போராடும் நால்வகைச்சேனைகளுடனே நேற்றுப்புறமுதுகிட்டோடிய பூபாலரும் பொங்கிப்பொருந்தி எங்குஞ் சேனைகளாகவந்து நிறைந்தார்கள். இந்த இரண்டுவகைச் சேனையுந் திரண்டு புரண்டெழுங் கடல்போனிற்கின்ற பெருக்கம் எப்படியிருந்ததென்றால், தசக்ரீவனாகிய இராவணனுடைய கொடுஞ்சேனையும் ஸ்ரீராமமூர்த்திக்குப் படைத்துணையாகவந்த வானரமாகிய கடுஞ்சேனையும்எதிரெதிர்நின்றதைப்போல் அண்டர்கள்துன்றிய விண்டல மண்டல மெண்டிசைமுதலிய கண்டமுங் கலங்கும்படியாய் அதிர்ச்சியண்ணி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள், அந்தவேளையில் அர்ச்சுனன் றேரில் அநுமக்கொடி யாடியது எப்படியிருந்ததென்றால் இராவண கும்பகர்ணாதிமுதலிய அரக்கரைச்செயித்த ஸ்ரீராமமூர்த்திக்கு அடிமைத் துணையாகவிருந்து வெற்றிபெற்ற எழுபது வெள்ளம் வானரப்படைகளும் எங்களவர்களே நான் அந்தக்கோதண்டமூர்த்தியின் குரைகழற்றாதனாகிய அநுமந்தனே அந்த இலங்கைப் பெருக்காகிய அரக்கரைப்போல் உங்களையும் நாசப்படுத்தித் தொலைப்பதற்கு இங்குவந்தேன் என்னைநீங்கள் நன்றாயறிந்துக் கொள்ளுங்களென்று துரியோதனன் முதலாகிய படைப்பகைவருக்குச் சொல்லித்தெரிவித்து நின்றாடியதைப்போல் அக்கினிதேவன் கொடுத்த அழியாரதத்தின்மீதேறிநின்று அந்தரமுதலிய மந்தாநடிங்கத்-தொங்தொங்-தொங்தொங்-தொங்கமென்று படபடாகாரத்துடன் அசைந்தாடிக்கொண்டிருந்தது, அவ்விதமாக ஆடிக்காட்டிப் அநுமக்கொடி நாட்டிய இரதத்திற் சுவேதவாம்புரவிபூட்டி அலங்காரஞ்செய்து சர்வஜீவதயாபரனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவன் சகந்காமனத்தோனாகிய காண்டிபனுக்கெதிரிற் கொண்டுவந்து நிறுத்த அந்தயிரதத்திலரோகணித்துக் கொண்டு ஐவரை ரட்சிப்பதற்குக் கங்க

ணைக் கட்டிக் கொண்டிருந்தும், ஐயனுடனே காண்டீபக்
கையனுங்கலந்து வார்த்தையாடிக் கொண்டு யுத்தபூமிக்
குவந்தார்கள், அவ்விடத்தில் திரிபுரதகனஞ் செய்வதற்கா
கத் திசைமுகன்முதலிய தேவர்களாலமைத்த தேரின்பே
ரில்விற்றிருந்த சர்வசம்மாரகால சிவபெருமானைப்போற்
பேரணியிற்பிறந்த தோரணியிலுயர்ந்த சயந்தனத்திற்பொ
ருந்தியிருந்த வீஷ்டுமருக்கெதிரில்தேரைக்கொண்டுபோ
ய்நிறுத்தி தேவதத்தத்தை முழக்கிவைத்துத்தானும் வல
ம்புரிச்சங்கை முழங்கி உரம்பெற்றவிஜயனை யுத்தஞ் செ
ய்யும்படிக்கு விடுத்து ஓயாமற்சுழலுந் திகிரியைப்போல்
தேரைநடத்தினன் ஸ்ரீகிருஷ்ணனாகியதேர்ப்பாகன் இந்த
ப்பிரகாரம் இரதத்தை இடசாரிவலசாரி வடசாரிபிடசா
ரி முன்னோட்டம் பின்னோட்டம் முன்னோட்டம் பின்னோ
ட்டம் முனைநாட்ட முதலிய ரதவேகச் சதிகளெல்லாஞ்
செலுத்தி கங்கைமைந்தனை யெதிர்ந்ததிர்த்து காண்டீப
நாட்டிக் காலாகாலாந்தக் கணைகளைப் பூட்டியகாலத்தில்
கலிங்கதேசாதிபரெல்லாம் புலிந்தசாலங்களைக் கண்களா
லிறைத்துக் கணைகளைத்தெரித்து அர்ச்சுனனைமறித்து யு
த்தஞ் செய்தார்கள் அந்த விஜயனுடனே வெகுவாகிய
போர்புரியுங் கலிங்கேசனை வெறித்துநோக்கி அவரவர்
கள்விட்ட வெங்கணைகளையெல்லாம் குங்குமமாக்கிச் ச
ங்கரநெடுவாளிகளாற்றுக்கினன். அந்தக்கணைகள் போய்
ப்பிளந்து சரசரவென்றளைந்தபுண்வாய்கள்தோறுங் கள
களவென்று மாமிசத்துடன் உதிரவெள்ளங்கள் கலந்
தோடிவர அந்தக் கலிங்கதேசாதிபரெல்லாந் தளர்ந்தா
டிக்கலங்கலாகிய ரத்தங்களினால் கண்கலங்கி மூழ்கி
னார்கள், இந்தப்படிக்கு எதிர்த்துப் போர்புரிந்த கலிங்க
தேசரெல்லாரும் அலுத்து ஒளித்து இளைத்தோடிவரும்
போது காளகண்டயீசனைப்போற் கண்சிவந்திருந்தசாங்
கேயன் கண்டு கடுங்கோபங்கொண்டு பூப்பாணம் தீப்பா
ணம் பொறிப்பாணமுதலியபல்லவங்களை மேன்மேலாக
த்தொடுக்கஅதைக்கண்ட அர்ச்சுனனானவன் வீஷ்டுமரு
டையபிராணனுக்குத்திங்காக ஐந்துபாணங்களையெடுத்து
அனலெறியமனக்கொதிப்புடன் அஜேயமந்திரஞ்சொல்
லி அதுகட்டிவிடுத்தான் அந்தஐந்துபாணங்களும் பஞ்சாக்கி
னியைப்போற்சென்று வீஷ்டுமர் கைக்கொண்டிருந்த வி
ல்லையும், அதிற்பூட்டிய நாணியையும், அவர் தொடுத்
துக் கொண்டிருக்கிற பலம்பொருந்திய பாணங்களையும்
ஓரோதரமா யொடித்தறுத்துப்போட்டு கடுகடுத்தெறிந்து
இன்னமும் அந்தப்பாணங்களி னுடைய வேக மடங்காமல்
பூகம்பமாகும்படியாய்ப் புதைந்தெழுந்து உருவித்துளைக்
க அதனாற்சேனைகள் தத்தளித்துக்கலக்க இத்தன்மையா
க இவ்விருவருமூண்டு மெத்தக்கணைமாரி சுற்றப்பொ
ழிந்து யுத்தஞ்செய்தார்கள். இப்படிக்கு இவர்களிருவரு
ங் கடுங்கோபத்துடன் மூகமாறுமற் போர்செய்துக்கொ
ண்டிருக்குங்காலையில் பெருங்காற்றெழுந்து பொங்கியக
டல்போற் பலதேயமன்னரும் வந்து சாமர்த்தியமுடை
ய வீமசேனனைமொய்த்துக்கொண்டு பலபல விதமாகிய
தேயுக்கணைகளைப் பலபலவென் றுதிர்த்தார்கள் அவர்க
ள்தொடுத்த கணைகளெல்லாம் பறந்துபறந்து வருவதை,

அளகாபுரிக்குச் சென்று மணிமாலனைக் கொன்று அம்
பொருகமலரைக் கைக்கொண்டுவந்த மூர்த்தன்ய தூர்த்
தண்டனாகிய வீமசேனன்கண்டு முனைபெற்றமுள்ளம்பா
கிய கல்வம்புகளைத்தொடுத்து அடுத்துவந்த மன்னவர்க
ளுடைய மார்புகளுருவிவாட ரத்தவெள்ள மருவியோ
ட விடுத்தபோது அவர்கள்யாவரும் கிட்டநெருங்கப்பய
ந்து முகஞ்சுருங்கிக் குலைந்து ரதமுதலிய சாரதிகளும்வி
லங்கித் தொலைந்து வெசாறினார்கள். அந்தக்காலத்தில் து
ச்சாதனனும் அவனுடைய தம்பிமார்கள்முதலிய புத்திர
வர்க்கமும் சகுனியும் சல்லியராஜனும் அதிரதத்தலைவர்
களாகிய முடிவேந்தரும் மித்ரவர்க்கமும் கொற்றவர்களு
ம் மற்றவர்களும் கூடிக்கொண்டு வீமனுக்கெதிரேயிந்து
ன்னி வன்னிக்கணைகளினாற் பின்னினார்கள், இப்படியாக
ச் சீறியகணைகள் தொடுத்தபாவனையும் வீமசேனன்பார்
த்து மனந்தேறி அசைவரப் பிடித்திருக்கும் வில்லில் அ
ஸ்திரங்களைப்பூட்டி அவரவர்களுடைய அந்தஸ்துக்குத்
தகுந்தபடிக்கு அநேகஞ்சரங்களை அமோகமாக விடுத்து
ஓடிப்பிழைப்பதற்கு ஒதுங்கிடம்பார்க்கின்றீர்களோ வெ
ன்று ஒல்லாமையாகிய பொல்லா இகட்சியைச்சொல்லி
க் கொல்லாமனிற்கும்போது பலத்துடன் வந்த படைம
ன்னர்யாவரும் உலைந்து வருந்தியோடினார்கள். அப்படி
வீமனுடன் பொருந்திப் போர்புரிந்து அடிபட் டிளைத்து
அலைந்தோடிவரும் அதிவீரருடன் தன் தம்பிகளையும்பா
ர்த்து மனம்பதைத்து மார்ச்சல்லியங்கொண்டு உடலொ
டுங்கி உள்ளங்கலங்கி கடைக்கண்களிற் கனற்பொறிபறக்
கச்சிறி-ஆ ? தம்பிமார்களே உங்களை வாட்டி யோட்டியு
த்தஞ்செய்யும் வாயுவின்மதலையாகிய காளையை மறித்து
மலைந்து இன்றைக்கே அவன்பிராணனைவாங்குகிறேனெ
ன்று கோபித்து உன்னதமாகிய ரதத்தைச்செலுத்தி உரி
யோர்களையுங் கூட்டிக் கொண்டு வந்தெதிர்த் தான் உரக
கேதனனாகிய துரியோதனன் இந்தப்படிசொல்லிவந்த து
ரியோதனனைக் கண்டமாத்திரத்தில் வீமசேனன் சந்தோ
ஷங்கொண்டு விற்பிடித்து பற்கடித்து விரைந்துவந்தான்
அப்படிவந்த வீமனைப்பார்த்து வணங்காமுடியோனாகிய
மன்னவன் அசையாநிலைகொண்டு நின்று பாரிய வில்லை
நாரிலுறுக்கிச் சோர்வுபடாத பத்துவீரவாளிகளை யெடுத்
துப் பேரொலி யுடன் விடுத்தான் அந்தத்துரியோதன
ன்விடுத்த பத்துப்பாணங்களும் வீமசேனனுடைய மரு
மத்தைத் துளைத்துக்கலக்கி தரித்தமணிக் கவசத்தைக்கி
ழித்துவிலகி ஆண்மிக்கைபடைத்த அதிதீரர்களுக் கெல்
லாம் துதி வீரமணி மகுடாபிஷேகத் தங்கச்சிங்கம்போ
ன்ற வீமசேனனுடைய அங்கத்தில் நுழைந்துநுவியபோ
து சற்று வருந்தி உடனே வாயுபுத்திரன்றேறி யெதிர்ந்
து எமத்திலும் சாமத்திலும் சமத்திலாடும் ருத்ரமூர்த்தி
க்குநேராக நேரிட்ட பஞ்சபாணனைப் பஸ்மீகரம்பண்ணி
ய நெற்றிக்கண்ணி னெருப்பையொத்த ஓர்-கங்கபத்திர
த்தை அங்கத்துடனெடுத்து அபிமந்த்ரித்து நந்தியாவட்
டமாலையணிந்த நரேந்திரனுடைய மார்பிற்குளித்து உதி
ரந்துளித்து வருந்தும்படிக்கு வதிலுக்கு வதிலாகச்சுளித்
து விடுத்து முன்னராகின்ற மன்னவரெல்லாருஞ் சின்

ளயின்னமாய்ப் பின்னேடும்படி மாரிக்கணைகளை வாரிப்
பொழிந்தான் அப்படியாகப்பொழிந்த மேகாஸ்திரத்தால்
யாவருமருண்டு வாட்டமுற்றுர்கள், அந்தத்தருணத்தில்
பெரியவுலகேழுமுடைய துரியோதனமகாராஜனுக்கு வீ
மசேனன்விட்ட கணையானது போய்ப்பட்டு பட்டகட்
டைபோற் றலைநட்டு நாக்கைத் துழுத்துக்கொண்டு வா
டியபோது அந்தத் துரியோதனனுங் கெதிரிலே நாணிபு
ங்கணையும் நலம்பெறப்பூட்டி வில்லைப்பிடித்துக் கொண்
டு இன்னம் வரத்தக்கபேர்கள் வாருங்களென்று வீமசே
னனிற்க அந்தவேளையில் பூமிக்குரிய நிரர்களும் பேரம்பி
ற்குரிய விரர்களும் போர்மதத்தனென்று புகழும்படியா
கப் பாடிய சோமதத்தனின்று மகிழும்பிள்ளையாகக் கூடி
ய பூரீஸ்வரனென்பவன் சுயோதன னிலைத்ததைக்கண்டு
தன்மனமிளைத்து க்ஷணந்தரியாமல் தன்தேருடன் சென்
று எதிர்நின்று தலிங்குங்கணைக ளிரண்டை யெடுத்து த
ருமனுக்கிளையோன்பேரில் விடுத்துத்தானும் படபடத்து
நிற்கும்போது அவன்விடுத்த கணைகளிரண்டும் ஆலகால
விஷம்போலிருண்டு அனற்கூட்டமாகப் புரண்டு வருவ
தை வாயுவேகமும் மாயும்படிக்குத் தேருர்ந்து வாநின்
ற வாசுதேவனுடையதம்பி சாத்தகியானவர் கண்டு அவ
ன்விட்ட இரண்டுகணைகளையுமழித்து அடாபாவி இவரு
டைய ஆண்மிக்கை யின்னதென் றுணராமலும், இப்பே
ர்ப்பட்டவரென்று தெரியாமலும் இரண்டுகணைகளை விடு
த்ததையே என்னடாதுரோகி இதோபார் என்றுகணியை
உன் பிராணனை வாங்குமேனென்று கலியொன நகைத்து
பிறைமுகமொன்றெடுத்துத் தொடுத்துவிட்டான் சாத்தகி
யானவன் இப்படியாகப்பேசி விட்டகணையானது விறுவி
றெனச்சுழன்று வருவதை நான்குவேத பாராயண னுகி
ய பூரீஸ்வரனென்பவன் கண்டு இளைக்காமல் எதிர்க்கெ
திராக வல்லவனுட்டிய பம்பரம்போ லொத்த பல்லவங்
களைப் பலமுகத்திலு நிறைத்தான் இந்தப் படிக்கு பலம்
பொருந்திய மலைபோன்ற புயத்தையும்-மார்பையுமுடை
ய இவ்விருவர்களும் உடுபதியாகிய சந்திரனுந் தினபதி
யாகிய சூரியனும் ஒருவருக்கொருவ ரெதிர்த்துப் போர்
புரிவதைப்போல் யுத்தஞ்செய்வதைத் தேவர்கண்முதலி
ய மூவரும் மற்றியாவரும் காண்பதற் கருமையாய்க் கர
க்கம்பஞ் சிரக்கம்பஞ்செய்தார்கள்-அப்போ திவர்க ளிர
ண்டுபேரும் கொண்ட லிடிக்குங் குமுறலுக் கொப்பாய்
மண்டலமுதலிய வெண்டிசையடங்கச் சண்டப்ர சண்ட
கடுங்கார்முகமாகிய வில்லைவளைத்து நாணிதொடுத்துக் க
ர்ணபரியந்த மிழுத்து ஷ்டங்கார மடித்து கவலாற்கலங்
காமற் கணைகளைவிடுத்து கதிர்மதி முதலிய கோள்களும
டங்க - அதிபதிமுதலிய ஆவ்களுமோடுங்க திரிபுவனங்
கருநடுங்க திசைகண்முடங்க ஒருவரையொருவர் வெல்
லவேண்டுமென்று சத்துரு மித்துரு வாரிய பல்லவங்க
ளைத்தூண்ட ஒருவர்விட்டபாணம் ஒருவர்பேரிற் படாம
ல யுத்தியினுலுஞ் சத்தியினுலுந் தெய்வ பத்தியினுலும்
வெற்றியினுலுந் தடுத்து கிட்ட அடுத்துப்போர்செய்யுங்
காலையில் மாதவப்பேர்சிறந்த சிதரனுக்குச் சோதரனென்
னுஞ் சாத்தகிமன்னனுடைய நாணியையும் வில்லையும்பூ

ரீஸ்வர னென்பவன் முறித்தான்-உடனே அந்தப் பூரீஸ்
வரனென்பவனுடைய வில்லையும் நாணியையும் சாத்தகி
மன்னனறுத்தான்-இந்தப்படி யிருவருங் குறைவில்லாம
ற் பூமியிற்குதித்து வலதுகரத்தில் வாளாயுதமும் இட
துகரத்தில் கேடகமும்-கொண்டு-வாசனை நிறைந்த-மாலை
யணிந்த மார்பினரிரண்டுபேரு மண்டியிட்டு சக்ராகதியா
ய்ச்சுழன்று சாகசஞ்செய்து இடதுபக்கம் - வலதுபக்க
ம்-வலதுபக்கம்-இடதுபக்கமாகப் பதுங்கி-யொதுங்கி ஒ
ட்டியிருந்தெழுந்து ஒருவருக்கொருவர் கிட்டிவந்து விழு
ந்து வாளினல்விசி, வஞ்சினங்கள்பேசி, சந்திரனும்-சூரி
யனும்-எதிர்த்துச் செய்யும் சண்டையைப் போல் வாள்
ப்போர்புரிந்து ஒருவரை யொருவர் வெட்டவேணுமெ
ன்னும் இஷ்டத்தினுல் வாளாயுதத்தையோங்கி வீசிக்கட்
டிக் கிட்டிவரும்போது வெட்டணையென்னுங் கேடையத்
தால் மறைத்து வெட்டவந்த வெட்டைத் தட்டிக்கொண்
டு மறுபடியும் கோணம் வட்டம்-வளைவு முதலிய குந்துச்
சாரிகை மூந்துச்சாரிகை உந்துச்சாரிகை-குப்புறுசாரிகை
ஒப்பறுசாரிகைகளெல்லாம் சுற்றித் தாங்களும் கர்ணமி
ட்டுச்சுழற்றி தலைக்கு லக்ஷயம்வைத்து எற்றி-கஜ சிங்க-
வியாக்ர விர்ஷபகதியாய்த் தத்திப்பதறி மேகங்களும் சுற்
றிக்கதறி இடிகளுஞ்சிதற மினிலங்களும்முதிர ஆகாயமு
ம் படபடவென்று அதிரும்படிக்கு இவ்விருவருந் தோர்
ப்புக் கெலிப்பில்லாமல் நெடுநேரம்வரையிலுஞ் சிரி யம
ராடினுர்கள், இப்பால் குதிரைகளுடன் குதிரை விரரள்;
காலாளுடன்-காலாள்-வில்லாளுடன்-வில்லாள் - தேர்க
ளுடன்-தேர்கள்-முடிமன்னருடன்-முடிமன்னர்-யானையு
டன்-யானை-சேனையுடன்-சேனை; சேனைத் தலைவருடன்
சேனைத்தலைவர்-யானைத் தலைவருடன்-யானைத்தலைவர்-யூ
கத்தலைவருடன் யூகத்தலைவர் படைத்தலைவருடன்படை
த்தலைவர்-இந்தப்படிக்குக் கைகலந்து போர்புரிந்தார்கள்
இன்று இந்த இருதிறப்படைகளிலு மிறந்தசேனைகளை இ
வ்வளவென்றியம்ப வென் தரமன்று இப்படியாக யுத்த
ஞ்செய்தத்தில் யானைத் துதிக்கைகள் அறுபட்டு உதிர
வெள்ளப்பெருக்கத்தில் விழுந்தோடுவது பெரியவாளை
மீனேடுகரியபனைமீனும் ஓடும்பண்பைப்போல் ஒருபக்க
த்திலிருந்தன தலைக்குறைக்கவந் தங்கணின் முடுகின்ற ர
ணகளத்தில் பேய்க்கூட்டங்களுங் கவந்தங்களுடன் எதி
ரெதிர் நின்றுடிக் கொண்டு ஒருசார்பிருந்தன, கும்பு கு
ம்புகளாய் அம்புபிடித்த கரங்களும் விற்கொம்பு பிடித்த
கரங்களும் வாள்பிடித்தகரங்களும் வேல்பிடித்த கரங்க
ளும்-சூலம்பிடித்தகரங்களும்-பிண்டிபாலம்பிடித்தகரங்க
ளும்-மழுப்பிடித்த கைகளுங் கொழுப்பிடித்த கைகளும்
உலக்கைபிடித்த வலக்கைகளும் இடக்கயம் பிடித்த இட
க்கைகளும் சக்ராயுதந்தாங்கிய-அஸ்தங்களும் உக்ராயுத
மோங்கிய அஸ்தங்களும் வாகுவலயமணிந்த தோள்களு
ம் வீரகண்டைபிடித்த தாள்களும் இவைகளெல்லாம் பல
பக்கங்களிலும் விழுந்து குவிந்துகிடந்தன மேலும் உதிர
வெள்ளங்களோடிப்பரவியிருக்கும்யுத்தபூமி யானதுசெ
வ்வானம்போலுமிருந்தது அந்தப்பூமியில் யானைத்தந்த
ங்கள் முறிபட்டுத் துண்டமாய்க் கிடப்பது மூன்றும்

பிறைபோலுமிருந்தன, யானையினுடலங்களறுந்துகிடப்பது மேககாலம் போலுமிருந்தன கடலினிடத்திற் கதிர்விட்டொளிசெய்யும் பவளங்களைப் போல் இரத்தங்களில்மூழ்கி அலைகளினால் அசைந்துகொண்டிருக்கும் தேர்ச்சக்கரங்களனேகமிடத்திலமிழ்ந்தன மழைபொழிந்து வரும் நல்லஜலப்பெருக்கத்திற் றிரண்டிருண்டுவந்த நுரைகளைப்போல் உதிரப்பெருக்கத்தில் மிகந்து அலையெறிந்து ஓடிவரும மூளைகளும் ஒருபுறத்திற் செறிந்தன இதன்றியும் கூர்மையாகிய வேலாயுதங்கள் கைவேல் எறிவேல்-இருகுவேல்-சொருகுவேல்-கதிர்வேல்முதலிய வேல்களையும் - முட்படை - வாட்படை - முரட்படை - இரும்புக்கணை - சுரும்புக்கணை - மருந்துக்கணை பருந்துக்கணை-பிறைமுகக்கணை-நறைமுகக்கணை-தசமுகக்கணை-விசைமுகக்கணை-ஒருமுகப்பகழி இருமுகப்பகழி இலைமுகப்பகழி-கொலைமுகப்பகழி-தலைமுகப்பகழி-வலைமுகப்பகழி - இந்திராஸ்திரம்- சந்திராஸ்திரம்-மந்திராஸ்திரம்-பர்வதாஸ்திரம்-திரிமுகாஸ்திரம் - மேகாஸ்திரம்-மோகாஸ்திரம்-நாகாஸ்திரம்-முள்ளம்பு-முனையம்பு-முரட்டம்பு-நெரட்டம்பு-குரட்டம்பு-முடியம்பு-கமலாசுகம்-விமலாசுகம்-அயன்-கங்கபத்திரம்- அரிகங்கபத்திரம்-அரன்கங்கபத்திரம்-தோமராயுகம்-சக்ராயுதம்-குந்தாயுதம்-வாளாயுதம்-கப்பணம்-கவண்முதலிய கையாயுதங்களுந்துளைத்த புண்வழியில் கடலாகிய மூங்கீர்போற்செந்நீர்பெருகி வழிந்தோட தேகங்கள் ஆயிரம் விதமாகச் சிதைந்தாட இருவர்படைகளும் இத்தன்மையாகப் போர்புரிந்து ஐந்தா-நாள் யுத்தத்தில் இருபத்தையாயிர முடிவேந்தர்கள் இவ்வுலகத்தைவிடுத்து அவ்வுலகத்தை யடுத்தார்கள் அவர்களுக்குரித்தாகிய நான்குவிதப்படைகளிற், காலாளகளும், மேலாள்களும் பட்டவர்த்தனர்படைத்தலைவர்முதலிய பேர்களிற் பலருமிறந்தார்கள் இவ்வாறாக இருதிறச்சேனைகளும் எதிர்ந்து போர்புரிந்து இறந்து இந்திரனுலகிற்புகுந்து மிகுந்த இந்தப் பெருங்கும்புகளுக்கு அவ்விடத்திலிடமில்லாமல் ஒருவர்மேரி லொருவர் விழுந்து நெருங்கி நாமிருப்பதற்கு இடமெங்கிருக்குதென்று வெற்றியையுடையவிரர்கள்சுற்றிக்கொண்டிருந்தார்கள், அந்தச்சமயத்தில் தேவர்கள்வாழும்ஆலயத்தை வலமாகச்சுற்றி வருமார்க்கமுடைய சூரியன்கண்டு நித்தியம் நாம்போயொடுங்கு மிடத்தை ஒருவேளைவீராள்கைக்கொண்டாலுங் கொள்ளுவார்களென்று அதிசீக்கிரமத்திலோடினவனைப்போல் செவ்வானமாகிய வஸ்திரத் திரையினால் தன்னைமறைத்து மூடிக்கொண்டு மேற்குத் திசையிலிருக்கும் அஸ்தமானகிரியாகிய பழைய யிடத்தைப்போய்ப்பிடித்துக்கொண்டான் (இவ்விடத்திற்போதுபோயதென்றுபொருள்கொள்க)

இக்கப்பிரகாரம் யுத்தங்கள்தோறும் மனக்களிப்படைந்துவரும் மகுடமன்னர்முதலாகிய பேர்களையும் அவர்கள்கைக்கொண்ட ஆயுதங்களையும் இரத்தவெள்ளங்கள்கால்வாயாக அடித்துக்கொண்டுபோய்க் கடலிற்கலந்து புகுந்துகலங்கியது இன்றுநடந்தபோரைக்குறித்து ஒப்புச்சொலலவேணுமென்றால் எப்பேர்ப்பட்டவர்களாலுஞ் சொல்லப்படாது இத்தன்மையாகச சங்கிராமநடத்திய இரணகளத்தை இருதிறவரும் விட்டுநீங்கிச் சேனைக்கூடுடன் இடமகன்றபாசறைக்குப்போய்ச்சேர்ந்தார்களென்று சஞ்சயன் திரிதராஷ்டிரனுக்குச் சொல்லி மறுபடியும் போர்க்களத்திற்குவந்தான் இவ்விடத்தில் யுத்தகளத்துசுத்திசெய்யத்தக்கன மனிதர்களெல்லாரும் உரியபேர்கண்முதலிபபடைவீரர்களை அவரவர்களந்தஸ்துக்குத் தகுந்தபடி. பரண்களிலேற்றி மற்றையர்களைக் குவியலாகக்குவித்துப் புதைத்துமறுநாள்யுத்தத்திற்கு அந்தக்குருக்ஷேத்திரத்திற்றானே வரிடமேற்படுத்தி வைத்தார்கள்.

இப்பால், இராத்திரியென்னுங் கரும்பாம்பானதுஇருட்குழம்பா லேர்ப்பட்டவாயைத் திறந்து இளம்பிறையாகிய கோரப்பல்லைக்காட்டிச் சூரியனைப்பிடித்து விழுங்கவந்ததைப்போல் இருள்மேலிட்டுது அப்படி வெகுண்டுவந்த அந்தஇருளென்னுங் கரும்பாம்பைக்கண்ட சூரியன்பயந்து ஓட்டமாயோடி. மேற்குச்சமுத்திரத்திலொளித்துக்கொண்டிருந்து சலத்துக்குள்ளே மூழ்கிநீந்தி அந்தக்கரும்பாம்பாகிய இருள்போய்விட்ட வுடனே கிழக்குச்சமுத்திரத்தில வந்து தலையெடுத்துப்பார்த்து மெதுவாயெழுந்து கரையிலுயர்ந்த உதயகிரியென்னும் மலைமீதேறி நேற்றுத் துரத்திக்கொண்டு என்னைவிழுங்கவந்த இருளென்னுங்கரும்பாம்பைக் கொளித்தி விடுகிறேனென்று யுத்தகோலங்கொண்டு தேரேறி ஆயிரங்கிரணக் கைகளையும் விரித்துக் கண்களுஞ்சிவந்து எழுந்தவனைப்போற்சூரியபகவானுதயமாகினான் கேளும் ஜனமேஜயமகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்ல, ஜனமேஜயமகாராஜன்கேட்டு மகாசந்தோஷத்துடன் புகழ்ந்து தீர்க்கதண்டமாகவிழுந்து சோடசமகாதானங்களுங் கொடுத்து பிராமணர்முதலிய யேழைகளுக்கு அன்னதானங்களுஞ்செய்து பொய்சொல்லாமெய்யோனாகிய வேதவியாசனையுஞ் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி மேன்டந்த ஆறுநாள்யுத்தத்தையும் அருள்செய்ய வேண்டுமென்று கேட்க, வைசம்பாயனர் மனமகிழ்ச்சியாய்ச் சொல்லத் தொடங்கினார்.

ஆறும் போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி-விருத்தம்.

கோயிலாளுடையபைங் கொண்டலார்கண்டுயில்.......*
பாயலாய்வாழ்கநீ பாக்கியமென்செய்தனை...... ......*
தீயலாலுவமைவேறிலதெனுந்தீயநின் ... .*
வாயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே.......... .....*

எ-து. ஓ சோதிவேடம்பூண்ட ஆதிசேடனே உன்னிடத்திலுண்டாகிய விஷத்திற்குயுகாந்தகாலாக்கினியை ஒப்பிட்டுச்சொன்னாற் சொல்லலாமல்லதுவேறொன்றையும் உபமானமாகச் சொலலத்தக்கதில்லை அப்பேர்ப்பட்ட விஷத்தை வாய்வழியாய்க்கக்கிக்கொண்டு பிரகாசமாகிய கோரப்பற்களையும் விஷக்குழம்பினாற் பூசி மெழுகியதைப்போன்ற தேகத்தையும், எப்பேர்ப்பட்டவர்களையுங்கிட்டநெருங்கவொட்டாத கொடியநெடிய சுவாசத்தையும், அந்தக்காற்றினால் நேரிடுமோசத்தையும் கண்டபோதிகதுவும்படியாகிய கோபத்தையும் உன்காற்பட்டவிடத்தை மிதித்தபேர்களுக்கு நேரிடும் ஆபத்தையும் பாம்பெ

ன்றால் படையுகமிக்குமென்று வெகுகாலப்பழமொழிக் கிணக்கமாகிய உன்னூரத்தையும் உடைத்தாய் துஷ்டசெந்துவென்று லோகப்பிரசித்தியாய்ப் பேர்பெற்றிருக்கின்ற சிராப்தமுதலாகிய திருவரங்கமென்னும் பெரிய கோயிலிலிடத்தில் சர்வஜீவாத்ம கோடிகளையும் ஆள்வினையுடையவராய் பெருந்தருவிபிராகின்ற ரூம்சொண்ட பகுங்கொண்டல்போன்ற காந்திமேற்கொண்ட ஸ்ரீரங்கநாயகராகிய நம்பெருமாளானவர் யோகநித்திரை செய்வதற்காக அமளியாகவமைந்து விடுதிவாழ்வதற்கு நீயென்ன பாக்கியஞ்செய்தனை அந்தவுண்மை எனக்குத் தெரிவிப்பையாகில உயர்ந்தோர்பழித்தொழிக்கும் உடலுக்குறுவு பகையென்னும் அழுக்காருகிய பொருமை- வெகுளியாகிய கோபம் பொய் அவாவாகிய ஆசைப்பெருக்கம் இன்னுஞ்சொல்லரிய துன்பம் புறங்கூறல் இவைகண்முதலிய விஷயங்க ளெல்லாம் என்னிடத்தி னிறைந்திருப்பதினால் அவைகளிலகப்பட்டு பலவிதவஞ்சகமாகிய கோரப் பந்தகளையும்போக்கி விசேஷப்போகமாகிய மெய்ச்சுமைகளைந்து அஞ்ஞானமாகிய விசைக்காற்றையகற்றி நீதாக்கிக்கொண்டிருக்கும் நெடுமாலுடைய அடியார்க்கடியார்களின் திருவடிப்பொமலங்களை அடியேன்றலையிற்றாங்கி நானுய்ந்துகப்பட்டுப்போவேன் ஐயா, ஆதிசேடனே உன்னிடத்தில் இக்குணவிதநுட்பங்களிருந்தும் நீர் சகப்பட்டாலல்லவோ இப்படி நீர்சகப்பட்டமார்க்கத்தை யெனக்குத் தெரிவிப்பீராகில் உமக்கு நற்பலனுண்டாம் ஐயனே, அப்பனே, யென்று சேஷனைக்குறித்தியாக யிரந்துசொல்லியது இந்தக்கவியென்றறியவும், இவ்வண்ணம் திருமாலையும் அவருக்குச்சயனமாகிய ஆதிசேடனையும் அடியார்க்கடியாராகிய அன்பர்களையும் ஸ்ரீவேதவியாசரையும் இணங்கி ஸ்துதித்து வணங்கி அருணாள்புத்தகத்தைச் சொல்லி வருகின்றேன்கேளும் ஜெனமேஜெயமகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

கலியோட்டி வையங்காக்குநவந்த நிலைநாட்டுஞ் செங்கோலதிக்கதிபதியாகிய நிருபசேகரரும், கிழக்குத்திசையில் ஆதித்தனுதித்தவுடனே பாசறையிற்றுயின்ற பாண்டவர்களும் படைமன்னவர்களும் எழுந்து நித்தியவிதிகளைச் சற்றுநேரத்தில் முடித்துக்கொண்டு பகர்த்தளபமாலையணிந்த பரந்தாமனைப் பணிந்தெழுந்து வாத்திய முதலாகிய விருதுகள்முழங்க மன்னுயிரெல்லா மடிவதற்காக கந்நகனிலேர்ப்படுத்திய நாவிலம்போன்ற குருக்ஷேத்திரம்போய்ச்சேர்ந்தார்கள், அவ்விடத்திற்சேர்ந்தவுடனே விராடகுமாரனாகிய சேனைபதியானவர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் திருவாய்மொழிகொண்டு மும்மதங்களைப் பொழியும் யானைப்படைகளையும் சேனைப்படைகளையும் தரந்தரமாகப்பிரித்து கிரக்கரமாகச் சக்கரந்க்களினும் புறமிடாத மகரவியூகம்வகுத்தான், (மகரவியூகமென்பது மகரமீனைப்போலவும் அம்மீனுலாவிய கடற்போலவுங்கட்டுவதென்றறியவும்.)

இக்கப்படிக்குப் பாண்டவச்சேனைபதியாகிய துஷ்டத்துய்மன் சேனைகளைச்சேர்த்து மகரவியூகங் கட்டியிருக்கக் கண்டு வீஷ்மரானவர் தங்களுடைய படைகளை யெல்லாந்தரம்பிரிந்து, நான்குதிசைகளிலும் நடுப்பக்கங்களிலும் நிறுத்தி கரிஞ்சமென்னும் வியூகங்கட்டினார் (கரிஞ்சமென்பது மகாமீனமாய்க்குமீன்) அந்த மீனைப்போல் புலால்-செவுள்-வால்-இவைகளெல்லாஞ் சேனைகளாகநிறுத்தி அந்தந்த வுறுப்புகள்செய்யும் வேலைகள் அவ்விடத்தில்நடக்கும்படியாய்ச் செய்வதென்றறியவும்.

இப்பால் சத்தியமும், கருமமும், தானமுபவிக்கும்போகமென்னும் அவைகள் விண்ணுலகெல்லாம் விரியும் புகழென்னும் மற்றப்போகபாக்கியமெல்லாம் மண்ணில் மறைந்துபோம் இதுவென்று மனத்திற்பதித்த தருமராஜனும் அசத்தியமுதலிய பாபங்களினும் பாக்கியமும் பெருமையும் படைக்கலாமென்றும் சத்தியத்தையும் புண்ணியத்தையுஞ்சார்ந்தாலோ தரித்திரம் உடனே சேருமென்னும் புத்திஸ்திரத்தைக்கொண்ட துரியோதனனும், விசவேகம்பெற்ற வெற்றிப்படைகளுற்ற விற்படை தாங்கிய வேற்படையோங்கிய வேந்தர்களும் நால்வகைச் சேனையாகச் சேர்ந்தவர்களும் அவைகளுக்குத் தலைவராகியமாந்தர்களும் யுத்தபூமியினிறைந்து சேனாபதிகளின் உத்தரவின்படிக்கு மேலாகிய சண்டையை விளைத்தார்கள், இந்தப்படிக்கு யிருதிறப்படைகளுங் கைகலந்து போர்புரியவே ஆகாயத்தில் வேடிக்கைப் பார்க்கவந்த தேவேந்திரன்முதலாகியபேரும் ஆகாயம் இடம்பெறுமல்ஒருவரோடொருவர் நெருங்கியோடினார்கள், பூலோகத்தார் யாவரும் வருந்திவாடினார்கள், இப்படியாக இருவகைப் படைஞரும் மாறுபட்டு தேர்களைச்செலுத்தியும்- குதிரைகளை நடத்தியும் யானைகளுடன் யானைகளைமுட்டவிட்டும் - ஒட்டிப்பதுங்கியும் பக்கத்தி லொதுங்கியும் பாணங்களையுந்தியும் நாணங்களால் முந்தியும் யுத்தஞ்செய்தார்கள்- அந்தச்சமயத்தில் நால்வகைச்சேனைகள்சூழ நான்குவேதங்களையும் பரிபாகப்பூட்டிய தேருக்கோப்பானதன்றோ ணவிளைவாகமுடுக்கி இருளுக்குப் பகையாகிய சூரியனைப்போல் விற்கையாசிரியனுகிய துரோணாச்சாரியர் வீமசேனன்பேரில் வந்தெதிர்த்து விற்குணத்தை யிரண்டுமொன்றுபடும்படியாய் நாணிமிழத்து பாணந்தொடுத்து பற்பல வசனங்களைச்சொல்லிச்சீறினர் அப்போது நிலைபெற்ற புகழும் மலையொத்தபுயமுமுடைய வீமசேனன் ஆசாரியனென்னும் மரியாதைபற்றி நெஞ்சினில் அஞ்சலி செய்துவணங்கி மலையினும்பெரியதேரும்; அந்தத்தேரை யூர்ந்து வந்தவலனுங் குதிரைகளும் முடியற்றுப்படியில்விழும்படி கொடிபெற்ற கூர்ங்கணைவிடுத்து ஷ்டங்காரங்காட்டி யுத்தகளத்தில்மெத்த நெருங்கிய நால்வகைப்படைகளையும் விட்டி அமோகமாகப்பாணங்களைத் தீட்டி மாட்டி அரசர் முதலாகியயாவரும் அடிபட்டுப் புறமுதுகிட்டோடவோட்டி சேனைபதிகொடுத்த கணைகளையெல்லாம் நானுவிதமாக அறுத்துகாட்டி அந்தத்துரோணருடைய தேகத்தையுந்துளைத்து மனஸ்தாபத்தையும் விளைத்தான்- அந்தச்சமயத்தில் கொடிகுடை தேர்குதிரை சாரதியுமழிந்து வீமசேனனுக்கெதிரில் நிற்க வெட்கமுடையவராய்ப் பின்னிட்டுப் பதுங்கியபோது சல்லியனைக் கண்டு நாணமுற்று என்தோழனே - இந்தவீமனை வளைத்

நேதிக்து சற்றுநேரம் யுத்தம்பண்ணுவையாகில்இதோ
நான்வருகிறேனென்று ஒருதிசையி னுழைந்துபோயின
ர் துரோணாச்சாரியர் (என் சீமுழனேயென்று துரோணர்
சொன்னவாக்கியம் சிநேகவுருமையைக்காட்டாமல் என்
போல் விமனிடத்தில் அடிபட்டோடப்போற அல்ல
லாதலால் பெலக்குக்தோழனென்னும் பெருமை தோ
ன்றக்காட்டும்) இப்பால் சேனாபதியாகிய துரோணாச்சா
ரியர் தானுபதியாகிய சல்லியனை விமனுக்கெதிர்விடுத்து
ச்சென்றவுடனே-இந்தச்சல்லியனென்பவன் துரோணாச்சா
ரியர் சொல்லியவண்ணம் படைமன்னவர்கள் புடைசூழ்
ந்து கடகடவென்று தேரோட்டிவரவும்- வாயுபுத்திரனி
டத்திற் சமர்புரிந்து போரிற் ஜெயம்பெறும்படிக்கு வந்
தான்சல்லியனென்பவன் அப்போது தன்மேலெதிர்த்துவந்த
அந்தச்சல்லியனைக்கொல்லும் வல்லிய வயப்புலிபோன்ற
விமசேனன்கண்டுவாரும்வாரும் மாமாஎன்றெதிர்த்
து போர்புரிவதற்கு வல்லமையும் மனமுமிருக்குமாகில்
திரும்பிவோடி வாரும்மனமில்லாவிட்டால் முதுகுகாட்
டி ஓடிப்போரும்மென்று விமசேனன் சொல்ல அந்தவசன
ங்கேட்டு வெங்கடுப்பாகி வெகுண்டு சல்லியன்வில்லை
யெடுத்து நிறுத்தினன் - உடனேவிமசேனன் அந்தவில்
லைப்புல்லாகச் செய்துபோடவேணுமென்று கல்லாகிய
கணைகளைத்தொடுத்து முறித்துமறுபடியுஞ்சல்லியன்வே
றுவில்லெடுப்பதற்கு முன்னேசட்டென்றுகீழேகுதித்து
த்தன்னைவெல்லவந்தசல்லியனேறியிருக்கரதத்தை இந்தி
ரவிமானந்தாங்கிய - ஐராவதத்தைப்போல் தோள்மே
லெடுத்துக் காந்தாரப்பிடித்துச்சுழற்றி ஆகாயத்தில் விசி
விடுத்து அவனுக்குநால்வகைச்சேனைகளைத் துணைசேர்க்
கும்படியாய் அநேகந்தேர்களையும்யானைகளையும் குதிரை
களையும் பதாதிகளையும்வாரிநதியில்வாரி எறியும் அலைகளை
ப்போல் வாரிவாரியெறிந்தான் வாயுபுத்திரனாகிய விமசே
னன்-அப்படியெறியவோழந்துபோன சல்லிய னென்பவன்
ஆகாயத்திலுயர்ந்துகலைகிறாகக்கிறுகிறென்றுசுழன்றுதா
னுந்தேரும்தரையில்வந்துவிழுந்து வருந்திச் சல்லியமாகி
தாராகனை விதிவரைக்குஞ் சென்று விழுஞ்சனங்க ளுட
னே கூடப்புரண்டு சஞ்சலமுற்றான் அந்தத்தன்மையை
உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தானேருசுவிற்பார்த்தி
ருந்த துரியோதனமகாராஜன் மன்னுயிரெல்லாந் தன்னு
யிரைப்போல மதிக்கு மனமுடையவனாக வருந்தி சல்லி
யராஜனுக்குச் சகல உபசாரமும் நடத்தும்படியாய்த்தன்
தம்பிமார்களைவிடுத்து அநேகங்கோடி வாத்திய முழங்கி
வர திரண்டபடை மன்னருடனெழுந்து அசவிதழ்நிறை
ந்த நந்தியாவட்ட மாலையணிந்த அரசர்க்கரசனாகிய துரி
யோதனராஜனும் வெற்றிமாலையணிந்த விரர்களும் துசு
வாசனன்முதலிய சில தம்பிமார்களும் சகுனி மாமனும்
மந்திரகேசுத்தலைவரும் விமசேனனுக் கெதிரில்வந்து வி
ல்லைவளைத்துக்கல்மாரி பொழிவதுபோல் வின்மாரிபொ
ழிந்து,அயிரமாயிரமென்னுங் கொடுங்கணைகளினுற் கடும்
போர்விளைத்தார்கள், அந்தச்சமயத்தில் சிங்கக்கொடிதரித்
த விமசேனன் இவர்கள் சேர்ந்துவந்து போர்கொடுப்ப
தைக்கண்டு உடல்பூரித்துத் தேரிலேறிக்கொண்டு நகுல
சகாதேவர்முதலிய தம்பிமார்களும் புத்ரவர்க்கமும் பாஞ்
சாலான்முதலிய மைத்துனர் நெருக்கமும் உடலைவிட்ட
கலா நிழற்போல்வருங் கடோத்கஜன் முதலாகிய அரக்க
ரும்கலந்து வரும்படியாய்த் திடுதிடெனத் தேனைச் செ
லுத்திச் சென்று எதிர்நின்று திசைகண்மறையும் படியா
ய்த் திவ்யாஸ்திரங்களைத் தொடுத்து அவர்கள் விட்ட அ
நேகமாயிரங் கணைகளையும் முறித்த காலத்தில் இருவர்பி
ரிவிலுமிருந்த விரர்கள் நேருக்கு நேராகக் கைகலந்து
போர்புரிந்தார்கள், அதெப்படியென்றால் வேலாயுதங்க
ளும்-சூலாயுதங்களும்-வாளாயுதங்களும் - பாலாயுதங்க
ளும்-சுக்காயுதங்களும்-சக்ராயுதங்களும்-தோமராயுதங்க
ளும் - சேமன் கணைகளும்-பூமன்கணைகளும் இந்திரப் பக
ழியும்-சந்திரப்பகழியும்-மந்திரப் பாணமும் - தந்திரப்பா
ணமும்-முள்ளம்பு-மூட்டம்பு-துாட்டம்பு-குராட்டம்பு-
கல்லம்பு கவையம்பு-வளைதடி-சூடுதடி-குண்டாந்தடி - கி
ளுக்குத்தடி-முழுக்குத்தடி-முள்தடி-முரட்டடி-பாணுத்த
டிகள் முதலாகிய சுவண்களுங்கொண்டு அவரிவரென்று
தெரியாமல் ஒருவர்படைக்கு ளொருவர்புகுந்து வருந்த
ப் போர்புரிந்துவரும்போது வில்லுக்குயர்ந்த வாளும் ம
ல்லுக்கிசைந்ததோளும் வடிக்கணைகளுங் கொண்ட விம
சேனபோராஜனும் துரியோதன ராஜனும் விக்ரமத் துடன்
உக்ரமங்கொண்டு கொக்கரித்து-ஒருவருக்கொருவர் யுத்
தஞ்செய்கார்கள், அதெந்தன்மையென்னில், மந்தரகிரி
யும் மஹேந்திரமலையும்போன்ற தேனை எதிர்செலுத்தி வா
யுதேவனும் வடவா முகாக்கினியும் எதிர்ந் ததைப்போ
லெதிர்ந்து இருவரும் வில்வளைத்து ஷ்டங்காரமடித்துக்
கணைகள்விடுத்து ஒருவர்மார்பை யொருவர்கிழித்து ஒரு
வர்தோளின்மேல் ஒருவரடித்து ஒருவர்கொடியை யொ
ருவர்கிழித்து ஒருவர் முடியை யொருவருடைத்து ஒருவ
ர்தேரை யொருவர்போக்கிப் போர்நடத்திவருங் காலையி
ல், கதை-கழு-முட்கருவி வாள்முதலிய விற்றிறமையிற்சி
றந்த விமசேனன், வேறுதேரேறி விரைந்துவந்து கமல
சரங்களைச்சொரிந்த காலையில் துரியோதனனும், வேறு
தேரேறித்தொடர்ந்துவந்து சுரிமுகக்கணைகளைத் தொடுக்
க அந்தக்கணைகளை விமசேனன், குறுமுகக் கணைகளாற்
குறைத்துக்கோடாகோடி பாணங்களையுமிறைத்து நிறை
த்து அவனுடைய முன்பக்கத்தைத்துளைத்து கலசத்தை
யு நீக்கிய காலையில்-சரவேகத்திலுமிஞ்சிய வேகத்தோடு
ந்தானேறியதேர், நேரோட ஓடிய சர்ப்பகேதுவைத் து
ரத்திவென்று பொற்பமைந்த யிரதத்தி னின்று அவனு
டையபின்பக்கத்திலும் அழற்கணைபகோம் துளைக்க விடு
த்து அவன்றம்பியர் முதலியபேர்களுக் கும்புகும்பாகக்
கொலைக்கணையேவி அவர்களுடைய மார்பையும் தோளை
யும் உதிரம்வழிக்கண்ணாகிய குழிப்புண்ணாக்கி இன்னம்
பற்பலபகழி விடுத்துப் பின்னுஞ் சிற்சிலபேரைத்துளைத்
து எவரெவர்களை எமலோகத்திற் கனுப்ப வேண்டுமோ
அவரவர்களைப்பொறுக்கி அப்போதேயனுப்பி இச் .கள
ல்லாமல் இன்னமும் பலரை இருந்தவிடம் விட் -றாம
ற்செய்து வேகங்கொண்ட குதிரைகளையும் பாகனேறிய
யானைகளையும் சூதன்விடுத்த தேர்களையும் கூவிநெருக்கு

ம் பதாதிப்பேர்களையும் பாழ்படத்தறித்து பலவாறாக மு
றித்து அடியுடமுடிசாய நெரித்துப் படாதபாடு படுத்து
ம்போது குதிரையிழந்து தேரழிந்து பாகர் சிதைந்து யா
னையொழிந்து வில்முறிந்து சொல்மறைந்து, வீரப்பு
ஜவலிமையுங்குறைந்து ஆரவார சேனைத்தலைமையுமறை
ந்து எவர்களும் முனைமுகத்திலில்லாமற் பறிந்து முறிந்
தோடச் செய்துகொண்ட வீமசேனனை தேவர்கள் கண்டு
ஜெயஜெயவென்று - பூமாரி பொழிந்தார்கள் இந்தப்படி
அக்கப்படை நொந்துப் படப்புரிந்த யுத்தத்தில் அலக்க
ழிந்து அடிபட்டுக் கலக்கண்ணி ருகுத்தோடிய காவலன்
முதலாகிய சேனைகளைக்கண்டு கண்ணில்லாவரசன் பெற்
ற காளையர்களில் விகர்ணன்முதற்சிலரும் - வெற்றிவேல்
தாங்கிய வேந்தரிற்பலரும்-சிவந்த கண்களுடையவர்களா
ய்ச் சேர்ந்து முதிர்ந்தசினங்கொண்டு முகிலெனத்திரண்
டு அதிவேகத்துடனோடிவந்து வீமனெங்கே யெங்கே
யென்று அதட்டினார்கள் அப்போது வீமசேனன் அ
வ்விடத்திலில்லாமையால் அந்த அதட்டுதலை அபி மன்ன
ன்கேட்டுபரிசுத்தமாகச்சாலைபிடித்ததயிலதாபஞ்செய்த
பாணங்களும்வரிபொருந்தியவச்சிரக்கட்டுகளுடன் எட்டு
விருதுகளுநவரத்னமணிப்பொற்பட்டமுங்கட்டியவிஜயகோ
தண்டத்திற் சொற்பாகிய வில்லைக் கைக்கொண்டுவிரைந்
தெதிர்வந்துமின்னுவிதைச்சுவாலையாகியபாணங்களைப்பொ
ழிந்து உண்மைஞான நிலைமைபெற்ற விகர்ணனுடைய
திண்மைதிரும்பும்படியா யடித்து தேர்குதிரைசாரதியில்
முதலியயாவற்றையும் ஒடித்துமுடித்துவிட்டான் அபிமன்
னுவானவன் அந்தக்காலத்தில் வந்தகால்மாறுமல்வந்தவ
ழியே அழிக்கொடி அருகில் வந்துக்கொண்டிருக்கிற தன்
தம்பியாகியசித்திரசேனனேறியிருக்குந் தேரிற்போயேறி
உடனேமற்றத்தம்பிமார்களுஞ்சிந்துதேசாதிபராகியமைத்
துனரும்மத்தராஜர்களுக் கதிபதியாகியபசதத்தனும்வெற்
றியையுடையவிகர்னனும்எல்லோருஞ்சேர்ந்துவந்துமறு
படியும் இந்த அபிமன்னனைவளைந்துக்கொண்டு அளவில்
லாப் போர்கொடுத்து அம்பு தொடுத்தார்கள், அப்போ
து அவரவர்கள்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் அ
பிமன்னனழித்து அவரவர்கள்மார்பிற் புதையும்படியாய்
விதையம்புசள்போய் உதயவிடுத்து மொய்த்து வந்தவர்
யாவரும் எய்த்து நொந்தவ ராகியும் மயங்கித் தலைசுற்றி
விழும்படியாய்மொத்தினன் சுபத்திரை புத்திரனானவன்
இந்தப்படியடிக்க அவரவர் பிடித்திருக்கும் வில்லானது
அடிக்கடி நாணிபறுந்து நிமிரவும் மளுக்கென்று விற்கள்
தறித்து குழறவும் மேற்கணைதொடுக்க விரைந்தும் பாற்
கடலைப்போலிரைந்தும் மேகமுழக்கென முழங்கியும் அ
ண்டமுகடிடிய வதிர்ந்தும் தாராகணங்களுதிர்ந்தும் மண்
சிதறும்படியாய்க் கண்சுழன்று சின்சிலவளைத்து சரமா
ரிபொழிந்து கடுங்கோபங் கொண்டு மறுபடியுஞ் சண்
டைக்குவந்தார்கள்; அப்படி மூண்டுவந்தவர்களை அபிமன்
னுவானவன் சிந்த அடித்துப் பிங்கவிடுத்துக் கொடுங்க
ணைபொழிந்தெதிர்ந்த கொடிய விகர்ண னென்பவனைத்த
கைந்து அவன் தேகமுழுமையுஞ் சல்லடைக்கண்களா
ய் உதிரம்வடியத்துளைத்து கவசத்தையுமறுத்துக் குடற்

கலங்கிக் குருதி நீரோடவும் இரண்டுதோளும் ஒடியும்ப
டியாகவும் ஒருநொடியினில் இடிமின்னலை விளக்கும்வ
டிக்கணையிரண்டு வயம்பெறவிடுத்து மன்னர் மன்னர்க
ள்வந்து வணங்கும் வீரகண்டாமணித்தாளையும் மணிவா
சலையுமுடைய வணங்காமுடியோன் றம்பியான விகர்ண
னை மறுபடியுமடக்கி இடியாஸ்திரத்தை யெடுத்து மார்பி
லுழைந்து முதுகிலுருவிப் போகும்படியாய் விடுத்து இ
ன்னமும் வேலையுண்டோவென்று கேட்டு எவர்களுநிக
ரில்லாமல் மகமேருவைப்போ லோங்கிய வாகுவலயத்
தரித்த மணிப்புயங்களையுடைய அபிமன்னுவானவன் இ
ன்னம் வரத்தக்கவர்கள் வாருங்களென்று மதத்து நிற்ப
தைக்கண்ட விகர்னன்முதலாகிய சத்துருக்களெல்லாரு
ம் விசனமடைந்து ஒற்றை இரதத்துடன் ஒருவனாயி
ருந்து உலைவாய்மெழுகைப்போல் நம்மை உருக்கிக் கரு
க்கிய இந்த உத்தமனுக்கு ஒப்பாக ஆரைச்சொல்லுவோ
ம்,இல்லை இனி, யெத்தனைநாள் யுத்தஞ்செய்தாலும் வெ
ற்றிக்கு நமக்கும் வெகுதூரமாயிருக்கும்-அந்தச் சொத்
துக்குரிய அர்ச்சுனனுக்கும் அவன் பிள்ளைக்கும் வெற்
றியாகிய புருஷன் மெத்தக் கூட்டாளியாயிருக்கின்றான்-
ஆகையால் இனிநாம் யுத்தஞ்செய்து என்ன பெருமை
யைப் பெறப்போறோம்-ஒன்றுமில்லை - இந்தமட்டும் மரி
யாதையாய்ச் செத்தவர்கள்போக மற்றவர்கள் பெரியோ
ர்செய்தபுண்ணியம் - உயிர்பிழைத்தோமென்று ஓடிப்பி
ழைப்பதே-உத்தமமென்று ஒருவரோ டொருவர் சொ
ல்லாமல் வெருவிப் பயந்தோடினார்கள், அப்படி ஓடின
வர்களில், கொஞ்சமானமும் கொஞ்சம் வீரமு முடைய
அதிரதர்முதலாகியவர்கள், சற்றுநின்று நிதானித்து நல்
லது, இன்றையப்போரில் நாமெல்லோரும் ஒன்றாகக்கூ
டி நெடும்பகழி குறும்பகழிமுதலிய நெட்டிலைவேல்களு
ம்-பட்டயங்கோல்களும் விடுத்துச் சண்டைசெய்தோம்
அநேகங்கோடி அஸ்திரங் களினாற் றாக்கினோமே இந்த
அபிமன்னுவினுடைய அங்கத்தில் ஏதாகிலுங்கொஞ்சம்
பங்கமுண்டா அல்லதுஅவனுடலாகிய காயத்தில் எள்
ளத்தனைகாயங்கள் ஏற்படுத்தினதுண்டா என்வினைப்ப
ராலுங்கொடுத்துக்குராலும் போகவேணும் ஐயையோ இ
ந்த மட்டும் உயிர்ப் பிச்சையாக ஓடிப் பிழைப்பதே
உத்தம மென்று முன்னோடி னவர் களுக்கு முன்னாப்
பின்னோடின - போர்களோடி - பாசறை போய்ச் சேர்
ந்தார்கள் அந்தச் சமயத்தில் கார்முனை கொண்டதை
ப்போல் வந்த போர்முனை வென்று பேர்புகழ்கொ
ண்டு சீர்பெறநின்றுதேர்விடுகென்று - சாரதிக்குச்செ
ல்லி நின்றஅபிமன்னனுக்கு நேரெதிர்சென்று மேலாகி
ய சந்தோஷநிறைந்த மனமும்வீரர்க்குட்சிறந்தகனமும்-
வேந்தர்க்கு வேந்தாகிய பெரியகனமுமுடைய தர்மராஜ
ன்முதலிய பாண்டவரொன்றுந்தந்தைமார்கள் மைந்தனைக்
கண்டு சந்திரனைக் கண்ட சமுத்திரம் போற் களித்து
இரைந்து மகிழ்ந்து இறுகத்தழுவி யணைத்து முத்தமிட்
டுக் கொண்டு உத்தம வித்தக புத்தியும் வித்தையு மு
டைய புத்திரனுடன் வெற்றி வார்த்தையைப் பேசிக்
கொண்டு போர்க்களத்தின் வேடிக்கையையும்பார்த்துப்

பொய்மலாகிய எங்களிப்பாயிருமாப்பனடைந்து பாசறை போய்ச்சேர்ந்தார்கள் இப்பால் இந்தயுத்தகளத்தில் அநேகந்சேனைகள் யானைகளெல்லாமழிந்து உதிரவெள்ளம்வழிந்து ஓடவும் அந்தவெள்ளத்தின் அலைகளில்தத்திவிழுந்ததலைகளைக் கழுகும் பருந்தும்காக்கையும் கொத்தியெழுந்தகாலையில் நரிகள்பறித்துக் கௌவிக்கொண்டோடவும் அதைக்கண்டசிறுபக்ஷிகள் மனமேக்கங்கொண்டுவாடவும் இப்படியாக யுத்தபூமியில் மலையினும்பெரிய தலையினையுடையயானைகளின் தந்தங்கள்பிடுங்குண்டு அந்தந்நிலைக்குத்தோடாங்காகியமந்தரகிரிபோலயர்ந்துதாரையாய்ச்செந்நீர்பெருகச்சாய்ந்துகிடப்பது எப்படியிருந்ததென்றால் துவாரகையிலிருக்கும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைத் தன்பட்டணத்திற் கழைப்பித்த கஞ்சனுனவன்நகரக்கோட்டைவாசலில் மதம்பொருந்தியபட்டத்து யானையை நிறுத்தி வெளியிலிருந்துவருவோர்களெல்லாரும்யானையின் வயிற்றில் நுழைந்து போவதென்றும் கிருஷ்ணனுழைந்து வரும்போது யானையினால் நெருக்கிக் கொன்றுபோடச்செய்யென்றும் தன்னுடையகருத்தை மாவுத்தனுக்குச்சொல்லிவைத்த காலத்தில் யானையையோட்டிவந்த ஆதிமூலமாகியஉளவறிந்தகளவன் - அநேகமாகிய இஷ்டருடன் யானைமுகத்துக்கு நேராகவந்தகாலையில் மணங்கமழ்ந்த குணந்தழைந்த வனமிறைந்ததேனுறைந்த திருத்துழாய்மாலையணிந்ததோளினையுடையசுவாமியைநெருக்கிக்கொல்லவந்தயானையின் இரண்டுதந்தங்களையும் பிடித்து அசைத்திழுத்துப் பிடுங்கியபோது சந்தங்குறைந்து அந்தங்குலைந்து சிந்தைநொந்து வருந்திவிந்தகிரிபோல்விழுந்திறந்தகுவலயாபீடமென்னுங்கொம்புபோனயானையின்கோலமெப்படியோஅப்படியிருந்ததுமேலும் ஓடிக்கொண்டிருக்கும் உதிர வெள்ளத்தில் பாதித்தேக மறைந்தும் மற்றப் பாதித்தேகம் வெளியில் தெரிந்தும் துதிக்கையை மேலாகத் தூக்கிக் கொண்டும் வாய்விட்டலறியும் கால்களிற்சக்கர மாட்டிக்கொண்டிருக்கவும் அநேகம்யானைகள்பக்கத்திற் பட்டுக்கிடக்கவும் இத்தன்மையாய்விழுந்திளைத்த வீரபட்ட நுதலணிகளையுடையயானைகளெப்படி யிருக்குதென்றால் மலைச்சாரிலிருந்தசுனையில் இனச்சாரியாய் நீருண்ணுவதற்கு அநேகம் பெண்ணானைகளுடன் வந்திறங்கியயூதநாவனென்னுங் கெஜேந்திரனை முதலைபிடித்துக் கொண்டபோது பெருங்கூச்சலிட்டுக் கரையிலிருக்கும் யானைகளின். துதிக்கையைப் பிடித்துக்கொண்டு முதலையைக் கரையிலிழுக்க முதலையானது யானையைச்சலத்திலிழுக்க அந்தக்காலத்தில் தனக்குற்றதுணையாகிய கர்த்தனைக் கூவிப் பாதியுடல் ஜலத்தில் மூழ்கியும் பாதிமூழ்காமலுமிருந்த நீலகிரியைப் போன்ற கெஜேந்திரனைப்போலுமிருந்தது இதன்றியும், மேகத்தைப்போல மதஜலத்தைப்பொழியுங் கவுட்குழியும் சிறியவிழியும் இரண்டு செவியும் தந்தக்கொம்பும் மத்தகத் தலையும் தும்பிக்கையும் தோலும்-வாலும்-நாலுகாலும் இவைகள்தவிர மற்ற மாமிசங்களையெல்லாம் பேய்கள்சுறண்டித் தின்றுபோட்ட யானைத்தோல்கள் எவ்விதமிருப்பதென்றால், நான்குவேதங்களும் மோனமென்றும் அகல்வானமென்றும் மூழுஞானமென்றும் சொல்லிய இப்

பொருள்களையே ஞானபூதித் திருவுருவாய்க்கொண்டருளிய சிவபெருமானென்னும் வீரட்டேஸ்வரர் தாருகாவனத்து ரிஷிகளாலனுப்பிய யானையையுரித்து அணிந்துகொண்ட. யானையுரியைப்போன்றிருந்தது- இன்னும் அழுபட்டுக்கிடக்கும் இராக்கதர்முதலிய சேனைகளின் றலைகளையும்-யானைத்தலைகளையும், தங்கள் தலையிற்கவிழ்த்துக்கொண்டு வாய்களிற் கவ்விக் கொண்டு வரும்படியாகிய பூதங்கள், ஆகாயத்திற்சென்ற வீரருடைய தலைகளைக் கைக்கொண்டு உள்ளிருக்குந் தசைநிண முதலிய வெல்லாவற்றையும் உறுப்புறுப்பென்று உறிஞ்சிக் குடித்துவருகிற சில பூதங்கள் மடக்கித் தங்கள்தலையில் யானைத்தலைகளைக் கவிழ்த்துவருங் கண்டெரியாப் பூதங்கள் மேல்விழுந்து சண்டைகொண்டு ஒன்றுக் கொன்று விடாமற்போர்புரிவது எப்படியிருப்பதென்றால் அநேககாலம் அரக்கரால் அவதிப்பட்ட அமரர்க்கிறையாகிய தேவேந்திரனும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் கயிலாசபதியைக்குறித்து வருந்தித்தவமிழைத்தகாலத்தில்மகாதேவர் உமாமயேஸ்வரியுடனெழுந்தருளிச் சித்திரமணிமண்டபத்தில் ஓவியமாகத் தீட்டியிருந்த பிரணவாகார வடிவத்தை எப்பொருட்கு மிறையென்னும் முதற்கடவுளாகிய விநாயக மூர்த்தியாகத் திருவுளங்கொண்ட சிவசத்தியினருளுருவாயமைந்த விநாயகக் கடவுளானவர் தேவர்முதலியபேர்களின் குறைநீங்க கஜமுகாசுரனுடனெதிர்த்து யுத்தஞ்செய்த காட்சிபோலிருந்தது இப்பால் ரத்தங்களைக்குடித்து வெறியேறிச் சண்டைசெய்யும் நாய்களும் நரிகளும் பிரமாணந்தப்பிய பெருங் குடியனைப்போன்று திரிந்தது காக்கை கழுகு பருந்துமுதலிய பட்சிகள் இச்சையடங்கத்தின்று அபிமன்னனுடைய ஜெயத்தைப் படித்துக்கொண்டு நாளைக்குவேண்டுமென்றுபுதைக்கும் லோபநாய் நரிகளைப்போல் தாங்களும் புதைத்துத் தடந்தெரியாமற் சஞ்சலப்பட்டதுகள் இப்படியாகிய போர்க்களத்தில் இமயகிரிவரைக்கும் ஜெயஸ்தம்பநாட்டிய விஜயன்குமாரனாகிய அபிமன்னு வானவன் இன்றையயுத்தம் உங்களுக்குப் போதுமல்லவாவென்று எதிரியின்சேனைகளைக் கேட்டு தங்களுடைய சேனைப்படைகளும் - அரவான்முதலிய பேர்களியாவரும் சூழும்படியாய் விருது மேளதாளங்களுடன் ஜெயக்கொடி பிடிக்கத் தாமிருக்கும் பாடிவீட்டிற்குப்போய் பொருந்தியிருந்தார்களென்று திரிதராஷ்டிர மகாராஜனுக்குச் சஞ்சயன்தெரிவிக்கப்போனான், அப்போது அந்தச்சஞ்சயனை வழிவிடுக்கப்போன வழித்துணைபோல் சூரியன் மேற்குத்திசையிற்சென்று மறுபடியுஞ் சஞ்சயன் வரும்போது கூடத்தொடர்ந்து ஆறுக்கு ஏழு அதிகமல்லவோ வென்று ஆசையாய்ப் பார்க்கவந்தவனைப்போல் கீழ்த்திசையி லுதயமாகினான், அந்தச்சூரியன் அஸ்தமித்தவுடனே பாண்டவர்களுந் துரியோதனாதியருஞ் சண்டைபோட்டார்களே அதைப் பார்ப்போமென்று வந்ததைப்போல் இராத்திரியும் சந்திரனும் இணைந்தோடிவந்து இரணகளத்தைப்பார்த்து பேய்க்கூற்றாக யிருக்கக் கண்டு பேசாமலோடிப்போனார்கள், இப்பால் சஞ்சயன் ரணகளத்திற்கு வந்து

விட்டான், கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டுவந்தார்.

ஏழாம்போர்ச் சருக்கம்.

கண்ணன்றுதி-விருத்தம்.

உரலும்வேதமுந்தொடரநந்தகோ னுடனசோதைகண்டுருகவாழ்கூர், தரணிமீதுசெங் கையுமாமுழந் தாளும்வைந்துதைத்தழமம்மாயனுர், விரகினூடுதா மருதினூடுபோய் மெத்தெனத்தவழ்ந்தருளிமீளவும், புரியுநீள்கடைக்கண்ணுறும் வண்ணமும் போற்றுவார்கள்மெய்ப் புளகமேறுமே ....*

எ-து. திருவாய்ப்பாடியிற்சிறந்த ஆயர்மாதர் முதலியபேர்களும்-நவநீத சோரனென்று சொல்லக் கேட்ட அசோதைப்பிராட்டியார் ஆயாசமடைந்து மனந்தாளாமல் அடா புண்டரீகாக்ஷா புருஷோத்தமா இனிமேல் அண்டை அசல்வீட்டுக்குப் போகாதே கண்ட உறியிற் கைபோடாதே ஆயப்பெண்டுகளுடன் கூடி யாடாதே, சண்டைமூட்டிக் காட்டிலோடாதே யென்று உரலுடன் கட்டிவிட்டபோது உண்மைப்பொருளையுரைக்கும் உடலையுடைய நான்குவேதமும் பின்றொடர்ந்து வரவும் நந்தகோபனும் அசோதைப்பிராட்டியும் பின்புறநின்று பார்த்து மனமுருகவும், வாழ்வைப் பெற்றோமென்று மனங்களிகூரும் பூமிப்பிராட்டியார்பேரிற் செந்தாமரையிலுஞ்சிறந்த அகங்கையையூன்றி முழந்தாளைப் பொருத்தி இரண்டுபாதங்களையும் முன் பின்னுகவுந்தி, தாய் தந்தையரைத் திரும்பிப்பார்த்தும் பாராமல் நளினநகை முகத்திற் றளர்வுதோன்ற நயனமுதலிய திருவாயுஞ்சோர அபிநயங்காட்டி கசிந்து துளிக்கக் கண்ணீரோட்டி சிற்றழுகைக்குரலிட்டி அழுதுகொண்டு அறியாக்குழந்தை மரத்திணிடுகநிற்போ யகப்பட்டுக் கொள்ளுமேயென்று பார்ப்பவர்களுடல் பதறும்படிக்கு அந்த வாசலிலிருந்த மருதமரத்தின்காரணத்தை மனத்துளுணர்ந்த மாயவன்-மாதவன்-மதிமயக்கத்தால் வழிதப்பிச்செல்லும் மதலைகளைப்போல் இரண்டாகப் பிணைந்திருக்கும் மருதமரத்தின் மத்தியில் உபாயமாகத் தவழ்ந்தருளியபோது உரல்மாட்டிக்கொள்ள திரும்பிப் பார்த்து அந்த உரலை யுதைக்குந் தன்மைபோலுந்தி அம்மரமாயிருந்த குபேரன்பிள்ளைகளுக்குச் சாபநீக்கிப் போக்கி தன்னைப் பார்த்துக்கொண் டிருக்குந் தந்தைதாய்முதலிய யாவர்களுக்கும் அருட்பார்வை கூட்டிய நீண்டகடைக்கண் காட்டியருளிய மாயனென்னும்வாசுதேவருடைய கிர்பா நோக்கத்தையும் காசாம் பூவைப்போன்ற சொரூபாவிக்ரகத்தையும் புகழ்ந்து வணங்கும்படியாகிய புண்யவான்களினது தேகம் புளகாங்கிதமுற்றுப் பரவசமடையும், இந்தப்படி அன்பாக சிந்தித்து வந்திக்குந்தாசர்களைப் பரவசமடையச் செய்யும் பரந்தாமன் பஞ்சாயுதன் பச்சைவண்ணன் பதுமநாபன் பரமபத நாதனென்னும் பக்தவற்சலனுடைய பாதாம்புயத்தைச் சிரத்தால்வணங்கிக் கருத்தாற்றுதித்து மேனடக்குஞ் சரித்திரத்தைச் சொல்லுகின்றேன், கேளும் ஜெனமேஜெய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

தனமேவிய மாமதிநாவலனே-ஜெனமேஜெய பூபதிகாவலனே கேளும், ஏழ்பரியோனுதயமாகிய ஏழாநாட் காலமே இருவர்படையு மெழுந்து காலக்கடனை முடித்துக்கொண்டு யுத்தசன்னத்தராய் வீரம்பேசியெழுந்தவுடன் பிணையாணபேரி யுத்தபேரி முதலியவாத்தியங்களெல்லாம் பெருங்கடல்போல் முழங்க ஆயுதங்களுட னுயுதமிழைய அதிபதிமுதலிய சேனுபதிகளும்-கொடி - குடை-சாமரை-பீலிக்குஞ்சமும் கவிக்சப் புறப்பட்டு நேற்றுப் போர்புரிந்த விடத்தில்வந்து மரகதமலைபோற் றிருமேனி வாய்ந்த மாதவனைப்பணிந்து இன்றைக்கு என்னயூகங்கட்டுவதென்று உத்தரவுகேட்டுக்கொண்டு சகல படைகளையுமமைத்து வச்சிரமாசுண யூகங்கட்டினுன் சேனுபதியாகிய துஷ்டத்துய்மன், (வச்சிரமாசுண யூகமென்பது-வச்சிராயுதத்தைப்போ லழிவற்றதாய் - படமுதலிய உடலும்-பாம்பைப்போல சேனைகளை யமைப்பதென்றறியவும்.) இப்பால் துரியோதனனுடைய படையிற் சேனுபதியாகிய வீஷ்டுமரானவர் தங்களுடைய நால்வகைப்படைகளையுங்கொண்டுவந்து சகடயூகம்வகுத்து சகலவித வாத்தியங்களுமுழங்கச் சகலவரசர்களு நெருங்கப் பலவித விருதுகளும் படிக்கப் பலவிதக்கொடிகளும் பிடிக்கப் பகைமேற்கொண்டிருந்தார்கள், (சகடயூகமென்பது வண்டிச்சக்கரம்போல் தொப்பக்கட்டை, குடம் - பழு-யிலை-மேல்வட்டகை-வளைவு-இருப்புக்கட்டுச் சட்டம் மத்தியிற்றுளை-உள்வாய்-கட்டுமேலாணி-இவைகளாக - அதிரதரை முனையினிறுத்தி நால்வகைச்சேனைகளையும் சக்கரமாயமைத்து நடுத்துளையில் நாயகனை வைத்துக் காப்பதென்றறியவும்.)

இந்தப்படி இருதிறப்படைகளும் யூகங்கட்டி வெற்றிக்கொடிநாட்டி விருது சின்னமுழக்கி சேனுபதி யிருவரும் முனையில்வந்து நின்று முடிசாய்த்துக் கொடிசாய்த்தார்கள், அந்த உடனே இருபடைகளுங் கைகலந்து-எவர்களுக் கெவர்கள்மீதிற்பகையோ-அவர்களை யவர்கள்போய் மடக்கிக்கொண்டு அண்டர்கள் யாவரு மொடுங்க எண்டிசைப்பாலரு நடுங்க-அவனிகுலுங்க விரைந்தோடி யுத்தஞ்செய்தார்கள், அதிரதர்-மகரதர்-முதலிய பேரும் செங்கண்களிற் றீப்பொறியுதிர அம்புகொண் டெய்தார்கள்-யானைகளுங் குதிரைகளும்-பதாதியருந்-தேவர்களும் இப்படி மாறிமாறிப் பகைவர்கள் சீறிசீறிப் போர்புரிந்துவருங்காலையில்-சத்துருக்களழியவும்-சகலவியாதிகளொழியவும்-பூதப்ரேத பிர்மராக்ஷதப் பைசாசகணமுதலிய கிரகங்களெல்லாம் வாய்திறந்து மொழிந்து சழியவும் அரைத்துப்பூசினுல்-அஸ்திபற்றிப-ஆறுப்புண்களெல்லா மாறவும் இன்னம் அநேக காரியங்களுக் குபயோகமாகி யிருக்கிற வாசனைபொருந்திய வேப்பமாலையணிந்த - வெம்பின்முரோன் மீனக்கொடியோன்வழுதி-பஞ்சவன்-மாறன் உசிதன்-செழியன் - தமிழ்நாடனென்று சங்கப் புலவர்களாற் காரணப் பேரிட்டழைக்கும்படியாகிய புகழ்பெற்ற பாண்டியராஜன் தனது-அம்புப் படைகளும்-வளைதடிக் கம்புப்படைகளும்-தும்பு-தும்பாகக் கூடிப் போராடும்படியாய் விடுத்துத் தானுஞ் சிலகணைகளைத் தொடுத்துத் து

ரோணுச்சாரியனை வளைத்து எல்லா-அரசர்களிலும்-மே
லாகிய, அக்கறை தனக்கிருக்கக்காட்டிக்-கடும்போர் புரிந்
தான், (அதெதினாலென்றால்-பாண்டவர்களும் பஞ்சவர்
தானும் பஞ்சவனுகையால் பேர்ப்பக்காளி சம்பந்தம்வை
த்துக்கொண்டு-பாண்டவர்கள் பொருட்டில் தன்பிராண
னை எண்ணிப்பாராமற் படுகளப்படுத்தி யுத்தஞ் செய்து
வில்-தேர்-சாரதி-குதிரை மினக்கொடி யாவும் விழுதாவி
விழந்து துரோணுச்சாரியனுலழிந்து உதிரம்வழிந்து உட
லுடலுலர உள்ளுடைந்து காயிலவைக்கும் வரண்டு போ
ய் நாக்குத்தடுமாறிப்பயந்துவியங்தோடினான், அப்பால் நா
ன்காம்போரில்இராக்ஷசமாயையாற்கம்பமுறிக்கும்யானை
க்கும்பாகவடிவெடுத்துபகதத்தனுடைய யானைக்கூட்டங்
களையெல்லாம்பதறக்கதறச்சிதறவுதறிமாய்த்துப்புறமுது
கிடாமற்செயித்த-விக்ரமமிகுத்தகடோற்கஜக் சாளையான
வனும்நேற்றையப்போரில்மாயைபோல்வந்த வீராள்முத
லியயானைப்படைகளையெல்லாம்நிமிஷத்திற்செயித்துப்பி
ன்வாங்காமல் வெற்றிகொண்ட அபிமன்னுவும் கூடிவந்
து துரோணுச்சாரியருக் கெதிரேறிச் சிறினர்கள் இதன்
றியும் நிலமேகம்போன்ற தேககாந்தியுடைய நெடுமாலு
க்குத்தம்பியாகிய சாத்தகியானவர் போர்முகத்திற் புகுந்
து நேரிட்டபேரைப் பிளந்துவருங்காலத்தில் சதாயு வெ
ன்பவனெதிர்த்துக் கணைகளைத்தாக்க-அவைகளை யெல்
லாம்பொடியாக்கி அவனுடைய கிரீடமுடியும் - தேரின்
கொடியும் பூமியிற்படியவிட நெடிய அம்புகளினால் அறு
த்துத்தள்ளி அவனுடைய தேகத்தையும் மோழையாக்கி
யபோது சற்றுநேரம் யுத்தபூமியில் நிலைத்துநிற்கமாட்டா
மல் அந்தச்சதாயுவென்பவன் பதாதியாயோடினான்-மே
லும் சகுனியும்-அவன்சேனைகளும்- வீமசேனனுட னெ
திர்த்துப் போராடி வீமனாலடிபட்டோடிப் போனார்கள்-
அப்போது ஜல்லிபராஜனோடிவந்து சமர்தொடுத்த வில்
முதலிய வீரமும்விடுத்து வெறுங்கையோடு நிலம்பாய்ந்
தோடும்படிக்கு வெற்றிகொண்டு வீரமாலையணிந்தான்வீ
மசேனனனவன் இப்பால் மகமேருவைப் போலொத்த
தேரை உலகளந்த தாளிணையுடைய சாரதிசெலுத்த இந்
திரகுமாரனாகிய சயந்தனைப்போல் அந்தரத்தி லேறிவ
ரும் அர்ச்சுனனானவன் நால்வகைச் சேனைகளுஞ் சூழ
ம்படியாகச்சென்று திரிபுரதகனனைப் போனின்ற விஷ்டு
மனை வளைத்துக்கொண்டு சரமாரிவிடுக்க- அவரும் கணை
மாரி தொடுக்க இருவருமெதிர்ந்து, இருவர் விற்களும் வ
ளைந்து ஒருவர்விட்டபாணம் ஒருவர்மேலிற் படாமற்றடுத்
து ஒவ்வொருசரத்திற்கு ஒவ்வொருசரம் விடுத்துக்கெடு
த்து லகுவம்பு-பிதுவம்பு முதலியசத்துருமித்துருக்கணை
களுந்தாக்கி, புத்திரமித்திரப்பேரையும் போக்கி இவரிரு
வரும் புரிந்த போர்வல்லபத்தை இன்னவாறென்று என்
னவும்படாது, ஒருவர்க்குச்சொல்லவும்படாது, ஆகிலு
ம் ஒருவாறுகச்சொல்லி உவமிக்கலாமென்றால் எனக்குஒ
ருநாக்கும் ஒருவாயுமல்லது வேறில்லை ஆனாலும் ஒரு உ
பாயமாய்ச்சொல்லுகிறேன்-எப்படியென்றால் தேவர்சே
னைபதியாகிய மயில்வாகனக்கடவுள் போர்புரிந்த காலத்தி
ல், மும்மதக்கொண்ட யானைமிதேறிவந்த தாரகனைப்போ
லும் பாலசுப்ரமண்ய சுவாமியைப்போலு மிருந்தது, மே
லும் என்னுசையடங்க யின்னொரு உபமானஞ் சொல்லு
கிறேன் கேளும் அரசனே அதென்னவென்றால், மோக
நாதியாகிய இராவணியும்-இலட்சுமணனும்-ஸ்ரீராமமூர்த்
தியும்-தசக்கிரிவனும் போர்புரிந்த தன்மைபோலிருந்தது
இப்படிக்குப் போர்செய்யும்போது யானைப் படைகளுக்
குள் யானைப்படைகள் புண்பட்டுப்பிராணன்விட்டுப்போ
கவும், தேர்நிரைக்குள்ளே தேர்நிரைகள் சிதைந்து முறி
ந்து புதைந்துபோகவும்-குதிரைக்கூட்டத்துக்குள்ளே கு
திரைக்கூட்டங்கள் குற்றுயிர் குறையுயிராய்ச்சுற்றிலும் க
தறிச்செத்துவிழவும் சாரதிக்குட் சாரதிகள்-தலைபோயெ
முந்து தனிவிழ்ந்தழவும் இவ்விதமாக ரணகளத்திற் சே
னைகளிறந்து இறைந்து போகும்படியாய் வீஷ்டுமரும் வி
ஜயனும் புரிந்த யுத்தத்தைச் சொல்லுவதற்கு எட்டுத்தி
சைகளும் பசபசவென்று விழிக்கும் சொல்ல வென்று
லோநாவெழாது-ஆனதால் குருபூமியி லிருபக்கத்திலும்
நிறைந்துநின்ற இருவர்படைகளிலும்பொருந்திய வீரர்க
ளில் இருவருடைய பாணம் - பட்டிறக்காதபேர்களில்லை
எதிர்த்துப்போர்புரியமாட்டாம லோடினபேர்களும் ஒற்
றைக்கையிற்றபேர்களும் இரண்டுகையற்றபேர்களும்-மா
ர்புகிழிபட்டபேர்களும் புயமறுபட்டபேர்களும் ஆயுதத்
துடன் கரமற்றபேரும் சிரமற்றபேரும் போர்புரியும்போ
து கால்துணிந்தபேரும் வல்லமை கெட்டபேரும் வில்ல
றுபட்டபேரும் பிணமலைகளிற்போய்ப் பதுங்கினபேரும்
பயந்தோடினபேர்களும் அயர்ந்து வாடினபேர்களும் உ
யிரழிந்தபேர்களும் உடலழிந்த பேர்களுமாய்ப் போர்க்க
ளத்திலிறந்தார்கள், ஆனாலவர்கள் பட்டபாட்டை பலவா
றுகச்சொல்லுவதிலும் ஒருவாறுகச் சொல்லுகின்றேன்
அதெப்படியென்னில் காய்வற்றிய சருகைப்போன்றது-
இருதிறச் சேனைகளும் அந்தச்சருகை யெரிக்கப் புகுந்த
பெருநெருப்பையொத்தது இரண்டுவீரர்கள் தொடுத்த ச
ரங்களும் ஆதலால் இனிவேறுயுத்தஞ் செய்யவேண்டி
யதுமில்லை இதைவிடவேறுயுத்தத்தின் பெருமையைநா
ன்சொல்லத்தக்கதுமில்லை-நான் சொன்னபோதிலும் நீர்
கேட்கவேண்டுமென்னும் ஆசையுமிராது தேவர்முதலிய
யாவரும்பார்த்துச் சலிக்கும்படியாய் விஜயதீரனும் வீஷ்
டுமவீரனும் முனைந்து போர்புரிந்ததில் - திக்குகளெல்
லாம் ரத்தவெள்ளமாய்ப்பாய்ந்து சிவந்து வழிந் தோடி-
யது அவ்விடங்களில் தலையறுந்த கவந்தங்கள் துகையிற
ந்தாடின இத்தன்மையாகச் சொல்லிய வெம்போர்க்கள
த்தில், குறைவிலாச்சண்டையை நிறைவுறச்செய்து அப
ரிமிதமில்லாமலழித்த ஏழாநாட்போரை யெடுத்துப் பே
சுமிடத்து இந்த ஆறுநாளையிலுமிறந்த பேரைப் பார்க்கி
லும் ஆறுபங்கு அதிகமானபேரை யின்றழித்துக்கொன்
றார்கள், அரசனே கேளும் பாரியவாளாயுதத்தாலும் கூரி
யவேலாயுதத்தாலும் பகபகவென்றெரியும் பகழியின் மு
னையாலும் காகரவென்றுழலும் கதிர்நேமியினாலும் அடி
பட்டு, முடிபட்டவீரர் முதலாகியபேர்கள் விரசொர்க்கவ
ழிநடந்து மேனிவருந்தி இளைத்து வேதனைமிகுந்து மிக
வுநெருங்கிப்போனார்கள் ஆகையால் நீங்களுமெத்தப் பு

மையாச மெடுத்துக்கொண்டு உடல்வருந்தி யிருக்கின்றீர்கள் ஓ படைவீரர்களே உங்களுடைய பாசறைக்குப் போய்ச்சேர்ந்து இளைப்பாறி நாளைப்போருக்கு வந்து விடுங்கள் நாளும் போதேமென்று இருவகைப் படைகளுக்கும் சாக்ஷிபூத எஜமானனாயிருந்தபெரியவன் ஆஜ்ஞாபித்துக்கார்ந்கோசமாய்த்துக் காட்டிப்போனதைப்போல் ஆரவாரங்கொண்ட மேற்றிசையாழியிற் போயடைந்தான் சப்தமாவென்னும் புரவிக்கேறிய அருர்கனனவன் இந்தப்ரகாரஞ் சூரியஸ்தமித்தவுடனே மாலைக்காலத்தைக்காட்டச் செவ்வானம்வந்தது அந்தச்செவ்வானம் யுத்தகளத்திற் கொப்பாயிருந்ததென்று உவமிக்கலாம் (அதெத்தன்மையென்னில்) சமுத்திரம்போன்றசெந்நீர்ச்சிவப்பினாலும் ஆகாசனிந்த ஆபாணக்காந்திக் கற்களாகிய நக்ஷத்திரங்களினாலும் சதுத்தயானைப் பிணங்களென்னும மேகசாலங்களினாலும் யானைத்தந்தங்களினாலும் யானைத் தந்தங்களாகிய வானப்பிறைநிலவினாலும் போர்புரியும் பூமிசெடுந் தூரப்பார்வையினாற் புகைசூழ்ந்துதோன்றுமாலைப்போதினாலும் யுத்தபூமி செவ்வானத்தை யொத்திருந்ததென் அமைக்கலாம்-அரசனே இதன்றியும் ரணகளத்தினிறைந்திருக்கும் ரெத்தவெள்ளங்களே பாற்கடலாகவும் இறந்துபோன அரசர்களுடைய உயர்ந்ததேகங்களே வானமளாவியமந்தரகிரியாகவும் யானைகளின் மணிக் குடர்களே வாசுகியாகிய கயிறாகவும் வெள்ளைக்கொடிகட்டிய ஸ்தம்பமே சந்திரனாகிய தூணாகவும் தேர்ச்சக்கரங்களே மந்தரகிரியைத்தாங்கும் கூர்மமாகவும் மாமிசமுதலிய நிணங்களே ஔஷதியாகவும் இருபிறத்திலுநின்று இழுத்துக்கடைகின்ற பிசாசுகளும் பூதங்களும் ஆதியில் அமுதங்கடைந்த தேவர்களும் ராக்ஷதருமாகவும் நிலைபெற்று நின்று அமுதங்கடைந்தபோது பிணங்களுடலிற் குடலிற்பொருந்திய பிச்சுகள்பெருகியதே வாசுகியினச்சாகவும் அப்படி பச்சென்றுவந்த பிச்சாகிய நஞ்சைக்கண்டு அமரர் வருந்திய தன்மையைப்போல் அச்சங்கொண்டோடிய பேய்பூதங்களைப் பிச்சையெடுக்குங் கபாலங்கொண்டு துச்சனமாகப்பாம்புக் கச்சையுடுத்தி பிச்சுப்பிடித்துத்திரியும் ருத்ரமூர்த்தியைப்போலொத்தவேதாளங்களோடிவந்து அகங்கையால்வாரி அந்த நஞ்சையுட்கொண்டு அப்புறச்செல்லவும்-மறுபடியும் மதிக்கும்போது மூளைகளாகிய அமுதங்களெழ அந்த அமுதங்களை மோகினிபவதார அரியைப்போல் மோகினிகள்வந்து பைசாச பூதங்களுக்குப் பகிர்ந்துகொடுக்க அதிற்சிலதுஷ்டப்பேய்கள் கிட்ட நெருங்கி அமுதங்களைக்கைபெந்த-அப்போது சிலகுட்டப்பேய்கள் இதுதுஷ்டப்பேயென்று சொல்ல உடனேசட்டுவத்தாலடித்த அடியினால் சொட்டைத் தலைப்பேயென்று பேர்கொண்டுதுள்ள மிருதியாகிய அமுதமென்னும் மூளைகளை இந்திரலோகம் போலொத்த சிங்காரினியாகிய காளிபிருக்குந் தலத்தில்வைத்துக் செட்டிசெய்தவுடனே அதைக்கண்டு சிலபூதப்பிரேத பைசாசங்கள் எனக்கமுதமில்லை யுனக்குமதமில்லையென்று போர்புரிந்து தோலுரித்து உடல்கெரித்து கண்பொசிந்து கால்விரிந்து ஆகாசத்தில் விழுந்தழிந்த அசுரப்பேய்க ளனந்தமாய்த் திரிந்து நிணங்களருந்தி ஆட்ல்பாட லுடன் பெங்சனும்பிரசாபித்துப் பேரொலிமுழக்கிக் கொண்டிருந்ததுகள் பின்னும் குடல்சரிந்த பிணங்களின் குதத்துவாரத்தில் கூர்மையாகிய கோரப்பல்லுகளையுடைய நாய்களும் நரிகளும்முகத்தைச்சொருகிக்கொண்டு பிடுங்கிக் கொள்ளமாட்டாமல் குரைத்துக்கூவு முழக்கமும் அமர்க்களத்தி லழிந்துகிடக்குந் தலைகளை யெடுத்து அம்மானையாடி ஆகற்கிசைந்தபாட்டுகளைப் பாடிக்கொண்டிருக்கும்பெண்பேய்களினுடைய கூக்குரலும் கொலுக் கொண்டிருக்கும் பகவதியாருக்கெதிரிலே பைசாசகணங்கள் கைகோத்துக்கொண்டு விதம்விதமாகிய பவுரிக்கூத்தாடி வருமோசையும் துன்பத்தைவிளைக்கும் நரிகளானது வீரர்களைப்புகழ்ந்து துதிகூறிக்கூவுங்கூச்சலும் உகாந்தக்கடல் முழக்கம்போலிருந்தது, அப்பால் கழுகு-கூகை காகம்-பருந்துக்கள் - இதுகளெல்லாஞ் சிறைவிரித்து நெருக்கமாய்ப்பறப்பது ஆகாயமளாவும்படி அமைத்த பந்தலைப்போலவும் - இரத்தனுபரணங்களே ஒளிமிகுந்த காடாவிளக்குப்போலும் - யானைக்காதுகளே தலைவாழை யிலைபோலும் யானைத்தும்பிக்கைகளே கெண்டிகைச் சொம்புபோலும் - வில்-வேல்-வாள்-முதலிய ஆயுதங்களால்உழுத-துளைப்புண்வழியிலிருந்து வரும் வீரர்களுடைய மாமிசங்களே, சட்ருசிபதார்த்தபோஜனம்போலும், மூளைநிணங்களே பருப்புநெய் போலும், கொள்ளிவாய்ப் பசாசுகளே குத்துவிளக்கின் பிரகாசம்போலும் அக்களத்திலுலாவிய பரிசனப் பைசகணங்கள் உபசாரஞ்செய்வது நெய்போன்ற மனத்தையுடைய அர்ச்சுனன் ஜெயம்பெற்றதைக் குறித்து வீரலட்சுமிக்கு விருந்து செய்ததைப்போலு மிருந்தது பேய்க்கணங்க ளருந்திய போர்க்களம் இன்னமு மெப்படியிருந்ததென்றால் கிழிந்தபேரிகைக்குள்ளே சிவந்த ரெத்தங்களோடும்போது குமுகுமுகுங்குங்கும் மென்று முழங்கியவோசை முழவாத்தியம் போலும் பட்சிக்கூட்டங்களடித்துக்கொள்ளும் ரெக்கையினோசை துருவதாளம்-மட்டியதாளம்-உருபகதாளம்-சம்பைதாளம் - திரிபுடைதாளம்-அடதாளம்-ஏகதாளம்-என்றுசொல்லும் எழுதாளங்களைப்போலும் கொள்ளிவாய்ப்பேய்கள் பந்தம்பிடிப்போரைப்போலும் தொந்தயுத்தஞ்செய்த வில்வீரர்கள் முதலியபேர்களின் ஆண்மிக்கையை யெடுத்துப் புகழ்வது இசைப் பாடலாகவும் தலையற்றகவந்தங்கள் கைநீட்டியாடுவதுமுன்னே விருந்து சாப்பிட வீரலட்சுமிக்கு கச்சேரிவைத்து கணிகை மாதராடும் ஆட்டம்போலு மிருந்தது இதன்றியும் தாய்தந்தையர் பிளந்துகொடுத்த தலைமூளைகளைத் தின்றுக் கொண்டிருக்கும் பேயின் பிள்ளைகள் உதிரவெள்ளத்தி லடித்துக்கொண்டு போகாநின்ற யானைத்துதிக்கைகளை யெட்டயிழுத்து தவறிப்பள்ளத்தில்விழுந்து ரெத்தவெள்ளத்திலழுந்தி சுழலிலகப்பட்டுக்கொண்டு வருந்தியபோதுகரையிலிருந்தோர் கைக்கொட்டிப்பார்த்துதேர்த்தட்டுகளைப்படகுபோல்விடுத்து பாலாபல்லயக் கொம்புகளை ஊன்று கோலாகப்பற்றி சுழலிலகப்பட்ட பேய்க்குட்டிகளைத்தடுத்தெடுத்துத் துன்பநீக்கி தாய்தந்தையர்கொஞ்சும் ஓசைகள்எல்லா முழக்கத்திலும்

ஏழாங்கு அதிகமாயிரைந்துகொண்டிருந்தது அல்லாமலு
ம்வொத்தங்கலாயள்ளிவாயாற்குடித்துக்கண்ணின்வழியேவ
ழியச்செய்யும வித்தையும் யானைத்தோலைக் கவசமாகவ
ணிந்து கேடயமுதலிய வாளாயுதமுங் கொண்டுநீங்கள்
தேவர்களென்றும்நாங்கள் அரக்கரென்றும் ஆசையாயுத்
தஞ்செய்வதும் ஒருவரோடொருவர் கதாயுதம் மல்யுத்த
ம் புரிவதும் வில்லைத்தாங்கிநோரிமாட்டி வெவ்வியகணைக
ளைபூட்டி அவ்விடத்தில் நிற்கும் வெறுங்கேரிளேறிக்கொ
ண்டு நாம்பிதாமகனாகிய வீஷ்மன் - நீசனாகிய அர்ச்சு
னன் நாமிருவரும்போர்பொருவோம்வாருமென்று பொ
ய்யாகவிளையாடப்போய் அந்த வீரர்போனைச் சொல்லவே
மெய்யாகவினைமுண்டு இருபக்கத்திலும் ஏராளமாய்ப்
பேய்ப்பசகள் கூடியுத்தஞ்செய்துபேய்ப்பிணங்கள்போர்
போராய்க்குவிய வெற்றிபெற்று அன்றுமுதற் கொண்டு
இரண்டு பிரிவாக பிருந்து சாயங்கலாம் வரையிலும் பா
ண்டவர்களும் துரியோதனுகியரும் போர்புரிந்து பாச
றைக்குப் போனபிற்பாடு இந்தப்பேய்கள் பகைத்து ஆ
யோதனம் புரிந்து கக்ஷிரண்டாக நிலைத்துவிட்டகாக்ஷி
யும் அலைகடலருந்திய அகஸ்தியரால் சர்வமடங்கிய வி
ந்தகிரியைப்போல் மேலோங்கிவளர்ந்துநின்ற பெரியடா
கினியை ஒருசிரியடாகினி ஒருசேதிசொல்லுகிறேன் ஒ
ருவருமறியாமற்கேளென்று குனியச்செய்துஅதினுடை
ய தலைமயிரைப் பிடித்திழுக்குத்தலத்திற்றள்ள கிழேவிழு
ந்து மெள்ளவெழுந்து சொழுத்துத்துள்ள - அதுஒதுஉ
திரப்பள்ளத்தில்விழுந்துக்கொள்ள - அதுநெருங்கிஇதை
மெள்ளக்கிள்ள - இருவருக்குஞ்சண்டைமூள - எதிரொ
திராகச்சாய்ந்து மாளவும் - வானவர்முதலிய தானவரு
ம் இன்றுநடந்த ஆர்ப்பைக்கண்டு மனங்கூசிவருந்தவும்
காலறுதகரோடி யோடிப்பிடித்துக் கைசலித்துப் பொருக்
தவும்இப்படியிருந்த யுத்தகளத்தில் இருவர்படைகளும்ம
ன்னர்முதலியபேரும் பெருங்கூச்சலுடனே போர்நிறுத்
தும்படியாகிய பொம்மற்பேரிகையின் முழக்கங்கேட்டுச்
சூலந்தோமர முதலிய படைகளையும்விடாமல் தேவருமி
ராக்கதருஞ்செபித்துத்திரும்பியதைப்போற்றிரும்பிஇன்
றுபுரிந்த இகலைப்போலென்றும் இல்லையென்றுதேகவி
டாய்த் தீர்த்துக் கொள்ளும்படியாய் திங்கள்குலத்திலு
தித்த மன்னவரிருவரும் - சேனைகளும் பாசறைபோய்
ச்சேர்ந்தார்கள். சூரியபகவானானவன் இந்தக்குருக்ஷேத்
திரத்தை அடியிட்டளந்தவர்போற்சென்று ஆகாயத்தின
ளவையும் பார்ப்போமென்று மேருப்பக்கமும் சுற்றி வி
ளைவிற்கிட்டிசைக்கோடிவந்துநின்று நடக்கப்போற யுத்த
த்தையும் பார்க்க வேணுமென்று இரவென்னுஞ் சங்கடி
யை விலக்கிக்கொண் டெழுந்ததைப்போ லுதயமாகினு
ன் இந்தஏழுநாட்காலத்தின் நிறங்களையெல்லாம் வந்த
லாகிய திரிதராஷ்டிரனுக்குங்காந்தாரியம்மனுக்குஞ்சொ
ல்லி அவர்களற் புத்திரர்களுக்குச் சொல்லும்படியாகிய
யுத்தியையுங்கேட்டுக்கொண்டு மறுபடியும் யுத்தகளத்தி
ற் றுவக்குவிட்டான்சஞ்சயனுனவன்கேளும்ஜெனமேஜெ
யமகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்ல வபுஷ்
டாதேவியுடனெழுந்துவணங்கிச் சோடசவுபசாரபூசை
யுஞ்செய்து மேனடந்த கதையின் விபரத்தை சொல்ல
வேண்டும் வேதவேதியனேயென்று விசுவாசித்துக்கேட்
டான் ஜெனமேஜெயமகாராஜனானவன்.

எட்டாம்போர்ச் சருக்கம்.

கண்ணால்ழுதி விருத்தம்.

பூந்தாமியந்தாமரைப் பூவில்வந்துபலபூதமும்........*
சேத்தநான்முகப்புனிதனும் முனிவர்யாவருந்தேவரும்..*
ஏத்தநாலுவேதங்களுந்தேடநின்றதாளெம்பிரான்......*
பார்த்தன்மாமணித்தேர்விடும்பாகனானதெப்பான்மையே

எ-து. புட்பித்தருளிய திருநாபிக்கமலத்திற்பிறந்துபல
பூதமாகிய ஆக்மகோடிகளைச்சிர்ஷ்டித்துச்சேர்த்தருளிய
பரிசுத்தமேதாவாகியநான்முகவிதாதாவும் முனீஸ்வரர்க
ள்முதலியதேவர்களும் நான்குவேதங்களுந்தேடிப் புகழ்
ந்துவணங்கி அறிதற்கருமையாகிய திருவடிகளையுடைய
எமதுகடவுளாகியகண்ணன், இந்த அர்ச்சுனனுக்கு அழ
கியமணித்தேரைச்செலுத்தும்படியாய்பார்த்தசாரதியென்
றுஉடன்பட்டது-எந்தப் பக்ஷமுடையதோ எந்தச்சம்பந்
தத்தாலாகியதோ என்ன காரணத்தாற்கைகூடியதோ இன்
ன விதமென்றறியப்படவில்லையே யென்றிரங்கியமுத தா
சர்களின்திருவடியைச்சிந்தித்து எட்டாநாள்யுத்தத்தைச்
சொல்லுகிறேன் கேளும் அரசனேயென்று வைசம்பாய
னர் சொல்லத்தொடங்கினர்.

கலிசடிந்துசெங்கோலைத்தாங்கிய - கஜாதுரகாங்கமே
விய, காவலனே கேளும் நேற்றுநடத்திய போரில் அர்ச்சு
னனும்,வீஷ்டுமரும்சமமாகயுத்தஞ்செய்து இருபடைகளு
மிளைத்து நிலை தளர்ந்த தன்மையைஇர்தயத்திற் கொண்
டு யின்றைக்கு எதிரிகளுடைய சேனைகள் புறங்காட்டும்
படியாய் வெற்றிபெறவேண்டுமென்றுகருதி அட்டதிசை
யும் போற்றும்ஆதித்தனானவன் வீரபட்டயம்போற்பிரகா
சித்துவரக்கண்டுகாலைக்கடனைமுடித்துக் கொண்டு தமது
சேனைமன்னர்களை யெல்லாரையுஞ்சேர்த்து ஜெயபேரிமு
ழங்கும்படியாய் சேனாபதியுஞ் செரு நிலத்திற்குவரவும்
செந்துளெழுந்து ஆகாயகங்கை அறல்வறண்டுபோகும்
படியாகவும் அண்டர்முதலிய யாவருங் கண்டேங்கும் ப
டியாகவும் தருமபூபதிமுனைந்து தாசிமுனையில்வரவும் ஸ்ரீ
கிருஷ்ணமூர்த்தியி னிஷ்டப்படிக்குச் சகடவியூகங்கட்டிச
ர்வவாத்தியங்களுமுழங்க ஆயுதபாணிகளாய்ப் பாண்டவ
ர்களிருந்தார்கள் இப்பால், ஏழாநாள்யுத்தத்தில் ஜெயித்
த யிறுமாப்பினால் இன்றைக்கும் வெற்றிபெறுவோ மெ
ன்று அளவிறந்த படைமன்னருடன் அமர்க்களமடைந்து
ஜபாவாகியவீஷ்டுமரின் அனுமதிப்படிசருதாசியூகமமை
த்து தருநிறைந்த சுராருலகெல்லாந்தயங்கும் படியாய்த்-
தானைமுன்னின்றுன் அரவக்கொடிதரித்தவரசனானவன்
அப்போது இரண்டுசேனைகளும் அலையெறியுங் கடற்
போற்புரண்டுநிற்குங் காலையில் சேனாபதிகளிரண்டுபே
ரும் சேனாவியூகத்தைப் பார்த்து சிந்தைகளித்து யுத்
தபேரிமுதலிய வாத்தியங்களை முழக்கிவைத்து வெற்றிக்
கொடியேற்றி வீரர்கள் யுத்தஞ்செய்யும்படியாய் விளம்
பினார்கள், அந்தவேளையில்வீரகண்டைதரித்து திராவிடப்பிட
த்துவிஜயம்பெறக்கருதிய புஜபலத்தம்பிமார்களும்பிருந்த

துணையாகியவேந்தரும் சூறவளிபோற்சுழன்றடித்திரைந்
து கொலைசெய்யும் வில்லைத்தாங்கிப் பிறைமுகக்கூர்வா
ளிகொண்டு கொடிமுடித்தேறி, மல்லைப் புயமுதலியமார்
பில், மணிக்கவசமணிந்து, மடமடவென்று தேர்செலு
த்திவந்துவாயுபுத்திரனாகியவீமசேனனைவளைத்துக்கொண்
டு மலைப்பகழி - மலர்ப்பகழி - மணிப்பகழி - மதிப்பக
ழி- மறைப்பகழி - முதலியசாயகங்களாலுடலுருவஎய்
தார்கள்- அவர்கள்விட்டஅம்புகளையெல்லாந்தும்புதும்பா
கச்செய்து எதிரில் நின்ற துரியோதனனைப் பார்த்து ஆ
சையாகவென்னைத்தேடி யோடிவந்தாயோ அரசே இவ்
வளவு அன்பாக என்னைநாடி இத்தனைகாலமே வந்த உ
ன்னை வெறுங்கையோடனுப்பாமல் கொஞ்சம்போனிப
ண்ணிவிடுகிறேன் இதோபாரென்று மதயானை போல் ம
தத்தவீமசேனன்,இருமுகமாகிய எட்டுச்சாயகங்களையெ
டுத்து ஓ துரியோதனனே, நீயானபடியால் வெண்ணெ
யுண்டு மோர்குடித்தாய் நாமப்படி பேதநினைப்ப தில்லை
உன்றம்பியொன்றும் என்றம்பியொன்றும் வித்தியாசநி
னைக்காமலும் நாமெல்லோரும் ஓரிடத்திலேயே கும்பாக
யிருப்பது உத்தமமல்லவென்றும் தேட்டத்தின் பேரில்
நாட்டம்வைத்துத் தேசஞ்செல்லலென்னும் வாக்கியப் ப
டிக்கும் தம்பிமாரெட்டுபேர்களைச் சொர்க்கத்திற் கனுப்
பி அந்த ஊர்வளம்-நீர்வளம்-நிலவளம் - தலவளமுதலிய
யாவுமறிந்து உனக்கும்-நல்லயிடம் பார்த்து வைக்கும்ப
டிக்கு தம்பிமாரைப் போக்கி வைக்கிறேனென்று ஆக்ர
மித்து அந்த அம்புகளைத் தாக்கினான் வீமசேனன் இப்ப
டியாகச்சொல்லிவிடுத்த எட்டுப்பாணங்களுந் துரியோத
னனுக்கெதிரில் அவன்தம்பிமார் எட்டுப்பேர்களின் கழு
த்தறுபட்டு தலைகட்டு-உயிர்விட்டு-நிலைகெட்டு-விழுந்தார்
கள் இப்படிக்கு வீமசேனனால் முடிந்த சுந்தரன், விசால
க்கண்ணன், வீரவாசி வெந்துண்டன், மகோதரன், மகா
விந்தன் அந்தணன், ஆதித்தகேது, இந்த யெட்டுப் பேர்
களினுடைய தலைகளானது உயிருடனாகாயத்திலெழுந்
து செல்லவும் கைப்பிடித்த வில்லுடன் உடல் பூமியில்
விழுந்து துள்ளவும் அதைக்கண்டு மன்னர்மன்னனாகிய
வணங்காமுடியுடையோன், தேர்விட்டிறங்கித் தம்பியரு
டலைத்தழுவியழுதுஉள்ளுடைந்துஉரனழிந்து,உயிர்சோர்
ந்து, உபசாரத்தாற் றேறி இரதமேறி குருகுலக் கோமா
னாகிய வீஷ்டுமர் நின்றயிடத்தை நோக்கிச்சென்று செங்
கமலம்போன்ற அவருடைய திருவடியிற் றனது திகழ்
முடிசூடி தேம்பித்தேம்பி யழுது என்தேவனே, உமதுத
ந்தையாகிய சந்தனுமகாராஜ னிமித்தத்தில் சிறியதாயெ
ன்னும் பரிமளகந்தியம்மாள் பெற்ற பாலன்விசித்ர வீரி
யமகாராஜனாகிய தம்பிக்குப் பட்டாபிஷேக பாக்கியமெ
ல்லாங் கொடுத்தருளிய புண்ணியனேபாரமார்த்தியனே
என்பாட்டனே-எனக்குத் தெய்வமும்-தேசிகனும்-செல்
வமும்-சீருந்-தாயுந்-தந்தையும்-நீயே-என்று-நிசமாக நம்
பி சத்துருக்களைச்செயித்துச் சகலவாழ்வும் பெறலாமெ
ன்றிருந்தேன்-ஐயா-என் கண்ணுக் கெதிரே எட்டுப்பேர்
தம்பியர்களை இவ்வுலகத்தைவிட்டு அவ்வுலகத்திற்குக் கு
டியாக்கினான் இடும்பி கொழுநனென்னும் வீமசேனன்,
மன்குலத்துதித்த என்குலத்தெய்வமே இந்தப்போர்முக
த்திற் றேவரீர் சேனாபதியாயிருப்பதினால் எனக்கும் என்
தம்பிமார்முதலிய கும்புகளுக்கும் சாவென்பதுவே இல்
லையென்று தயிரியமாய்த் திடங்கொண் டிருந்தேன்; தா
ஷ்டீகமாகிய வீஷ்டுமனென்னுந் தன்யனேயென்று சித்தி
ரப்பாவைபோற் றேகநிலைத்து மெய்யுணர் வழிந்து விச
னமேலிட்டு கடலிடத்திருந்து முத்தாக னுதிருந் தன்மை
போற் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீருகுத்து
மண்ணைத்துழாவி மதிமயக்கங் கொண்டு மதிகுல மன்ன
னாகிய துரியோதனன் வாடியதை வீஷ்டுமர் கண்டு வல
துகரத்தாலணைத்தெடுத்து மண்ணைத்துடைத்து வாட்ட
நீக்கி மன்னனே-நீர்-இதற்காகக் கொஞ்சமேனும் விசன
ப்படாதீர் என்பேரனாகிய குருகுலச் சிந்தாமணியே கே
ளும் உத்தம க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவர்கள் பெறவே
ண்டிய செல்வம் ஒன்றுண்டதாவது படையெடுத்தும்ப
கைத்துவருஞ் சத்துருக்கள் பலங்குன்றி உதிரஞ்சிந்தி
மறைவிலொன்றி அப்பா இப்போது பிராணன் தப்பிப்
பிழைத்தோம் என்று புறமுதுகிட்டு ஓடும்படியாய் மே
லாகிய அஸ்திரபாணங்களினாலு மிலைபாகிய வேலாயுதங்
களினாலும் முத்தலைபாகிய சூலாயுதங்களினாலும் சாணை
பிடித்த வாளாயுதங்களினாலும் ஜெயித்து மிகுந்தஜெயத்
தைப்பெற்றுப் புகழ்பெறத்தக்கது-அப்படி வெற்றி பெ
றுவதற்கு தைரியம்விட்டு வாடாமல் தானையுடன் போ
ரைவிட்டோடாமல் திடதீரனாகச்சண்டைசெய்து நின்று
வீரர்கரங்களால் தொடுத்துவிடுஞ் சரங்களால்-உரம்வே
று-சிரம்வேறு-காய்கள் வேறு-உடலுங் குடலும் வேறு
வேறாய் தாளுந் தோளுந் தாறுமாறாய் மூன்காயம்வாங்கி
எவர்களுங்காண முனைமுகத்தில் விழுந்துகிடக்கப் பெறு
ம்பேறாகிய செல்வமே-புகட்சிகுன்றாப் பெருஞ் செல்வ
ம் மற்றச் செல்வமெல்லாம் இகட்சி மறையாக் கொடுஞ்
செல்வம் இறைவர்க்கிறையாகிய என்பேரனே இன்னுங்
கேளும் இல்லாதபெருமைகளை இருக்கவிளக்குந் திரவி
யத்தை விசேஷித்துப்பெற்ற மாந்தர் எல்லா இன்பங்க
ளையும் அநுபவிப்பதற்குப் பயப்பட மாட்டார்கள் வழித்
துணையாகிவரும் மேலாகிய தர்மத்தைச் செய்வதற்கும்
பயப்படமாட்டார்கள் இதன்றியும்-கொலை-களவு-கள்-கா
மங்-கோபம்-பாவம்-லோபம்-மாறு பாடு-வல்லபம்-போ
க்கிரியாட்டம்-லட்சயமற்ற டம்பாசாரம் பெரியோர்முத
லிய உரியோரையிகழ்ந்து பேசுந் துற்குணம் இவைகண்
முதலிய பொல்லாங்கு செய்வதற்கும் பயப்படமாட்டா
ர்கள், (அதேனப்படி புண்ணியவசத்தாற் பொருள்கிடை
த்திருந்தும், தெளிவினால் அருளைப் பெறாமல் மருளைப்
பெற்று மதிமயங்குவானேனென்றால்) மூங்கிலைமேற்கா
ணிமிகுது மேற்கிழ்தன்னை, யிந்திரனு யெண்ணிவிடு மெ
ன்றும் பொருளிலார்க்கிவ்வுலக மில்லையென்றும், பொ
ருளல்லவரைப் பொருளாகச் செய்யுமென்றும், பொரு
ளென்னும் பொய்யாவிளக்கென்றும், இருந்தனம்படை
த்த மாந்தரின்பழு மரனு மஞ்சாரென்றும், செல்வம்வந்
துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணாரென்றும், செல்
வமது சேரிலோ வேங்கிபேர் வேங்கனுமென்றும் அறிவி

ல்லாத ஆற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோவென்றும், பொன்னுலகக் காணியினாற் புரந்தரன் புன்கணுறுனென்றும், தனமெச்சனு மதமிச்சனுவென்றும், தான்கிடந்தவிடையும், வலியன் குத்தும் வணிகன்வீட்டில் தவிடுவாங்கித்தின்ற நிலையுமறந்து பொன்னைக்கண்டு பொங்கினோர்க்குப்போமே வாழ்வென்றும் கர்வத்திற்கு முதற்காரணமாகிய திரவியம் வரும்போது இல்லாத சிற்குணத்தைக்காட்டிக் கூடப்பிறந்த பேர்களையுமோட்டிவிட்டு மதமாகிய துணைவனைக் கூட்டிக்கொண்டு வருமென்றும், இதன்றியும் மூத்தவளாகிய மூதேவிக்குப் பஞ்சகோசனென்று ஒருபிள்ளையுண்டு அந்தப்பிள்ளையானவன், சின்னம்மாளாகிய லட்சுமியினிடத்தில் வளர்ந்துகொண்டு வருவான் சின்னம்மா ளானவள் ஒருவருக்கு அருள்செய்து செல்வந்தருவிக்குங்காலத்தில் மேற்சொல்லிய பஞ்சகோசனுங் கூடப்போய் சின்னம்மாள் தயைசெய்த மனிதனுடைய தோளிலேறிக் கொண்டு தனது பஞ்சகோசத்தையும் பிடித்து அவனுடைய இரண்டுகண்களி லிரண்டுகோசமும் இரண்டுகாதி லிரண்டு கோசமும் வாயிலொருகோசமும்வைத்து அடைத்து விடுவான் ஆகலால் செல்வம் வந்தவர் களுக்குக் கண்ணுந் தெரியாமற் காதுங்கேளாமல் வாயும் பேசாமலிருப்பதென்றும் முன்னூன்முதலிய நன்னூலினும் மற்றென்னூலினுஞ் சொல்லியிருப்பதினால் அந்தப் பணக்கொழுப்பைப்பற்றி பாவபுண்ணிய மெண்ணிப் பார்த்துப் பயப்படமாட்டார்களென்பது கருத்து ஆனால் உலகமெல்லாமிப்படிதானோவென்றால் அடக்கம் அமரருளுய்க்குமென்னும் நீதியின்படிக்கும் சக்கரச்செல்வம்பெறினும் விழுமையோரொக்காலுஞ் சொல்லார், மிகுதிச்சொல் லென்னும் நீதியின்படிக்கும் செல்வப்பொருளுங் கல்விப்பொருளுஞ் சீர்பெறப்பெற்ற சீமானாகிய சத்தியநன்னெறியுந் தருமமுமுடைய கர்வமில்லாத உத்தமர்கள்சிலருண்டாயிருப்பரென்றும் ஒருவாறாகச்சொல்லவேண்டியதே மேலும் மேன்பாடாகிய நல்லறத்திற்குத் துணையாகும் இல்லறவாழ்க்கையை யுடையவர்கள் எத்தனைபேர் விருந்தினர் வந்தாலும் உபசரித்து அன்னம் ஊட்டிவைப்பதற்குப்பயப்படமாட்டார்கள் அரசனே இல்லறத்தானென்றுரைக்காமல் மேன்பாடாகிய இல்லறத்தானென்று விசேஷப்படுத்திச்சொல்லியது யாதெனில், பெரியாரைப்பேணல் அதிசத்காரஞ்செய்தலென்னும் நற்குண நற்செய்கை வாய்ந்த பதிவிரதையும் அந்தப் பத்தினிக்கிசைந்த புத்தியையுடைய நாயகனு மமைந்து இவர்க ளிருவருங் கூடி வாழ்கின்ற மனைவாழ்க் கையைப் பற்றி மேன்படவாழுமில்லோரென்றார்.

குறள்-இல்லதெனில் லவன்மாண்பானா லுள்ளதென் இல்லவண்மாணாக்கடை, மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை பெண்ணிற்பெருந்தக்க யாவுள்கற்பென்னுந் திண்மையுண்டாகப்பெறின், சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர் நிறைகாக்குங்காப்பேதலை. இப்படிக்குச் சொல்லிய திருமறைநீதியின்கருத் தென்னவென்றால்-பெண்சாதி நற்குண நற்செய்கையுடைத்தாய் தன்னையுங்காத்து தலைவனையுங்காத்து வாழ்க்கைத்துணை நலமா யிருப்பளாகில் அந்தலட்சுமியிருக்கும் வீட்டில் எல்லாப் பாக்கியங்களு நிறைந்திருக்கும், நற்குண நற்செய்கை யில்லாமல் துற்குணந் துற்செய்கை யுடையவளா யிருப்ப ளாகில் அந்த மூதேவியிருக்கும் வீட்டில் எல்லாப் பாக்கியங்களுஞ் சுரக்கத்தக்கதா யிருந்தாலும் பசையற்ற எலும்பினை யுடைய சுடுகாட்டுக்கொப்பாய் வசைபெற்றிருக்கும் அவளைக்கூடிவாழும் நாயகனுக்கு ஏதொருபலனுங் கைகூடிவாராது துன்பமேவிளையு மல்லது இன்பமென்ப திராது துற்குணமென்பது யாதென்னில் எறியென்றெதிர் நிற்பாள் கூற்பதினாலும் வலிகடந்தமாற்ற முனைக்குமேல் வில்லம் புதிகிடந்த தூறாய்விடு மென்பதினாலும் புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை, யிகழ்வார் முன்னேறுபோற் பீடுநடையென்பதினாலும், ஐயருக்கமுது படையென்று வந்தாய் நீயும் ஆண்பிள்ளையென்றெண்ணவோ வென்றுரைக்கும் பலநூல்களினாலும், துற்குணங்க ளின்னதென் றறிந்து கொள்ளவும். கற்புடைத்து அன்பு முடித்தென்பதினாலும் அடிசிற்கினியாளே யென்பதினாலும் மேற்கூறிய நன்னீதிகளினாலும் நற்குணங்க ளின்னதென்றறிந்துகொள்ளவும், புண்ணியவானுக்குப் பெண்டுவாய்க்கும் பாக்கியவானுக்குப் பாலன் வாய்க்குமென்றும், தாரம்வாய்த்தது வள்ளுவர்க்குத் தம்பிவாய்த்தது ராமருக் கென்று சொல்லும் பழமொழியாலும் பொல்லாப்பெண்டினைப் படைத்தவர்களுக்கு இல்லறதர்மம் பொருட்படாதென்றும் விருந்தினர்வந்தாற் றள்ளிக் கதவைச் சாத்துவார்களென்றும் நல்லமனைவியைப் படைத்தவர் களுக்கு இல்லறதர்ம மிசையுமென்றும் இத்தன்மை யாகிய தருமபத்தினியைப் படைத்திருக்கு மவர்கள் வாழ்கிற வாழ்வே மேன்பாடாகிய இல்லற வாழ்வென்று விளம்பியது மேலும் விருந்தினரென்பது யாதெனின், இவ்வுலகத்தில் அண்ணன் றம்பி அத்தான்-மச்சான்-மாமன் முதலியபேர்களை விருந்தினரென்று சொல்லுகிறார்கள் இவர்க ளெல்லாம் நமக்குச் சமதையானபேர்கள்-சமபந்தியாய்ப் புசிப்பவர்கள்-சம்பந்தமாகக் கலந்திருப்பவர்கள்- ஆகையால் இவர்களைவிருந்தினரென்றுரைத்தால் பிச்சைக்காரனென்னும் பொருளைத்தரும் அப்படிசொல்லப்படாது பின்னையாரைவிருந்தாளியென்னவேண்டுமென்னில் அன்னமிடுங்களென்று கேட்டுவருகின்றஆதுலர்-அதிதி- அப்யாகதி முதலியபாடிபரதேசி கூன்-குருடு-ஊமை-செவுடுமொண்டி-சப்பாணி-ஏழைகள்-இவர்கள்தான் இல்லறத்தானுக்கு விருந்தினரென்றுமேலோர் மொழிந்திருக்கின்றார்கள், அதற்குகாரணம், செல்விருந்தோம்பி வருவிருந்துபார்த்திருப்பர்-நல்விருந்துவானத்தவர்க்கு, ஆகையால்இந்தத்தர்மங்களைநீரறிந்துகொள்ளும் அரசனே மேலும், ஜீவன்முத்தாளாகியதத்வக்ஞானிகள் வினைப்போகத்தையநுபவிப்பதற்குநரிக்குச்சோறாகிய உடற்சுமைக்குபிறப்புவருமேயென்று பயப்படமாட்டார்கள் அதேனெனில்விக்ஞானவந்தாளாகியமேதாமேதையோராகையால் இனிப்பிறப்பில்லையென்னுந்திடங்கொண்டுபயப்படாரென்பது ஈதமின்

துகொள்ளுங்கோவே,இதன்றியும் ஒற்றைக்காலிலிருந்து
ந-தலைகீழாயிருந்தும்-சலத்தின் மூழ்கியும் பஞ்சாக்கினிம
த்தியிலின்றும் உடலபிமானநீற்று- உபாதியில்லாமல் எ
த்தனை விக்கினம் வந்தபோதிலும் நிலைதப்பாதிருந்து தவ
ஞ்செய்வதற்கு முனிஸ்வரர்கள் பயப்பட மாட்டார்கள்)
அதேதெனெனில் காரியமே கண்ணுனவர்களாகையால் பர
ப்பிர்ம்மத்தின்பேரானந்தநிலையி னின்றவரொன்றறிந்துகொ
ள்ளும் நிருபரோறே) க்ஷத்திரியகுலத்திற் பிறந்த உத்தம
ர்கள் எத்தனை அபஜெயம் வாய்த்தபோதிலும் சாவுக்கும்
பிழைப்புக்குந் தளராமல் ஒட்டியுத்தம் பண்ணுவதற்கு
ப்பயப்படமாட்டார்கள் அதேதெனெனில் ஜெயம் பெற்று
லும்-புகழுண்டு அபஜெயம்பெற் றிறந்தாலும் வீரசொர்
க்கமுண்டென்பது கருத்து இதன்றியுந் திகழியில்லாச்செ
ல்வமே இவைகளெல்லாம் பெரிதல்ல-இன்னொரு காரிய
ஞ்சொல்லுகிறேன்என்குலக்கொழுந்தாகிய இறைவனே
நான் சொல்லும்படியாகிய வாக்கியம் உன்னுடைய இர
ண்டுகாதும் ஏற்றுக்கொள்ளாதாயினும் அயிந்தொன்றறி
யாதெனினும் முறுகியுழையிருந்தான் கூறல்கடனென்று
நான்சொல்லவேண்டிய கடமையும்-முறைமையும்- தர்ம
முமிருப்பதினுற் சொல்லுகிறேன் அதாவது - பூர்வத்தில்
அரசாட்சி செய்துகொண்டுவந்த இக்குலத் தரசர்களினு
ம் முக்குலத்தரசர்களிலும் எவரோனு முறைதப்பி நடந்த
வர்களல்லது நடத்தினவர்களுண்டோ மூர்த்தன்யனாகிய
முதல்வனே அப்படியிருக்க விதிவிலக்குக்கு விலக்காகி
யகருமங்களை நடத்தியிருக்கின்றனை அஃதியாதெனிலோ
பலதேசத்தரசர்களும் பங்காளிகள்முதலிய பலபாஷைம
ன்னர்களும் உனக்குப் பின்னருமாகிய தம்பியரும் நெரு
ங்கி நிறைந்து நிமிட்கரித்திருக்கும் ராஜசபையில் குற்றம
ற்ற அருந்ததியாகிய குந்திமைந்தர் மனைவியை குருகுல்
பதியாகிய கோவேந்தன்மருமகளை குவலயமெல்லாம் வ
ணங்க வணங்காமுடிபெற்ற குருகுலாத குலவதிபதிமன்
னன் துரியோதன மகாராஜனென்னும் விற்பன்ன குண
வானுகிய உனக்குத்தாய்போன்ற அண்ணியையிழுத்துவ
ந்து நிறுத்தி அலமலங்கவலைத்து வஸ்திரபங்கஞ் செய்த
காலத்தில் அந்தப்புண்யசாலியினுடைய வயிறெரிந்து அ
வளாழுத அக்கினிச்சலமானது நமது ராஜசபையில் விழு
ந்ததே அந்தக்கண்ணீர் இறுமாக்கிரமா செய்யும் அரச
னே இன்னமெங்கே கண்டாய் தேருக்குள்ள சிங்காரம்
முன்னும் பின்னு மிருக்குது இப்போது யென்ன முடிந்
தது ஒன்றுமில்லை ஒருமொந்தைத்தண்ணீர் போச்சுது -
இன்னமொருமிடா தண்ணீரிருக்குது முதல்வனே இன்
னமநேகம் விளையப்போகுது நீ என்னநினைக்கிறுய் வாய்
வைப்போற்பறக்குங் குதிரைபூட்டிய தேரோட்டி நடத்துங்
கொடைக்கதிகாரியாகிய கன்னனும் மதப்பெருக்கங்கொ
ண்ட பட்டத்துயானை யேறிவரும் மதிபூதியாகிய சகுனி
மாமனும் இளவரசாகிச் சகலகேள்விகளுங் கேட்டுணர்ந்
த உன்றம்பி துச்சாதனனும் எல்லாத்திற்கும் பெருந்த
லையாய்க் கனவானுயிருக்கிற நீயும் நீங்கள் நாலுபேரும்
யோசித்துக்கொண்டிருக்கும் உங்களெண்ணங்களெல்லா
ம்காலக்கிரமத்தில் முடியப்போகுது கஷ்டியில்லாமற் கைவல்

யமாம்-காவலனே-ஆனல் உனக்குச் சிறியதந்தையாகிய
விதுரன் அவனுக்குஅண்ணன்பிள்ளையாகிய நீ-மரியாதை
யில்லாமற்சொன்ன கொடுஞ் சொல்லைக்கேட்டுச் சகிக்க
மாட்டாமல்வில்லையொடித்தெறிந்துமனம்ரோசி விரகத்த
னுகப் போய்விட்டான் அஃதல்லாமலும் கர்ணனுனவன்
நானிறந்துபோனபிற்பாடு தானே அதிரதத்தலைவனுகி யு
த்தஞ்செய்வதன்றி இதன்மத்தியிற் போர்புரியேனென்று
சபதம்பேசி நான்சாகிறவரைக்கும் எதிர்பார்த்துக்கொண்
டு பாசறையி லிருக்கின்றுன் பலங்கொண்ட அங்கதேசத்
தலைவனுகிய-அகரித்திரன் ஆகையால் நமக் குரியவர்கள்,
வேறே ஆரிருக்கின்றுர்கள் அப்பனே இப்போது மேலி
ட்டுப்போர்செய்யும் விஜயனும்-வீமனும் வெருண்டெழு
ந்துவந்த காலத்தில், எதிரிலிருக்கும் உன்னையும் என்னை
யும் விட்டு விட்டு வேறுலக்ஷியம் வைக்க மாட்டார்கள்,
வேந்தனே சத்தியமேரித்தியங் தர்மமே ஜெயமென்று வ
ளர்த்துவரும் நீதியையுடைய பொய்யில்லா மெய்யைப்
பெற்ற தருமதேவதையும் அவடத்திலிருக்கின்றுர் - அந்
தத்தருமத்திற்குஞ் சத்தியத்திற்குந் துணைக்காரணமாகிய
துலவணிமணிமாலையணிந்த-திருநெடுமாலும் அவடத்தி
லிருக்கின்றுர், வெற்றி பெறுவதற்கு முதன்மை யாகிய
பொருளிரண்டும் அவர்களிடத்திற் குடிகொண்டிருப்பதி
னுல், இந்தயுத்தரங்கத்திற்றப்பி-உயிர்பெற்றிருந்து வாழ்
பவர்கள பாண்டவர்களென்றும் இவடத்தில் வருந்தி ய
ழிந்து மாய்ந்து போகின்றவர்கள்மற்றவர்களென்றுந்தெ
ரிந்துகொள்ளு மஹாராஜனே, நானிப்போதுமக்குச்சொ
ல்லிய வாக்கின்வண்ணம் ஜீவன்முத்தராகவும் சிரஞ்சீவி
களாகவுமிருக்கப்போற புண்ணியவான்களெவர்களோ அ
வர்கள்காண்பார்கள்-அப்பனே-அப்படியிருக்க உன்தம்பி
மார்கள் இப்போதிறந்ததைக்குறித்து விசனப்படுகின்று
ய்-உன்றம்பிமாரை யிறக்கச்செய்து இவடத்திலினித் தப்
பிப்பிழைத்திருக்க நினைத்தவர்கள்யார்-ஐயோ-பிழைப்பா
ரொருவருமில்லையே ஆதலால் துயரத்தை விட்டுவிடு க
வலைகொள்ளாதே உனக்குறுதியாகவேண்டிய காரியங்க
ளை யெடுத்துச்சொன்னேம், நீ தயிரியம்விடாதே சாகிற
வரையிலும பிழைப்போமென்பது தேகசுவாபிகமாதலா
ல் உன்மனந்தளராமல் முடுகிவந்தடிக்கும் பகைவருக்கு
முன்சென்று நின்று முனைந்து வரும்படியாகிய முனைக்
காறரை முனைமுகத்தில்வென்று ஜெயம்பெறவ தொ
ன்றல்லது அவர்களால் அபஜெயமடைந்து அழியப்போ
கிறதொன்று இவ்விரண்டைவிட வேறொன்றுமில்லை அ
திசீக்கிரத்திற் படுகவாவென்று சொல்லிப் படைமுகங்க
லங்கப் பரிபூட்டிய இரதத்தைச்செலுத்திக் கொண்டு சூ
ரியனைப்போற்றுலங்கிச்சென்றுர் வீஷ்டுமரானவர் அக்க
வேளையில் நிழலைப்பார்த்து நெடுமுச்செறிந்து கோபித்
துக் கறுவிப்பாகனை ஏவித்துக் கொற்றவர் படைகளைப்
பற்றிக்கிழிக்குங் கொடுமையையும் மதமாரிகளையுமுடை
ய களிற்றுனைகளின்பேரி லேறிக்கொண்டுவரும் ஆயிரம்
ராக்ஷசாளும் அவர்களுக்கொருதலைவனுமாக - உருவெடு
டுத்து துரியோதனராஜனுடைய பேரணிகளையெல்லாம்
தோய்ந்துறைந்தஇருட்குழம்பைப்போன்றசோணமேகத்

தைப்போல் வளைத்துக்கொண்டு ஆகாயத்தி லிருந்து ந
க்ஷத்திரங்களுதிர்வதைப்போல் மணியணிமகுடமோங்கி
ய மன்னர்முதலிய படைகளைமாய்த்து வந்தான் கடோற்
கஜக்காளையானவன், இந்தப்பிரகாரம் இவனொருபக்கத்தி
ல் இராக்கத மாயையினாலாகிய யானைப்படைகளைக் கொ
ண்டு அழித்துவரவும் இன்னொருபக்கத்தில் நாககன்னிகு
மாரனாகிய அரவானானவன் மகாரூபத்திறத்தினால் அநே
கமாயிரம் பாம்பாகவடிவெடுத்து பாம்புக்கும் எலிக்கும்
பகையாகியதைப்போல், இருதிறப்படைகளும் எலிகள்
போலேங்கி மயங்கும்படியாய் ரணகளமெல்லாம்-பாம்பு
மயமாய்நிறைந்து துரியோதனனுடைய படைமன்னர்மு
தலிய வீரர்களெல்லாரும் உருண்டுபோகும்படியாய் பா
ணப்பிரயோகஞ்செய்து வட்டமாக அட்டகாசஞ்செய்
து ஒப்பற்ற யுத்தஞ்செய்துமடிந்தான், இவ்விடத்திலிவர்
களிந்தப்படி யுத்தஞ்செய்துக்கொண்டிருக்க நந்தியாவட்
டமாலையணிந்த நரேந்திரனானவன் வீஷ்டுமர் கூறிய வார்
த்தைகளைக்கேட்டு உடல்பதறி உயிருளைந்து உரக்குன்றி
உயிர்ச்சுத்தின்மேல் அம்பிவிருந்த உபத்திரம்போல்வரு
ந்தி ஒருவருடனொன்றுஞ் சொல்லாமல் வீமசேனனுக்
கெதிரிற்சென்று மிகுபோர்விளைத்து அவன்விட்ட கணை
யாற்றுளைப்புண்டு யிளைத்து அயர்ந்த காலத்தில் வீமசே
னன்வெகுண்டு ஒருபுறத்தினுழைந்து இன்று பகற்போ
தைக்குள்ளாக எவரையும் வென்று முடிக்கிறேனென்று
சமுத்திரத்தைக் கலக்கிடுக்கலக்குந் தாளாண்மை யுடை
யவனைப்போற் றலக்கலங்கித்தத்தளிக்க யுத்தஞ் செய்து
வருங்காலத்தில் பப்பரதேசாதிபன் பிள்ளையாகிய மகுட
வேந்தன் பல பெரும்படையுடன் கூடிவந்து வீமனுட
னெதிர்த்து, கடும்போர் புரிந்து இடும்பன் பகைவனு வி
ளைத்தோடிப்போனான் அப்படி யோடினவனைக்கண்டு ப
காசுரன் தம்பியாகிய அலம்புதனானவன் நெடிய கோபங்
கொண்டு துரியோதனமகாராஜன்முதலிய இராக்கதர்சே
னைகளைநோக்கி, பூர்வத்தில், ஏகசக்ரபுரத்திலிருந்த என்
தமயனாகிய பகாசுரனை தருமனுக் கிளையவீமன் கொன்றி
ருக்கின்றான், அந்தப்பழிக்குப்பழி இவனுடையவுடலைநா
ன் பிளக்கிறேனென்று உறுதியாகச்சொல்லி அரக்கப் ப
டைகள் உரக்கக்கூவிக்கொண்டு வரும்படியாய் வீமசே
னனுக்கெதிரில் வெகுண்டோடிவந்து மழைச்சகாலத்தில்
மின்னலுடன்கூடிய மேகத்தைப்போல தான்கொண்டப
ல்லுருவத்துடன்வந்து தகைந்துஜாடினான் அரவானானவ
ன், அந்த அரவானடித்த அடியினால் துரியோதனனுக்கு
த் துணைபட்டுவந்தஅலம்புதன்வருந்தி, அவதிப்பட்டோ
ட, அவனைச்சேர்ந்த அரக்கப்படைகளெல்லாரும் சிரக்
கம்பஞ்செய்து அரவானைவளைத்துப் போர் புரியாநின்ற
அக்கருணத்தில் அரவானாலடிபட்டோடிய அலம்புதனா
னவன் மறுபடியுமெதிர்த்துவந்து பழுதாற குலத்துதித்
த பாம்பின்குமாரனெடுத்த பாம்பாகிய பல்லுருவங்களு
டன்பகைத்துப்போர்புரிந்து அரவானெடுத்த மாயரூபத்
தை வெல்ல வல்லபமில்லாமல் அஞ்சிநடுங்கி அபயமி
ட்டோடினான் இந்தப்பிரகாரம் பலவிதத்திலும் அடிபட்டு
ஒடுங்கிபோடிய அலம்புதனென்னுமிராக்கதனானவன் த
னக்குள்த்தானேயோசித்துஇந்த அரவான்மாயையினைப்ப
லகோடி பாம்புருவெடுத்துவந்து யுத்தம்பண்ணுகின்றா
னென்றுணர்ந்துஇந்தப்பாம்புகளைக்கொல்லும்படியாகிய
அநேகங்கருடரூபமெடுத்துவெப்பமாகிய வேகத்துடன்வி
ண்ணெலாநிறைந்துமேககர்ச்சிதம்போலிரைந்து விரைந்
துவந்து வட்டமிட்டுப் பறந்துமிழலைப்பரப்பிறக்கைகளா
ற்றினால்மோதியடித்துக் கால்களினாலுராஞ்சிய போது
கொடிய விஷங்களைக்கக்கிக்கோரப்பற்களினாற் கடித்துச்
சேனைகளைக்கொன்று திரியும் புன்மலைப்பாம்புகளெல்லா
ம் திறுதிறு விறுவி அவென்றலறுமன்று கருகலுத்து எரிக்
துரிந்து பொரிந்துபடம்விரிந்துவிடஞ்சொரிந்துமேனிதி
ரைந்து ஒன்றுக்குள் ஒன்றடங்கும்பஞ்சபூதங்களைப்போ
லொடுங்கிமாயை யடங்கிப்பாம்பு கும்பெல்லா மடங்கிப்
போக அரவானொருவன்மாத்திரம் அசைவற்று மிகுந்தப
யங்கரநடுக்கத்துடனின்றான், அப்படி அடங்கிநிற்கும்அ
ரவானை எதிரியாகிய அலம்புதன்கண்டு கூர்மைகொண்ட
வாளாயுதத்தைக்கைக்கொண்டுவீசி அரவானைக்கொன்றா
ன், அந்த அலம்புதன் அரவானைவெட்டியவுடனே குரு
குலாதிபன் முதலிய அக்ரோணிசேனைகளெல்லாம் வெ
ன்றோம்வென்றோமென்று கும்பிபாடிக்கொண்டாடித்
துகுரவை கூத்தாடிக்கூவிதொந்தொந்தொந்தோமென்று
ஆடிசந்தினைக்கண்ட சமுத்திரமுழக்கம் போலிரைந்தார்
கள்,இந்தந்துரியோதனன் படைகள் செயித்துசந்தோஷ
த்தை யடைந்தபோதிலும் அரவானானவன் அன்றை
த்தினஞ் செய்தமாயாயுத்தம் போற்செய்ய வல்லவர்
கள்யார் அந்த யுத்த வல்லபத்தை எம்மனோராற் சொ
ல்லுந்தரமன்று.

ஈதிப்படியிருக்ககனுங்கள்வெடித்தோடிவரும் கரும்பி
ன் ரசங்களினால்நெற்பயிர் விளையும்நிலவளஞ்சேர்ந்தபா
ஞ்சால நாட்டார்பலரும் துரோணாச்சாரியரும் அசுபத்
தாமனும் காலமேதொடங்கிய போர்முனை குலையாமற்க
டுங்கோபத்துடன் போராடிப் பாஞ்சாலரில் வெகுபேர்
பட்டழியும்படியாய்ப் பாணப்பிரயோகஞ்செய்துமடித்
து மற்றப்பேர்கள்புறமுதுகிட்டோடும்படியாகஅடித்துக
ரங்களிற்கணையும் வளைந்தவில்லும் பிடித்துக்கண்செவந்
து போர்த்தலத்திற் புலிபோற்புகுந்து வந்தார்கள், அந்
தச்சமயத்தில் அலம்புதனால் அரவான் பட்டானென்று
சேதிகேட்டவுடனே பாண்டவர் பலருமனநொந்துபதை
க்க அதிமன்னு வொருவன்மாத்திரம் பிறப்பதும் இறப்ப
தும் புகழ்வதும் இகழ்வதும் பொங்குவதும் மங்குவதும்
உடற்சுமைக்குரிய பெருமையென்று தைரியத்துடன் த
மயன்மேலிருக்கும்பக்ஷத்தை தான்சொல்லிக்காட்டாமல்
தான்செய்யுந்சண்டை சொல்லிக்காட்டும்படியாய் தன
துமணித்தேரை விரைவாகச்செலுத்தச்சொல்லி வரிபொ
ருந்திய வில்லைவளைத்துக்கொண்டு அரக்கப்படைமுதலா
கிய அலம்புதன்மீதில் ஆயிரமையாயிரம் ஐம்பதுகோடி
யெண்பதுகோடியென் றிசைக்கும்படிக்கு விசையுடனி
ழுத்து வெகுபாணங்களை விதையைப்போல்விதைத்து வி
ளைவைப்போற்குதித்து மெலியச்செய்யும்போது அரக்கப்
படைகள் பசலைபட்டழிந்து அலம்புதனும் மாயவித்தை
யொழிந்து அலக்கழிந்துவாடி அரசர்முதலிய நால்வ

ப்படைகளும்கூடி அபிமன்னன்விடும் பாணம்பட்டு யுத்
தகளத்தைவிட்டுப் புறமுதுகிட் டோடினார்கள் அப்போ
துகோடில்லாவீரம்பெற்ற மாரனுக்குநேரொத்த அபிமன்
னுவானவன் சுழற்காற்றைப்போற் சுற்றியடித்துக்கொ
ண்டு வரும்போது அலம்புதனால் அரவானிறந்தானென்
னுஞ் செய்தியைக்கேட்ட வீமசேனன் இரண்டுதந்தங்க
ளுமிழந்து முரண்டு கோபங்கொண்டெழுந்துவிழுந்து அ
ழாநின்ற மும்மதம்பொழியுங்களிற்றானையைப்போல்நொ
ந்து தேகமுழுமையும் வெந்து மனதிற் செந்நீயெழுந்து
புலியமைப்புரவியிற்பற்றிய பொறிபோற் பொறிகளைச்சி
தறிச் செங்கண்சுழலச் சிம்சிங்கத்தைப்போல் நிலம்பு
தையவோடி அலம்புதனைத்தேடி வருகின்றான் அந்தவே
ளையில் துரியோதனமகாராஜன்கண்டு மிகுந்தகோபத்து
டன் யுத்தஞ்செய்யவருகின்றானென்றறிந்து வேட்டை
யாடவந்தவர்கள்பேரில் காட்டுப்பன்றி பலகும்பலைக்கூட்
டிக்கொண்டு கோரப்பல்லைக்காட்டி யெதிர்ப்பட்டாலெ
ப்படியோ அப்படிபோலத் தனது தம்பிகளையும் மன்னர்
முதலாகிய படைக்கும்புகளையுஞ்சேர்த்துக்கொண்டு பே
ரொலியுடன் ஆர்த்துச்சென்று சீறிப்புறப்பட்டான்தரா
தீபனாகிய துரியோதனன் இந்தப்பிரகாரம் விந்தகிரிக்கொ
ப்பாகிய தேர்களும் யானைகளும் படைவீரர்களும் புற்றி
லிருந்து ஈசற்பெரும்போக்குப் புறப்பட்டதைப்போல்
முன்னுதாகவந்து பொன்மலைபோன்ற வீமசேனனை வ
ளைத்துக்கொண்டு பெரும்போர்விளைத்துப் பேருக்கொரு
பாணம்விடுத்து அதிர்த்து வீமசேனனுடையவுடம்பைச்
சல்லடைக்கண்களாய்த் துளைத்தார்கள் அப்போது வீம
சேனன் அழலெழநகைத்து தழலெழவிழித்து தனுவை
வளைத்து நாணியிறுக்கி எண்ணிறந்தபாணங்களையெடுத்
துத்தொடுத்துவிழுத்து அடுத்துப்போர்புரியும் எதிரிகள்
பேரில்விடுத்து இமைக்குமுன் அவர்களைக்கெடுத்து முடி
த்தான்.

அந்தவீமசேனனால் வெகுபேரழிந்து வெகுபேரொழி
ந்து ஓடும்படியானதைத் துரியோதனனுடைய தம்பிமார்
கள்கண்டு க்ஷாத்திரங்கொண்டு சங்கார கங்கபத்திரங்க
ளை யெடுத்துத்தாக்கினார்கள், அந்தப்பகழிகளெல்லாம்நா
லுவிதவழிபாய்ப் பட்டொழியும்படியாயழித்துப் பம்பிய
நிருதிக்கணையேழெடுத்துத் தொடுத்துத் தம்பிமார்கள்
ஏழுபேரைப்படுத்தான் இந்தப்படி வீமசேனன்விடுத்த
ஏழுகணைகளினால் தர்மவாக்கியன் குண்டலபோஜன் ஆதி
யக்கன்-ஸீபகயனன்-திம்மவாகு-குண்டலதரன்-கருடத்து
ஜன் என்றுசொல்லு மேழுபேருடைய தலைகள்துள்ளி
யெழுந்து ஆகாயவீதியிற் சுழன்றுசென்றபோது அவட
த்தில் வேடிக்கைபார்த்திருந்த தேவர்களைத் தேவேந்திர
னேக்கி இந்தத்தலைகளேழும் ஒன்றின்பின்னொன்றாகவ
ருந் தன்மையைப்பார்த்தீர்களா இதற்கு உபமானமென்
னசொல்லுவீர்களென்றுகேட்க ஐயா? மேன்மையாகிய
விஜயலக்ஷ்மியானவள் கைக்கொண்டெறிந்தாடுங் கழங்
கெனச்சொல்லலாமென்றுசொல்லி இந்திரனுடன் கண்
களித்திருந்தார்கள் இப்பால் துரியோதன மகாராஜனான
வன் துயர்க்கடலில்மூழ்கி துன்பக்கரையேறி மாளாவிச
னமென்னு மலைமீதிருந்து மனத்திடங்கொண்டு தம்பிமா
ருடன் நாமுமடிந்து போவதேசத்தியமென்று சதுரங்க
பலமுந்திரண்டுவரும்படியாகத் தேரேறிவந்து வீமசேன
னுடனெதிர்த்து வெகுண்டுபோர்புரிந்தான் அப்போது
வாயுகுமாரனாகிய கேசகாரியானவன் சில அஸ்திரங்களைவி
டுத்து அவனுடையவுடலைத் துளைத்தான் அந்த அடியினா
ற்றளைத்து கண்கலங்கிநின்ற துரியோதனனைப்பார்த்து வீ
மசேனன் சொல்லுகின்றான், அடா துரியோதனா, ஜன்யா
ந்திரவினைவசத்தால் வரும்பாவபுண்ணியத்தை அனுபவி
ப்பதற்காக எடுத்த உன்னுடலானது தர்மமாகிய செல்வ
த்தைக்கூடியவரையிலும் பெற்றுவாழ்ந்த உன்னுடைய
வாழ்வு கொஞ்சங்கொஞ்சமாகக்குறைந்து வருகின்றது
ஆச்சுது இன்னங்கொஞ்சநாளையில் அனுபோகமுடியப்
போகுது அப்போது நான் நாவினால் ராஜசபையிற் கூறி
யகண்டா அவிஷதத்தை உனக்குப்பலிக்கும்படியாய் எ
ன்கதையினாற்கொடுக்கிறேன் நீ உன்றம்பிமார்களுடன்று
ணையாகப்போய்ச் சுகப்படலாம் உன்னால் இன்னங்கொ
ஞ்சம் வேலைகளிருக்குது அதனால் உன்னை இப்போதுசா
னேயனுப்பப்படாதென்று அன்பினால் நிறுத்தினேன் அ
டாவம்புசெய்தபாவி நீ பாசறைக்குப்போகலாம்போவெ
ன்று சிங்கக்கொடியையும் தங்கஸ்தம்பம்போன்ற புயத்
தையுமுடைய வீமசேனன் ஒருமாசுணக்கணையினால் சு
யோதனனேறிய தேர்குதிரை சாரதியையும்போக்கிப் பா
தசாரியாய்ப் பூமியினின்று வருந்தும்படியாக்கி ஓட்டினா
ன் அந்தமாசுணக்கணைபட்டுதன்தேகம்வருந்தி தன்படை
கள் முறிந்தோடினதைப்போல் தானும் புறந்தந்தோடினா
ன் துரியோதனமகாராஜனானவன் இந்தப்பிரகாரம் யுத்த
ஞ்செய்த அமர்க்களத்தில் மந்திரிசாமந்திரர் முதலியமன்
னவரும் நாற்படைகளும் முடிந்துவிழும் பெருக்கத்தைக்
கண்டு மதிமயக்கங்கொண்டு சாய்ந்தவனைப்போல் ஒற்
றையாழித்தேரினையுடைய அருக்கன் மேற்குத்திக்கில்வீ
ழ்ந்தான் இந்தப்படிக்குச் சூரியனஸ்தமனமாகவே செவ்
வானமு மிருளுஞ்சேர்ந்து போர்க்களம்பார்க்கப் புகுந்த
தைப்போல்வந்து மிகுந்தது இப்பால் அந்தரணகளத்தி
லழிந்த வீரமன்னர்களுடைய மகுடங்களும் இரத்னராசி
களும் ஆபரணங்களுநெருங்கி நிறைந்துகிடப்பது எப்
படியிருந்ததென்றால் தர்மதேவதையாகிய தர்மராஜன் வீ
ற்றிருந்தபோர்வென்று விஜயமடைந்து முல்லையரும்பை
ப்போன்ற பல்லையுடைய பூமிதேவியைக்கலியாணம்பண்
ணிக்கொள்ளு நிமித்தியமாகப் பரியத்திற் கொடுத்துக்கா
ட்டிய பற்பலவித ஆபரணங்களை யொத்திருந்தது மேலு
ம் யானைத்தந்தத்தினிறைந்திறைந்த முத்துகண்முதலிய
ரத்னக்கொத்துகளெல்லாம் யுத்தபூமியில் ராசிராசியாய்
க்குவித்து சிறந்திருப்பது எத்தன்மைக் கொக்குமென்றா
ல் பாணங்களினாற் பிளப்புண்டயானைகளினுடைய வீரப
ட்டமணிந்த நெற்றியென்னும் பெட்டியைத்திறந்து முத்
துக்கொத்துகளைப் பத்திபத்தியாய்வைத்திருப்பதையொ
த்திருந்தது இதன்றியும் வாளாயுதங்கொண்டு வீசியபோ
து வயிறுகிழிந்துவிழுந்த வீரர்களுடைய ஈரல்களும் ம
ணிக்குடர்களும் நாணியறுந்து நிமிர்ந்து ரொத்தவெள்ள

ப்பள்ளத்திற் கிடக்கும் வில்லுகளிற் சுற்றிக்கொண்டு பிர
காசித்திருக்குந் தோற்றமானது எத்தன்மையென்னில்
பூமிதேவியாரை வதுவைசெய்துகொள்ளும்பொருட்டில்
முரசப்பொற்கொடியுற்ற அரசர்க்குட் கெடிபெற்ற முத
ல்வன் அந்தக்கலியாணப்பெண்ணுக்குச் சூட்டுங்குணங்
கொண்ட மணமாலையையொத்திருந்தது பின்னும் வீரா
பிமானத்தாற்சிறந்த வீரர்களுடைய வீரவாளியால் வெ
ட்டுண்டிறந்த சுத்தவீரர்களின் ரெத்தவெள்ளமானது ப
லவித பள்ளக்குழிகளிலே நிற்கின்ற தன்மையானது எ
திரிகளுக்குப் பயந்தோடாமல் அவடத்திற்றானே நிலைத்
துநின்று சத்துருக்கள் தடுமாறிப் பள்ளத்தில்விழுந்தால்
உடனே பகையை முடித்துக்கொள்ளுவோமென்றிருக்
குந்தகவினைப்போலுமிருந்தது மேலும் அந்தரெத்தப்பெ
ருக்கங்களெல்லாம் அனேகமுகமாகக் கால்விட்டோடி
அலையடிக்குங்கடலிற்போய்க்கலந்தது எப்படியிருந்ததெ
ன்றால் முகூர்த்தப்பெண்ணுக்கு நலங்கிட்ட சந்தனதிசுக
ந்த களபகஸ்தூரிச் சாந்து சவ்வாது புநுகு முதலிய இ
ங்குலிகக்குழம்புகளினால்நனைந்துசிவந்தவஸ்திரத்தை நீக்
கி ஓமத்தீமுன் வந்திருப்பதற்கு நவமணிபதித்த நீலப்பு
டவையை நாடியதைப்போலுமிருந்தது இப்படியாக பூத
ப்பைசாச கணங்களுடன் நாய்நரிகளும்போராடிப் பிண
ங்களைத்தின்றுக்கொண்டு கலியாணச்சந்தடி வீட்டைப்
போலிருக்கும் போர்க்களத்தைவிட்டுப் பாசறைக்குப்
போனான் வீமசேனாலடிப்பட்டுப் புறமுதுகிட்டோடிய
காந்தாரிமைந்தன் இப்பால் மின்போலிலங்கும் வீரபாண
மும் பொன்போலிலங்கும் போர்வில்லுந்தாங்கிய வீம
சேனனுடன் குந்திமைந்தனும் தம்பியருங் கோபாலனும்
சொடிப்படைச்சேனைகளும் பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்
கள் பெரும்போரிலிறந்த மன்னர்களெல்லாருந் தென்றி
சையிலிருக்கும் எமலோகப்பாடிவீட்டி லடைந்தார்கள்,
இருண்டுகவிந்த இருளானது குருக்ஷேத்திரத்திற் குடிபு
குந்தது இப்படியிருக்க ஒருவினாடியில் இந்தப்படைகளை
முடிக்கிறேனென்று விஜயங்கூறிவந்த அரவானனவன்
மடிந்ததைக்குறித்து பாண்டவர்முதலிய ஸ்திரிஜனங்கள்
யாவரும் அழுதுவருந்தி அன்னபானதி அருந்தாமல் அ
யர்ந்து நித்திரையொழிந்து நெடுமூச்செறிந்திருக்கும் நி
லையைக்கண்டு கோவர்த்தனத்தைக் குடையாகப்பிடித்து
க் கோபாலனஞ்செய்தருளிய கோபாலனாகிய கோவிந்த
னவர் தர்மராஜன்முதலாகியதம்பிமார்களுக்கும் துரோ
பதை சுபத்திரைமுதலாகிய ஸ்திரீகளுக்குந்தைரியஞ்சொ
ல்லி நமதுபிள்ளைபோனதைக்குறித்து நாம்விசனப்பட்
டால் நமக்குத்துணைவந்தவர்கள் அவரவர்கள்பிள்ளைகளை
யுந் தம்பிதமயனையும் பறிகொடுத்திருக்கின்றார்களே அ
வர்களுக் கெவ்வளவு விசனமுண்டாகலாம் ஆகையால்
விசனத்தைக்காட்டாதீர்கள் சந்தோஷகரமாய் நாளைநட
க்கப்போகிற காரியங்களுக்கு வேண்டிய யுத்திபுத்திகளை
யோசியுங்களென்று ஒருவார்த்தைசொல்லித் தானுங்கூ
டயிருந்து சாப்பிட்டு தாசர்களுக்கு நேரிட்ட துன்பபா
சத்தைநீக்குந் தயாநிதியானவர் தானுஞ் சஞ்சலப்பட்ட
வரைப்போற் காட்டிப் பஞ்சவருடன் பஞ்சணையிற் படுத்
திருந்தார்.

துரியோதன மகாராஜனானவன் இந்த எட்டாம்போரி
லிறந்த தன்னுடைய தம்பிகளையெண்ணியெண்ணித் து
க்கப்படும்போது அந்த இறைவனைத்தேற்றி நாமேதுயர
ப்பட்டால் எதிரிகள்நகைத்துத் தனிவந்துபகைத்து மே
ல்விழுவார்கள் நமக்குத் துணைவந்த ராஜர்களெல்லாரும்
திகைத்து மனநைந்து போவார்கள், ஆதலால்-ஊக்கமது
கைவிடேலென்னும் வாக்கியப்பிரகாரம் தைரியம் விடா
மலிருக்கவேண்டும் உரககேதனனேயென்று வீஷ்மர்
துரோணர்முதலிய மேலோரெல்லாருங்கூடி விசனத்தை
யாற்றித் தேற்றிவிடுத்தார்கள், இந்தச் சங்கதிகளையெல்
லாஞ் சஞ்சயனானவன் திரிதராஷ்டிரனுக்குச் சொல்லக்
கேட்டு காந்தாரியும் காவலர் பத்தினிகளும் மற்றுமுள்ள
பேர்களும் முகத்திலறைந்து நிலத்தில்விழுந்து மூக்கைச்
சிந்தியெறிந்து மோதியடித்துக் கொள்ளும் உபத்திரம்
பொறுக்கமாட்டாமல் உலகமெய்க்க ஒப்புக்கு அழுவந்த
உடம்பைவருத்தாத உத்தமியானவள் தலைமயிரைச் சுரு
ட்டி முடித்துக்கொண்டு சாளரக்கதவுகளைத் திறந்துவிட்
டு ஜாடையாய் நழுவிப்போந் தன்மையைப்போல் கிழக்
கு வெளுக்கப்பார்த்து அடிகெட்டேனென்று இருட்டா
கிய பெண்ணானவளோட அந்தச் சமயத்தில் புத்திசாலி
யாகிய விவேகவிற்பனன் (ஆண்டாண்டுகோடி அழுதுபு
ரண்டாலும் - மாண்டார்வருவரோ மாநிலத்தில்) வேண்
டாஞ் சும்மாயிருங்களென்று சுடர்முகங்காட்டிச் சொல்
லவந்தவனைப்போல் சூரியபகவான் கிழ்த்திசையிற்றோன்
றினான், சூதகுமாரனாகிய சஞ்சயனும் படிகளம்வந்து சே
ர்ந்தான்.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்
பாயனர் சொல்லிக்கொண்டுவந்தார்இந்தவிர்த்தாந்தத்தை
த் தம்பதி சமேதராகக்கேட்டு சகலவித வுபசாரத் துடன்
தன்னுடைய கர்மந்தீரும்படியாய் தானந் தியாகம் ஓமமு
தலாகிய மங்களஸ்நானம் யாவும் மாதவர்களுக்குச்செய்
வித்து மேனடந்த ஒன்பதாவது யுத்தத்தையுஞ்சொல்ல
வேண்டும் என்னுயிர்த்துணையாகிய உயர்ந்தோனே என்
று ஜெனமேஜெயமகாராஜன் வணங்கினார்.

இந்த எட்டாம்போரிலிறந்த துரியோதனனுடைய த
ம்பிமார்களின் பெயர்கள்.

சுந்தரன்	தர்ம்மவாக்கியன்
விசாலக்கண்ணன்	குண்டலபோஜன்
வீரவாசி	ஆதியக்கன்
வெண்துண்டன்	தீபநயனன்
மகோதரன்	திம்மவாகு
மாகவிந்தன்	குண்டலதரன்
அந்தனன்	கருடத்துஜன்
ஆதித்தகேது	ஆ-௰௫.

ஆ மொத்தம்-௰௯-பேரென்றறியவும்.

ஒன்பதாம்போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி-விருத்தம்.

போரறுமுழ்கி மறைநாலுணர்ந்து பெருவேள்விசெய்
துபிறவித், தூராறுமாறு நினையாமல்வேறு தொழிலேபு
ரிந்தசுமடீர், ஓராறுபேத சமயங்களுக்கு முருவாகின்ற

வொருவன், ஈராறுநாம முறைசெய்துமண்கொ டிடுவார்மெய்காணுமிமையோர்...... .. ..*

எ-து. பெருகிவராநின்ற திவ்ய நதிகளில் மூழ்கியும்-நான்குவேதங்களைப் பூரணமாக உணர்ந்தும் - அவ்வேதமந்திரங்களைத் துணையாகக் கொண்டு அருமையாகிய யாகாதி கிருதுகளைச்செய்தும் பிறவிமூல மாகிய வேரைப்போக்கிக்கொள்ள வகையறியாமலும் தெரியாமலும் வழிபொருளறியாமலும் அப்பொருளையறிந்து சிந்தனைசெய்யாமலும் - வேறு வேறாகிய சில்லறைத் தொழில்களைச்செய்து தாறுமாறாகிய போக பாக்கியங்களை விரும்பி அவத்திற்காலங்கழிக்கும் பவத்தினையுடைய சமயமொன்றுங் கிழ்மக்களே - நீங்கள் சுகப்படும்படியாய் ஒருசூக்ஷியிருக்குது அதாவது நரைதிரை மூப்புமுதலிய பிறவித்துன்பங்களில்லாமல் சொர்க்காதிபோகத்தைக் கர்ப்பகநிழலி லிருந்து அனுபவிக்கும் இமயவரொன்று சொல்லுகிறார்களே அவர்கள் யார் உங்களுக்குத் தெரியுமா நான் சொல்லுகிறேன் கேளுங்கள் அந்தத்தேவர்கள் யாரெனில் பலவித பேதமாகிய வைரவம்-வாமம்-காளாமுகம்-மாவிரதம் பாசுபதம்-சைவம்-என்றுசொல்லிய உட்சமயம்-ஆறுக்கும் உலகாயுதம் புத்தம்-சமணம் மீமாஞ்சை - பாஞ்சராத்திரம்-பாட்டாசாரியம்-என் றியம்பும் புறச்சமயம்-ஆறுக்கும் உரியகடவுளாக உருக்கொண்டு அவ்வவர்கள் நினைத்தபேற்றை அநுக்ரகஞ் செய்வதற்குத் தானே தலைவனென்று ப்ரத்தியக்ஷமாக மோக்ஷமளிக்கும் படியாய் நின்ற ஒருவன் இத்தன்மையாக நிறைந் துறைந்த ஒப்பற்றகடவுளினுடைய துவாதச திருநாமங்களை நாற்றம்பெறப்புகன்று திருமண் ஸ்ரீசூர்ணமுதலியவற்றைத் தேகமிரம்ப வணிந்துகொண் டிருப்பதினாற் றிவ்யகாந்திபெற்ற பரிசுத்த யிர்தயவான்களாகிய பாகவதரெவர்களோ அவர்கள்தான் இமையாநாட்டத் தவர்களாகியதேவர்கள் ஆகையால் அறுசமயக் கடவுளாயும் துவாதசநாமச் சுதந்தரராயும்பொருந்திய சுவாமியினது திருவடிகளைச்சிந்தித்து ஓம்-அரிநமோ நாராயணாவென்று சிந்திப்பீர்களாகில் ஜனனவே ரறுந்துபோம் ஆதலால் இந்த உபாயத்தைவிடாதிர்கள் விடாதிர்களென்று திருவாய்மலர்ந்த திருமாலடியவருடைய அடியிணைகளைச் சிரத்திற்சூடிக்கொண்டு ஒன்பதாம்போரைச் சொல்லுகிறேன்கேளும் ஜெனமேஜெய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

தரியலர்தாலித் தலையவிழ்த்துந்தத்-தறிமதக் கயங்காற்றளைபவிழ்த்துவந்த அரசகுஞ்சரம் படைத்த ஐயாகேளும் எட்டாநாள்யுத்தத்தில் முடிமன்னர்முதலிய பேர்களும் துரியோதனராஜனுடைய தம்பிமார்களும் புறமுதுகிட்டுப் போனதுமல்லாமல் அநேகம்பே ரிறந்து போனார்கள் நேற்றுப்பார்த்தவர்கள் இன்றுபார்ப்பதற் கில்லையே யென்று விசனங்கொண்ட துரியோதனமகாராஜனவன் தன்னைப்போற் றுயரப்படும் சகுனியாகிய மாமனையும் கேட்டுக்குத் துணைக்காரணமாகிய பாட்டைவழியைக்காட்டுந் துச்சாசனனையும் அழைத்து வைத்துக் கொண்டு அநேகம் யுத்திகளையெல்லாம் ஆலோசித்து என்னண்ணனாகிய கொடைத்தாதாவென்னுங் கன்னன் வராமல் என்மனந்தேறாது ஆகையால் அவரை அழையுங்களென்று சொல்ல அப்படியே வீஷ்மர் சாகிறவரைக்கும் ஆயுதமெடுப்பதில்லையென்று பாசறையை விட்டுப் புறப்படாமலிருக்குங் கர்னனிடத்திற் றூதர்சென்று கண்டுவணங்கி கருணைக்கடலாகிய நிறையே கருதலர்க்கு அடலாகிய இறையே உம்மை யழைத்துவரும்படியாய்க் காவலன்மனங்கொண்டா னென்று சொல்ல அந்த வார்த்தையைக் கேட்டு அதிசீக்கிரமத்தி லோடிவந்த கொடையாளியைக் கட்டிக்கொண்டு கூகூவென்றழுத துரியோதனமகாராஜனைத் தேற்றி அடடா தெய்வமே ஐயோ தம்பிமார்கள் எவ்விதத்தி லிறந்தார்களென்று கர்னன்கேட்க நானென்னமென்று சொல்லுவேன் அண்ணா பாரியவில்லைப் பிடித்து வீரியத்துடன் கணைதொடுத்து வீமனெதிரிற் சென்று நின்று போர்கொடுத்தார்கள்.

அப்போது சிவனுக்கெதிர்முந்தி சிலமலர்ப்பசழிசிந்தி அழிந்த மான்மகனாகிய மன்மதனைப்போல் மண்ணிலழியும்படியாய்ச் செய்தான் வீமசேனனனவன் அந்தோ அண்ணா அங்கதேசத் தலைவனே இனியென்ன செய்வேன் இதுவரையிலும் என்றம்பிமார்கள் இருபதுபேர் வரையிலுமிறந்துபோனார்களே அவர்களைப் பறிகொடுத்துநான் இருந்தென்ன யிறந்தென்ன இறைவனே என்றந்தைதாய்முதலிய பேருஞ் சிந்தைவருந்து வார்களே நான் நிந்தனைகளாகி நொந்தேன் நொந்தேனென்று சோர்ந்துவிழுந்தான் துரியோதனமகாராஜன் அப்படிசோர்ந்த அரசனை எடுத்தணைத்து அதிசீதள சுகந்த பரிமள சந்தனம்பன்னீருடன் ஆலவட்டம் சாமரைமுதலிய வுபசாரங்களுஞ்செய்து சோபமாற்றியபோது பெருமூச்சுவிட்டு கண்ணைத்திறந்து கர்னனைப்பார்த்து அண்ணா சத்துருவைச்செயித்து வெற்றிபெறுவதற்காக வந்த உத்தமர்கண்முதலாகிய மித்திர புத்திரருடன் யுத்தஞ்செய்ய எத்தனித்த எனக்குத் துணையாகியபேர்களில் முதன்மை யாகிய எங்கள் பாட்டன் வீஷ்மர்சேனாதிபதிப் பட்டங்கட்டிக்கொண்டு வில்லெடுத்து நிற்பதினால் என்ன பிரயோசனம் நான்குவேதங்களும் தனுர்வேதங்களும் வல்லவர்களுக்குச்சொல்ல வலலகுருவாகிய துரோணாச்சாரியர் விற்பிடித்திருப்பதினா லென்னலாபம் இந்த எட்டுநாள்வரையிலு மிவர்களுடைய நிர்வாகங்களையெல்லாம்பார்த்துவிட்டேன் இனிக்காரியமில்லை அண்ணா நாளைமுதற்கொண்டு நீர் வில்லெடுத்துப் போர் புரிவீராகில் போனவர்கள் போக இருக்கிற நாங்களெல்லோரும் பிழைப்போம் பாண்டவர்களாகிய சத்துருக்க ளொருக்காலும் வெற்றிபெறமாட்டார்கள், அதிரதமுதல்வனாகிய உம்மை நம்பியிருந்ததற்கு உம்மாலாகு மாகாதென்று இப்பதானே சொல்லிவிடும் கர்னனாகிய அண்ணாவே யென்று துரியோதனராஜன்கேட்க அந்தச்சொலலானது கர்னனுடைய காதில் நாராசம்போலேற மனங்கொதிப்பேற தேகம் படபடப்பேற கண்களிற் றீயேற வாயி லீயேற சத்துருக்கள் மலையேற கோபந்தலைக்கேற நாற்றமும்பேற நுரைத்துப்புகையுங் கோபக்குறிப்புடன் சொல்லுகின்றான்; அம்பு

யிற்கொடியோங்கிய செம்பொன் முடியினைத் தாங்கிய துரியோதன மகாராஜனே கேளும்; உங்கள்பாட்டன் வீஷ்டுமர் அர்ச்சுனனைச் செயிக்கமாட்டாதவனென்று எ ன்னை அர்த்தரதரிற்போட்டதும் அதற்கு நான் சபதங்கூறியிருப்பதும் உமக்குத் தெரிந்திருந்தும் எவ்விதத்தில் என்னை யுத்தஞ்செய்யச்சொல்லுகிறீர் கொற்றவனே உமக்கு நான் எப்போதும் வெற்றியைத்தருவதற்குச் சித்தமாயிருக்கிறேன் இந்தமொழியை நீர் சத்தியமாய் நம்பும், திரிபுவனங்களும் ஓடித் திரியும்படி யாகிய தேரும் திசைகண்முழுதும் இசையுடன் விஜயம்பெறத் தக்க வில்லும் அண்டகூடம்வரைக்கும் உண்டுமிழும்படி யாகிய கணையும் நான்வைத்திருக்கின்றேன், இப்பவும் அந்தவீஷ்டுமர் என்னைக்கண்டு ஏக்கங்கொண்டு போகும்படியாய் ஒருவிந்தைசெய்கிறேன் அதாவது இந்திரலோகம் எமலோகம்பிர்மலோகம்இவடங்களில் என்கணைகளைவிடுத்து ஆராய்ந்திறந்துபோன உன்றம்பிகளை இப்போதே உயிர்த்துவரச்செய்கிறேன், நாளைப்போரில் பாண்டவரை மாளச்செய்து உலகமுழுமையும் நீயாள உன்சொந்த மாக்குகிறேன், ஆனால் வீஷ்டுமன் சாகிறவரையிலும் யுத்தமுனையில் ஆயுத மெடேனென்று சொல்லிய சபதம் வீணாய்ப்போமேயென்றுஎண்ணிப் பார்க்கிறேன், ஆகிலும் ஆபத்திற்குப்பாபமில்லை அதற்கொரு சாந்தி யிருக்குது அந்தப்படி வீஷ்டுமன் செய்வானாகில் நாளை யிந்நேரத்திற்கெல்லாம் பஞ்சாசதகோடி பூமண்டல முழுமையும் நாகக்கொடிபறக்கவும் நான்மணித்தோரணம் விரித்துச்சிறக்கவும்சந்திரவிம்பமணிமுரசங் தயங்கவுந் தரியலர்தலைகிறுகிறென்று மயங்கவுஞ் செய்கிறேனென்றான் கனகக்கொடியோனாகிய கர்னன், இம்மொழிகேட்ட சந்தோஷத்தால் விம்மிப் புடைத்து வேந்தர் வேந்தனாகிய பாந்தளங்கொடியோன் விசனநீங்கி மித்திரனாகிய அண்ணா அதெப்படி ஜெயம்பெறுவீரென்று கேட்க, குந்திமுதற் புத்திரனாகிய கொடையாளன் சொல்லலுற்றான்.

கௌரவகுலமுதல்வனே வியாபகமாய்க் கேளும்; இந்த யுத்தகளத்தில் கடல்போலிரைந்து நிறைந்திருக்கும் நமது படைவீரர்களுக்கு எதிராகச் சேனாபதியாகிய வீஷ்டுமர்வந்து நின்று எல்லோரையு நோக்கி இரண்டு கரத்தையு மேலேதூக்கி தன்வாக்கினால் ஓ-வீரர்களே பலம்பொருந்திய பாண்டவர்களை நான் ஜெயிக்க மாட்டேன்- இனி யென்னால் முடியாதென்று சொல்லிக் குப்புறக்கவிழ்ந்து விழுந்து வில்லையொடித்துப் புல்லைக்கடிப்பானாகில் போதுவிடியுமுன் னெழுந்துவந்து போர்புரிந்து உனக்குத் துன்பமும் பழிச்சொல்லும் விளையவைத்த துஷ்டப்பாண்டவர்களையும் அவர்களுக்குத் துணைவந்திருக்கிற கிருஷ்ணன் முதலிய தோன்றல் களையுந் தேவலோக போகத்தை அநுபவிக்கும்படியாய்ச் செய்து விடுகிறேன் நானிதுவரையிலுஞ் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தையைப்போ லெண்ணுதீர் இதோநான் யுத்தத்திற்குச் சித்தமாயிருக்கிறேன் என்று கவசகுண்டலன் சொல்லவே துரியோதனன்முதலிய உரியோர் காதுகளில் தேவாமிர்தஞ் சொரிந்ததைப்போல் சிந்தைமகிழ்ந்து சகுனிமுதலிய தம்பிமார்களின் முகத்தைப்பார்த்து தானும்பிழைக்கான் பிழைப்பவனையும் பிழைக்கவொட்டான் என்றுங்கதையாச்சுது நமதுவீஷ்டுமர் செய்திருக்குங்காரியமானது ஆனால் கர்னமகாராஜன்சொல்லிய நீதிஞாயமாயிருக்குதல்லவா ஓ! வீரர்களே? அதிசூரர்களே? அடா! தம்பி துசுவாசனா வீஷ்டுமரிடத்திற்குப்போய் அங்கதேசாதிபன் சொல்லிய சங்கதிகளைச்சொல்லி உம்மாலாகிலுஞ் செவ்வைப்படவேணும் அல்லது பிறராலாவது வெற்றிபெறவேணும் இந்தயிரண்டுமில்லாமல் திரண்டுவந்த சேனைகளெல்லாம் இறந்துநூறுபேரென்னுங் கணக்கில் இருபதுபேர்குறைந்து இப்படி நாளுக்குநாள் நொந்துபோகும்படியானகாலம் வந்திருக்குதல்லாமல் வேறொன்றில்லைமேலும் முகத்துக்கஞ்சி முறைமைதப்பினால் குலத்துக்கீனமென்பதுபோல் உம்மைப்பாட்டனென்றுநம்பிபட்டங்கட்டிவைத்துநான்நட்ட மாய்ப்போவேனோ என்னையாவேஎந்தப்புண்ணியவானைக் கொண்டாகிலும் வெற்றிபெறுவதுயுமக்குச்சம்மதமா அல்லவென்றால் நீரேயிருந்துமுடித்துக்கொடுக்கிறேனென்றுசொல்லுகிறீரா அல்லது இரண்டாட்டிஊட்டிய குட்டியென்பதுபோல் நான்கெட்டுப்போகவா உமது இஷ்டந்தானெப்படியிருக்குது இப்போதென்னசொல்லுகிறீரென்று அவருடைய எண்ணத்தை அறிந்தோடிவாவென்று அரவகேதனனனுப்ப அக்கக்ஷணமே ஒப்பில்லா ஆலகாலவிஷச்செந்துக்கொப்பாகிய துச்சாதனனானவன் ஒருநொடிப்பொழுதில் பாசறைக்குவந்து வீரவாகை விற்பிடித்துநெருங்கிய வேந்தர்கணநிவில் அஞ்சூராணிபோல் நடுநாயகமாகநின்று நாளைப்போருக்குவேண்டிய யுத்தியைப்பேசிக்கொண்டிருந்த வீஷ்டுமனைக்கண்டு கர்னராஜன்சொல்லியசங்கதியாவும்துரியோதனமகாராஜன் சொல்லச்சொன்னதாய்ப்புகன்றான் இந்தமொழியை தன்பேரப்பிள்ளையாகிய துச்சாதனன் சொல்ல உரியோனாகிய பெரியோன்கேட்டு கையினால் வாயைமூடிக்கொண்டு கக்கடகக்கடநகைத்து அப்பா உப்பில்லாமல் முக்கலக்கஞ்சி குடிக்கிறேனென்னும் என்னுடைய துப்பற்றவீரத்தை நீங்கள்மெச்சும்படியாக நான்சொல்லி வயிறுவளர்த்து வாணாள்வச்சிருக்கப்போறதில்லை ஆங்காலமெல்லாம்போச்சுது, போங்காலம்வாச்சுது, இன்றைக்கோநாளைக்கோ சாங்காலமாச்சுது, இனிநான் உங்களிடத்தில் என்வீரத்தை யெடுத்துப்பேசுவதிலாபமென்ன ஆதலால் பாண்டவர்களில் அர்ச்சுனனைவெல்லவாவது கொல்லவாவது என்னாலாகாது அந்தவிஜயனுக்கு நானீடல்ல ஆனால்விந்தையாகியயுத்தங்களெல்லாஞ் செய்கிறேன் இன்றைப்போரில் அரசரிடத்தன்பில்லாத- மகுடாதிபர்கள் நூறுபேரை முடியறுத்து முடியவைக்கிறேன்.

அதைவிட்டு வில்லைத்தள்ளி புல்லைக்கவ்வி வீரமில்லையென்று சொல்லச்சொன்னவாக்கியம் நல்லதல்ல நானப்படிசெய்யப்படாது என்பேரனேஇப்போது நீங்கள்நினைத்தகாரியம் நாளையேநிறைவேறுங் குறைவில்லை இன்று ஒருநாள்மாத்திரம் நீங்கள் மனம்பொறுத் திருக்கவேண்டியது நாளைமுதற்கொண்டு உங்களைநாடாளவைக்கவரப்

போறவர் தான்சொன்ன உறுதிவாக்கியப்படிக்கு ஐவரை
ச்செயித்து வெற்றிபெறுங் கைத்திறலை புடையவர்தான்
அப்படியாகவெற்றிபெற்ற உத்தமருடைய பெருதவியினு
ல் நமதுகுருநாடும் சுற்றிலுநிறைந்தவளநாடும் உங்களுக்
குக்கிடைத்து நீங்கள்பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்
டு புத்ர-மித்ர-களத்ர-சுற்றத்தாருடன்கலந்து எள்ளுக்கா
ய் முள்ளுமுறியாமற்பொருந்தி அநேகநாளிருந்து மிகுந்
த சம்பதுடன் நீடூழிவாழக்கடவீர்கள் குழந்தைகளே
யென்று துச்சாதனனுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு
அரசர்களுக்கும் உத்தரவுகொடுத்துத்தானும் விசனத்து
டன்போய்ப் படுத்துக்கொண்டு நித்திரையில்லாமலிருந்
துமறுநாட்காலமேயெழுந்துகாலைக்கடனைமுடித்துக்கொ
ண்டு தானெண்ணியவெண்ணப்ரகாரம் சமானமாகிய அ
திரதத்தலைவரும் சக்கரரக்ஷகரும் இணைக்குதிரைகளும்ம
ன்னர்மண்டலிகர்முதலிய நால்வகைப்படைகளும் சூழ்ந்
துவர பஞ்சமேளவாத்திய முதலாகியவிருதுங்கழைக்கப்
பாருங்குலுங்கக் காருங்கலங்கப் பர்வதங்களெல்லாம்வே
ரறுந்தாட தூளிப்படலங்களெல்லாங் கண்மறைந்தோட
திக்குகளும் அஷ்டகஜங்களுந்தியங்க சேடன்முதலியபே
ர்களுமொடுங்க திரண்டசேனைகள்புரண்ட கடலெனபரந்
து மிகுந்து குருக்ஷேத்திரத்திற் புகுந்துகலந்து என்னவியூ
கங்கட்டலாமென்று யோசித்து சத்துருக்களைவெல்லும்
படியாகிய செயபத்திரவியூகங்கட்டினார் சேனாபதியாகியவீ
ஷ்டுமர் [செயபத்திரமென்பதுவெற்றிலையைப்போல்]சே
னைகளைநிறுத்திவைத்து நாகக்கொடியோனாகிய ராஜாதி
ராஜனை வெற்றிலைக்காம்புக்கு மத்தியிலிருக்கும் பெருநர
ம்புக்கு நடுவிலிருத்தி அந்தநடுநரம்புக்கு பக்கத்திலிருக்
கும் மற்றநரம்புகளுக்கெல்லாம் ஒருகோடிராஜர்களைநிறு
த்தி அந்தச்சேனைகளுக்கு முனைக்காறராகப் பகதத்தன்
சோமதத்தன்வாகுலிகன் இவர்கள்முதலியபேர்களையமை
த்து மற்றவீரர்முதலிய கைக்காறரை அந்தவெற்றிலை யா
கிர்தியாகச்செய்து பூமிகுலுங்கும்படியாய் அலம்புதன்
அலாயுதன்முதலிய அரக்கரை எல்லாம்முனையாகப்போ
க்கி யானை தேர்-குதிரைகளைச்சுற்றிலும் வரம்பாகவிடுத்
து அடிக்காம்பில் சமசத்தகர்-கலிங்கேசர்-மாளவர்-சீனர்
சோனகர்-திராவிடர்முதலிய தெலுங்கரையுங்கூட்டி நே
டாம்போற் கவிப்பாயமைத்து தானும் தூசிப்படையில்
நின்றார் வல்லமையுடைய மானபரனென்னும் வீஷ்டு
மரானவர்.

இப்பால் பாண்டவர்களெழுந்து நித்தியவிதிகண்முடி
த்துக்கொண்டு யுத்தசன்னத்தராய் நேற்றைப்போரில்ச
டாசுரனுடைய குமாரனென்னும் அலம்புதனனவன் அ
ரவானாகிய தங்கள்பிள்ளையைக் கொன்றானென்ற மனஸ்
தாபத்தினால்துரியோதனனுடையதம்பிமார்கள் பதினைந்
துபேரையுமடித்து அரக்கப்படைகளையெல்லாம்முடித்து
பலபல அரசர்களின் ஆவியையுமழித்து ஆருப்புத்ரசோ
பங்கொண்டு தேருரடிபட்டோடச் செயங்கண்டுநின்ற
விமசேனனும் தேவர்பகைகளைக்களைந்தஜெயதிரவிஜயனு
ம் நகுலசகாதேவரும் சத்தியவிரத உத்தமனாகிய தரும
ராஜனும் மற்றப்படைமன்னர்முதலாகியபேரும் முன்பக்
கங்களிலும் பின்பக்கங்களிலும் நெருங்கிவரவும் இடக்
கை-உடுக்கை-தப்பட்டை-தாரை-பூரி-மேளம்- முரசுமுத
லிய வாத்தியங்கள்முழங்கிவரவும் - கொடி- குடை-சாம
ரம்-பீலிக்குஞ்சம்-மேற்கட்டி மகரதோரணம்-விருதுடா
ல் வகைகளெல்லாம் மேகமண்டலத்தை யளாவிவரவும்
காசாம்புமேனியையுடைய வாசுதேவன் போஜகுலநே
சவிசுவர்சர்களுடன் பேசிக்கொண்டு தாசானுதாசர்களா
கிய பாண்டவர்களும் புடைசூழ்ந்துவரும்படியாய் யானை
குதிரை-தேர்-பதாதிகளுந்துள்ளி யோடிநடுங்கும்வேகத்
தால் கொள்ளையாகிய தூசிகளெழுந்து மாசிகள்மறையும்
படியாய்வீசி மூசிக்கொள்ளவும் விசனமிகுதியினால் உள்
ளத்திற்கனற்பொறி தெறிக்கவும் யுத்தகளம்வந்துசேர்ந்
து சிவந்த பத்மராகமணிகளாற்செய்த மகுடமும் பெரி
யபதக்கமாகிய மதாணிகளும் முத்துத்தொங்கட்டங்களு
ம் குண்டலங்களும் வாகுவலயங்களும் பொற்றாமரை
வாசியாகிய மகாலக்ஷிமியும் பொருந்திய திருமேனியை
யுடைய புண்டரீகாக்ஷன் சேனாபதியாகிய துஷ்டத்தூய்
மனையழைத்து பத்மராகவியூகங்கட்டச்செய்து வச்
ராயுதனைப்போன்ற அர்ச்சுனனேறியதேரில் பச்சைவண்
ணப்பாந்தாமனிருக்கச் சேனாபதியின் உத்தரவின்பேரில்
இரண்டுபடைகளும் கைகலந்துதொந்தயுத்தப் போர்புரி
ந்தார்கள்.

அந்தவேளையில் தேவேந்திரனும் தேவர்களும் ஆகாய
முதலிய அகண்டமும் எட்டுத்திக்கும் அஷ்டகுலாசலமு
ம் எட்டுநாகங்களும் படபடவென் றதிரும்படியாய் அல
ம்புதனென்னும் அரக்கனானவன் அநேகம் ராக்கதப்ப
டைகளுடன் ஆகாயமளாவிய தேரைச்செலுத்தி ஆக்ரமி
த்துக்கொண்டு வெற்றிமாலைசுற்றிய கொற்றவெம்புயத்
தைப்பெற்ற வீமசேனனுடன் போர்புரியும்படிக்கு வந்
தெதிர்த்தான் அப்படிவந்தெதிர்த்த அலம்புதனை மல்யுத்
தத்தாற் கொல்லவேணுமென்று மனங்கொண்டுவந்த வீ
மசேனனைக்கண்டு இந்தவீமசேனன் மல்யுத்தத்தால்வெ
குபேரைக் கொன்றிருக்கின்றான் நமதுதந்தையாகிய ச
டாசூரனைச் சடாய்ச்சுவிட்டான் நம்மையும் அப்படியே
லைமுடித்துப் போடுவான்.

ஆகையால் இவனோடு மற்போர்புரியலாகாது இவனுக்
கு அதிகப்பழக்கமில்லாத விற்போர்புரிந்து வெல்லவே
ணுமென்று வீமசேனனைக் கண்சிமிட்டாமற்பார்த்து மீ
சைமுறுக்கி கனைத்து பற்கடித்து அடாவீமா மற்போர்க
ளைப்போரில் வழக்கப்பட்டவனேயல்லது விற்போர்தெ
ரியாத விழலப்பனே என்னைப்போற்றேரேரி வில்யுத்த
ஞ்செய்ய வாடாவென்று உனக்கு வில்லின்வல்லமையு
ண்டோ அந்தப்பண்டவாளத்தையும் அறிபுறேனென்று
வெகுண்டு வில்லெடுத்து நாணிபூட்டுவதற்கு முன்ன
மே வச்ரக்கல்லுக்கொப்பாகிய புயவலிமையுடைய வா
ய்வுபுத்திரன் கார்முகமெடுத்து நாணிசேர்த்துக் கர்ணப
ரியந்த மிழுத்து காலகோடி விஷாக்னிக்கணைகளைக் கல்வ
ருஷம்போல் வருஷித்து அலம்புதன்கைக்கொண்ட கன
கமலைக்கு மேலாகிய வில்லை மனுக்கென்றுமுறித்து அ
டா அரக்கனே மல்யுத்தத்தில் இடும்பனை பகனை ஒப்பி

ல்லாக்கிசகனை தப்பிவிவேலைசெய்த உன்னப்பனை ஒருகு
த்தினாலும் ஒருகாலுதையினாலும் உடல்சிதையச்செய்த
வொருவனென்று நினைக்காமல் வில்விற்செயிக்க வந்தா
யோ உன்கையில்லெங்கே அடாதுன்மார்க்கனேயென்று
வீமசேனன் மேலுமேலும் நாலுகணைகளைவிடுத்து உட
லைத்துளைத்தபோது ஆகாயவீதியிற் சென்றுமறைந்து பூ
மியிற்சுழன்றுவந்து பலங்கொண்டிருக்கும் மந்தரமலைக
கொப்பாகிய கந்தரமலையென்னும் பர்வதத்தையும் பாரி
யமரங்களையும்பிடுங்கி வந்தெதிர்ந்து வீமசேனனுடைய
தோளின்பேரில் வீசியெறிந்தான் அலம்புதனானவன் அ
ப்படியாகவீசிய மலையுமரங்களும் பொடிப்பொடியாய்ப்
போம்படி வடிக்கணைகளால்மாற்றி பாலசுப்ரமண்யக்கட
வுள் கிரவுஞ்சகிரியைக் கிழிக்கவிடுத்த வேலாயுதமென்று
மேலோர்கள் சொல்லும்படியாகிய வேலைத்தாங்கி பூசித்
துவணங்கி அபிமந்திரித்து விட்டான் வீமசேனன் அந்த
வேலாயுதம் போய்ப்பட்டமாத்திரத்தில் குமாரஸ்வாமியி
ன் வேல்பட்டழியும் சூரனுருக்கொண்ட மாமரத்தைப்
போல் இருகூறாய்ப்பிளப்புண்டுவிழுந்தான் அலம்புதனா
னவன் அப்போதுவீமசேனன் கதையைக்கையிற்கொண்
டு காரரவென்றுசுழற்றி அலம்புதனுடன் படைகூடிவந்
த தொண்ணூற்றுநாலாயிரம் அரக்கரும் மாறுபட்டபா
ஷைகளையுடைய நூறுலக்ஷம்வடதேசத்து அரசரும்தலை
கிழிந்து மூளைவழிந்து தாரணியிற்சேறாய்ப் பெருக்கெடு
த்தோடும்படியாகச் சாடினான் அநேக உறுப்புகளினால்
மண்மேல்மூடினான் இந்தப்படிக்கு எலும்பு ஒடிய அடித்
து வெகுபேர்களமுடியமுடித்துப் பூமிநெளியநடித்து உ
க்ரதிண்யனிவனென்றுரைக்குஞ் சிலாக்கிய அக்ரகண்ய
னென்று யாவரையும்போக்கிய வீமசேனனுடைய வீரப்
ரதாபத்தைக்கண்டு முந்நாட்போரில் அரவானைக்கொன்
ற அலம்புசனைப் பின்னாட்போரில் பிறண்டழிய கூர்கொ
ண்டவேல்கொண்டுகிழித்தான் இவனென்றால் சத்திய
நெறிபுத்தமனாகிய தருமராஜனுக்கிளைய வீமசேனனென்
று இரவுபகலில்லாத இந்திரலோகத்திலிருக்கும் இமை
யாநாட்டத்தவராகிய தேவர்களெல்லாரும் இரைந்துமதி
த்து வியந்து துதித்தார்கள் இவடத்தி லிப்படியிருக்க
காசிதேசாதிபதி போஜாதிபதி மாளவ தேசாதிபதி க
லிங்கதேசாதிபதி புளிந்ததேசாதிபதி அஜபதி கஜபதி மு
தலிய எழுபதினாயிரம் அரசர்கள் நாலுவகைப்படை ஆ
யுவிதப்படை விற்படை வேற்படையுடன்பொங்கி அர்
ச்சுனனையெதிர்த்து அநேகங்கணைகளைத்தொடுத்து அகி
லபுவனங்கள் யாவுநடுங்க நிகிலசராசர நெட்டுயிர்ப்பொ
ங்க மட்டிலாயுத்தஞ்செய்து கேசவன்செலுத்துந் தேரி
ற்கிளர்ந்த வாசவன்மகனாகிய சுவேதவாசியான்பிளந்த வி
த்தகத்தேக வெதுப்பினாற்சாய்ந்து கொத்தழற்கணைகளா
ற் பற்றமாய்ந்து மற்றொருபக்கத்திற் சுற்றிநெருங்கிய
சேனைகளெல்லாம் வெற்றிபொருந்திய வீரவாகைவிஜய
ன்சொரியுங் கணைகளாற் பற்றியெரிந்து சாம்பராய்மடிந்
தார்கள், இன்னொருபக்கத்திற் றுரியோதனன் சேனைகள்
வீமசேனனுடையகதாயுதத்தாற் காற்றிற்சிதறிக் கலங்கு
ஞ் சருகைப்போற் பறந்துமடிந்தார்கள்.

இந்தப்படி நாலுபக்கங்களில் நால்வகைச்சேனைகளையு
ம் நலியச்செய்யுங்காலத்தில் கங்காபுத்திரனாகிய வீஷ்டு
மர்கண்டு கண்கள்சிவந்து முகங்கருகிக் கடுமை கொண்டு
பாரைக்கிழித்தோடுந் தேரைச்செலுத்தி பாணங்களைவா
ரியிறைத்து பற்கடித்துவராநின்றதை இராஜபூச்சியனாகி
ய தர்மராஜன்கண்டு கலங்கியோடுஞ் சேனைகளைக் கைய
மத்தி தன்னைச்சூழ்ந்த சதுரங்கச்சேனைகளுடன் வீஷ்டு
மரைத்தகைந்து வெற்றிமாலைசூட்டிய வில்லைவளைத்துவீ
ரபாணப்பசுழி மழைகளைப்பொழிந்து குதிரைகளுஞ் சா
ரதியுங் குறைந்துபோகும்படியாய் அழுந்த அடித்தகால
த்தில் அந்தத் தருமராஜன் தூற்றியபகழிகளைத் தன்பேரி
ற்படவொட்டாமற் றடுத்து அவர்கைப்பற்றிய வில்லையு
முறித்து வீரதோரணத்தையு மறுத்தார் அவராசொன்னி
ல் தந்தைபொருட்டில் இன்பம்விடுத்து விரதமேற் கொ
ண்ட வீஷ்டுமானவர், அந்தவேளையில் வீரபட்டந்தாங்
கிய யானைகளும்-வாயுவேகம்பிற்படத் தாவியோடுங் குதி
ரைகளும் மேகஞ்சிதையக்கிழிக்கும் கொடிநாட்டிய ரதங்
களும் விதவிதமாகிய வீரர்களின் பேதங்களுமுடைய
பாஞ்சாலன் திர்ஷ்டத் தூய்மன், சிகண்டி உத்தமோசன்-
உதார்மன்-விகர்மன் முதலாகிய பேர்களெல்லோரும் வி
ரைந்து வீஷ்டுமருக்கெதிர்வந்து போர்புரிந்தார்கள அப்
போது சந்திரவட்டக்குடை யோங்கிய வீஷ்டுமரும் துரி
யோதனனுடைய தம்பிமார்களும் இசைகள் பெற்று தி
சைகளெட்டிலு மிருந்து வந்திருக்குங்காவலரும் நேரிட்
டுப் போரிட்டார்கள் இந்த வேளையில் வீஷ்டும ரானவர்
தாஷ்டீகமாக வடிக்கணைகளை மந்திர பலத்துடன் வாரிவி
டுத்தகாலத்தில் தேருந் தேராளிகளும் யானைகளும் யானை
வீரர்களும் காற்றிலுங் கடுவேகங்கொண்ட குதிரைகளும்
குதிரைவீரரும் வேற்படை - விற்படை-கதைப்படை-
வாட்படைதாங்கிய-காலாள்களும் பட்டார்கள், வீஷ்டும
ர் விட்டகணைகளுக்குத் தப்பிப்போன பாஞ்சாலர்களில்
லையென்று தேவர்முதலிய மூவரும் சொல்லும் படியாய்
ப் பிராணன்விட்டார்கள், சிலர் காயம்பட்டுப் புறமுதுகி
ட்டார்கள்.

இப்படியாக வீஷ்டுமர் முனைந்து கணைமாரி பொழிந்து
வருங்காலத்தில் சிகண்டியானவன் தன்றேரெதிர்விடுத்து
வீஷ்டுமரையடுத்து ஓ, வீஷ்டுமனே, உன்னுடற் பூமியில்
விழவும்நீ விண்ணுலகங்குடியேறவும் ஒருகைபார்க்கவே
ணுமென்னும் ஆசைகொண்டு போர்செய்யவந்தேன், இ
ப்போது பாஞ்சாலாள்பேரிற் காட்டிய சேவகமெல்லா
ம் என்னிடத்திற்காட்டென்று அநேகம் வீரவார்த்தைக
ளை இழிவாகப்பேசி கார்முகம்வளைத்து நேர்முகமாகக்கா
ய்ந்த தீக்கணைகளை யுந்தினான், அந்தவேளையில் திரிலோ
கமுங்கலங்க-மோகம்விளைக்கும்-மன்மதனுடைய ஐந்து
கணைகளுக்கும்-கலங்காத வீஷ்டுமரானவர்-தன்பேரில்வி
ழும்-பேதையின் பாணத்திற் கிலக்காகிச் சிகண்டியை
நோக்கிநகைத்து அவன்பேரிற் பாணந்தொடுக்காமல் வி
ல்லைக் கீழேவைத்துவிட்டு வீஷ்டுமர் வெறுங்கையாய் நி
ற்க சிகண்டியின்பாணங்கள் தன் தேகமுழுமையுந் தைக்
க அப்போது ஜன்மாந்திரவினையை சிந்தையினினைந்துவ

ருந்திக்கொண்டிருக்கும் நிலைமையைத் துச்சாதனன் கண்டு துயரங்கொண்டு சுடுசரங்களைச் சோனாமேகச் சொரிதலைப்போற் பெய்ந்து-கோடைங் காய்ச்சலைப்போற் காய்ந்து பாஞ்சாலாள்- சோமகாள் முதலாகிய பல்லோருங் கெட்டழியப்படுத்தி மேகமளாவுங் கொடிநாட்டிய சிகண்டியேறிவந்த தேரையும்-அவன் கைப்பிடித் தெய்யும் வில்லையும் சிதைத்தான் துச்சாதனனானவன் அந்தத் தெப்பலினாற் றேகம்வருந்திக் காலோட்டமா யோடி உதயகிரிச் சாரலிலொடுங்கும் இருளைப்போலொளித்தான் சிகண்டியானவன் இந்தப்படி துரியோதனனுடையதம்பி துச்சாதனன் சிகண்டியைவென்று பாஞ்சாலப் படைகளைத்துரத்தி ஒருவர்போனவழி யொருவர்போகாமற் பறக்கவடித்துச் செயஞ்செய்யும்போது தன்வில்லை யெடுத்துப் பிடித்து நாணிபூட்டினார் வீஷ்டுமரானவர் அந்தச்சமயத்தில் விஷ்டுமருக்கு ஈடில்லாத சிகண்டியை துச்சாதனன் வென்று மேன்மையடைத்தானென்று தேவர் முதலிய யாவருஞ் சந்தோஷமடைந்தார்கள், அப்போது துச்சாதனனாலும் விஷ்டுமராலும் பாண்டவச் சேனைகளும் பாஞ்சாலப்படைகளும் படாதபாடும் பட்டுக் கெடுவதைப் பார்த்தனானவன்கண்டு முகம்வியர்த்து கண்ணனுடைய முகத்தைநோக்கி பவனவேகத்திலுமிஞ்சிய ரதத்தைப்படைக்கு நடுவில் விடச்சொல்லிவந்து சரமாரி பொழிந்து ஜாடுங்காலையில், சத்துருக்க ளியாவரும் பரந்து பறந்து தலைவிரிகோலமாய்ப் போய்விட்டார்கள், அப்படி ஆகஸ்மிகமாய்வந்த அர்ச்சுனன் அபாரியாய்த் தொடுத்துவிட்ட கணைகளினாற்பட்டுக் கெட்டபேரைச் சொல்லுவதற்கு பிரமாவானவன் பலகோடிநாவைப் படைக்காமற்போனான் என்றொரு நாவினாற்சொல்ல தரமன்று, ஆனால் ஓர்கணக்குச்சொல்லுகிறேன் கேளும் அரசனே அதெப்படியென்னில் வெற்றிமாலையும் வீரபட்டமுமணிந்த யானைகளும் குதிரைகளும்-பதாதிகளும்-அழிந்து அவர்களுடலிலிருந்து வழிந்த ரத்தவெள்ளங்களோடி சமுத்திரத்திற் கலக்கவே அக்கடலானது திக்குணமும் சென்னிறமுங் கொண்ட வடவாக்கினிபோற் பிரகாசித்து அக்கடல்முழுமையுந் தன்னிறமாக்கிக்கொண்டது, இவ்வளவு ரத்தவெள்ளங்கள் ஓடினால் எவ்வளவுசேனைக ளிறந்திருக்கவேணும்-இறைவனேகேளும்.

இப்படியாக அர்ச்சுனன் பாணங்களினால் அழியா நின்ற சேனைகளைக்கண்ட வீஷ்டுமரானவர் மறுபடியும் வின்னாணியிழுத்துப் பகழி மாரிபொழிந்து பாண்டவச்சேனைகளைப் பலபலவென்று நெல்லி யிலைபோலுதிர அடித்தகாலத்தில் இளம்பஞ்சபாண்டவர்களும் தர்மராஜன்புத்திரனாகிய தேவகனும்-வீமன் புத்திரனாகிய சர்வதேவனும்-கடோற்கஜனும்-அர்ச்சுனன் புத்திரனாகிய அபிமன்னனும் நகுலன்புத்திரனாகிய விஜயனும் நிற்மித்திரனும் - சகாதேவன்புத்திரனாகிய விரசுகோத்திரனும்-பாஞ்சாலன் பிள்ளையாகிய திர்ஷ்டத்துய்மன்-சிகண்டி-சுமித்திரன்-பிரியதரிசனன்-சித்திரகேது-சுகேது-துவ சேனன்-உத்தமோசன்-உதார்மனு முதலியவர்களும்விராடராஜன்பிள்ளைகள் சதாநீகன்-சயகன்-வாரகேது-சிசகன் பிள்ளைபிரிதிவன் குந்தி போஜன்-குமாராள்-மந்தன்-சுமந்தன்-தூமகீர்த்தி-அவன்குமாரன்-மலையத்துவஜன்-அவன் பிள்ளை பிரதிபாண்டியன்-ஜெயசேனன்-சராசந்தன் பிள்ளை-சகதேவன்-சிசுபாலன்பிள்ளை துஷ்டகேது-கிராதாள்-அவுணாள்-ஆந்தராள்-வடமாள்-புண்டரீகாள் - புருமித்திரன் முதலாகிய புத்திரவர்க்கங்களும்-தேசராஜ புத்திரப் பெருக்கங்களும் எதிர்ந்து தங்கள் தங்கள் கைக்கிசைந்த ஆயுதங்களாலும் அடித்து பிரபலமாகிய விற்களைவளைத்து கற்களைப்பொழியும் காளமேகம்போல் கமலாஸ்திரம்-நாகாஸ் திரம்-கருடாஸ்திரம்-பிர்மாஸ்திரம்-நாராயணாஸ்திரம்-ருத்திராஸ்திரமுதலாகிய கணைகளைப்பொழிந்து சிங்கக்குட்டிகளெல்லாம் கிழச்சிங்கத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டதைப்போல் வீஷ்டுமரை வளைத்துக்கொண்டு காஞ்-சிரங் கால் மேலென்று ஒன்றுந் தெரியாமல் மூடுபனியைப்போல் மூடியகாலத்தில் வீஷ்டுமரானவர் திக்குமுக் கிட்டுத் தேம்பிச் செல்லெரிப்பி லகப்பட்டுக்கொண்ட 'செத்தையைப்போற்சோம்பி அடடா என்ன இந்த அறியாப்பசங்கள்கையி லகப்பட்டுக் கொண்டோமென்று சற்று நிதானித்துச் சாரதிக்குச் சவுக்ஞைசெய்து தேரை நெடுந்தூரஞ் செலுத்திக்கொண்டுபோய்த் திரும்பிவந்து சிலையை வணக்கிச் சிலீமுகம்விடுத்து இளம்பஞ்சபாண்டவர் எதிரினிற்காமல் இளைத்தோட அடித்துப் பாண்டவர்களின் உபபத்தினி புத்ராளாகிய தேவகன்முதல் யாவருஞ் செத்துவிழும்படி பத்துபாணங்களைத்தொடுத்து பிரிய தரிசனன்-சித்திரகேது இவர்களிருவரும்-விண்ணுலகேற வீரவாளிதாக்கிச் சங்கனென்பவன் நிலத்தோடுசாயச் சாயகம்விடுத்து பிரிதிவன் பிராணன் போனதும் போகாததுமாகப் புங்கவம் விடுத்துப் புரட்டி மாய்த்து, வருணக்கணையால் மந்தனென்பவனைமாய்த்து-மலயத்துவஜனை மழைப்பாணம்விடுத்து மடக்கிச் ஜெயசேனனைச் செயித்து-சகதேவன் குண்ணித் தண்ணீரொன்றோடந் தாக்கித்-துஷ்டகேதுபேரிற் சோதிக்கணைதூவி-ஆந்திராள் முதலிய அவுணர்களையடித்து ராஜபுத்ராள் முதலாகியபேர்களையெல்லாம் ஒருநொடியில் நாசப்படுத்தி திரிகாலவாசுதேவாள் பவுண்டரவாசுதேவாள்-சாத்தகி முதலாகிய யதுகுலத்தாயாதிகளையெல்லாம் புறமுதுகிட்டோடச் சாய்த்து ரவுத்ராகார ருத்ரமூர்த்தியைப்போல் வீஷ்டுமர்-இரதத்தைக் கரகரவென்று குயவன்திகிரிபோற் சுழட்டிக்கொண்டு வருங்காலையில்-நகுல சகாதேவர்கள்கண்டு தாஷ்டகமாகிய வீஷ்டுமரைத்தகைந்து ஏமாஸ்திரம்-பாசுபதாஸ்திரம்-நக்ஷத்தி ராஸ்திரம்-வருணாஸ்திரம்-முள்ளம்பு-கிளையம்பு-துளையம்பு-திருகம்பு-கவ்வம்பு-குதையம்பு - பிறைவாயம்பு-முதலாகிய பாணங்களைவிடுத்து வீஷ்டுமருடைய மேனியைத்துளைத்து விருவிருக்கச் செய்தபோது வீஷ்டுமரானவர் வெகுண்டு நகுலசகாதேவர்களுடைய தேர்-குதிரை-சாரதி-வில்-பாணம்-வீரபட்டமுதலிய எல்லாவற்றையும்-இடியாஸ் திரங்களினாலடித்து-இடித்து-ஒடித்துப்-பொடித்துப்-பாண்டவச்சேனைகளையும்- சேனாபதியையும்-படைவீரர்களையும்-பறக்க வடிக்கும்போது இராமமூர்த்திக்கிளைய இலட்சுமணருக் கொப்பாகிய சத்திய

வசன நித்தியவிரத புத்திமானாகிய விராடராஜன் தம்பி சதானிகனானவன் அவதிப்படுகின்ற தங்கள் சேனைகளைக் கண்டு தனது தேரைச்செலுத்திக் கொண்டு படைவீரர்களும் பட்டவர்த்தனரும் படர்ந்து தொடர்ந்து நெருங்கும்படியாய் பாரியவில்லேந்தி நாணிபிகிந்து எட்டுத்திசையும் பம்பரம்போலாடவும் அம்பரம் கூராழிபோற்சுழலவும் வீஷ்டுமருடைய பனைக்கொடிக்கம்ப முறிபட்டு விழும்படியாகக் கூர்மைதங்கிய அம்புகளும் பாணக்கொம்புகளும் விடுத்து அலக்கழித்து அழிந்த தன்சேனைகளுக்கு கடைக்கண்ணாநேர நாட்டி களைத்துணையும் உயிர்த்துணையும்போ லிருந்து ஒருநொடியில் தெம்புண்டாக்கிக் கொண்டு சத்துருக்களைக் காற்றினால் மூண்டெழுங் கனற்போன் றழித்து வீஷ்டுமருடைய முனைமுகத்தில்வந்து நின்று வெகுகோடி வீரர்களையும் சேனைகளையும் யானைகளையும் வெதும்பச்செய்யுஞ் சதானீகராஜனை வீஷ்டுமர் கண்டு வெருண்டோடிய தன் சேனைகளைத் தகைந்து அரவக்கணையை யெடுத்துத்தொடுத்து அதிர்த் தெதிர்ந்துவரும்படியாகிய சதானிகன் றலையை அறுத்து அந்தரத்திலோடச்செய்து அரவக்கொடியோன்முதலாகிய யாவரும்புகழ்ந்து மகிழும்படியாய் வீஷ்டுமர் வீராவேசங் கொண்டு நின்றார்.

அப்போது பாண்டவச்சேனைகளும்பாஞ்சாலப்படைகளும்-விராடன்சேனைகளும்-யாதவபோஜ குலங்களும்-சதானிகன் இறந்தானென்று மெலிந்துவருந்தி வாடியோடினார்கள். அப்படியிறந்த சதானிகனுடைய தலையானது மேற்குத்திசையிற் றெறித்துவிழுந்த தன்மையைப் போற் சூரியன் மேற்குச்சமுத்திரத்தில் வீழ்ந்தான். இந்தப்பிரகாரம் சேனைகளெல்லாமழிந்து சதானிகனும்விழுந்து பகலோனுமறைந்து செவ்வானம்போல் ரத்தவெள்ளமுஞ்சிவந்த ரணகளமும் இருண்டுபோனபோது இந்த அமர்க்களத்தைக்கண்டு பாண்டவக் கும்புகளும் விராடன் முதலிய பாஞ்சாலருஞ்சேர்ந்து சதானிகனிறந்ததைப் பார்த்துப் பலவாறுகச்சோர்ந்து அந்தோ இதென்னகாரணம் இந்தவீஷ்டுமனானவன் முதனாட்போரில் விராடனுடைய மூத்தப்பிள்ளையாகியசேனாபதி யென்னுஞ் சுவேதனனுயிரை வாங்கிவிட்டான், இன்று யுத்தத்தில் அந்தவிராடராஜனுடைய தம்பியாகிய-சதானிகனை அழித்து விட்டான், இந்த மச்சகுலத்தவருக்கு இவனே யமன்போலுமிருந்து மாய்க்கின்றான் இது ஜன்மாந்திரப் பழியோ அல்லது இதென்ன வழியோ வென்று ஏங்கி, எண்ணாயிரம் ராஜகுமாரர்களையும் இன்று போக்கினானென்று துயரோங்கி காலனையொடுக்குங் கதிர்வேலைத்தாங்கிய காவலரொல்லாருங் கண்கலங்கி விராட ராஜனுக்கு வேண்டிய தயிரியங்களைச் சொல்லித் தேற்றி நல்லது இந்தமட்டும் போரை நிறுத்துங்களென்று பேரிமுழக்கி வைத்து புருவநெரிய நெறிக்குஞ்சிவந்த கோபக்கண்களையுடைய திருஷ்டத் தூய்மன் முதலாகிய புத்ரவர்க்கத்தாரும் மித்ரவர்க்கமாகிய நிருபர்களும் போர்த்திற க்ஷாத்திரமேற்கொண்ட ஐவர்களும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சஞ்சலத்துடன் தங்களுடைய பாசறைபோய்ச்சேர்ந்து விராடராஜனுக்குத் திடஞ்சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இப்பால் திங்கட்குடைகவிக்க செம்பொற் கவரிவீசுவிருது சின்னங்களூத வீஷ்டுமரும் துரியோதன மகாராஜனும் தம்பியர்பலரும் சேனைகளும் வீராதிவீர வேந்தர்களுந் திரண்டுவரும்படியாய்ப் பாசறைக்குப்போய்ப் பலவிதஜயங்களையும்பேசி பாட்டனாரையும்புகழ்ந்து கொண்டிருந்தார்கள், இவடத்தில் நடந்தயுத்தங்களையெல்லாம் திரிதராஷ்டிரமகாராஜனுக்குத்தெரிவித்து மறுபடியும் போர்க்களத்திற்குவந்தான் சஞ்சயனானவன், இந்த ஒன்பதாநாள் யுத்தத்தில்மடிந்த ரதகஜதுரகபதாதிமுதலாகிய சேனைப்பெருக்கத்தைக்கண்டு பூதப்பிரேத பிசாசகணங்களும் நாய்நரிகளும் கும்பலாகக்கூடிக்கொண்டு கூடியவரையிலுந் தின்றுகளித்து ஜெயம்பாடி நமதுவயிற்றை நிரப்பவோ இந்த உயிர்களைப்படைத்தான் பிர்மாவென்று கொஞ்சந்துயரமும் வெருவாகிய சந்தோஷமுமுடைத்தாய்ப் புதிதாய்ச்செல்வமனுபவிக்கப்புகுந்த திருடரில் முதற்றரமாகிய குருடனைப்போல் வேதாந்தம்பேசி வீணாகியடம்பங்கூறி காணாதுகண்ட சுகவாழ்வீதுவென்றிருந்ததுகள்.

இப்பால் போர்க்களத்திற்பொருந்தி துரியோதனமகாராஜனினைவைப்போலிருண்ட இருட்கூட்டத்தை நீடித்துயிற்கவொட்டாமல் தர்மராஜன் சத்தியத்தைப்போன்ற சூரியனானவன் வித்துவான்கள் வாக்கினின்றும் பிரகாசிக்குங்கற்பனையலங்காரம்போற் கீழ்த்திசையி லுதயமாகினான் கேளும் ஜெனமேஜெயமகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டுவர இந்தச்சரித்திரத்தை அரசன்முதலாகிய மந்திரிகள்யாவருங்கேட்டு அகமகிழ்ந்து அமுதகிரணக்குலத்துதித்த அரசனானவன் தருமபத்தினியுடனெழுந்து சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து யாவினைக்குட் புகுந்திருந்து மறுநாட்காலமேயெழுந்து ஸ்நான சந்தி ஜெபதப முதலாகிய நித்தியவிதி கர்மக்கிரிகைகளெல்லா முடித்துக்கொண்டு யாகமண்டபம்வந்து சேர்ந்து மகானுக்கள்முதலிய வைசம்பாயனரையும் புகழ்ந்துபோற்றி ஆசீர்வசனங்கொண்டு சிந்துமுதலிற்கதித்துவந்த இந்துமரபிலுதித்தெழுந்த தாஷ்டீகராகிய எங்கள் பாட்டனார் வீஷ்டுமர் வசுபதமடையப் போகின்றபத்தாநாளிதாகையால் சித்தசுத்தியுடன் தானதர்மஞ்செய்ய வேண்டுமென்றெண்ணி பெரியோர்களுக்கெல்லாம் தவிசளித்தல், கைகழுவநீர்தரல், காலகழுவநீர்தரல், முக்குடிநீர்தரல், ஸ்நானஞ்செய்வித்தல், வஸ்திரஞ்சாத்தல், முப்புரிநூல்தரல், சந்தனம்பூசல், புட்பம்அணிதல், அக்ஷதைசாத்தல், விளக்கேற்றல், தூபங்காட்டல், கர்ப்பூரமேற்றல், நைமித்தியம்வைத்தல்; பாக்குவெற்றிலை அமைத்தல், மந்திரங்களால் மலரார்ச்சனைசெய்தல், இவ்விதமாகிய பதினாறுவிதவுபசாரங்களும், அன்னதானம், வஸ்திரதானம், நவரத்னதானம், பொன்பாத்திர தானம், வெள்ளிப்பாத்திரதானம், செம்புப்பாத்திரதானம், அஜதானம், கஜதானம்; ரததானம், பூதானம், கோதானம், கன்னிகாதானம், கிரசதானம், சயனதானம், சத்தியசாமதானம், பாதுகைதானம், இத்தியாதி சோடசமகாதானங்களும்: ஆதுலர்க்குச்சாலை, ஓதுவர்க்குணவு, அறச

மயக்காருக்குண்டி, பசுவுக்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்க்குமருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்குஎண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், தர்மகல்யாணம், இவைமுதலாகிய முப்பத்திரண்டறங்களும் சற்பாத்திரங்களுக்குக் குறைவறச்செய்து புண்யதேககண்யனாகிய ஜெனமேஜெய மகாராஜன் மேனடந்த பத்தாநாள் யுத்தத்தைக்கேட்க வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

இந்தப்பஞ்சமவேதமென்னும் மகாபாரதத்தைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் சுசி ஆசாரமாயிருந்து இப்பேர்ப்பட்ட உபசாரங்களைத் தங்களாலியன்றமாத்திரஞ்செய்து கண்ணனைத்துதித்துவந்தால் ஒன்றுக்குப்பத்துலாபமுண்டாம் நல்வினைசேரும் தீவினைதீருமென்று வியாசருரைத்தவண்ணம் ஜெனமேஜெயமகாராஜன்கேட்டுத் தன்வினைதீர்த்தான் இது பிரமாணமாகக் கொள்ளவேண்டியது. மேலும் படிக்கும்போது ஏடுதள்ளி பாட்டுத்தள்ளி கதைதள்ளிப்படிக்கவுங் கேட்கவுங்கூடாது அப்படிகேட்டால் பாவமும் பழியுமுண்டாமென்று வைசம்பாயனர்சொல்லிவந்தார்.

பத்தாம்போர்ச்சருக்கம்.

கண்ணன்துதி-விருத்தம்.

வலியவன்றந்தைசெற்ற மைந்தனுக்குதவந்தபேர் ... ..*
நலிவெலாமகற்றுநாம நாலிரண்டெழுத்துடன் .. ..*
பொலியுநாமமறைகள்சொன்னபொருள்விளக்குநாமமும்
கலியனெங்கள்மங்கையாதி கண்டுகொண்டநாமமே ... *

எ-று. பூர்வத்திற்றனக்குக் கேட்டைத் தானேதேடிக்கொண்ட தந்தையாகிய இரண்யனைத் தானே காரணமாக விருந்துபோக்கிய புத்திரனென்னும் பிரகலாதனருக்கு அத்தந்தையால்நேரிட்ட பெரிதாகிய துன்பங்களையெல்லாம் ஆற்றி இன்பங்களைவிளைவித்து எட்டெழுத்தாகப் பிரகாசித்திருந்ததிருநாமமும் வேதங்களிற் சொல்லிய வேதப்பொருள் தன்னையன்றி வேறில்லையென்று விளக்கிக்கொண்டிருக்குந் திருநாமமும் கலியனென்னும்பேர்கொண்டு கைப்படைதாங்கிய திருமங்கைமன் முதலாகிய ஆழ்வாராதிகளும் அருள்கொண்டுகண்டு அந்தத் திருநாமத்தின் உண்மைப்பொருளுணர்ந்து உரியபதம்பெறச்செய்த திருநாமமாகிய ஓம் அரி நமோ நாராயணாவென்னு நாமத்தை யெளியேனாகிய யானும் உச்சரித்து மேல்நடந்த பத்தாநாள் யுத்தத்தைச்சொல்லுகின்றேன் கேளும் பசுங்கதிர்குலக்கொழுந்தாகிய பார்த்திவனேயென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

வாக்கினாற் சக்ரவாளத்தைப்போன்ற ஆக்கினாச்சக்ரத்தினாற் பூமியாண்ட அரசனே பத்தாநாட்காலமே பஞ்சசயனத்திற்பொருந்திய நித்திரைநீங்கியெழுந்த குந்திபுத்திரனாகிய தர்மராஜனானவர் காலைக்கடனைக்கழித்து யுத்தகோலந்தரித்து சக்ராதரனாகிய ஜநார்த்தனனுடன் பேசவேண்டிய வசனங்களைப்பேசி போர்த்திறங்கொண்ட பூபாலர்சூழ யுத்தசன்னத்தராய்ப் பொங்கியெழுந்துவந்து தன்னைப்பணிந்த தம்பிமார்களுடன் புறப்பட்டு கடலோசையும் காரோசையும் கலங்கச்செய்யுஞ் சேனைகளின் பேரோசையுந் தேவர்கள் செவிடுபடும்படியாய் முழங்கியவாத்தியத்தொனியும் இமையவர்கண்கள்புதைத்து மெய்பதைக்கும்படியாய்ச் சேனைக்கும்புகளினலெழுந்த புழுதித் தும்புகளும் முன்னடிச்சென்று மன்னனாகிய துரியோதனனைக்கண்டு இதென்னவேலை இனிக்காரியமில்லையென்று அவனுடையகாதுகளையும் அடைத்துக் கண்களையுமறைத்ததைப்போற்கவிந்து கலந்துபறக்கும்படியாய்த் திரண்டுபுரண்டுவந்த சேனைப்படைகளெல்லாம்போர்க்களம்புகுந்து நேற்றுக்கட்டிய பத்மராகவியூகமே இன்றைக்குங்கட்டி அந்தவியூகத்தைச்சுற்றிலும் மதிற்சுவர்போற் படைகளையமைத்து அண்டமுகடதிரும்படியாய் பாண்டவச்சேனைகள் வெற்றிபெறநின்றார்கள் இந்தப்படையின்சேனாதிபதியாகியவீஷ்டுமர்உதையத்திலெழுந்து ஆரண்யநெருக்கம்போன்ற கிரணப்பெருக்கங்களையுடைய சூரியபகவானைக் கைதொழுதிருந்தபோது வலம்புரிமாலையணிந்த மகாராஜனும் அவன்றம்பிமார்களும சகுனி சல்லிய திரிகர்த்த சிந்துதேசாதிபர்முதலாகிய படைத்தலைவரும் வீஷ்டுமரைக்கண்டுவணங்கி நாடோறும் அழைத்துக்கொண்டுபோகும் வழக்கப்படிக்கு இன்றைக்கும்வந்து சேனாதிபதியின் பாசறைவாச லிருபக்கத்திலும் மொய்த்துநின்றார்கள் இப்படியாகவந்துநின்ற அரவகேதனன்முதலாகிய அதிரதசமரத வாசர்களைக்கண்ட வீஷ்டுமரானவர் அதிசீக்கிரத்தில் சல்லடந்தொடுத்து கட்டிகட்டிக் குச்சுவிட்டுக் கச்சைபிகிந்து பொற்கவசம் மற்கவசம் சித்ரக்கவசம் வச்ரக்கவசமுதலிய கவசங்களிறுக்கி அண்டர்கோன்விதிக்கும் எண்டிசைமதிக்கும் விண்டலந்துதிக்கும் மகரகுண்டலமணிந்து முத்துவடம் ரத்னவடம் வச்ராவடம் உத்ரசஞ்சம் மோகனமாலை தும்பிப்பதக்கம் சரப்பளிமுதலாகிய ஆபரணங்களும் தோளணி வாகுவலயம் கடககங்கணம் வீரச்சரடு கரச்சரடு மோதிரங்கள் முதலிய ஆபரணங்களும் கொத்துச்சித்திரவேலையுடைய நவரத்னகசிதகிரீடமும் வீரபட்டமும் பட்டயனைஞாணும் வீரகண்டாமணியும் அழகுக்கலங்காரஞ் செய்வதைப்போ லணிந்துக்கொண்டு கத்தி-சட்டாரி-கரிசை-வாங்கு-வாள்-கதை-சூலம்-வேல் எழு-கொழு-மழு-முதலாகிய தனுர்ப்பாணங்களுங் கொண்டு விபூதி ரேகையும் செந்தூரத் திலகமுமணிந்து சுகந்தபரிமள மலர்த்தார் புனைந்து தும்பை சூடிக்கொண்டு அம்பைவிரத நிறைவேறுங்காலமிதென்று சம்பராரியைப்போல் இம்பர்நடுங்க உம்பரொடுங்க பகைதொடர்ந்த வம்பர்மடங்க சிங்க மடங்கல்போற் சிறந்தெழுந்து டங்கசமுகம் பளபளவென்றிலங்க-வெள்ளைக்குடை - வெண்சாமரை யானைக்குடாரி-பூசுசக்கரம்-கொடி-தோரணம் சங்குமுழங்க - டால்வகை வாத்தியக்குழுவோசை முதலாகியவெல்லாம்புடைசூழ்ந்துவர மந்திரியர்-சருமாதிகர்-தந்திரியர்-கட்டியர்-பட்

டுவான்கள் வந்திப்போர்-புகழ்வோர்-சகுனநூல் - பார்ப்போர் நூதுவர் பாதநாட்டியப்பெண்கள் இவர்கண் முதலிய அரசசின்னங்களுடன் புறப்பட்டு இன்றைய யுத்தந்தடையில்லாமல் முடிக்கிறேனென்று வீரப்பிரதாப தீரத்வங்கள்பேசி பனைக்கொடி நாட்டிய தேரிலேறிப் பலருஞ்சூழப் போர்முகத்திற்கு வந்து நாணிபூட்டியவில்லும் ஆணிப்பொற்கவசம்புனைந்த அம்பறாத்தூணியும் வெற்றியைத்தரும் வடிவாளுஞ் சத்தியாற் சித்திபெற்ற கூர்வேலுமுடைய வீஷ்டுமரானவர் முரசவாத்திய முழங்கவைத்து சமுதுசேனைகளை நேற்றுவகுத்த ஜெயபத்திரவியூகமாகவே யின்றுமமைத்து தூசிமுனையில் மாசிலா இர்தயமுள்ள காங்கேயன் வந்துநின்றார், அந்த கங்காபுத்ரனைக் கருணைவள்ளலாகிய ஸ்ரீ கண்ணன்கண்டு மனமகிழ்வுகொண்டு மகிழ்ந்து முகமலர்ந்த காலத்தில் பற்குனன்பார்த்து பார்த்தாமனைப்பணிந்து இந்தப்பத்தாநாட் போர்முனையில தேவரீர் களித்துமகிழ்க்க காரணமென்ன அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டும், ஸ்ரீநாதனேயென்று இறைஞ்சிக்கேட்ட, இந்திரன் மதலையை நோக்கி வேறொரு நிச்சயமில்லை விஜயனே இதோ யுத்தமுனையில் வந்திருக்குங் கங்காபுத்திரனாகிய தேவவிரதனுக்கு வானவர்வணங்கும்-பழய வசுபதத்தை இன்றைக்குக் கொடுக்க விருப்புற்றிருக்கின்றோம் ஆசையால் நெடுநாளாயமனிதன் இந்தக் கர்மபூமியை விடவேண்டியகாலம் இன்று நேரிட்டதல்லவாவென்று விந்தையாகநினைத்து சிந்தைகளித்தோம் வீரமோங்கிய விற்புயகரனே நரிவாங்குதல் நற்செயல்நரனேயென்று நளினநாபியானுரைக்கக் கேட்டு காலகேயநிவாதகவசரைத்துணித்துதேவர்களுக்குச்சிறும்சிறப்புஞ் செயமுமளித்த, விஜயகாண்டீப விற்குன்றிய வீரன் பலம்பொருந்திய தேரின்மீது படபடா காரத்துடன் ஜெயம் ஜெயமென்று பறந்து முன்னே செல்லும்படி யாகிய அனுமங்கொடிபெற்ற மேன்மையுற்ற தீரன் சூற்கொண்டமேகம்போன்ற சுந்தரரூபமாரன் வனவாசஞ்செய்துவந்த மன்னனாகி அர்ச்சுனராஜன் இந்திர விமானம்போன்ற இரதத்திலேறிக்கொண்டு தாசரதியென்னும் ஸ்ரீராமமூர்த்திக்கு ஒப்பாகயிருந்தான். (அப்படியிருந்த அர்ச்சுனனை ஸ்ரீராமமூர்த்திக்கு ஒப்பாக எப்படிக்குச்சொல்லலாமென்றால் ஸ்ரீராமமூர்த்தியானவர் கடலைக்கடந்து அரக்கரையழித்து அமரரைக்காத்தார், இந்த அர்ச்சுனனும் கடலைக்கடந்து தோயமாபுரக்காலகேய நிவாதகவசராகிய அரக்கரைக்கொன்று அமரரைக்காத்தமையாலும் ஸ்ரீராமருக்கு சிதையென்னுங் கொடிநிமித்தமாக அநுமார் முன்னின்றபடிக்கு இந்த அர்ச்சுனன் றேரிலும் காந்தியையுடைய கொடிநிமித்தமாக அநுமார் முன்னின்றமையாலும்ஸ்ரீராமர் மேகம்போன்றதிருமேனியையுடையவராகையாலும்அர்ச்சுனராஜனும் மேகம்போன்றதிருவுருவங்கொண்டமையாலும்,ஸ்ரீராமர்சிறிபதாயின்வாக்கியநிமித்தமாய்ப்பட்டத்தைவிடுத்து வனம்போய் மீண்டமையாலும் இக்கவிஜயனும்பெரியதாயின்பிள்ளை நிமித்தமாய்ப்பட்டத்தைவிட்டுவனவாசம்போய்வந்தமையாலும் ஸ்ரீராம ஜெபமேஜெய மென்பதினாலும் விஜயன் விஜயமே விஜபமென்பதினாலும் - ஸ்ரீராமர் வில்வளைத்து பெண்கொண்டமையாலும் இந்த அர்ச்சுனனும் வில்லை வளைத்துப் பெண்கொண்டமையாலும், ஸ்ரீராமர் சிறுபோதில் விஸ்வாமித்திரருடைய சபதநிறைவேற்றி யாகத்தை முடித்தமையாலும், அர்ச்சுனராஜனும் சிறுபோதிற் றுரோணாச்சாரியாருடைய சபதத்தை முடித்தமையாலும், அவருஞ் செங்கதிர்க் குலமாதலினாலும் இவரும் வெண்கதிர்க்குலமாதலினாலும் அவருக்கு விஜய கோதண்ட மிருப்பதினாலும் இவருக்கு விஜயகாண்டீப மிருப்பதினாலும், ஸ்ரீராமரைப்போல் நின்றான், அர்ச்சுன ராஜனென் றுரைத்து அப்பாற் கதையுஞ்சொல்லத் தொடங்கினார் வைசம்பாயனர்.) இப்பால் அர்ச்சுனராஜன் அகங்களிகூர்ந்து அநந்தகல்யாணனுடைய அருண்முக நோக்கி என்னையனே யான்பிடித்திருக்கு முறியாதவில்லும் அழியாத ரதமும் மாளாத அம்பறாத்தூணியும் அசையாத அனுமத்துஜமும் சளையாத சுவேதவாம்பரியும், இதுகளெல்லாம் அக்கினிதேவன் கொடுக்கப் பெற்றிருக்கின்றேன் இதுவுமல்லாமல் அப்படியாகப்பெற்ற இந்த அழியாதரதத்தைச் செலுத்துவதற்கு என்னையாளவந்த தேவரீரைச் சாரதியாகப்பெற்றேன் ஆகையால் இப்பூமியிற்பொருந்திய அரசர்கள் யாவரானபோதிலும் தேவரானபோதிலும் ராட்சதரானபோதிலும் இன்ன் மற்றயெவர்களானாலும் என்னுடன் வந்தெதிர்ப்பவர்களை இன்றையப்போரில் இறக்கச்செய்யாமற் பிழைக்கச் செய்யப் போறதில்லை, மலையைக் குடையாகப்பிடித்த மாதவனேபாரும், இன்றைக்கு என்னுடைய பராக்கிரமத்தை பார்த்தாமனாகிய சுவாமியே கனங்சரகிதமாகிய மனமும் மிகுந்த உச்சாகமும் எனக்கு மேலிட்டிருக்கின்றபடியால் இந்தக்காலத்தில் என் தந்தையானாலும் சகோதரனாலும் பிள்ளைகளானாலும் பாட்டனானாலும் குருவானாலும் இன்னமெவர்களானபோதிலும் இன்றைக்கு கொல்லேனென்று ஒருக்காலுஞ் சொல்லேன் தேவரீர் திருவாய்மலர்ந் தருளிறால் கண்டதுண்ட மிரண்டாகக் கொன்றுபோடுவேன் முதன்மையாகிய தத்வஞானவேதாந்தப்பொருளை என்சிந்தை நிரம்பச் செவிவழியுகுத்து ஜெனனமரணமுதலாகியதீவினைக்கட்டறுத்த திருமாலாகிய எங்கள்பங்குத் தெய்வமாயமைந்தமர்ந்த தேசிகனேயென்று வாசவன் மகன் வணங்கிச்சொல்லக்கேட்டு மாயோன் மனதுவந்து பொன்மலைபோன்ற தேரைநடத்திப் போரைநடாத்தும் அர்ச்சுனைவென்று தேவவிரதனின்ற யுத்தபூமியிற் றேரைக்கொண்டுபோய் நிறுத்தினார் - ஸ்ரீகிருஷ்ணதேவர் அப்போது அர்ச்சுனன்பின்னால் அவடத்தி னிறைந்துவந்த வெற்றியையுடைய கொற்றவரெல்லாம் சுற்றிலுஞ் செறிந்து ஒன்றுபட்டு கைகலந்து எதிரியின் சேனைகளுந் தாங்களுஞ்சேர்ந்து போர்புரிந்தார்கள் அந்தவேளையில அவர்களையெல்லாம் அம்பரத்திலாட்டும் பம்பரம்போ லாட்டி அவடத்தில் நிலைக்கவொட்டாமலோட்டி தீரபோஜரிற் சிறந்த வீரகேசரிபோலிருந்த வீஷ்டுமரை வளைத்துக்கொண்டு பதாதிகேசம்வரைக்கும் பாணங்களைநிறைத்து பலபல திசைகளினிற்குஞ் சேனைகள் விலவிலவென் றசைவற்று

விழும்படி பாராடப் போராடியபோது, பார்த்தன் முதலிய பலவீரர்தொடுத்த பாணங்களெல்லாம் பரம்படித்த சேற்றில்விதைத்த விதைபோலும் பள்ளத்தாக்கில் நட்ட நாற்றினடவுபோலும் வீஷ்டுமருடைய மெய்முழுதுந் தைக்கும்போதில் நாவுலர்ந்து நாபிவரண்டு கண்புதைந்து வெந்து கவலைப்படாத உள்ளநொந்து கரங்களிளைக்க மனம்புழுங்கி உளைக்க மிகுந்தபனியினால் முகங்கருகிவருந்தி நிறமழிந்து குவிந்துவாடிய தாமரைக்கமலம்போல் மதிமுகம்வாடிநின்றார், வீஷ்டுமர் அந்தவேளையில் ஆயுதமுனைகள் கருகிப் புகையவும் யானை-குதிரைகள்-கண்ணீர்சொரியவும், அணிந்தமாலைகள் சருகாகவும், அலகைமுதலிய காக்கை கழுக்கள் அடித்துமோதி தேரின்மேல் விழுவமெழவும் அந்தரத்தினின்று உதிரமாரி தூறவும் குறைக்கொள்ளிக்கட்டை யுதிர்ந்துகுவியவும் கூக்குரலாக நாய் நரி கூவவும் தீப்பட்டெரிந்து சேனைகள் வேகவும்; சித்தம் பிரமிக்கவும், யுத்த நிர்மிக்கவும், இப்படியாகப் பலவித துற்சகுனங்களைக்கண்டு சகுனநூல் வல்லோர்தடுக்க அவர்களை வீஷ்டுமர்தடுத்து இந்தச் சகுனங்களெல்லாம் எனக்கு நல்ல சகுனமென்று மனந்தெளிந்து தன் பூர்வோத்திரத்தைத் தானெண்ணிப் பார்த்து தன்னை நம்பிய மித்திரனுக்கு நானுமுதவிசெய்யு நன்மையோன், தன்கரத்திற்பிடித்த வில்லிற் கணைகளைத்தொடுத்து அவர்கள்விடுத்த அஸ்திரங்களையெல்லாந் தடுத்து அவர்களையும் முகமாறவடித்து வருங்காலையில், துருபதேயர்-மச்சநாடர்-கலிங்க தேசர்-சோனகர்-சிஞ்சயர்-கராடர்-கௌசிகர்-சாலுவர்-சீனர்முதலிய தேசபாஷை மன்னர்கள் வந்தெதிர்க்க, அவர்களையெல்லாங் கலகலக்கச்செய்து ஒருவர்போல் அனைவரும் உடல்வருந்தி இறக்கும்படியாகவும் முதுகிட் டோடும்படியாகவும் வின்னாணி யிறுக்கி யுறுக்கினார்-வீஷ்டுமர், அவர் முன்னோடி யடித்த அடியினால் சுத்தவீரர்களின் தலைதுணிந்து பின்னோடிவிழ அவர்களுடலானது முன்னடி நடந்து கொடும்போர் விளைக்கும் குறைத்தலைக் கவந்தங்களுடன் கூத்தாடவும் இன்னஞ்சில் சூரர்கள் இரண்டுபாதங்களும் அறுபட்டுப்போகப் பூமியில் குந்திக்கொண்டு பூமாலை சூடியு வில்லைவணக்கிச் சரங்களைப் பொழியுஞ் சப்பாணிகளாய்த் தவழ்ந்தூரவுங், கொடியறுபட்டுக் குடைமுறிபட்டுக் கோலொடி பட்டுக் கால்தறிபட்டு வில்லொடிந்து பல்லொடைந்து சரங்கொண்ட கரம்விண்டு கடககங்கண புயமுறிந்து கலகலென்றெழும் அயமறந்து பயம்பிறந்து சோரி வெள்ளத்திற் சுழலவும் விதைக்காலத்தி லடிக்குஞ் சுழற்காட்டி லகப்பட்டுழலும் புழுதிபோல சரந்தொடுக்கவந்தவர், சரந்தொடுத்துவந்தவர், போர்கொடுக்கவந்தவர் போர்கொடுத்துவந்தவர், இவர்களெல்லாரு மடங்கிப் பறக்கவும் இடிமுழக்கங்கேட்டுப் படியில்விழுந்திறக்கும் பாம்பைபோல் தலையுடைந்திறக்கவும், ஒருத்தனோடுவதைக் கண்டு ஏனோடுகிறாயென்று கேட்டுக்கொண்டு இருவரோடவும் இவர்களை இன்னஞ்சிலர் வினவிக்கொண்டு முன்னும்பின்னுமோடும் அவர்களுடனோடவும் இந்த வேடிக்கையைப் பார்த்து நகைத்துக்கொண்டு ஓடிய பலபேர்களைச் சிலர்தடுத்தோடவும் தடுத்தபேர்களைப் பிடிக்கும் படியாய்ச் சிலர் அடுத்தோடவும் ஆவிகுன்றியபேரை கூவிக்கொண்டோடவும், இந்தப்படி யுத்தமுனையில் நிற்கப் பயந்தவர்களாய் யாவரும் ஓடியொழியவும் வீரப்பகழிவிடுத்து அடுத்து அடித்து முடித்துவந்தார் வீரராகிய வீஷ்டுமர், இந்தவீஷ்டுமரானவர் வில்வளைத்து இன்றுபுரிந்தபோராண்மையானது விஜயனிடத்தி லுண்டென்று என்றைக் காகிலு நினைக்கத்தக்க துண்டோ வெண்கதிர்குலத்துதித்த வேந்தனே, மேலும் வீஷ்டுமரானவர் விஸ்ரம் பிச்சு விண்ணு மண்ணுங்-கண்ணுர்-கொண்ணுந்தெரியாதென்று சொல்லும்படியா யுத்தம்பண்ணி வரும்போது, அர்ச்சுனன்பேச்சு வச்சது வச்சதுபோல் அச்சுப்பதித்தாப்போலாச்சுது; அந்தவேளையில் துரியோதன மகாராஜன் சந்தோஷமடைந்து ஐயோ என்பாட்டனாகிய ஐயாவானவர் இந்தப்ரகாரம் இரண்டுநாழிகை யுத்தஞ் செய்தால் நானீடேறிப்போவேனென்று கண்ணுமனமுங் களித்து இரண்டுமகமேரு வெழுந்ததையொத்த தடம்புய வீர தாஷ்டீகமுள்ள வீஷ்டுமர் நிலைநின்று போர்செய்யு முனைமுகத்திற்கு சோழராஜனும், குற்றமற்ற கிருபாச்சாரியும், துரோணாச்சாரியும், அசுபத்தாமனும், ஜயித்திரதனும்; திரிகர்த்தனும், துசுவாசனன்முதலாகிய தம்பிமார்களும், சகுனியும், பகதத்தனும், சல்லியனும்-துரியோதன மகாராஜனும் மேகசாலம் பொழியுமிடத்திற் குளிர்காற்றும் இடியுங் கூடக்கலந்து வீசியடிக்குந் தன்மைபோல் வந்துகூடி மனோதிடங்கொண்டாடி ரதகஜ துரகபதாதியருஞ்சேர்ந்து தனஞ்செயனென்னுஞ் சிங்கத்தை வளைத்துக்கொண்டு விண்ணணியேற்றிச் சரமாரிதூற்றி வெகுண்டு போர்செய்தார்கள். அந்தச்சமயத்தில் சம்வர்த்தம்-ஆவர்த்தம்-புட்கலாவர்த்தம்-சங்காரித்தம்-துரோணம்-காளமுகி-நீலவர்னமென்றுரைக்குஞ் சப்தமேகமும் சமுத்திரத்தை யுறிஞ்சிக்கொண் டெழுந்துவருந் தன்மையைப் போன்ற நிறங்கொண்ட விஜயனானவன் தனக்கெதிரில்வந்து போர்புரிந்த வீராதிவீரர் யாவர்களையும் கண்ணோட்ட மிட்டு தன்கரத்திற் றரித்திருக்கும் ஒப்பற்ற கார்முகம்வளைத்து ஓரினமாகிய சரங்களை ஒவ்வொருதடவைக்கு நூறு நூறு சரங்கலாக வரிசைவரிசையாய் மாலிகாயோகம் பிடிக்குந்தன்மைபோல் விடுத்து அவர்கள்தொடுத்தகொடும் பகழிகள் யாவரையும் தடியடிபோல் நொடியிற்பொடியாக்கிப் படியிற்படியச்செய்து முடியினையுடையோர் முடியும்படியாய் தேருடனுதயமாகிய திவாகரனைப்போற்றிரிந்து சேனைகண்முதலிய யாவரையும் அடைகிடந்தெழுந்து பொரிந்து சீறுங்சருநாகம்போன்ற கணைகளைத்தொடுத்துப் பிளந்துவரும்போது அர்ச்சுனனுடன் போர்புரிந்து யுத்தயிச்சைகொண்டுநின்ற அரசர்களாகிய சமுத்திரஞ்சுவறிச் சேனையென்னுஞ் சலசரங்களெல்லாந் தீயும்படியாய் ஆனைமுதலிய மலைகள்சாயும்படியாய் இறைந்துவருஞ் சூறைக்காற்றைப்போலும் அந்தக்காற்றின் சகாயனாகி யெழுந்துவருங் காலாக்கினியைப்போலும் சடவுண்மாருதிமைந்தனாகிய வீமசேனன் கதாயுதத்தைக் கொண்டு குதித்து தானொருவனாகப் புகுந்து முடிகளுடன்

சிரங்களும்-கொடிகளுடன்-உரங்களும்-நிரமணிகளுடன் றேறுளும்-விசமணிகளுடன் முளும்-கவசங்களுடன் மெய்யும் - கங்கணத்துவஜங்களுடன் கையும் சிதைபட்டழிந்துடைந்து வாடவும்-முதுகிட் டொழிந்தகன்று ஓடவும்-முடுக்கி யடித்து ஒடித்து முடித்து நடித்துக் கூத்தாடி தடுக்கிவிழுந்தழிய மாட்டினுன்-மண்டை யொடிந்து உதிரம்வழியச் சிலரையோட்டினுன் அவனுரொன்னில் காமதகனனென்னுஞ் சிவனுக்கொப்பாகிய வீமசேனன்.

இதன்றியும் அதிரதர் மகாரதர்-சமரதர் முதலிய அவரவரேறிவரும் அணிமணிக்கொடி முடியுடைய ரதங்களை-ஆகாயத்தி லெடுத்தெறிந் தாடியும் - யானைப்பாகர் முதலாகிய வீரருடன்-யானைகளின் இரண்டுகொம்பையும்-துண்டத்தையும் பிடித்துக்கொண்டு-மண்டலா கிர்தியாய்-தும்பியைத் தும்பிசுற்றி அம்பரத்தில் வீசியோடியும்-மல்லகதி-மயூரகதி-வியாக்கிரகதி-வானரகதி-விடபகதியாகிய-இவ்வைந்து கதியும் பிந்திப்போகும்படியாக முந்திப்போகும் குதிரைகளைக் குதிரை வீரருடனெடுத்து வானுலகு விதிவலம் வரும்படியாய்ச் சுழற்றிவிடுத்தும் வஞ்சகமனத்தில் வெஞ்சினங்கொண்டு வஞ்சினம்பேசி-அஞ்சாமல் மிஞ்சிவரும்படியாகிய வாளரசரேறிய ரதகஜதுரகங்கள் சாயும்படியாகவும் - நிலத்தில்விழுந்து மாயும்படியாகவும் இடதுகாலாற் சிதைத்தும் வலதுகாலாலுதைத்தும் வலக்கரத்தாற்குத்தியும் இடக்கரத்தாலெற்றியும் வாட்டியபோது முதற்பட்ட மீனுறுமென்னும் பழமொழிக்கிணங்க மதப்பட்டுவந்த படைவீர ரெல்லாம் வீமசேனனுக்கெதிர்நிற்கமாட்டாமல் தடைபட்ட பாம்பைப்போலேங்கிப் பின்வாங்கி முதுகிட் டோடுவதைக் கண்ட வணங்காமுடியோனுகிய துரியோதனமகாராஜன்-விசனமடைந்து நொந்து மிகுந்த கோபங்கொண்டு வில்த்திறமையில் அர்ச்சுனனுக் கிணையாகிய பலவான்களென்னும் யானைவீரர்கள் குதிரைத்திரர்கள் ஐஞ்ஞூறுயிரம் பேரை வீமசேனன்பேரில் முடுக்கிவிடுக அவர்கள் யாவரும் ஏழுமேகமும் ஊழி முகிவிற்பொழிவதைப் போல் வாளிமழை பாணமழை சரமழைகளைப்பொழிந்து ஆர்ரமங்கொண்ட பராக்கிரமசாலிகள் தடுத்துப் போர்கொடுத்தார்கள் அந்தவேளையில் அக்கினிதேவன் காண்டவவன தகனஞ்செய்வதற்காகச் சாரதியாயமைந்த சக்ராதரன்-தேரைச் செலுத்த திரவீர வில்லாளியாகிய விஜய னெதிர்சென்று நின்று விஜயகாண்டீபங்கொண்டு அவரவர்கள் தொடுத்து விடுத்த கும்புகளாகிய அம்புகளுக்கு நேராக அந்த அம்புகளைத் தொடுத்தழித்து அவர்கள் கைப்பிடித்தவிற்களுமற்று நாணிகளறுக்கத்-தனு-வாள்-கதைகொண்ட கைத்தலமற்று ஏறிய துகிரைக் கல்லணையற்று கடிவாளமற்று கவசங்களற்று விரகண்டைகளற்று சுதியற் றிறக்கக் கலங்கிப்பறக்க கூரங்கணைகளைவிஜுன்-கிரீடியானவன் இவடத்தி லிப்படியிருக்க துரியோதனன் றம்பிமார்கள்-துச்சாதனன்முதலிய வைந்துபேர்களும்-வீஷ்டுமரிடத்திலிநின்ற வீரர்கவீர மற்றப்பூபாலரும்-கிர்தபத்மன் கிர்தவீரியன் முதலியகோபாலரும் கேரேறிச்சென்று தருமராஜன் முதலாகிய ஐவரையும் இன்றே வென்றிடுதுமென்று வில்வளைத்து நின்று அர்ச்சுனனையும் வீமசேனனையும் வளைத்து பற்பலவார்த்தைகளைக் கூறி போர்புரியும்போது-அர்ச்சுனனுடைய பாணங்களினுலும்-வீமன் கதையினுலும் - தலைவிரிகோலமாய்த்தளர்ந்து செத்தவர் போகமற்றவர் பின்கொடுத்தோடினர்கள், அப்படி யோடத்தக்க சேனைகளை வீஷ்டுமர்கண்டு உள்ளம் வெதும்பிக் கண்கள்சுருங்கி நெருப்பெழ விழித்து நெடிய வில்வளைத்து ஆலகாலம்போற் சீறிவருங் காலத்தில் ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களின் அனலன் அனிலன் ஆபச்சைவன் சோமன்-தரன்-துருவன்-பிரத்தியூசனென்னும் ஏழுவசுக்களும்-எட்டாவது பிரபாசன வசுவாகிய வீஷ்டுமரைக்கண்டு வருந்தி மனஸ்தாபங்கொண்டு எங்களுக்கு எஜமானுகி வசுபதத்தி லிருந்த நீர் பூலோகத்தில் எத்தனைநாளாய்விட்டுது-ஐயா-இனி நீர் பதத்திற்குவந்து சேரும்பாக்கியனே உமது பூர்வோத்திரத்தை உற்றுநோக்கிப் பாருமென்று சொல்லவே அந்தத் தேவ ரகசியத்தை வீஷ்டுமர்கேட்டு கண்களிகூர்ந்து முகமலர்ந்து நமக்கு இதுதான் கடைசிக்காலமென்றுணர்ந்து, வேறுவிதங்களைக் கருதாமற் கவலாமற்-கரையாமற்-கலங்காமற் கார்முகம்வணக்கிப் போர்முகக்குறுகி வெற்றிமாலை பூண்ட வித்தகனையும்-சுற்றிலுஞ்சூழ்ந்த மற்றெவரையும் உத்தமப் பாண்டவராகிய கொற்றவரையும் தகைந்துக்கொண்டு கோலாகலமாக்கி பலவித பாணங்களைப் போக்கி கூறுபடுத்தி மாமிசமழியத் தூறுபடுத்துவார்களாக ஊறுபடுத்தி உதிரவெள்ள ஆறுபடுத்தி முடம்விட்டோட மாறுபடுத்தி தருமன்முதலாகிய ரதத்தலைவர் யாவருந்தளர்ந்து வருந்தச்செய்து ஒருவரையும்விடாமற் றன்னுடைய பாணக்குறியானது எல்லாருடனு மிருக்கக்காட்டி கொடுமரமாட்டிஎவர்களையும்வீட்டியபோதுஎத்தனைகோடிமுடித்தலைகள்எத்தனைகோடிதோள்மலைகள்எத்தனைகோடிகரக்கமலம்எத்தனைகோடியுடற்சுமைகள்எத்தனைகோடி அவயவங்கள்எத்தனைகோடிக்குழிகணங்கள்-எத்தனைகோடிக்குடல்வகைகள்எத்தனைகுவியல்மாமிசங்கள் எத்தனைவகைகள்நரம்பினங்கள்எத்தனை கிரிகளெலும்புவகைஎத்தனைகோடி அடித்தொடைகள் எத்தனைகோடி மணிக்கால்கள்-இந்தப்பிரகாரம்ரணகளத்தில்இற்றுவிழுந்ததுகளை எத்தனைகோடியென் றியம்புவேன்-இன்னமும்கிழிந்துபிளந்த மார்புகளும் வெருண்டுதளர்ந்த மனங்களும் கரைபுரண்டோடும் ரெத்த வெள்ளமும் நெரிந்து முறிந்த எலும்புகளும் அழிந்து சிதைந்த கொழுந்தசையும்-கிமிர்ந்துவலிக்கும் நரம்புகளும்-சரிந்துகிழிந்த பெருங்குடலும் துண்டம்ரொண்டாகிய சிரங்களும்-கடைபுரண்டு திரண்டுநெரியும் புருவங்களும் தணல்விட் டெரியுங் கண்களையுடைய முகங்களும் இடிந்து ஒடிந்ததொடைகளும் இறந்துமறந்த வீரப்படைகளும் எல்லாம் அழிந்தபோது சோமகாள்-மச்சர்-மாாடர்-துருபதேயாள் சோழர்கள்-சேரர்கள்-பாஞ்சாளர்-குலிங்கர்-சிஞ்சயர்-பப்பரர்- மகதர்-குருதர்-மகுடவர்த்தனர்-பட்டவர்த்தனர்-மண்டலீகர் முதலாகிய பாண்டவச்சேனைகளெல்லாம் வீஷ்டுமரிடத்தில் எதிர்த்துப் போர்புரிந்து இறந்தவரன்றி இருந்தவர்களில் வாய்

-வுந் சூரியகிரணமு மருவாத ஊருமில்லை இவருடைய க
ணைக் குட்கலங்கி மயங்காதபேருமில்லை-இந்தப்படி வீஷ்
டுமர் பாண்டவப் படையுட்புகுந்து கொல்லுந் தன்மை
யைப் பார்த்தாமன்கண்டு இரக்கமுற்றுக் கோபித்து வெ
ண்ணெயுண்ட செம்பவள வாய்மலர்ந்து அர்ச்சுனனை
நோக்கி என்மைத்துன இன்னஞ் சற்றுநேரம் நாம் சும்
மாயிருப்போமாகில் குருக்ஷேத்திரத்திற் கூடிய நமது ப
டைகளெல்லா முடிந்துபோம் நாமுங் குறைவுபடும்படி
யாயிருக்கும், ஆகையால் நாமுரண்டு எதிர்சென்று இந்
தக்காங்கேயனை இன்று முடித்துப்போடுவோம் அப்படி
முடிப்பதற்கு யிதுவே நல்லகாலமாயிருக்குது வாரும் அ
ர்ச்சுனராஜனேயென்று வாசந்தயங்கிய துளபமணந்தமு
குந்தனானவர் சுவேதவாம் புரவிபூட்டிய சயர்கனத்தைத்
தடதடவென்று செலுத்தி வீஷ்டுமருக்கெதிராகக் கொ
ண்டுபோகவே பாரிய காண்டீபம்வளைத்துகுணத்தொனி
செய்து அழகாகிய பாணங்களை யேர்ப்படுத்தித் தந்தா
மாக முடுக்கிவிட்டான் றனஞ்செயனானவன், அந்தக்க
ணைகளையெல்லாந் தவிடுபொடியாக்கி அவனுகத்தையுஞ்
சாரதிதேகத்தையுந், சல்லடைக்கண்ணாக்கித் தனிச்சிங்
கம்போன்று திரியும் வீஷ்டுமனைநோக்கி அர்ச்சுனன்சஞ்
சலப்பட, அப்போது பக்தவர்ச்சலனாகிய பகவான் அர்
ச்சுன தயிலமற்றதீபம் தயிலத்திற் சேர்ந்திருந்த வத்தி
எரிந்து ஒளியெழுந் தணைவதுபோல முகிவுகாலங் கொ
ண்ட உங்பள்பாட்டனாகிய முதியோன் பகைபகைக்கின்
றான் பாருமென்று-மண்டலம் விண்டல் மொன்றுபடச்
சுழலவும், தொண்டர்கண்முதலிய அண்டர்களுழலவும்,
புண்டரீகன்முதற் கண்டவரோங்கவும், கொண்ட லாகிய
ஏழுமேகமும், இடித்து முழங்கி யிளைந்துபின்வாங்கவும்
வேலைபெழும் அலையெறிந்து மறிந்து விழுந்து எழுந்த
லையவும், சர்வசம்ஹார ஜலப்ரளய ஊழிக்காலஞ் சார்ந்த
தென்று தானவர்முதலிய வானவரலையவும், திக்கெட்டு
ம் விக்கிட்டுச் செவிடுபட்டுப்போகவும் பேரண்டங்குலு
ங்கவும், பிர்மாண்டங்கலங்கவும், சக்ரவாளத்தகடு தத்த
ளிக்கவும், தனபதியுலகஞ் சாயவும் சந்திரசூரியர்கதிபோ
யவும், தானவரடங்க மாயவும், சேடன்முடி சடசடவெ
ன்று திப்பிரமை கொள்ளவும் திருவிக்கிரமனாகிய ஸ்ரீ அ
ரிபரந்தாமன், பரப்பிர்மன், பக்தவச்சலன், பக்தபரா தீ
னன், பங்கஜபாதன், பரமபதநாதன், ஜகதீசன் ஜகரக்ஷக
ன், ஜகநாதன், ஜநார்த்தனன், ஸ்ரீபப்பதி, ஸ்ரீதரன், ஸ்ரீநி
வாசன், ஸ்ரீநாதன், மாதவன், வாசுதேவன், கேசவன், தி
ருத்துழாயணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவ னானவர், வீஷ்டுமரு
டைய போரைக்கருதி இவனையின்று கொன்று மேலுல
கத்திற் கனுப்பவேண்டுமென்று கொண்ட சருத்தின்படி
தமது திருக்கரத்திற் பாஞ்சசன்யந்தை யெடுத்துப் பவ
ளமாகிய திருவாயில்வைத்து திம்திம்திம்-கிரதக தும்தும்
தும்-கிர்தக பொம்பொம் கிர்தக பொம்மென முழக்கின
ர் அந்தவேளையில் திடகிரமேருப் புயகாந்திர தாஷ்டிக
வீஷ்டுமரும், இதரமாகிய சேனைவீரர்களுஞ் சங்குத் தொ
னிகேட்டுத் தயங்கி அங்கத்தைவிட்டு ஆத்மம் வெளிப்ப
டும்படியாய் மயங்கி அல்லலுற்றூர்கள், அந்தவேளையில்

இரண்டணிப் படையிலுமிருந்த அதிரத அரசர்களுடை
ய சங்கநாதமும், தோல்க்கருவி-துளைக்கருவி-நரம்புக்கரு
வி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி, முதலிய வாத்தியங்க
ளெல்லா முழக்கிக் குமுறவும்; வீராவேசங்கொண்ட அ
ர்ச்சுனராஜனானவன்தனதுதேவதத்தத்தைப்பூரித்துநால்
வகைச்சேனையுங் கலந்துவருஞ் சேனைமண்டலங்களுட
ன் சிகண்டியை வீஷ்டுமருடைய கண்களுக்கெதிராய் மு
ன்னணிமுனையிற் கூட்டிக்கொண்டுபோய் புராதனமாகிய
உலகம் இன்று பொன்றுமென்று பேசிக்கொள்ளும்படி
யாய்ப் போர்புரியச்செய்தான்-ஆண்டொழின்மைத்தனாகி
ய அர்ச்சுனன், அப்போது சிகண்டியானவன் கூசாமனி
ன்று கொடுமரமாகிய வில்லைவளைத்துக் கொடுமை கொ
ண்ட கொலைப்பகழிகளினாற் கோமனாகிய வீஷ்டுமனையடி
த்தான் இப்படிக்கு அநேக அஸ்திரங்களினால் அடித்தசி
கண்டிநிற்கு நிலையை வீஷ்டுமர்கண்டு குளுந்தகைசெய்
து அன்று அம்பையானவளுடைய பகை இன்றுமுடிய
வந்ததென்று தன்கரத்திலிருந்த தனுப்பாணங்களைத் தே
ரின்பேரில்வைத்துவிட்டு நிஷ்டா கநிஷ்டனைப்போல்வெ
றுங்கையோ டிருந்தார் வீஷ்டுமரானவர், அப்போதும்
சிகண்டி கையோயாமல் அஸ்திரங்களினால் அங்கந்துளை
பட அடித்தபோது பேரப்பிள்ளையாகிய துச்சாதனன்க
ண்டு மனந்தாளாமற் பெருங்கோபங்கொண்டுபோய் பற்
பலவிதமாகிய பாணங்களைவிடுத்து அடாபாவியென்று ப
ல்லைக்கடித்து வில்லைமுறித்து அவன் மெய்யையுந்துளைத்
து அவனேறிவந்த தேர்-குதிரை-சாரதிமுதலிய கொடி
குடைகளையும்அழித்தான் அப்போது அந்தச் சிகண்டியா
னவன்சாகப்பயந்துயுத்தமுகம் விடுத்ததான் வந்தவேலை
முடியா திருப்பதினால் வந்தவழியினமேற்சிந்தைகொண்
டோடினான், அந்தவேளையில் சந்தனுகுமாரனாகிய வீஷ்டு
மர் ஜாக்கிரதையாய் மறுபடியும் வில்லைப்பிடித்து நாணி
யிறுக்கி-மினலாஸ்திரம் - இடியாஸ்திரமுதலிய விசிகங்க
ளைத்தொடுத்து பாண்டவர்கட்டிய யூகத்தைப் பறக்க அ
டித்து பாஞ்சாலக்கும்புகளைப் படுபாழாக்கி வீபற்சேன
னும் விஜயனுடைய மேனிமுழுமையும் வேத்திரநிறைத்
து மெய்-வாய்-கையாடவொட்டாமற் செய்து தேர்ப்பா
கனாகிய செங்கணெடுமா லுடைய கறுங்கடலும் கறுத்த
மேகமும் காசாம்பூவும்-கருமணியும்-கறுத்தமையும் - க
ருவிளமலரும் கலந்துபார்த்து சிறந்திருக்கு மேனியிற் கா
லாக்கினி உருமுகக் கணைகளைப்பொழிந்து கால்முதற்சிர
ம்வரைக்குந் துளைத்து செம்பவளமும் செம்முருக்கின்ம
லரும் செங்காவியும் செங்கிடையும் செவ்வல்லியும் நிக
ராகும்படி சிவக்கச்செய்தார் துரியோதனனுடைய சே
னாபதியாகிய தேவவிரதன் அந்தச்சமயத்தில் சேனைவீர
ர்கள் திடுக்கிட்டு முடுக்குண்டோட தேவேந்திர குமார
னும் திருமாலும் சற்றுநேரஞ் சித்தப்பிரமைகொண்டிரு
ந்து உடனே மனந்தேறித் திடங்கொண்டு முன்வந்து அ
டிபட்டோடிய சிகண்டியை பின்னும் அழைத்துக்கொண்
டுவந்து அவனுக் கநேகம் உறுதிகளையு முபாயங்களையுஞ்
சொல்லி அந்தச்சிகண்டிக்குமேற்றுணையாகத் தாங்களெ
ல்லோருமடுத்துச்சமீபத்திலிருந்துபூசல்நடத்தியபோது

சிகண்டியானவன் அவடத்தி னிற்கமாட்டாமற் றிரும்பி போடபின்வுகொண்டிருக்குந்தினத்தைத்திருமால்கண்டு நீயொன்றுக்கும்பயப்படாதே அஞ்சாதேஓடாதே வாடாதேநாமிருக்கிறோ மென்று உண்மைவாக்ய உறுதி கூறிக் கூர்மையாகியகொழுக்கணைகளைக்கொண்டல்போற் பொழியச்செய்து அர்ச்சுனராஜன், அவனுக்கண்டையிலிருந்துக்கொண்டு அக்கினிதேவனளித்தகாண்டீபத்தைவளைத்து சிகண்டிதொடுக்கும் அம்புகளுடன்கலந்துஇதுவோ அதுவோவென்றுன்னும்படியாகப்பேதமில்லாமற்கலந்துவேதமந்திரம்விளம்பிசெஞ்சாமாருதம்போற்செல்லும்படியாகிய தீமுகப்பாணங்களைத்தெரிந்தவுடனேகாண்டீபத்தைவிட்டுபுறப்பட்ட அந்தப்பாணங்களெல்லாம்பஞ்சபாணத்திற்குத்தப்பிப்பிழைத்துக்கொண்டிருந்தவிவேகமுள்ளவீஷ்டுமருடையபொன்மலைபோன்ற அருமைத் திருமேனியெல்லாம் சிதுமைப்படும்படியாய்த்தைத்துத்துளைக்கும்போதுமேலுமேலும்சிலஅர்த்தசந்திரபாணங்களைவிடுத்தபோதுகரகரவென்றுருவசிரத்திலும்கரத்திலும்நெஞ்சிலும்மார்பிலும் புகுந்துபின்பிறந்தடாரித்து வருத்தப்படுத்திவாட்டி சாளரத்துவாரம் போல்சந்தாக்கி சாறைப்பாம்பைப்போற் சரசரவென்று செல்லுகின்ற பாணங்களைக் கண்டுஇதுவரையிலும் சுத்த வீரனென்று பிழைத்தநான் பெண்பாலாகிய ஒருவன் கணையாலிறக்கும்படி நேரிட்டதல்லவாவென்று ஊழைநினைத்துசற்றுநேரந் துக்கப்பட்டு நமக்குச்சமானமானவன் கையாலிறக்கப் பாக்கியம்பண்ணாமற்போனேமேயென்றெண்ணி நல்லதுஇப்பேர்ப்பட்டபாணந்தொடுக்கும் வல்லபம் இந்தச் சிகண்டிக்கு எப்படியுண்டாகும் இவன்விடும் பாணம் நமதுதேகத்தைஇவ்வளவு வருத்தப்படுத்த மாட்டாதே ஆகையால் இதைப்பரிசோதிக்க வேணுமென்று தன்னுடைய மார்பிற்பட்ட அர்த்தசந்திரபாணத்தைப்பிடித்து அந்தப்பாணத்தின் அடியிலெழுதியபேரைப் பார்க்கும் போதுதனஞ்செயனென்றெழுதியிருப்பதைக்கண்டு நான்செய்த தவத்தின் வாழ்வே வாழ்வென்றுமனமகிழ்ந்து உடலபிமானம் உயிரபிமானமென்பதைஉதறி நிரியாண வயிராக்யநிஷ்டை வகித்தவராய்ப்பரிசுத்தவான்மா பிரியும்போதுபூமிப்பரிசமாய்த்தர்ப்பாசனத்திற்சயனிக்கவேண்டுமென்றுசான்றோருரைத்திருக்குந் தன்மைப்படிக்கு தானேறியிருந்தஇரதத்தை விட்டிறங்கிமிகுந்த இளைப்பினை யுடையவராய்ப்பூமியிற்சந்திர கலைபொருந்தச் சயனித்துக் கொண்டு ஆண்சிங்கம் போன்ற வீஷ்டுமர் அரசர்க்கரசனாகிய துரியோதனனுடைய தம்பிமார்கள்சமீபத்தினின்றுஇரங்குகின்றவர்களைப்பார்த்து கையமர்த்தி அப்பா பேரப்பிள்ளைகளே நீங்கள் விசனப்படாதீர்கள் நம்மாற் கூடியவரையிலும்போர்புரிந்து அநேகங்கோடியரசர்களையும் படைவீரர்களையும்கொன்று அவர்கள் தொடுத்தபாணங்களினால் நமதுபடைகளும் நாமும்நொந்தோம் இதன்றியும் எனக்குப்பகையாயேற்பட்ட அம்பையென்பவளுடைய பவுருஷ நிறைவேறுங்காலமும் நெருங்கியபடியால் இனிமேலென்ன நம்பவேண்டாம் இதுவரையிலும் இன்றையயுத்தத்தை நிறுத்தி அதிசீக்கிரமத்தில் உங்கள்தமயனாகிய துரியோதனமகாராஜனையடுத்து அவன்பாதத்தில்வணங்கி தமயனுடையவார்த்தைக்கு மொன்றுசொல்லாமலிருந்து யெந்தக்காலத்தில் யுத்தஞ்செய்யவேண்டியதோ அந்தக்காலமுஞ்சமயமும் பலாபலமுதலியவற்றையும் அறிந்துபோர்புரிந்து பூமியிற் புகழ்படைக்கக்கடவீர்கள் பவுத்திரர்களே மேலும் எப்பேர்ப்பட்ட தந்திர எந்திர மந்திர யுக்தியுடன் சதுர்வித உபாயங்களையுங்கொண்டு யுத்தஞ்செய்வீர்களானாலும் கைவல்யமாகுங்காரியமொன்றுமில்லை தங்களுடைய ஆண்மிக்கையும் பெருமையுங்கேட்டு உலகத்திற்பழிக்குடம்பெடுக்கவேண்டுமல்லது பின்னைவேறொன்றுமாகாது காதுக்கினிமையாகச் சொல்லுவோர் வார்த்தையைக்களிப்பாய்க்கேட்டு கண்கலக்கப்படாதீர்கள் பூர்வத்திற்பேரிகையோசை கேட்டிறந்தபெருநரியின்கதைபோல் முடியும்பேர்களே ஆகையால் புத்தியாகப்பிழையுங்கள்நீங்கள்போங்களென்றுசெலவுகொடுத்தனுப்பினார் பனைக்கொடிதரித்த பாட்டனாகிய வீஷ்டுமர் அந்தவேளையில் பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் பாஞ்சசன்யத்தை யெடுத்துப் பவளம்போன்ற தமதுதிருவாயில்வைத்து முழக்கினார் அந்தத்தொனியானது வீஷ்டுமருடைய செவிகளிற்கேட்டவுடனே சிந்தைநிலைத்து தத்துவசுவாநுபோகநிலையினின்று சர்வாந்திரியாமியாகிய ஜநார்த்தனனுடைய திருவடியைத் தனதுள்ளத்திருத்தி சஞ்சலசித்தத்திற்கேதுவாகிய பிரபஞ்சமாயா விசித்திரத்தைமறந்து இனிமேலும் ஜனனயேதுவைச்செய்யாத திருநாமங்களை நாத்தழும்பேற ஸ்தவுத்தியஞ்செய்து தேகத்திலுருவியோடிய அம்புகள்போகதைத்துக்கொண்டிருக்கும் மற்றப்பாணங்களெல்லாம் நிரியாணயோக சயனமாகச்சாய்ந்த வீஷ்டுமருடைய கிடக்கையை இந்திரன்முதலாகிய தேவர்கள்கண்டு உவந்து தேவதுந்துபி முழக்கிவைத்துதேவவிரதனென்றும் காங்கேயனென்றும் வீஷ்டுமனென்றும் பேர்பெற்ற சித்தசுத்தியை யுடைய உத்தமன்மேற்கத்திற் செம்பொன்மலர்களைவாரி அம்புவிநிறையக்கும்பத்தாரையாய்ச்சொரிந்தார்கள் இந்தப்பிரகாரம் வீஷ்டுமர் தேரைவிட்டிழிந்த தன்மையெப்படியிருந்ததென்றால் அருட்சலம் உட்கொண்டு நிறைந்தமேகம்மலை விட்டிறங்கியதைப்போலும் ஆகாயத்திலூருஞ் சூரியன்ரதநீங்கி வழுவியதைப்போலும் கற்றூணைக்கிழித்துப் புறப்பட்ட உக்ரம நரசிங்கத்தைப்போலுமிருந்தது சமுத்திரஞ்சூழ்ந்த தாரணியாண்ட சந்திரவம்சோத்தாரனாகிய சந்தனுமகாராஜனுடைய தநயன்சரங்கள்பதைந்த அங்கத்துடன்பூமியிலிழிந்து சாய்ந்ததன்மையானது அந்தவேளையில் குருகுலபுங்கவனாகிய தங்கள்குலக்குரவன் போர்முகத்திலிளைத்துப் புவியிற்சாய்ந்தாரென்று துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனராஜனும் தியங்கிமனமயங்கி உள்ளம்வருந்தி இருகண்களிலுஞ் சலம்பெருகும்படியாய் வாயுலர்ந்து ரதம்விட்டிறங்கி பாட்டனிடத்திற்குவந்தார்கள் அப்போது ரணகளநிறைந்த இருவகைச்சேனைவீரர்களுந் திரண்டுவந்து சேனாபதியாகிய வீஷ்டுமனைக்கண்டு நெஞ்சழிந்து நொந்து நைந்துவருந்தி யிரங்கி வையகமெல்லாம் பே

ரோசை நிறையும்படியாய் வாய்விட்டுக்கதறினார்கள் உடல்பதறினார்கள் அந்தச்சமயத்தில் தர்மராஜன்முதலாகிய மன்னவர்களும் துரியோதனன்முதலாகிய அரசர்களும் பேரொலியுடன் பொங்கி உகாந்த காலாக்கினியினால உலகம்பொன்றும் உருவடிபோற் றங்களைத்தாங்கவொமறந்து தளர்ந்தோடிவந்து ஆண்சிங்கம்போன்ற ஐயாவுடைய பாதங்களைத் தங்கள்கரத்தாற்றடவிசிரமேற்கொண்டு கண்ணிர்வடித்துமண்மேல்விழுந்துபுரண்டழுதார்கள் அசெப்படியென்னில்வீரத்திறமும்வலியும் விற்படைவேற்படையின் சாகசமும்திடதிரமும் அழகும-அஷ்டலக்ஷிமிவாசமும் சிருந்சிறப்பும் புகழும்-மகிழ்வும்-நல்லகேள்வியும் இரக்கமும்காதுர்த்துவமாகிய ஈகையும்,ஜீவகாருண்யமும், உணர்வும்பொலிவும்-நன்னெறியும்நன்னீதியும் சத்தியமும்- வெற்றியும்- சித்தசுத்தியும் அன்பும் அறமும் இவைகளெல்லாம் இந்தச்சந்திரகுலத்திற் தேவரீரிருந்த இதுவரையிலும்வளர்ந்து படர்ந்துகொண்டிருந்தன ஐயா அவைகளெல்லாம் இன்றைக்கே இறந்து தேவரீருடன் கூடத்திரும்பிப் போய்விட்டன அந்தோ அந்தோவென்றும் வெளியழிக்க பயிரானேனும்மின்னலிழந்த மழைபானேனும் மாலையிழந்தமணமானேனும் மதிபோயொழிக்க குணமானேனும் எங்கள்வம்சபார்யமேயென்றும் இந்தக்குலக்கோட்டைக்கு மதிற்போலிருந்தருளிய கோவே சத்தியநெறிபடருங் கற்பகக்காவே எங்களுக்கிஷ்டமாகியதேவே தாஷ்டீகமேருவாகிய தருமதேவதையே தாயாய் தந்தையாய்த் தமராய்த் தானுவாய்ச் சகலமுமாயமைந்தாண்ட தரிபலரோறே தேவரீருடைய தந்தை சந்தனுமகாராஜனானவர் பரிமளகந்தியினிடத்தில் இன்பம் அநுபவிப்பதற்காகத் தவமே தனக்கின்பமென்று சிந்தைதெளிந்து விரதமேற்கொண்டு ஈஷணத்திரையாதிகளையும்விடுத்து மன்மதபாணந்தையுமாற்றிய மாதவனே ஞானச்செல்வமே செஞ்சேவகனே பழமையாகிய இந்தச்சந்திரமரபினுக்கு முதல்வாறுவனே இவ்வுலகமுழுமைக்கும் யெங்களை இறைபாக்கிவைத்து இருகண்களுங்களிக்க யிருந்துபார்ப்பாயென்றிருந்தோமே ஐயா ஐயோதெய்வமே இனி எங்களுக்கு ஆதரவு ஆரிருக்கின்றார்கள் எந்தையே எங்கள் கோவே இனியெங்களைப் பாராளச்செய்யும்பாக்கியமெவரோஎங்கள்பாவமேஇப்படிபண்ணினையோவென்றுஇப்படிபலவாறுகமுறையிட்டமும்பிள்ளைகளைப்பார்த்து அப்பா குழந்தைகளேகலங்காதிர்கள்பயப்படாதீர்கள் எனக்கொன்றுமில்லைஇப்போது நானிறக்கவுமில்லைஅதேதென்னில பாதாதிகேசவரையிலும்பட்டிருக்கும்அந்தபாணங்களினால்வருந்திநொந்துஅங்கப்பாணசயனத்தின்மீது சாய்ந்திருக்கின்றேன் ஞல்காண்டீபக்கணைக்குக்கல்லுங்கரையுமென்னும்பழமொழியைப்போல்இந்த அர்ச்சுனனுடையபாணங்களினால்எப்பேர்ப்பட்ட உயிரு மாறிப்போம்அப்படி மாறாமல் யோகாப்பியாசஞ்செய்தபழக்கத்தினாலும் எப்போ துயிர்விடவேண்டுமென்று நினைக்கின்றையோ அப்போ துயிர்விடலாமென்று என்றந்தையாகிய சந்தனுமகாராஜன் எனக்குக் கொடுத்திருக்கின்ற வரத்தினாலும் உத்தராயணபுண்யகாலத்தி லிறந்தால் மோக்ஷமென்றிருப்பதினாலும் இந்தப்பூததேகத்தைவிட்டுப் பிராணன்புறப்படாவண்ணம் நிறுத்தி பூரணஞானத்துடன் பொறிபுலன் குன்றாமற் பொருந்தி யிருக்கின்றேன் குமாரர்களே நீங்களெனக்காகவருந்தவேண்டாம் சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மாவினால் ஏர்ப்படுத்திவிதித்த தொல்லைவினையைத் தொலைப்பவரொருவருமில்லை எந்தக்காலத்தில் எப்படி விளையவேண்டியதோ அப்படிக்கெல்லாம்விளைத்து முடித்துவைக்கும் அந்த ஊழ்வினையானது ஆதலால் வினைக்குமிஞ்சியதொன்றுமில்லை, இதைநேவருநர்கருதிடிலோ மேல்வருந்தொல்லை வினைக்குமிஞ்சியதொன்றுமில்லை வினைதனக்குத்தானே நிகராய்ச்சொல்லும். மற்றசாஸ்திர புராணாகமங்களையும் வெல்லுங்கனக்கும், வயித்தியநாலைக்கொல்லும், திரிகாலக்கடனையுணர்த்துஞ் சோதிடத்தைக்கெல்லும் வினைக்குமிஞ்சியதொன்றுமில்லை. (மேலும் ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று, சூழினுந்தான்முந்துறும்.) (வகுத்தான்வகுத்த வகையல்லாற்கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது. என்று இப்படிக்கெல்லாம் ஊழ்வினையைக்குறித்துப் பெரியோர் பேசியிருப்பதால் நாம் ஒன்றுக்கும் விசனப்படலாகாது அப்பனே பார்த்திர்களா எனக்கு இந்தவயதுசென்ற திதுவரையிலும் ஒருவருடையபாணமும் படாமலிருந்து காலங்கழித்தேன் இப்போது என்றேகத்தை உழும்படியாகியகொழுப்போலொத்தபாணங்கள் மெத்தவந்துவிழுந்து தைத்துவருத்தமுற்றதினாலுங்கள்கண்ணுக்கெதிரே விழ்ந்திருக்கின்றேன் நான்ஜன்மாந்திரத்திற்செய்த பாபத்திற்குத்தக்கபயனிதுவாக்களும் பேரர்களே என்றுரைத்துப் பின்னையும்பிள்ளைகளைநோக்கிப் பரிதாபமடைந்து அய்பா நான் சொல்லும்படியாகிய வாக்கியத்தை! அந்தக்காலத்திற்கேளாமற்போனாலும் இந்தக்காலத்திலாகிலும் யோக்கியமாகக்கேளுங்கள் அதனாற் சிலாக்கியப்படுவீர்கள் பாக்கியவான்களே நீங்களிருதிறத்தவர்களும் வெகுசேனைகளைக்கூட்டிக்கொண்டுவந்து செய்த யுத்தத்தில் என்னநலத்தைக்கண்டீர்கள் என்னயின்பம் அறிந்தீர்கள் என்னபலன்பெற்றீர்கள் இன்னமெத்தனை கோடிகாலம் யுத்தஞ்செய்தாலும் நீங்கள் அனுபவிக்கப் போகிறது துன்பமேயன்றி இன்பமென்பது எப்போதுமிராது ஆகையால் வஞ்சகங்களைப் போக்கி மனக்குறையையும் நீக்கிப் பொய்யைக்கெடுத்துப் பொறாமைவிடுத்து நீங்கள் நூற்றைவர்களும் நமது பெரியோர்கள் கலந்துபொருந்தியிருந்த தன்மையைப்போல நன்மையாயிருந்து நால்வரும் புகழநாட்டைப்புரந்து நாளைக்கழித்து நலம்பெற்று வாழுங்கள்நற்குலப் பௌத்திரர்களே இனிமேல நானொன்றும் விசேஷித்துச் சொல்ல வேண்டியதில்லையென்றுவீஷ்டுமர் அநேகவிதமாகிய தர்மங்களைப்போதித்தார் இப்படியாக ஒப்புரவொழுகென்னும் வாக்கியப்படிக்கு தருமநீதிசொல்லி உண்மைப்பொருளைத் தெரிவித்தகெங்கா புத்திரருடைய வார்த்தையைக்கேட்டு பேரகவாரிப்புணர்ப்பிற் பொருந்திய தர்மராஜன் முதற்சத்தியுவான்களென்னும் பாண்டவர்கள் வீஷ்டுமனைவணங்கி ஆண்டவனே தேவரீரிஷ்டப்படிக்கு ஒருமையா யிருக்கச்

சம்மதித்தோமென்றார்கள். அப்போது துக்கசமுத்திரத்தி
ல்மூழ்கும்படியாயிருக்கிற நாகக்கொடியோன்என்னுந்து
ரியோ தனனைப் பார்த்து உன்கருத் தென்ன வென்று
வீஷ்டுமர்கேட்க ஐயா இந்தக்கர்மபூமியில் அனுபவிக்கு
ம் ஆசைப்பெருக்க மாகிய மோகவாரிலய விரும்பேன்
நான் பாண்டவர்களுக்குப் பூமியைப் பகுந்துகொடுத்து
அவர்களுடன்கலந்து பொருந்தியிருந்து வாழ்வதற்கு எ
வ்வளவேனும் எனக்குமனமில்லை போதுமானவரைக்கு
ம் போர்புரிந்து இந்தப் போர்முகத்தில் முடிந்துபோன
லும்போவேனேயல்லது இந்தப்பஞ்சைகளாகிய பாண்
டவர்களுக்குப் பயந்து இளைத்து இந்தப்பூமியைப்பகுந்
து கொடுத்து அவர்களைப்பணிந்து வாழ்ந்தான்துரியோ
தனனென்று பார்த்திபர்முதலாகிய பேர்கள் நகைக்கப்
பழியாகிய சொற்கேட்டு உயிர்வாழமாட்டே னென்று பு
ற்றரவக் கொடிதாங்கிய புரவலன்சொல்ல சாந்தமூர்த்தி
யாகிய சந்தனுவின் றநயனுன வீஷ்டுமனென்னும் பாட்ட
ன்கேட்டு சிறிய நகைசெய்து சிரமசைத்து இன்னரின்னு
ர் இந்தக்காலத்தில் இப்படி அநுபவிப்ப தென்றும் இவ்
விதமா யிறப்ப தென்றும் விதித்திருக்கும் வினையின்பய
னையாவர்கடக்கத்தக்கவர்கள் விதியின் வழிமதி செல்லு
மென்னும் மேலோர் வாக்கியப்பிரகாரம் ஊழின்பலிஷ்ட
மெப்படியிருக்கின்றதோ அப்படிமுடியும் உத்தமனே உ
ன்னைவெறுக்க வேண்டியதில்லை என்று சற்றுநேரம் உ
ன்னிப்பார்த்து ஏதேது இனிநாம் சொல்வதிற் காரியமி
ல்லையென்று தெரிந்துக்கொண்டு குறைவில்லாத தாளா
ண்மைபூண்டு பூரித்த புஜபல பராக்கிரமசாலியாகிய வ
ணங்காமுடியோனை நோக்கிமன்னர்க்கு மன்னனாகியமதி
குலவரசே என்னுடைய முடியானது அடிக்கடிசாய்ந்து
போவதினால் அந்தமுடிசாயாதிருக்க ஒரு உபாயஞ்செய்
யவேணுமென்று வீஷ்டுமராகிய பாட்டன்சொல்ல, அந்
தமொழியைக்கேட்டு உடனே கிடைத்தற் கருமையாகிய
இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர்; அன்ன
த்தின்றூவி இவைகளாற்செய்த பஞ்சணைகளும் உயர்ந்த
தலைக்கணைகளும், பரியங்கமாகிய கட்டிலுங்கொண்டுவரு
ம்படி உத்தரவுசெய்தான், அந்தவார்த்தையை விரதசில
னாகிய வீஷ்டுமர்கேட்டு வெறுப்படைந்து உதட்டைப்பி
துக்கி நந்தியாவட்டத் தாமமணிந்த நரோந்திரனைப் பார்த்
து அடா குழந்தாய் பரிமள கந்தியென்னுஞ் சிறியதாய்
க்காக தாதராஜனுடைய கழிக்கரைநகரில் கைபெடுத்துவீ
ஷ்டுமம்பெற்றுக்கொண்ட பதினெட்டாம்வயதுமுதல் இ
துவரையிலும் ஒழித்துப்போட்ட பஞ்சசயனமுதலாகிய
சுகபோக இன்பங்களையெல்லாம் இப்போது நான்பெற
த்தக்க மரியாதையு முண்டோ அப்பனே அப்படி நான்
பெறுவேனாகில் ஆதியிற்கொண்ட என்வீஷ்டும விரதத்
திற்குப் பங்கம்வருமே தங்கமாகிய சிங்கமே, ஆதலால்
எனக்கு வேண்டாமென்று அவைகளைமறுத்து மேலுஞ்

சொல்லுகிறார் வீஷ்டுமரானவர், மதிகுல திலகமாகிய
மைந்தனே கேளும், நான்கொண்ட வீஷ்டுமத்திற்கும் நி
ரியாணகாலத்திற்குந் தகுந்திருக்கும்படியாய்ச் சரசயன
ங் கிடைத்திருப்பதினால் இந்தப் பரப்பானது பஞ்ச சய
னத்திலு மேலாகிய சுகத்தைத் தரத்தக்கது, ஆகையால்,
வைதீகத்திற்குரிய இந்த இனமாகவே அமைந்து என்சி
ரம் தாழாதிருக்கச் செய்யுமென்று சொல்ல; அம்மொ
ழிகேட்டு பாணங்களினாற் றலைசாயாமற் செய்வ தெப்ப
டியென்று துரியோதனன் விழித்துக்கொண் டிருக்கும்
போது வீரகண்டைதரித்து அண்டையில் நின்ற திண்
டோள்விஜயனைப்பார்த்து குருகுலச்செல்வமே, என்மு
டியின் தாழ்வு நீ கட்டமாட்டுவையோவென்று வீஷ்டும
ர் கேட்டமாத்திரத்தில் வரப்பிரசாதத்தால் உயிரை நிறு
த்திவைத்திருக்கும் மகாநுபாவராகிய தேவவிரதன் சிந்
தைகளிக்கும்படியாய் யோகதண்டம் போன்ற மூன்றும்
பிறைக்கொப்பாகிய அர்த்தசந்திர பாணத்தை யெடுத்து
விடுத்து அவருடைய தலைசாயாமல் உயரும் படியாய்ச்
செய்து உடனே சோமபாணந்தொடுத்து தலையுங் கழுத்
தும் உறுத்தா திருக்கும்படியாய்ப் பக்குவம் பண்ணினா
ன் விக்ரமனாகிய விஜயன், அப்போது தருமபுத்திரமகாரா
ஜனானவர் நாலுபக்கத்திலும் நவமணிக்கால் நாட்டி மே
லாகப் பந்தல் மேற்கட்டியாலமைத்து திரைச்சீலையும் வி
டுத்து காவல்முதலிய உபசாரத்திற்கு ஆள்களும் அமை
த்தார் அந்தக்காலத்தில் வீமசேனனும் நகுலசகா தேவ
னும் தர்ப்பாசனம் அமைத்து தளர்வு நீக்கினார்கள், அப்
போது வீஷ்டுமரானவர் துரியோதனராஜனை அழைத்து
அப்பனே நானினி யென்னசொன்னாலும் உன்புத்தியிற்
படயில்லை சொல்லா திருப்போ மென்றால் என்மனமுங்
கேழ்க்கிலை இப்பவாகிலும் நீ யோசிக்கத்தக்கது என்னு
டைய விரதமழிந்திருந்தும் மெத்தையுந் தலைக் கணையுங்
கொண்டுவரச்செய்தாய் அர்ச்சுன னிடத்திற் சொன்னத்
திற்கு ஒரு பிறைமுகப்பாணத்தினால் என்குறைகளை அ
கற்றினான் இப்போது நானிருக்குஞ் சவுக்கியத்தை நீயே
அறிந்துகொள் இப்பேர்ப்பட்ட வீரராகிய பாண்டவர்க
ளை நீங்களெப்படி ஜெயிக்கப்போறீர்கள் ஐயோ புத்ர மி
த்ர சகோதரானுடன் மாய்ந்துபோவீர்களே யல்லது ஒ
ருக்காலும் வெல்லமாட்டீர்களே மதிமரபிற் றோன்றியும்
மதியற்றவர்களே யென்று ரகசியமாகச் சொல்லவேண்
டிய காரியங்களைச் சொல்லியும் அந்த வார்த்தையைக் கா
திற்கொள்ளாமற்போன பேரனைக் கண்மலர்திறந்து உற்று
த்திப்பார்த்து வினையின் பயனேபய னென்று தருமராஜ
ன் முதலியவர்களால் வகுத்தசயனத்தில் நோவில்லாமல்
நொடியில்லாமல் தேகத்திலுருவுகின்ற பாணங்களைப் பா
ர்த்துக்கொண்டு இந்தவேளையி லிறந்தால் முத்தியில்லை
என்று சூரியன்வடபால்வரும் உத்தராயண புண்யகால
ம்வரைக்கு மிருந்தார். அவராணில் சிறுபோது முதற்

கொண்டு கேள்வியென்னு மந்தரகிரியால் மதித்துவராநி ன்ற தெள்ளமுதாகிய முனீஸ்வரர்களுடைய சொல்லமு தத்தைக் காதின்வழியாய் நுகர்ந்து களங்காகிதமாயிருந்த காங்கேயனென்னும் வீஷ்டுமர், அந்தவேளையில், அங்க தேசாதிபனாகிய கன்னன் ஓடிவந்து அலமிக்கதபி மோதி விழுந்து ஐயா - ஐயா வென்று சோனாமேகத் தூறலைப் போற் கண்ணீர்சொரிந்து காலடியிற் பணிந்து புரூருவ குலப்போரேறே சகல சாஸ்திரங்களு முணர்ந்து பேரறி விற்சிறந்த தாஷ்டிகமேருவே சந்திரகுலத் தோன்றலே நாயிலுங் கடையேனாகிய நான் கல்லாதவிவேகசூனியத் தால் துன்பத்தை விளக்கும் துஷ்ட அறிவினால் றேவரீ ரை மதிக்காமல் துதிக்காமல் மனத்திற் பதிக்காமற்சொ ல்லிய சொற்பமாகிய அற்பச்சொற்களையெல்லாங் குற்ற மாகக்கொள்ளாமல் நான் ஸ்தவுத்தியம் பண்ணியதாய்க் கொள்ளவேண்டும் - குருகுலமணியே, அன்றியும் நான் செய்த குறைவாகிய பொல்லாங்குகளை யெல்லாம் தேவ ரீருடைய மனத்தில் வைக்காமல் க்ஷமிக்கவேண்டுஞ் சா ந்தமாணிக்கமேயென்று மலரடியில் முடிசூடி வணங்கின ன்-அப்போது கண்ணைவிழித்துப்பார்த்து ஆராவமுதினு க் கொப்பாகிய அருணிறைந்த கருணைக்கடல்போன்றவீ ஷ்டுமர்-கன்னனைத்தேற்றி அங்கதேசத்தலைவனாகிய அப் பனே உன்னுடைய சொற்றிறமை யாலும் விற்றிறமை யாலுந்-துரியோதனனுக்குத் தெரியச் சொல்லா முறை மையினாலும் உன்னை அர்த்தரதனைச்சேர்த்தேன் அப்ப டி நான் சேர்க்காமல் அதிரதத்தலைவனில் உன்னைவைத் து நீயும் விற்பிடித்துச் சத்துருக்களுக் கெதிரிற் செல்லு வையாகில் உன்னை வெல்லத்தக்க வல்லமை பெற்றவர்க ளுண்டென்று சொல்லத்தக்க பேர்களுமுண்டோ, நல்ல வனாகிய கன்னனே, இப்பவும் கௌரவகுல முதல்வனா கிய துரியோதனன் உன்னை வெகுவாக நம்பியிருக்கின் றான், நீ-எந்தப்பாடாகிலும்பட்டு,ஏகசக்ரமுடிசூட்டி இந் தப் பாராளச்செய்யுங் கடமை உம்முடையதென்றுசொ ல்லி, துரியோதன மகாராஜனை அழைத்து, கன்னன்கை யி லொப்பிவைத்து, காப்பதுன் கடனென் றுரைத்தார், காங்கேயனானவர் அப்போது துரியோதனன் - கண்ணீர் சொரிந்து, கவலைகொண் டிருப்பதைப்பார்த்து, ஐயாவா னவர், தன்கையாற் கண்ணீர்துடைத்து, அரசமக்களிற் சிறந்த துரியோதனராஜனே; வரிவிற்றாங்கிய இந்தக் கன் னமகாராஜனானவன் அரசர்களுக்குத் தலைநோவச்செய்யு ங் கோடைகாலத்திடிபோன்றவன் அதிபராக்ரம வியாக்ர ம்போன்றவன் ஆகையாற் காலமறிந்து சேனாபதி பட்ட ங்கட்டி, இவரைக்கொண்டு செய்யும்படியாகிய செய்கை களை நாளைப் போர்முதற்கொண்டு நடப்பித்துக்கொள்ளு மென்று வீஷ்டுமர்சொன்னார்.

இப்படி யிருக்கும்போது துரோணாச்சாரியருங் கிருபா ச்சாரியரும் அசுபத்தாமாவும் வந்து வீஷ்டுமரைக் கண்டு மனநொந்து கண்ணீர்வடித்து அவருடைய கருணைப்பிர வாக வருளைப்படித்து ஐயா வனத்திற்றவஞ்செய்து வை நீகனாகியிருந்த என்னை உங்களினத்தி லொருவனுக்குப் பேரும் பெருமையும் பிரக்யாதியுங்கொடுத்து துருபதே யனைக் கட்டுகிறேனென்ற என் சபதத்தையு முடித்து என்னருமைப்பாராட்டி அருளளித்தாண்ட சத்தியவிரத அரசே இனியென்னை யாதரிப்பவரெவரோ இனி ஆர்மு கம்பார்ப்பேன் நான் அவனியிலிருக்கேன் அடியேனும்வ ந்தேன்வந்தேனென்று துரோணாச்சாரியர் தரையிலறை ந்து முறையிட்டுவிழுந்து குறைமொழிந்தார், கிருபாச்சா ரியருங் கிட்டி நிலத்திற்றலையை முட்டிக் கொண்டு நீதி யையுடைய நிருபரேறே-உன்னுடைய தந்தையாகிய சந் தனுமகாராஜன், யென்னை யெடுத்துவளர்க்க அவருடை ய நினைவறிந்து என்னைக் காத்தருளிய நேயனே நான்இ ப்போது உன்னைப்பிரிந்து பேயனாகிப் போயினேனே பூ ரிக்கும்புயனே பொங்கிய அருளே பொறுமைக்கனியே மலர்ந்தவதனமே மணிப்பிரவாளமே மதிகுல திலகமே மானபூஷணனே வைராக்கிய மலையே சத்திய நெறியே தருமசொரூபியே உத்தமகுணனே உடல் வருந்தியதோ உன்னுடன்வராமல் உற்றனன்பாவி என்று கலங்கியேங் கிச் சோர்ந்தார் கிருபாச்சாரியர் அப்பால் அசுபத்தாமா வும் ஆலைக்கரும்பெனவுடைந்து வேலைத்துரும்பென வ லைந்து சோலைச்சுரும்பென விரைந்துசோபித்தரும்பென க்கரிந்து துயரங்கொண்டார். இந்தப்பிரகாரஞ் சிந்தை நொந்த இவர்களைப்பார்த்து விசனமகற்றிக் காரணகாரிய காலநுட்பங்களைச்சொல்லி எல்லாந்தெரிந்த நீங்களேஇ ப்படி விசனப்படலாமா வென்று அவர்களைத்தேற்றி வ ணங்காமுடிபெற்ற மன்னனைக்காட்டி உங்களாலானவ ரைக்கும் யுத்தஞ்செய்து வெற்றிபெற்று அரசனுக்குமு டிசூட்டக் கடவீர்களென்று உரைத்து இன்னம் பற்பல தேசாதிபதிகளாகிய இராஜர்களையும் படைத்தலைவர்களை யும் மன்னர் மண்டலீகர் மந்திர தந்திரத்தலைவரையும் ப ட்டுவான்கள் கட்டியர்முதலிய அரண்மனை வேலைக்கார ரையுங்கண்டு விசனப்படாதீர்களென்று அன்புடன் ஆத ரங்கள்கூறி போர்முகத்தில் வருந்திய தன்றியும் பென் னாலும் விசனப்பட் டிருக்கின்றீர்கள் ஆகையால் நிலைபெ ற்றிருக்கும்படி யாகிய பாடிவீடுபோய்ச் சேருங்களென் று யாவருக்கும் விடைகொடுத்தருளினர்-வீஷ்டுமர் இப் பால் சந்தனுவாகப் பிறந்திருந்த மேற்றிசைத்தலைவனாகி ய வருணனைக்கண்டு இன்று உன் மைந்தனாகிய தேவவிர தன் பட்டானென்று சொல்வதற்காக விரைவிற் சென்றவ னைப்போற் சூரியன் மேற்றிசையடைந்தான் அந்தச் சூரி யனால் மகனிறந்த துயரங்கேட்ட வருணனானவன் பூமி முழுவதும் நிறைய ரத்தக்கண்ணீர் விடுத்து அழுதகன் மையேபோற் செவ்வானம்பரந்தது, வீஷ்டும ரிறந்த விசன ம் யாவருக்கு நிறைந்ததைப்போல் ரணகள மெங்கும் இ

ருட்கலந்துற்றது, கங்காதேவியானவள் களத்திற் சாய்ந்
த தன்மகனைப் பார்க்கவந்ததைப்போற் சந்திரனுதயமாயி
ளுன், தாயாகியகங்கைதன்கரங்களாற் றன்குமாரன்றேகத்
தைத்தடவிப்பார்ப்பதைப்போல்சந்திரகிரணங்கள் பரவி
யது-அந்தப்பிள்ளையின்றேகத்திற்பட்டபாணங்களைப்பார்
த்துபெற்றவயிறெரிந்து தேகமுழுமையும் பொங்கிக்கோ
ப்பளங்கொண்டதைப்போல் நக்ஷத்திரங்கள் பிரகாசித்த
ரும்பியது சந்திரனை வெள்ளைமேகமறைத்த தன்மையா
னது கண்கள்வழியினும் மூக்கின்வழியினும் பெருகும்ப
டியாகிய ஜலங்களைப் பாகீரதியானவர் வெள்ளைவஸ்திரத்
தாற் றுவட்டிக்கொள்ளுமுகத்தை யொத்திருந்தது. அந்
தச்சந்திரனிடத்திற் களங்கந்தோன்றிய தன்மையானது
கண்ணினுர்கிட்ட மைகலந்த களங்கம்போலிருந்தது அ
ன்றியும் நட்சத்திரங்களுதிர்வது கங்காதேவியானவள் பு
த்ரசோபத்தால் மார்பிலறைந்துகொண்டபோது மணிவ
டமறுந்து உதிர்ந்தவாறுபோலிருந்தது, சமுத்திர இரை
ச்சலானது கங்காதேவியார்கூச்சலிட்டமூந்தன்மைபோ
ன்றிருந்தது, ரெத்தங்களினுற்சிறந்த ரணபூமியானது பா
கிரதியாகிய தாயார்மார்பிலறைந்துகொள்ள அந்த அறை
யினுற் செவந்த அங்கம்போலிருந்தது, இத்தன்மையாக
அன்றிராத்திரி வெகுநேரம்வரையிலும் யுத்தபூமியைவி
ட்டு ஒருவரும்போகாமலிருக்க அதைக்கண்ட வீஷ்டுமர்
விசனப்பட்டு என்னே என்னே மன்னர்களே முன்னே
போய் இளப்பாறுங்களென்று விடைகொடுக்கப்பெற்று
பாண்டுபுத்திரரும்அவர்களைச்சேர்ந்தபடைமன்னரும் பா
சறைபோய்ச் சேர்ந்தார்கள் துரியோதனமகாராஜனும்அ
வனைச்சேர்ந்த படைகளும்பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்க
ள், அந்தச்சமயத்திற் சஞ்சயன்வந்து வீஷ்டுமரைக்கண்
டு துயருறும்போது அவனைத்தேற்றி அப்பாசஞ்சயனே
கண்ணில்லாதகாவலனுகிய திரிதராஷ்டிரனென்னும் கா
தலனுக்கு என்முடிவைபுரைத்து விசனம்வரவொட்டா
மற்றேற்றி அவத்திற்காலம் போக்காமற் றவத்தைச்செ
ய்யச்சொன்னுர் வீஷ்டுமரொன்றுசொல்லுமென்றுவிடை
கொடுத்துவிடுத்தார் அப்போது சஞ்சயன் துரியோதன
மகாராஜனிடத்தில்வந்து கண்டான் அந்தச்சஞ்சயமுனி
யைக்கண்டவுடனே நாகக்கொடியோன் கண்கலங்கியழு
துகாவலராற்றேறி ஓசஞ்சயனே எமது வம்சமுதல்வனு
கிய பாட்டன் இறந்தமார்க்கத்தை எந்தையாகிய திரித
ராஷ்டிர மகாராஜனுக்குச் சொல்லக்கடவையென்று தா
விச்செல்லுங் குதிரைபூட்டிய தடந்தேரினையுடைய இரா
ஜாதி ராஜனுகிய துரியோதனமகாராஜன் அஸ்தினபுரத்தி
ற்குச் சஞ்சயனை அனுப்பிவைத்தான் (வழக்கப்படி சஞ்
சயன்போய்ச் சொல்லத்தக்கவனுகயிருந்தாலும்இதுபெ
ருஞ்சாவாகையால் அதிவிரைவிற் சொல்லும்படி யனுப்
பிவைத்தானென்று பொருள்கொள்ளவேண்டியது) இ
ந்தப்பிரகாரந் துரியோதனன் சொல்லியனுப்பிவைத்தச


ஞ்சயன்

ங்கதிகளைத் தார்வேந்தனுகிய திரிதராஷ்டிரனுக்குச் சஞ்ச
யன்தனிமையிற்போய்ச்சொன்னுன் இதைக்கேட்டவுட
னே அடியார்களுக்கு அன்பிற்பெருகுங் கருணைவெள்
ளைக்கண்ணீராவது ஆறுகப்பெருகி யோடுவதைப்போல்
அழுது அலறிவீழ்ந்து கடகடவென்றுபுரண்டு ஐயா ஐ
யா தேவரீருடைய துணையைப்பற்றி என்பிள்ளைகளை ய
னுப்பினேனே நடுத்தெருவிளக்கும் நட்டாற்றுக்கோரை
யுமாய் விட்டிறந்தீரோ இனியென்பிள்ளைகளுக்கு உற்ற
துணையெவரிருக்கின்றுர்கள் என்னப்பனே என்னையனே
என்றேங்கிக் குளிர்ச்சிகொண்ட சந்திரனைக்கண்ட தாம
ரைக்கமலம் எப்படிமுகங்கூசிக்குவியுமோ அப்படிபோ
ல் முகங்கருகி மொழிகுழறி அடிக்கடி மண்மேலடித்து
மோதிவிழுந்து மறுபடியுமெழுந்து ஐயோ குலமானம்
குடிமானம் குணமானமுதலிய மானங்களெல்லாம் போ
ய்விட்டுதே என்வயிற்றிற்கொடிய நெருப்பிட்டுதே பா
மூகிய வினையேயென்று இருகண்களிலும் முகத்திலும்
வயிற்றிலும் மார்பிலும் பளபளவென்று அறைந்துகொ
ண்டு இன்றுதான் என்னிருகண்ணுமிழந்தேன் இதுமுத
ற்கொண்டுகண்ணற்றபாவியாகினேன் அந்தோ அந்தோ
எங்களையாவைக்கண்டவுடன் ஆகாயத்திலிருக்குந் தேவ
ர்களெல்லாஞ் செல்வமோங்கிவீறுபெற்று மகிழ்ச்சியடை
ந்திருப்பார்களேயென்று அளிந்தபுண்ணினிடத்தில் அக்
கினியிற்காய்ச்சிய வேலாயுதத்தைச் சொருகியதைப்போ
ல் பதைபதைத்துத் துடிதுடித்துக் கைநெரித்து நாவுலர்
ந்து நாபிவறண்டு நானிலஞ்சோர்ந்தான் மேதினிக்கரசனு
கிய திரிதராஷ்டிரன் இப்படியாகச்சோர்ந்தவேந்தனையெ
டுத்தணைத்து உபசரித்துத் தேற்றினுர்கள் அப்போது பக்
கத்திலிருந்த சவுபலராஜகுமாரியாகிய காந்தாரியம்மனுன
வள் மாமா மாமா வென்று மண்மேல்விழுந்து ஐயோதே
வரீரை நம்பியிருந்த யெங்களையும் எங்கள்சிறுவர்களையு
ம் தெருவில்விடுத்துச் சேனுலகஞ்சென்றீரோ தெய்வ
சிகாமணியே எங்கள்குலதெய்வமே திங்கட்குல விளக்
கே ஐயா இவ்வுலகாளவேணுமென்று ஆசைகொண்ட
பாண்டவரென்னும் பாவிகள் என்பிள்ளைகளிற்சிலரைக்
கொன்று மற்றப்பிள்ளைகள் வருந்தச்செய்துவென்று எ
ன்பிள்ளைகளுக்கு ஆகாரபூதமாயிருந்த பரிசுத்தமாகிய உ
ம்மையுங் கொன்றுபோட்டார்களே மகாபாதகியாகிய கு
ந்திமக்கள் அடியம்மா அவர்களுந்தானென்னமோ வர
ந்தானென்னமோ கரந்தானென்னமோ சிரந்தானென்ன
மோ தெய்வமே, அவர்கள் என்மக்களைப்போல் அழியா
ர்களா ஒழியார்களா அறுபடார்களா தறிபடார்களாமுறி
படார்களா என்பிள்ளைகளெல்லாரும் பேதமையுடைய
ஏழைகளாச்சே. இனியேது நாங்கள் பிழைப்போமென்
பது வீண்பேச்சே உலகத்திற்குப் பழிப்பாச்சே பிள்ளை
களால் உத்தரிமைக்கடன்பெறுமல் ஒண்டியாய் நிற்க
லாச்சே என்வயிற்றெரிச்சல் அந்தக்குந்திக்கிடாதோ எ

ஷ்பாவம் அவர்களுக்கிடிக்காதோ என்பெண்பாவங்கொண்டு பெருக்கத்தவிக்காரோ யென்று பற்பலவிதமாகிய துற்பாஷைகள்பேசி தொண்டைவறண்டு கண்டங்கம்மிக் காக்கைபோற்கூவி அரசனும் அரசன்றேவியும் வெந்துயரால் வெதும்பிச் சோர்ந்துவிழ்ந்தார்கள் அவர்களை உயிச்சன் சஞ்சயன்முதலாகிய பேர்களும்தேற்றி விசனத்தைமாற்றி அவர்களிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு பொன்னாரமணிந்த மன்னர்பொருந்திப் போராடும் போர்க்களத்தில் வாசஞ்செய்யக் கட்டியபாசறைபோய்ச்சேர்ந்து துரியோதனமகாராஜனுக்குச். சங்கதிதெரிவித்திருந்தான் துல்லுருலமிற்பிறவாதநாயோன் சூதசுதனென்னுஞ் சஞ்சயனானவன் இப்பால் பத்தாநாட்போரிலிறந்தவீஷ்டுமருடைய தன்மையைச் சந்தனுவாகிய வருணனுக்குச்சொல்லப்போன சூரியனானவன் அர்ச்சுனனுடைய செய்கையைத் தேவேந்திரனுக்குச் சொல்லவேண்டுமென்று வந்தவனைப்போல் இந்திரதிசைக்குவந்து சந்தேகமறப்புகன்று இருள்களைவென்று இனைந்து விரைந்து தேர்தூண்டிற்கொண்டு அநேகமாயிரங்கரங்களுஞ் சொலிக்கும்படியாய்க் கிழ்த்திசையிலுதயமாகினன் செங்கதிர்ச்செல்வனான தேவன் கேளும் ஜெனமேஜெயமகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டுவந்தார்.

ஸ்ரீமகாபாரதவசனம் - வீஷ்டுமபர்வம்

முற்றுப்பெற்றது.



ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாயநம:.

ஸ்ரீமத்திரவிடமஹாபாரதவசனம்.

துரோணபர்வம்.

பதினோராம்போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி விருத்தம்.

காயமும்புலனுமந்தக் கரணமுமாகியெல்லாத், தேயமும்பரந்துநின்று மீளவுஞ்சித்தசித்து...※
நேயமுமாகிநீங்கா நிறைசுகஞானநந்த, மாயவெம்பெருமானென்னை யாண்டருளாழியானே. ※

எ-று. வினைப்போகத்தை யநுபவிக்கவந்ததேகமும், அந்தத்தேகத்தினுள்ளாகிய ஐம்புலனும், அதற்குத்துணையாகிய அந்தக்கரணமுமாகி எல்லாவுலகினும்பரந்து நிறைந்துநின்று மறுபடியும்-சித்து - அசித்து என்றுரைக்கும்தேசமுமாகி நீங்காமற் பூரணமாய் பரமசுகஞான ஆநந்தமாகியஎமதுசார்த்தனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அடிமையாகிய யென்னை ஆண்டருளுஞ்சக்ராதரன் ஆகையால் இந்தச்சங்கு சக்ராயுதந்தரித்தருளிய காதல கமலச் செந்தாமரைக்கண்ணனை - மேகவண்ணனை - ஸ்தவத்தியஞ்செய்து துரோணபர்வமாகிய பதினோராம்போர்ச்சருக்கத்தைச் சொல்லுகிறேன்கேளுமென்று வைசம்பாயனர்சொல்லக் கேட்டுப்போராண்மையிற்சிறந்த ஜனமேஜெய மகாராஜன் அன்புடன்வணங்கி ஆநந்தவாரிபொங்க அருள்விழி யுடையவனாகி வைசம்பாயனரைப் பார்த்து திகலவந்த மாதவனே வீஷ்டுமர் முதலாகிய பற்பல பேரும் அநேகவித உறுதி மொழிகளைச்சொல்லியும் அவைகளைப்பழித்து விலக்கித் தன் சுயயிச்சையாய்ப் பத்துநாள்வரையிலும் போர்புரிந்து பார்த்து- அதிலிருக்கும் ஜெயாபஜெயத்தை அறிந்துந்தேறாமல் மறுபடியுஞ் சண்டைசெய்யச் சம்மதித்த சர்ப்பக்கொடிதரித்த துரியோதனனை நோவதோ அல்லது ஜன்மாந்திர வினைவிதியை நோவதோ யாரைநோவலாம் ஐயனேயென்று அர்ப்புத ஆச்சரிய முடையவனாகி மனமுருகி வினையின்பயனே பயனன்றி வேறொன்றில்லை யென்று வெதும்பி மேலோனாகிய வைசம்பாயனரைப், பணிந்து நாயினுங் கடைப்பட்ட அடியேனுடைய ஜனனசாகரம் வாறும்படிக்கு மேனடந்தசரித்திரத்தை விளம்பவேண்டுமென்று ஜனமேஜெயன் விரும்பிவேண்டிக் கேட்டபோது வேதவியாசரைத்துதித்து வைசம்பாயனர் மனமகிழ்ந்துவாரும் ராஜசிரோஷ்டனேவீஷ்டுமர் சேனாபதியாய்ப் பத்துநாளளவும் யுத்தஞ்செய்த இயற்கைகளைஎல்லாம்பகர்ந்தனன், இனிமேற் குறைவற்றகேள்வியையும்- மறைபெற்றவேள்வியையும் முறைபெற்ற தனுர்வேதத்தையுமுடைய துரோணாச்சாரியர் சேனாபதிப்பட்டங்கட்டிக்கொண்டுஐந்துநாள்வரைக்குஞ்செய்தபிரபலயுத்தத்தையுஞ் சொல்லுகின்றேன்.

பற்றற்றோரைப்பணிந்து-சுற்றத்தாரைக்கனிந்து கொற்றத்தாற்பகைகளைந்து-வெற்றித்தாரைப்புனைந்த குருகுலக்கோமானேகேளும் வீஷ்டுமரிறந்த விசனத்தினால் இராத்திரிமுழுமையும் நித்திரையற்றிருந்த வீரப்பிரமுகாள் யாவரும் உதயகிரியிற் கதிரவனுதிக்கு முன்னெழுந்து முறைவிதிக்கடன்களை முடித்துச் சதுரங்கசேனைத்தலைவர் முதலியயாவரும் யுத்தகோலத்துடன் வெற்றிபெறும்படியுத்தகளம்வந்து சேர்ந்தார்கள், அத்தருணத்தில் இருளைக்கெடுத்தெழுந்த சூரியனளித்த கர்னமகாராஜன்சமுத்திரஞ்சூழ்ந்தஉலகமதிக்குஞ்சாமர்த்தியமுடையவனாய், மன்னர் - மண்டலீகர் - மகுடவர்த்தனர் - பட்டவர்த்தனர் முதலாகிய அரசர்களின்மத்தியில் மகமேருவைப்போன்ற ரதமேறிவந்து நடுநாயகமாகநின்றபோது அங்கிருந்த அரசர்கள் பேசிக்கொண்டார்கள், அதென்னவெனில் வெற்றிபொருந்திய யுத்தமுறையைக் கற்ற விக்கிரமனாகிய அர்ச்சுனனுக்கெதிரில் நிலைபெற்றுநிற்கும் வல்லமையுடைய அதிரதத்தலைவர்கள், வீஷ்டுமர், துரோணாச்சாரியர், அசுபத்தாமாவென்னும் இவர்கள்மூவரில் புகழ்ப்பிரதாபவில்லைத்தாங்கிச் சத்துருக்களென்னும் யானைகளைச்சாடும்படியாகிய உக்ரமநரசிங்கம்போன்ற வீஷ்டுமரொழிந்துவிட்டாரோ, இனிமேல் நமக்குத்திக்காரென்று வெற்றிபெற்ற வேந்தர்களெல்லாரும் ஒடுக்கத்துடன்கடு

க்கங்கொண்டு கர்னமகாராஜனையடுத்து அங்கதேசத்தலை
வனாகிய அரசே எங்களுக்கு உம்மைவிட வேறொருவரு
மில்லை ஆனதால் நீரே சேனாபதியாயிருந்து ஜெயம்பெ
றவேண்டுமென்று செப்பினார்கள், அப்போது அஷ்டகு
லாசலம்போன்ற புஜபலபராக்கிரமக் கர்னனானவன் அந்
த அரசர்களைப்பார்த்து நீங்கள் ஒன்றுக்கு மஞ்சாதீர்கள்
அவதயிரியப்படாதீர்களென்று அவர்கள்கொண்ட அச்
சத்தைநீக்கிஇன்றுமுதற்கொண்டுவீஷ்டுமருக் கொப்பாக
ச்சென்று விஜயனைக்கொன்று அசைவரமின்று வீரவெற்
றிபெறும்படியாக இஷ்டங்கொண்டிருக்கிற என்னிச்சை
க்கு மாறுபாடாய் என்னைச்செயித்து இளைக்கச்செய்கின்
றவனெவனோ அவனை நானறிகிறேனென்றுவீரங்கள்பேசி
வீஷ்டுமரிருக்கும் இடத்தையணுகி தீர்க்கதண்டமாய்த்
தொழுது அவருடைய திருவடியை அர்ச்சித்துத் துதித்
து பரதகுலமணியாகி விரதநிலையிட்ட பரமமுனியாகிய
பார்த்திவனே. தேவரீரைவதைத்த மகாபாவிகளை திரிபுரா
ந்தகனாகிய சிவபெருமானுக்கெதிரிலெரிந்த அசுரர்களை
ப்போல் மணிமுடிசிதறிப் பணிமுடிப்பாரில் உருளச்செ
ய்கிறேன் - சத்தியமாகச்சொல்லுகின்றேன் - உத்தமனா
கிய தேவரீர் எனக்கு விடைகொடுமென்றுவிரதசீலனாகி
யவரதனுடைய பாதத்தில்வணங்கியபோது அந்த வீஷ்
டுமர்குதூங்க நகைத்துகர்னன் சந்தோஷிக்கும் படியாய்
ஒருவசனஞ்சொல்லுகின்றார் ஓ அங்கதேசாதிபதி நாகத்
துவஜனாகிய நராதிபன் உன்னை அதிரதத்தலைவர்களிற்சிற
ந்தவனென்றுதனது மனத்திற் சார்வதாய்ப் பதித்திருக்
கின்றான், இப்படிமுழுமனதுடன் நம்பியிருக்கிற இராஜ
னுக்கு அநுகூலமாகும்படியாய் பனியைப்போலொத்த
அர்ச்சுனனைவளைத்து - மகத்துச்சனியைப்போலபாணம்
விடுத்து - சூரியகிரணம்போல் சாய்ந்து முடித்துத் - தே
சராஜர்களெல்லாரும்புகழ தேவர்மாதவர்யாவரு மகிழும
கிபதியாகிய துரியோதனமகாராஜனுக்குப்பட்டாபிஷேக
ஞ் செய்துவைப்பது உன்னுடைய சாமர்த்தியமாயிருக்க
அதைவிடுத்துஎன்னைக் கொன்றவர்களை யெரித்து விடுகி
கிறேனென்று எனக்கிதவாகப் பேசவந்தது போர்வீரர்க
ள் சொல்லுகிற வார்த்தையல்ல, புகழ்பெறுங்குலத்தோ
ர் புகலுஞ்சொல்லல்லவச்சையர்பேசுகின்ற லச்சைகெ
ட்ட இச்சகவார்த்தையாகையால், இந்தவார்த்தைக்கேட்
பவனும் பதராயிருப்பானாகில் சொல்லவந்தபதர்போன்
றவனுடன் கூடிக்கொண்டுபழிக்குடன்படுவான், நான் அ
த்தன்மைபோன்றவனென்று நீ நினையாதே, என்கர்மா
நுபவம் நானனுபவித்தேன், ஒருநாளிரண்டுநாள் உன்கர்
மத்தையு நீ தொலைத்துவிடு. மேலும்படைமுனையில் அ
டிபட்டவருத்தத்தாற் பூலோகத்தரசர்கள்முதலாகிய ப
டைவீரர்களெல்லோரும் பழுத்தமரத்திற் பறவைகள்
சேருமாப்போற் பலம்பொருந்திய உன்வில்லினுடைய
நிழலில்வந்து சேர்வார்கள், நீ அப்போது வாடியபயிருக்
கு மழைபெய்வதுபோல் அவர்களை ஆதரித்து மூங்கில்
ஒன்றோடொன்றிழைந்து பற்றிக் கொள்ளும் நெருப்பி
னால் ஆரண்யமெரிந்து பொரிந்து கரியாகுந் தன்மைபோ
ற் போர்செய்து வித்வான்கள் உன்பேரிற் பொரணிபாடு
ம்படி செய்யாமற் புகழத்தக்க பாணிபாடும்படியாய்ச் ச
முத்திரத்தை ஆடையாகவுடுத்த தரணியை - சந்திரகு
லாதிபனாகிய இந்திரவோலக்கங்கொண்ட என்பேரனுக்
குச் சுதந்தரமாக்கிவைக்கக் கடவை தோன்றலேயென்
று பலவாறாகியநீதிமொழிகளைச்சொல்ல அவர்சொல்லிய
வார்த்தைகளெல்லாம் இருசெவிகுளிரக்கேட்டு இரண்
டுபயமும்திரண்டோங்கவார்த்தையின் பெருமைசிறுமை
யை மனத்தி லூன்றாமல் துட்டுவந்து பெட்டியில் விழு
தோ திட்டுவந்து பெட்டியில்விழுதோ என்றுரைக்குந்
தான மில்லாத் நீசனைப்போல் மன மகிழ்ந்து வணங்
கி விடைபெற்றுக் கொண்டு தனது பாடிவீடாகிய மாளி
கைக்குப்போய் கேயூரமணிமுதலிய குண்டலகிரீட புஜகீ
ர்த்தி வாகுவலயந் தோளணிமாலை பாசுபந்து கடகாங்க
ண தொடிகொலுசுதோடா மோதிரங்கள் தும்பிப்பதக்
கங்களேமுதலிய சுந்தர அணிமணிப்பணிகளும் வீரக
ண்டா மணி மேலேறு வச்ர கவசம் வீரகச்சை வீர
பட்டம் வீரத் துவஜம் வெற்றி மாலை மணிகட்டிய வில்
அம்பறாத் தூணி - வாள் - வேல் - கத்தி - முதலாகிய
ஆயுதங்களுடன் முழுதுமுடனே மூடர்கொண்டாடிய மு
றைமையென்னும் வாக்கியத்திற்கிணங்கத் தங்களைத்தாங்
களே புகழ்ந்து தங்களுக்குப்பெருமை தாங்களேவைத்
துக்கொள்ளுஞ் சடையனைப்போல தானே சேனாபதிக்
கோலங்கொண்டு பார்த்தவர்களெல்லாம் இன்றைக்கே
யுத்தமுடிந்துபோம் நாளைக்கு நமனுக்கும் நமக்கும்வே
லையில்லையென்று மேகம்போலிரைந்து விரைந்தெதிரோ
டிவந்து கர்னனைக்கண்டு கைதொழுது புகழும்படியாய்
சர்வவாத்தியங்களுமுழங்க கொடை கொடி பீலிக்குஞ்
சங்கள் சாமரைமுதலாகிய விருதுகளுடன் துதிக்கும்ப
டியாகிய ராஜகூட்டங்களும் ரதகஜதுரகபதாதிமுதலிய
பேர்களும் பொன்மலையைவளைந்தகடல்போல் கன்னனு
டைய தேரைச்சூழ்ந்துகொண்டுவரதாமரைக்கமலம்போ
ன்ற கண்களில்நெருப்புப்பொறிபறக்க நெற்றியில்வியர்
வுபொடிக்க குணத்தொனியுஞ் சங்கத்தொனியுங்கூடிசப்
திக்கும்படி முழக்கிக்கொண்டு ஆலகால விஷம்போற்
கோபமூண்டெரியும்படியாய் வேகமாகி மேகமளாவியபூ
ந்தேரேறிப் போர்முனைக்கு வந்தான், கர்னனானவன் அ
ந்தவேளையில் பூமிமுழுமையும் சந்திரவட்டக்குடை நிழ
ற்படுத்திய நந்தியாவட்டத்தாமவேந்தன் கேட்டு கர்னம
காராஜனிடத்திற்குவந்து அண்ணா இப்போது தாம்கொ
ண்டிருக்கும் யுத்தகோலம் மெத்தவும் நன்றாயிருக்கின்ற
து இன்றைக்கே எனக்கும் ஜெயம்வருமென்பதற்குச் ச
ந்தேகமில்லை ஆனால் தேவரீருக்கு வருத்தங்கொடுக்க எ
னக்குச்சம்மதமில்லை அதெதினாலென்றால் காடுதிரிந்து
வேடனைப்போற் கசங்கிவந்த குடிகேடராகிய பாண்டவ
ரென்னும் பஞ்சைபசகளையோ நீர்ஜெயிக்கநினைப்பது எ
ஜமானனாகிய தேவரீரோ சுதாவில் ஆயுதங்கொண்டு இந்
தப்பஞ்சவரைக்கொன்று தேவரீர் விஜயம் பெறுவீராகில்
மிகவுநன்மை அப்படிக்கில்லாமல் தெய்வீகத்தால் உமக்
குயிர்நஷ்டம்வருமாகில் இந்தப்பஞ்சாசதகோடிராஜ்ய ப
ட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அரசாட்சி செய்பவர்க

ள்யார் அண்ணா நமதுகையின் கீழிருக்கின்ற மனிதர்களைக்கொண்டுவென்று விஜயம் பெறவேண்டு மல்லது நாமே யுத்தஞ் செய்து பெறுவது நலமன்று அப்படியுத்தஞ் செய்வதற்கு நாமெப்போது ஆயுத மெடுத்துத் தலைவனாகப் புறப்படவேணுமென்றால் நமது வீசாள்முதலியயாவரும்போய் விட்டபிற்பாடு இனி யெவருமில்லையென்றுணர்ந்து அப்பால் நாமே புறப்படவேண்டும் ஆகலால் அல்ப்பர்சணிமித்தம் நீர்வெளிப்படவேண்டாம் இன்னம் அநேகயுத்திகளும் நடக்கவேண்டிய காரியங்களும் பலவாறாயிருக்கின்றது நான்றெரிவிக்கிறேன் தேவரீர் இப்போதுகொண்ட சேனாபதிப்போர்க்கோலத்தை நிறுத்தும் அண்ணாவென்று கன்னனைத் தழுவிக்கொண்டான் துரியோதனமகாராஜனானவன் அந்தவேளையில் மிகுகொடையாளன் உள்ளத்திலுண்டாகிய கொதிப்பை வெளியிற்காட்டாமல் தானேறிவந்த இரதத்தைவிட்டிழிந்து சூரியன்போனபிற்பாடு முகங்குவிந்து மூடிசாய்ந்து சலத்திற்றாழ்ந்த தேன் பராகமுதலிய மணத்தை அகத்தில் அடக்கிக்கொண்டிருக்குந் தாமரைப்புட்பம்போலானான் அங்கதேசத்தலைவனாகிய கர்ணமகாராஜன் இந்தப்படிவாட்டங்கொண்ட கன்னனுடைய நாட்டத்தைத்தங்கள் கண்ணோட்டத்தாலறிந்த துசுசாசனன்முதலாகிய தம்பிமார்களும் புத்திமானாகிய மத்திரராஜனும் மனதொத்தசகுனி மாமனும் கூடி ஆலோசித்து இந்தக்கர்ணமகாராஜனைவிலக்கி வைப்பீராகில் வீஷ்டுமருக்கு வதிலாக நின்றுபோர் புரியும்படியாகிய விக்கிரமர்கள் யாரிருக்கின்றார்கள் வேந்தனே, இவரைவிடவேறொருவரையுங்காணேமேயென்றுசொல்லியபோது எனப்படி ஒருவருமில்லையென்று சொல்லவேண்டியது யுத்தமுனையில் வெற்றிபெறும்படியாகியசமுத்தர் விற்குருவாகிய துரோணாச்சாரிய ரிருக்கின்றார் அவரைச் சேனாபதியாகக் கொண்டு ஜெயம்பெறுவோமென்று துரியோதனமகாராஜன் சொல்லியாவரும் அந்தவார்த்தைக் குடன்பட்டு கர்னராஜனையும் அழைத்துக்கொண்டு துரோணாச்சாரியரிருக்கும் பாசறைக்குச் சென்று அவரைப்பணிந் தெழுந்து எங்கள்தேசிகனாகிய தேவனே இறந்துபோன எங்கள்பாட்டனைப்போற் சேனாபதிபட்டம் பெற்றுசத்துருக்களைச் செயித்து நாங்கள் வெற்றிபெறும்படியாகிய விதத்தைத்தேடும் ஒப்பொருவரில்லாத உம்மைவிடஜெயம்பெறுவா ரொருவருமில்லை உத்தமனே, மேலும்-தனுர்வேத சதுர்வேத சாம்பிரதாயமுணர்ந்தசகலகலை நிபுணராகையால் தேவரீருடனெதிர்த்துவிற்பிடித்து மற்கொடுத்து வெற்றி புனையும் வல்லமைசாலிகள்வேறொருவரையுங்காணேம்மறுவிச்ஞானமுணர்ந்தராஜராஜர்கள் மகிழும்படியாய்க் கண்ணிமைக்குமுன் வில்லைவளைத்துக் கணைகள்விடுத்துக் கருதலரைக்கால்சாய்ந்தோடவடித்துக் காசினி முழுது மெனக்களித்து கருணைப்பிரவாக வருளளித்துக்கைகொடுத்துக் காக்குந்திறம்உமக்குத் தருமல்லது மற்றொருவருக்குந் தகாது உண்மைப்பொருளோதுங்குருவேயென்று உரகக்கொடியோனுரைக்க,அந்த வார்த்தையைக்கேட்டு புன்னகையுடையவராய் அகங்களித்துப் பொங்கி ஆகமப் பனுவலையுடையதேவாதிதேவர்களும்பூவுலகப்பூபாலரும்சந்தோஷிக்குப்படியாய் ஒருவாக்கியஞ் சொல்லுகின்றார் துரோணாச்சாரியரானவர்.

மதிமரபுதித்த மாசிலாமணியே- வணங்காமுடி பெற்ற மகுடசூடாமணியே ஜகமெலாம்புரக்குந் தெய்வசிகாமணியே-சேர்ந்தோரைக் காக்குஞ் செல்வ சிந்தாமணியே கேளும், மையையன் றையப் படக் கறுத்த மேகத்தைப் போலிடித்து முழங்கி பாணவருஷங்களைச் சொரியாநின்ற எனதுவில்லினால் ஏழுபுவியுமெரிய கானமுடைபட்டுச்சரிப திக்கஜங்கள் கலங்கி முகங்கரிய தேவர்கள் பூமாரி சொரிய-சேடன்முதலிய பாம்புகளினுடைய லுரிய பகையாளிகளின் மண்டைகணெரிய-ஒருநொடியிற் போர்புரிந்து இப்படியை உமக்கு முடிசூட்டிவைக்கும் பராக்கிரம முடையவனாகயிருக்கின்றேன் எதிரியின் படைகளை மாய்ப்பது எனக்குப்பெரிதல்ல ஆகையால் உன் னிஷ்டப்படிக்கு நாகிபர்களும் நால்வகைச் சேனைகளும் அறியும்படியாய் சேனைக் கதிபதியென்னும் நெறிமுறையைச் செய்யென்று தேசிகன்சொல்ல, உடனே காசினியாளுங்காவலன் பூசுரர்களையனுப்பிப் புனிதமாகிய கங்கையமுனைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களும்; பால்-தயிர் - நெய்-தேன்-இளநீர்முதலாகிய அபிஷேக திரவியங்களும், அறுகும் பலநிறமுங் குணமும் மணமுமுடைய புட்பங்களும், அக்ஷதை தாம்பூல கர்ப்பூர சாம்பிராணி தேங்காய் வாழைப்பழங்களும் கொண்டுவரச்செய்து மந்திரலோபங் கிரியாலோபமில்லாமற் கலசங்களமைத்து வேதவேதியர்கள் வேதகோஷஞ்செய்யத் துரோணாச்சாரியருக்குத் திருமஞ்சனமாட்டி உபசாரத்துடன் வழிபட்டு பூசித்து நாதகீதவோசையும், நாதன்வேதபூசையுமுழங்க நவரத்னகசிதபட்டங்கட்டிசகலராஜர்களும்சகலதேசர்களும் சதுரங்கசேனைகளும்சரணகமலத்திற் சிரமுறப்பணிந்து நெருங்கிநிற்க துரியோதனமகாராஜனும் வணங்கியபோது இருகரத்தாலும் அணைத்தெடுத்து ஆசீர்வதித்து மகிழ்ந்து ஐயோ, வணங்காமுடிபெற்ற மன்னவனுடையமனம் என்னபாடு படுது பார்த்தையாவென்று துரோணாச்சாரியின்மனமானது அனலைக்கண்ட மெழுகைப்போலுருகி அரசன்பேரி லிரக்கம்பிறந்து அருட்பார்வையாகப்பார்த்து, கௌரவகுலமுதல்வனே உமக்குவேண்டிய வரத்தைக்கேளும் தடையில்லாமற் றருகிறேனென்று சேனாபதியாகிய துரோணர்சொல்லவே தன்னைமறந்துமகிழ்ந்த தரணீசனானவன் குருசுவாமியைப்பார்த்து ஐயனே எனக்கு வரமருளும்படியாய்க் கடாக்ஷம்வருமாகிற் சண்டைமுனையிற் றருமராஜனை யிளைக்கச் செய்து கைப்பிடியாய்ப்பிடித்துக் கட்டி என்னிடத்தி லொப்பிக்குங்கடமைதேவரீருடையது. நான் இருகரத்தையுமேந்தி விரும்பி வரமாகக் கேட்டுக்கொண்டேனென்று நாகக்கொடியோனுரைக்க இந்த வசனத்தைக்கேட்ட தநுர்வேதமுனிவரானவர் பலமுறைகளினாலும் பலதுறைகளினாலும் பண்பாகயோசித்து இது விருதாவாகிய வீணாசையேயொழிய முடியத்தக்க தல்லவேயென்று மனநொந்து சிந்தித்து மன்னர்பெருமானை நோக்கிச் சிலவார்த்தைசொல்லத் தொடங்கினார்.

பலகலையுணர்ந்தும் பயனறியாப் பதடியர்போன்ற பார்த்திவனைகேளும்; அளவிலாப் பகைமேற் கொண்டபலவான்களாகிய பாண்டவருடையமுடிகள் பொடிபட அமர்முடித்து சந்திரவட்டக் குடை நிழலில் இந்திரனைப் போல் என்னையிருத்தி அரசாக்ஷிசெய்ய வரங்கொடுத்தருளுமென்று ஒருசொற்கேளாமல் பிரகாசம்பெற்ற முரசக்கொடியுற்ற தருமபூபதியை உயிருடன் பிடித்துக்கொடுக்கும்படியாய் வரங்கேட்டையே அப்பனே கமலசம்பவனாகிய பிர்ம்மாவினால் சிருஷ்டித்தருளிய இவ்வுலகத்தில் சாதமொழிவிரதசீலத் தயாளுவாகிய தருமராஜனென்பவருக்கு மகாவிஷ்ணுவையும் ஒப்பாகச் சொல்லப்படாதே அப்பேர்ப்பட்ட மேன்மையையுடைய அருளாளனை எப்படிப்பிடித்துத் தரக்கேட்டனை, இறைவனே நான்கு வேத ஆறுசாஸ்திர-பதினெண்புராண-உபநிடதமுதலாகிய சாஸ்திரக்கேள்விகளிலேயும், அந்தச் சாஸ்திரக் கருத்துணர்விலேயும் பிர்மாவும் நிகராகமாட்டார், ஜீவகாருண்ய முதலாகிய கிர்பைகளில் ரக்ஷகனாகிய விஷ்ணுவும், நிகராகமாட்டார், வில்லைப்பிடித்து யுத்தஞ்செய்து சத்துருக்களைக் கொல்லுஞ் சம்மாரகிர்த்தியத்தில் தாமசகுணமுடைய ருத்திர மூர்த்தியும் நிகராகமாட்டார், இப்படியிருக்கப் பகைவராகிய நாம் அவரை ஜெயித்து வெற்றி பெறுவோமென்பது லேசாகிய வார்த்தை யல்லவே, ஒருக்காலும் நாம் நினைக்கவேண்டியதில்லை, செல்வப்பெருக்காருடைய சீமானே மகமேரு மலைக்கிணை யாகிய புயத்துணைகொண்ட தர்மராஜன்விதியை அனுசரிக்கும் மதியென்னும் வினைச்செயலினால் ஒருவேளை என்கைவசப்படுவாராகில் அவரைக் கொண்டுவந்து உன்னிடத்தில் விடுகிறேன், நீ அவரை யென்னசெய்ய நினைவுகொண்டிருக்கிறாய் அந்தக்கொடுமையை இன்னதென் றெனக்குச் சொல்லக்கடவை, கொலைத்தொழிலைக் குடியாய்க் கொண்டு கூர்மைபொருந்தி அழற்சினை திருந்தி அசுரரைக் காய்ந்த அயிலேலந்தியகரனே, அரவக் கொடிக் கதிபனே யென்று ஆசாரியர்கேட்க அடங்காப் பேராசை கொண்ட மனத்தோனாகிய துரியோதன மகாராஜன் சொல்லுகின்றான்.

ஆசாரியபுருஷனே கேளும் அழகிய முரசக்கொடியோனைப் பிடித்துக்கொண்டுவந்தால் அவனுயிரைப் போக்கிவிடவேணும் அதனால் மற்றத்தம்பியர் நால்வரு மடிந்து போவார்கள் நமக்கெப்போதுஞ் சல்லிய மில்லையென்று நினைத்தேன் அந்த நினைப்பை நிதானிக்கும் போது தலைமாட்டிற்குக் கொள்ளிதானே தேடிக் கொள்வதைப்போல் வந்துமுடியும் அதென்னவென்றால் தர்மராஜனைக்கொன்றுபோட்டால் தம்பிமார்களுஞ் சாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை அப்படி சாகத்தக்கவர்கள் சும்மாய்சாகமாட்டார்கள் போறது போரோமென்று ஒரு புதுமைவிளையாடினானென்பதுபோலும் சாகிறபேருக்குச் சமுத்திரங் காலவாயென்னுந் தன்மைபோலும் அதிசூரனுக்குப் பிராணன்றுரும்பென்னும் அலக்ஷயத்தைக் கொண்டு குபேரகமென்னு மடங்காக் கோபமூண் டெரியும்படியாயத்தனை யுகாந்தகாலாக்கினிபோலோங்கி அர்ச்சுனனானவன் போர்புரிந்து நமதுசேனைகள் முழுமையுங் கால்பெயர்க்கவொட்டாமற் காய்ந்து தீய்ந்து-சாய்ந்து-மாய்ந்துபோகத் தொலைப்பானெப்போது நாம் சும்மாயிருக்காமல் எதிர்த்துப் பிறைமுகக்கணையால் அர்ச்சுனனைக்கொல்லுவோமாகில் அவனைக் கொன்ற மாத்திரத்தில் குறைவில்லாப் பிரகாசம்பொருந்திய சக்கரந்தரித்த மாயோன் ஏர்ப்பட்டுநமது புத்ர மித்ர களத்ராதிகளுடன் ஒன்றொழியாமல் நம்மையுமுடித்து பெண்காணியாகக் குந்திதேவி துரைத்தனஞ் செய்யும்படியாய் ஏகசக்ர பட்டாபிஷேகங் கட்டிவைப்பானையா அந்தக்கோபாலகிருஷ்ணன் மாசற்ற மறைக்குருவாகிய துரோணச் சாரியரே ஆகையால் தர்மராஜனைக் கொல்லப்படாதென்று விலக்கி வேறுயோசனை யொன்று செய்திருக் கிறேன் ஐயா அதாவது தர்மராஜனைத் தேவரீர் கட்டிக்கொண்டுவந்தால் எங்களம்மானாகிய சகுனியை விட்டுச் சூதாடச் சொல்லி உரிமைமுதலிய யெல்லாவற்றையுங் கெலித்துக் கொண்டு முன்னையைப்போல் பயித்தியக்காறத்தனமாய்ப் பனிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமுஞ்செய்து வாருங்களென்று சொல்லாமல் இன்றுமுதல் உங்களைவருக்கும் உங்கள் புத்ர மித்ர சந்ததியாருக்குங் காடேகதியென்று ஓட்டிவிட்டால் மறுவார்த்தை யொன்றும்பேசாமல் தம்பிமார்களுடன் வனம்போய்ச் சேர்வான் நமது தம்பியரும் நாமும் நமக்கிஷ்டமாகிய பேர்களுடன் இவ்வுலகத்தைச் சஞ்சல மில்லாமல் ஆண்டநுபவிக்கலாம் நானிப்படி ஈரேழியுலகம் புரக்கும் படியாய் நீர்தயைசெய்யவேண்டுமென்று எனது சிறத்திற் கரத்தைக்குவித்து வணங்கிக்கேட்டுக்கொண்டேன் உரம் பொருந்திய சரத்தின் திறத்தைப் பெற்ற துரோணச் சாரியரே நாயினுங் கடையேனாகிய அடியேனுடைய எண்ணமிதுவென்று துரியோதனராஜன்சொல்ல அதைக்கேட்டுப்பரிசுத்தமாகிய ஆரணந்தெரிந்த பூரணனாகிய துரோணச்சாரியர் நகைத்து ராஜாதிராஜனுடைய பேதைமைப் புத்தியைச் சகிக்கமாட்டாமல் விசனமடைந்து வேண்டியவரத்தைக்கேளுந் தருகிறேனென்று தான்கொடுத்த வாக்குக்குப் பழுதுவராமல் காரண காரியங்களையும் வேறொருதேவரகசிய வாக்கியச் சத்தியத்தையும் நினைத்து ஓ! மன்னவனே எது எப்படியிருந்தாலும் நான் தருகிறேனென்றவரந் தப்பக்கூடாமையால் நீ ஒருகாரியஞ்செய் அதாவது இந்திரனுக்குப் பூந்தோட்டமாகிய காண்டவவனத்தின் கட்டழித்த காளை அனுவிர்தகண்டம் - அளாவிர்தகண்ட முதலாகியதிக் செயஞ்செய்து வென்றுவந்த செவ்வேளை நாரணனால் வெல்லுதற்கரிய காலகேய நிவாதகவசரை நமனூரிற் குடியேற்றிய தோளை யுடைய விஜயன் சத்துருக்களுக்கு மாரணன் இப்பேர்ப்பட்ட தம்பியானவன் தருமராஜனுக்குச் சமீபத்திற் றுணையா யிருக்கிறவரையினும் நீ கேட்டுக்கொண்டவரம் நிறைவேறுமென்றும் நானப்பேர்ப்பட்ட விற்றிறமை யுடையவன் என்றுஞ் சொல்லமாட்டேன் இதை நன்றாக உன்னுள்ளத்தில் வைக்கவேண்டியது உத்தமனே மேலும் தென்றற்றேரும் இருட்டாகிய யானையும் ஸ்திரீகளின் படையும் தாழை

மலர்வாளும் கரும்புவில்லும் சமுத்திரபேரியும் சந்திரவட்டக்குடையுமுடைய மன்மதனும் மலர்ப்பாசழியும்மகாதேவருக்கெதிர்ப்பட்டெரிந்து மண்ணானதுபோல் தவசம்பன்னர்களாகிய தருமவான்களை எத்தனை விதமாகிய வஞ்சகத்தைச்செய்ய நினைத்தாலும் அத்தனையும் பருத்திப் பொதிக்கு நெருப்பாகி நினைத்தவர்களைப் பாழாக்கிப்போடும் இந்த தர்மங்களையெல்லாம் நீ சற்றும்யோசிக்காமல் தர்மவிருத்தமாகிய மார்க்கமில்லாதவகையை நினைத்தாய் ஆகிலும் உன்னெண்ணப்படிக்கு யுத்தமுனையில் என்னாற்கூடியவரையிலும் பாடுபட்டு சத்தியநெறி உத்தமனாகிய தர்மராஜனைக் கட்டிக்கொண்டு வருகிறேன் ஆனால் பூர்வத்தில் புராரியாகிய கயிலாசபதியுடன் விற்போர்முதலிய மற்போரும்புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்ற அஞ்சாத பஞ்சானனம்போன்ற அர்ச்சுனனானவன் தர்மராஜனுக் கருகாமையினில்லாமலும் எனக்கெதிராகாமலும் அகன்றுபோகச் செய்வாயாகில் நான்சொன்னவாக்கியம் ஸ்திரமென்று நீ-தெளிந்துணர்ந்து கொள்ளலாம் திங்கள்குலத்துதித்த எங்க ளரசேயென்று வீரத்தனாகிய வேதபுங்கவன்சொல்ல அந்தப் பக்ஷத்தைத்துரியோதன மகாராஜன் முதலாகிய தம்பிமார்களுங்கேட்டு சந்தோஷங்கொண்டு தாங்களெண்ணிய கருத்து நிறைவேறித் தர்மராஜன் கைவசப் பட்டதைப்போற் களித்து துரோணாச்சாரியருக்குக் கரங்குவித் திறைஞ்சி கர்னமகாராஜனே முதலாகிய பலவான்களெல்லாரும் பக்கத்தி னெருங்கி முரசமுதலாகிய வாத்தியங்களுடன் ஏழ்கடலார்ப்பென்ன முழங்கி யுகமுடிவாகிய காலமிதுவென் றுரைக்கும்படியாய் துரோணனென்னுஞ் சேனாபதியுடன் ரணகளம்வந்து சேர்ந்தார்கள்.

இவ்விடத்தினடந்த சங்கதிகளெல்லாம் வணங்கியுரைத்த தூதராற்றெரிந்துகொண்டு பலம்பொருந்திய முரசக்கொடிபடைத்த தருமராஜனானவர் வீமசேனன்முதலாகிய தம்பியர்களையும் மித்துருவாகிய புத்திமான்களையும் ஸ்ரீ கிருஷ்ணதேவரையும் சேர்த்துவைத்து இச்செய்திகளையெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்து அர்ச்சுனனை நோக்கி அப்பாதம்பி, துரியோதனமகாராஜனுக்கு வரம் கொடுத்திருக்கிற சேனாபதியாகிய துரோணாச் சாரியர் போர்புரிந்து என்னைப்பிடிக்க வரும்போதில், சோமசூரியாக்கினியாகிய முச்சுடருஞ் சூழலும்படிக்கு நீமுனைந்து யுத்தஞ்செய்தால்மாத்திரம் நானும் பிழைப்பேன் சபதமுமுடிக்கலாம், நீ முனையாவிட்டால் நமக்கெதுவு முடியாது-ஆகையால்-அந்தத் துரோணாச்சாரியர் எதிர்த்துவந்தகாலத்தில் ஆசாரியனென்னு மரியாதையும்-முறைமையும் எண்ணிப்பார்த்து அச்சப்படாதே என்னைவிட்டு நீங்கியெங்கும்போகாதே, தர்ம்மசாஸ்திரந் தேர்ந்தவர்களுந் தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல்லுவார்கள் என்சகோதரனே, இதை நீ யோசிக்கவேண்டியதென்று உதிட்டிரனுரைப்ப நானிலம்புகழும் நரன்சொல்லு கின்றான்.

அறநெறிவழுவாத் திறமுறை குறையாத என்னண்ணாவே தரித்திரன் குபேரசம்பத்தை அநுபவிக்க நினைப்பதுபோல இராஜாதிராஜனாகிய துரியோதனன் தனக்குள் தானே நினைத்துக் கொண்டகாரியமல்லாமல் இதுமுடியுங் கருமமல்லவே இந்தத் தனுர்வேதசம்பன்னனாகிய துரோணாச்சாரியாராலும் ஆகாதுமுத்தொழிலாட்டும்மூர்க்கடவுளாலுமுடியாதுஎன்வார்த்தையைத்தேவரீர்மனத்தில்ஸ்திரமாகநம்பும் அண்ணா என்பிராணனைநான்வைத்துக் கொண்டிருக்க உம்மை யொருவர்கைக் கொள்ளவசமாமோ நிர்மலனே தேவரீரைக் கைவிட்டிருப்பேனாகில் குருத்துரோகஞ் செய்து ஆசாரியனாயினவரைக்குந் தோஷமும் உம்மைக் கைவிட்டுப் பிரிவதினால்நேரிடுந் தோஷமும் இவ்விரண்டுமெனக்கொன்றாய்முடியும் எமதுகர்த்தனே இந்தத்துரோணாச்சாரியர் மாத்திரமல்ல பாதலத்திலிருப்பவரொவராலும் பூதலத்திலிருப்பவரொவராலும் மீதலத்திலிருப்பவரொவராலும் ஒன்றாகச்சேர்ந்து தேவரீரைக்கவர்ந்துகொண்டு போகும்படியாய் வருவாராகில் அப்போதே இந்தமண்ணுலகம் பொடிப்பொடியாகிய மண்ணாய் வார்கடலேழும்வற்றி வறண்டுதிடராய் வடவாமுகாக்கினியும் அவிந்து சிதைந்து நீறாய் விண்ணுலகம் நிலைகெட்டுத் தடுமாறித் தலைகீழாய் சந்திரசூரியர்கதியோய்ந்து கால்சாய்ந்து வேறாய் மகமேருகுயவன்திகிரிபோற் சுழன்று தளர்வாய் இவ்வுலகைச்சுமக்கும் ஆதிசேடனும் உடல்நெரிந்து மெலிவடைந்து ஒன்றுமில்லாமல் வெட்டவெளியாய் போய்விடுமே உதிட்டிரமகாராஜனே தேவரீர்மனதில் இதைக்குறித் தெண்ணவேண்டாம், உமதிஷ்டப்படிக்குக் குறைவிலாமலிருமென்று சொன்னான் அவனாரெனில் பகைத்தவரையடக்கும் சக்ராயுதத்தைத்தாங்கிய காத்தனென்னும் கண்ணனுடைய இர்தயகமலம்போன்ற குற்றமற்ற பற்குணனானவன்.

இப்படியாக நீருண்டெழுந்த மேகம்போ லிரைந்துகூறிய வாய்மையை வெற்றிபெற்ற முரசக்கொடிக்கதிபனாகிய வீரன்கேட்டு மகிழ்ச்சியினால் இரண்டுதோளும் வதுவேறி வீங்கி மதத்துவிண்ணிலோங்கச் சகலஜெயமும் பெற்ற முரசங்களுடன் தப்பட்டை-தாரை-பூரி-சங்குவாத்தியங்களும் எங்கும் ஆர்ப்பரிக்கப் பிரகாசியாநின்ற ரதகஜ துரகபதாதிகளென்னும்பெருங்கடற்புரண்டுசூழவெற்றிபொருந்திய வெண்சாமரை-விருதுக்கொடி-வெள்ளைக்குடை-மயிற்பீலி-ஆலவட்டமுதலாகிய யாவுநெருங்கத் தருமராஜனானவர் விசித்திரமாகிய தேரேறித் தம்பிமார்களும் யானைகளும் புடைகவிந்துவரத் தாம்தாமென்று புறப்பட்டபோது ஓ மெய்விரதனாகிய தரும நந்தனரே கேளும் கங்கா புத்திரனாகிய வீஷ்டுமர் உயிர் வேஷ்டையால் நீங்கிவிட்டாற் தனக்குச்சேனாபதிப்பட்டம்வருமென்று சந்தோஷித்திருந்த கர்னனானவன் மனமிடைந்து யுத்தஞ்செய்வதற்கு ஏனோதானோ வென்றிளைத்துப் போய்விட்டான் துரோணாச்சாரியர் குமாரனாகிய அசுவத்தாமனானவன் நெடுநேரம்வரைக்கும் நிலைத்துமுனிந்து முனைந்துபோர்புரியமாட்டான், ஆகையால் இனிமேற் கொண்டு நாமேவென்று ஜெயம்பெற்றோமென்று மைவண்ணம்போன்ற மேகத்திற்கொப்பாகிய வடிவமமைந்த மாதவன் திருவாய்மலர்ந்தருளக்கேட்டு மலையைப்போற் குவிந்ததோளினையுடைய பாண்டவர்கள் மனமகிழ்ந்து

போர்மலைவதற்கு ரணகளம்போய்க் குறுகினர்கள் இப்பால் நவநிதிநிறைந்த மாதனக்களஞ்சிய அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனென்றும், ஐந்தருவுறைந்த அமராவதிக்குத்தலைவனாகிய போகதேவேந்திரனென்றும் சொல்லத்தக்க அவனிபர்க்கதிபதியாகிய துரியோதனமகாராஜனுனவன்விவேகத்திற்சிறந்தபடைமன்னர்களுடனும் வேதவிற்குரிசிலாக்கிய சேனாபதியென்னுந்துரோணாச்சாரியருடனும்வெம்போர்க்களத்தில்வந்துமிகமகிழ்ந்துநின்றான்.

இந்தப்படிக்கு இருதிறவீரர்களும் பொருந்தி வீஷ்மரொருவரில்லாமல் நிறைந்திருந்த அமர்க்களமெப்படியிருந்ததென்றால் சந்திரசூரியர்மறைந்த வானம்போலும், அழகியகுணமும், மணமுங்கெட்டு நலங்கியமலர்போலும் தெளிந்தநன்னீர்நிறைந்த ஆறில்லாத ஊர்போலும், அழகிய தந்தியற்ற நாதயாழ்போலும், திரவியமில்லாதார் செல்வம்போலும், சத்தியந்தப்பினோர் தளர்ச்சிபோலும், இரக்கமற்றவர் இல்வாழ்க்கைபோலும், நன்வினைப்பிலையார் நலிவுபோலும், வேதமந்திரமில்லா வேள்விபோலும், கியானமற்றதேகம்போலும், கண்கள்கெட்ட முகம்போலும், நியமமவிந்த மனைபோலும், பரதனைப்போன்றதம்பியைப் படைக்காத்தமயன்போலும், குருவாக்கியங்கொள்ளா வித்தைபோலும், பொறுமைமறைந்த தவம்போலும், நற்குணநற்செய்கை கெட்ட பெண்ணுடன்கூடிவாழும் இல்லறத்தருமம்போலும், நீதியற்ற அரசுபோலும், யானையில்லாச்சேனைபோலும். கியானமுன்னுநிஷ்டைபோலும், புத்திரன்கிட்டாப் பாக்கியம்போலும், மேகமிழந்த பூமிபோலும், வித்வான்கள்பொருந்தாத சபைபோலும், ஆசார பூசாவிதி பெறாதகுலம்போலும், நாணிதளர்ந்தவிற்போலும், நாதனிழந்த படைபோலு மிருந்தது கங்காபுத்திரனாகிய காங்கேயனென்னுமவீஷ்டுமனில்லாத சேனை இப்படியாகயிருந்த ரதகஜதுரகபதாதிமுதலாகிய நால்வகைச்சேனைகளையும் வண்டிச்சக்கரம்போற் சகட வியூகமாகவகுத்துச் சகலவிதவாத்தியங்களுடன் தானுந் தூசிப்படையினின்றார் துரோணாச்சாரியர், பாண்டவப்படைகளாகிய சதுரங்கச்சேனைகளையுஞ்சேர்த்து எதிரிகளேற்படுத்திய வியூகத்திற்கு மாறாகக்கிரவுஞ்சவியூகமென்று பிரம்மாண்ட மலையைப்போலு மேர்ப்படுத்திக் குஷ்டத்துய்மனாகிய சேனாபதியும்பெரும்போர்முகத்தினின்றான்.

இவ்வகையாயிருவகைப்படைகளுங் கவிந்துக்கொண்டுநிற்க இரண்டுசேனாபதிகளும் எதிர்த்துக்கொண்டுநிற்க குளிர்ச்சிபொருந்திய சந்திரவட்டக் குடையினையுடைய அரசர்கள் சூழ்ந்துவர தடதட படபட மடமட வென்று நாவிவநற்குதிரைபூட்டியதடந்தேர்செலுத்திவந்துதேவர்கள்தியங்கிநடுங்கிமயங்கும்படியாய்ப் பத்திரபுட்பாதிமாலைகளணிந்த வரிசைபெற்ற வாளிகளைச் சோனாமேகத்தைப்போற்சொரிந்து உலகமதிக்கும் துரோணாச்சாரியரானவர் மேற்பட்ட பலமுடையவராய் செவ்வரக்கைப்போற் கட்கடைசிவந்து பற்பலகோடி சிலீமுகக்கணைகளைவிடுத்துக் குற்றமற்றபாண்டுவின் புத்திரர்களுடைய வாகினியைப்பிளந்து சிதற அடித்து முடித்து மத்தியானச் சூரியனைப்போல் இயாவரு நிகரில்லாமனின்றார், இதல்லாமல் பார்த்தசாரதியாகிய வலவன் படபடாகாரத்துடன் றேரைச்செலுத்த பிரதாபருத்திரனைப்போல்வந்த பற்குனன் கண்டு மழுப்போற்காய்ந்து அனற்பொறிபறக்குங் கணைகளையிறைக்க அந்தக்கணைகளைக்கர்னன்கண்டுஅர்ச்சுனனைத்தனைந்து வில்வளைத்து மேகாஸ்திரம் மோகாஸ்திரம் பிர்ம்மாஸ்திரம்விடுத்துப் போர்புரியுங்காலையில் எண்டிசைமுதலிய இரவியும்நடுங்கிஇமையாநாட்டத்தவருமெடுங்கி இருகரத்தாலுங் கண்களை மூடிக்கொண்டார்கள் இன்னொருபக்கத்தில் சகாதேவனும் மாயச்சூதாடிய வஞ்சகமுடைய சகுனிமாமனும் நேர்நேராகப்புகுந்து கலந்து ஒருவனை யொருவர்வெல்லுவதரிதென் றுணைக்கும்படியாய் போராடி வேகமுங்கூர்மையுங்கொண்ட சரங்களைவி ஒன்றோடொன்று முனைந்துதேய்ந்து சாய்ந்து ஓய்ந்துபோம்படியாய் வில்வளைத்தெதிர்த்தார்கள், இவ்விருவரும் நெடுநேரம்போர்செய்யும்போது சகாதேவன் ஒருகணைவிடுத்து சகுனியினுடைய சாரதியைப்போக்கி இருகணைதொடுத்துக் கொடியையறுத்து நான்குபாணம்விடுத்து குதிரைகளையுங்கெடுத்து வஞ்சகனுடையமார்புகிழிய வடிக்கணையினாற் றுளைத்து காயப்படுத்தியபோது நிணச்சேற்றில் விழுந்து ஓடுவதற்கு எண்ணினவனைப்போ லிளைத்த சகுனியானவன் தன்றேர்விட்டிறங்கி செயங்கொண்டு வெற்றிமாலையணிந்த வஞ்சமில்லாநெஞ்சினனாகிய சகாதேவனையெதிர்த்து கைத்தண்டங்கொண்டு மதத்துவரும்போது நகுலனுக்கிளைய சகாதேவனகைத்துப் பிரகாசிக்கும் வாகுவலயமணிந்த தன்றோளின்பேரில் யாவரும்பார்க்கும்படியாகத் தாங்கிய பலம்பொருந்திய கதையைக் கையிற்கொண்டெதிர்த்துச் சகுனிமாமனைத்தாக்கிப் புறமுதுகிட்டோடப் புரட்டியடித்தான் சகாதேவனனைவன் மற்றொருபுறத்தில் மும்மதங்களைப்பொழியும் யானைகளுங் குதிரைகட்டிய கலசங்களையுடையதேரும் வேகப்புரவிகளும் வெற்றிபெற்ற வீரவெள்ளப்படைகளும் நாலுபுறமுஞ்சூழ்ந்துவர ராஜவீர்யகுடாதிப சொல்லாரும் தன்னிழலைப்போற்றொடர்ந்துவர பாட்டனாகிய வீஷ்டுமரிறந்த துன்பத்திலாழ்ந்திருக்கும் துரியோதனன் வேங்கைப்புலிபொருந்திய மலைபோலொத்த இரதத்தைவிடுத்துக்கொண்டு கொடியகாலாக்கினிக்கொப்பாகக் கொதித்தெழுந்து வாயுகுமாரனாகிய வீமசேனனை வளைத்தெதிர்ந்துதாக்கினன் அப்போது சிங்கக்கொடிதாங்கிய தேரினையுடையவீமசேனன் சிங்கம்போற்சினத்தெழுந்து சரிக்குச்சரியாய்ச்சாயகம்விடுத்துக்கருக்கி திமுகாஸ்திரங்களையேவி அரவக்கொடியும் இடிக்குப்பயந்த பெரும்பாம்பைப்போலொத்த வில்லும் முறிந்துபோகச்செய்ததுமல்லாமல் அரசனடுங்கிப்பயப்படவும் அமர்பொரத்துணிந்து அவனுடன்வந்த படைமன்னரும் யானைகள்-குதிரைகள் தேர்நிறைகள் பதாதியர் முதலியயாவும் அடியோடழியவும் வெவ்வியபாணங்களை மேலுமேலு முடுக்கிவிடுத்தான் இப்படியாக வீமசேனன் கொட்டகணைகளினால்வாத்தியங்கள் முழங்கும்படி மகிழ்ந்துவந்த பட்டவர்த்தனரும்-மகுடவர்த்தனரும் - பரிபூட்டியதேராளிகளும்-வில

லாளிகளும்-வாளாளிகளும்-வேந்தர்வேந்தாகிய துரியோ
தனனும் வெருகிட்டோடும் விரைவைக்கண்டு யாவருந்து
திக்காநின்ற வெள்ளைக்குடைவிரிந்த வீமசேனன்பேரிம்
சோடையிடியைப்போலிளாந்து விரைந்துமுனைந்து சல்
லியராஜன்வந்துவளைந்து வீரசாயகங்களைச் சரமாரியாய்
ப்பொழிந்தான் அந்தச்சல்லியன்விடுத்த பாணங்களையெ
ல்லாங்கெடுத்துப் போர்புரியும் வீமசேனனை நகுலன் அ
டுத்து தேவரீர் யுத்தம்பண்ணவேண்டாமென்று தடுத்து
தன்றமையனெதிர்த்த சல்லியனைத்தகைந்து என்னுட
ன்போர்செய்யக்கடவையென்று இமைக்குமுன் கொடுங்
கணைசெலுத்தி ரணகளமுழுவதும் தலைபறுந்தமுண்டங்க
ளாடும்படியாய் சல்லியன்மனமும்வாடும்படியாய் வெம்
முனைவென்ற வீரப்பிரதாப வெஞ்சிலைதாங்கிய நகுலரா
ஜன் மிகும்போர்விளைத்து மோகரித்துாணைந்து ஒன்றுஇ
ரண்டு-மூன்று-நான்கு ஐந்து-இப்படியாக அம்புகளைப் பி
ரையோகஞ்செய்து சாரதிதலையை வீழ்த்தி நாணியறுத்
து வில்லைமுறித்து ரதத்தையுங் கொடியையும் அழித்து
நான்குகுதிரைகளையும்போக்கி பாதாதிகேசமளவுமிளைத்
துரப்பனம்போற் றுளைக்கும்படியா யெய்தான் நகுலரா
ஜனனவன் அப்போது மனங்கூசி மத்திரனனவன் அப்
பா இவன் அர்ச்சுனராஜனுக்குத் தம்பியல்லவாவென்று
புறங்கொடுத்துப் போய்விட்டான் இன்னொருபக்கத்தில்
திரண்ட இரண்டுமலைமாரண்டெதிர்ந்ததைப்போல் சூரி
யகுமாரனுகிய கர்னனும் விரதீர விராடராஜனும் வெகு
ளியுடனெரிட்டுப்போரிட்டார்கள் அப்போதுபூமியும் இ
ந்தப்பூமியைத்தாங்கிய ஆதிசேடனும் நடுநடுங்கிப்போ
கும்படியாய் அபரிமிதமில்லாமலெய்யுங் கணைகளினல்
ஆகாயமெங்கு மறைந்து - அநேகஞ்சேனைகளுங் குறைந்
தது - இப்பால் துருபதராஜனும் - யாகசேனனும் ஒன்
றுகச்சேர்ந்துவெற்றிமாலைபூண்டுமேலிட்டுவரா நின்றசிங்
கமனைய பகதத்தனைமடக்கி ஒருபகல் முழுவதும் தங்கள்
தங்களுடைய தயிரியமும் பலமும் பிரகாசம்பெற்றஆயுத
ங்களின்வலிமையும்-சிலைத்திறங்களைத்திறமுங் காட்டியா
னைச்சண்டையிட்டார்கள் இதல்லாமலும் விரகண்டாம
ணிகட்டியசோமதத்தனும்-மேலாகிய வலிமைபெற்றவே
ந்தர்களும்-வாளாயுதம்வேலாயுதங்-குந்தாயுதம் தோமரா
யுதம்-சக்ராயுதமுதலிய ஆயுதங்களைக்கொண்டுயுத்தங்கள்
செய்துபுறங்கந்தோடினர்கள், அப்பால் வீஷ்டுமனை வெ
ன்ற சிகண்டிராஜன்இன்றையத்தினத்திற்செய்த போரின்
திறத்தை எம்போலியராற் சொல்லத்தரமல்ல இறைவ
னே, இப்படியொருவருக்கொருவர்கைகலந்துபோர்புரிந்
தும் - இளைத்தும் - களைத்தும் - ஜெயித்தும் அப்ஜெயம
டைந்தும் - எங்குங்கணைமயம் - எங்கும்பாணமயமாய்நி
றைந்திருக்குங் காலத்தில் தேர்க்கூட்டங்களும்-யானைப்
பெருங்கூட்டங்களும்-சேனைகளினெருக்கமும்-குதிரைக்
கும்புகளின்பெருக்கமும் - ராஜகூட்டங்களும் - அம்புகள்
தெறித்த அம்புவி அசைய - தும்புகளெழ - வம்புகள்வி
ளைத்துவந்த-கொடி-குடை-நெருங்க வாத்தியங்கள் முழ
ங்கும்படியாய் நெருங்கி அர்ச்சுனராஜனுடைய குமார
ன் அபிமன்னனும் துரியோதனராஜனுடைய குமாரன்
இலக்கணனும் எதிர்ந்து தொடுத்தபாணங்கள் மண்ணை
ப்பறித்து விண்ணைமறைக்கவுஞ்-சரவேகத்திலும் சர்ப்ப
வேகத்திலு மிஞ்சிப்போகும் ரதவேகமுடையவர்களாய்
ச் சென்றுவிடுத்த மெய்மையாகிய கணைகளுடன்கணைமி
ன்னிப் பின்னிக்கொண்டு இவர்களுக் கெதிரிலே வீழ்ந்த
தியவும் கார்முகமாகிய வில்லைக் கரகரவென்று வளைந்து
பல்லை நெடநெடவென்று கடித்து இடசாரிவலசாரியாய்
ச் சாகசஞ்செய்து சண்டையிட்டார்கள் அண்டிய அரச
ர்கள் மண்டைகள்பிழிபட எண்டிசையதிரும் நின்றதிஜ
யமுற மண்டலம்-விண்டலம் ஒன்றெனப் பொடியெழ-க
ண்டவர்கண்கள் கலங்கிப் பொறிவிழ போர்விளைத்தகாலை
யில் கருப்புச்சிலைபிடித்த மன்மதனுங்கொப்பாகிய இலக்
கணகுமாரனும் சிலைவீரத்திறம்பெற்ற அர்ச்சுனன் மகிழு
ம்படியாகிய அபிமன்னனும் நெடுநேரம்வரையிலும் பூச
ல்விளைத்து ஒருவரையொருவர் வெல்லவேணுமென்னும்
ஆசைமிகுத்து இலக்கணக்குமாரன் கைக்கொண்ட வின்
னுணியைப் படுகென்றறுத்து வேறுநாணி பூட்டுமுன்
னே மளுக்கென்று வில்லையொடித்தான் அபிமன்னன் இ
ப்படிக்கு மேன்மையாகிய பாணங்களை விட்டபோது அ
ந்த இலக்கணக்குமாரன் மறுவில்லெடுத்து நாணிபூட்ட
நாட்டஞ்சொல்லுவதற்குமுன்னே சகல பகையும் வெல்
லி நல்லவனென்றுஞ் சகலகலையுஞ்சொல்ல வல்லவனெ
ன்றும் பேர்கொண்ட தந்தையாகிய தனஞ்செயனைப்
போல தனதுதேரைச் சமீபத்திலெருக்கி சலத்திலசைந்
து தத்தளிக்குங் கப்பலிலகப்பட்ட இளஞ்சிங்கக்குட்டி
போன்றதீரனை துரியோதனனுதியர் நூற்றுவர்க்குரிய இல
க்கணகுமாரனை மலர்ப்பகழிதாங்கிய மாரனை, வாளாயுத
மோங்கிய வீரனை, மகாதிடங்கொண்ட சூரனை, ஒருகரத்
தால் மார்போடணைத்து உயிருடன்பிடித்தான் பாண்டவ
ர்க்குத் திருமகனும் (பரந்தாமனென்னும்) என்னுண்ட
வர்க்குமருகனுகியும் விளங்கிய அபிமன்னன் மேலும் ம
லர்க்கணையினுல்வெல்லவல்லபங்கொண்டு எதிர்சென்றம
ன்மதனை நெற்றிக்கண்ணாலெரித்தருளிய சிவபெருமானை
சிந்தையு ளிருத்துந் திறங்கொண்ட சிவனடியார்க் கடி
மையாகிய ஜெயவிஜயனுக்குச் சிறுவ னனவன் இலக்
கணகுமாரனுடைய நீண்டதலைமயிரைக் கையிற்சுற்றிக்
கொண்டு பொன்மயமாகிய தேரைச் செலுத்திப் போம்
போது சிந்துதேசாதிபதியாகிய செயித்திரதன் தனதுதே
ரை விரைவாகச்செலுத்தி வந்து விருது பூட்டிய வில்லை
வளைத்து இறகுகட்டியவாளிகள் விடுத்து யானையைக்கை
க்கொண்டு ஆண்மிக்கையுடன்செல்லும் ஆண்சிங்கத்தை
ஒரு சிலம்பிப்பூச்சி நால்வலையில் மடக்குமாப்போல் அ
பிமன்னுவைச் சயிந்தவன்தடுத்து வளைத்தகாலத்தில் அ
யன்கணை, அரிக்கணை, அரன்கணை, அனற்கணைகளைவிடு
த்து தோளுந்தாளும் மார்பும் துளைப்படுத்திய போது உ
ளைப்பெடுத்தோடி களைப்புடன்வீழ்ந்தான் சிந்துதேசாதி
பனனவன் அந்தவேளையில் புயவலிமை கொண்ட கர்ன
ன் முதலாகிய போர்வீரர்கள் முழுமைக்குந் திரண்டுவந்
து அபிமன்னுவென்று மொருவனைத் தகைந்து அண்ட
முகடதிரும்படி அமர்புரிந்தார்கள் அப்படி அமர்புரியவர்

தவர்கள் யாவரும்சோர்ந்து உடல்வெந்து சிந்தை வருந்தி தாங்கள்விட்ட கணைகளுங்கெட்டு தங்கள்நெற்றியிற் சிந்தூரத்திலகமும் உண்டென்று பொட்டிட்டு அவரவரும் கொட்டாகிய கட்டுகள்விட்டுப் பட்டுக் கெட்டொழியும்படியாய் அட்டமாசித்துகளும் வல்ல அபிமன்னனானவன் பட்டயக்கணைகளைப் பாயவிடுத்து அவரவர் நெற்றிகளில் ரத்தங்கள் பாயும்படியாய்ச் செய்ததுமல்லாமல் வேறு வேறு பாணத்தாலடித்துப் புறமுதுகிட்டோடும்படியாய்ப் பாடுபடுத்தினான் வீராதிவீரனாகிய விஜயன்குமாரன் இவ்விதமாக எதிர்த்துத்தடுத்த தேராளிகளையெல்லாம் தனக்கொருவர் சகாயமில்லாமல் தானேயிருக்கும் ஒரு தேரினால்வென்று தாணிசனுடையகுமாரனைக்கைக்கொண்டுபோகின்ற அபிமன்னனுடைய தாஷ்டீகத்தைக்கண்டு நாபியில் நாவில் நீர்வறண்டு யாவரும் வாட சிலர்கூவிக்கொண்டோட சொந்தமுள்ள சேனைகள் ஜெயம் ஜெயமென்றுபாட அந்தச்சமயத்தில் வல்லியம் போன்ற சல்லியனானவன் ஆக்ரமித்து அடடா குடிமுழுகிப் போச்சுதென்று ஓடிவந்து அபிமன்னனையுந் தன்வில்லையும் வளைத்து பாணவருஷங்களைப்பொழிந்து சிகைவிரிந்து புகைமலிந்து அனலெழுந்து பொறியிறைக்குந் தீயைப்போலெரிந்து சீறி மலைந்துவரும் மத்திரராஜனை விஜயன்புத்திரன்கண்டு வாரும் வாருந் தாத்தாவாரும் வாருந் தாத்தாவென்று தலையசைத்து (வாய்-வாழைப்பழம் - கை-கருணைக்கிழங்கென்னும் பழமொழிக்குந் தேனொழுகப்பேசி தெருக்கடக்க விட்டானென்பதற்கும் இணங்கத் தக்கதாய்) இந்திரக்கணையிரண்டு சந்திரக்கணையிரண்டு ஏமக்கணையிரண்டு சேமக்கணையிரண்டு ஆகக் கணைகளெட்டையுமெடுத்து சல்லியன்முகத்திற்றுக்கியபோது தோளிரண்டிலிரண்டு பாணந்துளைக்க மார்பிலொன்றியிரண்டுபாணம்வருத்த முகத்தினில் நாலுபாண மொய்க்க அதனாற் சல்லியன் களைத்தபோது தேரின்மேலிற் சிலகோலும் சாரதிமேலிற் கோலவேலும் தாக்கினான் அபிமன்னுவானவன் அப்போது தேருமழிந்து சாரதியுமொழிந்து தரையில்விழுந்த சல்லியன் இருப்புக்கட்டு எழுக்கட்டுகளையுடைய கதையைக் கையிலெடுத்துக்கொண்டு உயர்ந்த மலைக்குகையை விட்டிழிந்து வரும் யாளிபோல் ரதத்தை விட்டிழிந்து இந்திரகொலுவேறிவாழ்ந்த கோமானுடைய குமாரனாகிய அபிமன்னன்மேலிற் பாய்ந்து வருவதை படைமுகத்தில் தேர்நிரைகளையெல்லாம் பொடியாக்கித் துவைத்துக்கொண்டு அபிமன்னுவுக்குப் படைத்துணையாக ஓடிவரும் வீமசேனன்கண்டு உடல்பதறி ஐயோ அறியாதபிள்ளையின்மேலிற் சல்லியன் கதைகொண்டு தாவுகின்றானேயென்று காற்றிலுங்கடிய வேகமாய்ப் பாய்ந்து சல்லியனுடைய எலும்பும் புயமும் நவமணிபதித்தமகுடமும் நெரிந்து நொறுங்கிச் சாயும்படியாய் கதையினால் வீசித்தாக்கினான் வீமசேனன்.

அந்த அடிபட்டமாத்திரத்தில் சாவுக்குச் சரியானமூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான் சல்லியராஜன், அப்படிவிழும்படியாக அடித்த தன் பெரியதகப்பனாகிய வீமனைப்பார்த்து முகம்வியர்த்து அடங்காவிசனமும் ஆறாத் துன்பமுங்கொண்டு ஐயா வீமசேன மகாராஜனே சல்லியனும் நானும் யுத்தஞ்செய்யும்போது நீர் குறுக்கேவந்துவிழுந்து கதையினாலடித்துத் தள்ளிவிட்டீரே, இது தர்மந்தானா ஒருவனும் ஒருவனும் போர்புரியும் போது இன்னொருவர்வந்து யுத்தம்பண்ணலாமா, ஒருவன் மேலில் இரண்டுபேர் கணைதொடுத்தெய்யலாமா, நல்லது அப்படிசெய்தீரே, ஐயா நானென்ன கையிலாகாதவனா அவனால் நானிளைத்தபோது நீர்வந்து எனக்கு உதவிசெய்தீரென்று பேரோ அல்லவென்று எனக்கு ஏதாகிலும் ஒரு பெருமையை உண்டாக்கவேணுமென்று நினைத்தோ அல்லது நானிறந்து போவேனென்று கருதியோ, அப்படியிறந்தால்த்தானென்ன வீரசொர்க்கங் கிடைக்குமல்லவா, அத்தனே இப்போது நீர்செய்தவேலையில் என்னைப்போலொத்தவர்களு நகைக்க எனக்குக்கிடைக்கும்வீரசுவர்க்கமும்பகைக்க என்னாண்மையுங்குன்ற அடியேனுக்கு அவமானந் தேடிவைத்தீரே என்னையனேயென்று கண்ணும் மனமும் மார்பும் கையும் முகமுஞ் சிவந்து உடல் கருகறுத்து இரதத்தின்மேலில் அயர்ந்துசாய்ந்தான் அபிமன்னனானவன்இப்படியாக அந்தப்பிள்ளை கூறியவார்த்தையைக்கேட்டு வீமசேனன் விசன மேற்கொண்டு ஐயோ, புத்ரவார்ச்சல்லியத்தாற் போய்ப்புகுந்தேனேயன்றி வேறொன்று நினைக்கவில்லையே செவ்வேளைப்போன்ற குமாரன் சிந்தைவருந்தி நொந்தானே நாம் என்னகாரியஞ் செய்தோமென்று இருகண்ணுமிருண்டு இருந்தயிடம்விட்டுப் பெயராமலிருந்தான் அந்தச் சமயத்தில் அபிமன்னுவினுடைய கரத்திற் சுற்றிப்பிடித்திருந்த தலைமயிரின்தளர்வும் அவனுடைய மனத்தளர்வுங் கண்டு இது நல்ல சமயமென்று இலக்கண குமாரன் இழிந்து இனைந்தோடிச்சென்று தன்னிமித்தமாய் தரையிற்சாய்ந்துகிடக்குஞ் சல்லியனையுந்தூக்கி பின்வந்துகொண்டிருந்த தன் தேரின்மேலிற்போட்டு தானு மேறிக்கொண்டு திரும்பும் போது, கிரீடபதியாகிய கிருதபன்மனானவன் அரசனுடைய குமாரனை உபசாரமாய் அநேகங் காவலுடன் அழைத்துக்கொண்டுபோய் நமன்கைக்கொண்ட உயிரும் நல்லபாம்பின்விடமேறிய உயிரும் திரும்புந் தன்மைபோற்றிரும்பினான் தேவரீருடைய செல்வனென்று துரியோதன ராஜனிடத்திற் சொல்லி பிள்ளையைச் சமுகத்தில் விட்டான்.

அந்தப் பிள்ளையைக்கண்ட துரியோதனன் வெள்ளமாகக் கண்ணீர்விடுத்து வள்ளலே, இன்று உன்னைநான் உயிருடன் கொள்ளை கொடுக்கும்படியாய் நேரிட்டதல்லவா, அநேகம்பேரைக் கட்டிவிடத்தக்க அதிபதியாகிய நீ ஒரு அறியாதவன் கையிலகப்பட்டனையே அப்பனேயென்று விசனப்பட்டு அப்புறமும் போர்செய்து அவனைப் பிடிப்போமென்று முனையும்போது போர்புரியும் இடங்கள்தோறும் புண்யசீலனாகிய தர்மராஜனுடைய சேனைகளில் பேர்பெற்ற அரசர் முதலிய படைகளும் வெற்றி பெற்று ஜெயங் கொண்டு வீரப்பாடலைப் பாடியாடிக் கொண்டு, மதோன்மத்தராய்த் திரியும் வேடிக்கையைப் பார்த்து இன்று நாம் வெற்றி பெறத்தக்கதில்லையென்று

மனத்துட்கொண்டு அரவக்கொடிக் கதிபனுகிய அரசன் பலவிதச்சேனைகளும் தானுந்திரும்பிப் பாசறைபோய்ச் சேர்ந்தான், இப்பால், அபிமன்னு வுக்குஞ் சல்லியனுக் கும் யுத்தநடக்கும்போது மேல்விழுந்து வந்த வீமசேன ன் அசுவத்தாமாவுடனே யுத்தஞ்செய்து தானேறிய ரத மும்-கைப்பிடித்த வில்லும்போய்க்கதையைக் கையிலெ டுத்து அசுவத்தாம னுடைய தேர்-குதிரை-சாரதியும் அ ழித்து-புறமிட்டோடக்கண்டு படைஞர்பேரிற் புகுந்துபி ரசண்டமாருதம்போற் முக்கிக்கொண்டு வருவதினுல்பல ம்பொருந்திய துரியோதனன் படையிலிருக்குந் தேர்க ளெல்லாம் பட பட மட மடவென்று சிதைந்து பொடி யாயிச்-சின்னபின்னமாகிய பான்மையைச் சூரியன்பார்த் துமனநடுக்கங் கொண்டுஐயோ, முன்னமேமக்கிருப்ப து ஓர்சக்கரத்தையுடையதேர் - அதிற்சப்தமாவென்னும் புரவிகளைப்பூட்டிக் காலங்கழித்துவருகின்றேமே,ஏதோ கோபம் பாவமென்னுந் தன்மையின் பேரில் ரதங்களை யழித்துவரும் வீமசேனராஜன் - வெகுண்டுமேற்கொண் டு இவனுடாமேலாக ரதத்தைச்செலுத்தி யோடுகிறவ னென்று கதையினுல் மாட்டினுலுமாட்டுவானப்பா அப் போதுநாமென்ன செய்யப்போறேம்(முனைமுகத்துநில் லேனென்று)நிறிவாக்கிய மிருப்பதினுல் நாம்நீங்கிப்போ வது உத்தமமென்று தான்போனவழியையாவருங்கண்டு ணர்ந்து கொள்ளாதிருக்கும்படியாய் இருள்த்திரையினு ல் உலகத்தை மறைக்க விடுத்து மேற்குச்சமுத்திரத்திற் சூரியன்குதித்து மூழ்கினன் - இவடத்தில்போதுபோய் விட்டதென்று பொருட்கொள்ளவேண்டியது.

இப்பால் எதிர்த்துவந்த அரசர்களெல்லாரும் புறங்கந் தோடச்செயித்த பூரித்தபுஜத்தோடுகூடிய அபிமன்னு வானவன்-பொங்கித்தணிந்தகடற்போல்தனக்குத்தானே கோபமாறிதன்கரத்திற்பிடித்திருந்தஇலக்கணகுமாரனைக் காணுமல்அடடாதப்பித்துக்கொண்டுபோய்விட்டானல்ல வா, உத்தமக்ஷத்திரிய குலத்திற் பிறந்த அரசன்பிள்ளை யென்றுஅலக்ஷ்யமாகநினைத்து வெற்றிபெற்றுவரும் வீ ரப்ரதாபர்களுடன்குழுவாகக் கூடிக்கொண்டு பெருமை கொண்ட சேனைத்தலைவர் - படைத்தலைவர் - சேனுபதி முதலிய பாண்டவர்களும் திருத்துழாய் புனைந்த ஸ்ரீகிரு ஷ்ணமூர்த்தியும், அரசர்கள் அநேகரும்பொருந்திய இ டத்தையணுகி - பாடிவீடுபோய்ச்சேர்ந்து அபிமன்னனு டைய வெற்றி பெற்றயுத்தத் திறமுதலிய யாவற்றையுங் கேட்டுமனமகிழ்ந்து மங்களகரமாய் அறுசுவை யின்பத் துடன்புசித்து நித்திரைசெய்தார்கள் - இணையில்லாதது ணிவினையுடைய பாண்டவர்கள், இவடத்தி லிப்படியிரு க்க அவடத்திற் துரியோதனமகாராஜன் - பாதிராத்திரிவ ரைக்கும் நித்திரையில்லாமல்வருந்திக்கொண்டிருந்ததை க் கேட்டுஉயிர்த்துணைவனுகிய கர்னன் முதலியபேரும்நீ திமான்களாகிய தேசராஜர்கள்பலரும் துரியோதனனு டைய தம்பிமார்களும் சேனுபதியாகிய துரோணுச்சாரி யாரும் சபையாகக்கூடியிருந்து அரசனைத் தேற்றியபோ து ஐயா - தனுர்வேதியாகிய துரோணுச்சாரியரே - தர் மராஜனைப்பிடித்துத்தாருமென்றுநான் - வரங்கேட்டிரு க்க, இன்றையத்தினத்தில்என் பிள்ளையாகிய இலக்கணகு மாரன் அபிமன்னனிடத்தில் அகப்பட்டுவருந்திவந்தானே நாமொன்றுநினைக்கத் தெய்வந்தானென்று நினைத்ததே, நானென்னசெய்வேனென்று இரக்கமுற்றுநொந்து-மறு படியுந்தேறி ஆசாரியரைப்பார்த்து கண்ணீர்சொரிந்து க ண்ணிருக்கும்போதே என்பிள்ளை கட்டுப்படும்படியா யி ருந்ததே ஓ காலமே அகாலமே என்குருவாக்கிய தெய் வமே தனுர்வேதத்தின் கேள்விக்கும் சதுர்வேதங் களி னுற் செய்யும் வேள்விக்கும் சொந்தமாகப்பிறந்திருக்கும் எந்தையே எண்ணியகருமம் நிறைவேற்று வதற்கு வில் லேந்தியதேவரீரைவிட வேறாகியவல்லவரொருவரு மில்லையே ஆகையால் நான் கேட்டுக்கொண்ட வரத்தின் பிரகாரமும்-என்பிள்ளையைப் பிடித்துக்கட்டிய ஈட்டுக்கீ டாகவும் நாளையுத்தத்தில் எவ்விதத்திலாகிலும் மநுநீதிக் கொப்பாகிய தர்மராஜனைப் பிடித்துக்கொடுத்தாலொழிய என்மனத்தில் விளைந்த மானமென்னும், வயிரம்நீங்காதெ ன்று துரியோதனன் வேண்டிக்கொள்ள இந்த வசனங்க ளை யெல்லாங்கேட்ட துரோணச்சாரியர், அப்பா துரி யோதனராஜனே தர்மராஜனைப்பெற்ற எமதர்மராஜனைப் போல் ஏழுபங்கு வலிமைகொண்ட வீமசேனன் - பின் காவலாகநிற்க விஜயம்பெற்று தன்தோளழகுற்ற விஜய ன் முன்காவலாக நிற்க இதல்லாமலும் ஒருவருதவி யில் லாமற் சுதாவாக முரசக் கொடியோன் போர் முகத்தில் நேர்புகுந்து வில்லெடுப்பானுகில் காலைக் கருக்கிப் பா ளைத்துளைத்து வேரறுக்கத்தக்க வலுவேறிய தர்மராஜனை வாக்கினுல்வதரும் பலவீனர்களைப்போற் பிதற்றி வில்லே னைத்து அவருக்கெதிரிற்றொடுத்து போர்கொடுத்துப் பிடித்துக் கைவசப்படுத்துவதற்கு இன்னொரு பிறப்பில் நடக்குமோ நடவாதோ அதுயெனக்குத் தெரியாது இத் தப்பிறப்பி லென்னுல்முடியாது அதேனெனில் பவளம் போன்ற திருவாயில்வைத்து ஊதும் பாஞ்சசன்யசங்கமு ம் அழகிய சக்கரமும் அஷ்டாக்ஷரமுமுடைய ஸ்ரீகிருஷ் ணனுனவர் ரதசாரதியாயிருக்க கொள்ளிவாய்ப்பாணங்க ளையுடைய வில்விஜயனும் வீமசேனனுஞ் சத்தியவானுகி ய தருமராஜனை முன்னும்பின்னுமாய்க் காத்துக் கொண் டு எவர்களையுங் கிட்ட நெருங்கவொட்டாம லிருக்கின்ற மையால்-என்னுலாகாதென் றுரைத்தேன், அந்த அர்ச் சுனனையும் வீமசேனனையும் ஒரு இமைப்போதுமாத்திர ம் தர்மராஜனைவிட்டுப் பிரியும்படியாய்ச் செய்து நெடுந் தூரங்கொண்டுபோய் மடக்குஞ்சேவகர் நமது படையிற் சிலரிருப்பார்களாகில் இன்றைக்காகிலும் நாளைக் காகிலு ம் கைப்பிடியாகப் பிடித்துத்தா வல்லென் அந்த அர்ச் சுன ராஜனும் வீமராஜனும் தர்மராஜனை விட்டுப் பிரியா திருக்கும் வரைக்கும் அவரைப் பிடித்துத் தரலாமென்ப து அசாத்தியமேயல்லது சாத்திய மல்லவென்று துரோ ணுச்சாரியர்சொல்ல இந்த வார்த்தையைக்கேட்டு திரிகர் த்ததேசாதிபரும் சஞ்சத்தகர் முதலாகிய சிலராஜர்களும் கடையுகத்திலெரிந்தெழுங் கனற்போ லெழுந்து, நான் முந்துவன் நீ முந்துவையென்று ஒருவருக்கொருவர் மு ந்தியுரைத்தார்கள்-ஐயா; உமதுசிந்தை வருந்த நீங்களுவ.

வுலகமெல்லாம் புகழும்படியாகிய வாயுபுத்திரனையும் ஒப்பற்ற விஜயனையும் மகநட்சத்திரத்திற் சனிபிரவேசிப்பதுபோற் பிரவேசித்து வளைத்துக்கொண்டு தர்மராஜனுக்கு உதவியாகவொட்டாமல் ஜாடிவிடுகிறோம்பாரு மெங்களுடைய சாமர்த்தியத்தையென்று சபதங்கூறினார்கள்.

அதாவது அருளேவடிவாகிய முரசக்கொடி பெற்ற தருமராஜனை அருமக்கொடிநாட்டிய தேராளியான தனஞ்செயனும் வீமனும் அணுகாமல் ஒருநாள்முழுது மடக்கிப்போர்புரிகிறோம், அப்படிசெய்யாமற் போவோமாகில் பேராசையென்னு மயக்கமேறி பெண்ணாசை-பூவாசை-பொன்னாசையுங்கொண்டு குடிபடைகள்வருந்த-மருவிக்குணங்குன்ற-வழக்கழிவுபேசி கொடுங்கோல்செலுத்தும்அரசர்கள் எவ்விதநரகத்திற்புகுவார்களோ, அந்தத்துர்கதியில்நாங்களும் போகக்கடவோம், இன்னமும்வீரத்திற்சிறந்ததோள்வலிமையுடையமலைபோன்ற வீமசேனனை தர்மராஜனுக்குத் துணையாக வொட்டாமற் றடுக்கிறோம் அப்படிதடுக்காமல் விடுப்போமாகில் உரியகுலத்திற்பிறந்தபெண்ணை குலதர்மப்பிரகாரம் அக்கினிசாக்ஷியாய்-வேதமந்திரவேதியர் சாட்சியாய்-சாலுங்கரகத்திநிறைந்த கெங்கா தேவிசாக்ஷியாய் கிராமம் புரோகிதன்முதலாகியதொழிலாளிகள்- சாட்சியாய்- பந்துசெனங்கள் சாட்சியாய்ஆகாயம்பூமிதேவிசாட்சியாய்- பச்சைப்பந்தலில்தாளியத்தின்பேரி லிருந்துக்கொண்டு இந்தப்பெண்ணைக் கைவிடாமற்காக்கிறேனென்று தாராதத்தம்வாங்கி, மாங்கல்யந்தந்தனேனுமமஜீவனவேதுணைவென்று திருமங்கிலிய தாரணஞ்செய்துக் கொண்ட தன்பெண்சாதியானவள் - படுக்கையிலிருந்துதிடுக்கென்றெழுந்து வெடுக்கென்று பாம்புகடித்த பயம்போலேங்கி அழுது இரங்கி வயிறெரிந்திருக்க அன்னியஸ்திரியுடன்படுத்து அவளைக் கவனம்பண்ணி அலைந்துதிரியும் பெரும்பாவிகளுக்கு அமைந்திருக்கும் கொடியநரகத்தில் - நாங்களும் அமிழக்கடவோம், இன்னியும் அந்த வீமார்ச்சுனனை, தர்மராஜனைவிட்டு விலக்காமற்போவோமாகில் - விதவைமுதலிய ஸ்திரீமோகத்திலுற் றுய்தந்தையரைவிடுத்து பிரஷ்டத்துவமடைந்து- பொய்பேசிதன்சகோதரர்முதலாகியபந்துக்களையுந்துன்பப்படுத்துங்கொடியதுஷ்டர்கள் அநுபவிக்கும் யமதண்டனையைநாங்களும் அநுபவிக்கக்கடவோம்-மேலும்நம்பினவர்களொப்பும்படியாய்த் தப்புவார்த்தையைச்சொல்லி நெடுநாள்வரைக்கும் அவர்களையலக்கழித்து-ஒருகாசுமுதலாஉலுத்தப்பசாசுகளும் தர்மசரித்திரமுதலியதைக்கெட்டும்சந்நிதானத்திற்றவமும் ஜெபமுஞ்செய்துகொண்டுசந்தடியாயிருக்கும் ஜனசமூகத்தில் தழிகைத்தொழிலாகிய சாராய்களுடன் அபினிகஞ்சாமுதலிய வஸ்துக்களை உட்கொண்டுமயக்கமேறி வெகுபேர்நிந்திக்கும்படியாய் மாடுமுதலிய வண்டிகளைவிட்டு கவுண்கல்லெறிதல் முதலாகிய கலகங்களைச் செய்யுங் கசடர்களுடைய-செல்வமுஞ் சிறுக்கெட்டுப் புண்பட்டுக் கண்கெட்டுக் கலங்கிய கடையர்விழாநின்ற மீளா நரகத்தில் நாங்களும் வீழ்க்கடவோமென்றும் - பசுவின்கன்றுல் விளக்கனியெறிந்த பார்த்தசாரதிவிடுக்குந்தேரிலடுத்த பார்த்தனையும் ஆஜானுபாகுவாகிய வீமசேனனையும் தர்மநந்தனனை விட்டுப்பிரிந்து சண்டையிட்டு மறிக்காமற்போவோமாகில் எந்த நன்றிகளிலும் ஒருவருடைய ஆபத்துக்காலத்தில் தயிரியஞ்சொல்லி ஆதரித்த நன்றிகுன்றிய அல்பருக்கு விதித்திருக்கும் அழுநரகமே நாங்களும் பெறக்கடவோமென்றும் இவ்விதமாகச் சொல்லிய இறைவர்களுக்கு சன்மானமுதலிய உபசாரச்சிறப்புஞ்செய்துஎவ்விதத்தாகிலும் எனக்குவெற்றியைக்கொடுக்கவேண்டுமென்று பிரியவசனங்களைச்சொல்லி துரியோதனமகாராஜன் விடைகொடுத்தனுப்ப அப்படியே நல்லதென்று தனுர்வேதியராகிய துரோணச்சாரியரின் வீரகண்டாமணி பூட்டிய பாதத்தில் வணங்கி விடைபெற்றுக் கொண்டு வீராவேசத்துடன் பொழுது எப்போது விடியுமென்று பொங்கிப் புகைந்துசென்றார்கள்.

இந்தப்பிரகாரம் இவர்களுக்குச் செலவு கொடுத்துவிட்டு மானத்திலும்-வல்லபத்திலும் - மனோதிடத்திலும்-வாழ்விலும் - வயிராக்கியத்திலும் உலகத்தி லொருவருமொவ்வாத வணங்காமுடிபொறுத்த துரியோதனராஜனுனவன் தேவபோக சம்பிரமராஜ சின்னங்களுடன் பாசறைபோய்ச்சேர்ந்தான்-பதினோராநாள் ராத்திரி சேனபதியாகியசிலைக்குருவினுடன் தர்மராஜனைப்பிடிக்கவேணுமென்றுதுரியோதனமகாராஜன் சொல்லியதும் அதற்குத்துரோணச்சாரியர் சொன்னதும் வீமார்ச்சுனனைமடக்கிறோமென்றுசிலவீரர்கள்ஏற்பட்டுதாம்பூலம்வாங்கி வெகுமதிபெற்றதும்இதுகளையெல்லாம்அறிந்த சூரியபகவானனவர் மெத்தவும்விசனப்பட்டு தன்னொளிமழுங்கி முகமுதலியவுடலுங் கறுத்து சத்தியவிரத லோகோபகாரியென்னும் அருள்குடிகொண்ட முரசக்கொடியோன் துரோணன்கையில் ஒருவேளை- அகப்படப் போறானென்று மனந்தாளாமல்மேற்குத்திசையிற்போனவன் அவடத்திலுந்தரியாமல் கிழக்குத்திசையில் ஓட்டமுநடையுமாயோடிவந்துபாண்டவப்படையிற் புகுந்து நித்திரைசெய்யாநின்றநிருபர்களையெல்லாம்கிரணக்கரங்களாலெழுப்பி வெப்பமானவார்த்தையைசுடச்சுடக்காதிற்போட வந்தவனைப்போற் காய்ந்து ஆறு குளம் ஏரிகளி லிருக்கும் சங்குமுழக்கங்களினால் இருபாளையத்தாரும் நித்திரை மயக்கம் நீங்கியெழுந்திருக்கவும், கருக்குருமான்முதலிய பட்சிகளெல்லாங் கதறிக்கதறிச் சப்திக்கவும்-சாவற்கோழிகளெல்லாம் வயிற்றிலடித்துக்கொண்டு கூவவும் வண்டினங்களெல்லாம் இரையவும் தாமரைகளெல்லாம்கையை விரித்து என்னசெய்வோம் தர்மராஜனுக்கு அபாயம் வருமோவென்று கண்ணீர்சோரவும், (கண்ணீ ரென்பது-கள்-நீர் என்றறியவும்.) குமுதமுதலிய மலர்களெல்லாம் கொடும்பாவியாகிய துரியோதனனுடைய நினைப்பையறிந்து குடிகெடுமென்று முகஞ்சோம்பிவாடவும், இலைகளசைந்து இலைகளுதிருந்தன்மைகளினால் சோலையினிறைந்தமரங்கள்வருந்துங்காலத்தில்,சூரியன்-கீழ்த்திசையி லுதயமாயினன்,இந்தப்படி பதினோராநாள் நடந்த யுத்தவிபரம் இதுவாக்களுங், கேளும் பார்த்திபனேயென்று திரிதராஷ்டிரனுக்குச்சஞ்சயன் சொல்லிவந்தானென்றுஜென

மேஜெயமகாராஜனுக்குவைசம்பாயனர் சொல்லிக்கொண்டுவந்ததைக் கேளும் நைமிசாரண்ய வாசிகளே யென்று சூதபுராணிகர் சொல்லிக்கொண்டுவந்தார்.

௰உ-ம் போர்ச்சருக்கம்.

கண்ணன் றுதி-விருத்தம்.

பொய்யாததவமுனிபின் போயருளித்தாடகைதன்......*
மெய்யாவிநீ்றென்ன வெஞ்சரத்தால்வீக்கியபின் ....*
மையாருமுகில்வண்ணன் வாங்கியவண்பூங்கமலக் .....*
கையாலுமொருசாபங் காலாலுமொருசாபம்.........*

எ-து. மெய்த்தவத்திற்சிறந்த விஸ்வாமித்திர மகாரிஷியுடன் தம்பியுந் தானுஞ்சென்று-காவலாக நின்று யாகநடத்தச்சொன்னபோது, கருமலைபோல் வந்த தாடகையின்பிராணனை வாங்கிவிடென்று மகாமுனிசொல்ல, குருவாக்கியந் தப்பாமல் உடனே வெவ்விதாகிய சரத்தாற்கொன்று மாரீசனைவென்று, சுவாகுவையும்-விஸ்வாமித்திருடைய யாகத்தையுங் குறைவற முடித்து தேவர்களுக்குத் திர்ப்தியாக அவிர்ப்பாகங்கொடுத்து மிதுலையைநோக்கிச்சென்ற கறுத்தமேகம்போன்ற காயாம்பூ வண்ணனுடைய (காலாலுமொருசாபம்) செந்தாமரை மலர்க்கொப்பாகிய திருவடியால் கல்லாகியிருந்த அகலிகைசாபத்தைப்போக்கி யிரட்சித்து, ஜனகராஜ னுடைய சபையில் சதாநந்தர்முதலிய பேர்களுடன் போயிருந்தபோது (கையாலுமொருசாபம்,) கமலம்போன்ற கரங்களால் சாபமென்னும் வில்லைவளைத்து சீதையைத் திருமணம்புரிந்தருளிய ஸ்ரீராமமூர்த்தியை வணங்கி பன்னிரண்டாநாள் நடந்த யுத்தத்தைச்சொல்லுகிறேன், கேளும் ஜெனமேஜெய மகாராஜனே என்றுவைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். புவிமன்னர்புகழப் புரக்குந்திரனே அபிமன்னன்மகிழ அனைக்கும் பேரனேகேளும், நேற்றிரவில் துரோணாச்சாரியர் முதலிய அரசர்களுடன், துரியோதனமகாராஜன்-ஆலோசித்த சங்கதிகள் யாவும், தூதர்களால் தர்மராஜன் றெரிந்துக்கொண்டு-அரவணைதுறந்து வந்தவதரித்திருக்கும் ஆபத்பாந்தவனுக்கும்- அர்ச்சுனராஜனுக்கும் சொல்ல வேண்டிவண்டுகள் மொய்க்கும் மதுமாலைத்தரித்து விளங்குந் தோளிணையுடைய துணைவர்களே என்னைப் பாதுகாத்துக் கொள்ளுங்க ளென்று வாழ்த்த, நல்லதென்று-கறுத்த களாப்பழ வண்ணனாகிய கண்ணன் வீரகண்டைதரித்த வேந்தர்களுடன் போர்க்களம்புகுந்து சத்துருக்கள் புறமிடும்படியாய்க்களிகொண்டு வாநின்ற நால்வகைச்சேனையைக் கொண்டுபோய் மண்டலயூகமாகவகுத்து, வீமசேனனைப் பின்னணியில் நிறுத்தி பற்பலமன்னரையும் பேரணியாகவமைத்து, இருபக்கத்திலும் நகுல சகாதேவரை யேர்ப்படுத்தி, மின்னொளிசெய்யும் நெடுவாளியையுடைய விஜயனையும்- அபிமன்னுவையும் முனைமுகத்திலமைத்து, முதன்மையாகிய தர்மராஜனை நடுவிலிருத்தி கொடி - குடைமுதலியது நெருங்கி காளமுதலிய வாத்தியங்களு முழங்கும்படியாய் மமதையடைந்து, தர்மராஜனைப் பிடித்துக் கொண்டுபோகத்தக்கபேர் வரட்டுமென்று வலிமைபேசிக்கொண்டிருந்தார்கள்.

இவர்க ளிப்படியிருக்க நேற்றிரவிற் சொல்லிய சபதந்தப்பாமல் திரிகர்த்தராஜ குலந்தலைவரும்-சஞ்சத்தகரும் துரோணாச்சாரியர்முதலிய சேனைகளும் வீரவிருது சின்னங்களுடன் வந்து மகரயூகம்வகுத்து சகல மேளமுமுழங்க இருபுறச் சேனையுமிரைந்து மனமகிழ்ந் திருக்குங்காலையில்-மேகக்கூட்டம் போன்ற யானைக் கூட்டம் மலை நெருக்கம்போன்ற தேர்நெருக்கமும் வாயுவேகம்போன்ற குதிரைவேகக்கூட்டமும் மன்னுயிர்போன்ற திரிகர்த்த தேசாதிபரும் நாராணகோபாலரும் அர்ச்சுன ராஜனுக்கெதிராகவந்து, ஓ அர்ச்சுனனே, எங்களைவெல்லுவதற்கு உனக்கு வல்லபமும் புருஷத்தனமும் உண்டா யிருக்குமாகில் புறப்படலாமென்று அறைகூவியழைத்து இறமாகியவில்லில் அக்கினிநிறமாகிய பாணங்களைத் தொடுத்து அதிர்த்து ஆர்த்துவரும் அவர்களுடைய தலைதெரியாநிலையை அர்ச்சுனன்கண்டு சாத்தகிமுதலாகிய பிள்ளைகளைநோக்கி தர்மராஜனை இமைப்பொழுது காத்துக்கொண்டிருங்கள் இதோவந்தேனென்று காவலர்களுக்குக் கட்டுமைவகுத்து தர்மராஜனைப்பணிந்து உத்தரம்பெற்றுக்கொண்டு சங்கத்தொனிசெய்து விஜயகாண்டீப வின்னாணியிறுக்கி பற்கடித்துறுக்கி அவர்களுக்கு நேர்சென்று நின்று பற்பல பாணவருஷங்களைப் பொழிந்தான் இத்தன்மையாகக் கைகலந்தகாலையில், மண்டலத்தி லிருந்தெழுந்த தும்புகளானது அண்டத்தைத்தூர்க்க, இருதிறவரும்பொழியும் வாளிகளானது அவைகளைமறைக்க-மலையைக் குழையச்செய்யும்வில்லை-வளையவாங்கி ஆண்சிங்கம்போன்ற அர்ச்சுனனும்-சஞ்சத்தகாள் முதலாகிய அரசர்களும் கவந்தங்களாட-கூளிகள்கூட-காளிகள்பாடி நடமாடப் போர்புரியுங்காலையில், படர்கொடி யிலைபோன்ற முனைத்தலையுடைய வேலாயுதத்தைக் கைக்கொண்டசயித்திரதன் குண்டலன்-சௌபலன்-முதலாகிய முடிமன்னருடன்படையரசர்கள்முப்பதினாயிரம்பேர்சூழும்படியாய் மேக கர்ச்சிதம்போலிரைந்துகொண்டு-யானை குதிரைபரிவாரங்களெருங்கிவரகுதிரைபூட்டியபெருந்தேரேறிகொடுமையென்னும்வில்லைவளைந்து நாணேறிட்டு குருகுல சிகாமணியாகிய தர்மராஜனுடன் போர்புரியும் படிக்கு துரோணாச்சாரியர் துடிக்காய்ச் சுறுக்காய் வருவதை பாஞ்சாலர்களும் பற்பதினாயிரம் படை மன்னரும் சேனாபதி துஷ்டத்துய்மனும் எதிர்ந்துவளைந்து ஈரேழுலகமும் அதிரும்படி பேரிகைமுதலிய.வாத்தியமுழக்கி சமுத்திரங்கொதிக்குந் தன்மைபோற் கதித்து சண்டைசெய்தார்கள் இவ்விருவருடைய சேனைகளும் எதிர்த்துப் பலபலவாயுதங்களுங்கொண்டு ஒருவரொருவரைக்கொன்று உன்மத்தமாய் ஒன்றுந்தோன்றாமல் யுத்தஞ்செய்ய அந்தச்சமயத்தில் போர்ப்புலிபோலொத்த துஷ்டத்துய்மன் பெருங்கோபங்கொண்டு கொலைவாளிகளைப் பலவாறுக வில்லிலிருந்து பொழிந்தபோது துரோணருடன் கூடிவந்து போர்புரிந்த வீரசிங்க வீரர்கள் பலபேர்மடிந்தார்கள் மேலும் துன்முகன் புறமுதுகிட்டோடப்பாய்ந்து துன்மருடன் யுத்தமுனைவிட்டோடக்காய்ந்து கற்போன்ற மனேதிடங்கொண்ட காந்தாரர்-கலிங்கர்-கௌசலர்-நிடதர்

முதலாகிய தேசாதிபரெல்லாம் புன்முகமாகக் களைத்து
இளைத்தோடப்பிளந்து பொருந்தியழித்த காலையில் துரி
யோதனனுடைய பெருஞ்சேனைகள் துரோணாசாரிய
ரிடத்திற் போய்விழுந்து துடிக்க அவர்களைக் கண்ட வே
தபண்டிதனாகிய வில்லாசிரியன் தமது படைகள் நிறைவ
ழிந்து குறைவாய் அவதிப்பட்டு அபயமென் றோடிவந்
ததைக் கண்டு அடங்காக் கோபமேற் கொண்டு அழகிய
வில்லை ஆகர்ணபரியந்தமிழுத்து பிறைமுகாஸ்திரத்தைத்
தொடுத்து பெருநெருப்பைப்போ லடித்துக் கடுகடுத்து
துஷ்டத்துய்மனுடைய வில்லை நடுவறப் பிளந்து கெடுத்
து-பிறைபணிந்த கறைமிடற் றண்ணலைப்போல் நின்று-
ஒருபெருங்கணைபோக்கி தர்மராஜனுடைய வில்லையு மு
றித்து-சித்திர விற்றிறங் கொண்ட சிகண்டியி னுடைய
தையுமழித்து-உத்த மோசன்-உதார்மன்முதல் வெற்
றியையுடைய வேந்த ரெல்லாரும் தங்கள் தங்களுயிரை
காப்பாத்திக்கொண்டு போர்த்தொழிலை விட்டுப் புறமிட்
டோடவிடுத்து சேனைகளையெல்லாஞ் சிதைத்து, நகுல
சகாதேவர்கள் நாணிபறுந்து நாணியோட அடித்து பா
ண்டியராஜன் ஆண்டியாய்வாட விடுத்து-பாஞ்சாலர் ஒஞ்
சுமாஞ்சாப்போற் புறமிட்டோடக்காஞ்சு-தேரோடி யுந்தி
யெதிரேறிவந்த வியாக்ரதுண்டனும் அவனைச்சார்ந்த உ
ள்ளிட்டாரும் அநேகமாயிரம் அரசர்களும் போர்க்களத்
தில் மடியும்படியாய்ப்போக்கி எதிர்த்து வரும் பேர்களை
த் தாக்கிக்கொண்டிருக்குந் துரோணருக்கெதிரில் வில்லு
க்கொருவனென்னுஞ் சோழராஜன் ஆண்மிக்கை யுடன்
வந்து காவேரிப்பெருக்கம்போற் கணைகளைப்பொழிந்து
துரோணர் தொடுத்த கணைகளால் காற்றுமழையுங் கலந்
தடிக்கக் கலந்து கரைந்தோடிய மண்ணுங் கட்டியைப்
போலும் வற்றியுலர்ந்த சேற்றைப்போலும் மனங்க
ரைந்து மதிகுலைந்துவாடி மனம்போனவாறே நாடி ஆத்
திமாலையணிந்த சோழன் போர்முகமும்விட்டு வேறுமு
கமாயோடினன்.

அந்தவேளையில் குற்றமற்ற மச்சதேசாதிபன் வந்தெ
திர்த்துலச்சைகெட்டுவச்சவிடந் தெரியாமல்மயங்கி பிச்
சையெடுக்கப் போனவரைப்போற்றியங்கி பயங்கொண்
டு வாடிப்பறந்தோடினன். அப்போது மாயமாகியயானை
ப்படையுடன் வந்தெதிர்த்த கடோற்கஜன் பிள்ளையாகிய
அஞ்சனபத்மனும் கலக்கண்ணீருருத்து அலக்கழிந்தகன்
றுன் இன்னுமுள்ள காவலரையுங் கைக்காறரையுங் கை
ப்படைவீரரையும் கடுங்கோபத்துடன் காய்ந்து கணைம
ழைகளைப்பெய்ந்து கண்கலங்கிமாய்ந்தரணகளத்திற்சாய்
ந்துபோகச்செய்தார் துரோணாசானவர் அவரால் தங்கள்
படை தளருந்தாட்சியைத் தர்மராஜன்கண்டு தனுவலாசி
ரியரை யெதிர்த்து இருவருந் தளர்விலாமலதிர்த்து வடு
வில்லாதவில்லைவளைத்து அளவில்லாதபாணங்களைத்தொ
டுத்து இருவர்மனத்திலும் கோபமெழுந்து எங்கும் அக்
கினிப்பொறிகளாய்விழுந்து எவர்களாலும் ஒரு ஆயுதங்
கள இடையிற்போடக்கூடாமல் எதிர்த்தவர் அரைக்க
ணப்போதும் வாடாமல் வேறொருவராலுந் தடைபடக்
கூடாமல் தேவர்கள்முதலியபேரரும் நடுங்க மூவர்கண்
முதலிய மோனருமொடுங்க அங்கம்பவிப்பச்சங்கத்தொ
னிசெய்து காகளமுழங்கி பேரிகையறைந்து அண்டகோ
ளகை யதிரும்படி இறைப்போதுந் தாளாமல் முறைப்
படி யெதிர்க்கவும் யானைகள்-குதிரைகள்-இரதங்கள் முத
லியதும் கும்புகும்பாய்க்கூடி யிரைந்துவிரைந்துவரவும்
வாளாயுதம்-வேலாயுதஞ் சக்ராயுதம் குந்தாயுதம்-தோம
ராயுதம் முதலாகியதும் கைக்கொண்டு சுழற்றி கண்கள்
விழித்து கனற்பொறியுகுத்து தங்கள்தங்கள் சேனைகளு
டன் ராஜபுத்திரருமெதிர்ந்து போர்புரிந்தார்கள்.

இதன்றியும் கஜங்களுடன்கஜங்கள் ஒன்றையொன்று
மதித்து கர்ணமதம் கபோலமதம் கரடமதம் கோசமத
முதலாகிய மதங்களைப்பொழிந்து காளமேகத்தையொத்
து உயர்ந்து பருத்து இருப்புலக்கை இருப்புச்சங்கிலி
கொண்டுநீண்ட துதிக்கையைச்சுழற்றி முகபடாமணிந்து
கிம்புரிக்கொம்புக்குக்கத்திகட்டி வீரகண்டையணிந்து ந
க்ஷத்திரங்களையுதிர்த்து வானநடுங்க அதிர்த்து வாரிதி க
லங்கக்குழப்பி ஆதிசேடனுடைய பணமகுட மடமட
வென்று நெரியமிதித்து கோபங்கொண்டு கால்விலங்கை
த்தரித்து கட்டுத்தறியைமுறித்து கடைக்கண்களிற் கன
லையுதிர்த்து பாகனையெடுத்தெறிந்து தன்னிழலைப்பார்த்
து தானேகறுவிப்பகைத்து சந்திரனைக்கவளமென்று பி
டித்து சோபத்திற்செழித்த சோபத்தைக்கழிக்க மேகத்
தைப்பிழிந்து தாகத்திற்குக்குடித்து எட்டுத்திசைகளுமு
லாவி அஷ்டகஜங்களைச்சுலாவி கட்டுப்படாமல் வீரபட்
டமணிந்த யானைகள் மத்தகத்துடன் மத்தகந்தாக்கி எதி
ர்த்துமலைந்தன அநேகங்கோடி ரதங்கள் ஒன்றோடொன்
று எதிரெதிர்மலைந்தன அந்தரதங்களை மலைகளுக்கொப்
பாகச் சொல்லுவோமென்றால் அந்தமலைகளுக்கு பிரகா
சிக்கும் சக்கரங்களும் இருசுகளுமில்லை வரிசைகளாகநா
ட்டுங் கொடிகளுமில்லை அழகியகொடிஞ்சிலாகிய தோ
மொட்டில்லைமுன்னும்பின்னும் மண்டலவளைவாக விரை
ந்தோடுதலுமில்லை அதைச்செலுத்தும்படியாகிய சாரதி
யுமில்லை அத்தபாகர்கைக்கிசைந்த பரியாகியகுதிரைகளு
மில்லை அலங்காரஞ்செய்யுந் தேர்ச்சீலைகளுமில்லை இன்
னமுந் தேர்களுக்குவேண்டிய உறுப்புகள்பலவும், மலை
களுக்கில்லாததினாலும் இடம்விட்டுப்பெயரா திருப்பதி
னாலும் புற்பூடுகள் கற்காடுகள் நெருங்கியிருப்பதினாலு
ம் தேருக்குமலையைநேராக ஒப்புச்சொல்லப்படாது வே
றொருபமானமுமில்லாமையால் தனக்குத்தானேயொப்
பாகிய அதிரதரேறியரதங்கள் அநேகம்பொருந்திப்போ
ர்புரிந்ததுகள் இதன்றி உகாந்தகாலத்திற் பொங்கும் பெ
ரும்பொரைக்கடற்போலிரைந்து அலைபோற்பாய்ந்து பந்
துபோற்றுள்ளி கருப்புகையெழுந்தககனம் வெடித்திட
கனைத்தலைக்காட்டி சமுறிவிரிந்தெழும் நெருப்பைப்போ
ற் கோபங்கொண்டு சிகரமலைகள் சாயும்படியாய் எதிரே
திநடந்த பிரசண்ட வாயுவைப்போற் கதிகொண்டுலாவி
யெதிரிகளைப்பகைத்து இறுமாப்படைந்து போர்புரிந்த
கருந்தாள் செந்துரௌழுப்பிய வெற்றிபெற்ற குதிரைக
ளநேகம் யுத்தஞ்செய்ததுகள் அப்பால் வீரர்கள்முதலிய
சேனைகள் தொந்தயுத்தம் விளைத்து தங்களுடைய வீரங்

சனை மேலாகக்காட்டி ஒருவரையொருவர்சண்டைக்குவாருங்களென்று அறைகூவியழைத்து சாபசார்த்தூல சிங்கம்போலுறுமி ஆ ஆ வென்றுகூறுவி எதிர்சென்று மேவிட்டு முடுக்கி வில்லைவணக்கி சாணைபிடித்த சரங்களால் அங்கத்தைப்பங்கப்படுத்தி யாவருமிளைக்கச்செய்து வெற்றிபெறும்படியாய் வீராவேசங்கொண்டு நின்றுவென்ற வீரரநேகம் இந்தப்படி ரணகளமெல்லாந் தொந்தயுத்தம் நடந்துங்கொண்டிருக்க இந்திரன்முதலியயாவரும்நொந்திளைத்துப் பிந்திவெளிவாங்க துரோணாச்சாரியருந் தர்மராஜனும் வீரமேற்கொண்டு அதிகரித்து வெற்றிமாலை தரித்து விஜயபட்டந்தரித்த முடியணிந்தே சிரந்துளக்கி பற்கடித்து கோபச்சிரிப்பாகச்சிரித்து சண்டமாருதம்போல் ஒருவர்தேருக்கெதிர் ஒருவர்தேரைச்சுழற்றி நடத்தி பிரபலமாகிய சண்டைசெய்து விஷங்களைக்கக்கிக்கொண்டுவரும் பாணங்களை உடல்முழுமையுந்தைக்கவிடுத்து இன்றையயுத்தம்போதுமென்று கண்டவர்நடுங்கிச் சொல்லும்படியாய் இடம்வலம் வலம்இடமென்று மாறிமாறிப் போர்புரிந்தகாலையில் சிலைக்குருவின் மறைக்கொடி மறுக்கென்றொடியவும் மநோவேகத்திலுமிஞ்சியவேகங்கொண்டோடிய குதிரைகள் நான்குந் துணிபட்டுவிழவும் விரைந்துசெலுத்துஞ் சாரதிதலைகுறைந்து மடியவும் சக்கரங்-குத்துக்கால் அச்சு-மச்சு-கொடுங்கை-சிரம்-குடை கொடி-சட்டம்-ஆப்பாணி சுள்ளாணி-கடையாணி- இருசாணி - அஞ்சூராணியுடன் தேருடையவுஞ்செய்து ஜன்மாந்திரவினைகளிற் றீவினைவருந்தன்மைபோற் றுன்பப்படுத்தும்படியாகிய ஐந்துகணைகளை ஐம்பூதம்போற்றொடுத்து உடல்முழுமையுந்துளைத்து அனர்த்தம்விளைத்து நாணிதறித்து வில்லைமுறித்து அதனால் வெதும்பிநிற்குந்துரோணரைப்பார்த்து ஐயா நீர் பிராமணகுலமென்றும் முதன்மையாகிய தனுர்வேதக்குருவென்றும் பெரியோர்களால் மேன்மைபெற்றிருக்குந் தேவரீர் மெத்தவும் மிளைத்திருப்பதினால் உமதுபேரில் ஒருபாணமேனும் இனித்தொடுக்கமாட்டேன் நீர் பயப்படாமற்போய் இளைப்பாறிக்கொள்ளுமென்று பூபதியாகிய தர்மராஜன்சொல்ல அந்தவசனத்தை விற்குருவானவர்கேட்டு தர்மராஜனுடைய ஆண்மிக்கையையழித்து உயிருடன்பிடித்து பேரிகையடித்து வீரப்பிரதாபத்துடன் கொண்டுபோகவேணுமென்று மனத்துள்மதித்து மறுபடியுமெதிர்த்தபோது சத்தியவிரதன்றொடுத்த பாணங்களால் நெற்றியிலணிந்த விரபட்டமும்போய் உதிரப்பிரகவாமாகத் துளைத்து நெரித்த உரத்தையும் அவருடைய கைத்திறத்தையுங்கண்டு நாணத்துடன் வெட்கமடைந்து மெலிந்து வருந்தி தளர்ந்து மனமிளைத்து உயிர்பொருந்திய தேசமல்ல, உடற்சுமையாகிய சடமென்றுரைக்கும்படியாய் ஓடினார் துரோணாச்சாரியர்.

இந்தப்படி தர்மராஜனுடன் தானினைத்தகாரியம் பலிக்கும்படியாய்ப் போர்புரிந்திளைத்து அஞ்சியோடியதுரோணாச்சாரியர் பின்னையும் ஷாத்துடன் பலங்கொண்டு யுத்தம்பண்ணி தர்மராஜனைச் செயித்துக் கைப்பிடியாய்ப் பிடித்துப் போவதற்கோ, அல்லது இன்னொருதரம் அடிபட்டு எல்லாரைப்பார்க்கிலுந் தான் முந்தியோடுவதற்கோ, எனக்குத்தெரியவில்லை மறுபடியும் அதிவேகத்துடன் கோபங்கொண்டு வேறுதேரேறி விரைந்துவந்தார், அந்தவேளையில் தங்களரசனாகிய தர்மராஜன் போர்முகத்திற் றுரோணாச்சாரியரைவென்ற விற்றிறமையுந் தனுவாசிரியர் வெற்றிபெறாமல் அழிந்தோடியமுறைமையும் அப்பால் உள்ளங்கொதித்து அழகியதேரேறி தர்மராஜனுடன் யுத்தம்பண்ணவந்ததும் இவைகளையெல்லாம் சிங்கக்குட்டிபோன்ற அபிமன்னுமுதலாகிய சிறுவர்கள்பார்த்து முகம்வியர்த்துசீறி யுத்தமுனையிலேறி நான்முந்துவேன் நான்முந்துவேனென்று மச்சதேசராஜரோடு சேனாபதியாகிய துஷ்டத்துய்மனும் குந்திபோஜர்முதலாகிய ராஜகூட்டங்களும் மற்றச்சேனைகளும் கும்புகும்பாய்ப் பந்திபந்தியாய் நிரைநிரையாய் அணியணியாய் நெருங்கியிறைந்து மதயானைகளின்மீது ஆண்சிங்கங்கள் ஆரபாரித்துவருந் தன்மைபோல்வந்து மறைமுனியாகிய துரோணரை வளைத்தார்கள் அப்போது கர்ணராஜன் சகுனி சௌபாலன், கலிங்கராஜன் துரியோதனமகாராஜன், அவன்றம்பிமார்கள் முதலாகிய இவர்களெல்லாரும் பெரும்படையாகக்கூடி சேனாபதியாகிய துரோணாச்சாரியருக்குத் துணையாயினார்கள் பாண்டியராஜன் நகுலசகாதேவர் பாஞ்சாலர் துஷ்டத்நூய்மன்முதலாகியபேர்கள்சேர்ந்து தர்மராஜனுடையமுனைப்படைமுகத்தினின்றார்கள் இப்படியாகநிலைத்துநின்றசேனை மன்னர்முதலாகியபடைத்தலைவரும்நின்றயிடத்திற்றானேநின்று நெடும்போர்விளைக்கஇவர்களுடன்கூடிச்சென்றசேனைமன்னவர்முதலாகியபேர்களும் ரணகளமெல்லாம் ஓடியாடியுத்தஞ்செய்தார்கள்.

ஆனால்அவ்விடத்தில்அன்றுநடந்தயுத்தத்தைஇவ்விதமென்றுநேருக்குநேராகச் சொல்லுவதற்குயாவராலுமுடியாது ஆகிலும்ஒருதேர் பதினாயிரந்தேராகவும் ஒருடல் நூறுகோடிசின்னமாகவும், உடைந்தொழிந்தகன்றது இதன்றியும் வேலாயுதங்களினாலும் வாளாயுதங்களினாலும் வில்லுகளினாலும் கவண்கல்லுகளினாலும் நீண்டபாணங்களினாலும் முடியறுந்திறந்த வெற்றியையுடையமன்னர்கள்வெகுகோடியென்றுசொல்லலாம்மேலும் தனுர்வேதங்களினாலும் தகுதியாகியகேள்விகளினாலும் - மேன்பாடுடையவிற்கரத்தர் வேகமாயிழுத்து விடுக்கும்பாணங்கள் விடுவிடென்று புறப்பட்டு மொய்த்துவந்து ரதகஜதுரகபதாதியர் முதலாகியபேர்களைக் காய்ந்தழிக்க மாய்ந்தொழிந்தவர்போக மிகுதியாகியபேர்கள் மேல்விழுந்தும் வெறுப்பில்லாமல் - ஈட்டி - யெறியீட்டி - பாங்கு- சாங்கு-பல்லயம்-பாலா-கட்டாரி மடுகொழு-எழு-சூலம் வேல்- முதலாகிய ஆயுதங்களினால் ஒருவரையொருவர் எற்றினார்கள் படைக்கலமுதலிய பாணங்களைக் கொண்டு மோதினார்கள் - முஷ்டிமுதலியதைப் பிடித்தும்,கைகளைமடக்கிக்கொண்டுங் குத்தினார்கள் தேருடன்றேர்முட்டவிடுவார்கள் - சற்றெட்டவிடுவார்கள் - கொஞ்சங்கிட்டவிடுவார்கள் மதத்த யானைமீதிருப்பவர்கள் ஆகாயத்திற்பாய்ந்துமார்புடன்மார்பு - தோளுடன்தோள் - ஒத்திபிடித்து மற்றொருயானையின் முதுகுநெளியத்தத்துவர்

ர்கள் - குதிரைமீதிருக்கும்வீரர்கள் ஒருகுதிரையிலிருந்து தாவி நூறுகுதிரை ஐந்நூறுகுதிரை ஆயிரங்குதிரைவரைக்கும் தாரைபோல்தவறுமல் வரிசையாய்த் தாண்டுவார்கள் இகன்றியும், வீரருடையவெற்றிவாளியினுற்றலையிழந்த குறைத்தலை முண்டங்களான பேர்கள்-வாளாயுதத்தைத கையிற்பிடித்துக் கொண்டு தாங்கள்கற்றிருக்கும் நெடுநாட் பழக்கமுள்ள இடசாரிவலசாரி முதலாகியவைகளெல்லாஞ் சுழன்றுடுவார்கள்- அப்படி ஆடும்படியாகிய முண்டங்களை அறுபட்டுப் போகும் தலைகள்புகழ்ந்துபாடிப்பறந்து விழுவதைக்கண்டு சிலர்மகிழ்ந்து பாடுவார்கள் ஆயுதமற்று வெறுங்கையோடிருக்கும் வீரர்கள் தறிபட்டுக் கிடக்குங் கால்களையும், - கரங்களையும் - சிரங்களையும்-தொடைகளையும் தங்கள்கைக்கு ஆதாரமாகிய ஆயுதங்களாகஎடுத்துஎதிரிகளின்பேரிலெறிவார்கள் பின்னுந்தர்மராஜனுடைய படைமன்னர் முதலாகிய வீரர்கள்- சேனுபதி என்னுந் துரோணுச்சாரியை நோக்கி, உங்கள் சேனையுநீங்களும்கெட்டீர்களென்றுகலகலவென்றுசிரித்துஇகழுவார்கள்-அப்போது அந்தத்துரோணருடையசேனைகள்,நிஜந்தான்ஒருக்காலுங்கெடாத எங்கள்சேனையும் நாங்களும்உங்கள்ராஜனுகிய தர்மராஜனுடையவில்லாண்மையால்கெட்டோம்அநேகபாடும்பட்டோம்,உயிரையும் விட்டோமென்றுகூவிசொல்லிதங்கள் சேனுபதியாகியதுரோணுச்சாரியர்,தர்மராஜனுக் கிளைத்தோடிவந்த தன்மையைக்குறித்து தங்களுக்குள்த் தாங்களேயிரக்கப்படுவார்கள். இந்தப்படி வாக்கினுற்சொல்லிய வார்த்தையின்படிக்கு பொறிவைத்துக் குறிதட்டியதைப்போல் குதிரையுடன்குதிரைவீரர்களும் - கன்னந்தங்களைப்பொழிந்துலாவியயானையுடன் யானை வீரர்களும் அறுபட்டுந் தறிபட்டு நெரிபட்டு வீழ்ந்தார்கள் ரதங்களும் பதாதிகளும் ஒன்றின்மேலொன்றுய்விழுந்தழிந்து, சின்னபின்னப்பட்ட செய்கையைஇன்னவிதமாக இருந்ததென்று நிதானித்தும்மன்னர்முதலிய எவர்களாலும் சொல்லப் படாது - போர்க் களத்தில் இரண்டு பிரிவாக நின்ற இருதிறச் சேனைகளும் - நான்கு பிரிவாகப்பிரிந்து ஒருதிறச்சேனைகளென்று உம்பர்முதலிய உலகத்தாருரைக்கும் படியாய்க் கைகலந்துமெய்மறந்து இவர்களென்றும் அவர்களென்றும் கண்டுணரக் கூடாமல் தொந்த யுத்தஞ் செய்தார்கள், அந்த வேளையில் பாண்டவச் சேனைகள் அடிபட்டுமெலிந்தோடும்படியாய் துரோணர் முடுக்கிவிடுப்பதை,கடோற்கஜன்கண்டு விரைந்தோடிவந்து வாடியோடிய தங்கள்சேனைக்குத் துணையாகியபோது அபிமன்னனுங்கலந்துக்கொள்ள அப்போது அடிபட்டு மனம்வருந்தி நெஞ்சுழன்று தஞ்சமென்றேடிவந்த, காவல்மன்னர்களுஞ்சேர்ந்துபரிசுத்தவேத பாராயணனென்னுந்துரோணுச்சாரியைமடக்கியபோது சூரியனைக்கண்ட பனியைப்போல் எதிரியினுடைய சேனைத்தளங்களெல்லாம் பறந்து மறைந்தோடி அரவக்கொடிக்கிறைவனுகிய துரியோதனமகாராஜனுடைய பக்கலிற்போய்ச்சேர்ந்தார்கள்.

அந்தவேளையில் ரதகஜதுரகபதாதிகளுடன் விதரன் வில்லைப்போல் முறிபட்டிறந்த அரசர்கள்போக நிலைத்துநின்றமன்னவர்களும் சாத்துவந்த மகாரிஷியின்பிள்ளையாகிய கிருபாச்சாரியரும், வசிஷ்டமகாரிஷியால் மதிக்குஞ்சத்தியவாய்மை நித்தியவிரத தத்வசீலராகிய துரோணுச்சாரியரும் பெருங்கும்பாகக்கூடி போர்புரிந்தபோது, தர்மராஜனெதிர்ந்து சரசரவென்று கணைகளைப்பொழிந்து சண்டைசெய்ய அத்தூற்றளர்ச்சிகொண்டதளங்களெல்லாம் துரியோதனன் அண்டையிற்சென்று அரசனே பாண்டவர்கள் மிஞ்சிப்பதறிவிட்டார்கள் இன்று அவர்களுக்கு நல்லகாலம், அகண்டசாம்பிராச்சியமும் ஐவரே பெருவார்கள்போ லிருக்குதென்று சொல்ல, அந்தமொழியை அவர்களாற்கேட்டும் அதிஷ்டங்கெட்ட. துரியோதனன் மின்பின்யோசனைசெய்யாமல் ஓகோ கையிலாகாதவர்களே இவ்வளவுதானு உங்கள்தயிரியமென்று கொடியநெருப்பினுங் கடியவேகங்கொண்டு முன்னேபோயிருக்கிற சதுரங்கச்சேனைகளும் முடிமன்னர்களும் அவர்கள்கைக்கொண்டவில்லும் பாணமும் தர்மராஜனுல்முறிபட்டுத் தறிபட்டு ரணகளத்தில் விழுந்தழிந்து கிடப்பதல்லாமலும்இன்னமிருக்கும்படியாகியபேர்களியாவரும்இறந்துபோகப்பார்க்கவேணுமென்னும்இச்சைகொண்டவனைப்போல்விடாதீர்கள்விடாதீர்கள்முடுக்குங்கள்முடுக்குங்கள் போங்கள்போங்களென்று கொஞ்சநெஞ்சமிருந்த சேனைகளையுமுட்டவிட்டு தானுந்தன்படைக்கு முந்திச் சென்று வெற்றிமாலைபெற்றவீரர்களுடன் சுத்தவீரர்களையும் சேனைகளையும் அநேகமுகங்களிலும் அணியாகவகுத்து மூனேந்தகாலத்தில் அந்தந்த மூனைமுகந்தோறும் வீரப்பிரதாபவிற்றுங்கிய அபிமன்னுவானவன், தானொருவனுகநின்று வந்தவீரர்களுடைந்து - உடல்சிதைந்து படையழிந்து, உயிர்மடிந்து - உதிரம்வழிந்து ஓடும்படியாய் வில்வளைத்து - வீசியடிக்கும்பெருங் காற்றுடன் கூடிப்பொழியும்பிரசண்டமேகசாலங்களைப்பேரற்பாணமழைகளைப் பொழிந்து போர்புரியுஞ்சமயத்தில், யானை சேனை பரிவார முதலாகியபடைவீரரும் புறமுதுகிட்டு ஓடினுர்கள் - அந்த ரணகளமானது உதிரப் பெருக்கத்தால் அந்திவானமென்னுஞ் செவ்வானம் போலிருந்தது இந்தப்பிரகாரம்இவடத்தில் அபிமன்னனுனவன் யுத்தம்பண்ணிக் கொண்டிருக்க தர்மராஜனுடனெதிர்த்துப் போர்செய்த துரோணுச்சாரியானவர் தேரழிந்து வில்முறிந்து தேகமெலிந்து வேறுதேரில்லாமற் பாதசாரியாய் நிலத்தினின்று துரியோதனனுகிய அதிபதியைநித்தித்து தன்தலைவிதியைச் சிந்தித்துதர்மராஜனுடையசேனைகளுக்குடைந்துபுறங்கொடுத் தோடுங்காலையில் அநேகமாயிரங்கோடி தேராளிகள் துரோணுச்சாரியருக்குத் துணையாகவந்து காத்துக் கொண்டார்கள் அந்தவேளையில் துரோணுச்சாரியர் திடங்கொண்டு மறுபடியுந்தர்மராஜன் பேரில யுத்தஞ்செய்யத் திரும்பி கோபங்கொண்டு மூனேந்தகாலத்தில் வீரப்ரதாபவிற்றுங்கிய அபிமன்னுவானவன் வேகங்கொண்டு முடுகிவந்த துரோணரையும் வேந்தரையும் பதாதிகளாகிய மாந்தரையும் யானை சேனை தேர் முதலிய வெல்லாவற்றையும முகமாறும்படியாய் மார்பொடிய அடித்து வாட்டியகாலையில் மார்புகொடாமல் முதுகு கொடுத்து வாடியோடிவரும் துரோணுச்சாரிய

சொன்னுஞ் சேனாபதியையும் மன்னவர்முதலாகிய சேனைகளையும் இந்திரனுக்குச் சுதந்தரத் தோழனாகிய பகதத்தன்கண்டு இனிநமக்கு நல்லகாலமென்றுசீறி அநேக தீரவசனங்களைக்கூறி சமுத்திரப் பெருக்கம்போல யானைப்படைகளைக்கொண்டு போர்புரியும்படியாய் ரணகளத்திலெதிரேறிவந்தான் இந்தப் பகதத்தன் ஏறிவந்த மதம் பொருந்திய தாவள்யயானையானது க்ஷீராப்தியிற் பிறந்த அயிராவதத்திற் கொப்பாகவும் இவன் கைப்பிடித்த வில்லானது இந்திர தனுவுக் கொப் பாகவும்- தேவேந்திரனைப் போல் வருவதை - தேவர் முதலிய யாவருங் கண்டு இவனு- னெதிர்த்துப்போர் செய்யும் பேர்களு முண்டோ வென்று சொல்லும்படியாய் பதினாயிரம் யானைக்கொப்பாகிய புஜபலங்கள்பெற்ற பகதத்தராஜன் பலவகைவிருதுகளுடன் பற்பலவாத்தியங்களு முழங்கப்புறப்பட்டு இவனிலுஞ் சிறந்த வீரர்கள் இருபதினாயிரம் யானைகளைச் செலுத்திக் கொண்டு வரும்படியாய் அசுரகுலகாலனாகிய சுப்பிரமண்ணியக் கடவுளைப்போலும் ராக்ஷச வயிரியாகிய சக்ராதரனைப் போலும் வந்தான் மேலும் இவனைப்போர்ப் பட்டவ னென்னில் தெய்வலோகத்தின்பேரில் பகைத்துவந்த அரக்கர்களையெல்லாம் பறக்க அடித்து ஓடியொளித்துப் போன தேவேந்திரனுக்குச் சகாயமாயிருந்துதெய்வலோகத்தை நிலைநிறுத்திக் கொடுத்து தேவேந்திரனுக்குத் தோழனென்றுதேவர்கள்முதலியயாவர்களாலும்பேர்பெற்றதிடவான் இத்தன்மையவாகிய பகதத்தன் ஏறிவந்த அழகியமகமேருவையொத்த யானையானது தலையசைத்து காதின் காற்றினால் கடல்களை அலையச்செய்து கோடையிடிமுழக்கம்போல் துதிக்கையை நிலத்திலடித்து இரைந்து பூமி குலுங்க கால்களாற்றுவைத்து மலைகள் மரங்கள் பொடியாகும்படிவிரைந்து வேகமாகநடந்து கோபாக்கினியினால் மனம்புழுங்கிப் புகைந்து பிரகாசிக்கும் வீரபட்டஞ்சிறந்தநெற்றியில் வியர்வைவழிய நெருப்புங்காற்றும் நேரிட்டதன்மையைப்போல் சிறியகண்களிலிருந்து பெரிய நெருப்புப் பொறி வீசிவரும்படி யாகிய மத்தகஜத்தின் மேலேறிக்கொண்டு கேயூரகுண்டல வாகுவலய மிலங்க வீரகேசரிபோல் போர்முகத்திற்குவந்தான் இப்படியாக வந்த பகதத்தனைக் கண்டவுடனே அபிமன்னுவினால் புறங்கொடுத்தோடிய சேனைக ளெல்லாரும் திரும்பித் திரண்டுவந்து பகதத்தனுடன் கூடிக்கொண்டார்கள், அந்தச்சமயத்தில் நாகக்கொடியினை யுடைய நரேந்திரனும் அவனுடைய தம்பிமார்களும் தேசபாஷைத் தலைவர் முதலாகிய நால்வகைச்சேனைகளும் போர்முகத்திற் கெதிர்சென்று இரண்டு கைகளையுங் கொட்டி கொண்டா னடித்துக் கொண்டு ஜெயம் ஜெயமென்று கூத்தாடி எதிர்த்து இருபடையுங்கைகலந்து யுத்தஞ்செய்தார்கள் இத்தன்மையாக யுத்தஞ்செய்யுங்காலத்தில் ராவணேஸ்வரனெடுத்த ஆதிகயிலையங்கிரியும் இதற்கொப்பல்லவென்று சொல்லும் படியாகிய வெள்ளையானையை வேகத்துட நடத்திக்கொண்டுவந்த பகதத்தனானவன் வீமசேனனெவன் அவனெங்கிருக்கின்றான் அவனெங்கே-அவனெங்கே-கொடுமுடிபோன்ற அவனுடைய நெடிமுடியை வெட்டி வெற்றியுடன் திரும்புகிறேன் அவனைப்பாருங்கள் அவனைத் தேடுங்கள்-அவனை விடாதிர்களென்று பலவிதமாகிய வசைமொழிகளைப்பிதற்றி பற்கடித்துக் கறுவிக் கெறுவங்கொண்டுவராநின்ற நிர்வாகசாலியாகிய பகதத்தனை வீமசேனன்கண்டு அவனிரைந்துவருகிற சொல்லையுமுட்கொண்டு தன்னுடைய ரதத்திலிருந்து கதாபாணியாகக் கிளம்பி சுசகரவென்று அந்தரத்திற்சுழன்று, சரசரவென்று மந்தரகிரிபோன்ற யானைமத்தகத்திற்பாய்ந்து நான்தானடா வீமசேனனென்று பகதத்தனைக்காய்ந்து அவனுடைய இரண்டுதோளுநெரிய ஒருகையால் இறுக்கிப் பிடித்து மற்றொருகையால் பகதத்தா என்னைத்தேடிவந்ததற்கு என்னாலியன்றமாத்திரம் உனக்கு உதவி செய்தே னென்று சொல்லி அவனை முன்னுக்கிழுத்து பின்னுக்குத்தள்ளிதிரும்பி இருப்புலக்கையைக்கொண்டு நீண்டதுதிக்கையாற் படைகள்மாண்டுவிழ வீசிவராநின்ற அவனேறிய வெள்ளையானையின் வீரபட்டம் பதித்த நெற்றியிற் குழிபட வுதைத்து மத்தகங்கிழியக் கதையினாலடித்து விரைவிலோடாநின்ற புறவிபூட்டிய தனதுரதத்திற் றிரும்பிக்குதித்து தனிச்சிங்கம்போ லிரைந்தகாலையில் பகதத்தனேறிய யானை விலவிலவென் றுதைத்துக்கொண்டு கலகலவென்று கண்ணீருகுக்க அந்தவேளையில் திப்பிரமைகொண்டு களகளவென்று சேஷ்பங்கட்டிக்கொண்டிழுக்கச் சாய்ந்தபகதத்தனானவன் நமக்கு இது ஒருகத்தென்று தேறியெழுந்து வீரர் முதலியயாவரும்அஞ்சும்படியாய்நெஞ்சில்நெடுங்கோபமெரிய மட மட வென்று வில் நாணியிறுக்கி பல பாணங்களை வரிசைவரிசையாய் வசிபோல்விடுத்தான் அந்தப்பகதத்தன் விடுத்தபாணங்களை யெல்லாம் பாரியகதையினாலடித்து முறித்து பல பல விதத்திலுங்கோபங்கொண்டு வில்லையெடுத்து நிறுத்திவளைத்துரிண்ணெனும்படி நாரிபூட்டி நாகாஸ்திர முதலாகிய மேகாஸ்திரங்களையும் வீமசேனன்விடுக்க இந்தப்பிரகாரம் இவர்களிருவரும் பர-பர-பர-பரவென்று ஒருநிலத்திற் றனித்து ஒருயுகம் போர்புரிந்தாலும் ஒருவரையொருவர் வெல்லுவது அருமையென்று தேவர்கள் சொல்லிக் கொள்ளும் படிக்கு இவர்க ளிருவரும் பிடித்த வில்லானது மளமளவென்று ஓசையுடன்வளையவும் ஷ்டங்காரநாதோசை நான்குதிசையுஞ் செவிடுபடவும் பெரு மழைகளைப்போல் ஒருவர்பேரி லொருவர்விட்டபாணங்கள் அவர்களுடைய தேகத்தைத் துளைத்துருவ மாட்டாமல் முனைமழுங்கி நுனிமுறிந்துபோகவும், மேலும் இவர்களிருவரும் தனுர்வேத முறையின்படிக்குச் சத்துரு மித்திராஸ்திரத்தைவிட்டு விலக்கிக்கொள்ளவும் ஆகாய மறையும்படி அம்புகள் நிறைக்கவும் இப்படியாகத் தப்பில்லாமல் ஒப்பொருவரில்லாமற் போர்புரிந்தார்கள்.

இதுவல்லாமலும் பகதத்தனேறிவந்த யானைசெய்த கொடும்போரைக் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளும், அரசனே அவனேறிவந்த யானைக்குப் பட்டுக்குச்சு முதலிய பூண்கட்டிய நான்குகொம்பிருக்குமாகில் கிட்டிசையானையாகிய அயிராவதம் இதற்கு நிகரல்லவென்றுசொ

ல்லவேண்டியது இந்த யானையின் பேரென்னவென்றால் பற்பலருங் கொண்டாடாநின்ற சுப்ரதீபமென்று நாமம் பெற்றது இதனுடைய பலபராக்ரமத்தைச் சொல்லுமிடத்து திக்குயானைகளெட்டுந் திக்கென்று திகில் கொண்டு நாணிப்போம் இதன்றியும் போர்முகத்தில் எதிரிகள் விடுக்கும்-பாணமுதலிய ஆயுதங்களையெல்லாந் தெரிந்துகொண்டு எந்த வேளைக்கு-எவ்விதம்-பதுங்கி-ஒதுங்கி-ஒடுங்கி-அடங்கி தன்னையும் தன் எஜமானனையுங்காத்துக்கொண்டு பகைவர்மேற் கடிந்து சுற்றிலும் பத்து நகமுடைய காலாலும் இருப்புச்சங்கிலி இருப்புலக்கை- இருப்புக்குண்டு முதலியதைக்கொண்ட துதிக்கரத்தாலும் கரும்பின் இலையைப்போல் வரிசையாக கத்திகட்டிய வாலாலும் கவஜத்துடன் வீரபட்டங் கட்டிய மத்தகத்தாலும் மதத்துப் போர்புரிந்த யானையின்வல்லமையைச் சொல்லத்தக்கதோ மதிகுல நிதியே அதெப்படியென்னின் பகதத்தனேறிவந்த சுப்ரதீபமென்னும் யானையானது தனது துதிக்கையினால் தர்மராஜனுடைய படையிலின்ற யானைகளையெல்லாம் பிடித்து குயவன் திகிரிபோல் விறுவிறெனச் சுழற்றி ஆகாயத்திலெறிந்தும் பிறைபோன்றிருக்குந் தந்தங்களினால் அவரவரேறிய ரதங்களையெல்லாமுடைத்தும்-குதிரைக்கும்புகளெல்லாம் தூம்பாய் கதறிக்கனைக்கும்படி வாலினாலடித்துச் சாய்த்தும்வீரர்முதலாகிய பதாதிப்படைகளெல்லாம் அலறிக்கதறி அபயம் அபயமென்றுசாய்ந்துமாய்ந்துபோககூத்தாடியும்-குட்டையைக் கலக்குந் தன்மையைப்போல்குருக்ஷேத்திரத்திற் கூடிய பாண்டவச்சேனைகளைக் கொன்றுகுவித்தது

இந்தப்படி யுத்தஞ்செய்யாநின்ற பகதத்தனாலும் அவனேறிவந்த மதமலையாகிய யானையினாலும் அவனுடன்கூடிவந்த யானைப் படைகளினாலும் அணிபொருந்திய தமது சேனைகள் நொந்து நைந்து அழிந்ததென்று தருமராஜனுணர்ந்து-இந்தப் பகதத்தனை மடக்க வகையில்லாமல் வருந்தி சஞ்சத்தகாள் பேரில் சண்டைக்குப் போயிருக்குந் தம்பியாகிய தனஞ்செயனுக்குச் சாரதியாயமர்ந்தருளிய ஜநார்த்தனனை-மலரகிதனாகிய பரிசுத்தனை பக்தவற்சலனைபரந்தாமனை-சிந்தையுனினைத்துதிருவடியைத்துதித்து இந்தவேளை வந்து காக்கவேணும் - என்படைகள் நொந்த அலங்கோலத்தைப் பார்க்கவேணும், ஈசனேயென்று பேசாதிருந்தார், அந்தவேளையில் ஒப்பில்லா விற்பனனாகிய பற்குனன் ஒருமூலையிற்செய்த யுத்தத்தினிற் வாகத்தை ஒருவாறாகக் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளும், திருவார்புயனே-ஜனமேஜெயனே என்றுவைசம்பாயனர் சொல்லுகின்றார், அதெப்படியென்னில், அர்ச்சுனனை ஜெயிக்கிறோமென்று, துரியோதனனிடத்திற் சபதஞ்சொல்லி தாம்பூலம் வாங்கிவந்த சஞ்சத்தகர் முதலிய திரிகர்த்தரும் நாராயணகோபாலருங் கூடி தாரணியுந் தடங்கலும் குலுங்கிக் கலங்கும்படியா யுத்தஞ்செய்து தனஞ்செயன்விடுத்த பாணங்களினால் எலும்புகளெல்லாநெரிந்து மாமிசங்களெல்லாமுதிர்ந்து மார்புகள் கிழிந்து உதிரம்வழிந்து தலைகளறுந்து விழுந்தழிந்தவர்களெல்லாமலும் படைவீரர்களின் தேரிற்கட்டிய குதிரைகளெல்லாம் தலையறுபட்டு மலைக்கோப்பாகிய தேர்களெல்லாம் பொடிப்பொடியாய் உடைபட்டு சாரதிகளெல்லா மடிபட்டு நெருப்பினாற்கருகிய சருகைப் போலும் இடியினாலேங்கிய பாம்பைப்போலு மொடுங்கி சூரியனுக்கு முன்னாகிய பனியைப்போற்றொலைந்து பலதிசைகளிலும் புகுந்து ஓடியொதுங்கிப்போயினார்கள்.

இவ்விதமாக முனைபுகுந்த திரிகர்த்தனும் அவன்சேனைகளும் யுத்தஞ்செய்யச் சத்துவமில்லாம லோடவும் மேகக்கூட்டம்போன்ற சஞ்சத்தகரெல்லாரும் எஞ்சியிளைத்து பஞ்சுகள்போலப் பஞ்சைகளாகி ஆபரணங்களறுந்து அருமையாகிய கவசங்கள் கிழிந்து தலைதறிந்து வில்முறிந்து-இறந்துபோகவும் புறமுதுகிட்டுப் பறிந்து போகவும் உக்கிரமாகிய பாணங்களை படபடாகாரத்துடன் தொடுத்து, உயர்ந்தமரத்தின் றலையைச்சுழற்றி-மளமள வென்று முறிய பலங்கொண்டெழும்பி வீசியடிக்கும் பெருங்காற்றைப்போற் சுற்றித்திரிந்து வெற்றிபெறும்படியாகிய யுத்தத்தைச்செய்த அர்ச்சுனன்பேரில் எதிர்த்து வந்தவர்களுடைய கீர்த்தியெல்லாமழிந்து குதிரைகளெல்லாமொழிந்து இரதங்களெல்லா நொறுங்கி வேகமோங்கியபாணங்களெல்லாமுறங்கி ஆயுதங்களுடனேகரங்களற்றுவிழ அநேக இடங்களிலு அம்புகள் துருவியெழ நெக்குவிட்டு திக்குக்கெட்டு அழிந்தவரும் உயிரற்று ஒழிந்தவரும் ஓடிய செத்தவெள்ளப் பள்ளத்தில் விழுந்து உடங்கிமங்கி னபெரும்மாம்சாதிகள் - ஊன் நிணங்கள்-முதலியதைக் கெடுத்து எலும்பைப்பற்றி உருவுகின்ற பாணங்களால் உயிர்போகாமல் நிலைத்து நின்றவரும், இப்படிக்குப் பலவிதமாய் அர்ச்சுனனுக் கெதிர்ப் பட்ட வீராதிவீரத் தலைவர்களெல்லாரும் வெந்து வெதும்பிப் போகின்ற அந்தவேளையில் முரசக்கொடியினையுடைய முன்னோன் செங்கண்மாலைச் சிந்தித்தவுடனே தேவகிநந்தனன்-தெரிந்துக்கொண்டு திரிகர்த்தன் முதலாகிய சஞ்சத்தகரெல்லாரும் முனைமுகத்திலொழியும்படியாய் யுத்தஞ்செய்து ஜெயங்கொண்டு-மகாவீர சந்தோஷமடைந்த நீலநிற மேகத்தேக வடிவினையுடைய அர்ச்சுனன்கையில் மின்னல்போற் பிரகாசிக்கும் விஜயகாண்டீபத்திலிருந்து இன்னமும் புறப்படும்படியாகிய பாணங்களென்னவெனில் இந்திராஸ்திரம்-வருணாஸ்திரம்-வாய்வாஸ்திரம்-குபேராஸ்திரம்-இப்பேர்ப்பட்ட பாணங்கள்-ஒன்று-பத்து-நூறு ஆயிரம் பதினாயிரமாக ஒண்ணக்ஷயமாகிய அஸ்திரங்களானது எதிரிகளெங்கே யெதிரிகளெங்கேயென்று இரைச்சலிட்டுக்கொண்டு வரும்படியாகிய பாணங்களால் எட்டுத்திக்கு மறையும் படிக்கு விட்டுக்கொண்டுவராநின்ற நரனுடையமுகத்தை நயமாகப்பார்த்து அவன்கொண்டிருக்கும் மனக்களிப்பைத் தானறிந்துகொண்டு அசைவற்ற மனத்தையுடைய விஜயனே நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம் நமது சேனைகளை அணிவகுத்திருக்கும் அவடத்தில் உன் தமையனாகிய தர்மராஜனைப் பகதத்தன்வளைத்துக் கொண்டு வினைமுற்றிய அரிய யுத்தத்தைச் செய்கிறான்போலு மிருக்குது- இவடத்தில் சஞ்சத்தகரில் பதினாலாயிரம் வெண்கல ரதக்காறரும்-

திரிகர்த்தனுடைய சேனைகளும்இறக்கும்படியாய் ஒரோவபிராக்கியமாக நின்றுபகழிவிடுத்துயுத்தஞ்செய்துவெற்றி பெற்று பகைவருடைய - பலமடங்கச் செய்தாய் இனி மேல்உன்னுயிருக் குயிராகிய தர்மராஜனைப் பிடிக்கிறேனென்று துரோணர் சபதஞ் செய்திருந்த சங்கதியை ஸ்ரீகிருஷ்ணனும் தம்பியாகிய அர்ச்சுனனும தெரிந்திருந்தும்நம்மை விட்டுப்பிரிந்து போனார்களே என்று தர்மராஜன் விசனப் படுவார், ஆகையால் அதி சீக்கிரமத்தில் உன் தமையனிடம் போய்ச் சேர்ந்து மலை போன்ற யானையேறி வந்து நமதுபடைகளை வருத்தும்- பகதத்த னுடைய பிராணனை ஒரு நொடிப் போதில் வாங்குவோம் வாருமென்று வேண்டி காற்றிலுங்கடுவேக முடையதாய்த் தாண்டிச் செல்லுஞ் சுவேதவாம்புரவியைத் தூண்டி,தன்மனம்போன்றஅழியாரதத்தில் இருக்கும்-இந்திர குமாரனுடனே நெருப்புங் காற்றுநேரிட்டதைப்போல் நெடுநிலநடுங்கக் கடல்புடைகலங்கத் தேரைச்செலுத்தித்தாங்கள்வருவதைதர்மராஜன் அறியும்படியாய்ச்சங்கத்தொனிசெய்து க்ஷணப்போதில்மலைகளின் இறகையறுக்கப்புறப்படும் வஜ்ராயுதம்போலஉதயகிரியிலுதித்தசூரியனைப்போல் விகடகட - கரடக்கைமலையாகிய சுப்ரதீபமென்னும் யானையின்மீதேறிவந்துசேனைகளின் பேரிற் பாணங்களைப் பொழிந்துபோர்புரியும் விக்கிரமனாகியபகதத்தனை உக்ரமத்துடன்வந்துவளைந்தார்கள்.

இப்படியாசவந்து வளைத்த அர்ச்சுனனுடைய தேரிற்கட்டிய அனுமக்கொடியானது ஆகாயத்தையளாவி, மேகத்தைநிலைகுலையச்செய்யவும் சமுத்திரத்திலோடுங் கப்பலைப்போல்,தரையைப்பிளந்தோடிவரும்இரதத்தின்ஓசையைக்கேட்டுபோர்முகத்தில்விஜயன்வந்தான்வந்தானென்று அக்கர கன்யராயிருந்த தருமராஜன் முதலானபேர்களுமறிந்துஜானகிநாயகனாகிய தாசரதியின் வில்லுக்கு மேற்பட்ட வில்லையுடைய தனஞ்செயன் வந்து விட்டபடியால்நமக்கொருபயமுமில்லைஇனிமேல்யுத்தமுமுடிந்து பகதத்தனு முடிவானென்று இன்பமுற்று இளைத்துப்பயந்தோடியபாண்டவப்படை வீரர்களெல்லாரும் கூட்டமாகக்கூடிவந்து காண்டிபனைச் சேர்ந்துக் கொண்டார்கள், அந்தவேளையில் விமசேனன்பேரில் வயிரங்கொண்டு யுத்தஞ்செய்து வாராநின்ற பகதத்தனானவன் வீமசேனனுடைய போர்முனையைவிட்டு விஜயனை நோக்கி நகைத்து அடா-அர்ச்சுனா நீ - எவ்விதமாக ஒட்டிக்-கிட்டி யுத்தஞ் செய்தாலும் இன்றையப் போரில் என்னைச் செயிக்க உன்னாலில்லை என்னைவெல்லுவது உனக்கு மெத்த அருமையாயிருக்கும் உன்னைச்செயிப்பது எனக்கு மெத்தச் சுருக்கமாயிருக்குமென்று சொல்லி தானேறிய மும்மதக்களிற்றை நடத்திவந்து அழல்நெருங்கியமனமும், பொறிபறக்கும் விழியும், புகைபுறப்படுமூக்கும்,அனல் வீசிய காதும், மேகமுழக்கம்போல் வெடித்தசொல்லுங் கடித்தபல்லு முடையவனாய் வில்லை வளைத்து குணத்தொனி காட்டி விதவிதமாகிய மின்னல்போன்ற பற்பலகணைகள் அற்புத-நிற்புத பொற்புதமாக வசையில்லாப் புகழினையுடைய விஜயன்மீதுவிடுத்தான், அர்ச்சுனனும் அதிகபலம்பொருந்திய தனது வில்லைவளைத்து டங்காரஞ்செய்து சந்திராஸ்திரம்-கருடாஸ்திரத்திற்கு ஒப்பாகிய கொலைப்பகழியால் வரமும் உரமும்பெற்ற தாவள்யமாகிய மதவெற்பைநடத்திவரும் பகதத்தனுடைய வில்லையும் கவசத்தையும் துவஜத்தையும் அறுத்து மேலுமேலும் விஷங்கணைகளை விடுக்கும்போது அந்த பகதத்தனானவன் சரிக்குச்சரியாய் சரம்விட்டழித்து, ஒப்பற்ற வேலாயுதத்தை யெடுத்து விஜயனுடைய தேர்ச் சாரதிமேல் வெகுண்டுவிடுத்தான் அந்த வேலாயுதமானது ராக்ஷசக் கூட்டங்களையெல்லாம் வென்று கொன்று மென்று-தின்று-மாமிசமுதலிய உதிரத்தின் ருசிகண் டிருப்பதாகையால் அதிவேகங்கொண்டு அண்டமுகடு நடுங்கவருவதை அர்ச்சுனன்கண்டு வச்சிரக்கணையால் முட்ட விட்டுத் தறித்து திரிபுரதகனனாகிய சிவபெருமானைப் போல் நகைத்து பகைத்து போர்புரியும்படிக்குப் பகதத்தனுடன்வந்த விகட-தட கட-திடகாட குஞ்சரங்களெல்லாம் பஞ்சாகப்பறந்திறக்கப் பகழிமழை பொழிந்தகாலையில், குடுகுடு குடுகுடு கும்கும்கும்மென படபட படபட, பம்பம்-பம்மென வந்துவிழுந்த அந்தப்பகழிகளினால் யானைக்கும்பகளெல்லாம் வம்பாயழிந்து துதிக்கை தறிந்து தலைதுணிந்து காதறுந்து கால்முறிந்து வாலொடிந்து உடல்கிழிந்து குடலழிந்து உதிரம்வழிந்து தொடையொடிந்து கொத்துச் சித்திரவேலைபெற்ற தங்கத்தாற்செய்த கிம்புரிப் பூண்கள் கட்டிய கொம்புகள்முறிந்து நாவழிந்து வாய் கிழிந்து கழுத்துக் கச்சைக்கயிறறுந்து மாலைகள்கரிந்து மணிகளுடைந்து மலைக்குகைபோன்ற வயிறு பூறுண்டு மண்மேலழிந்து மாவாய் பொடிந்ததுகள், இந்தப் பிரகாரம் போர்முகத்திற் பேர்பெற்ற யானைத்தலைவராகிய சேனைத்தலைவர்களும் வெற்றிவயவர்களும் பிணக்காடாய்க்குவிறிற ரணகளத்தில் நிற்கமாட்டாமல் முனைகெட்டுப் புறமுதுகிட் டோடினார்கள்.

அதுகாலையில், பூர்வத்தில் அரக்கரை வெல்ல வேணுமென்று தேவேந்திரன்வந்து தன்னைப் படைத்துணையிரந்தபோது அவனிஷ்டப்படியே ராக்ஷசாளைக் கொன்று ஜெயஞ்செய்து அரசுகொடுத்த காலத்தில் அந்தத் தேவேந்திரனானவன் சந்தோஷித்து தனக்குக் கொடுத்திருந்த உக்ராக்கினி வேலாயுதத்தை யெடுத்து உபசரித்து பற்குனனுக்கு மக்னம் வரும்படியாய் விக்ரமனாகிய பகதத்தன்விடுத்தான், அப்படிவிடுத்தவேலாயுதமானது நாலாவித காலாகோலமாய் அர்ச்சுனன்மார்புக்கு நேரே லக்ஷயம்வைத்து வருவதை ரக்ஷகனறிந்து அதிசீக்கிர மத்திலெழுந்துநின்று தனது வக்ஷஸ்தலத்திற்றாங்கினான்.

(அவனாரெனில்) ஒருவேளை அடியார்களுக்கு ஆபத்து வந்து-அறிவழிந்தகாலத்தில் அந்த அறிவுக்கணியாகிய நுன்னறிவாயிருந்து ஆண்டருளும் ஆபத் பாந்துவும் அழியாமுத்தி முதல்வனுமாகி அர்ச்சுனனருகிற் பார்த்தசாரதியாயமைந்த அரவணைச்செல்வன், இப்பால் சத்துருக்களை ஸ்ரமப்படுத்துஞ் சுப்ரதீபமென்னும் யானையைநடத்திவந்த பகதத்தன் கரகரவென்று திரித்து எறிந்த கொடும்பகைகளைத் தீர்க்குங் கொடிய வேலாயுதமானது கோ

பாலனுடைய மார்பிற் குபிசென்றுபாய்ந்த வுடனே எல்
லாம் வல்லகண்ணன் எண்ணியபடியே புதிதாகிய ரத்ன
ராசிகளைப்பதித்த பூவுலாசமாய் பொன்மலைபோன்ற பூரி
த்த திருப்புயத்தின்மீது பிரகாசிக்கும்படி வீழ்ந்தது இ
ப்படியாகிய ஒப்பில்லாக் கருணை யுருவத்தை காரியா கா
ரியங்களுக்கு ஆணையாகின்று கைகொடுக்குங் கருமத்தி
னமுதலே, ஆரியர்போற்றும் அரிவையதேவர்கள் முதலிய
யாவரும் சித்தசுத்தியுடன் பரிபூரணமாய்த்தொழுது, அ
ர்ச்சுனனுக்குத் தாக்ஷியுமுண்டோவென்று அளவிறந்தபு
கழைப்பாடித்துதித்தார்கள் அப்போது அநந்தகல்யாண
குணமுடைய அநேசராஜகன் அந்த வேலாயுதத்தைத் த
டுத்துத் தாங்கியபோது அர்ச்சுனன், தன்னுடல்செட்ட
தைப்போல் தன்னுயிர் விட்டதைப்போற் பதை பதைத்
து வடவாமுகாக்கினியாற் காய்ந்து சிவந்தகனற்போலிரு
ந்த கடுங்கோபக் கண்ணிரண்டும் அனற்பொறி பறக்க,
ஆ-ஆ, வென்று உடல்பதறி அன்புமுதலாகிய யாவுமற
ந்து கல்மனங்கொண்ட தனஞ்செயனானவன் கடுகடுத்து
பகதத்தன் என்பேரில்விடுத்த வேலாயுதத்தை நீர் எப்ப
டி தடுப்பீர், நானவ்வளவு கையிலாகாதவனு என்னை நா
ன் மறந்துபோனபோ தல்லவோ நீரேற்பட்டுத் தடுக்க
வேணும் இடைத்தில் நாலுபேரும் என்னை நகைக்கும்
படியாய்ச் செய்தீரோ நல்லகாரியம் நல்லகாரியம் நடத்தி
னீரென்று நான்கோபித் தெழுந்தகாலையில் கருணைமேக
ம்போன்ற நெடுமாலானவர் காண்டீபனைப்பார்த்து மைத்
துன உமக்குக் கவலைவேண்டாம் இந்த உக்ரவேலாயுதம்
மேகத்திலிருந்து பிரகாசிக்கும் மின்னலைப்போன்றது இ
தை யுத்தஞ்செய்யும்படியாகிய சத்துருக்கள்பேரில்பிர
யோகஞ்செய்தால் எப்பேர்ப்பட்டவர்களானாலும் அவர்
களுடைய பிராணனை வாங்காமற் போகாது இப்பேர்ப்ப
ட்டவேலை இந்தப்பகதத்தனுக்கு தேவேந்திரன் கொடுக்
கும்போது நிராயுதன்பேரில் விடுவையாகில் மலர்ந்தபுட்
பமும் குளிர்ந்ததண்ணீரும்போ லாகுமென்று வரங்கொ
டுத்திருக்கின்றான் அந்த வளவறிந்த ஞானையால் குதி
ரைநடத்திய உழவுகோலையும் போட்டுவிட்டு என் மார்
பிற்றாங்கினேன் மற்றப்படி வேறொரு சூதுவாதில்லை இ
ந்தப் பூமியுள்ளவரைக்கும் உன்புகழுக்கும் உன் வெற்றி
க்கும் யாதொரு கேடுமில்லை இதனால் உனக்கொரு கு
றவுமில்லை இதைக்குறித்து நீ-விசனப்படவேண்டாம் இ
ப்போது வருத்தப்படுத்தும் எமனைப்போலொத்த இந்த
ப்பகதத்தனைக் கொல்லுவதற்கு இது பக்குவமாகிய நல்
லகாலம் இந்தப்போரைச் சீராகப்பாரென்று உலகமுத
லிய உயிர்பேதங்களை கர்ப்பத்திற் குடியாகவைத்துக் கா
த்தருளிய கார்வண்ணன் காண்டீபனேநினைத்து பகதத்த
ன்பேரில் விடுவதற்குப் பக்குவமாகிய உக்ருக்கணை யெ
ன்று ஒரு துரும்பையெடுத்து அருட்கடலாகிய அரிவா
சுதேவன்கொடுக்க அர்ச்சுனனானவன் சிந்தை மகிழ்ந்து
சந்தோஷத்துடன் பிரதக்ஷணஞ்செய்து வணங்கி இரண்
டுகரத்தாலும் அந்தக்கணையைப் பெற்றுக்கொண்டு பூமி
யதிரும்படியாய் மதயானையைச் செலுத்தி தனக்கெதிர்
போர்பொருதவந்த அந்தப் பகதத்தனுடைய மார்பிலுரு

வும்படியாய் ஒருநொடியில் வடியாகவிடுத்தான் அப்போ
து அந்தக் கணையானது சிட-சிட-சிடக்காரத்துடன் விற்
றென்று புறப்பட்டு தாவித் தந்திவரும் பரிபூட்டிய ரதத்
தின்மீதுதாண்டி மண்டியிட்டுச் சண்டைசெய்யும் மன்ன
ர் மண்டலீகரும் அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்த பக
தத்தனுடல்முழுதும் மிகுந்த நெருப்பு தத்திப் பற்றிப்
பொறியுதிர்வதைப்போல் ரத்தந்துளித்துத் துள்ளியோ
டப் பலம்பொருந்திய மலைக்கொப்பாகிய தோள்களறுப
ட்டு தாள்தடுமாறிவிழ கிரீடத்துடனே தலையறுந்து சுழ
ன்று சுற்றிவிழ வெள்ளிமலையானது சாய்ந்துவீழ்வதைப்
போல் அவனேறிவந்த சுப்ரதீபமென்னும் வெள்ளையா
னையானது கால்சாய்ந்தறுந்து இறந்துவிழச் செய்து ஆ
காயகங்கையில் மூழ்கி அர்ச்சுனனுடைய அம்பறுத் தூ
ணியி லடங்கிப்போகவும், பசாசுக்கூட்டமானது யானைப்
பிணங்களைக்கண்டு சந்தோஷங்கொண்டுநடம்புரிந்துகொ
ண்டானடித்து விஜயன்கணையை வாழ்த்தி பக்ஷி கொள்
ளவும் இப்பால் பகதத்தனுமிறந்து அவனேறிவந்த யா
னையுமடிந்து இவனுடன்கூடிவந்த ரதகஜதுரகபதாதிகளு
ம் அழிந்து ஒழிந்ததை பூபாலராகிய போர்மன்னர் கண்
டு வெற்றிக்கணையைவிடுத்து ஜெயித்த இந்திர குமாரனை
யும், அந்த விஜயனுக்குத் தேர்செலுத்துஞ் சாரதியையு
ம் புகழ்ந்தார்கள் அந்தக்காலத்தில் கிருஷ்ணார்ச்சுன ளா
கிய இவ்விருவரையும் புகழ்ந்து துதித்து மகிழாதபோர்க
ளொருவருமில்லை அப்போது துரியோதன னுடைய ப
டைமுறிந்து ஓடிவருவதையும் பகதத்தன் முடிதுணிந்து
உதிரம் தாரைதாரையாய் ஓடிவருவதையும் அவன் சே
னைகளிறந்ததையும், சகுனிமுதலிய காந்தார்கெட்டுப்ப
யந்து பதைபதைத்து விருதுகளும் வெற்றிக் கொடியும்
வெள்ளைக்குடையும் பிடிக்க, வெண்சாமரை வீச, சங்கு
பேரி-தாரை-பூரிமுதலிய வாத்தியங்க ளெல்லாம் வெகு
விநோதமாய்முழங்க, நால்வகைச் சேனைகளையுங் கூட்டி
க்கொண்டு நடநடவென்று பற்கடித்து விற்பிடித் தெதிர்
த்து இன்றையப்போரில் நாங்கள் யுத்தஞ் செய்து இந்த
அர்ச்சுனனைக் கொல்லாமற் போகமாட்டோ மென்று
நாலுபக்கங்களிலும் கருங்கடல்போல் வளைத்துக்கொண்
டு மருதமரமும் சகடாசூரனும் மாயும்படியா யுதைந் த
ருளிய மாயவனுகியவலவன் வாயு வேகம்போற் செலுத்
தாநின்ற சுவேதவாம்புரவிபூட்டிய யிரதத்தின்மீதிருக்கு
ம் வீரகண்டாமணிதரித்த விஜயன்மேல் மின்னற் பசழி,
அனற்பசழி மேகப்பசழி நாகப்பசழி முதலாகிய வீரசா
யங்களைத்தொடுத்தார்கள், இந்தப்பிரகாரம் காந்தாரத்தலை
வர்கள் யுத்தஞ்செய்யும்போது சகுனியின் பிள்ளைகள்-வி
டன் சேயன்-என்றுசொல்லு மிருவரும் காந்தார தேசத்
தாருக்குகாந்துங்கோபக்கண்களினின்று உதிரும்படியாகி
ய அக்கினிப்பொறியைப்போற் றுங்களுஞ் சினப்பொறி
சிந்தி கண்கள் சிவந்து சுழலக் கடுகடுத்துப்பார்த்து முக
ம்வியர்த் தெதிர்த்து வில்லை வளைத்து மேக கெற் சிதம்
போல் - வில் நாணி யிழுத்து - விந்தையாகிய பாணங்க
ளைப்பூட்டிவிட்டார்கள் அந்தப்பாணமானது ஆகாய வீதி
யிலுலாவி அண்ட கடாகத்தை சுறுசு றென்று துருவி

த்துளைத்துத் திரும்பிவரும் அம்புகளானது ஜடஜடவென்று விடாமழைபோல் விதைத்தைப்பொழிந்த காலையில் விஜயன் நகைத்து மெதுவாயெதிர்சென்றுநின்று விதைக்கணைதொடுத்து சந்தனங்குங்கும கந்தகதம்ப மணக்குந்தோளினையுடைய சகுனியின் பிள்ளைகள் போரிற் புலிபோன்ற இருவரையும் போக்கி சஞ்சத்தகாளிடிந்துவிண்ணுலகம் குடியேறத்தாக்கி மண் விண்ணாக்கி விண் மண்ணாக்கி வாாநின்ற அர்ச்சுனனை சதுரங்கசேனைத் தலைவர் சண்டி திகில் கொண்டு ஐயோ பகதத்தனையு மாய்த்தானவனேறிய யானையையுஞ் சாய்த்தான் சகுனிமைந்தரையுமாற்றினான் சஞ்சத்தகரையும் விண்ணிலேற்றினான் இத்தன்மைவாய்த்த கூர்ங்கணைகொண்ட விஜயனுக்கு இளைத்தோடிய நாமெல்லாரும் ஒருலகூடியமோ வென்று படைமன்னர்கள் பலரும் இரங்கி இரைந்து கரையழிந்த ஆற்றைப்போலோட அந்தவேளையில் வஞ்சகச்சகுனியானவன் புத்திரரிறந்த செய்திகேட்டு உள்ள முருகி கண்ணிர்பெருகி உலைவாய்மெழுகென உடலுருகி குடற்கருகி-மந்தரகிரிபோன்ற தேரைச்செலுத்தி வில்லைவளைத்து நாணோசைசெய்து நாணைவளைத்து கரதூஷணுள் யுத்தம்போற் கணைகளைப்பொழிந்து கண்டதுண்டமாகப் பாணந்தயிர்ந்து குவியும்படியாய்ப் போர்புரியும்போது தேவராஜகுமாரனாகிய தனஞ்செயனானவன் சில கணைகளைத்தொடுத்து அவன்விட்ட பலகணைகளையும் அறுத்து அவன்றேரையுமழித்து வில்லையுமொடித்து சாரதி குதிரையைச்சாய்த்துகவசங்களுடன் வீரபட்டத்தையும்போக்கிமற்றொருகணையைத்தாக்கிஅவனுடையமார்புருவவிடுத்தான்

இப்படியாக அர்ச்சுனன்விடுத்த பாணங்கள்தைத்த துவாரத்திலிருந்து பெருகிச்சொரியும் உதிர வெள்ளத்தினல் அந்தச்சகுனியினுடையதேகமறையவும் நீங்காத வெட்கத்தினல் கண்களைமூடிக்கொண்டு கலங்கிக் காலெழாமலிருக்கின்ற மாமனாகிய சகுனியைக்காண்டீபனேக்கி அடடா மாமா, ஏனிப்படிநொந்தீர்-போருக்கேனோடிவந்தீர்-பொல்லாச் சூதாடத்துணிந்தீர்-புகழும் பவிஷுங் கெட்டு இருந்தீர்-ஐயோ ராஜசபையில் தருமராஜன்முதலாகிய தம்பிமார்களும் தழலிற்பிறந்த துரோபதையும் மனநடுங்கி வருந்தும்படியாய் மன்னுயிரெல்லாந் துன்புறும் படியாய் தேவரீர் செய்த மோசச் சூதைப்போல் சுளுவென்று யோசித்து வந்திரோ.

ஓ ! சௌபலராஜனே ! இது ஒருவரையொருவர் வஞ்சித்துக்கெடுக்குஞ்சூதல்ல, உயிர் நிலைகெட்டு உற்றார் உறவின் முறையாரைவிட்டு உடல்துளைபட்டு உதிரம்வடியும்படியாய்த் தலைநட்டு பாணமுகத்தினின்று போர்செய்யாநின்ற யுத்தமாக்களும் ஊரார்குடியைக்கெடுக்கும்வஞ்சகச்சூதில் நீர் சமத்தன் உன்றலையையும் உன்னைச்சார்ந்தவருயிரையுங்கெடுத்து எமலோகத்தில் விடுக்கமுடிக்கும்படியாகிய வாதில் நான்சமர்த்தன் ஆகையால் இன்றே உன்னைமுடிக்கவேண்டியதா இருந்தாலும் சுவரைவைத்துக்கொண்டு சித்திரமெழுதவேணுமென்னும் பழமொழியைப்போலும் பெருமாளில்லாமற் றிருநாள்நடவாதென்னுந் தன்மையைப்போலும் உன்னைவைத்துக்கொண்டு எல்லாமன்னரையுங் கொல்லவேண்டியிருப்பதினல் உன்னுடலையும் உயிரையும் இந்தவேளைகாத்துக்கொள்ளும்படியாயோசித்து மன்னித்தேன் நீர் ஓடிப்பிழைக்கும்விதத்தை யுன்னிப்போவென்று அர்ச்சுனன்சொல்ல அந்தவார்த்தையைக்கேட்டு போர்புரிந்திளைத்த சகுனியானவன், பார்த்தனல்பங்கப்பட்டு மறுபேச்சுப்பேசாமல் மௌனமாய்த்திரும்பி மடியாதபோர்களுடன் மனஸ்தாபமடைந்து ஒப்பற்ற ஆண்சிங்கம்போர் செம்பொற்றேரேறிநின்ற தருமராஜனுக்கெதிரில் மதத்தபுலிபோற்சென்று நின்று வாசாமகோசரமாய் பாணங்களைவாரிப்பொழிந்து போர் புரிந்தான்.

அந்தவேளையில் முரசக்கொடிமுதல்வன்கண்டு நகைத்து ஓ ! சகுனி கும்பலிற்கோவிந்தம் போடுவதைப்போல் அரசர்கள் சந்தடியிற்சேர்ந்து திருட்டுத்தனமாய் சண்டைசெய்யவந்திரோ அந்தோ ? இது சூதல்ல, சூதல்ல, ஓ ! சூதனே ? வீரப்பகழிகளினற் றேகந்துளைபட்டு வேகச்செய்யும் போரென்றறிந்துகொள்ளும் ஓ! மேதகனே ? இதோ எனதுகையைப்பாரும் அதோ உனது மெய்யைப்பாரும் சபையில்நடத்திய சூதாகிய பொய்யைப் பாருமென்று தயையுடைய தருமராஜன்சொல்லிமச்சமில்லாத சந்திரகுலத்திற்கு வடுவேற்றிவைத்த மாபாவியென்று வச்சிரக்கணைகளைமாட்டிப் பிச்சுப்பிடுங்கவிடுத்தார் அந்தக்கணைக்குத் தப்பித்துக்கொண்டு முந்திவந்தவர்களுக்குத் தெப்பலென்று தேரைச்செலுத்திப் பின்னிட்டோடும்படியானவர்களைப்பார்த்து உங்களுக்குநான் ஓட்டத்திற்கெட்டிக்காறனென்று எல்லோருக்கும் முன்னிட்டோடினான் சகுனியானவன் அந்தவேளையில் தருமராஜன்வந்தவர்களை விடாமற்றொடர்ந்து கணையாற்சேதிக்கும்போதுவாதைப்பட்டு அழிந்தவர்போக ஒழிந்தவரெல்லாரும் இனியுத்தத்திற்கும்நமக்கும்வெகுதூரமென்று தர்மராஜன் புகழைப்பாடி அவரவர்பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது அந்தயுத்தகளம் எப்படியிருந்ததென்றால், உதையகாலத்தில் செந்தாமரைப்புட்பமலர்ந்த தடாகம்போலிருந்தது இவைகளைக்கண்டசேனபதியாகிய துரோணச்சாரியரும் அசுபத்தாமனும் பலம்பொருந்திய கர்ணராஜனும் நாகக்கொடிநாட்டிய தேரேறிவந்த நராதிபனும் துச்சாதனன்முதலிய தம்பிமார்களும் ஒன்றாகச்சேர்ந்து பூமிநடுங்க அடிக்கும் பெருங்காற்றைப்போல் வேகங்கொண்டெழுந்துவந்து வீமசேனனை வளைத்துக்கொண்டு கூசாமற்கொடும்பகழிகளைக்கோத்து. ஆகாயம்பூமி முதலியயாவற்றையுந்தூற்றார்கள் வீமசேனனுங் கண்டேனென்றெழுந்து கடுங்கோபங்கொண்டு கைகலந்து போர்செய்யும்போது பாம்புகளினற் கருடனிளைக்குமோ யானைக்குச்சிங்கந்தளருமோ ராக்ஷதர்களுக்கு சக்ராதரனாகியநாரணன் இளைப்பரோஒருக்காலும் இளைக்கத்தக்கதல்லவே அதுபோல் மகமேருவின் முச்சிகரத்தை முறித்த உச்சிதமுற்ற வாயுதேவனுடையகுமாரன் வீமசேனன் இந்தப்பஞ்சைகளுக்குப் பயப்படுவானே ஆகையால் அவர்கள் தொடுத்த அநேககோடி பாணங்களெல்லாம் மலையின்பேரில்விழுந்த மழைத்துளிதெறிப்பதுபோல் வீமன்பே

ரிற்பட்டு தெறித்துவிழ இந்தவீமன்தொடுத்த கணைகள்நொருங்குநொருங்கென்றுருவிச்சொருகி அழுந்தவிடுத்து இவ்விதமாகத் திரிபுரசம்மாரஞ்செய்வதற்காகச் சிவபெருமான் வளைத்த வில்லைப்போலொத்த விஜயவில்லினிடத்திலிருந்து வீரசாயகங்களை விதவிதமாக தக தக தக தகவென்று விடுத்து அரசர்களேறிவந்த எல்லாரதங்களையும் வல்லவனாட்டிய பம்பரம்போல் வானத்திற்சுழலும்படியாட்டினான் வீமசேனன்.

இதுவுமன்றி ஒருமுகப்பகழி இருமுகப்பகழி மும்முகப்பகழி நான்முகப்பகழி ஐம்முகப்பகழி அறுமுகப்பகழி எழுமுகப்பகழி எண்முகப்பகழி நவமுகப்பகழி தசமுகப்பகழி சகஸ்திரமுகப்பகழி தசசகஸ்திரமுகப்பகழி சதசகஸ்திரமுகப்பகழி அயுதசகஸ்திரமுகப்பகழி முதலாகிய கணைகளை ஒவ்வொருதரமாய்த் தனித்தனிதொடுத்து முதன்மையாக யுத்தஞ்செய்தபடைமன்னரின்உடல்கள்தோறுந் தீப்பற்றியெரியுந் திறம்போல் அரவிந்தக்கணை புரம்வெந்தக்கணை கரம்வந்தக்கணை கதிர்தந்தக்கணை இவைகளால் மூட்டி இயக்கும்போது இனியெங்கள் பிராணனுள்ளவரைக்கும் முனைமுகத்தில் முந்தோமென்று ஆணையிட்டுக்கொண்டோடும்படியாகச்செய்து அரவக்கொடிமன்னனாகிய துரியோதனனைமடக்கி அக்கினிக்கணைகளால் பாதாதிகேசபரியந்தந் துவளையிட்டுத் துளையிடுவதுபோற் துடி-துடிக்கக்காச்சி அவனுடையமனமுங் கொதிக்கச்செய்தான் அந்தச்சமயத்தில்துரியோதனன் மனந்தடுமாறி மாற்றாருக்கிடம்விட்டு மிகைபடச்செய்த வினையால் இந்தத்தீவினை விளைந்ததென்றுமீதூன்போல்விசனமருந்தி முனைமுகத்துநில்லாமல் மூர்க்கனைவிடுத்து வல்லாண்மையொடுங்கி மதிமயங்கி தனிமையில்நிற்பதை துச்சாதனன்முதலிய தம்பிமார்கள்கண்டு அண்ணா! என்னஒரு விதமாயிருக்கிறீர் அஞ்சவேண்டாம் விஜயலட்சுமியாகிய மெல்லியோடோள்சேர்ந்து மேன்மக்களாவோம் புறப்படுமென்றுசொல்லி உடனே அவர்களெல்லோரும் இனி வீமனை விடுகிறதில்லையென்று வரிகள்பொருந்திய வில்லை வளைத்து வாயு புத்திரன்பேரில் காயுங் கணைகளைத் தொடுக்கஅந்தக்கணைகளைக்கண்டுவீமசேனன் ஆர்ப்பரித்து அதிர்த்து தன்கரத்திலிருந்துவிடும்படியாகியசரத்தால் அவர்கள்பிடித்த வில்லையும் நாணியையும் அறுத்துகொல்லத்தக்க பல்லவங்களைத்தொடுத்தபோது துரியோதனன் தம்பிமார்களெல்லாரும் ஐயோ அனியாயமேயென்று அலறி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள் அப்பா தம்பிமார்களே சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மதேவன் நமக்குத் துணையாகவந்தாலும் இந்த வீமசேனனுடன்வில்யுத்தஞ்செய்து வெல்வதுமெத்த அருமையென்றுவீமசேனனை நிதானித்து நினைத்துமதித்து அடடா வீமனென்றாலும் இவனுக்கேசெல்லும் இவனுக்கேசெல்லுமென்றுவாடி ஓடும்வழிதேடிநின்றார்கள் அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்றால் தங்கள்தமையனாகிய துரியோதனமகாராஜன் எந்தக்காரியமுடிக்கவேணுமென்று நினைக்கின்றானோ அந்தக்காரியத்தை அப்போதே முடிக்கத்தக்க சமர்த்தராகிய தாஷ்டிகாள் அப்பேர்ப்பட்டவர்கள் வீமனால்மெத்தவும் வருத்தமுற்று வெற்றி நஷ்டமடைந்தார்கள்.

இவ்விதமாக நின்றவர் நின்றபடிநின்றுவாட கண்டவர் கண்டபடிசென்றோட துரியோதனமகாராஜனையும் அவன் தம்பிமார்களையும் வீரகண்டாமணிதரித்த விற்குருவாகிய துரோணரையும் அசுவத்தாமனையும் அங்கதேசாதிபனையும் பொன்னாரமணிந்த மார்பினராகிய மன்னரையும் படைமன்னரையும் கொடைமன்னரையும் நால்வகைச்சேனைகளையுங் கோலாகலவெய்கொடுங்கணையாற் கொல்லாமற் கொன்றான் வாயுகுமாரன் இனிப்பிழைப்பிவடத்திலில்லை நாமொன்றுக்கும் ஈடாகோமென்று சென்றவர்போக நின்றசேனைகள் முழுவதுமிளைத்து இந்தப்புறத்தில் வீமசேனன் வில்வளைத்துக்கொண்டு எமனைப்போலிருக்கிறான் மாயனாகியவலவனோடு அர்ச்சுனனொருபுறநிற்கின்றான் சேனாபதியாகிய துரோணாச்சாரியின் தேகத்தைத்துளைத்த கணைதரித்த தர்மராஜன் இதோயிருக்கின்றார் நகுலசகாதேவர் அதோ உலாவுகின்றார்கள் ஆதலால் எவ்விதங்களிலும் இவர்களை வெல்லப்படாதென்று அமர்க்களத்தைநீங்கிச் சென்றார்கள் அப்போது பேரறத்தின்குமாரனாகியதர்மராஜனைப்பிடிக்கிறேனென்று சொற்சோர்வுபடாமற் சோம்பித் திரியாமற் சாதிப்பவரைப்போல் தன்யாளாகிய போரரசருடன் சேனாதிபதியாகிப் பொற்றேரேறிவிற்றாங்கிவந்ததுரோணரும் புறமிட்டோடினார்பின்பு நந்தியாவட்ட மாலைபணிந்த நரேந்திரனும்வீமசேனனால் பரிபவமாகிய படாதபாடும்பட்டானென்று பாண்டவச்சேனைகளும் மன்னர்முதலியயாவரும் போர்க்களத்தினின்றுபராக்கிரமத்துடன்ஜெயங்கூறியாடினார்கள் துரியோதனனும் அவனுடையசேனைகளும் துக்கத்தால் மூடுண்டுவாடிபாசறை போய்ச்சேர்ந்தார்கள்.

இப்பால் மேகம்பொழிந்த மழைகளினால்அநேகங்காடுகளெல்லாங் குளிர்ந்து தளிராகியகொழுந்துகள்விட்டு செழுமையுடன் அரும்பி, பலவிதமாகிய புட்பங்களைப் புட்பித்து உதிர்வதைப்போல் அநேகவிதநிறங்களையுடைய சிறந்த குதிரைகளெல்லாம் போர்முகத்திற் புகுந்துமடிந்து போர்போராய் குவிந்து போனதைச் சூரியபகவான் கண்டு தன்னிரதத்திற்பூட்டிய சப்தமா வென்னுங் குதிரைகளுக்கும் ஒருவேளை அபாயம் வரப்போகுதென்று அஞ்சிப் பயந்து தேரைச்செலுத்திக்கொண்டு புறந்தந்து போனவனைப்போல் மேற்குத்திசையிலோடி யொளித்தான் இவ்விதமாகச் சூரியன் மேற்றிசையில் மறைந்து பொழுது போனவுடனேதர்மராஜனாலும் வீமனாலும் விஜயனாலும் அபிமன்னுவினாலும் அடிபட்டுப்பயந்து புறங்காட்டியோடிய வயவீரர்களெல்லாரும், துரியோதனமகாராஜனுடைய பக்கத்திலிருந்து ரணகளத்தி லிறந்து போய்விட்டபடைமன்னர்முதலிய வீரர்களைக் குறித்து இரங்கி விம்மி அழுது எசகங்கொண்டு தூக்கமில்லாமல் கொலைத்தொழிலில்நிலைத்த தலைத்திறங்கொண்ட மலைக்குயர்ந்தமதயானையுடனிறந்த பகதத்தனைக்குறித்து துக்கப்பட்டு அவனுடைய பெருமையையும் சாமர்த்தியத்தையும் எடுத்து விசேஷித்து பேசிக்கொண் டிருந்தார்

க்ள் அந்தக் காலத்தில் துரியோதன னிடத்தில், வந்து
சேர்ந்த துரோணாச்சாரியனைப் பார்த்து - ஐயா ! சேனு
திபதியே - யானைகூட்டங்களைக்கண்டு-ஆண்மிங்கையை
யுடையசிங்கம் அஞ்சிப்பயப்படுமோ பயப்படாதல்லவா
அதுபோல் பாண்டவர்களுக்குப் பயப்படத் தக்கதோ
தேவரீர் - கைப்பிடித்திருக்கும் வில்லுக்குச்சரியானவி
ல் உலகத்தில்உண்டென்று சொல்லக்கூடுமோ அப்படி
யிருக்க நீர்வேறுமென்று சண்டைசெய்வீராகில் பாண்
டவரொன்றும்பூண்டுநிற்தமோ என்னுண்டவனே உமக்கு
அண்டையில் வேரோ ருதவியும் வேண்டுமோ தொ
ண்டனாகிய என் பேரிற் றயவில்லாமல் பாண்டவர்
மீதுகொண்ட அன்புநீங்காமையால் கிம்புரிக்கோட்டினை
யுடைய பட்டத்து யானை பெற்ற தர்மராஜனை, மர்ம
ம் விடாமல் வென்று பிடித்துக்கட்டிக்கொண்டு வாராமல்
என்சேனைகளையுஞ்சாவக்கொடுத்து என்னையுஞ் சிந்தை
கலங்கச் செய்து அவராலடிபட்டுப் புறமுதுகிட்டு ஓடி
வந்துவிட்டீரோ என்றுகோபாக்கினி அதிகரிக்க கண்சிவ
ந்து துரோணாச்சாரியனை வெறுத்துக்கொண்டான் துரி
யோதனமகாராஜன் அப்போது வணங்கா முடியோனு
டைய பக்கத்திலிருந்த கர்னமகாராஜனனவன் சுலிரொன
நகைத்து-ஓ- துரோணரோ நேற்றையத்தினம் இராஜாதி
ராஜனாகிய துரியோதனமகாராஜனுக்கு முன்னிருந்து மு
ன்பின்யோசிக்காமல் கலக்கமில்லாமல் உமது மனமாற
உமதுவாயாற தர்மனைப் பிடித்துத்தருகிறேனென்றவாக்
கை, இன்று நிலைக்கச் செய்தீரோ-ஆ-ஆ-சபாஷென்று உ
ல்லங்கனஞ்செய்து துரியோதனனுடைய முகத்தைநோ
க்கி கர்னன்சொல்லுகிறான்.

சந்திரகுலத்தார், இந்திரனென்னுவணங்குந் தார்வேந்
தேகேளும், உலகத்தில் கிளிப்பிள்ளையானது-எத்தனைவி
தவார்த்தைகளைக்கற்றிருந்தாலும் பூனைவாய்ப் படும்போ
து கிக்-கிக்-கீ-யென்று கூவத்தக்க தன்னுடைய சுவஜாதி
கம் வருமேயல்லது வேறில்லை அதுபோல் எத்தனைவித
மாகிய வித்தைகள் கற்றிருந்தாலும் கல்லா திருந்தாலும்
உத்தமகுலக்ஷத்திரியன் மாத்திரம் உறுதியுடன் வெற்றி
பெறுவானே யல்லது வேதமேகதியென்று ஓதிக்கொண்
டிருக்கும் பார்ப்பாருக்கு கட்டாண்மையென்பது எவ்வி
தத்தில்வரும் திடதிரமுதலிய மனவலிமை யெப்படியுண்
டாகும் வெறுவாயைமெல்லுகிறவனை வெற்றிலை தாவெ
ன்றுகேட்ட சம்பந்தமாச்சே-வேந்தனே யென்று மிகச்
சிரித்தான்-சத்துருக்களுக்குச் சோடையிடி போன்ற கர்
னனனவன் இப்படி சொன்னமாத்திரத்தில் தெளிந்தவி
வேகத்திற் சிறந்த சேனாபதியாகிய சிலைவலாசிரியருடை
ய சிந்தைநொந்து வருந்தி செவ்வரக்கைப்போல் இருக
ண்ணுஞ்சிவந்து தேகம் படபடப்புடன் றுடிதுடிக்க வெ
ழுந்து மேகமுழக்கமும் வேறுக இரைந்து கொதிப்பேறி
அங்கதேசத் தலைவனைப்பார்த்து ஆக்ரமித்துச் சீறி ஒரு
வார்த்தைகூறினார், ஓ-கன்னா - நீ உத்தமகுலக்ஷத்திரியன்
றன்-நீ-வெற்றிபெற்றது வேனா துண்டு-அதுநிற்க இந்த
மன்னவன்பொருட்டில் அதிகபக்ஷத்துடன் கருணை தப்
பாதவனாகக்கலந்து பேசவந்த நீ - யானாலும் அல்லது இ
ன்னமும் வீரகண்டாமணியும் வீரபட்டமுங்கட்டிய வி
ல்வேந்தர்களில் யாரானாலும் தருமராஜனுக்கெதிர்நின்று
சண்டைகொடுத்து நிலைநின்று வெற்றி பெறத் தக்கபேர்
இச்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுவரோபோசட்டும்.

ஓ-துரியோதனமகாராஜனே-இப்போது ஒன்றும்முழு
கிப்போகவில்லை இன்றைக்கு நான் தப்பிப்போனாலுபோ
க நாளையுத்தத்தில் உன்சபையிலிருக்கும் உனக்குரிய தி
றவான்களைப் போகச்சொல்லி தங்கள் வில்லாண்மையி
னல் வேந்தனாகிய தர்மராஜனை துன்புறும்படியாகச் செ
யித்துப் பிடித்துக்கொண்டுவரச்செய்யும் அப்படி ஜெய
ம்பெற்று லொழிய திரும்பிவாராத வீரர்க்கு விடைகொடு
த்தனுப்பும் வெற்றியையுடைய வேந்தனே பாண்டவரி
டத்தில் நான் பக்ஷம்வைத்திருக்கிறேனென்று கோரமா
கிய யுத்தத்தில் ஓரவார்த்தை சொல்லுவது உமக்கு நன்
மையல்ல (வஞ்சகம் பேசேலென்னும்) நீதியை மறந்து
பேசுகின்றீர். மன்னனெதிரில் (வாதுமுற் கூறேலென்னு
ம்) வாக்கியத்தை நான் றுறந்துபேசுகிறேன் மேலும், கெ
வித்தவரிற் பாதியென்னும் சில துஷ்டாளுடைய வார்த்
தைகளைப்போல் நான் பேசமாட்டேன்-சேனாபதிப்பட்ட
ங்கட்டியகாலத்தில் நீரென்னைக் கேட்டபோது தர்மராஜ
னைப்பிடிக்க, என்னாலாகாது, இன்னொரு ஜென்மத்திலெ
ன்னமோ இந்த ஜென்மத்திற்கூடாதென்று ஆதியில்ஸ்தி
ரமாய் உமக்கு நான் சொல்லியிருக்க நீரிப்படி பேசத் த
காதென்று மிகவுங் கோபமாகச்சொல்லி எனக்குமாத்தி
ரம் வில்லாண்மை யுண்டென்றும் என்னைப்போல் சபத
ங்கூறிச் சொல்லாமலும், தங்களிஷ்டப்படி சென்று போ
ர்முகத்தில்வென்று புகழ்பெற்ற புயவலிமையால் தர்மந
ந்தனனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வரத்தக்க
வல்லமையுடையபேர்கள் புறப்படலாம். இதற்குயாதொ
ரு தடையுமில்லை அப்படிக் கொண்டுவந்தபேர்கள் இவ்
வுலகத்திற்கு மாத்திரமல்ல ஈரேழு பதினான்குலோகத்தி
ற்கும் அவர்களே வீரர் அவர்களே சூரர் அனேகவரிசை
முதலிய பாக்கியங்களும் அவர்களுக்கே யுண்டாமென்று
சொல்லி மேலுஞ்சொல்லுகின்றார்.

ஓ-அரசனேகேளும் எனக்கு மிஞ்சினபே ரொருவரு
மில்லை நானே வில்லாளியாகிய வல்லவ னென்று சொ
ல்லா நின்ற வீரனும் வெவ்விய போர்புரியு மிடத்தில்
வந்தால் ஓரணுவுக்கு முதவாமல் புறம்பிலோடி தன்
னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவானேயன்றி போர் புரி
யப்போகிறதில்லை; ஆகையால் காய்ந்த ஓலை கலகல வெ
ன்று சப்திக்கும் வெண்கலத்தில் ஓசையிருந்துகாட்டும்
பொன்கலம் ஓசைப்படாது அதுபோல் வம்பாகிய பேச்
சுகளை வம்பர்பேசுவார்களல்லது நான்பேசுவதில் வருகி
றலாபமென்ன, அந்தத் தர்மராஜனுடைய திறம் யாருக்
குத்தெரியும்அக்கரைக்கிக்கரை,பச்சென்றிருக்குதென்று
திரிகின்றபசுப்போல் வயிறுவளர்க்க நாக்குருசைபார்த்து
க்கொண்டு திரிபவர்களுக்கு என்னதெரியும் கூடிப்பார்
கூட்டுப்பயிரிட்டுப் பாரென்றுரைக்கும் பழமொழிபோல்
அந்த ராசக்கொடியினை யுடைய முதல்வன் கைக்கொ
ண்ட வில்லாண்மையும் அவன்தொடுக்கும் அம்பின்றிற

த்தையும் இராமனுடைய வில்லுக்கும் - பாணத்திற்கும் மேம்பட்டதாகச் சொல்லவேணுமேயன்றி அதற்கு ஒப்பாகச் சொல்லப்படாது அந்த ராமமூர்த்தியின் வில்லுக்கும் பாணத்திற்கும் ஒப்பாகச் சொல்லுவோமாகில் அபராதம்வந்து சம்பவிக்குமேயல்லது வேறில்லை பார்த்திபனே, அப்பேர்ப்பட்ட கைக்காறனாகிய தர்மராஜனை லேசாக நினைக்கக்கூடுமோ அந்த தர்மராஜனுடைய பாணப்பிரயோகத்தை நூறுவிதமாகச் சொல்லவேண்டியதில்லை, ஒருவிதமாகிய சூக்ஷியாய்ச்சொல்லுகிறேன்.

கேளும் இறைவனே, நான்போய் தர்மராஜனை மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்யும்போது அவர் சில அஸ்திரங்களைவிடுத்தார் அந்த அஸ்திரமானது எப்படிவந்த தென்றால் கொத்துங்கொத்தாகவும், பத்துப் பத்தாகவும், குத்துக்குத்தாகவும், வரிசையாகவும், கும்பாகவும், கூட்டமாகவும், நிரையாகவும், நெருக்க மாகவும், கறைதுறை தெரியாமலும் கோத்தமாலை-தொடுத்தமாலையைப்போல் வரிசையாகவும், பலம்பெற்று உரங்கொண்டு இறகுகளையுடைத்தாய்-குதையாகிய வில்நாணியை-உந்தி விடுக்கவந்து ஒன்மீறுடொன்று ஒத்து-நான்விடும்பாணங்களின்-முனையைக்கவ்வி-பொறிமுகம்-புகைமுகங்காட்டி. போராடி-எதிர்க்கெதிராக நான்தொடுத்தபாணம் நடுத்தறிபட்டு விழும்படியாகப் பிரயோகஞ்செய்தார் வெற்றிபெறத்தக்கவரும் புரவிபூட்டிய தேரினையுடைய முரசக்கொடி முதல்வனுமானவர் - இன்றையத்தினம் என்னோடு யுத்தஞ்செய்த சாதித்ததிறத்தை நானென்னமென்று சொல்லுவேன் சொன்னாற்றுக்க மழுதால் வெட்க மென்னுந் தன்மையினால் பேசாமலிருக்கிறேன்-ஆகிலும் ஒருவாக்கியங் கேளும் நான் விட்டகணைகளெல்லாம் ஒருவிதை விதைத்தால் ஒருமுதல்முளைக்கு மென்பதைப்போல் ஒன்றுக்கொன்றாகவே யிருந்தது அந்த தர்மசுவரூபிவிட்ட பாணங்களானது ஒருவிதைக்கு ஒருமுதல் முளைத்து பலவிதமாகவிளைந்து ஒன்றுக்குப் பதினாயிர மென்பதுபோல் அபரிமிதமில்லாமற் பெருகிவந்தது ஆதலால் நான்தொடுத்த வாளிவிதையும் அவர்தொடுத்த வாளி விளைவுமெனக் கூறலாயிற்று.

கேளும், நற்குலக்கோமானே, புயவலிமைக்கு வீமசேனனென்றும் - வில்வலிமைக்கு விஜய னென்றும் இவர்களுக்கு, மேலாகிய பேர் இவ்வுலகத்திலில்லையென்றும் எல்லா அரசர்களுஞ்சொல்லுவார்கள்-அப்பேர்ப்பட்ட வில்த்திறமைக்கும் வெகுபேரை ஒப்பாகச் சொல்லலாம் ஆனால், சாந்தமும்பொறுமையும், தயையுமுடைய தர்மராஜனது நன்னெறி நிலைக்கு நிகராகியபேர் யோசிக்குமிடத்தி லெங்குமிரார்கள் ஆதலால் வீணுகக் கூவத்தக்கபேர்கள் நிமிர்ந்துநிக்கார்கள் குதிக்கத்தக்கபேர்களே குதிப்பார்கள் இப்பேர்ப்பட்ட வீண்வாய்ப்பேச்சிற் காரியமில்லை உலகக்குலையப் போர்புரியும் தர்மராஜனுடன் எதிர்த்து யுத்தம்பண்ணத் தக்கபேர்க ளுண்டாயிருக்குமாகில் அவர்களை நாளை முதல்யுத்தத்திற்கு நான்பார்க்கவேண்டும் வஞ்சனையில்லாமற் புறப்படுங்கள் உப்புச்சப்பு ஒப்புவமையில்லாமற் பேசும் பேச்சுகளில் என்னபயன் விருதாவாகிய காரியமென்று வெகுகாரியங்களைச் சொல்லி வெவ்விய நிலக்குருவானவர் தன்னுடைய பாடிவீட்டுக்குப்போயினர் கிரீடாதிபதியாகிய கௌரவகுல முதல்வனும் அங்கதேசாதிபன் முதலிய அரசர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு தானுஞ் சயனத்திற்குப்போயினன் அப்படியே விடைபெற்றுக்கொண்டு மகத தேசாதிபரும் சூரதேசாதிபரும் சஞ்சத்தகரும் சசிபாலரும் பகதத்தனைச்சார்ந்த பார்த்திவரும் காந்தாரத் தலைவரும் பகதத்தனைவென்ற ரணகளத்தில் தகதத்தவென்று பேய்களாடச் சத்துருக்களைக்கொன்று வென்ற துரோணாச்சாரியரும்-கிருபாச்சாரியரும் மற்றுமுள்ளபேர்களும் சவுரியத்துடன் தாங்கள் பட்டபாட்டுக்கு வதிலாகப் பாண்டவச்சேனைகளைப் பாடுபடுத்த வேணுமென்னும் வீரமடங்காமல் வெகுநேரம் கண்விழித்திருந்து அப்பால் நித்திரை செய்தார்கள்.

இப்படியிருக்க, நிலைபெற்ற வயவீரர்க ளெல்லாரும் தேவர்களாய் வீரசொர்க்கமடைகின்ற நிலையைக் கண்டு நாம் அவர்களுக்கு அமுதம் பகுக்கவேணுமே யென்று பூரணமாகிய கலைநிறைந்த சந்திரன் மறைந்துபோக அந்தராத்திரியாகிய சமுத்திரத்தில் நீலமணிபோல் ஒளிமழுங்கிப்போன சூரியன், நெருங்கிப் பிரகாசித்திருந்த இருளைநீக்கிக்கொண்டு மாணிக்க வட்டம்போன்ற கதிராயிரத்தையும் மலியக்காட்டி கார்கடல்சூழ்ந்த கிட்டிசையிலுதயமாயினான் கேளுந் திரிதராஷ்டிரபூபதியே யென்று சஞ்சயன் சொல்லிவந்ததாக ஜெனமேஜெய மகா ராஜனுக்கு வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

இந்தக்கதையைச் சூதபுராணிகர் சொல்லக்கேட்ட, சவுனகாதி முனிகளெல்லாருஞ் சந்தோஷ மடைந்து எந்தாயாகிய மாதவனே அர்ச்சுனனுக்காக நம்பெருமானாகிய ஆதிமூலப்பெருமாள் அன்புவைத்து நடத்தும் பக்ஷங்களைக்கேட்க இச்சையுண்டாகின்றமையால், மேனடந்த பதிமூன்றுநாட் கதையையுஞ் சொல்லவேண்டுமென்று சவுனகாதிமுனிகள் வணங்கி வேண்டிக்கொள்ள, சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

௧௩-ம் போர்ச்சருக்கம்.

அபிமன்னுவின்யுத்தம். கண்ணன்றுதி விருத்தம்.

சங்கையிலாவகையமபடர்னுயிர்தளர்பொழுதத்தருகே
மங்கையர்சூழவிருந்தழுதுள்ள மயக்கினும்யான்மறவேன்
கங்கையுநான்மறையுந்துளவுங்கமழ்கழலிணைபுந்திருமால்
அங்கையின்மிதொளிர்சங்கமுநேமியுமஞ்சனமேனியுமே

எ-து. ஐயமில்லாமல்வந்து பிடிக்கும்-யமதூதவரால் பிராணனிக்கும் படியாகத்தளர்வுற்ற காலத்தில் புத்ரமித்ரகளத்ராதி முதலாகிய பந்துவர்க்கங்களும், பக்கத்திற் சூழ்ந்திருந்து மேல்விழுந் தழுது-ஒருவழிப்பட்ட என்னுள்ளத்தை மயக்கியபோதும் பிரமாவினற் றிருமஞ்சனம் ஆட்டிவைத்த-ஆகாயகங்கையும் நான்குவேதசாரமும் திருத்துளவமும் எக்காலமும் பரிமளித்துக்கொண் டிராநின்ற திருநாரணன் திருவடிக் கமலங்களையும், அவரது அழகியகரங்களிற் றுலங்குகின்ற சங்கு சக்கரத்தையும்-கறுத்தமைபோன்ற திருமேனி யெழிலையும் ஒருக்காலும் யான்மறக்காமற் றுதிப்பேனென் றுரைப்பதற்கு ஒரு முத

லாகிய ஆதிமூலப்பொருளை அன்புடன்வணங்கி வந்திக்குந்தாசர்களைச்சிந்தையுளிருத்திவேதவியாசரைப் பணிந்து மேல்நடந்தபதிமூன்றுநாள் யுத்தத்தைச் சொல்லுகின்றேன், கேளும் ஜெனமே ஜெயமகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

ஆவிதத்தியெழக் தரியலர்சிறியதாவிதத்தி வரும் பரிமிசையேறிய அண்ணலே கேளும், பனிரண்டாநாள்ராத்திரிமுழுவதும் விசனங் கொண்டிருந்த நாகக்கொடியோனாகிய நராதிபன், பதின்மூன்றுநாட்காலமே நித்தியவிதிமுதலாகிய கடன்களைமுடித்துக்கொண்டு தனது படைகள் பிரயாணமாகும்படி பேரிகைமுழக்கி வைத்தான், அப்போதே அரசனுடைய யேவலின்படி அளவிறந்த சேனாசமின்யங்களும்-படைத்தலைவர்களும் - மகுடமன்னர்களும் அர்ச்சுனனைத் தகைந்து போர்புரியும் படியாய்த்திரண்டு வந்தார்கள், அந்தவேளையில்நேற்றையப்போரில் நெஞ்சழிந்து வருந்திய விற்குருவானவர் நடந்து போன முன்னைநாளைப் பார்க்கிலும் பின்னைநாளாகியஇன்றையத்தினம் அதிவேகமுங் கடுங்கோபமுமுடையவராய் பஞ்சவர்கோ முதல்வனாகிய தர்மராஜனை எப்படியுங் கைப்பற்ற வேணுமென்று மனத்துணிவுகொண்டவராய் இலக்கணகுமாரனும் துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களும் கோபக்கண்களிலிருந்து புலிங்கசாலம்புறப்படசத்துருக்களைக்கலக்கச்செய்யுங் கலிங்கதேசாதிபரும் இன்னம்பற்பலராகியசாவலரும்வெற்றிவேலையும்வீரவில்லையுந்தாங்கி ஜெயப்பிரதானங்கொண்ட சிந்துதேசத்தலைவரும் செயத்திரதனும் முதன்மையாய்ப் பேரணியினின்று பூமியிலிருந்து பொடியெழுந்து ஆகாயத்தை மறைக்கும் படியாய்ப்போர்பொரக்கருதினர்கள்.

அந்தச்சமயத்திலசேனாபதியாகிய துரோணாச்சாரியரானவர் பத்மவியூகங்கட்டவேணுமென்றெண்ணி இயாவருங் கொண்டாடும்படியாகிய கன்னன் - அலம்பன் - சல்லியன் - அச்சுவத்தாமன் - அடலாயிரவாகு - அகம்பன்முதலாகியபேர்களை தாமரைபுட்பத்திற்கு நடுவிலிருக்கும் கருணிகையாயமைத்து திசாதிசைகளி லிருந்துவந்த பதினெண்பாஷைமன்னவர்களையும் கிருபாச்சாரிமுதலாகிய வயவீரர்களையும்மேற்சொல்லிய கருணிகையின் சுற்றிலுமிருக்கும் அகவிதழாய் நிறுத்திபோர்த்திறத்தில்வல்லமையாகிய சுதாயுசதாயு-நயுதாயுமுதலியமகாரதர்களையெல்லாரும் புறத்தியிலிருக்கும் புற இதழாய்ப்பொருத்தி ஒவ்வொருயிதழினுடைய உருவத்தைப்போல், யானையொருவரிசை - தேர்ஒருவரிசை - குதிரையொருவரிசை-பதாதியொருவரிசை - இந்தப்படி நால்வகைச்சேனைகளாலமைத்த ஒருயிதழுக்கு மேற்கூறிய அதிரதமகாரதசமரதாள்முதலிய வீரர்களைகாரியத்தலைவராகநிறுத்தி அமைத்த ஆயிரமிதழையுடைய தாமரைமலர்போற் செய்து அளவில்லாததேர்கள் - யானைகள் குதிரைகள் காலாள் இவைகளையெல்லாம்பத்மவியூகங்கட்டுவதற்குஏற்படுத்திக்கட்டியிருக்கிறசாஸ்திரத்தில் எப்படிசொல்லி யிருக்கின்றதோ அந்தப்பிரகாரம் இடைக்கிடைசேர்த்து வெல்லுந்திறத்திற்சொல்லுதற்கரிய உயிர்ச்சேவகவீரருடன்பலம்பொருந்திய நாயகனாகிய துரியோதனமகாராஜனை நடுமத்தியிலிருக்கும் தாமரைப்பொகுட்டிலிருத்தி வாசனைதினிந்த கற்பகமாலையணிந்த தேவர்களெல்லாருந்தியங்கித் திடுக்கிடும்படியாய் பத்மவியூகங்கட்டி அந்தவியூகத்தைச் சுற்றிலும் ஒருவிதகுணமாகிய சூசிகாவியூகமொன்று ஏற்படுத்தினர் அதாவதுதுவாரமும் நீளமுங்கூர்மையுமுடையவூசியைப்போன்ற அந்தவியூகத்தை நால்வகைச்சேனைகளாலும் அமைத்து இருகரங்களிலும் ஆயுதங்களைக்கொண்டு உலவாநின்ற மற்றச்சேனை வீரர்களையெல்லாம் அந்தச்சூசிகாவியூகத்தைச்சுற்றிலும் மதிற்சுவர்போல் விர்த்தமாய் சக்ரவட்டவியூகமியற்றி பிரணவாக்ஷரவேதசாஸ்திரங்களியாவும் பூரணமாகத்தேர்ந்த சிலையாசானென்னுஞ் சேனாபதியானவர் இராக்ஷசராஜுக்குமத்தியில் சுக்ராசாரியிருக்குந் தன்மைபோல் ஜெயம் ஜெயமென்று முனைமுகத்தில் இரதமேறி நின்றார்

அப்பால் பனிரெண்டாம்போரில் வெற்றிவாகையணிந்த தர்மராஜனானவர் பதின்மூன்றுட்நாட்காலமேயெழுந்துகாலைக்கடனைமுடித்துக்கொண்டு சேனைகளெழுந்து பிரயாணப்படும்படியாகிய பேரிகையை முழக்கிவைத்து தானுந்தம்பிமார்களும் யுத்தகோலங்கொள்ளும்போது துரியோதனராஜனானவன் இராத்திரிமுழுவதும் விசனப்பட்டு பாண்டவரிடத்தில் பக்ஷமாயிருக்கிறாயென்று துரோணாச்சாரியைக் கோபித்துக்கொண்டதின்பேரில் இன்றையயுத்தத்தில் எப்படியுந்தருமனைவென்று தருகின்றேமென்று சஞ்சத்தகர்முதலியபேருந் துரோணரும் நெஞ்சில்நினைத்திருக்கின்றார்களென்று தூதராலுணர்ந்து தனஞ்செயனையும் சாமளவர்ணனாகிய கிருஷ்ணனையும்பார்த்து துரியோதனன்முதலிய துரோணரும் நேற்றிராத்திரி இப்பேர்ப்பட்ட சங்கதிகளெல்லாம்பேசி கெட்டிசெய்து வந்திருக்கிறார்களாம் என்றுசொல்லி கோடையிடியுடன் கலந்தெழுந்த கொடுங்கதிரோனென்னுமாக்கும்படிக்குக் கோபமெழுந்து தமதுசேனாசமினியங்களை நடத்திக்கொண்டு போர்க்களத்திற்குவந்தார்.

இப்படிக்குச் சூழ்ந்துவந்த அதிரதர்-மகாரதர்-சமரதர்-அர்த்தரதரென்னும நால்வகைத்தேரினரும் கிரிசரம்-வனசரம்-நதிசரமென்னும் மூவகையானைவீரர்களும், காங்தருவதேசத்தாரும் மதிக்கும்படியாகிய குதிரைத்தலைவரும் பதினெண்பூமியிலுள்ள பார்த்திபரும், பதாதிகளும் எட்டுத்திக்குந் திக்குமுக்காடிப் போகும்படியாய் அளவிட்டுச்சொல்லப்படாமற் கடற்பெருக்கம்போல் ஆயுதங்களுடன்பரவிவந்த சேனைகளை மகரவியூகமாகநிறுத்தி நாம் கட்டியவியூக மகரமீனானது ஒருதரம் புரண்டிக்குமாகில் எதிரி கட்டிய தாமரை போன்ற பத்ம வியூகம் இதழிதழாய்ப்பெயர்ந்து அலக்கழிந்து போய்விடுமென்று அறக்குமாரனாகிய குருபுலபூபதியும் திரிவிக்கிரமனாகிய திருமாலும் இதுவரையிலுங்கட்டியவியூகம் இதற்கொப்பல்லவென்று மகிழ்ந்து சந்தோஷிக்க அந்தவேளையில் சேனாபதியாகிய துருபதேயகுமாரன் துஷ்டத்துய்மன் இரதத்தைச்செலுத்தி யெதிர்த்துவந்துநிற்க தேவதுந்துமிமுதலாகிய வாத்தியங்களெல்லாந் திசாதிசைகளும்போர்ப்

ப இவ்விதமாக இருபடைகளும்பொருந்தி சமுத்திரங்கரைபுரள்வதுபோல் எதிரெதிர் மலேயும்படியாயிருக்கும் வேளையில் சந்திரவட்டமுத்துச்குடை நிழலிலிருக்கும் தராபதியாகிய துரியோதனன் ஏன் இன்னங்காலதாமசஞ்செய்கிறீர்களென்று சண்டைசெய்ய ஆக்யாபிக்க அப்பொழுதே நேற்றையதினம்போ லேற்பட்டு யானைதேர்முதலாகிய நால்வகைச்சேனைகளுடன் சஞ்சத்தகர்வந்து அர்ச்சுனனைப்பார்த்து ஆ ஆ அர்ச்சுன நேற்றையத்தினம்போலல்ல இன்றைக்கு உன்னைவென்று ஜெயங்கொண்டுபோம்படி வந்திருக்கின்றோம் உனக்குத்தயிரியமும் வீரமுமிருக்குமாயில் ஓடாமல் ஒளியாமற்புறப்படலாமென்று அறைகூவி அழைத்தார்கள் அவர்களுடைய வீரத்தைக்கேட்ட விஜயனுக்குக் கோபம்பிறந்து முன்பின்றோறாமல் இப்படிவீரவசனஞ்சொல்லிய அவர்கள்பேரிற்சண்டைசெய்யச்சென்றான் அர்ச்சுனனுளவன் (அறைகூவிலென்பது) சண்டைக்குவாவென்று வலுவிலழைத்தலாம்.

இந்தப்பிரகாரம் போர்புரியும்படியாய் மாயன்செலுத்துந் தேரில்வந்த அர்ச்சுனன்பேரில் இந்திரதனுவுடனெழுந்த காளமேகம்போல் வந்துவளைந்து தாரைதாரையாக பாணவருஷங்களைப்பொழிந்து போராடியதோராள்களையும் வில்லாள்களையும் யானைவீரர்களையும் குதிரைவீரர்களையும் அர்ச்சுனன்கண்டு விரகாண்டீபம்வளைத்து மல்லிகைக்கொம்பு மலர்ந்ததைப்போல் வாயுக்கணை வாரிக்கணை முதலிய பாணங்களைவிடுத்து வந்தெதிர்த்த சஞ்சத்தகருடையமெய்யும் இருகையும் துளைத்துருவும்படியாய்ச்செய்து வாடைக்காற்றுடன் கூடிவரும்மழைத்தாரையிலகப்பட்ட சருகைப்போல் மதிகலங்கிப் பறக்கும்படியாய்மாட்டினான் அந்தமாட்டலினுற் துரியோதனனுடைய படையுடைந்து ஏதொருசெய்கையு மில்லாமல் விரைந்தோடினார்கள் இப்படியாகவாடியோடிய பேர்களில் கிரீடிதொடுத்த கொடுங்கணைகளினால் உயிரொழிந்து பட்டவொத்தனையாயிரம் உயிரொழியாமனின்று முதுகிட்டவொத்தனையாயிரம் அர்ச்சுனராஜனே உமக்கபயம் அபயமென்று யுத்தத்தைவிட்டவ ரொத்தனையாயிரம் தங்களுடைய குலத்தின் மேன்பாடும் வீரத்திறமும் மிகுந்தகீர்த்தியுங் கெட்டவரொத்தனையாயிரமென்று சொல்லுவேன் பட்டப்பகற்போற்றெரியுதே விஜயன்பாணங்களினால் உடலெரியுதே ஐயனே, கேளும் ஒவ்வொருவருடைய உடம்பில் செங்குவளைபோன்ற பாணங்கள் ஆயிரம்ஆயிரம் தைத்துத்துளைப்பதினால் ரொத்தவருஷங்களைப் பொழியுமேகத்தையொத்தார்சிலபேர் சிலபேருடைய ரெத்தங்களினால் தேகம்பாதி மறைந்திருப்பது மன்மதனைஎரித்த மகாதேவருடைய வடிவம்போலிருந்தார்பலபேர் இவ்விதமாக இந்திரகுமாரனுகியபற்குனன் மூன்றுயோசனைதூரத்திற்கப்பாற் சண்டைசெய்துகொண்டிருக்க இவடத்தில் அணிவகுத்துச் சந்திர சூரியர்மண்டலம்வரைக்கும் குடை-கொடி-படைமுதலியதுந் தாவும்படியாயிருந்த இருவகைச்சேனைகளும் சேனுபதிகளின் உத்தரவின்பேரில் கைகலந்து போர்புரியுங்காலையில் சேனுபதியாகிய திர்ஷ்டத்துய்மன் நாலுசக்கரம்பூட்டிய ரதத்தைநடத்திக்கொண்டுபோய் துரோணச்சாரியனை யெதிர்த்து வரிபொருந்தி மணியணிந்த வில்லைவளைத்து அஸ்திரப்பிரயோகஞ்செய்தான் அப்போது தனுர்வேதமுணர்ந்த துரோணச்சாரியர் தமதுவில்லைஎடுத்து நிறுத்தி இழுத்து வளைத்து சிவ்வென்று நாணேற்றி ஷ்டங்காரம்பண்ணி உக்ரமமாகிய அக்கினியாஸ்திரத்தைத்தொடுத்து அவசரமில்லாமல்விடுக்க அப்படிவிட்ட அக்கினியாஸ்திரஞ் சிவன்விடுத்த நாராயணஸ்திரம்போல் மிமிடிகரித்துக்கொண்டுவந்து எதிரிவிடுத்த பாணத்தைமோதி ஒன்றோடொன்று எதிர்த்து பகைத்து அவர்தொடுத்தகணையும் இவர்விடுத்தகணையும் கூர்மைகொண்ட முனையோடு முனைகொத்தித் தத்திமுனையற்றுவிழும்போது வெற்றிபெற்ற உத்தமனுகிய பரிசுத்தனென்னுந் துரோணரானவர் சித்தியாகிய அஸ்திரங்களைவிடுத்து திர்ஷ்டத்துய்மனுடைய வின்னாணியையறுத்து நெருப்பிடி நீரிடியுடன்சேர்ந்து இரண்டுமேகம்நெருங்கி எதிர்த்ததைப்போல் இருவருடைய தேர்களுமெதிர்த்து சக்கரங்களுடன் சக்கரங்கள்முஷ்கரமாகத்தாக்கி உக்ரமத்துடன்சக்கரமாகிய காற்றுடியைப்போற் கரகரவென்று இடம்வலமாகச்சுழன்று செலச்செலுத்தி நெடுநேரம்வரைக்கும் அமர்புரிந்து பாண்டவச்சேனை நாயகனுடையகவசத்தையுந் துவசத்தையும் அழித்து தேகத்தையுந்துளைத்துத் தேரைவிடுத்து நேருக்குநேராக முட்டவிட்டகாலையில் ஆதிவஷிஷ்டரொன்னும் அருமுனிக்கொப்பாகிய வீஷ்டுமரும் அர்ச்சுனனும் துரோணச்சாரியரும் ஒரேயினமாக யுத்தஞ்செய்யத் தக்கவர்கள் அப்பேர்ப்பட்டவர்கள் செய்துவந்த யுத்தத்திற்கிடாக முற்காலத்திலும் இக்காலத்திலும் யுத்தஞ்செய்யத்தக்க பேர்கள் எக்காலத்தினுங்கொஞ்சமேனு மிரார்கள் இவர்கள்மூவரும் ஒரேகைக்காறர்கள் ஆகையால் போனவீஷ்டுமர்போக இருக்கும் இவர்களுடனெதிர்த்து எவர்கள்முன்னுக்கு வருபவர்கள் இதுவுமல்லாமல் பூர்வத்தில் ஒப்பற்ற முனிவராகிய அகஸ்தியர் உருத்திரசெபத்தால் எழுசமுத்திரத்தையும் உள்ளங்கையிலடக்கி உண்டுவிட்டாரென்று உலகத்தோர்கூறுவார்கள் இவர்கள்நினைத்தால் ஒருகணையால் உலகிலுள்ளபேரெல்லாம் உறுஞ்சச்செய்வார்கள் மேலும் இந்தத் துரோணச்சாரியரென்னு முனிவரானவர் தனக்குச்சத்துருவாகிய துருபதேயகுமாரனையும் வென்றுவிட்டார் ஆகலால் முனிஸ்வரர்களுக்குத்தவஞ் செபம் முதலிய மகத்துவ மேலாயிருப்பதினால் அவர்களைச் சாபமுதலியபகைகள் ஒன்றுஞ்செய்யமாட்டாது முனிஸ்வரர்களுடனெதிர்த்துப் போர்புரிந்துவெல்லும் வல்லமையுடையபேர்கள் தொல்லுலகிலில்லை அப்படியிருக்க நாமும் இவருடனெதிர்த்து ஒருக்காலும்வெல்லமாட்டோமென்று தன்னுடையதேரைத் திருப்பிக்கொண்டு மானபிமானமுதலிய வீரத்தையும் தீரத்தையும்விட்டு வேறொருசெய்கையுமில்லாமல் புறமிட்டோடினான் இப்படிபாண்டவர்களுக்குத் தந்திரநாதனுகிய பாஞ்சாலகுமாரன் போரழிந்து புறமுதுகிட்டு ஓடும்படியானதை இருவகைச்சேனை மன்னவருங்கண்டு கையைக்கொ

ட்டிக் கபிலொனநகைத்து வண்மையின்மிகுந்த துரோணச்சாரியருடைய ஆண்மிக்கையையும் விற்றிறமையையும வெகுவாய்க்கொண்டாடித் துதித்தார்கள், அப்போதுதனுர்வேதியன்விட்ட சரங்களினால சரீரநொந்து தயிரியங்குன்றிபயந்து ஓடிவராநின்ற துஷ்டத்துய்மனாகிய சேனாபதியை புட்பராகந்திணிந்த மதுமாலையணிந்த மார்பினையுடைய தர்மராஜன்கண்டு கட்டியணைந்துகலக்க மகற்றிமைத்துனனாகிய காவலனை முன்முகத்திற் கதிகாரியாகிய சேனாதிபதியே நிருபர்சிகாமணியாகிய நீயே நிதியும்-நிலையும் வீரமும்தவறிஓடிவருவையாகில் பின்னையார்நின்று யுத்தம் பண்ணும்படியானவர்கள், ஐயோ, பாவம், மெத்தவும்போர்புரிந்துவருந்தி யிளைத்தனைபோலுமிருக்கின்றது சற்றுநேரம் இவணிருந்து தேகவருத்தமாற்றிக்கொள்ளக் கடவையென்று தயவாக உபசாரஞ்சொல்லிநிறுத்தி தன்படைகள் தத்தளிக்குந்தன்மை தன்னையுற்றத மனக்கொதிப்புடனே தனக்குநேரில் மயில்வாகனனைப்போல்நின்ற தனஞ்செயன்குமாரனாகிய அபிமன்னுவை பொன்னொளிபோற் பிரகாசிக்கும் அருள்வடிவாகிய தருமராஜன்கண்டு பூரிப்புடன்மகிழ்ந்து அடாகுழந்தாய் என்னப்பனேஇங்குவா வென்றழைத்து மகிழ்ந்து ஆசையுடன்புகழ்ந்து இந்தயுத்தத்தில் உனக்கெதிர்நிற்பவரொருவருமில்லை, நீமுனைந்தெதிர்ந்து போர்புரிந்தாலொழிய துரோணாச்சாரியர் கட்டியிருக்கும் பத்மயூகத்தின்பலங்குறையாது மேலும் நேற்றையத்தினம் என்னிடத்திற் சண்டைசெய்து இளைத்துவெங்கிட்டோடிய விற்குருவானவர் இன்றையத்தினம் என்னைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுபோக வேணுமென்று நல்லபலவான்களாகிய அரசர்களையெல்லாஞ் சேர்த்து சக்ரயூகமாகவகுத்து மிகுந்த சண்டைசெய்வதற்கு என்னெதிர்வந்து நிற்கின்றார், ஆகையால் அவரால் ஏற்படுத்திய பத்மயூகம், சூசிகாயூகம், சக்ரயூகம், இந்தமூன்று யூகத்தையும் உடைத்து நாசப்படுத்தத்தக்கபேர்கள் உன்றந்தையாகிய அர்ச்சுனராஜன், அல்லது உன்பெரியதந்தையாகிய வீமசேனன், நீ யொருவன் உங்கள்மூவராலும் ஒழியவேண்டியதேயல்லது விற்பிடித்து யுத்தஞ் செய்து சேதித்து வெல்லத் தக்க வல்லவர்கள் பின்னை வேறொருவருமில்லை கல்வித்திறங்கொண்ட நல்லவனே, உன்மாமனாகியஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் புயங்கள் பூரிக்கவும் உன்றந்தையாகிய அர்ச்சுனனுடைய மனங்களித்துமுகமலர்ந்து தோள்கள்பாரிக்கவும் உன் பெரியதகப்பனாகிய வீமசேனனுடைய மெய்புளகாங்கித முறவும், வெல்லுகிறோமென்று சபதங்கூறிக் கொல்லும்படி யாகிய உன் சிறியதந்தையிருவருஞ் சிந்தைமகிழவும் திசாதிசையி லிருந்து வந்த காவலர்யாவருந் தங்களைத்தாங்கள் மறந்து உன்தாளாண்மையைப்புகழவும் சத்துருக்களுடைய கூட்டங்களைந்து வாட்டமடைந்து வானுலகேறவும் என்னிருகண் கண்டுகளிக்கவும் நீ வெற்றிபெற வேண்டுமென்றுவிரும்பினேன் அரும்பைவிரித்துச் சுரும்புதேனருந்தும் மலர்மாலையணிந்த தோளினையுடைய மதனசிங்காரனே உசித ஓங்காரத் தோன்றலே யென்று முரசக் கொடியினை யுடையவராகிய பெரியதந்தைசொல்ல் அந்தவார்த்தையானது தன்னிருசெவியிலும் இந்திரலோகத் தமுதுபோல் வந்துவிழுமுன்னமே வாட்படை-விற்படை-வேற்படை-கதைபடைமுதலிய யாவுங்கற்ற சித்தசனுக்கொப்பாகிய உத்தமகுணமைந்தன் மகிழ்ந்து சிந்தைகளித்து பெரியதந்தையைப்பணிந்து எந்தையே பகைவர்கூட்டமாகிய படைகளெல்லாம் இடியிற்பொடிபடும் பாம்பைப்போலடித்து முடித்து நொடிபோதில் கெடிஸ்தலாதிபதியாகிய துரியோதனன் இடிந்து பொடிந்து போகும்படியாய்வெற்றிகொண்டு வெற்றிமாலை தரிக்கிறேன் தேவரீர் சீக்கிரமத்தில் விடைகொடுத் தருளுமென்று இந்திர னுக்குப் பேரனாகிய சுந்தரன் பெரியதந்தையின் சந்திரவிம்ப முகத்தைப்பார்த்து இருகரத்தையுங் குவித்து இரண்டுமலைதிரண்டதைப்போன்ற புயமும் பூமியிற்பொருந்த வணங்க அடக்கஒடுக்கத்துடன்வணங்கி வாய்புதைத்து நிற்கின்ற கீர்த்திப்பிரதாபனாகிய புத்திரனைப் பார்த்து அப்பா கதாபாணியாகிய வீமசேனன் உனக்குப்படைத்துணையாக அமர்புரிந்து முன்னேநடக்க நீ-பின்னே தொடர்ந்து சக்ரயூகமுதலாகிய யூகங்களை யுடைப்பதற்கு முன்னே தி-சாமர்த்தியமுள்ள தீர-வீர மன்னர்களுடன் இதோ உன்பின்னாக நான்வருகிறேன் நீ-முன்னுதாகச்சென்று சக்கிரவட்டயூகத்தைச் சேதிக்கக்கடவையென்று மேகமுழக்கம்போலார்த்து என்கண்மணியே என்னையிறுகக்கட்டித்தழுவென்று தானுந்தழுவி மார்புறவணைத்து கண்ணிமை கொட்டாமற் கால்முதல் சிரசுவரைக்கும் பார்த்து தாமிசமில்லாமல் க்ஷணப்பொழுதிற் செல்லென்றும் வலிமைபற்றிய யுத்தத்திற்சென்று நமதுபகைவரைக் கொல்லென்றும் அப்படியேகொன்று உன்புயத்திற் குடிகொண்ட கொற்றவையாகிய வீரலட்சுமியினருளால் விஜயத்துடன்வெல்லென்றும் வாழ்த்தி விடைகொடுத்தாரேயன்றி ஜெயம்பெற்று திரும்பிவாவென்னும் வாக்கியம் திவினைவசத்தாற் சொல்லாமற்போனார். அவ்ராறொவில் துரோணாச்சாரியரைவென்ற பெருந்தகையாகிய தர்மராஜன். இந்தப்படி தான் வருகிறேனென்றும், வீமசேனன்-முன்னாடிப் போகட்டுமென்றும் சொல்லிய தனது பெரியதந்தையின் வாக்கியத்தைக்கேட்டு மனந்தாளாமல் நமது திறமுதலியது முணர்ந்த அறக்கடவுளாகிய ஐயா வானவர் படைத்துணைப்பற்றிப் போகும்படி சொன்னா ரல்லவாவென்று சற்றுநிதானித்து நின்று அந்தவார்த்தைக்கு தன்மனத்தி லிடங்கொடாம லகற்றி சிந்தை களித்து சூரசம்மாரக் கடவுளாகிய கந்தஸ்வாமி தனிமையிற் சென்று தாருகன்முதலிய சூரரைவென்று வந்த தன்மையைப்போல் ஒருதவியுமில்லாமல் தானும் ஜெயம்பெற்று வரவேண்டுமென்று மனங்கொண்டுநின்ற மைந்தனை தருமபூபதிகண்டு ஓகோ-நான்சொன்ன உத்தரம் புத்திரன்மனத்தை வருந்தியதுபோலுமென் றுணர்ந்து சுந்தரனாகிய குழந்தை உச்சாகந்தப்பி யுத்தத்திற்குச் செல்லலாகா தென்று உடனே பலவித நன்மைகளைப்பகர்ந்து சத்தியசெறி உத்தமனாகிய தர்மராஜன் பகைவர்மேற்சென்று வெல்லும் வெற்றிமாலையைப் புத்திரன்கழுத்திலணிந்து புக

ந்து போர்புரியுந்திறங்களும் பாணங்கள் தொடுக்கவேண்டிய விதங்களும் பகைவரைமுடிக்கத்தக்க திறமும்விற்பனமுள்ள புத்திரனுக்குப் பற்பல விதமாய்ப் பகர்ந்து விடைகொடுக்க, அவருடைய செலவுபெற்ற புத்திசாலியானபுத்திரன் பெரிய தந்தையராகிய தர்மராஜன், வீமசேனன், இவர்களின் திருவடித்தாமரையிற்பணிந்து - தட்டி-ஜல்லடம் பிகிந்து வீரகண்டாமணியிறுக்கி கவசந்தொடுத்து கொத்தாகிய மாலையணிந்த வீரமார்பில் முத்தாரமணிந்து நாகரத்தினங்களினாற் செய்த வாகுவலயம் அழகுடன் பிரகாசிக்கத்தரித்து, இரண்டுசந்திரர், இரண்டுசூரியர், இரண்டுருண்டதைப்போன்ற ஜீவரத்தினங்களினாற்செய்த மகரகுண்டலங்களைக் காதிற்றொடுத்து நவரத்ன கசித-வுசிதமாகிய முடியணிந்து வீரபட்டங்கட்டிபலம்பொருந்திய நாணியுடன் விற்பிடித்து தேர்ந்துதெளிந்த வீரவாளிநிறைந்த அம்பறாத்தூணியுந் தோள்புறத்திற்சேர்ந்து வாளாயுதம்-கதாயுதம்-வேலாயுதம்-சூலாயுதம்-சக்ராயுதமுதலாகிய ஆயுதங்களுங் கொண்டு நூன்மையாகிய முப்புரிநூற் பிரகாசிக்குமார்பில் தும்பிப்பதக்கமுதலாகிய அணிமணிப்பணி யணிந்து அர்ச்சுனராஜகுமாரனாகிய அபிமன்னுவானவன் அலங்கரித்திருக்குந்தேரில் இளஞ்சூரியனைப்போல் ஆரோகணித்துக் கொண்டு இயாவரு மதிக்கும்படியாகிய சுமித்திரனென்னுஞ் சாரதியைப்பார்த்து எனக்குரிய தேர்வலவனே தநுர்வேதவன்மைபெற்ற துரோணாச்சாரியர்-அசுபத்தாமன்முதலிய பேர்கள் யாவரும் பொருந்தி முனைந்து நிற்கின்ற போர்முகம் நீறுபட்டுப் பொடியாகும்படி திருந்திய நமதுதேரை விரைந்து விடக்கடவையென்று அண்டகடாக நடுங்க மண்டியிட்டிரைந்து சொல்லும் அபிமன்னு ராஜனை நோக்கித் தேர்ப்பாகன் வாய்ப்பாகப் பணிந்து சொல்லுகின்றான்.

ஐயா ! தேவரீருடைய வசனத்தைச்சிரமேற்கொண்டு நடப்பவனானபோதிலும், தங்களுடன்வந்து சிலசங்கதிகளைத் தடுத்துப்பேசுஞ் சுதந்தரத்தை யெனக்குத்தாங்கள் தந்திருப்பதால், எந்தன்மனத்திற்றோன்றிய சிலவற்றைச் சொல்லுகிறேன் தாங்கள் சிந்தையிற்கொள்ள வேண்டியதென்று, மந்திரிக்கொப்பாகிய வலவன் சொல்லுகின்றான்.

கேளும் என்னாண்டவனே, சொர்க்கமத்திய பாதலமென்னு மூன்றுலோகத்தையுங், கைகாட்டிய யிடத்தில் நிற்கும்படியாகச்செய்து கொல்லுந்திற வல்லமை பெற்ற உன்றந்தையாகிய அர்ச்சுனராஜன்-விற்பிடித்தும் இவர்களுடைய போர்முனைபுகுந்து வீரவாளிதொடுப்பாராகில் அளவில்லாத வல்லமைகொண்ட அதிரதவீரர் முதலாகிய நால்வகைச்சேனை வீரர்களுடைய தேகமுழுமையுங் கிழிந்தழிந்து விழும்படிவென்று ஜெயங்கொண்டுதிரும்புவார் அவருக்கிவர்கள் லக்ஷ்யமில்லை ஐயா-ஆகையால், பற்பலவிதமாகிய சாஸ்திரங்களைக்கரைகண்ட விற்பனவிவேகியாகிய துரோணரும்-கிருபர்-அசுபத்தாமர்-கர்ணமகாராஜன்முதலிய எண்ணிறந்த நிருபர்களும் நிலைபெற் றிருக்கும் யுத்தமுகத்திற்கு நீர் தனிமையிற் சென்று வென்று வருவேனென்பது லேசாகிய காரியமல்ல நிருபர் சிகாமணியே மேலும்-இன்று யேற்படுத்தியிருக்கும் யூகமோ பேதாபேதங்களாக வகுத்திருக்கின்றது அந்த யூகத்தைப்பேதித்து நுழைவதற்கு தேவர்களாலுங்கூடாது அன்றியும், இப்படியாக யூகம்வகுத்த சேனாநாயகனாகிய தேசிகனும், மற்றப் பிரதாபவீரர்களும், உம்முடைய பாணங்களினாற் சாகமாட்டார்கள்-அவர்களை வென்றாலல்லவோ உமக்கு வெற்றியுண்டாகும் வெல்லாமல் வெற்றியெப்படிவரும் வீராதிவீரனே-நீர்-கொல்லாமற்போனாலும் செல்லாமல் நின்றுவிடுவதுவேசிலாக்கியமென்றுதெளிவித்தான் பலவிதகாரியங்களும் பகுத்துணர்ந்த சுமித்திரனென்னுஞ் சாரதியானவன், இந்த வார்த்தையைப் பற்குனன்புத்திரனாகிய விக்கிரமபராக்கிரமன் கேட்டு சிறுநகைபுரிந்து சாரதியைப் பரிந்துநோக்கி என்னுடையவில்லை எடுத்துநிறுத்தி அசைத்து இணக்கி இழுத்து வளைத்து குணத்தொனி செய்வேனாகில் அந்தப் பேரோசையினால் நிலமுதலாகிய தலமெலாம் கலகலவென்று பயந்து எழுசமுத்திரமும் வறண்டு உகாந்தகாலமுமடங்கி முக்குணத்தேவராகிய மூவரும் நாணோசையால் முதுகுகாட்டியோடுந்தன்மையைப் பெறுவார்களென்றால் போர்முகத்திற்கு நேர்முகமாக நானேபுகுவனாகில் என்னாற்சொல்லுந்தரமன்று நீரோ சொல்லுஞ் சாரதி இந்திரன்முதலாகிய எமனும் மற்றெவனும் எனக்குநேராவாரோ நிகராவாரோ ஓகோ விந்தையாகிய வார்த்தைசொல்லவந்த எந்தன்வலவனாகிய வல்லவனே ஆதிகாலத்திற் பாற்கடல் கடையும் நாளில் வாசுகிகக்கிய ஆலகாலவிஷமானது அண்டமுகடுமுதலாகிய எல்லாவற்றையும் எரித்தழிக்குங்காலையிற் சகலதேவதைகளுஞ் சங்கரமூர்த்தியைச் சிந்தித்த க்ஷணத்தில் அங்கவர்களை ரக்ஷிக்கும்படியாய்ச் சூலபாணியெதிர்ந்தபோது அந்த விஷாக்கினி தொலைந்து போகவில்லையோசாரதி, எதிரிகள் மிகுந்த திறத்தினையுடைய வில்லாளிகளென்றும் அவர்களை வெல்லுவ தரிதென்றும், நீ யுரைத்த ஆசான்முதலிய வாசாகைங்கிரிய ரெல்லாம் நிலைகெட்டுத் தலைநட்டுக்கொண்டு பலம்விட் டோடுவதை நீ கண்டு-நகைக்கும்படியாய்க் கூர்ங்கணை விடுத்துக் குலைகலையக் கொல்லுகிறேன் நம்மைப்போலொத்த வீரர் நம்மையேசாமல் உன்மனங்கூசாமல் என்னுடன் றடுத்துப்ப்பேசாமல் தேரைச்செலுத்தென்று பற்பல விதமாகிய பராக்கிரமங்களை அர்ச்சுன குமாரனாகிய அபிமன்னன் சொல்ல அந்தவார்த்தையைச் சாரதிகேட்டு தன்னை மறந்து மகிழ்ந்து பலம்பொருந்தியவிற்றிறத்தில் வல்லமைபெற்ற விர்ஷப விராட்டைப் போன்ற மலர்மாலையணிந்த புயத்தினையுடைய அபிமன்னராஜனைப் பணிந்து-அன்புமேற்கொண்டு முருக்கம்பூவலர்ந்த தெனச்சிவந்த முகத்தினையுடைய அநுமக்கொடியணிந்த தேரிற்கட்டிய குதிரைகளின் கடிவாளமாகிய குசைக்கயிறுகளைப் பிடித்து முனைமுகத்தில் வினைபற்றிநின்ற வீரர்களெல்லாரும் விடவிடத்துப் படபடத்துக் கடகடத்தோடும்படியாய் உல்லாசத்துடன்-தடதடவென்று தேரைச்செலுத்தினான்.

அந்தவேளையில், தமக்குரிய உறவினராகிய துருபதே

யுக் கூட்டத்தாரும் அளவில்லாத கோடாகோடி அரசர்களும் கருமேக முழக்கம் போலும், வெற்றிமுரசி ஞோசைபோலும் கோபங்கொண்டிரைந்து நெருப்புக்காற்றைப்போற் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அபிமன்னனுடைய ரதத்திற்கு, இருபக்கத்திலு நெருங்கிவரவும் பேரிமுதலிய வாத்தியங்களெல்லா முழங்கவும் தேவதுந்துபி கறங்கவும் வேதமந்திரங்களுணர்ந்த தேவர்களெல்லாரும் அரண்டு வெருண்டு பயந்திளைக்கவும் நெருப்பு முனைபெற்ற நாராயணாஸ்திரம் பொருந்திய திரிபுர சம்ஹாரியாகிய சிவபெருமான் கைக்கொண்ட மேருமலையென்னும் வில்லுக்கிணையான வில்லைநிறுத்தி வளைத்து நாணியேற்றி-ஷ்டங்காரஞ்செய்த ஓசையால் திசாதிசைகளும் நடுங்க ஓங்காரஞ்செய்து தனஞ்செயன் பூர்வத்திற்செய்த புண்யபலமே உருவாகித் தோன்றியதன்மையைப்போன்ற அபிமன்னுவானவன்-யுத்தமுனைக்குவந்து காரொலியுங் கடலொலியும் அடங்கும்படியாகப் பேரொலிகொண்டு நின்ற சக்கரயூகந்தளர்ந்து வருந்தித்தடுமாறும்படியாய் மணிகளினாலும் மலர்களினாலும் அணிபெற்றிராநின்ற-கூர்மைதங்கிய பாணங்களினால் கூட்டமாகிய மன்னர்களுடைய மார்புகளூருவும்படியாய்ப் பற்பல பாணங்களைப் பிரயோகஞ்செய்து சீதாபிராமனுக்கும் சத்துருக்களின் பிராணனை தென்றிசைக்கனுப்பும்-தன்-றந்தையாகிய அர்ச்சுனராஜனுக்கும் சரியாகியவீரனென்று சொல்லும்படிக்கு, இமைக்குமுன் எட்டுத்திக்குஞ் சுழன்று வரும் தேரைச்செலுத்தி அச்சுதனென்னும் அம்மானானவர், பூர்வத்தில் தனக்கு உபதேசித்திருந்த அருமையாகிய உச்சாடனமந்திரத்தை உச்சரித்து ஒருநொடியிற் பலகோடிபாணங்களைத்தொடுத்துநாலுபக்கங்களிலும்அடித்துமுடுக்கியபோதுஎதிர்நின்றவர்களின்சிரங்களையும்புயங்களையும்கரவென்றறுத்துக்கால்மாடு தலைமாடாகச்சாய்க்கும்வேளையில்தேவேந்திரன்மெச்சும்படியாகச்சிறந்துநின்றசக்கரயூகம்அழிந்துமுகமாறிப்பின்னிட்டோடுவதைச்சேனாநாயகனாகியதுரோணாச்சாரியர்கண்டுசிற்றங்கொண்டுமெல்யுத்தத்திலும்வில்யுத்தத்திலும்சிறந்தபுயத்தினையுடைய அபிமன்னுவானவன் விடுத்தமழைபோன்றசரங்களையெல்லாம் பெருங்காற்றைப்போலொத்த பல்வகைப்பாணங்களை விடுத்து விலக்கி போரில்முனைந்துவந்து அபிமன்னனை வளைத்துக்கொண்டு அருஞ்சமர்விளைக்கும்போது அபிமன்னுவானவன் அடிமேலடியடித்தால் அம்மியுநகருமென்னும் வாக்கியப்படிக்கு அர்த்தசந்திர பாணங்களினால் துரோணாச்சாரியருடைய பலமழிந்து தேககலமழிந்து வெல்லுவேனென்றுவந்த சொல்லழிந்து கைக்கொண்டிருந்தவில்லழிந்து குருவென்னும்பேரழிந்து ஏறிவந்ததேரழிந்து கொடியழிந்து முடிகிழிந்து மிகுந்தவிசனத்துடன் படியிலிழிந்தோடினான்.

இவ்விதமாக சேனாபதியாகிய விற்குருவானவர் துன்பப்படுங்காலையில் பக்கத்திலிருந்த நால்வகைச்சேனைமுதலாகியவீராதிவீரர்களும் நிலைதளர்ந்து கலைந்துலைந்து தலைவிரிகோலமாய்த்தடுமாறி சக்ரயூகந் தத்தளிக்கும்போது மனோவேகத்திலுமிஞ்சிய தேரைவிடுத்து, நேமியூகத்துக்குட்புகுந்து வளைத்தவில் நிமிராமற்பொழியும் அம்புமாரிகளால் அநேகமுகந்தோறும் பிணங்களாகி நால்வகைச்சேனைகளையு நாசப்படுத்தி கடலைக்கிழிந்தோடுங்கப்பலைப்போல் பலதிசைகளிலுங் காவலிருக்கும் மன்னர்களையெல்லாங்கலக்கி கடுங்கணையால் உடல்கிழிந்து தேர்ச்சக்கரஞ்செல்லுகின்றவேகத்தாற் சிதைந்து உயிரழியும்படியாய் உடல்சிதையும்படியாய் ரதத்தைநடத்தி நிலங்குலுங்கிக் கலங்கவிடுத்து காற்றுடியைப்போல் இடசாரிவலசாரி வலசாரி இடசாரியாய்ச்சுழன்று சாரிகைவர உயிர்பொருந்திய உடல்கள்தோறும் விபரீதகமாகச்சாயகம்போக்கி அவரவர்களுடைய பலாபலங்களெல்லாவற்றையும்பாழாக்கி மாம்சமுதலியகுடல்களைக் கூழாக்கி உதிரவெள்ளப்பள்ளங்களேழாக்கி நொந்து மனம்வருந்திவெந்து தாழாமற்போகும்படியாய்க்கொன்று சூரன்முதலாகிய சூராளுக்கெதிரில் ஜெயம்பெற்றுநின்ற சண்முகக்கடவுளைப்போல் தன்யனாகின்றான், தயிரிய திடகாத்திரவீரிய மூர்த்தண்ய அபிமன்னுவானவன்,

ஓ ஜெனமேஜெயமகாராஜனே கேளும், கொலைபுரியாநின்ற கொடுங்கணைகொண்ட கிரீடியின் குமாரனாகிய அபிமன்னன்றொடுத்த கூர்ங்கணைகளானது திறவான்களென்னும் வெற்றிவீரர்களுடைய தலைகளையறுத்துச்சாய்க்குதல் எத்தன்மையொத்திருந்ததென்னில் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும், நாரதர் கலகஞ்செய்துவைக்க ஆதிசேடன்படத்தால் மகமேருவைமறைக்க அந்தமகமேருவின்சிகரங்களை வாயுதேவன்முறித்துந்தள்ளியதைப்போன்றிருந்தது மேலும் அச்சுதனென்னும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் மருமகனாகிய அபிமன்னன் வீரவிற்றாங்கிய மகாவீரர்களுடைய இரண்டுதோள்களையும் அறுத்துத்தள்ளுதல் பூர்வத்தில் வானமளாவிய மலைகளெல்லாம் பறந்துபோய் விழுந்து பதிகள்முதலாகிய பட்டினங்களைப் பாழ்படுத்தியநாள்களில், தேவேந்திரனானவன் அந்தமலைகளின் ரக்கைகளை வச்சிராயுதத்தால் அறுத்தகற்றியபான்மையை ஒத்திருந்தது அன்றியும் உத்தரைகுமாரத்திக்கு நாயகனாகிய அபிமன்னுவானவன் பத்மயூகத்திற்செறிந்து நிறைந்துநிற்கின்ற மன்னவர்களின்தேர்களையும் அத்தேரிற்பூட்டிய குதிரைகளையுஞ் சாரதியையும் நிலத்திற்புதையும்படியாகத் தகர்த்து வீழ்த்துதல் ஒருநாள் நாரதர்செய்தகலகத்தால் விந்தகிரியானது மகமேருவின்பேரிற் கோபங்கொண்டு அந்தரமுழுதுநிறைந்து அண்டமுகடுவரையிலு முயர்ந்து சூரிய சந்திரர் செல்லும் வீதியை அடைத்துநின்றகாலத்தில் சுப்ரமண்யக்கடவுளின் அடியார்களிலொருவராகிய சகலகலைவல்ல அகஸ்தியரானவர் தமக்கு வழிவிடச்சொல்ல அந்தவிந்தகிரிதாழ்ந்தபோது உச்சியிற்கையைவைத்து ஒரேயிருக்காகப்பாதலத்திற்படியும்படி அழுத்தியதைப்போன்றிருந்தது, பின்னும் சுபத்திரையின் கர்ப்பத்திற்றோன்றிய மாசற்றமணிக்கொப்பாகிய அபிமன்னுவானவன் உந்திவிடுக்கும் கூர்மைகொண்ட பிரகாசம்பெற்ற சந்திரபாணங்கள் இந்திரபாணங்கள் அக்கினிபாணங்கள் கூட்டமாகியயானைகளின் உடல்களைத்துளைத்து ஊடுருவியோடுதல் வானமளவுமு

யார்ந்து யாவருக்கும்பயத்தைக்கொடுத்து தவத்தைக்கெடுத்துப் பவத்தைவிளைத்துக்கொண்டிருந்த கிரவுஞ்சகிரியைத் துண்டாகத்துளைத்த பாலசுப்ரமண்யருடைய கொடியவேலாயுதம்போலிருந்தது இன்னமும் தேவேந்திரனுக்குப் பேரனாகிய அபிமன்னுவானவன் கூர்மையாகத்தொடுத்த வச்சிரக்கணைகளானது துரியோதனனுடைய படையிலிறைந்த குதிரைக்கும்புகளையெல்லாம் வம்பாக எரித்துக்கரித்துத் தும்பாகப்பறக்கும்படிக்குச் செய்யுதல் இமயமலைபோன்ற புயவீரனாகிய அர்ச்சுனராஜன் பிரயோகஞ்செய்த அக்கினியாஸ்திரங்களினால் இந்திரனுடைய காண்டவவனம் எரிந்ததன்மையை ஒத்திருந்தது இதல்லாமலும் மண்டலவில்லாளியென்னும் அபிமன்னுவானவன்விடும் அடுங் கடுங் கொடுங் கணைகளானது சத்திரவட்டக்குடைகளைத் தகர்த்துச் சாய்க்குதல் இராவணனுடைய சிரங்களிற் கவிந்திருந்த சுவேதகிமுர்க்குடைகளை ஸ்ரீராமர்பாணங்களினால் துண்டித்ததையொத்திருந்தது புஜபலபராக்கிரமசாலியாகிய இணையில்லா அபிமன்னுவானவன் சாங்கோப சங்கபுங்கானு புங்கமாய்ப்பிரயோகஞ்செய்யும் புங்கவங்களால் ரதகஜதுரகபதாதிகளென்னுங் கருங்கடற்பீஞ்சுபோகாநின்றது எப்படியிருந்ததென்றால் சரசயனத்திலிருந்த சக்ரவர்த்தித் திருமகனானவர் வெகுளிமேற்கொண்டு தொடுத்த அக்கினியாஸ்திரத்தால் மகரமுதலிய சலசர உயிர்களுடன் சமுத்திரந்தீஞ்ச தன்மைபோன்றிருந்தது பின்னுந்தேவர்முதலிய யாவருந் துதிக்கும் நிசாபதி என்னுஞ் சந்திரமாபிலுதித்த வாளபிமன்னுவானவன் சகடவியூகத்தையும் சூசிகாவியூகத்தையுமுடைத்து சேனைகளையுமாய்த்து பத்மவியூகத்தையுமுனை கெடச்சாய்த்து தேருடனுல்லாசமாயுலாவிக்கொண்டிருந்தது க்ஷீராப்தியை கடைந்தகாலத்தில் மந்தாகிச்சுழன்ற மந்தாகிரியைப்போன்றிருந்தது, தன்னைச்சரணடைந்தவர்க்குப் பிராணதாரனாகிய அபிமன்னு சாணைப்பிடித்துந் தயிலநாபஞ்செய்த சதபுகக்கணைகளால் அணிவகுத்திருந்த சேனைவீரர்கள் யாவரும்மழிந்து யாவுமுடைந்து பிராணனழிந்து உதிரத்தில்விழுந்து குழைந்து-அமுந்தி-சிதைந்து-புதைந்து-வதைந்துபோகுதல் யானை விழுந்துகலக்கிய குளத்தில் அழிந்த நீலோர்ப்பலம்போன்றிருந்தது, இதன்றியும் முரசு-பேரி-காகளம் டமாரூரி [illegible]-சின்னம்-கொம்பு-குடை-கொடி-முடி-கவசம்-பத[illegible]ரம்-மாலை-வில்-வாள்-கேடையம் - வேல்- கதை- [illegible]கு ஈட்டி இவைமுதலாகிய எல்லாவற்றையும் அபி[illegible]னசேதித்து வீழ்த்துதல், அந்தரத்திலுலாவுகின்ற முழகமுடைய மேகங்களும். சந்திரசூரியர்முதலாகிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், ஆகாயகங்கையிலுலாவியமச்சங்களும், விண்டலத்தைவிட்டுவழுவி மண்டலத்திலுதிர்ந்துவிழுந்த தன்மைபோன்றிருந்தது, இந்தப்பிரகாரம் தொந்தமாகிய பெரும்போர்செய்து எதிரிகளுடைய சேனையணிகளைக்கெடுத்து. ஆறுகள்-குளங்கள் ஏரிகள்-மடுக்கள்-தடாகங்களைப்போல் பற்பலவிதங்களாக ரெத்தவெள்ளங்கள் பெருகியோடுங்காலையில் மத்தியானச்சூரியனைப்போனது எவர்களுக்கும் வருத்தமுண்டாகும்படியாய்க் குயவன்திகிரியைப்போல் விருவிறெனச்சுழன்றுவராநின்ற அபிமன்னனை வண்டுகள்மொய்த்துச் சுற்றிக்கொண்டிருக்கும் நந்தியாவட்டமாலையையும் மின்னலைவிரட்டும் நல்லிலவைப்போன்ற வேலாயுதத்தையுமுடைய துரியோதனராஜன்கண்டு சோர்வுற்று மனமெரிந்துகண்பொறிசிதற நெருங்கியபற்களை நறநறவென்றுகடித்து இருகரத்தையும் ஓங்கியறைந்து நெற்றியிற்புருவநெறிய விழித்து வியர்வைசிந்த முகங்கருகி கலகலவென்றுசிரித்துகொதித்து வெறுத்து ஐயோ சிறப்பினையுடைய பற்குனனுக்குப்பிறந்த ஒரு சிறுபையனுடையபாணங்களின் வீரங்களினால் அளவிறந்த என்னுடைய சேனாசயினியங்கள் கெடாதகேடும் படாதபாடும்பட்டு அதாகதமாயிறந்துபோவதென்றால் தர்மந்தப்பாதபேர்களும் வல்லமைபெற்ற நம்மைப்போலொத்த அரசர்களும் பாண்டவர்களாகிய பகைவரும் வலதுபேசுவார்களே மகாபாவியென்று என்னையேசுவார்களே அம்மம்ம அகண்டசாம்பிராச்சியன் இடகாத்திரதயிரியதனகுபேரன் வணங்காமுடியோனென்னும் என்பெயர் இன்றோடிரக்கவாச்சுதே இனிநானென்னசெய்குவேன் தான்போகாக்காரியம் ஓராள்ப்போனாற் செட்டென்னும் பழமொழிமெய்யாச்சுதே காரியவாதிகளல்லாத விர்தாவாகிய பேர்களை நம்பி என்காரியம் வீணாய்ப்போச்சுதே இதென்னகர்மம் என்வினை என்னைமாச்சுதே என்று தான்பூண்டிருக்கும் அம்பறாத்தூணியும் மேருமலை வெருளும்படியாகியவில்லும் அரவக்கொடியுமுடைய அரசன் கோபங்கொண் டெழுந்து கொலைபுரியாநின்றபேரணியைவிட்டுக்கூவிக்கொண்டோடுஞ் சத்தமுடைய கொற்றவர்களையெல்லாங்கூவி உலைக்களத்திலெழுஞ் சுவாலைபோற் பெருமூச்சுவிட்டு கையெடுத்தழைத்தான் அப்படியழைத்தபோது படைமுகத்திலடிபட்டிளைத்தோடிய சேனைவீரர்கள் வந்ததுமல்லாமல் எக்காலுமிளைக்காத தீரவீரர்களாகிய கர்ணனும்-கிருபாச்சாரியும்-அசுபத்தாமாவும்-ரத்தமாமிசந்தோய்ந்த வேலைத்தாங்கிய சயத்திரதனும்-சல்லியராஜனும் போராடுந்திறத்தையுடைய கிருதவன்மனும் பூரிசாரவும் யாவருமெச்சாநின்ற துச்சாதனன்முதலாகிய தம்பிமார்களும்-சோமதத்தனும்-நாமதத்தனும் ஏமதத்தனும்-மாமன்சகுனியும்-சுதாயுவும்-சதாயுவும்-அலம்பன்-அலம்புதனும்-புலிமுகனும் - அஸ்வசேனனும் இன்னமுள்ள தாமசகுணத்தாராகிய பல அரசர்களும் சளையாமற் துரியோதன மகாராஜனுக்குந் துணைவந்தார்கள்.

இப்படியாகத்திரண்டுவந்த வெப்பமான படைமன்னரைப் புத்திரசிகாமணியாகிய அபிமன்னுபார்த்து நான்பிரவேசித்த இந்தயுத்தமுனையில் வெல்லுதல்வல்லபம் இவர்களுக்கில்லையெனச் சொல்லத்தக்கதென்று பெருமைபொருந்திய தேரைநடத்தி விரைந்தனுகிவந்தான் அப்படியிருமாந்துவந்த அந்தச்சுபத்திரையின் சிங்கக்குட்டியை மதம்பொழியும் யானைகளைப்போன்ற இவர்களெல்லோருங்கூடி சிந்தைநெருப்பெழச்சினந்து மூண்டுவளைந்து சப்தமேகத்திலிடிக்கும் பேரிடியைப்போல நாணொலிகாட்டி சிறப்புபொருந்திய வில்லுகள்தோறும்பா

ணவருஷங்களைப்பொழிந்து பெருங்காற்றுடன்கூடிய தீயைப்போற் சிதறக்கலக்கி யெரித்து தங்களாற்கூடியமட்டும்பார்த்து கடன்வாங்கியும்பார்த்தார்கள் இவர்கள்தொடுக்குங் கணைகளெல்லாம்கற்பாறைமேல் விழுந்துதெறிக்கும் கடுமழையைப்போல் அபிமன்னன்பேரிற் பட்டுதெறித்துப்போய்விட்டதல்லாமல் அவனுடம்பிலழுந்தாமற் போச்சுது அதேனென்னில் சுமித்திரனென்னுஞ்சாரதிரதத்தைச்சுழற்றுஞ் சாகசத்தினாலும் அபிமன்னுவினுடைய விற்றிறங்கைத்திறங்களினாலும் இப்போது(நாமெல்லோரும் இந்தவீரனைவிசேஷித்துப் பேசிக்கொள்ளவேண்டியிருப்பதினாலும்) அந்தமகாவீரர்கள் தொடுத்தபாணங்கள் பிரயோசனமில்லாமற் றெறித்துப்போய் விட்டது.

இந்த அபிமன்னன் ஒருவன்பேரில் எத்தனைகோடி மன்னரெதிர்ந்தோர்கள், அவர்கள்தொடுத்த பல்லவங்கள் எத்தனையாயிரங்கோடி தாங்கள்கற்றிருக்கும் வித்தைகளெல்லாவற்றையுங்காட்டி எத்தனைவிதமாகிய சேவகங்காட்டினார்கள், இவைகள் இன்னவிதமாய் நடந்ததென்று எவர்களுணர்ந்து சொல்லத்தக்கவர்கள், இறைவனே, இப்படிக்குப்போராடும்போது சத்தியவாதியாகிய அபிமன்னுவானவன் எந்தெந்த அஸ்திரங்கள் எவரெவர்கள் தொட்டார்களோ அந்தந்த அஸ்திரங்களுக்குத்தகுந்த அஸ்திரங்களை அவரவர்கள்பேரில் மிகுந்த கோபத்துடன் பிரயோகஞ்செய்து நீர்மேலெழுத்தென்ன நிலைகெடச்செய்ததுமல்லாமல், வந்தவர்களில் ஒருவரையும் வஞ்சிக்காமல் ஒவ்வொருவருக்குமும்மூன்றுபாணம் உடல் புதையும்படியாய் பெரியோர் சிறியோரென்னு முறைமைதப்பாமல்மாட்டினான், அப்படிக்குவிடுத்த பாணங்கள், அவர்களுடைய இரண்டுபுஜத்திலும் மார்பிலும் பாய்ந்து அதனால் ரெத்தவெள்ளம் பாய்வதினால் கூட்டக்குலைந்துஓட்டமெடுத்தார்கள் அந்த அலங்கோலத்தைத் துரோணாச்சாரியர்கண்டு - துயரங்கொண்டு அபிமன்னனை யடித்துமட்டில்லாத தேவாஸ்திரங்களையெல்லாம்பொழிந்தார், அதைக்கண்டு அந்தஅபிமன்னுவானவன், ஒன்று-பத்து - நூறு - ஆயிரமென்னும் அம்புகளைப்போக்கி அவர்விடுத்த பாணக்கொம்புகளைத்தாக்கி நீக்கியதுமல்லாமல்,தீக்கணைகளையெடுத்து கன்மாரிபோற் றெறிக்கும்போது - புறங்கொடாத் தூயோனாகிய துரோணாச்சாரியானவர், மனங்கொதித்து - தந்தையும் - பிள்ளையும் இந்தவேலைக்கென்று வந்தவர்களோவென்று ஓடுகிறவர் களுக்குமுந்தியோடினார்; அந்தவேளையில் தந்தையாகிய துரோணாச்சாரியர் வந்தவழி நோக்கிப் பிந்தியபோது திரிபுரசம்ஹாரிக்கொப்பாகிய மைந்தன் கந்தஸ்வாமியைப்போன்ற அசுபத்தாமன்சிந்தைவருந்தி கோபங்கொண்டு தன் தேரைச் செலுத்தித் திடுதிடென வந்து வில்லைவளைத்து பலபக்கங்களிலும்உருவும்படியாய்ப்பாணங்களைவிடுத்தான், அப்போது அபிமன்னன் அவன்றொடுத்த அம்புக்கிளையாகவிடுத்த சரமாரியால் பாதாதிகேசவரையிலும்முழுகி உதிரம்பெருகப் பரதவித்துப் பின்னிட்டான் உடனே உலகமெல்லாம் உன்னும் கொடையாளி கன்னனென்னும் பலசாலியாகிய வீரன், விஜயமன்னவன்பிள்ளையாகிய அபிமன்னுவையெதிர்ந்து மேகத்திலிருந்தெழும் மின்னலின்றொழுங்கைப்போல் உருப்பேதமாகிய பாணங்களை ஒருநூறு கோடியென்னத் தொடுத்து அபிமன்னுவின்றேகந் துளைபடவடித்தான் அப்போதந்த அபிமன்னுவானவன் பற்பலவிதமாகிய பாணக்கூட்டங்களை அமோகமாகத்தொடுத்ததினால்கன்னனானவன்-தான்றொடுத்த அஸ்திர-சஸ்திரங்கள் யாவுமழிந்து தேகங்கிழிந்து உதிரம்வழிந்து மதியழிந்து மனமடிந்து இனிநாம் என்ன யுத்தஞ் செய்யப்போகிறோமென்று இளைத்து எயியதேருடன் ஓடியபேருடன் மாறுமுகமாயோடினான்.

அதுகாலையில்,கிருபாச்சாரியருங்கிருதவன்மனும் எதிரேறிச்சென்று இருமாந்துநின்றுஇவருடைய ஆண்மையுமறிலைபெறும்படியாய்ஒருபுறத்தில்வரும் அபிமன்னுவை இருபுறத்திலும் வளைத்துக்கொண்டு பனித் தூறல்போற் பகழியைத் தூற்றினார்கள்-அந்தச்சமயத்தில் ஒப்பற்ற அபிமன்னுவாகிய ஒருவன் வில்லிடத்திலிருந் துந்திய ஒவ்வொருகணைகளால் மேற்கூறிய இருவரும் தேர்-குதிரை சாரதிமுதலிய யாவும்போய் பற்களுந் திறந்து விற்களுமுறிந்து வெறுங்கைவீரராயோடிப்பிழைத்தார்கள் அவர்களைக்கண்டு மாமன்-சகுனியும், வெகுண்டு அவனுடைய சிரேஷ்டபுத்திரன்-உலூகனும் இன்னமுள்ள காந்தாரதேசத் தலைவரநேகரும் நால்வகைச்சேனையும் பெருங்கடல்போ விரைந்துவந்து இன்றையப்போரில் ஜெயம் எங்களுடையதென்று மங்களம்பாடிச் சொல்லும்படியாக வெல்லுகிறோமென்று,வீரவார்த்தையைப்பேசிக்கொண்டு அறியாதபயலுக்கு யாவரு மிளைக்கிறதாவென்று யேசிக்கொண்டு அபிமன்னுக்கெதிரில் வந்தணுகினார்கள் வந்தவுடனே பந்துபோற் சகுனி குமாரனாகிய உலூகன் றலைவிற்றென்று ஆகாயத்திற் கதறிக்கொண்டுபோவதைக் கருவிக்கொண்டு வந்தவர்கள் கண்டு-ஐயோவென் றேங்க சகுனிபார்த்து அடாமகனே - என்னருகில் வந்தையே உனக்கு எமன் எங்கிருந்து காத்துவந்தான், என்கண்மணியே கைசலிக்க-மெய்சலிக்க - யுத்தஞ்செய்து தான்-காலங்கழித்தையா, அடாகண்ணே, என்னமுன்னுக்கு வாராதென்று ஏங்கி வில்லெடுத் தோங்கினான்-சகுனியானவன் உடனே அபிமன்னுவின் கணைகள்வந்துநின்று இதுதான் சமயமென்று மாமனுடைய மருமஸ்தானத்தைக் கிழிக்கவேகெட்டவர்கள்கெடட்டும் நட்ட நமக்கேயென்று போரைவிட்டுவிட்டு மிகவுநொக்குமுற்று பிள்ளை வாய்ப்பது புண்ணியவானுக் கல்லவோ நாம் பேராசைகொள்ளுவது விருதாவல்லவோ வென்றுபேசிக்கொண்டோடினான்-சகுனியானவன் இவனையேசிக்கொண்டோடி வெகுமன்னர்களோடிந்து மடிந்தார்கள்-அவடத்திலிருந்த ராஜாதிராஜனாகிய துரியோதனன்றம்பி விகர்னனென்னு நீதிமான், வின்னாணி ஏற்றி அபிமன்னன் விடுக்கும்பாணங்களை மாற்றி தங்கள் சேனைகளின் துன்பத்தையாற்றி தன்னைக் காப்பாத்திக்கொண்டு வரும்போது துன்முகன் முதலாகிய தம்பிமார்களும் வந்துகலந்து மலைந்து மிகுந்த சமர்தொடுக்கார்கள்-அவர்களை நன்றாகமாக

ப்பார்த்துவிஜயகுமாரனாகிய அபிமன்னு-ஐயா, நானுங்களு
க்கெதிரல்ல உங்களுக்கெதிரிளங்கள் பெரியதந்தையிருக்
கின்றார் ஆகையால் என்பேரில் நீங்கள்வந்ததும்போனது
ந்தெரியாமல் புறமுதுகிட்டோடிப் பிழையுங்க ளென்று
பூர்ணசந்திரோதய வாளிகளாற் றாக்கிப்போக்கினான்-அத
னாலடியுண் டிடியுண்டோடும்படியாகிய தம்பிமார்களின்
பாங்கிலிருந்த சல்லியராஜனும் அவன்றம்பியும்-வில்லேவ
லைத்துக் கொல்லவரும் வேங்கையைப்போற்றாவித் தே
ருடன்மேவிப் போர்செய்யும்போது கார்நிறக் கண்ணன்
மருமகனுடைய கணைகளினாற் சல்லியன்றம்பி தலையறுந்
தொழிந்தான், மலைபோற் றம்பிமாய்ந்தது நோக்கி சல்லி
யனொந்து சவ்வியசாசியின்பிள்ளையை வளைத்துத்தாக்கு
ம்போது துள்ளுகாளையாகிய அபிமன்னுவானவன் மழை
கால வருஷங்களைப்போன்ற கணைகளைத்தொடுத்துச் சல்
லியனுடைய வில்லையும், கவசத்தையும், வீரபட்டத்தை
யும், நொடியிற் பொடியாக்கினான், அப்போதே சத்துரு
க்களுக்கு யிளைக்காத கோடையிடிபோன்ற சல்லியனான
வன் இந்த வில்லாளியாகிய வாளபி மன்னனை வாழ்த்தி
பெரியானைத் துணைக்கொள்ள வேண்டுமென்று மரியா
தையுடன் திரும்பிப்போய்விட்டான்.

இந்தப்படிக்கு பின்னணி முன்னணி முன்னணி பின்
னணியாக முனைந்துவந்து போராடும்படியாகிய ஆயுதங்
களான வாளாயுதம்-வேலாயுதம்-சூலாயுதம்-கெதாயுதமு
தலிய வாளினையுடைய வெற்றிவேந்தர்களின் தேகமுழு
மையும் அந்த அபிமன்னுவின் தயிலதாபம்பண்ணிய வா
ளிகளானது இலைத் துளைப்பணம்போற் றுளைத்து உருவி
யோடுதலினால் ஆயுதங்களெல்லா மொடிந்து பதாதிகளு
மழிந்து ரணகளமுழுவதும் நிறைந்து செத்தவர்கள்போ
க மற்றவர்களுடைய தேகம் வேறுமுகம் வேறு சிந்தை
வேறாகக்கலங்கி வந்தவழிபார்த்து நொந்து நைந்தோடி
னார்கள் இதுகளையெல்லாஞ் சேனாநாயகராகிய துரோணா
ச்சாரியர்கண்டு ஆச்சரியங்கொண்டு நெருங்கியுத்தஞ்செ
ய்ய விரும்பிய மைத்துனனென்னுங் கிருபாச்சாரியர்மு
தலாகிய பேர்களுக்கு நேரே முகத்தைத் திரும்பிக் கொ
ண்டு பூமண்டலாதிபனாகிய துரியோதனமகாராஜனுடை
ய நவரத்ன கசிதகுண்டலங்களாடி நின்ற காதுகளிற் கே
ட்கும்படியாகவும் மனத்திலன்புருக்கவும் மேகமுழக்கம்
போலிரைந்துசில வசனங்களைச்சொல்லத்தொடங்கினார்.

அதாவது பூமிமுழுதாளும் நேமிதாங்கிய சாமியேகே
ளும் ஒருதவியுமில்லாமல் ஒருவில்லும்-ஒருதேரும்-ஒரு
சாரதியுங்கொண்டுவந்து அநேகம் பெருதவியைப்பெற்
ற பலவில்லும் பலபேரும் பலதேரும் பலபல சாரதியு
முடைய நமது படைகளையெல்லாம் பாழாக்கி பலவான்
களாகிய வீரர்களெல்லாருந் திகைக்கும்படி செய்து நடுக்
கமில்லாமற் றிரியும் முனைவீரனை அர்ச்சுனகுமாரனை
வன சந்தஸ்வாமியென்று சொல்லத்தக்கதோ அல்லது
முகுந்தனென்று பேரிட்டழைக்க வேண்டியதோ உமாப
தியென்றுரைப்பதோ எனக்கொன்றுந் தோன்றவில்லை
மேலும் இவனொருவன்வந்து யுத்தஞ்செய்யும்போதேநா
மடிதாக்காம லிருக்கின்றோமே இந்தப்பிள்ளையின் தந்தை
மார்களும் சகோதரவர்க்கமும் மாமன்கும்பும் படைத்து
ணைவந்த மன்னரநேகரும் இவனுக்குதவியாய் வருவார்க
ளாகில் திரிபுவனங்களு மென்னபாடுபடுமோ தெரியா
தென்று தேசிகன்சொல்ல இந்தவார்த்தை இராஜாதிராஜ
னுடைய இரண்டுசெவிகளுக்கு மேற்காமல் கர்னகடூரமாய்
கடுங்கோபமு முடையவனும் வித்தியாமுணர்ந்த வேந்தரி
ற்சிறந்த வித்துருவாகிய வேதியனைப்பார்த்து ஆ-ஆ, ஐய
ரே-ஒரு கொசுப்போன்ற சிறியபையனை ஒருபாணத்தால்
கொலைசெய்து போடாமல் அவனொரு வீரனென்று அ
திரத வீரவருக்கத்திற் சேர்த்து உம்மைப்போல ஒத்த
உத்தமன் றுதித்து கொண்டாடுவது எல்லா நன்மைகளி
லும் மேலாயிருக்குதென்று நகைத்து தனது சமீபத்திலி
ருந்த வெகுவீரர் முதலாகிய கர்னனைநோக்கி அண்ணா-
தருவேதியர் சொன்னவார்த்தையைக் கேட்டீரா-மெத்த
நன்றாயிருக்குது கலங்கி எண்ணமிட்டுக்கொண் டிருக்கு
ம் மனத்தைப் புண்ணாகச்செய்யும் பெரியோர்கள் இவர்
களைவிட இனி வேறொருவரைச் சம்பாதிக்கவேண்டியதி
ல்லை தலைமாட்டுக்குக் கொள்ளி தானே தேடிவைத்துக்
கொண்ட தன்மைபோல் நாமிவர்களைச்சேர்த்து வைத்து
க்கொண் டிருக்கின்றோமென்று துரியோதனனுரைத்து
தீர-வீர-திடவான்களைப் பார்த்து மறுபடியுஞ் சொல்லு
கின்றான்.

ஓ-வேந்தர்களே, இப்போது நமது வியூகமத்தியில்வந்து
புகுந்த அந்தமைந்தனானவன் தனது தாய்தந்தையர் முக
த்தில் மறுபடியும்போய் முழிக்க வொட்டாமல் உங்களு
டைய கூர்மையுஞ் சுடருங் கூட்டுறவாகிய ஆயுதங்களை
க்கொண்டு சாய்த்து சீக்கிரத்தி லுயிர்மாய்த்து விண்ணு
லகேற்றி விடுங்கள் விஷக்கணைகளையுடைய வில்வேதிய
னை நம்பி மயங்கிக் கெடாதீர்கள் அந்தப் பயலை விடாதீர்
கள் மன்னவர்களே சாக்கிரதை சாக்கிரதையென்று தன்
னுடைந்தகோபங்கொண்டு தானிபன்சொல்ல, அந்
தச்சொல்-சொல்லி ஒயுமுன்னமே ஒப்பற்ற சாமர்த்திய
முள்ள தீரர்கள் பெருங்காற்றடிக்கப் புரண்டெழுங் கட
ற்போற் பொங்கியெழுந்து புறப்பட்டவர்களை மடக்கி நி
றுத்தி பார்க்கக் கண்கூசும் பத்தினியாகிய உக்கமி யுடுத்
திய வஸ்திரத்தைத் தொட்டிழுந்த துஷ்டக்காளையென்னு
ம் துச்சாதனனானவன் வணங்காமுடி மன்னனை நோக்கி
ஏ அண்ணா பத்மவியூகங்கட்டிய பராக்கிரம இராஜசேனைக்கு
ட்புகுந்து செயித்துத்திரும்பிவர வேண்டுமென்று என்
ணங்கொண்டு வந்திருக்கிற அபத்தக்காறன் தங்கையாகி
ய சுபத்திரையின்பிள்ளையை தேவரீர் சிந்தையில் நினைக்
குமுன்னமே, நொந்தானென்று ஒருகணையால் அவனு
யிரைத் தின்றுவிடுகிறேன் எனக்கொருவருடைய உத
வியும்வேண்டியதில்லை அதிவிதக்காச்சனுங்கருமாறப்பாச்
சனும்போல்அபிமன்னன்இறந்தானென்றுநாரணனுங்காரண
னுங்கேட்டுபுத்திரசோபத்துபரால் உடனேசெத்துப்போ
வார்கள், அப்பால் யுத்தமென்பதில்லை நமக்கொரு சத்
துருக்களுமில்லை, நம்மைத்தொடர்ந்த எல்லாச்சனியும்,
இன்றைக்கு முடிந்துபோமென்று பிதற்றி கோபாக்கினி
யுடன் யுத்தமுனைக்குச்சென்று வெற்றிவில்வளைத்து அ

நேகமாயிரம் சஸ்திரங்களை யெடுத்து இடியுமழையும் மின்னலுங் காற்றும் ஏககாலத்தில் நேரிடுந்தன்மைபோல் வடவானலம்வந்து வளைந்தவாறுபோல் மாறுமாறாக நூறுநூறாகப் பொழியும் வடிக்கணைகள் தாறுமாறாக வருவதை மாயன் மருகனாகிய அபிமன்னுவுணர்ந்து அகோரம் பொருந்திய பாணங்களினால துச்சாதனன் றொடுத்த பாணங்களை ரெண்டி ரெண்டாய்த் துண்டாக்கி அவன் கைக்கொண்ட வில்லைக் கண்டகண்டமாயறுத்து ரெண்டாக்கி அவன்றேகத்திலும் ஆயிரங்கணைகளைப் பாயவிடுத்தான்.

அப்போது சல்லடைக் கண்போலுஞ் சாளரம்போலும் சரீரமெல்லாந் துளைக்க துச்சாதனன் மாய்ந்தவனைப்போல் அவசரமாய்த் தேரின்மேற் சாய்ந்தான்-அந்தவேளையில் அபிமன்னுவானவன் துச்சாதனனைப்பார்த்து அப்பா சிற்றப்பா: நிறைவாகிய தர்மமுதலிய சத்தியங்களையுடைய-தர்மராஜனை இராஜசபையில் வரை-யிறை-முறை துறை-யில்லாத கொடிய வாக்கியங்களினால்மனம்வருந்தச் செய்தாயென்று மதிமருண்டு சேட்டிருக்கிற யான் ஓகோ-உன்னுயிரை எமலோகத்திற் கிப்போதே அனுப்பிவைக்க யெத்தனித்தேன் ஆனால்-பழுதில்லாத என்பெரியதந்தையின் சபதத்திற்குக் குறைவு வருமேயென்றெண்ணி கொஞ்சங் கிர்பைவைத்து உனக்குயிருதவிசெய்தேன் விவேகமற்ற மிருகமே விரைவாகவோடிப் பிழையென்று கோபித்து அக்ரமனாகிய விக்ரமனுடைய பக்கமெரியும்படிக்கு அக்கினிச் சிலிமுகங்களை வீசினான், பராக்ரமப் பார்த்தன்பெற்ற பாலன் அந்தக்கணையடியால் பிடிபட்டவில்லு மொடிபட்டு உடலுங்கிழிந்து உதிரம்வழிந்து வெல்லுகிறேனென்று விளம்பியெழுந்த சொலலுமிழந்து உண்டோ இல்லையோவென்னும் பிராணனுடன் ஒடுங்கி அடங்கி மடங்கிவீழ்ந்த துச்சாதனனைத்தேருடன் சாரதிகொண்டுபோய்த் தேற்றினான்.

இப்பால், மலைகள் பொடியாக விடிக்கு மத்தக மருப்பினையும்-பருத்த உடலையுமுடைய மதயானையினாலும்வெல்லப்படாத வீரசிங்கத்தைப் போன்றிருந்தான் அபிமன்னனென்னும் அதிசூரன், அந்தவேளையில் துச்சாதனன் அபிமன்னுவினாலடிபட்டு அயர்ந்து வீழ்ந்தானென்றுணர்ந்து சிந்தைதளர்ந்து தேம்பி-வாடி துயராலுடைந்துதுன்பமடைந்து தளர்ந்த துரியோதனராஜனையடுத்து பற்பல வசனங்களினாற் றேற்றி உருக்கியசெம்பிலும் முருக்கம்பூவினுஞ் சிறந்து சிவந்த கோபக்கண்ணையுடைய கன்னன் ஆ ஆ-இத்தன்மையாக யுத்தஞ்செய்த அபிமன்னுவென்னும் புத்திரனை ஒரு கணைக்கிரையாக்கிறேன் அவனுடன் வந்தோரையும் உயிர்போக்கிறேனென்று தேரேறி வில்வளைத்து அபிமன்னனென்னும் ஒரு சிங்கக்குட்டியை கோபமுடைய் கன்னனென்னும்யானை கொல்லப்புறப்பட்டதைப் போல் வந்து கடுமையாகக் கொடுமைகொண்ட கணைகளை நூறுநூறாக நொடிக்குட் பிரயோகஞ்செய்ய அவைகளை அந்த அபிமன்னுவானவன் வேறுவேறாகத் துண்டித்து வீழ்த்தி இலைமுகப்பகழி-எரிமுகப்பகழியென்னும் இருபாணத்தை யெடுத்து அங்கதேசாதிபனுடையமார்புகிழியும்படிக்குப் பிரயோகஞ் செய்ய செங்காந்தம்போல்வந்துவிழுந்த அந்தபாணங்களினால்மார்புதுளைபட்டுஆற்றின்பெருக்கம்போல் ரெத்தங்களோடஅதனாற்களைபட்டுஅயர்ந்துபயந்துதேரின்மீதுவீழ்ந்தான் இப்படிவீழ்ந்த கர்னனை அவனேறிவந்த தேருடன்சாரதிகொண்டுபோயினான் அக்காலையில்கன்னிப்பருவத்திற்குந்திதேவியாரால்விடப்பட்டபெட்டியை ஆற்றில்மிதந்துவரக்கண்டெடுத்து அதிற்குழந்தையாயிருந்தகர்னனை பிள்ளையாகவளர்த்தபிற்பாடு தேர்ச்சாரதிக்கும் அவனுடைய பெண்சாதி இராதையென்பவளுக்கும் சிலபிள்ளைகள் பிறந்து வளர்ந்துவருகையில் கன்னனென்னும் அண்ணனுடன்சேர்ந்து திரிதராஷ்டிரனுடைய அரண்மனையில் உத்தியோகம்பெற்றிருந்தார்கள், அவர்களில்மூத்தவனாகிய ராதனென்பவன்போர்புரிந்து மற்றோர்முகத்தினின்றபோது அண்ணனாகன்னன் அபிமன்னனால் அடிபட்டுச்சோர்ந்ததைக்கண்டு உடலுமனமும் உருகிச் சகியாமல் அதிவேககோபங்கொண்டு வெவ்வியபோர்முகத்திற்சென்று மேகம்போன்றவில்லைவணக்கி நாணிபிணக்கி கூர்வாளிகளைக் கார்வருஷம்போற் பொழியும்போது அபிமன்னன் செழித்ததிர்த்து ஒருமுகப்பகழியென்னும் ஒருகணைதொடுத்து, அழகியமுடித்தலையை யறுத்துத்தள்ளினான் ஒப்பில்லாச்சுப்ரதீபம்போன்ற அபிமன்னுவானவன், அப்போது, மாருபாணனாகிய துரியோதனமன்னனும் அவனுக்கிசைந்தகன்னனும் மற்றப்போர்களும், கும்பாக்கூடி வம்பாகப்பாடி. போர்புரிந்து அம்பறுத்தூணியிலிருக்கும் பாணங்களெல்லாம் அம்பினால் அழியும்படிவிடுத்து சப்திக்காமல் பொன்வாளியென்று புறப்பட்டுவராநின்ற அபிமன்னுவின் கணைகளானது, எதிராளியின் மானமும் வெட்கமுமாற்றி உடலெல்லாம்பீறி உலர்த்தும்போது பித்தறிவந்த கன்னன் புறமுதுகிட்டோடும் பெரும்வீரருக்கு முன்னிட்டோடும் பேதமையை, சாமபேததானதண்டமுதலிய யாவுமுணர்ந்த தனுர்வேதியராகிய துரோணாச்சாரிபர்கண்டு பின்தொடர்ந்து ஐயோ அப்பா அரசனுக்குயிர்த்தோழனாகியகன்ன அறியாதபையன் அபிமன்னனைச்செயிக்கமாட்டாமல் அவனாலடிபட்டிளைத்தோடுதல் உங்களுக்குத்தக்கதோ உலகம்பழிக்கும்படியாகிய யீனமல்லவோ மானமுள்ளவர்களே க்ஷத்திரியகுலத்திற்பிறந்த க்ஷாத்தரோயென்று தூபவனாகிய சேனாபதி சொல்லித்தொடரும்போது இவரைத்திரும்பிப் பார்க்கக்கூடாமல் வெட்கமு நாணமும் மேலிட்டபடியால் துரியோதனராஜன் இரிந்து பிரிந்தோடிநின்ற இடத்திற்றான் சளுஞ்சென்று பெரும்போர்முனையிலெதிர்த்து காயும்படியாகிய திப்பொறிக்கணைகளைத்தொடுத்து மன்னவர்களும், ரதகஜதுரகபதாதிகளுமேலிட்டபோது கனப்படவேண்டுமென் றுயருங்குடியரைத் தலையெடுக்கவொட்டாமற் றாழ்த்துங்கடனும் பொய்யும்போல இந்தவீரர்களை மேலிடவொட்டாமல் இவர்களெல்லாரும் வற்றியுலர்ந்த சருகாகவும் அபிமன்னன் தீயாகவுமிருந்துகாய்ந்தருக்கினான், அதனாலநேகம்பேர் மாய்ந்தார்கள், அந்தகாலையில் தம்பிபுத்திரனாகிய அபிமன்னன் சத்துருக்கள் இளைத்துச்சாவும்படியாய் வெற்றிமிகுந்த யுத்தங்கள் செய்

துவரும்போது இதழ்விரிந்த பரிமளமிகுந்த மலர்மாலைய
ணிந்த வீமசேனமகாராஜன் திடுதிடுவென்றோடி வளைந்த
விற்றுங்கி அசத்தியத்தால் இளையாச்சொற்றுங்கியிருந்த
தர்மராஜனுடைய பாதகமலத்தில்வணங்கி கண்கலங்கி ச
த்துருக்களெல்லாரும் வருந்திவிளைத்து மாயும்படிக்குப்
புகுந்து அமர்செய்யாநின்ற அபிமன்னுவின்பேரிற்பரிவி
லையுடையவனாகச் சோபங்கொண்டுரைத்தான் அண்ணு
யானைகளநேகம்-தேர்களநேகம் - குதிரைகளநேகம்-பதா
தியரநேகம் - வேலநேகம்-வாளநேகம் - வில்லநேகமுத
லாகிய ஆயுதங்களைக்கொண்டு சப்தமேகமும் பிரசண்ட
மாருதமும் கூடிவிளையாடும் தன்மைபோற்கொதித்து அ
மர்செய்கின்ற இந்தப்பத்மவியூகமத்தியில் அறியாத சிறிய
பாலகனே வலிமையுடன்சென்று யுத்தஞ்செய்பத்தக்க
து அவனுலாகுமோ, ஐயோ இதுமகாபாவம், மகாபாவ
ம், எனண்ணு தேவரீரெனக்கு விடைகொடுத்தருளும்
நானவனுக்குத் துணையாகப்போகிறேனென்றுசொல்லி
அந்தகர்மராஜனுடைய இருபாதபத்மங்களையும்பற்றி நெ
ற்றியிலுங் கண்களிலு மொத்திக்கொண்டு ஸ்நேகத்தியப
மாகப்பேசி எனக்கொப்பானவர்களெவர்களுமில்லை, எ
னக்குத் தடையறவிடைகொடுமென்று அண்டர்புகழுந்
தண்டாயுதத்தைக்கைக்கொண்டு செலவுகேட்ட வீமசே
னன்பேரிற் றயைபிறந்து தர்மநந்தனன் உத்தரவுகொடுக்
க தன்மனதினினைத்தபடி முடிக்குங்காரியவாதியாகிய க
தாபாணி வீமசேனன் மனோவேகம்போன்றதேரைச்செ
லுத்தி பற்பலமண்டலீகரும் மன்னவர்களும் பதாதிக்கூ
ட்டமுதலாகிய சேனைகளும் தன்னைச்சூழ்ந்துவரும்படி
யாய் சகலவிதவாத்தியங்களுடனே புறப்பட்டு தன்னுரு
ச்சாயையைப்போல்சேனைவீரர்ள்முதலியபேர்களுந்தொ
டர்ந்துவர நேரில்நேரிட்ட வீரர்களையெல்லாந் தலையுருட்
டிக்கொண்டு சத்துருவின்சேனைகளென்னுங் காட்டுக்கு
வாய்ந்த வீமசேனனென்னும் பெருந்தீயானது புகுந்து
நிறைந்து திசாதிசைகளெல்லாம்கொளுத்தி மாய்க்குங்கா
லையில், மாய்கையில்மயங்கிய வறிஞரைப்போல் வேறொ
ருசிந்தையுமில்லாமல் நினைவற்று மயங்கித் தங்களைத்தா
ங்களேமறந்துநின்ற சக்கரவியூகச்சேனைகளெல்லாம் ஈயை
யொத்து இறக்கும்படியாய் ஆண்சிங்கமனைய வீமசேன
ல் கருடனைப்போனின்று கலக்கினன்.

அந்தவேளையில்," கலிங்கர்-சோனகர்-மகதர் - மாகதர்-
கன்னடர்-கங்கர்-கொங்கர்-கௌசலர்-தெலுங்கர்-ஆரியர்
பப்பரர்-துளுவர்-சீனகர்-சாவகர்-சிங்களர் - குலிங்கர்-மா
ளுவர்-கள்மர்-ஒட்டியர்-குகுதர்-பொப்பளர்-கூபகர் இவ
ர்கள்முதலாகிய தேசபாஷைராஜர்களெல்லாரும் நெருப்
புப்பொறிபோற் சீறியெழுந்து வாயுகுமாரனாகிய வீமசே
னனை வளைத்து உருத்துப்போர்செய்தார்கள், இப்படியாக
ப் போர்புரிந்த பற்பலபாஷை மன்னர்களெல்லாரும் வீ
ரசொர்க்கஞ் சேரும்படியாய் விருதுவித்தகனாகிய வீம
சேனனுடன்வந்த பலபாஷையைக்கற்று வீராவேசவே
ட்கையைப்பெற்ற மன்னவரெல்லாரும் பின்னிடாமற்று
ணிந்து புகுந்துவெட்டினார்கள் அதனால், நேமிவியூகங்கெ
ட்டு நெடியசேனைகளெல்லாந் தறிபட்டு உயிர்விட்டு அ
ழிபட்டது, அப்படியிறந்தபடைகள் எப்படியிருந்ததென்
றால் இந்தவீமசேனன் வனவாசஞ்செய்தகாலத்தில் மந்
தாரைமலருக்காகஅளகாபுரியிற்சென்றுகோபமுகங்கொ
ண்டு உறுக்கிப்போர்புரிந்து முறுக்கியநாளையில், எக்ஷரா
க்ஷசாள் முதலாகிய அசுரப்படைகளெல்லாரும் எப்படி
யழிந்தார்களோ அப்படியிறந்தார்கள் உடனே மருத்து
மைந்தனானவன் நெருங்கியகாளமேகம்போன்று முழங்
கிக் கோபங்கொண்டெழுந்து எழுகிரற்செய்த தண்டா
யுதத்தைக்கைக்கொண்டு சக்ரவியூகமத்தியிற் புகுந்து கர
கர கரவென்றுசுழற்றி சாடும்போது ஸ்ரீராமராகிய விஷ்
ணுவைச்சுமந்து ராக்ஷதப்படைகளைப் பக்ஷணஞ்செய்த
ருளிய ஆஞ்சனேயர் இந்தப்போரையும் ஒருகைபார்ப்
போமென்று இவடம்வந்தாரோ என்னமோ தெரியவில்
லையேயென்று அச்சங்கொண்டுமேலபடியும் அநுமாரல்ல
இவன் வீமசேனனென்று அவரவர்கள்தேறி வெவ்விய
கோபாக்கினி விரியும்படிக்கு நிலைத்துநின்றபோது எரிக்
கும்படியாகியபொறிகள் சிதறிக்காயுங் கண்களையுடைய
இராஜாதிராஜன் நைந்து மனநொந்து ஆகாயத்திலுலவா
நின்ற மேகம்நீருண்டிடித்து விழுங்கோடையிடியால் நடு
நடுங்கித் தலைசுருங்கிமாயும் பாம்புகளைப்போலும் ஆக்ர
மித்தெழுகின்ற சிங்கம் அசைந்து புகுந்துவரக்கண்டு அ
ழிந்து இடம்விட்டொழிந்து ஓடுகின்ற யானைக்கூட்டங்க-
ள்போலும் நமதுசேனைகளெல்லாம் ஒரு அபிமன்னுவி
டுங் கைப்படையினால் அழிந்து ஒழிந்து நெளிந்து நெ
ரிந்து முறிந்து. தாமரையிலைச்சலம்போல் தத்தளித்துக்
கொண்டிருக்குஞ் சமயத்தில் இந்தவீமசேனனும் வந்து
சேர்ந்து அபிமன்னனுடன்கலந்து இருவருமொன்றாகக்
கூடிப் புகுவார்களாகில் ஐயையோ, பெருங்காட்டையெ
ரிக்குங் காடாக்கினியுடன் பிரசண்டக்காற்றுங் கலந்துவி
சுவதைப்போலாகுமல்லவா, ஆகையால் என்மாயாசகு
னியும், சிந்துராஜனும் பூரிமுதலாகிய அரசாடங்கலுமொ
ரோமுகமாகச்சென்று வீமசேனன் அபிமன்னனுடன்வந்
து கலக்காத விதமெப்படியோ அப்படிக்கெல்லாம் வளை
த்து உயிருக்கொட்டி யுத்தஞ்செய்யுங்கள் மற்றப்படை
வீரர்களாகியபேர்களும் ஆண்சிங்கம்போன்ற தம்பிமார்
முதலாகிய விகர்னனும், அசுபத்தாமாவும், எதிர்த்துபல
மாகிய யுத்தஞ்செய்வீர்களாகில் இவ்விருவரையும் இப்
போதேவென்று எளிதிற்கொன்றுவிடலாமென்று அரவ
க்கொடியோன்சொல்ல அந்தமொழிகேட்ட வீரர்கள்யா
வரும் அப்போதே அவடத்திற் செலவுபெற்றுக்கொண்
டு சாக்காலமேகம்போல் முரசவாத்திய முதலியதுமுழ
ங்க முனையாகச்சென்றெதிர்த்து கோபங்கொண்டு ரதக
ஜதுரகபதாதிமுதலிய பலபலசேனைகளும் தீப்பட்டெரி
யுஞ் செங்கனலைப்போற்றிரண்டு வீமசேனனுடனேயும்
வீமசேனனுடன்வந்த படைமன்னர்களுடனேயும் கைக
லந்து போர்முடிக்கினார்கள் அப்போது வாயுகுமாரனா
னவன் கண்மலர்சிவந்து அழகியதிருமுகம் வியர்த்து இ
ருதோளும்பூரித்து கலீரெனநகைத்து மணிமகரகுண்ட
லங்கள் பிரகாசிக்கவசைத்துமுழவுவாத்தியமும்சிங்கநாத
முமுழங்கிவரவிரைவிற்சென்று பாணப்பிரையோகங்கள்

பண்ணி துரியோதனன்சேனைகள் வருந்திவாடும்படியா
க அடித்து அவரவர்களுடைய தங்கம்போன்ற அங்கமெ
ல்லாந்துளைத்து ரத்னமுடியுடன் தலைகளற்றுவிழும்படிய
றுத்து வாகுவலயங்களுடன் தோள்கள்துணிபடமுறித்
து ஆபரணங்களுடன் மார்புகிழியப்பிளந்து வீரகண்டா
மணியுடன் கால்கள்முறிபடச்சிதைத்து வேலாயுதமுத
லிய ஆயுதங்களைக்கொண்ட கைஓடிய அடித்து உயர்ந்த
ரதங்களுடைபடவொடிந்து குதிரைகள் தறித்து நடுவற
வறுத்து வளைந்தவிற்கண் முதலாகிய பாணங்கள் துண்ட
மாயறிந்து பொடியாகச்செய்து உதிரம்வழிந்து யுத்தபூ
மியைவிட்டு உடலெலாங்கிழிப் பிறித் தாறுமாறுகச்செ
ய்யும்பாணங்களுக்கு எட்டாமற்றளர்ந்தோடாநின்ற இரா
ஜர்களை வணங்காமுடியோன்கண்டு பற்பலவுசைகள் புக
ன்று கலகலவென்றுநகைத்து முகங்கருகி மனதிற்கோ
பாக்கினியுடையவனாய் திணிந்தமனத்துடன்மிகுதமேனு
ம் ஓரிடத்தினிற்காமல் ஓடிவரும்போதுபடைத்துணையா
கவேண்டி நாடிவராநின்ற தன்மைத்துனனாகிய சிந்துதே
சத் திலகனைக்கண்டு அபரிமிதமில்லாத இரக்கவார்த்தை
களை அநேகமாகச்சொல்லி இதுநல்லசமயம் இது நல்ல
காலமென்று புகழ்ந்து மகிழ்ந்து புஜபலபராக்கிரமவீரமும்
மகமேருவைப்போன்ற பலமும் வெற்றியும் அரசாக்ஷிநீ
தியும் தர்மமும் மன்மதாகாரவடிவமும் சத்தியமும் சம
யோசிதமும் சாதுசங்கப்பழக்கமும் தாராளமாகியகொ
டையும் இவடத்தினிற்குஞ்சேனைமன்னர் முதலாகியபட்
டவர்த்தனர்களைப்பார்க்கிலுஞ் சிறந்த திடவீரசாத்திரத்
தோற்றமும் மதிப்பும் இதன்றியும் துண்டமாகியபிறையு
ம் கண்டநிரம்பியகரையும் வண்டலோடியநதியுந் தரித்த
ருளிய சிவபெருமானது பாதாம்புயத்தை தெளிந்தமன
த்தால் சிந்தித்துப்பணிந்த திவ்யஞானமுடியும்பெற்றஎம
துமைத்துனனே நீர் எங்களுக்கோருதவிசெய்யவேண்டு
ம் அஃதியாதெனிலோ வெற்றிபெறும் விஜயனுடைய
தேர்ச்சாரதியின் மருமகனாகிய அபிமன்னனுடன் மலைக்
கொப்பாகுங்கெதைதாங்கிய தோளினையுடைய வீமசே
னன்வந்து கலந்துகொள்ளுவானாகில் அவ்விருவரையுஞ்
செயித்து வெற்றிபெறுவோமென்று உன்னுவது அரு
மை ஆதலால் ஒருயுத்திதோன்றுது ஒருவரோடொருவ
ர் சேராமற்பிரித்துவிட்டால் யுத்தஞ்செய்து வெல்லுவ
தற்கு நமக்கு மெத்தச்சுளுவாயிருக்கும் ஆனதால்மதனை
யெரித்த நெற்றிக்கண்ணினையுடைய மகாதேவரின் அநு
க்கிரகத்தால் நீபெற்ற வரத்தைச்சிந்தித்து யுத்தமுயற்சி
யை நடத்தவேண்டியகடமை உம்முடையதாயிருப்பதி
னால் ஆதிபகவானாகிய அடியார்க்கெளியவன் உமக்குக்
கொடுத்த வரப்பிரசாதத்தைக்கொண்டு முனைமுகத்தில் நீ
ரேமுதலாளியாகநின்று உன்னெதிரில் வராநின்ற வீமனை
புரளுஞ் சமுத்திரம்போலொத்த நமதுபதாதிகளும் ப
டையரசர்களும் கூடிவளைந்து ஆளைமடக்கிப் போர்புரிந்
துக்கொண்டு நீர் யிவடத்திலிரும் நான் பலமும் மலர்மா
லையுமணிந்த கைக்காரர்களைச் சேர்த்துக்கொண்டு சரவ
ணோற்பவனைப்போற் பிரகாசத்துடன்வந்து சமர்செய்யு
ம் பிரதாப அபிமன்னுவினுயிரை சத்தியமாயின்றுவாங்

கிவிடுகிறேன் என்சொல்லுறுதியைப்பாரும் வல்லவரோ
யென்று வணங்காமுடிமன்னன் சொல்லியபோது சயத்
திரதன் அவருடையபாதங்களிற்பணிந்து தேவரீர் திரு
வாய்மலர்ந்தவண்ணம் ஜெயம்பெறும்படியாய் வீமனையு
ம் அவனுடன்பொருந்தி ஒரேயினமாகவராநின்ற ராஜரா
ஜர்களையும் வளைத்துப்போர்புரிந்து மாய்ப்பதுமல்லாமல்
தப்பிப்பிழைத்தோரையும்மேற்பட்டுவருந்தானைகளையுஞ்
சூரியாஸ்தமாகிறவரையிலும் உள்ளேவிடாமற்றடுக்கிறே
ன்ஆனால் தேவரீர் சபலசித்தமாய்ச்சொன்னசொற்சோர்
வுபடாமல் எவ்விதத்திலாகிலும் அபிமன்னனைக்கொல்
லவேணுமென்று துரியோதனனுக்கு உறுதிவார்த்தை
சொல்லி குளிர்ந்த சந்திரனை அணிந்தமுடி பொறுத்த
பரமசிவனைச் சிந்தித்துமிகவும் உருகித்தொழுது வெற்
றிமாலைபூட்டியவில்லையெடுத்து நாணிமாட்டி சரங்களை
ருங்கிய அம்பறுத்தூணியுங்கட்டி பன்றிக்கொடி நாட்டி
நாகரத்தினப் பணியணியாலமைந்த இரதத்திலேறி தீர
த்துவமாக வயிரங்கொண்டெழுந்து முனைந்த தேசராஜ
ர்களும் பிரகாசிக்கும் படைகளையுடைய சதுரங்கச்சேனை
த்தலைவரும் குடங்கொண்டு சொரியும் நெய்யினால்வான
மளவும்படி தீயெழுந்து வீசுங் கொடுஞ் சுவாலையைப்
போல் இருபக்கங்களிலுஞ் சூழ்ந்துவளைந்தெதிர்த்துப்
போர் புரிவதை தர்மராஜனுணர்ந்து இந்தவேளையில்
நாம்சும்மாயிருக்கலாகாதென்று தனக்குக் காவலாகச்சூ
ழ்ந்திருந்த சதுரங்கசேனையுந் தானும்போயெதிர்ந்த கா
லத்தில் திறம்பெற்ற சிந்துதேசாதிபனானவன் ஈசனுற்
கொடுத்த கொன்றைமாலையை அணிந்து எவ்விடத்திலு
ம் ருத்ரமூர்த்திபோற் பிரகாசித்து நாகாஸ்திரத்தையெடு
த்து அபிமந்திரித்து வில்லிற்றொடுத்து குண்டுக் கட்
டாய்க்கட்டும்படிக்கு லட்சுமணர்பேரில் இந்திரசித்து
விட்டதன்மையைப் போல் விடுத்தான் அந்தநாகாஸ்திர
மானது சக்ரவாளம்போற் றங்கள் சேனைகளைக் கோட்
டைக்கட்டாகவளைத்து எதிராளிபடையைவருத்தியபோ
து திறமும் நிறமும் சிலர் கெட்டார் சிரமும் உரமும்
பலர் விட்டார் தாளுந் தோளுந் தறிபட்டார் வாளும்
வேலுமுறிபட்டார்தேகமுழுமையும் பாணங்களுருவசெ
ங்கீராராகவழியத் தியங்கினாரநேகர் மூர்ச்சைபோய் மய
ங்கினாரநேகர் அபஜயமென்பதை அறியாதவீரரெல்லாரு
ம் பயந்து வேசாறினார்கள் அந்தவேளையில் நாகாஸ்தி
ரக்கட்டுக்கு எட்டுப்படாத வாயுகுமாரன் யூகங்கட்டிய
சேனையைச்சுற்றிசுற்றிஎங்கேயாகிலும்கொஞ்சஞ் சந்த
ப்படுமாகி லுள்ளேநுழைந்துமைந்தனுக்கு உதவியாகலா
மென்று வளைந்து வளைந்து ஓடிவந்து மகா சேனைகளை
யெல்லாம் மாய்த்துப் பொடிப்பொடியாக்கி விருதுபெற்
றவில்லிலிருந்து வேணபாணங்களைச்சொரிய அப்போது
ஒப்பற்ற தருமபூபதியினுடையதேரும் வீமசேனனுடை
ய இரதமும் மற்றப்பிரமுகாளுடைய வாகனங்களும் சே
ர்ந்து நாலுபக்கங்களிலுஞ் சுழலும்போது சிந்துதேசாதி
பனானவன் இவர்களெந்தயிடத்திற் றிரிகின்றார்களோ அ
ந்தயிடத்தில் அவர்களுக்கு நேராக முன்வந்திருந்து அ
வரவர்கள் விடுத்த சரங்களையெல்லாம் வெட்டி தருமரா

ஜனுடைய வில்-தேர்-குதிரை-சாரதி-முதலிய வெல்லாவற்றையும் பொடியாக்கி, வீமசேனனேறிய ரதம்-வில் பாணம்-குதிரை-சாரதிமுதலிய யாவையு மழித்து கருடனிமுற்போற் பொருந்தி படைகளைக் காத்திருந்தான்.

இப்பால், வீமசேனன் கெதையைக் கைப்பிடித்து விருவிறென்று சுழன்று படையின் பக்கங்களி லாவது நுழைந்து உள்ளே போவோ மென்று ஒதுங்கிப் பதுங்கிப் பார்க்கால் ஈசற்போலொத்த எண்ணிறந்த பாணங்கள் தேடிவந்து விழுந்து வளைத்து வருத்தமுறு கின்றதனால் வீமசேனன் தண்டத்தோடு திரும்பி மண்டல மிட்டோடி சாத்யகிமன்னனவர் கூடியவரையிலும் போர்புரிந்து வில்லுமுதலிய யாவும்போய் ஏறியதேருடன் திரும்பி வருபவருடன் போய்ச்சேர்ந்து தேரேறிக் கொண்டான் வீமன், அப்போது தர்மராஜன் இந்தச்சரமாரி தாளாமல் திரும்பிவிட்டார், இடிம்பிகுமாரனாகிய கடோர்க்கஜனும் அவன்பிள்ளைகளும் நாலுபக்கத்திலும் பயந்தோடினார்கள், இப்பிரகாரம் பாண்டவர்முதலாகிய சேனைகளெல்லாம் பஞ்சாகப்பறக்கும்படியாய்முனைந்து சரமாரிபொழிந்தான் சயத்திரதனனவன் அந்தச் சிந்து தேசாதிபன் செய்தபோரை விசேஷித்துச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை, அப்படி சொல்வதானாலும், பாண்டவர்கள் விட்ட பாணம் விதைவிதைத்ததைப் போலும் அவன்விடுத்த பாணங்களெல்லாம் அதினுடைய விளைவைப் போலுமிருந்தது, அந்தச்சமயத்தில் துருபதேயராஜனும் அவனுடைய பிள்ளைகளும் வந்து கலந்து அஸ்திரங்களைத் தொடுத்தபோது அதுகளையெல்லாம் நொடியிற் பொடியாக்கி ஐந்து கணைகளினால் துருபதேயனை வெருந்துபோகச்செய்து அவன்குமாரனாகிய துஷ்டத்துய்மனை இரண்டு சரங்களினால் உதிரம்புரண்டுபோகத்தாக்கி மற்ற ராஜர்களுடைய அழகும் சாமர்த்தியமும் ஆயுதங்களும்-ரதங்களும்-சாரதி-குதிரை-முதலாகிய வில்லும் நிலைகெடச்செய்து சாத்தகியின்பேரில் பத்துக்கணைகளை யேவி மார்புந்தோளும் புதையும்படியாக மாட்டியோட்டினான், அவனுரெனில் பூர்வத்தில் முகுந்தனென்னுந் திருநாமத்தை யுடைய விஷ்ணுவானவர் ஆதிவராகமாகத்தேடி அறியப்படாத இரண்டுபாதங்களு முடைய சேமநிதியென்னுஞ் சிவபெருமானைச் சிந்தைபுட்கொண்ட பலம்பொருந்திய சிந்துராஜ புத்திரனாகிய செயித்திரதன்-கயிலாசபதியென்னும் அரவாபரண னருளிய வரப்ரசாத மானது தன்னுண்மிக்கையை - நிலைபெறச் செய்யவும் தேவர் முதலிய யாவருமயங்கித் தியங்கவும் திக்குப்பாலர்களும் அஷ்டகஜங்களும் நடுங்கிச் செவிடுபடும்படியாகவும் நிரத்துடன் போர்புரிந்த செயித்திரதனென்னுங் காளைதொடுக்குந் திக்கணைகளினால் இடிமுழக்கத்திற் செதிர்ப்பட்டழிந்த பாம்புகளைப்போலடங்கி ஐயோ, இந்தவேளையில் அர்ச்சுனன் வராமற்போனானே யென்னுங் கொடுமையும் அதிசயமாகிய தமதுபிள்ளை அபிமன்னு வானவன், யூகமத்தியிற்புகுந்து புரியும்படியாகிய போர்க்கடுமைத் திறமையும், அவனுக்கு துணையாவதற் கில்லையேயென் றேக்கங்கொண்டுந் துயரமும், ஸ்திரமாகிய தங்க ளுள்ளத்தைப் பிளக்கவருந்தி போர்முகத்தி னிற்கமாட்டாமல் பாண்டவச்சேனைகள் யாவரும் புறங்கொடுத் தழிந்தார்கள்.

இத்தன்மையவாக முனைந்து யுத்தஞ்செய்யச்சொல்லி சிந்துதேசாதிபனை யிவ்விடத்தி னிறுத்திவிட்டு திரும்பிவரும் துரியோதனமகாராஜனும் கர்ணனும்-தன்னிஷ்ட ஜனங்களும் தம்பிமார்களும் வாயுவேகத்திலு மிஞ்சிய தேரணிகளும் பற்பலபடைஞரும் தன்னுடைய சேனாநாயகனென்னுந் துரோணாச்சாரியும் ஓரோமுகமாய்த் திரண்டு உலகமழியவெழுந்த ஊழித்தீயைப்போல் வந்து திரிபுராந்தகப் புருடனைப்போல் நின்ற அபிமன்னனாகிய வீரனை நெருங்கி மேகம்போல்வளைந்து சோனைப்பேச்சலைப்போற் சுரிமுகக்கணைகளைத்தொடுத்து துன்பப் படுத்தியபோது இன்பமேற் கொண்ட அபிமன்னன் சம்பிரம மாகிய அம்புகளைப்போக்கி அவரவரணிந்துவந்த விருதுக்கொடி வீரபட்டங்கள் முதலியயாவையு முறித்து விற்களைத் தறித்து கவசங்களைக்கிழித்து தோள்களைச் சிதைத்து துணைக்கரமறுத்து திருமுடி நெரித்துச் சிரத்தை யுருட்டி திசாதிசைகளிற் பொடியாகத்தேர்களையழித்து அங்கமெல்லாம் புங்கவங்கள் புதையவிடுத்து கத்தி - கட்டாரி-கதை-சூலாயுதம்-வேலாயுதம்-சக்ராயுத-முதலிய ஆயுதங்களெல்லாஞ் சிதையக்கெடுத்து வீராதிவீரர்கள் துண்டமாயிறக்கத்துண்டித்துபோர்த்தொழில்தெரிந்ததேசதேசத்தரசர்களுடைய புகழ்கெடவடித்துப்போக்கி ஆளியைப்போல்நின்ற வெற்றி வீர அபிமன்னன்பேரில் அநேகம்வாளிகளை அவர்களும் பொழிந்தார்கள் ஆச்சுதுஅபிமன்ன னிறக்கப்போகிறான் அவனுடலைப் பிடுங்கித்தின்னலாமென்று ஆவென வாயைத்திறந்து அநேகங் கூளிகள் நடம்புரியும்படியாய்ச் சிற்சிலசேனைகளும் பற்பலராஜர்களும் மத்திர தேசாதிபரும், வில்லை மண்டலாகிர்தியாக வளைத்து கொல்லத்தக்க வயமபெற்ற பகழிகளைப் பலவிதமாகத் தொடுக்க, அதுகளெல்லாம் இடையில் முடங்கிப் போகும்படியாய் தடைபடாத கூர்மைப்படைகளால் விலக்கி-நெருங்கி மொய்க்கும்படியாகிய பாணங்களை அவர்களுடையதேகம் தைக்கும்படிக்கு ஊந்தினான் அபிமன்னன், அந்தப் பாணமானது இந்தலோகம் அந்தலோகமென்று பாராமல் தொந்தப்பட்டு சுருசுருப்புடன் கொடியகாலாக்கினி விஷத்தைக் கக்கி காலாகோலமாய் வராநின்ற அந்தவேளையில் அங்கதேசத் தலைவனாகிய அதிரத்திரன்வந்து மலைக்கொப்பாகிய புயமும் சிலையு முடைய அபிமன்னுவையெதிர்த்து முகஞ்சுளித்து போர்முனையிற்களித்து வலமிடமாக ரதத்தைச்செலுத்தி வானமும்பூமியும் மதியுங் கதிருநடுங்க நிலைபெற்று நின்று இருவரும் பாணப்பிரயோகங்களினாற் கைகலந்து போர்புரிந்த காலையில், அபிமன்னுவானவன் வெங்கணைகள் நான்கெடுத்து அங்கதேசாதிப னுடைய தேரிற் கட்டியிருக்கும் நான்கு குதிரைகளும் மேகம்போலற்றுவிழ விடுத்து அவன்றொடுத்த அஸ்திரங்களையெல்லாம் அகற்றி எத்தனை வில்லெடுக்கினும அத்தனை வில்லையு முறித்து ச்சசைக் கொடியுமறுத்து அநேகந்தரம் லச்சைகெட் டோடும்படியாய்ச்செய்ய அதனால்வருந்தி இரவிகுமாரன் இளைத்தோ

டுவதைக்கண்டு இரக்கங்கொண்டு அரவக்கொடிக் கதிப னுடைய தம்பிமார்கள் மிகுந்தவேகத்துடன் தகுந்த புரவிகள்பூட்டிய தேரைச்செலுத்திவந்து வில்லெடுத்தார்கள்-உடனே அவர்களேறிவந்த தேரையும், வட்டமாக வளைத்துக் கையிற்பிடித்த வில்லையும் துட்டக்கணை யில்லாமல் வெட்டி முறித்து எட்டுக்கணைகளெடுத்துப் பட்டுமடியத் தொடுத்தபோது, கெட்டுப் புறமிட்டோடினார்கள் அப்போது சுகப்பிரமத்திற்கொப்பாகிய துரோணாச்சாரியும் அவருடைய குமாரன் அசுவத்தாமனும் தேரை நடத்திச்சென்று விஜயன்குமாரனாகிய அபிமன்னனுக்கெதிரில்-திரிபுரதகனமென்னத் தெறித்து நின்று வரிபொருந்திமணிகள்கட்டியவில்லை வளைத்து தாராகணம்போற்பிரகாசம்பெற்ற நாறுகணைகளை அபிமன்னனிற்கு நிலைகள்தோறுந் தொடுத்தார்கள், அந்தக்கணைகளையெல்லாம் திரணமாகவிலக்கி ஒண்டியாய் நின்று யுத்தஞ்செய்யும் விஜயன் குமாரன்-இரண்டு சரோருகப் பாழிகளையெடுத்து. இமைப்பொழுதிற் றொடுத்தபோது, தோற்றிந்து வில்முறிந்து போர்முகமொழிந்து அபிமன்னுவுக்கு நேரே முகமழிந்தோடினார்கள், அவர்களைப்பார்த்த துன்முகனென்பவன் துடிதுடித்துக் கோபங்கொண்டு துரோணரை நோக்கிச் சொல்லுவானாகிய ஐயா - இதோ நானே யெதிர்ந்து சண்டைசெய்து அந்தப்பையலை முடிக்கிறேன், என்திறத்தைப் பாருமென்று சபதங்கூறி மடமடவென்று பூமிதலுங்கக் கடகடவென்று தேரைநடத்திச் சென்று வில்லைநிறுத்தி நாணேற்றி இடிக்கணைகளைத்தொடுத்து நொடிக்குள் விடுத்தான், அபிமன்னன்றொடுத்த இடிக்கணையால் மனுக்கென்று வில்முறிய வேறுவில்லெடுக்குமுன்னமே யாவருந்திடுக்கிடத்தலைதறிந்துசெத்தான் துன்முகனானவன்.

அந்தவேளையில், இதென்ன விபரீதகாலமென்று விசித்திர வில்லைப் பெற்ற வீரனென்னும் மத்திர தேசாதிபனும் அவருடைய பிள்ளை களில் ஆதி பராசனும் அவனுக்குரிய அநேக மித்திரரும் வந்து தனுர்ப்பாணங்களைக்கொண்டு ஜாடும்போது, அவரவரெடுத்தவிற்களும் விருதுகளும் ஆயுதங்களும் கண்டதுண்டமாகக் கணைகளைப்போக்கி - அண்டையில்வந்து சண்டைபுரிந்த ஆதிபனை ஒருவாளியால் அந்தாம்புர அனுப்பிவிட்டு நீயென்ன சொல்லுகிறீ ரென்று சல்லியனுக்கு நேர் திரும்பியபோது, தன் புத்திரனிறந்தவிசனத்தால் விஜய புத்திரனுடைய குமாரனைவளைத்து ஒன்று-பத்து-நூறு - ஆயிரமென்னும் பாணங்களை அமோகமாகவிடுத்து அபிமன்னனுடைய ஆக்கையிற்றைக்கியபோது அர்ச்சுனனுடைய குழந்தைகண்டு வேற்கடவுள் கைக்கொண்ட கூரிய வேல்போன்ற பலவாளிகளால் படுகுழியாகிய புண்படுத்தும்போது மெத்தவுநொந்து மத்திரராஜன் புறங்கொடுத்தோடினான், அப்பால், மகாரதக்கலைவர்க ளெல்லாரும் ஒருவரும் பாசக்கூடி யாவரையும்வென்று ஆளரிபோல்நின்ற வாளபிமன்னனை மனங்கூசாமல் வளுவிற்போய்வளைத்தார்கள் அப்படிவளைத்த அத்தனைபேரும்மாயன்மருகன்றொடுத்த கணைகளாற் றொழிந்து போரழிந்து-போமழிந்து-காரிழிந்து தெனச் செந்நீரிழிந்தோட உளநடைந்தார்கள்-ஆகினும், இந்தப் போரின் சிறப்பைப் புகழ்ந்து சொல்லுதற்கு யென்னாற்றாமல்ல வாயினும். இந்தப் பாண்டுவின்பௌத்திரன் விட்டபடைகளால் கெட்டழிந் தவர்கள் இன்னாரென்று கேட்டறியக் கூடாமலும் இன்னங் கொஞ்சமெஞ்சமிருக்குஞ் சேனைகளை முழுமையுங் கெடுத்துவிடென்று வலுவிற்செலுத்தி வல்லுயிரிழக்கச்செய்யும் வளம்போல் வந்தவர்களை வடிக்கணைகளை விட்டு மடித்தான், இந்தப்பிரகாரம் முதலிற்கட்டிய சக்ரவ்யூகத்தைப் பிளந்துக்கொண்டு பலம்பொருந்திய விஷ்ணுசக்கரம்போல் பத்மவ்யூகத்தையும் பேதித்துக்கொண்டு பலதிசைகளிலுநின்ற சேனைகளைப் பசையறக் கொன்று பொன்னார மணியணிப் பணிமுதலாகிய வாசனைபெற்ற மாலைகள்பிரகாசிக்க இந்திரதநுசைப்போல வில்லைத் தாங்கி விந்தையாகிய நவமணிகளாற்செய்த தேரின்மீது உல்லாசமாய் யிருக்கும்படியாகிய அபிமன்னுவானவன் பத்மவ்யூக மத்தியினிற்பது எப்படி யிருக்குமென்றால் சூழ்ந்திருக்குஞ் சக்ரவாளமத்தியில் ஊர்ந்து வேகமாய்ச்செல்லுகின்ற செக்கதிர்ச் செல்வனைப்போன்று வடதிசையும் தென்றிசையும் அன்னிய அரசர்களாற் காவற்செய்துநின்ற மேற்றிசையும் கிழக்கிசையும் இந்நான்கு திசைக்குட்பட்ட நான்குகோணத்திலும் இரதத்தை க்ஷணப்போதாகிலும்நிலைவிடாமற் செலுத்தி இங்கும் அபிமன்னன் அங்கும் அபிமன்னன்-எங்கும் அபிமன்னனென்று சொல்லும்படியாய் பூரணமாகநிறைந்து நின்ற நாரணனுடைய மருகன் நதிமதி தாங்கிய சடாமகுடம்பெற்ற திரிபுர சம்ஹாரியைப் போன்றிருந்தான் அப்போது விஜய காண்டீபத்தின் றிடத்தைக் கொண்டு காலகேய நிவாதகவசர்களைவென்ற விஜய வீரப்பிரதாபனுடைய அபிமன்னுவென்னு மைந்தனுக்குசகலவீரர்களும்புறமிட்டார்களென்று துரியோதனன்வெட்கங்கொண்டு நாணப்பட்டு இராஜகுமாரர்களென்னும் இளவரசர்கள் பலபதினாயிரருடன் தன் பிள்ளையாகிய இலக்கண குமாரனையுங் கூட்டி யனுப்பி வைத்தான் அவர்களெல்லோரும் இன்னும் பலவேந்தர்களும் ஊழிக்காலத்தி லடிக்கும் சண்டமாருதமானது விசாலமாகிய கடலைக்கலக்குமாப்போல் தநுர்வேதத்தைக் கைபழகியதாஷ்டிகத்துடன் வில்லைவளைத்து நாணேற்றி வீரப்பகழிகளை விடுத்து மதமேறியயானைபோன்ற அபிமன்னனை வந்துவளைத்துக்கொண்டு சோனைமின்னலைப்போல் இடியாஸ்திரம்- மின்னலாஸ்திரம் - வருணாஸ்திரம் - வாயுவாஸ்திரம் - குபேராஸ்திரம் - இந்திராஸ்திரம் - சந்திராஸ்திரம் சூரியாஸ்திரம்-ஏமாஸ்திரம்-அக்கினியாஸ்திரம்- கமலாஸ்திரம்-கருடாஸ்திரம்-பிர்மாஸ்திரம்- நாராயணாஸ்திரம்-ருத்திராஸ்திரம்-நாகாஸ்திரம்-மேகாஸ்திரம்- விருக்ஷாஸ்திரம்-பர்வதாஸ்திரம்முதலாகிய பகழிமாரிகளையேவி கைசாலசைக்கவொட்டாமற் கலக்கும்போதில் காண்டீபன்குமாரனாகிய அபிமன்னன் ஒருதேரும் நான்குகுதிரையும் ஒருசாரதியும் ஒப்பில்லாத்துவஜமும் ஒரு தரம்வளைத்தல்லதுமறுபடிகிமிராமலிருக்கும்ஒருவில்லும்ஒருஅம்பறாத்தூணியும் அழிவில்லாமல்காப்பாத்திக்கொண்டு தனக்கு மூனவின்று நான்முந்தியடித்தேன் நான்முந்தித்தொடுத்தேனென்று வீரபாஷைகள்பேசிக்கொண்டு இராஜகு

மாரர்கள் தொடுக்கும் பலம்பெற்ற பாணவருஷங்களெல்லாம் மன்மதன் றொடுத்த மலர்ப்பகழியானது ஈசனுக்கெதிரில இறைந்த தன்மைபோல் இந்த அபிமன்னுவின் பாதங்களில் தூற்றியமலர்போல்விழுந்தன, அப்பால் அலலோலகல்லோலஞ்செய்யும் அபிமன்னுவினுடைய விலலிருந்து உந்தும்படியாகிய உரகக்கணைகளால் முன்வந்தவர் பின்னும் பின்வந்தவர்முன்னுமாகப் புரட்டிப்புரட்டிக்காய்வதினால் அநேகங்கோடி சேனைகளுடன் இராஜகுமாரர்களும் பலபாடுபட்டுப் புறமுதுகிட்டோட. அப்படியோடிப்பிழைத்தவர்கள்போக இருப்பவர்களை ஒன்றொழியப்பார்த்து விடவேணுமென்று நானுபக்கங்களிலுந்தேடி ஒருவருமில்லையென்று தெரிந்து கழுத்துமயிர்பெற்ற குதிரைபூட்டியதேரைச்செலுத்துஞ் சாரதியை அபிமன்னனோக்கி ஓ சுமித்திரனே, என்பேரிலெதிர்த்துவந்த ராஜகுமாரர்களும் சொல்லுக்கடங்கா பிரக்யாதியும்பேரும்பெற்றவேந்தர்களும் வாடித்திகைத்து நிலைகெட்டுமயங்கி மடங்கி ஓடி உயிர்பிழைத்தார்களென்று உத்தரைநாயகனுரைக்க அந்தவசனத்தைக்கேட்டசாரதி சந்தோஷமடைந்து சொல்லுகின்றான்

ஐயா இளஞ்சிங்கமே, தேவரீர்யூகத்தையுடைக்கவரும்போது அடியேன் அவசரப்புத்தியால் யோசிக்காமல் அநேகம்வார்த்தைகள் சொன்னேன், அவைகளை நீர்மன்னிக்கவேண்டும் இவடத்தில் உம்முடைய கை ஓயாமல் யுத்தஞ்செய்து வெகுபேர் சுத்தவீரர்களைப்போக்கி வெற்றிபெற்றமையால் சூசிகாயூகம் சக்ரயூகம் பத்மயூகமுதலியயாவுமுடைந்துபோய்விட்டது இதுவரையிலுஞ் சாகாதிருக்குஞ் சேனைகளுக்கு உயிர்ப்பிச்சைகொடுத்து இந்தமட்டும் யுத்தத்தைநிறுத்திவிட்டு தங்கள் தந்தையரிருக்கும் இடத்தைநோக்கி திரும்பிப்போவது உத்தமமாயிருக்குது, குறைவுபடாத ஆண்மைக்கு ஒருவருமொவ்வாத ஜெயசிங்கமே, இதன்றியும் உமக்குத்துணையாகவந்ததர்மராஜன் வீமசேனன் நகுலசகாதேவர்கள்முதலியபேர்களையும் மற்றபத்துவர்க்கவீரர்களையும் படைக்குதவியாகிய பராஜர்களையும் உமக்குதவியாயுட்புகவொட்டாமல் திரண்டுபுரண்ட வெள்ளத்தை அணைகட்டி தடுத்ததன்மைபோல் உங்களத்தைபுருஷனாகிய சயந்தவன் ஈஸ்வரானுக்ரகத்தால் சபதங்கூறிக் குறிவைத்து அடிப்பவருக்கொப்பாய் தும்சப்படுத்திக்கொண்டிருக்கிறான், அவன்றொடுக்கும பாணங்கள் எல்லாருடைய மார்புகளிலும் உருவிப்போகும்படியாய் இடங்கொடுத்துக்கொண் டிருக்கிறார்களே யல்லது அந்தக்கணைகளுடனே சயத்திரதனையும் அழித்து உள்ளேபுகும்படியாகியதிடம் நமக்குதவியாகவந்தவர்களில் ஒருவருக்குமில்லை அவர்களுக்குத்துணைவரத்தக்கபேர்களுமில்லை உன்றந்தையாகிய அர்ச்சுனனும் இங்கில்லை ஆகையால் நீரிவடத்திலிருந்து செயஞ்செய்து என்னபிரையோசனம் ஒப்பாகியவீரர்களைத் தப்பாமற்கொல்லுந் தோளாண்மையையுடைய எங்களரசனே உமக்குத்துணையாகவந்த உன்றந்தையர் முதலியபேர்களுக்கு நீர் துணையாகச்சென்று நின்று வெற்றிபெறுவது வீரதர்மம் ராஜதர்மமுதலிய எல்லாவிதங்களுக்கும் உத்தமமாயிருக்கின்றது.

மேலும் இந்தமுனையைச்செயித்தநீர் அந்தமுனையுஞ்செயித்து எதிரிட்டோரை யெமலோகங்குடியாக்கி, வெவ்விய வீரப்பிரதாபசூரதீரநிடகாத்திரதயிரியஜெயங்காட்டி உமது தந்தையர் போராநந்தத்துடன் இன்புற்றோங்கி உடல் புளகாங்கிதமுற மகன்போலுனேயென்னமோ ஏதோவென் றிருக்கும் அவர்களுடைய கவலைநீரப்போகவேண்டியதே யென்று - வேகமளாவிய சிகரத்தேரைவிடுக்குஞ் சாரதி சொல்ல - அதைக்கேட்டு அர்ச்சுனகுமாரன் தேருடன் திரும்பிப்போகச் சம்மதமில்லாதிருந்தாலும்அவடத்திலும்வீரர்களிருக்கின்றார்கள் அவர்களையும் நீஜெயிக்கவேணுமென்று சாரதிசொல்லிய யுத்தமென்னும் ருசியானது ஆ ஆஹா வென்று ஆர்ப்பரித்துவிரைவிற் றேரைச்செலுத்துமென்று விளம்ப தோழமையாகிய சாரதி மகாசந்தோஷமடைந்து மண்டலம் விண்டலம் எண்டிசையண்டகடாகமுருண்டிட ஓடுந்தேரானது பிணமலைகளின் உச்சியிலேறி அருணனுடைய பச்சைக்குதிரைகளோடுவதைக்கண்டு வீராவேசங்கொண்டு வீறிபெருக்கமாகிய ரத்தவெள்ளங்களை நீந்திச்சென்று தேறிநிணச்சேறு நெடுந்துகளாகக் கண்டுபாறி எதிரிகள்தொடுக்கும் பாணக்காட்டுக்குள் நுழைந்துவருவதை தருமராஜன்முதலியயாவருங்கண்டு சந்தோஷங்கொண்டுபடைகளைவென்று தநயன்வந்தானென்று களிப்பதை சந்திரவட்டக்குடைதரித்த துரியோதனமகாராஜன்கண்டு அரசர்களே படுகுழியிலும் பெருவலையிலுஞ் சிக்கியசிங்கந் திரும்பிப்போய்விடுதே விடாதீர்கள் விடாதீர்கள் ஓடுகிறான் ஓடுகிறான் மடக்குங்களென்று வல்லவர்களுடன் பின்னாகக்கூவிக்கொண்டுவந்து எதிர்த்ததை அபிமன்னன்பார்த்து பின்புறத்தில்வந்த வீரர்கள்யாவரும் பேசாமற் போகும்படியாய் முட்கணைகளை வாசா மகோசரமாகத் தொடுத்தான் அந்தக்கணைகளால் தாசானுதாசனென்று ஸ்தவுத்தியஞ் சொல்லிக்கொண்டு போர்முனைகெட்டழிந்து ஓடிவந்த அரசர்களும் நல்வினையில்லாத நந்தியாவட்டத்தாரோனும் அவனுடையகுமாரனும்ஒருபக்கத்திலொதுங்கி இளப்பாறிக்கொண்டிருக்கஅழகில்லாதமானைத்துரத்திச்சென்ற ஒருசிங்கக்குட்டியானது அந்தமானைவிட்டுவிட்டு மதம்பெற்ற காட்டானையின்பேரிற் றிரும்பியதன்மைபோற்றாவிவராநின்ற அபிமன்னனைவிட சேனனென்னும் விடங்கதேசத்து ராஜகுமாரன்பார்த்து தமதுதேரைச்செலுத்தி ஆர்த்து நேரேபுகுந்து தகுந்தபகழிகளைச்சொரிந்து போர்புரியும்போது இணையில்லாத உத்தரைகுமாரத்திக்குக் கணவனாகிய வொருவன் ஒருமுகம் இருமுகமென்னும் பகழிகளை ஒவ்வொருகை வாரிவாரி விடுத்ததினால் ஆகாயத்தைவிட்டு மேகம்வழுவிவிழுந் தன்மைபோல் பிடித்திருந்தவில்லுடன் இருதோளுமறுந்து தேருமழிந்து குதிரையழிந்து கொடிமுறிபட்டு முடிதறிபட்டு வானைநீங்கி மறந்துவிழுந்த குருசுக்கிரானைப்போல் மண்ணில்விழுந்துமடிந்தான்.

அப்பால் நெருக்கிநின்ற வீரவேந்தரைலட்சயமில்லாமல் பாணவருஷங்களைப் பொழியும் கார்காலமேகமென்றுசொல்லும்படிக்கு முன்பின்பாராமல் அஸ்திரங்களைத்

தொடுத்த போது அந்த அரசர்களெல்லாருந் தலைகிரி
கோலமாய்த் தத்தளித்தோடுங்காலையில் அளவிறந்தசே
னைக்கதிபதியாகிய பதாதிமன்னனென்னும் ஒருராஜன் அ
பிமன்னனை வந்துவளைத்து அமோக யுத்தஞ்செய்யும்
போது நெருங்கியமாலையணிந்த அபிமன்னுவானவன் ஒ
ரு யிடியாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து பேரிடியினு
ற் பிளப்புண்டகருங்கல்லைப்போல்அவன் தலையையுடை
த்தழித்தான் அப்போது அவனுடைய குமாரன்கண்டு
மனந்தாளாமல் தன் றந்தையைக்குறித்துச் சற்றே சிந்தி
த்துத் தனஞ்செயன்குமாரன்மீது சண்டைக்குவந்தான்
அவனைக்கண்டமாத்திரத்தில் வச்சிரக்கணையொன்றினால்
தலைமுண்டமாகத் தள்ளிமின்னல் வாளியென்னும் கூர்
மைபொருந்திய அஸ்திரங்களைப் பலகோடிவிடுத்து வெ
துப்பும்போது முனையேறிவந்த வேந்தர்முதலாகிய சே
னைகளும் புறந்தந்தோடுவதை அபத்தப்பஞ்சாங்கமாகிய
துரியோதனன்கண்டு சகியாமலேங்கி இளைந்துபொங்கி
முன்னேபோயுத்தஞ்செய்து இளைத்துவந்திருக்கும் ராஜ
குமாரரையும் தன்குமாரனையுந் தட்டிக்கொடுத்துந் தயி
ரியஞ்சொல்லிவிடுத்தபோது இளங்கன்றுபயமுணராதெ
ன்பதுபோல் துடிதுடித்துச்சென்று ஆர்ப்பரித்தார்கள்
அசத்தியப்பொருளை நித்தியமாய்க்கொண்ட சித்தவிர்த்
தியையுடைய பாண்டவர்களுக்குப்பிராணனாகிய அபிம
ன்னன் தன்வில்லைவளைத்து அம்புகளை சரமாரியாகவிடு
த்தபோது கால்களறுந்துங் கைகள்முறிந்தும் இப்படியா
கச்சிலரழிந்தார்கள், 'துரியோதனனுடையகுமாரனும், ப
லம்பொருந்திய சிலராஜகுமாரரும். சூரியகிரணங்களைப்
போற் சிறியகண்களிற் பெரியபொறிபறக்கப் பயந்துதிக்
குத்திசைகளிலோடி யொதுங்கும் யானைகள்போல் கல
ங்கியோடினார்கள், அவ்வேளையில் மத்தளம்போன்ற தி
ணிந்தபுயத்தையுடைய அபிமன்னனென்னுஞ் சமர்த்த
னொருவனும் ஒப்பற்ற ஒருதேரும் ஒருவில்லுடனெருங்
கி யுத்தஞ்செய்யும் ரணகளத்திற்கு அழகுண்டாகும்படி
யாய் வெற்றிபெற்ற வெப்புலியைப்போல் வீராவேசங்
கொண்டு நேரிட்டபேர்களெல்லாரும் விரிட்டுப்போகமு
டுக்கி வில்லைவணக்கி நாணிறுக்கும்போதெல்லாங் கணு
க்களிலிருந்து முத்துதிரும்படியாகிய வரிபொருந்திய மூ
ங்கில்வில்லை மன்மதனுக்கு மைத்துனனாகிய அபிமன்ன
ன்வளைத்து படைகூடிவந்தபார்த்திவரெவரையும் இளைத்
தோமென்று புறங்கொடுத்தோடும்படியாகயடித்து அநே
க இராஜகுமாரரைவளைத்து அமர்புரியுங்காலையில் துரி
யோதனனுடைய குமாரன் தீரங்கொண்டு எதிரூன்றிவ
ந்து அபிமன்னனைமறித்துத் தேரைச்செலுத்தவும் அபி
மன்னுவானவன் கூர்மைதங்கிய முனைபோன்றதந்தங்கள்
பிரகாசிக்கும்படி அண்டமுக டுடைபட நகைத்து கழுத்
துமயிரையும் கடுங்காற்றின்வேகத்தையும் ஜெயத்தையு
முடைய பரிபூட்டியரதத்தை நேராகச்செலுத்தி இரதமு
ம் இரதமுந்தாக்கிச் சக்கரங்களுடன் சக்கரங்கள்மோதி
உடைபடும்படியாய்விடுத்து லட்சுமணப்பெருமானும் இ
ந்திரஜித்துவும் ஒப்பென்றுரைக்கும்படி கடைக்கண்கள்
சுழலவிழித்து புருவநெரிய நெற்றிசுளிக்கப் பற்கடித்து

மேகமுழக்கம்போலிரைந்து எழுகடலும்மொருமொகெ
னக்கலங்கி வையிஞல் வாய்புலர்ந்து மடியும்படியுத்
தஞ்செய்து ஒருவருக்கொருவர் பற்பல வார்த்தைகளைப்
பேசிபகைமேற்கொண்டு இழைந்த மரத்திலிருந் தெழு
நெருப்பைப்போல் இருவர்முகத்திலும் நெருப்புப் பொ
றி வீசும்படியாய்ப் போர்கொடுக்கவந்த ரதகஜதுரகங்க
ளும்மெலிந்துவருந்திப் புறங்கொடுத்தோடப் புழுதிபடி
ந்தி எதிரில்நின்ற இலக்கணக்குமாரனைப்பார்த்து அபிமன்
னுசொல்லுகின்றான்,

அப்பா இலக்கணகுமாரா ஒப்பற்ற என்வில்லாண்மை
யைத்தெரிந்த நீயும், என்னைச்செயிக்கவேண்டுமென்று
ரதஞ்செலுத்தி வந்தாயோ அந்தோ ஓசை யுண்டாகும்
படியாய் இதோநான்விடப்போகிற அக்கினிக்கணையின்
முனையிலிருந்தெழுஞ்சுடர்களினால் இவ்வுலகம்விட்டு அவ்
வுலகத்திற்குன்னையனுப்பிவிடுகிறேன் போச்சுதுன்பிரா
ணன்காப்பாத்திக்கொள்ளுகிறையாவென்று தன்னுடை
யவல்லமையையுறுத்திச்சொன்னான்வச்சிரபாணிபோனு
கிய அபிமன்னன் அப்பொழுது துரியோதரனுடையகு
மாரனும் வரையெதிரொலிக்குமாப்போல் கோவில்மண்
டபம் மலைமுதலியமடங்களில் ஓவென்று கூவினால் கூட
க் கூவுகிறது - அதுபோலஉலகநடுங்கக்கூவி அர்ச்சுனன்
குமாரனைப்பாத்து ஆ, ஆ, இந்த அரசரெல்லாருங்கண்டு
கண்களிக்க ஒருநொடிப்பொழுதில் உன்னுயிரைவாங்கி
ப் பொன்னுலகத்திற்கனுப்புகிறேன் - முன்னவனாகிய அ
பிமன்னனேயென்று சீறி சிவபெருமான்வளைத்த பொன்
மலையைப்போன்ற வில்லையெடுத்து நிறுத்தி இழுந்து வ
ளைத்து நாணேற்றி கலகலவென்று அசைத்து வட்டமா
கக் கையிற்பிடித்துக் காதுபரியந்த மிழுத்து குணத்தொ
னிசெய்து அண்டநடுங்க ஓங்கிபடிக்குஞ் சண்ட மாருத
மானது சமுத்திரத்தி லிருக்கும் வடவா முகாக்கினி
யைக்கோபித்துக்கலக்கும் பக்குவமொத்துப் பட்சிகளமு
ழுவதும்பறவைபோற்பறந்துஉதிரவெள்ளம் பரவைபோ
ற் புரண்டோடும்படி இருவரும் பாணப்பிரயோகஞ்
செய்யுங்காலையில் குதிரைகள் தேகத்திற்சொருகிய சில
கணை பலதினுசுகொடிகள் முறிபடக்குவிந்தன சிலகணை
முன் படடுப் பின்னுருவி யோடின பலகணை - இரண்
டு புஜங் களினும் - ஏறிய பலகணை - நெருப்புப் பொ
றியுடன் எரிந்தன - சிலகணை ஆகாய கங்கையையும் உ
றிஞ்சினசிலகணை- அம்பரவெளியைமறைத்தன சிலக
ணை- திக்குகளெங்குந் திரிந்தனசிலகணை- இந்தப்படியா
க அபிமன்னும், இலக்கணகுமாரனும், முடுகி அமர்மு
தலியபாவரு நடுங்க நெடு நேரம்வரையிலுங் கொடுமை
யாகிய அமர் புரிந்து வருங்காலையில சூற்கொண்ட மேக
வடிவம்பெற்ற சுந்தரக் கிருஷ்ணமூர்த்திக்கு மருகனென்
னும் அபிமன்னன்பாண முஷ்டிநிலையும், கரவேக சரவே
சமும், மெய்வலிமையும், கைவலிமையும், மந்திரசத்தியு
ம் பெற்றவனாகையால் இந்திராஸ்திரத்தை யெடுத்து அ
பிமந்திரித்து உந்திவிட்டபோது குருகுலக் கோமான் கு
மாரனாகிய இலக்கண குமாரனுடைய சரீரமாத்தியந்தமு
ஞ்சொல்ல யிடமில்லாமற் சல்லடைக்கண்ணாய் துளித்து
வீரகண்டைகட்டிய காலைத்தறித்து இரண்டுதொடையை

யுமுறிந்து அங்கத்திலணிந்த தங்கக்கவசத்தையுங் கிழித்து மலர்போன்றகரத்தையும் மலைபோன்ற புயத்தையுமறுத்து நவரத்ன கசிதமுடிதரித்த சிரத்தையும் வெட்டித் தள்ளியபோது செந்தாமரைக்கமல மலரெனச் சிறந்த நகைமுகத்துடன் பூமியிற்சாய்ந்தான்.

இப்படிக்குக் காண்டாவனமெரித்த காண்டீபன் குமாரன்றொடுத்த கூர்ங்கணையால் காசினி முழுவதும் ஆண்டான்குமாரன் அமர்புரிந்து போர்க்களத்தில் துன்புற்றிறந்தானென்று துரியோதனமகாராஜன் கேட்டு கலக்கண்ணீர்சொரிந்தழுது கசிந்து விம்மி தனக்கு வலக்கண்போன்ற துரோணாச்சாரிய ருடனேயும் மித்துருவாகிய மன்னவருடனேயுஞ் சொல்லி தெய்வமே, இதென்ன அநியாயமென்றேங்கித் தியங்கித் துக்கசாகரத்தில் மூழ்கிய வணங்கா முடியோனை உபசாரத்தாற்றேற்றி ராஜநீதிகளைத் தெரிவித்தபோது அவர்களைப்பார்த்து-ஓ சேனாபதியே என்னுயிர்க் குயிராகிய அரசர்களே, அநேகம்-ராஜகுமாரரையும் என்குமாரனையுந் துடிமிடியாய்க்கொன்ற அபிமன்னனென்பவனை இமைக்குமுன் கொன்று பழிக்குப்பழி முடித்து இன்று நமக்குச் செயமென்று வெல்லாமற் போவீர்களாகில் இனிமேல் ஆளவேணுமென்று ஆசைகொண்டிருக்கும் இவ்வரசாக்ஷியும் வேண்டேன் யாவரும் வணங்கும்படியாகிய பெருமிதவாழ்வும்வேண்டேன் இனிமையாகிய வென்னுயிரையும் விரும்பேன் இறக்கத்துணிந்தேனென்று இராஜாதிராஜன் வெறுப்பாகச் சொல்லிய வசனத்தைக்கேட்டு அரசர்களெல்லாரும் தனித்தனியாகத் துரியோதனனுடைய பாதங்களில்வணங்கி கண்ணீர்துளித்துக் கைநெரித்துக் கண்கலக்க முற்றுச் சொல்லுகின்றார்கள்.

ஓய் காவலனேகேளும், உமது குமாரனையும், ராஜகுமாரர்களையும், யுத்தமுகத்திற்கொன்று வெற்றி யடைந்த பார்த்தன்குமாரனைச் சேர்த்து வளைத்து க்ஷாத்திரத்துடன் காங்களெடுத்து வளைத்த வில் நிமிருவதற்கு முன்னமே அவனைக்கொன்று உமக்குச்செயபேரிமுழக்கிவைக்கிறோம்அப்படி அவனை இன்றைக்குக்கொல்லாமற்போவோமாகில் எங்களாயிசுவரைக்கும் போர்முகத்தில் வில்லெடுத்துப் போர்புரிவதேயில்லை இஃதுண்மையாகிய சபதம் இறைவனேயென் றியம்பி குன்றைவில்லி யாகிய சிவபெருமானுக் கொப்பென்னும் அசுபத்தாமனும் காமக்குரோத-லோப-மோக-மத-மாச்சரியமென்னும் ஆறுபகையையும் வென்று சதுர்வேதமுனியும், இன்னமும்பக்கத்திலிருந்த வீரசூராளாகிய வேந்தரும், மற்றுமுள்ள வீரவிற் பிரமுகரும்சேர்ந்து, துரியோதன மகாராஜனுடைய குமாரனென்னும் இலக்கணகுமாரனைக் கொன்ற அபிமன்னன்பேரிற் பெரும்புலியைப்போற் பாய்ந்து வளைத்துக்கொண்டு யுத்தஞ் செய்யப் புகுந்தார்கள்-ஒருமுகமாயிராமல் பலமுகத்திலும் வளையம்போல் வளைந்து ஏழுசமுத்திரத்தையும், ஏழுமேகங்களுமிஞ்சி தொகைவகையில்லாமற் பொழியுமாப்போல் வில்வளைத்து ஒவ்வொருவிரர்கோடி-சோடி-கோடா கோடியென்னும் பாணங்களைத் தொடுத்து திக்குமுக்கிட்டாடிச் செந்தாளமும்பச்செய்து ஸ்ரீராமனை மாரீசனென்னும் மாயமான் கொண்டுபோனதைப்போல், பழயயிடமாகிய பத்மயூக மத்தியம்வரையிலுங் கொண்டுபோனார்கள்.

அசைவறநிற்கும் அபிமன்னுவானவன்-ஹரி பிர்ம்மாதியர் நடுங்கும்படியாக வில்லிறுங்கி ஜெயம்பெற்ற அஸ்திரபாணங்களைத் தொடுத்து அரசர்கள் விடுத்த அம்புகளையெல்லாம் துணிகள்போற் றுணியவிலக்கி பலம்பொருந்திய பருப்பதப் பாழிகளைவிடுத்து வந்தவர்களுடைய பாதமுதல் தலைவரைக்கு நிறைத்து அந்தக்கரணமும் ஐம்புலனும் அங்கமுங்கலங்கி நமக்கு மரணகாலம் வந்து சம்பவித்ததென்று நினைத்துமருட்பார்வைகொண்டுமயங்கிமடியும்படிமாட்டிக்கொண்டு வாட்டும்போதுபோர்முனையில்வந்தகப்பட்டுக்கொண்ட அநுகுலராஜன்-தலையறுந்தழிந்தான்-கேகயராஜகுமாரன்மாய்ந்தான் கிருபாச்சாரியர்வில்லொடிந்து சொல்லழிந்துபுறமிட்டான்-மகததேசாதிபன் மாண்டான்-கோடிமகுடவர்த்தனர் கொலையுண்டார்கள்-இராஜபுத்திராள் கோடிபேர் வீரசொர்க்கஞ்சேர்ந்தார்கள்-இதல்லாமலும் வில்லழிந்தவரநேகர் பல்லுடைந்தவரநேகர்-தேருடைந்தவரநேகர்-மார்புடைந்தவ ரநேகர்-தலைநெரிந்தவரநேகர்-புயமலைமுறிந்தவரநேகர்-தாளொடிந்தவரநேகர்-வாளொடிந்தவரநேகர்-நிலைகெட்டவரநேகர்-கொலைபட்டவரநேகர்-நெஞ்சழிந்தவ ரநேகர்-பஞ்சுபோனவரநேகர்-தூரத்துலையிலோடினவரநேகர்-நேரிற்றறையில் நின்றுடினவரநேகர்- தோள்கரந் தொடைமுறிந்தவரநேகர்-மாளவந்தனமென் றிறந்தவரநேகர்- இதுவல்லாமலும், துரியோதனன் மனதிற்கிசைந்த சகுனியினுடைய பிள்ளைகள் ஏழுபேரும், சகுனியினுடைய தாயாதித்தம்பிமார் ஐம்பதுபேரும், பந்துவர்க்க முதலாகியபேர்களும், அடிவேரைப் பிடுங்கினால் படர்ந்திருக்கும் பலகொடியும் வாடியழியுந் தன்மையைப்போல் ஒட்டொழிய அழிந்தார்கள் எல்லோருமிறந்ததைக் கண்ட சகுனி மனந்துறந்து அபிமன்னுக் கெதிர்ப்போய்ப் போரரடிமடியும்படியான முடிவுகாலத்திற்கு நேராகிய வருத்தப்பட்டு, அப்பா தப்பிப் பிழைத்தேனென்று அப்பாலோடிப்போனான்.

இப்பால், துரியோதன னுடைய தம்பிமார்களுந் துச்சாதனனும், தங்களுக்கிச்சையாகிய மச்சின வருக்கத்தாரும்-குதிரைபூட்டிய தேரைச்செலுத்திச் சென்று கோபாக்னியுடன் போர்புரிந்து நிலைபெற மாட்டாமல் முனையாகிய வெகுபாணங்கள் துளைத்து மூலாதாரம்வரைக்கும் பேதிப்பதினால் யுத்தத்திற்குப் பயந்து புறமுதுகிட்டோடினார்கள், இந்தப்பிரகாரம் அரசர்கள்முதலிய யாவருந் தலைகாட்டாமல் போரிலுடைந்தோடுவதை திரிதராஷ்டிர குமாரன்கண்டு மனங் கொதிப்புக்கொண்டு கன்னனைப்பார்த்து அண்ணா-அறியாத பையன் செய்கின்ற அல்பயுத்தமென்று அலக்ஷியமாக நினைக்காதிர் சின்னப்பாம்பானாலும் பெருந்தடிகொண் டடிக்கவேண்டியது பாம்பு சின்னதானாலும் விஷஞ் சின்னதல்ல ஆலகாலவிஷப்பாம்பின் வயிற்றிற்பிறந்த குட்டியாக்கும் சம்மட்டிக்கொண்டடித்தாலும் உடைப்படாக் கருங்கல் சிற்றுளியா லு

டையும் ஆதலால் இன்றையயுத்தங் கேவலமான தல்ல, இதன்றியும் இதுவரையிலும் அர்ச்சுனனுக்குச் சமாச்சாரம் போயிருக்குமென்று நினைக்கிறேன், ஒருவேளை அந்தக் கிரிடிவந்து தன்பிள்ளையுடன் சேர்ந்துகொள்ளுவானுகில் திரிபுவனங்களும் நிலைக்கமாட்டாது அப்போதுமுனக்கு வல்லமையிருக்குமாகில் நீயே பிரயாசமெடுத்துக்கொண்டு அவ்விருவருடனும் போராடிச் செயம்பெற வேண்டிவரும், இப்போதானல் வெறுங்கட்டென்றுசொல்லலாம் அர்ச்சுனன்வந்து கலந்துவிட்டானுனல் நமக்கு நமக்குங் கட்டாகும் அண்ணு ஆகையால் யாவரும்பார்த்துக்கொண் டிருக்கும்போதே நேரிற்சென்றுமலைந்து கொல்லக்கடவையென்று குருகுலக் கோமான்கூற கொடையாளியாகிய கர்னன் அப்படியே நல்லதென்று கோபாலன் மருமகனுகிய அபிமன்னனைக் குறுகி பரசிராமரிடத்தில் தான்கற்ற வித்தைகளெல்லாம் பழுது படாமல் ஒன்றொழியாமல் உம்பர்மதிக்கவும் இம்பர்துதிக்கவும்அம்பரமறையப் பம்பரம்போற்சுழன்று அரிதாகியயுத்தங்களைச் செய்யும்போது இவன்விடுக்கும் பாணங்களையெல்லாம் அபிமன்னன் எந்தமாத்திரமும் ஒரு பொருளாயெண்ணுமல் இருமாந்து வச்சிரக்கணைமுதலிய மலர்ப்பகழிகளைப்பூட்டி மாட்டினுன் அந்தப்பாணங்கள் தூரிய வருத்தத்தினுல் ஏறியதேரானது மேகஞ் சிதைந்ததைப் போல முறிந்துவிழவும் - கைப்பற்றிய வெற்றிவில்லொடிந்து விரபட்டந்தறியவும், இதனுல் உள்ளமுடைந்து ஒருபுறமாய் ஓட்டமெடுத்தான் - வள்ளலாகிய கன்னன்-இவ்விதமாகப் போரழிந்தோடி வராநின்ற கன்னனைத் துச்சாதனன்கண்டு தேற்றி செம்பொற்றேர் கொடுக்க அந்தத்தேரின்பேரி லேறிக்கொண்டு மறுபடியும் அபிமன்னன்பேரிற்றிரும்பி பற்பலவாகிய திவ்வியாஸ்திரங்கள்-தேவாஸ்திரங்களையெல்லா மிறைத்துச் செயிக்க வேணுமென்று பேராசைகொண்டு திரியும்போதில், அளக்கரிய ஆற்றலைப்பெற்ற அபிமன்னனுடைய செங்காத்தி லிருந்து புறப்படும் வெங்கனல்த் தொடைகளினுல் அந்தப்படைகளெல்லா மொழிந்து இவனுடையதேர் - வில்முதலிய யாவுமழிந்து தேகத்திலும் உதிரம்வழிந்து சோரச் செய்யுங்காலையில் அபிமன்னனுடன்யெதிர்த்துப் போர்புரிவதற்கு அஞ்சி முகமாறியோடிய கன்னன் துரோணுச்சாரிமுதலிய பேர்களைப்பார்த்து இதோ நான்வருகிறேன் நீங்களெல்லோரும்போய் மடக்குங்க ளென்று அவர்களை அனுப்பிவிட்டு இரண்டு குதிரைபூட்டிய தடந்தேரேறிச் சென்று இந்திரக்கணை-சந்திரக்கணை முதலிய பாணங்களைப் பந்திபந்தியாய் விடுத்து அந்த அபிமன்னனுல் மனநொந்து தேரழிந்து வில்முறிந்து கொடியும் விரபட்டமுடியும்போய் காலாளைப்போல் ஓடி மூர்ச்சையாய் விழுந்தான் கன்னனுனவன் அவனைக்கண்ட காவலரும், தேவர்களும் கலகலவென்றுநகைக்க உடனே தெளியெழுந்து வேறோர் தேரேறிநடந்து துரோணர் முதலாகிய பேர்களிடத்தில் ஒரு சூழ்ச்சியாகிய யோசனைசெய்து மோசத்தினுல் வெல்லவேணுமே யல்லது சாகசஞ்செய்து கொல்லுவதரிது சேனுபதியாகிய தேவே, இப்போது நானே போய் யுத்தஞ்செய்து நாகாஸ்திரம்போல்நெளிந்து பின்பக்கமாகப் போகிறேன் அந்த அபிமன்னு என்பக்கந் திரும்பிப்பாராமல் உங்கள்பக்கம் யுத்தஞ்செய்யும்படியாய் ஒருகணப்போது மருக்குவீராகில் இவனை அடக்கி முடித்துவிடுகிறேனென்றுசொல்லி எல்லாரையுஞ் சேர்த்துக்கொண்டுவந்து அபிமன்னுவுக்கு முன்னேவிடுத்துத் தானும் போர்செய்து அபிமன்றெடுத்த நாகாஸ்திரத்தால் அடிபட்டுப் புறங்கொடுத் தோடுகின்றவனைப்போல அர்ச்சுனகுமாரனுடைய தேருக்குப் பின்பக்கமாய்வந்து ஒதுங்கி வில்லைக் கையிற்பிடித்து விரசாயகந்தொடுத்துகாதுபரியந்தமிழுத்துப் பிடித்துக்கொண் டிருக்க முன்னேயிருக்கும் சேனுபதியாகிய துரோணுச்சாரி-அசுபத்தாமன் முதலியபேர்கள்-அபிமன்னனுடைய ரதமும்-மனமும் அப்பாலிப்பால் திரும்ப வொட்டாமல் முப்பத்து முக்கோடி தேவரும் - இந்திரனும் பிரமிக்கும் படியாய் வீராவேசமும் ரோஷமும் வரும்படியா யுத்தம்பண்ணிக்கொண்டிருக்க காலசுதியினுல் ஓயாமற்றிருப்பிச்சுழற்றிக்கொண்டிருக்கும் ரதத்தைச் சாரதியுந்திருப்பாமல் தன்னைமறந்துநின்றுவிட்டான், அந்தச்சமயத்தில் களவனைப் போல் களிப்பாய் ஒளிப்பாயிருந்த கர்னன் பாணமழைகளைச் சுமைசுமையாகப் பெய்யும் மேகம்போன்ற அபிமன்னனுடைய வில்லைக் கருங்கல்லைமுறிக்குந் தன்மையைப் போல் முல்லைக்கணையைத்தொடுத்து நில்லாமல் முறித்தான் இந்தப்பிரகாரம் கர்னனுனவன் பின்பக்கத்தி லிருந்து அபிமன்னனுடைய அழிபடாத பெரியவில்லை முறிக்க அவனுக்கெதிரிலே நின்ற சேனுபதியும் பேர்பெற்ற ஆயிரமாதக்காரரும் அந்த அபிமன்னனுடைய தேரும் அச்சும் சக்கரமும் குதிரைகளும் சுமத்திரனென்னும் மனசொத்த சாரதியும் அழியும்படியாய்ச் சரங்களை விடுத்து வீழ்த்தினுர்கள்.

இப்படியாக் வில்லுந்தேரு முறிந்த மாத்திரத்தில் மேலண்டங் கிழியும்படியாக இரைந்து இருகாதிலுங் குண்டலங்கள்பிரகாசிக்க இருபுயங்களும் மலையினும் பெரிய தெனவோங்க, உதயபானுவைப்போல் கிரீடம் ஜொலிக்க நெற்றியிற் றிரிபுண்டரமும் அகருதைப்பொட்டும் ஒளிசெய்ய குளிர்ந்த சந்திரவிம்ப முகமானது குறுநகைப்புட்விலங்க அறுகுபோன்றமீசை அனற்போற்றுடிக்கப் பெருமூச்சுவிட்டு அரையிற்கட்டிய வாளாயுதத்தை உறைவிட்டெறிந்து கரத்திற்பிடித்து செண்டெழும்புந் தன்மைபோல் விண்டலத்தெழும்பி சிங்கக்குட்டிபோற் பூமியிற் பாய்ந்து மானங்கெடப்பேசினுலும் ஏசினுலும் பிராணனிருந்தாற் போது மென்று வானுள் வளர்த்து வரும் கன்னனுனவன் பின்னிருந்து தன் வில்லை முறித்தானென்று தெரிந்து கொண்ட வல்லமை சாலியானவன் ஆல கால விஷம் போலும் வடவா முகாக்கினிபோலும் சீறி வட்டமிட்டுத் தத்திக் கேடையத்தைப் பற்றி மண்டலாகிர்தியாய்ச்சுழன்று இன்றையப்போரில் நாம் சொர்க்கமடையத் தக்கதேயென்று மனமகிழ்ந்து மண்டியிட்டு தன்புயத்திற்கொப்பில்லாத மகமேருவைச்சுற்றி வரும் சூரியனைத்தொடர்ந்து செல்லுங் கேதுவாகிய பா

ம்மைப்போல் தன்னுடையதோள்களை, வாளும் கேடையமும் வலமிடம்வரும்படியாய்ச் சுற்றினான், இளவரசர்களென்னும் யானைகளைக்கொல்லும் ஆண்சிங்கம்போன்ற அபிமன்னன், இவ்விதமாகப் பூமியில்நின்ற அபிமன்னனைக்கண்டு அமர்புரிந்து அடிபட்டுப் பயந்தோடிய அரசர்களெல்லாரும் ஒன்றாய்க்கூடி ஓ ஓ வீராதிவீரர்களே நமதுபகைவனாகிய அபிமன்னனுக்குத் தேர்போய்விட்டது குதிரைசாரதிமுதலாகிய வில்லும்போய்விட்டது நமதுநல்லகாலம் இந்தச்சிறியவன்செய்தபோரும் போய்விட்டது இவனுடைய சிலம்ப மினிநடவாது இப்போது நாம்பின்னிடுவோமாகில் குடிகெட்டுது இனிமேல் நமக்குப்பயமில்லை எதுத்துயுத்தம்பண்ணுவோம் வாருங்கள் வாருங்களென்று மேகமுழக்கம்போல் ஏஹேயென்று இரைந்து நகைத்து உதடுமடித்து பல்லைக்கடித்து கடற்பெருக்கம்போல் வந்துமொய்த்தார்கள் அப்போது விரிந்தசமுத்திரம்போல் மூன்றுவிதயூகமாகக் கட்டிவைத்த வீரர்கள்முதலாகிய சேனைகளெல்லாரும் மண்ணைவிட்டு விண்ணிற்குடியேறும்படியாக ஒருநொடிப்போதில் யுத்தஞ்செய்துவென்ற வெற்றிவீரனாகிய அபிமன்னனை ஒப்பற்றதுரோணாச்சாரியர் நினைத்து நினைத்து தலைநடுக்குற்று அப்பா இவனை யெப்படிஜெயிப்போமென்றேங்கி ஹரியோமென்னும் பிரணவமாகிய மந்திரங்களுடன் ஆயிரந்தேவதாஸ்திரங்களைத்தொடுத்துவிடுத்தார்; அந்தக்கணைகளையெல்லாம் பருக்கைக்கல் கலகல கலகல கலகலவென்றொலியிடுஞ்சிலம்பணிந்தபாதங்களையுடைய அபிமன்னுவானவன் தன்பேரிற்படவொட்டாமல் கரத்திற்பிடித்த வாள்வீச்சினாற் கண்டகண்ட துண்டதுண்டமாகக்கரணையாடி எழுந்து பூமியிற்பதுக்கி ஒடுங்கியிருந்து சோனாமேகம்போல் அம்புகளைச்சொரியுந் துரோணாச்சாரியருடைய தேரிற்பாய்ந்து அவருடையவில்லையும் சாரதியையும் நான்குகுதிரையையும் ஏறியதேரையும் சிலசில துண்டமாகப் பலபலவென்று உதிரும்படியாய் வடிவாள்கொண்டுமோதி வானிலுயர்ந்து பூமியிற்பாய்ந்து மன்னர்மண்டலீகர் முதலிய வயப்படைகளை கால்மாடு தலைமாடாக விழும்படி ஒட்டிவீசி வெட்டியெறிந்து மத்தியானச்சூரியனைப்போல் வடிவமெல்லாம் உதிரந்தோய்ந்தொளிரும்படிநின்ற விஜயகுமாரன்மீது மறுபடியுந்தேரேறி சேனாபதியாகிய ஆசான்வந்து பூசாவிதிபெற்ற புரதகனாஸ்திரம்விடுக்க அது வாசாமகோசரமாய் நாசப்படுத்தவந்தடுக்க அந்தக்கணையையுங்கிழித்து அவருடைய தேர்-குதிரை-சாரதி-வில்முதலாகியவிரபட்டத்தையுந்தட்டி வெட்டியபோது மறுபடியுந் தேரேறிவந்தார்.

இந்தப்படிக்கு ஒருதரம்-இரண்டுதரம் - மூன்றுதரம்-நான்குதரம்-ஐந்துதரம் இப்படி அநேகந்தரம்வந்தார் அவரெத்தனைதரம்வந்தாலும் அத்தனைதரமும் வாளாயுதத்தாலழித்து அவருடைய வடிவத்தையுங்கிழி பெருகிய ஆறுபோல் உதிரங்களோடும்படி அழகுசெய்து இளம்பிறைபோன்ற அபிமன்னன் செருக்கடைந்து சிலைக்குருவைநோக்கி ஓபா சேனாபதியே வெட்கமில்லாமல் இன்னம் எத்தனைதரம் வருவீர் ஒன்னாயிருக்குந்தேர்களைக்கொண்டுவந்து ஒழித்துவிடவோ ஐயோ உடம்புசாகவில்லையோ, இது ஒருவீரமோ, உம்மைத்தானோ விற்குருவென்றுரைப்பது உம்மிடத்திலேயா அர்ச்சுனராஜன் தநுர்வேதங்கற்றது ஆ, ஆ, போதும் போதுமென்று சிரக்கம்பம் கரக்கம்பஞ்செய்து நகைத்தபோது இனியெப்படி யிவனைக்கொல்லு முபாயமென்று சிந்திக்கும் வேதபுங்கவனாகிய துரோணாச்சாரியை வெறுங்கையுடனேவாள்கொண்டு வீசியகாலையில் மறுபடியும் சிலைக்குருவானவர் இமயமலைபோன்ற தேரேறிவந்து நிலைபெற்ற வில்லைவளைத்து கதிரவன்கணையையும் பிறைமுகக் கணையையும்பூட்டி அபிமன்னன்கைக்கொண்ட வாளாயுதம் பொடிப்பொடியாகப் போகும்படி ஒடித்தபோது சத்துருக்களுடைய பிராணவாயுவைப்புசிக்கும் பசியினையும் பிளப்பாகிய வாயையுமுடைய ராகுவென்னுஞ் சர்ப்பம்போன்ற அபிமன்னுவின் வடிவாளானதுநொய்யுந்தவிடுபோல் நொறுங்கிப் பூமியில் விழுவதற்குமுன்னமே சூரியகுமாரனாகிய கர்னனானவன் மாட்சிமைதங்கிய வாயுக்கணைகளை விடுத்து நவரத்தின கசிதங்குமிழ்க்கட்டிய கேடயத்தை நடநடவென்றுபொடிசெய்துதீர்த்தான் அப்போது வாளாயுதமுங் கேடையமும் பொடியாய் மண்ணில்விழுந்தவுடனே மருதமரமாயிருந்த நளகூபரன் மணிக்கிரீபனென்னுங் குபேரனுடைய பிள்ளைகள் நற்கதிபெறவேண்டி மருதமரம் அடியுடன்சாய உறலுடன்றவழ்ந்துந்திய மாயனுக்கு மருமகனாகிய அபிமன்னனானவனுக்கு விருதுபெற்ற அமர்செய்யும்படியாகிய வீரவேந்தர்களெல்லாரும் வாசனைபொருந்திய தாமரைமலர்நிறைந்த ஒருமடுவாகவும் இரண்டுதுதிக்கையுடன்புகுந்து அம்மடுவைக்கலக்கும் பலம்பொருந்திய யானைதானாகவும் வெறுங்கையுடனுழைந்து குழப்பும்போது எட்டுத்திக்கிலுமிருந்துமட்டற்றபாணங்களைச்சொரிந்து இடைவிடாமற்போர்புரியும் இராஜவீரர்கள்பேரில் கேசரிபோலெதிர்த்து தன்மாமனாகிய மாயனானவர் பூர்வத்தில் தனக்கு உபதேசித்தருளிய எதிசக்கரமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு உடைந்த ரதங்களின் சக்கரத்தையெடுத்து உச்சாடனஞ்செய்துவிடுத்து இந்திரனாற்பொழியச்செய்த கல்வருஷத்தை கோவர்த்தனகிரியினாற் றடுத்த கோபாலனைப்போல சத்துருக்கள் தன்பேரிற் பொழியும்படியாகிய வில்மாரியென்னுங்கணையைச் சக்கரத்தால்விலக்கி அந்தவீரர்களையும் முடிதறிந்து விழும்படி முடித்தான்.

இந்தப்படிக்கு ஒருகையால் தேர்ச்சக்கரத்தையெடுத்து திக்குகள்தோறும் ஓடித்துரத்தித்திரிந்து யுத்தம்பண்ணும் சத்துருக்கள்பேரிலெறிந்துநாசப்படுத்துந் தன்னமயில் ராக்ஷசாள்பேரிற் சக்கரத்தைவிடுத்துக்கொல்லும் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியை ஒத்திருந்தான், அக்காலையில் சிரத்தாலுங் கரத்தாலும் ஒருவரைவணங்காமுடிபெற்ற துரியோதனமகாராஜன் மதிமயங்கி ஐயோ இந்த அபிமன்னன் தேருடனும் வில்லுடனும் போர்புரிந்தபோது கொஞ்சஞ் சுமாராயிருந்தது இப்போது தேரும்வில்லும் போனபிற்பாடு நமதுபடைகள் தாறுமாறாகக்கெட்டழியுதே நானென்னசெய்வேனென்று தன்னருகிலிருக்கும்

பொருபடைகளை முடுக்கிவிடுக்க அவர்களையுந் தலைகாட்டவொட்டாமற் சக்கரத்தாற் சதைக்கும்போது அநேகம் யானைகளழிந்தன, கோடாகோடி குதிரைகளிறந்தன, மலைபோன்ற கிரணமணிச் சிகரத்தேர்களொடிந்தன, வல்லமைபெற்ற வீரர்களின்தேகந்தோறும் உதிரங்களுடன் அக்கினிப்பொறிசிந்தின, பூமியிற் சோரிவெள்ளந்தோய்ந்தோடிக் காயந்தன, அப்படிதோய்ந்து புரண்டரத்தவெள்ளங்களில் குருபதிசேனையிலுள்ள கோவேந்தர் பலபேர்மூழ்கிப் பிராணனிழந்தார்கள், சிலரோடி ஒழிந்தார்கள், இப்படியாக இந்த அபிமன்னனால் அல்லோலகல்லோலமாய் அவதிப்படுவதைக்கண்டு சேனாபதியாகிய துரோணாச்சாரியரும், அவருடையகுமாரன் அசுபத்தாமனும், சூரியகுமாரனானகர்னனும், இளையாகிர்தியாகிய வேலாயுதம்பிடித்தபலகோடிமன்னரும்படாதபாடுபட்டுஇனிநாங்கள்தாளமாட்டோமென்றுஎய்த்திளைத்துவாடியபேர்களும்மதங்கொண்டயானையைக்கொலைசெய்யக் குறுகுஞ்சிங்கம்போற்றெழித்துஉரப்பிச்சேர்ந்துமலைமீதுபொழியும்மழையைப்போலும் பெருங்காற்றைப்போலும் அஸ்திரங்களைப்பொழிந்து அபிமன்னன் கைக்கொண்டசக்கரத்தையும் அழித்தார்கள் அபிமன்னனுடைய கையிலிருந்த தேர்ச்சக்கரத்தை அழித்தஉடனே முகவாட்ட மில்லாமற்-பிரகாசத்துடன் நகைத்துத்திரும்பிஉலகமதிக்கப் பெருமையடைந்த கதையைக்கைக்கொண்டுமேககர்ச்சிதப் பேரிடிபோல் முழக்கமாகநகைத்து போர்புரிந்து ஆட்டுக்கூட்டங்களிற்புகுந்த தனிப்புலி யாகிய வேங்கையைப் போற்சுழி திசாதிசைகளுமுலாவி மண்டலம்- கோணம் வட்டம்- ஒதுங்கல்- பதுங்கல்- தாவல்- மேவல்- முதலாகிய சாகசங்களால் முனைவீரரை முடித்துவருங்காலையில் அசுபத்தாமன் வந்துதகைந்து ஆயிரம்- ஐயாயிரம்- ஐம்பதினாயிரமென்றுசொல்லும் அஸ்திரங்களைத் தொடுத்து முடுக்கும்போது அபிமன்னன் வெகுண்டு கதையைக் கைக்கொண்டு உயரத் தூக்கினால் சப்தமேகங்கள் அஞ்சியோடவும் பூமியி லடித்தால் பிலத்துவாரங்க ளெல்லாம் அதிர்ந்து மூடவும் எதுத்தவர்கள் சிதைந்திறக்கவும்,எறிந்தால் அண்டகடாக முடையும்படியாகவு மிருக்கிற அபிமன்னுவின்கதையின் திறத்தை அறிந்து சொல்லத்தக்க அதிசூரர்கள் யாரிருக்கின்றார்கள், அப்பேர்ப்பட்டகதையினால்தன்னைத்தடுத்துப்போர்செய்யும் அசுபத்தாமனை-தேர்குதிரை - சாரதி-முதலியபேர்களுடன் பூமியிற்றுடித்துவிழஅடித்து அந்தஅடியினால் மெத்தவும்வருந்தி உடல்நொருங்கி உயிர்பிழைத்தாற் போதுமென்று அசுபத்தாமன்-காலோட்டமாக ஓடும்படியாய்விடுத்து நாலுபக்கங்களிலு நெருங்கியநரபாலரும்- கவிந்துபோர்செய்யும்நால்வகைச்சேனையும் நாடியவாறே ஓடும்படியாய்ச்சாடிதேவேந்திரனுக்குப் பௌத்திரனும், அர்ச்சுனனுக்குப்புத்திரனுமாகிய அபிமன்னன்-முன்தாவுதல்-பின்தாவுதல்-பாடுதாவுதல் ஊடுதாவுதல்-பாச்சல்பதுங்கல்இருத்தல்-எழுதல்-முதலாகக் கைபழகியிருக்குங்கதைப்போரின் சுழற்சியைக்காட்டி தன்னுடைய அகாலசமயத்தைத் தன்றந்தையாகியதனஞ்செயனுக்குத் தெரிவிக்கவேணு

மென்று உரமாகக்கற்ற வரமாகப்பெற்ற பால்போன்ற வெண்சங்கத்தைவாயிதழில்வைத்து பம்பம்பமென்று ஊதியபோது ஈரேழுபதினான்குலோகமும் செவிடுபட்டு படபடவென்றும விடவிட வென்றுங் கடகடவென்றும் கலங்கிப்பதறும்படிக்கு, முழக்கினான் - அந்தவேளையில் சஞ்சத்தகாள்பேரில்யுத்தஞ்செய்யும் அர்ச்சுனனுடையரதத்திலிருக்குஞ்சாரதியாகியமாயனென்னுஞ்செந்தாமரைக்கண்ணன்-இந்த அபிமன்னன்குறித்த சங்கத்தொனியானது அர்ச்சுனன்காதில் விழவொட்டாமல்தன்னுடைய பாஞ்சசன்னியத்தையெடுத்து பொம்பொம்- பொம்மென்றுபேரொலியுண்டாகும்படியாய் முழக்கி லோகாலோகங்க ளதிரும்படிக்கு-அபிமன்னன் குறித்த சங்கத்தொனியைமறைத்தான்.

அப்போது அர்ச்சுனன் - முகுந்தனுடையமுகத்தைப் பார்த்து ஓ - சுவாமீ, இவடத்தில் இப்போது யாதொரு அதிசயமும்ஏதொருவிந்தையும் இல்லாதிருக்குங்காலையில்தேவரீர்சங்குமுழக்கிபசந்தோஷதாத்பரியமென்னவென்றுகேட்க அப்பாஅர்ச்சுனா. உன்னைப்போல்யுத்தஞ்செய்யும் உத்தமனைப்பார்த்தஎனக்குத்தான் தன்னைமறக்கத்தக்கசந்தோஷம்வந்ததனாலும் உன்னுடன் சண்டைபோடாநின்ற-இந்ததுஷ்டர்களாகியசஞ்சத்தகரும்திரிகர்த்தரும்மயங்கித்தியங்கிப்போகவும்,என்னமோ ஏதோவென்றிருக்குந் தருமராஜன்- முதலியபேர்களுக்குத் தயிரியமுண்டாகவும்சங்கத்தொனிசெய்தேனென்று அந்த அர்ச்சுனனுக்குச் சமாதானஞ்சொல்லி சுவேதவாம்புரவிபூட்டிய தேரைத்தடதடவென்று சத்துருக்கள் பேரில் விடுவதைப் போல் இன்னஞ்சற்றுதூரத்திற் கொண்டுபோனார், அதப்படியிருக்கஇவடத்தில்அபிமன்னன், சுவாமியினுடைய பாஞ்சசன்யத்தின் ஓசையைக்கேட்டுமகாதயிரியமுடையவனாய்நாமுழக்கியசங்கத்தொனிக்கு எதிர்முழக்க முழக்கியபடியால் நமதுதந்தையும்,மாமனாகியமாயனும், வருகின்றார்களென்றுமனமகிழ்ந்து எண்காற்புள்ளினாற் பதைபதைத்திறக்குங்கொடும்புலி முதலிய யானைக் கூட்டங்கள் போலும்சண்டமாருதத்தாற் பறக்குஞ் சருகைப்போலும் தீயும்படியாய்த் துரியோதனனுடையபடையடங்கலையுஞ் சாய்த்துமாய்த்தான் இதைக்கண்டதுரியோதனராஜன் ஏதேது நாம்தலையெடுக்கிறதாயில்லையென்று வயிற்றில்வாள்கட்டிக்கொண்டவர்களைப்போல் உறக்கங்கொண்டு வாடிவருந்த துரோணாச்சாரியர் - அசுபத்தாமன் - கன்னன் முதலாகிய பேர்க ளெல்லாரும், கடுப்பென்னும் வயிற்றில்நெருப்பைமூட்டிக்கொண்டவர்களைப்போல் ஓட்டத்துடன் வாட்டங்கொண்டு தலைநட்டுக்கொள்ள அபிமன்னனானவன், மள-மள-வென்றுமுறித்தேறிச்சென்றுபளபளவென்று பாழாக்குங்காலையில் - வயித்தியன்கைவிட்டதைப்போ லிருந்தஅந்தச்சமயத்தில் சகலதேசராஜர்களுந் தொழும்படியா யிருக்கின்ற துச்சாதனனுடைய குமாரன் காலாக்கினிவிஷங்கொண்ட கண்டத்தினை யுடைய கரும்பாம்பைப்போன்ற துச்சனியென்பவன்-உங்களையெல்லாம் பங்கப்பட வென்ற சிங்கம்போன்ற இந்த அபிமன்னனை நானே கொல்லுகிறேனென்று பிரமசரமுத

மிய பெதங்களைக்கொலிடுத்து தேரைச்செலுத்தி யடுத்தான்-அந்த துச்சனியைக்கண்ட அபிமன்னனானவன், கடுகடுத்துப் படபடத்துக் குடுகுடுவென்றோடி அச்சாணி-அப்பாணி-அஞ்சூராணி-குத்துக்கால் கொடிங்கை-சிகரம் கொடி-குடை-குதிரை-சாரதி முதலிய யாவும் குப்புற்று விழுந்தழியும் படிக்கு ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து கதைகொண் டடித்தான், அந்த இடியினால் ரத்னமுடி முதலியதும் பொடியாய்ப்போய்ப் பாதசாரியாய்ப் பூமி யென்னும் படியிற் பாதாபடியாய் நின்று தனது தேர்-குதிரை-சாரதி-வில்முதலிய வெல்லாம் பிடிபடாமல் ஒரு நொடியிற்போனதைக்குறித்து விசனப்பட்டு தலைக்கு மொட்டைக்குல்லாதரித்து முசசெகம்புகழும் வச்சிரக்கட்டணிந்த உச்சிதர்கதையைக்கைக்கொண்டு அந்த அபிமன்னனுக்கு நேரில்வந்து அடா அபிமன்னு, உன்சாமர்த்தியத்தைக்காட்டடாவென்று கதையாற்றட்டிக்கிட்டிவந்து கைகொட்டி நடநடவென்று பற்கடித்துச் சொற்படித்துத் தடுக்க அபிமன்னனும் உகாந்தகாலாக்கினிபோலோங்கி கொலைத்தொழிலைக் குறைவில்லாமற் செய்யுங் கொடுங்கூத்தனும் பயப்படும்படியாய் நின்று இருவரும் பற்பலவிதகதைப்போர் புரிந்தார்கள்.

அஃதெப்படி யென்னில் அபிமன்னனுடைய இடதுகாலும் துச்சனியுடைய வலதுகாலு நாட்டி ஒருவர்காலின் புறவடியை ஒருவர்மிதித்து கணுக்காலுடன் கணுக்கால் தொடையுடன் தொடை-இடையுடன் இடை-கரத்துடன் கரம்-சிரத்துடன் சிரம் இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாக பின்பக்கம் முன்பக்கம் - குந்தியெழுந்து குனிந்து நிமிர்ந்து பாய்ந்து-பதுங்கி பறந்துவளைந்துகோபங்கொண்டு குமாளமிட்டெழுந்து பங்கப்படாச்சிங்கம்போற் பாய்ந்துகுதித்து மதத்து-விழித்து ஒருவரையொருவர் விட்டுத்திரும்பி கிட்டிநெருங்கி காலுடன் கால்மாற்றி முறைமுறையாக அடித்து ஒருவரடிக்கும்போது மற்றொருவர் தடுத்து தலையிலும், உடலிலும், தாக்கி-விலாப்பக்கங்களிலு மோதிநீதியாகிய செருச்செய்வதினா லுண்டாகிய பேரொலியானது காரொலியால் விழுந்த அக்கினிவிளைந்து பற்றிக்கொள்ளுங்காலையில், வாயுவுங் கூடிக் கலந்து குபிரெனவிசுந் தன்மையைப் போலும், சமுத்திரங்கலங்கி அதிர்ந்து ககனமும் நடுங்கிப் பளீர் பளீரென மின்னலெழுந்து திக்குகளொடுங்கித் திக்குப்பாலர்களடங்கித் திக்குக்கஜங்கள் மடங்கி அண்டச்சுவர் படபட படீரென வெடிக்கத் தக்கதாய் திடமுடைய இருவரும் மனமழன்று விறுவிறெனச்சுழன்று பொன்மலைக்கொப்பாகிய புயவலிமைகாட்டி புராதன விவர்களெனகதையுடன் கதைமாட்டி ஒருவரை யொருவர்வென்று வெற்றி பெறவேணுமென்று வீராவேசங் கொண்டு பலம் அதிரிக்கும்படியாய்ப் போராடுந் தருணத்தில் அருமையுற்ற பெருமைபெற்ற துச்சாதனனுடைய உரிமை மைந்தனுக்கு இரண்டுபுய மொறுங்கவும்-எலும்புகள்-நெடநெடவென்று முறியவும் - வயிற்றிலிருக்கும் பெருங்குடல் வாய்க்கிவரவும், மணிக்குடல்முதலாகிய கொடிவளையங்களெல்லாம் வெளிவாயில் வந்திடிக்கவும் - இருதொடையுங் கடகட படபடவென்று நடுங்கவும், கால்கள் தடுமாறி முடங்கவுங் கண்கள்சிவந்து கரும்புகையுடன் கனற்பொறி பறக்கவுந் தலையிலணிந்த மொட்டை முடியிலிருந்து விலையில்லாமணிக ளுதிரவும் பெருமூச்செடுத்து பெதறும்படியாகவும் நெருப்புப்பறக்குங் கோபத்துடன் இருகையிற்பிடித்த கதையை ஒருகையிற் பிடித்துச் சுழற்றி ஓங்கியடித்தான் வீங்கியபுயத்தில் வெற்றிமாலையணிந்த அபிமன்னனானவன், அந்த அடியினால், துச்சனி இளைத்துத் துடிதுடித்து அவதிப்பட்டு பிராணன்போனதைப்போல் மூர்ச்சித்து உடனே பிழைத்து ஆயித்தெழியெழுந்த துச்சனியானவன்-வசையற்ற இசைபெற்ற குருகுலமணியை மாசற்ற வம்சத்திற்குத் திலகமானவனை இணையாகிய மருசமரத்தையுந்திய மாயன் மருமகனை கணைபொழியுங் காண்டீபக் கரவிஜய னுடைய புத்திரனை நான்மநப்பி யானையூர்தியாகிய தேவேந்திரனுக்குப் பேரனை அசைவில்லாத் திடதீரத் திறலினையுடைய நிருபர்களையெல்லாங் கருவறுத்த அழிவில்லா அழகினையுடைய அபிமன்னனை கீர்த்திகொண்ட வல்லாண்மைபெற்றவில்லாளியாகிய துச்சனியானவன் எதிர்த்துத் தன்னுடைய ஒரு சதையை, இருகரத்தாலுந் தூக்கி அபிமன்னனை அடித்தான்.

இப்படிக்கு இவனையவனடித்து அவனை யிவனடித்து கால்கட்டிய வீரகண்டாமணி கணகணவென்று சப்திக்கும்படி காலுடன் கால்பிணைத்து தைத்து வாருவலயந்து சிதறும்படியாய்ப் புயத்துடன் புயம் இறுகக்கட்டிப் பிடித்திடித்து-தலையிலணிந்த மகுடங் கலகலவென்றுதிர்ந்து உடைபடும்படிக்குத் தலையுடன்றலை மலையுடன்மலைமோதுந்தன்மைபோல் மோதி-அண்டங்கலங்கக் கண்டங்குலங்க அதட்டிக்கூவி அஷ்டகஜங்கள் தங்களுக் கிஷ்டமாகிய பெண்ணானைகளுடன், சொகுசி விச்சி-முக்கி ரெத்தங்கக்கி மலைத்துவாரத்துக்குட் புக்கிப் போகும்படியாய் கதையுடன் கதை இடித்து நெக்கிப் புதைபடும் கீழுலகமேழுங் குலுங்க ஆதிசேடன்தோள் மாற்றும்படியாய்க் குதித்துக் குதித்து வேகமாக ஓடிவந்து வேர்த்து சித்திரப்பாவைபோல் கண்சிமிட்டாமல் உறாய்ப்பார்த்து கண்களிற் பிரிட்டு தாரைதாரையாய் ரெத்தம் வரும்படி நடநடநட நட-நடநடவென்று பல்லைக்கடித்து கிர்ம்மமாகக்கலந்து நெருங்கியடித்து யாவரும் அதிசயங்கொள்ள ஒரு முகூர்த்தம் வரைக்கும் கதாயுத்தஞ்செய்தார்கள், கெடுதியில்லாத் திறமாகிய கதாயுத்தத்திற்கு உறவாகிய துச்சனியும் வில்லுக் கருச்சுனனென்னுஞ் சொல்லைப் பெற்ற வல்லவனுடைய குமாரன் அபிமன்னனும் யுத்தஞ்செய்யும்போது ஒருவரையொருவ ரிகழ்ந்து ஒருவரையொருவர் புகழ்ந்து இருவரும் யுத்தமுறையில் மகிழ்ந்து, எனக்கிணை நீயல்லவென்றும் உன்னைநானே கொல்வேனென்றும் எதிரொருவரில்லாத இருவரும் இணையொருவரில்லாமல் தங்களுக்குத் தாமே யொப்பாய் போர்மலையாய் நின்றகாலத்தில், இந்தத் துச்சனியிலும் நூறுபங்கதிகமாகிய, சூாத்திரமுங்-கோபமுங் கொண்டு சமயம்பார்த்துச் சாடிவரும்படி யாகிய அபிமன்னுவின் புயவலிமை

யைக்கண்டு கடல்சூழ்ந்த நாட்டையாளும் அரசர்களும் தேவர்களும் மற்றியாவர்களும் அண்டமுகடதிரும்படிக்குப் புகழ்ந்து துதித்தார்கள்.

இதல்லாமல் தங்களுக்கு வயிறுநிறைய மாமிசங் கொடுத்த இந்த அபிமன்னனை எத்திவாழ்த்தி ரணகளமுழுமையும் சமுகு பந்தரிட்டன பைசாசக்கூட்டங்களெல்லாம் கைகொட்டிப் பாடிக்கொண்டு பலவிதக் கூத்தாடினதலையறுந்த கவந்தங்களெல்லாம் சிலவித நடனம்புரிந்துவிழுந்தன ஆயுதமுதலிய பாணங்களெல்லாம் வேகமடங்காமற்பிரிந்தன பெருகியோடும் உதிரவெள்ளங்களினால் கருங்கடலுஞ் சிவந்தன, அந்த ரெத்தப்பெருக்கத்தில்மூழ்கி அநேகம் வீரர்முதலாகிய சேனைகளுமிறந்தன அந்தச் செந்நீர்ப்பெருக்கச் சுழியில் மேகம்போ லிறைந்து யானைகளுங் குதிரைகளும் அழிந்தன தேர்களெல்லாமுறிந்து முழுகிப்போயின பதாதிகளுஞ் செத்தார்கள் இப்படியாக அமக்களங்கொண்டிருக்கிற அமர்க்களத்தில் வலம்புரிமாலையணிந்த துரியோதனனுடைய தம்பிபுத்திரனும் பூசக்கொடிபெற்ற தருமராஜனுடைய தம்பிபுத்திரனும் கதாயுதத்திற் சேர்ப்பட்டிருக்குஞ் சாஸ்திரப் பிரகாரம் கதைப்போர் நடத்தி பலம் பொருந்திய இருப்புக் கட்டுகள் கட்டிய கதையடியால் இருவர்தேகமுங்கொட்டியாஞ்சுபோற் கூளமாய்நொந்து மல்லிகைமலர்போல் வாடிக்கசக்கி தேகாபிமானம்விட்டு தங்களைத் தாங்களே மறந்து உயிரானது விண்ணுலகஞ்சேர உடலானது மண்ணுலகஞ்சேர விழுந்துவிட்டார்கள், இப்படி இருவரும் விழுந்தவுடனே இராஜநீதிக்கும் தர்மத்திற்குங் குறைவாகத்தக்கதாய் முறைமையில்லாமல் பதினாயிரம் அரசர்கள் சூழநின்று கதைகளினாலும் வேலாயுதங்களினாலும் பாலாமுதலிய பல்லயங்களினாலும், ஈட்டி-யெறியீட்டியினாலும் அபிமன்னனைக் கொலைசெய்தார்கள்-அதெப்படியென்னில், தாகவிடாயால் தண்ணீர் குடிக்கச் சுனையிலிறங்கி வகைமோசத்தால் முழுகியயானையை கிராதகராகிய பலவேடர்கள் கூடிக்கொலைசெய்து துணிக்கும்விலையைப்போல் கும்புகும்பாகக் கூட்டங் கூடிக்கொண்டார்கள்; ஐயா-இத்தனைபேர்களாலும் இப்பேர்ப்பட்ட அடிபட்டிறந்த அபிமன்னனுடைய மறங்குடிகொண்டிருக்குஞ் செவந்த விழிகளும் சிறியமுத்தைப் பதித்ததை யொத்த புன்னகையும் காந்தியையுடைய சுந்தரச் சந்திரமுகமும் கமலகுண்டலந்தாங்கிய இருகாதும் பலதிசையுஞ்சொலிக்கும் விலையில்லா நவமணியழுத்திய மகுடமும், பகைத்த பார்த்திபரைச் செயிக்கிறேனென்றுபருகிபோற்கட்டிய வீரபட்டமும் இவைகளெல்லாம் பிரகாசிக்கும்படியாய் பூமிப்பிராட்டியின் மடிமீது நித்திரைசெய்கின்ற தன்மைபோல் அபிமன்னு இறந்துபோனான், அவனிறந்து இரண்டுநாழிகைவரைக்கும் துரியோதனன் துச்சாதனன் முதலாகிய திறம்பெற்ற அரசரெவர்களுங் கிட்டநெருங்காமற் பயந்து எட்டியிருந்து தாச்சனியிறந்த தங்கத்தை காட்டாமற் தூரத்தொலைவி லிருந்தார்கள்-அதே ளில் மாயன் மருமகனானையினால் வாயுவைப் பந்தித்துக்கொண் டிருந்து நாம் கிட்டவரக் கண்டு மறுபடியும் பிழைத்தெழுந்து நம்மைப் பிழைக்கவொட்டாமற் கொல்லுவானென்றுங் கலவரத்தால் அருகணையாமலிருந்தார்கள், அந்த அபிமன்னன் அடங்கிவிட்டது, எப்படியிருந்ததென்றால் - உதயகிரியில் உதயாதியிலுதித்து, கிரணங்களைவிரிந்து, காலஅளவைக்கட்டவந்த-சூரியதேவன் மாலைப்போதில் தன்னுடைய குணாவிசேஷங்களை யெல்லாம் அடக்கிக்கொண்டு மேற்றிசையி லிருக்கும் அஸ்தமான கிரிக்கப்பால் ஒடுங்கிபதைப் போலும் விசாலமாகிய அநேகவசனங்களைக் கரியாயெரித்த அக்கினிதேவன் புகைமுதலாகிய பொறிகளுங் கொதிப்பும் ஆறி அடங்கியதைப்போலும் தலைவணங்கிச் சேனைகளைக் காய்ந்து அதிரதத் தலைவர்கள் சாய்ந்து மாய்ந்து தலைகாட்டாமற் புறங்காட்டி ஓடும்படியாய்விட்ட ஆண்சிங்கமாகிய அபிமன்னன், நிலவளரும் இளம்பிறையானது வானத்தைவிட்டு வழுவிவிழுந்த தன்மையைப் போல், ஐயோபாவம், நிலத்தில் விழுந்துவிட்டான், (இவ்விடத்தில் வைசம்பாயனரென்னும்புராணிகர்சங்கித்துச்சமாதானம்பேசுகிறார்.)

அதாவது, இவ்வுலகத்தையெல்லாங் கர்ப்பத்தில்வைத்து ரக்ஷிக்கும் ரக்ஷகர்த்தாவாகிய மகாவிஷ்ணுவானவர் அம்மானாகயிருந்தும், காலகேய நிவாதகவசாளைச் சம்மரித்து இந்திரனுக்குப் பட்டங்கட்டி தானுந் தெய்வலோகச்சேனாபதி ஆசுபுரிந்து சிவசத்தியுடன் சோமசுந்தரக் கடவுளைக் காட்சியாகக்கண்டு தாட்சியில்லா அருட்கொண்டு பாசுபதம்பெற்று திசைகளில் இசையவெழுதிய வசையற்ற இசைபெற்ற விஜயனைசிறந்த தந்தையாகப் பெற்றிருந்தும் முப்பத்து மூக்கோடி தேவர்களுக்கு நாயகனாகி, காமதேனு கற்பகத்தருமுதலிய நிதிகளையும்-இந்திராணி சமேத இந்திரவிமான வைபோகங்களையும், பெற்ற தேவேந்திரன் பாட்டனாகக்கிடைத்தும் தருமமே ஜெயஞ்-சத்தியமே நித்தியமென்னுந் தருமராஜனும் - திரிபுவனதீரனாகிய வீமசேனனும் பெரியதந்தையாகயிருந்தும நகுலசகாதேவர்கள் சிறிய தந்தையாகியும்-வெற்றிவேல் தாங்கிய ஒருகோடிராஜகுமாரர்கள் உயிர்த் தோழமையாக வந்து பிரியாவிடையாயிருந்தும்-இளஞ்சிங்கக் கன்றாகிய அபிமன்னுவானவன் இந்தரணகளத்தில் மடியலாமா, இது நியாயமாவென்று மேலுஞ் சொல்லுகின்றார், தாம்தாம் முன்செய்தவினை தாமே அநுபவிப்பாரென்னும் வாக்கியப்படிக்கு எத்தனைபேரிருந்தாலும் அவரவருடைய கர்மாநுபவ விதிப்பிரகாரம் அநுபவிக்க நடத்துமல்லது அதைத் தடுப்பதற்கு எவர்களாலுமில்லை, அவரவர்கள்வினையை அவரவர்களே அநுபவிக்கவேணும், ஒருவருக் கொருவர் உயிர்த்துணையென்பது ஒருக்காலுமில்லையென்றார் ஆகையால், ஆரிருந்தாலும் ஆவதொன்றில்லை, ஊழ்வினையே பெரிதென்பது கருத்து, இப்பால், புத்திரனை அபிமன்னன்பூமியில்விழுந்ததைப்பார்த்து அந்தக்குருக்ஷேத்திரத்திலிருந்துபற்பலராஜர்களும் சேனைகளுங்கண்ணீர்விட்டழுதுஐயையோ-அநியாயமேஇயாவராலுந்துதிக்கும்படியாகியபிர்மகுலத்திற்பிறந்தும்விற்குருவாகியும்மேலாகிய மறுமுறைதெரிந்தும-மேன்மையான புத்தியையுடைத்தாயிருந்தும், புகழ்பெற்ற துரோணாசாரியரும் - பிரு

கொடையாளனாகிய கர்னனும் - அநேகங்கோடியேமகத் தோராகியசேமத்தேரோடியவீரர்களும்பூலோகத்திற்குஎர் ப்படுத்திவைத்தபுண்யமுதலிய நீதிமுறை தப்பிஅழியாத ஒருநிறுவனுடைய உயிரைமாய்த்தார்களே, ஐயோ, பழி கொலைக்கஞ்சாதபாவிகள்-குளிர்ந்தமுகங்கோணுதவார்த் தையும் சத்தியமும்தர்மமும், கிருபையும்பொறுமையும் செங்கோலும் மநுநீதியும்கெட்டுப்போய்விட்டது, இனி மேல்நாம்இவடத்திலிருந்துவாழ்வதிலுங்காடே கதியாய்ச் செல்லுவதுநன்மை, அல்லது இறப்பது மேன்மை என்று ஏங்கி யுருகி விசனப்பட்டுச்சொல்லுகின்றார்கள்.

ஆ,ஆ ஆதிசேடனுடையபணமகுடம்நெடநெடமடமடவென்று ஒடியும்படிக்குச்செலுத்திக்கொண்டுவந்த அபிமன்னனுடையசேமத்தே ருடைபடத்தக்கதோ ஐயையோ சர்வசம்மாரகால ருத்ரமூர்த்தியைப்போல் அமராடி சத்துருக்களை அழித்துவரும்பிள்ளைக்கு ஒருவருதவியுமில்லாமற் போச்சுதே அந்தோ அந்தோ கங்கசுவாமியைப்பார்க்கிலும்வலிமையுடைய அபிமன்னுவானவன் அங்கதேசாதிபனாகிய கன்னனை அநேகந்தடவை தோற்கடித்தான் ஐயையோ ஈரேழுலகத்தையுமெரித்து ஏழுகடலையும் வறளச்செய்துஏழுமேகத்தையுஞ்சுருக்கிஇசைபெறுஞ்சாமர்த்தியராகியதந்தைமாரைந்துபேர்பொன்மலைபோலிருந்தும்அருமையான மைந்தனுயிரழியத் தக்கதோ அந்தோ அந்தோ இந்தமகாசூரனுடைய வீரத்தைப்பார்த்திருந்த தேவர்களெல்லாருந்தாளாமல்மனமுருகி அன்புடன் புட்பமாரி பொழிந்தார்கள்ஐயையோ இளமைப்பருவமுஞ் சுந்தரஉருவமும் இருகண்களில்மறமும் மின்னெனஒளிருநிறமும் எதுத்தோரைக் கொல்லுந்திறமும் ஈகையாகிய அறமும் ஐயந்திரிபில்லாமற்கசடறக்கற்றகல்வியும் விசனமில்லாமற் பெற்றசெல்வியும் இன்னம்வேண்டிய நன்மைகளையெல்லாம் இவனுக்குப் படைத்தருளிய அன்னக்கொடியோனுகிய பிர்மதேவன் அதிர்ஷ்டமெழுதும்போது அதிகமாக ஆயுளெழுதமறந்தானேபாவி அந்தோ அந்தோ எத்தனைபேர் எத்தனைமுகத்திலிருந்து எத்தனைவிதமாகிய எத்தனைகோடிபாணந்தொடுத்தாலும் அத்தனையும்பொறுத்து அத்தனையும்அறுத்து அத்தனைபேரையும் அழித்தான்ஐயையோ எத்தனைகோடிவில்லைமுறித்தான் எத்தனைவிதமாகிய கொடியைவெட்டினான் எத்தனைகோடி குடைகளைத்தள்ளினான் எத்தனையாயிரந் தேர்களையழித்தான்அந்தோ அந்தோ இந்தகுருக்ஷேத்திரமானதுபதினெட்டக்ரோணிபடைகளைச்சுமக்கமாட்டாமற்பாரங்கொண்டிருக்கபளுவைத்தீர்த்தான் சேனபதியாகியதுரோணாச்சாரியை ஒருதரமோ அம்மம்மகாற்றிலோடு நாலோட்டம்போற் பலதரமும் காலோட்டமாக ஓடவிட்டடித்தான் அநேகம் ராஜகுமாரருடன் போராடிபின்னைகளென்கிற பேரில்லாமற் தலைகளையறுத்துத்தள்ளிய அரபார அகோரதீரவீரப்பிரதாப சூரனுகிய வில்விஜயன்குமாரனென்னும் இந்த அபிமன்னனுக்கு திரிபுரசம்மாரனாகிய சிவபெருமானை ஒப்புச்சொன்னுற் சொன்னவாயே யெரிய ஆயுதம்பிடித்து யுத்தஞ்செய்து வெற்றிபெற்று புவனியையாண்ட அரசர்களில் இந்த அபிமன்னு ராஜனுக்கொப்பாகியபேர்கள் எவர்களுமில்லையே தெய்வமே ஒருவருக்கொருவர் ஈடாக இரண்டுபேர்முனைந்துநின்று யுத்தஞ்செய்வது மநுமுறைமை அந்தை அநுசரித்து நடப்பது உலகியற்கை அப்படியிருக்க அதைவிட்டு நான்குபுறத்திலுங்கோடாகோடிராஜர்கள் வளைந்துகொண்டுபோராடி ஒருவனைக்கொன்றார்களே ஐயையோ இவனேறியதேர் அழிந்தவுடன் இன்னொருதேரிருக்குமாகில் ஒருக்காலும் இந்தப்பிள்ளை இறக்கமாட்டானே இவனுக்குச் சேமத்தேரொன்றில்லாத குறையல்லவா இந்தச்சிறுவன் ரணகளத்திலிறந்ததற்குக் காரணமென்று துஷ்டசதுஷ்டாளாகிய நான்குபேர்தவிர மற்றுமுள்ளபேர்களெல்லாரும் அழுதிரங்கியென்னபாடுபட்டார்கள் ஐயா ஜெனமேஜெயமகாராஜனே, அதைநான் வாக்கினுற் சொல்லலேனென்று வைசம்பாயனர் வருந்திச்சொன்னார்.

இப்பால் அஷ்டகுலா சலங்களுடன் ஜெயஸ்தம்பநாட்டிய அர்ச்சுனகுமாரன் பட்டானென்றுகேட்டு, முன்னேமுதுகிட்டோடிய வீரர்களெல்லாரும் பறந்தோடிவந்து பார்த்து இவன்பொருந்திப் பொருத்தியபோரையும் தங்கள்தேகத்தைவருத்திய சிரமையுநினைத்து மனம்புண்ணாய்க் கண்ணுக்கு கலத்தண்ணீர் விட்டழுதார்கள், இந்தச்செய்திகளைக்கேட்ட துரியோதனன்முதலிய தம்பிமார்களெல்லோரும் அபிமன்னனிறந்தானென்று கேட்டவுடனே ஜெயித்தோஞ்செயித்தோமென்று சிந்தைகளித்து எமனுடையகைக்குள்டங்கி இறந்த உயிர்வந்து புந்தியினுழைந்ததைப்போற் பூரித்துதோம்பாரித்து தங்கள்பிள்ளையாகிய துச்சனியிறந்த புத்ரசோகத்தையுமறந்து அபிமன்னனென்னும் ஒருபிள்ளையிறந்தது தங்களுக்குக்கோடிபிள்ளைகள்பிறந்த சந்தோஷம்போற் கொண்டாடிச்சிறந்து அப்பா, இனி ஊசென்றுதலைவைத்துப்படுத்து நித்திரை பண்ணலாமேயென்று முகமலர்ந்து வேதைதீர்ந்து வாதையடங்கிற்றென்றிருந்தார்கள் இவடத்தில் இவர்கள் இப்படிமகிழ்ந்திருக்க தாளாண்மைகொண்டு முனைந்து களைந்து சக்ரவ்யூகம் பத்மவ்யூகமுதலியயாவற்றையும் வளைந்து பிளந்து தானொருவனுகநின்று சேனைக்கடலைக்கலக்கித்திரும்பிய மகரமச்சம்போன்றபிள்ளையைக்கண்டு மனங்களித்திருந்த தந்தையருக்கெதிரில் வரவொட்டாமல் சயந்தவன்மறிக்க மற்றவீராதிவீர வேந்தர்களெல்லாருந்தடுத்துப் பிறிக்க ஒடுகிறான் ஒடுகிறானென்று அவமானப்படுத்தி ஆளைமடக்கிக்கொண்டுபோய் போர்புரிந்த மன்னவரெவரையும் - விண்ணுலகேற்றி தேவர்முதலியயாவரும் புகழ்ந்துகொண்டாடும்படியாய்ப் பேர்பெற்ற அபிமன்னன் நாமிவடத்தில் வெட்டிமாட்டி யனுப்பிவைத்தவீரர்கள்வீரசொர்க்கம்போய்ச்சேர்ந்தார்களோ இல்லையோ நாம்போய் ருசுவிற்பார்த்து வருவோமென்று ஆய்ந்து போனவனைப்போல் மாய்ந்து விண்ணுலகேறினனென்று வேள்வியிலுங் கேள்வியிலும் வின்மையிலுந் தன்மையிலும் உண்மையிலும் திண்மையிலும் கிருபையிலும் பெருமை யிலும் வீரத்திலுந் தீரத்திலுஞ்சிறந்து மிகுந்து மன்னுயிர்களுக்கெல்லாம் உறவாகிய உத்தமகுணப்புத்திமானுகிய தர்மபுத்திரமகாராஜன்காதில் நாராசஞ்

சொருகி யாதப் போற் கேட்டு அடாசெல்வமேயென்று சோர்ந்து வயிற்றி லறைந்துக்கொண்டு வாடிப்புலம்பினார்.

ஐயா என்செல்வமே நீ பிறந்தநாள்முதற்கொண்டு நமது குலத்துக்குரித்தாகப்பிறந்திருந்த பிள்ளைகளைப்பார்க்கிலும் சிறந்தபெருமையும் தகுந்தஅழகும் மிகுந்தகல்வியும் வளர்ந்தவீரமுமுடைத்தாய் நாளுக்குநாள் அபிவிர்த்தியாய் உலகமெங்கு நமது உரிபார்த்திக்க ஓங்கிவருகின்ற உன்னைக்கண்டு கண்ணேறுபடப்போகுதென்று உள்ளங்களித்து (கல்லெல்லாம்மாணிக்கக்கல்லாமோ). வென்பதுபோல் நமது பல்பலபிள்ளைகளிலும் இந்த ஒருபிள்ளையினால்தான் நாம்சவுக்கியப்படவேணுமென்றும் இவனைக்கொண்டு சத்துருக்களைவென்று உலகாளவேணுமென்றும் எண்ணங்கொண்டிருந்தேனே, என்னையனே என்னெண்ணத்தின்வாயில் மண்ணைப்போட்டு எங்களைமறந்தனையோ, அப்பா பத்மவியூகத்தைச்செயஞ்செய்துவந்த உன்னை ஒருகணப்பொழுதில் வளைத்துக்கொண்டுபோன சத்துருக்களுடனே சமர்புரிந்து இறந்துவிட்டாயோ என்னமோசஞ்செய்தாய் என்கண்ணே, என்னுயிரே, அபிமன்னுவென்னும் அரசே, ஆ தெய்வமே, தேனும்வண்டுஞ்செறிந்திருக்கும் திவ்யமலர்மாலையணிந்த உன்றந்தையாகிய சிலைவிஜயனிருக்க மலைபோன்ற திண்டோளினையுடைய வீமசேனனிருக்க பெருமைபொருந்திய நகுலசகாதேவர்களிருக்க ருக்குவேதத்தின்முடியில் அடிவைத்திருக்கும் பசுமைதங்கிய கதிர்களைவீசும் மரகதமாமலைபோன்றமாயன் கோபாலகுலத்துதித்த ஆயன் நமக்குப்பந்துவாகவந்தமைந்திருக்க வாழ்வுபெற்று உன்னாலே முன்னுக்குவரலாமென்னும் பேராசைகொண்ட நானிருக்கமுதியமரமிருக்க இளமரமுறிந்ததைப்போல் விளைவதின்னதென்றறியாத இளஞ்சிங்கம் இறப்பதோ இதென்னவிபரீதம் அறந்தப்பிப்போச்சோ அன்யாயமிகலாச்சோ ஈதென்னகாலம் ஈசனே, அடாகுழந்தாய் உன்றந்தைசெய்த உத்தரவின்படிக்கு என்னைக்காத்துநின்றனையேநீபோய் வெற்றிகொள்ளென்று நானுரைக்க என்வார்த்தையைத்தள்ளாமல் நெடியதேரூர்ந்து சென்றனையே இமைக்கொட்டுமுன்போய் சூசிகாவியூகம்-சக்ரவியூகம் - பத்மவியூகம்- இவ்வகைகளையெல்லா முடைத்துச் சத்துருக்கள் வாடியோடவென்றனையே துரியோதனனுடைய பிள்ளைகளுடன் ராஜபுத்ரர்களையெல்லாம் விஷாக்னிபாணத்தாற் கொன்றனையே துரோணாச்சாரி கர்னன்முதலாகியபேர்களையெல்லாங் குன்றச்செய்தனையே இப்பேர்ப்பட்ட சுத்தவீரன் தன்னுடைய ஜெயத்தைத்தானே சொல்லிக்கொள்ளக்கூடாதென்னுந் தர்மத்தைக்கருதி மர்மத்தைவெளிவிடாத உன்னுண்மையை திரும்பிவந்து உள்ளங்களித்து எனக்குச்சொல்லக்கூசினையோ தங்கமாகிய குமாரசிங்கமே உனக்குதவியாக ஒருவருதவாமல் நீயே தனிமையாய் நின்று அமர்புரிந்திறந்த வசனத்தை தனக்குத்தானே நிகராகிய தனஞ்செயனுங்கேட்கத் துணிவானோ கேட்டுஞ்சகிப்பானோ, உயிர்பொறுத்திருப்பானோ என்னுள்ளக்கனிவே, ஐயா ! நால்போய் யாவரையுமுடித்து அகண்டராச்சியத்தையும் உமக்குப் பட்டங்கட்டுகிறேனென ஐயாவென்று எனக்கு உறுதிவார்த்தையைச் சொல்லிப்போன அருமைமகனே எனக்கு சாக்ஷி கொடுக்கிறேனென்று சொன்னது இவ்வளவுதானோ என்னிருகண்மணியே என்றுயேங்கிமயங்கி மனக்கவலையுடன் சுவாசமடங்கி அழகிய தேரின்பேரில் மன்னர்க்கு மன்னனாகிய தர்மராஜன் தன்னைமறந்து விழ்ந்துவிட்டான் வீமசேனனும் பூமியில்விழ்ந்து புரண்டுபதறி விண்ணுலகோனும்படியாய்க்கதறி என்னருமைத்திருமகனே, உன் பெரியதந்தையின் வசனத்தைக்கேட்டுநீ போர்செய்யப்புறப்பட்டு வியூகத்தையுடைத்துச் செல்லும்போது இடைக்கிடை வளைத்துக்கொண்டு சக்ரவியூகத்தையுடைத்து உனக்குச்சகாயஞ்செய்வதற்காக நான்வந்து அங்கு உலாவிக்கொண்டிருந்தேர்மன்னரையெல்லாம்போக்கி இப்போது துணையாய்நெருங்கும்படிவந்தேன், அப்போது இடப்பாகத்தில் மரகதக்கொடிபடர்ந்திருக்கும் பவளமலை யருளியவரத்தால் மாலையணிந்த சிந்துதேசாதிபன் உரத்தாற்செய்த சூட்சியின்னதென்றறியாமல் மயங்கியிருந்து போர்புரிந்தேன் மதியற்றேன் என்மனமே என்குலக்கொழுந்தே நீ யெடுத்துத்தொடுக்கும் ஆயுதங்களெல்லாவற்றிற்கும் உனக்கொருவ ரெதிரில்லையென்றும் அந்தந்த ஆயுதங்களுக்குரிய சாஸ்திரங்களெல்லாம் உன்னையடுத்து எனக்கென்ன வேலைசொல்லுங்களென்று விட்டுப்பிரியாதிருக்கும் விதத்தைக்கண்டிருந்தும் ஐயனே உன்னுயிர்போய்விட்டதென்றுகேட்டு கரைந்துகரைந்து சந்தேகங்கொண்டேன்நான்கொண்ட சந்தேகம்பொய்யோ அல்லதுமெய்யோநல்லது உன்பெரியதந்தையானவர் யுத்தஞ்செய்ய உன்னை விடுத்திருக்க நீபோய் பகைவரைவென்று பலவிதஜெயமுங்கொண்ட பிள்ளையாகிய நீ அவருடையகண்கள் களிக்கத்திரும்பி வாராமற்போன காரியமென்ன இருந்தால் வருவையே என்மகனே நீ இறந்துதான்போனையோ இறந்தாயென்று கேட்கப்பெற்ற என்காதானது அபிமன்னன் மறுபடியும் பிழைத்தானென்று இன்னொருவர்வந்து சொல்லக்கேட்கப் பாக்கியம்பெறுமோ என்னிறையேயென்று வீமசேனனும் நகுலசகாதேவரும், முறையிட்டழுதார்கள், அபிமன்னனுடைய வீரமேவீரமென்று இருதிறப்படைஞருஞ்சோர்ந்து பலபலவிதமாகப் பேசிக்கொண்டு பசிமுதலியதுந் தோணாமல் கண்ணீருங்கையுமாகநின்றார்கள் அந்தரணகளத்தில் வீழ்ந்துகிடந்த அபிமன்னுவின் புயமலையைக்கண்ட சூரியன் அஸ்தமானகிரி இத்தனைசமீபத்தில் வந்ததேதென்று திப்ரமைகொண்டு மனமருண்டு தடுமாறி அபிமன்னனுடைய புயமென்று தேறித்தெரிந்துகொண்டு தானும் அவனைக்குறித்து வருந்தி தனதிடமாகியமேற்றிசையேறி அஸ்தமானகிரியைச்சார்ந்தான், பின்பு தர்மபுத்திரமகாராஜன் நமதுமைந்தனிறப்பதற்குச் சிந்துபதி காரணனாயிருந்தானென்று சிந்தைவருந்தி சூரியனஸ்தங்கதனாகிய செயலும்பார்த்து தன்சேனைசயினியங்களுடன் திரும்பினார் பலவான்களாகிய பந்துமித்ரர்யாவரும் மூன்றாம்பிறைமுடித்த முக்கண்ணன்வரத்தால் செயித்திரதனென்னும் யானையானதுபா

ண்டவனொன்றுஞ் சிங்கங்களைச் செயித்ததல்லவா தெய்வமே தெய்வமே, காலந்தலைகீழாய்விட்டது குப்பையுயர்ந்தது கோபுரந்தாழ்ந்தது, இனிநாமென்னசெய்யலாம் தெய்வச்செயலிப்படி யிருந்ததென்று சிந்தை நொந்து போர்க்களத்திற்குவந்து உயிரையொழித்துவிட்டு பிரேதமாகிய உடல்திரும்பிப்போகுந்தன்மையைப்போல் அபிமன்னனாகிய பிராணனை ரணகளத்தில் உகுத்துவிட்டு வெறுங்கூடாகிய தேகத்துடன் மருவும்படியாகிய பாடிவீடு போய்ச்சேர்ந்தார்கள்.

வலம்புரி மாலையணிந்ததுரியோதன மகாராஜனானவன் மைத்துனனாகியசயிந்தவனை எதிர்கொண்டு தழுவி முகத்துடன்முகம்வைத்து,இன்றுஉம்மாற்பிழைத்தோம்நீரெங்களுக்குப்பிராணபிச்சை கொடுத்தீரென்றுதன்பிள்ளைகள் தம்பிமார்பிள்ளைகள்முதலாகிய பதினாயிரம்ராஜபுத்திரர்கள் அபிமன்னனால் இறந்து போன துன்பத்தை எவ்வளவும் மனத்தில் வைக்காதவனாய் - போர்மன்னனாகிய வாளபிம னிறந்துவிட்ட மகிழ்ச்சியினாற் புயங்கள்பூரிக்க விதரணையுடைய விற்குருவும் - நன்னயமுள்ளகன்னனும் ஆமாமென்னும் மாமனும் - மற்றிதரமாகியபேர்களும்தன்னைச்சூழ்ந்துவர- அல்குஜாபுள்ளாங்குழன்முதலிய வாத்தியங்களுடன்மேல்நடக்கப்போகிற காரியங்களின்னதென்றுயோசியாதவனாய் சீக்கிரமாகத்தன்பாசறைக்குப்போய்ச்சேர்ந்தான், இதிப்படியிருக்க தருமராஜனுந் தம்பிமார்களும் பாசறைக்குப்போய் பலவிதவருத்தமுடையவர்களாய்ப் பரிதாபப் படும்போது விராட ராஜனும் துருபதராஜனும் அவனுடைய குமாரர்கள் துஷ்டத்தூய்மனே முதலாகியபேர்களும் ஏனையராஜரும் சாத்தகியுங்குந்திபோஜர்கள் முதலியபந்துவர்க்கத்தாரும் வெற்றிவீரப் படைஞர்முதலியபேரும் சந்திரனைச்சூழ்ந்த தாரரகணங்களைப்போல் தருமராஜனைச் சுற்றிக்கொண்டு அவருடைய துயரத்தை அநேகவிதபரிகாரத்தால் ஆற்றி விசனமாற்றி அவரைதேற்றி அப்படியுந்தேறாமல் நாங்களொருஅநியாயமுஞ்செய்யவில்லையே அதர்ம்மவிர்த்தியாய்தர்மங்குறையுமாகில் இனியிவ்வுலகத்தில்எந்த நெறியிலே நிற்குமென்று முரசக்கொடியினையுடைய உதிட்டிரன் நினைந்து நினைந்து இரங்கிக்கொண்டிருக்குங்காலையில் சிவந்தசடைமுடியும் காவியுடையுங்கதிர்மறைக்குங் குடையும் மரவுரியுங்கண்டி கமண்டலமும் மிதியடிம் விபூதிரேகையும்முப்புரிநூலும் ஒப்பிலாக் குண்டலங்களுமுடையவராய் ஈரேழுலகும் புகழ்ந்தேற்றும் மாதவநேசராகிய ஸ்ரீவேதவியாசர் வந்தார். அவரைக் கண்டவுடன் பொய்யில்லா மெய்யினையுடைய புண்ணியனும் வீமசேனன் முதலிய மற்றுள்ளோரும் எழுந் தெதிர்போய்ப்பணிந்து போற்றி குற்றமற்ற ஆசனத்திலிருத்தி அர்க்கியபாத்திய ஆசமனமுதலிய உபசாரக் கடன்களெல்லாஞ்செய்து விக்கி விசனத்தால் அவருடைய பக்கத்தி னின்றார்கள் அடுத்துச் சூழ்ந்திருந்த-அரசர்களுக்கு ஆசிபுகன்று தர்மராஜனைக்கிருபையுடனோக்கி ஓ-தாமகந்தனா-என்ன ஒருவிதமா யிருக்கின்றீர் உமது மனத்தில் விளைந்த துன்ப மென்னவென்று வியாசர்கேட்க என்குலதெய்வமே என்னுயிராகிய அபிமன்னன் உயிர்சோர்ந்தானென்று சொல்லுஞ் சொல் முடியுமுன்னமே தானும் படியிற்சோர்ந்தார், சமீபத்தி லிருந்தவர்கள் எடுத்தணைத்து உபசரித்து சாந்திசெய்து சோபந்தீர்த்தார்கள். மறுபடியும் அவர்படுங்கவலையை வேதவியாசர்பார்த்து ஐயா தருமநந்தனா பூர்வ விதியின் செயலின் புணர்ப்பின்படிக்கு இப்பிரகாரம்செய்ததல்லாமல் யாரிறக்கத்தக்கவர்கள், யார்கொலலத்தக்கவர்கள் எவர்களாலுந் தடுத்தற்கரிய புலன்களை நல்லறிவின்வழியில் நடத்திக்கொண்டிருக்கும் தருமபூபனே உமக்குத் தெரியாத காரியமொன்றுண்டோ ஆயினுஞ் சொல்லுகிறேன் கேளும், சிருஷ்டிகர்த்தாவாகிய முதற்கடவுளினால் ஏற்படுத்திய ஆத்மகோடிகள் முழுமைக்கும் அமைத்திருக்கும் ஆயுவென்னும் ஓர் கணக்கின்படியிருந்து நல்வினை தீவினைப்பயனை யனுபவித்து இறக்கத்தக்கதல்லது அந்த ஆயுள்முடிவதற்குமுன்னும் முடிந்தபின்னும் மாயுமென்று நினைக்கத் தக்கதுமுண்டோ அப்படிகிடையாது போர்முகத்திற் றீயைப்போற் காயும்படியாகிய அபிமன்னனென்னும் உமதுபுத்திரன் சகலவீரர்களையும் வென்று விட்டி தனது நலத்தையும் பலத்தையும் நிலைநாட்டி வீராவேசக் கோபாக்கினியுடன் வீரலட்சுமியைப் புணர்ந்து வீரசொர்க்கமடைந்தான்.

இப்பேர்ப்பட்ட பேறு கடல் புடைசூழ்ந்த உலகின்கண் எவர்களும் பெறமாட்டார்கள், என்பேரனாகிய இறைவனே பலபல யாகங்களைச்செய்தும் வெகுவித அருந்தவமிருந்தும் அநேகங் கோதானம் பூதான முதலிய-சோடச மகாதானங்கள் கொடுத்தும் - யானென தென்னுஞ் செருக்கறுத்தும் தர்மந்தப்பாமற் சத்திய நெறியிலிருந்து நெடுங்காலமுயற்சிசெய்த மகான்களும் பெறுதற் கருமையாகிய நற்கதியை உமது சிறுவனானவன் வெகுசுலுவிற் பெற்றான் ஆகலால் அநேகயுகங்களழிந்தாலும் உங்கள் புத்திரனடைந்த உயர்ந்தகதிக்கு ஓரழிவுமில்லை உமக்கு இதைவிட, வேறு நன்மையுமுண்டோ மலையைப்புயமாகவுடைய மன்னனே மேலும், அறத்தின் வழிநிற்கும் பெரியவனே உத்தமக்ஷத்திரிய குலத்திற் பிறந்தவர்களுக்கு உரித்தாகிய குணம் யாதெனில், இறந்தவர்களுக்கு மனம்வருந்தாமல் போர்முகத்தில் வாட்டங் கொள்ளாமல் புறங்காட்டாமல் சத்துருவின்பேரிற் பிறந்தகோபந் தளராமல் உடல்வருத்தம்பாராமல் உயிராசை வையாம லிருக்கவேண்டியது இதுதான் குலத்துக் குரிமையென்று இராஜர்களுக்கேற்படுத்திய ராஜநீதி இவைகளை எல்லாமுணர்ந்த உதிட்டிரனே என்று வேதவியாசர்சொல்ல அதனாற் சோபமென்னும் அக்கினி அவிந்து சகல நலத்துக்கு முரித்தாகிய தர்மராஜனானவர் சொல்லுகிறார்.

ஓ-வேதமுதல்வனே பதினான்கு லோகத்தையாண்டவர்களும், திரிலோகத்தையாண்டவர்களும், பூலோகத்தையரண்டவர்களும், தேவர்கள் துதிக்காநின்ற மேலோகத்தை யாண்டவர்களும், யாதாகிகிர்த விரதங்களைச் செய்த பேர்களும் அரசாட்சியாகிய மேலானசெல்வத்தைப் பெற்றவர்களும் மானிடருடன் மற்றவர்களும் மண்ணில்மடிந்துபோனார்களே ஐயா, அப்பேர்ப்பட்ட புண்ணியவான்

கள்-தங்களுயிரை விர்த்திபண்ணிக் கொண்டும் ஊழ்வினையானது தங்களைத் தொடராமற் பண்ணிக்கொண்டும் நீடூழிருக்கும்படியாய்ச் செய்துகொள்ளலாமே அவர்களுக்கு அது ஒரு அருமையல்லவே அவர்களே னப்படிசெய்து கொள்ளவில்லை அவர்களுடைய நினைப்பென்ன அவர்களெண்ணிய எண்ணம்-இன்னதென்று எனக்குக்கட்டளையிட்டருளும் யெந்தையே யென்று தருமநந்தனன் கேட்க வேதமுனிவராகிய வியாசர் சொல்லுகின்றார்.

கேளும் தருமநந்தனா கருங்கடற் சூழ்ந்த உலகமெல்லாம் ஒருகவிகை நிழலிலாண்ட மருமாந்தாதா முதலிய பேர்களினாலும் மாற்றுவதற் கரிதாகிய இம்மிருத்து மாயையென்று ஒன்றுண்டு அதைக்கடந்த ஹரிபிர்மாதிகளாலு மாகாதென்றால் இவர்களா லாகத்தக்கதோ ஆகையால் மாயும்படியாகிய காரணத்தைக்குறித்தநாரொருகதை சொல்லுகிறேன் உன்னுடைய பூரண நல்லறிவிற் பொருந்தக்கேளென்று முக்குற்றங்களைந்த மேலோனாகிய வேதவியாசர் சொல்லத்தொடங்கினார். தர்மமேஜெயமென்னுந் தர்மநந்தனனே-மேகம் போன்ற கூந்தலும் பவளம் போன்ற வாயிதழும், வெண்டாமரை போன்ற மேனியும் செந்தாமரைபோன்ற சிறடியுமுடைய வெள்ளைக் கலைமாதை வேதாசம்பெருகிய நாவிற்சுமந்த வேதா வென்னுந்தாபோன் கவளங்கொண்ட அஷ்டகஜங்கள் தாங்குங் காசினியைப்படைத்து இவ்வுலகில் மருவும்படியாகிய சராசரங்கள் யாவையும் முறைப்படி சிருஷ்டித்தருளினார்-ஆத்மகோடிகளெல்லாம் நாள்தோறும் மிகுந்து உலகெல்லாநெருங்கி சாவில்லாம லிருந்தபோது தவண்டு வளைந்து ஒசிந்த இடையினையுடைய பூமிதேவியார்-சுமக்கமாட்டாமல் வருத்தமடைந்து இதென்ன காரண மென்று நிதானித்து எப்போர்ப்பட்ட துயரங்களையு மாற்றும் பாதங்களையுடைய பிர்மாவை யடுத்து சுமப் பவர்க்குத் தலையெரிச்சல் தோன்றுமல்லதுசுமையேற்றி வைப்பவர்களுக்குத்தெரியுமா நிறைந்த ஆத்ம கோடிகளைச் சுமப்பது சொற்பமல்லவே அப்பனே-உன் சற்பனையால் மன்னுயிர்களைச் சிருஷ்டிக்குந் திறத்துடன் கூடலய மாகும்படியான காரியத்தையும் யோசிக்க வேண்டியது, இல்லாவிட்டால் நான் தாளமாட்டேனென்று பூமிதேவி சொல்ல உற்பவக் கர்த்தாவாகிய பிரமன்-ஓய்ந்து மனந்தடுமாறி எண்ணங்கொண்டு நிற்கும்போது அதிக ஆலோசனையாலுருகிய அவருடைய இக்கிரியம் பூமியில் வீழ்ந்து ஆலகாலவிஷம்போ லெரிந் தெழுந்து-உயிர்த் தொகைகளைக் கொல்லாநின்றகாலத்தில் ஆத்மகோடிகளெல்லாம் வருந்தி ஓ; பசுபதி யென் றிரைந்து ஓலமிடும்போது, மறைகளுணர்ந்த வேதநாயகியின் மணாளன்-சூலம்போன்ற மூன்றுவிழியுடன் - அன்னவாகனனுக் கெதிரிற் றுன்னிமன்றிய பூதநாதனைக்கண்டு ஆசார உபசாரத் துடன் எதிரெழுந்து வந்து வணக்கமாகின்ற பிர்மமாவைச் சிவபெருமான் நோக்கிச்சொல்லுகிறார்.

ஓ-சதுர்முகனே, இவ்வுலகந்தையும் உயிரையும் படைத்த தந்தையாகிய நீதானே-அழிக்கத் தொடங்குவையாகில், பழியெவரைச்சேரும், நீ-யோசித்துப்பார்த்தையா, இந்தப்பழிச்சொல் - உனக்குவேண்டாம், கொல்லுங்காரியத்தை நிறுத்திவிடென்று கோமான்கூற - பிர்மாவானவர் கயிலாசபதியைநோக்கித் தேவரீர் நிறுத்தென்று சொன்னால் நிறுத்திவிடுகிறேன் ஆனால் வருத்தம்பொறாமல் வருந்தி வாடி யழுதுலந்த பூமிதேவியின் பாரமெப்படிநீங்கும் விடையேறிய சிவமே இதற்கோ ருபாயஞ் சொல்ல வேணுமென்று பிரமன் வேண்டிக் கேட்குங்காலையில், கங்காதரன் சொல்லுகிறார்-பங்கேருகவாசனே கேளும், உன்னிடத்திருந்து நிலத்திற்சிந்திய வீரியத்தை ஒருபெண்ணாயேர்ப்படுத்தி அழைத்து அவளால் சம்மாரகிர்த்தியம் நடக்கும்படி செய்வாயாகில் அவள் நடத்துவாள் அது தகுதியுடையதென்று நிலைபெற்ற நிலவை முடித்த சடைமுடிப் பரமன்சொல்ல, அந்த வாக்கியத்தின் சூட்சியைத்தெரிந்துகொண்ட மண்பொதுத்தந்தையானவர், உயிர்ப்பிராணிகளைக்கொல்லாநின்ற வீரியக்கனலை ஒருமாத்திரைப்போதிலழைத்துபெண்ணுருவாக்கிஉருவாகிய லக்னத்திற்கிசைந்த மிருத்துதேவதையென்னும் பேர்கொடுத்து பரமேஷ்டியின் பக்கத்நிறுத்தினார் அந்தப்பெண்ணை சாம்பமூர்த்திபார்த்து ஓ பெண்பாவாய் நீஇவ்வுலகத்திலிருக்கும உயிர்களைவதைத்து சம்மாரத் தொழில் செய்துக்கொண்டிருவென்றுசொல்ல அதைக்கேட்டு உடல் நடுங்கி என்னாண்டவனே, நான் அப்பேர்ப் பட்ட தொழிலி லிருக்கமாட்டேன் என்னைக் காத்திரட்சிக்கவேணுங் கண்ணுதலேயென்று கைதொழுதாள் மறுபடியும் அவளுக் கினிமையான சிற்சிலவசனங்களை இவர்க ளிருவரும்-போதித்துப்-போவென்றனுப்ப அந்தப் பெண்ணானவள் அவர்களை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு பூலோகத்தில்வந்து உயிர்களை வதைப்பதை உன்னிப்பார்த்து கொலைநடுக்குற்று மனங்கூசி சிருஷ்டி கர்த்தாவைக்குறித்து அருமையாகிய தவஞ்செய்தாள் குளிர்ச்சிபொருந்திய சமலாசனக்கடவுள் அந்தப் பெண்ணுக்குப் பிரத்தியக்ஷமாய்-வேண்டிய பெருமைகளையெல்லாம் இன்பமாய்க்கொடுத்து பூமியிற்பிறக்கும் உயிர்களைச் சம்ஹாரிக்குந்தொழிலை உனக்குக்கொடுத்தேன், நீ-சந்தோஷமாய் நடத்தென்று சொல்லிப்போட்டு - பிற்பாடு என்னகாரியமாய் என்னை நினைத்து இத்தனை நாள் தவமிழைத்தாய் சொல்லென்று கேட்க வாசம்பெற்ற தாமரை மலருளானை வணங்கிப்பணிந்து எந்தையே ஆசாபாசங்களிலாழ்ந்த ஆத்மகோடிகள் பதைபதைத்து உயிரிரக்கங் கொள்ளும்படியாய் நாசப்படுத்துந் தொழிலைச்செய்வதற்கு நான் துணியமாட்டேன் நாதனே பெற்றதா யேங்கியழ-தந்தைபுலம்பியழ-புத்ராள்கதறியழ-மித்திராள் மெலிந்தழ-பெண்சாதி புரண்டுமுறையிட-வளர்த்தோர்கள்-வாடிக்குறைபட-கொண்டாரழ-கொடுத்தாரழ - சகோதராளழ-மற்றுமுள்ள பந்துஜனங்களெல்லாரும் மார்பிலும் முகத்திலும் அறைந்துகொண்டு இறந்தவரைப்போல் பறந்தழத் தக்கதாய் என்கண்களிற் பியழ முனிந்து என்மனதைக் கல்லாக்கி எல்லா உயிரும்வருந்த நானொருத்தியிருந்து உயிர்வதைசெய்து என்னுயிர் வாழ்வதிலு

ம் அக்கினிக்குழியில் விழுந்து என்னுயிரை விடுப்பது மேலென்றாள்.

அப்படிசொல்லிய வல்லிக்கொடிபோன்ற மகளைநோக்கி மகாசந்தோஷத்துடன் மகிழ்ந்து பிர்மாவானவர் ஒரு வாக்கியஞ்சொல்லுகின்றார். அம்மா சம்மாரத்தொழில் மகாபாபமென்றுசொல்லிய உனக்கு யாதொரு சம்பந்தமு மில்லை உடலிற் சம்பந்தப்பட்டு உலகிலிருக்கு முயிர்கள் அநாது மார்க்கத்தைப் புத்திமான்களாகிய பெரியோர்கள் கொண்டாடித் துதிக்கும் படியாக வைத்திருக்கின்றேன் அதென்னவெனில் ஆத்மகோடிகளுக்கு விதித்த ஆயுட்பிரமாண மென்பதும் தாயின்கர்ப்பத்தில் உடலெடுக்கும்போதே உற்பத்தி யாக்கிவைத்த அநேகம் வியாதிகளும் தேகத்திற்குரித்தாய் அமைந்திருக்கின்றமையால் அதுகளின்பேரிற் பழிவைத்து இன்ன வியாதியால் இன்னகாரணத்தால் இறந்தார்களென்றுஉலகத்தார்சொல்லிக்கொள்ளும்படியாகிய பழியை வழியாகிய வழக்குமுண்டாக்கி வைத்திருக்கிறேன் இதனு லுனக்கொரு தீமையுமில்லை ஆனதால் இந்தச் சம்மாரத்தொழிலை நீ செய்யலாமென்று வேதனார்சொல்ல அன்றுமுதற் கொண்டு எல்லோருடைய பிடரியிலிருந்து அவரவர்களுக் கமைத்த ஆயுட்பிரமாணத்தையும் பார்த்துக்கொண்டு தொடக்காகிய வியாதிகளென்னுஞ் சத்துருக்கள் சமயம் பார்த்துக் காலைத்தட்டி விடத்தக்க துதராகக்கொண்டு வாயிற்போட்டுக்கொள்ளும் வல்லமையுடையவளா யிருக்கின்றாள் நீதிக்குவழுவாக ஒருயிரிருக்க மற்றொருயிரை முடிக்கப்போகிறதில்லை ஆளுக்குக்கொஞ்சம் ஆள்ப்பாரமென்பதுபோல் அந்த மிர்த்துதேவதையானவள் தன்பேரிற் பழிவைத்துக்கொள்ளாமல் இந்தத்தொழிலை நடத்திவந்தாள் சிவந்தநிறம்பெற்ற அயனானவர் சிருஷ்டித்தொழிலைநடத்தினார்-அதுமுதற் பூமிதேவியார் பூபாரந்தீர்ந்து சமனாகயிருக்கக்கண்டு சந்தோஷங் கொண்டாள், தரும சொரூபியே கேளும் எப்பேர்ப்பட்ட உயிர்களானாலும் தோன்றியழிவதேயன்றி அழியாம லிருக்கும்படியாகிய தொன்றுமில்லை-அந்தரவாசிகளாகிய தேவர்களும் அளவிறந்தமாமாந்தாதாமுதலியசக்ரவர்த்திகளும் உலகில்நிலைபெற்ற ஆத்மகோடிகளும் அழிந்துபோவது ஞாயமே-ஆயுள் முடிந்தால் தாமரைவாசியாகிய சிருஷ்டி கர்த்தாவும் உடல்விட் டுயிர்மாய்வாரொன்று உமக்குத் தெரியாதோ குந்திமுதற்புத்திரனாகிய கோவேசொர்க்கமத்தியபாதலத்தி லிருக்கும்யாவரும்ஆயுளைவிர்த்திபண்ணிக்கொண்டு நீடூழிநிலைகொண்டுவாழ்ந்தவர்களில்லையே ஆகையால்நீரொன்றுக்கசாகரத்தில்மூழ்கிவருந்துகின்றீர்தர்மநந்தனா உமதுசோபத்தைநீக்கிவிடும் உங்கள்புத்திரனாகிய அபிமன்னனானவன்தன்சாரதியுடனேஎவரும்விரும்பியதிரும்பாக்கதிபுகுந்தான்நீர்சிந்தையைவேண்டாமென்று வேதவியாசர்தேற்றஅந்தவேதவாக்கியங்களைபரிசுத்தவானாகியபாண்டவர்முதல்வன்றேர்ந்து வியாசரைநோக்கி என்னகத்தனையே ஆயுள்முடிவினாலும் வியாதிசம்மந்தத்தாலும்மிருத்துவெனுபவன் முடிப்பாள் பிறந்தவர் இறக்காமலிருக்கமாட்டார்கள் இறந்தவரொருக்காலும் பிழைக்கமாட்டார்கள் ஒருவரு மீடித்திருப்பதில்லையென்று தேவர் திருவாய்மலர்ந்தீர் சுவாமி இறத்தந்தோய்ந்த கூர்மைபொருந்திய வேலாயுதந்தாங்கிய சுவர்ணடீவென்னும் ஒருராஜபுத்திரன் இறந்துபோய்ப் பிழைத்தானென்று மேலோர்பேசுகின்றார்களே அஃதென்னவென்று இருகரத்தையுங்குவித்து வணங்கிக்கேட்ட தர்மராஜனைப்பார்த்து திரிகாலமுந்தேர்ந்த வாதராயணர் சொல்லுகின்றார்.

அப்பனே, முன்னம் யான்சொன்ன மிர்த்துதேவதை முடிவுகாலம் பார்த்திருந்து என்போலொத்தவனைப் பிடித்தாலுந் தப்பமாட்டாது அப்படியிருக்க ஆயுள்முடியாமல் அவமிர்த்துச்சாயையென்னும் வேதையினால் ஒருவேளை பிராணன் போமாகில் மணிமந்திரம் அவிழ்தம்-ஜெபம்-தவம்-பெரியோரால் ஆசிர்வசனம் வாழ்த்துதல் நவக்கிரகசாந்தி ஓமம்-தானம் - பாலக்கிரகதோஷநிவாரணம்-குழைபடித்தல்-நீரோதல்-நீறுபிடித்தல் - கிராமதேவதைபூசை-புலி முதலியகாரியங்களெல்லாம் எந்தெந்தவிதத்துக் கெப்படிசெய்யவேணுமோ அப்படிசெய்துயாவத்தும் ஈஸ்வராற்பிதம் பண்ணினால் அந்த அவமிர்த்துச்சாயை நீக்கிப்பிழைப்பார்கள் இதற்காகவே ஆயுள்வேதமுதலிய மந்திரங்களும் ஏற்படுத்தி யிருக்கின்றது மேலும் அந்தச்சுவர்ணடீவினுடைய கதையைச்சொல்லுகிறேன் தர்மசொரூபியாகியதோன்றலே கேளுமென்று இல்லறத்தைவிட்டு நல்லறத்தைத்தொட்டு இருவினையற்றசுகனென்னும்பிள்ளை ஒருவனைப்பெற்ற மேலோன்சொல்லுகின்றார்.

திடதீரபராக்ரமமும்இராஜமுறைமையும்தர்மமுங்குறையாமல் அரசாக்ஷிசெய்துவந்த சிஞ்சயனென்றொரு அரசன் தனது தர்மபத்தினியுடன் கூடிவாழுநாளில் புத்திரனில்லாவருத்தத்தால் மெத்தவுநொந்து சித்தப்பிரமைகொண்டு யாகம்-ஓமம்-ஜெபம்-கோவில் - குளம் - சாலை-சோலை-தண்ணீர்ப்பந்தல் அன்னதானமேமுதலியதானம் தர்மம்-பரோபகாரம்-விரதம்-நோன்பு முதலியவெல்லாஞ்செய்து வருநாளையில் நாரதமுனிவர்வந்து இராஜனால் சகலஉபசாரமும்பெற்று அவனுக்காசீர்வதித்து உமாமகேசராகிய திகம்பரக்கடவுளைச் சிந்தையிலிருத்திச் சிவபூசைசெய்து வாருங்கள் என்று உபதேசித்தருளினார் அந்தப்படிக்குச் சிவப்பிரதிஷ்டைசெய்து அநேகநாள் வழிபட்டு வருநாளில் மறுபடியொருநாள் தனக்கன்பாகிய வேதமுணர்ந்த நாரதர்வரக்கண்டு அவருடைய சீர்பாதங்களைச் சிரத்தால்வணங்கி என்காலமெல்லாஞ் சழித்தும் ஒருகாதலன் வரக்காணேமேயென்று கவலைகொண்டுபெருமூச்சுவிட்ட மன்னனைநோக்கி மருதிடந்த செந்தாமரைப்பாதனுக்கொப்பாகிய நாரதமுனிவர் சொல்லுகிறார் சிஞ்சயமன்னனே உமக்குஎப்பேர்ப்பட்டபிள்ளைவேணும் உமதுகருத்திலுள்ள மார்க்கத்தைச்சொல்லும் அதற்குத்தகுந்த புத்திரனுதிக்கும்படியாய்ச் செய்வோமென்று அருந்தவன்கேட்க அவரைதொழுது அரசன்வணங்கிச் சொல்லுகின்றான்.

ஐயா நல்லசுந்தரவடிவமும் ஆயுளும் நோயில்லாமையும் பொன் பொன்னாகப் பெருகிற பிள்ளை யொருவனை

அநுக்கிரகஞ்செய்யுமென்று இரந்துகேட்க அப்படியே
உன்னிஷ்டப்படிக்கு யீஸ்வரானுக்கிரகத்தினால் உமக்குப்
புத்திரனுதிப்பானென்றுசொல்லிமகதியாழையுடைய மு
னிவரன் எதாஸ்தானத்திற் கெழுந்தருளினார். அன்றுமுத
ற்கொண்டு இந்தராஜனுடைய கர்ப்பத்திற்சனித்து இவ
ரது பத்தினியின் கர்ப்பத்துக்கேறி கரும்பில் முத்துப்பி
றப்பதுபோல் ஒருபுத்திரன்வந்து பிறந்தான் அந்தப்பிள்
ளைக்கு புத்ரோச்சவம் சாதகன்மமுதலிய கர்மங்களைச்செ
ய்து மனங்களித்து வருங்காலத்தில் பிள்ளையினுடையமல
லமும் அந்தமலம் ஒட்டிக்கொண்டபுட்டமும் பொன்
பொன்னாகயிருக்கக்கண்டு கடலைக்கடைந்து அமுதங்க
ண்ட தேவர்களைப்போல் சந்தோஷங்கொண்டு அந்தமல
ங்களைவாரி மந்தரகிரிபோல் பொற்குவைகுவித்து பேரா
சையிற்சிறந்த ராஜனானவன் அந்தக்குழந்தைக்கு சுவர்ண
டீவென்னும் பேர்வைத்து அன்னப்பிராசனம்-சவளம்
உபநயனமுதலிய கடன்களெல்லாஞ்செய்து அரசன் அ
கங்களித்திருந்தான், பொய்யில்லாப் பெருங்குதலைமொ
ழியினையுடைய அரசிளங்குமரன் குற்றமற்ற பிறைவள
ருந்தன்மைபோல் வளர்ந்து அரியவேதங்களும் சாஸ்தி
ரங்களும் கலக்கியானங்களும் படித்துவருங் காலங்களில்
இந்தப்பிள்ளையினுடைய மலமெல்லாம் பொன்னாயிருப்
பதினால் எல்லோரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்
போது சிலகாவர் இவனைக்கொண்டுபோக வேணுமென்
று கூடிநினைத்து ஒருநாள் தனித்திருக்குமிரவில் திருடர்
கள்வந்து களவிற்கொண்டுபோய் நித்தியமும் பொன்கா
ய்க்குமரமென்றும் இந்தப்பிள்ளையைவதைத்து வயிற்றை
ப்பிறி மலராதஅரும்பை மணங்காணமலர்த்தின மதியி
னைப்போல் குடல்களைப்புரட்டிப் புரட்டிப்பார்த்து தி
ரவியங்காணாமல்வீணாய்க்கொன்றோமென்று அறிவீனரா
கிய திருடர்கள் குளக்கரையில் பிள்ளையைவீசி எறிந்து
போட்டுப்போய்விட்டார்கள் இங்ஙனம் சிஞ்சயனென்னு
ம்ராஜன் மைந்தனைக்காணாமல் சிந்தைவாடித் தூதுவராற்
றேட விடுத்துமனங்கூசி வருந்தியிருக்கும்போது பாசிபி
றைந்தகுளக்கரையிற் பிரேதத்தை பரிசனர்கண்டு கொ
ண்டுவந்தார்கள் இறந்த இளமைந்தனை வேந்தன்முதலிய
யாவருங்கண்டு நெடுமூச்செறிந்து துக்கசாகரத்தில்மூழ்
கி பிள்ளைக்குச்செய்யுங் கருமவிதிகளுடன் ஈமவிதிக்கட
ன்களுநாடித்து புத்ரசோபத்தால் வைதிகக்கடல்மூழ்கி
சந்நியாசம்வாங்கிக்கொள்ள மனந்துணிந்தமன்னவனை ம
ந்திரியர்முதலிய பலருந்தேற்ற மனந்துணிந்து மாளிகைக்
குவந்து தேவியுந்தானுந் தேம்பியழுது குலத்திற்றுப்பமு
துவந்ததேயென்று ஆகுலப்பட்டுக்கொண்டிருக்குநாளை
யில் விழுதுபோற் சடையினையுடைய நாரதமகாமுனிவ
ர்வந்தார் அவர்பாதங்களில் ஓடிவிழுந்தெழுந்துதொழுது
அழுது தங்கள்பிள்ளைக்கு நேரிட்ட அநியாசமரண சங்
கதியைச்சொன்னார்கள் அதைக்கேட்டு ஞானபண்டிதனா
கிய நாரதர் அந்தராஜனுடைய கண்ணீர்துடைத்து கண்
கலக்கப்படவேண்டாம் போனஉயிர் மீளப்போகிறதில்லை
புலம்பியழுவதா லொன்றுமாகிறதில்லை நீங்களேன் வீம்
பிப்பொருமுகிறீர்களென்று அநேகஞான உறுதிகளைச்

சொல்லியும் அவர்கள் ஆறாப்பெருந்துயரில் ஆழ்ந்தவர்க
ளாதலால் விசனசாகரத்தைவிட்டுக் கரையேறும்படியாக
க்கருதி மோனமுனியாகிய நாரதர் பெரும்பான்மையாய்
ப் பூர்வம்நடந்த தன்மையைச்சொல்லுகின்றார்.

நீலோர்ப்பல நிறமும் வாள்போன்றவடிவுங்கொண்டக
ண்களையுடைய பரமேஸ்வரிக்குபக்தாவான பரமசிவனெ
ழுந்தருளி உபத்திர்ஷ்டியாய்ப்பார்க்கவும் சந்திரசூரியர்மு
தலிய தேவர்களுக் கெல்லாம் திர்ப்தியாகும்படி பால-
நெய்-தயிர்-தேன்முதலியயாவும் எழுகடலைப்போற்பெய்
து அவிர்ப்பாகங்கொடுத்து அநேகம்யாகங்களைச்செய்து
ஒன்பதுவகை இரத்தினங்களுந் திரவியங்களும் பொன்
மலை யேழெனக்குவித்து பிராமணருக்கீய்ந்துவிரதசீலந
ற்பரம ஞானியாய் தன்னுயிர்போல் மன்னுயிரைக்காந்
து உலகத்தையாண்டுவந்த மருத்து மகாராஜனும் இறந்
துபோனான் இதன்றியும் மாதமும்மாரி வருணன்பொழி
யபூசைமுதலியதுநடத்தியும் பொன்னுசையுடைய வறு
மிகளுக்கு சொர்ணபிடேகஞ்செய்து மறுபடியும்பொன்
னென்னுங்கியாபகம்வரவொட்டாமற்கொடுத்தும் அளவி
ல்லாத அஸ்வமேதயாகஞ் செய்தும் அருட்பார்வையாக
உலகமெல்லாம்ரட்சித்தும் தர்மந்தப்பாமல் சத்தியங்கு
றையாமல்தேவரும் பிராமணரும் புருஷசிலாக்கியனெ
ன்று கொண்டாடித்துதிக்காநின்ற சுகேத்திரராஜனென்
னும் நரபதியும்இறந்து போனான் கரும்பைக்கடிந்துபிடு
ங்கி முறித்துத்தின்று கட்டுத்தறியைப் பெயர்த்துமதங்
கொண்டுபூண்கட்டியகொம்புகளை யுடைத்தாயிருக்கும்ப
தினாயிரம்யானைகளும் நல்லபுத்தியும் குற்றமில்லாநிறமு
ம் குணமும்ஜாதியுமுடைய குதிரைகளும்பொற்பணிபூட்
டிய கோடிபாற்பசுக்களும் நற்குணம் நற்செய்கையும்பெ
ண்மையுங்குன்றாப் பெண்களநந்தமும் நித்திய தானமாக
க் கொடுத்து தேவர்களெல்லாரும் மிகுந்த ஆவலாக அ
ங்கீகரிக்கும்படியாய் யாகங்கள்செய்து ஆகுதிகொடுத்து
வேதியர்க்கும் ஆதுலர்முதலியயாசகர்க்கும் மேன்மேலா
கிய திரவியங்களையும் முத்துக்களையும்.- ரத்னங்களையும்-
மாரிபோல்வாரிப்பொழிந்து மேன்மையடைந்த நங்கனெ
ன்னும் ராஜனும் இறந்துபோனான் பெய்யுமழைத்துளி
யை பெண்ணினாலு மெண்ணலாம் தானமாகக்கொடுக்கு
ம் பசுக்கூட்டங்களையெண்ணப்படாது அப்படி அளவி
றந்த கோதானங்கள்கொடுத்தும் அந்தத்தானங்களுக்கு
விடுக்கும் தாராதத்தஜலமானது சமுத்திரம்போலிறைந்
து தடாகமாகநிற்கவும் ஏழுலகுந் தன்றேர்செலுத்தி விர
த்துவஜம்நாட்டி சத்துருக்களைவாட்டி மற்ற மன்னுயிர்க
ளைக்கூட்டி வாழ்வினிலைநீட்டி அஸ்வமேதமுதலாகியயா
கங்களெல்லாம் நூறு நூறாகச்செய்து புருவுக்காக தன்
றேகத்தை அறுத்துநிறுத்து மனம்பொருந்த பரமசிவ
னுடைய அருள்பெற்று இவருக்குநிகராகியபேர்களெங்
குமில்லையென்று யாவருங்கொண்டாடப் பேர்பெற்று சி
றப்புடன் உலகாண்ட சிபிச்சக்கிரவர்த்தியும் இறந்துபோ
னான் மாதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்வதற்காக இராச்
சியத்தைத் தம்பிக்களித்து பத்தினியுடன்வனவாசஞ்செ
ன்று மத்திமரைக்கொல்லுகிறேனென்று உத்தமர்களுக்

ரு அபயங்கொடுத்து தர்மபத்தினியைப்பிரிந்து சுக்கிரீவனுக்குருப்புரிந்து வாலியின்பேரிற்பாணங்கொடுத்து சீதையிருக்கு நிலையை அறிந்து சேதுபந்தனமெடுத்து இராவணகும்பகர்ணன் முதலாகிய அரக்கரழியும்படிக்கு ராமபாணம்விடுத்து அவர்களைக்கெடுத்து பதினன்குவருஷந் தொலைந்து அயோத்தியா புரிக்குவந்து பட்டங் கட்டிக்கொண்டு சகலஉயிர்களையும் தனதுகர்ப்பத்திலிருந்துபெற்றதைப்போல்ரக்ஷித்து நீதிமுறைதப்பாமல் திக்குவிஜயமுஞ்செய்து யாகங்களெல்லாமுடித்து அன்பத்தாறு தேசத்தரசர்களும்பணிய அரசாக்ஷிசெய்துவாழ்ந்த சக்ரவர்த்தித்திருமகனும் இறந்து போனன் சகராளாகிய அறுபதினயிரம் மூகானதகளும்மோக்ஷமடைய வேணுமென்று கருதிசெங்கோலும்முடியும் சந்திரவட்டக்குடையுந்துறந்து வெகுகாலம் வனத்துந் தவமிருந்து பூமிதேவியாகிய தாயார் சவுக்கியம் பெறும் படியாய் தன்பேர்பெற்றபாகிரதியைக் கொண்டுவந்து பாட்டமாரிந்த பள்ளத்தில் விடுத்து யாகம் ஓமம்-ஜெபம் முதலாகியவைகளினல்மேலோராகியதேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகநடத்திபிதுர்க் கடன்களுஞ் செய்து யானைகள் குதிரைகள்-தேர்கள் ஸ்திரீகள்- பசுக்கள்- பூமிமுதலாகியதானங்களும்பண்ணி முப்பத்திரண்டு தர்மமுநடத்தி கீர்த்தியுடன் துரைத்தனமுஞ்செய்த பகிரதனும் இறந்துபோனன்.

காந்திருவராஜர் முதலியபேர்கள்தேவகானம் பாட-ரம்பை-ஊர்வசி-மேனகை-திலோத்தமையென்னும் ஐம்பது கோடிரம்பாஸ்திரீகள் நடனஞ்செய்யதேவர்கள்முதலாகியபேரும் கர்ப்பக மலரைக்கொண்டுவந்துசந்துகண்டு அண்டையினெருங்கியிருக்க முனீஸ்வரர்களெல்லாரும் ஆசிர்வழங்கி அருமையாகத் துதிசெய்ய அஸ்வமேதம்தொண்ணூற்றென்பதுசெய்துநூருவதுயாகஞ் செய்யும்போது தேவேந்திரன்பயந்து நமதுஇந்திரப்பட்டம் போய்விடுமேயென்றேங்கி ஓடிவந்து மஹாப்பிரபோஎனக்கிந்த யாகபலனையெல்லாங் கொடுக்க வேணுமென்றுயோசிக்கும்போதுதடைசொல்லாமல் மனக்களிப்புடன் தத்தஞ்செய்து பூரணகுதிகொடுத்து பூசித்து பலபொருளும்மறையவர்களுக்களித்து தேசராஜர்க ளெல்லோரும்மலர்போன்றபாதத்தில் வணங்க பரராஜபயங்கரனென்று புகழ்கொண்டு பாராண்ட சிபிராஜனெங்கே - அவனுமிறந்தான்.

தர்மத்திலுயர்ந்த தகப்பன்வயிற்றிற் பிறந்துபனிரண்டு வயதிற்குள் - சகலகலைசம்பன்னனகிபட்டங்கட்டிக் கொண்டுகிரணங்களைவிசிசூரியன்றிரியும் உலகமெல்லாம்தன்னுடையசுவேதசத்திரத்தைவிரித்து நிழற்படுத்தி உலகத்திலுற்றவெகுஜெனங்களுக்கும் தாக்ஷியில்லா திருக்கும்படி அன்னம்சொர்ணமுதலாகியசகலபாக்கியங்களையும் உயர்ந்த பொன்மலைபோல் ராசிசட்டி அம்பார மாக்கிவைத்து ஒருநாழிகையும் ஓயாமற்றுனங்கொடுத்து அயமேதம் இராயசூயம் - கருடபந்தம் - பௌண்டரியமுதலாகியயாகங்களெல்லாந் தர்மத்துடன்புரிந்து மநுநீதிக்குத்தலைநீதியாயவாழ்ந்த மாந்தாதா எங்கிருக்கின்றன் அவனுமடிந்தான் அசுரர்களுந் தேவர்களும்சண்டையோடுங் காலத்தில் இளைத்ததேவர்களுக்கு படைத்துணையாய்ச் சென்று அசுரரையழித்து அமரருக்கு வெற்றிகொடுத்து தானும் ஜெயம்பெற்று பூலோகத்தில்வாழும் சராசரங்கள்தழைத்தோங்கும்படியாய்மநுநீதிப்பிரகாரம் மனுக்களைச்சவரக்ஷணைசெய்து ஆழிலொருகடமைகொண்டு வர்ணாச்சிரமம் வழுவாமற்காத்து அக்கினிட்டோமம் வாசிபேயம் அஸ்வமேதம்-இராயசூயம்-திரிதராத்திரம்-பவுண்டரீகம்-திருடபசு பந்தம்-சௌத்திராமணி - பார்வணம்-ஆக்ரகாயணீமுதலிய யாகங்களெல்லாம் பற்பலதேசத்தரசர்களும்மெச்சும்படியாய்ப்புரிந்து அவனிக்கதிபதியென ஆண்டயயாதிமகா ராஜனெங்கே எனக்குத் தெரியச்சொல்லும் அரசனே அவனுங்காலங்கழித்தான்.

பலதேசங்களையுங் காத்துரக்ஷித்த வேந்தர்கள்யாவரும் எதிர்த்து ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்யமாட்டார்கள் அப்படி யொருவேளைபோருக்குவந்தால் உயிரை-பொருளை தேசத்தை-ஒரு பொருளாகப் பாராமல் நெருங்கிய யுத்தஞ்செய்துவென்று மன்னரொல்லாருந் தன்னைவணங்க ஜெயமாலைசூடி பூமித்தேவராகியபிராமணுள் முதலிய பெரியோரும் மனங்களிக்கவமணிகளுங்கொடுத்து சிவபூசைபுரிந்து தேவர்களுக்கவிர்ப்பாகமளித்து ஈரேழுலகிலிருக்கும் யாவர்களும் பூமிதேவியாருஞ் சந்தோஷிக்கும்படியாய் அரசுசெலுத்திய பிரான் அம்பரீஷமகா ராஜனெங்கே பேசுமையா அரசனே அவனும் மாண்டு போனன்.

லக்ஷம் ஸ்திரீகளுடைய குயாசலம்-புயாசலத்திற் றேயும்படிக்குக் கலவியில்மகிழ்ந்து கணக்கில்லாத பிள்ளைகளைப்பெற்று தன்னைமறந்து சந்தோஷத்தால் குறைவில்லாச் செல்வம்பெற்று செங்கோற் செலுத்துநாளில் தன்னுடைய பிள்ளைகளெல்லாம் தனித்தனியே லக்ஷயமில்லாமல் அஸ்வமேதயாகஞ்செய்ய-தானும் பிராமணர் முதலிய பேர்களுக்குத் திரவியங் குப்பைகுவியும் படியாய்க்கொடுத்து சத்துருக்களுண்டென்னுஞ் சப்தங்கேளாமல் அம்புவி புரந்த விந்தமகாராஜ னெங்கேசொல்லும் அவனுமிறந்தான்.

அக்கினிதேவனுடைய திருவடியைப் பூசித்துச்சிந்தை செய்தத்தினல்-அந்த அக்கினிதேவன் பிரசன்னமாக அவரைத்தொழுது வணங்கி ஸ்திரீபோக விருப்பமில்லாமல்-திடவுறுதியும்-சாந்தம்-சத்தியம்-சாமர்த்தியம்- இரக்கம்-ஈகை இவைமுதலிய நற்குணங்கள் எனக் குண்டாக வேணுமென்று வரம்பெற்றுக்கொண்டு கங்கா தேவியைத்தொழுது கங்கைக்கரையில் முப்பத்தாறு காதம் யாகசாலைநேமித்து-தர்மம்புரிந்து வடவாலவிருக்ஷங்கள் வைத்து சாலையோர்ப்படுத்தி அவடத்தில் கங்கைக் கயமென்று தன்பேருண்டாக்கி கனதைபெற்ற சயனெங்கே அவனுமிறந்துபோனன்.

ஒருநாளொன்றுக்கு இருபத் தையாயிரம் பிராமணுள் புசிக்க அன்னதானமும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் இந்திரன்முதலிய சந்திர சூரியருஞ்சேர்ந்து-நாள்தோறும்-அக்கினிதேவனல் அவிர்ப்பாகம் பெறவும் அரசர்கள் பணிந்து மணிமுடிவணங்கி ஏவல்கேட்டு நிற்கவும்-யா

சகர்முதலியபெரும் ஆசையுடன் பெறவிசுவாசமாகத்திர
வியமளித்தும் எவர்களாலுஞ் செய்யப்படாத சத்திரயாக
முடித்தும் புகழ்கைக்கொண்ட புண்ணியசீலன்-மனோதி
டங்கொண்ட சத்தியவாய்மையை யுடைய அந்தித் தேவ
னென்னும் அரசனெங்கே அரசனே-அவனுமிறந்தான்.

கண்ணுவருடைய ஆசிரமத்தில் வளரும்போது - புலி-
சிங்கம்-சாபசார்த்தூலம்-யானை-மான்-கரடி-வேங்கை மு
தலிய மிருகங்களையெல்லாம் பிடித்து-அதுகளின் முது
கிலேறி வையாளியிட்டுப் பழகியும் சகலசாஸ்திர பண்
டிதனாகி தந்தையைவணங்கி வந்தவழியுணர்த்திஞாலமெ
ல்லாங் கைக்கொண்டு காளிந்தி-கங்கை-சரஸ்வதி இந்த
நதியின்கரைகளில் தினந்தோறும் சதமகம்புரிந்து மண்
டலமும் விண்டலமும் புகழும்படியாய்ப் பரதனென்று
பேர்கொண்ட பாக்கியவா னெங்கிருக்கின்றான் பார்த்தி
வனே அவனுமிறந்துபோனான்.

தான் அரசுசெய்யும்பூமியில் மலைமுதலாகிய மண்களி
னால் மேடுபள்ள மிருக்குமாகில் தன்னுடைய தேரேறிக்
கொண்டு விரைவாகவிடுத்து அந்தத் தேருருளாழியினால்
பூமியைச் சமமாக்கிக் காடுகளெல்லாவற்றையும் நாடாக்
கி கரம்புதிருத்திப் பரம்படிப்பது போற் காட்டி மலைக
ளெல்லாவற்றையுங் கோமுகமாகச்செய்து இதழ்விரிந்த
மலரணிந்த தேவர்களுக்கும் பிதிர்தேவதைகளுக்கும் நட
த்தவேண்டிய யாகமுதலிய உபசாரங்களை நடத்தி இரப்
போர்க்கில்லை யென்னுமலியந்துகடல்வளைந்த உலகத்தை
யெல்லாம் பிரிதிவென்று தன்பெய ரிட்டழைக்கச் சீர்
பெற்ற பிரிதிவென்னும் ராஜனுமிறந்தான்.

சிவந்த இரண்டாயிரங் கண்கள்பெற்ற கார்த்திய வீரி
யார்ச்சுன னுடையமகன் ஜெமதக்கினி மகா ரிஷியைக்
கொன்றானென்று இனிமேல் க்ஷத்திரியாளுக்குத் தனுர்
வேதஞ் சொல்லுவதில்லையென்று ராஜவம்சங்களை இரு
பத்தொரு தலைமுறை கருவறுத்துப் பிதிர்க்கடன் செய
வேனென்று சபதம் பண்ணிக்கொண்டு இராஜ வம்சங்க
ளை யழித்து அந்த அரசர்களுடைய உதிரங்களினால் குரு
க்ஷேத்திரத்தில் சிமந்தபஞ்சக தீர்த்தமென் றேர்ப்படுத்
தி கசியப் பிர்மாவைக்கொண்டு பிதிர்க்கடனாற்றி அந்தப்
பிதிர்க்கடன்செய்த காசிபமகாரிஷிக்கு தன்வசப்பட்டிரு
ந்த பூமியை தக்ஷணையாகக் கொடுத்து காசிபர் சம்பந்தம்
காசினியென்றுபேரிட்டு பலம்பொருந்திய யாகங்களைச்
செய்து அநந்தபத்மநாத ஸ்தலஞ்சேர்ந்து மும்மல மகற்
றிய செம்மாலாகிய அவதாரபுருஷன் பரசிராமரு மிற
ந்தாரென்றால் இறந்தபேர்கள் மறுபடியும் பிழைத்தெழு
ந்து வருவாரோசொல்லும் மன்னனே பற்பலவார்த்தை
பேச வேண்டிய தில்லை நானென்று சொல்லு கிறேன்
கேளும்.

இவ்வுலகத்தில்,நாமரூபமாகத் தோற்றமாகியதெல்லா
ம் அழியும் இன்றிறந்தவனுக்கு நாளை இறக்கப்போகிறவ
ன் அழும்படியாகிய காரியம் என்னபிரயோசன மென்
று நாரதர்சொல்லித்தேற்ற இந்த வார்த்தைகளையெல்லா
ங் கேட்ட சிஞ்சயராஜன் இருகரத்தையுஞ் சிரத்திற் குவி
த்திறைஞ்சி சொல்லுகிறான், சுவாமீ தேவர் இப்போது
சொல்லிவந்த சக்ரவர்த்திகள் முதலாகிய அரசர்களுக்கு
நிகர்சொல்லமாட்டேன், அவர்கள் மகா புண்யவான்கள்
குணமேருவாகிய நாரதமகாமுனியே என்பிள்ளை பிழை
க்கவேணு மென்பதைக்குறித்து நான் விசனப்படவில்லை
ஐயோ-என்னித்தாலுதித்த சித்தனுக் கொப்பாகிய மை
ந்தன் ஞாயமாய்ப் புகழ்பெற் றிறக்காமல் திருடர்களால்
உயிரிழந்து எனக்குப்பழியும் அபரோதனையும் வைத்தா
னே, மேலும்-அவமிர்த்துச்சாயையா யிறந்தவர் களுக்கு
விதித்திருக்கும் கொடுநரகிற் புகுவானே, கொடியேனா
கிய அடியேன் நெடுநாள்வரைக்கும்- புத்திர னில்லாமல்
வருந்திய யெனக்கு என்வாய் மொழிப்பிரகாரம் என்ம
னோ பிஷ்டப்படிக்கு ஆயுசுள்ள பிள்ளைவருவானென்று
ஆசீர்வதித்த உமது வார்த்தையும், ஈஸ்வர பூஜாவிதேய
னாக நானிருந்தும் நன்னீதிசெலுத்தியுந் தேவரீரைத்தரி
சித்தும் இப்போது தேவரீர்சொல்லிய உத்தமர்களின் ச
ரித்திரத்தைக்கேட்டும் விருதாவாய்ப் போய்விடுவதுமல்
லாமல் தந்தையே பிள்ளையென்னும் வேதவிதிப் பிரகார
ம் அச்சிறுவனிறந்ததும் அவன்புகுந்த நரகமும் என்னு
டையதா யிருக்குமேயென்று மனம்வருந்திக் குலைந்தே
ன் என்னிஷ்ட தெய்வமேயென்று அந்த அரசன் புலம்
பியழும்போது ஈஸ்வரானுக் கிரகம்பெற்ற-மகதியாழ் மு
னிவராகிய நாரதரானவர் அந்த ராஜனைப்பார்த்து, ஓ-அ
ரசனே-நீரேன் மெத்தவருந்துகிறீர், இதோ உமது கான்
முளையைக்கொண்டு வருகிறேனென்றுசொல்லி ஒரு கடி
கைக்குள் யமலோகஞ்சென்று எமதர்மராஜனுடன் வார்
த்தையாடி விபகாரப்படிக்கு அந்தப் புத்திரனைக் கொண்
டு வந்து தன்னாசீர்வசனத்துக்குக் குறைவில்லாமற்கொ
டுத்தார் அப்போது சிஞ்சயராஜனும், அவனுடையதேவி
யும், உள்ளங்களித்து நாரதமஹாமுனிக்கு நானாவித உப
சார மரியாதைகளை நடத்திவணங்கி வாழ்த்திப் போற்றி
உலகமெல்லாமதிக்க வாழ்ந்து அந்தராஜனுங் கதியடைந்
தான் அவன்பிள்ளை யாகிய சொர்ணடீவென்பவன் கண
க்கில்லாத யாகங்கள்செய்து அகண்ட ஐஸ்வரியமுடைய
வனாய் காசினியாண்டு மாண்டு மோக்ஷமடைந்தான் - ஆ
கையால் தர்மசுவரூபியே எத்தனைகோடிகாலம் இந்தக் க
ர்மபூமியில் வாசம்பண்ணி இந்திரபோகத்தைப்போல் அ
னுபவித்தாலும் துன்பமேவிட் டிருக்குமேயல்லது இன்
பமென்பது எள்ளத்தனையு மணுகாது - (குற்றஞ்செய்த
பேரை அரசன் தெண்டித்து காவலில்வைத்து பரிசுத்த
ப்படுத்தி விடுக்குமாப்போல்) எப்பேர்ப் பட்டவர்களும்
இந்தக் கர்மபூமியில்வந்து செபதவயோக வித்தியால்வ
ரும் இன்பமென்னும் ருசியையும், சமுசார முதலியதினா
ல் வருந்துன்பமென்னுங் கசப்பையும், ஒருநாவினால் ரு
சியறிந்து இதுவும் அதுவும் பிசறிக்கொண்டு கிழுது மே
லுதாய்ப் புரட்டவினையால் விளையும்நோய் முதலியவெல்
லா மருட்ட சகலபாடும்பட்டு சமஸ்தகேடுங் கெட்டு மற்
றெல்லாக் கொடுமைகளையும் இந்தக் கர்மபூமியில்விட்டு
மேலாகிய பதத்தைப்பெறக் கருதுவார்கள்-ஆனால் எல்
லோருக்கும் அப்படியே யெண்ணியவண்ணங் கிடைக்கு
மோ வென்றால் கிடைக்கமாட்டாது அது மெத்த அரு

மையானது அப்பேர்ப்பட்ட அருமையாகிய பேரின்பக் கதியை உலகத்தில் கீர்த்தியிலே நிறுத்திய உங்களபிமன்னன், மெத்தவும் லேசாகப்பெற்றான்-அவனுக்காகச் சந்தோஷப் படவேணுமல்லாமல் விசனப்படுவது காரியமன்று, இந்தமட்டும் விசனத்தையும் புத்ர வாஞ்சையையும் விட்டிருப்பதுவே நன்மையென்று கிருபைக் கண்ணினையுடைய வேதவியாசர்சொல்ல, வேதமந்திரம்போன்ற அவருடைய வாக்கியத்தை, தர்மராஜன் மனதுட்கொண்டு அருமறையின் அந்தமாகிய விதிமுறை யிதுதானென்று ஆசைப்பேயை அலறியோடவிட்டு - ஓடம்விட்டுக் கரையேறினனைப்போலிருந்து அந்த மஹாநுபாவருக்குதீர்க்க தெண்டஞ்செய்தார்-உடனே வேதவியாசர் ஆசீர்வசனந்தந்து விடைபெற்றுக்கொண்டு கந்தமூல பலங்கனி நிறைந்த சோலைபோய்ச் சேர்ந்தார். அந்த வேதவியாசர் போனவுடனே சொல்லுதற்கரிய தர்மராஜன் தம்பியாகிய விஜயனும், மைத்துனனாகிய மாயனும் வருவார்களே அவர்களுக்கு நாமென்ன உத்தரஞ்சொல்லுவோமென்று முன்னிருந்ததற்கு நூறுபங்கதிகமாகிய சஞ்சலத்துடன் பாசிமூடிய நீர்போல் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

இப்பால், சஞ்சத்தகர்பேரிற் சண்டைபோடச்சென்ற கிருஷ்ணார்ச்சுனனுடைய செய்கையைச்சொல்லுகிறோம் இவ்வுலகெல்லாம் தன்னைவணங்க தானொருவரை வணங்காமுடிபெற்ற வாழ்வைப்பூண்ட துரியோதனனேவலினால் அர்ச்சுனன்பேரிற் சண்டைக்குச்சென்ற திரிகர்த்த தேசராஜரும் சஞ்சத்தகரும் தென்றிசையினின்று சண்டப்பிரசண்ட உத்தண்ட தூர்த்தண்ட மூர்த்தண்டமாய் விஜயனுடன் யுத்தஞ்செய்தவர்களையெல்லாம் தென்னிலமாகிய யமலோகத்திற் குடியேற்றி எல்லாவுலகத்திலும் தன்னுண்மிக்கையை நிலையிட்ட இணையில்லாவிஜயன் போர்முகத்தில் நடந்திருக்குங்காரியம் இன்னதென்றறியாதவனாய் அவ்விடத்தைவிட்டு தர்மராஜன் முதலியபேர்களிருக்கும் இடத்தைநோக்கி வருவதற்கு ரதத்தைத் திருப்பச்சொன்னான், அப்போது பூத-பௌஷிய-வர்த்தமான புணர்ப்பெல்லாமறிந்த சர்வாந் திரியாமியாகிய துவாரகாபுரிவாசனென்னுஞ் சாரதியானவருக்கு தன்மருமகனாகிய அபிமன்னன் பத்மயூகத்தை உடைத்துச்சென்றதும் சிந்துதேசாதிபன் - அபிமன்னனுக்கு ஒருவருந் துணைபோகவொட்டாமல் தடுத்துப் போர்புரிந்து நின்றதும் இராஜபுத்திரர்கள்முதலிய அநேகங்கோடி படைகளை அபிமன்னன்வென்று வீரசொர்க்க மடைந்ததும் இவைகளெல்லாந் தனக்குநன்றாய்த் தெரிந்திருந்தும் ஒன்றுந் தெரியாதவனைப் போலிருந்து அர்ச்சுன னிஷ்டப்படிக்கு தேரைச்செலுத்த எத்தனித்தவர் மெதுவாகநடத்திக்கொண்டு வரும்போது எல்லாச்சோபங்களிலேயும் புத்திரசோபம் பெரிதாகையினாலும் அர்ச்சுனனுக்கு இந்தப்பிள்ளையின்பேரில் அதிகபக்ஷ மிருப்பதினாலும் அபிமன்னனிறந்ததை இவன் கேட்பானாகில் தன்னுடைய பிராணனை திரணமாகநினைத்து மரணமடைந்து விடுவான்-அப்படிக்கு நேரிடவொட்டாமல் ஒருபாயஞ் செய்யவேணுமென்று - சர்வாம் பூவண்ணனானவன் அதற்குவேண்டிய கருவிகளெல்லாந் தன் மனத்து ளமைத்து தேவேந்திரனை நினைத்தார் இவருடைய எண்ணப்படிக்கு பஞ்சபூதமுதலியஎல்லாப்பூதங்களும் ஆடத்தக்கதாகையால் இந்திரனும் மிகுந்தவிருத்தப்பிராமணனாக வடிவங்கொண்டு இவர்கள்வருகிற வழிக்கருகாமையில் எரியத்தக்கபெரியஅக்கினிக்குண்டம் ஏர்ப்படுத்திக்கொண்டு மஞ்சள்வஸ்திரமுடுத்தி மெலிந்ததேகத்துடன் வாய்விட்டழுதுகண்ணீர்வடித்து ஓ தெய்வமேயென்றுகூவி திக்குதிசையைச்சுற்றிவலம்வரும் போது தேரைச்செலுத்திவராநின்ற திருமால்கண்டு தனஞ்செயனுக்குக்காட்டிஇதென்ன இடத்தில் பெருந் தீயெரிந்துக்கொண்டிருக்குது, ஆரோவொரு பிராமணன் அலறி அழுது-அந்தக்குழியையவலம்வருகிறான் பாருமென்று மாயனுரைக்க, அதைப்பார்த்து அர்ச்சுனன்மெத்தவும் ஆச்சரியங்கொண்டுதாங்களிருவரும் அவடத்திற்குப்போய், தீயில்விழப்போகிற அந்தப்பிராமணனுடையகையைப்பிடித்துக்கொண்டு, மிகுந்தவணக்கத்துடன் பணிந்து, ஓ பிர்மசிரேஷ்டரே, தேவரீரிருக்கிறதுஉமதுபேரென்ன இந்தத்தீயில்விழப்போகிறகாரணமென்ன எங்களுக்குத்தெரியப் படுத்துமென்றுவேண்டிக்கொள்ள அந்தப்பிராமணன் தேம்பித்தேம்பியழுதுஐயா-அழுவாரழுவதுதன்துக்கத்திற்கல்லது பிறர்துக்கத்திற்கல்ல ஆகையால், தெய்வம்என்னைச்சோதித்ததற்காகஎன்விதிநானனுபவிக்கிறேன், நான்செய்துகொண்டவினை என்னை மோசஞ்செய்தது தளர்ந்தவயதில் ஆதரவில்லாப்பாவியானேன் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டுநீங்கள்போங்கள்என்கையைவிடுங்களையாவென்றுகண்ணீர்சொரிந்து கடகடவென்று புரண்டுவாயிலறைந்துக்கொண்டுவயிற்றைப்பிசைந்துகையைநெறித்துக்கதறுவதைகண்ணனும் காண்டீபனுங்கண்டுஇதென்னவிபரீதமாயிருக்குதென்று இவர்களிருவரும் அந்தப்பிராமணனைத் தேற்றி சங்கதியைச் சொல்லுமென்று கேட்க.

ஓ புண்ணியர்களே, என்வயிற்றெரிச்சலை ஏன்கேட்கிறீர்கள் நீங்கள்கேட்டதினாலென்னலாபம் என்குறையைத்தீர்க்க உங்களாலாகுமா பொன்பொருளானால்கொடுத்துக்காப்பாத்துவார்கள் உயிர்கொடுத்துக்காக்க ஒருவராலுமில்லை நான் மஹா பாவியாயிருப்பது மல்லாமல் உங்கள்காதிலேயும் இந்தக்கொடுமையான சங்கதியைச் சொல்லி நீங்களும் விசனப்படச்செய்வதில் ஒரு பிரயோசனமுமில்லையே உத்தமர்களே என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிற பிராணன், இன்றைக்கிறந்தால், அதனாலே என்னதாகஷி, நீங்களேன் இந்தப்பாவியைத் தடுக்கிறீர்கள் ஒருவருஞ்செய்யாக் கொடுமையைச்செய்த கொடியேனுக்குத் துணைவருவாருமுண்டோ கோவேந்தரே என்னைவிட்டுவிடுங்களென்று ஓரோநெட்டாகத்தீயில்விழத்தாவிய செந்தீவளர்ப்போனைப் பிடித்துநிறுத்தி ஓ சுவாமீ நீர் சொல்லுவதெல்லாம் நியாயந்தான், ஆகிலும் இன்னசங்கதியென்று எங்களுக்குச்சொன்னால் எங்களால் கூடுமானவரைக்கும் சகாயஞ்செய்கிறோம், நீர்சந்தேகப் படவேண்டாம் சொல்லுமென்று நல்லவசனமாக வின

வியபோது அந்தப்பிராமணனிவர்கள் முகத்தை ஊற்றுப்பார்த்து உங்களைப்பார்த்தால் சத்துருக்களிடத்தில் மெத்தவும் அலைச்சல்பட்டு அவதிப்பட்டு வேசாறிவருகிற அரசர்கள்போலுமிருக்குது அந்தஅவதியுடன் என்னவதியையுங்கேட்கிறீர்கள், சொல்லாமற்போனாலும் நல்லதல்லசொன்னாலும் என்றுயர்போவதல்ல, ஆனாலும்சொல்லுகிறேன்கேளும், நானிருப்பது இந்திரபுரி அக்ராரம் என்பேர் ஆகண்டலனையர் நானிந்தப்பூலோகத்திற்பிறந்துவளர்ந்து சகலகலைகளுந்தேர்ந்து விவாகம்பண்ணிக்கொண்டு மேன்மையாகவாழ்ந்துவருநாளையில் புத்திரனில்லாமல் மெத்தவருந்தி சித்தநொந்து தேவதார்ச்சனைசெய்து ஈஸ்வரானுக்கிரகத்தினால் ஒரு சற்புத்திரன்பிறந்தான், அவனைமெத்தவும் பாதுகாத்துவளர்த்து விவாகமுடித்து வேடிக்கையாக இருந்தேன் உத்தமர்களே இருபத்தஞ்சுவயதுவரைக்குமிருந்து என்னைமறந்து இறந்தான் அவனுடனேகூட இந்தத்தேகத்தையுமாய்த்து விடவேணுமென்று தீயிற்குதிக்கத் துணிந்தேன் இனித்தேறேன் தேறேனென்று திகைத்திட்டயர்ந்தான் அப்படி அயர்ந்தபிராமணனை அணைத்தெடுத்து ஐயையோ, இட்டதெல்லாம் பயிராமா, இகத்திற்பிறந்ததெல்லாம் அழியாமலிருக்கக்கூடுமா, இலைபழுக்காமற்போகுமா, எமனுக்கு வேலையில்லாமலிருக்கலாகுமா, அரிகரிராமா காய்க்குமரங்காய்க்கும், பூக்குமரம்பூக்கும், அத்தன்மைபோல உமதுபத்தினியும் நீரும் இன்னமநேகம்புத்திரர்களைப் பெற்றுங்கொள்ளலாம் இறந்தோருடன் மடிந்தோர்களை இதுவரையிலுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை போம்போம் பயித்தியம்பிடித்த ஐயரோவென்று பலவிதமாகிய தர்மங்களும் சாந்திகளுஞ்சொல்ல அதைக்கேட்ட ஆகண்டலையரானவர் அருள்வடிவாகிய அரசர்களே தர்மமும் தயிரியமும் பிறருக்குச்சொல்லுமிடத்து யாவரும்லேசாய்ச்சொல்லுவார்கள் தங்கள் தங்களுக் கிருக்கமாட்டாது வயிற்றுநோயின்வருத்தம் வந்தவர்களுக்குத் தெரியுமல்லது மற்றவர்களுக்குத் தெரியாது நீங்க ளெப்போதும் மகா ராஜாக்கள், செல்லஞ் சொல்லுக் கஞ்சர் தென்பதுபோற் சொல்லுகிறீர்கள் இப்பேர்ப்பட்டதுயரம் உங்களுக்குவந்தானால் அப்போதுதெரியும் இப்போது நான்படும் அருமை என்று பிராமணன் துக்கத்தினால் விக்கிக்கொண்டு சொல்ல, அதைக்கேட்ட கிருஷ்ணார்ச்சுனர்களில் அர்ச்சுனனகைத்து அல்லகாணும் ஐயரோ தான்சாவமருந்துண்பார்களா எங்களுக்கு இப்பேர்ப்பட்ட துன்பம்வந்தாலும் இன்னம் எப்பேர்ப்பட்ட பொல்லாங்குவந்தாலும் உம்மைப்போல் இளைக்கவுமாட்டோம் இறக்கநினைக்கவுமாட்டோம் நானுமக்கு உண்மையாய்ச்சொல்லுகிறேனென்று பார்த்தன்சொல்ல நல்லது நீர்சொன்னபடியே உண்மையாய் நிற்பீராகில் நானொன்றுகேட்கிறேன் அதற்கு வயணஞ்சொல்லும் ஒருகாலத்தில் உமக்குரியபுத்திரர்களில் ஆராவது தெய்விகராசிகத்தால் இறந்துபோனால், நீர் விசனமில்லாதிருப்பீரோவென்று பிராமணன்கேட்க, ஒருக்காலும் விசனப்படேனென்று கிரீடிசொல்ல, இந்தச்சொல் எதார்த்தமானால் எனக்குக்கைபோடுமென்று ஐயர்கேட்க இதுசத்தியமென்று கையறையப்போகச்சே காசாம்பூவண்ணனாகியகண்ணனென்னத்திற்குவினாகியகாரியம் அர்ச்சுனனிலையும்பழுப்பும் எல்லவர்களுக்குமுண்டு இப்போதுநாம்சொந்துவருவதுயுத்தம்இதில்சாவாராரோபிழைப்பாரரோ நாமென்னத்தைக்கண்டோம்நீஆத்திரப்பட்டுகையடிக்கவேண்டாமென்று கபடநாடகசூஸ்திரதாரியாகியஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தடுக்க அந்தவார்த்தையைக்கேளாமல் அப்படி என்னவந்தாலுஞ் சரிதான் நான்சொன்னசொற் றப்புவதில்லையென்று கையறைந்து அக்கினிக்குழியை அவித்து ஐயருக்குநமஸ்காரஞ்செய்து விடைகொடுத்தனுப்பிவிட்டு தாங்களுந்தேரேறியபின் குற்றமற்ற விஜயகாண்டீபன் தன்னுயிர்போன்ற ஆயுதங்களையெல்லாம் தேரில் அவிழ்த்துவைத்து இளப்பாறிக்கொண்டுவருகையில் தாமரையிலைபோலும் மாசறவிளங்கும் துளவமாலையணிந்த திருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அந்த ஆயுதங்களையெல்லாம் எடுத்து ஒளித்துவைத்து அவனுக்குத்துன்பம் வாரதிருக்கும்படியாய் அதற்குவேண்டிய யோசனைகளைச்செய்து விஜயனைப்பார்த்து பிராமணனுடைய பிராணனைக்காப்பாத்தி நல்லபலனைக்கொண்டீர் பார்த்திவனேயென்றுவார்த்தையாடிக்கொண்டு தன்னையடுத்தவர்களுக்கு அருளளிக்காநின்ற திருமாலாகிய ஒப்பற்ற ஒருவன் பொற்பிரகாசம்பொருந்தியதேரை பூமியதிரும்படியாய்ச் செலுத்தி மித்திரனாகியவிஜயனுடன் விரைந்துவருகிறவழியில் இதுவரையிலுங் குற்றமில்லாத சகுனங்கள்காண்பது போய் உடலுமுயிரு நடுங்கும்படியாகிய துற்சகுனங்களைக்கண்டு எதுகாரியத்திலும் அசையாமனத்தினையுடைய இந்திரகுமாரனாகிய வில்விஜயன் மயங்கிமனமருண்டு வாடியதை ஸ்ரீநாதனானவன்கண்டு சூரியன் மேற்றிசையடைந்த படியால் மாலைக்கடனாகிய சந்தியாவந்தனஞ் செய்து கொள்ளலாமென்று ஒருகுளக்கரையிலிறங்கி ஜெபதவ நித்தியவிதிமுடித்துக்கொண் டெழுந்தார்கள் அந்தவேளையில் சுவேதவாகனனானவன் மைத்துனனாகிய கிருஷ்ணபகவானை நோக்கி என்னிர்தயத்தெளிவேஎன்விழித்துணையே-வென்றாலும் தோற்றாலும் சமுத்திரகோஷம் போலிரைந்து முனீஸ்வரர்களுடைய ஆசீர்வசனசந்தடியாகயிருக்கின்ற நமதுபாசறையானதுசந்தடியில்லாமல் மாணிக்கதீபமுதலியமற்றத்தீபங்களுமில்லாமல் பிராமணாள்-மகாமுனிவர் முதலியவர்களின்வேதஆகமதர்க்க மீமாம்சமுதலிய ஓசையுமில்லாமல் இராஜசபைக்கூட்டமு மில்லாமல் குடிப்போன வீடுபோல் ஓசையடங்கிஉச்சாகமில்லாமல்இருக்கவேண்டியகாரண மென்னமோ இன்னதென்றுதெரியவில்லையே சுவாமீ இயம்புமென்று செந்தாமரைக்கண்ணனைக் காண்டீபன் கேட்க வெண்ணெ யுண்ட கள்வனுஞ் சற்றுயோசித்து எனக்குஞ் சந்தேகமாகத்தான் தோனுது என்ன நடந்திருக்குதோ அறியேன் காலமேமுதல் இதுவரையிலும் உன்னைவிட்டுப் பிரியா திருக்கும் எனக்கு எப்படிதெரியும் எல்லாம் நாம்போய்ப் பார்ப்போம்வாருமென்று பாசறையை நோக்கி வரும்போது அர்ச்சுனனுக்கு இடதுதோள் துடித்ததும் இடதுகண் துடித்ததும்

மனமடிதலும் கோட்டுவாய் வருதலும் சோம்பலாவதும் மதத்தில் வரும்போதே நித்திரைமயக்கங் கண்ணைமூடுவதும் புலால்நாற்ற நாறுவதும் மாலைசருகாகலும் இதுமுதலிய தன்மைகளைக்கண்டு ஏதோவகைமோசம் வந்திருக்குது அரசர்களுக்கு ஏதாகிலுந் துன்பமுண்டோ பெருமையை யுடையபிள்ளைகளுக்கென்னமோ பலம்பொருந்தியமூரசக்கொடிபெற்றதமயனுக்கியாதோமற்றசகோதராளுக்கென்ன துன்பமோ அலைபோலசையும் என்காதிற் கேட்கப்போகிறது என்னவார்த்தையோ தெய்வமேதெய்வமேயென்று ஏங்கங்கொண்டுசீக்கிரந்தேரைச்செலுத்துமையாபிமானேயென்றுஇருணெருங்கியநீண்டபாசறைக்குச் சமீபத்திற்போய்த்தேரைவிட்டிறங்கிவாசனைகளும்மலர்களும்மன்னவர்களும்கவிவாணர்களும்-எப்போதும்வாசமாய்ப்பொருந்திய ராஜமண்டபத்துக்குவந்து ஆ ஆ, யுத்தமுகத்திலிளைத்து என்புத்திரனாகிய அபிமனிறந்துபோனானென்றுணர்ந்து ஒருபாரியமரம்அடிவேர்ஆணிவேர்சல்லிவேர்முதலியவெல்லாவேறுமற்றும்பூமியிற்சாயாதிருக்குந் தன்மைபோல் தன்னைமறந்து மரம் போல்மறத்து அசைவற்ற கூடற்போலொடுங்கி உயிர்ப்படங்கி பசையற்ற பால்போலாகி வசையற்றமைந்தனேயென்றுநின்று ஒரு கடிகை சென்றபிற்பாடுசுவாசம்வந்து கண்மலர்திறந்துசிலவார்த்தை சொன்னானென்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது ஜெனமேஜெயராஜன் சிரமேற்கைகுவித்து சிந்தைவருந்தி எந்தையே எங்கள் மூதாதையாகியகாண்டிபருக்கு எங்கள்பாட்டன் அபிமன்னனிறந்தசங்கதியை ஒருவருஞ் சொல்லாதிருக்க சபாமண்டபத்திலவந்த படீ எங்கள் மூதாதை தெரிந்துகொண்டாரென்று தேவரீர் சொல்லிவந்தமையால் அவருக்கெப்படி தெரிந்ததென்றுகேட்க, வைசம் பாயனர் சொல்லுகின்றார்.

நிதிசேர்- திசைசார் - மதிசேரசேகேளும் இந்தயுத்தந்தொடங்கிய நாள்முதலிதுவரையிலும்யுத்தகோலங்கொள்ளும்போது பிள்ளையுந் தந்தையும் ஒருவருக் கொருவர் அலங்காரம்பண்ணிக்கொள்ளுகிறதுவிஜயகாண்டீபம்விற்றாணிமுதலியவீரகண்டாமணி யாவத்தும்விஜயனாகியதந்தைக்குத் தன்கையாலணிந்து தேரிலேற்றிவிட்டு தானுந் தேரேறிச்செல்லுகிறது-சாய்ங்காலம்தந்தை வருவதற்கு முன்னமே,தான்வந்துதேர்விட்டிறங்கிகவசமுதலிய ஆயுதங்களையுங்கழட்டிப்போட்டு நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு தன்றந்தைவரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்து சுவேதவாம்புரவிபூட்டியதேர்வந்தவுடனே எதிர்கொண்டோடி சருகினோர்க்குப் பெம்மானாகிய தன்னம்மானைப் பணிந்து அர்ச்சுனராஜனுடைய திருவடியைப் பிடித்து தனதுதிருமுடியில் வைத்துக்கொண்டு வீரகண்டாமணியைஅவிழ்த்து தந்தைக்குக் கைகொடுத்து தேர்விட்டிறங்கி முத்தமிட்டவுடனே வில்-பாணக்கூண்டுமுதலிய ஆயுதங்களையும் வாங்கிக்கொண்டுபோய் ஆயுதசாலையில்வைத்து, கரங்கால்சுத்தி செய்துக் கொள்ள சலந்தருவித்து இளப்பாறியபோதுதன்னுடையயுத்தத்திறமுதலான சங்கதிகளைச்சொல்லிதந்தையினுடைய சாதுரிய விநோத வீரப்பிரதாபச் சண்டைகளைக்கேட்டு அண்டையிலிருந்து ஆநந்தங் கொள்ளும்படியாகிய விசித்ரன் எப்பேர்ப்பட்ட காலங்களிலும் இந்த மரியாதை தப்பாதிருக்கும்படியான ஒப்பில்லாப்புத்ரன் தேரைவிட்டுத் தாவிறங்கும்போது வழக்கத்திற்கு முழுவிரோதமாய் மகன்வராமற்போனதால் இருந்தால்வருவானே ஆதலால் இல்லையென்று முறைமையினாலும் புத்திரசூக்ஷமத் திறமையினாலுந் தெரிந்துகொண்டான் அல்லாமலும் சில கேள்விகளாலும் நிச்சயம் அறிந்துகொள்ளத்தொடங்கினான்.

எல்லாத்திறங்களுந் தெரிந்த அரசர்முதலாகிய படைப்பதாதிகள் யாவரும் வந்து நெருங்கியிருக்க என்னுயிரினுஞ் சிறந்தவனென் றெண்ணிய புத்திரன் அபிமன்னனொருவன் இல்லாமலிருக்க வேண்டிய குறை யென்ன சொல்லுங்களென்று சபையி னெருங்கியபேர்களைக் கேட்க, இப்படி அர்ச்சுனன் கேட்டமொழிக்கு எவர்களும் உத்தரஞ்சொல்லாமல் அசைவில்லாச் சித்திரப் பாவையைப்போல் திகைத்திருக்கக் கண்டு சத்தியமாக மைந்தனிறந்துபோனானென்று வித்தகனாகிய விஜயன் சந்தேகமில்லாமற்றெளிந்து, அடா மகனே யென்றலறி மண்மேல்விழுந்து-மடமட கடகடவென்று புரண்டு மதியழிந்து நிறைகுறைந்து ஞானம்விட்டு தேகாபிமானம்விட்டு மனமூர்ச்சை யடைந்து மறுபடியுமெழுந்து கூர்மை யாகிய வேலாயுதத்தால் கிழிபட்ட உடல்போற் பதைபதைத்து - துடிதுடித்து வடவாமுகாக்கினியும் - சாடாக்கினியும், திரிபுராக்கினியும், பெரியோர்களின் சாபாக்கினியும், தாபாக்கினியும், பதிவிரதைகளின் சிந்தை வருந்திய அக்கினியும், கொடுந்தீயுஞ்சேர்ந்து வந்து பற்றிக்கொண்ட தன்மையைப்போல் வயிறெரிந்து வயிற்றி லடித்துக்கொண்டு வயிற்றைப்பிசைந்து மார்பில் மோதிக் கொண்டு வாயிலறைந்துக்கொண்டு மண்ணைத் துழாவி தண்ணீர் பெருகுங் கண்ணிலறைந்து தாழ்ந்து வீழ்ந்து எழுந்திருந்து சொற்றடுமாறி சுபாவமறந்து துயர்க்கடலில் மூழ்கி பளபளப்ள பளபளபள வென்று சத்தால் முகத்தில்மோதிக்கொண்டு என்காதலனே எனக்குப் பிள்ளையாகப்பிறந்து பெருநூலெல்லா முணர்ந்து கல்யாணம்பண்ணிக் கொண்டு காரியஸ்தனாகத் திரிந்து இந்தப்பூமியில் வாழ்ந்தவாழ்க்கை இம்மட்டோ இதற்கோ இந்தப்பாடு இவ்வளவுதானோ மாய்ந்து போனையோ ஐயையோ மகனே மகனே என்று வாடி மறுபடியும், தன்பக்கத்தி னெருங்கி நிற்கும் வேந்தர்களைத் - கிருகிருவென் றெரியும்- வெகு கோபப்பார்வையுடன் விழித்துப்பார்த்து சுவாலாமாலிகையாகிய ஆலகாலவிஷம்போற் சீறி கண்களிலொத்தக்கண்ணீர் வழியும்படியா யழுது என்கால்வழித்தோன்றலாகிய அபிமன்னனைப் போர்க்களத்தி லிறக்கவிட்டு நீங்கள் உங்கள் உயிருக்குறுதி தேடிக்கொண்டு உரம்பெற்றுவந்து விட்டீர்களே-ஆ-ஆ, யோக்கியர்களே-இந்த உலகத்தில் உங்களுக்கொப்பாகிய பேர்களுமுண்டோ-உத்தமம்-உத்தமமென்றுரைத்து-பின்னும் அவர்களை நோக்கி வீர கோர சூர தீர ஆர பார வில்த்திறம் வாள்த்திறம்-கதைத்திறம் வேல்த்திறமுதலாகிய இத்தியாதி மறங்களையும், திறங்களையும், அறங்களையு முடைத்தாய்ப் புறங்கொ

யும் போர்த்தொழிலும், சகலவித்தும் வில்லும் பாணமுங்கொண்ட தாஷ்டீகராகிய நீங்களெல்லாரு மிருந்தும் என்னுயிர்க்கிசைந்த குமாரனாகிய அபிமன்னனைக் காக்காமற்போனீர்களே நீங்கள்தானா தர்மராஜனுக்குப் படைத்துணையாகச் சாதிக்கிறோமென்று வந்தவர்கள்-நீங்களென்ன போர்புரியப்போகிறீர்கள்-ஐயோ உங்களுக்கு ஆயுதமுமேனென-வேந்தர்களந்தவார்த்தையைக் கேட்டவுடனே சற்றுந்தரியாமற் சென்று இன்று அவன் செய்தவிரத்தை நாங்களென்னவென்று சொல்லப்போறோம் என்னையனே நீயும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியுந் தென்திசை நோக்கிச் சென்றபிற்பாடு போர்க்கோலங் கொண்டு பெரியதந்தையை வணங்க அவர்புத்திரனை யெடுத்தணைத்து ஜெயம்பெறக் கடவையென்று சொல்ல ஆக்கினைச்சக்கரம்போற் புகுந்து எதிரிகளின் சேனைகளையுங் காரியஸ்தானையுந்தாக்க துரோணாச்சாரியரால் வகுத்திருந்த பத்மயூகத்தை உடைத்து உள்நுழைவதற்கு எவர்களாலுங் கூடாத நிர்வாகத்தினால் நமதுபடைகள் தயங்கினார்கள் அந்தவேளையில் மன்னர்யாவரையும் உன்னைப்போல் வெல்லத்தக்கவனாகிய பெரின்னைப்போலிலங்கி நின்ற மைந்தனுடைய வல்லபங்களையுணர்ந்த நான்-அவனைப் பார்த்து இளஞ்சிங்கமே உன்றந்தையுமிடத்தி லில்லாமையால் நீயேபோய்ச் செயிக்கவேணுமென்று சொல்லிவிடுத்தானே, பாவி சந்ததியை முடித்தவனென்று அந்தரம் படபடபடவென் றதிரும்படியாய் அதட்டிக்கேட்ட இந்திரன்குமாரனாகிய அர்ச்சுனனுக்கு மறுமொழிசொல்லவாயிலாது ஊமைபோற் பயந்து அயர்ந்து அடங்கி ஒடுங்கி நின்றார்கள். அந்தச்சமயத்தில் தம்பிகேட்குங் கேள்விக்கு உத்தரஞ் சொல்லாமற்போனால் புத்திரசோபக் கோபத்திலு மேலாகிய வேகமுண்டாமேயென்றெண்ணி தர்மமேஜெயம் சத்தியமே நித்தியமென்று தர்மராஜன் சொல்லுகின்றார்.

கேளும் என்னுயிர்க்குடற்றுணையாகிய சகோதரனே இன்று காலமே நாமெல்லோரும் படைமுகத்தில் நிற்கும்போது சஞ்சயன்-வில்லேன்-கணைகளேன் - தேரோன்-சிரோன்-முழுநீளப்பேரோன் வீரக் கொடியேன்-மணியணிப்பணியேன்-விரகண்டாமணியேன் - முத்தணிக் குடையேன்-ரத்தின முடியேன்-நான் கெட்டிக்காறனென்னுஞ் சாமர்த்திய மொழியேன்-முனையேன்-என்முன் னிற்காதீர்கள் அப்பாற் போங்களென்று இப்படி பற்பலவிதத்தாலும் பன்னிப்பன்னிப்பேசி சீச்சீ இரசொன்ற உங்களுக்கு இதுவொரு வீரமோவென்று ஏசி தனக்கெதிரில் நின்ற வீமன்முதலாகிய மன்னரைப்பார்த்து ஏளனஞ் செய்ய அபிமன்னன் வலுமைபெற்ற இருப்புச் சுவரொன அமைத்திருந்த சக்ரயூகத்தைப்பிளந்து சூசிகா யூகத்தைச் சிதறச்செய்து துரோணாச்சாரியர், கர்னன், கிருபாச் சாரியர் துரியோதனன்-அசுபத்தாமன் முதலாகிய பலகோடிவீரர்கள் வந்தெதிர்த்துத்தடுக்க அவர்களையெல்லாம் ஒருதரமல்ல பலதரமும் கையக்கொட்டி பையப் பையப்பயந்து புறமிட்டோட முடுக்கியோத்து மேலாகிய நால்வகைச் சேனைகளையும் தலையிலறைத்து ரொத்த வெள்ளத்திற் களைத்து இலக்கணகுமாரன்-பதாதிவேந்தன் சல்லியகுமாரன்-மகதராஜ மைந்தன்முதலாகிய அநேகம் ராஜபுத்ரானையெல்லாம் கொன்று கர்னனாலுந் துரோணனாலும்வில்லுந் தேருமழிந்து உக்ரமத்துடன் தேர்ச்சக்கரங்களைக் கையிற்கொண்டு பூமியில்நின்று யாவருந் துன்பப்பட்டஞ்சி எஞ்சியிளைத்துத் துஞ்சும்படியாய் முடித்து துச்சனியுந் தானும் கதாயுத்தஞ்செய்து அவனையும் முடிசிதற அடித்துத்தள்ளி தானும் படிசிதறவீழ்ந்தான்-வீழ்ந்தான்-வீழ்ந்தானடா அப்பனே ஒப்பில்லாத அபிமன்னனவன் சக்ரயூகத்தை உடைக்கப் போகும்போது நாங்கள்யாவரும் உடற்சாயை நிழலைப்போற் றொடர்ந்து நாலுபக்கத்திலும் படர்ந்து விடாமலடர்ந்துபுகுந்து அமர்புரிந்தோம், அந்தவேளையில் கயிலாசபதியின் வரம்பெற்ற உரத்தினால் சயித்தவன் வந்துவளைந்து காஞ்சுற்ற சாந்துற்ற சிரந்த்த திரிபுரம்பற்றிய நெருப்பையைப்போற் றிகைக்கச்செய்து அபிமன்னனுக்கு எங்களை துணையாகவொட்டாமல் இதுவரையிலும் நாங்கள் பிழைத்த பிழைப்பெல்லாம்வீண்பிழைப்பென்று எம்போலொத்த ராஜதீராள்பேசியேசி நகைக்கும்படியாய் எங்களைச் செய்யவேண்டிய அவமானமெல்லாம் பொழுதுபோமட்டுஞ்செய்து மடக்கினான் ஆகையினாலே போர்ச்சிங்கமாகிய அபிமன்னனுக்கு உதவிசெய்யக் கூடாமற்போச்சுது, அதனால் நமதுபுத்திரன் வீரசொர்க்கமடைந்தான். சயித்திரதனென்னும் பாவியினுடைய உபத்திரவமில்லாவிட்டால் நாங்களும் அவனைத் தனிமையில் விடமாட்டோம் அவனும் எங்களைவிட்டு ஒண்டியாய்ப் பிரிந்து இறக்கவு மாட்டான் என்ன செய்வோம் இந்திரசுதனே வினைப்பகுதியினால் தெய்வஞ்சோதித்த சோதனையல்லது வேறல்ல அப்படியிருக்க ஏதோ நாம்முகத்தில் விழித்த நல்ல வேளையினால் நமது பேரில் இறக்கமும் அன்பும்வைத்து தங்களுடைய ராச்சியமுதலிய புத்ர-பௌத்ர-களத்ராதிகளையும் விட்டு நமக்குப் படைத்துணைவந்து நமது பக்ஷத்தில் பிராணனையும் அலக்ஷியமாக எண்ணிக்கொண்டு போர்புரியா நின்ற இந்தஅரசர்களைவெருக்கவேண்டியதில்லையே-ஐயையோ பாவம்பாவம் அவர்களென்னசெய்வார்கள்-தம்பி-அர்ச்சுனாவென்று தருமராஜன்சொல்ல அதைக் கேட்ட-நரனானவன் புத்ரவாஞ்சையாகிய கடலில்மூழ்கி புத்திரசோகமென்னும் நெருப்புமலைமேலேறி புத்ரவின்ப நீங்கிய பூமியிற்பாய்ந் திறக்கத்துணிந்தவரைப்போல் அடா என்னருமைத் திருமகனேயென்று பிராணவாயுவடங்கி பூமியிற்சோர்ந்து வீழ்ந்தான் (இவடத்தில் புத்ரசோபந் தாளாதவர்கள் கடலிற்போய்விழுந்தும் மலையிலேறி விழுந்தும் பிராணனைவிடத் துணிவார்களென்பது தோன்ற புராணீகர் சொல்லுகின்றார்,) இவ்விதமாகப் புத்ரவாஞ்சைக்கடலில் வீழ்ந்தானென்றும் புத்ரசோக மலைமேலேறி புத்ரவின்பநீங்கிய பூமியாகிய அக்கினிக்குழியிற்பாய்ந்து பிராணமூர்ச்சை போனானென்றுஞ்சொல்லிய தனஞ்செயன் சற்றுநேரம்பொறுத்து கொஞ்ச மூர்ச்சை தெளிந்து மறுபடியுந் தலையெடுத்துப்பார்த்து அண்ணா சிந்துதேசாதிபனா என்மைந்தனைக் கொல்லுவதற்கு-வந்தினைந்தா

னென்று கேட்டு விசனமுடைய தர்மராஜன் முன்சொ
ன்ன வார்த்தைகளெல்லாம் உருகக்காச்சிய இருப்புநாரா
சம்போல் அர்ச்சுனனுடைய செவியிலேறை துடி துடித்து
ப் பதை பதைத்து உள்ளும்புறமும் சுடச்சுட வேகும
போது புத்திரசோபமென்னும் விஷமானது தலைக்கேறி
அதை ஆற்றுவதற்குப் போதுமானமருந்து அந்தத் தரு
ணத்தி லில்லாமையால் தலைமயங்கும் பிறந்தவனைப் போ
ல் விசாலமாகிய தன்னறிவு சோர்ந்து தானும் பூமியிற்
சோர்ந்து விழுந்தான், அப்படி அயர்ந்துவிழ்ந்தது ஒருத
ரமல்ல அநேகந் தரமாக வீழ்ந்து புரண்டு உருண்டு அர
ண்டு மிரண்டு கதறி அலறும்படியாகிய சமயத்தில் ஸ்ரீகி
ருஷ்ணபகவானுனவர் தேரைவிடுத்து குதிரைகளை அவி
ழ்த்து குதிரைச்சாலையிற் கட்டிப்போடச்சொல்லி அர்ச்
சுனனுடைய ஆயுதங்கள்முதலிய வெல்லாவற்றையும் ஆ
யுதச்சாலையிற் சேர்ப்பித்து ராஜமண்டபத்திற்கு வந்து வி
ஜயனுக்குப் பின்புறத்திநின்ருர்.

அவடத்தில் தர்மராஜன்முதலிய வீமசேனுதிகளெல்
லாம் தலையை புடைத்துக்கொண்டும் மார்பி லறைந்துக்
கொண்டும் முகத்தில மோதிக்கொண்டும் மண்மேல்விழ்
ந்து இப்படி பலபலவிதமாய்க் கூவும்படியாகிய பான்மை
யைக்கண்டு தானும் அவர்களுக்கு எட்டுப்பங்கதிகமாகம
ட்டில்லாத் துன்பத்தைக்காட்டி கண்ணீர் குளமாகும்படி
யா யோட்டினர், (பொய்நித்திரை கொள்ளுகின் றவனை
எழுப்ப ஒருவராலு மில்லையென்பது போல) இவ்விதத்
துயரத்தையுடைய பரமாத்மனைத் தேற்றுவாரொருவரு
மில்லாமையால் தனக்குத்தானே கொதிப்பாரிப வெந்நீ
ர்போலாறி தன்னுள்ளேதானே உறுதிகொண்டு தர்மரா
ஜன்முதலிய பேர்களுக்குந் தயிரியஞ் சொல்லி சண்டை
யென்று ஏர்ப்படும்போதே சாவுபிழைப்பு இரண்டு மு
ண்டென்று சொல்லியிருந்தேனே, தர்மநந்தனரே, எல்
லாந்தெரிந்த நீர்தானே இப்படி விசனப்பட்டால் இன்ன
மிருப்பவர்கள் என்னபாடுபட மாட்டார்கள், ஏதோ தெ
ய்வச்செயல் இப்படியாச்சுது, போனது போச்சுது; மி
ஞ்சிப்போன காரியத்திற்கு நாமென்ன செய்யலாம், இந்
தமட்டும்போதும் விசனத்தை நிறுத்து மென்று சொல்
லி சோர்ந்து வீழ்ந்துகிடக்கிற அர்ச்சுனனிடத்திற்சென்
று தர்மராஜனும் கபடநாடக சூஸ்திரதாரியும் தாராள
மாய்க் கண்ணீர்சொரியவிட்டு கிரீடியின் புயத்தைவிருவ
ருங் தழுவியெடுத்து மார்போடணைத்து பன்னீர்முதலிய
வாசநீர்களை முகத்திற்றெளித்து ஆலவட்டங்களாலுபச
ரித்து களையாற்றி தேற்றினார்கள்.

அப்போது, ஒருகுளத்தில் அநேகம்யானைகள்போயிற
ங்க, அதனாற் கலங்கிக் குழம்பியசேறுபோல மனவருந்த
த்தாற்கலங்கிக் குழம்பிவாடிய அர்ச்சுனன் அந்தயானை
கள்நீங்கியவுடனேகுழம்பிக்கலங்கியஜலமானது தெளிவா
கிறதெப்படியோ அப்படிபோற்றெளிந்துகண்திறந்துபா
ர்த்துசமயனையும்மைத்துனனையுங் கட்டிக்கொண்டிரங்கி
முகத்துடன் முகம் வைத்து தோளுடன் தோளணைத்
து சாமலனைக் கண்மலரி லொத்திக் கொண்டு வாய்
விட்டழத் தொடங்கினன் ஐயோ, என்காதலனே இந்தப்

பாரதப்போரில துரியோதனனையும் அவனுடையதம்பி
மார்களையும் ஜெயித்து இப்பூமியை எங்களுக்குப்பட்டங்
கட்டி ஆளச்செய்யும் ஆண்சிங்கம் நீயென்று என்னுள்ள
த்தில் ஆனந்தங்கொண்டிருந்தேனே ஒப்பில்லாத்தீரமே
ருவாகிய சுப்ரதீபமே நீ இதுகளைமறந்து போர்க்களத்தி
ல் இறந்துபோயிருப்பாயாகில் சத்துருக்களைச்செயித்து
எங்களுக்குத்துணைசெய்யாநின்ற வல்லவர்கள் உன்னைவி
ட ஆருமில்லையே பாண்டவர்களுக்குரிய பாக்கியமே உ
ன்பெரியதந்தையார்சொல்ல அந்தமொழிக்குப்பின்வாங்
காமற் சொல்லவல்லவனுகிய நல்லவனே நீ சென்று சக்
ரவியூகத்தைப்பிளந்த சாதுரியமும் பத்மவியூகப்படைஞரெ
ல்லாரும் பறந்துடையக்காட்டிய பராக்ரமமும், வேதபு
ங்கவனுகிய சேனுபதி துரோணச்சாரியும், அங்கதேசா
திபனுகிய அதிரதக்கன்னனும் அலக்கழிந்து கலக்கமுற்று
புறங்கொடுத்தோட ஆட்டியவிக்ரமும் இன்னம்பொருந்
திப் பொரக்கருதியவாள் முதல் ஆயுதங்களைக்கொண்ட
வயவேந்தர்களெல்லாரும் மரணமடைந்து வானிலேறவா
ட்டி மாட்டித்தொலைத்த வல்லமையும் வீரமுஷ்கரத்து
டன் என்னெதிரோடிவந்து நின்று என்முகமலர என்கா
துகுளிர என்மனமகிழ என்புயம்வீங்க புளகாங்கமுற உ
ன்செயத்தைச்சொல்லமாட்டையோ சிறுவனே என்ன
த்தனைபாவி இவ்வுலகத்தி லொருவருமிரார்களடா ஏந்த
லே நாககன்னியின்பிள்ளையாகிய அரவானை முதற்பலியா
க எட்டாநாள் யுத்தத்திலிழந்து இரும்பைப்போன்ற வ
ன்மனத்தனுகி யான் இறக்காமலிருந்தேன் இன்றையப்
போரில் உன்னையுந்தோற்றேன் உன்னுடன்கூடமடியாம
ல் இன்னமும் இருக்கின்றேன் என்னையனே கல்நெஞ்ச
னாகிய எனக்குஞ்சாவுவருமோ நானுனக்கு உரியதந்தை
யல்ல அல்லவடா உத்தமனே அடாசெம்மலே சூரியோ
தயமாகுமுன்னமே என்பக்கத்தில்வந்து வெகுபக்குவ
மாய் நித்திரையினெழுப்பி என்னுடன்கூட நித்தியவிதி
யைமுடித்துக்கொண்டு அதிரதகோலங்கொண்டு அம
ருக்கெழும்படியாய் என்னைத்துரிதப்படுத்தி அறிவுறுத்தி
ஜெயப்பிரதான நயங்களெல்லாஞ்சொல்லி என்னைத்தே
ரேற்றிவிடுத்துநீயும்யுத்தகோலங்கொண்டுதேரேறி எனக்
குச்சமதையாய்ப்புறப்பட்டுபோர்முகம்புகுந்து வீரர்களை
யெல்லாம்அநேகதிப்படுத்திசாயுங்காலம்பாசறைக்குமு
ன்னதாகவந்துரதம்விட்டிறங்கி எனக்கெதிரோடிவந்துவ
ணங்கிஎனக்குக்கைகொடுத்திறக்கிஎன்னுயுதமுதலியகவச
கிரீடங்களையும்வாங்கிவைத்து ஜெயவிஜயங்களைப் பேசிக்
கொண்டிருக்கும்நல்லவனே அடாவல்லவனேநான் சஞ்ச
த்தார்முதலாகிய திரிகர்த்தாளையும்வென்று ஜெயத்துடன்
வந்து இத்தனைப்போதாகியும்வழக்கப்படிக்கு இன்னம்உ
ன்னையெதிர்வரக்காணகிலேன் நீ யிவ்விடத்திலில்லையோ அ
ல்லதுநான்வந்தது உனக்குத்தெரியாதோ வேறுவேலையா
யிருக்கின்றையோஎன்வழித்தோன்றலேஇன்னம் என்ன
செய்கிறாய் நமக்கு அளவிறந்தசேனைகளிருந்தும் அன்பு
டன்படைத்துணைவந்த அரசர்களிருந்தும் நீதனிமையாகச்
சென்றுபோர்வென்றுஇந்தப்பூலோகவாழ்க்கையைவெறு
த்துமேலோகவாழ்க்கையைவிரும்பிப்போய்விட்டையோ

என்புதல்வனே நீ அந்தப்பொன்னுலகை நாடிப்போம்போது நமதுபேரப்பிள்ளை வருகிறானென்று தேவேந்திரன்மகிழ்ந்து தேவர்களையனுப்பி உன்னையெதிர்கொண்டு அழைத்துவரும்படிக்கு உத்திரவுசெய்தாரா, அந்தப்பிரகாரந் தேவர்கள்வந்து உன்னைக்கண்டு புகழ்ந்து வரிசைமுதலிய மரியாதைகளுடன் உபசாரஞ்செய்தார்களோ இல்லையோ-எனக்குத்தெரியப்படுத்தடா தநயனே, பத்மவியூகமத்தியில்தேரழிந்து கைப்பிடித்த வில்லுமுறிந்து வாளுங்கதையுமொடிந்து மனிதர்முதலிய ஒருதவியுமில்லாமல் உயிரொழிந்தநந்தனனே, பெரும்போரைப்பொருதி புறங்காட்டவாட்டி நீ அந்தப் பொன்னுலகத்திற்குப் போனபோது உன்னுடைய பேராண்மையைக்கேட்டு உன்பாட்டனாகிய தேவேந்திரன் என்னசொன்னார் அடாசேயனே மற்புயமலையோங்கிய மைந்தனே, சத்துருக்களை ஜாடாவாய்ப்போக்கி அழகாகிய புகழைக்கைக்கொண்டு சொர்க்கலோகஞ்சேர்ந்த தோன்றலே உன்பாட்டனாகிய தேவேந்திரன் தேவர்களைவிடுத்து என்பேரனுக்கு இந்த இந்திரபுரியின் சிறந்தவளத்தைக்காட்டி வாருங்களென்று சொல்லியனுப்ப அந்தப்படியே அமரர் உன்னையழைத்துக்கொண்டுபோய் தேவர்சோலையும், இந்திரபுரியும், அரம்பாஸ்திரீகளின்வீதியும், கற்பகக்காவும், ஆகாயகங்கையும், தேவசிங்காசனமும் நிதிநிக்ஷேபமும் ஐராவதமும் உச்சைஸ்வரியமுதலாகிய இந்திரவிமானமுங் காட்டினார்களா நீ பார்த்தையா என்னையனே, எங்கள்தந்தைவந்திருந்தபோது அவருக்குவிடுதி எங்கிருந்தது, காலகேயநிவாதகவசரை ஜெயித்தது எவ்விடம் அவர்கள் பதியெங்கேயென்று விசாரித்தையா வெள்ளையானையின் பிடரியிலேற்றி இந்திரகோலங்காட்டினார்களா, ஐயையோமகனே, சக்ரவட்டயூக மத்தியினின்று வளைந்தவில் நிமிராமல் ஓயாமாரிபோல் வாளிகளேவி தேர்களையும், குதிரைகளையும், யானைகளையும், போர்வீரர்களையும் பொடிப்பொடியாகப்போக்கி சேனாபதியாய் மேலாளாகிவந்துநின்றதுரோணரை காலாளாகத்துரத்தித் தாக்கித்துரந்தசூரா, திரைசெறிந்த கடல்பொருந்திய திடர்போற்கூடிய சேனைச்சமரில் நிர்வாகசாலியாயுத்தஞ்செய்து வெற்றிபெற்று உடல்வருந்திநொந்து இளைத்துவந்தான் கிரீடிகுமாரனாகிய நமது பேரனென்று இந்திராணியான உங்கள்பாட்டியார் மிகுந்தஉபசாரத்துடன் தேவாமிர்தங்கொண்டுவந்து உனக்கு ஊட்டிஉன்னுடைய ஆயாசத்தைநீக்கினாளா, அடாசிறுவனே,நீ, வருவதுதெரியாமல் அஜாக்கிரதையாயிருந்தார்களா அல்லதுநீவருவதுதெரிந்தும் அலக்ஷ்யமாயிருந்தார்களா,இல்லைலக்ஷ்யம் வைத்தார்களா-ஒருவாக்கியம் எனக்குத்தெரியச்செய்யடா என்சேயேயென்று இப்படியாகவாயில்வந்த வண்ணமெல்லாஞ்சொல்லிச் சொல்லிக்கதறிக் கதறிப்பதறிப்பதறிக் குரலோசையுடன் முறைகூறிஒப்பனை யிட்டழவும்,தர்மராஜன்-வீமசேனன்-நகுலசகாதேவர் முதலாகிய சமஸ்தமான பேரும். தனித்தனியேமண்ணைத் துழாவிப் புலம்பியும், தலைமேற்கைவைத்து தடதடவென்றுஅறைந்துகொண்டு கண்ணீர்விட்டுத்துக்கலக்கங்கொண்டயர்ந்தார்கள் அந்தக்காலத்தில்தானுங் கூடியவனாயினும் விசனப்பட்டு ஒருவிதத்தாற் தேறிய கறுத்ததிருமேனியையுடைய திருமால்சொல்லுகின்றார்.

ஓ பாண்டவர்களே தெரிந்தவர்களென்றுந் தெரியாதவர்களென்றுஞ்சொல்லுவது என்னத்தினாலென்றால் நல்லறிவுள்ளபெரியோர்களுக்கு நன்மைவந்தாலும் - தீமைவந்தாலும் - இரண்டினிடத்திலும் ஒரேநிதானமாகவிருந்துபலனை அநுபவிப்பார்கள் புல்லறிவுள்ள கயவர் துன்பம்வந்தால் புரண்டுபுரண்டு இரங்கியும் இன்பம்வந்தால் திரண்டுதிரண்டு நெருங்கிமகிழ்வார்கள் ஆகலால் கற்றவர்களென்றும் நற்றவர்களென்றும் பேர்பெற்ற விக்ஞானவான்கள் எதுகாரியத்திலுங் கண்ணீருகுத்துக் கலைப்படார்கள் மேலும் - தாய் - தந்தை - தாரம் - தனையர் சகோதராள் - சார்ந்தசுற்றத்தார்-சிநேகிதாள் - இன்னமிப்படி பலவிதமாகிய பந்துக்களென்பதெல்லாம்வல்லமையுடைய மாயாசம்பந்தம் மயக்கிவைக்குமயக்கமல்லது யோசிக்குமிடத்தில் ஆருக்கார்துணை ஒருவருக்கொருவரென்னசம்மந்தம் அழியாமலிருந்தவர்கள்யார் இதுவீணாகியபழியே. எல்லாம் அழியத்தக்கவழியே அன்றியும் நாம்வந்து பிறக்காத இடங்களில்லை விஸ்வாசமாய் நம்மைபெடுத்தணைத்துமாறிமாறிப்பால்கொடுத்துவளர்க்காத தாய்களுமில்லை பிறத்தலும் இறத்தலும் உடலுக்குச்சகசமாதலால் இதைத்தெரிந்து கொள்ளாமல் விவேகமில்லாதவர்கள்புலம்பிவாடிப்புத்தி கெடுவார்கள்விவேகவான்களாகிய அறிஞர்கள் இந்தக்கர்மபூமியின் நல்வினை தீவினையென்னும் அநுபவத்தைக்குறித்தும் மற்றவிதங்கள் யாவற்றிலும் மயங்கமாட்டார்கள் அல்லவென்று மயங்கினாலும் என்னலாபம் இனிவரப்போகிற பிறப்பில்நமக்கு ஆர் உறவாகத்தக்கது அதுதெரியமாட்டோமே போன பிறப்பில்நமக்கு ஆர் உறவாயிருந்தது அதுவும்அறியோம், இப்படியாயிருக்கஇப்போது இவ்விடத்தில் நமக்குறவென்றிருந்த இவர்களுக்காக இவ்வளவு இரக்கப்படவேண்டுமா இரங்கவேண்டாம் (கன்றும்பசுவும் காடேறிமேய்ந்தால் கன்றுவழிகன்றுதான்பசுவழிப்பசுதானென்று)- பழமொழிசொல்லுவதறியீர்களா, பார்த்திவர்களே இம்மை அம்மை உம்மையென்னும் மும்மையும் உணர்ந்திருக்கின்றமுதிர்ந்த அறிவினையுடையவர்களே, உங்கள் பிள்ளையானவன் வெற்றி பெறும்படியாகிய பல வித வல்லபங்களுடன் வேந்தர்களுக் கெதிர்சென்று வென்று ஜெயங்கொண்டான். இப்பூமியின் இன்பதுன்பத்தை அநுபவிக்கவேண்டி சில நாளிருந்து அநுபவிக்க வேண்டியவெல்லாம் அநுபவித்துவிட்டான், இன்னமெத்தனை நாளைக்கிருந்தாலும் கடைசியிற்கிடைக்குமோகிடைக்காதோ வென்று சந்தேகாஸ்பதமாய்க்காணப்போகிற நற்கதியைஇன்று ஒருபகலிற் கண்டான், நல்ல ஆண்மிக்கையையும் புகழையும்படைத்தமைந்தனைக்குறித்து கல்யாணம்போல் மனமகிழ்ச்சியடைய வேண்டியதைவிட்டு, குடிப்பேர் - குலப்பேர் - கோத்திரப்பேரைக்கெடுக்குங்கோழைப்பிள்ளைக்கு அழுகிறதுபோல் அழுகிறீர்கள்ஐயோ-பேதைகளேயென்று சிலரகசியவார்த்தைகளைமொழிந்து அவர்களு

டைய துன்பத்தையும் இரக்கத்தையும் ஒருவாறுகநீக்கி தெளிவாகியஇன்பமுண்டாகும்படிதேவகீநந்தனன் ஸ்திரப்படுத்தஉடனேபராமாத்மனுற்றுயசகன்றுதேறிய விரவிஜயன் இருகண்களிலும் நெருப்புபொறி சட்டிகட்டியாய்க் குபிர் குபிரென்று குங்கிலியம்போட்ட அக்னியைப்போற்பறக்க கோபாக்நிகளியால்தேவர்கள் முதலியயாவருந் திடுக்கிட்டுத்தியங்க உரத்துக்கூவி இந்தச்சபையிலிருக்கும் மேலோராகிய - முனிஸ்வரர்கள் - ராஜராஜர்கள்-முதலாகிய எல்லோரும்அறியும்படியாய் நான்சத்தியமாகச்சொல்லுகின்ற சபதத்தையாவருமிருந்துகேளுங்கள், இந்தப்பதின்மூன்றாநாட்போரில் என்மகனாகிய அபிமன்னனுக்கு உதவித்துணையாகாநின்றபேரை துணைபோகவொட்டாமல் தடுத்து அவர்களுடைய வல்லபத்தையழித்த சிலைவீரனாகிய சிந்துராஜகுமாரன் சயிந்தவனை, நாளைப்போரில் நானேமுனைந்து அவன்தலையைவெட்டித் தள்ளுகிறேன் இதுசத்தியம் சத்தியமென்று தாஷ்டீகத்துடன்மேலுஞ்சொல்லுகின்றான். சிந்துபதியாகியசெயித்திரதனை தேரைச்செலுத்திப்போர்புரியாநின்றநாளையுத்தத்தில் அவனைவருத்தப்படுத்திப் பொழுதுபோவதற்குமுன்னேஅவன்பிராணனை வாங்குகிறேன், நாளைப்பொழுதுக்குள்அவனுயிரைவாங்காமற் போவேனாகில் கொடுமையாகியதீயில்விழுந்திறப்பேன் இதுவே வேதவாக்கியமென்றுபின்னுஞ்சொல்லுகின்றான்.

இன்றுபுரிந்த சண்டையில் என்மகனாகிய அபிமன்னனுடைய பிராணனிறக்கும்படியாய் பத்மவியூகமத்தியில் விடுத்து அவனுக்கு உதவிபோனவர்களைத்தடுத்துப் போர்கொடுத்து நின்ற சிந்துதேசனை நாளையத் தினத்திற்குள்ளே அவன்றலையை நீறு நீருங்காமற் போவேனாகில் ஞாயஸ்தானமுதலிய நாடுதேசம் பஞ்சாயத்திலும் பக்ஷபாதமாய் லஞ்சம் பரிதானத்திற் கிச்சைவைத்து ஒருசார்பாக வழக்குதீர்க்கும் அல்ப ஜீவனஸ்தாளாகிய அயோக்கியர் வீழும்படியான நரகத்தில் நானும் புகுந்தழுந்தக் கடவேன்-சுப்ரமண்யக் கடவுளுக்கொப்பாகிய என்குழந்தை அபிமன்னு பத்மவியூகத்தை ஜெயித்துத் திரும்பி வரும்போது விடாமல்மடக்கி விரும்பிவந்த படைத்துணைகளைப் புறங்கொடாமலடக்கி என்மகன் உயிரழியும்படியாய் அடமலர்செய்த துரியோதனனுடைய மைத்துனனை நாளையமரில்மாய்த்து வெற்றிமாலையணியாமற் போவேனாகில், பெற்றதாய் தந்தையர் பசியால்வருந்தி வாதைப்படவிட்டு பத்தினிமுதலிய பரஸ்திரீகளுடன் சந்தோஷசம்போக சையோகங்களை அநுபவித்து உலகமெய்க்க தானதர்ம பரவுபகாரங்களைச் செய்து புகழ்பெற்று அவர்களிறந்த பிற்பாடு கோடியாந்திரஞ் செலவழித்து கருமமுதலிய காரியங்களைச் சம்பிரமமாய் நடத்திமகிழும் நாய்க்கொப்பாகிய அல்ப்பர்கள் நடந்துகிடந்த நரகத்தில்நானும் விழக்கடவேன் ஆயுதங்கொண்டுமோதி சேதிக்காநின்ற அமர்க்களத்தில் என்மகனாகிய அபிமன்னு முடியும்படிக்குத் தடுக்க சயிந்தவனென்னும் பாதகனை நாளைப்பொழுதில் நானெதிர்ந்து கொல்லாமற்போவேனாகில் தந்தை தாயையும், ஆசாரியனையும், அன்னையையும், எடுத்துப்பேசி அவர்கள் சொன்னவார்த்தையைத் தள்ளிநாதமொழிகளைப் பிதற்றிய பேதைமக்கள் எந்த துற்கதிபெறுவார்களோ அந்தக்கதியில் நானும்போகக் கடவேன்-விந்தைதங்கும் புயத்தோனாகிய என்மைந்தனை சிந்தைவருந்தச் செய்ததுமல்லாமல துணைவந்தவர்களையும் நொந்துபோகச்செய்த அரச்சலை கனவனாகிய துஷ்டனை-நாளையப்போரில் நஷ்டப்படுத்தாமற் போவேனாகில் சகோதரமாகிய அண்ணன் தம்பிகளில் ஒருவனையொருவர் வஞ்சித்து கஞ்சிக் கலையவிடுத்து - பெரியவர்கள் வைத்த சொத்துக்களைப் போக்கி அசத்தியவாதிகளாய்த்தூறி சத்துருவினிடத்திற்சேர்ந்து மித்துருபேதஞ்செய்து-சாந்திமானஞ் சமயமானமில்லாமல் தனிமையிலிருக்க நினைத்துக் குடும்பத்தைக் கலக்கும் சற்பனைக்காறர்கள் விழும் நரகத்தில் நானும்போகக் கடவேன் போர்வஞ்சகத்தால் என்மகனிறக்கும்படியாய்ச் செய்த செயித்திரதனும் அவன் றந்தையாகிய சிந்துராஜனும் நொந்தழியும் படியாய் நாளையத்தினம் அமர்புரிந்து கொல்லுகிறேன் அப்படி கொல்லாமற் போவேனாகில், அடைக்கலமென்று பொன்னைப் பொருளைவைத்தவர்களையும் அபயமென்று வந்தடுத்தபேர்களையும் ஆதரவற்ற ஏழைகளையும் மோசஞ்செய்து அநியாயங்கண்டு அவர்களை யெதிரிட்டுக் கொண்டு அவர்களுக்குத் துயர்விளைத்து புறத்தியார் பொருளுக்கு இச்சைவைத்துக்கொண்டிருக்கும் விஷத்திற்கொப்பாகிய அல்ப்பர்கள் போகாநின்ற அருநரகில் நானுஞ் சேரக்கடவேன் - ஐஞ்ஞூறு கதைகொண் டடித்து என் சுதனைக்கொன்ற படுபாவிகளையும் நானே முடிக்கிறேன், துடிதுடிக்க முடிக்காவிட்டால் கூலிமுதலியதைக் கொடாதவரும்-குளம்-ஏரியிற் றண்ணீர்விடாதவரும், கோவிற்குளங்களை யிடித்தவரும், நந்தவனச் சோலையை யழித்தவரும், நன்னீர்த்துறையைக் கெடுத்தவரும், நாவலர் சொல்லைத் தடுத்தவரும், நயவஞ்சகமா யடுத்தவரும், உணவில்நஞ்சைக் கலந்தவரும், உற்றாரைக் கெடுக்கப் புகுந்தவரும், குமரிமேற் றோஷஞ்சொன்னவரும், குடும்பத்தைக் கோளாற்கலைத்தவரும், பொய்சொல்லி வாழ்வையிழந்தவரும், புணர்ச்சியைச்சொல்லி மகிழ்ந்தவரும், தர்மமில்லாத் தறிதலையும், கோபமுள்ள கொடியோரும், கொடுப்பதைவிலக்குங் குருடரும், கொடுக்கிறேனென்று கொடாமற்போன திருடரும், கூத்திக்கிட்டுக் குரங்காகிய குடியரும், நல்லோர் பெரியோரை வணங்காத் தடியரும், பல்லோர்புகழுந் தர்மத்திற்கு இடையூறு செய்யும் பதறனவரும், கைம்பெண்ணைக்கருதிய கடையரும் தன்பெண்ணை நாடியசடையரும், மாமிவிட்டிற்சென் றிருந் துண்டமடையரும், தெய்வமிகழ்ந்த சேதனரும், வையகம்பழிக்கவாழ்ந்தமாதரும், குழவியைக்கொன்றகோபியரும், பழிவிடுத்த பாவியரும், தன்மனையை விட்டுப் புறமனைநாடிய சழக்கரும், பொய்ச்சாட்சி முதலியதைச் சொல்லி விலைகொடுத்துவாங்கும் வழக்கரும், பிச்சையிடாதலோபியரும்; வச்சுக்கொண்டிரக்கும் ஆவியரும், இன்னம் பற்பலவிதமாகிய நீதிக்கு வழுவாகநடந்த பதிதர்களும், அடையுங்கதியை நானுமடைவேனென்று அந்த

ச் சபையிலிருந்தோர்யாவரும் நடுநடுங்க இவ்வண்ணமாக அர்ச்சுனன் சபதங்கூறி தன்பக்கத்தி லிருந்த ஒருவருடைய வில்லைப்பிடுங்கி மடமடவென்றுவளைத்து நடநடவென்று பல்லைக் கடித்து கிடுகிடு கிடுகிடுவென்று லோகாலோகமுங் காலாகோலமாய்ப் பிதுரும்படியாய் இந்திரலோகம் எமலோகமுதலிய அகண்டமும் அதிரும்படியாய் ஷ்டங்காரஞ்செய்து, சப்தமேகமும்-சப்தசமுத்திரமும்-சப்ததீவும்-அஷ்டகுலாசலமும்-தாழ்ந்து பாதலத்தில்விழ்ந்து போமென்று சொல்லத்தக்கதாய் வீரியம் பெற்ற பாரிய தேவதத்தத்தை யெடுத்துப் பூரித்தான். இவன் முழங்கிய தேவதத்தத்தை ஓசைக்குமுன்னே பத்துப் பங்கு அதிகமாய் மேலிடிவிழுந்து பாரிடிந்து போனதைப்போல் பச்சைமேனிப் பரந்தாமனுடைய செம்பவள வாயில் நின்று பாஞ்சசன்யமும் முழங்கியது.

அப்போது, வீமன்முதலியசகோதரர்களும் உற்றதுணை வந்த நரபாலர்களும், தங்கள் தங்களுடைய சங்கத்தொனியுங் கூடக்கலந்து முழக்கினார்கள் திரிபுவனங்களுஞ் செத்துதென்று தேவர்கள் செவிடுபட்டுத் தியங்க துரியோதனனுடைய படைமுதலிய யாவரும் திடுக்கிட்டுப் பூமியில்விழ்ந்து மயங்க ஏககாலத்தில் பேரோசைமுழங்கியபோது விளையப்போகிற காரியங்க ளென்னதென்று தெரிந்துக்கொள்ளும் விதரணையுடைய தருமராஜன் ஆபத்பாந்தவனாகியும் தீனதயாளுவாகியு மிராநின்ற முகுந்தனைப்பணிந்து ஐயனே, உமக்கு இதுமெத்தப் பெருமையாயிருக்குது எடுப்பார்கைக் குழந்தையாகினீர் இதென்னகாரணம் என்னகண்காட்சி நான் பட்டபாடெல்லாம் போதாதா, எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளுமாப்போல் இப்பேர்ப்பட்ட கேள்வியுங்கேட்க இருந்தேன், இப்படி வாருமென்று தனிமையில் அழைத்துக் கொண்டுபோய் கண்ணீர்விட்டு நாளுக்குநாள் துன்பக்குறை வில்லாமல் ஒன்றுபோனாலொன்று மேலிட்டு வருதேயன்றி வேறில்லை நான் பிறந்தவேளையோ என் பொல்லாவினையோ தெய்வமே எல்லாமிருக்கட்டும் கூர்ங்கணை கொண்ட தம்பியான விஜயன் முன் ராஜசபையிற் கூறிய சபதங்க ளெல்லா முடியாமல் உனக்கோ எனக்கோ வென்றிருக்க எங்களை ரட்சிக்கவந்த துரோபதை தலையைவிரித்துக்கொண்டு முடியாதிருக்க இதுகளை யெல்லாம் யோசிக்காமல்-இப்போது-இந்தச் சபதங்களைமொழிந்தான், இவன்சொல்லிய சபதப்படி நாளை முப்பது நாழிகைக்குள் சயித்திரதனை முடிக்கக்கூடுமோ எங்களுக்குரிய இஷ்டமே நாங்கள் பட்ட கஷ்டமெல்லாந் தீரும்படியாய் சகாயஞ்செய்த கருணைக்கடலே நாளையப்போரில் சபதம் நிறைவேறாமல் அர்ச்சுனன் அக்கினிக் குழியில் விழுவானாகில் அப்பால் நாங்களுயிர்பொருந்தி வாழத்தக்கதோ ஏதேது இடி விழுந்திருந்த பாம்பைப்போல் நாங்கள் நாலுபேரும் அர்ச்சுனனுட னிறப்பது நிச்சயம் பச்சைவண்ணனாகிய பரமனே, அந்தச் சயித்திரதனைக் கொல்லுகிறேனென்று மொத்தமாக ஒருவார்த்தைசொல்லாமல் நாளைய முப்பது நாழிகைக்குள் பலசாலியாகிய சிந்து தேசனை தப்பாமற் கொல்லுகிறேனென்று சபதஞ்சொன்னானே-ஐயா, இந்தச் சேதியைக்கேட்ட துரியோதனன் தன்னுடைய அளவிறந்த சேனையை யூகமாகநிறுத்தி அந்த யூகமத்தியில் இந்தச் சிந்துராஜனை நிறுத்தி அதிரதத்தலைவர்களைக் காவலாக அமைத்து கெட்டிபத்தாரஞ் செய்துபோட்டால் திரிமூர்த்திகளுங் கிட்டிநெருங்கக் கூடாதே அப்போது இவன்சபதம் எப்படியாம் - ஆகியேயென்று தர்மராஜன்புகன்று, கோபாலனுடைய அடிமலர்மேல் வீழ்ந்து-அரிஹரி-முராரி-நரஹரி - அஞ்சினேனும் அஞ்சினேனென்று இருகரத்தையும் விரித்துக் கெஞ்சியபோது - கஞ்சமலர் மடுவில் முதலைவாய்ப் பட்ட குஞ்சரத்திற் கருள்செய்த கொண்டல் வண்ணன் தஞ்சமென்ற தருமராஜனை மார்போடணைத்து அஞ்சாதே அஞ்சாதேயென்று அவருடைய மனவருத்தத்தைத் திருத்தினார்.

இதற்குமுன் எல்லோரும் சங்கத்தொனிசெய்து ஷ்டங்காரம்பண்ணிய பேரொலியானது ஆகாயத்தில் நிறைந்த தேவர்களுடைய செவிகளிற் புகுந்தமையால் கும்மென்று செவிடுபட்டுப்பயந்து இந்திரப்பிரளயம் வந்ததோ அல்லது ஊழிமடங்க லென்னும் உகாந்தகால நேரிட்டதோவென்று நடுங்கி சற்றுநேரம் சந்தேகப் பட்டு மறுபடியு நிதானித்து இந்திரகுமாரனாகிய அர்ச்சுனன் தன்னுடைய பிள்ளைநிமித்தமாய் சபதஞ்செய்து முழக்குகின்ற சங்கொலியென்று தேறி சஞ்சலம்விட்டார்கள். அக்கணத்தில் பணிப்பாம்பைக் கொடியிலெழுதிப் படைத்த துரியோதனராஜனிருந்த பாசறையில் போர்த்திறங்களைப்பேசிக்கொண்டு பொருந்திய பலவீரர்களும் பாண்டவ ரிருக்கும் பாசறையி லிருந்தெழுந்த மீசுரமாகியபேரொலியைக் கேட்டு பூமியிற்றலைகட்டு தீமைவிளைந்தது-தீமைவிளைந்தது திம்மைதிரும்பிப் போங்காலமிளைந்தது என்றுதிடுக்கிட்டு சரிதான்-சரிதான்-பலம்பெற்ற ஆதிவராகமூர்த்தியைப்போன்ற அபிமன்னனுடைய சாதலைக்கேட்டும் யாவரையும் அடங்கமுடிக்கிறேனென்று அர்ச்சுனன் புறப்பட்டான் இனிக் கெஞ்சினாலும் விடான் எஞ்சினாலும் விடானென்று அஞ்சினார்கள் மீண்டும் துரியோதனனுடைய முகக்குறிப்பையும் மனோபீஷ்டத்தையும் அறிந்த நால்வகைச் சேனைசயினியங்க ளுடைய சிலவயவீராள் இப்படி சபதங்கூறிவருகிற அர்ச்சுனன் முதலிய பாண்டுபுத்திரர்பேரில் எதிர்த்து ஒருகைபார்ப்போம் அடடா, அவன்தானா ஆண்பிள்ளை நாமெல்லாரும் சாண்பிள்ளையோ போங்காணும் வீண்பிள்ளை யென்றுசொல்லி வாத்தக்க அநேகம் வீரர்களுடனெழுந்து ஒருக்கூச்சலிட்டு உச்சாகமுள்ளவர்களாய் அப்போதே யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள், இன்னம்பலபேர் அவர்களைத்தடுத்து இப்பேர்ப்பட்ட வீரங்களை யெல்லாம் நாளைக்குக் காட்டுங்க ளப்பாவென்று சமாதானஞ் சொல்லித்தடுக்க இப்படி அநேக கவித சவுரிய பராக்கிரமங்களைப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

அன்றிராத்திரி அயிராவதத் தலைவனுடைய பிள்ளையாகிய அர்ச்சுனன் சபதங்கூறிய சங்கதிகளையெல்லாம் தங்களுடைய தூதர்சொல்லக்கேட்டு மனநொந்து ஐயோ உன்னைமற் றின்றுமல் வயி றப்பிசங்கொண்டு ஊரம்பல

மானேனென்றும் பழமொழிக் கொப்பாகவும் காக்கையேறியதும் பனம்பழம் விழுந்ததென்னும் காகதாலிநாயம்போலும் விறுயென்றலையில் வந்துவிளைந்துதோனாந்த அபிமன்னனுடன் எதிர்த்து யுத்தம்பண்ணியிருப்பேனு நானெங்கு நின்றேன் அவனெங் கிருந்தான் - பண்டமொருபக்கம் பழியொருபக்க மென்பதுபோல் நான் பழிக்குடன்பட்டேன்; என்பாவமோ என்று பரதவித்துக்கொண்டு மகரதோரண முதலிய வாழைகள் கட்டிய துரியோதன மகாராஜன் பொருந்தியராஜ சபைக்கு வந்துசிந்துதேசாதிபன் சொல்லத்தொடங்கினான்.

சம்பத்தைப் பொருந்திவாழும் ஐம்பத்தாறு தேசத்தாரும் வணங்கும் பதத்தினையுடைய மைத்துனரே கேளும் அபிமன்னனுக்குத் துணைவந்தாரையுந்தடுத்து அவனையுங் கெடுத்தேனென்று அர்ச்சுனன்வெகுண்டு நாளை முப்பதுநாழிகைக்குள் என்னைக் கொல்லுகிறேனென்று சபதம் பண்ணினானும்-அப்படி அவன் சபதம் பண்ணினபடியால இனிநானிவடத்தி லிருப்பதி லென்னபெருமை. ஒருலாபமுமில்லைநீர்-செலவுகொடுப்பீராகில் இவடம் விட்டு அவன்கண்ணுங்கெட்டாததூரத்திற்போயிருந்து நாளயப்பொழுதைக்கழிக்கிறேன்வெள்ளம் வருவதற்குமுன்னமேஅணைகோலிக்கொள்ளவேணுமென்னுமுயர்ச்சிசெய்துக்கொள்ளாமலிருப்பேனாகில்எனக்காகமும்மூர்த்திகளுந்துணைவந்து மாமிசங்களும் உதிரங்களுநிறைந்த பகழிகளைவிடுத்துக் காக்கினும் இந்திரகுமாரனாகியவிஜயன்வாக்கினாற்சொல்லியசபதமுடியாமல்விடாது எப்படியுமுடியும்முதல்வனே ஈரேழுலகத்திற்சென்றாலும் இளாயுங்கடலுக்குள் மூழ்கினாலும், மலைக்குகையில்மறைந்தாலும்,தாயின்கர்ப்பத்துட்சார்ந்தாலும், தனஞ்செயன்கணை எப்படியுந்தேடிவந்து ஜாடிச்சாதிக்கும் அப்படியிருந்தாலும் ஆசைவெட்கமறியாதென்பதுபோல் யோசித்துப்பேசுகிறேன் உமக்கு நல்லகாலமிருந்து நாளையொருபொழுது நான் தப்பிப்பிழைத்தால் அர்ச்சுனன் அக்கினியில் விழுந்திறந்துபோவான் அவனைப்பழிகொடுத்து மற்றநாலுபேரும் பூமியிலிரார்கள் அவர்களுமடிந்துபோவார்கள் அப்பால் திரௌபதையும் மற்றுமுள்ள இஷ்டர்களும் நீரும் நாமுமிருந்து சுகப்படலாம் ஆகையால் எனக்கிப்பொழுதே விடைகொடுத்தருளுமென்று நாவறண்டு வாய்புலர்ந்து கண்கலங்கிச்சொல்ல அந்தவசனத்தைத் துரியோதனன்கேட்டு கலகலவென்றுநகைத்து ஓய்மைத்துனரே வெந்நீரொன்பதற்குள் வீடுவெந்துபோச்சென்னும் பழமொழிபோல் காச்சுமுச்சென்று பேச்சரியாமற் பேசிபிச்சிப்புடவையிற் கட்டிக்கொள்ளுகிறீர் சிச்சி இது நெடுநாளைக்குப்பெரிய பேச்சல்லவோ ராஜ்ஜியாதிபதியாகிய நீர் இப்படி நடுங்கவேண்டாம் உம்முடைய உயிர்க்கொருசேதமுமில்லாமல் வெற்றிபெற்ற என்தம்பிமார்களுடன் நானும் புறப்பட்டு உம்மைக்காக்குகிறேன் நீ ரொதுக்கும் அஞ்சவேண்டாமென்றுவிளம்பி மேலுஞ்சொல்லுகின்றான்.

சேரும் சிந்துதேசாதிபனை நமது சேனாபதியாகியதுரோணாச்சாரியர் - கிருபாச்சாரியர் - சல்லியராஜன் - அங்கதேசாதிபன் - அசுவத்தாமன் - சீர்பெற்ற பூரிசிரவமுதலாகியஅதிரதத்தலைவரும் முனைந்து அதிவீரபராக்கிரம புருஷத்தனமாக இருந்து காப்பாத்தும்போது இந்தச்சபதத்தை முடிக்க அர்ச்சுனனாலாகுமா அல்லது,சர்வசம்மாரியாகிய ருத்திரமூர்த்தியால்த்தானாகுமா - சயிந்தவனே-இதுவீண்பேச்சு அந்த அர்ச்சுனனானவன்-சொன்னசொற்படி உன்தலையைவாங்கப் போகிறதில்லை - ஆனால் அவனுடைய வாக்கியங்கெடாமல் நெருப்பில் விழுந்திறப்பது உண்மையே நான் சொன்னேன் நீர் - நன்றுயோசியும் உமக்குப்பயம்வேண்டாம் - சுகமாக என்னிடத்திலிருமென்று ராஜாதிராஜனாகிய துரியோதனன்-சயிந்தவனுடைய மனக்கொதிப்படங்கச் சொல்லி செவ்வரக்கைப்போற் சிவந்தகண்களையுடைய கர்னராஜனுடனும் சத்துருக்களையோட்டவலைக்கும் தனுவைத்தாங்கிய துரோணாச்சாரியருடனும் பாந்தகடல்வளைந்த பாரைப்புரக்கும் சிறைப்பெறவிருந்த துரியோதனராஜன் சிலவார்த்தைகளை தனித்துப்பேசுகின்றான்.

எங்கள் சுகத்தைத் தங்கள்சுகமாகப் பார்க்கின்ற இஷ்டர்களே விஸ்தாரமாகிய நமதுசேனைகளை இருபிரிவாகப்பிரித்து முன்னும் பின்னுமாகக் காவல்வைத்து நாளைமுப்பதுந் தனஞ்செயனைத் தலைகாட்டவொட்டாம லடித்து என்மைத்துனனென்னுஞ் சிந்துதேசாதிபனைக் காப்பதும் வல்லமையுங்களுக் குண்டாயிருக்குமாகில் அவனும் பிழைப்பான் திவ்வியமானபுகையுடன் பயத்தையுண்டாக்கும் அக்கினியில் அர்ச்சுனனும் விழுந்திறப்பான் நாம் பலநாளும் பாடுபட்டதுபெரிதல்ல நாளையொருநாள்கொடியபோர்விளைக்க வேண்டியிருக்கின்றது ஆகலால் நான் பலவாறுகச் சொல்லவேண்டியதில்லை வேளுங்கொப்பாகிய காளைப்பருவத்தை யுடையவேந்தரெல்லாரும் என்மைத்துனனைக் காருங்கள் காருங்கள் பகைவரையொருகை பாருங்கள் பாருங்களென்று ஆளைக்கொல்லும் மும்மதயானையும் ஆஞ்ஞா சக்கரத்தையுடைய அரவக்கொடிக்கதிபனானவன் ஆபத்துவந்து அவதிப்படுவோரைப்பார்க்கிலும் கோடிபங்கு அதிகமாய்க்குன்றி தீர்க்கதண்டமாகப்பூமியில்வீழ்ந்து எல்லோரையும்படைகள்பல்லோரையும் வேண்டினான் (குலத்திற்குங் குணத்திற்கும் தனத்திற்குஞ் சனத்திற்கும் கனத்திற்கும் மனத்திற்கும் மிக்கவாகிய தக்ககாரியங்களைப் பக்குவமாகச்செய்யாமல் அக்கிரமங்களால் தலைதெரியாச் சன்னதங்கொண்டு தனக்கிடாகிய முழுப்பாய்சுருட்டிகளையுஞ் சேர்த்துக்கொண்டு தானடங்கத் தன்குலமடங்கவென் றிராமல் தன்னைமறந்து நிலைகெட்டுவிட்ட சடையர் சார்வபூமனானாலும் யாவரையும்பணிந்து அவதிப்படுங் கடையராவார்களென்று சொல்லிய நீதிக்குச்சரியாய் நிலைகெட்டதுரியோதனன் நிலத்தில்வீழ்ந்துவணங்கினான்) அப்போதுதுரோணாச்சாரியர் துரியோதனராஜனை அணைத்தெடுத்து செந்தாமரையாள் திருவார்புயனே பைந்தாரணியும் பாதாம்புயனே திசைமகிழப்புகழ்பெற்ற விஜயனும்நீயும், தனுர்வேதமுதலிய சாஸ்திரங்களைப் பேதமில்லாமற் சொல்லிவந்த என்னிடத்திற் கற்றுக்கொண்டீர்கள், ஆசானுக்கு வழிப்ப

ட்டு ஒருகாலமாளுக்காயிருந்துகற்ற வித்தைகள் எல்லாருக்குஞ் சரியாயிருக்கவேணுமேயென்று வினவினால் அந்த அர்ச்சுனன் அசஞ்சலனாக அசைவற்றிருந்து அறிவிற்சிறந்தவனாயால் உலகமெல்லாம் அவனைப்புகழும்படியாக யிருக்கின்றது, நீர்செல்வச்செருக்கினால் சுதாவிற் பிரயாசமெடுத்துக்கொள்ளாமல் ஆள்களைக்கொண்டு ஆகவேண்டியவேலைகளை முடித்துக் கொள்ளுகிறதினால் முன்கற்றுக்கொண்ட தனுர்வேதத்தைப் பாராட்டுதலில்லாமற் போச்சுது, இப்பவுமென்ன (சித்திரமுங்கைப்பழக்கமென்னுந் தன்மைக்கொப்பாகவும் ஆடியகாலும் பாடியநாவுமென்பதுபோலும்) சாதிகுதிரை சர்ப்பக்கொடிபூட்டிய தேருடன்-வில்-நாணி ஆயுதமுதலியகணைகளுங்கைக்கொண்டு திடச்சித்தத்துடனின்று போர்செய்யும் வல்லமைகொண்டு வருவையாகில் ஆளைக்கண்டவுடனே ஐவர்சேனைகளெல்லாம் வியாகூலமடையும், இராஜகூட்டங்களெல்லாம் நேசவிசுவாசத்துடன் உம்மைப்புகழ்வார்கள் என்சொல்லை நீர் உண்மையாய்நம்பும், இவ்வுலகம் மெத்தப்பேதைமையுடையது அதெங்ஙனமென்றால், (படாடம்பபயங்கரஹா வென்பதுபோல்) எப்பேர்ப்பட்ட கடையனாகிலும் படாடம்பத்துடன் கொஞ்சமுழுங்காதகின்றால் யாவரும் அவனைக்கண்டுபயந்து மதிப்பார்கள் நயந்துநுதிப்பார்கள் ஆகையால் இன்று நீமுனையவேண்டும் முடிவணங்கா மூர்த்தண்யமுதல்வனே, இதன்றியும் பார்த்தனும் பரந்தாமனும் வெற்றிபெறுவதற்கு வெகுபாடுபட்டுவந்தாலும் சேதிக்கக்கூடாத ஒருயூகமிருக்குது, குற்றமில்லாக்கோவே, அந்தயூகத்தைவகுத்து நாளைப்போரில் அர்ச்சலை நாயகனை நான்காக்கிறேன், இப்போதுநான் சொன்னயூகத்தை என்னமோவென்றெண்ணுநீர், பெருக்கமுள்ள நமதுசேனையைப்பிரித்து அந்தயூகத்தை அமைத்து இடியுநெருப்புங் குடிகொண்டிருக்கும் கொடியவில்லைப்பிடித்து வருகின்றநரனுக் கெதிர்நாவிற்பேறுகில் முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் அவர்களுக்காசரிய தேவேந்திரனாலும் மும்மூர்த்திகளாலும்அந்தயூகத்தை முடிப்பதற்கு உடைப்பதற்கு முடியாது இப்பேர்ப்பட்டயூகத்தின்பேரில் வாயு - தேயு-விரண்டுமருவக்கலந்து கொடுக்குங்கணைகளையுடைய சவ்யசாசியென்னுஞ் சாமர்த்தியன்வந்து சண்டைதொடுக்கும் வில்முனைக்கெதிரில் நின்று போர்புரிய நிர்வாகமில்லாவிட்டாலும் இறந்துபோகாநின்ற நமதுபடையணியைப்பொருந்திடஞ்சொல்லிக்கொண்டு இருக்கத்தக்கதேயல்லது இந்த இடத்தைவிட்டு ஓடிப்பிழைக்கிறேனென்று தேவரீருடைய மைத்துனன் சிந்துராஜபுத்திரன்சொல்லத்தக்கவாக்கியம் அவருக்கு யோக்கியமல்ல, செத்தாலும் பிழைத்தாலும் சேனைகளுடன் செருமுகத்திருப்பதே தீரலக்ஷணம் திரும்பியோடிப்போவதே அவலக்ஷணம் இதல்லாமலும் தநுர்வேதமுணர்ந்து வில்லும்பிடித்து உத்தமக்ஷத்திரியகுல முறைமையின்படி மநுவிக்ஞானத்தையும் அநுசரித்திருக்கும் வண்மையாளர் துணிவுகொண்டு கோபத்துடன் சண்டைசெய்பத்தொடங்குவாராகில்சத்துருக்களைக் கொல்லுகிறதொன்று அல்லது அவர்களால் தாங்களிறப்பதொன்று, இவ்விரண்டுமல்லாமல் வேறு நினைப்புக்கொண்டு யுத்தகளத்திற்புகுந்து ஐயோ அப்பா தெய்வமேயென்று பெண்டுபிள்ளைகளுக்காகவும் தன்பிராணனுக்காகவும் இரங்கப் படுவது இராஜகுலத்திற் பிறந்தவர்களுக்குமில்லை இறைவே, அழகியகோட்டைக்கு அரணாகிய மதிற்சுவர்போலும் இக்கஅவனியைவளைந்த ஆழ்கடற்போலும் அந்தக்கடலுக்கு முகத்துவாரமாகிய ஆறுகள்போலும் சிலைபெற்றநமதுசேனையை அணியாகநிறுத்தி என்றுங் கூடியவாயிலும் - கொஞ்சமேனும் வஞ்சமில்லாமல் உண்மையாகக்காக்கிறேன்- ஒருகைபார்க்கிறேன்எமதுகாவலனே ஆனால்அவரவர்களுடைய பாவபுண்ய மெப்படியிருக்குதோவானறியமாட்டேன் - வெற்றிமாலைதரித்த வீரசிங்கமே-நாளை மூப்பதுநாழிகையில் அர்ச்சுனன்சொல்லிய சபதங்கெடும்படியாய்ச் செய்வது நமதுவேலையாயிருக்க ஒருவேளை அவன் கூறியவஞ்சினந் தப்பாமல் பெரியோர்களிடுஞ்சாபம்போல் வந்துவளைத்துக் கொள்ளுமாகில் விஜயன்வில்லுக்குமேலாகிய வில்லையுடையவல்லவர்களில்லை, சயந்தவனுக்குத்துணையாகச் சிருஷ்டிகர்த்தாவந்துதடுத்தாலும்அவன்சொல்லியசபதப்படி முடியத்தக்கதேயன்றி வேறில்லைஆகிலும்வினையின்படியெப்படியோ அறியேன்குவலயா பீடமென்னும்யானைக்கொம்பைக்கொண்டுமல்யுத்தஞ்செய்வதற்கு கம்சனேர்ப்படுத்திவிட்டமல்லரைக்கொன்றருளிய தந்திரமாயன், நகமுஞ்சதையும்போல் அவர்களைக்கலந்து கொண்டிருக்கின்றான் அவனிருக்கப்போகிலும், இன்னம் ஆரிருந்தபோதிலும் - சிந்துதேசாதிபனை வில்லினால் வெல்லும் படியானது அரிதரிது நீயெதற்கும்யோசிக்கவேண்டாமென்றுமறையோதுவதற் கிறைவாகிய துரோணாச்சாரியர்சொல்லைப்பக்கத்திலிருந்த கர்னமகாராஜன் பாய்ப்புலியாகிய தாயப்புலிபோலெழுந்துநாளை விளையப்போகிறதுஇன்னதென்றுணராமல்அநேகம் அரசர்கள் கூடியசமூகத்தில்சயந்தவனைக்குறித்துப்பலவிதசபதங்களைப் புகன்ற, அர்ச்சுனனுடையவாழ்நாளை நாளைப்போரில் முடித்து சிந்துதேசாதிபனுடையஜீவனைநானேரக்ஷிக்கிறேனென்றுசூரியகுமாரன்சொன்னான் - உடனே துரியோதனராஜனுடையதம்பியாகிய துன்மருஷணனவன் துடிதுடித்துநாளையுத்தத்தில சூரியன்மறைந்து இருள்வருகிற வரைக்கும் கொந்தலர்மாலைபூண்டசிந்துராஜனைக்கவ்வருஷத்தைக்கோவர்த்தனத்தாற்காத்த கமலக்கண்ணனைப்போல நான்காக்கக்கடவேனென்றான்.

இப்பால், சேனாபதியென்னுந் துரோணாச்சாரியின் பிள்ளையாகிய அசுபத்தாமன் இக்குவலயமெல்லாஞ்சென்று திக்குவிஜயமாகவென்று வீரமாலைதரித்த வில்வல்லபமுடைய வீரவேந்தர்கள் வாய்விட்டிளைத்து தங்களுடைய சேவகவல்லமையைச் சொல்லுவார்களோநல்லவீரரான ஒருக்காலுங்கூறார்கள் உரலுக்கொப்பாகிய அடியையும், வீரபட்டத்தையுமுடைய பட்டத்துயானையேறி பவனிவாரா நின்ற பார்த்திவனே(சாரிதுவென்னும் மழைக்காலத்து மேகமானாலும்மின்னலை முன்னதாகக்காட்டிமழைபொழியப்போகுதென்னுங் குறிப்பைத்தெரிவித்து அப்பால

ஆறு, குளம், ஏரி, முதலியவெல்லாம் பெருகிப்புரண்டோடும்படியாயமழை பொழிவதுண்டு அதுபோல எப்பேர்ப்பட்டவீரர்களானாலும் தங்களுடைய வல்லபத்தைச்செய்கைகளால் வெல்லுவார்களென்னுந் திறத்தைக்குறிப்பாலுணர்த்த வேண்டியதேயன்றி வாக்கினாற்சொல்லப்படாது) மேலும் போராடும்படியாகிய வல்லபம் ஒருவிதமல்ல, அநேககோடிவிதம் விதமாயுண்டு அப்பேர்ப்பட்ட அருமையான யுத்தத்தை இரண்டுபடைவீரர்கள் சபதஞ்செய்துங்கொண்டு சேனைகளுடன் திரண்டுமுரண்டு சண்டைபண்ணினால் ஒருவரையொருவர் வெல்லக்கூடுமோ ஒருபோதுங்கூடாது தங்கள்தங்களுடைய ஆண்மிக்கையினால் ஜெயிக்கிறேனென்று சொல்லிய உண்மைத்திறமையையும் பகைவர்களுடைய விற்றிறமையையும் சபதமுறைமையும்நாளைப்போரில் நீரேபார்க்கப்போகிறீர் காவலனேயென்று அசுபத்தாமன்சொல்ல அண்டையிலிருந்த காவலர்களெல்லாரும் துரியோதனராஜனைப் பணிந்து எங்களரசே தேவரீர் ஒன்றுக்கும்யோசிக்கவேண்டாம்போது விடியுமளவும் மனம்பொறுத்துக்கொண்டிரும் போது விடிந்தவுடனேபலமுகத்திலும்பற்பலவிதமாகிய சமர்புரிந்து பாண்டவர் முதலாகியயாவரையும்வென்று சயிந்தவனைக்காத்துநின்று ஜெயங்கொண்டு மீளுகிறோம்தேவரீருக்கு நேரகாலமாய்விட்டபடியால்விடைகொடுத்தருளுமென்றுசெலவுபெற்றுக்கொண்டுதங்கள்தங்கள்பாசறைக்குச் சென்றார்கள்.

இவ்விடத்தில் நடந்த இந்தச் சங்கதிகளையெல்லாம் இறவாநெறிபெற்றதருமபுத்திரமகாராஜன் தூதராற்றெரிந்து தனதுவிசாலமாகியபுத்தியில்தீர்க்காலோசனைசெய்துமைவண்ணத்திருமேனிவாய்ந்த மாயன் - முதலாகியவல்லவர்களின் செவிகளிற்பொருந்தச் சொன்னார், நீலகிரிபோன்றநீலமேனியான்கேட்டு அங்ஙனநிறைந்துறைந்த கருணைக்கடல்போன்ற அரசர்களெல்லாரும் இதுஎவ்விதம் போய் எப்படிமுடியுமோவென்று கவலைப்படாநின்ற அவரவர்களின்கருத்தைத் தெரிந்துக்கொண்டு எல்லோருங் கொண்டிருக்குங் கலக்கந்திரும்படிக்கு ஒருவார்த்தை நிதானித்து விஜயன்செவிதாழ்த்திக்கேட்கும்படிக்குச்சொல்லத்தொடங்கினார் என்னுயிர்த்தோழமை கொண்ட இந்திரன்முதலாய் நாளையுதயமுதற்சாயங்காலத்திற்குள்ளாக சிந்துபதியைக் கொல்லுகிறேனென்று அதிதீவிரத்தாற்கூறிய சபதங்களைக்கேட்டு துரியோதனன்முதலாகியஎதிரிகள் சயிந்தவனை நாளைமுப்பதுங்காக்கும்படியா யோசித்துக் கொண்டார்களாம் எப்படியுமவர்கள் காக்கவேண்டியகடமையே ஆகலால்துரோணாச்சாரியும்அசுபத்தாமனும் அங்க தேசாதிபனாகிய கன்னனும் வெல்லும் வலபமுடைய ஜல்லியனும் சகுனியும் துரியோதனனும் கிருபாச்சாரியும்கிருதவன்மனும் இன்னம் பலவான்களாகிய பலவேந்தர்களும் பிராணனுக்கொட்டி சயிந்தவனை எப்படியுங் காப்பாத்து வார்கள் உண்மைதான் நாளைஒருபொழுது தானே யென்று முக்கிமுரண்டி இப்போது நான் சொல்லிய பெருந்திறற் படைவீரர்க ளெல்லாரும் [illegible]காப்பாயிருந்துகாத்துக்கொண்டிருந்தால் இவர்களை ஜெயித்தபிற்பாடல்லவோநீ சிந்துதேசனுடைய முடிச்சிரத்தைத்தள்ளவேண்டியது அப்படியே இவர்களைவெல்லுவதற்குக் காலதாமிஷமாய் சயித்திரதன்முடிவீழ்வதற்குமுன்னேசூரியன்மேற்றிசையில்வீழ்ந்து விட்டால் நீ சொல்லியசபத முடிவதெவ்வண்ணம் தெய்வசகாயமிருந்தால்மாத்திரம் உன்சொற்படி சித்தியாமேயல்லது தெய்வசகாயமில்லாமற்போனால்மற்றெவர்களாலுஞ் சொன்ன்சொற்படியே சோர்வறமுடியுமோ அப்படிமுடிப்பதற்கு நமது வல்லமையாலாவதுண்டோ அர்ச்சுனமனுஷயெத்தனம் என்ன பிரயோசனப்படும் மைத்துனா என்றுகேசவன்கிளர்த்த அங்கிருந்த அரசர்கள் யாவருங்கேட்டுகிருபாநிதியாகிய தேவரீர் கிருபைசெய்வீராகில்மலையாகியபுயத்தையுடைய எங்கள்விஜயனுக்கு இது எம்மாத்திரம் திரிலோகத்தையும் ஜெயித்து ஜெயம்பெற்று வாழ்வானென்று ஜெயங்கூறினார்கள் - அந்தவேளையில்அர்ச்சுனனைப்பார்த்துநீஎன்னசொல்லுகிறாயப்பாவென்று காளமேகத்திற்கொப்பாகிய கருணாநிதி கடாக்ஷ வீக்ஷண்யமாய்க்கேட்க வில்லாளியாகியவிஜயகாண்டீபன் சொல்லுகின்றான்.

ஓ மெய்த்தெய்வமே,மன்மதசம்மாரியாகியமகாதேவருடையஅருளும்எங்களைஆண்டிரக்ஷிக்கும்தேவரீருடையகிருபையும்பூரணமாயிருக்கும்போது யாம்நினைத்தகாரியம் முடிவதற்குச் சந்தேகமா இன தயாளுதேவ நாளையப் போரில் அந்தச்சயிந்தவனை தேவேந்திரன் வந்து காக்கினும்அக்கினிதேவன் படைத் துணையாக வந்துகாத்தாலும் இயமன் உதவியாகி ரக்ஷித்தாலும் சிருஷ்டி கர்த்தாவாகியபிர்மா காக்கினும் பரிசுத்த வான்களாகிய மகாமுனீஸ்வரரள் துணைசெய்யினும் இவர்களைத்தடுத்துவிட்டு மிகுந்த தேசிற்சிறந்த திவ்வியரத்னமாணிக்கமமைந்த கிரீடந்தரித்த சிந்துபூபதியானவனை நாளையப்பொழுதில்நாசப்படுத்துகிறேன் இவ்விதஞ்சொல்லிய என்னுடைய நாக்குக்கு எள்ளளவேனும்கடுக்கமில்லை உள்ளபடிசொன்னேன் வள்ளலே அடியேன்விள்ளுமொழியைக்கள்ளமிலலாமற் கேளும்.

கண கண கண கணவென்று மணிகள்கட்டி குண குண குண குணவென்று குணத்தொனிசெய்து ஜெண ஜெண ஜெணவென அக்ஷய பாணங்களைத் தொடுக்கும்அழியாவிஜயகாண்டீபத்தைக் கைபிடித்திருக்கின்றேன் எப்பொருட்குமிறைவராகி யெல்லாவல்லமையுமுடைய செந்தாமரைக்கண்ணனை திருமாலாகியஉம்மைசாரதியாகப்பெற்றிருக்கின்றேன் பாண்டவர்களில்நடுப்பிறந்தோனென்னும்பலங்கொண்டிருக்கின்றேன் அமரர்முதலியயாவரும் புகழச்சமரம்புரியுந் தனஞ்செயனென்றுதயிரியப்பேர்பூண்டிருக்கின்றேன்இத்தன்மைவாய்ந்தமேன்மையைப் பெற்றஎனக்கு இந்தச்சபதமுடியாமலெப்படி தப்பிப்போம் ஒருக்காலுந் தப்பாது - அப்படியேநான் சொல்லிய சபதவாக்குத் தப்பிப்போய் கடுந்தீயில்விழுந்திறக்குங்காலத்தில் சந்திரன்சூரிய ரந்தர மந்தரகிரிமுதலாகிய நவக்கோள்களும் மன்னுயிர்கள் நிலைத்துவாழும் வாழ்நாள்களும் அண்டாண்ட பிர்மாண்டபகிரண்டலோ

கங்களும் எனக்குப்பிறபாடுமிருக்கத்தக்கதோஎன்னிருதயமே-துரியோதனனிடத்தி லிருந்து நாளைப் போரில்சிந்துதேசனைக் காப்பாத்தும் போர்வீரர்கள் வில்லாசிரியன் அசுபத்தாமன்கன்னன் இவர்கள்முதலானவர்களின் வில்த்திறம் வேல்த்திறமுதலியபோர்த்திறத்தைநானறிவேன் பகையினால் அவர்களுக்குளன்பேரிலிருக்கும் அன்பை மாந்துவதேதுசொன்னாலும் இவன்சொன்னசொல்முடிப்பான் முடிக்கானென்று சாமர்த்தியசமத்தேரிய என்னுடையபுயவெற்பின்திறத்தை இவ்வளவென்று அவர்களறிவார்கள்பரிசுத்தமாகியநாதனே என்று சிலவார்த்தைகளைவிஜயன்சொல்ல அவைகளையெல்லாம் சோகந்தீர்த்த மேகமேனியான்விரும்பிக்கேட்டு ஒப்பற்றவிற்பெற்றவில்லாளி என்பதற்குத் தகுந்த நானிவனேயென்றுமகிழ்ந்து அகத்தில் அன்புடையவராய்முகத்தில்அன்பில்லாதவராய் அர்ச்சுனனைப்பாத்து அந்தமட்டும்போதும் கெட்டிக்காரன்தான் வீணாசாரியத்தை விளைவித்துக் கொண்டாயே சும்மாயிருப்பவர்க் கெல்லாந்துயர முண்டாக்கினையே தோன்றலேயென்றுகடுகடுப்பாய்ச்சிலவாத்தைகளைக் கண்ணன் சொல்ல அண்ணலாகிய அர்ச்சுனன் கேட்டு கோபமாறி ஓகோபாலா காபாலியருளினால்வந்தமாபாலனையொத்த பூபாலனாகியஎன்புத்திரனை யுத்தகளத்திற்சென்று பார்த்துவருவேனென்று மூர்த்தன்யமா யெழுந்தார்த்த கார்த்திய வீரியார்ச்சுனனைப்போன்ற பார்த்தனைப்பரந்தாமன்பார்த்துபோதுபோனால்ரணகளத்தில் இருவகைத்தலைவரும்போகப்படாதென்றுநம்மிருதிறவருக்குள் கட்டுப்பாடும் ராஜதர்மு மிருக்க அதற்குவிரோதமாய் நீ போகநினைப்பது தப்பாகியமுறைமையென்று கிருஷ்ணசுவாமிதடுக்க அப்போது அர்ச்சுனன் வணங்கிஒப்பாகியஇறையே என்குழந்தையின் முகத்தைப் பார்த்தாலொழியஎன்மனக்குறைதீராது இன்னொரு வேளைபார்ப்போமென்னும் ஆசையுமெனக்கில்லை, இதுகடைசிப்பார்வையாகையால் ரகசியமாய்ப் போய்வரலாமென்று புறப்பட்ட அர்ச்சுனனுடனே முரசக்கொடியோன் வீமன் முதலியபேரு முகுந்தனுந்தகுந்த தீவர்த்திபகல்வர்த்திகளுடன்வெளிவந்து மகனாகிய அபிமன்னுதேரேறிச்சென்று சேனைக்கெதிரில் நின்று அடத்துடன்ஜெயித்துவிடத்துடன்போனஇடத்தையெல்லாம் பார்த்துப்பார்த்துபுலம்பிக் கொண்டுபோய் பிள்ளையை நோக்கும்போது, இருதிறவர்களிலும் ரணகளஞ்சுத்திசெய்யுங் காரியஸ்தாள்ராஜகுமாரனை யெடுத்துதயிலமாட்டிபரணேற்றி வைக்கும் வழக்கம்போல்வைப்பதற்குப் பக்குவஞ் செய்கின்றார்கள் அவர்களின் கைக்குளிருக்குங்குழந்தைன விக்ரமனாகிய விஜயன்கண்டு ஆச்ரமப்படும்போது அவனுடன்கூடி யாவரும்விசனப்பட்டு அர்ச்சுனனைத்தேற்றி அவன்குறையையகற்றி அவசரமாய்அவிடம்விட்டுத்திரும்பிபாசறைக்குச்சமீபத்தில்வந்து அரசர்முதலிய யாவரையும் அஞ்சன வண்ணன்பார்த்து நீங்களேன்நித்திரைபங்கமாயிருக்கிறீர்கள், போங்கோளென்று செலவுகொடுத்துவிட்டு, தர்மராஜன்வீமன்நகுலன்- சகாதேவன்அர்ச்சுனன் இவர் களைக் தனித்தழைத்துப்போய் சர்வலோக சரண்ணியன் சொல்லுகின்றார்.

ஓ பாண்டவர்களே; உங்களுக்கு நேரிட்டிருக்குஞ் சங்கடங்கள் தலைக்குமேல் வெள்ளமாயிருக்க அதுகொந்தக்காலத்தில் நீங்குமென்று நான் இரவும் பகலும்நித்திரையில்லாமலிருக்க அருமையுணராத அவசரக்காரனைப்போல் ஆத்திரப்பட்டு சபதங்கூறினான் இந்த அர்ச்சுனனவன் இதற்கு வேண்டிய முயற்சியை ஈஸ்வரானுக்ரகத்தால் பெறவேண்டி யிருக்கிறது, தெய்வச்செயலெப்படியோ அறியேன், நீங்களும் பாசறைக்குப்போங்களென்று அனுப்பி விட்டு யோசனைதூரங்கமழுங் களபவாசனையாரந்திகழுந் துளப வாசுதேவன், தனதுமைத்துனனாகியவிஜயனை அழைத்துக்கொண்டு உன்பத்தினி முதலிய பேர்களின்விசனத்தையும்-ஆற்றுவோமென்று சுந்தங்கமழும் - அந்தப்புரமாகிய பாசறையை நோக்கி இருவரும் வரும்போது, சுபத்திரையும் திரௌபதாதேவியும் - அபிமன்னன்பாரியாளாகிய உத்தரையும் இன்னமற்றுமுள்ள பேர்களும் பெருமூச்சுவிட்டு - காரோசைக்கு நிகராகிய பேரோசையுடன் பதறிப் பதறிக் - கதறிக் கொண்டுசித்திரப்பாவைபோன்று மற்றொரு செயலுமில்லாமற் பந்த பாசங்களினாற் சிந்தைவருந்தி மைந்தனால்நைந்துநொந்திருப்பவர்கட் கெதிரில் அந்தோவென்று நரநாரணர்வந்தார்கள் அவர்களைக்கண்டவுடனே அக்கினியில் வீழ்ந்த புழுப்போற் பதைத்து துடித்து தளர்ந்து விழுந்து புரண்டு எழுந்து இருந்து கரைந்து திரைந்து இரைந்து பரிந்து கண்டங்கம்மிக் கமறிவிம்மிக் கருமழை பொழிவதைப் போற் கண்ணீர்சொரிந்து கதறினார்கள்.

இந்தப்படிக்குநேசமதாய்வரு-மாசனருடனே - ஓசைகளிட்டுப் - பாசறைமுழுவதும் வேசாறும்படி அரோதனஞ் செய்யும் அநேகம்பேர்களில் (சுபத்திரா துக்கப்படுவதியாதெனில்)

என்னுடையமதியும் என்னிருசெவியும் என்னுயக னாகிய அதிபதியும் மகிழப்பிறந்தமைந்தனே-இந்திரச் செல்வம்பெற்ற சயந்தனே-உன் பெரியதந்தையானவர், தன்னைப்பிடிக்க மீறி-சதுர்விதச் சேனைகளோடெதிரேறி-தாறுமாறுகமாறி-வீறிப் போர்புரியுஞ் சத்துருக்கள் பேரில் உன்னையனுப்ப எதிரியின் படைவீரரை நீ-எள்ளத்தனையுமதிக்காமற் சென்று சேனைகளைக்கொன்று சேருடிகளைக்கிறந்த மேவலர் புயமலைகளைப்புரட்டி காவலர் முடித்தலைகளை யுருட்டி ரெத்தவெள்ளம் ஆறாக ஓட்காட்டிச்செயித்த உன்னுடைய வல்லபத்தை அருமை தெரிந்த பலசாலிகளாகிய உன்றந்தையர்க்குச் சொல்லவும் அவர்கள் கேட்டு விந்தைப்படவும் நல்ல வாழைத்தாறு முதலிய கமுகுகளால் அலங்கரித்த உன் தேரைநடாத்திக் கொண்டு வந்து சேதிசொல்லாமல் இதுவரைக்குந் தாமிசமா யிருக்கவேண்டிய தென்ன எங்கிருக்கின்றாய் அடா-என்மகனே அர்ச்சுனற் குரிய சுதனே, அழகிய மன்மதனே, அரிஹரி நான்முகனுக்கு உறுதிசொல்லாநின்ற நாராயணற்கு மருமகனாகியும் நான்முகனாகிய அக்கினி தேவனார் பலவரிசையும்பெற்ற பார்த்திவ னாகிய பார்த்தனுக்குத் திருமகனாகியும் ஒப்பில்லாத வேதமந்திர சாஸ்திரங் களையும் பாராயணஞ் செய்து கற்றுப் படைத்திறம் பெற்ற

வருநீயும் விளங்காநின்ற விற்பத்தியுடைய பாலனே சிங்காரவேலனே சம்பிரமலோலனே போர் நிறைந்த யுத்தகளத்திற்புகுந்த உன்னை தேவர்களாலுஞ் செயிக்கப்படாதே திடகாத்திர தீர சன்னிச்செல்வமே என்சிந்தையிலூருந்தேனே தெவிட்டாத தெள்ளமுதமே போர்க் களத்தில் மாவிடராகிய பஞ்சைகள் உன்னுடன் சண்டைசெய்து உன்னுயிரைப் போக்கும்படிக்குக் காலம்நேரிட்டதல்லவா மாற்றுயர்ந்ததங்கமே குணமென்னும் மலையேறிய சிங்கமே தயிரியமென்னுஞ் சரக்குநிறைந்த வங்கமே என்மனப்பொங்கமே நானனுபவிக்கக் கூடாத இப்போர்ப்பட்ட துன்பத்தை என்றீவினையே முதல்மையாகயிருந்து விளைக்குமாகில் நானெனை நோவேனடா என்கண்மணியே என்குலக்கொழுந்தே நீகொண்ட கோபமும் உன்னுடைய வல்லபமும் இளைத்துவந்த அரசர்களை பயப்படாதிரகளென்று தாங்கும் உன்னுடையதிறமு மறமு மற்றுந் தயிரியங் குறையாமலும் மலைகலங்கினுங் கலங்காமலும் இராநின்ற உன்சிந்தையின் வலுவும்-தீர்க்காலோசனை விவேகத்தெளிவும் இதுகளெல்லாம் எக்காலத் திலுங் குறைவுபடாதே என்றுசைக்கண்ணே என்றுவுக்கினிய அமுதமே என்பாவியினுடைய செற்பஞ்செய்தபாவத்தால் இதுகளெல்லாங் கெட்டுப்போன போதிலும் சந்ததியிற் பின்பிறந்தோரும் நினைக்கும்படியாகிய அளவில்லாப்புகழையும் பொருமையையும் ஆபரணமாகக்கொண்ட குருமபூபதியினுடைய தர்மந் தலைகாக்கவேணுமே அந்தத்தர்மம் பிசகிப்போவானேன் அப்பனே சனுவில்லாக்கரும்பே கல்வி ரசம்பாடுஞ் சுரும்பே இப்போர்ப்பட்ட தர்மமுஞ் சத்தியமுந் தப்பிப்போன போது இந்தப்பூமியில் என்னைத்தனை கொடியபாவி எவர்களுமில்லை யடா என்னுயிர்க்குயிராகிய இன்பமே ஆ ஆ, என்சுதனே வருந்தாமல் வாடாமல் பிறைபாசமில்லாமல் எகூதாள் வாசமாகிய அளகாபுரிக்குச்சென்று காவல்முகமிய பேனாக் கட்டறுத்துவென்று ஈஸ்வரத்தோழனுடைய சேனுபதியென்னும் மணிமாலனைக்கொன்று மந்தாரைமலர் கொண்டுவந்து உங்கள் பெரியதாயாகிய திரௌபதைக்குக் கொடுத்த உன் பெரியதந்தை விமசேனமகாராஜனிருக்க ஒருகோடி வேந்தர்கள் புகழுடன் சூழ்ந்திருக்க உன்னை ஒண்டியாய்விட்டுப்பிரிந்துபோன உன்றந்தையைக்குறித்து நொந்துநோவது தர்மமல்லவடா என்சாமி பூர்வஞ்செய்த தீவினைப் புணர்ப்பைப்போல் அநேகம்பேர்களெதிர்ந்து குருக்துக் குழந்தையாகிய உன்னுயிரைக் கொள்ளைகொண்டுபோன. கொடிய தீயபாவிகளைக் குறித்துநோவது தர்மம் என்குலமணித்தீபமே சூரியனும் பனிதியுமென்று உலகஞ்சொல்லும் அப்படியிருக்க பனிகளெல்லாஞ் சேர்ந்து ஒரு சூரியனை வெல்லவந்த பான்மையைப்போல், உன்னை ஜெயிக்கவந்த மன்னரெல்லாம் சின்னப்படும்படியாய் வென்று திரும்பிவந்தசேயே ஆரிட்டசாபமோ-யான்செய்த பாபமோ-என்னன்னலாகியகண்ணனுக்கென்னகோபமோ நானறியேனடா மைந்தா நல்லது இதுக ளிப்படியிருக்க உன்னுடைய உரிமை எப்போர்ப்பட்டது மகனே நமது தாய்க்கு நாமொரு பிள்ளை மேலும் அவளுடலும் அந்த உடலுக்கு நாம் உயிருமாக யிருக்கின்றோம் உயிராகிய நாம் பிரிந்தால் உடலாகிய தாய் இறப்பாளே யென்று உன்னுள்ளத்தில் எள்ளத்தனையும் நினைக்காமல் கள்ளத்தனமாய் வானுலக மடைந்த என்வள்ளலே பேதை யாகிய என்னை நீ யழித்திருந்தும் எனக்கொரு மொழியில்லாமல் மோசஞ்செய்து போனபடியால் இனிமேல் எங்களுக்கு உன்னையல்லது வேறென்ன செல்வமுண்டு மெய்யனே அடா ஐயனே, இனியென்ன இன்பம் இனியென்னவிசம் உன்னைப்பலிகொடுத்து இனி யுத்தஞ்செய்துபெறப்போகிறது என்னவெற்றி உன்னைக்கண்டு களிக்காத உச்சாகம்-என்ன உச்சாகம் உன்னுடன் கலந்து வாழாத வாழ்வு இனியெனக்குந் தாழ்வையா மகனே எனக்கோருருதி ஓடிவந்து சொல்லடாமகனே என்னெதிர் வந்து சற்றுநில்லடா என்னை யுன்னுடன்கூட அழைத்துச் செல்லடா பெற்ற நான் இங்கிருக்க பிரிந்த உன்மனமெத்தக் கல்லடா முதிர்ந்தமரமிருக்க இளமரம்பட்டது முறைமை தப்பாகிய பிழைபடா என்போலொத்தவர்கள் எளிதமாயென்னை யேசுவார்களே வலக்காரம்பேசுவார்களே ஐயோமகனே வல்லாண்மைபெற்ற வாசுதேவர்வாழ்ந்த வல்லகுலத்திற்பிறந்து எல்லா அரசும் வந்துபணியும் வில்லாண்மைவேந்தரின் நல்லகுடியிற் புகுந்து சக்களத்தி நாத்தி ஓரகத்தி முதலாகிய பந்துக்களுடைய கும்புகளிலும் பிரியாமல் மரியாதையா யுலாவியிருந்து யாவரும்புகழநானுமகிழ்ந்து எதொருகுறைவுமில்லாமல்சொல்லாண்மைபேசி இன்பமகிட்சியில் எனக்கீடாக ஒருவருமில்லை யென்று இறுமாந்து மணம் புரிந்து கொண்ட புருஷனாதலன் வரும்போதும் குணஞ்சிறந்து கண்டநாய காதலனுறும்போதும் அகமகிழ்ந்து முகமலர்ந்து அருள்சுரந்து விழிசிறந்து ஆனந்தத்துடன் ஆலிங்கனஞ் செய்து முத்தமிட்டுக்கொண்ட மகாபாவியாகிய வஞ்சிக்கு நெஞ்சுக்கிசைந்த துணையாகிய நீயொருவன் இல்லாமையால் எல்லாருமிருந்தும், இல்லாத்தனியாயினேன் வித்வசிலாக்யனுகிய விஜயன்மகனே, இதோவந்தேனம்மணி இதோவந்தேனம்மணியென் றோடிவந்து அங்கலாய்த்திரங்கும் என்னெதிர்வாராயோ என்னிஷ்டபாக்யமே என்சிலாக்யமே குணபூஷணமே கோதற்றகனியே பூவிற்பெருமையாய்ப் பிறந்த யென்னை காவிற்கொடிபோற் காத்த கண்ணனே அண்ணன் அலாயுதன்கருத்தை அகற்றி உன்னெண்ணம்போல் அர்ச்சுனற்கீந்த வள்ளலே மாணிக்கமான மகனையான் பெற்றேன் காணிக்கிலனே காவலெனு ஆற்றேன் பாவியே னென்ணம் பாழாய் விடினும் ஆவியே அண்ணு அருளுனக்கில்லையோ முதலைவாய்ப் பட்ட சுதனை நல்கினையே மூலமேயென்ற கரிபுரந்தனையே ஆபத்தால்வந்த அரசபுத்திரனை மேவித்துருவம் வீறவைத்தனையே எவரிருந்தாலும் என்வினைக்கிணையோ மகனையானிழந்தேன் மகபாவி விழந்தேனென்று மலர்விழிலறைந்துக்கொண்டு மண்மேற்சாய்ந்தாள் சுபத்திரையானவள்.

இப்பால், அக்கினியிற்பிறந்த பாஞ்சாலி அடித்துமோதி வீழ்ந்து ஆருமற்றபாவிக்கு அருந்துணையென் றிருந்த ஆதரவாகிய சேயனைப் பிரிந்தேன் என்கூந்தலை முடிக்க

ஏந்தலாயமைந்த மாந்தரிற்சிறந்த மைந்தனையிழந்தேன்,க
டலைக்கடந்து கரையேறுங் காலத்தில் படகுடைந்திறந்த
பாவியானேனே-அழகுஞ்சிறப்பும் ஆண்மையும் வீரமு
ம்-புகழும் பெருமையும்-புண்ணிய நெறியும்-சத்திய சவு
சமும்-தானமுங்கர்மமும்-எய்த்தபேர்க் குதவும் இரக்கமு
ம்அன்பும்-மெய்த்தவக்குணமும் மேன்மையும் பக்தியும்,
தந்தை தாய்க்குகந்த தகுந்தநடையும் அறிவுஞ்சிறப்புமா
ண்மையுங் குறிப்பும் பொறுமையுந் திறமையும் பூதய
வும், கர்த்தனைப் பூசிக்கும் வித்தகப்பத்தியும் இத்தனை யி
ருந்தும் இறந்தையோ மகனே-அப்பா சுதனே அங்காடி
க்கூடையை அதிரவிலையிட்டறியேம்-பங்கில்லாப்பங்கை
பகுதியெடுத்தறியேம் வரியிறையாற்குடிகளை வருத்தியறி
யேம் கொடுங்கோன்மைசெய்து குறைசெய்தறியேம்தா
லிகட்டுங் கல்யாணத்தைத் தடுத்தறியேம் வேலியிட்டப
யிரை மிதித்தறியேம் ஏழைகள்பொருளை யெடுத்தறியே
ம் வாழ்நரைப்பொறாமை வைத்தறியேம்-கோவிற் குளங்
களைக் குலைத்தறியேம் - காவிற்பூஞ்செடிகளைக் களைத்தறி
யேம்-பசுவைப்பட்டினி போட்டறியேம்-சிசுவைப்பட்டி
னி செய்தறியேம் பாவமென்றும் பரித்தறியேம் - கோப
மொன்றுங் குறித்தறியேம்-பெரியோர்தம்மையிகழ்ந்தறி
யேம்-பேதையர்வாழ்வை அகழ்ந்தறியேம்-நோயினர்தம்
மை நொடித்தறியேம்-பேயினர்துன்பம் பெற்வறியேம்-
பாவாணர்தங்களைப் பகைத்தறியேம்-பார்ப்பார் தம்மைக்
குறைத்தறியேம்-மறைவேதத்தை மறந்தறியேம் - வஞ்சம
னத்திற் கொண்டறியேம் - தஞ்சமென்றோரை விடுத்தறி
யேம்-அஞ்சலென்றோரை யடித்தறியேம் - கடனுளியை
வாசல் காக்கவைத்தறியேம் உடன்பிறந்தோரை யோட்
டியறியேம்-இனத்தைச் சனத்தை எதிர்த்தறியேம்-ஈசன்
மாலைப் பழித்தறியேம்-பசித்தோர்க் கன்னங் கொடாதறி
யேம்-பாதையைவெட்டிப் பிரித்தறியேம் - தண்ணீர்த்த
டாகந் தடுத்தறியேம்-சமயங் கெடுத்துச் சார்ந்தறியேம்-
பொய்கோள்சொல்லிப் பிழைத்தறியேம்-பெண்களைசோ
ரக்கண்டறியேம்-தீயோர்திருடரைச்சேர்த்தறியேம் தீயி
ட்டுமோசஞ்செய்தறியேங் கூலிகுறைத்துக் கொடுத்தறி
யேம்-குறையமரக்கா ளிறைத்தறியேம்-சொல்லிச் சோ
ர்வுபட்டறியேம்-துஷ்டமந்திரியை வைத்தறியேம்-தாய்த
ந்தையரை யிகழ்ந்தறியேம்-சண்டாளர்தம்மைப் புகழ்ந்த
றியேம்-கடையருறவைக் கண்டறியேம்-கற்றோர்தம்மை
விண்டறியேம்-ஜீவயிம்சைகள் செய்தறியேம்-செய்தோ
ரைச்செய்யாமல் விடுத்தறியேம்-குடும்ப தோஷங் குறித்
தறியேம்-குடிபரைக்கனவில் நினைத்தறியேம் தடியாற்பசு
வை யடித்தறியேம்-தருவோ மென்றலக் கழித்தறியேம்-
நம்பவைத்து மோசஞ்செய்தறியேம்-நாய்போற் குரைத்
துப்பகைத்தறியேம்-வம்புவழக்குத்தொடுத்தறியேம்-வா
ங்கினகடனைக் கொடாதறியேம்-மாதவம்யாகம் விடுத்தறி
யேம்-வழக்கிற் பக்ஷபாதஞ்செய்தறியேம் கணவற்குத்து
ன்ப மிழைத்தறியேம் கழறியசொல்லைத் தடுத்தறியேம்-
பச்சைமரத்தைப் பறித்தறியேம்-அச்சம் லச்சைவிட்டுப்
பிழைத்தறியேம்-இச்சகம்பழிக்க வாழ்ந்தறியேம்-இச்சக
ம்பேசித் தாழ்ந்தறியேம் - அனாத ரக்ஷகனைப் பழுதுரை

யேம்-அரியானல்லாற் தொழு தறியேம்-இப்பேர்ப்பட்ட
பொல்லாங்குகளை எப்போதுஞ் செய்தறியாத எங்களுக்
கு இந்தக்கொள்ளை எப்படிவந்து மூடிந்ததோ எங்க ளி
ஷ்ட தெய்வமான கர்த்தனே, அண்ணா கண்ணனே, நண்
ணாய்ப்புத்திரன் கிடைத்தும் போரினில்முடிந்தான் உன்
சித்த மிப்படியே தேறினதையோ பெற்றோர் வயிற்றில்
பெருநெருப் பிட்டையே என்றிரைந்தழுது ஏங்கிக்கலங்
கி-தரைமேற்சேர்ந்து சாய்ந்துடல்மறந்து-ஒஞ்சிருந் து
யிர்த்தாள் பாஞ்சாலியானவள். பக்கத்திலிருந்த மச்சவள
நாடன் பாவையாகிய உத்தரையானவள் சூத்திரமிழந்தம
ரப்பாவைபோலும், ரக்கையிழந்தபறவைபோலும்பறந்து
தீயில்விழுந்தசெந்தாமரைபோல் தேகமும் முகமும் க்ஷ
ணத்திற்கருகி முத்துப்போற்கண்ணீர்-முகமறைத்தோட
அத்தா-அத்தா அன்னையேயென்று அர்ச்சுனன்பாதத்தி
ல் அலறியேவிழ்ந்து மாமாவென்றே வயிற்றைப் பிசைந்
து வாய்மேலறைந்து வாடியகொடிபோல் கையைநெரித்
துக் கண்மேலறைந்து தெய்வமே யென்று தியங்கிப் பு
லம்பினள், வீட்டில்வந் தெனக்கு நாட்டியம் பழக்கிய
மாமா, எந்தன் வேந்தனையிழந்து நான்காந்திப் புலம்பவு
மாமா, வதுவையென்று யாரும் வாழ்த்தச் சிறந்தேனே
மாமா, இப்ப விதவையென்று சொல்ல வெட்கிமறைந்
தேனே மாமா, தந்தையைக்கொல்ல எந்தன் வயிற்றி லி
ந்தக் கருவே வந்து சார்ந்துதே ஆறு மாதமாய்ப் பேய்
பூத வுருவே - சகலராஜர்களுந் தாழ்ந்துவணங்கு மலர்ப்
பாதாமிகுந்த சல்லாபமாய்த்தழுவி உல்லாசமாம்பிராண
நாதா சந்தோஷவாநந்த வின்பமெனக்களித்ததேனே நா
ன் தந்தை தாயர் சொந்த பந்துக் களையும் பிரிந்தே
னே மருகிமருகி யென்று வாய்குளிர்ந்தழைத்தவென்மா
மாநான் உருகியுருகிச்சேர்ந்த வுயிரையிழந்திருக்கப்போ
மா அரிஹரி ராமா சின்னஞ்சிறுவயதிற் கன்னிகழியச்
செய்ததெய்வமேஎந்தத்தீவினையோ கணவன்போனால்நா
னென்னசெய்வேன் ஆருக்குமனியாய நாங்கள் யாருஞ்
செய்யவில்லையே இந்த அவகியிடியிடித்தாப்போல் வந்
துதேவினைத்தொல்லையே காய்த்துப் பழுக்குமாயிரங்கா
லம்பயிர்காஞ்சு போச்சுதே நான் கண்கலங்கி வயிறெரிய
விப்பருவத்திலாச்சுதே தேடிவந்து என்னைத்திருமணஞ்
செய்தவின்னயகன் இப்பதேடவிட்டுப்பரலோகஞ்சேர்ந்
தாரிது ஞாயமே என்றுவானமும்மண்ணும் மாமும் மலை
யும் கல்லும் கடலும் புல்லும் பூண்டும் உருவும்படியாய்
வாடியழுங்காலையில் அர்ச்சுனன் வேரற்ற பச்சைமரம்
போல் அசைவற்றுநிற்க மரகதமேனி மாயன்அவர்களை
யெடுத்து உபசரித்துத்தேற்றி அவர்களுடைய சோபந் தீ
ரத்திருவாய்மலர்ந்து சொல்லுகின்றார்.

(குறள்.) (நிலத்தியல்பா னீர்திரிந்தற்றாகுமாந்தர்க்,கின
த்தியல்ப தாகுமறிவு.) நிலத்தினுடைய குணம் ஜலத்து
க்கேறுந்தன்மைபோல் குலத்தினுடையகுணம் அறிவுக்
கேறு மென்றுநீதியிருப்பதினால் க்ஷத்திரிய குலத்திற்பி
றந்தஸ்திரீகள் க்ஷாத்திரங்கெடப் பேசமாட்டார்கள் அ
தென்ன வெனில்சண்டைக்குப் போயிருந்தபுருஷன் அ
பஜெயப்பட்டாலும் மார்பு காட்டி நின்றானென்றுகேட்

டால் மனமகிழ்ந்துதன்னுபகனைஎதிர்கொண்டு தழுவுவார்கள்ஜெயஞ்செய்துவந்த தீரனானாலும் புறமுதுகிட்டானென்றுகேட்டால்அந்தப் புருடன் முகத்தில் விழிக்காமல்பிராணனைவிட்டுவிடுவார்கள் ஆகலால் நீர்விசனப்படுவதைப்பார்த்தால் நமதுகுலத்தின்பெருமையைக்குன்றச்செய்வது போலுமிருக்கின்றது தெரிந்தநீரோ இப்படியிரங்குவதுநன்மையல்ல குலத்தின்குணத்தை அனுசரித்துக்கொள்ளவேணும் உன்புத்திரனைவதைத்த கொடியோர்களின் பலவிதவளங்களு மாளும்படிக்குமாய்த்து வென்றிகொண்டுசாய்த்துநாளைமுப்பதுநாழிகைக்குள் தப்பில்லாமல் வருவோம் தீர்க்க புத்தியை யுடைய நீங்கள் ஏக்கங்கொள்ளுவதுதர்மமல்லஅம்மா உன்மகனைநினைத்துமனேதுக்கப்படுவானேன் இப்பேர்ப்பட்ட வல்லமைசாலியாகிய பிள்ளையைப்பெற்றமாதவத்திற்கு சந்தோஷப்படவேண்டுமே உனக்கு மாத்திரந் தானதுக்கம் எங்களுக்கில்லையா பந்தபாச முள்ள யாவரையுஞ் சொந்த மாக்கிக்கொள்ளும் இந்த வுடல் வந்த வழி தெரியாமற்போகும் படி யாகிய வாளுள் அவத்திற்குப் பாடு படுவதைப் பார்க்கிலும் தவத்திற்குப் பாடுபடுவது தகுதி யல்லவோஎன்தங்கையேவிளிவிறந்து மறைந்து போகும் இந்ததேகத்தை அழியாத காலியாகிய கீர்த்தி பொருந்திபெருமைசிறக்கும் படிசெய்தான் உன்கண்மணியாகிய விண்மணி அம்மணி அதேதெனனில் எதிரிகளாகவந்த சுத்தவீரர்களெல்லோரும் உன்புத்திரனை மெத்தவுந் துதிக்க தேவர்களெல்லோருங் களித்துமதிக்க ராஜ புத்திரர்களுடைய ரத்னகிரீடம் பெற்ற தலைகள் யாவற்றும் பூமிதேவியார் அம்மானைாடுமாப்போல் ஆகாயத்திலெழுந்து பூமியில் விழுந்து மாயும்படிக்குப் பந்துவிளையாடி-எவர்களும் பெறுதற் கருமையாகிய வீரசொர்க்க மடைந்தான் உங்கள் மைந்தனாகிய அபிமன்னு, அவனைக் குறித்து நீங்கள் நெஞ்சு தடுமாறி நொந்தாலும்-அக்கினியில விழுந்து வெந்தாலும், விதிமுடிந் திறந்தவர்கள மீண்டும் பிழைத்துவருவார்களோ, காக்கை போற்கதறிக் கருகிமனம்வருந்தி ஆக்கையழிவதேயன்றி நோக்குஞ்சா லொருபயனுமில்லை, அம்மா, உன்பாக்கியமே பாக்கியம், நல்லகுடியிற்பிறந்து தகுதியாகிய இளம் பருவத்தில் கண்ணுக்குரம்யமாகியமன்னனுக்குட் ! பெருமைபெற்ற விஜய வீரனைக் கைப்பிடித்து காணத்தக்க சுகங்களைக்கண்டு ஒருபிள்ளையைப்பெற்றாய் ஐயையோ; அவனுடைய ஆண்மைத்திறத்தை எவர்களாலுஞ் சொல்லிமுடியாது, உலகத்தில்பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு வேண்டிய நன்மைகளென்னவெனில், மனதுக்கிசைந்த நல்ல புருடனைக் கூடிவாழ்வதும் - உலகமதிக்கும் புதல்வனைப்பெறுதலும், இவ்விரண்டைவிட மேலாகிய நன்மையும் இனிமேல் அனுபவிக்கப்போகிற போகபாக்கியமும் - வேறேயுண்டென்பது ஒன்றுமில்லை, எல்லா மனுபவித்துவிட்டீர்கள் - ஆனால், இன்ன மநேகம் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு வாழும் படிக்குத் தாழ்வில்லாத நாயகனென்னும் முதலும்-வித்தும் வைத்துக்கொண்டு மெத்தவருந்தி வாடுகிறீர்கள்-ஆஆ, உங்கள் மருமகளாகிய உத்தரை, ஏதொருசுகபோகத்தையும், பின்னுமுன்னும் அறியாத இன்னஞ் சின்னஞ்சிறியகுழந்தையாதலால் அந்தப் பெண்ணினுடைய நாயகனாகிய முதலும் வித்தும் முழுகிப்போய் விட்டபடியால் அந்த உத்தரையாகிய பெண்கொடி முதலிழந்தபேர்களைப்போல் மாறாத ஆறாத் துயர்கொண் டழுவது ஞாயம், நீங்களுருகி அழுவ தெல்லாம் மாயம் இனிப்புலம்பி அழுவீராகில் அபாயம், நீங்களிருவரும் உங்கள் மருமகளுடைய துக்கத்தை நீக்கி தயிரியமும் தெளிவுமுண்டாகும் படிக்குத் தேறுதல் செய்யுங்களென்று இவர்களைத்தேற்றி-உத்தரைகுமாரத்தியின் விசனத்தையு மாற்றி இங்குலிய நீர்கரைத்து, ஆறுஎள்ளுப்பூவை அதில்விடுத்து பந்துக்கள்முதலிய பேர்களும் வந்துகாணும் படியாய் உலகவழக்கத்தை யடுத்து தாங்களும் அவடத்திலிருக்கும்போது, குந்திபோஜத்தலைவர், போஜகுலத்தார், யதுகுலத்தார், மச்சதேசாதிபர், பாஞ்சாலரள், சோமுகாள், துருபதேயாள்முதலிய இவர்கள் யாவரும் பாசறையில் வந்து துரோபதை-சுபத்திரை உத்தரைமுதலிய யாவர்களையுங் கண்டு துக்கங்கொண்டு துயரத்தைநீக்கிச் சொல்ல வேண்டிய சொற்கள் பேசத்தக்க காரியங்கள் யாவும் பேசிஸ்தானமுதலிய தன்மைகளுஞ்செய்வித்து தாங்கள் தாங்களிருக்கும் இடம்போய்ச்சார்ந்தார்கள்.

அந்த இராத்திரியில் ஹரிவாசு தேவனாகிய தேவசிங்கனன்-அர்ச்சுனனை யழைத்துக்கொண்டு ஊழிகாலத் திருள் குடிகொண்டு குந்திக்கொண் டிருக்காநின்ற ஒரு சோலையைநோக்கி, நடந்தாரென்று வைசம்பாயனர்சொல்லஜெனமேஜெய மகாராஜன் வணங்கி சுவாமீ இங்குலிகநீரில்-ஆறு-எட்பூவிட்டு-நோக்கினார்களென்று திருவாய் மலர்ந்தருளிய வாக்கியத்தைச் சந்தேகமறத் தயவுசெய்யுமென்று நராதிபன்கேட்க-ஓ, அரசனே இங்குலிக நீரென்பது ஸ்ரோணிதம் எட்பூவென்பது சூட்சமாகிய சுக்குலம் இவ்விரண்டுஞ் சம்மந்தப்பட்டு ஆறு மாசமாய் நிலைத்து கருவாய் உருக்கொண்டு நின்றதென்று எவர்களுங்குறிப்பினாற் சுளுவிற்றெரிந்து கொள்ளும்படி லோகோபகாரயாய் என்னுண்டவராகிய வேதவியாசர் யாவருக்குமேர்ப்படுத்திவைத்த விபரமாக்கவும் அதேதெனனில் இந்தக் சர்ப்பம் இறந்துபோன எஜமானிருக்கும்போதே அவருக்குத் தரித்ததென்றும் அவனிறந்துபோன பிற்பாடு இடைக்கொள்ளைக் காரனுக்குத் தரித்ததென்றுஞ் சந்தேகப்பட வொட்டாமலும் குடும்பதோஷஞ்சொல்லும் சண்டாளருடைய வாயடைக்கும்படியாகவும் செய்ய வேண்டிய முறைமையென் றுரைத்து, எத்திசையும்பணிசீமானே புத்தியில்விண்மணி கோமானே கேளும், இந்தக்கர்ப்பந்தான் உன் றந்தையாகிய பரிக்ஷித்துமகாராஜன் என்று வைசம்பாயனர் சொல்ல, விருப்பத்தினால் இதைக்கேட்ட ஜெனமேஜெய மகாராஜன் வெறுப்புடையவனாய்த் தயிரியநீங்கித் தன்னைமறந்து மூர்ச்சைபோய் மறுபடியும் மன்னர் குலத்திற்குரிய தயிரியத்தை வரவழைத்துக்கொண்டு வபுஷ்டாதேவியுந் தானும், வைசம் பாயனரை வணங்கிப் பணிந்து பொன்னூலணி மார்பனாகிய பூரனே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தருளும் எ

ங்க ளிஷ்டதெய்வமாகிய கிருஷ்ணமூர்த்தி சிரேஷ்ட மூ தாதையாகிய அர்ச்சுனராஜனை-அழைத்துக்கொண்டு ஆர ண்யம்போனு ரென்றீரே அப்பாற் றிருவுளம் பற்ற வே ணுமென்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லுகின்றார்.

ஐயா! திவ்யதேஜோமயனாகிய ஜெகந்நாதன் அர்ச்சு னனை அழைத்துக்கொண்டு அரசு-ஆல்-வேல்-ஆத்தி-அத் தி-அனிச்சம்-அகத்தி-இத்தி-அசோகு-இலந்தை-ஆச்சா- இலவம்-இலுப்பை ஈந்து-எட்டி-எலுமிச்சை-உசில் - ஒ மை-கடம்பு-கடவு-கடுக்கை-கமுகு - கருங்குவாளி-கருங் காலி-கள்ளி-காயா-குங்குமம்-கோழரை-குருந்து-கூந்தற் பனை-கொன்றை-கோங்கு சந்தனம்-ஜாதி-சிவந்தி செண் பகம்-செருந்தி-தணக்கு-தேற்று-தேக்கு நறுவிலி-நார்த் தை-நாவல்-நெல்லி-நொச்சி-பச்சிலை பலா-பனை பாதிரி- பாலை-பிராய் புளி-புன்முருங்கு-நன்முருக்கு-பேயத்தி-பு னமுருங்கை-புன்னை-பூவரசு-மகிழ்-மஞ்சாடி-மருதம்-மா தளை-மலைப்பச்சை-மலை மல்லிகை-தேமா-புளிமா-முருக் கு-முருங்கை-மூங்கில்-முன்னை-வன்னி-வாகை- வில்வம் விளா-வெட்பாலை-வேங்கை-வேம்பு-தாழை-வாழை முத லாகிய ஈஸ்வர சிருஷ்டி பேதங்களான சகல விருக்ஷங்க ளும் வெகுவாகிய படர்கொடிகளும் குத்துச்செடிகளும் அநேகந் தீர்த்தங்களும் மிருகங்களும், பொருந்திச் செ றிந்திருக்கும் ஆரண்யத்திற் புகுந்து போகும்போது அர்ச்சுனனுக்கு இன்றுகாலமே புசித்த அன்னமாதலினா லும் சஞ்சத்தகாள் முதலியபேர்களிடத்தில் கொடிய ச ண்டைபோட்டு தேகம்வருந்தி மெலிந் திருப்பதினாலும் புத்திரனிறந்த சோபத்தினாலும்; பெண்சாதிமுதலிய ம ருமகளமுத வியாகூலந் தன்னை வருத்த வதினாலும், நா ளையப்போரில் சயந்தவனைக் கொல்லுகிறேன் இல்லாவி ட்டால் அக்கினியில் வீழ்வேனென்றுகூறிய சபதத்தினா லும் தன்னுடைய மனம்-ஒருவழிநிற்காமல் சஞ்சலமாயி ருக்கவும். அந்தத் துன்பத்தினால் இன்ப மில்லாமல் கை காலோய்ந்து காலுடன் கால் தட்டுப்பட்டு கண்ணீர்சொ ரிந்து உச்சாகந்தப்பி ஒடுங்கிவராநின்ற வில்லுக்கிவனே வல்லவனென்னும் அர்ச்சுனனுடைய நல்லமுகத்தை நா ரணன் நோக்கிச் சொல்லுகின்றார்.

ஓ! விஜயனே-தேகமுமனமும் தேம்பியிளைத்தாய் வா ட்டமில்லாத உன் முகம்வாடி கண்ணுக்குச் செரங்கைய ரிசி கொட்டலாம் போலிருக்குது, நாம்போறகாரியமோ பெரியகாரியம் அந்தக் காரியத்தைப் பெற்றால் மாத்திரந் தான் நீ-நரனென்றும், நான் நாரணனென்றும், நீ பாண் டவரில் நடுப்பிறந்தோனென்றும் நான் பாண்டவர்சகாய னென்றும் இதுவரையிலும் பெற்றபேர் இன்னங்கொஞ் சகாலைசகிருக்கும் இல்லாவிட்டால் நாம் இல்லாமற்போ ன தன்மையாயிருக்கும் ஆகையால் என்மைத் துனனே நான் உற்றவார்த்தையொன்று சொல்லுகிறேன் அதை சற்று நிதானித்துக்கேளும், அதாவது இவடத்தில் அநே கம் பண்டு பலாதிக ளிருப்பதினால் உம்முடைய இளப் பாறும்படியாய் கொஞ்சம் புசித்துப் புறப்பட்டால் நாம் நினைத்துவந்த வேலையு முடியும், சபதங்கூறிய வேலையு நாளைக்காலையில் விடியும், ஆலசியம் பண்ணாமற் செய்யு மென்று பாலகிருஷ்ணன்சொல்ல, மாதவிகாதலனைத் து ஓ மாதவா; எந்தக்காலம் எப்படி போனாலும் இராக் காலத்தில் மகாதேவருடைய பூஜாவிதி முடித்துக்கொள் ளாமல் ஜலபானஞ் செய்யேனென்று நான் கொண்டிருக் கு மனோதிடமும் என்னுள்ளத்தி லிருக்கும் விரதவுறுதி யும், தேவரீருக்குத் தெரிந்திருந்தும் பண்டுபலாதிகள் பு சித்து இளப்பாறிக்கொள்ளென்று ஏளனமா பண்ணுகி றீர் இச்சாசுதந்தானாகிய மச்சானேயென்று காண்டீபன் கேட்க, அப்பா அர்ச்சுனா என்னுடைய அருமை மருமக னைப் பறிகொடுத்து ஆவியும், உடலும் அலக்கலக்கா யி ருக்கின்ற நான் என்ன சந்தோஷத்தைக் கண்டு உன்னை ஏளனம்பண்ணப்போறேன் சிரிப்புங் கெலிப்பின் பேரில் அழையும் ஆங்காரத்தின்பேரில் வருமென்று வையகஞ் சொல்லுமே ஐயனே, உன்னைப் போஜனஞ்செய்யும்படி ஏன் சொன்னேனென்றால் தேகமானது சேற்றாலெடுத் த சுவரைப்போன்ற சோற்றாலெடுத்த சுவர்-மானம் - கு லம்-கல்வி-வண்மை-அறிவுடைமை-தானம்-முயற்சி-தாளா ண்மை-கனியுந்தேனும்போன்ற காதுக் கிதவாகிய சொல் மோகமுதலிய யாவும் பசிவந்தால் பறந்துபோமென்றுப ழைமை யிருப்பதினால் உன்னைப் பசிவருத்தஞ் செய்யு மே யென்றும் மேலும் வீட்டிற்செய்யும் பூசையைப் பா ர்க்கிலும் வனத்திற்பூசிப்பது கண்ணுதலுக் கற்புதமென் றும் நீ எப்போதும் இராக்காலத்தில் பூசைசெய்பவ னா கையாலும் இதுநல்ல இராக்காலமென்றுஞ் சொன்னே னல்லது வேறில்லையென்று நளினநாபன்சொல்ல ,கேச் வற்றோழன் கேட்டு வாசற்றிறையே தேவர்பேசிய வாசக ம் நேசமாயுறினும் ஆசாரபூசைக்கு இது உரியதலந்தான் ஆனால் ஈசன் திருவாராதனை பூசைவீடாகிய பாசறையி லிருக்கின்றதே நானென்செய்வேன் தேவரீர் இவடத்தில் அழைத்துக்கொண்டு வருவீரென்றும் இப்பேர்ப்பட்டவ ளங்கள் இந்தவனத்திலிருப்பதென்றும் எனக்கு முன்ன மேதெரிந்தால் சிவபூசைஎடுப்பித்துக்கொண்டுவருவேன் எனக்குத்தெரியாமற் போனபடியால் இப்போது நானெ ன்னசெய்வேனென்று விபற்சுசொல்லக் கேட்டு சமயங் கள்தோறு நிறைந்துநிற்கும், ஜனார்த்தனன்சொல்லுகிறா ர். சுருதி குருசுபானு பவமென்னுந் தூய்மையால் கடவு ள்பேத நினையாக் கருத்தினையுடைய காண்டீபனே, எ ல்லாச்செய்கைக்கு மனங்காரண மாதலினால் கவலையை யொழித்து உன்னுடைய மனத்தை ஒருவழிப் படுத்தி ந ன்மைக்கு நாயகனாகிய நம்பனை வன்மையாகிய உன்மன த்துட்பதித்து க்ஷணப்போதேனும் வழுவாமல் மாறுப டாமல் பேதமில்லாமல் துணிவோடிருந்து சிவலிங்க மு கூர்த்தமாக என்னை யேற்படுத்திச் சிந்தித்து என்தலையி லும் தேகத்திலும் பத்திரபுஷ்பங்களைச் சாத்தி ருத்ரமந்தி ரத்தை உருவேற்றி சகஸ்த் ரார்ச்சனை செய்வை யாகில் ஈஸ்வரனுடைய திருவுளங்களித்து உன் மனோபீஷ்டங்க ளெல்லாம் நிறைவேறுமென்று மாதவனுரைக்க, சுரேந் திரன் மைந்தன்கேட்டு-யதுகுலத்தோன்றலே தேவரீரை சிவலிங்க முகூர்த்தமாக நான் சிந்திப்ப தெவ்வண்ணமெ ன்று பார்க்குனன் பணிந்து வினவிய போது பரந்தாமன்

தன்னுடைய இரண்டுகாலையும் குத்துக்காலிட்டு அந்தக்
காலை இரண்டுகரத்தாலும் யோகபட்டைபோற் கட்டி இ
ரண்டுகரங்களின் பத்துவிரல்களையும் கும்பிடுந் தன்மை
போற் குவித்து நீட்டி இலிங்க முகூர்த்தமாக இருந்தார்.
(அந்த லிங்கமுகூர்த்தமாயமைந்த தன்மையைக் குறிப்பா
ற் சொல்லுகிறோம்.) குத்துக்காலிட்ட கால்களும் புட்ட
மும் பாணிவட்டமாகவும், அந்தக் கால்களை கட்டிக் கொ
ண்டு நீட்டிய இருகரமும், கோமுகமாகவும், கழுத்துஞ்சி
ரமும் இலிங்கமாகவும் இந்தப்பிரகாரம் பிர்மா விஷ்ணுரு
த்திரனென்னும் மூன்றுருவும் சிவலிங்க முகூர்த்தமென்
று சொல்லிய ஆகமவேதப் பிரமாணப்படிக்கு அமைந்
திருந்தார், ஆதிமூலப்பொருளாகிய கேசவன் இந்தச்சிவ
லிங்க உருவத்தை மாறுபடாச் சிந்தையை யுடைய வில்
வல்லவன் கண்டு மனதொருமித்து தர்ப்பைகள் நிறைந்
த சுனையில் ஸ்தானம்பண்ணி மாவிலை தர்ப்பை வாடாதபு
ஷ்பமும் பத்திரம் வில்வம் பலாப்பழம் செந்தேன் தே
ன்கசிந்தொழுகுந் தெவிட்டாக்கனியும் சேகரித்து வந்து
மலர்ந்தமலரை மாலையாய்க்கட்டி ஜலந்தன்னால் அபிஷே
கந்தான்செய்துவைத்து காட்டிற்பட்ட சந்தனக்கட்டை
யைக் கூட்டியுரைத்து பரமேஷ்டிக்கணிந்து மாலையு மல
ரும் மகதேவர்க்கிட்டு தீக்கடைந்தெடுத்து சந்தனத் தூ
ள் தூபமும் தீபமுங்கொடுத்து கனி தேன்முதலிய யாவு
ம் நிவேதனம்பண்ணி அநேக சிவநாமத்தால் அர்ச்சனை
புரிந்து தன் பிராணனாகிய ஹரியின் திருமேனி என்று
மனத்தில் னினைக்காமல் சிவபெருமா னுடைய தி
ருமேனி யாகச் சிந்தித்து அளவிறந்த சிவ நாமங்களை
ச் சொல்லி பிரதக்ஷணஞ் செய்து ஏகாங்க திரியாங்
க பஞ்சாங்க சப்தாங்க அஷ்டாங்க நவாங்க தசாங்க சா
ஷ்டாங்க நமஸ்காரங்களுஞ்செய்து அரஹர சம்போ ஆதி
தேப போற்றிபுரகரியழித்தபுண்ணியாபோற்றிபிறவிநோய்
தீர்க்கும் பிஞ்ஞகாபோற்றி அறமிலாவினையேனடைக்கல
ம்போற்றியென்று இவ்விதமாகப்பலவித தோத்திரங்களாற்
பாடித்துதித்தபார்த்தனுடையபக்தியைபரந்தாமனாகியபா
ண்டவர்சகாயன்கண்டுமனமகிழ்கொண்டு பக்தியினாற்சித்
தி பெற்றஉத்தமனாகியஎன்மைத்துனனே கேளும், அரன்ஹ
ரியென்றுரைக்கும்இரண்டுபொருளும்ஒன்றன்றி வேறில்
லைவேறாய்க்கருதினோர்க்கும்வேறாகும்இந்தவுண்மைஒன்
றென உண்டென்று உன்னுடைய அன்பிற் ஸ்திரப்படுத்
தும்படியாய்த் தெரிவிக்கிறேன், என்சிரமுதற் கால்வரை
யிலும் நீ சாத்தியபுட்பத் திரசுகளையெல்லாம் மாறாமல்
உன்சிந்தையிற் குறித்துவைப்பாயாகில் அந்தச்சிவமுகூர்
த்தமாகிய சிவபெருமானுடைய அவயவங்களிலிருக்க உ
னக்குக்காட்டுகிறேன், நீ அர்ச்சித்த பத்திரபுஷ்பங்களுட
னே இலிங்கமூர்த்தியைக்கண்டு தரிசிக்கலாமென்று வா
ழ்த்தி நைவேதனஞ்செய்த கனி தேன்முதலிய எல்லா
வற்றையும் அர்ச்சுனனுந் தானுமாகப்பங்கிட்டு புசித்து
கைகால் சுத்திபண்ணிக்கொண்டு அப்பாற் சற்றுதூரமந
டந்து வாசனைநிறைந்த மணற்றடத்தில் வரிவிற்றாங்கிய
அர்ச்சுனனுடைய கையைப்பிடித்துக்கொண்டுபோய் உ
ண்டஇளைப்பு தொண்டருக்குமுண்டென்பதினால் சற்று
சோம்படுத்து நித்திரைசெய்து ஆயாசந்தீர்ந்து அப்பாற்
போகலாமென்று தர்ப்பைப்புல்லுகளைப் பூமியிற்பரப்பி
தானும் அர்ச்சுனனும் அந்தத்தர்ப்பைப்பாயின்மீது உட்
கார்ந்தார்கள் அப்போது தீனதயாளுவின் தொடையின்
பேரில் அர்ச்சுனன் தலைவைத்துப்படுத்து தன்னைமறந்து
நித்திரைபோக அந்தவேளையில் இந்திரன்முதலியசிலபே
ர்கள்வந்து நந்தநந்தனனை வந்தித்துநிற்க, அருளாளனாகி
ய சுவாமியானவர் தன்தொடைக்குவதிலாக மணலைக்கு
வித்து நித்திரைசெய்யும் தனஞ்செயனுடைய தலைக்குய
ரமாகவைத்து தானெழுந்து வாசனைபொருந்தியபுட்பங்க
ளை விஜயனுக்கு நாலுபுறத்திலுந்தூவி, விற்படை-வேற்ப
டை-கதைப்படை-வாட்படையென்னும் நான்குவித ஆ
யுதங்களையும் நான்குபக்கங்களிலுங் காவலாகநட்டு வன
தேவதைமுதலிய ஆகாயவாணிபூமிதேவியையுங்கைதொ
ழுது காண்டீபனைப் பிராணபயமில்லாமற் காருங்களென்
று வேண்டிக்கொண்டு அநேகம்வீரருடைய காவலிற்
படுத்து நித்திரைசெய்யுந்தன்மையிலும் பத்துப்பங்கதிக
மாகிய பலமென்றுட்கொண்டு இனிப்பயமில்லையென்று
கண்டு தனக்குள்தானே சந்தோஷமடைந்து அவிடம்வி
ட்டுநீங்கி சற்றப்புறம்போய் தேனுறைந்த மலர்நிறைந்த
ஒருமேட்டின்பேரில் வந்திருந்து இந்திரன்முதலாகவந்து
பணிந்தபேர்களுக்கு தகுந்தமந்திரமாகிய ஆலோசனை
யைச்சொன்னார்.

மந்திரமென்னும் ஆலோசனை என்னவெனில், நரனுக்
கும் நமக்கும்பயமில்லை நாரிபாகனிடத்துக்குப் பாசுபத
ம்பெறப்போகிறோம், குறைவில்லாமற் பூபாரமுடியும் உ
ங்கள்குறையுந்தீரும் நீங்கள்போங்களென்று அவர்களை
யனுப்பிவிட்டு பரமபதத்திலிருக்குந் தன்சாரதியாகிய தா
ரகன் வரும்படிக்கு சர்வஜீவதயாபரமூர்த்தி நினைத்தார்
உடனே தாரகன்வந்து அடிமலரில் முடிசூட்டிவணங்கி
வந்தனைபுரிந்து நிற்கக்கண்டு வலவனாகிய தாரகனே இப்
பூபாரந் தீர்க்கும்படியாய்ப் பரமபதம்விட்டு பாண்டவர்
களுக்குதவிசெய்ய பூலோகத்தில்வந்து பாண்டவர்சகா
யனென்று அவர்களுடன் பொருந்தி அவர்கள்வருந்திய
துயரங்களையெல்லாந் திருந்தச்செய்து வரும்போது கா
ண்டாவனதகனஞ்செய்த காண்டீபனென்னுங்காளை தன்
பிள்ளையாகிய அபிமன்னனிறந்த ஆயாசத்தால் நாளையப்
பொழுதுக்குள் சிந்துராஜனைக் கொல்லுகிறேனென்றும்
அவனைக்கொல்லாவிட்டால் நெருப்பில்விழுந் திறப்பே
னென்றுஞ் சபதங்கூறி யிருக்கிறான் இந்தச்சேதிகேட்டு
எதிரிகளும் பலங்கட்டிக்கொண்டிருக்கின்றார்கள் நாளைப்
போரில் அந்தச்சபதம் நிறைவேறத்தக்கது லேசாகியகா
ரியமல்ல ஆகையால் அர்ச்சுனன்கூறிய சபதப்பிரகாரம்
வெற்றிபெருவானாகில் மெத்தவுநல்லது அந்தச்சபதமு
டிவதற்குக் கொஞ்சம்வருத்த நேரிடுமாகில் ஆயுதமெடுப்
பதில்லையென்றுரைத்த அச்சுதனாயுதமெடுத்துப் போர்பு
ரிந்தானென்று உலகத்தாரெல்லோரும் என்னைத்தூஷித்
து வசைவார்த்தைகள்மொழிந்தாலும் வாட்டுமென்றுது
ணிந்து தேரேறி சக்ராயுதங்கைக்கொண்டு அரிக்கிடை
யாய்யாவரையுமுடித்து அர்ச்சுனன்சொல்லைநிலைநிறுத்தி

அவனையுங் காப்பாற்ற வேண்டியிருப்பதால் பெருமையையுடைய சாரதி இப்போதெங்களுக்கு இவடத்திலாகவேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு நாளைக்காலமே நானும் நரனும் போர்க்களம்வந்து ஆலவாய்க்கரும்பைப்போலும் வேலைவாய்த்துரும்பைப்போலும் அவனிகளலைந்துநைந் தழியாநின்றதைவிரமாகாளிகண்டு கண்களிக்கும்படியுத்தஞ்செய்யவேண்டியதாயிருக்கும் நற்குணஞ்செறிந்த சாரதி நாளைப்போரில் காலைப்பருவநான் ஒருவேளை இளைப்பானுகில் தக்ஷணம்பாஞ்சசன்யத்தை முழக்குவேன் அந்த ஓசைகேட்ட நொடிக்குள்ளாக சக்கரஞ் சங்கு தண்டு வாள் வில்முதலியபஞ்சாயுதங்களையுந் தேர்மேற்கொண் டிமைக்குமுன்வந்து என்னெதிர்நிற்கவேண்டும் என்கிருதயமாகியருகனே யென்று திருமாலானவர் ஒருதரஞ்சொன்னதல்லாமலும் பலதரமாகச்சொல்லிவற்புறுத்தி வல்லமையுடைய சாரதியான தாருகனுந்தானும் சகலசுப சந்தோஷங்களுடன் க்ஷேமாதிசயங்களைப் பேசிக்கொண்டு அன்றிராத்திரிமுழுதும் அவடத்திலிருந்த ஆதிமத்யாந்தரகிதனுனவர், புத்ரசோபாக்கினியாலும், சபதாக்கினியாலும் உள்ளுடைந்து சாற்றிலுநெருப்பிலுங் கசங்கியமலர்போற்காய்ந்து தர்ப்பாசனத்திற்சோர்ந்து சாய்ந்து துன்பமே இன்பமாகக்கொண்டு மனமயங்கி சந்திரகலைநாவியோட சாகஸ்ரத்திலிருந்து நாம்சொன்னசபதத்தை யெப்படியுமுடிக்கவேணுஞ், சம்போ சங்குசக்ராதராவென்று ஆசைகொண்டு நினைத்து அயர்ந்துசொப்பனுவஸ்தையால்நித்திரைபோனுன் அர்ச்சுனராஜன்

இந்தப்பிரகாரம் நினைவுகொண்டு நித்திரைசெய்யாநின்ற சுபத்திரைநாயகனுடைய கனவில்வந்து கருநியவண்ணக்கைகூட்டி வைத்தார் கருங்கடல்வண்ணனுகிய கமலக்கண்ணன் கேளும் அரசனே பரமாத்மாவாகிய பண்ணவன் அங்கு சாரதியாகிய தாரகனுடன் பேசிக்கொண்டிருந்தவர் இங்கு அர்ச்சுனனுடைய கனவிற்றோன்றி பேசிக்கொண்டிருந்தாரென்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது, ஜெனமேஜெயராஜன் திடுக்கிட்டெழுந்து வைசம்பாயனரைப்பணிந்து என்கருவேகவந்தகுருவே கமலநாயகன் நீடர்மேட்டின்பேரில் சாரதியாகிய தாரகனுடன்பேசிக்கொண்டிருந்தாரென்று திருவாய்மலர்ந்த தேவரீர் எங்கள்மூதாதையாகிய அர்ச்சுனராஜனுடைய கனவிலும்வந்து பிரவேசித்தாரென்றீர் எனக்கிதுமிகுந்த ஆச்சரியத்தைவிளைக்குது அதனுடையவிதத்தைத் தேவரீர் விரித்துச்சொல்ல வேணுமென்று வேந்தன்கேட்க, சாந்தனுகிய வைசம்பாயனர் சந்தோஷங்கொண்டு மாந்தரிற்சிறந்த மன்னனேகேளும், இந்த இரண்டிடத்திலும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிருந்தாரென்பது ஆச்சரியமல்ல அவருக்கு இதுவொருபெரிதா அவரெப்பேர்ப்பட்டவரென்னில் கடல்சூழ்ந்த இவ்வுலகமெல்லாம் தன்னுடைய கர்ப்பத்திநின்று புஷ்பிக்கவும் அவ்வுலகினிறைந்த ஆத்மகோடிகள்தோறும் ஜீவாத்மாவுக்குப்பரமாத்மாவாய் தவழ்ந்துகொண்டிருக்குந் தனிமையாகிய பெருமையையுடையவராதலால் அவரெங்கு மிருப்பாரென்று அப்பாற்சொல்லத்தொடங்கினர்.

அரசனே - உங்கள்முப்பாட்டனுகிய வில்விஜயன்சொர்ப்பனுவஸ்தையில் பூரணவுருவாகிய புண்ணியனைக்கண்டுதான்கொண்டிருந்த சோகமெல்லாம்நீண்டு அண்டர்நாயகனுடைய புண்டரீகத்தாளை சிரமேற்கொண்டு கண்ணீர்சோரவிடுந்தழுதகாலையில் வணங்கியவிஜயனை யெடுத்து மார்போடணைத்து என்விசனப்படுகிறாய் உனக்கேதாகிலுங் குறையுண்டானுற்சொல்லும் நானதற்குறையை குறையுடன்குறையச் செய்கிறேனென்று கமலநாபியான்கேட்க, விஜயகாண்டீபன் சொல்லுகின்றான்.

மனத்துயர்மாற்று மாதவனே, வெற்றிமேற்கொண்ட வேதவேதியனுகியபிர்மாவானவர்நாளையுத்தத்தில்நெருங்கிய சயத்தனுக்குத் துணையாயிருந்து என் சபதம்நிறைவேறவொட்டாமற்றடுத்துபோர்செய்யத்தலையிட்டுக்கொண்டுபுகுந்தாலும்சிந்துதேசாதிபனைச்செயித்து நான்கூறியசபதத்தை ஸ்திரப்படுத்தி ஜெயத்துடன் வரும்படியாய் யென்சிந்தையிற் றுணிவுகொண்டிருக்கின்றேன் இதற்குத்தேவரீர்சகாயம்பண்ணவேணுமென்று அர்ச்சுனன்சொல்ல இந்தச்சங்கதிகளையெல்லாங் கமலக்கண்ணன் காதுகுளிரக்கேட்டுகாண்டீபனைநோக்கி, அப்பாமகனேநீகூறித்துச்சொன்ன சொற்படிக்கு முடிவது மெத்த அருமை ஆனாலும் நானுனக்குவஞ்சமில்லாமல் மனம்விட்டுச்சொல்லுகிறேன், மெய்வருத்தம் இளைப்புநித்திரைமயக்கமுதலிய யாவற்றையும் விட்டு விட்டு விரைந்தெழுந்துஎன்னுடன்கூட வருவையாகில் விஜயனுகியதோன்றலேஉனக்கொருநன்மையுண்டாம் அதாவது புராதனனுகியபுராந்தகன் பொருந்திய கயிலையங் கிரியைக்கண்டு தரிசித்துக் கொண்டு சூரியோதயத்திற்கு முன்னே யுத்தகளம்போய்ச் சேரவேண்டியிருப்பதால் சீக்கிரம்புறப்பட்டுவாரும் அர்ச்சுனுவென்றுசொல்ல அந்தவார்த்தைக்குடன்பட்டு வேலாயுதந்தாங்கிய அர்ச்சுனனெழுந்து சக்ராதரனுடன் கூடப்போனுன் - இந்தஇரண்டுபேரும்போனது எப்படியிருந்ததென்னில் பாற்கடலிலெழுந்த அமுதம்போலும் களங்கமறப்பிரகாசிக்கு நிலவைப்போலும்ஒளிபெற்றிராநின்ற சுத்தமாகிய வெண்மலையை இரண்டு நீலகிரியானது தேடிப்போகுந் தன்மை போலுமிருந்தது இவ்விதமாக நடந்து ஆலகால நிறைந்த கண்டத்தினையுடையஐமுகன்வாழாநின்ற அழகியவேதண்டத்தை ஆவலாய்க் கண்டார்கள் - அந்தவெள்ளிமலையின் சிறப்பெப்படியென்னில் சராசரங்கள் யாவுக்குந்தாயாகும்பசுபதியாருடைய பத்மபத்தங்களைச் சுமந்தருளியகயிலையின் சிறப்பைக்கடையேன் சொல்லுந்தரமன்றுயினும்உடையானிடமாதலால்தடையில்லாமற் கூடியவரையிலுஞ்சொல்லுகிறேன்-கேளும் அரசனே-சோடசகலை நிறைந்த சந்திரனுக்கொப்பாகிய நிறங்கொண்ட வெள்ளியங் கிரியானது திசா திசைகள் தோறும் வெண்மைதங்கிய பிரகாசத்தைப் பொழிந்துஜொலித்துக் கொண்டிருக்கும்நிலாத்தோற்றமானதுதேனிறைந்தகொன்றையைச்சூடியசிவபெருமானுடைய நீண்டஜடாமௌலியிற்பிரகாசித்துக் கொண்டிருக்கும் மூன்றாம் பிறையினும் மேலாகியஒளியைச்செய்துகிரணங்களைவீசிக்கொண்டிருந்தது - மேலும் அவடத்திலிருக்கும் வெட்டார வெளிகள் காடுகள் கமர் வெடி

ப்புகள் முதலிய இடங்கள்தோறும் அநேகமாயிரம் அக்கினிப்பொறிகளாற் சிறுங்கண்களையுடைய பாம்புகளின்நாகரத்தினங்களினால் எங்கும் இருளில்லாமல் சூரியகிரணம்போற்சிவந்துஜொலித்துக் கொண்டிருப்பதினால் இவர்கள்செல்லுகின்ற இருட்காலமும், பகற்காலம்போலிருந்தது, மழைமுதலிய ஜலமற்று அதனாற் பட்டுலர்ந்து போன கொடிசெடிமுதலாகிய விருக்ஷங்களும் உளுத்த என்புகளும் தளிர்த்துத்தழைத்து உயிர்பெறும்படியாய் நாரதர் - தும்புருமுதலோர் - பாடும்படியாகிய நாதயாழிசையானதுபாரத வமர்புரியவந்த பசுமையாகியநாரணர்கள் நடந்துவரும் மார்க்காயாச இளைப்பாகிய வழிவிடாயை ஆற்றியதாம்.

இதன்றியும், சிவசங்கர ருடைய புயமாகிய மலைச்சாரலில நவமணியா லலங்கரித்த தன்மைபோல் அணிந்திருக்கும் பாம்பாபரணத்தின் சுவாசமாகிய காற்றுனது சிரமேலிருக்கும் இளம்பிறையினுடைய நிலவின் குளிர்ச்சியையும், செஞ்சடாமகுடமாகிய செவ்வானத்தில் பூந்தாதுசொரிய கட்டவிழ்ந்துமலரும் கொன்றை புட்பத்தின் வாசத்தையும், சடாடவிச் செவ்வானத்தி லிராநின்ற கங்கையின் சிறிய துளித்திவலையையும் கலந்து மந்தமாருதம்போல் வீசிக்கொண்டிருந்தது. நீடுழிவாழாநின்ற வெள்ளிமலையின் பக்கங்களெல்லாம், மலையருவிகள் வழிந்தோடுந்தன்மைகள் எப்படி யிருந்ததென்னில், விக்ஞானத்திலாழ்ந்த மாதவர்கள் கருணைவாரிதியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தை தெவிட்டும்படியாகப் புசித்து தங்களுக் குள்ளே அடங்காமல் பெருகி வெளியிலோடும் பேராநந்த வெள்ளத்தை ஒத்திருந்தது, பின்னும் வேதங்களினொலியும், மகானுக்கள் துதிக்கும்படி யாகிய பேரோசையும், உடுக்கை, டமரகம், சங்குமுதலிய வாத்தியங்களின் முழக்கம், எப்போது மிடைவிடாமல் சப்திக்கும்படியாகவும் சந்திர சூரியர்கள் வலம்வந்து தொழும்படியாகவு மிருக்கின்ற கயிலையங்கிரியானது, பூமியிலவதரித்து மருதமரத்தை யுந்திய மாதவன் யோகநித்திரைசெய்யும் பாற்கடலைப்போன்றிருந்தது.

பிர்மா-விஷ்ணு - ருத்திரனென்னும் மூன்றுருவு மோருருவாயமைந்த அழகிய பரமசிவன் வாழாநின்ற வெள்ளியங்கிரியை-திரிகாலமுந் தொழுதேத்துதற்குத் தேவர்கள் கும்புகும்பாய்க் கூடிவருவது எத்தன்மையொத்திருந்ததென்னில் முக்குண நீங்கிய முதற்றேனைநாடி மூன்றுலோகத்திலு நிறைந்த அன்பென்னும் வண்டினங்கள் அருந்திக் களிக்க வந்ததை யொத்திருந்தது, தாயினுமினிய சாம்பமூர்த்தி சங்கரியுடன் தங்கிய வெள்ளிமலையில் உடுக்கைமுதலிய முழவுவாத்தியங்கள் அநேகமாயிரமாக அதிரும் பேரோசையானது. பூர்வத்தில் ஆதிசேடன் மகமேருவை மறைக்க வாயுபகவான் வீசியடித்த வலுவின் முழக்கத்தை யொத்திருந்தது, நிறைந்து நிலைத்த ஆத்மகோடிகள்தோறும் நடனஞ்செய்திராநின்ற பசுபதியாருக்கெதிரில் கணிகைக்கன்னியர் அசைந்து கைகாட்டி யாடுங் காட்சிகள் மின்னலைப்போல் அழகாகப் பிரகாசிக்கும் வல்லிக்கொடிகளானது காற்றினலசையுந் தகைமைக்கொப்பாயிருந்தது - கர்ப்பனைக் கெட்டாத கண்ணுதல் தாராயணியுடன் களித்திருக்கும் கயிலைபி னுட்புறத்திலும்-கோடி சூரிய சந்திரப்பிரகாசம் விளங்கும்படிக்கு ஆலயம் நிறைந்திருப்பது எப்படியிருந்ததென்னில் முதலேர்ப்பாடாகிய நால்கு வேதத்தின் முடிவை யுணர்ந்த வேதாந்தச் சிற்பராளுடையமலமாசற்ற இருதயத்துக்கொப்பாயிருந்தது இன்னும் ஓமென்னும் பிரணவத்துடன் பஞ்சாக்ஷரத்தையுஞ் சேர்த்து-ஆறெழுத்தாக உச்சரித்து தேவர்முதலிய முனிவர்களும் எப்பொருட்கு மிறைவராகிய ஈஸ்வரருடைய சாஸ்திரநாமங்களை எவ்விடந்துந்தித்துக் கூவிப் புகழாநின்ற ஆரபாரமானது பெருமை பொருந்திய க்ஷீராப்தியைக் கடைந்த காலத்தில் அமரரும்-அசுரரும் வாசுகியும்-மந்தர மாகிய மத்துங் கூச்சலிட்டபேரொலிக்கு மேலிட்டிருந்தது-இத்தன்மையாக அளவில்லா மகிட்சியை யுடையவர்களாய், ஆலயங் களும்-செப-தப-முதலிய சிவபூசை ஸ்தானங்களையுங்கண்டு,நாராயண ரிரண்டுபேரும் மிகுந்த பிரகாசத்துடன் நந்தனவனமுதலிய சூழல்களையுநோக்கிக் காந்த மிழுக்கும் இரும்பைப்போலுருகி நயக்குஞ் சிந்தையராய்ச் சென்றார்கள்.

அந்தவேளையில் சிவபூசையில் நம்மைவிட ஸ்ரேஷ்டமான பக்திமான்களில்லை யென்றும் திருமாலைச் சிவனைச் சிந்தைகலங்காமலிருந்து சிந்தித்தோமேயென்றும் தனக்குள்ளேதானே மகிழ்ந்தும் புகழ்ந்தும் கர்வமடைந்தும்வருகிற தனஞ்செயனுடைய தன்மையைச் சர்வஜீவ தயாநிதியாகிய சகாயனுணர்ந்து, இவடத்தில் இவனைக் கொஞ்சங் கர்வபங்கம் பண்ணவேணு மென்று கருதிய போது அநேகஞ் சிவகணங்கள்-பூதகணங்களாகியபேர்கள்-கோடாகோடி-கோடாகோடி-கோடாகோடி யென்று சொல்லும் படியாகிய பெரியகூடைகளில் திருசுவாரியாகியநிர்மால்ய புட்பங்களை வாரிக்கொண்டு நெக்குவிட்டுத் திக்குமுக்காடும்படியாய் வந்து வெள்ளிமலைச்சாரலிற் கொட்டும்போது அநேக புட்பங்கள் மலைபோற் குவிந்திருப்பதும் இன்னம் ஓச்சலொழிவில்லாமல் வரிசை வரிசையாய் வாரிக்கொண்டுவந்து வாசனை திரவியமுதலிய வஸ்துக்களுடன் மலர்களைக் கொட்டிப்போட்டு வருந்திப் போகிற பேர்கள் ஆகிலும் அப்பா இப்படியும் சிவபூசை செய்யும் மனிதனொருவ னிருப்பானோவென்று வேர்த்து விதிர்விதிர்த்து பெருமூச்சுவிட்டு பெருங்கூச்சலிட்டுப் பேசிக்கொண்டு போம்போது வாசவன்மகனாகிய அர்ச்சுன ராஜன் நேசமாகிய வாசுதேவனென்னும் மைத்துனனைப் பார்த்து தாசானுதாசனையா சாசரம்பூவண்ணனாகிய ஈசனே யென்று கண்கலங்கி கட்டுவிட்டுப்போய் இதென்ன விபரீதமாயிருக்கின்றது இவ்வளவுபுஷ்பம் எந்த லோகங்களிலுண்டு ஈஸ்வரச் சிருஷ்டியி லேயும் இல்லாத புஷ்பங்களெல்லாம் இப்போது கண்டோமே இவைக ளெந்தவிடத்தி லடங்கியிருந்ததோ, சிவார்ச்சனைசெய்வதற்கு இந்தப்புட்பங்களைக் கூடைகொண்டு வாரிச் சொரிந்தாலும் எத்தனைகோடிகாலஞ் செல்லும் எத்தனை யுகம்பிடிக்கும் எந்தமனிதனிப்படி பூசிப்பான். இவ்வளவுபுட்பங்களை எந்த ஸ்வாமி மனம்பொறுத்திருந்து ஏற்றுக்கொள்ளும் எ

ன்னப்பனே இதனுடைய விபரத்தைச் சொல்லு மென்று இறைஞ்சித் தலைஞ்செயன் கேட்க என்னாண்டவனாகிய செந்தாமரைக்கண்ணன் ஒன்றுந் தெரியாதவரைப் போல் அர்ச்சுனன்பட்ட ஆச்சரியத்திலும் நூறுபங்கு அதிகமாக ஆச்சரியமடைந்து நான் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட சிவார்ச்சனை செய்தபேர்களுண்டென்று என் நினைவிலுங் குறியேன் என் கனவிலு மறியேன், இக்கியாதி புட்பங்களுடைய பரிமளங்களைக் காட்டிலுமறியேன் காற்றிலுமறியேன் காண்டபனேயென்று பாண்டவத் தோழனுரைத்து அங்கயற்கண்ணியுடன் ஆண்டவனை யமர்ந்த வெண்பொன் மலைமேலேறி ஓ, சிவகணமாகிய தம்பிமார்களோ, ஐயோ மெத்தவருத்தப் படுகிறீர்கள், இப்பேர்ப்பட்ட சிவபூசைசெய்யும் அடியார்களாகிய அன்பர்களுமுண்டா இல்லை நீங்களேகொண்டுவந்து அர்ச்சிக்கிற துண்டாவென்று மாயவன் மிகுந்த உபசாரத்துடன்கேட்க அந்தக் கணங்களிற் சிலர்கள் சொல்லு கிறார்கள்-ஆமாம் ஐயா பூமியில் அவதரித்துப்போன பாண்டவர்களில்-மேலாகச்சிறந்த வீமசேனனென்பவனுக்கு மானதபூசையாசப் பூசிக்கும் வேலையும், மனஞ்செழிந்த அவன்மன நிறைந்த மலர்களை நாங்கள் வாரிக்கொட்டும் வேலையும் உள்ளநாளுள்ளமட்டும் எங்கள் தலையிலெழுதி யிருக்குது, ஆண்டவனே பெட்டிமகன் ஒருநாளாகிலும், ஏமாறுனு-நாலுகூடை-இரண்டுகூடை குறைக்கானு, நாரணனேயென்று சொல்லிக்கொண்டு அவர்கள்போய் விட்டார்கள் இவடத்தில் நானுனவன், நாராயணனைப்பணிந்து கண்ணீர்சோரவிட்டழுது எங்களண்ணனாகிய வீமசேன னுடைய அன்பு இப்பேர்ப் பட்டதோ அடியேன் மெத்த அருமையாகச் சிவபூசை பண்ணுகிறேனென்று கொஞ்சமமதை யடைந்திருந்தேன் மாயவனே இந்த உத்தம னுடைய மானதபூசை மகத்துவத்தைக் கேட்டவுடனே என்னுனவ முதலியயாவுங் குன்றி மாய்ந்தேனென்று மிகுந்த பயங்கொண்டு வருந்திய அர்ச்சுனனைத்தேற்றி அப்பாஇந்தப் பூலோகத்தில் தவம் அன்புமுதலிய சத்தியங்களில் இன்னான்சிறந்தவனென்று எவரைச் சொல்லலாம்-இந்த ஈசனுடைய திருவிளையாட லெப்படியோ நாமறியோம்-அவரவர்க ளிருதயத்திலிருந்து சிந்திப் பவனும் பூசிப்பவனும்-சிந்திக்கத்தக்கவனும் பூசிக்கத்தக்கவனும் அவனாயிருப்பானாகில் நாம் இன்னவிதமென்று எவரைச் சொல்லலாம் எல்லாம் சிவன்செயலென்று பேசிக் கொண்டு அண்ணலாகிய நுதற்கண்ண ரெழுந்தருளிய வேதக்கொடி விருஷபக்கொடி பொருந்திய பெரிய சபையினிடத்திற் புகுந்தபோது மிகுந்தபெருமை தகுந்தகிரண சூரியனொளியும், மாணிக்கங்களினழகும், மரகதமணியி னணியும், முத்துச்சரங்களும் பவளக்கால்களும் கோமேதகக் கொடுங்கையுமுடைய முத்தாசனத்தில் திரிநேத்ர தாரியாகிய சிவபெருமான் வீற்றிருந்து ப்ரகாசிக்கும் திருக்கோலத்தை நரநாரணர் கண்டார்கள், ஆயிரஞ்சிகரங்கள் ஆகாயத்தை யளாவும்படிக்கு ஓங்கியிராநின்ற இமயவல்லியாகிய யீஸ்வரி வாமபாகத்தி லெழுந்தருளியிருக்க இந்திரன்முதலாகிய மந்திரதேவர்களும் சமயம்பார்த்து அடிக்கடி வீழ்ந்து தாழ்ந்து போற்றிசெய்ய க்ஷமை யுடைய முனீஸ்வரர் களின் கூட்டமத்தியி லிராநின்ற தற்பரனை தானுவை ஆயிரம் பணமகுடமுடைய பாம்பின்பட நிழலில் செஞ்சடாமகுடந் திகழப்பொருந்திய திரியம்பகனை செவியிலணிந்த கட்செவிக் குண்டலமானது நிலவைத்தராநின்ற மூன்றாம் பிறையுடன் நகைத்து அசைத்து மலையும்படியாயிருக்கிற நந்திகேசுரனை உமாமகேஸ்வரனை முத்தாசனத்தி லோர்பாதமும் குறுகியதேக முயலகன் முதுகிலோர்பாதமும் பொருந்தியமூர்த்தியை மரகதக்கொடிபடர்ந்த பவளமலைபோன்ற மங்கைபாகனை இனிப்பாகிய தேவாமிர்தத்தையொத்த எண்டோளினை யுடைய மானிடமேந்தியை புலித்தோலாடையும் யானையுரிப் போர்வையும் சிரமாலையும் தினமாலையுங் காலையும் நான்குவேதங்களாலும் அறியப்படாத ஆலமர்கடவுளை பாலாக்ஷ-காலாந்தகனை காமத் வம்சியை வாடியபயிர் மழையைக்கண்டதைப்போல் பலமுற்றுயர்ந்த தவத்தைப் பெற்ற நரநாரணரிருவரும் வந்து கண்டார்கள் திரிபுரத்தை நகைத்தெரித்த திரிபுராந்தகனுக் கெதிரில் நர நாராயணர்கள்வந்து நெருங்கி மிகுந்த அன்புடன் சிவபெருமானுடைய சரணபங்கயத்திற் பலதரம்வீழ்ந்து அநேகமுறை சிரத்திற் கைகுவித்து ஸ்தவுத்தியஞ்செய்கின்றார்கள்.

விஷச்சுவாலையுடன் பொங்கியெழும் பாம்புகளின் சிரோரத்னப்பணியும் சுகந்த பரிமளமிகுந்த சகல வாசனை திரவியங்களும் - சந்தோஷித் தணிந்துகொள்ளும் ஜடாமகுடத் தானுவே சம்போ சங்கரனே மகமேருவை வில்லாகவளைத்த செங்கரனே சிவசிவமே தேவர் தேவனாகிய தெய்வமே விண்ணுலகுமுதலிய மண்ணுலகெல்லாம் வீறழுத்துத்திரியும் திரிபுரமானதுவெந்து நீறாகத் திகுதிகுவென்றெரியத்தக்க நெருப்பழலைப்பரப்பும் புன்னகை யுடைய ஆதிபாண்டரங்கனே, கபாலகங்காளனே, திரிபுவனத்தையு மயக்கி அரசு செலுத்திவந்த காமனைப் பொடியெழ யெரித்தருளிய போழற் கண்ணனே, செந்தீவண்ணனே, கடவுளே, எல்லாவுயிரையுங் கொல்லாநின்ற வல்லவனாகிய எமனை உதைத்தருளிய காலகாலனே, ஆத்மகோடிகளைச் சிருஷ்டிப்பதும் அவைகளை ரட்சிப்பதும் தேகமில்லாம லழிப்பதும் இம்மூன்றுதொழிலும் தேவரீருடைய திருவிளையாடலே, ஜனன மரணமில்லாம னீக்கிக்கொண்ட தமதடியாராகிய ஜீவன்முத்தா ளென்னும் பாக்கியவான்களுடைய உள்ளக்கமலத்தில் வெள்ளலா யுறைந்தருளிய ஒப்பற்றவனே உமது மகத்துவத்தை எம்போலியராற்சொல்லித் துதிக்கத்தக்கதோ, நித்யமா யுள்ள நித்தனே, மலரகிதனாகிய நிமலனே, எங்குந் துதிக்கு நாமங்கள் எல்லாவற்றையு முடையவனே, ஆதார மற்றோர் முதலிய யாவருக்கும் அத்தனே, அடியவர்க்கெளிய அண்ணலே பித்தனே, பிஞ்ஞகனே, ஆதியி னாலும் அந்தத்தினாலும் பேசவடங்காத பெம்மானே, மோக்ஷகாரணனே, உயிர்க்குயிராயுலாவிய பசுபதிமூலமே என்று பற்பலவிதமாகிய விற்பனஸ்துதியை எடுத்துப்பாடிநின்று உள்ளம் நெக்கு நெக்குருகி நேயமும் அன்பும் நெருங்கிய தன்மையால் கண்களால் ஜலங்களைத் தாரைதா

னாயா புகுந்து நர நாரண ரிருவருந் தாழ்ந்து வணங்கி நோக்கியபோது அவடத்தில் உமாபதியானவர் அவர்களைப்பார்த்து கிருபைசெய்து திருவாய்மலர்ந்தருளினார்.

அதாவது, பிர்ம்மாவினாலும் அறிதற்கருமையாகிய சிவபெம்மான் தன்னுடைய சன்னிதானத்திற் றுதித்துநிற்கின்ற நரநாராயணர்களைப்பார்த்து இதுவனாயினுநடந்த சுபம்நன்மையோவென்று குமுதம்போன்ற மெல்லிதழ்திறந்து நாரிபாகன்கேட்க, நரநாராயணர் சொல்லுகின்றார்கள், மோக்ஷமுதலாகிய முத்தனே தேவரீருடைய கண்ணருளினால் எங்கள்புத்திக்குப்போதுமாகிய மோக்ஷமத்தையடைந்திருக்கிறோமென்றார்கள், இப்போது இந்த யிருட்டில் இளைப்பாகிய இவ்வளவுவருத்தத்துடன் இவடத்திற்கு வந்தகாரணத்தைச்சொன்னால் நீங்கள்விரும்பியவரத்தை யாம்கொடுப்போமென்று விடையோன்விளம்ப கறுத்தமலைபோன்ற காயமுடைய நரநாரணரிருவரும் புளகாங்கிதமுற்று செந்தாமரைக்கமலம்போன்ற திருக்கரங்களைக்குவித்து வணங்கி யானையுரித்த அரனுக்குமுன்னின்றுசொன்னார்கள்.

அஃதியாதெனில், சத்துச்சித்தாநந்தமாய் விளங்கிய சாமபசிவமே, தேவரீர்முன்னால் அநுக்ரகஞ்செய்தருளிய பாசுபதாஸ்திரத்தால் காலகேயநிவாதகவசாளைக்காய்ந்து தேவர்கள் குறையைத்தீர்த்தோம், மறுபடியும் அந்த அஸ்திரத்திற்குரிய முஷ்டிநிலையும் மந்திரமும் சாகசமும் எங்களுக்குப்பொருந்த அருள்செய்தால் பாரதயுத்தத்தில் துரியோதனன் முதலாகிய மன்னர்களின் படையை வென்று பூபாரந்தீர்ப்போம், ஆகையால் எங்களுக்குப் பாசுபதங்கிடைக்கும்படியாய் அருள்புரியவேண்டுமென்று அரிவாசுதேவனும் அர்ச்சுனனுஞ்சொல்ல அந்தவசனத்தைக் கொத்தாகிய கொன்றமாலைபுனைந்த கௌரிபாகன்கேட்டு அப்படியே அருள்செய்வோமென்று அன்புகூர்ந்து முன்னேயாங்கொடுக்க உங்களிடத்திலிருந்து எம்மிடத்திற்குவந்துவிட்ட விசித்திரமாகிய வில்லையும் பாசுபதத்தையும், நமது கயிலைக்கு வாயுமூலையிலிருக்கும் தீர்க்கதடாகத்தில் வைத்திருக்கின்றோம் நீங்கள் சத்தியசௌச ஆசாரமுள்ள உத்தமர்களாகையால் அவடம்போய் அதையெடுத்துக்கொண்டு வாருங்களென்று. வல்லமையாகிய நல்லடியார்களை வழிகாட்டும்படி அனுப்பிவைத்தார். அந்த உத்தரவின்படி வில்லும்பாணமுமிருக்கின்ற தடாகத்தை நாடிவிரைந்து சென்று நோக்குமிடத்தில் சொல்லுதற்கரிய சிரோரத்தினக்கொண்டைதாங்கி அநேகமாயிரம் படங்களைவிரித்தோங்கி இரண்டு நாகசர்ப்பம் வாடைக்காற்றைப்போற்சீறி, வடவாமுகாக்கினியைக் குளத்திற்கக்கி வாலடித்துப்புரண்டு வந்தவர்களை கிட்டநெருங்கவொட்டாமல் மாட்டும்போது நரநாரணரிரண்டுபேரும் நடுங்கி இப்பவே இப்படியிருந்தால் இது நமக்கு அடங்கி வசப்படுவதெப்படியென்று தியங்கித்திரும்பும்போது கூடவந்தசிவனடியார்கள் அவர்களைத்தேற்றி இதுநாகசர்ப்பமல்ல ஆதிமூர்த்தியாகிய எமது அண்ணலால்போடப்பட்ட போர்வில்லும் பாசுபதாஸ்திரமும் இதுதானென்றுபுகன்று நீங்கள் சுசி ஆசாரங்கள்குறைந்திருப்பதினால் இப்பேர்ப்பட்ட விபரீதமாய்த்தோனுது, உங்களுடைய நித்தியவிதிகளைமுடித்துக்கொண்டு அத்தனுசருளைநினைத்து ருத்ரஜெபஞ்செபித்து பத்தியால்விரும்புவீராகில் இவை உங்கள் கைத்தலத்தில்வருமென்றுதீவன்முத்தனாகிய சிவனடியார்சொல்ல, அவர்களின்மொழிவழிதேறி ஸ்நானமுதலிய நியமங்களைக் குற்றமில்லாமல் முடித்துக்கொண்டுபிரகாசிக்குஞ் சிவபெருமானுடைய சன்னிதானத்துக்கு இரண்டுவிழிபோன்ற நரநாரணரிருவரும் நித்தியகருமங்களிற் செபிக்கின்ற உருத்திரமந்திரத்தை நூறுதரஞ்செபித்தார்கள். அப்படிசெபித்தவுடனே, பாம்பாகத்தோன்றிய வில்லும்பாணமும் ஏகரூபமாய் பலம்பொருந்திப்பிரகாசித்திருந்தது, உடனே நரநாராயணர்கண்டு வேகமாகச்சென்று சம்போசங்கரவென்னும்பெரிய ஓசையுடன் கூச்சலிட்டுத் தூக்கிக்கொண்டு தங்களுக்கு உத்தரவுசெய்தசதாசிவமூர்த்தியின் சன்னிதானத்திற்கு முன்பாகக்கொண்டுவந்தார்கள்.

அப்போது பவித்திரமாகிய கங்காதேவியைச் சடையிலணிந்தபரமசிவன் பூமியில்வைக்கும்படியாய் அருள்செய்ய அவருடைய திருவாக்கின்படிக்கு சன்னிதியிலவைத்தார்கள் அக்காலையில் தமக்கெதிர்நிற்கின்ற அதிகாரநந்திதேவனையழைத்து இந்தவில்லினுடைய முஷ்டிநிலையாவத்தும் நரநாரணர்க்கு முடித்துக்காட்டென்று முக்கண்ணனுரைக்க அந்தப்படியே பலம்பொருந்தியவில்லையெடுத்து நிறுத்தி வணக்கி இழுத்து வளைத்து நாணிலகடுங்க நாணிபூட்டி, பொன்னொளியும் மின்னும்புறமிடும்படியாகிய பேரொளிபெற்ற முனைவாளியை நாட்டி கரவேக சரவேக சாகசங்களுங்காட்டியகாலையில் முஷ்டிநிலைமுழுவதும் நரநாரணருணர்ந்து அக்கினிவடிவாகிய ஆதிபகவனைப்பணிந்து இதனுடைய மந்திரத்தையும் அருள்செய்யவேண்டும் ஐயனேயென்று கிருஷ்ணார்ச்சுனன் கேட்டவுடனே பச்சைக்கொடிபடர்ந்த பவளரூபமாகிய பரமசிவன் கிருபைபாலித்து பாசுபதந்தொடுக்கும் பிரணவத்தை பூபாரந்தீர்க்கச்சென்ற நரநாராயணன் பிழைக்கும்படியாய் அர்ச்சுனனுடையசெவியி லுபதேசித்தருள, அதனுற்சவித்து மகிழ்ந்து வணங்கிய கிருஷ்ணார்ச்சுனனைப் பரமமூர்த்திபார்த்து, நீங்கள் பூலோகத்துக்குப் போய் பாவிகளாகிய சத்துருக்களைமுடித்து பலம்பொருந்தியபாரதத்தை நிறைவேற்றி வெற்றிபெற்று மேன்மைபடையக்கடவீரென்றுசொல்லி மேலும், இந்ததனுப்பாணத்தை முன்னிருந்தகுளத்தில் விட்டுவிட்டுப்போவீராகில் அது உங்களிடத்துக்குவருமென்று உரகபூஷணன் அருள்செய்ய அம்மொழியைச்சிரமேற் சூடிக்கொண்டு அந்தவில்லையும்பாணத்தையும் முன்னெடுத்து வந்தகுளத்திற்கொண்டுபோய் விட்டுவிட்டு, பிறப்பிலியாகிய பற்றற்ற திரிபுரசம்மாரிக் கெதிரில்வந்து பணிந்து அநேகங்கோடிசெவந்தசூரியர் ஒருதிசையிலெழுந்து உதயமாகிய தன்மையைப்போற்பிரகாசிக்கும் - அந்திவண்ணனுடைய திருவுருவழகும் - பவளவிதழும் - செந்தாமரையனைய திருவடிகளும் - அங்கயற்கண்ணம்மையமர்ந்த அலங்காரமும் இவைகளையெல்லாம் தேவராஜகுமாரனாகியதனஞ்

செயன் தனது அன்பிற் குடியாக நிலைக்கவைத்து நீலமேகத்திருவுருவாய்ந்தநெடுமாலை - சிவலிங்கமூர்த்தமாகக்கொண்டு வனத்திற்பூசித்து அர்ச்சித்தபுட்பங்களை-எந்தெந்த அவயவங்களில்வைத்ததோ அந்தந்த அவயவங்களில் அந்தந்தப்புட்பங்களை யெல்லாம் அப்படியேகண்டு வேதங்கள் துதித்துக் கூவும்படியாகிய விடையேறியென்னும் புராரியும் முராரியும் நீங்கனாகிய நீயேயாருக்கும் - கல்விக்கியானமில்லாதவிவேகசூனியருக்குங்குருவாக இருக்கத்தக்கதன்றிமாசறக்கற்ற மகானுக்களுக்குபேதமில்லாதவொருருவென்று தமதுபத்திபூர்வகப்பூரணமாயுணர்ந்துதெளிந்து அர்ச்சுனன் மகிழ்ந்தான், கேளும் ஜெனமேஜெயமஹாராஜனே, முன்னே நரன்தவஞ்செய்தபோது ஜகன்மாதாவுடனே காடின்யமாகிய வேடருபங்கொண்டு வரக்கண்டான், பிற்பாடு-ரிஷபவாகனரூடராய்தேவர்கள் பூமாரிபொழியக் காட்சியாக வரக்கண்டான், இப்போது சகலவுயிர்க்குந் தாய்தந்தையாகிய உமாமஹேஸ்வரனை கயிலையங்கிரியிற்கண்களிக்கக்கண்டுபணிந்தான், ஆகலால் நற்றவத்தோனென்று உங்கள்பாட்டனாகிய அர்ச்சுனனொருவனைச் சொல்லவேண்டியதே யல்லது மற்றொருவனையுஞ் சொல்லப்படாதென்று வைசம்பாயனர்சொல்லி மேலுஞ்சொல்லுகிறார்.

நீருண்டகாளமேகம் போன்ற திருமேனியை யுடைய நாராயணனை சங்கரன் மனத்துள்மதித்து நீங்கள் போயிருக்குங்காரியத்தை முடித்துவாக்கடவீர் போங்களென்றுவிடைகொடுத்தருள சந்நிதானக்கண்டு சலசலவென்றெழுந்து பொங்குங்கடற்போலிளைந்து மகிழ்ந்து களித்துவணங்கி பசுவைப் பிரிந்துபோங் கன்றுபோல்நீங்கி நடந்நடந்துபோவதற்கு காலெழாமல் நடந்து மாலாகிய மேகங்களுலாவிக்கொண்டிருக்கும் ஆலயங்களையும் ஆகாயத்தை அளக்குந் தன்மைபோல் அளாவும்நிலைகளையுடைய கோபுரங்களையும் அன்பாகக்கண்டு பிரதக்ஷணஞ்செய்துக்கொண்டு போதுமானவரைக்குந்தொழுது கயிலையங்கிரியைவிட்டு நீங்கி ககெசரிமார்க்கமாய்விரைந்து பூமியில்வந்து தங்கள்பாசறைபோய்ச்சேர்ந்தார்கள்.

இந்தக்காரியங்களையெல்லாம் நிரத்துவமான நரன்கனவாகக்கண்டு ஆச்சரியங்கொண்டு திடுக்சென்றுவிழித்து திருமாலைக்கூவியபோது தாரகனை யனுப்பிவிட்டு ஏன் அர்ச்சுனா இதோ யிருக்கிறேனென்று ஓடிவந்து அரண்டெழுந்த அர்ச்சுனனை அணைத்து என்ன மைத்துனா படபடவென்று உன்னுடற்பதறுதேயென்று பரந்தாமன்கேட்க சுவாமி, நானொரு சொர்ப்பனங் கண்டேனென்று தான்கண்ட சொர்ப்பனத்தைச் சொல்ல,அதைக்கேட்ட காப்பனைக்குரியகண்ணன் கலகலவென்றுநகைத்து இதென்னகாணும் பிச்சியாயிருக்கிறாய் புத்திரனிறந்ததுக்கத்தினாலும்சபதங்கூறிய கலவரத்தினாலும் பசியினாலும்பித்தந்தலைக்கேறிய பெசப்பையாலும் இப்பேர்ப்பட்ட நினைவுகனவாய்விளைந்த தாக்கனுமென்றுபரியாசமாகச்சொல்ல அதைப்பற்குனன்கேட்டு என்னுயிர்த் தோழமையாகிய இறைவனே நான்கண்ட சொப்பனத்தைக் கலவரமென்று சொல்லுவீராகில் இதோபாரும் அந்தவில்லினுடையமுஷ்டிநிலைபாசுபதாஸ்திரத்தினுடைய மந்திரநிலை சாகசநிலை இவைகளையெல்லாம் குருவிற்கேளும்,இதன்றியும் தேவரீரைசிவலிங்கமூர்த்தமாய்ச்சிந்தித்துவந்தித்து அர்ச்சித்த புட்பங்களெல்லாம் எந்தெந்தவிடத்தில் நான்பார்க்கும்படிக்கு குறிப்பாகவைத்தேனோ அந்தந்த இடத்தில் அப்படியேகண்டு தரிசித்தேன் தேவரீருக்குங் காண்பித்தேன் - இதோ வில்லும் - பாணமும், அடியேனுடைய கையில்வந்திருக்குதென்று கண்ணிற்கண்ட காக்ஷிகளெல்லாங் காரத்தைவிட் டகலாமற்சொல்லித் திருஷ்டாந்தமாகக் காட்டியபோது இதுவரையிலும் சொப்பனத்திற்கண்ட பொருள் மெய்ப்பட்டுப் பிரயோசனப்படாதென்று பெரியோர்சொல்லுவார்கள், ஏதோ உன்னுடைய அதிஷ்டங்கைகூடிவந்தது நீ சொல்லியசபதம் எப்படியு நிறைவேறும் தடையில்லை இனிநமக்குநல்லகாலந்தானென்று அர்ச்சுனனுந் தானுமாகச்சென்று சூரியோதயத்தில் ஒருகுளக்கரைக்குப்போய்க் காலைக்கடனை முடித்துக்கொண்டிருந்தார்கள்.

இவடத்தில்நடந்தசங்கதிகளொன்றுந் தெரியாத தர்மராஜனனவர் நானாவித வியாகூலத்தினால் இராத்திரிமுப்பதும் நித்திரையில்லாமல் நடுநடுங்கி எப்படிமுடியுமோ ஏதாய்விளையுமோ, எங்குபோனார்களோ கிருஷ்ணார்ச்சுனனென்று அவர்களுடையபேரை ஸ்தவுத்தியஞ் செய்யுந்தன்மைபோல்வாயாற்சொல்லிக்கொண்டிருந்து பொழுவிடிந்தவுடனே தங்களுக்குரிய கடன்முறைகளைச் செய்துதம்பிமார் மன்னர் மன்னர்கள் முதலிய நால்வகைப்படைகளையெல்லாம் யுத்தசன்னத்தப்படுத்திக் கொண்டு சத்தியமேநித்தியம், தர்மமேஜெயமென்று தர்மராஜனிருக்க,செங்கதிர்ச்செல்வனாகிய சூரியன் அர்ச்சுனனேசபதஞ் செய்திருக்கின்றான், துரியோதனாதிகளோ, சயந்தவனை பாதலத்திலாகிலும் வைத்து காப்பாத்தவேணுமென்றிருக்கின்றார்கள், கிருஷ்ணார்ச்சுனனைக்குறித்து தர்மராஜன் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறார் நரநாரணர்கள் பாசுபதம்பெற்றுவருகிறார்கள், இந்தக் காரியங்களெப்படிமுடியுமோ தெரியவில்லை நமதுபேரிற் றோஷமில்லாமல் நமது வேலையை நாம்செய்து நாளைக்கழித்து விடுவோமென்று, சப்தமாவென்னும் புரவிபூட்டியதேரேறி இந்திரத்திக்கில் வந்துதயஞ்செய்தான் - சுந்தரனாகிய சுடரோன் - கேளும் ராஜனே, இந்தப்பிரகாரம் திரிதராஷ்டிரனுக்குச் சஞ்சயன் சொல்லிவந்தானென்று வைசம்பாயனர் ஜெனமேஜெயராஜனுக்குச் சொல்லியவண்ணம் உங்களுக்குச்சொல்லுகிறேன் கேளுங்களென்று நைமியசாரண்யவாசிகளுக்கு சூதபுராணிகர்சொன்னார்.

௰௬-ப் போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி. விருத்தம்.

ஆரியதண்கலைவாண்மதியமூன்றுதிகொளாலமூந்தனதிடத்தடக்கி, உரியவெண்கங்காநதிக்சொருபதியாயுறைபெறு மூயர்மகோததியிற், பரியதிண்சிலையோ டம்பெலாமுகந்து பற்குனப் பொருப்பிடைபொழியுங், கரியவண்புயலைக் கைதொழுபவரோ கருவிலேதிருவுடையவரோ......*

எ-து. அரிதாகிய குளிர்ச்சிபொருந்திய சோடசகலைக ணிறைந்த பிரகாசமுடைய சந்திரனையும் குதித்தெழுந்த ஆலகாலவிஷத்தையுந் தன்னிடத்தி லடக்கிக்கொண்டு உரியவொளியினையுடைய கங்காநதிக்கு ஓரிருப்பிட மாகிச் சிறந்த பேறாப்பெற்ற உயர்ந்தசமுத்திரத்தில் பருத்தபலம்பொருந்திய கல்லுகளுடன் ஜலங்களையெல்லாங் கிழித்தெழுந்து பற்குனமலைமீது பொழியாநின்ற கறுத்தவளமாகிய மேகத்தைக் கைதொழும் படியாகிய பேர்களெவர்களோ அவர்கள் தாயினுடையகர்ப்பத்திலே ஜனனமரணமில்லாத சிறப்பினைப் பெற்றவர்களாம். (இந்தப் பாட்டு சிலேடையாகையால் பதின்மூன்றுநாள் இராத்திரி கிருஷ்ணார்ச்சுனர்பெற்ற பாசுபதாஸ்திரத்தைக்குறித்து பரமசிவன்புறமாய் அர்த்தம்பண்ணிக்கொள்ள வேண்டியது.) அஃதியாதெனில், குளிர்ச்சிபொருந்திய கலைகணிறைந்த சந்திரனையும் அனலைவீசும் ஆலகால விடத்தையுந் தமதிடத்திற் பொருத்திவைத்துக்கொண்டு உரிய கங்காதேவியாருக்கு நாயகப்பதியா யமைந் தருளிய கிருபைவாரிதியென்னும் பரமசிவ னிடத்தில் பலம் பெற்ற பாரியசிலையென்னும் வில்லுடன் பாசுபதாஸ்திர மாகிய அம்பையுந் தாமேற்றுப் பெற்று மேகம்பெருகிய ஜலத்தை மின்னலிடியுடன் மலைமீதுபொழியுந் தன்மைபோல் அர்ச்சுனனுக்கு அநுக்கிரகித்தருளிய வளம்பெற்ற கறுத்த மேகம்போன்ற திருமேனிவாய்ந்த செந்தாமரைக் கண்ணனை யாவரொருவர் கைதொழு கின்றார்களோ அவர்கள் தாயின் கர்ப்பத்திற் கருக்கொள்ளும் போதே ஜனன மரண மில்லாச் செல்வத்தை யடைந்து நீடூழி வாழ்வார்கள்.

இப்படியாக - அர்ச்சுனன்கூறிய சபதத்தை நிறைவேற்ற வேணுமென்று தாமே கங்கணங் கட்டிக்கொண்டு கயிலையங்கிரிக்குச் சென்று கறைமிடற்றண்ணலி னிடத்தில் பாசுபதம்பெற்று அர்ச்சுனனுக்குக் கொடுத் தருளிய ஆதிமூலப்பொருளை, அனவரதங் கனவிலுமறவாமல் வணங்கி மேனடக்கும் பதினான்காநாள் யுத்தத்தைச் சொல்லுகிறேன்-கேளும் ஜெனமேஜய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

சிந்தைதங்குநெறி செல்வக்குணாளனே-விந்தைபொங்கு புயமேன்மைக் கண்ணாளனே கேளும், தருமபுத்திர மகாராஜன் உதயாதியிலெழுந்து ஸ்நான சந்தி செப தப முதலிய வெல்லாமுடித்து சூரிய நமஸ்காரஞ்செய்து, யாக சாலையி னிடத்தில் நவக்கிரக செபம் ஓமம் யாக முதலியதும் நடத்திவாநின்ற தவமியாச் சாரியர் முதலிய வேள்வி வேதியர்கட்கெல்லாம் கற்பகத்தருவைப்போல்சோடச மகா தானங்களுங்கொடுத்து, நேற்றிராத்திரி தன் தம்பியாகிய தனஞ்செயனுரைத்த சபதத்தை வழுவில்லாமல் முடிக்கும் மார்க்கம் எவ்விதமென்று மனத்துட்கொண்டு சகல சேனா சயினியங்களு நெருங்க சமுத்திரமுழக்கம்போற் பலவித வாத்தியங்களுமுழங்கத் திருந்திய ராஜசபையிற் பொருந்தியிருந்தார், அந்தவேளையில் குணபூஷண வலங்கிருதராகிய தம்பிமார்மூவரும் இடும்பிபுத்திரனாகிய கடோர்க்கஜனும் அவன்பிள்ளை அஞ்சனவர்மனும் - இளம்பஞ்ச பாண்டவர்களும், ஆபரண அலங்காரம் பெற்ற வீராதி வீர அரசர்களும் - சேனாபதியாகிய திருஷ்டத்துய்மனும்-துருபதேயன்-சோமகாள் முதலிய பாஞ்சாலரும், படைத்துணையாகிய வேந்தரும் யுத்தகோலத்துடனிணங்கி தர்மபுத்திர மகாராஜனை வணங்கி-சோடசகலைக ணிறைந்த சுந்தரச் சந்திரனை நக்ஷத்திரங்கள் சூழ்ந்திருக்குந் தன்மைபோலுறைந்து சிறந்திருந்தார்கள்.

இதன்றியும்-பரிசுத்தம்பெற்ற தவமியர்முதலாகிய வேதவேதியர்கள் அக்ஷதைகொடுத்துச் சொல்லும்படியாகிய மங்களாசனத்தையும் வீரப்பிரதாப ராஜர்களெல்லாரும் இன்றையத்தினஞ் சயித்திரதனைமுடித்து ஜெய பத்திரம் விடுக்கிறோமென்று சொல்லாநின்ற பேராண்மையையும்; காதுகொடுத்துக் கேட்டுக்கொண் டிருந்த முரசக்கொடிக் கதிபனானவர் சபைநிறைந்த தன்யர்களைப் பார்த்து எம்மிடத்தி லிஷ்டம்வைத்த அரசர்களே, நீங்கள் சொல்லிய ராஜவீரங்களெல்லாஞ் சரிதான், என்தம்பியாகிய அர்ச்சுனனும், ஸ்ரீ கிருஷ்ணனும் நேற்றிராத்திரிபோனவர்கள், இன்ன இடத்துக்குப் போனார்களென்று தெரியவில்லை, போதுவிடிந்தது இதுவரையிலும் வரயில்லை, எங்கேபோ யலைகின்றார்களோ-என்ன வருத்தப் படுகின்றார்களோ-அதுகெட்டுது என்னயுத்தமென்று மனம்வெறுத் திருந்துவிட்டார்களோ-எங்கேயாகிலும் வாடினார்களோ-இப்பேர்ப்பட்ட மைந்த னிறந்துபோனானே யென்று மனம்ரோசி வீடினார்களோ-இவ்வுலகத்திற் சோபம் பொல்லாது அதிலேயும் புத்திரசோபங் கொல்லாது நில்லாது எல்லாத்திற்குந் தெய்வமே கெதியென்றுசொல்லி சத்தியவானாகிய கருமராஜன் இடிந்தமனத்தினையுடையவராய் இளைத்திருக்குஞ்சமயத்தில் துவாரகாபுரிவாசன் மாத்திரந் தனித்துவருவதை மாசற்ற திறலினை யுடைய வாசற் காவலோர் கண்டு தருமராஜ னிடத்துக்கு ஓடிச் சென்று இருகரத்தையுங் குவித்துவணங்கி மீண்டெழுந்து காயாம்பூப்போலும்-காளமேகம்போலும்-கருவிளமலர்போலும்-கருநீல மணிபோலும் உருப்பெற்ற களங்கரகிதனாகிய மாதவன் இதோ வருகின்றா ரென்று சொன்னார்கள்-அம்மொழி கேட்டவுடனே கிரணசூரியனைக்கண்டு மலருந் தாமரை மலர்போலுஞ் சந்திரனைக்கண்டுகளிக்குஞ் சமுத்திரம்போலும் அகமும் முகமும் மலர்ந்துமகிழ்ந்து எதிரொழுந்துசென்று இன்பத்துடன்தழுவிக்கொண்டு உடற்சாயைபோற் பொருந்தி பிரியாமல் வந்து தருமராஜனும், சாத்தகியும், ஜநார்த்தனனும், சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது, காளிங்கனென்னும் பாம்பின்படத்திற் கூத்தாடிய கமலநாபனைப் பார்த்து முரசக்கொடி படைத்த தருமராஜன் சொல்லுகின்றார்..

எமக்குரிய மூர்த்தியேகேளும் ஆத்திமாலையும் அறுகம்புனைந்த அரவணிந்த சர்வசம்மாரகால அரனுக்கொப்பாகிய அரவக்கொடி தரித்த அரசன்முதற் பகைவர்கள் நேற்றிராத்திரி பாடிவீட்டிற்பேசிக்கொண்ட விற்றிறமையும் சொற்றிறமையும் மிகுந்தகளிப்புந் தருந்த செழிப்பும் வீராவேசமும் தீராவேசமும் இன்னவித மென்று நானியம்பமாட்டேன் பொன்னைத் தறித்த பூவடி யோனே

அனற்கணையாற் காண்டவ வனத்தை யெரித்த அர்ச்சுனன் சொன்னசபதத்தைச் சோராமல் முடிக்க என்னாலுமில்லை அவனாலுமில்லை இதுவும் உன்கடனே ஏழைகண்மீது இரக்கம்வைப்பா யப்பாவென்று குந்திமுதற்குமாரன் கூற கோபாலன் இந்த வசனத்தைக்கேட்டு கீழ்க்கண்ணால் நோக்கிப் புன்னகைகொண் டிருக்கும்போது, தன்னெண்ணத்திற்கிசைந்த காண்டீபனானவன் காலைக்கடன் முடித்து ஆரியர்க்கரிய சூரியனைத் தொழுதுமையணிந்த மடமாதேக்கியாகியமரகதவல்லியையும்மகாதேவரையுஞ் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வணங்கி ஹரிஹரிகிருஷ்ணாவென்று மாதவனுடைய திருநாமங்களையும் போற்றிப்புகழ்ந்து, திரிநேத்திரன்-திரிபுராநாயகன் திரிபுரசம்ஹாரி-திரித்துவக்குணன்-திரித்தொழிற்கடவுள்திரிபுவனபாதனளித்ததித்தித்தாதிந்தோமென நடனமிடும்-பாசுபதநிறைந்த அம்பறாத் தூணியையும் அரனருள்வில்லையும் கிரமப்பிரகாரம் வணங்கியெடுத்துக்கொண்டு பர்டிவீட்டையடுத்து ராஜசபைக்குட்புகுந்து தம்பியைக்காணேமேயென்று மிகுந்ததுக்கத்துடன் உழன்றுகொண் டிரர்நின்றதன்றமயனாகிய தர்மராஜன்முதலான பெரியோர்களைப்பணிந்து சந்தோஷமுகத்துடன் தனஞ்செயன் வந்தான்.

இப்படியாகச் சிறப்புடன் வந்த தன்தம்பியாகிய அர்ச்சுனனை அகம்புறமிரண்டும் ஒன்றெனத்திகழும் அறன்மகன் கண்டுஐயா அருமையானஉன்குழந்தையைப்பறிகொடுத்து இனிப்பிழைப்பது அருமையென்று சொல்லும்படியாய் அழுதகண்ணீருஞ் சிந்தையுமாச்சென்ற என்னுடைய இளவரசே உன் துயரங்களை எங்கே கொண்டுபோய்க் கொட்டிவிட்டாய் - எவ்விதத்தில் தேறுதலடைந்தாய், உன்னுடையமுகத்தில் அமுதகிரணஞ் சொலிக்குதே மிகுந்ததேயசு மூனுபங்கு அதிகமாயிருக்குதே மலைக்கொப்பாகியதோளையுடைய வாசவன்குமாரா இந்த அதிசெயத்தை எப்படியும் எனக்குச்சொல்லவேண்டும் என்னுயிர்க் குயிராகிய தம்பியேயென்று தர்மராஜன் இரக்கமாய்க்கேட்க விஜயனகைத்து எல்லாம்விளைந்த வசக்கறனென்னும் - வேடிசைக்காறனாகிய விசைக்காறன் முகத்தைப்பார்க்க கபடநாடக சூஸ்திராவதாரியாகிய கண்ணன் ஜாடைசெய்து கடைக்கண்ணால்நோக்க - அந்தக்கருத்தைத் தெரிந்துகொண்டு காண்டீபனானவன்-சுவேதசூத்திரக்குடை நிழற்படுத்தி காசினிஎல்லாம்புரக்கும்கருணைவள்ளலாகிய தர்மநந்தனருக்குக் கட்டுரையைவிட்டுரைக்கத்தொடங்கினான்.

என்னவெனில், அனாதரக்ஷகனாகிய ஆபத்பாந்துவானவன் என்னை யழைத்துக்கொண்டு ஒரு பெரியவனத்திற்குப்போய் இளைப்பாறென்று தேற்றினார்-சிவபூசை செய்துகொள்ள வேணுமேயென்று நான் சொன்னேன் அதற்குத் தன்னையே இலிங்க முகூர்த்தமாய்ப் பூசிக்கச்சொல்லி கனிந்தகனிகளுந் திணிந்ததேன்களுங் கிழங்குங் காய்களும் உண்பித்து அப்பால் ஒருதிடர் நிலத்திற்படுத்து நித்திரைபோகச் செய்தார் நானித்திரை போனேன் பின்னுஞ் சற்றுநேரந்தரித்து என்னிடத்திற்கு வந்து என்னை எழுப்பி அழைத்துக்கொண்டு கயிலையங் கிரிக்குச்சென்றுகண்ணுதலாகிய அண்ணலாருடைய அருள்கைக்கொண்டு பாசுபதாஸ்திரமும் வில்லும் முஷ்டிநிலைமுதலிய மந்திரங்களும் பெற்றுக்கொடுத்த தல்லாமலும்இந்தப்பெருமான் மீது நான் அர்ச்சித்துச்சூடிய மலர்கள் யாவும்பரமசிவனுடைய அவயவங்களின் மேலிருக்கக் காட்டியபோது என் கண்குளிரப்பார்த்து உமா மஹேஸ்வரரைவணங்கிக்கொண்டு வந்தோமென்று படைமன்னவரெல்லாருங் கேட்கச்சொல்லி தருமந்தப்பாத தம்பியாகியதனஞ்செயனானவன் தமயனைநோக்கி அண்ணா இவ்விதமாக வனத்திற் படுத்திருந்து திருமாலுடன் கயிலைக்குச்சென்று இதுகளெல்லாம் பெற்றேனென்று சொன்னேனே அதுகள்யாவுஞ் சொப்பனாவஸ்தையில் நடந்த காரியமாகத் தோணுது அப்படியே சொப்பனமென்று நம்பிச் சொல்லப்படாது - அதேனெனில், நான் சொப்பனத்திற்கண்டு பெற்றுக் கொண்ட வில் பாணமுதலிய பேறுகளெல்லாம் யாவருங் காணப் பிரத்தியக்ஷப் பிரமாணமாய் இதோ என்னிடத்தி லிருக்குது பாருங்களென்று தெரிவிக்க இவைகளைக்கண்ட தருமராஜன் முதல் யாவரும் சந்திரபிம்பம்போன்ற முககமல மலர்ந்து அழகிற்சிறந்த மணிகளழுத்திய ஆபரணப் பணியணியுந் திணிபுயங்களெல்லாம் மேலாகப்பூரித்து புளகாங்க முற்று நாமெல்லோரும் பிழைப்பதற்குச் சிவனருள் கிடைத்ததென்று சிவநாமங்களைச் சொல்லி - சிவஸ்மரணைசெய்து அண்டமதிரஆர்ப்பரித்துச் சந்தோஷங்கொண்டார்கள் அப்போது மலைக்கொப்பாகிய ஆஜானு பாகுவையுடைய அர்ச்சுனராஜன் தருமராஜனைப் பார்த்து மறுபடியுஞ் சொல்லுகின்றான்.

அண்ணா, தேவரீர் எனக்குச் சிரேஷ்ட ப்ருதுவாயிருந்து செய்யவேண்டிய நன்மைகளெவ்வளவோ அவ்வளவுக்கு ஆயிரங்கோடி பங்கு அதிகமாக இந்தமாதவன் செய்த முதற்காரணமாகிய சமுத்திரம்போலொத்த சகாயப்பொருளுக்கு வரையறையத்தக்க கணக்குண்டோ ஐயா? தெளிவில்லாத நாம் என்னத்தை யறிந்து சொல்லுவோம் ஆகாயத்திலிருக்குந் துணைக்காரண மாகிய மேகங்களினால்உலகத்திற்பொருந்திய உயிர்களெல்லாஞ் சுகம்பெறும்படியாயிருக்கஇந்தஉயிர்களினால்மேகத்துக்கு ஏதாகிலும்கைமாறாகிய ஒருதவியுண்டோஅதுபோல்நமது இஷ்டதெய்வம்போன்றஇந்த ஆண்டவனுக்குநாமென்னத்தைச் செய்வதென்று பற்பலவிதங்களாற் பார்த்தன் றுதிக்கும்போது விற்பனவிவேகியாகிய தருமராஜன்மேலாகிய சந்தோஷமுடையவராய் சீதரனானமாதவனைநோக்கிதாமோதரனேஎங்களுக்காகவருத்தமெடுத்துக்கொண்டுதிங்களைமுடித்த செஞ்சடைப்பெம்மானமர்ந்த கயிலையங்கிரிக்குச் சென்றுபாசுபதாஸ்திரம் வாங்கிக்கொடுத்த பக்ஷத்தைச் சொல்லுவதோஅல்லதுஎங்கள்தந்தையையிழந்துஅறியாதவர்களாய் காட்டைவிட்டுநாட்டில் வந்தநாள்முதல்நாளதுவரைக்கும்வணங்காமுடியோன் செய்த வஞ்சகத்தால் நாங்களெஞ்சி யிறக்காமல் எங்களுக்குப்பக்கத் துணையாயிருந் துகாத்திரக்ஷித்த அன்பைச்சொல்லுவதோ அன்றியும் அர்ச்சுனன் பேரில் பகதத்தன்முதலிய சுதாயுவென்

ளுஞ் சத்துருக்கள்தொடுத்த ஆயுதங்களைத் தேவரீர்திரு
மார்பிலேற்றுக் காத்தருளிய அருமையைச் சொல்லுவ
தோ நான் எத்தனையென்று சொல்லப்போறேன்இறை
யவனேயென்றுபுகழ்ந்து துதிமொழிந்து அர்ச்சுனன்கை
யைப்பிடித்துஅருளாளன்கையிற்கடையாகக்கொடுத்துஆ
பத்பாந்தவா அநாதரக்ஷகா அன்று-குந்திதேவியாருடைய
கெற்பத்திற்பிறந் திறந்தோம் - இன்று தேவரீருடைய
கெற்பத்திற் பிறந்திருந்தோம் - காக்கக்கடனுனக்கேகண்
ணனே நீலமேகவண்ணனேமுன்னம் ஆதிமூலமென்ற
ழைத்த யானையைக் காத்தவனேயென்று கைகுவித்திரு
க்குங் காவலனை நோக்கிக் கண்ணன் சொல்லுகிறார்.

ஓ தர்மநந்தனரே நீயோதொன்றுக்கும் பயப்படவேண்
டாம் இந்த அர்ச்சுனனைக் குறித்து மனக்கவலையுமக்கு
வேண்டியதில்லை அந்தப்பாரம் நானெடுத்துக்கொண்டே
ன்,சுவாமிசகாயத்தால் சூரியனஸ்தமிக்குமுன்னே துரோ
ணர்முதலிய காரியஸ்தரால் அணிவகுத்துப் பந்திக்கப்ப
ட்ட சயிந்திரதனை அடிவேருடன் முடிதறியமுடித்துசப
தநிறைவேற்றிஉமதிடத்துக்குவருவோம்நீர்பாரும்என்று
தாய்போற்பரிந்த அன்புடன்,தகுதியாகிய வசனங்களைச்
சொல்லிதண்டேனிறைந்து வண்டுலவுமாலையணிந்த தார்
வேந்தருடனெழுந்து தேர்புகுந்து கார்நிறைந்தகிரித்தலை
யெல்லாம் வேர்நிறைந்ததைப்போற் கருந்தாள் செந்து
ளெழுந்து மறைக்கக் கடவுளர்முதலாகியபேரும் கண்டு
கலங்கபயங்கொண்டு மலங்க ஆர பாரதாரா பூரி வீரசி
ன்ன மார காள சூர பூத பேரி வாரியோசையென்னமே
லும்மேலும்விம்மி அண்டகடாகமுமெண்டிசைமுதலாய்,
டுண்டுண்டுண்டுண்டுண்டெனவதிர ஆகாயம்பூமியிடமில்
லாமற்சுருங்க வாகாய் வன்னக்குடைகள் நெருங்க வசவ
சவென்னத் துவசங்கடுன்ன மயிற்பீலிக்குஞ்சங்கள் மே
ற்கட்டிகள் மகரதோரணங்கள் சிகரபூரணங்கள் கொடிக
ள் முதலாகிய சகலவிருதுகளுடனே,பிரகாசமுற்றவே
லாயுதம்பெற்றவீமசேனனும் நகுலசகாதேவர்களும்சே
னாபதிமுதலாகிய ராஜவீரர்களும் நால்வகைப்படைகளும்
இருபக்கத் திலுநெருங்கி இறுமாந்து வர தன்னையடுத்த
தேவர்களுக் கமுதமளித்த கருணைக்கடலாகிய திருமால்
செலுத்தும் அழியாரதத்தின்மீதேறிய அர்ச்சுனன் நடு
நாயகமாய்வந்து அமர்க்களஞ்சேர்ந்து அணிவகுக்கும்ப
டியாய்ச்சொல்ல அப்போதே சோனாமேகம்போல்கரிமு
கக் கணைகளைத்தொடுக்கும் வீரப்ரதாப பதாதிவேந்தரை
யும் யானை தேர்குதிரைமுதலியநால்வகைச் சேனைகளையு
ஞ் சேர்த்துராஜமண்டலங்களையும் நிலைக்கச்செய்துபலம்
பெற்றஉறுப்புவகையாயூகமேற்படுத்திநிறணிந்த தேவர்க
ளுஞ் சத்துருக்களும் ஆச்சரியப்படும்படியாய்ப் போரணி
முனையிற் றேரணியுடன் காரணிபோல் விறணிந்து தார
ணிந்தமார்பனென்னுஞ் சேனாபதியாகிய துஷ்டத் துய்ம
ன் நின்றான்.

அந்தச்சமயத்தில் பூரணனாகிய நாரணன்போன்ற வெ
ல்லோலாரணவின்ற மதலையாகியஅர்ச்சுனன் அணிந்திரு
க்குமகுடமானது பொன்னொளி மின்னொளி விண்ணொ
ளி கண்ணொளிமுதலிய பிரகாசத்தைச்செய்யவும், இரு
செவியிலுந்தரித்த இந்திரகுண்டலம் பாதலத்துள்ளிருக்
கும் இருட்டைப்பறக்கச் செய்யவும் ஒடிபடாமலும்ஒரு
வர்கைக்குப் பிடிபடாமலும் புகழ்தற்கு முடிபடாமலுந்
திணிந்தமைந்தகாண்டீபம்மகமேருவை இகழ்ந்துவிஜயன்
தோளைப்புகழ்ந்துகளித்துக்கொண்டிருக்கவும்,தேரானது
நேரோடிமலைகளையுடைக்கவும்,தேரிற்பூட்டிய சுவேதவா
ம்புரவிகள் காற்றின்வேகத்தைமாற்றிநகைக்கவும்,ஒப்பில்
லாச்சாரதி யானவர் சப்தமேகங்களையும் பார்த்து என்
னுடைய அருள் வாரிக்கும் ஈடாக மாட்டீர்களென்று அ
லக்ஷியமாய் மருட்டிவெருட்டவும் இவ்விதமாகப் போர
ணிகொண்டு சர்வ சம்ஹார காரணன் போல்வந்துபகை
வருடைய சேனாசமுத்திரத்துக்குத் தானொருவடவாமு
காக்கினிபோற் பிரகாசித்துக்கொண்டு திசாதிசைகளுநடு
க்கமெடுத்து ஒடுக்கமுறும்படியாய் அமர் முடிப்போமெ
ன்று நரநாரணரிருவருநின்றார்கள்,இடத்திலிவர்களி
ப்படியிருக்க,இராத்திரியெல்லா நித்திரையில்லாமல் சித்
தப்பிரமைகொண்டு மெத்தவும் ஆலோசனையிலிருந்த து
ரோணாச்சாரியர் சூரியனுதிக்கு முன்னெழுந்து காலைக்க
டன்முடித்துயுத்தபூமிக்குப்படைகளெழும்படியாய் பே
ரிகை முழக்கிவைத்து தானுஞ் சேனாபதிக்கோலங் கொ
ண்டு எல்லாப்பெருமையும்பெற்ற வல்லாளரெல்லாந்த
ன்னைச்சூழ்ந்து வரும்படியாய் யுத்தபூமிக்குச் சென்றுச
ப்தசமுத்திரம்போ லெழுந்து பரந்து சப்தமேகம்போலி
ரைந்து விரைந்து நெருங்கிய படைகளைப் பற்பலவிதமா
கப்பிரித்து அற்புதமாகியயூகங்கட்டினார்.

அதாவது,மூன்றுயோசனை முப்பதுநாழிவழி தூரம்வ
ட்டமாகவளைத்துசூசிகாயூகமென்பதைவிதிமுறைப்படிவ
குத்தார். அந்தச் சூசிகாயூகத்திற்குநிறைந்தவுடற்போலே
ற்படுத்தியயானை சேனை பரிவாரங்களெவ்வளவென்றால்,
கார்மதத்தைச்சொரிந்து போர்முகத்துக்குரிய நாற்பதினா
யிரம்யானைகள்-அறுபதினாயிரந்தேர்கள்-ஒருநூறாயிரங்கு
திரைகள்-பத்துநூறாயிரம் பதாதிகள்-இவைகளைச் சூசி
காயூகமாக அமைத்து இதனுடைய நடுவில்சிந்துதேசாதி
பனாகிய சயிந்தவனை நிறுத்தி, சூரியகுமாரனாகிய கன்ன
ன்-துரோணாச்சாரியின் குமாரனாகிய அசுபத்தாமன்-வில்
முனைபெற்ற கிருபாச்சாரியர்-ஒப்பில்லாத மத்திர தேசா
திபன்சல்லியராஜன்-வீரியராஜனாகிய பூரிசிரசு-திடங்கொ
ண்டவிடசேனன்-இவர்கள் முதலாகிய அதிரதத்தலைவர்க
ளையெல்லாம் பார்த்து,இந்தச் சயித்திரதராஜனையும் சூசி
காயூகத்தையும் காத்திரக்ஷிக்கத்தக்கவர்கள் நீங்களேயெ
ன்று அவர்களை அவ்வடத்தினிறுத்தி - துரோணாச்சாரியா
னவர்,துரியோதனன் முதலிய ராஜர்களைநோக்கி.ஓகோ
அரசர்களே, சிந்து தேசனைப் புரக்கும்படியாய் இப்போ
தமைத்த சூசிகாயூகத்தையும் இந்த அதிரதத்தலைவர்களை
யும் பார்த்தீர்களா, இப்பேர்ப் பட்டவர்களுக்கு - இந்த
ப்பஞ்சையாகிய அர்ச்சுனனெம்மாத்திரம்-அவனைவிட்டு
த்தள்ளும்,தென்றிசைக்கதிபனாகிய எமனைப்போலொத்
தவன்இந்தத்திசையை நோக்கி எதிர்த்துவரச் சக்தியுமு
ண்டா,அவனல்லாமல் இன்னம் எப்பேர்ப்பட்டவர்களு
ஞ் செயிப்பதற்கருமையாகிய யூகமாக்களுமென்று சொ

ல்லி,யூகமமைந்த திறமையைக் குறித்துத் தானுந் துரியோதனனுந் தம்பிமார்களுஞ் சந்தோஷமடைந்து, சூசிகாயூகக்காவலென்றமைத்த அதிரதத் தலைவர்களுக்குநான்குறுக்கிலும் நான்குவிதப் படைகளைப் பத்மயூகமாக நிறுத்தி, பலம்பொருந்தியகிருதபன்மன் - கிருதவீரியன்-துணிபுத்துணியும் பெற்ற காம்போஜன் - கன்னடராஜன் கலிங்கேசுஜன்முதலாகிய எண்ணிறந்த காவலர்களையெல்லாம்மேற்குத்திசையிற் கட்டிய பத்மயூகத்துக்கு ஆக்கியாகயிருந்து தாக்ஷியில்லாமற் காருங்களென்றுதானுமேவ த முறைமைப்படியமைத்து அந்தப்பத்மயூகப் பந்திப்பென்றுநின்ற அவிங்குபேசாழியன் முதலிய மகாரதத்தலைவர்களுக்குமேற்காவலாக மேற்குத்திசையில் சகடதுண்டம்வளைத்து, மேற்கூறிய பத்மயூகத்துக்குத்தென்கிழக்குத்திக்கில் சர்ப்பக்கொடிதரித்த துரியோதனனையும் அவனுடைய தம்பிமார்களையும் நால்வகைப்படையாகிய அரமனைச்சேவகரையுங்காவலாக்கி அவர்களுக்கு மேற்றுணைக்காவலாய் அக்கினிக்கோட்டை அமைத்திருப்பது போல் சமரதத்தலைவராகும், விந்தன் - அநுவிந்தன்முதலாகிய தேசராஜர்களைத்திருத்தி, வடக்கிழக்கு திசையிலமைத்த பத்மயூகத்துக்கு, பங்காளம், யுகந்தரம், மாடம், மிலேச்சமுதலாகியமகாரதத் தலைவரென்னும்வல்லமைசாலிகளைநிறுத்தி, தென்மேற்றிசையி லமைத்த பத்ம யூகத்துக்கு, மலையாளஞ், சேரசோளபாண்டியனமுதலிய மன்னரையும் அர்த்தரதத்தலைவரையும்முன்றுறவமைத்து, இதல்லாமலும் அழகுபொருந்தி குவிந்திருக்குந், தேர்-யானை-குதிரை-காலாளுடன்கலந்த கைத்திறனுடைய வித்தகரையெல்லாம் யூகசாஸ்திரத்தின் வண்ணம்பிரித்துகிழக்கு-தென்கிழக்கு-தெற்கு - தென்மேற்கு-மேற்கு - வடமேற்கு-வடக்குவடகிழக்கென்றுசொல்லிய எண்டிசையிலுங்காவலாகநெருக்கிதங்களிடத்திலிருந்த அதிரதர்மகாரதர்மந்திரிசாமந்தர்-பட்டவர்த்தனர்முதலியசேனைகளையெல்லாம் சூசிகாயூகமாகமுன்னேநிறுத்தினர்சூசிகாயூகமென்பது - தாமரைப்பொகுட்டைப்போலும், உ - வது, சக்ரயூகம் - உருளையைப்போலும், ௩-வது - பத்மயூகம், தாமரைமலர்போலும், ௪-வது-சகடதுண்டயூகம்,வண்டிச்சக்கரத்துக்குத்துண்டாகியவட்டைபோலும்-௫-வது எட்டுத்திக்கு நிறைத்துவைத்த கட்டுக்கோப்பினையுடைய கொடுமுகவியாக்ரதுண்டயூகம் புலிமுகம்போலும் இந்தப்படியாகச்சேர்ந்து ஐந்துவகையூகமாக அமைத்து அந்தச் சேனைகளின் சிரசுக்கு நவரத்தின கிரீடந் தரித்ததைப் போல்-நந்தியாவட்டமாலையணிந்த நரேந்திரனானவன்-அக்கினிமூலைக்கதிபதியாய்நின்று பிரகாசிக்கா நின்ற தென்மேற்றிசையில் பாண்டவப்படைகள் சிறிக்கொண்டிருக்குந் தன்மையை சேனாநாயகனாகிய சிலைக்குருவானவர் அறிந்து-ராக்ஷசப்படையைவகுத்தமைக்குந்திறத்தைக்கொண்ட சுக்ராச்சாரிநிவர்தானென்று சொல்லும்படியாய்-பதினாயிரந் தேராளிகள் தன்னைச் சூழ்ந்துக்கொண்டு நிற்க அர்ச்சுனன்வரும்வழிக்கு நேராய்ச சகடதுண்ட யூகமூலையிற் சர்வசமஹாரிபோல்நின்றார்.

இவ்விதமாகத் துரோணாச்சாரி யிருக்குங்காலையில் துன்மருடனென்னும்வன்மனத்தோன்றலானவன் குதிரைகளிலேயும் - யானைகளிலேயும் ரதங்களிலேயும் கணக்கில்லா மன்னர்களிலேயும் மேலாகச்சிறந்து-வில் - வேல்-வாள்-கதை கலைமுதலிய ஆயுதங்களைக்கொண்டு ஊசிநுழைய விடமில்லையென்று சொல்லும்படியாகியநெருக்கங்கொண்ட இரண்டுலக்ஷஞ் சேனைகளைச் சொந்தமாகவுடையவன் திரண்டு புரண்டு-வரும்படி யாகிய சேனையுடன்வந்தான்-அவனைத் துரோணாச்சாரியர்கண்டு - சந்தோஷங்கொண்டு அந்தத்துன்மருடனுடைய சேனைகளை அணியிற்சேர்த்து வகுக்கவொத்தலித்தபோதுகூடாதென்று தடுத்து கும்பலிற்கோவிந்தம்போடுவதற்காகவா என்சேனைகளை அணிவகுக்கப்போகிறீர் - ஓ.சேனாபதியே இந்தட ஞாகிய துரியோதனராஜனுக்குப் படைத்துணையாய் வந்த துன்மருடன் - துரோணாச்சாரியருடைய ஒட்டிலிருந்து ஜெயித்தானென்னும்பேர்பெறுவதைப்பார்க்கிலும் (விழுந்தாலு மெழுந்தாலுந்தனியென்பதுபோலுங் கொள்ளைக்குப்போனாலுங்கூட்டாகாதென்பதுபோலும்) உன்னுடன் கலங்காமல் என்சேனைகளும்நானும்பாண்டவர்களை வென்று முனைமுகத்திலின்று சயிந்தவனைகாக்கிறேன்-என்றிராணியைப்பாருந்துரோணரேயென்று வெகு அலக்ஷ்யமாகப்பேசி-சேனாபதி யேர்ப்படுத்திய யூகத்தண்டைக்குப்போகாமல் துரோணாச்சாரியனைப் பின்னாகச்செய்து சகடதுண்டயூகத்துக்குமுன்னேபோய்தூசிப்படையாய் நின்று சண்டைக்கு எவன் வருபவன் வருகிறவனெல்லாம் வாருங்கள்என்னிடத்திற் றப்பிப்பிழைத்துபோனபோதல்லவோ துரோணாச்சாரி முதலியபேரிடத்தில் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள் இன்றைக்கு ஒருவருக்கும் வேலையில்லாமற் செய்துபோடுகிறேன் வாருங்களென்று வீராவேசத்துடன் கோபிப்சபதங்கள்கூறி-எல்லாரும்பின்னாகத் தான்மாத்திரமுன்னுநி முனைமுகத்தினின்றான்.

அந்தத்துன்மருடனிப்படிநிற்கவே-கிருதவன்மனும்துச்சாதனனும் - மிகுந்தகோபமுடையவர்களாய்-நமக்கென்னபலமில்லையாநரனை நாம்வெல்ல வல்லபமில்லையா சத்துருவாகிய அர்ச்சுனன்வருவானாகில் சூரியனஸ்தமிக்கிறவரைக்கும் முனைந்து பாணப்பிரயோகங்களைவிடுத்து இந்த யூகங்களுக்குள் அவனை நுழையவொட்டாமற் றடுத்து நிறுத்துவது எங்களுடைய பெரிதாகியகடமையென்று வெற்றிபெற்ற கைக்காரராகிய வீரர்களுடன் தேவர்கள் வெருவும்படி வந்து துன்மருடனுடைய தூசிப் படையைப் பின்னாக்கி தங்கள் படையை முன்னாக்கி கொடிப்படையாய்க் கூடியிருந்தார்கள் இதல்லாமலும் சிலம்பத்தில் பலய்பற்றி நலம்பெற்றிருக்கும் தீரர்கள் சக்கரம் முசுண்டி-சப்பணம் கவண்-கதை-கத்தி- தோமரம்-கூரிய எழு-உழுங்கொழு-சொழுமழு முனைக்கழு-தண்டு-இருகரத்திலுங்கொண்டு எறியும்படியாகிய குண்டு ஒவ்வொருவருக்குமுண்டு கொலைபுரியும்வாள் குனத்தொனி கூடியவில் சத்தி-கட்டாரி-குத்திட்டி-யெறியீட்டி-வாக்குசாங்கு வல்லயமுதலாகிய ஆயுதங்களை-எல்லாருங் காத்திற்பிடித்துக்கொண்டு பாய்ந்து விக்ரமத்துடன கொக்க

ரித்துக்கூவி விதிர்விதிர்த்து இனி யெவர்களிருக்கின்றார்கள் பயமில்லாமல்வந்து எதிர்ப்பவரொவரொன்று தெழித்துப்பழித்து இறுமாந்து சிறந்து தங்களைத்தாங்கள் மறந்து-கெறுவித்திருந்தார்கள்.

அதுகாலையில், நேற்றிராத்திரி துரோணாச்சாரியர் இன்று முப்பதுநாழிகையும் எவ்விதமாவது சயிந்திரதனை நான்காக்கிறேனென்று துரியோதனமகாராஜனுடன்சொல்லியபடிக்கு துரோணரானவர் அவ்விடத்தில் அருமையாகவமைத்த யூகத்திரத்தைக்கண்டு ஆகாயத்தில் வாகாகிய தேர்மீதிருந்து வேடிக்கை பார்க்குந் தேவர்களெல்லோரும் ஆச்சரியமடைந்து சந்தனகுங்கும பாளித கடககங்கண வலங்கிருத சிகரமலைபோன்ற புயத்தினையுடைய சிந்துராஜனை நெருப்பைப்போற் செவந்து கொத்துக்கொத்தாகிய எங்ரோமம்வாய்ந்த தனஞ்செயன் கூறிய சபதப்படிக்குயுத்தஞ்செய்துவெற்றி யடைவதுமெத்தவருத்தம் இவனால் முடியத் தக்கதல்லவென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அந்தவேளையில் யுத்தத்திற்குப் புறப்படும்படியாயெத்தனித்து யுத்தகோலங்கொண்டு அருச்சுனராஜன் ஆழமும் அகலமுமுடையசமுத்திரவோசை வாயடங்கிப்போகும்படியாய்ஆரபாரித்துபெருக்க நெருக்கத்துடன் அணிவகுத்திருக்கின்ற எதிரிகளின் சேனைகளைக்கண்டு இருதயங்கலங்காமல் ஏழுமலைகளுமிணையல்லவென்று எழுமலைப்போன்ற புயவலிமைகொண்ட ஒப்பில்லாச் சிங்கமாகிய பற்குனன் பல்லாண்டு பல்லாண்டாகிய வாழ்வைப்பெற்ற பரந்தாமனுடைய தம்பியென்னுஞ் சாத்தகியைதன்னுடைய தேர்மேலேற்றிவைத்துக் கொண்டு தனுவேதியனென்னுந் துரோணாச்சாரியருடைய வில்லின் ஷ்டங்காரத்தொனியும்ஓங்காரத்தொனியும் அறுவிதயூகபந்திப்பையும் அவர் களின் சிக்கிப்பையும் அந்தச்சேனைகளின் சிறப்பையும் முறுமுறுக்கையும் பார்த்தையா சாத்தகியென்றுகாட்டிசிலவார்த்தைகளைநாட்டிச் சொல்லத்தொடங்கினான்.

அதாவது, என்னெண்ணமே இவ்வண்ணமாகவமைந்தசாத்தகியாகியமன்னனே சேனும்ராஜாதிராஜனாகிய துரியோதனமகாராஜன் துரோணாச்சாரியருக்குச் சேனாபதிப்பட்டங்கட்டியபோதுநமது தர்மராஜனைப் பிடித்துக்கொடுக்கும்படியாய்க் கேட்க அப்படியே கைப்பிடியாய்ப் பிடித்துத் தாறேனென்று வரங்கொடுத் திருக்கின்ற வாக்கியந்தப்பாமல் நானில்லாதவேளையிற் போர்செய்யப் புகுந்து தர்மராஜனைப்பிடித்து தன்னுடைய சொற்றிறத்தை விற்றிறத்தால் எத்திறத்திலும் நிறை வேற்றுவான் போலுமிருக்குது,ஆகலால்-கொந்தலர்மாலையுஞ் சந்தனக்குழம்பு மணிந்து குவிந்த தோளினை யுடைய சாத்தகி, நான் இன்றையத்தினங் கூறிய சபதமுடிப்பதற்காக விறியசேனைகளைக் கூறுபடுத்தும்படிக்குத் தேறியவிற்பிடித்து மியாதமேறிச் செல்லுகின்றேன், இவ்விடத்தில் தர்மராஜன்பேரில் வராநின்ற தனுவேதியனை ஒய்ந் தொடுங்கச் செய்யும் வில்வல்லமையில் ஆய்ந்துணர்ந்த அறிவாளியாகிய உனக்கொப்பாக எவர்களிருக்கின்றார்கள், எனக்குரிய உத்தமனே இப்போது இரண்டுகாரியம் நடக்க வேண்டியிருக்குது, அதேதெனெனில், சிந்து தேசாதிபனாகிய சயித்திரதனைக்கொல்லுதலும், தர்மராஜனைக் காத்தலும்-இந்த இரண்டுசெய்கைதான் இவ்விரண்டு காரியத்தில் நமது நாயகனாகிய தர்மபூபதியைக் காப்பாத்துதல் உன்னுடையகடனும் அந்தச்சயந்தவனை இன்றையப்போரில் முடிப்பது என்னுடைய கடனுமென்று காண்டீபன்சொல்ல அந்த வசனத்தைக்கேட்ட சாத்தகிமகிழ்ந்து கட்டுத்தறியைப் பிடுங்கு மதம்பொழிந்த யானைபோலெழுந்து விஜயனைப்பார்த்து ஐயா, தேவரீர் தர்மராஜனைக் குறித்து யாதொன்றும் நினைக்கவேண்டாம். அவர்கள் வகுத்திருக்குஞ் சேனையணிக்குள் அதிசீக்கிரமாகப்புகுந்து தகுந்த போர்புரிந்து சிந்துராஜன் தலையைக்களைந்து சபதமொழியிற்சிறந்து சந்தோஷமாக வாருமென்று இன்னம் பலவித வீரப்பிரதாபங்களைச்சொல்லி விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய தேரின்பேரிற் புலிபோற்றாவி யேறிச்சென்று சாத்தகியானவர் தர்மநந்தனருடைய நிழற் சாயைபோல் அவனைவிட்டுப் பிரியாமற் காத்திருந்தார்.

இப்பால், அர்ச்சுனராஜனானவர், வெற்றிபொருந்திய கொற்றவனாகிய தர்மராஜனுக்கும் உத்தமனாகிய வீமசேனனுக்கும் நமஸ்காரஞ்செய்து தம்பியர்களைக் கட்டித் தழுவிக்கொண்டு பந்து மித்ராதி மந்திரிமுதலிய மன்னவர்களுக்கும் சேனாபதியாகிய மைத்துனர்க்கும் மெத்தவும் உபசாரஞ்சொல்லி தமயனைக்காக்குங் காரிய வுண்மைகளைத் தெரியச்செய்து அவர்களுடைய விடைகொண்டு தன்கையிற்படைகொண்டு அர்ச்சுனன் முகமலர்ந்து மகிழ்ந்து உத்தமோசா, உதார்மனென்னும் மைத்துனரிருவரும் தன்னுடையதேருக்குச்சக்கரரக்ஷகராய் இருபுறத்திலோடவும் அநுமத்துஜம் ஆடவும் ஜகத்காரண வித்தகனாகிய சாரதி தடந்தேர்செலுத்தவும் சழனிகளிற் சேற்கெண்டைகளும் வாளைகளுங்கலந்து பிணங்கும் நீர்வளநிறைந்த சிந்துதேசத்தலைவனைக் கைக்குளடங்கும் பொருளைப்போல் பாதுகாத்துக்கொண் டிருக்குங் காவலரொன்னுஞ் சத்துருக்கள் பேரணியாக நிற்கும் அத்திசையை நோக்கி தாவி தத்திவராநின்ற சுவேதவாம் புரவிபூட்டிய இரதத்தைச்செலுத்தி வரும் விஜயனானவன் துரியோதன மகாராஜனுடைய சேனைகள் காதவழிக்கப்பாற் கலங்கிக் கருகிப்போகும்படியா யெரிக்குங் காடாக்கினியைப்போற் கண்சிவந்து கடுங்கோபங் கொண்டு விஜயகாண்டீப வில்நாணிநெறித்து திசைகள்மயங்க தேவதத்தமுழக்கினான் அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யானவர் உலகத்தை யழிக்கும்படியா யெழுந்த ஊழித்தீயானது ஓங்கிவளர்ந் தெரியச் செய்யும் உகாந்த வாடைக் காற்றின் பேரோசையைப்போற் பாஞ்சசன்யத்தை முழக்கினார்.

இவர்களிருவரு முழக்கிய சங்கத்தொனியினால் திசையானைகள் பொருத்த திக்குகளிடிந்து வெறுத்து தேவர்களொடுங்கிக் குறு குறுத்து குரு குலாதிபர் முதலாகிய சேனைகளெல்லாங் குப்புற்றுவிழ்ந்து வியாகூலங்கொண்டு தாழ்ந்தார்கள் - அந்தவேளையில், பூமிதேவியின் பாரநீக்கப்பிறந்த போராளிபோன்ற அர்ச்சுனன், அநுமக்கொ

டிநாட்டிய தேரைச் செலுத்துஞ் சாரதியாகிய ஆபத்பாந்தவனைப் பார்த்து, சுவாமி, துரோணாச்சாரியர் கட்டிய வியூகத்தின் கொடிப்படையை நான் காக்கிறேனென்று இறுமாப்படைந்து வெற்றிக்கொடி பிடித்து வந்திருக்கின்ற துன்முகனுடைய யானைப்படையின் மீது விடுந் தேரையென்று விரைந்து கோபித்து விளம்பினன் அந்த க்ஷணமே - பெருமைபொருந்திய ஆசபனாகிய மாதவன் அப்படியே ரதத்தைச் செலுத்துகிறேன் அர்ச்சுனாவென்று-சற்று நிதானித்து பூமி கிடுகிடென்றசைய இடங்கொண்ட தேரைக் கடகடவென்று செலுத்தினர் உடனே தனஞ்செயனானவன் விட்ட தடகட கணைகளெல்லாம் படபடவென்றலைய கடுங்காற்று மின்னலு மடங்காமற் காட்டி ஏழு மேகமும் ஊழியிற்பொழிவதுபோல் தேவாஸ்திரங்களைத் தீப்பொறி பறக்கவிடுத்துச் சிதற வடிக்கும்போது அந்த துன்முகனுடைய நால்வகைச் சேனைகளும் அலைகாற்றிலலைந்து முறிந்தமரம்போல் அவியழிந்தார்கள்.

இவ்விதமாகத் தன்னுடைய சேனைகள் தலைவிரிகோலமாயழிவதைத் துன்முகன் பார்த்து சகியாதவனாய்த் தன் தேரைச்செலுத்தி தனஞ்செயனைமறித்து, சந்திரக்கணை இந்திரக்கணை மந்திரக்கணை முதலிய அநேகம்பாணங்களைத் தொடுத்து அர்ச்சுனனுடைய தேகமும், சாரதிதேகமும், குதிரைகளினங்கமும் நிறைந்துமறைத்து அவன்றொடுக்குங் கணைகளையுங் குறைத்து முறித்தான், அதுகாலையில் இதழ்விரிந்த மலர்நிறைந்த மணமாலையணிந்த பற்குனன், அனலெரிந்து அழல்சொரிந்துவரும் அக்கினியாஸ்திரத்தை விசி முன்பின் பாராமல் பக்கத்துக்காயிரம் பகழிகளையேற்றி தாறுமாறாகத் தூறுசெய்தபோது ஆறுபோலுதிரம் சேறுடியோட, சக்கரம் இருசு குத்துக்கால் கொடுங்கை முதலிய ரதமுமெரிந்து சாரதி குதிரைகளுஞ் சாய்ந்துமடிய பன்முகத்திலும்வாடிய துன்முகனானவன் வின்முசு முறிந்து யுத்தமுகம்விட்டு தன்முகத்துக்கு நேராய்ப் புறமுதுகிட்டோடினான்.

உலகுக்கொரு சுடராயுதித்தருளிய சூரியபகவானை மூடிமறைக்கும் பனிபோல்வந்தடுத்துப் போர்கொடுத்த துன்முகனானவன் புறந்தந்தோடுவதை துச்சாதனனென்பவன் கண்டு அச்சாணிபோல் வந்துநின்று அர்ச்சுனனைத் தகைந்து யாவருமிப்பேர்ப்பட்ட அஸ்திரங்களைத் தொடுக்கமாட்டார்களென்று தேவருங் கலங்க திக்குகளொடுங்க திருகம்பு சொருகம்பு - உருசம்புமுதலிய திக்கணைகளைப் பொழிந்தான், இப்படியாகத் துசுவாசனன்றொடுத்த இணையற்ற பாணங்களையும் அவன் கைப்பிடித்தவில்லையும் எரியில்வீழ்ந்து தீய்ந்த சருகைப்போற் கருக்கி அவனுடன் கூடிவந்த சேனைகளின் பேரில் மலையருவி போல் ரத்தவெள்ளம்பெருக்கி அவனுடைய தலைமுதற் காலளவும் சல்லடைக் கண்களாக்கி விரபட்டத்தைப் போக்கி வில்லையுமுறித்து தேரையுமழித்து சாரதி குதிரைகளையுமொழித்து கவசத்தைக் கிழித்து கலங்கச்செய்யும் போது, காண்டீபனுக்கு முன்னிற்கமாட்டாமற் கசங்கிப்பயந்து காலோட்டங்கொண்டான். இப்பிரகாரம், துரியோதன மகாராஜனுடைய தம்பியானவன் மானம் போனாற் போகட்டும் பிராணனிருந்தாற் போதுமென்று உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடிப்போன பிற்பாடு செந்தாமரைக் கண்ணனாகிய திருமால் சயமலிந்து அர்ச்சுனனுடைய தேரைச்செலுத்தவே மழைசொரியு மேகம் போன்ற கிரீடியானவன் வாசாமகோசரமாய் வரிபெற்ற கூர்ங்கணைகளை வாரிச் சொரிந்து வாகினியைச் சேதிக்கும் போது, கரங்களெத்தனை, சிரங்களெத்தனை, உரங்களெத்தனை, கொடிமரங்களெத்தனை, நரம்புகளெத்தனை, எலும்புகளெத்தனை-கால்களெத்தனை யாயிரங்கள் - தோள்களெத்தனையாயிரங்கள் உடல்களெத்தனை கோடாகோடிகள்-குடல்களெத்தனை கோடாகோடிகள், நரன்செய்யும் யுத்தத்திற் - சரங்கள்கொய்தறுத்ததை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாது, மேலும் வீரபட்டங்களையுடைய யானைகளெல்லாங் கெட்டழிந்து பட்டன, அட்டதிசையும் அரைநொடியில் வலம்வருங் குதிரைகளெல்லாம் எரிந்து கரிந்து போய்விட்டன, வட்டமாகிய சக்கரங்களையுடைய நவமணியிழைத்த நீண்ட ரதங்களெல்லாம் பரிகளோட்டுஞ் சாரதிகளுடன் நெரிபட்டழிந்தன, விஸ்தாரமாகிய தசைகளும்நரம்புகளும் பிணங்களுடன்பிசறிக்கொண்டு கால்கொண்டோடும் ரத்தவெள்ளங்களிற்கலந்து களகள வென்னும் ஓசையுடன் சுழி சுழித்துச் சரிந்தன.

இவ்விதமாகத் தூசிப்படையை நாசப்படுத்தியகிரீடியானவன், மனமழன்றுயுத்தமுனையழிந்து ஓடாநின்ற துஸ்ஸாசனனைத் துரத்தித் தொடர்ந்து அடர்ந்துமுடுக்கி சகலதர்மமுந்தெரிந்தசத்தியவானே, தானீசனாகிய துரியோதனனுக்குத் தம்பியானவனே, போர்முகத்தில் நேராகநின்று போர்புரியாமல் புறங்கொடுத்தோடலாமோ, இதென்னபுண்ணியமா, அல்லதுபுருஷோத்தமமா நல்லதுஉலகத்திலுள்ளோர்யாவரும் உங்களை நிந்திக்கும்படியாய் நீ ஓடுகிறையே-இதனாலேதாகிலும் உனக்குலாபமுண்டா, நீ ஓடுகிறதினால் உன்னுயிர்தப்புமா, நீ பிழைக்கும்படியாகியவிதங்களுண்டா. அப்படியுண்டானாற்சொல்லுந் துஸ்வாசனா, சும்மாயிருந்த எங்களையழைத்து வம்புவிளைத்துச் சூதாடியநாளையில் இரும்பைப்பார்க்கிலுஞ் சிறந்த எங்களை-துரும்பைப்பார்க்கிலுந் துரும்பென்று அவமதித்துச்சொல்லிய கொடியகுற்றமாகியகோடாகோடி வார்த்தைகளையுமறந்து, வில்லாயுதங்களாற்-சொல்லும்படியாகியபோர்முகத்தில் வல்லமையழிந்து சொல்லாமற் கலங்கிப் புறமுதுகிட்டோடுதல் உன்பெருமைக்கடுத்ததோ, ஐயோ அப்பா, இராஜசபையிற் கொள்ளிபோற் றுள்ளிய உன்புஜபல பராக்கிரமத்தை எங்கேகொட்டிப்போட்டாய், எவ்விதத்திலொழித்துவிட்டாய் சொல்லும் ஏந்தலே, ஒருகுலத்திற்பிறந்த சகோதரனென்னும் அன்புகெட்டுஉலகத்திலிறைந்தஉயிரினத்தையும் அழிக்கும்படியாய் உனக்குமுன்பிறந்த துரியோதனன் முன்னாகமுடிந்து நீயும் அவனுக்குப் பின்னாகமுடிந்துபோகும்படியாய் குலத்திற்பிறந்த அரசர்முதலியயாவரையும்பேரறக்களையப்பிறந்த பெரும்பாவியாகிய உன்பிராணனுக்கு என்னசவுக்கியங்கிடைக்குமென்று ஓடுகிறாய் நீ எவ்வளவுதூரம் ஓடினாலுந் தப்

பிப்பிறைப்பைபா வைப்புருட்டிப்பேபா ஓடாதேஓடாதேயென்று இரண்டுவச்சிரக்கணையெடுத்துத் துச்சாதனனுடையமுதுகைத் துளைத்தோடும்படியாய்த்தொடுத்துக் கடுகடுத்துநின்றான் அர்ச்சுனராஜன்.

அப்போது துஸ்வாசனனென்பவன் அர்ச்சுனன் கொல்லுவானென்னும்பயத்தினால் திரும்பிப்பாராமல் தியக்கமும் மயக்கமுங் கொண்டு சேனாபதியாகியதேசிகனிடம்போய்ச் சேர்ந்து நாசிப்படையினின்றதுன்முகன் அடிபட்டோடியதும் அவனுக்குச் சகாயமாகத் தான்போயெதிர்த்ததும், தன்னுடையகதியும் இப்போர்ப்பட்டதென்று துச்சாதனன் சொல்லிக்கொண்டிருக்கும்போது நீலமேகச் சாமளவர்ணனாகிய நெடுமாலானவர் தங்களுக்குநேராகத்தேரிலிருந்த துரோணாச்சாரியருடையபக்கத்தில் தன்றேரைக்கொண்டுபோய்விட்டார்.

அந்தவேளையில்அர்ச்சுனராஜன் ஆசாரியனைப்பார்த்து இருகரக்கையுஞ்சிரத்திற்குவித்துவணங்கிச்சொல்லுகின்றான் - எங்கட்பிறையாகிய திங்கட்பிறைபோன்றதேசிகனே, எனக்குத்தாயும், தந்தையும், குருவும் மோக்ஷமும் என்தமையனாகிய தர்மராஜனும் தேவரீரும் சரியென்று ஒரேதன்மையாய் என்னுள்ளத்திற்கொண்டிருக்கின்றேன் கருணையையுடையதயாளுவே, சர்வஜீவதயாபரனளித்தசுப்பிரமணியக்கடவுளுக் கொப்பாகும்வல்லமையிற்சிறந்த ராசராஜனாகிய அசுவத்தாமாவும், யானும் ஒன்றென்று வேற்றுமையில்லாமல் தேவரீர்மனத்துட் கொள்ளவேண்டும் என்சற்குருவேயென்று நவவியாகரண பாண்டித்யமுடைய சூரியனைப்போன்ற அர்ச்சுனன்சொல்லித் துதித்து சுவாமீ தேவரீருடனெதிர்த்துயுத்தஞ்செய்யுந் திறத்தினையுடையவனல்லேன், மேலும், சிந்துராஜனைக்கொல்லவேண்டியிருப்பதினால் காலதாமதமாகாமல்செலவுகொடுத்துவிடவேண்டுந் தேசிகனேயென்றுதனஞ்செயன்கேட்கதுரோணாச்சாரியர் வெகுசீக்கிரத்திற்புன்னகைநகைத்து திடவானேவிஜயனே, ராக்ஷசப்படைக்குட்புகுந்துநாசப்படுத்துவதற்குச் சந்தோஷமறச்செல்லுஞ் சக்ராதரனைப்போல்நுழைந்து அணிவகுத்திருக்குஞ்சேனைகளெல்லாமிறக்கும்படியாக அடித்துபடைமுகம்புகுந்துபோவதற்குள்ளென்னைச்செயித்துப்போனாற்போகலாமல்லது என்னை இரக்சமாகக்கேட்டுக்கொண்டு நீ போகவுங்கூடாது உள்ளே நுழைவதற்கு நானுன்னையுயிருடன்விடவுமாட்டேனென்றுவைரமும் வீரமும் பலமும் நலமும்பெற்ற சல்லுக்கொப்பாகிய,விற்லேயினோக்குக்கனபடலங் கருகிப்பெருகும்படியாய் கணைகளைத்தொடுத்தார் துரோணாச்சாரியர்.

அதுகாலையில், அர்ச்சுனன் பார்த்து ஐயா! ஆசாரியனாகிய தேவரீர் பேரில் கையெடுக்கச் செய்கின்றதா காரணமேயென்று காண்டீபத்தைக் கலகலவென்றசைத்து நாருக்காகிய கடுஞ்சரங்களைத் தொடுத்துவிடுத்து நெடுநேரம்யுத்தஞ்செய்யும்போது சேனைகளெல்லாம்-அர்ச்சுனனுக் கெதிர்நிற்கமாட்டாமல்முனைகுலைந்தலைந்தழிந்துபறக்க அந்தச்சேனைகளின் மத்தியில்நின்றதுரோணாச்சாரியருக்கும் விஜயனுக்கும்விஸ்தாரமாகிய யுத்தம்நெருக்கி நடந்தது இவர்களுடைய தேரிற்கட்டிய குதிரைகளொன்றோடொன்று மேககர்ச்சிதம்போலிரைந்துகனைக்கவும் மலையுடன்மலைமலையுந்தன்மைபோல்கொடிகள்கட்டியதேர் குலுங்கிச்சுழலவும், முஷ்டிநிலையாலும் சைப்புஷ்டிநிலையாலும், மொய்ம்பாகிய பலத்தினாலும், அன்பாகிய நலத்தினாலும், வளைத்தவில்நிமிராமல்தொடுத்தபாணங்குறையாமல் மனமிளைக்காமல்வாட்டமாய்க் களைக்காமல் ஒருவருக்கொருவர் - கிட்டநெருங்கிநெட்டபசுழியாலும், மூட்டவிட்ட சணைகளாலும், ஒன்றோடொன்றுமுட்டிக்கொண்டு அஷ்டதிசைகளும் கெட்டிரியும்படியாகியதல்லாமல் இவ்விருவர்பேரிலும் பாணம்படாமற் றட்டிக்கொண்டார்கள் - இதன்றியும், இவர்களுடையஇரண்டுதேரும் இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத்திரிந்து முன்னோட்டம் பின்னோட்டமாகமுடுக்கிஇருவர்கரத்திலும்பிடித்தவில்லினின்றுபுறப்படும்வாளிகள்ஒருகோடி இருகோடி அறுகோடிவரவும் இரண்டுமேகமெதிர்த்துசமமாய்ப்பொழியுமழையைப்போல் அஸ்திரங்களைப் பொழிந்து ஆக்ரமித்து பராக்கிரமங்காட்டிஒருவருக் கொருவரொப்பாகநின்றாயுத்தம்பண்ணினார்கள்.

தேவர்முதலிய மூவருமயங்க நாகமுதலியலோகமென்னுங்கலங்க சாகரமுதலியவெழுந்தயங்க சக்ரவாளகிரியுங் குலுங்கதட்சடபடபடவென்னுஞ் சப்தத்துடன் சண்டைசெய்து வரும்போது சாக்ஷாத்கார சாரதியானவர் தனஞ்செயனைநோக்கி போர்புரியும்பெரியவில்லைத்தாங்கியபுகழ்வீரா திரிபுவனசூரா இப்போதுநாமிருக்குமிடத்துக்கும் சயிந்தவனிருக்குமிடத்துக்கும் இருபதுயோசனை தூரமிருப்பதால் நீயெந்தக்காலத்திற்போய்ச் செயிக்கப்போறாய் வீண்பொழுதுபோகுதென்றுசொல்லி மனந்தாளாமல சுவேதவர்ணம்புரவியைத்தட்டிமுடுக்கி துரோணாச்சாரியருடைய தேர்குலைகுலைந்துபோம்படி கிட்டமுடுக்கியிடித்து கொடிப்படைக்குள்ளாகத் தேரைச்செலுத்திக்கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னே-இந்திரஜாலமாயிதுவென்னும்படியாய் எதிரில்நின்றவிஜயனுடைய ரதத்தைவாயுகதிகொண்டவேகத்துடன் விண்ணவர்மயங்கக்கண்ணுங்கெட்டாமற்கொண்டுபோனார் மேகவண்ணனாகியகண்ணனானவர்.

அப்போது துரோணாச்சாரியர்பார்த்து ஆர்ப்பரித்துத் தேர்த்து தன்றேரைச்செலுத்திப்பின்றொடர்ந்து வளைத்து ஆ ஆ நல்ல காரியஞ்செய்தனை அர்ச்சுனா திருடனைப்போலோடிவந்துவிட்டாய் இதென்ன நிரமென்று மண்கொதிக்க விண்கொதிக்க கண்கொதித்து மனமழன்று மந்திரவாளிகள் சந்திரவாளிகள் இந்திரவாளிகளைத் தந்திரமாகவிடுத்தெதிர்த்த ஆசாரியனைத்திரும்பிப்பார்த்து விரும்பிப்பணிந்து என்னையனே தேவரீருடனெதிர்த்து யுத்தஞ்செய்யும்பக்குவந்தேவர்களாலுமாகாதென்றால் நானெம்மாத்திரம் சுவாமீ தேரீருடைய செந்தாமரைக் கமலம்போன்ற திருவடிகளைச் சிரத்திற்றரித்து சீர்பெறும் பாடியாய்க்காத்திருக்கின்ற அடியாதவனுனையால்ஆண்டவனே இன்றுமுப்பது நாழிகைக்குள்ளாகசயித்திரதனைவென்றுவருவேனென்றுநான்கூறியசபதமொழிக்குப்பழுதுவராமல் ஆசீர்வதித்தனுப்பவேண்டும் அருட்குருவேயெ

ன்று அர்ச்சுனன் துடிக்க-ஆசாரியனவர்குலுங்கநகைத்து ஐம்மாத்திரக்குறையையுநினைத்து பாணப்பிரயோகஞ் செய்யவந்த கோபமாறி பார்த்தபவென்னும் பக்குவமாகியவிக்கிரமனுக்குப்போய்வாவென்றுவிடைகொடுத்துப் போனார்சேனாபதியாகிய துரோணாச்சாரியர்.

அப்போது, பரமேஸ்வரனாற் பாசுபதாஸ்திரமும் சத்துருக்களைச் செயிக்கும் படியாகிய வரங்களும் பெற்றபற்குனன் படபடாகாரத்துடன் தேரைச் செலுத்திப் படைகளைச்சேதித்துப் புகும்போது காம்போஜன் முதலாகிய காவலர்வந்து தடுத்துக்கணைகளை விடுத்துச்சண்டைசெய்யுங்காலையில் - காண்டீபனும் அவர்களனைவரைத் துகாலாக்கினிக்கணைகளாற் கருக்கி நிறங்குலைந்திருக்கும் படியாய்ச் சுசர்மன் அதனாற் கடும்போர்புரிந்து காண்டீபனுடையகணைக்குத்தாளமாட்டாமற்பயந்தொதுங்கியுள்ளங்கூசிப் போனார்கள்.

அப்பால், நாற்புறத்திலு நெருங்கிநின்றநால்வகைச் சேனைகளையுங்கொன்று நடுநடுங்கும்படியாகவென்றுபேரலிபாகநின்றபிரபலவீரரைமடக்கிப்போர்புரிந்துநெருக்குநெருக்கவந்து யுத்தமுனைகடோறு முந்திப்போர்செய்யாநின்ற மன்னர்மன்னர்களுடைய வில்லும்வேலும்வாளும் சூலமும் அன்றுபின்னப்படும்படிக்குச்சிலிமுகங்களாற்சேதித்து அப்பால், நடக்குந் தனஞ்செயன் இன்னதன்மையையுடையவனென்று சொல்லவல்லவரொருவருமில்லையென் றுரைக்கும்படியாய்வென்றிகொண்டுவரும்விஜயனைக்கண்டுகிருதவன்மனும் கிரீடப்பிரகாசமுடையமன்னருமெதிர்த்துப்போராடும்போதுபன்னகசயனனாகிய பார்த்தசாரதியானவர்பற்குனனைக்கோபித்துஇவனுடத்திலொருநாழிகையாய்விட்டது இன்னமென்ன தாமதமாயிருக்கின்றாய் அர்ச்சுனா-வேறுயோசனைசெய்யாமற் பின்னமாகும்படி கொல்லென்று பெருமானுரைக்க அவர்சொன்ன சொல்வாய்விட்டு வெளிப்படுவதற்கு முன்னமேசுசரந்தொடுத்து கிருதவன்மனுடைய மார்பைக்கிழித்தான் அந்தச் சுசிசரம் பட்டபார்த்து துடிதுடித்துச் சோபித்துத்தேரின்மேல் விழுந்து மூர்ச்சைபோன கிருதவன்மனைக் கண்டு பச்சைமாலாகிய பரந்தாமன் உச்சைஸ்ரவசுக் கொப்பாகிய சுவேதவாம் புரவி பூட்டிய தேரை முடுக்கி விடுக்கவும் தேருருளைகளால் வெகு சேனைகள் கெட்டழிந்து துடிக்கவும் அர்ச்சுனன் - அநேகம் பாணங்களைத்தொடுக்கவும், அதனாலெண்ணில்லாதவெள்ளச்சேனைகளழியவும்ரெத்தவெள்ளம்வழியவுஞ் செய்து எந்தெந்தப் பாணங்களை யெவரெவர்விடுத்தார்களோ அந்தந்தப் பாணங்களை அவரவர்களுக்குத் தொடுத்து மார்பு சிதையவும் தோள்கள்குறையவும் வயிறுகிழியவும் கரங்களழியவும் சிரங்களொழியவும்சாரத்துலுங்கவும் இருநயனங்கலங்கவும் எலும்புகளொடிந்துசிந்தவும் நரம்புகளறுந்து தொங்கவும் வாய்துடிபடவும்பேய்கிணைஞ்சுடவும்-இருபதங்கள்முறியவும்பொருமதங்கள்பறியவும் இலக்கணக்கலைகளைச்சொல்லக்கணக்கில்லாமல்கலக்கமுற்றழிகர அலக்கழித்தத்தனன் அர்ச்சுனராஜன்-அந்தச் சேனைவீரர்களெல்லாரும் கண்கலக்கங்கொண்டு கால்சாய்ந்துவெ கமுற்ற குதிரையிறந்து அளவில்லாதயானை குறைந்து கொடிகள்முறிந்து குடைகள்தயிந்து தேரொடிந்து சாரதிமுடிந்துதனுவுமொடிந்துசகலருமிறந்துபோகும்படியாய்ஜாடிக்கொண்டு சமுத்திரஜலத்தைக்கிழித்தோடும்புகைக்கப்பலைப்போல்சதுரங்கச்சேனைக் கடலைக்கிழித்துக்கொண்டு வராநின்றதனஞ்செயனைக்கண்டு தேவர்களெல்லாரும் ஜெயங்கூறிதுதித்தார்கள் அந்தவேளையில்: அர்ச்சுனன்சரத்தால் அடிபட்டுவீழ்ந்த கிருதவன்மனானவன் மறுபடியுந்தேறியெழுந்து தெழித்துச்செழித்து தேரேறிவந்து அர்ச்சுனனுக்குச் சங்காரசூத்ராளாகியதிவ்வியமணமாலையணிந்த உத்தமோசன் உதார்மனென்னும் இருவரையும்வளைந்துக்கொண்டுபெருவரைபோலொத்ததேருடன் தேர்தாக்கி கொடியவேகமுங்கோபமுங்கொண்ட அக்கினியாஸ்திரத்தால் மலைந்து இரண்டுநாழிகை வரைக்குந் தகுதியானயுத்தஞ்செய்தான்.

இப்படியாக யுத்தம்பண்ணிய கிருதவன்மனைப்பார்த்து கிரீடிமுனைந்துஎண்டிசைமண்டலம் விண்டழியும்படி அண்டமகண்ட மலைந்ததிரும்படி கொண்டலங்கணைஆகண்டலன் கணைபுண்டரீகக்கணைமுதலியபோரம்புதொடுக்க அந்தக்கூரம்புகளானது வந்துவிழுந்துகிருதவன்மனுடலைக் கெல்லிக்கொல்லத்தக்க தன்மையோற்றமிக்கும்போதுகிருதவன்மன்மனமடிந்துமாழ்கிவருந்தி இளைத்தோடினான்.

அவனைக்கண்டு மனந்தாளாமல் வருணராஜகுமாரனென்னுஞ் சுதாயுவானவன்கோபித்தெழுந்து குவிந்தசேனைக்கூட்டத்துடன் வந்துவில்வளைத்து நாணேற்றிட்டு குணத்தொனிபண்ணிவிகங்காஸ்திரம் விடங்காஸ்திரம்மிருகாஸ்திரம்மேகாஸ்திரம் நாகாஸ்திரம் மோகாஸ்திரம்விருக்ஷாஸ்திரம்வாய்வாஸ்திரம்தெய்வாஸ்திரம்வருணாஸ்திரம் அருணாஸ்திரமுதலியவாளிகளைவிடுத்து யாளியெனவடுத்து செற்றவர்மகிழ மற்றவர்புகழ கற்றவர்களிக்க நற்றவர்நடிக்க மத்தங்கமதமாப்போல் சித்தங்கலங்காமல் யுத்தம் பண்ணினான்.

இந்தப்பிரகாரம்யுத்தத்திலழிவில்லாவரம்பெற்றவீரன் வந்தெதிர்த்துப் போர்செய்யுங்காலையில் வீராதிவீரிற்சிறந்தவிஜயன்பாராதியண்டமுகடுவரைக்கும் நிரம்பப்பாணங்களைத்தூவினான் இவ்விதமாக அர்ச்சுனன் மருந்தவேதமந்திர பலங்கொண்ட வெவ்வியபாணங்களையெல்லாம் முனைமுறிய அடித்துப்பூமியிற்றள்ளி உழுதுசேறுகாத ஏரிப்பள்ளங்களில்நற்றுவிடவிதைத்த செந்நெல்விதையைப்போல் சங்கோப சங்கமாய்ப் புங்கானுபுங்கமாய்புங்கவங்களைப்பிரயோகஞ்செய்துதனஞ்செயன்கணை தன்பேரிற் படவொட்டாமற் றடுத்து பிரமாஸ்திரம்ருத்திராஸ்திரம் வருணாஸ்திரம் நாராயணாஸ்திரமுதலிய அஸ்திரங்களைத் தொடுத்து அர்ச்சுனனைக் கலங்க வடித்தான் சுதாயுவானவன் அப்போது தான்விடுத்தபாணங்களெல்லாந் தலையழிந்து விழுந்ததன்மையைத் தனஞ்செயனேக்கிதாஷ்டீகத்துடன் கணகணவென்று காண்டீபத்தைத்தெறித்து கூர்மையுங் கொடுமையுங் கடுமையுங் கொல்லுதலையுங் குடியாகக்கொண்ட கொடியகணைகளை நேமித்துப் பூசித்து உபசரித்து வணங்கியெடுத்து ஒன்று-ப

தந-நூறு-ஆயிரமென்னும் பாணங்களைச்சுதாயுவின்தேகத்தி விழலைப்போர் பொருந்தும்படிக்கு விடுத்தான்.

தனஞ்செயன் றொடுத்த சகலாஸ்திரங் களையும் சுதாயுவானவன் தன்னுடைய பாணங்களினாற் றரிக்கவொட்டாமற் றரித்துவிலக்கும்போது வியர்சுவெறித்து கண்விழித்து முகஞ்சுளித்து வெருளிமேற்கொண்டு இடிக்கணை-வளரிக்கணை-இலைக்கணை எழுக்கணை-கொடிக்கணை - கமலாஸ்திரம்-விமலாஸ்திரமுதலிய அஸ்திரங்களைப்போக்கி அந்தச் சுதாயுபிடித்திருந்த பலம்பொருந்திய வில்லையொடித்தான், பார்த்தனானவன். சுதாயுவானவன் ஒடிந்த வில்லை விட்டெறிந்துப்போட்டு தன்னுடைய முகஞ்சுருங்க தேகங்கலங்க ஸ்திரம்பெற்ற மார்பு குழுங்க மனந்தடுமாற வாய்மடித்துப் பற்கடித்து மகாகோபங் கொண்டு ஒரு தண்டாயுதத்தை யெடுத்துப் பூசித்துத் தனஞ்செயன்மேலெறிந்தான், அந்தத் தண்டாயுதமானது மலைகளெல்லாங்குலுங்க மண்டலமெல்லா மயங்க உகாந்த காலப்பேரிடிபோல்விரைந்து விரைந்துவரா நின்ற தண்டாயுதத்தைச் சர்வலோக சரண்யனாகிய சாரதியானவர் கண்டு எழுந்து நின்று லோகாலோகங்களெல்லாங் கலங்கும் படியாய் ஸ்ரீதேவியும் திருமணிப்பணியும், திருத்துழாயு மணிந்த திருமார்பிற்றாங்கினார்.

இந்தப்பெரிதாகிய போர்முகத்தில் விஜயன் பிழைக்கும்படியாய் அருள்கூர்ந்து தன்னுடைய மார்பிற் றாங்கிய வுடனே அர்ச்சுனன் அழிந்து போவா னென்று ஆசை கொண்டெறிந்த சுதாயுவின் முடிதுளங்கி தன்னைத்தான் மாந்து தலைமுறிந்து மண்மிசைவிழ்ந்து விண்மிசைவாழ்ந்தான், இந்த ஆச்சரியத்தைக்கண்ட தேவர்கள்-முனிவர்கள்-எல்லோரும் பூபாரந் தீர்க்கவந்த போர்விஜயப் புண்ணியன்பேரிற் சிவந்த கர்ப்பகப் பொன்மலர் சொரிந்து குந்திமைந்தனுக்குச் சாரதியாகிய கோவிந்தனானவர் பல்லாண்டு பல்லாண்டாய் வாழக்கடவது, எம்முடன் கூட இவ்வுலகம் பிழைக்கும்படியாய் அவதரித் தருளிய நாரணனென்னும் நாதன்வாழக்கடவது நீருண்ட காளமேகம்போன்ற நெடுமாலாகிய நீலமேனியன் வாழக்கடவது வசுதேவமைந்தனாகிய பரவாசுதேவன் வாழக்கடவதென்று யாவரும் வாழ்த்திப்போற்றி யேத்தி மகிழ்ந்து புகழ்ந்து துதித்தார்கள்.

இவ்விதமாகத் தேவர் முதலாகிய யாவருந் தொழுது தோத்திரஞ்செய்யு முபாயத்தை ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியினுடைய பிராணனுக்குப் பிராணனான தனஞ்செயன் கண்டு அதிசயங்கொண்டு கொண்டல்வண்ண னென்னும் கோபாலனைப் பார்த்துப்போற்றி எங்கள் குலதெய்வமாகிய மாதவனே என்னுட னெதிர்த்து யுத்தஞ் செய்த சுதாயுவானவன் என்பேரிலெறிந்த கொடுங்கதையை தேவரீர் தமது திருமார்பிற் றாங்கவும் கதையைப் பிரயோகஞ்செய்த சுதாயு செட்டழிந்து சாகவுநேரிட்ட அபாயமாகிய இந்த வுபாயத்தை அடியேனறிந்து கொள்ளும்படிக்குத் திருவருள் புரியவேண்டுந் திருமாலே யென்று கேசவற்றோழன் கேட்க, கருடகேதனன் சொல்லுகின்றார்.

கேளும் அர்ச்சுனா, இயாவருங் கொண்டாடாநின்ற வாதையென்னுந் தாய்க்கும் சமுத்திரராஜனாகிய வருணனென்னுந் தந்தைக்குப் பிள்ளையாகப்பிறந்த சுதாயுவென்பவன் தன் றந்தையாகிய வருணனைக் குறித்துத் தவஞ்செய்து சகலவரமும் பற்பல வாயுதங்களும் பெற்றான் அந்த ஆயுதங்களைக்கொண்டு அமர்செய்ய வருவானாகில் அலகில்லாப் பலத்துடன் யாவரையும் வென்று ஒருவராலும் உயிரழியாத உத்தமவரத்தைப் பெற்றான் ஆனாலிவன் அழிவ தெவ்வண்ணமென்னிலோ போர்புரியும் போது இவன்விட்ட ஆயுதம் நிராயுதன்பேரிற் படுமேயாகில் தனக்குத் தானே யழிந்து போகும்படி யாகிய பிருதிவரம் பெற்றிருந்தான் அந்தக்கதை உன்பேரிற்பட்டால் நீ யெப்படியு மிறந்துபோவாயென்று அந்தரகஸ்ய உளவுதெரிந்த நான் எதிர் நின்று என் மார்பிற் றாங்கிய வுடனே அவனுயிரழிந்து அந்தகனுலகடைந்தானென்று அநேகமாகிய ஆத்மகோடிகளாய் அவைகளுக்கு ஆதிமூலமாய் அகப்பற்று புறப்பற்றுமுதலிய மமகாங்காரங்களை விடுத்து அடுத்தாசர்களுக்கு நேசமாகிய விசுவாசமா யிருந்து அருந்துயர்போக்கி ஆண்டிரக்ஷிக்கும் பாண்டவ சகாயனாகிய ஐயனுரைக்க அப்பால் ஆகாயமளாவிய வாகாகிய ஒருமலையானது சிகரமுறிந்து அடிவேர் தறிந்து பறிந்துவிழுந்தா லெப்படியோ அப்படிபோல் சுதாயு வென்பவன் உடல்தறிந்து தலைமுறிந்து பூமியில் விழுந்தான் அவனைப்பார்த்த யாவரும் மனங்கலங்கி வியாகூலப்பட்டு வருத்தமடைந்து சுவாமி செய்த தந்திரத்துக்கு ஆச்சரியப் பட்டார்கள்.

அந்தவேளையில், காம்போஜனென்னும் - சுதக்ஷணராஜன் முகம்புழுங்கி அகங்கலங்கி ஜகங்குலுங்கும்படியாய் கையுடன் கையறைந்து அர்ச்சுனன்செல்லுகின்ற முனையிற்புகுந்து வழிமடக்கி அழற்கணை-அரன்கணை-அயன்கணை-அரிக்கணை-அரவக்கணை அக்கினிக்கணை முதலாகிய அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்து அருமையாகிய அமர் புரிந்தான் இப்படிக்கு அவன்றொடுத்த கணைகளெல்லாம் அர்ச்சுனன் பேரிலும் சாரதிமுதலிய தேரின்பேரிலும் வந்துவிழுந்து அங்கா மெழுந்து பந்தம்போற் கொழுந்துவிட்டெரிவதை விந்தைதங்கிய தோளுந் தெளிவாகிய திடச்சிந்தையுங்கொண்ட சுவேத வாகனன் கண்டு மனங்கொதித்துச் சீறி வாயுக்கணை நூறு-தேயுக்கணை நூறு மாரிக்கணை நூறு-வாரிக்கணை நூறு-வசனக்கணை நூறு இவ்விதமாகிய பற்பல அம்புகளை வகை தொகையின்றி மாறுமற்றொடுத்து அவன்றொட்ட வாளிகளையெல்லாஞ் சிதைத்துவிடுத்து அவனுடைய தேர்-குதிரை சாரதி முதலாகிய வெல்லாம் மருட்சியடைந்து மாயும் படியாய்ச் செய்து திரிமூர்த்தி சொரூபமாகிய மூன்று பாணங்களை யெடுத்துத் தொடுத்து அவன் மார்பிற் றைக்கும்படிக்கு விடுத்தது மல்லாமல் அவனுயிரை வாங்குவதற்கு ஒரு பிறைமுகக் கணையையும் பூசித்துவிட்டான் அந்த அஸ்திரம்பட்டு அலக்கழிந்து கெட்டு வெருண்டு மருண்டு உயிர்விட்டு விண்ணளாவிய ஓர்மலையானது மண்ணுலாவிய வாயுவால் விழ்ந்ததைப்போல் மண்மீது விழ்ந்து மாய்ந்

தான் அவனிறந்ததைக்கண்டு சுதக்கணனைப் பார்க்கிலும் நூறுபங்கதிகமாகிய பிள்ளைகளில் சதாயு வென்பவனும் வெற்றிவீரங்குறையாத நயுதாயு வென்பவனும் முனையில்முனைந்து முடிமலர்புனைந்து போர்புரிந் தார்கள்-அந்த வேளையில் இந்திரகுமாரனாகிய கிரீடியெதிர்ந்து பிறைமுகாஸ்திரத்தைப் போக்கி ஒருவர் போனவழி யொருவர் போகவொட்டாமலடித்து உடல்வேறு தலைவேறுயுடைத்துத் தள்ளினான், அவர்க ளிருவரு மிறந்ததைக் கண்டு துரியோதனனுடைய சேனைகள் பெருமூச்சுவிட்டு துறந்தியங்கி முன்னிட்ட வண்ணமே பின்னிட்டார்கள் உடனே இறந்துபோன சுதாயுவின்குமாரனாகிய நியுதாயு வென்பவனும் நயுதாயுவின் பிள்ளையாகிய தீர்காயுவென்பவனும் இரண்டுபேரும் இரண்டுதேரும் இருண்டகாரும் திரண்டதோளும் மருண்டபோருமா யெதிர்த்துப்-பற்பலவாளிகளைச் செலுத்தினார்கள் அப்போது அழகாகிய போரிவினையுடைய அர்ச்சுனன் அந்தப் பிள்ளைகள்விடுத்த பாணங்களைக் கொள்ளைகொள்ளும் படியாய் முள்ளுக்கணைகளை வெள்ளமாகப்போக்கி இரண்டு கமலாஸ்திரமெடுத்து இதயத்தில்வணங்கி யுபசரித்து பிரணவ மந்திரங்களால் உச்சாடனஞ்செய்து ஓ ஓ, வீரர்களே உங்கள் தகப்பமார் போனவழியே நீங்களும் போய்ச் சேருங்களென்று தொடுத்துச்சுழித்தான் அக்காலையில் அவர்களிருவரும் ஒருக்ஷணத்தில் ரணகளத்திறப்பட்டார்கள்.

இதுகளையெல்லாம் ராஜாதிராஜனாகிய துரியோதன மகாராஜனோக்கி கலிங்கதேசாதிபனை யழைத்து இந்த வேளை உன்விற்படை விறற்படையுடன்போய்ப் போர்புரிய வேண்டுமென்று துரியோதனன் சொல்லியனுப்ப அப்படியே கலிங்கதேசத் தலைவராகிய அளவிறந்த மன்னர்களும் கட்டுத்தறியைமுறித்து எட்டுத்திசையும் வெறித்து காந்துங்கண்ணிற் கனலை நிறைத்துக் கடுங்கோபங்கொண்டிராநின்ற மும்மதக் கரடதட யானைப் படைகளை அநேகமலைகள் பெயர்ந்து வருந் தன்மையைப்போற் கூட்டிக்கொண்டு அவனிமாதுமுதலிய ஆதிசேடனு நடுங்கும்படிக்குவந்து எதிரொருவ ரில்லாமற்செல்லும் குந்துசிங்கம்போன்ற அர்ச்சுனனைவளைத்துச்சண்டைதந்தார்கள்.

இதன்றியும், யவனதேசாதிபர்-புவனதேசாதிபர்-சோனக தேசாதிபர்-கானக தேசாதிபர் - பப்பர தேசாதிபர்-உப்பார தேசாதிபர் - மிலேச்ச தேசாதிபர் - துளுவ தேசாதிபர் - சீனதேசாதிபர் - இவ்விதமாக அளவிறந்த பற்பல தேசாதிபரும் வந்து ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியனுந் தடுமாறிப் போம்படியாய் வில்லைவளைத்து ஷ்டங்காரம்பண்ணி நாநாவிதக் கணைகளைச் சோனை மேகம்போற் சொரிந்தார்கள்-அதுவேளையில் வேகம் பொருந்திய சுவேதவாம் பரிபூட்டி வேணுகோபால னோட்டிய அநுமக்கொடி நாட்டிய தேரிலமர்ந்து வாட்டிய அர்ச்சுனன்கண்டு புன்னகைகொண்டு பிரசண்ட வாய்வாஸ்திரந் தொடுத்துப் பூசித்துவிட்டான் - அந்த அஸ்திரமானது சமுத்திர ஜலத்தை வாரியிறைத்து கானத்தருவை வேருடன்பறித்து சகல மலைகளையும் அடிபோடுசாய்த்து சர்வசம்மாரகாலச் சூறாவளிபோ லிரைந்துவந்து சுழற்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சுபடும் பாட்டைப்போல் அந்தப் பரிவாரமுதலிய சேனைகளை யெல்லாம் பறக்கடித்துப் பாழ்படுத்தியது அதனால் கொம்புகள்முறிந்து துதிக்கையறுந்து மத்தகம்பிளந்து கால்துணிந்து உடல்கிழிந்து குடற்சரிந்து சிரங்களற்றுச் சில சிந்துரங்களிறந்தன, மார்பொடிந்து தலைதறிந்து கைக்கொண் டிருந்த விற்படை-வேற்படை-வாட்படை-கதைப்படை முதலிய ஆயுதங்களெல்லாம்போய் பெருங்காற்றினா லிலையுதிர்ந்து தலைமுறிந்த மரங்களைப்போல மிலேச்சர்முதலிய சேனைகளெல்லாரு மடிந்தார்கள்-இஃதன்றியும், எண்ணிறந்தபேர்கள் பொடிப்பொடி யாகும்படியாய் கொடிபெற்ற முடியினையுடைய இந்திராஸ்திரந் தொடுத்தகாலையில், நாற்படைகளும் வேற்படைகளும் காற்படைகளும் போர்ப்பட்டழிந்து வர்ப்பட்ட வீரர்கள் முதலிய பேரும் பேர்ப்பட்டொருத்தார்கள்-இறந்தவர்போக இருந்தவ ரெல்லாம் கரையழிந்த ஏரிநீரைப்போல் அச்சமுற் றோடும்படியானதைக்கண்டு ஆகாயத்தில் வேடிக்கைப் பார்த்திருந்த தேவர்களெல்லாருநகைத்தார்கள்-இவ்விதச்சமயத்தில் இன்றுமுப்பதுநாழிகையும்சிந்துதேசத்தலைவனைகாக்குவோமென்று சபதங்கூறிகோடையிடியிடிப்பதைப்போல்குடமுழாப்பேரிகையுத்தபேரிகைரணபேரிகைஜெயபேரிகைமுதலியவாத்தியமுழங்க, ஓசையானது ஏழுகடற்போற் புரண்டுவரும்படியாகிய சேனாசயினியங்களுடன்பூமிகுலுங்க, திசைகளடுங்க ஆதிசேடன்முதலாகியபாம்புகளெல்லாம்நெளித்தொடுங்க அண்டகடாகம் அதிரும்படிக்குடுண்டுண்டென்றுபேரிகைமுதலாகியவீரப்பறைகொளித்துமுழங்க, பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர்மன்னர்-மண்டலீகரும்திரண்டுஒருமுனையாகஎதிர்வந்துநின்றுசூரியனைச்சூழந்தோன்றும் ஊர்கோள்வட்டம்போல் பற்குனனைவளைத்துபங்கயகணை பாரந்தாமன்கணை அறுமுகக்கணைமுதலிய சால பாணங்களையு நிறைத்தார்களப்போது அர்ச்சுனன்தனது காண்டீபத்தையெடுத்து நிறுத்தி இழுத்துவளைத்து குணத்தொனிசெய்து தேர்ந்துதெரிந்து தெளிந்ததிசைமுகனாஸ்திரங்களையெடுத்து சந்தனாக்ஷதை பத்ரபுஷ்ப தூபதீப நைவேத்தியங்களுங்கொடுத்து ஒவ்வொருவருக்காயிரமாயிரங்கணைகளாகச் சிரமுதற்காலளவும்நெரிபடும்படி தொடுத்துவிடுத்து, கொடி குடை-சிகரம்-குதிரைகள் - சக்கரங்கள்-குற்றுக்கால்கள்-சாரதி-அஞ்சூராணிகள், ஆப்புகள்முதலிய தேருறுப்புகளையழித்து யானைக்கூட்ட முழுவதும், குதிரையினங்கள்யாவும், பதாதிப்படைகளடங்கலும், ஒருநாழிகையில், விண்டதுண்டகண்டம் ரெண்டுரெண்டாய் துணிபட்டொழிந்து போம்படி போக்கி மண்ணோடுமண்ணாக்கி, தேர்களிலும் குதிரைகளிலும் யானைகளிலும் ஏறிவந்த தீரவீரானுடைய வாகனங்களையும்போக்கினான், அதனாலவர்கள் இரண்டுபாதங்களுஞ் சேவப்பேறும்படியாய் வாடியோடி அயர்த்து அகாடி சோர்ந்துவியர்த்து வியாகூலங்கொண்டு கையிற்பிடித்த ஆயுதங்களையுமிழந்து போர்புரிந்தவேஷ்டையால் தாகவிடாயுந் தேகவிடாயுங்கொண்டு தாளமாட்டாமல் காளமேகம்போன்ற யானைக்கூட்ட மறைப்பில்மறைந்து வீழ்ந்தோடி ரெத்தவெள்ளமடுக்களிற்முழ்காடி ஆழ்ந்தமுழ்கி யெழுந்

துவாழ்ந்தவாழ்வை நினைத்துவருந்தி கழுகுபருந்து கூளி
கள் பக்ஷிகள் சூழ்ந்துபறக்காநின்ற ரக்கைகிழற்பந்தலி
லொதுங்கி இளைப்பாறிப்பதுங்கி திசாதிசையிற்சென்று
வதங்கினார்கள்.

இன்னுஞ்சிலபேர்கள் பயந்து புறங்கொடுத்தோடாமல்
மனமிளைத்து வாடாமலநின்றவிடத்தில் நிலைத்து நின்று
மானம்பெரிதல்லது பிராணன்பெரிதல்லவென்று யுத்த
ஞ்செய்யாநின்ற வீரநிராளெல்லோரும் அமர்மலைந்துகு
லைகுலைந்து உடல்வருந்தி மடிந்துபோனார்கள், மன்னர்
மண்டலிகர்முதலிய சேனைகளெல்லோருந் தங்கள் தங்க
ள் எஜமான்முன்னெதிரில் வீரவசனங்களைப்பேசி விருது
களும் வெகுமதிகளும்பெற்று அர்ச்சுனனுக்கெதிரிலோ
டிவந்து அவசரமாய்மடிந்து இடிந்துபோனார்கள் வெந்
தினப்பொறிபறக்கும் கோபக்கண்களையுடைய யானைக்கு
ன்றுகளெல்லாங் குடற்சிந்திறந்தன ஒப்பதுவித நாவ
கதிகளையுடைய குதிரைகளெல்லாம் அஞ்பது விதமாய்
ஒருங்கேயிறந்தன. இன்றையத்தினமிறந்த சேனைப்பெரு
க்கத்தை இவ்வளவென்று யானெப்படி சொல்லுவேன்,
ஆயினும் ஒருவிதக்குறிப்பாகச்சொல்லுகிறேன் கேளுமர
சனே, முதல்நாள்யுத்தமுதல் நேற்றுப் பதிமூன்றுநா
ள்வரையிலும் செய்துவந்தயுத்தத்தில் இறந்தபேர்களெ
ல்லோரும் இன்றையத்தினம் இறந்தவர்களுக்கு உறையி
டப்போதாது (உறையிடலாவது யானை குதிரை ரதமுத
லியவைகளில் நாற்றுக்கு ஒன்று உறையென்றலக்கக்கு
றிப்புவைத்தாலும் இதுவரையிலுமிறந்த சேனைகள் இன்
றிறந்த சேனைகளுக்குக் குறையுமென்பது கருத்து.)

இந்தப்பிரகாரம் கோபந்தணிந்து கொடுங்கணைபாற்று
ளிந்து வீழ்க்க யானையினங்கள் குதிரையினங்கள் பதா
தியினங்கள் ரெத்தவெள்ளத்தில் மிதக்கவும் அதன்பேரி
ல் தேர்ச்சக்கரங்களோடவும், சத்துருக்களைக்கொல்லும்
வயவர்களுடைய உயிரிழந்த உடலானது தலைகுலைந்து க
லைகுலைந்து அலையிலசைந்து சுழலமிட்டு வேகங்கொண்
டாடவும், இவைகளையடித்துக்கொண்டோடிய ரெத்த ஆ
றுகளானது சமுத்திரத்தோடெதிர்த்துச் சண்டைசெய்
யப்போனதைப்போற் கூடிக்கலந்தது, அநேகங்கோடித
லையறுந்த முண்டங்களாடின, கழுக்கூட்டங்களினையும்
ஓசைகளானது சப்தமேகமுழக்கம்போலிருந்தன, அல
கை சோகுமுதலிய பசாசகணங்கள் இரண்டுகைகளையுங்
குவித்துக் கும்மியடித்து ஆர்ப்பரித்தவுகள், செக்கச்செ
வேலென்று பூமிசெவந்ததன்மையானது யுத்தகளமென்
னும் பெண்ணானவள் செவப்புவஸ்திரஞ்சரித்துக்கொண்
டதைப்போலிருந்தது, அதுகாலையில் போர்த்திறங்கொ
ண்ட அநேகம் வல்லவர்கள் மூண்டுவந்து போர்புரிந்
து ஆவிநீத்து அழியும்படியாய்ப் பலம்பொருந்தியபாண
ப்பிரயோகஞ்செய்யாநின்ற பற்குனனை வீரகண்டைதரி
த்த விந்தரன் விந்தனென்னும் பேர்புனைந்த விஜயத்திற
ல்வீராகிருவர் விரைந்தெதிர்வந்து அர்ச்சுனனுடன்சண்
டைசெய்தார்கள், அவர்களைக்கண்ட அர்ச்சுனனானவன்
நெடுநேரம்வைக்காமல் ஒருநிமிஷமாத்திரத்தில்முன்னே
ானிய விந்தரனை மூன்றுவடிக்கணையால் முடித்து அப்பா

ற் முந்தவனுகையால் முன்னேபோவென்று முறையாய
னுப்பினான் அதைக்கண்ட பின்னோனாகிய விந்தனென்ப
வன் பெருமிதப்போர்விளைத்து ரதமுதலியசாரதிகுதிரை
களையுமிழந்து தனுப்பாணங்களும்போய் பூமியிலநின்று
பெருங்கதைகொண்டு புருஷநிரனாகிய அர்ச்சுனன்பேரி
லெறிய அந்தக்கதையானது நெருப்புப்பொறிகளை நேரா
கக்கக்கி உருக்குக்கட்டுள்ள பொருந்தி இருப்புக்கட்டுக
ளுடனெதிர்த்து வரும்போது விஜயன்கண்டு பட்டுக்குச்
சுகள் கட்டிக்களித்த உச்சிதபுரந்தரன் மெச்சியளித்த வ
ச்சிரக்கணையையும் இடியாஸ்திரத்தையும் எடுத்து விடு
த்தான் விட்டமாத்திரத்தில் அந்த அஸ்திரங்களானது
நெக்கிவருங்கதையை மடக்கிப் பொடிப்பொடியா யு
டைத்து அவனுடலத்தையுஞ் சின்னாபின்னப் படுத்தி
யபோது தேவதத்தத்தையெடுத்து - பம் பம் பம் பம்
மென்றுமுழக்கி சுவேதவாம்பரிபூட்டிய தேர்மீது மண்
டியிட்டிருந்த விபற்சுவானவன் வளைந்ததலை நிமிராதவ
ரிவிற்பிடித்து ஓயாமாரிசரந்தொடுத்துப் போர்செய்து
வரும்வேளையிலெங்கும்பொங்கிப்பெருக்கங்கொண்டோ
டுஞ் செந்து நதியினால் அரவக்கொடிபடைத்த அரசனு
டைய அழிபாச்சேனைகளெல்லாம் மாலைப்போதிற் சூரி
யனை வளைக்கும்செவ்வானம்போல் வந்துவளைந்து சிவந்
கொண்டார்கள் - அத்தருணத்தில் தாமரைமலரினிறைந்
ததேனைப்புசித்துப்பராசங்களிற்புகுந்துசிங்காரமாகப்பா
டிக்கொண்டிருக்குஞ் சுகந்தபரிமளமிகுந்த சிறைவண்டி
னங்கள் பக்கங்களினிறைந்த நிழலுறைந்த சோலைகளிற்
சென்று அன்றலர்ந்த அழகியமலரிற்பொருந்திமதுவுண்
ணும்படியாய்ச்செய்தமேலும் ஆதிப்பிராமணாள்வேதமம
ந்திரங்களினால் மூன்றுவகை ஜலமள்ளி ஆக்யங்கொடு
த்துவராநின்றகாலையும்மாலையுமல்லாமல் ருக்குவேதமந்
திரங்களினால், ஒருகைஜலத்தையள்ளிக் கொடுக்காநின்ற
அர்க்கியத்துக்காசைகொண்டு காலத்தைக்கருதி அந்தஸ்
தானத்திற்குச் சூரியன்வந்துசேர்ந்தான் (என்றது) வண்
டுகளானது, காலையிலும்மாலையிலும் நீர்ப்பூவிலிருக்கும்,
மத்தியானத்துக்குவனங்களிற்போய் கோட்டுப்பூவிலிரு
க்கும்பிராமணாள் மும்மூன்றுகையர்க்கியங் காலையிலும்-
மாலையிலும்-விடுவார்கள்-ஒருகைஜலமத்தியானத்தில் வி
டுவார்கள் ஆகையால், சூரியன் மத்தியில்வந்தான் பதி
னைந்துநாழிகையாச்சுதென்று தெரிவிப்பதற்கு புராணீக
ர் மேற்கூறிய குறிப்பாலுணர்த்தியது

வெவ்வியவெப்பத்தைத் தராநின்ற மத்தியானகாலத்தி
ல் வேதமுதல்வனாகிய வித்தகன் விஜயனைநோக்கி ஓவே
ந்தனே நாம் ஜெயிக்கவேண்டிய சயந்தவனிருப்பதற்கும்
நாமிருப்பதற்கும் நெடுந்தூரமிருக்கின்றது ஒருபங்குகட
ந்து வந்தோம் இன்னமிரண்டுபங்கு கடக்கவேண்டியிரு
க்குதுப்பாதிப்பொழுதாச்சுது உனக்கோமுகக்கருகிப்போ
ச்சுது எனக்கோவேர்வையும் வேஷ்டையும்வாச்சுதுவெ
ள்ளைக்குதிரைகள் நான்கும் வெதும்பிப்போச்சுது இப்
போது கொஞ்சந்தண்ணீர்குடித்து இளைப்பாறினலல்லது
குதிரைகளெடுத் தடிவைக்கமாட்டாது அர்ச்சுனா இவ்விட
த்திலொரு தடாகமுண்டாக்குவையாகில்எல்லாக்காரியம்

கருக்கும் அநுகூலமா யிருக்குமென்று கோபாலகிருஷ்
ணன்சொல்ல அருள்பெற்றவனுக்கு எப்பொருளும் பெ
ரிதல்லவென்னுந்தன்மைபோல் அந்தக்ஷணமே அர்ச்சு
னராஜனனவன் தேரைவிட்டிறங்கி ஆதிசத்தியும் ஆதிசி
வனும் ஆதியிற்கொடுத்திருந்த பகபேதி பாதாளபேதி
யென்னும் பாணங்களையெடுத்து ஆமிர்ஷணமாகிய வரு
ணமந்திரத்தையுச்சரித்து பூமியைநோக்கிவிடுத்தான், அ
ப்படிவிடுத்த ஒருநாழிகைக்குள்ளாக அவ்விடத்திற் பிரபல
மாகிய பெரியதடாகமுண்டாச்சுது அந்தத்தடாக மெப்
பேர்ப்பட்டதென்னில் சமுத்திரத்தைப்பார்க்கிலும் பே
ராழமும் கட்புலனுக்கெட்டாக் கரைபொருந்திய அகல
மும் நிரம்பியதடாகநிறைந்த வெண்டாமரை செந்தாமரை
யும் ஏழுதுறை இறங்குதுறைகளும் அவ்விடங்களெல்லா
ம் நீலோற்பலம் செங்கழுநீர் குமுதமுதலிய மலர்களும்
அந்தமலர்களினிழலினிடத்து நீரிலுலாவாநின்ற வாளை
குறவை வரால் கயல் சேற்கெண்டை மயறை தேளியுளு
வை சென்னல் கெளிறு ஆரால் விலாங்கு அலவன்சங்கு
நத்தைமுதலாகிய சலசரங்கள்யாவும் நாற்புறக்கரையோ
ரங்களிற்கின்னர மிதுனப்பட்சிகளும் ஒருபுறத்தில் நா
ரைகளும் தாராக்களும் ஒருசார்பிற் சக்ரவாகப்புள்ளும்
ஓரிடத்தில் உள்ளான் முதலியபுள்யாவும் ஓர்பாலில் அன்
னப்பட்சிகளும் ஓர்துறையில் அரம்பாஸ்திரீகளும் சிற்சி
லவிடங்களில் மணல்மேடாகிய புளினங்களும் அப்புளி
னங்களில் அன்றில்-அன்னம்-ஆந்தை- ஊர்க்குருவி-உள்
ளான்-தூக்கணாங்குருவி-எண்காற்பட்சி-கருடன்-காக்கை
காடை- கவுதாரி-கழுகு-அண்டங்காக்கை- நீர்க்காக்கை-ம
ணிக்காக்கை-மயில்-கிளி-குயில்-கூகை - குருகு-கேகயம்-
கொக்கு-மடையான்-கோழி-கானுங்கோழி சம்பங்கோழி
சக்கிரவாகம்-சாதகப்புள்-சிச்சிலி-சிவல் - செம்போத்து-
நாகணவாய்ப்புள்-ராமனுந்தி- நாரை-கருநாரை பெருநா
ரை-வெண்ணாரை பொன்னாரை நிலாமுகி-பருந்து புறு-க
ரும்புறு மாடப்புறு-தவிட்டுப்புறு-ஆட்டப்புறு பச்சைப்
புறு-பொய்யாப்புள் மீன்கொத்தி-வானம்பாடி-பாரத்வா
ச முதலாகிய பக்ஷிகளும்,அடர்ந்திருக்க குளிர்ந்தசோலை
களைச் சுற்றிலுமுடைய தாய் பூமிதேவியாருக்குத் திருநா
பிபோலும் விளங்கிய பெரியதடாகத்தை மலையுடன்மலை
மாறுகொள்ளும் வலிமைபெற்றுத் திரண்ட இரண்டுபுஜ
த்தையுடையவிஜயன்கண்டுசந்தோஷங்கொண்டு என்னு
ள்ளத்தில்வள்ளலாகிய வரகசயனு இதோ வெள்ளப்பெ
ருக்கமாகிய தடாக மேற்படுத்தினேன் இந்தத்தடாகத்தி
ற் குதிரைகளை இளைப்பாற்றிக்கொள்ளுமென்று இசை
யையுடைய விஜயனுரைக்க,அந்தவசனத்தைக்கேட்டு கூ
லமணியாகிய நீலமணிபோன்ற கோவிந்தனனவர்தேரை
விட்டுக்குதித்து பலம்பொருந்திய குதிரைகளையவிழ்த்து
குவளைமலர்வாசநிறைந்த தெளிந்த தடாகத்திற்கொண்டு
போய்க் குளிர்ப்பாட்டி தண்ணீர்குடிப்பித்துதூசுமுதலிய
யாவற்றுந்துலக்கிதாங்களுங்கைகாலசுத்திபண்ணிக் கொ
ண்டு சோகதாக விடாய்தீரந் திளைப்பாறியிருந்தார்கள்.

இப்பால் இந்த அர்ச்சுனனுடனெதிர்த்துபோர்புரிந்து
அக்கினிக்கெதிர்ப்பட்ட சரகைப்போல் உடற்கருகியுதிரம்
பெருகிஉள்ளமுடைந்தோடிய வீராதிவீரர்களும் அவனிவ
குத்திருந்த அரசர்முதலாகியயானைகளுஞ்சேனைகளும்ரு
ரியவெப்பத்தால் பாலைவனத்திலகப்பட்டுவெதும்பியவித
ம்போல் வெதும்பி நிலைநிற்காமற் கலைந்து கானுநுகண்
டபொருளை நல்லகாலத்திற்கண்டு களித்த வாறுபோல் த
டாகத்தில் வந்துவிழுந்து தாகவிடாயாறிய தன்மைகளை
யும் கைப்பாகிய காண்டீபன் கணையாற் கலங்கி நொந்து
கண்ணுங்கெட்டியதூரங் கலைந்தோடிய காரணத்தையும்
இவ்விடத்தில் பூரணமான தடாகமேற்படுத்திய புனிதத்
தையும் வீரக்கழல்தாங்கிய வேந்தனிடத்திற் சோர்ந்தவீ
ராளோடிச் சேர்ந்துசொன்னார்கள் அந்தவார்த்தையை
உரகமுடிப்படியையாளும் அரவக்கொடியோன்கேட்டுஇ
ருப்பு நாராசங்காச்சி செவியிலேற்றியதன்மையைப்போ
லேக்கங்கொண்டு சிங்கத்துடனெதிர்த்து யுத்தஞ்செய்ய
ப்பயந்த யானையைப்போற் றிரும்பியோடி நீபிறுலெரிந்
த பட்டணம்போற்றியங்கி இளைத்துக்களைத்து ஆரணவே
ள்வியைப்பெற்ற சகலகலைப்புராண நிபுணனாகி யிவனுற்
ற-துரோணுச்சாரிய னென்னும் பேர்பெற்ற பெரியோ
னிடம்போய்ச் சேர்ந்து அவருடைய பாதத்தில் வீழ்ந்
து பொறுமையை யுடைய புண்ணியனே, என் சிறுமை
யைக் கேளுமென்று சொல்லத் தொடங்கினுன். மல்லை
வெல்லநல்லவில்லை பல்லவங்களுடன் வல்லவேதியனே
ழுகளும், இயாவரும் ஆச்சரியப் படும்படியாகிய சாமர்த்
தியமபெற்ற தனஞ்செயன் சத்துருக்கள்தொடுக்கும் அ
ம்புக் கெதிரம்புவிடுத்து தனக்கெதிர்வந்து நின்ற தாஷ்
டீகரையெல்லாஞ் சாய்த்து மாய்த்தான் அவனுக் கெதிர்
சென்று அமர்புரிந்த அரசர்களில் யார் பிழைத்தவர்கள்,
ஐயோ, அன்யாயமா யழிந்துபோய்விட்டார்களே ஐயா,
சூரிய னஸ்தங்கத மாவதற்குமுன்னே எனக்குரிய மைத்
துனன்றலைபோய் நமக்குப் பழிச்சொல்வருவதாயிருக்கு
தல்லாமல் அவனைப் பிழைப்பிப்பவர்களுமில்லை எனக்கு
ப் பெருமை தருவோர்களுமில்லையே பெரியவனே, எதி
ரிகளைக் காணுதபோது தங்கள் தங்களுடைய ஆண்மிங்
கையை யெடுத்துப் பேசுகிறுர்கள் எதிரியைக் கண்டால்
அவரொதிர்நின்று க்ஷிணப்போது யுத்தம்பண்ண மாட்டா
மலும் வெட்கம்-மானம் ஈனம்-நாணம்-இவைமுதலிய தி
ல்லாமலும் புரமுதுகிட்டோடுகிறுர்கள் ஆதலால் நமது
சேனைகள் முழுவதுஞ் செத்து சேனுளும் போலுமிருக்
குது நாமநேகமுயற்சி செய்தும் வேறொருசெயலுங் கா
ணுமற்போனேம் - வேதவேதியனுகிய தேசிகனே என்
மைத்துனனுகிய சிந்துராஜன் தேவரீருடைய திருவடியி
ற்றுழ்ந்து நாமெங்கேயாகிலும் ஓடிப்பிழைக்கிறே னென்
று சொன்னபோது நீ, பயப்படாமலிரு உன்னுயிரைப்
போக்கிறவர்க ளொருவருமில்லை அப்படிக்கு உன்னுயிர்
போமாகில் அதற்குவதிலாக என்னுயிரைக் கொடுக்கிறே
ன் நீயேதொன்றுக்கும் அஞ்சாதே யென்று தேவரீ ரு
டைய விற்றிறந் தூக்குக் குறைவில்லாமற் சொற்றிறஞ்
சொன்னீரே உம்முடைய உண்மை வசனத்தை நம்பி எ
ன்றங்கை புருஷனனவன்-நீர் அணிவகுத்துப் போராடு
ஞ் சேனைகளின் மத்தியிற்போ யிருக்கின்றனே இப்போ

னு பகற் பதினைந்து நாழிகைக்குள் படிபாதி சேனைகளை யழிந்து பேரணிக்குள்ளே பார்த்தன்வந்து விட்டானே தேவரீர் இனிமேலென்னை யென்ன ரக்ஷிக்கப்போகிறீர், சத்துருக்களெண்ணப்படி நிறைவேறும்படியாய் தேவரீரிஷ்டங்கொண்டிருப்பதாய்த் தோணுது ஆரியனே பெரியோனுகிய நீர் சொற்பிசகு மாட்டீ ரென்று உண்மையாய் நம்பி என்மைத்துனனை இடைத்திலிருத்தி அவனுக்குக் கேட்டை விளைத்து நானுமிந்தப் பாட்டை யடைந்தேன், எனக்குரிய பெரியோர்கள் என் சத்துருக்களிடத்தி லன்புவைக்கார்களென்று சத்தியமாய் நம்பினேன், தேவரீர் மனவஞ்சகம்வைத்துச் சொல்லிய கைதவப் பொய்யைக் கருதாமற்போனேன், அதற்குச் சாட்சியாக என் பகைவர்வந்து புகுந்து இப்போது ஜாடும்படியாகிய முனைமுகத்தில் தலைகாட்டாதிருக்குஞ் சந்தோஷக் கருத்தினையுடைய சுவாமிகளே, உம்மைவிட எமக்குரியோர் யாரிருக்கின்றார்கள், அல்லது அந்த அர்ச்சுனனுட னெதிர்த்து யுத்தஞ்செய்ய என்னுலாகாம லிளைத்தே னென்று ஒருவேளை நீர் சொல்லுவீராகில் உமக்கீடாகிய வல்லவர்கள் யாராகிலும் உலகத்தி லிருக்கின்றார்க ளென்று உண்மையாய்ச்சொல்லும் உத்தமனே இனி நான் யாரையு நோவத்தக்கதில்லை, அக்கரைக்கார னெவனே அவன் பாடுபடவேண்டிய முறைமையாகையினுல் வில்லை யெடுத்து நிறுத்திவளைத்து நாணிபூட்டி வரிபொருந்தி மணிகள் கட்டி வெலுவெறியிராநின்ற விற்படைகொண்டு விஜயனுக்கெதிர்சென்று நின்று போர்புரிந்துவென்று அவன்பிராணனைக் கைக்கொள்ளுவதென்று அல்லது என்னுயிரை அவனுக் கொப்பிவைப்பதென்று இவ்விரண்டு காரிய மல்லாமல் வேறோர் சூட்சியுமில்லை, முனிசிரேஷ்டனுகிய முதல்வனே, தேவரீருடைய கண்காணும்படிக்கு நான்விரைவாகச்சென்று என்சேனைகளெல்லா நிலைக்கக்கண்டு அர்ச்சுனன்முதலிய பாண்டவச் சேனைகளைக் கொல்லும்படியான என் போர்த்திறத்தை யாகிலும் விரைந்துவந்து பாருமையா வேதியர்க்கரசே என்று வணங்கா முடியோன் வணங்கி மனமுருகி மனஸ்தாபமாய்ச்சொல்ல இந்தமன்னவன் சொல்லிய சொற்களையெல்லாம் மறையவ னுகிய சேனுபதிகேட்டு மனமகிழ்ந்து மன்னனைப் புகழ்ந்து நந்திபாவட்ட மாலையணிந்த நாதிபனே துன்பம்வந்தகாலத்தில் சோர்வடையாமலும்-இன்பம்வந்தகாலத்தில் எழுந்து மகிழாமலும் எப்போதும் ஓரே சீராகயிருந்து இப்போது சொன்னசொற்றப்பாமல் இனிமேலும் எண்ணியிளைக்காமல் நீ கொண்ட துணிவு தணியாமற்சென்றுஎதிரிகளை நாசப்படுத்தி உன்மைத்துனனைக்காப்பாத்தவேண்டியது உன் சேனுசயினியங்களெல்லாம் அழிந் தொழிந்து போனுலும் உன்னுண்மைக்கு ஒருக்காலும் அழிவில்லையே அரசனே, நீகொண்ட கருத்து நன்மையானதுதான் ஆகிலும் நானென்று சொல்லுகிறேன் கேளும், ஒப்பற்ற ஒருதேரில் வராநின்ற வரம்பெற்ற இவ்விருவரையும் நரநாராயணரெளென்று ஞானவான்களாகிய நலத்தோர் சொல்லியிருக்கின்றார்கள், மேலும் இவர்களைப் பேர்ப்பட்டவர்களென்றால் எப்பொருட்கு மிறைவராகிய ஈஸ்வரானுக்கிரகத்தால் சத்துருக்களைவெல்லும் பாணங்களும் அதற்குத்தகுந்த மந்திரங்களும் சகல வரமும் பெற்றிருக்கின்றார்கள் இவர்களைப்போ லெவர்களும் இப்பேர்ப்பட்டவரம் பெற்றதில்லை இவர்கள் திரிலோகரக்ஷகனென்னும்மகாபுருஷாள் வீரகாண்டீபத்தைக் கைக்கொண்டு போர்முகத் துக்கு நேர்முகமாக நிற்பாராகில் சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மாவும் இவர்க்கு ஈடல்ல, அத்தன்மைவாய்ந்த வில்லாளருக்கெதிரில் யுத்தஞ்செய்யத் தக்க இருதோள் வலியினையுடைய வல்லாளர் ஏவரிருக்கின்றார்கள் இந்துகுலத் தோன்றலே, அதுபோக கடல் நிறம்போன்ற காசாம்பூவண்ணன் கருணையுடன் தேர்ச்சாரதியாக வமைந்து இரதத்தைச் செலுத்திக்கொண் டிருக்கிறார், அதனுல் சர்வ சம்மாரகால ஈசன்முதலிய எவரானுலும் இவர்களோ டெதிர்த்துப் போர்புரியும்படியானது லேசானதன்று அருமையானகாரியம், அரவக்கொடி நாட்டிய அழகா இன்னஞ்சொல்லுகிறேன் கேளும்.

இராஜகுலத்திற் பிறந்தவர்கள் பரராஜருடன் பகைவைத்துக்கொள்ளுவது ஞாயம், அதைவிட்டு சொந்தபந்துக்கள்முதலிய தாயாதிகளுடன்விருதாவாய்ப் பகைவைத்துக் கொள்ளலாகாதென்று ராஜாராஜர்நிறைந்த பேரவையிடத்து அநேகஞ்சேதிகளை ஆதியிற்போதித்தேன், யான்சொல்லியஇஷ்டநீதிவார்த்தையை இகழ்ந்து உமக்குரிய துஷ்டாளுரைத்த சேதியைப் புகழ்ந்து இந்தப்பாண்டவர்களை ஒருதரும்பாகமதித்து எடுத்தெறிந்து நீஏதேதோபேசிய வசைமொழியை நானென்னவென் றுரைப்பேன் இறையே உங்கள்சிறியசந்தையாகிய விதுரராஜன் வேணுமென்றுபாடுபட்டு அநேகந் தர்மங்களைவிளம்பினுன் அப்பேர்ப்பட்ட உத்தமனுடைய மனநோவப்பேசிய உன்னைப்போலொத்தபாவிக்கு உதவியாகக் கூடாதென்று மண்ணுக்கும் விண்ணுக்குங் கண்ணுகி ஒண்ணுகதன்னுயிருந்த தன்னுடையவில்லை ரெண்டு துண்டாகவெட்டி யெறிந்துவிட்டு யாத்திரை போனுன், ஞானவிவேகத் திறமுணர்ந்த நுன்னறிவாளருரைத்தமொழிவழிவாமற் பழிவழிதேடிகற்புக்கணியாகிய மடமங்கையென்னுந் திரௌபதாதேவியானவள்மதிகலங்கிமனங்கலங்கி கண்கலங்கிவாடும்படியாய்ராஜசபையிலேற்றிவஸ்திரபங்கம்பண்ணிவைத்து அன்புடமைக்காதார பூதராகிய பாண்டவர்களை அரசருக்கெதிரில் அநேகமாகவரிசையிலாமலிகழ்ந்தாய்மலைக்கிணையாகும்புயத்தினையுடைய ஐவரைலேசாகநினைத்துவடவாக்கினி போலும் விஷ தீக்ஷண்ய மாகிய மின்னலைப்போலும் சுடச்சுட நிந்தித்துச்சொல்லிய கொடுஞ் சொல்லானது பிராண ஆணியாய்ப் பிரவேசித்து இப்போது உங்கள் பிராணனை வாங்குது அதற்காக நீர் துயரப்படவேண்டிய தென்ன மன்னனே, இதன்றியும் பாண்டவர்களைச்செயித்து நானே பாராளுகிறேனென்று நீர்சொல்லுங் காலங்கள்தோறும் அவர்களைவென்று ஜெயம்பெறுவது அருமை அருமையென்று அடிக்கடி தடுத்து எவ்வளவுசொல்லியும் எள்ளத்தனையேனும் உன் செவிபொருந்தக் கேட்டையோ என்னையனே அப்படி பலவாறுகச் சொல்லிய என் வார்த்தையைத்தள்ளி உனக்குரியோர்

கூறிய யுக்தியைக்கேட்டு உன் விஷ்டப்படி நடத்தினுய் நீ அப்படி நடத்தியதில் இதுவரையிலும் என்னபலனைக் கண்டாய் உன்றந்தையாகிய திரிதராஷ்டிரன் தலையிலடித்துக்கொண்டு சகலவிதத்திலுஞ் சொன்ன சங்கதியையுங் கேளாமலிகழ்ந்தாய், வீஷ்டுமராகிய பாட்டன் விளம்பிய மேலான முறைமையையும்விடுத்தாய் எங்களெல்லாரையுங் கூட்டிவந்து இந்த குருக்ஷேத்திரத்தில் மாயக்கொடுத்தாய், ஆயினும் உன்னை வெறுக்கவேண்டியதில்லை நீ என்ன செய்வாய்-பாவம்; விதியை யநுசரிக்கு மதியென்பதுபோல் வினைவசப்பட்டாய், அப்படியிருக்க இந்தச்சமயத்தில் எங்கள்பேரில் விழுந்து ஏன்மோதிக் கொள்ளுகிறுய் எங்களையேன் தூறுகிறுய், எங்களை இகழ்வதில் உனக்கொரு புகழுமில்லையே, நாங்கள் அன்றும் வேண்டாமென்று சொன்னேம், இன்றும் வேண்டாமென்றுசொல்லுகிறேம் ஓ இறைவனே இன்னமுங்கேளும் கர்னன் சகுனி-துசுவாசனன்முதலாகிய பலவான்களுடையபோர்த்திறத்தைக்கண்டு களித்தாய், தன்பலமும் எதிரியின்பலமும் யோசிக்காமல் வீண்பகை விளைத்துப் பாண்டவரோடு சண்டைவைத்துக் கொண்டாய் வெல்ல வல்லவரொன்று சொல்லும்படியாகிய சூராதி சூரனென்னும் திறவான்களாகிய பலகோடி படையைப் படைத்திருக்கின்றுய், அப்பேர்ப்பட்டவர்களைத் துணையாகக்கொண்டு ஜெயங்கொள்ளாமல் விருதாவாய் எங்களை வெறுத்துக்கொண்டு நிந்தைசொல்லு முறைமை உனக்கு இன்னம் என்ன பழிபாவத்தைக் கொண்டுவந்து வைக்குமோ, நாமறியேம்-அப்பனே - எனக்குச் சேனுபதிப் பட்டங்கட்டியபோது முரசக்கொடிதரித்த தருமராஜனை எவ்விதத்திலாகிலுங் கைப்பிடியாய்ப்பிடித்துத் தரவேண்டுமென்று நீ கேட்டுக்கொண்ட படிக்கு நிறைவேற்றும்படியாய் இரத முதலிய பற்பலசேனைகளுடன் இவடத்தி லிருக்கின்றேன், அதேனென்றுல் சத்தியவான்களாகிய உத்தமருடன் சண்டைசெய்யத் தக்கபேர்கள் இந்த மண்டலத்திலில்லாமையால் அர்ச்சுனன் முதலியபேரும் சயந்தவனைக் கொல்லவேணுமென்னும் ஆசையுடன் தர்மராஜனை விட்டுப்பிரிந்து நமது யூகத்தில்வந்து நுழைந்த பிற்பாடு தர்மராஜனைப் பிடிக்கலாமென்னுஞ் சமயம் பார்த்துக் கொண்டு வெகுஜாக்கிரதையாய் நிற்கிறேன், இதுதெரியாமல் உன் மனம்போனவழி வீணுகப் பேசுகிறுய், அப்பனே, ஆணிப்பொன் விரத்தினமோவென்று யாவருஞ் சந்தேகப்பட்டு சூரியகிரணச் சோதியென்று சொல்லாநின்ற மாணிக்கமழுத்திய மகுடந்தரித்த மகாராஜ வல்லவனே, உங்களொருவரையு நானம்பமாட்டேனென்று நீ முன்னமே சொல்லியிருக்கிறுய், அதுவுமல்லாமல் நானே யுத்தஞ்செய்யப் புறப்படுகிறேனென்று இப்போதென்னுடன்சொல்லிய உமது வீராவேசத்தை விட்டு விடாமல் அது கெட்டுதுபோவென்று மனமிளைக்காமல் புத்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டு தயிரியமும் பலமும் தழைக்கச்சென்று அமர்புரிவையாகில் உன்னை வெல்லத்தக்க வல்லமைசாலிகளு முண்டோ, துரியோதனமகா ராஜனென்னும் வேந்தனே-இது நிற்க இன்றைய தினத்தில் நானேற்படுத்தியிராநின்ற நிலைபெற்ற பேரணியூகத்தை மதிக்காமல் இந்த யூகத்துக்கு மத்தியி லிராநின்ற வெற்றியையுடைய சிந்துதேச வேந்தனை இன்றையப் பகற்குட் பிராணனைவாங்க அர்ச்சுனனுற் கூடுமோ, ஆயினும் ஒளிபெற்ற வடிவேற்றுங்கிய உரகதுவசனே-துரியோதன மகாராஜனே, விதியின்செய லெப்படியோ நானறியேன், ஆகிலும் என்னுற்கூடிய வுதவியுஞ் செய்கிறேனென்று தன்னிடத்திலிருந்த ஒருகவசத்தை ஆசீர்வதித்து துரியோதன ராஜனுடைய தேகத்திலணிந்து நந்தியாவட்டமாலையணிந்த நராதிபனே-உந்த னவசரத்தைவிடுத்து இந்தக்கவசத்தினுடைய பெருமையைக் கேளும்

இந்தக்கவசம்-சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மதேவனிடத்திலிருக்கும்போது ராக்ஷசாளால் அடிபட்டு வருந்தியதேவேந்திரன்பிர்மாவைவணங்கிப்பணிந்து இந்தக்கவசத்தையெனக்குக்கொடுக்க வேணுமென்று கேட்க அப்படியே கொடுத்தார் அந்த இந்திரனிடத்திலிருந்து அங்கிரமகாரிஷிபெற்றுர், அவரிடத்திலிருந்து நான்பெற்றுக் கொண்டேன்-நானுனக்குக்கொடுத்தேன்-நீ யிந்தக்கவசமணிந்து கொண்டால் எட்டுமலைகள் விழுந்தபோதிலும் ஏழுமேகங்களிடிக்குமிடிவிழுந்தபோதிலும் இந்தக்கவசமிளக்கமற்றுருக்கும், இதினின் பெயரென்னவெனில், சிவந்தநிறத்துடன் வலுவேறிய சாலிகையென்னும் பெயர்பெற்றகவசமாக்களுமென்று தெளியச்சொல்லி அறிவில்லாமைக் கொருவருமிகரில்லாத துரியோதனமகாராஜனை அர்ச்சுனனுடன் சண்டைசெய்யும்படியாய் துரோணுச்சாரியர் அனுப்பிவைக்க-துரியோதனன்-கறுத்தகாளகூடவிஷாக்கினியைப்போற் கனன்று புயம்பூரித்துச்சென்றுன்-இவனை இப்படிஅனுப்பிவிட்டு தர்மராஜனை யுத்தஞ் செய்து பிடித்துதான்சொல்லிய கடமையை முடிப்பதற்குத் திடங்கொண்டமேகத்துக் கொப்பாகியவில்லைத்தாங்கிச் சென்றதுரோணுச்சாரியருடையசெய்கையைச்சொல்லுகின்றேம் பாரியவில்லைப் படபடவென்று வளைத்துக் கூரியபாணங்களைக் குமுகுமுவென்று தொடுத்து விரைவாகத்தேரை நடத்திக்கொண்டு அளவிறந்த வீரப்பிரதாபமன்னரும் படைகளுமகிழ்ந்து சூழ்ந்துவரும்படியாய்உகாந்தகாலாக்கினியைப்போற் சென்று எதிர்த்தகாலத்தில்தர்மராஜனும் சதுரங்கச்சேனைகளும் ஆஜானு பாகுவையுடைய அரசருஞ்சேர்ந்து துரோணுச்சாரியரை வெல்லுவோம் வாருங்களென்றுவிறல்வேந்தனுகிய தர்மராஜனெதிர்த்து வெப்பமாகியகோபத்துடன் உச்சாகங்கொண்டு குற்றமில்லாத வெற்றிபெற்ற முரசக்கொடியோனுனவர் தன்னைப்பிடிப்பதற்காகச் சபதங்கூறி எதிர்த்துவாராநின்ற தனுர்வேதியன்பேரில்சண்டைசெய்யத்தொடங்கியபோது திக்குகளெல்லாம் அஞ்சிநடுங்கி யொடுங்கும்படிக்குச்சேனைகளார்ப்பரித்து அண்டகடாசங் குமுறும்படியாய் வாத்தியங்களை முழக்கி வந்தார்கள், அப்போது ஆகாயத்தில் வேடிக்கைபார்த்திருந்த தேவர்களெல்லோரும்-பயந்தோம் பயந்தோமென்று தங்களிற்றுங்களே மயக்கங்கொண்டயர்ந்தார்கள்.

இப்பால் யானைகளுடன் யானைக ளெதிர்த்துமோதவேகமாகிய குதிரைகளுடன்குதிரைகள் போர்கொடுக்கபொற்பிரகாசமாகியதேருடன்றேரிடித்துச் சண்டைதொடுக்க கிணறுபோற் சுரக்கும் வேதச் சிறப்பினையுடைய துரோணாச்சாரியருடன் பாண்டவச்சேனாபதியாகிய துர்ஷ்டத்துய்மன்வந் தெதிர்த்தான் இகல்மிகும்வெம்பியகோபக்கும்பினையுடைய விமசேனனை விகர்னன் முதலாகிய துரியோதனன்றம்பிமார்கள் வந்துவளைத்தார்கள்வாசனை தங்கிய மலர்மாலை யணிந்தவாகுலிகனென்பவன் இளம் பஞ்சபாண்டவர்களையெதிர்த்துக்கொண்டான் துச்சாதனனானவன் திருநாபிக்கமலமுடைய ஸ்ரீமான்றம்பியாகியசாத்தகியைவளைத்துச்சண்டை கொடுத்தான் நகுலனுடன் சகுனியும், சகாதேவனுடன் துன்மதியரசனுமெதிர்த்தார்கள் புத்திமானாகிய அலம்பனென்னும் ராக்ஷசன்-கடோர்க்கஜனுடன் கலந்துபோர்புரிந்தான்-கிருந்தியசோமதத்தனென்பவன் விற்றிறம் வேல்த்திறங்கொண்ட ஒப்பற்ற சிகண்டியுடன் அமருடற்றினன்-விண்ணினில்நிறைந்துவேடிக்கை பார்த்திருந்தபண்ணவருங் கண்ணைமூடிக்கொண்டார்கள்.

இவ்விதமாகச் சமுத்திரஞ்சூழ்ந்த மண்சுழல விண்சுழலக் கண்சுழலச் சண்டைபண்ணும்போது இருதிறவர்களிலுமிருந்துஎழும்பிய தும்புகளினாலும் அம்புகளினாலும் இடநிறைந்துநின்ற சேனைகளெல்லாமடங்கி அநேகங்காதவழிக் கப்பாலோடிஆவியிழந்து அழிந்துவிழுந்திறந்தார்கள்சிலர் யுத்தமறந்துபறந்தார்கள்

இப்படியாகச்செய்துவரும்யுத்தத்தில்பாண்டவப்படைகள்மேலிட்டுபஸ்மீகரப்படலம்பண்ணும்போதுஎதிர்த்துயுத்தஞ்செய்த எதிரிகளின்சேனைவீரர்களெல்லாரும், பெரிதாகியஇகல்விளைத்து இளைத்துதுன்பமடைந்துகோபமும்உச்சாகமும்ஆண்மிக்கையும்விரத்தன்மையும்விட்டுமதிமயங்கிக்கெட்டுவாயுவேகத்திலுமிஞ்சியவேகமாய் வலுக்கொண்டோடிகைத்திறல் வில்த்திறலையுடையதுரோணாச்சாரியரின்காலிற்போய்விழுந்து-ஐயா நமதுபடைகளெல்லாமழிந்துநாங்களொழிந்து உயிர்தப்பிஓடிவந்தோமென்றுமுறைசொல்லிக்கொள்ளும்போதுதுரோணாச்சாரியர்மிகுந்தகோபமுடையவராய் சேனைகளைத்தேற்றிநிறுத்திதேரைச்செலுத்திவந்து ஜெயம்ஜெயமென்று பாண்டவச்சேனைகளைத்தீய்க்கும்போதுபாண்டவச்சேனைகள் படுபாதிபட்டு சேனாபதியினிடத்திற்சொல்லித்தியங்கியதினதிசையைக்கேட்டு துர்ஷ்டத்துய்மனானவன் மனக்கொதிப்புடன்முன்சென்றுநின்றுமறலியுநடுங்கியொடுங்கும் வடிவேலைத்தாங்கிய துரோணாச்சாரியரைவளைத்துக்கொண்டு மாரிகாலத்து மேகம்பொழிவதுபோல பாணவருஷங்களைப்பெய்யாநின்றபாரியவில்லைப்பிடித்துநிறுத்தியெதிர்த்துஇரண்டுசேனாபதிகளும்சோனாமேகஞ் சொரிவதற்கொப்பாய் சுரிமுகக்கணை துரிதனற்கணை-சுடுசரக்கணை சுடர்விடுக்கணை-அரிமுகக்கணை-அனிலநற்கணை - ஆனுருக்கணை அயனருட்கணை - முதலாகிய அஸ்திரங்களைத்தொடுத்து அமர்புரிந்தார்கள் - அவ்விருவருஞ்செய்த யுத்தத்திறங்களை இவ்விதமென்று சொல்லவல்லவரொருவருமில்லை ஆயினும் இவர்ளெடுத்து விட்ட பாணங்கள் ஆகாயத்தை மறைத்து விட்டன, அந்தபாணங்களினுமிறங்க நால்வகைச்சேனைகள் யுத்தகளத்தையிடமில்லாமல்நிறைத்துவிட்டனவென்று ஆச்சரியமாய்ச் சொல்லவேணுமேயன்றி வேறில்லை ஆதலால் தனுர்வேதத்திற்செவ்வையாகக்கைதேர்ந்த இருவரும் செம்பவளம்போலும் செங்கதிர்போலும் செம்மைக்காச்சியுருக்கியதைப்போலும் செம்முருக்கின்மலர் போலும், செவந்தகண்களி லிருந்து இப்பொறிசிதறி திருதிருவென் றுதிர்த்து ஆவியுடன் புகைகயெழச்சிரித்து உதடுமடித்துப்புருவநெரித்து உடலம் வியர்த்து உலைமெழுகொத்து உரகருங்கதற-உதரியுஞ்சுவற உம்பரும்பதற அம்பரஞ்சிதற - திக்குகஜங்கள் விசிமுக்கிரத்தக்கட்டிகளைக்கக்கி யெக்கிறிக்கெட்டுந் திடுக்கிட்டுப்போகபொற்கட்டுபாணங்களும் வேகப்போர் புரியும்போது இவர்கள்விடுக்கும் பாணங்களினால் மயங்கிமாளாதமன்னவரில்லை ஜயங்கொளவெதிர்க்கச் சொன்னவரில்லை இப்பிரகாரம்கடலும் மலையுங்காரும் பாரும் எதிர்த்த தன்மைபோல் இடம்வலமாகத் தேரைச்சுழட்டி ஒருவரையொருவர் கொல்லநினைத்துக் கிட்டுங்காலையில் குற்றமில்லாத துர்ஷ்டத்துய்மன் தகடுதட்டிப்பெயர்பதித்து வளைவு கொண்டு பளபளென்று விளங்காநின்ற கைப்பிடித்தவரிபொருந்தி மணிகள்கட்டிய வில்லை மளமளவென்று முறித்துவானிற்பறக்கும் பொடியாகத்தூற்றினர்-அவராரெனில் மறைவலாளனாகிய துரோணாச்சாரியர்-அப்போது துர்ஷ்டத்துய்மன் தன்னுடைய விற்போய்விட்டதென்று விசனப்படாமல் க்ஷிணப்போதிற்ஜெயக்காரநின்ற சத்தி கேடயந்தாங்கி கண்மூடிக்கண்திறப்ப தற்கு முன்னேகாலடிசேர்த்து நாலடிபேர்த்து ஒட்டிப் பதுங்கியொடுங்கியெழுந்து துரோணாச்சாரியரிருந்த தேரின்பேரிற்றிடுக்கிடப்பாய்ந்துநான்குகுதிரைகளையும் ஓரோவீச்சாகவெட்டிமலைமேல் விழுந்த இடிபோல் முழங்கிக்கிட்டிக்கட்டி பூமியில்நிற்குந்தன்மையாகநின்ற துர்ஷ்டத்துய்மனை ஆசான்கண்டு அவசரங்கொண்டுகோபித்தெதிர்சென்று சூலயமெல்லாங் குலைகுலையும்படியாகக் கொடுந்தனற் கொலைக்கணை யொன்றைவிடுத்து வாளுங்கேடயமும் - மாப்பொடிபோலுதிரச்செய்தமறைவல்லாளனைப் பாஞ்சாலகுமாரன் பார்த்து மடமடவென்று பற்கடித்து சற்றுநேரநிதானித்து வெற்றிபெறநெருங்கிய போர்த்திறங்களுடன் மேலானசத்தியும் யுத்தியும் - சித்தியும், பூர்வதவத்தாற் பெற்றதைப்போற் பழகியதுரோணாச்சாரியரானவர் - பெருங்கிலிகாட்டிய பெரும்புலிபோனிற்கும் பிகாத்தைக் கண்டுகத்திகேடயத்தையிழந்த துர்ஷடத்துய்மனென்னுங் காவலன் கலங்கிநிற்குங் காரணத்தைக்கண்ணன் தம்பியாகிய சாத்தகியானவர்கண்டு - கருசற்சரியபடையுடனிடைபுகுந்து சேனாபதியைத்தேரினேற்றிக்கொண்டு திரத்வமாய்த் தங்கள்சேனையை நோக்கிச்சிங்கம்போற் செல்லுங்காலையிலதுரோணாச்சாரியரானவர் தனக்குப்பங்கம் வந்ததாக அடங்காக் கடுங்கோபங்கொண்டு அழன்று எல்லாவீரருடைய கைக்குமேலாகிய வில்லைஎடுத்து நாணிபிறுக்கி யுறுக்கி விடாநின்றபாணவரு

ஷங்களுட னெதிர்த்து நாலுமலைகளுங்கொப்பாகத்தேறி மீறி வீறிபேரிய புஜபலபராக்ரமக்கொற்ற வயம்பெற்ற மதமூற்ற விற்குரங்கியசாத்தகியென்னும் பெயர்கொண்ட சிங்கத்தைமதித்துமடக்கினார்.

அந்தவேளையில், சாத்தகியானவர் - தன்தேரிலிருக்குந் துர்ஷ்டத்துய்மனுகிய சேனாபதியைவேறொருதேமத்தே ரிலேற்றிவைத்து சிலபடைஞரைக்கூட்டி சேனைகளிருக் குமிடத்துக்குப்போகும்படியாயனுப்பிவிட்டு தன்னுடை யதேர்ப்பாகனைத்திருப்பிபலம்பொருந்தி நலஞ்சிறந்தவி ல்லைவளைத்து நாணிபூட்டி குணத்தொனிகாட்டிமேதினி யெல்லாங் கூட்டி வெங்கலலைமூட்டி வேகஞ்செய்யுஞ் சாயகங்களை மின்னற்பிரகாசம் போல் மிக மில்லாமல் வீசிஇவருடையரதங்களு மெதிர்த்து சாரதியுடன்சாரதி குதிரைகளுடன்குதிரைகள்கொடியுடன்கொடி இருசியுட னிருசிசக்கரங்களுடன் சக்கரம் ஊடுதாக்கி இணையில்லா தபாணமாரிகளைபெய்யும்பொழுதுமின்னிமையினால்விண்ட லத்தில்வேடிக்கைபார்க்கும் விபுதர்முதலாகியபெரும்வெ ருவிநடுங்கினர்கள், இருவருமிப்படியாகத்தப்பிதமில்லாம ற்கைப்படுகணைகளினால்வெப்பஞ்செய்யுங்காலையில், சாத் தகியானவர், ஆயிரம் பிறைமுகாஸ்திரத்தை யெடுத்து அ னுசந்தித்து ஆசாரஉபசாரபூசைமுதலியமந்திரங்களும்புரி ந்து துரோணுச்சாரியர்பேரிற்றளைபடத்தொடுத்தார், அந் தக்கணைகள் தொந்தோமென்று தூவிச்சிறிச்செந்தழற்போ ல்வருவதைதுரோணர்கண்டு உலகக்களத்திற்காய்ந்தராவி யஷ்டணங்கொண்ட ஆயிரம்பிறைக்கணைகளை யெடுத்து அந்தக்கணைகளுக்கிடாகவந்த வழியேமடக்கிப்போம்படிக் கு உந்தியபோதுவந்தக்கணைகளுடன் இந்தக்கணைகளும் சொந்தமாகப்பந்தப்பட்டு இந்திரனுலகும்-சந்திரனுலகு ம்-ஈசானுலகும்-பிசானனுலகும் - எமனுலகும்-எரியோ னுலகும்-வருணனுலகும்-வாயுவினுலகும்-நிருதியி னுல கும் பருதியினுலகும்-நெடுநிலமுழுதும் படபடெனச்சூ ழ்ந்து சாத்தகிவிடுத்தசரங்களெல்லாவற்றையும், சருகுங் கருகும் உமியெனச்சாய்த்துசதுமறையவன்வாழ் சத்தி யலோகந் தற்றுத்திரும்பி தன்னுடைய சாக்கூண்டில் வந்தடக்கிய தன்மையைத்தானேகண்டுசந்தோஷங் கொ ண்டுபலம்பொருந்தியகுமுதமுகாஸ்திரத்தைஉலகங்குமு றவெடுத்துசாத்தகிமார்பிற் றைக்கும்படிக்குப்பின்னும்வி டுத்தார், அந்தக்கணைவரும்வேகத்தை, சேரகத்தைபயத் தைத்தொடரவிளைக்கும்வடிவேலைத்தாங்கிய சாத்தகினே க்கி நலம்பொருந்திய சூரியாஸ்திரத்தைத்தொடுத்து து ரோணுச்சாரியர்விடுத்த குமுதமுகாஸ்திரத்தைக் குறை த்து மூன்றுவாயுவாஸ்திரம் விடுத்து துரோணுச்சாரியி னுடையதேரையும், குதிரைகளையும், சாரதியையுமழித் து நிலைக்கிடையாக்கினர், உடனே தநுவலாரியர் வேறுர தமேறிக்கொண்டு துளபமணிந்த முகுந்தனுக்குகந்த தம் பியாகிய சாத்தகியின்பேரில் மூர்த்தண்யமாகிய முத்தலை க்கணையையேவி அவர்கைப்பற்றிய வில்லைமுறித்து அந் தவில்முறியுமுன்னமே அரிக்கணையைப் பிரயோகஞ் செய்து ரதம்-சாரதி - குதிரை முதலியயாவையும்போ க்கினர்.

அக்காலையில் சாத்தகியானவர் வேறுதேரேறி பிரகா சத்தையும், பெருமையையுமுடைய பாரியவிற்கொண்டு நவக்கிரகாதிமுகலிய நக்ஷத்திரங்களும் அஞ்சியதிர்ந்து அடங்கியதிரும்படியாய் ஆலகாலவிஷத்துக் கொப்பாகிய கடுங்கணைகளைக் கோடிகோடி கோடாகோடியென்றுசொ ல்லும்படிக்கு வில்லேற்றொடுத்துவிட்டார். அந்தக்கடுங்க ணைகள் காலாந்தகனைப்போல் கருநிறம் வெண்ணிறம்செ ந்நிறங்கொண்டு காய்ந்துவந்தபோது திருதிறென்று தி சைகள் சுழன்றன, விறுவிறென்று ஆகாயஞ்சுழன்றன; இப்படியாகப் பற்பலபாணங்களை விற்பனவிவேகிகளாகி ய இருவருந்தொடுத்துப் போர்செய்யுங்காலையில் இடம் வலமாகத் தேர்கள் சுழன்றன, நடநலமாகக் குதிரை கள் சுழன்றன, தீப்பொறி யிறைத்துக் கண்கள் சு ழன்றன, மாக்கணை தொடுத்து விற்கள்சுழன்றன, ம னஞ்சுழன்றன - நிலஞ்சுழன்றன - இத்தன்மையாக இர ண்டுபடைவீரருஞ் செய்தயுத்தத்தில் துரோணுச்சாரிய ருடைய வில்லாண்மையையும், சாத்தகியுடைய வில்லா ண்மையையும், பூங்கொத்தணிந்த தேவர்கள் கொண்டா டிப்புகழ்ந்தார்கள், போரின்திறத்தைப் பூரணமாகவுணர் ந்த போர்வீரர்கள் இந்தப் பலவான்கள் புரிந்தயுத்த முனை யைச் செவ்வையாகப் பார்த்து அதிசயமா விக்கிரக அ நேகஞ்சொற்கள் சொல்லிமகிழ்ந்தார்கள்.

இவ்விதமாக, யாவருந்துதித்த இயற்கையினால் துரோ ணுச்சாரியர் திடங்கொண்டு சீறி தன்மனத்திலெழுந்தெ ரிந்த கோபாக்கினியைப் பார்க்கிலுங் கோடிபங்கதிகமா கிய அக்கினியாஸ்திரத்தையெடுத்து அநேக வுபசாரமா கப்பூசித்து வஞ்சமாகவெதிர்த்துப் போர்புரியாநின்ற சா த்தகியின் பேரிற்றைத்து உயிரொழிக்கும் படியாய்த்தொ டுத்தார்-அந்தக்கணையானது கடலிற்றங்கிய வடவாமுகா க்கினிபோற் படபடப்பாய் புகுந்து விண்டலத்திற் பாய் ந்து எண்டிசையைக் காய்ந்து நால்வகைச்சேனைகள்நாச மாகும்படி யுருக்கிக் கருக்கித் தீச்சுவாலை நின்ற வலிமை யை ஆய்ந்துணர்ந்த சாத்தகியானவர் கண்டு-ஒரு-வருண ஸ்திரத்தைத் தொடுத்து மந்திரங்களைப்படித்துச் சுந்தர மாகவிடுத்தார்-அப்படி விடுத்த வருணஸ்திர மானது து ரோணர்விட்ட அக்கினி யாஸ்திரத்தை அவித்து கும்பத் தாரையாய் மழைபொழிந்து அந்த யுத்தகளத்திற் பறந்த வெவ்வழற் றீச்சுடர்களையும், வெண்தூள் - கருந்தூள் - செந்தூளையுந் தணித்து நீக்கி இரண்டு பாணமும் ஒன் றோடொன் றுடற்றித் தாழ்ந்ததை சிவந்தகண்களையுடைய-இவ்விருவருங்கண்டு மிகுந்தகோபங் கொண்டு ரணக ளத்திற் றலையறுந்த கவந்தம் ஆடும்படியாய் நிலைசிறந்த போர்புரிந்து கொல்லும்போதில் சாத்தகிவிடுத்த கணைத் திறத்தையும் நாணேற்றி வில்வளைத்தகரத் திறத்தையும், குற்றமற்ற புஜபல பராக்ரமத்தையும், நற்றவப்பயனு ல மைந்த ஸ்திரமாகிய புத்திவிசாலத்தையும், துரோணரறி ந்து தலையசைத்து சந்தோஷமடைந்து நமது சிஷனுகிய அர்ச்சுன னிடத்தில் வில்வித்தைகற்ற பிள்ளை யல்லவா வென்று மெச்சினர்-அந்தவேளையில், அநேக ப ரசர்களு டன் நகுல சகாதேவரிருவரும் சூழவந்து முக்கண்ணனு க்கொப்பாகிய துரோணுச் சாரியை யடுத்துக் கணைகள்

தொடுத்து விடுத்தார்கள் அப்போது துரோணரானவர்
சாத்தகியைவிட்டுத் திரும்பி நகுலசகாதேவனாக்கிட்டிஎ
ட்டிப்பழம்போற்கண்சிவந்துமட்டில்லாச்சுணைகளைத்தொ
டுத்து இவருடன்வந்த அணிப்படைகளெல்லாம் அலக்
கழிந்து போம்படியடித்து அதிர்க்கும்போது நகுலசகா
தேவர் முதலாகிய நால்வகைப்படைஞரும், புறமுதுகிட்
டோடினர்கள்.

அந்தவேளையில், தர்மராஜனெதிர்த்து தருவேதியனை
வளைந்து காச்சித் தோச்சுங் கடைச்சற்பிடித்து விஷத்தி
லும் வைசனுமித் திராவகத்திலுந் துவயற்செய்து தங்கக்க
ட்டு பொற்கட்டு வச்சிரக்கட்டு எழுதுக்கட்டு பட்டுக்குச்
சுழுகவிபதுங் கட்டிய பாணங்களைப் பிரையோகஞ் செய்
து எங்குநடுங்கி மங்குலொடுங்கி கங்குல்சலங்கி கலசங்
தொடங்கி உலகமடங்கிச் சலிக்கும்படியாய் உக்ரமத்து
டனின்று விக்ரமமாகக் கொன்று ஜாடியகாலையில் வேத
விதியாகிய யாகங்களும் தர்மமும், வீரப்பிரதாபமும், நா
ன்குவேதங்களிற் சொல்லிய நன்னெறிகளும் வித்தியா
கவனர்த்து வாராநின்ற சிறந்ததுரோண ரானவர் தேவ
தாஸ்திரங்களைத் தொடுத்து தர்மராஜன் பிடித்த பாரியவி
ல்லைப் பாழலென்றொடித்தார் உடனே தர்மநந்தனர் வே
றொரு வில்லையெடுத்துப்பிடித்து நிறுத்தியிழுத்து நாணி
பூட்டி ஷ்டங்காரஞ்செய்து நாரோசைகாட்டி இடியாஸ்
திரம் பிரையோகஞ் செய்து எதிர்நின்ற குருவினுடைய
வெள்ளைநிறங் கொண்ட வேதக் கொடியையும், சிகரங்கு
டைதாங்கிய தேரையும் வாயுவேக முடைய குதிரையை
யும் வண்மைநிறைந்த சாரதியையும் கூறுகூறுகப் போக்
கி வெற்றிப்போரில் வீறிச்சிறந்த விசையுடனடிக்கும் இ
சைமணிகட்டிய வீரவில்லையுந் துண்டித்துதிரப்படைகளை
யுந்தெண்டித்துஎதிரேறிச்சென்றுசேதிக்கும்போதுசிலை
யாசாரியாகிய துரோணாச்சாரியரானவர் துயரங் கொண்டு
சேமத்தேரிற் பாய்ந்தேறி நின்று மலையைநிகர்க்குஞ்சிலை
யைவளைத்துஉலையைநிகர்க்குந் தலையினையுடைய உச்சித
மான வச்சிரக்கணைக்குத்தூப திப நைவேத்தியங்கொடுத்
து விடுத்து முரசக்கொடிக்கதிபனேறிய தேரையும் கை
பிடித்த வில்லையும்போக்கிய காலையில் எக்காலத்தும் உல
கத்தில் நீதியைநிறுத்திய யோக்கிய சிலாக்கியராகிய த
ர்மராஜனானவர்மற்றொருதேரில் விற்பிடித்தேறிபற்றலரு
யிரைப் பாழ்படச் சிதைக்குஞ் சத்திவேலை யெடுத்துப்
போற்றி கரத்திற்பற்றிவெற்றியையுடைய துரோணாச்சா
ரியினுயிரை வாங்குவேனென்று அபிமந்திரித்து ஆகாயத்
திலிறைந்துபரந்தவிண்ணவர்களும் பூலோகத்தி லுறைந்
து சிறந்த மன்னவர்களும் வேலாயுதத்தின் வெப்பத்தை
ப்பார்க்கமாட்டாமற் கண்களை மூடிக்கொண்டு துரோண
ர் பிழைப்பாரோ சாவாரோ வென்று சந்தேகப் பட்டு
தளர்வுறும்படியாய் தன்னைரக்ஷிக்கும் வழிபடுகடவுளினு
டைய திருவடியைச் சிந்தித்து வந்தித்துப்போற்றி நாசி
கவிக்து வீசியெறிந்தார், அந்தச் சத்திவேலானதுதத்தி
சுற்றிக் கத்திச்சிறித்துப்புறப்படும்போது மண்டல மெ
ல்லாங்கரிந்து விண்டலமெல்லா மெரிந்து திக்குகளெல்
லாஞ் செந்திச்சொரிந்து விஷநிறைந்த புகையெழுந்துமி
னல்மலிந்த பொறிவிழுந்து கனலில்வந்த புனல்வழிந்துக
லகலென்றுசிலைகவிரிந்து காரொடுகடன்மலை நேரொடுச்
ரியப் பாரொடு பரி கரி தேரொடு விரியப் பட பட கட
கட தட தட மட மட படீ ரென வந்து விழுந்த சத்தி
யைத் துரோணாச்சாரியர் கண்டு கவலைகொண்டு பிர்மா
ஸ்திரமெடுத்து வேண்டிய பூசை கொடுத்து வேதமந்திர
த்தை யுச்சரித்து விடுத்தார் அந்தப் பிர்மாஸ்திரமானது
பூதல பாதல மாதல தராதல மீதலம் யாவும் வாதனை
மலியச் சேதனப் படுத்தி அஷ்ட திக்கு களும் அஷ்ட
கஜங்களும் அஷ்டகிரிகளும் அஷ்டமாநாகங்களும் கஷ்ட
ப்பட்டுக் கலங்கி நஷ்டப்பட்டு நலிங்கி வட்டமாய்ச் சுழ
லும்படிக்குத் தர்மராஜன்விட்ட சத்திமேல்விழுந்து கொ
ழுந்துவிட்டெரியும் நெருப்பெனக்கொளுந்திக் காய்ந்து
எங்கும்பாய்ந்துஆரியனிடம்வந்துசேர்ந்தது, அப்போது
சேனாபதியாகிய சிலைக்குருவானவர் தர்மராஜனேவிய ச
த்திபழிந்த சந்தோஷத்தினால் மெய்த்திரம் கைத்திரம் வி
ற்றிரம் மல்த்திரம்-மதித்திரம்-யாவுங்காட்டி எவர்களுமி
வருக் கிடல்லவென்று சொல்லும்படியாய் தன்பேர் நி
லைநாட்டி மீளவும்-கமலாஸ்திரம்-கருடாஸ்திரம்-குமுதா
ஸ்திரம்-விருக்ஷாஸ்திரம்-பர்வதாஸ்திர முதலாகிய ஐந்து
அஸ்திரங்களை அபிமந்திரித்து அறக்குமாரனுடைய அங்
கத்தில்விடுத்தான் ஆசிரியன் றொடுத்த அந்தக் கணைகளை
ந்தும் அனற்புகை மலிந்து தருமராஜன் மீது தாவிவரும்
போது தர்மசுவரூப்பெரியோர்முதற் றேவர்களெல்லா
ருஞ் சஞ்சலமடைந்து ஏதேது இந்தப்பாணங்கள் தப்பா
து தப்பாது இந்தப்பூட்டுக்கு தர்மராஜன் தப்பிப் பிழை
ப்ப தருமை யருமை எப்படியு மிறந்துபோவார் சந்தே
க மில்லை ஒருவேளை, நல்வினைப்பயனாற் பிழைப்பா ராகி
ல் சிறந்த சேனாபதியாகிய துரோணாச்சாரியின்கையிற் சி
க்கிக்கொள்வானென்று தியங்கிமயங்கி பெருமூச்சுவிட்டு
சந்தேகிக்கும்போது குந்திமுதற் புத்திரனாகிய கோமான்
நந்தநந்தனனுக் கந்தரங்கபத்தனாகிய சீமான் சிந்தைவருந்
தி இந்திரக்கணை சந்திரக்கணை இரண்டையும் அநுசந்தித்
து வந்தித்துப் பிரையோகஞ் செய்தார், அந்தக் கணைக
ளால் துரோணாச்சாரியர் தொடுத்த கணைக ளைந்தும் மு
னைமுறிந்துயிறகறுந்து உடல்கிழிந்துமளமளென்று பொ
டிப் பொடியா யுதிர்ந்தழிந்தன, அந்தக்ஷணமே தர்மநந்த
னர் மனங்கொதித்து முகங்கடுத்து பற்கடித்து சில சொ
ற்படித்து வலுவிற்பிடித்து காழாகிய வயிரங் கண்ட ஏ
ழு வாளிகளையுந்தி அருமறையவன்கொண்ட வில்லையும்
அவரேறிய தேரையும் அழித்து யாவருந் துதிக்கா நின்
ற சூரியனைப்போற் றருமராஜன் றுலங்கிநிற்கவும் சேனா
பதியாகிய துரோணாச்சாரியர் தேரும் விலலும் சிதைந்து கு
லைந்து ஓட்டமு நடையு மொன்று மில்லாமல் அசைவற்
றவராய் பூமியி னிற்கும்படியானதை புண்ணிய சொரூபி
யாகிய தர்மராஜன்கண்டு அந்தத் துரோணாச்சாரியர்பே
ரிற் கையெடுத்து யுத்தம்பண்ணக் கருதாதவராய்செவ்வ
ரக்கைப்போற்சிவந்துதீப்பொறிசிதறுங்கோபக்கண்ணிற்
கிருபைசொரியும்படியாய்புன்சிரிப்புடன் அந்தத் துரோ
ணரை யுற்றுப்பார்த்து இப்போ தும்மைக் கைப்பிடியா

கப் பிடித்துக் கட்டுவதை மாப்பாக விட்டேனென்று தேரைத்திருப்பி அவருடன் கூடவந்த ஆலகாலவிஷத்துக்கொப்பாகிய படைவீரர்மேற் பாய்ந்து சிறிபாணங்களையாய்ந்து தூறியபோது சேனைகள்புரிந்து தியங்கியதைக்கண்டுமனந்தாளாமல் மாச்சரியங்கொண்டு ருக்குவேதசம்பன்னராகிய துரோணாச்சாரியர் பாண்டவமுதல்வனை விட்டுக்கால் நடையாய் மீண்டுபோனார்.

அங்காலையில். தமயனுடைய கருத்துணர்ந்த தம்பியாகிய வீமசேனன் களங்கரகிதமாகிய சூரியனைப்போற் பொன்மயமானதேரைச்செலுத்தி அண்ணலாகிய தர்மராஜன் செய்யும்யுத்தமுனைக்கனுகிறான் அந்தத்தம்பியைக்கண்ட தருமபூபதியானவர் யுத்தமுனையைவிட்டு வெற்றிபெற்ற பிரகாசத்துடன் திரும்பினர் ஐயா எப்போதும் தர்மந்தவறாதபுண்ணியவான்களுக்கு பொல்லாங்காகிய பகைவந்து தொடராது ஒருவேளை தீவினைவசத்தால் ஆரபாரப்பகைவந்தபோதிலும் வீரங்குறையாமனின்றுவெற்றிபெறச்செய்யும் அவர்கள்செய்த தர்மமென்றுமேலோர்சொல்லிய வாசகமானது சத்தியம் ஆதலால் தர்மநந்தனனைப்பிடிக்கத் கருதினேனென்று சபதங் கூறிவந்த துரோணாச்சாரியர் தான்சொல்லிய சபதத்திறமை தப்பாமலொப்பாகும்படியாய்வந்து போர்புரிந்த வேதியன் இளைத்தபோது ஆசாரியனென்னும் அன்புவைத்து அவருக்கொரு வருத்தமுமில்லாமற் போம்படியாய் தர்மராஜன் செய்த பெருங்கிருபையானது எல்லோராலும் கொண்டாடும்படி சிறந்ததென்று தேவர்களெல்லாரும் தர்மராஜனுடைய புகழை யெடுத்துப்பாடினார்கள்.

இப்பால், நகுலராஜனும்-அழகிய விகர்னராஜனும்பெருமைபொருந்திய பேரமர்விளைத்த காலையில் வீரப்ரதாப பரிசுத்தவான்களெல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள்-புராதனப் பூமியினிறைந்த ஆத்மகோடிகளெல்லாஞ் சலித்தது இதன்றியும்-யானைப்படை-குதிரைப் படையில் மிகுத்த துன்முகனும்-சகாதேவனு மெதிர்ந்து அருமையான போர்புரிந் தார்கள், அந்த யுத்தமுனையினின்ற வீத்தகவீரரெல்லாரும் வெருவிப்பயந்து கலக்கங் கொள்ளும்படியா யுத்தஞ்செய்து வருகையில் துன்முகனுடைய தேரையும் வில்லையும் பாணங்களையும் சகாதேவன் பொடியாகச்செய்தபோது தேசம்வருந்திப் பூமியிலிழிந்து புரமுதுகிட்டோடினன் துன்முகனனவன் அந்தத்துன்முகனுடையதைக்கண்டு சகாதேவன் திரும்பிவருங் காலையில் வில்முனை வீரனென்னுந்திரிகர்த்தனுடைய புத்திரன் வந்து வளைத்து யுத்தம்பண்ணும்போது சற்றுநேரம்போராடி மற்றவர் நேரோடிப் போம்படியாய்ச் சாடி வலிமையேறிய முனைவாளியால் திரிகர்த்தன் மைந்தனை மடித்து வானிலேற்றினன், அவனொளில் போர்செய்யா நின்ற ராஜர்களுடைய வீரமுனைக்கு இவனொரு எமனென்று சொல்லும்படியாகிய தீர வீர விஜய பராக்ரமங்கொண்ட சகாதேவன் இப்பால் ஒருபக்கத்தில் கதாயுதனகிய வீமசேனன்புகுந்து மிகுந்த வேகத்துடன் களித்துவராநின்ற தர்ந்தையாகிய வாயுதேவனைப்பார்க்கிலும் விந்தை யாகிய பலமேற்கொண்டு அந்தரமென்னு மேலுலகளாவிய நீல மலையானது கால்முளைத்துப் பூமியி லுலாவுவதைப்போல் ஓயாமல் யுத்தஞ் செய்து திரியுந் தன்மையால் இக்குருகைஙகளாற் சுமக்கப்பட்ட இக்குவலயமாகிய பூமியானது திக்குமுக்காடி வருந்தியது.

இத்தன்மையவாகிய போர்க்கோலக் கோபங்கொண்ட வீமசேனனுடைய புத்திரன் கடோற்கஜனனவன் அலம்பாசூரனை வளைத்துக்கொண்டு இரண்டு மகாமேருநிகண்டதோளிறுடன் விரிந்தநிலத்திலின்று அமர்செயயாநின்றஆரபாரமானது என்னைப்போலொத்தவர் நாவினுஞ்சொல்லத்தக்கதன்று ஒருநாற் சொல்லத்தொடங்கினலும் அருமையிலும் அருமையானது, இவ்வண்ணமாக அநேக யுத்தநடங்கவிதத்தையும், துரோணரானவர் வடவாக்கினிபோற் சீறிவந்து நேர்புகுந்து போர்புரிந்தகன்ற இறத்தையுஞ் சொன்னோம் இனிமேல் மாதவன் செலுத்துந்,தேரின்பேரில் ஆதவன்போலிருந்து குறைவற்ற நிறைவுற்றமுறைபெற்ற முனைவெற்றிகொள்ளும்அர்ச்சுனனுடையவீரமுதன்மைத்திறத்தைச் சொல்லுவோம்.

சேனாபதியாகிய துரோணாச்சாரியரால் ஆசிர்வதித்திட்டப்பட்ட கவசத்தை யணிந்துகொண்ட ராஜாதிராஜனும் அவனுக்குட்பட்ட பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் மன்னர் மண்டலீசர் முதலாகியபலவிதப்படைஞருஞ்சேர்ந்து திக்குகஜங்கள் செவிடுபட்டுப் போகும்படியாய் ஜெயபேரிபூரிவாத்தியமுழங்க-குடை-கொடி-பிலிக்குஞ்சம்பிடித்து கூக்குரலிட்டார்த்து தனஞ்செயநின்ற யுத்தமுனைக்கெதிரில்வந்து முனைக்காறராகியமுதல்வர்கள்கிட்டி முந்திதங்கள் சேனைகளைமூட்ட விட்டார்களா,அந்தவேளையில் யுத்தம்பண்ணும்படியாகத் துரியோதனனுடன்போனசேனைகளும் அணிவகுத்திருந்த சேனையானைகளும்தங்கள்,தங்களுடைய இளைப்புத்திரும்படியாய்தேவதத்தனு லேர்ப்படுத்திய மணங்குலாவு மலர்நிறைந்தபொய்கையிற்சென்று பூரணமாகிய புனலைப்பருகி தாகவிடாய் தீர்ந்து அந்தத்தடாகத்தின் வளப்பங்களைப்பார்த்துஆ-ஆ எமதுநாவானது எக்காலத்திலும்புசியாத ஜலமிதுஇதைச்சலமென்று சொல்லப்படாது அப்படிசொல்லியபேர்களுக்குச் சஞ்சலம்வந்து சம்பவிக்கும், அம்மம்மா, இது தேவர்களுக்குப்போகமாகிய இன்னமுதென்று சொல்ல வேண்டுமேயல்லது வேறல்லவென்று சொல்லித்துதித்து தென்றல்காற்று வாசமாகிய தடாகத்தைச் சூழ்ந்திரா நின்ற சோலையின் கரைதோறும் போய்ப் பொருந்திப்படுத்துந் தங்களுடைய விடாய் தீர்த்துக் கொண்டார்கள் மேலும் சிலபேர்கள்,கன்னமத கபோலமத கரடமதமென்னு மும்மதங்களையுடைய யானைகளைச் சேர்த்துக்கொண்டுவந்து செந்தாமரைமலர்ந்த தடாகஜலத்தில் நீந்தவடித்து விளையாடினர்கள் சிலர் தத்திப்பாயுங் குதிரைகளைக் கொண்டுவந்து ஜலங்குடிப்பித்து அதுகளைக் குளிர்ப்பாட்டி நீரில் நிஞ்சவடித்துஆழமாகியஜலத்தில் தாங்களுமூழ்கினர்கள் சிலபேர்கள்-புட்பங்களிற் பொருந்தி மொய்த்து ரீங்காரம்பாடாநின்ற வண்டினங்களைக்கண்டு சந்தோஷங்கொண்டு இருகையைக்கொட்டி யெழுப்பினர்கள், சிலபேர்கள்நீலோற்பலஞ் செங்காவி-வெண்டாமரை

செந்தாமரை முதலாகிய அன்மலர்ந்த புட்பங்களைப்பறித்துக் குணங்கொண்டமனங்கண்டார்கள்சிலபேர்கள்-இந்தக்குளத்திலிருக்கும்புட்பத்தின் பரிமளங்கள் எவ்வுலகிலுங்கிடையாதென்றார்கள்சிலபேர்கள்-கடலினாழத்தை யளவிட்டாலும் இந்தக் கயத்தினாழத்தை யளவிடப்படாதென்றார்கள்.

இப்படியாகப் பற்பலவிதமாகிய பெருமைகளைப் பேசிக்கொண்டு சமுத்திரத்தைவளைந்த சக்கரவாளத்தைப்போல் அளவில்லாதயானைகுதிரைகளுடன் சூழ்ந்திருக்காநின்றசேனைக்கடலை இந்திரகுமாரனாகிய காண்டாவனதகனன் கண்டு அழியாரதத்தினின்றிழிந்து சுவேதவாம்புரவிக்கு ஜலமூட்டிவைக்காநின்ற தளைகளைந்த கோபாலனைப்பார்த்து ஓ சுவாமீ குதிரைகளைக்கொண்டுவந்து தேருடன்கட்டிவையும் இந்தத் தெய்வீகவாவியிற் றண்ணீர்குடித்துங்ளைந்து நிற்கின்ற சேனைகளையெல்லாம் ஒருநொடிப்பொழுதிற்றெய்வலோகத்திற்கனுப்பிவிட்டு வந்தபிற்பாடுதேரின்பேரிலேறிச்செல்லலாமென்று சொல்லி கோபாக்கினிசொரியுங் கண்களையுடையவீரகண்டைதரித்திராநின்ற விஜயனானவன் கன்றியமனத்தை யுடையவனாய்ப்பாதசாரியாய்ச்சென்று ரதங்களின் பேரிலும் - யானைகளின்பேரிலும் - குதிரைகளின் பேரிலும் - அலைகள்போல் வரிசை வரிசையாய் நிற்கின்ற வீரர் களைத் தனித் தனிக் கணைகளாற் கொன்று குன்று போற் குவித்து மரகதமலைநிற்குந்தன்மைபோல்நின்றான் அந்தச்சமயத்தில் அதிரதத்தலைவராகிய சிலவீரரெதிர்த்து அக்கினிக் கணை முதலிய வெல்லாக்கணைகளையும் விடுத்துப் போர்புரிந்தார்கள், அப்போது சித்திராங்கதபாண்டியன் குமாரத்திக்குநாயகனாகிய கிரீடியானவன் ஒருகணைக்குக்கோடிகணை தொடுத்து அவர்கள்விட்ட சரங்களைக்கெடுத்து அதமாக்க அஸ்திரப்பிரயோகஞ்செய்து அவ்விடத்திலிராநின்றஅரசர்களையும் அச்சு மச்சு குத்துக்கால் கொடிகொடிஞ்சில் முதலியசக்கரங்களையுடைய தேர்களையும் சாரதி குதிரைகளையும்அவர்கள் கைக்கொண்ட வில்லையும் துக்கப்பட்டொழிய வழித்து அநேகந்தரம் அந்தக்குளத்தைச் சுற்றிச் சுற்றிசம்மாரகாலருத்ரமூர்த்தியைப்போல் வந்தான் தேர்மீதிருந்த வீரர்கள் பார்மீதிருந்த அர்சுனன் பேரிற்றொட்ட பாணமானது பாதாளத்திலிருக்கும் பாம்புகளின்பேரில் மேகத்திலிருந்துவிழுந்த மின்னலை யொத்திருந்தது பூமியி நின்ற விஜயனானவன் தேர்மீதிருந்த வீரர்கள்பேரிற்செலுத்தியகணைகளானது ஆகாயத்திலிருக்குஞ் சூரியனைவிழுங்குவதற்குப்பாதாளத்திலிருந்தெழுந்தவிஷச்சுவாலையையுடைய பாம்பையொத்திருந்தது.

இதன்றியும் இந்த அர்ச்சுனனா லடிபட்டு ஆகாயத்திலோடிய அதிரதத்தலைவர்க ளெல்லோரும் ஒரு முகமாகத்திரும்பி அமர்புரிந்தபோதுவிஜயன் தொடுத்தகணைகளினால்தேர்களுடைந்து- கொடிமுறிந்து-நாணியறுந்து-வில்லொடிந்து தாங்களும் நாசமடைந்து-மேலுலகடைந்தார்கள், அழியாதொழிந்தவர்கள், அலக்கழிந்தோடி யிடைந்தார்கள், இவர்களையெல்லாம் அந்தக்குளத்தின்மேட்டில்முடித்துவிஜயங்கொண்ட விஜயனானவன், வச்சிரச்சிகரக்கொடிஞ்சில் வட்டமும் அனுமத் துஜமும் சக்கரமுமமைந்ததேரில் சுவேதவாம் புரவியைப் பூட்டச் செய்து சாரதியுடன் தானும் அரோகணித்துக் கொண்டு சந்தோஷ காமாகச் சேனை முகத்திற் செலுத்தி யூகத்திற்குட்புகுந்து போகாநின்ற அர்ச்சுனனைக் கண்டு யுத்தமுனைக் கழிந்தோடிய வீரரும் - சகுனியும் - துரியோதனனுடைய தம்பிமார்களும் விசனங் கொண்டு அநேக வாத்திய முழக்கத்துடன் திரும்பி யெதிர்கொண்டுவளைத்த காலையில் தனுவேதிய ரேற்படுத்திய சகடவியூகச் சேனைக்குடலை அடிபோ டறிந்து அப்பாற்சட்டியவியூகத்தின் மேற்செல்லாநின்ற பாரியவில்லுக் கொருவ னென்னும் வீரியபார்த்தனானவன் போர்வில்லைத் தாங்கி தன்னெதிர் வருகின்ற துரியோதனன்றம்பிமார் சகுனிமுதலிய ஆறு பேர்களையும் நீறுசெய்யு நெருப்பைப்போற்சீறிநேர்முகஞ்சென்று கூர்ங்கணைவிடுத்துப் போர்கொடுக்க வடுத்து நெருங்குவதற்குமுன்னமே,வலம்புரியலங்கலணிந்துதலம்புரக்குக்காரபதியாகிய துரியோதனமகாராஜன் துரோணாச்சாரியரிடத்திற்பெற்ற சாலிகவசமும் பனிரெண்டுரதமும்-பனிரெண்டுகுதிரையும்-பனிரெண்டு யானையும்-பனிரெண்டு சக்ரஜெயவீரனும் சேர்ந்துவரும்படியாய்தான்முந்திவந் தெதிர்ந்து நீண்ட மகமேருவைநெடுங்கடல் வளைந்ததைப்போல் அர்ச்சுனனைமறித்து மலைக்கொப்பாகியவில்லைவளைத்துகண்விழித்து கடும்புகையெழுப்பி கனற்பொறிகாட்டி விஜயகாண்டீபத்துக்கு நேராகியவில்லாளிகளில்லையென்று மேன்மைபெற்ற விஜயன்பேரிற் பாணப்பிரயோகஞ் செய்தான்.

இவ்விதமாகச் சேனாசமீனியங்களுடன்வந்தெதிர்ந்துஎண்டிசைமண்டலவிண்டலம் யாவும் நடுங்கும் படிக்குக் கொடிய போர்புரியாநின்ற வணங்காமுடி வேந்தனை-வாசவன்மைந்தன்கண்டு திப்பிரமைகொண்டு ஆச்சரியமுடையவனாய், ஆ ஆ, தீதிலா வேணு கீதநாதப்பிரிய மதுசூதநாத சூதனே யென்றுவணங்கி-இந்தத்துரியோதனன் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தநாள்முதல் இன்னாள்வரைக்கும் ஒருயோசனை தூரத்துக்கப்பால் நிற்கிறதேயன்றி எனக்கெதிர்வந்துநின்று யுத்தஞ்செய்ததில்லையே, சத்துருக்களைக்கொன்றுவெற்றிபெற வேணுமென்று நல்லநினைப்பு இவனுக்குண்டென்று இதுவரையிலுநான்கண்டறிந்ததில்லையே,இப்போது-சுரவையாய் மோகரித்து-எல்லாவுலகுமதிரும்படிக்குவந்து போர்செய்யாநின்ற திறத்தைக்குறித்து இன்னவிதமென்றுயான் சொல்லமாட்டேன், அப்பப்பா என்னவலுப் பெற்றானோ - மந்திரசக்தியோ அஷ்டமாசித்தியோ அநுக்கிரகவில்லோ அழியாக்கவசமோ-ஒழியாத்துவசமோ-மற்றென்னமோ ஒன்றுந்தோன்றவில்லையேஉலவாப்பெருங்குணத் துத்தமனேயென்றுகேசவனைத்தொழுது வாசவன்மைந்தன்கேட்க, ஜகதீசனென்னும் ஜனார்த்தனன்சொல்லுகின்றார், சிங்கம்போலெங்கும் பிரக்யாதிபெற்றதங்கம்போன்றபற்குனனேகேளும்,உலகத்தைச்சூழ்ந்தசக்ரவாளகிரியைப்போல் உடலையுமுயிரையுங்காக்காநின்ற சாலியென்னுங்கவசம் பிர்மாவிடத்திலிருந்தது அந்தக்கவசத்தை இப்போதிருக்கிற இந்திர

னுக்கு முன்னிருந்தஇந்திரன் பிர்மாவிடத்திற் பெற்றுக்கொண்டான், அந்தஇந்திரன் பார்த்வாசரிஷிக்குக் கொடுத்தான், அவர் துரோணாச்சாரியருக்களித்தார், அந்தத்துரோணாச்சாரியர் அரவக்கொடிக்கதிபனாகியஇந்த அரசனுக்குத் தரித்தனுப்பியிருக்கின்றார், இந்தக்கவசத்தின் மகத்துவமெத்தன்மையுடையதென்றால், வெற்றிமுனைபெற்ற சித்திமுதலுற்ற ஆயுதங்களினாலேயும் அழியத்தக்கதன்று, ஆனால்உன்னாற் கூடிய சக்திவரையிலும் இந்தக்கவசத்தை ஒழிக்கும்படியாகிய விதத்தைத் தேடலாமென்றுரைத்து துரியோதனனுக்கெதிரில் தடதடவென்று சுவேதவாம் புரவிபூட்டியரதத்தைச்செலுத்தினார்.

பூர்வத்தில்-காண்டாவனமுண்டெரியும்படியாக விரதம்பூண்டெழுந்த பாண்டவர் நடுப்பிறந்த அர்ச்சுனனுக்கு நிண்டாச்சுடரோனாகிய அக்கினிதேவன்கொடுத்த விஜயகாண்டீபத்தின் மெய்வலிமையைக்கொண்டு விஜயனெதிர்ந்து மனக்கோபமுதிர்ந்து குணத்தொனிகாட்டி கொடியசரங்களைப்பூட்டி யுத்தத்திற் கெதிர்த்து வராநின்றவிராதிவிராளுடைய மகுடங்களிலும், துரியோதனனுடைய கிரீடத்திலும் மகமேருவையொத்துயர்ந்த புயங்களிலும் - உந்தியிலும் - முகத்திலும் - மார்பிலும் - இருதயஸ்தானத்திலும் - பிரயோகஞ்செய்த பாணங்களானது அந்தர்தஸ்தானங்களிற் புதைந்து பின்புறமாகஉருவி சூரியனுடைய ஆயிரங்கிரணங்களும் விரிந்து புடைபரந்ததைப்போல் ரெத்தங்களைப் பீரிடச்செய்து ஆகாயத்தின் வெளிதெரியவொட்டாமல் ஒளியைமறைத்துப் பந்தலிட்டதைப்போல் நெருங்கியது.

இரதத்திற்பூட்டிய குதிரைகளின் நாக்கெல்லாம் துண்டித்துவிழ விற்களுடைய நாணியெல்லாந் தறிபட்டற- தேர்ச்சக்கரங்களெல்லாம் பொடியாய்ச்சிதைந்துதிர யானைக்கால்களெல்லா முறிபட்டொடிய சாரதிகளெல்லாந் தலைபறுங்கோட கொடிகள்முறிந்தாட குடைமுதலியசிகரங்கள் தறிந்துவிழ அடித்துக்கொல்லுதற் கெதிர்முனைந்தராஜவீராளுடைய தலைகளுடைபட்டு மூளைகள்சொரிந்தழிய உதிரவெள்ளங்களுட னிணங்கள்வழிய உயிர்கள் ஒழிய சுவேதக்ஷத்திரமுதலாகிய பற்பலகுடைகளும் விழுந்துகிழிய, இந்தப்பிரகாரம் அர்ச்சுனனுடன் யுத்தஞ்செய்ய ஆசைகொண்டெதிர்ந்த வீராள்யாவரும் ரணகளத்தில் வாடிவீடினோர்போக மீதிப்பேர்களெல்லோரும்புறங்கொடுத்தோடினார்கள்.

அந்தச்சமயத்தில் அங்கதேசமன்னனென்னுங் கன்னனானவன், துரியோதனமகாராஜனுக்குப்பரிந்து நிறைந்த போர்முகத்திற்செறிந்து சிறந்த தீமுகக்கணைகளைச்சொரிந்து அறந்தவா அர்ச்சுனனாலடிபட்டு முறிந்து முகங்கறிந்து பொரிந்து உதிரஞ்சொரிந்து வெந்துசோர்ந்து நொந்து விஸ்தாரமாகிய வியாகூலத்துடனோடினான்.

நவரத்னகஜித விரகண்டைதரித்த மாமன் சகுனியும் துரியோதனனுடைய தம்பிமார்களும் புவனத்தையழிப்போமென்றெதிர்ந்து அர்ச்சுனன்றொடுத்தபுங்கவங்களாலதிர்ந்து உடல்பிதிர்ந்து முகமாறினார்கள், கலிங்கதேசாதிபர்முதலிய காவலரநேகரும், புலிக்கஜாலம்போற் சிறியெழுந்து தலைகலங்கி புயமலைகுலுங்கி மதிவிலங்கி விதிதலங்கிவாடினார்கள் கிருதபன்மனும் - கிருபாச்சாரியும்- சேதிதேசாதிபனுஞ் சண்டைசெய்திளைத்து அஞ்சியகன்றொடுங்கினார்கள், பூரீஸ்வரன் முதலியபேர்கள் புகுந்து உடல்கிழிந்து பிராணனைக்காப்பாத்திக்கொண்டுபோனார்கள், அணிவகுத்திருந்த பூபதிகளெல்லாரும் உயிர்விடுபட்டார்கள், மற்றவர்யாவரும் புறமுதுகிட்டார்கள்.

உடனே மண்டலதுரந்தரனென்னுந் துரியோதனமகாராஜனேறிய குதிரைகள்பந்தித்த இந்திரவிமானத்துக்கொப்பாகியதேரை சாமர்த்தியத்துடன் சாரதிசெலுத்த அரவக்கொடி படபடென்றாட அமர்க்களமெங்கும் அநேகஞ்சூரியர்களைப்போல் மகுடம்பிரகாசிக்க வீரபட்டந்துலங்க வெண்ணீறிலங்க உடற்காப்பாக அணிந்த கவசபலத்தினால் அர்ச்சுனனுக்கு முன்வந்து வில்லைநாட்டி நாணிமாட்டி அர்த்தசந்திர பிறைமுகக்கணையைப்பூட்டி மந்திரங்கூட்டிவெகுதாட்டியாய், மேகநிறம் போன்ற பார்த்தசாரதி தேகத்திலும் சுவேதவாம் புரவிபேரிலும் இந்திரகுமாரனுடலிலும் அநுமத்துஜத்தின்பேரிலும் கடல்முழக்கம்போல் கடகடவென்றோடிவராநின்ற சக்கரங்களையுடைய அழியாரதத்தின்பேரிலும்சமலாஸ்திரங்களையிறைத்து விஜயன்றொடுத்தபாணங்களையெல்லாங்கெடுத்து எழுவைப்போன்ற புஜத்தையுடைய துரியோதனமகாராஜன்முன்னும்பின்னும் மேன்மேலாகிய முழுக்கணைகளைத்தொடுத்தகாலையில் ஒண்ணக்ஷயமாகிய தன் அம்புக்கூண்டிலிருந்தெடுத்து இசைத்து இழுத்துவிட்ட அஸ்திரங்களையெல்லாம் அரவக்கொடியோன் அறுத்துவிட்டதும் சாரதிமுதலிய தன்பேரில் வாசாமகோசரமாய் வருணசரங்களைப்பொழிவதும் இவைகளையெல்லாம் விஜயன்பார்த்து அநேகந் தீமுகக்கணைகளைத்தெறித்து எண்டிசையும் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு பேர்புரியும்படியாக்கி அந்ததுரியோதனன்றொடுக்கின்ற அம்புகளையெல்லாம்போக்கி அவன்தேகத்திலும் ஆகத்திலும் முகத்திலும் மகுடத்திலும் இடியாஸ்திரங்களை தன்னாலியன்றமட்டும் வாரியிறைத்தபோது, வணங்காமுடிபொறுத்த அரசனணிந்த கவசத்தின்பேரிற்பட்டு கற்பாறையின்மீது மழைத்துளிவிழுந்து தெரிக்குந்தன்மைபோற் றெறித்துப்போய் அவனுடையதேகத்தில் எள்ளத்தனையேனுங்காயம்படாமையால் துரியோதனன்மேலிட்டு வெகுகணைகளைத்தொடுத்து விஜயனுடையசரீரமெல்லா மெலியச்செய்ததுமல்லாமல், பார்த்தசாரதி தத்தளித்துத்தடுமாறவும் குதிரைகள்துடித்துக் குண்ணிப்போகவும் அநுமத்துஜம் அலைந்துவாடவும் அச்சுமச்சுகுத்துங்கா லசைந்தாடவுமாக்கியபோது அர்ச்சுனனும் அசைவற்றிருந்து தான்பிரயோகஞ்செய்த சரங்களெல்லாம் அந்தத்துரியோதனனணிந்த கவசத்தின்பேரிற் பட்டவுடனே அப்பாற் றெறித்துவிழுநிலையை ஒருநொடிப்பொழுதிற் கண்டறிந்து பிரகாசமாகிய ரதத்தில்மண்டியிட்டு சூரியாஸ்திரமெடுத்து சுருதிமந்திரம்படித்து எல்லாவுபசாரங்களு முடித்து வில்லிற்றொடுத்து துரியோதனனுடைய தேகத்தைப்பூடும்படியாய் மிகவுஞ் சீறிவிடுத்தகாலையில் துரோணாச்

சாரிபருடையகுமாரன் அசுபத்தாமனுனவன்கண்டு அந்தச்சூரியாஸ்திரத்தை நாராயணாஸ்திரத்தாற்றுண்டித்துப் பாய்ந்து தானுஞ் சிலநேரம் எதிர்த்து போர்புரிந்து ஓய்ந்து புறமுதுகிட்டுச்சாய்ந்தான்.

அந்தவேளையில் வெற்றிபெற்ற அர்ச்சுனன்விடுத்த இலையாகிர்தியாகிய முனைச்சரமானது அசுபத்தாமனுலழிந்துபோகவே போர்முகத்தில் நேர்புகாமலழிந்தோடியபகைவிராளடங்கலும் வேகமுற்ற குதிரைகள்பூட்டிய தேரைச்செலுத்திக்கொண்டு ஓரேமுகமாய் மோகரித்துவராநின்ற மூர்த்தண்யத்தை விக்ரமவிஜயன்பார்த்து மூசம்வியர்த்து மூவருக்குந் தேவருக்குமரிய முதல்வனென்று முகுந்தனுடையபாதத்தில்வீழ்ந்துபணிந்து இரக்கமுடையவனுக இயங்கி மயங்கி யுத்தஞ்செய்வதை யெப்போது மறந்தவனைப்போல் அப்போது அசைவற்றிருந்தான், முல்லைநிலமாக்களாகிய கோபாலருடைய குலந்தழைத்தோங்க வளர்ந்தருளியும் புள்ளாங்குழலோசைக்குறுகி கன்றும்பசுவுங் கலந்தோடிவரும்படியாய் நின்றருளியும் காமனைப்பெற்ற தந்தையாயெழுந்தருளியும் இராநின்ற காரியமுகில்போன்ற கண்ணனுனவர் கலங்காச்சமர்புரியுங் காதல்மைத்துனனுகிய காண்டீபன் கலங்கிநின்ற நிலையைக்கண்டு அநேகந்தாமரையிதழ்மத்தியில் ஒருசந்திரனுதித்தெழுந்ததற்கொப்பாகிய தமதுதிருக்கரத்தின் விரல்களால் பாஞ்சசன்யத்தையெடுத்து மணங்குலாவிய பவளம் போன்ற திருவாயில்வைத்து வலம்புரிச்சங்குகள் அலம்புரிந்தேங்கும்படியாய் பம்பம்பம்பமென்றூதினுர்.

அந்தரத்துபர்ந்த இந்திரதருவை சத்தியபாமைக்காக பூமியிற்கொண்டுவந்து நாட்டியருளிய புண்டரீகாக்ஷனுனவர் முழங்கியபாஞ்சசன்ய ஓசையானது சப்தமேகத்தின் முழக்கம்போலும் எண்டிசையிலும் அலைபெறியாநின்ற சப்தசமுத்திரத்தி னேசைபோலும் ஈரேழுலகமுநடுநடுங்கும்படி பேரொலியெழுந்தகாலையில் யுத்தகளமுழுமையுமெலிந்து சத்துருக்களெல்லோருநலிந்து வெற்றிபெறவேண்டுமென்றெழுந்த கடுஞ்சினவேக்மும் அடங்கி அவிந்து மோகங்கொண்டெதிர்ந்த மன்னர் மண்டலீசரும் அதிர்ந்து அண்டமுகடுந் தொண்டியாய்ச்சிதறிவிட்டதோவென்று தேவர்முதலிய யாவருநடுங்கும்படியானபோது பால்போன்ற நிறத்தினையுடைய சுவேதவாம்புரவிபூட்டிய தேரைச்செலுத்தி பரந்தாமனுனவர் பார்த்தனைப்பார்த்து ஐயா அர்ச்சுனு, என்னகலங்கிப்போய்விட்டாய் இளைக்காதே பயப்படாதேயென்று சிலபாணங்களை தன்றிருக்கரத்தால் தொட்டுக்கொடுத்து துரியோதனனுடைய நகக்கண்களில் தொடுக்கும்படியாய்ச்சொல்லி இந்தக்கவசந்தறிபடும்படியாய் பூர்வத்தில் தேவேந்திரன் ஒருவேலாயுதங் கொடுத்திருக்கின்றுனே அதைமறந்துவிட்டையோ அன்பனேயென்று ஞாபகப்படுத்தியபோது வச்சிராயுதன்மகனுகிய அர்ச்சுனனுனவன் விரைந்துமகிழ்ந்து மேலாகியவாழ்வைப்பெற்றேனென்று மிகுந்தபரிவினையுடையவனுய் விவேகஞானபத்தியோடெழுந்து திருநாரணனைவலம்வந்து செந்தாமரைக்கமலம்போன்ற திருவடியில்விழுந்து அவருடைய திருக்கரத்தால் ஆசீர்வதித்துக்கொடுக்கும் அஸ்திரத்தைவாங்கி வணங்கி நாணிவிற்பூட்டி யிழுத்தோங்கி இந்தத்துரியோதனன் அழிந்துபோகும்படியாய் மந்திரக்கணையை பிரையோகித்து விடுவோமாகில் வாயுகுமாரனுகிய வீமசேனனுடைய சபதங்கெட்டுப்போமல்லவாவென்றுணர்ந்து தன்னுடைய கோபாக்கினியையடக்கி இந்தத்துரியோதனனணிந்த கவசமழிந்து அவன்தேகமுங்கிழிந்து அமர்விட்டொழிந்து புறமிட்டோடும்படி செய்விப்பதுபெருமையென்றுஉட்கொண்டு நூறுபேரிற்றலைவனுகிய துரியோதனனுக்குமனநோவுவரும்படியாயெதிர்த்து வேலாயுதத்தையெறிந்தளவில் அந்தத்துரியோதனன் அணிந்துவந்த கவசமானது நீறுபட்டழிந்து அவனும் யுத்தமுனைவிட்டொழிந்து நகக்கண்கிழிந்து உதிரம்வழிந்து புறங்கொடுத்தோடும்போது எட்டுத்திக்கையும்வென்ற மட்டில்லாப்புகழ்கொண்ட கிரீடியானவன் அதிவேகமாக ஐயாயிரம் பெரும்பகழிகளை ஒய்யாரமாக எடுத்துவிடுத்து சீரிற்பொருந்தியவில்லையும் தேரிற்பூட்டிய குதிரைகளையும் அரவத்துஜத்தையும் பத்தரைமாற்றுப் பசும்பொன்மணிகளாற் புத்தம்புதிதாகச் செய்த எழுதட்டிரதத்தையும் நாசப்படுத்தி பொடியாயழிந்து அந்தத்துரியோதனனுக்கு உதவியாக பக்கத்திலிருந்து சீறிவராநின்ற சிலைக்குருவின்மைந்தனும் தியாகியாகியகன்னனும் மாமனுகியசகுனியும்மற்றிதரமாகியவெற்றிவீர வேந்தர்கள்பலரும் தங்கள் தங்களுடைய பெருமைவீறுகெட்டு படபடவென்றுபாதசாரியாய்பூமியிலோடும்படி விரட்டியடித்து முடுக்கியதுமன்றி கண்களிற்கடுந்தீயெழுந்து விண்களிற்புகுந்து மேகத்திற் கலந்தஜலத்தைதாகந்தாறுநூறிக் கலக்கி, தேகத்திற் படிந்ததும்புகளைவேகத்தால் வியர்வையுடன் விலக்கி, கோபாவேசத்துடன் மோகரித்தெழுந்த கொடுங்கணைகளினுல் விஜயன்வென்ற ரணகளத்தில் ஆரபாரித்தெதிர்வந்த பேர்களில்ஆர்தான் பிழைத்தார்கள்.

இதன்றியும், இயாவராலுந் துகிக்கப்பட்டபதினெண்பூமி யரசர்களிற் பலவாறுகப்பற்பலவாயிரம்பேர்பட்டார்கள், துச்சாதனன்முதலாகிய தம்பிமார்களும் அர்ச்சுனன்விட்ட அம்பிலழிந்து - உதிரம் வழிந்து - ஆருயிராசைகொண்டு அமர்விட்டுக்கெட்டார்கள், பின்னும்மட்டுப்படாத அக்கினியாஸ்திரங்களை அமோகமாய்த்தொடுத்ததினுல் அம்பரமெல்லாம்பம்பரம்போலாடிச் சுழன்று அலம்வரும்படி ஓடிப்பரந்தபோது அதிரதர்-மகாரதர்-சமரதர்முதலியபேர்களும் வந்தெதிர்த்து - சாரதிகளுந்தாங்களுந்தலைகளிழந்தார்கள், நாரதாதிமுதலியதேவர்களெல்லாரு மடிந்தவரைப்பார்த்து நடுநடுங்கி இன்றைக்கேபாரதம் பற்றறமுடிந்துபோமென்று கண்ணிரிறைத்து மண்ணிற்படிந்தவரைப்போல் வருந்தியிருந்திய அரசருடன் பொருந்திபரிந்து வார்த்தையாடாநின்றுர்கள், (பரிந்து வார்த்தைபாடியதாவது) நீண்டகாண்டீபதாரியாகிய நரனுக்கெதிர்நின்றுவெல்ல நல்ல வல்லபமுடையபேர்கள் உலகெல்லாந்தேடினும் உனக்கெதிர் ஒருவருமிரார்களென்றூர்கள், ஓ ஓ கோடாகோடிபேர்நின்று யுத்தம்பண்ணுகின்ற வெற்றிமுனையினிடத்து நினைப்பதற்குமுன்னே ஓ

ருபொய்கை யழைத்தானே இஃதென்னவிந்தை இது எவரால் முடியுமென்றார்கள், போகட்டும் இந்த அர்ச்சுனனுண்டாக்கிய தடாகத்தில் அளவில்லாக்குதிரைகளும் எண்ணிறந்தயானைகளும் கண்ணடங்காச்சேனைகளும் தாகவிடாய்தீர்ந்து களையாறி சவுக்கியம்பெற்றும் நன்றியற்றவர்களாய் தண்ணீர்த்தடாகமேற்படுத்திய தர்மவானுடனே எதிர்த்துப் போர்புரியநினைப்பது நல்லறிவுடையோர்செய்யு நலமல்லவே, இது புல்லறிவாளர் செய்கையென்றார்கள், நல்லது தேவர்க்கண்ணலாகிய மேகவண்ணனென்னுங்கண்ணன் இவ்வண்ணமாய்ப் பாரதயுத்தத்தில் பார்த்தசாரதியாயமைந்து தேர்செலுத்தக்கிடைத்தது இந்நரன் பூர்வஞ்செய்த புண்ணியமியாதோ சொல்லுங்களென்றார்கள்.

இதுவன்றியும், அர்ச்சுனன்விடுத்த ஒரு முகவாளி-இருமுகவாளி மும்முகவாளி முதலிய வாளியும் படையினுழைந்து எல்லோருடைய பிராணனையு முண்டு அந்தரத்திற் றிரிந்துகொண் டிருக்கின்றதேயல்லது பூமியிலிறங்கவில்லையே ஆகையால்-என்றைக்கிருந்தாலும் இதுபொல்லாத பொல்லாங்காகிய பழுதைவிளைக்கும் எச்சரிக்கையாக விருக்கவேணுமென்றார்கள், இன்று முப்பது நாழிகையும் சிந்துதேசாதிபனுடைய பிராணனைக் காக்கிறோமென்று வந்திருக்கு மன்னவர்யாவரும் இந்த நன்னயகுணாலய நரனைத்தடுப்பார்களோ, தங்கள் வீரத்தை விடுப்பார்களோ, இந்திரகுமாரனாகிய அர்ச்சுனன் இன்னஞ்சற்றுநேரத்திற் சயந்தவன் றலையைத் தள்ளி சபத நிறைவேற்றுவானே வென்று இவ்விதமாக அரசர்முதலியயாவருஞ் சிற்சிலவசனஞ் சொல்லிக்கொண்டிருக்கார்கள்.

இப்பால், பசுமைதங்கிய துளவணிந்த பரந்தாமனும், பார்த்தனும், சிந்துராஜனைத்தேடி தேரூர்ந்துபோனார்கள் அந்தக்காலத்தில் தர்மராஜனால் நடந்த சில சங்கதிகளைச் சொல்லுகின்றோம் தார்வேந்தனே கேளும், தாசர்களின் கள்ளமில்லா வுள்ளத்திலுறையும் வள்ளலானவர் வெள்ளைநிறச்சங்கை பூரித்தநாதத்தின் தெள்ளமுதமானதுபேரணிமத்தியி லிருந்த தர்மராஜனுடைய செவியிற் பட்டவுடனே தளர்ச்சியில்லாமனத்திற் சந்தேகங்கொண்டு தன்னருகிருந்த சாத்தகியை யழைத்து என்னையனே, இன்று முப்பதுநாழிகைக்குள் சயிந்தவனை முடிக்கிறேனென்று சபதங்கூறிப்போன சதுரனாகிய தனஞ்செயன் - சண்டைமுகத்தி லிளைத்தான்போலு மிருக்கின்றது, இல்லாவிட்டால் ஜனார்த்தனனானவர் பாஞ்சசன்யமுழக்கந் தனிமையாய்க் காட்டமாட்டார், ஆகையால் சங்கத்தொனி கேட்டதுமுதல் என்னகத்தினில் உயிரோட்டமாயது, அப்பனே-நான் கொண்ட சங்கை தீரும்படிக்கு நீ அங்கேபோய் அறிந்துவரக் கடவையென்று தர்மராஜனுரைக்க, சாத்தகிகேட்டு-தர்மசொரூபியாகிய தார்வேந்தே,உமது சகோதரராகிய தனஞ்செயராஜன், போர்முகத்தில் முனிந்து முனைந்து புரப்பட்டால், தேவர்கள்-இந்திரன்-காந்தருவர்பக்ஷராக்ஷசாள்முதலியவிண்டலத்தவரும்கண்ணெதிர் நிற்கமாட்டார்களே, விஜயகாண்டீபனுக்கெதிரில் மண்டலத்தவர்களு நின்று வெல்லமாட்டார்களே,தேவரறிந்த மட்டுக்கும், விண்டலத்தவரில்-மண்டலத் தவரில்-இவருடனெதிர்க்கு மன்னவர் யாரிருக்கின்றார்கள், ஐயா-தருமமுங் கிருபையுந் தழைக்குமனத்தோய் தேவரீரை துரோணாச்சாரி கட்டக் கிட்டவொட்டாமல் முன்னணிப்படைக்குக் காவலாக யென்னைநிறுத்தி மேற்பட்ட வியூகபந்திப் பணியின்மீது சயந்தவ சம்மாரஞ் செய்யப் பெயர்ந்துபோனார் தேவரீருடைய தம்பியானவர், நானிவடம்விட்டுப்போய் மன்னர்துன்னி முன்னணிநிறைந்தபேரணியிற் புகுவேனாகில் என்னைக் கண்டவுடனே விஜயனாகிய மன்னன் வெறுப்பார் அது எனக்கென்னாளும் ஐயப்பாம் அழகிய மணிப்பொன் மௌலிபுனைந்த ஆண்சிங்கம்போன்ற அரசர்க் கரசேயென்று சாத்தகிசொல்ல,குற்றமற்ற குலவனைக் கொப்பாகிய புஜபலவலுமைபெற்ற கோவேந்தன் சொல்லுகின்றார்.

அப்பா சாத்தகி, நீ சொன்னதுஞாயம்-ஆகிலும் நேரிட்டது அபாயம்-ஆபத்தாகிய காயம் மேலுஞ் சேனாநாயகனாகிய துஷ்டத்துரோணன் இவடத்தி லிருந்து என்னணியைக் காப்பான்-உனக்கிந்தச் சிந்தனைவேண்டாம் நீபோய் அறிந்துவரக் கடவை யென்று முரசக் கொடியோன் மொழிய அந்தவார்த்தையைக் கேட்டு சாத்தகி மெத்தவருந்தி வலியபலம்பெற்ற தேரரசர் அநேகரிருக்க அவர்களுக்குச் சொல்லாமல் எனக்கிந்த கட்டளை யிட்டாரோ யென்று அவருடைய வார்த்தையை சிரமேற்கொண்டு மட்டார்ந்த மலரை வரிசையாய்க்கட்டிய மாலையணிந்த தருமராஜனுடைய மலரடியில்வீழ்ந்துவிடைபெற்றுக்கொண்டு தம்முன்னோனாகிய கிருஷ்ணமூர்த்தியையொத்தசாத்தகியானவர் அழியாச் சேமரதத்திலேறி அதிரதர் முதலாகிய வீரதளங்களோடுஞ் சென்று சத்துருக்கணெருங்கிய தூசிப்படையைப் பிளந்து தடதடவென்றேறி விருதணியிலிருந்து விளங்கிய கிருதவீரியன் கிருதபன்மன்-கிருபாச்சாரி முதலியபேர்களை யெதிர்ந்து மதயானையைப்போலதிர்ந்து-பாரியவில்லைத் திருந்தவளைத்து பகலவன்பாணமுதலியதை விடுத்து, பரியுங்-கரியும்-தேரும் பேரும்-வில்லுந் தில்லும் - புல்லுஞ் சொல்லும்பேரை இமையிலழித்து-குமியவொழித்து - நில்லு நில்லுமென்று வல்லபம்பேசி அப்பானடந்து போம்போது பன்முகத்திலுமிருந்து குதிரைபூட்டிய நூறாயிரந்தேராளிகள் - உகாந்தகால இருட்போல் வந்து வளைத்து மறைக்க-அவர்களையும் அவர்கள்தொடுத்த கணைகளையும்-சந்திராஸ்திரம்-சூரியாஸ்திரத்தாற்போக்கி பாக்கியில்லாமற் றுரக்கிவருங்காலையில் ஜெயமாலையணிந்த சலசந்தனனவன்நிலைபெற்றமதத்தையும்-துதிக்கையையுமுடைய மலைபோன்றயானைமேலேறிவந்து சாத்தகியை வளைத்து மலையும் போது இருதிறவர்களும் அருமையாகிய கணைகளையெங்கும் பரப்பிவிட்டு மங்குலுங் கங்குலுங் கருகும்படி போர் புரிந்து வாயுவாஸ்திரங்களை யெடுத்து மழைபோற்றொடுத்து புள்ளிபொருத்திய முகத்தினையுடைய மதயானையையும்-அதன்மேலேறிவந்த சலசந்தனையும் திச்சுக் கருக்கி திடர்நிலமாக்கி மற்றச்சேனைகளைப் போக்கி தடையற வருஞ் சாத்தகியை திரிதராஷ்டிரன் பிள்ளைகளிற் சிலர் கூட்ட

மாய்வந்து மடக்கி நாலுபக்கங்களில் நாலுபேர்நெருங்கி நாலுவிதபாணங்களைத் தொடுத்தகாலையில்-அந்தப் பாணங்களை யெல்லாம் பஞ்சுபோற் பறக்கச் செய்து அந்தக் கொடிய நியர்களை மடக்கிக்கொண்டு வேட்டம் போன வேந்தர்களுடன் வேடுவர்கையி லகப்பட்ட யானைபடும் பாடெப்படியோ அப்பாடு படும்படியாக்கி ஒப்பாருமில்லாமலேதாக்கி இப்போரில் எவரும் எதிர்ப்பதற்கில்லாமற்போக்கி வீர வயிரவில்லையுந்தாங்கி நேமித்தேரை நெட்டிடச்செலுத்தி சுடுசரங்களைச் சுற்றிலும் விடுத்து படபடத்துத் துரிதமுடன் செல்லுகின்ற சாத்தகியை தனுவாசிரிய ராகிய துரோணாசாரியர் கண்டு போகாதே போகாதே நில்லு நில்லு என்னுடன் யுத்தஞ்செய்யாமற் போவது ஞாயமன்றென்று ரதத்தைச் செலுத்தி வந்து சாத்தகிக்குச் சஞ்சலமுண்டாகும்படியாய் தனுவாரியன் வில்வளைக்கவும், மேகவண்ணனுக் கிளவலாகிய சாத்தகியானவர் கலீரென நகைத்து ஓ-ஐயரே, தனுப்பாணங்கொண்டு பிராமணருட னெதிர்த்து யுத்தஞ் செய்வது எம்போ லொத்தவர்களுக்குத் தகுதியன்றென்று ராஜதர்ம மிருப்பதினல் உம்மைவிட்டு அப்பாற்போனேன், அப்பேர்ப்பட்ட தர்மமில்லாவிட்டால் இப்போது எதிர் நின்று பேசும்படியாய் உம்மை இன்னமும் வைப்பேனுவென்று கன்னமதமுடைய சுப்ரதீபம்போல் தேருடன் சுழன்று திரும்பியபோது துரோணரு மெதிர்ந்து மதித்து துரிதமாகப்பேசி சுடு வடிக்கணைகளைத் தொடுத்து வீசிவிடுத்தார்.

இந்தப்படிக்கு இருவருந் தங்கள் தங்களுடைய வில்லை வளைத்து கொடுமையாகிய பகழிகளை முறைமுறை கோத்து கடுமையாகிய பகடுகளுடன் துணையாகவந்த சேனைகளையுமழித்து நெடுநேரம்வரையிலும் ஒருவரையொருவர் விடாமல் அமர்புரிந்து இருவருங்களைத்து இளைப்பாறியெழுந்து ஒருவரை யொருவர் உறுத்திப் பார்த்துநின்ற போது துரோணாச்சாரியர் வருத்தமுற்றிளைத்திருப்பதை சாத்தகிகண்டு மனோதிடங்கொண்டு கழுத்துமயிர் கத்தரித்து கவினமாட்டிய புரவிபூட்டிய தடந்தேரைச் சாரதி செலுத்த மாருதவேகத்திலு மீறிய வேகத்துடன் ஓடிவராநின்ற தேரின்மீது மண்டியிட்டு பாரியவில்லைவளைத்து நாணிதெறித்து வின்மணிகுலுக்கி மன்னவரிப் படைகளைப் பின்னிடக் கலக்கி வீறிமேல்வரும் சாத்தகி வேந்தனுனவன் அநேககோடி கிரணங்களை யுதயகிரியினின்றுவிரித்து அந்தகாரமான இருட்டைக் சரித்துவரும் மந்தகாசமாகிய சூரியனைப்போற் பிரகாசித்துவந்தான்.

அப்படி வரும்போது, அர்ச்சுனனலடிபட்டு கவசமழிந்து, துவசமொழிந்து, அவசமடைந்து சேனநாயகனுகிய துரோணாச்சாரிய ரிடத்திற்போய் சொல்லிக் கொள்ளுவோ மென்று போர்முனையை நோக்கிவராநின்ற துரியோதனமகாராஜனனவன், சக்ராயுதம்போற் சாத்தகி வரும் உக்கிடத்தைப் பார்த்து ஐயோ இவனெருவன் இடைக்கொள்ளைக் காறனுப்ப் புகுந்து அணிகளை யழித்து வதைக்க வருகிறுப்போலிருக்குதே இதற் கென்ன செய்யலாமென்று ஏங்கி இவனை விலக்கி வெல்லவேணு மென்றும்வினையை நினைத்து வீரபட்டங்கட்டிய கொடிக்காரராயொட்டிய வேந்தருடன் கூடி சாத்தகிக் கெதிரோடி தடுத்தான், அப்போது தேரில்வராநின்ற சாத்தகியானவர் கோபங்கொண்டு சிறியடுத்து ஆயிரமாயிரங்கணைகளை அடுக்கடுக்காய்த் தொடுத்து விடுத்து நால்வகைச்சேனைகளை நாசப்படுத்தி நெற்றிப்பட்டங்களையுடைய அரசர்களையும்வேகச்செய்தான்.

அதுகாலையில், வீரகண்டைகட்டிய துரியோதனராஜன் மெத்தமருண்டு இவனேடு யுத்தஞ்செய்யவல்லவராரென்று பயந்துபயந்து பாணங்களைத்தொடுத்தான், அதுகளையெல்லாம் அணுவாகப்பறக்கச்செய்து அரசனுடைய அரவக்கொடியைத்தறித்து தேர்ச்சக்கரங்களையுடைத்து நெருங்கிய வில்லைமுறித்து சாரதிதலையைப் போக்கி மோசஞ்செய்தவனைப்பிணையுடைய துரியோதனனுடனெல்லாங் கணைகளாற்றுக்கியவருஞ்சந்தோஷிக்கும்படியாய் இன்னமும் எவராகிலும் மெதிர்ப்பவருண்டோவென்று சாத்தகியானவர் இறுமாந்து படைவலியோடு எதிர்பார்த்து நின்றூர்-அப்போது, துரியோதனராஜன் தேரழிந்து ஜலத்தைவிட்டு நீங்கிய தாமரைமலர்போல் இரண்டு பாதமுஞ் சருகிச் சிவக்கத்தக்கதாய்ப் பூமியினின்று போர்நிலத்தை விட்டு வெட்டார வெளிநிலத்தில் விழுந்தோடினன், அவனேடுவதைக்கண்டு தேவர்களெல்லாரு மாருமற்சிரித்தார்கள், சாத்தகியும்பார்த்துக் கைகொட்டிநகைத்தார்.

இப்படியாக, துரியோதனராஜனை அவமதிப்பாகநகைத்த சாத்தகியை, கிருதவன்மன்கண்டு மனந்தாளாமல் உள்ளக்கொதிப்போ டெழுந்து சாத்தகிக்கெதிரிற் புகுந்து உயர்ந்த வில்லைவளைத்து நெருங்கித் திருந்திப்பொருந்திய காய்கணைகளை வரம்பில்லாமல் நிரம்பவிடுத்து நாணியிழுத்து ஷ்டங்காரஞ்செய்தபோது, தாஷ்டீகமுள்ள சாத்தகியானவர், வெகுசொல்ப்பத்தில் அவைகளைமாற்றி அவன்பேரிற் கொழுமுனைப் பாணங்களை யேற்றினர், அந்தப்பாணங்கள் தாக்கியவுடனே கிருதபன்மன் தேரின்பேரிற்சாய்ந்து அயர்ந்தான், அத்தன்மையை துஸ்வாசனன் பார்த்து பெருமூச்சுவிட்டு ரதகஜ துரக பதாதியாகிய நால்வகைச்சேனை வீராளுடனும், அணிவகுத்திருந்த அளவில்லாத தானைப்படைக ளுடனுஞ்சேர்ந்து சாத்தகியை அடுத்துத்தடுத்து சோனைப்பெய்ச்சலைப்போற் சுடுசரங்களைத்தொடுக்க அவைகளையெல்லாஞ் சாத்தகிகெடுத்து தன்னுடைய வில்வி ருந்து விடாமழைபோற் பொழிந்த கூர்த்தொடைகளால் எதிரிகள் கலங்கி அலமலங்கிசேனைகள் விலக்கிப்போகவும் துச்சாதனனனவன் தானும் பூனைபோலொதுங்கி பூமியிலிழிந்து இருபதஞ்சிவக்க இளைத்தோடிப்போய் சேனபதியாகிய துரோணாச்சாரியர் நின்ற யிடத்திற்சென்று அவரைக்கண்டு தான்பட்ட குறையையும் தானைகள் கெட்ட நிறையையும் தன்மன அறையையும் சாத்தகிசெல்லு முறையையுஞ் சொன்னுன், அவன்சொல்லிய வசனத்தை துரோணாச்சாரியர்கேட்டு நந்தியாவட்டமாலையணிந்த நரேந்திர னுடைய தம்பியைக்கண்டு உள்ளம்வருந்தி மணிசெறிந்ததேரும் அணிநிறைந்த வில்லுங்கொடுத்து ஏன் துஸ்வாசனராஜனே இதுவ

னையிலும் உமது மைத்துன ராகிய சயித்திரதன் க்ஷேம
மா இனிமேலும் இன்றையப் பொழுதை சாதிக்கலாமா
என்று பற்பல வார்த்தைகளைக் கேட்டுக்கொண் டிருந்து
அப்பால் துரோணாச்சாரியர் சொல்லுகிறார்.

அப்பா, குலமுங் குணமுமுள்ள அரசர் கூட்டங்களுக்
கெல்லாம் எமனென வுதித்தெழுந்த துஸ்வாசன னென்
னும் இறையே என்ன இவ்வேளை சற்றிளைத்தாப்போலி
ருக்கிறாய் அநேகராஜர்கள் பெருங்கூட்டமாகக் கூடியிரு
ந்த பேறவைப்புறத்தில் அருந்ததிக் கதிகமான கற்பினை
யுடைய திரௌபதை யென்னுந் தெய்வப்பெண்ணை அ
லமலக்க யிழுத்துவந்த அந்த நாளிலிருந்த ஆத்திரமும்
க்ஷாத்திரமும் உன்தோள்வலியும் இருதாள்வலியும்-உன்
னுரவலியும்-இருகரவலியும்-இந்த யுத்தகளத்தில் கண்டி
லேன்-அப்போது கண்ட அதிசயத்தை இப்போது பார்
க்கவேணுமென்னும் பக்ஷங் கொண்டாலுங் காணேமே
ஐயையோ இதென்ன தப்பாகிய மப்பாயிருக்குதே, அப்
பா அல்ப்பமும் அதிசொல்ப்பமு மாகிய வில்வல்லமை
தெரிந்த சாத்தகியுடன் போர்புரிந்திளைத்து யாவரு நகை
க்கும்படியாய் துன்பமென்பவை யாவும் பட்டீர்களே இ
னிமேல் வாயுபுத்திரனாகிய வீமசேனனும் தனஞ்செய
னும் வரப்போகிறார்களே அவர்களுக் கெதிரில் என்ன
செய்ய இருக்கின்றீர்கள் வேலாயுதந் தரித்த இளவரசா
கிய வேந்தரே சொல்லும் இவ்வளவு நிர்வாகமுடைய நீ
ங்கள் விரதபூதனை வீஷ்டுமனொன்னும் முத்தோர் வார்த்
தையைக் கேளாமல் தடுத்துவிட்ட பாவத்தால் நீங்க
ளெல்லோரும் உயிர்விடுத்து மாண்டுபோவது சத்தியம்
சத்தியம் நீங்கள் இன்னஞ் சிலநாளைக்கு பிழைத்திருக்க
வேண்டுமானால் குந்திதேவியின்புத்திரனுக்குபாதிராச்சி
யமுங்கொடுத்து உங்கள் வம்சனுபகனாகிய வீஷ்டுமனொன்
னும் வரதனுடைய செந்தாமரைக் கமலம்போன்ற திரு
வடியில்வணங்கி அவருடைய கடைக்கண்ணருள் பெறு
வீர்களாகில் சிந்தனை யில்லாமல் ஜீவதிசையாய் உயிர்த்
திருப்பீர்களென்று சுடச் சுட பற்பல வார்த்தைகளை து
ரோணாச்சாரியர் சொன்னார் அதைக்கேட்ட துஸ்வாசன
னென்பவன் நாணமென்னுந் துன்பமேட்டின்மேல்வீழ்ந்து
திடதயிரிய பராக்ரமமுந் தாழ்ந்து மறுமொழி யொன்று
ஞ்சொல்லாமல் அந்த இடத்திலும் நிலைத்து நில்லாமல்
மீண்டுவந்த வழியே திரும்பிப்போனான்.

அந்தவேளையில், பாரதியருள்பெற்ற சாரதியானவன்
தேர்செலுத்த வீரவில்லைத்தாங்கி போர்முகம்வேக-நேர்
முகமாக-செம்பொன்மலைபோன்ற தேரேறி அம்புவி நடு
க்கும்படியா யதுகுல சாத்தகிவரும்போது துரியோதன
ன் தம்பியாகிய துன்முகனானவன் அநேக மரசர்களையும்
நால்வகைச்சேனைகளையுங் கூட்டிக்கொண்டுசாத்தகிக்கெ
திர் சென்று நின்று தடுத்து ஆயிர மாயிரமென்னும் அ
நேகமுகங்களையுடைய அஸ்திரங்களையெடுத்து விஸ்தார
மாகத் தொடுத்து அண்டமுகடுந் தெரியாமனிறைத்து ம
ண்டலங்களும் மறையாகமறைத்துப் பரப்பிய போது-அ
தைக்கண்ட கொண்டல் வண்ணன் தம்பியாகிய சாத்தகி
யானவர் விண்டலங்குலுங்க வின்னாணிவிட்டெழும்பொ
ன்னான கணைகளால் அந்தத்துன்முகன் தொடுத்த தொ
டைகளைப்போக்கி வீரமீளிபோற் சீறி மேலாகத் தாக்கி
தேர்-குதிரை சாரதிமுதலிய யாவரையு நீக்கி சல்லடைக்
கண்ணாகத் தேகமெல்லாந் துளையாக்கினான் அதனாற் க
ளைத்துச்சோர்ந்த துன்முகனைப் பார்த்து நானொருவாக்கி
யஞ் சொல்லுகின்றேன் கேளென்று மேகநடுங்கும்படி
வின்னாணி யடித்து மின்ன லொடுங்கும்படி கணைமழை
பொழிந்து சத்துருக்களெதிர் உக்ர நரசிங்கம்போல் எ
திர்க்கழிக்குந் திறலினைக்காட்டிய சிங்கக்கொடி நாட்டிய
தேரினையுடைய பங்கமில்லாச் சாத்தகியானவர் பொங்
கத்துடன் சொல்லத்தொடங்கினார்.

அடா துன்முகனே, மின்னற்கொடிபோல் ஒசிந்த இ
டையும், வன்னப்பணியால் இசைந்த உடையும், அன்ன
ப்பெடைபோல் அசைந்த நடையுஞ், சொர்னத் தூண்
போற் பசந்ததொடையும், வன்னக்காவி வரிசட்சுடையு
முடைய திரௌபதியை ராஜசபைக் கிழுத்து வந்தநாளை
யில் மகமேருவின் சிகரத்தைமுறித்த தன் தந்தையாகிய
வாயுவின்பலத்தைப்பொறுத்த வீமசேனன் - உங்கள் நூ
றுபேரையுங் கொல்லுகிறேனென்று சொல்லிய சபதம்
ஒருக்காலுங் குறையாதல்லவா-அப்பா - ஆகையால் நா
னுன்னைக் கொல்லப் படாது துடிதுடிக்கக் கொல்லும்
பெருந்தெய்வமாகிய வீமசேனனுக்கு வேண்டிக்கொண்
டு-தண்ணீர் தெளித்துவிட்ட சண்டைக் கடாப்போன்ற
நீங்கள் கேடுகாலம் வருகிற வரைக்கும் பீடுகோல லோபி
யர்-பொன்னைக்காக்குந் தன்மையைப்போல் உங்க ளுயி
ரைக் காப்பாத்திக்கொண்டு ஓடிப் பிழையுங்களென் று
ரைத்து உரகபாணங்களை விடுத்து விரைந் தோட்டினான்.
பொன்போற் பிரகாசிக்குஞ் சிங்கக்கொடி நாட்டிய பூந்
தேரினையுடைய சாத்தகி, அப்போது துன்முகனென்பவன்
அந்தச் சாத்தகியுடைய பாணங்களினாலடிபட்டு மெலிந்
தோடுவதை அண்ணலாகிய அரவக்கொடிக் கதிபன் கண்
டு ஆயாசங்கொண்டு ஐயோ என்தம்பியாகிய துன்முக
ன் சாத்தகிக்கிளைத்து தடுமாறி வருகின்றானே இதைப்
பார்த்திருக் கின்றீர்களே பப்பரர்முதலிய யவனர்களே
இந்தவேளை அவனைவளைத்துப் போர்த்து யுத்தம்பண்ணு
ங்களென்று வேண்டிக்கொண் டனுப்பினான், அந்த அர
சனுடைய ஏவலினால் பாரித்துப் பூரித்த தோள்வலி பெ
ற்ற பப்பரர் யவனர்-சீனர்-ஆரியர்-வீரியர்-மிலேச்சர் மு
தலாகிய பேர்களும் சக்ரவாளத்தை சமுத்திரம் வளைந்த
தைப்போல் போர்த்திறத்துடன் வந்து சாத்தகியைத் த
கைந்து காலாக்கினிருத்திர கோலாகல மாலையாய்க் கடு
ஞ்சரங்களைத் தொடுத்து கண்சிவந்து விண்கலங்க மண்
குலுங்கப் போர்புரிந்தார்கள்.

அப்படி போர்விளைத்த அவர்களையும் அவர்கள் விடப்
பட்ட அம்புகளையுங் கண்ட சாத்தகியானவர்-திறமும்பல
முந் திறமும்பெற்ற நெடுஞ்சிலைவளைத்து நெற நெறவெ
ன ஆயிரம் பதினாயிரங்கோடி நெருப்புக்கணைசளை வாரி
யிறைத்து, அவர்களாற் றொடுக்குங் கணைமாரி களைக் கு
றைத்து, கிட்டி முட்டியபேர்களை யெல்லாம் வெட்டி ம
டித்து கீழ்மேலாகப் புரட்டும் போது, சமுத்திரம்போ

லோடும் ரத்தவெள்ளத்திற்கு பிணங்களினால் சேதுபந்தனஞ் செய்துக்கொண்டு போர்த்திறம் விட்டு குணங்கெட்டோடிய பூபதிகளையெல்லாம் நிணச்சேற்றிற் குளிக்கப்படுத்தி அழுகிய பூமிமுழுவதும் உதிரச்செவப்பேறும்படியாய் நிதானமாகிய அமர்நிலைத்து வராநின்ற நெடுமாலுக்கிளைய சாத்தகியின் நிர்வாகத்தைப் பார்த்து எவ்விடங்களிலு நின்ற எதிர்ப்படைவீராளும் இருநிலத்தாசர்களும் எதிர்த்துப் போர்புரிந்து யானைக்கு முன்னெதிர்ந்த பன்றிபடும்பாடு பட்டிளைத்தும் இடைக்கிடை கும்பாகவந்து வளைத்தார்கள் அவர்களை தொடைப்படும் அம்பாலடிக்க அதனாலவர்கள் களைக்க மறுபடியும் வெட்கமில்லாமல் மேமேட்டு வருவோர் பக்கத்துநிழற்போற் பட்டழிந்தொதுங்க பகைகளைந்து கடந்து தடையிலாமனடந்துதருக்கிச் செருக்கி மும்மதம்பொழியு முனைவேழம்போல் காரணமாக தனக்குத் தமையனாகிய நாரணனும் நரனும் இருக்கும் இடத்தைநோக்கி சாத்தகிமன்னனானவர், தாராளமாய் வந்துகொண் டிருக்கின்றார்.

இவர்சரிதமிப்படியிருக்க, மறுபடியும்-முரசக் கொடிக் கதிபனாகிய தருமராஜன் மனம்வருந்தி தனக்கெதிர் நின்ற தம்பியாகிய வாயுகுமாரனது முகத்தைப் பார்த்து துரியோதனன் கட்டிய அணிமுகத்தி னிறைந்த மன்னவரொன்று சொல்லாநின்ற சேனாசமுத்திர நடுவிற் சென்ற, உன்தம்பியாகிய அர்ச்சுனனும், எம்பெருமானாகிய கிருஷ்ணமூர்த்தியும், எப்படியானார்களோ என்ன பாடு படுகின்றார்களோ; எவ்விதமாயிருக்கின்றார்களோ ஒன்றுந் தெரியவில்லையே உத்தமனே, சாற்றுதற்கரிய சாத்தகியை யனுப்பி பார்த்துவரச் சொன்னேன் அவன் போய் அவர்களைச் சேர்ந்து கண்டதுங் காணாமல் நடுமத்தியில் தியங்கியதும் இன்னவிதமென்று தெரியவில்லை இன்று சாயங்காலத்துக் குள்ளாக சயிந்தவனைக் கொல்லுகிறேனென்று சபதங்கூறிய அர்ச்சுனனுடைய உறுதிமொழி நிறைவேறும்படியா யிருக்கவில்லையே சூரிய பகவான் மேற்றிசையிற் சாய்ந்தான், இதுவரையிலும்ஜெயம்பெற்றிருப்பார்களாகில் கிருஷ்ணார்ச்சுனருடையஜெயசங்கமிரண்டும் முழங்கவேண்டுமே அப்படிக்கில்லாமல நம்பெருமானாகிய கிருஷ்ணமூர்த்தியின் பாஞ்சசன்யமாத்திரம் ஏகதேசத்தில் முழங்கிற்றே, இவ்வுலக நடுங்கும்படியாய்ப் பாஞ்சசன்ய முழக்கத்தைக் கேட்டோமோ அவடத்தில் அர்ச்சுனனுக் கென்ன அபாயமோ தெரியவில்லை ஆகையால் என் மனதிற்கொண்ட சந்தேக நிவாரணமாகும்படிக்கு மேலிட்ட பகைகளை வெல்லும்பலத்துடன் நீயுஞ்சென்று சங்கதியறிந்து தெரிவிக்கக் கடவை தம்பி வீமசேனனே யென்று தர்மநந்தனருளாக்க அந்த வசனத்தைக்கேட்ட விமனானவன் உடல்பதறி பெருமூச்சுவிட்டு பிறக்கினைதப்பி பெருங்கோபங்கொண்டு உடனே கொதிப்பெழுந்து குளிர்ந்த ஜலம்போலாறி மனந்தேறி தமையனைநோக்கி அண்ணா பிராமணனாகிய துரோணாச்சாரியர் அளவிறந்த சேனைகளைக்கொண்டு தேவரீருடனெதிர்த்து நெருங்கிய ஜெயபேரி வாத்தியத்துடன் போர்புரிந்து வம்பாக உம்மைக் கட்டிக்கொண்டு போவா மென்று தம்பி யானவன் என்னைநம்பி தமக்குக் காவலாக வைத்துப்போயிருக்க எனக் கிளையவனுடைய வார்த்தையைத்தள்ளி உமக்கு ஆபத்து வரும்படியாய் நான் இவடம்விட்டுப்போவது வீரமோ அல்லது தர்மமோ நானப்படிப் போகப்படாது மேலும் நீரொன்றுக்கும் விசனப்படவேண்டாம் நமது தம்பியாகிய விஜயன் வல்லபம் உமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் நீரேன் சிந்திக்கிறீர் தர்மசொரூபியே நமது தம்பியாகிய காண்டீபனுடனெதிர்த்து போர்புரியும் இயற்கையை யுடையபேர்கள் ஈரேழு பதினான்கு லோகத்திலுமுண்டோ இறைவனே அப்படி யல்லவென்றால் நமக் கிஷ்டதெய்வம் போன்ற கிருஷ்ண மூர்த்தி யிருக்கிறவரைக்கும் ஒரு பொல்லாங்கு நடக்குமென்று சொல்லவுஞ் சொப்பனவஸ்தையில் நினைக்கவுங்கூடுமோ தோன்றலே மேலும் சர்வலோககண்டகனாகிய சாத்தகியை லேசாமதிக்கப்போமோ சார்வபூமா வேறுசிந்தனைவேண்டாம் நமது தம்பிக்கு ஒருகுறைவுமில்லை தேவரீரைவிட்டுப் பிரிவேனேயாகில் ஏதோ ஒருகுறைவுவரும்போலிருக்குது-அதுவோ உம்மைவிட்டுப்பிரிவதினாலுண்டாகிய குறைவுவந்தால் வரலாமே யல்லது வேறொரு குறைவும் வரமாட்டாது விக்ஞானவேந்தனே வேதநெறியுணர்ந்த சாந்தனே யென்று இன்னொரு திருஷ்டாந்தரஞ் சொல்லுகிறான்.

அண்ணா, (பஞ்சவடி தீரத்திலிருந்த ஸ்ரீராமமூர்த்தியானவர் மாயமானைத் துரத்திக்கொண்டு போகும்போது இளையபெருமாள் தடுக்க அதைக்கேளாமற் சென்று அந்த மானையடிக்க அம்மானானது-லட்சுமணனுக் கபய மென்று கூவியசொல்லினால் அண்டம்வெடிக்க அதைக்கேட்ட சீதாபிராட்டியாருடைய மனந்துடிக்க இளையபெருமாளைப்போய்ப் பார்க்கச்சொல்லிசிலவார்த்தைபடிக்க சக்ரவர்த்தித்திருமகனுக்கு ஒருகுறைவும் வராதென்றுதாயார்வார்த்தையைத்தடுக்க அதனாற்கோபித்து கொடுமையாகிய பழிச்சொல்லினால் முடிக்க அப்போது இளைய பெருமானுக்கு இடதுதோள் துடிக்க அரிகரியென்று எழுந்து கண்ணீர்விட்டழுது இதுவரையிலுங் குறைவில்லை தேவரீரைவிட்டு நான் பிரிவதினால் இனிமேல் வரப்போகிறதுதான் குறைவு தாயேயென்று சொல்லி நடந்தபோது இராவணனால் நேரிட்டதன்மை தங்களுக்குத் தெரியுமல்லவா,) திங்கள்குலக் கொழுந்தே அப்படியாக ஒருவேளை விளைந்தாலும் விளையும், அப்படி நேரிடுமாகில் தம்பியாகிய அர்ச்சுனனானவன் என்முகத்தைப்பார்த்து அண்ணா என்னுடைய சாமர்த்தியத்தை நீரறிய மாட்டீரா செவ்வையா யறிந்திருந்தும் பெரிய அண்ணா அவர்கள் ஏதோ பசியாதாபத்தாற் சொன்னபோதிலும் நான் சொல்லிவந்த வார்த்தையின்வண்ணம் பாதுகாத்திராமல் வந்துவிட்டீரோ இப்போது இப்பேர்ப்பட்ட மோசம்வந்து விட்டுதேயென்று கேட்பானாகில் நான் அவனுக் கெதிரில் தலைகவிழ்ந்து தயிரியங் குறைந்து சகலமுமிழந்து நாவெழுந்து உத்தரவுசொல்லுவதற்கு வகையில்லாமல் மற்றவர் நகைக்கும்படியாய் நேரிடுமல்லவா புத்தியிலுயர்ந்த உத்தமனே எனக்குக் கட்டளையிட்ட உத்தரவை மன்னிக்கும்

படிக்கு கேட்டுக் கொள்ளுகிறேனென்று அவருடைய திருவடியில் தன்னுடைய மவுலிமுடி படியும்படியாய்வைத்து வணங்கினான்.

அப்படிவணங்கிய வீமசேனனையெடுத்தணைத்து தமயன்வாக்கியத்தைக்கேட்டு நடக்கும்படிக்கு தர்மமிருக்குதேயன்றி தம்பிவார்த்தையைக்கேட்டு நடக்கும்படிக்கு தர்மமிருக்குதா, இதல்லாமலும் துரோணாச்சாரியர்வந்து என்னைப்பிடிக்கும்போது இந்தியாதி சேனைகளுக்குந் துரியோதனனுக்கும் சேனாபதியாகிய அவருக்கும் அஷ்டமத்துச்சனி பிடித்ததென்று நீ நிச்சயமாய் நினைக்கக்கடவை ஐயனே, இன்னமுஞ்சேனும் நமது மைத்துனனாகிய சேனாபதி திருஷ்டத்யும்னன்முதலாகிய பெரும்இளையவர்களாகிய நகுலசகாதேவர்களும் எனக்குக்காவலாக யிருக்கின்றார்கள் இவர்கள்புரியும் போர்த்திறங்கள் லேசாகியதல்ல ஆதலால் எனக்கொருதாட்சியும்வாராது நீ ஆட்சியாகச்சென்று சர்வசாட்சியாகிய கிருஷ்ணமூர்த்தியையும், மாட்சிமைபெற்ற சிகிடியையும் தாட்சியில்லாமல் உடன்கண்ணாரக்காட்சியாகக்கண்டுசந்தேகமீங்கியென் மனஞ்சாட்சியாகும்படியாய் சிங்கநாதகோஷஞ்செய்து என்னிருசெவிக்குமூட்டுவையாகில அப்போது என்மனந்தெளியும் என்சிந்தைக்கிசைந்த எந்தையே நான்சொல்லும்பேச்சுக்கு ஆட்சேபனைசொல்லாதேயென்று அறன்மகனுரைக்க அந்தமொழியை வீமசேனன் சிரமேற்கொண்டு ஜன்மாந்திர வினைவழியெதுவோ அந்தவழிவரும்பழியென்று களங்கமில்லா மனத்தினையுடைய வீமசேனன் பலம்பொருந்திய வீராதிவீர அரசர்களுக்கெல்லாம் தர்மராஜன் பத்திரம் பத்திரமென்று பக்குவமாக வற்புறுத்திச்சொல்லிமனோதிடங்கொண்ட சேனாபதியென்னு மைத்துனருடைய சத்தியவசன வுறுதியுங்கேட்டுக்கொண்டு தம்பியர்களாகிய நகுலசகாதேவரிருவருந்தமயனைச்சூழ்ந்து நீங்காதிருக்கும்படியாய்த் திட்டப்படுத்தி தமயனுரைத்தவாக்கியம் பின்னிடும்படிக்கு தான்முன்னிட்டுப்பணிந்து பிரயாணவிடைபெற்றுக்கொண்டு தனக்கொப்பாகிய தோள்வலிபெற்ற தாரணிபரநேகரும் நிலைபெறப்பொருந்திய நால்வகைப்படைகளுருந் திரண்டுநெருங்கி இருபக்கங்களிலும் பின்னுமுன்னுஞ் சாயைபோற்றொடர்ந்து அடர்ந்துவரும்படியாய் கொக்குத்தளத்தில் ராஜாளிபுகுந்ததைப்போலும், யானைக்கூட்டத்தில் ஆண்சிங்கம் பிரவேசித்ததைப்போலும், ஆட்டுமந்தையில் காட்டுப்புலி கலந்ததைப்போலும் ராக்ஷசப்படையில் ராமபாணநுழைந்ததைப்போலும், துரியோதனனுடையசேனாமுகத்திற் பெரியோனாகிய வீமசேனன்புகுந்தான்.

அப்போது தகுந்தவீராதிவீராளெதிர்ந்து திகாந்தமதிர்ந்து போம்படிக்கு யுத்தஞ்செய்தார்கள் அந்தச்சமயத்தில் கலிங்கர்-குலிங்கர்-தெலுங்கர் - புலிங்கர்-கன்னடர்-கௌசலர்-காடர்-சர்னடர்-யவனர்-ஆரியர் - சோனகர்-சீனர்-கவனமாப்பரி-குகுதர்-பப்பரர்-மகதர்-மாளவர்-மருடர்-மலையாளர்முதலிய பதினெண்பாஷை பார்த்திபரும் ஆர்த்து வோர்க்கு விலேல்விரித்துப் போர்க்குப்போர் புரியுங்காலையில் காற்றின்மகனாகிய வீமசேனன் முனைந்து அவர்களைக் கால்மாடு தலைமாடாகப்பிளந்து மண்ணுலகைநீங்கி விண்ணுலகிற்போக்கி, வட்டமாமதிலம்பலசொலவெடிக்க அட்டமாநாகமுந் திடுமெனத்துடிக்க, திக்கெட்டு முளகிரிகபாலெனக்குதிக்க திக்கிட்டுமின்கடல் குபீரெனக்கொதிக்க, சடசட தடதட படபடவென்றுதேசைச்செலுத்தி வயவீராளைத்தூரத்தி மேலாக விரைந்து காலாளைக்களைந்து கடுவேகங்கொண்ட காற்றைப்போல் வரும் வீமசேனனைக்கண்டு துரியோதனனுடைய தம்பிமார்களில் விந்தன், விந்தரன், சுசருமன், சுதர்சனனென்னுநால்வரும், ரதகஜதுரக பதாதிமுதலிய நால்வகைச் சேனை சூழும்படியாய்வந்து புகமுடிவில்லாங்கியிறையும் பெருங்கடற்போலிறைந்து இடைக்கிடைதனித்தனிதகைந்து முல்லைப்பகழி - குல்லைப்பகழி மல்லிகைப்பகழி-நற்பலப்பகழி-உற்பலப்பகழி-குமுதப்பகழி-முளரிப்பகழி கூரிலைப்பகழி இவைமுதலியதையும், சூலாயுதம்-வேலாயுதம்-வாளாயுதம்-மாலாயுதமுதலாகிய ஆயுதங்களையும் பூசித்து வணங்கியெடுத்து வல்லமையில் வல்லவராகப்பழகிய கைவல்லமையுடனே மல்லலந்தோளினையுடைய வாயுகுமாரனையடுத்து எல்லையில்லாமற்றொடுத்து அமர்கொடுத்தபோது குமாரருபரனுக்கொப்பாகிய கோமான் குந்திபுத்திரனாகிய வீமசேனனென்னுஞ்சீமான் குமாளமிட்டு கோபித்து கொடுவிடப்பகழியைப்பூசித்து குறைவில்லாமற்றொடுத்தவுடனே தன்பேரில்வந்தபாணமும் அவர்கள் கைப்பிடித்தவில்லும் எரியாதமும் தேரிற்பூட்டியகுதிரையும் குதிரையையோட்டிய சாரதியும் தாங்களுமழிந்து அவர்களுடையதலைகள் சென்று மேகங்களைக் கலைத்துலைக்கவும் தேகங்களிலிருந்துவழியும் ரத்தவெள்ளம் பெருகியோடி பெருங்கடலை மலைத்தலைக்கவும் உலைந்தொழிந்தார்கள் அவர்களின்தம்பிமாராகிய குண்டலபோகி-தீர்க்கலோசனன் சித்திரசேனனென்னும் பலசாலிகள் படைக்குமுந்திபடையாயிருக்கும் பராக்கிரமவீரர்கள் எமதர்மராஜனும் இவர்களுக்கெதிரில் என்றைக்கும் வரக்கூடாது, ஒருவேளை வழிதப்பிவந்தானாகில் எமனுக்கெமனாயேற்பட்டு தோற்பிலலாமல ஜெயம்பெறுநின்ற சுத்தவீராள் தங்கள் தமயனார் நால்வரும் காலமகனாகிய வீமனாலிறந்ததைக்கண்டு மிகவும்வெகுண்டு வெற்றிமாலைபூண்டு விரைவாகத்தூண்டும் விதமாகிய பாணங்களைக்கொண்டு வேண்டியபோர்மூண்டு பாண்டுமகன்றொடுத்த கணையால் தேகங்கீண்டு புரண்டு அருண்டு மருண்டு வறண்டுதோன்றியமூன்றுபேரும் ஈன்றுமாண்டுபோனார்கள்.

இந்தப்பிரகாரம் துரியோதனனுடைய தம்பிமாரேழுபேர் ஆயுமுடிந்து வாயுபுத்திரன்றொடுத்த வாளியால் மடிந்தபோது தாணீசர்முதலிய சேனைவீராளுடன் கட்டுப்பாடாய்க் கட்டியயூகம் சட்டெனக்கலைந்துபுறமிட்டோடிச்சாய்ந்தார்கள், இப்பால் பெருங்காற்றுடன்கலந்த செழுந்தீயைப்போல் வீமசேனன் அப்பால் செல்லும்போது மறக்குலாவிய திறங்களையுடைய வயவீரர்கள் வந்து வளைத்து வீமனுலிளைத்து மண்ணும்விண்ணுமதிர்ந்து கண்ணுமெண்ணுங்கலங்கி ஒன்றுந்தெரியாமல் நன்றாயிருந்ததேகம் புண்ணாய்மண்ணோடுமண்ணாய் மடிந்தார்கள்

அவர்களைவென்று வாள்விழிசெவந்து வாகுவுமுயர்ந்து வாளரிபோலெழுந்து செல்லாநின்ற தூளரியை கோளரியாகிய துரோணாச்சாரியர்பார்த்து ஐயோ, இன்றுநாம்கட்டிய யூகத்தைப்பிளந்து முன்னேபோன அர்ச்சுனனைத்தேடி பின்னேபோன சாத்தகியையும்நாடி இவனும் ஓடிபக்கத்திற்சேர்ந்து கொண்டானாகில் காற்றுநெருப்புங்கலந்ததைப்போல் மூவருங்கூடி நமதுபடை முழுமையும் நாசப்பட்டுப்போம்படி நலித்துவிடுவார்களேயென்று விசாலமாகிய வில்லைவணக்கி சமர்முகத்தில்முந்தி வீமசேனனைவளைத்து சப்தசமுத்திரத்தையுங் குடித்திடித்தெழுந்த சப்தமேகமும் பொழியுஞ்சலதாரையைப்போல் சரதாரைசொரிந்து எய்சலும்விரைந்து அங்கமர்புரிந்துவருகின்ற தங்கள்படைவீரரைக்கண்டு நீங்கள்துடியாய்வாருங்கள் வந்துநம்படையைக் காருங்களென்றிரைந்து பறந்துபறந்துபாடுபடும் துரோணாச்சாரியை வீமன்கண்டு நமக்குமிவருக்கும் யாதொருபகையுமில்லை மேலுநம்முடையவிற்குருவானவர் இவருடனெதிர்த்துப்போர்புரிவது ஞாயமல்லவென்று கோபமடங்கி ஆசாரியனை வணங்கி ஐயனே தேவரீரைப்பகைத்து சமர்கொடுப்பது அன்னீதியேயல்லாமல் நன்னீதியல்ல எங்களுக்கு நீர்முதற்குருவானவர் உமதுபாதத்தை உளத்திலுஞ் சிரத்திலுங்கொண்டிருக்கின்றோம் உத்தமனேயென்று பதாம்புயத்தில் சதாயுதன்வணங்கவும் தனுவேதியவகைத்து இன்றையத்தினம் எவர்களாகிலும் ஏமாறக்கூடுமா ஒருக்காலுங்கூடாது நீ எனக்கு இதவாகிய உபசாரஞ்சொல்ல வேண்டாம் !வஞ்சனையில்லாமல் நெஞ்சுறுதியாய்மிஞ்சி ஒருகைபார்த்துவிட்டுப் போகலாம் அஞ்சலைக்கிளையமகனேயென்று கொஞ்சமேனுமிரக்கமில்லாமல் வெஞ்சிலையைவளைத்து செஞ்சுடர்மாருதம்போல் அஞ்சரீகமென்னும் அடலாஸ்திரங்களைவிடுத்து அந்தவீமனுடைய தேகத்தைத்துளைத்துக்கெடுத்து படாதபாடும் படுத்தினர், அப்போது வீமசேனனாகிய வீரதீரன் இவருடன் அமர்புரிந்தால் காலதாமிசமாய்ப்போகுமென்று வதிலுக்குப் பாணங்களைத்தொடுக்காமல் வாய்திறந்தொருமொழியுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்து தன்பேரில் வந்துவிழும்பாணங்களையெல்லாம் இருகரத்தாலும் அடித்துவிலக்கிப்பிடித்து நெரித்துகசக்கி முறித்து திசைக்குளெறிந்து கண்செவந்துகுதித்து மீசைமுறுக்கி புருச்சி நெறித்துப்பார்த்து திடுக்கென்று தேரைவிட்டிழிந்து திடுதிடுவென நடந்து செழுஞ்சிலைக்குருவலி நடாத்தியதேருக்கருகாமையில்வந்து ஓரிரண்டுகையால் உருளையை வாரிக்கொண்டு கதிர்மதியுடுக்கள் கதியழிந்தாட காசகன்றோட கரகரவென்றவீசி யெறிந்தபோது ஆகாயத்தில் வேடிக்கைபார்த்திருந்ததேவர்கள் அஞ்சிப்பயந்து அப்பாலொதுங்கியோடவும் முந்தியகாலம்போல் அந்தரமளாவிவிந்தகிரிவளர்ந்ததோவென்று நவக்கிரகங்களுஞ் சிந்தைநையும்படியாகவும் யெகபந்திசலங்கி விரைந்தோடும்படியாகவும் விண்டலம்வரைச்சுழம்புகுந்து கிழதுமேலதாய்க்கவிழ்ந்துமண்டலத்தில்வீழ்ந்து சாரதியுங்கநெரிந்து சக்கரங்களுடைந்துதிர்ந்து அச்சுடன் கடையாணியதிர்ந்து ஆலவட்டங்களும்பறிந்து குதிரைகளின்குடற்களுஞ்சரிந்து குறுக்காற்கால்களுமுறிந்து கொடியுங்குடையுங் கழிந்து கொம்மையும் பொம்மையுமழிந்து வில்லும்பாணமுமறந்து வேறியனெலும்புமொடிந்தது.

இவ்விதமாக வீழ்ந்த துரோணாச்சாரியர் மெத்தெனவெழுந்து பின்னிடவேறுமென்று தன்னுடைய வேறுரதத்திலேறி நின்று குன்று போற்கட்டிய படைவீடுதேடிச்சென்று போவதை எமதூதர்களிலு மேம்பங்கதிகமாகிய பெருவஞ்சகநெஞ்சினையுடையபோர் வீரர்கள்கண்டு துரோணாச்சாரியருக்கு உபருலாய் எண்டிசையும் புடைசூழவந்து ஈரேழுமண்டலமும் புதைந்து தத்தளிக்க சலப்பெருக்குமுடைய தரங்கநெடுங்கடல் - சர்வசம்மாரகாலத்தில் எங்கும்பொங்கும் ஓசையைப்போலிரைந்து அதிகரித்து சினங்கொண்டு வீமனைவளைந்துபோர்புரிந்தார்கள் அவர்களைச்சுழற்காற்றிற்சுழலுந்துரும்புபோற்போக்கித்திரும்பியபோது ஆரபாரவீரகாகளசுரிமுகச்சங்குசோணக்கொம்பு தாரைபேரிபூரி வீரசின்னம் பம்மைமுதலாகிய வாத்தியங்களெல்லாம் மேககற்சிதத்தில் ஐந்துபங்கதிகமாகமுழங்கும்படியாய்பூரீஸ்ரவனும் புகழ்ப்பிரதாபராஜனும்போர்மல்லருமாரிபோல்வாரிகூரியவெங்கணைகளைச்சொரிந்து விஷாக்கினிசெறிந்துவேகும்படியாய் உலகஞ்சாவும்படியாய் நிலைபெற்று அமர்கொடுத்துக்கொண்டிராநின்ற மலையொத்த புயத்தினை வாயுகுமாரனாகிய வீமசேனன்கண்டு ஆயுங்கணைமழைகளைத் தேயுவென்னத் தொடுத்து அவரவர்கள் முகமாறிபலுமாறி யொடுங்கியோடியிளைத்து ரதகஜதுரகமுமிழந்து நாணிவிற்பாணமுமழிந்து, கோ கோ, வென்னுமிரைச்சலுடன் கூட்டங்கூடி ஓட்டங்கொள்ளும்படிக்கு மாட்டிவிடுத்து கடுங்கோபத்தாற் கடுகடுத்து நீண்டபுயங்கணிமிரச்சிரித்து நீலவண்ண நிறங்கொண்ட நாரணனிருவரையும் நேர்தேடிவராநின்ற வீமசேனனுடையரதமும் - இவனுக்குமுன்னோடிவந்த சாத்தகியினுடைய ரதமும் இரண்டுந் திரண்டமலைபெயர்ந்து வருவதைப்போல் சக்கரம் புரண்டுருண்டு முன்னும் பின்னுமாயோடிவருவதை, நச்சரவக்கொடியாடிய உச்சிதமுடிசூடிய ராஜராஜேஸ்வரனாகிய துரியோதனனோடி மனந்தளர்ந்துவாடி ஓடிபற்கடித்து விற்பிடித்து பரதவித்து அஞ்சியிளைத்தான்.

அந்தவேளையில், அஷ்டமகாநாகங்களினுடையவிஷாக்கினிவெப்பமுஞ் சூரியனுடைய தீக்ஷண்யமுஞ் சாந்தமாகும்படியாய் குளிர்ச்சியுடன் உலகத்திலுலவிக்கொண்டிராநின்ற வாயுவின்வேகந் தலைசாய்ந்துபோகவும் திசைகளுக்காதாரமாகவமைந்த திக்கஜங்களெட்டுந் தேகாபிமானம்விட்டு மெத்தமெலிந்துநலிந்துவாடவும் அதிராமல் எதிரேறிய பதினெண்பாஷைமன்னரும் ஆகங்கலங்கித் தேகம்விலங்கவும் பூமிமுதலாகிய குருக்ஷேத்திரத்தி லிராநின்ற யாவரும் விகாரங்கொண்டு தலையைக்கேறவும், அளவிடுதற்கரிய ஆழமானகடலைக் கிழித்தோடுங் கப்பலுக்கொப்பாகிய கடியவேகத்தேரை சதாயுதனுஞ் சாத்தகியும் செலுத்திக்கொண்டு கார்போர்கறுத்த கடலின்வண்ணனாகிய கண்ணனுங் காண்டீபனும் உலவிச்செல்லுமிடத்தை நாடியோடிவந்தார்கள்.

அப்பொழுது உலகமயக்கும்படியா யோடிவராநின்ற
இரண்டுதேரையும் நரநாரணரிருவரும் சமீபத்திற்கண்டு
தேவசங்கமுழக்கி தேசுப்பரவசத்தால்மகிழ்ந்துதிணிந்த
மலர்த்தாரணிந்த தீர வீர புயபுங்கவனாகிய தர்மராஜனு
மவர் நமது க்ஷேமத்தையறிந்துவரும்படிக்கு ஆக்ஞாபி
த்தனுப்பி வைத்ததென்றுணர்ந்து ஆனந்தங்கொண்டார்
கள்.

அப்போது சுதாயுதவீமனானவன் சூழ்கொண்டமேகம்
போன்ற வடிவினராகிய கிருஷ்ணார்ச்சுனரை தன்னிருக
ண்ணுங்களிக்கக்கண்டு துன்னிவிரைந்து தன்தமயனாகிய
தர்மராஜனுடைய காதுகளுக்கு இவர்களின்க்ஷேமத்தை
த் தெரிவிக்கும்படியாய் பாரியசங்கத்தை விரியமுட்டன் இ
ருகரத்தாலும் பிடித்து பம்பம்மென முழக்கி (சோமசூ
ரியாக்கினியென்னும் மூன்றுசுடரும்,)அல்லது உயிரிலு
ள்ள அக்கினி உதரத்திலுள்ள அக்கினி-கோபத்திலெழு
ம் அக்கினியென்பது மூன்றும்-அல்லது, காருகபத்திய
ம்-தக்ஷணாக்கினியம்-ஆகவனியமென்னும்-அக்கினி மூன்
றும் ஓரிடத்திற் சேர்ந்ததைப்போல் இவர் மூவருங்கூடி
மகிழ்ந்து விளங்கி-அர்ச்சுனனொருபக்கம் - வீமசேனன்
ஒருபக்கம்-சாத்தகி யொருபக்கமாய் முனைந்து சென்று
குதிரைசெலுத்துஞ் சாரதித் தொழில்பூண்ட நந்த நந்த
னுடைய திருவடியைச் சிரத்திலும் உளத்திலும்தரித்துத்
துதித்து ஜெயிப்பதற்கரிதாகிய படைமேற்றுவி நெருங்கி
ச் சூழ்ந்து வளைந்து வீரசங்கம் - பூரி-சிங்கநாதமுதலிய
வாத்தியங்களை முழக்கி ஆகாயத்தில் வேடிக்கைபார்க்குந்
தேவர்களுடைய உள்ளமயங்கித் தியங்கி நடுக்குறும் படி
யாகிய தீவரங்களுந் தெரிந்துகொண்டு மண்ணும் விண்
ணும் ஒண்ணாகும்படி மனம்போனவழியேகலக்கி சேனை
நெருக்கத்தை விலக்கி வரும்போது-இந்தப் பாரைத்தாங்
கும் ஆயிரம் பணாமுடிச்சேடன் போரைத்தாங்கமாட்டா
மல் தலைநொந்து அலம்வந்து சுழன்றான் இவ்வுலகிற்கு
த் திக்காகயேற்பட்ட திக்குகள்மருண்டு வெருண்டு கல
ங்கின-வடவாக்கினியின் வெப்பந் தணியும்படியாய் ஓயா
மல் அலையடித்துக் கொண்டிருக்கும் நதிபதியாகிய கட,
ல் தளதள வென்று கொதித்து வெதும்பின-மேலாகிய
அண்டமும் பிறுண்டு திசைப்பாலர் முதலியபேரும் பச
பசவென்று விழிக்கும்படியாய் போர்புரிந்து வராநின்ற
சாத்தகி வீமனென்னும் இவ்விருவரையுங் கண்டு அர்ச்சு
னனுடன் சண்டைசெய்து இளைத்தோடிய யாவருஞ்சே
ர்ந்து இவர்களுடன் போர்கொடுக்க நினைத்து பிரதாபரு
த்திரனைப்போல் நெருங்கிவந்த பேர்களையெல்லாம் நொ
றுங்கவடித்து தூளிப்போகாநின்ற வாயுகுமாரனென்னு
ம் வீமசேனன்கண்டு மனந்தாளாமல் சூரியகுமாரனாகிய
கர்ணன்வந்து முந்திச் சமர்தொடுத்தான்-அவனுடனெதி
ர்த்து வீமசேனனும் போர்கொடுத்தான்.

இவ்விருவருங் கொடுமையுடையவர்களாய்ப் பகைத்
து கோபமதிகரித்து வரிபொருந்திய வில்லை மளமளவெ
ன்று வளைத்து வரத்தினாலுற்ற ஜெயமுற்ற உரம்பெற்ற
அரம்வைத்த கூர்மையாகிய பாணங்களைப் பரிந்து தெரிந்
தெடுத்து-ஒருவருக்கொருவர் சமீபித்தடுத்து - விஷாக்கி

னிவெகுளியுடனெதிர்த்து-நேரோடுந்தேரும் தேரிற்பூட்
டிய குதிரைகளுஞ் சாரதியும் செங்கடப்ப மலர் சிவந்து
மலர்ந்ததைப்போல் நெருங்கிய ரெத்தவெள்ள நிரம்பிப்
பாயும்படியாய் மெத்தமுனைந்து அஸ்திரப் பிரயோக
ஞ்செய்து வருந்தியபோது போர்முனைந்த யோர்வீர பூ
பாலருடைய உடம்புஞ்சிவந்து, உதிரம்வழிந்து யுத்த பூ
மியிலும் ரெத்த அலைகளுடன் அலையலைந்து மலைந்து கா
டுகரம்பு மேடுபள்ளங்களிலும் வெள்ளமாய்ப்புரண்டோ
டியது.

இப்படிக்குப் பலவிதமாகிய யுத்தங்களை செப்படிப் ப
வர்போற் செய்துவரும்போது ஒப்புவமை யில்லாதவீம
சேனன் காமநாசன்போல் நின்றுதொடுத்த கடுவேக அ
ம்பினால் சம்பிரமனென்னுங் கர்னனுடைய ரதத்திற் கட்
டிய குதிரையிரண்டுந் துண்டித்துப் புரண்டு விழுந்தன.
கச்சைக்கொடி முறியுண்டன சாரதித்தலை தறிந்தன-தே
ருங்குலைந்து தெருப்பொடியாயின-சேமகவசமுங்கிழிந்த
ன-தேகமுந் துளையுண்டன-முழுமதிபோன்ற வெள்ளைக்
குடையும் மூன்றும்பிறைபோற் குறைந்தன,எந்தப்போ
ருக்கும் அஞ்சாத அஞ்சலனென்னுங் கர்னனுடைய நெ
ஞ்சமுமழிந்து போரொழிந்து சீரிழந்து தார் குழைந்து
காலோட்டமாக ஓடி மிகவும்வாடி வீமசேனனுடைய பா
ணவேகத்திற் கெட்டாமற் புறங்கொடுத்துப் போவதை
க்கண்டு பலம்பொருந்திய விடசேன னென்னும் பால்ய
குமாரனானவன் உள்ளங்கொதித்து வள்ளலாகிய கர்ன
னுக்கெதிர்சென் றிழிந்து மனவருத்தத்துடன் தழுவிநவ
மணியால் அலங்கரித்த விசாலமான தன்னுடைய தேரி
லேற்றிக்கொண்டு வீமசேனனா லடிபட்டழிந்த விதங்க
ளைக்கேட்டு மேனிநடுங்கி மிகக்கோபங்கொண்டு - ஆ ஆ,
விட்டேனா-அந்த வீமனையென்று மிகுந்த திடங்கூறி அ
ணைகடந்த வெள்ளத்திற்கு கரைகட்ட வந்தவரைப் போ
ல் அந்த வீமசேனனுக் கெதிர்ச்சென்று-நின்று மீளவு
ம் வெறித்து வெஞ்சிலைவளைத்து இருவரும் அவ்வொரு
வன்மீது அமர்புரியும்போது பெருவயிரமுடைய வீம
சேனன் அருவருப்புடனகைத்து மலைபோன்ற வில்லி
லிருந்து உந்தும்படியாகிய பாணங்களினால்-அவர்க ளே
றிவந்த குன்றனையதேரும்-துண்டுகளாயுதிர்ந்து உடலதி
ர்ந்து விழிபிதுர்ந்து குலை கொலைந் தலைநடுங்கி காலிலுள்
ள கடுவேகங்காட்டி வெங்கொடுந் தோடி துரியோதன
ராஜனைக்கண்டு அரசே பெருமோசம் வந்ததென்று தா
ங்கள் பட்டபாட்டையும்-தங்கள் சேனைகள்கெட்டகேட்
டையும், வீமார்ச்சுன சாத்தகி மூவருங்கூடிய பாட்டை
யுஞ்சொல்லி வருந்தியபோது நாகக்கொடியோனாகிய து
ரியோதனன்கேட்டு மனங்கன்றி கண்சிவந்து தைத்திற
லாசானென்னுந் துரோணாச்சாரியருக்கெதிரிற் சென்று
பெருமூச்சு விட்டு-விழுக்குழியி லிருந்தெழுந்து அனற்
பொறி பறக்கும்படிக்கு பற்கடித்து ஐயா, தனுவேதிய
னே, என்னைச் சதிசெய்யுந் தன்மையோ, இதென்ன வ
ன்மையோ, உசாந்த காலாக்கினி உருத்தெழுந்து அழகிய
கானகத்தை யெரித்தழிக்குஞ் சமயம்பார்த்து அந்த அக்
கினிக்கு வலுவேறும்படியாய் நெய்சொரிந்து வாடைக்

காற்றுஞ் சகாயமாய் வீசி யடிக்கச்செய்து-தீ யதிகரித்து
வளரச்செய்யு நற்றுணையைப்போல் தனஞ்செய னெதிர்
ந்து நமது சேனைக்காட்டை-தகிக்குங் காலத்தில் தண்ட
தரனென்னுங் காற்றுஞ்-சாத்தகி யென்னு நெய்யும் அந்
தத் தனஞ்செயாக்கினியுடன் கலந்துகொண் டார்களே,
ஐயோ, அவர்க ளொருவருட னொருவர்சேராமற் றடுக்க
வில்லையே ஐயா, தனுர்வேதியனே, இனியென்னகாரியம்
முன்முகத்தும்ம என் மைத்துனனாகிய சிந்துராஜன் இ
றப்பதற்குச் சந்தேகமில்லையே சுவாமி, தேவரை நம்பின
தற்கா இந்த வம்புவிளைத்துவிட்டீர், அம்புயத் திறையே-
என்மைத்துனன், அப்பவே எங்கேயாகிலும் ஓடிப்பிழை
த்தாலும்பிழைப்பானே,.அவனையும் போகாமல் பத்மயூக
மத்தியினிறுத்திசாகாமற்செய்யுறேனென்று-விலங்கைவி
ட்டு தொழுவில் மாட்டிவைத்த தன்மைபோல் வற்புறுத்
தி வைத்தீரல்லாமல் இந்தச்சமயத்தில் அந்தயுத்தமுனை
யை நீரொட்டிப் பார்க்கயில்லையே-நீ ரிங்கிருந்து செய்யுங்
காரியம் யாதோ, யிதுவரையிலு நடத்திய வீரப்பிரதாப
மேதோ, என்னுண்டவனே இனியாகிலும் அந்த அமர்த்
தலைக்கு வந்து என் மைத்துனனுயிரைக் காத்தருளு மெ
ன்று ராஜ ராஜேஸ்வரனாகிய துரியோதனன்சொல்ல, இ
ந்தவசனத்தை துரோணாச்சாரியர் கேட்டு சிந்தை நெரு
ப்பெழச்சிரித்து ஒரிருகண்களும் பொறியெழ வுறுத்து
பெருங்கோபத்தைப் பொருளாகக்கொண்டு பேதிக்காநி
ன்ற வேலாயுதத்தை யுடைய வீராதிவீரருந் திடுக்கிட்டு
செவியடையக் கேட்கும்படியாய் துரியோதனனைப் பார்
த்து சிறசிலவார்த்தைகள் சொன்னார், (அதாவது) புவ
னியோங்கும் விற்பூவார் தாருவே-அவனிதாங்கு-மற்புய
மார் மேருவே-கேளும், உமக்குப் பிராணபதமாகிய கர்
ணமகாராஜன்-அவடத்தி லிருக்கிறார், சேமநிதி போன்ற
மாமா சகுனிராஜன் அவடத்தி லிருக்கிறார், மகா பதிவிர
தையின் வஸ்திரத்தை யுரிந்த யிளவரசாகிய துஸ்வாசன
ன் அங்கிருக்கிறார்-இதற்கெல்லாங் காரணராகிய நீரும் அ
வடத்திலிருக்கிறீர்-நீங்களெல்லோருஞ் சூழ்ந்துக்கொண்
டிருக்கும்போது உமது மைத்துனனாகிய சிந்துராஜ னுயி
ரை யாவர் கைக்கொள்ளத் தக்கவர்கள், அரசே - இதுவ
ல்லாமலும்-நானிவடத்தில் காவலிராவிடில் - ஏழுகடலு
மொன்றுவதுபோல்-பாண்டவப்படை யாவும் வந்துகலந்
து பாரிய போர்புரிவார்கள்-ஒருவருட னிருவர்வந்துகல
ந்ததற்கே உலகங் கலங்குமாயின்-அவர்க ளெல்லோரும்
வந்துவிட்டால் அப்பாலெப்படி காப்பது அப்பனே-அ
ப்போது அதிகப் பிரயாசையைக் கொடுக்கு மல்லவா
ஆகையால், சமுத்திரம் புரளாம லிருக்குந் தடையைப்
போல் நானிவடத்திற் றடுத்துக்கொண் டிருக்கிறேன்.

இதன்றியும். இன்னமொன்று சொல்லுகிறேன் கேளு
ம், நானிவடத்தி லேதோ சிலசவுக்கிய மடைந்திருக் கி
றேனென்றும்-யுத்தஞ்செய்யப் பயந்து ஒதுங்கி யிருக்கி
றேனென்றும் எண்ணவேண்டாம் - அரசே - இவடத்தி
லெனக்கு அநேகவருத்தங்கள் நேரிடவும்-உடனுக் குட
னே அவைகள் நிவாரணமாகவும் பாம்பின்வாய்ப் பட்ட
தேரையைப்போற்பரதவித்துக்கொண்டிருக்கின்றேன் இ
த்தியாதி வருத்தத்துடன் இவடத்திலிருப்பானேனென்று
கேட்பீராகில்-நீரென்னை வரமாகக் கேட்டுக்கொண்டப
ண்ணம்-சத்துருவாகிய தர்மராஜனை சமயம்பார்த்து பிடி
த்துவரவேணுமென்று சகல சிறுமையும் அநுபவித்துக்
கொண்டு இவடத்திலிருக்கிறேன்-மேலும் நான் அவடத்
தில் வந்தாலும் என்னபிரயோசனம் அரசனே-சிருஷ்
டி கர்த்தாவாகிய பிரமதேவன் நமக்குப் படைத்துவையா
திருந்து நின்றாலும்-விதியின் வழி-வினையின்னெறி முடியு
மேயல்லாமல் வேறாக நடப்பதொன்றில்லை அப்படியிரு
க்க சிந்துதேசத்திறைவன்-அர்ச்சுனன்கையி லிறக்கும்ப
டிக்கு விதிநேரிட் டிருக்குமாகில் அதை விலக்குவதற்கு
உன்னாலும் என்னாலுங்கூடுமோ-இன்ன மற்றொருவரா
லும் கூடுமோ உத்தமனே-ஆதலால் உன்னுடைய கருத்
தும் சாமர்த்தியமும் திடமயிரிய வயிராக்கிய உறுதியுங்
கொடாமல்-ஒரே நிலையாக நின்று உம்மாற் கூடியவரையி
லும் யுத்தஞ்செய்து ஒருகைபாரும் போம் போம் உரக
கேதனனே-அப்பால் வினைச்செய லெப்படியோ பார்ப்
போமென் றுரைத்தார் அவரா ரெனில், நான்கு வேதத்
தையும்-வில்வாங்கு-வேதத்தையும் குற்றமறக்கற்ற வெ
ற்றியையுடைய துரோணாச்சாரியர்.

இப்பால்-ஆசானுரைத்த வசனத்தைக் கேட்டு பூசாவி
திபுடன் தாசானு தாசனாகப்பணிந்து வாய்பேசாமல் ரா
ஜாதிராஜன் திரும்பி வாசாமகோசரமாய் வழியில் வரும்
போது-அர்ச்சுனனுடன் கூடவந்த சக்கரரக்ஷகா ளாகிய
உத்தமோசா - உதார்மனென்னு மிருவரும்-பக்கவேதை
பாரிச வேதைகளில்லாமல் அறுத்துக்கொண்டு வருங்கா
லையில்-அர்ச்சுன னுடைய ரதம் முந்திப்போய் விட்டது
தாங்களிருவரும் அரைநாழிகை வழிதூரம் பிந்திப்போய்
தங்க ளெஜமானாகிய விஜயனிடத்திற் சேரவேணு மென்
னும் விருப்பத்துடன் செருப்பொடி யாக்கிக் கொண்டு
வாய்வேக மனோவேகமாய் தேர்நடத்தி காயும்படி யாகிய
வாயுக்கணை முதலிய தேயுக்கணைகளைச் சொரிந்து பிரதா
பவில்லை ஷடங்காரம் பண்ணி கண்டாவன தகனக்கினி
போல் மூண்டெரியுங் கோபமுடையவர்களாய் இரண்டு
தேர்களின் சக்கரங்களோடிய தாரிகளெல்லாம் சேறு நீ
ருஞ் சீரிட்டு ஒத்த ஆறுகளோடும் படிக்கு ராமபாணம்
போல் வராநின்றவர்களை, துரியோதனமகாராஜன்கண்டு
பெருமைகொண்ட வில்லைவளைத்து நாணியிறுக்கி மீசை
முறுக்கி-அவர்களைப்பார்த்து உறுக்கி-தலையசைத்து-பா
ணமுடிக்கியபோது, (வெறும்வாயை மெல்லுகிறவர்களு
க்கு, அத்தறுவாயில் அவலகப்பட்டதுபோல்,) அவ்விரு
வரும் இவனை யெதிர்த்துவளைத்து யிரைந்து போர் புரிந்
தார்கள்.

இப்பிரகாரம் உத்தமோசாவும்-உதார்மனும் துரியோத
னராஜனும்யுத்தஞ்செய்யும்போது -மணிமகுடமுடி பெற்ற
மன்னனானவன் அவர்கள்கொடுத்த அஸ்திர சஸ்திரங்க
ளையெல்லாம் அறுத்துக்குவித்து அவர்களேறிவந்த-தே
ர்-குதிரை-சாரதிமுதலிய யாவுங் கெடும்படியாய் நிலத்தி
ற்படுத்தி அவர்களுடைய தேகத்திலுஞ் சில கணைகளைச்
சேர்த்தபோது அவரிருவரும் பூமியிற்பாய்ந்து எழுக்கட்

டுகள் கட்டிய பாரியகதையைக் கைக்கொண்டு நந்தியாவட்டமாலையணிந்த திணித்ததோளினையுடைய துரியோதனனேறிய தேர்-கொடி-குடை-குறுங் கால்-சக்கரங்கள்-சாரதி-குதிரைமுதலிய யாவும் தரையுடன் தரையாகும்படி ஜாடினார்கள்-அதனால்-கொடுங்கோலுடைய துரியோதனமகாராஜன் மிகவுங் கூன்வளைந்து தேரோட்டம்போல் காலோட்டங்கொண்டோடினான். அப்படியோடும்படியாகிய ராஜனைக்கண்டு குலுங்கநகைத்து இப்பாற் திரும்பி சேனைகளெல்லாம் அலமலங்கப் பகைத்துவராநின்ற இவ்விரண்டு வீரரும் தாங்கள்வரும் வழியில் எதிர்ப்பட்ட வயவீரனிருவரையிருவருமெதிர்த்து போர்விளைத்து-மிகவதிர்த்து வில்லையொடித்து அவர்களங்கத்தைப் பங்கப்படுத்தி முடித்து - அவர்களேறிவந்த இரண்டுதேரிலுந் தாங்களேறிக் கொண்டு இருள்நீங்கப் பிரகாசித்தெழுஞ் சூரியனைப்போல் நான்குபக்கமுந் தகித்துக் காய்ந்து ஆய்ந்த அறிவினையுடைய அர்ச்சுனன் பக்கத்திற்போய்ச்சேர்ந்து வழியிற் பிரிந்தது முதல் வயம்பெற்று வந்ததுவரைக்கு முரைத்து மருங்கிற்பொருந்தி யிருந்தார்கள், இவர்களிடத்தில் அடிபட்டோடிய துரியோதனமகாராஜன் கால்நடையாய் வருவதை, மத்திர தேசாதிபதியாகிய சல்லியன்கண்டு முகங்கருகி மனத்தளர்வு கொண்டு தன்னுடைய கதிர்மணிக் கிரணத்தேரைக் கொடுத்தான், அந்த ரதத்தில் அரவக் கொடிக் கதிபனாகிய அரசனேறிக்கொண்டு மைத்துனனென்னுஞ் சிந்துதேசத்தலைவனிருக்குமிடத்தை நாடிச்சென்றான்.

இப்படியிருக்க, முன்னே வீமனிடத்தில் யுத்தஞ்செய்து தேர்முதலிய யாவுமிழந்து இளைத்தோடிய கர்னனானவன், கூர்மைதாங்கிய நகமோங்கிய பெரும்புலியெனச் சீறி வேறொருதேரேறி அநேகவண்டுகள் பாடுமாலையணிந்த புயமீறி வீமசேனனுடைய சிலையுற்றபாணங்களாலழியும் நிலைபெற்ற தங்கள்சேனைகளின்பேரில் பெருங்கிருபையுடையவனாய் இரக்கங்கொண்டு நேரிட்டவர் வீரிட்டுப்போம்படி செயித்துவராநின்ற அழற்கோபாக்கினிக் கண்களையுடைய வீமசேனனுக்கெதிரிற்சென்றுசெவ்வரக்கைப்போற் சிவந்தகண்களைவிழித்து உருட்டிக்காட்டி ஒப்பில்லாத முப்பது கூர்ங்கணைகளைப்பூட்டி வீமன்பேரில்மாட்டி அவனைப்பேய்போலாட்டி ஆர்த்ததட்டிய கர்னனைக் கைவிரலாற்சுட்டி அவனியிலுள்ளோர்யாவரும் புகழும்படியாய் அவன்கைப்பிடித்தவில்லையும் அவனேறிவந்ததேரையும்பாகனையும் குதிரையையும்போக்கியபோது, கூக்குரலிட்டெழுந்த கர்னனானவன், நிலத்தினின்று பலத்தவேலாயுதத்தை யெடுத்து வீராதிவீர வேந்தரெல்லோருந் திடுக்கிடும்படியாய் வீமன்மேலெறிந்தான்.

அந்தக்கர்னன் வீசியவேலாயுதமானது, கோலாகலமாய் வருந்திறத்தை வாயுகுமாரன் கண்டு எட்டுத்துண்டாகும்படி சூலாயுதம்விடுத்து தேவதாஸ்திரமொன்று தொடுத்து இதன்மத்தியில் மறுபடியுங் கன்னனேறிவந்த தேர்குதிரை முதலியயாவுமடித்து மேலுமொரு கூர்வாளி தொடுத்து திரிபுண்டரமணிந்த நெற்றியில் பெரும்புண்டாவித்தான்.

அதனால் குபீரெனரொத்தவெள்ளம்பெருகியோடவும் பரிசுத்தமுகம் வியர்த்து வாடவும் கர்னன் முதுகுகாட்டியோடவும் கதாயுதனாகிய வீமசேனன்கண்டு கக்கடக்கக்கடக் குலுங்கக்கலீரென நகைத்துப்பாடவும் மற்றப்பேர்கள் மெத்தமனஞ்சலித்து வாடவும் வீமசேனனுக்கிளைத்துப் பின்னிட்டோடிவராநின்ற மிகுகொடையாளனாகிய கர்னனை வேந்தனாகிய துரியோதனன்கண்டு சகிக்காமல் மனஸ்தாபமும் மிகுந்தகோபமுங்கொண்டு வில்லாண்மைமுதலிய வல்லாண்மையுடைய துர்ச்சயனென்னுந் தம்பியை அழைத்து அடாதம்பி நிர்மூடனாகிய வீமனால் கர்னமகாராஜன் இளைத்தோடிவருவதைப்பார்த்தையா ஐயோ நீயாகிலும்போய் அந்தவீமனை நாசப்படுத்தி வரலாகாதாவென்று உசுப்பேற்றியனுப்பினான் தமயன்சொற்படியே துர்ச்சயனென்னுந் தம்பியானவன்சென்று வீமனுக்கெதிரிலநின்று வெற்றிகொள்ளும் போர்புரிந்தபோதுவீமசேனனானவன் பாம்பைக்கண்ட கருடனைப்போற்பகைத்து ஒருபெருங்காலாக்கினிக் கணையைத்தொடுத்து வந்தவனைக்குங் கணக்காக்குவதே நமதுமகிமையென்று வந்தவனைமறுபடியுந் திரும்பிப்போக விடாமல்மடித்தான்.

அவனிறந்தசெய்கையைக் கர்னன்கண்டு காவலனுடன்சொல்லி இருவருமனநொந்து உடனே துரியோதனனைத்தேற்றி இதோபாரும் ஒருநொடிப்போதில் அந்தவீமனை தேருடன்சாய்த்து வருகிறேனென்று சபதங்கூறி மறுபடியுமொருதேர்மிசையேறி வெற்பென்றுரைக்கும் வில்லைவளைத்து பல்லைக்கடித்து புகைந்தெழுந்த விஷாக்கினிபொருந்திய கடைக்கண்களையுடைய கர்னனானவன் கடுமைக்கோபங்காட்டி இதனால் உன்னுயிரழியவேணுமென்று பதினாலுபாணங்களையெய்து நீ தப்பித்துக்கொள்ளும் விதத்தைத்தேடடாவென்று சில சொற்களினால் வைதான்.

அப்போது வீமசேனன் அந்தக்கர்னன்பேச்சைக்கேட்டு பெருமூச்சுவிட்டு மிகுந்தபராக்ரமத்துடன்முனிந்து பங்கஜநாயகன் மைந்தனென்னுங் கர்னன்பேரில் கமலாஸ்திரம் மூன்று விடுத்து அவன்றொடுத்த பதினான்கு பாணங்களையுங்கொய்து கெடுத்து உரமாகிய மார்பிலுந் துளைத்து வருந்தியபோது (சுரத்திற்குப்புளிதுணையென்பதுபோல்) உரத்திற்பாணமுறுத்தி வருத்த உடல்துடிதுடித்து உயிர்நிலைகுலைந்து உதடுகாய்ந்து உறுதியுந்தேய்ந்து ஒடுங்கிய நிலையைத் தேர்ச்சாரதியாய்ந்து விசாலமாகியரதத்தை திருப்பிக்கொண்டு வருவதை ராஜாதிராஜனோக்கி கர்னனையுபசரித்துத்தேற்றி கையொடுகையறைந்துகூவி தன்பக்கத்தினின்ற துன்முகனென்னுந் தம்பியை தட்டிக்கொடுத்து வீமசேனனைமறித்து சற்றுநேரம் வழிவிடாமல் போராடிக்கொண்டிருப்பையாகில்இதோகர்னராஜன் ஆயாசமாற்றிக்கொண்டு வருவானென்றனுப்பினான்.

அவன்சொற்படியே துன்முகனானவன் சென்று எதிர்நின்று வில்லையிழுத்துவளைத்தான் வெற்றியையுடைய வீமனானவன் இவனைக்கண்டு முல்லைக்கணையொன்றையெடுத்து முடுக்கியகாலையில் பல்லையிளித்துக்கொண்டு ஆகாய

த்திற் றலையெழுந்துபோவதை கர்னனுந் துரியோதனனு
ம்பார்த்து நமது துன்முகன்தலையாவென்று சோர்ந்து
விழ்ந்தெழுந்துமன்னர்மன்னனுனவன் மறுபடியும் துன்
மருடன் துன்மகன் விசயன் ஜெயன் மாலியென்னுந்தம்
பிமாரைவர்களை வாயுகுமாரன்பேரிலனுப்பினான் அவர்க
ளை வீமசேனன்கண்டு மனவருத்தமில்லாமல் அவர்களு
டன் யுத்தஞ்செய்வதற்கு ஆயாசப்படாமல் ஏரினாங்து சி
னந்து ஓ சம்பிமார்களே, நம்மிடவர்கள் அதோ முன்னு
ம்பின்னும்போய்க் கொண்டிருக்கிறார்கள், நீங்களும் முந்
திப்போங்களென்று மந்திரித்து கடவுளாஸ்திரக் கணைக
ளையுந்தி மண்ணாட்டின்வாழ்வை நீங்கி விண்ணாட்டுக்கனு
ப்பினான்.

அந்தவீமசேனனால் மன்னிளந்தம்பிமார்கள் ஐவர்மா
ய்ந்ததை ஆதபன்திருக்குமாரனாகிய அதிரத்திரன்கேட்டு
சைபழகியகார்முகம்வளைத்து நாணிமாட்டி ஜெயமணிபூ
ட்டி குணத்தொனிகாட்டி பொற்பிரகாசமுடைய தேனா
வீமசேனனுக்கெதிரிற்செலுத்தி பிரதாபம்பேசிநின்ற க
ச்சைக்கொடியோனை கழனிகளிடத்து வரான்மீன்களுல
வும்படியாகிய நீர்வளநாட்டுக்கதிபதியென்னும் பாண்டு
பூபதிபின்பாலனாகிய காலகாலன்கழலிணைமருத வீமசே
னன்கண்டு பெரும்புலிபோற்சீறி ஐயோ, அப்பா இப்ப
டியும் போர்புரிவாருண்டா, இதுவுமொருவீரமாவென்று
பற்பலவாகிய உண்மைவார்த்தைகளைப்பேசி சீச்சீயென்
றேசி மாசிலாவில்லையிறுக்கி வாய்மடித்துறுக்கி கூசாமற்
போர்தொடுத்தான்.

இவ்விதமாக யிருவரும் ஒருவரையொருவர் வெல்ல
வேணும் அல்லது கொல்லவேணுமென்று பல்லவங்க
ளையுந்தி வல்லவர்களுஞ் சொல்லப்படாத வயிரத்துடன்
அமராடிவருங்காலையில் இசைபெற்றதுரியோதனனுடை
ய நால்வகைச்சேனைகளுஞ் சேர்ந்து போராளிபோன்ற
வீமசேனனென்னுங் கேசரியைச்சூழ்ந்து வீராவேசத்
துடன் போர்கொடுக்கும்போது அந்த வீமசேனனுடை
ய கொடுமரத்தினின்று கடுகடுத்து விடுஞ்சரத்தால் மிகு
தியாகிய படைகள்குறைந்து மெலிந்துநலிந்து உயிரிழந்
து கணக்கில்லாத பிணக்குவியலாகி கால்மாடு தலைமாடா
ய்விழ அவர்களுடைய சரீரத்தினின்றெழும் உதிரவெள்
ளமான துசமுத்திரத்துடன்பகைத்தெழுந்ததைப்போல்பு
ரண்டோடும்படியாய்முன்பின்பாராமல் துச்சம்பண்ணிக்
கொண்டு வரும்கடோற்கஜன் தந்தையும் கர்னனும் எதி
ர்ந்து உயர்ந்த வில்லைப்பிடித்து ஆகர்னபரியந்தம் அதிர
விழுத்து முனையாகிய வாளிகளை தனிவான்மழைபொழி
வதுபோற் சொரிந்து ஒருவருக்கொருவர்பரிந்து ஒருவர்
விட்டபாணங்களை யொருவரழித்து ஒருவருடையதேரை
யொருவர்கழற்றி ஒருவர்சாரதியை யொருவரடித்து ஒ
ருவர்குதிரைகளை யொருவரொழித்து யிளையாமல் சளை
யாமல் களையாமலின்று சமர்செய்யும்வேளையில் ஆகாய
ப்பூமிமுதலிய வெங்கும் பாணமயமாய்க்குவித்து நிறைந்
துபோகவும் ரத்தங்களுறைந்துகாயவும் இப்பிரகாரஞ்
செய்த யுத்தஸ்திரங்களை இவ்விதமென்று யார்சொல்ல
வல்லவர்கள் ஐயா சுத்தசாமர்த்தியமாகிய யிருவரும்நெ

டுநேரம் வரையிலுஞ் சோராமற்போர்புரிந்து ஊழ்வினை
வசத்தால் விபாகரன்மைந்தனாகிய கர்னனானவன் வாயு
மைந்தனாகிய வீமசேனனால் அடிபட்டு உடல்வெதும்பி
விழுந்து சோர்ந்து இழிந்து ஓடினான் அவதிப்பட்டோ
டிவரும் ஆதித்தகுலத்தோன்றலை அம்புவிச்குலத்தோன்
றலாகிய அரவக்கொடியோன்பார்த்து முகம்வேர்த்து இ
ருகச்சேர்த்தணைத்து அண்ணா, நன்றாய்ச்சமர்புரிந்துவந்
திர் சற்றிளைப்பாறுமென்று சொல்லி மன்னவர்முதலிய
அன்னியர் பழிப்பார்களே நகைப்பார்களே யென்னுந்தா
ழ்வு தன்னுள்ளத்தில் எள்ளத்தனையும் நினைக்காத மன்ன
ர்மன்னன் தனக்கெதிர்நின்ற சித்திரவிசித்திரன் சித்திரா
ங்கன் சித்திரசாருகன் சித்திரச்சரன் சித்திராயுதன் சித்தி
ரவன்மன் சித்திரதரனென்னும் தம்பிமாரேழுபேரை இ
டும்பிநாயகனாகிய கடம்பனை அடக்கும்படி யேவினான்,
அவர்களுமேவி யுத்தத்திறங்களாற்கூவி அடா, பாவியெ
ன்று கோபித்தெதிர்ந்து எட்டுத்திக்கும்பட் டுதிரும்படி
மட்டில்லாப்போர்புரிந்து கூரம்புகள்தொட்டு அந்தவீம
ன்விட்ட கணைகளாற்பட்டுயிர்விட்டு விளைபயிர்ச்சாவிபோ
ல் ஆவிபோயினார்கள்.

துரியோதனமகாராஜன் ஏழுபேர் தம்பிகளை உய்த்தது
ம் அவர்கள் வீராவேசத் துடன்போய் வீமனை மொய்த்
ததும் இவர்களைக்கண்டு அந்தவீமன் நகைத்ததும் இவர்
கள் கணைமாரிபொழிந்து பகைத்ததும் அவனுஞ்சரமாரி
பொழிந்து யிவர்களைத் தகைத்ததும் கோமாரிகொண்ட
கொட்டியம்போல் அவர்கள்செத்ததும் இவைகளையெ
ல்லாம் வீமனாலடிபட்டு பாதசாரியாயோடி யிளைப்பாறி
ய கர்னனானவன்கேட்டு, அண்டமுகடதிர ஆர்த்து குடுகு
டுவென் றோடிவந்து சுப்ரமண்யக்கடவுளானவர் வேலை
மேற்கொடுத்த வேலாயுதம்போல் வீமசேனன் தோள்
முறியும்படியாய் ஒருதோமராயுதத்தை வீசினான் அந்தத்
தோமரமானது சந்திரசூரியரை விழுங்குவதற்கெழுந்து
வந்த ஆலகாலசோடிவிஷமுடைய ராகுகேதுவைப்போ
ல் வீமனைநாடியோடிவரும்போது சமயம்வந்தபொழுது
தேடியபொருளை சிக்கெனப்படுத்தாமல் செலவழிக்குந்
தீரனைப்போல் பகாசூரவயிரியாகியவீமசேனன்தேவதா
ர்ச்சனைசெய்து சிந்தித்து பங்கித்து அநுசந்தித்துவிட்ட
கடல்மடையனைய படைவகுப்புடைக்கும் பாணத்தினால்
கர்னன்விட்ட தோமரஞ் சாமரம்போல் துகளாபொடித்
துதிர்ந்து விண்ணிலும் மண்ணிலும் வேடிக்கைபார்ப்ப
வர் கண்ணிலும் படிந்தழிந்தது,கானெறிந்ததோமராயுதந்
துகளாபொழிந்துபோனதைக்கண்டசூரியகுமாரன்வேறு
தேரேறிசுவேதகூத்திரம்உபயசாமரம் அச்சமகற்றுங்கச்
சையங்கொடிவெற்றிமாலைவீரபட்டம்வச்சிரக்கவசம்முர
சுபேரி காகளங் கொம்பு கர்ணதாரைபூரி வீரசின்னமுத
லிய ஆரபாரத்துடன் பாரியவிற்குனிந்து காளகூட்டம்போ
லும் கறுத்தமேகமான மின்னலிடிமுழக்கத்துடன் விடா
மழைபொழியுந் தன்மைபோலும் விசிகங்களைத்தொடுத்
து விவேகத்திற்குறைந்த கர்னனானவன் தன்னிலுஞ்சிற
ந்த வீமசேனனை ஒரோபற்றுகப்பற்றிக்கொண்டு சாசாரு
திமுதலிய தேர்குதிரைசாரதியும் அசையவொட்டாமல்

ஸ்தம்பிக்கும்படி செய்தான், அத்தருணத்தில் வீமசேனன் திக்குமுக்கிட்டு திரங்குன்றாமல் தேறித்தெளிந்து கர்னன்தொடுத்த கணைமழைகளைக் களைந்து தன் தேரைச் செலுத்தி யெதிர்த்து மறுபடி யிருவரு மலைந்தபோது இருவருடைய தேரும் இடசாரி வலசாரியாய் குயவன்றிகிரிபோல் கூசாமற்சுழல இரண்டுமேகம் எழுந்திடித்தபேரொலிக்கு நேரொலியாக வில்லைவணக்கி குணத்தொனி செய்து கடலோசையடங்கும்படியாய் போர்வீரத்திறங்களைப்பேசி நெருக்குநேராகப்பொழியும் பாணங்களானது நிலமுதலிய மேலத்தலமெல்லாங் கடாரக்கினியைக்கக்கிக்கொண் டெரியத்தக்கதாய் இரண்டுநாழிகை வரைக்கும் இமைக்கொட்டாமல் சிறுமைகட்டாமல் பகைவருக்கெட்டாமல் சமர்புரிந்தார்கள், இவ்வதிசயங்களை மதித்திருந்த புலவரியாவரும் அற்புத மற்புதமென்றார்கள்.

இப்பால், கர்னராஜன் கடுமைகொண்டு என்னடாயிது விந்தையாயிருக்குது நமக்கீடானவனாயிவனென்றுவெறுத்து வெகுளிமேற்கொண்டு வீமசேனனுடைய தோளின்மேல் ஐம்பதும் தேரின்மீது இருபதும் குதிரைகளின்பேரில்நான்கும் பற்றிய வில்லின்பேரிற் பத்தும்மற்றுஞ் சுற்றுங்கொடியாடையின்மேலெட்டும் ஆகட்டுமென்றுகருவி மட்டில்லாப்பாணங்களை கைக்கெட்டியமட்டும் விட்டான்.

அப்போது வீமசேனனானவன் துட்டமிருகத்தை சிட்டைசெய்யுஞ் சிங்கத்தைப்போல் திடங்கொண்டு எப்படியப்பாவென்று சிந்தனைக்கிடஞ்செய்யாமல் தானொருவனால் அடிபட்டானென்னும் நிந்தனைக்கிடம்வையாமல் அமார்கோன்தொடுத்த புங்கவங்கள்யாவும் பங்கப்பட்டு மங்கிப்போம்படியாய் சிங்கக்கொடிக்கதிபனானவன் சேதித்துப்போட்டு சங்கையில்லாமல் தலையசைத்து நமடிகடித்து நாக்கைமடித்து நானாவித ரோஷமாகிய வசனங்களைப்படித்து படபடத்து துடிதுடித்து இன்னல் விளைக்கும் மின்னலுக்கொப்பாகிய அன்ன முயர்த்தோன் கணைகள்முதலிய ஐம்பதுபாணங்களை யெடுத்து கர்னன் மார்பு கலங்கவிடுத்தான், வெளிப்பட்ட ஐம்பதுபாணங்களும் சம்புவினுதற்கனல்போல் தலைப்பட்டு அங்கர்கோமானுடைய அகலமென்று மார்பில்த்தாக்கியபோது-அயர்ந்து பயந்து தீரத்துடன்தேறி வீமனை வியந்து புகழ்ந்து மகிழ்ந்தான்.

எப்படி யென்னில், மற்போர்முதலிய கதாயுத்தத்திற்கும் வலுமைக்கும் இவனையல்லது வல்லவரொருவரு மில்லை யென்னும் வாக்கியம் இவ்வுலகெல்லாம் வசனித்துக்கொண் டிருப்பதுண்டு நானுங்கேட்ட துண்டு பார்த்ததுமுண்டு, ஐயோ, விற்போருக்கும் இவனைவிட வேறொருவரு மில்லையென்று சொற்பல வுரைத்தான், அதைக்கேட்டு மற்புயவீரராகிய பற்பலவேந்தருஞ் சிற்சிலமாந்தரும் ஆச்சரியப்பட்டார்கள். மலையொத்த புயத்தினை யுடைய மாற்சரியக் கர்னனானவன், வீமசேனனுடனெதிர்த்து போர்புரிவதற்கு ஈடில்லாதவனாய் மேலு மேலும் வீமன்தொடுக்கும் பாணங்களினால் தேகங்கிழிந்து பிளப்புண்டு-மல்வலி மார்புடைந்து, சொல்வலி சோர்வடைந்து, தடந்தேர்குதிரை சாரதிமுதலாகிய தனுவு மழிந்து தாரணிந்த புயமுமெலிந்து நீறணிந்தமுகமும்வதங்கி காரணமின்னதென்று கண்டுணராமல் வாரணமுதலை வாய்ப்பட்டதுபோல் வாடிநின்று இவனுக் கிளைத்து எத்தனை தரமோடுவதென்று மானத்துடன் பனந்தேறி எதிர்சென்று-தானந்தடமாகிய பூமித்தேரினின்று வேறுவில்லெடுத்து நிறுத்தி வளைத்து பாலுகளடுத்த போர்க் களத்தில் வீமனைத்தடுத்து மூர்த்தண்ய மாகிய வெங்கணைகளைத்தொடுத்து சிற்றமாயஸ்திரந் திரம்படப்பொழிந்து ஆர்த்துவனி அமர்க்களத்தாடலை மொழிந்து அமர்கொடுத்து வரும்போதில், ராஜசெம்பிரனாகிய துரியோதனராஜன்கண்டு மிகுகோபங்கொண்டு ஓடி வாருவலய மணிந்து திணிந்த புயமிரண்டும்வாடி துணிந்த தம்பிமார்களை நாடி ஓகோ, தம்பிமார்களே காரியத்தாக்ஷிவந்தது, நீங்க ளேழுபேருங் கூடி, இந்தக்ஷணத்தில் கர்னனுக்குச் சகாயமாயோடி, காற்றின்மகனைச்சாடி கண்ணுக்குத் தெரியாமல் கணைகளால்மூடி வெற்றிப்பாடல் பாடி வேறுவேறாக்கி நீறுநீறாக்கி அவனுடலைத் தாறுமாறாக்கி கூறு கூறாக்கி சதைத்துச் சிதைத்து உதைத்துயிர்வதைத்து சீக்கிரத்தில் பிராணனை வாங்கி வாருங்களென்று அனுப்பினான்.

அந்தத் தமயன்மொழி தவறாத தம்பிமார்கள் சத்துருஜெயன்-சத்துருமித்திரன்-சுதேசன் மாமதனன் - நற்றுருவன் சித்திரபானு - விகர்னனென்னும் பேர்பெற்ற ஏழுபேரும் வீமன்மேல் அமர்செய்யச்சென்று வெற்றிமாலை பூண்டவில்லைவளைத்து பற்றியெரியாநின்ற பாவகன்கணைகளை பெருமழைபோற் பொழிந்து நிறைத்து பூமிநிரம்ப மறைத்து புழுதியெழும்ப இறைத்து பாண்டுபுத்திரனுடலைத் துளைத்து போர்த்திறங் காட்டினார்கள், அதுகாலையில் வாயுகுமாரன்மகிழ்ந்து வந்த தம்பிமார்களைப்புகழ்ந்து வரிவில்லைவளைத்து அகமகிழ்ந்து சிலவாக்கியஞ்சொல்லி யிகழ்ந்து அவர்கள்விடுத்த அக்கினிக்கணைகளுக்கு மாறாக வருணாக்கணைகளை மாட்டிவந்த கணைகளின் தீக்ஷண்யங்களையோட்டி, ஆறு வாய்வாஸ்திரங்களை யுந்தி, அவர்களூர்ந்துவந்த தேர்களைச்சிந்தி குதிரைகளை மாய்த்து சாரதிமுதலாகிய கொடிகளைச்சாய்த்து சிகரமுடிகளைப்போக்கி கவசங்களைப் பொடியாக்கி வில்லைமுறித்து நீக்கி விற்றாக்குறுந் தடியாக்கி மாறுவேறில்லாமல் வீறிய வீமசேனன் தேறிய ஆறு பர்வதாஸ்திரங்களையெடுத்து அபிமந்திரித்து விடுத்து, வட்டமா யெதிர்த்துவந்த ஏழுபேர்களில் இட்டமாகிய விகர்னனைமாத்திரம் நீக்கி மற்ற ஆறுபேரும் நட்டமாகும்படியாய்த் தாக்கி பட்டமாகிய மகுடமுடிபோக்கி சட்டமாகப் போகாறுபவஞ் செய்யுங்களென்று திட்டமாகத் தேவலோகக் குடியாக்கினான், இவ்விதகஷ்டமாகப் போர்செய்த திரபட்டமுடைய தெண்டாயுதனை வீரக்கழற்கால் விகர்னன்பார்த்து தன்னுடன் கூடவந்த தமயன்மாராறுபேரும் பாண்டுமகன் கணையால் மாண்டுபோனதற்கு வெருண்டு வெகுண்டு திரங்கொண்டு சினம்பூண்டு சிலையைவளைத்து கலகலென நகைத்து தெழித்துப் பகைத்து மதித்துக்குதித்து வேண மட்டும் பாணங்களையெடுத்து விடுத்து அடுத்து கடுகடுத்து

வந்த காட்சியை வீமசேனன்பார்த்து மிகுந்த இரக்கமு
டையவனய் அம்புஎி மரபிலுதித்த என் தம்பியாகிய வி
கர்னனே, சகலராஜர்களும் சகல தேசர்களும் நெருங்கி
யிருந்த ராஜசபையி னிடத்தில் உகாந்த காலாக் கினியை
யொத்த துச்சாதன னனவன், எங்களையிகழ்ந்து சுடச்சு
ட வடுப்படும் வார்த்தையைச் சொல்லவும் அந்தச்சபை
யினிறைந்த உரியோர் பெரியோர்முதலாகிய மன்னமண்
டலிகரும் மறுவார்த்தை சொல்ல மாட்டாமல் வாயை
வாயை மெல்லவும், எங்கள்முகத்தை நோக்கி யிரங்கிப்
பேசவும், ஒருவர்முகத்தை யொருவர் பார்க்கவும், எங்க
ளுக்கு ஓருதவியுமில்லாமல் முகம்வியர்க்கவும் உயிரொ
ழியும்படியாய் உள்ளம் வெதும்பி யிருக்குஞ் சமயத்தில்
(வார்த்தைபதினயிரத் தொருவ னென்னுந்) தன்மை கு
றையாமல்-ஆர்த்தெழுந்து கொடுங்கோல் மன்ன னென்
னும் உன்தமயன் முதலிய ஒருவருக்கும் பயப்படாமல்
நடுவுநிலைமையை யெடுத்துச் சொல்லிய நல்ல நாவையு
டையவனே நானுன்னைப் பகைத் தாலும் உரம்பெற்ற
கொடுங்கணைகளை விடுத்தாலும் அந்தப் பாணங்களி னு
டைய அதிதேவதையானவள் அதர்மமாக வுன்னைக்கொ
ல்லுமோ - தர்மமாக வுன்னைவெல்லுமோ சொல்லுந்தம்
பி-இவ்வுலக முள்ளமட்டுக்கும் பேசிக்கொள்ளும் படியா
ய் நீடித்தபழியை வழியாகத்தேடிக்கொண்ட துஷ்டசது
ஷ்டாளைப்போல் பழிக்குடன்படாத உன்னுடைய நேர்ப்
பறிந்திருந்தும் இப்போது யுத்தஞ்செய்வதற்கு என்னெ
ஞ்சு உடன்படுமோ, நன்னெஞ்சுடைய நல்லதம்பி, என
க்குக் கோபம்வரும்படிக்கு பற்பலவாசகம்பேசி யுத்தம
றிந்து யுத்தஞ்செய்யடா வீமாவென்று யேசி என்முன்
னெதிர்ந்து என்தேகமதிர்ந்து பிதிர்ந்துபோம் படியாய்
பாணப்பிரயோகஞ் செய்து சண்டைக்கு வாவென் ற
ழைக்கின்றயே நீயப்படி அறைகூவியழைத்தபோதிலு
ம், சிறந்த மேலோருரைத்த உரையின்படி (ஒருநன்றி
செய்தாரை யுள்ளத்தேவைத்து, பிழைநூறுஞ் சான்றோ
ர் பொறுப்பரென்னும்,) நீதிவாக்கியத்தை அனுசரித்துந
டத்தாமல் என்னன்றியிலுஞ் செய்நன்றிகுன்றிய தீயரை
ப்போல் நிரகடைவேனே என் சிந்தைக்கிசைந்த இளைய
செல்வமே, நானிப்போதொரு உறுதிவாக்கியஞ் சொல்
லுகிறேன்கேளும், முன்னர்-மன்னர்சபையில் உங்கள்நூ
றுபேரையுங் கொன்று துச்சாதன னுடைய உதிரத்தை
கைநிறையவாரிக் குடித்தபிற்பாடு தாகத்திற்கு ஜலமள்ளி
க் குடிப்பேனென்று நான்சொன்ன சபதந்தப்பி பொய்
யனகி உலகம் நிந்திக்கப் பேரெடுத்தாலும் எடுப்பேனே
யல்லது உன்னுடனெதிர்த்து யுத்தஞ்செய்து உன்சீர்கெ
டுக்கமாட்டேன், தம்பி விகர்னனே, உன்னை இந்தப்பாரா
ளச்செய்து என் கண்ணுற் பார்க்கவேணுமென்கிற பக்ஷ
ங்கொண் டிருக்கின்றேனல்லாமல்உந்தன்பேர்மாளச்செ
ய்து உன்னைப்போக்குவது அறமன்று அரிஈரி பாவம் பா
வம், ஆகலால் நீ திரும்பிப்போவதே புண்ணியம் போ
போ வென்று இப்படிப் பலவாறாக மிகுந்த தயையுடன்
வீமசேனன்சொல்ல, அந்தவசனங்களைக் காதுகொடுத்து
க் கேட்டுங் கேளாமல் விலாசமான மலைக் கொப்பாகிய
தோளில் உல்லாசமான வெற்றிவீர மாலையணிந்த உத்த
ம தீரவிகர்னனனவன் நவமணிபொருந்தியவில்லைநாணி
யிறுக்கி திக்குகளெரியும்படியாய் அக்கினி முனைக்கணை
களைத் தண்டதரன்பேரிற் கண்டாவருஷம்போலுந்திஞன்
அந்தக்கணைகள் முந்திவருவதை விந்தமன்ன புயத்தோ
னகிய வீமசேனன்கண்டு நொந்து அந்திவண்ணன் கணை
களினல் அவைகளைச்சிந்தி விகர்னனுக்கெதிர்வந்து குந்
தி முதற்புத்திரன் முதலியகாம் ஆறுபேரும் இந்தத் தே
சத்திலிருந்து செந்திருமார்பனருளால் விந்தையாகிய ந
ற்பேறுபெறலாம், எங்களுடன்வந்துசேரும் இனி நடக்க
ப்போகிற புகழைப்பாரும், தமயனகிய என் சொல்லைக்
காரும், இந்தாரும் வாரும் தம்பியென்று பரிவுடனழைத்
து-நான் உமக்கு உரிமைகூறியிருக்கஅந்தப்பெருமையை
வகிக்காமல் எனக்குச் சிறுமையுண்டாகும்படிக்குகூரிமு
கப்பாணங்களைத் தொடுத்தையே; என்னிளவ லாகிய இ
ன்பமே என்பேரில் இஷ்டம் வைத்து எனக்குப் பழிச்
சொல்முதலிய கஷ்டம்வைக்காமல் திரும்பிப் போய்விடு
மென்று வேண்டி வேண்டி வேண்டியவிதத்தில் வீமசே
னன் சொல்லவும், மானம்பூண்ட மதிவல்லோனகிய வி
கர்னனனவன் வாயுகுமாரனைப் பார்த்து அண்ணு தேவ
ரீர் சொன்னதெல்லாம் நண்ணுயிருந்தபோதிலும்என்னு
டைய கர்மானுபவத்தால் நூறுபேருடன் பிறந்து இரும்
புக்குப்படவேண்டிய சம்மட்டி யடியானது நெருப்புக்கு
ம்பட்டதென்னு நீதிபோல் எங்கள் தமயன் தேடிக்கொ
ண்ட பழிபாவமெல்லாம் இந்த லோகமுள்ள வரைக்கும்
எங்கள் நூறுபேரையும் பீடிக்குமேயல்லது ஒருவரைவி
ட் டொருவரைத் தொடாது, மேலும் ஆக்கை யவிந்த
அறுகம்புற்சுமைபோல் என்சகோதரர்களிற் பலபேர் ஆ
வியிழந்து அழிந்திறந்தார்கள், அதுவுமன்றி, இப்போது
நாங்க ளேழுபேர்வந்தோம்-வெப்பமாகிய உமது கைக்க
ணையால் நொந்தோம்-அவர்களாறுபேரும் ஆவியொழிந்
திருக்க நானெருவன் உயிர்கொண்டோடிப் பிழைப்பது-
உத்தமமோ-உத்தமனே யுத்தபூமியிற்போய் தம்பி தமய
ன்மாரைச் சாவக்கொடுத்து தான்மாத்திரம் பிராணனைத்
தப்பித்துங்கொண்டு வந்தான்,சண்டாளனென்று கண்டா
ருரைப்பது தர்மமோ உங்களளவில் தேடிக்கொண்ட ப
ழியில் மூழ்கிப்போயிருக்க இன்னமெங்கள் கால்வழிக்கு
நீடூழி ஆழிபோற் பழிதேடிக்கொள்வது ஞாயமோ வாழி
வாழி அண்ணு உம்மாலெனக்கு யிழிவாகிய ஒரு குறைச்
சல்வந்ததென்று முறைச் சொல்லும் வேண்டாம் சொ
ன்னசபதந்தப்பினல் வீமசேன னென்று என்னல் உமக்
கொரு குறைச்சலும்வேண்டாம், ஆசாபாசமாய் என்பே
ரில் உமக்கு விசுவாச மிருக்குமாகில் வார்சிலை வளைத்து
பூசல்விளைத்து என்னை நாசப்படுத்துவதே எனக்குநேச
மாதலினல் போர்கொடுக்க வாருமென்று தேர் முடுக்கிச்
சாடினன், அப்போது வீமசேனன் தன் மனத்தில் தர்ம
தேவதையை நினைந்து சற்றுநேரமிருந்து தலையையசைத்
து ஊழ்வினையைவெறுத்து உரக்கநகைத்து உடலெல்லா
ஞ்சிலிர்த்து திரிபுராந்தகனையொத்த வாயுவின் சேயாகிய
வீமசேனன் விகர்னனுக் கெதிர்சென்றுநின்றுபலம்பொ

ருந்திய வில்லையிழுத்து-பூதேவக்கணை-மாதேவக்கணை முதலிய பாணங்களைத்தொடுக்க விகர்ணனும் சில பாணங்களைவிடுக்க பரபரவென்று பகழிகள் ஒன்றோடொன்று இடிக்க இடம்வலமாகத் தேரைக் கரகரவென்று களத்தில் முடுக்கி ஒருவர்பேரி லொருவர்விடுத்த பாணங்கள் இருவர்பேரிலும் படாமற்றடுத்து வீராவேசங் கொண்டுவிட்டேனு உன்னைவெட்டி மடிக்கிறேன் சீக்கிரம்வா யுத்தத்திற்கென்று அறைகூவியழைத்து அண்டங் குலுங்கவதிர்த்து தங்களுக்குத் தாங்களே நிகர்த்து உடல்வருந்தியிளைத்துச் சற்றுநேரங்களைத்து மறுபடியுங் கிளைத்து ஒருவரையொருவர் வளைத்து முகஞ்சுளித்து எக்களித்துப் பற்கடித்து விற்பிடித்து உக்கிரமித்து மற்கொடுத்து வரும்போது விறற்படைதாங்கிய திறக்கமாருதி அண்டமுகடு வெடிபடவிடித்து மின்னலைச்செய்யு மேகம்போலொத்த பிறைமுகாஸ்திரத்தை யெடுத்து பிரயோகஞ் செய்யும்வேளையில், பெற்றவள்வயிறு மெத்தவருந்திவாடுமே மற்றப் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப்பிள்ளையை அருமையாகத்தேடுமே-அப்பா,மகனே, ஆவென் றழும்போது ஆவிபோய் விடுமேயென்று வீமன் தானும்வருந்தி தன்னுடையகண்கள் தண்ணீர்ததும்ப தர்மத்தை நினைத்துத் தன்மனம்வெதும்ப, என் வசனத்தைக்கேளாத தம்பி, நானென்னசெய்வேன்· வினையின்பயனே பயனாகமுடிந்ததென்று மேற்கூறிய பிறைமுகக் கணையைவெந்திறல் வீமன் மந்திரித்துவிடுக்க அந்தக் கடுங்கணை அந்தரத்துலாவியுவந்து அவனிமேற் சுலாவிவந்து விகர்ணனுடையவெற்றி மகுடமுடியை வெட்டியெறிந்து மறுபடியும்வீமனிடத்திற்கிட்டி யுறைந்தது.

அக்காலையில் ஆறுபேர் தம்பிமார் களுடன்தேவி விகர்ணனிறந்துவிழுதெய்வலோகமேறியவிந்தையை துரியோதனனுங் கர்ணனுங்கண்டுவெகுளிமேற்கொண்டு வெகுபடையுடன் சென்று வீமனைமடக்கிய காலையில் போர்புரிவதற்கு பொருந்தித்திருந்தியபுயாசலப்பிரகாசம் பெற்ற வீமசேனன்பொங்கியெழுந்துபற்பலர் ஆவியிழந்து சிற்சிலர்கள மறுந்துமாய்ந்து போம்படிக்கு மந்திரக் கணைகளை ஆய்ந்துதெறித்தான், அந்தவேளையில் காய்ந்து கோபியாகிய கர்ணன் வந்தெதிர்த்து கொலைவாளிகளைத் தொடுத்தகாலையில் அந்தப் பாவியாகிய கர்ணன் பதைத்தோடும்படியாய் பருந்துக்கணை முதலியதைத்தொடுத்துக் கலகம்விளைத்தான், சாதுரியனாகிய வீமசேனன்.

அவன்விடுத்த சரங்களினால் தம்பிமார்களிறந்ததைக்குறித்து பிறந்தது ஒருதரம் ஒருக்கிரமாகையால் துரியோதனனுக்கு மனஞ்சகியாமல்தானுமெதிரிட்டுசத்தடிபட்டு தன்னைமறந்து பிரபஞ்சவாழ்க்கையைத் துறந்து தன்னுடையதேகம்பறந்து உரியாரிற்சிறந்த சிறியதந்தையாகிய விதுரமகாராஜன் ரகசியமில்லாமல் ராஜசபையில்யாவருங் கேட்கவிளம்பிய மதுரவாக்கியத்தை மனத்துணினைத்து மதித்துமனமருகி வதங்கிமுறுகி ஊற்றமடங்கி சூத்திரமிழந்தபாவைபோல் அசைவற்றுநின்றான், அந்தச்சமயத்தில் தன்கண்ணுக்குநேராக துரியோதனன் வருந்திப் பறந்தத்தையும் அவனுடைய தம்பிமார்களிறந்ததையும் அங்கதேசத் ததிபதியாகிய கர்ணன் கண்டு மனம் வருந்தி நொந்து மேக வேகமாகப் போகுங் குதிரைபூட்டிய தேரேறிவந்து சோகதாகமாகவிற்குந்துரியோதனன் முகத்தைப்பார்த்து யுத்தசன்னதமாகப்பாவித்து வந்தமோகத்தம்பிமார்களை சாகக்கொன்ற வீமசேனனுடைய முடித்தலையையிதோ ஒருநொடிப்பொழுதில் ஒடித்தெறிகிறேன் அப்படி அவன்தலையை ஒடித்துமுடிக்காமற்போவேனாகில இப்போதே என்னுடைய அல்பமானதலையை அவன்கையிற்கொடுத்து விடுகிறேன், நீர் அதுவரையிலும் விசனப்படாமலிருமென்று உறுதிவசனஞ்சொல்லி சுசனமித்திரனாகிய கர்ணனானவன் பெரும்புகழ்தாங்கிய யிரும்புக்கொப்பாகிய வில்லைவளைத்து வல்லவர்கள் மதிக்கும்படி நாணியிழுக்கி எடுத்ததைசாயாமல் தொடுத்தபாணமோயாமல் நீலமலைபோல்நெருங்கியதோளும் வீரகண்டைபூண்டதாளும் சினங்கொண்டமனமும் நெற்றியிற்சுருக்கி நெருக்கியபுருவமும் கற்றைகற்றையாய்க் கனலெழுங்கண்களுங்காட்டி கடுங்கணைகளைப்பூட்டி தேரோடப் பாராடப் போராடப் பேர்சூட வேர்வாடப் போர்செய்துவாராநின்ற வீமன்மேற்றூவி இனி இவ்வுலகமெல்லாந் துரியோதனனுக்கு சந்தேகமறச் சொந்தமென்று தேவர்முதலாகிய யாவரும்பேசிக்கொள்ளும்படியாய் பலமாகியயுத்தஞ்செய்தான்பருதிகுமாரனாகியகர்ணன்·

அதுவேளையில் பாரிய ஆற்றைப்போலொத்த கால்வாயினீற்றில் அளறுகப்படிந்த சேற்றில் அமுங்கிப்பதுங்கியொதுங்கிக்கிடக்கும் ஆமையை பலம்பொருந்திய மள்ளர்கள் மொய்த்திருக்கு முத்துகளுடன் இருகையாலுஞ் சேறென்றுவாரி யெறியும்படியாகிய நீர்வளநிறைந்த செல்வக்குருநாட்டுக்கதிபதியாகிய வீமன் தன்தந்தையாகிய வாயுதேவனுக்கொப்பான வல்லமைகொண் டெழுந்தான், அப்படியெழும்பிய வீமனைக்கண்டு இவ்வுலகத்துக்கு பகலைவிளக்கி இருளைக்காய்ந்தெறிக்குங் கிரணந்தரித்த கதிரவன்திருமைந்தனாகிய கன்னனானவன் எமனுக்கொப்பாகிய பலங்கொண்டெழுந்தான் (இவ்விருவருக்கும்வல்லமைவிசேடத்தைச்சொல்லிய புராணீகரினது கருத்தென்னவெனில்) பிறக்கும்போதே ஓர் கர்ப்பத்திலுறியுதித்த சம்பந்தமுடையவராகையால் தகுதியாகிய குணங்களுங்கொண்டிருப்பார்களன்றி வேறில்லையென்பதுகருத்து.

றிங்காரம்பாடியெழும் வண்டுகணிறைந்த பங்கஜமாலையணிந்த பருதிக்குரியகுமாரனாகிய கர்ணராஜன்முகத்தை கதாயுதன்பார்த்து ஓ கர்ணனே, வலிமிகுந்த சேனைகணிறைந்த இந்தயுத்தபூமியில் என்னுடனெதிர்த்து யுத்தஞ்செய்யத்தொடங்கியதுமுதல் இதுவரையிலும் எத்தனைதரம் இளைத்தோடியிருப்பாய் கணக்குப்பார்த்தையா இன்னமும் உன்னைவெல்லுவதற்கு நான்பின்னிடையில்லை உன்னைவென்று வெல்லக்கொட்டுகிறது எனக்குக் கடனாயிருந்தபோதிலும் உன்னைவெல்லுகிறத்தில் எனக்கொருபுகழ்ச்சொல்லும் வரப்போறதில்லை எத்தனைதரம் யுத்தம்பண்ணினாலும் நானுன்னைக் கொல்லப்போகிறதுமில்லை, நீ என்கையாற்சாகப்போகிறதுமில்லை அதேனெனில மன்னர்கூடிய மகாசபைதன்னில் சொன்னசபதஞ் சோர்

வுருவண்ணம் உன்முடித்தலையை முடிப்பதற்கு என்தம்பியாகிய அர்ச்சுனனுடைய கணை காத்துக்கொண்டிருப்பதினால் உன்னைவெல்லத்தக்கஇடம் எனக்கல்லது கொல்லத்தக்கதன்னெனக்கில்லையென்று கூறி வாளரிகொடிபடைத்த வீமசேனன் வரிபொருந்தி மணிகள்கட்டி மலைவிந்து மகிமைகொண்டவில்லை மளமளவென்றுவணக்கி நாணியிணக்கி ஆணிநிறைந்த பல்லவங்தொடுத்து வல்லவரிருவருங் கொல்லுங்குரோத முடையவர்களாய் ஒருவரையொருவர் வெல்லும்படியாக மலைந்தார்கள்.

இவ்விதமாக அளவிறந்த அம்புகளைப் பிரயோகஞ்செய்து இருவரும்மெதிரெதிராக அமர்புரிந்து ஒருவர்கணைகளா லொருவர்கலங்கிஒருவரையொருவர்விட்டு விலங்கிமறுபடியுங் கடுகடுத்து இருவரும் படபடத்து அடுத்து பாணங்கள்தொடுத்து போர்கொடுத்தகாலையில் சூரியகுமாரனாகிய கர்னன்மேலிட்டு காற்றின்மைந்தனாகிய வீமசேனன் துன்பங்கொண்டு அலக்கழிந்து கண்கலங்கிப் போகும்படியாய்ச்சீறி இலக்கமற்ற பெருங்கணைகளாற்கலக்கி வீமன்றொடுத்த விஷக்கணையாவையும் விலக்கி அவனேறிவந்த வச்சிரத்தேரையும் உச்சிதப்புரவியையும் சிங்கக்கொடியையும் தங்கமயமாகியவில்லையும் பங்கப்பட்டொழிய அழித்தான், இப்பிரகாரம் அங்கதேசாதிபனால் தன்னுடையரதமுதலிய யாவும் அழிந்துபோவதறிந்த வீமசேனன் ஆக்ரமித்தெழுந்துபராக்ரமத்துடன்பாய்ந்து சேமத்தேரிற்புகுந்து திடங்கொண்டவில்லைவளைத்துதினகரன்மைந்தனென்னுங் கர்னனுடையதேகத்தைத்துளைத்து துரத்துடனெதிர்நின்றவீமனை கனகக்கொடியோனாகிய கர்னன்கண்டு கவலைகொண்டு கதத்துடன்மீண்டு கல்லகக்கணை-கார்முகக்கணை-காலகாலக்கணை முதலிய பாணங்களை ஆலகாலம்போல்விடுத்து வீமனேறிவந்தசேமத்தேரையுங்கெடுத்து அவனுடைய மேனியெல்லாம் இந்திரன் கண்களைப்போல் வடுபடுத்தினன் அப்போது வீமசேனன் ஏறுவதற்கு வேறுதேரில்லாமையால் நிலத்தினின்று பலத்திற்சிறந்த தண்டுகைக்கொண்டு சாகசஞ்செய்து சடசட சடாத்காரமாகச் சுழற்றியெறிந்தான்.

அந்தவீமனெறிந்த தண்டாயுதமானது ஆகாயபரியந்தமுயர்ந்த விசாலமாகிய மலைபெயர்ந்து வருவதைப்போலும் ஊழ்வினையோடிவருந் தன்மைபோலும் உரத்துவந்து கர்னனேறிய கனகரதத்தைப் பொடிப்பொடியாயுடைத்து சாரதிகுதிரைகளையுஞ்சாய்த்து தன்னைநோக்கிக்கருகருத்துவருங் கதையைக்கண்ட கர்னனானவன் இனிக்காரியமில்லையென்று தன்புகழ்முதலிய பெருமையுங்கெட்டு போர்புரிந்த பூமியையும்விட்டு புறமுதுகிட்டோடிப்போனன், அப்படியோடிய கவசகுண்டலவீரன் பின்னும் வேறுதேரேறி இன்னம் வீமனைவிடாமற் சின்னப்படுத்தவேனுமென்று மன்னன்முதலிய யாவருமதிக்கும்படியாய் வன்னமாகிய சிலையைவளைத்து இதோவந்தேன் வீமாவென்று எதிர்வந்தகர்னனை வீமன்கண்டுவாட்விழிசெவந்து வாய்மடித்துறுக்கி வாளுங்கேடயமுங் கைக்கொண்டு மண்டியிட்டு சக்ராகிர்தியாகச்சுழன்று தாவிவரும் பெரும்புலியெனப்பாய்ந்து மட்டில்லாக்கொடையாளனாகிய கர்னன்கைக்கொண்டவில்லை வீமன்வெட்டினன், உடனே மோசம்வந்ததென்று கர்னனானவன்கச்சைக்கொடிகட்டிய தேரின் கம்பத்தடிவாரத்தில் ஒரு சமயாசமயங்களுக்கு மறைந்துபோகும்படியாய் ஏற்படுத்தி வைத்திருக்கிற சுரங்கவேதிகைத்துவாரத்தி லொளிந்துக்கொண்டான்.

அப்போது வாசமிகுந்த மாலையணிந்த வாயுவின்குமாரனானவன் சூரியகுமாரனாகிய கர்னனைக்காணாமல் தேடிக்கொண்டு திரும்பும்போது மறைந்திருந்த கர்னன் வெளிப்பட்டு மந்திராஸ்திரம் இந்திராஸ்திரம் முதலியபாணங்களினால் வீமசேனனுடைய மெய்யெல்லாந் தைக்கச்செய்து அருவிபெருகி ஓடிவராநின்ற மலையைப்போல் உதிரம்பெருகி யோடிவரும்படியாய்மாட்டி மேலுமேலுஞ் சொரியுங்கணைகளினால் வீமசேனன் கைப்பிடித்திருந்த கேடயமும் வாளும் கேடுறும்படியாய்க் கெடுத்து முனைமுகத்தி லிளையாமல்நின்று போர்புரியுங் கொடுந்தேவகனுடையதேகமெல்லாஞ் சல்லடைக்கண்கள்போற்றுளைபடும்படியாய்த் தாக்கியபோது வீமன்சகியாதவனாய் தள்ளாடி சஞ்சலத்தாலிளைத்து யுத்தபூமியிற் செத்துக்கிடக்கும் பரிகளையும் யானைகளையும் வாரியெடுத்து தேகத்தைமூடிக்கொண்டு கர்னன்றொடுக்கும் பாணங்கள் தன்பேரிற் படவொட்டாமல் சிந்தையிற் கோபாக்கினிவெந்தெழும்படியாய் சினங்கொண்டமனத்துடன் விலத்திலின்றான், (அந்தோ அந்தோ அந்தோவென்பது யிரக்கப்படுஞ் சொல்) ஊரும்படி யாகிய ரதமில்லாமலும் வில்முதலிய ஆயுதங்களில்லாமலும் ஆருமற்றதனியனாய் நிலத்தில் மறைந்துநின்ற வீமசேனனை தேரின்பேரிலிருக்குங் கர்னனெருங்கி தன்கையிற்பிடித்த விற்குதையால் அவனுடைய வயிற்றிற் குத்திக்கொல்லும்படியாகிய கோபந்தனக்கிருந்தபோதிலும் குந்திதேவிக்குத் தான்கொடுத்தவரத்தை நினைந்து குளங் கயங் தடாகங்களிலிருக்குஞ்சலமானது வெப்பகாலத்தில் மேலேசூடுகாட்டி உள்ளே குளிர்ச்சியாயிருக்குந்தன்மைபோல் அகத்திற்குளிர்ச்சிகாட்டி முகத்திற்றளர்ச்சிகாட்டி சிடுசிடுப்பாகிய வசனங்களைச்சொல்லி அடா வீரமில்லாதவீமா, எருமைக்கடாவைப்போல் காட்டிற்றிரிந்து கிடைத்த பலபண்டத்தையும் பிரயோசனப்படும்படியாய் ருசியாகத்தின்று பெருவயிற்றை நிரப்பிக்கொண்டு வெடிப்பாகிய பேச்சைப்பேசி காலங்கழித்துத் திரியத்தெரியுமல்லாமல் விற்பிடித்து மரியாதையாகிய சொற்படித்து யுத்தஞ்செய்வதற்கு உணர்வுண்டோ எப்போதும் படியாதமுடனுக்கும் படித்தவிசேடனுக்கும் அநேக பேதாபேதங்களுண்டு அதை நீயறிவையோ முரட்டுத்தன்மாயுத்தஞ்செய்து எத்தனைத்தடவைவென்றாலும் சாஸ்திரசாம்பிரதாயப்பிரகாரம் ஜெயம்பெறுகிற சம்பிரமத்துக்கிடல்லவே சபலனே, உன்னுடையகதியை இப்போது நீயோசித்துப்பார்அப்பா, இப்பவுமென்ன மேலாகிய சொர்க்கபூமிபோய்ச்சேரவேணுமென்னும் இச்சையுனக்கிருக்குமாகில் என்னுடனெதிர்த்துநின்று அமர்மலையத்தக்கது அல்லவென்று இந்தக்கர்மபூமியிலிருந்து இன்னஞ் சின்னாள்கழிக்கவேணுமெ

ன்றும் இச்சையுடன் லச்சையற்றிருக்கத்துணிவையாகில் கரகாத்தொனியுடன் சக்கரங்களுருளும்படியாகியதேரிற்பொருந்திய நரநாரணர் அதோ செல்லுகின்றார்கள், அவர்களிடத்திற்போய்ச் சேரக்கடவையென்று ஆய்ந்து தேர்ந்த அறிவாளனாகிய ஆதபன்குமாரன்சொல்லி அப்பாற்போனான், இப்பால் வீமசேனன் கவஜமாகப்போர்த்துக்கொண்டிருந்த கஜகளேபரச்சாமங்களையுந்தி தேய்பிறையைப்போல் புயவலிசிந்தி சிந்தைவருந்தி கதையைக் கரத்திலேந்தி மாய்ந்துகிடக்கும் பிணமலைகள் முதலியரத்தவெள்ளங்களைநீந்தி நிணச்சேறுகளைத்தாண்டி கிருஷ்ணார்ச்சுனன் செல்லும்படியாகிய வியூகபந்தியிடத்தை நாடிவந்து சேர்ந்தான், இதுவரையிலும் வீமனுக்கும் கர்னனுக்கும் விளைந்தபோரைச் சொல்லிவந்தோம் இனிமேற் சாத்தகி செய்துவந்தசண்டையிற் சிலவற்றைச்சொல்லுகின்றோம், தராதிபனையாளும் நராதிபனேகேளும்.

தேவர்களும் மற்றியாவர்களும்புகழுஞ் சாமர்த்தியமுடையசாத்தகியானவர் விற்றிறவேகமும்மற்றிறக்கோபமுங்கொண்டு கடதடக்களிற்றினங்களின்பேரிற் றாவிவரும் ஆண்சிங்கத்தைப்போல் சத்துருக்களைக் குடியோட்டிய கெடிகாட்டிய-முடிசூட்டிய-கொடிநாட்டிய-தேரை யோட்டிக்கொண்டுவருங்காலையில் தந்திரப்படைகளை முந்திச்செயித்து முடுக்கிமுடுக்கிவிட்டு மூர்த்தன்யமாய்ச்செல்லுகின்ற அர்ச்சுனனால் அடிபட்டிளைத்து அழகியவியூகமுடைந்து புறங்கொடுத்தோடிவராநின்ற வீராதிவீரவேந்தர்யாவரும், பந்திபந்தியாய்வந்து, தனித்தனியெதிர்ந்து சண்டைசெய்யும்போது சாத்தகிவெகுண்டு விடையேறிய சிவபெருமானானவர் திரிபுரதகனஞ்செய்த தினமெனச்சென்று எதிர்த்தோரைமறித்து சிலையைக்கோலி திசாதிசைகள்தோறுஞ் சரங்களிறைத்துத் தீப்பொறிமலியவெரிந்து நாற்படைகளும் இறந்தவியும்படிநெறித்து யாவரும் நாவிற்சொல்லியடங்காத வீரங்காட்டி குற்றமில்லாதசாத்தகியானவர், வெற்றிபெறமாட்டும்போது எதிரிட்டபடைஞரெல்லாரும் மார்புகிழிந்து - எலும்பொடிந்து-நரம்பறுந்து-நிணமுதலியமாமிசமிதந்து-கரங்கள்நெரிந்து-கால்கள்துணிந்து-குடல்கள்சரிந்து - தலைகள்பிளந்து - மூளைசொரிந்து உதிரம் வழிந்து-உலைந்திறந்தார்கள்.

இவ்விதமாக கரியும்-பரியும் - தேரும் - கால்பலப்பந்தியும் - கால்சாய்ந்தழியும்படியாய் வென்று வராநின்ற உண்மைக்கொருவனாகிய சாத்தகியை - கடோற்கஜனுடன்-போராடி கையிளைத்து கண்கலங்கி மனநொந்துவாடியோடிவருகின்ற அலம்புதன்கண்டு குற்றமாகிய மனக்குறுகுறுத்துக் கறுத்து கோபமாகிய விழிசெவந்து மலை - நிலை - குலையச் சாடுந்தோளிணையுடைய வாசுதேவன்றம்பியாகிய சாத்தகியை மார்புந் தோளும் உருவும்படியாய் வாளிகளேவி மதிமயங்கக் கலக்கினான். அதுகாலையில் சாத்தகியானவர் அமோகமாக அக்கினிக் கணைகளைத்தொடுத்து அந்த அலம்புதன்விடுத்த அஸ்திரங்களையெல்லாம் அழித்துப்போக்கி அவன்கைப்பிடித்த வில்லையும் நீறுநீறுக்கி அவனுடம்பிலுந்தாக்கி உதிரம்வழிய உடல்கிழியச் செய்தபோது கார்முகமிழந்து-போர்முகமிழந்து-நேர்முகமொழிந்து-ஒரோ முகமாய் விழுந்தோடினான், அலம்புதனானவன்.

அப்பாலொருவரும் சாத்தகியைத் தடுப்பதற்கிடமில்லாமையால் துரோணாச்சாரியர் கட்டிய பார்முகவியூகபந்தியிற் கலந்து தனிப்புலிபோலெதிர்ந்து பற்கடிக்குந்தன்மையை பூரிசராவென்னும் புகழ்ப்ரக்யாதி பெற்றபோர்வீரன், பார்த்து நேர்முகமாக வந்து-அடா, சார்முகம்பிடித்த காளையே இந்தக்ஷணத்தில் உன்பிராணனைவாங்குகிறேன், ஓடாமல் நில்லடாவென்று சாத்தகியைத் தடுத்து பூமியதிரும்படியாய்த் தடந்தேரைச்செலுத்தி முனைந்தெதிர்வந்த பூரிசராவை முகுந்தனுடைய தம்பி கண்டு வாரும் வாரும் பூரிசரனே, இதுவரையில் ஒருவரிடத்திலுஞ் சாகாமல் தப்பித்துக்கொண்டிருந்த உன்னை என்னு விறப்பிக்கும்படியாய் உன்பிடரியிலிருந்த எமமிர்த்து தேவதை தள்ளிக்கொண்டு வந்ததல்லவா அந்தத்தேவதையே உன்னை யுந்திக்கொண்டுவந்து என்முன் விடுமாகில் உன்னைச் சிந்துசிந்தாய்ச் சேதிக்காமல் விடுவேனோவென்று தீரவார்த்தைகள்சொல்லி தனக்குத்தானேயொப்பாகிய பூரிசரனை ஊக்கமுடைய சாத்தகியானவர் தாக்கினார்.

இந்தப்படிக்கு சாத்தகியும்-பூரிசரனும்-வெவ்விய வில்லைவளைத்து-வீரவாளிகளைத் தொடுத்து-தேருந்தேருங்கிட்டி-ஒன்றோடொன்று முட்டி இடிபடும் படியாகச் செலுத்தி விண்ணுலகும் மண்ணுலகும் அதிரும்படியாய் மலைந்தபோது இருவருடைய பாணங்களினுறுவடியால் இருவருடையதேரும் இருவருடையபரியும் இருவருடையபாகும் இருவருடைய வில்லும் அழிந்து பூமியில் விழுந்தவுடனே இருவரும் நிலத்திற்பாய்ந்து வாளுங்கேடகமுங் கைக்கொண்டு முனையொட்டிப் பதுங்கி யொதுங்கியிருந்து அதிர்ந்துகிளம்பி விளம்பியெழுந்து மிகுந்தலகுவுடன் மூவடி நாலடி ஈரடியிற்சுழன்று ஆர்த்து இடியுடனிடியிடிக்குந் தன்மைபோல் இருவருமிரைந்து விரைந்து கிட்டிக்கட்டி கீழுமேலுமாய் விழுந்து மறுபடியெழுந்து ஒருவரொருவரைப் புரட்டி மகிழ்ந்து ஓங்கரித்து யுத்தமேலிட்டு ஆங்கரித்தபோது புண்டரீகாக்ஷனாகிய பெருமான் அர்ச்சுனனைத்தூண்டி சாத்தகியும் பூரிசரனும் செய்கின்ற செருமுனையைப் பார்த்தையாவென்றுகாட்டி காரியமிஞ்சிப்போவதற்கு முன்னே உன்சீஷனாகிய சாத்தகியைக் காத்துக்கொள்ளென்று கருணாநிதியாகிய கண்ணன் தருணோசிதமாய்ச் சொல்ல-அந்தவார்த்தையை அர்ச்சுனன் கேட்டு-சுவாமீ-இரண்டு பேரு முனைந்து ஒருவரையொருவர் வெல்லவேணுமென்று சமமாகச் செய்துவரும்போரில் இளைத்தவனுக்குத்துணையாகி நடுவிலொருவன் புகுந்து யுத்தஞ்செய்வது ராஜவீரதர்மமல்லவே நந்தநாதனே-மேலும் இவன்பேரிலவனும் அவன்பேரிலிவனும் வாளெறிந்துவிட்டார்கள்-படைக்கல மேலிட்டுவிட்டது அப்படி மேலிட்ட ஆயுதங்களை மாற்றும்படியான பெரிய சாமர்த்தியத்தன்மை இப்போர்ப்பட்டதென்று யோசிக்காமல் வாய்ச்சுருவாய்ச் சொல்லிவிட்டீர்-மாதவனே நல்லது நீர் சொன்னபடி செய்யலா

மென்றாலும் யாவருக்கு மிருக்குந் தன்மைபோல் எனக்
கும் இரண்டுகர மிருப்பதல்லாமல் அதிகமாகிய கரங்கள்
பெற்றிருக்கின்றேனே சொல்லும்-திருமறு மார்பனுகிய தி
ருமாலே-ஒருகரத்தில் விற்பிடித்து மற்றொருகரத்தில்பா
ணத்தொடுத்து முன்னிட்டு யிவடத்திற் பொருந்தியபோ
ர்வீரர்கள்பேரிற் போர்கொடுத்து வருகின்றயான் எனக்கு
ப் பின்னிட்டு வருகிறவன்பேரிற் பாணந்தொடுப்ப தெவ்
வண்ணம்-கூடாப் பக்ஷமாயிருக்கின்றதே கோவிந்தாவெ
ன்றுபிரிடிசொல்ல-அந்தச்சொல்லை-ஸ்ரீகிருஷ்ணன்கேட்
டு ஓ அர்ச்சுனா-தன்னுடைய பிராணன்பேரில் ஆசைவை
யாமல் பெண்சாதி பிள்ளைகளைவிட்டு பெருங்கூட்டமாகி
ய போரிற் றலைப்பட்டு உனக்குத் துணையாக வந்தவரை
சத்துருக்கள் மடக்கிக்கொண்டு கொல்லும்போது நீயவ
ர்களுக் குதவிசெய்து காக்காமற் பார்த்திருப்பதுவோகா
வலர் தர்மம், ஆ ஆ, இந்த நன்மையாகிய தர்மத்தை எ
த்தனைநாளாய்க் கற்றுக்கொண்டாய், விற்றிறவீரனே, ஒ
ருவேளை என்னை யொருவன்மடக்கி, யடித்தாலும், நீ எ
னக்குதவிசெய்ய மாட்டையல்லவா, இப்பேர்ப்பட்ட தர்
மவிசாரணையையுடைய உனக்குநான் சாரத்தியஞ்செய்வ
தைப் பார்க்கிலும் இப்போதே உயிர்பிழைத்துப் போய்
விடுவது யுத்தமமாச்சே, இதுவல்லாமலும் எட்டுத்திக்குப
திறு கோணத்திலுமிருந்து எதிரிகள் வந்துதடுத்துப்போ
ர்கொடுத்தாலும் அப்பேர்ப்பட்ட யுத்தத்தில் வலுக் கு
றையாமல் மனமிளையாமல் வாழ்நாள் பேரில் வாஞ்சை
கொள்ளாமல் மனைவிமைந்தர் பாலாசைவையாமல் பின்
பலந்தேடாமல் தன்னைக்காத்து தேர்-குதிரை சாரதிமுத
லிய வில்லைக்காத்துச் சத்துருக்களைச்செயித்து வெற்றிய
டையும்படியானவ னெவனோ அவனையல்லவோ அதிரத
விஜயனென்றுபேரிட்டழைப்பது, அந்த விஜயனென்னு
ம் பேரை உரித்தாகப் பெற்றிருக்கின்ற நீ எனக் கிரண்டு
கையேயொழிய அநேகங் கைக ளிருக்கவில்லையே யென்
று சொல்லத்தக்கதோ சுந்தரனே, இருவர்நேரிட்டுப்போ
ர்புரியும்போது செயிக்குந்திறத்தை யோசிக்காமல்-வாய்
ச்சுளுவாய்ச் சொல்லிவிட்டீரென்றாய், ஐயா, செயிக்குந்
திறம் உன்னிடத்தி லிருக்குதென்று உணர்ந்து நான்
சொன்னேன் அர்ச்சுனா, அந்தமட்டும் நல்லகாரியம் நீ ம
காபுத்திசாலிதான், இப்பவுங் காலதாமிசஞ் செய்யாமல்
அந்தப் பூரிசரனை ஒருகணையாற்றடிந்திடென்று அகிலச
ராசரங்களெல்லாம் அடக்கமாயடங்கும்படிக்குவயிற்றில்
வைத்தருளிய மாயோனுரைக்க வாசவன்மகன் மந்தஹா
சத்துடன் விசுவாசமாக மனத்துட்கொண்டு மணிவடங்
களலரிந்து அரத்தாலுராவிய கூர்மையிற் றிணிந்து அதி
தீக்ஷண்யமாக முனிந்த வயிரவாளியை-விஜய காண்டீபத்
திற் பொருந்தி தேவர்கள் கொண்டாடும் போர்வலித்திற
த்தையுடைய சாத்தகியும் பூரிசரனும் வாளமர் தொடங்
கிய வரிசைவகையைப் பார்த்துக்கொண் டிருந்தான் மா
தவிகணவன்.

அந்தச்சமயத்தில், வல்லமையும் வளமையு நிறைந்த
தடந்தோளுடைய மாயவன் சகோதரனுகிய சாத்தகியை பூ
ரிசரவாவவன் விற்யுத்தத்தில் வென்ற தன்மையைப்
போல் மல்யுத்தத்திலும் வென்று ஆளைப் பூமியில் விழ்த்
தி கல்லென்று வமிக்கும் புயத்தின்மீது தன்னுடைய கா
லழுந்த மிதித்துக்கொண்டு கடககங்கண தொடிவலய ம
ணிந்த கரத்திற்றரித்த வாளாயுதத்தை யோங்கி அந்தச்
சாத்தகி யிறக்கும்படியாகத் தலைமீதில் வீசினன்.

இதற்குள்ளாக எதிர்ப்பார்வையிலிருந்த விஜய னைவ
ன், வில்லிற்றொடுத்த கணையை இமைக்கொட்டுமுன்விடு
த்து பூரிசிரனுடைய தோளானது வாளுடன் விழும்படி
யாய்த் துண்டித்தான். உடனே வேதமந்திரத்தை உருச்
செபித்து விஷைவினை விளைவேற்றும் வாளினை யுடைய பூ
ரிசிரனைவன் அர்ச்சுனன்கணையால் தோளும்வாளும் து
ணிந்ததென் றுணர்ந்து அர்ச்சுனனின்ற திக்கைநோக்கி
ஓகோ, சவ்வியசாசி உன்னுட னெதிர்த்து யுத்தம்பண்ண
வில்லையே வேறொருவ னுடன் போர் புரிந்து ஒருவருக்
கொருவர் பிராணன்வனைக்கும் ஒட்டி வாள்யுத்த மென்
னும் வாரிதியை நீந்தி கரையேறப்போகிற சமயத்தில் உ
ன்னுடையவாளியால் என்றோளைத் துணித்தனை நல்லகா
ரியஞ்செய்தாய், தர்மந்தப்பாமல் நீதியைநடத்துஞ் சூரிய
னுக்கொப்பான வீரியனே, அதர்மமாகிய அன்னீதிக்கு
டன்பட்டையே. ஐயோ, உனக்கு வில்வித்தைகற்பித்தரு
ளிய துரோணச்சாரியராலும்-அல்லது (நீ) இந்திர லோ
கத்திற் போயிருந்தபோது உன்றந்தையாகிய தேவேந்தி
ரனாலும் அளவிலாத ஆத்மகோடிகளைச் சிருஷ்டிக்குங்கா
ரணகர்த்தாவாகிய பிர்மாவின் கால்வழியில்வந்த காரியத்
தலைவர்களாகிய பிராமணர்களாலும் நீ கற்றுக் கொண்ட
தோ, அல்லது உன்னுடைய ரதத்தி லிருந்து சாரத்திய
ஞ்செய்யுங் கமலநாபனுடைய சிறந்த போதனைகொண்டு
செய்ததோ, இதுவன்றி அநுவிர்த கண்டமுதல் திக்குக
ளெல்லாம் ஜெயஸ்தம்பநாட்டிய உன்வீரியம் மாசடையு
ம்படியாய் அறிவிலா விவேகசூனியனைப்போல் தர்ம வி
ருத்தமாய் நாணமில்லாமல் மானமில்லாமல் என்னகாரி
யஞ்செய்தாய் விஜயனேயென்று ஒப்பற்ற சிலையாண்மை
பெற்ற பூரிசிரனைவன் இப்படிசொல்ல, மிக்கோரற்பு
கழுந் தக்கோனுகிய பற்குனன்கேட்டு பற்பலவிதமாகிய
ஞாயம் உனக்குச் சொல்லவேண்டிய அவசரமில்லை. ஆ
கிலும், நீயே யோசித்துப் பார்க்கலாம், எனக்கு உயிர்த்
துணையாகவந்த பேர்கள் பகைவர்கையி லகப்பட்டு நடுங்
கி உயிரிழக்குந் தன்மையைப்பார்த்த நான் அவர்களுக்கு
தவிசெய்யாம லிருக்கலாமோ, நீர் சொல்லும்-ஆகலால்
அவர்களுக்குச் சகாயஞ்செய்து என்னுடன் சேர்த்துக்
கொண்டேன்-இதைக்குறித்து நீ பழிக்கத்தக்கதோ-இது
பழிப்புக்கிடமாமோ (நீ) வெறுத்துக்கொள்ள வேண்டிய
பேர்கள் வேறிருக்கின்றூர்கள் - அவர்களாரெனில், துரி
யோதனனுக்குப் படைத்துணையாக வந்து சுகதுக்கங்க
ளுக் குடன்பட்டு போர்கொடுத்து வராநின்ற உன்னை இ
ந்தச்சமயத்தில் என்மைத்துனுக் குதவியாகிக் காத்த என்
னைப்போல் விற்படை-வேற்படையுடன் வந்து உனக்கு
உதவிசெய்யவேண்டியது அப்படிக் குதவிசெய்யாத உ
ங்கள் முதல்வனுகிய துரியோதனனுக்கு முன்போய்வெ
றுத்துக்கொள்ளவேண்டும் பூரிசிரனே.

இந்தஞாயம் இப்படியிருக்க நேற்றுப் பதிமூன்றுநாள் யுத்தத்தில் மழலைவார்த்தை மாறாச் சிறுகுழந்தையாகிய அபிமன்னன் அதுலசங்கிராம விஜயனாகப்பொங்கி போர் புரிந்தபோது பின்னாலொருவன் வந்து நாணியறுத்ததும் முன்னையொருத்தனின்று வில்லைமுறித்ததும் பக்கத்திற் பலபேரிருந்து தேரையழித்ததும், நீ பார்க்கவில்லையோ நீ அவ்விடத்திலிருக்கவில்லையோ இப்போதறிந்துசொல்லிய பாவபுண்ணியம் நேற்று நடத்திய அநியாயத்தின் மீது மாறுசொல்லத் தெரியாமற்போச்சே, அப்போது மறந்துவிட்டாயோ, அந்தமட்டும் நீ மகாயோக்கியன்றான் உன் சொந்தத்துக் காணபடியால் இப்பவாகிலும் பாவபுண்ணியம் பார்த்துச்சொன்னாய், இதுவுமெத்த மேன்மையான காரியந்தான், அப்பா பூரிசிரனேயென்று பலபல தருமவாக்கியங்களை யெடுத்துச்சொல்லி அவனுக்கெதிர் சென்று நின்று ஒருபுஜமறுந்திருக்கிற பூரிசிரவென்னுஞ் சிறுவனை அதிவாளியாகிய அர்ச்சுனன்பார்த்து நமது குலங்களுக்கெல்லாம் நமனாகயேர்ப்பட்ட துரியோதனராஜன்-நாளையோழிந்து நரகத்தில் மூழ்கப்போகிறான், அவனுக்காகத் துணைப்பட்டுவந்த (நீ) துற்கதிபுகாமல் நற்கதி சேரக்கடவையென்று இரக்கத்துடன் நயமாக வார்த்தை சொல்லிய அர்ச்சுனனுடைய அன்பைபூரிசிரன் அகத்துட்கொண்டு அறுபட்டதோளுடன் சாய்ந்துகிடக்கும் வாள் மேல் வீழ்ந்து வெற்றிபெற்ற பிராணனைவிடுந் தன்மையனாகிய வேளையில் சாத்தகிகண்டு தன்பிராணன் போய்விடுமென்று நொந்திருந்தகிலிவிடுத்து புயவலியடுத்துகோபங்கொண்டு சீறியெழுந்து சாத்தகி கையிற் பிடித்த வாளாயுதத்தால் ஓங்கி பூரிசிரனை வெட்டும்போது, மதமூன்றுடைய மால்யானைபோன்ற நர நாரணரிருவரும் ஆஆ, ஆவென்றதட்டிக் கையமர்த்தவும் நில்லாதவனாய் ஓரோ வீச்சில் தலைவேறு உடல்வேறாக வெட்டித்தள்ளினான்.

இந்தப்பிரகாரம் பூரிசிரனுடைய சிரத்தைவெட்டி வீழ்த்திவிட்ட சாத்தகியானவன், கால்நடையாக நடந்துசென்று செத்துகிடக்கிற பிணமலைக் கணவாய்களெல்லாந் தாண்டி ரத்தவெள்ளங்களெல்லா நீந்திமுடியாதகாரியங்களை அதிசொல்பத்தில் முடிக்கும் படியாகிய கிருஷ்ணார்ச்சுனனென்னு முதல்வர்சென்ற யிடத்திற்போய்க் கலந்தான், (இவனுடைய சங்கதி இப்படியிருக்க கர்ணனாலடிபட்டு மரணமூர்ச்சையடைந்து தருணந்தப்பி சினக்குறிப்புடன் தெழித்து தீப்பொறியெழ விழித்து வசனமாற்றமொன்று மில்லாமல் விசன ஆற்றலுடன் காலோட்டமாய்த் திரும்பிவருகின்ற வாயுகுமாரனாகிய வீமசேனனை நர நாரணரிருவருங்கண்டு விசனங்கொண்டு-ஓ ஓ, என்னயிந்த அதிசயம் இப்படியாகவருவதற்கேதுவென்னவென்றுகேட்க இடும்பிநாயகன் மனமிடிந்துசொன்னான்.

ஐயா, தேவரீர்முழக்கிய சங்கத்தொனிகேட்டு தேவதத்தத்தொனியைக் காணாமையினால் அர்ச்சுனனுக்கென்னமோவென்று தர்மராஜன் சந்தேகப்பட்டு சாத்தகியையனுப்பினார், பின்னுஞ் சற்றுநேரந்தரித்து என்னையுமனுப்பிவைத்தார் அவருத்தாரப்படி புறப்பட்டு பற்றார்முதலிய படையைப்பற்றறச்செய்து பத்மயூகமுனைக்குவந்து உங்களிருவரையும் க்ஷேமமாகக்கண்டு ஸிங்கநாதத்தொனிசென்று தர்மநந்தனருக்குத் தெரிவிக்கும்படியாய் முழக்கஞ்செய்து உங்களை நோக்கிவரும்போது காவலன்றம்பிமாருங் கர்ணனும்வந்தெதிர்த்து மடக்கினார்கள், அவர்கள்மதத்தையடக்கி ரதத்தையழித்து பதத்தையளித்து அகத்தைவிளைத்துவந்தவென்னை மறுபடியும் கர்ணன்வந்தெதிர்த்து என்பாணங்களாலதிர்ந்து மடங்கி விசைகொண்டோடினான் இப்படியொருவிசையல்ல பலவிசையவமானப்பட்டோடினதுமல்லாமல் துரியோதனன் றம்பிமார்கள் இருபத்தெட்டுப்பேர் இறக்கும்படிவிடுத்து அவன்சேனைகளையும் பறக்கும்படிகெடுத்தான்.

இப்படியிருக்க ஒருதடவை ரதமேறிவந்து என்னுடைய ரதமுதலியவில்லைமுறித்து நான்றொடுத்த பாணங்களினால் தன்னுடையதேருஞ்சீரும் பெருமழிந்து ஓடிப்போனான் அப்படி ஓடினவன் மறுபடியுந் தேரேறிவந்து நான் கைக்கொண்டிருந்த கதையைமுறித்து என்தேகஞ்சிதையவடித்து யானைச்சரமங்களாற் புதைந்திருந்த என்னை விற்கூதையா லிடித்திடித்து நங்கபங்கமாகப் பேசாதபேச்சும்பேசினானென்றுவீமன்சொல்ல, அந்தவார்த்தையை விஜயன்கேட்டு வெதும்பித்துடித்து வீமனைப்பார்த்து அண்ணா, உம்மாலேதான்பட்டபாடும் மானமழியக்கெட்டகேடுமறந்து இப்படிக்குப் பேசுவோமாகில் பிற்படிக்கு இப்படிவிளையுமேயென்னுங்கிடும் எண்ணிப்பாராமல் அந்தக்கர்ணனானவன் உம்மை யிழிவாகப்பேசினானல்லவா ஆகட்டும், அவனும்மைப்பேசியதல்ல அவைகளெல்லாம், என்னைப்பேசிய வார்த்தையாக்களும் நீரிதைக்குறித்து விசனப்படவும்வேண்டாம்,இதற்காகப்பரிந்துகோபங்கொள்ளவும் வேண்டாமென்று தமயனுடையகவலையைத்தணித்து (வளமாலையணிந்த திருமாலை, அர்ச்சுனன்வணங்கி அருள்முகநோக்கி அநந்தகல்யாண குணங்கணிறைந்த கோபாலா என்னண்ணாவாகிய வீமசேனமகாராஜன் சொன்னதெல்லாங்கேட்டீரா நல்லது அதப்படியிருக்கட்டும்) சோமதத்தன்பிள்ளையாகிய பூரிசிரனால் சாத்தகியின் சாமர்த்தியங்குறைந்துபோகும்படியாகிய தன்மையென்னவென்று வரிமுனைவிரிந்த இந்திரதனுப்பெற்றஇந்திரன்மைந்தனாகிய, சுந்தரவிஜயன்கேட்க தமக்கொருவரு நிகரில்லாத சதங்கைத்தாளினையுடைய செந்தாமரைக்கண்ணன் திருவாய்மலர்ந்தருளினார், அதென்னவெனில், கம்ஸனுடையதந்தை உக்ரசேனனும் அவனுடையதம்பி, தேவகனும் நாடாண்டுவருநாளையில் தேவகனுக்குக் குமாரத்தியும் எனக்குத்தாயுமாகிய தேவகிதேவியை சுபமாநாட்டவேண்டுமென்று, கல்யாணவோலையுடன்தூதனுப்பிவைத்தநாளையில் சகலராஜர்களும் வந்தார்கள்.

அந்தக்காலத்தில் எங்கள்பாட்டமாராகிய சூரசேனனும் சினியென்பவரும் அந்தசுயமரத்துக்குப் போயிருந்தபோது எல்லாராஜர்களையும் வஞ்சித்து அந்தத்தேவகியம்மனை தூக்கிக்கொண்டுவந்து தங்களுக்குப் பிள்ளையாகியும் எனக்குத்தந்தையுமாகிய வசுதேவருக்கு கலியாணம் பண்ணிவைக்கவேணுமென்றெண்ணி எனக்குச்சின்னப்பாட்டனும் இந்தச்சாத்தகிக்குச் சொந்தப்பாட்டனுமா

கிய சினியென்பவரொழுந்து சபைமேல்நடந்து தாவிவிழுந்து தேவகியைக்கைக்கொண்டு திரும்பியபோது தேசராஜபோஜரெல்லாரும் சேர்ந்துபகைத்து செருவிளைத்து சினியென்பவரால் அடியுண்டு திசாதிசையிலுந்திரிந்துபோனார்கள், அப்போது வாகுலீககுமாரனாகிய சோமதத்தனொருத்தன்மாத்திரம் மனம்வருந்தாமல் முடிவளையாமல் அஸ்திரங்களின் அடியாலிளையாமல் வாடிக்களையாமல் மெத்தவலுவேறி சினியுடனெதிர்ந்து கலாமூதிர்ந்து உலகமதிர்ந்து சடலம்பிதிர்ந்து போம்படியாய் இருவரும் அம்புகள்விட்டு வம்புபுரிந்தார்கள், இப்படி நெடுநேரம்வரையிலும் யுத்தஞ்செய்து எங்கள்பாட்டனாகிய சினியென்பவர் ஜெயங்கொண்டு தன்னாலிளைத்த சோமதத்தனை பூமியிற்றள்ளி புரட்டிப்புரட்டிக் காலாலுதைத்து உன்னுடைய பொல்லாதகாலம் இவ்விதமாச்சுது, நானுன்னைக் கொல்லாமல்விட்டேன் நீ ஓடிப்பிழையென்று உதைத்தோட்டிவிட்டு நமதுகுலமுறைப்படிக்கு வேதவிதியை யனுசரித்து தேவகிதேவிக்கும் வசுதேவருக்குந்திருக்கலியாணங்கண்டருளிய பந்துஜனங்களுடன் சந்தோஷங்கொண்டிருந்தார்கள் இப்பால், முன்னாலடிபட்டோடிய அரசர்களெல்லாரும் முடிகெட்டோடிய சோமதத்தனைக்கண்டு ஐயோ முன்னமே எங்களைப்போல் ஓடிவந்து விடாமல் வீணாகிய வீரங்காட்டி கொஞ்சநஞ்சமிருந்த சேனைக்கும்புகளெல்லாவற்றையும் குடியோட்டி பெதிர்ந்தத்தில் என்னபலமென்றுசொல்ல அவர்கள்பேசிய வாசகத்தால் வெட்கமடைந்து நாணமுற்று அதுவே பயணமாய் நாட்டைத்துறந்து காட்டுக்குப்போய் விபூதிதாரிதசடைமுடி மரவுரியுடன் அடயோகத்திலிருந்து எப்பொருட்கு மிறைவனாகிய கயிலாசபதியைக் கருத்திலிருத்தி வருத்தமாகிய தவத்தைப்புரிந்தான், இப்படி நெடுநாட்சென்றபிற்பாடு அவனுடைய தவசுக்கிரங்கி சாம்பமூர்த்தியானவர் பிரசன்னமானார் அப்போது தவம்விட்டெழுந்து வலம்புரிவந்து சாஷ்டாங்கமாக விழுந்துதொழுது கண்ணீர்பெருகவிடுத்து அழுதுபோற்றியகாலையில் உனக்குவேண்டியவரமென்னவென்று உமாமகேஸ்வரன் கேட்டார் அப்போது சோமதத்தன்வணங்கி என்னாண்டவனே என்பகைவனாகிய சினியென்பவனை நான்வெல்லும்படியாய் அருள்புரியவேண்டுமென்றிரப்ப அந்தவாக்கியத்தைக்கேட்ட பரமசிவனானவர் அப்பாசோமதத்தா நீ கேட்டவரத்தைக்கொடுப்பதற்கு உன்றவம்பயன்படாமல் காலதீதமாய்ப்போய்விட்டபடியால் உன்பகைவனாகிய சினியும் அவன்பிள்ளையாகியவிருஷ்டியும் இறந்துபோய்விட்டார்கள், ஆதலால் உனக்கும் அவனுக்கும் பகைபோய்விட்டது, அப்படியல்லவென்று நீஜெயம்பெறவேண்டுமாகில் உன்கால்வழியில்பிறக்கும் பிள்ளையானவன் சினியென்பவனுடைய பேரப்பிள்ளையை வெல்லுவான் நீ போவென்றுசொல்லி கண்ணுதலானவர் கைலாசத்திற்கெழுந்தருளினார்.

இவ்விதமாக பரமசிவன், அநுக்கிரகஞ்செய்த வரத்தைப்பெற்றுவந்த தன்மையால் இந்தச்சாத்தகியை அந்தச்சோமதத்தனுடைய கால்வழியில்வந்த இந்தப்பூரிசிரவன் வெல்லும்படியாகநேரிட்டது இல்லாவிட்டால் வெல்லக்கூடுமோ அர்ச்சுனா, காரணமில்லாமல் ஒன்று நடவாதென்று கமலக்கண்ணன் பூர்வீககதை யெடுத்துச்செல்ல வீமன் - அர்ச்சுனன் - சாத்தகி - இவர்கள் மூவருங் கேட்டு மனங்களிந்து முராரியாகிய முதல்வனைவாழ்த்தி நானிலங்குலுங்க நாகங்கலங்க நாற்றிசைநடுங்க நால்வருஞ் சங்கத்தொனிசெய்தார்கள், இடைத்தில் இப்படியிருக்கப் பூர்வத்தில் தர்மராஜனுக்குச் சந்தேகம் விளையும்படியாக சநார்த்தனன் சங்கத்தொனிசெய்தாரென்று சொன்னோமே அந்த சங்கத்தொனியால் பதிமூன்றுநாள் ராத்திரிதாரகனிடத்திற் சொல்லிய சொற்படிக்கு தாரகனாகியசாரதியானவன், சங்குசக்ரகதா கஷ்க-கோதண்டத்துடன் சுவாமியினுடைய கனக ரதத்தை பரமபதத்தி லிருந்து-கொண்டுவந்து ஆகாயத்தில் வட்டமிட்டுலாவிக்காட்டினான், அதை அஞ்சன வண்ணனாகியஅமலனானந்தன் ஆதிகேசவனறிந்து கையமர்த்தி அர்ச்சுனனுடைய தேரைச் செலுத்திக்கொண்டிருந்தார் அப்போது தர்மராஜனானவர் பெருங்கும்பலிற் சண்டைசெய்யப்போயிருக்கிறநமதுதம்பிமார் முதலியபேர்களுக்கு ஒருவேளைரதம்நாணி அம்பறுத்தூணி-வில்-வேல்-வாள் முதலியஆயுதங்கள் வேண்டியிருக்குமென்றுநினைத்து இரண்டுசேமரதமும் அதினிறைந்தஆயுதங்களும் அனுப்பிவைத்திருந்தார், அதுஇந்தக்காலத்தில வந்து நற்றவங்கைகூடுமாப்போல் நல்லசமயத்தில்வந்து உதவியபோது அதைக்கண்டவீமனுஞ் சாத்தகியும் அந்தத் தேரிலேறிக்கொண்டுவில்முதலிய ஆயுதங்களையுங் கைக்கொண்டுமுத்தொழிற்கிறைவராகிய பிர்மா விஷ்ணு ருத்திரன் இம்மூன்றுபேரும்உலகத்தின்மேல்விரோதித்தெழுந்தெதிர்ந்ததைப்போல்,சீற்றங்கொண்டகண்ணில் செங்கனலுமிழும்படியாய்தேரைச்செலுத்தி தங்கள் தங்களுடையதிறங்களைக்காட்டிஎட்டுத்திசையுந்திடுக்கிடக்கலக்கி,எதிரொருவருமில்லாமல்இடித்துப்பொடியாக்கிவரும்போதுசூரியபுத்திரனாகிய கர்னனைக்கண்டுசூழ்கொண்ட மேகங்கவியுந் தன்மையைப்போற் சூழ்ந்து சுடுசரங்களைப்பொழிந்தார்கள்.

அந்தக்கர்னனும்; பொற்பிரகாசம்பொருந்திய விசாலமான தேரினின்று போராடும்படியாக புரியிறுக்கிய வில்லைத்தாங்கி அவர்களுக்கெதிர்வந்து நின்று இணைக்கிணையாக கணைகளைப்பொழியுங்காலையில் சத்துருக்களுக்கு ஆணிடிபோன்ற அர்ச்சுனனானவன் அந்தக்கர்னனை நோக்கி மனஞ்சகியாமல் பற்கடித்து பக்கத்தினின்ற பலபேருக்குங் கேட்கும்படியாய் ஒருவசனஞ்சொல்லத்தொடங்கினான், அடாகர்னனே நல்வினைப்பயனால் நலத்தைப்பெற்றோங்குதலும், தீவினைப்பயனால் சிந்தைநொந்துருகுதலும், ஆத்மகோடிகளுக்கு இயல்பாகநேரிடுந்தன்மைபோல் ஒருவேளையில் ஜெயம்பெறவெல்லுவதும், ஒருசமயத்தில் அபஜெயமடையத் தோற்பதுமாக நேரிடுவதும், சுத்தவீரனுக்கு உத்தமத்தன்மையாக்களும் அதை நீ எவ்வளவேனும் யோசிக்காமல் தீரமற்ற தீனனைப்போல் வீணாகிய வார்த்தைகளைப்பேசி என்தமையனாகிய வீமசே

ளராஜனை ஏசினையாம் நல்லகுடிப்பிறப்பில்லாத கோமானே, உன்னுடைய சுவாவிகங்கெட்ட குணத்தைக்காட்டினாயல்லவா, நீ ஏறிவந்த தேர்-குதிரை-சாரதிமுதலிய வில்லுமிழந்து பாணங்களுமழிந்து எத்தனைதரம் புறமுதுகிட்டு காலோட்டமாயோடினாய் நீ ஓடியபோது இந்தஉத்தமகுலத்திற்பிறந்த வீமசேனன் உன்னை ஏதாகிலும் எள்ளத்தனை வசைவார்த்தையுரைத்து ஏளனம்பண்ணியதுண்டோ, அநேகந்தடவை உன்னைச்செயித்து யானைக்கும் அடிசறுக்குமென்பதுபோல் சற்றிளைத்தகாலையில் நீ வெட்கங்கெட்டு எதிரியாகிய வீமசேனனுடைய மனஞ்சுளிக்கும்படியாய் இப்படிக் கெல்லாம் பேசப்போமாநல்லது நேற்று நடந்தபதின்மூன்றும்போரில் மகாபாவியாகிய நீ வஞ்சகமாக என்பிள்ளைக்கு பின்புறம்வந்துபதுங்கி ஒதுங்கிஎன்மகனாகிய அபிமன்னுவினுடைய வில்லையொடித்து பலங்குறையும்படியாய் பாணந்தொடுத்த தன்மையினால் என்குழந்தை அநியாயமாக இறந்துபோய்விட்டான்.

அந்தப்பழிக்கு தகுந்தவழியாக இனிநடக்கும் போர்முகத்தில் உன்தவத்திற்பிறந்த சிரேஷ்டபுத்திரனாகிய விடசேனன்தலையை நீ பார்க்கும்படியாய் உன்கண்ணுக்கெதிரில் நானே அறுத்துத்தள்ளுகிறேன் நான்சொல்லிய இந்தப்பேச்சை உன்னுள்ளத்தில் கெட்டியாகக்கொள்ளக்கடவை இத்துடன்போய்விட்டதென்று நினைக்காதே இன்னம் எவரெவர் என்பிள்ளையைபேதித்து வாதித்து சேதித்தார்களோ அவரவர்களும் அவரவர்புத்திர மித்திரரும் சின்னபின்னப்படும்படியாய் செய்வேனல்லாமல் சும்மாவிடப்போகிறதில்லை உன்மனத்தை உறுதியாய்த்தேற்றிக்கொள்ளென்று அருச்சுனன்சொல்லி இருவிழியும் நெருப்புப்போற்சிவந்து மண்ணும்விண்ணும்சரிந்து ஒன்றாய்ப்பிதிரும்படியாய் அதிர்ந்து விஜயகாண்டீபத்தை யிழுத்து நாணோசைகாட்டி வில்லாளியாகிய கர்னனுடைய உடம்பு முழுதும்புதைந்து அழுந்தி உருவிப்போம்படியாய் கங்கபத்திரமென்னும் புங்கவங்களைச் செலுத்தினன், அப்போது அங்கதேசாதிபனாகிய கர்னன் பலபாணங்களினால் அர்ச்சுனன்விடுத்தபாணங்கள் மடியும்படியாச் சங்கரித்து மறுபடியும் அளவில்லாவாளிகள்தொடுத்து கிருஷ்ணார்ச்சுனரைத்தடுத்து போர்கொடுத்தபோது அந்தக்கர்னன் விடுத்தகணைகளையெல்லாம் திரணமாகிய புழுதியாய்ப்போக்கி கச்சைக்கொடியைத்தாக்கி கைப்பிடித்தவில்லையும் இரண்டுதுண்டாய்த்தாக்கி அவனும்புறங்கொடுத்தோடவாக்கி அந்தயிடத்தை விட்டுத்திரும்பி பாராடப்போராடுங் காண்டீபபுருஷனாகிய விஜயன் சிந்துவுக்கரசனாகிய செயித்திரதனிருக்கும் இடத்தைத்தேடி உந்துவேருடன்வந்து சாத்தகியும் வீமனும் உத்தமோசாவும் உதாமனும் சாயைநிழற்போல் தன்னைநெருங்கி வரும்படியாய் தனஞ்செயன்முந்திச்சென்று தானைபடைகளைத விடுபொடியாக்கிப் போம்போது துரோணச்சாரியர் கல்வித்திறத்தாற்கட்டிய பத்மயூகப்போணி சிதைந்துபறந்தோடுந் தன்மையை வாசங்குலாவிய நந்தியாவட்ட மாலையணிந்ததுரியோதனராஜன்கண்டு கர்னனின்றயிடத்தில்வந்து ஐயனே அண்ணா, இன்றையத்தினம் (நீ) மனம்விண்டு இளைத்தாயாகில் ஒருக்ஷணத்தில் சிந்துராஜபுத்திரசெயித்திரதன்செத்துப் போவான், இதற்கு யாதொருதடையுமில்லை ஆகலால் இதுவரையிலும் நீர், காத்ததுபெரிதல்ல என்னைப்புரப்பதற்கு இதுநல்ல சமயம்-கொஞ்சம் பிரயாசமெடுத்துக் கொண்டு எதிர்சென்று நின்றுபோர்கொடுத்துத்தடுப்பீராகில் இன்னஞ்சற்று நேரத்தில் சூரியனஸ்தமித்துப் போவான் இன்றையப்பொழுதுபோய்விட்டால் சொல்லிய சபதப்படிக்கு பற்குணனாகிய அர்ச்சுனன் அக்கினியில் வீழ்ந்திறந்துபோவான் இந்தச்சேதிகேட்ட உடனே பாண்டு நந்தனரெல்லாரும் மாண்டுபோவார்கள், ஏதொருவருத்தமு மில்லாமல் நாம் வெற்றிபடையலாம் உத்தமனே இவ்வளவு சகாயத்தை எனக்குச்செயக் கொடுக்கத்தக்கவர்களில் (நீ) யொருத்தனையல்லாமல் எனக்குரித்தாகிய துணைவேறொருவருமில்லை உன்னை நான் நம்பினேன் உனக்கு உற்றதுணையாய் துரோணபுத்திரனாகிய அசுபத்தாமனும் உன்சிரேஷ்ட புத்திரனாகிய விடசேனனும் சத்துருவுக்கு மித்துருவாகிய மிர்த்துதேவதையையொத்த கிருபனும் மத்திராத்தலைவனுஞ் சேர்ந்துவரும்படியாய் சேகரித்துக்கொண்டு அமர்த்தலைசென்று நின்று அர்ச்சுனாதியரை வளைத்துக்கொண்டு போர்மலைந்து சிந்துராஜகுமாரன் ஈண்டுமாண்டுபோகாமல் ஆண்டிரட்சிப்பையாகில் பேர்பெற்றிருக்கிற இப்பூமியும் கீர்த்தியும் பிரதாபவல்லமையும் உனக்குச் சொந்தமாகுமல்லாமல் 'மற்றெவருக்குச் சொந்தமாகும்' என்னுயிர்க்குயிராகிய துணையேயென்று துரியோதனன் சொல்ல அந்தவார்த்தையைக் கர்னன்கேட்டு புரந்தரபூவலனாகிய காவலனேகேளும், வெற்றிபெற்றவீமனெதிர்த்து விறல்காட்டி அவனால் என்னுடலம் மெத்தமெலிந்திருக்கின்றது இல்லாவிட்டால் நானென்னும்பெயரும் அவனுடைய உயிரும் இதுவரையிலும் நிலைபெற்றிருக்குமோ ஆனாலும் (கடுகுசிறுத்தாலும் காரம்போகாதென்னுங் காட்சிபோல்) நான் நிலைபெற்றுநிற்கும் போர்முகத்தில் சிந்துதேசநாயக சயிந்தவனுடையபிராணனை வாங்குவதற்கு சம்மாரகால ருத்திரன் சிந்தித்துவந்தாலும் லேசில்முடியுமோ ஒருக்காலுமுடியாதுமுடியாது தீயைப்பார்க்கிலுஞ்சிவந்து சிதறும்பொறிகளையுடைய செங்கண்தாங்கிய எங்களுபகனே, நீர்பாரும் என்னுடையவீரத்திறத்தையென்று பாண்டவர்களுக்கு முன்பிறந்தோனாகிய கர்னன்சொல்லி வீரபட்டங்கட்டிய நெற்றியில்வெயர்வெழ அட்டமாகிரியைச் சூழ்ந்த வட்டமாகியமலைகளெல்லாம் குட்டமாக நாணுறவில்லைக் கோணுறவளைத்து குணத்தொனிவிளைத்து குரலெடுத்துக்கனைத்து யாவருஞ்சூழும்படியாகிய வலிபடைத்து மகாரதத்தைநடத்திக்கொண்டு வந்தான் கர்னனெனவன்.

இதற்குள்ளே வீமார்ச்சுன சாத்தகி முதலாகியபெரும் வெகுண்டெழுந்து விசையுடன் விடுக்கக் கொழுந்துவிட்டெரியுங்கணை மாரியுடனெதிர்ந்து போர்புரிந்தபோது யானைகளெத்தனை தேர்களெத்தனை குதிரைகளெத்தனை பார்த்துநடுங்கும் படைகளெத்தனை வீரரெளெதிர்ந்துவிசு

ம்பாசமெத்தனை மலைகளெத்தனை கண்டுகளெத்தனை உலக்கையெத்தனை வச்சிராயுதமெத்தனை வில்லெத்தனை வாளெத்தனை வேலெத்தனை சணையெத்தனை பாணமுனைகளில் கலந்தெரியும் நெருப்பெத்தனை காலாயுதமெத்தனை சூலாயுதமெத்தனை கவணெத்தனை சவளமெத்தனை இவ்வளவுங்கலந்து நெருங்கியிருக்கும்படியானதை அர்ச்சுனன்விடுத்த கணைமாரியானது ஒருநொடியில் தும்சப்படுத்தியதல்லாமலும் எதிரிபேரில் எரியும்படியாக சக்கரம்-முஷ்கரம்-கதை-தோமரம்-பிண்டிபாலம் - வேலாயுதங்கள்-சூலாயுதங்கள்-பலம்பொருந்தியகலப்பைகள் - உலக்கைகள்-முசலம்-அங்குசம்-முதலாகிய ஆயுதங்களை எல்லாருங்கைக்கொண்டு எட்டுத்திக்கிலுமின்று விடாமழைபோல எறிந்துபொழிதலால் அந்த ஆயுதங்களினடுவிற் புகுந்த விஜயனுடைய அஸ்திரமானது ஒன்றுக்கு மூன்றாகப் பிரகாசித்து ஒன்றொழியாமற் றுக்கிப்போக்கியது இஃதன்றியும் தனஞ்செயன்விடுத்த சரத்தால் கரங்களற்றன-தோள்களிற்றன-கால்கள்வீழ்ந்தன - கிரீடசிரங்கள் தாழ்ந்தன-குடல்கழிந்தன-மார்புபிழிந்தன-நரம்புகளறுந்தன-பல்லுகள் தெறித்தன எலும்பு முறிந்தன - இடையொடிந்தன-தலைபிளந்தன-மூளைசிதறின-உதிரமோடின இதல்லாமலும், துரியோதனனுடைய யூகபந்தியிழைந்து நிறைந்தபடைத்தொகுதிகளும் யானைகள் பலதிசைகளும் விரிட்டுச்சிதைந்து சிந்திவீழ்ந்தன அந்தமாகச்சிந்து தேசத்திற்பிறந்து சொந்தமாக சயிந்தவன் வீட்டில்வளர்ந்து நடைபழகிவந்த மந்தமாருதம்போன் றகத்துகங்களெல்லாம் கால்முறிந்து மறிந்து பின்புறிந்து தாழ்ந்தன அச்சுமச்சு - குத்துக்கால்-கொடிஞ்சை-கொடி-குடை-முடிபடி-அடி-இரிசி-ஆணி-அஞ்சூராணி-குதிரை-சாரதி முதலியவைகளுடைய தேரானது அந்தரத்திலெறிந்தபந்து சுழல்வதுபோல் அலைந்துருண்டழிந்தொழிந்தன.

இன்னமும் விரலட்சுமிகின்று ஜெயம் ஜெயமென்று நடம்புரிந்து விளையாடுந்தேரேறிய வீரசிம்மம்போன்ற அர்ச்சுனன்கணைகளினால் கொடிகளெத்தனை - குடைகளெத்தனை-முடிகளெத்தனை-மாணிக்கமழுத்திய தொடிகளெத்தனை-தொடைகளெத்தனை-படைகளெத்தனை- வாத்தியங்களெத்தனை-வெற்றிமாலைமுதல் மணமாகிய மற்றமாலைகளெத்தனை-குணமாகிய தோளணியெத்தனை - சாமரையெத்தனை-கவஜமெத்தனை-மகரத்துவஜமெத்தனை- தோரணமெத்தனை - வாரணமெத்தனை - இவ்விதமாக அநேகங்கோடா கோடிகளைப் பொடிகளாகப்படுத்தி அவனியிற் சாய்த்து அஸ்திரங்களினுடைய வேகமடங்காமல் பூமியையுந் துளைத்துப்போய்க்கொண்டிருக்கின்றதாம், புரந்தரகுமாரன்விட்ட பொற்பாணமானது, (துரந்தரகுமாரனெப தோன்றலேதேனும்) இப்படியா யிருக்கிறவேளையில் குடிகலங்களுக்கதிபதியாகிய துரியோதனனும் மத்திரதேசாதிபதியும் விடசேனனும் சுகுணசீலமுடைய குருபுத்திரனும் போராடுந் திறந்தெரிந்த கிருபாச்சாரியும் அழகாக இருபுறமு நெருங்கித்தொடரவும் அநேகம் வீரத்திறமுடைய மன்னர்கள் அலகாலவிஷாக்கினிபோற கொதித்தெழுந்து அடரவும் நமனை நாசப்படுத்தும்படியாகிய உறுதிநெஞ்சமும் ஒப்பில்லாவீரமும் உலவாததயிரியமுமுடைய கர்னனானவன் வந்து துன்னிமுன்னின்று என்னசொல்லுகிறாய் வின்னலமுள்ள வல்லவனென்னும் விஜயனேயென்று சொன்னயஞ்சொல்லி மின்னலைப்போன்ற வன்னப்பகழியை மாறாமல்விடுத்து எதிர்ந்தான், கன்னற்கழனிசூழ்ந்த காவிரிநாடன் அவனைக்கண்டவுடனே முக்குணங்களும் ரூபிகரித்தெழுந்ததைப்போலொத்த வீமார்ச்சுன சாத்தகி இவர்கள் மூவரும்தேவருநடுங்கும்படியாய் வில்லைவளைத்து நடநடவென்று பல்லைக்கடித்து காளெழுமிசெய்துமேகாஸ்திரங்களை விசும்போற்றொடுத்தார்கள் அந்தக்கணைகளின் கொடியவேகத்தால் திசையெட்டும் பொரிந்து திக்கஜங்களெட்டுஞ் சரிந்து புணரியுந் தளதளவென்றுபொங்கிச்சரிந்துபோம்படியெரிந்து யூகபந்தியிலிருந்த வல்லவர்கள்விடுத்த கணைகளையெல்லாம்வாரிக்குடித்து மாரிபோலிடித்து நூங்கிசிலநேசந்தங்கி அம்பரத்தின் மேலெழுந்து வேடிக்கைபார்க்குந்தேவர்களின் மகுடகொடிகளின்மீது நெருப்புப்பொறிகளை ராசிராசியாச்சொரிந்து எங்குந்திரிந்தது அனையகாலையில் இரவிகாதலனென்னுங்கர்னன் பார்த்தசாரதிமார்பையும் மூர்த்தண்யபோரங்கப் பார்த்தனுடையதேகத்தையுந் துளைக்கும்படிக்கு சன்னபின்னலாய் வலைவீசியதைப்போல் அருணகிறக்கிரணங்கள்பெற்ற அன்பத்தொரு அம்பைப் பிரயோகஞ்செய்தான்.

அந்தக்கணைகளை அர்ச்சுனனென்றுந் தனிச்சிங்கங்கண்டு ஒப்பில்லாதபிறைமுகாஸ்திர மொன்றையெடுத்து விடுத்து அவன்தொடுத்த கணைகளெல்லாவற்றையுங்கெடுத்து அவனையும் மார்புகிழிய அடித்து போர்முகமழித்து அயர்வெய்தும்படியாய்ப் பொருத்தியபோது மார்பில் மூழ்கியவாளியை ஒருலட்சியம்பண்ணாமல் இருவருமெதிர்ந்து வில்லை மண்டலமாகவளைத்திழுத்து இவர்மார்பிலும் எண்ணிறந்தகணைகள் துளைத்தேறும்படியாச்செலுத்தி சமர்புரியுஞ்சமயத்தில் கீர்த்திப்ரதாபம்பெற்ற கிரீடியானவன் வஞ்சகத்துடன் கர்னனுயிரைமாய்க்கும் இஃதென்றுவிசால வில்லிலிடத்து மேன்மையாப் பூசித்துவைத்து சதபத்திரக்கணையை தாராளமாக ஏவினான், அந்தவாளி அந்தரத்தெழுந்து பக்தெனச்சுழன்று செந்துகள்பறந்து கொந்தெனச்சிறந்து சிந்தைகள்வருந்த வந்தவாறதனை கந்தனுக்கொப்பான அந்தணகுமாரனாகிய அசுபத்தாமன்கண்டு அதற்குத்தகுந்த விண்டுவின்கணைகொண்டு துண்டுகளாகவொண்டுசெய்திட்டான், அதைக்கண்டசண்டன் குமாரனென்னுங்கர்னன்வீரியமுடன் ஆரியனைத்தொழுது சூரியாஸ்திரங்களைச்சிந்தி காரிமைந்தனாகிய காண்டீபனுடைய புயமெங்கு மூழ்கிவித்து புதியொத்தஞ்சிந்தி புத்திநைந்து நொந்து எஞ்சிவாடும்படிக்குப்போர்செய்து வந்தான் இவ்விதமாக இரவிகுமாரன் விட்டகணைகளும் இவனுடன்வந்த இதரமன்னர் முதலியவீரர்கள் தொட்டசரங்களும் இவைகளையாற்றும்படியாக மாறுபரணனென்னும் வீமசாத்தகி முதலியயாவருந் தொடுத்தபடைக்கலமாரியும் துரியோதனனுடைய் நால்வகைத்தானையும் ஒப்பற்ற ஒருவனாகிய திவ்விய சவ்வியசாசிவிட்ட

வெவ்வியகணைகளினுற்சாய்ந்து மாய்ந்து தேய்ந்து ஓய்ந்து குறைந்து மறைந்துபோனதால் வானிறைந்த வேந்தர்களும் பூவிநிறைந்தமாந்தர்களும் மதித்துத் துதித்தார்கள். அவர்களிப்படி துதிக்கும்படியாகிய துதியை நிதியாகக்கொண்ட மகபதிகுமாரனும் மாதலிகொழுநனுமாகிய அனுமக்கொடிதரித்த அர்ச்சுனராஜன் பூஜாவிதிமுதலிய மந்திர உபகரணங்களுடன் கூடியமேகாஸ்திரங்களை மோகாஸ்திரங்களைப்போல முடுக்கிவிடுத்து குருபுத்திரனென்னும் அசுபத்தாமனுடைய கேசரிக்கொடியையும் கிருபாச்சாரியினுடைய விருஷபக்கொடியையும் பச்சைப்புரவிபோன் மகனென்னுங் கன்னனுடைய கச்சைக்கொடியையும் அவனுக்குத் துணையாகக்காக்கவந்த கர்ணபுத்திரனென்னும் விடசேனனுடைய மயில்க்கொடியையும் பயமற்ற செயமுற்ற மத்திரதேசாதிபனுடைய வெற்றிபெற்ற அத்திமதயானைக்கொடியையும் ராஜாதிராஜன் துரியோதனமகாராஜனுடைய பாம்புக்கொடியையும் மற்றமுனைக்காரருடைய கொடிகுடைமுதலிய வெல்லாவற்றையும் ஒருநொடியிற்றுணித்து துண்டமாக்கி அவரவர்கையிலிருந்த வில்லையுமுறித்து அவர்களுடைய தேகமுழுமையுஞ் சிறுகண்ணாகத் துளைத்து தன்னையெதிர்த்து அம்புதொடுத்த யாவரையும் உடலங்கிழிந்து உதிரஞ்சொரிந்து உதிரம்வழிந்து போம்படியாய் முனையம்புமுதலிய மின்னற்கணைகளை வாசாமகோசரமாய் விடுத்து கெடுத்துதனது வெற்றியை தளர்வில்லாமல் தாலத்திலெழுதிநாட்டிய தனஞ்செயன்பேரில் மூண்டெழுந்து கனன்று அங்கதேசாதிபனானவன் வேறொருவில்வளைத்து மின்னலென்று வமிக்கும் வன்னக்கணைகளை சன்னப்பின்னலாய் வாரிவாரி மாரிமாரி காலத்திற்பொழியவந்த பெருந்தாரையைப்போல் சலசலவென்று நரனுடைய தேகமுழுமையும் புழையாகப் பொழிந்து தகைந்தான், இந்தக்கர்னன்றொடுத்த பாணங்களையெல்லாம் விற்கொண்டு பற்குனன்கெடுத்து சற்கொண்டெழிவாரைப்போல அங்கதேசனைப்பார்த்து அடாகர்னனே, நீபொழிந்த அம்புக்கும்புகளெல்லாம் வம்பும் தும்புமாய்மடிந்து போனதைப்பார்த்தையா இனிநான் அம்பாரநைய எய்யப்போகிற வெய்யகணைகளின் திறத்தை நீ சற்றேகண்கொண்டுபாரென்று கயமுகக்கணை அபமுகக்கணை கதிரவன்கணை உதிரவெங்கணை கனல்மினற்கணை மினலனற்கணை முதலியகணைகளை கலகல கலகலவென்று நரன்முடுக்கவும் அப்படியா அடா அர்ச்சுனா, இன்னம்என்கைத்திறமும்மெய்த்திறமும் கணைத்திறமும் புயத்திறமும் அறியமாட்டையா இதோ நான்தொடுக்கிற கணையின்கடுமையைக்கண்டறிந்து கொள்ளென்று புகையுடன் கனலும் கனலுடன்புனலும் புனலுடன் மணலும் மணலுடன்காற்றுங்கலந்த கணைகளைச்சொரிந்து கன்னன்பரிந்து நாலுபக்கங்களிலுமிருந்து பகழிமாரி நறநற வென்றுதூறவும், இவைகளையெல்லாம் பார்த்தன் கரகரவென்று நூறிமீறி துரோணரேற்படுத்திய பத்மவியூகப்பொகுட்டைக்கெடுத்து அடுத்து பற்கடித்து விற்பிடித்து சொற்படித்து முகங்கடுகடுத்து அவ்விடத்தில் அதிவிரப்ரதாபசூராதிரகோர ஆரபாரவாரிமுதலிய சேனைகளையும் முடுக்கியபோது காவலாகிய காவலரணிப்படைகளுங் கலந்துகொல்லுதற் கரிதாகிய சமரம்விளைத்துசொல்லுதற்கரிதாகிய சொல்லை விளைத்து அர்ச்சுனன்முதலியபேரை உள்ளேபுகவொட்டாமல் வளைத்துத்தடுத்து இப்புவனமுதலிய எப்புவனங்களும் நிலைதளர்ந்து தலைகுலுங்கி படபடென்று விறுவிறென்றுமாதிரங்கலங்கி பருதிசுழன்றுமேற்றிசையிலோடும் படியாய்ப் போர்விளைக்கும்போது பத்மவியூகப்பொகுட்டின் மத்தியில் பதனம் பண்ணிவைத்திருக்கின்ற சிந்துபதிபெற்ற சயந்தவனானவன் சங்கதிதெரிந்து இனிக்காரியமில்லை ஆரிய உதாரன்பேச்சும் சூரியகுமாரன்பேச்சும் அவலம் அவலமேயென்று அனுமக்கொடியோனும் சிங்கக்கொடியோனும் இத்தனைதூரம் ஜெயித்துவந்து நாமிருக்கும் நிலையைக்கண்டு ஜாடும்போது இனிமேல்நாம் மூலையிற்பதுங்கி ஒதுங்கி முனையற்றிருப்பது ராஜமுறைமையல்லவே இனிநம்மை யவர்கள்பிராணனோடு விடப்போறதுமில்லையே, விருதாவில் நாமறைந்திருப்பது குறைவாகிய தொல்லையேயென்று, நற்சிலையைப்பிடித்து சிற்சில கணையைத்தொடுத்து வேலிபோற்கோலிநின்ற காவலரணிப்படைக்குப் பின்புறத்தினின்று வாலிசுமாலிபோற் றுவிவந்த வீமார்ச்சுனன்பேரிலும் பார்த்தசாரதியுடம்பிலும் சரமாரிதனைவாரி தனிமாரிபோற் றாவினான், அவனொளிவில் காவியங்கண்ணனாகிய அர்ச்சுனநாயகன்.

இதுநல்லசமயமாகையால் ஒருவரும் இளையாமல் வருந்திச்சளையாமல் மனநொந்துளையாமல் வாடிக்களையாமல் வலுவுடனலசிலபலகணையேவி, செலவிட இடமிலையென அடல்தாவி, குலவிபயிரினில்மணியறுசாவி, குணமிலை அணிபடைக்குமாரரோடாவி, ஜெயம் ஜெயமென்றுநிருபருடன் போர்ப்பயன்பெற்று வீரப்பாடல்பாடும் வேளையில் கயரதுரங்கக்காலாளுடனே வயம்பெறுகன்னன் வந்தெதிர்த்துன்னி வாட்டமும் நாட்டமும் ஓட்டமுமாக கூட்டமாங்கணையால் வாட்டியதாலே சுரேந்திரன்மகனாகிய சுவேதவாகனன் குன்றக்குன்றக்கொன்று நின்று ஒருநாழிகைவரையிலும் அந்தக்கர்னன்செய்யும் உபத்திரத்தால் மதிமயங்கி ஓய்ந்து சாய்ந்து நின்று ஆய்ந்து உச்சாகங்கொண்டு உடல்கொதித்தெழுந்து உரங்குதித்ததிர்ந்து யுத்தமுனையை மெத்தவருத்தி செத்தபிணமாக்குந்திறங்கொண்ட வச்சிரக்கணையால் வள்ளலாகிய கர்னன் உள்ளம்வெதும்ப வாசமாலையணிந்தபுயத்தில் கூட்டி நாட்டி மாட்டியபோது உடல்வருந்தி அயர்ந்து திருந்தியதேரிற்பொருந்திச்சாய்ந்தான் கர்னனானவன், அதுகண்டு வெகுண்டு எவர்களுக்குமேலாகிய வில்லைக்கைக்கொண்டதனுர்வேதபுத்திரனாகிய அசுபத்தாமன் முனிந்துகனிந்த காலாக்கினியைப்போல் காண்டீபனுக்கெதிர்வந்து தகைந்து அழகிய மாநிலமும், குலவிய வானுலகும் சுலவியவாரிதியும் உலவியமாருதமும், நிலைகுலைய வெஞ்சி அஞ்சும்படிக்கு பலம்பொருந்திய பங்கஜபாணங்களைப் பலவாகத்தொடுத்து வெவ்வியமுனைகளைத்தீட்டி வில்லிற்கணைகளைப்பூட்டி விருதுநிலைநாட்டி மிகுபடைகளைவாட்டி யுத்தஞ்செய்யாநின்ற விஜயனுடைய மேனிமுழுவதும்

வெற்றிச்சரப்பணிகள்போற்றுளைத்து சாத்தகிவீமன் இவர்களிருவருடைய கேசாதிபாதமுதல் அங்கத்திலும் புங்கவங்களைப்பொருத்தி செங்குருதிபாயச்செய்து எப்புவனங்களுக்கு மிறையாகி முப்புரமெரித்தருளிய மூர்த்தியின்மைந்தனாகிய சுப்பிரமணியக் கடவுளைப்போற்றுலக்கிய அசுபத்தாமனானவன் அற்புதகுணமேருவாகிய அர்ச்சுனனுடைய ரதச்சாரதியென்னுஞ் செந்தாமரைக்கண்ணன் கைப்பற்றிய உருவுகோலையுமழித்து தளர்விலாமல் வெறித்துப்பார்த்து நெறித்து நிலைத்துநின்ற அசுபத்தாமனுடைய விற்றிறத்தினிலைகண்டு மற்புயங்கள்வீறிவிம்மேற்சென்றுமேறி வெகுகோபங்கொண்டவிஜயன் ஐயமுகக்கொடுங்கணைகளேவி அவனுடைய வில்லைமுறித்து கவசமழித்து மார்பைக்கிழித்தகாலையில் சோர்ந்து அயர்ந்துசாய்ந்து மாய்ந்தவர்போல் பெயர்ந்துபோயினான் நிலைகுலையத்தளேதியன் மைந்தனாகிய அசுபத்தாமனந்தவேளையில் தன்தந்தையைப்போல் சிந்துகேசாதிபனைக் காக்கவேண்டுமென்னுந் திடத்துடன் விடசேனன்வந்து மடமடவென்று தேர்செலுத்தி நேர்நிறுத்தி சிலையைவளைத்து, தினபதி-உடுபதி-தனபதி-கணபதி- சிந்தைகலங்க வெருவிசலிந்தைதுலங்க - பலவாகிய இந்திரக்கணைகளை உந்திச்சொரிந்து மந்திரக்கணைகளை வாரிப்பொழிந்து பேரமருடற்றிய பெருங்கொடையாளன்மைந்தனை பிரதாப ஜயவிஜயன்பார்த்து தேவவாளிகளிரண்டுசேர்த்து அவன் கோர்த்த நெட்டிலைச்சரங்களனைத்தையும் எட்டுணையேனுமில்லாமல் துட்டத்தனையாய்க் கெட்டழியும்படியாக கட்டப்படுத்தி வின்னாணிக்கட்டையுமழித்து வீரபட்டமுமொழித்து பாகன்சாகப்படுகளத்திற் கிடத்தி எட்டிபங்களும் நடுக்கங்கொண்டு கொட்டாவி கொள்ளும்படியாய் அந்த விடசேனனுடைய மார்பில் மின்னலாஸ்திரத்தைவிடுத்தான் விஜயவீரனானவன்.

அந்த அஸ்திரமானது துஸ்தரமாகவந்து மெத்தவருத்தி உரத்தைச்சிதைத்தபோது, விடசேனன்,உறக்கங்கொண்டு யுத்தமுனைநீங்கி ஓடாமலும் யுத்தஞ்செய்வதற்கு வாடாமலும் யுத்தவீர ருதவியைத்தேடாமலும் அமர்விலங்கி மயங்கி ஒருபுறத்தில் அசைவற்றுநின்றான் அப்போது புயவலிமைபெற்ற கிருபாச்சாரியும் துரியோதனமகாராஜனும் காளைப்பருவம்போன்ற இளையதம்பிமார் அநேகரும் மத்திரதேசத்தாருக்குத் தலைவனாகிய சல்லியனும் அவனைச்சுற்றிச்சூழுங் கொத்தாகிய உத்தமவீரரும் அர்ச்சுனனைத்தடுத்து வளைத்துக்கொண்டு கொடுஞ்சமர்விளைத்து கோபாலன்முதலிய குதிரைகளுமிளைத்து குருகுருக்கும்படியாய் மலைத்துவரும்போது அந்த அர்ச்சுனராஜனானவன் இணைக்கிணையாகத்தொடுத்த கோலாகலக்கோல்விசையினால் தேர்முதலாகிய சிலைகளுமுறிந்து மார்பைத்துளைத்த வடிக்கணைகளினால்வாடி சண்மூடி உதிரமோடி வாரியிற்கூடி யுத்தபூமியையுமூட மெத்தவருந்தி போயினார்கள், மற்றவருடல் துணிந்து - வீழ்ந்து-அழிந்து - ஒழிந்துவாடும்படியாய் அஸ்திரங்கள் பலவாகக்கொண்டு மோதினான், . அர்ச்சுனனானவன், செத்தவரல்லி மற்றவர்நின்று யுத்தம்பண்ண சத்துவமில்லாத தாஷ்டியையுணர்ந்து எத்திசைகளையு மூடிமறைந்த பெரும்பனியைவென்ற கிரணசூரியனைப்போல் குதிரைபூட்டிய தேரில் வராநின்ற பராக்ரமனாகிய பார்த்தன் சயிந்தவனை சாயங்காலத்துக்குள் வெல்லும்படியாக முடிவுகொண்டு மிகுந்தவேகமாய் வரும்பொழுது இன்னம் எவ்வளவு தூரத்திலிருக்கின்றான், சிந்துபதியென்று முனைபெற்றதன்தேரிலெழுந்து நின்று தலையைநீட்டிப்பார்த்தான் இப்படிக்குப் பார்த்தன்பார்க்கும்போது ஆகாயத்தில் பிரகாசித்து அசைந்தாடிக்கொண்டிராநின்ற சயிந்தவனுடைய பன்றிக்கொடியைக்கண்டு விண்டுக்கணை ஒன்றுதொண்டு கைக்கொண்டு அண்டர்முதலிய மண்டலமடுங்க அழித்தான் அழித்தான் சிந்துபதி, நமதுசபத நிறைவேறியதென்று, அகமகிழ்ந்து முகமலர்ந்து அடுத்த மன்னவர் யாவருந்தியங்க வடுத்தவிர் சிந்துமன்னனுமயங்க அந்தப்பன்றிக்கொடியைத் துண்டாகமுறித்துக்கெடுத்து அவனுக்கண்டையில் நெருங்கும்போது சூரியகுமாரனாகிய கர்ணனு மவனுடைய மைந்தனாகிய விடசேனனும் கிருபாச்சாரியும் குற்றமற்ற மத்திரதேசத்தலைவனும், அசுபத்தாமனும், விஷாக்கினியுடைய சர்ப்பக்கொடிதரித்த துரியோதனனும், அவனுடையதம்பிமார்களும், நெருங்கின்றநெடுஞ்சிலைவீரரும், அர்ச்சுனனால் அடிபட்டோடிய அரசர்கள்யாவரும்கிங்கிரர்-பப்பரர்-சீனர்-மருடர்-கிருடர்-கர்ணாடர்-கேகயர்-ஆரியர்-விரியர்-பூரியர் இவர்கள் முதலாகிய அரக்கரு நெருங்கி தங்கள் தங்கள் பிராணனுக்கொட்டிசயித்திரதனிடத்திற்கு;அர்ச்சுனனைப்போகவொட்டாமல் தகைந்தார்கள், விஸ்தாரமான பெருங்கும்பகளைப்பார்த்த விஜயனானவன் இவர்களைக்கொன்று சிந்துராஜனிடத்திற்சென்று அவனைவென்று வருகிறவரைக்கும்பொழுது நின்றிருக்குமாவென்று புந்தியின்மதித்துமேற்றிசைசென்ற சூரியனைப்பார்த்து ஏதேது பொழுதிருப்பதாய்த்தோணவில்லையேயென்று முகம்வியர்த்து பசுமைதங்கிய துளபமாலையணிந்த மேகநிறங்கொண்ட பக்தவச்சலனைப்பார்த்தான். இவ்விதமாக மனோவிகாரமான எண்ணங்கொண்டு மயங்கி தன்னைப்பார்த்த சவ்வியசாசியின் நினைவைத்தெரிந்துகொண்டு அர்ச்சுன தளராதே தளராதேயென்று தயிரியப்படுத்தி நீ எண்ணிய எண்ணஞ்சரிதான் வண்ணமாகிய ஏழுபச்சைப்புரவிபூட்டி காலங்கணித்து வருந்தேரினையுடைய சூரியன்மறையும்படியாய் அந்தியென்னுமாலைப்பொழுது வந்து சூழ்ந்தது இப்போது வந்துவளைத்த இவர்களுடன் அருஞ்சமர்விளைத்து வெல்லுவதற்கு சாவகாசமில்லை இனி நாம் வேறுவிதமெண்ணிப் பார்ப்பதினாற்காரியமுமில்லை ஆனால் ஒருதந்திரஞ்செய்யவேண்டியிருக்குது, அதாவது போதுபோமுன்னே சூரியகிரணத்தை என்னுடைய மாயையினால் மறைத்துப்போடுகிறேன் அவர்களெல்லாரும் சூரியன் அஸ்தமித்தானென்று மகிழ்ந்து மமதையடைவார்கள் அந்தச்சமயத்தில் சொல்லும்படியாகிய யுத்தத்தில் கொல்லும்படியாக விரைந்து முனைந்து யாவரையுங்களைந்து திடுக்கிடும்படியாய் திவ்யாஸ்திரங்கொடுத்து அந்தச் சிந்துபதிதலையை வந்தவேலைநிறைவேறியதெனச் சிந்திவிட்

க்கடவையென்று ஸ்ரீயம்பதியானவர், சமயமறிந்து யுத்தி
சொல்ல அந்த வாசகத்தை தனஞ்செயன்கேட்டு அளவி
றந்த சந்தோஷமுற்று சரிதான் சரிதானென்று உறுதியா
யுட்கொண்டு, மனோவேகத்திலும் மேலான வேகமாகிய
பலவாலிகளால் பக்கநின்றவர் யுத்தமுனையிற்புக்கி நின்ற
வர்நோக்கிக் கணைகளைத்தொடுத்து வந்தவர் கைக்காறரா
ய் நின்ற மிக்கோர்முதலிய யாவரையும் சக்கை சக்கையா
ய்ப்பெயர்த்து திரிநேத்திர தாரியாகிய முதல்வன் சர்வ
சம்மாரகாலத்தில் ருத்திராமிசங் கொண்டெழுந்து பல்
லிகாப்படுத்து முறைமைக் கொப்பாகப் பாரெல்லாம் ப
டபடத்து நடுங்கும்படியாய் எத்திக்கு வெளியில் எவர்க
ளை யெப்படிசெய்யவேணுமோ அந்தந்தப்படியே அர்ச்சு
னன் அடித்து அல்லோல கல்லோலஞ் செய்து அலக்க
ழித்து வருங்காலையில் ஆபத்பாந்தவாகிய அரிவாசு தே
வன் அர்ச்சுனன்பொருட்டிற் செய்த தண்ணளியாகிய கி
ருபையைச் சொல்லுகிறேன் கேளும் அரசர்க்கரசாகிய
அரசே யென்று, வைசம்பாயனர் சொல்லிக் கொண்டு
வந்தார்.

சமுத்திரத்தை ஆடையாக உடுத்த பூதேவியாருடைய
வருத்த நீங்கும்படி யாகவும் தெய்வத் தன்மையாய்
அவதரித்த பாண்டவர் களின் இடராகிய துன்ப நீங்
கும்படி யாகவும் சாய்ங்காலத் துக்குள் சயிந்தவனை
சம்மரிக்கிறே னென்று சபதங்கூறி அந்தச் சபதந்த
ப்பிப்போய் தழலில்விழ்ந்திறக்குஞ் சமயநேரிட்ட-தனஞ்
செயன்-சாகாமல் வாழும்படியாகவும் திருப்பாற்கடலையு
ம் சேஷசயனத்தையும் ஸ்ரீதேவிமுதலிய பெருமிதத்தை
யுந் துறந்து வசுதேவருக்கும் தேவகிதேவியாருக்கும் பு
த்திரனாகப்பிறந்த மாயோன் ஒற்றைச்சக்கரத்தையும் சப்
தமாவையுங்கொண்ட ரதம்பெற்றசூரியனை மாய்கையினு
ல் மறைக்கும்படியாய் தமது கைக்கிசைந்த சக்கரத்தை
அனுப்பினர் உடனே அந்தச் சுதரிசனமானது சுவாமியி
னுத்தாரப்படிசென்று சூரியனைமறைத்து அந்தரணகள
த்தின் உதிரச் சிவப்பைப்போல் மேற்றிசை யெல்லாம்
செவ்வானம்பரந்து திகழ்ந்ததுமாலை, கரும்பொன்னுகிய
அயத்தில் ரசத்தைப்பொருத்தப் பசும்பொன்னுகும் பா
ன்மைபோல் அருச்சுன னிமித்தமாக உலகத்திலுள்ளோ
ர் பலரும் விச்ஞானவந்த ளாகும்படிக்கு நயரசமாகிய
பகவற்கீதையை திருவாய்மலர்ந்தருளிய நாரணன் செய்
த காரணமறியாதவர்களாய் நாட்செய்யுந் தினநாத னுகி
ய சூரியன் ரதத்துடனே மேற்றிசையில் மறைந்துபோ
னுனென்று வலம்புரிமாலையணிந்த மன்னனும் அவனைச்
சார்ந்த மன்னரும்படைவகுத்திருந்த நால்வகைச்சேனை
மன்னரும் மகிட்சிகொண்டு ஆர்ப்பரித்தார்கள் ஜயத்திரத
னுனவன் இறந்துபோவோமென்றிருந்த பிராணபயமொ
ழிந்து பொழுதுபோய் விட்டதென்று பூரித்து இரதத்து
டன் வெளிப்பட்டு தலைநீட்டி செவ்வானமிகுந்த குடதி
சையாகிய மேற்குத்திசையைப்பார்த்தான்-அந்தக்காலத்
தில் திருமாலானவர் ஜெயங் கொள்ளும் தேவதத்தனைப்
பார்த்து உன்பகைவனுகிய சிந்துதேசனைக் கண்டையா
வென்றுகாட்டி தலையைநீட்டி வெளிவந்திருக்கின்றுன்இ
துநல்லகாலம் அர்ச்சுனு இதல்லாமல் இன்னொருபொல்
லாத ப்ரமாதமிருக்கின்றது அதென்னவெனில் மதிப்பி
ற்சிறந்த தன் மகன் தலையைவெட்டி எவனொருவன்கையா
ல் நிலத்திற்றள்ளுகிறுனே அவனுடைய தலை அநேகஞ்
சுக்கலாய்ப் போகக்கடவதென்று சத்துரு நாசமாகிய சூ
ரியமந்திரத்தை உச்சரித்து மனவுறுதி வலுக்கொண்டுஇ
ந்தச் சயத்திரதன் றந்தையாகிய சிந்துபதியானவன் தன்
னெண்ண நிறைவேறும்படியாய் சிமந்த பஞ்சகமடுவில்
தர்ப்பணஞ்செய்கின்றுன் ஆதலால் போதுபோச்சுதென்
னும் பூரிப்புடன் உல்லாசமாய் வெளிப்பட்ட இந்தச்சயி
ந்தவன் தலையை நீ வாங்குவது பெரிதல்ல அறுபட்டஇ
வன்தலையானது சிமந்தபஞ்சக தீரத்தில் இருக்கின்ற இவ
ன் றந்தையாகிய சிந்துராஜன்கையிற்போய் விழும்படியா
ய் உன்கரத்திற்கிசைந்த கணையைக் கொண்டு ஜாடக்கட
வையென்று நாரணன்சொல்ல நரனுனவன்கேட்டுவாட்
டுப் பலித்ததென்று நானுவித மகிட்சி கொண்டு வரத்தி
னுற்பெற்ற விஜயகாண்டீபத்தை ஊர்த்தினுற்பிடித்து ஆக
ர்ணபரியந்தம் வாங்கியிழுத்து ஷ்டங்காரம் பண்ணி-ஆதி
ரொண்டரங்க னருளிய, பாசுபதாஸ்திரத்தைப் பணிந்தெ
டுத்து பலமலருடன் பத்திரபுட்ப சந்தனுக்ஷதையுங்கொ
ண்டு, பூசித்து விசுவாசித்து தன்மன நேசித்த விதத்தை
யோசித்து தூபதீபங்கொடுத்து சிந்துபதிதலைக்கு லக்ஷ
யமாகப் பிடித்துத் தொடுத்துவிட்டான்.

உடனே, பாசுபதாஸ்திரமானது உலகங்குலுங்க உரக
னடுங்க-உவரியொடுங்க-உம்பரடங்க-உம்பலமடங்க ஓதி
மமுதலிய மலைகள்குலுங்க உடுபதிகலங்க உலகுள்ளோர்
கண்பிதுங்கும்படியா யெழுந்து சணித்தவன்றலையைத்து
ணித்துவந்தது. (இவ்விதமாகப்) பாசுபதாஸ்திரந்துண்டி
த்த தலையை, பூமியில்விழவொட்டாமல் வாயுக்கணை மு
தலாகிய சரங்களை மேலுமேலுந் தொடுத்து சிமந்த பஞ்
சக மடுவிலிருந்து ஜலத்தையள்ளி தர்ப்பணம் விடுகின்ற,
சிந்துராஜனுடைய, இருகரத்திலும் வீழும்படியாய்ச்செய்
தான் அப்படியே விழுந்தபோது அந்த சிந்துராஜன் திடு
க்கிட்டு தன்மகனுடைய தலையென்றுணராமல் ஐயமாய்
க்கையை விரித்து நிலத்திலிருந்த ஜலத்தில்விடுத்தான்-
அந்தத்தலையை நிலத்திற் போட்ட தக்ஷணத்தில் சிந்து
தேசாதிபனுடைய தலைவெடித்துச் சாய்ந்து மாய்ந்தான்
அந்த சமாச்சாரத்தை இங்கும் அங்கும் சங்கதிதெரிவித்
துக் கொண்டிருந்த தூதர்களோடிவந்து-சயிந்தவன்-தலை
யானது அவன் றந்தைகையில் வந்துவிழுந்து அந்தச் சி
ந்துபூபதியு மிறந்தானையாவென்று துரியோதனன்முதலி
ய அரசரிடத்திற் சொன்னுர்கள்-அவர்கள் மொழியைக்
கேட்டு பெருமைதங்கிய மாயோனுடைய மகாமாயமெ
ன்று தெரிந்துகொள்ளாமல் சூரியனஸ்தமித்தானென்று
முன்னுதாய் முகமலர்ந்து-அகமகிழ்ந்து சுகமொழி மொ
ழிந்து உடல் பாரித்து-உள்ளம் பூரித்து, முகத்தெளிவும்
அழகுங்கொண்ட துரியோதனன் சயிந்தவன்பட்டானெ
ன்று சேதிகேட்டு அந்தச்சேதி காதிற்புகுமுன்னே அவ
ன்றந்தையாகிய சிந்துபதியும் உயிர்விட்டானென்று அப்
போதே கேள்விப்பட்டான், அந்தச்சொல்லைக் கேட்டவு

டனே இளியாவரும் பட்டாரென்று அயர்ந்துபொல்லாங்கில் மூழ்கினவனைப்போல் வருந்தி ஐயோ,அர்ச்சுனன் அக்கினியில் விழ்ந்திறப்பான் அதைக்கேட்ட மற்ற நால்வருமுடிவார்கள் நமக்கொரு பகையுமில்லையென்று எண்ணிய எண்ணங்கெட்டு எரிபட்ட புழுவைப்போல் என்னபாடுபட்டான், துரியோதன மகாராஜன் அந்தோ-அந்தோ, அவன்பட்ட வருத்தத்தை என்றொருவனும் சொல்லிமுடியாது இறையவனே, இப்படியிருக்க, கர்னராஜன், சவுபலராஜன், துஸ்வாசனராஜன், துரியோதன ராஜன்முதலாகிய நால்வருங்கலந்து சூரியனஸ்தமித்தால் தீயில்விழுந்திறப்பேனென்று சொல்லியமொழி தப்பி சிந்துராஜன் சிரத்தைத் தறித்துவிட்டான் சுவேதவாகனனாகிய அர்ச்சுனன் பார்த்தீர்களா இந்தமொழி - லேசாகப் போவதல்லவே என்று ஆர்ப்பரித்துத் துள்ளினார்கள்,அந்தவேளையில் எமதுபெருமானாகிய அரவணைச்செல்வன் மாயமாகிய இருட்டுடன்கலந்து மறைக்கும்படியாய் ஆக்ஞாபித்த சக்கரத்தை நீக்கிவிட்ட உடனே பளிச் சென்று பிரகாசிக்கும் கிரணசூரியனை யாவருங்கண்டு அடடா இதென்ன விந்தையா யிருக்குது சப்தபுரவிபூட்டிய சயந்தனமுடைய இணையிலாத தபனனானவன் இன்னமொரு பனைப்பொழு துண்டென்றிருக்கின்றானே ஐயையோ,அப்பா இது பெருமோசமா இருக்குதே என்று துரியோதனன்முதல் யாவருங்கலங்கி ஒன்றுந்தோன்றாமல் மாண்டார்போலிருந்து மீண்டார்போற் றெளிந்தார்கள். துரியோதனராஜன் சரியாகிய மதிகலங்கி விதிமேவிய தலைகுனிந்து அதிபடியாகிய நிலைதுலங்கி சந்தேகாஸ்பதமாய் சில மொழிகள் கேட்கத்தொடங்கினான்-ஓகோ, விவேக வேதியர்முதலாகிய மன்னவர்களே இந்தச் சூரியன்மறைந்து பிரகாசித்ததற்குக் காரணஞ்சொல்லுங்கள்-அல்லது நான் கேட்பதற்கு ஞாயம் விள்ளுங்கள்-மிகுந்த விசாலமும் ஆழமும்-அகலமும் ஓசையுமுடைய மேற்கடலில் இந்தச் சூரியன் அஸ்தமித்து விழ்வதற்குமுன்னே-கேதுவென்னுஞ் செம்பாம்பானது வெகுண் டெழுந்து விழுங்கி இருக்குமா வென்று மிகுந்த வேகமாய்க் கேட்டான், அவடத்தி லிருந்த நாலாய்ந்த மேலோர் சொன்னார்கள்.

ஐஸ்வரியமுடைய மகாராஜனே கேளும், தேவரீரெண்ணியபடிக்கு சூரியகிராணமா யிருந்தால் கேதுதொடருவான் மற்றக்காலத்தில் தொடமாட்டான் அப்படியே சூரியகிராணமென்று யோசிப்போமாகில் இந்தஇரவிகூடிய அமாவாசையா யிருக்கவேணுமே அப்படி யிருந்தால் உமது இஷ்டப்படி நினைக்கலாம் அப்படிக்கில்லாமல் இன்றுசதுர்த்தசியும் நாளைவரப்போறது பௌரணையுமாதலால் சூரியகிராணமென்று சொல்லப்படா தென்றார்கள்-அந்தவார்த்தையைத் துரியோதனன்கேட்டு நல்லது அப்படி யல்லவென்றால், தன்மகனாகிய அர்ச்சுனன் சபதந்தப்பி அக்கினியில் விழ்ந்திறந்து போகப் போறானென்று புத்திரவாஞ்சையினால் சப்பமேகங் களையும் அனுப்பி நீங்கள்போய் சூரியனைமறைத்து பொழுதுபோனதாய் மயக்கக்காட்டுங்களென்று தேவேந்திரன்சொல்ல அவனுத்தரவின்படி மேகங்கள்வந்து மறைத்திருக்குமாவென்றான், இந்தக் கேள்விக்கு அவடத்தி லிருந்த பெரியோர்சொன்னார்கள், மன்னா. பிரானையொத்த மன்னவர் பிரானேகேளும் மேகங்களானது சூரியனைமறைத்தபோதிலும் சூரியவெப்பமுங் கிரணமும் அடங்கிஇருட்டிக்காட்டுமேயல்லது போதுபோய்விட்டதாய் செவ்வானமிட்டு சூரியபிம்ப மறையமாட்டாதென்றார்கள்-அப்படி யானால் நமக்கு வஞ்சமாகியும் பாண்டவர்க்குத் தஞ்சமாகியும் இராநின்ற அரியோன் அக்கறையாக சக்கரத்தினால் மறைத்திருப்பானோ ஒருவேளை உண்டென நினைக்கிறேனென்று வணங்காமுடிபெற்ற துரியோதனராஜன்கேட்க ஐயா, கோடிசூரிய ப்ரகாசமுள்ள சக்கரத்தை இந்தச் சூரியன் மறையும்படிக்கு விட்டிருந்தால் இவ்வுலகமெல்லாம் கண்கூசும்படி ஜொலித்துக்கொண்டிருக்க வேண்டுமேயல்லது சூரிய கிரணத்தை குன்றச் செய்து மாலைப் போதுவந்து மறைக்க மலைவாயில்விழுந்த தன்மையைப் போற் சரியாகக்காட்டிய செவ்வானத்தின் வண்மையை யோசிக்குமிடத்தில் சக்கரத்தினால் மறைத்ததாக நினைக்கக்கூடாதே என்றார்கள் அவர்கள் சொல்லிய முகாந்திரத்தைக்கேட்ட துரியோதனமகா ராஜனானவன் மனங்கொதித்து நல்லது நான்கேட்ட கேள்விகளையெல்லாம் ஞாயஞ்சொல்லித் தடுத்துவிட்டீர்கள், அப்படியானால் சூரியன் ஒரு பனைப்போதாக இருக்கும்போதே மாலைப்போது கவிய செவ்வானமிட்டு இருள்வந்து சூழ்ந்ததற்குக் காரணமென்ன சொல்லுகிறீர்கள் சொல்லுங்களென்று நந்தியாவட்ட மாலையணிந்த நராதிபன் கண்கறுத்து உள்ளம் வெறுத்துக் கேட்டான் அந்தக் கேள்விக்கு வெள்ள மாகிய வேதியர்முதல் சிலவேந்தருங்கூடி உள்ளத்தைச்சொல்லுகிறோம் எங்கள்பேரில் எள்ளத்தனை வெறுப்பு மில்லாமற்கேளும் வள்ளலே என்று சொல்லத் தொடங்கினார்கள்.

அதென்னவெனில், நல்லோர் பெரியோர்களைத் திடுக்கிடச் செய்து அதனால் அவர்களுள்ளம் வேறுபட்டுப் பேதிக்குமாகில் எல்லாப்பொருளும் தாறுமாறு பட்டுப் போவதும் அல்லாமல் இரவும்பகலாம் பகலு மிரவாகும் இதைக்குறித்து வேறே தருமம் விசாரிக்கவேண்டியதில்லை வேந்தனே என்று சொல்லி மேலுஞ்சொல்லுகின்றார்கள், ஐயா ? நாமெத்தனை மெய்யாய்ப் பாடுபட்டாலும் காரியமில்லை ஏனெனில், அர்ச்சுனனுக்குத் தேருஞ்சாரதி யானவன் தன் மார்பில் ஆயுதத்தைத் தாங்கி உபாயத்தால் வருணகுமாரனுடைய பிராணனை மாய்ப்பித்தான் ஒருமந்திரத்தை உபதேசித்து துரோணாச்சாரியரால் நீர்பெற்றணிந்து வந்த சாலிகவசத்தைப் பொடியாக மாற்றிவைத்தான் பத்மவூகப் பந்திப்பாகிய சேனைகளெல்லாம் மயங்கித்தியங்கி விழும்படியாய் பாஞ்ச சன்யத்தை முழக்கினான் பனைப்பொழு திருக்கும்போதே சூரியன் மறையும்படியாய் இப்போது இந்திரஜாலஞ் செய்திருக்கிறான் இப்பேர்ப்பட்டவன் பக்கத்துணையும் உதவியுமாய்க் கிடைத்திருக்கும் போது இந்திர குமாரனாகிய சுந்தரன்-ஜெயம்பெறாமல் இன்னமெவர்கள் ஜெயம்பெறப் போகி

ரூர்கள்-இந்து குலத்தோன்றலாகிய ஏந்தலேயென்று எல்லோரு நின்று ஏக்கங் கொண்டார்கள்-அந்தச்சமயத்தில் இந்தவார்த்தைகளை யெல்லாம் மனங்கொண்ட மன்னர்க் கிறையாகிய துரியோதனராஜன் மனமழன்று வயிறெரிந்து வாள்விழி சிவந்து மகத்தாகிய துக்கத்துடன் பெருமூச்செறிந்து வாய்விட்டுச்சொல்லுகிறான் - கேளுங்கள் என்னிதயம்போன்ற இஷ்டர்களே-இந்த மகாமாயக்கிருஷ்ணனானவன் கஞ்சனுடைய காராக்கிரகத்திற் பிறந்து கானவராகிய இடையர் வீட்டில் வளர்ந்து கன்றுமுதலாக மேய்த்து ஆயர்மனைதோறும் பாலுந் தயிரும் வெண்ணெயுந் திருடியுண்டு ஆச்சிமாரெல்லாம் அசோதையினிடத்திற்சென்று என்னடி அம்மா இங்கேவந்தால் இந்தக்கிருஷ்ணன் பாச்சி சோச்சி யென்கிறான் அங்கேவந்தால் பானைபானையாய்-பால்தயிர் வெண்ணெய்களைகொள்ளையிடுகிறானென்று பிராதுசொல்லிக் கொண்டபோதுஅந்த அசோதையென்னும் இடைச்சிபிடித்து அணைக்கயிற்றாலணைக்க-கட்டுப்பட்டு அடியும்பட்டான் இதல்லாமல்பூர்வத்தில் அந்த முல்லைநிலத்தாரெல்லோரும் முல்லை நிலத் தலைவனாகிய இந்திரனுக்கு வருஷந்தோறும் ரேவதிகசயிலத்தினிடத்தில் பொங்கலிட்டுப் படைப்பதைமாற்றி கோவர்த்தனகிரியினிடத்தில் பொங்கலிடச்செய்து தானுங்கூட இருந்து சட்டமாய்ச் சாப்பிட்டான் இந்தச்சேதியைத் தெரிந்து கொண்ட தேவேந்திரன் கல்வருஷம் வருஷிக்கும்படி மேகங்களுக்குக் கட்டளையிட்டபோது காற்றுமழைபாற்கலங்கி அந்த அண்டரெல்லாரும் விசனங்கொண்டு பெண்டு பிள்ளைகளுடன் கோவென்றலறி என்னடா அப்பா கிருஷ்ணாவென்று கேட்ட காலத்தில் உங்களிடத்தில் பொங்கற்பூசை வாங்கிக் கொண்ட தெய்வம் எப்படி உங்களை ரட்சிக்காமற்போகும் பார்ப்போம் வாங்களென்று அழைத்துப்போய் நிறுத்தி கோவர்த்தன கிரியைக் குடையாயெடுத்து மழையைத் தடுத்து இன்னம் பலபல விந்தைகளெல்லாஞ் செய்து உலகிலுள்ளவஞ்சனை யென்னுஞ் சரக்குகளெல்லாம் நிறைந்த கப்பலாகிய கொடியபாவியானவன் நான் படைத்துணைகேட்கப் போயிருந்த நாளையில் அப்பவும் என்னை மோசஞ்செய்து அர்ச்சுனனுக்குச் சாரதியாய் ஒத்துக் கொண்டேன் ஆயுதமெடுத்து அமர்செய்யேனென்று எனக்கு உறுதியாய்ச் சொல்லிய வார்த்தைதப்பி உனக்கோ எனக்கோவென்று பகைத்துப் போர்புரியும் நடுச்சமயத்தில் சக்கரத்தைவிடுத்து சூரியனைமறைத்து என் மைத்துனனைக் கெடுத்து அர்ச்சுனனைத் தப்பிவிடுத்தானே இனிமேலும் இவனென்ன செய்யமாட்டான் இவன்சொல்லைநானெப்படிநம்புவேன்-தெய்வமே இப்பேர்ப்பட்ட வஞ்சகத்தியருக்கு நீ என்னகதி அமைப்பாயோ, நான் அறியேன் என்று இரைந்தெழுந்து விரைந்துவந்து ஓராழித் தேருடைய சூரியனானவன் அஸ்தமான மாகுமுன்னே போர் விளைத்து பாண்டவரையுங் கொல்லுகிறேன் இல்லாவிட்டால் அவர்கள் கையால் நானுமிறந்துபோகிறேன் இதுநிச்சய நிட்சயமென்று சகோதரர் முதலாகிய சேனைகளுடன் சென்று பாண்டவரை-வளைத்துக்கொண்டான்.

இவ்விதமாகச் சொல்லியெழுந்ததுரியோதன மகாராஜனுடைய வாக்கியத்தைக்கேட்டு-கொடித்தடந்தேரேறிய கோவேந்தரெல்லாரும் தங்கள் தங்கள்மட்டும் ஒவ்வொருசபதங்கூறிக்கொண்டு மற்றத்தேசபாஷைமன்னராகிய ஜெயவீராளுடன் சேனைகளையும் அழைத்துக் கொண்டு ஒருகூறிணைப் போதிற்சென்று தனித்தனிச் சண்டைசெய்தார்கள் அப்போதந்த யுத்தகளத்தில் ஆற்றுப்பெருக்கம்போல் அலையெறிந் தோடுகின்ற ரெத்தவெள்ள மானது ஒரு நிமிஷத்தில் சேறுகவறண்டு திரண்டுருண்டு பொடியாகும்படியாய் தேர்செலுத்தி வந்த வீமார்ச்சுன சாத்தகி மூவரும் தங்கள் சேனையைவளைந்து சண்டைக்கு வந்து தடுக்கும் தண்டைக்கண்டு தேருடன் தேர் நெருங்கி செந்தழல்கக்கிய கொந்தலர்க் கணைகளை திசையெங்கு நிறைய இறைத்து இவர்களுடனெதிர்த்து மாறுடிப் போராடவந்த வயவீரர்தங்களை வானகஞ்சேர்ந்து வாழும்படிக்கு அனுப்பிவைத்தான் அவனுரெனில், பவள மலைமேல் பாற்கடல்வழிந்த பான்மைபோல் திருநீற்றின் துளிதத் திருமேனிச்செல்வனாகிய ஒப்பற்ற சிவபெருமானுடன் வில்யுத்தம் மல்யுத்தமுஞ்செய்து வென்று பாசுபதமுதலாகிய பாக்கியங்களும்பெற்ற பற்குனனென்னும் விற்பனன் மறுபடியும், பின்னும் முன்னும் பாணங்களைப் பொழிவதினால் கிருபாச்சாரியருடைய மார்பில் மூன்று கணை சென்று ஊன்றி பிராணவருத்தம் விளைத்ததின் பேரில் கிரியாண நமக்கென்று முடிசோர்ந்தயர்ந்து தேரின்பேரில் வீழ்ந்தார். மாமனிளைத்ததைக்கண்டு பரிந்துவந்த அசுபத்தாமன் ஒருகணைக்கு ஆற்றமாட்டாமல் வில்லை நிலத்திலூன்றி யுத்தஞ்செய்யுந் தலத்தைத் தாண்டி புறங்காட்டி ஓடினான் உரகக்கொடிதரித்த துரியோதன மகாராஜனானவன் தன்னுடன்வந்த நரபாலருடன் தேரிழந்து வில்லிழந்து சபதஞ்சொல்லிவந்த சொல்லிழந்து கல்லுறுத்தும் பூமியிற் காலோட்டமாகத் தோற்றுப்போனான் கதிரவன் புத்திரனாகிய கர்னன் எதிர்த்து சண்டைசெய்யவராமல் இருந்த இடத்திற்றானே இருந்து நடந்த காரியங்களைத் தெரிந்துகொண்டோடினான் இப்படிக்குச் சத்துருக்க ளெல்லாரும் முதுகிட்டோடச்சாடிய அர்ச்சுனன் சந்தோஷமில்லாமல் முகம்வாடி தன்னுடைய கணைபட்டு பொன்மலைபோற் சாய்ந்து அயர்ந்து தேரின் மேல்வீழ்ந்த கிருபாச்சாரியருக்கு என்னமோ ஏதோவென்று உள்ளந்தளர்ந்துவாடி கண்ணீர் வெள்ளமாயோடநின்ற விஜயனுடைய நிலையை-பச்சைவண்ணப் பரந்தாமன்பார்த்து என் மச்சினனாகிய அர்ச்சுனா அந்தக் கிருபாச்சாரியருக்கு ஏதொரு கெடுதியுமில்லை அவர் சிரஞ்சீவியென்று, கலங்கிய காண்டீபனைத் தெளிவித்துத் தேற்றி தன்னுடையகையால் மார்புடன் அணைத்துத்தழுவி கோதிலாப்பாக்கிய பற்குனமணியே அநேகநாள் - எண்ணிச் சொல்லினும் அளவிடப்படாத குருசேனையைக் குறைத்து குறித்த சபதத்தைமுடித்து வென்ற கோவே-உனக்கு நிகராரொன்று உந்தி பூத்தோனென்னும் உவணமுயர்த்தோன்சொல்ல அர்ச்சுனன் அந்த வாசகத்தைக் கேட்டுரோப்புலர்ந்து நாரண ஆரண பரிபூரண காரண னென்

னுந் திருநாமம்வாய்ந்த எங்கணுதனே தேவரீருடைய திருவடிக்கிருபையினல் ஜெயங்கொண்டதல்லது என்னுல் வென்றேனென்னும் இருமாப்பு ஈஷத்துவமுமில்லை என்னுயிர்க் குயிராகிய இறைவனே என்று இறைஞ்சிக் கூற இருவருமகிழ்ந்து காலைமுதல் - இதுவரையிலும் என்னமோ ஏதோவென்று கலங்கியிருக்கும் உமது தமயனுகிய தருமராஜ னிடத்திற்குப் போகலாம் வாருமென்று புண்டரீ காக்ஷன்சொல்ல நல்லதென்று வண்டணிமாலையான் உடன்பட்டு நாகிபர் புகழுஞ் சாத்தகியும் வாயுபுத்திரனும் இருபக்கத்தில் நிறைமணிப் பதக்கம்போல் வரவும் தன் மனதுக்கிசைந்த உத்தமோசா உதார்மனென்னும் மைத்துனராகிய சக்கர ரக்ஷகாள் மேற் சொல்லிய பதக்கத்துக்கு முத்துத் தொங்கட்டம்போல் அருகோடிவரவும் அனந்த கல்யாண குணபூஷணை அலங்கார ஆனந்த சந்தோஷச்செருக்குடன் அர்ச்சுனராஜன் நடுநாயகமாயிருக்கவும் ஆதிமூலக்கடவுள் முன்னணி மணியாய் தேரை நடத்திவரவும் குறைந்தபோரங்க முண்டத்துடன்சிறந்த குவங்கங்க ளாடுமிடமும் அரிதாகிய பிணங்கள்-குவிந்தமேடும்-மிகுதியாகக்கூடிய பைசாசக்கும்புகள் பேரோசையுடன்பாடியாடிய தடமும்-காக்கைபருந்து-கழுகோடு பலபறவைகள் கத்திப்பறந்து சுற்று பிணங்களைக்கொத்திக் கத்திக் திரியுமிடமும் சலசலப் பேரோசையுடன் சமுத்திரம்போ லோடுகின்ற உதிரப் பள்ளங்களினிடமும் நாடி நாடி சத்துருக்களுண்டோவென்று தேடித்தேடி பார்த்துப்பார்த்து அகப்பட்டபேரைக் கரணையாடிவந்து துரோணச்சாரியருடன் மிகுந்தயுத்தம்விளைத்து அவரிடத்தில் போர்செய்த ஜெயமாகிய பூரிப்போசையுடன் புயமிரண்டிலும் லட்சுமியைக் கொண்டு நிற்கின்ற தருமராஜனுக்கெதிரிற் சென்று ரதம்விட்டிழிந்து கிருஷ்ணர்ச்சுனுள் முதலியயாவரும் தீர்க்கதண்டமாய்ப் பணிந்து நின்றார்கள் தனஞ்செயன்சொல்லிய சபதப் பிரகாரம் சிந்துபதியழிந்த செய்கையை இவர்களுக்கு முன்வந்து தூது சொலலத்தக்கவர்கள் சொல்ல அந்தவார்த்தை இருசெவியினும் அமுது சுரப்பதைப்போற் கேட்டு சதுர் பெற்றோங்கிய இருபுஜங்களும் விசிட்டுச்செல்ல மகிழ்ந்திருந்த தர்மராஜன் இவர்களைக் கண்டவுடனே சூரியனைக்கண்ட தாமரைக் கமலம்போல் அழகிய முகமலர்ந்து எதிர்கொண்டுசென்று கிருஷ்ணர்ச்சுனுள் இருவரையும் மார்போடுறுக அணைத்து தழுவிப்புகழ்ந்து தேகமுழுமையும் நிணசசேறும் ரெத்தமுந் திவலை திவலையாய்த் துளித்திருக்குந் தேககாந்தியையுடைய பெருமானுக்கு அளவில்லாத பிரியவசனங்களைச்சொல்லி என்னனுசனைக் காத்துக்கொணர்ந்த என்னப்பனே என்று பெருமையிற் சிறந்த முரசக்கொடியோன்பேசி வாயுபுத்திரனுகிய வீமசேனனை வாரிச்சேர்த்து மாயனிளவலென்னுஞ்சாத்தகியை வயிற்றிலணைத்து பக்கத்தினிற்கின்ற காயுந் தன்மையும்-கனற்பொறியும்-கக்குகின்ற கடுங்கட் கணையாராகிய உத்தமோசா-உதார்மன் இருவருக்கும் இங்கிதமாக இனிமையுரைத்துதன்குலந்திரும்படியாய் செந்தாமரைக்கண்ணனுடனேசிலவார்த்தையை நேசவிசுவாசமாய்ப்பேசி இற்றைப்போரில் வெற்றிவயம் பெற்றுவராநின்ற உம்மைப் பார்ப்பதற்கு என்கண்களானது பரிசுத்த பாக்கியமான தவங்கள்செய் திருந்ததென்று தர்மசொரூபியாகிய தருமனிசன்சொல்லி, இன்னம் பலவாறுகிய இங்கிதவார்த்தை பேசிக்கொண்டு இன்பத்துடனிருந்தார்.

இதிப்படியிருக்க, அர்ச்சுனனுல் அடிபட்டு நிலைகெட்டு முதுகிட்டோடிய அரசர்க்கரசாகுந் துரியோதன ராஜன் மெத்தப் பலங்கெட்டு யுத்தநிலம்விட்டு ஓடிய படைஞருடன் திரும்பி தனக்குச் செயம் வராதேனு மென்று சாபிகவசர் தரித்தனுப்பிய தனுவாரியனிருந்து சண்டைசெய்யாநின்ற சதுரங்கப்படையின் பங்திப்பையுடைய சுமர்முனைக்குவந்து மனநொந்து சேனபதியாகிய ஐயா,மின்னெளிபோலும் பொன்னெளிகாலும் விதானமுடிசிறந்த-சந்துவேந்த னிறந்த விதத்தைக்கேளுமென்று விளம்பி மதத்தயானைபோல் மனநொந்து நின்றுன், இவனுரொனில், நாடுமுதலிய வீடு கொடுத்தாலும் அவர்களுக்கு ஈடல்லவென் னும் பெருமையிற்சிறந்த பாண்டவர்கள் தாங்க ளிருப்பதற்கு ஐந்துவீடாகிலுங் கேளுமென்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் தூதனுப்பியபோது ஈயிருக்குமிடமும்-இல்லையென்றுரைத்த பெரும்பாவியானவன், சிந்துபூபதியும் தலைவெடித் திறந்தானென் றுரைத்த-செயல்களெல்லாம்-ஆசானுகிய அந்தணன்கேட்டு-அரவக்கொடிக் கதிபனுகிய அரசனை நோக்கி அரசே உனக்கொருமர்மஞ் சொல்லுகிறேன் எப்போதும் தர்மம் வெல்லும் பாவந் தோர்க்கும் எத்தனைவித பத்தாம் பண்ணினுலும் காரியமில்லையென்று உன்மனதுக்கு-நேராய்த் தெரிந்துகொண்டாயல்லவா உங்கள் பாட்டனுகிய வீஷ்மரும் நாதுவந்த நந்த நந்தனன் முதலியபேர்களும் சொல்லிய நன்மொழியெல்லாம் இழந்து இளையோராய் தன்னைப் பணிந்து வாழும் தன்மைபெற்ற தாழ்ந்தபேர்களைச்சேர்ந்து அவர்களுரைத்த உரைவழிநாடி இவ்விதமாகிய பழிதேடிநின்ற உத்தமனே ஆகிலும், உன்னை வெறுப்பதுந் தகுதியான காரியமல்ல எதுவும் ஊழ்வினை முறைமையென் றுணர்ந்தோம், அப்படியிருக்க நீ - அதைச் சற்றேனும் யோசிக்காமல் என்னை வெறுத்துப்பேசுகிருய் இதனுல் உனக்கென்ன லாபமுண்டு இமயவர்புகழும் வேந்தலே, இப்பவும் நம்மைவென்று சென்ற நரன்முதலாகிய பேர்களை நாம் போய்வளைத்து பலத்துடன்மோதி-பாண்டவரில் ஒருவனையேனு மடித்து-அல்லது, கைப்பிடியாய்ப்பிடித்து நமக்கு நேரிட்டிருக்கிற வெறுப்பைத் தவிர்த்துக் கொண்டு அப்பால் நாம் வெற்றிபெறுவோம், புறப்படுங்களென்று துரோணச்சாரியர் சொல்ல - இதனுற் கொஞ்சந் தயிரியமேலிட்டு துரியோதன மன்னனும் மனமெலிவு நீங்கித் தனக்குச் சமானமான கல்வியிற்சிறந்த சூரியகுமாரனிடத்திற்சென்று அண்ணு-வில்வேதியனை யடுத்து என்கதி யிப்படியாச்சேயென்று விளம்பினேன்-அதற்கவர் சொன்னதாவது-மறுபடியும் அணிவகுத்து படையோடு சென்று ஐவரை வளைத்து காரணப் படிவிற் போர்விளைத்து-ஒருகைபார்த்து விடுவோமென்று உறுதியாய்ச்சொல்லுகிறுர், இவையெல்லாஞ் சரிதான்-இந்தச்சொல்லை நானே

ப்படி நம்புவது நமது மைத்துனனைக் காக்கிறேனென்று இன்று காலைப்போதில் நெடுங்கடல்போல் நெருங்கிய பூரணச்சேனைகளைப் பிளந்துப் பிளந்து ஐந்துவித வியூகபங்கியணிந்து அர்ச்சுனனை-உள்ளே புகவொட்டாமல் அமர்புரிந்து சிந்துராஜனைத் தேறச்செய்கிறே னென்றார்-இதோ ஜீவனுடன் தேற்றி விட்டோமல்லவா இது ப்ரத்தியக்ஷமாயிருக்க காட்டிற் கந்தமூல பலங்களைத்தின்று காலங்கழித்துக்கொண் டிருக்கும்-வைதிக சாந்தஸ்த தேசிகன்வாய்மையை எவ்விதத்திற்றெளிந்து-நம்பத் தக்கதென்று வணங்காமுடிமன்னன்சொல்ல அங்கதேசராஜனென்னும் ஈகையாளன் சொல்லுகிறான், திங்கள்குலக் கொழுந்தாகிய மங்களாகரனே கேளும்-நெட்டையாகியவரிவில்லை வட்டமாய்வளைக்குங் குருவாகிய துரோணரால் ஏதொருவஞ்சனையுமில்லை-இவர்-நமது சேனையை பலம்பண்ணியதற்கு யாதொரு கலனுமில்லை அந்த அர்ச்சுனன் கற்ற சாஸ்திர நுட்பங்களினாலும், அவன்பெற்றிருந்தமேலாகிய வரங்களினாலும், நமது கிரகசார காலபலஸ்திரங்களினாலும், வெப்பமாகிய போரொட்டி முனைந்து பூர்வவினைவல்லமையால் யாவரும், (சித்திரப் பதுமைபோல்) அசைவற்று நிற்கக்கண்டு ஜெயம்ஜெயமென்று தன்னெண்ண நிறைவேற்றிக் கொண்டு போனான்-மேலும், என்னேரமு மெரிந்து முடிக்கொண்டிருக்கும் அக்கினிக் கிருப்பிடமாகிய ஆரணியத்தில் பனிரண்டுவருஷம்ஒட்டி வைத்தோம் வளப்பமாகிய நல்லநாட்டில் சவுக்கியமாக நலம்பெற்றிருந்த பாக்கியவான்களில் எத்தனை பேரோ செத்தார்கள், காட்டில் கசங்கி வருந்தியிருந்த பாண்டவர்களில் ஒருவராவது சாகலாகாதா, முன்ன முன்னம், அன்னத்தில் விஷங்கலந் தூட்டி வைத்தோம், ஆற்றிற் கட்டிப் போட்டோம், வசிரட்டிவைத்தோம், அரக்குமாளிகை கட்டி குடியேற்றி அந்தவீட்டை நெருப்பிடவைத்தோம் பூதத்தைவிட்டோம்-நம்மால் கூடியவரையிலுஞ் செய்து வஞ்சனையில்லாமல் பார்த்துவிட்டோம், இவைகளினால், பாண்டவருக்கு ஏதாகிலுமொரு நிற்குண்டா-சாவுண்டா கேடுண்டா இப்படி யிருக்க, நாம் கையிலாகா தவரைப் போல் ஒருவரை வெறுத்துக்கொள்ளலாமா, அது-உலகத்தில் மெத்தப் பழிப்பான காரியமல்லவா, உரகத்துஜ கஜ-அஜபதியாசே, ஆசாரியன் சொன்ன வாசகப்படி அவர்பேரில் பொறுப்பை வைத்து, உன்னையே நம்பினேமென்று சொல்லி, இன்னஞ் சண்டைசெய்து பார்ப்போம், விதிவழிதப்பினே ரொருவருமில்லை வேந்தனேயென்று, வெப்பமாறும்படி-சொல்லி, தனுர்வேதியனோடு கலந்து வேந்தர்யாவரும்விரைந்து-நான்குபடையுடனடந்து இனி எவ்வுலகிற்குமென்று எல்லோரு மேங்க-இங்கித சங்கதி-மங்கள ஜயபேரிப் பறைமுதலிய பணைகளுமுழங்க திரிலோகத்திலுந் தனது திருநாமப்புகழை முறைபெற நிறுவிய கிரணக்கதிர்விடும் அருணன் மைந்தனாகிய மிகுகொடையாளன் அலங்காரத்துடன் ஆர்ப்பரித்தெழுந்து தேர் நடத்திச்சூழ்ந்தான். அந்தவேளையில் தன்பேரிற் சிந்தைநொந்து வந்த துரியோதனனுடைய பந்தமுணர்ந்து சொந்தமாகிய துரோணாச்சாரியர் மனதிற் கோபாக்கினி குடிகொண்டெழ-கொழுந்து நுனையிற்சிந்திய பொறியைக் குபு குபு குபு குபு திகு திகுவென்று இருவிழி காட்ட அந்தத்தீயினுடைய புகையை மூக்கிலிருந்து வாரின்ற-பெருமூச்சாக விட்டு பெருங்கோபங்கொண்டு சகலகலை வல்லவராகிய வில்லாசாரியர்-துரியோதனன்முதலாகிய தார்வேந்தருங் கெதிர்வந்து நின்று தன்னிலுந்தாளாமல் ஒருசபதங்கூறினார், அந்தச் சபதமாவது இவடத்திலிருக்கும் பல்லோருமறியச் சொல்லுகிறேன்-நானெடுத்துப்பிடித்த நாணடுத்த வில்லுடனும் இப்போது ஏறியதேருடனும் சத்துருக்களாகிய பாண்டவரைக் கொன்று சமரறவென்று நாகக்கொடிக்கதிபனாகிய நவமணி முடித் தாரதிபனுடன் இந்தத் தரணியை ஆளுகிறேன்-இல்லாவிட்டால், அந்தப்பாண்டவர்கள் கையால் மாளுகிறேன், இது ரெண்டி லொன்று தெரிகிற வரைக்கும், இந்த ரணகளத்தி லிருப்பனே யல்லது ஆதரவாகிய-பாசறைக்குப் போகேனென்று, யாவருநடுங்க அருஞ்சபதம்புகன்று சுப்ரமண்யக் கடவுளென்று சொல்லும், அற்புதப் பிள்ளையாகிய அசுபத்தாமனையழைத்து அழகிய ஒளிமிகுந்த அவனுடைய முகத்தைப் பார்த்து அப்பனே, நான் பேசிய சபதத்திறத்தைத்தெரிந்து கொண்டாயாஎனக்கு முதற்சத்துருவாயமைந்த முந்தியுந்தும்வில்த்திறம் பாஞ்சாலர்களுடைய முடித்தலைகளை யெல்லாம், அடியோடு கெடுத்துச் சிதைத்துவிடுகிறேன் ஒருவேளை நான்செய்த யுத்தமுனையில் பாஞ்சாலப் பூண்டுகள் பிராணனுடன் பிழைத்திருக்கும்படி மறந்து உயிரிறந்துபோவேனாகில் அவர்களை வேரறக்களைந்து முடிப்பது எனக்குப்பிள்ளையென்று வந்த உனக்கு அருங்கடனாக மனங்கொள்ளென்று துரோணாச்சாரியர் சொல்ல, அவருடைய மொழியைக் கேட்ட அசுபத்தாமனாகியவன் வேறுசிந்தையில்லாமல் தந்தை தந்த மொழியைத் தலைமேற்கொண்டான்.

தகப்ப னிறப்பானென்பதை அவனினைக்கவில்லையோவென்று கேட்குமிடத்தில், தானிருக்கிற வரையிலும் தனது தந்தையின் பிராணனுக்கு அழிவுவருமென்று எள்ளத்தனையுஞ் சிந்தையி னினையாதசெல்வன், இந்தப்பிரகாரந் துரோணாச்சாரியராகிய சேனாபதி சபதங்கூறி திரண்டசேனைகளுடன் புரண்டகடல்போற் பொங்கிவரும்போது-வில்லாசிரியர் முதலிய எல்லார் செவியுஞ் செவிடு படும்படியாய் பேய்கள் கைகொட்டிக் கொண்டாடிக்கும் ஓசையும் - உறிஞ்சிக்குடிக்கும் கொழுப்பாகிய உதிரக்கூழினோசையும் ரத்தநதிபெருகி மடமடவென ஓடி விழுமொலியும்-கவந்தங்களெருங்கி விழும் பிணவொலியும், பேயின்பிள்ளைகள் பேசிக்கொண்டாடும் பேச்சொலியும், பந்துபோல் அந்தரத்திலெழுந்த தலைகள் வந்து விழுகின்ற மூச்சொலியும் அடக்க ஆசையுடன் வில்வளைத்து நாணிபூட்டிய குணத்தொனியும்-கர்க்கரத்தொனியுடன் தேர்களோடுஞ் சக்கரத்தொனியுங்-குதிரைகள் அனுமானிக்கிற ஓசையும் - துதிக்கைபெற்ற தும்பிகள் வீறிடுமோசையும் - படைமள்ளரின் ஆரபார அதிர்ச்சியும் பாண்டவர்களின்செவியடைக்கப்பரவியது, இந்தப்பேரொலியைக் கேட்டவுடனே பொழுதிருக்கிறவரைக்கும் யுத்

தஞ்செய்வதற்கு மறுபடியும் வந்தார்களென்று இருதோ
ரும் புளகமுற்று எழுந்தார்த்து முந்திவிரைந்து பாண்ட
வர்களும், தங்களுக்குப் படைத்துணைவந்த வீரவேந்தர்
களும் வாத்தியங்களுடன் இரதமுதலிய படைகளுஞ்சூ
ழ், தங்களைச் சூழும்படியாய் நெருங்கி யெதிர்த்து நின்
றார்கள்.

பூர்வத்தில், காண்டவ வனத்தை கனலுக்களித்த கா
ளையாகிய காண்டீபன் கண்ணன்விடுக்குந் தேரேறிச் செ
ன்று காண்டீபத்துடன் முன்னின்றான். இந்த யிருவரு
டைய படைகளும், எதிரெதிராகக் குமுறியிரைந்து போ
ர்புரிய நிற்குஞ்சமயத்தில் அரவுயர்த்த கொடிதரித்த-துரி
யோதனராஜன் மைத்துன னிறந்த மனஸ்தாபத்தால் இ
னிப் பிராணபயம் வைக்கவேண்டியதில்லை-ஒருகைபார்த்
து இவ்விடத்தில் என்னுயிரை யொழித்து விடுகிறேனென்
று வீரமாகிய துணிவைக்கொண்டு விடவிடவென்று வந்
து யாவரும் துதிக்கும் முரசக்கொடி தாங்கிய தருமராஜ
னையெதிர்த்து மதர்த்தவரிப் புலிபோலதிர்த்து மலைந்தா
ன் இவர்களிருவரும் புரிகின்ற சண்டையையும் இருட்பி
ரகாசத்தாற் பகலிரவும்-ஒளிப்பிரகாசத்தால் இரவு பகலா
வதையும் பார்த்து ஆகாயத்திலொன்றி நின்ற அண்டரெ
ல்லாரும்-கண்டவண்ணம்-உபமானஞ் சொல்லும்படியா
ய் திண்டிறச் சாரதியானவர்கள்-குதிரைகளை முடுக்க கு
திரைகள்-ஒன்றின்மேலொன்று காலெடுத்தடுக்க-எதிரெ
திர் அலங்கரித்த ரதங்கள் ஒன்றோடொன்று இடிக்க-அ
ந்த ரதத்திலிருக்கும் சுந்தரவில்வீரர்கள் ஒருவரையொரு
வர் பகைத்துச் சினந்து விற்பிடிக்க நாணோசை யடிக்க
அந்த நாணியிலிருந்து நாலுமற்புறப்படும் விபரீதமாகிய
அளவற்ற அம்புகள் ஆகாயத்தைமறைக்க வாகாய உலக
மும் உவர்க்கடலும் உயர்ந்த ஓங்கல்களும் வருந்திக்கலங்
கும்படியாய்-தர்மநந்தனனும் துரியோதனராஜனும் யுத்
தம்பண்ணினார்கள், அந்தச் சமயத்தில் ரவிகுலபதியாம்
ஸ்ரீராமன் சவிகுலவிய சதகண்டனுடன் செய்த சண்டை
சற்றேறக்குறைய இத்தன்மையா யிருந்ததல்லவா வென்
று தேவர்க ளெல்லாரும் சந்தேகமாக நினைத்துத் தளர்ந்
தார்கள், இப்படி போராடிவரும்பொழுது தர்மராஜனை
வர் அக்கினிவிளையும் அனல்முகக் கணைகொண்டு அமர்
புரிந்து விருதுபெற்ற அரசனுடைய அரவத்துஜமும்-அ
வன் கைப்பிடித்த வில்லும் ஏறிவந்த ரதமும் இரதத்திற்
பூட்டிய இவுளியும் வலவனும் குடைச்சிகர முதலிய யா
வும் பொடிபடும்படியாய்ப் போருடனின்று கமலமுகக்
கணையொன்று சொண்டு பொன்மலைபோன்ற புயத்தில்
உதிரம்பொழிய விடுத்துப் புரட்டியபோது துரியோ த
னராஜன் அயர்ந்து பூமிமேற்சாய்ந்தான். அவன்சாய்ந்த
வுடனே அவனைச்சேர்ந்த படைமுனைஞர்கள் பார்த்து ஏ
தேது அரசன் மாய்ந்தவன்றான் இனி தலை யெடுக்கப்
போறதில்லையென்று கலங்கி யுத்த பூமிவிட்டு விலகிப்
பின்றோட்டங் கொள்ளும்படி யிருக்கிற சமயத்தில் துரி
யோதனனுடைய தம்பிமார் முதலிய பேர்கள் சஞ்சலங்
கொண்டு சமீபத்தில்வந்து சயித்தியோபசாரஞ் செய்தா
ர்கள், அதனால் கொஞ்சம் களைதீர்ந்து சுவாசந்திரும்பி க

ண்விழித்து சந்தேகந்தீரத் தலையெடுத்துப் பார்த்தான் இ
தற்குள்ளே முதன்மையாகிய ராஜர்களும் அங்கதேசாதி
பதியு முனைந்து அறன்குமாரனைச் சினந்துவளைந்து அள
விறந்த அம்புகளைப் பொழிந்து கொடி முடி முதலிய கு
டைகளையும் களைந்தார்கள் அப்போதே தர்மராஜன் கை
வில்லை கண கணவென் றசைத்து தாண்போற்றியண்ட க
ணை பலவெடுத்து வீண்போகாமற் சொல்லென்று விடு
த்து சமர்நிலத் திறமையை அமரர்கொண் டாடும்படியா
ய் தர்மராஜன் சிறந்திருந்தார்-அவர்தொடுத்த அஸ்திரங்
களினால் மிகவும் கஸ்திப்பட்டு இனிநாம் செய்வதேதெ
ன்று அஞ்சி கர்னன்முதலிய காவலரும் எஞ்சியிளைத்து
த் திரும்பி ஓடிவருவதை சிலைக்குருவாகிய சேனாபதிகண்
டு கோபங்கொண்டு இருவிழியும் செவேலெனச்சிவந்து
திகுதிகுவென்று பொறிக ளெழுந்து நீடயர்ந்து எரியும்
படிக்குவந்து தர்மராஜனுக் கெதிராகுஞ் சமயத்தில் சிபி
யென்னும்-ஒரு தேசராஜனானவன் தேர்செலுத்தி தெழி
த்தோடிவந்து சித்திர விசித்திரமாகிய அஸ்திரங்களால்
மெத்தவருத்தி குற்றமில்லாத உத்தமனென்னும் புத்தி
ரனாகிய தர்மபுத்திரன் கணையால் செத்துப்புத்தேளாகிய
புரந்தரனுலகிற் புகுந்தான்,, அவனிறந்துபோனதைக் க
ண்ட மத்திரதேயனுடைய தவத்திற் சுபுத்திரனாகப் பிறந்
த மாத்திரயன் கண்டு மலர்ப்பகழி கொண்ட மன்மதனுக்
கொப்பாக வடிவிற்சிறந்த முரசக்கொடி படைத்த முதல்
வனையடைந்து மூன்வாளிகளைப் பலங்கொண்டு விடுத்து
அநேகவிதமாகிய அமருங்கொடுத்து அறன்மகன் சேனை
யை அலக்கழித்துக் கெடுத்து அந்த யுத்த பூமிக்கு இவ
னொருவனே சுதந்தரமானவனென்று வானவர்சொல்லு
ம்படியாக நின்று தானவருந்தயங்க வானவருமயங்க வெ
ல்லும்போது-மாறுபரண மன்னனாகிய பாண்டுமைந்தன்
கண்டு மூண்டெரியு முதற்கணைகொண்டு பாண்டவர்சகா
யனை வேண்டி ரதத்தைவிடுத்து பாணந்தொடுத்தபோது
நீண்ட தாண்டவமாடிய சல்லியன்மைந்தன் மாண்டுவிழு
ந்து வானுலகடைந்தான் இவைகளையெல்லாம் அசை வ
ற்றுப்பார்த்திருந்த ஆசானனவர் அறக்கடவுள்மைந்தனு
க்கெதிரடுத்து அநேக மந்திரங்களை யுச்சரித்து விருக்ஷா
ஸ்திரம், விகங்காஸ்திரம், வெற்பாஸ்திரமுதலாகிய விசி
கங்களை விடுத்து மதங்களினால் அளவிடப்படாதயானைக
ள்-குதிரைகள்-தேர்கள்-உயர்ந்த விருதுங் கொடிகள்-விரி
ந்த சுவேதக்குடைகள்-ஆயுதப் படைகள்-யாவும் பொடி
ப்படும்படியாய் முடுக்கி வருகின்ற துரோணாச்சாரியைப்
பார்த்து வல்லமைமிகுந்த வாயுகுமாரனான வீமசேனன்
செங்கிரணக் கதிரவன்போல், ஒருபுடை புகுந்து தாக்கி
துரோணருடைய ரத கஜ துரகபதாதிகளை சூரியகிரணத்
தாற் காரியமில்லாமற் போகின்ற பனியைப்போற்போக்
கி, ஏமாஸ்திரத்தை யெடுத்து வந்தித்துவிடுத்து-சேனாப
தியாகிய சிலைக்குரு சண்டைசெய்யும் போர்முனை கெட்
டுப் போகும்படியாய் பிரளயகால ஓசையைப்போல் பெ
ருங்கூச்சலிட்டுக் கொண்டு விருகோதரனாகிய வீமசேன
ன்-திரியும்போது-துருபதேயனும் அவருடைய பிள்ளைக
ள்-துருஷ்டத்துய்மன் சிகண்டி-சுமித்திரன்-பிரியதரிசன

ன் சித்திரகேது-சுகேது-துவசேனன்-உத்தமௌசா-உதா
ர்மனு முதலியபெரும்சாத்தகியும் சேர்ந்து வரங்களாகப்
பெற்ற உரங்களுற்ற அரங்கள்போன்ற சரங்களை மாங்
கள்போல - வரிசையாய்த் தொடுக்கும் குருவுடனெதிர்
த்து குவலயங் குலுங்கப் போர் கொடுத்தார்கள் - து
ரியோதன ராஜனும், அவன் தம்பி மார்களும் வெற்றி
பெற்ற வேந்தர் பதினாயிரம் பேரும் ஒன்றாகக்கூடி வெ
ன்றேனென்று வீமனைவளைத்து அவனுடன் அமர்புரிந்து
அவனுடையதேரும் பாகும் குதிரையும் வரிமணிபூட்டி
யவிலலும் அழிந்து போகச்செய்து அங்கத்திலும் உதிர
ம்வழியும்படியாய் புங்கவங்களை அங்கையால்த் தொடுத்
தார்கள் அங்கவனும் இவர்கள் விடுத்த பாணங்களினலை
டிபட்டு வில்முதலியயாவும் ஒடிபட்டுப்போய் பங்கமில்
லாச் சிங்கம்போல் சங்கையில்லாமல் வெறுங்கையுடன்
பூமியிற்றாவிப்புகுந்து குதிரைகளின் காலைக்குறசிப்பி
டித்து குதிரைகளின் பேரில் முறுக்கி யடித்து தேர்களை
வாரிநேருக்குநேராகிய தேர்களில் மோதி கொம்புகளையு
டைய யானைகளைப்பிடித்து அம்பரத்திலம்பரம்போலா
ட்டி துதிக்கை பெற்ற யானைகளின்பேரில் வீசிமாட்டிகா
லாள்கள் காலாள்பேரிற் கடகடவென்று விழுந்துருளும்
படிக்கு தன்காலாலெற்றி நாயகன்முடியும் சாரதிமுடியு
ம் நாகலோகத்தையெட்டிப்பார்க்கும்படியாய் வேகமாக
எடுத்தெறிந்து விடுத்து நால்வகையாகிய படைக் கடலை
க்கலக்கி மந்தர கிரியால் பாற்கடல் கடைந்தகேசவனா
கிய மாயவனைப்போல் சிங்கக்கொடி நாட்டிய ஜெயவீம
ன் தோள் வலித்துணை கொண்டு கலக்கி ஸிம்கநாதஞ்
செய்து செழித்திருக்குஞ் சமயத்தில் தேசராஜர்பணியு
ம் வீரகண்டாமணி யணியுங்காலினையுடைய திறங்கொ
ண்ட ராஜராஜேஸ்வரனென்னுந் துரியோதன மகாராஜ
னுடைய தம்பிமார்சிலர் சேர்ந்து பலமாகப்பலவிதமாக
ச்சகலவிதப் போரும் புரிந்து, வாயுகுமாரனல் செந்நீர்
சொரிந்துவாடியோடிப்போனார்கள் அவர்களிலவிருதனெ
ன்பவனும் நிர்வாகசாலியாகிய சூசியென்பவனும் புறங்
கொடாமல் நிலைத்துநின்று, நெடுநேரம்வரைக்கும் தோ
ள்வலி - தாள்வலி - தேர்வலி - போர்வலி இவைகளின்
வீரத்திறங்காட்டி தங்களுடைய சொல்லுறுதிவில்லுறு
தியாகிய மறங்களைகாட்டி, தொடுத்தகணைமழைஓயாமல் வி
டுத்து, அடுத்த அவ்வீமனை அயர்வுற அடித்து அலைத்த
காலையில் கலையெலாங்கற்றகதாயுத வீமன் மலைபோலொ
த்தமற்புயமோங்கி சம்மாருத்ரனைப்போல் தானொருவ
னுச்சமர்புரிந்து சீறி ஒருவர்போனவழி ஒருவருக்குத்
தெரியாமல் ஒழிந்துபோகும்படியாய்உலைவாய்மழுப்போ
ன்ற எழுவாயுதம்போக்கி தம்பிமாரிருவரையும் அம்பரக்
கனைக்கிற்றுக்கலாக்கிவிட்டான், எல்லோரும் பார்த்துக்
கொண்டிருக்க கல்லென்று வயிக்கும் வீமனுடைய புய
வலிமையால் காந்தாரிமைந்தரிருவர் யுத்தகளத்தில் மடி
ந்து ககனஞ்சேர்ந்தாரென்னும் நிந்தையையும் வீமன் பூ
ந்தேடிப்போராடிவென்று வரசகின்ற விந்தையையும்
போர்முகவீரர்யாவரும்பார்த்துகலக்கங்கொண்டுஐயை
யோ, தெய்வமே, ஆத்மகோடி களைந்தேடி அழிக்குந்

தொழில் பூண்டயமனனவன் வீமனென்னும் உருக்கொ
ண்டு பாண்டவருக்குத்துணைவந்திருக்கின்றதே யொழிய
வேறல்ல இவனுடனெதிர்ந்து எவர்கள் போர்விளைப்பா
ர்களென்று மனங்குறுகி சோர்ந்து, வில்வல்லவரும்; மற்
றெல்லவரும், யுத்தமழிந்து புறந்தந்தோடினர்கள். இவ
டத்திலிப்படியிருக்கஇன்னொருதிசையில் வாகுலீகன்மை
ந்தன் சோமதத்தனனவன் சாத்தகியென்னுந் தோள் வ
லிபெற்ற சரபத்தினெதிர்நெருங்கிதன் பிள்ளையாகிய பூரி
ஸ்வரனுடையபிராணனைப்போக்கி விட்டதைக் குறித்து
பெருங்கோபங்கொண்டுமனந்தாளாமல் அடாபாவி, நீயு
ம் இந்த அர்ச்சுனனுங் கூடிக்கொண்டு என்குழந்தையை
விருதாவிலே மடித்து விட்டீர்களே இதுநற்குலத்திற் பி
றந்தார் செய்யும் நடைத்தையோ ஆகிப்பகை முடிப்பத
ற்கு நான் சமயம்பார்த்திருக்கும்போது நீமுந்திக்குலப்ப
கை முடித்துவிட்டாயே ஆகட்டும் அந்தப்பழிக்குப் பழி
தீர்க்கும்படியாய் வழிதேடியிருக்கிறேன் வாடாவெளியி
லென்றுவாய்மதத்தாற் சிலமொழிமொழிந்து மலையாகிய
வில்லை வளைத்து நிலையாகிய நாணிதொடுத்து நெருப்பு
ப்பொறிமிகுத்துத்துளி துளித்துக் கரிகருத்துத் திசை
பொறுக்ககஜதிசைப்பாலர்கள்கலங்கப்புரி ஜயத்தைப்பெ
று கடுங்கட்கணை ! தொடுங்கைத்திறல்காலாகோலமாகிய
யானையானது வேலாவலயம்போல் மதம்பொழிந்து கண்
டீரவத்தின்மேல்சண்டைசெய்யப் போனதைப்போற் பு
குந்து அமர்புரிந்தான் இவனைப் பரிந்துகண்டசாத்தகியா
னவர் - அடாசோமதத்தா அப்போதுன் பிள்ளையைக்
கொன்றதுபொய் இப்போது உன்னைக்கொல்லுவதுமெ
ய் இதோபாரென்று எழிலோங்கிய வில்லைவளைத்து மின
ல்தாங்கிய நாணிகொடுத்து நெற்றியிற்புருவநெரித்து ப
த்தியெரியும் பொறிவிழித்துஎட்டுத்திக்குங்கெட்டழியும்
படிகட்டழல்கொளுத்தி மட்டுப்படாதவாளிகள் செலுத்
தி அம்பரம்போலசைந்தாட உம்பர்கள்கம்பமாயொழிந்
தோட - இருவருந் தெழித்து சமர்செய்யும்பொழுதத்து
சோமதத்தனிளைத்தகுறையும் வாமசாத்தகி வலுத்தமு
றையும் வழிக்குவழியாய்ப்பழியைச்சுமந்த வணங்காமுடி
யோன் கண்டு மாமனாகியசகுனியையும் நால்வகைச்சே
னையையும் சேர்த்து தமக்கினிமையாகிய சோமதத்தனு
க்குத் துணைச்சார்பா யனுப்பிவைத்தான், அவர்களும்
அவன்பக்கத்துணையாய்வந்து சேர்ந்தார்கள், அந்தக்கால
த்தில் குறைவுபடாப் பேராண்மைபெற்ற சேனபதியா
கிய திருஷ்டத்துய்மனும் மட்டில்லாப்பலங்கொண்ட ம
ன்னரனேகரும் சேர்ந்துகாய்ந்து வருந்தாமற்கொல்லுங்
கடுங்கொடுங்கணையைப் பொழியும் விற்றாங்கிய சாத்தகி
க்குத் துணையானார்கள். இருதிறவருந் துணைகூடியபேர்க
ளுடன் ஒருவரையொருவர் மதித்து ஒருவரையொருவர்
பகைத்து ஆகாயமெங்கும் வாகாகப்பொங்கு நெருப்பா
னது ஓயாமல் நிரம்பும்படி யுத்தம்பண்ணும்போது கா
யாமலர்வண்ணனுடைய தம்பியானவர் தன்கைக்கிசைந்
த கடுங்கணைகொண்டு ஆயாமற்சாடியகாலையில் சாயாத
முடிசாய்த்து அயர்ந்துமயங்கி வீழ்ந்தான் சோமதத்தனு
னவன் அவன்தேகஞ்சேர்ந்து தேரில்வீழ்ந்தவுடனே யு

த்தத்தின் சூட்சிதெரிந்தசாரதி ஒருக்ஷணத்தில் தன்தே
னாசெலுத்தி சொப்பனத்தில்மறந்தும் பொய்சொற்
சொல்ல சோர்வில்லாவல்லமன்னர் மன்னவிருந்த இடத்
திற் கொண்டுபோய் சோமதத்தனுக்குவந்த ஆபத்தைச்
சொன்னான், இவடத்திற்போர்கொடுத்த சகுனிமுதலிய
சேனைகள் அழகிய மலைபோல்வளர்ந்து தகைந்ததைசோ
ர்ந்து மழைபோலுதிரம்வழிந்து மலைபோலொத்த மெய்
சாய்ந்து விஷத்திராவகத்திற் றோய்ந்த படைசோர்ந்து
விருஷப குஞ்சர வியாக்கிரமம்போன்ற இடிமாந்தருடை
சோர்ந்து வில்லாகிய கார்முகங்கள் தாறுமாறாய் உல்லா
சச்சிர்முகங்கள் வேறுவேறாய் முன்னெடுத்தகாலைப் பின்
னிழுத்துக்கொண்டு வென்கொடுத்தோடினார்கள்.

ஐயா, இவ்விதமாக யாவரும் இளைத்தோடச்செய்து
ஆர்ப்பரித்துவருகின்ற கார்க்கடல்வண்ணன் கண்ணன் த
ம்பியை அஸ்வத்தாமன்கண்டு சினங்கொண்டு போற்பு
லிபோற் பாய்ந்து அடாசாத்தகி உன் புஜபலபராக்கிரமத்
தை இன்றைக்கே போக்குகிறேன் பாரென்று நேர்புகுந்
த அளவில் தோற்பதைப்படிக்காமல் மறந்த தொல்காப்
பியச் சிறப்பெனும் வலிமேலிடச்சிறந்த வாயுதேவனுக்
குப்பௌத்திரனும் வீமசேனனுக்குப் புத்திரனுமாகிய
கடோற்கஜன் இளைந்துபரிந்து விரைந்து நெருங்கி இந்த
அஸ்வத்தாமனுடன் நானெதிர்க்கிறேன் ஐயா, சாத்தகிய
ரசே சற்றுநோம் வேடிக்கைபாருமென்று சண்டைக்கு
ப்போன சாத்தகியைத் தடுத்து சேய்த்திறந்துடனடுத்து
ஓ அஸ்வத்தாமனே உன்மண்டைக்கு ஓலைவந்ததென்று
ரைத்து நான்குபடையுமலிந்துமெலிய ஈங்குவந்தெதிர்ந்
து போர்புரியாநின்ற கார்நிறம்பெற்ற இடிம்பன் மருமக
னைவிலக்குதற்கரிய புயவலிமைபெற்ற வீமன்திருமகனை
மேலாகிய வீரத்[illegible]மலைக்குயரமாகவளர்ந்த புயவரகனை,
நந்தியாவட்டமாலையணிந்த நராதிபனும் களங்கமில்லாத
தோள்வலிதிணிந்த காளையரும் காவலரோடுகலந்துசமு
த்திரகோஷம்போற்கலித்து கடோற்கஜனுக்கெதிரிற்சூ
ழ்ந்தார்கள் அவர்களைக்கண்ட இடிம்பிமகனானவன் அஸ்
வத்தாமனுக்கு உபகாரமாய் வந்தீர்களோ வாருங்களென்
று கடைவாயைக் கசகசவென்றுமென்று மந்தரகிரியா
ல் பாற்கடலை மத்தித்தவண்மையைப்போல் பூதவேதாள
பிசாசகணங்கள்கட்டிய புவனமாயத்தேரை படபடவெ
ன்று காற்றடிபோற் சுழற்றிப்போக்கி யாவரையுந்தாக்கி
எல்லோரையுநீக்கி தன்னுடைய கோபக்கொதிப்பைமே
லாக்கி குறுக்குநெடுக்கும் பாழாக்கிவருவதை கொடிப்
படைச சூராளபார்த்து வீரப்போரில் விலங்காத கொடி
த்தேரையுடைய கோடிவீரர்களும் முதுகுகாட்டி ஓட்ட
த்தில் வாட்டமில்லாமல் முன்னிட்டார்கள், அஸ்வத்தா
மன் மாத்திரந் தனிமையினின்றான், அந்த அஸ்வத்தா
மனை - பலம்பொருந்திய இடிம்பன் மருமகனும் கடோ
ற்கஜனுக்கு ஒருமகனுமாகிய அஞ்சனவர்மனும் தேவர்க
ளுடன் ராக்ஷசர்கள் ஜெயிக்குந்தன்மைபோ லெதிர்ந்து
அந்தரமும் பூமியும் அநேகந்தரம் நிணச்சேறுசொத்தவெ
ள்ளமாகும்படியாய் யுத்தம்பண்ணி வாளிகள்கோடி-வடி
க்கணைகோடி-வச்சிரங்கோடி - மலைகள்கோடி - மரங்கள்
கோடி-வந்துவிழுந்து இந்தக்கணை, அந்தக்கணை, யென்
பதொன்றுந் தெரியாமல் இகல்புரிந்து வருங்காலையில்
அஸ்வத்தாமன் மனமெரிந்து பகலவன் பாணத்தைப்பா
ர்த்தெடுத்து பூசித்துப் பிரயோகஞ்செய்து அஞ்சனவ
ர்மனுக்கு அடைக்கலஸ்தானம் அமரலோகமென்று அ
ரைநொடிப்போதில் அனுப்பிவிட்டான் கடோற்கஜன்கு
மாரனாகிய அஞ்சனவர்மன் என்னதான் போர்புரிந்தபோ
திலும் சூரியனுடனே இருள்பகைத்தால் செலிக்குமோ
வென்று பெரியோர்பேசிக்கொண்டார்கள் அஸ்வத்தாம
னால் தன்பிள்ளையழிந்ததைக்கண்ட மலைபோன்ற பராக்
ரமசாலியாகிய கடோற்கஜன் அதிகவிசனகரத்தாற் கோ
பங்கொண்டு ஆகாயபரியந்த முயர்ந்தமலைகளையும் மரங்
களையும் அடிவேருடன் பிடுங்கிவந்து விசாலமான வீரப
ட்டங்கட்டிய யானைபோன்ற அஸ்வத்தாமன் மேல்வீசி
யெறிந்து அண்ட பகிரண்டமுநடுங்க ஆர்ப்பரித்து அல
க்கழித்து அலங்கோலஞ்செய்தான். அப்போது சுப்ரம
ண்யக்கடவுளின் வெற்றிப்பதம்பெற்ற துரோணாச்சாரிய
ர்மைந்தன் மிகுந்த துரிதக்கணைகளைவிட்டு (வீமசேனன்
கையில் பகாசூரன் பட்டபாடெவ்வளவோ. அவ்வளவு
பாடுபடுத்தி ஒருகதாயுதங்கொண்டடித்து தேர்முதலிய
பூதங்களையுமடித்து அந்தக்கடோற்கஜனைப் படிமேல்வீழ்
த்தினான் உடனே அரக்கன்தேறியெழுந்து சேனைபதியா
கிய திருஷ்டத்துய்மனுடைய தேர்மேலேறிக்கொண்டு
மாயாவல்லபத்தினால் மாறிமாறி அருஞ்சமர்புரிந்து ரா
க்ஷசமயமாய் வல்லமைநாட்டி துரியோதனன்படைகள்
இடுக்கிட்டு திசைகெட்டோடும்படியாய் ஜெயங்காட்டிவ
ருகின்ற போர்முனைதோறும் அஸ்வத்தாமன் அடுத்து
கோடையிடிபோன்ற அயமுகாஸ்திரந் தொடுத்துத்தாக்கி
கடோற்கஜன்முதலாகிய பாண்டவவீரர்விடுத்த கணைக
ளைநொறுக்கி அணுப்பொடியாக்கி காற்றில் தூற்றிப்போ
க்கி தீமைகூர்ந்த தேகம்வாய்ந்த அரக்கரையெல்லாம் ஒரு
நொடிப்பொழுதில் ஆவிபறித்து ஆகாயஞ்சேர்த்தான் இ
ப்படியிருக்க முன்னே சாத்தகியுடன் சண்டைசெய்துசா
ய்ந்தோய்ந்த சோமதத்தன் ஆயாசந்தீர்ந்து தேறியெழுந்
து தேர்மேற்சிறந்து மிகுந்தபடைகளுடன் திரும்பி சாத்
தகியெங்கே யெங்கே, யென்று அவன்மேற் சண்டைக்
குவந்தான் அப்போது வீமனெதிர்த்து நெருப்பைக்கக்
காநின்ற கூர்முனைபொருந்திய வச்சிராஸ்திரத்தைத் தச்
சுருவும்படி விடுத்தான் அதுவந்துவிழுந்து கொழுந்தெ
ழுந்தெரிந்து துளைந்தவருத்தத்தினால் மறுபடியுமாய்ந்த
வனைப்போல்குதிரைபூண்டதேர் மேலயர்ந்து சாய்ந்தான்
அந்தவீமன்விட்டவச்சிரக்கணைசெய்த வலிமையைக்கண்
டு தரணிபரா யுள்ளவேந்தரெல்லோருந்தலைசாய்ந்தார்கள்
அந்தவேளையில் தந்தையாகிய வாகுலிகன்-கோபித்து வீ
ழ்ந்த சோமதத்தனென்னுந் தன்மைந்தனைப்பார்த்து முக
ம்வேர்த்து மனந்தாளாமல்வரிவிலலைவளைத்து செந்தழல்
கக்குந்திமுகப்பாணங்களைச்செலுத்தினான் அவன்றொடு
த்த அம்புகளையெல்லாந் தும்புபறக்கச்செய்து ஆவேசங்
கொண்டுவந்த,வீமசேனனானவன்,அந்த வாகுலிகனுடன்
அநேகநேரம்போராடி தேவதாஸ்திரத்தைப் பிரயோ

கஞ்செய்து சிரத்தைத்துண்டித்தான் தனுசாந்தலையிழந்த
வாதூலிகனைக்கண்ட படைஞரெல்லாரும் அஞ்சியெஞ்சி
அடங்கி ஒடுங்கி ஒதுங்கி அந்தயிடத்தைவிட்டு திசைசளி
லகன்றார்கள் அப்படி அகன்றவர்களை அரவக்கொடிக்கதி
பதியாகிய முடியரசன் தம்பிகள்கண்டு ஐயோ, நீங்களோ
டுவகந்து இதுகாலமல்லவேயென்று அவர்களைத்தடுத்து
தங்கள்மனக்தாளாமல் சந்திரனைக்கண்ட தாமரையைப்
போல் விளங்கியமுகங்கள் குறுவெயர்வரும்ப கூட்டிப்
போய் தேன்துளிக்குமாலையணிந்த திண்ணிய புயவீம
னை வளைத்து மண்ணெல்லாங் கணைமாரிபொழிந்து விண்
ணெல்லாந் தலைதலையாய்க்குவிந்து கண்ணெல்லாமிதந்த
விந்தைகண்டு மகிழ்ந்து அண்ணலாகியவீமன் அகமெலி
ந்து நலிந்துபோம்படியாய் அஸ்திரக்குப்பைகளை அணிய
ணியாய்த்தொட்டார்கள் அதுகாலையில் வாயுகுமாரன் ஆ
ர்ப்பரித்து அவர்கள்விட்ட பாணங்களையெல்லாம்போக்கி
அரவிந்தக்கணை அனல்பிந்துக்கணை அருமந்தக்கணையாவு
ந்தொடுத்து அவர்களைமடித்தான். அந்தவீமசேனன் எய்
த விசிகங்களால், நாகதந்தன் உக்ரசாயி வேகதரிசி அத்
திரிலோசனன் விப்பிரதெரிசி தண்டுலசாயி உனாகநாத
ன் பிமபிந்து மக்குவாசி தூர்த்தன் இவர்கள் பத்துப்பே
ரும் ஆவியிழந்தார்கள், அப்போதுமாய்ந்த அரசன்தம்பி
கள் அலறிக்கொண்டு விண்போனது எப்படியிருந்ததெ
ன்னில் இதுவரையிலும் போர்வினைத்துப் பார்த்தீர்களே-
ஆவியழிந்தோரையும் பார்த்தீர்களே! இனிமேலாகிலும்
போனவர்கள்போக இருந்தோர்கள் இந்த மட்டுஞ் சண்
டையைவிட்டு சமாதானமாய்ப் போங்களென்று சொல்
லிப் போறவர்களைப்போல் இருந்தது, இந்தப்படிக்கு-ஒ
ருமுனையில் வீமசேனன் வென்றுவரும்போது ஒருபக்க
த்தில் அஸ்பத்தாமனானவன் வெகுசேனைகளைக் கொன்று
வருங்காலையில், குந்திபோஜனுடைய மைந்தரிருவர்வந்து
முந்தி எதிர்த்து இந்துக்கணைமுதலிய கொந்தழற்கணையா
வும் உந்தி அந்தணன்குமாரனாகிய அஸ்வத்தாமன் அடித்
த வடிக்கணையாற் கூவி அரைநொடியில் ஆவிமாய்ந்தார்க
ள், வந்தவர்போனவர் விந்தையாகிய சமரம்புரிந்து வரு
ம்வேளையில் உந்தி பூத்தோனாகிய மாயன் அந்திப்போது
செய்யவேணுமென்று செந்திகிரியை உந்தியபோது அ
தற்குள்ளடங்கிய கிரணமுடங்கிய சிறுமையை எண்ணி
யெண்ணி ஜகதீசனுக் கொருகண்ணாய் இவ்வுலகில் நின்
று பிரகாசிக்கிறநாம் ஒருசக்கரத்தால் மறைந்தோமேயெ
ன்று நாணமடைந்து அந்நாணமே தன்னைக்குன்றச்செ
ய்ததைப்போலும், பெருமையடைந்தவன் சிறுமையடை
ந்து உயிர்வைத்திருக்கலாகாது, ஒழிவது உத்தமமென்ப
துபோலும், ஒளிமழுங்கி ஓராழித்தேரோனாகிய சூரியன்
சிந்துமுதலாகிய நந்துசிந்தும் உந்தும் அலைகளை யுடைய
மேற்கடலில் ஒளித்திட்டான். சூரியனஸ்தமித்தானென்
று விருதர்முதலாகிய நிருதரும் பொருபடை யடங்க இ
ருபடையிலுங் கடலுடைபடுந்தன்மைபோல்'தடதடவெ
ன்று முழங்கும் பேரிகையின் பேரொலியைக்கேட்டு கீர்
த்தியாகிய இசையிலுஞ்சிறந்த பசையை யுடையதென்று
தன்னுடைய இயற்கைக்குணத்தால் அபகீர்த்தியாகிய வ
சையை ஆவிபோல் வளர்த்துவருகின்ற துரியோதன ம
காராஜனைச் சூழ்ந்த இழிவாகிய பாவத்தைப் பார்க்கிலும்
மேலாகக்கவிந்த இருட்பொழுதை நோக்கி தீபம்போன்
ற நீண்டவாளியையுடைய துரியோதனன்மகிழ்ந்து இன்
றுராத்திரியும் யுத்தஞ்செய்கிறோமென்று எதிரிகளிடத்தி
ல் தூதனுப்பிவைத்து சேனாபதி முதலிய யாவரையுந்
சேர்த்துக்கொண்டு, சத்துருக்களாகிய பாண்டவர்களுக்
கு நேர்கொடுத்துநின்றான். அவனெனில், அண்டமுக
டசைந்தாலும், அத்துடன் மண்டலமசைந்தாலும், சண்
டைமுகத்தில் தான்கொண்டகருத்தை சற்றேனுமசையா
த் திறலாண்மைபெற்றவன் மேலும் தடைப்படா மனத்
தினன், தனதனை யொப்பாந் தனத்தினனென்றுந் துரி
யோதனமகாராஜன் தனது தொழிலாளிகளைநோக்கி, அ
ண்டகூடம்வரைக்கும் பரந்துநிறைந்த இருள்நீங்கும்படி
யாய்அநேகங் கோடாகோடிசூரியப்ரகாசவெளிச்சம்போ
ல் ஒளியுண்டாக்கும் விளக்கின மெடுங்களென்று விரை
வாக ஆக்ஞாபித்தான் அந்த உத்தரவின்படிக்கு யானைத்
தீபம்-குதிரைத்தீபம்-தேர்த்தீபம்-ஏணித்தீபம்-கம்பத்தீப
ம்-மலைத்தீபம்-அகண்டதீபம்-கைத்தீபம்-மணித்தீபம்-சா
த்தீபம்-அநேக முகதீபவத்திகள்-பகல்வத்திகள்-காட வி
ளக்குகள்-சந்திரபிம்பச் சோதி சூரியபிம்பச்சோதி முத
லாகிய தீபங்களேற்றினார்கள், இந்தச் சோதியைக்கண்ட
தேவர்முதலிய யாவரும் தியக்கங் கொண்டு இவன்பகை
யாகிய பாண்டவர்களுக்குச் சகாயமாய்த் தேர்த்தொழில்
செய்யும் ஆண்டவன் பகற்காலத்தில் ராத்திரியை வரவ
ழைத்தானென்று சூரியன் மறைந்து இருள்வந்த ராத்திரி
யை பகற்கால மாக்குந்தன்மைபோ லாக்கினான், பார்த்தீ
ர்களாவென்று பற்பலவிந்தையாய்ப் பேசிக்கொண் டிரு
ந்தார்கள், இதல்லாமல் இந்தப்பூமிக் காதாரமாய்ப்பொரு
ந்தி விரிந்த படத்துடன் பாதலத்திலிருக்கும் ஆதிசேடன்
முதலாகிய ஆடரவங்க ளெல்லாம்பொங்கி யெழுந்து சி
ரோமணிக்குவைகளால் அநேக விதமாகிய தீபவெளிச்ச
ங்களைச் செய்ததென்று வீரப்பிரதாப வேந்தரும் மற்ற
மாந்தருஞ் சொல்லிக்கொள்ளும்படியாய் தீப ஜாலங்கள்
ஏற்படுத்திய நாகக்கொடிதரித்த நராதிபனுடைய நினை
வை நாரணனும் பாண்டவரும் நன்றாயறிந்துக்கொண்டு
தாங்களும் இராச் சண்டைக்குப் பின்னிடாமல் முன்னி
ட்டவர்களாய் யுத்தபூமிமுழுவதும் சொல்லுதற்கரிதாகி
ய யானைப்பந்தம்-குதிரைப்பந்தம்-தேர்ப்பந்தம்-ஏணிப்ப
ந்தம்-ஒருமுகம் பதுமுகம்-சதுமுகம் சகஸ்ரமுகமுதலா
கிய தீவத்திகளும் கில்வத்திகளும் பகல்வத்திகளும் பிர
காசிக்கும்படியாய்ச் செய்துகொண்டு-மேள காள-காகள
எக்காளங்களுடன் சங்கு-பேரி-பூரி-சிங்கநாத ஆரவாரம்
எங்கு முழங்கும்படிக் கெழுந்து வெம்பிச் சேனை, சயினி
யங்களுங் குதித்து தம்பிமார்முதலியாவருந்துதிக்க தர்
மராஜன் சண்டைமுகத்திற் கெதிர்வந்து நின்றார்.

இராச்சண்டை.

அந்தச்சமயத்தில், எண்ணத்தின்வண்ணம் இசையை-
ப்பெறும் விஜயன்மேல் அசைவற்ற அஜேயனாகிய கர்ண
ன் முந்தி வந்து பந்தி பந்தியாய்ப் பலகணை தொடுத்துப்

போர்செய்தான் படைத்திறம்பெற்ற விருதனென்னுங்கி
ருதபன்மனுனவன் முரசக்கொடி தரித்த தர்மராஜனோடு
முடுகினுன், தனுவேதசம்பன்னனுகிய துரோணுச்சாரியா
ர் பழையவஞ்சப் பகைவனுகிய துருஷ்டத் தும்மனுடன்
துன்னினுன் யுத்தஞ்செய்து இரண்டிலொன்று கண்டு உ
யிர்விடுகிறேனென்று துரியோதனனென்னும் உலக துர
ந்தானுகிய உரககேது விமனோ டெதிர்த்து மிகுபோர்வி
ளைத்தான் ஜல்லியராஜன்மிகுந்த சல்லியத்துடன் சதானி
கனை வளைத்துக்கொண்டு சமர் தந்தான் வலிகொண்ட பு
லிபோன்ற கடோற்கஜனுடன் முனிமைந்தனுகிய அஸ்வ
த்தாமன் முனைந் தமர்புரிந்தான் தரணிபாலராகிய தார்
வேந்தர்கள் தங்கள் தங்களுக்குரிய பகைவருடன் சண்
டைசெய்தார்கள் பகலிலெழுந்து ஒளியிடும் சூரியனைப்
பார்க்கிலும் ஏழுபங்கதிகமாய் எங்கும் ப்ரகாசிக்கவும் வா
த்தியங்களெல்லா முழக்கவும் தேருடன் தேரும் யானை
யுடன் யானையும் குதிரையுடன் குதிரையும் காலா ளுட
ன் காலாளும் வில்லுடன் வில்லும் வேலுடன் வேலுங்
கொண்டு பகைத்துப்போர்புரிந்தார்கள்,ஒருவர்பேரிலொ
ருவர்விட்ட கணைகளானது உடலி லுருவி வேகமடங்கா
மலோடுகின்ற ஓசையும் வில்லைவளைப்பதினு லுண்டாகிய
அதிர்ச்சியும் அந்த வில்லிற்கட்டிய மணிகள் சப்திக்கும்
அமலையும் வாளாயுதங்களைத்து வளவிசும் ஆர்வமும்வே
லாயுதம் எறிந்துவரும் ஆரவாரமும் சூலாயுதஞ்சுழன்று
வருஞ்சும்மையும் சக்கரம்போற் சுழலும் படைவீர ரு
டைய சத்தமும் ரதச்சக்கரங்களி னுதமும் குதிரைகளின்
கோஷ்டமும் யானைகளின் ஆர்ப்பும் விரசேகரிகளின் வீ
ரகண்டைத்தொனியும் உபகரண மமைந்தவாத்தியங்களி
னுசையும் இருதிறப் படைஞருமெதிர்ந்து விளைத்திடும்
போர்த்துழனியும் அசுரரும் அமரருஞ்செய்த அமரைப்
பார்க்கிலும் ஆயிரமடங் கதிகமாக முழங்கிய முழக்க மா
னது எட்டுத்திக்கு நிறைந்து முட்டிமுடியது, இவ்வித
மாக அவரவர்கள் புஜபலத்துக்குத் தக்கபடி போர்புரிந்
து வருங்காலையில்,அர்ச்சுனனுங் கர்னனும் அமோகமா
ன யுத்தங்கள் விளைத்து கர்னனைநோக்கிகாலகேய நிவா
தகவச அசுரரைக்கடந்த வெற்றிபெற்ற அர்ச்சுனன்சொ
ல்லுகின்முன், ஆ ஆ, கர்னு-நீ பிறப்பதற்குக் காரணமா
யிருந்த சூரியன் மலைவாயிற் போய்விட்டான் நான் காண்
டவ வன தகனஞ்செய்தபோது ச்வேதவாம்புரவியும்தே
ரும் கொடியும் வில்லும் அக்ஷயதுணியுங் கொடுத்த அ
க்கினிதேவன் அமோகரித்து அநேகஞ்சோதியாய் அமர்
க்களத்தில் அசைந்தாடிக்கொண்டு, அமர்ந்திருக் கின்று
ன், ஆகையால் உனக்குப் பலமொடுங்கிப் போச்சுது-எ
னக்குப் பலமிகுந்துவாச்சுதென்று அங்க தேசாதிப னு
டைய வல்லமை குறையும் படியாய்ப் பேசி பொன்னிற
மின்வலைத் துன்னிய செங்கிறத் தீச்சிகை மன்னிய சிலீ
முகங்களால் கர்னன்பற்றிய வில்லும் நாணியுங்கணையுந்
தேருஞ் சாரதி குதிரையும் அற்று வீழச் செய்து மற்றவ
னும் புறங்கொடுத்து வலுவேகத்துடன் ஓடும்படிக்குமா
ட்டினுன், (இஃதிப்படியிருக்க) தருமராஜனுங் கிருதவன்
மனும் தளர்வில்லாமற் சண்டைசெய்து ஒப்பற்ற முரசக்
கொடியினுனது இருதோள் வலிமையினுலும் நீண்ட வி
ல்லி லிருந்து தூண்டிய நெரிமுகக் கணைகளின் நிர்வாக
நேர்ப்பினுலும் கால்முதற் கழுத்தளவும் உருவக்கொய்து
மேல்முகத் துதிரவெள்ளம் பெருகச் செய்து பூட்டிய
போது கிருதவன்ம னென்று கீர்த்தி ப்ரதாபமாய் வந்த
கேடில்லான்சேட்டு குதிரை சாரதி ரதமுதலிய வில்லும்
பாணமும் கைவிட்டு முதுகுட்போரில் சக்கரவர்த்தித் தி
ருமகனே டெதிர்த்த தசக்கிரீபனையொத்து சண்டைசெ
ய்தநிலத்தில் எதிர்நிற்க தாஷ்டியில்லாமல் அர்ச்சுனனுல்
சூரியகுமாரனுன கர்னன் எந்தக்கதி யானுனே அவனுக்
கொப்பாய் அந்தக் கதியானுன் விந்தையாகிய வெகுளி
மேற்கொண்டுவந்த கிருதவன்மன் அவன் முதுகுகாட்டி
யோடுவதை அரவெழுதிய உரககேதனன் கண்டு சுரசுர
வென்று தேரைச் செலுத்திச் சென்று சேனுபதி யாகிய
ஆசாரியருக் கெதிர்போய் நின்று ஐயா, அந்தப் பக்கத்தி
ல் அர்ச்சுனனுடனெதிர்த்த கர்னனு மிளைத்தான், இந்த
ப்பக்கத்தில் தர்மராஜனுடன் பகைத்த கிருதவன்மனுங்கி
லேசத்துடன் ஓடுகிறுன் பாரு மென்று துரியோதனன்
சொல்ல அந்தவார்த்தையை ஆசாரியர் கேட்டு அரசன்
சொல்லி யடங்குவதற்குமுன்னே தருமராஜனை யெதிர்த்
து மறங்குலாவிய மலைச்சிலையை இருவரும்வளைத்து வா
ளிகள் பலவிடுத்து இடம் வலஞ் சுழன்று எதிரெதிர்யகி
ழ்ந்து ஒருவரையொருவர் புகழ்ந்து உடனே யிருவரு மி
கழ்ந்து-தேருருளைகள்-குதிரைகள் அலன்று-உடன் வரு
ஞ் சேனைகளழிந்து-உகாந்தகால மிதென்று சொல்லும்ப
டி ஒருபக்கத்தில் யுத்தம்பண்ணி இருவருங் கைபிளைத்து
மறுபடியுந் தேறியபோது-துரோணுச் சாரியர் மேலிட்டு
இந்திராஸ்திரம்-சந்திராஸ்திரம்-சூரியாஸ்திரம் - அக்கினி
யாஸ்திரம் வாயுவாஸ்திரம் நிருதியாஸ்திரம்-வருணுஸ்திர
ம்-ஏமாஸ்திரம்-குபேராஸ்திரம்-ஈசானுஸ்திரம் -'காந்திரு
வாஸ்திரம்-எக்ஷாஸ்திரம்-வசுவாஸ்திரம் குருவாஸ்திர மு
தலிய தேவாஸ்திரங்களைத் தொடுத்து குபு குபுவென்னு
ம் புகையும்-திகுதிகுவென்னுஞ் சிகையும்-ஜகமெலாநி
ரம்பப் பிரயோகஞ்செய்தான்-அவருடன்கூட வந்தவர்
களும் கோடி கோடியாய் கூரம்புகளை யிறைத்தார்கள்-கு
வளை மலர்மாலையணிந்த தருமராஜனுனவர்-அவர்கள்விடு
த்த சரங்களையெல்லாந் தன்பேரிற்படவொட்டாமல் செ
ந்தழற் கதுவும்படிக்கு எந்தெந்தக் கணைகளை எவரெவர்க
ள் தொட்டார்களோ அந்தந்தக் கணைகளை அவ ரவர்கள்
பேரி லுந்தி யழிகவென்றுகின்ற சத்தியவா னுடைய மே
ன்மையை துரோணுச்சாரியர்கண்டு அம்புயத்திறைதொ
டுத்த பிர்மாஸ்திரத்தை யெடுத்து ஆசார உபசார பூசா
விதிமுடித்து மேன்மேலாகத் தொடுத்தார், அந்த பிர்மா
ஸ்திரமானது நான்குமுகத்துடன்நாகமொலித்து வடவா
க்கினியைப் பக்கத்துணையாகக்கொண்டுகானெலாங்கொ
ளுத்தி வானெலாந்தகித்து வருவதை கருணையும் பொறு
மையுங்கொண்ட தருமராஜனென்னும் புண்ணியன்கண்
டு கமல வூர்திக்கணையாகிய சிநேந்திராஸ்திரமெடுத்துசி
ந்தித்து வந்தித்து திபதூபமேற்றி வாழ்த்திப்போற்றி சா
ஸ்திசெலுத்தி துண்ட பெட்டாகக்கண்டு நாஸ்தியாக்கி

வென்று யாவருந்துதித்து மதிக்க சூரங் காட்டி சிற்சில
அஸ்திரங்களைச் செலுத்தி நின்றார் சிருஷ்டிகர்த்தா வாகி
ய வேதகாருண்யனளித்த பிர்மாஸ்திரம விபூதிபோலழி
ந்துபோனதை தனுவேதபாரகராகியவிற்குருகண்டுமகா
ராஜசிரேஷ்டனாகியமெய்விரதனுடனே வல்லமை யாகிய
வாளிகளைக்கொண்டு அமராடி தர்மமூர்த்தியை வெல்லா
மல் ஒருவரோடுஞ் சொல்லாமல் முதுகிட்டோடுபவரை
ப்பார்க்கிலும் நாமே திரும்பிப்போவது நலமென்றுபோ
னார். இப்பால், வீமசேனனுடனெதிர்த்துப் போர்விளை
க்கப்போன-வேந்தர் வேந்தனாகிய துரியோதனன்-பேரி
ழந்து-சீரிழந்து-தேரிழந்து-தாரொழிந்து-சீரம்யாவும்-உ
திரக் கார்பொழிந்து வில்முறிந்து-கணைதறிந்து கவசமறு
ந்து-விரபட்டந்துறந்து-ஸ்திரமும் வீரமுங்குறைந்து வரு
ந்திவாடி புறங்கொடுத்தோடி திறங்கொண்ட தன்தோழ
னாகிய கர்ணனைத்தேடி அவனைக்கண்டு அவனெதிர்நின்று
மிகுந்த ஆசையுடன் தொடுத்த பூச்சரம்போல் சோர் வி
ல்லாமல் தொடங்கிச்சொன்னான் (அதுயாதெனில்,) அ
ங்கதேசத்தரசேகேளும்மிகுந்தஜெயமுழக்கத்துடன் சஞ்
சரிக்கின்றபலம்பொருந்தியபாண்டவர்நாலுபக்கத்திலு
மிருந்துவளைம்படியாகியமிகுந்தஉச்சாகம்பெற்றபாணபல
த்தினால்நமதுபடைகளெல்லாம்மெலிந்துநலிந்து அடங்கி
ப்போய்விட்டது ஆனதால் மலையென்றுநிலையாகச்சொல்
லுகின்றபுஜவிநோதமுடையவள்ளலே என்னைக்காக்கவே
ணுமென்றுநீர்கொஞ்சம்வலிமைகொண்டுமனவுறுதியோ
டு நின்றுபோர்புரியும் இடங்கள்தோறும்உமதுவிற்றிறந்
சொற்றிறம் வீரத்திறமுதலியபோர்த்திற வல்லபத்தைமு
னையாகநாட்டுகின்றதிருணம் இதுதான் இதைவிடவேறுச
மயமுங்காலமுமில்லை ஆகையால்,என்முகத்தைப்பார்த்து
முனைந்துநின்று சத்துருக்களைக்கொன்று விண்ணிற்குடி
யாக்கென்றுவணங்காமுடி வேந்தனுரைக்க அந்தமொழி
யைச் சாந்தமாய்க்கேட்ட புங்கம்லநண்பன் மகனாகியபு
ண்ணியனுய்ந்து சொல்லு கின்றான் நல்லகுலக்கொழுந்
தாகியசெல்வத் துரியோதன னென்னும்வல்லவனேகே
ளும்-ஆ ஆ?வின்னலஞ் சொன்னலங் கொண்டு என்னுட
னெதிர்ப்பவரும் தப்பியெதிர்த்து விட்டால்உயிரொழியா
தவரும் உயிர்பிழைத்தால் புறங்காட்டியோடாதபேரும்உ
ண்டோஉன்னிஷ்டப்படிக்கு பகைவர்நஷ்டப்படும்படியா
ய்ப்போராடவும்வல்லவன்அந்தமட்டில்விட்டுவிடாமல்ப
லம்பொருந்தியபாண்டவர்களுடைய பிராணனையும்வாங்
கி இந்தபஞ்சாசதகோடிஇராச்சியமும் உனக்குப்பட்டங்
கட்டவும்வல்லவன் ஆகையால் ? நான்மெத்த நல்லவன்
நானிருக்கும் போது நீ யாதொருசஞ்சல முங்கொள்ள
வேண்டியதில்லைநஞ்சராவுயர்த்த நாதிபனேயென்று,கர்
ணன்சொல்ல, யாவருந்துதிக்கும்படியாய் அவர்கள்பக்க
த்திலிருந்தகிருபாச்சாரியர் கர்னன்கூறியவார்த்தைக்கும
னந்தாளாமல் சிலவாக்கியஞ்சொல்லுகிறார்,ஓ சூதகுமார
னேநீபலவாறாகிய சிங்காரப்பேச்சுப்பேசுவதற்கு மெத்த
வல்லவனேயல்லது சத்துருக்களைச்செயித்துச்சாதிப்பத
ற்குவல்லவ னல்லவே, அடா தம்பி ? வெட்சிமாலைதரித்
தவிக்கிரமாகிய சாந்தரும் சிலவீர வேந்தரும், ஆயுதங்
கைக்கொண்டமாந்தரும், இந்தத் துரியோதனராஜனும்
இவருடைய தம்பிமார்களும், கூட்டமாகிய புத்ர பௌத்
ரானும் துரோணரும் அஸ்வத்தாமனும் நானும் நீயும்வி
ராடபுரத்தெல்லையை மிதித்தபோது இந்தநானவன்
ஒருதேருக்கு மேல் வேறுதேருமில்லாமல் ஒருபடைக
ளுந் துணையில்லாமல் ஒருவில்லுடன்வந்து யுத்தம்புரிந்
து புடைத்தநாளையில் முல்லைமாலையணிந்த ஆயர்களையு
ம் பசுக்கூட்டங்களையுங் கைவிட்டு முதுகுகாட்டியோடிய
முதன்மைத்திறத்தையோ இப்போது இவடத்தில் சொ
ல்லியதுஎன்று கிருபர் சொல்ல அங்க பூபதியானவன்
அவரைமென்றுதின்றுவிடத்தக்கசினங்கொண்டவனாய்ஓ
கோ கிருபனே எனக்குஈடாவானோ அந்தநானவனெ
ன்று அருகிற்சென்றுகண்பொறிகலங்கக்கனைத்து கனைத்
துநின்றுஇதழ்மடித்துசிவ்வென்றுமிஞ்சிப்பெருமூச்சுவி
ட்டுஅடடாஇந்தமொழி இன்னொருவன்சொல்லியிருப்பா
னாகில்இன்னேரம் அவனுடைய நாக்கையொண்டாய்த்து
ண்டித்துவிடுவேன் நீபுராதனனாகியும் பிராமணனாகியுமிரு
ந்ததினால் இந்தப்பிழைபொறுத்தேன் இன்னொருக்கால்
இப்பேர்ப்பட்ட தப்புவார்த்தை இசைப்பாயாகில் வெற்
றிபெற்ற வேதியனே பழையவிற்குருவென்றும் பார்க்க
மாட்டேன் இன்னம் எவர்கள் தடுத்தாலும்கேழ்க்கமாட்
டேன் ஒருவிசைக்குப் பத்துவிசையாகச் சொன்னேன்
சொன்னேன் சொன்னேனென்று பின்னுஞ்சொல்லுகி
றான் என்னுடைய விற்றிறமையை தேவாதிதேவர்களும்
புகழ்வார்கள் இவ்வுலகத்தில் என்னைக்குறித்து உள்ளங்
களிக்காத பேரொவர்கள் அப்படியிருக்க உன்மனம் பாண்
டவர்பக்ஷத்திலிருந்தபடியால் என்னைக்குறைவாகச்சொ
ன்னாய் நீசொல்லவேண்டிய பெருமைதான் நான்கேட்க
வேண்டிய சிறுமைதானென்று தனதுமனத்தின் படப
டப்படங்காமல் முகஞ்செவந்துநின்று கன்னன்சொல்ல
இந்தவசனத்தை அண்டையிற்பொருந்திக் கேட்டுக்கொ
ண்டிருந்த பரிசுத்தம்பெற்ற சிலைக்குருவின் ப்ரதாபமை
ந்தனாகிய அஸ்வத்தாமன்மனந்தாளாமற்சொல்லுகின்றான்.

அடாசூதனே உன்னைவிடவல்லவர் ஒருவருமில்லையெ
ன்று தன்னைத்தான் புகழ்ந்துமெச்சிக்கொள்ளுஞ் சவுங்
கலே அல்பசந்தோஷி உன்னிடத்தில் வீரமிருக்குமாகில்
உன்மட்டிலிருக்கவேணுமேயல்லாமல் எவராகிலும் உள்
ளத்தைச்சொன்னால் அவர்கள்நாக்கைத்துண்டிப்பேனெ
ன்று புறப்பட்டவல்லமை என்னத்தைக்கொண்டுசொன்
னாய் இளந்தையே யோசிக்குமிடத்தில் சவ்யசாசியை எ
வ்வளவேனும் நீவெல்லவல்லவனல்லவென்று பத்துதர
ஞ்சொல்லியிருக்கிறேன் இப்பவும் கோடியாந்தம் அந்த
விஜயனை நீ அசைக்கமாட்டாயென்று இதோ உன்குருவி
ற்சொன்னேன் இசைகெட்டவனே பசையற்றவனே வ
சைபெற்றவனே நீயிப்போது சொன்னசொல் வழுவா
மல் என்னுடையநாக்கைத் துண்டித்துவிட்டு மறுகாரிய
ம்பாரொன்று கண்டித்துப்பேசி கர்னனுக்கண்டையிற் செ
ன்றுநின்ற அஸ்வத்தாமனை காந்தாரிமைந்தனாகிய காவல
ன்கண்டு வேகமாகப்போய் இருவருக்கு மத்தியிலிருந்து
அவர்கள்முகத்தைநோக்கி சகலகலைக்கியானம்- ஆகமம-

புராணசாரம்-ராஜதருமம்-வீரதருமம்-நன்னெறிநீதி-தருர்வேதமுதலிய சாஸ்திரங்களெல்லாம் பார்த்து ஓர்ந்து தேர்ந்திருக்குந்திண்ணியராகிய நீங்கள் உள்ளங்கொதித்து பகைத்து இஷ்டமாகிய எனக்காகப் பாடுபடுவதைவிட்டு துஷ்டத்தனமாகப்பேசி எதிர்க்கத்தக்கதோ நீங்களொருவரிலொருவர் மாறுபட்டகொள்ளையால் யுத்தமுனையைவென்று எனக்குக் கொடுக்கவேணுமென்றிருந்த அரசும் ஆண்மையும் ஒழிந்துதிர்ந்தது என்னிஷ்டர்களே நாமெல்லோருங்கூடி இந்தக் குருக்ஷேத்திரத்துக்குவந்தது நம்மைமதிக்காமல் துதிக்காமல் பகைத்து நம்முடனெதிர்த்த சத்துருக்களைவென்று கொய்யவா அல்லது நாமொருவருக்கொருவர் கோபமேற்கொண்டு சண்டை செய்யவா இழிவாக ஒருவரையொருவர் வையவா நாம் என்னகாரியத்துக்குவந்தோம் சொல்லுங்கள் உரியராகிய பெரியோர்களே மேலும் இந்தத் துரோணாச்சாரியரும் கிருபாச்சாரியருமத்திரராஜனாகியசல்லியனும்மித்திரனுக்குரிய புத்திரனாகிய கர்னனும் நீரும் என்னுயிர்க்குயிராய் என்னுடன்பொருந்திய பஞ்சபூதமென்றுகொஞ்சமேனும்நெஞ்சில் வித்தியாசமில்லாமல் உண்மையாய் உறுதியுடன் ஆசைகொண் டிருக்கின்றேன் அப்படி யிருக்க போர்க்களத்தில் நீங்களொருவருக்கொருவர் பற்பலபேதமாகிய வார்த்தைகளைப் பேசிக்கொள்வது நீதியோ என்னைவிருதாவில் விடுக்கிறசேதியோ ஐயையோ பெருமையுடையவர்களே இன்றிரவு விடிவதற்குள்ளே நீங்களெல்லோருஞ்சேர்ந்து எப்படியாகிலும் ஒப்பற்ற வில்லாளியாகிய அர்ச்சுனன்பிராணனை ஒருநொடிப்பொழுதில்வாங்கி உத்தமக்ஷேமாபரணத்தை என்காதிற்போடுங்கள் உரியவர்களேயென்று உபசாரமாகச்சொல்லிய புவனசக்கேஸ்வரனுடைய மொழியைக்கேட்டு இதோ உமதிஷ்டப்படி முடிக்கிறேன் பயப்படாதீரென்று இரவிகுமாரனாகிய கர்னன் தேரேறிச்சென்று இந்திரகுமாரனாகிய காண்டீபன்பேரிலெதிர்த்தான், அவனைக்கண்ட அர்ச்சுனன்அதிகசந்தோஷங்கொண்டு ஆழிமால்வரைபோன்ற காண்டீபத்தைவிருக்கி அழகிய நாணிமுறுக்கி அம்பரக்கணைகளைநெருக்கி அங்கர்பூபதியை உறுக்கி அம்புலிக்குடையும் அம்பறாச்சிலையும் ஆணிப்பொற்றேரும் சரவேகக்குதிரையும், சாரதிதலையும், உச்சிதச்சிகரமும் கச்சையக்கொடியும் ஒன்றொழியாமற்போக்கி வீரபட்டமுதலாகிய கவசமும் பொடிப்பொடியாய் அழியத்தாக்கிப் போர்புரியும்போது புறங்கொடுத்தோடி மறுபடியும்நாடி, மேலுமேலும்வாடி, மிளவுங்கோடி, இப்படி அநேகவிசையழிந்தோடிய அங்கதேசனானவன் அதி உக்ரவேலாயுதத்தையெடுத்து ஆழாழிமுதலிய மாலாழிகளும் அலையக்குலைய மலையற்றலைய அர்ச்சுனன்பேரிலெறிந்தான், அந்தவேல் வரும் விந்தையைக்கண்டவிஜயன் மிகவும் மகிழ்ந்து அந்தவேலை மால்தரும் வடிக்கணையால் தூளாகமடித்து கால்தரும் இடியாயிரத்தால் தேரையுமொடித்து மணிக்கவசங்களையுந்தொலைத்து வசனக்கணையாற் போர்விளைத்து [illegible]போது வல்லலாகிய கர்னன், வெள்ளமாகியசெ[illegible] புறமிட்டோடினான் அந்தவன்மையை வணங்காமுடியையும் வாளராக்கொடியையுமுடைய மன்னவன்கண்டு மனஸ்தாபங்கொண்டு ஐயோ பாவம், நமக்குரியதோழன் எத்தனையோதரம் பாடுபட்டும் இறக்காமற் போகுதேயென்று நெட்டுமூச்செறிந்து இவனைப்போல் அக்கறையாய்ப் பாடுபடத்தக்கவர் ஒருமில்லையென்றறிந்து இனிநாம் சும்மாவிருக்கலாகாது இந்த அர்ச்சுனனுடன் எதிர்ந்து போர்புரிந்து கூடியவரையிலும்பார்த்து பிராணனைவிட்டுவிடுவோமென்று மனத்துணிவுகொண்டு மண்டலாகிர்தியாய் வில்லைவளைத்து குண்டலாகிர்தியாய் தேரைச்செலுத்தித் திரும்பும்போது வேதக்கடலாகிய கிருபரானவர் நிதானித்து இந்தத் துரியோதனனுடைய கருத்து இவ்விதமென்றுணர்ந்து அவனுடைய ஏழ்மையைக்குறித்து மிகுந்தயிரக்கமுங் கிருபையுமுடையவராய் தர்மசகாயனென்னும் தன்மருமகனாகிய அஸ்வத்தாமனைநோக்கிச் சொல்லலுற்றார் (என்னருமைமருமகனே, கேளும் சமுத்திரஜலத்தை மீறவொட்டாமலடக்கி மேன்பாடாக வீறிப்பிரகாசிக்கும் வடவாமுகாக்கினியின்பேரில் விட்டிற்பூச்சிவந்துவிழுகின்ற பேன்மைபோல் நன்மார்க்கமில்லா மனத்தினனாகிய துரியோதனனென்னுந் துன்மார்க்கநாதிபன் அர்ச்சுனனோடெதிர்த்து அமர்செய்ய வெத்தனித்தான் நாமெல்லோரும் சமீபத்திலிருந்தும் அவன்போய்ப் போர்புரியப்பார்த்திருப்பது அழகல்லவே ஆதலால் யுத்தஞ்செய்யப்போகாநின்ற துரியோதனனை தர்மமாக நாம்தடுத்து விஜயவீர சண்டீரமாகிய விஜயனைபடுத்து சண்டைபண்ணுவோம் வாருமென்று கிருபாச்சாரியர்சொல்ல விபூதிப்பிரகாசத்தினால் பிரகாசித்துவிளங்கும் அங்கிவண்ணத்திருமேனி அழகுவாய்ந்த அரனடியைநோக்கித் தவமிருந்து சாம்பசிவத்தரிசனங்கண்டு அவனருள்கொண்ட அன்புநெஞ்சுறுதிவாய்ந்த அஸ்வத்தாமன் தேவரீர்சொல்லிய யுத்தி நல்லகாரியந்தான் மாமாவென்று வல்லமையுடன் ரதத்தைச் செலுத்திப் போய் தனக்குமுன்னுதாய்ச்சென்ற மன்னர் மன்னனாகிய தார்வேந்தன்முகத்தைப்பார்த்து அரசனே நாங்களெல்லோருமிருக்க நீர் அந்தவிஜயன்பேரிற் போர்புரியப் போகவேண்டுமோ, நீர் அவ்வளவு பிரயாசமெடுத்துக்கொள்ளவேண்டியதில்லை அந்தநரனையடுத்து சொல்லுதற் கரிதாகிய யுத்தத்திறத்தை நாங்கள்விளைத்துமுடிக்குறோம் எங்களுக்குச்சொல்லவேண்டியகாரியங்களைச்சொல்லிநீர்படைக்குப் பின்னாகநின்று வேடிக்கைபாருமென்றுபுரவித்தாமன் புகன்று துரியோதனன் - தேருக்குமுன்னேதன்றேரைச்செலுத்திச்சென்றகாலையில்பின்னாநின்றமன்னர்மன்னன்மிர்துவாக இனிமைச்சொற்சொல்லுகின்றான் அஸ்வத்தாமனே உன்றந்தையாகிய துரோணாச்சாரியரை, என்றந்தையாகிய திரிதராஷ்டிரனைப்பார்க்கிலும், எண்மடங்காயெண்ணிநம்பினேன், அந்தமகாராஜன் அர்ச்சுனன்பேரில் பூரணமாகிய அன்பும்பக்ஷமும் வைத்திருக்கின்றபடியால் தந்தைகொண்டிருக்குந் தாக்ஷண்யத்தைப்பார்ப்பயேயல்லது, என்சிந்தைகொண்டிருக்குந் தினத்தைக்கண்டு தனஞ்செயன்பேரில் கோபம் சற்றுப்பிறக்கமாட்டாதே இந்தப்பேச்சை நானுறுதியாய்ச்சொல்

லமாட்டுவேன், அதென்னத்தினுலென்ருல், விஜயசங்கிராம மீளியாகிய நீ கோபவீரங்கொண்டு யுத்தமுனையிற் பிரவேசித்து வில்லைப்பிடித்து நாணியடித்து விசிகங்கொடுத்து நிற்பாயாகில் என் சத்துருக்களாகிய பாண்டவர்கள் பழையபடி வனவாச நுழையவேண்டும் அல்லது மண்ணுலகம்விட்டு விண்ணுலகடையவேண்டும் புண்ணியவானே உன்னெதிர்நின்று யுத்தஞ்செய்யும் பெருமைவாய்ந்த பேர்களுமுளரோ, மேகவாகனனுகிய இந்திரகுமாரனைவெல்லுவதுங் கொல்லுவதும் உனக்கொரு கணக்கோ, விந்தைதங்கு மிகுஜெயவீரப் பிரதாபகர சந்திரசடாமௌலி நந்திகேச்சுரன்றரும் வரமுள்ளநின்னை அறியாதவர்களுமுண்டோ ஐயனே, ஏதோ சிலகாரியத்தால் என்மனத்தை வாதித்துக்கொண்டிருந்த நினைவை வஞ்சனையில்லாமற்சொன்னேன் இப்பவும் நீங்களே தஞ்சமென்று நம்பினேனென்று நெஞ்சிரக்கமாய் சஞ்சலத்துடன் நிலையும் ஜெயமும் பெருக நிருபனுரைத்தான்.

இந்தவசனத்தைக்கேட்ட அஸ்வத்தாமன் இந்துகுலத்தோன்றலைப்பார்த்து அரசனே என் தந்தையின்பேரில் மெத்தவும் நிந்தனைநினைத்துச்சொன்னாய் அது உந்தனுக்குத்தகாது பெரியோர்களும் வீரர்களுமாயுள்ள பேர்களின்செய்கை யெப்படியென்றால் பாசமும் அன்பும் பக்ஷமும் மனங்கொண்டிருந்தபோதிலும் பகைநேரிட்டு அமர்புரியும் போர்க்களத்தில் முன்வைத்திருந்த நேசபாசபக்ஷ விசுவாசமுதலியயாவையும் லக்ஷியம்வைக்காமல் சரியாகிய சண்டைசெய்து எதிரியைக்கொன்று ஜெயம் பெற்றாலும் பெறுவார்கள் ஒருவேளை அபஜெயமடைந்து தாங்கள் மடிந்தாலு மடிவார்கள், எப்பேர்ப்பட்ட பகைநேரிட் டிருந்தபோதிலும், எதிரிகள் பூரணமாகநிறைந்த பலமுடையவரா யிருப்பாராகில், அவர்களையும் புகழ்ந்து மகிழ்ந்து, கொண்டாடுவார்கள், அப்படிப் புகழ்ந்தபோதிலும் காரியமே கண்ணாயிருப்பார்கள், வில்த்திறமும் போர்த்திறமும் தெரிந்த நாங்கள், வேதியராகையாலும் வேழ்விநாயகன் மைந்தனென்னும், விஜயனுடைய வில்வித்தையையும் வீரசிந்தையையும் கூடிய வரையிலுந் தெரிந்திருக்கின்ற விவேகமுடையபேர்களாதலால் இவனுடனெதிர்த்த எல்லாவுயிரும் நாசமடையுமென்று அவன்கற்றிருக்கும் வித்தைத்திறத்தைக்கண்டுபெரியகிருபைகொண்டு மதிநயமடைந்து, மலர்விழி சிறந்து, மகிழ்ந்து மேன்மேலாகச் சொல்லியிருப்பார் என்றந்தையாகிய துரோணாச்சாரியர் ஒருவருடைய கல்வியின் அருமைதெரிந்து பெருமைப்படுத்திச் சொல்லுவது நல்ல நூல்களையெல்லாம் ஆராய்ந்து வல்லவராகிய செய்கையுற்றிருக்கும் பரிசுத்த மேலோர்களின் நற்கடமையாக்கும் விக்ரமவேந்தனே அப்படி அன்பாகப்புகழ்ந்து சொல்லும்வார்த்தையானது, அவர்கள் பேரிற் பக்ஷமாய்ச் சொன்னதென்று, நீ நினைக்காதே கல்வித்திறத்தைப் புகழ்வதேயன்றி கற்றவனைப்புகழ்வதல்ல நல்லது அதிருக்கட்டும், நானிப்போது விரைந்து-விரைந்து-சென்று எனக்குள்ள வல்லபமெல்லாங் காட்டுவதன்றி கடன்வாங்கிப் போர் புரிந்தாலும் சாகாமலிருக்குந் தலையெழுத் துடை யவர்கள் சாவார்களோ, நமது சாமர்த்தியத்தால் அவர்களைக் கொல்லக்கூடுமோ இதற்குமுன்னே உன்கையிலான வளாக்கும் பார்த்துவிட்ட காரியந்தானே இது உனது தெளிவாகிய சிந்தையில் தோன்றவில்லையோ, ஆகிலும் இதோநான் போர்புரியப்போகிறேன் இந்த யுத்தமுனையை உமது கண்ணாறக்கண்டு மனமாறத் தெரிந்துக்கொள்ளுங் காவலனேயென்று புகன்று சாரதியைப் பார்த்து மாவலானே தேர்விடென்று-கரகர-கிறுகிறு-விறுவிறு விறுவிறென்று மந்திரத்தைச் செலுத்திச்சென்று அழகிய பொன்மயமார்ந்த, வில்லைவளைத்து நாணொலிகாட்டி திகாந்தமெட்டுந் திடமெனச்சுழங்கி உகாந்தகாலத் திடியெனவோங்கிகடல்சுவறக் குமுறுங்கதிமேவிய அடல்தாவிய புகையாஸ்திரங்களை புங்கானு புங்கமாய்ப்பொழிந்து சேமத்தில் வைத்திருந்த செம்பொன்னைப் போன்ற அம்புயக்கணை ஆதிசேஷக்கணை அரிபரந்தாமன் கணை முதலிய பற்பல அஸ்திரங்களை கார்காலமழை சொரிதலைப்போல் மூட்டி சந்திரகுலேச இந்திரபோக சுந்தரவதன நந்தியாவட்டமாலையணிந்த விந்தகிரிப்புயனாகிய துரியோதன னாதிபனும் அவனுடனிருந்த வீரபூபாலரும் ஆச்சரியங் கொண்டு மதிக்கும்படியாய் பாண்டவப் படைகளெல்லாம் பஞ்சாய்ப்பறந்து எஞ்சிச்சிதைந்து இறக்கச்செய்தான் பின்னும், பலபலயானைகள் விலவில வென்று உதைத்துக் கொண்டோய்ந்தழியவும், கலகலவென்று சிறந்தவேகமுந்திறமுநிறமுங்கொண் டுயர்ந்த புரவிகள் தலையறுந்து சிதைந்திறந்து மடிந்தொழியவும் சாரதியுந் தேர்வரிசைகளெல்லாம் மாருதிசிந்திய மலைபோற்றகர்ந்து வீழவும், திரண்டுவந்த பதாதியர் யாரும் உருண்டு மாய்ந்து ஒழிந்தனர் போரும் பலதேசத் தரசர்களும் வந்து வந்து அஸ்வத்தாமனுடனெதிர்ந்து முதிர்ந்து அமர்தொடுத்து ஆற்றமாட்டாமல் அழிந்துபோனார்கள்,போனவர்போக, சிலர்மடங்கி நீர்நிறைந்த ஏரிக்கரையுடைந்துசாறிப்போகின்ற ஜலம்போல்வேசாறிப்போனார்கள்,இவ்விதமாகஒப்பற்றஅஸ்வத்தாமனுடைய கொடுங்கணைகளானது எவ்வெவ்விடங்களிலும் நுழைந்து நுழைந்து எல்லாவுயிர்களையும் பயிர்களை களைவதுபோற்களைந்து களைந்து பறிக்குந்தன்மையை அவடத்தில் அமர்புரிந்துக்கொண் டிருந்த பாண்டவராகிய ஐவரும், ஐவருக்குரிய அரசரும் அரசரைச் சேர்ந்த சேனைகளும் கண்டார்கள்.

அந்தச்சமயத்தில், சேனாநாயகனாகிய துருஷ்டத்துய்மன்பார்த்து தன்னுடைய தேரைத்திருப்பி உகாந்த காலாக்கினியிலு முயர்ந்த உரகக்கணைமுதலிய புரதகனக் கணையாகிய புங்கவங்களை ஒன்றின்மே லொன்றாய் எங்கு நெருங்கச்செலுத்திமதம்பொருந்தியஒருயானையைக்கொல்லவேணுமென்று வந்த நகந்திருந்திய கொடும்புலியைப்போல் வந்தெதிர்ந்து அஸ்வத்தாமனுடன் கைகலந்து மண்ணில்நிறைந்த மன்னுயிரெல்லா மயங்க விண்ணிலுறைந்த விண்ணவரெல்லாருந் தியங்க அஷ்டகிரிகளுஞ் சிதறிக்குலுங்க அஷ்டகஜங்களும் ஈதறிந்தலங்க அஷ்டதிசைகளும் பதறிக்கலங்க புஷ்டியாய் நெய்சொரிந்த நெருப்பைப்போல் நெஞ்சிற் கோபமுண்டெறிய நெடுமூக்

செறிந்து நீண்ட மழுவைத்தாங்கிய கர தூஷண திரிசிரனென்னு மூவரும், முதண்டங்குழுங்கக் கோதண்டமேந்திய கோசலைமைந்தனும், பஞ்சவடிநிரத்திற் பகைத்துசண்டைசெய்த தன்மையைப்போல் இருவரும் வெகுநேரம் சமர்புரிந்து வரும்போது தான்செய்யும் போர்முகத்துக்கெதிராகிய நேர்முக மில்லையென்னும் பூரிப்பும் இறுமாப்புமுடைய அஸ்வத்தாமன் திருஷ்டத்துய்மனைச் சினந்து பார்த்து செந்நிறப்பறக்க உருட்டிவிழித்து வேர்த்து-அடா-பாண்டவச் சேனைபதியாகிய பழிகாரா-எங்கள் குலப்பகை யிரிஷத்தில் - முடியும்படியாய் உங்கள் குலத்தை யொழித்து விலக்குமுன்னே உன்னுயிரையும் நீக்கிவிடுகிறேன் பாரடாவென்று பற்கடித்து விற்பிடித்து பலவாகுகிய போர்த்திற வீரங்களைப் பேசினன், அந்த மொழியை அக்கினியிற்பிறந்ததிருஷ்டத்துய்மன் கேட்டு ஆ ஆ அஸ்வத்தாமனே, இதோ உறுதியாய்ச் சொல்லுகிறேன் இந்தக்ஷணத்தில் என்கைக்கணையால்உன்னை விண்ணிலேற்றி அப்பால் - உன்னப்பனுகிய துரோணனை ஆவிமாற்றுகிறேன், பாரென்று காரிடிபோற்கலங்கச் சிலவார்த்தையிசைத்தான் - அந்தவேளையில் - துரோணனென்னு முனிமைந்தனுக்கும் பாஞ்சாலனுடைய தனிமைந்தனுக்கும் உற்றதுணையாய உதவியாகும்படிக்கு அனேகம் வெற்றிவீரர்வந்து யுத்தமுனையிற்கலந்துசற்றுநேரமலைந்து இவர்களிருவருங் கடு கடுத்துத் தொடுக்குந் தொடைகளாற்படபடத்து அடிக்குமடிகளால் அவர்களெல்லாரும் படிமிசையிற்கமாட்டாமல் முடிசாய்ந்து முகமாறிதுடிதுடித்து ஓடிப் போனார்கள் அப்பால் - கலிரொன்றசையும் விரகண்டாமணி கட்டிய அழகிய அஸ்வத்தாமனும், திருஷ்டத்துய்மனும்-ஒருவரையொருவர் மிட்டிக் குறித்து நீண்டவில்லைவளைத்து நாணிமாட்டித்தெறித்துகனைத்து ஓசையுடன் பலங்கொண்ட தேவாஸ்திரங்களைக்கலங்கலமாகக் கொண்டுசொரிவதைப்போற் சொரிந்தபோது அந்தக்கணைத்திறங்களால் இருதிறப்படைகளுங் கால்மாடுதலைமாடாய்க் கவிழ்ந்து விழ்ந்தழிந்தார்கள். இவ்விதமாக இளைக்காமற் போர்புரிந்த யுத்த முகத்தில் செவ்வியோனுகிய அஸ்வத்தாமன்முனிந்து திவ்வியாஸ்திரங்களை யுதைந்து திருஷ்டத்துய்மனேறிய தேரும் குதிரைகளுஞ் சாரதியும் எடுத்த கொடியும்பிடித்த வில்லும் நடுத்தறியும்படியாய்க் கெடுத்தகற்றினன், அதனல்-வெற்றிபெற்ற வீரனுக்குக் கோடாலியாகிய ஐவர் சேனநாயகன் அகைத்தக்கும் புங்கவங்களால் எங்குங் காயப்பட்டு மலையருவியைப்போல் உதிரம்பெருகி யோடாநின்ற உடலோடோடிவாடி சற்றுநேரம் வேறுயோசனைகூடி உடனேவருத்தமொழிந்து விடமாகிய கணைகளைச் செலுத்தும் திடமாகிய வரிவிற்கொண்டு இடமாகியவேறுதேரேறிச்சென்று அஸ்வத்தாமனுக் கெதிர்நின்று அவன்தேரிற் கட்டிய சிங்கக்கொடியைப் பங்கப்படுத்தினன். அப்போது,அஸ்வத்தாமன் அகங்கரித்துஅச்சத்தைவிளைக்கும் அரியாஸ்திரமுதலிய அனலாஸ்திரங்களை மேலுமேலும்விடுத்து அந்த திருஷ்டத்துய்மனுடைய வில்லைத்துண்டித்து வெதறிமாலையைக்கருக்கி வீரபட்டத்தை யுருக்கி கவினம்பூட்டிய குதிரையையும் கதலிநாட்டிய தேரையும் அந்தத் தேரையோட்டிய சாரதியையும் பக்கத்துணைபாகச் சார்ந்தவரையும் சதைத்துச் சிதைத்து உயிரழிந்து சங்காருயம்புவானவர் அங்கஜராஜனுகிய சம்பாரியை முனிந்து தழித்தகாலத்தில் பொறியெழ விழித்த நெற்றிக்கண்ணுக்கொப்பாகிய புகையும் அனலும்விரிந்த புங்கவங்களைப்பூரித்து-செறிந்து;- பாஞ்சால புத்திரனுடைய அங்க முழுதையும் அனலாற்கொளுத்தினன் - அந்த வெப்பத்தால மேனியெல்லாம் வெந்து அயர்ந்து நொந்து சாய்ந்து வீழ்ந்த கின்னரியனுகிய ஐவர் படைநாயகனை சேமத்தேர் வைத்திருக்க சாரதிகள் வேறுதேரி லேற்றி யுத்தமுனை விட்டு அப்பாற்கொண்டுபோய் உபசரித்தார்கள் - அந்த திருஷ்டத்துய்மனவன் சவுக்கிய மடைந்து மறுபடியுஞ் சண்டைக்குவருமுன்னே மதமோகமும் அதிவேகமுங்கொண்டு நெறிப்பட்ட மணிந்துவந்த யானைகள் குதிரைகள் ரதங்கள் கால்பலங்கள் முதலிய வீரர்களையுஞ்சேர்ந்தரக்கொண்டு அந்திவானம்போல் ரத்தச்சிவப்பேறியபுத்தபூமிக்கு நகுல சகாதேவர்கள்வந்து அஸ்வத் தாமனை யெதிர்ந்து அமர்தந்தார்கள் அவர்களுடைய திறத்தைக்கண்ட-ஆசாரியகுமாரராகிய அஸ்வத்தாமன் கல்வம்பாகிய கணைகளைசெறிந்து அவர்கள்தொடுத்த செவ்வம்புகளைத் தடுத்ததுமல்லாமல் - சூரியனைப்பகைத்து உலகத்தை மறைத்தெழுந்த பனியை சூரியகிரண வெப்பங்கெடுக்குந் தன்மையைப்போல் அருணோதய அஸ்திரங்களை யுந்தி யானை-சேனை-பரிவாரங்களைக்கொந்தி-தேர்-குதிரை-சாரதி-வில் முதலியவற்றைச் சிந்தி அவர்க ளிருவரும்பிந்தி-காலோட்டங் கொள்ளும்படியாய் முந்தி-முனிந்து-முடுக்கிவிட்டு இப்பால்-மரகத நிறங்கொண்ட மாயன் செலுத்துந் தேரிற்பொருந்திய வாசவன்மைந்தனை மதியாதெதிர்ந்தான். அப்போது-தனஞ்செயனும், அவனோடெதிர்த்த அஸ்வத்தாமனும் சமனுகத்தனுவளைத்து ஷ்டங்காரஞ்செய்து சரவருஷம் வருஷித்தார்கள். இந்த அஸ்வத்தாமன் அடைந்திருக்கும் மமதையையும், இவர்கள் செய்யும் சண்டையின் சமதையையும்-தேவர்முதலிய யாவருங் கண்டு-பயங்கொண்டு-சிரோமாணிக்கத்தையும் ஜீவரத்தினத்தையு முடைய நாகத்தைக் கொடியாய்ப்படைத்த நராதிபனுக்கு, இவ்வுலகம் பட்டாபிஷேக மாய்விடுமென்று கெட்டியாய்ச் சொல்லி ஓரடிமேலே பெயர்த்து ஒதுங்கிப்போம்படியா யுன்னினார்கள், வாடைக் காற்றுடன் வடவாமுகாக்கினியுஞ்சேர்ந்து புகைந்து பொரிந்துசொரிந்து உகாந்தகாலப் பேரிடியைப்போல் முழங்கா நின்ற மூர்த்தன்ய முதன்மையாகிய வேதனைவிளைக்கும் அஸ்திரங்களை அவ்விருவருஞ் செலுத்துகின்ற கரவேகத்தையும் வச்ரகட்டுகளுடன் மயிர்பீலி யிறகுகளார்ந்த வடிக்கணைகளைக் குறித்துவிடுகின்ற நெறிப்பாகிய சரவேகத்தையும் வலமிடஞ்சுழலுகின்றம்காரதவேகத்தையும் கண்ணுறக்கண்டு, சகிக்கமாட்டாமல், விண்ணுடர் முதலிய மன்னுயிரெல்லாம் மனத்தினினைத்து வாதையடைந்து வருந்திவாடவும், பலம்பொருந்திய இராஜாஜர்க ளெல்லாரும் சிந்தைகலங்கித் தியங்கித் திடுக்கிட்டகலவும், இவர்க

லைப்பெற்ற தந்தைகளின்பட்டம் இவர்களுக்கே தகுமெனறு யாவரும்வியப்பவும், இவரிருவரும் ஒருவரையொருவர்விடாமல அம்புகள்தார்கள, அந்தவேளையில் ஞாலமுழுமைக்கும் காப்பியாகிய துரியோதன ராஜனும் துரோணாசாரியாகிய மெய்க்குருவும் இவர்கள் விளக்குஞ்சண்டையைக்கண்டு அற்புதம அற்புதமென்று ஆச்சரியங்கொண்டுஅங்கங்காரமாக அர்ச்சுனனுக்கருகிற்போனார்கள்.

அப்போது, சர்வசம்மாரகால உருத்திரர்க் கொப்பாகிய அஸ்வத்தாமன் அர்ச்சுனனுடைய யுத்தமுனையைவிட்டு அப்பாற்றிரிகின்ற போர்முனையிற் புகுந்து அலங்கோலங்கண்டான் அந்த அஸ்வத்தாமன் விஜயனைவிட்டகன்று போகவே அழகியமேகம்போன்ற தேகங்கொண்ட அர்ச்சுனனவன் பரிசுத்தமாகிய ஆசாரியனைக் கண்டு அவர்பக்கத்தில் தன்றேரை நடத்தி அவருடன் பகைத்து அனகெழச்சிரித்து அடட்டிச்சினந்து ஆசானிடத்தில் சுற்றவிந்தையை அப்போதே போக்கடித்துக் கொள்ளாமல் எப்போதும் விர்த்தியாக்கி இசைபெறநிலையிட்ட விஜயராஜன் தனுர்வேத சாமர்த்தியமுடைய ஆசாரியனிடத்தில் தளர்ச்சியில்லாமல் நினைத்தற்கரிதாகிய பெருமையுடன் அமரியற்றினன்.

இவ்விதமாக இருவரும் இவடத்தில் சண்டைபுரிந்துக்கொண் டிருக்கும் வேளையில்-வாகுலிகராஜகுமாரனாகிய சோமதத்தனனவன் பொன்மலையிலும் பெரியமலைபோன்றதேகாசசெலுத்தி சாமர்த்தியமுள்ள தரணிபாலரெல்லாருஞ்சூழ்ந்துவரும்படியாய் சண்டைக்கெதிர்த்து, தமுற்பொறிகொடுத்து-தழைந்துசசிதறும்படிக்கு மன்னிமேலாகிய வெற்றிபெற்ற சாத்தகியை வளைத்து அமர்விளைத்தான் - அப்போது மாலினுக்கிளைய சாத்தகியானவன், வேலினுங்கொடிய கடுங்கணைவிடுத்து அவ்னெறிவந்த தேரிற்பூட்டிய நான்குகுதிரையும் பவளக்காற்றேரும்பக்குவசாரதியும்வெள்ளிக்கொடியும் விரபட்டங்கட்டியவில்லும்பாழாகும்படிவிலக்கி, அவனுடன்மேவிவந்த படைஞரையுங்கலக்கி அயிந்திராஸ்திரப்படையைத்தொடுத்து அந்தச்சோமதத்த னுயிரைக் கெடுத்துவிட்டான், இதற்குள்ளே வாயுகுமாரனாகிய வீமன்மேவிட்டு தேயுக்கணைகளைத் தீட்டிவிடுத்து துரியோதனனுடைய சேனைக்கடலைக் கலக்கிவரும்போது அரசனுடைய சேனைவெள்ளம் சண்முகக்கடவுள்தொட்ட சத்துருசங்காரவடிவேலினால் சமுத்திரம் பட்டபாடெப்படியோ அர்தப்பாடுபட்டுது அதுகாலையில், பூரிசன்தம்பியாகிய பூரியென்று பெயர்கொண்ட பூபதியொருவன் பெருந்தேர்செலுத்திவந்து போர்புரிந்தசாத்தகியின் பேரிலெதிர்த்து விண்டலமும் அதற்காசனாகிய ஆகண்டலனும் மண்டலமும் எண்டிசையும் அதிர்ந்துபோகும்படி சண்டைவிளைத்து சாத்தகிதொடுத்த சங்கிராமக்கணையால் தன்னுயிரொழிந்தான். இப்பால் பூலோக புரந்தரனாகிய தருமராஜனுடன் போர்புரிந்து பொங்குங்கடற்போலெங்கு நெருங்கிக்கங்குல்பகல்தோன்றாமல் நிறைந்துநின்ற பூபாலரெல்லாரும் புயவலியிழந்து தேரிழந்து வில்முதலிய விரபட்டமும் ஒழிந்து உரிமையழிந்து உயிரழிந்தோடினார்கள். இதலலாமல் ஆதிகாலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் சஷாத்திரநேரிட்டு மகமேருவின்முடியைப் படைலென கொடியிலொடித்த வாயுவின் தன்மைபோன்ற வலிமைகொண்டு வில்வளைத்து பலம்பொருந்திய சண்டைசெய்து மண்டைபிளக்கும்படியாயச சதாவிகள்தொடுத்து வந்தகணைகளுக்குச் சகிக்கமாட்டாமல் மத்திரராஜனாகிய சலலியன் மனமடிந்து உயிர்வாடி அறிவழிந்து உடலாடி இருவரையிலுந் தனதுகுலத்துககில்லாத பழியைத்தேடி இருட்டில வழியைநாடி ஓடினான், இஃதிப்படியிருக்க அஸ்வத்தாமன் அல்லோல கல்லோலஞ்செய்துவராநின்ற அவதியினால் ஐவர்படைக்கலம் படுகின்ற அலங்கோலத்தை இடும்பிமைந்தனாகிய பலம்பெற்ற கடோற்கஜன்கண்டு சன்னப்பின்னலாகிய மின்னலையுடைய வன்னவேலையெடுத்து அன்னோன்மார்புக்கு நேராக எறிந்தான், அந்தவேலாயுதம்வந்து அஸ்வத்தாமனுடையமார்பில் தாக்கியபோது பெருந்துக்கங்கொண்டவனைப்போல் பேச்சில்லாமல் மூச்சில்லாமல் தேர்மேற்சாய்ந்துவிட்டான் அப்படிமாய்ந்தவனைப்போல் வீழ்ந்த அஸ்வத்தாமனை ஆய்ந்துணர்ந்த சாரதியானவன் உடனே நெடுந்தூரங்கொண்டுபோய் உபசரித்துத் தேற்றிக்கொண்டிருந்தான் இப்பால் செங்கதிர்க்கினியமைந்தனாகிய அங்கதேசாதிபனுடன் சங்கையிலாமற் சகாதேவனெதிர்த்து உரம்பெற்ற பிரபலபாணங்களைத்தொடுத்து யுத்தஞ்செய்து ஸ்திரமாகிய பலம்பெற்ற வில்லுந்தேரும் வீணாய்முறியவிட்டு தானும் மண்மேற்குதித்து மண்டியிட்டு சாணைபிடித்துத் தயிலந்தோய்த்தெடுத்தகத்தி கேடயத்தைக்கைக்கொண்டு காற்றுடிபோற் கரகரவென்றுதிரிந்து சுழன்று எரிந்துபரிந்து வந்துகுந்தியிருந்து பந்துபோலெழுந்து கர்னனுடைய தேரின்மேற்றாவியபோது அதைக்கண்ட கர்னனனவன் கமலாஸ்திரத்தைவிடுத்து சகாதேவன்கைப்பற்றிய கத்திகேடயத்தைத் துண்டு துண்டாக்கினன், அப்போதுசகாதேவன், விண்ணிலெழுந்துமண்ணிற்பாய்ந்து கண்கறுத்து கடுங்கோபங்கொண்டு கதாயுதத்தைவீசியெறிந்தான் அந்தக்கதாயுதம்வந்த காத்திரத்தைக்கர்னன்கண்டுகாலாக்கினிக் கணையைத்தொடுத்துப்பொடியாயுதிர்த்தான் உடனே சகாதேவன் களைத்து வேலாயுதத்தையெடுத்து வேண்டியபூசைகொடுத்து விடுத்தான் அந்தவேலாயுதமானது நாலாவிதகோலாகலமாய் மேலாகளரிந்துவருவதை மிகுகொடையாளன்பார்த்து சூலாயுதத்தைதிரித்து விடுத்து வேலாயுதத்தை வெட்டியெறிந்தான் அந்தவேலாயுதம் அழிந்துபோனதை சகாதேவன் கண்டு வெகுண்டு மாலாகிய சக்கிராயுதத்தை விறுவிறென்றுசுழட்டி விடுத்தான் அந்தச்சக்ராயுதமானது உக்ரமான கழலைச்சொரிந்து மின்னலும் இடியும்விளைத்துவேகங்கொண்டுவருவதை கர்னன்கண்டு கலீரெனநகைத்து பின்னமாம்படியாய்ப் பிறைக்கணைதொடுத்து அன்னவனைப்பார்த்து அடா சகாதேவா, இன்னம்பற்பலவிதமாகிய ஆயுதங்களை எத்தனைவகையாயெறிந்தாலும் அத்தனையையுந் தூளாகும்படியா யழிக்கிறேன்பாரென்று கூரம்புகளைக் கும்பாய்விடுத்து சகாதேவனுடைய அங்கத்தை

ப்பங்கப்படுத்தியபோது தங்கமிழந்ததரித்திரர் தமைப்
போல் சங்கடப்பட்டு சகாதேவனுனவன் அலைந்து ஆடி
ப்பாடி அடங்கிப்பெலிந்துவாடி நாடி வருந்திநின்முன், இ
ப்படியாக ஒடுங்கிநின்ற சகாதேவனுக்குச் சமீபத்தில த
ன்னுடைய தேரைச்செலுத்திக்கொண்டுபோய் அந்தச்ச
காதேவனுடைய கழுத்தில் தன்னுடையவில் நாணியை
மாட்டிமுடுக்கி வெட்டவேனுமென்று கிட்டயிழுத்தகர்
ணனுனவன் தன்தாயாகிய குந்திதேவியாருக்கு முனகொ
டுத்திருக்கும் வரத்தையினைத்து அவனைக்கொல்லாமல்
விடுத்து அடாசகாதேவா, நீ தனிமையிற்சென்று சண்
டைசெய்யும்படியாகிய கொண்டைக்காரனுனையோ அத
ற்காறுனும் உனக்குத்தகுந்தவர்களுடன் யுத்தம்பண்ண
வேனுமேயல்லது மல்யுடன் மண்ணுங்கட்டியெதிர்ப்ப
துபோலும், மகாராஜனுடன் சொக்கட்டான்போடுவதை
ப்போலும்) என்னுடனெதிர்த்து இனியில்லாத தலையறு
ந்த ஆட்டமெல்லாம் ஆடினையே இதுவரையிலும் நீ என்
னபலன்கண்டாய் ஆகிலும் இப்போதுமெத்தச்சுளுவாக
உன்னைநான் கொல்லலாமல்லவா அப்படியே உன்னைக்
கொன்முலும் அதனுல் எனக்கொரு லாபமுமில்லை உன்
னைக்கொல்லாமல விட்டுவிடுவதினுல் எனக்கொருலோப
முமில்லை நீயகப்பட்டதைப்போல் அருச்சுனன் அகப்
படுவானுகில் ஆ ஆ அவனை இன்னேரமே கொன்று கச
கசவென்று மென்று தின்று வென்ற விடுவேனென்று
தனதுநாவானது தடிப்பேறும்படியாய் நுடிப்பாகிய பல
பலவார்த்தைகளைச்சொல்லி இகழ்ந்து அதோ இருக்கிரு
ன் அருச்சுனனுனவன் அவனிடத்திற்போய்ச்சேர்ந்து நீ
பட்டதொல்லையும் நான் உன்னை உயிருடன்விட்ட சொ
ல்லையுஞ் சொல்லுபோவென்று சொல்லிவிடுத்தான் அவ
னும் அதேபோக்காய்த் திரும்பிப்போய்விட்டான்.

இப்பால் பாண்டவச் சேனுபதியாகிய திருஷ்டத்தூய்
மனும் அவனுடன்சேர்ந்து யுத்தஞ்செய்யவந்த அநேக
மாகிய ராஜாராஜர்களுங்கூடி தெய்வவாளிகள்தொடுத்து
அருச்சுனன்பேரில் எதிர்த்துவந்த துரோணுச்சாரியை
மாட்டி ஓடவிட்டடித்தார்கள் அந்தச்சமயத்தில் அவரு
டன்சென்றயானைகளும் தேர்களும் குதிரைகளும் காலா
ள்களும் எதிரணியாகத்துணிந்துநின்ற படைவீரர்முத
லாகிய மன்னவர்களும் பாண்டவப்படைகளுக்கிடைந்து
புறமுதுகிட்டு துக்கத்திலாழ்ந்து துரியோதனன் நிற்கின்
ற பக்கத்தைநாடி ஓடிவந்து வீழ்ந்தார்கள், அந்தவேளையி
ல்சகாதேவனை அருச்சுனனிடத்திற்கனுப்பிய கர்னனுன
வன் - துரியோதனமகாராஜ னிடத்துக்கு வந்து - தேர்
விட்டிழிந்து சிலவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கின்
ற சமயத்தில் பயந்தோடிவருகின்றபடைகளைக்கண்டுபய
ப்படாதிர்களென்று கையமர்த்தி இருவிழியிலும் புலிக்
கசாலப்பொறியெழும்பும்படியாயுருட்டி விழித்து போர்
புரியும் வெஞ்சினமிகுந்தெழச் சிரித்து ப்ரிமுறுக்கு வி
ல்லுனாணியைப்புயமுறவிழுத்து அபயமிட்டோடிவந்தசே
னைகளை அணிபெறநிறுத்தி தன்பிள்ளையும் துரியோதன
னுடைய தம்பிமாரும் - துணையாகிய மன்னவரும்புடை
பெயர்ந்து வரும்படியாய் எதிரிகளினுயிரை ஒருக்ஷணத்
தில வாங்கிவருகிறேனென்று தேரோட்டிமுனைமுகத்திற்பு
குந்துவெப்ப மேற்கொண்ட வில்லைத்தாங்கி ஒப்புவமை
யில்லாத தன்னுள்ளத்துக்கொப்பாகிய உரிய துரியோத
னனைப் பார்த்துச்சொல்லுகிருன் - ஓ - புஜபல பராக்கி
ரம பூபதியேகேளும் ஒன்றுபலவாகவிளையும்விதையைப்
போன்ற பாணங்களைக்கொண்டு உமதுசத்துருக்கள்மே
ரில் இன்றுகோபித்தெதிர்த்தேன் - இன்னமொருவினுடி
ப் போதில் இங்குச்சத்துருக்களெல்லாம் - அமுதநிறைந்
த அகன்ற அந்தரத்திற்போகச்செய்கின்றஎன்னுடையதி
ராணித்துணிவை நீர்பாருமென்று சொன்னுன்.

இப்படியாகச்சொல்லிய கர்னனுடைய வார்த்தையை
க்கேட்ட துரியோதனமகாராஜனும் பலவான்களாகியஅ
நேகமன்னவருங்கர்னராஜனுடன் கலந்து கொண்டுவரவு
ம் கோடைகாலத்துகாளமேககர்ச்சிதம்போல மேளவாத்
தியங்கள் முழங்கவும் - விருதுபெற்றவீரரெல்லாரும்
வெற்றிச்சங் கூதவும் - காகளம் - பூரி - தாரை - வீரசின்
னம்பேரி - ஆரமணிமுதலிய அளவிறந்த வாச்சியங்கறங்
கவும்கணக்கில்லாதவிருதுகளெடுக்கவும்-தகுதியையுடை
யதாஷ்டிகாள்கண்டு இனிமேல்யுத்தமென்னமாமோவெ
ன்று ஏங்கித்தளரவும், குணத்தொனிகாட்டி குமித்தெதி
ர்நாட்டி கிரித்தேரோட்டி படைமுனையிலேதிரிந்துகடை
முனைகூடிய கணைகள்கைக்கொண்டு காலாந்தகனே இந்த
க்கர்னனென்று சொல்லும்படியாய் எதிர்ந்தகாலையில் இ
வனெதிர்ப்பட்டவிரவேந்தரெல்லோரும் நெருங்கிச்சுரு
ங்கிமடிந்தார்கள் இன்னம்பலவீரர்ள்மூன்னுதாகச்சென்று
சின்னஞ்சிலபூண்டுவெங்கிட்டோடினுர்கள் இதுகளையெல்
லாம்மடைகொண்டெழுந்த தேனிறைந்தமலர்த்தொடை
புனைந்தபுயவள்ளலாகியதருமராஜன்கண்டு மனத்துள்மதி
த்து அந்தோ இதென்ன அனியாயம் ஒருவில்லாளியாகி
யஅங்கதேசராஜன்விடுக்கும்அம்புகளினுல் நமதுபடைக்
காவலருடையபாணங்களும் வில்லுகளும்பலங்களும் ப
தாதிகளும்புகளும்பங்கப்பட்டுப்போகவும்நேரிடுமாகில்இ
னிமேல் நாம்செய்யவேண்டியதிறமென்னஇப்பேர்ப்பட்
டவேளையில், எதிர்நின்றுயுத்தம்பண்ணுமல்விஷபரிக்ஷை
பார்ப்பவரைப்போல்இடைந்துநிற்பதுமுறையோ இதுஎ
ன்தவக்குறையோ,ஈசனேயென்றுஇரக்கங்கொண்டு இந்
திரைநாயகனுகிய சுந்தரமாயனுடையஇருசெவிகேட்கும்
படிக்குச்சொல்லவும், அந்தவார்த்தையினுடைய நட்பத்
தைஇளவலாகிய அருச்சுனனறிந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய
முகத்தைப்பரிந்துபார்த்துமுகம்வியர்த்து அந்தக்கர்னன்
பேரில்ரதத்தைவிடும்நாதனே, அவனுயிரைவாங்கிவிடுகி
றேனென்றுஆக்கிரஷப்பட்டுஆக்கிரமித்தசிங்கம்போல்அ
தட்டிச்சொல்லியதோழன்சொல்லை அலர்நாயகிநாயகனு
கியஅருளாழிவேந்தன் தடுத்து அவன்முகத்தை நோக்கி
அவசரப்படக்கூடாது அர்ச்சுனு, நெருங்கிய ராத்திரியி
ல் யுத்தஞ்செய்வதற்குராட்சசாள் துணிவார்களல்லாம
ல் மற்றவர்கள் துணியமாட்டார்கள்-இந்தராக்காலம்மே
ற்சொன்னராக்ஷசாளுக்கு உரியகாலம், இந்தக்காலத்தில்
தேவர்கள் யுத்தஞ்செய்யப்புறப்படார்கள், ஒருவேளைபுற
ப்பட்டாலும்ஜெயம்பெறமாட்டார்கள், ஆகலால் இந்தக்

கர்னன் ராக்ஷசஅமிசம், நாமெல்லாருந் தேவாமிசம் இ
தை உமதுபுத்தியில்ஸ்திரமாகவையும்புயவலிமைபெற்ற
புண்ணியனே, இந்த இராக்கதலபலத்தால் மூர்த்தண்ணி
யதிசைகொண்டிருக்குங் கர்னனுடன் நாமெதிர்ந்துபோர்
புரிவது முறைமையல்ல ஆனல் நான் சும்மாயிருக்கிறே
னென்றுநினைக்காதே, இந்தராத்திரியில் இவனுக்கிடாக
யுத்தஞ்செய்யும்படியாகிய பேனைத்தேடிக் கொண்டிருக்
கிறேன் இந்தவேளையில் இவனுக்குத் தகுதியாகிய யுத்த
த்திறங்களின்பெற்றியுணர்ந்தபலவானும் கைப்பற்றியவி
ல்த்திறத்திற் சிறவானும், வேலாயுதம்-சூலாயுதம்-சக்கரா
யுதம்-குந்தாயுதம்-தண்டாயுதமுதலிய ஆயுதங்களிற்றலை
வானும், இந்த இருட்டைமருட்டும்படியானதேகமித்திர
னும்வீமசேனனுடையமோகபுத்திரனுமாகிய கடோற்கஜ
னென்னும் இந்தமகானுபாவன்பிரவேசிப்பானுகில் (எள்
ளுக்காய் முள்ளுத் தெறிப்பதுபோல) கொள்ளையாடிவி
டுவானென்பதாயுள்ளபடி நான் யோசிக்கிறேனென்று
கோபாலன்சொல்ல அந்தவாக்கியத்தை அண்டையிலிரு
ந்துகேட்ட கடோற்கஜனனவன் விண்டலம்வரைக்குங்கி
ளம்பிமண்டலங்கிழியக்குதித்து சண்டை முன்னண்டை
யில்முனைந்து நிற்கின்ற சதகோடி வேந்தர்களைப்பார்த்
து - ஓ ஓ, வீரர்களே உங்களை நோக்கி இந்தவார்த்தை
யைச்சொல்லாமல் என்னை மதித்துத்துதித்துச் சொன்
னர் எப்பொருட்கு மிறையாகிய ஜனார்த்தனரென்று வி
ருதேறிய இருதோளையுங்கட்டி புயவலிநாட்டி மின்னலை
ப் பிரகாசிக்கும் மேகம்போன்ற திருமேனியையுடையகி
ருஷ்ணார்ச்சுனனைவணங்கி தர்மபுத்திரருடைய தாள்மே
ற்பணிந்து பேய்கள்பூட்டிய கழுதுக்கொடி நாட்டிய பெ
ருந்தேரிலேறி விருஷப விசாட்டைப்போல் அநேகம் அ
ரசர்கள் படைகொண்டு புடைசூழ்ந்து வரும்படியாய்வி
டைகொண்டு விரைந்துசென்று கடையுகக் காலாக்கினி
போற் கலந்து கடுஞ்சிலை வளைத்து காச்சித் திரைச்சுக்
கடைச்சற்பிடித்து தயிலதூபமேற்றிய சரங்களைக் கோ
டாகோடிகளாக எங்குமிறைத்து அம்பர நிறைத்து உக்
கிரமாக பக்கத்தில் யுத்தஞ்செய்துவாராநின்ற சூரியகுமா
ரனுகிய வீரிய கர்னனைவளைத்து மாரிபோற்பொழியும்வே
ரியங்கணைகளாற் றுளைத்து அணிபடக்கூடிய மணிமுடி
சூடிய மன்னவரெல்லாருஞ் சின்னமுறக் கொன்று மின்
னும் பலவாகிய வன்னப்பகழிகளைச் சன்னப் பின்னலா
ய்த்தாக்கி வராநின்ற கடோற்கஜனை, கிணிதோளினை யு
டைய செங்கதிர்ச் செல்வன்கண்டு - சீறிப்பாய்ந்து சிலை
யைவளைத்து தேவாஸ் திரங்களைச் செலுத்தி அந்தக் க
டோற்கஜன் கைப்பற்றியவில்லைப் புல்லெனமதித்து ரெ
ண்டுதுண்டாக்கினன், அப்போது கடோற்கஜன் கனைத்
து இரண்டாய்முறிந்த தன்வில்லை வீரகண்டாமணிகட்டி
ய கர்னன் பேரில்சுழற்றி யெறிந்து மிகுந்த துணிவினை
யுடையவனய் கதாயுதங்கைக்கொண்டு அரவக்கொடி நா
ட்டிய துரியோதனனும்-மற்ற அரசர்களும் சிந்தைநொந்
து மயங்கித் திகைக்கும்படியாய் தாழாவலிகொண்டு தா
னெருவனுமெதிர்ந்து ஜாடும்போது - சடாசூரன்பிள்ளை
யாகிய அலம்புதன்கண்டு தீர்க்காலோசனை கொண்டு புல

ம்பிக்கலங்கும் போர்முகத்தெதிர்ந்து பெருமைபெற்றசா
மர்த்தியத்துடனே பெயர்ந்து கடோற்கஜனைத் தகைந்து
நகைத்து மிகைத்திறமாகிய ஊழ்விலையைப்போற் பகை
த்து வைரம்பற்றிய கதாயுதத்தைக்கொண்டும் வாளாயுத
த்தைக்கொண்டும் வலுவேறிய யுத்தஞ்செய்தான்.

இம்பர்முதலாகிய-அம்பரமுட்ட எரிந்துவரும் போராடி
யகாலையில்-பெருங்கோபத்தையும்-போர்த்திறத்தையும்-
பொருளாகவுடைய அலம்புதனனவன் பூமியிற்குந்தி ம
ண்டியிட்டுச் சுழன்று கடோற்கஜனுடைய ஒருகாலைப் பி
டித்தான் - அப்போதே அலம்புதன்பிடித்தகாலை பூமியி
லழுந்தவூன்றி மற்றொருகாலைத் தூக்கி அந்த அலம்புத
னுடைய மூளைசிதறும்படியாய் முடிமீதுதைத்து தரைமீ
துசாய்த்து ஒருகாலைத் தன்காலினுல் மிதித்து மற்றொரு
காலைக் கையாற்பிடித்து இருபிளவாகக் கிழித்து மூறுகு
ழந்தலையை மோதிக்கொண்டோடி குருகுலநாயகனென்
னுந் துரியோதனனேறிய அழகியதேர்மேல் விசியெறிந்
து-ஆ ஆ, அரவக் கொடியோனே-உனக்குரிய அலம்புத
னைப்பார்த்தையா இதோ-சூரியகுமாரனுகிய கர்னன்றலை
யையும், இந்தப்பிரகாரம் முறித்துக் கொண்டு இப்போ
தே வருகிறேன் இந்த இரண்டுபேருடைய முகத்தையும்
ஏககாலத்திற் பார்க்கலா மிருவென்று சொல்லி வேந்த
னுடைய விருதணிப்படைகளெல்லாம் பிரசண்டமாருத
த்திற் பறக்குஞ் சரகைப்போல வெருண்டு புறமிட்டோ
டும்படியாய்க் கலக்கும்போது படைவீரரள்பறந்து பதை
ப்பதை பாராளுந் துரியோதனன் பார்த்து பரதவித்துப்
பரிந்து தன்சேனைகளைக் கலங்காமற் றரிக்கச்செய்து தயி
ரிய சாமர்த்தியத்துடன் தனுவளைத்து - ஷடங்காரம்பண்
ணி மூன்று மின்னற்கணையை விடுத்தான்-அவன் றொடு
த்த மின்னற்கணையாகிய மூன்று பாணமும் தாண்டவமா
டிவருகின்ற தன்மையை தர்மராஜனுடைய படைகளுக்கு
த் தலைமையாகத் தோன்றிய கடோற்கஜ காளையானவன்
கண்டு கார்முகம்வளைத்து கடுங்கணை செலுத்தி கத்தரித்
தெறிந்தான்-இவ்விதமாகப் போர்புரியும் இடும்பி குமார
னுக்கிளைத்து ஏங்கிய ராஜேந்திரனும் வீரப்பிரதாபவேந்
தர்க ளியாவருங்கலந்து இந்தக் கடோற்கஜனைக் கைப்பி
டியாகப் பிடிக்கவேண்டுமென்று கவிந்து சூழுங்காலையில்
அமுதங்கடைந்த நாளையில் பாற்கடலிலுதித்த ஆலகால
விஷம்போற்கலந்து அரவக்கொடியோன் முதலாகிய அ
ரசர்களெல்லாரும் அலக்கழிந்து மருண்டு அவரவர்கள்
பாட்டி லோடும்படியாய்க் கலக்காநின்ற கடோற்கஜனு
டைய பகைமேலிட்ட புஜபலபராக்கிரமத்தை சொல்லு
தற்கரிதாய் தேவர்களெல்லோரும் பூமலர்தூவக் காவல
ர் பல்லோருந் துதித்து மதித்தார்கள். அப்போது அரச
னுடைய சேனசயினியங்களெல்லாம் அந்தரத்தி லாடும்
பம்பரம்போற் சுழன்று அவதிப்படுங்காலத்தில் அநேக
ங்கோடி அரக்கருடன் இவ்விதமென்றுரைக்கொணுத ஆ
ண்மிக்கைபெற்ற அலாயுத னென்பவன் கர்னனுக்கும்
சௌபலனுக்கும் உயிர்த்துணைவனனவன் உலகிலுள்ள
இருட்டெல்லாங் கூடி ஓர்வடிவாக நாடிவந்த தன்மை
யைப்போல் வந்து பாண்டவர்முதலாகிய படைமன்னவ

டில்லாரும் பயப்படும் படியாய் துரியோதன னுடைய பாதத்திலே விழுந்தெழுந்து பாராஜ பயங்கரனே பராக்கு தேவரீரென்ன ஒருவிதமா யிருக்கிறீர் ஏதொன்றுக்கும பயப்படவேண்டாம் இதோநானிருக்கிறேன் இன்றிராத்திரி விடியுமுன்னே நஞ்சங்கலந்ததுபோல வெஞ்சமர் நடத்தி பஞ்சவர் எஞ்சும்படி பாழாக்கி வென்று அவர்களுக்குத் தெய்வலோக பதவிகொடுத்து பணிமுடிபொறுத்த பார்முழுதும் நீராளும்படிக்கு உமக்குப் பட்டங்கட்டிவைத்துஎன்கண் களிக்கப்பார்க்கிறேனென்று பலவாறாகிய சபதங்கள்கூறி ஏற்றிய தீபங்களெல்லாம் இருண்டு மண்ணும் விண்ணு மொண்ணாகித் தும்பெழும்படியாகவந்து அர்ச்சுனனுடன் முனைந்தெதிர்ந்து அவனாலடிப்பட்டழிந்து வலிமைகழிந்து புறமிட்டொழிந்து வீமசேன னுடன் போர்புரிந்து சிறி வேண்டியயுத்தங்களை விதவிதமாகச்செய்து பூரித்த மலைபோன்ற புயங்கள் வளரவும்போராடு மெதிரிகள் பயப்படுத்தளரவும் ஜெயம்பெறும்லாபங்கிய துரியோதனுகியர் திடங்கொண்டெழுந்து முடுக்கவும், அலாயுதனென்னும் ராக்ஷசன் கடைவாயை நக்கிச் சுழற்றுகின்ற நாக்கிலிருந்து பொறிநெருப்புப் பறக்கவும் துர்மாமிச நாற்றமுடைய கோரப் பல்லுகளின் பிரகாசத்தினால் நெருங்கிய யிருளகன்றோடவும் செம்பட்டமயிரினால் திசைகளெரியவும் பகைத்திறங்கொண்டுபகைவர்மேற் செல்லுமுன்னமே இருபுறத்திலும் இவனைச் சூழ்ந்துவந்த இராக்கதச்சேனைகள் எக்களிப்புடன் பக்கங்களிற்பிரிந்து மக்கள்முதலாகிய ஒக்கலுடன் பரிந்து மேலிட்டு இருண்ட மலைக்கிடாகக் கறுத்த உடம்பும் பற்சங்குகளும் வரிசையாய் ஒட்டிக்கொண்டிரா நின்ற உரிசையாகிய மிருகமாமிசங்களின் கொடிய நாற்றமும் முருக்கம்பூவைக் கருக்கிப் புறங்கிடச்செய்யும் செந்நிக்கண்களும் மேககற்சித மெலிந்து போம்படிக்குக் கூவுகின்ற வெடிக்க குரலோசையும் வஞ்சக மயக்கமுடைய மனத்திற்கொதித்தெழுங்கோபமும் மதம்பெற்ற யானைமுகங்களும் பூனைமுகங்களுமுடைய ராக்ஷசப் படைகளெல்லாம் பாண்டவப் படைமேல்விழுந்து அதிர்ந்து ஆர்ப்பரித்து அலையக்கண்டு வில்லைவளைத்து கூரம்புகளைத் தொடுத்து எதிர்படைகளை நெருக்கி தங்களுக் கொருவரு மெதிரில்லாமற்றருக்கி இறுமாந்து யுத்தஞ்செய்கின்ற காலத்தில் சூரியனைமறைத்த தளவணிமாயன் செலுத்துகின்ற தேரிற்பொருந்திய அர்ச்சுனன்முதலாகிய சகோதரரும்சாத்தகியும் சேனாபதியென்னுந் துருஷ்டத்தூய்மன் முதலாகிய மைத்துனமார்களும் ராஜபுத்திர வர்க்கங்களும் காவலாகக் காத்திருக்கின்ற யுத்தகளங்கள் மெத்தவருந்தி சித்தப்பிரமைகொண்டு வெருக்கொண் டோடுகின்ற சமயத்தில் வாயுகுமாரனுகிய வீமசேனன் மனந்துடித்து வில்லைக் குலைத்தொலிசெய்து வடிக்கணைகளைவாரி அரக்கர் படைமேற் றூரிமாடடும்போது இரதத்தின்மீதிருந்த தார்த்தனுகிய அலாயுதனும் தூரத்திலே நீண்ட மேருத்தலை போன்றபாரவில்லைவளைத்து வீரமாகிய அந்தகாரக்கணைகளை அநேகமாயிமாகத் தொடுத்தான்.

அவன்விடுத்த அம்புக்கும்புகளையெல்லாம் வாயுபுத்திரன்விட்ட வயிரக்கணைகளானது மடக்கி யொடித்து மடித்துக்கடுத்து வாட்டியதுமல்லாமல்வந்து கவிந்த இருட்டைக்கெடுத்து அரக்கன் தேரிற்கட்டிய கொடியை முறித்து குதிரைகள்முதலிய பைசாசுகளைத் துணித்துத் துண்டு துண்டாகத் தறித்து திடத்துடன் தேர்செலுத்திய சாரதிதலையையுந்தி பந்துபோலாடி தாஷ்டீகவில்லைச் சடைபோல்முறித்து இருளாகிய உடலை எண்ணிறந்ததொண்டிகளாக்கி இமைக்கொட்டுமுன் அவனுடையதிறத்தையு மழித்தது அப்போது அந்த அலாயுதனானவன் பூமியிற்பாய்ந்து வடவைக்கனல்போற் பெருந் தீயெழவிழித்து பெருமூச்சுவிட்டு அலப்படைவிடுத்து அனற்படசிரித்து ஆர்ப்பரித்து வலத்திலுயர்ந்த கலப்பையெடுத்து வல்லிரும்பை மலைபரித்தெறிந்து வட்டமாய் வளைந்து முடுக்கி மலைந்தகாலையில் இலக்கமற்ற தேவர்களுக் கிருப்பிடமாகிய மகமேருவின் முடியையொடித்த வாயுகுமாரனென்னும் மறவியானவன் மனக்கொதிப்புடன் திரண்ட மலைபோன்ற புயங்கிமிர்த்தோங்கி ரௌத்துவமாகிய வீரத்திறங்காட்டி ஒப்பற்றகதையைச் சுழற்றியடித்து அரக்கனெறிந்த மலையை ஒருநொடியில், படியிற்படியப்பொடிப்பொடியாக்கி உக்கிரமித்தெழுந்தபோது, பின்னொரு திக்கில் யுத்தஞ்செய்கின்ற கடோற்கஜனென்பவன் வீமனுகிய தன் றந்தையின்மீது அலாயுதனெதிர்த்து சண்டைக்கு வந்ததைக்கேட்டு பரத்துவாச பௌத்திரனுகியும் துரோணாச்சாரியர் புத்திரனுகியும் விளங்காநின்ற அஸ்வத்தாமனென்னும் அந்தணசிரோஷ்டரோர்ப்புதனுடன் அநேகம்போர்புரிந்து அந்த அஸ்வத்தாமனிறந்தானென்று சொல்லும்படியாய் வேலாயுதமுதலாகிய பிறைக்கணைகளை விடுத்துக்கலக்கி அவனைவிட்டுத் திரும்பும் போது சிறுமலைபோலடுத்துச் சண்டைசெய்யவந்த பராக்கிரமச் சூரியபுத்திரனுகிய கர்ணனைத்தடுத்து சோம்பியிளைத்துப் புறமிடச்சாய்த்து நார்த்தண்ய மூர்த்தண்யமாகப் புகுந்துவீமசேனனிடத்திற்போய்ச் சேர்ந்துபணிந்து ஐயா, வரத்தினாற் பெற்ற ஊத்துடன் புகுந்து மலைந்து இந்த அலாயுத னுயிரை அரைநொடியில் மாற்றுகிறேன் நீர் பார்த்திருமென்று கோடையிடி கோபித்தெழுந்ததைப்போற் படைமேற்புகுந்து பலவிதத்தாலு மீறிய தன்னுறுதியானது தன்றந்தைக்குத் தெரியும்படியாய்ச் சண்டை செய்தான், இவனைக்கண்ட அலாயுதனும் தொண்டைகிழியக்கொண்டல்போற் கூவிக் கறுவிக்குதித்தோடி வந்தெதிர்த்து (குலத்துக்குக் குலம், பலத்துக்குபலமென்று) கூடிப் போர்புரிந்தார்கள்.

இவ்விதமாக, அரக்கனும் அரக்கனும் உரக்கக்கூவி அதிரப் போர்புரியுங்காலையில் இவரிருவரும் இடிமுழக்கம்போல் இரையும் பேரொலியால் நாகலோகத்திலிருக்கும் பாம்புகளுந் தலைநடுக்கி நாடவும் இவர்கள்கூவுங் கூச்சலுக்கு எதிரொலியாக மலைகளெல்லாங் கூவவும் மலைகளின்மேலே உலவுகின்ற மத்தகஜங்க ளெல்லாம் மன்னடைகிழிந்திறக்கவும் மண்டல மண்பறக்கவும் அண்டமுகடிமடமிட்டனச்சரிந்து வெடிக்கவும் என்னமோ ஆபத்தென்று எண்டிசை யானைகளெல்லாந் தியங்கிமயங்கவும், அர

க்கருடன் போர்புரிய நம்மாலாகுமா வென்று அமரர்கள் துணுக்கிட்டேங்கி அடிக்கடி கண்ணிமைகொட்டவும்திக்குப்பாலர்கள் தேங்கியொடுங்கவும் இருவர் போரடியினும் எழுகின்றசெந்தூள் கருந்தூள்களினால் திரையாழிகள் வறளவும் ஆர்த்து முகம்வியர்த்து இருவரு நகைத்து அப்போதைக் கப்போது கோபித்து உழுத்து அறுவுடலெடுத்து மலையெனப்பருத்து அதர்ச்சியமாய் மறைந்து அந்தரமெல்லாம் பரந்து அவரவ ருருக்கொண் டெதிர்ந்து ஆங்கார ஓங்காரமிட்டெழுந்து சூறாவளிபோல் வாயினாலூதி அக்கினிக் கொழுந்துகளா லெரித்து அடுத்த படைகளையரிந்து ஆகாயத்திற் கையெடுத்து அருக்கன்மேற் படும்படியாக அநேகமரங்களை ஆணிவேருடன் பறித்தெடுத்துப் பூமியிற் சுழற்றியடித்து நேமிபோற்குழியமிழ்ந்து படிமிசைகுலவிய கொடிமுடி சிகரமுறித்து இடிகடகடெனச்சிரித்து வில்முதலிய பாணமுறித்து துண்டு துண்டாகத்தறித்து துதிக்கைபற்றிய யானைகளையெல்லாம் துணிபோலுரித்து மணிபோ லுருட்டி சக்ரவாளமும் நெக்குவிடத்தக்கதாய் ஒருவரையொருவர் தாண்டி யுத்தத்துக்கு வாவென்றுவேண்டி ரூபம்வேறாகப்பூண்டு நுதல்வியர்க்கக் கடுங்கோபங்கொண்டு சிலைப் படையாலும் அலைப்படையாலும் அயிற் படையாலும் உகிற்படையாலும் வாட்படையாலுந் தோட்படை யாலும் வல்லபங்களென்பன வெல்லாவற்றையுங்காட்டி,வினைவிளைத்தபோது, கடோற்கஜனானவன் தனது இருகரமென்னும் வலையைக்கட்டி நீட்டி அலாயுதனென்னும், ஆண்சிங் கத்தை அடித்துவளைத்து வில்யுத்தம்-சொல் யுத்தம்-மல்யுத்தங்களெல்லாம் புரிந்து தன்புயத்துட னணைந்து தரையிற்றள்ளித்தாக்கி அலாயுதனுடைய உயிரை அந்தகனாரிற் போக்கி விந்தையாகிய மனக்கடுமை வலிகாட்டிசினப்பொறிகொளத் திவிழிகாட்டி உலைக்கள நெருப்பென ஓங்குஞ் செருக்களம் உதிரப்பெருக்கெழ உடலந்தெரத்தெழ ஒருவர்போற் பல அரக்கரைமடித்து புகழ்ப்பிரதாபம்படித்து பேய்களோடு நடித்துத்திரியும் கடோற்கஜனை, தேவர்கள் முதலிய யாவர்களுங் கொண்டாடினார்கள்.

எப்படி கொண்டாடினார்களென்றால், திரிபுர சம்மாரியாகிய, சிவபெருமானெழுந்தருளிய கயிலையங்கிரியைத் திணிந்தபுயத்திற் றாக்கியதிசை யெட்டும் இசைபெற்ற, தசக்கிரீபனென்றும், பராக்கிரமன் தன்னுடனெதிர்ப்பவர்கள், யாராகிலு முண்டோவென்று தனிவனத்திற்றிரிந்த நாளையில், இந்த, அலாயுதன்முதலாகிய சிலபேருடனெதிர்த்துப் போர்புரிய மாட்டாதவனாய் இளைத்துப்போய் விட்டான் அப்பேர்ப்பட்ட இராவணனாலும், கொல்லப்படாதவல்லபமுடைய அலாயுதனை வாயுபுத்திரனுக்கு மைந்தனாகிய கடோற்கஜனானவன் தானொருத்தனுமெதிர்ந்து தாக்கிக்கலக்கிக் கொன்றுவிட்டதுமல்லாமல், அவனுடன் வந்தஅரக்கர்பற்பலருடனெதிர்ந்து, அவர்களையும் பற்றறமுடித்துப் பொடித்தா னென்று அதிசயித்துத் துதித்துவாழ்த்தினார்கள்.

இப்பால், கடோற்கஜன் பதினாலாநாள் இராத்திரியில் பற்பலபதினாயிரம் அரக்கருடன் அலாயுதனையுங் கொன்று அரவக்கொடிபடைத்தஅரசனுடைய சேனைகளெல்லாங்குரங்கின் கையிலகப்பட்ட பூமாலையைப்போற்கசக்கிராக்ஷசமாய்கையினால் பத்துலக்ஷமாக உருக்கொண்டு கிழ்ரொப்பையுடன் மேல்ரொப்பை முடித்திறப் பதற்கு முன்னமே-ரத-கஜ துரக - பதாதிகளாகிய நால்வகைப்படைகளையும் நாசப்படுத்திமனுலகிற் குடிபுகச்செய்து தனக்குரித்தாகிய ராக்ஷசமாய்கைகளனைத்துங் காட்டினான் அந்த மாய்கையெத்தன்மையுடையதென்றால். பிரசண்டமாகவீசியடிக்கும் பெருங்காற்றைப்போல்புற்பூடுகள் முதலிய கற்காடுடன்கூடிய பூலோக புவலோக மெல்லாம் புரண்டு மருண்டு பூவுதிர்ந்து வேர்பறிந்து கிளைமுறிந்து விழும்படியாக ஒருகரமெதிர்த்தான் பின்னொரு தடவை சப்தசமுத்திரமும் அலையுடனெழுந்து அதிர்ச்சியாயிரைந்து அவனிமேற்புரண்டுவருவதைப்போல்வந்தான் இன்னொருக்கால்பதினாயிரமேகங்களைப்போல் பளிச்சுப் பளிச்சென்றுமின்னிபடபடகடகடபடவென இடித்துப்பல்பமாய்ப் பொடித்து கல்மழைகனல்மழைபொழிந்து காட்டினான், மற்றொருவிசைகானம்விட்டெழுந்துவானமளாவிய அநேகமாயிரமலைகளைப்போல் வந்து யுத்தகளத்தில் இடமில்லாமல் நிறைந்து திமிர்ந்து நிமிர்ந்து நின்றான்,மறுபடியும் வடவாமுகாக்கினி சாட்ராக்கினி தாபாக்கினி முதலிய வெல்லாங்கூடி நெருங்கிக்கரிந்து பொரிந்துபுகைந்து மிகுந்துபரந்து தீய்க்குங்கொடிய சிகையுடனெழுந்தான், மேலும், மேலுலகத்தவரும் பூவுலகத்தவரும் வெருக்கொளும்படியாய் ஊழிக்காலத்தில் உண்டாகும் இருளைப்போல ஒன்றுந்தோன்றாமல் இருண்டுபோம்படி மறைத்தான் இஃதன்றியும் இந்தப்போர்க்களத்தில் இவ்விதமாக அநேகமாய்கைகளைவிளைத்து ஒருவரு மெதிரிலாமற் கிளைத்து உலகமதிரச் சஞ்சரித்து திருபுரத்தைநகைத்தெரித்த சிவபெருமானைப்போனின்ற வாளரக்கனாகிய கடோற்கஜன்விசாலமாகிய தன்வாயினால்பேய்களைப்போல் அந்தரணகளத்தில் வீழ்ந்தபிணங்களின் நிணங்களையும் குதிரைவெள்ளக் கணங்களையும் உதிரவெள்ளக் குளங்களையும் வாரிவாரிக்குடித்து விழுங்கினான்.

இந்தப்பிரகாரம், அந்தயுத்தத்தில் இறந்தயானைகளையும் குதிரைகளையும் வீரரையும்ரொத்தங்களையும் இந்தக்கடோற்கஜனானவன் வாரிவிழுங்காமற் போவானாகில்உண்மையாக நாம்சொல்லுமிடத்து ரொத்தவெள்ள ஓட்டங்களினால் கருங்கடலுநிறைந்துகிழிந்து பிணமேடிட்ட கூட்டங்களினால் அண்டகோளமும் நெளிந்து பிளந்து உம்பர்வாரியையுங்கலக்கி உலரச்செய்யாமல் விடாது இந்தவிதமாகப் போர்புரிந்த அந்தகனாகிய கடோற்கஜனால் அளவிறந்திறந்த சேனைகள்போக மெலிந்து நலிந்துகுறைந்த சேனைகளெல்லாம் வேஷ்டையடைந்து மேனிவெதும்பி முதுகிட்டோடிய காலையில் பாம்புக்கொடியைப்பாங்குறப்பிடித்த பலமணிமுடி பொருத்த துரியோதனனாகிய கொடியோன் துடிதுடித்து கண்கலங்கி மருண்டிருண்டகடைக்கண்ணால் கர்ணனைப்பார்த்து அன்றே புண்ணாகிய மனங்கொண்டநான் இன்றே நின்னுடையும் படியாய் நல்லகாலம் நன்றாகிய என்பதைவருந்தி கேட்டுத

ஆகையால்அந்தரவாசியாகியதேவேந்திரன் உமக்குக்கொடுத்த வேலாயுதத்தையெடுத்துவிடுத்து வீமன்பிள்ளையானகடோற்கஜனுடைய வல்லபத்தையும்மனநிறைந்தகோபத்தையும் மாளாத உயிரையுமழித்துவேலைமுடித்து பூலோகம் விட்டுமேலோகஞ்சேரும்படியாய்க் கொல்லுவதைவிட நான் சொல்லுவதொன்றில்லை வண்டுமொய்க்குமாலை யணிந்த மன்னனே அதிசீக்கிரத்திற் கொல்லுங்கொல்லுமென்று வாக்கிற்றுடியும் மனத்திற்சிகையும் நாக்கிற்பொரியும் மூக்கிலக்னியர்வும் விழிவழிகளிற் புகையு மெழும் படியாக சவுரவகுலமுதல்வன் விளம்பினான்.

இவ்விதமாகிய சொல்லை, சூரியகுமாரக் கர்னனானவன் கேட்டு சோர்ந்துமறுபடியுந்தேர்ந்து ஐயா? துரியோதன மகாராஜனே இந்தபஞ்சையாகிய கடோற்கஜன்செய்யும் தன்மையைக்குறித்து நீரெவ்வளவேனும்கலங்க வேண்டாம இராக்கதருக்குரிய இருட்காலமாதலால் அவனிஷ்டப்படி மாயப்போர் விளைக்கிறான் இன்னம் சற்று நேரத்திற் பொழுதுவிடியப் போகுது உடனேவரும்பகற்போதில் கூர்தங்கியசரம்பினால் அவன்தலையைத்தப்பாமலுருட்டிவிடுகிறேன் இதைக்குறித்துநீர்வேறுகவலைசிக்க வேண்டாம், மேலும் ? நாளைநடக்கப்போகிற நாலுடைய யுத்தத்தில் ஒருவேளை சமயந்தப்பி சங்கடங்கள்நேரிடு மாகில் அப்போது இந்தக் கூர்மை யாகிய வேலாயுதத்தை நேர்மையாகப்பூசித்து இந்திரகுமாரனாகியஅர்ச்சுனன் நெஞ்சழியும்படியாய்விடுத்து இந்தப்பூமி முழுவதையும் உண்மையாக உனக்கேபட்டங் கட்டி உமதுகுடைநிழலில் உலகத்தை வைக்கிறேன் உத்தமனே, என்பிராணபதமாய்க் காப்பாத்திவைத்திருக்கிற இந்த இந்திரவேலை இப்போது விடுதல்விட எனக்குமனமில்லையென்றுமிகுகொடையாளன்சொல்ல, வணங்காமுடிமன்னன் மனங்கொள்ளாதவனாய் மணிமுடியசைத்து வாய்விட்டுநகைத்து அன்று,நீர்சொன்னதுநன்றாயிருந்தபோதிலும்இன்றையத்தினம் இராத்திரி நானும் என்னுடைய நால்வகைப்படையும்பிழைத்திருந்தாலல்லவா நாளைப்பகலில் அர்ச்சுனனைவென்றுஎனக்குப்பட்டங்கட்டப்போகுறீர், அதுவரையிலும் இங்கார் பிழைப்பவர்கள் (பசிக்குப்ப்பனம்பழந்தின்றால்பின்பு பட்டபாடு படலாமென்பது போல்) உயிரழியா நின்ற இந்தவேளைக்குத் தப்பினால் நாளைக்குப்பார்த்துக் கொள்ளுவோம், நீரிவனைக் கொல்லுவீராகில் பிற்பாடு வில்விஜயனை மிகுந்த இலேசாகவிரைவிற்கொல்லலாம், எனக்கு நீர்பட்டங் கட்டியதுபோலாமென்று மனங்கன்றிக் கொதித்து கமலமுகங் கறுத்து தன்னைத்தானே வெறுத்துதலைகுனிந்திருந்ததுரியோதனனுடையதன்மையை. கோடைக்குத் தென்றலும். குலவிய இருளுக்கு நிலவும். குவலயத்துக்குமேகமும், துணையானதைப்போல், தன்னையடுத்தவர்களுக்குத் துன்பமுதலாகிய பயங்களைத்தீர்த்து இன்பமுதலாகிய இனிமையைத்தந்து இரட்சிக்கும் இரவிகுமாரனானசவுரியன் கண்டு தரியாமல் காலனுடைய சூலம்போன்ற ஆலகால வேலாயுதத்தை அக்கணத்தெடுத்து அதிபூசைகொடுத்து விற்கணிற்றொடுத்துவெல்லவேணுமென்று மிகுந்தகோபங்கொண்டெறிந்தான் அந்தவேலாயுதமானது, அண்டமுகடுமுதலாகிய மண்டலமும் எண்டிசையும் மண்டியெரிந்து புகைந்து விரைந்து பரிந்து வந்து பகையாகிய கடோற்கஜன் மார்பைப்பிளந்து பாற்கடலிற்றோய்ந்து பமுயபடிக்குப் பாகசாசனனிடத்திற்போய்ச்சேர்ந்தது.

இப்பால், கடோற்கஜனானவன் பொறியழிந்து புலன் கழிந்து உடல் சிதைந்து உயிரிழந்து உதிரம்வழிந்து உணர்ச்சியொழிந்து வாயினால் மண்ணைக்கவ்விமுகம் பூமியிற் கவிழ்ந்துமேருகிரிமலைசாய்ந்ததைப்போல்வீழ்ந்து மடிந்தான், அவன்மடிந்த ஒருகடிகைவரைக்கும் சத்துருக்களெல்லாம் கடோற்கஜனைக்கிட்டிவந்து பார்ப்பதற்குப்பயந்து எட்டியிருந்து கெட்டிகெட்டியென்று வருந்திசிந்தைகலங்கி நொந்திருந்தார்கள் அந்தவேளையில்சொந்தமாகிய பாண்டுநந்தனர்முதலியபேரும் அவடம் வந்து அவனருகணைந்து கண்ணீர்பெருகவிட்டுருகிகரைந்துநைந்துஉள்ளுருகிநொந்து தங்களுடல்வருந்திசுங்குலுங்கலங்கப் பொங்கியபோது சங்கு சக்ராதரச் ஜனார்த்தனனாகி சங்கைகள் தீர்ந்துசாஸ்திரமுணர்ந்த புங்கவர்க்கல்லது புலப்படாப்பெருமான் அங்கவர்துயரம் அகலுமாறாக - பங்கஜமலர்த்தும் பான்மைபோலுரைத்தான் கேளும் பாண்டவர்களே தேவேந்திரன் கர்னனிடத்தில் கவஜகுண்டலங் கவர்ந்த அந்தநாளையில் இந்தவேலாயுதத்தைஅவனுக்குக் கொடுத்திருந்தான் இந்தவேலை எவர்கள்பேரில் விட்டாலும் தப்பாமற்கொல்லத்தக்கதாமும் உயர்ந்தசிரமும்உரமும் வரமுமுடையது இந்த ஆயுதத்தைப்பெரியபொருளாக நம்பி போதுமான ஆற்றல் நிறைந்த கூற்றினுங் கொடிய கர்னன்பூசித்து தேகம்பாரித்து சேருந்திச்செல்லுகின்ற போர் முகத்தில் நாம் தப்பாமல் நானைக் கொல்லுவதற்கு நாகாஸ்திர மிருக்குது எப்படியுமவனை முடிக்கலாம், ஒருவேளை நாகாஸ்திரந் தப்புமாகில் இந்த வேலாயுதத்தால் அவனுயிரைச் சிந்திமுடித்து அந்தரலோகத்துக் கனுப்பலாமென்று சிந்தைகொண்டிருந்தான். இப்படியிருக்க, அலப்படையுடைய அலாயுதனும் அலம்பனும் அநேகமாயிரம் அரக்கரும் அரைநொடியில் அழியும்படி அமர்புரிந்தொழித்த அரக்கர் மாயத்திற் சிறந்த கடோற்கஜனுடைய உபத்திரம் பொறுக்கமாட்டாமல்போதுவிடியு முன்னமே யாவரு மிறக்கும்படியா யிருக்குதென்று மனங்குன்றி வருந்திய துரியோதனன் தான்பிழைக்கவும் கடோற்கஜனிறக்கவும் தயவுசெய்யென்று கர்னனை வணங்கி இந்த வேலாயுதத்தை விடுக்கும்படியாய்ச்செய்தான், அந்தத் துரியோதனனுடைய வார்த்தைக்குப்பழுதில்லாமல் இந்த வேலாயுதத்தை இவன்மேலெறிய இவனை முடித்துப்போட்டு தன்னுடையவனாகிய இந்திர னிடத்துக்குப் போய்விட்டது இனி உங்களுக்குச் சிந்தனையில்லை நான்கொண் டிருந்த கவலையு மொழிந்தது, இன்றையப்போரில் மண்டலமுழுதும் கவஜகுண்டலன் கொடுத்தான் பாண்டவராகிய உங்களுக் கென்று பொங்கிய காளிங்கன் முடிமேனடித்து மங்கையர்கோவியர் கொங்கையைப் பிடித்து அங்கவரின்ப மாரமுடித்த சங்கணிகரத்து ஜனார்த்தனன்படித்துசாற்றியபோதுதருமராஜனும்

மருத்துவாகிய வாயுபுத்திரனும், தேவவயித்தியராகியம
ருத்துவர் மக்கள் நகுல சகாதேவரும், மருத்துவனென
னும இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனைத் தழுவிக்கொண்
டு பெருமையும் வலிமையும் புகழ்ப்பிரதாபத்தையும் நல்
வினைப்பயனால இன்று பெற்றன மென்று கன்றுகொண்
டு விளவெறிந்தகண்ணனை மகிழ்ந்து அருமையும் பெரு
மையுமாக அமுதளித்து வளர்த்த கடோற்கஜனை நினைந்
து நினைந் துருகாநின்ற பெருஞ்சோகத்தையும் அருந்து
யரத்தையு மாற்றி அர்ச்சுனன் பிழைத்தானென்னுஞ் சந்
தோஷத்தால்-மகிழ்ந்திருந்தார்கள். புத்திரசோபம் இவ்
வளவு லேசாக நீங்கிவிடுமோவென்றால் உலகத்தியற்கை
யும் காலக்கருமமும் தெரிந்த கனவான்கள் எப்பேர்ப் ப
ட்ட காரியங்களுக்குங் கலங்கமாட்டார்க ளென்பது பு
ராணிகர் கருத்து.

சக்ரவர்த்தித் திருமகனால் இராவண னிறந்த படுகளம்
போலிருந்த, இந்தப் போர்க்களத்தில் மீண்டும் அரவக்
கொடியோன் ஆக்யாபித்தபடியே குருவுமாகி வரிவிற்று
ங்கும் சேனாபதியுமானவர் நால்வகைச்சேனைகளுடன் ந
டந்து பாண்டவப்படைகளைநலிந்து விராடன்-துருபதே
யன் முதலிய வேந்தர்களுடனெதிர்ந்து போர்புரிந்து கா
ந்திக் கமழுகின்ற கடுங்கணைதூண்டி அநேகம் அரசர்களை
யொறுத்துவிராடன்துருபதேயன் இவர்கள் இருவருடை
ய சிரங்களையறுத்து கடுங்கோபத் துடன் கண் கறுத்து
வருங்காலையில் துரோணாச்சாரியால் துருபதேயன் மடிந்
தானென்பதை திருஷ்டத்துய்மனறிந்து உள்ளஞ் சுடச்
சுடவெகுண்டு உலவாப்பெருங்கடற்போ லிரைந்து தட
தடவென்று அரசர்கள் முடிகளிடிபடப் படியும் அடியி
ணையுடைய கடிகமழ்முளரியைக் கண்சிவக்கக் கறுவிப்பா
ர்த்து, ஓ ஓ, துரோணரே, என்றந்தையாகிய துருப தே
யராஜனை என் கண்முன்னாகச் சிரச்சேதஞ் செய்தா யல்
லவா, நல்லதாகட்டும், நாளைப்போரில் இப்போது பார்
த்திருந்த சகல இராஜர்களும் பார்க்கும்படியாய் உன்மக
னாகிய அஸ்பத்தாமனுக் கெதிரிலே உன்றலையை வாங்கு
கிறேன் பாரென்று கொடுஞ்சபதங்கூறி சலசலவென்று
சரமாரி பொழிந்தான். அந்தருணத்தில் மன்மதனிற்சிறந்
த அழகும் சுப்ரமண்யக் கடவுளிலுயர்ந்த திறமும் கால
கேயநிவாதகவசாள் பாலலோஜனப் பரமன்கணையாஸ்பா
ழாகும்படிவென்ற திறமு மறமுமுடைய விஜயகாண்டீப
அர்ச்சுனனானவன், இயாவரும் வணங்கும் தநுவாரியனா
னவர் தன்மாமனுடைய தலையை வாங்கினானென்று ஆரு
க்கோபங்கொண்டு அவரெதிர்சென்று நின்றுவெவ்விதா
கிய பிறைமுகக்கணைகளை விறுவிறென்றுதொடுத்து கை
கால் அசைக்காமல் ஸ்தம்பப்பிரமைகொண்டு தியங்கிம
யங்கி இமைக்துப் பதைத்து தாமரை மாலை யணிந்த து
ரோணாச்சாரி புறமுதுகிட்டோடும்படிக்கு விஜயன் தாக்
கினன் இந்தத்திக்கில் இவ்வாறிப்படி போர்புரியவும் இன்
னொருதிக்கில் தானுற்பவமாகிய குந்திபோஜகுலமும் அ
ஷ்டகுலாசலமும் திக்கஜங்களின் பலமும் கொண்டாடும்
படியாய் பூமியைப் புகழ்பெறக்காத்து தன்பெயர் நிறுத்
திய மிகுகொடையாள னென்னுங் கர்னன் பெற்ற விட
சேனனானவன் அகிலும் சந்தனமும் புனுகும் புஷ்பமுங்க
மியயாவும் பரிமளிக்க அலரியும் கொடும்புயமும் வெற்றி
மாலையுமுடைய சாத்தகியின்பேரி லெதிர்ந்து சண்டைபு
ரிந்து அடிபட்டலுத்து சிங்கத்தின் முன்னெதிர்த்து ப
ங்கப்பட்டோடிய யானைபோல் விடசேனன் நங்கப் பட்
டோடினான் இப்பால், உலகுலாவி வருங்குதிரையையும்
அதிரும்படியாகிய வில்லையும் அரிய வல்லமையும் இயா
வரும் நிகரில்லாத ஆண்மிக்கையு முடைய நகுலராஜனு
டன்-சகுனிவந்தெதிர்த்து அரும்போர்புரிந்து அநேகந்த
டவை தளர்ந்து தளர்ந்தெதிர்ந்து தன்னுடைய நால்வகை
ச் சேனைகளும் உயர்ந்தவில்லும் வெற்றிக்கொடியும் சுழ
ற்றியதேரும் விழித் துணையாகத்தேறிய வேந்தரும் ஓய்
ந்து சாய்ந்து மாய்ந்துபோம்படியாய் ஒழித்துவிட்டு தா
னொருத்தனு மீண்டு உடல்வருந்தி கால்சிவக்கும் படிக்கு
ஓட்டமாயோடி எந்தயிடத்திற் போய்ச்சேருவோம் தெ
ய்வமே இனிநாம் சேரப்போகிறயிடம் மேலுலகமல்லது
வேறுலக மில்லையே யென்று பூர்வஞ்செய்த வஞ்சனைக
ளெல்லாம் செஞ்சாமாருதம்போலவந்து சஞ்சாரப்பிரே
தத்தி னெஞ்சைப் பிளக்கும்படியாய் தொஞ்சித் தொஞ்
சி துவண்டு அஞ்சியஞ்சி அகன்றுபோனான். அங்கக்கா
லத்தில் இரண்டுஜாமம் நீங்கி மூன்றாவது ஜாமத்திலும்
மோகரித்துப் போர்புரியும்போது, இருதிறப் படையோ
ங்கிய நேபாளரும்-பொருதிறப்படைதாங்கிய பூபாலரும்
நித்திரைமயக்கத்தால் மெத்தவருந்தி தத்திவிழுந்து ரொத்
தத்தழுந்தி அலுத்து கண்திறக்கமாட்டாமல் விழிசொரு
கிக்கொண்டு மூடுவதினாலும், தங்களுக்கு உடற்காவலாகி
ய ஆயுதங்கள் கைநழுவிப்போவதினாலும் நித்திரைமப்பா
ல் சதுருவைப் போல் தங்கள் படைகளைத் தாங்களே
வெட்டிக் கொள்ளுவதினாலும் நினைவு மறந்து தங்களிற்
றுங்களே வெட்டி இறப்பதாகப் போர்செய்வதினாலும்,
இவ்விதமாகிய சண்டையின் எளிதத்தை செவ்விதமாகிய
சிலைவிஜயன்கண்டு மேகமுழக்கம்போன்ற பெருங்குரலி
ட்டுக் கூவி-ஐயையோ, மன்னர் முதலாகிய சேனைகளும்
நித்திரைமயக்கத்தால் பின்னமாய்ப் போகிறார்களே-இன்
றிராவிடிந்து சூரியோதயமாகிறவரைக்கும் துன்னிப்புரிகி
ன்ற தொந்தயுத்தத்தை நிறுத்துங்கள் நிறுத்துங்க ளென்
று இருவகை ப்ரமுகாளுங் கேட்கும்படியாக இரைந்து
சொன்னான் இந்தச் சொற்சொல்லி வாய்மூடுவதற்குமு
ன்னே எப்ப எப்பவென்று காத்திருந்த இருதிறப் படை
களும் முராரி மைத்துனனாகிய நரனை சிரமேற் கரமெடு
த்து வாழ்த்தி, உரமாக நடத்திய யுத்தம்விட்டு ஓய்ந்திரு
ந்தார்கள்.

அப்போது துரோணாச்சாரியர் வெல்லுவது தோற்ப
தென்னும் இரண்டிலொன்று தெரிந்துக்கொள்ளாமல்பா
சறைக்குப் போகேனென்று சபதம்பண்ணிய பான்மை
யினால் போதுவிடிந்த பின்பு போர்தொடுக்க வேணுமெ
ன்று பூரண வயிராக்கியத்துடன் போர்க்களப் பூமியிலி
ருந்தார் வெற்றியையுடைய சேனாபதி யுத்தபூமியிலிருக்
கும்போது மற்றஅரசர்முதலாகிய திறவான்களெல்லோ
ரும் ஆசாரியனைவிட்டுப் போக மனமில்லாதவர்களாய்

போர்க்களத்திலிருந்து குடைச்சிகரங்களையுடைய இரதத்திலும், விரபட்டமுடைய யானையின்பேரிலும், மாசற்ற குதிரையின் மணியிழைத்த கல்லணையாகிய சேணியின் மீதிலும் நித்திரைசெய்தார்கள், பதாதியெல்லாரும் நிலத்திற்படுத்து உறங்கினார்கள், அமர்க்களத்தில் எதிரிலிருப்பதினால பாண்டவர் திலகனாகிய தருமராஜனும் தம்பிமார்களுடன் பதாதியரும் சூழும்படியாய்ச் சமர்நிலத்திருந்து தங்கள் படையில் இறந்துபோனவர்களுக்கிரங்கித் துயரமுற்று எதிரிபடையி லிருப்பவர்கள் இறக்கும்படியான விதத்தை நாடிக்கொண்டு நித்திரையற்றிருந்தார் சத்தியசந்தனாகிய தருமராஜன்துரியோதனனும் தன் படையி லிறந்துபோனவர்களைக் குறித்து விசனப்பட்டு இனி யிருப்பவர்களும் இறக்கும்படியான காலம் நேரிட்டிருக்குமே யென்று ஏக்கங்கொண்டு பாடி வீட்டுக்குப் போகாமல் நித்திரையின்றி சித்தமதோய்ந்து பறந்தலையாகிய ரணகளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்பால், விண்ணாட்டவரும், மண்ணாட் டவரும் சந்தோஷிக்கும்படியாய் அண்டத் துக்கு உறைபோட்டதுபோல் அடர்ந்து மூடிக்கொண்டிருந்த இருள்களை குகையுற ஓட்டி, முகங்குவிந்திருந்த முண்டகமலர்களை முகமலரக்காட்டி, ஒற்றையாழியும் சப்தமாவையு முடையரதமேறி மிம்பமிழி ஆயிரங்கரத் ததிபதியாகிய ஆதித்தனானவன் நேற்று சாயங்காலம் சக்கரத்தினால் மறைந்த குறைச்சலாகிய தாழ்வு நீங்கும்படியாய் ஒளிபொருந்திய ஆயிரங்கடரும் அநேகமாயிரஞ் சுடர்ப்பிரகாசமாகி இதுவல்ல பொழுதென்று இயாவருங் கொண்டாடும்படியாய் நாகாலயத்தை வலமாகவந்து நேற்றையத்தினத்தில்தன்னை மறைத்த சக்கரத்தை இன்றைக்குக் கைப்பற்றவேணுமென்னும் இச்சையுடையவனாய் லக்ஷம்யோஜனை தூரத்தில் அருணக் கிரணக்கொடிநாட்டி கீட்டிசைக்குரிய உதயகிரியிலுதித்தான் பெரியோனாகிய சூரியன், கேளும் ஜெனமேஜெய மகாராஜனே யென்று வைசம்பாயனர்சொல்ல, ஜெனமேஜெயராஜனும் வபுஷ்டா தேவியும் மற்றுமுள்ள மந்திரிமுதலாகிய பந்துவர்க்க மாந்தர்களும் எழுந்து திர்க்கதண்டமாக விழுந்து பலவிததானங்களுங் கொடுத்து மகா பயபக்தியுடன் பணிந்து மேல்நடந்த கதையின் விஸ்தாரத்தைச் சொல்லவேண்டுமென்று யிரந்து யிருந்து துதித்தார்கள்.

இந்தமட்டும்பதினாலாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

இந்த இதிஹாசத்தை இன்பங்கொண்டு படிக்கா நின்ற புண்ணியவான்களுக்கு ஒரு சூரியனொளியை கோடிசூரியப்பிரகாச முடைய சக்கரம் எப்படி இருட் காட்டி மறைக்குமென்று சிலர் ஆட்சேபிப்பார்கள், அதற்குப்பலர் ஒருவித சமாதானஞ்சொல்லுவார்கள். ஆஃதியாதெனில் சூரியவம்ஸ ருக்மாங்கத மகாராஜனானவர் மிகுந்த பத்தியாய் ஏகாதசி விரதமிருந்து வருநாளில் ஒருநாள் தூருவாச மகாரிஷிவந்து ருக்மாங்கத மகாராஜ சிரேஷ்டனைக் கண்டு துவாதசிபாரணைக்கு நான் வருகிறேனென்றுசொல்லி ஸ்நானசந்தி ஜெபதப முடித்துக்கொண்டு வரப்போனவர் காலங்கடத்து வந்தார். இவடத்தில் ருக்மாங்கத மகாராஜன் பாரணைகாலந் தப்பிப்போகிற படியால் அந்தக் காலாதீத மாகவொட்டாமல் திருத்துழாயுந் தீர்த்தமும் அருந்தி தூருவாசர் வருகிற வழியைப் பார்த்துக்கொண்டிருந்தார், போதுவிடிந்து ஐந்து நாழிகைக்குமேல் பாரணைகாலந் தப்பிவருகிற மகாரிஷியை எதிர்கொண்டு வணங்கி அழைக்கும்போது இன்னம்பாரணை பண்ணாதிருக்கிறையா அப்பாவென்று மகாரிஷிகேட்க சுவாமீ திருத்துழாயுந் தீர்த்தமும் வாங்கிக்கொண்டு தேவரீர்க் கெதிர்பார்த் திருக்கின்றேனென்று ருக்மாங்கத மகாராஜன்சொல்ல அந்தச்சொல்லைக் கேட்ட வுடனே தீப்பொறி பறக்க விழித்து திடுக்கிடப் பற்கடித்து அடாபாவி-பாரணை உச்சிஷ்டம்-பண்ணிப்போட்டு எனக்கு அன்னம்படைக்கப் போறாயோ மகாபாதகனாகிய நீ-செல்வகர்வத்தால் இப்படி செய்தாயென்று வெகுண்டு பிடி சாபமென்றார் அப்போது அரசன் கலங்கி ஆபத்பாந்தவாகிய ஐயா, அநாதரக்ஷகனாகிய துய்யா ஆதிமூலப் பொருளாகிய மெய்யா அஞ்சாயுதந்தரித்த யையா அரி ஓம் நமோ நாராயணாவென்று அலறி விழும்போது அண்ட ரண்ட சராசரங்களு மொடுங்க மண்டல விண்டல பிண்டமுநடுங்க அநேகபானுகோடிப் பிரகாசத்துடன் சக்ராயுதம் புறப்பட்டு தூருவாசமாமுனியைத் துரத்தும்போது பிராணபயங்கொண்டு காடு-மேடு நாடு-வீடுமுதலிய இடங்கள்தோறும் வாடியோடும்படியாகிய மகாரிஷியானவர் சுதரிசனத்தைத் திரும்பிப்பார்த்து திகிலடைந்து ஐயோ உன் ஜோதிகுன்றாதா உன் சுடரவியாதா உன் ஒளிமழுங்காதாஉன்னுரமொடுங்காதா நீ-கருகறுத்துப் போகாயா உன்காந்திசிந்தி மாயாதா என்று இப்படிக்குப் பற்பல விதமாய்ச் சபித்துக்கொண்டு இந்திர னிடத்திற்சென்று அபயமபயம் அடைக்கல மென்று அலறிய போது ஆருக்காக அடைக்கலமென்று இந்திரன்கேட்க ஸ்ரீமந் நாராயண னுடைய சுதரிசனத்துக்காகவென்று தூருவாசர் சொல்ல அப்பப்பா நான்மாட்டேனென்று அவனீக்கிவிட குபேரனிடத்திற்செல்ல அவனுமிப்படியே சொல்ல சகல தேவரிடத்திலும் விரும்பி அடைக்கலக் காப்பில்லாமற் திரும்பி ஆதிபகவானாகிய கயிலாசபதியி னிடத்திற்சென்று சொல்லியடுக்க அவரு நம்மாலாகாதென்று விளம்பி விடுக்க ஸ்ரீ வைகுந்த நாதனாகிய பரவாசுதேவனிடத்தில் வந்துநான பண்ணிய அபராதத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று மகாரிஷிகேட்க அதற் கதிகாரிநாமல்ல உமக்கும் நமக்கும் பொறுமைகொடுப்பவன் பரமபாகவதனாகிய ருக்மாங்கதனுகையால் போட்டவிடத்திற் றேடும்போமென்று விடுக்க சாக்ஷிக்காரன்காலில் விழுவதினுஞ் சண்டைக்காரன் காலில் விழ்வது மேலென்று தூருவாசர் ருக்மாங்கதனிடத்தில் வந்து அடைக்கலம் புகுந்தார். அப்போது அரசன்பார்த்து மகாரிஷி வெகுவருத்தப்பட்டதுபோலிருக்குதென்று மனமிரங்கி மாதவ-கேசவ-வைகுந்த-வாசவ-வானோர்க்கீச-மலர்மங்கை நேசமணியாழிதுயின்றோய் மண்ணுல களந்தோய் ஜனார்த்தன வென்று மலர்விழி நீர் சொரிந்து இருகரத்தையுஞ் சிரத்திற் குவித்து இறைஞ்சிய போது சக்கரத் தாழ்வான் தூருவாசரை விடுத்து அரிநாராயணருடைய சன்னிதானத்திற்போய்வி

ன்று சங்கதிகளைத் தெரிவித்துத்தொழ. இந்தச் சக்கரத்தாழ்வாருக்குப்பின்புறுகச்கருமலைபோற்கலந்துதிரண்டுவந்திருப்பதைகமலக்கண்ணன்பார்த்து இதென்னவென்றுகேட்கஅந்த நாருவாசரிட்ட சாபமென்றுஇந்திரநாதர்சொல்லஸ்ரீநாதன்மகிழ்ந்துஅந்தத் நாருவாசனும்நமதுதாசனுகையால் அவன்கூறியசாபத்தை நாமேதள்ளிப்போட்டால் உலகத்திலயாவரும் பெரியோரைமதிக்கமாட்டார்கள் ஆகலால்நாமே ஏற்றுக்கொள்ளவேண்டும இந்தச்சாபம் உம்மிடத்திலிருக்கட்டும்ஒருசமயத்தில் உன்பேரிலேற்றி உடனே அதைமாற்றி விடுவோமென்று பூர்வம் சொலலிவைத்திருந்த அந்தச்சாபக்கறுப்பைஇந்தக்கரத்துக்கேற்றி பதினைலாநாள் யுத்தத்திற்சூரியனைமறைப் பித்தாரென்று சமாதானஞ்சொல்லுவாாகள் - புராணிகர் இந்தக்கதையைச்சொலலவில்லை இந்தக்கதையானதுஏகாதசிவிரதமகத்துவத்திற்செப்பியிருந்தபோதிலும்இந்தயிடத்தில் இதைப்பொருத்திச்சொல்லுவதற்குயாருஞ் சம்மதியார்கள், அதேதெனில் சர்வவல்லமையும் சர்வசுதந்தரமும் சர்வலோகசரண்யமுமுடையசலசலோசனஜநார்த்தனனுகிய மாதவனுருந்தவைகுந்தவாசனுனவர்எந்தக்காலத்தில் எந்தப்பொருளைஎப்படியாகவேனுமென்றுஎண்ணங்கொள்ளுவாரோ அந்தக்காலத்தில் அந்தப்பொருள் அவரெண்ணப்படிக்கு அமையுமென்பது ஒன்றிருப்பதால் இதற்குவேறொரு பொருளைக் கொண்டு ஒட்டவேண்டிய தில்லைஎன்பதாம்.

பதினைந்தாம்போர்ச் சருக்கம்.

கண்ணன்றுதி விருத்தம்.

சித்தசித்திலங்கிநின்று செப்புகின்றமூவகை..........*
தத்துவத்தின்முடிவுகண்ட சதுர்மறைப்புரோகிதன்.....*
கொத்தவிழ்ந்தசோலைமன்றல் கூரனுடனெஞ்சிலே.. ...*
வைத்தமுத்திநாடனன்றிவானநாடர்முதல்வர்யார்......*

இவ்விதமாக, ஸ்ரீகிருஷ்ணதேவரையும் ஸ்ரீவேதவியாசரையும் வணங்கி, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

ஐயா ! நந்தன்-அடியிணைக் கடிமை-செய்யாநந்த - ஜனமேஜெயனேகேளும் நேற்றிராத்திரி இவர்களேற்படுத்திய தீபவர்த்திமுதலானதீபப்பிரகாசங்களும் சூன்யமாக மூடிக்கொண்டிருந்த இருள்களும் ஒழுங்கில்லாமல் மழுங்கிப்போகும்படியாய் உதையமாகிய சூரியபகவானைக் கண்டுணர்ந்தெழுந்துகாலைக்கடனைமுடித்துநமஸ்காரஞ்செய்து ஜெயம்ஜெயமென்று யுத்தகோலம் பூண்டுஉள்ளத்திற் கோபமுண்டெரியும் படிக்கு இருவகைச்சேனைகளும் இராஜவர்க்கமுங் கடு கடுத்துவெப்பமாகிய கண்கள்சிவந்து கருத்துறுத்துயுத்தபூமியில் முற்கிக்கடிகிநிறைந்தார்கள்.

அப்போது, விற்றலைமைக் கொருநிலைமையுற்றுக்கற்றசத்தவீரனுகியவல்லபம்பெற்றநாணும், வீமனும், நகுலனும், சகாதேவனும், நாலுவகையாகியசேனுபதி துருஷ்டத்தாய்மனும் முதன்மையாக நின்று தங்கள் சேனைகளை நாலுபங்காக்கி சதுர்த்துவாரயூகங்கட்டி, நான்குவேதமுடிவிற்றும் அதியாகிய நாரணன் தோரணநாட்டிய இரதஞ்செலுத்த, பூரணவிவேக புண்யபார்த்தனன் போர்செய்யப் புகுந்தான், அந்த வேளையில் பார்மதிக்கும் ஆண்மையையுடையபாலவீமனென்னும்-சூலபாணியாகியசுந்தரேசனை யொத்தபுராதன ராஜரும் ஆலகாலம் போலுருத்து எரித்துஅடர்த்துபோர்கொடுக்கும் அக்காலையில்-அர்ச்சுனனெருங்கி-அயிந்திராஸ்திரங் தொடுக்கும் போது எதிராளிகளின் சேனைமுதலியவீரரும் எமலோகங்குடியானூர்கள்.

இன்னஞ்சில மன்னவர்கள்-முன்துள்ளி வந்து-என்முன்வா-என்முன்வாவென்று - வீராபாஷைகள் பேசிநரத்துடன்-வில்வளைத்து தீரமாகிய கணைபோக்கினர்கள்-அவர்களுக்கு முன்னின்று அர்ச்சுனன் பலம்பொருந்திய காண்டீபத்தை குணத்தொனிசெய்து தலம்புதையும் சாக்கனையைத்தூண்டியபோது இந்த அர்ச்சுனனுடையவில்லுக்குமிஞ்சிய வில்லுமில்லை வெஞ்சமரில் மிஞ்சியடிக்கும் வீரத்திற் சொல்லத்தக்க வீரருமில்லை யென்றுமிகவும் புகழ்ந்தார்கள் அப்போதுகிழக்கு-தெற்கு மேற்கு-வடக்கு - என்றும் நான்கு திக்கிலு மிருந்து வளைந்து கவிந்து எதிர்த்த பாண்டவர்களுடைய நால்வகைச்சேனைகளும் - வீரர்களும் - நானுபக்கங்களில் முகம்விட்ட வாக்கேமுதுகிட்டோடும்படியாயடித்து வின்னுணியிலைந்து பாணங்களைப்பூட்டிவிதம்விதமாய் விடுத்துயுத்தம்விளைத்தார் அவராரெனில் வேதம்நான்கு, வேதாங்கம் ஆறு, மீமாம்சை தருக்கம், புராணம் தருமநூலாகிய உபாங்கம்நான்கு, ஆகப்பதினன்குவித்தையுங்கற்றுவிவேகம் விளைந்த துரோணுச்சாரியானவர் அந்தத்துரோணருக்கு ஈடாக எதிர்நின்று யுத்தஞ்செய்யமாட்டாமல்யாவரும்புறங்கொடுத்தோடுவதை, குந்திபோஜமகாராஜன்அறிந்து ஆயிரம்தேர்முதலிய யானைசேனைகளுடன்யெதிர்த்துமூடிப்போர்புரியுங்காலையில் உதிரவெள்ளம்பெருகிய யுத்தகளமானது, செவ்வானம்போற் சிவந்திருந்தது, இந்தப்பிரகாரம், விற்குருவும் குந்திபோஜனும் - வில்லைக்குனித்து வேண்டிய சரங்களைத்தொடுத்து வெஞ்சமர்விளைத்தார்கள் இப்பால், மகத்தாகிய சாமர்த்தியமுள்ளமத்திரதேசாதிபனுனவன் மருகனுனநகுலனுடனெதிர்த்துமலைந்தான், பலம்பொருந்திய கோபாக்கினிபத்தியெரியும்படிக்கு வந்த - மாளவபதியானவன்கருநிறமுள்ள - அனந்தசாயிக்குக் கனிஷ்டனுகிய சாத்தகியுடன் சமர்செய்தான், குருபுத்திரனுகிய அசுபத்தாமன் அர்ச்சுனனுடன் அமர்புரிந்தான் கர்னனுனவன் விமசேனனுடன் வெகுண்டு, சிறி வினைபுரிந்தான் வில்வல்லபத்தின்மேற்பட்ட பாண்டியனை சகுனிமடக்கிக்கொண்டு சண்டைசெய்தான் இப்படி ஒருவருக்கொருவர்கைகலந்துபோர்புரியும்போது அண்டாண்டமும், மண்டலகண்டமும். எண்டிசைமுதலிய குண்டலியுலகும் குன்றும்படியாகிய ஊழிக்காலமென்றுரைக்கும்படியாயுத்தம்விளைத்து எவரெவர்கள் பகைத்து இருவராய் நின்று யுத்தஞ்செய்தார்களோ, அவரவர்களுடைய ஆண்மையை நிலையிட்டுச்சொல்லி முடியாது, முதன்மையாகவந்து யுத்தஞ்செய்து வெற்றியடைந்து அமோகரிப்புட னிருந்த பகைவர்கள் வந்த வந்த வழிமடங்கியோடும்படியாகவும் நொந்து நொந்துசேனைதியங்கிச்சிதையும் படியாகவும்அர்ச்சினியாஸ்திரம்வருணுஸ்திரம்தே

வாஸ்திரம்வாய்வாஸ்திரம்புஷ்பாஸ்திரம்இதுமுதலாகிய அஸ்திரங்களைக்கொண்டு துரோணாச்சாரியர், ஜாடும்போது அட அட பட பட மட மட கட கட வென்று வருகின்ற தீக்ஷண்ய பாணங்களினால சிந்தை கைந்துநந்தைதாயைப்போல அரசாக்ஷிசெய்கின்ற தருமராஜனுடையயானைகள் உருமாறி உடலசிறி உயிர்பிறி உணர்மிறி ஓகோகோவென்னும ஓசையுடன் ஓய்ந்தழிந்தார்கள்.

இவ்விதமாக, துரோணாச்சாரியும் துரியோதனனுடைய சேனைவீரரும் போர்க்களத்தினின்று இன்னம வரத்தக்கபேர்கள் ஆரகிலுமுண்டானால வெட்டுமென்றுஜயமாலைபுனைந்து, தருக்கிசெருக்கி தாரணியெல்லாங்கருக்கிப் பெருக்கியிருக்குஞ்சமயத்தில், ஒருவருக்கொருவர் ஒப்புவமையிலலாத - மகத்தியன் - மரிசி - அகத்தியன் ஆங்கிரசன் - கௌதமன் - காசிபன் புலஸ்தியன் - முதலாகிய முனிச்சிரேஷ்டர்களெழுவரும் தருவனுக்கொப்பாகிய துரோணாச்சாரியைக் கண்டு சுதரிசனம் போல் வந்து எழுந்தார்கள அவர்களைக்கண்டவுடனே, மகத்துவமிருந்தஜகத்திலில்வனுத்த தலத்தினி லுயர்ந்தகேள்வியையுடைய தனுவாரியன் எதிர்சென்றேற்றி நிர்க்கதண்டமாகச் சென்னிபாலிறைந்தப்பார்க்கப் பாக்கியம் பண்ணினேனென்று அனிபெறத்துதித்து அழகுறப்பணிந்து நின்றபோது சகலகலைமொழிகளிலும்வலல சப்தரிஷிகளாகியதவத்தினர்சொல்லத்தொடங்கினார்கள். ஓ, துரோணாச்சாரியரே கேளும் வேதியர்க்குரியசெய்கைகள்யாதென்றால்-வேத பாராயணம் சாஸ்திரவிசாரம் - அவுபாசம்-பிர்ம்மதேயக - மாசற்றமாதவம் - கோதற்றஞானம் - வழுவற்றதெளிதல் - அழிவற்றயாகம் - இவைமுதலிய நற்செய்கைகள் முனிவர்க்குறுதி யல்லாமல் வேறுதுணையுண்டோசொல்லும் நல்வழியாகிய கலைக்கியானங்களை நலமுறத்தெளிந்த வில்வல்லவனே சத்துருக்களை வெற்றிகொள்ளும் வீரப்பிரதாபமும் மிகுஜயப்பேரும் அழிவில்லாதஜாமர்த்தியமும்மநுமுறைநிலையாகியநீதியும்நிதானமும் போகபோக தியாகமோசம் பக்கரமாகிய வாழ்வும் இவைக ளெல்லாம் க்ஷத்திரியாளுக்குரிய இயற்கை யல்லவோ ஆகையால் நமக்கேனிந்தப்பந்தம் உம்மை நீர்மறந்திருக்கின்றீர் உத்தமனேநீர்கைப்பிடித்திருக்கிற வில்லும் வேலும்-வாளும்-கணைகள் நிறைந்த அம்புறாத் தூணியும் யானை-குதிரை-முதலாகியதேரும், வீரகண்டைகேயூர மணிகுண்டல கிரீடபுஜகீர்த்தி முதலிய வீரபட்டமும் வெவ்விய கோபாக்ஷாத்திரமும்வேண்டாம் விட்டுவிடும், இந்திரன்முதலிய தேவர்களும்யாகாதிகருமங்களில்லாமல்இதயம்வருந்தியிருக்கின்றார்கள்.

ஆதலால் அதிசீக்கிரத்தில் விண்ணுலகம்வரவேண்டும் மென்னவர்பிரானே இப்போது நீர்மூழ்கியிருக்கின்றபாசபந்தக்கலக்கமாகிய இருளைவிடுத்து உமதுபுத்திபூர்வமாய்ப்பழமையை உன்னிப்பார்க்க பூர்வஞானம பலிக்குமென்று சுட்டமாகிய தங்களின் உரிமைதோன்றும் படியாய்ச் சொல்லி செலவுபெற்றுக்கொண்டார்கள் நிர்த்தோஷமானமாகிய பாவமற்ற பக்குவசாலிகள் இப்படி சொல்லிச் சொல்லவே துரோணாச்சாரியருடைய மனத்தில்வேதாந்தசாரத்தாலாகும் வெறுப்பும் பூர்வஞானவிருப்பும் பிறந்து பல விதத்தில் நடத்தும் போராசையும் உலகத்தி லனுபவிக்க உன்னும் பேராசையு மறந்து பரிசுத்தமாகப் பிரகாசிக்கும் சௌம்யகுண மடைந்து தேவவிமானமும் பல்லக்கும் எப்போது வருமென்னும் இஷ்டமுடையவராய் எதிர்பார்த்துக்கொண்டு இப்போதுஏறியிருக்கும் ரதமுதலிய வாகனங்களின்மீது விருப்பமில்லாதவராய்கோடைகாலத்தில வறண்டு மறுபடியும் மாரிகாலத்துக் கொண்டல்பொழிய அதனால் நிறைந்து தெளிந்த நீரோடையைப் போல நின்ற துரோணாச்சாரியருடையநிலையையும்-சப்தமுனிவர் வந்துரைத்ததன்மையையும் ஆதிமுதனாள்யுத்தந் தொடங்குமுன்னமே பாண்டவர்கள்கேட்டுக் கொண்டபோது இந்தத் துரோணர் சொல்லியசொல்லையும் இவனை வெற்றிகொள்ளுவதற்கு இதுதான் நல்லகாலமென்பதையும் இந்திரநீலமணிமலைமேற்பொற்கொடிபடர்ந்ததைப்போல் பொன்னுடைதரித்தருளிய புருஷோத்தமன் தெரிந்துகொண்டு சித்திராங்கதைபுருஷனாகியபாண்டியனும்மேகவண்ணங்கலங்கும்படியான உடல்வண்ண அருச்சுனனுமாகிய உத்தமனுக்கு சங்கதிதெரிவித்து இதுவேநல்லகாலம்மெத்தஜாக்கிரதையாயிருவென்று சொல்லி துரோணருக்குஜன்மப்பகையாக யாகாக்கினியிற்பிறந்ததிர்ஷ்டத்துய்மனையழைத்து துரோணாச்சாரிபேரிலேவிவிட்டுகுற்றமாகிய கோள்மொழிகளை சித்தமறந்தும் செப்பமாட்டாத உத்தமகுண மேருவாகியசத்தியசம்பன்னனான தருமராஜனைக்கண்டு அடியவரிடுக்கண்தீர்க்கும் அருளாழி வேந்தன் சொல்லத்தொடங்கினார்.

ஓ, முரசகேதனமூர்த்தண்யனே கேளும், நமது அர்ச்சுனனாகிய விஜயகாண்டீபனும் நானும்மந்திரமலைபோன்ற பிரகாசம்பொருந்தியதோள்பெற்றமாளவத்தலைவன்மேற்சண்டைபோடச்சென்று அக்கினியாஸ்திரப் பிரயோகஞ்செய்தபடியால்அந்தஅரசனேறிய அஸ்பத்தாமாவென்னும்பெயரினையுடையபட்டத்துயானையானது நட்டமடைந்துநமனுலகடைந்தது அந்தயானையைக்கொன்றது மெத்தஅருமையாதலால் உமதுவாக்கினால் அதனைச் சொல்லி ஜெயங்கூறவேண்டுமென்று செங்கண்மாலுரைக்க அங்கண்மாஞாலம் அனைத்தும்புரக்கும் அறன்மகன் கேட்டு ஐயா, அரிகிருஷ்ண துஷ்டத்தனமுள்ள மாளவத்தலைவனுடையபட்டத்துயானையைவென்று விட்டால் நான் அந்தயானையின் பெயரை யெடுத்துச் சொல்லவேண்டிய பிரகரணமொன்று மில்லையேயென்று தருமராஜன்தடுக்கஇவர்களுக்குரியகரியோன் தருமராஜனையடுத்துமறந்துபோனீரோதர்மநந்தனாமுதல்முதல்யுத்தத்துக்கு ஆரம்பிக்கும்போதுநாமெல்லோரும் விஷ்டுமர்துரோணரிடத்திற்போய்நமதுகுறைகளைச் 'சொல்லிக்கேட்டகாலையில் இந்தமுனிவரன்சொன்னவாக்கியம் கியாபகமில்லையோதர்மராஜன்வாக்கினால்என்மகனாகிய அசுபத்தாமா இறந்தானென்றுசொல்லக்கேட்பானாகில்புத்திரசோபத்தால் உயிர்விடுவேனென்றுசொல்லிய அந்தக்காலம்இப்போதுசமீபித்திருக்கிறபடியால் நீரும்பொய்சொல்ல வேண்டிய தில்லை

இந்தப்போரில் அவன்பிள்ளைபேர்கொண்டயானையிறந்து தென்றுபேசுவீராகில் இந்தச்சொல் அந்த அந்தணன் செவியில் விழ்ந்தவுடனே தன்னைமறந்து வில்முதலாகிய பாணங்களைத்துறந்து உயிர்குறைந்து இறந்துபோவான் ஆதலால் நீர் அவருக்குமுன்சென்று நின்று சுருக்கிற் சொல்லுமென்று காந்தியையுங்கருக்கையுமுடைய சங்கு சக்கரக்கையனுகிய என்னையன் துரோணுச்சாரி இறப்பதற்கு உபாயம்பேசியகாலையில் மெய்யினு லேர்ப்பட்டமெய்யாகியமெய்யையுடைய வேந்தன்கேட்டு அரிகரியென்று இருசெவியுமூடி இப்போது நான்பொய்சொல்லிவாரிக்கொள்ளுவது இந்தப் பூமியாகிய மண்ணுேவென்றுநகைத்து அப்பா உரகசயனு ஒருபொய்சொல்வார்களாகில் அவர்களுக்கு நெருங்கியசுற்றமும் பொருந்தியவீடும் வருந்திப்பெற்ற புத்திரபாக்கியமும் திருந்திய சீருஞ்சிறப்பும், திணிந்தமனமும், அணிந்தபுகழும், கேள்விச்செல்வமும், தீரத்துவத்திறனும், மாசிலாததேசும், எண்ணத்தக்கபொருள் யாவும் 'புண்ணியமனைத்தும், நாம்செய்ததவமும், அவமாயழிந்து பவமாகமுடியுமே, பங்கயலோசனுவென்று சொல்லியபாண்டுமைந்தனை,இந்திரனுற்பொழியச்செய்த கல்வருஷமாறும்படியாய்கோவர்த்தனத்தைக்குடையாயெடுத்துப்பிடித்துக்கோவினங்களையும் கோபாலர்களையுங்காத்தருளியமாவிந்தையாகியகோவிந்தன் பற்பலவிதத்திலும்புகன்றுதேற்ற அவைகளையும் தடுத்துப்பேசிய பார்த்திபனைப்பார்த்து என்னநீர்மெத்த சாந்தஸ்தமாயிருக்கிறீர்தருமரோ. இப்படிப்பேசினுல் எப்படிபோர்முடியும் எவ்விதத்திற் சபதநிறைவேறும்வீணுகிய அபரோதனையாரைச்சாரும்மேலும் இம்மைப்பயனுகியஇகத்தின்பலன் மறுமைப்பயனுகிய மோக்ஷபலன்இவ்விரண்டையும் சீர்தூக்கிப்பார்க்கில் இவ்வுலகத்தில் வாழும்படியாகிய யாவர்களும் அவரவர்களுக்குஉரித்தாகிய இயற்கையின்படிக்கு முடித்துக்கொள்ள வேண்டியது அல்லாமலும் வெப்பமாகியபொய்யைச்சொன்னுலும்சொல்லலாம்; அஃது ஒருவருக்குநேரிட்ட ஆபத்தைமீட்டுவிடுமாகில் அந்தப்பொய்யானது மெய்யாகி மெய்யானதுபெறுகின்ற புண்ணியபலனைத்தானேபெறும்-இதற்கு (நீதிவாக்கியங்கேளும்) (பொய்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த-நன்மைபயக்குமெனின்) (இ-ள்)பொய்ச்சொல்லானது ஒருவருக்குநேரிட்டவிபத்தை நீக்கிகுற்றமில்லாத நன்மையைத்தருமாயின் அஃதுமெய்மையின்வீட்டைப்பெறுமென்பதாம்) இதன்றியும்; நீர் நினைத்தவண்ணம் பொய்யானுல்த்தானென்ன வல்லவராகியமகானுக்கள்அநேகக்கோடிவேதங்களை ஆய்ந்துதேர்ந்துலோகோபகாரமாய்ச்சொல்லியிருக்கின்றவெகுவாகியசாஸ்திரதருமங்களெல்லாம் உமதுள்ளத்திற்சோறி ஊறி அறமேமயமாயிருக்கும்போதுஒருபொய்சொன்னுல்என்னமுழுகிப்போச்சுது பெருநெருப்புக்கு ஈரமுண்டோபெரியோனே நீரொன்றும்யோசிக்கவேண்டாம் இது அப்படிக்குப்பொய்யாகியசாரியுமல்ல உமக்கு இதனுல்ஒருபழிபாவமுதலாகியதும்சம்பவிக்கமாட்டாது இதுநல்லசமயம்விரைவிற்சென்று சொல்லுமென்று வேலையிற்றுயின்றோன் இது

வேலையாய்ச்சொல்ல, அப்படிசொல்லுவதற்குமனங்கொள்ளாதவராய்வருத்தமுற்று மாதவனை நோக்கிகனம்போன்றமெய்யாகன்றுகொண்டுவிளங்கவியெறிந்தகையா அஸ்வத்தாமாவென்னும் யானையிறந்ததென்பதாய்ச்சொல்லுகிறேனென்று தருமராஜன்சொல்லகாளிங்கநடனராயகனுகியகண்ணன்கேட்டுகலகலவென்றுநகைத்துநீர்சொல்லுகிறவாக்கியம் முன்பின்னுகப்புரண்டிருக்குது, சொல்லமுகா யிருக்கயில்லை, இப்படிதானுசொல்லுவீர், இப்படிசொன்னுல்துரோணருக்கு கர்ன கடூரமாயிருக்குமென்று கண்ணன்சொல்ல பின்னையெப்படிசொல்வதென்று தர்மக்கியான பூரணன்கேட்க, நீர்சொன்னது சரிதான்- ஆனுல் இனப்படுத்திமுன்பின்னுக்கி அஸ்வத்தாமா அதாகுஞ்சரகாவென்று சொல்லுவீராகில் தனுர்வேதியனுங்கோபங்கொள்ளான், சத்தியமுங்குறைவுபடாது, நமது எண்ணமுந்திண்ணமாமென்று கருங்கடல்வண்ணனுகிய கண்ணன்சொல்ல நல்லதென்று அண்ணலுட்கொண்டார். இஃதிப்படியிருக்க? இனிமேல் இப்பேர்ப்பட்டயுத்தஞ்செய்பவர்கள், இவ்வுலகத்திலில்லையென்று சொல்லும்படியாகப்போர்புரிந்து'வெற்றியடைந்துதத்வஞ்ஞான சித்தத்தால் தேவர்மக்கள்விலங்குபுள்ஊர்வன நீர்வாழ்ஜெந்துதாபரமுதலிய ஜனனசாகரங்களேழையும் வேரறக்களையும்படியான மேதகுநிலையில் யோகமூர்ச்சைகொண்டுநின்றுர்.அப்படிநின்றதனுர்வேதியனுக்கெதிரில். சகலவீரர்களையும்வென்றுதடந்தேர் செலுத்திச்சென்று தர்மராஜன்போய்நின்றுகுற்றமில்லாத தன்னுவினுற்'கோபாலன்குறித்தபடிபேசத்தொடங்கினுர்.

அதென்னவெனில் ? என்குருவாகிய யிசனே ! தேவரீராண்மைக்கொப்பாகிய அஸ்வத்தாமா அதமாய்வீழ்ந்த மதத்தயானையென்று சொல்லுவதற்குமுன்னமே மாதவன் பாஞ்சசன்யசங்கத்தைப் பவளம்போன்றவாயில்வைத்துபம்பம்பமென்றுபூரித்தான் இந்தப்பேரொலியால் அநேகமரசர்களுடன் எத்தனைகோடியோசேனையிறந்தார்கள் இந்தவிதமாகியசங்கநாதத்தின் உபாயவிந்தையைஎந்தவிதத்திற் சொல்லுவேன் கொந்தலர் மாலையணிந்த பரிக்ஷித்து விஸ்மைந்தனே யென்று வைசம்பாயனர் சொன்னுர்.

தீதிலாமொழியையுடைய தர்மராஜனுனவர் அஸ்வத்தாமா அதாகுஞ்சரகாவென்று சொன்னபோது, குஞ்சரமென்னுமொழியானது துரோணுச்சாரியருடையகாதில் வீழ்வதற்கு முன்னே சாரங்கபாணிசங்கத்தொனிசெய்த சந்தடியினுல் அஸ்வத்தாமா அதாவென்பதுவரைக்கும்; தர்மராஜன் வாக்கினுற்கேட்டதுரோணுச்சாரியர் வில்லுங்கணையும் வீரமும்விடுத்து எவர்களிடத்தும் பாசபந்தம் வைக்காமலறுத்து அசைவற்றநிலையில்மனத்தைநிறுத்தி ஊத்தைத்துருத்தியிற்காற்றைக்கூட்டி, ஊர்த்தமுகத்தினில் மூலாக்கினிமூட்டி, ஒளியெழ இரண்டுதிட்டியும் பூட்டி, உலகத்தாரிறக்கும்உண்மையைக்காட்டி; உலவாப்பெருங்குணத்துத்தமனுதன் மலைவாய்த்தேனைமாந்தவிரும்பினேன் பிரமசொரூபியாகிய தத்துவநாதன் முக்குறும்பகற்றிய பக்குவபோதன் ரேசகபூரகத்தையொட்டித்து நடு

நிலையிற்றிரும்பிக்குங்காலையில், சிற்றம்பலத்தில் நர்த்தநட
னஞ்செய்து, சுத்தபவித்திரசுடர்பரந்தோங்கி யெத்தப்
ரகாசம் விளங்கியஜோதிமத்தகஉச்சிவழிவந்தெழுந்து சி
ற்றுருவாகி சேட்செலும் ஒளியை சித்தர்முதலாம் சிவ
கணத்தெவரும்மெத்தப்புகழ்ந்து வேண்டித்துதிக்க?கரும
லைக்கொப்பாங்கண்ணனுண்டவனும். பருமலைக்கொப்பா
ம் பஞ்சபாண்டவரும்? மறுவற்றஇருதயமாதவத்தோருங்
கண்டுகண்களித்தார்கைதொழுதார்களே.

அந்தவேளையில் முள்ளையுற்றதாமரைப்புஷ்பக் கோ
விலைப்பெற்ற பிர்மாவினுடையகடுந்தலையைப்பூர்வங்கிள
ளிய பிநாகபாணியும், பிறப்பிலியுமாகினகிரிசனுக்கொப்
பாகியதுருஷ்டத்தூய்மனெனவீரன்துள்ளிச்செல்லும்பரித்
தேரினைத் துரிதமாயோட்டி விண்ணுளிமாட்டிநாணொலைை
காட்டி வீரவாளிபூட்டி ஆரபாரப்பகைபாராட்டி துரோ
ணர்பேரில் பாணம்விடப்போகிற சமயத்தில். ஆ-ஆ-ஆ
ஆவென்று அதட்டி அமட்டி அர்ச்சுனன்மறித்து ஐயோ
துருஷ்டத்தூய்மனுகிய மைத்துனனே, இந்தமகானுபாவ
ன்சுகானுபவத்திலிருக்கின்றுர் இந்தச்சமயத்தில்நீரபாண
ந்தொடுக்கவேண்டாம். என்சொல்லைத்தள்ளி விடுப்பிரா
கில்உலகத்தில் உமக்குண்டாகியபுகழும் தேஜசும்நேசமு
ம வீரப்ரகாசமும் குறைந்துபோம்குறைந்துபோமென்று
விஜயன்தடுத்தும்! அந்தவார்த்தையைச் சிந்தையிற்கொ
ள்ளாமல்உந்திவிட்டான் அந்தக்கணைசென்று, புந்தியிற்
சிறந்ததவமுனித்தலையைக் கந்தரமறுத்து அந்தரத்தெழு
ந்து பூமியிற்சிந்தியது, அந்தோ! அந்தோ? தனுவாசரிய
ன்தலையறுந்ததை தனஞ்செயன்கண்டு, கண்ணீர்விட்டது
உன்னிருலர்ந்து செவ்வரக்கைப்போற் செவந்திருகண்
ணும் கோபங்கொண்டு இதோசிதைக்குறேன் உன்தலை
யையென்றுசிலைவல்லாளச்சேனுபதியாகியதுருஷ்டத்தூ
ய்மனைச்சீறிநெருங்கினுன் இதிப்படியிருக்கதனுர்வேதபா
ண்டித்யமுடையதுரோணுச்சாரியனென்னும்சேனுபதியா
னவர் இறந்தாரென்று கெடிபெற்ற வீரங்கிளர்ந்த நரகக்
கொடியோனுடைய - ரத - கஜ - துரக - பதாதிவீரர்மு
தலிய நால்வகைச் சேனைகளெல்லாம் புறங்கொடுத்
தோடினுர்கள்.

இப்பால் ! வில்லாண்மையிற்சிறந்த அஸ்வத்தாமாவா
னவர்பொல்லாதவிசனங்கொண்டுபோர்க்களத்திலோடி
வேதமந்திரவேழ்விகளின் விதிமுறைதவருத தன்தந்தை
யிறந்ததனிக்களம்போய்ப்பார்த்து தடாலென்று பூமியில்
வீழ்ந்து அவருடைய பாதத்தைதலைமேல்வைத்து மறுப
டியும் தரைமேல்வீழ்ந்து பளபள வென்றுமுகத்திலறை
ந்துக்கொண்டு துடிதுடித்து கண்ணீராறுசப்பெருக அ
ழுது வாய்சோரமாலைசோரமண்மேல் உடல்சோரப் புர
ண்டு நெஞ்சமழன்றுநஞ்சையுண்டவர்போல் மதிமயங்கி
எண்ணமழிந்து கண்ணெளிகுறைந்து உள்ளநொந்துருகி
ஐயா, ஐயா, அத்தா, அத்தா, அப்பா, அப்பாவென்று
தாயிழந்த தனிக்கன்றைப்போற்கதறி பதறி ஓதெய்வமே
ஆ, எந்தையே வல்லமைமிகுந்த விஷ்டுமரானவர் பேர
ன்புடனே தேவரீரையழைத்து சிங்கம்போன்ற எங்களை
ப்போல் நிருமொருநிதியையுடைய இராஜனுகஇருமென்
று, கேயூரமணிகுண்டலகிரீடபுஜகிர்திவிரகன்டை சுவே
தசஷத்திரமுதலாகிய எல்லாவரிசையும் யியந்துநாடாளு
ம்படி நன்மையேசெய்தார், அந்தநலத்தைப்பெற்று அஸ்
தினபுரமென்னும் தலத்திலுற்றுவிற்குருவாகி மேன்மை
கொண்டிருந்தவேதியர்க்கரசே- முன்பிறந்தோரிலும்பின்
பிறப்போரிலும் ஒப்புச்சொல்லுவதற்கு உவமையில்லா
த உத்தமனே-நீசெத்ததெய்விதமோ(தேவரீர்முடியும்ப
டியானகாலம்நேரிட்டுதோதந்தையே)உன்னைப்பிரிந்துநா
னிவடத்திலிருந்து உய்வேனே இதோஉன்னிடம்வந்தே
ன் உன்பின்வந்தேன்- உனைமறந் தொழிந்தேன்-உயிரிழந்த
ழிந்தேனென்றுஉலைவாய்மெழுகுபோல் உருகிவீழ்ந்தோ
ய்ந்தான், பின்னும். தேரியெழுந்து வில்வேதபுருஷனே
வெம்போர்வெல்லும்வெற்றிவீரனே - சொல்நிலையாகிய
சுத்தனே துய்யவேதியர்க்கெல்லாங்கர்த்தனே வல்லவர்
செய்த சாஸ்திரங்களுக்கெல்லாந்தலைவனே எல்லாத்தலை
மையும் நீரிருந்தவரையிலுமிருந்து நீரிறந்தயின்றைக்கே
உம்முடனேகூட இறந்துமறைந்துபோய்விட்டுதுஎன்தா
யே? என்று இளமைதங்கிய அஸ்பத்தாமனுனமைந்தன்
சோகமுற்றுசோர்வடையுங்காலையில்சத்துருவின்மேற்ப
டைகொண்டதரணிசனுகிய துரியோதனனோடிவந்துசோ
பமாற்றிகண்ணீர்துடைத்து மார்புடனணைத்துபயப்படா
தேயென்றுதயவாகச்சொல்ல கிருபாச்சாரியுங்கிட்டிவந்து
நஷ்டமாகியமைத்துனனுக்காகசற்றுநேரம் நைந்து உரு
கினின்றுமறுமடியுந்தேறியபேர்துமகமேருபோன்ற என்
தந்தையைக் கொன்றவனுரவன் சொல்லுமென்று தா
ய் மாமனைக்கேட்க! நடந்தகாரியங்களையெல்லாம் மாமனு
கியகிருபாச்சாரியார்சொல்லலுற்றுர்.

அப்பனே அஸ்வத்தாமா,கல்மலையைத்தூக்கிகல்வருஷ
ங்காத்த கண்ணனுனவன்ரதசாரத்தியந்தவிர மற்றென்று
ஞ்செய்வதில்லையென்றவிரதத்தைமறந்துசொந்தஅக்கறை
யாய்கல்லைக்கடித்துப்'பல்லைமுறித்துக்கொள்வானைப்போ
ல் மெத்தவருத்த மெடுத்துக்கொண்டு சத்தியவானுகிய
தர்மராஜன்புத்தியைமயக்கி தன்வழியிற் கொண்டுவந்து
விட்டுக்கொண்டான், அவன்தந்திரத்துக்குடன்பட்டமுரா
சுயர்த்தோனுனவர்சகலருங்கேட்க அஸ்பத்தாமா அதா
வென்றுபொய்சொன்னுன் இந்தச்சொல்லைக்கேட்ட உன்
தந்தையானவர் வில்லும்பாணமும்விட்டுவெறுங்கையுட
ன்நிருபாதிகநிட்டையிலிருக்கும்போது துருஷ்டத்தூய்ம
னென்னுங்குருத்துரோகிகொன்றுன், இப்படிக்கெல்லா
மில்லாமல் விற்கொண்டுயுத்தம்பண்ணிவெல்லுவதற்குன்
னுவாராகில் பிர்மாமுதலிய தேவர்களாலும் உன் தந்தை
யைவெல்லப்போமோஎவ்வளவுங்கூடாது மேன்மையா
கியமருமகனேயென்று கிருபாச்சாரியர்சொல்ல. நான்கு
வேதமுமுணர்ந்த சிலைக்குருவின் மைந்தனுனவன் மனம
றுகிக்கேட்டு துன்பம்விட்டெழுந்து கோபக்கொழுந்தெ
ழுந்தோங்கக்கொதித்து மேசம்போற்பொழியுங்கிர்பைக்
கணைகளையுடைய என்தந்தையானவர்வில்லையெறிந்து வெ
றுங்கையாய் நின்ற சௌமியகாலமறிந்து சிரத்தைத்தறி
த்ததுருஷ்டத்தூய்மனையும் பாண்டவரையும்சேர்த்துஒரு
கணையால் உயிரைமாய்க்கிறேன். பாரும் உரகக்கேதனதுரி

யோதனமகாராஜனேயென்று போர்முகமாகியவனத்திலிழுமாந்துதிரியும்சிங்கம்போற்சீறி கஜரததானைதுரங்கமுதலிய படைமன்னர் யாவரும் கடல்போலினைந்து விளைந்து துரியோதனமகாராஜனுடன் சூழ்ந்துவரவும், டிண்டிமடென்னும் பேரிமுதலிய வாத்தியங்கள் எண்டிசை கலங்க முழங்கவும், வெற்றித்துஜம் வீரக்குடை - வெண்சாமரைமுதலிய விருதுகளோங்கவும் இந்திர தனுப்போன்ற வின்னாணோசையால் திசையானைக ளெட்டுந் திடுக்கிட்டேங்கவும், திரிபுவனமுநடுங்கிப் பின்வாங்கவும் சேமத்தேர்மேற் கொண்டு திடுதிடெனச்சென்று வருங்காலையில் பொருந்திய உலகெல்லாம்' அழிந்து போங்காலம் நேரிட்டதென்று தேவர்முதலியயாவரும்சிந்தைநைந்துநடுங்கி யொடுங்கும்படிவந்த அஸ்வத்தாமனைதர்மராஜனேக்கி மனத்தளர்வுடனே பசுந்துளபத்தாமப்புயப்பரந் தாமனுடைய பங்கஜ முகத்தைச் சங்கையாய்ப் பார்த்து இவ்வளவு ஆரபாரத்துடனிங்குவருகிற அஸ்வத்தாமனால் ஏதாகிலுந்துன்பம் விளையுமோ எங்கள்சகாயனேயென்றுகேட்க. சங்குசக்கரம் தாங்கிய ஐயன்சொல்லுகிறான், தர்மசொரூபனேகேளும். கொன்றை அறுகு தும்பை கூவிளமுடித்தசெஞ்சடைமுதல்வன் திருவடியருளால் மிகுதியவாழும்மேன்மையும் புகழும் பெற்றேன் இதன்றியும் தேவாஸ்திரங்கள்யாவுந்தெரிந்தோன் உரித்தாகியதந்தையிறந்தபிரிவாற்றாமையால்யுத்தஞ் செய்யவருகிறான். உள்ளபடிமுடியும்தெய்வச்செயல்எப்படியோநாமறியோம் ஒப்பற்ற உத்தமனே நீ ஒன்றுக்கும் அஞ்சாதேயென்று உறுதிசொல்லிக் கொண்டிருக்கும்போது அர்ச்சுனனானவன் ஆயாசங்கொண்டு ஐயோ,நீண்டவில்லும் மூண்ட அழற்கணையுங்கைவிட்டு பழயபடி தேவர்களுடன்மருவிப்பழகும்படிக்குவிரும்பிபொறிபுலனடக்கி பூரணத்திற்கலந்து ஆகாயத்திற்சோதிகாட்டி அமர்ந்தருளிய என்னுண்டவனாகிய துரோணருடைய சபச்சடலத்தை நான் தடுக்கத்தடுக்க என்னைத்தடுத்துத்தறித்து மாளவசைக்கிளங்களை ஆளாக்கிவைத்தானல்லாமல், இந்தப்பாவியென்னலாபம்பெற்றான் அந்தோ ? கொடியவில்லாண்மை கொண்டஅஸ்வத்தாமன் ஆலகாலங்கொதித் தெழுந்து மேலுமேலும் வருவதைப்போல் வருகின்றானே கொலைத்தொழிலுக்குரியஎமனும் மற்றஎவனும் இவனுக்கு எதிர்நிற்கமாட்டார்களே யாவருடைய பிராணனையுங்கைக் கொள்ளுவானே? இனிஇதற்குநாமென்னசெய்யலாமென்று இந்திரகுமாரன்சொல்ல சேனாபதி யாகிய துருஷ்டத்துய்மன் செந்தழற்போற்சினத்துச் சொல்லுகின்றான்.

ஓ, மைத்துனனாகிய மெய்த்தவனே கேளும், விரிந்த தாமரை மலர்மாலையணிந்த துரோணாச்சாரியைக் கொல்லுவதற்கு என்றந்தை, பாஞ்சாலராஜன் செய்த புத்திரகாமேஷ்டியாகத்தில் நான் பிறந்திருந்த படியால் இவன் தலையை வாங்கினேன், அப்படியிருக்க உனக்குக் குருவென்று நீ மெத்த உருகிப்போறாய், படுகளத்திலொப்பாரி பார்ப்பவர்களுண்டா? நல்லது உன்னிஷ்டப்படி தனுவாரியனானவர் முனையேறிய கணையால் அளவிறந்தவர்களுடைய பிராணனைப்போக்கியதுதர்மமா அநேகம்பேருடைய ஆவியைக் கொள்ளைகொண்ட அழும்புக்காறவரோதய ஐயனை உயிரழிக்கப்போகாதா, அழித்தால் அதனாலேதாகிலும் வசையுண்டா, நீ இதைக் குறித்து இவ்வளவுதூரம் பேசுகிறாய், உன்யோக்கியந் தெரியாதா வம்சநாயகனாகிய வீஷ்டுமருயிரை நீ வாங்கவில்லையா அதுமாத்திரம் தர்மமா, இப்போ நீ யென்னைக் கடிந்துபேசியது கனவிரோதமென்று கண்ணிரண்டும் சிவக்கக்காய்ந்த கடற்போற் கொதிப்பேற விளம்பினான் இதல்லாமலும், எங்களுடைய பாஞ்சால குலமனைத்தும் பற்றறக்களைந்து பாபமூட்டை கட்டிக்கொண்ட துரோணனென்னும் பாவியை தலைவாங்கின தன்மையைக் கேட்டு கரையேறமாட்டாத துயர்க்கடலி லாழ்ந்து கலங்கி போர்புரியவரா நின்ற அஸ்வத்தாமனுடைய யுத்தமுனையில் நான்புகுந்து போராடி அவனைவெல்லுகிறேன் ? அல்லவென்றால் அவன்கையால் நான்சாகிறேன், நீங்கள் உங்கள்பிராணனைக் காத்துக்கொண்டிருங்கள் இப்ப நான்கூறியபேச்சுக்குயாதொரு திருகுமில்லை இனி நடக்கப்போறயுத்தங்களை மாம்பழச்சாற்றால் செஞ்சாலிவளரும் வயல்சூழ்ந்த வளநாடரெல்லோரும் காணுவார்க ளென்று பின்னுஞ் சொன்னான், இப்படிசொல்லவே வனசநாபன் தம்பியாகிய சாத்தகிமுனிந்து தழலெனக்கனிந்து என்னசொன்னாய் துருஷ்டத்துய்மனே இன்னமொருக்காற் சொல்லு ஐயோ? தன்னைமறந்துபேசுஞ் சர்வமூடனைப்போல் நீ உன்னைமறந்து பேசுகிறாய் அதென்னவெனில், கங்காபுத்திரனாகிய வீஷ்டுமனை உன் தமயனாகிய சிகண்டிவென்றான், தனுவாரியனான துரோணாச்சாரியை நீ கொன்றாய் நீங்களிருவரும் குருவைச்சுட்டுத் தின்னவந்த பெரும்பாவிகளாய்ப் பழிக்குடன்பட்டிருக்க இந்திரகுமாரனாகிய அர்ச்சுனராஜன்-கொன்றானென்பது நீதியோ, புட்பப்பொடிதிணிந்த பசுந்தேனிறைந்த பூமாலையணிந்த அரசர்களுக்கெதிரில் நீ சொன்னபடியால் உன்னைப் பொறுமையுடன் மன்னித்தேன் இன்னொருவன் பேசியிருப்பானாகில்பொருந்திய நாக்கு இதுவரையிலு மிருக்குமா, ஆ ஆ ! இந்நேரம் யென்னபாடு பட்டுப்போமென்று உருத்து பெருமூச்சுவிட்டிரைந்து சொன்னான், அந்தச்சாத்தகி வார்த்தையை வீமன்கேட்டு மனஸ்தாபமடைந்து ஒருபக்கத்திலிருந்து அர்ச்சுனன் முகத்தைப்பார்த்து அடாதம்பி விஜயனே இந்தச் சாத்தகியும்-பூரிசராவும் போராடியபோது சாத்தகிக்காகப் போராடப் பரிந்து பூரிசராவினுடைய வலதுகரத்தைவாங்கிய வல்லபமும் உன்றந்தையாகிய இந்திரனுக்கு இனிய நண்பனான வில்லாண்மைபெற்ற பகதத்தனைக் கொன்றதுவும் தர்மமல்லவோ நீ செய்தகாரிய மிப்படியிருக்க கமலமாலையணிந்த துரோணாச்சாரியரை துருஷ்டத்துய்மன் வதைத்ததுவோ கொடும்பாவ மாச்சுதென்று குவடுகள் பொடிப்படச்செய்யும்வாயுகுமாரன்சொல்ல, புராதனப் பொருளாகிய தர்மராஜன் மிகுந்த பொறுமையுடையவராய், அப்பா-ஒருவரையொருவர் நொந்துகொள்ளா தீர்கள் இந்த மண்ணுலகத்தில் நல்வினை தீவினையைச் செய்தபேர்கள் ஜனனந்தோறும் நல்வினை தீவினையை அனுபவிப்பார்கள் ஜகதீசனாகிய கடவுளை நினைத்து எல்லாம் உனது செயலென்று பற்றறவிடுத்த பாக்கியவான்கள் வேதவிதிப் பிரகாரம் வினை யிரண்டையும்

வென்று மேலாகிய மேன்மையடைவார்கள், தம்பிமார்க
ளே, கொல்லப்படுவதெல்லாம் தீவினையா யிருந்தபோதி
லும் ஸ்ரீகிருஷ்ணனுடையதிருமொழிகொண்டு செய்வோ
மாகில ஒருதீங்குமில்லை நாம்செய்வதெல்லாம் பரிசுத்த
ம், அதெப்படியென்னில், வேதமந்திரத்தை நம்பி வேழ்
வியில் உயிரைப் போக்குந் தன்மைபோ லாமென்று ச
த்யஞ்ஞான உத்தமன்சொல்ல முத்திவித்தாகிய மூகுந்த
ன்கேட்டு. பருந்தும்-கழுகும்-பந்தலிடா நின்ற படுகளத்
தில் முன்பின்பாராமல் பலபேரைக் கொன்ற பலவானு
ககலலவோ வீரசொர்க்கம் விதித்திருப்பது இவைகள்அர்
ச்சுனனுக்குத் தெரிந்திருந்தும் தெரியா தவரைப்போல்
சொன்னதெல்லாம் ஆசாரியர் இறந்தாரென்றும் ஆருமை
யால் அவசரப்பட்டுச் சொல்லுகிறான், போகட்டும் உல
கத்தார் தூறி நிந்திக்து ஏசும்படியாகவோ, அல்லது தே
வர் சிந்திக்கும்படியாகவோ எவ்விதத்திலேயோ, ஒருவி
தம நிகந்து முடிந்துபோன செய்கைக்கு இனி யோசிக்க
வேண்டியதென்ன, தன் தகப்பனிறந்ததுக்கம் சகியாமல்
சர்வ சம்மாரகால சதாசிவனுடைய மகனைப்போல வரு
கின்றான் அஸ்வத்தாமனானவன், இவனைவெல்லும்வல்ல
மையைக் குறித்து யோசிக்காமல் தலைக்குமேல்வந்திருக்
கும் சங்கடத்தை விட்டு வீணான காரியத்தை யோசிக்கி
றீர்களென்று மேகவண்ண னுரைக்க சுகபோக வண்ண
லாகிய தர்மராஜன் சொல்லுகிறார், நவமோக அவதார
நாராயணனே கேளும், அவயவங்களுடன் அழகாகிய உ
டலை மெய்யென் றெடுத்தோம், ஐயோ-இதுவெறும்பொ
ய்யே, இந்த-ஸ்தூல உடலால் நாமொன்றுமுணர்ந்திலே
ம் இனிமேலுங் கேறத்தக்கதொன்றில்லை இணைசொல்லு
வதற் கிடமில்லாமல் எல்லாந்தெரிந்த சௌரி-தேவரீரு
டைய திவ்யகடாக்ஷமே எங்களுக்குத் திரத்துவமாகிய
திறமென்று ஸ்திரமாக நம்பி யிருக்கின்றோம், இஃது உ
ண்மையாகிய சத்தியமொழியென்று அகமும் - முகமும்-
அலர்ந்து-ஆநந்தமயமாய்ச்சொல்லிய தர்மபுத்திரருடை
ய முகத்தை ஜநார்த்தனன் பார்த்து சிறுநகைவிளைத்து ந
ல்லது படையெடுத்து வாருங்களென்று நால்வகைப் ப
டையும் கடலெனச்சூழ ஐவகை வாத்தியத்தால் அநந்த
ன்முடிதாழ விண்டலமெழுந்த கொடி குடைமுதலியது
ம் கொண்டலை மறைக்க முன்னும் பின்னுமாய் முடிமன்
னர் நெருங்க வன்னக்காசாமலர் மேனிமாலும், மன்னி
யவில்லாளி வாசவிதன்னோடும்போர்புரியப்போனார்கள்.

அப்போது சரத்காலத்துமேகம்பொன்னிறம்போலமி
ன்னிபேரிடியிடித்துபெருமழைபொழியுந்தன்மைபோல்
புருவங்களேற்றிகண்கள்சிவந்துகாந்திமலிந்துகனற்பொ
றிபறந்துகடுங்கோபங் கொண்டு நுதற்கண் ணுருத்திரன்
போல் விண்ணதிரச்செய்து மண்ணதிரவந்தவேதப்பரித்
தமன் வணங்காமுடி மன்னனைக்கூட்டி அவன்பேரில்மி
குந்தபக்ஷங்காட்டி, ஓ, அரசனே அரியதவஞ்செய்து எ
ன் தந்தை பெற்ற ஆலகாலவிஷத்துக் கொப்பாகிய உலக
ழிக்கும் உக்ரநாராயணாஸ்திரத்தை எனக்குக்கொடுத்தார்,
மகத்தாகியபரிசுத்தமுள்ள அந்த அஸ்திரத்தைத்தொடுத்
துச்சத்ருக்களைக்கெடுத்து என்றந்தைமடிந்தவிசனத்தை
விடுப்பேனென்று பற்பலசபதவாக்கியங்களை அஸ்வத்தா
மன்சொல்ல இராஜாதிராஜன் கேட்டு உன் தகப்பனைக்
கொன்றவர் களைக் கொல்ல உனக்குக் கோப மிருக்கு
மாகில் அவர்கள்முடியும் வகைதேடவேண்டியதே யல்ல
து இந்த அஸ்திரத்தைவிடுப்பையாகில் திரிபுவனமும்பி
லைபெற்று நிற்பது அரிதரிது ஐயனே, யென்று அரவக்
கொடியோ னெடுத்துத்தடுத்துச் சொல்ல, அவன்வார்த்
தையையுங் கேளாமல் இரண்டு புஜமுந் திரண்டோங்கப்
பாண்டவர்களுக்கெதிர்சென்று பலம் பொருந்திய குந்
திமைந்தர் ஐந்து பேரையும் அவர்களுடைய புத்ரமித்ர
வருக்கத்தையும் பாழாக்கி தலை துணித்து என்தகப்பன்
தலையைவாங்கின யாகசேனன்மைந்தன் திருஷ்டத்துய்ம
னுடைய சிரத்தையுந் துண்டித்து நாசப்படுத்துகிறே
னென்று சொற்சோர்வில்லாத அஸ்வத்தாமன் வரிபொ
ருந்தி மணிகள்கட்டிமாலைபுனைந்து விறியுயர்ந்த வில்லை
வளைத்து நாணிதொடுத்து சொல்லுதற்கரிதாகிய வேதம
ந்திரங்களை விளம்பி பூசை நைமித்திய மெல்லாம் பொ
ருந்திஉலகழிக்கும் உக்ரநாராயணாஸ்திரத்தை ஆகர்ணபரி
யந்தம் இழுத்துத் தொடுத்து விட்டான், அவனதுகரத்
தை விட்டுப் புறப்பட்ட அந்தக் கணையானது சந்திர
மண்டலம் வரைக்கும் உந்தி பந்துபோ லெழுந்து ஊ
ழிக்காற்றும் உகாந்தகாலாக்கினியும் ஒன்றுபட்டெழுந்த
தைப்போ லெழுந்து சப்தமேகமும் சப்தசமுத்திரத்
தைச் சாப்பிட்டு சட சட வென்று இரையுந்தன்மை
போலிரைந்து கனன்று பொங்கி காருஞ்சுழல பாருஞ்
சுழல மகமேருவின் வேருஞ்சுழல மன்னர்களுடைய
போரு முழலப் போர்க்களம் புகுந்து தீர்க்கமாகிய ஐவ
ரையும்வாயிற் போட்டுக்கொள்ளும்படிக்கு வந்துதிமிர்
தண்டங்கொண்டு அண்டாண்ட புவனசராசரங்களும்,வி
ண்டல மெண்டிசை மண்டல கண்டவகண்டமும் பிண்ட
முங் கொண்டலும் பிண்டுதிரிந்து போகும்படியாய்ப் பு
துமைகாட்டிவந்த புருஷோத்தமன் கணையை புண்டரீகா
க்ஷன்கண்டு, அண்டையில் நிற்கின்ற யாவரையும் அழை
த்துஅவரவர்கள் ஆயுதங்களுடன் வாகனம் விட்டிறங்கி
அடக்கவணக்கமாய் கைகுவித்து நில்லுங்களென்று அர்
ச்சுனனுடன் தானும்தேர்விட்டிழிந்து செங்கரத்தைச்சிர
த்தின்மேற் கூப்பி ஸ்ரீநாதனைச் சிந்தைசெய்திருந்தான்.

அந்தவேயில், பாகசாதனன் பிள்ளையாகிய பார்த்தன்
பாகன்சொல்லிய பாகப்படிக்குஆயுதப்படைகளைநீக்கிதங்
கள்சேனைகணிறைந்ததிசையெல்லாஞ்சென்றுதீரவீரவே
ந்தரைக்கண்டு வாகனங்களும் ஆயுதங்களும் விட்டிழிந்து
விரைந்து வணங்குங்க ளென்று மேகம்போ லிரைந்து
விளம்பினான் அந்தவார்த்தைக் குடன்படாத வீமசேன
னொருவன்தவிரமற்றப்பேர்களெல்லோரும், வில்-வாள்-
வேல் முதலாகிய ஆயுதங்களையும் விட்டுமண்மிசிறங்கித
லைமேற்கையெடுத்துதத்வஞ்ஞானயோகி களைப்போல் ரச
ம்-ரத்தம்-சுக்கிலம்-மூளை-தசை-எலும்பு-தோல் என்னு
ம் தாது ஏழும் தன்மயமற்று ஒடுங்கி நிராயுதராய் நின்றா
ர்கள்-அஸ்வத்தாமனெடுத்துத் தொடுத்த பெரும் வாளி
யானது சுடரொளிபோ லிலங்கிப்புறப்பட்டு சக்ரவாளச்

சலசிதி நேமியைக்கிழித்து சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைத்துளைத்து தங்கிளமைந்த திசைகளைப்பீறி சகலமுமடங்கிய அண்டகூடத்தைப்பிளந்து சர்ப்பங்கள் பொருந்திய பாதாளத்தைப் பெயர்த்து சத்தியலோகத்தைத்தாக்கி தணலாகிய வடவாமுகாக்கினியைத்தூக்கி சகலமலைகளையுந் தவிடுபொடியாக்கி ஜகமெல்லா நிறைந்துபரந்து சீறி வீறி ஒவ்வொருவருடைய மயிர்க்காலுக்கு ஒவ்வொருகணையாகவந்து யுத்தகளம்புகுந்து நோக்கியகாலையில் ஒருவரும் தனக்கு நேரெதிர்த்து யுத்தஞ்செய்யாமல் நிராயுதபாணிகளாய் நிற்காநின்ற தர்மராஜனுடைய சேனைகளைக்கண்டு வெறுங்கை வீணர்பேரில் நம்மைவிடுத்தா னென்று கடுகடுத்துக் கடகடத்துக் கவலையுற்றுப் படபடத்து அஸ்வத்தாமனிடத்தில் ஆலகால விஷம்போற் றிரும்பிய கொடுங்கணையானது வாகனமடுத்து ஆயுதம் எடுத்து விடுத்து அஞ்சாமல் நிற்கின்ற வீமன்மேற் பாய்ந்தது அந்தவாளியைக்கண்ட வாயுகுமாரன் மனத்தளர்வில்லாமல் நேராகத் தேர்செலுத்தி கண்கள் செவந்து மனங்கருகி மூகஞ்சுடித்து புருவநெரித்து உருவமாகிய வில்லைவளைத்து உலவிலா வீரச்சொல்லை விளைத்து எமதர்மராஜனைப்போ லெதிர்சென்று நின்று கொடுங்கோபக் கடுங்கண்ணுளனாகிய அஸ்வத்தாமனுடைய நெடுங்கணையை மதிக்காமல் மற்றவர்களைப்போல் துதிக்காமல் எந்தெந்தக்காலத்தில் எந்தெந்த ரூபமாய் வருதோ அந்தந்தக்காலத்தில் அந்தந்த ரூபமாகிய வேற்றுருவமைந்த அக்கினியாஸ்திரம் வாய்வாஸ்திரம் தேவாஸ்திரமுதலாகிய திவ்யதேவாஸ்திரங்களால் மாற்றி ஒன்றுக்கொன்று பின்வாங்காமல் மண்டியிட்டடித்தான். இதுவுமல்லாமல் வீமசேனன் விடுகின்ற பெருமூச்சினால் அடியுண்டும் கடுங்கோபாக்கினியால் எரியுண்டும் இவன்விடுத்த பாணங்களினால் ஒடியுண்டும் விற்குதையால் உதையுண் டுதிர்ந்தும் நாணோசையால் அறையுண்டலைந்தும் கடக கங்கண மணிந்த திணிந்த புயத்தினாலிடியுண்டுலைந்தும்தூறிக்கூறியவீரப்பேச்சினால்வெருண்டுகுலைந்தும்மிகுந்தவருத்தத்துடன்படாதபாடும் பட்டது-வாயுபுத்திரனாகிய வீமசேனனால் அஸ்வத்தாமன்விடப்பட்ட உலகழிக்கும் உக்கிர நாராயணாஸ்திரமானது ஐயா, (எவ்வளவு பலசாலியாயிருந்து தன்வல்லமையால் இதம்பெற நடந்தாலும் தப்பாமற் றாக்கும் ஊழ்வினையைப்போல்,) வீமனானவன் தன்னுடைய புஜபலத்தினால் அஸ்வத்தாமன்றொடுத்த அஸ்திரத்தை விலக்கியும் அதுவிலங்காமல் கலங்காமல் வந்து ஊழ்வினையைப்போல் வாசமாலையணிந்த வீமசேனனுடைய மார்பைத் துளைக்கும்படியாய் மேற்கொண்டு நோக்கி வருகின்ற அஸ்திர தீக்ஷண்யத்தை எமது கர்த்தனாகிய அறிதுயிலமர்ந்தோனறிந்து ஆ ஆ, மோசம்வந்தது மோசம் வந்ததென்று அர்ச்சுனனுந் தானும் தேர்விட்டிழியும்படிக்குப் பலதரஞ் சொல்லியும் அறியாத்திடங்கொண்டு போர்புரிந்திருந்த வீமனுக் கருகுசென்று அவன் கைப்பிடித்த வில்லையும் வாளியையும் பிடுங்கியெறிந்து தேரைவிட்டிழிந்து பூமியிற்கவிழ்ந்து விழும்படியா யிழுத்துத் தள்ளி ஓம் அரிநாராயணாஸ்திரமே இதோ உம்மைப்பணிந்தான் வீமசேனனென்று பணிமேற்றுயின்ற பரந்தாமன் சொல்லவும் மிகுந்த வெட்கத்துடன் நாணமுற்று நாராயணாஸ்திரம் திரும்பிப்போய்விட்டது தீர்க்காயுசுட னிருக்கத்திறம்பெற்றவர்களை இடையிலழிக்க எவர்க ளாலுங் கூடாதாகையால் உலகழிக்கும் உக்ர நாராயணாஸ்திரம் உடையவரருளால் திரும்பியதென்று பொருள்கொள்க.

அப்பால் லட்சுமி நாராயணனுடைய அஸ்திரமானது முகமாறி அஸ்வத்தாமனிடத்தில் வரக்கண்டுமிகுந்தகோபங்கொண்டு இதழ்துடித்து முகம்வியர்த்து அனலெழச்சீறி ஆக்ரம பராக்ரமத்துடன் அக்கினியாஸ்திரத்தையெடுத்து ஆரோகணஞ்செய்து விட்டான். ஒப்பில்லாத அஸ்வத்தாமனாலேவிய அக்கினிக் கணையானது ஆகாயத்திலுயர்ந்து பொங்கி வடவாமுகாக்கினிபோ லெழுந்துவந்து சந்திரமண்டலமும் சூரிய மண்டலமும் அந்தரபதியும் மந்தரகிரியும் தொந்தமாம்புவியும் விந்தமார் செவியும் எட்டுத்திசையும் எட்டுக்கிரியும் எட்டுப்பாலரும் எட்டுவசுக்களும் எட்டுக்கரியும் எட்டுநாகமும் ஏழுமேகமும் ஏழுகடலும் ஏழுமண்டலமும் வெதும்பித்ததும்பி வெந்துருகும்படியாய் புலிங்க ஜாலங்களைப் பொழிந்து செழுஞ்சோதிகொண்டு வராநின்றதை சிவபெருமா னுக்குத் தொண்டாய் பாசுபதாஸ்திரங்கொண்ட செஞ்சிலைவிஜயன்கண்டு ஜெபதப முதலிய உபசாரத்துடன் சிருஷ்டிகர்த்தாவின் பேர்கொண்ட பிர்மாஸ்திரத்தை சிந்தித்துவிடுத்து தன்னையடுத்துவந்த தீக்கணையைக் கெடுத்தான், இந்தப்பிரகாரம் வில்வேதமுணர்ந்த குருபுத்திரன் விடுத்த வெம்பகழி கும்புகள் எல்லாவற்றையும் வம்புப் படுத்தி முனைசாய்ந்து போகும்படியாய்ச் செய்த நரனுடைய திறத்தை அஸ்வத்தாமனுணர்ந்து வாட்டமாய் மனமெலிந்துதன்கையிலிருந்த வில்முதலாகிய அம்பறுத்தூணியையும் போட்டுவிட்டு தேர்விட்டிழிந்து பற்றில்லாத வேதங்களையும் தனுர்வேதமுதலிய மந்திர நெறிகளையும் உண்மையென்று நம்பப்படாது இவைகள் பொய்யான மந்திரமே யல்லது மெய்யான மந்திரங்களல்ல, இந்த மந்திரங்களுக்குரிய மூவர்களும் தேவர்களும் ஆளைப்பார் முகத்தைப்பாரென்று பக்ஷபாரமா யிருக்கிறார்கள் இதுகெட்டுதென்று மனநொந்து முனிந்து பட்டத்துயானை மதமேறி துட்டத்தனமாய்த் தூறிச் செல்லுந் தன்மை போல் போர்கொடுத்த யுத்தபூமியை வெறுத்து முத்திக்குரியதவத்தைக்குறித்து காடேகதியாகச் செல்லுகிற காரணத்தைக்கண்டு தடுப்பவரில்லாத காலத்தில், தண்டிக மண

டலமும் முப்புரிநூலும் மிதியடியும் விபூதி ருத்திராக்ஷமாலிகாபரணமும் காவிதோய்யுடையும்செவேலியசடையும்மின்னற்பிரகாசமும்வேதமந்திரம்விளம்பிய நாவுமுடைய வேதவியாசர், சுப்ரமண்யக் கடவுளைப்போன்ற அஸ்வத்தாமனுக் கெதிர்வந்து நின்றார், பரமசிவனுக் கொப்பாகிய வேதவியாசரைக்கண்டவுடனே அஸ்வத்தாமனின்று தீர்க்க தண்டமாகவிழுந்து சிந்தை மெலிந்து வருந்தியெழுந்த மைந்தனுக்கு ஆசிர்வதித்து இந்தக்கோலத்துடன் எவடம் போறாயென்று வேதவியாசர்கேட்க, என்றந்தையிறந்த விசனத்தால தவஞ்செய்யப்போறேனென்று அஸ்வத்தாமன்சொல்ல, வேதவியாசர் கேட்டு அப்பனே, யாகசேனன்செய்த யாகத்தில் வரப்ரசாதமாகப்பிறந்த துருஷ்டத்துய்மனால் உன்றகப்ப னிறக்கும்படிக்கு அந்திவண்ணத்திறைவன் அநுக்ரகஞ்செய்திருக்க, அந்த அழலேந்தியினுடைய ஆக்கினையின்படி வெற்றியடைந்ததல்லாமல் மற்றொருவிதத்தினால் விற்பாணமுதலிய ஆயுதங்களைக்கொண்டு உன்றந்தையை வெல்ல நல்ல வல்லவர்கள் தொல்லையுலகி லில்லையென்று சொல்லவல்ல நல்லவர்கள் பல்லுலகிற் பலருண்டு ஆகையால் இதைக் குறித்து நீ-விசனப்படலாகாது (மயில்வாகனனையொத்தவல்லமைபெற்ற மாசிலாமணியே,) உன்னுடைய உள்ளங்கொள்ளாக் கோபத்துடன் யுத்தத்தைவிடுத்து மெத்தப் படபடத்து சித்தப்பிரமைகொண்டுவந்த சேதியைச்சொல்லென்று காளிங்கன்மீது நடித்த கருணைக்கடலை நிகர்த்த கண்ணனைப்போல சாந்தமொழியாற் கேட்ட சடைமுடிதரித்த வியாசரைப்பார்த்து, மங்கைபாக னென்னுஞ் சங்கரபுத்திரனாகிய அஸ்வத்தாமன் சொல்லுகின்றான்,எமது கர்த்தனாகிய ஈசனே கேளும், என்போலொத்த பிள்ளையிருக்க எனக்கெதிரில் இறக்கப்போகாத என்னையன் இறந்ததைக்குறித்து மறந்துபோகா விசனத்தில் மாழ்கியிருக்கின்றேன், அது ஒருபுறத்திலிருக்க, மேலு மேலும் விந்தையாக நேரிட்ட குறைகள் என்சிந்தை நிறைந்திருக்கின்றது அது செப்பத்தரமல்ல, எங்கள் தேவனை அஃதாவது, இயாவருக்கும் பொதுவாகியது-வேதம் அதனுலாகிய மந்திரம் தேவர்கள்முதலிய மூவர்கள்கொடுக்கும் திவ்விபாஸ்திர முதலியவைகளை யெடுத்துத் தொடுக்கும் கைத்தந்திர சாகசம்குறிப்பு நிதானம இவைகளெல்லாம் எல்லாருக்கும் ஒன்றேயொழிய யிரண்டில்லை எங்களையாளவாகிய துரோணர் தனுவாசரியரா யிருந்து எங்களிருவருக்கும் அநுக்கிரகஞ் செய்திருக்க அந்தமந்திரமுதலிய வல்லமையும் அர்ச்சுனனுக்குத் துணைப் பட்டு உறுதியைச் செய்வதுபோல எனக்குச் செய்யாமல் பாழாகிப்போய் நல்ல போர்முகத்தில் மூனைமடங்கி என்னை மோசஞ்செய்த படியால், பாணமுதலிய வில்லையுமெறிந்துவிட்டு வேதமுதலிய மந்திரங்களும் தேவர்களும்பொய்யாய்ப்போனார்கள் இனிமேற் சொர்ப்பனத்திலும் நினைப்பதில்லையென்று மனம்வெறுத்து சமர்விடுத்து தவமடித்து வந்தேனென்று அஸ்வத்தாமன் மெத்த வருந்தத்துடன் சொன்னான் அம்மொழியைக்கேட்ட வேதவியாசர் சொல்லுகின்றார்.

ஐயா-அஸ்வத்தாமனே கேளும் இவ்வுலகமுதலான சராசரங்களைப் படைத்தருளிய காலத்தில் திரிநேத்திரமும் மகாமேருவில்லையுங்கொண்ட சிவபெருமானுடைய செந்தாமரைப் பதத்தை அறிந்து சிந்தைசெய்யுந்தன்மையனாய்ச் சிந்தித்து-ஒருகாலத்தில் மகேசனைக் குறித்து வாட்டமில்லாத தவமுற்றிருந்த மாதவனுக்கெதிரில் கங்காதரன் பிரசன்னமாய் வந்து நீர்-என்னை வருந்தி என்ன விரும்பித் தவஞ்செய்கின்றீர் சொல்லு மென்று ஏறூர்ந்தோன் கேட்க அப்படிகேட்ட ஈசனைக் கேசவன் வணங்கி பிர்மசிருஷ்டியினாலேற்பட்ட ஆத்மகோடிகளுக் கெல்லாம் குறைவில்லாமல் நிறைவாகிய திதியைச் செய்யுமென்று எனக்கு ரக்ஷகர்த்துவம் கட்டளையிட் டிருக்கின்றீர் மலரகிதமாகிய மழுவாளியே நானப்படி நடத்திவரும்போது பூலோகத்தில் பலம்பொருந்திய துன்மார்க்கர் சிலரிருந்து சாபானுக்கிரக சாமர்த்தியமும் ரக்ஷகர்த்துவமும் தங்களால் நடத்தப்படுமென்று தர்மவிரோதமாய்த் தாறுமாறு செய்கிறார்கள் அப்பேர்ப்பட்ட தீயருடைய தலையைத்தறித்து உடலைமுறித்து தர்மத்தை நிலைநிறுத்தும்படியாய் கருணைசெய்ய வேண்டுமென்று கண்ணன் கேட்கக் கயிலைநாதன் சொல்லுகின்றார்.

ஓ-நாராயணனே-உமதிஷ்டப்படி நீர் ஜெயங்கொள்ளும்படியாய் வரங்கொடுத்தோம் இதுவுமல்லாமல் இயாரிடத்தில் அன்னியாயமும் கொடுமையும் அகங்காரமும் அமைந்திருக்கின்றதோ அவர்களுக்கு வில்லின்வல்லபமும் மேலாகிய ஆயுதமும் மந்திரபலம்பெற்ற வாளிகளும் பிரயோசனப் படமாட்டாது உன்னைப் பகைத்து எதிர்ப்பவர்களுடைய வரங்களும் உரங்களும் மற்றவல்லபமியாவும் உன்னையடையக் கடவது நீ முறைமையாக வுறைந்து தருமபரிபாலனம் புரிந்து திதித்தொழிலைச் செய்யக் கடவையென்று சிவபெருமான் சொல்லி திருக்கயிலைக் கெழுந்தருளினார்.

இப்பால் பச்சைவண்ணப் பரந்தாமனாகிய அச்சுதன் தன்னிச்சையின்படி நரநாரண ரூபமெடுத்து இவ்வுலகந் துதிக்க வந்து பாவத்தொழிலையுடைய அரக்கரையோட்டி தேவர்களை தர்மத்துடன்நிலைக்ககாட்டி சத்தியகருமங்களை நித்தியமா யோங்கும்படி ரக்ஷிக்கவெழுந்தருளிய இந்தக் கிருஷ்ண மூர்த்தியும் இந்திர குமாரனாகிய நரனும் நரநாராயண சொரூபமாக்களும் நான்குவேத முணர்ந்த

நாவலனே ஒளியும்-ஒலியும்-மணமுங் கலந்த கங்கையும் திங்களும் பொங்கரவு முடித்தருளிய செஞ்சடைப் பிரேசதனென்னும் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வரத்தின்படிக்கு வஞ்சகமாகக் குருகுலத்தில் விளைந்த வெஞ்சமரை முடிப்பதற்குவந் துதயமானூர்கள்.

இந்தப்பிறப்பில் சந்திரசேகர சடாமண்டலதாரியாகிய ஒப்பில்லாத உமாபதியைவணங்கிஆராதனைசெய்துவருகின்ற அன்பினையுடையவர்களாதலால் - மதங்கொண்டசத்துருக்களுக்குசிங்கம்போன்றெதிர்ந்துபங்கப்படுத்திமெத்த லேசில் யுத்தமுனை வென்று மேன்மைபெறுகின்றூர்கள் ஆகையால் எதிரிகள்பிரயோகஞ்செய்யாநின்றஅஸ்திரசஸ்திரங்கள் யாவுமடங்கி இந்த நாநாராயணர்களுடையஎண்ணப்பாடுமேன்பாடாகநிறைவேறுமென்றுஉலகிலுள்ளோர் பலரும்தன்பேரிலாசைப்பட்டுவந்திருக்கும்படியாய் தான் ஒருவர்பேரிலும்ஆசைவையாமல்நிராசைகொண் டிருப்பவராகிய வேதவியாசர்சொல்லஅந்தவார்த்தையைஅஸ்வத்தாமன் கேட்டு-கும்பிட்டு வணங்கி வேதமுனிவனுகியநாதனே-துஷ்டராகியபேர்களைநஷ்டப்படுத்தி இஷ்ட மாகிய பலத்தை நாநாரணர் பெறுவார்களென்று தேவரீர்சொன்ன வாக்கியம் யோக்கியமோ சிவபூஜாவிநோதராகியசிஷ்டர்களை கஷ்டப்படுத்தி ஜெயம்பெறுவார்களென்பது எப்படி தேவரீர் அப்படி செப்பவில்லேயே மேலும்-பிர்ம்மகுலத்திற்பிறந்த அடியேன்மைப்படியுங் கண்ணிமனுளனுகிய வேதவேதாந்த நாதமூர்த்தியைப் போற்றி அவருடைய கிருபையினுலே நலம்பெறப்பெற்ற நல்லபடைகளெல்லாம்-இந்த நாநாராயணருடையவில்லின் வல்லபத் திறங்களினுல்வீரமழிந்துபோகவேண்டியதென்னென்று அஸ்வத்தாமன்கேட்க வேதவியாசர்சொல்லுகின்றூர்கேளும்அஸ்வத்தாமனேமேற்சொல்லியநாநாரணரிருவரும்,தோகைபாகனுகிய கந்தரேசனைபாணலிங்கமாகிய பேருருமயமாயேற்றிப் போற்றியிறைஞ்சிப்பணிந்துசிந்தித்து வருகிறூர்கள் நீயோவென்முல்,உன்னுடையமனத்தில் நல்லுருவென்றுமானதபூசையாகக்கொண்டுலிங்கசொரூபத்தை விசாரிப்பாய் இவ்விரண்டுதிறங்களில் உத்தமமெதுவென்று உன்சித்தத்தில்யோசித்து உணரவில்லையா சிவபெருமானை உருவாகச்செய்துபூசிப்பதினும் பாணலிங்கவடிவாகச்செய்துபூசிப்பதுஆதிசம்பங் கதிக மாதலால் அவர்கள் நினைத்த படியே முடியும் சர்ப்பிரமமாகிய சுப்பிரமணியக்கடவுளைப் போன்ற அஸ்வத்தாமனேயென்றுசொன்னூர் தன்னுடைய மனோபாவங்களை அறிந்துசொல்லிய வேதவியாசருடைய பாதத்தில் விழுந்து சுவாமி தேவரீர்சொல்லிய இலிங்கபூஜாவிதியின்படிக்கு இன்று முதல்அனுஷ்டிக்கிறேனென்று அன்புடன்சொன்னூன் அந்தமொழியைக்கேட்டுவேதவியாசர் அநுக்கிரகஞ்செய்கின்றூர்,செந்தழல்வாணனே,நீதிரும்பி யுத்தபூமிக்குப்போய் வெற்றி பெறும்படியாய்ப் பாடுபட்டு அரவக்கொடியோன் அழிந்தபிற்பாடு என்னுடைய தபோவனத்துக்குவருவையாகில். அப்போது உனக்குந் தெரிவிக்கிறேனென்று வியாசர்சொல்ல, அப்படியே வருகிறேனென்று உறுதியாகச்சொன்னஅஸ்வத்தாமனோராஜாதிராஜனுகிய துரியோதனனுடையபலம்பொருந்தியசேனையினிடத்திற்போய்க்கலக்கும்படியாய் அனுப்பிவிட்டு பிற்பாடு, வேதநூல்விரித்தவேதவியாசர் பாண்டுபுத்திரிடத்திற்குச்சென்றூர் இவரைக்கண்டபாண்டவர்கள் தாழ்ந்தெழுந்துபூசனைசெய்து புகழ்ந்துமகிழ்ந்து நின்றூர்கள் அவர்களுக்கு ஆசீர்வதித்து குருபுத்திரனுகிய அஸ்வத்தாமனுடையசங்கதிகளையெல்லாம் அர்ச்சுனனுக்குரதசாரதியாகிய அருளாளனிடத்திலுரைத்து அவருக்கருகாமையில்நிற்கும்போது அர்ச்சுனன்வணங்கிஎன்னுண்டவனே இந்தப்போர்க்களத்தில் நான் எந்தபாணங்களைத்தொடுத்தாலும்திரிநேத்திரதாரியாய்ஒருமகாபுருஷன்சூலப்படையுடன் தோன்றி சத்துருக்களைக் கொல்லும்படியாயிருக்கிருன். இப்பிரகாரம், என்பாணங்கள் தோறும் விளையாடிக்கொண் டிருக்கிற காக்ஷியைக்கண்டுகளிகொண்டிருக்கின்றேன் இதென்னகாரணமென்று அர்ச்சுனன்கேட்க. வியாசர்சொல்லுகின்றூர்.

அர்ச்சுன; நீமகாதேவனைபாணலிங்கமூர்த்தமாய் மகாபத்தியுடன் பூசைசெய்கிற அன்பிற் சிறந்தவ னுகையால். அந்தச்சிவபெருமானவர் உன்னிடத்தில் அன்புகொண்டு திரசியமாய்விளங்குகின்றூர். இன்னமும்உன்சிந்தையினிடத்தில் வந்திப்புடன் அவரைவிடாமல் பந்திக்கக் கடவை யென்று அருள் புரிந்து ஆசீர்வதித்து தன்னுடைய தவச் சூழலுக்கு வேதவியாச ரெழுந்தருளினூர்.

இப்பால்-அஸ்வத்தாமன்-துரியோதனனுடைய சேனைகளிற் போய்க்கலந்து அதிரதர் முதலாகிய மலைபோன்ற சிலைப்படைவீரரெல்லோருஞ்சேர்ந்துமறுபடியுத்தஞ்செய்யும்போது இருபடைகளிலும் நெருங்கிய நால்வகைச்சேனையுமிறந்து எங்குநிலைத்து நிற்காமல் பலரும்கலைந்துபறந்து போனூர்கள் முதனுள்யுத்தமுதல்பதின்மூன்றுநாள்வரைக்கும் இறந்தபேரைப் பார்க்கிலும் இன்றிறந்தபேர்கள் பதின்மடங்குதாஸ்தியாயிருந்தபடியாலும்-ரத்தவெள்ளம் பூர்த்தியாயோடிய துடியாலும்-நிலைபெற்ற சூரியன்நிற்கப்பயந்து மேகமண்டலமளாவிய சோலையில்மறைந்து நீலநிறங்கொண்டவேலையில் மூழ்கினன்-உடனே இருள்மூடியது-ஒருவர்முகமொருவருககுத தெரியாமலவந்துகவிந்த இரவைக்கண்டதர்மராஜன் அக்ஞானத்தைக்கண்டுபயந்த-விக்ஞானவந்தரைப்போலிளைத்து இன்றைய

ப்போர்இதுவரையிலும்போதுமென்று'நிறுத்திமெலிந்து போனநால்வகைச்சேனைவீரருடன் வீரகண்டைதரித்த தம்பிமாரையும் அழைத்துக்கொண்டு வேசாறலுடன்பாசறையடைந்தான்.


இவட்த்தில் மதிமயக்கங்கொண்ட மனத்தனுகிய துரியோதனன்ரதகஜதுரகபதாதிமுதலியதானைவீரரும் சேனைவீரரும் சூழ்ந்து வரும்படியாய் சஞ்சலசித்தனுய்வாடிபாடிவீடுபுகுந்தான்.

இந்தரணகளத்தில் - நாய்நரிமுதலியதுங்கின்றுகொழுத்து ஜெயம்பாடிக்கொண்டிருந்தது - கேளும். ஜெனமேஜெயமகாராஜனேயென்றுவைசம்பாயனர்சொல்லிக்கொண்டுவந்தார்.

ஸ்ரீ ம கா பா ர த வ ச ன ம்.

துரோணபர்வம்

மு ற் றி ற் று.



ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாயநம:

ஸ்ரீமத்திரவிடமஹாபாரதவசனம்.

கர்ணபர்வம்.

பதினாரும்போர்ச்சருக்கம்.

கண்ணன்றுதி விருத்தம்.

மாதுலனாகிய மேதிலனாகியும் வஞ்சனைகஞ்சன் வரவிட்ட ... ... *
பூதனைதனுயிர் முலைபொழிபாலொடு போதுறவுண்ட புயல்வண்ண .. *
மாதவ யாதவ வாசவ கேசவ மாயா வாயா மதுசூதா ... . *
ஆதியுமந்தமு மாகியநின்புக ழல்லாதுரையே னடியேனே ... ... *

எ-து. தாயுடன்பிறந்த அம்மானாகியும்-காயுங்கடுங்கட்சத்துருவாயும அமைந்த வஞ்சகநெஞ்சமுடையகஞ்சன் அனுப்பியபேயின் முலைப்பாலோடு பிராணனையும்பிரித்துண்டருளிய மேகவண்ணனே, மாதவனே. வாசவனே கேசவனே மாயனே பங்கயவாயனே மதுசூதனே, ஆதியும் அந்தமுமாகியநின்பொன்னடிப்புகழைத்துதிப்பதல்லது, மற்றொன்றையும் என்சித்தத்திற்குறியேன்சிறியேனென்று திருநாதனைத்துதித்து வாழ்த்தி ஸ்ரீவேதவியாசனைப்போற்றி இந்தமட்டும் துரோணபர்வம இனிமேல்கர்ணபர்வமென்று ருக்வேதமுணர்ந்த வைசம்பாயனர் சொல்ல.

சங்கையில்லாமற்கேட்ட,ஜெனமேஜெயமகாராஜன் தருமபத்தினியாகிய வபுஷ்டாதேவியுடன் எழுந்து பிரதக்ஷணம்வந்து வைசம்பாயனரைப் பணிந்து தேவர்கள்மகிழத்தேசிகனாக இவடத்திலெழுந்தருளிய தெய்வமே,என்குறைதீரவும - என்னிருசெவிக்கமுதாகவும், கன்னனால் நடத்தப்போகிறபதினாரும்போர்ச்செயல்கள் அனைத்தையும் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று ஏற்றிப்போற்றிபிறைஞ்சிக்கேட்க, மாதவஞ்சிறந்த வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

படமுறஞ்சேடன் - பரித்தபாராரும் - அடலுறும்விசேட - அரசனேகேளும், பதினாரு நாட்காலமே துரியோதனமஹாராஜன் முதலாகியபேர்களுமெழுந்துகாலைக்கடன்முடித்து-சூரியநமஸ்காரஞ் செய்து - வீரியமுடன் சொலுங் கொண்டிருந்து - சீரிய யோசனைசெய்யத்தொடங்கினர்கள்.

அஃதென்னெயெனில், வீஷ்டுமரும் துரோணாச்சாரியரும் - சேனாபதியாயிருந்து தங்களாற்கூடியமட்டும்போர்புரிந்துநம்மைக்கைவிட்டிறந்தார்கள் இப்போதுஎன்பிராணநேசனாகிய கர்னமகாராஜனை யல்லது-வெல்ல - நல்லவல்லமையுள்ளோர் எவர்களுமில்லையென்று துரியோதனனுட்கொண்டு அங்கதேசாதிபனையழைத்து - அண்ணா இனிஎன்னையாதரிப்பது உன்கடனேயல்லது வேறில்லை நீரோ சேனாபதியாகவேணுமென்றுரைத்து, புண்ணியதீர்த்தங்களால் அபிஷேகஞ்செய்வித்து பொன்னுடைமுதலிய வன்னப்பணிகளணிந்து. மானாபரணராகிய தானாபதிகளும் சந்தோஷிக்கும்படியாய்ச்சேனாபதிப் பட்டங்கட்டிவெற்றிமாலைசூட்டி. சிங்காரவிருதுகளும் டங்காமுதலியபாங்காவாத்தியங்களும். பொங்காரமாகிய ஓங்காரச்சங்குநாதங்களும் எங்கும் நிறையச்செய்து விஷயங்கக்கொடிதரித்தருளிய - பூபதியுடனே - போர்க்களம்புகுந்தார்கள்.

வெற்றிபெற்றகொற்றவராகிய பாண்டவர்களும் காலைக்கடன்முடித்து யுத்தகோலங்கொண்டுவாகனாதிகளுடன் மோகனாதிகரான பாஞ்சாலர் - பப்பரர் - சோமகர்-போஜர் - திராவிடர் - மாராடர் - கர்னாடர் - சாளுவர் - சாளுவர் - கேரளர் - விராடர் - முதலாகிய -வீராதிவீரச்சேனைமன்னவரும்சாத்தகியுடன்கருடக்கொடிக்கதிபனாகிய கண்ணனும், ரத கஜதுரகபதாதிகளும் யுத்தகளம் புகுந்தார்கள்.

அந்தவேளையில், துரோணவயிரியாகிய துருஷ்டத்தாய்மன் முனைந்து எதிர்சென்றுநின்று இன்றைய யுத்தஞ்செயிப்பது என்கடனென்று இரைந்துசபதங்கூறி எதிர்த்தான் - அவனைக்கண்டகர்னனுமவன், வண்டுமொய்த்து

மதமொழுகுகின்றயானைகளையும், செண்டுபோலெழுந்து
திசைதிரிகின்றகுதிரைகளையும், அண்டமளாவி அசைந்
தோடுகின்ற தேர்களையும், மண்டலம் அதிரவருகின்றகா
லாள்களையும், வெற்றிமாலையணிந்த முடி-கொடி- - கொ
டை - படை - தொடை - மிடை - அட்டுடை - பூபா
லர்களையும் அவரவர்கள் நின்றநின்றநிலைபெயராமல்நின்
று போர்புரியும் படியாய் பாரிய மகரமீனைப்போல்வியூக
ம்வகுத்தான், அந்தவியூகத்தைப்பார்த்து சந்தோஷித்துப
னிரண்டு திருநாமமுடைய பரந்தாமனும், அருச்சுனனு
ம், சேனாபதியாகிய திருஷ்டத்யும்மனும், ஜெயிக்குந்தி
றங்கொண்டவர்களாய் திரைக்கடல்போன்ற தங்கள்சே
னைகளைக்கண்டுபகைவர் பயப்படும்படியாக நேமிவியூகம்வ
குத்து, அவர்களைப்பார்த்துநமதுவீராதிவீரர்களேகேளு
ங்கள், பானுபுத்திரனாகிய கர்னன் திரிதராஷ்டிர குமாரனு
க்குச்சேனாபதியானான், ஆதலால் போனவர்போக இரு
க்கின்ற எல்லோரும் ஒருமுகமாயிருந்து அந்தக்கர்னனை
க்கொல்லவேணும் இன்றையப்போர்நாம்வெல்லவேணு
மென்றுயாவருக்கும் உறுதியாகச்சொல்லவே, குதிரையி
ன்மீதும்-யானையின்மீதும் ரதத்தின்மீதும் பூமியின்மீதும்
இருந்தவர்களெல்லாரும் - அப்படி அப்படியே குபீரெ
னப்பாய்ந்துகோபப்பொறிபறக்கக்காய்ந்து சர்ப்பக்கொ
டியோன் எங்குளான் - எங்குளானென்று ஆய்ந்து எதி
ரிகளுடன்வாய்ந்துபோர்விளைத்தார்கள்.

அந்தச்சமயத்தில், வெற்றிபெறுந்தேரேறிவந்த வீமன்
தேரைவிட்டிழிந்து போர்த்திறவேழமாகியயானை மேலே
றிப்புகுந்துபோர்செய்தானென்றுவைசம்பாயனர்சொல்
ல, ஜனமேஜயன்கேட்டு, ஓ, சுவாமீ, பதினாயிரம் பலத்
தையுடைய வீமனென்னும் எங்கள்பாட்டனை ஒருயானை
சுமந்ததென்று திருவாய்மலர்ந்தருளினீர், அந்தயானை எப்
பேர்ப்பட்டதோவென்று சந்தேகிக்கிறேனென்று சந்தி
ர குலோத்துங்கன் வினவ வைசம் பாயனர் சொல்லு
கின்றார்.

பனைமரம்போற்பருத்துநீண்டதுதிக்கையும்மலைச்சுனை
போற் பொழியுமதத்தையும் கடலின் அலைபோலசைத்
து - பலதிசைக்காற்றையும் வீசுகின்ற ஆலவட்டச்
செவியையும் மந்திரகிரிபோலுயர்ந்த அளவையும்புள்ளி
நிறைந்தமுகத்தையும்வெள்ளமாகிய அழகையும்செவந்த
நிறங்கொண்டு தொங்கிய சிறுவாயையும் முழுமதியைப்
பிளந்துநவரத்தினகசிதப்பூண்கட்டி பட்டுக்குச்சுத் தொ
ங்கவிட்டு இரண்டு கடைவாயிலும்வைத்தத்தை யொத்த
தந்தத்தையும் அலங்கார அந்தத்தையும்நெருங்கிப்பகை
வரைநொறுக்கயிடிக்கும்மத்தகத்தையும் புன்னைமலரின்
இதழ்போற்சிறந்த இருகண்ணையும் நெற்றித்திலகத்தையு
ம் வீரபட்டத்தையும் விதண்டைத்தொழிலையும் உலகஞ்
சுமக்கும் ஆதிசேடனே, இதுவென்று உவமிப்பதையும்
களிப்பதையும் வாய்க்கூட்டங்களின் வல்லபமுடைய
மெச்சையும்சுருங்கியகழுத்தோடுஉயர்ந்தபொன்மலையை
யுமொர்பில் மூன்றுவலம்புரிச்சுழியையும் கனத்தகற்றூ
ணுக்கொப்பாகிய நாலுகாலையும் உருட்டிவைத்த வெண்
ணெய்மொத்தைபோன்ற நகக்களையும் குளிர்ந்ததிருத்து
ளவமணிந்தமாயோனுடையகிலையையொத்து உக்கிரத்து
டன்கிடந்த ஆமையைப்போன்றபுறவடியையும் திணிந்த
தேகத்தையும் கனிந்தகோபத்தையும் மிகுந்தஊக்கத்தை
யும் புகைந்தநோக்கத்தையும்பருத்தவயிற்றையும் இளங்
கமுகுபோற்றழைந்தவாலையுமுடையது மேலும்கட்டித்த
றியையும் கால்விலங்கையுமுறிப்பது பாகனையும் அங்கு
சத்தையும் தூரத்திற்கானும்போதே ஆடிஆடித்துரின்று
கோபத்துடன்கொதிப்பது குலுங்கி நடப்பது தன்னிழ
லைக்கண்டுதானேமிழிதனக்கு எதிரியென்றுமலைவதுவளை
வு-வட்டம் அசைதல் ஆடல் ஓடலென்னும் வேககதியி
னையுடையது அந்தரம்வரைக்கும்கை நீட்டிசந்திரனைப்பி
டித்து கவளமென்று உண்டுமேகத்தைச்சேர்த்து முழுக்
கிப்பிழிந்து தாகத்திற்குச்சலமென்றுகுடிக்குஞ்சத்துருச
ங்காரச்சினவேழம், இப்பேர்ப்பட்ட பலம்பொருந்திய
குற்றமற்றயானையின்மேல் வாயு புத்திரனேறிக்கொண்டு
சேனைகளுடன் வந்தான் அவனைக்கண்டு ஆண்மைக்கொ
ருவீரனாகிய காசிராஜனென்னுங்கேமதூர்த்தியும் எழுது
ப்பும் சப்தமேகம்போல் மதமாரியுமுடைய ராஜகுஞ்ச
ரத்திலேறிக்கொண்டு தூசிப்படைமுனையில்வந்துவீமனு
டன் முனைந்தான், இவர்களேறிய இரண்டு யானைகளும்
ஒன்றோடொன்று போர்செய்யும்படியாய் இரண்டுதே
வேந்திராள் சிகரங்களுடன் திரண்டமலை மேலேறிவந்து
யுத்தஞ்செய்வதைப்போல்மலைந்தார்கள்.

அங்குசக்கொந்தினாலும் அல்லோ அல்லோவென்று
அதட்டிய பேச்சினாலும் வலியகால்களை மடக்கவும் நட
க்கவுஞ்செய்து வேறுவிதமாகிய வேகமும்நடையும்ஓட்ட
மும் வெகுண்டு வராநின்றகுதிப்பும் வெவ்விய கோபக்
கொதிப்பும் அங்சாரிமுதலிய யாவற்றையும் விதவிதமா
கக்காட்டி யானையேற்ற முதலாகிய அனைத்துஞ்சற்றந
ன்னூலறிஞர்கள் கொண்டாடும் படியாய் யானைகளைச்
செலுத்தி செவந்தகரத்தால் வில்லைவளைத்து சிறுநாணொ
லி தெறித்து சிலீமுகங்களைத் தொடுத்து சீறியெதிர்
த்தார்கள்.

கொம்பிரண்டு-துதிக்கை யொன்று-கால்நான்கு - வா
லொன்று-கோசமொன்றெனும் ஒன்பது உறுப்புகளினா
லும் பகைவரைவெல்லத்தக்க நீண்டுயர்ந்த கேமனேறிய
யானையும்-வீமனேறிய யானையும் நெருப்பெழமுனைந்து
நெடுமூச்செறிந்து பெருங்கோபங்கொண்டு இருப்புலக்
கைநெருப்புக்குண்டு சுருக்குச்சங்கிலி இவைகளால் அ
டித்துப் போர்செய்யவும் - இந்தயானையின் மேலேறிய
இருதிறவீரரும் அளவற்றபாணங்களைத் தொடுத்து ஆ
திசேடனும் தேவர்கள் முதலாகிய இந்திரனும் பயந்து
அயர்ந்து வருந்திநடுங்கும் படியாகயுத்தஞ் செய்தார்கள்.

இவ்விதமாக இருவரும் பிரபல யுத்தஞ்செய்து வரு
ங்காலையில் வீமசேனன் விடுத்த விக்கிரமக்கணைகளுக்கு
அஞ்சிப்பயந்து அலக்கழிவாகியகேமதூர்த்தி யென்னுங்
காசிராஜன் வேலாயுதங்கொண்டுவீமன் பேரிலெறியவும்
அந்தவேலாயுதம்வந்த வேகத்துக்குத்தப்பியவீமன் காலா
கோலமாகச்செய்யும் சூலாயுதமெறிந்து அந்தக்காசிரா
ஜனேறிய யானையையும் அவன்விட்ட வேலாயுதத்தையு

ம் விரல்நிறைப்போதில் அழித்தான் அப்போது காசிராஜன்மலைவிட்டிறங்கிய யாளிபோற் பூமியிற்பாய்ந்து தண்டாயுதங் கொண்டு வீமசேன னேறி வந்த யானையைப் புடைத்து வீழ்த்தினன் அதுகாலையில் வாசனை பொருந்திய மலர்மாலை யணிந்த வீமன் வண்டைப் போலெழுந்துவிண்டலத்தைக்காய்ந்து பூமிமேற் பாய்ந்து கதாயுதத்தைக்கொண்டு வந்தான், கேமனும் கதாயுதங்கொண்டுநின்றான் யானைப் போருக்கு வல்லவனெனும் இருவரும் பூமிமேல் நின்று கதாயுதப்போரிற்சிறந்த பல்பல காவலர்களுங்கண்டு களிக்கும்படியாய் மலையுடன் மலையெதிர்த்துமாறுவதுபோல்மாறிமாறிப் போர்புரிந்தார்கள்.

இவ்விரண்டு வில்வீரரும் புரிந்த கதாயுத யுத்தத்தைப்போல் கதைப்போர் பொருதும் வல்லமையுள்ள காவலர்கள் காசினியில் எவர்களும் இல்லையென்று சொல்லும்படியாக தண்டொடு தண்டொத்தி இடசாரி வலசாரியாகச் சுழன்று சுற்றிக் கீடலோசை யென்றும் காரிடியென்றும் கேட்டவர்கள் காட்டினவர்கள் கண்டவர்கள் விண்டவர்கள் முதலாகிய பேரும் ஒடுங்கி வாய்விட்டுச் சொல்ல நடுங்கி ஆமைபோல் ஐம்பொறிகளுமடங்கி அசைவற்றுப் போம்படிக்கு யுத்தம்விளைத்து தத்திக்குதித்துத் தளரும்படிக்கு மெத்த அடித்து சுரகரவென்றுகாற்றுடிபோற் சுழன்று இடித்து பரபரவென்று பற்றிப்பிடித்துப் பலங்கொண்ட வீமனனவன் காசிராஜனுடையகேமனை நிலத்திலடித்து முடித்தான். இத்தன்மையாக கதாயுத்தம் விளைத்து காசிராஜ னிறந்தானென்ற வுடனே,கடிஸ்தலாதிபதியான துரியோதன னுடைய சேனைகளெல்லாங் கலங்கி அலமலங்கி படைமுறிந்தோடும்போது வெற்றிபாட்சிபெற்ற கர்னன்கண்டு வில்லைப்பற்றி காட்சியாய் எதிர்சென்று நின்று வெள்ளைவிசிறி முகம்விட்டவாறேயோடிய சேனைகளையெல்லாம் கையமர்த்தி ஒன்றுகக் கூட்டி பேரணியாக நிறுத்தி தானே பேரணித்தலைவனுகிப் பிரகாசிக்கும் ஆபரணங்களுடன் கடலைப்பார்க்கிலும் சப்திக்காநின்ற சேனைக்கடலுடன் பிரதாப ருத்திரனைப்போல் நின்றான்.

அப்படியாக நின்ற கர்னனை, வெற்றிமாலை தரித்த தர்மராஜன் முதலியபேரும் அவர்களுடைய சேனைகளும் பேரணியாகச் சேர்ந்து யுத்தம்பண்ணும்படிக்கு மெத்தவுங் கிட்டநெருங்கிப் போனார்கள், திலதமணிந்த நெற்றியும் தங்கப்பூண்கள் கட்டிய கொம்புகளும் மின்னல்போல பிரகாசிக்கும் வீரபட்டமும் ஆபரணங்களும் விளங்கிய மத்தகமும் வண்டுகள் மொய்க்கும் படியாய் மழைநீரைப்போற் குமிழிகளெழுந்து வழியாநின்ற கர்னமதமும் விசாலமான மார்பும் பெருமுதுகி னுடைய இருபக்கத்திலும் கணகண வென்று ஆடியமணியும் கார்மேகம்போல் உருவமும் பேரிடி போன்ற முழக்கமும் பெருங்காற்றைவிளைக்குஞ் செவிகளும் மலைக்கரும்பாம்பைப்போன்ற துதிக்கையும் கருமானுடைய உலைக்கனக் கனல்விசுங் கடைக்கண்ணும் கடுகியவேகமும் கோரணங்களு முடைய வாரணங்களுடன் வாரணங்களெதிர்த்து பாரணைந்து நடுங்கும்படியாய் வானமுந் தானமுமாறிக் கலங்கும்படியாய்ப் போராடவும், சுரிகைவேலைவிட்ட பட்டுகளினால் அலங்கரித்த அலங்காரமும் ஒன்பது நிற இரத்தினங்களும் இழைத்த நெடிய கொடிமுடிபோன்ற மகுடமும் மலையருவி பாவியதைப் போன்ற கவசமும் நெருங்கிய மேகங்களையொத்த துவஜமும் தேனும் பாரகமுந் திகழ்ந்து கமழும் பூமாலையின் அழகும் சமாசமயத்தில் அரசர்கள் மறையும்படியாய் இருக்கிற சொரங்கத்கட்டுகளும் சூரியகாந்திப் பட்டுகளும் சுழலுஞ் சக்கரக்கட்டுகளும் ஆப்பாணிமுதலாகிய அச்சுகளும் அடுக்காகிய மச்சுகளும் தொங்கவிட்டிருக்குங் குச்சுகளு முடைய தேர்களானது அநேகமலைகள் றெக்கையுடன் பறந்து திரியுந்தன்மைபோற் பிரிந்து சுழன்று ஒன்றோடொன்று மோதி சண்டைசெய்யவும், வெற்றியிலும் யுக்தியிலும் வல்லமையிலும் வேகத்திலும் சாகசத்திலும் சிறந்து சிந்துதேசத்திற் பிறந்து தேகாபிமான மறந்து ஒருநொடியில் உலகை வலந்திரிந்து, பொடிபறப்ப உடனடர்ந்து இடிபிறக்க எதிரடர்ந்து பரம அணுவினிற்சிறந்து பரவிய சமுத்திர அலையுடன் சண்டைபுரிந்து எதிரிகள் விடுக்கும் ஆயுதங்களெல்லாம் இடிந்து போகும்படி நிமிர்ந்துபூமியிற் கால்வைக்காமல் வாயுகதியெனத்திரிந்து திவ்விய மலர் வாசனையைப்போல் சுவாசம் விரிந்து சுழிசுத்தம் பொருந்திதோகைவால்விரிந்த குதிரைகள் ஒன்றோடொன்று கலந்து யுத்தம்பண்ணவும், நிலையிலா விலைபெற்றஆபரணங்களும்உலைவிலா வரம்பெற்ற கவசங்களும் சாணைபிடித்த நவமணியாரமும்மணிகட்டியவரிவில்லும்முனை தீட்டியபாணங்களும்உரங்கொண்ட உடல்வலியும்தாமரைக்காடுபோற்றழைத்தபடைகள்நெரியத்திரியு நடைகளும் வீராபரணமும்மானாபரணமும்விரிந்த அலைசிறந்தவிசாலமாகியகடலைப்போல் வெகுகூட்டங் கூடி வேகங்கொண்டுவரா நின்ற படைமன்னர்முதலிய வீரர்கள் கைகலந்து போராடவும்,முரசு-காரடிகை-கணைதுடி-பெருமரம்-முருடு-படுபறை-இடக்கை-உடுக்கை-உறுமி-பம்பை கொம்பு சங்கு-பேரி-மத்தளம்-தாரை-பூரி-வீரசின்னம் முதலாகிய வாத்தியங்களும், அரசர்கள் அமர்க்கெழும்போது முழக்காநின்ற-வரிவளை-சுரிவளை-பெருநாதக்குழலும்-அரவக்கொடி - முரசக்கொடி-ஆலவட்டம்-தாலவட்டம் - நகர தோரணம்-மகரதோரணம்-இந்திர விட்டக்குடை-சந்திர வட்டக்குடை-முதலாகிய வாத்தியக்கருவிகள் முழுவதும் அதிர்ந்தஓசையான துஉலகமுடிவிலெழும் அலைகளையுடைய ஏழுகடலைப்போலும் பிரசண்டமாருதம் போலும் மேகசுற்சிதம்போலும் ஒளிவெளி யுடைய காலாக்கினி போலும் பிரகாசித் ததிர்ந்தது, முரசக்கொடி படைத்த முன்னவன்சேனையும், அரவக்கொடிதரித்த அரசன் சேனையும், யானைத்தலைவருடன்-யானைத் தலைவரும், தேர்த்தலைவருடன்-தேர்த்தலைவரும், குதிரைத்தலைவருடன் குதிரைத்தலைவரும், படைத்தலைவ ருடன்-படைத்தலைவரும், அரக்கரைப்போன்ற காலாளுடன் காலாளும், மேலாளுடன்-மேலாளும், வீராளுடன்-வீராளும், நிருபருடன் நிருபரும், அதிரதருடன்-அதிரதரும், மகாரதருடன்-மகாரதரும், சமரதருடன்-சமரதரும், அர்த்தரதருடன்-அ

ர்த்தாதரும், குற்றம் விளைத்து மெத்தப் பகைத்து விதிர்விதிர்த்துப் பதைபதைத்துப் போர்செய்தார்கள.

பத்துத்திசையிலுங் கீர்த்திநாட்டுஞ் சூரியகுமாரனாகிய கர்னனும சூரியன்பேரனாகிய நகுலனும் இருவரும் குதிரைமேற்கொண்டு எதிரெதிர் முனைந்து வேகமாகியு குதிரையை-மச்ச கதி-மல்லகதி-மற்கட கதி-மயூரகதி-மாசுண கதி-மனவேக-சரவேக-வாயுவேகமாக இடசாரி-வலசாரியாய் விட்டு சுழற்றிவைக்குந் துரிதத்தினால் பூமிபிளந்து ஆதிசேடனுடைய பணாமகுடமணிப் பிரகாசமானது பூதலத்திலிருக்கும் இருளைப்போக்கிப்பிரகாசித்து உடனே கும்பல்க் கும்பலாய் எழும்புந் தூம்புகளினால் சூரியகிரணத்தைமறைத்து பழயபடி இருளையழைத்து படிமிசை நிறைத்து கோணம் வட்டம்-வளைவுமுதலாகிய கதிகளைக் காட்டி போர்செய்யாநின்ற இருவர் குதிரைகளும் எப்பேர்ப்பட்டதென்னில் அசைவில்லாத தொடையும் உடல் அதிர்ச்சியில்லாத நடையும் திணிர்ந்த தசையும் கழுத்துமயிரும் உயிர்விடும் வரைக்கும் ஒடுங்காதபலமும் உத்தமம் மத்திமம் அறியத்தக்க சித்தமும் உயர்ந்த விவேகமும் நினைப்பதற்கும் கேட்பதற்கும் - தகுதியாகிய வளமையும் குற்றமில்லாத சுழியும்-பழுதற்ற வருண வடிவின் வழியும் குரலோசையும் மனோதிடமு மிகுந்து பலகதிவிசையிலுஞ் சிறந்து திசாதிசைகளையும் அளந்து உச்சேஸ்வரமென்னும் இந்திரன் குதிரையிலுஞ் சிறந்து கீர்த்திபெற்று இத்தன்மைவாய்ந்த குதிரைமேற் கொண்ட முரசக்கொடியோன் தம்பியாகிய நகுலனும், அரவக்கொடியோன் அண்ணனாகிய சேனாபதிக் கர்னனும் எதிர்த்து கிரீடமுதலிய கவேதாக்ஷத்திரமும், உபய சாமரங்களுமுடையவர்களாய் தடையறநெடியவில்லைவளைத்து நிரைநிரையாகப் பாணங்களைமுடுக்கிவிரைத்து கோடையிடியைப் பார்க்கிலும் எழுபங்கு அதிகமாக வாய்விட்டுக் கூவி ரோஷத்துடன் கனைத்து மனஸ்தாபத்துடன் பகைத்து போர்விளைத்த காலையில், நகுலன்விட்ட நாராசக்கணையானது கர்னனேறிய குதிரைக் குரத்தையும் அவன்கையில்விழிய வில்லின்திறத்தையும் நாணியையும் கவஜத்தையும் வீரபட்டத்தையும் அழித்து இரண்டுதோளையுந் துளைத்து நெற்றியில் திலகப் புள்ளிபோல் நாட்டி - நிலைதளமலைந்து வாட்டியபோது-நகுலனுடைய வல்லமைக்கு சந்தோஷ லாபமும் நாம் இவன் கையால் அடிபட்டோமென்னும் நாணத்தினால் நேரிட்ட லோபமும் இவ்விரண்டு குணமுமுடைய கர்னனானவன் மனமறுகி தீரத்துவங் குன்றாத் திறத்துடன் குதிரைவிட்டுப் பூமியில் விழுந்தான். அப்போதே அவன்சாரதி வேகத்துடன், ஒரு தேர் கொண்டுவந்து நிறுத்தினான்.

அந்தரதத்தின்பேரில் இரவிகுமாரனேறிக்கொண்டு நகுலனுக்கு நேர்புகும்போது நகுலனுங் குதிரைவிட்டிறங்கி தேர்மேலேறி அந்தரவாசிகளைப்போல்ஆக்கிரமித்து அந்தவேளையில் சண்டனுக்குச் சமானமாகிய சாரதியுஞ்சாரதியுந்தங்கள்தங்கள் திறங்களைக்காட்டிச்சக்ராகிர்திமாக ஓட்டி,தானைகளைத்தவிடுபொடிகளாகமாட்டி கேருடன் தேர்முட்டி திருகுங் குயவன் திகிரிபோலாட்டி கடுங்கோபக் கதி முட்டியசமயத்தில் இருவரும் எயிறுமடித்துக் கடித்து-நாரிக்கயிறு தொடுத்துப் பிடித்து-நொடியினிற் சிலையையெடுத்து வளைத்து-கூர்மைதங்கிய அம்புக்கோல்களைவாசா மகோசரமாகத் தொடுத்து பூமிமுதல் ஆகாயம்வரைக்கும் இடித்து-எழுமேகமும் பொழியுந் தன்மைபோல் சரதாரைவிடுத்து-உடல்களைத் துளைத்து உதிரவெள்ளத்தால் நனைத்து உதவியாக வந்த தானிபர் அனைவரும் உருண்டுபோகக் கெடுத்து மறுபடியும் யுத்தஞ்செய்ய அடுத்து கணைசொரியுங்காலையில இருவருடைய குதிரைகளும் மார்புகிழிந்து வழிந்த ரத்தங்களால்முழுகிபோகவும் இருவருடைய சாரதிகளுந்தங்களுக்கு எதிர்விழுந்தழியவும் இருவருடையதேரும்அரும்பொடியாயுடைபட்டழியவும் இருவருடைய கொடிகள் முறியவும்இருவருடையகவஜம் இடைக்கிடைகிழியவும் இருவருடைய குடையும் மனுக்கென்று முறிபட்டுலையவும் இருவருடலிலும் பாதாதிகேசம் வரைக்குங் கணைகளுருவவும் அதனால்வருந்தி அரியதரித்த கர்னனும், பரிவிடுத்த நகுலனும், பதாதியாய்ப் பூமியில் நிற்கும்போது, இருவருடையசாரதிகளும் சேமத்தேர் கொண்டு வந்தார்கள் அந்தத்தேரிலேறி தங்களுடன்வந்த மன்னர்மன்னரும் எவ்வெவ்விடங்களிலும் நிறைந்து நிலைந்து மலைத்துப்போராடும் படியாய் பாரிய விற்கொண்டு சீறி அகவிதழுடைய அரவிந்தங்களை அலர்த்தும் ஆதபன்குமாரனும் சுகமொழிச்சொற்களைப்பயிற்றும் ஆயுள்வேதியர்சுதனும்முன்செய்தயுத்தத்திலும் பத்தத்தனை பங்கதிகமாகத்தொலையாத அமர்புரிந்து - தெரித்தநாணியும் வெறித்தபார்வையும் வியர்த்தமுகமும் அயர்த்தசிந்தையுமாக அமர் கொடுக்கும்போது நகுலன் கைவிளைத்து கர்னன்கையே விடுங்காலையில் இப்போது இவனைக்கொல்லுவது நல்லதல்ல கொன்றால் அப்போது நாம் அன்னைக்குச் சொல்லியவாக்கு பின்னப்படுமென்று எப்போதும் நாக்கைக் காப்பதே நலமென் றெண்ணி துப்போதும் பெரியோர் முப்போதும் வணங்கும் சூரியாஸ்திரத்தைத் தொடுத்து அந்தநகுலனுடைய-தேர்சாரதி-குதிரை வில்முதலிய-எல்லாவற்றையும் அழித்து விற்குதையைக் கழுத்தில்மாட்டியிழுத்து கடகடவென்று ஆட்டி நகைத்து ஒட்டிவிடுகிறேன் நீஓடிப்போவென்று உரத்துக்கூவித் துரத்திவிட்டுஅந்த நகுலனுக்குத் துணையாகிவந்தமகதராஜனையும் செவ்வேளுக்கொப்பாகிய விடசானையும், திடவிசட்கணையினால் ஜெயம்பெறக் கொன்று அர்ச்சுனனிற்கின்ற அமர்முனையைநோக்கி ஆண்சிங்கத்தைப்பகைத்து ஆணவத்துடன் சினந்தெழுந்து எதிர்த்த யானையைப் போல் வேறொரு விற்கொண்டு விஷம்பூசியநாணி மாட்டிநேர் வந்துநின்ற கர்னனை. நல்லோர்முதலிய வில்லாளிகள் மெச்சும் விஜயன்கண்டுமின்னற்கணையிரண்டுபூட்டிவிடுத்தான் அந்தக்கணையைக் கர்னன் தறித்து-வேறு சிலபகழி கொண்டு குறித்துபார்த்தசாரதி மார்பில் படரானச்செறித்து பெயரும் நிறமும் பேதமில்லாமல் பிரியாவிடையாய் நிலைத்திருக்கின்றார்களே இந்த நாநாரணரொன்றுதிசெயும் அதிசயமாயுட்கொண்டு தனக்குத் தானே சங்

தோஷித்துநகைத்து உரைத்துப்போனான் அப்படிப்போகிற சேனாபதியாகிய கர்னனென்னும், வீரனைப் பார்த்து இராக்ஷதகுல வைரியாகிய ஸ்ரீராமனைப் போன்ற நாருனவன் கூவியழைத்து இன்றைக்குப்போய் இளைப்பாறி நாளைக்கு யுத்தஞ்செய்ய வாபோவென்றான் இப்பால் சாத்தகியும் சல்லியனும் சேனா சயினியங்களுடன் அநேக வாத்தியங்கள் முழங்கும்படியாய் மதத்த யானையுடன் புலியெதிர்த்துப் போராடுந்தன்மைபோல் வேறோரிடத்தில் மாறுபடாமல் மலைந்தார்கள். மன்மதனை வென்ற வீஷ்டுமனை மின்முகக் கணையாற்கொன்ற சிகண்டியும், கிருதபன்மனும் ஓரிடத்திற் போர்விளைத்தார்கள். அகஸ்தியரருளிச்செய்த அருந்தமிழும் அறிஞரும் பொருந்தும்படி சங்கப்பலகை ஸ்தாபித்துவைத்த பாண்டியனும் சந்திரவட்டக்குடை தரித்த துரியோதனனுடைய மாமன் சகுனியும் பொழுதுபோகிற வரைக்கும் பழுதிலாமற் சண்டைசெய்தார்கள்; பெரியோர்சொல்லைக்கேளாமல் பூமியையாளுந் துரியோதனனுக்கு உகந்த தம்பியாகிய துஸ்வாசனனும், மாசிலா மனத்தோனாகிய சகாதேவனும் அமர்புரிந்தார்கள் மறைவேதமும் மனுவேதமும் தனுவேதமுங்கற்ற அஸ்வத்தாமனும் வீமசேனனும் இதைவிட வேறுவேலை யில்லையென்று வில்லைக்கொண்டு சிறந்து அநேக வாத்தியங்களும் அறைந்து கலந்து தேவர்கள் மகிழும்படி அமர்மோதினார்கள்.

அப்போது, தன்னையளித்த திரிபுராந்தகனுக் கொப்பாகிய அஸ்வத்தாமன் கெட்டிலை வேல் போன்ற எட்டு வாளிகள் தொடுத்து வீமனுடைய இருசி சக்கரம்-தேர்-நான்கு குதிரை சாரதிமுதலியதும் அழிந்துவிழப்பொருதி ஆக்ரமித்துச் சீறினான், அதுகாலையில், வீமசேனன் வேறுதேரேறி மேலு மேலுங் கோபமீறி புயவலியுடன் சீறி பலம்விளைந்த வில்வளைத்து முனைவிரிந்த கோல்தொடுத்து அஸ்வத்தாமனும் புறங்கொடுத்தோட தேர்-கொடி-குடை-வேகப்புரவி-சாரதி முதலிய யாவையும் தூள்படப்போக்கினான்.

இப்பால், கேகயராஜனும் இளம்பஞ்சபாண்டவரில் சுரத கீர்த்தியும் உடன்முனைந்து ஊஞ்சிறந்து யுத்தம்தொடங்கினார்கள், சிகண்டியும்-கிருதபன்மனும்-சிலைத்திறம்-கணைத்திறங்காட்டி-செருச் செய்து கொடிமுறிந்து ரதமழிந்து முதுகுதந்து பிராணனை நாடி சிகண்டியும் கிருதபன்மனும் ஓடி-வாடினார்கள். தருமராஜனுக்கு சேனாபதியாகிய துருஷ்டத்துய்மனும் கிருபாச்சாரியும் எட்டுத்திசையும் வசையறும்படியாய் இசையுறும்படியாய் கொடும்போர் புரிந்தபோது யாகாதி கருமங்களையுடைய கிருபாச்சாரியர் முனையழிந்து ரதம்-குதிரை-சாரதி-பாரிய வில்முதலாதியதும் பஞ்சுபோற் பறக்கவிட்டு நெஞ்சுலர்ந்து கொஞ்சமேனும்தைரியமில்லாமல் உயிர் பிழைத்தோடினார்.

இந்தப்படிக்கு சந்திரகுலத் தோன்றல்களாகிய கௌரவர்களும் பாண்டவர்களும் இவர்களைச்சேர்ந்த சேனைமன்னரும் ஆனைமன்னரும் ஒருவருக்கொருவர் எதிர்த்து அகண்ட சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் உங்களுக்கோ எங்களுக்கோவென்று புகைந்து அதிர்த்துங்கூவி தேவர்களும் ராக்ஷசர்களும் பகைத்துச் செய்யும் சண்டைக்கு ஏழுபங்கதிகமாகப் போர்விளைத்துப்புகழ்படைத்தார்கள் அப்போதிருந்த ரணகளப் பெருமையை என்னொருவனாலெப்படி சந்தோஷித்துச் சொல்லத்தக்கது.

இறைவனாகிய ஜெனமேஜயனே, ஆயினும் இப்படியாக யுத்தம்விளைத்த போர்க்களம் எப்படியிருந்ததென்னில் குருக்ஷேத்திர முழுதும் பருந்தும் கழுகும் பந்தர்போற் பரவிப் பறந்தது அலகை கூட்டங்களெல்லாம் ஆர்ப்பரித்திருந்தது மன்னர் மன்னர்களுடைய உடலுந்தினைந்து குடலுஞ்சரிந்து வழியும் உதிரங்களின் அலையினால் சாமரம்போல அலைப்புண்டிருந்தன வெற்றிப்பறைமுதலாகிய மேளங்களும் விருதுகளும் விற்பாணங்களும் ஓசையழிந்து உலைந்து கிடந்தன மேகத்தைக்கிழித்துப் பிரகாசிக்கும் மின்னலைப்போல் யானையினது நுதலணியாகிய வீரபட்டங்கள் ஜொலிக்கவும் மததாரைகள் பெருக்கங்கொண்டு நீரோடைகள்போல் ஓடவும் இருபுறத்திலும் வீசிக்கொள்ளும் வால்களுடன் புள்ளிபொருந்திய யானைமுகங்கள் ரெத்தவெள்ளத்தில் மூழ்கவும். உயர்ந்த மலையானது அடிவேர்பறிந்து சாய்ந்த தன்மைபோல் யானைக்கும்புகள் வீரிட்டு வீழவும் பட்டமணிந்த நெற்றியில் பாணம்பட்டு வட்டமாகத் துளைக்கவும் ஒட்டியுத்தம்பண்ணும்படி சிட்டி மத்தகத்தால் முட்டி போர்முனையிற்சீறிய தும்பிகளின் பொங்காரமும் தர்மராஜனுடைய சேனைகள் வெட்டி ஜெயித்துக் களிக்கும் சிங்காரமும் துரியோதனனுடைய படைகள் மண்டைகிழிந்து மடியும் பிணமிகுதியின் ஓங்காரமும் மந்திரங்களினாலூங்கிய வடிக்கணைகளின் றீங்காரமும் மைக்கண்ணிழந்து கிழிந்தொழிந்த முழவுவாத்தியங்களின் குங்காரமும், வெற்றி நேரிட்டாலும் கொலைசெய்வது மிகுபாதகமென்று சொல்லும் சிங்காரமும்; வீரானுடைய வாக்கியப் பொங்காரமும், மல்யுத்தம்வளர்ந்த மலைபோற் றோளினையுடைய வயவர்கள் கைப்பிடித்த வாள்முனையில் வயவர்களுடைய தலைகள் வாய்விட்டரற்றும் ஓங்காரமும், யானை-சேனை-தேர்-குதிரைகள்-மாய்வுற்றிறக்கவும், பழுதற்று வீழ்ந்த படைமன்னருடலிற் பாய்ந்த பற்பலபாணங்களின் தோற்றமும் பொழியா நின்ற பெருங்குருதியில் மூழ்கியபேர்களின் பேருடல் நாற்றமும் வலுவேறிய வீராள் தலையையும் தழல்விழிவழிபொழியானை மத்தகமலையையும், சக்ராயுதந் திரிந்து தேடித்தேடி தரிபலனை அறுக்கும் ஜல்தியும், அக்கினியைக்கக்கிய அஸ்திரங்கள் அமர்க்களத்தைச் சுற்றிவாரா நின்ற அவசரமும், வீரர்முகத்தில் அழுந்தியவாளிகளால் வெண்ணிலவைப்போல விளங்கு நாட்டமும்! கண்களிற் காலாக்கினிபொங்கக் கூசங்கிங் கலீரென்று நகைக்குங்காவலர் கூட்டமும், மழைபொழிவது போல் சலசல சலவென-குலவிய படைகள் குமுகுமு குமுவென - நொடியிற்புகுந்து படியிற்பாந்து உருவிப் பிரகாசிக்கும் வெய்யிலும் அழியாத வருநினிமை அழிக்கும்வெவ்வாளிலும் அமோகமாகநிறைந்த அஸ்திரக்காடுகள் விஸ்தார நிறைந்த வனமென்று நரிமுதலிய நாய்களும் வந்து சேர்ந்து கூவு

கின்ற ஓசையும்-காக்கை கழுகுமுதலிய பக்ஷிகள் பிணங்
களைத்தின்று பசியாறி ஒன்றோடொன்று உறவாடும் ஆ
சையும் பறந்து இறகற்றுவீழும் பெருமலைகளைப்போல்
உயிர்துறந்து இறந்துவிழும் யானைகளும்-பூதங்க ளாட்ட
மும் பேய்கள் பாட்டமும்-ஜோகினி-டாகினி-யோகினிகூ
டி ஆடுகிற காரமும்-மோகினி - டோகினி-வாகினி-யோ
தும்கின்ற-கீத-நாத யாமளவேதமும் உதிரவெள்ளம்பரந்து
நிறைந்து பள்ளம் பள்ளமாயுறைந்து அதனாற்சிவந்தயுத்
தபூமியின் பேதா பேதமும் தங்கள் வயிற்றைச் சுனையாக
க்கொண்டு ரத்தவெள்ளங்களை மடுத்துறுஞ்சும் பூதவே
தாள கணங்களும்-வாளினாலும்-வேலினாலும் - தறிபட்டு
அந்தரத்தில் எழுந்தோடிய அனேகம் தலைகளாகிய கந்
தரங்களும்-அதிரத-மகாரத-சமரத அர்த்தரதாளுடையஅ
றுந்த புயமந்தரங்களும், ஜெயசந்திரக் கச்சைபூட்டிய யா
னைக்கழுத்தும் அம்புக் கூடுபோலவிழைந்து அநேக பா
ணங்களை நுழைந்து பொருந்தி பூமாலையுடன் புயமலை வீ
ழும் நிரந்தரங்களும், புருவைப்போன்ற பிராணன்சாகின்
ற குரயமும் வீராள்முதலிய பாய்பரிகளின் தலைகளை - இ
நாய்-நரி-பேய் ஓரிமுதலிய பேருக்கும் அருந்தவிருந்தாக
அமைந்த மாயமும் முன்றும் பிறைபோன்ற கொம்பொ
டிந்து முன்படிந்த யானைகளும் படைமுறிந்து ஓட்டமா
யோடிய யானைகள் அனேகமும் உதிரக்கடலுக்குத் திரு
வணைகட்ட அடுக்கிய ஓங்கல்கள் அநேகம்போல்-உம்பல்
கள் அனேகமும் யானைத்துதிக்கையாலும் வாளாயுதங்க
ளாலும் வல்லிருப்புத் தடியாலும் அடியுண்டழிந்த அரச
வீரர் அநேகமும் புயமலை யொடிந்த போர்வீராள் அ
நேகமும் வீரந்தாழ்ந்த பலசாலிகளின் தலையை அறுக்கு
ஞ் சரங்கள் அநேகமும் அந்தந்தவீராள்நொந்து விழ்ந்தி
றந்த ரத்தத் தடாகம்அநேகமும் சப்தமேகங்களைப்போ
ல் ஆகாயத்தை மறைத்து உலகத்தில் இருளைக்காட்டி ஒ
ளியை மறைக்கும்படியாய் எங்குமெழுந்த தும்புக்கும்பு
களும் மிகுந்த பசியினால் வருந்திய குள்ளப்பேய் பூதங்
கள்கூடியுண்ணும் விருந்துகளும் கடல்போற்புரண்டோ
டிய ரத்தவெள்ளத்தில் அலைந்துக்கொண்டிருக்கும் கப
ந்தங்களும் கரசரணாதிகளைக் கொண்டு போர்புரிந்து முறி
ந்த கையும்-நெரிந்து அழிந்தமெய்யும் குறைந் தொடிந்த
காலும் அறுந்தொழிந்த நாடி நரம்பும் தறிந்துடைந்த எ
லும்பும் உடையவர்களாய் மனம்வருந்தி வெகுண்டுமலை
ந்த விதங்களும் நான்குவிதமாகியகுரலிலும் ஐந்துகதியா
கிய வேகத்திலும் மிஞ்சிய புரவிகள் அநேகமும் ஆவியி
ழந்தொழிய அதிசயமும் தேகமெலிந்து சோகமிகுந்து
தாகமலிந்து தாபமுழுன்று தழற்கணை தொடுத்து தாமும்
அடுத்து பூமியிற்படுத்து இறந்ததன்மைகளும் தாரைகள்
கிடுகுகள் ஒற்றைகள் கோணக்கொம்புகள் நீள்வயிரங்க
ள்பொங்குஞ் சங்கும் எங்கும் பம்பும் கொம்பும் பம்பை
பேரி-முரசு-காகளம்-பூரி-வீரசின்னமுதலிய வாத்தியங்க
ளும் முழங்கிக்கொண் டிருந்தநுகள்-ஓரிமைபோதில் யா
னைமுதல் குதிரைக்கூட்டங்களுஞ் சாக்குரலோசைமு
ழங்கியதாள் இருதிறவரும் விளைத்தவில்லி லிருந்து எழு
மபடியாகிய பாணங்கள் கோடாகோடி கோடாகோடியா
ய்ப் புறப்பட்டதுகள் உயிர்விட்டிறந்த வீராளுடையமுக
மானது செந்தாமரைக் கமலம்போற் சிறந்திருந்தது-சுடா-
திடர்போன்ற ரத்தக்கடல் திமிதிமிங்கலம்போன்ற யா
னைத்துதிக்கையுடன் மிகவுமிரைந்தன-ஆகாய மெங்கும்
வேடிக்கை பார்க்கின்ற தேவர்களுடையவிமானங்களிறை
ந்து நின்றன பாணத்தாலழிந் திறந்து பூமியில்விழ்ந்த வீ
ராளுடைய கண்களி லிருந்து எரிபோகம்போல் புகைபு
றப்பட்டன-அரிவாளுடன் அறுபட்டுவிழ்ந்த தோளினை
யுடைய வல்லவர்களின் கையானது மீளவும் வாளை வீசி
யும்வில்லைப்பிடித்து எய்யாநின்றதுகள்-துதிக்கையிழந்து
யிறந்து வீழ்ந்தயானைகளானது மதந்த சினப்பன்றிபோ
லிருந்தது பூரணச்சந்திரனைப்போல் வெள்ளைக்குடை மு
றிந்து வீழ்ந்ததுகள். இந்த வீராளுடைய கருவிழி மணி
யை காக்கைகள் கொத்தியது, உயிரிழந்த யானைகளினு
டைய குடல்களை குள்ளநரிக ளிழுத்தது, உதிரங்களைத்
தடுத்து பேய்க்கூட்டங்கள்குடித்தது வீராளணிந்த அழ
கிய பூமாலைகளில்நிறைந்த தேன்கள் கரைபுரண் டோடி
ன - பூமியைச்சுமக்கும் ஆதிசேடன் முதலிய பாம்புக
ளெல்லாம் பதறிக் கதறின-அநேக பாணங்கள் வீராளு
டையபுஜங்களை அறுத்துத்தள்ளின-பிணங்களையும் மூளை
களையும் நெடிய குடல்களையும் பூதகூட்டங்கள் புசித்த
ன-கழுகுபருந்துகள் குதிரைகளின் மணிக்குடல்களை இ
ழுத்து ஒன்றோடொன்று மாட்டி ஆகாயத்திற் பறக்கும்
போது (பெரிய பாக்கியவான்களுடையபிள்ளைகளைப்போ
ல்-பூமிமகளுனவன் சண்டைக் காற்றாடிவிட்ட சட்டமா
யிருந்தது.) கொட்டமடக்கும்படியாய் வெவ்விய யுத்தம்
விளைத்த வீராதி வீராளுடைய முடித்தலைகளெல்லாம்வி
ரத்துடன் அறுந்து விழ்ந்தன. கோடையிடிபோல முழ
க்கும் பதாதியர்களும் குறைந்து மாநிலத்தில் மடிந்தார்க
ள் வீர சூராள்பற்றிய வாள்களும் வாள்பிடித்த கரங்களு
ம்-மேகமுலாவிய தெய்வலோகத்தை முட்டி மறிந்து வீ
ழ்ந்ததுகள்.

இவ்விதமாகிய யுத்தபூமியில்பேராண்மைசெய்து போ
ர்விளைத்த பாண்டவச் சேனைபதியானவர் பின்னிட்டோடு
வதற்கு முன்னே தேர்த்திறமும் விற்றிறமுங் கொண்ட
ஜெயவிஜயன் எதிர்நோக்கிச் சென்றான்.

அந்தவேளையில், வீரமாலையணிந்த விசால மார்பினரா
கிய சஞ்சத்தகாளும் நவகோடி நாராயண கோபாலர்களு
ம் யுத்தஞ்செய்யும்படியாகச் சேர்ந்து சென்று காளமேக
மண்டலத்தை அளாவிய தேரேறி வருகின்ற சத்தியசே
னனாகிய தனஞ்செயன்பேரிலும் கருடக்கொடியினாற் சிற
ப்புற்ற பார்த்த சாரதியின்பேரிலும் தோமராயுதமெடுத்
தெரிந்து குதிரையோட்டுகின்ற முட்கோலும் குதிரைபூ
ட்டிய ஏர்க்காலும் குதிரைமாட்டிய தோல்வாரும் சிதை
ந்து அறும்படிக்கு முரண்கொண்டு மோதினார்கள்-அவர்
கள் அடித்த அடிபட்டு மனமுருகி வருந்தி நீலமேகவண்
ணனாகிய நெடுமால் நகைத்து வெற்றிமாலை தரித்த புயத்
தினையுடைய சஞ்சத்தகாள் முதலியபேரும் கரைகின்று
உடைந்து புரண்ட கடலைப்போல் தலைசிதிரிகோலமாயோ
டும்படிக்கு தடையறநிற்கின்றவிசாலமாகிய விஜயனுடை

ய தேரை சஞ்சத்தகர்பேரிற் செலுத்தி முனைபெற்ற கோபால கிருஷ்ணனனவர்.

அப்போது அமர்புரியச்சென்ற குறைபாத காளைப்பருவத்தினையுடைய அனுமக்கொடிதரித்த அர்ச்சுனனுடன் சித்திரசேனனும்-தாளாண்மைபெற்ற மத்திரபாலனும் மற்றப்படைகளும் கலந்து மிகுந்தபோர்விளைத்தபோது அர்ச்சுனனனவன் தன் தந்தையாகிய இந்திரனளித்த பலம்பெற்ற பலவிதபாணங்களினால் வெகு விநோதமாக மோதிக்கொன்றது மல்லாமல் முன்னாள்யுத்தமுதல் நாளதுவரைக்கும் நாள்தோறும் நடக்கின்ற யுத்தமுனைதோறும் போர்புரிந்து தன்னாலிறந்தவர்சள்போக உயிர்பெற்றிருந்த சஞ்சத்தகரையும் நாராயணகோபாலரையும் விண்ணுலகமேற்றும்படியாகபொன்னணிப்பூட்டியவில்லைவளைத்தான் புண்டரீகாக்ஷனுக்குப்பிராணன்போன்ற காண்டீபப் பார்த்தனனவன்-சஞ்சத்தகாளும்கிருஷ்ணமூர்த்தியின்பிள்ளைகள் நவகோடிநாராயண கோபாலரும் பற்றறமுடியும்படியாய் முன்பின்பாராமல் பருத்தபாணங்களைக்கொண்டு ஜாடினன் அவன்றொடுத்த கணைகளின் மாட்டுதலினால் மிகவும் அஞ்சியுத்தபூமிமுழுதும் குறைத்தலைமுண்டங்களும் கழுகுகளும் கூடிக்கொண்டு கூத்தாடும்படியாயும் பிலிக்குஞ்சமும் குடைகளும் அற்றுவிழும்படியாகவும் கண்டு பயங்கொண்டு தேசம்விண்டு சத்துருக்களெல்லாரு முதுகிட்டோடி துரியோதன மகாராஜனுக்கு முன்பாகப்போய் அடித்துமோதிவீழ்ந்து முறையிட்டார்கள்.

இவ்விதமாக முறையிட்டபேர்களைப் பார்த்து பயப்படாதிர்களென்று திடஞ்சொல்லி ஐயாயிரங்குதிரையும்விகடகட திடகடம்படமுடைய நாலாயிரம்யானையும் அழிவில்லாத ஆயிரந்தேரும் அநேகம் பதாதிகளுங்கொண்டு மிகுந்த கோபவார்த்தைகளைப்பேசி எதிரேறிவந்தான் தனக்கொருவரு நிகரில்லாத சாமார்த்தியமுள்ள தாணீசனாகிய துரியோதனமகாராஜன்.

இந்தப்பிரகாரம் வருகின்ற துரியோதனனை வளைத்துக்கொண்டு கொடுங்காரிடிபோற்சீறி யுத்தம்பண்ணுவோமென்று மனஉறுதியுடனிச்சயித்து முனைந்துபுகுந்தான் மநுநீதிக்கொருநிலையென்றும் தருமத்தினுக்கு உயிரொன்றும் தக்கோர்கொண்டாடும் மிக்கோனாகிய தர்மராஜன் இந்தத்தர்மராஜனும் துரியோதனராஜனும் எதிர்ந்து யுத்தஞ்செய்யத்தொடங்கியபோது வெப்பமாகிய மதக்கவுட்சுழியினையுடைய யானைகள் வேகம்பெற்றகுதிரைகள் வாஜமனாவியதேர்கள், சோனைத்துளிபோன்ற சேனைகள், இவைகளெல்லாமுந்தி வேலாயுதம் சூலாயுதம் காலகோலமாகிய விற்கள் கவுண்டுக்கற்கள் வடிவாள்முதலிய ஆயுதங்களைக்கொண்டு பகைத்து புள்ளாங்குழல்கள் - சங்குகள்-தாரைகள் ஊதுசொம்புகள்-குறுந்தடிகொண்டடிக்கும் பெரும்பறைகள் முதலாகிய வாத்தியங்களெல்லாம் சப்தமேகங்களின்முழக்கம்போலும் சலசலப்புற்ற அலைகளையுடைய சமுத்திரக்கோஷ்டம்போலும் அதிர்ந்தது வேகங்கொண்ட சேனைகளை நடாத்தியபோது கருந்தூள் சேர்ந்தெழுந்து ஆகாயத்தைமறைத்து வாயுவேகமுற்றுமுதிர்ந்த பிரசண்ட சூரகிரண விருள்மூடிக்கொள்ள மேகங்களிலைய பஞ்சபூதவடிவுபெற்ற பாசைந்தாட பெருக்கமாகிய ஆகாயகங்கைவறண்டு வண்டலாக தேவர்களுறையுந் தெய்வலோகவீதி புழுதிநிறைந்துபடிய பூரணச்சந்திரன் பொடியாய்க்கழிய வரிசைவரிசையாயடுக்கிய அண்டமுகடும் இடிய அதிரும்படியாய்க் குதிகொண்ட குதிரைவீரரும் துதிகொண்ட தேர்வீரரும் குறுகிமலைந்தாய்கள் துதிக்கையுற்ற யானைமறவர்களுடன் துதிக்கைபெற்ற யானைமறவர்கள்முனைந்தார்கள் அதிர்ச்சிகொண்ட பிரசண்டவேகாதிகருடன் அதிர்ச்சிகொண்ட பிரசண்டவேகரதிகர் அடுத்துப்போர்கொடுத்தார்கள் நெருங்கிய பதாதிவீரருடன் நெருங்கிய பதாதிவீரர் பொருதினார்கள்.

இந்தவேளையில் செம்பொன்னினாற்செய்த சக்கரங்களின் கர்க்கரத்தொனி உக்ரமத்துடன் முஷ்காரஞ்செய்து வாராநின்ற விக்ரம பராக்ரமராகிய தர்மராஜனும் துரியோதனராஜனும் பொன்மலையிரண்டு போர்செயப்பொருந்தியதைப்போல் இருவர்தேரையுஞ் செலுத்தியபோது அந்தத்தேர்களிற் பதித்திருக்கும் நவமணிகளி னொளிவிரிந்த ஜோதிப்படல மேலாகப் பிரகாசிக்கவும் மேற்கொண்ட தேரைச்செலுத்தும் வலவர்கள் சறுவிச்சினந்து கசந்து கண்சிவந்து கரும்புகைபுகைந்து கனற்பொறிமலிந்து ரதத்தைமுடுக்கிவிடுக்கவும் படனாக்கொடியும் படுமுரசக்கொடியும் படபடவென்றுபரிந்து பறக்கவும் பயநீங்கிய வயவீரரிருவரும் பலம்பொருந்திய வில்லிலிருந்து உந்தும் பற்பலபகழிகள் மேகமுறையும் வானமுழுதையும் மூடிவிடும்படியாகவும் போர்புரிந்தார்கள்.

தர்மராஜனும் துரியோதனராஜனும் ஒருவருடன் ஒருவரெதிர்த்து மாராகப்பகைத்து சன்னப்பின்னலாய் வன்னவன்னமாகிய கணைகளை மின்னலிடியுடன் கலந்தமேகம்போற்பொழிந்து சேனைகள் மனஸ்தாபமாய் அழிந்துபோகும்படியாய் நெடுநேரஞ் சண்டைசெய்துவரும்போது தர்மராஜன் தொடுத்தசாயகங்களானது துரியோதனன்விடுத்த கணைகளைத்தாக்கிப் பொடியாகப்போக்கி விலகச்செய்தது உடனே துரியோதனன்கொதித்து துரிதமாய் அடித்த வடிக்கணைகளானது தொந்தமிட்டுச்சென்று தர்மராஜனேவிய அம்புக்கும்புகளை யெல்லாஞ்சாடியது.

இந்தப்படி முறைமுறையாய் ஒருவருக்கொருவர் - இளையாமல் - சளையாமல்-உளையாமல் - களையாமல்-விளையாமல்-எதிர்ந்து சமனாகநின்று யுத்தம்பண்ணி வீரக்ஷாத்திரமும் மிகுந்த ஆத்திரமும் கோபமும் மேலாகிய புயவலிமையுங்கெடாமல் தேவர்முதலிய யாவருங்கண்டு அரிதரிதென்று ஆச்சரியங் கொள்ளும்படியாய் அமர்புரிந்து மாச்சரிய தீக்ஷண்யமுள்ள ஏழுவாளிகளை தர்மராஜனெடுத்து பூசைகொடுத்து துரியோதனனுடைய மார்புபிளந்து மாமிசங்கழிந்து ஊன்வழிந்து உதிரம் பொழியும்படிக்குவிடுத்தான், அந்தக்கணைகளேழும் அந்தகன் அனுப்பிய சூலம்போல பந்தெனச்சுழன்றுவந்து மூந்தியதுரியோதனன் மார்பிற்றக்கித்துளைத்தது, விரிந்த உயர்ந்தநீலமலையில் இளஞ்சூரியன்எழுந்தகிரண தாரைகளைப்போ

லஅழகாய்ச் சொரிகின்ற ரெத்த தாரைகளுடைய வணங்கா முடியோன் முகஞ் சுளிக்காமல் அகங்கரித்து அகங்களித்து நெற்றியிற் புருவநெரித்து பற்கடித்து ஸ்தானைகுறித்து வில்லைவளைய இழுத்து விரைவாக நொடிப்பொழுதில மின்னற்கணைகளை மேலாகவிடுத்து தர்மராஜனுடைய புஜகீர்த்தி வாகுவலயம் அணிந்த தோளைத்துளைத்துமார்பைக்கிழித்து அவனைத் துன்பப்படுத்தினன்.

இந்தப்பிரகாரம், இருவரும் எதிர்த்து புயங்கள் அதிர்ந்து உரங்கள் கிழிந்து உதிரம்வழிந்து தங்களுடலைத் தாங்கள்மறந்து பொங்கிய கோபப் பொருமலுடன் போர்புரியும்போது வகிகிலைபெற்ற தர்மராஜன் கலகல வென்றுநகைத்து நாலுகணைகளைச் செலுத்தினன் அந்தக்கணைகள்நான்கும் இடியஞ்சும்படியாய் படீலென்றிடித்து எங்கும்மின்னற்பிரகாசமாய்ப் பொங்கியெழுந்து நான்குபாணமும் நான்குபிரிவாகப்பிரிந்து நாராசம் போலெரிந்து ஒருபாணமானது துரியோதனனுடைய பாம்புக்கொடியை பாழாகமுறித்து மற்றொருபாணம் ஓங்கியதேரை உதிரவொடித்தது மூன்றொருநிலையாம் இன்னொருபாணம் சாரதிதலையைச் சட்டென்றறுத்தது வேறொரு சதுமுகவெங்கணையானது குதிரை நான்கையுங்கொன்று குவித்துமாறுபடாவேகத்துடன் கூறுபாடுசெய்தது அப்போது துரியோதனராஜன் தேரழிந்து உடனே பூமியிலிழிந்து வேறுதேரேறி தர்மராஜனுக்கு எதிர்வந்துநின்று வீராவேசம்விளம்பி இதோ உன்னுடைய வீரப்பிரதாபம் யாவும் ஒழிந்து நீயும் அழிந்துபோகப்போருய் பாரென்று சூரசம்மாரவேலுக்கொப்பாகிய கைவேல்கொண்டுகடுங்கோபத்துடன் கைப்பலங்காட்டி ஓங்கியெறிந்தான் அந்தவேலானது செந்தழற்கதுவத் திப்புகைமலிந்துகொந்தளற்பொழிந்து பந்தெனச்சுழன்று வந்தவாறதனை தர்மசிந்தையான்கண்டு தான்கைக்கொண்ட வாகைசிறந்த வரிவில்லிலிருந்து வச்சிரக்கணை-மூச்சிரக்கணை-உச்சிதக்கணை-வெட்சியங்கணைமுதலிய பாணங்களை ஒவ்வொன்றாய்விடுத்து தன்பேரில் வரவொட்டாமல் தடுத்துப்போர்கொடுத்துச் சீர்கெடுத்துப் பார்படுத்துக் கடுகடுத்துவந்தகாலையில் துரியோதனனால்விடுத்து உந்தியவேலானது தர்மராஜன்விடுத்த பாணங்களுடன்மூக்கொடுத்து அண்டங்கலங்கப் போராடி நுனைமுறிந்து மோழையாய் மூக்கறிந்த கூழையாய் தரையில் வீழ்ந்த தாழையாய் குலைதள்ளிச்சழிந்த வாழையாய்ப் போய்விட்டது - தான்விடுத்த வேல் பிளந்துவிழ்ந்த விதத்தைக்கண்ட நந்தியாவட்டமாலையணிந்த நாதிபன்யுத்தம்விட்டொழிந்து குற்றமற்ற யானையைப்போல் மெலிந்து உள்ளநொந்து நாணமுற்றகாலையில் மறுபடியுந் தர்மராஜன் சினமுதிர்ந்த பத்து அஸ்திரங்களைத்தொடுத்து தேர்-குதிரை-சாரதி-முதல[illegible]ம் பொடியாய்ப்போக அடித்து பத்துமலைகளுக்குமத்தியில் சிகரமற்றிருந்த சிறுமலையைப்போல் தலைகுனிந்துநின்ற துரியோதரனை நெருங்கிப்பார்த்து ஆகாயத்திலிறைந்த தேவர்கள் ஆசக்தப்படும்படியாய் ஒருவார்த்தைசொல்லத் தொடங்கினர்.

அஃதென்னவெனில், அப்பாதம்பி துரியோதனராஜனே வஞ்சநெஞ்சுடைய உன்மாமன் எங்கள்செல்வத்தைக்கைக்கொள்ளவேண்டுமென்று வண்டுமொய்த்த மாலையணிந்த மன்னவர்கூடியிருந்த மாசபையில் மண்டிபோட்டு வாதாடிச்செயித்த சூதல்ல விலலும் பாணமுங்கொண்டு யுத்தஞ்செய்து வெல்லும்படியாகிய சூக்ஷம் இதுயாவருக்கும் அரிது அரிது, சூதுபோராடிச்செயித்த சந்தோஷத்தை இந்தபாணப்போரில் வந்த விசனத்துக்குச் சரிப்படுத்தி நிரவிக்கொள்ளுங்கள் அன்றைக்குச்செயித்த அம்மானெங்கே அன்றையப்போல் சுளுவாய்ச்செயிக்கலாமென்று எண்ணிவந்தாயோ ஐயா, உன்னுடையபிரகாசம்பெற்ற தேரும் பிரபலமாகியசீரும் நால்வகைப்படைகளும் நாசமடைந்துபோச்சுதே நீயும் யுத்தஞ்செய்யவந்த உறுதிதப்பி கலகலத்துப்போனையே உன்னுள்ளத்தில் தெளிவாகிய திரமென்பது எள்ளத்தனையுமில்லையே முதிர்ந்தபோரில் ஜெயம்பெறும்படியாகவந்த உன்னுடையதிறம் போதும் போதும் பூமானே, ஆணிடிபோன்ற அனிலகுமாரனாகிய என்தம்பி வீமசேனன் உங்கள் நூறுபேரையுங் கொல்லுகிறேனென்று கூறியசபதவாக்கியம் பழுதாய்க் குறைவுபடுமென்றெண்ணி உன்னைக்கொல்லாமல் விட்டேனே யல்லது உன்னுடைய உரத்தினுக்கும் திறத்தினுக்கும்பயந்து விட்டவனல்ல உன்னாலென்னசெய்யலாகும் இதோநான் தொடுக்கப்போகிறகணையினால் நீ அணிந்திருக்கிற தும்பைமாலையானது சருகுபட்டெரிந்து சாம்பலாய்ப்பொடிந்து போய்விடப்போகுது நீ மெத்த வருத்தமடைந்திருக்கிறாய் ஆகையால் இன்றைக்கு ஓடிமறைந்து நாளைக்குவந்து பகைபாராட்டி யுத்தம்பண்ணலாம் இப்போது எங்களுடைய ஆண்மிக்கையை உன்னுடன்சொல்லி என்னபிரயோசனம் அப்பாவென்று குந்திபோஜனுக்குப் பௌத்திரனும் குந்திதேவிக்குப் புத்திரனுமாகிய முரசகேதனன்சொல்ல அந்தமொழியைக்கேட்டு அண்டம் அதிரும்படியாய்க் கரத்தைக்கொட்டி உரக்கச்சிரித்து பருத்தகதையைப்பிடித்து சத்தியவிரதத் தர்மராஜனுடைய மார்புக்கு லக்ஷியம் வைத்து பலங்கொண்டெறிந்தான் அந்தக்கதைபதபதைத்துச்சுழன்றுவருவதைப் பாண்டுமுதற்புத்திரனாகிய நீதிமான்கண்டு பதறாமல் மேன்மைபெற்ற ஒரு வடிவேலையெடுத்து அந்தக்கதாயுதந்தறிந்து வீழும்படியாயெறிந்தான் தர்மராஜனென்னும் சத்தியவிரத மெய்த்தவனெறிந்த வேலானது ஊழ்வினைசூழ்ந்து பாய்ந்ததைப்போற்பாய்ந்து சாரதி குதிரை முதலியதேரையுமழித்து அவனுடையமார்பையுங்கிழித்து வாயில் உதிரம்வழிய வீழ்த்தியது.

இவடத்தில் மெய்த்தவவிரதனாகிய தர்மராஜன்விட்ட வேலாயுதத்தினால் நமதுவேந்தனாகிய துரியோதனன்மாய்ந்தார்போல்வீழ்ந்தான் இனிமேல் நமக்கு வெற்றியில்லையென்று அவனுடைய மொத்தப்படைகளாகிய வீராதிவீரரெல்லாரும் யுத்தபூமிவிட்டு நால்வகைச்சேனைகளுடன் நிலையாய் நிற்பதற்கு நெறிநாடாதோடினர்கள் இந்தச்சேதிகேட்டு ஆழமாகிய கடல்போன்ற அன்பினையுடைய அங்கதேசாதிபன் மோசம்வந்ததென்று மிழதமேலதாய்க்கலங்கி ஓடிவந்தான்.

றிப்பால், சென்னற்போரில் தந்தையைப் பலிகொடுத்துக் களர்ந்து மெய்வருத்தத்துடன்வேசாறியிருக்க அஸ்வத்தாமனுனவன் கல்லடிபட்ட புண்ணில் தடியடிபட்ட தன்மைபோல் சங்கதிகேட்டு மலைகளைப் பொடியாக்கும்மல்லுக்கிசைந்த விசாலமானஉரம்பெற்ற தோள்களையுடைய துரியோதன மகாராஜன் தர்மராஜன் வேலினால் விழ்ந்ததற்காக மெத்த வருந்தி வினாவிற்றேர் சேனுத்திராவிலுதிக்க சூரியனைப்போல் வந்தான், வேட்டையாடுங்காட்டில் வெருண்டோடும் களிற்றுயானைபோன்ற கெடிஸ்தராதிபனுனவன் தேர்-குதிரை-சாரதி முதலியவிற்போரும் அழிந்து பொறிமறந்து புலனிறந்து பொடிமலிந்துமேல்மூடியதியாகிய தர்மராஜன்கைவேலால் உரங்கிழிந்து சிரம்வளைந்து உலைந்துவிழுந்தானென்று கேட்டுங்கேளா ததற்கு முன்னே வாட்டங் கொண்டு ஓட்டமாயோடிவந்தார் கிருபாச்சாரியாரானவர் மேலும் ஏகசக்ராதிபதியாய் உலகத்தைநந்தாக்கும் ஆக்கினைச் சக்கரம்பெற்ற அரவத்துவஜாதிபனுடைய நந்தியாவட்ட மாலையணிந்த மார்பில் சத்தியவிரதனேவிய கூர்வேலானதுதாக்கியதென்றுகேட்குமுன்னே தானீன்ற சேய்க்குட்டிக்கு இடையூறுவராமற் பாதுகாக்கும் தாய்ப்புலியைப்போற் பாய்ந்து சாய்ந்துகிடக்குந் துரியோதனனுக்கு அருகில் சல்லியராஜன் வந்தான் இன்னமுள்ள தம்பிமார்முதலாகியபேர்களும் வந்துசேர்ந்து பக்குவமாகிய எப்பெருஞ் சேனையும் எக்குலவேந்தரும் ஏகமாய்க்கூடி ஒப்பு உவமை இல்லாத தருமராஜனை வளைந்துகொண்டு சரமாரி பொழிந்தார்கள். அந்தவேளையில், அர்ச்சுனராஜன்-வீமராஜன்-நகுல சகாதேவராஜன்-ஒப்பற்ற தரணிபாலராகிய ராஜவிரச்சேனைகள் யாவரும் முரசக்கொடி அரசனுக்குத் துணையானுர்கள்-இருபடைச் சேனநாயகரும் மானபரணராய் இருதிறச் சேனைவீரரும் இருபாலாகப்பிரிந்து எழிற்படைமுதலிய அஸ்திர சஸ்திர ஆயுதங்களைக்கொண்டு சொரிந்து நின்று ஒன்றேடொன்று கலந்து வல்லவர் வல்லபடி போராடிப்பார்த்து வாடியிளைத்து நாகக்கொடிபடைத்த நராதிபனை இழுத்துக்கொண்டு ஓங்கியசேனைப் படைமுதலாய்த் தாங்கள்கைக்கொண்ட ஆயுதங்களெல்லாம் அவடத்திற் பலிகொடுத்து மிகுந்ததுக்கத்துடன் புறங்கொடுத்து உடைந்து பாடிவீட்டுக்குப்போனுர்கள்.

இவடத்தில் வீமனும் இந்திரகுமார அர்ச்சுனனும் ஆயுள்வேதியர் புத்திரர் நகுல சகாதேவர்களும் தர்மநீதியாகிய தர்மராஜனும் தங்களுக்குரிய சேனுபதியுடன்சேர்ந்த சேனைகளும்-யானை-குதிரை-தேர்-முதலாகியதம்அமர்க்களம்விட்டுச் செருக்கடைந்து பாசறைக்குத் திரும்பினுர்கள்.

அப்பால், சத்தியமேமயம் தர்மமேஜெயம் நித்தியமே நயம் நிஷ்டூரமே பயம் என்னுந் தர்மராஜனுடைய ஆண்மிக்கையையும் சவுரிய பராக்ரமத்தையும் நன்னிலையையுங்கண்டு வெருண்டு பயந்து புறங்கொடுத்தோடிய போர்வேந்தைப்போல் ஓராழித் தேரோனுகிய சூரியன் பின்விட்டுப்போகிய தன்குமாரனை நினைத்து வருந்தி பொருந்திய மேற்குச் சமுத்திரத்தில் மூழ்கி மிகுதியாகிய இராக்கால முழுதும் இளைப்பாறியிருந்து விடியற்காலத்திலெழுந்து இன்றைக்கும் யுத்தநடத்தப்போகிற தன்பிள்ளையாகிய கர்னன்மே லுண்டாகும் புத்ரவாஞ்சையினுலும் ஆசைப்பெருக்கத்தினுலும் சாமர்த்திய சந்தோஷம் அனுபவிக்கும்படிக்கு வந்தவனைப் போல் மறுபடியுங் கீட்டிசைக்கடல் முகட்டிற்பிறந்து தன்குமாரனைக் கண்ணுறிய கிரணங்களினுற் பார்த்து தன்னைக் கைதொழும் படியாய் நேர்புகுந்தான் இவ்விதமாக யாவருந் தொழுதற்குரியவனுகக் கிழக்குத்திசையில் உதயகிரிமேலுதயமானுன சூரியன், கேளும் ஜெனமேஜெய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

பதினேழாம்போர்ச் சருக்கம்.

கண்ணன்றுதி விருத்தம்.

ஈரொருபிறப்பி லொருசிறுகுறளா யாவருந்தேவரும் வியப்பக், காரொருவடிவு கொண்டெனச் சென்று காவல்கூர்மாவலியளித்த, நீரொருகரத்து விழவெண்டரங்க நீள்மகரீருடுத்த, பாரொருகணத்தில் அளவிடுங்கமலப் பாதனுர் நாதனுர்நமக்கே ....*

எ-து. இவ்விதமாகிய ஸ்ரீவேதவியாசர் திருவாய்மலர்ந்தருளிய யுத்தபஞ்சகத்தில் கர்னபர்வமாகிய பதினரும் போரைச் சொல்லிவந்த வைசம்பாயனருடைய திருவடிகளிற்றுழ்ந்து வீழ்ந்து வாழ்ந்தோமென்று புகழ்ந்து மகிழ்ந்த ஜெனமேஜெய மகாராஜனும் வடுஷ்டாசேவியார்முதலாகிய மந்திரித்தலைவர் தந்திரத் தலைவரும் மற்றுமுள்ளோரும் சுற்றிலுமிருந்து.

சிந்தைகளித்துச் சேவித்திறைஞ்சி.............*
எந்தையாமெழுந்த இருக்கலையோனே.......*
பந்தமகறுக்கும் பரஞ்சுடர்ப்பொருளே......*
முற்போர்நடந்த முறையெலாம்உரைத்தீர்...*
பிற்போர்விளைந்த பெருமைபேசென்ன ......*
கொந்தலர்மாலைக் குச்சுறுங்கொண்டைச்...*
செந்துவர்வாயன் தேவகிபாலன்..... ....*
வாமனரூபன் மாவலிபாற்போய்.................*
மூவடிகொண்ட மூர்த்தியைப்போற்றி.. .....*
சோதிலாக்குணத்துக் குருபரனுன........*
ஈதிலாத்தெய்வத் திருமுனியென்னும்
வேதவியாசனை வேண்டிப்பணிந்து ....*
ஆதபன்மைந்தன் அனிசெயும்பர்வத்.........*
தோதியபதினே ழாநாள்யுத்தம்.............*
மாபனைக்கருதி வகுத்தனர்வைசம்
பாயனனென்னும் பண்ணவன்றனே..........*

ஆரமும் அரியும் அணியும் உரனே....*
வீரமும் வேலும் மேவிய கரனே.......*
கனமே கயசுக போஜனே நாளும்......*
ஜெனமே ஜெயமகா ராஜனே கேளும்...*

நேற்றுநடந்த நெடும்போர்முனையில் யுத்தஞ்செய்து நிறுவகிக்க மாட்டாமல் அமர்விட்டு அகன்றுபோன அரவக்கொடியோனைச் சார்ந்த அவனிபரெல்லோரும் சமர்வேடிப்பான கதிஞ்சாரம்போற் கொதித்து பொழுதுவப்

பலிடியுமென்று கடுங்கோபங்கொண்டு குதித்துபதினேழாநாட் காலமே தங்கள் தங்களுடைய நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு அகில புவனமும் இன்றைக்கு அடியோடே அழியுமென்று அயன்முதலாகிய தேவரும் மற்றியாவரும் மயங்கித் தியங்கும்படியாய் ஒருமுகச் சங்கு ஈரிமுகச்சங்கு வலம்புரிச்சங்கு இடம்புரிச்சங்கு தவளைச்சங்கு குவளைச்சங்கு நத்தைச்சங்கு குடமுழச் சங்கு வெற்றிச்சங்கு வீரச்சங்கு மங்களச்சங்கு இடக்கை-உடுக்கை-தப்பட்டை-உறுமி பேரிகை-பம்பை - மத்தளம்-முரசு-முருடு-முழவு-பெருந்துடி-தண்ணுமை-திண்டிமம் சல்லரி-மல்லரி-சச்சரி தக்கை-தடாரி-திமிலை-தூரியம்-குடமுழா நெய்தப்பறை-ஆர பார தீர தாரை-புரி வீர காளமாசின்னா-தாரி-காகள-கோணக்கொம்புமுதலாகிய பல்வகைத்துளைக் கருவியும் தோற்கருவியாகிய பறைகளும்-கடல்முழக்கம்போல் அதிரபாற்கடலி லெழுந்துவிழுந்த கொழுந்தலைபோன்ற கற்றையாகிய வெண்கவரிகள்வீச-ஆலவட்டம்-தாலவட்டம்-தொங்கட்டம்-சுருட்டி-அரசிலைவட்ட முதலியதும்-அசைந்தாட மகரதோரணம்-மேற்கட்டி-புட்பவிதானம் பிரகாசிக்க-பெரிய ஜண்டா-சிறியஜண்டா- வெள்ளைக்குடை முதலாகிய பலதினுசுக் குடைகளுங்கவிக்க வெள்ளைக்கொடி முதலாகிய பலவகைக்கொடிகளும் பிடிக்க-நாகத்துஜம்-வாகைத்துஜம்-மேகத்துஜம்-தேர்த்துஜம் போர்த்துஜம் யானைத்துஜம்-சேனைத்துஜம்-குதிரைத்துஜம்-சதுரத்துஜம்-கம்பத் துஜம்-சம்பத்துஜம்-கச்சைத்துஜம்-பச்சைத்துஜம்-வீணைத்துஜ முதலாகியதும் தழைக்க இவைமுதலிய பஞ்சமேளவாத்தியங்கள் தொனிக்க பற்பல ஆயுதங்களுடன் யுத்தகளம்வந்துசேர்ந்து சத்துருக்களை அழைக்கும்படியாகிய சமர்பூமிக்குவந்தார்கள். இப்போது நடந்திருக்கிற பதினாறுநாள்யுத்தத்திலும் இறந்து நீங்கிய பற்பலசேனைகளெல்லாம் இன்றைக்கு உயிர்பிழைத்து எழுந்து வந்ததென்று சொல்லும்படியாய் அளவற்ற வர்ணங்களையுடைய அநேகங் குதிரைப்பந்திகளும்-பலதினுசாகிய பெரிய தேர்நிரைகளும் கோடாகோடி மலைகள்போன்ற மதயானைகளும் ஈடாக எவைகளையுஞ் சொல்லப்படாத பதாதிகளுஞ் சேர்ந்துவிண்டலமும் மண்டலமும் எண்டிசையும் ஒன்றுந்தெரியாமல் மேகஜாலம்போற் கவிந்து காக முதலிய கழுக்களார்ந்த வெங்களமுழுதும் நிறைந்து நின்றார்கள்.

அந்தவேளையில், ஆஜானுபாகுவென்னும் தாவாகிய கர்ணனவன் பூஜாவிதிமுதலியதும் முடித்துக் கொண்டு நேரிய நமஸ்காரஞ்செய்து பெரியோர்களைவணங்கி-அநேகமான தர்ம-பரவுபகாரங்களைச்செய்து மஹாமகிமையுற்ற புவன சக்ரேஸ்வரனாக முடிபெற்ற துரியோதன மகாராஜனுடன் கேசரி போரேறுபோல் யுத்தகளத்திற்கு வந்தான் யுத்தகோல சிங்காரங்கொண்டு வந்த அந்தக்கர்ணனுடைய அழகு எத்தன்மையா யிருந்ததென்னில், சிரத்திலணிந்த நவரத்ந கசித மகுடமானது எட்டுத்திக்கும் ஒளிவிடுப் பிரகாசிக்க இரண்டுகாதிலும் அணிந்திரா நின்ற மணிக்குண்டலங்கள் சோதிகாட்டி அசைந்தாட-புஜகீர்த்தி-கடக கங்கணம்-தோளணிமாலை-வாகுமாலை-பாஜிபந்து-விரலாழிகள்-விரற்சாடு முதலாகிய ஆபரணங்கள் மின்னிக்காட்ட-முத்தாரம்-ரத்னாரம்-மோகனமாலை-தும்பிப்பதக்கம்-மகரகண்டிகை-முகதாளிப்பதக்கம்-உத்திராசஞ்சம்-தும்பைப் பூமாலை தாமரைப்பூமாலை-அரைப்பட்டிகை உருக்குக்கவஜம்-எழுகுகவஜம் - வஜ்ரக்கவஜம்-சரிகைவேலையிட்டு ரவைகள்பதித்த நடுக்கட்டுப் பட்டிகை முதலியதும் ஜொலிக்க பொன்னுலாகிய மணிகள்பதித்த வீரகண்டாமணி வெயில்வீசிச் சப்திக்க, தலைநிறைந்த கருங்குழல் பின்புறத்தில் பின்னலிட்டு சுருண்டு நெருக்குகாட்ட, புஷ்டியாகிய மீசைகளும் கன்னப்பரிசையும் செவிக்கறனும் ராஜபயங்கரத்தைவிளைக்க, நெற்றியில் விபூதிரேகையும் ஜவாது திலகப்பட்டையும் செந்தூரப்பொட்டும் காந்திசெய்து சிறக்க அணிந்திருந்த உத்தரீய முதலிய வஸ்திரங்கள் இந்திரப் பட்டென்று இலங்க, தன்னைப்பெற்ற தந்தையாகிய சூரியனைப்பார்க்கிலும் விந்தையாகிய செந்துகிர் வடிவம்விளங்கிச் சுடர்வெயிலெறிப்ப, இன்னம் பற்பலவிதமாகிய போர்க்கோல அலங்காரத்துடன் கர்னன் இருந்த அழகைக்கண்டு கண்களிக்கொள்ளாத பேர்களியார் இயாவருங் கண்களி கூர்ந்தார்கள்.

இப்பால், இவ்வளவு தொகையென்று சொல்லுதற்கரிதாகிய பதாதினிக் கூட்டமும், உயிர்க்குயிராகிய வீமார்ச்சுன நகுல சகாதேவனென்னும் தம்பிமார்களும், காசாம்பூவின் நிறம்பெற்று களாப்பழத்தின் அழகுவாய்ந்த திருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும், தர்மசொரூபியாகிய தர்மராஜனும், சகலவாத்திய விருதணி விசேஷங்களுடனே பெருங்களப்பரப்பில் வந்து பெரிய கொடிகள் நாட்டி படைகள்முதலிய மன்னரை அணிபெறநிறுத்திக்காட்டி தர்மராஜன் தேர்விட்டிழிந்து திருநீற்றின் ஒளிபிரகாசிக்கும்படியாய் செந்தூரத்திலகமிலங்க தேவர்கள்முதலிய பெரியோர்களும் சகலாத்ம கோடிகளும் பிழைக்கும்படியாய் கடற்பிறந்த ஆலகாலவிஷத்தை அமுதாகவிழுங்கி அதனால் கறுத்த கண்டராகிய கறைமிடற்றண்ணலைப்போல் கண்சாக்ஷியாய் கிருஷ்ணார்ச்சுனன் இருவருங் காணும்படிக்குபூமித்தேர்மேல் நின்று துரியோதனன் நின்ற பெருக்கத்தைக்கண்டு கவலைகொண்டு கர்ணனிருந்த செம்பிரத்தையும் நோக்கிய தர்மராஜனவர் பலாஷ்டகனாகிய அர்ச்சுனன்தேர்மேல் சாரதித்தொழில் கொண்டிருந்த தண்ணீலமேனிச் சாமளவண்ணனை, சாத்தகிக்கு அண்ணனை வாசனைபுறைந்த மதுநிறைந்த திருத்துளவமணிந்த மாதவனை கொத்தடிமை குடியடிமையாய் வழிப்பட்டு தாஜத்துவம் புகுந்தபேர்களுக்கு உற்றதுணையாகிய பக்தவற்சலனைப் பார்த்து-விசாலமாகிய கண்களும்-இருதயமும் பூத்து முத்தாய் ஆனந்த பாஷ்பந்துளிக்க சுவாமிகளின் திருவடிகளை மனதினால் வணங்கி எங்களுக்கிணங்கிய பேரின்பமே, இன்றையப்போரில் இரவிகுமாரனாகிய கர்னன் வானுலகஞ் சேர்வானா எங்களை வாட்டி வெற்றிபெறுவானா சொல்லும் எந்தையே என்று முரச கேதனன் கேட்க. சிறிய அணுவும் பெரிய அகண்டமும் தானாகின்ற அருள்நிறைந்தசெந்தாமரைக்கண்ணனாகிய திருமால்திருவாய்மலர்ந்தருளிச் சொல்லுகின்றார்.

தருமநந்தனா, ஔதாரியனாகிய சூரியபுத்திரன் இன்றை
யத்தினம் அர்ச்சுனன்பாணத்தால் இறந்துபோவான், நா
ளையத்தினம் வாயுபுத்திரனாகிய நமது தம்பி வீமசேனனா
ல் துரியோதனன் வெம்பிச்சாவான், அஸ்தினாபுரியும் நா
ட்கடல் சூழ்ந்த எண்டிசை அவனியும் உமக்குச் சொந்
தமாம் பட்டாபிஷேக பாக்கியம் பெற்ற தர்மராஜனென்
னும் சிலாக்கியனே யென்றார்.

இவ்விதமாகச் செங்கண்மாலுரைத்த இனியசொல்லெ
ன்னும் அமுதம் தர்மராஜனுடைய காதினூடே மனந்
தெளிந்து மகிழ்சிறந்து கவலைநீங்கி கருணையோங்கியகாசா
மபூவண்ணனை கண்களிக்கப்பார்த்து எங்களுடைய அழி
யாமானமும் பழமையாகிய ஆண்மையும் அளவில்லாத
கீர்த்தியும் நிலைபெறச்செய்யுந் தெய்வம் தேவரீரையல்ல
து வேறில்லை, நாங்கள் அனாதையாயிருக்கிறோம் கொடி
யசர்ப்பக்கொடிபிடித்த துரியோதனன் செய்தவஞ்சனை
யாகிய கடலில்வீழ்ந்து ஆழ்ந்து மாய்ந்துபோகாமல் கரு
ணையளித்து எடுத்து எங்களைக்கரையேற்றி அழகிய பூமி
முழுதும் அகண்ட ஐஸ்வரியமும் அணிமணிப்பணிது
டைமுதலிய கதிர்முடியுந்தந்த அத்தனே எங்கள்தந்தை
யாகிய கர்த்தனே யென்று பெரிய அறத்தின் புத்திரனாகி
ய தர்மராஜன்சொல்ல அதைக்கேட்ட அருளாழி முகுந்
தன் புன்னகைகொண்டு மன்னனேகேளும் என்னாலென்
னமாகும் நானென்னசெய்தேனாலும் எல்லாம் உம்மா
லாகிய சத்தியமேயன்றி வேறில்லையென்று வேணுகோ
பாலன்சொல்ல, அந்தச்சொல்லைக்கேட்டு முரசகேதன
ன்மெத்தவருந்தி சித்தம்பரிந்து உத்தமனாகிய உரகசயனா
செத்து எழுபிறப்புப் பிறந்தாலும் உன்னுடைய நன்று
ணையை நாங்கள் மறக்கமாட்டோம். ஹரிகரி என்னப்ப
னே பொன்னையனே நாங்கள் பால்யாளாயிருக்கும்போ
து தீக்காய்ந்த சிந்தைவாய்ந்த துரியோதனன் கங்காநதி
யில் புனல்பாய்ந்து விளையாடவிட்டு அப்போது எங்க
ளைக்கொல்லும்படியாய் ஜலத்துக்குள் புதைத்துவைத்த
வசிமூலையில் ஒருவண்டுபோற்சுழன்று வீமசேனன் சா
காமல் ஆருயிர்பிழைக்க அருள் அளித்துக்காத்தாய். (க)
வீரகண்டை ஆர்ந்த அரசர்கள் திருந்திய ராஜசபையில்
நாலுபேரைப்போல் நாங்களும் பார்த்திருக்க துரோப
தையை வஸ்திரபங்கம்பண்ணியபோது துன்பத்தால்மெ
லிந்து துயர்கூர்ந்து இளைந்து மானமும் மனமும் மறந்து
தேவரீருடைய திருவடிக்கடிமையாய் தேகாபிமானமும்
நீற்று தியானம்பொருந்தி சிந்தித்த கர்ப்பூரதீபம்போன்
ற பாஞ்சாலிக்கு நாணமும் துகிலும் நலம்பெற அளித்
து திருவருள்நோக்கினால் அருள்செய்து காத்தருளினை
தேவாதிதேவனே. (உ) ஓ நாராயணனே, நாங்கள் பனி
ரண்டுவருஷம் வனவாசம் தொலைக்குங்காலத்தில் சத்து
ருவாகிய துரியோதனனுடைய உத்தரவினால் க்ஷுத்பா
தையாகிய கடும்பசிவருத்த கவலைகொண்டுவந்த துருவா
சரென்னுஞ் சடைமுனிவனுடைய கோபமும் அதிதா
பமும் - பசியுந்தணித்து எங்களுக்கு வருத்தமாகியசாப
மும் வாராமல்தடுத்துமனோபயத்தைநீக்கி யாண்டனை
(ங) பரமாத்மாவானவனே, எம்மைஒருபொருளாகயெ

ண்ணி செம்மையற்றதுரியோதனனிடத்தில் தூதாகவந்
து விதுரராஜனுடைய வீகரற்றவில்லை முறிப்பித்து சந்
தேகத்தால் அஸ்வத்தாமனுக்குச்சேனாபதிப்பட்டம் ஆக
வொட்டமற்கொடுத்து தேனலர்ந்த நந்தியாவட்டமாலை
யணிந்த துரியோதனனுக்குத்துணையாகிய பலங்களையெ
ல்லாம் அபலப்படுத்தி அவன்நடத்தப்போகிற ரகசியங்
களெல்லாவற்றையும் அறிந்து அந்தந்தக்காரியங்களுக்கு
த்தகுந்தசுள்ளாணிவைத்து அநுகூலமாகிய சாலவினைக
ளும் புரிந்தாய். (ச) ஞானஜோதியே, முதல்முதல் யுத்
தத்துக்குவரும்போது பதினொரு அக்ரோணிசேனைகளை
யும் பெரியோராகிய ப்ரமுகாளையுங்கண்ட பயத்தினாலே
யோ அல்லது இவர்களை எப்படி கொல்லுவது என்கிற
ஜீவகாருண்ய இரக்கத்தினாலேயோ, அதெப்படியோ எ
னக்குத்தெரியாது, மெத்தவருந்தி ஆயுதமுதலாகியகாண
ப்பாணங்களைப்போட்டுவிட்டு இரங்கிய விஜயனுக்குதத்
வஞானபோதகீதைஉபதேசித்து யுத்தஞ்செய்ய மாட்
டேனென்று பின்னிட்டவிஜயன் மறுபடியும் திடங்கொ
ண்டு தீரத்துடன்எல்லாருநாசப்படும்படியாய்நானேகொ
ல்லுகிறேனென்று சொல்லிப்புறப்படும்படியாய்ப் போ
தனைசெய்து விட்டாய் (ரு) இந்திரஜாலதந்திரனே, ஆயு
தமெடுப்பதில்லையென்று அரசனுக்குச்சொல்லிய ஆணை
மறந்து ஆழிதரித்து ஐயா அவர்களாகிய வீஷ்மருடன்
எதிர்ந்து எங்களுக்காகப்பாடுபட்டு பார்த்தசாரதியாகத்
தேரூர்ந்து சிகண்டிசெய்ததவம்வழுவாமல் நிறைவேறு
ம்படியாய் முன்னிறுத்தி மூதாதை முடிசாயும்படிக்குமு
டித்தாய். (சு) நித்யசத்தியனே, ஒருநாள்யுத்தத்தில் ஏ
ழுமதம்பொழிந்து எழுப்புயர்ந்தயானைமேல் வந்தபக
தத்தன், அர்ச்சுனனுடைய மார்புகிழிந்து அதனால் அவ
ன் இறக்கும்படிக்கு எறிந்தவேலாயுதத்தைதிருத்துளவா
ர்ந்த தேவரீருடைய மார்பில்தாங்கிநிராயுதன்நானென்று
ஞாயம் எண்பித்து நிவிர்க்கினமாக்கி வைத்தாய். (எ)நே
சனே, போராடும்படைகளெல்லாம் பொரிந்து - சரிந்து
பொடிந்து - மடிந்து-போகும்படிக்குபொருபடையுடை
ய அரசரெல்லாரும்பொன்றிக்குன்றிப்போகும்படியாய்
யுத்தஞ்செய்துவகைமோசத்தால் இறந்தவாளபி மன்ன
னைக்குறித்து புத்திரசோபத்தால் ஆத்திரப்பட்டு அர்ச்சு
னன்கூறிய சபதமானது அரசர்களுக்குமுன் பழுதுபட்
டு அபஜயமுறாமல் அதற்குவேண்டியபலங்கட்டும்படியா
ய் அர்த்தராத்திரியில் அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு
கயிலையங்கிரிக்குச்சென்று பாசுபதம் பெற்று எங்கள்பா
க்கியம்போலுற்றாய்சபதப்படிக்கு அவனையுங்கொன்றாய்
(அ) அரியாமூர்த்தி, வருணன்மாமனாகிய வல்லவன்அ
ர்ச்சுனன்பேரிலெறிந்தவெவ்விதாகிய உக்குக்கதையைகி
ருபையாகதேவரீருடையமார்பிற்புதையும்படியா யேற்ற
போது அந்தக்கதையானது கல்லின்மேல்வீழ்ந்தபந்தெ
ன எழுந்து பல பல பொடியாய்த்தெறித்து திரும்பிப்ப
றிந்து தன்னையெறிந்த தாடாளன்பேரில் விழுந்து தாக்கி
அதனால் அவன் அழிந்து சொர்க்கலோகம் புக்கும்படி
யாய்ச் செய்தனை (கூ) நிர்மலாநந்தனே, நல்லதருணமா
கிய பதினாலாநாள்யுத்தத்தில் மத்தியானவேளையில் தடா

கமேற்படுத்தி அந்தத்தடாகத்தில் தண்ணீர்குடிக்கவந்த சத்துருக்களின் சேனாசமுத்திரமுதலிய சகலரும் சந்தைக்கூட்டமாகக்கூடியிருக்குஞ்சமயத்தில் சங்கமுழக்கி வாளாயுதம்பிடித்த இருபர்முதலியபேரும் பங்கப்படும்படிக்குச்செய்தனை. (௰)காளிங்கடனபாதனேகாலாதிதனே அபிமனைக்கொன்றபழிக்குப்பழி வழியாய்முடிக்கும்படியாய் பதினாலாநாள் யுத்தத்தில் சூரியனைமறைத்துஇருளை அழைத்து எதிரியைக்கெடுத்து சபதமுடித்து தனிப்பழிமுடித்தாய். (௰௧) சந்திர சூரியனொன்றுஞ் சங்குசக்ராயுதனே, இதோஇப்போது பதினேழாநாள் யுத்தத்தில் இயாவருமஞ்சித் துஞ்சிக்-கெஞ்சிப்-பஞ்சாகும் படிக்குச்செஞ்சாமாருதம்போல் அஞ்சாமற்றொடுத்த அஸ்வத்தாமனுடைய அஸ்திரங் களினால் நாங்களைந்துபேரும் எங்களைச் சேர்ந்த உறவினரியாவரும் அழியாமலிருக்கும் படியாய் யோசித்து வாகனங்கள் விட்டிறங்கியும், விற்படை வேற்படைவிட்டு இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்து நிற்கும்படிசெய்து அந்த அஸ்வத்தாமன்விட்ட அஸ்திரத்தைஅபலமாக்கி நீக்கிவைத்தனை. (௰௨) அமலனேநந்தனே போர்தொடங்கியமுதனாள் யுத்தத்தில் வீஷ்டுமர்-துரோணர்-இவர்களிடத்துக்கு எங்களை அழைத்துப்போய் குறைசொல்லி அவாள் இறக்கும்படியாகிய நிரியாண நிச்சயங்கேட்டு வீஷ்டுமரை பத்தாநாளிலும், துரோணரை பதினைந்தாநாளிலும் முடித்துவைத்தனை, மும்மூர்த்தியும் ஒன்றாகியமூர்த்தியே வேதமுணர்ந்தவேதியனே பாரிற்பொருந்திய மாந்தர் முதலான வேந்தரும் நற்றவத்தோராகிய உத்தமத்தேவரும் அறியக்கூடாத உன்செயலை அல்பமாகிய எம்போலியரால் அறியத்தக்கதோ ஆகியனாதியேயென்று அறன்குமாரனாகிய தருமராஜன் அன்புநிறைந்து அநேகவித ஸ்துதியாகச்சொன்னார்.

அந்தவேளையில் சரிகிருஷ்ணமூர்த்திக்குங் கருணைபிறந்து கடாக்ஷவீக்ஷணக் கண்ணனாகிய தர்மராஜனைப்பணிந்து இருகரத்தினாலுந்தழுவி எந்தவேலை, நீங்களைவரும் இப்போதுநடக்கிற யுத்தத்தில் இறக்கமாட்டீர்கள் உங்களுக்கொரு சிந்தனையுமில்லை பயப்படாதிர்கள் என்று ஆசிர்வசனம் பலவாகச்சொல்லி நடனம் அமைந்த குதிரைபூட்டியதேரையுடைய சேனாபதியென்னும் துருஷ்டத்துய்மனைப்பார்த்து நல்லது நமதுபடைகளை அணிவகுத்துவையுமென்று உத்தரவுசெய்ய அண்ணலாகிய துருஷ்டத்துய்மன் அந்த அருளாளனுடைய அருள்வாக்கின்படிக்கு சத்துருக்கள் பயப்படும்படியாய்ப் பேரணிவகுத்துநின்றான்.

இவ்விதமாக பாண்டவர்களுடைய பதாகினிவெள்ளம் பேரணியாக ஏற்படுத்திய பெருமிதத்தைக்கொல்லவல்ல திறத்தையுடையவில்லையும் வெள்ளைக்கொடி முடித்தேரையுமுடைய அங்கதேசத்தலைவன்கண்டு படபடப்புக்கொண்டு படம்பொருந்திய பாம்புக்கொடிபடைத்த துரியோதனனைப்பார்த்து குருகுலநாயகமே கேளுமென்று குதிரைபூட்டிய தடந்தேரினையுடைய கோவேந்தர்பலருங்கேட்டுக் கொண்டாடும்படியாய்ச்சொன்னான்.

அதென்னவென்றால் கைதேர்ந்த பலவித ஆயுதவல்லபங்களுக்கும் வேறொருவீரானும் ஒப்பில்லாதிருக்கும்காட்டாண்மைபெற்ற துரியோதனனென்னுங் காவலனே, வாசமாலையணிந்த புஜபலவீரானுடைய தலைகளெல்லாம் உருண்டுபோய் தரையில் உடலாகிய கவந்தங்கள் கூத்தாடும்படியாய் இந்தக்ஷணத்தில் இப்போதே பாண்டவரை வென்று ஜெயம்பெறுகிறேன் பாருமென்று இறுமாந்து சொல்லி மேலுஞ் சொல்லுகிறான்.

மேகவாகனனாகிய இந்திரகுமாரனென்னும் அர்ச்சுனனுக்குத் துணைசெய்யும்படியாய் எல்லாக்கலகமும் விளைப்பதற்கு வஞ்சகங்களை நெஞ்சறக்கற்று உருவாய்வந்த மாயனாகிய கள்வன் பார்த்தனுக்குச்சாரதியாய் அமைந்திருக்கின்றான். அதனாலே, அந்த அர்ச்சுனனுக்கு ஒப்பாகிய பேர்கள் மண்டலமுதலாகிய விண்டலத்திலுமில்லை, அவனுடன்சண்டையிட்டு வென்றுவரத்தக்கவருமில்லை, ஆகையால் அந்தப்பார்த்தனுக்குச்சமைந்த சாரதியைப்போல் எனக்கும் ஒருசாரதிகிடைப்பானாகில் உனக்கு நான் அணிமுடிசூட்டி ஆசையாய்ப்பார்ப்பேன் அரசர்க்கரசாகிய அணியே, புரசைக்களிறேறியமணியே யென்றுகர்னன்சொல்லிப் புகழ்ந்தான், அப்போது வணங்காமுடிமன்னன் புல்லிமகிழ்ந்து என்னுயிர்க்குயிராகிய அண்ணா, அங்கதேசத்ததிபதியாகிய கர்னா, தஞ்சமென்றடைந்தபஞ்சபாண்டவருக்கு அஞ்சலென்றருளி தேர்ப்பாகனாகிப் பொருந்தி அஞ்சனமேனி வஞ்சகனைப்போல் தேர்விடுவதற்கு நம்மிடத்தில் ஆரிருக்கின்றார்கள் ஐயாவென்று அரவக்கொடியோன்கேட்க கர்னன்சொல்லுகிறான்.

அம்புலிக்குலத்தரசனேகேளும், திசாதிசைகளுநடுங்கி ஒடுங்கும்படியாய் ஆர்ப்பரித்து வேகமாய் அரைநொடியில் வலம்வருகின்ற அஸ்வங்களுடையமனத்தை அறியத்தக்கவனும் எதிராளிகள்செய்யும் போர்த்திறத்தை அறிந்து சமயோசிதசூழ்ச்சியை எனக்குத்தெரிவிக்கத்தக்கவனும் குவிந்த சேனைகள்பேரிற் கவிந்து தேர்விடுந்தொழிலிற் றிறவானும் மலர்த்தமணமாலையணிந்த திணிந்தபுயத்தோனாகிய சல்லியராஜனைவிட வேறொருவருமில்லை இத்தந்தாரணியிலென்று கர்னன்சொல்லி மேலுஞ்சொல்லுகிறான்.

அந்த மகாராஜனாகிய சல்லியன் என்னுடைய மணிநெடுந்தேர் ஊர்வதற்கு உடன்படுவானாகில் இன்றையப்போரில் சக்ராதரனாகிய திருமாலும் சர்வசம்மார ருத்ரனாகிய பெருமானும் வந்து இந்த அர்ச்சுனனுக்குத் துணைப்பட்டாலும் அல்லது தேர்விட்டாலும் முந்திவந்த நரநாரணரிருவரையும் தப்பாமற்கொல்லுவேன் செங்கோல் ஆட்சிபெற்ற துரியோதனராஜனே அப்பால் வாயுபுத்திரனென்னும் வீமன் முதலாகிய நால்வரும் ஒவ்வொருபாணமுனைக்கு நிற்கமாட்டாமல் மடிவார்கள்சமுத்திரத்தை ஆடையாயுடுத்த அவனிமுழுவதும் உன்னுடையசந்திர வட்டக்குடைநிழற் குள்ளாக்கி போர்த்திறமாலையும்பூஷணமாலையும் நீ பூணும்படியாய்ச் செய்கிறேன்புரவலனே திருப்பாற் கடலிற் பிறந்தஆலகாலவிஷத்தையாவரும்பிழைக்கும் படியாய்ப்புசித்து அதனாற்கறுத்தகண்டத்தை யுடைய சிவபெருமானுக்குத்தொண்

டாகிய சிவனடியார்களின் திருமேனியிற் றரித்தருளியதி
ருவெண்ணீற்றின் வடிவத்தைப்போற் சிறந்த சோறுநி
றைந்தமடலையும் பூப்பொழிமிடைந்தபுஷ்பத்தையுமுடை
யதாழைகளானதுபரிமளித்துக்கொண்டிராநின்ற கழிக்க
ரைக்கானகம்பொருந்திய நெய்தனிலமானதுசெழிப்பினை
யுடைய மருதநிலமாகத் திருந்திய-கார்வளம்நீர்வளம்-நில
வளம்-நெல்வளம் போர்வளம் பேர்வளங்கொண்டபொங்
கமுடைய குருநாட்டுக்கதிபதியாகியசிங்கமே உன்னுடை
ய அன்னமும் புத்துருக்குநெய்யும்ஆய்ந்தபருப்புந் தோய்
ந்ததரும் காய்ந்தபாலும்வாய்ந்தவெண்ணெயும் நாவுக்குரி
சையாய் அறுசுவைவாய்ந்த அமுதும்-தேவாமிர்தமுண்ட
தேவர்களைப்போல் நின்று இதுவரையிலும் உயிர்வளர்த்
துவாழ்ந்துவந்த நான் இப்பேர்ப்பட்ட யுத்தகாலத்தில்
செஞ்சோற்றுக்கடன் கழிக்காமற் போவேனாகில என்னு
டையதிணிந்த தோள்களை வளர்த்துவந்த தற்குப் பிரை
யோசன மென்ன துரியோதனமன்னனென்னும் அண்ண
லே, இதல்லாமலும், இன்ன ஊரானென்றும் இன்னகு
லத்தானென்றும் இன்னதலத்தானென்றும் ஏதோன்று
மில்லாமல் உங்களுக்கு தேர்செலுத்தும் சாரதியாகிய
சூதனுடைய வீட்டில், தளர்ந்துவளர்ந்து வந்தஎன்னை உ
ங்கள்குலத்துள்ளவர்களில் ஒருவனாகக்காட்டி, அங்கதே
சத்ததிபதியாக அணிமுடிசூட்டி, அழகிய குலக்கொடி
யை அணிமன்றல்கூட்டி, உன்னை வணங்குஞ் சமுத்திர
ஞ்சூழ்ந்த தேசதேசராஜர் பலரும்என்னைவணங்கும்படி
யாய்உன்னைப்பார்க்கிலும் நான் சீர்பெறும்பதத்தில்உயர்
வுசெய்துவைத்த என்னுத்தமனே, அழகுசெறிந்த கிர
ணக்கதிர்முடியாய்இப்போது நேரிட்டிருக்கும் யுத்தத்தி
ல்உனக்காகப் பாடுபட்டு என்னுயிரைக் கொடுக்காமல்இ
ன்னம்யாருக்கு என்னுயிரைவளர்க்கப் போகிறேன் சொ
ல்லும் என்னுயிர்க் குயிராகிய இறைவனே யென்றுகர்
னமகாராஜன் கண் கலுழ்ந்துகரைந்து பரிந்து கருத்துவ
ந்து சொன்னான்.

அவன்சொல்லிய வார்த்தையைக்காந்தாரகுலக்கன்னி
யின்ற மன்னர்பிரானாகிய அரவக் கொடியோன் கேட்டு
அகமகிழ்ந்துமுகமலர்ந்து அருணிறைந்து ஓரிமைப்பொ
ழுதில் குற்றமற்ற மத்திரதேச வாசராஜ போஜ விசுவா
ச நேசனாகிய சல்லியனை அழைத்து அவனுடைய் கை
யைப் பிடித்துக்கொண்டு வண்டுநெருங்கி தென்னவென்
று பாடும் செவ்விமாலையணிந்த திருத்தோளையுடைய சி
நேகனே, நான் உம்மைக்குறித்துநல்ல ஒருகாரியஞ்சொ
ல்லப்போகிறேன் நான்சொல்லப்போகிற வார்த்தை நல்
லதாயிருந்தாலும்கெட்டதாயிருந்தாலும்அதைஇன்பமா
கக்கேட்டு உடன்படுகிறேனென்று எனக்கொருவரந்தர
வேணும் என்பேரில் ஆணையிருக்குது நான் சொல்லும்
பேச்சைநீர்தள்ளக்கூடாது எங்கே ஆணையிடுமென்று த
ன்னுடைய இருகரத்தையுங் குவித்து சல்லியராஜனை வ
ணங்கினான், சர்ப்பக் கொடியோனாகிய வணங்காமுடிம
ன்னன் அந்தச்சொல்லைக்கேட்டு சல்லியராஜன் சந்தேக
த்துடன் தாழ்ந்து சொல்லுகின்றான்.

எதிர்த்துப்பகைத்த சத்துருக்களுடைய சம்பத்தையு
ம் பெருக்கமாகிய வாழ்வையும் அவர்களுடைய உயிரை
யுங் கெடுத்து அடுத்துப் பிழைக்கவந்த பேர்கள் செய்த
பெருங்கொடுமைக் குற்றங்களை யெல்லாம் பொறுத்து
அன்பாக ஆதரித்து ஆசைவைத்து ஆண்மையுற்று உல
கமுழுதும் ஆக்கினைச் சக்கரஞ்செலுத்தும் பாக்கியவானா
கிய அரசனே, என்னை ஒருபொருளாக நினைத்து உம்
முடையஇருகரத்தையும் விரித்து வரமாகக்கேட்கும் வா
ய்மையைத்தடுத்து மறுத்துச்சொல்ல மாட்டேன், உம்
முடைய மனக்கருத்தைச் சொல்லுமென்று மத்திர பூப
தி மெத்த யிளைத்துக் கேட்க துரியோதனன் சொல்லு
கின்றான்.

ஐயா, சல்லியராஜனே, நீருண்ட காளமேக நிறத்தை
வெளுப்பென்று சொல்லும் படியாய்க் கறுத்த திருமே
னிபொறுத்த திருத்தகுகண்ணன் என்னுடைய சத்துரு
க்களாகிய பாண்டவர்களை எப்படிகாத்து இரட்சிக்கிறா
னோ அப்படிபோல நீரும் எங்களைக் காத்துரட்சிக்கவே
ண்டிய பொறுப்பு உம்முடையதென்றான், அந்தமொழி
யைச் சல்லியன்கேட்டு மிகவும் மனம்வெறுத்து வணங்
காமுடி மன்னனைக்குறித்து வையகம்புரக்கும்? மகாராஜ
னே கேளும், வேகத்துடன் தாவிநடக்கும் குதிரைபூண்
ட நெடுந்தேர்களையுடைய ராஜாதி ராஜர்க்கெல்லாம் சி
ரேஷ்டத்துவமா யிருக்கின்ற தேவரீர் எம்போல் வாரை
ரட்சிக்கவேண்டியது, நாங்கள் உம்முடைய தயவுக்குக்
காத்திருக்கத் தக்கது; அப்படியிருக்க, நாங்கள் மெத்தவு
ம் அல்பமாகக் குதிரைகளையோட்டுந் தொழில்களைச்செ
ய்து உமது சந்திரவட்டக்குடை நீழலுக்குள் அடங்கி ஜீ
வனஞ்செய்து காலங்கழித்து வருகின்ற என்னைப்போ
லொத்த தீனனைப்பார்த்து கர்ப்ப ஸ்ரீமந்தனாகிய நீர்காப்
பாத்தவேண்டுமென்று கேட்க இயற்கையோ இல்லை எ
ங்களுடைய மனத்தைச் சோதிக்கும் படியாய்ச் சொன்
னதோ இதென்ன காரணமோ தெரியவில்லை, மேலும்,
கண்ணனைப்போல் காக்கவேணுமென்று கட்டுரை கூறி
னீர், எதிரொருவரும் இல்லாத காவலனே, அந்தக்கரு
ணைக்கண்ணன் எப்பேர்ப்பட்டவனென்றால், தேவர்களு
க்குட் சிறந்த தேவுமாய் மானிடவர் களுக்குள் உயர்ந்த
மானிட உருவமாய் இன்னுஞ் சொல்லுகின்ற பற்பல
கோடி-சர-அசரங்கள்-யாவுமாய் அண்டரண்ட பிரமாண்
டமுமாய் நின்றருளிய ஆதிமூர்த்தியாகிய யாதவ குமார
னுக்கு நான் ஈடாவேனோ அவருடைய வல்லமை எனக்
குண்டாகியதோ அதைரியமில்லாத அரவத் துவஜனே
நேர்நடத்துந் தனிச்செங்கோலுடைய நிருபனே நீர்சொ
ல்லவந்த காரியந்தானென்ன அது இன்னதென்று உம
து நினைப்பை வெளிப்படுத்துமென்று சல்லியராஜன் வி
னவினான்.

அப்போது, பெருஞ்சேனைகளின் சமூகத்தில் நிற்கின்
ற மத்திரதேசாதிபனுடைய முகத்தை நோக்கி துரியோ
தனன் சொல்லுகிறான், தாரணிந்த புயனாகியசல்லியனே
அர்ச்சுனனுக்குத் தேர்செலுத்துகின்ற அரிவாசு தேவ
னைப்போல் சூரியபுத்திரனாகிய கர்னனுக்கு நீர் தேர்செ

ளுத்தவேண்டும், அப்படி செலுத்தாமற் போவீராகில்
இன்றையபபோரில் ஐவரையும் வென்று வெற்றியடை
வது நமக்குத் துஸ்கரமாயிருக்கும் நம்மால் யுத்தஞ்செய்
து யாவருமபிமுப் புகழ்பெறமாட்டோம்-நீர் என்சொல்
லைத் தடுக்காமல ஒப்புக்கொள்ள வேணுமென்று புகழ்
ந்து வணங்கினுன்.

இவ்விதமாகத் துரியோதனன் சொல்லிய அற்பச்சொ
ல்லை ஒருபொருளாய் மதிக்காமல் மனம்புழுங்கி வாட்
டமுற்று வருத்தமடைந்து வணங்காமுடி மன்னனை நோ
க்கி ஓசோ - வடிவேற்றாங்கிய மதிகுல பதியே முன்பின்
பாராமல் என்னைப்பார்த்து இப்பேர்ப்பட்ட சொற்சொ
ன்னுயலலவா, அப்படியாயிறதா யிருந்தாலும் புனமாகிய
வனத்தில் புல்லைத்தின்று உலாவுகின்ற புள்ளிமானுக்கு
வேங்கைபுலியானது தாழ்ந்து ஏவற்றொழில் செய்யும்
படியான பொல்லாத காலம் நேரிடுமாகில் அப்பவல்ல
வோ சல்லியராஜனுகிய நான் கர்னனுக்குச் சாரதியாக
த்தக்கது ஆ ஆ, இப்பேர்ப்பட்ட வசனம் இன்னொருவர்
சொல்லி யிருப்பார்களாகில் அவர்களுடைய நாக்கு இன்
னேரம் என்னபாடு பட்டிருக்குமோ அறியேன் சுயோத
னனுகிய நீ சொன்னபடியால் மனம்பொறுத்தே னென்
று மிகக்கொதித்துச்சொல்லி மழுவைப்போல் மனமறு
க்கக்கொண்டு-புருவம்நெரித்து பகையெழச்சிரித்து பொ
றிவர விழித்து இருகண்ணுஞ் சிவந்து ஏறநோக்கி, சவு
ரிய பராக்கிரமக் கோபமுடைய சல்லியராஜன் வல்லியம்
போற்சுழிழ் பின்னுஞ்சொல்லுகிறுன்.

நான்கு வருணத்தாருக்கும் ரதஞ்செலுத்தா நின்றதே
ர்ப்பாகனுடைய வளப்புப் பிள்ளைக்குத் தேரோட்டுவது
இழிவாகிய வேலையல்லவோ அது உனக்கு எவ்வளவுந்
தோன்ற இல்லையே மதுநிறைந்த வலம்புரிமாலையணிந்த
மன்னனே, மேலும், வீரமுதலிய நிரத்தில் அவனுக்கு
நான் இளைத்தவனல்லவே, அதைப் பரிட்சிக்க வேண்டு
மாகில் இப்போது எதிர்த்து வந்திருக்கின்ற பாண்டவச்
சேனைகளை இரண்டு பங்காகப்பிரித்து எனக்கொரு கூ
றும் கர்னனுக்கொரு கூறுமாக விடுத்து வெற்றிபெறச்
செய்வையாகில் எனக்குப் பங்காகவிட்ட சேனைகளை மு
ன்னதாகச் செயித்து கர்னன் பங்குக்குவிட்ட சேனைக
ளையுங் கொன்று முதன்மையாகிய ஜெயம் பெறுகிறேன்
அப்படி ஜெயம்பெருமற் போவேனாகில் உன்சொல்படி
யே இவனுக்குத் தேர்செலுத்துகிறே னென்று நெருப்
பெழக்கனன்று சொன்னுன் அந்தச்சல்லியன் உரைத்த
வார்த்தையைக்கேட்ட அரவக்கொடிக் ககிபனானவன், ம
னஞ்சலித்து முகம் வியர்த்து உடல்மெலிந்து மனமுரி
ந்து சல்லியராஜனைப் புல்லியணைத்து அழகிய பூலோக
முழுமையும் துதித்து மதிக்கும் ஆண்மிக்கையையுடைய
மத்திராஜனென்னும் போர்வேந்தே, உம்மைப் போல்
மிகுந்த சித்திவாய்ந்து அமர்முனையில் ஜெயித்து அணி
மாமுடியவேந்தர் தொழும் வேந்தராயுள்ள வீராதிவீ
ரர்களுக்கு தேர்விடும்படியாகிய தொழில் மேன்மையல
லவோ, இந்தச் சாரதித்தொழிலானது குறைவற்ற தவ
த்தையடுத்து நிறைவற்ற பவத்தைக் கெடுத்து மானிட

ஜனனமெடுத்து எவரினுஞ்சிறந்து எல்லாக் கலைகளையுங்
கற்ற வல்லவர்களுக்கு வருமேயல்லது மற்றுமேலசாகிய
பேருக்கு வாய்த்தக்கதோ இதுகுறைவாகிய வேலையல்ல
வே மதுநிறைவாகிய மாலையணிந்த சல்லியராஜனே யெ
ன்று விதுகுலபதியாகிய துரியோதனன் பணிந்து கரத்
தைப் பிடித்து வேண்டிக்கொண்டான் அப்போது சல்லி
யன் என்னசெய்வான் பாவம்; (இந்தப் பெரியவன் கை
யைப் பிடித்தால் எப்படி மாட்டோமென்ப தென்னும்
பழமொழிபோல்) ராஜாதிராஜன் வாமாகக்கேட்டுக்கொ
ண்ட சொல்லைமறுத்து வேறொரு விதமாய் வெறுத்துச்
சொல்லுவது தர்மமல்ல வென்று யோசித்து ஒன்றுந்
தோன்றுமல் உடன்பட்டான்.

அப்படிக்கு உடன்பட்ட சல்லியராஜனுடைய மனமா
னது துடிதுடிப்படங்கி பூரணமாக இசையாமல் உள்ள
த் தளர்ச்சிகொண் டிருக்கிறுனென்னும் உண்மையை து
ரியோதனன் அறிந்து அவனுடைய விசனம் நீங்கும்படி
யாய் மெத்தவு நாடி பூர்வத்தில், எமதுபெருமானுனவர்
புரம்பொடிசெய்த கதையைச் சொன்னு னென்று வைச
ம்பாயனர் புகல, அந்தக்கதை என்னவென்று ஜெனமே
ஜெயன் வின்வ, (கண்ணிய வியாதன் சமுனியை யிறை
ஞ்சிப், புண்ணிய முனிவன் புகறன்மேயினன்.) தாரு
காசூரன் பெற்றபிள்ளைகள் வித்துவமாலி தாருகாக்ஷன்
கமலாக்ஷன் இம்மூவரும் கேயூரமணி குண்டல கிரீட க
வஜ மணிமலர் மாலைகளை நீக்கி? சடைமுடி மரவுரி காவி
காம்பர விபூதிமுதலிய தர்ப்பைப்புந்தரித்து தாருகாவனச்
சார்பிலிருந்து பிர்மாவைக்குறித்து வெகுநாள் தவம்புரி
ந்தார்கள் எண்ணிறந்தநாள் தவஞ்செய்த இவர்களுக்கெ
திரில் கோடிசூரியப் பிரகாசம்போல் பிர்மதேவன் பிரச
ன்னமானுர். அந்தத் தேவனை கண்ணிழந் தவர்கள் கண்
பெற்ற தன்மையைப்போல் கண்டு எதிர்கொண்டு சென்
று தீர்க்கதண்டஞ் செய்தார்கள். அவர்களைச் சதுர்முகன்
பார்த்து நீங்கள் என்னைவேண்டி ஏன் தவஞ்செய்தீர்கள்
உங்களுடைய எண்ணமென்ன சொல்லுங்களென்று இ
ரணிய கருப்பன் கேட்க ஐயா-நாங்கள் கால்வழி கால்வ
ழியாக அழியாதிருக்கும் படியாய் வரந்தருமென்று அ
சுரர் உரைக்க அவர்கள்கேட்ட வரத்தைத் தடுத்து நீங்க
ள் முறைமைதப்பி தீதாகிய வரங் கேட்பது ஞாயமல்ல
இவ்வுலகத்திற் பிறந்தபேர்களிலும் மேலுலகத்திற் சிற
ந்தபேர்களிலும் சாவில்லாமல் பிழைத் திருந்தபேர்கள்
யார் நாமரூபம் ஏர்ப்பட்டபோதே அழிவென்பதுவுடற்
பிறப்பென்று அறிய மாட்டீர்களா அந்த ஒருவரந் தவிர
மற்றெதுகேட்டாலுந் தருகிறேன் சொல்லுங்களென்று
சரோருகத்தன் விளம்ப அசுரர்கள் அம்மொழியைக் கே
ட்டு திரிலோகத்திலும் சிறப்புப்பொருந்திய சீர்வளந் தி
ருந்திய செம்பொன் வெண்பொன் கரும்பொன்னுலாகி
ய மூன்று மதில்களையுடைய புரமூன்றும் நினைத்தயிடத்
திற் சிறக்கப் பறக்கத்தக்கதாய் அருள்செய்யவேணும் ஐ
யனேயென்று நிசாசர்கேட்க அப்படியே திரிபுர மென
னும் பெயரை உடையதாகிய புரமூன்று தருகிறேம் அ
வைகளுக்கு அழிவெப்படியென்று அயன்கேட்க ஐயா
எவர்களாலும் ஜெயிப்பதற்கரிதாகிய புரங்கொடுப்பிராகி

ல் அந்தப்புரத்தை ஒப்பற்ற ஒருவன் மூன்று மதிலி னு
டைய குணத்தைக் கூட்டி விற்குணத்தைப் பூட்டிக் கண்
ஸரிமைகொட்டுமுன் ஓரோபாணங் கொடுத்து அடித்துஅ
டுத்தகாலத்தில் இம்மூன்றுபுரமும் கடமையாக அழிந்து
போகக் கடவதென்று அநுக்கிரகஞ் செய்யும் ஐயாவெ
ன்று மூவருந்தொழுது வாழ்த்தி னர்கள் வாசனையும் ம
ணமும் நிறைந்த மலரோன் அவர்களுடைய கட்டளையி
ன்படி வரங்கொடுத்து ஒளிவந்தவழியே வெளிமறைந்து
போனார்.

இந்த மூவரும் அந்தப் பிரமாவைவாழ்த்தி வணங்கிமய
னை அழைத்து மாலமகன்சொன்ன வாக்கியத்தைக் கூறி
னார்கள். அந்தப்படியே குற்றமற்ற மூன்று மதிலபெற்ற
மயனுடைய ராக்ஷசக்கம்மியனானவன் நகரமூன்று படைத்
து நல்வளங்களெல்லாஞ் சமைத்து திரிபுரமென்றுபே
ரிட்டு அரியதவம்புரிந்த அரக்கர் மூவருக்குங் கொடுத்
தான் அந்தவிடத்துற் குடிபுகுந்து நல்ல சம்பத்துடைய
வர்களாய்ப் பெரியோர்களும அருந்தவமுனிவர்களும் த
லைகுனியும்படியாய் தேவர்கள் வணங்கி ஒடுங்கி ஒடும்படி
யாய்த் திரிபுரத்துடன் திரிலோகத்தையும் புரந்து சூரிய
னுந் தோற்கும்படிக்கு மேற்குத்திசையில் ஓட்டி மாணி
க்க முடியினை யுடையவர்களாய் பலப்பட்டுப்போய் பல
வகை இன்பங்களும் அனுபவித்து தங்களுக் கொரு கு
றைவுமில்லாமல் ஒருவரும் தமக்கு எதிரில்லாமல் சம்பி
ரமமாக யிருக்குஞ் சமயத்தில் இந்த மூவருக்கும் பிறந்
த பிள்ளைகள் உயர்ந்த நான் முகக்கடவுளைநாடி கோடிகா
லந் தவம்புரிந்து தவத்தைகூடி ஏழுலகமுதலிய உலகத்
தை வெல்லவும் சத்துருக்களைத்தாங்கள் ஜெயித்துக்கொ
ள்ளவும் சத்துருக்கள் தொட்ட வாளிகளினால் தாங்கள்
சாகா திருக்கவும் தங்களவர்களில் ஆராகிலும் ஒருவே
ளை மடிந்தால் பத்துப்பெயராய்ப் பிழைத்து வரும்படியா
கவும் வரங்கள்பெற்று, (ஆணவம்-மாய்கை-காமியமுதலி
ய மும்மலத்தையும் தீவினைக்கூட்டம் விளைக்குந்தன்மை
போன்று) தங்களுக்குத் தாங்களே மேலாய்விளங்கி உ
ரம்பொருந்திய வில்லாண்மையாலும் கரந்திருந்திய மல்
லாண்மையாலும் வீரகண்டைதரித்த தாளாண்மையாலு
ம் பாரகண்டுபொறுத்த தோளாண்மையாலும் கமல ம
லர்மாலையணிந்த பிரமதேவன்கொடுத்த வரத்தின் ஸ்திர
த்தினாலும் சிறந்து, ரதகஜ துரக பதாதிகள்முதலிய ரா
க்ஷசபபடைகள் மிகுந்து கடல்போ லிரைந்து விரைந்து
விரிந்த திசைசூழ்ந்த பூமண்டலமுதலிய எண்டிசை யெ
ல்லாம் மிண்டுசெய் கண்டக துண்டர்களாகி, சண்டனும்
இவர்க்குத் தொண்டுசெய்யும்படியாய் மாலையிலங்கியமா
ர்பினராகி மாய்கை நிறைந்த வாளரக்கர் மயமானார்கள்.

இவ்விதப் பெருக்கமுடைய ராக்ஷசர்களையும் அவர்க
ள் செய்யாநின்ற கொடிய தீங்கையும் முனிவர் முதலாகி
ய தேவர்கள் கண்டு நடுங்கி பயங்கொண்டு ஒடுங்கி நெஞ்
சு கலங்கி அஞ்சிவிலங்கி தேவேந்திரனைக் கூட்டிக் கொ
ண்டு சத்தியலோக வாசியாகிய சரஸ்பதி நாயகனென்னு
ம் சதுமுகனிடத்திற்போய் சாஷ்டாங்கமாகப் பணிந்து
தானவர்களால் தங்களுக்கு நேரிட்ட சங்கதியைச்சொல்
லி அபயந்தங் கேட்டார்கள்.

அந்தமொழியைக் கேட்ட தட்சணமே அவர்களை அ
ழைத்துக்கொண்டு க்ஷீராப்தியில் யோகநித்திரையி லிரு
க்கின்ற திருமாலிடத்துக்குப் போய் அவரை இயாவருந்
தரிசித்து வணங்கி சமீபத்திலிணங்கி தங்கள்குறையைப்
பகர்ந்தார்கள், அவைகளைக்கேட்டுணர்ந்த மலரகிதனுகிய
கேசவன் அரக்கரால்விளைந்த பொல்லாங்கை யெல்லாம்
தன்னுட்கொண்டு அந்த ராக்ஷசரை வென்றொலாழிய
வேறொரு நன்மையுமில்லை என்று எல்லோருங்கூடி கயி
லாச பதியினிடத்திற்குப்போய், அந்த ஈஸ்பர னுடைய
சன்னிதானத்துக்கு முன்போகமாட்டாமல் அஞ்சி அஞ்
சி ஒதுங்கி ஒதுங்கி அவடத்திலிருந்து ஆலாலமுண்ட அ
ரனைக்குறித்து ஆயிரந்தேவவருஷம் அருந்தவம்புரிந்தார்
கள் அப்போது அந்தவண்ணல பிரசன்னமாகாததினால
சிந்தைமெலிந்து நொந்து வருந்தி வெகுஜனங்களும் தவ
ம்விட்டெழுந்து உமாமகேசன் உறைந்து வாழ்கின்றமா
சுமறுவற்ற கயிலையங்கிரிக்குச் சென்று தலைவாசலில்நின்
று நந்திதேவருடைய அருள்கொண்டு பரமசிவம் எழுந்
தருளி யிராநின்ற பவளக்கால்மண்டபத்திற் போயிருந்து
பராபரைதழுவிய பராபரத்தைவாடிய பயிர் மழைகண்ட
வாறுபோற்கண்டு தேடியபொருள் சிக்கிய விறுபோற்
கொண்டு தெண்டனிட்டுத் தொழுது எழுப்போற்றி,தி
னையில்லாத அன்பு கனிந்தொழுகும் ஆநந்த மயமாகிய
ஆயனைவர் தமது நான்கு நாவினாலும் ருக்கு-சாமம்-மு
தலிய வேதத்தை அனந்த முறையாக எடுத்தெடுத்து ந
டேசனுடைய பெருங்கீர்த்தியை அலங்கலங்காய் ஆய்ந்
து தமக்கு மோக்ஷவீடு கூடியதென்று மேலாகிய இன்ப
ம் விளங்குகின்ற அடிபணிந்தேத்தி ஆடிப்பாடினார்,

ஐந்தொழிற்செய்யும் ஆநந்தம் அமைந்த அரகரசம்போ
ஜீவன்முத்தர்களாகிய மெய்யர்களின் மெய்யில் மெய்யா
கிய சத்தியமாக விளங்குகின்றனை வேத வேதாங்கத்திற்
கூறிய நன்னெறிமுறை வழிசெல்லாத பொய்யர்களின்
பொய்மொழிவழியிற் பொய்த்திருக் கின்றனை பொய்மை
யென்றும் மெய்மையென்றும் சம்மந்தப் புணர்ப்பில்லா
மல் மானிலத்தோர்களுடைய சந்தேகநிக்கிரகபதியென்
னும் பான்மைகுன்றாமல தேவரீருடைய உயிராக இரட்
சித்தனை இனிவேறென்ன சொல்லத் தக்கது அல்பாளா
கிய நோய்யர்கள் தேவரீரைமதித்தலும் மதித்துத்துதித்
தலும் நிந்தித்தலும் சிந்தித்தலும் பிரபஞ்ச சுபாபமாயிரு
க்கின்றது பிரமமாகிய தேவரீரோ காலமாயினை சூரியசந்
திரராயினை கடவுளாயினை முனிவராயினை ஆகமமுதலிய
வேதங்களாயினை இந்தப் பூமியாகிய பிரிதிவு ஆகாயம்-அ
ப்பு தேயு-வாயு இவைகளான பூதகோல மாயினை பசுவா
கிய உயிர்களாயினை-அவ்வுயிர்களுக்கு மோக்ஷம் அருளு
ம் பசுபதியுமாயினை குணமுமாயினை முத்தொழில் வல்
லோர்களுக்கும் முதன் மூலமாயினை பேதமாயினை முத்
தியாயினை-அத்தனே கர்த்தனே தேவரீரைக் கண்டவர்
சிலபேர் கண்டுவிண்டவர் சிலபேர் காணாதவர் சிலபேர்-
பேணாதவர் சிலபேர் இயாவருங் கருதுகின்ற வேதவிதி
வழிப்படியே கைக்கொண்டுளார் சிலபேர் அவ்விதியை
அனுசரிக்காமல் கைவிட்டவர் சிலபேர் பொருந்தியஅன்

புள்ளார் சிலபேர் அன்பில்லார் சிலபேர் புராதனமாகிய குறிகளையும் செய்கைகளையுங்கண்டு உண்மையாக நெடுநாளுடையவர்கள் சிலபேர் இப்போ திருப்பவர் சிலபேர் பாசபந்தமாகிய நல்வினை தீவினைகளை நீங்கினோர் சிலபேர் நீங்காதவர் சிலபேர் இவைகளெல்லாம் தேவரீர் நடத்தும் விதங்களல்லாமல் வேறொன்றில்லை எல்லாம் உன் செயல் ஈசனேயென்று பற்பலவிதங்களாய்ப் பாடிப்படித்து இறைஞ்சி ஏத்தி எட்டுக்கண்களிலும் ஆநந்தபாஷ்பம் சொட்டிட் டோடும்படியாய்த் துதித்து வாய்புதைத்து வணங்கி நிற்கின்ற மலராயன் மால்முதலாகிய பேர்களின் முகத்தை நோக்கி நீங்களெல்லோரும் இவடம்வந்த காரணம் யாது சொல்லுங்கள் பயப்படாதிர்களென்று யாதொருபயமும் அற்றவராகிய சுந்தரேசர்கேட்க அவர்களெல்லோருங்கூடி பேரானந்தக் கூத்தாடி மனமகிழ்சியாகி இனி நமக்கு நல்லகாலமென்றுசந்தோஷங் கொண்டாடினார்கள்-அப்போது அம்சவாகனனாகியபிர்மதேவன் சொல்லுகின்றார்.

பிரமமாக விளங்காநின்ற பரமசிவமே பாபஅரக்கர் குலத்திற் பிறந்தும் அழியாது தப்பிய மூதன் மூவர்களில் தாருகாக்ஷன் பெற்ற மூன்றுபிள்ளைகள் என்னை நோக்கி அருந்தவ மிருந்தார்கள் அந்தத் தவத்துக்கிரங்கி தேவரீருடைய அருட்செயலானது என்னைச் செலுத்துதலினாலே நான் அவர்களுக்குப் பிரசன்னமாய் அவர்களுடைய கருத்தறிந்து சிறப்பாகிய என்மனது உவந்து அவாள் எண்ணியவண்ணம் எல்லாவரமுங்கொடுத்தேன் ஆனால்திரிபுரமும் அந்தத்தீயரும் சீக்கிரத்தில் அழியும்படியாகச் செப்பி இருக்கிறேன் இதுஉண்மையான் காரியம் உலவாப்பெருங்குணத்து உத்தமனேயென்று உந்திபூத்தோன் உரைத்து மறுபடியுஞ் சொல்லுகிறா-என்னைவேண்டிவினையமாகத் தவம் இழைத்து தங்களுக்குவேண்டிய தனமெல்லாம்பெற்றுக்கொண்ட அசுராள் திரிலோகத்தையும் அடக்கி தேவர்கள்தம்மை வணங்கத் தக்கதாய் மடக்கி தேவதாபூசை ஆசாரிய பக்தியை ஒடுங்கி-ஜெயங்கொண்டு பாபத்தொழிலிற் குடன்பட்டு மேன்பாடாயிருக்கிறார்கள் வேதமுதல்வனாகிய வெள்ளி விடையாய் தேவர்களுக்கு உணவில்லாமல் யாகாதிவேள்விகளும் தவமுதலாகிய தர்மங்களும் பொய்த்துப்போய் விட்டது அவர்களைக் கொல்ல நல்ல வல்லபமுடையவர் தேவரீராயல்லது வேறொருவர் மற்றெந்த தேசத்தினுமில்லை ஆகையால்-தேவரீருடைய திருவடிக்கடிமையாகிய அடியேங்களெல்லாம் சிறுமைநீங்கி பெருமை பெறும்படியாய் அந்த அசுரரைக்கொன்று அறத்தை நிலைநிறுத்திஎங்களைக்காக்கவேண்டியது ஆதிமூர்த்தியே யென்று அயன்முதற் றேவரும் துதித்தார்கள் அவர்களுக்கிரங்கிய அஞ்சொலாட்சிபாகனாகிய அந்திவண்ணன் கிருபை பூரித்து தேவேந்திரன் முதலாகிய பேர்களைப்பார்த்து சொல்லுகிறார்.

ஓ, அமரர்களே, இந்தச்சுராசுரர் முதலியபேரும் நமது அடியார்கள்தான், சகலஉயிரும் நம்பும் படியாகப்பொதுமையாயிருக்கிற பசுபதி யென்னும் நாமமுடையவன் நான் தேவர்களுக்காகயிரங்கி அசுரரை ஒறுத்துக்கெடுப்பது இயற்கையல்ல, உங்களுக்குள்ளே நீங்கள் பகைத்துச்சண்டை செய்வீராகில் வஞ்சகராகிய அசுராள்தாழ்ந்து அபஜெயம் அடையவும், நீங்களெல்லாம் மிகுஜெயம்பெறும்படியாகிய புஜபலவலிமையும் கொண்டு இருக்கிறார்களென்று கூற்றுதைத்தோன்கூற, அந்தவசனங்கேட்ட அமரரெல்லோரும் அரவாபரணனுடைய அடிமேல்விழுந்து அடைக்கல மென்றிரைந்து அஞ்சலிசெய்துதாழ்ந்து உமது அருள்கிடைத்தபோதிலும் அவர்களை வெல்லமாட்டோம் எங்களாலில்லை, மெத்தபயந்திருக்கின்றோம் நாங்கள் செய்ததவவலிமைப்பலனெல்லாந் தங்களுக்கே தந்தோம் எங்களை அடிமை கொண்டுரக்ஷியும், தேவரீர் கிர்பாநிதியாகிய பசுபதியாயிருந்தபோதிலும வஞ்சகராகிய துஷ்டர்களைக்கண்டித்து நிக்ரகித்துசிஷ்டர்களைப்பக்ஷம்வைத்து அனுக்கிரகிக்க வேண்டுமே இப்படி செய்வதினால் தேவரீருக்கும் பெருமையேயல்லது சிறுமையாகியவசையில்லையே தேவாதிதேவனே, நாங்கள்யாவரும் தஞ்சமென்று அடைந்தோம் எங்களைக்காப்பது உமதுகடன் அப்படிக்குக்காக்க மனமில்லா விட்டால் தேவரீருடையகண்டத்தில் வைத்தருளிய நஞ்சத்தைவிட்டாகிலும் எங்களை நாசப்படுத்தி விடும் நாதனேயென்றுநான்முகன் முதலாகிய பேர்களும் நாரிபாகனுடையதிருவடியைச் சென்னியிற்சூடி நெடுநேரம்வரையிலும்நைந்துருகினார்கள்-பிர்மா-விஷ்ணு - முதலாகிய பேர்களும் வந்து இரந்திடுங்காலையில், இவர்கள்பேரில் அன்புவைத்துரட்சிக்க வேணு மென்னும் இச்சையுடையவராகியும் அலைகடலிற் பிறந்த ஆலகாலவிடம்போன்ற அசுரரை நாசஞ் செய்வதற்கு யோசனைசெய்து அந்தவிஷயம் விருப்ப மில்லாதவராகியும் இருந்து எதிரில் பொருந்தி நிறைந்த பூசுரன் முதலினோரைப்பார்த்து நல்லது இன்னஞ் சிலநாள் வரைக்கும் நீவிர் யாவரும் பாசுபதவிரதங்கருதுங்களென்று அந்த மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்தருளினார்.

அந்த மந்திரத்தை உபதேசக்கிரமமாகப்பெற்று கயிலையங்கிரிச் சாரலையுற்று அமரர்முதலியயாவரும் அநேகமாயிரவருடம் அருந்தவமிருந்தார்கள், அவர்கள்விரும்பிச்செய்தபாசுபத விரதத்துக்குப் பவனாசன் மெச்சி, உச்சிதமாகிய விடைமேலெழுந்து பிரசன்னமானார்.

அப்போது, வரந்தரவந்த அரனைஎதிர்கொண்டு வணங்கிவாழ்த்தித்தோத்திரிக்கின்ற பேர்களைகிருபையாகநோக்கி அந்தத் திரிபுரமானது அழிந்து நீறெழும் படியாய்எரித்துப்போடுகிறேன், நீங்கள் இதைக் குறித்து வருந்திச் சிந்தனைசெய்ய வேண்டியதில்லை, ஆனால்-அந்தஅசுரர்கள்பேரில் சண்டைக்குப்புறப்படவேண்டி யிருப்பதால் அதற்கு வேண்டிய-தேர்-சாரதி-வில்-பாண முதலியதுங் கொண்டு வாருங்களென்று சொன்னதிருடிய கோமான் கூற விண்டுமுதலிய யாவரும் பண்டுசெய்த தவப்பலன்கண்டோமென்று களியுட்கொண்டு கங்கை வேணிநாதன் வாக்கியமாகிய வேதவிதிப்படி ரதஞ்சமைத்தார்கள்.

அதெப்படியென்னில்-அழகிய சக்கிரவாளகிரி அச்சாகவும் சூரிய சந்திரான் சக்கரமாகவும் குழுமியபூமி தேர்

த்தட்டாகவும் அஷ்டகுலாசலம் குத்துக்காலாகவும்மே
ற்கொடுங்கை முதலாகிய உறுப்புகளும் சித்திரப்பதுமை
களும் தேவர்களாகவும் ஜெகதலபிம்பம் கலசமாகவும்அ
ண்டகடாகக் குடையாகவும் பற்பல நிறம்பெற்ற சமுத்
திரங்களெல்லாம் தேர்ச்சீலையாகவும் நீருண்ட சப்தமே
கங்களானது சமுகாகவும் பசுமையாகத் தாழுவிட்ட வா
ழையாகவும் நிலைபெற்ற ஆறுசமயங்களும்அஸ்வங்களா
கவும் மாறிலா வேதம் நான்கும் குதிரைபூட்டுதற்கு வட
மாகவும் கெடுதிபடாத குடிலென்னும் அக்ஷரமானது
குதிரையோட்டு முட்கோலாகவும் விவேகத்திற் சிறந்த
விதியாகிய பிர்மாவை சாரதியாகவும் அமைத்து அலங்
காரமாகத் தேரொன்றுசமைத்து மகமேருவி னுடைய
வலுமைகளையெல்லாம் வில்லாகத் திரட்டி-இந்தப் பூமி
பாரந்தாங்கிய ஆதிசேடனை நாணியாய் பிகிர்த்து அண்ட
த்தை அளந்தருளிய விஷ்ணுவாகிய மேகவண்ணனை நா
ராயண அஸ்திரவடிவாக்கி அந்த அஸ்திரத் துக்கு தீக்ஷ
ண்யமாகிய அக்கினிதேவனை கூர்முனையாகக் கூட்டி பிர
சண்டமாக வீசுகின்ற பலம் பொருந்திய வாயுதேவனை
அந்த நாராயண பாணத்துக்குறொக்கையாகக்கட்டி நிரை
த்து நெடியோன்முதலிய பேரும் சந்திர சடாமுடியோ
னிடத்திற் சென்று ஐயா தங்களுக்கு தேர்முதலிய வில்
லும் பாணமும் அமைத்துக் கொண்டு வந்தோமென்று
நாமென்னும் மமதைகொண்டு சொல்லவும் மால்விடை
ப்பாகனாகிய மஹேசன்தலை சாய்த்துப் பார்த்து சடைமு
டியசைத்து இந்தத் தேருக்குச் சாரதியாக அமைந்தபெ
ருமைபெற்றவர்கள் எவ்வளவு சாஸ்திரங்களை ஆய்ந் து
ணர்ந்தோ ராஜனும் விவேகஞ்சிறந்த மேலானவர்களா
ல் சாதித்தனஞ்செய்ய முடியுமேயல்லது சாமானியர்க
ளால் முடியமாட்டாது அதற்குரிய காரியச் சொற்களைக்
கேளுங்களென்று கண்ணுதல் விளம்பினர்.

அண்ணலாகிய சல்லியராஜனே கேளும் தேர்ப்பாகன்
சேர்ப்பாக யிருக்கவேண்டிய திறங்கள்யாதெனில், சூழ்
ந்துவரும் வேசம்பொருந்திய குதிரைகளின் இருதயமும்
நாயகனுடைய சாமர்த்தியமும் தங்களுக்குரிய காலமும்
தாங்கள் போகின்ற இடமும் தங்களுக்குநேரிட்ட துணை
வலியும் தங்களுடைய தோள்வலியும் நடக்குங் காரியங்க
ளும் நடக்கப்போகிற காரியங்களும் இவைகளுக்குக் கா
ரணங்களும் எதிராளியின் பலமும் நமக்கும் அவனுக்
கும் நேரிட்டிருக்கிற பகைத்திறமும் நால்த்திறமும்விவே
கத்திறமும் அறிந்திருக்கின்ற பாரமார்த்தியன் எவனோ
அவனைத்தான் வல்லவனென்றுரைப்பது அப்பேர்ப்பட்
டவன் கிடைப்பது அருமை மேலும், தேர்ப்பாகனவ
ன் இப்போது நாம்சொல்லிய சாஸ்திரப்பழக்கமும் புத்
தியும் இத்தன்மைவாய்ந்த திறமும் உடையவனாகி இருப்
பானாகில்-அப்பேர்ப்பட்ட சாரதியையுடைய எஜமானுக்
கு பிராணனும்-மானமும் - அழகும்-கீர்த்தியும்-வாக்கின்
வலிமையும்-புயவலிமையும்-வெற்றியும்-இன்னமுள்ள ம
ற்றவைகளெல்லாம் பூரணமாக உண்டாகும் இத்திறங்க
ளில்லாத சாரதியை உடைய எஜமானனுக்கு மேற் கூ
றியதிறங்கள் கொஞ்ச நஞ்சமிருந்தாலும் உபயோகப்ப
டாமல் கெட்டுப்போவதுமல்லாமல் அபஜெயத்தையும்
விளைக்கும் அந்த மொழியின்படி. யோசிப்பதற்கு எனக்
கிப்போது சாரதித்தொழில் செய்யும்படியாய் ஏர்ப்பட்
டவர்கள் ஆறொன்று தங்களுக்கிசைந்த சந்திரசேகர நாய
கன்கேட்க-சத்தியலோக வாசியாகிய எண்கண்ணனு னெ
ன்று இயம்ப அதைக்கேட்டு உத்தமம் என்றுரைத்து
காமக்கோட்டியுடன் விடையேறிக்கொண்டு கயிலையங்கி
ரிவிட்டு நீங்கி ரதத்தண்டைக்கு வந்தார். அவடத்திலிரு
ந்ததேவர்களெல்லாரும் ஆர்ப்பரித்து அரகாசம்போவெ
ன்றுமால்விடைமேலூன்றிய மலரடியைவணங்கினர்கள்.

அப்போது, எப்பொருட்கு முரித்தாய் எல்லாருடை
ய அன்பிலும் நிறைந்த அம்பிகைபாகன் ரிஷபவாகனம்
விட்டிறங்கி தேரின்பேரில் ஒரு திருவடியை ஊன்றினர்
ஊன்றுமுன்னே உரம்பெற அலங்கரிந்த ரதமான துமள
மளவென்று முறிந்தது. உடனேதேவர்கள் புத்தியற்றோ
ம் கெட்டோமென்று தங்களுடைய கர்வத்தைத் தாங்க
ளே அடக்கிக் கொண்டு தொழுது அழுதார்கள் அந்தச்
செய்கையைக்கண்ட அரவாபரண ராவவர்திருவருட்பா
ர்வைதாங்கிய திருநீற்றினால் ஸ்திரம்பெறச் செய்து தே
வியோர்பாகன் தேங்கமழ்ந்த மாலையுடன் திருவடி பொ
ருத்தி தேர்மீது வீற்றிருந்து ஆடிகரங்க-துந்துமி-ஆர்ப்ப
தவளைச்சங்குமுதலிய திருச் சின்னங்கள் - ஓங்கிமுழங்க
தேவகணங்கள்-பூதகணங்கள் - பூமியிடங் கொள்ளாமல்
நெருங்க-விக்கின விநாயகர்-பாலசுப்ரமண்யர்-வீரபத்திர
ர்-வைரவர் இவர்களாகிய பிள்ளைகளும், அயன்-ஹரி-இந்
திரன் முதலியபேர்களும், தங்கள் தங்கள் வாகனருடரா
ய்ப் பக்கத்தில் நெருங்கிவர-பாம்புகளுக்கு எதிரில் பேரி
டியிடித்துச் செல்லுந்தன்மைபோல் வீர ஆர பாரத்துட
ன் ஒருநாழிகைக்குள் திரிபுரமாகிய மூவெயிலிருக்குமிட
டம் நாடிச் சென்று எதிர்நின்று நோக்கி திரிலோகத்தி
னுஞ் சிறந்த திரிபுரங்கள் ஒரிடத்திற் சேர்ந்திருக்குமாகி
ல் வெல்லலாம்-அப்படி இராமல்வேறுபட்டு தனித்தனி
யிருப்பதினால் செயிப்பது அருமையென் றுன்னி, (கவ
சம்விளைத்தால் காரிய முண்டென்னும் பழமொழியைப்
போல்,) மகம்மேருவென்னும் வில்லைவளைத்துப்பிடித்த
மகதேவரானவர் நாராயணாஸ்திரத்தைப் பூட்டிவிடுத்தார்
உடனே மூன்றெயிலும் ஒன்றுகூடிவந்து எதிர்ந்தார்கள்
தன்பக்கத்தில் இளைத்த நுண்ணிடையோடிருக்கும் இம
யவான் புத்திரியைப் பார்த்து இளநகைப்பாக நகைத்த
ருளினர். அது ஒருக்ஷணத்துக்குள்ளாக தீப்பொறிமலி
ந்து திக்கெனவெரிந்து திரிபுரம்பொரிந்து-தியராகிய அ
சுரருங் கரிந்து சாம்பராய்க் கழிந்தார்கள்.

இப்பால், தேவர்கள் குறைதீர்த்த திரிபுராந்தகன் திரு
ம்பி கயிலையங் கிரிக்குவந்து தம்மை அடிதொழு தேற்றி
ய, அரி-அயன்-அமராவதியோன்-முதலாகிய அமரர்களு
க்கும் அருளளித்து, இனிமேல் உங்களுக்குத் துன்பமி
ல்லை உங்களுங்கள் பதமாகிய எதாஸ்தானத்துக்குப் போ
ங்களென்று விடைகொடுத்து தாமும் விடைவிடுத்து உ
மையுடன் கயிலாயத்தில் உவந்திருந் தருளினர் அவராா
ரெனில், வேண்டி விரும்பியபேர்களுக்கு வேண்டிய உ
ருவமாம் விமலன்.

கேட்டீரோ, சல்லியராஜனேவாசமுற்ற மலர்மாலைபெற்ற என்தந்தையாகியதிரிதராட்டிரனுக்கு இந்தச்சரித்திரத்தை மார்க்கண்டேயர் சொன்னார். நான் பக்கத்திலிருந்து கேட்டுணர்ந்த வண்ணம் உமக்குச் சொன்னேன்கொ. கமுகங்கள் பொருந்தி வாழ்ந்த பகுவச் சோலைகள் நெருங்கிச் சூழ்ந்த மத்திரதேசத்தலைவனே சாரதித் தொழில்செய்யாநின்ற சாமர்த்தியத் தன்மையானது அநேககாலம் தவமிருந்தபேர்களுக்குக் கிடைக்கும் பெருமையோ யல்லது மற்றச் சாமானியர்களுக்குக் கிடைக்கத்தக்கதோ ஆதலால், தேர்செலுத்துந் தொழிலானது மெத்தவும் சின்னத்தொழி லென்றும, அதனால் மிகவுஞ் சின்னத்தனமென்றும், உமது சிந்தையில் எண்ணுகிர் இது ஆர்செய்கிற வேலை இது ஆருக்குத்தெரியும் இந்தத்தொழில்முறை தெரிந்தவரியார் என்றால், வல்லவராகிய கிருஷ்ணனும், தேவரீரும் கீர்த்திபெறும்படியாய்க் கற்றிருக்கின்றீர்கள் அல்லது வேறொருவருக்குந் தெரியாது, இப்படிக்கு அருமைபெறக்கற்ற வித்தையை அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் உபகாரப் படுகிறதுபோல், என்பொருட்டால் உபயோகிக்கச்செய்யாமல் நீர்தடுப்பது என்னகாரணமென்று பலபல விதங்களாகப்பேசி, மேகத்துளியைப்போன்ற மின்னற்கணைகளை விடுக்கும்; துரியோதன மகாராஜனானவன், மறுபடியுஞ் சொல்லலுற்றான்.

மத்திரபூபதியாகிய மன்னனே, அங்கதேசாதிபனாகிய கன்னனுக்குத் தேர்விடுஞ் சாரதியாக ஏர்ப்படுவது நமது தீவினைப்பயன் என்று உன்மனத்தில் வருத்தங்கொள்ளாதே, அங்கக்கர்னன் எப்பேர்ப்பட்டவ னென்றால் ஒப்பில்லாத உரம்பெற்றவன், தப்பில்லாததனுமறைகற்றவன் அடல்புரியாநின்ற தடக்கையை யுடையவன், மிகுகொடையாளன், கவசகுண்டலத்தோடுபிறந்தவன்; சுடர்மேனியுடையவன், சொற்சோர்வுபடாத நிலையுள்ளவன், ஒரு காரணத்தினால் சவ்வியசாசியைக் கொல்லும்படியாய் வந்து பிறந்திருக்கின்றவன் நாரணனுக்கு இணையானவன் கலைப்பயிற்சியிற் பூரணக்ஞான புண்ணியன், புகழ்ப்ரதாபனாகிய கன்னியன்-போர்மழுவாளி யென்னும் பரசிராமனானவர் தமக குற்றதுணையாகிய ஆரணமந்திரங்களுடன் திவ்வியாஸ்திரங்களெல்லாம் அளித்திருக்கின்றார்-இதுவே போதுமாகிய சாட்சியாயிருக்குது ஐயா, சல்லியராஜனே, அதெப்படியென்றால் சொல்லுகிறேன்கேளும் பாரதபுகழிற் சிறந்த சமதக்கினி முனிவருடைய தவத்தாலுதித்த சிரேஷ்டபுத்திரனாகிய இந்தராமனானவர் - கயிலாசபதியைக் குறித்து சிலநாள் தவமிழைத்தபோது பார்வதி பங்கனாகிய பரமன் சீரணிமலரணிந்த செஞ்சடையிலங்க விரியவிடைமேற் காட்சியாய்வந்து உனக்குவேண்டிய வரங்கள் சொல்லென்று கேட்க, வேதியனாகிய முதலவதார ராமனெழுந்து தொழுந்தன்மையிற் சிறந்த துதியெல்லா மோதி-மதி-கூவிளம்-எருக்கு-தும்பை-கங்கை-அறுகு முதலிய மலர்மாலை தரித்தருளிய மதிமுடிப்பரனே ஆகாயத்தி லிருக்குந் தேவர்களும் சூரியசந்திரர் காலவழிதோன்றிய ராஜாக்களும்; சாமர்த்தியம்பெற்ற என்தந்தையை சிந்தை நோவச்செய்து சேதித்துப்போட்டார்கள். அந்த அவனிபர் யாவரையும் நான்வென்று தந்தையின் கடனைமுடிப்பதற்கு நிர்வாகமில்லாதவனாயிருக்கின்றேன் தேவரீருடைய கிருபையினால் ஜெயிப்பதற்கு திவ்யாஸ்திரங்களும் வில்லும் ஒப்பில்லாத வல்லமையும் அருள்செய்ய வேணுமென்று பலவிசை தாழ்ந்து வீழ்ந்து வாழ்த்தேனென்று மகிழ்ந்து மானிடமேந்தியின் மலரடியை தனது முடிமேற்பரித்து.

வந்தித்தபோது அந்திவண்ணன், தந்தைபோல்மகிழ்ந்து தருவோமென்று, செந்துவர் வாயான் சுந்தர உமையொடு, நந்திமேலேறி நடந்தான்போனார், வந்தான்மறைந்த வாறறியாமல், அன்புமேற்கொண்டு அநேகநாள்நின்று, அருந்தவம் ஆற்றி அருந்தகைஉறும்நாள், அடியார்அன்புறு வாகியநாதன், முடிசேர்பச்சைக் கொடியுடன்வரவும், படிமேல்விழ்ந்து பாடித்துதித்து, உருகிக்கண்ணீர் பெருகிக்கரைந்த, வேதியன்றவத்தை வியந்துவியந்து, பாதியாளுடனே பக்ஷமாயணைத்து, துன்பங்கள்தீர்த்து சுடர்மழுவளித்து, இன்பமார்படைகள் இருக்குடன்கொடுக்க, உத்தமன்பேறு, ஒருவர்பெருமையால், கற்றவர்நற்றவக் ககனவாணரும், மெத்தப் புகழ்ந்து மிகுஜெயங்கூறி, ராமனைப்பரசி ராமனென்றுரைத்து, வாமாங்கதன்வெண்மலைக்கெழுந்தருள, கொற்றமர்பரசி ராமனுக்குறுகி, பற்றலர்தம்மைப் பாழ்படக்களைந்து, அத்தனுக்குரிய அருங்கடன்முடித்து; வெற்றிசேர்படையும் வில்லும் அகற்றி, மறுமைப்பயனை மனந்தனில்நாட்டி, சிறுமைப்பயனைச் செறுத்தகலோட்டி, நற்றவம்புரியு நாளையிலோர்நாள், கொற்றமார்கன்னன் குறுகிப்பணிந்தான். அத்தனும்அணைத்து ஆதவகுமாரதத்வக்ஞானசம்பன்னனென்று, அடவுடன்படையெலாம் அளித்து அருள்புரிந்து, விடைகொடுத்துஅனுப்ப மீண்டனன்கர்னன், சாரதிபெற்ற தநயனுமென்னில், ஆரணமுனிவன் அருள்செய்யானையா, உற்பவத்துண்மை ஒருவரும்அறியார், கற்பனை ஆணவக் கற்மிகள்தூறுவார், விற்பனவிவேக வேந்தசல்லியனே, அற்பமாய்இழிவாய் அகத்தினில்நினையேல், நமக்கெலாம்மேலாம் நற்குலப்பாலன், உமக்குநான் இனிமேல் உரைப்பதொன்றில்லை, கன்னன்புகழும் கருதும்என்வாழ்வும், உன்றால்இன்று உயர்வுறவேண்டும், கன்னனால்விஜயன் கால்சாய்ந்துமாளவும், மன்னனாய் முடிகொண்டு வையகம் ஆளவும், உன்னைநான் அடுத்தேன் உரிமையுங்கொடுத்தேன், வன்னமாம்சல்லிய வீரரோறே, ஆர்க்கிது கிடைக்கும் அஸ்வமூர்நற்றொழில், பார்க்குள்முன்வெகுபேர் பாக்கியம்பெற்றோர், செங்கமலத்திற் சிறக்குந்திசைமுகன், தங்கியஉலகிற் சராசரம் பெற்றோன், முப்பாலிரண்டுடன் மூதறம்வளர்க்கும், அப்பாவைபாகற் கருமறைமதஞ்சேர், புரவித்தேரினைப் பொற்புடன்செலுத்த. பரவுநான்முகன்முனம் பாகனும்ஆனான், பாற்கடற்றுயின்றோன் படிமேற்பிறந்த, கார்க்கடல்வண்ணக் கண்ணனென்னும், வசுதேவன்மைந்தன் மாதவிக்கிசைந்த. விஜயன்தேர் தூண்ட மிகுசுகனானான், மாடுபிடிக்க மச்சநாடுற்றநாள், பேடியாய்த்தனஞ்செயன் பிள்ளைதேரூர்ந்தான், சுபத்திரையாளைச் சோரமாய்க் கொணர்ந்த, விபத்தினில்விஜயற்கு

மேல்விதேர்விட்டான், உய்வாசித்தேனை உம்பரூர்உய்த்த கைகேசிதன்னால் களித்தான்தசரதன், நளன் ரிதுபர்னன் நற்றேரூர, அளவில்லாப்புகழோ டவன்மகிழ்வுற்றான், ஆதலால்மிர்விடும் அனுபவ இரட்சியாய்,ஒழுசக்கொள்வோல் உயர்ந்தோர்செய்கை, இஃதென்றுஉந்தன் இதயத்தில் வைப்பாய்,சுகமநிமத்திரதத்தோன்றலேயின் ஊம் கார்தொட்டதேசைவிர்விட்டவேலோ,சீர்பெற்றகர்னன் விஜயன்றனை,வென்றுயிர்அழித்தால்விண்ணோர்மன்னோரர், நின்றனைத் துதிப்பார் நின்னருள் என்பார, இசையுலகு கல்லது எவர்க்குறும் ஐயா, வசையிலாப்புகழ்சேர் மத்திரர்க்காசே, என்னுடை வாழ்வும் இருநிலப்பரப்பும், மன்னும் என்னுயிரும் மானிட ஆக்கையும், உன்னுதே முன்னுதாய் உனைதன்முப்பாலும், மன்னனேபோற்றி மகிழ்ந்தென்னையாளும், என்றுவணங்கிய இறைமேற்றயவாய் நன்னாநல்றெல் று நன்மனம் இரங்கி, மணிமுடிவாகு வலயமுமிக்கி, தினியுறகுல்லாச் சிறுசட்டைஅணிந்து, பார்த்தசாரதிபோற் பாகனும்ஆனான், போர்த்கனன்பிதாம்பரம்புவிக்கிறைவன், அந்தரத்திறைமகன் அர்ச்சுனன்றனைக்கு, மந்திரபுயத்தோன் வசுதேவகிருஷ்ணன், தேர்ப்பாகனாகிச்செலுத்துந்திறம்போல், மார்த்தாண்டனீன்ற மகன்கன்னனுக்கு, வல்லியப்போன் மத்திரத்தலைவன், சல்லியபூபதிசாரதியானான், சொல்லுதற்கரியதும்பையும்வெற்றியும், வில்லுறவாகையும் வீரமும்பெறுவான், வலம்புரிமாலை வனைகாமுடியோன், புலம்புறுகடல்சூழ் புவியெலாம்ஆள்வான், அவனதேமுடியும் அவனதேகொடியும் அவனதேசெல்வமென் றரசர்ஆர்த்தனரே.

இந்தப்பிரகாரம் துரியோதனனுடைய சேனைசயினியங்களெல்லாம் சிந்தைகளித்து மகிட்சியிற் சிறந்திருந்தார்கள் அந்தவேளையில் அருக்கன்பெற்றபிள்ளையாகிய கர்னன் தேவேந்திரனுக்குத் தானமாகக்கொடுத்த கவஜகுண்டலம் மறுபடியும் தன்னுடன்கூடப்பிறந்து தனக்கு உற்றதுணையான தன்மைபோல் சந்தோஷமடைந்து சுத்தவீரர்களில் முதன்மையாகிய மத்திரராஜ சல்லியனைக்கண்டு மார்போடணைத்து தழுவி தனக்குரிய மணித்தேர் கொண்டுவாருமென்றுசொலல அந்தசல்லியனானவர் கர்னன்சொல்லியபடியே போருக்குத்தகுந்த வீரப்பரிபூட்டி கடிவாளமும் குதிரையோட்டும் உனுவுகோலுங்கைக்கொண்டுபாகர்வேலையிற்பக்குவமாயிருந்து 'ஆதபன்சாரதியாகிய அருணனுக்கு ஒப்பாகும்படியாய் தேர்கொண்டுவந்து நிறுத்தினான் அந்தத்தேரின்மீது சேனாபதியாகிய கன்னன் ஏறிக்கொண்டு படைமுகத்திற் சென்றுநின்று அரவக்கொடிநாட்டி அழகுபெறும் துரியோதனமகாராஜனையும் அவன்தம்பிமார்களில் இறந்தவர்போக இறவாதிருக்கும்பேர்களையும் சிலசேனைகளுடனே பாற்கவப்பேரணியாகநிறுத்தி அடிபோர்புரியும் அரசர்களையும் கிருபாச்சாரியையும் இருபக்கத்திலும் அணியாய் அமைத்து சகுனிமுதலாகிய வல்லவர்களையெல்லாம் முன்னணில்நிறுத்தி சொல்லுதற்கரிய பூரணையில் நக்ஷத்திரங்களுக்குநடுவில் வான்மணியாகிய சந்திரனை நாட்டிவைத்தது போல் சேனாசமுத்திரமத்தியில் தன்தேரைநிறுத்தி வாயுவின் உலகத்தில் ஓங்கி உயர்ந்து அதனுடையவேகத்தைத்தாங்கிய மகமேரு நிலைத்துநின்றதைப்போல் வன்மையிற்சிறந்தகன்னன் நின்று வேதப்பிராமணாள் வித்துவான்கள் இரப்போர் கர்மிகள் மிடியர் வினையர் இலேத்தராஜாக்கள் அதிதி அப்பியாகதிகள் இவர்முதலாகியபேர்களுக்கும் தேவாலயம் விஷ்ணுவாலயங்களுக்கும் தானமும் தியாகமும் சிறப்புஞ்செய்து சிந்தைகளித்து ஆறுமுகத்தெய்வம் ஓர்முகமாய்வந்து அவதரித்ததென்று சொல்லும்படியாகிய கன்னன் சந்தனபாளிதகுங்குமம் அணிந்த விரிந்தமலர்மாலை புனைந்த குவிந்ததோள் சிறந்தவாள சிறந்தசல்லியராஜனை நோக்கி சிலவசனஞ்சொல்லத்தொடங்கினான்.

ஆல்லியமகிச்சல்லியனே கேளும், தேவேந்திரன் பிடித்திருந்த இந்திரதனுவென்னும் வில்லை சூரியன்பெற்றான் அந்தச்சூரியன் இடத்திலிருந்து மதங்கமகாமுனிவர் பெற்றார், அவரிடத்திலிருந்து பரசிராமர்பெற்றார், அந்த மகாபுருஷரானவர் எனக்குக்கொடுத்தார், இத்தன்மை வாய்ந்த 'அரியவில்லையும் அதற்குத்தக்க பழிகளையும்பெற்றிருக்கிறேன் ஆரணகாரண பூரணனாகிய நாரணனுக்கு ஒப்பான உன்னைத் தேர்ப்பாகனையும் பெற்றேன் 'நான் ஜனமாந்திரத்திற்செய்த நல்வினைப்பயனாற் பெரும்பாக்கியம் பெற்றபெருனேன் உரியமித்திரநேசனாகிய மத்திரராஜனே எனக்குப்பகை அர்ச்சுனன் அல்லாமல் வேறொருவரும் இல்லை அந்த அர்ச்சுனனுக்கு எதிர் என்னை அல்லாமல இன்னிலத்தைஆளும் அவனிபாலரில் ஒருவரும் இல்லை, ஆகையால் என்மனத்துக்கிசைந்த தோழனாகிய துரியோதனமன்னன் மண்டலமுழுதும் ஆளும்படியாய்ச் செய்யப்போகிற என் ஆண்மிக்கையைப்பாரும், மேகம்போன்ற குரல்முழக்கமுடைய வீரபட்டயானை பெற்றவேந்தனேயென்று கர்னன்சொல்ல இவன்சொன்ன வார்த்தைகளையெல்லாம் மத்திராஜன்கேட்டு இளநகையாகநகைத்து ஓ கர்னனே உன்னுடைய வெற்றியும் சாமர்த்திய சத்தியும் வலிமையும் நீகற்ற வில்த்திறமையும் சொல்த்திறமையும் இவைகளையெல்லாம் நீ எனக்குச் சொல்லவேண்டாம் உங்களிருவருடைய தேரும் ஒன்றோடொன்று கிட்டிநோக்கி உருள்களுடன் உருள்கள் முட்டித்தாக்கிஎதிர்க்கெதிர்சென்றுயுத்தம்பண்ணும்போது உங்களுடைய சேவகத்திறந்தெரியுமென்று சல்லியன் சொல்லி பின்னையும் பேசுகின்றான்.

கர்னார்ச்சுனன் என்னும் நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் ஈடுதாழ்த்தியில்லாமல் வரமும்உரமும் திரமாய்ப் பெற்ற வீரர், இதுவரையிலும் நீங்கள் இரண்டுபேரும் யுத்தம்பண்ணிய இடங்கள் தோறும்நாங்களும்பக்கத்திலிருந்துபார்த்திருக்கின்றோம் போர்முகத்தில் மறந்தும் பயப்படாத மகாவீரவிஜயனை ஒருகாலத்திலாவது நீ செயிக்கநாங்கள் கண்டறியோம் செல்வக் கொடையாளியாகியதீரனேநீங்களிருவருங் கூறிக்கொண்ட சபதமுடிக்கும்படியாய் மனம் இளைக்காதவயிரங்கொண்டு யுத்தம்செய்யுங்கள்அப்படிஅமர்விளைத்தால் ஆர்செயிப்பார்களோஆர்தோற்பார்களோ தெரியவில்லை இன்னார்வெல்லுவார்களென்றும் இன்னார்தோற்பார்களென்றும் எப்படிச்சொ

லலாம் அப்படிதுணிந்து சொல்லுவதற்கு நாங்கள் ச
கிக்கப்படுகிறோம் என்றுசாரதியாகிய சல்லியன் இயம்
ப அதைக்கேட்டு அங்கதேசாதிபன் பெருமூச்சுவிட்டுப
ற்கடிகது மனம்பதைத்து பின்னுஞ்சொல்லுகிறான்' ஆக
ண்டவன்மகனாகிய காண்டீபனுக்கு நானே எதிராளியல்
லது வேறொருவரும் இல்லையென்றுநிச்சயமாகஎண்ணி
க்கொண்டிருக்கின்ற வில்லின்வல்லபம் பெற்ற தந்திரபா
லராகிய தாதிபர்களுக்குமுன்னே என்னைநீ இகட்சியா
கப்பேசவேண்டாம் சல்லியனே குதிரைபூட்டிய தேரை
தந்திரமாகச் செலுத்தும் வல்லபம் உனக்குண்டாயிருக்
குமாகில் உன்சொந்தமாகிய அந்தத்தொழிலை மாத்திரஞ்
செய்வாயல்லது மிகுந்தசாமர்த்தியத்துடன் செய்கின்றயு
த்தத்திறங்களுக்கும் உனக்கும் என்னசம்பந்தம் தோற்ப
தும் ஜெயிப்பதும் நீயா எடுத்துச்சொல்லுகிறவன் இதற்
கு நீ அருகனல்ல' உன்வேலையெதுவோ அந்தவேலையை
ச்சாக்கிரதையாய்ப்பார்க்காமல்மற்ற வீரத்திறங்களைராஜ
தந்திரங்களை நீஎடுத்துப்பேசவேண்டிய நிமித்தமில்லைஉ
ன்வேலையைப்பாரொன்றுபுல்லியமனிதனைச்சொல்லியவா
றுபோல் அலக்ஷியமாக அங்கர்கோன்சொன்னான்பெரும்
புலிபோன்றகர்ணனானவன் லேசாகச்சொல்லியவசனமா
னது சல்லியனுடைய காதில் கேட்டும் கேட்காத மூன்
னமே நெய்சொரிந்து விறகுபோட்டு மூட்டுந் தீப்போ
லெரிந்து - மூண்டு - கொதித்து - மூறுகிப் பொங்கி-
கடுங்கோபத்துடன் கர்ணனைப்பார்த்து தகுதிபெறக்கற்ற
சாமர்த்தியமுற்றவர்களை அல்பபலம்பெற்ற அறிவீனர்க
ள் வெற்றிபெறுவார்களா அப்படியிருக்கநான்ஜெயிப்பேன்
நான்ஜெயிப்பேனென்று வாய்மதமாகச் சொல்லியவார்த்
தைதப்பாமோ அந்தஅர்ச்சுனனைப்புழ்ந்துநான்மாத்திரஞ்
சொல்லுவதல்லஇந்தஉலகத்தில்நிலவுண்டுகள்மொய்
த்தவெற்றிமாலைபெற்றவிஜயனைதுதிசெய்யாதபேர்கள்யா
ர்காலகேயநிவாதகவசர்முதலியமூன்றுகோடி அறுபதினா
யிரம் பேர்களைதேர்க்கால் ஊன்றுமுன்னமே ஓர்கணையா
லமாண்டு போம்படி அழித்தபாண்டுகுமாரன் பனைமா
க்கொடி நாட்டிய வீஷ்டுமர்முதலானபண்ணவர்களும் வி
ண்ணவர்களும் முடிமன்னவர்களும் இந்தமண்ணவர்களு
ம் தங்களுக்குள் தாங்களே மகிழ்ந்து தனித்தனிப்புகழ்ந்
து பாலகேசரியென்று பேரிட்டழைத்து மங்களகரமாய்
ஆசிர்வதித்து மிகவும் அவன்புகழைக்கொண்டாடிய செ
யலை நீ அறிந்திலாயோ அங்கதேசராஜனே மாட்சிமை
பெற்ற நாற்பத்தெண்ணாயிர முனிவரும் முப்பத்துமுக்
கோடி தேவரும் அமரர் சித்தர்முதலாகிய தேவகணங்க
ளும் சப்தமேகமும் அஷ்டவசுக்களும் திக்குப்பாலரும்
ஏகாதசருத்திரரும் துவாதச ஆதித்தரும் தேவேந்திரனு
ம்முனிந்து செருச்செய்ய எதிர்ந்து விண்ணும் மண்ணும்
அதிர்ந்து அண்டகூடம்பிதிர்ந்து நக்ஷத்திரம் உதிர்ந்து
போகும்படியாய்ப் பார்த்தனைவளைத்தகாலையில் இவர்க
ளெல்லாரும் பஞ்சாய்ப்பறக்க அடித்து அக்கினிதேவனு
க்கு அஸ்திரதுடைகொடுத்துச்சகல உயிர்களோடு காண்
டவனத்தைஅழித்து ஜெயங்கொண்டு திரும்பியகதை
யை நீ கேட்டறியாயோ அஸ்திர சஸ்திர ஜாலங்களில் வ
ல்லமன்னனாகிய கன்னனே, இவைகளெல்லாம் நீ அறி
யாமலும் நீ கேளாமலும்போனால் போகட்டும் ஒருநாள்
வனவேடிக்கை பார்க்கப்போனவிடத்தில் நீ அருகிலிருக்
கும்போதே உனக்கு உரிய சிநேகமித்திரனாகிய துரியோ
தனனையும் அவன்தம்பிமார்களையும் பெண்டுகளெல்லா
ரையும்பிடித்து புயமொடித்து மடலொடிய இறுக்கித்
தாமணிப்பிணையலாகக்கட்டி சிறைகொண்டுபோனகாந்தி
ருவராஜசித்திரசேனனை வெல்லமாட்டாமல் சிலவீராளோ
டிவந்துபாண்டவர்களிருந்தவனத்திற்புகுந்துமெல்லவுமா
ட்டாமல்விழுங்கவுமாட்டாமல்சொல்லவுமாட்டாமல்நின்ற
சோர்வைதர்மராஜன் அறிந்துசங்கதிதெரிந்து தம்பியென
ருபரிந்துவீமார்ச்சுனனைநோக்கி,விரைவில் துரியோதன
தியரைக்கொண்டுவாருங்களென் றுஉத்தரஞ்சொல்ல, அ
ப்போதே பத்தரைமாற்றுப் பசும்பொன்போன்றதம்பிக
ள்சென்றுகந்திருவன் போரைவென்று மீட்டுக்கொண்டு
வந்துதர்மராஜனுக்கு நேரில்நிறுத்தி கட்டு அவிழ்த்துவி
ட்டகாரியத்தைநீயோசிக்கவில்லையோ-இதோநேற்று,பெ
ரியதேர்கள் அநந்தம்குதிரைகள் அநந்தம்யானைகள் அநந்தம்
கடலைப்போற் சேனைகள் அநந்தம்-போராடும் போர்த்தி
றவீரர்கள் அநந்தம்-சூழும்படியாய் பெருமுழக்கப்பேரிவா
த்தியத்துடன்போய் விராடனுடைய பசுக்களை மடக்கிய
காலத்தில் வீரவிற்கொண்ட விஜயககாளை ஒன்றித்தேரு
டன்தோன்றிஒருபெருங்கணத்தில் முன்னேவென்று மச்
சநாட்டில்லச்சைசயாக அச்சத்தைவிளைத்து தலைத்துணி
களைக்கைக்கொண்டு பிராணதாரை வார்த்து அனுப்பிய
தம்நீசாலோட்டமாய் ஓடும்போது அஸ்வத்தாமன் உன
க்கெதிர் வந்துதடுத்துக் கேட்டதும் நீ அவனை அடித்துச்
சொன்னதும் மறந்துபோனாயோ உள்ளத்தில் இல்லையோ
உதாரனேபற்பலகாரியங்களிலேயும் சிற்சில யுத்தங்களி
லேயும் இந்திரகுமாரனாகிய சந்திரமுகவிம்ப தனஞ்செ
யன் ஜெயம்பெறும்புகழ்ச்சியும் உன்னுடைய புயவலி இ
கழ்ச்சியும் கேட்பதுவும் பார்ப்பதுவும் எங்கள்வேலையா
யிருப்பதேயன்றி வேறு மாறிச்சொல்லுவதற்கு இடத்
தைக்காணோம், கச்சைக்கொடியோனாகிய கன்னனென்
னுந்தோன்றலே இன்றைக்கு நடந்துவருகிறயுத்தத்திலு
ம் நீ பெறப்போறது அதுதான் (ஆகிலும்) பலம்பொரு
ந்திய மேருமலையானாலும் வச்சிராயுதத்துக்கு முன்னே
அந்தமலையின் சிலம்பம் என்னநடக்கும் அதுபோல் இந்
தவிஜயனுக்குமுன்னே எவர்களுடைய சமத்தும் தலைகா
ட்டாது மேலும், வேந்தர்பெருமானாகிய துரியோதன ம
காராஜன் என்னிடத்தில் உற்றுப்பொருந்திய நண்பினால்
அவன்சொல்லைத்தள்ளாமல் உனக்குத்தேர்செலுத்தி சம
யோசிதமான காரியாகாரியம் தன்பலம் மாற்றார்பலமுத
லிய தன்மைகளைக்குறித்து உறுதிவார்த்தை சொல்லவந்
தேன் அல்லாமல்விருதாவில் நான் உனக்குச்சொல்லவே
ண்டிய அவசரம் ஒன்றுமில்லை இப்பவுமென்ன துள்ளிக்
குதித்து சண்டைகொடுக்கச் சென்றாயாகில் நீபட்டுப்
போவாய் என்னுஞ்சொல்லுக்கு யாதொரு நட்டமில்லை
திர்க்காலோசனைகள்செய்து உன்னிஷ்டப்படிக்குச் செ
ய்துகொள்ளக்கடவை, விதி தப்பிப்பிழைத்து வாழ்ந்

தோர்மேதிஙீயிலில்லே, அநுசரிக்கும் மதியென்பது மேலோர்வாக்கியம் இதை அறிந்துக் கொள்ளென்று சொல்லிய சல்லியன் பேச்சைக் கன்னன்கேட்டு கடையுகம் போற்கமழி-படைபடையாய்ப் பொறியெழவிழித்து-மத்திராஜனைக்குக்கிரகோடுரமாய்ப்பார்த்து-ஆ ஆ-நீ சொன்னவுத்தரம் மெத்த நன்றாயிருக்குது, எனக்குநல்லுறுதிகாட்டிநாட்டினை - நல்லது-நான் அந்தஅர்ச்சுனன் முன்னேசென்று வெற்றிகொண்டு வரும்படியாகிய வல்லபம் எனக்கொரு அதிசயமல்ல, அப்படியிருக்க அவனைக்கொல்லுவதற்கு உன்னாலுமாகாது, மற்றெவர்களாலுமுடியாது, என்று நீ-சொல்லுகிறாய் போகட்டும், என்னால் ஜெயம்பெறக் கூடாதென்று சொல்லும்போது உன்னைப்போலொத்தவனால் அல்லது உன்னால் அந்தகிரீடியை ஜெயிக்கக்கூடுமென்று எந்தவீரன்சொல்லுவான் நல்லது, சாமான்யாளாவது மனந்துணிந்து வாயெடுத்துச் சொல்லுவார்களா மத்திரனே வெகு ஜனங்களும் அறியும்படிக்கு விஜயகாண்டீபம்பிடித்த விஜயனுடைய பிராணனை வாங்குவதற்கு நெருப்புப் பொறிகளைச் செருக்கும் பிரகாசக் கண்களைப்பெற்ற நாகாஸ்திரம்படைத்திருக்கின்றேன், ஒருவேளை யாதவபுத்திரனாகிய மாதவன் அந்த நாகாஸ்திரத்தைக்கெடுத்து அர்ச்சுனனைப்பிழைக்கச் செய்வானாகில் துட்டத்தனப்பகைவரின் கொட்டம் அடக்கி பட்டத்துயானைகட்டி எட்டுத்திசையும்புரக்கும் விருஷப விராட்டாகிய துரியோதனமகாராஜனது பிராணனுக்குத் துன்பமில்லாமல் காக்கவேணுமென்னும் எண்ணமே என்னெஞ்சிற் குடிகொண் டிருக்குது அர்ச்சுனனை வெல்லுகிறதொன்று அல்லது அரவகேதனனைக் காக்கிறதொன்று இந்த இரண்டில் ஒன்றாகிலும் என்னால் முடியாமற்போகாது, இந்த உலகமெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து பற்குனனுக்கு உதவிவந்தாலும் எப்பொருட்குமிறையாகிய ஈசன் துணைப்பட்டு இவனுக்குத் தேர்செலுத்தினாலும் பலகலைத் திறன்களையுடைய இந்திரன்முதல்தேவர்களெல்லாம் சகாயமாய் தாங்கள் கற்ற மந்திர தந்திர எந்திரங்களால் என்னைத்தடுத்து எதிர்த்தாலும்,குலமலைபோன்ற அழியாததேருடைய அர்ச்சுனன் பிராணனை நான் வாங்குவேனென்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை; இதன்றியும், காலம்-இடம்-வலி-இவைகளை நோக்கியிராநின்ற கருத்தினர்கள் கோபித்துப்பகைத்து ஜெயம்பெருகிற வரையிலும் தங்களுடைய வீரகுணத்தையும் வல்லபங்களையும் வெளிவிட்டார்கள். அதுபோல, சமயம்வருகிற வரைக்கும் எதிர்பார்த்துக்கொண்டு கொஞ்சம் மாழுபட்டிருக்கின்றேன்-இப்படியாயிருக்கிற என்னுடைய குணத்தையும் - நான் கொண்டிருக்குங் கோலத்தையும், நீ-நிதானித்து உட்கொள்ளாமல் ஞாலமும் விசும்பும் நகைக்கும்படியாய் படியாத கொடியர்களைப்போல் குறைவாகிய காரியங்களையெடுத்து மனம் விட விடப்பேசினையே குற்றமற்ற மத்திரத் தலைவனே யென்று கர்னன் சொல்ல அந்தவார்த்தையைக் கேட்டு தீர்க்கபுத்திமானாகிய சல்லியன் திக்கறப் பேசலுற்றான், ஓ-கர்னனே உன் கைத்திறத்தை அறியாதவர் எவர்கள் யாவரும் அறிவார்கள் நேற்றுப் பதினாலாநாள்ச் சண்டையில் ஓங்கியபுயந் தாங்கிய ஜெயசிந்துராஜனை உயிர்போகாமல் நீ-ரட்சித்ததைக்குறித்து அழகிய கிரணங்கள் பொருந்திய திரிலோகத்திலுங் கொண்டாடினார்களே அந்தக்கொண்டாட்டம் உன்னைத்தான்போலு மிருக்குது அப்பா எக்காலத்திலும் வெற்றிமுனைபெற்ற சுவேதவாசியும் அநுமக்கொடியும் உடைய அர்ச்சுனன் தேருந்திகளைசிந்தி போர்முந்தி வரும் போர்முகத்தில் சளையாமற்சென்று நின்று வஞ்சமில்லாமல் நீயும் கூடியவரையில் யுத்தஞ்செய்கிறாய் அப்படி யுத்தஞ் செய்தபோதிலும் ஒருநாளாகிலும் நீ வெற்றி பெற்றதில்லையே இல்லையல்லவா,விஜயனை நான்வெற்றிகொண்டேனென்று விளம்புவை யாகில் காலந் தலைகீழாகும்-கத்தரி-பத்திரியாகும்-களிற்றானையைமுசல்வெல்லும்-சிங்கத்தை-யானை கொல்லும்-வேங்கைப் புலியைமான்புல்லும்-வெவ்வியகருடனைப் பாம்புகொல்லுமல்லவா மிகுகொடையாய் ஒரு கதைசொல்லுகிறேன்.

கேளாய், உத்தரதேசத்தில் சத்திர வாசத்தில் மித்திரநேசத்தில் பொருந்திய ஒரு சிற்றூர் அவடத்திலிருக்கும் வணிபர் எல்லோரும் நல்ல மகாராஜர்கள் அவர்களிருக்கும் நாட்டில் கருங்காக்கையொன்றுதவிர பசு பட்சிமுதலாகிய ஈஸ்வர சிருஷ்டியில் உண்டாகிய ஜெந்துகள மற்றெல்லாம் உண்டு அன்னப்பட்சியைக்காணுமல் நாமெப்படி ஆசைகொண்டு அவதிப்படுகின்றோமோ அதுபோல் பல்லோரும் புகழும் பாக்கிய வான்கள் காக்கையைக் காணக் கவலைகொண்டார்கள். ஆனால், எங்கேயோ ஒரு தேசத்தில் இருக்குதாமே மெத்த சுந்தரவடிவு பெற்றதாமே ஆ ஆ, அதைநாம் பார்க்கக் கிடைக்குமா அவ்வளவு பாக்கியம் பண்ணியிருப்போமா என்னும் ஏக்கங்கொண்டு இருந்தார்கள். அப்படி யிருக்கும் நாளையில், ஒருநாள் வாடைகாற்று வாகாய் அடித்து மரங்கள் அசைந்து தென்னல்காற்று செடிகளைமுறித்து திரும்பியபோது அந்தக்காற்றின் வேகத்தில் அகப்பட்ட ஒரு காக்காயானது மேற்சொன்ன சிற்றூரிற்போய்விழுந்தது இதைக்கண்ட அந்த ஊரார் யாவரும்வந்து கவிந்து மேள தாளத்துடன் பல்லக்கின் பேரில் இந்தக் காக்கையை எடுத்துப்போய் பக்குவமாகரொக்கையைஉருவிஉலர்த்திபால்புகட்டி நெய்பருத்தி குங்குமச் சம்பா அரிசி குத்தி கொழியவில்லாமல் குழையப்பொங்கி கற்கண்டு கூட்டி கவளம் ஊட்டி காலுக்கு-நவரத்தினத் தண்டை-கொலுசு-கிண்கிணியாமுதலிய ஆபரணங்கள் பூட்டி-தங்கள் தங்களின் பணப்பை நிறைந்த கோட்டி வீட்டைக்காட்டி பஞ்சணைமெத்தை கூட்டி மிகுந்த பக்ஷமாய் தங்களுடைய பணங்களை லக்ஷம் லக்ஷமாய்ச் செலவழித்தும் அந்தப்பணம் ஒரு லக்ஷியமில்லாமல் விடியற்காலத்திலெழுந்து அதனுடைய காலில் எல்லோரும்வந்து விழுந்து கட்டியணைத்து பட்டுமெத்தையினால் கைமேலேந்தி முத்தமிட்டுமுகத்துடன் முகம்வைத்து மெத்த நேத்தியாய்வீட்டுக்சொருநாள் விருந்துசெய்யப் பொருந்தி இருந்து அருந்தி பறந்து போகமாட்டாமல் எச்சிற்சோற்றுக்கு ஏக்கமுறிருந்த காக்கைக்கு யோகம்பிடித்து மாமிசபர்வதமனுக்களை

ப்போல் ஊதிப்போச்சுது அந்த ஊரிலிருக்கும் அன்னப்பட்சிகளெல்லாம் வறுமையடைந்து நம்முடையவூரில் இந்த காக்கைகள் என்ன கதியடையுமோ அந்தக்கதியை அடைந்து அடங்கி இதுவும் வினைவசந்தானென்று பிர்மாவை யெண்ணிக்கொண் டிருந்ததுகள் இப்படியிருக்குங் காலத்தில் நின்று மதத்த காகமானது தெருவெல்லாந் தாவி-அன்னம்போல் உலாவி-இறகுகளை நீவி-இறுமாந்துபோவி புதுவாழ்வு பெற்றவரைப்போல் கண்மறைந்து குனியமாட்டாமல் மேல்ப பார்வையாய்ப் பார்த்து நிமிர்ந்து பெருமூச்சுவிட்டு காதடைபட்டு கலையும் ஆயாசமும் உடைத்தாய் ஒழுங்கு ஏர்ப்பட்டு பெரிய அந்தஸ்துடன் தானிருந்த பழையகதியையும் தன்சாதியையுந்தன் குலத்தையும் கோத்திரத்தையும் தான்வந்த வழியையும் தந்தை-தாய்-பழியையும் முன்விதியையும் தனதுமதியையும் தான் உண்டிருந்த இரையையும் நினையாமல் ஆகாயத்திலிருந்து இறங்கிய போகதேவேந்திர சம்பத்தை அனுபவிக்க புராதனத் தன்மைபோல் ஒன்றுந்தோணாமல் எதிரிலிருக்கும்பேரை இன்னதென்று உணராமல் இறுமாப்படைந்து கொழுத்து சர்வம்பிடித்து கவலையற்றிருக்கும் காக்கையானது அன்னப் பட்சிகளைப் பார்த்து ஓ, வெண்குட்டம்பிடித்த ஜாதியே, உங்களுக்கு ஜீவனமெப்படி நீங்கள் நெடுந்தூரம் பறக்கமாட்டுவீர்களா மெத்த நீட்டும் சொகுசுமா யிருக்கிறீர்களே தாமரை யிலையைச் சாப்பிடுகிறீரோ என்று இப்படி எல்லாம் ஏளனமாய்வாய் மதம் பேசும்போது அந்த அன்னங்கள் நொந்து மெத்தவும் மனவருத்தப்பட்டு புல்லோருக்கு நல்லகாலம் நல்லோருக்குத் தீகாலமுமா யிருக்குதேயென்று ஏங்கி காக்கையின் சொல்லை வாங்கி ஐயா, நாங்களென்னபஞ்சைகள் உங்களுக்குச் சரியாய்ப் பறப்போமா எங்களால் முடியாது என்று தீனத்துவமாகத் திடுக்கிட்டுச்சொல்ல, அப்படியல்ல நீங்களும் நாமும் பறந்து பார்ப்போமென்று காக்கை கூப்பிட, எங்களுக்குச்சோறேது தண்ணீரேதென்று அன்னங்கள்சொல்ல, இவ்வளவுதானா உங்கள் பவுஷென்று காக்கைபேச; அதன்பேரில் நல்லது பார்ப்போமென்று அம்சங்கள் உடன்பட்டு காடு-கரை-நாடுமுதலாகிய இடங்களை நோக்காமல் கடல்-நடுவை நாடிப்பறந்து போகும்போது காக்கையானது இளைப்பாகி உருக்காரவேணுமென்றால் ஆதாரமில்லாமல் நிராதாரவாகிய கடலின்பேரிற் பறந்து விசுக்கு விசுக்கென்று முன்னதாகப்பறந்துபோய் மறுபடியுந்திரும்பிவந்து, பறக்கும்போதே நித்திரை இளைப்பு-ஆயாசமுதலியதைத் தீர்த்துக்கொண்டு மெதுவாய் வட்டமிடும்படியாகிய அன்னத்தின் இடம்கிட்டி, ஐயையோ, இம்மட்டா நீங்கள்பறப்பது உங்களுக்கும் ஒரு பட்சியென்றுபெயரா மானமில்லையா ஈனமல்லவாவென்று பேசி முன்னோடிப்பறந்துபோய் பின்னடித் திரும்பிவந்து இப்படி இரண்டு மூன்றுவிசைபோகவும் திரும்பிவரவுமா யிருந்தபோது விசையடக்கி உடலிலுற்ற பசைமுடங்கி அசைவற்று-சிறகைச் சுருக்கிக்கொண்டு தலைகீழாய்க் கடலில்விழுகிற காக்கையானது அன்னத்தைக்கூவி ஐயா ! அன்னப்பட்சிகளே; அயனுக்குவாகனமாகிய அமிருதோ, நல்லோர் பெரியோருடைய நலந்தெரியாமல் நயமுணராமல் வாய்மமதைபேசி கெட்டழிந்தவன் நான் தான் நல்ல குணவான்களே - விதிதோஷம் மலந்தின்னுகிற சாதியாகிய எனக்கு பலமாகிய அமுதங் கிடைத்தும் அதைப்போற்றி காத்துங்கொள்ளாமல் உங்களைப்போலொத்த பெரியோருடன் வீம்புபேசிப்பிராணன் இழந்தேனென்று சொல்லி கடலில் விழுந்து இறந்துபோச்சுது என்று ஒருகதை சொல்லுவார்கள்.

அதலால், இளைக்காத பலம்பெற்ற அர்ச்சுனனுடனே எதிர்ந்து வெல்லுகிறேனென்று நீ-சொல்லும் வெல்லப்பேச்சானது இப்போது நான்சொன்னகதைக்கு ஒப்பாயிருக்குது-சிற்றூரார்-துரியோதனன் காக்கை-கர்ணனாகிய நீ-துரியோதனன் விட்டுச் சோறுதின்று வயிறுவளர்த்துக் கொழுத்திருந்தது அன்னப்பட்சிபோன்ற அர்ச்சுனன்பேரில யுத்தத்துக்குப் போகிறேனென்று சொல்லுவதினால் காக்கை அடைந்தகதி உனக்கும் உண்டாமென்பது கருத்து.

இவ்விதமாகப் பல்பலவசனங்களைச் சல்லியன்சொல்ல கர்னன் சற்றுயோசித்து நீர்வள நித்திலஞ்சிறந்த இந்த மந்திரத்தானவன் நமது ராஜனிடத்தில் அன்புடையவர்களைப்போல் நடித்துக்காட்டி இவனுக்கு பருமக்களாகியும் நமக்குச் சத்துருக்களாகியும் இராநின்ற பாண்டவர்களுக்குப் பலமாகவேண்டிய உறுதிசெய்கிறனென்று அறிந்து ஆக்கிரஹத்துடன் உதிரம்பொங்கி வாளாயுதத்தைக் கையிலுருவிக்கொண்டு இப்பேர்ப்பட்ட அற்பச்சொற்களை இனிமேலுஞ் சொல்லுவையாகில் ஒரே வெட்டாக வெட்டி வீசிப்போடுவேன் புல்லிய சல்லியனே என்தேரைச் செலுத்தென்று கெழித்தான்.

இப்படியாக வலிமையுடன் கர்னன் சொன்ன வசனத்தைசாரதியானசல்லியன்கேட்டு தழலினுங்கொடிய அழலெழக் கொதித்து தடாலென்று தேர்விட்டுக் குதித்து கர்னனுக்கெதிர் குதித்து கத்தியை உறைநீக்கிப் பிடித்து அடா சூதன்மகனே, அனுமானிக்குங் குதிரை பூட்டிய தேரை உனக்கு நான்விடத்தக்கதோ (எலியானது சண்டைசெய்வதற்கு இருந்த இடத்தில் நடக்குமே யொழிய பூனைமேலெதிர்த்துப் புறப்படுமோகில்'என்னபாடுபட்டுப் போம்)எவ்வளவும் நீ-நினையாமற் போனாயென்று-நீடி-நெருப்பிடி-பேரிடிபோலிரைந்து-விரைந்து-சீறி-எதிர்த்த காலத்தில் சூரியபுத்திரனாகிய வீரியன் தேர்நீங்கி வாளாயுதந்துடன் மண்ணிற்குதித்து ஒருவரையொருவர் துண்டிக்கும்படி நிச்சயித்து வாளாயுதத்தை ஓங்கினார்கள்-இவர்களுடைய தேகத்தில் காயம்படுவதற்குமுன்னே அல்லது காயம்விட்டு ஆகாயம் அடைவதற்குமுன்னே சர்ப்பக்கொடிதரித்த தார்வேந்தன் கண்டு பயங்கரங்கொண்டு சிந்தைகலங்கிச் சீக்கிரஞ்சென்று இருவருக்கு மத்தியில் நின்று என்னை முன்னதாய்க்கொன்றுபோட்டு அப்பால் நீங்கள் எப்படியாகிலும் போங்களென்று விலக்கினான் இருவரும் விலக்கிய பிற்பாடு அவர்களுடைய வாய்மொழி கேட்டு மனமூண்ட வெஞ்சினத்தையுமாற்றி பலமாகிய சிநேக சம்பந்தம் உண்டாகும்படியாய் இருவரையுங் கல

க்கப்பார்த்து மறுபடியும்ரதத்திலேற்றி எப்படியாகிலும் யுத்தம்விளைத்து வெற்றிபெற்று வாருங்களென்றுவிடை கொடுத்து அனுப்பினான். அவனுபோனபின், பாண்டுமைந்தர் ஐவரும் மாண்டு மாளவும், வையகமுழுதும் தானே ஐயனாக ஆண்டுஆளவும் கருத்துட்கொண்டு எல்லா அரசர்களையும் அழிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் வழ்வினைக்குரிய குணத்தையுடைய துரியோதன மகாராஜன்.

அந்தவேளையில் அழகியவீரகண்டைபூட்டிய கிருதபன்மன் வரிவிற்குறுக்கிய கிருபன் தனக்குத்தானே ஒப்பாகிய சகுனி வாசமாலை அணிந்த சாலுவராஜன் திரிகர்த்தராஜன் இவர்முதலாகிய பொற்றடந்தேர் வேந்தர்களும் அளவிறந்த சேனைமாந்தர்களும் அகிர்ச்சிகொண்ட பெருங்கடற்போல்நெருங்கிச் சூழ்ந்து கர்னனைக் காத்துநின்றார்கள்.

இவ்விதமாக உபபலத்துடனின்ற கர்னனை துரியோதனமகாராஜன் மனப்பூர்வமாய் கண்களிக்கக் கருணைபுரிந்து மகிழ்ந்துநோக்கி இன்றையயுத்தம் நாமேவென்றோம் இதற்குயாதொருதடையுமில்லை, பிரபலஸ்தனென்று கொண்டிருக்கிற விஜயனும் தன்தந்தையாகிய இந்திரனிடத்திற்கு இன்றுபோய்ச்சேருவான், அச்சுது அவனுக்குப்போங்காலம் சமீபத்தில்வாய்ச்சுதென்று மனந்தேறிசிற்சிலவார்த்தைகளைச் சொன்னான்.

தேங்கமழ்மலரிடத்து நீங்காமல் வண்டுகள் அடுத்துப்பொருந்திய வலம்புரிமாலைதிருந்திய துரியோதனமகாராஜன் படைமன்னர்களைப்பார்த்து கேட்டீர்களா எனக்குரிய இஷ்டர்களே, தேவேந்திர குமாரனுக்குத் தேர்ச்சாரதியாகிய ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் வைத்திருந்த நட்பாகிய உறவுக்குக் குறைவுவரப்போகுதென்று அஞ்சி என்னிடத்தில் அன்னபானாதிமுதலியவைகளைத் தின்றுவளர்ந்த விதுரனானவன் இந்தத் தருணத்தில் எனக்குதவியாகநின்று யுத்தஞ்செய்யாமல் தன்கையிலிருந்த வெஞ்சிலையைவெட்டியெறிந்துபோட்டு எனக்குப்படைத்துணைவந்த யதுகுலமுதல்வனாகிய பலராமனையும் கலைத்து அவருடன்கூடிக்கொண்டு உலகிலுள்ள தீர்த்தங்கள் முழுமையும் ஒருங்கே ஸ்நானஞ்செய்யும்படியாய் இருவரும் போய்விட்டார்கள்.

இதல்லாமலும், எங்கள்பாட்டனாகிய வீஷ்டுமர் கங்காதேவியாருடைய கர்ப்பத்திலுதித்த தன்தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்குக் காதலிரும்படியாய் பரிமளகந்தியைக் கலியாணஞ்செய்துவைத்து அந்தக்கால்வழியிற் பிறந்த எங்கள் நிமித்தத்தில் அரசும்வாழ்வும் இருநிலப்பரப்புமுழுமையும் கொடுத்துவிட்டு வீஷ்டுமம்பெற்ற விக்ஞானதீரன் வெவ்வியபோர்க்களத்தில் எனக்குச் சேனாபதியாயிருந்து சண்டைசெய்து வெங்களத்தையெல்லாம் உதிரம்வழிந்தோடுகின்ற செங்களமாக்கி மங்களமாக வந்த பகைவருடைய வீராதிவீரர்களையெல்லாம் அமங்களமாக்கி தானுந்தேவரில் ஒருவராகச்சேர்ந்துபோனார்.

மேலும், இயானைமுகக் கடவுளுங்கொப்பாகிய அஸ்வத்தாமனென்னும் தாக்கிய சிலாக்கிய வாக்கிய பாக்கியன் விரகண்டாமணி விக்கியாதர்களையுடைய சிங்கக்குட்டியைப்பெற்ற தந்தையென்னும் துரோணாசாரியார் வேதபாராயணத்தில் பிரகஸ்பதிகுமாரனாகிய கசனுக்கொப்பானவர் பலம்பொருந்திய வில்வல்லபத்தில் நலந்திருந்திய நக்கீசுரனை ஒத்தவர் பிறந்த திருவைக்குஜெசரதகனாகிய விஷ்ணுவைப்போன்றவர் எனக்காகச் சேனாபதியாயிருந்து ஐந்துநாள்வரைக்கும் யுத்தஞ்செய்து அடியேனுக்கு மகுடாபிஷேகப் பட்டங்கட்டச் சித்தஞ்செய்து அவனியோர்முதலாகிய வீரரையெல்லாம் பிணக்காடாக மொத்தஞ்செய்து அழகிய போரில் தன்பிராணனைத் தத்தஞ்செய்து அவனிவாழ்க்கையை விரும்பாமல் விடுத்து இரும்புண்ட நீர்போல் திரும்பாதிருக்கும்படியாய் அடுத்து மோக்ஷவீடுசேர்ந்தார், பசுங்கலாபச்சாயலாற்சிறந்த தோகைமயிலேறி நடாத்தும் சேயாகியசிவசுப்பிரமண்யக்கடவுளானவர் போரங்கச்சூர சம்மாரஞ்செய்து தேவர்களுக்குத்தீங்கில்லாமல வாழ்வைக்கொடுத்தாரல்லவா மற்றெந்தேவர்களாகிலும் வாழ்வு தந்ததுண்டோ.

அதுபோல், அண்ணா ஔதாரியகர்ணா, இப்போது சமர்நேரிட்டிருக்கின்ற இந்தவேளையில் உன்னையல்லாமல் என்னை நிலைபெறச்செய்வதற்கு வேறே உரியவர்கள் ஒருவருமில்லை, மறையாய்ந்துதோய்ந்த நயத்தாற்பயந்த தந்தையாகிய கிரணசூரியனைப்போன்ற சூரா உன்னை நான் அடைந்தேன்.

இன்னும் மத்திரதேசாதிபனாகிய வில்லியற் சல்லியராஜன் தன்சகோதரி புத்திரர்களாய்ப்பந்துக்களிற்சிறந்தமருமகராகிய பாண்டவர்கள் தனக்குரியரென்றும் பாராமல் தன்னுடைய சத்தியவாக்குச்சோராமல் என்னுடன் கலந்த சிநேகதர்மத்தினால் உனக்குதவி செய்யும்படியாய் படைத்துணையானார், வஞ்சநெஞ்சுடையவரல்ல செவ்வையாகிய தீரத்துவமும் வீரத்துவமும் பெருமையும் உடையவர் தனுர்வேதத்தில் மிகுந்த சரஜாலங் கரஜாலங்களில் தாஷ்டியானவல்லவர் போர்முனை முனைவாராகில் இவருடன் எதிர்த்து ஆர்சண்டை செய்பவர்தன் இணையில்லாத வீரத்திறம்வாய்ந்த அண்ணா, கர்னராஜனே இந்தச்சல்லியபூபன்என்வார்த்தைத்தள்ளாமல் உமக்குச்சாரதியுமானார், காலம்அறிந்து நமக்குஅனுகூலமாகியநல்ல விஷயங்களைச் சொல்லுவாரேயல்லாமல் வேறு நாறுமாறாகிய பொல்லாமொழிகளை நாவில் நாறும்படி வைத்துப்பேசமாட்டார் இப்பேர்ப்பட்டமகாராஜன் நமது லாபலோப தனதென்று எண்ணிப்பாடும்படியாகிய தனாட்டியன், இவர்சொல்லுகின்ற உறுதிப்பேச்சுகளெல்லாம் நமக்கு சுகத்தையும் நலத்தையும் பலத்தையுந் தருமென்று உண்மையாகநினைத்து நகமும் சதையும்போல் பூவும் மணமும்போல் சொல்லும்பொருளும்போல் உடலும் உயிரும்போல் பாலும் நீரும்போல் கலந்து கைக்கொண்டு காரியங்களை நடத்தாமல் விரோதமாகப் புன்மொழிபேசி வீரியங்காட்டி விறுதாவில் உங்களுக்குள் நீங்களே பகைவைத்துக்கொண்ட விவேகசிலாக்கியமும் அநேகசாஸ்திரங்களை ஆராய்ந்த அன்பராகிய உங்கள்வாக்கியமும் என்னுடைய தவர்ப்பாக்கியமும் யோசிக்குமிட

த்தில் மெத்தப்புதுமையும் அதிசயயோக்கியமுமாகஇருக்கின்றது.

இதல்லாமலும் குதிரைகளின் மனமும் தேசத்தின்இயற்கைக்குணமும் பற்பலவேககதியும் சுழி சுத்தமும் மிகுந்தபலமும் உணர்ந்து இன்னகாலத்தில் இன்னதேருக்கு இன்னகுதிரை பூட்டலாமென்று தெரிந்துகூட்டவும் ஓட்டவும் எதிராளிகளின் வீரங்கள் மிகுதிபற்றியிருக்குமாயின் அவர்களுடைய புஜபலதிடத்தை எடுத்து எஜமானுக்குத் தடுத்துச்சொல்லவும் சிலவிஷயங்களைச் சொல்லுங்காலையில் எஜமானனவன் அந்தவிஷயத்தைக் கேளாமல் தடுப்பானாகில் சொல்லுமதியினால் இடித்து இடித்துச் சொல்லுமிடத்துக்கு உரியநண்பனாதலும் யுத்தங்களின் குறைவு-மலிவு-காலம்-இடம்-தன்வலி - எதிரிவலி இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டியகடமையும் சாரதிகளுக்கு இயல்பாகிய முறைமையாக்களும் அண்ணா கர்ணராஜனே, இனிமேலும் சல்லியபூமான் சொல்லத்தகுந்த சொற்களையெல்லாம் நமக்கு விநோதமாகிய தவறுதலே விளைப்பிக்குமென்று எவ்வளவுநினையாமல் மனங்கலந்து என்னிருவிழிபோன்ற நீங்களிருவரும் அன்புபூண்டு நாமெடுத்தகாரியத்தை முடித்து என்னை நிலைநிறுத்தி வைப்பீராகில், சமுத்திரத்தையுடுத்த தாரணியும் சகலசெல்வத்துடன் யானும் என் தம்பிமார்களும் என்புத்திரமித்திர களத்திராதிகளும் உங்கள் கைக்குளடங்கியிருக்கும் குற்றமில்லாத செல்வியங்களியென்று நீங்கள் நிச்சயமாய் நினைக்கக்கடவதென்று இருவருக்கும் மனங்களிந்து களிக்கும்படிச்சொல்லி உபசரித்து யுத்தத்துக்குப் போகும்படியாய்ச் செலவுகொடுத்து விடுத்தான் கலவை அணிந்த புயத்தோனாகிய துரியோதனராஜன்.

அப்போது சல்லிய சாரதியும் கர்ணநாயகனும் தேரேறிக்கொண்டகாலத்தில் மல் இளைக்கக்கிளைத்த திணிந்த புயத்தினையுடையசாரதியாகிய சல்லியராஜனை மணமாலையணிந்த வாகுவலிநிறைந்த மார்த்தாண்டன் தந்தகன்னன் அருட்பார்வையுடன் மத்திரதேசத்தரசனைப்பார்த்து ஓ சல்லியராஜனே நீர் என்னை இவ்வளவு அவமதிப்பாகப் பேசலாமா இது உமக்கு தர்மமா என்று உலகமதிக்கப் பலவித நன்மொழிகளைப்பேசி மறுபடியும் தன்வரலாறு சொல்லத்தொடங்கினான்.

ஐயா சல்லியற்கிறைவேகேளும், பூர்வத்தில் மகேந்திரமலைச்சாரலிற் பொருந்திய அருந்தவத்தொருவனான பரசிராமரிடத்துக்குப்போய் திருத்துளவமுடியினானுடைய வீரமணியணிந்த திருவடிமிசைதாழ்ந்தேன் அவர் எனக்கு ஆசீர்வதித்து அருளுதவிசெய்தார், அவருடையகிருபைகொண்டு அவரைப்பூசித்திருக்கும் நாளையில் நீர் எக்குலத்தானென்று வினவினார், அப்போது ஏழையாகிய யான் உயர்ந்தமறையவர்குலமென்று புகன்றுநின்றேன் என்னைவிரும்பி என்னிடத்துக்கு வந்தாயென்றுகேட்டார் வில்வித்தைகற்க வந்தேனென்று விளம்பினேன் தகுதியாகியகாரியந்தானென்று தயைபுரிந்தார் தனுர்வேதமுதலியயாவற்றும் பூரணமாகக்கற்றேன் அளவிறந்த அம்புகளும்பெற்றேன் மதிக்கப்படாத பொருளுடையவராய்ப் பிர்மாஸ்திரமுதலிய சம்மோகாஸ்திரங்களுந்தந்து வேண்டிய வேதமந்திரங்களும் அனுக்கிரகஞ்செய்தருளினார் இப்படிநடந்தநாளையில் தேவர்கள்முதலிய தேவேந்திரனும் பொறாமைகொண்டு மனம்பொறாமல் துயரப்பட்டு என்னைக்கெடுக்கநினைத்து ஒருசூதுபண்ணினார்கள் (அந்த அனியாயச்சூது என்னவெனில்) ஒருநாள் மந்திரவடிவனாகிய பரசிராமர் என்மடிமீது முடிவைத்து நித்திரைபண்ணிக்கொண்டிருக்கும்போது தேவேந்திரனும் அவனுடன்சேர்ந்தவர்களும் கூடி வஞ்சமாயவண்டென்று உருக்கொண்டு பறந்து அந்தரமவிட்டுவந்து என்னுடைய தொடையைத்துளைத்து விஸ்தாரமாக ரத்தவெள்ளம் பெருகி பூமியிலத் தோயும்படியாகச்செய்து இந்தப்பக்கத்திலிருந்து அந்தப்பககத்தில் உருவிப்போச்சுது அந்த வண்டு துளைத்தபோது எனக்குமெத்தவும் பிராணவருத்தமாய் இருந்தது, அப்படியிருந்த போதிலும் தேகத்தையாகிலும் உடையையாகிலும் தொடையையாகிலும் அசைத்து ஆட்டுவேனாகில் ஆசாரியர்கொண்ட நித்திரைக்குப் பங்கம்வருமே என்று அசையாமல் மனம்பொறுத்துக்கொண்டிருந்தேன், அந்தவேளையில் என்தொடைவழிவந்த உதிரமானது படுத்திருந்த பரசிராமருடைய தேகத்திற் சில்லென்று பரிசப்பட்டு அதனால் அவர் திடுக்கிட்டெழுந்து இளஞ்சூரியனைப்போன்ற பரசிராமனானவர் என்முகத்தை ஏறநோக்கினார் நான்பயந்து நடந்தகாரியங்களைஎல்லாம் நயந்துவணங்கிச் சொன்னேன், அவையாவுமுணர்ந்துசற்றுநேரம் நிதானித்து நீ பிராமணனென்று சொன்னபே, பிராமணனானால்இப்பேர்ப் பட்டகாரியங்களுக்கு மனத்துணிவு கொண்டிருக்கமாட்டார்களே ஆதலால், நீ பிராமணன் அல்லபின்னையென்னகுலத்தான் உள்ளபடிஉரையென்றுகேட்டார் நான்மிகவும் அச்சப்பட்டு கை-கால்நடுங்கிவித்தகனுடைய மெல்லடிமேல்வீழ்ந்து சூதநாயகனென்பவன் என்னையெடுத்துவளர்த்தவரலாறுசொன்னேன், அதைக்கேட்ட மழுவாளியானவர்தன்னுடைய தியானத்தால் அறிந்து என்மேல்முனிந்து அடா கர்ணா? நான் உணர்ந்த தனுர்வேதத்தை பிராமணனுக்கு உபயோக மாகும்படி செய்வதல்லாமல் பற்றைப் பெருக்குச் சொல்லுகிறதில்லை யென்று ஒரு காரணத்தால் பிரமாணம் வைத்துக்கொண்டேன்-அப்படியிருக்க நீ என்னை ஏமாற்றி என்பிரமாண விரதத்தையுங்கெடுத்தாய், வேதியர் அறியத்தக்க பிர்மமந்திரமுதலியதும்பிர்மாஸ்திரங்களும் உனக்குக் கொடுத்திருக்கிறேன், மானஈனமான பொய்பேசியஉனக்குக்கொடுத்தபடியால் எனக்கு அல்ப்பமாகிய ஆசூசமாகியஇடர்வந்து நேரிட்டது அதனால், நாமெத்தவும் துன்பம் அடையலானேன் ஆகையால், நீ என்னிடத்திற் பெறற-மந்திரமும்-கணைகளும்யுத்தமுகத்தில் உனக்குஉதவாமற் போகக்கடவதென்றுசபித்து, பொய்வார்த்தைகூறிய புன்மையால் ஏந்தயுத்தஞ்செய்வதற்கு எதிர்காலும் நல்லசமயங்களாகிய அந்தப்போர்முனையில் உனக்குமனமறதிவருமென்றுசத்தியவாக்கினையுடைய உத்தமனாத்துவிந்தார் இதனை

லே நாலுபேரும் என்னை இழிவாகப்பேசும்படி இளைக்கலாச்சுது செய்தவத் தொருவனாகிய சல்லியனே, உனக்குஉண்மையாய்ச் சொன்னேன் நீமனங்கொள் ளென்று உரைத்துஇன்ன மொருசாபம் வந்திருக்கின்றது அதன் வரலாறையுஞ் சொல்லுகிறேன் கேளென்று சொல்லலுற்றான்.

அஃதெதன்னையெனில் உங்கள் மாபினனாகிய துரியோதனமகாராஜனால் தங்கமுடிசூட்டி அங்கதேசத்தைப்பொங்கமாய்ஆண்டுவந்தநாளையில் ஒருநாள் ஊர்வலஞ்செய்யவேணுமென்று சந்தோஷ உவகையும் உச்சாகமுங்கொண்டு சகலவாத்திய சம்பிரம ராஜவக்துடன் சீர்திருத்தியதேர்மேலிருந்து கார்பொருந்திய மதில்சூழ்ந்தவீதியில் வரும்போது இராஜாதி ராஜனாகிய துரியோதன மகாராஜன் தேடிக்கொண்ட கொடுமையோ இந்த உலகம் புகழாநின்றசத்துருக்களாகிய பாண்டவர்களின் நற்றவநன்மையோ அல்லதுஎன்னுடையமுற்பவத்துண்மையோ எந்தப்பாவமோநான் என்னவென்றுசொல்லுவேன் ஊர்வலம்வரும்படியாய் ஏறிச்செல்லுகின்ற தேர்ச்சக்கரத்தில்செவந்தநிறத்தினையுடைய ஒரு பசுவின்கன்றானது ஓடிவந்துவிழுந்து உடல் சிதைந்து உயிரொழிந்து விட்டது அந்தவேளையில் பாபிகளுடைய நிரியாணசாங்காலத்தைக்குறித்து கோபசாபங்கொண்டுவரும்கூற்றம்போல் ஆலகாலத்தியெனப்பொருந்தி நிறைந்த அழற்கண்ணனாகிய ஒருமுனி கண்சிவந்த தனது திருமேனியின் தோற்றம் போல் சினங்கொண்டு என்தேருக்கு நேர்வந்து நின்று என்முகத்தைப்பார்த்து அடாபாவி நான்மெத்த அருமையாகவும் ஆசையாகவும் வளர்த்த என்னுடைய இளமையாகிய பசுவின்கன்றைக் கொன்றையே இன்று இந்தக்கன்றைச் சிதைத்துக்கொன்ற உன்னுடையதேரும், விருதும் மேற்கொண்ட சத்துருக்கள்விடுக்கும் வெவ்விய பாணங்களினால் உன்னுடைய தேகமும், துளைபட்டு அழிந்துசிதைந்து போவது மல்லாமல்நல்ல யுத்தசமயத்தில்நீ ஏறியதேர்ச்சக்கரங்களும் பூமியிற்புதைந்து போகக்கடவது என்றுசபித்தான் இவ்விதமாக உரைத்தசாபச்சொல்லானது கடுந்தழற்கம்பிபோல் என்காதில் நுழைந்த உடனே நான் வேகமாக ஏறிச்சென்ற தேர்விட்டிழிந்து விரைந்து தாழ்ந்து வேதியன் திருவடியில் வீழ்ந்துகோவென்று இரைந்து காவென்று கரைந்து ஆண்டவனே இது எனக்குத் தெரியாமல்விளைந்த குற்றம் ஆகையால் இதை நீர்மன்னிக்க வேண்டியது தேவரீர் கூறிய சாபாக்கினியைத்தவிர்த்துஇனனைக்காத்தருளும் தீனரக்ஷகனே செந்தாமரைமாலை யணிந்த தேவனேசுவாமீ யென்று பலவிதமாகிய இனியசொற்களைச் சொல்லிப் பணிந்தும் பாற்குடம்போல் மடிசார்ந்த உயர்ந்த பருத்தபாற்பசுக்கள் ஆயிரமும் பூமியைக்கிழித்து ஓடுகின்ற பொன்னுருள் பொருந்தியதேர்கள் ஆயிரமும் மான்குதிக்குந்தன்மைபோல் திருந்திய நான்குகதியிலுஞ் சிறந்துநான்குதிக்கும் ஓங்கிக்குதிக்கும் குதிரைகள் ஆயிரமும், சுபலக்ஷணகுணமுடையயானைகள் ஆயிரமும்மிகுந்த தொழிலாளரும் கடல்சூழ்ந்த காசினிமுழுதும் என்னிறைவனாகிய துரியோதனமகாராஜனுடைய கையினாற் கொடுக்கச் செய்கிறேன் என்குறையைத் தீர்த்தருளும் கோமுனியே என்றுகூறித்தொழுதேன் நான் இரங்கித்தொழுது அழுத இரக்கத்துக்குஎவ்வளவும் என்னை ஏறெடுத்துப் பாராமல்நான்சொல்லியதையும் ஓராமல்-எள்ளளவேனும்இரக்கமில்லாமல் இருபிறப்பாளனாகிய மேற்குலத்தோன் உரக்கக்கூவி நிகண்டித மாகிய கோபத்துடன் சொன்னார் அடா அரசனே கொடுப்பிக்கிறே னென்று சொல்லியபாற்பசுக்கள்-நால்வகைச்சேனைகள்-அணிபணி மணிமுதலாகிய அநேகம்பொருள்களினால்இறந்துபோன பசுவின் கன்று உயிர் பெற்று வருமா - நீ கொடுக்கும் பாக்கியம் என் பசுவின் கன்றைப்போல எனக்குச் சந்தோஷந்தருமா-இதனால் எனக்கொரு ஆநந்தம் வருமா-ஆகையினால், நான்கொடுத்த சாபம்நீங்க மாட்டாது - உன்னைச் சூழ்ந்த தீவினைவசத்தால் நீ அனுபவித்துத் தீரவேணுமென்று சொல்லிப்போட்டு அந்த அந்தணர்போய் விட்டார், அப்போது நான் பெற்ற அந்தச்சாபமும்ஆசாரியராகியபரசிராமரால் பெற்றசாபமும் ஒருவேளை நேரிடுமாகில் நல்லதவத்தையுடையபாண்டுபுத்திரர்கள்வெற்றிபெறுவார்கள் அவர்களுக்குநல்லகாலம் மத்திர பூபதி இதுமாத்திரந்தான் என்னை வாதித்துக்கொண்டிருக்குது, இல்லாவிட்டால் எனக்கு நேர்நின்று போர்புரிந்து ஜெயிக்கத்தக்கபேர்கள் திரிலோகத்திலும் உண்டோ கிடையாது, ஆகிலும் தேவர்களிற் சிறந்த திருமாலும், தேவர்பகையைவென்ற விஜயனும் என்னுடன்பகைத்து எதிர்த்து மூட்டப்போகிறயுத்தங்களை நீரும் இருந்து பார்க்கப்போறீர் தெளிந்த சல்லியநிருபனே என்று மிகுந்த ஆசையாய்ப் பூரணமான மனத்துடன்பொருந்தி நல்லவார்த்தைகள்சொன்னபிற்பாடு காயுங்கண்ணினையுடைய கடும்பரிபூண்ட கயிறுபிடித்து எதுகாரியங்களிலும் கலங்காமனத்தினையுடைய காவலரெல்லாம் கலங்கித்திடுக்கிடும்படியாய்ச் சாரதித்தொழில் செய்தான் சல்லியராஜன்.

வாள்போற்சிவந்த கோபக்கண்களையுடைய வயவீராள் படைவீராள் முதலியபேரும் புடைசூழ்ந்துவர புரசைபானை முதுகின்மீது முரசவாத்தியமுழங்க குற்றமில்லாத வெண்சங்குகள் பொங்கிமுழங்க சகலவித்துவான்களும் சூழும்படியாய்ச் சூரியகுமாரனாகிய கர்ணமகாராஜனானவன் பாரியவிற்பிடித்து படைமுகம்வந்து இராஜாதி ராஜனுடனேகலந்து ஒருவரையொருவர் தழுவிப்புகழ்ந்து சத்துருக்களைப்பகைத்து யுத்தஞ்செய்யாநின்ற கோபக்கண்கொண்டு குருக்ஷேத்திரபூமியிலேநின்றான்.

இவனைக்கண்டவுடனே முன்சொன்னதர்மராஜனுடைய படைக்கதிபனாகிய திருஷ்டத்துய்மன் திணிந்தபலங்கொண்ட துருபதேயன் சோமகேசன் குந்திபோஜன்முதலாகிய சூரரும் தேறியதீரரும் கர்ணனின்ற யுத்தமுனையைக் கலக்கும்படியாய்த் தங்கள் தங்கள் மனோவேகத்திலுமிஞ்சிய வேகமான தேரைக்கடவிவந்து வில்லோசை-நாணோசை விசிக ஓசையுறக்காட்டி உரங்கொண்ட சரங்களை உருத்துத்தொடுத்து விடுத்தார்கள்.

அவடத்தில் நிலைத்து நின்ற துரியோதனனுடைய சே

னைக்காவலர்கள்வில்வளைத்து நாணி பூட்டி விஸ்தாரமாக நீண்டபாணங்களை நிமிரவிடுத்துஅமாகொடுத்தார்கள்.

அகறல் திசைகளிலிருந்து ஓசைபிறந்து பிரஜைகளிறந்து பூமியிற்புகுந்து போகும்படியாக மேலே எழுந்து வட்டமிட்டுச் சுழலும்பெருங்காற்றைப்போல வருகின்ற பேராண்மைக் கணைகளைக்கண்டு தேவர்கள் திடுக்கிட்டுத் தியங்கிப்போனார்கள்.

ஓ ஜெனமேஜெயராஜனே, இன்றையத்தினம் நடந்த போர்த்திறத்தைச் சொல்லுமிடத்தில், இயாரை யார்வென்றார்கள், இயாரை யார்கொன்றார்கள், இதனுடையவிபரத்தை எப்படிச்சொல்லி நாம் அதிசயிக்கத்தக்கதுஇறைவனே; அன்று நடந்தயுத்தம் அறிதற்கருமையாயிருந்தது, அதிரதர் ஏறியதேர்கள்முறிந்தும் வீறியகுதிரைகள் அழிந்தும் சாரதிகள்சாய்ந்தும் கணக்கற்ற நூறு நூறுகளைகள் உடம்பெல்லாம் நுழைந்தும் அதனாலமெய்வருந்தியும் நொந்தும் புரந்தந்தும் இப்படிக்கெல்லாம் வருந்தினார்கள் முந்திப்பொருந்தி யுத்தஞ்செய்யவந்தவீராளைக்க அந்தவேளையில் வேறுவேறாகிய பலகோடிவீரான்பேரில் மகமேருபோன்ற வில்லைவளைத்து சுழற்காற்றாகிய் சூறாவளிபோல் சூரியகுமாரன்தேர் சுழன்றுவந்து முனைமுகத்தில் மூட்டவிட்டுப் பின்கொடாமல் பற்பலமுகமாக விற்போற்நடாத்தி மேலெழுந்து விழுந்த கணைகளினால் அடிபட்டு உயிரழிந்து ஒழிந்த இருவர்படைகளும பதைபதைத்துப் பறக்கும்போது இரண்டுசேனாபதிகளுமாண்டு ஜெயம்பெறக்கருதி சண்டையிட்டார்கள்.

இருவர்விட்டபாணங்களும் இணைந்து எழுந்து ஆகாயத்தில இடமில்லாமல் அடைந்தது இருவருடைய தேகங்களுங்கிழிந்து உடைந்து திடந்தப்பும்படியாய் வின்னவிழுக்கி முறுக்கிப் போர்புரிந்தகாலையில், துருஷ்டத்துயமனனவன் கன்னனுக்கு முன்னிற்கமாட்டாமல் அமர் அழிந்து இடம்விட்டொழிந்து ஏறுதேருடன் மாறி ஓடினான்.

சோமதேசத்தலைவராகிய பாஞ்சாலர் வருக்கத்தில் அழிந்து ஒழிந்த சூராள்போக இன்னம் இருப்பவர்பேரில் பகைகொண்டு அஸ்வத்தாமனானவர் காமபாணத்துக்கும் மேற்பட்டுக் கருத்தைவாட்டும்படியாகிய எண்ணிலாக்கணைகளை யெடுத்து திமுகத்துடன் தேகத்தைக்கருக்கத்தெறித்துவிடுத்து சிலசில அஸ்திரங்களை பலபலவென்று செலவுசெய்தார்.

அந்தவேளையில் தர்மராஜன் ஆவேசங்கொண்டவரைப்போல் பரவசங்கொண்டு ஐயோ இதென்னவிபரீதகாலம், அப்பாவிமசேனனே, நீயாகிலும் அஸ்வத்தாமனுக்கெதிர்போய் நிற்கமாட்டாயா என்று மிகவும் மனஸ்தாபம் அடைந்து விளம்பிய மணங்குலாவும் மலர்மாலையணிந்த முடிபொருந்திய தமயனது உத்தரவின்பேரிலும் தனக்குச்சரியான கையுடன்சண்டைசெய்யக் கொண்டசங்கோஷத்தினாலும் சமானமான வீரனுடனே விமசேனனபுறப்பட்டு அஸ்வத்தாமனுடன் எதிர்ந்து அந்தஆசாரியகுமாரனையும் மற்றப்பேர்களையும் யுத்தத்தில்வென்ற ஆபாரத்தை நானெவ்விதமாகச் சொல்லுவேன் ஒன்றுக்கொன்று சம்மந்த மில்லாமல், உலைவாய்மெழுகாய் உருகச்செய்யுங்காலையில் துரியோதனனுடைய படைகள் சாய்வதையும் அஸ்வத்தாமன் இடைந்ததையும் பார்த்து மனந்தாளாமல் கடகடவென்று மிகுந்த விரைவாகத்தேர் செலுத்திப் போர்கொடுக்கும்படியாய் கர்னனுடைய குமாரனாகிய விடபசேனன் எதிர்த்துவந்தான்.

அப்போது, வாயுதேவன் தந்த வீமசேனனுக்குச் சொந்தமாகச் சேர்ந்த மனைவி விஜையாளுக்கு உகந்த மைந்தனாகவந்த விஜயகேஷத்திரனும், சூரியனாற்பிறந்த கன்னனுக்குத் தருந்த பொன்மாலை வயிற்றில் வந்தவிடபசேனனும் முனைந்து பெருமையுடன் கலந்த யானை-சேனை-ரதம்-குதிரை-முதலாகிய ஆயுதப்படைகளும்-திவ்யவாகனங்களும் உடையவர்களாய் வில்லைவளைத்து சொல்லைவிளைத்து மிகுபாணங்களைவிடுத்து வேல்கொண்டெறிந்து-வாள்கொண்டெறிந்துவிற்பிடித்து-அடித்துவிற்பனங்கள்படித்து-விருது முதலாகிய-குடை-கொடிகள்பிடித்து விதம்விதமாகஇருவர்தேர்விடுத்துவிறுவிறெனச்சுழன்று வெம்போர் விளைத்தார்கள், மைந்தர்கள் செய்த யுத்தங்களை தந்தையாகியஇந்த இருவருங்கண்டுகளித்து-பஞ்சபூதபுஞ்சமாகியஉடல்பாரித்து-வாசமாலைபொருந்திய தோள்கள்பூரித்து-தங்களுடைய ரதத்தை வேகமாக விடுத்து மனோவேகத்திலும் மிஞ்சிய வேகமாய் வலம் இடம் சுழன்று குதிரைக்காலடிமுதலாகிய தேர்ச் சக்கரங் களிநால் எழும்பும்படியாகியதும்புகளானது அம்பரத்தைமூடி மறைத்துஇம்பராகிய மண்ணுலகாகி உலகமெல்லாம் அஞ்சிப்பயந்து மிஞ்சிப் போச்சென்று விவேகம்விடுத்து அவிவேகமயக்கம் அடுத்து-சிந்தைநொந்து-எட்டுத்திக்கும் அண்டரண்டமும்-செவிடுபட்டுப்போகும்படியாய் வில்வளைத்தார்கள், இடிமுழக்கத்துடன் கீழ்மேலாகிய இரண்டுதிசைகளிலும்திரண்டு உயர்ந்த வில்லைப் போன்ற வில்லைவணக்கிய இருதிறவரும் கரசாரணுதிதெரியாமல் கடுஞ்சமர் புரிந்த காலையில், பொன்மலையாகிய கல்லை வில்லாகவணக்கி எப்புவனத்துக்கும் இடையூறுசெய்துவந்தமுப்புரத்தைஎரித்தருளிய தற்பரனை முக்கண்ணனுடைய வலக்கண்ணான சூரியன் அருளிய குமாரனானவன், வீமசேனனுடைய மார்பிலும் தாமமாலைநிறைந்த தோளிலும் - அலகிறந்த அம்புகளைவிடுத்துமுன்னும்பின்னும்உருவும்படியாய்த் துளைப்படுத்தினான்.

அப்போது செஞ்சுடர்ப்பொறிபறக்கும்இட்டுகண்ணும் மிஞ்சியவீரவாகுவும் படபடவென்று துடிக்கும்படியாய் ஆகுலப்பட்டு கலக்கண்ணீர்பொழிந்துவீமசேனன்மெத்தவுநைந்து கல்லடிபட்டபுண்ணில்தடியடிபடும்தன்மைபோல்மேலுமேலும் இலக்கமற்றகணைகள்கலக்கமற்றெறிந்த ஔதாரியாகியகர்னன்பேரில்ஈரிரண்டு - நாலிரண்டு எண்ணிரண்டு - என்றுசொல்லாநின்ற அஸ்திரங்களைவில்லிற்பூட்டிகன்னனுடையமார்பு-தோள்கள்சின்னபின்னமாய்க்கலங்கும்படிக்குவீமன்விடுத்து-தனுர்வேதஉருவாகிய அங்கதேசனைப்பார்த்து பகைத்து நகைத்து அடா கர்னா நீநல்லவில்லாளி அல்லவென்று பொல்லாதவார்த்தையைச்சொல்லாமற்சொல்லி அவனுக்குத்தேர்ச்சார

கியாகிய சல்லியனைநோக்கி, பார்த்திராமாமா இந்தக்கர்ண
னை ஒருநொடியில் முடிசாயமுடித்துப்போடுவேன்; அப்
படிமுடித்துப்போட்டால் என்தம்பியாகிய அர்ச்சுனன்ச
பையிற்கூறியசபதம் மாறுபட்டு வீணாய்ப்போகப் போகு
தென்று எண்ணிபெரியமனசுபண்ணிபிராணபிச்சைகொ
டுத்தேன் இப்பேர்ப்பட்ட சூதனாகிய சூதன்பிள்ளைக்கு நீ
சூதனாகிவந்துதேரைச் செலுத்திக்கொண்டிருக்கிற உன்
னுடைய சூதையும் தொலையாத தோள்வலி கூடியபோர்
வலியைக்குறித்துநாளும் எனபோலொத்தவர்களும்என்
னசொல்லவேண்டியது, விசனப்படுகிறோம் உன்னுடை
யவில்வண்மை சொல்வண்மை யெல்லாம்நிஷ்பிரையோ
சனமாச்சுதே உன்முகத்தில் முழிக்கலாகாமற் போச்சு
தேஎன்றுநிஷ்டூரமாகநிந்தித்துநிமிஷத்தில் அப்பாற்போ
ய் மறுபடியுந்திரும்பி வீமசேனனும்ராஜபுத்திரவர்க்கமும்
நால்வகைப்படையும் நான்குபுறத்திலும் வளைந்து ஊழி
காலத்து இருளாஸ்திரங்களைஎடுத்துத்தொடுத்து ஏகமாய்
விடுத்து அமர்மலையும்போது அங்கதேசாதிபகர்ணனும
அங்கதேசத்தலைவரும் ஐஸ்வரியமுள்ள அங்கதரும்முனை
சாய்ந்து மனம்ஓய்ந்துவாய்காய்ந்து வலிதேய்ந்து வாகனா
திமுதலிய படைகளுமாய்ந்து வருந்திப்போர்புரிந்து மா
ளாத்திச்சொரிந்து சிர்திருந்திப்போர பொருந்தினார்கள்.

அந்தவேளையில், யாரினு மேலாகிய வீரத்திறமிஞ்சிய
விடசேனன் விருதுபெறப்பிடித்த வரிவில்லை இருகால்வ
ளைய நாணியேற்றி தன்தந்தையைவருத்தியவீமன்முதலி
யபேர்கள் பேரில் கொந்தநற்கணைகளைத்தூற்றி விந்தகிரி
க்கொப்பாகிய தேரை மேலாகப்போக்கி, சிந்திக்கும் அ
ன்பர்க்கு முன்வந்துகாக்கும் செங்கண்மாலுக்கிளைய சா
த்தகியுடன் சீறி எதிர்த்து செருப்புரிந்தார்கள்.

இப்பால், (இன்றைக்குப் புதுவெள்ளம்வரும் நீங்கள்
வயலைஉழுங்களென்று ஆற்றுமணற்குறிப்புக்காட்ட, அந்
தக் குறிப்பின் பிரகாரம் அப்போதே வெள்ளம் புரண்டு
வராநின்ற காவிரிநாடனாகிய சோழனும் அழகிய பொன்
முடிபொறுத்த மகததேசனாகிய சாதேவனும் பகைத்து
யானையேறினார்கள். அந்தயானைகள் மலையருவிகள்போல்
மததாரைகளைப் பொழிந்து வானமும் மண்ணும் நனை
களமுந்து வாரிதி நிரிற்றுளைந்து வலியபகைகளைக களைந்
து மேகங்களைப்பிடித்துப் பிழிந்து வேறுவழிபுகுந்து தா
றுமாறாகத் திரிந்து உதிரச்சேறுபட யுத்தம்புரிந்து ஒன்
றும் நிகரில்லாமல் திரியுங் குன்றுபோன்றயானைகள்) அ
தன்மீதேறி திடங்கொண்டு அடல்தேறி-சிற்சிலகணைகளை
விடுத்துச் சீறி இரண்டு கருங்கடல்முகட்டில் உதித்த சூ
ரியர்களைப்போல் பிரகாசித்து நின்று பலம் பொருந்திய
வில்லைவளைத்து நாட்டி-நாணோசை காட்டி-இந்த ஓசையு
டனேகூட பாணங்களும் ஓடும்படியாய் உந்தி உற்றுவந்
தசேனைகளின் உயிரையுஞ்சிந்தி-ஒருவருக்கொருவர் முந்
தி-உடல்வருந்திப் பிந்தி-ஓயாதயுத்தஞ்செய்து வரும்போ
து மாவினையாளனாகிய சோழராஜன் பூசித்துபிறைமுகக்
கணையாகிய ஒன்பதுபிரபல வாளிகளைப் பலமாக விடு
த்தான்.

அந்தவாளிகளினால் மாகதனுடைய மார்பமும் வாகாகி
ய திண்ணியபுயமும் மறைந்து போம்படியாய்த் துளைந்
துநிறைந்து ரெத்தங்கள் உறைந்து உயிரிலே குறைந்து
தானேறிய யானையுமழிந்து வெற்றிக்குடையும் விருதுக்
கொடியும் யானைப்பாகன்முதலிய படையும் அழிந்து பி
ன்பழிந்து வீழ்ந்தொழிந்தார்கள்.

அப்போது. மகதராஜனானவன் தானேறிய யானையை
த் திடப்படுத்தி திரும்பிவந்து சோழராஜனை வளைத்தான்,
அந்தச்சோழன் எப்பேர்ப்பட்டவனென்றால், (கங்காநதி
யில் மூழ்கி ஆழம் அறிந்து கட்டுத்தறியையும் மூங்கிற்கா
ட்டையும் பாகனையும் உரலடி போன்ற காலால்முறித்து
விலங்கையும் தொழுவையும் விலங்க எறிந்து மும்மத
ம்பொழிந்து எழுறுபபுயர்ந்து காவிரியைக் சலக்கிக்குடி
த்து கடலைக் காவிட்டளந்துதிடனாக் கிணறுப்பறித்து
த் திருகுதலில்லாமல் இறுமாந்து திரியும் பட்டத்து யா
னையை யுடையவன், மேலும்-கப்பலோடும் படியான க
டல்சூழ்ந்த காசினியெல்லாம் சிவப்பிர திஷ்டைசெய்து
பாணிப் பிரபந்தங்கொண்டு பாரெல்லாம் ஜெயித்து பவ
னிவலம்வந்த மறுகுலச்சோழன்,) அந்த ராஜனைவளைந்த
மாகதனானவன் கனகனல் உதிர்த்து அதிர்ந்து, மேலு
மேலும் விர்த்திக்கும் படியாகிய மின்னலாஸ்திரம்-இடி
யாஸ்திரம்-விருதாஸ்திரங்களைத் தொடுத்து இளமை தங்
கிய அங்கனைமார் இளமுலைதோயும் புயத்திலும் மார்பி
லும் ஊடுருவும்படிக்கு விடுத்து அந்திவெய்யிலைப் போ
ன்ற சோரியில் மூழ்கப் படுத்தான்.

அதுகாலத்தில், கருவூர்-மதுரை-காவேரிப்பூம்பட்டின
ம்-முதலிய கடிஸ்தல முடைய சோழனானவன்-வடதேச
த்திலிராநின்ற மன்னர் மண்டலீகர் திறையிடவாரிப்போ
ர்கட்டிய நேரியன் இந்திரனுக்குத் துணையாயிருந்து இந்
திரன்பேரி லெதிர்த்த இராக்கதரை போர்முனை தோறு
ம் வென்று தேவர்களுக்குப் பயமொழித்த பொழுதில்-
தேவேந்திரன் மகிழ்ந்து நஞ்சுகக்கும்முனைவிஞ்சிய அஞ்
சரீகமென்கிற பாணங்களைக் கொடுத்திருந்தான் அந்தபா
ணத்தை யெடுத்து மரியாதையுடன் பூசித்து விரிதலையி
னிடத்து எரிகுலவும்படியாய் நீண்டவில்லைவளைந்து வெ
ங்கணை விடுத்து மாகதனேறிய மகமேருபோன்ற மதயா
னையானது மடிந்து சாகவும் மாகதன்முடிசாய்ந்து உயிர்
மாய்ந்து போகவும் மாட்டினான்.

அவனானில், தேவர்களுக்குக் குலபதியாகிய ரிஷப
வாகனராகிய, பரமசிவனது அழகிய பொன்மலரடியை
நிலவிய மின்மணிமுடியிற் பதித்து எட்டுத் திக்கும் மனு
நீதிச்செங்கோல் செலுத்தி எல்லாவுலகையும்சுவேதகூ
த்திர நீழலில் அடக்கி நெருங்கிய கிரணசிகாமணி முடி ஓ
ங்கி வண்டுமொய்த்த ஆத்திமாலைதாங்கிய மதங்கொண்டு
லாவிய ஆண்புலிக்கொடி பொறுத்து அன்னவளம்பெற்
ற மன்னவரோனாகிய சோழமகாராஜன், அவனுக்கீடாகிய
வீரவேந்தர்கள் எவர்களுமில்லை அந்தச் சோழராஜனுங்
குரிய பலமன்னருங்கலந்து எங்களுக்கு என்ன ஏவல் க
ட்டளையிடுகிறீர்களென்று கைகட்டி வாய்புதைத்து நிற்
கும்படியாய் இந்தப்பூமியைப் புரக்கும் சாமியாகியசோ
ழராஜன் அவனுடைய கைவில்லி லிருந்து உந்திய அஞ்ச

ரீகக்கணையினுல் மோதப்பட்டு மகதர்கோமானுகிய சகாதேவன் நிலதனைதமுகம்பார்த்தவண்ணம் தலைகவிழ்ந்துவீழுந்தான் அதைககண்டு அவன்சேனைகளும் துரியோதனராஜனுடைய யானை வெள்ளங்களும் புறங்கொடுத் தோடினுர்கள்.

இவ்விதமாக, சேனைப்படைகள் புறந்தந்தோடிய நிலையை ஜோதிவிற்பிடித்த துரோணுசாரியர் குமாரனுகிய அஸ்வத்தாமன்கண்டு மனங்கனறி மகிழ்ச்சிகுன்றி மென்மேலும் வீரவாளிகளைப் பலவாருக விடுத்து வெகுண்டதன்மையை தர்மராஜனுடைய தம்பிமார்களில் இன்றையப்போர் வினையைவென்று முடிப்பேனென்று சீற்றங்கொண்டு ஒருபொற்குன்றியில் இரண்டு இந்திரநீலக் குன்றுபொருந்தியதை யொத்த திருமாலுந் தானுமாகிய ஜெயவிஜயனுனவன்கண்டு தேர்செலுத்தி நேர்புகுந்து அதிர்ச்சிவிளைத்து செங்கையாலுந்திய அங்குலிகமென்னுங் கணைகளினுல் அஸ்வத்தாமனைவென்று முதுகுகண்டு வெறுங்காலுடன் ஓட்டிவிட்டான்.

அப்போது, துரியோதனன் தம்பியாகிய சுதக்கண்ணனுனவன் பெரியோனுகிய குருபுத்திரன் புறங்கொடுத்தோடியதைக்கண்டு பரிதேர் பதாதிகளுடன் யானைகளும நெருங்கவந்து மூலிந்தோடிய சேனைகளுக்குப் பின்புபோய்நின்று கொடுந்தீக்ஷணியமாகிய அககினியைக்கக்குங் கண்களையுடைத்தாய் கனன்றுகோபித்துமேகம்போன்ற வில்லைவளைத்து கூர்மைபொருந்திய அஸ்திரங்களை விஸ்தாரமாக விடுத்து போர் கொடுக்குஞ் சுதக்கண்ணனென்னுங் காளையை நகுலன்பார்த்து நகைத்து இறுமாந்து கோபித்துப் பகைத்து பிரகாசிக்கும் பாணங்களை அமோகமாக ஏவி ஆவிதுடிக்கும்படியாய் அலட்டி அஞ்சச்செய்தான். அந்தவேளையில் அளவிடக் கூடாமல் வருகின்ற சத்துருக்கள் மலையும்போது யுத்தமுகத்தில் தட்டுப்படாமல்த் திரியும் தர்மராஜனுடைய தானைகளையும் சேனைவீரர்களையும் இறந்தவர்போக இறவாதிருந்த வடிவேற்ருங்கிய வீராதி வீராள்பலருஞ் சூழும் படியாய் போர்முகப்புலிபோன்ற பலசாலியாகிய கர்னன்முனைந்துவந்து எதிர்ந்தான். அந்தக்கர்னனைக்கண்ட தங்கள் சேனைகளாகிய பாஞ்சாலர்களிலும் பற்பலதேசத்து பாஷைமன்னர்களிலும் அன்றையப்போரில் மாய்ந்தவர்நீங்க மற்ற மன்னர்களும் சுற்றத்தார்முதலிய மாப்பெரும்படைகளும் தன்னைச் சூழும்படியாய்வந்து வாசமாலையணிந்த தோள்திருந்திய தர்மராஜன் எதிர்ந்து மலைந்த காலத்தில் கர்னன் கருத்தும் அவனைச்சார்ந்த கடுஞ்சேனையும் தர்மராஜனுடைய தாஷ்டியையுங் கண்டு எதிரேறிச் சென்று சேனைகளுஞ் சேனைகளுங் கைகலந்து உதிரச்சேறுடும்படிபோராடினுர்கள் தர்மராஜனும் கர்னனும் எதிர்ந்து பொன்மலையிரண்டு பொருதப்புகுந்ததைப்போல் தேருந்தேரும் திருகவிடுத்து தங்களுக்குத் தாங்களே நிகரொன் றடுத்து வெம்போர் விளைத்தார்கள். அந்த யுத்தத்தில் உதிட்டிரன் கைக்குதை அம்பினுல் கர்னனுடைய பெருஞ்சேனைகளின் கால்மாண்டழிந்தபேர்களை இன்னார்இன்னுரென்று சொல்லுவதற்குக் கூடாமையா யிருந்தது மாசற்றமனத்தோனுகிய தர்மராஜனுடைய சேனைகள்-கர்னன் கையம்பால் உதைபட்டு இறந்தபேர்களை சொல்லத்தொடங்கினுலும், சொல்லமுடியாது, இதுதான் நல்லயுத்தமென்று சொல்லத்தக்கதாய் யுத்தம்பண்ணி அழிந்தும் ஒழிந்தும் மறுபடியுந் தேறியெழுந்து மல்யுத்தம்-கவுண்டுக்கல் யுத்த முதலிய கனசண்டைவிளைத்து பிரகாசிக்கும் மகுடமணிந்த அந்தந்த அரசர்கள் தங்களுக்குள் தாங்களேமுனைந்து முதன்மையாகிய அஸ்திரங்களை விடுத்து அண்டமுகடுவிள்ளும்படிக்கு சண்டப்பிரசண்ட வேகமாக அண்டரும் அதிரக் கோதண்டங்கொண்டு சண்டைவிளைத்தார்கள்.

மண்டலமுழுதும் வில்வேத வல்லவ னென்னும் பேர்கொண்ட கர்னனும், தர்மராஜனும், கொலைபுரியும்பாணங்கள் நிறைந்த அம்பறுத்தூணியும்வில்லும் திகழ்ந்த இரண்டுமலைபோன்ற திரண்டதோளும் நிலைத்து நிற்கும் நிலையும்-குறிப்பும்-சிறுநாணெலியும்-நெறிப்பும்-இருவரும் எதிர்ந்து சண்டைசெய்யும்படியாகிய சிறப்பும்-மறமும்-திறமும்-அறமும்-இவர்களைவிட்டு நீங்காதிருப்பதுகண்டு தேவர்களெல்லோரும்புகழ்ந்துமகிழ்ந்துவாழ்த்தினுர்கள்

பாதாளம்வரைக்கும் ஆழ்ந்து அலை உயர்ந்து வீசும் சமுத்திரம்வளைந்த ஏழுலகத்தையும் தனிச்செங்கோற்செலுத்தி ஆளுதற்கிருக்கின்ற தர்மராஜனுடைய மார்பில் ஏழுபாணமும் அம்பொன்மாலைபூண்ட விம்பமாகிய கம்பம்போன்ற இருதோள்களில் எட்டுப்பாணமும் எய்தான் கர்னனுனவன், தன் தோள்களிலேயும் மார்பிலேயும் கர்னன்தொடுத்த கணைகள் மூழ்கிய உடனே வாய்மைநிலைநின்ற மன்னவரோறென்னும் கலங்காமனமுடைய காம்பீரன் வேகம்பெற்ற வில்லைவணக்கி வீரவாளி இரண்டு முடுக்கி கர்னனுடைய புயமும் மார்புங் கலங்கச்செய்ததுமல்லாமல் அவனுடையவில்லையுமுறித்து வீழ்த்தினுர்.

அப்போது, கர்னன் வேறொரு வரிபெற்ற வில்லைத்தாங்கி இருகுதையும் வளையவாங்கி முனைபெற்ற முள்ளம்புகளை நூறுநூறுகத் தொடுத்தபோது இருவரும்கைகலந்து உடல் இருகூறுகும்படிக்கு இருபடைகளையும் கொன்றகாலத்தில் இருவருடைய தேகத்தி லிருந்து பெருகியோடிய ரெத்தங்களானது ஆறுபோலோடி அங்கங்கே குளங்குளமாய் நிறைந்து உறைந்திருந்தது.

இவ்விதமாகத் தர்மராஜனுக்கும் கர்னனுக்கும் போர்நடந்து வரும்போது, இன்னொரு பக்கத்தில் வீமசேனன் பகைத்து மேற்கோள்போற் சினத்து துரியோதனன்சேனைகளைத் தகித்து திகிரிவட்டம்போற் சுழன்று திரியும்போது துரியோதனனுடைய தம்பிமார்களில் சகாதேவன்-தண்டகன்-சித்திரதேவன்-தீதில்லாச் சாத்தகி-சித்திரகீர்த்தி-தண்டநாதன்-தண்டகரன்-என்று சொல்லுகின்ற தாதேறிய மாலைபுனைந்த துரியோதனன் தம்பிமார் ஏழுபேர் தங்களுடைய தேரைச்செலுத்தி வீமனைச்சுத்தி தீமுகக்கணைகளைத் தெழித்து விடுத்து தீப்பொறிபறக்கக்கணைவிடுத்தார்கள். அவர்தொட்ட அம்புமுதலிய யாவற்றையும் வீமன்கண்டு சினங்கொண்டுநொந்து எதிர்சென்று நின்று அவர்கள் ஏறிவந்ததேரும் ராஜசெல்வச் சீரும் கெட்டுப்போம்படியாய்த்தாக்கி உயிரையும் போக்கி சே

னைகளையும் மண்ணுக்கி வருங்காலையில் துரியோதனனுடைய சேனாநாயகன் முதன்மையாகிய படையுடன் கவிந்து வலைபமிகுந்து மூர்த்தண்யமாக ஆர்த்து அரியவாளிகளை மேகம்போற் சொரிந்து மூடுபனிபோல் மேல்மூடுங்காலையில் தங்கள் சேனாபதியாகிய துருஷ்டத்துய்மனும் மற்றதேசராஜர்களும் நால்வகைச்சேனைமுதலிய தர்மராஜரும் தளர்ச்சிகொள்ளுந் தன்மையை தண்டதரன் கண்டு தாளாமற் கோபங்கொண்டு தன்னுடையநால்வகைச் சேனைகளும் உடன்சூழ்ந்துவரச் சென்று போராடுந் தோள்வலி பொருந்த வீமசேனன் எதிராக வந்ததைக அங்கர் பெருமான்கண்டு பொங்கிப் பொரிந்து போர்செய்யப் புகுந்தபோது துரியோதனன்பார்த்து முகம்வியர்த்து ஐயோ, தர்மராஜனை கர்னராஜன் மடக்குவான் என்றல்லோயிருந்தேன், இந்தவேளையில் வீமனுகிய கெண்டன்வந்து கேரிட்டானே, இன்று என் தம்பிமார் எழுபேரை எமலோகஞ்சேர்த்துவிட்டானே என்றுதுடிதுடித்து கிருபாச்சாரியர்-கிருதபன்மன் - இன்னம் உறவினராகிய வேந்தர் பல்லோருடன் அஸ்வத்தாமன் இவர்களை யெல்லாஞ்சேர்த்து கர்னனுக்குத் துணையாகக் கூட்டி அனுப்பிவைத்தான் அவர்களும் கோபத்துடன் மிகுந்த வேகத்துடன்வந்து வீமனைவளைத்து சிற்றெறும்புபோற் சுற்றிக்கொண்டார்கள். அந்தவேளையில் பகாசூரனுக்குளமனை வத்தோன்றிய பங்கஜமுகம்போன்ற வீமசேனனுக்குப்படைத்துணையாக காண்டீபதாரனுகியநானும் நகுலசகாதேவரும் சாத்தகியும் பற்பலதேசத்துப் பார்த்திபரும் பக்கபலங்கொண்டு படைசேர்ந்து உறுதியாக வந்து அமர்மூண்டு நின்றார்கள் சத்துருவாகிய துரியோதனன்படை அடங்கலும் பலகோடிபாணங்களை உய்த்தார்கள். பாண்டவப்படை வீரர்யாவரும் ஈட்டுக்கிடாகிய கணைகளே வி அவர்கள்விட்டபாணங்களையெல்லாம் அழித்து அவர்கள்பேரில் அநேகம் அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்து திரிபுரம் எரித்த நாளைப்போல் பொங்கிச் செழித்து கொக்கரித்து பேரோசை செய்துநின்றார்கள் இவ்வுலகம் என்னமாய்ப்போமோ இன்று பிறந்தது உகாந்த காலமாக்கரும் யென்று தேவர்களெல்லாம் உட்கிமக்கி குகைகண்ட யிடங்களிற்புக்கி இருந்தார்கள்.

இப்பால், படைமுனையில் வீரர்செய்த போர்த்திறங்களால் குதிரைகளிறந்தது யானைகள் பூமியில் வீழ்ந்து மிதிபட்டு நெரிபட்டன வீரர்களெல்லாரும் பட்டொழிந்து பொடியானர்கள், இன்னம் வெகுபேர் வேந்தர்களுடைய மார்பில் ரெத்தவெள்ளம் சொரிந்து தோய்ந்துகாய்ந்து காடுபற்றியெரியும் கருநிறச் சிவப்புப்போல் இருந்ததுகள் சூரானுடைய கைகளெத்தனை, மெய்களெத்தனை, மணிமகுடச்சிரங்களெத்தனை: அணிமணிப்பணி உரங்களெத்தனை, வாகுவலயத் தோள்களெத்தனை, வீரமணியும் தாள்களெத்தனை, திரமேற்கொண்ட ஆள்களெத்தனை, இவ்விதமாக ரணக்களமுழுதும் நிரம்பிக் கிடக்குமாகில் ஒவ்வொருவில்லி விடத்தில் விருந்துபுறப்படும் சரங்களெத்தனையென்று சொல்லலாம், இவ்வாறு இருபடைச் சேனைமன்னரும் பகைத்து மூண்டு உக்கிரமுகக் கணைகளைச் சொரிந்தும் வெவ்வேறு கைப்படை கொண்டு மோதியும் பற்பலவிதமாகச் சோதிக்கும்பொழுது உதிரக்கடல்பெருகி சூரியன் அஸ்தமித்தபோது தோன்றுகின்ற செவ்வானச் சிவப்புப்போற பூமி முழுதும் சிவந்துவிட்டுது சுழன்றுடுங் கொடிகளை யுடைய மகாயானைகளும் தேர்களும் குதிரைகளும் வயவரும் இறந்து விழ்ந்தார்கள். அவர்களுடைய உடல்களையும் குடல்களையும் ரெத்த வெள்ளங்களினுடைய அலைகளானது அடித்துக்கொண்டோடி நாடுமுதலிய காடுமேடெல்லாங் கடந்து பலநதிகளின் முகத்துவாரம்போல் ஒருமுகமாகச் சென்று கடலோடு கலந்து கப்பல்முதலாகிய படகுகளும் சமுத்திரமும் புலால் நாறும்படியாக்கியது, இந்தச் சமயத்தில் பொய்யே மெய்யாகவுடைய துரியோதனனும் அவன் தம்பிமார்களும் இவர்களுக்குரிய வாகினியும் சூழப்போய் வீமனைவளைத்து அவனுடைய உடல்முழுதும் பீறும்படியாக அநேகங்கோடி அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தார்கள்.

அந்தவேளையில், அருச்சுனன்கையில் அகப்பட்டு அவதிப்பட்டு ஒடிவராநின்ற சஞ்சத்தகர் துரியோதனனுக்குத் துணையும வீமனுக்குப் பகையுமாகவந்து வளைத்து வலுவேறிய கணைகளை வர்யுவேகமாக விடுத்தார்கள். இன்னமுள்ள வீராதி வீரானும் எவரெவர்களுடன் எவரெவர்கள் எதிர்க்கவேண்டுமோ அவரவர்கள் அவரவர்களுடன் திறங்கொண்டெதிர்த்து தாங்கள் தாங்கள் ஜெயம்பெறவும், வீரமாலைபுனையவும்,புகழ்நாட்டவும் தக்கவாறு கூடியவரையிலும் போர்பொருகினார்கள்.

இதிப்படியிருக்க, நால்வகைத்தானைசூழ படைத்துணை வந்த பார்த்திபர்நெருங்க வரிபொருந்திய வில்லைக் கைக்கொண்டு மலைவாளி-மழைவாளிகளைப் பூட்டி-அமரர் முதலாகிய யாவருங்கலங்க ரதஞ்செலுத்திவந்த,சக்கிரவாக்கியாகிய தர்மராஜனைக் கண்டு எட்டுத்திசையும் மட்டுப்படாத விற்பிடித்து இசைபெற்ற வேதமுனியாகிய கிருபாச்சாரியும், கிருதவன்மனும்,விரகுடைய சகுனியும்,இன்னஞ்சில அங்கமாகிய சிங்கம்போன்ற நிருபரும் அங்கங்கும் நிரை நிரையாய் நின்று இலைத்துரப் பணம்போல துளைக்கும்படியாகிய இந்துமுகப் பாணங்களை இறைஞ்சி ஏத்தி வாழ்த்தியெடுத்து, ஐம்பது-அறுபது-எழுபது-எண்பது-தொண்ணூறு பலவாய் மூடுக்கி விடுத்தார்கள் அந்தப் பாணங்களானது பலமிகுந்து, தர்ம சொரூபியாகிய முரசக் கொடி நாட்டிய முதல்வனை வளைக்கும படியாய், (பூமியில்வந்த இந்திரனையெதிர்த்துப் போர்புரியும் ராக்ஷதரைப் போல்,) சண்டை விளைத்தார்கள், இத்தனைமையாகிய அத்தனைப்பேரையும் அடித்து அவர்களெண்ணத்தையும் அவமாக்கி முடித்து தருமன்மைந்தனை தர்மராஜனைவர் தனது ரதத்தைத் துரத்தி பாநதிமைந்தனை பார்த்திபக் கர்னனைக்குறித்துப் பகைத்து பாணம்விடத்தொடங்கினர். எப்படியென்றால், முரசக்கொடியினை, சச்சைக்கொடியினுனைக்குறித்து இடியோங்கிய திருகணையேவி கர்னன் கைப்பிடித்த கட்டுகளார்ந்த வில்லையும்-பாணங்களையும் துணித்தார்கள், அதுகண்டு அருந

டைக் கர்னனானவன் தருமன்விட்ட இரண்டுகணையைத் தடுத்து தானிரண்டுகணையுந்தி முரசக்கொடியைமுறித்து மேலும் இருகணைதெறித்து தர்மராஜனுடைய தேர்ச் சிகரத்தைப்போக்கி மற்றொருகணைவிடுத்து சாரதிஅங்கத்தைப் பங்கப்படுத்தி-வேறொருசரம்பூட்டிவிஷப்பார்வையாக விழித்து வேகமாகிய குதிரைகளைமாட்டியழித்து வரமபெற்ற வலுவேறிய சரங்களைக்கொண்டு தர்மராஜனுடைய தடந்தோளிரண்டிலும் துளைபட்டுருவித் துயர்பெறவழுத்தினான்.

அதுகாலையில், தர்மநந்தனன் சாணை பிடித்துத் தயிலதூபஞ்செய்த சரங்களை சரமாரியாகத்தாக்கி கர்னனுடைய இருபுயத்திலும் கரகரவென் றெறவிட்டு வடகலிங்கர்-தென்கலிங்கர்-மேலகலிங்கர்-நடுநாட்டுக்கலிங்கர்-குருதர் ஒட்டியர்-மருடர் கர்னுடர் சௌராஷ்டிகர்-பப்பரர்- சுப்ரதீபர்- ஒப்புவமையில்லாத களமர்முதலாகிய காவலரும வெள்ளைக்குடை நிழலில் மேதினியை ஆள்கின்ற மகுடமுடிவேந்தரும்-உலகம் நிறைந்த மாந்தரும்-பைம்பொன்முடி மகுடவர்த்தனருடன் வீரபட்டத் தலைவரும்-கெடிகொண்டு இடிமுழக்கங்கேட்டு தலைநசுங்கி பிலத்துவாரத்தில் இறங்கி ஒளித்துக்கொள்ளும் விஷஜெந்துவாகிய பாம்புகளைப்போல ஒடுங்கி படபடப் படங்கி ஒருவருக்கொருவர் நடைதளர்ந்து அடியோய்ந்து அஞ்சலிசெய்து முதுகிட்டு அவதிப்பட்டோடவும் அநேகமபேர் உயிர்மாறவும் தெய்வலோகங்குடியேறவும் அணிகொண்டபடைகள் அடியோடழிந்துபோகவும், போர்பொருந்தி அமுதிய சங்கத்தை பவளம்போன்ற மணிவாயில் வைத்து பம்பம்பமென்று ஊதியகாலத்தில் அண்டங்களெல்லாம் உடைந்துபோகவும் திசாதிசைகள் செவிடுபட்டு மாறவும்-தெய்வலோகமுங்குன்றி தத்தளிக்கவும்-ஆதிசேடன் முதலாகிய அரவினங்களும் மடிந்ததைப்போல் மண்டலாமிர்தியாய் மண்மேற்படிந்து பாதாளத்தில் மறைந்து போகவும்-பூமிகுலுங்கி குமுங்கவும்-உலகிலிருக்கும்மனிதரெல்லாரும் மடிந்துபோவார்களென்று வசந்தைபிறக்கவும் கருத்தகடலும் கடையுகக் கலகம்போல் பொங்கி வடவைக்கனலோடு கலந்தெரிந்தெழுந்து பிரசண்டவேகக் காற்றினுடன் பேரோசைகொண்டு கலக்கும் படியாய் சங்கநாதத் தொனியுடன் சதுரங்கப் படைகளுங்கூடி சண்டையாடினார்கள்.

இப்படியாகப்பொருந்தி நெருங்கிய உகாந்தகாலக் காற்றைப்போல் வீசியடித்து அடுத்துப் போர்கொடுக்கானின்ற கவஜகுண்டல தானாபரனாகிய கர்னன் நான்குவிதப் பொற்கலசம்பெற்ற தேரும், நான்கு கதிபெற் றோங்கிய குதிரைகள் நான்கும் தர்மராஜனால் இளைத்து களைத்து மதுமாலையணிந்த சாரதியாகிய மத்திரத்தலைவனும் மெத்த வருந்தின-அப்போது, அமரராகிய அந்தரவாசிகளனைவரும் தும்தும்தும்மென பம்பைமுதலிய கொம்புடன் கம்பலிசெய்தார்கள்.

இப்பாலிருந்த யாவரும் இதென்ன வம்பாய் முடிந்ததென்று அம்புமுதலியதுந்தொடாமல் கும்பலாய்க்கூடி வார்த்தையாடினார்கள், அப்போது செம்மலாகிய சல்லியன்தேறி சபதங்கூறி கோபமேறி கோல்கொண்டுவீசிகுதிரைகளைத் தட்டிக்கொடுத்து தேர்செலுத்தியபோது கர்னனானவன், தைரியத்துடன் அவனியெல்லாங் குலுங்கி அடங்கலுங் கலங்கும்படியாய் அவனிலும் பதின்மடங்கு அதிகமாகிய தன்னுடைய சங்கத்தைமுழக்கி அங்குமுழக்கத்தினால் யாவரும் அயர்வடையச்செய்துசமர்முகமாகிய முனைமுகத்தில் தர்மராஜனுக்கெதிரில்வந்து சிகைவிரிந்த சரோருகாஸ்திரங்களைவிடுத்துமுரசக்கொடியோனுடைய மார்பும் திண்ணியபுயமும் அவர்தொடுத்தகூர்மையாகிய பலசுடர்ப் பகழிகளும்தேர்த்தட்டும் கலசசிகரமும் குச்சுக்குடையுங்குவிந்த கொடிஞ்சையும் கவிந்ததேருருளைகளும் குற்றுக்கால்களும் அச்சும் மச்சும் நடுநாயகப் பீடமும் குதிரைகளும் கைப்பிடித்தவில்லும் நாணியும் அழியும்படியாய்ச் செய்து சாரதியுடலைச் சங்கடப்படுத்தி அவனை முகமாறவிடுத்து முரசமெழுதிய பொற்கொடியைப் பின்னாக்கி தர்மநந்தனனுடைய தேகத்தைசல்லடைக்கண்ணாக்கி மனத்தைப் புண்ணாக்கி விண்ணை மண்ணாக்கி படைகளை ஒண்ணாக்கி வருத்தினான்.

இத்தியாதி உபத்திரவங்களுக்கும் பயப்படாமல் குருகுலவேந்தர் கோமானும் குந்திதேவிமூதற்புத்திரசீமானுமாகிய தர்மராஜனென்னும் பூமான் வேறுவில்லெடுத்து நாணேற்றிவளைத்து சண்டைவிளைத்துத் தாக்கி மூண்டகக்கணை முதலாகிய கண்டகக் கணைகளைப் போக்கி கர்னனுடைய கவஜத்தையும் துவஜத்தையும் நவமணிபூண்ட மணிப்புயத்தையும் நவமாகிய தேரிற்பூட்டிய நான்கு அயத்தையும் உரத்தையும் விற்பிடித்தகரத்தையும் மணிக்கலச முடியையும் அணித்தேர்த்தட்டாகிய அடியையும்அவனேறியதேரையும் எதிரேறிய போரையும் அவனுடலையும் சேனைக்கடலையும் சல்லிய சாரதியுடையஉடலைக்கெல்லியும் வில்லை நடுவற வெட்டியும் இப்படி பலவாறாகச் சிலசொற்சொல்லி வருத்தப்படுத்தினான். உடனே கர்னனும்வேறுதேரேறி விற்கொண்டு தர்மராஜனைச்சரங்களாற்பொழிந்து தவிக்கவிடுத்தான், இப்படியாகக் கர்னனும், தர்மராஜனும் கைகலந்து பலம்பொருந்திய போர்க்களத்திற்செய்த கலகத்தைஇவ்விதமென்று எவர்களும் உரைக்கக்கூடாது. இவர்களுடைய திறத்தையும் மறத்தையும் உபநிடத வஸ்துவாகிய பெரியோர் முதல் அவனிபரான தேசராஜரும் கொண்டாடி இவர்கள் இருவருங்கற்றதனுசாஸ்திரமுதலிய சகலசாஸ்திரவலுமையும் மேலாகிய விவேகத்தையுஞ் சொல்லிக் கொண்டாடினார்கள்.

அப்போது, தருமபூபதி மனஉறுதியுடன் மற்றோர்தேரேறி ஒருகரத்தில்வில்லும் இன்னொருகரத்தில்வடிகணையுங்கொண்டு வருஷகாலம்போற்றூறி தடந்தேர் ஊர்ந்து நேரேறி தானாபரனை ஓர்ந்துநின்று எதிர்த்தகாலையில் கிருபையும் அருள்மொழியும் விதரணகுணமும்நிறைந்தகொடையாளனாகிய கர்னன் திறனேங்கிப்பிரகாசிக்கும் செங்கதிர்க்கணைகளைத் திடுக்கிடவிடுத்து அங்கவன் தொடுத்த பாணங்கள் அனைத்தையும் துணிபடக் கெடுத்து பொடியாய்ப்போக்கி தேனிறைந்த பூமாலையணிந்த தர்மராஜனுடைய மார்பையும் தோளையும் குழிகுழியாய்க் கணை நு

மையும் வழிவழியாகத்துளைத்து வருத்தியகாலையில் எறியும்படியாகிய சக்ராயுதம்-குந்தாயுதம்-தோமராயுதம் சூலாயுதம்-வேலாயுதம்-மாலாயுத முதலாகிய எறிபடைகளை யெடுத்து எறிந்து இரதத்தின்மீது களைத்து புறமுதுகிடும்படியாகிய தருமபூபதியை, கர்னன்கண்டு, ஓஹோ தர்மராஜனே, தருமத்துக்கு மிகுநேசனே, யுத்தத்தில்மிகுந்தவிசுவாசனே, ஏன் ஓடுகிறீர் நில்லு நில்லுமென்று சிற்சில சொல்லைச் சொல்லத் தொடங்கினன். நீரோ-சத்தியவாக்கினை யுடையவர், அநேகஞ் சாஸ்திரங்களைக்கற்றவர், கற்றநெறியின்படிக்கே நல்லுணர்வுற்றவர், அந்த நல்லுணர்வுக்கிணங்க நன்னடத்தையும் படித்தவர், நல்ல விவேகமுள்ளவர், தகுதியாகிய பிள்ளைகளையும் பந்துக்களையும் பெற்றவர், தர்மத்தைக் கைப்பிடித்தவர், குணமேருபோன்றவர், கருணைக்கட லானவர், ஜீவகாருண்ய முடையவர், எல்லாத்திசைகளிலும் வழுவில்லாமல்வளர்த்தபுகழையுடையவர், இயாவராலும் வரிசைபெற்றவர்,பூமியைப்போன்ற பொறுமைபூண்டவர்,தர்மவிதிப்பிரகாரம் தம்பிமார்வணங்கி வழிபடும் படியாகிய வரிசையையும் மதிப்பினையுமுடையவர், பூமிமுழுதும் முத்தின்குடை நிழற்படுத்தி ஆளும்படி யாகிய புண்ணிய தேகர், புஜபலயோகர், எல்லா அரசர்க்குள்ளுந் தலைமைபெற்றவர், இப்பேர்ப் பட்ட நற்குணமுற்று நாவலரால் புகழ்ப்பாடல் பெற்றிருக் கின்ற நீர் - யுத்தஞ் செய்து சமுத்திரம்-சரை - அழியுந் தன்மை போல் ப்ரமுகரா! முதலாகிய வீராதிவீர சேனைசயினியங்களெல்லாம் ஒழிந்து உலகம் உனக்கோஎனக்கோ என்றிருக்கின்ற நல்ல சமையத்தில் மனக்சேவலமாய் உமதுபிராணனைக் காப்பாத்திக் கொண்டு புறங்கொடுத்தோடுதல் பெருமையோ உமதுமகிமைக்கு இது கடமையல்ல, உம்மைப்போ லொத்த சாந்தமூர்த்தியானவர் ஆர்கெட்டாலும்,ஆர்செத்தாலும்நாம் பிழைத்தாற் போதுமென்று போவது-நிருணர்ந்தகல்விகுத்தவருகியகாரியமேயாம் ஆகையால், இதுவரையிலும் பிழைத்தபிழைப்புக் குக் குற்றம் நேரிடாமல் ஒருவர் குறைவுசொல்லாமலும் இருக்கும்படியாயோசித்து யுத்தத்தின்அணிமுனையில்நிலைபெற்றுநின்றுஇனிமேலும்நடக்குங்கதியைக்கண்டுணர்வதுகாரியமென்றுகர்னன்நவின்று எதிரில்நில்லுமென்று இவரைவழிமறித்துத்தடுத்துமுகமலரைப்பார்த்துமகிழ்வுபூர்த்துப்போர்கொடுத்தான்,அந்தக்கர்னனுடைய முகத்தைதர்மராஜன் பார்த்து அவனுடைய வல்லபத்தைமதித்து மிகுந்தகருணையாளராகிய தர்மராஜன் கவலைகொண்டிருக்குங்காலத்தில்,விருதுகட்டிய விருதர் தலைக ளெல்லாம் அறுபட்டு மேலுங்கீழுமாக உருளவும், வீரபட்டங்கட்டிய மதயானைகளெல்லாம் வாதுமலைந்து காதுடன் தலையறுபட்டு மேனிதுணிந்து தலையறுபட்டு நிதாப்புரளவும்; பலம்பெற்றகுதிரைகள் பாதமறுபட்டு மேனிதுணிந்து தலையறுப்புண்டு தாலத்திற்கிடக்கவும் தேர்களெல்லாம் அச்சொடிந்து சிகாமுங்குடையும் முறிந்து சாய்ந்து குற்றுக்கால்கள்கொடுங்கை சரிந்து சக்கரங்களெல்லாம் உக்ரமாயோடவும், தலையிழந்த கவந்தங்கள் நின்று கூத்தாடவும் உதிரப் பெருக்கம் ஓடவும் பறந்துவரும் அஸ்திரங்களெல்லாம் பஞ்சு பஞ்சாய்ப்பறக்கவும், மிகுந்த பலத்தோடு திணிந்தகதாயுதங்கைக்கொண்டுஅடித்து எதிரேறிவெகுபேரைமுடித்துமதயானைமத்தகத்தொடித்து வீரப்பாடல்கள் படித்து விஜயக்கூறிவராநின்றகுற்றமற்ற வீமசேனனெனுமவன், ஓரிமைப்பொழுதில் ஓடிவந்து தம்முதல்வனாகிய தர்மராஜனுக்கு உறறதுணையாய் அடுத்தான். இந்தவீமசேனன் வருவதற்குமுன்னே வெகுண்ட்ட தர்மராஜனைப் பின்னிட்டுத் துரத்தி யுத்தஞ்செய்யவந்தமுடிவேந்தர்முதலாகிய அதிரதர்களும் மற்றையாவர்களும் நடுக்கமில்லா வைரமனத்தோனாகிய வாயுவின்புத்திரனைக்கண்டு நடுங்கிசத்துருவாகிய நமக்கு எமன்வந்தானென் றுகலங்கினெத்தனைநாள்போர்புரிந்தாலும் இவனைவெல்லுகிறது அருமையென்று யாவரும் பின்னுக்கிளைத்தார்கள்.

அதுகாலையில், பாகனாகிய சல்லிய ராஜனானவன், அழகிய தேர்வாய்ந்த ஆதபன் குமாரனென்னும் அங்கதேசனைப் பார்த்து அன்பனே கேளும் நமதுபடையோமுறிவாயிருக்குது உன்னால் அடிபட்டு இளைத்த தர்மராஜன் தேறிக்கொண்டார், அவருக்குப்பின்பலமாக வீமசேனனும்வந்து ஒத்துக்கொண்டான். இப்போது நாம் வெற்றிபெறுகிறது கொஞ்சம் அருமைபோலும் யிருக்குது ஆகையால் தேரைத்திருப்பிவிட்டு ஒருசுற்று சூழ்ந்து வருவது உத்தமமாக நினைக்கிறேன் என்று சல்லியசாரதிசொல்ல, மன்மதாகிர்தியாய்நின்ற வடிவமைந்த கர்னன்கேட்டு பொன்மலைபோன்ற வில்லைவணக்கி நாணிபிணக்கி வாகைமாலைபுனைந்த சல்லியன்முகத்தைச் சரசமாய்ப்பார்த்து கர்னன்சொல்லுகிறான்.

ஆ, ஆ, சல்லியராஜனே, முக்கண்படைத்த சோமனனும் இந்தவீமனனும் என்கைப்பாணத்தால் இன்றையப்போரில் இவர்கள் படப்போகிறபாட்டை நீரே பார்க்கப்போகிறீர், புகையும் நெருப்பும் பொறியும் பிறப்படாநின்றநான்விடப்போகிறஒரேகணைக்கு அற்றமாட்டாமல் காற்றாய்ப்பறக்கப் போகிறார்கள், நீரிருந்து காணலாம் மடமடவென்று விடும் விடும்தேரை அவர்கள்பேரிலென்றான்.

இப்படி கர்னன்சொல்லுவதற்கு முன்னேமருத்தின்குமாரனாகிய வீமசேனன் உருத்து கோபச்சிரிப்பாகச் சிரித்து இரதத்தைமுடுக்கித் துரத்தி வரிவில்லைவளைத்து அரியம்புதொடுத்து அங்கதேசன் சொல்லியசொல்லும்அவன்கைப்பிடித்தவில்லும் ஒருக்ஷணத்தில் சிதைந்தபோகும்படியாய் அடித்து பின்னும் கர்னன்பேரில் மின்னற்றுன்னிய சென்னிறக்கணையை வீசினன் அதைக்கர்னன் கண்டு வீமன்தொட்டகணைகளை வெறுங்கணையாக்கி பன்னிரண்டு சூரியாஸ்திரத்தை அபிமந்திரித்து வீமன்மார்பிலும் தோளிலும்பரப்பினன் அந்தப்பாணம் பன்னிரண்டும் துவாதச க்ஷாமத்திற்காயுங் காச்சலைப்போலவும் சரித்துக்காலத்திற்பெயும் பேச்சலைப்போலவும் மழையும் இடியும் வெயிலும் நிலவும் இருளுங்காட்டிக்கொண்டு மூதண்டமும் அதிரும்படியாய்ப் பாய்ந்து காய்ந்துவராநின்ற பாணத்தை வீமன்பார்த்து ஐயப்படாமல் கை

யால் அறைந்து முறிந்துபோம்படியாய்க்கசக்கி யெறிந்து நிக்காயும்படியாகிய கடுங்கொடும்பசுமியென்னும் காளவாளியையெடுத்து மந்திரித்துவணங்கி சூரியன்குமாரனாகிய வீரியன்மார்பு விரியும்படி விடுத்தான் தடதடவென்று காய்ந்துவந்தபாணமானது ஆய்ந்தமலர்மாலை வாய்ந்தகர்ணன் மார்பில் தட்டிறவைப் பாய்ந்தவுடனே ரதத்தின்மீது சாய்ந்து பிணத்தைப்போல விழுந்துமயங்கி அசைவற்று ஓய்ந்தான் சேனாபதியான கர்ணன் வானூர்பதிபோனதுபோல் விடவும் மானபதியாகிய ராஜாதிராஜனென்னும் துரியோதனனுடைய படைமன்னர்களெல்லாரும் வெகுவிட்டோடினார்கள்.

அப்போது, பிறைக்குந்தன்மையாகப் பிராணசேதையடைய வசமாகன்னன் மீறலிந்து தேர்விடுக்குஞ்சாரதியெல்லும் மந்திரத்தலைவன் கோபிந்த செலிகான்சொன்னது தெரிந்துராவென்று கடக்ககூறலிந்துசெப்பியபோது அப்பவும் அந்தச்சொல்லைக் கேளாமல் சப்தமாய் பூட்டிய தேரோன்மைக்கனாகிய விற்பனக்கன்ன னென்னும் சதுரன் கணைசெலித்தெழுந்து பலம்பொருந்திய சாபம் வளைத்து கலந்திருந்தியகாணிபிறக்கி அலங்கல் தாங்கிய கேசன்புடைத்தாத்துதலைகளுக்கடலும் பொங்கிஎங்கும்மங்கும் அக்கினிச் சுவாலையுடைய மேலாகிய விஷக்கணைசெலுத்தி விமானைச்சார்ந்த படைவீரான் யாவரையுந் துண்டித்துசோமசேகரனுடைய நெற்றிக்கண்ணுற்சாம்பலாகிய காமனைப்போல பஸ்மீகரப்படலமாக்கினான் அப்பிரகாரம் கைத்தலவண்மையையுடைய கர்ணன் வில்லிலிருந்து பொழிந்தபற்பலவகையாகிய பாணங்களில் எத்தனை அரசர்கள் இறந்தார்கள் எத்தனைப்பட்டவர்த்தனர்துஞ்சினார்கள் எத்தனை அதிரதத்தலைவர் மாய்ந்தார்கள் எத்தனை மகுடவர்த்தனர் சாய்ந்தார்கள் எத்தனை மந்திரிகள் மடிந்தார்கள் எத்தனை தந்திரிகள் முமைந்தார்கள் எவ்வளவுவீரர் அற்றார்கள் எவ்வளவுச்சதுரங்கச்சேனைகள் செத்தார்கள் பாஞ்சால வம்சர்களில் சிங்கசேனன்முதலாகிய உள்ளிட்டார்கள் ஏழுபேரும் அவர்களுடன் கூடிய அநேகரும் இந்திரலோகஞ்சேர்ந்தார்கள் இதுவல்லாமலும் தன்னுடன் கூடவந்தநால்வகைச்சேனைகளும் தளர்ந்து முறிந்து வீமசேனனும் முதுகிட்டோடினான் கர்ணனால்அடிபட்டோடிய காற்றின்மகனை கருந்துளவணிந்த காயாம்பூவண்ணன் சண்டிசடுமைகொண்ட வேகம் பெற்ற குதிரைபூட்டிய நெடுந்தேர் துண்டி யானைமேல் ஆர்ப்பரித்துச் செல்லுகின்ற ஆண்சிங்கம் போல் அர்ச்சுனனைக் கொண்டு வந்து அங்கதேச ராஜனுக்கெதிரில் நிறுத்தினர்.

அப்போது, வானவர்க்கரசனுடையமைந்தன்கர்ணனைக்கனன்று நோக்கி பலம்பொருந்திய வரிவிற்குங்கிஆகர்ணபரியந்தம் இழுத்து அமலைவிளைத்து சேனைப்படைகளும் இருவரும் கர்ணனுடைய காரியத்தலைவரும்காலளாட்படைகளும் கைகலந்துபோருச்செய்தார்கள் சூரியனுடைய மைந்தனுநொந்து தேவாஸ்திரங்கள்பலவாகவிடுத்து குடிகுடிக்கப்போர் புரியுங்காலையில்விஜயனுமுனைநது கட்டிவிட்டவிட்ட விசிகங்களானது யுங்கள் மூடிவிலெழுந்தழைத்தோப்போலுதித்துவந்து விழுந்தகலந்து அண்டமுதலிய மண்டலங்களிலும் நெருங்கிப் பரவியது இந்தச்சமயத்தில் இமைக்கொட்டுக்கு முன்னே கன்னனுக்குபசாரமாக அஸ்வத்தாமன்தேர்செலுத்திவந்துகடுசரங்களைத்தொடர்ந்தமாகச்செலுத்தி அரவணைச்செல்வனுடையபார்த்தசாரதியினுடையமெய்யும் அருச்சுனனுடைய மெய்யும் துளைபட்டுருவிரத்தங்களினால் செவ்வானம்போல் சிவப்பேறும்படிக்குச்செய்தான் அந்தஅஸ்வத்தாமன் சிறுகணைகளினால் திருமேனிவருந்திய திருமாலும் விஜயனும் தியங்கிமயங்கி ஸ்திரங்கொண்டுதிவ்யாஸ்திரங்கொண்டு கோபமேற்கொண்டு கொடி முடித்தேர்செலுத்தி எதிர்சென்று நின்று அஸ்வத்தாமனுடைய வில்லும் அவன் எறியதேரும் அசைந்துலையும்படிக்கும்புகளைமுடுக்கிவிடுத்தான் அந்த அம்புகளினால்தேரழிந்து சிலைமுறிந்து இளைத்துவமாகிய அஸ்வத்தாமனானவன் குதிரைபூட்டிய வேறுதேரேறிகொடுஞ்சிலைகைக்கொண்டு வளைத்துகுருந்துக்கணை மருந்துக்கணை பருந்துக்கணைமுதலிய கோலகொண்டு மாட்டி இருளைப்போக்கும் சூரியன்ஒளியைப்போல அவன்தொட்ட அஸ்திரங்களைப்பொறுக்கமாட்டாமல் அர்ச்சுனனும் அரிபரந்தாமனும்நிலைதளர்ந்துநெடுமூச்செறிந்துபுயமலைபிளந்து பிராணநிலைதளரச்செய்தான்.

அதனாலே தளர்ந்து வருந்திய தனஞ்செயனைஜநார்த்தனன்கண்டு அநேகவிதப்பிரியஞ்சொல்லித்தேற்றி அர்ச்சுனா, பிரகாசத்துடன் எதிர்த்துப்போராடுகின்ற அஸ்வத்தாமனைலேசாகநினைக்காதே அவன்செய்கிறயுத்தமானது கேவலமல்ல ஆகிலும் நீ அஞ்சவேண்டாம் உடனே அவனுடலைக்கிழித்துப் பிளந்து விடென்று லட்சுமிமோகனாகிய தேர்ப்பாகன்சொல்ல அந்தச்சொல் சொல்லிமுடியுமுன்னே சுவேதவாகன்தேறி திடங்கொண்டு பிறைமுகக்கணை யொன்றெடுத்துப்பிடித்து பெரும்பூசைகொடுத்து அஸ்வத்தாமனுடைய நெஞ்சுக்கு நேராய்த் தொடுத்தான் அந்தப்பகழியானது அகிலமெல்லாம் குழியவோடி அஸ்வத்தாமன்எங்கேஎங்கேயென்றுதேடி அவன்நின்றநிலையைநாடி ஆங்கார-ஓங்காரமாய்க்கூடி அவனுடையமார்பிற்றாழிகரகரவென்றுருவியபோதுஉதிரவெள்ளத்தால்மூழ்கிஉரங்குலைந்து மாழ்கிஉரக்கக்கூவிஉடலைவிட்டு ஆவிபோனதன்மைபோல் சுவாசமேவிட்டுச் சோர்ந்து தேர்மேற் சாய்ந்தான், அப்படியாக விழுந்த அஸ்வத்தாமனை மகாபாவமாகிய செய்கைத் தொழிலோனான துஸ்வாசனன்கண்டு தர்மத்தலைகாக்கு மென்னுந்தன்மை குறையாமல் பூர்வஞ்செய்த தவப்பயன் ஆபத்காலத்தில் வந்து உதவிசெய்யும் வாறு போலுவந்து அந்தஅஸ்வத்தாமன் அயர்ந்து விழுந்த தேருடனேகொண்டு போய்த் தேற்றினான், இளவரசாகிய துஸ்வாசனாலே தேறிய அஸ்வத்தாமனானவன் வேறுதேரேறி வீரவில்கொண்டு மறுபடியும்வந்து போர்தொடங்குங்காலையில் நால்வகைச் சேனைகளுடன் சேல்க்கொடி அசைந்தாடநின்ற மீனவன் வழுதிமாறன் சந்திரன் கால்வழியில்வந்தோன் வளைதடியினால இந்திரன்தலைமேலடித்து மகமேருமுடியை செண்டாலெறி

ந்து முயற்சியாய் மீண்டோன் இத்தன்மைவாய்ந்த சித்திர வாகனென்னும் பாண்டியன் சுப்பிரமண்ணியக் கடவுளை ப்போன்ற அஸ்வத்தாமனுக்கு நேர்சென்றுநின்று அம்ப னந்தம் வளைதடிக்கொம்பனந்தம் விடுத்து அஸ்வத்தாம னுடையதேரை அழித்துச் சாரதியைப்புடைத்து குதி ரைகளை அறுத்து வில்லையுமுறித்து அவன்மேனியையு ந்துளைத்து வேந்தன்தம்பிமார் முதலியயாவரையும் வரு த்தி போராடும்பூமியைத்திருத்தி சமப்படுத்தினான் இது வரையிலும் யுத்தஞ்செய்துவந்த அரசர்களில் இவனைப் போல் போர்செய்யத்தக்கவல்லவர்கள்யாவரென்றுசொ ல்லலாம் தேவர்களும் ஆச்சரியப்படும்படி. செருவிளை த்தான், அப்போது பிர்மமரபில்வந்த அஸ்வத்தாமன்வே றொருதேரேறி பாரியவில்லைப்பிடித்து வளைத்து சிறிய தேவாஸ்திரங்களை நூறுநூறாகப்போக்கி திருமந்திரங்க ளினால் உபசரித்துமுடுக்கித் தாக்கி வைகையாருடையம ன்னவனை மதிமரபிலவந்ததென்னனை வாட்டியம்பரம்போ லாட்டி மிகவும் பயப்படும்படியாய்ப் பயங்காட்டி சண் டைவிளைத்தான்.

அஸ்வத்தாமனானவன் ஆசாரியகுமாரன் தொடுத்தஅ நேகவிதமாகிய அம்புகளையெல்லாம்பாண்டியன் பார்த்து எந்தெந்தக்கணைகளுக்கு எந்தெந்தக்கணைகளை யேவவே ண்டுமோ அந்தந்தக்கணைகளை அவிழ்த்து விடுத்து அதிதே வதைகளைப்பூசித்துத்தொடுத்து அஸ்வத்தாமன் சிந்திய கணைகளையெல்லாம் சிந்தி மும்மூர்த்திசொரூபம்போன்ற மூன்றுபாணங்களைப்பூட்டி மோகனமந்திரங்களை யுச்சரி த்து தங்களுடைய மூவகைத்தமிழைப்போல் அஸ்வத் தாமனுடைய சிந்தையில்மூழ்கும்படியாய் உந்தினான், ஆ னால் அஸ்வத்தாமனுடைய கைத்திறலுக்குப் பாண்டிய னுடைய கைமேலிட்டதோ வென்று கேட்குமிடத்தில் இவன் தந்தையாகிய துரோணாச்சாரியை புறங் கொடுத் தோட அடித்த ஒருவன் அந்தத்துரோணன்பிள்ளையாகி ய அஸ்வத்தாமனுக்கு இளைக்கமாட்டா னென்பது சுவியி ன் இருதயம்-இப்பால் இப்படியிருக்க, வீரகண்டைகட்டி ய காலினால் கடல்சுவறச் செய்தவன் பூர்வத்தில் வேலா யுதத்தைவிடுத்து ஏழுகடலையும் வளறச்செய்தவன்-வெ ற்றிபெற்ற மீனக்கொடியுற்ற பாண்டியனாகிய வீரன் மா யாஸ்திரமென்னும் ஒருகணையைத்தொடுத்து துரியோத னனுடைய நால்வகைச் சேனைவெள்ளங்களை ஒருநிமிஷ த்தில் வறளப்படுத்தினான்.

சங்கர புத்திரனாகிய சதுர்வேத சம்பன்னன் அஸ்வத் தாமனானவன் பாண்டியன்புரிந்த படுகளத்தைப்பார்த்து தாளமாட்டாமல் முகம்வியர்த்து போராடும் சிலையை வ ளைத்து பூரித்தநாணியை இழுத்தெறிந்து பொங்கழற்க டவுளைப்போன்ற அங்கனற்கணைகளை அபிமந்திரித்துமே கம்போல் பொழியாநின்ற கணைவாளிமழையினால் பாண் டியராஜனுடைய சேனைகளுமடிந்து செம்பொற் றேரும் ஒடிந்து சேல்க்கொடியு முறிந்துவிழ்ந்தது, அந்தோ, அ ந்தோ, ஆண்சிங்கம்போன்ற பாண்டியன் முறிபட்டதேர் விட்டிழிந்து பட்டத்துயானைமேல் அரோகணித்து உயர் ந்தான், (அந்தயானை எப்பேர்ப்பட்ட தென்னில்,) கடம

மைபொழிந்து திடமலை அழித்துப்போங்கி தங்களுடை ய பொதிகையிலிருக்கும் தமிழ்முனி யாகிய அகஸ்திய னைப்போல் அலையெறியும் கடலேழையுங் கையால்அள் ளிக்கொள்ளும் வெற்றிபெற்ற மதயானையாம்.

இவ்வித பலலக்ஷண முடைய யானையின்பேரி லேறிக் கொண்டு பொதிகையிற்பிறந்த வாசனை செறிந்த பூஞ்சந் தனம் திமிர்ந்து தங்களுடைய அலைகடலிற் பிறந்த முத் துமாலைகளை மெத்தஅணிந்து அதனால் அழகு செறிந்த தோளிணையுடைய பாண்டியன் சத்துருக்களைக்கொல்லும் கொலைத்தொழில் வாய்ந்த, கொம்புகளை யுடைய தாமே றிய யானையை நடத்திவந்து வில்யுத்தத்தில் திருமகனாகி ய பஞ்சபாணன் போன்ற பஞ்சவன் போர் தொடுக்கவும் அஸ்வத்தாமன் தன்னுடைய தேரைச் செலுத்தி தானும் போர்புரிந்தான் இப்படி இருவரும் அமராடியபோது அ ஸ்வத்தாமனென்னும் வித்தகன் விடுக்கும் அஸ்திரங்களை யெல்லாம் பாண்டியன் ஏறிவந்த யானை தன்னுடைய ம த்தகத்தால் மோதி மத்தாரையை மாருமற் சொரிந்து கண் சிவந்து செவ்வானச் சோதி காட்டி செம்பொ றி பறந்து சேனைகளை மாட்டி தழைந்து விரிந்த கா துகளை தடாம்தடாமென்றுஆட்டி அதனிடத்தி லிருந்து உண்டாகும் காற்றானது உயர்ந்த பொதிகையிலிருந்துவரு ம் பெருங்காற்றைப்போல் ஓசைப்படமோதி தனுவாரிய ன் மைந்தன் அஸ்வத்தாமனுடைய தேரிற் கட்டியிருந்த அம்சக்கொடியைமளமள வென்று முறித்து அறுத்துதே ருக்கு உட்புறத்திற்றானே வீழச்செய்து மேலும் சும்மா யிராமல் திரிந்து எமனைப்போலும் சப்தமேகம்போலும் பெருங்குரலிட்டு நாலுபுறத்திலும் முழக்கி-சப்தசமுத்தி ர முழக்கம்போலும் பெருங்காற்றைப்போலும் கொடிய வேகத்தையும் கோபக்கடுமையையும் காட்டி ஊற்றெழா நின்ற வெள்ளக்கரட மதங்களேழையும் பெருகவிடுத்து மண்குழைந்து கலந்த சேற்றிடை அஸ்வத்தாமனுடைய தேர்ச்சக்கரங்களைப் புதையச்செய்துவிட்டது.

அதனால், அஸ்வத்தாமன் தேர்-அப்பால் இப்பால் - ஓ டமாட்டாமல் அசைவற்று நின்று போச்சுது அந்தவே ளையில், பாண்டியனானவன் தனுமறையவனுடைய செம் பொற்றேரைவளைத்து ஓட்டி மண்டலாகிருதியாய்ச்சுழற் டி பிறைமுகக்கணைகளினால் பூரித்து அடித்தான், நிறை ந்த மதியினையுடைய அஸ்வத்தாமன் கொஞ்சங் கலங்கி நெஞ்சந்துலங்கி சரோருகச் சதுமுகாஸ்திரங்களை விடுத் து பாண்டியன்தொட்ட பிறைமுகாஸ்திரங்களைவிலக்கிப் பொடியாயகற்றி தன் கைகளிலிருக்கின்ற ரெக்கைகட்டி ய வச்சிரக்கணை யொன்றையெடுத்து வாழ்த்திப்போற்றி விடுத்து மீனவன்ஏறிய யானையைக் கருமலைவீழுந் தன் மைபோல் வீழக்காட்டினான், யானை வீழ்ந்தவுடனே பா ண்டியராஜன் பதாதியாய் கைவில்லுடன்நின்று கடுங்கோ பங்கொண்டு ஆலகாலப்பகழி முதலாகிய அநேகங்கணை களைச்செலுத்தி, நெருங்கிய அஸ்வத்தாம னுடைய இரு தடந்தோளும் மாலையுற்ற விசால மார்பும்-வேண்டியபடி கிழிந்து மலையருவிக்கால்போல் உதிரம்வழிந்து பின்னுந் தேறி தென்னனுந் தானும் நீராடியைப்போல் போராடி யபோது, அஸ்வத்தாமனானவன் ஒரு அக்கினி யாஸ்திர

த்தை க்ஷாத்திரமாக வெடுத்து அபிமந்திரித்துத் தூண்டினான். அந்த அஸ்திரம்புறப்பட்டு ஜோதிகாட்டி-அகண்டாகாரமா யெரிந்து அநேகம் பொறிகளைப்பொறித்து அனற்சுவாலையைச் செறித்து-பாண்டியன்பிராணனைப் பிறித்துப்போட்டு பாற்கடற்செறிந்தது, ஆசாரியகுமாரனால் அழிந்தான் பாண்டியனென்று கேட்டவுடனே, தர்மராஜனுடைய படைவீரரானும் வீரவேந்தரும் ஓட்டமா யோடிப் போனார்கள்.

அந்தவேளையில், இராஜாதிராஜனாகிய துரியோதனனுடைய சேனைவீரர்கள் இதுதான் சமயமென்று மேலேறிவரிபொருந்திய விற்கொண்டு வேண்டியவரைக்கும்கிட்டிகிட்டி அடுத்தடுத்துத் தொடுத்து மேலிட்டார்கள், விற்குருவின்மகனாகிய அஸ்வத்தாமன் விட்ட ஒழுங்காகிய அரிவாளியினால் ஆகாயத்திலிருந்து எரிந்துவீழ்ந்தகொற்கையாயென்னும் பாண்டியன் மாண்டான்.

அவனிறந்ததைக்கண்ட சத்தியநெறியுற்ற மொழியைப்பெற்ற சோழியானென்னும் மனுகுலத் தோன்றலாகிய சோழராஜன், மிகுந்த ஆர பார விர மேளங்களுடன்வந்து அஸ்வத்தாமனைத் தகைத்து, ஓ-பின்புத்திபெற்ற பூசுரா-நீ தேர்மேல் நின்றுக்கொண்டு திரண்ட தந்தத்தையும் சிவந்த கண்ணையும்-புள்ளிபொருந்திய செம்முகத்தையுமுடைய கருத்தயானைமேலிருந்த பாண்டியனாகிய வீரனை காயுங்கணைசெலுத்தி மாயச் செய்தனை, இவ்வுலகத்தில் யாவரேனும்-இப்பேர்ப்பட்ட பாதகஞ் செய்தவர்களுண்டோ, நீ-ஆசாரியபுத்திரனாயிருந்தும்தேர்மேலிருந்தவனுக்கும்யானைமேலிருந்தவனுக்கும்-ஈடுசரிதானாஇதைஉன்னியோசிக்காமற்போனையே, நீர்மேல் எழுத்தென்று சொல்லுகின்ற நிச்சயமுடைய நிலையில்லாத வாழ்க்கையும்-ஆக்கையும்பெற்ற நிஷ்டூரன்-ஒரான் ஓர்வழியாய் ஓகை யிட்டுக் கற்பிக்கும்படியாகிய வேதங்களைக்கற்றும் ஒருவருக்குக் கற்பித்தும் காயத்திரி சொல்லி திரிகாலமும் அர்க்கியங்கொடுத்தும்-செபித்தும்-பாவங்களைப் பரிகரிக்கும் படியாய் வேழ்விகளைச்செய்தும் தேவதைகளுக்கு அவிர்ப்பாகங்கொடுத்தும் ஆசார பூசா விதேயங்கள் தப்பாமலிருக்கும் பிர்மகுல ஆசாரக் கருமங்களைவிட்டு கூர்மைபெற்ற ஆயுதங்களைப் பலமாகப் பலவாறுகக்கொண்டு தனுர்வேத தர்மா தர்மம் புண்ணியம்பாராமல் பழிக்கஞ்சாமல் சண்டைசெய்யச்சொல்லி எந்த நீதியிலிருக்குது, க்ஷத்திரியகுல வீரமானது பிராமணனுக்குவருமோ, (உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாமோ,) உபையோகமற்ற அஸ்வததாமனே, உன்தந்தையாகியதுரோணாச்சாரியாரை ஒரு விந்தையாகக்கொன்ற பாஞ்சாலன் மைந்தனாகிய திருஷ்டத்துய்மனென்னும் வில்வீரனை விற்பிடித்து விசாலக்கையாற்கொன்று அப்பனைக்கொன்றபழி முடித்துக்கொள்ளாத நீ ஊதைக்காற்றில் ஓடுஞ்சருகுபோல் ஓடவேண்டியதே யல்லது ஆயுதமுதலாகியசேனைகளைக்கொண்டு வந்தெதிர்த்து யுத்தம்விளைத்து வெற்றிபெறவல்லையோ, சத்திசெத்தவனே-புத்தியற்றவனே-என்று சிற்சில மொழிபுகன்று சோழராஜன்கனன்று அஸ்வத்தாமன்மேற்சென்று கொண்டால் முழக்கம்போல்அண்டர் நடுக்குற கைக்கொண்ட வில்லைவளைத்து கணைகுறித்தான்.

அப்போது, அஸ்வத்தாமன் ஆலகால விடம்போல்ஆர்ப்பரித்து எழுந்துவந்து எதிர்வளைத்தான், குன்றும்குன்றும், குறுகியவாறுபோல் நெருங்கி இருவருடைய தேருந் தேரும், சென்றெதிர்சுழன்று இருவர்செங்கரங்களும் இரண்டு விற்கொண்டு வளைத்து இரண்டுமேகம் இடிக்கும்லவாறுபோல் நாணியிறுக்கி முறுக்கி தோள்பரியங்கம் இழுத்து அடித்து வில்லும் வில்லுங்கிட்டி விரைவுடன்கணைகளை நாட்டி மாட்டிப் போர்புரிந்தார்கள்.

அந்தவேளையில், அஸ்வத்தாமன் சர்வசம்மாரகாலருத்திராஸ்திரம்-நாராயணாஸ்திரம்-இந்திராஸ்திரம்-குபேராஸ்திரம்-சந்திராஸ்திரம்-சூரியாஸ்திர முதலாகிய தேவதாஸ்திரங்களெல்லாம் எந்தெந்தத்தேவதைகள் எந்தெந்தக் கட்டுப்பாட்டின்படி கொடுத்தார்களோ அந்தந்தப்படியே அபிமந்திரித்து பகைவனுடைய முனைமுகத்தில் மூடுக்கினான், இதற்குள்ளே சோழராஜனானவன் சரபாஸ்திரம்-சரோருகாஸ்திரம்-சங்காரஸ்திரம்-முதலாகியதைத் தாழ்ந்து பூசித்துவிடுந்தான், இந்த இருவருடைய அம்புகளும் ஒன்றை ஒன்றுகிட்டி முட்டி ஒன்றை ஒன்று ஒடித்து முடித்து எள்ளித் தள்ளிஅம்பரமாகிய ஆகாயவெளியைப் புதைத்துவிட்டது.

இவ்விதமாகிய அமர்புரிந்துவரும்போது, தெய்வலோகம்போகிய துரோணபுத்திரனாகிய அஸ்வத்தாமனுடைய இருபுயத்தில் இருகணையும்,மார்பில் இரண்டுகணையும், வில்லில் ஒருகணையும், உருவும்படியாக விடுத்தான் வாசம்பெற்ற ஆத்திமாலையணிந்த சோழராஜனானவன். அதுகாலையில்; பிறைமுடிச்சடையவன் பிள்ளையாகிய அஸ்வத்தாமன் பலமுகப் பாழிதெறித்து புருவுக்காக சரீரத்தை அரிந்த சிபிச்சக்ரவர்த்தியின்தேகம்போல் அரிவாள்போன்ற நகம்பெற்ற புலிக்கொடிபடைத்த சோழராஜனுடைய தேகமுழுமையும் அரிந்து உதிரம்வடியும்படியாய்ச் சிவக்கச்செய்தான், அப்போது-சோழராஜனானவன் துடித்து ஒருவேலாயுதத்தை யெடுத்துப்பிடித்து (விளாமரத்தில் பசுங்கன்று கொண்டெறிந்த துளவணி சுருள்முடியோனாகிய ஸ்ரீ கிருஷ்ணனைப்போல்,) எவரும் அஞ்சி இளைக்கும்படிக்கு மயூரவாகனனுக்கு இளவலாகிய அஸ்வத்தாமன்பேரில் வீசியெறிந்தான், அந்த வேலாயுதமானது வேலாவலயமுதலிய எல்லாவற்றையுங் கோலாகலப்படுத்தி நாலாவிதமாகிய காலாகோலமாய்வந்து லீலாவிபூதியாகிய உருத்திரமூர்த்தியின் சுக்கிலத்தால் தற்பவமாக உற்பவித்த விவேகவீரனாகிய அஸ்வத்தாமனை மெய்கலங்கச்செய்து புகுந்து உழக்கிப்பொறியெழவிழ்த்தியது.

அந்தவேளையில், சிறந்த சகுனியும்-சிற்சில வேந்தரும் மிகுந்த வருத்தமடைந்து அஸ்வத்தாமனை எடுத்துக்கொண்டுபோய் அவிழ்தாதிமுதலியதுங் கொடுத்து அவன் தன்னைமறந்து அடைந்த ஆயாச வருத்தங்களை ஆற்றினார்கள். உடனே அஸ்வத்தாமன்தேறி தேரேறிப் புறப்படும்போது அவன்கூட கர்னன்முதலாகியகாவலருஞ்சேர்ந்து (சிவனுடன்போராட எதிர்த்த சத்துருக்களைப்போல்,)மு

ரசவாத்திய முதலியது முழக்கச்செய்து முடுகிவந்து நெருங்கிப் போர்விளைத்தார்கள்.

அவர்களைக்கண்டு அதிக கோபங்கொண்டு ஆக்ரமித்த பராக்ரமசாலியாகிய சோழராஜன் அனேகம் ஆனைகுமபுகளில் ஒரு ஆண்சிங்கம் புகுந்ததைப்போற்புகுந்து தகுங்க கணைகளிறைப்பதுந்து உடல்களை வகுந்து உயிர்வதைபுரிந்து குயவன் திகிரிபோற்றிரிந்து வருங்காலையில், துன்மருடைய குமாரான்-சுவாகு-துன்முகன் என்றுமிவர்கள் சோழனைவளைத்து காமகிற்கணைதொடுத்து கலகம்விளைத்தார்கள், அவர்கள்விட்ட-அம்புங்கெட்டு உருளையுடைய தேர்க்கட்டும்விட்டு வில்லுமுறிந்து தாங்களும் உயிரிழந்து ஒழிந்தார்கள்.

அப்பால், வில்லாளியாகிய சுவாகுவென்பவன் பலருடன் சேர்ந்து வந்து பகைத்து-ரதம்-குதிரை-சாரதி முதலியவர்களு முறிந்து அவனும் ஆவிபறிந்துபோனான், உடனே சூரியனுக்குப் பேரனும், கர்னனுக்குக் குமாரனுமாகிய சங்கனும், அங்கதேசாதிபர் அனைவரும் வெகுவாகிய ராஜகுமாரனும்இன்னம்பலரும் எதிர்த்துப்போர்விளைத்து ஜகத்திற்போர்தழைத்து அவத்தில் உயிர்விடுத்து அந்தரம் அடைந்தார்கள்.

பண்ணுடன் பாடும் வண்ணவண்டுகள் நாடும்கண்ணகன்சோலைசூழ்ந்த காவிரி நாடனாகிய சோழராஜன் தொடுக்குங் கணைகளானது மண்ணுலகத்தின் இடர்நீங்கமலைந்து மன்னர் மன்னனை அவ்வரசர்களுடைய மைந்தரை அவர்களுக்குரியநால்வகைப் படைகளை விண்ணுலகத்தில்இடமில்லை மிகநெருக்க மென்று உரைக்கும்படியாய்மிதமில்லாமல் ஏற்றிவைத்தான் இந்தவெற்றிப் போரைப் பார்த்து மெத்தவும் யோசித்திருந்த வேதியன்சுதனாகிய அஸ்வத்தாமனும்; தன்னிகரில்லாத சகுனிமாமனும்பொன்மாரிபொழியும் புண்ணியக்கர்னனும்-இன்னம் அநேகம் நிருபர்முகலாகிய நெடும்படை வீரரும் சோழராஜனைப் பார்த்து சுத்த நித்திய உத்தம குணம் வாய்ந்த நற்றவச் சிவபத்தனே பழமையாகிய போர்புரிவதற்கு நீயேசென்னியென்று அவன் புகழைத் தேடிப் புகழ்ந்து போனார்கள் (சோழராஜனுக்கு சென்னி யென்பது ஒருபேர்.) அக்கப் பெயரைத்தானே யுத்தஞ்செய்வதற்குத்தலையானவனென்று சொன்னார்கள்.

மேற்சொல்லிய வீரரெல்லாரும் சோழராஜனைவிட்டுமுனைமடக்கிஒன்றொருதிசையிற்போய் சத்துருக்களாகிய தேராளிகளுடன் போராடிஆற்றமாட்டாதவர்களாய்க்கொற்றம்பெற்ற வெற்றிவில்லைப் பிடித்த விஜயனைச்சூழ்ந்து கொழுங்கணையேவினார்கள், அந்தவேளையில், வளைந்தவில்லைத்தாங்கி-திணிந்தகாணிவாங்கி-தகுந்தபாணம் ஓங்கிசம்சத்தகாள்வந்துகணைகள்பரப்பிப்போர்விளைத்து, கொடுங்கணைகளைபற்பலசோடியாய்விடுக்கவும்,கொல்லவந்தயானைகளுக்கெதிரில் மெல்லவந்தஆண்சிங்கம்போன்ற அர்ச்சுனன்பல்லவக்கணைகளைவிடுத்துச்சாடி அவர்கள்விட்ட கல்லகக்கணைகளையெல்லாம் விலக்கி அவர்களுடைய சிரமும்-உரமும்-கரமும்-வீரக்கழலும்-தோளும்-தாளும்-மேலும்காலும் மூக்காலும்போக்கினான், அந்த அர்ச்சுனன்தொடுத்த அம்புகளினால் காலற்றார்கள்-கரமற்றார்கள்-முடியற்றார்கள்-அழகிய வேலற்றார்கள்-மாலற்றார்கள்-விலலற்றார்கள்-விறலற்றார்கள்-முப்புரியாகிய முன்னூலற்றார்கள்-கடககங்கணங் தோள்வளை புஜகீர்த்தி வாகுவலயம் தொடிவளையல் முதலாகிய ஆபரணங்களற்றார்கள்-தோழற்றார்கள் கூர்மையாகிய பாணக்கோலற்றார்கள்-சாரதியற்றார்கள்-குதிரையற்றார்கள்-கொடியற்றார்கள்-முடியற்றார்கள்-மிகுந்த அதிரதத்தலைவராகிய பலவான்களெல்லாம் அற்றுச்செத்தார்கள்.

இதன்றியும் மதயானைகளின் துதிக்கையும் பெரிகையும் அற்றன, வேகமாகிய குதிரைகளெல்லாம் தங்கள் எஜமானையும் குரங்களையும் இழந்தன, வெற்றிவீரப்படைஞர் முதலாகியபேர்களெல்லாரும் பலமற்றார்கள், வயவிரர்கள் சிரமற்றனர், புயமற்றனர், வானுலகம் இடமற்றன, தேவர்கள் வேறிடந்தேடினார்கள், அந்தயிடங்களையும் பகைத்துப் புரிந்த யுத்தத்திடங்களையும் எத்தனையென்று சொல்லுவோம் ஐயா, வஞ்சகமாகிய சாமர்த்தியவான்களென்னும் சஞ்சத்தகாள் பதினாயிரம்பேர்கள் பலவாறாக இறக்கும்படியாய் அவர்கள் ஏறிவந்தவெண்சலத்தேர்கள் அநேகந்தூளாய்ப் பொடிந்துபோகும்படியாய்அவர்கள்தொட்ட அஸ்திரங்களெல்லாம் மண்ணாய்மடிந்து பொடிந்து படிந்துபோம்படியாய் அழித்து அடர்த்துப்படபடத்து நின்றான்மேகநிறத்தான் விடுந்தேரினையுடைய அர்ச்சுனனானவன். அந்தவேளையில்சகலமான வீரரும் அர்ச்சுனனுக்குப்பயந்து இளைத்துரணகளத்தில்நிற்கமாட்டாமல் வாட்டமுற்று ஓட்டமிட்டார்கள் இப்படிசஞ்சத்தகாள் ஓடவே துரியோதனனுடைய தம்பிமார்களைக்கண்டு அவர்களையுமாட்டிவாட்டி மிகுந்த தாட்டியாய்வராநின்ற விஜயகாண்டீப வீரன்கதிர்மகனாகிய கன்னனைக்கண்டு அக்கினிச்சொரியும் அருங்கணை பலவாகக்கொண்டு மந்திரநவின்று திசாதிசையும்நிறையக்கைக்கொண்டகாண்டீபத்தை நாணோசை கொண்டுதிசைகள் நடுங்கி செவிடெய்தும்படியாய்த் தேரையுமுடுக்கி துரியோதனனுடைய சேனையுங்கருக்கி வீராதிவீரர் முதலியயாவரையும் உருக்கி - உதிரம்பெருக்கிக் கர்னனைக் காலோட்டன் காணவேண்டுமென்று கருதிஅவனுடைய போர்முகத்துக்குத் தாவு முன்னமே, மாத்திராதேவி புத்திரராகியநகுல-சகாதேவர்கள் இருவரும்இந்தக்கன்னனைவெல்லாமல் மீளமாட்டோ மென்று தடதடெனச் சென்று தாதா வாகிய கர்னனுக் கெதிரிற் புகுந்து கணைமாறிசொரிந்து யுத்தமுனையைப் பிளந்துவல்லாளனாகிய வில்லாளிகன்னன்வடுப்பட்டு மனந்திடுக்கிட்டுவருந்தஅவனுடைய வாகினிகளெல்லாம் மடிந்துமுடியபூதப்பிரேதபைசாகணங்கள் அருந்தப்போர்புரிந்துகுதிரைக்கும்புகளை வீழ்த்தி யானைக் கூட்டங்களைச்சாய்த்துவாத்தியங்களைத்தாக்கி விசாலமாகியதேர்களைத்தூளாகநெரித்துத்தேர்க்கொடிகளைமுறித்துவிற்கழிகளைத்தறித்து புதுமதிக்குடைகளைப்போக்கி ஆயுதப்படைகளைத்தாக்கி ஆள்ப்பேர்களைச்சிதைத்து உயிர்போக்கி தேர்ச்சக்கரங்களினாற் புதைத்து வாள்ப்பேரர்களைமாற்றி வீரப்பயிரோற்றித்தூற்றி தெய்வலோகத்திற் குடியேற்றி வாதிக்காநின்ற இரண்டுசிங்கங்களைக்கண்டு இளைத்திருக்கும் யானைகளைப்போல் கர்னனு

டயினவந்தகாவலரும் காலாள்களும் சாயந்து ஓய்ந்து மாய்ந்துபோனார்கள், நகுலசகாதேவர்களினால் அடிபட்டு மடிவதை ஆயிரக்கிரணக்கதிர்தந்த அங்கதேசாதிபன் கண்டு கோபங்கொண்டு இருகண்களுஞ்சிவந்து கலற்பொறி கூடிக்கொளளும்படிக்கு முனைந்து வண்டுமொய்த்த வாசமாலையணிந்த மார்பினராகிய பாண்டவச்சேனைகளையெல்லாம் மாய்த்து நகுலசகாதேவருடைய திணிந்ததேகமெல்லாம் அவிந்தபுண்களாய் மோழைமோழையாய் வழிகாட்டி தாரைதாரையாய் உதிரஞ் சொரியத்தக்கதாய்க் கணைகளைப்பொழிந்து அவர்களுடையதோளும் ஒப்பற்ற மார்பும் துளைபடவும் வளைந்துப்பிடித்த வில்லானது தறிபடவும் நீண்டகொடிகள் முறிபடவும் உன்னதத்தேர்கள் உடைபடவும் நிமிராத விற்கொண்டு ஜாடி நால்வகைச் சேனைகளும்வாடி ஓடிப்போம்படியாய் அழித்துவருங்கர்னனைப்பார்த்து இவனைச்செயிக்குந்திறம் நம்மிடத்தில் இல்லை திரும்பி ஓடிப்போவதே திறமென்று உன்னி நகுலசகாதேவரிருவரும் யுத்தத்தைவிட்டுப் புறங்கொடுத்தோடினார்கள்.

அப்படி அவர்கள் ஓடுங்காலையில் ஒருவரும் நிகரில்லா வலிமைபெற்ற கர்னனானவன் மறுபடியும் யுத்தஞ்செய்யும்படியாகிய எண்ணங்கொண்டு சின்னபின்னமாய்த்தளைத்து ஊடுருவாநின்ற கொடுங்கணைகள் ஐந்துகொண்டுமுந்து நொந்துபோகாநின்ற நகுலசகாதேவரைப் பின்தொடர்ந்துபோக எத்தனப்படுகின்ற பிரதாபனை விலக்கி மிகுந்தபலத்திலும் தகுந்தநலத்திலும் உயர்ந்தகுலத்திலும் சிறந்ததலத்திலுஞ் செறிந்த சல்லியனாகிய சாரதி சொல்லுகின்றான் ஐயா, கர்னனே குதிரைக்கும் எனக்கும் ஏன் வீணாகிய பிரயாசங்கொடுக்கிறீர் முன்னேதருமராஜன்வந்து எதிர்த்தார் அவரைச்செயித்தாய் இரண்டாவது வீமசேனன்வந்து போர்தந்தார் அவரைமுதிர்ந்த போரினில்வென்றாய் சிறுவராகிய நகுலசகாதேவர்களை இதுவரையிலும் ஜெயிக்காமல்விட்டுவிட்ட நீ, இப்போது ஜெயிக்கஎத்தனிக்கிறாய் நீ,ஜெயிக்கப்போறதில்லை அப்படி அல்லவென்றுஜெயித்த போதிலும்அதனால்உனக்கொரு புகழுமில்லைநெருங்கிய பிரகாசம்பெற்றகிரீடியுடன்போர் புரிந்துவெல்லுவையாகில்உன்வில்வல்லபத்தையும்போர்த்திறப் புகழையும் யாவருஞ், சொல்லித் துதிப்பார்கள் இவர்கள் மெத்தவும் அறியா தவர்கள் இவர்களுடன் எதிர்த்து ஜெயம் அடைந்தாலும் அபஜெய மடைந்தாலும்உனக்குயாதொருபெருமையும் இல்லைஆகையால்நகுலசகாதேவர்கள் போர்செய்யப் போரில்போற கோபவேகத்தை அடக்கித்திரும்பி விடுமென்று சாரதி தடுத்தான்.

அப்போது, கர்னனானவன்குந்தி தேவிக்குத்தான்கொடுத்தவரமாகியவாக்கியநெறியும்சாரதிசொல்லிய குறியும் யோசித்து அந்தநகுலசகாதேவரைவிட்டுத்திரும்பி நல்ல மத்தியானத்திற்காயும் கத்தரிகாலச்சூரியனைப்போல் ஆர்ப்பரித்த மூண்டுப்பகைத்து வந்த பலமுடிமன்னரையும் அடிமுடி அரச்சாய்த்து முனைந்து அகோராஸ்திரங்களை அநேகமாகப்பொழிந்தான் அவன்தொடுத்தகணைகளானது திசாதிசைமுழுமையும் வளர்ந்து அளவிட்டு அறியத்தக்கதாம் சிலகணைகள் ஆகாயமுதலிய அண்டத்தைஅளந்து அளவிடுதாம் சிலகணைகள் ஆசைகொண்டு நாகலோகத்திற்புகுந்து நாலுபக்கத்திலுந்திரிந்து நாடிவருகின்றதாம், பலகணைகள் ஆகாயத்தில் நேரே உருவிப்போகுதாம் பலகணைகள் இதல்லாமல் உடலைநெருக்கிப் புகுந்துமாமிசம்-தோல்-குடல்-நரம்பு-தாரைகள்முதலிய இடங்கள் தோறும் புகுந்து நிச்சிகைசொருத்துதாம் பற்பலகணைகள் தேசத்திற்கண்ட யிடங்களைப் பிளக்குதாம் சிற்சிலபாணங்கள் வசையற்று இசைபெற்று காற்றுடன்கூடி அசைவற்றுத்திரியுதாம், சில அஸ்திரங்கள் பிடிபட்டன பலமலைகள் பொடிபட்டன, சிலதலைகள் எரிபட்டன, பல வனங்கள் முறிபட்டன, சிலஜனங்கள் கொதிபட்டன, கடல்நீர்கள் மிதிபட்டன, அடல்தேர்கள் இடிபட்டன, மஞ்சினங்கள் பொடிபட்டன, குஞ்சரங்கள் தூசியெழுந்ததுபூமியினால்வாசிஅழிந்ததுநேமியினால்விண்ணூடெழுந்தகரும்புகைகள்,மண்ணூடெழுந்தசெழும்புகைகள், அகிலம்பிளப்புண்டுஆதிசேடனும்தலைவளைப்புண்டுஅதனால் மிகஇளைப்புண்டுபோனானென்றுசொல்லுவேனாகில்காயத்திற்காயம்படாதிருந்தவர்கள்இன்னதொன்றுஸ்திரமாகஎவர்சொல்லமாட்டுவார்கள்,உடல்கெட்டவர்பலபேர்,உயிர்விட்டவர்சிலபேர், வில்லைக்கொண்டு பதறியெய்தவர்சிலபேர், பல்லைக்காட்டிக்கதறிவைதவர்பலபேர், தங்கள் கீர்த்தியுடன்மானத்தையும் கைவிட்டுக் கலங்கினோர்சிலபேர்,யுத்தகளம் விட்டு விலங்கினோர் பலபேர், ஆச்சரியம்ஆச்சரியமென்று அகன்றார்பலபேர்,ஆகட்டுமென்று கறுவிவெகுண்டார்பலபேர்,இப்படியாகபற்பலவிதத்திலும் வருத்தப்பட்டார்கள். அவர்களாரெனில், தருமராஜன் விடுத்தசதுர்விதபுருஷார்த்தமுமடுத்த சேனைசயினிய வேந்தர்கள், இவ்வாறாகக் கோலாகலமாய் அமர்மோதி வராநின்றகர்னனுக்குஎதிர்நின்றுபோர்கொடுக்கும்வீரமுள்ள பேர்கள் ஒருவருமில்லாமையால்இயாவரும்பிராணபயங் கொண்டுநிலமலைபோல்நிற்கின்றஅர்ச்சுனனிடத்தில் வந்துமிகநொந்துமனம்வெந்துவருந்தியபோதுதிருந்தியமனத்தோனாகியசிலைவிஜயன்கண்டு கல்லென்றுநகைத்து-சில்லென்றுவியர்த்துடையாடரவணைவிட்டெழுந்துஐயாபொற்சிகரித்தேர்க்கிசைந்தகைபா, சுவேதவாம்புரவியினைமுந்தச்செய்வாயெனக்கனல்படுகண்ணான் தாட்டியாய்த்தந்த வசனப்பிரகாரம் உசிதாதத்தைஒட்டி கர்னனுக்கெதிர்காட்டி கணகண வென மணிஆட்டி அண்டமுகடதிர நாட்டினான்செந்தீப்பொறிசெறிந்துபறக்கும் கண்ணையுடைய வில்விஜயனானவன் கடுங்கோபாக்கினிக்கணைகளையெடுத்துகார்பொழிவதுபோல் பார்மிசை தொடுத்து கரகர வென்று தேறினைவிடுத்து கால்மாடு தலைமாடாகத் துடித்திடப்படுத்துவலசாரிஇடசாரியாகச்சுழற்றிகாலகாலாந்தகனைப்போல் திரியும்காண்டீபனைக்கண்டகர்னனுடைய சேனைக்காவர்களெல்லோருங்காலூன்றிப்பூமியில்நிற்கப் பயந்து ஓட்டங்கொள்ளநயந்துஓடமாட்டாமல் அயர்ந்து ஆருந்தப்பாமல் அழிவதற்குக் காண்டாவனம்போன்றார்கள், ஒருவரையும் விடாமல்ஒழிப்பதற்கு அர்ச்சுனன் ஓ

ருவனுக ஒப்பற்றுநின்றுன், அதுகாலேயில் சேனேமன்னர் இளேத்து அழிந்த செய்கையைத்தெரிந்த கர்னன் அர்ச்சுனனுடன் எதிர்த்து இருவரும் அமர்இளேத்தார்கள், இருவரும் எதிர்புகுந்தார்கள், இருவரும் எதிர்முனேந்தாரகள், இருவரும் வில்வளேத்தார்கள் இருவரும் காணிப்பிமுத்தாரகள்,இருவரும்ஷ்டங்காரந்தெறித்தார்கள், இருவரும் சங்குகுறித்தார்கள், இருவரும் தெழித்துச்சினந்தார்கள், இருவருமீசைதுடித்தார்கள், புருவநெரித்தார்கள் இருவரும் சரங்களெடுத்தார்கள், பூசைகொடுத்தார்கள், மந்திரம் உச்சரித்தார்கள், ஒருவருக்கொருவர் எச்சரித்தார்கள், இருவரும்பெருங்கணேவிடுத்தார்கள், ஒருவனையொருவர் புகழ்ந்தார்கள், அகமகிழ்ந்தார்கள், முகமலர்ந்தார்கள்; அகிலபுவன சராசரங்களும் அசையும்படிபோர்புரிந்துவருங்காலேயில், அர்ச்சுனனுனவன், அருணக்கணே-வருணக்கணே-முதலிய அஸ்திரங்களே அங்கதேசராஜன்மேற் ஜெடுத்தான்.

கர்னனுனவன் அந்தக்கணேகளே இடையிற்றடுத்து சரோருகப்பகழி சதுமுகப்பகழி கமலவன்பகழி தனுவினிற்கோத்து சரேலெனவிடுத்துப்பகைத்தான். இப்பிரகாரம் வெற்றிவீரரிருவரும் ஒருவருக்கொருவர் போராடவிட்ட கணேமாரியினுல உலகெல்லாம் அலறவும் அநேகமாயிரம் புஜவீரதிராள் பிரமலோகக் குடியேறவும், அழகிய சமுத்திரம் ஏழும்-கைலே-இயமம்-மந்தரம்-விந்தம்-நிடதம்-ஏமகூடம்-நீலகிரி முதலிய மலேயேழும், கந்தமாதனமுதலிய எந்தமலேகளும் நொந்தசைந்தாடவும் வானஞ்சலிப்பெய்தவும் குதிரைகள் யானேகள்-தேர்கள்-காலாள்கள் இதுகளெல்லாம் சிந்திச் சிதையும்படியாய்க் கல்லேப்போன்ற வில்லேவளேத்துக் கணேத்துக் குனித்துக் கணேதெறித்தார்கள், ஒருவர்பேரில் ஒருவர் ஆயிரம் ஆயிரமாக பலம்பொருந்திய வாளிகளேவிடுத்துப் பின்னு முன்னும்பாராமல் ஒருக்ஷணத்துக்குக் கோடா கோடியாய் அடுத்து அடிக்கும் கடுங்கோரத்தையுங் கன்றிய விரோதத்தையும் முடிவேந்தர்முதலிய தேவருங்கண்டு மூவரும் புகழாநின்ற வாணசூரன் முதலாகிய பேர்களுடன் சண்டைசெய்யத்தக்க சமானஸ்க்கந்தாளென்று கர்னர்ச்சுனனாகியஇவ்விருவர்களின் புகழைக்கொண்டாடினுர்கள்.

அண்டமுதல அகண்டிதவிண்டல............*
மண்டலமெண்டிசை குண்டலிகுண்டல......*
தண்டலேசொண்டல்கள் செண்டுகளென்றே*
மூடுண்டுண்டுண்டென திண்டிமமுதலிய......*
சிறுபறைஅரைகர முரசெலிநிறைபெற.....*
அரசர்கள்குறைவுற மறவர்கள்குறவர்கள்....*
திறவர்கள்முடிவுற சரசரசரவென............●
பரபரபரவென மாவொலிசெவிடுற............●
காமிருசெவியுற செவிதனில்புகையுற.......*
இருவிழிகனலுற கனலுளபொறியெழ...... *
கதித்தபொன்முடி காவலரோடிட............●
பதித்தநன்மணி வார்சிலேநீடிட..............●
விதித்தநீள்கணே மேவலர்தூவிட..... ....●
எதிர்த்தபேர்அபயச் சொலிசைத்திட.........*
உாடுவு
எட்டுத்திக்குட் டட்டக்கிரிகளும்..... ......*
வட்டத்திட்டுட் பட்டக்கரிகளும் ....*
விட்டத்துட்பட் டிட்டப்புரிகளும்..........*
பட்டுக்கட்டிட் டட்டப்பரிகளும்............*
பதறிக்கதறிச் சிதறிக்கதலுற............ .....*
பாரொடுபுவனம் படீரெனவாட..... ....*
ஆறுபோலுதிரம் அலேபுரண்டோட... .....*

அமராடியகாலேயில்; அர்ச்சுனன்-கர்னன்-இவர்களிருவருங் கைமேலிட்டு மாயக்கணே யேவினுர்கள், அக்கணேகளானது பந்தெனச் சுழன்றெழுந்துகொந்தழற்சொரிந்து வந்து அந்தெனப்புகுந்து நொந்து தந்தெனக் குழைந்து வெந்து அதிவீரபராக்ரம சாலிகளாகிய இருவருடைய தேகத்திலும் தைத்திட்டதனுல் வலேக்குளகப்பட்ட வீரசிங்கம்போல்மடக்கி சாயாபதி மைந்தனுகியகர்னனும் சலித்துநின்றுன், அவனுக்கெதிர் நின்ற தனஞ்செயனும் தேகந்தளர்ந்து அகமெலிந்து தன்னேத்தானே மறந்திருந்தான் அப்படியிருந்த அர்ச்சுனனேக் காயாம்பூவண்ணனுகிய கண்ணன்கண்டு, ஆ ஆ, போர்த்திற வியாக்கிரம பராக்கிரம சாலியாகிய அர்ச்சுனு, கூர்செறிந்த-கோல்பொழிந்து போர்முனேந்து நேரடர்ந்துகார்சொரிந்த நேர்பொருந்த நேர்மொழிந்து போர்புரிந்து சீர்பொருந்திவந்த நீ இப்போது ஜெயம்பெருமல் இப்படிக்கு இளேப்பானேன் மெத்தகளேப்பானேன் ஐயோ, அப்பா-சம்பளம்-ஜாடியில்லாமலும் என் பெண்சாதி பிள்ளேகள் சமீபத்திராமலும் யிருக்கிற என்னே இங்கேகொண்டுவந்து கன்னனுக்கு எதிர்சென்று போர்தந்து மன்னனுகிய நீ மனம்நொந்து வன்னமேயிய சித்திரம்போல் வாய்பேசாமல் அமர்ந்து அசைவற்றிருக்கின்றுயே இதென்ன ஆயாசமோ அல்லது பெருமோசமோ கர்னனிடத்தில் வைத்த மிகுநேசமோ கணேபட்டுருவும் பிரையாசமோ அதனுல் நேரிட்ட ஆபாசமோ நானுனக்குச் சாரதியாய்அமைந்த விசுவாசமோ என்விதிவசமோ அடா-ஐயனே, காண்டீபக்கையனே, மாகதமணிபோன்ற மேய்யனே, மெய்யாகச்சொல்லென்று செய்யாள்பதியாகிய ஐயன் பரிசுத்த துய்யன்கேட்க, அனுமக்கொடிதரித்த அர்ச்சுனனுனவன் கண்ணீர்சோரவிட்டு இருகரத்தையும் உச்சியிற்குவித்து ஆபத்பாந்தவாகிய அண்ணலே, என்னுடன்போர்புரிகின்ற வெங்கணேதரித்த அங்கர்பிரானுகிய கர்னராஜனுனவர் சாயலில்,தர்மராஜனேப்போல் விளங்குகிறுர் அதனுல் என்னுடைய எண்ணம் வேறிட்டுது, துக்கமேலிட்டது, துயரம்நேரிட்டுது, கலவரமா யிட்டுது, கடுமைபோய்விட்டது, கண்கள்மறைக்குது, கவனங் குறைக்குது, கதம்பகஸ்தூரிமுதலிய மாலேகளெல்லாம் புலால்நாற்றநாறுது, காண்டீபமோ வளேயவில்லே, நான்தொடுத்த பாணங்களோ அவர்பேரிற் செல்லாமல் முகங்கூசி முகமாறிவிடுது என்னுடைய மனம் மெத்தவும்இரக்கங்கொள்ளுது, இனிநான் இவரோடுயுத்தஞ்செய்வது அரிதுநானென்ன செய்யப்போகிறேனென்று வேள்பார்த்தன் பயித்தியம்பிடித்து பரதவிப்பதை எதிரிலிருக்கும் இறைவனுகிய சாரதியறிந்து தேரைத்திருப்பி வேகமாக முடுக்கி

தடதட படபட மட்மட் கடகட கிடுகிடு வென்று புடவி நெரியச்சென்றுதங்களுடையபேரணியாகிய பேரணிப்படைக்குட்புகுந்து செவியிலேறவே முகஞ்சுடித்து காமுறுகநின்று கேசவநாமக் கிருஷ்ணனும் வாசவன்மகனான அர்ச்சுனனும் முரசக்கொடி மன்னனாகிய தருமராஜனைத்தேடி நாலுபுறத்திலுநாடி முகம்வாடியபோது, நகுலசகாதேவரிரண்டுபேரும் வந்து கூடி-ஐயா, நமது அண்ணனாகிய தருமராஜன் கர்னனுடன் எதிர்த்து நெடுநேரமபோர்விளைத்து அவனேவியகணையால் மெத்த வருந்தி சித்தமறுநாது சத்துவங்குறைந்து துன்பமடைந்து சோர்ந்து கிருஷ்ணார்ச்சுனருக்கு என்சங்கதி சொல்லுங்களென்று சொலலி, சண்டைமுகத்தை விட்டுநீங்கி பாசறைக்குப் போகவேணுமென்று நாங்களே கொண்டுபோய்விட்டு இதோ வந்தோமென்று இளையோர்சொல்ல அந்தச்சொல்லைக் கேட்டவுடனே ஒப்பில்லாத புஜவலிமைபெற்ற அர்ச்சுனன்சொன்னான். அதென்னையெனில், என்தமயனாகிய தர்மராஜன் சத்துருவினிடத்தில் அகப்பட்டு பயப்பட்டு பரிதாபப்பட்டுவருந்தி யிளைக்க, நானம்மாத்திரம் அசைவறநின்று பகைவனைவென்று இசைபெறநின்று எதிர்முனைசென்று விசையுடனின்று பூபனைக்கொன்று புகழ்கைக்கொண்டேன் தமயன்வருந்த தம்பி ஜெயம்பெறுவது மிகவும் நன்றாயிருக்குது, நானிருக்கும் என்தமயன்இப்படி வருத்தப்பட்டாரல்லவாவென்று வருந்தி இப்போதே அவரை நான் காணவேணும் அப்பா தம்பிமார்களே அண்ணா வீமராஜனே மைத்துனர்முதலாகிய மற்ற மன்னர் மண்டலிகரே காலதலை தெரியாமல் கர்னன் யுத்த நடத்துகிறான் நீங்களெல்லோரும் சற்றுநேரம் அவனெதிர் நடந்து சத்துருக்களை மடக்கிப் போர்புரிவீர்களாகில் இதோ வந்துவிடுகிறேனென்று ஒருவருக்கொருவர் துணையாகச்செய்து துவாரகாபுரி வாசனுந்தானும மனக்குறைவறத் துறையாகத்தேர்விடுத்து தருமராஜனிருக்கின்ற பாசறைக்கு வந்தார்கள், இவர்கள் வரவைக்கண்ட வாசற்காவலாளிகள் சென்றுமுரசக்கொடியோனை வணங்கி எதிர்நின்று சுவாமீ, பராக்கு நாரநாரணர் வந்தார்களென்று சொன்னார்கள், அந்தச்சொற்கேட்டபோதே அகண்டசாம்பிராச்சியமும் பெற்றதைப்போல் அகமகிழ்ந்து முகங்குளிர்ந்து அதிசீக்கிரமாக யெழுந்து எதிரோடிவந்து இரவிகுமாரனை முடித்துவிட்டு ஜெயம்படிதநுவிட்டுப் போகும்படியாய் வந்தார்களல்லது இப்போது நாமிருவரும் பாசறையைத்தேடி வரும்படியாகிய காரியம் வேறொன்றுமில்லையென்று மிகமகிட்சிகொண்டு அருட்கண்ணூட்டி கிருபை பூண்டிருந்த காலையில், நாரநாரணரிருவரும் தேர்விட்டிழிந்து சிரேஷ்டனைப்புகழ்ந்து தீர்க்கமாய் வணங்கினார்கள், அப்போது தர்மராஜன் சீக்கிரமத்தில் இருவரையுமெடுத்து சந்தனமணிந்தகொந்தலர்ப்புனைந்த திணிந்த புயத்திற் பொருந்தத்தழுவி முன்பிருந்து தம்பிமுகத்தைப்பார்த்துத் தென்பாகச் சொல்லுகின்றார்.

எனது அன்பிற்குரிய அனுசனே தம்பி முன்பு அக்கினிதேவனுக்குக காண்டவனத்தைப் பசியடங்கக் கொடுத்த பலனானது ஆகாயவாசிகளாகிய காலகேய ரென்னும் அறுபதினாயிரம் அரக்கரைசசெயித்து அழகுடைத் தாகியபுகழ்படைத்த தல்லாமலும் கடல்மத்தியிலிருந்த நிவாதகவசாள் மூன்றுகோடிபேரை வென்று இந்திரபட்டத்தை நிலைநிறுத்தினாய் அந்தப் பலனானது அசுர கண்டகனென்னும் பேரைக்கொடுத்துச் சிறும்அடுக்கது இன்று சூரியகுமாரனாகிய கர்னனைக கொன்றமையால் ஈரேழுலோகத்தையும் வென்ற இறைவனென்றும் ஏந்தலென்றும் இயம்பப்பட்டது எனனப்பனே என்று சொன்னமனனப்பனை நோக்கி பொன்னப்பனாகிய புயல்வண்ணன் சொல்லுகின்றான்.

சாந்தமூர்த்தியாகிய தருமகந்தனு-சூரிய புத்திரனாகிய வீரியனுடனே ஆரியர்முதலிய சிரியகாரியரும் அகமகிழும்படியாகிய போர்புரிந்து அவன்றொடுத்த அம்புகளினால் இந்த விஜயன் நொந்து சிந்தைபிரமித்து யுத்தமுனைவிட்டு விலங்கி தேவரீரைக்கண்டு வார்த்தைபேசி தரிசித்து மறுபடி போகலாமென்று நமது சேனைப்படைக்குள் வந்து தேவரீரைநாடியபோது தாங்களும்-கர்னனும்-தருமந்தப்பாமல் சண்டைபுரிந்து மண்டைகிழிந்து உதிரம்வழிந்து ஊற்றமொழிந்து தேகமெலிந்து திரும்பிவந்துபாசறைக்குப்போனாரென்றும் நாங்கள் கொண்டுபோய் விட்டுவந்தோமென்றும் நகுலசகாதேவர்கள் சொன்னார்கள் அந்தச்சொல்லைக்கேட்கவே எனக்குக்கூட மெத்த மனவருத்தம் உண்டாச்சுது அந்த பாதகத்தால் தேவரீரைப் பார்த்துவிட்டுப் போகும்படியாய் இவ்வளவு தூரம் இவடம்வரவேண்டிய தாச்சுது இல்லாவிட்டால் இதுவரையிலும் கர்னன் மாண்டிருப்பான் ஆகிலும் இப்போதென்ன முழுகிப்போச்சுது நமக்கு நல்லகாலம வாச்சுதென்று திருத்துளவமணிந்த செங்கண்மால் சொன்னார்.

இவ்விதச்சொல்லானது தருமராஜன்-பற்கடித்து அக்கினிதேவன் அழல்கக்கி எழுநாக்குடனெழுந்த தன்மைபோல் கண்களிற்பொறிபறக்க கனைத்துப் பதைத்து கையைத்தேய்த்துக் கனக்கஅறைந்து கலீரென நகைத்துக் கர்னன் இன்னம் உயிர்பெற்றிருக்கின்றானா-உடலைவைத்திருக்கின்றானா-ஆ ஆ-என்னகிருஷ்ணாஇதுமெய்யா அல்லதுபொய்யாசொல்லையாவிற்கையாவென்று முரங்கடுத்து முனிவடுத்துஉடல்படபடத்துமனம்விடவிடத்து முன்னின்றவிஜயன்முகத்தைவெறித்துப்பார்த்துபூர்வந் தொடங்கிஇன்னாள்வரையிலும் அங்கர்கோமானாகியகர்னனை ஒரேகணையால் மாளச்செய்து வானாளச்செய்வேனென்றுமெத்த வலுவாகச்சொன்னவாக்கியம்அபாக்கியமாகி சொற்சோர்வு படவந்தாயே இந்தச் சோர்வைக் குறித்து நம்போலொத்த அரசர்களென்னநினைப்பார்கள் அவர்கள் மனம் என்னமாய்வருந்தும் ஆகாய வாசிகளாகிய தேவர்கள் என்னயோசிப்பார்கள் எவ்விதமாகிய ஏளனம் விளைப்பார்கள் கானகவாசிகளாகிய கலைகற்ற முனிவோர்களுடைய மனம் என்னபாடுபடும் இக்கடல்சூழ்ந்த புவிக்கிறையாகிய நன்னெறிபெற்ற காவலனே, துரோணாச்சாரியிடத்தில் ஓடி ஓடி தனுர்வேதமெல்லாம் சம்பூரணமாய்க்கற்றனையே, அக்கினிதேவன்கொடுத்த அழியாதவில்லு

ம் அருக்காலியும் அக்ஷயதூணியும் சளையாத சுவேதப்புரவியும் இளையாத தேரும்பெற்றனையே, தேர்செலுத்துவதில் மிகுதிறவானென்றுசிகைதெரியாச் சன்னதங்கொண்டு மண்ணைத்தின்னுகிறவனை தேர்வலவனாகக்கொண்டனையே பிறைமுடிச் சடைப்பெம்மான் திறமுடனளித்த சிவபாசுபதமென்னும் பெயர்கொண்ட தழற்கணையொன்று தாங்கியிருக்கின்றனையே, ஜெயமாகிய வீரவீர அனுமக்கொடி நாட்டினையே, பத்துபெயரும் பூண்டனையே, இவைகளெல்லாமிருந்தும் என்ன பிரையோசனம் ஏந்தலே போர்முனைக்கு அஞ்சும்படியாகிய நெஞ்சுள்ளபேருக்கு ஒருவன்சொல்லி அதனால்வருவதொன்றில்லை இவைகளெல்லாம் அவரவர்கள் வினைப்பகுதியினாலுண்டாகிய பிறவியின் குணமாக்களும் அப்பனே சூதாடக் கூறிய ஆண்மைப்பயிரோறிய அரசர்கள்நிறைந்தசபையில் பஞ்சையாகிய மனத்தையுடைய நாம் மானம் அஞ்சாமல்சபதமாகிய வஞ்சினங்கூறியது என்னலாபம் அடையவோ தெரியவில்லை உன்னைவிட திறத்தை யுடையவர்கள் எவ்வுலகத்திலுமில்லை என்று மெத்தவும் புகழ்ந்தேன் என் சித்தமு மகிழ்ந்தேன் செழுந்தேனிறைந்த மாலையணிந்த தீரனே இப்படி மானமிழந்து போவதற்காகவா தூதனுப்ப வேண்டாம் நானொருவனுமேபிளந்து விடுகிறேனென்று தளர்ந்திருக்கும் என்னுடன் போராடி நீங்கள் உங்களை நம்பித்தானே பதினெட்டுநாளைப் போரொன்றுவைத்துக்கொண்டேன் ஐயோ-வேடிக்கைபார்க்கிற தேவர்களுக்குமுன்னே கர்ணனைக்கொல்லாமல் இன்னம்பொழுதைப் போக்கிக்கொண் டிருப்பையாகில் எந்தநாளையில்ப் போர்முடிவது எந்தக்காலத்திற் சீர்பெறுவது எந்தவருஷத்தில் சபதமுடிவது எந்தயுகத்தில் நமக்குவந்தவள் கூந்தல்முடிவது நீ-பிடித்தவில்லும் ஒருவில்லா-இந்த வில்லுக்கும் உனக்கும் ஒரு பெருமையுண்டா என்று நிந்திக்காநின்ற திருத்தமயன்சொல்லானது ஆலகாலவிடம்போல் சுழிசென்றுசெவியிலேறவேஒருதரம் உயிர்போய் உயிர்ப்படங்கி உரக்கக்கூவிஓங்கிப் பெருமூச்சுவிட்டுபெருந்தீயிலிடு அனல்க்காச்சிய வேலாயுதத்தை அளிந்த புண்ணிற் சொருகினல் எப்படியோ அப்படிபோல்அன்று அழன்று அதிர்ந்து அகழ்ந்து பதைத்து மிகு வேகமாய் வெகுகோபங்கொண்டு முரசக்கொடிபடைத்த முன்னோனை முறுக்காய் முறுக்கி முளிர்ந்துபார்த்து முகங்கடுத்து மொழியலுற்றான்.

நீரும் விமனும்நகுலசகாதேவரும், கர்னனையெதிர்ந்து கனயுத்தம் விளைத்து கணைகள்பொழிந்த நீங்கள் நால்வரும்அந்தக்கர்னனைச் செயிக்காமல் உங்கள் பிராணனைக்காப்பாத்திக் கொண்டு ஓடிவந்து விட்டது உமதுமனதுக்குத் தெரிந்திருந்தும் யுத்தத்தின் பெருமை உணர்ந்திருந்தும்-எதிரியின்பலாபலம் அறிந்திருந்தும்-இரக்க மில்லாமல்-கிருபையில்லாமல்-யோசிக்காமல் - ஒருகிழ்மக்களைப்பேசும் பேச்சைப்போல் என்னை யிகழ்ந்து பேசியது உம்மைப்போன்றவர்களுக்கு யியல்பல்ல - காரியமல்ல-வீரியமல்ல-நான் பிரவேசித்த போர்முகத்தில்என்பாணங்களினல் எதிராளிகளுடைய விருதுமுதலியு உயிர்போய்விட்டகாலத்திலும்-இன்னம் எப்பேர்ப்பட்டபொல்லாங்குகள் நேரிட்டபோதும் என்வில்லைக்குறித்து நிந்தித்த சத்துருக்கள் ஒருவருமில்லை என்னைக் குறைத்துப் பேசினபேருமில்லை-ஆ, ஆ, கோமானே, கூர்மையாகிய பாணங்களைக் கொண்ட என்னுடைய விஜயகாண்டீபத்தைக்குறைச்சலாக எனக்கெதிர்கூறியபேர்கள் எவரானபோதிலும் அவர்களுடைய ஆவியைத் தாவிவாய்குவேனென்று சபதங்கூறி இருப்பதுதமக்குத் தெரியுமல்லவா அப்படியிருந்தும் நீரிப்போது என்னையும் என்வில்லையும்இழிவாகத் தூறிப்பேசினபடியால் நான்சொல்லியிருக்கிற சபதப்படிக்குத்தேன்சொரியும்மாலையணிந்த உதிட்டிரனே உமதுதலையைவாங்குவேனென்று மாதண்டஞ்சென்று வேதண்டங்கண்டு தீதண்டாத்தவங்கொண்ட காண்டீபன் மூதண்டங்கலங்கும் கோதண்டம்போன்ற நீகாண்டீபச் சிலையைவளைத்து நாணிமாட்டிபாணம்பூட்டிஆகர்னபரியந்தம் இழுத்தான்.

அந்தவேளையில், சொந்தமான பந்துவாகப் பந்தாயிருந்த நந்தநந்தனன் கொந்துதலென்னும் சிந்தைவருந்திபெருங்கோபங்கொண்ட இந்திரன்மைந்தனை இருகையாலுமணைத்து இறுகத்தழுவி நாநாமனே-இதுநல்லநெறிமெத்தநல்ல காரியம் நீ கூறியிருக்கிறசபதம் வழுவாமற்காக்கவேண்டியதே ஆகிலும்-அன்னியரிடத்திலமாத்திரம் நீ செப்பியசபதம் செல்லுமல்லது-தாய் தந்தை-தமயன்-ஆசாரியன்-முதலாகிய-பெரியோர்-உரியோர் - இவர்களிடத்திற்செல்லுமோ ஒருக்காலுஞ் செல்லாது-மேலும் தருமமல்ல இதை நீ அறிந்து கொள்ளக்கடவை - குணமேருவே-மணத்தாருவே-இதைக்குறித்து ஒருகதைசொல்லுகிறேனென்று கோவர்த்தனகிரியைக் குடையாகவெடுத்தும்-விளாங்கனி அடிப்பதற்கு இளங்கன்றைக்கல்லாகக் கொண்டும் காரியா காரியங் களைத் தெரிந்து நடத்தியும்காலிகளுடன் திரிந்தும்புள்ளாங்குழலூதுகின்றமேகவண்ணனாகிய கண்ணன் விளம்புகின்றார்.

கர்ப்பகக்காவுக் கிறையென்னுந்தேவேந்திரன் மைந்தனாகியகாரணனே கேளும் - வேதவேதாங்கந்தெரிந்தவிப்பிரன்-மெய்த்தவன்-கௌசிகமகாமுனிவனென்னும்பேர்பெற்றவன்-சித்தசுத்தியாய் நற்றவமிருந்து கற்றவருடன்மெத்தநாட்கலந்துஉத்தமத்தலங்களெல்லாந் திரிந்துஜீவன்முத்தர்முதலியபேரெல்லாரையுமுணர்ந்துஇந்தனைநாள்பூபிரதக்ஷணஞ்செய்தோம் இனிமேல்ஓரிடத்தில்நிலைக்திருக்கவேணுமென்றுநினைத்து - ஒருநகரதநுக்கு அருகாமையில் மடமொன்று கட்டிக்கொண்டு-பொய்சொல்லாமை ஒன்று-கோபமில்லாமற் கொன்றுநடத்துங்குணத்துக்காக மௌனம் ஒன்று-இந்த இரண்டையும் விரதமாகமேற்பூண்டு பாபந் தன்னைத் தொடராமல் பரிசுத்தஇருதயத்துடன் தவம்புரிந்து வந்தார், அவருடையநற்செய்கைகளைக்குறித்துஉலகமெல்லாங்கொண்டாடிப்புகழ்ந்து இவருக்கு மிஞ்சிய சத்தியவாயமையில் எவர்களும்நிகரிலலையென்று மகிழ்ந்து வணங்கி தொண்டுபட்டு இருந்தார்கள்-இந்தப் பெரியவருக்கும் தவம்நிறைவேறி நீடித்துவந்தது இப்படியிருக்குநாளினில ஓர்காலை

சிலதிருடர்கள்சேர்ந்து இவருடைய மடத்துக்கருகாமையிலிருக்கும் ஒருபதியிற்பொருந்திய வர்த்தகராமவேள் பார்த்தன் போரங்கன் என்பவருடைய வீட்டில் கன்னக்கோல்வைத்து சொட்டையிட்டு திருந்திய பொருள்கள் முதலாகியநகைகளையும் கொள்ளைகொண்டு அவர்கள் வருந்தி அழும்படி விட்டுப்போனார்கள் அப்போது தலையாரிகளுக்குச் சங்கதிதெரிந்து அந்தத்திருடர்கள் போயிருக்கிற காலடியைப்பிடித்து பின்தொடர்ந்து வருவதை அந்தச்சோரர்கள் தெரிந்து மிகவும்பயந்து ஓட்டமும் நடையுமாயோடி ஒளிந்துகொள்வதற்கு வேறிடம் இல்லாமையால் அந்தகௌசிகமுனியை வணங்கப்போகிற விரதிகளைப்போல்சேர்ந்த மடத்துக்குள்ளே நுழைந்துபதுங்கினார்கள், அப்போது காவலாளிகள் அடியை மிதித்தாப்போல்வந்துபார்த்து எங்குங்காணாமையால் மெத்தவும்யோசித்து எங்கி ஆயுதபாணிகளாய் இந்தமடத்துக்குள்ளே நுழைந்து அவடத்தில் மௌனியாயிருக்கிறகௌசிகமுனியைக் கேட்டார்கள் பாபந்தொடாமல் பொய்பேசாவிரதம்பூண்ட புண்ணியன் சற்றுநிதானித்து திருடர் இங்குவரவில்லையென்று சொன்னால் முழுப்பொய்யாகுது, வந்தார்களென்றுசொன்னால் மகாபாவமாகுது இதற்கென்னசெய்வோமென்று யோசித்து வாக்கினாற்சொல்லாமல் அந்தத்திருடர் ஒளிந்த இடத்தைக்கையினாற்குறிப்புக்காட்டினார் அந்தக்குறிப்பின்வழியே காவலர் சென்று திருடரைக்கண்டு மடலொடித்துக்கட்டி வவ்வியபொருளையுங் கைக்கொண்டுபோய் அரசனால் அந்தக்கள்வரைத்தண்டித்து தலைகண்டித்தார்கள் அப்பால் சில காலஞ்சென்று காலம்பண்ணிய இந்தக்கௌசிகமுனிக்கு மீளாநரகங்கிடைத்ததென்று மேலோர் சொல்லியிருக்கிற இதிகாசத்தை நீ கேட்டதில்லையோ சொல்லும்.

ஓ விஜயராஜனே அதேன் மீளாநரகம்கிட்டியதென்றால் பொய்யுஞ்சொல்லலாம் அந்தப்பொய்யானது அநேகம்பேருக்கு துன்பத்தை விளைக்காதிருக்குமாகில் அது சத்தியமொழியிலும் மெத்தமுக்கியமாம் மெய்ச்சொல்லானது ஒருவருக்குப் பொல்லாங்கை விளைக்குமாகிலும் அது மகாபாவமாகிய பொய்ம்மையிலும் பொய்மையாம் ஆகையால் உன்னுடைய சபதம் உத்தமனாகிய தருமராஜன்பொருட்டில் தப்பிப்போனாலும் போகலாம் அதனால் பாதகமில்லை நீ இப்படிச்செய்யத்தகாது மேலும் நீ கூறியசபதங்களெல்லாம் சத்துருக்கள்நேர்ந்த யுத்தகளத்திலல்லது மற்றோரிடத்திலுந் தலைகாட்டப்படாது அப்படியிருக்க தருமராஜன்பேரில் கோபங்கொண்டாய் கோபத்தினால் பாபம்விளைந்து விட்டது கைப்பிடித்தகாண்டீபத்தைவளைத்து கணைதொடுக்கிறேனென்றுகடுமொழிபுகன்று முனிந்தாய், இதனால்நீயாய்த்தேடிக்கொள்ளாமல் தனக்குத்தானே வினைவந்துமூண்டது அர்ச்சுனாவென்று அரிவாசுதேவன்சொல்ல, அதைக்கேட்டவிஜயன் மெத்தவுமெலிந்து சுவாமியைநோக்கி நான் என்னசெய்வேன் இப்பேர்ப்பட்டசபதம் முன்னமே சொல்லியிருக்கிறேனே அந்தச்சபதமுந்தப்பாமல் தமயனுநோகாமல் நிறைவேற்றவேணும் அண்ணா அவர்களை எதிர்த்துப்பேசிய வார்த்தையால் வந்தபாவமும் நீங்கவேணும், இதற்கெப்படி ஏழைபங்காளனாகிய எம்பெருமானேயென்று கிரீடி கிலேசப்படும்போது கிருஷ்ணமூர்த்தி கிரீடியைப்பார்த்து நானொரு மர்மமாகிய தர்மனுசொல்லுகிறேன் அந்தப்படி நீ நடத்துவையாகில் சபதம் நிறைவேறியதைப்போலாம் பழிபாவமும் நீங்குமென்று பாந்தாமன்புகல அதென்ன என்னையனே திருவாய்மலர்ந்தருளுமென்று அர்ச்சுனன்கேட்க, சுவாமிசொல்லுகிறார்.

ஐயா சவ்வியசாசியேகேளும், பிராயசித்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது, என்னவென்றால் கொலைசெய்வதற்குப்பதிலாய் அவர்கள்மனங் குன்றப்பேசினாலேபோதுமென்றிருக்குது தருமசாஸ்திரத்தில் என்னசொல்லுதென்றால் பெரியோர்களை மரியாதைகுறைவாய் நீ ஒன்றுசொன்னால் கொலைசெய்வதைப்பார்க்கிலும் மிககொடியதென்று பெரியோர்பேசியிருக்கிறார்கள் இது உயர்ந்தகேள்வி நூல்வல்லவர்களுடைய கருத்து ஆகையால் நீ சில இழிவாகியபேச்சைப் பேசுவையாகில் இந்தகர்மராஜனாகிய உன்தமயனை உன்சபதப்படிக்கு தலைவாங்கியதற்கு ஒப்பாயிருக்கும் இது உண்மையென்று உந்திபூத்தோனுரைத்தார், அந்தச்சொல்லுக்கிணங்கிய அர்ச்சுனன்பயந்து இளைத்து இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்து இறையையென்றுவணங்கி நாதிபனாகிய தர்மராஜனைநோக்கி தன்னுடைய நாவானது இதுவரையிலும் பேசியறியாத பேச்சுகளை துச்சனமாய்ப்பேசி சேவகர்முதலிய யாவரு நகைக்க முகமலர் முகைநகத்தளர்ச்சிகொண்டு எதிர்நின்றபோது பேரறன்குமாரனாகிய பெரியோன் ஒருத்தரமுஞ்சொல்லாமல் சோர்வடைந்து மனந்துறந்து எனக்கு நாடுநகரம் பட்டாபிஷேகம் பெண்டுபிள்ளை ஒன்றும்வேண்டாமென்றுசொல்லி துறவடைந்துதவஞ்செய்வேனென்று ஆடை ஆபரணமுதலிய மணிகுண்டல கிரீடங்களை மாற்றி கானகமநோக்கி நடந்தார். அவர்துறந்து போவதைக்கண்ட நரநாரணர் இருவரும் பறந்துபோவதுபோற் சென்று சிறந்த தர்மராஜனுடைய செந்தாமரைத்தாளில்வீழ்ந்து நாங்கள் விசனத்திலாழ்ந்தோம்; எங்கள்பேரில் கிர்பை வையுமென்று இரக்கமாகவேண்டி நடுநாயகம் போன்ற சத்தியவானை சமாதானஞ்செய்து அழைத்து வந்து ஆசனத்திலிருத்தி அவருடையமனோதுக்கமாறும்படியாய் ஏழ்மையாக மிகுந்த தாழ்மையாகிய அநேகம் வார்த்தைகள்படித்து தர்மசொரூபியாகிய ஐயா நீர் திரிபுர சம்மாரியான சிவனைப்போல் இவடத்தில் நின்று எங்களைவிடுப்பீராகில் நாங்கள் அக்கினிக்கணைபோல் அரைநொடியிற்சென்று திரிபுராதிகளாகிய தெயித்தியரை அழித்தவாறுபோல் கர்னனைக் கடுகப்போக்கி அவனுயிரைக்கைக்கொண்டு வருவோம் என்று பலவாய்மைவிளம்பியபோது கோபம்விடுத்துப் பொங்குங் கிருபைக்கண்ணுடைய புண்ணியதர்மராஜன் புயம்பூரித்து நரநாரணர் இருவரையுநோக்கி நீங்கள்சென்று படைமுகம்வென்று ஜெயங்கொண்டு வாருங்களென்று திருவாய்மலர்ந்தருளினார் முரசகேதனனுடைய அருள்கொண்ட இருவரும் அவருடைய சரணங்களில்தலைசாய்த்துவணங்கி ஆசிர்வ

சனம்பெற்று கிருஷ்ணமூர்த்தியும் நானும் ரதமேறி வி டைகொண்டு பகலில சந்திரன் உதயமானுனென்னும்ப டியாய் வெள்ளைக்குடை விரித்துப்பிடிக்க இருபுயத்திலு ம் வெண்சாமரைகுளிர்ச்சியாய்வீச காற்றுகள் திருமார்பி ற்முக்க ஜெயபேரி பூரிமுதலிய சின்னங்கள் கடலோசை போல முழங்க வன்னவன்னக்கொடிகள்-விருது-டால்க ள்-எடுத்துவர புகழ்வோர் வந்திப்போர் கட்டியர் பட்டு வான்கள் துதித்துக் கீர்த்திப்படிக்க விசேஷ அரசர்கள் பக்கங்களில் எக்களிப்புடன் கைக்கொட்டி ஆர்ப்பரித்து வர அழகிய யானைகள்-குதிரைகள்-தேர்கள்-பதாதிமுத லிய சேனைகளைக்கொண்டு துருஷ்டத்தூய்மனும் தமபி மார்களுமநின்று சண்டைசெய்யும் போர்முகத்துக்குவந் து அப்போது நடந்துவருகிற போர்விரத்திறங்களைப்பா ர்த்து புண்ணியனுகிய புண்டரீகாக்ஷன் இன்பமாகியதிற த்தை அர்ச்சுனனுக்குச்சொல்லுகிருர்.

அரன் அனையானே, இன்றைய யுத்தத்தில் நம்மெல் லோரையும் வென்று ஜெயம்பெறவேணுமென்று என் ணிவந்திருக்கிறுன் கர்னனனவன் அவன் இன்றைக்கு வென்று வெற்றிகொடுக்கவும் அதைப்பெற்று அவனிமு ற்றும் தன்குடைகிழற்படுத்தி ஆளவேணுமென்னும் ஆ சையினுல் ஆஜராய்க் காத்திருக்கிறுன், விவேகமில்லாத துரியோதனன் இது அவர்கள் எண்ணிவந்திருக்கிற கரு த்து இன்றையப்போது தப்பித்துக்கொள்ளுவோமாகில் கர்னன் போய்விடுகிறுன் அப்பால் இந்த துரியோதன னுக்கு உற்றதுணை ஒருவருமில்லை அப்பால்யிருப்பவெ ல்லாம் பதினெழுநாளிலுங் கழிபட்டமொண்டி-முடஞ்- சப்பாணி-கூன்-குருடே யிருப்பது என்றுசொல்லி இனி வெல்லும் மல்லும் கற்றவரிசையை அடுத்து சத்துருக் கள் புகழும்படியாகிய தோள்வலிமைபெற்ற தோன்றலே நமதுசிங்கைநையும்படியாகச் செய்துவந்த பலவிதபாச ங்களும் சிலவிதமோசங்களும் துரியோதனனுல் விளைந்த தென்று தேருதே இந்தப்பாவமாகிய கைதவங்களெல் லாங்கர்னன் விளைவித்தவனென்று நீ தாராளமாய் நினைக் கலாம் இதன்றியும் அரசர்களுக்கு முன்பாக பெருஞ்கு தினில் உங்களைவென்று திரௌபதையைச் சபையேற் றிபிழைசெய்த காலையில் இந்தக்கர்னன் அந்தவேளையில் இவன்சொன்னசொல் மிகவும் கொடிமையுடையதென் று உன்மனந்தோன்றவில்லையோ அர்ச்சுன, அதைமறந் துபோனையே மறக்காதே நான்வேணுமானல் உனக்குக் கியாபகஞ்செய்கிறேன்.

கேளும் இந்த திரௌபதையானவள் கோவென்று அ ழுது நின்றபோது உனக்குரிய பாண்டவர்கள் துரியோ தனமகாராஜனுக்கு அடிமைவேலைசெய்யும்படிக்கு சொ க்கட்டானில்தோற்றுப்போனுர்கள் இனிமேல் உனக்குக் கிடைக்கமாட்டார்கள் நீ அவர்கள்பேரில் ஆசைவைக்கா தே அதையினுல் இந்தச்சபைநிறைந்தபேர்கள் ஆராகிலு ம் உன்கண்ணுக்குத்தக்க ஒருபுருஷனைப்பார்த்துகைகோ ர்த்துக்கொண்டு போடிவாடி குடி கேடியென்று புகன் ருனே (புயத்துணைவாய்ந்த புருஷதீரனே அப்பேர்ப்ப ட்ட மகாபாவியாகிய கர்னனை துரியோதனனுக்கெதிரில் புரட்டிப்புரட்டி அடித்து இந்தத்துரியோதனன் கண்கல ங்கி அழுது எஞ்சி இளைக்கும்படியாய் முன்னுதாக கர்ன னைக்கொல்லுவது தகுதிபெற்ற மாணுபரணனுகிய உனக் குக் கடமையாககளுமென்று கண்ணன்சொல்லவே தன ஞ்செயனுக்கு எரியுங்கொள்ளியை ஏறத்தள்ளியதைப் போல் இருகண்களும் எரிமூண்டு தீப்போற்செவந்து ம னமழன்று இப்பொதே பகையொழிந்து வெற்றிபெறுகி றேனென்று முனைந்து படைமுகத்திற்புகுந்து தடைப டாமற் செல்லும்போது வாயுகுமாரனுகிய ,வீமசேனன் கண்டு தர்மராஜனுடைய க்ஷேமத்தைவிசாரித்தான்.

அதற்காக அந்தவீமனுக்கு சமீபத்தில் வந்து அவன் சந்தோஷிக்கும் படியாய் மூத்தோனுகிய சவுக்கியங்களை ச்சொல்லி கன்னனைக் கொல்லாமல் வந்ததைக்குறித்து தன்னைநிந்தித்ததன்மை களையுஞ் சொன்னுன் - அதைக் கேட்ட வுடனே வீமனுஞ்சினந்து இவடத்திலுள்ள மன் னர் முதலாகிய பேர்களு முனைந்து முன்னே செல்லபி ன்னே அர்ச்சுனன் அவன்பின்னுக நகுலசகாதேவன் மேல்ப்புறம் சாத்தகி வடபுறம் உத்தமோசன் இடப்புற ம்உதார்மன் துரோணவயிரியாகியதுருஷ்டத்தூய்மன் இ டம்வலம்நெருங்கி இடைவிடாமல்வா அசுரேசரைச் செ யிப்பதற்கு சிவபெருமானெழுந்த திரிபுரசம்மாரகாலம் போல்வந்த அர்ச்சுனன்திடங்கொண்டு கர்னனுக்கெதிரி ல்ப்போய்க் கலப்பதற்கு முன்னமே முந்திச்சென்ற வீம சேனன் கதாயுதங் கொண்டு மதாசலமுதலியபதாதிகளை க் கலக்கும் போதுகர்னன் பெரியவிற்கொண்டு உயர்ந்த கணைகளை அளவறவிடுக்க வீமன்முதலிய பேர்கள் கர்ன னுடைய சேனைகளில் இருக்கும்-ரதகஜ-நாள்-முதலிய யாவற்றையும் அவன்விடுக்குங்கணைகளையும்வடவாமுகா க்னியைப்போல் எரித்துத்தகித்து கொற்றவர்களுடை யமொய்த்தமெய்ப்புகைய உருத்து சாரிகைசூழ்ந்துதிரிந் து படர்ந்து எதிரொருவருமில்லாமல் உலகம் அதிர்ந்து போகும்படிவருகின்ற-வாயுகுமாரனை மதித்துமனம்பொ ருமல் நாணிமாட்டியவிற்பிடித்த நராதிபரெல்லாம் நடுங் கி அங்கதேச ராஜனுடைய படைக்கும் நமதுபிராணனு க்கும்புதுசாய் ஏர்ப்பட்டுவந்த அந்தகன் இவனேஇவனே யென்று குலைகுலைந்தார்கள்.

இனிவீமனுக்கும் துச்சாதனனுக்கும் சண்டை.

இப்பேர்ப்பட்டசமயத்தில்; துச்சாதனனும் அவனு டைய தம்பிமார்களும் உச்சிதமாகிய வில்லைவளைத்து நா ணிதொடுத்து சோனுமேகம்பொழிவதைப்போன்ற வா ளிசொரிந்து வானுலகம்போவதற்கு வழிதேடிவருபவர் களைப்போல் பூர்வத்தில் ராஜசபையில்மொழிந்த சபதங் களை முடிக்கும்படியாய் கங்கணங்கட்டி ஜெயப்படப்பய ப்படாமல் அமர்க்களத்தில் ஆர்ப்பரித்துத்தேர்மேற்கொ ண்டிருக்கும் வீமசேனனுக்குநேராகவந்தடுத்து இன்றை க்கே பாண்டவர் ஐவரையும் படைகளுடனே முடிக்கி றேமென்று பலவாருக உறுத்து நினைத்துக்கோபித்து மனோவேகத்திலு மிஞ்சியோடுகின்ற துரிதப்புரவிபூட்டி ய தேராளிகள் வீரபேரி யுத்தபேரி ரணபேரி தசபேரிமு தலாகிய வாத்தியங்கள் முழங்கும்படிக்கு வந்தார்கள்நே

த்தியாகச் செங்கோற்றுங்கிய துரியோதனன்தம்பி துஸ்வாசனன்முதலாகிய தம்பிமார்களை வாயுபுத்திரனாகிய வீமன்கண்டு மழைமேகம்போல் இடித்து இரைந்து அதிர்ந்து அண்டம்பிளந்து எண்டிசையொழிந்து போகும்படியாய் சிலவசனங்களைப்பேசினான் ஓ துச்சாதனனே உன்னைப்போலொத்த சூரனுண்டோ உலகிலுள்ளசூரரெல்லாம் உன்னை மெத்தவும் மெச்சுகின்றார்களே பூர்வம் ராஜசபையினிடத்தில் நீசெய்த ஆண்மைக்குங் கும் நீ நடத்திய வெற்றிமேன்மைக்கும் நீபேசியபேச்சுக்கும் நீஎய்த எச்சுக்கும் சகராஜர்களுடன்சேர்ந்துவந்து நீகொடுக்கும் போருக்கும் நீதிதெரிந்த உனக்கும் எதிரி என்னைவிடவேறே ஆரிருக்கின்றார்கள் அம்மம்மா, உன்னை இச்சாபோசனமாக எமனுக்குவிருந்திடப் போகிறநாள் இன்றுதானே அப்பா, உன்தலையை அறுத்து அதனிடத்திலிருந்து பெருகிவராநின்ற ரெத்தவெள்ளத்தில் விழுந்தானன்உள்ளசூடற அலறமூழ்கிக்குளித்துஎன்றுபாசம்தீரப்போகிறகாலம் இன்றுதானே. துருபதேயன் செய்தயாகக்கினியிற் பிறந்தந்ரௌபதா தேவியினுடைய இருள்போன்ற கூந்தல் முடிக்கப் போகிற சுதினமாகிய நல்லகாலம் இன்றுதானே, உன்னுதிரத்தைவாரி என்னுடைக்கு ருசியாகியதண்ணீர்போல்குடித்துதாகந்தணியும் காலம் இதுதானே, ராஜசபையில் நாங்களைவரும் சொல்லியசபதங்களெல்லாம் பிரயோசனப்பட்டு பலிக்குங்காலம் இன்றைக்குநேரிட்டதோ ஆ, ஆ, இதுமெத்தநல்ல நாளாக்களும் விரோதய முள்ளவேந்தனே எங்களைச்செயித்துவசக்கிராதிபதியாய் உலகத்தையாளவேனுமென்று எண்ணங்கொண்டிருக்கிற உன்தமயனாகிய துரியோதனராஜனை நாளை யுத்தத்தில் நாசப்படுத்தி அரம்பாஸ்திரீகள் முதலாகிய அமரரும் எதிர்கொண்டு அழைத்து உபசரிக்கும்படியாய் அனுப்பிவைக்கிறேன், இன்றையப் போரில்உன்னைக்கொன்று முன்னடி அனுப்புகிறேன் நீ முந்தி முன்னுதாக விரைந்து போய் செவ்வையாகப் பிழைத்த உன் அண்ணனுக்கும் அவனுடன் கூடக்கூட்டமாக வரப்போகிறமன்னருக்கும் ஆள்ப்போர்முதலிய தம்பிமார்களுக்கும் சிராகியஇடம் தேடிவைக்கக்கடவைசிமானே, சகுநிகபாவத்தால் என்னுக எண்ணமெல்லாம் எண்ணிகிஞ்சிந்போகத்தில் சந்தோஷம் அடைந்துமகிழ்ந்துஅப்போதேகலகம் விளைத்துஎன்றைக்கும் அழிவில்லாத சந்திரகுலஅரசாட்சியை அன்யாயமாய் அழித்த அடாபாவி-குலமுறை உணராதகோபி-குருத்துரோகி என்று இப்படிப் பலவாறாகப் பேசிய வீமசேனனைப் பார்த்து மறுவார்த்தைஒன்றும் பேசாமல் சுரமடங்கினஊமைபோல்நின்றான் துஸ்வாசனன்.

அச்சச்சமயத்தில், துச்சாதனனை வீமன்ஏசிய சொல்லெல்லாங்கேட்டிருந்த, விசித்திரவீரன் விசித்திரபாகு-விசித்திரன் விநோதன்-அகண்டகரன் விஷையன் ஆகமன் தன்-சுநிகாதன், சுகிர்தன்-போரக்கன் - இந்தப்பத்துப்பேர்தம்பிமார்களுக்கும்மனந்தாளாமல்ப்புறப்பட்டுபயம்விளைக்குமவில்லும் கணையும்தேரினையுமுடையவர்களாய்நாலுமுகத்திலும்செலுத்திதேர்ச்சக்கரம்போனவழியெல்லாம் செந்தீப்பொறியும் பெருங்கரும் புகையும்குவிந்தோங்கும்படிக்குஓடிவந்துசெழுங்கணைகளைத் தொடுத்து எதிர்வந்தடுத்தாகள்.

அவரவர்களுக்கு இச்சையானபடி தொடுத்தகணைகள் அனைத்தையும் சூரியனாகிய வீமசேனன் தன்கணையாற்றடுத்து மறுபடியும் ஆளொன்றுக்கு ஒவ்வொரு அஸ்திரத்தைஎடுத்து அபிமந்திரித்துவில்லிற்பூட்டி விரைவில்விடுத்தான், அந்தவீமன்தொட்டகணைகள்பத்தும்மொத்தத்துற்றுத்தத்திக்கக்கிச்சுற்றிப்பற்றிக்கொத்துச் சித்ரமொத்துத்திக்குப்பக்கென்றுக்கத்தாக்கிதலையைப்போக்கிப் பிராணனைநீக்கியது தம்பிமார் பத்துபேரும் மாய்த்துதேரிற்சாய்ந்தார்கள் இவ்விதமாகச்செத்தபத்துப்பேரையும் ஆகாயத்திலிருக்கும் அழகார்ந்த அரம்பாஸ்திரீகளும்மற்றதேவதைகளும் ஆசையுடன் வேகமாகவந்து தேவதுந்துபிதந்து முந்துபுகுந்து புட்பசங்களுதிகளைக்கையிற்றந்துவிமானத்தேற்றி வீரசொர்க்கம்கொண்டுபோனார்கள், ஓரோகாலத்தில் உயிருக்குயிராகிய தம்பிமார் வீமன்கணையால் சிரந்துணிந்து பத்துப் பேரிறந்தசோபம் பாரெல்லாம்நிறைந்து ஊரெல்லாமுறைந்துபடபடத்து உடல் பதைபதைத்துபயிரின் பருவகாலம் அறிந்து பொழிந்துவரும் மேகங்களைப்போல் வீமசேனனுடைய மயிர்க்கால்தோறும் உருவும்படியாய் வச்சிரக்கணைகளைப்பொழிந்துமுகமாறுமல மலைந்தான் அப்போது வீமசேனன்பேரில் துச்சாதனன்போட்ட சரங்களெல்லாம் கல்லின்மேல்விழுந்தமழைத்துளி சிதறுமாப்போல் சிதறும்படியாய் கடுங்கணை செலுத்திக்காய்ந்து வாய்ந்ததால் ஆய்ந்தவலுமைகொண்டு தோள்வரைக்கும் நாணியிழுத்து கொடும்போர்விளைத்து மேன்மேலாகவேண்டிய சரங்களை உரம்பெறவிடுத்தான்.

இந்தத் துச்சாதனன் எப்பாமதுகையில் அகப்படுவானென்று காத்துக்கொண்டிருந்த வீமனுக்கெதிரில் வலுவில்வந்து அகப்பட்டபோது சும்மாவிடுவானா பெருமூச்சுள்ளவீரன் இந்தப்பிரகாரம் போர்புரியுங்காலத்தில் வீமசேனன்தொடுத்த பாணங்களையெல்லாம் ஒன்றொழியாமல் முறித்து ஓயாமற்கணைகளைவிடுத்து தன்தேகத்திற்படவொட்டாமலத்தடுத்து ஏழு அகநிஷியாஸ்திரம் எடுத்து மந்திரித்து எய்தான துச்சாதனனானவன் அந்த ஏழுகணைகளும் எரிந்து ஈரேழுலகத்தையும ஏங்கச்செய்து வந்துவிழுந்து வீமனுடைய தேரிற்பூட்டியகுதிரைநான்கையும சிங்ககொடியையும் மணியுற்றதேரையும் அணிபெற்றவில்லையும் துணித்துவிழுக்கியது தேர் அழிந்த உடனே வீமசேனன் வேறொரு சேமத்தேரிற்பாய்ந்து க்ஷீராப்தியில் மத்தாகச்சுழன்ற மந்தரகிரிபோன்ற வில்லைவளைத்து துச்சாதனன்தொடுத்த பாணங்களுங் கொப்பாகிய பத்துப்பாணங்களைப்பூட்டி ஆராதித்துத்தொழுது அதட்டி அக்கிரமித்து துச்சாதனனுடைய தோழியவும் கொடிதுணியவும் வலவன்மாயவும் குதிரைநான்குங் குறைந்துருளவும் எய்து அவனது இருபுயத்திலும் துளைக்கும்படி இடிபாணங்களைவிடுத்தான் அதுகாலையில் திரௌபதாதேவியின் கறுத்த அளகத்தைத்தீண்டி யிழுத்துவந்து

வஸ்திரபங்கஞ்செய்த மகாபாதகனாகிய சுழற்காளையானவன் தேர்முகலிய சாரதியுஞ் சிந்தியவுடனே பூமியிற்பாய்ந்து தோற்படையாத கதைப்படைகொண்டு காற்றாடிபோற்சுழன்று மேலெழுந்து வீமனுடைய தேர்மேல்த்தாவிமோதினான், அந்தக்கதை அடியால் வீமனுடையரதமொடிந்து சாரதிமடிந்து குதிரைகளும்பொடிந்து வேலைமுடிந்துபோகவே பூமியிலிழிந்து சற்றுநேரம் நின்றுநிதானித்து இனிமேலும் உன்னுடைய சிலம்பம்சாயுமா தம்பியென்று சிலமொழிமொழிந்து கைப்பிடித்தவில்லை நாவிதளத்திலைவைத்துவிட்டுத் தேருக்குள்ளுறைந்த போருக்குச்சிறந்த வீரக்கதைகொண்டு காதுநெறித்து வாலைமுறுக்கி தண்டடித் தெகிறும் தனிப்புலிபோலெழும்பி துச்சாதனுக்கு எதிரிற்குதித்து மண்டலமிட்டு இருவரும் எதிர்த்து இடதுகால்முன்னும் வலதுகால்பின்னும் வலதுகால்முன்னும் இடதுகால்பின்னுமாக வைத்து இடதுபக்கம் வலதுபக்கம் முனைகட்டிக்காட்டிமுனைந்து இருந்து பதுங்கி ஒதுங்கி ஒளித்து கூமாட்டி தலைநீட்டி கதையுடன் கதைபூட்டி மிருந்ததாட்டியான புஜங்களைத்தட்டி மீசைமுறுக்கி புருவநெரித்து புயல்போலிரைந்து ஒருவர்தோளில் ஒருவர் அடித்து ஒருவரை ஒருவர் இறுகப்பிடித்து அண்டம் அதிரச் சிரித்துக்கனைத்து பிண்டங்கலங்கப் பிரித்துப்பகைத்து கெதையைக் கெட்டியாய்ப்பிடித்து மடித்து அக்கினிப்பொறிபெற அடித்துத் துடித்து மண்டலாகிருதிகொண்டு வளைவுவட்டமாகச் சென்று மறுபடியும் கிட்டிநின்று ஒருவரடியை ஒருவர்மிதித்து ஒருவரை யொருவர் உதைத்து உதிரம்வடியச்சிதைத்து காயத்தைக் காயத்தால் மறைத்து தூரத்துலையில் ஓடிப்போய் நின்று இமைக்கோட்டுக்குமுன் எப்போதும்போல நெருங்கிக்கிட்டி தலையினால்முட்டி கதையினாற்குட்டி கோபம்வரப்புடைத்து கொதித்துக் கிடகிடத்து வதவிதமாக சித்திரங்களாகிய யுத்தம்புரிந்து பலவிதமாகவருத்தப்படுத்தி வெவ்வியவிஷம்போல வெகுளிகொண்டெதிர்ந்து கண்பொறிகதுவக் கரும்புகைபுகைத்து பலிசட்டியெடுத்து இரையும் பக்குவர்போல எக்களிப்புடன் கொக்கரித்து விசையுடன்ஓடி மேற்பாய்ந்துவாடி குதித்துமதித்து ஒப்புவமையில்லாமல் கிறுகிறெனச்சுழன்று கைமாறிக் கைமாறி விறுவிறெனக் கதையைச்சுழட்டிமேலெறிந்து ஒருகையாற்பிடித்து முகம்மலர்ந்து அகமகிழ்ந்து இளைப்பாறிநின்று போர்க்களவீரான் அறிந்து பின்னிடனைத்து முதிர்ந்தசபதங்களை நிச்சயமாகவும் பலவாறாகவும் உரைத்து வேடிக்கைபார்க்கும் தேவர்களும்வீராளாகிய பூபர்களும்கண்டு உயிர்விண்டு சித்தம்விண்டு திரமடங்கித்தியங்கி மயங்கிவாடும்படியாய் மலையுடன் மலைமலைந்துமல்யுத்தம் கற்பதுபோல் இடமாறிப்பகைத்துகொடுங்கதையெடுத்து புயங்களில் அப்பி மோத்தி கோடைகாலத்திடிபோல் குமுகுமுவென்று ஓசையுண்டாகும்படிமோதி அடாபிரக்கியாதி இனி யென்னசொல்லுகிறாய் சேகியென்று உரக்கக்கூவி உழன்றபோது மாதலம்பிளந்து பாதலமிறிந்து அஷ்டநாகமும் வயிறழன்று நெஞ்சிளிவிக்கி கஞ்சிவைக்கக்கி எஞ்சி இளைக்கும்படியாகவும் சக்கிரவாளகிரி பக்குபக்கென்று நெக்குவிடவும் திசையெட்டும் செவிடுபட்டுக்கெடவும் திக்குகஜங்கள் தியக்கம்படவும அண்டமூகடு விண்டு அண்டமும நவகண்டமும் நடுங்கவும் சப்த மேகங்களும் பறந்தோடிச்சென்று பாரியதுகைபுகுந் தொளியவும பகைபாராட்டி இருவரும் கொதித்து செம்பைக்காய்ச்சி உருக்கியதுபோலும் செம்முருக்கை மலர்போலும் செம்பவளம் போலும் செம்பருத்திப் பூப்போலும் செங்காந்தள் போலும் செம்பாறைபோலும் தீப்பறக்கும்படியாய் இருவர் கண்களுஞ்செவந்து இப்பிழுத்துப்போல் நெற்றியில் பொடிவியர்வு வந்தரும்பவும் இருமாந்து ஆகாயம் நடுவெச்சியி லிடிக்கும் இடியைப்போல் அதிர்த்து எதிர்த்துப்பேசி பொறிபறந்து முரிமுரிந்து கரிகரிந்து பொரிபொரிந்து பருவச்சிலைவளைய அழகாகிய புயமலைஉளைய நமடுகடித்து இதழ் அதுக்கிக்கருவி உதடுமடித்து இமயம்-மந்தரம் - இருமலைபோன்ற இவர்களுடைய புயங்களைக்கொண் டிடித்து மெலியக்கொட்டிய பஞ்சுபோல் நஞ்சுபோயும் அஞ்சாமல் எஞ்சாமல் இளைக்காமல் சளைக்காமல் அரும்போர்புரிந்து கதைகொண்டடித்து இடிக்கு கதாயுத்த சாஸ்திரப்படிக்கு எதிர்மலைந்து பலமிகுந்து கலமதிர்ந்து வலமும்வந்து யுத்தம் உச்சரித்து மற்பரித்துமேலுமேலும் நெஞ்சுரம் அதிர வஞ்சினமுகிர தேகத்திலும் சமுத்திலும் மார்பிலும் தோளிலும் தாளிலும் அங்கங்களெங்கிலும் பங்கமாம்படியாய் மாமிசஞ்சிதைந்து உதிரம் ஓடி அகிரப்போராடியகாலையில்,இருவருடைய கதைகள்பிளந்துமுறிந்து தறிந்து பொடிந்து தூசியாயப் போறவளைக்கும்ஜாடி இருவர்காங்களும் கண்ணிப்போய்க் கருகிச்சிவந்து ரொத்தப்பசையால் நெட்டிடநின்று மூண்டெரியும் முதிர்ந்தகோபத்தால் முறிந்தகதைகளை தரையிலெறிந்து பிராணபரியந்தமும் விடுவதில்லையென்று காளங் கொண்டு திரண்ட புயத்தால் முரண்டுபற்றி வெறுங்கைஅறைந்து விரல்களைமுடக்கி குத்துச்சண்டையாகிய முஷ்டியுத்தஞ்செய்தார்கள்.

வீமன் துச்சாதனன் இருவரும் கங்குலைத்து காலடிபிசகாமல் நாட்டி விரல்கள் ஐந்தையும்முடக்கி நெருக்கிக் குவித்துக் குத்தியபோது, வெண்மையாய்ப் பிரகாசிக்கும் நகங்கள் இருவர்தேகத்திலும் புதையும்படியாகவும் அகங்கையுடன் அகங்கை அறைந்தபோது மலைச்சிகரத்தில் உறைந்த கறுத்தமேகம் நெருங்கி விலங்க பொறுத்த பூமிபிளந்து கலங்கபேரிடி இடிக்குந்தன்மையா யிடித்து காலுடன்கால் கணுவுடன் கணு முழந்தாளுடன்முழந்தாள் தொடையுடன் தொடை இடையுடன் இடை கரத்துடன் கரம் சிரத்துடன் சிரம் மார்புடன் மார் தோளுடன் தோள் இவ்விதமாக முட்டி மாட்டி மடமடவென்று இழுத்துக்காட்டி புஸ்திமுதலிய பிடிகளும்போட்டு டிங்கடித்து டங்கெடுத்து எலும்பு நரம்பு முதலியயாவுங் கலகலத்துப் போம்படியாய்மல்யுத்தஞ்செய்துவந்தார்கள்.

அந்தவேளையில், தருமராஜனுக்குச் சகோதரமாகிய வீமசேனன் அடித்த அடிகளினாலும் உதைத்த உதைகளினாலும் பூர்வ வினைவசத்தினாலும் துரியோதனனுடைய

தம்பி துச்சாதனன் அழன்று அலன்றுஅயர்ந்து பயந்து மயங்கி அவதிகொண்டு நின்றுவிடுங் காலம் அறிந்து அவனைக் கொன்றுவிடும் படியாயிருந்த வீமசேனன் அந்த துச்சாதனனைக் கைப்பிடியாகபிடித்து இரண்டுகாலையும் திரண்ட இரண்டுமலைபோன்ற இரண்டு கையையும் சேர்த்துப்பிடித்து பன்றிக்குட்டிபோல வாரித் தூக்கிக் கொண்டு சூரியகுமாரனாகிய கர்னனையும் பாம்புக்கொடி யோங்கிய துரியோதனன் தன்னையும் அவனுக்குரியதோழனையும் அவன் தம்பிமார்களையும் விற்குருவாகிய துரோணனையும் அவருடைய பிள்ளையென்னும்அஸ்வத்தாமனையும் காவிடமனத்தாகிய பட்டவர்த்தனர்களையும் மகுடவர்த்தனர்களையும் போர்மிகுந்த யுத்தகளம் வாய்பேசாமல் அடங்கிப் போம்படியாய்க் கூவுகின்றவாது சூதின் வலுமைபெற்ற சகுனியையும் இன்னமுள்ள வெற்றிவீரர்களையும் கொற்றப்புயம்படைத்த கொற்றவர் களையும் உற்றுற்று உறுகப்பார்த்து அவர்களுக்கு அருகாமையிற் சென்று இதோ பார்த்தீர்களா இளவரசாகிய துஸ்வாசனனையென்று தூக்கிக் கையால் ஒரு அறைதாக்கி அவர்களுக்கெதிரில் நீட்டி குண்டுக்கட்டாகக்கட்டி மாட்டி அவர்களுடைய காதுகேட்கும்படியாய் கிட்டநெருங்கி ஆகாயம் குலுங்கியதைப்போற் சுருக்கி இரைந்து அதட்டி ஆங்காரங்கொண்டு ஓங்காரமிட்டு இயாவரும்வெருண்டு திரண்டு புரண்டு அருண்டு போம்படியாய் வெற்றிமுற்றும் வீரப்பிரதாப வார்த்தையைப் பேசினான் வீமசேனனானவன்.

ஓ, சுத்தவீராதி வீரர்களே, நானென்றுசொல்லுகிறேன் இந்தத் துச்சாதனனை இப்போது கொல்லுகிறேன்,எமலோகத்துக்கு அனுப்பிவைக்கப்போகிறேன், இவனுக்கு நேரிட்டிருக்கிற இடயூறைநீக்கி என் அடலையும் போக்கி நடலையாகப்போர்செய்து உலகமதிக்கக் காக்கும் வல்லமைகற்றிருப்பவர்கள் உண்டானால் வெளிப்படுங்கள் இதுநல்லசமயம் இதைவிட வேறுபுகழில்லை இந்தக்கால நகப்பினால் துச்சாதனனைக் காணமாட்டீர்கள் வெற்றிமாலைபூணமாட்டீர்கள்விருதாக்காலத்தில் வீண்பேச்சுப்பேசுவதினால் லாபமென்ன சமயம்வந்தபோதல்லவோ சமர்த்தைக் காண்பிக்கவேணும் நான் உங்களைப்போல் வஞ்சகமுள்ளவனாய் நெஞ்சிலொன்றுவாக்கிலொன்றாகப்பேசவில்லை ரகசியமாக குசு குசுவென்றுபேசி மோசஞ்செய்யவாவில்லை எல்லோருக்குங் கண்ணுக்கெதிரில்தெரியும்படியாய்க்காட்டி உங்களுடைய செவிகளும் புதையும்படியாய் உரக்கக்கூவிச்சொன்னேன் ஒருவேளை நான்பார்க்கவில்லை நீ-பார்க்கவில்லை பார்த்தா லல்லவோ வீமனைப் பாழாக்கி துச்சாதனனை மீட்டுக் கொள்ளுவோமென்று ஒப்பற்ற துப்பில்லாப்·பேச்சுப் பேசப்போகிறீர்கள், இதோ நால்வருக்குந்தெரிய நன்றாய்க் காட்டுகிறேன் என்று அநேகங் கோபவார்த்தைகள்கூறி, எட்டுத் திக்கிலுங் கூறி, அவரவர்களுக்கு எதிரில்க்கொண்டுபோய்ப்போட்டு காலாலுங் கையாலும் உதைத்து அறைந்து வாருங்கள் வாருங்கள் பாருங்கள் பாருங்கள் காருங்கள் காருங்களென்று வாயுபுத்திரனாகிய வீமன் அநேகம் யானைகளுக்கெதிரில் ஒருசிங்கம் கெற்பித்துவரும் தன்மைபோல் களமுழுதுஞ்சுழன்று சுழற்றிவந்தான், அந்தவேளையில்அங்கதேசாதிபனும் அதிரதத்தலைவர்களாகியவிக்கிரம பராக்கிரமமுடைய வேந்தாதி வீரரும் துரியோதனனும்கண்டு நெஞ்சழிந்து தாராளமாய் கண்களிற் ஜலம்பெருக நின்று வாயிலும் வயிற்றிலும் அறைந்துக் கொண்டு எதிர் வந்து போராடி இசைபெறமாட்டாமல் அசைவற நின்று விட்டார்கள்.

அப்போது வீமசேனன் அவர்களைநோக்கி என்னென்ன சொல்லுகிறீர்கள், இந்தப் பசிதனைமீட்டுவிட உங்களுக்குப் பலமில்லையா, இவன் பிழைக்கும்விதியில்லையா, அதனாலொரு நலமில்லையா, மானமில்லையா, பழியாகிய ஈனமில்லையா, பாஷமில்லையா, உடலில் ரோஷமில்லையா,இந்தக்கேட்டுக்கு வாயொருகேடா, பந்தபாசமில்லாதபேய்களே, ஆளில்லா இடத்தில்ப் பிதற்றுகிற அண்ணா, துச்சாதனன் அன்யாயமாய்ப்போருனே கர்னா, என்று சொல்லி துஸ்வாசனைப்பார்த்து,அடா துரோகி உனக்குத்துணைவருவார் ஒருவருமில்லையே பாவியென்று பல்லைக்கடித்தான், காலைச்சேர்த்துக் கொல்லப் பிடித்தான், வாயுகுமாரனான வீமசேனன் துரியோதன மகாராஜனுடைய சிரேஷ்டத்தம்பியாகிய துச்சாதனனை இடதுகையில்த்தாங்கி வலதுகையையோங்கி குபீலென்று அக்கினி எழும்படிக்கு அவன்தலைமேல ஒருகுத்துவைத்தான் அந்தச்செங்குத்தான தூயப்பாத்திரத்தில் இரும்புக்குண்டு விழுந்தாற்போல் சப்பென்று இருந்தியது அந்தக்குத்தினால் இரண்டு தவடையும்நெரிந்து நெருங்கி ஆமைத் தலைபோல் உள்ளடங்கியது இரண்டுகாதும் உள்ளே புகுந்து என்னசேதியென்று கேட்டது வீரியமூளைசிதைந்ததுமார்புடைந்தது பல்லெல்லாம் கல்லெனத்தெறித்தது சல்லெனவியர்த்து சில்லென்றிருந்தது வாய்வறண்டு வார்த்தையுந்தளர்ந்து அழகுங்குலைந்து செவ்வரக்கினும் தீக்கனலினும் சிறந்து சிவந்துபரந்து நிறைந்த பருத்தகண்களானது வாழைப்பூப்போல் பிதுங்கியது இருகரத்திலும் அணைத்துப்பிசைந்து கசக்கியபோது நவத்துவாரங்களும் திறந்து மூகத்துவாரம்போல் மலமூத்தி ராதிகளும் உதிரங்களும் நிணக்கொழுப்புமுதலாகிய சீதங்களும் சபமுதலிய வளும்புகளும் கசிந்தோடியது இதன்றியும், அந்தத் துச்சாதனனை பூமியின்மேற்போட்டு மேலேறிக்கொண்டு இரண்டுகாலினாலும் துவைத்து மிதித்தான் கால்விரல்கள் கைவிரல்களைப் பிடித்துநெரித்தான் நரம்புகளின் விசைபார்த்து எடுத்து இழுத்துத்தெறித்து பொம்மைக் கூத்தைப்போல் உடலெல்லாம்அசைய ஆட்டினான் எல்லோருக்குங்காட்டினான், எலும்புகள்முறிய எறிந்து எற்றினான் எலும்புவேறு மாமிசம்வேறாகக்குத்தினான் உதறிஉதறி எடுத்தான் விந்தைவிந்தையாய் வேடிக்கை வேடிக்கையாய் புரட்டிப்புரட்டி உதைத்தான் அடித்தான் இழுத்தான் காலால்எறிந்தான் வீணை இசைநரம்புகளைப்போல் வீணை விசைநரம்புகளை முறுக்கி அறுத்தான் குதிகால் நரம்பையும் பிடரிநரம்பையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நன னன நன னனவென்று கின்னரிகொட்டினான்,ம

டங்கல் மமதையடைந்திருந்த தடம்புயமலைகளில் பலமலைகளுடன் மோதுவதுபோல் உரமேறிய தலைவிரிய கழுத்தானது அடங்கிந்தாழ வாயும்தாளும் இருத்திக்கொண்டு போம்படியாய்த்தாக்கி மூக்கினுள்நரம்புகளைப்போக்கி நேர்த்தானை நரம்புமுதலிய நரம்புகளை விக்கி இறுக்கி முறுக்கிப்பிழிந்து முன்பக்க முகமிருப்பவனைப்போல் இவன் பின்பக்கம் முகமுடையவன் பின்புத்திகாறன் பாருங்களென்று இருவிரலால் தலையைப்பிடித்து குயவன் திகிரிபோல் முதுகின்புறத்தில் திருப்பி அழகுறவைத்து தலைநிறைந்த மயிரையும் வலிமிகுந்த கையையும்சேர்த்து இறுகப்பிடித்துத் தூக்கி நீளநரம்பைக் கையில்ப் பிடித்துக்கொண்டு அச்சாணியுடைய தேரின்பேரில் இந்த துச்சாதனனை விட்டெறிவான், அப்போது சேனைகளெல்லாம் ஒருபுரள்புரண்டு பெருமருள்மருண்டு உகாந்தஓசைபோல் சாக்கூச்சல் இடுவார்கள், மறுபடியும் கைமேல் இருக்கும்படியாய் பிடித்த நரம்பை இழுத்துக் கொள்ளுவான்.

அதெப்படியென்றால், (அல்லாச்சாமி பண்டிகையில் ஒரு பெரியமூங்கிலை கயிறுகட்டி கும்பலில்தள்ளி யாவரும் பயப்படச்செய்து தன்கையிற் பிடித்திருக்குங் கயிற்றுட னிழுத்துக்கொள்பவனைப்போல் செய்தான்,) மேலும் அந்ததேகத்தை பூமிமேற்போட்டு தும்பு தும்பாகும்படிக்கு இரண்டுகாலையுஞ் சேர்த்துத்துவைத்து மிதிப்பான் கோபத்துடன்சீறி, ஆ ஆ,வென்று இரைந்துகூறிதொடையைப்பிடித்து இழுப்பான் தூக்கித் தலைகீழாய்ப் பிடிப்பான், இன்னம் இப்படி பற்பலவிளையாட்டெல்லாம் புரிந்து, (இரணியனுடைய பிராணனை வாங்கிய உக்கிரநரசிங்கத்தைப் போல்,) மண்டி யிட்டுக் கடித்து உக்கிர ஆவேசமேற்கொண்டுபுஜபலமேற்கொண்டு புவனபுவனங்குலுங்கச் சிங்கநாதம்பூரித்து ஆர்ப்பரித்து அந்தத்துச்சாதனனைப்புரட்டி முன்னே போட்டுக்கொண்டு நெட்டிட்டுத்தங்கச்சட்டிட்டு செந்தூரப்பொட்டிட்டு உறையாகிய பட்டிட்டு சாணைபிடித்த சொட்டைபோன்றிருக்கும் தன்கைநகத்தினால் அவனுடைய அங்கத்தைச் சிங்கத்தைப்போல் பங்கப்படுத்தி சிங்காரமார்பில் உருவும்படியாய்எற்றிக்கிளைந்து 'மாங்காய்க்கீற்றைப்போலும்பிளந்து) நீண்டவட்டமாய்ப்பிதுங்கிவந்தகுடல் தொங்கவும் வயிறுகிழிந்து தொங்கவும் உதிரம்பொங்கவும் அவனைத் தூக்கிதன்தோளின் பேரிற் போட்டுக் கொண்டுவஸ்திர முதலியமேனியெல்லாம் உதிரஞ்சொரியவும் வாழ்முனி போன்று நின்றவீமசேனனைப்பார்க்கு மிடத்தில், பகீரதன்கொண்டுவந்த கடவுட்டீர்த்தத்தில்மூழ்கியெழுந்த அசைவற்ற இதயமும் காவிகாம்பரமுமுடையமேலோர்களின்தன்மையைப்போன்றிருந்தான், துரியோதனமகாராஜனுக்கிளைய துஸ்வாசனைதர்மராஜருக்கிளைய விக்கிரமவீமசேனன்பிளந்து சுவர்க்கலோகத்துக்கு அனுப்பினான்.

அதைக்கண்ட வீராதிவீரப் பெருஞ்சேனைகளெல்லாம் கர்ணன்முதலாகிய காவலர்கள் தடுத்தும் அவர்களால்த்தடைபடாமல் நெடுங்கடல் உடைபட்டு மடைவிட்டோடுந் தன்மைபோல் புறமிட் டோடினார்கள், வண்டாரவாரம்நீங்காததுளவத்தண்டாரமணிந்த சாரதியுங்காண்டீபக்கரத்தோனாகிய தனஞ்செயனும்பார்த்தார்கள், இன்னமுள்ளகாவலருங்கண் மலர்ந்துகைகலந்தார்கள், வெண்மையாகியநக்ஷத்திரங்கள்பரவிய ஆகாயத்தையொத்திருந்தது யுத்தபூமிஎங்குந்தன்மயமாயிருந்தவீமன் துச்சாதனனுடைய பிரேதத்தைத்தூக்கிக்கொண்டு அவரவர்களுக்குக்காட்டிபாஞ்சாலராஜன்வளர்த்தசெந்தீயில் அவதரித்த பாக்கியவதியாகியதிரௌபதையினுடைய அளகத்தையும் வஸ்திரத்தையும்தொட்டிழுத்ததோளும்கையும்விரல்களும் இதுவல்லவாவென்று பாகம்பெற்றபத்துவிரல்களையும் கொத்தித்தறித்துஎங்களைத்தூஷணித்த வாயல்லவா வென்று வாய்மேலறைந்து இடித்தும் நெரித்தும் அவனுடலைப் பிளந்தும் அவன் தலையைத் திருப்பியும் இன்னம் கோபம் ஒழியாமல் கோவென்று இரைந்து எழுந்தும் ஆவென்று வாயைத்திறந்தும் தான்சொல்லிய சபதப்படிக்கு துச்சாதனனுடையதேகத்தில் ஓடிவருகின்ற செந்நீரைக் கையேந்தி யாவருந் துன்னென்று கண்ணீர் விட்டழும்படியாய்த் தண்ணீர்விடாய் தீரச் சாப்பிடப் போறசமயத்தில் கறுத்தகாளமேகம்போன்ற கண்ணனானவன் வெகுபக்குவமாய் வீமனிடத்துக்குப்போய் அவன் உதிரத்தைக்குடிக்க ஒட்டாமல்நிறுத்தினார் ஆனால்யோசிக்குமிடத்தில் எல்லாவல்லமையுமுடைய ஈசனென்பதினால் அந்தவீமனிடத்தில்போய்சமாதானமாய்ப்பேசிமீண்டுவந்தார் இவரல்லது இன்னொருவரானால் மாண்டுவருவாரென்பதற்குமடங்குதலிராதே, ஆனால் ரத்தத்தைக்குடிக்கப்படாதென்று இவர்சொல்ல நான்சபையிற்கூறியசபதம் எப்படிப்போகிறதென்று அவன்கேட்க அந்தரத்தத்தை வாயில்விட்டுகொப்பளித்து அவன்மேல்த்தானே துப்பென்றுசொல்ல அச்சச்சொல்லை ஒப்பென்றுட்கொண்டு குடிக்காமல் கொப்பளித்து உமிழ்ந்து என்னெண்ணமுடிந்ததென்று அவ்விடத்திலிருந்த அரசர்களுக்கெல்லாம் நடுக்கமுண்டாகும்படி தன்கொடியிற்பொருந்தியசிங்கம்போல்க் கூத்தாடிநின்று ஆர்த்து ருத்திராமிசங்கொண்டு குவலயமெல்லாம் இன்று கொன்றுவிடுகிறேனென்று கொதித்திருந்தான், துன்பம்விளைக்குந் துற்குணத்தையும் துன்னீதியையுமுடைய துச்சாதனன் முனைந்து யுத்தம் பண்ணி தன்தம்பிமார் பத்துப்பேர்களுடன் தானும் உயிரிழந்து போனதைக்கண்டு இன்பமுற்றிருக்கும் வீமசேனனுக்கு எதிரில்வந்து யுத்தஞ்செய்யுந் திறத்தை யுடையவர்கள் ஒருவரும் இல்லாதிருக்கும் வலுமையைக்கண்டு கர்ணனுக்குத் தேர்விடுஞ்சாரதியாகிய சல்லியனானவன் சொல்லுகிறான்.

ஓ-கர்ணனே, தாளாண்மைபெற்ற ஒப்பற்றவீமசேனன். இவனைமீட்டுக்கொள்ளுங்களென்றுநேரில்க்காட்டிச்சொல்லியும் அவனுக்குநேரிற்சென்றுவெற்றிகொண்டுதுச்சாதனனை மீட்பதற்கு சாமர்த்தியமில்லாமல் வெறுங்கை வீணனைப்போல் ஒதுங்கி நின்றாய், உன்னுடைய ஆண்மையையும் வீரத்திறமேன்மையையும் இதுவரையிலுங் கண்டறிந்தது போதாமல் இவ்விடத்தில் இப்போதும் நான் கண்டுகொண்டேன், இந்தவீமனை வெல்லமாட்டாதநீ இங்

திரகுமாரனுகிய தோளான்மை வலிமையைக் கொண்ட அர்ச்சுனனை எப்படிஜெயிக்கப்போறாய் தோர்ப்பினையுடைய வனையிந்த பாம்புக்கொடிபடைத்த துரியோதனனுகியப ரித்தியக்காறன் பெரியோராகிய மூத்தோர் மொழிந்த எதார்த்தமொழிகளை உள்ளத்திற்கொண்டு செவ்வைப் படாமல் உன்னைநம்பி உன்புயுத்தைப்புகழ்ந்து உன் வல்லமையைவியந்து தம்பிள்ளை குட்டியுடன் தன்பிராணனையும் போக்கடித்துக்கொண்டான், இனிக்காரியமில்லை இனிமேலும் படைகொண்டு நெருங்கி யுத்தஞ்செய்ய எத்தனிப்பது என்னபிரயோசனம் எல்லாருமுடிந்தார்கள், கன்னனுகியதம்பியும் போய்விட்டான்-இனியென்ன யுத்தம் இனியென்ன வெற்றிஇனிமேல் சண்டை செய்து வெற்றிபெறுவதைப் பார்க்கிலும் தங்கள் தங்கள்கையி லிருக்கும் வாளாயுதத்தினுல் தாங்களே கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்து போகிறது எல்லாத்தையிட மெத்தவும் மேலாகிய நல்லது அதனுல் ஒருநாட்சியுமில்லை கீர்த்தியும் ஆட்சியாயிருக்கும் மாட்சிமைபெற்றவனே, காற்றின் மகனுகிய வீமசேனன் துச்சாதனனைப்பிடித்துக்கொண்டு அதிரதாளாகிய தோராசருக்கெதிரில்வந்து அவரவர்கள்பேரைச்சொல்லி அழைத்து இதோஇவனைக்கொல்லப் போகிறேன் உங்களுக்குவல்லபமிருந்தால்வாருங்கள் காருங்களென்றுவனுவில்வத்துகாரிடிபோலிரைந்து அவன் அழைத்தும் இரண்டதோளும் வீரகண்டைத்தாளுமுடைய அரசவீரரெல்லோரும் அவனுக்கெதிர் புகுந்து போர்கொடுக்கமாட்டாமல் போற்றிபோற்றியென்று வணங்கி அஞ்சி கெஞ்சி ஒதுங்கிப்போனுர்கள் என்று இவ்வுலகத்தார் நிந்திக்கும்படிபரவிய மொழியானது போதாதோ,இன்னம் வீரம்வேணுமோ,மானுஷியம்வேணுமோ, கேயூரமணி குண்டலம்பூட்டிக்கொண்டு வெட்கமில்லாமல் வெளிப்புறப்படலாமோ-இன்னம் உயிர்வைத்திருக்கலாமோ சொல்லும் கர்னனே நமது சேனைமேலிட்டுச்சூழ்ந்திருக்கபாண்டவச்சேனைகள் பதறிச்சிதறி நிற்க கைக்காறராகிய நீங்களெல்லோருங் கருங்கற்சுவர்போல் காத்திருக்க அன்யாயமாய் மயக்கத் தலைக்கேறினவர்களைப்போற் சென்றுகல்டுமீண்டு மீட்டுவராமல் மாண்டுபோனுனே-ஆ, ஆண்டவனே என்று சலித்து தாற்றுக்கோல்கொண்டு சக்கரங்கலையுடைய தேரைச்செலுத்தினன், இந்தப்படி அந்தச் சல்லியனுரைத்த சொல்லைக்கேட்டகர்னன் வதிலுத்தரஞ் சொல்லத்தொடங்கினன்.

ஓ, சல்லியராஜனேகேளும், கெஷஸ்தலாதிபதியாகியதுரியோதனமகாராஜனையொத்த தம்பி இளவரசாகிய இறைவன் துச்சாதனராஜன் வீமன்கையில் மாய்ந்ததிலேயைக்கண்டு ஒன்றுந்தோன்றுமல் மனத்தளர்வடைந்துஇருந்தேனேயல்லது வீமனுக்குப்பயந்துஇருந்தவனல்லஅன்பின்னுடைய மத்திரர்கோவே, பாம்புபடமெடுத்தாடினுல் அதற்குநேர்செல்ல கருடன்பயப்படுமோ-யானை மதங்கொண்டெழுந்தால் அதைக்கண்டு சிங்கம்பயந்து தியங்குமோ-என்று கர்னன்சொல்லியது மத்திரத்தானுக்கு திர்ப்தியில்லாவிட்டாலும் ஒருவிதமாய் மனம்பொறுத்து மலையற்று மயிர்க்காலிற்றெக்குறபோது நாமேன் வயிற்றெரிச்சலை விளக்கவேணுமென்று சும்மாயிருந்து விட்டான்.

இப்பால், யுத்தமுனைவிட்டுப்புறங்காட்டி ஓடியமன்னர்களையும் இராஜாதி ராஜனையுங்கூட்டி பேரணியாகக் காட்டி பொற்கொடியாடிய பொன்னெடு மலைபோன்ற தேரேறி பாரியவில்லைப்பிடித்து காயுங்கனல்போற்கனிந்துஉலந்துகன்னன்மன்னன் முன்னர்வந்துநின்றுன், அந்தக்கர்னனைக்கண்டவுடனே பாண்டவச்சேனுபதியாகிய துருஷ்டத் துய்மனும் நக்ஷத்திரங்கள்போல் நிறைந்திருக்கின்ற போர்வேந்தரும் தன்னையொத்த சமானனும் சிகண்டி முதலிய தம்பிமார்களும் நாற்படையும் சூழ்ந்துவர மாவில முதலிய மேளிலகடுக்க வாத்தியமுழங்க எதிர்நோக்கி நடந்தான் வீமன்.

அப்போது பாண்டவர்களுடைய சேனைப் படைஞர்கள் பூரணச் சந்திரோதயங்கண்ட சமுத்திரம்போல்பொங்காரங்கொண்டு பூரித்து மகிழ்வாகிய அலைகொழித்து ஆர்ப்பரித்து காண்டாவனத்தை எரித்த கனல்போற் செருக்கி மிகவுந்தருக்கி காமாந்தகனைப்போல் நின்ருர்கள்.

இந்தன்மையாகிய பாண்டவச்சேனைகள் மூண்ட நிலையைக் கர்னன்கண்டு முதுகிட்டோடுந் தன் சேனைகளுடனேதிரும்பி யுத்தஞ்செய்யவிரும்பி எதிரேறியவீமனை வளைந்தான்; இப்படியாகவளைந்த கர்னனை வாயுகுமாரனுகிய வீமசேனன்கண்டு மன்னர்களுடைய பொன்னுருள்களையுடைய தேர்கள் உடைய தன்னுடைய தேரைச் செலுத்திக்கொண்டுவந்து வில்வளைத்து நாணொலிதெறித்து நாகர்கோன்கணை-நான்முகன்கணை-நாரணன்கணைமுதலிய நானுவிதபாணங்களைத்தொடுத்தான், அந்தப் பாணங்களால் கொடையாளியாகிய கர்னன் குலைகுலைந்து கொடுந்துயர் அடைந்து புறந்திரும்பி முகமாறி மறுபடியும் வேறு தேரேறி சிம்ம ஏறுபோற்சீறி வீரவசனங்களைக் கூறி மனந்தேறிவந்து கர்னனும் வீமனும் கலந்துகொடும்போர்செய்வதற்கு கோபித்தெழுந்தபோது அஸ்வத்தாமனும் சஞ்சத்தகருஞ்சேர்ந்து வீமனைவளைத்து அமர்விளைத்தார்கள் கற்பகக்காவுக்குமன்னனுகிய இந்திரனுடனே காண்டாவனப்போராடிய காளையென்னும் அருச்சுனனும் காவலர்களும்-எமத்தேராளிகளும்-சேமத்தேராளிகளும்-எதிரெதிர்போய் வளைத்துப் போராடினுர்கள், பொன்மயமாகிய முரசவாத்தியங்களுடன் பேரிமுதலிய வாத்தியங்கள் முழங்குகிற பேரோசையாலும் வில்லினுடைய நாணோசையாலும் தேர்களினுடைய கர்க்கரத் தொனியினுலும் கையிலிருந்து விடும்படியாகிய முஷ்க்கரத்தொனியினுலும் அநேகம்பேர்பெற்ற அதிவேக அஸ்திரமுழங்கும் ஆர்ப்பரிப்பாலும் ஆகாயவாசிகளாகிய தேவர்கள் அருண்டு வெருண்டு செவிடுபட்டார்கள், படைவீராள்முதலியபேர்கள் ஆயுதப்பிரகாசங்களினுலும் வீராவேசங்களினுலும் தங்கள்தேகத்தைத் தாங்களேமறந்து மனங்கல்லாய்ச்செறிந்து விழித்தகண் விழித்த படியே வெறியேறி விட்டார்கள்.

இதிப்படியிருக்க இவ்வுலகத்தில் எவ்வுயிர்களும் நித்திரைசெய்யாநின்றஇராத்திரியைநீக்கிவாழ்நாளாகியபகற்காலத்தை அளந்துவரும் சூரியனுக்குப் பேரனும் கர்

னனுக்குக்குமாரனுமாகிய விடசேனன் நவமணி அலங்கிர்தமுடைய ரதமேறிநகுலராஜனை வளைத்து மானையனிந்தமாதேவன் மழுப்போன்ற வயவாளிகளை தழற்பொறிபோல்தாக்கும்படியாய்த்தெறித்தான்.

அப்போது, சுவேதவாம்பரிபூட்டிய தேரேறிய அருச்சுனனுக்கு நேரிளையவனுகிய நகுலராஜன் செந்தாமரைமலருக்கொப்பாகிய அகங்கையினல் வில்லைவளைத்து நாணிபூட்டி சிறுநாணேசைகாட்டி கம்பகும்பக் களிற்றுனையையுடைய கன்னன்குமாரன்தொட்ட கூரம்புகளை யெல்லாம் தான்விட்டபாணங்களினல் அறுத்தறுத்து தரையில்வீழ்த்தினன்.

அந்தவேளையில், தேவேந்திரனுக்குக் கவசகுண்டலங்கொடுத்த மாவேந்தனுகிய கர்னகுமாரன்கடுவிடக் கொடுங்கணைகளை செரித்துநெருங்கிய நெருப்பெழவிழித்து நகுலராஜனேறியதேர்ச் சக்கரங்களை அழித்தான், உடனே நகுலராஜன் வேறொருதேரேறி வீரசாயசங்களை விட்டுக் கச்சைக்கொடியோனுடைய காதலன் லச்சைப்படும்படியாய் அவன் கைப்பிடித்த வில்லையும்வெற்றிக் கொடியையும் வெட்டினன், இந்தநகுலராஜனுடைய ஆண்மிக்கைக்குஆரொதிராவார்கள், மறுபடியும் அந்த விடசேனனுனவன்மகமேருபோன்றவில்லெடுத்துநாணிதொடுத்துநாராசுக்கணைகளைவிடுத்துநகுலராஜன் முடிசாய்ந்து விழும்படியாய்அடித்தான், அந்தக்கணைகள் செந்தழற்கணையெனக்கொர்நாகவந்து நகுலனுடைய மார்பிற்பாய்ந்தவுடனே தேர்மேல்ச்சாய்ந்துவிழ்ந்தான், விழ்ந்தநகுலனை மூண்டெரியுங்கோபக்கண்களையுடைய வீமசேனன்கண்டு சமீபத்தில்வந்தான்.

அந்தவேளையில்,நகுலனும்விடசேனனுஞ்செய்தபோர்த்திறத்தைக்காண்டாவனத்தை நீறுபடுத்திய அருச்சுனன்கண்டு மிகுகோபங் கொண்டு சந்திரனைத் தறியாய்க்காட்டிமந்திரகிரியை மத்தாகநாட்டி வாசுகியைக் கயிறுகப்பூட்டிசுராசுரரும் இடம் வலமாகஆட்டிக் கடைந்தெடுத்த அமுதத்தைதேவர்களுக்கு அளித்தருளிய திருமாலானவர்சாரதியாகயிருந்து செலுத்தாநின்றதேர்மேற் சென்றுமலைபோன்ற புயங்கூசாமல் மின்னற்கணையாகிய தூண்டிலிட்டு விடசேனனென்னும் மீனைப்பிடிப்பதற்குவந்த மீன்படுப்போனைப்போல்கன்னற்கணைகளைவலைபோலும் வீசினன், அதைக்கண்டவிடசேனன் கலினென நகைத்து உன்தம்பிஎன்னுற்பட்டதளர்ச்சியை நீவரும்வழியிற்பார்க்கயில்லையாஆனல், உன் தம்பிபட்டபாடுநீயும் படும்படியாய்த்தெரிவிக்கிறேன் இதோ அரிக்கணை விடுக்கிறேன் நீ பாருபோராடுஎன்றுவில்லைவளைத்து லேசாகநெருங்கி வந்த பார்த்தனையும் காசாம்புமேனிப் பாகனையும் அம்புக்கும்பேனல்மூழ்கவைத்துகாசரனுதிகள்ஆடவொட்டாமலுஞ் செய்தான் அவனுக் கொப்பானவர்யாவருமில்லை யென்று அமரர் புகழ்ந்தார்கள், பாண்டு குலமைந்தனுகிய பார்த்தனுனவன் கருமேகமானதுபேரிடியிடித்துப் பொழியுங்சனைப்போல்சரமாரி பொழிந்துபோர்த்தபோது மலையாகியதேநம்குதிரையும் சிலையும் அழிந்து தேகத்தில்உதிரமவழிந்துதியங்காமல் மறுபடியும்விடசேனன் திறமாகியவேறுதேரேறிசிமேலேறியவண்ணச்சிலைதாங்கி வின்னுணிவாங்கி வச்சிரக்கணை ஓங்கி எரிபாந்து புகைசெறிந்து பொறியுதிர்ந்து புனல்வறண்டு புடைபெயர்ந்து புகழ்நிறைந்து புகைமலிந்து விருவிறென்றுவரும் பாழிமழைசிந்தினன், அடுத்து விடசேனன்விடுத்த அஸ்திரங்கள் கடுத்துவருகின்ற திடத்தைப் பகைவரைவென்ற காண்டீபன்கண்டு கண்கலக்கங்கொண்டு புற்றிலிருந்துபுறப்படும் கிருஷ்ண சர்ப்பம்போல் அக்கினி யாஸ்திரங்களை அநேகமாகச்செலுத்தி அந்தவிடசேனன் உந்திய சரமாரியைத்தடுத்து மத்தியில் முறியக்கெடுத்து, மேலும் - பிறைமுகமாகத் தேறிய மாறுகோல்களை நூறுநூறெடுத்துத்தொடுத்து விடசேனன் பிடித்திருந்தவில்லை நடுவில் ஒடித்து வின்னுணியை படலெனத்தறித்து விற்பிடித்தஜங்து விரல்களையுமறுத்து முதன்மை யாகிய வெற்றிமாலைபூண்ட விடசேனனுடைய முடிந்தலையையும் இடியிடித்து விழுந்ததைப்போல் ஒரு நொடிப்பொழுதில் பெருவடிக்கணையால் அறுத்துத் தள்ளினன்.

விடசேனன் வீழ்ந்தவுடனே வேந்தரெல்லாரும்நத்ததளித்து கொஞ்சமேனுந் தைரியமில்லாமல் வெஞ்சமரைவிட்டு எஞ்சிளைத்து பஞ்சையாய்ப் பஞ்சுபோற் பறந்து புறந்தந்தோடிப்போய் விடசேனன் தந்தையாகிய கர்னமகாராஜனுடைய தேர்க்காலைச்சூழ்ந்து நிபுங்கி அறுதார்கள்-சிலபேர்கள்-சிலவேந்தர்கள்-இளைக்காமல்-தைரியத்துடன் எதிர்நடந்து என்றைக்கிருந்தாலுமிறப்பேயொழிய இருப்பதில்லையென்று மனோ திடங்கொண்டு இந்த விடசேனன் சாவான் என்று நாம் ஆராகிலும்நினைத்தோமா ஆருக்காகிலுந் தெரியுமா அவன் அழியத் தக்கவன் தானு அப்பேர்ப்பட்ட அழகன் அழிந்தபோது நாமெல்லோரும் எம்மாத்திரமென்று அர்ச்சுனன்பேரில் எதிர்ந்து உலகம் அதிர்ந்து போம்படிக்கு அமர்புரிந்து அருச்சுனன்விடுத்த அந்தக்கணையால் அழிந்து அரம்பாஸ்திரிகளின் ஆகத்திற்கலந்து அமரர்புகழ மகிழ்ந்து அந்தரம்புகுந்தார்கள் இவ்விதமாக விஜயன்எறிந்த பிறைமுகக்கணை-தறையனற்கணை-அக்கினிக் கணை-இவைகள் விடசேனன்முதலாகிய வேந்தர்களும் இறந்துபோகும்படி முடித்தும் வேகம்அடங்காமல் வெங்கரிகள்கோடிநீடிய பொங்குபரிகோடி துங்காதங்கோடி தங்குபடைகோடி சதுரங்கப்படைகளும்வாடி மடியும்படியாய்ச் சாடியது அதுவுமல்லாமல் பார்த்தனுடைய பாணக்கனலாய் எரிபடுஞ்சரகைப்போல் போர்க்களமெங்கும் எரித்துக்கொண் டிருந்தது அந்தவேளையில் அர்ச்சுனன்கையினல் அடிபட்டிறந்தான் உன்மைந்தனை விடசேனன் என்று வேந்தர் முதலாகிய வீராள்சொல்ல கர்னன்கேட்டு கேட்டாததைபட்டு கண்விழிபிதுங்கிட்டு கண்ணிருண்டுவிட்டுகருத்தழிந்துவிட்டு, தலைகட்டு, ஆ ஆ, ஆவிசேர்மேவிய, குமரனே என்றுகூவி, ஆவிபோனவன்பேரல் அயர்ந்த போது தேர்ச்சாரதியென்னும் ஆய்ந்த சல்லிய ராஜன் புல்லியெடுத்து புத்ரசோபம் தீரும்படிக்கு பற்பலவாக்கியங்களினல்த் தேற்றினன் அந்தவேளையில் அஸ்வத்தாமன் எந்தெந்த யிடங்களிலுந் திரிந்து நொந்துறும்படியாய் அ

மர்புரிந்து சிந்தைவருந்திய கொந்தலர்மாலையணிந்ததுரியோதன வேந்தனின்ற இடத்தை நோக்கிவந்தான் அந்த அஸ்வத்தாமனை நோக்கி எப்படியிருக்குது யுத்தமும்வெற்றியுமென்று நாகக்கொடியவன் கேட்க அஸ்வத்தாமன் சொல்லுகிறான் அரசர்க்கரசாகிய அரசே உத்தமக்ஷத்திரிய குலத்துக்கு உரித்தாகிய தப்பில்லாத யுத்தம் விளைத்தாய் தருமியாகியபலைகளும் பெற்றிருந்தாய் சகலயுத்திகளும்தெரிந்தாய் பலநல காரியங்களும் புரிந்தாய் பாரெல்லாம் கீர்த்திவிரித்தாய அப்படியிருந்தும் இப்போது தர்மராஜன் புகழ்பெறும்படியா யிருக்கிற இந்தக்குருக்ஷேத்திரத்தில்-வீஷ்மரும்-துரோணர்முதலாகிய வீராதிவீர தாஷ்டிகரும் பெரியோர்களும் உரியோர்களும் படைத்துணைவந்த விளைஞரும் பந்துகளாகிய கிளைஞரும் இன்னம் இதரமாகிய மன்னரும் மைந்தரும் தம்பிமார்களும் ஒப்பற்ற சதுரங்கப்படைகளும் போர் கொடுத்துப் புகழடித்துப் பிராணனைவிடுத்தார்கள்.

எல்லாம் போய்விட்டது ஐயா, பெரியோர்கள்சொல்லிய தருமவாக்கியங்களைக் கேட்டதில்லையா, இன்னம் நமக்கு நற்காலம் வரவில்லையா. இருப்பவர்கள் பிழைக்கும்படிக்கு ஒருவசனஞ்சொல்லையா, பூர்வாசாரியர் சொல்லிய நீதிவாக்கியம் தருமவாக்கியம் இவைகளை உட்கொள்ளையா, (சங்குமுழக்காமல் தாலிகட்டுதலும் கட்டுப்பாடில்லாத குடிமரபும் நன்செய் புன்செய்விளையாதநிலமும்-கிரியாக்கினியில்லாத பிராமணர்களின் மனைவாழ்க்கையும்-துவாரமில்லாத முத்தும்-நீர்வளத்துறைசேர்ந்த ஆற்றுக்கால்ப் பாய்ச்சலில்லாத வளநாடும்-கியான மில்லாத உள்ளமும் பந்துஜனமாகியகிளையில்லாத அரசியற்கையும் பெருமைஅடையுமென்று இதுவரையிலும் நீர்கேட்டதுண்டாமதிகுலபதியே,பிரயோசனமில்லையே,நமக்குண்டாயிருக்கதுதிக்கைமாவாகியயானைகள்பரிமாவாகிய குதிரைகள் தேர்கள்-சேனைகள்-குறுக்கமாச்சுது சம்பிரமமாகிய உன் தம்பிமார் கும்புகளில் இம்பர் பதமாறி உம்பர் பதம் வாச்சுது - பேர்சொல்லும் புத்திரவர்க்கம் பௌத்திரவர்க்கம்-கால்மாறிச் சாச்சுது உலகத்தில்பெரும்பழி வாச்சுது-இன்னங்கொஞ்சநெஞ்சமிருக்கிறபேருக்குக்காலங்குறுகிப் போச்சுது ஆகையால் போனவர்கள் போக இன்னமிருக்குந் தம்பிமார்களுடன் சொல்லுதற்கரியபல கேள்விகளும், சாஸ்திரங்களும்தேர்ந்த வீமார்ச்சுனன் முதலாகிய தம்பிமார்களுடனும்-உன்சமயனாகிய சத்தியநெறிபோன்றஉத்தம ஆசாரமுள்ள தருமராஜனுடனும் கலந்துபரிந்து உபசாரம்புரிந்து நன்னெறிதெரிந்து அரசுபுரிந்துவாழ்வதேகடனென்று துரியோதனமகாராஜனுக்குஅஸ்வத்தாமன் சொல்லினான் இந்தவார்த்தையை அரசன்கேட்டு, இப்போது நீர்சொல்லிய காரியங்களெல்லாம் சரிதான், ஆனால் இதுயாருக்கு வேண்டியதென்றால் பூமியை ஆளவேணுமென்னும் கருத்தை ஆட்சியாகஉடையவர்கள் யாரோ, அவர்களுக்கு வேண்டியது எனக்குவேண்டியதென்னவென்றால் வீரமுரசவாத்தியமுழங்காநின்ற போர்க்களத்தில் என்தேகமானது விழவும் உயிரானது வீரசொர்க்கம் அடையவும் வீரியம் பெறுவதே எனக்குப்போதுமானபிரயோசனம்இதைவிட வேறொன்றுமில்லையென்று வேல் தாங்கிய துரியோதனன் சொன்னான்.

இந்தமொழியை முனிமகனாகிய அஸ்வத்தாமன் கேட்டு நாம்புகன்றகட்டுரையை நாடாமலும் இதற்குவேண்டிய யுக்திகளைத் தேடாமலும் மறுத்தானே துரியோதனனென்று சோபங்கொள்ளாமல் துரியோதனனுடைய மனதின்படி கலந்து கொண்டு யுத்தஞ் செய்வதற்குத் தகுந்தஇனிய வார்த்தைகளைப் பலவாகப் பேசி நயந்தத்தின்பேரில் நந்தியாவட்ட மாலை அணிந்த நராதிபனானவன் அஸ்வத்தாமனைப்புகழ்ந்து கொண்டாடிமகிழ்ந்துஇருவருஞ்சென்று இரப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற சந்திரவட்டக்குடை பெற்ற கர்னனைக்கண்டுகட்டி அணைத்து அவனது கண்ணீர்போக்கிபுத்திரசோகத்தைப்பிரித்து குளிர்ந்தகடல் சூழ்ந்த குவலயத்தை ஆளுங்கோமான் பலவிபகாரங்களினாலுந் தேற்றி விடசேனனைமுடித்த அர்ச்சுனன் உயிரைக்கொல்லுதற்குவேண்டியயுக்தி செய்து சொல்லுகிறான்.

அண்ணா மாலையணிந்தமார்பினையுடையகர்னராஜனே, உம்முடையவல்லபம்உமக்குத்தெரியஇல்லைநீரொருகணைதொடுப்பீராகில்அந்தக்கணையின்உரத்தால்சப்தமலையும்சப்தசமுத்திரமும் சப்தபூமியும்தடுமாறிப்பயந்து சாய்ந்துபோம்அப்பேர்ப்பட்டசாமர்த்தியமுடையநீர்எதிர்த்தசத்துருக்களின்வெற்றியைப்பறித்து தனுவும்தனுவும் தகர்ந்துதாரணியில்வீழ்ந்துஇறந்ததுஸ்வாசனென்னும்தாரணிந்தஎன்தம்பியைக்குறித்தும்குழந்தையாகியவிடசேனனைக்குறித்தும்கண்கலங்கவேண்டாம்மனம்கலங்கவேண்டாம்நம்மைவிட்டு நீங்காதவர்கள் நீங்கினால் அதற்காகநாம் ஏங்கலாமா துயரப்படவேண்டாம் என்று ஆற்றல் சொல்லிபுத்திரவிசுவாசதுயரத்தைமாற்றினான் வலம்புரிமாலையணிந்ததிணிந்ததோளான் அந்த அரசனுடையவார்த்தையைக்கேட்டகர்னனானவன்கண்களைவிழித்துஉருட்டிப்பார்த்துச்சொல்லுகிறான்,கல்மலைகலங்கினாலும்திசாநிசைகலங்கினாலும்திக்குப்பாலர்கள்கலங்கினாலும்தேவர்கள்நிலைகலங்கினாலும் நீண்டசமுத்திரங்கலங்கினாலும்நெடியபூமிகலங்கினாலும்ஆதிசேடனுடையபணாமகுடங்கலங்கினாலும்அளவில்லாதமுக்கடவுளின்பேரவையில்சளர்வில்லாதவர்கற்றகலைகலங்கினாலும் போர்முகத்தில்என்மனங்கலங்குமோஒருக்காலுங்கலங்காதுதுரியோதனமகாராஜனேஎன்குமாரனாகிய விடசேனனுடைய தலையானது என் கண்ணெதிர்துணியும்படிக்குஅம்புப்பிரயோகஞ்செய்த இந்திரன்மகனாகியஅருச்சுனன் தலையை இப்போதொருகணத்தில் ஒரேபாணத்தினால் துணிப்பேனென்று நாகக்கொடியுடைய நராதிபனுக்குச்சொல்லி தனதுரதத்தைச் செலுத்துகின்ற சாரதியாகிய சல்லியராஜன் முகத்தைநோக்கிதன்மனமகிழ்ந்துஓர்சொற்சாற்றினான்சூரிய குமாரனாகியவீரியக்கர்னன்.

ஓ,மத்திரர்க்கரசனே கேளும், இன்றையத்தினம் உதயமாகியசூரியன் அஸ்தமிக்கிறதுக்குள்ளே சாமர்த்தியமுள்ள அருச்சுனன் தலையைஅருமையாகியவிஷாக்கினிவெ

க்கணையால் விண்ணுலகிற் சேர்க்கிறேன், எங்கே இந்த வேளையில் உன்கைவல்லமையை நான்பார்க்கவேண்டியிருப்பதால் பகைமேலிட்ட பார்த்திபரெல்லாரும் புகழ்ந்து கொண்டாடும் படியாய் ஜல்தியில் விசாலமாகியவீரத்தைவிடு பார்ப்போமென்று கர்னன்கூற, அந்தக்கர்னனைப்பார்த்து மத்திரதேசாதிபனாகிய சல்லியராஜன் மித்திரனை சொல்லத் தொடங்கினான்.

ஐயா, அங்கராஜனே, பூமிஅதிருது-ரெத்தமழைபொழியுது கச்சைக்கொடிமேல் காக்கைகள் அடித்து மோதிவிழுது மேகமில்லாமல் ஆகாயத்தில்-இடி உண்டாகுது ஆயுதங்களின் முனைகள்கோலும் கரும்புகைபுகையுதுவாசனைபொருந்திய மாலைகளெல்லாம்வாடி சரகாய்க்கரிந்துபுலால் நாற்றம் நாறுகின்றது இடதுதோளும் இடதுகண்ணும் துடிக்குது-யானைகளுங்-குதிரைகளும் கண்ணீர்விட்டழுகின்றது-பைசாசுகள் எதிரெதிர் கூத்தாடுது-நரி கூவுது-நவரத்தின கசித ஆபரண முடிகளெல்லாம் செம்பைப்போலும்- இரும்பைப்போலும்-பித்தளையைப் போலும - ஒளிமழுங்கி அழகழிந்துகாணுது-தேர்கள் புதைந்துஒலியெழாதிருக்குது ஓடங்களையுடைய கடல்கள் ஒலிமிகுந்து புரண்டுவருந்தன்மைபோலும் இருக்குது பகலில நக்ஷத்திரங்கள் உதிரத்தோணுது வயிற்றில் பசிரொன்றுஎரிச்சலுண்டாகுது - இதுகளெல்லாம் நீ காணவுமில்லையோ இப்போது இதோ நோக்கப்பார் இப்பேர்ப் பட்ட துற்சகுனவிபரீதந் தோன்றுவதினால் இன்றையப்பொழுதை உபாயமாய்ப் போக்கி விட்டு நீ உயிர்பிழைத்துப் போய் நாளையத்தினத்தில் போர்புரிவை யாகில்இந்த அருச்சுனனையுஞ் செயித்துக்கொல்லுவாய் மற்றப்பேரையும்எதிர்த்து வெல்லுவாய் துரியோதனமகாராஜனுக்கு அகண்ட மண்டலாதிப பட்டாபிஷேகமும்பண்ணிவைப்பாய்உண்மையாகஇன்றையத்தினம் நீசண்டைக்குப்போகவேண்டாம் என்பேச்சைத் தள்ளி வெஞ்சிலை விஜயனுடன்வீண்சண்டை செய்யப் போவாயாகில் அவனுடைய அம்பினால்உன்னைமாய்த்துச்சாய்ப்பதுசத்தியம்இன்றைக்கு நீ எப்படியும் அவனால்பட்டுப்போவாய் என்று எதிர்நின்று குன்றுபோன்ற தோளினையுடைய மத்திரராஜன் சொன்னான்.

அந்தப்பேச்சைத் தனக்குத்தானேஒப்பாகியகொடையாளன்கேட்டு கலிரென நகைத்துஎன்னிடத்தில் வளர்ந்துவராநின்றநாகாஸ்திரத்தை விடுப்பேனாகில்தனஞ்செயனுடையதலைதப்புமோ, செப்பவந்த சல்லியனே நான்விடுக்கும் பாணம் அவனுக்கு அமுதமும் உறவுமாகிறது, அவன் தொடுக்கும்அஸ்திரம்எனக்குவிஷமும்விரோதமும் ஆகிறதுமா அப்படியாகல்லது அப்பப்பார்த்துக்கொள்ளுவோம் யானையினுடைய தவவலிமையை சிங்கம்வியந்துசந்தோஷப்பட்டு அந்தயானைமேற் செல்லாமல் திரும்பிவிடுமாகில் உன்சொல்படிக்கு நானுந்திரும்பிவிடுவேன்யானையைக்கண்டு சிங்கமும்திரும்பப்போகிறதில்லை,உன்சொலலைக் கொண்டுநானுந்திரும்பப் போகிறதில்லை சல்லியனே ஆசையால் உபயோகமில்லாத பேச்சைஏன் பேசவேணும் பிரயோசன மில்லை உமதுஉத்தியோகப்படிக்கு அந்த விஜயனுக்குநேரில் என்ரதத்தைச்செலுத்தென்றான் கர்னனானவன்

அதைக்கேட்ட தடந்தேர்ச்சூதனாகிய சல்லியன் மனஞ்சலித்து நமது சொல்லுறுதியைக் கேளாமல்த்தள்ளி இவனெண்ணப்படிப்போகிறானே, வீணாகச் சாகிறானே, என்றுசற்றுநேரம் நிதானித்துநின்றுவிசனங்கொண்டுவியர்த்துகண்ணீர் பெருகிக் கலங்கி மறுகி வெறுத்து சரிதான்இவ்வுலகத்தை தருமராஜன்ஏகச் சக்கிராதிபதியாய் ஆளுகிறதுக்குநாள் சமீபித்ததென்றுதன்மனதில்நினைத்துவினைப்பயன்படிமுடியுமென்றுகனைத்துசத்ருக்களின் மனம்உடையும்படியாய் மூட்கோல்கொண்டுகுதிரைகளை உந்திநீயேவெற்றிகொள்ளென்று கர்னனுடையமனவேகம்பின்னாகவும்தேர்வேக முன்னாகவுஞ்செலுத்தினான் சாரதித்தொழிற்குச்சமத்தனாகியசல்லியனானவன்.

அப்போது அங்கதேசாதிபன் சிங்கம்போற்றெழித்து தன்கைவில்லை வட்டமாக வளைத்துமழைகளைப்போல் பலகோடிபாணவருஷங்களைவருஷித்து பாண்டவச்சேனைகளைமுனைசாய அடித்துமடித்தான், அனேகவாத்தியங்கள்முழக்கமும் அம்பினோசைப்பெருக்கமும் யானைசேனைபரிவாரங்களினுடைய ஆர்ப்பும் இவைமுதலாக எழுந்தஓசைகளினால் திக்குயானைகளினுடைய கர்னமதச்சுவடு அடைந்துபோச்சுதென்று சொல்லுவோமாகில் போர்வீரத்தையெடுத்துப் பேசும்படியானவனெவனோ, கர்னராஜனானவன்காலாக்கினி ருத்திரனைப் போற்கலந்துசிந்தித்தபடி முந்திவந்து அமர்புரியும் அந்தவேளையில், தேனிறைந்தமதுமாலையணிந்த புயவீரனாகிய அருச்சுனன் மாயனூர்ந்ததேர் மிசைவந்துபாரியகாண்டீபத்தை நாணிபூட்டி சக்கரரக்ஷகாளாகிய உத்தமோசா உதார்மனுடனும் வாகினிகளோடும் மெய்மையாகிய தம்பிமாரிருவரும் வீமசேனனும் அளவற்ற அரசர்களும்புடைசூழ்ந்து வரச்சென்று கதிரவன்குமாரனாகிய கர்னன்பேரில் கடுமையாயிருந்தான், இவனும் அவனும் போராடத்தொடங்கிய போது கருங்கடலிரண்டும் கலந்து அலைமோதுவதுபோலும் உகாந்தகாலாக்கினி இருபங்காய்ப் பிறிந்தெழுந்து ஜாடுவதுபோலும் சண்டமாருதமானது அண்டபிண்டசராசரமடங்க அடிப்பதுபோலும் பகைத்துமுனைந்து பலத்தெழுந்துவரும் பெருஞ்சேனையை இருநிறவேந்தரும் அணிபெற அமைத்து கற்காடகச் சந்திரயோகம்போல் கணைமழைதூற்றி விண்ணுமண்ணுங் கலங்கக்குதித்துவிலகுவதற் கருமையான யுத்தம்தந்து மெத்தக்கலித்தார்கள்.

போற்முனையிற்சிறந்த புஜபலகர்னராஜனும் கார்முகஞ்செறிந்த கஜ ரத விஜயபோஜனும். கைகலந்து செய்கின்ற சண்டையின்திறத்தைக் காணுவதற்கு சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்ம்மாவும் தேவர்களும் தேவேந்திரனும் வசுக்களும் பூதகணங்களும் தேவகணங்களும் சடாமௌளியும் உயர்ந்த ஆகாயத்தில் விமானக்கொடிகள் நிறையும்படிக்கு அதிசிக்கிரமத்தில் வந்துநிறைந்தார்கள்.

அப்போது பரிசுத்தமாகிய கமலசம்பவனென்னும் பிர்ம்மாவானவர் செஞ்சுடர்க்கண்களையுடைய சிவபெரு

மானது சிவந்ததிருவடியில் விழுந்துதொழுது திரிபுராந்
தகனே இவடத்தில் இப்போது நடக்கின்ற யுத்தத்தைநி
றுத்தி; துரியோதனுதியர் பாண்டவர்கள் இவர்களிருவ
ரையும் நேசமாக்கிப் பகையில்லாமல் கலந்துவாழ்கச்செ
ய்வதற்குக் கருணையுண்டாயிருக்கின்றதோ என்றுகேட்
டார்.

அதுகாலையில் முகந்திரும்பிய மான்மழுத்தாங்கி சகந்
தழைத்துள சகல உயிர்கள்தோறும் நிறைந்து அவரவர்
களிழைத்த நல்வினைதீவினைப்பயன்படி அனுபவிக்கச்செ
ய்யும் திருவடிகளையுடைய வேதமுதல்வனுகிய வெள்ளை
விடையான் வெள்ளிமலையான் கிருபைசுரந்து சிறுநகை
காட்டிச் சொல்லுகின்றார் (ஆகாயத்திலெறிந்த கல்பூமி
யில் விழாமலும் அந்தக்கல்லைத்தட்டி மேலேறச்செய்யு
ங்கைகள் தப்பாமலும் ஏற்றுவார்களாகில்) அப்போதும்
இந்தயுத்தத்தைநிறுத்திச் சமாதானப்படுத்துவது ஏதா
மோ அலலது இதாமோ யாமறியோம் எல்லாந்தெறிந்த
நீ பொல்லாதசமரத்தை ஒழிக்கலாமாவென்று கேட்டது
பெரிய ஆச்சரியமாயிருக்குது உன்னுலாகுஞ்செயலல்ல
மற்றெவர்களாலும் நடக்கும்பயனல்ல நாமெல்லோரும்
அறிய நம்மிலொருவன் நடத்தப்போயிருக்க இந்தப்போ
ர்நடவாமல் முடியுமோ என்று உமாமஹேசனுரைத்தார்
உடனே தேவேந்திரன் பணிந்து ஈசனைநோக்கி ஓர்மொ
ழிகேட்கலுற்றான்.

அதாவது பாற்கடற்பள்ளியான் நாற்கடற்றிசையு நடு
ங்கச்செலுத்துகின்ற தேரிலிருக்குந் தனஞ்செயனும்பிர
காசிக்கும் விசாலமார்பினையுடைய சூரியகுமாரக்கர்னனு
ம் தொடுக்குஞ் சரதாரைப்போரில் ஆர்ஜெயம்பெறுவா
ர்கள், ஆர் அபஜெயம்பெறுவார்கள் புத்ர பாச நேச வி
சுவாசமாகிய என்மனம் சந்தேகமாயிருக்குது நான்கொ
ண்டசந்தேகம் நிவாரணமாகும்படியாய்ச் சொல்லவே
ண்டும் நிமலனே என்றான், அந்தமொழிகேட்ட சுந்தரே
ஸ்வரர் இந்திரனைப்பார்த்து புரந்தரா கேளும் வில்லெடுத்
த போர்வலிக்கொருவனுகிய விஜயனுக்கு யாதொரு இட
ரும் துன்பமும் கிட்டாதிருக்கும்படியாய் பூர்வம்நல்லவர
ங்கொடுத்திருக்கின்றேம் மேலும் நாரணன்காப்பாயிருக்
கிறார் அதனுல் அந்த அர்ச்சுனனேஜெயம்பெறுவான் இ
தன்றியும் வீரபராக்ரமவிதரணவேளாண்மை மேன்மைம
னத்தோனுகிய கர்னன் ஆவிநீங்கி அகன்று ஹரிவாசுதே
வனுடைய அருட்பார்வையினுல் நற்கதிபுகுவா னென்று
அருள்சுரந்துரைத்தார் பார்ப்பதி சமேதராகியபரந்தாம
னுனவர்.

அப்போதுசதாஸ்துசதாஸ்துவென்றுஇந்திரன்முதலா
கியதேவர்களெல்லாரும்ஆசீர்வதித்து அவனேறியஅழகி
ய அழியாததேரின்மீது பொற்பூமாரி பொழிந்தார்கள்,தே
வேந்திரன் தன்மகன் ஜெயம்பெறுவானென்று கேட்டசந்
தோஷத்தால்விந்தகிரிபோல புயம்பூரித்துஉடல் பூரித்து
புளகமெறினுன்.

இப்பால், கர்னராஜனும் அர்ச்சுனராஜனும் சேர்ந்துயு
த்தபூமி மெத்தநொந்து வருந்தும்படியாய் அடுபோர்புரி
ந்தார்கள், அந்தக்காலத்தில் எழுந்த பேரோசையானது
இவ்விதமாக்களுமென்று இசைக்கும்நாவலர்களெவர்களு
மில்லை, சங்கு - பம்பை-தப்பட்டை-பேரி பூரி-வீர-காக
ள-தாரை - சின்ன முதலாகிய வாத்தியங்களின் ஓசையா
ல் அண்டபகிரண்டம் நெரிந்து சரிந்துபோம் அவைகள்
சரிந்துபோனுல் மறுபடியும் படைக்கவேண்டுமேஎன்று
அயன் திடுக்கிட்டு அஞ்சினுன், சேனுசமுத்திரங்களின்நெ
ருக்கத்தினுல் மலைகளெல்லாம் நொறுங்கிப்போம் அது
களுடன்கூட நமது கயிலையங்கிரியும் நொறுங்கிப்போனு
ல் நாமிருக்க இடமெங்கேயென்று கயிலாசபதியுங்கலங்
கினுர் இந்தச்சேனைக்கும்பிலிருந்து எழுந்த தூம்புகளினு
ல் சமுத்திரமெல்லாம் தூந்துபோம் அப்படி தூந்துபோ
னுல் நாம்பள்ளிகொண்ட பாற்கடலும் வறண்டுதிடராய்
ப்போமேயென்று சக்ராதரனுகிய திருமாலும் தியங்கினு
ர் இம்மூவரும் ஏக்கங்கொள்ளும்படியாய் குதிரைகளுட
ன் குதிரைகள்கலந்து நெருக்கின ஆயுதங்களுடன் ஆயு
தங்கள் இழைந்து புகைந்து உராஞ்சின மதவாரணத்து
டன் மதவாரணம் மதர்த்து அதிர்த்துப்பகைத்தன ஓடுந்
தேர்களுடன் ஓடுந்தேர்கள் ஊடுதாக்கின, விரிந்தகுடை
யுடன் பரந்தகுடைகள் மிகக்கலந்தன, பலதினுசுக்கொ
டிகளுடன் பலவகைக்கொடிகளும் காற்றினுல் வலம்வந்
துழன்று பின்னித்துன்னின, குதிரைவீராளும் குதிரை
வீராளும் வயப்படைகொண்டெறிந்து மாறிமாறி போர்
புரிந்தார்கள், வெற்றிபெற்ற யானைவீராளும் மதமுற்ற
யானைவீராளும் மேற்கடுகி அமர் முடுகினுர்கள், சக்கரங்
களையுடைய மலைபோன்ற தேர்வீராளும் தேர்வீராளும்
தெழித்துக்கிட்டினுர்கள், வெற்றிமாலையணிந்த சுத்தசா
ரிகைவந்த பாதசாரியாகிய பதாதிவீரரும் பதாதிவீரரும்
விதியாகிய செருவிளைத்து மூட்டினுர்கள் எடுத்தவேலின
ரும் பிடித்தவேலினரும் அடுத்துகடுத்து முனைந்தார்க
ள் லட்சயமாய்விடுக்கும் கொடும்பகழிகளைத்தொடுக்கும்
வில்லை திடும்பிரவேசமாய் வளைத்தார்கள் கடகமணித்
தொடிகளை அணிந்த கரங்களில் எடுத்த வாளமும் வாள
மும் மாட்டிப்பொருதினுர்கள் விரல்களிற்றுங்கிச் சுழற்
றிவிடுத்த சக்கரங்களும் சக்கரங்களும் முஷ்கரங்களும்
முஷ்கரங்களும் உக்கிரத்துடன் பகசென்றெரிந்திடவிட்
டு வீராளுடையதலைகள் விழத்துண்டித்தார்கள்வெகுபே
ரைக்கண்டித்தார்கள், அறன்மகனுகிய தருமராஜனுடை
ய பெருஞ்சேனைநிருபரும், நாகக்கொடிபடைத்த திறன்
மகனுகிய துரியோதனராஜனது பெருஞ்சேனைநிருபரும்
மிஞ்சி வஞ்சினம்போல்பேசி திறமிகுந்த தங்கள் தங்கள்
சேனைகளுடன் எதிரொதிர்சென்று போனபோன இடங்
கள்தோறும்புகுந்து பொருந்தி ஒருவருக்கொருவர் தோ
ள்பலமும் தாள்பலமும் வாள்பலமும் ஆள்பலமும் வீரா
வேசமும் சோபாவேசமுமுடைய சமமாகியபேர்கள்சா
தாரணமாகமலைந்தார்கள், தம்பிமார்களும் பெருஞ்சேனை
களும்இரண்டுபுறத்திலுந்திரண்டுவர பந்துக்களும் படை
த்துணைவந்தபார்த்திபர்களும் இன்னமுள்ளயாவரும் சக்
ரவாளகிரிபோல் சூழ்ந்துவர, வெவ்விதாகிய வெஞ்சின
ச்சபதநீர்பாய்ந்த கோபப்பயிர் விளைவேறித் தழல்மூளு
ம் மனத்தோனுகிய வீமசேனன் முன்னேபோகஇவ்வித

ஆடம்பரத்துடனே நெருங்கி நடுமத்தியில் அர்ச்சுனன்விஜயகாண்டீபத்தை நிறுத்திவளைத்து குணத்தொனிபண்ணி ஜெனுக்காரச் சிலீமுகங்களை மாரிபோல் வாரிப்பொழிந்திடவந்தான், அஸ்வத்தாமனும்-கிருபனும்-கிருதவன்மாவும்-வீரகண்டையார்ந்த மாமன் சகுனியும் இன்னமுள்ளமறவர் முதலாகியபேர்களும் எரிந்துபொறிபறந்துவிழும்படியானகோபக்கண்களையுடையவர்களாய் மதில்சூழுந்தன்மைபோல் வளைந்துவர-யாவரு மெச்சும்படியாகிய உச்சித வில்த்தாக்கிய மனோ நிச்சயங் கொண்டுஅர்ச்சுனனுடன் கர்னனும் எதிர்த்து மல்யுத்தங்களை புறம்போகவொட்டாமல் வல்லமையுடன் குடிவைத்துக் கொண்ட தோள்களையுடைய கர்னார்ச்சுனனிருவரும் தங்கள் தங்கள் புஜபலத்துக்குத் தகுந்ததாகிய வில்லைவளைத்துகுணத்தொனி தெறித்து வெல்ல அடுத்து கொல்லத்தொடுத்து நல்ல சிலீமுகங்களை மெல்லவிடுத்து விறுவிறென்றேற்றியபோது சக்ரவாளமும் சமுத்திரமும் வளைந்த இந்தப்பூமிக்குப் பந்தலமைத்து நிழல்காக்கச்செய்யுந் தன்மைபோல் பாணங்களை இறைத்து பாரிடத்தை நிறைத்து அந்தரத்தை மறைத்துச் சொல்லுக் கிளக்காமல் ஆவேசங்கொண்டு போர்புரிந்தார்கள், போர்வெற்றிமாலை புனைந்த புயத்தார் மருவிச் செபமேவி உருவேறிய மந்திரங்களைச்சொல்லி பூசித்து விடும்படியாகிய நிலையாலும், இருவருஞ் சமமாக வில்வளைத்த விரகினாலும் தகுந்த பாணங்களைச் சமையமறிந்து எய்த சாமர்த்தியத்தினாலும் யாவருமிளைத்து இவர்களுடைய சூட்சி இப்பேர்ப்பட்டதென்று சிறிதேனும் அறியாமற்போனார்கள், தேவர்கள்முதலிய விஞ்ஞையரும் திகிலடைந்து உகாந்தகாலம் இன்று குறுகியதோவென்று வெருவிப்பயந்து மேற்சென்று விசனமேற்கொண்டார்கள்.

இப்படியாக, கர்னார்ச்சுனன்செய்த யுத்தத்திறங்களைச் சொல்லுமிடத்து, இவர்க ளிருவரும் எதிர்த்து வாய்மடித்து மண்டியிட்டு வாள்விழிசிவந்து வாய்புகை மலிந்து-தேயுக்கணை-வருணக்கணை-அருணக்கணை-நாகக்கணை-மேகக்கணை-இந்திரக்கணை-சந்திரக் கணை-மந்திரக்கணை-அந்தரக்கணை-மோகனக்கணை-பாகனற்கணை-மருந்துக்கணை-ருத்திரக்கணை-பத்திரக்கணை-சஞ்சரிகக்கணை - அஞ்சரிகக்கணை-அரிக்கணை-கஜக்கணை-அலைக்கணை-கலக்கணைமுதலாகிய ஆலாலக்கணைகளை விடுத்து ஆர்ப்பரித்துப் போர்புரிந்தார்கள்.

இவர்கள் இருவரும் விடுத்தபாணங்கள் ஒன்றோடொன்று எதிர்ந்து முனையுடன்முனை உராய்ந்து ஒன்றைஒன்றுகவ்வி ஒன்றை ஒன்றுவிழுங்கி ஒன்றை ஒன்றுகக்கி உமிழ்ந்துஒன்று ஒன்றைத்துரத்திநெடுந்தூரம் பின்னலோடி விசைகொண்டு அந்தரத்திலாடி ஒன்றை ஒன்றுபிளந்து பூமியிலே புதைந்து குபுகுபுவென்று புகைந்து ஒன்றால் ஒன்று அழிந்து ஒன்றுடன் ஒன்றுமோதி பாதி வீதியில் விழும்படியாய் துணிபட்டு துண்டமாய்க் கிழிபட்டு கண்டகண்டமாய் அழிபட்டு குமுகுமுகுமுகுமுவென்று கூவி இரைந்து சடசடசட்வென்று அழிபட்டு தாவிவிழுந்து மடமடமடமடவென்று மாறிவிரைந்து ஒன்றையொன்று கட்டுகளை அழித்து கூர்மையையழித்து இறகுகளைப்பொடித்து எழுதிய வீரப்பேராக்கலைத்து எந்த உலகிலும்பகைத்து எதிர்வந்தவர்களின் சிந்தையைப் பிளந்து எதிர் எதிர் ஓடிக் கூடி பகைவரிருக்கும் இடம் நாடியோடி ஒருகணை இடம்புரிவந்தால் பலகணை வலம்புரிதிரிந்தும் பலகணைவலம்புரிவந்தால் சிலகணை இடம்புரி வந்தும் அளவிறந்த முறைமையாய் மண்டலமாக வளைந்தோடிவந்தும் விண்டலம் அளாவி விரைந்தாடிவந்து கொண்டல்கள் குலைழந்தொதுங்கவும் எண்டிசை நடுங்கவும் தகதத்திமியென நடம்புரிந்தும் பவரிசுத்திப் பறந்து திரிந்தும் பாணங்கள்போராடியது, இதன்றியும் இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாக குயவன்திகிரிபோல்ச் சுழலுந்தேர்கள்-மண்டலம்-கோணம்-வட்டம் - நேரோட்ட மென்று சொல்லும்படியாகிய தேரோட்டம் ஒன்றோடொன்று கர்க்கரத் துவனியுடன் இரைந்து கலகலவென்று மணியசையவோடி எதிர்முட்டி சிம்ம முகத்துடன் சிம்மமுகந் தாக்கி ஏர்க்கால் நுகத்துடன் ஏர்க்கால் நுகம்போக்கி சக்கரங்களுடன் சக்கரங்கள் இடிபட்டுடைந்து குற்றுக்கால் கொடுங்கைஅலன்று குதிரைகளும் அயர்ந்து சாரதிகளும் தலைகவிழ்ந்துபோகும்படியாய் முட்டவிட்டுத் தாக்கி குற்றமற்ற குதிரைகள் பூட்டியதேரை மொய்த்திருக்கும் யுத்தகளத்தில் சாரதியும் சாரதியும் வீரரோஷத்துடன் சமத்துக்கூறி ஒருவருக்கொருவர் தேரைச்செலுத்தி நான்முன்னே நீ பின்னே நீ முன்னே நான்பின்னே யென்று தேரைவிடுத்த சாரதியாகிய இருவர்களில் திறத்தினாலும் நிறத்தினாலும் வாசுதேவனையும் மத்திரதேசராஜனையும் இன்னாரென்று தேவர்களாலுங் கண்டறியக்கூடாமையால எல்லாருடையகண்களும் சுழன்று கலங்கி மனமயங்கிப் போய்விட்டது தேர்வலவராகிய சாரதிகள் திறமுதலிய செய்கைகளில் வேறுபடாமலிருந்தபோதிலும் இருவருடைய் ரதத்திற் பூட்டிய குதிரைகள் பேதமில்லாத வீரமும் அபேதமில்லாத சுழியும் சாமர்த்தியமும் நல்லகுரலோசையும் பற்பலவித வேககதியும் ஆகாயநிறமும் உடைத்தாய் உயரமும் பருமனும் நிகளமும் தேகவலுமையும் ஒத்திருந்தது வல்லவராகிய கர்னார்ச்சுனருடைய தேரைச்சூழ்ந்த சிலமன்னவரெல்லாரும் இருபிறிவாகப்பிரிந்து இரண்டு நிலையாகநின்று ஈடுதாழ்த்தியில்லாமல் போர்புரிந்தார்கள்.

அப்போது சர்வசம்மாரகால ருத்திரனுக் கொப்பான கர்னார்ச்சுனன்; திரண்ட இரண்டுமலைகள் எதிரெதிர்எதிர்த்து வளைந்ததைப்போலும் வளைந்து நிறைந்த இலைகளைப்போலும் நறுந்தளிர்களைப்போலு மிராநின்ற பாணங்களைத் தொடுத்து அதிரும்படியாய்ப் போராடுகின்ற அதிரத வீராளிருவரும் தாங்கள் கைப்பிடித்த விற்களிரண்டும் நிமிராமல் அற்பகல்தெரியாமல் விற்பனவிவேக வினமொழியும் சற்பனையாகிய உற்பனம்போலுங் கணைகளைக் கலகலவென்று சிந்தினார்கள், இப்படி போராடுங்காலையில் அருச்சுனராஜன் தேவதத்தத்தை யெடுத்து உலகந்திடுக்கிட முழக்கி மேலாகிய நூலாய்ந்த வெகுபேர்க ளாலும் மதிக்கும்படியாய் பாரதப்போருக் கென்று பற்பல

வாக முன்னமேபெற்றிருந்த மும்மூர்த்திகளின் தம்தம்வடிவுபோன்ற நற்பசுழிகளை நாடியெடுத்து பூசைகொடுத்து முதல்வனுகிய சூரியனது மெய்ப்புத்திரனுகியகர்னன் பேரில் கள்ளுண்டவண்டினங்கள் மொய்க்குந் தன்மைபோல் நிரைநிரையாய் திரை திரையாய்-பரபர-சரசர-கரகரவென்று போதுமானமட்டும் நீதுசெய்யவிட்டான்.

அதைக்கண்ட அங்கதேசாதிபன் தன் தந்தையாகியசூரியபகவான் விந்தையாகிய அன்புடன் சிந்தைமகிழ்ந்து மைந்தனுகிய தனக்குக்கொடுத்திருந்த பராபரமென்னும் பாரிய வலம்புரிச் சங்கத்தை யெடுத்து பைய வாயில் வைத்து வையக நைய மேகங்கள் மழைகளைப்பெய்ய சங்கநாதஞ்செய்ய வரிநெடுஞ்சிலைதாங்கிய வலாரிமகனுகிய அருச்சுனன் மழைபோற்பொழிந்த வடிக்கணைகளையெல்லாம் வறிதுக்குவதில் மந்திராஸ்திரங்களைத் தொடுத்து முறித்துத் தறித்துக்கொய்தான். வெற்றிமாலை தரித்த நீண்டவில்வளைக்கும் ஓசையும் அவ்வில்லில்மாட்டிய சிறுநாணேசையும் அவரவர் களின்-நொடி-டால்வகை முதலாகிய விருதுகளின் ஓசையும் அருச்சுனனுடைய தேவதத்தம் கர்னனுடைய பராபரமென்னும் இருவருடைய சங்கோசையும் அதிர்ந்து அண்டம்பிதிர்ந்து போம்படியாகமுழங்கும் வாத்திய ஓசையும் நால்வகைச் சேனு சமுத்திரங்களின் பொங்கோசையும் தேர்ச்சாரதிகளின் திட ஓசையும் ஒன்ருகச்சேர்ந்து அண்டமுடைந்திட்டு அப்புறமும்போய் வீணுகாமல் மீண்டுவந்து ஈண்டி இருக்கும் யாவர்களுடைய செவிகளையும் செவிடுபட அடைத்து கண்விழிபிதுங்கக் கலக்கி இன்னமுள்ள பேரிடிமுதலாகிய ஓசைகளைப் பெருக்கச் சேர்த்துக்கொண்டு திரிலோகத்தையும் கலக்கிக் கருக்கப் புறப்பட்டபோது இமையாவிழியோராகிய தேவர்களும் தேவேந்திரனும்பயந்து அயர்ந்து பாறினுர்கள், அக்கினிதேவனுற் கொடுத்த காண்டீபதைப்பிடித்த அருச்சுனனென்பவன் குணத்தொனிபண்ணி நாகாஸ்திரங்களை யெடுத்து நலம்பெறப் பூசித்து கர்னன் அஞ்சும்படியாசத்தொடுத்து சங்கித்து மறுபடியும் யோசித்து பலம்பொருந்திய அக்கினியாஸ்திரத்தை மந்திரித்து வெற்றிகொள்ளும்படியாய் ஒரோநிலையாகநின்று எவினுன் அந்தக் கணைகளிரண்டும் கடிவேகங் கொண்டு பொங்கி அனலெழுந்து அழல் தழைந்து புகைமிகுந்து பொறிபரந்து புனலவறண்டு புழுதி மண்டும்படியாய் ஆகாயகங்கையைவறட்டி இருள் நீங்கிய சந்திரனைப்போல் எங்கும்பிரகாசமாய் நக்ஷத்திரங்களின் கூட்டம்போல்நாடி எரிந்து பலபல பலபலவென்று பூமியிற்பாய்ந்துஇணையில்லாமல் எழுந்து காயுங்கணைகளினுல் ரதங்களும் வேகக்குதிரைகளும் மும்மத யானைகளும் வீரப்பதாதிகளும் கூர்மையாகிய சூலாயுதம்-வேலாயுதம் - முதலாகிய எல்லா ஆயுதங்களும் வெங்கணைகளும் வீரவிற்களும் கரிகரியாய்க்கரிந்து பொரிபொரியாய்ப் பொரிந்து போகும்படி மடித்து சிலவற்றை ஒடித்துப் போர்முடித்து வருகின்ற அருச்சுனன் தொடுத்த அக்கினிக் கணையை யமனுக்குச் சகோதரனுகிய கர்னன்கண்டு இரண்டு புஜங்களும் வளர்ந்து மேற்கொளநின்று நெற்றிசுடித்து நீண்டபுருவங்கள் துடித்திடச்சென்று வாத்தியங்களின் ஓசை மகாயுகம்போல் முழங்கக் கோபமேற் கொண்டு சமுத்திர ராஜன் கொடுத்த வருணுஸ்திரத்தையெடுதது வந்தித்து மந்திரஞ் சிந்தித்து நாணியில்ப்பந்தித்து அநுசந்தித்துவிட்டான்; கணகணவென்று புறப்பட்டு சமுத்திரஜலத்தை வறளக்குடித்து வலுவேறிய அம்பரம் உருவி ஆகாயத்திலெழுந்து மேகங்களைக்கருங்கி கலங்கி விலகி மலைக்குப்போம்படி மாட்டி,மாதிரங் குடிபோக ஓட்டி, வானத்தில்நின்று சிரங்காட்டி சப்தமேகத்தின் பேரை நிலைநாட்டி இடிமின்னல்-இருள்-இரைச்சல்-இவைகளைகூட்டி-நறநறநறவென்று வெள்ளஞ்சோரிந்துபள்ளம்படுகுழி நிறைந்து தூலி சேனைப்பிணங்களைச் சிதைத்து ரத்தவெள்ள வாரியோடும்படியாய்க் கர்னன் சீறிச்சாடிய அம்பானது செவ்வானம்போன்ற யுத்தகளத்திற் புகுந்து தருமராஜனுடைய தம்பி அருச்சுனன் தொட்ட அக்கினிக் கணையை அடக்கி அவித்து அறுத்துத்தள்ளியது, உடனே அருச்சுனன் உடல் படபடெனத்தேறி தடபிடலாகச் சிறி சபதங்கள் பலவாருகக்கூறி வாயுக்கணையைக் கோறி மந்திர உபசாரம் பூசித்து அங்கர்கோன்பேரில் ஏவினுன்.

அந்தக் கணையானது சூரியன் ஒளியைப்போல் சிவந்து வெப்பமாகிய நிறத்துடன் முகமலர்ந்து திகழ்ந்து பிரகாசமிகுந்து பேரோசை மலிந்து வரும்போது, வான்மணி மகனுகிய கர்னன்கண்டு அர்ச்சுனன் பிராணனை அகற்ற வேனுமென்னும் எண்ணங்கொண்டு, நாகேந்திரன் கொடுத்திருந்த திணிந்தபலநிறைந்த அரவக்கணையெடுத்துப் பிரையோகஞ்செய்தான்.

அந்த நாகாஸ்திரமானது புறப்பட்டு அர்ச்சுனன்விடுத்த சருநெய்தல்போன்ற கணைகள்யாவற்றையும்கொன்று முன்தொடுத்த வாயுக்கணையையும் வாய்ப் பேச்சில் வென்று விழுங்கியது. தக்ஷணமே விஜயன்பார்த்து வெகுண்டு வியர்த்து இதோ விடப்போகிற என்னம்புக்கு எதிரம்பு எங்குமில்லையென்று சொல்லி சில மேகாஸ்திரத்தை யெடுத்து துபதீபங்கொடுத்து பலமாகவிடுத்தான்.

அதைக் கர்னன்கண்டு கலீரெனநகைத்து கடுமைகொண்ட காற்றின்கணையை ஏவினுன். அந்தக்கணை யானது கடலும்-திடரும்-கடும்போரடலும்-வாகுமடலும் - வருந்தக்கெடுத்து வந்து விஜயன்உந்திய மேகக்கணையைச் சிந்து சிந்தாய்ச்சிதைத்துச் சிந்தியது, அதைக்கண்ட அருச்சுனன் கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னே விண்மூடும்படியாய் மேலுமேலும் கோல்ாகல நாலாவித மேலாகிய சுவாலா மாலிகையாகிய லீலாவிநோத கோல்கள் வந்து பாயத்தொடுத்தான் அவைகளையும் அரைநொடியில் பிலத்துவாரத்தில் நுழைந்த பெரும் பாம்புபோல் பின்னிட்டகன்று போகக்கொடுத்தான்.

இப்பால், சுரேந்திரன் மைந்தன் தன் தந்தையாகியதேவேந்திரன்கொடுத்த இந்திராஸ்திரத்தைச் சிந்தித்துவந்தித்து அபிமந்திரித்துப் பிடித்து அடித்தான், அந்த அஸ்திரமானது புறப்பட்டு அம்பரத்தில் பம்பரம்போற் சுழன்று வருவதை சப்தமாவென்னும் பச்சைப்புரவி பூட்டுக் தேரினையுடைய சூரியபகவான் மகனுகிய தியாகபார

யனைக் கர்னன்கண்டு, தன்பிதாவாகியசூரியன் தந்திருந்த சூரியாஸ்திரத்தை எடுத்து நாட்டி-ஆரியர்காட்டியமந்திர முவிர்ப்பாக மூட்டிவிடுத்தான் தகுதிபெற்ற இருவர் வாளிகளும் ஒன்றுடன் ஒன்று முனைநெருங்கி ஒன்றுக்கொன்றுதாழாமல் அடிபட்டு விழாமல் உதிர வெள்ளத்தில் அழாமல் ஒன்றை ஒன்று கிரிப்போழாமல் ஒன்றுக்கொன்று உயராமல் அயாராமல் சமமாக சமர்பொருந்தி தாரணி சலிக்கும்படியாய்த் தழல்காட்டி அழல் கொடுக்கும் போது, கர்னன்முகவாளிவிடுத்து அருச்சுனன் தொடுத்த இந்திராஸ்திரத்தை அழித்துசசெழித்திருந்தான், இவர்கள் இருவர்செய்யும்போர்முனையில் இன்னம்இப்படிஎத்தனை கோடிஅஸ்திரங்கள்வந்தபோதிலும் அத்தனைகளும் இவ்விதமாகவேஎதிர்மோதிஅழிந்தனநாகக்கொடிபடைத்தராஜனும்அவன்தம்பிமார்முதலியபடைஞரும்உள்ளங்களித்து மகிழ்ந்து சேனைகளுடன் எக்களித்து தங்கள்வலிமையையாவருங் கொண்டாடும்படியாய் நிற்கின்றார்கள்.

அவர்கள் நிற்கின்றஜெயநிலையையும் பகலோன் பிரயோசனமாகப் பெற்றகாளையாகிய கர்னன்செயுமுவருகின்றபோர்த்திறந்தையும் சிலைவிஜயன்விடுக்கிறதேவதாஸ்திரங்களெல்லாம் முனைதுணிந்து முதலொழிந்து முடிசிதைந்து மூன்றாயழிந்து வேகங்குறைந்து விழ்வதையும் பாண்டவசேனைகள் கண்டுவிசனத்தில் ஆழ்வதையும்வாயுகுமாரனாகியவீமன்பார்த்து மனஸ்தாபமடைந்து தனது தேரைச்செலுத்திசீக்கிரமாயோடி அருகினிற்சென்று அருச்சுனனுக்கெதிர் நின்று ஆத்திரத்துடன் சிலவார்த்தை சொல்லத் தொடங்கினான் விமசேனன்.

ஆ, ஆ, தம்பி அருச்சுனா, மும்மூர்த்திகளாலும் ஜெயிக்கப்படாதகாலகேயநிவாதகவசாளென்னும் அசுரேசனை வென்றுமூன்றுலோகமும் புகழும்படியாக விஜயனென்னும்பேர்படைத்தும் இந்தக்கர்னன்பேரில்'நிறைந்தவாளிகள்தொடுத்து அவனைஜெயிக்க நினைக்காமல் உனக்குஈடாக எதிரில் நிறுத்திக் கொண், டிருக்கின்றாயே, இன்று நான் கதையைக்கொண்டு ஒருக்ஷணத்தில் இந்தக் கர்னனைக்கொண்டு பிராணனை நீக்கி அவன் தலையைப்போக்கி விடுவேன், ஐயோ, அப்படி செய்தால் நீ சொல்லி யிருக்கிற உன்னுடைய சபதங் கெட்டுப்போமேயென்றுதடையாயிருக்கிறேன் அடாதம்பி, நீ என்னசொல்லுகிறாய், ஆலந்தளிரின்மேல் அருந்துயில் கொள்ளும்ஆயன்உனக்குச் சாரதியாயமைந்தமாயன் அந்தக்கர்னனுக்குஇவர்மெத்த அச்சப்பட்டிருக்கும் தன்மையுடையவர்போல் ஒடுங்கியிருக்கிறாரேயல்லது ரதத்தைச் செலுத்திஉனக்குத் திடஞ்சொல்லி யுத்தஞ்செய்ய விடுக்கும் அக்கறை இவருக் கில்லைபோலு மிருக்குது, மேலும், கூலிப்படைகளைக் குறித்துப் பேசவேண்டிய காரியமில்லை, எவன்அக்கறைக்காறனோ அவன் பாடுபட்டுதன்னுடையகாரியததைத்தானே நிறைவேற்றிக்கொள்ளவேணுமே யல்லது ஒருவர்சொல்லவேணுமென்னுங்காரியமென்ன,நீயோபோதுமானவளாக்கும்புகழும் பெருமையும் பெற்று ஒருவரும்நிகரற்றவில்வேதங்கற்றுமேன்மையுற்றிருக்கிறாய்நமதுதமையன்மனவருத்தமடைந்து பாசறையிலிருப்பதைத் தெரிந்திருந்தும் இப்போர்ப்பட்டசன்னைமுகத்தில் சத்துருவைக் கொல்லாமல் ஏனோதாமதமாயிருப்பது காரணமல்ல-நம்போலிய காவலருங்கண்டு மகிழத் தக்கதல்ல ஆகையால் இப்போதே முனைந்து வேலாயுதத்துக் கொப்பாகிய ஒரு வெங்கணை கொண்டு இந்தக்கர்னனைவீழ்த்தி விட்டு மறுவேலை பாரென்று மிக உறுதியாகவும் அருச்சுனனுக்குப் பெருமையாகவும் விளம்பினான் வீமசேனன்.

இவ்விதமாக விமசேனன் சொல்லியவார்த்தையைவெற்றிபெற்ற வில்விரசிகாமணியாகிய விஜயன்கேட்டு கொவ்வைப்பழம் போன்ற வாய்மலர்ந்து நகைத்துநின்றான் அண்ணாவென்று சொல்லி கர்னனைக்கொல்லவேணுமென்று கடுங்கோபங் கொண்டு தீர்க்கவயிர மனவுறுதி பற்றி சத்தியலோக நித்தியவாசியாகிய சதுமுகனைதாங்கிஉயர்ந்தபூசை முதலிய உபசாரங்கள் எல்லாஞ்செய்து அபிமந்திரித்து கர்னனைக் கொன்று இன்றையப் போரைமுடிக்கவேண்டுமென்று தேவதாஸ்தோத்திரம் ஆசாரியவணக்கம் இவையெல்லாம் புரிந்து பிரயோகஞ்செய்தான் அந்தபிர்ம்மாஸ்திர மானது நான்குமுகத்துடன் நானாவித கோலமாய் வெளிப் பட்டு முகிலேழையுங் கருக்கி கடலேழையுஞ்சுருக்கி-புவியேழையு முருக்கி தீவுயேழையுந்தியக்கி - மண்டலம் ஏழையும்வாட்டி - மருத்துவொழுவரையுங் குடியோட்டி உலகமொடுங்குங் காலத்தில் உரத்தெழும் வடவாமுகாக்கினிபோல்அனல்விசி சிடசிடவென்றெரிந்து வந்து கர்னனைக்காய அடுத்தது, உரமாகிய மந்தரகிரியிலும் உயர்ந்த புயமார்ந்தமார்பினையுடைய கர்னராஜன் கடிந்து பெருங்கோபத்துடன்பிர்ம்மாஸ்திரம் வருவதை உணர்ந்துமிகவிரைந்து உடனே பிரமன்கணையெடுத்துவந்தித்துச் சிந்தித்து வாழ்த்தி முறைமையாகவிடுத்தான், அந்தக்கணை வந்தக்கணைமேல்விழுந்து அண்டங்களெல்லாம் பிதறவிட்டு அர்ச்சுனன் ஏற்றிய பிர்ம்மாஸ்திரத்துடன் முனைந்து எதிர்ந்து இதை அதுவிடாமல் அதைஇதுவிடாமல் கட்டிப்புரண்டுவிழுந்து முனையோடுமுனைமுட்டித்திரண்டு எழுந்து தீவ தீவாந்தரங்களிற்பாய்ந்து சாய்ந்து அகன்று - அகோரமுற்றிருந்தது.

அந்தப்பிர்ம்மாஸ்திரத்தைத்தொடுத்துத் துடிதுடித்து நொடிப்போதில் ஒருவரையொருவர் கொல்லவேணுமென்றிருந்த போர்த்திறத்தாம்பெற்றசொற்றவரிருவரும்தேர்தூண்டிமூண்டெழும் போர்செய்யாமல்வேறுபாணங்களுந்தொடாமல் கையிற்பிடித்த வில்லையும்வளையச் செய்யாமலிருந்தார்கள், மணநாறியமாலை யேறிய மணிமகுடமுடியோராகிய கர்னார்ச்சுனர் இருவரும் இவ்வாறுதேவர்கள் தந்தவரங்களினால் உருச்செபித்திருந்தமந்திரங்களை உச்சரித்துவிடுத்த பிர்ம்மாஸ்திர மாகிய வெவ்வாளிகளிரண்டும்-ஓடி - ஓடி - நுழைந்து நுழைந்து பெருங்கோபங்காட்டிபோராடுவதினால் இருவர்படைஞரும் இருதிறச்சேனையும் நடுங்கி அடங்கிமடங்கி முடங்கி ஒடுங்கினார்கள்.

அப்போது, கருத்தயுத்தகளமும் திக்குகளுமிரத்தமடுவாயெழுந்து வழிந்தோடி பூமிதேவியாருக்கு வெள்ளைப்புடைவையாகியஎழுசமுத்திரத்தையும் செவப்புச்சாயந் துவைத்ததுபோற்கலந்து செவந்நிறமாக்கியபடியால் செவ்வையாகிய அலங்காரத்தை பூமிதேவியாகிய மேதினிமாதினுடைய திருமேனிஅணிந்து சிறந்தது.

நாகாஸ்திரப் பிரயோகம்.

மறுபடியும் தினகரன்மைந்தனாகிய அங்கதேசத்தலைவன் தெறித்து-மகபதிமைந்தனாகிய கிரீடியைக் கொல்லவேணுமென்று மகிழ்ந்து கந்த்தகோபம்மிகமிக விளையத்துதித்தவெஞ்சிலை சிவ்வொளிவிளைய நாணிமாட்டிடங்காரங்காட்டி, வெருவாகிய மலைகள்செறிந்த பழங்களுடன்கிளைகள்நிறைந்த மரங்களையுடைய காண்டாவனத்தையெரிபடுத்தியபோது புகையும் சிகையும் பொறியும் நெருங்கியெழுந்து சீறித் தழல் மண்டிய காலத்தில் அந்த வெப்பம் சகிக்க மாட்டாமற் கூறிய அம்பு வேகம் போல் அம்பரத்தில் எழுந்து அருச்சுனனால் அடிபட்டுவிழுந்து இந்திரனாற் பிழைத்தெழுந்து தன்னிடத்தில் அடைக்கலம்வந்துவிஜயனைக்குறித்து பகைமேற்கொண்டு வெம்பகுவாய்கள் ஐந்தினையுடையதாகி யிருக்கிற நாகாஸ்திரத்தைவிடவேணுமென்றுயோசித்து அதற்குத்திருமஞ்சனமாட்டிநீர்துவட்டிபரிமளதிரவியம் சந்தனபாளிதம்குங்குமம்சாத்தி-தூபதீபங் கொடுத்து மணநிறைத்துக்காட்டிதேன்கனிநற் குளிர்ந்தபுட்பமாலையுஞ் சூட்டி-பூசைபுரிந்து அர்ச்சனைசெய்து அநேகங்கலப்பாலூட்டி-பிரதக்ஷணம்வந்து-அன்புடன்மிகுபக்தியாய் அடங்கி-ஒடுங்கி தீர்க்கதண்டமாகவணங்கிவழிபடு கடவுளைத் தொழுது ஆசாரியரைப்பணிந்துகரத்தாலெடுத்துநாணியில்த்தொடுத்துகலங்காதிழுத்து காரணங்குறித்து-கனன்றுவெறித்து-காண்டீபனைபழித்துவிடவேண்டியதென்று நெறித்துப்பற்கடித்துஇதழ்மடித்துவியர்வெழவிரித்து-மார்புளத்தாங்கிகாதுபரியந்தங் கைசேர்த்துவாங்கி ஓங்கி மண்டியிட்டுவிடப்போகிறசமயத்தில் பலம்பொருந்தியசாரதியென்னும்சல்லியராஜன்அவசரப்படாதேஎங்கேகுறிவைத்துவிடப்போகிறாயென்றுகேட்க,அருச்சுனனுடையகழுத்துக்குக்குறிவைத்து விடப்போறேனென்று கர்னன்சொல்ல,ஐயோ, இப்பேர்ப்பட்ட அஸ்திரத்தை விருதாவிற் கெடுத்துவிடாதே நான்சொல்வதைக் கேளென்று சிலவார்த்தைகள் சொன்னான்.

அஃதாவது; ஐயா, அங்கதேசராஜனே, நேசவிசுவாசபாசப்பரிவினையுடைய நறைவிரிதுளவமணிந்த ஜகன்மோகனமாயன் கபடநாடக சூத்திரதாரிமகாவஞ்சகன்நஞ்சகன் அருச்சுனனுடைய தேரின்முன்னே குந்தியிருக்கிறான், (அவன்) ஏகாகிலும் ஒருதந்திர எந்திரம்பண்ணுவான், ஆதலால், விஜயனுடைய கழுத்துக்கு லக்ஷயம்பிடிப்பதை விசாலமாகிய மார்புக்குநேராகப்பிடிப்பீராகில், அந்தமதுசூதனன் செய்யும் பித்தலாட்டத்துக்குத்தப்பிப்பட்டால்மார்பிற் படட்டும் அல்லவென்றால் கழுத்தில்ப்பிடிக்கட்டும் அதுவுந்தப்பினால் மண்டையில்த்தாக்கட்டும் இந்தமூன்றுந்தப்பிப்போகமாட்டாது எப்போதும் எதிரியை அறிந்துஒருகாரியஞ்செய்யவேணும் ஆகையால்பார்த்தனுடையமார்புபுதையும்படியாய்ப்பாம்புக்கணையைப்பிரயோகஞ்செய்யுமென்றுசல்லியராஜன்சொல்ல,அந்தஉறுதிவார்த்தையைவினைவசத்தினால்உணராமலும்யோசிக்காமலும் உட்கொள்ளாமலும் போனான் ஆதபன் குமாரனாகிய கர்னனானவன் மழுவாயுதந்தாங்கிய செங்கையோனாகிய பரசிராமனென்னும் தனுவாசிரியர் மனப்பூர்வமாய்த்தனக்குக் கொடுத்திருந்த வரிபெற்று மணிகட்டி வயிரமகொண்டிராநின்ற வீரவில்லானதுமண்டலமாய்வளைய அதிற்பூட்டிய நாணோசை மிகுந்துமலிய கர்னபரியந்தஞ்சமுவஇழுத்து முனைந்து தறுக ணெடுங்கோபமூண்டு (தன்னெதிர்வந்த நெடுங்கணையை அகஞ்செய்யும் இடிக்கொடியையும்மதஞ்செய்யும் மேகவாகனத்தையுமுடையதேவேந்திரன் மைந்தனாகிய சிலைவிஜயனது) அழகுபெறவழுத்துங்கழுத்து அறுந்து விழும்படியாய் மிகமொழிந்து அழல்புழுங்கிமகிழடைந்து எதிர்செறிந்து நின்று பிரயோகஞ்செய்துவிட்டான், வண்டுசென்று நின்று மதுவுண்டு உள்ளங்களிகொண்டுபாடும் நளினநாயகன் மகனாகிய கர்னன்.

வெளிப்பட்ட நாகாஸ்திரமானது பம்பரம்போற் சுழன்று அம்பரத்திலுயர்ந்துவிம்பமெனச்செறிந்துகம்பமெனவளர்ந்து ககனவாணருங்கண்புதைத்தொதுங்க - அகலிலத்தவர் கண்களும்பிதுங்க - முழைகொள் பாதலத்தவரும்பதுங்க - விழைகொள் போர்முகத்தவரும் வதங்க - அழலெழுந்துதாவிட - விஷம்உமிழ்ந்துமேவிட - அலைகடல்பொங்கிப்புரண்டிட - மலைகளுங் குலுங்கிச்சுருண்டிட - ஆதபன்சுடர்மறைய - சேடனின்றுயிர்குறைய - யாவருந்துயர்நிறைய - அம்புலிக்கலைமறைய. தாராகணங்கள்விழ - கோரார்பிணங்கள்விழ - தாராகிபுத்திரர்அழபாசோர் தெய்வங்கள்தொழ - தந்திகளெட்டுஞ்சிந்திச்சிதறப் - புந்திகலங்கிப் பாரிற்பதறப் பந்திப்பெட்டுப்பாலரும்பிதறத் - தொந்திப்பாகிய தொடுகடல்கதற - வாள்விழிவழி வரும்பொறிபறக்க வையக மெல்லாம் வாடிமுறுக்க - வாயைத்திறந்து வரும் விஷஞ்சிறக்க - வளரும்பருநா நீட்டிக்கறுக்க - மறுக்கமூண்டாம்படி பட - பட - நட - நட - மட - மட - கட - சட - படீரென்றுவெடித்து அண்டச்சுவர்விண்டுபிண்டுபோகும்படியாய் வடவாமுகாக்கினி போல் வளர்ந்தெரிந்து ஆலகாலவிஷம்போல் அழலெழுந்து பிரசண்டமாருதம்போல் தழல்சொரிந்துவாராநின்ற நாகாஸ்திரத்தைக்கண்டுகாவலர்பூவலர்நாவலரெல்லாருங்கலங்கிஅலமலங்கிவிலங்கி தலைகுலுங்கிக்கருதிநைந்து நொந்தார்கள்.

துரியோதனனுடைய சேனையுள்ளார் சிரித்துக்களித்துகாண்டீபன் இன்று ஆவிபொன்றினானென்று நாகாஸ்திரத்தைப் புகழ்ந்து அகமகிழ்ந்து கெலித்தோமென்று முகமலர்ந்தார்கள் வஞ்சமற்ற தருமராஜன் முதலாகியபடைமன்னரெல்லாரும கண்ணீரும் விசனமுங்கலந்து பெருகிஉண்ணீரும் உடலும் உலர்ந்து உருகிமனதும்முகமும்வாடிக்கருகி விசன மேற்கொண்டுதீவினையோர்போலத்தியங்கி வெறியேறி வேறுவகையில்லாமல் வினையே

கெடியென் றிருந்தார்கள்.

இவ்விதமாகக்கலங்கி ப்ரமாதங்கொண்டு ஏக்கமுற்றிருக்குங்காலத்தில் சாரதியென்னுந் திருமாலாகிய பெருமான் யாவருடைய உள்ளமும்நையும்படிக்கு நான்கழுத்தை நாடிவராநின்றநாகாஸ்திரத்தைக் கண்டுதாமேற்கொண்டிராநின்ற தேரிற்பொருந்திய சக்கரங்களானது சராசரவென்று பூமியிற்புதையும் படியாய் தம்முடைய திருவடிப்பெரு விரலாலூறுத்தி ஊன்றினர் அப்போது அக்கினிதேவனாற் கொடுத்த அழியாததேர் சக்கரங்கள்கண்ணன் எண்ணிய வண்ணப்படிக்கு பன்னிரண் டங்குலம்பாரிற் புதைந்து அன்னேரம் விரிந்தகதிர் தந்தகர்ணராஜன் விடுத்த அம்பாகிய தாம்புபோன்ற பாம்பானது ராமபாணம்போல்ஒரேஒழுங்காகவரும்போது ரதம்தாழ்ந்தமையால்தனஞ் செயனுடைய மார்பையும்கழுத்தையும்விட்டு குறிதப்பி, அருச்சுனன் தெய்வலோகத்துக்குப் போயிருந்தபோது அவன்தந்தையாகிய தேவேந்திரனல் முடிசூடிய ஜோதிமயமானமகுடத்தின் பேரில்வந்து விழுந்துமோதிஇடறிப்பின்புறத் தோடியது.

கிரீடியின் கிரீடத்தை இடறிய நாகமானது வேகமடங்காமல் பின்பரிந்தோடவும், அந்த நாகாஸ்திரத்தை நேருக்குநேர் போர்புரியும்படியாய் விஜயகாண்டீபத்தைவளைத்து பாணங்களைப்பூட்டிக்கொண்டு எதிர்காத்திருந்தபார்த்தன்பார்த்து தேவர்முதலிய யாவரும் இந்த அருச்சுனனுக்குப் பிடரியிலுங் கண்களுண்டோ வென்று மிகமகிழ்ந்து கொண்டாடிப் புகழும்படியாய் வலிமைபெற நிலமையுறநின்று இருதோளும் பரிவுற நாணியிற்பூட்டிப் பிடித்திருந்த வச்சிரக் கருடபாணத்தைப் பின்புறமாகஇழுத்து விசையாக விட்டான்.

அப்படிப் பின்புறமாகத்தொடுத்த வச்சிரக்கருட அமின்முகாஸ்திரமானது, பூர்வம் காண்டாவன தகனத்தில் இந்தப் பாம்பினுடைய தாயையுந்தொலேத்து இதன்வாலேயுங்குறைத்த பெரும்பழக்கத்தினல்பின்தொடர்ந்துபோய் அந்நாகத்தின் பருத்ததேகத்தை இரண்டு கூறுகக்கிழித்து அலமரச்செய்தது உம்பர்பிரானருள் குரிசிலாகிய தனஞ்செயன் முதுகின்புறமாய் அபிமந்திரித்துவிட்ட அமின்முகப்பிறை வெங்கணையால் இருகூறுய்க்கிழிந்ததக்ஷகன்பிள்ளையாகிய அச்சுவசேனன் என்னும் நாகம் திடதயிரிய திறத்துடன் கிழிபட்ட ஐந்து தலையோடுந்திரும்பி கர்னனிடத்தில்வந்து இந்தத்தடவைத் தப்பிப்போச்சுது இன்னெருவிசை என்னை விடுப்பாயாகில் தப்பாமல் அவன்தலையை வாங்குகிறேனென்று கூவிக்கூவிச் சொல்லியும் தன் தாயாகிய குந்திதேவியாருக்குத் தான்கொடுத்த வரத்தையும் தான்சொல்லிய சொற்சோர் வில்லாஸ்திரத்தையும் தன்னுடைய வலுமைமிகுத்த உரக்கையும்நினைத்து நாகத்தைப்பார்த்து ஓ, நாகேந்திரனே, எனக்கு எப்பேர்ப்பட்ட இடறுகள்வந்தாலும், நீங்காத் வியாகூலம் நேரிட்டாலும், நான் அதிரதத்தலைவனென்பதற்கு ஒருகணைதொடுப்பதே ஒழிய மறுகணை தொடேனென்பது என்னுடையமதம் ஆகலால் இன்னெருதரம் முனைந்து உன்னை விடுக்கமாட்டேனென்று வீரகண்டையார்ந்த அங்கர்குலாதிபன் சொல்லவே அந்தமொழிகேட்டு அச்சுவசேனனென்னும் நாகம் மெத்தவருந்தி ஔதாரிய குநிய அங்கர்பிரானை நோக்கி அரசனே காண்டாவனதகனத்தில் அகப்பட்டு உடல்வெந்து வால்தறிந்து என் தாயையுமிழந்து இனியில்லா இடர்பொருந்திய அந்த இடரையும் என் மனோதுக்கத் தொடர்பையும் நீக்கிக்கொண்டு பிழைக்கவேறுமென்று பேராசை கொண்டு நீயே அடைக்கலமென்று விரைவுடன் ஓடித் தேடி நாடிவந்து என்னே பாணமாக எடுத்துக்கொள்ளென்று உன்னை அடுத்தேன் நீ யென்னை ஆதரித்து தினத்துக்கு ஆயிரக் கலப்பாலூட்டி வளர்த்துவந்தாய் உன்னிடத்தில்ப் பூரணமாகப்புசித்து வளர்ந்த நான் என்பகையும் உன்பகையும் முடியும்படிக்கு விஜயனை வெல்லலாமென்றிருந்தேன், நான் எண்ணிய எண்ணத்துக்குப் பழுதுவந்துதே, ஐயோ, உம்முடைய வில்லானது சமனுகவளையாமல் ஒருமுனைக்கொருமுனை ஈடுதாழ்த்தியா யேறியதோ, குறிபார்க்குமுன்னே உமது கை பதறியதோ, நாணி மெருகில்லாமல்க் குதறியதோ, நேராகச்சென்ற எனக்கே புத்திசிதறியதோ, யாதோ அறியேன் ஒருவிசை பிழைபோனேன் இன்னெரு ஆசை இந்த விசைபார்த்து விடென்று நானெத்தனையோ வேண்டிக்கொண்டும் என்னை மறுபடியும் விடுவதற்குச் சம்மதியாமல் நீர்தடுத்துச் சொன்னமையால். (இவ்வுலகத்தில் மலையையும் கோபுரத்தையும் மாற்றித் தூக்குறேனென்று அநேககாலம் பூரணமாயுண்ட ஒருவன் எல்லோருங்கூடி தூக்கிவையுங்களென்றகதைபோலும், கோலமிடுகிறேனென்று நாலுவருஷக்காலமாய்ச் சாப்பிட்டு அவசரக்கோலம் அள்ளித் தெளித்த அம்மையார் அகந்தைபோலும்,) பழிச்சொல் விளைச்சு நானும் இளைச்சுதுயரால்க் களைச்சு இந்தப்பூமியில் உயிர்பிழைச்சு இருக்கமாட்டேனென்று அங்கர்பிரானை நோக்கி மிகவுமெலிந்து மெத்தவுநொந்து அந்தகனிடஞ் சேர்ந்தது அருச்சுனனல்ப் பிளக்கப்பட்ட அச்சுவசேனனென்னும் நாகாஸ்திரம்-இப்பால்-உதயகிரியி னுச்சியிலெழுந்த உதயசூரியனது ஒளிபோல்நெருங்கி உயர்ந்த கொற்ற வெற்றிபெற்ற கிரீட மகுடமானது நாகாஸ்திரத்தால் நீங்கவே குந்திதேவி தருங்கோவாகிய அருச்சுனன் இதயம் வெதும்பி நிலேக்கோபுரம் சிகரம்போ யிருந்தால் எப்படியோ அப்படிபோல் முடியிழந்து தேர்ச்சக்கரங்கள் புதைந்த தேரின் மீது வெற்றிபெற்ற வெப்புலிபோலிருந்தான்.

அப்போது சுடராகிய சூரியன் மேற்குக்கடலில் மூழ்குவதற்கு முன்னமே கிழக்குக் கடலிலிருந்து ஒருஜோதியாகிய சோடசகலைகள் நிறைந்த சந்திரனகிய முழுமதி உதித்தாலெப்படியோ, அப்படிப்போலும், புழைக்கடை வாசலாலொருத்திபோனல் தெருவாசலாலொருத்திவந்தாளென்னும் பழமொழிபோலும் கறுத்த காளமேகம் போன்ற கண்ணனவர் வைரமணிகளினலாகிய வச்சிரமுடியை தமது மச்சினனுக்காக மதுமலர்க்கரத்திற்கொண்டு இந்த அகண்ட சாம்ப்ராச்சியமும் நீயே ஆண்டுகாவல்செய்யக்கடவதென்று ஆசிர்வதித்து முடிசூடிந் தன்மையாய் முன்னிருந்தமுடி பின்னேதாழ பின்னிருந்த மு

ம. முன்னேவாழ கிரிடியானவன் சுவாமியை வணங்கித்
தாழ அவனைவாழ்த்தி அவன்முடிமேல் முடி விசேஷமா
ய்த தரிக்கருளினார், லட்சுமிபதியாகிய முகுந்தன்.

இப்பால், நாகாஸ்திரந்தப்பிப்போய்நாசனாகிய அருச்சுன
ன் பிழைக்கபோது நாகக்கொடியோன் முதல் அவனைச்
சார்ந்த வயிரமனத்தோராகிய சேனைகளும மன்னர்களும்
வாடியகமலம்போல முகமூடி திகைத்திருந்தார்கள், வா
னுறுபோற் பொழிகின்ற மதமூற்ற பட்டத்துயானைபெற்
ற பாண்டவர்களும் அவர்களுக்கு வேண்டினவர்களும்ம
ற்றச்சேனை மன்னர்முதலாகிய போகளும் ஏகாதசஸ்தா
னத்தில் குருவிருக்குந் தன்மைபோல் பேராசைகொண்
டு பரிவுடன்மகிழ்வற்றுச் சண்டையற்று நின்றார்கள்.

இங்குக்கதை யிப்படியிருக்க மத்திரதேசாதிபனாகியசுத்
திரபூபதி சல்லியன் அங்கதேசனை நோக்கி தனக்குள்த்
தானே விசனப்பட்டான். அதென்னையோவெனில், அந்
தமாயனிருக்கிறான் வகைமோசஞ் செய்வான் நீ மார்புக்
கு நேராய் லக்ஷயம்வைத்துவிடு அப்படி விட்டால ஒரு
யிடம் தப்பிவிட்டாலும் மற்றொருயிட மாட்டிக்கொளளு
மென்று நாம்சொல்லியும் நமதுசொல்லை அலக்ஷயம்செ
ய்து அங்கிகரியாமல்ப்போன இவனுடைய ஆங்காரத்தை
யும் மறுபடியும் நாகாஸ்திரம்வந்து எத்தனையோவித உ
பசாரம்புரிந்து ஒருதரம் தப்பிப்போச்சுது இன்னொருத
ரம் விடுமென்றுவேண்ட அதை மறுபடியும் விடாமல்ம
றுத்த கர்வத்தையும் யுத்தஞ்செய்யுங்காலத்தில் சமயோ
சிதமாய் யுத்தத்தை அப்போதைக்கப்போதுமறந்துநினை
வற்று விடுவதையும் இதுகளையெல்லாம் பார்த்த திருமா
லுக்கொப்பாகிய சல்லியராஜன் மனநொந்துநொந்து அ
ருச்சுனனுக் கெப்போதும் ஒப்பான போர்ச்சிங்கமாகிய
கர்னனைப்பார்த்து சிலவாக்கியஞ்சொன்னான்.

ஓ, அங்கராஜனே, உனக் கிஷ்டமாம் படிக்கு உன்னு
டைய தடந்தேரைச் சல்கியாய்ச் செலுத்துவதற்கு சக்தி
என்னிடத்திலுமில்லை இனி என்றென்றைக்கும் இந்த அ
ருச்சுனனுடைய பிராணனை வாங்கப்போறவல்லமையை
உன்னிடத்திலுமில்லை,இது உன்னாலாகாது அது என்னா
லாகாது இப்போது நேரிட்டிருக்கின்ற இந்தப்போரை உ
ன்னாலேவென்று பாராளலாமென்று அநேகம்ஆசைகொ
ண்டிருக்கும் நாகத்துவஜனாகிய துரியோதனமகாராஜனு
க்கு இந்த எண்ணம் ஒருக்காலும் நிறைவேறப் போறது
மில்லை இது கெட்டியா யிருக்கட்டுமென்று சொல்லி அ
ழகிய குந்திதேவிவயிற்றில் முதற்பிள்ளையாகப்பிறந்தஒப்
பற்றயாளிபோன்ற கர்னனுடைய தேரை கண்ணனைப்
போல்ச் செலுத்தவும் பெரும் போரைப் புகழ்பெற மு
டித்து பெருமையைவளர்த்து துரியோதானை சுடர்முடி
பெறவைக்க வேணுமென்னவும் எண்ணங்கொண் டிருந்
த மேலாகிய கீர்த்தியை உடைய சல்லியராஜன் தேனொ
ழுகிப்போன மலரைவிட்டு நீங்கிய சிறைவண்டைப்போ
லகாரியமில்லாத கர்னனுடைய தேரின்பேரில் ஏறிக்கொ
ண்டிருந்த சாரதித்தொழிலையும் அதற்குத் தகுந்த வேட
த்தையும் விட்டு தடாலென்றிரங்கி ராஜவீர அலங்காரம்
பூண்டு நீண்ட தன்னுடைய வில்லை மறுபடியுங்கைக்கொ
ண்டு அந்தமாகச் சொந்தரதமேறிமுந்திவந்துஇருந்தான்.

இப்பால், வெற்றிவீரமிகுந்த கர்னமகாராஜன் சல்லிய
னாகிய சாரதி போய்விட்டவுடனே பழையசாரதியை அ
ழைத்து தனது தேர்விடும்படியாய் அமைத்து வெங்கை
மபுலியானது மேகம்போன்றதும்பிக்கையானையுடன்வெ
ம்போர் பொருந்தப் புறப்பட்டதுபோல் தேர்செலுத்தி
நின்று ஆர்ப்பரித்து, அருமையாகிய வில்லைவளைத்து அ
ண்டங்குலுங்க நாணிதெறித்து ஆகாயத்திலிருந்த தேவ
ர்கள் ஆச்சரியப்படும்படியாய் தேகமுழுதும் தீயம்போ
ல் எரியும்படியாய் கோபங்கொண்டு அனலவீசுகின்ற அ
ஸ்திரங்களை வாரிவாரி மாரிகால மாரிபோற் றூவினான்,
அதுகாலையில் வெற்றிப்பெண்ணாகிய வீரலட்சுமியின தி
ருக்கண்ணோக்கமானது இருதோள்களிலும் பொருந்தும்
படியாய்க் கொண்டிருக்கின்ற வில்விஜயன் விஜயகாண்டீ
பத்தைப்பிடித்து அளவில்லாத பகழிக்கூட்டங்களை எய்
து பருந்துங்கழுகும் பறக்கும்படியாகிய போர்முகத்தை
வெற்றிகொண்டு சூரியபுத்திரனாகிய கர்னன்றொடுத்த க
ணைகளின் முனை முகங்களெல்லாம்பிளந்து கட்டுகள்தள
ர்ந்து போம்படிக்கு முனைகாட்டிப் பகைவரை முழுங்
காட்டினான்.

இந்த அருச்சுனன்புரிந்த வீரவெற்றிப்போரைவிட இ
ன்னொருவர் யுத்தம்பண்ணினானொன்று எவர்களைக் குறித்
து எவர்கள்சொல்லுவார்கள் செப்புதற்கரிய ஒப்புவமை
யில்லாத இப்பேர்ப்பட்ட சண்டையை இருவரும் விளை
த்து வரும்போது சகல உலகும் அதிரும்படியாய் நடந்
துவருகிற பெரும்போரின் மத்தியில் அருச்சுனன் நின்று
மேகமுழக்கம்போல் யாவருக்கும் கேட்கும் படியாய் மு
திர்ந்தகோபத்துடன் ஆசாரியனாகிய ஒருபிராமணனிட்ட
சாபமானதுவந்துஇப்போதுஉன்ரதத்தை மூழ்த்தப்போ
குதே உன்கழுத்தை அறுக்கப்போகுதே, ஆ, ஆ, அங்க
ராஜனே யென்று ஆர்கிரமித்துச்சொல்லி பராக்ரமபாண
ங்களைச் செலுத்தி எதிர்வந்தான், இந்த வார்த்தைசொல்
லி வாய்மூடுமுன்னே எதிர்த்துவந்த கர்னராஜ னேறிய
தேர்ச்சக்கரங்கள் பூமியிற் புதைந்துவிட்டுது சக்கரங்கள்
புதைந்தவுடனே கோடி வீரக்குணங்களை யுடைய குதி
ரைகள் நடையற்று நின்றுவிட்டுது அப்படிநின்ற குதி
ரைகளை ஒட்டி ஒட்டிச் சாரதியுங்கைசலித்து ஜல்தியாய்
ப் பூமியிற்குதித்து ஐயா, சக்கரங்கள் நிலத்திற் புதைந்த
தென்றுசொன்னான். அந்தச் சொற்சொல்லு முன்னே
வில்லையும் பாணத்தையும் நிலத்திலெறிந்து தலத்தி லிற
ங்கி தானேறியதேரும் தனது மனமேறிய சீரும் தலமை
யும் வலுமையும் மெலிவடைந்து நமக்கு மனப்பூர்வமாய்
சகலவித்தையுங் கற்பித்தருளிய பரசிராமர் யுத்தசமயத்
தில் மந்திரங்கள் உதவாமல் மறந்துபோகச் சாபமிட்டா
ரோ அத்துடன்கூட தேர் புதையும்படியாய் ஒருபிராமண
னிட்ட இந்தச்சாபமும் இப்போது நேரிட்டுதேயென்று
பழமைபாராட்டி நினைத்தான், (இந்தப்பொல்லாத சாப
க்கொடுமையில்லாவிட்டால் அங்கராஜனாகிய கர்னன் எப்
பேர்ப்பட்ட பலம்பெற்ற யுத்தத்துக்கும் பின்னிடைந்து
அஞ்சிப் பயப்படமாட்டான்,) அப்பால், ஒருதவிபு மில்

லாமல் தன்னியற்கையாகிய வெற்றிக்கொற்றம்படைத்த
வில்வல்லமையுடைய வீரனே அலலது ஒருவருகவியா
கிய செயற்கைப் பலன்களினல் திறம்பெறநினையாத செ
ல்வன் செங்கதிர்ப்புதல்வனுகிய கர்னன் ? தனது நெற்றி
யும் முகமும்வியர்க்க இருகண்ணுஞ் செவ்வரக்கைப்போ
லச் செவப்பேற மனதுவெம்பி கும்பியெறிய மயக்க ம
டைந்து தேர்புதையச்சபித்த சிரியோனேவாழ்த்தி திக்கு
நோக்கிப்பணிந்து எழுந்திருந்து பூமியைப்பறித்து குனி
ந்து அடிச்சட்டத்தில் தன் தோளேக்கொடுத்து நெக்கிமு
க்கி பூமிபெயர்ந்து கிளம்பும்படியாய்த் தூக்கினன் அந்த
ந்தருணத்தில் கரவேகமாகிய பற்பல பாணங்கள் விரிந்த
வில்லாகிய விஜயகாண்டீபத்தை சாநாணேசைகொடுத்து
எண்ணிறந்த கணைமாரிகளே ஏகமாய்ப் பொழிந்தான் இந்
தக் கணைகளெல்லாம் வெறுக்கையோடுநின்ற கர்ன னு
டைய மேனியை தவிட்டுச் சல்லடைக்கண்களாய்த்துளை
த்து சல்லியாக்கி இந்தப்புறத்தி லிருந்து அந்தப் புறத்தி
லும்அந்தப்புறத்திலிருந்து இந்தப்புறத்திலும் உருவியோ
டவும் உதிரங்கள்வழிந்து நிலமீது சொரியும் தாரைகளா
னது ஆகாயத்திற்செல்லுகின்ற இவன்கங்கையாகிய சூரி
யனது கிரணங்கள்கடலூடுபாய்ந்து தாக்குந்தன்மைபோ
லவும் இருந்தது, இத்தன்மை யாகிய வருத்தம் அடை
ந்த கர்னன் தனது ரதத்தை தோள் கொடுத்துத் தூக்கி
யதைவிடுத்து அர்ச்சுனனுடைய தயையற்ற முகத்தைப்
பார்த்து அப்பா-அர்ச்சுன, அதிசூரா-புகழ்வீரா - எழில்
மாரா-கிளிதோளா-திடதீரா-மலர்த் தாரா-இதசிரா-எ
ப்பேர்ப்பட்ட ஏழைகளானலும் யுத்தகளத்தில்ஆணெக்கு
ம் அடிசறுக்குமென்பதுபோல் அபாயம்வந்து தேர்விட்
டிழிந்து ஆயுதமுதலியதில்லாமல் அவதிப்படுங் காலத்தி
ல் நிராயுதர்பேரிலும் அபாயம் அடைந்தவர்மீதிலும் பா
ணங்களைப் பிரையோகஞ்செய்வது உத்தமந்தான, இப்ப
டி செய்யச்சொல்லி எந்தநூலிற் பேசியிருந்ததோ எந்த
ஆசாரியர் உனக்கு உபதேசித்ததோ, இதுதான உன்னு
டையசிறந்தஆண்மிக்கையென்பது என்று சிலவார்த்தை
பேசி வேறொரு தேரேறி பத்துத்திக்குஞ் சப்திக்கும்படி
யாய் வில்லேவளைத்து யுத்தத்துக்கெதிர் வெற்றிவிற்கொ
ண்ட விஜயனுக்கு முன்வந்து நின்று விசாலமாகிய கண்
கள் நிமிரவிழித்து புகைந்து எரிந்து பொரிந்து பொறிப
றந்து அஸ்தமாலகாலத்துச் செவ்வானம்போற் சிவந்து
ஆக்கிரம பராக்கிரமத்துடன் வியாக்கிரமம் போல்ச் சீறி
பெருங்கும்பாகிய வீரவேந்தர்களைப் பார்த்து ஒருவாக்கி
யம் பேசத்தொடங்கினன், திறமாகிய நீதிநெறிநிறைந்து
நின்ற தேர்வேந்தர்களே வாழ்ந்தாலுந்தாழ்ந்தாலும்மனம
டியாமல் ஒருநிலையாகிய உண்மைபாராட்டிவீரத்திறத்தை
க் கைக்கொண்டிருந்தவர்கள் எவ்விதத்திலும் வெற்றிபெ
ற்று வெகுமானம் பெறுவார்களே யல்லது சத்தியற்று
அவமானம் அடையமாட்டார்களென்று ஆதி நூலோர்
சொல்லியிருக்கிற தர்மநீதியை உண்மையென்று என்னு
யிருக்குள் உயிராக நம்பி நிலைபிசகாமல் நின்று என்னற்
கூடியமட்டும பாடுபட்டுவிட்டேன்,சான்றோர்மொழியா
கிய பெரியோர்கள் பேசியவாக்கியம் என்ன பிரையோச
னத்தைத் தந்தது அந்தோ, அதைநம்புவதில் இனி யெ
ன்னகாரியம் இவ்வளவு உறுதியாக மாறுமலிருந்த நான்
பெற்றபேரும் நான் அடைந்தகாட்சியும் இயாவருங்கண்
ணுற மனமாறக்கண்டீர்களே, என்னைப்போல் தர்மத்தை
நம்பி ஏமாறிப்போகாதீர்கள் தர்மத்தை நம்பி சமயத்தில்
மோசம்போனேன் பார்த்தீர்களா, பால்மாருத பக்குவசா
லிகளாகிய பெரியோர்களே சிந்தைதெளிந்து தேறுங்கள்
நேரிட்டவரைக்கும் அநுபவித்துக் கரையேறுங்கள் என்
று கர்னன் மகாமனோதுக்கத்துடன் கூவிக்கூறிய காலேயி
ல், பசுவின்கன்றுகொண்டு விளாங்கனியெறிந்த கருங்க
டல்மேனியையுடைய கண்ணன கெடாத வெற்றிபெற்ற
கர்னனுடைய இருசெவியிலும் நுழையும்படிக்கு ஒருவ
சனம் பேசினர். மங்களவாசம்பெற்ற அங்கதேசராஜனே
தர்மத்துக்கு ஒருக்காலுங்குறைவில்லை தர்மந் தலைகாக்கு
மென்பது சத்தியமே அப்படியிருக்க இவடத்தில் நீ, தர்
மத்தை ஏன் நிந்திக்கிருய் அசர்மம் ஆறுபங்கும் தர்மம் ஒ
ருபங்குமா யிருக்குமாகில் இங்ஙனந் தர்மமென்ன செய்
யமாட்டும் நீ, சத்துருக்களே வெல்லத்தக்க வல்லவனே
யன்றி வேறொன்றில்லை, உன் தருமத்துக் கொருக்காலுங்
குறைவில்லை, நீ, எப்படியும் வெல்லுவாய் அப்படியே
வென்ருயாகில் வெற்றிமுடி சூடிக்கொண்டு பலன் அனு
பவிக்கப்போகிற துரியோதனன் எப்ப எப்பவென்று கா
த்துக்கொண்டிருக்கிறன். நீ, வெற்றிபெற்றலாபத்தை அ
வன் அனுபவிக்கப்போறவனுகையால் அவன்தேடிக்கொ
ண்ட பாவமானது அவனையுங்கெடுத்து அவனுக்கு உத
விசெய்வதற்கு அடுத்த உன்னைப்போ லொத்தவனையுங்
கெடுத்தது இதற்கு ஆரென்னசெய்யலாம் அப்பனே கர்
மஞ்செய்தவன் கர்மத்தைஅநுபவிப்பான் தர்மஞ்செய்த
வன் தர்மத்தை அனுபவிப்பான், இதற்குயாதொருதிரு
குமில்லை திருகுண்டானல் நீ, ஞாயஞ்சொல்லு விறுதா
வாய் தருமத்தை நிந்தித்துக் குறைவாக ஏசி வெகுபேரு
டையமனம் ரோசும்படிக்குப்பேசுகிருய் அப்படி உலக
விரோதஞ்சொல்லாதே, அதுமிகுபொல்லாதே; என்று
சுவாமிசொல்ல வீரனுகிய கர்னன், இது உண்மை யெ
ன்று உட்கொண்டு தர்மத்தின்பேரில் தான்கொண்டிருந்
த ஆத்திரந்தணிந்து அநேகங்கோடி கூர்மையாகிய கடு
ஞ்சாயகங்களை மனோவேகத்திலுமிஞ்சிய வேகமாய் தன்
னெதிர்நின்று போராடும்வீராள் முதலிய சேனைகளின்
பேரில் எய்தான், அவன்விட்ட கணைகளினலே எதிர்ந்த
பேர்களும் நெருங்கிய தேர்களும் வேகக் குதிரைகளும்
சாரதிகளும் விற்களும் சிந்திச்சிதைந்து முனைசாய்ந்து உ
யிர்மாய்ந்தார்கள் உடனே தனது தடந்தேரைச் செலுத்
தி அருச்சுனனைமறித்து இடக்கைவில்லும் வலக்கைபா
ணமுங்கொண்டு சீறி கோடி கோடியாய் கும்பு கும்பலா
ய் நிரைநிரையாய் திரைமேலலையாய் அலைமேல்த் திரை
யாய் மலைமேல்ச்சுனையாய் சுனைமேல்ப்பனியாய் வரிசை
யாய் பந்திபந்தியாய் கூட்டங்கூட்டமாய் நாட்ட நாட்ட
மாய் சுமை சுமையாய் முகிலூர்திமின்மகனுகிய பார்த்தன்
மேனிமூடும்படிக்கு கடுங்கணைகளை மூடிக்கினன், அந்த
யாணங்களினல் அருச்சுனன் பேச்சுவச்சது வச்சபடி

யாசசு சாதிக்கு மயிர்க்கூச்சு மேலிட்டுது பாண்டவச் சேனைகளுக்கு பெருமூச்சு ஆச்சு ஓஞ்சுபோச்சுதென்று சொல்லிக் காச்சுமுச்சென்று கதறுங் காலையில் பார்த்தசாரதிபார்த்து பதறாதே பார்த்தனே என்று கனைத்து கவனைறு கருள கம்மயரி தூண்டி கணைகள் மேல்விழ வொட்டாமற் றூண்டி கருணைக் கடலாகிய கண்ணன் ஈண்டி அருச்சுனன் கைப்பிடித்திருந்த கணைகளைத் தீண்டி வழிபடுகடவுளைவேண்டி கர்னனுக்கெதிர்தேர் தூண்டி தாக்கென்று கொடுக்க சீக்கிரம்எழுந்து வணங்கி மலைபோல் இருமாப்படைந்து குறைவற்ற உயர்வுற்ற நிலைபெற்ற மலையொத்த காண்டீபத்தை வளைத்து கிருஷ்ணமூர்த்தி ஆசீர்வதித்து தமது கரத்தாலளித்த சரத்தை களங்கமற்ற சந்திரனைப்போல நிலவு பிரகாசித்திலங்கும் முத்துமாலையணிந்து வீரகண்டைதரித்த அருச்சுனன் வாங்கி வில்னுனியில்த்தொடுத்து சிறகற்ற மலைபோல் நிற்கின்ற தினகரன் குமாரனாகிய கர்னனுடையதேகமெல்லாம் நிறைத்து நிரமறைத்து உதிரம்பெருகி ஒழுகிப்போம்படியாய் மயிற்காலதோறும் மாமிசமெல்லாம வழியும்படிக்கு விடுத்தான் இவன்றொடுத்த எண்ணிறந்த பாணங்களும் தப்பாமல் கர்னன்பேரில்ப்பட்டு புண்ணின்வழியாக்கிப்பேருடல்வாடத் துன்னியது அந்தக்கர்னனையும் அவன்எண்ணிய எண்ண மறந்து இளைக்கப்பண்ணியது.

கர்னனுடையதர்மத்தை, கண்ணன்
தானம்வாங்கப் போறது.

விருத்தம்.

எத்தலங்களினும்ஈகையால்ஓகை வாகையால்எதிரிலா வீரன், மெய்த்தலமுழுதுந் திறந்துகுருதி வெயிலவன் கரங்கள்போலுகுப்ப, கொத்தலாலங்கனமகுடமுங்கவஜ குண்டலங்களுமுருக்குலைந்துங், கைத்தலமறந்திலைவிற்குனிப்புங் கடுங்கணைதொடுத்திடுங்கணக்கும்........ *

எ-து. எந்தஸ்தலங்களிலும் இவனுக்கொப்பாகியபேர்எவர்களுமில்லையென்னும் ஈகையுங்கொடுத்தலும் ஓகையும்சந்தோஷமும் வாகையும்ஜெயமும்எதிரொருவரில்லாத தன்மையுமுடைய அங்கதேசராஜன் அருச்சுனன்விட்ட அம்புகளும்புகளினால் சரீரமெல்லாங் கிழிந்து வாய்திறந்து பெருகிச்சுரந்து ஓடிவராநின்ற குருதியாகிய ரெத்தவெள்ளம் சூரியகிரணங்களைப்போல் கம்பிகம்பியாய்பீரிட்டொழுக கொத்துக்கொத்தாகிய புஷ்பங்களைக் கோர்த்துந் தொடுத்தும் பிணைத்துமிராநின்ற மாலைகளும் மகுடமும் கவசமும் குண்டலங்களும் ஆபரணங்களும் இடமாறி உருமாறி தடுமாறி ஒன்றின்மேலொன்றேறி உடல்வாடி நெறிநாடி வழிதேடி தடமாடி உன்னதத்தேர்மேற் சாய்ந்து உடல் ஓய்ந்துகிடக்குந் திசையுற்றிருந்தும் கடுங்கணைதொடுப்பதும் கார்முகம்வளைப்பதும் நாணிதெறிப்பதுமாகிய அவைவையை விடாமல் மறக்காமல் கரங்களிரண்டினுடைய வேலைகளாகக் கணைகளை இறைத்துக்கொண்டிருப்பதை, அருச்சுனன்பார்த்து கர்னன் இன்னஞ் சண்டைசெய்கிறானென்று கடுங்கோபங்கொண்டுகனற்பாணமுதலிய கணைகளை கடையுகமாரிபோற் பொழிந்து பாசிக்கொண்டிருக்கின்றான், பிறக்கினை தப்பி தேர்மேல்விழுந்த கர்னனுடைய தேகத்தில் அருச்சுனன் விடுகிற கணைகள் ஒன்றாகிலும் படவொட்டாமல் தருமதேவதை பிரசன்னமாய் நின்று வாசாமகோசர செஞ்சாமாருதம்போல் வருகிற பாணங்களையெல்லாம் கௌளீகரிக்கின்றகாட்சியை சர்வசாட்சியாயிராநின்ற தம்பரன் அறிந்து சொல்லுகின்றார்.

விருத்தம்.

அத்தவெற்பிரண்டு விறகிடையெனப்போய் ஆதவன் சாய்தல்கண்டருளி, முத்தருக்கெல்லாமூலமாய்வேத முதற்கொழுந்தாகிய முகுந்தன், சித்திரச்சிலைக்கைவிஜயனை சசெருநீ ஒழிகெனத்தேர்மிசைநிறுவி, மெய்த்தவப்படிவ வேதியனாகி வெயிலவன்புதல்வனை அடைந்தான்....... *

எ-து. அஸ்தமானகிரியை சூரியன் அடைவதற்கு இன்னம் இரண்டு விற்கிடைப்பொழு திருப்பதைக் கண்டருளி ஜீவன்முத்தாளுக்கெல்லாம் ஆதிமூலமாய் வேதங்களுக்கெல்லாம் முனைக்கொழுந்தாய், லோகவிரோதிகளைக் காயுந்தோறுங் காயாய்-ராஜாளுக்குப் போகவீடருளுந்தோறுங் கனியாய்-பிரசங்கத்தில உன்னிப்பன்னுந் தோறும் இன்சுவையாய்-எழுந்தருளிய முகுந்தன் விசித்திர வில்லைத்தாங்கி-வினைப்பேரோங்கிப் போர்தாங்கி விளைத்துவராநின்ற விஜயனைப்பார்த்து, நீ எத்தனைகாலம் நின்று எத்தனைகோடி பாணங்களைப்போட்டாலும் அதுகள் அந்தக்கர்னனை ஒன்றுஞ்செய்யமாட்டாது, அதேனென்றால், இந்தக்கர்னனுக்காகத் தருமதேவதை கண்ணருள் சுரந்து எதிர்வந்து நின்று நீவிடுக்குங் கணைகளை கௌளீகரிக்குது. ஆகையால், பாணத்தை ஏன் வீணாக நஷ்டப்படுத்துகிறாய் சற்றுநேரம் சண்டைவிட்டிருப்பையாகில் நான்போய்க்கண்டறிந்துவருகிறேனென்று ரதத்தின்பேரில் பார்த்தனை யிருக்கச்செய்து, குதிரையோட்டுங்கோல் முதலிய கடிவாளக் கயிற்றையுந் தேர்க்காலுடன் மாட்டி விட்டு மெய்மையாகிய பிரமதேயசுநிறைந்த தவவடிவம் அமைந்த வேதியனாக ரூபமெடுத்து சூரியகுமாரனாகிய கர்னனிடத்துக்குவந்து அசைவற்றுக் கிடக்குங் கர்னனைக்கண்டார்.

விருத்தம்.

தாண்டியதரங்கக்கருங்கடலுடுத்த தரணியிற் றளர்ந்தவர்தமக்கு, வேண்டியதளித்தி நீயெனக்கேட்டேன் மேருவினிடைதவம்புரிவேன், ஈண்டியவறுமைப் பெரும்பிணியுழந்தேன் இயைந்ததொன் றிக்கணத்தளிப்பாய், தாண்டியகவனத்துரகதத்தடந்தேர்ச் சுடர்தரத் தோன்றிய தோன்றால்..*

எ-து அலைகள்தாவி அடிக்கின்றகருங்கடல்வளைந்த பூமியில் தளர்வாகிய ஏழைகளுக்கு இஷ்டப் பட்டவைகளையெல்லாந்தடையறக் கொடுப்பது மல்லாமல் இன்னம் வேண்டியதுகள் ஏதாகிலுமுண்டோவென்று உபசரித்துக்கேட்டு, அளிக்கின்ற தாதாநீயென்று கேள்விப்பட்டேன் நானுமகமேருவினிடத்தில் தவஞ்செய்துக்கொண்டிருப்பேன் நெருங்கிவருத்திய தரித்திரமென்னும் வியாதியால் உழன்று நொந்தேன் உன்கீர்த்திகேட்டு இங்கோடிவந்தேன் (ஐங்காதம்போனாலும் தன்பாவந்தன்னோடெ

ன்பதைப்போல்,) நான்வந்தத்துக்கும்நொந்தத்துக்குஞ் சரியாயிருக்குது, நான்செய்தபாவம் போகட்டும் எப்படியும்உன்னைவந்துகண்டுவிட்டேனஇனி எப்படியானுலுஞ்சரிதான் இப்போது என்சிறுமை நீங்கும்படியாய் நாளைப்பின்னை யென்று சொல்லாமல் இந்தவேளையில் உன் னுடையன்றபொருள் ஏதாகிலும் ஒன்று இப்போதேதந்தனுப்புவாய் ஒப்பற்ற வேகக்குதிரைபூட்டியகிரணசூரியக் கதிரவனளித்ததோன்றலே,எப்படியுங்கிடைக்குமென்கிறமகிட்சிகொண்டுவந்தேன் என்றார்.

விருத்தம்.

என்றுகொண்டந்த அந்தணனுரைப்ப இருசெவிக்கமுதெனக்கேட்டு, வென்றிகொள்விஜயன்விசையவெங்கணையால் மெய்தளர்ந்திரதமேலிருந்தோன், நன்றெனநகைத்துத் தாத்தகும்பொருணிலெனநான்மறையவனும், ஒன்றிய படியின் புண்ணிய மனைத்தும் உதவுகென்றனுளமகிழ்ந்தான்......... ....*

எ-து. இப்படியாக மனங்கொண்டு வந்தஅந்தஅந்தணன்சொல்ல-அந்தமொழியை இரண்டுசெவிகளிலும்அமிர்தாசம்பிழிந்ததைப்போல்க்கேட்டு வெற்றிகொண்டவிஜயன்தொடுத்தவிசையினையுடைய விஷக்கணைகளினுல்மெய்தளர்ந்து மேனிமெலிந்து தேரின்பேரில் வீழ்ந்திராநின்ற கர்னராஜன் நலலது இதுவுஞ்சோதனைதா னென்றுநகைத்து விர்த்தப்பிராமணனைப்பார்த்து ஐயரோ,மெலிவாகிய இந்தநிலையில் இருக்கிறநான் இப்போது உமக்குத்தாததக்கபொருளைச்சொல்லுமென்றுகச்சைத்துவஜனுகியகர்னன் கேடக நான்மறையவனுகிய,காரணன்அப்பா இப்போது பொருந்திய உன்புண்ணிய மெல்லாங்கொடுவென்றுகேட்டார், அந்தச்சொல்லைக் கேட்டவுடனே உள்ளமகிழ்ந்து ஆநந்தவெள்ள மெழுந்து ஐயரோ, என்னுடையபாகக்கியமே பாக்கியம் என்கையிலில்லாத வஸ்துவைககேட்டு எனக்குலோபத்துவம் காட்டி நீரும்பிரையோசனம் அடையாமல் எங்கேவினைப்போநீரோ, இப் போது என்கையிலில்லாத என்னத்தைக் கேட்பீரோவென்றுஎண்ணங் கொண்டிருந்த எனக்குஇச்சை விளையும்படியாய்என்னிடத்தில்யெரும்பொருளாயிருந்த தர்மத்தைக்கேட்டீரோஇதுவேபோதும் இறைவனே யென்று உள்ளமகிழ்ந்தான்.

விருத்தம்.

ஆவியோநிலையிற் கலங்கியதாக்கை அகத்தவோபுறத்தவோவறியேன், பாவியேன்வேண்டும் பொருளெலாநயக்கும் பக்குவந்தன்னில்வந்திலையால், ஒவிலாதியான்செய் புண்ணியமனைத்தும் உதவினேன்கொள்கநீயுனக்குப், பூவில்வாழயனு நிகரலவென்றாற் புண்ணியமதனினும்பெரிதோ...*

எ-து. என்பிராணனே உயிர்நிலைவிட்டு மேல் எழுந்துகலங்கிப் பிரிந்து போயிருக்குது அதுஉடலுக்குள்ளே இருக்குதோ, அல்லது வெளிப்பட்டு விட்டுதோ, நானறிய மாட்டேன் ஆனல் வேண்டினவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துக் கொண்டிருந்த அந்தப் பக்குவகாலத்தில் நீர்வராமல்ப்போனீர் அப்பேர்ப் பட்ட காலத்திற் கொடுத்து நன்மையைப் பெறுவதற்குப்பாக்கியம் பண்ணாத பாவியாயிருந்தேன் இப்பவும்தாமஷஞ்செய்யாமல்நான்செய்தபுண்ணியமனைத்தும் இதோ, கொடுக்கிறேன் பெற்றுக் கொள்ளுமென்று சொல்லிசுவாமீ, உம்முடைய சுந்தரத்தையும் பிரமசொருபத்தையும் பார்க்கும்போது சத்தியலோக வாசியாகிய சதுமுகனும் உமக்கு நிகராகமாட்டா னென்றால் திருவடிவருந்திவந்த தேவரீருக்கு நான்கொடுக்கப்போகிற சொல்ப்பமாகிய இந்தப்புண்ணியம் உனக்கொரு விஷையமோ.

விருத்தம்.

என்னமூன்மொழிந்துகரங்குவித்திறைஞ்ச இறைவனையெழிலியே றனையான், கன்னனை யுவகைக் கருத்தினுனேக்கிக் கைப்புனலுடன்றருகென்ன, அன்னவனிதயத் தம்பின்வாயம்பால் அளித்தலுங்கையினுலேற்றான், முன்னமோரவுணன் செங்கைநீரேற்று மூவுலகமுமுடனளவர்ந்தோன்........ ....*

எ-து.என்று முதன்மையாகமொழிந்துஇருகரங்குவித்துஇறைஞ்சினன்.

அப்படிவணங்கிய கர்னனை மேகம்போன்ற திருவுருப்பொலிந்த பிராமணன் உவகைக்கருத்துடன் நோக்கி அப்பாகர்னராஜனே; நீதானமாயிருந்து கொடுப்பையாகில்நான் பெற்றுக் கொள்ளலாம் உலகம் என்னை ஒன்றுஞ்சொல்லமாட்டாது நீஉடல்வருந்தியிருக்கிற இந்தச்சமயத்தில்நான் பெறுவனேயாகில் ஸ்மாரகந் தப்பியகாலத்தில்என்னமோ ஏமாற்றிக்கொண்டு போய்விட்டானென்று என்னை இழிவாகப் பேசுவார்கள் ஆகையால் நீ; நல்ல கியாபகத் துடனே எனக்குக் கொடுக்கப் போறதை உன்னுடைய திரிகாணசுத்தியாய் தத்தஞ்செய்து கொடுப்பையாகில் உனக்கும் பலனுண்டு எனக்குஞ் சொந்தமுண்டுஎவர்களாலும் யாதொருநிந்தையுமில்லை யென்று அரவணைச்செல்வன் கேட்க அப்படியே மகாபாக்கியமையா சுவாமிகளேயென்று தாரைவார்ப்பதற்கு உடன்பட்டகர்னன் அப்போது தண்ணீர்கொண்டு வாச்செய்து தத்தம் பண்ணிக் கொடுப்பதற்கு அசக்தனும் தண்ணீர் கொண்டு வருவதற்குள்ளே தன்மனமும் அனித்தியமாகிய பிராணனும் பிரிந்துபோமோ அல்லது எப்படியாமோவென்று அவநம்பிக்கை யுடையவனுய் உடனே அருச்சுனனலடித்த அம்புகள் தனது இருதயஸ்தானத்திற்பாய்ந்து துளைத்துப் புதைத்திருப்பதுகளில் ஒருஅம்பைப்பிடுங்கி அந்த அம்பு நுழைந்த வழியால் வழிந்துவராநின்றஉதிரத்தைப்பிடித்து நான்செய்த புண்ணியமெல்லாம் மனப்பூர்வமாய் தத்தம்பண்ணினேனென்று தாரைநீர்வார்த்தான், அந்தஉதிரத்தைத் தாரைநீராகஉள்ளங்கையில் ஏற்றான்.

அவனெப்பேர்ப் பட்ட மனிதனையா ஒருவன் சாகும் போது அவனிடம்போய் தருமங்களையெல்லாம் தானங்கேட்கிறவனும் செத்தத்தை தாரைவார்த்தால் மனங்கூசாமல் தாரைவாங்குகிறவனும்,இப்படியும் ஒருபிராமணன்இருப்பானேவென்று (புராணிகர்) சங்கைசெய்து மருபடியுஞ் சொல்லுகின்றார்.

அப்பேர்ப்பட்ட பிராமணன் ஆரென்றால் பூர்வத்தில், மகாபலியென்னும் ராக்ஷசனிடத்தில் மெள்ளச்சென்று குள்ளமாகநின்று மூன்றடிமண் தானமாகவேண்டுமென்றுதாரையேற்றுக் கொண்டுபேராசைபிடித்து இந்தமகாபலியினுடைய பெரியவாள் தன்னை வெகுவாய்ப் பூசித்திருந்த நன்மையையும் யோசிக்காமல் ஆதரித்தவர்களை மறந்துநன்றியற்று மூன்றுலோகத்தையும் மூன்றடியாக அளந்து வாயிற்போட்டுக் கொண்டு கொஞ்சமேனும் எண்ணிப்பாராமல் தனக்குத் தானங்கொடுத்தவனையும் தலையெடுக்கவொட்டாமல் அவன்தலைமேல்க்கால்வைத்துஒரே மிதியாக மிதித்து பாதாளத்திலொடுக்கிவிட்ட திருவிக்கிரமனென்னும் பிராமணனானவனென்று அந்த ஆளைச் சொன்னவுடனே அடடா, ஐயையோ, அப்பப்பா அவனா அவனா, அந்தமாயனா, அங்கக்கபடநாடகனா, அவன்மொத்தத்தைமாத்திரமா தாரையாகவாங்குவான், ஊன் - மாமிசம் - உயிர்இவைகளைத்தாரைவார்த்தாலும் ஏர்த்துக்கொள்ளுவானே ஒன்றையும் விடானே-உலகத்தைஎல்லாம்ஒருவாயில் ஆவென்று போட்டுக்கொள்ளுகிறவனாச்சே, கர்னன் பிராணனுக்கு இவனாபோய்ச்சேர்ந்தான் என்று சொல்லுவதுபோல் நிந்தாஸ்துதியாகச் சமர்த்தித்தார், இதைசுககவியின் இருதயமாய்ப் பிரசங்கிவிரித்து அலங்காரஞ்செய்தார்.

விருத்தம்.

மல்லலந்தொடையவிருபனைமுனிவன்மகிழ்ந்துநீவேண்டியவரங்கள், சொல்லுகவுனக்குத் தருதுமென்றுரைப்பச் சூரன்மாமதலையுஞ்சொன்னான், அல்லல்வெவ்வினையாலின்னமும்பவமுண் டாயினுமேழுபிறப்பு, இல்லையென்றிரப்போர்க் கில்லையென்றுரையா விதயநீயளித்தருளென்றான்.......................................*

எ-து. வாசம்பெற்ற மாலையணிந்த கர்னனைபுண்ணியப்பொருளைத் தானமாகப்பெற்ற முனிவன்நோக்கி மகிழ்ந்துபுகழ்ந்து அப்பாமகாராஜா உனக்கு ஏதாகிலும்வரங்கள்வேண்டியதிருந்தால் கேளும் தடையின்றித் தருவேனென்று சலசலோசனன்சொல்ல, சூரியகுமாரனாகியகர்னன்சொல்லுகின்றான், வேதவேதியனாகியசுவாமீ எனக்கொருகுறைவுமில்லை நான் இனிமேற் பிறக்கப்போகிறதுமில்லை ஒருவேளை அல்லல்படுத்தும் வெவ்வினையின்பவிஷ்டத்தால் உற்பவம் உண்டாகிறதாகவிருந்தாலும் ஏழேழுபிறப்பிலும் இல்லையென்று என்னிடம்வந்து இரப்போர்க்கு நானும் இல்லையென்றுசொல்லாமல் இரக்கத்துடன் ஈயும்படியாகியமனம் எனக்குண்டாகும்படியாக அளித்தருளவேண்டுமென்று இரந்துகேட்டான்.

விருத்தம்.

மைத்துனனுரைத்தவாய்மைகேட்டையன் மனமலருவகையான்மலரக், கைத்தலமலரால்மார்புறத்தழுவிக் கண்மலர்கருணைநீராட்டி, எத்தனைபிறவியெடுப்பினுமவற்றுள் ஈகையுஞ்செல்வமுமெய்தி, முத்தியும்பெறுதி முடிவிலென்றுரைத்தான் மூவருமொருவராமூர்த்தி........*

எ-து. மைத்துனனாகிய கர்னன்சொன்ன வாய்மையைமெய்த்துணையாகிய கண்ணன்கேட்டு மேலாகிய சந்தோஷத்தினால் இருதயகமலம் அலர்ந்து புளகமுற்றுக்களித்து கமலமலராகிய இருகரங்களினால்த்தழுவி மார்போடணைத்து செங்கமலம்போன்றகண்களால் கருணைநீர்பொழிந்து கர்னனுடையதேகத்தை நனைத்து முழுமையும்முழுக்காட்டி ஓ உத்தமக்கொடையாளனே நீ எத்தனைபிறவியெடுத்தாலும் அந்தப்பிறவிகள்தோறும் உன்னை அடுத்துக்கேட்பவர்களுக்கு இல்லையென்னாமற் கொடுக்கும்படியாகிய மனமும் அதற்குத்தகுந்த செல்வத்தனமும் மிகுந்தகனமும் பெரியதனமும் உண்டாய் பெண்டுபிள்ளைகளுடன் மண்டலத்தில் சிற்சிலபோகம் அனுபவித்து முடிவில் மூத்தியும்பெறுவையென்று அனுக்கிரகஞ்செய்தருளினார், மூவரும் ஒருருவாகிய கிருஷ்ணமூர்த்தி.

விருத்தம்.

போற்றியகர்னன்கண்டுகண்களிப்பப்புணரிமொண்டெழுந்தகார்முகிலை, மாற்றியவடிவும்பஞ்சவாயுதங்கள் வாங்குகைத்தலங்களுமாகிக், கூற்றுறழ்மடுவிற்கராப்பொருபுழைக்கைக்குஞ்சரராஜன்முன்முன்னந், தோற்றியபடியே தோன்றினான்முடிவுந்தோற்றமுமிலாதபைந்துளவோன்.

எ-து. தன்னைப்போற்றிப்புகழ்ந்து நிற்கின்ற சர்னன் கண்டு களிக்கும்படியாய் கடல்நீரை உண்டெழுந்த காளமேகத்தின்வடிப்பத்தைக் குறைவென்று இகழ்ந்து மாற்றியகறுத்தவடிவும் பஞ்சாயுதங்கள் பிரகாசிக்கும்கரதலகமலங்களுமாகி கொல்லுந்தொழில்பெற்ற எமன்குடியாகிய தாமரைமடுவில் முதலைபிடித்துப் போராடநின்ற துவாரம்பொருந்திய துதிக்கைபெற்ற கஜேந்திரனுக்கு எதிரில் முன்னம் பிரசன்னமாகிய வாறுபோல்த்தோன்றினார், அவராரெனில் ஆதியும் அந்தமும் இல்லாதபைந்துளவணிந்தபரந்தாமன்.

விருத்தம்.

அமரரானவருமமரயோகிகளும் அமரருக்கதிபனானவனும், கமலநான்முகனுமுனிவருங்கண்டு கனகநாண்மலர்கொடுபணிந்தார், சமரவான்முனையிற் றனஞ்செயன்கணையாற் சாய்ந்துயிர்வீடவுஞ்செங்கண், ணிமலநாரணனைக்காணவும்பெற்றேனென்றுகன்னனுமுளமகிழ்ந்தான்.

எ-து. தேவர்களும்-தேவயோகிகளும்-தேவர்களுக்கிறையாகிய தேவேந்திரனும்-கமலோற்பவனாகிய நான்முகனும்-முனிவர்களும்-தேவசணம்-பூதகணமுதலிய சகலமானபேரும் ஜெயாவிஜீயவாவென்று கண்டு கற்பகக்காவின் கனகநாண்மலர்கொண்டு அர்ச்சித்துப்பணிந்து பூமாரிபொழிந்தார்கள் வாளாயுதம்-வேலாயுதம்-சூலாயுதமுதலிய கணைகளைக்கொண்டு யுத்தஞ்செய்கின்ற போர்முனையில் தனஞ்செயனாகிய தன்னியன்பாணத்தால் சங்கடப்பட்டுசாய்ந்து மாய்ந்துபோந்தருணத்தில் செந்தாமரைத்தாளனாகிய நிமலநாரணனைக் காணப்பெற்றேன்கண் காணப்பெற்றேனென்று அகக்களிப்பும் முகக்களிப்புமுடைத்தாய் ஆனந்தக்கண்ணீர்சொரிந்து உள்ளம்பரிந்து உரையாற்புகழ்ந்து கர்னன்சொல்லுகிறான்.

விருத்தம்.

அருந்தழன்மாமகம்புரிந்துங் கடவுட்கங்கையாதியாம் புனல்மடிந்தும்அனிலயோகத், திருந்துமணிமலர்தூவிப்

பூசைநேர்ந்தும் எங்குமாகியவுன்னையிதயத்துள்ளே: திரு
ந்துநிலைபெறக்கண்டும் போகமெல்லாஞ் சிறுமையெனத்து
யிரிரக்கஞ்செய்யவொண்ணுப், பெருந்தவங்கள்மிகப்பயி
ன்றும் பெறுதற்கெட்டாப்பெரும்பயனின் றிருவருளாற்
பெறப்பெற்றேனே...... ....*

எ-து. கருநிறவுருவாங்கருணைவாரியே, அருமையாகி
ய அக்கினிஹோத்திரம் மாமகம் இவைமுதலி யவைகளை
ப்புரிந்தும், தெய்வீகமபெற்ற சிரேஷ்டமாகிய கங்கைமு
தலாகிய புண்ணிய தீர்த்தங்களெல்லா மூழ்கியும் வாசி
யோகத்தி லிருந்தும் மணிமுதலிய ரத்தினங்களினாலும்
மலர்களினாலும் அர்ச்சித்துப் பூசைபுரிந்தும் எங்குநிறை
ந்த உன்னை இருதயகமலத்தில் நிருத்திப் பொருந்தும்ப
டிக்கு நிலைபெறச் செய்து மோனநிட்டையினால் அறிந்து
ம் போகபாக்கியங்களையெல்லாம் வெறுத்து ஈஷணத்தி
ரையாகியவை அகற்றி அநேக ஆத்மகோடிகளும் தன்பே
ரில் இரங்கத்தக்கதாய் தாம் ஒருவர் பேரிலும் இரக்கம்
வைப்பதற்கென்னாத பெரியதவங்கள் மிகவிருந்தும் விர
தம் நோன்பு அனுஷ்டானம் இவைமுதலியதாக விருந்து
ம் பெரும்பயனைப் பெறுதற்கருமையாகிய நின்றிருவடி
களை தேவரீருடைய திருவருளாற்பெறப்பெற்றேன்.

விருத்தம்.

நீலநெடுங்கிரியு மழைமுகிலும்வாரி நெடுநீருங்காயாவு
நிகர்க்குமிந்தக், கோலமும்வெங்கதைவாளுஞ்சங்குநேமி
கோதண்டமெனும்படையுந் துறைத்தவாச, மாலைநறுந்
துழாய்மார்புந்திரண்டதோளு மணிக்கழுத்துஞ் செவ்வி
திகழ்பாரிஜாத, காலமலரெனச்சிறந்த முகமுஞ் சோதிக்
கதிர்முடியுமிம்மையிலே கண்ணுற்றேனே............ ☼

எ-து. நீண்ட நீலகிரியும்-மழைமேகமும்-சமுத்திர ஜ
லமும்-காசாம்பூவும்-நீலமணியும்-கருவிள மலரும்-நிகரா
கிய உமது திருமேனிக்கோலமும், வெங்கதை-வாள்-சங்
கம்-சக்கரம்-கோதண்டம் என்னும் ஐம்படையும், வாசங்
கலந்த நறுந்துளவணிந்த திருமார்பும்-திரண்டதோளும்
அழகிய கவுஸ்துவாபரணமு முடைய சங்குமணி போன்
ற கழுத்தும், அபிராமங்குலாவிய பாரிஜாத மலரைப்போ
ற் சிறந்த திருமுகமண்டலமும், ஜோதிக்கிரணக் கதிர்மு
டியும், இம்மைப்பிறவியில் செம்மையான கியானத்துட
ன் கண்ணுற்றேன் நான் காணப்பெற்றேன் கண்ணனாகி
ய புண்ணியனே என்றான்.

விருத்தம்.

தருமனேமுதலானவரியகாதற் றம்பியரோடெதிர்மலை
ந்துதறுகணாண்மைச், செருவிலெனதுயிரனைய தோழற்
காகச் செஞ்சோற்றுக்கடன்கழித்தேன்தேவர்கோவுக், கு
றைபெறுநற்கவஜமுங் குண்டலமுமீந்தேன் உற்றபெருந
ல்வினைப்பேறுனக்கேதந்தேன், மருதிடைமுன் றவழ்ந்த
ருளுஞ்செங்கண்மாலே மாதவத்தா லொருதமியேன் வா
ழ்ந்தவாறே.................. ....※

எ-து. ஆசைமேற்கொண்ட தருமன்முதலாகிய என்
தம்பிமாருடன் எதிர்மலைந்து கோபக்கண்ணாகிய ஆண்மி
க்கையுடன் சண்டைசெய்து என்னுயிர்க்குயிராகிய துரி
யோதனமகாராஜனென்னுந் தோழனுக்காக செஞ்சோற்
றுக்கடன் கழித்தேன் தேவியென்றுகேட்ட தேவராஜனு
க்கு மதிக்கத்தக்க கவசகுண்டலமும் ஈய்ந்தேன் அதம
லாபமாக இருந்த நல்வினைப்பேறாகிய புண்ணியத்தை உ
மக்குத்தந்தேன்; மருதமரத்தி னடுவில் உரலுடன் தவழ்
ந்தருளிய செங்கண்மாலே ஆருமற்ற ஒண்டியாகிய தனி
யேன் மாதவத்தால் வாழ்ந்தவாழ்வுக்கு மீந்த மிருதி இ
தே சுவாமி.

விருத்தம்.

வான்பெற்றநதிகமழ்ந்தாள் வணங்கப்பெற்றேன் மதி
பெற்றதிருவுளத்தான் மதிக்கப்பெற்றேன், தேன்பெற்ற
துழாயலங்கற் களபமார்புந் திருப்புயமுங்கைவந்து தீண்
டப்பெற்றேன், ஊன்பெற்றபகழியினு லழிந்துவீழ்ந்தும்
உணர்வுடனின்றிருவாய்மை யுணரப்பெற்றேன், யான்
பெற்றபெருந்தவப்பேறென்னையன்றி யிருநிலத்திற் பிறந்
தோரில் யார்பெற்றாரோ........,.......... .,....... .....※

எ-து. எது எப்படிபோனாலும், பிர்ம்மாவினால் திரும
ஞ்சனம் ஆட்டிவைக்கும் ஆகாயகங்கை பொருந்தின சம
மூன் திருவடிகளை வணங்கப்பெற்றேன், நாயினுங்கடைய
னாகிய சிறியனைத்தாயினுங் கருணைசுரந்து, மேன்மைசிற
ந்த திருவுளத்தால் மதிக்கப்பெற்றேன், தேனிறைந்த து
ளபமாலையும்-களபமார்பும்-திருப்புயமும்-கைநீட்டி என்
னைத் தீண்டப்பெற்றேன், அருச்சுனன்விடுத்த ஊனாகிய
மாமிசந்தினிந்த பகழிகளினால் அடிபட்டழிந்து ஆன்மா
ஒழிந்து விழ்ந்த நாயேன், இந்தக்காலத்திலும் நல்லஞா
னத்துடன் உமது திருநாமங்களாகிய திருமந்திரத்தைச்
சொல்லவும்-தேவரீர் திருவாய்மலர்ந் தருளிய வாக்கியத்
தைஉட்கொள்ளவும்பெற்றேன். நான்பெற்ற பெருந்தவப்
பேற்றைப்போல்இந்தப்பெருமைதங்கியகர்மபூமியிற் பிற
ந்தோரிலும்இறந்தோரிலும்யார்பெற்றார்கள், பேறுபெற்ற
பேர்களில்என்னைவிடஒருவருமில்லைஇறைவனேயென்று
மகிழ்ந்து வணங்கினான் அங்கசசூரிய குமாரனனவன் இ
ன்பம் அடையும்படிக்கு காளிங்க நர்த்தனஞ்செய்து கன்
றுகொண்டுவிளாங்கனியெறிந்து விளையாடிய கண்ணன்
கட்டுரைகளை விட்டுரைக்கின்றான்.

விருத்தம்.

என்றுமகிழ்வுறவணங்குமெல்லிமைந்தன் இன்பறவன்
புறவாவினியென்றுபின்போய்க், கன்றுகொடு விளாவெ
றிந்த கண்ணன்மீளக்கட்டுரைத்தா னிதையுணர்தி கடவு
ளாகன், அன்றுனதுகவஜமுங்குண்டலமும்வாங்க வழை
த்தேனுங் குந்தியைக்கொண் டரவவாளி, ஒன்றொழியத்
தொடாதவகைகொள்வித்தேனும் உற்பவத்தினுண்மையு
ணக்குணர்வித்தேனும்.—தக்கன்றன்மகவானவுரகவாளித
னஞ்செயனைக்காணமற்சாய்வித்தேனு, மெய்க்கருணை யு
ன்பொருட்டாலியானேயென்று மீண்டும்போய்த் தேர்வ
லவன்விஜயற்கானான், எக்கடலுமெக்கிரியு மெல்லாமண்
ணு மிமையோரு மானிடமும்யாவுமாகி, மைக்கணிளங்
கோவியர்நுண்டுகிலுநாளும் வரிவளையுமடநெஞ்சும் வா
ங்குமாலே...... .... ※

எ-து. நன்னய மிர்துவசன மன்னனாகிய கன்னனே
நான்சொல்லுவதை உணர்ந்துகேள் தேவேந்திரனை விடு

த்து உன்னுடைய கவசகுண்டலத்தை வாங்கச்செய்தவனும் குந்திதேவியைக்கொண்டு உன்உற்பவத்தின்தன்மையை உணர்த்திவைத்தவனும் நாகாஸ்திரம் ஒருதடவையொழிய இரண்டாந்தரம் விடாமல் குந்திதேவியைக்கொண்டு வரங்கொள்ளச்சொன்னவனும்-தக்ஷகன் பிள்ளையாகிய அச்சுவசேனனென்னும் நாகாஸ்திரம் தனஞ்செயனைக்கொல்லாமல் தப்பிப்போகச் செய்தவனும் நான்தான் அதேனென்றால் விசுவாசமாகிய உன்னிடத்தில் எனக்கும என்னிடத்தில் உனக்கும் அன்புமிகுந்த பரிபூரணக்கருணை யிருப்பதினால் உன்னைச்சீக்கிரம் என்னிடத்துக்கு வருவித்துக் கொள்ளவேண்டுமென்று உன்பொருட்டில் நான் இவ்வளவு பிரயாசமெடுத்துக் கொண்டு மெத்தவேலைசெய்தேன் இல்லாவிட்டால் உனக்கு இவ்வளவு காரியம் கிட்டாது என்றுகூறி உருமறைத்துத் திரும்பிப்போய் விஜயனுடைய தேரிலேறி தேர்ச்சாரதியானார் ஆவாரென்னில் எல்லாக்கடவுளரும் எல்லாமலையும்எல்லாவுலகும் எல்லாந்தேவரும் எல்லாமானிடரும்எல்லாவுயிரும் யாவர்காணுகி மையிட்டிய கருங்கண்களை யுடைய இளங்கோவியர்களின் வஸ்திரங்களையும் வரிவளையல்களையும் நாணத்தையும் அவாருடைய மடநெஞ்சாகியபேதைமையையும் வாங்கும்படியாகியமாமாயன் பழையபடி பார்த்தனுடையதேரில் சாரதியாயிருந்து அர்ச்சுனனைப் பார்த்து சூரியன் மேற்குச் சமுத்திரத்தில் விழுமுன்னமே கர்னனைக்கொல்லென்று சொல்ல பகைமேற்கொண்ட பார்த்தன் சுவாமியின்வார்த்தையை உறுதியாகக்கொண்டு அஞ்சரீகமென்னும் உரிய அஸ்திரத்தை யெடுத்து அநேக உபசார ஆசார விதியாவுமுடித்து வழிபடுகடவுளைத்துதித்து ஆசாரியனைமதித்துப்போற்றி கர்னனுடைய இதயத்துக்கு லக்ஷயம்வைத்து விசாலமாகிய உலகினுள்ள அரசர்களெல்லாம் அதிசயித்து மகிக்கும் படியாய் எய்தான் அந்தக்கணையானது வந்து தகைவுடைய பெரியோர்களின் சாபச்சொல்லைப்போல் அங்கதேசாதிப னுடைய இருதயத்திலுருவிப் புகுந்து தீயருக்குரைத்தநல்லோர் மொழிபோல் அப்பாலோடிப் பூமியைத்துளைத்து பாற்கடலிற்குளித்து வேகமடங்காமல் வீபற்சுவினிடத்திற் போய் அடங்கியது.

இப்பால், கர்னமகாராஜன் பூமிமேற் சாய்ந்தான் உடனே கருடபகவானுடைய திருத்தோளின்மீது காயாம்பூவண்ணனாகிய கரியமாலைச் சற்றுநேரத்துக்குமுன்னேகாகிளியிற்கண்ட கண்காட்சிபோல் ஆகாயத்திலும்கண்டு தரிசித்து கிருபைசெய்யும்படியாய் வானத்தில்எழுந்தருளியிருந்த ரிஷபவாகனரூடராகிய உமாபதியையும் இந்திரன்முதலாகிய அந்தரவானவரையும் சண்முகக்கடவுளையும் தேவகணங்களையும் தந்திமுகனையும் முந்திய மந்திரமுனிவரையும் நெருங்கிப்பார்த்து ஆறும்பெறுதற் கரிதாகிய அன்புடன் போற்றிவாழ்த்தி அடிவணங்கியேற்றி புருஷசிலாக்கியனாகிய கர்னமகாராஜன் இரும்பு உண்ட திரும்பாநீர்போல் வீரசுவர்க்கம் அடைந்தான். மானாபரணனாகிய சேனாபதி சாயவே ஜெயம்பெறக்கருதிப் போர்க்களத்திலிருந்த புரவலர்களும் நான்கு படையும்பயந்து உடலலைந்து உயிர்கலைந்து புறங்கொடுத்தோடினார்கள்.

அந்தச்சேதியை வேவுகாறரால் கேள்விப்பட்ட குருடன்மகனாகிய குருகுலவேந்தன்-வாடி ஓடிவந்து அந்தோ கர்னா-அண்ணா கர்னா-அண்ணா-அண்ணாவென்று தாயிழந்த சேய்போற்கதறி பெருமூச்சுவிட்டு உயிர்சோர்ந்து உடல்தாழ்ந்து மலைமேல் மலைவிழுந்த தன்மைபோல கர்னன்பேரில் அடித்துமோதி விழ்ந்து முகத்திலும் மார்பிலும் மோதிக்கொண்டு அரண்டு-புரண்டு-மருண்டு-சுருண்டு-எழுந்து-விழுந்து-ஆ ஆ, வென வாய்விட்டரற்றி ஆவிசோர்ந்தான்.

அப்போது, பக்கத்திலிருந்த உரியோர் பெரியோர்முதலிய பேர்கள் வணங்காமுடியோனைத் தேற்றி விசனமாற்றி அடிபணிந்துபோற்றி ஐயா, தேவரீர் இளைக்கலாமா களைக்கலாமா வணங்காமுடி வளைக்கலாமா இது கடைசியாகிய காலம் இந்தவேளையில் களையாதியொன்று வேண்டிய உறுதிகளைக்கூறித் தேறச்செய்தார்கள், அதுகாலையில் சோபம்ஆறி விசனமாறினவனைப்போல் தேறிகர்னனுடைய திருமுகத்தையும் அவனதுதேகத்தையும் தனது இருகரத்தால் தடவித்தடவிப்பார்த்து விசனப்படத்தொடங்கினான்.

அண்ணா, சத்துருக்களுடைய சேனாசயினியமென்னும் ஆழமாகிய கடலில் அகப்பட்டு ஆழ்ந்து நிலையில்லாமல் நீச்சலில் நின்று ஆதரவற்று அவதிப்பட்டுக்கொண்டு ஆயாசம் அடைந்து அழுந்திப் போகாமற் கைகொடுத்து என்னைக் கரையேற்றிவைப்பதற்கு அழகிய தெப்பமாயடுத்து எல்லாத்திறங்களிலும் வல்லபமாகியநான் வாய்விட்டுச் சொல்லுமுன்னே என்மனக்கருத்தறிந்து வண்மைப்படுத்தியும் வளம்பெறச்செய்தும்-உண்மை உரைத்தும்-உற்றது-அற்றது-சொல்லிக்கொள்ளுவதற்கு உயிருடலாகியும் உற்றதுணையாய் உயிர்க்குயிராய் தோழனுமாகிய உம்மை இன்றுதோற்று விடுவேனாகில் யாரும் இணையில்லாத அங்கராஜனே, உன்னைவிட்டு இனியாரைக்கொண்டு அரசாள யிருக்கின்றேன் ஐயோ, அந்தோ, சமுத்திரம்வளைந்த உலகத்தை ஆளும்படியாகிய சூக்ஷ உபாயமும் இந்தப் பெருஞ்சேனைகளினுடைய சமபந்தமும்-இதுகளையெல்லாம் என்னெஞ்சி லடக்கிவைத்த மன்னனே உன்னை நினைத்து வருந்தி வருந்தி வாடிவாடி துணையற்றவர்போல் மாய்ந்து வீழ்வேனோ-அல்லது, அமராடப்புகுந்த தலைநாளில் விளைந்த க்ஷாத்திரங் கொண்டு போர்புரியவாநின்றவீமசேனனுக்கு தாழ்வடைவேனோ உன்னையொழிந்தும்-என் தம்பிமார்களைப் பிரிந்தும்-புத்திரவர்க்காதிகளை இழந்தும்-உரியோர்முதலிய பெரியோர்கள் அழிந்தும் நான் தனித்திருந்தும் இனி வாழ்வேனோ என்வாழ்வே-என்மனவலியே-என்மதியே-கர்னா, இதோ உன்பின்னே வருகின்றேன், வந்தேன் வந்தேன், வந்தேனேயென்று துரியோதன மகாராஜன் ஏங்கித் தளர்ந்து பேரிரக்க முடையவனாய்ப் புரண்டுவீழ்ந்து அழுதகாலத்தில், பக்கத்திலிருந்த பார்த்திபரெல்லாரும் மனம் நிறைந்த வருத்தத்துடன் வருந்தி வல்லமையிழந்தோம், இனி நாங்கள் என்னகாரியம், இஃதென்னவீரியம், என்று இரைந்து கண்கலுழ்ந்தார்கள்.

அந்தவேளையில், மிகுந்த துயரப்பட்டுத்தேறிய மத்திரதேசாதிபனாகிய சல்லியராஜன், வில்வீரங்களையும்-வீரத்திறங்களையும் வெகுவாயெடுத்துப் பற்பலவாகப் பேசி மேகம்போ லிளைத்தழாநின்ற துரியோதன மகாராஜனுடைய துயரத்தையும் போக்கினன், என்னசொல்லித் தேற்றினாலும் ஆர்த்து-முகம்வேர்த்து கர்னனை நசுவிற்பார்த்து, விசனமும்-துக்கமும்-விக்கலும்-முக்கலும்-கக்கலும்-பெருமூச்சும் உடையவனாகயிருப்பதைச் சகுனியாகிய மாமன்கண்டு, எதிரில் இருக்க இருக்கத் துக்கமேமிகும் துயரம் அகலாதென்று யோசித்து, மருமகனாகிய வண்ணகாமுடி அரசை மெல்லத்தேற்றி தங்களுடன் கொண்டு போய்ப் பாடிவீடு சேர்த்தார்கள்.

ஆகாயத்தினிறைந்து லீலாவினோத ஆட்ட வேடிக்கை பார்த்திருந்த கங்கைவேணியனும்-பிர்மாவும்-தந்திமுகனும்-தேவேந்திரன் முதலாகிய யாவர்களும், தனஞ்செயனுக்கும் கர்னனுக்கும் நடந்த யுத்தத்திறங்களைக்கண்டுமனமகிழ்ந்து தங்கள் தங்களுடைய சார்புக் கெழுந்தருளினார்கள்.

தனஞ்செயன் கைக்கணையால்தரையில்வீழ்ந்த ஓரோராசியான மேகமுழக்கங்களைப்போல் அந்தர துந்துபி துந்துந் துமமென்று முழங்க-இமையோர் ஆர்ப்ப-இருதிறப்படைஞருந் தத்தளித்துக்கொண் டிருக்க, இப்படியாகிய சமயத்தில் தேகமெல்லாம் அக்கினிச்சுவாலையாகயெரிய-உள்ளும்புறம்பும் ஓரோவிலையாய்க் காய்ந்து வருந்தி-புத்திரசோபத்தால் கருக்கி-பிராம்மணர் முதலியபேர்கள் அள்ளிக்கொடுக்குஞ் சலத்தை-அருந்தி-நாவைநனைத்துக்கொண்டு அழகிய கிரணக்கரங்கள் ஆட்ட மில்லாமற் சுருங்கி ஆழியிற்பொருந்தி அழிவதேயென்று மனந்திருந்தி மேற்கடலோடு முழுகினன். அவனாரெனில், மிகு கொடையாளனாகிய கர்னனென்னும் புத்திரனைப் பெற்ற மித்திரனானவன், இப்பால்-முதன்மையாகஎதிர்த்துபோர்புரிந்த விஜயனுடைய வெற்றியைக் கண்டு மற்றையெல்லாரும் மெச்சப் புகழ்ந்து மகிழ்ந்து முனைவீராள் முதலியபேர்களெல்லாரும்புடைசூழ்ந்துமொய்ப்பபலம்பொருந்திய மலைபோன்ற புஜபலசாலியாகிய வீமன் படைமன்னருடன் சேமமாக மொய்த்துவர நகுலசகாதேவராகிய இளையவர்கள் வளையவர ஒக்கல்முதலாகிய பந்துக்கள் பக்கங்களில்வர திருமால் தேர்செலுத்திவர போதுபோவதற்கு முன்னே புறப்பட்டு அநேகவாத்திய கோஷையுடன் ஜெயபேரி முழங்கும்படியாய் தருமராஜ னிருக்கும் பாசறையைப்போய்ச் சார்ந்தார்கள்.

கிருஷ்ணர்ச்சுன ரிருவரும் இரதம்விட் டிறங்கி எதிரேடி தருமநந்தனருடைய திருவடியில் திருமுடிசூடிவீழ்ந்தார்கள்-மங்களாசனம்பெற்று முரசக்கொடியோனுடைய மனமகிழும்படியாய் போராடிய போராட்டையும் கர்னன் உயிர்விட்ட பாட்டையும் சொன்னார்கள்.

இதைக்கேட்ட வுடனே பொறுமையை யுடைய புண்ணியனாகிய தர்மநந்தனன்புளகாங்கித மூற்றுதம்பியாகிய தனஞ்செயனுடைய மலைபோன்றதோளைநோக்கும் விஜயகாண்டீபத்தை நோக்கும் இதழ்மலர்ந்த செந்தாமரைக் கண்ணனுடைய திருமுகமண்டலத்தை நோக்கும்தனதுதம்பிமுன்னம்வெம்பிகர்னனைமுடிக்கிறேனென்றுசொல்லியிருந்தவஞ்சினங்களைநோக்கும் சூரியகுமாரனாகுங் கர்னனுடையவல்லமையைநோக்கும் மறத்தின்திறத்தைநோக்கும்இவ்விதமாகவிளைத்தவினைச்செயலை நோக்கும் செம்பைக்காய்ச்சியுருக்கியதைப்போல்தீப்பொறிமலிந்து செவந்திருக்குந்தம்பியினுடையகோபக்கண்களைநோக்கும்-ஜன்மாந்திரத்தினதபோபலனைநோக்கும்-பலம்பொருந்திய ராஜராஜேந்திரனாகிய துரியோதன மஹாராஜனுடையவஞ்சனைபொய்முதலாகியதீவினைகளை நோக்கும்-தனஞ்செயனேதான்கோபித்த சமயத்தைநோக்கும் இப்படிக்கெல்லாம்எண்ணிஎண்ணிப்பார்த்துஇந்திரஜெயித்தை ஜெயித்துவந்த இளையபெருமாளைக்கண்டு மிகமகிழ்ச்சிகொண்டஇராமனைப்பார்க்கிலும்பதின்மடங்கு அதிகமாகிய களிப்புற்றுஆநந்தங் கொண்டார் தருமராஜன்.

இவடத்திலிப்படியிருக்க கர்னனிடத்தில் புண்ணியதானம் வாங்கிக்கொண்டுவந்த புருஷோத்தமன் அருச்சுனனிடம் வந்து சேர்ந்து இனிமேல்க்கர்னனைக் கொல்லும்படியாகிய உன்வேலையை நீ பாரென்றுசொல்லிப்போட்டு குந்திதேவிமுதலாகிய பேர்களிருக்கும் பாசறையினிடத்துக்குப்போய் சபதங்கூறியபடி முதன்மையாகப் பகைத்து எதிர்த்துப் போர்புரியும் விஜயபராக்கிரமன்தொடுத்தஅஞ்சரீகமென்னும் அஸ்திரத்தால் நெஞ்சங்கிழிந்து ஐவருக்கு முன்னோனாகிய அங்கதேசாதிபன் இன்றுமுடிசாய்ந்து வீழ்ந்தான்-சூரியன் அஸ்தமானமாய் அந்திப்போது வருவதற்கு முன்னே பிராணன் போய்விடுமென்று அசரீரிபோல் ஆகாயத்தில் நின்று இந்தச்சங்கதியையெடுத்துச் சொன்னார். இந்தவாக்கியங் கேட்டவுடனே தாயாகிய குந்தி தேவியானவள் மனமுருகி கண்ணீர்பெருகி கண்கள் சோர குழல்சரிய ஆபரண முதலாகியவஸ்திரங் குலைய வயிற்றிலு முகத்திலும் அறைந்து கொண்டுகைநெரித்து என் செய்வேனென்று முடிமேலடித்துக் கொண்டு தலைமேற்கைவைத்து கோ கோ வென்றழுது போர்க்களத்துக்கு வந்து முதற்பிள்ளையாகிய கர்னன்மேல்மோதிவிழுந்து மகனே-மகனேயென்று அழுதாள்,மயில்போற் சாயலும் குயில்போற்குரலும் வெயில்போற்சுடரும் - அயில்போல் விழியு முடையஐவர் களுக்குஅன்னையாகியகுந்திதேவியானவள் அப்பாமகனே-என்னையாகொடைக்கையா என்னணியே - கண்மணியே-தேசுறும் விண்மணியே மாசிலாமணியே குந்திபோஜகுலத்திற் பிறந்து என்தந்தையாகிய சூரசேனனிடத்தில் வளர்ந்து கன்னிமாடத்திற் கன்னிகையாயிருந்து சூரியபகவானைப் பரிந்து அவருடைய திருவருளால் உன்னைப் பெற்றேன் என்னைப் பெற்றவனே நீதி செலுத்தி உலகத்தையாளும் அரசனுடைய பெண்ணானவள்கன்னி கழிவதற்கு முன்னேபிள்ளையைப் பெற்றாளென்று உலக நிந்திப்பாகியபழிச்சொல்லுக்கஞ்சி எள்ளத்தனையும் இரக்கமில்லாதபாவியாகிய நான் உன்னைப்பெற்ற அப்போதே பெட்டகத்திலவைத்து கங்கையாற்றில் விட்டுவிட்டேனடா காதலனே திரிதாஷ்டிரபூபதியின் குமாரனாகிய துரியோதானி

டத்திற் சேர்ந்து அவனுக்கு உக்கமித்திரனுயிருந்துசத்துருக்களாகிய பாண்டவரைவென்று பூமியைக்கவர்ந்து அகண்டசாம்பிராச்சிய பட்டாபிஷேகங்கொண்டு அன்புகூர்ந்திருக்கப்போமுவென்று நான்கேள்விப்பட்டும் உனனுடைய வீரத்திறங்களைக்கேட்டும, உனதுபேர்கேட்டும் மெத்தவும் மேலாகிய நன்மைபொருந்திய நமதுதவப்பயனென்றுநினைத்து எங்கிருந்தாலுஞ் சுகமாயிருக்கட்டுமென்று மனமகிழ்ச்சியாய் வாழ்ந்தேன் அடா என்னுயகமே, இவ்வுலகத்தை ஏகசக்ராதிபதியாய் ஆண்டு மனம் எலேசம் இடத்திலிருக்கும் எல்லாப்பொருள்களின்மேலும் இச்சைக்கு அம்பரத்தை ஆளவேணுமென்னும் ஆசைகொண்டு எங்களை எல்லாம்விண்டு அமரரைக்கண்டு அவ்விடத்தில் அரசாளச்சென்றையோ அருந்தவமே சதுர்ப்பொருளாய்ப்பிறந்த தருமராஜன்முதலாகிய தம்பிமார் ஐவர் துரியோதனன்முதலாகியதம்பிமார் நூறுபேர் ஆக ஆற்றுமைந்துபேரும் உனனுடைய இங்கிதகுணங்களையறிந்து குற்றேவல்செய்யவும் வார்கடற்சூழ்ந்த வையகமெல்லாம் ஒருகுடைநிழலில் நீ ஆளப்பதம்படைத்தும் கல்வினைவழியாய்ப் பயன்பெறுமலபபோய்விட்டாயே மேகமும் அஞ்சும்படியாய்க் கொடுக்காநின்ற கரனே, அமுதாகரனே, அப்பா கர்ணனே, தேவர்கள் உன்னை ஏமாற்றிய மாய்கையினால் மதிமயங்கி கலங்கிப்போய்விட்டாயோ காதலனே அருச்சுனன் உறுக்கி உறுத்திவிட்ட அஞ்சலிகம் என்னுங்கணையினால் நீ மாண்டுபோவதை அறியாமல் உணர்ந்திடாமல் அருச்சுனன்பேரில் நீ விடுக்கப்போகிற நாகாஸ்திரம் ஒருதரமொழிய மறுதரம் விடாதொழியும்படியாய் கொடியமனத்தையுடைய கொடியேன் உன்னிடத்தில உறுதியாய்வரம்பெற்றேன் அடாமகனே உன்னுயிருக்கு நானே உலைவைத்தேனடாமகனே, உன்தம்பிமார்களின் பிராணனை ரட்சிக்கும்படியாயும்பெற்றேன் இந்தப்பாவியானவள் பெற்றும் பெருக்கொடும்பாவியென்று எண்ணுமல் என்சொல்லைத்தள்ளாமல் பெற்றதாயென்று என்னைப் பூரணமாய் நினைத்தோகோடி கோடி கோடாகோடியாய் சேதிகருங்கணைகளைச்செலுத்திப்போர்முகத்தில் விராதிவீரரெலலாரும் மதிக்கும்படியாய் துதிக்கும்படியாய்ச்சிதைந்து சிங்கமாளுகிறவனைக்கும் பிராணன்போகிறவனைக்கும் எனக்குக்கொடுத்தவாமும் வாக்கும்பிசகாமல்நிலைநின்று உடல்கின்று உயிரோடியும் சத்தியந்தப்பாமல் தருமத்தைக் காத்த, தநயனே தேவர்முதலிய யாவர்க ளாலுந் துதிக்கப் பெற்ற தேவேந்திரனுக்குஉன்னுடன்பிறந்து உன்னுயிர்த் துணையாயிருக்க கவசகுண்டலத்தைக்கழட்டி மனமடியாமற்கொடுத்து இப்போது நீ மடிந்தையே என்மதலையே கான்முளையே பூர்வத்தில் உன்னைப் பிள்ளையாகப்பெறும்படிக்கு விதிபெற்றேன் அல்லாமல் உன்னைவளர்க்கவும் இடுக்கவும் எடுக்கவும் அணைக்கவும் முத்தியிடவும் கொஞ்சவும் குலாவவும் தொட்டிலேற்றவும் தாலாட்டவும் பாராட்டவும் சீராட்டவும் செந்தூரத்திலகமிடவும் திருமஞ்சனமாட்டவும் சிற்றுடையட்டவும் நீ தெருவில்விளையாடி அம்மாவென்று அழைத்தோடிவந்து என்னை அணைக்கவும் என்னருகிற்படுக்கவும் அமுதுண்ணவும் அன்னம் ஊட்டிவைக்கவும் கண்ணுக்கலங்காரமாய்ப்பார்க்கவும் பாக்கியம்பண்ணுத மகாபாவியாகினேன் தவம்பெருத தரித்திரியாகினேன் தேறித்தெளிந்த மாதவர் அடைதற்கரிதாகிய மோக்ஷம்பெற்ற பாண்டுபூபதியுடன்கூட முடிந்துபோகாமல் இக்கோலங்களைக் கண்டிருந்தேன் உயிர்வைத்திருந்தேன் காயகனுடன் செல்லும்படியாகியபேறு என்போலொத்த பாவிகளுக்குக்கிடைக்குமோ கிடைக்காது கன்னானே, கல்லினுங்கொடிய கெட்டிமனம்பெற்ற காதகிக்கு உன்கையினால் நீரும் நெருப்புங்கிடைக்குமென்று தேகம்வைத்திருந்தேன் அதை மோசம்பண்ணிப்போன மகனே மகனே யென்று வாடிக்கரைந்து நீ என்பிள்ளையென்றும் நான் உன்தாயென்றும் பலரும் புகழப்பெறுதபாவியை நீ ஆவிவிடும்போது சிந்தனைசெய்தையோ அல்லது நிந்தனைசெய்தையோ அடா ஐயா என்னையும் உன்னுடன் அழைக்க எண்ணுயோ இதற்குத்தகுந்த யோசனைபண்ணுயோ அன்னுய் துயரப்படுவானேனென்று ஓடிவந்து ஒரு ஆறுதலைசொல்லாயோ அடா நீதிபரனே நான் விசனப்பட நீ மறைந்திருப்பது ஞாயமோ இல்லை நரனுல்நேரிட்ட அபாயமோ உடலிற்பாணங்கள்தைத்த காயமோ பட்சி பறந்தோடிப்போன மாயமோ என்பேரில் நீ வைத்தநேயமோ நீ எங்கேயிருக்கிறாய்சொல் ஆகாயமோ சங்கு சக்கரக்கையன் உன்னைச்சதித்தானே எனக்குமூத்தபிள்ளை என்று உன்னைக்கொஞ்சமதித்தானே பஞ்சணைப்பட்டுப் பரப்பித்தூங்கின்றையோ இந்தப்பாரிற் புழுதிமேற்புரண்டையே உன்பொன்னனமேனி கறுத்துதே நீசெய்தபுண்ணியமெல்லாம் இதைப்பொறுக்குதே யென்று கன்றையிழந்து நினைந்துநினைந்து மறுக்கங்கொண்டழும் பசுவைப்போல் என்னபாடுபட்டுக்கதறினுள் அவளாமொனில் கலாபம்விரித்துவீசி காரைக்கண்டு உடல்கூசி இளமயிலாடுகின்ற மலைகளெருங்கிய குருநாடனுக்குத் திருத்தேவி குந்திதேவி.

இப்படிப் பலவாறுகப் புலம்பி கண்ணீரால் கையலம்பிக் கவலைப்பட்டழுகின்ற குந்திதேவியை அமர்க்களத்தில் நிறைந்து நின்ற அரசர்யாவரும் அவளழுவதைக்கேட்டும் பார்த்து மதிமயக்கும்படி அதிசயித்து ஏங்கி ஏங்கிச்சென்று இருபாளையங்களிலும் சொன்னுர்கள் இச்சொற்கேட்டவுடனே பேரறத்தின்புத்திரனுகியதருமராஜன்-வீமசேனன்-அருச்சுனன் நகுலன்-சகாதேவன் முதலிய ஐந்துபிள்ளைகளும் தங்களைப்பெற்ற தாயானவள் கண்ணீர் சொரிந்துவந்து கர்ணன்பேரில்வீழ்ந்து அழுதாளென்று கேட்டு மனமறுக்கங்கொண்டு சமீபத்திலிருக்கின்ற மாயவனைப்பார்த்து இதென்ன ஆச்சரியம் இதென்னவிந்தை இமைப்போதையிற் சொல்லுமென்று இறைஞ்சிக்கேட்டார்கள்.

அப்போது கண்ணன் அவர்களைநோக்கி எனக்கென்னதெரியும் நான் உங்களைவிட்டுப் பிரியாதிருக்க என்னைக்கேட்டால் உங்களுக்குத்தெரிந்த அவ்வளவுதான் எங்களுக்குந்தெரியுமென்று சொல்ல வீமனுக்குக்கோபம் வந்து கதைகொண்டகையுடன் ஓடிவந்து நீரறியாதாகசி

யாமுண்டோகிலமேனியாயுள்ளபடி சொல்லுகிறையா அல்லது எங்களையெல்லாம்ஒருங்கேகொல்லுகிறையாவந்த பாவம் வரட்டுமென்று உன்னை ஒரேயடியாய் அடிக்கட்டாவென்று கதையைக்கையிற்றூக்கினன் அவனைப்பார்த்து அப்பாவீமா, இதோநான் அறிந்தமாத்திரஞ்சொல்லுகிறேனென்று உண்மையாகிய காரியத்தைச்சொன்னார்.

அதைக்கேட்ட பாண்டவரைவரும் பசபசவென்றுமுறிந்து கோடையிடிவிழுந்த நாகப்பாம்புபோல் குலைகுலைந்துசோபித்து பூமிமேற்சாய்ந்தார்கள் நாலாய்ந்தகேள்வியுற்றமும் கொற்றமாகிய வெற்றியுமுடையோர் வீழ்ந்துபுரண்டு அலறி பதறி கண்களிலிருந்து ஒழுகிவராநின்ற வெள்ளத்துடன் தள்ளாடி. வெற்றிமுற்றும் தாழ்ந்து உயிர்தளர்ந்து உடல்வருந்தி உறக்கமாகிப் பொய்கியபேர்களை மகாவாக்கியங்கள் உரைத்து மாயோன்தேற்ற அந்தசசங்கிரதாலுடனே சமுத்திரம்வருவதுபோல் அநேகம் இராஜர்கள் சூழ்ந்துவர அஸ்தமானமாகிய சூரியன் மறுபடியும் உதயமாய்வந்தானேவென்று பிரமித்துச்சொல்லுந்தன்மைபோல் ஆயிரம் ஆயிரம் தீபம் அயலார் எங்கிவரபகல்வத்திமுதலாகியவெளிச்சங்களுடனே உயிரோடிருந்தகாலத்திலும்பெற்றிடாதபெருமையை இறந்தஇப்போதுபெற்றவண்மைமேற்கொண்ட வன்மையாளனாகியகர்னராஜன் உடல்நடுங்கி உயிரொடுங்கிக்கிடந்த இடத்தைச்சேர்ந்து கொடிபோன்ற இடையினையுடைய குந்திதேவியாரும் மித்திரனாகிய சூரியனுக்கும் சுதனாகியபுத்திரன்மேல்விழுந்துபுரண்டு புனத்தில்வளரும் பூங்கிளிபோலும் வேடரால்விட்ட வெங்கணைபட்டமானைப் போலும் இரங்கிக்கொண் டிருக்கின்ற இடத்தை அறிந்து பாண்டவர்களும் மாயனும் அந்தப் பிரதையினுடைய கால்மேற் பணிந்து மெய்மையாகிய தாயின்முகத்தைப் பார்த்து தருமராஜன் சொல்லுகின்றார்.

அம்மணி-இதென்னகோலம் இதென்னஜாலம்இஃதென்னகாலம், இதுஆலஹாலம்போல் எங்கள்செவியை உருக்குதேசங்கதியென்னதாயேயென்று தர்மராஜன்கேட்கபிள்ளைக்குஒளிக்காமல்அந்நாள்நடந்தபேச்சைஉண்மையாகச்சொன்னாள்அதைக்கேட்டுமிகவும்வியாகூலமடைந்து-தாயைப்பார்த்துஅன்னையேநீர்கன்னிகையாயிருந்த இளம்பருவத்தில் சூரியபகவான் காதல்கொண்டு வரும்படியாய்க்கற்பிருந்தமந்திரத்தையும் அந்தமந்திரத்தினலாகிய பிரையோசனத்தையும் எங்களுக்குத் தெரிவிக்காமலும் சொல்லாமலும் வன்மனத்துடனிருந்தாய்சொல்லப்படாதென்னும்பக்ஷத்திலேயோ அல்லதுமறந்துபோய்விட்டாயோ.பின்னலாகியசெஞ்சடைக்குழலாய்இதென்னவிவேகம்உனக்குஇருக்கவேண்டியபெரியஅறிவுஇதுதானோ உன்னைப்பெற்றதாயென்றுபேசவேண்டியநீதானாஅன்னியர்களைத்தாயென்றுஉறவுபிடித்தால் அவர்கள்மகனென்னும்விசுவாசம் மாறாமல்வைப்பார்களே,பெற்றதாயாகிய உம்மைவிட ஒப்பாரித்தாய்மேலென்றுநினைக்கிறேன்.பிள்ளைகளுக்குத் தாயேசத்துருவாயிருந்து சதிசெய்யக்கேட்டதுமில்லைநான்கண்டதுமில்லைதேவரீரைக்கண்டேன் அம்மா.எங்களை அநியாயஞ்செய்துகெடுத்தையேயென்று அலறிப்பதறிக்கதறிஅண்ணாவென்றுஅறைந்து மேனைமேல்விழுந்து ஊறுகயம்போல் ஜலம்பெருகுங் கண்ணினையுடையவர்களாய் அண்ணாகர்ணா குந்திதேவியென்னும் உன்னைப்பெற்றதாயார்,ஓகோ,வென்று அழுதுஆற்றவும் பிராணவாயுபொருந்தியிருந்த இடத்தை பூராயமாய்த்தேடிகுடியிருக்கப்போனையோவெற்றிமுற்றும்பெற்றவேந்தனே மிகவும்பொறுமை பொறுத்த சாந்தனே, நீர் சிங்காசனத்தில், வீற்றிருந்துபுவியாளவும் நாங்களைவரும்,உமதுதிருவடிவருடவும் ஊழியம்பண்ணவும் விதிப்பயன்பெறுமற்போனோம் வீரரேறே மாமிசத்தையும் உதிரத்தையும் மாறுமறக்கவ்வியநீண்டபாணங்களை எத்தனையாயிரமோதொடுத்தேன்நீதொடுத்த பாணத்துக் கெல்லாந்தப்பி னேன் எப்படியுஞ் செயிக்கலா மென்று சந்தோஷித்தேன் தேனிறைந்த மலர் மாலை யணிந்த திணிந்த தோளா-சிலம்பணிந்தவீரகண்டைத்தாளா - தினகரன்குமாரனாகிய செல்வமே, தேவரீருக்குத் தொண்டுசெய்துசீருஞ்செல்வமும் பெறாத தீங்கினரானோ மென்று தருமராஜன் தலந்தெரியாமல் நிலந்தெரியாமல் தன்னை மறந்து தாரணியில் வீழ்ந்தார், வீமசேனன் மேனிமெலிந்து முகஞ்சுளிவடைந்து அங்கதேசராஜதிலகனே ஆ-அண்ணா, கண்ணுக்குண்மணிபோல் அடிமைசெய்து காத்திருப்பேனே-ஐயோ, கைதவப்போரில் வீணாகிய கணைகளைவிட்டேனே-கலகம்விளைத்தேனே-காரிய முண்டோனே கசங்கிப் போனேனே - எந்தப்பாவியும்எள்ளத்தனைதெரிவிக்காமற் போனார்களே - எங்களிறையே, ஒருவருக்கும் உண்மை சொல்லவேண்டா மென்று கட்டுச்செய்துவைத்தீரோ - அல்லது, உமக்குந்தெரியாதோ-எங்களுடைய தீவினையானது தாயென்றுருக் கொண்டு வந்துதமயனைச்சதிப்பதற்குச்சகாயமா யிருந்ததே அண்ணா, சந்தோஷம் அனுபவிக்கயிருந்த நாங்கள் சங்கடம் அனுபவிக்கும்படி நேரிட்டதே வினையால் விளைந்த சஞ்சலமேயென்று வீமசேனன் புலம்பிமெத்த வெறிகொண்டவர் போற் கர்னனுடைய தேகக்குறிகண்டு நின்றான்.

அப்போது, அருச்சுனன் நெடுமூச்செறிந்து சிரேஷ்டப்பாதுவாகிய தேவே, நானாவிதமாகிய மூனைக்கணைகளை நான் தொடுத்தும் நீ தொடுத்த நாகாஸ்திரத் துக்குத்தப்பிப்பிழைத்தோமென்றும்சந்தோஷம்அடைந்தேன் தேன்வண்டு மொய்த்த செண்டாகிய வெண்டாமரைமலர்மாலையணிந்ததிண்டோளுடையதினகரன்சேயே,உம்முடையதிரமார்பகத்தில்இயான்விடுத்தபாணங்கள்என்னைக்கெடுப்பதைஅறியாமல்உம்மைக்கெடுத்ததாயெண்ணி உடல்பூரித்தேன்,உலவாப்பெருந்திறலுத்தமனேஇனிநான் என்ன செய்வேன் பூமியில் ரதம்புதைந்தபோது இந்தப்பூமி பனிரண்டங்குலம் மேலெழும்படியாய்த் தோள்மடுத்துத் தூக்கியதோன்றலே, உம்முடைய வாழ்நாளைமடியச்செய்யுமென்று உணராயல் வறியேன் சிறியேன் அறியாமையாற் சூரியாமற்கொன்றேன்-கொன்றேன்-கொன்றேன்-கொடும்பாவியாகியநான் கொலைசெய்தேன் சகோதரத்துரோகியானேன் - ஐயோ - இவடத்தில்இந்த அம்மாளாகிய தாய்சொல்லத்தெரியவந்தது இதன்றியும்

...து அசரீரியென்னுந்தேவின்வாயுரைத்தது-இதுவு ...ராமல் இன்றையவரைக்கும் நாங்கள் கேட்டறிந்ததிலையே-தெய்வமே, கொஞ்ச மேனும் அறிந்திருப்போமாகில் எங்களுக்கு வாட்ட முண்டோ-வதக்கமுண்டோ ஒரு நஷ்டமுமில்லையே உத்தமனே பூதகியென்னும் பேயானவள் மடிமீதுவைத்துக் கொண்டு தாலாட்டிமுலையூட்ட - முலைப்பாலுடன் அவளுயிரையும் உண்டருளியபித்தா, வஞ்சகநெஞ்சுடைய அஞ்சனமேனிச்சித்தா பாவி, இப்போது நீ சொல்லத் தெரியவந்தது, ஆகா இப்பசொன்னரகசியத்தை நாலுநாழிகைக்குமுன்னே சொல்லப்படாதா கபடநாடக முடையவனே, இதனால் உனக்கென்னலாபம் நீ என்னவாரிக் கொள்ளப்போகிறாய் - உலகத்தையெல்லாம் மோசம்பண்ணியிருக்கிறையே-பாவபுண்ணியம் பார்க்கவில்லையே-தன்கையைக்கொண்டு தன்கண்ணைக்குத்திக் கொள்ளச் செய்ததுபோல் - எங்கள்தமயனை எங்களைக்கொண்டே முடித்துப்போட்டையேயென்று அருச்சுனன் புலம்ப, நகுல சகாதேவர்கள் நடுங்கி கிருஷ்ணனைப்பார்த்து (பூர்வம், இரணியாசூரன் என்பவனை அவன்பிள்ளையைக் கொண்டு அழித்துவிட்டாய்) (இலங்கைக்கிறையாகிய இராவணனுக்கு, அவன்தம்பியாகியவிபிஷணனைப் பகைப்படுத்தி வைத்து அவனை நீ உளவாசவிகொண்டு புத்ரமித்ர களத்திராதிகளுடன் போக்கிவிட்டாய்.)

இந்தலோகப் பிரசித்தியாய், குருகுலநாயகக்கோமானாகிய கர்னனை, நரனாகிய அருச்சுனன் கையினால் ஈடழியப்பொருதி வைத்து இறப்பித்தாய், பெரியோனென்று நம்பும்படியாகிய இமயவர்கள் செய்யும் சூதாகியவிரகைப்போல் செய்வதற்கு யாவர்வல்லவர்கள் என்றுநகுலசகாதேவர்கள் முதலாகியபேர்களும் திரௌபதையும் விசனமடைந்து கோபாலகிருஷ்ணனைநோக்கி, ஆளுக்கொருபேச்சுப்பேசி கர்னனுடைய அடிமலர்மேல்வீழ்ந்து அழுது ஆற்றி துன்புறுங்காலையில் குந்திதேவியும் பாண்டவர்களும் கர்னனைக்குறித்து துயரப்பட்ட சங்கதிகளையெல்லாம் பாம்புக்கொடிபடைத்த துரியோதனன்கேட்டு, அநேகம்மத்தாப்பு வெளிச்சத்துடன்வந்து யுத்தகளத்தைப்பார்த்து மரம்போல்நின்று வாயைத்திறவாமல் மறுவார்த்தைபேசாமல் ஐயையோதெய்வமே, இதென்ன சூது நாடாண்டவனுங் கர்னன், காடாண்டவனுங் கர்னன், எங்கும் அவர்களாய் இப்படியாகமுடிந்ததே அடடாவென்று அதிசயமடைந்து நாமேன் உலகத்துக்கு விருதாவாய்ப்பழிசுமந்தோம் கர்னனுடன் பாரதஞ்சரியாச்சுது இனிமேலென்ன அதுகெட்டுதென்று மனதுரோசி சிகிரமாண்டு விடுவதற்கான வழியைத்தேடி அடங்காத துக்கமுடையவனாய் பாசறைபோய்ச்சேர்ந்தான்.

இவடக்கில் குந்திதேவியாகிய தாயும் பாண்டவர்களாகிய சேயும்-மாயனும்-தேறாமல்-திகிலடைந்து ஆகுலத்தில் மூழ்கினவர்களாய் தங்கள் பாடிவீடுபோய்ச்சேர்ந்தார்கள், அந்தவேளையில் சஞ்சயனானவன் துரியோதனனைப்போய்க்கண்டான், அந்தத்துரியோதனன் சஞ்சயனைப்பார்த்து ஓசஞ்சயனே,இனிக்காரியமில்லை,என்னுடைய க்ஷேமத்தை ஐயா அவர்கள்திரிதராட்டிரனுக்கும் தாயாகிய காந்தாரிக்குஞ்சொல்லிப்போவென்றுசொல்லி அனுப்பினான். அப்படியேசஞ்சயன் அஸ்தினாபுரம்போய்ச்சொல்ல; அதைக்கேட்ட பெரிய அரசன் இனிமேல்நமதுபுத்திரன்பிழைக்கமாட்டான் அரிது அரிதென்றுபெருமூச்சுவிட்டு உயிர்ப்படங்கி சத்துப்போனவர்களை ஒத்திருந்தான். வெற்றிவீரனாகிய பெரியவேந்தன் இதுசேதிகேட்ட காந்தாரி கண்கலக்கப்பட்டு கதறியழுதாள். கர்னனுடைய பத்தினியும் இன்னமுள்ள மற்றப்பேர்களின் பத்தினியர்களும் புத்திரவர்க்கத்தாரும் மெத்தக்கலங்கி விசனப்பட்டார்கள் இதுவரையிலும் இழிகுலத்தானென்று தன் தாயுந்தகப்பனும் தள்ளிவிட்டிருக்க தான்மாத்திரம் பதிவிரதாமகத்துவப்படிக்கு இவரோதெய்வமென்று நம்பியிருந்தகர்னன் பெண்சாதியாகிய பொன்மாலையானவள்பாண்டவர்களுக்குத் தன்புருஷன் மூத்தவனென்றுங் குந்திதேவியாருக்கு முதற்புத்திரனென்றுங் கேள்விப்படவே, தேகபரவசமடைந்து ஐயையோ தெய்வமேயென்றுதியங்கி பேச்சுமூச்சில்லாமற்போனாள் தாதியர்தேற்றி யாற்றினார்கள், காந்தாரியும்-திரிதராட்டிரனும் மற்றப்பேர்களும் கர்னனுடைய பிறப்பு வளப்பு அறிந்து மெத்தவும் முழித்து உத்தரஞ்சொல்லமாட்டாமல் வாயைத்திறவாமல் வயிற்றைப்பிசைந்துக்கொண்டிருந்தார்கள், இப்படியாக வருத்தப்பட்ட இவர்கள்துயரத்தை சஞ்சயன்மாற்றி மறுபடியும் ரணகளம்வந்தான்.

இப்போதுசொல்லிவந்த இந்தக்கதைகளெல்லாம் கர்னபர்வம் எனப்பெயர் கூறப்பட்டதென்று திரிகாலமுமுணர்ந்த வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

எதுகாலமும் தன்னுடைய செங்கோலின் கிர்த்தியைச்செலுத்தி ஆண்டுவராநின்ற எங்கோனாகிய ஜெனமேஜெயமகாராஜன்கேட்டு தன்பத்தினி புத்திராளுடன்எழுந்து தகுதிபெற்ற வைசம்பாயனரை மூன்றுதரம் பிரதக்ஷணமாகவந்து விழ்ந்து விழிவழியேஜலம்பெருகும்படியாய் விசனமடைந்து ஆசாரிய முகூர்த்தங்கொண்டெழுந்த அன்புருவாகிய வைசம்பாயனரைப்பார்த்து என்னுடைய தீவினையைப் பொடியாய்த்தீர்க்கவந்த தெய்வமே, கூட்டமாகிய குதிரைப்பலங்களும்'ஓட்டமாகியதேர்ப்பலங்களும் நாட்டமாகிய மதயானைப்பலங்களும் தேட்டமாகிய பதாதிகளின் கும்புப்பலங்களும் - வாளாயுதப்பலங்களும்-வேலாயுதப்பலங்களும்-எல்லாப்பலங்களும் உண்டாயிருந்தபோதிலும்எப்பொருட்கும்இறைவனாகியதெய்வத்தின்பலம் அணுவத்தனையேனும்இல்லாமற்போகுமேயாகில்மற்றப்பலங்களெல்லாம்இருந்தும்என்னபலம் அபலமேசபலமேயென்றுஇப்படியாகநிச்சயமாய்த் தெரிந்துணர்ந்தேன்மேல்நடந்த சல்லியபர்வத்தின் கதையைச்சாங்கமாய்ச்சொல்லவேண்டுமென்று,ஜெனமேஜெயமகாராஜன்கேட்க வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

கர்னபர்வம் - முற்றிற்று.